ஓ

ஓம் மகாகணபதயே நமஃ

ஸ்ரீ ஆளவந்தார் முனிவர்

மொழிபெயர்த்தருளிய

ஸ்ரீ ஞானவாசிட்டம் மூலமும்,

ஸ்ரீ துறவாண்டவர் பாதசேகரராகிய

ஸ்ரீ நித்தியானந்த முனிவர்

மொழிபெயர்த்தருளிய

சமுசாரதரணி யென்னும் உரையும்,

ஸ்ரீ திருக்களர் ஆண்டவர் பாததூளியாகிய

நியாயசந்திர வேதாந்தபாஸ்கர

ஸ்ரீ சுப்பய்ய ஞானதேசிகேந்திரர்

திரட்டியருளிய

ஸ்ரீ வீரசேகரமென்னும் உரையும்.

இவை

மடி ஸ்ரீ சுப்பய்ய ஞானதேசிகேந்திரர்

அவர்களாலே

சென்னை ஆனந்தபோதினி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1928

Copy Right Registered.

Tittle Page Printed at Sri Bharathi Press, Choolai, Madras.

அன்பளிப்பு
R.G. துரைப்பாண்டி B.A.,
கோச்சடை, மதுரை.



ஸ்ரீ வசிட்ட பகவான்
ஸ்ரீராமபிரானுக் குபதேசித்தல்.

THE MADURA TAMIL SANGAM
7405



ஸ்ரீ வீரசேகர

சுப்பய்ய ஞான தேசிகேந்திர சுவாமிகள்

ஓ

ஓம் மகா கணபதயே நமஃ

சிவமயம்.

முகவுரை.

அன்பிற் சிறந்த பெரியீர்! ஞானவாசிட்டக் தெரியாத நண்பர்களும் நாட்டிலுளரோ, இலர். சாத்திரத்திற் பெரியதிது தடங் காவியத்திற் பெரியதிது, மாத்திரத்தின் மெய்ஞ்ஞான வழியாற் பெரியதிது ஞான, நேத்திரத்திற் பெரியோர்க்கு நிதிபோற் பெரியதிது கதிரோன், கோத்திரப் பொற் பாத்திரத்திற் குதித்தவமுதாம் வாசிட்டம். என்றபடியாக இது ஸ்ரீ இராகவர்க்கு ஸ்ரீ வசிஷ்டபகவானுல் 32000ங் கிரந்தமாகப் பதினெட்டு தினங்களில் உபதேசித்ததாம், இதன் விஸ்தாரத்தை யுத்தேசித்து ஸ்ரீ கான்மீர பண்டிதரால் (24000ங் கிரந்தத்திலிருந்து) 6000ங் கிரந்தம் சங் கிரகிக்கப்பெற்று லகுயோக வாசிஷ்டமெனப் பெயர்சூட்டப் பெற்றதிது. இதனே, ஸ்ரீ கவிராச பண்டிதர் குமாரர் வீரை ஸ்ரீ ஆளவந்தான் முனிவர் செந்தமிழ்ச் செய்யுள் வடிவமாய் மொழிபெயர்த்து வைத்தனர், இது நெடு நாள் விரிந்த உரையோடு இயையாமைபற்றி, நமது ஸ்ரீமது சுவாமிகள், எங்கள் வேண்டுகோட் கிசைந்து ஸ்ரீ வாசிஷ்ட சந்திரிகை, ஸ்ரீ வாசிஷ்ட தாற்பரியப் பிரகாசம் என்பவற்றைக்கொண்டு, அழகிய அவதாரிகை, பகுத்துணர்த்தும் பதவுரை, விரிந்த விசேட வுரைகள் அடங்கிய ஸ்ரீ வீர சேகரம் என்னும் உரையை இதனுடன் இயைத்துத் தந்ததுடன், இதற்கு முன்னிருந்த ஸ்ரீ நித்தியானந்த முனிவர் 60-வருடங்கட்குமுன் மொழி பெயர்த்து இதுவரை பாடம் நடந்துவந்த ஷெ தமிழ் வாசிட்ட வியாக்கியானமாகிய சமுசார தரணி யென்னும் உரையையும் மூலத்திற் கியையத் திருத்தித்தர அவதாரிகை பதவுரை விசேட வுரைகளடங்கிய அதனையும், முன்றந்த ஸ்ரீ வீரசேகரத்தையும் தமிழ் மக்களுக்கு உபயோகமாமாறு அச்சிட்டு வருகின்றோம். இம்மூலமும் உரைகளும் முன்னுத்தேசப்படி 160-ராயல் பாரங்களில் அடங்காமல் 220-பாரங்கட்கும் மேலாகும்போற் றோற்றுகின்றபடியால் படிப்பவர் சௌகர்யத்தை யுத்தேசித்து இரண்டு பயிண்டுப் புத்தகங்களாக்கி, முதலாவதில், வைராக்கியம், முமுக்ஷுத்வ, உற் பத்தி, திதி யென்னும் நான்கு பிரகரணங்களும், இரண்டாவதில் உபசாந்தி நிர்வாணம் என்னும் இரண்டு பிரகரணங்களும், அடங்குமாறு செய்து பயிண்டியற்றி இரண்டாவது இப்போது முற்றுப்பெறுமைபற்றி முதலா வதை வெளிசெய்திருக்கின்றோம். கடித விலையாதிக்கியம் பற்றியும், பார மிகுதிபற்றியும், இம் முதலாவதற்கு ரூபா 6—0—0 விலைவைத்திருக் கின்றோம். மற்றது மத்தகையதே பின் வெளியாம். இதனே வாங்கி ஸ்ரீ ஞானசிரியர் சங்கிதியிற் சிரவணஞ்செய்து பேராநந்தப் பெரும்பே றடைந்திடுமாறு எல்லாம்வல்ல இறைவனே வேண்டிக்கொள்ளும்,

அநந்தானந்த சுவாமிகள்.

4/5, ஆனந்தாசிரமம், வேப்பேரி, சென்னை.

சிவமயம்.

ஸ்ரீ சற்குருப்யோநமஃ

ஸ்ரீ ஞான வாசிட்டம்

வைராக்கியப் பிரகரணம் மூலமும்

சமூசார தரணியென்னும் உரையும்

கணபதி வணக்கம்

ஆரண மிதுவென் றோதா வறிவரு வான சோதி
பூரணமாகி யென்றன் புறத்தகத் திலகா நிற்குங்
காரண மாயன் ரூகிக் காண்பன வனைத்து மாமவ்
வாரண முகத்தன் சீரார் மலரடி வணங்கு வாமே.

சபாபதி வணக்கம்.

இதம்பெற வெவரு மெண்ணி யேத்திநின் றிறைஞ்ச மேலாஞ்
சுதந்தரை யுமையா ளுள்ளஞ் சுகோதிதி யதனின் மூழ்க
நிதந்தித நிமல போத னிசுழ்ந்ததன் கருணை யாலே
சிதம்பர நடனஞ் செய்யுந் திருவடி சிந்தை செய்வாம்.

பரமதரு வணக்கம்.

அங்குமிங்கு மெங்குநிறைந் தாநந்த மயமாகி யறிவாய் நாளுந்
தங்குகின்ற மெய்ப்பொருளே யோர்வடிவாய்க் கோவிலூர் தனின்வாழ்சாது
சங்கமுற்ற வெம்மனோர்க் ரூகமாவைத் தொலைத்தின்பந் தானேதந்த
சிங்கமுத்தி ராமலிங்க தேசிகன்ரூ டொழுதேத்திச் சிந்தை செய்வாம்.

அருளிறை வணக்கம்.

திருத்தில்லை நடனபதச் சிற்சொ ரூபன் நிகழ்வடிவா யப்பாலுக் கப்பாலாயிவ்
வுருத்திகழு மணுவினுக்கு மணுவாய்நித்த வொளியாகி வெளியாகி யொன்ரூய்மோன
வீருத்தியெழு மின்பமா யெல்லா மாகி மிளிரருளு சலகுரவன் விமலப் பொற்ரூள்
கருத்திருத்தி னீனைத்தவரந் தருக வென்று கைகூப்பித் தொழுதுதி கசிந்து
[செய்வாம்.

வாசிட்ட நிர்ச்சந்தேக ளுப்திவியாக்யானம்

இந்நூல் வரலாறு.

இவ்வுலகின்கண்ணே சகலசகத்திற்கு மேககாரணமான சச்சிதாகந்தமயப் புருடோத் தமனுகிய பகவான் குணத்திரயமயமான தனது லீலையைச் செய்பவராகி ரசோகுண சம் பந்தமான சதுர்முகன் முதலிய தனது மூர்த்திபேதங்களால் விசித்திரமான பூதபௌதி கப்பிரபஞ்சத்தைச் சிருட்டித்துச் சீவரூபமாகப் பிரவேசித்த சீவர் சீவிக்குநிமித்தமாகவே யோகக்ஷேமத்தைக் கற்பித்தற்குச் சகல சகத்பாக்கியத்தையும் விபாகஞ் செய்வதான மச்சகூர்மாதி சாத்துவிதாவதார பேதங்களைத் தரித்தார். அவற்றிற் பலித்திரமான சகத்திரயங்களிற் சிறிதவதாரங்கள் கிருதகிருத்தியமாகி யுபசாந்தம் பெற்றிருக்க, இரா வணன் முதலிய விராட்சதர்களாற் ரூபமுரூரின்ற சகத்திரயத்தை யிரக்ஷிப்பதற் கப் பகவானே சகல கலியாண குணங்களோடிரமித்து ஸ்ரீராமரென்னு நாமத்தோடுஞ் சூரிய குலத்துதித்தார். அவர் தாமே தடையறச் சகலவித்தையு முபதிஷத்தும் வந்தமனதடை யறேனுஞ் சம்பிரதாயத்தைத் தெரிவித்தற்குக் குருகுலத்தில் வசித்து, குருமுகத்தி னின்று நன்றூய்க்கற்ற சகலசாத்திரதத்துவஞ்ஞாய்ப் பின் வெளிப்பட்டார். வெளிப் பட்டவிராமர் சற்கருமங்களிற் பிரவிருத்தியுற்று மகாமோகமய சம்சாரசாகரத் தாழ்ந்து மிதந்து துன்புறுமுலோகத்தைப்பார்த்துப் பரமகாருண்ணியத்தா லதைக்கரையேற்ற வேண்டுமென்னு மிச்சையுடையராய்த் தம்முகத்தாலும் தற்குரு முகத்தாலும் வாரா நின்ற பிரசினேஞ்தரங்களினுல் முக்திமார்க்கத்தை யுபதேசித்தார். அத்தன்மையான இவ்வுபதேசத்தைக் கவிகுலகுருவாகிய வான்மீகிபகவான் உலோகாநுக்கிரகநிமித்தம் விடர்க் களம்பாவைய ருரைபோன்ற காவியப் பிரபந்தமாக வடமொழியி லருளிச் செய்தார். இதை வீரை யாளவந்தாரென்னு முனிவர் தமிழ்பாவினமாக மொழிபெயர்த் தருளினர். வசிட்டோபதேச மன்னிகிற்றலின் வாசிட்டமென்னுமிது மோக்ஷசாத்திர மாமிதில் வைராக்கிய முமுக்ஷூப்பத்தி திதி யுபசாந்தி நிருவாணங்களென்னும் ஆறு பிர கரணங்களுள. அவற்றில் முதற் ரோடதரிசனத்தாற் கண்டகேட்ட விஷயங்களில் வைராக்கியமு மதன்பின் முமுட்சுத்துவமும் அதன்பின் முமுக்ஷுவென்னு மதிகாரி யாய்த் தத்துவமறிய விச்சித்த மனமுடையனுக்குச் சகவுற்பத்திதிதி வுபசாந்திகளாற் றத்துவஞானவுபதேசமுந் தத்துவஞானந் திடப்படின் நிருவாணமுமாமென்னு மிதுவே கிரமமாம்.

உ

ஓம் மகாகணபதயேநமஃ

ஞான வாசிட்டம் மூலமும் உரையும்.

மங்களம்.

திங்களணி வேணியனூர் உமையோடுந் திளைத்தாடித்
திருந்து வேதம்,
பொங்குலகும் போற்றிசெய நாற்றிசையும் புகழ்பெருகப்
பொலித்த சீமான்,
மங்களமெய் மூர்த்தியாய் வணங்கினார்க்கு மாறினையும்
மணமே செய்யும்
எங்கள்குரு வீரேசன் இணையடியை மனமொழியில்
இணைத்து வாழ்வாம்.

ஸ்ரீ வீரசேகரம்.

சத்தியஞான அனந்த அத்விதீய பரமாத்மாவாகிய பகவான் நாராயணர் கற்பாதியின்கண்ணே தமப்பிரதானமாகிய க்ஷேத்திரங்களையும் சிற்பிரதான மாகிய ஜீவர்களையும் பர்வனே ஞான கருமானுசாரமாகச் சிருஷ்டித்தார்; "தமப்பிரதானமாம் க்ஷேத்திரங்கட்கும் சிற்பிரதானமாஞ் சீவர்கடமக்கும், பரம் காரணமாம் பான்மையைப்பற்றும், பாவனை ஞான கருமங்களினுல்" என ஸ்ரீமதாசிரியரும் கூறியுள்ளார். தம்மாற் சிருஷ்டிக்கப்பட்ட பிராணி களின் சொர்க்கமோக்ஷப்பொருட்டு உபாயமாகக் கொள்ளத்தக்கனவாயிருக் கும் கருமஞானவடிவ வேதார்த்தத்தை மரீசியாதிகட்கும் சனகாதிகட்கும் உபதேசித்தனர்; அவர்களானே யுபதேசிக்கப்பட்டுப் பிராணிகளானே யனுஷ்டிக்கப்பட்டுவந்த அந்த வேதார்த்தமானது இராவணாதி துஷ்டர்க ளானே யனுஷ்டிக்கப்படாதவாறு இடையூறு செய்யப்பட்டதை யுத்தேசித்து அதை இரக்ஷிக்கவேண்டுமென்னு மிச்சையினுலே மாயையைத் தன்வயப்படுத் திய சத்திய சங்கற்பமுடைய பகவான் சங்கற்பத்தினுலே இனிது சம்பாதித் துக்கொண்ட அறியாமையுடையவராகிக் கௌசல்யதசரத குமாரராயவதரித் தார். அவதரித்துப் பின் ஸ்ரீ வசிஷ்டபகவானது சீடன்போனடித்து நானு விதமான கதைமாலைகணிறைந்த அவரது சம்வாதத்தால் ஞானபிருதரசத்தை யும் வெளிப்படுத்தினர், கருமத்தையும் பிரவிருத்திப்பித்தார் அரக்கர்குலத்தை நாசஞ்செய்யும் வாயிலாக அவ்விரண்டையுமே காப்பாற்றியருளினர். ஆண்

டுப் பிரஹ்மத்திற்கே பிரஹ்மவித்யாகிக ரித்தன்மை அறிவித்தற்பொருட்டு ஸ்ரீ ராமர் சீடனைதாம், "இவையெலா மெழுந்திங் கிலங்குதன் முன்னர், நவையறு பிரமமேநண்ணும் நன்கது, உவமறு தன்னையே யுணர்ந்தது யானப், பவமறு பிரமமே படிவமா யுள்ளேன்" "ஆகலினது வெலாமாயதுகண்டாய்" என மறையுமுறைகின்றது. "சர்வதுவைதாகார அஞ்ஞான பரிணமங்களில் தன்னுடைய ஆபாசம் அந்தப்பலகத்தில் இனிதாருடமாகச் சாக்ஷித்வ ஈசுரத்வ காரணத்வ அந்தர்யாமித்வரூபத் தன்மையை யாத்மா அடைகின்றது. அதுவும் உலகத்திருந்தபோதினும் உண்மையாகினும் அதனோடு சம்பந்தப்படாதாம் அசங்காகமவீரோதம் வருதலின், ஆகலின் ஈசுரத்வாதி கற்பிதம்" என வார்த்திகத்துளதாம். அவ்வசிஷ்டராம சம்வாதத்தைத் திவ்யஞான சம்பத்தையுடைய ஸ்ரீ வான்மீகிபகவான் மூப்பத்தீராயிரம் சுலோக வடிவமாக இயற்றினர். வைராக்கிய முமுக்ஷு விவகார ஜகதுற்பத்தி ஸ்திதி உபசாந்தி நிர்வாணப்பிரதிபாதக ஆறுபிரகரணப் பேரலகளோடு கூடியதும், அநேக ஆக்கியான பெரியவர் வரதரங்கங்களோடுற்றதும், விவேக வைராக்கிய உபரதி விஞ்ஞானதி இரத்தினங்கட்கிடமும், ஆகிய அவ்விவ் வாசிஷ்ட சமுத்திரத்தை மந்த மதிகள் கடக்க முடியாதவாறுகண்டு பரமகாருணிகராய காண்மீரபண்டிதரென்னும் ஸ்ரீ அபிநந்தாசாரியர் ஆறுயிரம் சுலோகங்களோ யதினின்றும் தொகுத்தனர், அவற்றையே வீரை ஸ்ரீ ஆளவந்தார் முனிவர் கீர்வாணவலியிலாதுகளர் தமிழ்மாக்கண்மேலுள்ள காருண்யச்சிறப்பால் செந்தமிழ்த்தவிதையிற் செய்து வைத்தனர், அவ்விவ் வரியஞானவாசிஷ்டத்தை மந்தமதியினர்க் கெளிதுபுலப் படுமாறு ஸ்ரீ வீரஞானேசதேசிகன்றந்த மதியளவு ஸ்ரீ வீரசேகரமெனப் பெயர்தந்தே யுபகாரப்பொருட்டு வியாக்கியானிப்பேன்.

பாயிரம்

விநாயகர் வணக்கம்.

பெண்மை பாதியன் பெற்ற களிற்றினை
யண்மை தூர மறவகத் துன்னுவாம்
திண்மை ஞானச் சிறப்புயர் வாசிட்ட
முண்மை யாக வொருங்குரை செய்யவே.

(ப - ள்.) திண்மை=ஐயந்திரிபு இலாமல் அப்பிரதிபந்தகமாய்ப் பிரத்தியக்ஷமாக வண்டாகும், ஞானம்=சாக்ஷாத்கார அனுபவத்தையும் அதன் அந்தரங்க பகிரங்க சாதனங்களையும் கூறுவதில், சிறப்பு=மற்றைய எல்லா அத்தியாத்மிக சாஸ்திரங்களிலும் விசேடமாக இருத்தலின், உயர்=சர்வவேதாந்த மூர்த்தன்யமாய் மேம்பட்டிருக்கும், வாசிட்டம்=ஸ்ரீ வசிஷ்ட ஸ்ரீ இராகவர் சம்வாதரூபமாகிய இஞ்ஞானவாசிட்ட நூலை, உண்மையாக = எவ்வாறு கீர்வாணபாஷையில் ஸ்ரீ வான்மீகி பகவான் அருளியிருக்கின்றரோ அவ்வாறே அருத்தமுங் கருத்தும் மாறுமலும் வேதாந்த சம்பிரதாய விரோத மில்லாமலும், ஒருங்கு=காண்மீர பண்டிதர் சங்கிரகித்த ஆறுயிரங் கிரந்தங்களையும்,

உரைசெய்ய = செந்தமிழ்ச் செய்யுளால் இனிமையாகப் பாடும்பொருட்டும், இடையூறின்றி யினிது முடியும் பொருட்டும், பெண்மைபாதியன் = பராசக்தியைப் பாதிபாகத்திற் கொண்ட பெருமானுகிய பரமசிவன், பெற்ற = தவம் புரிந்து உலகமுய்ய உதவிய, (இருவரும் தவம் புரிந்தே பரமான்மாவைப் புத்திரராகப் பெற்ற புராணவசன மனுசரித்துத் தான் பெண்மையாதியன் என்றதாம்) களிற்றினை = தாம் எப்போதும் விசுவரூபமென்று எல்லாரும் உணர்ந்துய்யக் கொண்ட சகலாகிருதியை யுடையகயமுக அசுரனுல் வந்த இடர்தீர்ந்து சுர நராதியுலகு சுகிப்பக்கொண்ட திருமேனியையுடைய பிரஹ்ம விஷ்ணுருத்திராதி சர்வதிருசியமும் தோற்றற்கும் ஒடுங்குதற்கும் வாயிலாக இலங்கும் கஜமுகப் பெருந்தகையை, அண்மை தூரமற = தற்பதபரோக்ஷ துவம்பத அபரோக்ஷமதாய்ச் சர்வகதமா யிருத்தலின் சமீபதூரமிலாது தன் வடிவமாகலே பஞ்சகோச பிரபஞ்ச கற்பனைகள் கடந்து, அகத்து = சுத்த சத்துவ அந்தக்கரணத்தில், உன்னுவாம் = அகண்டாகார விருத்தியால் பலவியாத்தியிலை மல்விருத்திவ்யாத்தியாற் சந்ததம் நிந்திப்பாம்; என்பதாம்.

பாவினங்களின் அளவுகள் பரிமாணம்.

போற்றி ராமன் புகல்வை ராக்கியம்
தோற்று நூற்றிரு பத்திரண் டாஞ்சுகன்
சாற்று சீரிருபத் தைந்து தற்பதத்
தேற்றம் வேண்டினர் சீரிரு பத்தெட்டே. (2)

(ப - ள்.) போற்று = அறிவுடையார் யாவரும் நிரந்தரம் தோத்திரம் செய்யும், இராமன் = எல்லாருடைய மனங்களும் ரமிக்கும் படியான அநந்தகலியாண குணங்கணிறைந்து யாவற்றையும் அனுஷ்டித்துக்காட்டும் ஸ்ரீ இரகுகுலதிலகன், புகல் = நம்மனோர் பொருட்டுக் குறையுள்ளவன்போல் நடித்துக் காட்டி மகரிஷிகளின் சங்கிதியிற் சித்தருந் தேவரும்புகழப் பதினெருவகையாகப் பிரித்துக்கூறிய, வைராக்கியம் = வைராக்கியப் பிரகரணமென்னும் ஞானவாசிட்ட முதலவயவம், தோற்று நூற்றிருபத்திரண்டாம் = நூற்றிருபத்திரண்டு கவிதைகளாக யாவருக்கும் வைராக்கியந் தோற்றுமாறு தோற்றும், சுகன்சாற்றுசீர் = ஸ்ரீ வியாசபகவானது அருந்தவப் புதல்வராகிய சுகப்பிரஹ்மத்திற்கு ஜனகமகாராஜாவிஷ்ணுலே பரிசோதித்துபதேசிக்கப்பட்ட சிறந்த ஞானமணமணக்கும் கூகோபாக்கியானம், இருபத்தைந்து = இருபத்தைந்து செய்யுட்களாகத் தேற்றும், தற்பதத்தேற்றம் வேண்டினர் சீர் = தற்பதமாகிய பரமசிவ ஸ்வரூபப் பிரஹ்மானந்தத்தில் விசிராந்தியடைந்து கிருதகிருத்தியர்களாக வேண்டுமென்று சந்ததம் நிமித்தமில்லாமல் இயல்பா யிச்சையுற்ற முமுக்ஷுக்களின் இலக்கணம் கூறும்முமுக்ஷு விவகாரப்பிரகரணம், இருபத்தெட்டே = இருபத்தெட்டு யாப்புறுளாகத் தோற்றும். (எ - ம்.) (2)

ஞான விண்மக ஞற்பத்து நாலதா
மான லீலை மகிமைதொண் ணூறதா
மான ஆசியு மையெட்டு மேழுமா
மீன மற்றசீ ராய்ந்தவ ரீரைந்தே. (3)

(ப - ள்.) ஞானவிண்மகன் = கர்த்தவயமிலாது யாவையுஞ்செய்து கால இயக்ககப்படாத ஞானகன குமாரோ பாக்கியானம், நாற்பத்து நாலதாம்= நாற்பத்துநான்கு செய்யுட்களாலாம், மானலீலை= ஸ்ரீ சரசுவதிதேவியின் திரு வருளினலே யாவரும் புகழும்படியிலங்கிய லீலோபாக்கியானத்தில், மகிமை= திருவியதோடத்தை யகற்றும் பிரபாவம், தொண்ணூறும் = பத்திலாறாறு பாவினங்களாலாம், ஆனவாசி=முன்னர் கீலகிரிபோற்பருத்திருந்து ஆசையாற் றவம்புரிந்து சிறிதினுஞ் சிறிதானரோகரூப அவித்யாகார வரலாறும், உம்=பின் னர் நிராசையோடும் பெருந்தவம் புரிந்து புராதனருதியையும் ஆனந்தஞான கிருதியையும் பெற்றுக்கம்பீரமாய் ஞானவிநோதியாய்ச் சஞ்சரித்தவரலாறும் கூறும் கற்கடிகதை, ஐயெட்டு மேழுமாம் = நாற்பத்தேழு செய்யுட்களா லமையும், ஈனமற்ற சீராய்ந்தவர் = ஸ்ரீ கைலாசபதியின் திருவருளாலே ஜனி த்து இந்துமறையவரின் குமாரராய். அக்காரணங் கொண்டே ஐந்தவரெனப் பெயர் பெற்ற பதின்மரும் சாமந்தபதமே முதற் சதமகபதமீருக ஈனமுற்ற பதங்களெனத் தள்ளி எவ்வினைமுமில்லாமற் சிறப்பே பொருந்திய பிரஹ்மா ண்ட ஐசுவரியத்தை யாக்கும் பிரமனுக ஆராய்ந்து பெருந்தவம் புரிந்து அடைந்தவர் சரிதை, ஈரைந்து= பத்துப்பாட்டுகளாலாம். (எ - ம்.) (3)

வஞ்ச விந்திரன் வன்கதை யொன்பதாம்
நெஞ்சி னுக்கிரு பத்திரு நீள்கவி
தஞ்ச பாலகன் றன்கதை யெட்டதா
மெஞ்சு சித்த னிருபது மாறுமே. (4)

(ப - ள்.) வஞ்சவிந்திரன் = பெயர் மாத்திரத்தானே இந்திரனென நினை ந்து பெருவஞ்சஞ்செய்து தீரமனத்துடனிருந்த அவன், வன்கதை=மனத்தின் செயலேசெயல் மற்றவற்றின்செயல் கௌணமெனப் புலப்படுத்திய சரிதை, ஒன்பதாம்=ஒன்பது கவிதைகளாலாம், நெஞ்சினுக்கு = மனத்தினுக்கு உரிய சொரூபவைபவமும் வேறுவேறு வகையானே விளங்குமதற்கு வேறுவேறு வகையான விசேடபயனுறுதலும் போதிக்கும் மனத்தின்கதை, இருபத்திரு நீள்கவி = இருபத்திரண்டு செவ்விய செய்யுட்களாலாம். தஞ்ச பாலகன்றன்= அன்னையையே அருஞ்சரணடைந்து அவள் வாக்கியத்தை யறியாமை யால் நம்பிய குழந்தைக்குத் தாய்மெய்போன் றெண்ண முழுப்பொய்யே சொன்ன, கதை=அறியாற்கு மெய்யாயுலகம் பொய்யாகவே போவதையுணர் த்தும் பாலன்கதை, எட்டதாம் =எட்டு எழுசீர்க்கழினெடில் ஆசிரியவிருத் தங்களாலாம், எஞ்சு = லக்ஷணராஜாவிற்கு மானசீய இராஜசூயயாகத்தின் முற்

பயனுய பெருந்துயரைத்தந்து தான் சேடித்து நின்ற, சித்தன்=தேவலோகத் திருந்துவந்த சித்தனது காரணத்தால் நடந்தலவணேபாக்கியானம் இருபதும் ஆறுமே=இருபத்தாறு இனிய கவிகளாலாம். (4)

தன்னு முற்பத்தி சொல்லெழு பத்தொன்றும்
கன்னர் வெள்ளியு நாற்பதே டேழுதாம்
அன்ன தாமனு மையெட்டு மூன்றுமாம்
இன்ன வீம னிருபது மைந்துமே. (5)

(ப - ள்.) தன்னும் = மனத்தினுனே வாசனைக்குத் தக்கபடி நெருங்கி விசாரித்துண்டாம், உற்பத்திசெல் = உற்பத்திப்பிரகரண இதோபதேசம், எழுபத்தொன்றும் = எழுபத்தொரு இன்கவிகளாலாம், கன்னர் வெள்ளியும் = கன்மையான தியானஞ் செய்துகொண்டிருந்து வாசனையினுலே பலபிறப் படைந்து எமதருமரது திருவருளால் இன் பதமடைந்த பார்க்கவ உபாக்கியானம், நாற்பதேடேழுதாம்=நாற்பத்தேழு நல்லயாப்புகளாலாம், அன்னதாமனும் = வாதனையின் இயக்கமற்றிருந்து சூட்சியால் நான் என்னும் வாதனை உதிதமாகக் கட்டுண்டிருந்த அத்தன்மையராய தாமவியாள கடர்தம் உபாக்கியானம், ஐயெட்டு மூன்றுமாம்=நாற்பத்துமூன்று செய்யுட்களாலாம், இன்ன வீமன் = இச்சூட்சியையுணர்ந்த சம்பிராசுரனுல் ஞானத்துடன் சிருஷ்டிக்கப் பட்டு ஸ்ரீமகாவிஷ்ணுவோடும் போர்புரிந்த வீமபாசதிடர்தம் உபாக்கியானம், இருபதும் ஐந்தும் = இருபத்தைந்து கவியினங்களாலாம். (5)

துதிகொ டாசுரன் ரெல்கதை நூற்றெட்டா
மதிகெடுங் கசன் வண்கதை நாலிந்தாம்
திதியெனுங் கதை யேழுஞ் சனகன்றன்
முதிய நற்கதை முப்பது மாறுமே. (6)

(ப - ள்.) துதிகொள் = பவித்திரமான இடத்தை யக்கினிபகவான் வாயிலாகப்பெற்றுப் பெருந்தவம்புரிந்ததால் யாவருந்துதிக்கும்படி வாழ்ந்த தாசுரமுனிவரது, தொல்கதை = ஸ்ரீ வனதேவதையின் மைந்தருக்குப் பிரகரணத்து முறையேசெய்த வுபதேசம் நிறைந்த உபாக்கியானம், நூற்றெட்டாம் = அஷ்டோத்தரசத அருஞ்செய்யுட்களாம், மதிகெடுங்கசன் = அதிசூக்குமதீர்க்கபுத்தி விருத்தினுலே பரமான்மாவை தன்சொரூபமாகப் பேதபின்றித் தருமமேக சமாதியிலனுபவித்துத் தன்னேத்தவிர எங்குமே யொன்றுங்காணுத தேவதேசிகர் திருமைந்தனது, வண்கதை = அருமை யனுபூதி நிறைந்த சரிதை, நாலிந்தாம்=இருபது செய்யுட்களாலாம், திதியெனுங்கதை= திதிப்பிரகரண இதோபதேசமாய்ப் பெரியோர் சொரூபமும் நடையும் குணமும் அதிகாரி செய்யவேண்டிய கடமையும் கூறும் அரியகதை, ஏழுஞ்=ஏழு பாக்களாலாம். சனகன்றன் முதியநற்கதை = ஆகாசபலம்போலத் தெய்வ சம்பத்தால் சித்தகேதைச் சிரவணமாத்திரத்தானே வெஞ்சினக்கருடன் ஒலி

கேட்ட பாம்பென்னக் கலங்கி ஆராய்ந்து சொரூபத்தில் விசிராந்தியடைந்த சனகராஜாவினது திடஞானபோதக வினிமையான சரிதை, மூப்பதும் ஆறுமே = மூப்பத்தாறு கவிகளா லமையா நிற்கும். (6)

உரிய புண்ணிய ஞென்பது நாற்பது
நரகின் மாவலி நாலுட னேம்பதாம்
பிரக லாதன் பிழைப்பெழு பத்திரண்
டரிய காதியு மைந்துடன் மூப்பதே. (7)

(ப - ள்.) உரிய புண்ணியன் = மகா விவேகத்திற்கும் சாந்திக்கும் உரிய வஞ யிஜய சகோதரனுக் கனுக்கிரகம்புரிந்த புண்ணியன் அருள்பெற்ற பாவ னென் சம்பாஷணை, ஒன்பது நாற்பது = ஒன்று குறைய ஐம்பது பாக்களா லாம், நரகில் = பாதாளமென்பதே யறியாமற் பெரும் புண்ணியத்தையும் பேராயுளையும் பெருவலியையும் பெற்ற, மாவலி = மகாபலிச் சக்கிரவர்த்தி யென அபுத்தி பூர்வபுண்ணியத்தால் அநேகங்கோடிகாலம் அகிலத்தையாண்ட விவேகப் பிரதானனது சரிதை, நாலுடனேம்பதாம் = ஐம்பத்தினாலு பாசுரங் களாலமையும், பிரகலாதன் = எண்ணினவர்தமக்கும் விசேஷ சந்தோஷத்தை யுண்டாக்கி ஸ்ரீபகவற்பக்தி விசேடத்தால் ஐயாயிரம் வருடம் அசம்பிரஜ்ஞாத சமாதி யானந்தத்தை யனுபவித்த சிரஞ்சீவியினது, பிழைப்பு = பக்திவிசேட மும் ஆராய்ச்சியும் ஸ்ரீபகவதனுக்கிரகமும் பொலியும் புண்ணிய சரிதம், எழு பத்திரண்டு = எழுபத்திரண்டு கவிகளாலாம், அரியகாதியும் = அருமையான தவம்புரிந்து ஸ்ரீமாயவன்மிருவருளால் மாயாவிலாசத்தைக்கண்டு மாயையை யொழித்த காதிப் பிராஹ்மணரது கதை, ஐந்துடன் மூப்பதே = மூப்பத் தைந்து செய்யுட்களாலாம். (7)

சித்த மாறித் தெளிந்த வுத்தாலக
ஞெத்த வெண்பதுக் கொன்று குறையவாஞ்
சுத்த நாற்பது மாறுஞ் சுரகுவாம்
பத்து மேழுமாம் பாசவி பாசரே. (8)

(ப - ள்.) சித்தமாறித் தெளிந்த ஒத்த உத்தாலகன் = மனத்துடன் மிகவும் போராடிக் கஷ்டத்தை யடைந்து யோகவலியால் வென்று நிருவிகற்ப சமாதிபெற்றுத் தெளிந்து ஐயம் திரிபற்று சர்வபதார்த்தங்களிலும் அவற்றின் இன்பங்களிலும் வியப்பொன்றின்றிச் சமதிருஷ்டியையடைந்த உத்தாலக முனி வரது அரியகாதை, எண்பதுக்கொன்று குறைவாம்=எழுபத்தொன்பது செய் யுட்களாலமையும், சுத்த சுரகு = விவகாரவேளை யெலாம் சமாதியே பெற்று ராஜாங்கஞ் செலுத்திய தூயகுணச் சுரகுமன்னன் சரிதை, நாற்பதும் ஆறும் ஆம் = நாற்பத்தாறு செய்யுட்களாலமையும், பாசவிபாசர் = இந்நாமம் வாய்ந்த இரு நேயரும் பெருந்தவம்புரிந்து சம்பாஷணையா லரிய வுண்மை யடைந்த வரலாறு, பத்துமேழுமாம் = பதினேழு பாக்களாலாம். (8)

ஏத மற்ற வெழுபது மாறுமே
வீத கவ்வியன் மேலெழு பத்தொன்றும்
போத முந்துப சாந்தி புசுண்டனு
மோத நூறு கவியிலொன் றில்லையே. (9)

(ப - ள்.) ஏதமற்ற வீதகவ்வியன் = பூர்வம் சிவகணமாக இருந்து சர்வ பவித்திரமாகிவந்து சித்த விசிராந்தியின் பொருட்டுச் சங்கத்தியாகமும் பிராணத்தடையும் அதாற்பெறு நிருவிகற்பசமாதியு மடைந்து புற்றுமூடி வெளியான வீதகவ்விய முனிவரது உபாக்கியானம், எழுபதுமாறுமாம் = எழுபத்தாறு கவிகளாலாம், போதமுந்து=ஞானத்தினது மகிமையின் மேன்மையினாலே ஆகாச கமனதிகளுந் துச்சமெனக் காட்டும், உபசாந்தி=உபசாந்தியைத் தருமிதோபதேசம், மேலெழுபத் தொன்றும்=மேலாகிய ஞானரசம் வாய்ந்த எழுபத்தொரு செய்யுட்களாலாம். புசுண்டனும் ஓத=பிராணவிருத்தி யனுசந்தானங்கொண்டு மிகுநீள்காலம் சித்த விசிராந்தியை யடைந்திருக்கின்ற மகாயோகீசுரனுடைய பெரியமகிமைச் சரிதத்தைப் புகழ்ந்து ஓதுசுற்கு, நூறு கவியி லொன்றில்லை=தொண்ணூற் றொன்பது செய்யுட்களாலாம்.(எ-று.) (9)

தேவ பூசை சிறந்த வெழுபதா
மேவும் வில்வ மிகுபதி னாறதா
மேவ மற்ற சிலேக்கதை யெட்டதாந்
தாவி லர்ச்சுனன் சாற்றிரு பத்தொன்றே. (10)

(ப - ள்.) சிறந்த தேவபூசை = சாகூசாத்தாகப் பரமசிவனே பார்வதி தேவியாரோடும் வந்து ஸ்ரீ வசிஷ்டபகவானுக் குபதேசித்த தேகாபிமானம் விட்டுச் சித்த விசிராந்தி சாதக விசேடமான தேவபூசா பாக்கியானம், எழுபதாமேவும் = எழுபது செய்யுட்களை யுடைத்தாகும், மிகுவில்வம் = மிகுந்த மகிமைவாய்ந்த அத்விதீய பரிபூரணப் பிரஹ்ம சொரூபமே எல்லாவடிவமாகவு மிருக்கின்ற தென்றுணர்த்தும் வில்வபலக்கதை, பதினாறதாம்=பதினாறு செய்யுட்களாலாம், ஏவமற்ற = அசங்கத் தன்மையினாலே யாதொரு திருஷ்யத்தினது சம்பந்தத்தையும் மடையாம விருத்தலின் குற்றமென்பதே பற்றுமல், சிலேக்கதை = சிலேடையப்போலும் சித்தானது அசையாமல் அதாவது ஜகத் சித்திரங்கள் கோடானுகோடி தோற்றியபோதிலும் விகாரமுறுமல் அகண்டைகரசமும் நிருவிகற்பகனமுமே யுடையதாம் எனவுணர்த்துங்கதை, எட்டதாம்-எட்டுத் திருவிருத்தங்களாலாம், தாவிலர்ச்சுனன் சாற்று=போர் பெரிதுவந்தும் பூரணன்றன் நிருவருளால் எக்கலக்கமும் அடையாமல் அவ்வமராலும் சித்தவிசிராந்திமாறுத அர்ச்சுனனது வருஞ்சரிதை சாற்றுதல், இருபத்தொன்று=இருபத்தொரு செய்யுட்களாலாம். (எ-று.) (10)

சதவு ருத்திரன் றன்கவி மூப்பதா
முதவு மையைந்தோ டொன்றென்பர் பேய்க்கதை
முதுப கீரதன் மூப்பத்து மூன்றதா
மெதிர் சிஷ்வச னெண்பது மும்மையே. (11)

(ப - ள்.) சதவுருத்திரன்றன் கவி = திடசமாதியாற் சத்தியசங்கற்பத்தை யடைந்து வேண்டியதைத் தானே சிருஷ்டித்து ஜன்மபரம்பரை சங்கற்பமாத் திரமெனக் காட்டு மிம்முனிவரன் சரிதையைக் கூறுங் கவிகள், மூப்பதாம் = மூன்றுபத்தாம், உதவும் பேய்க்கதை = சர்வ சமூசயங்களையு நீக்கி விடையுத வும் படியான வேதாள மன்னசம்வாதம், ஐயைந்தோடொன் றென்பர் இரு பத்தாறு செய்யுட்களா லாமென்றறைவர் பெரியர். முதுபகிரதன் = முதிர்ந்த வைராக்கியத்தை யடைந்து அரசையும் பகைக்கீந்து முயன்று ஞானியாய்த் தவத்தாற் பாகீரதியை இம்மண்ணுலகிற் றந்த வீரராஜனது பாக்கியானம், மூப்பத்து மூன்றதாம் = மூன்றுபத்தொரு மூன்று செய்யுட்களா லமையும், ஆதிர் சிகித்வசன் = தனக்கிதத்தை யுபதேசித்த நாயகியோடு மெதிர்த்து அவள் இதோபதேசத்தை நம்பாமல் காட்டில் வருந்தித் தவங்கிடந்து அந்நா யகியாலேயே அதிதிட ஞானியான இராஜரிஷியின் றிவ்யசரிதை, எண்பது மும்மையே = இருநூற்று நாற்பது செய்யுட்களாலமையும். (எ-று) (11)

புகல் கசன் பதின்மூன்று பொய்யாமவன்
நிகழு நாலைந்து நீண்ட விரதங்கள்
இகலில் பத்தொன்ப தாமிக்கு வாகுவின்
அகில ஞான மறுபது மாறுமே. (12)

(ப - ள்.) புகல்கசன் = தன்குறைகளைப் புகன்ற கசனைநோக்கி ஆசிரியர் மனம்விடுதலே சகலமும் விடலாமெனவும் எளிதிலது முடியுமெனவும் உபதே சிக்க அவ்வாறே யியற்றிய தேவகுருமகனது சரிதை, பதின்மூன்று = பதின் மூன்று செய்யுட்களா லமையும், நிகழும் பொய்யாமவன் = அகங்காரத்தோடு கூடி விவகரிக்கும் யாவரும் துக்கியரேயெனக் காட்டும் மித்தியா புருட ஆக்கி யாயிகை, நாலைந்து = இருபது பாவினங்களா லினையும், இகலில் = சமாதியில் லாவிடினும் அகங்காராதி பகைகளொன்றுஞ் சித்த விசிராந்தியைக் கெடாத படி, நீண்டவிரதங்கள் = அதிதிடமான புத்தியாற் செய்யத் தக்கனவாமென ஸ்ரீ பரமேசுரனுற் பிருங்கீசற்கு உபதேசிக்கப்பட்ட மூன்று விரதங்களைக் கூறும் உபாக்கியானம், பத்தொன்பதாம் = பத்தொன்பது செய்யுட்களா லமையும், இக்குவாகுவின் = சர்வகாரண மியாதெனத்தேர்ந்து அறியாத இரகு வம்ச முதல்வனுக்கு மனுபகவான் அனுக்கிரகித்த, அகிலஞானம் = ஆசிரியனது ஊகத்தானே அடையத்தக்கனவான ஞான அதன் சாதனங்கள் அனைத்தை யும் பிரதிபாதிக்கும் இவ்விதிகாசம், அறுபதும் ஆறுமே = அறுபத்தாறு யாப் புகளாலமையும். (எ-று.) (12)

மானு வேடனு மற்றிருபத் தைந்தா
மான யோக மறுபது மெட்டுமா
மோன வுண்மை மொழிந்துள வாசிட்ட
ஞான நூற்கதை நாற்பது மூன்றுமே. (13)

(ப - ள்.) மானு வேடனு மற்று = மானைக்காணை மென்று பின்றொடர்ந் தேகிய வேடன் ஆங்குறை மூனிவனைக் கண்ணுற்றுக் கேட்பத் தானிருக்குந் தூரியத்தைக்கூறி இலௌகிகமறந்த தன்மையைத் தெரிவிக்கு மிக்காதை, இரு பத்தைந்தாம் = இருபத்தைந்து செய்யுட்களாலாம், ஆனயோகம் = சர்வகிரந்த சாரார்த்தத்தையும் தொகுத்துக் கூறும் கிருவாணத்தின் இதோபதேசம், அறு பது மெட்டுமாம் = அறுபத்தெட்டுச் செய்யுட்களா லமையும், மோனவுண்மை மொழிந்துள = மறுகுவாதனைகள் தீர்ந்த மவுனத்தை யொழிய வேறொருரு கதி நல்லதில்லை யுணர்வன வுணர்ந்தவாகும் என ஞானவரம்பின் சாதனத்தை சாங்கோபாங்கமாக விஸ்தரித்துக் கூறும், வாசிட்ட ஞானநூல் = ஸ்ரீ வசிஷ்ட பகவானது வாக்கியாமிருதமாயும் ஸ்ரீ மகாவிஷ்ணுவே ரூபாந்தரமாய்க்கேட்ட தாயும் உயர்ந்த ஆதிகவியின் வாக்குதித்த தத்துவமாயும் விளங்கும் ஞான சாஸ்திரங்களிற் சிகாமணிபோன்ற இந்நூலிலுள்ள, கதை நாற்பது மூன்று மே = கதைகள் நாற்பத்து மூன்றுகளேயாம். (எ - று.) (13)

பாக மார்பதி கம்பதி ஞன்கதா
மாக வேயிரண் டாயிரத் தைம்பது
மாக விக்கைந் ததிகமிவ் வாசிட்டம்
யோக ஞானத்தி னுண்மை யுரைக்குமால். (14)

(ப - ள்.) பாகமார் பதிகம் = அதிபக்குவமாக உபோற்காதமாய்; மற் றொன்று வந்து கலவாது மங்களமுட்படக் கூறும் பாயிரம், பதினன்கதாம் = பதினன்கு செய்யுட்களா லமையும், ஆக = இவையாவும் ஒருங்குசேர்ந்து, இர ண்டாயிரத்தைம்பது மாகவிக்கைந்ததிகம் = இரண்டாயிரத் தைம்பத்தைந்து ஞானரசம் வாய்ந்த மகாகவிகள் நிஷ்டூர்ந்தலங் கரிக்கப்பட்ட, இவ்வாசிட்டம் = இந்த ஞானவாசிட்ட நூலானது, யோகஞானத்தின் = அதிதிட நிருவிகற்ப சமாதியானுண்டாகும் சாக்ஷாத்காரம் அதனலெய்தும் பிரம்மானந்த மோக்ஷ முதலியவற்றின், உண்மை யுரைக்கும் = யதார்த்த தத்துவத்தைப் பிரதிபா திக்கும். ஆல் — அசை. (எ - று.) (14)

பாயிரம் முற்றியது.

ஓம் மகாகணபதயேநமஃ

நூல்

வைராக்கியப் பிரகரணம்.

ஸ்ரீ வீரசேகரம் (அவதாரிகை.)

இனிதுதொடங்க இச்சித்தகிரந்தம் இடையூறிலாது முடிபெய்துவான், பாரம்பரியமாய்ப் படித்துணருவானுகவும் இஷ்டதேவதையை நமஸ்கரிப்ப

தாய மங்களாசரணத்தை நேரேகூறிப் பொருளால் நூலால் தூவலப்பட்ட பொருளை ஸ்ரீ பகவானுசிரியர் காண்பிக்கின்றார் :—பொன். அல்லது, இணித் தொடங்கஅவாவிய பெரியநூல் இடையூறிலாமல் இனிது முடியவும், எங்கு மினிதுலாவவும் வேண்டி "மங்களத்தை முதலினும் இடையிலும் ஈற்றிலும் உடையசாஸ்திரங்கள் வீரபுருடர்களை யுடையனவாகியும் ஆயுளோடுகூடியவர் களை யுடையனவாகியும் விளங்கும்" என மகாபாஷியத்திற் கூறியதும், சுருதி யிற் செய்யற்பாலதென வுணர்த்தப்பட்டதும், யாவற்றையும் விளக்கும் அறிவு ரசம்வாய்ந்த சர்வபிரத்தியக்கபின்ன பரப்பிரஹ்ம நமஸ்கார இலக்கணம் வாய்ந்ததும் ஆகியமங்களத்தைச் செய்துகொண்டு பொருளானே சாஸ்திரத்தி னது விஷயப் பிரயோஜனங்களைக் காண்பிக்கின்றார் :—பொன்.

சம்சாரதரணி பவதாரிகை.

இனி வடநூலாசிரியராகிய ஸ்ரீ வான்மீகிபகவான் இயற்றற்கிச்சித்த கிரந் தம் கிர்விக்கினமாக நிறைவேறவும், குருசீட பாரம்பரியமாக யாவருஞ் சிர வண (உபதேச)ஞ் செய்யவும் சிஷ்டாசாரத்தாற்பெற்ற இஷ்டதெய்வ நமஸ் காரவிலக்கணமான மங்களத்தை யங்கீகரிக்கின்றார் :—பொன்.

பொன்னுல கத்தினிற் புவியி லந்தரத்
தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது
மன்னுசிற் சோதியே வடிவ மியாவுமாய்த்
துன்னுவ தப்பொருள் தொழுதிறைஞ் சுவாம்.

(பதவுரை.) பொன்னுலகத்தினில் = சுவர்க்கலோகத்திலும், புவியில் = பூலோகத்திலும், அந்தரத்து = பூ சொர்க்கமத்திய அந்தரிக்ஷலோகத்திலும், என்னுடைய = எனது, உட்புறத்து = உள்ளிலும் வெளியிலும், மன்னு = விபு வாயுறையும், சிற்சோதியே = (எந்த) ஞானவடிவமாகிய ஆன்மா, இலங்குகின் றது = விளங்காநிற்குமோ, வடிவம் யாவுமாய்த் துன்னுவது = சர்வான்மகமா கச் செறிகின்றதோ, அப்பொருள் = அவ்வான்மாவை, தொழுதிறைஞ்சுவாம் = மீண்டும் மீண்டும் வணங்குவோம். (எ-று.)

விசேஷ உரை.

(ஸ்ரீ-வீ-ம்.) எது என்பது பிரசித்தப்பொருளை யியம்புதலான் ஆன்மாப் பிரசித்தமாகவிருத்தலின் ஆன்மா விசேடியமாகச் சம்பந்திக்கும், எனவுணர்த் தற்பொருட்டு எந்தஞானசொரூபமெனப்பட்டது; எவ்வான்மா எனக்குணர்த் தியவா றிலங்குகின்றதோ அதன்பொருட்டு நமஸ்காரமாமெனவுணர்க. அதன் வடிவமறிவிப்பான் அறைந்ததாம் சிற்சோதியென்பது. சிற்சோதி = யாவையு மிலக்கும் அறிவுவடிவமாம். தேசபரிச்சேதம் இன்றென்றுணர்த்தியது மன் னுமென்றது, சகலதேச வியாபியாமென்க. வியாபகத்தைச் சாதிக்கின்றது

பொன்னுலகத்தினிற் புவியிலந்தரத்து என்பது. தொகுத்துவகுத்துச் சொல்லியபொருள் கேட்போர்மதியில் எளிதாக ஏறுமென வெண்ணி விஸ்தாரமாகப் பிரதிபாதித்தபொருளைச் சுருக்கிக் காட்டுகின்றது உட்புறத்தென்றது. அல்லது லோகத்திரயத்திலும் உள்ளிலும் வெளிபிலும் யாதிலங்குகின்றதோ அதன்பொருட்டு நமஸ்காரம்; "உள்ளும்புறம்பும் அவையாவற்றையும் வியாபித்து நாராயணர் விளங்குவர்" என சுருதியுமறைகின்றது, "பூதங்களி னுள்ளிலும் புறம்பிலும் அசரத்திலும் சரத்திலுமே பரமனுளன்" எனமிருதியு மறைகின்றது. இத்தகைய ஆன்மசொரூபத்தில் ஞானிகளினனுபவமே பிரமாணமாமென ஸ்ரீ வான்மீகிபகவான் குறிப்பிக்கின்ரூர் எனக்கிலங்குகின்ற தென்பதாக; அற்றேல் ஆன்மாவிற்கயலாய்ப் பொருள்களிருத்தலின் பொருள்களினுலே பரிச்சேதம்வருமேயெனின், வாராதாம், வடிவமியாவுமாய்த் தன்னுவதாதலின், கற்பிதமாய சர்வதுவைதப்பிரபஞ்சத்திற்கும் வெள்ளிக்கிப்பியேபோல வடிவமாக எந்தப்பரமாத்மா விருக்கின்றதோ அதன்பொருட்டு நமஸ்காரம், வஸ்துபரிச்சேத நிராகரணஞ் செய்தமாத்திரையானே ஆன்மாவிற்குக் காலபரிச்சேதமும் நிராகரிக்கப்பட்டதேயாமென வுணரற்பாற்ரும்; காலத்திற்குமுண்மையாகத் தன்னிடத்திற்கற்பிதமாந் தன்மையுண்மையின் ஆன்மா இருப்பு விளக்கங்கொடுத்தலின் ஆன்மாவை யது பரிச்சேதப்படுத்த முடியாதாம். அல்லது, விளங்காநின்ற லிங்கசரீரத்திலும் பூமிகாரிய தூலசரீரத்திலும் அவ்யாகிருத ஆகாச தோன்றிய காரண சரீரத்திலும் அவற்றின் சாக்ஷி வடிவமாக யாது ஒளிர்கின்றதோ அதற்கு நமஸ்காரம்; பிறமுன்போலவேயாம். "அண்ணியனிவனே யண்ணியன் யானே என்னத் தேவதை யெவனுபாசிப்பனே, அன்னவன் சிறிது மறிந்திலனந்தோ, இன்னவன் றெய்வப் பசுவென வியம்பலாம்" என்னும் சுருதியினுலே ஆன்மாவிற் கயலாகத் தேவதையைக் காணில் நிந்தை காணப்படுதலினுலும் "ஆன்மாவே தேவதை யாவெவர்க்கடமக்கும்" என்னும் மனுமிருதியினுலும், ஆன்மாவையே யிஷ்டதேவதையாக நமஸ்கரித்தனரென வறியலாம். அல்லது, பரமான்மா விசேடியமாகச் சம்பந்திக்கின்றதாம், எப்பரமாத்மா வென்பதாக; அதற்கு ஜீவசரத்தன்மையானே பிரசித்தமுண்மையின் அதற்கு ஜீவர்களிடத்தினின்றும் வேற்றுமை நீக்கப்படுகின்றது வடிவமியாவுமா யென்பதால், சர்வஜீவர்களின் பரமார்த்த சொரூபமாயிருக்கப்பட்டதன் பொருட்டு நமஸ்காரம், மற்றவை சமானமாம். அல்லது பூமியாகாசமென ஆதியந்தங்களைக் கவர்தலான் மத்தியிலிருக்கும் மூப்பூதமும் சூக்ஷ்மதன்மையாயங்கொண்டு கவர்ந்ததேயாம், காரணபூதக் கவர்ச்சியாலே காரியமுமாம், ஆகவே பொருளிதுவாம்:—ஆகாசாதி ரூபபூதபௌதிகங்களிலும், கூக்ஷ்மதிரஞ்ஞவடிவமாக வுள்ளிலும் சம்சாரத்தின் வெளியிலும், தனது மகிமையிலும் யாது விளங்குமோ அதற்கு நமஸ்காரம். "இதனது பாதமொன்றே இகபர வுலகங்கள், பதமது மூன்றே நற்பர வறிவமுதந்தான்" எனச் சுருதியுமுளதாம். ஆக விங்ஙனம் மூவித பரிச்சேத ரகிதமாய் நித்திய அத்விதீய பரிபூர்ணமாய் சிதான்

மகமாயிருக்கும் வஸ்துவே சாஸ்திரங்களாற் பிரதிபாதிக்கப்பட்டதாம் எனக் காண்பிக்கப்பட்டதென்றுணர்க. மற்றும், சுவர்க்கத்தில், பூவுலகில், அந்தரிக்ஷ லோகத்தில் அதிபூதத்தில், அத்தியாத்மத்தில், அதிதைவத்தில், எவ்விபுவான வர் ஞானவடிவமாக எனதறியாமையால் எனக்கிலங்குகின்றாரோ, உண்மை யாயோ இலங்கும் வடிவதாய் நிர்விகார சின்மாத்ர இயற்கையதாய எல்லாவற் றின் வடிவாய அதன்பொருட்டு நமஸ்காரம். அல்லது, பிருதிவி பூர்வரூபம் துறக்கம் உத்தரரூபம் என்னுஞ் சுருதியிற்போல, ஈண்டும் பொன்னுலகத்தில் = பிரஹ்மாண்டத்தினது மேற்கபாலமாகிய சுவர்ணமய வத்துவில், புவியில் = கீழ்க்கபாலமாகிய வெள்ளிமய்வத்துவில், அந்தரத்து = அவ்விரண்டன் சந்தி யாகிய சூக்ஷ்ம ஆகாசத்தில், பிரஹ்மாண்டத்தின் வெளியிலும் உள்ளிலும் யாது விசேடமாக = சூரியசந்திர அக்கினி வாக்கு முதலியவற்றினும் அதிசய மாக, சுவப்பிரகாச அபரிச்சின்ன இயற்கையானே யாதிலங்காகிற்குமோ! அஃதெங்ஙனமெனின், "இவ்விலங்காகின்ற ஆன்மாவானது சூரியாதிகளையும் விளக்குவதும் அவற்றின் வடிவமும் ஆகுமாதலின், எதனைச் சூரியன்றபிக்கின் றானே தேயுவொளிர்கின்றதோ, ஆன்மாவே யிதனது ஜோதியாம், ஜோதி களுக்குமது ஜோதியாகும்" என்பதாதி சுருதி பிருதிகளானே யெனவுணர்க. எல்லாவஸ்துக்களினது பாரமார்த்திக சொரூபபூதத்தின் பொருட்டு நமஸ்கா ரம். அல்லது, பொன்னுலகத்தில் = இலக்குவிக்கும் ஏகரசம் வாய்ந்த பூமா னந்த வடிவ துரியவடிவமத்தில், இரண்டவஸ்தைகளி னுற்பத்தி பூமியில், அவ் வியாகிருத ஆகாசத்தில், வெளிப்பிரஞ்ஞைப் போக்கியமாகிய ஜாகரத்தில், உட்பிரஞ்ஞைப் போக்கியமாகிய சொப்பனத்தில், அவற்றின் சந்திகளாகிய மரண மூர்ச்சை முதலிய அவத்தைகளிலும் யாது நானவிதமாக இலங்குகின் றதோ, தூலசூக்குமகாரண அபிமானியாகவும், அவற்றின் போக்தாவாகவும் அவற்றின் சாக்ஷியாகவும், நிஷ்பிரபஞ்ச பூர்ணானந்த சின்மாத்ர இயற்கையதாக வும், விளங்குகின்றதோ என்பதாம். ஆயினென், நானு இரசமேயின்றுவெனக் கடாவிக் கூறுகின்றார்:—இலங்கும் வடிவது=அறிவுமாத்திர இயற்கையது. திருஷ் யமானது திருக்குமாத்திர வடிவமாய்த் திருக்கினும் வேறுக இராமையின் அவித்தையோடு கூடியதும் அவித்தையற்றதும் ஆகிய எல்லா வடிவத்தின் பொருட்டு நமஸ்காரம். அல்லது, பொன்னுலகத்தினில் = சர்வஞ்ஞத்தன்மை முதலியவற்றின் சம்பத்தாண்மையின் இலங்காகின்ற காரண வுபாதியின் கண்ணே, புவியில் = கருமபீஜமுண்டாகும் பூமியாகிய காரிய வுபாதியின் கண்ணே, அந்தரத்து = எங்குமிலங்காகின்ற சொரூப மிகப்பிரகாசத்தில், அஸ்வ ஜீவன் முக்தி தசையில், வெளியில் = நிருபாதி சொரூபத்தில், உள்ளில் = காரியகாரண வுபாதியுள்ளடங்கிய மாயாந்தக்கரணவிருத்தி பேதங்களிலும், எவ்விளங்கு மியற்கையுடையது விளங்குமோ சருவ உபாதிசாரமாய அவ்வான் மாவின் பொருட்டு நமஸ்காரம். அல்லது, விளக்கும் வடிவதேஜசில், பிருதிவி யில், விண்ணில், உள்ளடங்கிய நீர் காற்றுகளில், பகிர்ப்பூதமாகிய அவ்வியா

கிருதத்தில், நிருபாதிகத்தன்மையானே சப்தாதிகட்குத் தகுதியல்லாத பார மார்த்திக வடிவத்திலும் யாது தொடர்ந்து நின்று சன்மாத்திர வியல்பதா யிலங்குமோ அதுவே இலங்கும் பிரத்தியக்காண்மாவாம். அச்சர்வவடிவமாகிய பூர்ணனந்த சொரூப என்பொருட்டு நமஸ்காரம். அல்லது, தேவலோகத்தில்= வெளியே தடஸ்தமாகப் பூஜ்யதேவதா ஈசுராதிவடிவமாக, புவியில்=உள்ளே, உடம்பிலிருப்பாய்ப் பூஜகவடிவமாக, ஆகாயத்தில்=இரண்டனிடையில் கிரியா பலசாதனாதி வடிவமாக, என்னுடைய வடிவம், விளங்காத காலத்தில் பரிச்சேத மாகி வேறுக விளங்கினும் யாது இப்போது தத்துவதிருஷ்டி யுதயத்தானே வெளிப்படையாய் விளங்கும் வடிவதாய, மூவிதபரிச்சேத சூனியவிபு, வெளிப் படையாய் விளங்கும். அத்தகைய பூர்ணனந்த வடிவின்பொருட்டு நமஸ்கா ரம். அல்லது, மேல் கீழ் இடையில் கிழக்குமுதலிய திசைகளில், உடம்பினுள் பூர்வோத்திரகாலங்களில் எவ்விலங்குமான்மாவாகிய சிதேகரசமானது தத்துவ வித்தாகிய எனக்கு விளங்குமோ, "ஆன்மாவே கீழும் ஆன்மாவே மேலும்" என்பதாதி சுருதியினனே யென்க; ஆன்மாவே இவ்வி யாவுமென்னும் சர்வ பிரபஞ்சபாதத்தால் எஞ்சி நிற்பதாய பரமான்மாவின்பொருட்டு நமஸ்காரம். இவ்வாறு வேறுபொருள்களும் மதிவைபவப்படி ஊகித்துக்கொள்க. ஈண்டுப் பொருளால் அவ்வகையாய அறியப்படாத பிரஹ்மமே சாஸ்திரத்தின் விடய மாம். ஞானத்தால் அவ்வடிவமாய் நிலைபெறுதல் பரமநிர்வாண ரூபமாகிய பிரயோஜனமாம் எனக் குறிப்பிக்கப்பட்டது. மேலும்மேலும் இதுவே வெளிப் படையாய்க் காட்டப்படும்.

சமூசார தரணி.

ஆத்மாவே யீதனைத்துமென்னுஞ் சுருதியினாலும், அடியுமுடியுமிலாச் செயப்படாவுணர்வே தெய்வமென மேற்றேவபூஜையிற் கூறுதலானும் ஆன் மாவே யிஷ்ட தெய்வமாம். அத்தெய்வத்தியல்பே சிற்சோதி யாதலினாலும், சர்வாத்மகமாதலினாலும், பொன்னுல்கென்பது முதலானதால் உலகத்தியத் தினும் வியாபித்திருத்தல் சொல்லப் பட்டது. உட்புறத் திலங்குகின்றது என் பதனாற்றிருக்கு ரூபத்தாலுந் திருசியரூபத்தாலும் பிரத்தியகூமாகவே ஆத்மா வின் சொரூபம் பிரகாசிக்கின்ற தென்றியற்று. சிற்சோதியே யென்பதனால் ஞானசொரூபம் ஆத்மாவென் றிலக்கணங் கூறியதாம். அன்றியு மூட்புறத் திலங்குகின்றது என்பதனாற்றனும் பிரகாசித் திதரங்களையும் பிரகாசிப்பித்த லின் பிரகாசமான இவ்வாத்மாவின்கண் சொரூபத்துக் கிதரமான மற்றோர் பிரமாணமும் அபேக்ஷிக்கப் படாதாம் எனக்குறிப்பித்ததாம். இதற்குப் பிர மாணம்.—அதன்கட் சூரியனு மிலங்கவில்லை, சந்திரனுந் தாரகையு மிலங்க வில்லை, இம்மின்னல்களு மிலங்காதனவாம் அக்கினியெங்கே யிலங்கும் இலங்கு கின்ற அதனையே யனுசரித்துச் சர்வமுமிலங்குகின்றன, அதனது விளக்கத்தா லீதனைத்தும் விளங்குகின்றன—என்றும், விஞ்ஞானரூபனை, பெண்ணே எதனு

லறியலாம்—என்றும், எப்படிச் சுருதிகூறுகின்ற தப்படியே சுவானுபூதி யையே முக்கியப் பிரமாணமாக வுடைய சாந்தமான தேசசுக்கு நமஸ்கார மென்று பர்த்ருஹ்ரியானுங் கூறப்பட்டிருக்கின்றது. (1)

நூற் பெருமை.

திகழுஞான் முகன்முதற் றேவர் மூவருஞ்
சகலவே தங்களும் சாத்தி ரங்களும்
புகலுஞா னத்தினுற் புரண மானது
நிகரில்வா சிட்டமா நிபுண ஞானநூல். (2)

(ப - ரை.) திகழுஞான்முகன் = ஸ்ரீ வசிஷ்டர் மரீசியாதி சகல முனிவர்கட்கும் ஞானசிரியராய் விளங்கும் நான்கு வேதங்களையும் நான்குமுகத்தாலருள் புரியும் பிரஹ்மா, முதல் = முதலிய, தேவர் மூவரும் = பிரஹ்மா, அருச்சனற்கும் பிரஹ்மாதிகட்கும் அருளும் மகாவிஷ்ணு, சனகாதிகட்கும் பிருங்கிரிபு முதலியவர்க்கும் அம்பிகை நந்தி முதலியவர்க்குந் திருவருள் புரிந்தமாகாதேவர், என்னும் முத்தேவரும் அருளிய கீதாத்திரயங்களும், சகல வேதங்களும் = கருமம் பக்தி ஞானமென்னுங் காண்டத்திரய வடிவமாய் அநேகமாயிரம் சாகைகள் நிறைந்து விரிந்த தருமத்தையும் பிரஹ்மத்தையும் பிரதிபாதிக்கும் அபௌருஷேயப் பரமப்பிரமாண வாக்கியங்களின் வடிவமான சுருதிகளனைத்தும், சாத்திரங்களும் = அவ்வேதங்களையே யாதாரமாகக்கொண்டு மகரிஷிகளாலே செய்யப்பட்ட அநேகம்ஸ்மிருதி யிதிகாச அத்யாத்மசாஸ்திரங்களும், புகலு ஞானத்தினுல் = பிரதிபாதிக்கப்பட்ட விஸ்தாரஞான ஞான சாதனங்களால், நிகரில்வாசிட்டமாநிபுண ஞானநூல் = தன்னிடத்திலேயே சகல கிரந்தங்களின் அருத்தங்களுமிருத்தலின் உவமையற்றுப் பிரஹ்மபுத்திரவாக்கியமிருதமாய்ச் சகலமாண்பானும் அலங்கரிக்கப்பட்டு மிகவுமாழ்ந்து கம்பீரமாய் மகத்தான தீரபுத்திகட்கே சாத்தியமாய் விளங்கும் இந்த ஞான வாசிட்ட நன்னூலானது, புரணமானது = பூரிக்கப்பெற்றுப் பொலிகின்றது. (2)

தலைமைநான் முகன்மனத் தாமணிக் கினன்
சிலையில்ரா கவன்றிருச் செவிக்குத் தெள்ளமு
துலவில்வான் மீகிவாக் குதித்த தத்துவ
நிலைமைவா சிட்டமா நிபுண ஞானநூல். (3)

(ப - ரை.) தலைமை = பிரஹ்மாண்டம் அவரது நுகர்வினைப்பயனுதலின் இதன்கண்ணியாவருக்குமே பிரதானமாயிலங்கும், நான்முகன் = நாற்றிசையினும் படைக்கச் சதுர்வதனங்களையுடைத்தாய் பிரஹ்மாவினது, மனத்தாமரைக்கு = திருவுள்ளமாகிய தாமரைமலருக்கு, இனன் = அலர்ந்தபோன்றதாம், மனத்தாமரையை மலர்த்தமைந்தன் மதலைமொழி மாண்புடைத்தேயாம், சிலையில் = வில்வித்தைக்கில்லமாயிருப்பவரும், சிரவணிக்குங் காலத்தில் ஆத்தாதிபணி

விடைகளே மேற்கொண்டொழுகலின் சிலையில்லாதவரும், சிலையாகிய அகலிகை யைத் தமதுதிருவடிப்பரிசத்தான் மீண்டும் கௌதமர் இல்லத்திற்குத் தருமபத்தினியாக்கியவரும், அவர் வைராக்கியப் பிரகரணத்திற்கூறிய சில ஐயங்கள் உண்மையி லில்லாதவராயிருந்தும் இருப்பதுபோ னடித்தவரும், ஜடஇயற்கை யின்றிச் சந்ததம் சேதன இயற்கையையே யுடையவரும், சீதாபிராட்டியை யுத்தேசித்துக் கோதண்டச் சிலையைச் சிதைத்தவரும், ஸ்ரீ வசிஷ்ட உபதேசானந்தரம் சிலைபோல நிருவிகற்பசமாதியை யடைந்து காஷ்டலோஷ்டம் போலானவரும், அசங்கமா யசலமா யிருக்குந் தம்மிடத்தி லுண்மையில் ஜீயாதொரு ஆரோபமுமில்லாதவரும், மேலும் அநந்தவிதமான கல்யாண குணங்க ணிறைந்தவரும், ஆகிய இராகவன் = ஸ்ரீ காமதேனுவின் கன்றுகிய நந்தினியின் திருவருளால் வந்து மகாதீரவீரரு யிந்திரனையும் வெற்றிகொண்டு குருதக்ஷிணை கொடுக்கும் நிமித்தம் யாகானந்தரம் அடைந்த குமரனை யுத்தேசித்துக் குபேரன்பேரில் படையேவிய இரகுவினது உத்தமோத்தம குலத்தவதரித்த ஸ்ரீ இராமச் சந்திரரது, திருச்செவிக்கு = இலக்குமிதேவியின் அமிருத மொழிகளே யெப்போதுங் கேட்டுக்கொண்டிருக்கும் அழகிய சுரோத்திரங்கட்கு, தெள்ளமுது = பாற்கடலினுதிதமாய அமுதமும் கற்பாந்தபரியந்தமே வாழ்க்கை நல்குமாதலின் அதனினும் மிகத்தெளிவுற்ற இது அழியாத பரமபதத்தையே கரதலாமலகம்போலத் தருதலின் பரமாமிருதமானதாம், உலவில்வான்மீகி=முன்னனேககாலம் ராமஜபத்தாற் றவம்புரிந்து கெடாத வித்தையையும் பிரஹ்மவித்தையையு மடைந்திருந்து திருமேனி புற்றுன்மூடப் பட்டு புற்றினுள்ளேயே ஸ்ரீ ராமசரிதங்கூறிய ஆதிகவியாகிய மகாமுனிவரர்தம், வாக்குதித்ததத்துவம்=திருவாக்கியாமிருதமாய் வெளிப்பட்டு அநேகதத்துவங்களையும் சாகித்ய நவரசங்களையும் பொழியும்பெருமைவாய்ந்ததாம், இத்தகைய விசேடங்கள் வாய்ந்தது யாதுகொலாமாலோவெனின் ? நிலைமை= சொரூபத்தின் யதாஸ்திதியையும் சாதகமாகிய சர்வஞானநிஷ்டைகளையும் நித்திய மோக்ஷத்தையும் அனுக்கிரகம்புரிவதில், மா = மாக்ஷிமைதங்கிய, வாசிட்ட நிபுண ஞானநூல் = ஸ்ரீ வசிட்ட ராமசம்வாதமாகி அதிவிததகன கம்பீரமான இந்தஞானசாஸ்திரமேயாம். (எ - று) (3)

பெரிய வரறிவுறு பெருமை சான்றது
விரிவுறு சிறியவர் மேவொ ணாதது
வரிசையி லுயர்ந்தது வசிஷ்ட சங்கிதை
யரியமெய்ஞ் ஞானநூ லனைத்தின் மிக்கதே. (4)

(ப - ரை.) பெரியவரறிவுறு = சாதனங்கள் நான்கும் நிறைந்து சிசுருஷை சிரவணாதி தொடங்கியெப்போதும் ஆந்தரவிருத்தியிலும் சித்தவிசிராந்தியிலும் விருப்பமிகுந்து பரீக்ஷியாகிச் செயற்கரியசெய்யும் மகான்கள்மாத்திரம், அறிவுறுத்த ஆசிரியர் அரிதிலெளிதிலறிந்து கொள்ளும்படியான, பெருமைசான்

றது = அத்தகைய மேன்மையுடைத்தான் பிரதிபாதிக்கும் சூக்குமப்பொருளால் உடையதும் ; விரிவுறு = விடயங்களிலிந்திரியங்களே இஷ்டப்படிபோகுமாறு செலுத்திப்பின்னேகி மொத்துண்டலையும், சிறியவர் = அற்பமதியும் அற்ப முயல்வும் அதைரியமும் நம்பிக்கையின்மையும் தேகான்மமதியும் பிரபஞ்சசத் தியபுத்தியும் உடைத்தாகி மோக்ஷ ஆவலின்றிய அற்பர்கள், மேவாணைத்து = சிறிதுங்கிட்டிக் கரத்தினுந்தீண்ட அருகமல்லாததும் ; வரிசையிலுயர்ந்தது = ஞானப்பொருள்களையும் கதைமேற்கதைகளையும் உபாக்கியானத்துள்ளுபாக் கியானங்களையும் திருஷ்டாந்தங்களையும் ஊகங்களையும் ஆரோபஅபவாதக்கிர மங்களையும் ஜகன்மித்தியாத்துவத்தையும் பரமாத்ம சாக்ஷாத்காரத்தாலெய் தும் பரமானந்தத்தையும் சமாதிகளையும் போகங்களையும் பிறவற்றையும் அடுக்காக அடுக்காக அறைவதும், எல்லாஞானநூல்களிலும் பரமப்பிரமா ணமா யெடுத்துக்காட்டாய் நின்று மிகவும்பூசிக்கத்தக்கதும் ; ஆகிய, வசிட்ட சங்கிதை = ஸ்ரீவசிஷ்டபகவானது இனிமையைத் தருமிதோபதேசம், அரிய மெய்ஞ்ஞான நூல் = அதிதூலபமாகி யாச்சரியம்போற் கண்டுங் கேட்டும் பேசியு மனுபவித்தும் வரும் மெய்யான சிதானந்த பூரணத்தைப் பிரதிபாதிக் கும் வேதாந்த சாஸ்திரங்கள், அணித்தின்மிக்கதே = யாவற்றுள்ளும் சர்வார்த்த போதகமாதலின் மிகவும் உயர்ந்ததே. (எ - று) (4)

தெருளுறு மகர்க்கிதஞ் செய்யு மன்பினு
லருமைவா சிட்டநூற் கன்னே யொப்பளோ
வுரியதாய் பிறவியை யுள்ள தாக்குவள்
பெருமைவா சிட்டமிப் பிறப்பை மாற்றுமே. (5)

(ப - ரை.) தெருளுறுமகர்க்கு = ஞானத்தையடையவேண்டுமென்று மிக வும்முயல்வையுடைய முமுக்ஷுக்கட்கு, இதஞ்செய்யுமன்பினால் = பக்குவ நோக்கி யவரவர்க்குத்தக்கபடி இதோபதேசம் செய்யாகின்ற கருணையைச் சீர்தூக்கிப்பார்க்கின், அருமை = சொல்லாலும் பொருளாலும் மிகவும் அருமை வாய்ந்த, வாசிட்டநூற்கு = ஸ்ரீ வசிட்டகீதமாய் மனக்கோட்டம்மாற்றும் இச் சாத்திரத்திற்கு, அன்னையொப்பளோ = பெற்றுவளர்த்திடும் பெருங்கருணைத் தாய்தானும் சமமாவளோ, ஆகாள் ; என்னே, உரியதாய் = சரீரத்தைப் போற் றற்குத்தக்கதாய், பிறவியை = ஜனனமரணசமூசாரத்தை மேலும் மேலும் மனவிமக்களாதி வாசனையையுண்டுபண்ணி விருத்தியே யடையுமாறு செய்து வைப்பள், பெருமைவாசிட்டம் = திருசிய தோடத்தையகற்றிச் சனனமரண சமூசாரமகற்றுவதில் மிகுவலியுடையதாய் பெருமைவாய்ந்த ஆசிரியர் வசிட்ட ரதுபதேசம், பிறப்பைமாற்றுமே = ஜனித்தற்குமூலமாய வாசனைக்கிருப்பிட மான அவித்தையையே யில்லாமற்செய்யும் ; செய்யவே அன்னையுவமையாகா ளாம். (எ - று) (5)

அவையடக்கம்.

எண்ணுறு பெருங்குணத் திராமன் றன்மய
நண்ணுற வசிட்டனே நவின்ற ஞானநூல்
பண்ணுறு தமிழினிற் பாடுகேன் சுதை
மண்ணுறு கலத்தினும் வைக்கு மேழையேன். (6)

(ப - ரை.) எண்ணுறு = அநந்த நல்லகல்யாணகுணங்களும் தம்மிடத்து மூந்திவரவுத்தேசித்துப்பரஸ்பரம் பொருமையுற்று நின்றனவெனவெண்ணத் தக்கனவான, பெருங்குணத்து = அரும்பெரும் பொறுமையாதி யளவின்மகத் தான குணங்கட்காஸ்பதமாக விலங்கிய, இராமன் = சந்ததம் சொரூபத்தின் கண்ணேயியல்பாகவே இரமித்துத் தம்மைபடைந்தவரையும் சொரூபாநந்தத் தில் இரமிக்கச் செய்பவராயிருந்தபோதினும் அதிகாரி போனடித்த ஸ்ரீ இரகு குலதிலகன், தன்மயம் நண்ணுற = இயல்பாகவே சித்தித்திருக்குந் தன்னுடைய சைதன்ய இயல்பை ஞாபகஞ்செய்துகொண்டு அதன்கண்ணே சதாசுகிக்க, வசிட்டனே = சூரியகுலகுருவாயும் திரிகாலஞ்ஞராயும் சர்வசாஸ்திர சுதந்திர ராயும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பிரஹ்மாவின் மானசீய புத்திரரே நேராகத் தமது வாக்கியாமிருதத்தால், நவின்றஞானநூல் = ஸ்ரீ இராமச்சந்திரரை முன் னிலைப்படுத்தி அனேத்தாய அதிகாரிகட்கும் அமலஞானமுண்டாகப் பொழிந் தருளிய அரியபெரிய இந்தஞான சாஸ்திரத்தை, சுதை = ஸுரோத்தியரிற் கடைந் தெடுத்த தேவாமிருதத்தை, மண்ணுறுகலத்தினும் = மண்ணுலாய சாமானிய பாத்திரத்தினும், வைக்கும் = வைக்கும்படியான உயர்வுதாழ்வின் பகுப்பிலாத, ஏழையேன் = அற்பஅறிவினனுகிபயான், பெரிய மகரிஷியின்திருவாக்கியா மிருதத்தை, பண்ணுறு தமிழினற் பாடுகேள் = அநேகவித சந்தங்களோடுகூடிய செந்தமிழ்ப்பாஷையில், என் புன்கவியாற்கொள்வ தவடிறமையன்றேயென்ற அருமைத் தந்தைவசனம்போல என்அற்ப செய்யுளாகிய மட்கலீத்தில் வைக் கின்றேன் குணமேகொள்க. (எ - று) (6)

அதிகாரியையறிவித்தல்

ஸ்ரீ வீரசேகரம் அவதாரிகை.

நூலின்முதலில் கேட்பவனுக்குப் பிரவிருத்தியுண்டாகுமாறு செய்விக்க விடயத்தைக்காண்பித்து அதிகாரியைத் தரிசிப்பித்துக்கொண்டு பிரயோஜன சம்பந்தங்களைக் குறிப்பிக்கின்றார்:—பந்த. மற்றும், இனியிந்நூலின் கண்ணே அதிகாரியாவன், அறியாஞ? அறிவுடையவனு? ஆதியனல்லன், அவனுக்குத் தேகாதிகளிடத்தில் ஆன்மமதிதிடமாக விருத்தலினும், ஆசையதிகரித்திரு த்தலினும், முமுக்ஷுத் தன்மையில்லாமையின் ; விடங்களித்திற்றேடதரி

சனத்தாலும், ஜனனமரணாதிதுக்கதரிசனத்தாலும் அவனுக்கே வைராக்கிய உதயஇச்சையால், முமுக்ஷுத்தன்மையுண்டாகி, அதிகாரமாமென்னற்க; இராகமுடையவர்கள் மிகவும்விடயங்களே இரக்ஷிப்பதாகக் காணப்படுதலின் விடயங்களிருக்கும்போதே அவற்றிலுள்ள தோடத்தை நீக்கு முபாயத்தை முயல்வதுடன் நல்லநல்ல விடயங்களேயும் தேடுதலின் இகலோக சம்பந்திபர லோகசம்மந்தியுபாய இச்சையோடு முயலுதலின்என்க. அறிஞனுமாகான், அவனுக்குக் கிருதகிருத்தியத்தன்மை யுண்மையினாலே கிரந்தத்தாற் சாதிக்கப்பட்ட பிரயோஜன ஆசையின்மையினாலே கிரந்தத்திற் பிரவிருத்தி கூடாமையின் என வினவிசிஷ்டஅதிகாரியை காண்பிக்கின்றார்:—பந்த.

சமுசாரதரணி பவதாரிகை.

இஷ்டதெய்வத்தை வணங்கி யதிகாரியைத் தெரிவிக்கின்றார்:—பந்த.

பந்தமுற் றனன்பர பதத்தைச் சேர்கவென்
றந்தநிச் சயமுளா னறிவிலா னலான்
சிந்தனைத் துயர்கெடச் சித்தைச் சேர்ந்துளா
னிந்தநூற் குரியவ னென்று கொள்கவே. (7)

(ப - ரை.) பந்த முற்றனன் (நான்)=நான் பந்தத்தை யடைந்திருக்கின்றேன், பரபத்தை=மேலாகிய மோக்ஷபதத்தை, சேர்கவென்று=இனியடைய வேண்டு மென்று, அந்த=அம் மகிமைவாய்ந்த, நிச்சயமுளான்=நிச்சயத்தை நன்றாகவுடைய முமுக்ஷுவே, இந்த நூற்கு = இந்த ஞானசாஸ்திரத்திற்கு, உரியவன் = பொருந்திய அதிகாரியாவன், என்றுகொள்க = முத்திவாஞ்சை யுண்டா யிருத்தலின் இந்திரியங்கள் விடயங்களி னின்றும் அவசியம் உபாதி யடைந்திருக்கும் இருக்கவே இக பரபோக வைராக்கிய மின்றியமையாது எய்தியிருக்கலாம், ஆகவே நித்தியமின்னது அநித்தியமின்னது என்னும்பகுப்பும் ஒருதலையாக வுண்டாகி யுளதாமென்க, எனவே நான்கு சாதனமுடைய வனே இந்நூற் கதிகாரியானன் என்று மனதிற் கவர்ந்து கொள்க. அறிவிலான்=அஞ்ஞான மிகுந்தவனும், அலான் = அதிகாரி யலன், சிந்தனைத்துயர் கெட=சங்கற்பதுக்க நீங்க, சித்தைச் சேர்ந்துளான் = சைதன்யான்மகமான தன்னை யுணர்ந்த ஞானியும், அலான்=அதிகாரியலன், என்று கொள்க=என் றுணர்தற்பாற்று. (எ - று.)

(ஸ்ரீ - வீ.) பத்தன்யான் வீடுபடவேண்டும் என எவனுக்கு நிச்சயமதி யுளதோ அவனிந்த நூலில் நூற்கேட்கு மதிகாரமுடையவ னென வறிக. அவனுக்குக் கேட்குதலாதியின் சாதகமாக ஆரம்ப விவேகம் வேண்டுமெனக் காட்டுகின்றார்:—அறிவிலானலன் என, சித்தைச் சேர்ந்துளான்=அதனை யுணர்ந்தவன் எனப் பொருள்படும் தத்ஞன் என்பது மூலபதமாம், அலன் = நோ,

ஒருங்குகூடி (நோ)தத்ஞன் எனவாம், ஆகவே, தீ அது என்பது பிரஹ்மமெனப் படும், ஓம் தத்சத்தென்னும் நிர்த்தேசம் பிரஹ்மத்தை மூவிதமாய்க் கூறியது என்னு மிருதியினல்; அதனையுணர்ந்தவன் தத்ஞன் பிரஹ்மவித்தாவன், நோத த்ஞன் என்பதில் ந-உத-ஞ-என்றேனும் பதப்பிரிவு செய்யலாம், உம்மைப் பொருளில் உத, வரும், வரவே ஞோபிந=அறிஞனும் அலன், பிரஹ்மத்தைப் பெரிதறிந்தவனும், பெரிதறியாதவனும் கேள்வியாதியில் முயலுதல் கூடாமை யின் சிறிது விவேகியே யதிகாரியாவன். பரபதத்தைச் சேர்க வென்பதனல் பந்தநீக்கம் இந்நூலின் கேள்வியாலுறும் பயனுமெனக் குறிப்பிக்கப்பட்டது. அறிவிலான் அலன் என்பதாதியாலும் சாஸ்திர பிரஹ்மங்கட்குப் பிரதிபாத் திய பிரதிபாதகபாவ வடிவ சம்பந்தமுளதாமென அறிவித்ததுமாகும். மற் றும், அத்தியந்தம் அஞ்ஞனும், அறிஞனும், இந்நூலின் கண்ணே அதிகாரிக ளல்லர்; மற்றிரு, யான்பத்தன் = இச்சம்சாரத்தில் அநாதிகாலந் தொடங்கிச் சிறையிற் கட்டுண்டு கிடப்பவனைப் போலப் பரிச்சேதபரவச ஜன்ம ஜரா மர ணாதி துக்க மனுபவித்துக்கொண்டு சோகிக்கின்றேன். முற்றினுஞ் சோகத் தைக் கடக்கவேண்டு மாஞலோ ஆன்மஞானமே யுபாயமாம். " ஆன்மவித் தானவன் சோகத்தைக் கடக்கின்றான் " என்னுஞ் சுருதியினனைக. அவ் வான்ம ஞானத்தானே யான் முக்தனுவேன் ' என்னும் முதிர்ச்சியாய அறியும் வேட்கையோடு கூடிய நிச்சயமானது எவனுக்குளதோ அவன் விஷய உபாய முதலியவற்றினே குருவைச் சரணுகதியாக அடைவன் இந்நூற் கதிகாரியுமா வன் சாஸ்திர சிரவணுதிபலத்தைச் சேவிப்பவனுவ னென்பதாம்; எனவே அளவிறந்த புண்ணியங்களானே இராகாதி தோடங்களற்றவனும் விவேக உத யத்தானே அறியும் வேட்கையனும் ஆகிய அஞ்ஞனுக்கே அதிகாரம் என்பது கருத்தாம். அற்றேல் இராகாதி தோடமற்றவன் மூவருணத்தினுயின் சந்யா சவாயிலாக வேதாந்த சிரவணத்தின் கண்ணே யதிகாரியாவன்; முற்காண்ட அநித்த அனுஷ்டானத்திற்கு மனத்தூய்மை வாயிலாகப் பிற்காண்ட அதிகா ரத்தை யடைவிக்குந்தன்மை " அவ்விதனே வேதவசனத்தானே " என்பதாதி சுருதியினனே துணியப்பட் டிருத்தலின் மூமருணத்தின னல்லாதவனுக் கிண் டதிகார மில்லையாம்; " அம்மகத்தாயதை வேதமூணராதவன் மனனியான்," என அதிகார நிடேதங் காணப்படுதலின்; ஆகையால் அதிகாரி சுலபனல்ல னெனின் ? அற்றன்றும், ஸ்மார்த்த கருமம்போற் கூடலின்; மூவர்ணமுடைய வனுக்கு மூன்றக்கினியிற் சாதிக்கத்தக்க கருமத்தின்கண் ணதிகாரமிருந்த போதினும் அக்கினியாதானஞ் செய்யாதவனுகிய சாதாரணன் ஸ்மார்த்த கரு மாதிகாரத்தை யடைவதேபோலும்; சிரௌத ஞானதிகாரியிருந்தபோதினும் அசந்யாசியாகிய மூமுக்ஷு சாதாரணன் இந்நூலின்கண் ணதிகாரியாவன்; அஞ்ஞான மிருக்கும்வரையாம். இந்நூற்கும் மிருதியைப்போலும் வேதவியாக் கியானத்தன்மை யுண்மையின், அங்ஙனமே கூறவும் பட்டுளது:—வேதம் விளம்பாகின்ற பரபுருடன் தசரதர் மதலையாயுண்டாம் போழ்து வேதமும்.

ஸ்ரீ வான்மீகி பகவானுடைய வாக்கினின்றும் சாகூஷாத் திராமாயண வடிவமாகியது. ஆண்டுப் பூர்வகாண்டத்திற்கு, ஸ்ரீ இராமசரிதகதை முன்னிலையாக வியாக்கியானமாகிய ஆறுகாண்ட பூர்வ ராமாயணம் சமானமாம் உத்தர காண்டத்திற்கு இவ்வைராக்கியாதி யாறு பிரகரணமும் சமானமாம் சில ஸ்மார்த்த கருமங்களில் ஸ்திரீசூத்திரப் பொதுவாக அதிகார முண்டாவதே போல இதனது சிரவணத்தினும் புராணம் போலுமாம். " மறையவனே முதன்மையாகக்கொண்டு நான்கு வருணங்களேயுங் கேட்பிக்க " " சூத்திரரும் மகத்துவத்தையடைகுக " என்பதாதி வசன லிங்கங்களானும். " அப்பெரும்பொருளே வேதமுணராதவன் மனனியான்; அவ்வுபநிடப் பிரதிபாத்திய புருடனே வினவுகின்றேன் " என்பதாதிவசனமோ அவேதவித்திற்குச் சிறுளதஞான அதிகாரபரமாமென்பர் சிலர்; அபரோக்ஷஞான முடிவுபேறிலதாம் பரமென்பர் மற்றையர் ; வேதவாயிலாந்தன்மைத் துதிபரமாமென்பர் சிலர். எல்லாவாற்றானுமே மற்றையருக்கும் புராணசம்பந்த சாதாரணமாகிய ஞானத்தின்கண்ணே அதிகாரமுளதேயாம் " எல்லாவருண ஆசிரமங்களானுமே அவ்வான்மா அறியத்தக்கதாம் " என்பதாதி வசனங்களானுமறிக. ஆண்டுச் சிரௌதஞானத்தில் பூர்வகாண்டத்திற் கூறிய தருமானுஷ்டான ஜன்னியமனத்தூய்மைபோல. ஈண்டும், பூர்வ இராமாயணத்திற்காட்டப்பட்ட தத்தம் வருணாசிரமத்திற்குத் தகுதியாய நிஷ்காம தருமானுஷ்டான ஜன்னியமனத்தூய்மை அறியும் வேட்கையை யுண்டாக்கும் வாயிலாகக் காரணமெனப் பூர்வோத்தர இராமாயணங்கட்கு ஹேது ஹேதுவுடைமைச் சம்பந்தத்தைக் காண்பித்துக்கொண்டு சர்வாகர்த்த நிவிருத்திவடிவ வேறு பிரயோஜனத்தைக் கூறுகின்றார்:—தருமதத்துவஞான அனுஷ்டானங்களாகிய, ஞானநிகாரங்களையடைவிக்கும் ஈசுர ஆராதணைகளில் கதையே யுபாயம் என்றாலின் கண்ணே அந்தப்பூர்வ இராமாயணக்கிரந்தம் கதையுபாயமாம். அநேக காண்டங்களோடுகூடிய அவற்றை ஆதியில் விசாரித்து அதனர்த்தானுஷ்டானத்திலதிகாரத்தையடைந்து எவ்வதிகாரியானவன் இவ்வியம்பும் ஆறுபிரகரணரூபமோக்ஷோபாயங்களே ஆராய்கின்றனனே, பிரஞ்ஞையால் காம கருமவாசனே அஞ்ஞானபீஜங்களே யெரித்த அவன், மறுபடியும் ஜன்மாதிதுக்கத்தையடைவதில்லை முக்தனே யாகின்றன்.

(ச.) அதிகாரி யென்பவன் முத்தி விருப்புடையனன்றே ! முத்திவிருப்பாவது, ஆன்மாவிற்குப் பந்தநிச்சயத்தை முன்னிட்டிருப்பதா மென்பது கருத்து. அதிகாரியைத் தெரிவிக்கின்றார்:— அறிவிலான் என. தேற்றும் பொடி சேற்றைத் தேற்றுதற்காகாதென்னும் நியாயத்தால் மிகுந்த அஞ்ஞானமதிகாரியாகான், இடித்த மாவைப் பொடித்தல் போல அறிஞனுக்கறிவிப்பதும் பலமன்றுதலின் ஆத்மஞானியும் அதிகாரியாகானென்பது கருத்து. (7)

(ஸ்ரீ வீ-அ-கை) பரத்துவாசர் விஞ்தல்.

இங்ஙனம் பொன்னுலகத்தினில் என்பதனுல் மங்களாசாஸனத்தையும் விடயஞ்சனத்தையும் விதித்து, பந்தமுற்றன னென்பதனுனே அதிகாரியையும் பிரயோஜனத்தையும் சம்பந்தத்தையு மூணர்த்திச் சாஸ்திரத்தைத் தொடங்குபவராகி இதற்கு மூதலில் சம்வாத கதைரூபத்தன்மையை விளக்குவிக்கும் பொருட்டுக் குரு சீட முறையைத் துதிக்கின்றுர்:—ஒருங்கு, மற்றும், 56000ங் கிரந்தவடிவ இராமாயணத்தில் அகாதிகாலந் தொடங்கிப் பயின்ற இராகாதி தோஷத்தைக் கெடுக்கு மாற்றலுடைமையின் மகாபலம் பொருந்திய இராம கதை வடிவமாகிய 24000ங் கிரந்த வடிவ 6 காண்டங்களை முதலில் ஸ்ரீ வான் மீகி பகவானியற்றி, வணக்கமுடையவனும் மதிமானும் திருவருள்பெற விரும் பியவனும் சீடனும் ஆகிய பரத்வாஜர் பொருட்டுக் கடலானது யாசகனுக்கு இரத்தினத்தைக் கொடுத்ததேபோலக் கொடுத்தார் ஒருகாலத்தில் அறிவின் மிகுந்த பரத்வாஜர் மேருகிரியின்பாலுள்ள ஒரு ஆரணியத்தின் கண்ணே வீற் றருளியிருந்த ஸ்ரீ பிரஹ்மாவின் சங்கிதியிற் கீர்த்தித்தபோது சந்தோஷத்தை யடைந்த வுலகபிதாமகராகிய பிரஹ்மதேவர் வரமுனிலையால் உலகைக் காக்குஞ் சாதனமாகிய மோக்ஷசாஸ்திரத்தைச் செய்விக்கவேண்டு மென்னும் பெருங் கருத்துடையராகி அந்த பரத்வாஜரை நோக்கி ஹே! குழந்தாய்! உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளென, பரத்வாஜர் ஹேபகவன்! பூதபவ்ய ஈசுரரே! பூர்வ இராமாயண அர்த்தானுஷ்டான ஜன்னிய சித்தசுத் தாய்மையை யடைந்த இப்போது எதனுலிம் முமுக்ஷுக்கள் சமுசாரதுக்கத் தினின்றும் விடுபடுவார்களோ அதைத் திருவாய் மலர்ந்தருளுவீராக என்னும் வரத்தைத்தான் தேவரீரை வேண்டிக்கொள்ள அடியேனுக்கு இச்சை யிருக் கின்ற தென்றனர், இதைக்கேட்ட பிரஹ்மதேவர் ஈவினவிய இப்பொருளில் உனதாசிரியராகிய வான்மீகரையே மிகமுயல்வுடன் விரைவில் பிரார்த்தித்துக் கொள்ளுவாயாக வெனவருள்புரிய அவரது ஆணையைச் சிரமேற் கொண்டு வந்து தமதாசிரியரைச் சரணுகதியடைதல் சாற்றப்பெறுகின்றது:—ஒருங் கென.

(ச-அ-கை) இனிக் தருவைத்துதித்துக் கதையை விஞவுதல்:—ஒருங்கு.

ஒருங்குணர் குரவனு முயர்வான் மீகனை
மருங்குறப் பரத்துவன் வணங்கி வன்பவ
னெருங்கு வெந்தயரிலே நின்ற தெங்ஙனே
மருங்குணத் திராமனீ யருளிற் கூறென்றுன். (8)

(ப - ரை.) ஒருங்குணர் = முற்றறிவும் அசேஷ சாஸ்திர பாண்டித்தியமும் பிரஹ்மநிஷ்டையும் உடையராய, குரவனும்=ஞானசிரியராகிய, உயர்=ஏகாந்தத்தில் சந்ததம் பகவத்தியானத்திலிருந்த மேலான, வான்மீகனை =

ஸ்ரீ வான்மீகி பகவானே, மருங்குற = ஒழுங்காகச் சீடன் விதிவாயிலாய் அடையவேண்டிய அடைவின்படியாக, பரத்துவன் = பரத்துவாசர், வணங்கி = பூமியிற்றண்டவத்தாக அட்டாங்க நமஸ்காரஞ்செய்து சிரங் கரங்கூப்பித் தோத்தரித்து, வன்பவம் = கொடிய துயரமே வாய்ந்த இச்சமுசாரத்தில், நெருங்கு = மிகநிபிடமாய்ச் செறிந்து, வெந்துயரிலே = வெவ்விய விசேஷ சங்கடத்திலே, அருங்குணத்து = சகல சற்குணலயமாய, இராமன் = ஸ்ரீ இராமச்சந்திரன், நின்றது = விவகரித்துக்கொண்டிருந்தது, எங்ஙனம் = எவ் வாறும், ஈ = ஞானுசிரியராகிய தேவரீர், அருளில் = பரமநிரபேக்ஷிக காருண் யத்தினுல், கூறென்றன் = அடியேனுக்கனுக்கிரகிக்க வேண்டுமென்று கேட் டார். (எ-று.)

(ஸ்ரீ - வீ.) பிரஹ்மானந்தத்தை யினிதுபருகும் பொருட்டு ஏகாந்தத் திருந்த சமதரிசன சீலரான ஸ்ரீ வான்மீகி யாசிரியரைப் பரத்வாஜராகிய சீடர் நமஸ்காரஞ்செய்து விநயத்துடன் அடங்கிய குரலால் வினவினர். சங்கடமென் பது சம்பாதமாம், ஸ்ரீ இராமர் ஜீவன்முத்த பதத்தையடைந்து எங்ஙனம் சமு சார சங்கடத்தில் விவகரித்துக்கொண்டிருந்தனர். ஆனுல் இப்பொருளேயே பரத்துவாஜர் வினவினர் என்று எங்ஙனம் அறிய முடியும் எனின், கேட்டி ! பெரிய வாசிட்டத்தில் எங்ஙனம் சம்சார சங்கடத்தில் ஸ்ரீ இராகவர் விவகரித் தனர் என முன்வினைச் செய்து, அதன் அடுத்தபின்னரே ஸ்ரீ இராமர் முதலி யோர் ஜீவன் முத்தராய் விவகரித்ததுபோலவே நீயும் விவகரிப்பாயாக எனத் தங்களாற் கூறப்பட்டதே அந்த ஜீவன் முக்தஸ்திதி யடைவினுபாயத்தில் ஸ்ரீ இராமருக்குக் கிடைத்த முறை தெரிந்தால் யானுமதைப் பின்பற்றலாம், அன்றியும், ஸ்ரீ இராகவரை வருணிப்பதற்காக முன்னிலையாய் முக்கியமாக்கி ஜீவன் முக்தஸ்திதியை முறையாக ஹே பிரஹ்மத்தை யுணர்ந்த பெரியவரே ! கூறுவீராக, அதைக் கேட்டுப்பின் அடியேன் நித்தியம் சுகியாயுலவுவேன், ஸ்ரீ இராகவருக்கு முறையாக ஜீவன்முக்தாவஸ்தையைக் கற்பித்து அடியேனுக்கு முதலினும் மொழிவீராக, அம்முறையானே யான் நித்தியம் சுகியாய் வாழ் வேன்; எனவினவி யிருத்தலினுலும், ஜீவன்முக்தபதத்தை யடைந்து மகா மனத்தையுடைய ஸ்ரீ இராகவர் எவ்வாறு விவகரித்தாரோ அவ்வாற்றை யாம் கூறக்கேட்பாயாக எனவிடை தொடங்கலானும், மேலும் இச்சமுசார சங்க டத்தில் ஸ்ரீ இராமரும் மகாமனத்தை யுடைய பரதரும் சத்ருக்நரும் இலக்கு மணரும் புகழ்பெற்ற சீதையம்மனும் ஸ்ரீ இராமரைப் பின்தொடர்ந்திருந்த மந் திரி மைந்தர்களாகிய மகாமதிமான்களும் தசரதரும் அவர் பரிவாரமும் எங்ங னம் விவகரித்துக் கொண்டிருந்தனர், அஞ்ஞானிகளாய் மற்றையரைப்போற் சோகித்துக்கொண்டா ? அல்லது ஜீவன் முக்தரைப் போலவா ? என்பதை யருளவேண்டும், அவர்கள் துக்கமடையாமற் சுகிகளாயிருந்த விதத்தை அடி யேனுக்கு என் மதியிற் படும்படி வெளிப்படையா யருள்செய்யின் அவ்வாறே

அடியேனும் தங்களுபதேச சிரவணத்தானே கிருத்தியத்தன்மையை யடைந்து திருக்கூட்டங்களுடனே சுகியாயுலவித்திரிவேன் என ஸ்ரீ இராமபரதாதி விடைய வினவின் பின்னர் மந்திரிமைந்தர் நிர்துக்கித்தன்மை வடிவ ஜீவன்முக்தி யடைவுவகையை வினதலினனும் அறியப்பெறுகின்றதாம், பெறவே இப் பொருளே பரத்வாஜரால் கேட்கப்பட்டது.

(ச.) ஒருங்குணர் என்பதனால் குருவிற்குச் சீடனறிய விரும்புஞ் சகல பொருள்களையும் விரித்துரைக்குஞ் சாமார்த்தியஞ் சாற்றப்பட்டது. பவத்தில் வெந்துயர்யாதது சாயையின் தன்மமான பிரியாப்பிரிய விஷயத்தில் மிகுந்த மத்தமாம். பவம் = சமுசாரம், சாயை = ஸ்திரீ, கிடையாததில் வாஞ்சையும் கிடைத்ததில் அபிமானமும் துயரமன்றே ! (8)

(ஸ்ரீ - வீ - அ - கை) இவ்வாறு மிகவும் பணிவுடன் வினவிய வித்யா விநய சம்பன்ன பரத்வாஜரை யாசீர்வதித்துக் கிருபாதிருஷ்டியுடன் ஸ்ரீ வான் மீகி பகவான் கூறுகின்றார்:—

நல்லது சிறுவநீ யுரியை நானது
சொல்லுவன் கேட்குதி துயர்செய் மோகநீ
வெல்லலா மோகத்தான் சகத்தின் வேறன்றி
மல்லல்வா னிறம்படைத் தென்ன வந்துறும். (9)

(ப - ரை.) சிறுவ = உத்தமோத்தமமான புதல்வனே ! நீகேட்டது, நல்லது = மிக மிகவும் நன்குளது, உரியை = யோக்கியனனுய், பூர்வ இராமாயண பாராயண மகிமையான் மனத்தூய்மையும் அதனுல் வேண்டுஞ் சாதனங்களும் அடையப்பெற்றுய், நானது = நானவ் விருத்தாந்தத்தை, சொல்லுவன் = விஸ்தாரமாய் விளக்கமாய் மாதூரியமாய்ப் புகல்வேன், கேள் = பாரத்துவாசனே சித்தமிது வதுவென வெண்ணுது ஏகாக்கிரமாய்க் கேட்பாயாக, கேட்டலும் = நீயன்போடுஞ் சிரவணஞ்செய்த மாத்திரத்தால், துயர்செய் = சந்ததம் சிந்தை செயமுடியாத ஜனன மரணவிக்ஷேபாதிய பெருந்துயரத்தை யுண்டு பண்ணும், மோகம் = ஆவரண விக்ஷேபவடிவ அஞாதிபாவவடிவ ஞானமாத்திர நிவர்த்திய அஞ்ஞானத்தை, வெல்லலாம் = ஆவரணத்தைக் கெடுத்தும் விக்ஷேபத்தை மனுலய வாசனுக்ஷயங்களால் கெடுத்தும் வெற்றி கொள்ளலாம், மோகத்தான் = மேலுரைத்த அஞ்ஞானமானது, சகத்தின் வேறன்றி = சகத் சம்பந்த முடையதாயே காரியரூபமாயே, மல்லல் = வளமைதங்கி வியாபித்திருக்கும், வான் = நிரவயவ ஆகாசம், நிறம்படைத் தென்ன = அறியார்தம் மறியாமையால் நீலவண்ண முடைத்தானதே போல, வந்துறும் = அஞ்ஞானிகளினத்தியாசமாத்திரத்தா லாரோபிக்கப்பட்டு வந்து கற்பித தாதாத்மியமாகப் பொருந்தியதாம். (எ-று.) (9)

(ஸ்ரீ - வீர.) நின்னுலியாது வினவப்பட்டதோ அது சாதுவாம். சிரவணத்தின் பொருட்டு நீ யோக்கியனாக விருக்கின்ற யாகலின் உன்பொருட்டுக் கூறுகின்றேன். சிரவணிக்கும் ஸ்ரீ இராகவ ஜீவன் முக்திலாப வுபாயத்தாற் சம்மோக மென்னும் அஞ்ஞான மலத்தை முற்றிலுமே நீ தூரஞ்செய்யலாம் இனி மேல் வராமலே யத்தியந்தங் கெடுக்கலாம், அல்லது சம்மோகமே மலமாம் ஹேயத்தகைமையால் அதனனே அதைத்தூரத்திலெறிந்த லுசிதமாம். அன்றியும், குழந்தையாகிய ஹே பரத்வாசனே! கேட்பாயாக! நீ கேட்ட படி கூறுகின்றேன், அதைச் சிரவணித்த மாத்திரையானே ஆன்ம தத்துவத்தை யறியாத மலமான அஜ்ஞானம் அத்தியந்த தூரத்தில் ஓடுமாறு செய்து விடலாம், யாவற்றினும் பொய்யென்னும் புந்தியானே பற்றின்றிச் சென்தாமரைக் கண்ணராகிய ஸ்ரீ இராமபிரான் ஜீவியாயிருந்து விவகரித்தது போலவே, பிராஞ்ஞனகிய நீயும் விவகரிப்பாயாக. அபரிச்சின்ன வஸ்து மனதிற் புகுதலானே பெருமனத்தை யுடையவராகிய இலக்குமணர், பரதர், சத்ருக்னர் கௌசலை சுமித்திரை சீதை, தசரதர் அவர்தம் பரிவாரம் இராமசகாயர்களாகிய கிருதாஸ்திரன், அவிரோத னென்போர் யாவரும் எதன்பின் னறியவேண்டிய தயலொன் றெஞ்சாதோ அத்தகைய முடிவான மெய்ஞ்ஞானத்தை யடைந்தனர். ஸ்ரீ வசிஷ்டரும் வாமதேவரும் மந்திரிமா ரெண்மரும் அயலாரும் அவ்வாறே யடைந்தனர். திருஷ்டிஜயந்தன் பாசன் உண்மையுரைக்கும் விஜயன் விபீஷணன் சுஷேணன் அனுமான் சுக்கிரீபனுடைய மந்திரியாகிய இந்திரஜித்து என்பரே எட்டு மந்திரிமாரென எண்ணப்படுவர். இவர் யாவரும், உள்ளேசாந்தராகி, இராகமற்ற மனத்தராய் வெளியிற் பிராரப்தப்படி கிடைத்தவற்றின் கண் மகிழ்வுடையராய், மகான் மீக்களாய்ச் சீவன் முக்தர்களாய் வாழ்ந்தனர்; இவர்கள் ஹோம, முதலிய சிரௌத கருமங்களையும், தான முதலிய ஸ்மார்த்த கருமங்களையும் கொள்ளல் தள்ளல் முதலிய அவ்வக்காலத்திற் குத்தக்க இலௌகிக நல்விவகாரங்களையும், நிஷேதலையும் மேற்கூறிய இரண்டன் ஆலோசனையையும், செய்ததேபோலச் செய்துகொண்டு நீ வாழ்வையாயின் மைந்த! இச் சங்கடத்தினின்றும் முக்தனே ஆவாய்; கரையற்ற துன்பக்கடலில் விழுந்தவன் இவ்வுயர்வாகிய ஊகத்தை யடைவனுயின் மிகுந்த சத்துவ குணமுடையவனுய், சோகத்தையு மடையான், தைன்னியத்தையு மடையான் யாதொரு விதமான தாபமுமில்லாதவனுகி நித்திய திருப்தனுய் நிலைப்பன்.

(ஸ்ரீவீர - அ - ஞக.) சமுசார சங்கடத்தில் ஸ்ரீ இராகவர் எங்ஙனம் விவகரித்தனர் என்னும் வினவிற்கு, ஜீவன் முக்தபதத்தை யடைந்த இராகவர் மகாமனத்தராய் எங்ஙன் விவகரித்தனரோ என்பதாதியாக விடையளித்து ஆதியில் கூறப்படும் ஜீவன்முக்தி சாதனபூதி ஆத்ம அபரோக்ஷ ஞானத்தினுபாயம், சித்தமானது சின்மாத்திரமாகச் சேடித்து நிற்கும் வடிவத்தியான மும் அதன் முதிர்ச்சியாற் கையுறும் அசம்பிரஞ்ஞாத சமாதியும் ஆமென்பது

பிரசித்தமாம். ஸ்ரீ இராகவ விருத்தாந்தத்தைக் கூறும் வாயிலாக விஸ்தாரமா யினி யடிக்கடி பிரதிபாதிக்கும்படியாக விழைந்துள்ள சோபாயத்தை யுணர் வின் சௌகரியப் பொருட்டுச் சுருக்கிக் கூறுகின்றார்:—மோகந்தான், என. அல்லது ஜீவன்முக்த பதத்தையடைந்த ஸ்ரீ இராமர் என்பதாதியால் விஞவி ஞத்தரத்தைக் கூறி ஆதியில் முக்தியையும் அதனுபாயவடிவ சாஸ்திரார்த்தத் தையும் மதியிலெளிதாக ஏறும் பொருட்டுச் சுருக்கிக் கூறுகின்றார்: மோகந் தான், என, ஆகாயத்தின் நியாமளத்தகைமைபோல ஜகத் சம்பந்தியாய மோ கத்தை, மறப்பதே மேன்மையான பேருபாயமென வெண்ணுகின்றேன் என் பது வருஞ் சம்பந்தமாம்.

(ச.) சம்மோகமலம் = அஞ்ஞானரூப மலமென்பதாம், சம்மோகமலம் என்பது, அலம் = அத்தியந்தம், சம்யக்மோகம் பெருமோகத்தைத் தூரப் படுத்துவா யென்பதாக இருபதமாகப் பிரிந்தும் பொருடரும். ஆகாயத்தி னது நீலவன்னம் பொய்யுருவ மாயினும் மெய்போற், பாமரனுக்கும், பரீக்ஷக னுக்கும் பொதுமையுற்றுத் தோற்றுவதேபோல அவித்தையாற் கற்பிக்கப் பட்ட சகத்பிரதீதியும் பாரமார்த்திகம் போற், சனித்ததென்பதாம். (9)

(ஸ்ரீவீர - அ - கை) ஸ்ரீ வான்மீகி பகவான் இலக்கணம் சொரூபம் சாத னம் பலம் என்பவற்றுனே ஜீவன் முக்தியினிலைமையை விரிவாகக்கூற இச் சித்தவராய் முதலில் எளிதாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டுச் சுருக்கி முத் தியிலக்கண சொரூபங்களைக் காண்பிக்கின்றார்:—இறப்பிலாவென.

இறப்பிலா விந்தமோக மிறையுமீட் டெண்ணமின்றி
மறப்பதே நல்லதென்று மதித்துயர் மனத்தினுக்குத்
திறப்படக் காணப்பட்ட தில்லெனச் சித்தினுலே
யுறப்பெறு மெப்போதப்போ துயர்பர சுகமதாமே. (10)

(ப - ரை.) இறப்பிலா = உளதுபோற் ருேன்றுகின்ற அதிஷ்டான ஞானத்தாலன்றிக்கெடாத, இந்த மோகம் = இச்சகத்பிரதீதியை, இறையும்= அணுவளவேனும், மீட்டெண்ணமின்றி = மாறிநினைப்பு வாராதிருக்கும்படி, மறப்பதே = மறந்துவிடுவதே, நல்லதென்று = நன்ருக வேண்டுமென்று, யாம் மதித்தும் = நாம் நிச்சயிக்கின்றனம் ; திறப்பட = அதிதிடமாக, காணப் பட்டது = திருஷ்யம், இல்லை = முற்றினும் முக்காலுமே கிடையாதாம், எனா = என்று, சித்தினுலே = உண்டாம் போதத்தினுலே, மனத்தினுக்கு = மன துக்கு, உறப்பெறும் = (திருஷ்யமறப்பு) மீட்டெண்ணமறப் பொருந்தும், எப்போது = அஃதெக்கணப் பொருந்துமோ, அப்போது = அக்கணம், உயர் = நிரதிசயமான, பரசுகமதாம் = கைவல்லிய சௌக்கியஞ் சித்தியாம். (எ-று.) (10)

(ஸ்ரீ-வீர.) மீண்டும் ஜகத்பிரமத்தை விடயஞ் செய்யும் உண்மையான் நிஷேப்பு இல்லாதிருத்தலே மீட்டெண்ணமின்மையாம். அல்லது ஞானத் தானே மூலஅவித்தை அழிந்தொழியவே பிரமத்தின்பாவமே மறப்புச் சப்தத் தாற் கூறவிழைவாம், ஆதலினானே மீட்டெண்ணமின்றி யென்னப்பட்டது. கற்பிதமாகிய திருஷியம் அதிஷ்டானமான காண்போனுக் கயலாகவில்லை யென்பதா யாகமாதிகளா லுண்டாக்கப்பட்ட போதத்தால், சங்கற்பவடிவ மாய மனமென்னும் அந்தக் கரணத்தினின்றும் திருஷியநீக்கம் உண்டாகு மானால் மோக்ஷசுகமானதுண்டாகி விளங்கிநிற்கும். அதுவிடய சுகம்போலச் சாதிசயமன்றென்பார் உயரென்றார். திருஷியமித்திபாத்வ நிச்சயந் திடமான வழி அவ்வாதனை நீங்கிப் போதலின் ஆண்டு இராகம் அனுதயமாதலின் அதனி னின்றும் திரும்பிய சித்தம் பிரஹ்மானந்தத்தை யறிந்தனுபவிக்கும்; அத னாலே தடையாவுமுடைந்து அவிருந் அபரோக்ஷ ஞானத்தால் மோக்ஷமான துண்டாமென்பது கருத்தாம். அன்றியும், ஆகாயத்தில் நீலம்போல முற்றினும் அசம்பவமாயதும், கற்பனையானுண்டாகியதும் ஆகிய உலக சம்பந்தியத்தியாச வடிவ இம்மயலை, இதன் மூலமாகிய அவித்தை வாசனையழிவானே மீண்டு மெண்ணமை யுண்டாகுமாறு மறத்தலே யாவற்றினும் மேலாகிய முக்தியிலக் கணமும் சொரூபமுமாம், எனப்பிரமாண அனுபவங்களானே துணிந்திருக் கின்றேம்; பரோக்ஷ ஞானிகட்கும் துயிலினும் நிருவிகற்ப சமாதியினும் திரு ஷியத்தின் மறப்பிருந்தபோதினும் அதுமீட்டு மெண்ணமில்லாமை யாகாதாம். அல்லது மீண்டும் நிஷேத்தல் எம்மனத்தால் அது மீட்டு மெண்ணமாம், அது எதன்கண்ணின்றே அது மீட்டு மெண்ணமில்லாமையாம். மறப்பு என்பது நிஷேப்பின்மையாம், துவைதத் தோற்றமாத்திரமு மில்லாதிருத்தலென்பதாம். அல்லது மறந்திருத்தலேபோல மறந்திருத்தலாம், அனுபவிப்பவன்பால் மறந்த விடயமிருந்தபோதினும் தோற்றுதேபோலச் சைதன்யத்தின்கண்ணே திரு ஷியமிருந்தபோதினும் தோற்றுதிருக்கும். ஆயினென் பரமார்த்த சத்திய மாகிய திருஷியத்திற்கே சாங்கியர் கொண்ட முக்தியைப்போலத் தோற்றுமை மாத்திரமாயிருத்தலா முக்தி யெனின்? அல்லவாம், அத்தியஸ்தமாகிய அது தோற்றுமையே முக்தியாமென்க. சமஸ்காரத்தா லஃதுண்டாகாமையின் யாங் ஙனம் அதற்கு மயலாந்தன்மையெனின்? பூர்வ பூர்வ ஜகத்து விவகாரத்தாலுண் டாய சமஸ்காரத்தால் நிலைபெறல் கூடுமென்றுணர்க. அற்றேலாயின், தோடத் தாலுண்டாகாமையானும், அதிஷ்டான மின்மையானும் மயற்றன்மை கூடா தெனின், ஆகாயத்தில் வர்ணம்போலுண்டாய தென்க. தூர ஆராய்ச்சியின் மைத்தோடத்தானே ஆகாசவர்ண மயலுண்டாவதேபோல் அவித்தைத் தோடத்தாற் பிரஹ்மத்தின்கண்ணே யவித்தை மயற் கூடுமென்றுணர்க. எனவே முற்றினுந் திருஷியத்தை மாற்றுவதாம் மொழிந்த இவ்விலக்கணம், அதனுற்குறிப்பிக்கப்பட்ட சின்மாத்திர நிலைபேறு சொரூபமாம். மதித்தும் என்பதனானே அவை தமதனுபூதியினானே துணியப்பெற்றனவெனக் காண்பிக்

க்ப்பட்டன், அவ்வாறுயின் நம்மனோரால் அவையே னனுபவிக்கப்படவில்லே யெனின்? திருசியத்தினது அத்தியந்தாபாவ போதமாகிய பாதமில்லாமல், கூறிய இலக்கணமும் சொரூபமும் எப்போதும் எங்கும் அனுபவிக்க முடியா வாம். அனுபவமில்லாமை காலத்தினுந் தேயத்தினும் வியாபகமாமெனக் காட்டும்பொருட்டு எப்போது மெங்குமென்றதாம். ஆயின், திருசியபாத மானது எவ்வேதவிலா மென்று சங்கைவரின், சர்வ ஜகத்திற்கும் அதிஷ்டான பிரத்தியக்கபின்ன ஆன்மதத்துவ சாகூஷாத்காரத்தானே அஃதாம், என்பத னுனே அச்சாகூஷாத்காரத்தைத் தேடவேண்டும்; உபாயத்தாலதைச் சாதிக்க வேண்டுமென்பதாம். ஆயினதற்கென்ன வுபாயமெனின், அது இச்சாஸ் திரத்தை யுணரின் அவசியம் சம்பவிக்கும் அதன் பொருட்டே இஃதுண் டாயதாம். தத்துவத்துணிபுண்டாகும்வரை சாஸ்திரத்தைச் சிரவணஞ் செய்கு வாயாயின் தத்துவத்தையடைவாய் வேறுவிதமாய் முடியாதாம். உலகமய லாகிய இதுகாணப்பட்டபோதினும், இந்நூலிற் காண்பித்தபடி யாராய்த லினனே யாதொருதுயரமுமில்லாமல் ஆகாயத்தில் வருணத்தைப்போலும் இல்லவே யில்லையென அனுபவிக்கலாம். அனுபவிக்கலாமென்றல் அனுபவம் ஆன்மசைதன்யமேயா? அல்லதுஅயலா? அயலென்பது கூடாது, ஏனெனின், அறிவிற்கு வேறுயது ஜடமாய் விடயமாதலின் அனுபவமென்பது பொருந்தா தாம். ஆன்மாவேயெனின், அதுமுன்னரே யிருக்கின்றதாதலின் சாஸ்திரத்தா லாகவேண்டியதென்னுளது? எனின், உண்மைதான், ஆன்மாவே யனுபவ மாயினும் இது திருசியத்தோடு கூடியிருத்தலின் அவ்வனுபவமாகாதாம்; மற்றே, விருத்திரூபமாகிய ஆன்ம தத்துவ சாகூஷாத்கார போதத்தானே அவித்தையினழிவால் அதனுண்டாய திருசியநீக்கமானது, திருசியம் மூக் காலத்திலு மில்லையென்பதாகு மனத்திற்குக் கிடைப்பின், நித்தியசித்த ஆன்ம வடிவமாக இருப்பினும் மேலாகிய மோகூஆனந்தமானது தத்துவஞானத்தா லுண்டாயதேபோல ஆகின்றதாமெனக் கேவலம் அதன்வாயிலாகச் சொரூப பூதமாயினும் அனுபவம் சாஸ்திரபலமாம்.

(ச.) அற்றேல், கணத்திற்குக்கணம் காணப்படுஞ் சகத்தினது மறப்பெங் ஙனமாமெனின், கூறுகின்றூர்:—திறப்படவென. ஆத்மாவினின்றும் ஆகாசம் உதித்ததென்னுஞ் சுருதியால் திருக்குரூபமான ஆத்மாவினின்றுந் திருசிய மான ஆகாசாதிப்பிரபஞ்சத்திற் குதயமுண்டாதலின் திருக்குக்கன்னியமாகத் திருசியமிலதேயாம், உபாதானகாரணத்திற் கன்னியமாகக் காரியமுண் டென்றுரைத்தற்கு அரிதாதலின் என்க. கடக மகுட குண்டலாதியைக் காஞ் சனத்திற் கன்னியமாகக் காட்டுதல் எளிதன்றே! உபாதானமும் உபாதேயமும் வேறுபொருளாயின் குருப்பொருட்கு இருகுண நீர்மைவரல் வேண்டும், மற் றஃதவ்வாறுகவே, பொன்முதலியவற்றுற் றட்டானியற்றிய அபகாரமாம், கனமானதிரவியத்திற்கு இடையுயர்ந்து மாற்றதிகரித்திருத்தல் வேண்டும் அங்

ஙனங் கண்டதின்ருகலின் வேறுபொருள் என்பதெங்ஙனங்கூடும்? என்னுந் தார்க்கிகமுறைபோல் அஞ்ஞானபகாரமா மென்பதுமுதலிய தர்க்கங்களாலும், "இவ்விடத் தநேகமெவளவு மில்லை" என்பதாதி சுருதிப்பிரமாணங்களாலும் உண்டான தத்துவஞானத்தால் மனத்தினுக்குத் திருசியவிஸ்மரணம் உறப் பெறுமாயின் அப்போது நிரதிசயசைவல்லிய ஆநந்தமாம், அதுவே ஜீவன் முக்தியென்பதாம். (10)

(ஸ்ரீவீர அ - கை.) வித்தையின்வலுவினலே சித்தத்திற்கு விடயத்தினின் றுந் திரும்புதலைச் சம்பாதியாதவர்கள்பாற் றோடங்கூறுகின்றார்:—வழிபடு மென. அல்லது வேறுசாஸ்திரந்தெரிவித்த உபாயங்களானே முக்தியே ணுண்டாகமாட்டாதெனின் கூறுகின்றார்:— வழிபடுமென.

(ச.) இதனிதரபக்ஷத்தின் வருந்தோடத்தைக் கூறுகின்றார்:—திருசியத் தோற்ற மறப்பதின்றேல் அதனல்வருந் தோடமிஃதாமென்கின்றார்:—வழி படுமென.

வழிபடு மிதனை விட்டு மற்றுள நூல்க ளென்னுங்
குழிகளிற் புரண்டஞ் ஞானக் குணத்தினுற் பிறப்போர்க் கெல்லா
மொழிவற வொருவர் செய்தற் குரித்தன்ருய்த் தானே யுண்டாங்
கழிதலிற் பரம வின்பங் கற்பங்க ளாலுங் கூடா. (11)

(ப - ரை.) வழிபடும் = வித்துவான்கள் எல்லா முறையானும் மேன்மைப் படுத்தி வணங்குவதான, இதனைவிட்டு = இத்திருசியமறப்பை யொழித்து, மற்றுள = இதற்கிதரமாக விரிந்துகிடக்கின்ற சப்தஜாலங்களா லமைக்கப் பெற்ற, நூல்கள் என்னும் = மனத்தைச்சிக்ஷிக்காமையின் சாஸ்திரங்கள் என் னும் பெயர்மாத்திரம் வாய்ந்த, குழிகளில் = (பரப்பிரஹ்ம விடயவபரோக்ஷ அனுபவமின்றி)ப் படுகுழிகளாகிய ஏறமுடியாத கிடங்குகளில், புரண்டு = தாங்களும் உருண்டு தங்களைச் சேர்ந்தாரையும் உருட்டி, அஞ்ஞானக்குணத் தினல் = அறியாமையின்றீர்மையால், பிறப்போர்க்கெல்லாம் = மீண்டு மீண் டுமோயாது பிறந்துகொண்டிருப்பவர்கள் அனைவருக்கும், ஒழிவற = கெடுத லின்றி, ஒருவர் செய்தற்கு = அகாரணமாதலின் யாவராலுமியற்றற்கு, உரித் தன்ருய் = தக்கதன்ருய், தானேயுண்டாம் = சுயமாகவே சித்தமாகி அகண்ட விருத்தியையும் அஞ்ஞானநீக்கப் பொருட்டுமாத்திர மவாவி விளங்கும், கழித லில் = நித்தியசித்தமான, பரமவின்பம் = கைவல்லிய சௌக்கியம், கற்பங் கூடா = ஆயிரங்கோடி பிரமராயுட்களாலும் உதியாதாம். (எ - று.) (11)

(ஸ்ரீ-வீர.) கூறிய முறையே உண்முகத்தைச் சம்பாதிக்காமல் வெளிமுக மாகச் சாஸ்திரங்களாகிய படுகுழிகளில் புரளும் காயசேஷ்டையைச் செய்து கொண்டு அதிகிருத்திரிமத்தையறியாத அதாவது அப்பிரஹ்ம வித்துக்களாய பரத்வாஜாதி யுங்களைப்போன்றவர்கட்குப்பெரும் பெரும்போது சென்றபோ

கினும் மோக்ஷசுக முண்டாகாதாம். அல்லது, அறியாதவர்கட்கு மோக்ஷசுக முண்டாகாதாமென்க. குழியிற் புரளும் புரட்சியானது, சேறுபூசிய காத்திரபங் காதியாலுளவாம் துக்கத்தின் பொருட்டே யாதல்போல, வெளிமுகர் தங்கள் நூலின் கேள்வி துயரப்பொருட்டேயா மல்லாமல் இன்பப்பொருட் டிறையு மாகாதாம் என்பதபிப்பிராயம். அன்றியும், கூறியவுபாயத்தைக் கவராவிடின் பிறப்பில்லாத அநாதியஞ்ஞானத்தை யுடையவரும், வெவ்வேறு வகையாய அநான்ம சாஸ்திரக்குழிகளிற் புரளுபவரும், இச்சையையுடைய குருடுகள் விழு வதற்கேதுவாதலின் குழியெனப்படும் அவ்வச் சாஸ்திரமுணர்த்திய உபாயங்க ளானே இகபரலோக விடயவிருப்பத்தானே முயல்பவரும், அதனானே, அதனை யனுபவிக்கும்பொருட்டு, மீண்டு மீண்டு இச்சம்சாரத்தில் பிறப்பெடுப் பவரும் ஆகிய கீழ்மக்கட்கு அளவில்லாத பிரஹ்ம கற்பங்களானும், இளைப்பா றுஞ் சுகமானதுண்டாகாதாம். அநாதியஞ்ஞானமானது ஞானத்தினும் வேறுகிய ஆபிரஞ் சாதனத்தானும் நீங்கமாட்டாதென்பது கருத்தாம்.

(ச.) திருசியமறப்பில்லாமல் நூல்களென்னுங் குழிகளிற் புரண்டென்றத னுற் சாத்திரசன்னியமான விஞ்ஞானம் விக்ஷேபத்திற்கிருப்பிடமாதலாற் கேவலங்கிலேச நிமித்தமேயன்றிச் சித்தவிசிராந்தியினிமித்தமன்று மென்றதா யிற்று. இங்கு, அசிகிருத்திரிம அஞ்ஞானமென்னும் மூலபதத்திற்கு நித்திய சித்தபரப்பிரஹ்மவிஷய அபரோக்ஷ அனுபவம் இல்லாதவர்கட்கு என்பது பொருளாம் என்றும், அசிகிருத்திரிமா அஞ்ஞானம் எனப் பதங்கள்பிரிவு படினே இயற்றற்கேலாத மோக்ஷசுகம் எனவிசேடிக்கப்பட்டு மோக்ஷசுக விசேஷணமாம் என்றும் அஞ்ஞானமென்பதற்கு விசேஷணமாகாது என்றும் அறியக்கிடந்ததாம். (11)

(ஸ்ரீ - வீர - அ - கை.) போதத்தாற் றிருசியநீக்கம். திருசியவாசனை நீக்க வாயிலாகவே யாமாகளின் வாசனைத்தியாகம். திருசியநீக்கமுதலியவற்றின் வாயி லாக மோக்ஷத்திற்கு உத்தம உபயோகமாக இருத்தலின் அனுஷ்டிக்கத்தக்க தாம் எனக் கூறுகின்றார்:—அலைசெய்யென, அற்றேல், உபாசனைமுதலிய வேறு உபாயங்களானே சாதிக்கப்படுவனவாகிய சாலோக்கிய முதலிய அன்னிய மோக்ஷங்களும் பிரசித்தங்களாம் அவற்றுலவர்கட்கு எங்ஙனம் ஆனந்த முண்டாகாமற்போகும் எனின் கூறுகின்றார்:—அலைசெய்யென.

(ச.) அற்றேற் றிருசியத்தோற்ற மறப்பான் மோக்ஷமெங்ஙனமா மெனிற் கூறுகின்றார்:— அலை செய்யென.

அலைசெய்வா தனையைச் சேட மறவிட னல்ல தென்று
நிலைபெறு முத்தி யென்று நிமலமா நெறியீ தென்றுந்
தலைமையோர் பகர்வ ரன்ன திருவகைச் சனன நல்கி
யுலைதரு மலின மொன்ற தொழித்திடுஞ் சுத்த மொன்றே. (12)

(ப - ரை.) அலைசெய் = சலனத்தைத் தராநின்ற, வாதனையை = வாசனைகளை, சேடமற = மிச்சமின்றி, விடல் = விடுவதை, நல்லதென்றும் = உத்தமமெனவும், நிலைபெறும் = திதி பொருந்தும், முத்தியென்றும் = மோக்ஷமெனவும், ஈது = இதுவே, நிமலமாகெறி யென்றும் = விமலமான கிரமமெனவும், தலைமையோர் = சத்புருடர்கள், பகர்வர் = கூறுகிற்பர், அன்னது = அவ்வாசனை, இருவகை = இருவித வேற்றுமையுடைத்தாம், அவற்றுள், சநநநல்கி = பிறப்பைக்கொடுத்து, உலைதரும் = உழல்வதான, மலினமென்று = அசுத்தவாசனை யென்றும், அது = அச்சனனத்தை, ஒழித்திடும் = நாசஞ்செய்யும், சுத்தமொன்று = சுத்தவாசனையொன்றும் ஆம், (எ - று) (12)

(ஸ்ரீ - வீர.) வாசனைத்தியாகத்திற்கு எங்ஙனம் மோக்ஷத்தன்மையாதல் கூடுமெனவாசங்கித்து உபசாரத்தாலாமெனக்கருதி விடையளிக்கின்றார்:—ஈது என. வாசனைத்தியாகமே நிர்மலவுபாயமாம் மோக்ஷத்திற்கென்பது பொருள். பிறப்பிற்குவிரையாய் வாசனைகளின் சேடமின்றிய யாதொரு பரித்தியாகமுளதோ, அதாவது, மூலத்தைக்கெடுத்தலானே முற்றிலுங்கெடுத்தல் யாதோ அது முக்கியமோக்ஷமாம்; மோக்ஷசப்தத்திலிருக்கும் மூச என்னும் பகுதிக்குப் பந்த நீக்கத்தில் இடுகுறித்தன்மை யுண்மையின் வாசனைகளே முக்கிய பந்தமாதலின், சாலோக்கியாதிகளில் அவ்வாசனை நீக்கமில்லாமையின், மோக்ஷசப்தங் கௌணமாம்; அந்த முக்கியமே அவித்தை முதலியமலம் நீங்கியோராலடையப்படும், மற்றையரான் முடியாதாம், கருமங்களானும் உபாசனைகளானும் சிரவணாதிகளானும் நாடோறும் மன நற்றாய்மையே சர்வ வாசனைகளும் அழியும்வரை சாதனமுறையாமெனவுணர்க. வாசனை நீங்கிய போதிலும் அதனேதுவாகிய மனமிருத்தலின் மீண்டும் வாசனை யுண்டாம் உண்டாகவே பந்தமுமாமெனின், ஆகாதாம், சீதசந்ததியானது சென்றழியவே பனிக்கணம் பட்டழிவதேபோல, வாசனையானது கழிந்தொழியவே வாசனையின்கூட்டமே மனமாதலின் விரைவாகவே மனங்கெடும்; மனம் நஷ்டமாயினும், தூலதேகமே பந்தமாக நிலைபெறுமே யெனின், பெறுதாம், பூதக்கூட்டத்தாலாகிய பிராணிகளாகிய பறவைகட்குக் கூண்டுபோன்ற இத்தேகமும் வாசனையால் மெல்லியதாகி யுட்பிரவேசித்த நூலினுலே, முத்துக்கூட்டம் நிலைப்பதேபோல நிலைக்கும்; ஆகலின் வாசனையழியவே அத்தேகமும் நீங்கிவிடும்.

(ச.) உலகவாசனை, சாத்திரவாசனை, தேகவாசனையாகிய வனைத்தும் நசியாவிடின் திருஷ்யமறப்பு வாராதெனக் கருதித்தமது வாக்கான் மேற்கூறப் போதலின் வாதனைத்தியாகமும் வேண்டு மென்பது கருத்து.

(ஸ்ரீ-வீர.) வாசனைத்தியாகம் மோக்ஷவுபாயம் என்னும் பொதுக்கூற்றில் எஞ்சுதலின்றி எல்லாவாதனையின் நீக்கம் எய்துறத் தூயவாதனை விடத்தக்க

தன்றும் என்று காண்பிக்கும் பொருட்டு வாசனை யிருவகையாமெனக் கூறுகின்றார்:—அன்னதென தள்ளுக்கொள்ளத் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவற்றின் முரணிய காரியஞ்செய்யுந் தகைமையைக் காட்டுகின்றார்:—மலினமென. அல்லது இங்ஙனம் உபோற்காதத்தானே பரமுக்தியை வருணித்து பிரகரணத்திற் றுதிக்கப்பட்ட ஜீவன்முக்தியை விளம்பும் வேட்கையராகி அதன்பொருட்டு வாசனையின் இருவகையை வழங்குகின்றார், சுத்தம் மலினம் எனவாசனை யிருவகையாக வழங்கப்படும், மலினமானது பிறப்பிற்கேதுவாம், சுத்தமானது பிறப்பையறுப்பதாம்.

(ச.) இவ்விடத்திற் சீவன்முக்தியை யடைந்த ஸ்ரீ இராகுநாதரது கதையை வெளிப்படுத்துவதற்கு வாசனை யிருவகையென நிரூபிக்கும் வாயிலாய்ச் சீவன்முக்தியை நிதானித்துக்கூறுகின்றார்:—அன்னதென. மலினவாசனை சன்மத்திற்கேதுவென்றும் சுத்தவாசனை சன்மராசத்திற்கேது வென்றும் கூறினதாயிற்று. ஆண்டு வாசனபினிலக்கண மிதுவாம், திடமான பாவனையான் மூன்பினெண்ணந்தீர்ந்து பதார்த்தந்தனைச் சேர்வுறக் கைக்கொள்கை, மடமான வாதனையாம்; திடபாவனையினுற் பூர்வாபர விசாரணையின்றிப் பதார்த்தத்தைக் கிரகிப்பது வாசனையெனப்படும். (12)

(ஸ்ரீ-வீர-அ-கை.) அவற்றுண் மலினவாசனையின் இலக்கணங் கூறுகின்றார்:—மடமையின் என.

மடமையின் செறிவே மெய்யாய் மலியகங் காரந் தன்றிப்
படர்தரு பிறப்பை மேன்மேற் பயில்விக்கு மலின மென்ப
ரடர்மறு சநந மென்னும் அங்குர மின்றிச் செந்தீச்
சுடமூளை யாவித் தொக்குஞ் சுத்தவா தனைய தென்பர். (13)

(ப - ரை.) மடமையின் = அஞ்ஞானத்தினது, செறிவே = கனமே, மெய்யாய் = ஆகாரமாய், மலியகங்காரம் = கனமான வகங்காரத்துடன், தன்றி = நெருங்கி, படர்தரு = தன்பத்தைத்தாராகின்ற, பிறப்பை = சன்மத்தை, மேன்மேல் = மேலும் மேலும், பயில்விக்கும் = உண்டாக்கும், மலினம் என்பர் = மலினவாசனை என்று மேலோர் சொல்வர், (சுத்தவாசனையாவது), அடர் = நெருங்கிய, மறுசனனமென்னும் = மறுபிறவியைத் தருவதென்னும், அங்குரமின்றி = மூளையில்லாமல், செந்தீ = சிவந்த அக்கினியால், சுட = வெதுப்ப, மூளையா = அங்குரியாத, வித்து = பீஜத்திற்கு, ஒக்கும் = ஒப்பாகும், சுத்தவாதனை என்பர் = தூயவாசனை என்று மேலோர் சொல்லுவர். (எ-று.) (13)

(ஸ்ரீ-வீர.) மடமையின் செறிவே மெய்யாய் = அஞ்ஞானத்தால் நன்னிடமாயேனும், நற்றிடமாயேனும் ஆகாரம் பெற்று என்பதாம்; அஞ்ஞானமிருந்தாலன்றே வாசனைக்கு நிலைபேறு தன்மையாதல், மற்றையபோதாகாதாம்,

கன அகங்காரசாலினியாமிது அதாவது நிபிடமாயாதல் திடமாயாதல் அகங் காரத்தால் அழகுடைத்தாகும் என்பதாம். இனிச் சுத்தவாசனாபினிலக்கண மாவது, இனிது வறுத்த விதைபோலும் மீண்டும் உண்டாக்கத்தகாததா யிருக் கும். அன்றியும், மலின வாசனையானது அஞ்ஞானத்தினன்குபெருத்த ஆகா ரத்தை யுடையதாம், கன் அகங்கார இயற்கையதாம், மீண்டும் மீண்டும் பிறப் பினும் வித்தாம், என்பர் மூத்தோர். வாசனை விரைகள் இனிது முளைப்பதற்கு அஞ்ஞானம் நல்ல நிலமாம், அதன்கண்ணே விடயத்தைச் சந்ததம் சிந்தித்தல் வடிவப்பயிற்சியால் விருத்தி யடைந்த நல்ல ஏகனுகாரத்தையுடைய வாசனை விரையாம். இராகத்துவேடாதிகளானே வளர்தலால் நெருங்கிய அகங்காரம் நீர் தெளிக்கும் நிலமுடையவனும்; அவனுலேயே அது விருத்தியடைவதாகி விரிந்து விளங்குகின்றது. சுத்த வாதனையானது மறுபிறப்பை யுண்டாக்கு மங்குரத்தை விடுத்து வறுத்தவிதைபோ லிருப்பதாம்.

(ச.) மடமையென்பது அஞ்ஞியவித்தையும், அகங்காரமென்பது தேகா தியி லாத்மாபிமானமும் ஆகிய அஞ்ஞானம் அன்னியதர ஞானம் என்னு மிரண்டாலும் நிபிடமா யிருப்பது மலினவாசனை யென்பதாம். வறுத்தவித் தங்குரத்தை யுண்டாக்குவதற் காகாததேபோல ஞானக்கினியால் வெந்து வலி குன்றி யிருத்தலின் ஜன்மாந்தரத்தை யுண்டுபண்ணுதது சுத்த வாசனை யென் பதாம். (13)

(ஸ்ரீ-வீர-அ-கை.) கூறிய பொருளையே விரித்து விளம்புகின்றார் அல்லது பலத்தோடுகூடி வியந்த ஜீவன்முக்தியை யாசிரியத்தோடுங் கூறுகின்றார், விளம்புமென.

(ச.) இப்போது சுத்தவாசனாசித்தியே ஜீவன்முக்தியாமெனக் கூறிப் பிரதானமான கதையைக் கூறத் தொடங்குகின்றார்:—விளம்புமென.

மெய்தரி நிமித்த மாகத் தரிப்பதாம் விளம்புஞ் சுத்த
மெய்தினர் பிறவி யான வனர்த்தத்தி னென்று மெய்தார்
நொய்தினி னேகுக்க வேண்டு நோக்கெலா நோக்கி யின்பஞ்
செய்திடுஞ் சீவன் முக்தி சேர்ந்தவ ரென்ன லாமே. (14)

(ப-ரை.) அன்றியுஞ் சுத்தவாசனை, மெய் = தேகம், தரிநிமித்தமாக = தங்கும் பொருட்டாக, தரிப்பதாம் = அணிவதாம், விளம்பும் = இங்ஙன மியம்பிய, சுத்தம் = தூயவாசனையை, எய்தினர் = பொருந்தினவர், பிறவி யான = ஜன்மமாகிய, அநர்த்தத்தில்=பொல்லாங்கில், என்றும்=மேலொருக் காலும், எய்தார் = பொருந்தார், நொய்தினில் = அதிக சூக்குமமாக, நோக் கவேண்டும் = அறியத்தகுந்த, நோக்கெலாம் = விடயமுழுதையும், நோக்கி= அறிந்து, இன்பஞ் செய்திடும் = சௌக்கியத்தைத்தராநின்ற, ஜீவன் முக்தி = ஜீவிக்குங்காலத்திலேயே முக்தியை, சேர்ந்தவரென்னலாம் = பொருந்தின வராமென்று புகலலாம். (எ-று.) (14)

(ஸ்ரீ-வீர.) வர்த்தமான தேகஸ்திதியின்பொருட்டுத் தாங்கப்படுவதும், எதன் நிமித்தத்தினாலே அறியவேண்டிய பிரஹ்மம் அறியப்பட்டதோ அதுவும் சுத்த வாசனையாமென்று மறிக. யாவர் தூயவாசனையுடையவராய் அறியவேண்டிய தமது யதார்த்த சொரூபத்தை யறிந்து மகாமேதாவிகளாயிருக்கின்றார்களோ அவர்கள் ஜன்மமேயாய அனர்த்தத்தின் பாத்திரமாக மறுபடியாக மாட்டார்கள்; அவர்களே ஜீவன்முக்தர்களென்றும் சொல்லப்படுகின்றார்கள். சுத்த அசுத்த வாசனைகட்கு இவ்வாறு இலக்கணங்களமைந்தவழி முழுமூலால் தூயவாசனை விடத்தக்கதன்றும், மற்றே, மலினவாசனையே விடத்தக்கதாம், தூயதோ பெருமுயற்சியினாலே சம்பாதிக்கத் தக்கதாம் என்பது சமுதாயப் பொருளாம். விதையினுள்ளே சூக்குமமாகிய அங்குரங்களிருந்தே காலஞ்சல முதலியவற்றின் சம்பந்தத்தான் முளைக்கின்றன, அதுபோல, வாசனையின் கண்ணுள்ளடங்கிய ஜன்மபரம்பரைகளிருந்தே காமகருமாதி நிமித்தவசத்தால் கிளம்புகின்றன. முற்றினுமில்லாததற்குச் சன்மஞ் சம்பவியாமையின் ஆண்டுத் தத்துவ ஞானத்தானே அவித்தைநிலஞ் சுடப்படுதலின் அதனுள்ளடங்கிய பிறப்புங்குரங் கெடினும் தனது பிறரது பிராரப்தத்தானே தடைப்பட்ட, வறுத்த விதைபோலும் தேகத்தைத் தாங்குவதின் மாத்திரம் பயனுடையதாய வாசனை எஞ்சும் அதுவே சுத்தமாம். ஜீவன் முக்தர்களாகிய தேகிகளிடத்தில் தேகமிருக்கும்வரை மீண்டும் பிறப்பைத் தராததாகிய சுத்த வாசனையானது, சுழன்ற சக்கரத்தில் சுழற்சியிருப்பதேபோல விருக்கும். தேகத்தைத் தாங்குங்காரியத்தானே அவர்களிடத்தும் வாசனையினிருப்பு அனுமிக்கப்படுமென்பது கருத்தாம். மீகுதியாகச் சுத்தவாசனையுடையவர்களாகி மீண்டும் பிறப்பாகிய அநர்த்தத்தை யடையாதவர்களாகியிருக்கும் அவர்களே மகாமதியுடையவர்களும் ஜீவன் முக்தர்களும் அறியவேண்டியதை யறிந்தவர்களும் ஆவர்கள் எனப்படுவர்கள், படவேதத்துவஞானத்தால் தடுக்கப்பட்ட பிறப்பின் மூலயாற்றலையுடைய வாசனை மாத்திரத்தானே தரித்த சரீரத்தன்மை, ஜீவன்முக்த இலக்கணமென்பதுதுணிபாம்.

(ச.) வறுத்தவித்துத் தினிக்குபயோகியாயிருப்பதுபோலத் தேகதாரணமாத்திரத்திற் குபயோகியாயிருப்பது சுத்தவாசனையென்பதாம். சுத்தமெய்தினர் ஜீவன் முக்தி சேர்ந்தவர் என்றதால் சுத்தவாசனையின் சித்தியே ஜீவன் முக்தியென்றதாயிற்று. (14)

(ஸ்ரீ-வீர-அ-கை.) இதுகாறும் இயம்பியவகையே ஜீவன் முக்திசாதன விஞ்ஞானஉபாய தத்துவமாதியையும் உபாயசகித முக்தியையும் அதனுபாய இலக்கண சாஸ்திரார்த்தத்தையும் சுருக்கமாகக் கூறி இப்போது எம்முறையானே ஜீவன்முக்தபதத்தை யடைந்து இச்சமுசார சங்கடத்தில் விவகரித்துக்கொண்டிருந்தனர் ஸ்ரீ இராகவர் என்னும் விஞவிற்குத்தரத்தைப் பிரதிஞ்ஞைவாயிலாக உத்தரகிரந்த சந்தர்ப்பங்கொண்டு கூறுகின்றார்:— அல்லது

ஜீவன்முக்தியின் சாதன நிரூபணத்தைப் பிரதிஜ்ஞை செய்கின்றார்:— ஆன்றதோரென.

ஆன்றதோர் சீவன் முத்திப் பதத்தினை யடைந்தி ராமன்
பூன்றமா மனத்தனை நெறியினைப் புகலக் கேட்பிற்
சான்றவிக் கேள்வியாலே சரைமர ணங்கடீர்த்தி
தோன்றலே யெனவான்மீகித் தொன்முனி சொல்லலுற்றான். (15)

(ப - ரை.) ஆன்றது = மாசுநிமையான, ஓர் = ஒப்பற்ற, ஜீவன் முத்திப் பதத்தினை = ஜீவன்முக்திப்பதவியை, அடைந்து = சேர்ந்து, இராமன் = ஸ்ரீ இராகவர், பூன்றமாம் = மகத்தாகிய, மனத்தனை = மனதுடையவனை, நெறியினை = சன்மார்க்கத்தினை, புகல = யாமுனக்குக்கூற, கேட்பில் = நீ சிரத்தையோடுஞ் சிரவணஞ் செய்வையேயாயின், சான்ற = சர்வசாக்ஷியே தானெனத் தெளிவிக்காகின்ற, இக்கேள்வியாலே = இச்சிரவணத்தினாலே, சரை மரணங்கடீர்த்தி = தானேநிருவிகாரியாதலின் சராமரணஞ்சேர்ந்தனுவாய், தோன்றலே = சிடநற்குணங்களிற் பெருமைவாய்ந்த சிறந்தபரத்துவாசனே, என = என்றிவ்வண்ணம், தொல் = பழமையான ஆதிகவியென்னும், வான்மீகிமுனி = வன்மீகமாகியபுத்து மூடும்படியாகத் தவம்புரிந்து வான்மீகரெனக் கூறுமாறு நின்ற ஜீவன்முக்த தவத்தையுடைய முனிவர், சொல்லலுற்றான் = அனுக்கிரகிக்கத்தொடங்கினார். (எ - று.) (15)

(ஸ்ரீ - வீர.) ஜீவன்முக்தர்களுடைய ஸ்தானத்தை அதாவது சுவாராஜ்ய மென்னும் நிர்வாண பரமானந்தவடிவ சொரூபத்தை எம்முறையானே ஸ்ரீ இராகவரடைந்திருந்தாரோ அம்முறையை யென்பதாம். அத்தகைய ஜீவன் முத்திப்பதத்தை மகாமதியையுடைய ஸ்ரீ இராகவர் எச்சாதனமுறையானே சாதித்தாரோ அதனை நினக்குக்கூறுகின்றேன் கேட்குதிகேட்பின் ஜனன மரணமேமுதலாயிருந்த அநர்த்தங்களியாவும் நீங்குவதாகிய பயன்கிடைக்கும்; மேலும், இச்சுயமாகிய ஸ்ரீ இராமர் முறையைக்கூறுகின்றேன் இதனை நீ கேட்ப தனுனேயே எப்போதுமே யாவற்றையுமே யுணர்வாய், இதனனே, ஒன்ற னுணர்வானே எல்லாவற்றி னுணர்வுமாமென்பதும் அதன்பயனுமதாம்.

(ச.) சரைமரணங்கடீர்தி யென்றதனால் ஞானசாத்திர விசாரத்தாற்றானே பஞ்சகோசவிலக்ஷணமான நிருவிகாரியென்னுஞ் சுவானுபூதி யுதித்தலின் அப்பஞ்சகோசங்களுக்குள்ள சரா மரணமுதலிய சகலவிகாரங்களுஞ் சாந்தியா மென்றதாயிற்று. (15)

(ச - அ - கை.) அற்றேல் ஏககாலத்தில் வெகுவித சாஞ்சல்லியமான வாலியமும், அன்றியும் அகிலமான ஆசையென்னுந் தோடத்துக்கடிமை புகுந் தாருண்யமும், அன்றியும் சார்வபௌம சம்பத்தோடுகூடிய மகாகீர்த்தியும் வலியுமுள்ள பிதாவும், முன்னிலையி லனுதினமு மனுபவித்தற்குரிய சுகசாதன

சாமக்கிரியும் இருப்ப ஸ்ரீஇராமருக்கு வைராக்கியாதி யோக்யதை யெங்ஙன மாம், எங்ஙனந்தான் அநதிகாரியாகிய அவருக்கு ஸ்ரீவசிஷ்டபகவானுபதேசங் கூடல், உபதேசமில்லாதவருக்குச் சீவன்முக்தியினடைவுதான் எங்ஙனமோ தானுதல் எனச்சங்கித்து, நிரந்தரந்தடையற வியற்றும் ஞானசாஸ்திர விசாரத் தால் நித்தியாகித்திய வஸ்துவிவேகமும், தீர்த்தாடன மூர்த்தி வழிபாடு முத லியவற்றுண்டாகாகின்ற அகண்ணிய புண்ணிபத்தானே பரிசுத்தமான சித் தத்திற்கு விடயங்களிலுள்ள தோடதரிசனத்தால் வைராக்கியமும் ஸ்ரீவசிஷ் டாதி மகாமுனீசுரர்கட்கு அன்புடன் செய்யும் பணிவிடையாற் சமதமாதிசம் பத்தும் முத்திவிருப்பும் என்னுஞ் சாதனசதுட்டய சம்பத்துள்ள அதிகாரி யான ஸ்ரீ இராகவருக்கு ஆசிரியரது அனுக்கிரகத்தாலும் தமதுபோதவலி யாலும் ஜீவன்முக்தி சித்திப்பதிற் றடையாதாமெனக் கருதிக்கூறுகின்றார்:— சதுர்மறையென.

சதுமறை நூல்க ளியாவுந் தரித்தனன் விநோதத் தாலே
யெதுபய மென்ன வஞ்சா திருந்தனன் சின்னஞ் பின்னுண்
முதுபய னதிக ளியாவு முனிவர திடமுங் காண்பான்
கதுமெனக் காத லாணுன் கார்நிறக் கமலக் கண்ணன். (16)

(ப - ரை.) கார்நிறக்கமலக்கண்ணன் = மேகவர்ணமான தேககாந்தியை யும் செந்தாமரைமலரிதழ்போன்ற கண்களையும் கவின்பெறப் பொருந்திய ஸ்ரீ இராமச்சந்திரர், சதுமறை = இருக்குமுதலிய நான்குவேதங்களையும், நூல் களியாவும் = ஆறு அங்கங்கள் நியாயம் மீமாம்சை மிருதி புராணம் அர்த்த வேதம் ஆயுர்வேதம் காந்தர்வவேதம் தனுர்வேதம் இதிகாசங்கண்முதலிய சருவசாத்திரங்களையும், தரித்தனன் = ஆன்றோரொழுக்கத்தை யனுஷ்டித்துக் காட்டுவான் சீடராயினும் ஈசுரமான்மியங்கொண்டு குதூகலத்துடன் ஆயாச மின்றியே கற்றுணர்ந்தவராகி, ஷ்யாகிரகத்தினின்றும் தமது அரண்மனைக்கு வந்து, எதுபயமென்ன் = இனிநமக் கச்சமியாதுளதென்று, அஞ்சாது = ஒரு பயமுமின்றி, விநோதத்தாலே = லீலையால், சின்னஞ் = சிலதினங்களைப் போக்கிக்கொண்டு, இருந்தான் = நின்றான், பின்னஞ் = வாலிபகாலஞ் சென்ற தன்பின்பு, முதுபயன் = முதிர்ந்தபிரயோசனத்தைத் தராகின்ற, நதிகள் = தீர்த்தங்களையும், முனிவரதிடமும் = முனிசிரேஷ்டர்கள் வசிக்கும் புண்ணிய ஆச்சிரமங்களையும், யாவும் = மற்றுமுள்ள தேவாலயாதி அனேத்தையும், காண்பான் = தரிசிக்கவேண்டுமென்று, கதுமென = அதிவிரைவாக, (அல்லது கதுவுறு = நீங்காதுபற்றுதலான,) காதலாணுன் = விருப்பமுற்றான். (எ-று.) (16)

(ஸ்ரீ - வீர.) ஷ்யாகிரகத்தினின்றும் = ஷ்த்தைகளின் இலாபஸ்தான மாகிய ஆசார்யகிருகத்தினின்றும் என்பதாம். தீர்த்த புண்யாசிரமங்களின் வரிசைகளைக் காண்பான் அனுராகமுண்டாயதாம். எங்கும்பயமின்றிய செந் தாமரைக் கண்ணராகிய ஸ்ரீஇராமர் பாடசாலையினின்றுங்கிளம்பி வீடுவந்து

சேர்ந்து நாட்களே விளையாட்டாற் கழித்துவந்தனர். பிரஹ்மசரிய ஆசிரமத்திற்குத் தக்க குருகுலவாசத்தினின்றும் இளம்பி யென்றதனனே சர்வவித்தைகளின் தானங்களையும் கவர்ந்ததன்பின்னென்னலாம். சுரமுதலியவற்றுச் சோகமின்றியவராய்ப் பிரஜைகளிருக்கும்படியாகத் தசரதர் பூமியைக்காத்துக் கொண்டிருக்குங்காலத்தில் ஈண்டு இராஜ்யத்தின் இனிமையானே பிரஜைகட்குச் சுரமுதலிய பீடையுமில்லையாயின் அன்னிய பீடைகளில்லாமலிருந்தன வென இயம்பவேண்டுவதில்லையாம். அக்கால் ஸ்ரீ இராமருடைய மணமானது, தீர்த்தங்கள் புண்ணியாசிரமங்கள் முதலியவற்றைக் காணவேண்டுமென்னும் பேரவாவைப் பெரிதுமடைந்தது. அற்றேல், இவ்வத்தியாத்ம சாஸ்திரத்தில் தீர்த்தயாத்திரையை வருணித்தற்கும் இனிக்கூறப்படும் வேட்டையை வருணித்தற்கும், யாதுசம்பந்தம்? ஸ்ரீ இராம சரித்திரமாதலினனே ஈண்டுவருணிக்கப்பட்ட தென்பது கூடாது, ஏனெனின், ஸ்ரீ இராமரது அவதாரத்தை வருணிக்க நேர்தலினனும், பூர்வஇராமாயணம் வீணுகப்போதலினனும் எனவினவின்? விடைவருமாறு:—க்ஷதையினுபாயத்தை விசாரித்து என்பதன்கண்ணே தத்தம் வருணத்திற்குத்தக்க யாகாதி கருமத்தாலுண்டாய மனத்தூய்மையானது பிரஹ்மவித்தையினதிகாரத்திலினிது பொருந்துகின்றது எனவியம்பப்பட்டது; வயது வித்தைமுதலியவை கிடையாமையின் யாவன் யாகாதியை அனுஷ்டிக்கச் சாமர்த்தியமில்லாதனுவனே அவனுக்குத் தீர்த்தயாத்திரை முதலியவற்றினும் யாகாதிபலமாகிய மனத்தூய்மையதிகாரம் 'பூமிசம்பந்தமாய் இந்நீரமய யாகங்கள் தீர்த்தரூபங்களாக உண்டாக்கப்பட்டன' என்னும் வசனத்தானே சித்தமாம் என்பதை குறிப்பிக்கும் பொருட்டுத் தீர்த்தயாத்திரையை வருணித்ததாம். இதனனே ஸ்ரீ இராமரைக் கிழவயதுடையவராக இனிதுகற்பித்து ஆண்மஜ்ஞாசையை வருணிக்கவில்லை, கூறியபொருள் குறிப்பிக்கப்படாமற்போதலின். வேட்டையைவருணிப்பதோ, கண்டூஉற்சாக தரிசன அவ்வும் ஆண்மஜ்ஞாசைக்குத் தடையாதலின் அவ்வுற்சாகத்தை யனுபவியாமல் அவ்விச்சையகலாவிடின் அதையனுபவித்தேனும் அஃதசாரமென்னுந் துணிபானே அவ்வாசையை யகற்றித் தடையில்லாமல் சிரவணாதிகளில் நிலை பெற்று நிற்றல்வேண்டுமென விசேடமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஆமெனயாவுமே மிணுமுடைத்தாம்.

(ச.) அவதாரிகையிற் சந்நிதியிற் பிதாவும் என்பதிட்டமாயின், அத்தகைய பெருமைவாய்ந்த பிதா தமது சமீபத்தில் வேண்டிய சௌகர்யஞ் செய்து கொடுக்கத் தடையிலாதிருப்பச் சாதனமெங்ஙன்கூடும் எனப்பொருள் கொள்ளலாம்.

விநோதத்தாற் சிலநாளிருந்தனன் என்பதனற் குருகுலத்திலடங்கிச் சிசுரூஷைகளைப் பயபக்தியுடன் செய்துகொண்டிருந்தமையின், அக்கிலேச நிவிருத்தியின் பொருட்டுத் தனதிச்சைப்படி விளையாடிக் கொண்டிருந்தாரெனத் தெரிவித்ததாம்.

(அ - கை.)

தந்தைதன் சரண மான நகமெனுந் தாது பூத்த
வந்தமில் கமலப் போதை யன்னம்போ லணைந்து தாழ்ந்து
முந்தைநன் னதிக டேவ ராலய முனிவர் கான்கள்
எந்தைநின் னருளிற் காண்பா னெண்ணிய தென்ற னுள்ளம். (17)

(ப - ரை.) ஸ்ரீ இராகவர் இங்ஙனஞ்சிந்தித்தெழுந்து, தந்தைதன் = பிதாவினது, சரணமான = பாதமாகிய. நகமெனும் = உகிரென்னும், தாதுபூத்த = கேசரநிறைந்த, அந்தமில் = அழகிற்கிருப்பிடமான, கமலப்போதை = பதுமமலரை, அன்னம்போல் = ஒதிமம் போல், அணைந்து = சார்ந்து, தாழ்ந்து = வணங்கி, முந்தை = பழமையான, நன்னதிகள் = புண்ணியதீர்த்தங்களையும், தேவர் = கடவுளரையும், ஆலயம் = அவர்வசிக்கும் கோயிற்களையும், முனிவர் = தவத்தோரையும், கான்கள் = அவர் வசிக்குந் தபோவனங்களையும், எந்தை = எனதுபிதாவே, நின்னருளின் = நினதுகாருண்யத்தினால், காண்பான் = தரிசித்தற்கு, என்றனுள்ளம் = எனதுமனம், எண்ணியது = விரும்பியது. (எ - று.) (17)

(ஸ்ரீ - வீர.) அபிநவங்களாகிய நகங்களே தாமரைமலரின் கிஞ்சல்கை போல கேசரங்களாம் = கிஞ்சற்கங்களாம், அத்தகையவை சரணங்களென்க. ஆண்டு ஒருகால் நற்குணங்கட்கிடமாகிய ஸ்ரீ இராகவர் இவ்வாறு கூறியபொருளைச் சிந்தித்துத் தந்தையினது நகமாகியதாதுக்கீறைந்த நவீனசரணகமலங்களை அன்னப்பக்ஷியைப்போல அணைந்து வணங்கிக் கூறுவதாவது, ஹேநாதனே, தீர்த்தங்களையும் தேவாலயங்களையும் முனிவர்வாழும் வனங்களையும், அவரது பண்ணகசாலைகளையும் காணும் பொருட்டு எனதுமனம் மிகவும் விரும்பியது. நாதனேயென்றது தமதுபரதந்திரத்தைக் குறிப்பிக்கும் பொருட்டாம். தந்தையின்பால் வாழ்பவனுக்குத் தந்தையின் சந்நிதியில் தந்தையின் ஆணைவாயிலாகவே தருமஅதிகாரமிருத்தலின் என்பது கருத்தாம். (17)

(அ - கை.)

முடிவில நிரந்த தெல்லா முடிவுறு தில்லை நின்னு
லடியனேன் முன்னம் வேட்ட வரமுநீ யருடி யென்னப்
படிபுகழ் வசிட்ட னோடும் பார்த்திப னினிதி னெண்ணிக்
கடிதுபோய் மீடி யென்னக் கார்கழல் வணங்கிப் போனன். (18)

(ப - ரை.) முடிவிலர் = அநந்தம் யாசகர்க்குள் ளொருவனேனும், இரந்த தெல்லாம் = யாசித்தபொருளனைத்தும், நின்னால் = (நாதனே) உம்மால், முடிவுறுது = முற்றுப்பெறுமல், இல்லை = அமானிதையாய்ச் சென்றது இன்றும், ஆகலின், அடியனேன் = அடியேன் ; முன்னம் = பூருவம், வேட்ட =

யாசித்த, வரமும் = இவ்வரத்தையும், நீயருடியென்ன = நீயருள்வாயென்று வேண்ட, படிபுகழ்=உலகத்திலுள்ள மகான்கள் புகழாகின்ற, வசிட்டனேடு= ஸ்ரீ வசிட்டமுனிவரருடன், பார்த்திபன் = அரசன், இனிதின் = நன்றாக, எண்ணி = விசாரித்து, கடிது = சிக்கிரமாக, போய் = சென்று, மீடி=திரும்பி, என்ன = என்று விடைகொடுக்க, கார் = மேகவண்ணனான ஸ்ரீ இராகவர், கழல் = அம்மன்னவனது சரணத்தை, வணங்கி=இறைஞ்சி, போனன்= தனது கிருகத்திற்குச் சென்றான். (எ-று.) (18)

(ஸ்ரீ-வீர.) உம்மால் எந்த யாசகனுவது இப்புவனத்தில் இச்சித்தவற்றை யடைதலாற் சன்மானிக்கப்படாமற் போனனென்பதாக இல்லையாதலின், முதலதாகிய இவ்வெனது பிரார்த்தனையைப் பலனுடையதாகச் செய்யவேண்டும், எனவேண்டிக்கொள்ளப்பட்ட அரசரானவர் ஸ்ரீ வசிஷ்டபகவானேடும் ஆலோசனைசெய்து முதல்முதல் வேண்டிக்கொண்ட ஸ்ரீ இராமரைப் போகுமாறே ஆஞ்ஞை தந்தனர். மைந்தன் பிரியும் துயரால் அங்கீகரித்திலர் என்பதாக இல்லை. (18)

(அ-கை.)

* தம்பிய ரோடு நன்னு ளேகித்தன் னூடு நீங்கிப்
பம்பிய நதியுங் கானும் பற்றற்ரோ ரிடனும் பாலை
வெம்பிய நிலனும் வேலைக் கரைகளும் விலங்கற் சார்வும்
வம்பிய லலங்கல் வீரன் நோக்கினன் மகிழ்ச்சி கூர. (19)

(ப - ரை.) நன்னுள் = சுபமான நக்ஷத்திரதினத்தில் சுபயோக சுபகரணத்தி வாய்ந்தவேளையில், தம்பியரோடும் = சகோதரருடன், வம்பியலலங்கல் வீரன் = வாசனை பரிமளியாகின்ற (வெற்றி) மாலையைத்தரித்த சுத்தவீரனுகிய ஸ்ரீ இராகவர், எகி = தனது கிருகத்தினின்றும் தீர்த்தயாத்திரை நிமித்தம் புறப்பட்டு, தன்னுடு = தமது கோசலமண்டலத்தை, நீங்கி = கடந்து, பம்பிய = பொலிவுள்ள, நதியும்=புண்ணியமயமான தீர்த்தங்களையும், கானும்= தபோ வனங்களையும், பற்றற்ரோரிடனும் = முனிவராச்சிரமங்களையும், வெம்பிய = வெப்பமுள்ள, பாலைநிலனும்=பாலைநிலங்களையும், வேலைக்கரைகளும்= சமுத்திரங்களையும், விலங்கற் சார்வும் = மலைச்சார்புகளையும், மகிழ்ச்சிகூர= சந்தோடம் பெருக, நோக்கினன் = நீராடல் தானம் ஜபம் தியானம் ஆகிய இவைகளைக் கிரமமாக முன்பியற்றிப் பின்பு தரிசித்தான். (எ-று.) (19)

(ஸ்ரீ-வீர.) சுபவாரத்தில் சுபதிதியில் சுபநக்ஷத்திரத்தில் சுபயோகத்தில் சுபலக்னத்தில் ஸ்ரீ இராகவர் தம்பிமார்களோடும் சுபசகுனங்களோடும் மங்கள அலங்காரத்தோடுகூடிய திருமேனியை யுடையவராகி, மறையவர்களாலாசீர்வாதம் பண்ணப்பட்ட மார்க்கமுடையவராகி ஸ்ரீவசிஷ்டபகவானுற் றேர்ந்தெடுத்தனுப்பப்பட்ட சாஸ்திரமுணர்ந்த பிராஹ்மணர்களோடுகூடியவராகி

மிகநேயத்தோடுகூடிய மேன்மைதங்கிய இராஜபுத்திரர் சிலரோடுகூடியவராகி, தாய்மார்களால் பன்முறை தழுவித் தழுவிச்செய்யப்பட்ட ஆசீர்வாதங் களோடு அலங்கரிக்கப்பட்டவராகித் தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்னு முயற்சியுடையவராகித் தமது அரண்மனையினின்றும் வெளிப்போந்தனர். தமதுகோசல மண்டலத்தினின்றும் முறையாகத் தொடங்கி ஸ்நான தான தவத்தியானவாயிலாக நதிதீரங்கள், புண்ணியவனங்கள் புண்ணிய ஆசிரமங்கள் தேவாலயங்கள் காற்றுநிறைந்த பாலைவனங்கள் கிராமமுடிபுகளிலிருக்கும் கடற்கரைகள் மருத்தலங்கள் மலைத்தோற்றங்கள் இந்துசமுத்திராகினி நிலோற்பல சமீப்முனைமுதலிய விசேடபுண்ணியநதிகள் ஸ்ரீவாரணசிமுதலிய விசேடபுண்ணிய ஸ்தலங்கள், ஸ்ரீவிசுவேசர் முதலியவிசேட புண்ணியமூர்த்தி கள் 64 சிவாலயங்கள் 64 விஷ்ணுவாலயங்கள் நாணுவித ஆச்சரிய விசித்திர நாற்கடற்கரைகள் விந்திய மந்திர ஹிமாசலதலங்கள் இராஜஇருடிகள் பிரஹ்ம இருடிகள் தேவர்கள் பிராஹ்மணர்கள் புனிதமங்கள புண்ணியாசிரமங்கள் முதலியயாவற்றையும் மிகவும் ஆதரவோடும் இனிது நோக்கினர்.

(ச.) தம்பியரோடுமென்பது பரத லக்ஷ்மணரோடுமென்றுணர்தற்பாற்று, என்னெனினிவர்களே யவர்திருக்கருத்துணர்ந்து நடக்கும் நீர்மையராதலி னென்க. (19)

(அ - கை.)

துன்னுறு மமரர் போற்ற மானிடர் துதிப்ப மீண்டு
தன்னுயர் சிவலோ கத்தைச் சார்தரு மீச னென்னப்
பொன்னுல கத்தை மேவும் புரந்தரன் புதல்வ னென்ன
மன்னுறை யயோத்தி புக்கான் மலர்சொரிந் தியாரு மேத்த. (20)

(ப - ரை.) தன்னுயர் = தனதுமேலான, சிவலோகத்தை = சர்வஐசுவரி யங்களும் நிறைந்து ஸ்ரீபார்வதி சமேத பரமசிவத்தின் நிவாசமாகிய கைலாச பர்வதத்தை, சார்தரும் = பரமபக்தானுக்கிரகநிமித்தம் விஜயஞ்செய்திருந்து மீண்டும் சுவஸ்தானத்தைநோக்கி யெழுந்தருளிவராநின்ற, ஈசனென்ன = உமா மகேசுரர் போலும், அந்தஸ்ரீ இரகுநந்தனர், துன்னுறும் = நெருங்காநின்ற, அமரர் = தேவதைகள், போற்ற = புகழவும், மானிடர் = மனிதர், துதிப்ப = துதிக்கவும், மீண்டு = தமதுகிருகத்தைக் குறித்துத்திரும்பி, பொன்னுல கத்தை = சுவர்க்கலோகத்தை, மேவும் = பொருந்தாநின்ற, புரந்தரன் புதல் வனென்ன = தேவேந்திரனது மைந்தனுகிய சயந்தன்போலும், யாரும் = பூவை யர் புருடரீனவரும், மலர் சொரிந்து = முறையே அரிவையர்பொரிமலரும் ஆடவர் பூமலரும்பொழிந்து, ஏத்த = மங்களத்துதிகள்பாட, மன்னுறை = தமதுதந்தையாகிய மகாராஜன்வாழும், அயோத்தி = அயோத்திமாநகரத்தை, புக்கான் = சேர்ந்தான். (எ - று.) (20)

(ஸ்ரீ - வீர.) ஆண்டாண்டு சந்தித்த அமரர் கின்னரர் மனுடர் முதலியோ ராலே பூஜிக்கப்பெற்றவராகி, ஜம்புத்தீவு வடிவமாய இச்சர்வபூமியையும் இனிதுகண்ணுற்றுத் தமது அயோத்திமாநகரை ஸ்ரீஇரகுநந்தனர் திசைகளில் பரமபக்தானுக்கிரக விலாசமாகச்சென்ற ஸ்ரீபார்வதிநாயகர் தமதுசிவலோக த்தை யடைந்ததுபோல அடைந்தனர். புரவாசிகளால் லாஜபுஷ்பாஞ்சலி மாரியால் நிறைக்கப்பட்டவராகி, ஸ்ரீமான்ஜயந்தனுகிய தேவேந்திரன் மைந்தன் றனதுசுவர்க்கத்தை யடைந்ததேபோலத் தமதரண்மனையை யடைந்தனர்.

(ச.) ``யாருமலர் சொரிந்தேத்தவெனப் பொதுப்படக்கூறினமையின் அயோத்தியில் வசிக்கும் பூவையரனைவரும் வணங்கிப் பொரிமலர்மாரி பொழி ந்து துதிக்கவும், புருடரனைவரும் வணங்கிப் பூமலர்மாரிபொழிந்து துதிக்கவும் எனப் பொருள்விரித்தாம்.

(அ - கை.)

நோக்கிய தேச நீதி நுவல்வுற்றுப் புலரு முன்னே
சேக்கைகின் றெழுந்து நித்த நியமங்கள் செய்துந் நாதை
நீக்கமில் சரணந் தாழ்ந்து நெடுந்தவ வசிட்டன் முன்னோர்
வாக்கினுன் ஞான நீதி வாய்ந்தபல் கதைகள் கேட்டும். (21)

(ப - ரை.) ஸ்ரீஇராகவர் தமதுகிருகத்திற் சுகமாக வசித்தவராகியக்காலந் துடங்கி, நோக்கிய = விதிதாகாரங்களாகக்கண்ட, தேசநீதி = தேசாசாரங்களை, ஒருவர்க்கொருவர் நுவல்வுற்றும் = சொல்லிக்கொண்டும், புலருமுன்னே = விடிதற்குமுன்பு, சேக்கைகின்றெழுந்து = சயனத்தைவிட் டெழுந்திருந்து, நித்தநியமங்கள் = நித்தியகன்மங்களை, செய்தும் = விதிப்படி புரிந்தும், நாதை = தமது தந்தையினது, நீக்கமில் = பிரிவில்லாத, சரணம் = பாத த்தை, தாழ்ந்தும் = வணங்கியும், நெடுந்தவ = மகாதவமுடைய, வசிட்டன் முன்னோர் = ஸ்ரீவசிஷ்டாதிகளது, வாக்கினால் = அமிர்தமயமான மொழி களால், ஞானநீதிவாய்ந்த = உண்மையான ஞானத்தைத்தாராநின்ற, பல்கதை கள் = பற்பலவிசித்திரமான கதைகளை, கேட்டும் = வினவியும் இருந்தனர்.

(ஸ்ரீ - வீர.) தமது தந்தையை = சப்யர்கள் நிறைந்த சபையில் தேவேந்தி ரனுக்குத் தம்பியாக்க கொலுவீற்றிருக்கும் தமது பிதாவை யென்பதாம். மேலும் சந்தோஷத்தாலுன்மத்தராகிய ஜனங்களால் மிகமேன்மையாகச் செய்யப்பட்ட கம்பீரமாகிய கோலாகலத்துடன் ஸ்ரீராமரது விஜயமகோற் சவம் பரமானந்தத்துடன் எட்டுதினங்கள் கொண்டாடிய பின்னர் ஸ்ரீ இராக வர் இங்குமங்கும் கண்ட நானுவகையாய தேசாசாரங்களை யிங்குமங்கும் வரு ணித்துக்கொண்டு அரண்மனையிலேயே அது முதற்சுகமாக வசித்து வந்தனர். அதிகாலையில் தினம்தினம் எழுந்து விதிப்படி சந்தியைச்செய்து கொலுமண்ட பத்தில் வீற்றிருக்கும் இந்திரசமமாகிய தமதுதந்தையைத் தரிசித்து ஸ்ரீவசிஷ்

டர் முதலியவரோடு மிருந்து மிகவும் விசித்திரத்தோடு கூடிய அத்தியாத்ம ஞானக்கதைகளானே மகிழ்ந்தும் இருந்தனர்.

(ச.) ஸ்ரீ இராகவர் ஸ்ரீ வசிஷ்டமுனிவர் முதலியவரோடு கூடியிருந்து தினசதுர்ப்பாகத்தில் ஞானகர்ப்பம் வாய்ந்த கதைகளினலே மகிழ்ந்திருப்பர்.

(அ - கை.) (21)

தந்தைசொற் படியே தாணே தன்னுடன் வேட்டை கண்டும்
பந்துமித் திரர்கள் பின்னேர் தம்மொடும் பருகி ராரீத்
திந்துவு மமுதும் போல நிருபருக் கினிய செய்து
மைந்துட னீரைந் தாண்டு புக்கின னனைய நாளில். (22)

(ப - ரை.) தந்தை = பிதாவினது, சொற்படியே = உத்தரவின்படியே தாணே தன்னுடன் = தமது மகத்தான சேனையோடும், வராகாதி நிறைந்தவனத்திற் சென்று, வேட்டைகண்டும் = வேட்டையாடியும், அதன்பின்ன ரண்மனையில் வந்து மூழ்குதன் முதலியவற்றை முறையே செய்து, பந்துமித்திரர்கள் = மித்திர பந்துக்களோடும், பின்னேர் தம்மொடும் = சுகிர்தர் சகாயர்களோடும், பருகி = புசித்து, ரீராரீத்து = நிசியை நெகிழ்த்தி, இந்துவும் அமுதும் போல = சந்திரனும் சுதையினது ரசமும்போல, நிருபருக்கு = நிருபதிகளுக்கு, இனிய = சம்மதமான விவகாரங்களே யின்பமாக, செய்தும் = இயற்றியும், ஐந்துட னீரைந்தாண்டு = பதினைந்துவருடம், புக்கினன் = சென்றவனுனன், அனையநாளில் = அக்காலத்தில் (எ-று.) (22)

(ஸ்ரீ - வீர) தினத்தின் நான்காவது பாகத்தில் தந்தையினது கட்டளைப் படி பெருஞ்சேனையோடு கூடியவராகி வேட்டையின் விருப்பத்தால் காட்டுப் பன்றி காட்டெருமை முதலியவற்றினே கலக்கமிகுத்த காட்டையடைந்து வேட்டையாடி வீட்டிற்குத் திரும்பிவந்து முறையாக ஸ்நாநாதிகளைச் செய்து மித்திரர் பந்துக்களோடும் அமுதுசெய்து நேயர்களோடும் நிசியை நீக்குவர். ஸ்ரீ இராகவர் இலக்குமண சத்ருக்நர்களோடும் தீர்த்தயாத்திரையி னின்றும் வந்தது முதற்கொண்டு இவ்வாறு பெரும்பாலும் தினசாரமுடையவராய்த் தந்தையினது அரண்மனையில் பெருமகிழ்வோடும் வாழ்ந்து வந்தனர். பெரும்பாலும் என்றது வேட்டை முதலியவற்றிற்கு குடிகட் குபத்திரவ மேற்பட்டாற் செல்லுதலும், படாவிட்டாற் செல்லாமை பற்றியாம். அரசர்கட்குத் தக்க விவகாரத்தால் மனைகரமும், நல்லோருடைய வுள்ளத்தில் சந்திரிகையைப் போலும் மகிழ்வைத் தருவதும், அதனனேயே புகழத்தக்கதும், அமுதரசம் போல ஆற்றலுற்றதும், கோமளமும் ஒழுகாகின்ற அமுதரசம்போலும் மாதுர்யமும், ஆகிய ஒழுக்கத்தானே ஸ்ரீ இராமர் தினங்களே நன்குகழித்துவந்தனர்.

(ச.) பிரிதலுக்காற்றுதவர் பந்துக்களும், சம்மதியோ டொன்று பட்டவர் சுகிர்தரும், சமப்பிரிய முடையர் மித்திரரும், சமப்பிராண னுடையர் சகாய

ரும் என்பது சம்மதமாம்; என்னுமிப் பிரமாணத்தாற் பந்துமித்திரர்கள் பின் னோரின் பேதமறிக, நிருபதிகளுக்குச் சம்மதமான விவகாரமாவது மனுவாதி களா லுபதேசிக்கப்பட்ட மன்னர் நீதி யென்பதாம். வடமொழி மூலம், ஊன சோடச வருஷம் (சிறிதுகுறையப் பதினாறுவருடம்) ஸ்ரீ இராகவர் திருமேனிக் காயதெனவுளது. (22)

(ஸ்ரீ-வீர - அ - கை) ஈண்டிது சுருதிபுகன்ற நிச்சிரேய சோபாய பரிபா டியாம், பல அபிப்பிராயம் பற்றுமை வாயிலாகத் தத்தமது வருண ஆசிரம கரும அனுஷ்டானத்தால் அறம்பிறக்கும் அதனானே மறமழியும், "அறத் தான் மறத்தையறுத்தே யகற்றலாம்" என்னும் சுருதியினனென்க, மறமழி ந்தவழி மனத்தினுக்கு விவேகவாற்றலாம், பின் சமூசாரதத்துவ பரிஞானம் அதனால் வைராக்கியாதி அதன்பின் முமுக்ஷுத்தை, அதனன் மோக்ஷசாதனந் தேடுதல், பின் சருவகரும சந்நியாசம், பின் குருசரணத்திற் சரணடைதல், பின் சிரவணாதி யனுஷ்டானம், பின் பிரஹ்மான்ம சாக்ஷாத்காரம், அதனால் அஞ்ஞான வினாஷத்தி, அதன்பின்னரோ சுவராஜ்யத்தின் கண்ணேயே யெழுந்த ருளி யிருத்தலாம். "இச்சம்பிரசாதம் இவ்வுடம்பினின்று மினிது கிளம்பிப் பரஞ்சோதி ரூபத்தைப் பற்றித் தன்வடிவத்தானே தானேயிருக்கும்" எனச் சுருதியு மறைகின்றது. அறை அவ்வித்தொடர்ச்சிஜகத்குரு ஸ்ரீராமசரண கமல பஜனத்தின்கண் மூழ்கிக்கிடக்குஞ் சிற்சில மகாதீர புருடர்களிடத்தின் மாத் திர மிருப்பதாகும், புருடோத்தமனுகிய உலகர்க்கெல்லாந் திருவருள் செய்ய வேண்டுமென்னு மிச்சையினானே பிரஹ்ம வித்தையின் அதிகாரி துரந்தரத் தகைமையைத் தரித்திருந்த தாசரதியின் மாட்டும் கூறிய முறையை காண்பிப் பான் விரும்பி, அவரிடத்தில் நிஷ்காம கருமானுஷ்டான மிருப்பதாக அறை ந்த கிரந்த சந்தர்ப்பத்தால் அறைந்து இஞ்ஞான்று அதன்பயனை விவேக வைராக்கிய இலக்கணத்தைக் காண்பிக்கின்றார்:—இவ்வாறு ஸ்ரீ இராமருக்கு மனத்தூய்மையினுபாய அனுஷ்டான ஒழுக்கத்தை வருணித்து, அதன்பயனு கிய வைராக்கியாதி சாதனசம்பத்தியை விளம்பும் வேட்கையராய்த் தொடங்கு கின்றார்:—நிறையென.

(ச - அ-கை.) வைராக்கியத்தை நன்கு வருணித்தற்கு இனிது தொடங்கு கின்றார்:—நிறையென.

நிறையெழின் மேனி யெல்லா நெடுஞ்சரற் கால நீர்போற்
குறைவுற நெடுங்கட் செய்ய குளிர்முகம் விளர்ப்பத் தும்பி
யுறையும் வெண் கமலம் போல வொருகையாற் கபோல மேந்தி
யறைகழ லிராம னம்பு யாசனத் திருப்ப தானன். (23)

(ப - ரை.) அறைகழ லிராமன் = சப்தியா நின்ற வீரகண்டை முதலிய ஆபரணங்களைத் திருவடியி லணிந்துள்ள ஸ்ரீ இரகுகுலதிலகர், நிறையெழின்

மேனியெல்லாம் = நிறைந்த கட்டழகு மன்மதனையும் பெற்றதன்மையால் வாய்ந்த திருமேனிமுழுதும், நெடுஞ்சரற்கால = முதிர்ந்த மழைபேய்ந்து ஓய்ந்தபோது வந்தபோது குறைந்து கொண்டே போகும்படியான, நீர் போல் = தெளிவான தடாகஜலமே போல, குறைவுற் = அணுதினம் கிருசத் தகைமையை யடைய, நெடுங்கண் = விசால அரூஷங்களையுடைய, செய்ய குளிர் முகம் = சிறந்தசந்திர சீதளவதனம், தும்பியுறையும் = அளிமாலைகணிறைந்த, வெண்கமலம்போல = காலபாகத்திலே விகசித தளங்களையுடைய சுவேத பதுமம்போல, ஒருகையால் = ஒரு திருக்கரத்தால், கபோலமேந்தி = கபோல தலத்தை யேந்தியவராகி, அம்புயாசனத் திருப்பதாஞன் = பதுமாசனத் திருந்தார். (எ - று.) (23)

(ஸ்ரீ - வீர.) தீர்த்தயாத்திரையை முடித்துவந்து தமது வீட்டில் வசித் துக்கொண் டிருக்கும் ஸ்ரீ இராமர் தமக்குப் பதினேந்தே முக்கால் வயது நிகழ்ந்து கொண்டிருக்கும்போது ஈடோறும் சரத்காலத்தில் நின்மலமாகிய தடமானது குறைவதேபோல இளைத்துக்கொண்டேவந்தார்; இளைத்தன்முதலி யவை வைராக்கிய சிந்தாதுக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. குமா ரருடைய விசாலநேத்திரத்தோடு கூடிய வதனமானது, (பக்குவமாகி மலர்ந்த விதழோடு கூடிய வதனமானது,) பக்குவமாகிமலர்ந்த விதழோடுகூடிய வண்டு மாலைகள் சூழ்ந்த வெண்டாமரையைப் போலும் வெளுப்புற்றது. விசாலநேத் திர விசிஷ்ட உவமானப் பொருட்டே வண்டின் மாலைகள் சூழ்ந்த என்றதாம், கபோலத்தைக் கரத்தாற்றாங்கிப் பத்மாசனத்தில் வீற்றிருந்து சிந்தைபரவச ராகி மௌனியாகிச் சேட்டையற்றிருந்தனர். (23)

(அ-கை.)

சிந்தனே வயத்த ஞகிச் செய்தொழி லனேத்தும் விட்டுப்
புந்திகைந் தியார்க்குங் கூறன் புனேயுமோ வியமே போலச்
சந்தத மிருப்பை நோக்கித் தமரடி தாழ்ந்து வேண்ட
நொந்தயர் முகத்த ஞகி நோக்கரு நியமஞ் செய்தான். (24)

(ப - ரை.) ஸ்ரீ இராகவர், கூறியவண்ணம் ஆசனத்தசைவற்றிருந்து, சிந் தனேவயத்தஞகி = சிந்தாபரவசராகி, செய்தொழி லனேத்தும் விட்டு = வியா பாரமொன்றுமின்றித் தூஷணீம்பூதராகி, புந்திகைந்து = கிருசஅங்கராகிச் சிந்தையோடுகூடிப் பரமதுர்மனராகிப் பரமதுக்கியாகி, யார்க்குங்கூறன் = யாவரிடத்தும் எதையுமே பேசாதவராகி, புனேயும் ஓவியமேபோல = சித் திரிகஞலே சித்திரிக்கப்பட்டுப் பித்திகையிலமைந்த சித்திரப்பதுமை போன் றுகி, சந்ததம் இருப்பை நோக்கி = எப்போது மிருப்பதைப் பார்த்து, தமர் = பரிஜனங்கள், அடிதாழ்ந்துவேண்ட = தமது திருவடியிற் பணிந்துமீண்டும் மீண்டும் பிரார்த்தித்துக்கொண்டால், நொந்து = கேதத்தோடும், அயர்முகத் தஞகி = மிகவாட்டத்தோடு கூடிய முகாம்புஜமுடையவனுகி இவர்கட்காகச்

செய்து தீரவேண்டியதாகவன்றே இருக்கின்றது என்னுங்கவலையுடன், நோக்கருகியமஞ் செய்தான் = பார்த்தற்கு முடியாதபடி அலக்ஷியமாகக் கடன் கழிப்பதேபோல ஸ்நானாதி தின ஆசாரங்களை யியற்றினன். (எ-று.) (24)

(ஸ்ரீ-வீர.) பரமதர்மனம் = அத்தியந்தம் துயரத்தாழ்ந்த சித்தம்; பரிஜனம் = சேவகஜனம் என்பதாம். இவ்வாத்தயாக்கையராய் சிந்தையோடு கூடியவராய், துக்கிதராய், மிகவுந்துன்பமுறுமுளத்தராய், எவரோடும் எதனையும் இயம்பாதவராய் சித்திரத்திலெழுதிய பதுமைபோலும் ஆயினர். தாதர்களாண் மீண்டும் மீண்டும் வேண்டிக்கொள்ளப்பட்டபின் அவசியம் செய்யத்தக்க நிஜசாரத்தை மிகவும் மலினமுற்ற முககமலத்தையுடைய அவர் கஷ்டத்தோடுஞ் செய்தனர். (24)

(ஸ்ரீ-வீர-அ-கை.) குணக்ணங்கட்கிடமாகிய ஸ்ரீ இராகவர் துக்கத்தோடு மிலாத்து வருவதை நோக்கிப் பத்தினிமார்களோடும் தசரதமன்னவர் மிகவுஞ் சிந்தாவசராகி வினவுகின்றார்:— மடிமிசையென.

மடிமிசை கொண்டு தாதை வருந்துவ தென்கொ லென்ன
வடிபணிந் தயர்வொன் றில்லென் றணையவ னிருந்த நாளிற்
படிபுகழ் காதி மைந்தன் வருதலும் பணிந்து போற்றி
முடியுடை வேந்தர் வேந்தன் பூசணை முறையிற் செய்தான். (25)

(ப - ரை.) தாதைதசரத அரசர், மடிமிசைகொண்டு = தமது உத்சங்கத்தில் அன்புடன் உட்காரவைத்து, வருந்துவதென் கொலென்ன = ஹே குழந்தாய் கினக்கு நெருங்கிய திதிடமான சிந்தாகுலமுண்டாகி யிருக்கின்றதே அதுயாது காரணத்தைப்பற்றி யென்று அடிக்கடி மிக இனிமையான வசனத்துடன் வினவியபோதினும், அடிபணிந்து = அவரது பாதபதுமங்களில் நமஸ்கரித்து ஹே தந்தையே! அயர்வொன்றில்லென்று = யாதொரு துயரமுமே தங்கள் கருணையால் எனக்கில்லையென்று சொல்லித் தந்தையினது மடியிற்றானே, அணையவனிருந்தநாளில் = கமலபத்ராக்ஷராகிய ஸ்ரீ இராகவர் மௌனமாகவே இருந்துவந்தபோது, படிபுகழ் காதிமைந்தன் வருதலும் = அயோத்யா நகர அதிபரைப் பார்க்கும்பொருட்டுப் பெருந்தவத்தினாலே யுலகமெல்லாம் புகழும்படியான காதிமைந்தராகிய விசுவத்திற்கு மித்திரர் என்னும் பிரசித்தமகரிஷி வருவதைக் கண்டு, முடியுடைவேந்தர் வேந்தன் = கிரீடந்தரித்த மன்னவர்கட்கெல்லாம் மன்னவரான தசரதசக்கரவர்த்தியானவர், பணிந்துபோற்றி = இலக்குமியினாலே யலங்கரிக்கப்பட்ட அவரை யெதிர்கொண்டழைத்துவந்து வீற்றிருக்கச் சுவர்ணசனந்தந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து மிகுந்த சந்தோஷத்தையுடைய வதனத்தை யுடையவராகிய அரசர், பூசணை முறையிற் செய்தார் = தாமே அர்க்கியத்தை நிவேதித்துக் கிரமமாகப் பூசை செய்தார். (எ-று.) (25)

(ஸ்ரீ-வீர-அ-ன்ன.) இங்ஙனம் நிஷ்காம கருமபலமாகிய வைராக்கியத்தைச் சுருக்கமாகப் பிரதிபாதித்து இதனையே பிரசன உத்திரங்களால் விஸ்தாரமாகப்

பிரதிபாதிப்பான் விரும்பிப் பிரசனப் பிராப்தியின்பொருட்டுப் பிரசங்கத்தைக் கூறுகின்றார்:— இருந்தராளில் என. விரத அத்தியயன ஜன்னிய சரும(த்)துறு தீப்தியே பிரஹ்மவர்ச்சசம் எனப்படும், அத்தகைய பிரஹ்மவர்ச்சசவடிவ இலக்குமியாம் மாலாகாரத்தால் மறைக்கப்பட்டிருந்தனர். ஹே மந்த! நினக் குப் பெருஞ் சிந்தையுண்டானதென்னே யென அடிக்கடி மிகவும் அன்போடு கூடிய மொழியினனே கேட்டும் அவர் யாதொன்றுஞ் சொல்லவேயில்லை; சொல்லியும் பயனில்லையே யென்னும் நிச்சயமிருத்தலின் என்பது கருத்தாம். தந்தையின் மடிமீதிருந்த தாமரையிதழ்போலும் நேத்திரமுடைய ஸ்ரீ இராமர்! ஹே தந்தையே எனக்கு யாதொரு துயரமுமில்லையெனக்கூறி மௌனமாகவே யிருந்தனர்; வந்திருக்கப்பட்டதுயரம் அரசராற் பரிகரிக்கமுடியாத தென்பது கருத்தாதலின் மித்தையாகாதாம். மன்னவர் ஸ்ரீ வசிஷ்டபகவானைப் பார்த்து இராமசுவாமியேன் றுயருற்றுளனெனக்கேட்ப, முனிநாதர் இதன்கண்ணே காரணமிருக்கின்றது நீர் துயரப்படவேண்டாம் எனச் சாமானியமாக வுரைத் தலும் விசேஷ சந்தேகத்துடன் அரசரிருந்த அவ்வேளையில், தவசிரேஷ்டரா கிய ஸ்ரீஜகன்மித்திரமகரிஷி ஆண்டெழுந்தருளினர். அம்முனிவரைத் தூரத்தி லேயே கண்ட பூபாலர் வணங்கிய ஆசிருதியுடையவராகி மவ்லிமணிகழன்று பூமியை யலங்கரிக்குமாறு நமஸ்கரித்தனர். மகாமகிமைவாய்ந்தவரும் பால சூரியனைப்போற் பிரகாசிப்பவரும், செஞ்சுடர்ச் சடாசூடரும் தவஇலக் குமியை யுடையவரும் புருடோத்தமரும் ஆகிய அம்முனீசுவரரும் அவனி காவலரை யாசீர்வதித்து மதுரகம்பீர உதாரவாணியால் விஸ்தாரமாயனுக் கிரகித்தனர். ஸ்ரீ வசிஷ்டபகவானும் ஸ்ரீ ஜகன்மித்திரமகரிஷியும் பரஸ்பரம் அநாமயமுரைத்துக்கொண்டபின் தங்கத் தங்கப்பீடந்தந்து தவஇலக்மியா லலங்கரிக்கப்பட்ட அவரைக் கண்டஞ்சி அந்த உத்தமோத்தமமாகிய மகரிஷி க்கு மகிழ்ச்சியோடுகூடிய வதனராய் அரசர்தாமே அர்க்கியத்தை நிவேதித்த னர்; அதாவது, அர்க்கியத்திற்கு வேண்டிய நீரைப் பிறரைக்கொண்டுவரச் செய்யின் அபராதம் வருமென நினைந்துதாமே கொணர்ந்து அருக்கியங் கொடுத் தனர், முனிநாதரும் விதிப்படியாய கருமத்தால் அருக்கியத்தைக் கவர்ந்து வலம்வந்து போற்றும் அரசரைப் புகழ்ந்தனர். நிராசையுடையவிவர் அரசர் பால் வருவானேனெனின், மாயாவீரியபலத்தால் உன்மத்தராகிய அரக்கர் களானே, தருமமே யவசியஞ் செய்யத்தக்க காரியமெனக்கொண்டு நடத்தும் மகாமதியையுடைய அவரது தருமயாகமானது சிதைவுற்றது அதைக் காக்கும் பொருட்டு அரசரைப் பார்க்கவேண்டுமென்னு மிச்சையான தவருக்குண்டாய தால் வருமாறு நேரிட்டதென்றுணர்க.

(ச.) முறையிற் செய்தான் என்றமையால், பரமபக்தியினுற் சுவர்ணபீடத் திருத்தித் தாமே அர்க்கியபாத்திய ஆசமனீய முதலிய சோடசவுபசாரத்தோடு மர்ச்சித்து மாறி மாறி வணங்கினரென்பதாம். (25)

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஆசனத்திலெழுந்தருளிய மகாமதியை யுடைய ஸ்ரீ விசுவாமித்திர மகா முனிவருக்குப் பாத்தியம் அர்க்கியம் சந்தனம் புஷ்பம் வஸ்திரம் தக்ஷிணை பழந் தாம்பூலம் கோக்கள் முதலியவற்றை அளவிறந்தன வாகச் சமர்ப்பித்து, விதிப்படி அருச்சனைபுரிந்து அம்முனிவரை நோக்கித் தசரதர் இருகரஞ் சிரங்குவித்து அன்போடும் புனிதமாகிய இவ்வாக்கியத்தைக் கூறத்தொடங்கினர் :—நினைவென.

(ச.) ஸ்ரீவிசுவாமித்திரரை நோக்கித் தசரதர் கொண்டாடல்:—நினைவென.

நினைவற வெளிதின் வந்த நின்னுயர் காட்சியாலே
வினையெலாந் தவிர்ந்து வெய்யோன் மேவிய கமல மொத்தேன்
இனையதோ ரின்பமென்று மியைந்திலேன் மழையிலா நாள்
நனைதரு மழையு மந்த ணண்ணிய கண்ணு மொத்த. (26)

(ப - ரை.) நினைவற = எண்ணி யெதிர்பாராமலே, எளிதின் வந்த = அதி சுலபமாக யாதொரு கிரியையு மில்லாமற் கிடைத்த, நின்னுயர் காட்சியால் = தேவரீரது யாவற்றையு மீயும் பரமமேலான தரிசனத்தாலே, வினையெலாந் தவிர்ந்து = தூலசரீர பீடைகள் சூக்குமசரீர பீடைகள் காரணசரீர பீடைகள் என்பனயாவு மொழியப்பெற்று, வெய்யோன் மேவிய = சூரியபகவானது கிரணங்களின் அனுக்கிரகத்தை யடைந்த, கமலமொத்தேன் = அம்புஜ ஆகரம் போலத் தேவரீரது திருவருளை யடைந்துய்ந்தேம், இனையதோரின்பம் = இத் தகைய பேரானந்தத்தை, என்றும் = எக்காலத்திலும், இயைந்திலேன் = அடைந்தேமில்லை, தேவரீரது தரிசனமானது, மழையிலாநாள் = மழையின்றிக் குடிகள் கஷ்டப்படுங் காலத்தில், நனைதரும் = பூமியை நனைத்துப் புன்மூதலிய வற்றை யுண்டாக்கவரும், மழையும் = மகா விருஷ்டியையும், அந்தன் = பிற விக்குருடனை இருந்தவன், நண்ணிய = தேவதையின் திருவருளால் அடைந்த, கண்ணும் = திவ்யநேத்திரங்களையும், ஒத்த = ஒப்பிடும்படியாக இருக்கின் றது. (எ-று.) (26)

(ஸ்ரீ-வீர.) நினைவற வெளிதின் வந்த = எனது எண்ணமின்றியே எனது சமீபமா யடைவுற்ற வென்பதாம். தீப்திமத் விடயத்தன்மை உண்மையின் உயர்ந்ததரிசனமாம்; அதிஸ்புடமான தரிசனமெனினு மமையும். தம்பால் அசங்கித உபநீதத் தகைமையும் பாசுவப்பான்மையும் பிரசித்தமேயாம். அனுக்கிர கீதத்தன்மையைக் காட்டுகின்றார்:—இனையதோரென, எத்தகைய வின்பமெனின், ஆதியந்தரகிதமாயிருப்பது, இருப்பினும் கூடஸ்த நித்தியத் தன்மையின்றும் ஜகத்நித்தியத்வ வாதிகட்குப் பிருதிவியாதிபோலு மெனின், பிருதி வியாதிபோலச் சிலபாற் கண்டித அவயவமுடையதாகாதாம், ஆகா தேகக்கூடஸ்த நித்தியமென்பது சித்தமாம். ஆனாலுநாயினும் முன்னின் மையேபோல அநித்தியமாமோவெனின், ஆகாதாம் அபாயவர்ஜிதமாதலின்.

அபாயமற்றதாயினும் பின்னின்மைபோலச் சாதியாகலாமேயெனின், அநாதியேயாம், என்னை, உண்மையாக வுணருங்காற் பின்னின்மையும் அபாயமுடையதேயாம், ஆகவே சாதியாதலுமையும், அமையவே யாது நாசமற்றதோ அதே அநாதியாமென வுணர்க. எனவே மாயையும் உற்பத்தி யறியாமையின் அநாதியேயன்றி யுண்மையநாதியதாகாதாம் அத்தியஸ்தமாதலின். கூறிய வகையாய இன்பம் பிரஹ்மசொரூப ஆனந்தமேயாம், இங்ஙனமே சுருதிகளில் "ஆனந்தம் பிரஹ்மமென வறியப்பெற்றது, விஞ்ஞானம் ஆனந்தம் பிரஹ்மம், எவ்விவ்வாகாசம் ஆனந்தமாக இராதேலாயின்" என்பதாக ஆனந்தசப்தத்தின் அர்த்த வடிவமாய்ப் பிரஹ்மத்தைக் கூறுதல் வெட்டவெளியாதலின். நிஜையாமலிருப்பக்கிடைத்த தங்களது வரவினுலும், ஒளிவாய்ந்த தரிசனத்தாலும், ஆசீர்வசனத்தாலும் ஹே மகாமுனிவரே! கதிரவனேக்கண்ட கமலாகரங்கள் போலுவந்தோம். தங்களுடைய அனுக்கிரகமே எங்களுக்கினிவரும் பாக்கியமன்றே; காரணமற்றதும் உண்டாதல் வளர்தல் அயலொன்றுய் மாறல்களற்றதும், குறைவழிவுகளற்றதும், ஒளபாதிக தனது அங்கிச லேசத்தானே யாவரையும் ஆனந்திக்குமாறு செய்விப்பதும் ஆகிய அந்தப் பிரசித்த பரமபுருடார்த்த சுகத்தையே தங்களுடைய தரிசனத்தால் நாங்களடைந்தோம். தங்களுடைய வரவுக்குரியராகிய யாங்கள் இன்றுதன்னியர்களாகிய கிருதகிருத்தியருக்குள் முதன்மைத்தானத்தையடைந்தோம். மேழிச்செல்வனுக்கு மழையிலாநாளில் மழையுற்றதுபோலும், அந்தகனுக்கு அழகியவிழி கிடைத்ததே போலும் ஆம் தங்களுடைய திவ்யதரிசனம். அபாயவர்ச்சிதம்=நாசமின்மை.

(ச.) கமலமொத்தேன், மகாபுருட தரிசனத்தினுற் பிரசன்ன சித்தர்க்குச் சொரூபம் பிரகாசிக்கும் அதனுல் கமலங்கள்போற் பந்தநீங்கி மனம்பரிபூரணமாமென்பதாம். இவ்வாறே "கண்களுக்குக் கதிரவன் கடுப்பச் சாதுக்களும் சமசித்தர்களும் அத்தியந்தம் தற்சொரூபமாய்ப் பிரகாசிப்பவர்களும் ஆகிய மகானுபவர்களது தரிசனத்தீட்டும் புருடார்க்குப் பந்தமுண்டாம்" என ஸ்ரீமத் பாகவதத்தும் கூறப்பட்டுளது. சொரூபம் பிரகாசிக்குமெனின் சொரூபசுகமுமுதிக்கலாமே யென்றல், உண்மையே இனையதோ ரின்பமென்று மியைந்திலேன்; இதன் கருத்திதுவாம்:—அநாதியுந் துர்லபமும் அபாயவிவர்ச்சிதமும் ஆகிய வித்தன்மையான ஆனந்த சுகமிப்போ தடைந்தனன் என்பதாயிற்று. அவற்றி லநாதியென்பது முதலியவற்றுன் விடய சுகத்தினின்றும் விசேடந் தெரிவித்ததாம். சுழுத்திச் சுகமுமநாதி, அதுவுஞ் சொரூப சுகமாதலின், அதனை நீக்குவதற்காகத் துர்லபமென்றார் என்பார் என்று மியைந்திலேன் என்றார். இதனுற் சர்வசுகத்தையும் ஆனந்தாத்மகமாக்குங் கைவல்லியசுகம் பெற்றே னென்பதாம். இஃதன்றியுந் தன்னியனுனேன் எனல், மழையிலா என்பதாக. (26)

(ஸ்ரீ-வீர-அ-கை.) மேலும்மேலும் உபமானங்களே யுரைத்துத் தன்னியனுனேன்என முனிநாதாதிவரவை யரசர் கொண்டாடுகின்றார்:—உடலொடு என.

உடலொடு விண்சென் மார்க்க முற்றென வொழிந்த வாவி
கடமுற வந்த தென்னக் கணிகட லமுத கும்ப
மிடமுற வெய்திற் றென்ன வெந்தைநீ வந்த வின்பஞ்
சடமெலாங் குளிர்ப்ப நின்றென் றளர்வெலா மகற்றிற் றன்றே.(27)

(ப - ரை.) உடலொடு=தேகத்தோடுகூட, விண் சென்மார்க்கம் = ஆகாசத்திற் கமனஞ்செய்யும் நெறி, உற்றென = கிடைத்ததே போலவும், ஒழிந்த ஆவி = சரீரத்தை விட்டுப் பிரிந்துபோன உயிரானது, கடமுறவந்ததென்ன = சரீரத்திற் றங்கும்படியாகத் தெய்வயோகத்தாற் பிராப்தமானதே போலவும், கணிகடல் = சப்தியாகின்ற க்ஷீராப்திபிற் கடைந்தெடுத்து மேருகிரியின்பால் அக்கினிபகவானது காவலிலிருக்கும், அமுதகும்பம் = அமிருதம் நிறைந்த கலசமானது தேவேந்திரனது தயவால், இடமுற = தானிருக்கு மிடத்திற்கே தேடிவந்ததுபோற் பலாத்காரமாய், எய்திற்றென்ன = கிடைத்ததுபோலவும், எந்தை நீ = எந்தந்தையைப்போலும் வேண்டியதை யறிவுறுத்துந் தேவரீர், வந்த வின்பம் = வந்து வலுவில் தரிசனந்தந்த ஆனந்தமானது, சடமெலாங் குளிர்ப்ப = தேகமுழுவதும் ஸ்ரீ கங்கா ஸ்நானத்தாற்போற் சீதளமாம்படி செய்து, நின்று = அச்சீதளமானது நெடுநேரந் தங்கி, என் றளர்வெலாம் = எனது சர்வதாபங்களையுமே, அகற்றிற்று = நீக்கியது. (எ-று.) அன்று ஏ அசை.

(ஸ்ரீ - வீர.) ஆகாசகமனத்தா லுண்டாய அரியமகிழ்ச்சியைப் போலவும் இறந்தவன் மீண்டெழுந்த சந்தோடம் போலவும், மனுடனுக்கு அமுதங் கிடைத்ததே போலவும், ஹேபிரஹ்ம சொரூபமாகிய மகாமுனிவரே ! தங்களுடையவரவால் அடங்கா மகிழ்ச்சியை யடைந்தேன். பிரஹ்மலோகத்தின் வாழ்வானது யாருக்குத்தான் பிரீதியை யுண்டாக்காது. அதுபோலத் தங்கள் நல்வருகையென் றுண்மையாகவே கூறுகின்றனன். தேவரீருக்கு அடியேன் கொடுக்கத்தக்க எப்பொருளி லதிகப்பிரியம் ! அடியேன் செய்யத்தக்க சேவை யாது ! ஹே பரமதரும மூர்த்தியாகிய விப்பிரசிரேஷ்டரே ! நீர் நற்பாத்திர மாக அடியேனுக்குக் கிடைத்தீர் முன்னர் இராஜ இருடி சப்தத்தானே விளங்கிய ஒளியுடையவரானீர், தவத்தாலே பிரஹ்ம இருடித் தன்மையைப் பின்னெய்தினீர் ! ஹேபகவன் ! அடியேனைப் பூஜிக்கத்தக்கவராயுள்ளீர் ! ஆகலின் பூஜாபாத்திரமாயுள்ளீர், ஸ்ரீ கங்காஜல அபிடேகத்தானே எனக்கெவ்வாறு பிரீதியுண்டாமோ அவ்வாறு தேவரீரது தரிசனத்தானே யுண்டான உட்பிரீதியானது எனது தாபங்களைப் போக்கிச் சுகத்தையே யுண்டாக்கியது. ஹேபிரஹ்ம சொரூபரே ! தங்கட்கு நமஸ்காரம்.

(ச.) சித்தர்கட்குக் கேசரத்துவாதி(ஆகாயத்தே செல்லுதன் முதலிய)சித்திகளாலும், இறந்தோர்க்குப் பின் ஜீவித்தலாலும், வருமின்பம்போல் வந்தசுகமென்றும், வறண்ட தடாகத்ததகம் நிரம்பல்போற் பரிபூர்ணமானவென்றும், அந்த ணண்ணிய கண்ணீப்போற் சுவப்பிரகாச திருஷ்டி பெற்றேனென்றும்,

அமிர்தபானஞ்செய்த தேவர்கள்போல் அசராமரண சம்பன்னனானே னென்றும் சூசிதமறிந்துகொள்க. இவ்வுபமான பஞ்சகங்களாலும் அவரவர்க் கின்பம் வரல்போற் றேவரீரெளி தெழுந்தருளலால் வந்தசுகம் என்னுற் கணித்தற் கரிதாய்ச் சரீரத்திரயங்களும் சீதளமாம்படி யிருந்தெனது சர்வதுக்கங்களையும் நீக்கிற்றுதலின் யான் பரிபூரணமான சொப்பிரகாச திருட்டிபெற்று அசராமரண சம்பன்னனானே னென்பதாம். (27)

(ஸ்ரீ-வீர-அ-கை.) தேவரீரது வரவு புதுமைத்தாயிருத்தலின் அவசியம் தாங்கள் விரும்பியதை அடியேன்றனஞ் செய்தேவிட்டேன் என அரசர் கூறுதல்:— காதலென.

காதலும் பயமு மன்புங் கதமும்வன் பிணியு மில்லா
மாதவ விவணீ வந்த வரவிது புதுமைத் தாகும்
யாதுநீ கருதிற் றன்ன தியன்றன னுணர்த்து கென்றான்
மேதகு முனிவன் கேட்டு மெய்புள கெறிந்து சொல்வான். (28)

(ப - ரை.) காதலும் = இச்சையும், பயமும் = அச்சமும், அன்பும் = இராகமும், கதமும் = குரோதமும், வன்பிணியும் = துன்புறுத்தும் வலிய வியாதியும், இல்லா = எப்போதுமில்லாத, மாதவ = மகாதவத்தையுடைய முனி சிரேஷ்டரே! இவண் நீ = இவ்வெமது அரண்மனையைநாடித் தேவரீர், வந்தவரவிது = எழுந்தருளி அகஸ்மாத்தாகவந்தவரவான இது, புதுமைத்தாகும் = அதிசயஅற்புதமாக விருக்கின்றது, யாதுநீகருதிற்று = எவ்வத்துவிஷயகமாக எக்காரியத்தைத் தேவரீருத்தேசித்தீரோ, அன்னதியன்றனன் = அக்காரியத்தை யான் செய்துமுடித்து விட்டதாகவும் தேவரீர் வந்தகாரியம் சித்தியாய் விட்டதாகவும் தங்கள் திருவுளத்தில் எண்ணிக்கொண்டு, உணர்த்துக என்றான் = எண்ணிய காரியத்தைத் திண்ணமாகத் தெரியப்படுத்தலாம் என்று மன்னவர் மன்னன் கூறினன்; மேதகுமுனிவன் = சர்வயோக்யதையையும் மேன்மையாகவுடைய மனனசீலர்களுக்குள்ளே யுத்தமோத்தமராகிய ஸ்ரீவிசுவாமித்திரர், கேட்டு = அரசர்க்கரசன்கூறிய அற்புதவிஸ்தர அமிர்தம்போன்ற இனிய மொழிகளைச் செவிகுளிரக்கேட்டு, மெய்புளகெறிந்து = உடம்புமுழுதும் மயிர் சிலிர்ப்பக் குலுங்கி, சொல்வான் = இராஜசார்த்தூலரை நோக்கிக் கூறத் தொடங்கினர். (எ-று.) (28)

(ஸ்ரீ-வீர.) இச்சை = அர்த்தமாத்திரவிடையஞ் செய்யும் ஆசையாம், இராகம் = ஸ்திரீமுதலிய விசேடவிடயங்களின் ஆசையாம். சிலர், கிடையாதவத்துவானது கிடைக்கவேண்டு மென்பது மாத்திரமான ஆசை இச்சையென்றும், அடைந்ததிற் பிரார்த்தனை இராகமென்றும் கூறுவர். என்ன பிரயோஜனத்தை யுத்தேசித்துத் தேவரீரிங்குற்றதோ அதன்பொருட்டு யான் என்ன செய்யவேண்டுமோ அதுசெய்து முடிவுற்றதாகவே எண்ணிக்கொள்ளலாம்;

ஏனென்றால், எங்களாற்றுங்கள் பூசிக்கத் தகுந்தவர்களல்லவா ! மயிர் சிலிர்த் துக்குலுங்கல் =மிகுந்தசந்தோஷத்தால் என்றுணர்க. இச்சையபயம் குரோதம் விடயமேய அதிசயத்தால் விடயாகாரமாகச் சித்தம் இரமிக்கும் இராகம் நேயம் முதலியவையற்றவராக இருந்துந் தாங்கள் என்பால் வந்த இவ்வருகை மிகவும் அற்புதமாகவிருக்கிறது; இச்சையாதிகள் இருப்பினன்றே பிறன்பாற் செல்லல் வேண்டும். ஹே முனிபுங்கவரே ! எக்காரியத்தை யெண்ணி வந்தீரோ அது செய்யப்பட்டதாகவே எண்ணுவீராக, எப்பொருளேவேண்டிவந்தீரோ, நிரந்தர மென்னும் பூசிக்கப்பட்டவரா யிருத்தலின் அதை யடைந்ததாகவே எண்ணுவீ ராக; என ராஜசிங்கம் முழக்கிய ஆச்சரிய அருத்தத்தோடுற்ற அதிவிஸ்தார மாகிய அவ்வாக்கியத்தை, மகாதேஜசையுடைய ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியான வர் கேட்டு மெய்புளகெறிந்து விளம்பலுற்றார்.

(ச.) தேவரீர்வாஞ்சித்த பொருளேச் சமர்ப்பிக்கின்றேன், செய்யவேண்டு மென் றிச்சித்தகாரியத்தைச் செய்கிறே னென்பார்; யாதுநீ கருதிற்றன்னதி யன்றன னென்றார். இதனுற் குருவினுமன்னிய பாத்திரமின் றென்பது ஆயி ற்று. யதார்த்தத்தைத் தரிசித்தால் தரிசித்தபடியே உபதேசிக்கும் சொப்பிர காச சொரூபரென்பார். மேதகுமுனிவனென்றார். (28)

(அ-கை.)

மன்னவர் வணங்க வாழ் வோய் வசிட்டன்சொன் மறுதோய் பானு
தன்னுயர் குலத்தில் வந்தோ யாதலாற் றக்க சொன்னுய்
முன்னுறு செந்தீ வேள்வி முயல்வதற் கிடையூ றுகி
யின்னல்செய் யரக்கர்க் காற்று தெய்தின னிரங்கல் வேண்டும். (29)

(ப - ரை.) மன்னவர் வணங்கவாழ்வோய் = 56 தேசத்தரசர்களும் திரை கட்டிக் கரங்கட்டி வந்தித்துப் போற்றும்படியாக இந்திரணி நிகர்த்து வாழ்க்கை நலம்பெற்ற அரசசிங்கமே! வசிட்டன் சொன்மறுதோய் = ஸ்ரீ வசிஷ்டபகவா னது ஆணையைச் சிரத்தில் வகித்து மறுக்காமல் அவரது வசவர்த்தியா யிருக் கப்பட்ட சற்குண! பானுதன்னுயர் குலத்தில் வந்தோய் = சூரியபகவானது மகாவம்சத்தில் அவதரித்தோய்! ஆதலால் = இத்தகைய மகிமை வாய்ந்த வனுயிருத்தலி னன்றே, தக்க=தினக்குத் தகுதியாய வார்த்தையைச், சொன் னுய் = கூறினுய், ஹேபுருட இடபமே! முன்னுறு = நிலசித்திகளே யடையும் பொருட்டு, செந்தீவேள்வி = மந்திரபூர்வகமாகத் தீப்தஞ்செய்த அக்கினியின் கண்ணே மந்திரபூர்வகமாகவே ஆகுதிகொடுத்து முடிக்கவேண்டியதாய யாகத் தினை, முயல்வதற்கு = செய்யயத்தனப்படுவதற்கு, இடையூறுகி = இடைத் தடையாயுற்று யாகதிரவியத்தையும் சாலையையும் ருத்விக்குகளையும் துன்புறுத் தும் குரூரமனமுடையவர்களாகி, இன்னல் செய் = கொலைமுதலிய மகாபாத கங்களே யஞ்சாது செய்யும், அரக்கர்க்கு=இரக்கமில்லாத கரதூஷண தாடகை

மூதலிய இராக்கதர்க்கு, ஆற்றுது = பயந்து அவரியற்றும் துயரைப் பொறுக்க முடியாது, எய்தினன் = உன்னிடத்திற் றெரியப்படுத்தவந்தேன், இரங்கல் வேண்டும் = நீ யிரக்கத்துடன் அதற்கு வேண்டிய காரியத்தைச் செய்யமுயல வேண்டும். (எ-று.) (29)

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ விசுவாமித்திரர் கிருதகிருத்தியரே யாயினும் உலகதிருஷ்டியை யனுசரித்துக் கூறுகின்றார்:—சித்திகளின் பொருட்டென. காரியகாரண சங்காதத்திற்கு ஞானநிஷ்டை யோக்யதையடைவே சித்தியாம், கருமத்தாற் சாக்ஷாத் முக்திலக்ஷண சித்தி சம்பவியாமையின், அத்தகைய எனது நியமத்திற்கு விக்கினஞ் செய்கின்றார்கள் அரக்கர்கள் என்பதாம். ஹேமன்னர் மன்னரே! மகாவம்மிசத்திற் பிறந்து குலகுருவாகிய ஸ்ரீ வசிஷ்டபகவானது ஆணையைச்சிரமேல் வகித்துவளரும் உமக்கே தகுமிப்பூமண்டலத்தில், எனது மனத்திற் சொல்லவேண்டுமென் றுள்ள வாக்கியத்தின் காரிய நிண்ணயத்தை; அதாவது, அதன் சம்பந்தியாகச் செய்யத்தக்க பொருணிச்சயத்தை; நீர் மூதலிற் செய்வீராக, அஃததருமமாயின் செய்யத் தகாததுதான், ஆனலது தருமமாதலின் அதை யினிதுகாக்க வேண்டும். சித்தியையடையும் பொருட்டு யான் யாகத்தை யாரம்பித்தேன் அதற்கிடையூறு செய்யக் கோரமாகிய அரக்கர் அங்குவந்து சேர்ந்தனர். யான் யாகத்தாற் றேவர்குழாங்களைப்போற்றும் போதெல்லாம், அம்மகத்தை யங்கிசாசரர் அழிக்கின்றனர். என்னுன் மிகவும் அனுஷ்டிக்கப்பட்ட அந்த யாகபூமியைத் தசையாலும் இரக்தத்தாலும் பேரரக்கர் கெடுக்கின்றனர். இடையூற்றின் மிருதியாற் கெடுக்கப்பட்ட அத்தகைய அம்மகக்கூட்டத்தில் அளவிறந்த கஷ்டப்பட்டு உற்சாகமற்று அங்கிருந்திங்கு வந்து சேர்ந்தேன். சாபத்தினுலேயே இடையூறுகளை நீக்கிக்கொள்ளலாமெனினேனு, ஆண்டென்மதி கோபத்தைச் செய்ய முயற்சிக்க வில்லை, அக்கருமம் அத்தகையதாக விருக்கின்றது, அதன்கண்ணே சாபம்புகலாகாது. அம்மகாயாகத்தில் எனது யாகதீக்ஷையானது இத்தகைய கோபசாபமற்றதா யிருக்கின்றது; அதன்கண் மகாபலத்தைத் தங்களுடைய அருளால் இடையூறில்லாமல் அடையலா மென்றெண்ணுகின்றேன். (29)

(ஸ்ரீ-வீர- அ - கை.) ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியானவர் தாம்வந்த காரியமானது இன்னதானத்தாற் கைகூடுமெனல்:—அருளென.

அருள்செய வல்லை நீயென் றரும்புகல் புகுந்தே னின்னை
வெருளுறும் புலிபோன் மொய்ம்பன் விண்ணவர்க் கிறைபோல் வீரன்
மருளுறு மரக்கர் காலன் வாய்மைநின் முதன்மை மைந்தன்
றெருளுறு மிராம னென்னுஞ் சிகைமுடிச் சேயை யீவாய். (30)

(ப - ரை.) அருள்செய = எண்ணிவந்த காரியத்தை யினிதாக முடித்து அனுக்கிரகஞ் செய்ய, வல்லைநீ = சாமர்த்தியசாலி நீர்தானென்று, அரும்புகல்

புருந்தேனின்னை = ராஜசேகரராகிய உம்மையே அனன்னிய தஞ்சமென் றடைந்தேன், என்னசெய்ய வேண்டுமெனின், வெருளுறும் புலிபோல் மொய்ம்பன் = தர்ப்பத்தோடு கூடிய வியாக்கிரத்தைப்போல விக்கிரமத்தை யுடைய வனும், விண்ணவர்க் கிறைபோல் வீரன் = தேவதைகட் கெல்லாம் இறைவ னுகிய தேவேந்திரனைப் போன்ற வீரியத்தை யுடையவனும், மருளுறு மரக்கர் காலன் = கட் காமாதிகளாற் கலங்கி மயங்கும் அரக்கர்குல காலனும், வாய்மை = சத்திய பராக்கிரம முடையவனும், தெருளுறும் = சர்வத்தையு முணர்ந்தவனும், சிகைமுடி = காகபக்ஷச் சிகையை முடியில் வைத்துக்கொண் டழகாயிருக்குஞ் சூரனும், மூதன்மைமைந்தன் = ஜேஷ்டகுமாரனும், ஆகிய, இராமனெனனும் நின்சேயை யீவாய் = இராமசுவாமி யென்னும் உம்முடைய சுதனை யென் காரியசித்தியின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்—எ-று.(30)

(ஸ்ரீ - வீர.) தஞ்சமென் றடைந்தேன் = இரக்ஷிப்பீரென் றடைந்தேன், விக்கிரமம் = அதிக சக்தியாம். சத்தியபராக்கிரமம்= பலபரியந்தம் பராக்கி ரமம் உடையவன். துக்கிதனுய்த் தஞ்சமென்றடைந்த என்னைக்காத்தல் உமது கடனுகும், வேண்டிக்கொண்டவர் வேண்டியது பெறுமற் போவது, மேன்மை தங்கியவரின்பால் பெருமிகழ்ச்சியையே கொடுக்கும். ஆகலின், மதத்த வெம்புலிபோல விக்கிரமத்தையும், மகேந்திரருக்குச் சமானமாகிய வீரியத்தையு முடையவனும், அரக்கர் குலகாலனும், சத்தியத்தையும் அமோக பராக்கிரமத்தையு முடையவனும், காகபக்கத்தைப்போற் சிகைமுடியனும், சூரனும், மூத்தவனும், ஆகிய உமதுமைந்தனை ஸ்ரீமான் இராமச்சந்திரமூர்த் தியை எனக்குத் தரவேண்டும். காகபக்கமென்னுங் காதடிச்சிகை சூத்திரிய ஆசாரசித்தமாம். (30)

(ஸ்ரீ-வீர-அ-கை.) வில்வித்தையிற் றேர்ச்சியில்லாத பாலகனுகிய ஸ்ரீராம சுவாமி கரதூஷணாதி யரக்கரைக் கொன்று எங்ஙனந் தங்களுடைய யாகசித்தி யைச் செய்தல் கூடுமெனின் இங்ஙனமென்கின்றார்:—தேவரிலென.

தேவரிற் றேசு மிக்க வென்பெருஞ் சேமந் தன்னு
லேவரு நிருதர் சேனை யிராமனே யெளிது கொல்லுங்
காவல சிறுவ னென்னுங் கவலையை யொழியென் போல்வா
ரோவலிற் சங்கை யான கருமத்தி லுள்ளம் வையார். (31)

(ப - ரை.) அரக்கரை வதஞ்செய்வதில் ஆற்றலின்மையின் கொடுப்பது கூடாதென்று நினைக்கலாகாது, என்னை, தேவரிற்றேசுமிக்க = தேவதைகட் குப் பூர்வபுண்ணிய ஜன்னிய தேஜசாதலின் அவ்வளவிற்றேயாம், இகத்தவத் தால் வருந்தேஜசோ எவ்வளவிற்றும் ஆமாதலின் பெருந்தவத்தான் மிகுந்த தேஜசோடுகூடி விளங்கும், என்பெருஞ் சேமந்தன்னை = எனது பெருஞ் சாக்கிரதையுடன் குப்தமாய் ரக்ஷிக்கும் தன்மையினுலும், ஏவரும்= ஒருவரா

னும் வெற்றிகொள்ள முடியாததே யாயினும், நிருதர்சேனை = யாகத்தைக் கெடுக்கும் இராக்ஷதப்படைகளை, இராமனே = ஸ்ரீ இரகுவம்ச கேதுவானவனே எளிதுகொல்லும் = அதி சுலபமாக அநாயசத்துடன் தூட்படுத்துவன், காவல = பார்த்திவனே! சிறுவனென்னுங் கவலையையொழி = மைந்தனியிற்றே என்ன நேரிடுமோவென்னுங் கவலையைவிட் டொழித்தல் வேண்டும், போர்க்கிவன் அயோக்கியனை குழந்தைப் பருவத்தன் என்றுண்டாங் கவலையை விட்டுவிட வேண்டும், என் போல்வார் = என்னைப்போன்ற அறிவு நிறைந்த பெரியர், ஓவலிற் சங்கையான கருமத்திலுள்ளம் வையார் = பொருத்த மில்லாமல் வருத்தத்தைத்தரத்தக்கதும் ஐயமுற்றதும் ஆகிய தொழிலைச் செய்யவேண்டு மென்று எண்ணமாட்டார்கள். (எ-று.) (31)

(ஸ்ரீ-வீர.) தூட்படுத்துவன் = அபகாரிகளாகிய அவர்களின் றலைகளைப் பொடிப் பொடியாயாக்குவதி லாற்றலுடையவனென்க. தேவரிற்றேசுமிக்கதனலும் = தான் தானே ஸ்ரீமந் நாராயண ரானபடியால் எல்லாத்தேவதைகளினும் மிகுந்த திவ்ய தேஜசுடன் கூடி மகாவல்லவனு யிருத்தலாலும், என் பெருஞ் சேமந்தன்னலும் என்று பிரித்துப்பொருள் கொள்ளவே திவ்யதேஜசால் ஆற்றலுடைமையும், இருடியாற் காக்கப்படுந் தன்மையும் முரண்படுமாலோவெனின், படாதாம், அஞ்ஞானுவதாரத்தில் இருடியும் அஸ்திரதானுகிகளால் அவரது திவ்யதேஜசை விளக்குதல் பொருத்தமா யிருத்தலின். என் போன்றார் சந்திக்கத்தமான கிரியையில் திடப்பிரவிருத்தி யுடையவர் ஆகார். மற்றும், என்னைற் காக்கப்பட்ட இராகவன் தன்னுடைய திவ்யதேஜசினாலே யாகத்திற்கும் உலகிற்கும் அபகாரஞ் செய்யப்பட்ட அரக்கர்களுடைய சிரச்சேதஞ் செய்வதன் கண்ணே வல்லமை யுடையவன்; அவனுக்கு அஸ்திரவேற்றுமையாலே பலவேறு வகைப்பட்டதும், எல்லையில்லாத அழிவற்ற மகிமையோடு கூடியதும் ஆகிய அஸ்திரவித்தையை யினிது கொடுத்தல் வடிவமேன்மையைச் செய்வேன் அதனால் மூன்றுலகங்களும் பூஜிக்குமாறு ஆய்விடுவன். ஆயினுந் தந்தையார் மைந்தரைவிடல் எளிதல்லவே யெனின், உண்மையே, மைந்தன்மேல் வைத்த என் மைந்தனிவனென்னும் நேயத்தை மிகுதிப்படுத்திக் கொள்ளுதல் நலனன்றும். என்போலிய அறிஞர் ஐயப்பட்ட காரியத்தில் மெய்ம்முயற்சியைச் செய்யார். (31)

(ஸ்ரீ-வீர. அ-கை.) அரக்கர்களை யழிக்கமுடியு மென்று கூறினீர்களே பாலகனாகிய இராகவனுக்கு இத்தகைய சாமர்த்தியம் எங்ஙனங் கூடுமெனின், கூறுகின்றார்:—இயாரினுமென.

இயாரினு மிராமன் மேன்மை வசிட்டனு மியானு மாதி
யாரிய ரறிவே மாட்சி யறம்புகழ் வேண்டினந்தப்
பேரிய லானை யீதி பெருமையோர் கொடாத தண்டோ
வீரிய வரக்கர் மாய்தன் மெய்யென விளம்பி விட்டான். (32)

(ப - ரை.) இயாரினும் = உலகத்திலுள்ள மகாமகிமைவாய்ந்த எல்லாரினுமே, இராமன் மேன்மை = மகாத்மாவும் ராஜீவ லோசனனும் தன்பாலடைந்தாரை ரமிக்கச் செய்பவனும் ஆகிய ஸ்ரீ இரகுகுல திலகன்றன் மகாமகா மகாமகிமையோடு கூடியிருத்தலை, வசிட்டனும் = ஸ்ரீ பிரஹ்மாவின் மானசபுத்திரராகி மகாதேஜசோடுந் தலங்கி யாவற்றையும் எக்காலத்திலும் உணர்ந்த ஸ்ரீ வசிஷ்டபகவானும், யானும் = பெருந்தவத்தால் யாவையும் பெற்ற ஜகன்மித்திரனுகியயானும், ஆதி = இவ்வாறேயாய முக்காலமுமுணர்ந்த யோகீந்திரர்களும் ஆகிய, ஆரியர் = அறிஞர்களாகிய மேலோர்களும், அறிவேம் = தெரிந்துகொண் டிருக்கின்றேம், மாட்சி = பெருந் தன்மையும், அறம் = புண்ணியமும், புகழ் = யசசும், வேண்டின் = இனிதாக விரும்புதியேயாயின், அந்தப் பேரியலாணையீதி = அழகு நிறைந்திருப்பதேபோல அநந்த கல்யாண குணகணங்கட் கிருப்பிடமாகிய மகாமகத்துவம் வாய்ந்த அவ்வமது ஜேஷ்ட புத்திரனைக் கொடுப்பீராக, பெருமையோர் = மகான்மாக்கட்கு, கொடாததண்டோ = கொடாததான பொருள் இவ்வுலகத்திற் காணேம், வீரியவரச்சர் = மிகுந்த பலமுடைய இராக்ஷசர்கள், மாய்தல் = மாய்ந்து போதல், மெய்யென விளம்பிவிட்டான் = பிரதிஜ்ஞையோடு கூறி நிறுத்தினர். (எ-று.) (32)

(ஸ்ரீ-வீர.) ஸ்ரீ இராகவனை, சங்கற்பமாத்திரையாலே உலகமாங்குட்டியாவையுண்டாக்கவும் ஒழிக்கவும் வல்லமைவாய்ந்த பரமாத்மாவென்று யாங்களறிந்திருக்கின்றோம். தன்மமுதலியவை உம்முடைய உள்ளத்திற் நள்ளத்தகாதனவாக வுள்ளனவாயின் உமக்கதிப்பிரியனை ஜேஷ்டமைந்தனைத் தரல் வேண்டும். என்பதாகத் தருமாண்மாவாய் மகாதேஜசோடு கூடிவிளங்கும் ஸ்ரீ விசுவாமித்திர முனீசுவர் தருமார்த்த சகிதவாக்கியத்தை விளம்பிவிட்டுச் சும்மா யிருந்தார். செந்தாமரைக்கண்கள் வாய்ந்து மகாமகிமையோடிலங்கும், ஸ்ரீ இராமனை ஜீவஉபாதியாற் பரிச்சின்னப்படாத பூரணவடிவ ஈசுவரனென்று, யானும் மகாதேஜசையுடைய ஸ்ரீ வசிஷ்டபகவானும் யோகசித்தியினாலே எல்லாவிடங்களிலிருக்கும் பொருள்களையும் அறியுந்தன்மைவாய்ந்த மற்றைய இருடிகளு மறிவோம், அறத்தையும் மேன்மையையும் கீர்த்தியையும் காக்கவேண்டுமென்னும் எண்ணம் உமதுள்ளத்திருப்பின் அதிகப்பிரிய மைந்தனை ஸ்ரீ இராமச் சந்திரனை நன்னிச்சயத்துடன் கொடுக்கவேண்டும். எனதுயாகவைரிகளாக விக்கினங்களையே செய்யும் அரக்கர்கள் ஸ்ரீ இராமனாற் கொல்லப்படுபவர்களாய் நடக்குமென்பது யாகம் பத்துநாளிரவும் பகலும் செய்யத்தக்கதாம். அசக்தத்தன்மையை யங்கீகரித்துக் கூறுகின்றீர். இவ்வுலகில் மகாத்மாக்கட்குக் கொடுக்கத்தகாத பொருளுமொன்றுண்டோ! "கன்னனை கவசந்தான் கவின்றுசைசிபிசூதன் இன்னுயிர் அலர்க்கன்கண்ணை ஈந்தனன் றதீசி தேக, வென்னென்புதந்தான் வேண்டில் விழுமியபெரியோர்க்காக, வென்ன தான் கொடுக்கலாகா விரும்பொருளுலகிலம்மா!" என்பது ஸ்மிருதியாம். சிபி

தகீசியலர்க்கன்முதலியோர் தமதுதேகம் விழி முதலியவற்றையும் கொடுத்தனர் என்பதுமக்குத் தெரியாததல்லவே, இவ்விடயத்தில் அபாயம் வருமென நினைத்தலும் கூடாது,வெற்றியும் மேன்மையுமே யுண்டாம். அற்புதம் அவ்வரக்கர்களே மடிந்தவர்களாகவே என்றவத்தால் நான் நிச்சயமா யறிகின்றேன் என் வாக்கியத்தால் நீரும் அதை நிச்சயமாக வுணருதிர். ஸ்ரீ இராகவனே அனுப்புவதில் ஸ்ரீ வசிஷ்டாதியருஞ் சம்மதிதருவர். காலத்திற்செய்த நன்றியே ஞாலத்திற் பலபரியந்தம் மேன்மையதாம் என்றனர்.

(ச.) ஆரியர் = என்போன்றே பூத வர்த்தமான பவிஷ்யத்காலங்களே யுணர்ந்த அறிவுடையோர். மகான்களனுக்கிரகத்தினல் குலத்திற்குந் தனக்கும் மகத்துவமும், யாகசம்ரக்ஷணையினுற் றருமமும், இராக்ஷதர்களே விஜயஞ்செய்தன் முதலியவற்றுனே மகாகீர்த்தியும், விரும்புதியாயின் என்பார் மாட்சியறம் புகழ் வேண்டினென்றார். (32)

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஸ்ரீ இராகவனுக்குப் பருவமின்மையின் வலியின் றென்றும் யாளுவது வந்து போர்செய்யலாமாவென வெண்ணுகின்றே னென்றும் மன்னவர் கூறுதல்:—முனிமொழி யென.

> முனிமொழி கேட்டு மன்னன் முகூர்த்தமொன்றயர்ந்து சோர்ந்து
> தனியொரு சிறுவன் மூவைம்ப ருவத்தன் சமர்கண் டில்லான்
> பனிசெய்வல் லரக்கர்க் காற்றுன் பகைஞர்கோ ளறிதல்தேற்றுன்
> அனிகமோ டேகி யானே யவரொடு மரும்போர் செய்வேன். (33)

(ப - ரை.) முனிமொழிகேட்டு = ஸ்ரீவிசுவாமித்திரரது வாக்கியமாகிய கர்ணகடோரத்தைக் கேட்டவுடனே, மன்னன் = தசரதர் சிங்கம்போன்றவ ரேனும் புத்திர சோகத்தால், முகூர்த்தமொன்றயர்ந்து சோர்ந்து = ஒரு முகூர்த்தம்வரை சேஷ்டை யற்றவராகி மயங்கிவாடித் தைனியத்தோடும் இவ் வாக்கியத்தைப் பகரலாயினர், ஹேசர்வக்ஞராகிய மகரிஷியே! இராகவன், தனியொருசிறுவன் = அத்தியந்தம் ஒருசிறிய பாலகன், மூவைம்பருவத்தன் = கேவலம் ஊனசோடச வருடவயதினன், சமர்கண்டில்லான் = போர்க்களமே கண்டவனல்லன், பனிசெய் வல்லரக்கர்க்காற்றுன் = பனிபோல் மூடும்படியான அநேக மாயைகளைச் செய்யும் வல்லமைபொருந்திய அரக்கரோடு போர் செய்யக் கிஞ்சித்தும் சமர்த்தடையவனுகக் காணப்படவுமில்லை, பகைஞர் கோளறிதல் தேற்றுன் = சத்துருக்களது பலாபலங்களையும் வஞ்சகங்களையும் தெரிந்துகொள்ளும்படியான சாமர்த்தியமும் அவனுக்கில்லை, ஆனல், அனிகமோடேகியானே = யானே சர்வசைனியங்களோடும் போய், அவரொடும் அரும்போர் செய்வேன் = அத்துஷ்டர்களாகிய அரக்கரோடும் பெரும்போரைச் செய்யலாமென் றெண்ணுகிறேன். (எ-று.) (33)

(ஸ்ரீ-வீர.) ஊனசோடசம் = பதினறுவருடங்களின் பூர்த்தி சோடசமாகும், அப்பதினறுவது வருடஞ் சிறிது குறைவாயிருத்தலே ஊனமாகும்

என்பதாம். அவ்வரக்கர்கள் பாற் றுஷ்டத்தன்மைக்குக் காரணம் மாம்சபக்ஷணமே யாமென்றறிக. ஸ்ரீவிசுவாமித்திரர் கூறியதைக்கேட்டு அரசர்க்கரசராகிய தசரதர் விடை யில்லாமையின் செயலற்று, முன்மொழிந்த ஸ்ரீ இராமரது தசையை எண்ணுதலால் பிரதிஜ்ஞைசெய்த பொருளிற் சாமர்த்தியமின்மையினும், முனிவரது வசனத்தைத் தாண்டமுடியாமையானும், தனியத்தோடு கூடிய இவ்வசனத்தைக் கூறுகின்றார்.—தனியன. தாமரை விழியையுடைய இவ்விராமனுக்குப் பதினேந்தே முக்கால் வயதாகுகின்றது. போர்செய்யத் தகுதியே யில்லாதபோது அரக்கரோடு போர்செய்வானென்று நினைக்கவே முடியாது. ஆனால் கேட்டது வீண்தானே என்பீரேல் ஹேபிரபுவே! பூரணமாகிய அக்ஷௌஹிணிக்குக் கருத்தாவாகிய யான் அச்சேனையோடு கூடிச் சென்று தசைதின்னுமரக்கரோடு போர்புரிவேன், அக்ஷௌஹிணியின் இலக்கணமிதுவாம்:— ஆனை 1, தேர் 1, குதிரைகள் 3, காலாள்கள் 5, இது பத்தியெனப்படும், இத்தொகைமூன்று மூன்று கொண்டனமுறையே, சேனைமுகம், குல்மம், கணம், வாகினி, பிருதனை, சமூ, அனீகினீ, யெனவாம்; 10 அனீகினீ சேர்ந்து அக்ஷௌஹிணி அதாவது, ஆனைகள் 21870, தேர்கள் 21870 குதிரைகள் 65610 காலாள்கள் 109350 என்பதாம். இஃதமரசிங்கத்தானே ஸ்ரீமத் மகாபாரதாதியில் வெளியாயிருப்பது தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இச்சேவகர் சூரர்வெற்றி நிறைந்தோர் மந்திரத் தெளிஞராவர், வில்விளங்குங் கையனுகியயானே இவர்களைப் போர்முனையிற் காப்பேன். இவர்களோடு கூடவே சென்று சிங்கமானது மதம்பொழியும் யானைகளோடு போரிடுவதே போல மகேந்திரனும் வலுமைவாய்ந்த போர்வீரரோடும் போரிடுவேன். பாலகனுகிய இராமனே பகையாளிகளின் பலாபலத்தையறிந்து கொள்ளமாட்டான், நகரத்துள் அம்புபயிலுமிடத்தில் விளையாட்டின் பொருட்டுக் கற்பிக்கப்பட்ட போர்க்களத்தினும் வேறுகிய போர்க்களத்தை யவன் கண்டதேயில்லை. மேலான சஸ்திரமாகிய விடாப்படையோடு கூடினவனுமல்லன், போர்விடயம் முற்றுந் தெரிந்தவனுமல்லன், விடும்படைகளோடு கூடினவனுமல்லன், சூரகோடிகணிறைந்த போர்க்களத்திற் போருணர்வு மவனுக்கில்லை, போர் ஞானமுமில்லையாயின் போரின்முற்றுமுணர்ச்சி அதிதூரத்ததன்றே. அன்றியும், இப்போது எனதுபாக்கியக்குறைவால், பனியிலுலேபதுமாகரம் போல மிகமிகவும் வெளுத்திளைத்து வருகின்றான், அன்னமுண்ணவும் ஆற்றலில்லை, வீட்டினுட்சஞ்சரிக்கவு முடியவில்லை, உள்ளே நிரம்பியதயரோடுகூடிய வடிவினனுகிக் கேவலம் சும்மாவே யிருக்கின்றான். அனுப்புதற்கே தகுதியற்ற அவனைப் போர்க்கனுப்புதல் எங்ஙன்? அதனினும் அரக்கரோடு போர்க்கென்பது அத்தியந்தம் தகுதியற்றகாரியமன்றே! வஞ்சகமாகப் போர்செய்வதிற் சமர்த்தும், கொடுந்தொழிலும், உடைய அரக்கர்களோடு கூறிய இத்தன்மையிலிருக்கும் இராமன் போர்புரிகவெனக்கூறும் தங்கள்யுக்தியே மிகவும் சகிக்கமுடியாததாக விருக்கின்றது, எனவிரிவாயுணர்க. (33)

(ஸ்ரீ - வீர - அ - கை.) முன்னவனைத்தந்தால் பெரும் பெரும்ஆபத்துகள் வருவதுடன் தங்கட்கும் தருமம் வளர்வதற்கயலாக அதருமமேயேற்படும் என்றுதசரதர் கூறுகின்றார்:—முன்னவனென.

(ச.) தசரதர் புத்திரவாஞ்சையாற் றளர்ந்தவராதல்:—முன்னவனென.

முன்னவ னீங்கின் மற்ற மூவரும் வாழா ரியானு
மின்னுயிர் வாழே னின்றி ராவண னெழிந்தோ ரியாவ
ரன்னவர்க் கஞ்சேன் முன்ன மிராவண னமர்க்கு மஞ்சேன்
வென்னிடப் பொருதும் வீரர் வீரங்க ணிலைமைத் தாமோ. (34)

(ப - ரை.) முன்னவனீங்கின் = ஜ்ஞேஷ்டகுமாரனுகிய இராகவன் நீங்கு வானேயானால், மற்றமூவரும் வாழார் = பரதலக்ஷ்மண சத்ருக்நரென்னும் மூன்றுதம்பிமாரும் ஜீவிக்கமாட்டார்கள், யானும் = தசரதனுகியயானும் ஜ்ஞேஷ்டகுமாரன் மேன்மிகப் பிரியுடையவனுதலின், இன்னுயிர்வாழேன் = இனிமையான இகலோக வாழ்க்கையிலிரேன், இன்று = விருத்தாப்பியத்தை யடைந்த இப்போது கரதூஷணுதிகளைக் கொல்லயான் வருவனேயாயின் அவர்கள் நிமித்தம் இராவணன்வந்தால் அவனோடு போர்புரிய என்னுண்முடி யாது, இராவண னெழிந்தோரியாவர் அன்னவர்க்கஞ்சேன் = இராவணனு கிய இலங்கேசுரனல்லாமல் மற்றெவ்வரக்கரெதிர்ப்படினும் அவர்கட்கு யான் சிறிதும் பயப்படமாட்டேன், முன்னம் = யவ்வனமாக இருக்கும்போது, இராவணனமர்க்குமஞ்சேன் = கைலாசபர்வதத்தை யசைத்த புஜபலத்தை யுடைய தசமுகனுக்கும் தசரதனுகியயான் அச்சமுறேன், வென்னிடப்பொரு தும் வீரர் = பகைவர்முதுகு காட்டியோடும்படி போர்புரியும் வீரசூரரது, வீரங் கள் = வீர்யசௌர்யங்கள், நிலைமைத்தாமோ = ஒரே படித்தாகவோ நிலைத் திருக்கின்றது ? காணும் மாறிக்கொண்டேயிருக்கின்றது. (எ-று.) (34)

(ஸ்ரீ-வீர.) இன்னுயிர்வாழேன் என்றது அரக்கர்பொருட்டு என்னருமை முதன்மைச்சுதனை வலுவில்கொண்டு செல்வீராயின் உயிர்துறப்பேன் என்ற தாம். இராகவனைக் கொடுக்கமுடியாதென்பதில் வேறுநிமித்தமும் சங்கிக்கப் படுகின்றது என்கின்றார்:—இன்றென. இராமனைப் பிரிந்து ஒருமுகூர்த்த மேனும் வாழவிரும்பிய யான்வாழ்ச்சகியேன், ஆகையால் இராமனையழைத் துச் செல்லுதல் தகுதியன்றும், இராமனையழைத்துச் செல்லுவீராயின் அரக்கர் வதமோ உண்டாகப்போவதில்லை, மாறுகவோ மைந்தரோடுகூடிய வெனக்கே யும்மால் அவ்வதமேற்படும், படவே யாகதருமத்தைக்குறித்து உமக்கு மகா அதருமமன்றே ஏற்படும். ஒன்பதினுயிரவருடங்கள் புத்திரஇச்சையால் வருந் திக்கழிந்த எனக்கு மிகவும் கஷ்டப்பட்டுச் சாதித்த அசுவமேத புத்திர இஷ்டி யாதிகளானே இந்நான்குமைந்தர் உண்டாயினர். பூர்வ இராமாயணத்தில் "ஹேகௌசிகரே! அறுபதினுயிரம் வருடங்கழிந்த எனக்கு" என்றது, தனக்குக் கடந்தவயதைக் காட்டலின், ஈண்டொன்பதினுயிரவருடம் புத்திர

வாஞ்சையாற் கழிந்ததோடு விரோதியாதாம். அந்நால்வருள்ளும் கமல லோசனனுகிய இராமனே முக்கியனுவான், தேசுகத்துப்பிராணனேபோலும் முக்கியமாய அவன் அதிகப்பிரீதிக்கு பாத்திரனுயிருக்கின்றுன்; ஆகலின் ஈண்டு அவனில்லாமல் மற்றையமூவரும் உயிர்தரிக்கமாட்டார்கள். எவனே யழைத்துச்செல்வதால் மற்றையமூவரும் மரணத்தைமருவுவரோ, அத்தகைய இராமனே, யமன்வடிவமாய அரக்கர்பொருட்டுத் தங்களாலழைத்துக்கொண்டு போகப்படுவனேல் நான்குமைந்தர்களையுமிழந்தயான் இறந்ததாகவே நீரறிந்து கொள்ளவேண்டியது. நால்வர் மரணத்தாலென நான்சொல்லவேண்டிய தென்னே, இராமன் ஒருவனையழைத்துச் செல்லன்மாத்திரையானும் நானிறப் பேன்; ஏனெனின், இந்நால்வருள்ளும் இவனிடத்திலேயே எனக்குப்பரமப் பிரீதியானதிருக்கின்றது. ஆகையால்மூத்ததருமமயமாகிய இராமனே யழைத்துச் செல்லுதல் தங்கட்குத் தகுதிபன்றும். நல்லது இராமனையழைத்துச் செல்லாமற் போவனுயின் எனதுகாரியசித்தி எப்படியாகுமெனின், ஹே மகாமுனிவரே! நிசாசரர்களுடைய சேனையைக்கொல்லத் தங்கட்கு விருப்பமிருக்குமாயின் என்னேடுகூடச் சதுரங்கசேனையை யழைத்துச் செல்லுங்கள். பகைவர்பலமறியாமல் எதிர்க்கலாகாதன்றே, அவ்வரக்கர் எவ்வளவு வீரியமுடையவர் எவர் மைந்தர் எங்ஙனமிருக்கின்றனர் எவ்வளவுபேரிருக்கின்றனர் அவர்கள்பெயர்கள் தானென்னே என்பதை நன்ருய்த் தாங்கள்கூறவேண்டும்; அவ்வரக்கரோடு இராமனுற்போர்புரிய எங்ஙன் முடியுமா? என்னுலேனும் எனது பால்கர்களாலேனும் பெரும்போரில் அத்துஷ்டபாத்கியமுள்ள வஞ்சகப்போர் செய்யும் அவரோடு எவ்வாறு எதிர்த்துநிற்க முடியும்? இவ்வியாவற்றையும் தாங்களே கூறவேண்டும்; வீரியமிகுத்து வலுத்தவரன்றே அவ்வரக்கர், நேரே குபேரனுடைய சகோதரனும் விசிரவசுவின் மைந்தனும் ஆகியமகா வீரியத்தையுடைய இராவணனென்னும் அரக்கன் ஒருவனிருக்கின்ருனென்று கேள்விப்பட்டுளேன். தங்களுடைய யாகத்தில் அந்தத் துன்மதியானவன் ஒருவேளே யிடர்செய்ய வருவானுயின் அந்தத் துராத்மாவோடு போரினெதிர்த்து நிற்க எங்களான் முடியவே மாட்டாது.

(ச.) ஹே கௌசிக முனிநாதரே! எனக் கமுபதினுயிரவருடங் கழிந்த பின் வெகு வருத்தப்பட்டியற்றிய புத்திரகாமேட்டி யாகத்தால் நான்கு புத்திரருதித்தார், அவர்களிற் பிரதான புத்திரனை இராமனையே தேவரீர் அரக்கருக் கிரையாகக் கொடுக்கத் துணிந்தீர் அவனிவ்விடம் விட்டுப்பிரியின், மற்றப்பரதாதி மூவரும் சீவியார் அப்புத்திராபாவத்தால் என்னையு மிறந்தவனுகவே யறிந்துகொள்ளு மென்பார், முன்னவ—வாழுனென்றுங் கூறினர். அஞ்சேனென் றமையா லிக்காலத்திற் றுட்டமனமுடைய ராவணனுக்குப் பயப்படுவே னென்றதாயிற்று. (34)

(ஸ்ரீ-வீர. அ-கை.) இராவணனுக்கு இத்தகைய வீரியமெங்ஙனம் வந்தது, எங்ஙனந்தான், காகுத்தாதி வம்சத்தில் வந்தவர்களாய் இராவணுதிகளைப் பார்

க்கினும் அதிகபலத்தோடு கூடிய தங்கட்கு வீரியக்குறைவு ஏற்பட்டது எனக் காரணத்தைவினவத் தசரதர் கூறுகின்றார்:—காலவென.

காலவேற் றுமையா லெல்லாப் பொருள்களும் கலங்கி வேறு
மேலவ ரிலோத்தோ ராவர் வெய்யவன் குலத்துப் பூமி
பாலனு மியான்மேற் செய்வ தியாதெனப் பரிகேன் மூப்பாற்
சாலவு மென்றன். மன்னன் றுபதன் முனிந்து சொல்வான். (35)

(ப - ரை.) காலவேற்றுமையால் = காலங்களின் வேறு பாட்டையனு சரித்து, எல்லாப் பொருள்களும் = சிருஷ்டியிலுள்ள சர்வபதார்த்தங்களுமே, கலங்கிவேறும் = கலக்கமுற்று வேறு வேறு திறனும், மேலவர் = சற்சனர், இலோத்தோராவர் = பலஹீன ராக்கப் பெற்றனர், வெய்யவன் குலத்து = சூரியவம்மிசத்திலுதித்த, பூமிபாலனுமியான் = தசரதமன்னவனுகிய யான், சாலவு மூப்பால் = அத்தியந்தம் விருத்தாப்பியத்தை யடைந்திருத்தலின், மேற்செய்வதி யாதெனப் பரிகேன் சாலவும் = இனித்தங்கட்கு எந்தவித மாக உதவிசெய்வது என்று மிகவுந் துயருறுகின்றேன், என்றன் மன்னன் = என விவ்வண்ணம் சிநேகபரியாகுல அக்ஷரத்தோடு கூடிய மொழிகளால் தசர தர் வணக்கமாகக்கூற, தாபதன் = மிகுந்ததபத்தோடு கூடிய ஸ்ரீ விசுவாமித் திரமகரிஷியான கௌசிகர். வெகுண்டு சொல்வான் = மிகவுங் கோபாவேசத் துடன் கூறத்தொடங்கினர். (எ-து.) (35)

(ஸ்ரீ-வீர.) அன்னி யோன்னியம் விலக்ஷணங்களான பகுவீர்ய சௌர்ய சம்பத்துகள் அபிவியக்த அநுகூல அவ்வச்சமயத்தில் பிராணிகளிடத்தில் வெளிப்பட்டு விளங்குகின்றன; பிரளய அநுகூல காலத்திலோ யாவும் உட் பட்டு ஒய்கின்றன. எம்போலிய சற்சனர்கட்குப் பிரதிகூலமாகவுள்ள இக்கா லத்தில் இராவணுதிகளாகிய சத்துருக்கள் முன்னிலையில் யாங்கள் எதிர்த்து நிற்கச் சமர்த்தராகேம், இவ்விதி ஈசனுலே விதிக்கப்பட்டதாம். காலம் பிரதி கூலமாகவே யிருக்கின்ற தென்பார் மேலவரிலோத்தோ ராவரென்றார்.

இப்போழ்து முன்போழ்தைக்குறித்து அத்தியந்தம் அயலாய் விபரீதமா யிருக்கின்றது. விருத்தத் தன்மையும் சர்ச்சரத்தன்மையும் எனக்கு மேலிட்டு விட்டது, இராகவனை ஊனசோடச வருடத்தோடு கூடினவனையினும் விருத்த அவஸ்தையிற் போலச் சர்ச்சரமடைந்தவனு யிக்கால் தீனபாவத்தை யடை ந்து தக்கியாக விருக்கின்றான். கௌசிகர் = குசிக கோத்திரத்தில் வந்தவர்.

ஒவ்வொருபிராணிகளிடத்தில் ஒவ்வொருகாலத்தில் தனித்தனியாக மிகுந்தவீரியங்களும் விபூதிகளும் உண்டாகின்றன, ஒவ்வொருகாலத்தில் ஒடுங்குகின்றன, ஆகையால் இக்காலத்தில் அதனினுமிப்போது நாங்கள் இரா வணுதி சத்துருக்கள்முன்னின்று போர்புரிய ஆற்றலுடையவர்களல்லேம் ; இஃதீசர் நியதியென்பது நிச்சயமாகும். ஆகலின் ஹே தருமத்தை யுணர்ந்த மகாமுனிவரே! என்னுடையமைந்தன் மீதுதிருவருள் புரியவேண்டும், யாசக

ரது எண்ணத்தைப்பூர்த்தி செய்யுமாற்றலற்ற அற்பபாக்கியமுடைய அடியேனுக்குத்தாங்களே மேலாயதெய்வமாக இருக்கின்றீர்கள்; ஏனிவ்வளவு அதைரியமெனின், தேவர்தானவருங்கூட இராவணனோடு போர்புரியச் சமர்த்தராகார் ஆயின்மனுடராகிய யாங்கள் அவன்முன்னென்செய்வோம். போரின்கண்ணே இந்திராதிகளையும் துச்சமாக்குகின்றனன், அத்தகையனோடு பாலகன் என்ன செய்வான். நல்லமேலோர்களும் பலமற்றவர்களாகவாழும் இஃதொரு விபரீதகாலமாக இருக்கின்றது; யானே கிழத்தன்மையானே தளர்ந் திருக்கின்றேன். இராமனே கிழவனைப்போல எளிமையையுந் தளர்வையுமடைந்துளான். ஆகையால் இராமனைக் கொடுக்கமுடியாது, யான்கொட்டாமலிருந்தும் தாங்கள் தவமகிமையாற் கொண்டுசெல்வீர்களேயாயின், உங்களால் யானேகொல்லப்பட்டவனுவேன் என்பதாக அவ்விரகுலதிலகராகிய தசரதர் என்னும் மேன்மை மிக்க அரசர் மெதுவாகக் கூறி மகாமுனிவருக் கிஷ்டமாகிய ஸ்ரீ இராகவரை யனுப்புதலினும் அரக்கர் வதத்தினும் செய்யத்தக்கதா? தகாததா? அனுப்பலாமா? வேண்டாமா? என்ப தாதிவடிவச் சம்சயமாகிய பேரலைக்கூட்டத்தில் உயர்ந்தெழா நின்ற அலை மிகுத்த கடலில்மூழ்கி மோக முற்றவனைப்போல மூழ்கினவராகித் தன்னின் பத்தையும் நிச்சயத்தையும் அறியாதவரானர். நேயத்தால் வியாகுலமுற்ற விழிகளோடு கூடிய அவரது அவ்வாக்கியத்தைக் கேட்டுக் கோபத்தோடு கூடிய ஸ்ரீகௌசிக மகாமுனிவர் மகீபதியை நோக்கிக்கூறுகின்றார் என்பதாம்.

(ச.) சிருஷ்டியாதி கால வேறுபாட்டால் பரமேஸ்வச ரைஸ்வரியங்களனைத்துஞ் சிவரிடத்துதித்தலும் ஒடுங்குதலும் ஆகிய கலக்கமுற்றுப் பிரிவுறுமென்பர். வேறுமென்னு மிக்காலத்தில் இராவணதியர் சங்கார ஹேதுக்களான பரமேசுவர ஐசுவரிய மிகுந்தவரும், சற்சனர் அது குறைந்தவரும் ஆவரென்பார் மேலவரினைத் தோராவரென்றும், இப்போது யான்வார்த்திகத்தால் அசக்தனு யிருத்தல்போல இராகவனும் வாலியத்தால் அசக்தனு யிருத்தலின் அவனையு மனுப்புதற்கு மனமின் றென்பதைக் குறிப்பாலறிவித்தா ரென்பார், யான் மூப்பாலென்றுங் கூறினர். (35)

(ஸ்ரீ - வீர. அ - கை.) இப்போது ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியானவர் வெகுண்டு கூறுதல் கூறப்படுகின்றது:—கருதியதென.

கருதிய தளித்தே னென்று கழறிய வாய்மை பொய்த்தாய்
செருவுயர் சிங்கமா நீ சிறுவிலங் கியற்கை செய்தாய்
மருவிய கிளைஞ ரோடும் வாழ்தியாம் போதுமென்று
பெருமுனி முனிய மண்ணிண் பெரும்பயம் பிடித்த தன்றே. (36)

(ப - ரை.) கருதிய தளித்தேனென்று = தாங்கள் எண்ணிவந்த காரியத்தை முடித்துவிட்டதாகவே நினைத்துக் கொள்ளுங்கள் என்பதாக முன்பு, கழறிய வாய்மை பொய்த்தாய் = பன்முறை யுறுதிப்பட வுரைத்த பிரதிஞ்

ளையை விட்டொழிக்க விழைகின்றாய், செருவுயர் சிங்கமா நீ = போர்க்களஞ் சாத வுயர்ந்த சிங்கம்போல மாண்புட னிருந்த நீ, சிறுவிலங்கிபற்கை செய்தாய் = சிறிய பயத்தோடுகூடிய மிருகவியற்கையுட னிருப்ப வாஞ்சிக்கின்றாய், யாம்போதும் = உன்னலக்காரிய முடியாவிட்டால் யாமெங்கிருந்து வந்தோமோ அங்கேயே செல்லுகின்றோம், நீ, மருவிய கிளைஞரோடும் வாழ்கி = உன்னை நம்பி உன்னுடன் கூடிக்குலவும் பந்து வர்க்கங்களோடும் பிரதிஜ்ஞை யிழந்தவனுய்க் காகுத்த வம்மிசத்திற் பிறந்தவனென்று சொல்லிக்கொண்டு சுகமாக நீ வாழக்கடவாய், என்று = என இவ்வண்ணம், பெருமுனி = சப்த ரிஷ்களி லொருவராய்ப் பெருந்தவ முடையராய அம்முனிவர், மூளிய = சினந்து கூறியவளவில், மண்விண் = மண்ணுலகத்தி லுள்ளாரும் விண்ணுல கத்திலுள்ளாரும், பெரும்பயம் பிடித்தது = மிகுந்த அச்சத்தையடைந்தனர். (எ-று.) அன்று, ஏ அசை. (36)

(ஸ்ரீ - வீர.) காகுத்தனெனக் குறிப்பிட்டது ஏசிக்காண்பித்ததாம்; ஹே மன்ன! செய்கின்றேன் என அங்கீகரித்த பிரதிஜ்ஞையைக் கெடுக்க நினைத் தல் தகுங்கொல்! மகாமகிமைவாய்ந்த நீ சிங்கமாக விருந்து மான்றன்மையை மருவ வாஞ்சித்தலென்னே! இராகவர் குலத்திலிப் பொய்பேசும் விபரீதமா னது பொருந்தாததே யன்றே! ஒருகாலத்திலுஞ் சந்திரனிடத்தில் உஷ்ண கிரணங்க ளுண்டாகாவாம். நீர் சாமர்த்தியமுடைய ரல்லராயின் நாம் வந்த வாறே செல்கின்றோம், ஹே காகுத்த! பிரதிஜ்ஞை யற்றவனுகிப் பந்துக்க ளோடும் சுகமாக வாழ்ந்திகொண் டிருப்பீராக வென்றனர், தவமகாத்மிய சாலியாகிய ஸ்ரீ விசுவாமித்திரர் இவ்வாறு கோபத்தினுல் வியாபிக்கப்பட்ட போது நமதுபதியின் அபராதத்தாலேனும், அபராதியைத் தாங்கிக்கொண் டிருக்கும் அபராதத்தினுலேனும் என்னையே எங்கு சபிக்கப் போகின்றாரோ வென்னும் பயத்தானே பூமிமுழுதும் நடுநடுங்கியது. தவத்தால் வேறுகவே இராவணுதிகளைக் கொல்லு மொருவனை பெங்கு சிருஷ்டித்து விடுகின்றாரோ, அவன் நம்மனோரையும் எங்குதுன்புறுத்தப் போகின்றனனெனத் தேவதை களும் நடுநடுங்கினர். இத்தகைய சக்கிரவர்த்திக்கு ஏதாவது முனிவர் சினத் தாற் தீதுண்டாயின் அவனியானது காப்பற்றுத் தவிக்குமேயென இவ்வுலகி லுள்ளவர்களும், புண்ணியமூர்த்தியாகிய ஸ்ரீ இரகுநாயகற்கு ஏதாவதுதடைவ ரின் இராவணுதி சங்காரமிலதாகி யாம் பெருந்துயரன்றே முன்னினும் அதிக மாக அனுபவிக்க நேரிடுமென அவ்வுலகி லுள்ளாரும் பயந்தனர் எனினும் அமையும். (36)

(ஸ்ரீ-வீர-அ-கை.) உலகிற்கு நேர்ராகிய மகாமுனிவர் கோபத்தால் வியா பிக்கப்பட்டதை யுணர்ந்து, தைரியமுடையவராதலின் ஸ்ரீ விசுவாமித்திரரது கோபத்தைத் தமது கோபத்தாலே தடுக்காமல், பேரறிவாளியும் பரமசாந்த சொரூபரும் நல்லவிரதமும் உடையவராய ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறுகின்றார்:- மாதவவென.

மாதவன் முனிவு நோக்கி வசிட்டனு மனு குலத்தே
சாதனுய்த் தசரதப்பேர் தரித்தனே சபதங் காவாய்
தீதுறிற் பிறிதார் காப்பார் திருத்திநீ நிறுத்து நீதி
மேதினி கடவா தென்றல் வேந்தநீ கடக்கற் பாற்றே. (37)

(ப - ரை.) மாதவன் = மாட்சிமைதங்கிய பெருந்தவத்தால் சிருஷ்டி முதலிய எல்லாவல்லமையுமுடைய ஸ்ரீ விசுவாமித்திரர், முனிவு = குரோத அபிபூதமானதை, நோக்கி வசிட்டனும் = ஸ்ரீ பிரஹ்ம மானசீய இயற்கை ஞானியாகிய மைந்தர் கண்ணுற்று, தசரதனைநோக்கி, ஹேமன்ன! மனு குலத்தே சாதனுய் = மனு இக்ஷ்வாகுவம்சத்தே அவதரித்தவனுய், சுயம், தசரதப்பேர் தரித்தனே = தசரதன் என்னுங் காரணக்கீர்த்தி நாமத்தை யடைந்தவனுய், இருக்கின்றபடியால், சபதங்காவாய் = நீ மகரிஷிக்குச் செய்த பிரதிஜ்ஞையை இரக்ஷிக்கவேண்டும், தீதுறிற் பிறிதார்காப்பார் = தபோதனர் கட்குத் தவ இடையூறு உற்றால் உன்போன்ற க்ஷத்ரமாகிய = ஆபத்தினின்றும் திராயமாகிய இரக்ஷிப்பைச் செய்யும் க்ஷத்திரிய அரசனன்றி வேறுயாவர் காத் தற்குரியருளார், திருத்திநீ நிறுத்துநீதி = இன்ன இன்னநீதி முறைப்படிதான் இன்ன இன்னவர் நடக்கவேண்டும் எனநீ ஆக்ஞாபித்த மரியாதையை, மேதினி = நின்ஞலாளப்பட்ட சர்வபூமண்டல மகாப்பிரஜைகளும், கடவா தென்றல் = தாண்டியணுவும் வேறுமுறையாக அணுஷ்டிக்கமாட்டார்கள் என்பது பிரசித்தமா யிருத்தலினுல், வேந்தநீ = மன்னர்கட்கெல்லாம் நீதி தெரிவிக்கும் மன்னவனுகியநீ, கடக்கற்பாற்றே = தவமுனிவர்க்குச் செய்த பிரதிஜ்ஞாபங்களுஞ்செய்தல் உசிதமாமோ, ஆகாதாம். (எ-று.) (37)

(ஸ்ரீ-வீர.) இக்ஷ்வாகு குலத்திற்பிறந்தும், சாக்ஷாத்தருமமே வேற் றுருவங்கொண்டுவந்ததேபோல இருந்தும் ஸ்ரீமான் தசரதப்பெயர் பெற்றும் மூவுலகிலுமுள்ள குணவான்களினுடைய குணங்களே யெல்லாம் ஒருங்கே யலங் காரமாக அடைந்தும் தைரியமுடையவனுகி நல்ல விரதமுடையவனுகி யிருந் தும் தருமத்தைக் கெடுக்க நினைப்பது தகுதியன்றும். இதுகாலம்வரை பிரதிஜ் ஞாபாலனமாகிய விரத அலங்காரம் பெற்றும் இப்போதுமாறுதல் தகுதி யாமோ, தருமத்தோடுங் கீர்த்தியோடுங் கூடியுள்ளது மூன்றுலகினுமன்றே விளங்குகின்றது உங்களுடைய குலதருமமாகிய பிரதிஜ்ஞாபாலன தருமத் தைக் காப்பாற்றவேண்டும். தருமத்தைக் கெடுப்பது தகுதியன்றும், மூவுல கிலும் விரும்பியதைச் சம்பாதிப்பதில் ஆற்றன்மிக்க மூவுலகேசராகிய முனி வரருடைய வாக்கியப்படி செய்வதே தகுதியாம், செய்கின்றேனென அங்கீ கரித்துப் பின்னதைச் செய்யாமலிருப்பது உனது இஷ்டபூர்த்தங்களாகிய யாகாதி தடாகாதி தருமத்தை யழிக்குமாதலின் இராமனை யவசியம் அனுப்ப வேண்டும். எந்நெறியோடு மன்னர்கள் வாழ்கின்றார்களோ அந்நெறியே குடி கள் என்னும் நியமமிருத்தலின், குடிகள் மரியாதையைக் காக்கும் பொருட் டேனும் பிரதிஜ்ஞாவாக்கியத்தைக் காப்பாற்றுவாயாக இக்ஷ்வாகு குலத்திற்

பிறந்தும் சுயம் தசதிசையினும் தேரைச் செலுத்திப் போர்செய்தலினல், தசரத ஆருடமாகி மாறிமாறிப் போர்செய்தலினுதல், தசரதனெனப் புகழ் பெற்றும், முனிவருக்குரையைக் காப்பாற்றுமல் பொய்யாக்குவையாயின் வேறு யாவர் காப்பாற்றுவர், உன்னல் நியமித்த விவகாரப்படி நீதியாக அஞ் ஞானிகளாகிய பிராணிகளும் மரியாதையைக் கடவாராயின் நீ கடத்தல் நீர் மையாமோ என்பதாம். (37)

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஆனல் சிறுபாலகனுகிய இராமனுக்கேதாவது ஆபத்து வந்தால் யாவரே காப்பர், வில்வித்தையினும் இவன் பாலகனுயிற்றே யெனின் கூறுகின்றர்:—எரிகாக்குமென.

எரிகாக்கு மமுதென்ன விம்முனிவ னனிகாக்கு மிராமன் றன்னைச்
செருவாழ்க்கை யரக்கர்செயுந் தீங்கணுகா தெனக்கேட்ட திண்டோள் வேந்த
னருள்வாய்த்த குமரனெது செய்கின்ற னெனவுழைய ரங்கை கூப்பி
விரிதீர்த்த மாடிவரு நாடுடங்கி யுறுதுயரம் விளம்பலுற்றுர். (38)

(ப - ரை.) எரிகாக்கும் = அக்கினிபகவானுலே காக்கப்பட்ட, அமு தென்ன = அமிர்த கும்பமேபோல, இராமன் றன்னை = அமிர்ததேஜசையும் அமிர்தமொழிகளையும் அமிர்த அந்தக்கரணத்தையும் உடைய இராகவனை, இம் முனிவன் = எதிரிலிருந்திலங்கும் அக்கினிச்சுவாலேபோலும் பெருந்தவக்காந்தி வீசும் இந்த விசுவாமித்திர மகாமுனிவர், நனிகாக்கும் = மிகவும் கன்றுக வுன் னைக் காட்டினும் ஆயிரமடங்கு இரக்ஷிப்பர், செருவாழ்க்கை = போரையே செய்து வாழ்நாள் கழிக்கும், அரக்கர் = இராச்சரிப்போர், செய்யும் = வஞ் சகமாகச் செய்யாநின்ற, தீங்கு அணுகாது = துன்பமொன்றும் சமீபத்திலும் வராமட்டாது, எனக்கேட்ட = என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் புத்திமதி சொல்வ தைச் சிரவணஞ்செய்து, அதனுலுண்டாய களிப்பால் தருமஹானியும் புத்தி ஹானியும் வராதென்னுந் துணிவால், திண்டோள் = புயம்பூரித்த, வேந்தன் = மன்னர் மன்னவன், அருள்வாய்த்த = ஸ்ரீவசிஷ்டபகவானுடைய திருவாக்கியப் படியே ஸ்ரீவிசுவாமித்திரரது திருக்கருணைக்குப் பாத்திரமாகி அவரதுதிருவருள் வாய்க்க யோக்கியமாய, குமரன் = நமது மைந்தன், இப்போது, எது செய் கின்றன் = எந்தெந்த எந்தெந்த வகை விவகரித்துக் கொண்டிருக்கின்றனே, எனை = என்று தீமானுகிய மன்னவன் வினவ, உழையர் = ஸ்ரீராமபிருத்தியர், அங்கைகூப்பி = அன்புடன் சிரங்கரம் வைத்து, விரிதீர்த்தம் = விஸ்தாரமான தீர்த்தயாத்திரையைச் செய்து, ஆடிவரும் = அவ்வத்தீர்த்தங்களில் முறை முறையே ஸ்நானுதிசெய்துவந்த, நாடுடங்கி = தினமேமுதலாக, உறுதுயரம் = அடைந்துவராநின்ற பெருந்துன்பங்களை யெல்லாம், விளம்பலுற்றுர் = சொல் லத் தொடங்கினர். (எ-று.) (38)

(ஸ்ரீ-வீர.) பயிற்சிசெய்து சாதிக்கப்பட்ட அஸ்திரங்களோடு கூடியவனே னும், அவ்வகைகூடாதவனேனும் ஆகுக இராகவன், ஆயினும் அவனைத்துயர்ப்

படுத்த அரக்கரான் முடியாதாம். இந்திரரது கிருகத்தில் வைத்திருக்கும் அமிருதமானது நாற்புறமும் வளைந்திருக்கும் அக்கினியால் பிரசித்தமாகக் காக்கப்படுவதேபோலப் புருடசிங்கமாகிய இம்முனிவரானே இராமன் அஸ்திர வித்தை பயின்றவனுயினும் பயிலாதவனுயினும் அவனே அரக்கர் தீண்டவும் வல்லரல்லர். இவர் தரும விக்கிரமாக விளங்குபவர் வீரியவான்களுக்குள் உயர்ந்தவர், இவ்வுலகில் மதியினும் உயர்ந்தவர் தவத்திற்குமேலாய இடமாக விருப்பவர், பலவேறுவகைப்பட்ட அஸ்திரங்களையு முணர்ந்தவர் என்பது சராசரமாயுள்ள மூவுலகத்திலும் வெட்டவெளியேயாம் என்றறிதி. இத்தகைய இவ்விசுவாமித்திரமுனிவர் வீரியத்தையும் பெருந்தேஜசையும் யோகபலத்தால் உலக முழுவதையும் நேரேகாணு மாற்றலுடையவரும் ஆவர், அதனனே இராமனது எதிர்காலவிஜயத்தையும் தெரிந்தேவந்திருக்கின்றராதலின் இராமனது செல்கையில் மதியைச் சஞ்சலப்படுத்திக்கொள்ளுதல் தகுதியல்லவாம் ; என்றிவ்வாறு ஸ்ரீ வசிட்டபகவான்கூற அரசர் மிகமகிழ்வுற்ற மனத்தராய் அருமை மைந்தராகிய ஸ்ரீ இராமரை இலக்குமணரோடும் அழைத்துவருமாறு சேவகனை விளித்து, பெருந் தோளையும் பராக்கிரமத்தையும் உடைய இராமனை இலக்குமணனேடும் விரைவில் இடையூறின்றி முனிவரதுயாகஞ் சித்திக்கும்பொருட்டும் உண்மை மொழியைக் காக்கும்பொருட்டும், அத்தகைய மகாபுண்ணியகாரியத்தில் முன்னுண்டாய பொய்ச்சோகம்போலக் காலதாமதத்தால் வேறேதேனும் விக்கினமுண்டாகாம லிருத்தற்பொருட்டும், அழைத்து வருவாயாகவென்றனர். இவ்வரசரால் ஏவப்பட்ட அவன் சென்று அத்தப்புரத்திலிருக்கும் ஸ்ரீ இராமமந்திரத்தினின்றும் முகூர்த்தமாத்திரத்தில் வந்து அரசரை நோக்கி ஹே தேவரே! ஸ்ரீ இராமர் தமதுமந்திரத்தில் இரவிற்றூமரையில் வண்டிருப்பதே போலத் துக்கமனத்தரா யிருக்கின்றனர், ஒருபோது கணத்தில் வருகின்றே னென்கின்றார் ஒருபோது தியானத்திலிருக்கின்றார், கூறுதல் வாக்குமாத்திரத் தானே யிருக்கின்றதேயன்றி மனப்பூர்வகமாகவில்லை முக்கியமாகத் தியானமே செய்கின்றார், (கணங்கடிகையி னறிலோர்பாகம்) சமீபத்திலொருவருமிருக்க இச்சிக்கின்றாரில்லை மதிவடிவாயுள்ளார் என்றனன் சேவகன், என்றபோது அரசர் அச்சேவகனேடு ஸ்ரீ இராமரது சமாசாரத்தைத் தெரியப்படுத்த வந்திருக்கும் அவரது சேவகரை யதட்டிக்கேட்பின் அனேத்தையும் சரியாய்ச் சொல்லாரென் றெண்ணி அவர்பால் மிகப்பிரீதிகாட்டி முறையாக யாவற்றையும் கூறவேண்டுமெனக் கேட்டனர். (அ-கை.) இராமன் எவ்வாறு ஒழுகுகின்றனன் இளைத்தல் துயருறல் முதலியவற்றின் கீழ்மை யெங்ஙனிருக்கின்றது என அரசரால் கேட்கப்பட்ட ஸ்ரீ இராமரது சேவகர் அரசரை நோக்கித் துக்கிதராயிவ்வாறு கூறத்தொடங்கினர்:—உழையரென. ஹே தேவரே! தங்களுடைய மைந்தராகிய ஸ்ரீஇராமர் இளைத்த யாக்கையோடுந் துயருற்றிருத்தலக்கண்டு மெலிந்த இந்த யாங்களும் துக்கிதரா யித்தேகக்குச்சியைத் தாங்கிக்கொண்டிருக்கின்றோம், காணப்பட்ட எங்கட்கும் இத்தகைய துக்க இளைப்பு

கள் உண்டாயிருப்பின் அவருக்கிவைகளைப்பற்றி யாங்கள் கூறவுமாவேண்டும், கமலபத்திர நேத்திரமுடைய ஸ்ரீ இராகவர் மறையவரோடுந் தீர்த்தயாத்திரைக் குச்சென்று வந்தநாள் முதலாக மனுஷியாகூலத்தோடு கூடியவராகவே யிருக்கின்றனர் என்பதாம். புருடசிங்கமாகிய மகரிஷியால் ஸ்ரீ இராகவர் கருடனலமுதம்போலக் காப்பாற்றப்படுவர் என்றும் பாடமுள தெனக் காண்க.

(ச.) இராமன் அத்திரதாரியேனும் அஸ்த்திரதாரியேனும், இவனே யிச்சகன்மித்திர முனிவரது தவமகிமை யிரகஸ்யிக்குமென்பார் இம்முனிவனனிகாக்கும் இராமன்றன்னை யென்றார். (38)

(ஸ்ரீ-வீர - அ - கை.) இப்போது உழையர் ஸ்ரீ இராகவர் அடையுந் துயரத்தை விளம்புகின்றார்:—பதமென.

பதம்பணிந்து வேண்டியபின் பண்டைநிய மஞ்சிறிது பண்ணு நிற்கும்
இதந்தருமா தருநிதியு மில்லமும்பொய் யாதலினு லென்னையென்னுஞ்
சிதம்படுநற் றுகிலடிகில் சீதநீ ராதிகளிற் சிந்தை தீரும்
மதந்தவிர்சந் நியாசியர் போன் மானபிராச்சிய மகிழ்ச்சி மறுக்க மாற்றும்.(39)

(ப - ரை.) பதம் பணிந்து = அவருடைய திவ்ய திருவடித்தாமரைகளில் வீழ்ந்து நமஸ்கரித்து, வேண்டியபின் = மிகுந்த முயற்சியோடும் பிரார்த்தனை செய்துகொண்டபின்னர், பண்டை நியமஞ்சிறிது = எப்போதும் செய்து வரும்படியான தமது தினவியாபாரத்தை அற்பம், பண்ணுநிற்கும் = வாடிய வதனத்தை யுடையவராய்ச் செய்தாலுஞ் செய்வர் சும்மாவிருந்தாலுமிருப்பர், இதந்தரும் = சுகத்தையும் நன்மையையும் ஈயுமென்று நம்பிக்கொண்டிருக்கும், மாதரும் = மதர்த்தநேத்திர மதோன்மத்த மங்கையரும், நிதியும் = அளவிறந்த திரவியமும், இல்லமும் = மாடமாளிகை கூடகோபுரங்களும், பொய் = அத்தியந்தம் மித்தையாம், ஆதலினால் = அவ்வாறு பேய்த் தேர்க்கொப்பாயிருப்பதால், என்னையென்னும் = இவற்றால் எனக்கு ஆகவேண்டிய தென்னே யெனச் சும்மாவிருக்கும், சிதம்படு நற்றுகில் = வெளுத்து மிகவும் வெள்ளையா யிராநின்ற வஸ்திரங்களிலும், அடிசில் = அறுவகைச் சுவை வாய்ந்த ஆகாரங்களிலும், சீதநீர் = வாசனைத் திரவியங்கள் சேர்த்து வெயிலில் வைத்தாற்றிய தண்மை பொருந்திய தெண்ணீரிடத்திலும், ஆதிகளில் = இவை முதலிய மற்றைய போக்கியங்களிலும், சிந்தைதீரும் = பராங்முகமாக மிகவும் நொதுமலேயே யடைந்துள்ளார், மதந்தவிர் = காமக்குரோதலோப மோகமத மாற்சரியாதி துற்குணங்களை வென்ற, சந்நியாசியர் போல் = சர்வ சங்க பரித்தியாகஞ்செய்த துறவிகளைப் போலத் தவஞ்செய்யவே முயலுகின்றனர், மானம் = அபிமானத்தையும், இராச்சியம் = இராஜாவாக இருக்குந் தன்மையையும், மகிழ்ச்சி மறுக்கம் = சுகதுக்காதி விருத்திகளில் சந்தோஷ விஷாதங்களையும், மாற்றும் = அடைவதே கிடையாது (எ-று.) (39)

(ஸ்ரீ-வீர.) பரிவிராட்டுகள் என்று சொல்லப்பட்ட சந்நியாசிகளின் தருமமாகிய நிரபேக்ஷை முதலியவற்றையே நமது ஸ்ரீ இராகவர் கைக்கொண்டுளார் என்பார் சந்நியாசியர் போலென்றார். சந்தோஷ விஷாதங்கள் ஆவன மனதின் எழுச்சியாகிய வுற்சாகமும், விழுச்சியாகிய சோகமும் ஆமென்றறிக. எங்களுடைய முயற்சியினாலும் பிரார்த்தனையினாலும் தினந்தினஞ் செய்யும் தமது போஜனாதி வியாபாரத்தை வாடிய முகமுடையவராய்ச் செய்தாலுஞ் செய்வர், செய்யாமலு மிருப்பர், அதில் விருப்பமே கிடையாது, ஸ்நானம், தேவார்ச்சனை, தானம், ஆதானம், போஜனம், முதலியவற்றில் மனமேயில்லை வேண்டிக்கொண்ட போதிலும் திருப்தியுண்டாம் வண்ணம் உண்ணுவதே கிடையாது. போஜனம், சயனம், வாகனம், விலாசம், ஸ்நானம், ஆசனம், என்னுமிவ்வாசற்றவைகளிலும் உன்மத்தன் விவகரிப்பதேபோல மகிழ்வதே கிடையாது; சம்பத்தாலென்னே ! விபத்தாலென்னே ! மானியாலென்னே ! மனோரதங்களா லென்னே ! யாவுமே சாரமற்றனவாம், என்பதாக வியம்பி மவுனமாகத்தனியே யிருப்பர். பரிகாசங்களில் மகிழ்வதில்லை போகங்களில் மூழ்குவதில்லை தொடங்குங் காரியங்களில் அவாவுறில்லை மவுனியாகவே யிருக்கின்றார். ஏகாந்தங்களிலும், திகந்தங்களிலும், தீரங்களிலும், ஆரண்யங்களிலுமே அவர் மகிழ்கின்றனர்; உடுத்தல் குடித்தல் உண்ணல் நண்ணல்களில் வெளிப்படையாக உபேக்ஷையா யிருத்தலின் தவமுடைய எதையுமே யேலாத யதிகள்போலவே யொழுகுகின்றனர். ஜனசூன்யமாகிய தேயத்தில் ஒருவராகவே யிருந்துகொண்டு முக்கியமாகிய மதியினனே நகைத்தல் பாடுதல் அழுதல் முதலன வொன்றுமே செய்வதில்லை, மற்றோர். பதுமாதனத்திருந்து இடதுகையாற் கபோல தலந்தாங்கிக் கேவலம் பரமார்த்தப் பற்றுதலானே தியானத்திலேயே யிருக்கின்றார் அபிமானத்தை யடைவதே கிடையாது, மன்னவனுந்தன்மையையும் வாஞ்சிப்பதே கிடையாது. இஷ்ட அநிஷ்ட வஸ்துக்கள் கிடைக்கும்போ தண்டாம் சுகதுக்கங்களில் மகிழ்ச்சி வாட்டங்களையும் அடைவதேகாணும். இவர் செல்கின்றதென் ? செய்வதென் ? விழைகின்றதென் ? தியானிக்கின்றதென் ? வருகின்றதென் ? எங்ஙனமென் னனுசரிக்கின்றார் என்பதை யாங்கள் அறிய முடியவில்லை. தினந்தினம் இவ்வீத்தே வருகின்றனர் வெளுத்தே வருகின்றனர், சரற்கால முடிவிலுள்ள காய்ந்தருவைப் போலத் தினந்தினம் வைராக்கியத்தையே யடைகின்றனர் என்பதாம். (39)

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஆயின் என்னதான் சொல்கின்றான், என்னதான்செய்கின்றான், அவன் கருத்துத்தானென், அவனைத் திருத்தத்தான் முடியாதோ வெனிற் கூறுகின்றார்:—இடரில் பதமென.

இடரில்பத மொழிந்தபல தொழிலாற்போம் வாணுளென் றிரங்கிப் பாடு, மடர்செல்வ மாபத்துக் கிடமென்றே யாசைதவிர்ந் தியார்க்கு மீயும், படர்கின்ற கருத்தறியே மிவற்காரே நற்குணங்கள் பயிற்ற வல்லார், தொடர் செய்கை யிதுவென்று தொழுதுரைத்தார் முனிகேட்டுச் சொல்வதானன். (40)

(ப - ரை.) இடரில் பதம் = இடரில்லாமலே யெளிதாக அடையத் தக்க தும் எல்லாத்துயரங்களு மில்லாததும் ஆகிய மோகூஷத்தை, ஒழிந்த பலதொழி லால் = அடைவதற்கில்லாதனவான பற்பல அநாத்ம சம்பந்தமானதொழில் களினாலே, போம்வாணுள் = ஆயுளானவை கழிக்கப்படுகின்றன, என்று = என இவ்வண்ணமாகக் கோர்க்கப்பட்ட பாடல்களை, இரங்கி = மிகவுமிரக்கத் தோடும் பரிதாபத்தோடும், பாடும் = அடிக்கடி மிருதுமாதுரிய சிறுதொனி யினாலே பாடிக்கொண்டே யிருக்கின்றார், அடர் செல்வம் = நெருங்கிய சம் பத்துகளெல்லாம், ஆபத்துக் கிடமென்றே = துயரங்களெல்லாம் வசிக்கப் பட்ட ஸ்தானமெனக் கூறிக்கொண்டே, ஆசைதவிர்ந்து = அவற்றிற் சிறிதும் அவாவுறாமல், யார்க்கும் ஈயும் = உங்களுக்கு விருப்பமிருந்தா லெடுத்துக் கொண்டு போகலாமெனச் சொல்லி யாசகரிடத்தில் அள்ளி அள்ளித் தனங் களை யெல்லாங் கொடுத்துக் கொண்டே யிருக்கின்றார், படர்கின்ற கருத்தறி யேம் = இவருடைய மனதில் என்ன எண்ணிக்கொண் டிருக்கின்றார் என்பது எங்கட் கெவ்வள வாலோசித்தும் தெரியவேயில்லை, இவர்க்காரே நற்குணங் கள் பயிற்றவல்லார் = இவ்வண்ணம் அபிப்பிராயத்தைத் தெரிவியாமல் துய ரப்படு மிவ்விராகவர்க்கு இவர் கருத்தறிந்து யாவர்தாம் நற்குணங்களைப் போ திக்கவல்லார் உள்ளார் ஒருவரையுமே காணேம் இது விடயத்தில் தாங்கள் எங்களுக்குப் பெருங்கதியாக வுள்ளீர்கள், தொடர் செய்கை = இராகவர் இடைவிடாது செய்யப்பட்ட செய்கை, இது என்று = இத்தன்மையதாக இருக்கின்றதென, தொழுது உரைத்தார் = நமஸ்கரித்துக் கூறியவுடன், முனி கேட்டு = ஸ்ரீ விசுவாமித்திரர் இவற்றையெல்லாஞ் செவியிற் குளிரக்கொண்டு சொல்வதானான் = சொல்லத் தொடங்கினர். (எ-று.) (40)

(ஸ்ரீ-வீர.) இடரில் பதம் என்பது நிர்வாண பதமாம். இரங்கிப்பாடுதல் என்பது காகலியினாலே அதாவது கண்டஞ்சிறுகிய தொனியினாலே பாடுத லாம். ஹேயாசகனே! ஆபத்திற்கு முக்கிய வாசஸ்தானமாக இருக்கும் தனத்தை யாதின் பொருட்டு வாஞ்சிக்கின்றாய் என்றறிஞர்கள் உபதேசஞ் செய்து கொண்டே சர்வ ஜனவரியங்களையும் உச்சம் நீசம் நாடாமல் கேட்டவர்கட் கெல்லாம் இவ்வாபத்து நம்மைவிட்டுத் தொலைந்தாற் போதுமென்னும் மதி யால் ஈவதே வேலையாக இருக்கின்றா ரென்பதாம். அத்தகைய சித்தமுடைய இவர்க்குயாங்கள் என்னசெய்வ தென்பதாகத் தீர்க்கமாக ஆராய்ந்தும் தெரிய வில்லை. பிராகிருத விவகாரத்தின் கண்ணே இவ்விராமச் சந்திரரை பிரவேசிக் கும்படிசெய்ய யாவர் சமர்த்தரோ, அத்தகைய பேராற்றலை யுடையவர் இம் மகீதலத்திற் சுற்றினும் யாவர்தாங் கிடைக்கப்போகின்றார் என்பதாம். இந்தி ரியங்களா லனுபவிக்க ஆரம்பிக்கும்போது மாத்திரம் மனோரம்மியமாகிப் பின்பு விடம்போலாம் போகங்களில் மனத்தை யழுத்தாதீர்கள் எனச் சமீ பத்திலிருக்கும் இனியநேயர்களாகிய விவேகிகளை நோக்கிச் சிக்ஷிப்பர். ஆயாச மில்லாம லடையத்தக்க மோகூஷபதத்தை யடையாமற்போம் புருடரானே

பாகியப் பிரவிருத்திகளால் ஆயுள் வீணே கழிக்கப்பட்டதென்றும், அநாயாசமாக அடையத்தக்க பதத்தை யடையாமற் போம்படியான தொழில்களால் என்னுல் ஆயுள்வீணே கழிக்கப்பட்ட தென்றும், மாதுரியமும் வெளிப்படாததும் ஆகிய வாக்கினுனே யடிக்கடிபாடா நிற்பர்; ஆபத்துக்கட்கு முக்கிய வாசஸ்தானமாகிய தனத்தையா விரும்புகின்றீர்கள் எனக்கூறி எல்லாத்தனத்தையும் யாசகர் பொருட்டு வாரிவாரித் தருகின்றார். இஃதாபத் திது சம்பத்தென்னும் கற்பனைப் பெருக்கான மோகம் மனத்தினின்றும் உண்டாயதென்னும் கவிகளைப் பாடுகின்றார். தங்களுக் கிட்டமானவை நழுவிவிடின், யான் ஹதஞ்செய்யப் பெற்றேன், யான் காதனற்றவனுயினேன், எனப் பெருந்துயரடைந்தபோதிலும், அதாவது உடன்பா டெதிர்மறைகளானே இராக மூதலியவை துயரமெனக் கண்டபோதிலும் இவ்வுயிர்கள் வைராக்கியம் அடைவதேகிடையாது அகோ! ஆச்சரியம் எனக் கூறுகின்றார். ஸ்ரீ இராமர் நிகந்தரம் இவ்வாறிருத்தலினுனே யாங்கள் துயரத்தை யடைந்துள்ளோம். இத்தகைய மனத்தையுடைய இவருக்கு என்ன செய்வதென எங்களுக்குத் தெரியவில்லை இவ்விடயத்தில் நீர்தான் எங்கட்குக் கதி. மேற்கூறிய இயற்கையோடு கூடியிருக்கும் ஸ்ரீ இராமருக்குச் சம்பூர்ண ஐசுவர்யத்தோடுகூடி வஞ்சகவேடம் புனைந்த இச்சம்சார ஜாலமானது பிரதிகூலமாகிய விடம்போலிருக்கின்றது. இத்தகைய இவரை உலகவிவகாரத்தில் புகுத்திவைக்கும் ஆற்றலுடைய மகானுபாவர் இவ்வுலகில் எங்கேயிருக்கப் போகின்றார், நீர், நீர், உங்களையன்றி வேறுயாரிருக்கின்றார், உங்களைப் போன்றுவது யாவரேனு மிருப்பின் இது முடியக்கூடியதேயாகும் எங்ஙன மிருளையகற்றும் சூரியர் பூமியின் கண்ணே தனது ஒளியைப் பயனுடையதாகச் செய்கின்றனரோ, அங்ஙனம் விவேகத்தைத் தடுக்கும், துயரமாகிய இருளையுண்டாக்கும் சகல மோகத்தையும் ஸ்ரீ இராமருடைய மனத்தினின்று மகற்றி இவர் விடயத்தில், தமது சாதுத்தன்மையை யுபதேசிக்கு மாற்றலைப் பயனுடைய தாக்குகின்ற மேன்மைவாய்ந்த மனத்தின ரெங்குளார்?

(ச.) மிகுந்த வருத்தத்திற்கு முக்கிய வாசத்தானமாகிய தனத்தை வாஞ்சிக்கின்றனை யென்னென்று தானே தன்னைச் சிக்ஷித்து அப்பற்றகன்று சர்வ சொத்தையும் யாசிக்கும்யாவர்க்கும் கொடுக்கின்றார். இத்தன்மைநடக்கின்ற கருத்தை யுணர்ந்திலே மென்பதுபொருள். என்று இனியாங்கள் என்செய்வோம் எங்களுக்குத் தேவரீரேகதி என்று தொழுதுரைத்தார். இடரில்பதம்=ஜீவன்முக்திபதம், பாடும்=சிறுதொனியால் ஒலமிடும், ஞானமகிமையினுலே மகா உதாரசத்துவ சித்தத்தை யுடையயாவர் இராகவனே லௌகிக விவகாரத்தில் நுழைவிக்க ஆற்றலுடையரோ அத்தகைய ரெங்கே. (40)

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியானவர் ஸ்ரீ இராமர்தம் வசமாம் வகையை நினைந்து மிகுந்த குதூகலத்துடன் ஸ்ரீ இராகவரைச் சபைக்கழைத்து வரும்படியாகப் பிருத்தியருக்குக் கட்டளையிடுகின்றார்:—இப்பெரியவனை,

இப்பெரிய செல்வனேநீ நினக்கலையிற் றனிக்கலேபோ லீங்குத் தம்மின், கைப்படுமிம் மாமோகங் காதலினு லாபத்தாற் கலந்த தன்றுற், செப்பரிய நிராசையினுல் விவேகத்தால் வருமுணர்வின் செல்வமாகுந், தப்பில்பல யூகத் தான் மோகம்போய்த் தளர்வதுந்தற் பதத்தி லெம்போல். (41)

(ப - ரை.) இப்பெரிய செல்வனே = நீங்கள் சொல்லியவண்ண மிருக்கும் பக்ஷத்தில் பெரும் பேரறிவுச் செல்வமுற்ற இரகுநந்தனனே, நீர் = ஹேபிருத்தியரே நீவிர்! இனக்கலையிற் றனிக்கலேபோல்=இனமானிற் றனிமான்போல, ஈங்கு = விவேகிகள் நிறைந்த இச்சபையின் கண்ணே, தம்மின்=அழைத்துக் கொண்டு வம்மின், கைப்படும் இம்மாமோகம் = இரகுபதிக்குற்ற இப்பெரிய மோகமானது, காதலினுல் = இராகத்தாலேனும், ஆபத்தால் = ஆபத்துக்களாலேனும், கலந்ததன்றுல் = வந்தடைந்த தல்லவாம், செப்பரிய நிராசையினுல் = சொல்லுதற்கரிய பெரும்புகழ் வாய்ந்த வைராக்கியத்தினுலும், விவேகத்தால் = பகுத்துணர்வினுலும், வரும் = உண்டாகாகின்ற, உணர்வின் செல்வமாகும் = போதமகோதயமாம், தப்பில் பலயூகத்தால் = சுருதியுக்தமாய் மனத்திற்குப் பொருந்தும்படியான நானுவித யுக்திதருக்க அனுமானங்களினுலே, மோகம்போய் = இம்மோகத்தைத் துடைத்துவிட்டால் அது நீங்கப் பெற்று, தற்பதத்தில் = சர்வ அநர்த்தங்களும் நிவிருத்தியான ஆனந்த பதத்தில், எம்போல் = ஸ்ரீ வசிஷ்டபகவானே முதலிய எம்மைப்போல, தளர்வதும் = சர்வ ஆயாசங்களும் நீங்கப்பெற்று இளைப்பாறிக் கொண்டிருக்கும். (எ-று.) (41)

(ஸ்ரீ - வீர) பரமானந்த ஆவிர்ப்பாவம் எதனுலுண்டாமோ அதனுலது மகா உதயமாம், இம்மோகம் போதமாமென, இத்தகைய மோகத்திற்குப் போதஹேதுத் தன்மை யுண்மையின் உபசரிக்கப்பட்டது. விளம்பியவண்ணம் துயரத்தையும் மோகத்தையும் அடைந்திருப்பின், அவ்விடயத்திற் சோதிக்கும் ஆற்றலுடைய பேரறிவாளர்களாகிய நீங்கள் இரகுநந்தனனைத் தலைமாணைப் பின்றொடருமான்கள்போல இங்குவிரைவிற் கொண்டுவாருங்கள். இம்மோகம் அவனுக்கு ஆசையாலேனும் ஆபத்தாலேனும் வந்ததன்றும், விவேக வைராக்கியவானுக்குப் போதமே மகோதயமாம். ஆபத்துக்களாலேனும் இராகங்களாலேனும், உண்டாம் ஜடத்தன்மையே மோகமாம் இதோ விவேக முதலியவை யுடையவனுக்குப் போதபல முண்மையின் போதமாகிய பெருஞ் செல்வமேயாம். இராமனிங்கு விரைவில் வருவானுயின் வந்த இந்த இடத்திலேயே யாங்கள் சீக்கிரத்தில் அவன் மோகத்தை மலையின் மருவும் மங்குலை மாருதம் மாற்றுதலே போல மாற்றி விடுகின்றேம். மோகமகன்றபோதினும் அவருக்குக் கிடைப்பது யாதெனின் கூறுகின்றார்:—தளர்வறுமென. இம்மோகமானது ஊகத்தா லகற்றப்படவே இரகுநந்தனன் எம்மனேரைப்போல, முன்னின்ற "அது விஷ்ணுவினது பரமமாம் பதமாம்" என்னுஞ் சுருதிப்பிரசித்த உத்தமபதமாகிய தன்னுன்மாவின்கண் இளைப்பாறு

வன், அபரிச்சின்ன ஞானரூபத் தன்மையையும், ஆனந்தம் வெளிப்பட்ட போதுண்டாம் பிரஞ்ஞையையும், கெடாதவஸ்துத் தன்மையையும், பரமானந்த ரூபத்தகைமையையும், இவைப்பாறுதலையும், தாபமின்மையையும், தேகத்தின் பருமையையும், பேரழகையும், அமுதபானஞ் செய்தவன் மறையறைந்த அறப்பயனைக் கண்கூட்டாய்க் காண்டலின் மெய்ம்மையையும் சுவர்க்க சுகித்தகைமையையும், தெய்வஞான அடைவையும் உறுவதேபோலடைவன்.()

(ஸ்ரீ-வீர-அ-கை.) விவகாரம் அவித்தையாலுண்டாயதெனப் பிரசித்தமாதலின் குடை நீங்கவே கிழல்நீங்கினற்போல அதனிக்கமுமாம், அதோ பிரஜை கட்கிட்டமன்று, இராஜ்ஜியத்தைத் தனக்குப் பின்னுளுவதற்கு எவ்வளவோ பிரயாசப்பட்டு விருத்தாப்பியத்திற் பெற்றமைந்தன் விவகரியாமற் போவது மன்னவற்கு மிட்டமன்று எனின் கூறுகின்றார்:—மனமென.

மனநிறைந்து மானமுடன் மானவருக் கேற்றவெலா மகிழ்ந்து செய்யு
மெனமுனிவன் புகல்போதி லிராமனுந்தா தையைத்தொழுவா னேகித் தாதை
கனைகழல்கண் முனிவர்பதங் கமலமறையோ ரடிகுரவர் காலக டாழ்ந்து
தனதிருதாள் வணங்கினரைத் தலையாற் சொல்லால் விழியாற் சற்கரித்தான்.()

(ப - ரை.) மனம்நிறைந்து = பரிபூர்ணமனத்தோடும், மானமுடன் = மான்னியனுய், மானவருக்கு ஏற்றவெலாம் = தனது மன்னவமனு சம்பந்த லௌகிகவிவகார பரம்பரையையே, மகிழ்ந்து செய்யும் = மிகமுகமலர்ச்சியுடன் அகண்டிதமாக ஒன்றுங்குறைவற ஆசிரிப்பன், என முனிவன் புகல்போதில் = என்றிவ்வண்ணம் முனீந்திரரானவர் சமாதானங் கூறிக்கொண்டிருந்த சமயத்தில், இராமனும் = கமலலோசனராகிய ஸ்ரீ இராகவரும், தாதையைத் தொழுவான் = பிதாவினுடைய சரணபிவந்தனப்பொருட்டு, ஏகி = தமதரண்மனையிலிருந்து கொலுமண்டபத்திற்குவந்து, முதலில், தாதை கனைகழல்கள் = பிதாவினுடைய வீரகண்டையாற் சப்தியா நின்றதும் அநேகமன்னர்கள் நமஸ்கரித்தலால் அவர்கள் தங்கிரீடங்களின் பரஸ்பரம் மோதிக்கொள்வதாலுண்டாம் சப்தத்தோடு கூடியதும் ஆகிய திருவடிகளை நமஸ்கரித்து, பின்னர், முனிவர்பதம் = பூஜிக்கத்தக்கவராற் பூஜிக்கப்பெற்ற முனீசுரர்தம் திவ்யதிருவடிகளை நமஸ்கரித்து, கமலமறையோரடி = நாலுவேதங்கள் ஆறங்கங்கள் 64 கலைக்ஞானங்கள் நியாய வேதாந்த மீமாம்சை தருமசாஸ்திரம் புராணங்கள் முதலிய யாவற்றையும் கற்றவைதிக மறையவர்களுடைய திருவடிகளை நமஸ்கரித்து, குரவர்கால்கள் = தமக்குச் சாஸ்திரங்களைக்கற்பித்த ஆசிரியர்கள் திருவடிகளை, தாழ்ந்து = நமஸ்கரித்து, தனதிருதாள் வணங்கினரை = தம்முடைய இரண்டு கமலபாதங்களை நமஸ்கரித்த அரசசம்பந்திகளை, தலையால் = சிறிதசைத்த சிரத்தாலும், சொல்லால் = இன்சொற்களாலும், விழியால் = பார்வையினுலும், சற்கரித்தான் = தகுதிக்குத் தக்கபடி சன்மானஞ் செய்தான். (எ-று.)

(ஸ்ரீ - வீர.) தனது வருணாசிரமத்திற்குத் தகுதியாய்த் தொடங்கிய விவகார பரம்பரையையே யிடையீடிலாது நிறைந்த மனத்தனாகி மானியனுய்ச் செய்வன். அவாவிய அனேத்தையு மடைந்தவனுயினும் வாழுமவன் சர்வவிவகாரத்தையும் விடமுடியாமையின் இன்றியமையாது கொள்ளத்தக்கதாய தொடங்கிய விவகாரத்தை விடுத்து வேறொன்றைக் கொள்ளக் காரண மின்மையினுனும், தனது நடையைக்கண்டு நடக்கும் பிரஜைகட் கனுக்கிரகித்தற் பொருட்டும் தனது விவகார பரம்பரையைத் தடையிலாது செய்வன். அவற்றைச் செய்து அவற்றிற் பற்றுறின் அதனுல் முன்போலச் சுகதுக்க தசையுடையவராகவும் ஆவரேயெனின் மனனுதியாலாகிய ஞான திடவலுமை யென்னும் மகாசத்துவத்தை யுடையவனுகியும் உலகிற் காரணதத்துவம், காரியதத்துவம், பிராணிகளின் பரமபுருடார்த்த ரூபம், சமூசாரத்துற்ற சுழல்கை வடிவமென்னும் பிரிவுகளை விவேகத்தா லுணர்ந்தவனுகியும், உலகவடிவமாகிய விராட்டையும், அவ்யாகிருதத்தையும் ஹிரண்ய கருப்பரையும் உண்மையாகப் பிரஹ்மமே யல்லவென அறிந்தவன்; இதனு னேபற்றறவே சுகதுக்க தசையற்றவனுகியும், ஓடு கல் பொன்களின் சமமதியுடையவனுகியும் ஆவன்; என்றிவ்வாறு முனிநாதர் கூறவே அரசர்நிறைந்த மனத்தராகி ஸ்ரீ இராமரையழைத்துவரும் பொருட்டுத் தூதபரம்பரையை மீண்டு மீண்டும் அனுப்பினுர்! தூதர் வந்ததும் ஸ்ரீ இராகவர் தமதரண்மனேயுள் ளாசனத்தினின்றும் தந்தைபால் வந்து சேவிப்பான் அசலத்தினின்றும் அருக்கன்போல எழுந்து தேவேந்திரரது சொர்க்கம் போலிருக்கும் ஸ்ரீவசிஷ்ட விசுவாமித்திரரது திருவடிபடலாற் புண்ணிய மயமாகிய தமது பிதாவினுடைய அக்கொலுமண்டபத்தை நோக்கிப் பலதாசர்களும் சகோதரர்களும், சூழத்தந்தையின் பாதவந்தனஞ் செய்யும் பொருட்டு வந்தனர். முதலிற்றந்தையையும், பின்பூஜிக்கப் பெறுபவரானும் பூஜிக்கப்பெறும் ஸ்ரீ வசிஷ்டவிசுவாமித்திர மகரிஷிகளேயும், பின்மறை யவரையும், பின்பந்துக்களேயும், பின்குருமார்களேயும் அழகிய இருதயத்தையுடைய ஸ்ரீ இராமர் வணங்கினுர். பின்பார்வையினுலும் தக்கவர்களிடத்தில் விநயத்தைக் காட்டும் சிறிது வணங்கிய சிரமசைத்தலினுலும் வாக்கினுலும் அரசக் கூட்டங்களாற் செய்யப்பட்ட நமஸ்கார பரம்பரையை யேற்றுக்கொண்டனர்.

(ச) சகல குரவரினும் பிதாபரம குருவென்பதால் முன்னற் பிதாவையும் அதன் பின்னர், சகல முனிவர்களுள்ளும் பூஜ்யராதலின் வசிட்ட விசுவாமித்திரரையும் அதன் பின் அங்கியமுனிவரையும் அதன்பின் பிதாவுக்கொப்பான பந்துக்களேயும், அதன்பின் பிராஹ்மணர்க ளல்லாத கவி வித்யா குருக்களேயும் நமஸ்கரித்தன ரென்பது நியாயமேயாம். தலேயால், சொல்லால், விழியால், சற்கரித்தான் என்றது, உத்தரோத்தர தாரதம்மியத்திற் கியைய என்றுணர்க. (42)

(ஸ்ரீ-வீர. அ-கை.) மகீபதியானவர் புத்திரரைத் தழுவி யுச்சிமோந்து அன்புகாட்டி மடிமீதிருத்த முயன்றும் இராமற் பூமியிலிருத்தல்:—மடியென.

மடிமிசைவந் திருத்தியென மன்னுரைப்ப வாராது மடித்ததூசைப்
படிமிசையிட் டிருத்தலுமே பார்த்திபன்பார்த் துயருணர்வு படைத்த மைந்தா
முடிவறுநன் னலங்களுக்கு முன்னியல்பாத் திரமானுய் மூர்க்கர் போல
நொடியுமினி மனந்தளர்ந்து நோகினிய மெய்வாடி நோதல் வேண்டாம்.(43)

(ப - ரை.) மடிமிசை வந்திருத்தியென = ஹே மைந்த! நீ உற்சங்கத்தில் வந்துட்காருவாயாகவென்று, மன்னுரைப்ப = மகீபதிவிரும்பி யழைத்தபோதினும், வாராது = வந்திராமல், மடித்ததூசை = மடித்த வத்திரத்தை, படிமிசை = பூமியின்கண்ணே,

இட்டு இருத்தலுமே = பரிஜனங்கள் விரிப்ப, இருத்தலும், பார்த்திபன் பார்த்து = தசரதர் நோக்கி, உயருணர்வு படைத்தமைந்தா ! = உயர்ந்த விவேகத்தோடு கூடிய புத்திர ! முடிவறு நன்னலங்களுக்கு = அளவில்லாத நல்ல மங்களங்கட்கு, முன்னியல் பாத்திரமானுய் = முதன்மையாகப் பொருந்திய பாத்திரமாகா நின்றனே, மூர்க்கர் போல = ஜடர்கள்போல, நொடியும் = ஒரு கணமேனும், இனி = இன்னும், மனந் தளர்ந்து = ஜீர்ணமான மதியினுலே, நோக்கினிய மெய்வாடி = யாவரும் பார்ப்பதற்கு இரம்மியமா யிராநின்ற மேனியானது நுடங்க, நோதல் வேண்டாம் = கேதப்பட வேண்டாம். (எ - று.) (43)

(ஸ்ரீ - வீர.) மஹீபதியானவர் மடியில் வந்திருத்தி மைந்தவெனக் கூறவும், பூமியில் வேலியாட்களால் விரிக்கப்பட்ட வத்திரத்தி லுட்கார்ந்தனர் ; விவேகியாகிய நீ மங்கலங் களெல்லாம் மருவவேண்டியவனுக இருந்தும் அவிவேகியைப்போலச் சிதில்மாகிய மதியினுனே உயிரைத் துயரப்படுத்த வேண்டாம்.

(ச.) ஸ்ரீ வசிஷ்டாதி மகாமுனிவர் சங்நிதியில் தொடைமீதிருத்தல் பொருந்தாமை யானும் தனிமையான தரைமிசையிருத்தல் யுக்தமின்மையினுலும் பரிசனங்கள் விரித்த வஸ்திரமீ திருந்தாரென் றுணர்க. சித்தத்தைத் தைனிய பரவசமாக்க வேண்டாம். (43)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ இராகவருக்குத் தசரதமன்னர் கவலையற் றிருக்கும்படி யான விவேகத்தைப் போதிக்கின்றூர்:—விருத்தரென.

விருத்தர் மறையவர் குரவர் விளம்புபதந் தனேமோக மேவாதான
கருத்துடைய வுன்போல்வார் கலந்தனரா னீவாளா கவலா நின்றுய்
வருத்துறுமா பத்தெல்லாம் வன்மோக மறிலநுகும் வாரா தென்று
பெருத்தமுடி மன்னவர்கோன் பேசியபின் வசிட்டனிவை பேசலுற்றுன்.(44)

(ப - ரை) விருத்தர் மறையவர் குரவர் = விருத்த விப்பிரகுருமார்கள், விளம்பு பதந்தனே = கூறுகின் றசீரியபதத்தை, மோக மேவாதான = மோகத்தைப் பின்றொ டர்ந்து செல்லாதான, கருத்துடைய = மனத்தோடு கூடிய, உன்போல்வார் = நின்னே யொப்பானவர், கலந்தனர் = அந்தப் புண்ணியபதத்தை யடைந்தனர், ஆல் அசை, நீ வாளா கவலாநின்றுய் = நீ வீணுகவே கவலைப்படுகின்றுய், வருத்துறுமாபத்தெல்லாம் = துன்பப்படுத்தா நின்ற ஆபத்துக ளெல்லாம், வன்மோகமறில் = வலியமயக்கமானது அற்று விட்டால், அருகும்வாராது = வெகுதூரத்திலே எளிதாக ஓடிவிடும் பின்னர் கிட்டவும் நாடா, என்று = என விவ்வண்ணம், பெருத்தமுடி மன்னவர்கோன் = பெரிய நவரத்ன கசித கிரீடந்தரித்த இராஜாதிராஜன், பேசியபின் = உரைத்தபின்னர், வசிட்டன் = ஸ்ரீ வசிஷ்டபகவான், இவை = மேற்கூறப்படு மிவற்றைப், பேசலுற்றுன் = ஸ்ரீ இராகவரை நோக்கிக் கூறத்தொடங்கினர். (எ - று.) (44)

(ஸ்ரீ - வீர.) மோகத்தை யடையாதவர்களாகிய நின்னைப் போன்றவர்கள் பிதாமுத லிய பெரியோர் மறையோர் ஆசிரியர் அருளிய பிரஜைகளிடம் காக்குந் தருமசாதனமாத லிற் புண்ணியமாகிய இராஜஸ்தான சுவர்க்காதி பதத்தையடைந்து வாழுகின்றுர்க ளல்லவா. மோகத்திற்குவிரிய இடங்கொடாயே லாயின் ஆபத்துக்களானவை தூரத்தி லேயே மிகக் கோமளங்களாக வீருக்கும், சம்பந்தியாதனவோ தூரத்திலேயே நிற்கும் தொடரா, சம்பந்தித்தனவோ முற்றிலும் மிருதுவாகி விருக்கும் தமது காரியத்தைக் காட்டமாட்டா. மோகம் விரியிலே மொழிந்தவைமாறுகி வந்துவிடும் என்றரசர் கூறினர்.

(ச.) அருகும் வாராதென்றமையால் மோக நிவிருத்தியினு லன்றி மற்றொன்றினு லும் ஆபத் தகலாதென்ப தாயிற்று. (44)

(ஸ்ரீ-வீர. அ-கை.) ஸ்ரீ வசிஷ்டபகவான் ஸ்ரீ இராகவரது வைராக்கியத்தை மெச்சி மோகக்கடலின் மூழ்குதல் எற்றினுக்கு யாமிருப்பவெனல்:—வெலற்கரியவென.

வெலற்கரிய தீமுயற்சி விடயமெனும் பகையெளிதின் வென்ற சூரா
கலக்குறுபே தையர்க்குரித்தா மடஞ்செறிமோகக் கடலிற் கவிழே லென்ரு
ணலக்குறுகோ சிகன்புகல்வானன் மனையை யெலிநலியும் நலிவுபோல
வலக்கணுறு காரணமென் காதலித்த தேததனை யடைதி யன்றே. (45)

(ப - ரை) வெலற்கரிய = துருச்சேதமாய், தீமுயற்சி = துராரம்பமாயிருக்கும் விடயமெனும் பகை = விடயங்களாகிய இப்பகைகளை, எளிதில் = அநிசுலபமாக, வென்ற = வெற்றிகொண்ட, சூரா = ஹே மகா பாகுவையுடைய மகாசூரனே! கலக்குறு = மிகவும் கலக்கத்தை யடையாநின்ற, பேதையர்க்கு = அஞ்ஞானிகட்கு, உரித்தாம் = யோக்கியமாய, மடஞ்செறி = அறியாமை நிறைந்த, மோகக்கடலில் = விஷியாமோக சாகரத்தில், கவிழேல் = வீழ்ந்து மூழ்கவேண்டாம், என்ரூன் = என இவ்வண்ணம் ஸ்ரீ வசிஷ்டபகவான் ஸ்ரீ இராமமூர்த்தியைப் பார்த்துக் கூறினர், நலக்குறு கோசிகன் புகல்வான் = சகல நலங்களையும் பெருந்தவத்தானே யடைவுற்ற ஸ்ரீ விசுவாமித்திரமக ரிஷி கூறுவதாவது, நன்மனையை = நல்ல அழகிய வீட்டை, எலி நலியு நலிவுபோல = பேதுகளை கெடுத்துத் துன்புறுத்து வதேபோல, அலக்கண்உறு = நீ துன்புறுவதற் குரிய காரணமென்னே, காதலித்ததேது = நீ யெதனை வாஞ்சிக்கின்றனையோ, அதனை யடைதியன்றே = அத்தகைய பதார்த்தத்தை யடையப்பெற்று வாழ்வாயாக. (எ-று.) (45)

(ஸ்ரீ - வீர.) துக்கமுற்றும் கெடுக்க முடியாதவை யாவையோ அவை துர் உச்சேதங்களாம், துஷ்டத் தொடக்கங்களோடுகூடிய வியாபாரங்களையுடையவை யாவையோ அவை துராரம்பங்களாம்; அல்லது துராரம்பங்கள் என்பவை துர் உபக்கிரமங்களாம் அதாவது துர்ச்சாத்தியங்களாம். பேதையர்களாகிய அப்பிரஹ்மவித்துக்கள் போலத் துயருறேல். விஷியாமோகசாகரத்திற் பேரலைகள் பிரசண்ட ஆபத்துக்களாம், அக்கடலில் சாட்டிய சாலித்தகைமையோ சிரத்தகைமை யுடைமையாம். சங்ஷேபமாகப் பூர்வம் பிரதி பாதித்த வைராக்கியத்தை விஸ்தாரமாகப் பிரதிபாதிக்கும் உத்தரகிரந்த சந்தர்ப்பம் கிளம்புவதற்கு ஹேது பூதமாக ஸ்ரீ விசுவாமித்திரர் விளக்களை யுதிப்பிக்கின்றூர்:—அலக் கணுறு என. மூஷிகங்கள் கிருகத்தைக் கிலப்படித்துவதேபோல மனப்பீடையிலக்கண ஆதிகள் நினது மனத்தை விசேஷமாகத் துன்புறுத்துகின்றன. அவை எவ்விடயங்களில் நிரந்தரம் நிற்கின்றன எவ்விடவமுடையன, எக்காரணத்தாலுண்டாயின, எவ்வளவுள்ளன, என்பதாம். வினவிய விளக்கட்கு விடை யளிப்பது பிரயோஜன மற்றதாமாலோ வெனக் கடாவக் கெடுக்கின்றூர்:—காதலித்ததென. ஹே அகக! எதனையடைந்த மாத்திரை யானே நீ காதலித்ததினின்றும் அதனல் எல்லா ஆதிகளுமே நின்னைப்பீடிக்கமாட்டாவோ அத்தகையவாய அபிப்பிரேத பதார்த்தத்தைக் கூறுதி, காதலித்தவை வெகுவாயினும் அவ்வியாவுமே நீ யடைந்து கொண்டதாகவே யெண்ணலாம். பெரும் புயங்கள் வாய்ந்த அரசகுமர! உன்னல் கெடுக்க முடியாதனவும், துக்கத்தைத் தொடங்குவனவும், ஆக இவ் விடய சத்துருக்களிருந்தபோதினும் வெற்றிகொள்ளப்பட்டனவாதலின் நீ சூரனே யாவாய், என்னை, பிரசித்தமாய சத்துருக்கள் கெடுக்க முடியாதவர்களே யாயினும் அவர் கள் தன்னல் துக்கத்தோடும் சம்பாதிக்கப்பட்டவர்களல்லர் விடயப்பகைகளோ, தன்

ஞலேயே சம்பாதிக்கப்பட்டவைகள், வேறு துக்க பரம்பரையை யுண்டாக்குபவைகள், கெடுக்கமுடியாதவைகளன்றோ; இங்ஙனமிருந்தும் நீ விரே க்ஷபங்களாகிய பேரலகணிறைந்ததும் ஆவரணத்தான் மூடப்பெற்றதும் அஞ்ஞானிகட்கு யோக்கியமும் ஆகிய அருமோகப் பெருங்கடலில் ஆன்மாவை யறியாதவர்கள்போல ஏன் மிக மூழ்குகின்றனை, என ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறினர். துக்கமடைந்ததாலாக்கப்பட்ட அசையாநின்ற கருங்குவளைக் கூட்டத்தோடொத்த விழிகளின் சாஞ்சல்யத்தை விடுத்து எவ்வேதுவினனே நீ மோகித்து மயங்கி யிருக்கின்றாயோ அதனைக் கூறுதி! நினது மயக்கினுக்குக் காரணமியாது, வீட்டை மூஷிகங்கள் குடைவதேபோல எம்மனை வியாதிகள் நின் மனத்தைத் துன்புறுத்துகின்றனவோ அவை எதன்கண் முடிவுபெறுபவை, விரும்பிய எதனை யடைந்தாலவைதீரும், எவற்றைப் பற்றியவை, எவ்வடிவமுடையன எக்காரணத்தால் வந்தன, எத்தனை வகையின, மனோவியாதியின் காரண முதலியவை உலகிற் பிரசித்தங்களே யாமாதலின் அவற்றையேன் கேட்கவேண்டும்? எனின், பிரசித்தமென்பதுண்மையாயினும் தகாதனவாகிய மனோவியாதிகட்கு நீ யுத்தமபதமாகமாட்டாய் ஆபத்துடையவனேனும் தரித்திரனேனும் மிடமாவன், என்றெண்ணுகின்றோம், தந்தையின் மகிமையினனே உனக்கு யாதொரு ஆபத்துங் கிடையாதாதலின் நீ யகற்றவேண்டிய ஆபத்தேயில்லை. மேலும் சர்வ சௌபாக்கியமும் முனக்கு நிறையக்கிடைத்திருத்தலின் சுயமாகவே ஆபத்துக்கள் நீங்கி யிருக்கின்றன. மனோ வியாதிகளும் நீங்கியேயுள்ளன. ஹே பாவமற்ற குழந்தாய் நீ விரும்பியது யாதோ அதனை மறையாமல் அறைவாயாக! பாவமுனக்கில்லாமையானுமே விரும்பிய யாவற்றையுமே யடைவாய்.

(ச.) இச் செய்யுளின் நான்காமடி, அலக்கண் மனக்காரணமென் னிருவிருப்பென்னை வதற்கென்னறைதியன்றே. மனதை வருந்தச் செய்யுஞ் சிந்தைக்கு விடயமெது, சௌரூபமெது, ப்ரிமாணமெது, க்ரணமெது என்று வினவினரென்பார், காரணமென்னென்றார். (45)

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஸ்ரீ இராகவர் முனிநாயகர் கூறியதைக் கேட்டானந்தமுற்று அவர் ஆக்ஞையின்படியே தமது குறையைத் தெரிவிக்கத் தொடங்கல்:—மீட்டணுவென.

மீட்டணுகா தகத்துயர்போம் விளம் பென்ன முகிற்குரலால் வெம்மை தீர்ந்து
வாட்டமறு மயிலென்ன மகிழ்ந்திடர்போ யருண்மூர்த்தி மடவ னேனைச்
சேட்டமுறு மாதவநீ செப்பெனமுன் செப்புதலாற் செப்பு கின்றேன்
கேட்டருடி மேலவர்சொன் மறுக்குகரியா ரெனவினிது கிளத்த லுற்றான். (46)

(ப - ரை.) மீட்டணுகாது = நீ விரும்பியதை யடைந்துவிட்டால் மீண்டும் ஒரு துயரமும் வந்துறாது, அகத்துயர்போம் = சிந்தாகுலங்களி யாவுமே தீர்ந்துபோம், விளம் பென்ன = விரைவில் நீ விழைந்ததை விளம்புதியென ஸ்ரீ விசுவாமித்திரமுனி நாயகர் கூறிய வளவில், முகிற்குரலால் = மேககர்ச்சனையினாலே, வெம்மை தீர்ந்து = வெப்பந் தொலைந்து, வாட்டமறு = துக்கமற்ற, மயிலென்ன = மயிலைப்போன்று, மகிழ்ந்து = இஷ்டார்த்தசித்தியாமென அனுமித்து மகிழ்ந்து, இடர்போய் = முன்னிருந்த துயரங்களிங்கி, அருண்மூர்த்தி = அமூர்த்தமாக இருந்தபோதினும் கிருபையினாலே திவ்ய மங்களத் திருமேனியைத் தரித்த ஸ்ரீ இராகவர், சேட்டமுறுமாதவநீ = ஸ்ரீ முதலிய ஆறு ஐசுவரியங்களையு மடைந்த ஹே பகவன்! ழகுமிதங்கிய பெருந்தவத்தையுடைய ஹே தயாநிதே! தேவரீர், செப்பெனமுன் செப்புதலால் = [illegible] தயாநிதே! தேவரீர், செப்பெனமுன் செப்புதலால் = நினகுறையை நீ வாஞ்சித்ததைக் கூறவேண்டுமென்று முன்னர் ஆக்ஞை செய்ததால், செப்புகின்றேன் = உண்மையில்

மௌனமாகவே யிருக்கவேண்டு மென்றெண்ணமிருத்தலால் ஒருவாறு விண்ணப்பிக்கின் றேன், கேட்டருடி = தேவரீர் திருச்செவி சாத்தி யருளல்வேண்டும், மேலவர் சொன் மறுக்குனர்யார் = சற் புருடர்களுடைய கட்டளையைத் தடுப்பவர்கள் எவ்வறிவாளிகள், என = என்றுரைத்து, இனிது கிளத்தலுற்றான் = பரிபூர்ணமாக அர்த்தம் அடங்கிய மாதுர்யமான மொழிகளாற் கூறத்தொடங்கினர். (எ-று.) (46)

(ஸ்ரீ - வீர.) இராகவர் = இரகுவம்சகேதுவாகவுதிக்குக் கேதுவானது அலங் காரமாக இருத்தலேபோல இரகுவம்சத்திற்கு அலங்கார பூதமானவரென்க, ஸ்ரீவிசுவாமித் திரமகரிஷியருளிய வாக்கியமானது உசிதமான அர்த்தங்களின் விஸ்தாரத்தைக் கர்ப்பத்தி லடைத்தாகியிருந்தது. மயூரமானது எங்ஙனம்தான் விரும்பிய பிரயோஜனத்தை யனுபவித் தித் துயரத்தைத் துடைக்குமோ அங்ஙனமே ஸ்ரீ இராகவரு மென்றறிக. நீ விரும்பிய வண்ண மடைந்திடின் மீண்டுமுன்னை மலைவியாதிகள் பிளக்கமாட்டா இரகுவம்சகேது வாகிய ஸ்ரீஇராமர் இவ்வாறு மகாமதியையுடைய ஸ்ரீ விசுவாமித்திரர் கூறிய, தாம் விரும்பி யவைபோன்ற பொருள்களின் பிரகாசத்தைத் தாற்பரியத்தில் வைத்திருக்கும் வாக்கியத் தை இருசெவிகுளிரக்கேட்டு விரும்பியபொருள் கைகூடிவிட்டதாகக்கருதி மேககர்ச்சனை யைக்கேட்ட மயூரம்போல அத்துயரத்தை யடியோடு விட்டனர். முன்னர் சங்ஷேபமாகப் பிரதிபாதித்த வைராக்கியத்தை விஸ்தாரமாகப் பிரதிபாதிக்கும் பொருட்டு உத்தரகிரந்த சந்தர்ப்பமென்னத் தாற்பரியங் கூறினேம், ஆண்டுச் சென்றசெய்யுளில் அலக்கண் மனக் காரணமென் னென்பனவாய விஞ்சுக்கூ விட்டுவிட்டு அவற்றின் நிர்ணயார்த்த வசன த்தை ஸ்ரீஇராகவர் கூறுகின்றார்:—சேட்டமென. அர்த்தமடங்குதல் = அருத்தங் கம்பீ ரமாயிருத்தல்; முனிநாதராலிவ்வாறு கூறக்கேட்ட ஸ்ரீ இராகவர் நன்கு சமாதானத்தை யடைந்து பரிபூரண அர்த்த கவுரவத்தானே மந்த நடையை யடைந்து அதனுனே யழகு பெற்ற வாக்கியத்தைக் கூறத் தொடங்கினர்:— சேட்டமென. ஹே பகவன்! தங்களால் கேட்கப்பட்டது முழுவதையும் முள்ளபடி யிப்போது தங்களுடைய ஆணையைக் காக்கும் பொருட்டு அஞ்ஞையினும் யான் கூறுகின்றேன்; என்றுட்டியத்தைக் காண்பிக்கும் பொருட்டல்ல. பெரியோர் வாக்கியத்தை யாவரே கடப்பர்.

(ச.) துயரென்பது ஆதிகள் அவை சிந்தைகளென்றுணர்க. (46)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேற்கூறியவண்ணம் விநயமாகக்கூறி முனிவரை வயஞ் செய்து தமது விருத்தாந்தத்தை யனுவாதஞ் செய்யும் வாயிலாகத் தருமானுஷ்டானத்தா லுண்டாய மனத்தாய்மையாளே யுளதாய விவேக வைராக்கியங்களால் தமக்கு விசார முதித்ததைக் காட்டுகின்றார் ஸ்ரீஇராகவர்:— தந்தையென.

தந்தையிவ னிற்பிறந்து வளர்ந்துபல கலைதரித்துச் சதாசா ரத்தால்
வந்துயர்ந்த னதியாடி வாரிதிசூழ் புவியுழன்று வருதலோடு
மிந்தநெடுஞ் சகமோகத் திச்சையெலாந் தீர்ந்ததிதி லின்ப மில்லை
யந்தமுறல் பிறப்பதற்கே பிறப்பதுமீட் டிறப்பதற்கே யகித்த மியாவும். (47)

(ப - ரை.) தந்தையிவன் இல் = எதிரில் வீற்றிருக்கும் பிதாவினுடைய இந்தச் சொந்த மந்திரத்தில், பிறந்து = யான் உற்பவித்து, வளர்ந்து = கிரமமாக விருத்தியாகி, பலகலைதரித்து = பற்பல சாஸ்திரங்களைப் பயின்று, சதா சாரத் தால் வந்து = நல்லொழுக்க தற்பரனாய் நடந்து, உயர் நன்னதியாடி = மிகமகிமை பொருந்திய நல்ல தெய்வ தீர்த்தங்களில் மூழ்கி, வாரிதி சூழ்புவி யுழன்று வருதலோ டும் = சமுத்திரஞ் சூழ்ந்த பூமியைப் பிரதக்ஷிணஞ்செய்து இவ்வரண்மனைக்கு வந்து

சேர்ந்ததும், இந்த நெடும் = பிரதிதியாகாநின்ற விஸ்தாரமான, சகமோகத்திச்சை = விடயங்களில் மோகப்படுவதற்குக் காரணமான ஆசை, எலாந்தீர்ந்தது = யாவும் ஒழிந்தது, இதிலின்பமில்லை = இச்சம்சாரத்தின்கண்ணே கிஞ்சித்துஞ் சுகங்கிடையாது, அந்தமுறல் = மரணமாதல், பிறப்பதற்கே = மீண்டுஞ் சனிப்பதற்கேயாம், பிறப்பது = சனிப்பது, மீட்டிறப்பதற்கே = மீண்டும் மரணமாதற்கேயாம், அதித்தமியாவும் = சர்வமும் அஸ்திரமேயாம். (எ-று.) (47)

(ஸ்ரீ - வீர.) சமுத்திரஞ்சூழ்ந்த = கடலாகிய மேகலை யென்னும் காஞ்சி சுற்றிய வென்பதாம். இச்சம்சார சமஸ்திதியின் கண்ணே என்னதான் சுகமுளது கூறுவீராக; அசுகமுண்டாதலேயே அறிவிக்கின்றீர், பிறப்பது என. பிறப்பது இறப்பதின்பொருட்டென்றதால், சனனம் மரணத்தை விட்டிராதென்று கூறியவாறுயிற்று. சனனத்தின் பொருட்டு மரணமடைதல் என்றதனால் மரணமானது அஞ்ஞானுக்கவசியஞ் சன்மகாரணமென்றதாயிற்று. இந்தான் இந்தத்தந்தையி னரணமனையிற் பிறந்து முறையாக விருத்தியடைந்து வித்தையையு மடைந்திருந்தேன். பின்னர் ஹே முனிநாயகரே! நல்லொழுக்கமுடையவனாகி ஆகலியை மேகலையாயுடுத்த பூமியைத் தீர்த்தயாத்திரையின் பொருட்டுச் சுற்றிவந்தேன். இவ்வாறிருக்குங் காலத்தில் இச்சமுசாரவாசை அடியோடழிந்து என் மனதில் இனிக்கூறும் வகையாய விசாரமுண்டாயது. விவேகம் நிறைந்தயான் இன்று சுயமாகவே போகங்களிலிச்சையின்றிய புத்தியானே இதனை விசாரித்தேன்:— அந்தோ! இவ்விஸ்தாரமாகிய சம்சாரத்தில் யாது சுகமிருக்கின்றது ஒன்றையுங்காணேமே! பிராணிகள் இன்பின்மைக் கேதுவாகப் பிறக்கின்றன இறப்பதற்கு: இறப்பதுவோ பிறப்பதற்கேயாம். மரிப்பதற்கு விரையாயாம் பிறந்திடுதல், பிறத்தற்கு விரையாயாம் மரித்திடுதல், என்னும் வசனமுழுதுந்தேரு!

(ச.) தீர்ந்தது, அஃதியாதினுலெனின், என் மனதிலித்தன்மையான விசாரமுதித்தமையான். (47)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல் அவ்வாறுகுக, ஆயினும் இடையில் வைபவபூமிகளில் சுகமனுபவிக்கப்படுகின்றதே யெனின் கூறுகின்றீர்:—பாவமென.

பாவமதா யாபத்துப் பயிலிடமாய்த் தம்மிற்றும் பற்றின் றுயுந்
தாவுமனக் கற்பனையாற் சம்பந்த மாயிருப்புச் சலாகை போலா
மேவுபெருஞ் செல்வத்துக் கிடமாகு மெப்பொருளும் விடயத்தாலும்
பூவலயத்தாலுமெது பயன்யாமார் வருவதெது பொய்பொய் பொய்யாம் (48)

(ப - பை.) பாவமதாய் = பாவ ஹேதுக்களாய், ஆபத்துப் பயிலிடமாய் = சர்வ ஆபத்துக்கட்கும் ஸ்தானமாய், தம்மிற்றும் பற்றின்றுயும் = பரஸ்பரம் அசங்கிகளாயும், தாவுமனக் கற்பனையால் = வாசனைவயத்தால் சுயம் எழுந்தெழுந்து பாயும் சித்தத்தின் சிந்தனையால், சம்பந்தமாய் = ஒன்றோடொன்று சேர்ந்தனவாய், இருப்புச் சலாகை போல் = அயச்சலாகைக்குச் சதிருசமாக, மேவு பெருஞ்செல்வத்துக் கிடமாகு மெப் பொருளும் = கர்மஜமாய்வரும் மகா விபவபூமிகளா யிராநின்ற சராசரவஸ்துக்கள் யாவும், ஆம் = பொருந்தும், விடயத்தாலும் பூவலயத்தாலு மெதுபயன் = இப்போகங்களாலென்னே இவ்விராஜ்ஜியத்தா லென்னே, பிரயோஜனம், யாமார் = யான் என்பதென், வருவதெது = இவ்வருகையாது, பொய் பொய் பொய்யாம் = அத்தியந்தம் மித்தையாம். (எ - று.) (48)

(ஸ்ரீ - வீர.) ஆபத்துக்கட்குப் பதிகள் எனினும் ஆம். சராசரங்களாற்செய்யப்பட்டயாவும். வஸ்துக்கள் = பாவங்கள், விபவபூமிகள் = ஐஸ்வரிய காரணங்கள்—இவை

களே சர்வ ஆபத்துக்கட்கும் இடமாய்ச் சர்வபாவங்கட்குங் காரணமாய் நிற்குமென் றுணர்க. கனச் சம்சாரங்கடுப்ப மனோநிர்மிதமே சம்சாரமென்பார் இருப்பு என்றார். பரஸ்பரம் அசங்கிகள் இயற்கையாகவே அந்நியோன்னியம் சம்பந்தமற்றவைகள். சுய மாகவே சம்பந்தமற்ற தன்மையில் திருஷ்டாந்தம் சலாகையாம். இருப்புச் சலாகை என்பது இரும்பாலாக்கப்பட்ட சங்குதுலலியங்கள் என்றுணர்க. இரும்புச்சலாகை அரக்கு காஷ்டம்போலப் பரஸ்பரம் சம்பந்திக்க மாட்டாதாம். பாவங்கள் என்னும் புத் திரபாரியாதி லக்ஷண பதார்த்தங்கள் கேவலம் தன் மனக்கற்பனையால் என்மைந்தனி வன் என்மனைவியிவள் என்பதியிது என்பதாதி வடிவமாய்ச் சம்பந்திக்கின்றன. சரீரம் இந்திரியம், மனம், புத்தி, அகங்காரம், சித்தம், அஞ்ஞானம், சித்பிரதிபிம்பம், பிம்பம், கேவலம் என்பவற்றின் மத்தியில் யான் யார்? வாராநின்ற அபிவியக்தமாயது இவ்வுல கம்; அசத்தியமா அல்லது சத்தியமா என்று நன்கு விசாரிக்குங்கால் இவ்வுலகமானது பொய்யேயா யிருக்கின்றது. பொய்யா யிருக்கப்பட்ட இது ஒரு காலத்திலும் மெய்யாக மாட்டாது. சரங்கட்குப் பிரவிருத்தி நிவிருத்தி அதீனமான சாதனத்தானே சாதிக்கப் பட்டவை யெனவும் அசரங்கட்கோ தெய்வத்தாற் கிடைத்த சாதனாதீனமானவை என வும் இருவகையன்றே போகப்பிரவிருத்தி! அவ்வடிவ சேஷ்டையோடு கூடிய வைபவ சமயத்தில் மாத்திரம் இருப்பனவாய மாலை சந்தன அன்னபானாதி விடயங்கள் யாவுமே இன்ப மீவனவாகாவாம்; நிரமற்றவையாகலின்; இலாபமற்ற போதும் கைவிட்டபோ தும் துக்கத்தைக் கொடுப்பனவாம். நினக்கும் அனுபவிக்குங் காலத்தில் அவற்றுற் சுகந்தானே யெனின் ராகாதி தோஷத்தைப் பயத்தலானே பரம ஆபத்தை அடைவித்த லின் ஆபத்துக்குச் சுவாமிகளாகி மேன்மை மிக்கனவாம். இவைகள் சாஸ்திர நிஷித் தங்க ளல்லாதவைகள். இனி நிடேதிக்கப் படுவனவோ பாவத்தைப் பயத்தலின் பாவங் களாம். ஆகவே விடங்கலந்த அன்னம்போ லாதலின் அதன் யோகத்திற் சுகமின்றே மென்பதாகச் சம்சாரத்திலும் சுகமின்றுமெனத் துணிவேன். அவைசுகங் கொடுப்பன வல்லனவாயின் சுகம் செய்விப்பனவாய் ஒன்றற்கொன்று யாங்ஙனம் பற்றி நிற்கின்றன வெனின் எல்லாவிடயங்களும் தாம் இருப்புச் சலாகைகளாகிய ஊசிகள் மூதலியவை போல ஒன்றற்கொன்று சம்பந்த மற்றனவேயாம். ஆனால் இம்முறையாக எனக்கிது போகசாதனம் இதனால் இவ்வகை இதனைச் செய்வேன் என்பதாதியாய்த் தன் மனக் கற்பனையானே கேவலம் கிரியை காரகாதித் தன்மையானே இவை சம்பந்திக்கின்றன; இவ்வாறே அன்வயமும் வியதிரேகமும் காணப்படுதலின். யான் யார்: இத்திருசியக்கூட் டத்திற்கு வடிவம்யாதாம்: யாதின்பொருட்டு வந்தது, எனக்கு இவ்விராஜ்யத்தா லென் னே, போகங்களாற்றுனென்னே, அவற்றுள் யாது மித்தையேயாமோ அதுவே மித்தை யாகுக; மாறுகவாகா தொழிக.

(ச.) சராசர வடிவமாக விருக்கும் சகத்தின் சனனாதி சேஷ்டைகளோடு கூடின வாம். பாவங்கள் = துக்கஹேதுக்களாம். சம்பந்தமா யென்றமையால் மமதாகற்பித சம்பந்தமன்றி வாஸ்தவமன்று மென்பதாயிற்று. பெருஞ்செல்வத்துக் கென்றது-பரமே ஸ்வர ஐஸ்வரியத்துக் கென்றுணர்க. எப்பொருளும் பரமேஸ்வ ரைஸ்வரிய மிருத்தற் கிடமாதலின் இராச்சியத்துள்ள போகமுதலிய சகல பதார்த்தங்களு மநித்தியமென்ப தாயிற்று. விடயத்தாலு மென்றது, போகப்பிரயோசன விசாரம். பூவலயத்தாலு மென் றது - இராச்சிய விசாரம். யாமார் என்பது ஆத்மவிசாரம். வருவதெது என்பது - சரீர விசாரம். இங்ஙனம் விசாரிக்கின் ஆத்மாவுக் கன்னியமான திருசியமனைத்தும் சுத்த மித் தையேயா மென்பதாம்.

(ஸ்ரீ-வீர. அ-கை.) யாவும் பொய்யேயாதலின் எப்பொருளிலும் ஆசையானது இன்றென்கின்றீர். யாதியார் என.

யாதியார் பெற்றதென விவ்வண்ண நினைவேற்கு வழிச்செல்வோர்க்கு
மோதுகா னலிலம்பு முறைமைபோற் பொருண்முழுதின் மூளா வாசை,
பேதியா வித்துயர்போ நெறிகாடிற் பெருந்தருதான் பெற்ற தீயால்
வேதல்போல் வேகின்றேன் விடரடைகல் லாந்திறவா வெய்ய மோகம். (49)

(ப - ரை.) யாதியார் பெற்றது = எப்பொருளே யாவர்தாம் பெற்றார்கள், எனவிவ் வண்ணம் = என்றிந்தப் பிரகாரம், நினைவேற்கு = விசாரிக்கப்பட்ட எனக்கு, வழிச் செல்வோர்க்கு = பதிகர்கட்கு, மோதுகானலி லம்பு முறைமைபோல் = பொருதா நின்ற கானலின்கண் ஆசையுண்டாகாத தன்மைபோல, பொருண்முழுதில் = சர்வபாவங் களிலும், மூளாவாசை = இரதியுண்டாக மாட்டாது, பேதியா = எவ்வுபாயத்தானும் பிளக்க முடியாததுபோ லிருக்கும், இத்துயர் = இப்படுதுயரம், போம் நெறிகாடில் = சாந்தியாகும் மார்க்கத்தை ஆராய்ந்து பார்த்தறியாமல், பெருந்தருதான் = விருத்த விருஷ்மானது தானே, பெற்றதீயால் = கோடரத்துற்ற கொடுவன்னியால், வேதல் போல் = தக்தமாதலொப்ப, வேகின்றேன் = வெதுப்பப் பெறுகின்றேன், திறவாவெய் யமோகம் = பேதிக்க முடியாதபடி இடைவெளி யற்றிருக்கும் கொடியசம்சார மோகத் துயர், விடரடைகல்லாம் = இடைவெளியில்லாத கல்லேபோல அதிகடினமாய். (எ-று.)

(ஸ்ரீ - வீர.) யாது யார் பெற்றது—பொய்யாகிய அதனால் யாருக்குத்தான் என்ன தான் வந்தது. பொய்ப்பொருளானே அபகாரமாதல் உபகாரமாதல் எவருக்கும் உண் டாவதில்லை. மரீசிகையின் உதகத்தால் பூமிக்குப் பூஷணமேனும் அபூஷணமேனு முண் டாவதின்றும். அதிஷ்டானபூத ஆத்மாவித்குக் கற்பிதப் பிரபஞ்சத்தால் ஒரு சிறிதும் உண்டாவதில்லை யென்பது கருத்தாம். இவ்வண்ணம் சம்சாரத்தின் உண்மைவடிவை விசாரஞ் செய்வதாற் சித்தித்த பலம் யாது கொலாமாலோ வெனின் கூறுகின்றீர்: இவ் வண்ணமென. எண்ணி யெண்ணிப் பார்ப்பதால் இரமித்தல் ஒய்ந்தது. பதிகன் = வழிப்போக்கன். கானலில் = மருப்பூமியில் எந்நிஷ்டை யென்பதாதி வினவிடை தரும் பொருட்டிங்ஙனம் உபோத்காதஞ்செய்து இப்பொழுததன் விடைகளைக் கூறுகின்றீர், போம் என இச்சம்சாரதுக்கம் எவ்வுபாயத்தானே நீங்கியொழியும் என்னுஞ் சிந்தையால் தாபமுற்றுத் துக்கிதனு யிருக்கின்றேன். ஜீரணவிருஷம் விருத்த விருஷமெனப்பட் டது. எக்காரணத்தால் ஆதிகள் துன்புறுத்துகின்றன. என்னும் வினவிற்கும் சம்சார சாந்தியுபாயத்தை நன்கறியாத காரணத்தானே எனவிடை, பொருளால் ஈண்டேயியம் பப் பெற்றதென இனிதுணரற் பாற்றும். அதுமித்தையாயின் யாவர்க்கு என்னவந்தது, யாதொருகோதும் வாராதாம். இவையாவும் பொய்யா? அல்லது சிறிது மெய்யுமாமோ? அவற்றினுள்ளும் திருஷ்டியுண்மையா ? அல்லது திருஷ்டியுமுண்மையா ? ஹே பிரஹ்ம சொரூபரே ! மேற்கூறிய வகையானே ஆராயுமெனக்கதனுல் எல்லாவிடயங் களிலுமே வழிப்போக்கனுக்கு நீரின்றிய பூமியிற் பிரீதியில்லாததே போலப் பிரீதியில்லை. இவ்வா றெனைக் காராய்ச்சி யுண்டா யிருத்தலினாலும் ஆராயுங்கால் அசாரத்தன்மை யிருத்தலினு லும் தங்களே வினவவேண்டிய அங்கிசம் மிகவுமுள தென்பதாம். எவ்வேதுவினாலே மோகிக்கின்றீ யெனின் ? பெருந்தருவானது தனது பொந்திலிருக்கும் உக்கிரமான அக்கினியினாலே வேதலேபோல இத்துயரமானது எங்ஙனம் நீங்குமென்னுஞ் சிந்தை யானே வேகின்றேன். சமுசாரதுக்கத்தால் கற்போல இடைவெளியில்லாமல் நெருக்கி நிரம்பப்பெற்ற இருதயத்தை யுடையவனு யிருக்கின்றேன்.

(ச.) அங்ஙனமாராயின் யாருக்குத்தான் என்னவந்தது? ஒருவருக்கும் பத்தமுமின்று மோகமுமின்று என்பார் யாது யார் பெற்றது என்றும் ஆராய்ச்சியுண்டாயின் மருமரீசி கையில் ஜலப்பிராந்தி சாந்தியாயின் வழிப்போக்கருக்கு அவாவொழிந்த லுண்டாதலே போலச் சர்வபாவங்களிலும் அவாவொழிதலா மென்பார் காணலிலம்பு முறைமைபோ லென்றுங் கூறினர். வீடாரடைகல்லாம் என்றது நீரற்றமான கல்லேப்போலென்பதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) எவ்விதத்தாலேனும் இத்துயரை நீக்கிக்கொள்ள லாமேயெனின் ? கூறுகின்றார். இனமென.

இனமிகமு மென்றஞ்சி யித்துயருக் கழுதாற்றே னீன்ற மாதர்
தனமுதலா மாபத்தோர்க் கெனச்சிந்தா வினஞ்சுழலுந் தானமாகுங்
கனமிலதாமுதார மதாமென்னினுமின் பம்பயவாக் கயவரென்ன
வனகரெனத்தரமறியா தரசரைப்போ லடைந்தார்பா லணுகுஞ் செல்வம்.(50)

(ப - ரை.) இனமிகமு மென்றஞ்சி = பந்துக்கள் நிந்திப்பார்க ளென்று பயந்து, இத்துயருக்கு = இச்சம்சார துன்பத்தைக் குறித்து, அழுதாற்றேன் = கண்ணிற்றண் ணீர்விட்டு ரோதனம் புரிந்தித்துயரைத்தீர்க்கேன், ஈன்றமாதர் = பிரசவித்த மங் கையரை இல்லங்களி னுடைத்தாய், முதலா மாபத்தோர்க்கு = உக்கிரமான ஆபத்துகள் நிறைந்த கிருகஸ்தர்களுக்கு, என = சிந்தாகுலங்கள் வந்துறுவதேபோல, தனம் = திரவியமானது, சிந்தாவினஞ் சுழலுந் தானமாகும் = சிந்தாகுலங்களின் கூட்டம் வாட் டஞ்சுழற்றும் இடமாம், செல்வம் = ஸ்ரீயானது, கனமிலதாம் = கனமற்றதாம், உதாரம தாம் = உதாரமுற்றதாம், என்னினும் = என்றாலும், இன்பம்பயவா = ஆனந்தத்தைக் கொடுக்கமாட்டாது, கயவர் என்ன = அகுணவான்க ளென்றேனும், அனகரென்ன = குண வான்களென்றேனும், தரமறியாது = ஏற்றத்தாழ்வின் விசாரமிலாது, அரசரைப்போல் = இராஜப்பிரகிருதிபோலும், அடைந்தார் பால் = சமீபித்தவரிடத்து, அணுகும் = சேரா நிற்கும்.

(ஸ்ரீ - வீர.) சர்வபோக்கியங்க ளோடுகூடி விளங்காநின்ற நீ தரித்திரனைப்போல துக்கத்தையே வர்ணிப்பது எவ்வாறு ஒவ்வுமெனச் சங்கிப்ப, யாவும் அனர்த்தத்தைச் செய்யும் துஷ்டங்களே, எனக்காண்பித்து ஆதியில் அநேக அனர்த்த ஹேதுவான தன த்தை நிந்திக்கின்றார்: ஈன்றமாதர் என, சிந்தைகளின் சமூகங்களே சக்கரங்களென் னும் ஆயுதவிசேடங்களாய்ச் சுழற்றுமிடமாம். தனங்களால் உண்டாக்கப் பட்டவை களேயாய சிந்தைக்கூட்டங்கள் நேமியைப்போலப் புருஷனைப் பிளந்தெறியும். நன்முகவிசே ஷமாய்ப் பிரசவித்திரா நின்ற தாரங்கள் இல்லங்களி லிருப்ப மிகவும் விருத்தியான உக் கிர ஆபத்துக்களாற் பீடிக்கப்பட்ட குடும்பிகட்குச் சக்கரதுல்லிய சிந்தைச் சமூகாயங் களே உண்டாக்கும் அநேகங் குழந்தைகள் சூழ்ந்த மனைவிகளும் மனைகளும் சுகத்தின் பொருட்டாகாவாம்; மற்றோ துக்கத்தின் பொருட்டேயாம்: அதுபோலத் தனங்களும் ஆம். தன நிந்தையின் பின்னர் தனஹேதுவான ஸ்ரீயை நிந்திக்கின்றார் கனமென இச் சம்சாரத்தின் கண்ணே அச்செல்வம் உதாரமென்னும் மகத்தாயிருப்பதாம்; எங்கும் நிரமற்றதாம், அச்செல்வமும் சுகத்தைக் கொடுப்ப தாகாதாம். நிச்சயமாய் மாறுகப் பரிமோகத்தின் பொருட்டு ஆம். குணமுடையவர்களையே ஆசிரயிக்கின்றது இலக் குமி என்பதாக நியமமின்மையின் அதற்கு ஆசிரயத்தன்மையில் துஷ்டத்தன்மை யுள தென்பார் கயவர் என்றார். மூடமையாக்குவதாம் துன்பத்தை மீவதாம், பெறுதற்கரியதாம் இவளிடத்திற் குணமிருக்கின்றது, இவளிடத்திற் றோஷமிருக்கின்

றது, என்னும் ஆராய்ச்சியில்லாமலே பக்கத்துறுபவனைப் பற்றுகிற்குமென்பது உலக வதந்தியாம். எங்ஙனமென்னின் அரசரியற்கையைப் போலுமென்க. அரசரியற்கையைப் போலுமென்க. அரசரியற்கை துர்ச்சனமேனும் சற்சனமேனும் பக்கத்திலிருந்தால் பகுப்பின்றியே பற்றுதலாம். தூராரூடமும், அல்லது அரசரியற்கை ஆபத்தியாதியரைப் பற்றுமென்க. எனது பந்துக்களும் என் பொருட்டாக அழுவார்களே யென்னும் பயத்தானே கண்ணீர்பெருக அழவில்லை. தரித்திரம், சத்துரு, நோய், முதலிய தீவிரமான் ஆயிரம் ஆபத்துக்களாற் பீடிக்கப்பட்டவர்கட்குப் பிரசவித்த அநேக மனோவியரோடுகூடிய இருகங்கள்போலத் தனிகரைச் சிந்தைகளாகிய மூனைகளால் எள்ளளாகத் துண்டித்துக் குவிக்கும்பொருட்டு முயன்ற சக்கரங்களாகிய தனங்கள் அடியேனுக்கானந்தத்தின் பொருட்டாகவில்லை. இவ்வாறு விடயங்கள் அசாரங்கள் அநர்த்தங்கள் விடய சம்பாதன காரணமாகிய தனமும் அவ்வாறும், இச்சம்சாரத்தில் நீங்காத வளாகி மிகமிகச் சுகவேதுவாகலின் மேலானவள் என இவ்விலக்குமி மூடர்களாலினிது கற்பிக்கப்படுகின்றாள். உண்மையாயோ, அவளும் கொலைபந்தம் நரகமுதலிய நிந்தைக்கிடமானவற்றையே கொடுத்தலானே அணுவள வின்பமும் கொடாமையானே, பெரு மோகப் பொருட்டே யாவள் பெருமோகப் பொருட்டடைவதினும் அடையாமற் சென்றிடினும், இகழ்ந்தனத்தைக் கொடுத்து விவேகத்தைக் கொடாமையினாலும் நிந்தைக்கிடமே யாவள், இலக்குமி = செல்வம். அநேக மூர்க்க அரசர் தருமமும் குணமுமுடையவரோடு நேயஞ்செய்வதில்லை; மற்றோ, எவன் முற்பட்டானோ அவனோடு நேயஞ் செய்தலே போலத் துயருற்றுச் சம்பாதித்தபோதினும் தருமமுடையவரே யனுபவிக்கின்றாரென்பதாக இல்லாமல் குண அகுண ஆராய்ச்சியின்றியே முற்பட்ட எவனையேனும் பற்றுவள்.

(ச) சமுசார (சமுசாரிகளின்) துக்கத்தைச் சிந்தித்துக் கண்ணீர்விட் டுரோதனஞ் செய்யவேண்டுமாயின் என்னிவன் அமங்களாசாரனாய் நிர்மித்தம் உரோதனஞ் செய்கின்றான் என்னுஞ் சனபவாதபயத்தினாலேயே உரோதனஞ் செய்திலனென்பார்: இனமென்றார். தனம், ஆயுள், அகங்காரம், மனம், ஆசை, சரீரம், வாலியம், யவ்வனம், மாதர், சரை, காலம், ஆகிய இவற்றைச் சிந்திக்கத்தொடங்கி, அவற்றுள் தனமூலத்தினுற் சமுசாரசம்பந்தமான சர்வப்பிரயோஜனமுஞ் சித்தித்தலின் முக்கியந்தனமென்று முதலிற் றன விசாரமாம்; தனமிருக்கின் வெகுகால போகப்பொருட்டுச் சிரஞ்சீவித்தகைமையபேக்ஷிக்கப்படுதலின் தனத்தின்பின் ஆயுள்விசாரமாம்; ஆயுளுந்தனமுமுற்றவழி நான் கர்த்தா நான் போக்தாவென்று வெகுவித கர்த்திருத்துவ போக்துருத்துவாதியபிமானப் பிரவிருத்தி வருதலின் அதன்பின் அகங்கார விசாரமாம்; அகங்காரமுமிருக்கின் அதன் வசத்தால் நானுவிதமான சங்கற்ப விகற்பவடிவமாக மனமுதித்தலின் அதன்பின் மன விசாரமாம், அம்மனத்தின்பின் நிரந்தரம் போகேச்சை ரூபமான ஆசை விசாரமாம், அதன்பின் பேரழகுடைய விசித்திரமாய்ப் போகத்தானமான சரீரவிசாரமாம், அதன்பின் அதன் அவஸ்தா விசேடரூபமான பாலிய விசாரம், யவ்வனவிசாரம்; அதன்பின் யவ்வனத்தின் மாத்திரம் முக்கிய போகத்திற்குரிய சர்வவிடய சமஷ்டிரூபமான மாதர் விசாரம்; அதன்பின் போகத்திற்குரித்தன்றாயினும் போகேச்சை மிகுந்த சரைவிசாரம், அதன்பின்சர்வ சிருஷ்டிதிதி சங்கார நிமித்தமானகாலவிசாரம், இதுவே கிரம அபிப்பிராயமென உணரத்தக்கது. ஆர்ஜன ரக்ஷணதரிசனதி விஷய சிந்தா சமூகங்களே சிந்தாவினமென்றதாம். (ப—ம்.) உக்கிரமான ஆபத்தையுடைய குடும்பிகளுக்குரான்ற மாதர்போல தனம் துக்க நிமித்தமேயன்றிச் சுகநிமித்தமாகாமல் சிந்தா சமூகஞ் சுற்று

தற்கு நிர்ப்பய நிவாசஸ்தானமா மென்பார், ஈன்றதானமாகு மென்றார். (இ—உ—ம்) "இன்ன தரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே—பின்னதனைப் பேணுதலுந் துன்பமே, யன்ன—தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா—லிழத்தலுந் துன்பமேயாம்." தனம் குணகுண விசாரமற்றதும் அவிவேக மூடையதும் தானுகப் பொருந்தாததும் ஆகுமென்பது தாற்பரியமாம். (50)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இலக்குமியால் தோஷங்கூறி அபிவிருத்தியின் கண்ணும் எல்லா மூடர்கட்கும் பிரியந்தந்து சந்ததம் போகானர்த்தங்களை ஈந்து வெகுவித தோஷங்களோடு கூடியிருக்கு மெனக் கூறுகின்றார்:—கருமவென.

கருமவகையால் விரிந்த கட்செவிப்பால் விடமாகுங் கணக்கே போலாந்
திருவெனுஞ் சூறைக்காற்றுற் பணிபோலச் சிதருறார் சேரார்சேர்ந்தோர்
நிருவகைக்குங் குளிர்ந்தினியர் நன்றியறிவோ ரறிஞரினி யோர்சூரர்
பொருவிலை வருந்திருவாற் புழுதிசெறி சுடர்மணிபோற் புன்மைசேர்வர் (51)

(ப - ரை.) கருமவகையால் = நானுவிதமான தொழில்களினுலே, இது, விரிந்தது = விஸ்தாரத்தை யடைகின்றது, கட்செவிப்பால் = பாம்பின் பானமானபால், விடமாகுங் கணக்கேபோல = கேவலம் விடமேயாகிவிடுந் தகைமையேபோல, ஆம் திரு எனும் = ஆகாகின்ற இலக்குமி யென்னும், சூறைக்காற்றுல் = பிரசண்டமாருதத்தால், பணிபோல = ஹிமம்போன்று, சிதருறார் = அடித்துக்கொண்டு போகப்படாதவர் யாவர், சேரார் சேர்ந்தோர் = அய்லவர் தம்மவர்என்னும், இருவகைக்கும் = இருதிறத்தவரிடத்தும், குளிர்ந்தினியர் = தண்மையோடும் நன்மொழி புகன்று நன்கேசெய்பவர், நன்றியறிவோர் = கிருதஞ்ஞர், அறிஞர் = பிராஞ்ஞர், இனியோர் = மிருதுவாய்க் காரிய முடிக்கும்படவர், சூரர் = வீரர், பொருவிலைவரும் = இத்தகைய சமானமற்ற யாவராயினும், திருவால் = செல்வத்தால், புழுதிசெறி = பாம்சு மூட்டிக்குட்பட்ட, சுடர் மணிபோற் = பிரகாசம் பொருந்திய மணிபோல, புன்மைசேர்வர் = தாழ்மையையே சார்வர். (எ - று.) (51)

(ஸ்ரீ - வீர.) அவ்வச் சாதுவான கருமத்தாலேனும் அசாதுவான கருமத்தாலேனும் அபிவிருத்தியை யடையாகிற்கும், அபிவிருத்தி யடைந்தபோதினும் அஃதனர்த்தத்தின் பொருட்டேயாம் என்பார், கட்செவியென்றார். இலக்குமிரூபக்ஷீரம் தோடங்களாந் தர்ப்பாதி விடப்பாம்புகளின் விடவேகத்தினுடைய விசர்ப்பணம்போல ஆகிரிக்கின்றது என்பதாம். எங்ஙனம் பால் உரகத்தின் விடவேகத்தை வளர்ப்பதாமோ அங்ஙனம் தோஷ சர்ப்பங்களின் பிரபாவரூப விடவேகத்தை வளர்ப்பதாய இலக்குமி ரூபப்பாலுமாம். பால் விசர்ப்பணம் செய்கின்றது என்றதை வெளிப்படை யாக்குகின்றார்:—திருவென.

குளிர்ந்து = சுகஞ்செய்யுந் தன்மையோடும், இனியர் = விநயமதுர வாக்கியத்தன்மை முதலிய குணசம்பந்த முடையவர். பிரசண்ட மாருதம் = சக்கரவாதம், சிதறல் = சக்கரவாத சலிதஹிமமானது துயர்தரும் பரிசமுடைத் தாதலேபோல இலக்குமியால் விடமஞ்செய்யப்பட்ட சித்தம் துக்கசம்பந்த முடைமையாம். பிராஞ்ஞர் = பண்டிதர். கிருதஞ்ஞர் = செய்தவுபகாரத்தை மறவாதவர், படவர் = சமர்த்தர், மணி = ரத்னம் முதலியவை. எக்கருமத்தின் பலம், தன இராஜ்ஜிய இலாபாதியின் உலோபத்தாணுண்டாம் இம்சை பொய்முதலிய தோஷசர்ப்பவிஷ வேகத்தின் பொருட்டாமோ; போர், சூது, வாணிச்சியம் முதலிய அவ்வக்கருமத்தானே இவ்விலக்குமி விஸ்தாரத்தை யடை

வளேயன்றி யாகதாஞதியானே யடையாள் ; மாறுக, அவை அழிவின் காரணங்களே யாம். வாயுக்கூட்டத்தாற் பனியேபோல எதுவரை யிலக்குமியானே பெருங்கஷ்டப் படுத்தப் படவில்லேயோ அதுவரை யுயிர்கள் தம்மவரிடத்தும் பிறரவரிடத்தும் தயை, தாக்ஷிண்யம், நேயம் முதலியவற்றோடு கூடியிருப்பர். மேலும் செய்ந்நன்றியறிவோர், விவேகியர், சூரர், குசலர், இனியவர், முதலியயாவரும், இலக்குமியினலே, பெரும்புழுதி யாற் பதிந்த அரும்மணிபோல மலினத்தை யடைவர்.

(ச.) கருமவகையால் = விதிவிலக்கென்னும் இருவகைக் கன்மங்களால் விரியும், இவ்விரிவு எத்தன்மையதெனின் ? கட்செவிப்பாலே விடமாகுங் கணக்கேபோலாம், விடவேகமுடைய சர்ப்பத்திற்கு க்ஷீரமும் விடமே யாவதுபோல இராகாதிதோஷ மூடைய செல்வவானை அந்தனுக்கு க்ஷீரம்போன் றிதமான ஆப்தவாக்கியமும் உருசி யாகாதென்பதாம். காமாதி பாப்புரைப்பாற் காதனீங்கும் என்னும் பாடத்திற்கும் இதுவே பொருள். (51)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீமான்களுள்ளும் அநேகர் தருமமூடையவராயும் கீர்த்தி யுடையவராயும் காணப்படுகின்றரெனின் ? உரைக்கின்றார்:—நீதடையாவென.

நீதடையாச் செல்வர்மொழி திறம்பாத சூரர்நடுத் தெரிந்து நோக்கு
நாதரிவர் மிகவரியர் நாகஞ்சூழ் குழிவல்லி நனேபோற் செல்வம்
சாதனத்துக் கரிதுளத்தை யிழுத்திமைப்பி லிறுந்தலேகீழ்த் தளிரினுன்ற
வோதுதுளி யொத்தவுயிர் மத்தரென வகாலத்தி லுடல்விட்டோடும். (52)

(ப-ரை.) நீதடையாச் செல்வர் = ஜனங்களால் இகழப்பெறாத தனவந்தரும், மொழி திறம்பாதசூரர் = அதிகரித்த மொழி மொழியாத சூரரும், நடுத்தெரிந்து நோக்கும் நாதர் சமதிருஷ்டியையுடைய பிரபுவும், இவர்மிக அரியர் = இயம்பிய இத்தகையோர் அத்தி யந்தந்துர்லபரவர், நாகஞ்சூழ் குழிவல்லி நனேபோல் = பாம்புகள் மண்டலமிட்டிருக் குங் படுபள்ளத்திலுள்ள தேன்கொண்ட பூமொட்டுகளோடு கூடிய கொடிபோல், செல் வம் = இலக்ஷ்மி ஆம், சாதனத்துக் கரிது = கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கத்தக்கது, உளத்தை இழுத்து = சித்தவிருத்தியைக் கவர்ந்து, இமைப்பில் இறும் = க்ஷணபங்குர மாம், உயிர் = ஆயுளானது, தலேகீழ்த்தளிரில் = தலேகீழா யிருக்கும் இலேயில், நான்ற = தொங்கிக்கொண்டிருக்கும், ஓதுதுளி = இதோ விழப்போகின்ற தென்று சொல்லப் பட்ட ஜலபிந்துவோடு, ஒத்த = ஒப்பிடத்தக்கதாம், மத்தரென = உன் மத்தரைப் போல, அகாலத்தில் = சமயமல்லாத போது, உடல் விட்டோடும் = சரீரத்தைப்பரித்தி யாகஞ்செய்து போய்விடும், இமைப்பில் இறும் = கணபங்குரமாம்.

(ஸ்ரீ - வீர.) மொழிதிறம்பாமை = சூரன் நான், எனக்குச் சமானமாக யார் இருக் கின்றார் என்பதாக மிகவும் ஜல்பம் செய்தலின்மையாம். ஜனங்களால் நிந்திக்கப்பெறாத ஸ்ரீமானுகிய புருஷன் துர்லபன் என்பதற்கு ஆத்ம ஸ்துதிரஹித சூராதி திருஷ்டாந்த மாகக் கூறப்பட்டதென் றுணர்ந்து கொள்க. குழி = வல்மீகர்ந்திரந்திரம்; அதனினின் றெழுந்த புட்பம் நிறைந்த கொடிபோல இலக்குமியானவள் தொடக்கத்தில் மாத்திரம் சௌந்தரியத்தால் மனோரமையாய்ச் சித்த விருத்தியைக் கவர்ந்து தன் அபிமுகமாகு மாறு செய்வள். கஷ்டப்பட்டுச் சம்பாதித்தலாவது = நீசசேவை முதலியவற்றால் உண் டாகும் கஷ்டமுற்றுச் சாதிக்கத்தக்கவளா மென்க. நாகஞ்சூழ் குழிக்கொடியானது, சர்ப்பபந்திகள் புரளும் தேகத்தோடு கூடியிருப்பதே போலச் சடர்களின் புந்தியால் காத்திரங்களிற் புரளும்படியான தேகத்தை யுடையவளாவள். இலக்குமியை இகழ்ந்த

தின் பின்னர் இலக்குமியின் போக நிமித்தமான ஆயுளை நிந்திக்கின்றார்: தலைகீழ் என. இலையின் ஈற்றுக்கூற்றின் நுனியில் தொங்கும் உதகலேசம்போல பங்குனிலம் வாய்ந்த ஆயுளானது அசமயத்தில் சரீரத்தை விட்டோடிவிடும். இதன்கண்ணே திருஷ்டாந்தம் இயம்புகின்றார்: மத்தரென. அநுன்மத்தன் உன்மத்தனை விடுதல் போலவாம், அல்லது உன்மத்தனைப்போல விருக்கும் சரீரத்தை யென்றேனுங் கொள்க. இமைப்பில் இறும் என்றது மறுமுறையும் வருவித்தது தேகளீதீப நியாயத்தாலாம். உலகரால்கழப்படாத அது ஸ்ரீமானும் மொழிதவறுத சூரனும் சமதிருஷ்டியையுடைய பிரபுவும் ஆகிய மூவரும் கிடைக்கக் கூடாதவரே யாவர். மனதுக் கினிமையானவரும், மனைவிருத்தியைக் கவர் பவரும் அதோகதி மரண முதலியவற்றை உண்டாக்கும் காரியங்களானே தேடத்தக்க வரும், ஒரு கணத்திலழிபவரும், பாம்பின் மாலைகளை யாகத்தி லலங்கரித்துக் கொண் டிருக்கும் பாழுங்கிணற்றிலும் படுகுழியிலும் எழுந்தமலர்க்கொடி போன்றவளுமாவளர்ந்த இலக்குமிதேவி. இலக்குமியைப் போலவே ஆயுளும் சுகத்தின் பொருட்டாகாதாம், ஆயுளானது மூங்கிலிலை நுனிமேற் றூங்கும் பனிநீர்போலக் கணத்தில் நீங்குவதாகும். உன்மத்தனைப் போன்ற ஆயுள் உன்மத்தமாய உடலினின்றும் அகாலத்தி லோடிவிடும்:

(ச.) தீது = சனநிந்தை, சனங்களா னிந்திக்கப்படுவார்கள் என்பதாம். கட்டப் பட்டுச் செலவைச் சுருக்கிச் சேர்க்கத்தக்கது, லோபிகளான பாபிகளால் அசாத்தியமா மென்பார் சாதனத்திற்கு அரிது என்றார். உளத்தையிழுத்து = மனத்திருத்தியாகிச் சித்த விருத்தியைக் கிழிக்கிறது, இமைப்பிலிறும் = கணபங்குரமாம். சர்ப்பசரீரவேஷ டிதமான சொரூப முடையதாம், புராணை கூபாதியினின்றும் உற்பன்னமான புஷ்பல தையாம். தலைகீழென்பது ஆயுள் நூடணமாம். பயித்தியம் பிடித்தவன் அகாலம் அநவசரத்தில் விட்டுவிட்டுச் செல்வதேபோல ஆயுளும்போம் என்பதாம். (52)

(ஸ்ரீ-வீர - அ - கை.) சிலபால் தீர்க்கமான ஆயுளும் காணப்படுகின்றதே யெனின், உண்மையே, அதுவும் ஆத்மஞான உபயோகமற்றதா யிருப்பின் வியாதி ரோகம், ஜரை, முதலியவற்றோடுகூடி காமாதிகளாற் கலக்கமுற்று, அனர்த்தத்தின் பொருட்டேயாம் என்கின்றார்:—வளர்என.

வளர்புலமா மராத்தீண்ட மனமயர்வோர் மெய்யுணர்வு வாய்த்திலாதோர்
தளர்வுறுகா ரணம்வாணுட் டனிமோக மெனுமுகிலிற் சார்மின்போலு
மளவுபடு முடன்மெய்யென் றழுந்திநா மிதின்மகிழே மாகாயத்தைப்
பிளவிடவா யுவைப்பிடிக்கத் திரைகோக்க வெளிதிதனைப் பேணவொண்ணு ()

(ப - ரை.) வளர் = மேலும் மேலும் விருத்தியாகும், புலமாம் அரா = விஷயமா கிய பாம்பு, தீண்ட = தொட்டு விஷசம்பந்தமாக, மனமயர்வோர் = ஜர்ஜர சித்தமான வருக்கும், மெய்யுணர்வு வாய்த்திலாதோர் = திடமான ஆத்மவிவேக மில்லாதவருக்கும், வாணுள் = ஆயுளானது, தளர்வுறு காரணம் = ஆயாச காரணமாம், தனிமோக மெனும் = தாழ்வில் ஒப்பற்ற சம்சாரமென்னும், முகிலில் = அப்பிரமண்டலத்தில், சார்மின்போலும் = பொருந்திய மின்னற் புஞ்சம்போலும், இதில் = இவ்வாயுளின் கண்ணே, அளவுபடும் உடல் = பரிமித ஆகாரத்தின் கண், மெய்யென்றழுந்தி நாம் = சத்தியமென்று நத்திஷ யாம், மகிழேம் = சந்தோஷியேம், ஆகாயத்தை = அவயவங் காணப்பெறுத அவகாசந்தரும் வத்துவை, பிளவிட = கண்டனஞ்செய்ய, வாயுவை = வேககதியோடு கூடிய தத்துவத்தை, பிடிக்க = வேஷ்டனஞ்செய்ய, திரைகோக்க = அளவின்றி அடுக்கடுக்காய் வரும் அலைகளைக் கிரந்தனஞ்செய்ய, எளிது = வேண்டுமா

ணுற் சுலபமாம், இதனைப்போன்ற ஒண்ணு = இவ்வாயுளின் கண்ணே ஆஸ்தை செய்தல் இயையாததாம்.

(ஸ்ரீ - வீர.) விடயமேயாய விடப்பாம்புகளிடத்தில் ஆசக்தியாலேனும் சம்பந்தத்தாலேனும் அதிசிதில் மூற்ற சித்த விருத்திகளை உடையவர் என்பார், மனமயர்வோ ரென்றூர். விருத்தியாகாத ஆத்மவிவேகம் உடையவரே வாய்த்திலாதோர். மீண்டும் ஆயுள் அஸ்திரமென்பார், நாம் என்றூர். பரிச்சின்ன ஆகாரம் வாய்ந்த அனுன்மாவின் கண் ஸ்திரபுத்தியை யுடைய யாம் என்பதாம். சமுசார மேகவித்யுத்சூக ஆயுளில் சுகிகளாகேம். கிரந்தனம் = பந்தனம். விடயப்பாம்பு தீண்டலானே எங்குஞ் சிதறுண்ட சித்தத்தையுடையவரும், அதிதிடமாகிய ஆன்மஞான மில்லாதவரும் ஆகியோர்க்கு ஆயுளானது ஆயாச காரணமாம். பிரஹ்மவித்துக்கட்கு மிவ்வாறேனுகாதெனின் ? யாவர் நன்கறிய வேண்டியதை யறிந்துளாரோ, அபரிச்சின்ன வஸ்துவின் கண்ணே இளைப்பாறியுளாரோ இலாப அலாபங்களிற் சித்தசமாதான மடைந்துளாரோ அவர்க்தம்மாயுள் சுகத்தைக் கொடுப்பதாம். நாங்கள் தேகாதிகளிடத்தில் இவ்வளவுதானுன்ம ரூபமெனத் துணிந்து சம்சாரமேக மின்னற் கூட்டமாகிய ஆயுளிற் சுகிகளாகிலேம். எளிதாக ஆகாயத்தைப் பிளக்கலாம், வாயுவைக் கட்டலாம், அலைகளைக் கோர்க்கலாம், ஆனுல் ஆயுளின் கண்ணே நம்பிக்கை வைக்கமுடியாதாம்.

(ச.) மனமயர்தலாவது—விடயசம்பந்த உறுதியாற் பிரஞ்ஞா நாசமாம். (இ-உ-ம்) ஆறுசெல் பொருள்கடுய்க்கு மைம்புலனுக்கும் பின்னே, காரூடர் நெஞ்சமந்தப் புலன்றனைக்கலக்கு மாங்கே, யூறிய கடலுளோடு கலத்தினை யுடன்செல்காற்றே, வேறுசெய்தறைந்துமாய்த்து வீழ்த்துமாபோலவேயாம். அதனுற்றூனே தேகேந்திரிய அந்தக்கரணுதிகட்கு விலக்ஷணமான பரிதர ஆத்துமதத்துவ நிச்சயமற்றவ ரென்பார், மெய்யுணர்வு வாய்த்திலாதோர் என்றூர். பரிபூரண சொரூபத்தில் ஆன்மாபிமானிகளாய் ஆழ்ந்திப்பேமன்றித் நியமிதமாய்த் தள்ளத்தக்கனவாய் நிகழும் தேகேந்திரியாதிகளில் அன்றென்பார் அளவுபடும் என்றூர். (தா—ம்.) மேகம் போன்று நசிக்கும் மோகமென்னுந் தேகத்தில் மின்போன்று க்ஷணத்தில் நசிக்குமாயுளிற் சந்தோஷியேம் என்பதாயிற்று. ஆத்மாவிற்கு இத்தேகத்தில் விபரீதஞானம் விளைதலின் மோகத்தைத் தேகமெனப் பட்டது. ஆத்மா சம்சரிக்குங் காரணம்பற்றி சம்சாரமென்னும் தேகமாம் மேகம் துபோற் பங்குரத்திலிருக்கும். மின்னற் கூட்டம்போல க்ஷணபங்குரமான ஆயுளில் யாம் இளைப்பாறிலேம். (53)

(ஸ்ரீ - வீர-அ-கை.) மேலும் அற்பவாணுளின் பயனே நாடில் நிற்பது ஆபத்தே என்கின்றூர் சரற்பருவமென.

சரற்பருவ மேகமெனத் தைலந்தீர் விளக்கென்னத் தரங்கமென்னத்
திரப்படநீங் குவதாகிச் சிறிதுமிளைப் பாறுத சிந்தைத்தாகிப்
பரப்புடைய சேட்டையதாய்ச் சூனியமாம் வாணுளின் பயனேநாடிற்
முரப்பரிய துயராக்கு மொட்டகத்துக் குயிர்தொலைக்குஞ் சூலேபோல. (54)

(ப - ரை.) சரற்பருவமேகமென = சரற்காலத்து மேகம்போலும், தைலந்தீர் விளக்கென்ன = சிநேகமற்ற தீபம்போலவும், தரங்கமென்ன = அலைபோலவும், திரப்பட நீங்குவதாகி = அத்தியந்தம் ஆலோலமாகிச் சென்றதாகவே கருதப்படும், சிறிது மிளைப் பாறுத சிந்தைத்தாகி = விசேஷ மூடத்தனத்தோடும் விகிராந்தி பெறுதமனத்தோடுகூடியதாய், பரப்புடைய சேட்டையதாய் = விஸ்தார விவகாரத்தோடு கூடியதாயிராநின்ற,

சூனியமாம்
வாணுளின் = வியர்த்தமாய் விஸ்தாரமாயிருக்கும் ஆயுளின், பயனை நாடில் = பிரயோஜனத்தை ஆலோசித்துப்பார்த்தால், ஒட்டகத்துக்கு = அசுவதரி என்னும் மிருகத்துக்கு, உயிர் தொலைக்கும் = பிராணனை விலக்கும், சூலேபோல = கர்ப்பமொப்ப, துரப்பரிய துயராக்கும் = நீக்கமுடியாத துக்கத்தையே அது உண்டு பண்ணும். (எ-று.)

சாரம்
(ஸ்ரீ - வீர.) சரன்மேகம் அதிதனுவாம். உபாய விசேஷத்தால் நீண்ட ஆயுளையும் சம்பாதித்துக்கொண்டிருக்கும் சிலபுருடர் உலகிற் காணப்படுகிறாரே யெனின் ? உண்மையே அதுவும் அப்பிரஹ்ம வித்தாயிருக்கு மவர்க்கு அனர்த்தத்தின் பொருட்டேயா மென்பார், சிறிதும் இளைப்பாறுத என்றார். விசேஷ மூடத்தனத்தோடு கூடினமை யானே பிரஹ்மத்தின்கண்ணே மனம் இளைப்பாறவில்லையாம். அசுவதரியென்பது அசுவத்தாற் பெண் கர்த்தபத்தின்பாலுண்டாவதாம், அதனது கருப்பம் அதனையே யழிக்கு மென்பது பிரசித்தம். சரற்காலத்திருக்கும் அற்பமேகம்போலவும், தைலமில்லாத விளக்கே போலவும் அலையாநின்ற அலைபோலவும் சென்றதாகவே கருதவேண்டும். முற்றினும் ஆசை நீக்கமாகிய இளைப்பாறுதலை யடையாத மகாமூடன், சுகப்பொருட்டல்லாத விஸ்தாரமாய ஆயுளைத்துக்கத்தின்பொருட்டே, ஆண்குதிரைக்கும் பெண்கழுதைக்கும் பிறந்த அசுவதரியானது தனது கருப்பம் தன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவதா யிருந்தபோதினும் கருப்பந்தரிக்க இச்சிப்பதேபோல இச்சிப்பன்.

தமிழ்ப்பண்
(ச.) ஆத்மசொரூபத்தில் விசிராந்தியற்ற மனமுடைய தேகவிராமனை மூடன் புருடார்த்த சூனியமேனு மாயுளைத் தீர்க்கமாக இச்சிப்பனென்பார், சிறிதுமென்றார். அதனல்வரும் பிரயோஜனம் யாதெனில், துரப்பரிய துயராக்கும். அதற்குக் காரணம் விசேட மூடத்தன்மையேயாம், அதற்குத் திருஷ்டாந்தம் அசுவதரியாம், அசுவதரியாவது, கழுதைபாற் குதிரையாற்பிறந்த சங்கரஜாதி அவ்வசுவதரி தனக்குக் கர்ப்பம் விநாசகாரணமாக விரும்பினும் அத்தகைய துக்கவேதுவான கர்ப்பத்தை இச்சிப்பதேபோல மூடனும்மா மென்பதாயிற்று. (54)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஞானத்திற்குச் சாதகமாகாத ஆயுளை விசேஷமாய் நிந்தித்து அதற்குச் சாதகமாகும் ஆயுளைக் கொள்ளத்தக்கதாக ஸ்துதிக்கின்றார்:—அடையவென.

(ச - அ - கை.) ஆயின் எத்தகைய ஜீவனம் சிலாக்கியமாம் எனின் கூறுகின்றார்:—அடையவென.

அடையவேண் டியதடைந்து மேற்றுயர மற்றின்ப மளவி லாதாய்க்
கடையதாந் தருவிலங்கு பறவைகள்போல் வீணுள்கள் கழியாதாகித்
தடையிலா மனனத்தால் வாழ்வதே யுயர்வாணுள் சகநந்தீர்ந்தோ
ருடையபிறப் புயர்ந்ததாங் கிழவேச ரிப்பிறப்பா மொழிந்த வெல்லாம். (55)

(ப - ரை.) அடையவேண்டிய தடைந்து = அடையத்தக்க வஸ்துவை அடைந்து, மேற்றுயரமற்று = மறித்தும் சோகம் வராதபடி, இன்பம் அளவிலாதாய் = பரமானந்தத்தைப்பெற்று, கடையதாந்தரு = கீழாகிய விருக்ஷம், விலங்கு பறவைகள்போல் = மிருகம் பக்ஷி இவற்றைப்போல, வீணுள்கள் கழியாதாகி = வாளாகாலம் போக்காமல், தடையிலா மனனத்தால் = இடைவிடாது செய்யும் விசாரத்தால், வாழ்வதே = ஜீவிப்பதே, உயர் வாணுள் = உயர்ந்த ஜீவனமாம், சகநந்தீர்ந்தோருடைய = இனிவரும் பிறப்பற்றவருடைய, பிறப்பு = அவதாரம், உயர்ந்ததாம் = சாதுஜீவிதமாம், ஒழிந்தவெல்லாம் = சேஷஜனங்களெல்லாம், கிழவேசரிப் பிறப்பாம் = ஜரட்கர்த்தபத்திற் கினையாய ஜன்மங்களை யுடையவர்களாம். (எ-று.) (55)

(ஸ்ரீ - வீர.) எச்சீவனத்தாலே அடையத்தக்க பிரஹ்மம் அடையப்படுமோ அதுவே உயர்ந்ததாம். அதனுனேயே எச்சீவனத்தால் ஜன்மாந்தரத்தை யடையாமல் மீண்டும் சோகிக்கவேண்டியதின்றுமோ அதுவே உயர்ந்ததாமென்றுணர்க. எச்சீவிதம் பிராரத்த கன்ம க்ஷயபரியந்தம் விஷயசுகவில க்ஷண பிரஹ்மாநந்தத்தின் ஸ்தானமாமோ அதுதான் ஈற்சீவிதமெனப்படும். காரியத்தைத் துறந்தபோதே அதன் காரணத்துறை அவசியம் பவிக்குமென ஆயுவின் காரியபூத பிராணதாரண இரக்ஷணஜீவிதத்தின் ஸ்துதி செய்யப்பெற்றதா மென்றுணர்க. எப்புருடனுடைய மனம் துர்வாசனை பரவசமாகாமல் வஸ்து தத்துவவிஷயபூத நிரூபணமாகிய மனனத்தினுனே ஜீவிப்பதாமோ, மனனத்தி ஜனித சாக்ஷாத்காரத்தானே பாதிதமேயாமோ அதுதான் நல்வாழ்க்கையென நவிலப் பெறும். ஜரடகர்த்தபம் = ஜரையோடுகூடிய கிழக்கழுதையாம். இச்சம்சாரத்தின் கண்ணே வாழும் வாழ்க்கையானது எனக்குப் பிரியமாகத் தோற்றவில்லை. அவசியம் அடையவேண்டியதாகிய பரம புருடார்த்தத்தை அடைந்து எப்போதும் துயரமே சிறிதும் அடையாமல் மேலினும் மேலாய ஜீவன் முத்திச் சுகத்தானத்தையுற்று வாழும் வாழ்க்கைதான் வாழ்க்கை யெனப்படும். மரங்களுந்தான் வாழுகின்றன, பசுபறவைகளுங்கூட வாழுகின்றன ; அதுபோல் மனனத்தின் மனஞ் செலுத்தாமல் வாழும் வாழ்க்கையும் வாழ்க்கையாமோ? மனனத்தின் பயனுகிய தத்துவஞானமேனும் வாசனாக்ஷய மேனும் அடையாமல் வாழும் வாழ்வு துச்சமேயன்றே? மீண்டு மீண்டும்பிறவாத பெரிய வரே புகழும் வாழ்க்கையை உலகிலுடையவராவர். மற்றையர் நெடுநாள் வாழ்பவராயினும் அசுத்தமாகிய தேகாத்மபுத்தி யுடைத்தாயிருத்தலின் கிழக்கழுதை யொப்பக் கீழான இகழும் வாழ்க்கை யுடையவரே யாவர். அந்தமொன்றில்லா ஆநந்தம் பரமானந்தமாம்.

(ச.) அடையவேண்டியது அத்துவிதீயமான ஆத்ம தத்துவமாம். அளவிலாவின்பம்=பரமாநந்தமாம். மனனத்தால்=விசாரத்தினுலேயே; கேட்ட பொருளை நல்லயுக்திகளோடு அனவரதஞ் சிந்திப்பது மனனமாம். வாழ்வதே=காலத்தைக் கழிப்பதே, உயர்வாணுள் = தத்துவவிசார பரனுக்குப் பிரயோஜன ஜீவனமாம். கிழவேசரி மீட்டும் மீட்டும் பாரமெடுக்குந் துக்க பரம்பரையில் நின்றும் விடுபடாததுபோல மற்றைய ரெல்லாம் மோக்ஷாபாயத்தைச் சம்பாதியார் என்பார், கிழவேசரி யென்றார். விருத்தவேசரி கடினமான கவலைகளைச் சகிக்கத்தக்கதாம். (55)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அஞ்ஞஜீவிதத்திற்கு விருக்ஷாதி ஜீவிதம்போலத் தூர்ஜீவிதத்தன்மையைத் தரிசிப்பித்து அச்சரீராதிகட்கும் துஷ்டத்தன்மை அர்த்தத்தாற் றரிசிப்பிக்கப்பட்டது. அதனைத் தெளிவிக்கின்றார் அவிவேகிக்கென

(ச.) அஞ்ஞானிகளை நிந்தித்தல்.

அவிவேகிக் குப்பாரஞ் சாத்திரமெய் யறிவிலோர்க் கங்கம்பார
நவில்சாந்தி யில்லாதோர்க் குளம்பார மவாவினர்க்கு ஞானம் பாரஞ்
செவிதான வுருவாணுண் மனம்புந்தி யகங்காரஞ் செயல்க ளெல்லாங்
குவிபார மாஞ்சுமடர் சுமைபோலப் புந்திநலங் கூடா தார்க்கே. (56)

(ப - ரை.) அவிவேகிக்குப் பாரஞ்சாத்திரம் = பகுத்தறிவில்லாதோருக்கு நூல் சுமையாம், மெய்யறிவிலோர்க் கங்கம்பாரம் = அஞ்தத்வித்துக்கட்கு சுமைவபுவாம், நவில்சாந்தியில்லாதோர்க்குளம்பாரம் = மூர்க்கர்களென்னும் அசாந்தர்கட்கு மனஞ் சுமையாம், அவாவினர்க்கு ஞானம்பாரம் = இராகிகட்கு மெய்யுணர்வு சுமையாம், செவி

தானவுரு = மனங்கவரத்தக்க ரூபம், வாணுள் = ஆயுள், மனம் = உள்ளம், புத்தி = புத்தி, அகங்காரம் = அகங்காரம், செயல்கள் = திரசேஷ்டைகள், எல்லாம் = இயம்பிய இவை யாவும், புந்தி நலங்கூடாதார்க்கு = துர்ப்புத்தியுடையவருக்கு, சுமடர் சுமை போல = பாரம்வஹிப்பவனுக்குப் பாரம்போல, குவிபாரமாம் = பெருந்துயரைத் தரும் மிகுந்த பாரமாம். (எ - று.) (56)

(ஸ்ரீ - வீர.) பாரம் எங்ஙனம் தரிக்கமுடியாததாய்ச் சுவாதீனமாகாதோ அங்ஙனம் அவிவேகியாதிகட்குச் சாஸ்திராதிகள் சுவாதீனமாகாவாம் என்றுணர்க. ஈண்டு அவிவேகி என்றது விவேக சாமர்த்திய மில்லாத மந்தபுத்தியென விளம்ப விழைந்ததாம். அஞ்ஞமவித்துக்குச் சரீரம் பாரம் என்பதன் திருஷ்டாந்தமாக மற்றையயாவும் உபந்நிய சிக்கப்பட்டன வென்றுணர்க. அற்றேல் ஆத்மவித்துக்கும் தேகம் பாரமே, ஆக ஆண்டு அஞ்ஞமவித்துக்கு உடம்பு சுமையென உரைத்ததென்னே யெனின் ? இங்ஙனமன்றும், ஆத்மவித்துக்குச் சரீரமே இன்றுதலின் உண்டெனினும் பிராதிபாசிகமாய அதன் கண்ணே மூன்போல் அபினிவேச நிவர்த்தியின்மையின் அதன் சம்பந்தமாய் வாராநின்ற லாப சேதங்களில் உதாசீனமுண்மையின் என்க. திரசேட்டைகள் என்பதில் சேஷ்டைக்குத் திரத்தன்மை திரகாரிய விஷயத்தன்மையாலாம். நிதசேஷ்டையெனினும் இதே பொருளாம். அவிவேகிகட்குச் சாஸ்திரம், பாரம்போல வீணென சிரமகாரணமாம், ஆசையுடையவருக்கு ஞானம் பாரமாகும், சர்வ சிரமங்களையும் நீக்குவதிற் பிரசித்தமாகிய ஞானமும் பாரமாயின் மற்றவற்றைப் பற்றிப் பேசுவதெங்ஙன். சாந்தியற்றவனுக்கு மனது பாரமாம்; ஆன்மாவை யறியாதவனுக்குத் தேகம் பாரமாம்; சிறந்தரூபம், வாணுள், மனது, மதி, அகங்காரம், தொழில்கள் முதலியயாவுமே கெட்டபுத்தியுடையவருக்கு சுமைசுமப்பவர்க்குச் சுமையேபோலத் துக்கப்பொருட்டேயாகும் என்பதாம்.

(ச.) யாதினுல் தூல்பாரமெனின், விவேகலக்ஷண பலசூனியத்தாற் சித்தக்கிலேச மாத்திர வேதுவாதலின் என்க. அவாவினர்க்கு = இராகாதி தோஷங்களாற் மூர்ஷிக்கப்பட்ட சித்தத்தினர்க்கு, ஞானம் = அத்தியாத்மசாஸ்திர போதமும், பாரம், யாதினுலெனில், மனோபசாந்தி இலக்ஷண பலமின்மையாலென்க. நவில் + பாரம், யாதினுலெனில், இராகாதி நிவிருத்தியின்றேல் சிரவணமனனுதி சாதனமானமனமும் நிஷ்பலமாதலின் என்க. இம்மூன்றுந் திட்டாந்தங்களாம் இனித்தாட்டாந்தம் ; மெய் - பாரம் கூறப்பட்டதால் அஞ்ஞந் நிந்திக்கப்பட்டான், இதனுல் அன்னியதா ஞானங்களென்னும் விபரீத ஞானங்கள் நிந்திக்கப்படுகின்றன. சௌந்தரியமானதேகம், சிரசீவனம், சங்கற்ப விகற்பாண்மகமான அந்தக்கரணம், நிச்சயாண்மகமானபுத்தி, அபிமானரூபமான அகங்காரம் விபரீதபுத்தியுடையோர்க்கு யாவுந் துக்க நிமித்தமேயா மென்பதாம். (56)

(ஸ்ரீ - வீர - அ - கை.) யவ்வன அவத்தைகளின் ரூபாதிகள் சுகத்தின் பொருட்டாமே யெனின் அதற்கஸ்திரத்தன்மை யுண்மையின் இங்ஙனமின்று மென்கின்றூர்:— சின்னலென.

சின்னண்மெய்ப் பயின்றிளமை நீநட்பை விடுமறிஞர் திறம்போ னீங்கு
மன்னது சுகநிலைமை மரணத்தின் பாத்திரமாம் வாணுள் போல
வின்னுத நில்லையிடர் மோகத்தால் வாளாவந் தெங்கும் வாளா
தின்னுநின் றதுபொல்லாப் பொய்யகங்கா ரப்பகையாற் றுணுக்கென் கின்றேன்

(ப - ரை.) சின்னல் = சிலதினங்கண் மாத்திரம், மெய்ப்பயின்று = சரீரத்தின் கண்ணே யிருந்து, இளமை = யவ்வனமானது, நீநட்பை = துர்ஜன சகவாசத்தை,

விடும் அறிஞர் நிறம்போல = அறிந்து ஆதரம்செய்யாத சர்ஜனர்களின் தன்மைக்கொப் பாய், நீங்கும் = விட்டுவிடும், சுகநிலைமை மன்னுது = நிரமாய் ஆநந்தப் பேற்றையடை யாது, மரணத்தின் பாத்திரமாம் = மரண்பாஜனமாம், வாளுள்போல = ஆயுளைப் போல, இன்னுதில்லை = குணவர்ஜித வஸ்து ஜகத்தில் இல்லையாம், இடர்மோகத்தால் = துன்புறுத்தும் மயக்கத்தினுலே, வாளாவந்து = வீணுகவே யுண்டாகி, எங்கும் வாளாதுன்னு நின்றது = எவ்விடத்திலும் வீணுகவே பரிவர்த்தனே யாகின்றது, பொல் லாப் பொய்யகங்காரப் பகையால் = மித்தியாமயமாய துர் அகங்காரவைரியால், துணுக் கென்கின்றேன் = மிகப்பீதியை யடைகின்றேன். (எ-து.) (57)

(ஸ்ரீ - வீர.) அறிந்து = துர்ஜனுள் என்று தெரிந்து, ஆதரஞ்செய்யாமை, கிரியா விசேஷணமாம்; ஆயுள் நிந்தையை யுபசங்கரிப்பார், மன்னுது என்றூர். மன்னுது, சுகதி பிதமாய் சுகசோபிதமாய்ப் பிரகித்தமாய் நிரத்தன்மை யுடையதாய், அசத்தில் அசாரம் போலப் பொருந்துமேயல்லாமல், சததம் பொருந்தாதாம். மரணபாஜனமான இவ்வா யுள் குணவர்ஜித மாவதேபோலக் குணவர்ஜிதமாகும் வேறுபொருள் உலகத்தில் இன் ரும். ஆயுளானது அகங்கார வாயிலாய் அனர்த்த ஹேதுவாதலின் அந்நிந்தையின் பின் னர் அதற்கனர்த்தத்தைத்தரும் மூக்கியவாயிலாம் அகங்காரத்தை நிந்திப்பார், வாளா வென்றனர். துரகங்காரம் = துஷ்ட அகங்காரம். அதுவே வைரியாம், மோகமாமஞ் ஞானத்தால் விருதாவாகவே எதிர்த்தெழா நின்றது. அகங்காரத்தினது உற்பத்தியின் கண்ணே வியர்த்தத்தன்மையை விளம்பி அபிவிருத்தியின் கண்ணே அதனைக்கூறுவார், எங்கும் வாளா என்றனர். மித்தியாமயம் = பொய்வடிவம். " அகமெனல் தானே ஆதி யத்தியாசம் " என்றூர் ஆசிரியர். புருடார்த்தத்தில் உபயோகிக்கவில்லை எனவுணர்ந்து ஆதரவு செய்யாத யவ்வனத்தால், துஷ்டனென்று தெரியாதவரையுமே சாதுவால் துஷ்டன் ஆதரிக்கப்பட்டுத் தெரிந்தபின் கைவிடப் படுவதேபோலச் சில தினங்களி லேயே கைவிடப்படும். ஜீவன் முத்திச் சுகத்தினுனும் நிலபேற்றினுனும் எப்போதும் விடுபட்டதும் மிகவும் துச்சமாயதும் குணமற்றதும் மரணத்தைச் சேவிப்பதும் இவ்வாயுள் எவ்வாறுமோ அவ்வாறு இவ்வுலகில் ஒரு பொருளுங் கிடையவே கிடை யாது. மேற்கூறியவகையே எல்லா அனர்த்தங்களும் தொடங்குதற்குக் காரணமாகிய தம்பமும் மமதையாகிய கொடிக்குக் காரணமும் ஆகிய அகங்காரமும் சுகவேதுவாகா தாம்; மாருகச் சர்வ தோஷங்கட்கும் அபிமான மூலமாயிருத்தலின் அனர்த்தமே செய்கின்றது. அதன் விஸ்தாரமெங்ஙன மெனின் அஞ்ஞானமாகிய நிமித்தத்தானே வீணுகவே அகங்காரமானது எழுகின்றது, வீணுகவே நாற்புரமும் வளருகின்றது, அதனுற் புருடார்த்த மின்றும். அதனது காரணமும் மோகமேயாகும். பொய்மயமாயும் நோய்மயமாயு மிருக்கும் கெட்ட அகங்காரமாகிய சத்துருவினுலே மிகவும் அஞ்சுகின் றேன்.

(ச.) இளமை, சரீரசௌபாக்கிய உபலக்ஷித ஆயுள் என்றுரைகாண்க. இஃதன் றேல் வேறு நிரூபிக்கும் இளமையை ஆயுள் நிரூபணவசரத்தில் நிரூபித்தல் அயுக்தமாம். விடும் = ஆதரமின்மை யறிந்து நீங்கும். ஜகத்தில் அத்தியந்தம் சாரமின்மையதும் குண மின்மையதும் மற்றொன்று மின்றென்பார், இன்னுதில்லையென்றூர். சந்ததம் ஸ்திரமா யிருக்குந் தன்மையையும் இன்பமாயிலங்குந் தன்மையையும் நியாகித்து மரணபாஜன மாய் உள்ள ஆயுளானது பரம நிஸ்ஸாரமா மென்றுணர்க. அகங்காரம், அந்நிதா ஞான சொரூபமாதலின் மோகமென்னும் அஞ்ஞானத்தினுல் உதயமும் விருத்தியும் பொருந்து மென்பது கருத்து. துணுக்கென்கின்றேன் = பெரும்பயத்தை யடைந்துள்ளேன். (57)

(ஸ்ரீ-வீர-அ-கை.) அகங்காரம் தூர்வைரி என்பதையே சாதிக்கின்றார்; அல்லது அகங்கார வயத்தினாலேயே கொடியவை யாவையும் எய்தலின் அதன்பலத்தையே ஒரு வாறு காண்பித்து விஸ்தரிக்கின்றார்:—மனத்துயர் என.

(ச.) அகங்காரம் வைரி என்றதையே உறுதிப்படுத்தல்.

மனத்துயரு மாபத்தும் வளர்தொழிலு மகங்கரத்தால் வருமித்தைப்போற்
கனத்தபகை யிலதுநெடுங் காலம்வினை யிதுசேர்ந்து கலங்காநின்றே
னனத்தொடுதண் ணீர்நுகரே னரும்போகம் விளம்புவதென் னகங்காரஞ்சேர்
தினத்தொழில்க ளோமமுண வினைத்தும்பொய் யகங்காரந் தீர்தன்மெய்யே ()

(ப - ரை.) மனத்துயரும் = துஷ்ட ஆதிகளும், ஆபத்தும் = பெரிய ஆபத்துக்களும், வளர்தொழிலும் = விரிந்த விவகாரங்களும், அகங்கரத்தால் = அகங்கார வசத்தால், வரும் = உண்டாம், இத்தைப்போல் = இவ்வகங்காரத்திற் கிணையாக, கனத்தபகை = பெருஞ்சத்துரு, இலது = அயலொன்றின்றும், நெடுங்காலம் = நீள்போழ்து, வினையிது சேர்ந்து = பரமசிர வைரியான இவ்வகங்காரத்தைப் பற்றி, கலங்காநின்றேன் = அதிவிமோஹபத்தை யடைந்துளேன், அனத்தொடு தண்ணீர் நுகரேன் = அடிசிற்புசியேன் சீதநீர்பருகேன் என்றால், அரும்போகம் விளம்புவதென் = பெரும் போகங்களைப் புசிப்பதில் பேசுவதற் கென்னுளது, அகங்காரஞ்சேர் = அகங்காரபரவசப்பட்டு, தினத்தொழில்கள் = அனுதினம் யான் செய்துகொண்டு வந்த, செயல்களாகிய, ஓமம் = பரலோக சம்பந்த காரியங்கள், உணவு = இகலோக சம்பந்த காரியங்கள், அனைத்தும் = சர்வமும், பொய் = அவஸ்துவேயாம், அகங்காரம் தீர்தல் = அகங்காரரிக்கதை, மெய் = வஸ்துவாம். (58)

(ஸ்ரீ - வீர.) ஆதிகள் = மனப்பீடைகள். விவகாரங்கள் வாஞ்சையால் ஆவனவாம். பெருஞ்சத்துரு = உத்கிருஷ்ட ரிபு. அகங்காரம் வைரி என்பதை நன்குணர்தலால் வரும்பயனிஃதென்பார்நெடுங்கால மென்றார். அற்றேல், சத்துருவை ஆசிரித்தசிலர்க்கும் உலசத்தில் போஜனுதியின் கண் பிரவிருத்தி காணப்படுகின்றது; அதுபோல் நினக்கேன் ஆகாதெனின் இயம்புகின்றார், அகங்காரஞ்சேர் என. அவஸ்துவே = அபரமார்த்தமே. எங்ஙனம் சொப்பனத்தில் புக்தியாதிகள் அகங்கார வசத்தால் இயற்றப்பெற்றனவாய்ப் பொய்யேயாமோ அங்ஙனம் சாக்கிரத்திலும் ஆம். அகங்காரரிக்கதன்மையாவது, அகங்கார ரகிதத்தன்மையாம். வஸ்து = பரமார்த்தம். அகங்காரவயத்தானே ஆபத்தாகிய சரீரதுக்கமாம். அகங்காரவயத்தானே கொடிய மானச துக்கங்களாம்; அகங்காரவயத்தானே இச்சையும் கெட்டதொழிலுமாம்; அகங்காரமே எனக்கு நோயுமாம்; மேலாயதும் நெடுநாள் வைரியுமாய அவ்வகங்காரத்தைப்பற்றி அன்னமுண்ணேன் தண்ணீருமருந்தேன் எனின் இனி யரும்போகங்களைப்பற்றிப் போகிக்கும் விடயத்தில் அறைய வேண்டியதென்னே! அகங்கார வயத்தினாலே என்னால் யாவை புசிக்கப்பட்டனவோ, ஆகுதி செய்யப்பட்டனவோ விவகரிக்கப் பட்டனவோ, அவையாவுமே துச்சங்களும் அசாரங்களும் ஆகிய பொய்களேயாம்; அகங்கார மில்லாமையே மெய்யாம். நானென்னும் தோற்றமுண்டாயின் ஆபத்தில் துயரடைகின்றேன் இலதாயினோ இன்பமடைகின்றேன். ஆதலின் அகங்காரமின்றி யிருத்தலே மேலானதாம்.

(ச.) அகம்கர்த்தா அகம் போக்தா என்னு மபிமான மூலத்தால் சம்சாரசம்பந்தமான துக்கம் வருதலின் அகங்காரமே முக்கியவயிரி என்பார். கனத்தபகை என்றார். இங்ஙனம் அனர்த்த ஹேதுவாதலால் அகங்காரம் பரமசத்துருவேயென நிச்சயித்தும்

எப்படி அதனையே யனுசரித்துப் பிரவிருத்தி மார்க்கத்தைத் தொடங்குவேன் என்னுங் கருத்தால் உரைத்தார் அரும் போகமென. விளம்புவதென் என்றமையால் அந்தர்முகர் களான தங்கட்கும் இது சம்மதமல்ல வெனக் குறிப்பித்தாம். அற்றேலாயின் விகித நித்திய நைமித்திகங்களாய கருமங்களை என்னுன் செய்கின்றிலை எனின், கூறுகின்றார். அகங்காரஞ்சேர் என. முன் அஞ்ஞானதசையில் அகங்காரத்தை ஆசிரயித்துக் கன்மங் களை யனுஷ்டித்தேன். இப்போதோ அகங்காரமும் அதன் மூலமான பிரவிருத்தி மார்க் கமும் மித்தியாமயமாதலின் புருடார்த்த மன்றென நிச்சயித்தும் பின் எப்படி அனுஷ்டி ப்பே னென்பது பொருளாம். (58)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அகங்காரவசத்தாலென்று கூறியதையே விஸ்தரிக்கின்றார்; அல்லது அகங்காரம் தீரும்வரை எல்லாக் கிளர்ச்சிகளும் மேலும் மேலும் விளைந்து கொண்டே யிருக்கும் என்கின்றார், அகங்காரமென.

(ச.) சாம்ராஜ்ய போகம் சமீபத்திலிருக்க நினக்கெப்படிப் போகேச்சையற்ற தெனின் கூறுகின்றார் அகங்காரமென. (58)

அகங்கார முகில்படர வாசைமலை மல்லிகையவ் வளவிற் ருகு
மிகுந்துயரிவ் வகங்காரத் தொழில்பிரிந்தும் பேதைமையின் மிகவு நொந்தேன்
செகந்தனிலா பத்திடமாய்த் திரந்துறப்ப தாயுள்ளாய்த் தியக்க மாயு
முகந்தவிசார முமுணர்வு மிலாவகங்கா ரம்போமா றுபதே சிப்பாய். (59)

(ப - ரை.) ஹே பிரஹ்ம சிரேஷ்டரே! அகங்கார முகில்படர = எவ்வளவு காலம் அகங்காரமாகிய மேகமானது விஸ்தரிக்கின்றதோ, ஆசை மலை மல்லிகை அவ்வளவிற் ருகும் = திருஷ்ணையாகிய குடஜமஞ்சரி அவ்வளவு காலம் விகாசத்தை யடையும், மிகுந் துயர் = பெருந்துன்பத்தைத்தரும், இவ்வகங்காரத் தொழில் பிரிந்தும் = நிரகங்கார விருத்தியைப் பெற்றும், பேதைமையின் = மூர்க்கத்தன்மையினால், மிகவு நொந்தேன் = சோகத்தால் பெருந்துயரமே பெற்றேன், செகந்தனில் = இவ்வுலகத்தின்கண்ணே, ஆபத்திடமாய் = சர்வாபத்துக்கட்கும் நிலயமாய், திரம்துறப்பதாய் = திருவமற்றதாய், உள்ளாய் = அந்தரஸ்தமாய், தியக்கமாயும் = எவ்விடத்தும் துன்ப மயமாயும், உகந்த விசாரமும் உணர்வுமிலா = கொள்ளத்தக்கனவான ஆராய்ச்சி விவேகம் முதலிய உத் தமகுணங்கள் விடுபட்டதாயுள்ள, அகங்காரம் = அகங்கிருதிபதம், போமாறு உபதேசிப் பாய் = நீங்கும்படி திருவருள் புரிவாய். (59)

(ஸ்ரீ - வீர.) குடஜம் = வத்சகமெனப் பெயரிய விருக்ஷவிசேஷமாம், மலைமல்லிகை; ஆசையே மலைமல்லிகைப் பூங்கொத்தாம். மலைமல்லிகை மரத்தின் இயற்கையாவது கார்வருங்கால் மலர்ந்து மஞ்சரியோடு கூடிவிளங்குதலாம். இங்ஙனம் குருவனுசாசன யோக்கியத் தன்மையைத் தமக்குத் தெரிவித்து அவர்தம் அனுசாசனத்தைப் பிரார்த் திப்பார், அகங்காரத் தொழில் என்றார். நிரகங்கார விருத்தியைப் பெற்றும் = அகங் காரமின்றி யிருக்கப் பெற்றும், மூர்க்கத்தன்மையால் = மூடத்தன்மையால். சர்வாபத் தென்றது பூர்வத்தின் பிரபஞ்சமாம். அகங்கிருதிபதம் = அகங்கார வஸ்து அல்லது அகங்காரஸ்தானம் அணுகாதிருக்குமாறு எத்தனத்தாற் பற்றுவண்ணம். நிலயம் = ஆசிர யம். அந்தரஸ்தம் = தேகத்துள்ளிருப்பது. அகங்காரத்தியாகத்தால், அதன் சாக்ஷி யாகச் சேடித்த அநித்தமசமாயிருக்குமாறு நன்குபதேசித்தருளுவீராக. ஈண்டுத் தொனித்த பொருள் கூறப்படும் :—அகங்கிருதிபதம், அகமெனச் சப்தித்தலால் அகங்கிருத் தோவாம் அதன்கண் நிகழும் பதம்; அல்லது அகம்சப்த விஷயாகிருதிப்

பிரயத்தனம் எக்கோலிற்கோ அது அகங்கிருதியாம் அதனது பதம், பாதமாம். ஆகவே சஞ்சலமாய், குகூதிப்பிரதேசத்திருப்பதாய், உத்தமமான ராஜ்ஜியங்களில் விடப்பட்டதாய், எப்புறத்தும் அடிமுதலியவற்றினே அதிசயமாய துக்கத்தைக் கொடுக்கும், கோவின் பதத்தை விவேகி பற்றுதலேபோல அவ்வகங்காரபதத்தை யான் பற்றுதிருக்குமாறு உபதேசித்தருளுவீராக. விவேக ஜோதிக்கூட்டத்தை மறைக்கும் அகங்காரமாகிய மேகம் காற்புறத்தும் சரீரங்களே விரிக்கின்ற காலம்வரையுமே ஆசைமல்லிகைப் பூங் கொத்தானது மலர்ந்துகொண்டிருக்கும். அகங்காரமாகிய மேகம் சாந்தமாணபோது ஆசை யென்னும் கவலின்னற்கொடியானது அழியுந் தீபச்சிகை யொடுங்குவதேபோல மிகவிரைவில் எங்கேயோ ஓடிவிடுகின்றது. மூர்க்கத்தன்மையினலே சோகத்தாற் றுக்கிக்கும் நிரகங்கார விருத்தியோடுகூடிய எனக்கு யாதுபதேசிக்கத் தக்கதாமோ அதனை எண்டு தேவரீர் உபதேசித்தருள வேண்டுகின்றேன். இவ்வாறு அகங்காரத்தை யும் அஃதுண்டாக்கிய அனர்த்தத்தையும் அதைக் கெடுக்கினுண்டாம் பயனையும் இனிது வருணித்துத் தமக்கு அதன்றியாகத்தாலுண்டாம் சிரவண அதிகார அடைவைக்கூறி ஸ்ரீ இராகவர் உபதேசிக்கும் பொருட்டுப் பிரார்த்திப்பார், ஆபத்திடம் என்றார். எல்லா ஆபத்துக்கட்கும் இடமும், நிலையில்லாததும், உள்ளே யிருப்பதும், சாந்தியாதி உத்தம குணங்களினின்றும் விட்டப்பட்டதும், காற்புறமும் மிகத்துயரை உண்டு செய்வதும், ஆகிய அகங்காரவடிவ அடையாளத்தை விவேகத்திறத்தானே பற்றுமல் ஒழித்துவிடும் வகை யையும், மற்றுமின்னும் என்ன சம்பாதிக்கவேண்டுமென்பதையும், ஆன்மதத்துவத்தை யும், தேவரீர் உபதேசிக்க வேண்டுமென்பதாம்.

(ச.) அகங்கார—ஆகும், போகேச்சைக்கு அகங்காரம் மூலமாதலின் அகங்கார மூள்ளமட்டும் அஃதுதிக்கு மென்பது கருத்து. அகங்காரம் மின்றிப் போகேச்சையு மின்றேல் துன்புறுங் காரணம் யாதெனப் பேதைமை யென்றார். விசிராந்தி பதத்தை யறியாமையினல் மிகவும் நொந்தேன். அகங்காரம் நிவர்த்தியாகியும், விசிராந்திப தம் பெருமையின் சோகம் நிவர்த்தித்தலின் றென்பது கருத்தாம். யாதொன் றுணரத்தக்கதாமோ அஃது உபதேசிக்கப் படவேண்டு மெனினும் யாதோதுவ தென அறியவேலாமையின் இத்தன்பம் நீங்கத் தேவரீர் இத்தன்மையான அனுக்கிரகம் செய்யவேண்டுமென் றியம்புகின்றார், ஆபத்திடமென. அகங்காரம் போமாறு அகங்கா ரத்திற்கிடமான தேகாதிகள் துக்கமயமாதலின் அவைகளே எப்படியும் யான்என அபி மானியேன்; ஆயினும் அவ்வபிமானரூபமான அகங்காரம் மீட்டணுகாதேகும்படி தேகேந்திரியாதிகளுக்கு விலக்ஷணமாயும், அகங்காரத்திற் கவிஷயமாயும், சுத்தமாயும், இராகின்ற ஆத்மசொரூபத்தோடு யான் ஐக்கியமுற உபதேசிப்பாய் நீர் மகானுபாவராய் நிச்சயித்திருத்தலின் அனுக்கிரகித்தல் வேண்டும். (59)

(ஸ்ரீ - வீர- அ - கை.) அகங்கார நிந்தையின் பின்னர் அகங்காரத்தின் காரியமான மனத்தை நிந்திக்கின்றார்; அல்லது அநேக ஹேதுக்களாலும் திருஷ்டாந்தங்களாலும் விஸ் தாரமாக மனத்தோடங்களைக் கூறத்தொடங்குகின்றார்:—காமமென.

காமமுதல் வினைக்குடைந்து கற்றவர்கற் றெழிலகலுங் கடுங்காற் றுற்ற
மாமயிலின் பீலிபோன் றதிதூர நகார்நாய்போல் வாளா சுற்று
மாமதுகிஞ் சிலுங்கிடையா தருநிதிபெற் றுலுமகிழ்ந்தமைத்துட் கொள்ளாச்
சேமமுறு கரண்டகநீர் தரியாபோற் றிரியுமனந் தீய தன்றே. (60)

(ப - ரை.) காமமுதல்வினைக்குடைந்து = காமம் முதலிய தோஷங்களானே ஜர் ஜரத்தன்மையை யடைந்து, கற்றவர் கற்றெழிலகலும் = சற்காரியத்தையும் ஆரியர்

சேவையையும் விட்டொழிக்கும், கடுங்காற்றுற்ற சண்டமாருதத்துட்பட்ட, மாமயிலின் பீலிபோன்று = அழகிய மயிற்றோகைமயிர்போலச் சித்தஞ்சஞ்சலிக்கும், அதிதூரம் = தூரத்தினுந் தூரதூரதீர்க்கம், நகர்நாய்போல் = நகரின்கண்ணே நாய் திரிதல்போல, வாளாசுற்றும் = இங்குமங்கும் அலுப்புடன் வியர்த்தமாகவே மனம் ஓடித்திரியும், ஆமது = இவ்வாறு சஞ்சலமாம் அம்மனமானது, கிஞ்சிலுங் கிடையாது = ஓரிடத்திலும் ஒன்றையும் பெறாது; அருநிதி பெற்றாலும் = மகாதனத்தைப் பெற்றபோதிலும் மகிழ்ந்து அமைந்து உட்கொள்ளா = உள்ளே சந்தோஷித்து போதுமென்று சம்பூர்ணத்தன்மையை அடையமாட்டாது, சேமமுறு கரண்டகம் = பதார்த்தங்களைப் பாதுகாக்கும் பெட்டியானது, நீர்தரியாபோல் = ஜலத்தைச் சேமித்து வைத்துக்கொள்ளாதது போலவாம்; திரியும் மனம் தீயது = இவ்வாறலையுஞ் சித்தம் குரூரத்தன்மையை அடைந்துளது. அன்று = விவேகமுடையதன்று. (எ-று.) (60)

(ஸ்ரீ - வீர.) சஞ்சல சித்தமானது ராகாதி தோஷங்களாலே ஜர்ஜரமய சிதிலத்தன்மையை யடைந்து ஆரியசேவித காரியமாய மோக்ஷசாதன அனுஷ்டான லக்ஷணத்தினின்றும் சலிக்கும். நற்றோழில் தனிப்பதமாயின் சலன கர்த்துருத் தன்மைமாத்திரத்தில் திருஷ்டாந்தமாம். வாயுவிடை யிலகப்பட்ட மயிற்றோகை லேசம்போலும் என்பார் மாமயிலென்றார்·பிரயோஜனமுள தாமாயின் சலனமானது தோஷத்தின்பொருட்டு ஆகாதன்றே வெனின் அறைகின்றார் வாளாவென. தூரதூரதீர்க்கம், தரப், விகுதியின் அர்த்தமாய தூராதிசயத்திற்குச் சதியோஜனை முதலியவற்றில் முடிபு நீக்குவான் தீர்க்கமெனப்பட்டது. வாளாசுற்று மென்றது பொருந்தாதாம்; சிலபால் ஏதாவதொன்று கிடைத்தலையும் காண்டலின் எனவினைய விடைதருகின்றார், பெற்றாலும் என. ஈண்டுப் பெட்டியென்றது மூங்கிலா லாக்கப்பட்ட கண்டோலமாம் (பெருங்கூடை) கேவலம் சித்தத்தின் சலனம் வியர்த்தமன்றும் அனர்த்தத்தையுந்தரும் என்பார் தீயதென்றார். தீயது = குரூரத்தோடும் அவிவேகத் தன்மையைப் பொருந்தியது. அகங்காரத்தைப் போலச் சித்தமனங்களும் சுகதுஹேதுக்களாகாவாம்; மற்றோ, துக்கதுஹேதுக்களே யாகும்; "மகத்துக்கள் சேவையை முத்திக் கேதுவாய் மலர்வர்" என்னும் வாக்கியத்தானே நல்ல முமுக்ஷுக்களால் இன்றியமையாது செய்யத்தக்கதாய ஆரியசேவையையிடித்துக் காமாதிகளானே கிலேசித்த தன்மையாகிய புருடார்த்தசாதன ஆற்றலின்மையைச் சித்தமடையும்; வாயுப் பிரவாகத்திடையிலகப்பட்ட மயிற்றோகை நுனியின் சஞ்சலம்போலச் சஞ்சல சுபாவமுடைய தாதலிற் சலிக்கும் மனதும் பிராணவாயுவின் அதீனமாய்ச சலனமாகவே யிருக்கும். எவ்வாறெனின் ? பொருத்தமா, பொருத்தமின்றோ என விசாரியாமல் மிகுந்த வியாகூலத்துடனே மேலும் மேலும் வீணாகவே, எவ்விடத்தும் தனக்கு நிறையுங்காரணங் கிடையாமையின் தீனமான நகர் நாயானது மிகுதூரத்தினும் தூரமாகச் சுற்றித் திரிதல்போலச் சுற்றித்திரியும். எவ்விடத்தும் ஒரு சிறிதும் அடைவதேயில்லை. பெருந்தனங்களை அடைந்தபோதினும் மூங்கிற்பிரம்புப் பெட்டிகள் தண்ணீரால் நிறையாததேபோல உள்ளே நிறைவையடைவதே கிடையாது. குரூரம் = நிஷ்டூரம்.

(ச.) ராகாதிதோஷ ஹேதுக்களால் பிரஞ்ஞைஹீனமாய் வாயுமத்திய வர்த்தியாய மயிற்றோகையின் தளம்போலச் சஞ்சலசித்தம் சாதுஜனங்களால் பரிக்கிரகிக்கப்பட்ட சத்கருமத்தினின்றும் நீங்கிச்சலிக்கும். (பரிக்கிரகித்தல் = அனுஷ்டித்தல்.) பிரமாதஞ் செய்யுமென்க. செல்லும் சுனகம் வீணாகவே சுற்றுவதுபோலச் சித்தமும் சுற்றும். கரண்டகமென்பது மூங்கிற் சலாகையாற் கற்பிக்கப்பட்டுப் புஷ்பாதிகள் கொணரத்

தகுதியாய அந்தராளமூற்ற பெட்டகமாம். அது நீரால் நிரம்புவதில்லாமல் பிராப்தத்தை விசர்ஜனம் செய்து அப்பிராப்தத்தை ஆகாங்ஷித்து நிற்றலேபோலச் சித்தமும் நின்றழலும் ஹிம்சாபரவசமாய் நிர்த்தயையை யடையும். (60)

(ஸ்ரீ-வீர-அ-கை.) மேலும் அச்சித்தம்செய்யும் பேரனர்த்தத்தையே விரிவாகக் கூறுகின்றார். காதல் என.

காதலெனு மனைவியின்பின் செல்கின்ற மனமென்னுங் கடியஞாளி
பேதைமைமே வியவென்னைப் பிணந்தின்னு மாறுபோற் பிடுங்கித்தின்னும்
மோதுபெருங் காற்றினுன் முறிந்தெழுந்த தரும்புபோன் மோகமெய்த
வாதைமனம் பெரும்பாழின் மிகவீழ வதிதூர மலங்கத்தள்ளும். (61)

(ப - ரை.) காதல் எனும் மனைவியின்பின் = திருஷ்ணை யென்னும் பாரியைப் பின்பற்றி, செல்கின்ற மனமென்னும் = கமனஞ்செய்யும் சித்தமென்று சொல்லப்பட்ட, கடியஞாளி = குரூர விவேகமில்லாத சுவானமானது, பேதைமை மேவிய என்னை = அறியாமையோடு கூடியவென்னை, பிணந்தின்னுமாறுபோல் = சவத்தைப்பிடுங்கித் தின்பதேபோல, பிடுங்கித்தின்னும் = துண்டுபடுத்தி உண்ணும், மோதுபெருங்காற்றினுல் = வீசியடிக்குஞ் சண்டமாருதத்தால், முறிந்து எழுந்ததரும்புபோல் = தாட்பட்டெழுந்த திருணத்திற் கொப்பாய், மோகம் எய்த = சூனியத்திற் பிரமணமடையவும், பெரும்பாழின் மிகவீழ = மகாசூன்யத்தில் அவாந்தர வீழ்ச்சியின் பொருட்டும், வாதை மனம் = துயர்செய்யும் உள்ளமானது, அதிதூரம் = வெகுதூரத்தில், மலங்கத்தள்ளும் = கலங்கும்படியாக இழுத்துச் சென்று விட்டோடும். (61)

(ஸ்ரீ - வீர.) பெண்நாயைப் பின்றொடரும் குரூர ஆண்நாயால் சவம்பிடுங்கித்தின்னப்படுவதேபோலக் கூறிய விசேஷங்கள் வாய்ந்த சித்தத்தால் உபத்திரவப்படுத்தப்பட்டேன் என்பதாம். கேவலம் ஜீவிக்கப்பட்ட எனது துக்ககாரணம் சித்தமென்பதன்றும்; மற்றோ, மரித்தபின் நரக திரியக்காதியோனிகளை அடைவிக்கும் கரும விரையுமாம் என்பார் அவாந்தர மென்றார். அவாந்தர வீழ்ச்சி = ஏறிவீழ்கை, சூனிய பிரமணம் = புருஷார்த்த சாதன சூன்யமாய திரியக்குமுதலிய ஜன்மங்களிற் சுழலல் ஆம். திருணபக்ஷத்திலோ சூன்யத்திற் பிரமணம், நிராதாரகனத்திற் சுற்றிச்சுற்றிவருதலாம். சந்ததம் உதரம் நிறையாத மனைவியாகிய பெண்ணையைப் பின்றொடரும் கோரமான நாயால் பெரும்பாரம் வாய்ந்தபிணம் தின்னப்படுவதேபோல ஆசையாகிய மனைவியைப்பின் றொடரும் சித்தத்தால் யான் தின்னப்பட்டேன். அற்றங்காரைத் தருவானது, அலைமிகுத்துச் சஞ்சலித்துக் கரைக்கும் நீர் வெள்ளத்தால் வீழ்க்கப்பட்டிழுக்கப்படுவதேபோல, அலைபோற் சலித்துக் கிடையாத விடயத்தின் மொத்துண்டெழலும் விருத்திகளோடுற்ற சடவடிவமாயசித்தத்தால் இழுக்கப்பட்டேன். சூறைக்காற்றினுலே தரும்பானது இடையில் வீழ்த்தற் பொருட்டும், சூனியத்திற் சுழற்றும் பொருட்டும் இழுக்கப்படுவதேபோல யான், தருமப்பிரவிருத்தியானே சுவர்க்கத்திற் செல்லில் அகாலத்தில் வீழ்தற் பொருட்டும், அஃதில்லையாயின் சுகலேசமுங் கிடையாத இவ்விடத்திலேயே புழுபறவை முதலிய பிறப்புக்களானே சுழலும் பொருட்டும், மனத்தால் நெடுந்தூரம் இழுக்கப்பட்டவனு யிருக்கின்றேன். அவ்வாறே:—" இங்கெறி தன்னினே யிறங்குவர் மீண்டே " எனவும் " பின்னிவ்வீரு நெறியு ளொன்றேனும் பெற்றில, அன்னவிவை துச்சமாம் பிராணியா யகேகமூறை, பின்னும் பிறக்கும் பிறத்தியிறத்தி, யென்னு மிது மூன்றுவது தானமாம் " எனவும் சுருதிகளும் புகல்கின்றனவன்றே.

(ச.) பேதமை மேவிய என்னே காரியாகார்ய விவேகரஹிதனை என்னே. (இ-ம்) சண்டா நிலத்தால் திருணம் தாரஞ்செல்லுதலால் மத்தியில் வீழ்தலாவது சூன்ய அம்பரத்திற் சுழலுதலாவது அதற்குப் பிரயோசனமன்றி மற்றொன்று மின்மைபோல மனதால் மனோரத மார்க்கத்தில் தூரம் சென்றபோதிலும் ஆம் என்றதாயிற்று. (61)

(ஸ்ரீ-வீர-அ-கை.) துஷ்ட சித்தமானது என்னைக்கேடும் மேலுமாய்க் கிருகிருக்கின்றது என. "பிராணனற்றது, மனமற்றது, சுபீரம், அக்ஷரத்தினும் பரத்தினும் பரம்" என்னும் ஆத்மதத்துவப் பிரதிபாதக சுருதி இருத்தலின் உனக்குச் சித்தமே இன்று. இலதாகவே எங்ஙன் அதனால் எவப்படுந் தன்மையென ஆசங்கித்துக் கூறுகின்றார் வேறு என.

வேறுபொய் யாய்ச்செறிந்த வடிவாகி விசாரத்தால் விரோத மாகுங்
கோரமனம் பேய்பிடித்த சிறுவரைப் போற் பலதொழிலிற் கூட்டா நிற்கும்
பாரகன்று பாதலம்போம் பாதலத்தி னின்றகன்று பாரின் மீளுஞ்
சோரமனங் கிணற்றுமரம் பழங்கயிற்ரு லெடுப்பதுபோற் றொழிலிற் றள்ளும்.

(ப - பை.) வேறு பொய்யாய் = பீஜமற்ற மித்தையேயாய், செறிந்த வடிவாகி = நெருங்கியவடிவாகி, விசாரத்தால் விரோதமாகும் = ஆராய்ச்சியால் மாறுகி நிற்கும், கோரமனம் = துஷ்டசித்தமானது, பேய்பிடித்த சிறுவரைப்போல் = வேதாள சம்பந்தியாய பாலகரைப்போல், பலதொழிலிற் கூட்டாநிற்கும் = பற்பல விவகாரங்களிற் சேர்ப்பியாநிற்கும், பாரகன்று பாதலம்போம் = பிருதிவியைவிட்டுப் பாதாளத்திற்குச் செல்லும், பாதலத்தினின்றகன்று பாரின்மீளும் = பாதாளத்தை விட்டுநீங்கிப் பிருதிவியில் வந்து சேரும், சோரமனம் = கள்ளவுள்ளமானது, கிணற்றுமரம் = கூபகாஷ்டம், பழங்கயிற்றால் = பிணித்த புராதனரச்சுவினாலே, எடுப்பதுபோல் = பந்தித்துத் தூக்கப்படுவதுபோல், தொழிலிற்றள்ளும் = பலகாரியங்களில் வீழ்த்தா நிற்கும். (62)

(ஸ்ரீ - வீர.) நெருங்கியவடிவம் = பூரிதரூபம். மாறுதல் = விசாரணசிலமாதல் பாலகன் தன்மேனிச்சாயை முதலியவற்றில் வேதாளத்தை ஆரோபித்து அதனாற் பீடிக்கப்பெற்றவனவன். பொய்யாகவே செறிதலும் அதன் விசாரத்தால் மாறுதலும் சித்தத்திற்கும் வேதாள சம்பந்திக்கும் சமானமாம், உருவேயானது கயிற்றினாற் சுற்றப்படுவதே போலத் துஷ்டசித்தத்தாற் பாதாளத்தினின்றும் பிருதுவியிற் செல்பவனுடியும் பிருதுவியினின்றும் பாதாளத்திற் செல்பவனுடியும் சுற்றப்படுகின்றேன். பாலன் பயப்படக் கற்பிக்கப்பட்ட வேதாளம், பாலபுத்தியினாலே இருப்பதாய்த் தோற்றி அவனுக்கே பாலியம் நீங்கினவுடனே விசாரத்தால் அசத்தாவதேபோல அஜ்ஞான மதியினாலே வெற்றிகொள்ள முடியாததாகியும், பொய்யாகவே தோற்றுவதாகியும் விசாரத்தால் விவேகமுதித்த அளவில் வடிவமே யில்லாததாகும் துஷ்டசித்தத்தானே பீடிக்கப்பட்டுளேன்.

(ச.) வேறு பொய்யாய் நிற்கும், ரோதனாதி நிவர்த்தியி னிமித்தம் பயவேதுவாகக் கற்பிக்கவந்த பேயானது பாலகனை அவிசாரத்தால் விருத்தியாகி அநேகத் தொழிலிற் சேர்த்து வருத்தஞ்செய்து விசாரிக்கில் இன்மையாவதுபோலச் சித்தமும் ஆம் என்பது பொருளாம். தள்ளும் (இ - ம்) கூபத்திற்கிடக்கும் காஷ்டம்தான் நிஷ்கிரியமாயினும் குடிலரீச்சுவால் பந்திக்கப்பட்டு மாறிமாறி மேலே வருதலும் கீழேபோதலும்போல ஆத்மாநிஷ்கிரியனாயினும் மனதால் மாறி மாறி ஊர்த்துவ அதோகதியை யடைவனென்பதாம். (63)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஹே ராகவ ! நீ கூறியவாறு சித்தமானது துஷ்டசேஷ்டையைச் செய்யும் பக்ஷத்தில் நிக்கிரகித்துவிடலாமே எனின் முடியாதகாரியமா யிருக்கின்றதென்கின்றார், கடுவென.

கடுமனவன் பேய்கனலிற் கொடிதாகு மலைகளினுங் கடத்தற் கொண்ணு
நெடுவயிரத் தினும்வலிது கடல்பருகி மேருவினை நேரே பேர்த்துச்
சுடுகனலை விழுங்குகினு நிறுத்தரிது புலன்முழுதுந் தோன்று மூலங்
கெடுமுலகீ துண்டெனினுண் டிலதாகி லிலதிதனைக் கெடுத்தல் வேண்டும். (63)

(ப - பை.) கடுமனவன்பேய் = கொடியமனமாகிய வலியகிரகமானது, கனலிற் கொடிதாகும் = வன்னியிலும் உஷ்ணதரமாம், மலைகளினும் கடத்தற்கொண்ணு = மலை முதலியவற்றைத் தாண்டுதல் குறித்துத்தாண்டற்கு முடியாததாம், நெடுவயிரத்தினும் வலிது = நீண்ட வஜ்ராயுதத்தினும் திடமுடையதாம், கடல்பருகி = அப்தியைப் பானஞ்செய்து, மேருவினை நேரேபேர்த்து = சுமேரு பர்வதத்தை வேரோடும் பிடுங்கி, சுடுகனலை = தகிக்கின்ற அக்கினியை, விழுங்குகினும் = அசனஞ் செய்யினும், நிறுத்தரிது = நிக்கிரகஞ் செய்தல் கூடாதாம், புலன்முழுதுந் தோன்றுமூலம் = எல்லாப் பொருள்களும் பிரதீதியாவதற்குக் காரணமாம், கெடும் உலகு = நைஸ்வரமான இந்த ஜகத்திரயமும், ஈதுண்டெனில் உண்டு = இம்மனமானதிருந்தால் இருக்கும், இலதாகில் = க்ஷீணமாயின், இலது = க்ஷீணமாம், இதனைக் கெடுத்தல் வேண்டும் = பிரயத்தனத்தினாலே இவ்வுளத்தைச் சிக்ஷித்தடக்கவேண்டும். (63)

(ஸ்ரீ - வீர.) கடத்தற்கொண்ணு = மிகக்கஷ்டப்பட்டும் பார்த்தவீக்ஷிப்முற்றும் ஆரோகணஞ்செய்தல் முடியாதென்பதாம். கிரகம் = பூதம், மேருவைப் பிடுங்கிப் பிளந்து அசனம் = பக்ஷணம், இவ்வண்ணம் சித்தநிக்கிரகம் பெருந்துயரெடுத்தும் வருந்தி முடியாவிடின் அதையுபேக்ஷித்து மற்றொன்றே புருஷார்த்தப்பொருட்டுச் செய்யத்தக்கதாமெனின் அறைகின்றார் புலன்என. ஆகாசாதிபதார்த்தங்கட்குச் சித்தம் உபாதான காரணமாம். அங்ஙனமே சங்க்ஷேபசாரீரகத்தின்கண்ணும் கூறப்பட்டுளது:—"முத்தொழொட்முத்தர் நின்னியை லறிவாளர் மூடர், மத்தகமாதி மண்ணீரூகிய மகிதாவெல்லாம், அத்தமதவித்தை பெற்றவகப் பொறியாக்குமுத்தை, மைத்ததை யறிகமாரூய் மன்னுணர் வடைந்திடாதே" (இ—ள்) அற்றேல், நித்திராதி தோஷஜன்னியமாய சொப்பனம் அவித்தை அத்தியாசத்தானே அதைக் காண்பவனினும் அயலாக அசத்தென்பது கூடும், அதனானே யாங்ஙனம் ஜாக்ரத் பிரபஞ்சத்தின் சாமியமாதல், அதனானே வைதர்மியத்தானும் சொப்பனதிபோலாகாதாம், எனச் சொப்பனவைஷம்மியம் சூத்திரக்காரர் கூறினர் எனக்கடாவ, பிரமாதா வீரூப்பப் பாதமாவது கொண்டும் பாதிமாகாதது கொண்டும் சொப்பனஜாக்கிரங்கட்கு வைதர்மிய மிருந்தபோதினும் அத்தியஸ்தத் தன்மையானே, மூக்காலத்தினு மில்லாமற்போதலில் யாதொரு விசேடமுமின்றூ மென்னுங் கருத்தோடும் விடையிறுத்த வுத்தேசித்துக் கூறுகின்றூர்:—முத்தென. சுகாதி முக்தர் சைத்திராதிமுக்தர் இங்ஙனம் குருமுதலிய அறிஞர் தேவதத்தாதி அறிவிலர், மண் பிருதிவி, என்பதை யுத்தமாகவுடைய விசுவமாயிது முழுதும் தன்னவித்தையி னுண்டாய அந்தக்கரண கதவாசனை நிமித்தத்தானே அதனது சேஷ்டை மாத்திரமேயாம்; அவித்தையின் காரிய அந்தக்கரண பரிணாமமென்றேனும் அறியத்தக்கதாம், மாறூய் = சொப்பன விலக்ஷணமாகச் சத்தியமாய் நீயதியவேண்டாம், அல்லது இங்ஙனம் தள்ளத்தக்க சமுசாரப் பிரபஞ்சத்தை யவித்தையாலாயது என்பதை நிரூபித்து முன்னர் விவர்

த்ததிருஷ்டியினனே ஏக அநேகஜீவவிடயமாக இருவகைமை யியம்பப்பட்டது, ஆண்டுச் சுகர்முக்தர், நம்மனோர்களிலவாம் என்பதாய், வைதிக இலௌகிக விவகாரத்தை யனுசரித்து ஜீவநாநாத்தகைமையே பொருந்துமென வினவித் திருஷ்டிமாத்திரம் அங்ஙனமே சொப்பனம் போலும், உண்மையாகவேனும், வியாவகாரிக மாகவேனும் ஜீவபேதமில்லையாம். அங்ஙனமன்றே:—அவித்தையின் கண்ணேபிரதிபிம்பிதமான சைதன்யமே ஜீவனும், அவித்தையும் எளிதிற்கோடல் என்னும் உக்தியா லனுக்கிரகிக்கப்பட்ட அஜை ஏகை'' என்பதாதி சுருதியால், அதனனுபவத்தால், அதனது பேதத்திற் பிரமாண மின்மையினனும் ஏகமாகவே சித்தமாகின்ற படியால் ஜீவனும் ஒரு வனேயாவன். அவனும், அவித்தியாகாரிய அநேக அந்தக்கரண வரைவினனே அநேகரூபப் பிரமாதாகருத்தா போக்தாத் தன்மையை யடைவன், என இலௌகிக வைதிக விவகாரம் யாவுமே எவ்வாறு வேண்டப்படுமோ அவ்வாறு ஒரு ஜீவனே யுடன்படினும் ஒத்தே யிருக்கின்றதாம், ஆகவே அகந்த ஜீவகற்பனைசெய்தல் அடாதாம்; வேரூன்றிநிற்றல் பெறப்படாத அளவை யின்மையினனும், அரிதிற்கோடலானும் என்க. அந்தக்கரண ஞானத்தன்மையும், ஏகஜீவவாதத்திலும் பிரசித்தமாய் விவஸ்தையோடுகூடி விளங்கும் விவகாரத்தை யனுசரித்துக் கற்பிக்கப் பெற்றதாய் லோகசுகந்தித் தன்மையையும் கவர்வதின்ரு மென்னுங் கருத்துடன் கூறுகின்ரூர் முத்தரொட முத்தரென. என்பதாம். அக்காரண சித்தம் உளதாயவழி அதன் காரியமாகிய மூப்புவனம் நிகழாநிற்கும், அக்காரணம் நஷ்டமாகிய வழியோ அதன்காரிய பூதஜகத்தும் க்ஷீணமேயாய்விடும். ஆகவின் அச்சித்தமே புருடார்த்த மடைவான் பிரயத்தனத்தாற் கூறப்போதலின் சிகிச்சை செய்து வயப்படுத்தற்குரியதா மென்றுணர்க. துயரமடைந்தும் கவரத்தகாத மனமாகிய பேயானது எப்போதுந் தகித்தற் கேதுவாதலின் தீயினுமிக்க வெப்பமுடையதாம்; மலைகளைத் தாண்டுவதினும் இதனை வயப்படுத்தல் மிகவுங் கஷ்டமாம்; இதுவயிரத்தினும் வலியதாகும், இடியினுங் கொடுமையுடையதாம். பெருங்கடலைக் குடிப்பதினும் மேருகிரியைப் பெயர்த்தெடுப்பதினும் அக்கினியை விழுங்குவதினும் சித்தத்தை யடக்கல் மிகவும் கஷ்டமாம், பொருள்கட்கெல்லாம் சித்தமே காரணமாம் அஃதிருந்தால் மூன்றுலகமுமுளது, அஃதடங்கின் அகிலமுமடங்கும், எம்முயல்வானும் அது நோய் போல அவசியம் அகற்றத்தக்கதாம்.

(ச.) உலகு = சகத்திரயமும், கெடுத்தல் வேண்டும் = சர்வப் பிரயத்தனத்தினும் ஒழித்திடல் வேண்டும். (63)

(ஸ்ரீ-வீர-அ-கை.) கூறியதையே திருஷ்டாந்த முகத்தால் நன்குகூறுகின்ரூர்: —

வரையிலெழு வனம்போல மகிழ்ச்சியிட ரிவையனைத்து மனத்திற்ரேன்றும்
புரையில்லிவே கத்தின்மனம் பொன்றிலவை பொன்றுமெனப்புந்திசெய்தேன்
கரைதலறு மோகமெனுங் காரிருளிற் ரெழிற்கடங்காக் காதலல்லா
லுரைதருகா மாதிகளாமுலுக நிரையுணர்வெனும் விண்ணுலாவுமன்றே. (64)

(ப - ரை.) வரையிலெழுவனம் போல = மேலான பர்வதத்தின் கண்ணே வேரூன்றி ஓங்கிநிமிரும் காளனுமொப்ப, மகிழ்ச்சியிடரிவை யனைத்தும் = சுகதுக்கங்களென்னும் இந்தச் சங்கடங்கள், மனத்திற்ரேன்றும் = சித்தத்தின் கண்ணே உற்பத்தியா யோங்கும், புரையில் விவேகத்தின் மனம்பொன்றில் = குற்றமற்ற விசாரத்திலே மனமானது சுருங்குமாயின், அவைபொன்று மெனப்புந்தி செய்தேன் = கூறிய இடர்யாவும் முற்றினும் நசிக்கும் என்பதாக நன்கெண்ணுகின்றேன், கரைதலறு மோக

மெனும் = பிரஹ்மஞானத்தானன்றி மற்றொன்றினுமே கெடாததாய அஞ்ஞானமென் கின்ற, காரிருளில் = சொரூபத்தை மறைக்கும் இருதய அந்தகாரத்தில், தொழிற்கடங் காக்காதல் அல்லால் = விவகாரஞ்செய்து முடியாமல் அலுத்துப் போகும்படி செய்விக் கும் ஆசையாகிய இரவால், உரைதரு காமாதிகளாம் = மேலேசொல்லப்பட்ட காமமே முதலான தோடங்கள் என்னும், உலாக நிரை = கோட்டான் வரிசைகள், உணர் வெனும் வின் = சேதனகாசத்தில், உலாவும் = மகிழ்ந்துலாவும். (எ-று.) (64)

(ஸ்ரீ-வீர.) சித்தமானது மெலியமெலியச் சுகதுக்காதிகளும் அத்தியந்தம் தோற்ரு மல் நசித்துவிடும் என் றெண்ணுகின்றேன். மனத்திற்குத் திருவஷ்ணவாயிலாக அசர்த்த ஹேதுத்தன்மை யுண்மையின் மனநிந்தையின் பின்னர் நீக்கும் பொருட்டுத் திருவஷ் ணையை நிந்திக்கின்ரூர்: — மோகமென. மோகவிருள் = ஹார்தாந்தகாரம், இருதயத் திருக்கும் அந்தகாரத்தோடு கூடிய சந்திரிகையில்லாத இரவு திருவஷ்ணையாகிய ஆசை யாம். ஆசையாலே தொழில்கள் அதிகமாகத் துயரமாய் முடியும். அறிவேயாய ஆகா யத்தில் சூரோதிகளேயாய கெள்கெங்களின் பந்திகள் உலவும், பிரசித்த அந்தகார இரவு பிரசித்த ஆகாச உலாக பந்திகட்குப் புரணவேது வென்பது பிரசித்தமேயாம். பெரும் பர்வதங்களினின்றும் பெருங்காடுகள் உண்டாவதே போலச் சித்தத்தினின் றும் தூற்றுக்கணக்கான இச்சுகதுக்கங்களியாவும் திரமாயுண்டாகின்றன; விவேகமிகு தியினனே அம்மனம் இலயமடையுமாயின் அவைகள் அடியோடுந் தொலைந்து விடுமென எண்ணுகின்றேன். எல்லாப் பாவங்களையும் உண்டாக்குவதும், நீனலோப மரணங்களை யீவதும் உலகமுழுவதும் உலாவுவதும் ஆகிய ஆசையையிகழ்தல் செய்கின்ரூர்:—கரை தலறு என. பரமப்பிரீதிக் கிடமான ஆன்மதத்துவத்தையும், இருதயத்திலுதித்த விவே காதிகளையும், மறைக்கும் கெடுக்க முடியாத இருளினுலே, இச்சேதன காசமாகிய ஜீவன் பால், இராகாதிதோடக் கூகைகளின் கூட்டம் குலாவித்திரியும்.

(ச.) மோகமேயாய இருளோடு கூடிய இரவுபோல் வளர்தற் கேதுவான துக்க முடிபையுடைய ஆசையாமேதுவான் அறிவம்பரத்திற்றோட கௌசிகபந்திகள் உலவும். தோஷங்கள் = காமாதி, பாதகங்கள், அவை மலினமயமா யிருத்தலின் உலூகங்களாம். அக்காமாதி பரம்பரைகளாகிய வரிசைகள் உலாவி யொளிரு மென்றமையானே நிரு லேபனன ஆன்மாவிற் காசையத்தாற் பாபரூப காமாதிசம்பந்தத் தோற்றம் வருகின்ற தென்பதாம். (64)

(ஸ்ரீ - வீர - அ - கை.) திருவஷ்ணையானது கேவலம் தோஷத்தையே யுண்டாக்கு கின்றது என்பதாக மாத்திரமின்ரூம், மற்ரே, குணங்களையும் நாசஞ்செய்கின்ற தென் கின்ரூர்:—ஆதரித்தவென.

ஆதரித்த நற்குணங்க ளாகுவினுற் றந்திரிபோ லாசை யாலே
சேதமுறுஞ் சொரூபநிலை செறிதரவல் லமையில்லாச் சிந்தை யேங்கண்
மீதுவலை யுறுபுட்போன் மெலியவரு மாசைத்தீ வெதுப்ப நொந்தேன்
கோதிலமு திற்குளித்துங் குளிராதென் றென்மனத்திற் குறிக்கின் றேனுல். (65)

(ப - ரை.) ஆதரித்த நற்குணங்கள் = மிகவும் அன்போடும் சம்பாதித்த நல்ல குணங்களெல்லாம், ஆகுவினுற்றந்திரிபோல்=குமூஷிகத்தால் நாசீசாதகங் கெடுக்கப்படு தலேபோல, ஆசையாலே = திருவஷ்ணையாலே, சேதமுறும் = சைதன்யமயமாய்ச் சித் தத்தின்கண்ணிருக்கும்) சொரூபநிலை=தற்சொரூபஸ்திதியை, செறிதர=அடைவதற்கு, வல்லமையில்லா = அசமர்த்தமான, சிந்தையேங்கள் = மதியையுடைய யாங்கள், வலை

மீதுறுபுட்போல் = ஜாலத்துள்ளகப்பட்ட சகுனப்பக்ஷிபோல, மெலியவரும் = திருஷ்ணை ஜாலத்தில் விமோஹிக்கின்றேரும், ஆசைத்தீ = திருஷ்ணையெனப் பெயரிய சுவாலை யானது, வெதுப்ப = தஹிக்க, நொந்தேன் = துயருற்றேன், கோதிலமுதிற்குளித்தும் = குற்றமற்ற தேவாம்ரித்தில் மூழ்கியும், குளிராதென்று = தாகஉபசமனமாகாதென்று, என்மனத்தில் = அடியேனுடைய உள்ளத்தில், குறிக்கின்றேன் = (ஆசங்கிக்கின்றேன், ஆல் அசை. (எ-று.) (65)

(ஸ்ரீ - வீர.) ஆதரித்தலாவது, அவிகத ஆசக்தியாமாறு குணசோபையைப் பற்றி யிருத்தலாம். விஸ்தாரமாய்த் திருஷ்ணையை நிந்திக்கத் தொடங்குவார், சேதமுறு மென்ரூர். சொரூபநிலை = தனது ஆஸ்பதமாய தன்வடிவம், சர்வஹிலேசங்களும் விடு பட்டுப் பரமானந்த வடிவமாக இருப்பது. ஜாலம் = வலை, சகுனிபக்ஷத்திலோ தன திடம்தன் கூண்டாம். நிரதிசயதுக்க வேதுவாகத் திருஷ்ணையை நிந்திப்பார், ஆசைத்தீ யென்ரூர். அமுதம் = சுதை. சுதைகளானும் தாகஉபசமனம் ஆகாதென் றெண்ணும் வண்ணம் தஹிக்கப்பட்டேன். விவேக வைராக்கியாதி குணங்களுக்குள் எவ்வெதன்பால் யான் அதிக ஆவற்படுகின்றேனோ அவ்வதை யெனதாசை, வீணையின் நரம்பைத் துஷ்ட எலி கடிப்பதேபோலக் கெடுக்கின்றது. சூழலாநின்ற பிரவாகத்திற்பட்ட இலைபோலவும், சண்டமாருதத்தின் கண்ணேபட்ட துரும்பேபோலவும், ஆகாயத்தின்கணே சரற்கால வெண்மேகம்போலவும், சிந்தையாகிய சக்கரத்திற் சுழலுகின்றேன் யான். எங்களு டைய பாரமார்த்திக வடிவத்தை யடையமுடியாத மதியையுடைய யாங்கள் வலையிற் பறவைகள்போலச் சிந்தையாகிய வலையிலகப்பட்டுக்கொண்டு பெருமயக்கத்தை யடை கின்ரூம். ஆசையெனப் பெயரிய அழலினானே யழற்றப்பட்டயான், அமுதத்தானுந் தாகசாந்தியை யடையமாட்டேனென வெண்ணுகின்றேன்.

(ச.) திருஷ்ணையானே நற்குணங்கள் சென்றுவிட்டன. சொரூபநிலை = விசிராந்தி பதமென்னுங் கைவல்லியம், புட்போல ஆசாசாலத் தகப்பட்டு சாலநம் = சமுதாயம். எவ்வகையானே தாகவுபசமனம் அப்தசதங்களானும் அவ்வகையைச் சங்கித்திலேன், அவ்வகையானது சமவுத்தர சதத்தானும் பவிக்குமெனக் கற்பிப்பான் முடியாத காரிய மாம். அமுதில் அநேக வருடங் குளித்துங் குளிராது என்றமையால் மற்றெவ்விதத்தாற் ரூன் இத்தாகோபசமனம் ஆமெனச் சாற்றத்தகு மென்பதாம். (65)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல் தீரனுய் விசாரவானுய் திருஷ்ணைக் கனுகூல வியா பார ரஹிதனுயிருக்கும் நின்னை யெங்ஙனம் திருஷ்ணை தாகப்படுத்துவதாகும் எனக் கூறு கின்ரூர்:—பின்னென.

பின்னுறுபக் கத்திருள்போற் பேராண்மைத் தீரரையும் பீதி செய்யும்
நன்னயனங் குருடாக்கு முபசாந்தத் தோர்தமையும் நடுக்கஞ் செய்யுங்
கின்னமுறு காதலெனுங் கிழமடந்தை யொருபொருளுங் கிட்டா தேனும்
இன்னிதிய நயந்தெவர்க்கும் பின்ரொடரும் மனோரதமு மெய்தா தாகும். (66)

(ப - ரை.) பின்னுறுபக்கத்திருள்போல் = அபரபக்ஷத்துற்ற இரவிருளேபோல, பேராண்மைத் தீரரையும் = மிகுந்த ஆண்மையுற்ற தீரரையும், பீதிசெய்யும் = பயப் படுத்தா நிற்கும், நன்னயனங் குருடாக்கும் = நல்ல விழிகளோடுகூடி யிருந்தபோதி னும் ஒன்றுந் தெரியவொட்டாமற் செய்கின்றது, உபசாந்தத்தோர் தமையும் = பரம சாந்தமாயிருக்கும் நல்லோரையும், நடுக்கஞ்செய்யும் = பெருந்துயரடைந்து கம்பிதமா மாறு செய்விக்கும், கின்னமுறுகாதலெனும் கிழமடந்தை = துன்பமயமாய திருஷ்ணை

யென்னும் ஜீர்ணகாமினியானவள், ஒரு பொருளுங்கிட்டாதேனும் = எவ்வர்த்தமுந் தனக்குக் கிடையாததன்மை யுடையவளேனும், இன்னிய நயக்து = இனிமையைத் தரும்பொருளே காடிக்கொண்டு, எவர்க்கும் பின்முடரும் = யாரைக்கண்டபோதினும் பின்பற்றியோடும், மனோரதமும் எய்தாதாகும் = எண்ணியபடி யாதொரு பலத்தை யுமே யடைவதில்லை, ஒருவர் மனத்தையும் வசப்படுத்தவு முடியாதாம். (எ-று.) (66)

(ஸ்ரீ - வீர.) தீரரையும் = தைரியமாய் விவகரிப்பவரையும், விசாரமெனப் பெயரிய ஈக்ஷணங்களோடுற்றவரையும் கார்யா காரியந் தெரியாதவண்ணஞ் செய்கின்றதென்பார், குருடாக்குமென்றார். பரமசாந்த விவகாரஞ் செய்பவராய், துயரையுண்டாக்கும் தொழி லற்றவராய், இருப்பவரையும் துயர்ப்படுத்து மென்பதாம். வேறும் ஆசை துஷ்டத் தனஞ் செய்வதுபற்றிக் கிழக்சாரமற்ற. வேஷக்கொப்பிட்டுரைக்கின்றார்:—சித்தத்தை வசம்பண்ண முடியாத குருபியாயினும் அலைவள் என்பார், மனோரதமென்றார். துர்ஜனர் சத்ஜனர் யாவரையுமே ஜாதியாதியும் பாராமற் பொருணசையாற் பின்பற்றலின் எவர்க்கு மெனப் பொதுப்படக் கூறினர். பிராணி பிரவிருத்தித்தோடுதல் திருஷ்ணையாலேவப் பட்டே யாதலின் அதைத் திருஷ்ணையின் பேரிலேற்றிக் கூறுவார், காதலெனும் என்றார். இவ்வண்ணமே மேல்வருமிடங்களிலும் திருஷ்ணையின் செய்கை உபசாரத்தா லாயதெனக் காண்க. ஆசையானது, அறிவுமிருந்து தைரியத்தோடு கூடியிருக்கு மென் னையும் பயமுறுத்துகின்றது, விவேக நேத்திரங்களோடும் வெளி விழிகளோடுங் கூடி யிருந்தபோதினும் குருடாக்குகின்றது, அபரபக்ஷத்திரவேபோல ஆனந்தத்தோடுகூடி யிருந்தபோதினும் பெருந்துயரப்படுத்துகின்றது. ஒருவனது மனத்தையும் வயப்படுத்த முடியாம லிருந்தபோதினும் யாவர் பின்னும் தொடர்ந்து யாதொரு போகலாபப் பயனை யும் சிறிதும் அடையாமல் விருத்த விலமாதைப்போன்ற விருப்பம் துயரையே யடையும். விரிந்தபுவன நடனசாலையின்கண்ணே சோகமோக கருணை நகைப்பு முதலிய பலவித ரசங்களோடு கூடிய சமுசாரப் பெருங்கூட்டத்தில் ஆசையாகிய கிழத்தாசி யாடுவள்.

(ச.) தீரர் = தைரியத்தோடுகூடிய இச்சையுடையவர், உபசாந்தத்தோர் = நிர் விகார ஈகையுடையவர், கிழப்பொதுமடந்தை தருணசனமன வசீகரணத்தில் தான் சமர்த்தை யன்றியினும் தனவாஞ்சையாற் சகலதருணசனத்தையும் மேன்மேலுங் தொடர்தல்போல், ஆசையும் சகல தனவானையுந் தொடரும்; அதனற் பிரயோஜன மொன்றையும் பெறுதென்பதாம். (66)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வேறு வகையானே திருஷ்ணையைநிந்திக்கின்றார்:—முதிர் என.

முதிர்பருவத் தளர்ச்சியான் முடியாத நடனகதி முயல்வா ளாகி
மதிமகிழ்ச்சி யறநடிக்கு மாடுங்கூத்தி யைப்போல வருத்து மாசை
யெதிர்கிடைத்தற் கரும்பொருளிற் சென்றெய்து மமைந்தாலு மின்பந் தேடுங்
கதியறவோ ரிடத்துறையா துலகின்ற வானரம்போல் காதல் தானே. (67)

(பத.) முதிர்பருவத்தளர்ச்சியால் = கிழ அவஸ்தையின் அவஸ்தையால் அவய வங்கள் சிதிலப்பட்டிருத்தலால், முடியாத நடனகதி முயல்வாளாகி நடிக்கும் = ஆற்ற லின்றித் தள்ளாடி நடனநடை செய்யும் பிரயத்தினத்துடன் ஆடுவள், மதிமகிழ்ச்சியற = ஆனந்தரகிதமாய், ஆடுங் கூத்தியைப்போல = ஜீர்ணகர்த்தகிபோல, ஆசை = திருஷ்ணை யானது, வருத்தும் = ஆடியாடித் துயர்செய்யும், எதிர்கிடைத்தற் கரும்பொருளில் = இனிக்கண்காண அடைதற்கு முடியாததாயிருக்கும் வஸ்துவினும், சென்றெய்தும் =

கிடைத்துவிடுமென்னும் ஆசையை யிருந்தவழி கிடைக்கும்பொருட்டுப் போய்ப் பெரும் பிரயத்தனஞ் செய்யும், அமைந்தாலும் = செய்தடைந்து திருப்தியுற்றபோதினும், இன் பந்தேடும் = ஆனந்தபலத்தையே மேலும் மேலும் சம்பாதிக்க முயலும், காதல் = திரு ஷ்ணேயானது, உலகின்ற வானரம்போல் = சபலமர்க்கட சமானமாய், கதியறவோ ரிடத்துறையாது = சலனமின்றி யொருஸ்தானத்தில் நீண்டபோது இராதாம். (எ-று.)

(ஸ்ரீ - வீர.) நடனநடை = நர்த்தனப் பிரயத்தினத்துடன், கமனப் பிரயத்தி னத்துடன் என்பதாம். சென்று ஆனந்தமின்றியதாக நடனம்புரிவள். முடியாத பொரு ளையும் சாதிக்கும் பொருட்டு சம்பிரமத்தோடுஞ் செல்வள். ஆசையோ சுகமொன்று மின்றியே கஷ்டத்துடன் சேட்டிக்கும். அசாத்திய விடயத்திலும் உண்டாந்தன்மை, துன்புற்றும் நிறைவின்மை, நிரமின்மை வடிவ வேறுதோடங்க ளிருக்கின்றனவென்பார், எதிர்நிடைத்தற் கென்றார். நடக்கவுஞ் சாதிக்கவும் முடியாதவளா யிருந்தாலும், நடன கதியை முயல்பவளான, ஆசையாகிய கிழக்கூத்தியானவள் வலுவின்மையினுனே மன மகிழ்விலாம லானந்தமின்றிக் கூத்தாடா நிற்பள். ஆசையாகிய அதிசஞ்சலவானரம் அடையத் தாண்டமுடியாததன் கண்ணும் எண்ணமாகிய பாதத்தை வைக்கின்றது; திருப்தியடைந்திருந்தபோதினும் இலாபமென்னுங் காய்கனியை விரும்பிக்கொண்டே யிருக்கும் ஓரிடத்தில் நீள்காலம் நிலைத்திருப்பதே கிடையாது. பிராணிகளின் கருமானு சாரமாக விருக்கும் பிரஹ்மாவின் சேஷ்டையைப்போல ஆசையானது சுபமா யுசிதமான தைத் தொடங்கி அதனை முடிக்காமலே அசுபமா யனுசிதமாய்த் தொடங்கியதற்கு மாறுய எல்லாக் காரியங்களையுமே அதிவிரைவி லனுசரிக்குமாயினும் இனைப்பாறுவதே கிடை யாது, மற்றே, எப்போதுமே சுப அசுபப் பலப்பொருட்டு முயன்றுகொண்டே யிருக்கும்.

(ச.) முடியாத — காரணமாவது, அங்கஹீனமாவது செய்தற்குச் சக்தியற்றிருந்த போதினும் முடியாதவிடய மென்றுணர்ந்தும் பரபரிகாசபயத்தால் அக்கடனகதி திருஷ்டி யத்தினின்று முயல்வாளாகி, ஆனந்தமின்றியே நடிப்பள். அதுபோல இவ்வாசையும் பொருந்தாத விடயத்தில் மிகவருந்தி முயற்சித்துச் சந்தோஷமற நடித்துவருத்தும் என்ப தாம். ஈண்டோ, திருஷ்ணையின் பரவசப்பட்டியாது யாது செய்யப்படுகின்றதோ, அவை யாவுமே திருஷ்ணையை யேதுவாக வுடையன வாதலின் திருஷ்ணையின்கண்ணே ஆரோ பித்து நடித்து வருத்துமென்னப்பட்டது; அன்றியிலே நடிப்பியெனப் பிரயோகித் திருக்கலாம், அங்ஙனமன்றே "வீண்மனோரதமாய் விரிக்திடுமாசைநீ, யேணிதனினு மயலென்னையென் னுட்டுவாய்" ஸ்ரீபர்த்ருஹரியுங் கூறியுள்ளார். (67)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஓரிடத்தில் நிலையாமையையே காண்பிக்கின்றார், எப்போ துமே சுப அசுபப்பலப்பொருட்டு முயன்றுகொண்டே யிருக்குமென்பதை விரிக்கின் றார்:—காவின் என.

காவின்மதர் வண்டென்னப் பாதலம்விண் டிசையனைத்துங் கணத் துலாவும்
வாவிவளர் மயலொன்றே வருத்தமனைத்தினும் பெரிய வருத்த நல்கு
மேவுமர ணுறைபவர்க்குந் துயர்செய்யு மாசையெனும் விடுசி கைக்குத்
தேவர்புகழ் மந்திரமாஞ் சிந்தையற லுலகிடர்போஞ் சிந்தை யற்றால். (68)

(ப - ரை.) காவின்மதர் வண்டென்ன = இருதய தாமரையாகிய பூஞ்சோலையில் நறைமாந்திப் போதையோடு இங்குமங்குந்திரியும் அறுகாற்போல், பாதலம் விண் திசை யனைத்தும் கணத்துலாவும் = கணகாலத்திற் பாதாளலோகம் போய்மீளும், கணத்திற் சுகனமேகும், கணப்போதிற்றிக்குக் குஞ்சங்களிலுலவும், வாவிவளர் மயலொன்றே =

கணம் கணம் மேலும் மேலும் வளர்ந்தேசென்று கொண்டிருக்கும் திருஷ்ணையேகமே, வருத்தமனைத்தினும் = துயரீயும் சர்வசம்சார தோஷங்களுக்குள்ளும், பெரியவருத்த நல்கும் = அதிதீர்க்க துக்கத்தைத் தருவதாம், மேஷுமரணுறை பவர்க்கும் = காவற்கட் டோடுற்ற அந்தப்புரத்தி லிருப்பவர்க்கும், துயர்செய்யும் = அதிசங்கடத்தை யுண்டாக்கும், ஆசையெனும் = இத்தகைய திருஷ்ணையென்று சொல்லப்பட்ட விடிசிகைக்கு = விஷுவியாதிக்கு, தேவர்புகழ் மந்திரம் = இந்திராதி தேவதைகளும் ஸ்தோத்திரஞ் செய்யும் மந்திரம், சிந்தையறல் ஆம் = மனோலயமேயாகும், சிந்தையற்றால் = சித்தம் க்ஷயமானால், உலகிடர் போம் = உலகத்திலுள்ள எல்லாத் துயருமே உலகர்க்கு நீங்கும். (எ-று.) (68)

(ஸ்ரீ - வீர.) அறுகால் என்பது வண்டாம். விரித்துக் கூறுவதாலென்னே! தொகுத்துக் கூறக்கேளுங்கள் திருஷ்ணையின் துஷ்டத்தனத்தையெனக் கருதிக்கூறுகின்றார்: — வாவியென: சருவசமுசார தோடங்களின் மத்தியில் ஆசையொன்றே பொல்லாததாம். ஆயின் என்னதான் திருஷ்ணையைத் தியாகிக்கு முபாயமெனின், கூறுகின்றார்:—உலகிடர் என. உலகத்துள்ள இச்சனம் பாபவடிவமா யிராநின்ற சிந்தையைத் தியாகஞ் செய்த மாத்திரையானே அகில துக்கங்களையும் விட்டொழிக்கின்றது என்பதவிவாத மேயாம். ஆண்டுச் சிந்தையின்றியாகம் துக்ககாரணபூத திருஷ்ணையின் றியாகசம்பாதனவாயிலாகவே அகிலதுக்கத்தின் றியாகவேது வென்பது பொருத்த முடைத்தாம்; ஆகலின் அறைகின்றார் ஆசையெனும் விடிசிகையென. வேறுபாய மின்மையின் அறல் என்பதில் தேற்றமேற்றப்பட்டது. விடயசிந்தை யின்றியாகமே திருஷ்ணைவிடிசிகையின் மந்திரமெனப் பிரசித்தமாகக் கூறப்படும். திருஷ்ணையே விடிசிகையெனப் பெயரிய ரோகவிசேஷமாம் அதையகற்றும் மந்திரம் திருஷ்ணை விடிசிகை மந்திரமெனப்படும். விடயங்களில் இரமணீயத்தன்மைச் சிந்தையிலனே ஆண்டித் திருஷ்ணையுண்டாகின்றது, ஆண்டுச் சிந்தைப் பரித்தியாகத்தால் இராகமெனுமுயற் பெயர்வாய்ந்த திருஷ்ணை யுண்டாகாதாம், ஆகலின் சிந்தையின்றியாகம் திருஷ்ணை விடிசிகைமந்திரம் என்பதாகப் பொருத்தமாகவே புகலப்பெற்றதாம். இருதயதாமரையி லிருக்கும் வண்டாகிய ஆசையானது கணப்போதிற் பாதாளஞ் செல்லும், க்ஷணத்தில் மேலுலகங்கட்குப்போம், கணத்திற்றிக்குக் குஞ்சங்களிற் சுழலாநிற்கும். அந்தப்புரத்தி லிருப்பவனேயும் அதிக சங்கடத்திற் சேருமாறு செய்யாநின்ற ஆசையொன்றே சமுசாரத்துள்ள சர்வதுக்கங்களுக்குள்ளும் நீண்ட தூண்டிற்கயிறு கொல்பவனது அருகாமையிற் கொண்டிழுத்துக் கொல்லன் முதலியவற்றைச் செய்வதேபோலப் பெருந்துயர்களை நெடுங்காலீயும். விட விசேடத்தா லுண்டாய விடிசிகை ரோகம்போல மரணஹேதுவாகிய ஆசையை எது வரையினும் அனுசரிக்கின்றார்களோ, இனிது தரிக்கின்றார்களோ, விடுகின்றார்களில் லையோ, அதுவரையும் அத்தியாத்ம சாஸ்திரக்கதையே கேளாத் பிராணிகள் வியாகூல சித்த முடையவர்களாகி மோகிக்கின்றார்கள். ஆயினதன்றி யாகத்தில் யாதுதானுபாயமெனின், விடயத்தைச் சிந்தித்தலே விடுதலானே உலகர் எல்லாத்துயரங்களையும் விடுப்பர். காதலாகிய விடிசிகைக்கு மகாமந்திரம், சிந்தைசெய்தலே விடுதலே யாமென்பர். “விடயந்தமை நினைகின்றவன் வீரிகொன்று வனவையில்” எனக்கீதையுமருள்கின்றது.

(ச.) திக்குக்குஞ்சம் = திங்மண்டலம், இருதயபதும அறுகால் திருஷ்ணையானது அந்தக்கரண தருமமாதலின், அந்தக்காரணம் ஜீவான்மாவால் அதிஷ்டிக்கப்பட்ட ஹிருதயபுண்டரீகத் திருத்தலின், திருஷ்ணையை ஹிருதயபதும ஆசிரயமாக விருக்கும் அறுகால் என்று நிரூபித்தது பொருத்த முடையதேயாம். துயர்செய்யும், [(இ-ம்.) நிருபத்

திரவஸ்தானத்திற் சுகமாக வசிப்பவரையும்,] வெகு ரதகசதுரக பதாதிகளோடு கெருங்கிய போராதி சம்பவித்தலிற் பிரவேசிப்பிக்கு மென்பதாயிற்று. இதன் கருத்து, ஆசாபரவசன் அந்தப்புராதியிற் சுகமாக வசிப்பினும் பிரசுரப்திராச்சியத்தில் வாஞ்சையால் மெலிந்து போராதிதுக்க சாகரத்தில் மூழ்குவனென்பதாம். இப்போது பரமகாருண்ய மூடையராய் ஆசாநிவிர்த்தி யுபாயமிஃதெனல்: — ஆசையென. மீட்டு மீட்டும் பிரவிருத்தி யேதுவாதலின் விடுகிகையே யாசை, அதனது நிவிருத்தி யேதுவாதலின் நிந்தாத்தியாகமே மந்திரமென்க. சிந்தையற்றால், உலகு = உலகென்னுமகட்கு, இடர்போம் = அகிலதுக்கமு நீங்கும். (68)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சர்வதோஷங்களின் மத்தியில் திருஷ்ணை நீர்க்குதக்கத்தைத் தருவதென் றியம்பப்பட்டது திரப்பெறும் பொருட்டு மீண்டும் திருஷ்ணையை நிந்திக்கின்றார்:—பைந்தொடியென.

பைந்தொடியா ராசைநோய் கெம்பீர மனிதரையும் பதுமந்தன்னை
முந்திரவிக் கதிர்போலு மிளிர்விக்குங் கனவிடியின் மூணைகூர் வாளும்
வெந்தவிருப் புப்பொறியு மெனக்கொடிய மனவேட்கை மேருவொத்தோர்
சுந்தரஞானியர்தீரர் சூரரையெல் லாமிமைப் பிற்றுரும்பு செய்யும். (69)

ஸ்ரீ (பு - ரை.) பைந்தொடியார் = அங்கனையார், ஆசை = திருஷ்ணை, நோய் = ரோகார்த்தி, கெம்பீரமனிதரையும் = மிகத்தீர வீரராய புருடரையும், பதுமந்தன்னை = அம்புஜத்தை, இரவிக்கதிர்போலும் = உதயமாகி வராநின்ற சூரியனது கிரணங்கள்போலும், முந்து மிளிர்விக்கும் = விரைவில் உத்தானத்தன்மையை யடைவிக்கும், கனவிடி = வஜ்ஜிர அக்கினியும், மூணைகூர்வாளும் = அக்ரபாகத்தில் மிகவும் கூர்மை வாய்ந்த அசிதாரையும், வெந்த விருப்புப்பொறியும் = தப்த அயக்கணங்களும், இல் = அவ்வளவு கொடியனவாகவில்லை, என = என்று சொல்லும்படியாக, மனவேட்கை = இருதயத்தின் கண்ணிருக்கும் இத்திருஷ்ணை, கொடிய = தீக்ஷ்ணமுடையதாம், மேருவொத்தோர் = பொன்மலை போன்றவரையும், சுந்தரஞானியர் = விசேஷப் பிரஜ்ஞையுடையவரையும், தீரர் = தைரம்பெற்றவரையும், சூரர் = சௌர்யமுடையவரையும், எல்லாம் = மற்றைய நரோத்தமரையும், இமைப்பில் = நிமிஷமாத்திரத்தில், துரும்பு செய்யும் = திருணீகரிக்கும்; (இத்திருஷ்ணை) (எ-று.) (69)

(ஸ்ரீ - வீர.) உத்தானத்தன்மையாவது, சூன்யமில் குழவிபால் வெளியாம் சூப்புறப் படுத்திருத்தலின்மாறுய சரீரநன்னிலைமையாம். வஜ்ஜிர அக்கினி = அசனிதகனம். அயக்கணங்களின் சுவாலைகளும் எனக்கூட்டுக. ரோகபீடையும், மோக மங்கையும், சோக ஆசையும், கம்பீரதீரவீரரையும், சூரியகிரணங்கள் தாமரையை மலர்த்துவதேபோல விரைவில் அதீரத்தன்மை மேன்மலர்ச்சி யடையுமாறு செய்யும். கெடுக்கவே முடியாத தான இவ்வாசையையும் மகாமதிமான்கள் விவேகமாகிய ஒளிபொருந்திய வாளினாலே கெடுத்துவிடுகிறார்களே! அற்புதம் அற்புதம் இஃதொரு பெரிய சித்திரமாயன்றே இருக்கின்றது. கூர்மையாய வாளின் முனையும், வச்சிரவொளியும், வெந்த இருப்புப் பொறியினொளியும், இருதயத்தின்கண்ணே யிராநின்ற இவ்வாசையைப்போலக் கூர்மையுடையதல்ல; எனெனின், வாளின்முனை முதலியவை வெளியிலிருத்தலினாலே ஒவ்வொரு காலே யநர்த்தத்தைச் செய்யும்; ஆசையோ, இருதயத்தின்கண்ணே யிருத்தலின் எப்போதுமே துயர்தரும்; ஆகையால் அவற்றினின்றும் ஆசையை யதிகமென்றே சொல்ல வேண்டும். கவுரவத்தானே மேருகிரிக் கொப்பானவரையும், மிகுந்த அறிவுடைய

வரையும், சூரரையும், வேண்டாமை யென்னும் விரதத்தானே நிலைபெற்றவரையும், புரு டோத்தமரையும், இவ்வொரே யாசையானது ஒரு கொடிப்போதில் தூரும்புபோல உபேக்ஷிக்கத்தக்கவராகவும், சஞ்சலமுடையவராகவும் யாசகத்தனிய அடைவினனே இருக்குமாறு செய்துவிடும். "தூரும்பினுந் தூலமெலி தினு மெலிதாம், விரும்புறு மிரப் போனதனினு மெலியோன், தரம்பெறு வாயுத்தானடித்திலையென், இரும்பெருமெனையு மிரப்பானெனவே" என்றுமன்றே கூறுகின்றார்.

(ச.) நோய் = பீடை, நிமித்தமானரோகமும் = ரோகத்தாலுண்டாய பீடையும், பைந்தொடியார் = மனோகர சர்வ அவயவ தருணியும், சமுத்திரம்போலக் கம்பீரமான புருடரையும் உத்தானத்தன்மையையடைவிப்பார், அதாவதுகிருபணத்தன்மையை யடை விப்பர். மிளிர்வித்தலாவது, அகம்பீரமான கெடுதலைச் செய்தலாம். அதுபோன்றசையும் அடைவிக்கு மென்பதாம், ஆசையே யெல்லாக் கெடுதல்களுக்கும் உபாதானகாரணமாம். கட்கதாரையின் தீக்ஷ்ணமான மூனைப்பாகமும், குலிசனது கோடியும், தப்த அயக்கணங்க ளில் வர்த்தமான வன்னிச்சுவாலை விஸ்புலிங்கங்களும் திருஷ்ணையைப் போலாகாவாம்; திருஷ்ணையானது தாக்ஷ்ண்ய காம்பீர்யாதி குணகணங்களையும் சேதித்து விடுமாகலின் பிகவும் கொடியதாமென்றுணர்க. திருஷ்ணையினது தீக்ஷ்ண்ய அதிசய நிர்வாகப் பொருட்டுத் தைர்ய சௌர்யஸ்தைர்யாதி குணகணங்களை அது சேதிப்பதையே காட்டு கின்றார்:—மேருவென. நரோத்தமரென்றது, நரர்களுள் உத்தமர்என ஏழாம் வேற்று மைத்தொகையாம், ஆறும்வேற்றுமைத்தொகை மற்றன்றும், இலக்கண ஆசிரியராலிகழப் பெற்றிருத்தலின். (69)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணம் வாளாவன்தெங்கும் என்பதாதியாய் மேரு வொத்தோர் சுந்தர ஞானியர் என்பதந்தமாய்க் கொண்டு தருமத்தோடுகூடிய லிங்கசரீ ரத்தை விசேடமாக நிந்தித்துத் தூலசரீரத்தை நிந்திக்கின்றார், அல்லது உள்நோய் வெளிநோய்களாகிய, அநேகவிதக் கிலேசங்கட் கிடமாகியும், ஜரைமரணுதியானே யழி வுறுவதாயும், அபிமானம் ஆசைமுதலியவற்றிற்குக் காரணமாகியும், இராகின்ற தேகத்தை நிந்திக்கின்றார்; நல்லது ஆசை தக்க ஹேதுவாமெனில், ஆகுக, ஆயினும், "வாழ்ந்து வளனே வயங்கவே காணும்" என்னும் நியாயத்தால் ஆகத்திற்கே சுகபோகங்களை யனுப வித்தற் கிடனுகி யிருக்குந்தன்மை வெளிப்படையாதலினுனும், யாவருக்குமே தேகத்தி லதிகப்பிரீதி காணப்படுதலினுனும், சுகவேதுவாகலாமே யெனின், அதுவுந்துக்க வேதுவே யாகுமென்கின்றார்:—ஈரித்தவென.

ஈரித்த குடனரம்பாற் செறிந்துபல விகாரியா யிரங்கவாடிப்
பூரித்த வுடல்பிறப்பிற் பொலிந்தாலுந் துன்பத்தின் பொருட்டே யாகும்
பாரித்த சிற்றின்பஞ் சிறுதுன்ப மனுபவிக்கும் பகர்ந்த மெய்போ
னேரிட்ட குணமிலதுந் துயருளது நீசமுமா நிலைவேறுண்டோ. (70)

(ப - ரை.) ஈரித்தகுடல் = மலநீர்களால் நனைந்து தண்மைவாய்ந்த சிறுகுழல் பெருங்குழல் பைகள், முதலியவற்றாலும், நரம்பால் = கோடானு கோடியாயிருக்கும் நரம்புகளாலும், செறிந்து = நிறைக்கப் பெற்று, பல விகாரியாய் = பிறத்தன் முதல், இறத்தல்வரை நானாவித விகாரத்தை யடைந்து, இரங்கவாடிப் பூரித்தவுடல் = பரிதாப வானுகிச் சுகதுக்கம் வந்து போனபோது மகிழ்ச்சி வாட்டங்களை நிறைய அடைந்துவள ரும் சரீரம், பிறப்பில் = சம்சாரத்தில், பொலிந்தாலும் = நன்கெனத் தோற்றியபோ தினும், துன்பத்தின் பொருட்டேயாகும் = கேவலந் துக்கத்தின் பொருட்டேயாம்

பாரித்த சிற்றின்பஞ் சிறுதுன்ப மனுபவிக்கும் = கருமஜன்னிய சிறுகாரணங் கொண்டு மிவ்வுலகில் ஆனந்திக்கும் சிறுகாரணங் கொண்டுந் துக்கிக்கும், பகர்ந்த மெய்போல் = மேற் கூறியபடியுள்ள தேகசமமாக, நேரிட்டநன்மையிலதும் = குணவிவர்ஜிதத்தோடு கூடியதும், துயருளதும் = சோகிக்கத் தக்கதும், நீசமும் = தாழ் வுற்றதும், ஆம் நிலை வேறுண்டோ = ஆகிய நிலைமையையுடைய வஸ்து தேகத்தினயலாக உளதோ ! இலதா மென்றபடி. (எ-று.) (70)

(ஸ்ரீ - வீர.) செறிதலாவது, மலப்பைகளாலும் ஜலப்பைகளாலும் ஈரல் நுரையீரல் இருதயகமலம் குடல்கள் முதலிய அசுத்த பதார்த்தங்களால் நெருக்கப்பட்டிருக்கு மென்பதாம்: பரிதாபவான் = மிகுந்த துயருடையது. பரிபாதவான் எனினும் அமை யும். சிரச்சுரைபுனைந்த ஏககோடிக்காயம், குவளைத்தண்டம்போல விளங்கும். அற்பம் அற்பமே யுலகில் இன்பத்துன்ப மணுகலின் சிறிதெனப்பட்டது. ஈரமாய மலமூத்திரா திகள் நிறைந்த குடல்களோடு கூடியதும், நரம்பிஞல் நிறைவுற்றதும், அநேக விகார முற்றதும், எங்கும் விழுதல் கழிதல் அழிதல் முதலியவற்றோடு கூடியதும், ஆகிய தேக மிச் சம்சாரத்தி லிலங்குகின்றது; அதுவும் கேவலந் துக்கத்தின் பொருட்டேயாம். அற்ப அன்னபாஞதிகளானும் சீத உஷ்ணதிகளானும், ஆனந்தத்தை யடைகின்றது, துயரத்தையு மடைகின்றது தேகத்திற்குச் சமானமாகச் சோகிக்கத் தக்கதும், அசுசியா னதும், குணமில்லாததும் உலகிற் கிடையவே கிடையாது.

(ச) இனிச்சரீரவிசாரம். குடன் முதலிய யாவையுங்கூடிக் கூக்குரலிட்டுக்கொண்டு துயர்ப்படுத்துவதோடும் அறுவகை விகாரத்தோடுங் கூடியதாம், அபாயமிருந்தது, பிறப் பில் = ஜகத்தில், தாத்காலிக அன்னபாஞதி லாபமாத்திரத்தாற் சந்தோஷிக்கும், ஒரு பொழுதஃதலாபத்தாற் கிலேசிக்கும் என்பதாம். (70)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அகங்காரமாகிய இல்வாழ்வானுக்கு இல்லமாக நிகழும் இக் காயத்தாலென்னே யெனல்:—அற்பவென.

அற்பமதாஞ் சுகாசுகத்தி லழுந்துமூட னிலையெனினு மழிவென்றலு
நற்பலமென் னகங்கரனுக் ககமாகிப் பொறிபசுக்க ணிலோ டாறுங்
கற்பனைசெய் மனத்தொழும்பு மாசைமனை வியும்வாயாங் கடையுமாங்கே
பற்பலபல் லென்புகளாந் தோரணமும் நாக்குரங்கும் பயின்று தோன்றும். ()

(ப - ரை.) அற்பமதாஞ் சுகாசுகத்தில் = சிறிது சிறிது வாராநின்ற இன்பத்துன் பங்களிலும், அழுந்துமூடல் = சந்தோஷ விஷாதங்களே யடைந்துகொண்டே யிருக்கும் இத்தேகம், நிலையெனினும் அழிவென்றலும் = ஸ்திரமாயிருப்பினும் அஸ்திரமாயிருப் பினும், நற்பலமென் = நற்பிரயோஜனம்யாதுதரும், அகங்காரனுக்கு = அகம்பாவமாகிய இல்வாழ்வானுக்கு, அகமாகி = பெரியவீடாகி, பொறிபசுக்கள் = இந்திரியங்களாகிய பசுக்கள், நாலோடாறும் = கருமேந்திரியபஞ்சகம் ஞானேந்திரியபஞ்சகம் எனப்பட்ட பத்துப்பொறிகளோடும், கற்பனைசெய் மனத்தொழும்பும் = சந்ததம் யாதாவதொன் றைச் சிந்தித்துக்கொண்டேயிருக்கும் சித்தமாகிய பிருத்தியேஞமும், ஆசைமனைவியும் = சஞ்சலமான திருஷ்ணையென்னும் இல்லாட்டியோடும், வாயாங்கடையும் = பயங்கரமான வதனத் துவாரத்தோடும், ஆங்கே = அவ்வாயிலின்கண்ணே, பற்பலபல் லென்புகளாந் தோரணமும் = அநேகவிதமான தூர்க்கந்த தந்தஎலும்புகளாலாக்கப்பட்ட பலதோரணங் களோடும், நாக்குரங்கும் = ஜிஹ்வையென்னும் அதிசஞ்சலக்குரங்கோடும், பயின்று தோன்றும் = மிகவிமரிசையாக விளங்கிப்பொலியா நிற்கும். (எ-று.) (71)

(ஸ்ரீ - வீர.) உடல், = களேவரமாம். அகங்காரமே கிருகத்தன், அஸ்திரம் = அழிவு. அசங்களுகி யிருக்குமெனக்கு இக்களேவரத்தா லாவதென்னே, யாதொன்றுமே யாவதுகிடையாதாம். அக்கிருகத்தில் இருவகையிந்திரிய பஞ்சகங்களும் வரிசைவரிசை யாகக் கட்டப்பட்டிருக்கும் பசுக்களாம். அக்கிருகத்தில் வேலைமிகுதியா லிங்குமங்கும் திரிபவளாவள் திருஷ்ணேயேயாய இல்லறக்கிழத்தி. சித்தமேயாய சேவகன் வேண்டிய காரியங்களைச் சாதித்துச் சுகத்தைச் செய்துகொண்டிருப்பதற் கிடமாயதா மக்கிருகம். உலகத்தில் அடங்காத அநேகபசுக்கள் நிரைநிரையாய்க் கட்டப்பட்டு இடத்தை யடைத் துக்கொண்டிருப்பதும், மற்றையகிருகங்களிற் சென்று சுற்றுவதே வேலையாகவுடைய மனேவியோடு கூடியதும், வேலைக்காரனுக்கே சுகித்தற்கிடமாயிருப்பதும் ஆகியகிருக மானது விவேகிதட் கிட்டமாகமாட்டாது, அவ்வாறே யெனக்கும் தேக மிட்டமாக மாட்டாது. நாலேயாய பெண் கோத்தியாடிக் கொண்டிருக்கும் வக்கிரவாயில் பார்ப் பதற்குப் பயங்கரமாக விருக்கும். காணப்பெற்ற பல்லெலும்புத் துண்டங்களே கோர்த் துக் கட்டப்பட்டிருக்கும் மாலையே தோரணமாம். அகங்காரமாகிய இல்வாழ்வோனுக் கித்தேகம் பெரியவீடாம், இதுபூமியில் விழுந்தருண்டபோதினும், நிலத்தபோதினும் இதனல் ஹேமுனிவரே ! அடியேனுக் காகவேண்டியதென்னே ! வரிசை வரிசையாகக் கட்டியிராநின்ற இந்திரியங்களாகிய பசுக்களையுடையதும், மீண்டு மீண்டுலவாநின்ற ஆசையாகிய இல்வாழ்க்கைத் துணைவியையுடையதும், அதனுனே காமமாங் காவிக்கன் முதலியவற்றுனே அலங்கரிக்கப்பட்ட மூழுமேனியையுடையதும் ஆகிய இத்தேகவீடா னது எனக்கிஷ்டமாகத் தோற்றவில்லை. சித்தமாகிய வேலைக்காரனுற் செய்யப்பட்ட அநந்தஞ் சேஷ்டையினுலே மிழாமற்றடுக்கு முயற்சியுண்டாக இருப்பையுடையதும், பொய்யும் அஞ்ஞானமுமாகிய இருபெருமாதாரத் தூண்கள் தாங்கியதுமாகிய இத்தேக வீட்டை யான்விரும்பேன். நாவாகிய சுருங்கைக் கட்டிவைத்திருக்கும் கபாடத்தடை யாய காட்டம்போட்ட பயங்கரமாகிய தலைவாயிலையுடையதும், பிரத்தியகூப் பல்லென் புத் துண்டுகளின் சோரணங்களையுடையதும், ஆகிய இத்தேகத்தை யான்விரும்பேன்.

(ச) அகங்காரனென்பவன் உடம்பாதிகளில் நானெனதென்னும் அபிமானமுடைய அந்தக்கரணவிசேடமாம். அவனே கிருகஸ்தனென்னும் யஜமானன் ; களேவரநிமித்த சுகதுக்க உபபோகியாயிருத்தலின். இத்தேகம் வீழ்ந்தாலென் வாழ்ந்தாலென், அகங் காரனுக்கிது மகாக்கிருகமாம், ஆகவே அன்னியனது கிருகசிந்தையில் எனக்கு நற்பய னென் என்பதுபாவமாம். பந்தியாகாரமாகப் பந்திக்கப்பட்ட இந்திரியங்களே பசுக் களாம், பராதீனப் பிரவிருத்தியுடையனவாதலின் இந்திரியங்கள் பசுக்கள் என்னப்பட் டன. சம்பிரமத்தோடுஞ் செல்கின்றபடியினுலே ஆசைமனேவியாம் ; திருஷ்ணேயின் பரதந்திரமுடையதாதலின் சித்தம்பரவசனுகவும் பரிசாரகனுகவு மிருக்கும். கிருகஸ்தனே அகங்காரன்முன், அவனே விசேஷணமாகவுடைய ஜீவன்முன் ஆவனென்றுணர்க. அச் சத்தைத்தருவதும் அருவருக்கத்தக்க அசுத்தமுடையதும் ஆதலின் மசான துல்லியமான தேகக்கிருகத்தில் எனக் கிஷ்டமின்றென்பது கருத்து. (71)

(ஸ்ரீ-வீர-அ-கை.) அநித்தியமாய் அத்தியந்தம் அசுத்தமாய் அறிவற்றதாய் அற்பமா யிருக்கும் ஆகத்தில் அபிமானமடைவது யாங்ஙனமென்கின்றுர் :— நிதியென.

நிதியுமரசுஞ் செயலுமிவ்வுடம்பும் வேண்டுவன நிற்கினன்றே
விதியில்வரு காலனுற் சிலநாளிலிவையெலாம் வீந்துபோகும்
உதிரமொடு தசையுடைத்தா யுடைவதியல் பாய்த்தாழ்ந்தோ ருயர்ந்தோ ரொத்தே
யதிகசராமரணமுறுந் தரமறியா திவ்வுடலி லழகென் கொல்லோ. (72)

(ப - ரை.) நிதியும் = ஸ்ரீயும், அரசும் = இராஜ்யமும், செயலும் = ஈகையும், நிற்கினன்றே = திரமாயிருந்தாலல்லவா, வேண்டுவன = விரும்பப்படுவனவாகும், இது போல, இவ்வுடம்பும் = இத்தேகமும் நிலையாக இருந்தாலல்லவோ விரும்பப்பெறும். இவை எலாம் = கூறின கூரு தனயாவுமே, சிலநாளில் = சிற்சில போழ்தினுள்ளேயே விதியில் வருகாலனுல் = கருமபோக உபரமத்தை யனுசரித்து வாராநின்ற தருமராஜா வால், வீந்துபோகும் = நாசமுற்று இருந்த விடந்தெரியாமற் போய்விடும். ஏ உதிர மொடு = இரக்தத்துடன், தசையுடைத்தாய் = பொத்தையுன் மயமாயுள்ளும் புறம்பும், உடைவதியல்பாய் = நாசமாகிய முக்கியதருமத்தை யுடையதாய், தாழ்ந்தோர் = தரித் திரர்கள், உயர்ந்தோர் = போகிகள், ஒத்தே = என்னுமிருவர்பாலுஞ் சமமேயாய், அதிக தரமறியாது = விசேட ஏற்றத்தாழ்வொன்று மூணராதிருப்பதாய், சராமரணமுறும்= ஜரைகாலத்தில் ஜரையையும், மிருத்திகாலத்தில் மிருத்தியையும் அடைவதாயிருக்கும், இவ் வுடலில் = இத்தேகத்தில், அழகென்கொல் = ஹேமகரிஷியே ! யாதுஇரம்மியத் தன்மையுளது கூறுங்கள். (எ-று.) (72)

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ = தனதானியாதி சம்பத்து, ஈகை = சேஷ்டை தனத்தாற்ரு னென் ? இராச்சியத்தாற்ருனென் ? தேகத்தாற்ருனென் ? சேஷ்டைகள் மநோரதங் களாற்ருனென் ? சிலதினங்களிலேயே காலன் யாவற்றையுமே யழிப்பன். அழிவையே யியற்கையான தருமமாகவுடைத்தாகிய உதிர மாமிசமயமான இத்தேகத்தை யுள்ளும் புறம்பும், ஆராய்ந்து நோக்கின் என்ன இரம்மியமிருக்கின்றது கூறுங்கள். மரண சமயத்தில் எக்காயங்கள் ஜீவனை யனுசரிக்கவில்லையோ, காத்துக் கொழுக்கவைத்த உபகாரத்திற்கு மறுஉபகாரஞ் செய்யாமையின் செய்ந்நன்றி கொன்றனவாய அவைக ளிடத்தில் மதிமான்கட்கு எவ்வாறுபற்றுதலுண்டாகும். ஜரைவரும் போழ்தில் ஜரை யேவரும், மரணகாலத்தில் மரணமேவரும் ஆதலின் போகிதரித்திரர்களின் விசேடத் தை யறியாததாய்ச் சமமாகவே இக்காயமிருக்கும் என்பதாம்.

(ச.) ஈகை = கார்யா (வழக்கா) திக்கனுகூல சேஷ்டை. வீந்துபோகும்=நிதியும் அரசாதியும்போற் காயமும் = கைசுவரமாகலின் விசுவசித்தற் குரித்தன்றென்பதாம். அகத்தும் புறத்தும் ; உதிரம், இம்ஃபலஷ்ணம், இரத்த தசையாதி மயமுடைத்தாய், அழகென்கொல், இரக்தமாம்சாதிகள் யாவரானுமே மிகவும் அருவருக்கத்தக்க அசுத்த மூடையனவாதலின் யாதொரு அழகையுங்காணேம். அழகு = இரம்மியத்தன்மை, தாழ்ந்தோர் = தரித்திரர், உயர்ந்தோர் = போகியர், தரமறியாது = காயமானது தர மறியுமெனின், நிறைந்த போகசாமக்கிரியை யுடையவனை யனுசரித்தே யவ்வனகாயத் தோடும் சிரஞ்சீவியாக விருக்கவேண்டும், தரித்திரன்பால் அதனினும் விபரீதமாக விருக்கவேண்டும். அங்ஙனமின்ரு தலின், தரமறியாதென்றதே தகுமென்பதாம். இரக் தமாம்சாதியசுத்தம் நிறைந்ததும் அன்றித் தரமறியாத சரீரத்தில் இரம்மியத்தன்மை யெள்ளளவும் இன்றென்பதாயிற்று. எவ்வளவும் = கிஞ்சித்தும். (72)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அத்தியந்தம் அனித்தியமாய பொருள்களில் நித்தியபுத்தி யைச் செய்யும் அறியாதவனை இக்காயத்தை நிலையென மருள்வனென்கிறார் :— மின்னென.

(ச-அ-கை.) நிலையில்லாததேயாகு மிக்காயமெனல்.

மின்னிடத்திற் சரற்கால மேகத்திற் கந்தர்வ வியன்மூ தூரி
னன்னிலைமை யெண்ணுவோ னெவனவனே யுடனிலைமைநாடு கிற்போன்
மன்னுகிலா தசைந்துபல தொழிற்றரங்கஞ் செறிபிறவி வாரி தன்னி
லென்னபிறப் பெய்துகினு மிளைமைமிகு தியரத்திக் கேது வாகும். (73)

(ப - ரை.) மின்னிடத்தில் = மின்னல்களிடத்திலும், சரற்காலமேகத்தில் = சரற் போதுற்ற வெள்ளிய மேகங்களிலும், கந்தர்வ வியன்மூதூரில் = அற்புதமான கந்தர்வ நகரங்களிலும், நன்னிலைமை = நன்காய திரத்தன்மையை, எவன் = எம்மூடன், எண்ணுவோன் = விசேடநிர்ணயஞ் செய்வனே, அவன் = அம்மூடனே, உட னிலைமை = விக்கிரக நிக்கிரக மின்மையை, நாடுகிற்போன் = விசுவாசத்தோடு மெண்ணுகிற்பன், மன்னுகிலாதசைந்து = நிலைபெறுது சஞ்சலப்பட்டுத் (தரளாகாரமாய,) பலதொழிற் றரங்கஞ்செறி = நானுவிதமான கிரியைகளென்னும் அலைகள்நிரம்பிய, பிறவிவாரிதன்னில் = சம்சாரசாகரத்தில், என்னபிறப்பெய்துகினும் = எவ்வகையான உயர்ந்த ஜன்மத்தையடைந்தபோதினும், இளமை = பால்யம், மிகுதியரத்துக் கேது வாகும் = கேவலம் பெருந்துன்பத்திற்கே காரணமாகும். (எ-று.) (73)

(ஸ்ரீ - வீர.) விக்கிரகம் = சரீரம். இங்ஙனங் காயத்தை விசேஷமாக நிந்தித்து அதனவஸ்தையை விசேஷமாக நிந்திக்க வேண்டுமென்று முயன்று ஆதியிற் பால்யத்தை நிந்திப்பார், மன்னுஎன்றார். உம்மை இழிவிலாம். தரளாகாரம் சஞ்சலாகாரம், பல தொழிற்றரங்கம் செறிபிறவிவாரி = செய்யத்தக்கனவாய இகலோக சம்பந்த பரலோக சம்பந்த பெரும் பெரும் காரியங்களாய தரங்கங்கள் நிறைந்த சமுத்திரமென்றறிக. ஜன்மம் பெற்றபோதினும் வர்த்தமானத்தின் என அத்தியாகாரமாம். பொய்யாயிரா நின்ற அஞ்ஞானத்தின் விகாரமாயும், கனவிற்காணும் நகர்க்கொப்பாயும், "தன்றேகத்தி லிஷ்டப்படி யுலவுகின்றனன்" என்னும் மறைப்படி கனமயல் கட்காதாரமாயும் வெட்ட வெளியாயழிவை யடைவதாயும் இருத்தலின் இக்காயம் அத்தியந்தம் அசத்தியமாம், இத்தகையதி லிச்சையுற லெங்ஙனமேலும். மின்னலின் கண்ணும், சரற்கால மேகத் தினிடத்திலும், கந்தர்வ நகரத்தின் கண்ணும், நன்னிலைமையை நாடுபவனெவனே அவனே இக்காயத்தின்கண்ணும் நம்பிக்கை வைக்குக. விரைவிற் கெடுவதிற் றன்றிறமையைக் காண்பிக்கும் பொருட்டு வலுவின்முயன்ற பதார்த்தங்களுக்குள் எப் போது மழியுங்காரியக் கூட்டத்தை வெற்றிகொள்வதாய எவ்வெம்மின்னல் சரற்கால மேகம் முதலியனவுளவோ அவற்றினும் வெற்றிபெற்று மேன்மையை யடைந்ததும், நாச ஹேதுவாய தோஷசாமக்கிரி மிகுத்திருத்தலின் பிரபலதோஷத்தோடு கூடியதும் ஆகிய இக்தேஹப்ரபஞ்சத்தைத் துரும்பிற் கொப்பாகத் துச்சபுத்தியினனே நீக்கியான் சுக மாக விருக்கின்றேன் என்பதாம். அறியாமை பதிதாகம் நோய் சுசியிலாமை சஞ்சலம் என்பவற்றோடு கூடித் தூடிக்கப்பெறுவதும், விலங்கு பறவைகட்கு ஒப்பாயிருப்பதும் ஆகியபாலியம் நிந்திக்கத்தக்கதா மென்பார், மன்னுகிலாதென்றார். அற்றேல், தேகத் திற்குண்டாம் பாலிய அவஸ்தையானது யாவராலும் விரும்பும்படியான மிக இரம்மியமா யிருத்தலின் உடம்பின் எல்லா அவத்தைகளுமே துக்கரூபங்களெனக் கூறுதல் முடியாது; மேலும் "பேரிறையீவனும் பெருமிறையவனும், சீரிளங்குமரனும் சிறந்தபேரின்பையுற், றூர்தரவுறங்க லெவ்வாறுமோ" என்னுஞ் சுருதியினனும் பாலியமானது மிகுந்த ஆனந் தத்தோடு கூடியதெனப் பிரதிபாதிக்கப்பட்டிருத்தலினனே மிகத்துக்கமெனல் எங் ஙனங் கூடுமெனின்? விஸ்தாரமா யது செய்யும் அனர்த்தமிகுதியைக் கூறுகின்றார், எய்துகினு மிளமையென, பலவிதமாய்ச் செய்யவேண்டு மென்னும் அபிமானத்தால் அலந்து கொண்டிருப்பதும், நான்குவித சரீரங்களோடு கூடித் திரமற்ற ஆகாரத்துடன் சஞ்சல இயற்கையுடையதும், ஆகிய சமுசாரசாகரத்தில் மனுடஜன்மங் கிடைத்தபோதி னும் "அரியமானுடம் பெறலரிதரிதே" எனமறை கூறலின் மனுடப்பிறவி கிடைப் பதற் கருமையினும் அருமையா யிருந்தபோதினும் பாலியம் கேவலந்துக்கத்தின்

பொருட்டேயாகும். மாலைப்போது வானின்மேகம் பலநிறப்பட்டுப் பொலிதலும், மரண காலத்தில் நகரம்பொலிதலும் கந்தர்வநகரமா மென்பர்.

(ச.) கந்தர்வநகரமென்பது வியோமத்தில் விசித்திரவர்ணங்களோடு கூடிய பிராசாதாதி (மேன்மாடி கோயின்முதலிய) ரூபமாகப் பரிணமித்துக் கணத்தில் வேறுபடுந் தரணிகிரணமென்பபடும். தரளாகாரமாய் = அஸ்திரசொரூப இயற்கைத்தாய் அநேக கர்த்தவ்ய காரியபரம்பரைகளாகிய தரங்கங்களையுடையதா யிருக்கும் இச்சம்சார சாகர மென்பதாம். (73)

(ஸ்ரீ-வீர-அ-கை.) பிரிஞ்ஞைசெய்ததையே விரித்துப் பகர்கின்றார்:—தொலையென.

(ச-அ-கை.) பாலியங் கேவலம் படுதுயர்ப் பொருட்டேயெனப் பட்டது முன்னர், அம்மிருதுயரத்திற் கேதுவாருமென்றதனையே வற்புறுத்துவான் வாலிபத்திற் சம்பவிக்கும் துக்கஹேதுக்களைத் தெரிவிக்கின்றார்:—தொலையென.

தொலைவறுமா பத்தெளிமை சொல்லின்மை மடமாசைத்துவட்சி யெய்தி
யுலைவுறுசை சவத்துடனே யுலையியல்பா மனங்கூடி யோத நீரி
னலைமடவார் விழியனலின் கொழுந்தொடுமின் னிவைக்கெல்லா மலைவு கற்பித்
தலைதலுறு நாய்போல மலமருந்து மற்பத்தான் மகிழும் வாடும். (74)

(ப - பை.) தொலைவறும் ஆபத்து = நீக்கிக்கொள்ள முடியாததான ஆபத்து, எளிமை = அதற்கேதுவான அசக்தி, சொல்லின்மை = அயலாராலும் பரிகாரஞ்செய்வித்துக் கொள்ளமுடியாததான மூகத்தன்மை, மடம் = மூடமதியுடைமை, ஆசை = திருஷ்ணை, துவட்சி = லோலத்தன்மை, கிருத்நுதை, தீனத்தன்மை முதலியவற்றை, ஐய்தி = பாலியத்திலடைந்து வருந்தும். உலைவுறு = மிகவும் சஞ்சலத்தன்மைவாய்ந்த, சைசவத்துடனே = பாலியத்தோடு, உலையியல்பா மனங்கூடியோத நீரில் = இயல்பாகவே அதிசஞ்சலத்தை யடைந்திராநின்ற சித்தமும் கூடிவீட்டேதையாஞல் இயற்றுங் குசாபலத்திற்குக் கணக்கு மோதலுளதோ; இலதாம். அலை = கல்லோலம், மடவார் விழி = மடமையுற்ற மங்கையர்கண்கள், அனலின்கொழுந்து = சுவாலைமாலை, ஒடு = இவற்றுடன், மின் = மின்னற்கூட்டம், இவைக்கெல்லாம் = கூறிய பொருள்கட்கெல்லாம், அலைவுகற்பித்து = சபலத்தன்மையை யுபதேசித்து, அலைதலுறும் = பாலியமனம் அலைந்தேதிரியும், நாய்போல = ஞாளிபோன்று, மலமருந்தும் = பாலன் அமேத்தியத்திலேயே இரமிப்பன், அற்பத்தால் = சிறிது தின்பண்டங் கிடைப்பினும், மகிழும்= சந்தோஷமடைவன், (அதிற்சிறிது கீழேசிந்திவிடினும்) வாடும் = பேரழுகையுறுவன். (எ-று.) (74)

(ஸ்ரீ - வீர.) திருஷ்ணை = அருத்தமாத்திரவிஷய ஆகாங்ஷை. கிருத்நுதை = அர்த்த விசேஷவிஷய அபிகாங்ஷையென்னும் லோலுபத்தகைமையாம். மனமும் பாலியமும் மருவின்கெட்ட சஞ்சலத்தன்மையில் அந்தமியாதுளது, ஒன்றுமின்றும், குசா பலத்வத்திற்கு அந்தமே யோதமுடியாதாம். ஓதநீரில் = ஓதவே முடியாதாம் என நீர் என்பது தேற்றத்தை யுணர்த்திற்று. சைசவம் = சிசுத்தன்மை, அதனுடனேகூடிய மனம் பேரலைச்சற் கேதுவாமென்க. ஞாளி = சுனகன். சக்தியில்லாமை, ஆபத்து, பரஞ்ஞதி விடயங்களில் விருப்பு, பேசமுடியாமை, மூடமதியுடைமை, வியாபாடல் குணுகுலமாய்த் திரிதலாதியிலாசை, இடையாவிடிற் தீனத்தன்மை, அதிசஞ்சல மூடைமை, என்னுமிவையாவும் பாலியத்தில் நிகழ்கின்றன, கோபம் அழுகை, கொடூரம், தைனியம், இவைப்புமுதலிய தசைகளையும் வேறு அநந்த துர்த்தசைகளையும், பாலியமானது யாவை

கட்குக் கட்டுத் தம்பமிருப்பது போலக் கட்டுமிடமாயிருக்கும். மனதின் சஞ்சல மிருதியானே துக்கம் மிருத்துவருதல் வெட்டவெளியேயாம், மனமியல்பாகவே சஞ்சலமானதாம், பாலியமோ அதிசஞ்சலமுடையதாகும், ஆகவே யவ்விரண்டுஞ் சேர்ந்ததனுலுண்டாம், அனர்த்தத்தில் தன்னைக்காப்பாற்றிக் கொள்பவன் யாவன்முனிருக்கின்முன். சைசவத்தோடுகூடிய சித்தத்தினின்றும் சஞ்சலத்தை மங்கையர் கண்களும், மின்னற் கூட்டங்களும், சுவாலாமாலைகளும், அலைகளும், கற்றுக்கொள்ளுகின்றன. சைசவமும் மனதும் எப்போதும் சஞ்சலசுபாவங்களுடையனவாய்ச் சகல வியாபாரங்களிலுமே சகோதரர்கள்போலவே குறிப்பிக்கப் படுகின்றன. அற்பத்தினுலேயே பாலகன் வயமாகி விடுகின்முன், அற்பத்திலேயே விகாரத்தையு மடைகின்முன், மலத்திலேயே இரமிக்கின்முனுதலின் இப்பாலன் நாய்போலவன்முே திரிகின்முன்.

(ச.) ஆபத்து = வாலக்கிரகாதி பீடையும், எளிமை = கடிக்கும் மசகாதிகளைத் தொடைக்குந் திறமின்மையும், சொல்லின்மை = சொல்லுதற்குச் சக்தியின்மையும், மடம் = இதாகித விவேகமின்மையும், ஆசை = தாகமிருதியும், கிருத்துதை = கண்டவத்துக்களனைத்தினும் வாஞ்சையும், லோலதை = சாபல்யமுடைமையும், தைன்யம்= அதைர்ய முடைமையையும், என்னுமிவைபோன்ற துக்கசாதன மனைத்தும் வாலியத்திற் குடிகொண்டிருக்கும் என்பதாம். கூடின், அவ்வாலியசலனம் எத்தன்மையதாமெனின் கூறுகின்முர் அலஎன, அலையாதிகள் உலகத்திற் சலனரூபமென்பது பிரசித்தமாம். அவைகளும் சலனமனதோடுகூடிய பாலியத்தினுலே அப்பியசித்தன என்றதாயிற்று. அலையாதிகட்கு சைசவத்தோடுகூடிய சித்தமே சலனோபதேசத்தில் குருவென மதித்தேன் என்பது கருத்தாம். அற்பவுபகாரத்தாற் சந்தோஷிக்கும் அற்பவபகாரத்தால் கிலேசிக்கும். மலபங்காதியின் கண்ணே இரீடிக்கும் ஆதலால் பாலியம் நாய்போல் துச்சசுபாவமுடைய தென்பதாம். (74)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலும் பாலியத்தினது சாபல்யத்தையே விரித்துக் கூறுகின்முர்:— மண் என.

மண்ணுகரும் விண்மதியை வரவழைக்கு மிம்மடமை மகிழ்ச்சியாமோ
நண்ணுகுரு தாய்தந்தை யுற்முர்மூத் தோரெவர்க்கு நடுக்கங் கூரும்
புண்ணுறுசை சவம்பயத்துக் கிடமாகுங் குற்றமெலாம் பொதிந்த கூடா
மெண்ணுமவி வேகவிடன் வாழ்மனையாம் யார்க்குமிதி னின்ப மெய்தா. (75)

(ப - வை.) மண்ணுகரும் = புவனமுண்ண விழையும், விண்மதியை வரவழைக்கும் = அம்பரத்தில் நின்றும் இந்துவை வரவழைக்க இச்சிக்கும். இம்மடமை = இத்தகைய மூர்க்கத்தன்மையோடு கூடிய பாலியம், மகிழ்ச்சியாமோ = சுகத்தின் பொருட்டு எங்ஙனமாகும்? ஆகாதாம். நண்ணு குரு = கல்விதரவரும் உபாத்தியாயரையும், தாய்தந்தை = ஹிதத்தைவிரும்பும் மாதாபிதாக்களையும், உற்முர் = பந்து ஜனங்களையும், மூத்தோர் = வயது முதிர்ந்த பாலகர்களையும் கண்டால், எவர்க்கும் நடுக்கம்கூரும் = கூறியயாவருக்கும் பயந்துநடுங்கும், புண்ணுறு சைசவம்=மனம் புண்படும்படியான பால்யம், பயத்துக்கிடமாகும் = சர்வபயங்களுக்கும் ஸ்தானமாகும், குற்றமெலாம் பொதிந்த கூடாம் = சகலதோஷங்களும் நிரம்பியநீடமாம், எண்ணும் அவிவேகவிடன் = அடைய முடியாத வஸ்துக்களைச் சிந்திக்கும் அவிவேகவிலாசி, வாழ்மனையாம் = இன்புற்றுவாழும் பவனமாம், யார்க்கும் இதில் இன்பம் எய்தா = எத்தகைய பிராணிக்கும் இத்தபால்யத்தில் சந்தோஷமானது உண்டாகமாட்டாது. (75)

(ஸ்ரீ - வீர.) மண்ணுகரு மென்றதால் எதனைக் கண்கண்டதோ அதனைத்தின்ன முயலுமென்றதாயிற்று. ஆகாயத்தினின்றும், உப்பு, பச்சைமிளகாய், பச்சைக்கொத்து மல்லி, இஞ்சி, பெருங்காயம், பிஞ்சுமாங்காய், கட்டித்தயிர் கலந்து கடுகுமுதலியவற்றால் தாளிக்கப்பெற்று மணம்வீசும் தத்தியோதன கவளமென்னும் எண்ணத்தால் இந்துவை வரவழைக்க முயலும்படியான வாஞ்சையானது எம்மூர்க்கத்தன்மையா லுண்டாகின் றதோ அம்மூர்க்கத்தன்மை வாய்ந்த மௌட்டியாதி அபரிபாய பால்யம் சுகத்தின் பொருட்டு எங்ஙனமாம்? ஒருபோதுமாகாதென்பதாம். சிசுத்தன்மையோடு கூடியிருக் குங்காலத்தில் வயோதிகபாலர்கள் அடித்துவிடுவார்க ளென்னும் பயம் பிரசித்தமாம். பால்யம் கேவலம் துக்கத்தின் பொருட்டேயாம்என பிரதிக்ஞைசெய்து பிரசாதித்ததை உபசம்மரிக்கின்றார், குற்றமெலாம் என. குற்றம், = ராகாதிகள். சகலதோஷதசை களால் உபத்திரவம் பண்ணப்பட்ட அந்தக்கரணம் அப்பாலியத்திலிருக்கும் அவிவேக விலாசிக்குசுகமாகவாழும் மனோயேயாயினும் பாலியம் இச்சம்சாரத்தில் எப்புருடனுக்கும் மிகவும் மகிழ்ச்சியின் பொருட்டாகாதாம். மாறுக அத்தியந்தம் துக்கத்தின் பொருட்டே ஆம். ஒருகால் போஜன இச்சையானே அழும் பாலகனைநோக்கிப் புவனத்தை யுனக் குப் போஜனமாகத் தருகின்றேன் என்னும் வஞ்சகவாக்கியத்தாற் சந்துஷ்டனுகிப் பின்னதையே புசிக்க ஆசைப்பட்டழுவதும், மூர்க்கத்தன்மையினுலே ஆகாயத்திலிருந் தும் நிலவைப்பிடித்து வரவிழைவதும், ஆகியபாலியமானது இன்பப்பொருட் டெங்ஙன மாகும். மனத்திற் குளிர் வெப்ப முதலியவற்றை நீக்கிக்கொள்ள வேண்டுமென்னு மெண்ணமிருந்தும் முடியாமையின் இப்பாலகனுக்கும் மரத்திற்கும் யாதுபேதமிருக்கின் றது. பறவைக்குஞ்சேபோலப் பாலகன் இறகுகளாகிய புயங்களால் எழும்புவதற் கிச்சிக்கின்றனன், பசியோடு கூடியவனுயுளன் நித்தியம் பயாகார பரனுகியேயிருக்கின் றான். தந்தை தாய் ஆசிரியர் மூத்தோர் மற்றையர் முதலியோரால் சைசவத்திற் பயம் இருந்துகொண்டே யிருக்குமாதலிற் சைசவம் பயத்திற்காலயமாம். சகல தோஷதசை களானே தூஷிக்கப்பட்ட மனத்தையுடையதும், அவிவேகவடிவ தடையிலாமற் சஞ் சரிக்குஞ் சீவனுக்குவீடும், ஆகிய பாலியமானது ஈண்டு எவர்க்குமே இன்பத்தைத் தரத் தகுதியுடையதாகாதாம்.

(ச.) மண்ணுகரும் என்பது உபலக்ஷணம். அன்னியருடைமையாயினும் புசிக்கத் தகாதவையாயினும் அவ்வஸ்துவினத்தையும் புசிக்கவாஞ்சிக்கும். விண்மதியை வரவழைக்கு மென்றதும் உபலக்ஷணம். வருத்தித்தர பொருத்தமற்றன முடியாதவனைத்தையும் வருத் தித்தர இச்சிக்கும். இம்மடமை = இவ்வறியாமை நிறைந்தபாலியம் எப்படிச் சுகமிழித் தமாமென்பதாம். குற்றமெலாம் = முற்கூறிய தோஷங்களனைத்தாலும் தன்னைப் பிராயம் வீக்கனிக்கப்படு மென்பதாம். பாலியம் யாவருக்குமே சந்தோஷத்தைத்தர சமர்த்த முடையதாகாதாம். (75)

(ஸ்ரீ-வீர-அ-கை.) அநேகதோஷ ஆஸ்பதமான பால்யம் துக்கத்தின் பொருட்டாம் என்றுலாகுக. யவ்வனமோ ஆற்றலுடைமை பிறர்க்குப்பாண்மை, முதலிய குணங் களால லங்கரிக்கப்பட்டிருத்தலின் சுகத்தின் பொருட்டாம் எனச்சங்கிப்ப அதனை நிந் திக்கின்றார் : உலோபம் துவேடம், மதம், அசூயை, அபிமானம், மாச்சரியம் முதலிய வற்றுனே தூடிக்கப்பெற்றதும் காமம்முதலிய அனர்த்தங்களின் இல்லமும் ஆகிய யவ் வனத்தை நிந்திக்கின்றார் : பாலியமானது மிக மூர்க்கத்தன்மையோடும் ஆசையோடும் பரதந்திரத் தோடுங் கூடினமையின் மிகுதியருக் கேதுவென்பதாக, ஆனபோதிலும் யவ்வனமானது அவ்வாறுகாமையினுலும் பலவிதமாய் போகரச ரஞ்சிதத்தன்மையினு

னும் சுகவேதுவேயாகலாமென இச்சிக்கத் தக்கதேயாகுமெனின் யவ்வனம்போல வனர்த்தத்தைக் கொடுப்பது யாதனதா மென்கின்றூர் இப்பருவத்தென.

இப்பருவத் தகர்த்தமகன் றிடரில்வீ ழெவ்வனத்தி லேறி நெஞ்சா
மொப்பரிய பொந்திலுறை காமனெனும் பேயறைய வுள்ளம் வாடுஞ்
செப்பரிய விரிவுடைத்தாய்த் தெளிந்துபரி சுத்தமாய்ச் சிறந்தநேனு
மைப்புயனு ணதிநீர்போன் மதிகலங்கு மெவ்வனத்தின் மயங்கு நாளில். (76)

(ப - ரை.) இப்பருவத்தகர்த்தம் அகன்று = இந்த பாலியபருவத்த கர்த்தங்கள கன்று பிகஆசையுள்ளத்துடன், இடரில் வீழ் = பெருந்துன்பத்தில் வீழ்வதற்காக, எவ் வனத்திலேறி = மகாசம்பிரமத்தோடும் காளைப்பருவத்தில் ஆரோகணித்து, நெஞ்சாம் ஒப்பரிய பொந்திலுறை=தன் மனமாகிய உவமையின்றிய பிலத்துவாரத்திலிருந்து வலு வில் நானுவித விப்பிரமங்களேயீந்து வாழும், காமனெனும் பேய் = மன்மதப் பிசா சானது, அறைய=ஓங்கிவலுத்த அடிகொடுக்க, உள்ளம் வாடும் = மனம் பரவசமாய்த் துயருறும், செப்பரிய விரிவுடைத்தாய்=சொல்லுதற்கரிய விஸ்தீரணமாகி, தெளிந்து = பிரசன்னமாகி, பரிசுத்தமாய் = பாவனமாகி, சிறந்தநேனும் = விசேடித்திருந்த போதினும், மைப்புயனுள் = கார்மேகநிறைந்த மழைகாலத்தில், நதிநீர்போல = ஆற் றில் ஓடிவரும் வெள்ளநீர்க்குச் சமானமாக, மதிகலங்கும் = புத்தி கலக்கத்தையடையும்? யெவ்வனத்தில் = இத்தகைய தாருண்யப்பருவத்தில், மயங்குநாளில் = மயலுற்றிருக்கும் போது. (எ-று.) (76)

(ஸ்ரீ - வீர.) ஆசையுள்ளத்துடன் = காமாதிகளாலே உபத்திரவம் பண்ணப்பட்ட அந்தக்கரணத்துடன். வீழ்வதற்காக யெவ்வனத்தினின்று மெனச்சேர்க்க. தன்மனப் பொந்திலுள்ளேதனித்திருந்த தினிதுவாழும் பன்மயல்மிகவுமீயும் படர்முலோமோகப் பேயால் அடிபட்டுமாயும். விஸ்தீர்ணம் = வெகுபொருள்களைக்காண்பிப்பதாம். கலங் கும் = அப்பிரசன்னமாம். பாலிய அனர்த்தத்தை விடுத்து போக உற்சாக மயக்கத்தா னும் மேற்கூறப்படும் காமப்பேய் முதலியவற்றுனும் கெடுக்கப்பட்ட மனத்தையுடையவ னுகிய புருடன் இடர்ப்படும் பொருட்டு யவ்வனத்தி லேறுகின்றன். பதினைஞ்சுவருட மென மாண்டவ்யமகரிஷியால் பால்யம் எல்லையிடப்பட்டிருத்தலின் அத்தகையபாலி யம் இடர்ப்பொருட்டாகாதாம். யவ்வனமோ இடர்ப்பொருட்டேயாம். யவ்வனத்தில் மூர்க்கனவன் அனந்த விலாசத்தோடு (சேட்டையோடு) கூடிச் சஞ்சலமாயிராநின்ற தனது மனதின் இராகத்துவேஷாதி பரிணுமங்களே யனுபவித்து ஒரு துயரினின்றும் மற்றெருதுயரை யடைந்துகொண்டே யிருக்கின்றன். தனது மனதாகிய துளையுட் புகுந்து நானுவித சம்பிரமங்களைச் செய்துகொண்டிருக்கும் காமப்பேயினுலே பலாத் காரமாய்த் தன்வயமற்றவனுகி விவேகத்தைவிட்டு அதன் வயப்படுகின்றன். இதனுனே சுதந்தரமின்றிய மனமானது தருணிகளைப் போலுஞ் சஞ்சல வியற்கைவாய்ந்த சிந்தை கட்கு நிதிமுதலியவற்றைக் காணும்பொருட்டுக் குழந்தைகளின் கையிற்கொடுத்த சித்தாஞ்சன மானது சஞ்சல வியற்கைவாய்ந்த அவர்கள் விழியொளிகட்குத் தடையிடா மல் பூமிசிலை முதலிய மறைப்பையகற்றி இவ்விடப்படி நிதியைக்காணும்படி ஆற்றலைச் செய்விப்பதே போலத் தடையிலாம லிட்டப்படி சுழலவழிதரும். யவ்வனத்தில் உள்ள மானது தோட்டத்தைக் கெடுத்தலானே நிர்மலமா யிருந்தபோதினும் உதாரதன்மை யானே விஸ்தீரணமா யிருந்தபோதினும் குணத்தைத் தருதலானே புனிதமா யிருந்த போதினும் இன்னும் தண்மை இனிமை முதலியவற்றேடு கூடியிருந்தபோதினும் மாரி

காலத்தில் தெளிந்த நதியானது கலக்கத்தை யடைவதேபோலக் கலக்கத்தை யடையும்.

(ச.) இடரின் வீழ் = மனோரதம் கெடுக்கப்பட்டுத் துன்பத்தினுல் தன் தருமம் இழந்து போதலாம், ஒப்பரிய = அளவற்ற பிரமங்களைத் தாராநின்ற காமமெனும்பேய், விரிவுடைத்தாய் = வித்தியாப்பியாசத்தால் விஸ்தீரணமாய், தெளிர்த்து = குருசேவை யால் பிரசன்னமாய், அதாவது நிர்மலமாய், பரிசுத்தமாய் = புண்ணிய கதியால் பாவனமாய். (76)

(ஸ்ரீ-வீர-அ-கை.) யவ்வனத்தி லுண்டாம் அனர்த்தங்களையே வருணிக்கின்றார் கருத்தென.

கருத்தெனுமான் மருண்டோடி விடயமெனுங் குழியில்விழக் காயமென்னு
மருத்தலத்தி லெவ்வனமாங் கடுங்கான லெழுந்துமிக வளராநிற்கும்
பெருத்ததுய ரிளமைநல மெவ்வளவுண் டவ்வளவும் பெருகாநிற்கு
மருத்திகளு மெவ்வன மவ்வளவும் விரைந்தெழுந்து மிகவகர்த்தஞ் செய்யும்.()

(ப - ரை.) கருத்தெனுமான் = மனோமிருகம், மருண்டோடி = மயங்கியோடி, விஷயமெனுங் குழியில் = சப்தாதி அவிட்டத்தில், விழ = வீழும்படியாக, காயமென் னும் = சரீரமாகிய, மருத்தலத்தில் = மருப்பூமியில், எவ்வனமாம் கடுங்கானல் = தாருண்யமாம் கொடுந்தாபத் தாங்கானனீர், எழுந்து = உதித்து, மிகவளரா நிற்கும்= அதிகமாய் விருத்தியாம், இளமை நலம் = யவ்வனமானது விருத்தியாதல், எவ்வள வுண்டு = எது காலபரியந்தமாமோ, அவ்வளவும் = அதுகால பரியந்தமும், பெருத்த துயர் = பெருந்துன்பத்தை யீயும், அருத்திகளும் = காமாதிகளும், பெருகா நிற்கும்= வளர்ந்து செல்லும், சென்று, எவ்வனம் அவ்வளவும் = தாருண்ய மிருக்கும் பரியந்தம், விரைந்தெழுந்து = வேகமாக ஊர்ப்பரித்து, மிக அகர்த்தஞ்செய்யும் = கேவலம் நாசத்தையே செய்யாநிற்கும். (எ-று.) (77)

(ஸ்ரீ-வீர.) சரீரமே மருப்பூமியாம் ஆண்டுக் காலமனுக்கிரகித்த வைசுவானர தாபத் தால் உற்பன்னமான யவ்வனப்பேய்த்தேர் என்பதாம்: யவ்வனமே கானல்நீர் என்பது திரண்டபொருளாம். அவடம் = படுபள்ளம், யவ்வனத்தினது ஆரம்பத்தில் தோஷம் கூறி அபிவிருத்தியின் கண் அதைக் கூறுகின்றார், எவ்வளவு உண்டென. யவ்வன மானது எவ்வளவுகாலம் எத்துணை உயர்ந்து விரிந்து பெரிதாகுமோ, அவ்வளவுக் கவ்வ ளவு மேன்மேலாகக் காமஜன்னிய ஜ்வரமும், காமங்களும், காமிகளும், அபிவிருத்தி யடைந்து கொண்டே போவார்கள். காயமாகிய மருப்பூமியில் காமவெயிலா னுண்டா கித் தோற்றுகின்ற யவ்வனமாகிய கடிய கானனீரைக் கண்டோடி மனமாகிய மானுனது விஷயப் படுகுழியில் வீழும்; எக்காலெக்கால் யவ்வனமாது உயர்ந்த நிலையை அடை கின்றதோ அக்காலக்கால் சந்தாபத்தோடு கூடியகாமங்கள் கேவலம் நாசப்பொருட்டே விருத்தியடைகின்றன.

(ச.) காயமே தாபம்மிகுந்த நிர்ஜல மருத்தேயமாம் அதனினின் றெழுந்த யவ்வன மேயாய கானல் நீரைநோக்கி விவேக மின்மையினுலே அதிவேகமாக ஓடி மனோமிரு கங்கள் விடயப் படுகுழியில் வீழ்ந்து மடியும். இதனுல் பரஸ்பரம் யவ்வன மங்கை யிடத்து யவ்வனனுக்கும் யவ்வனனிடத்தில் யவ்வனிக்கும் மாறி ஆங்காங்கு தோற்று நின்ற யவ்வனமானது கானல் நீர்போல் மயக்கவேது வாதலால் துக்கவேது வாமெனத் தெரிவித்ததா மென்றுணர்க. சொந்தமான யவ்வனத்திற் கிருப்பிடமாதலின் கான

லென்பது பொருந்தாமையானும் கருத்தெனும் மானுக்கு மதித்தோடல் முடியாமை யானும் கூறியவண்ணம் பொருள்கொள்க. பெருத்ததுயர், அருத்திகள் = சந்தாப சகிதமனே ரதங்களாம். (77)

(ஸ்ரீ-வீர-அ-கை.) இவ்வண்ணம் யவ்வன தோஷங்களைச் செவ்வையாய்ப் பகர்ந்து அதனலுண்டாய காமாதியால் இகபரங்களில் துக்கபீஜம் சம்பாதித்து அதன்னின்றும் கடந்து சென்றேரை, அதனைக்கடப்பதில் பெருமுயற்சி செய்யவேண்டும் முமுக்ஷுவால் என்று காண்பிக்கும் பொருட்டித் தோத்திரிக்கின்றார் எத்திற எனை.

எத்திறத்தோ ரெவ்வனமா மிடையூற்றைக் கடந்தெளிதி னேறவல்லோர்
ரத்திறத்தோரே புருடரவர்களே தொழற்குரியோ ரவரேசான்றோர்
மெய்த்திறத்தோர் சேரிடமாய் விநயநிதி படைத்தருளால் விளங்காநிற்குஞ்
சுத்தகுண வெவ்வனமிவ் வுலகிலுளதோ விசும்பிற் சூழ்காடுண்டோ. (78)

(ப - ரை.) எத்திறத்தோர் = எத்தன்மையர், எவ்வனமாமிடையூற்றை = தாருண்ய சங்கடத்தை, கடந்தெளிதின் ஏறவல்லோர் = சுகமாக நன்கு உத்தீரணஞ்செய்து கரையேற ஆற்றலுற்றவராவரோ, அத்திறத்தோரே = அத்தன்மையரே, புருடர் = நரோத்தமர், அவர்களே தொழற்குரியோர் = அப்பெரியோர்களே போற்றி வாழ்த்தற் குரியவர், அவரேசான்றோர் = அப்புருடோத்தமரே இவ்வுலகில் மகாத்மாக்களெனப் பேசுரும்பூழ்வாழ்வோர் படுவர், மெய்த்திறத்தோர் சேரிடமாய் = ஆரியஜனங்க ளடைதற்காஸ்பதமாய், விநய நிதி படைத்து = விநயபூஷிதமாய், அருளால் விளங்காநிற்கும் = கருணையால் உஜ்வல மாகியோங்கும், சுத்தகுண வெவ்வனம் = கல்யாண குணங்களா லலங்கரிக்கப்பட்ட தாருண்யம், இவ்வுலகிலுளதோ = இச்சகத்தில் எளிதாயுளதாமோ? ஆகாதிதேயாம், விசும்பிற் சூழ்காடுண்டோ — அம்பரத்தில் தருகிறை கானனம் கண்டது முண்டு கொல்? (எ-று.) (78)

(ஸ்ரீ - வீர.) யவ்வனம் தோஷாஸ் பதமெனச் சொல்லி குணமற்றதுமா மெனக் கூறுவார் மெய்த்திற மென்றார். யாவர் கொல்லாமை, மெய்ம்மை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை முதலியவற்றை விடாமற் சுகமாக யவ்வன சங்கடத்தினின்றும் ஏறவல்லரோ இவ்வுலகில் அவரே தொழற்குரியோர், அவரே புருடர் அவரே சான்றோராவார். பெரும் பெரும் முதலேகட்கு வாசஸ்தானமாம் பெருங்கடல் தாண்டு தற்கெளியதாகும். ஆனால் இராக முதலிய அலைகளின் வலுவான உல்லாசத்தோ டேற்றதும் இகழத்தக்கதும், தோடத்தோடு கூடியதும் ஆகிய யவ்வனக் கடலைத் தாண்டல் அரிதினும் அரிதாம் இவ்வாறுயின் பாலியமும் விருத்தாவஸ்தையும் மூர்க்கத் தனத்தினலும் முடியாமையா லும் புருடார்த்த சாதன மாகாமையின் யவ்வனமும் அநேகந்தோடத்தோடு கூடி யிருத்தலின் ஒருகாலத்திலும் புருடனுக்குச் சாதன அடைவினனே புருடார்த்தத்தின் பொருட்டாசை செய்யமுடியவே மாட்டாதன்றே வென்றுசங்கிப்பின் எல்லாயவ்வனத் தையும் யானிகழவில்லை, மற்றேரு, கெட்டயவ்வனத்தையே யாகும்; நல்ல யவ்வனமோ புருடார்த்தத்தையே கொடுக்கும், விநயத்தினு லலங்கரிக்கப்பட்டதும், புகழத்தக்க முனிவர்பா லிருப்பதும், சாதுக்களின் வாசஸ்தானம்போல இளைப்பாறுதலைத் தரு வதும், கருணையானே கவின்வாய்ந் திலங்குவதும், சாந்தி தாந்தியாதி குணங்களானே பிரகாசிப்பதும் ஆகிய நல்லயவ்வனம் இவ்விலக்கணத்துடன் இவ்வுலகிற் கிடைப்பது அரிதன்றே; ஏனெனின், பறவைகளாற் சூழப்பெற்ற கற்பகதருக்கள் நிறைந்தலங்கரிக் கப்பட்டதும் தேவதைகட் கிடமாயும் அதனனே தயையினுற் பிரகாசிப்பதும், பலம்,

புஷ்பம், ஐசுவர்யம், முதலியவற்றனும், கற்பகக்கொடி முதலிய குண்ங்களானும் சூழப் பெற்றதும் ஆகிய ஆகாய நந்தனவனமானது இவ்வுலகின்கண்ணே மிகவுந் துர்லப மன்றே ? இந்நந்தன வனத்தைப்போல இம்மனுடஜன்மத்திலும் கூறிய யவ்வனங் கிடைப்பதரிதாயின் பிறவிடத்தி லின்றெனக் கூறவும் வேண்டுமோ. (78)

(ஸ்ரீ - வீர-அ - கை.) யவ்வனனுக்கு ஸ்திரீவாயிலாகப் பெரும்பான்மையும் அனர்த்தம் வந்து சேர்தலின் அதனை நிந்தித்தபின்னர் அதன் அனர்த்த காரணத்துவாரமாய ஸ்திரீயை நிந்திக்கின்றார்: பிரத்தியக்ஷ நரகக்கூட்டங்களா லுண்டாக்கப்பட்ட சர்வ அங்கங்களை யுடையவர்களும் புருடர்கட்கு நரகத்தையும் ஜன்மத்தையும் எப்போதும் கொடுத்துக் கொண்டே யிருப்பவர்களும் ஆகிய மங்கையர்கள் நிந்திக்கத் தக்கவர்களே யாவர்கள் என்கின்றார்: எந்தஸ்திரீ பிண்டத்தில் காளையர்களுக்கு ரமணீயத்தன்மை புத்தியுண்டாகின்றதோ அதன் சொரூபத்தைப் பிரித்துத் தெரிவிக்கின்றார்:— சந்துறு என.

சந்துறு நரம்போ டென்பு தசைசெறி பாவையொப்பா
ரெந்திரத் தியங்குமங்க பஞ்சரத் தினிமை யென்னே
கந்தமென் குழலார் கண்ணிற்றோறதை கண்ணீர் புண்ணீர்
சிந்தையிற் பிரித்து நோக்கிற் சீரிதேன் மோகஞ்செய்வாம். (79)

(ப - பை.) சந்துறு = பொருத்துற்ற, நரம்போடென்பு தசைசெறி = சலுயு, அஸ்தி, மாம்சம் நிறைந்த, பாவை யொப்பார் = பதுமைக்குச் சமானமான, எந்திரத்தி யங்கும் = எந்திரலோலமா யிலங்கும், அங்கபஞ்சரத்து = சரீரபஞ்சரத்தில், இனிமை யென்னே = சோபனம் யாதுளது, கந்தமென் குழலார் = தகரமையூட்டி நறுமணம் நாறும் மெல்லிய கருங்கூந்தலார்தம், கண்ணில் = நேத்திரத்தில், தோல்தசை = தொக்கு மாமிசம், புண்ணீர் கண்ணீர் = ரக்தம் பாஷ்பநீர் என, சிந்தையிற் பிரித்து நோக்கில் = கருத்தின் கண்ணே பகுத்துக் காண்போமாயின், சீரிதேல்=ரம்மியமாகத் தோற்றுமாயின், மோகம் செய்வாம் = மயக்கத்தையடைவாம். (எ-று.) (79)

(ஸ்ரீ - வீர.) பதுமை = ஆடையாபரணம் தரித்தபதுமை யென்க, வஸ்திராதி நிர்மித பதுமைபோலும், மாமிசாதி நிர்மித இப்பதுமை நரம்புகளாற் கட்டப்பட்டு நடிக்கும். நரம்புகளாலும் என்புகளாலும் மாமிசக் கிரந்திகளாலும் சோபிக்கும், தோலையின் ஜல எந்திராதிபோலச் சஞ்சலமான அங்கநீடத்தில் அழகென் கொலென்பதாம். நரம்புகளின் எலும்புகளின் கிரந்திகளினுனு மெனினுமமையும், அற்றேல் மங்கையர்தம் விழிகள் சஞ்சலத்துடன் கருங்குவளையொத்து அதிரமணீயங்களாகி யிருக்கின்றன, ஸ்தனியங்களோ புரளாநின்ற வெள்ளிய முத்து ஹாரங்களோடு கூடிக் கனகசலசங்கள் போலத் திரண்டு விளங்கி மனத்தையிழுக்கின்றன, இவ்வாறிருக்க அம்மங்கையர்தம் அங்கபஞ்சரத்தில் இனிமை யென்னே யென எங்ஙனமாகோபித்தல் கூடுமெனச் சங்கிப்பப் பரிகரிக்கின்றார்:—கந்த மென்னென. சுகந்தம் ஆங்காங்கு அவயவங்களிற் சேர்க்கப் பெறுதலினுலே இயல்பா யங்கமுழுவதும் துர்க்கந்தமயமா மென்பது விளங்கும். பாஷ்பம்=விழியிலொழுகும் கழிநீராம். தோன்மாங்கிசாதி சமூகவடிவமேயன்றே லோசனம், அது உணர்வில் திருஷ்டியால் இரம்மியமாகுமாயின், தோன்முதலிய வற்றைத் தனித்துப் பிரித்து நிவ்வறிவான் நன்காலோசனைசெய்து பார்க்கட்டும் அப்போது லோசனம் சோபனமாகின்றதா பார்ப்போம் வாளா மோகிக்கின்றனன். நரம்பு எலும்பு பருத்த முடிச்சுகளோடு விளங்கும் மாம்சமயப் பாவைபோன்ற மங்கையரின் யந்திரங்க

ளாகிய சக்கிரமுதலியவற்றைப்போலச் சந்ததஞ்சுழலும் சரீரக்கூண்டில், இரமணீய மதியைச் செய்கின்றனரே இஃதென்னே, யாதொன்றையுங் காணேமே. இதன் விஸ்தாரத்தைப் பின் பார்ப்போம்; முதலில் காளைகட்கு எதன்கண்ணே நேத்திரமயக்க மாமோ அதை யாராயின் அமங்கலமாகத்தானன்றே வுளது; தோல் மாம்சம் புண்ணீர் கண்ணீர் என்பவற்றைப் பிரித்து நோக்கின், நோக்கமானது இனிதாகத் தோற்றும் பக்ஷத்தில் மோகிப்பாம், அல்லாக்கால் ஏன் வீணுப் மோகிக்கவேண்டும். இதுமயிர் இது இரக்தம் என்னும் இவைதாமே பிரியகாதலியின் நாரச்சரீரம்; இகழத்தக்க இதனனே விவேக விஸ்தீர்ணமதியுடையவர்க்காகவேண்டுவதென்னே.

(ச.) மாமிசாதி கற்பிதப்பதுமை, நரம்புகளாலுங் சூக்குமமான கிருமிகளாலும் எலும்புகளாலும் மாம்சபிண்டங்களாலும் சேர்க்கப்பெற்றதாம், பெற்றதே பெண்ணும். யந்திரலோல = யந்திரம் = சேர்க்கை விசேஷமாம், அதனுற் சஞ்சலமான, அங்கபஞ்சரத்தில் = அவயவக்கூட்ட விசேஷத்தில், இனிமையென்னே, ஒன்றுமே யின்றுமென்க. விலோசனம் இரம்மியமாயின் தோன்முதலியவற்றை வேறுபிரித்துப் பகுத்துநோக்குக என்னதானிரம்மியமென எண்ணியாராய்க, ஆராயின் தோன்முதலியவை யசுத்தமாதலினும், அவைகளுக்கு வேருகக் கண்ணின்மையினும், அற்பமும் இரம்மியஞ் சேடித்த தின்றென்பது கருத்தாம். (79)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அடிக்கடி கஸ்தூரி புனுகு சவ்வாது சந்தனம் முதலியவற்றைப் பூசி வாசனைகளானே மினுமினுக்கும் குயக்குன்றங்களைக் கழுகு குள்ளநரி முதலியவை கொத்தியிழுத்துப் புரட்டுகின்றன வென்கின்றூர்:—மேருவென.

மேருவின் குவட்டின் வீழும் விரிதிரைக் கங்கை நீர்போ
லாரமுற் றிலங்குகின்ற வணியிழை மடவார் கொங்கை
யூரயன் மயானந் தன்னி லுற்றபோ துருண்டைச் சோற்றி
னேருறு கவளம் போல நிரைநிரை நாய்க டுய்க்கும். (80)

(ப - ரை.) மேருவின் குவட்டின் வீழும் = மேரு சிருங்க தடவுல்லாகியாய், விரிதிரை = விஸ்தாரமான தரங்கங்களோடுகூடி விளங்கும், கங்கைநீர்போல் = ஸ்ரீபாகீரதியின் பிரவாகம்போல, ஆரமுற்றிலங்குகின்ற = முத்துமாலை முத்தமிட்டு விளையாடும்படியாக விளங்கும், அணியிழை மடவார்கொங்கை = அநேக ஆபரணங்களைத்தரித்து வருத்தும் மங்கையர் கொங்கைகள், ஊரயன் மயானந்தன்னில் = கிராமத்தின் வெளியேயிருக்கும் மயானங்களிலும் திக்கந்தங்களிலும், உற்றபோது = பிணத்தைக் கொண்டு போய்ப் போட்டுவிட்டபோது, உருண்டைச் சோற்றில் நேருறு = உருண்டையாகத் திரட்டி அன்னத்தாலாக்கப்பட்ட, கவளம்போல = லகுபிண்டம்போல, நிரை நிரை = வரிசை வரிசையாக, நாய்கடுய்க்கும் = நாய் முதலியவை பிடுங்கித்தின்னும். எ-று. (80)

(ஸ்ரீ - வீர.) எத்தனத்தின்கண் முத்துமாலையின் உல்லாசசாலித்தன்மையானது, மேருசிருங்க தடவுல்லாசி ஸ்ரீ கங்கையின் பிரவாகம்போன்றதாகக் கண்டதாமோ அந்தலலனையினறனமே திக்கந்தங்களிலும் ஸ்மசானங்களிலும் அன்னத்தில் லகுபிண்டம் போலக் காலத்தில் ஞாலிகளாலே தின்னப்படும் எனத் திரண்ட பொருளாம். மேருகிரி முடியிடத்தில் விளிர்கின்ற தன்மைபற்றி மேருசிருங்க தடவுல்லாசி யென்றதாம். அல்லது மேருகிரியினது சிருங்கத்திடத்தில் குதித்துக்கொந்தளித்து விளையாடிக்கொண்டிவரும் ஸ்ரீகங்கையினது தீர்த்தத்தின் வேகத்தோடுவமையுற்ற உல்லாசமாய் முலைமேற் குதித்துருண்டு சோபிக்கும் பான்மையெனினும் அமையும். பொன்மலையின்

கொடுமுடியினின்றும் பெருகி யுல்லாசமாய் வரும் விரிதிரைக் கங்கைப் பிரவாகம்போல முத்துமாலையான து கிடந்து புரளு முல்லாசத்தோடுகூடிய மங்கையரின் மலைமூலைகள் யாவை காணப்பட்டனவோ அவையே மயானங்களோடும் திசைதிசைகளில் அதிவிரைவில் நாய்களானே சோற்றுச் சிறுபிண்டம்போல மிகவு முருசியாகப் பட்சிக்கப்படும்.

(ச.) எம்மங்கையின் குயமேல் முத்தார உல்லாச சாலித்தன்மையாங் காந்திசாலித்தன்மை (ஆகிருதியன்றும்.) மேருசிங்கத் தடவுல்லாகியாய ஸ்ரீகங்காஜலப்பிரவாக சதிருசம் காணப்பெற்றதோ அதுவே காலாந்தரத்தில் மசானங்களில் ஜீவனபிண்டம்போல விரைவில் நாய்களால் பக்ஷிக்கப்படும். காய்களாற் பக்ஷிக்கப்படும் மாம்சக்கிரந்தியில் ரம்மியத்துவமென் என்பது கருத்தாம். (80)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நாரியர்கள் மகத்தான பாபரூபங்களென்கின்றார்:—மேவு வென.

மேவுதற் கரிதாய்க் கேசம் புகையதாய் விழிக்கு நன்காய்த்
தீவினைச் சிகைசேர் மாதரெனுங்கனற் றிருணம் போல
யாவரைச் சுடாது தூரத் தெரிகின்ற நரகத்தீக்குப்
பாவையர் குளிர்ந்தமேனி பசையிலா விறக தாமே. (81)

(ப - ரை.) மேவுதற்கரிதாய்=பரிக்கமுடியாதவராய், கேசம்புகையதாய்=கேசகஜ்ஜல தீரியராய், விழிக்குநன்காய்=லோசனப்பிரியராய், தீவினைச்சிகைசேர்=துஷ்கிருத அக்கினிச்சிகை வடிவஞ்சேர்ந்தவராய் ஒளிராநின்ற, மாதரெனுங்கனல் = நாரியரென்னும் எழுநா, திருணம்போல = துரும்புக்குச் சமானமாய், யாவரைச்சுடாது = எந்நரரைத் தகிக்கமாட்டாது, தூரத்தெரிகின்ற நரகத்தீக்கு = அதிதூரத்தில் ஜ்வாலைவிட்டெரியும் நரகாக்கினிகளுக்கு, பாவையர் குளிர்ந்த மேனி = ஸ்திரீகளின் சரசசரீரமானது, பசையிலா விறகதாமே = நீரச இந்தனமாகும். (81)

(ஸ்ரீ - வீர.) கேசமே கஜ்ஜலமென்னும் மையாம் அதைத்தரித்தவரென்பதாம்; எனவே மிகுதியும் துயரம் தருபவ ரென்றதாயிற்று. தீண்டமுடியாத பாபமேயாய அக்கினியின் ஜ்வாலைபோன்றிருப்பர். அரிவையர் மிகவும் ஜொலிக்கும் நரகாக்கினிக்கு சாருதாருணமான இந்தனமாயிருப்பர். சாருசப்தத்தால் அற்புதத்தன்மை ஈண்டியம்ப விழைந்ததாம், தாருணம் = பயங்கரம். ஸ்திரீகட்கு சாரு இந்தனீபாவம் சாதிப்பான் விசேஷணமாம். சரசராயினும் நீரசராவர். ரசம் = சாரம். பிராந்தத்திருஷ்டியினாலே ரசதோடு கூடியவராயினும் அதற்கயல் திருட்டியினாலே நிஸ்ஸாரநீரசமாவர். ரசசப்தத்தால் நெகிழ்ச்சியும் நிகழ்த்தப்படும். இந்தனமானது உலகத்தில் ரசமுற்றதாகவேனும் ரசமற்றதாகவேனும் உண்டாம். உபயவடிவமாய் உண்டாவதின்றும். ஸ்திரீகளோ சரசராயினும் நீரசராயிருத்தலின் சாரு இந்தனமாவர். தூரத்திலிருந்தபோதினும் நரகலக்ஷ்ண அக்கினியை மிகச் சொலிக்கச் செய்தலாலும் சாருவிந்தனமும் தாருணவிந்தனமுமாவர்கள். கூந்தலாகியமையைத் தரித்தவரும் தீண்டத்தகாதவரும், கண்ணிற்கு மாத்திரம் அழகாயிருப்பவரும் ஆகிய ஜீவினைச்சுடர் சுவாலையா மங்கையர் மனுடனைக் காய்ந்த தரும்பிற் கொப்பாகக் கொளுத்துகின்றனர். அதிதூரத்திலிருக்கும் நமஞர் புரியிற் கொடுமாயெரியும் நரகாக்கினிக்கும் மங்கையரிங்குள்ளவராயினும் காய்ந்த கட்டையா யிருக்கின்றனரென்னும் காரியகாரணத்தால் இரசத்தோடு கூடியவராயினும் இரசமற்றவரே யாவர்; துஷ்டவாசனையோடு கூடி யிருத்தலின் பார்வைக்குரசத்தோடு கூடியவராயினும் உண்மையில் இரசமற்றவரேயாவர், பார்வைக்கழகா யிருப்பவராயினும், பயனுங்காற் பாவமயமேயாவர்.

(ச.) லோசனகாந்தியர் பாபரூபவன்னியின் ஜ்வாலைபோன்றவர், நரரது பாபகன் மங்களே காரீரூபமாக ஜ்வலித்துச் சந்தாபப்படுத்துமென்பது பொருளாம். லோசனப் பிரியர் என்னும் பாடத்தில் நாரிபக்ஷத்தில் சௌந்தர்யாதிசயத்தாற் திருஷ்டிப்பிரியர் எனப் பொருள்கொள்க. அக்கினிச்சிகைப் பக்ஷத்திலோ கயனசகாரிகள் என்பது பொருளாம். குளிர்ந்தமேனி தேகத்தின் ரசதாதுக்களின் சாஹித்தியத்தாலாம். பசையிலாமையோ அவர் மனத்தில் நிர்த்தயையிருத்தலின் என்க. சாருத்தன்மை மனோகரத் தன்மையாலாம். தாருணத்தன்மைய ஹேதுத்தன்மையாலாம். (81)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மாதர்வலக்கும் தாண்டிலிரைக்கு மொப்பா ரென்கின்றார்:—மாமடமென.

மாமடஞ் செறிந்த நெஞ்சின் மனிதராம் புட்பிடிக்கக்
காமனும் வேடன் வீசும் வலையொப்பார் கருங்கண் மாதர்
தீமனச் சேறூர் சன்மச் சிறுகுழி மீனு மாந்தர்க்
கேமவா தணிக்கயிற்றுத் தூண்டிலுக் கிரையு மொப்பார். (82)

(ப - ரை.) மாமடம் செறிந்த நெஞ்சின் = பெரிதும் அறியாமையுற்ற மனத்தோடு கூடிய, மனிதராம்புள் = நரவிகங்களே, பிடிக்க = அகப்படுத்த, காமனும் வேடன்= மன்மதனெனப் பெயரியங்கிராதன், வீசும் வலையொப்பார் கருங்கண் மாதர் = நீலோர்ப்பலம்போலும் விழிகளையுடைய மடவார் வீசியெறியாநின்ற ஜாலத்திற்குச் சமானமாவர், தீமனச்சேறூர் = வெவ்விய சித்தபங்கம் நிறைந்த, சன்மச்சிறுகுழி = ஜன்மபல வலத்திலிருக்கும், மீனும் மாந்தர்க்கு= மத்ஸ்யங்களாகிய புருடர்களுக்கு, ஏமவாதனைக் கயிற்று= துர்வாசனை ரஜ்ஜுவின்கண்ணுள்ள, தூண்டிற்கு = படிசத்திற்கு, இரையுமொப்பார் = பிண்டிகையாவர். (82)

(ஸ்ரீ - வீர.) நாரியர் மூடமனத்தினையுடைய நரப்பறவைகளின் அனங்களும் வேடனுல் விரித்திடப்பட்ட அவயவபந்தன ஜாலமாவர், மிருகபந்தனவாசக வாகுரமென்னும் மூலசப்தத்தால் ஈண்டு ஜாலங் குறிப்பிக்கப்படுகின்ற தென்றுணர்க. ஜன்மமே பல்வலமென்னும் அற்பபள்ளமாம்; அங்குள்ள சித்தச் சேற்றில் உலவும் மீன்களாகிய புருடரைக் கவரும்பொருட்டு அவிவேகமெனப் பெயரிய துர்வாசனையே தூண்டிற் கயிறுமென்க. நாரியோ, படிசமென்னும் மத்சத்தைமாட்டும் கயிற்றின் நுனியிலுள்ள இரும்பு முதலியவற்றாற் செய்யப்பட்ட கொக்கிபோன்ற வத்துவில் வைத்த மீனுகாரம் பிண்டிகையா மென்றுணர்க. மூடமனத்தையுடைய நரர்களாகிய பறவைகளினங்கத்தைக் கட்டக் காமவேடனுற் பரப்பப்பட்ட பெருவலக்கொப்பாவர் இக்கருங்கண் மடந்தையர். குமரிப் பெண்ணுகிய பெரியகட்டுத்தறியில் இரதியென்னுங் கொடிய சங்கிலியால் மனமென்னும் உன்மத்த மதயானையானது கட்டுப்பட்டு ஒன்றுந் தோன்றுமல் ஏமாந்து நிற்கின்றது. சித்தமாகிய சேறுநிறைந்த சென்மமென்னுஞ் சிறு குழியில் மீன்களாப்போன்றுழலும் மூர்க்கர்கட்குத் துர்வாசனையே தூண்டிற்கயிறும், பெண்களே தூண்டின் முள்ளில் வைத்தமாவு மாவரென்பதாம்.

(ச.) சமுசாரமென்னும் சொற்ப சரசில் மீன்கள்போல மூழ்கிக்கிடக்கும் மாந்தர்க்குப் போடப்படும் துர்வாசனை யென்னும் கயிற்றுத் தூண்டிலில் மாட்டிய மாமிசகண்டமும் போல்வார் இந்நாரியர், சம்பந்த ஹேதுவாவார் என்பதாம். (82)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இங்ஙனம் பெண்டோடங்களைக் காட்டி அவற்றை யறிந்து கொள்வதால் வரும்பயனை யறிவிக்கின்றார்:—முதலென.

முதுதுயர் விலங்குமாகி முடிவில் காமாதி யென்னும்
புதுமணி வைத்த செப்பாம் பூவையரின்பம் வேண்டே
னிதுதசை யிதுநெய்த்தோ ரென்பிதரம் பிதுவென் றெண்ணில்
விதுமுக மாதர் வேட்கை விரோதமாஞ் சிறிதுநாளில். (83)

(ப - ரை.) முதுதுயர் விலங்குமாகி = பெருந்துயர்ச் சங்கிலித் தடையுமாய், முடிவில் காமாதி யென்னும் = அளவுபடுத்த வொண்ணுதற்சார்வதோஷங்களென்று சொல்லப்பட்ட, புதுமணிவைத்த செப்பாம் = நவரத்தினங்கள் அடங்கிய சம்புடமாம், பூவையரின்பம் வேண்டேன் = மங்கையர்தம் மடமைச்சுகத்தை விரும்பிலேன், இது தசை = இதுமாமிசம், இது நெய்த்தோர் = இது இரக்தம், இது என்பு இதுசரம்பு = அஸ்திபிது சாயுவிது, என்றெண்ணில் = என பருத்து ஆராய்ந்து கொண்டே யிருந்தால், விதுமுக = சந்திரவுல்லாச வதனம் வாய்ந்த, மாதர் வேட்கை = அரிவையர் மேல் வைத்த ஆசை, சிறிதுநாளில் = சில தினங்களிற்றானே, விரோதமாம் = பகையாகி யருவருப்புறும். (எ-று.) (83)

(ஸ்ரீ - வீர.) தோடங்களேயாய இரத்தினங்கள் வைத்திருக்கும் சோபன சம்புடமாகிய மாதர் வெளியின் மினுக்கேனும் உள்ளே அசுசியரும் இராகத்வேஷியருமேயாவர் என்பதாம். துக்கத்தைத்தரும் விலங்காய சங்கிலிவடிவப் பெண்ணை போதும்போதும் வேண்டாம். திரமின்மையினுனும், பிரித்துப் பார்த்தால் அசுத்த பதார்த்தங்களாயிருத்தலினுனும், பலநாளும் பெண்ணுலே பட்டதுயர் போது மென்கின்றூர்: — இதுதசை யென. விரோதமாம் = காரியர் நசைவிசரண சீலத்தன்மையை யடையு மென்பதாம். எல்லாத்தோட ரத்தினங்கட்கும் சிமிளாயும், எப்போதுந் துயரைத்தரும் பெருஞ்சங்கிலியாயும், இராகின்ற மங்கையராற் பெற்றபயன் போதும், எனக்குப்போதும், மாம்சமாத்திர முக்கியசாரமாய்ப் பொய்யாயிருக்குந் தனங்களாலும், கண்களாலும் அல்குலாலும் புருவங்களாலும் எனக்காக வேண்டுவதென்னே ! எனக்காகவேண்டுவ தென்னே !! இதுமாமிசம், இது இரக்தம், இவை யெலும்புகள் என ஆராயிற் சிலதினங்களிலேயே பெண்களினுசை இருந்த இடந் தெரியாமற் மறந்துபோம்.

(ச.) முதுதுயர் = மகத்தானதுக்க சங்கிலியாவர், மற்றுன்றிலும் பிரவிருத்திக்க வொட்டாமலும், எங்குஞ் செல்ல முடியாமலும் அவர் பொருட்டாகவோ செல்லமுடியாத விடத்தும் சென்றுவர முடியுமாறும் செய்வித்தலின், பெருந்துயரை யீயும் பூட்டாற் பூட்டி மாட்டலின், மாதரது சம்பந்தத்தால் வரும் சுகத்தை விரும்பேன். இது தசை யென முதலாக இங்ஙனம் விசாரிக்கிற் சொற்பகாலத்தில் மகளிர் சம்யோக இச்சை நசிக்கும், மீட்டதில் மோகம் வாராதென்பது கருத்து. விசரண சீலத்தன்மை = சிதிலத்தன்மை. (83)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல், போகேச்சையான திருப்ப எனக்குப் பெண் வேட்கை யலமெனக் கூறியது எங்ஙனங் கூடுமெனின் கூறுகின்றூர்:—பாரியென.

பாரியை யுடையோன் யாவ னவனுக்கே பற்றும் போகம்
நாரியை யில்லா தாற்குப் போகத்தி னலமெங் குண்டாங்
காரிகை தன்னை நீங்கிற் கருத்தறு சகத்து நீங்கும்
பேரியல் சகத்து நீங்கிற் பிரிவில்பே ரின்ப முண்டாம். (84)

(ப - ரை.) பாரியையுடையோன் யாவன் = எவன்பால் நாரி யிருக்கின்றூளோ, அவனுக்கே = அச்சம்சாரிக்கே, பற்றும் போகம் = போகத்திலிச்சையாம், நாரியை

யில்லாதார்க்கு = நிஸ்திரீகனுக்கு, போகத்தினலமெங்குண்டாம் = போகபூமியானது எங்ஙனங்கிடைக்கும், காரிகைதன்னே நீங்கில் = ஸ்திரீ ஒருத்தியையிவிட்ட மாத்திரத்தானே, கருத்துறு சகத்து நீங்கும் = மானசோல்லாச வுலகமகலும், பேரியல் சகத்து நீங்கில் = நாமரூபக்கிரியை மயமாயவுலகம் அகன்ற கணத்திலேயே; பிரிவில் பேரின்ப முண்டாம் = தனது சொரூபத்தினின்றும் பேதியாத பேரானந்தம் ஆவிர்ப்பவிக்கும்.()

(ஸ்ரீ - வீர.) ஸ்திரீயையுடையவனுக்கே போகேச்சை யுளதாம், போகேச்சையில தாயின் நிபுணனுய அன்னவனுக்கு அதன்பரிக்கிரகம் கூடாமையின்; நிஸ்திரீகன் = ஸ்திரீ பரிக்கிரக வர்ஜகன், அன்னவனுக்குப், போகபூமியெங்கே = பேர்கேச்சை யெங்கே, எங்குமில்லை யென்பதாம்; போகேச்சையானது இருக்குமாயின் அதன் பரிக்கிரக வர்ஜனம் சம்பவியாதாம், ஆகுகதானிங்ஙனம், இங்ஙனமாயினும், ஸ்திரீத் தியாகமாத்திரத்தானே என்னுய் விடுமெனின்' எல்லாவின்புமா மென்பார், காரிகை யென்றார். எவனுக்குப் பெண்பேய் பிடித்ததோ அவனுக்கே போக இச்சையாம், பெண்ணற்றவனுக்குப் போகமெவ்வாறுண்டாம்; பெண்ணுசையை விட்டொழித்தாற் பெரிதான வுலகம் போகும் பெரியதான வுலகம் போனுற் பேரின்பந் தானே யுண்டாம். (84)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பிரகரணப் பொருளே யுபசங்கரிக்கின்றார்:—வந்தென.

வந்துறு போதினன்றுய் வரியளிச்சிறகு போலச்
சந்ததஞ் சலித்துத் தள்ளற் கரியதாம் போகந்தன்னே
மூந்துநோய் மரணமூப்பு முதலவாக் துயர்கட்கஞ்சிச்
சிந்தையில் விரும்பே னெங்ஙன் சேர்வரும் பதத்தைச் சேர்வேன். (85)

(ப - ரை.) வந்துறு போதினன்றுய் = ஆபாதமாத்திர இரமணீயமாய், வரியளிச் சிறகுபோல = பொறிவண்டி னிறகுபோன்று, சந்ததம் = எப்போதும், சலித்து = அதிசஞ்சலமாய், தள்ளற்கரியதாம் = சுதுஸ்தரமாய், இருக்கும், போகந்தன்னே = அளவிறந்த போகத்தை, மூந்துநோய் = முதிர்ந்துவாராநின்ற ரோகம், மரணம் = இறப்பு, மூப்பு = ஜரை, முதலவாம் = இவை முதலிய, துயர்கட்கஞ்சி = துன்பங்கட்குப் பயந்து, சிந்தையில் விரும்பேன் = மனத்தின்கண்ணே ரமிக்க விருப்பமுறேன், சேர்வரும் பதத்தை = அடைதற்கரிய ஆநந்தவீட்டை, எங்ஙன் சேர்வேன் = எவ்வாறு முயன்றேனும் அடைவேன். (எறு.) (85)

(ஸ்ரீ - வீர.) விடயங்களே இந்திரியங்களின் பொருட்டுச் சேர்ப்பித்தலே ஆபாதமாம், விடயேந்திரிய சம்பந்தமென்பதாம். சேர்க்கைச் சமயத்திலேயே இன்பாம்; அல்லது; சேர்க்கை மாத்திரத்தானே யின்பாம், சுதுஸ்தரம் = சுலபமாகத்தாண்டமுடியாததாம். சந்ததஞ் சலித்தல் = பிரமரபக்ஷாமச சஞ்சலமாம். கிடைத்தபோது மாத்திரம் இரமணீயமாயிருப்பதும், வண்டின் சிறகுபோல மிகச் சஞ்சலமுற்றதும், விழுந்துவிட்டாற் ருண்ட முடியாததும், ஆகிய பொய்ப்போகங்களில் பிறப்பிறப்புச் சரைமுதலிய பீதியுஞல் யான் இரமிக்கவேமாட்டேன்; தங்கள் ஆசீர்வாதத்தாற் பெருமுயற்சி செய்து ஹே மகா முனிவரே! சாந்தியையடைவேன், பரமபதத்தையு மடைவேன்.

(ச.) நன்றுய் = விசாரமில்லாமன் முதலில் நோக்கும்போது மாத்திரம் இரமணீயமாய், அதனுத்தர க்ஷணத்தில் பெருந்துயரோடியைந்து தள்ளற்கரியதாம். விஷய சாக்ஷாத்காரத்தில் அற்பசந்தோஷமாதலின் திருப்தியதிகரியாமையின் சந்தோஷம் மிகு நிமித்தம் முயற்சித்து அரிதலாபமாயின் வெகு விசூபஞ் சம்பவித்தலின் உத்தரக்ஷ

ணத்திற் பெருந்துயராமென்றுணர்க. அத்தன்மையான தோஷதர்சனத்தாற் போகங் களிலிரமிக்க யான் விரும்பேன், ஆதலால், எங்ஙன் = எத்தன்மையான பிரயத்தனத் தால், துயரமுழுவதுஞ் சாந்தியையடைந்து பரமசுகரூப கைவல்யத்தை யடையலாம் என்றிச்சிக்கின்றேன். எங்ஙன் = எத்தகையதான பிரயத்தினத்திலும் கைவல்லி யத்தை யடைந்தே தீருவேன். எங்ஙன், உம்மைத் தொகை. (85)

(ஸ்ரீ - வீர - அ - கை.) யவ்வனத்திற் பெரும்பான்மையும் அநர்த்தகரணத் துவார மாகிய ஸ்திரீயை நிந்தித்து, பாலியாதிகட்குப் பாத்தியபாதக பாவந் தரிசிப்பித்துக் கொண்டு, யவ்வனத்தின்பின் வரத்தக்க ஜரையை உத்தரகிரந்த சந்தர்ப்பத்தால் நிந்திக் கும்பொருட்டு நன்கு துதிக்கின்றார்:—சோகம், மோகம், பிரிவு, பீடை, வாட்டம், நோய் முதலியவற்றோடு கூடியதும், பெருஞ்சிந்தைக்கும் அவமானத்திற்கும், இருப்பிடமும், ஆகிய வயோதிகத்தன்மையானது நிந்திக்கத்தக்கதே யாமென்கின்றார்: மேற்கூறிய வாறேலாயின், காமாதிதோஷப் பிரபலத்தன்மையினாலே யவ்வனத்திற் சுகமில்லா திருக்குக, வயோதிகப்பருவத்திலோ காமாதிகள் குறைந்துபோனதாலும் அடக்க முதலிய சற்குணசம்பன்ன புத்திர பௌத்திராதிகளால் வீட்டிற் சேவிக்கப்பட்ட வயோதிகனுக்கு அதிக சுகமானது உண்டாகக் கூடுமல்லவாவெனின் ? அந்த அவஸ்தை யானது அநேக துக்கங்கட்கு இடமா யிருந்தபோதினும் அவ்வியாவற்றையும் பின்னராய் வாம், முன்னர், "தன்னினந்தின்னும் பாம்பினங்கட்கு, இன்னினமுயலிற் றுயை யெங்ஙன மாம்" என்னும் நியாயத்தாற் பெருங் கொடூரமுடைய தென்பதைக் கூறுவாமென்கின் றார்:—ஈறறுவென.

ஈறறுசை சவத்தை யெவ்வனம் விழுங்கு மித்தை
மாறறுசை விழுங்கு மயக்கநோய் வருத்தமிக்க
பேறறுசை கைக்கொண்டாற் பேரறிவ கன்றிட்டோடும்
வேறறுமணங்கான் முன்னே மெல்லியலகலு மாபோல். (86)

(ப - ரை.) ஈறறுசை சவத்தை = அபரியாப்தமான பாலியத்தை, வலிதில், யவ்வ னம் விழுங்கும் = யவ்வனமானது பானஞ்செய்யும், இத்தை = இத்தாருணீயத்தையும், மாறறுசரை = தேகங் குணமுதலிய யாவுமே விகாரமாக்கிடப்பெற்ற வயோதிக அவஸ் தையானது, விழுங்கும் = பானஞ்செய்துவிடும், வருத்தம் நோய் = துன்புறுத்தும் வியாதிகளும், மயக்கம் = அவற்றிற்குக் காரணமாகிய ஆகாராதிகளில் அகந்தை மமதை களும், மிக்க பேறறும் சரை = மிகவளர்தலேயே பெரும் பிரயோஜனமாகவுடைய கிழப் பருவம், கைக்கொண்டால் = வந்தடைந்துவிட்டதேயாயின், வேறறு மணங்கால் = அயலாகவந்த சபத்நியால் (சக்களத்தியால்) முன்னே மெல்லியலகலுமாபோல் = பூர்வ களத்திரம் பிரிவதேபோல, பேரறிவகன்றிட்டோடும் = பெரும்பிரஞ்ஞையானது விலகி விட்டுப் போய்விடும். முன்னேயணங்காலெனினும் அமையும். (எ-று.) (86)

(ஸ்ரீ - வீர.) அபரியாப்தமான பாலியத்தை = அசமர்த்தமான பாலத்தன்மையை யவ்வன அரக்கன் இனிய திருப்தியின் பொருட்டுக் குடித்து விடுவன், யவ்வனத்தையோ ஜரைவலுவிற் குடிக்கும். இங்ஙனம் பரஸ்பரம் குரூரத்தன்மையை யடைந்திருப்பதைக் காணலாம். ஜரையானது அநாயாசமாகவே இலேசந்தருவதாம். விளையாடல் மகிழ்ந்து திரிதல் முதலியவற்றிலாசை நிறைவடைதற்கு முன்னரே, பலாத்காரமாய்ப் பாலியத்தை யவ்வனமானது விழுங்குகின்றது ; பின்பு பெண்முதலிய போகஆசை நிறைவுறுதற்கு

மூன்பே பலாத்காரமாய்த் தர்ருண்யத்தை ஜரை விழுங்குகின்றது தாங்களே பாருங்கள், பரஸ்பரம் பெருங் கொரேத்தன்மைய. ஆயாசமில்லாமலே னைத்தன்மையைத் தரும் ஜரையாற் கவரப்பெற்றவரானபோது சக்களத்தியுரல் முத்தவள் தள்ளப்படுவதே போலப் பேரறிவானது அவரைவிட்டோடியே விடுகிறது. பானஞ்செய்தல் என்றது உட் கொள்ளும் வேகம் பற்றியாம்.

(ச.) இனிச்சரை, ஈறறு = பாலக்கிரீடைகளிற் திருப்தியின்றிய; இத்தை-பர்லகத் தன்மையைப் பானஞ்செய்து விளையாடித் திருப்தியுறுத யவ்வனத்தை, விழுங்கும். இங் ஙனம் ஒன்றற்கொன்று குரூரமூடையதா மென்றுணர்க. ஒருபருவமும் போகத்தில் முடிவு பெறுத்தென்பது கருத்து. மயக்கம் = கமனாதி யத்தின விசேடங்களால் ஆயர் சமும் அதனுற் கேதமுமுண்டாம்; இதனுற் பிரஞ்ஞைபு மதிதூரத்திலகலும், தூரத்தி னின்றும் வரலால் மயக்கநோய் வருத்தமிருந்த மூத்தமனைவியால் வெகுகால போகமனு பவித்த இளையமனைவி தூரஞ்சேர்ந்து மறைதல்போலவாம். (86)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அச்சரையில் வரும் நானுவிதமான துயரையே விரித்துரைக் கின்றார்:—புரையென.

புரையுட னெகிழ்வு சோர்வு பொருந்திய லோபந் துன்பங்
கரையுறு கருமந்தன்னில் வலியின்மை கடுநோய் தோற்றம்
வரைபொருள் செயமாட்டாமை மைந்தரே முதலோர் நிந்தை
சரைநரை வருகாலத்துத் தருந்துயர்வி விதமாகும். (87)

(ப - ரை.) புரையுடன் = அநேக குற்றங்களுடன், நெகிழ்வு சோர்வு = பெருஞ் சோகமும் தளர்ச்சியும் தைன்யமும்;. பொருந்திய லோபம் = கண்டவற்றிலெல்லாம் ஆசையும் லோபமும், துன்பம் = அநேகவிதமான துயரங்களும், கரையுறு கருமந் தன்னில் = இயல்பாகவே மாசோடுகூடிய ஒருசிறு தொழிற் செய்வதன் கண்ணும், வலியின்மை = சாமர்த்தியமில்லாமையும், கடுநோய் தோற்றம் = மறைந்திருந்த கொடிய குன்ம கூயாதி வியாதிகள் ஆக்கமுற்றெழுதலும், வரைபொருள் செயமாட்டாமை = நாடிய பொருளைச் செய்ய முடியாமையும், விரும்பிய பொருளை யுண்ண முடியாமையும், அளவிட்ட திரவியத்தைக்கூடச் சம்பாதிக்கமுடியாமையும், மைந்தரே முதலோர் நிந்தை = புத்திரன் முதலியவருங்கூடச் செய்ந்நன்றி மறந்து நிந்தை செய்தலும், விவித மாகுந்துயர் = ஆகிய அநேக வகையான துக்கங்களை, சரைநரை = தோற்சுருங்கி வெண் மயிர் வேய்ந்தவயோதிகம், வருகாலத்துத்தரும் = தான் வரும்போது கொடா நிற்கும்.

(ஸ்ரீ - வீர.) ஆசை = விசேட விடயங்களிலிச்சை. (87)

விருத்தராய் நடுக்குவோரை மித்திரர் மைந்தருற்றார்
கருத்துறு மாதர்தாசர் நகை செய்வர் காணுணுதாய்
வருத்தமுஞ் சரையுமுற்று வலிகுண மிழந்த மூப்பை
யருத்திவந் தடையுங்கட்டை மரங்கழு கடையுமாபோல். (88)

(ப - ரை.) விருத்தராய் நடுக்குவோரை = வயோதிகப் பருவமடைந்து நடுங்கிய தேகமுடையவரை, மித்திரர் மைந்தர் உற்றார் கருத்துறுமாதர் தாசர் = நேயர்க ளும், பாலர்களும் காணுணுக்களும் உறவினர்களும் ஆசைப்படத்தக்க தருணிகளும், அடிமைகளும், மற்றவர்களும், நகை செய்வர் = நடையுடைபாவனைகள் உன்மத்தர்

போன்றிருத்தலின் பரிகாசஞ் செய்வர், காணெனுதாய் = அவர் தம்வடிவமோ காண்பதற்கும் அருவருப்பாய், வருத்தமும் சரையும் உற்று = அநேகந் துயரங்களையும் கவலைகளையும் தோற் சுருக்கம் அங்கத்தளர்ச்சிகளையும் அடைவுற்றதாய், வலிகுணமிழந்த = குணபராக்கிரமங்கள் குன்றியதாயிருக்கும், மூப்பை = விருத்தாப்பியமுடையவனை, கட்டைமரங் கழுகடையுமாபோல் = மொட்டைமர முழுவதும் கழுகுகள் நிறைய அடைவதேபோல, அருத்திவந்தடையும் = ஆசைகள் வந்தடையும். எ-று. (88)

(ஸ்ரீ - வீர.) ஆசை = அர்த்த விசேட விடய இச்சையாம். வயோதிகப்பருவத்தால் நடுங்காநின்ற கிழவனைப் பைத்தியகாரனைப்போலப் பார்த்துத் தாசர்கள் மைந்தர்கள் பெண்கள் பந்துக்கள், நேயர்கள், முதலியோர்கள் நகைக்கின்றார்கள். பார்க்கச் சகிக்கக்கூடாதவனும், இருக்குங் கிழவனைப் பேராசையானது, மிகநீண்டதும் பலத்தோடுகூடிய சாகை தூறு முதலியவை நிறைந்து விரிந்ததும் வேறு பக்ஷிகள் வந்து வசியாததுமாகிய மிக நீண்ட விருக்ஷத்திற் கழுகு வந்தடைவதேபோல வந்தடையும்.

(ச.) கிழமையாலே சர்வாங்கங்களும் நடுக்குற்றுத் தாசாதிகளானே பரிகசிக்கத் தக்க வீணனவயோதிகம் யாவரானும் உன்மத்தன்போல் நிந்தித்து நீக்கப்படுமென்பது கருத்து. அருவருப் புருவத்தாற் பார்த்தற்கு முரித்தன்ரு யிருக்கும் முதுகுபற்றிக் கைத்தலத்தால் முன்னெருகோலூன்றி விதிர்விதிர்த்துக் கண்சுழன்று மேற்கினை கொண்டிருமிவரும் உருவம், அருத்தி = பேராசை. (88)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பேராசை வளர்தலும் பெறமூடியாமையும் சீரேதுமில்லாமற் சிறுமையே யுறுதலும் பாரா லௌகிகமே பற்றிப் பயமிகவுறுதலும் ஆமென்கின்றார் குற்றமுமென.

(ச.) பேராசையின் சொரூப மிஃதெனல்:—குற்றமுமென.

குற்றமு மினைப்புமேவிக் குறிதன்றி யுளத்தைச் சுட்டித்
துற்றவா பத்துக்கெல்லாந் தோழியா மாசைதன்னு
மூற்றதோர் பரலோகத் துக்குறுதியே தென்று மூப்பிற்
பற்றுறு பரிகாரந்தீர் பயமிகப் படருமன்றே. (89)

(ப - ரை.) குற்றமும் இனைப்புமேவி = தைன்ய தோஷமயமாய், குறிதன்றி யுளத்தைச்சுட்டி = அதிதீர்க்க இருதயதாகத்தை யாற்றுவதாய், துற்றவாபத்துக் கெல்லாம் = கருமவயத்தால் வளர்ந்துவரும் எல்லா ஆபத்துக்கட்கும், தோழியாம் = முக்கியசகியாகிய, ஆசை = ஸ்பிருகை, தன்னும் = வார்த்திகத்தில் விருத்தியாம், உற்றதோர் பரலோகத்துக் குறுதியேதென்று = அடுத்த க்ஷணத்தில் பிராணன் நீங்கினுல் வாராநின்ற பரவுலக வாழ்விற்கு என்னதருமத்தை யான் சம்பாதித் திருக்கின்றேன் ஒன்றையும் காணேமே, அந்தோ கஷ்டம் என்னுமிப்போது என்னசெய்யத் தக்கது என்பதாக, மூப்பில் = கிழப்பருவத்தில், பற்றுறு பரிகாரந்தீர் = செய்துகொள்ளத் தக்கபரிகாரமானது யாதொன்றுமில்லாமல் அப்பிரதிகார யோக்கியமாய் அதிதாருணமாய் வளர்ந்த, பயமிகப்படரும் = பெரும்பயம் விருத்தியாம் அன்று எ. அசைநிலைகள். (எ-று.) (89)

(ஸ்ரீ - வீர.) ஸ்பிருகை = அருத்தமாத்திரத்தை விடயஞ்செய்வதாம், மறுமைக்கண் அதிதாருணங் கஷ்டம் பவிக்குமே, என்னுல் என்னசெய்யத்தக்கது என அப்பிரதிகார யோக்கியம் பயமாமெனப் பகுத்தறிக தீனத்தன்மையாகியதோமிகுந்ததும், இருதயத்தின்கண் ணெப்போதுந் தாபத்தைக் கொடுத்துக் கொண்டே யிருப்பதும், மிகவும்

நீண்டதும், சர்வ ஆபத்துக்கட்கும் முக்கியமாகிய தோழியும், ஆகிய ஆசையானது, வயோதிகத்தில் வந்து வளர்ந்துகொண்டே யிருக்கும், பரலோகத்திற்காக என்னுல் என்னசெய்யத் தக்கது, ஆ ! கஷ்டம், எனமிகக் கொடுமா யெவ்விதத்திலும் நீக்கமுடி யாத பெரும்பயத்தின் வீருத்தியானது வயோதிகத்தில் மிகவு மூண்டாகின்றது. வயோதிகத்தில் வருந்தீனத் தன்மையானது யாரே மிகமுடியாதவன் என்னதான் எவ்வாறுதான் செய்வேன், மௌனமாகவே யிருக்கின்றேன், என இவ்வாறு பல வகையாம்.

(ச.) ஆபத்துக் கெல்லாந் தோழியாமாசை = வாஞ்சித்தபொருளைக் கைவசமாக்கச் சாமர்த்திய மின்மையால் என்க. (இ-ம்.) கைவசமான டொருளை யனுபவித்தற்குஞ் சக்தியின்மையால் ஆபத்தி னிமித்தமே யாசைமுடிகின்ற தென்பதாம். மறுமைக்கண் = மறுஜன்மத்தில், கஷ்டம் = இகழத்தக்க கருமம், அப்பிரதீகாரமென்பது, கஷ்டசொ ரூபத்தை நிச்சயிக்க முடியாமையின் அதனிமித்தம் பயமும் நீக்குவதற்கு முடியாதென்ப தாம்; உறுதியேதென்று = என்னுற் செய்யவேண்டும் நன்மையாதென்று, பற்றுறும் கட் டத்தை; கட்டத்தைநீக்க முடியாமையின் அதனிமித்தமான பயத்தையும் நீக்கக்கூடா தென்பதாயிற்று. இகழத்தக்ககருமம் = ஜுகுப்சகருமம், துச்சத்தோழில். (89)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்வயோதிகத்தில் அருந்தலாதி யாசை யதிகரிக்க யனுப விக்க முடியாமையும், முடிவின் மடிதலும், துயரத்தையே தருமென்கின்றார்: — ஆதரவென.

ஆதரச் செருக்கு மல்குமருந்துதற் கரிது மூப்பிற்
காதல்செய் வலியிலாமை கருத்தெலாம் வெந்து சோரும்
போதுறு நீரர்மூற்றற் பூசுணிப் பெருங்காய் போல
மேதகுகாலன் மாந்தர் வெண்ணரைத் தலையைத் தின்னும். (90)

(ப - ரை.) ஆதரச்செருக்குமல்கும் = உல்லாசத்தோடு மாசையானது எழுந்து வரும், ஆனுல், அருந்துதற் கரிதுமூப்பில் = அவ்விருத்த அவஸ்தையில் அனுபவித் தற் கெதனையு முடியாதாம், காதல் செய்வலியிலாமை = இச்சித்த செயல்களைச் செய்யச் சிறிதும் ஆற்றலிலாமையால், கருத்தெலாம் வெந்து சோரும் = இருதய முழு வதும் தகிக்கப்பட்டுவாடும். மூற்றல் போதுறு நீரூர் = பரிபக்குவமுற்றுச் சூரணம் விரவிய, பூசுணிப் பெருங்காய்போல = பெரியகூஸ்மாண்டபலம் போலிருக்கும், மாந்தர் வெண்ணரைத்தலையை = மக்கள் தம் வெள்ளிய மயிர்மூடிய சிரங்களை, மேதகு காலன் றின்னும் = மேன்மைபிக்க காலன் உண்ணும். எ-று. (90)

(ஸ்ரீ - வீர.) உல்லாசத்தோடும் = சம்பிரமத்தோடும், ஆற்றலிலாமையால் = சக்தி மந்தத்தால்; என்பதாம். ஜரையே வெண்ணரைப்பய ணெடும்விரவிப் பஸ்மத்தால் அற்பவெண்மையை யடைவிக்கும், கூஸ்மாண்டபலமானது மேற்பாகத்தில் விபூதிக் கொப்பான வர்ணத்தால் அற்பபாண்டுரத்தையடைந்திருப்பது வெளியேயாம். எவ்வாறு எக்காலெனக்கு என்ன போஜனம் உருசியாயிருக்கும் என்பதாக ஜரையானது பிராணி களைப்பற்றி வயோதிகத்தில் நிரந்தரம் சித்தத்தைத் தகிக்கின்றது; எவ்வாறெனின், போகங்களை யனுபவித்தற்காக உல்லாசத்தோடும் பேராசையானது கிளம்புகின்றது, ஆனலனுபவிக்க முடியவில்லை, போகிக்கச் சமர்த்திருந்தால் ஜீரணமாவதில்லை. ஜீர ணிக்கும் ஆற்றலிருப்பினே போகிக்க முடியவில்லை யெனச் சக்தியின் கெட்ட நிலைமை யானதுண்டாம், அதனுற் கிழ அவஸ்தையில் அத்தியந்தம் இருதயமானது வெந்து புழுங்கும் ஜரையாகிய லவணமுதலியவற்றுனே யுபகரிக்கப்பெற்ற, புருடர்களுடைய

சிரமாகிய வெண் பறங்கிக்காயை நன்முகப் பக்குவமாயிருப்பது நோக்கிக் காலசுவாமியா ரானவர் தாமே யதனையுண்டாக்கி வளர்த்தவராதலின் இனிது புசிப்பர்.

(ச.) ஜரையேயாய பஸ்மத்தால் விலோபிதமாய சிரமேயாய கூஸ்மாண்டபலத்தைப் பரிபக்குவமானது இனிது நோக்கிக் காலேசுரர் புசிப்பரென்றுணர்க. (90)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மரணமன்னவன் விஜயமாகைக்கு ஜரையே முன் ஜாக்கிர தைப்படுத்து மென்கின்றார்:—மரணவென.

மரணமா மன்னன் முன்னர் வருநரைக் கவரி வீசித்
திரளுறு வியாதியாதி யாகிய சேனை செல்லும்
தரமறு நரைவெண் சாந்தார் சரீரமா மனைக்கு ளாபத்
துரவலி யின்மை சோர்வா மொண்டொடி மகளிர் வாழ்வார். (91)

(ப - ரை.) மரணமாமன்னன் முன்னர்=இறப்பாகிய இறைவன்முன், வருநரைக் கவரிவீசி = வாராநின்ற ஜரையென்னுஞ் தவளசாமரை யிரட்டி, திரளுறு வியாதியாதி யாகிய=கூட்டங்கூட்டமான ஆதிவியாதிகளென்னும் காமாதிருன்மாதிகளாகிய, சேனை செல்லும் = படைகள்போம், தரமறுநரை வெண்சாந்தார் = குணங்குலங் கல்விகவின் றன மூடையனெனப் பாராது ஜரைத்தவளச் சுதை லேபத்தால் வெளுத்திருக்கும், சரீரமாம் மனைக்குள் = சரீர அந்தப் புராந்தரத்தில், ஆபத்து உரவலியின்மை சோர்வு ஆம் = விபத்து அசக்தியூர்த்தி என்று சொல்லப்பட்ட, ஒண்தொடி மகளிர்வாழ்வார் = ஒள்ளிய தோள்வளையலணிந்த அங்கனையார் சுகமாக ஜீவித்துக்கொண்டிருப்பர். (91)

(ஸ்ரீ - வீர.) ஜரையேயலித்தோடுகூடித் தவளசாமரமாம், அவற்றைப் பதாகினி (சேனை) யுடைத்தாயிருக்கும். பவனிவரும் மரணமன்னவனுக்கு முன்னே செல்லு மென்றறிக. சுதை = சுரணதி விகாரமாம். மரணமாகிய மன்னவர் வருவதற்கு முன் னர் ஜரையாகிய வெண்சாமரையை வீசிக்கொண்டு உள்நோய் வெளிநோய்களாகிய தமது சேனைகள் வெளியே செல்லாதிற்கும். ஜரையாகிய சுண்ணும்புப் பொடியாற் பூசப்பெற்று வெளுத்த சரீர அந்தப் புரத்தினுள்ளே முடியாமை பீடை ஆபத்து என்னும் ராணிமார் கள் சுகமாக வாழ்வர்.

(ச.) மரணமே சுவதந்திரமா யிருத்தலின் மன்னனுவன், அவன் வருவதை விளக்கு தலின் ஜரைகளே வெள்ளிய சாமரைகளாம். அவற்றையுடைய ஆதிவியாதிகளே யாயசேனைகள் முன்னே செல்லும் என்பதாம். சுதையா லேபிக்கப்படுதலாவது = சூர்ண பரிகற்பித லேபவிசேடமா மென்க, அதனால் வெளுத்திருக்கும். ஆபத்து = மிகுந்த பயமும் உரவலியின்மை = அசக்தி = அர்த்தக்கிரியையிற் சாமர்த்தியமின்மை யும், சோர்வாம் = ஆர்த்தி = பீடையும், ஆகிய, ஒண்டொடிமகளிர் சுகமாக வசிப்பார். அர்த்தக்கிரியையாவது பிரயோஜன காரியமாம். சுகவிருத்திகள் மற்றென்றுமின்றென் பதாயிற்று. உரம்திடமாக வசிப்பரெனினுமாம். (91)

(ஸ்ரீ - வீர - அ - கை) அதிகமாகக் கூறுவதானேபயனென்னே, ஜரையோடு கூடி யவன் அநேக துயரங்கட்கிடமா யிருந்து வாழ்வதைப் பார்க்கினும் வீழ்தலே நலமாம் ஜரையவமானப்படுத்த மரணமெதிர்பார்க்க வாழ்தலிலென்ன பயனும் மந்தமதியை யுடைய தத்துவமறியாத வெனக்கென்கின்றார்:— நரையென.

நரையுறு தீவாணாளாம் பேயுட னண்ணி வாழ்வென்
சரைவெலற் கரிதியார்க்கு மீடணை மூன்றுந் தள்ளும்
நிரைபவத் தவிஞையாகி நிகழின்பப் பொருள்க ளெல்லாம்
புரையுறு மெலியா நூல்போற் காலனுற் பொன்று மன்றே. (92)

(ப - ரை.) நரையுறு = ஜரையோடுகூடிய, தீவாணுளாம் = துர்ஜீவிதமாகிய, பேயுடன் = துர்க்கிரகத்தோடும், நண்ணி வாழ்வென் = பொருந்தி வாழ்வதாலென்னே பிரயோஜனம், சுரைவெலற்கரிது இயார்க்கும் = எத்தகையவர்க்கும் வயோதிகம் ஜயித்தற்கரியதேயாகும், ஈடணை மூன்றுந்தள்ளும் = சர்வ ஈஷணைகளையும் திரஸ்கரிக்கும், நிறைபவத்து = பாரம்பரியமாக வாராநின்ற சமூசாரத்தோர் பால், அவிஞையாகி = மயலாற் சுகசாதனமெனவாகி, நிகழ்=பொலியாநின்ற, இன்பப்பொருள்களெல்லாம்= சுகபாவனைகள் யாவுமே, புரையுறு மெலியால் = யாவற்றையுங் கெடுக்குங் குற்றத்தோடு கூடிய ஆசுவினால், தூல்போல் = பட்டுவஸ்திரங்கள் முதலியவை கெடுக்கப்படுதல் போல, காலனால் = பெருஞ் சங்கார தேவனால், பொன்றும் = கெடுக்கப்படும். (எ-று.)

(ஸ்ரீ - வீர.) ஜரையையடைந்து பகுயாதனைகட்குப் பாத்திரபூதமாயும் வாழும் வாழ்வு யாதுளதோ அத்துர்ஜீவித துர்க்கிர துரபினிவேசத்தால் என்னே பயனென்பதாம். திக்குவிஜயம் செய்பவரானும் வெலற்கரிதாமிச்சரை; ஞானமுடையவர்களையும் விடுகின்றதில்லையாதலின் என்க. மகாதுக்கந்தருந்தன்மையானே சர்வஷணைகளையும் திரஸ்கரிக்கின்றது. அதிமகத்தான ஜரைத் துக்கத்தால் ஆகுலப்படுத்தப்பட்ட மனத்தன் அத்துக்க நீக்கத்தையேவிழைந்து கொண்டிருப்பனன்றி மற்றொன்றையும் கருதான் என்பது கருத்தாம். இங்ஙனஞ்சென்ற கிரந்தசந்தர்ப்பத்தால் துக்க சீதசங்குல சமூசாரத்தில், குற்றமற்ற சுகம்யாண்டும் இலதாமெனத்துணியப்பெற்றதாம், இப்போதின்ப மூளதாமென வுடன்படினும் போக்தாபோக்கிய போகவடிவ அதற்கு அஸித்தியத் தன்மைத் தோடம் வந்தணுகுதலின் முக்தியானதின்றுமென்னும் உத்தரகிரந்த சந்தர்ப்பத்தால் ஓதுவதன்முன் ஆண்டுச் சுகத்திற் கஸித்தியத்தன்மையை முதலிற் கூறுகின்றார். நிரையென. உண்மையிலின்பமில்லாவிடினும் மயலாலின்பம் சிலருண்டென்பார், அவ்வாறிருப்பினுமஃதஸித்தியமேயாமென்பார் நிகழ் என்றார். ஜரையானது வந்தபின்னரும் வாழ்ந்துகொண்டிருக்க வேண்டுமென்ற துக்கவாழ்க்கையாற்கெட்ட பிடிவாதஞ் செய்வதாலென்ன பிரயோஜனமுளது, வீண்டானன்றே; உலகத்திலுள்ளவர்களால் ஜரையானது வெற்றிகொள்ள முடியாமலிருக்கின்றமையானே ஆசைகள் யாவற்றையும் விட்டொழிக்கச் செய்கின்றது. குணந்தோஷம்பலம் மேன்மை முதலிய தனது மிகுந்த விலாசங்களாலே சர்வப் பிராணிகளின்றெழில்களாகிய மனோவிமாரை இரமிக்கும்படியாகச் செய்யும் காலபுருடன் என்பார்காலனால் என்றார். மேற்கூறியபிரகாரம் போக்கியங்களாகிய தனங்கண் முதலியவை, போக ஆசை போக அனுபவகாலமாகிய பாலிய முதலிய அவஸ்தைகள், தோடமுடையனவென விரிவாய் விளம்பியமையானும், அளவிடப்படாத மகாதுக்கத்தை முடிபாக உடைத்தாயிருக்கின்றன வெனக் கூறினமையானும் ஸ்ரீ இராமர் தமக்கு இகாமுத்திரார்த்தபல போகவிராக மிருப்பதாகக் காண்பித்தனர், "இப்போது காமாதிகளின் இயற்கையை விஸ்தரிக்கும் வாயிலாய் நித்தியாநித்திய வஸ்துவிவேக மிருப்பதையும் காண்பிப்பார் பொன்றுமென்றார். அவிஞையாகி = அஞ்ஞானத்திஞலே மூடர் மயலுடையவராகி, இஃதென்னுடைய போக்கியம், யானிதன் போக்தா, இவை யதன் சாதனங்கள், இதனுலிதைச் சம்பாதித்து கெடுநாளேக்கனுபவிப்பேன், இஃதின் றென்னுலெய்தலாயது, "இஃதினி யெண்ணுமறெய்துவலினிதே" என்பன முதலிய அளவில்லாத மஞ்ஞவிகற்ப கற்பனைகளானே மிகமிகவும் விவகாரவசனங்களே வசனிப்பவரும் அற்பதேகத்திலான்ம மதியைச் செய்பவரும் அற்பசுகலேசங்களிற் பரமபுருடார்த்த மதியைச் செய்பவரும்ஆவர் ஆகிய மூர்க்கமூடர்களால் சத்துருபித்துரு உதாஹரணர் முதலிய பேதங்களாணும், தள்ளத்தக்கது கொள்ளத்தக்கது உபேக்ஷிக்கத்

தக்கது என்பது முதலிய பேதத்தானும், அவற்றுளுண்டாகிய இராகத்து வேடாதி பேதத்தானும், சம்சாரத்தைப் பெருக்கும் பிரமாண்டப் பொந்தில் ஒன்றை மற்றொன்றைக் கவரும் பெருமயக்கமானது ஒருவராலுங் கெடுக்கமுடியாத விதமாக அடைவிக்கப்பட்டுளதாம். இத்தகைய அஞ்ஞானமயமாகத் தோற்றும் அவஸ்துவான சமுசாரத்தில், குழந்தைகள் கண்ணடிக்கனியை யுண்ணக் கருதுவதேபோல மூடரே இரமிப்பரன்றி விவேகியர் இரமியார், இத்தகைய மித்தியா சமுசாரத்தின்கண்ணும் எம்மூடர்க்குத் துச்சமாகிய சுகவாசனையும் ஆசையுமுண்டாகின்றதோ அம்மூடர்களையும் எளியானது கெல்லும் வளைக்கருகிருக்கும் அறுகம்புன் னுனியை மாத்திரம்பற்றி வாழவேண்டுமென்றெண்ணி நூல்நூற்று அந்நூல் நுனியிற்றொங்கும் நூற்புழுவினது நூலை அடியோடும் அறுப்பதேபோலக் காலன் அடியோடு கெடுத்துவிடுவன். நூல் ஆருபெயராற் பட்டாடையைத் தொட்டு நின்றது.

(ச.) வாழ்வேன் = ஜரையோடு கூடியும் ஜீவிப்பதாயின் அதிதுக்கத்தோடு மேன் ஜீவிக்கத் துராக்கிரகம் செய்யவேண்டுமென்பதாம், ஈஷணை = சர்வ ஆசாதுக்கங்களையும் ஜராதிமித்த துக்கந்திரஸ்கரித்தலால் சர்வதுக்க அதிசயமுடையதா மென்பதாயிற்று. இனிக்காலம், இன்பப் பொருள்கள் = சுகபாவனைகள் = சுகசௌக்கியகந்தங்கள், நூல் போல = திருணதிக்கொத்துப்போலக் கெடுக்கும். (92)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சுகஜனக விடயசமூதாயத்திற்கு நித்தியத்தன்மை யிருக்குமாயின் சுகத்திற்கும் பிரவாகரூபத்தால் நித்தியத்தன்மை சம்பவிக்கும் எனக்கடாவ விடைதருகின்றார்:—மகரவென.

மகரநீர் கடல் குடிக்கும் வடமுகக்கனலே போலச்
சகலமும் விழுங்குங் காலன் சகத்திடை விழுங்கா தில்லைப்
புகலரும் பெரியோ ரேனும் பொழுதொரு கணமுந் தாழா
னகிலமும் விழுங்கித் தானே யகிலமாய் நிற்கு மன்றே. (93)

(ப - பை.) மகரநீர் கடல்குடிக்கும் = முதலைமுதலிய ஜந்துக்கணிறைந்த பெரு நீர்நிலையமாய சமுத்திரத்தைப்பானஞ்செய்து வற்றடிக்கும், வடமுகக்கனலேபோல = வடவாத்தீயேபோல, சகலமும் விழுங்குங்காலன் = யாவற்றையுந் தவம்சஞ்செய்யும் சகலதஸ்மரனென்னுங்காலன், சகத்திடைவிழுங்காதில்லை = கெடுக்காதவஸ்துவொன்று இவ்வுலகத்தின்கண்ணே கிடையாதாம், புகலரும்பெரியோரேனும் = சொல்லுதற்கரிய புகழையுடைய மகான்களாக இருந்தபோதினும், பொழுதொருகணமுந்தாழான் = அக்காலதேவன் ஒருகணமும்பரிபாலியான், அகிலமும்விழுங்கி = அசேஷவிசுவத்தைக் கவளீகரித்து, தானே = அக்காலன்றானே, அகிலமாய்நிற்கும் = விசுவான்மத்தன்மையையடைந்துநிற்கு. எ - று. 93

(ஸ்ரீ - வீர.) கஸ்மரன் = பக்ஷணசீலன். துச்சர்கட்குக்காலனுற் பயமிருந்தபோதினும் மகாத்மாக்கட்கு அஃதின்றுமென்றுசங்கிப்ப வீடையளிப்பார், புகலருமென்றார். பூரணநிலவெழுந்தவுடனே பொங்கிப்பெருகும்பெருங்கடலை வடவாமுகவனற்குடிப்பதேபோலச் சகலமும்விழுங்குங்காலன் விகாரபூமியானஜகத்திடை விழுங்காததுமுளதோ! இல்லவேயில்லை உண்டாயயாவற்றையுமேவிழுங்கிவிடுவன். இச்சருவதிருஷ்டியசத்தைகளையும் ஒரேகவளமாய்விழுங்கமுயன்றகாலனே, சர்வ பதார்த்தசாதாரணமாக அதிபயங்கர சங்கார உருத்திரனுவன், வல்லமை பேரறிவுமகிமைமுதலியவற்றானே மிகப்பெரியோராயிருப்பினும் ஒருகணப்பொழுதாயினும் தாழான், உடனேகொண்டுபோய்விடுவன் அதற்

தவிசுவத்தையும்தானேகவளீகரித்து விசுவவடிவமாய்க்காலனே விளங்காநிற்பன்.

(ச.) சர்வபக்ஷகனுமிக்காலன் விழுங்காதது உலகிலில்லை என்றதனால், பிரஹ்மாண்டங்கள் அநந்தமாதலின், அளவற்ற ஆயிரக்கணக்கான சகச்சாலங்கள் உள்ளன, அவையனைத்தும் அநித்தியமென அறைந்ததாயிற்று. கணமுந்தாழான் = கற்பமுடிவின் பின் கணமேனமுஞ் சகியானென்பதாம். அகிலம் = விசுவம், அகிலமாய் நிற்கும் = விசுவரூபியாயிருப்பன். (இ - ம்) காலன் ஈசுரசக்திரூபமாதலின் விசுவாகார ஈசுரரூபத்தோடபேதம் ஆரோபித்திங்ஙனங் கூறியதாம். (93)

(ஸ்ரீ - வீர - அ - கை) இரமணீயத்தன்மை, சற்கருமத்தன்மை, குணகரத்தன்மை முதலியவையும் கால நிவாரகங்களே யாவதில்லை யென்கின்றனர்:—விழுவென.

விழுமியர் சுபத்தின் பாலர் மேருவை யொப்போ ரெல்லாம்
பழுதறு கருடன் கொல்லும் பாம்பெனக் காலன் கொல்லும்
புழுதியோடிலை திரும்பு பொன்மலை புணரி வெள்ளஞ்
செழுமமகேந் திரமுங் காலன் சிதைத்துத்தன் வடிவமாக்கும். (94)

(ப - ரை) விழுமியர் = இரம்மியர், சுபத்தின்பாலர் = தூய்து தொடங்குவோர் மேருவை யொப்போர் = சுமேருபோற் பெரியர், எல்லாம் = என்பவர் யாவரையுமே, பழுதறுகருடன் கொல்லும் பாம்பென = குற்றமற்ற விகத்தராஜன் சங்காரிக்கும் அற்ப அரவமென்ன, காலன் கொல்லும் = காலபகவான் நசுக்கிவிடும், புழுதியோடு இலை திரும்பு = பாம்சுபர்ணம் திருணம் என்னுமிவற்றுடன், பொன்மலை = தங்கமலை, புணரிவெள்ளம் = சமுத்திரமேழு, செழுமமகேந்திரமும் = சர்வ வளப்பம் நிறைந்த மகேந்திரமலை என்னுமியாவற்றையும், காலன் = சங்காரபகவான், சிதைத்து = துவம்சப்படித்தி, தன்வடிவமாக்கும் = ஆன்மமயமாய்ச் செய்துகொள்வன். (எ - று) (94)

(ஸ்ரீ - வீர) தூய்து தொடங்குவோர் = மங்களகாரியத் தொடக்கம் யாவருக்கோ அவர் அத்தகையர் ஆவர். அற்றேல் அநந்தபதார்த்த விஸ்தரிதமத்தியில் காலனுக்குக்கட்டுப்படாததுஞ் சிறிது சம்பவிக்கலாமேயெனின், இன்றென்றுரைப்பார், புழுதியென்றார். ஆன்மமயமாக்குதலாவது, தனது உதரபூரகஞ் செய்து கொள்ளுதல் என்பதாம். மிக அழகாயிருப்பவர்களும், நல்லொழுக்கத்தவர்களும், மேருகிரிக்குச் சமானமாய் வல்லமையுள்ளவர்களும், சர்ப்பங்கள் கருடனால் விழுங்கப்படுவதேபோலக் காலனால் விழுங்கப்படுவார்கள். தயையேயின்றியவனும், கற்போலக் கடினமானவனும், புலி முதலியவற்றைப்போலக் குரூரமானவனும், இரம்பாதிபோலக் கூர்மையானவனும் உலோபியும் அதமனும், தன்வயிற்றை நிரப்புவதிலேயே கருத்தையுடையவனும், ஆகியகாலன் புழுதி, இலை, திரும்பு, பொன்மலை, மஹேந்திரம், அலைகடல், முதலியயாவற்றையும் தன் வயமாக்கி விழுங்கும் பொருட்டு முயலுகின்றனன். இவன் இதுவரை விழுங்காதவஸ்துவே கிடையாதென்பதாம்.

(ச.) புழுதியாதி மஹேந்திராந்தமான சகல சகத்தையும் தனது குகூயில் அந்தர்ப்பவிக்கச் செய்யுமிக்காலனென்பதாம். (94)

(ஸ்ரீ - வீர - அ - கை) யாவற்றையும் தன் மயமாக்க முயல்கின்றனன் என்பதனாலே காலன் சர்வ சங்கார கர்த்தாவெனக் கூறப்பட்டது, அதனையே விரிக்கின்றார். பெருங்கற்பந்தனில் விளங்கா நிற்கும் என்பதந்தமாய இரந்த சந்தர்ப்பத்தால், ஆண்டுப் பிரதமம் பிராகிருதப் பிரளயத்தில் பிரஹ்மாண்ட சங்காரத் தன்மையைக் கூறுகின்றார்:—அகலென.

அகல்பூதக் கொதுகிரையு மண்டமெனுங் கனியுகுத்த வத்தி யாயும்
பகலவனே கண்ணைகப் பகற்பொழுது பார்வையாற்பதங்கள் பார்த்துச்
சகமெனுந்தொல் வனத்துலக பாலரெனும் பழம்பறித்துத் தானே தின்னுந்
திகழுலகா மணிமாலைக் குணமூன்றுற் கோத்தணிந்து சிந்துங் காலன். (95)

(ப - ரை) காலன் = பிரஹ்மாண்ட சங்காரன், அகல் பூதக்கொதுகு இரையும்= விஸ்தீர்ணமான பூதமசகங்கள் கும்கும் என்றிரைச்சலிடும், அண்டமெனுங் கனியுகுத்த= பிரஹ்மாண்டங்த ளென்னுங் கனிகள் யுதிர்த்துக்கொண் டிருக்கும், அத்தியாயும் = பெரிதாய உதும்பர பாதபமாயு மிருக்கும், பகலவனேகண்ணுக = சூரியனே நேத்திரமாக பகற்பொழுது = பகற்காலமேயாய, பார்வையால் = நோக்கத்தால், பதங்கள் பார்த்து = பாகமானதை நோக்கி, சகமெனுந்தொல் வனத்து = ஜகத்ஜீர்ண வனத்தில், உலகபாலரெனும் = ஜகத்ரக்ஷகரென்னும், பழம்பறித்து = கனிகளைக் கொய்து, தானேதின்னும் = அயலொருவரு மின்மையின் சுயமே விழுங்கும், திகழுல காமணிமாலை = விளங்காநின்ற லோகரத்நாவலியை, குணமூன்றுற் கோத்து = மூக் குணங்களால் நிரப்பித்து, அணிந்து = அலங்காரப் பொருட்டு அலங்கரித்து, சிந்தும்= மீண்டும் சிதறுமாசெய்யும். எ - று (95)

(ஸ்ரீ - வீர) பிராணிகளேயாய கொதுகுகள் ஆற்றும் குங்குமத் தொனியோடு கூடிய பிரஹ்மாண்டங்களேயாய அத்திக்கனிகளின் கூட்டங்களையுடைய பேரத்திமரமாம். பிரஹ்மாண்ட சங்காரத் தன்மையைக் காலத்திற்குரைத்த மாத்திரத்தே அதனுள்ளடங் கிய சங்காரத் தன்மையும் துணியப் பெற்றதேயாம், ஆயினும், அறித்தியத் தன்மைப் புத்திதாட்டியமாதற் பொருட்டுத் தனித்து அதனுள்ளடங்கியிருக்கும் வஸ்து சங்கா ரத் தன்மையைக் காண்பிப்பவராய் ஆதியில் லோகபால சங்காரத் தன்மையைச் சாற்றுவார், பகலவனேயென்றார். பகற்காலம் = அஸ்தமய சமயம். திதிகாலத் தில் அதனை யங்கத்தணிந்து சங்காரகாலத்திற் சிதைத்துப் போக்கும். பிராணி களாகிய கொதுகுகள் கும்கும் என இரையும் பிரஹ்மாண்டங்களாய அத்திக்கனி நிறைந்த பெரிய மரமாயிக்காலனிருப்பன். தினமாகிய இமைதிறத்தலானே சூரியஞ் கிய கண்ணுற் பழுத்ததைப் பார்த்து ஜகத்தாகிய பழைய வனத்திலிக்காலஞனவன் பக் குவமாயிருக்கும் லோகபாலர்களாகிய பழங்களைப் புசித்துக்கொண்டே யிருப்பன் இது பாலக சங்காரத் தன்மையாம். வித்தைவிஷய முதலிய நூற்களானே கோக்கப்பட்ட சற்புருடர்களாகிய இரத்தினமாலையை நிரந்தரம் அலங்காரப் பொருட்டுத் தனதவயவங் களாகிய கிருத திரேதாயுக முதலியவற்றில் அணித்தணிந்தடிக்கடி அறுத்தெறிவன், யாவரையுமே யறுத்தெறிவதாயினும் குணவான்களுடைய விநாசமே லோகப்பிரசித்த மாகுமன்றே ! = இது பாலிய திங்காரத் தன்மையாம்.

(ச.) பூதங்களாகிய மசகங்களால் குங்குமத் தொனி தொனிக்கும் பிரஹ்மாண்ட ரூபபலஸ் தோமங்கட்கு (கூட்டங்கட்கு) பிருகத் பாதபத்தன்மையை அதாவது ஆசிரய பூத உதும்பர விருக்ஷத் தன்மையை யடைந்துளான். அத்தியாயும் எனப் பாதப்தவ நிரூ பணஞ் செய்தலால் காலன் சிருஷ்டி திதி சங்காரகாரணனெனக் குறிப்பித்ததாம். (உ - ம்) காலன் பூதங்களைச் சிருட்டிப்பவன், காலன் பிரஜைகளைச் சங்கரிப்பவன், சகலமும் காலத்தினது வசமாம் காலனென்றினது வசமன்றுவன் ; என்பதாம், இக்கா லன் பகற்காலமென்னும் பார்வையாற் பார்த்தலினல் பக்குவப்பட்ட லோகபாலராகிய பலங்களை முற்றும் நன்றாக உற்றுநோக்கி ஜகத்தாகிய புராதன வனத்தினின்றும் பறித் துப்பறித்துத் தின்பன். திகழுலகா மணிமாலை = சற்சனரத்தின மாலை. அணிந்து =

ஆபரணம் பூஷணு நிமித்தம் போன்மேனியிற் றரித்துப் பின் சிந்துங்காலன். " சமமாம் புஷ்பாபரணங்கடாம் பார்த்திவங்களாம் " என்னும் நியாயத்தானே இரத்தின மாலையும் பூமாலையைப்போல நிருமாலிய மாமெனக் குறிப்பித்ததாம். குணமூன் றென்றதற்கு வைராக்கியம் உபரதிஞானம் எனவேண்டுமாயின் அமைக்கலாம். (95)

(ஸ்ரீ-வீர - அ - கை.) பாலக சங்காரத் தன்மையைப் பகர்ந்து பாலிக்கத் தக்கவற் றின் சங்காரத் தன்மையையே இன்னும் பகர்கின்றார்:—சிறியவென.

சிறியசகப் பழங்குடிலிற் சிதறுலக மணியமனுஞ் செப்பிற்சேர்க்கு
மறிவில்பல பூதமாம் விலங்குகளும் பறவைகளு மளவற்றெங்கு
முறியவுலர் சகப்பாலை தனில்வேட்டை யாடிகெடு முதுகற்பத்திற் [காலன்.
பொறிவடவைத் தாமரைசேர் கடல்வியோயாட் டோடைகளாப் பொருந்துங்

(ப - ரை.) சிறிய சகப்பழங்குடிலில் = அற்பமானஜகத் ஜீர்ணமனையில், சிதறுலக மணி = பரவிக்கிடக்கும்;லோகமணிகளை, யமனுஞ்செப்பில் சேர்க்கும் = மிருத்தியுசம் புடத்தில் பொறுக்கி யடைக்கும், அறிவில்பல = தினங்களாயும் மூடங்களாயு மிருக்கும் பற்பல;பூதமாம் விலங்குகளும் பறவைகளும் = பிராணிகளாகிய மிருகங்களும் விகங் கங்களும், அளவற்றெங்கு முறிய = அளவில்லாமல் எவ்விடத்தும் ஜர்ஜரிதமாமாறு, உலர்சகப்பாலைதனில் = சுஷ்கமான ஜகத்ஜாங்கல ஜாலத்தில், வேட்டையாடி = ஆகேட கம்புரிந்து, நெடுமுது கற்பத்தில் = நெடிதுமுதிர்ந்த கற்பகாலத்தில், பொறிவடவை = பொறிப்பொறிந் தெறியும் சுவாலையுற்ற வடவானல மென்னும், தாமரைசேர் = பங்கஜ மலங்கரித்துக் கொண்டிருக்கும், கடல் = அர்ணவத்தை, வியோயாட் டோடைகளாக = இரம்மியமானகிரீடா புஷ்கரணிகளாக, காலன்பொருந்தும் = காலன் அடையா கிற்பன். (எ - று.) (96)

(ஸ்ரீ - வீர.) உலகமே ஜீர்ணகுடிசையாம், அங்கு விக்ஷிப்தமாய்க் கிடக்கும் குணங்க ளோடு கூடிய லோகங்களேயாய மணிகளைப் பெரும் பள்ளத்துடனிருக்கும் யமனுகிய சம்புடத்தில் வைக்கும் அயல்வகையினனே காலனுடைய லோகசங்காரத் தன்மையைக் கூறுவார், முறிய வுலரென்றார். அடற்சிலதாங்கி யென்பதுவரையு முள்ளகிரந்த சந்தர்ப் பத்தாலெனவுணர்க ஜாங்கலம் = காற்று மிகுந்ததேசம், இதனைக் கூறுதலால் வேட் டஞ்செய்யத்தக்க தேசங்குறிப்பிட்டதாம் ஜாலம் = சமூதாயம். இத்தகைய வனங்க ளில் பூதமிருக விநோதங்களோடு வேட்டையாடி வியோயாடும் இக்காலனெனப் பெயரிய இராஜகுமாரனுக்குக் கற்பகால மகார்ணவமானது கிரீடாபுஷ்கரணியாம் என்பதாதி உத்தரகிரந்த சமூகக் கூற்றுப் பொருள்களோடு சம்பந்தமாம் என்க. ஏகதேசத்தில் உல் லாசமாக இருக்கும் கவின்வாய்ந்த வடவ அநலமேயாய பங்கஜத்தை யுடையதாம் அச் சமூத்திரம், ஜகத்தாகிய பழையகுடிசையிற் சிதறுண்டிருக்கும் குணத்தோடு கூடிய உலகமணிகளேயுக்கிரமாகிய பொந்தினையுடைய யமனுகியசிமிழில் முறையாக அடைத் துக்கொண்டே யிருப்பன் சண்டிகாதேவி யென்னும் பிராணநாயகியோடும் கூடிய அக் காலனே வேட்டைக்குரிய காலத்தோடு விளங்கும் அரசகுமாரனுக வருணிக்கப் படு கின்றார்:—வேட்டையென, அக்காலனே வேட்டைமகிழ்வால் வியோயாடும் மகாமன்ன வன் மைந்தனுக விளங்குவன்; இச்சம்சாரத்தில் அடங்கா மேன்மையான லீலையை யுடையவனும், சர்வ ஆபத்துக்களும், மிகுதூரத்திலேயே நீங்கப் பெற்றவனும், எண்ண வொண்ணுத பராக்கிரமத்தை யுடையவனும், பிரசித்தமாகிய சூரிய சந்திராதிகளையும் பிரகாசிப்பித் தொளிரும் அரசனுகிய பரப்பிரஹ்மத்தினுடைய அநாதிமாயை யென்னும்

பட்டமகிஷியின் சம்பந்தத்தாற் கிடைத்த வடிவத்தானும் யுவராஜ்ஜிய பட்டாபிஷேகம் பெற்றுச் சம்பத்துக்களி யாவற்றையும் அனுபவித்தலினுனும் மைந்தனுமாகிய காலனு டைய சரித்திரமானது வருணிக்கத்தக்கதேயாம். மிகவும் பழமையா யிராநின்ற ஜகத் தாகிய பெருங்காட்டுக் கூட்டத்தில், தீனர்களும் அறிவில்லார்களும் ஆகிய பிராணிக ளென்னு மிருகக் கூட்டங்களோடு வேட்டை விநோதத்தைச் செய்யும், இவனுக்கே அக்காட்டின் ஏகதேசத்தில் விரிந்து விளங்கும் அழகிய வடவாமுகாக்கினி யாகிய தாம ரையா லலங்கரிக்கப் பெற்ற கற்பகாலப் பெருங்கடலானது மனோரம்மியமான விளையா டுந் தடாகமாகச் செய்யப்பட்டுளது.

(ச.) ஈண்டுச் சகத்தேபழங்குடில் = புராதன மிருகமாம், குணவான்களாகிய ஜனங் களே மணிகளாம், மிருத்தியுவே சம்புடமாம், யாவருக்கும் அதன் கண்ணே யந்தர்ப் பாவமிருத்தலின் அதற்குக் கிரகோட்டரத்தன்மையுளதாம் அதாவது பயங்கரவதனக் குகையிருக்குகையுளதாம். (இ - ம்) ஒரு ரத்நசம்பாதன இச்சையுள்ளவன் புராதன மிருகாதியிற் சிதறிக்கிடக்கும் நாநாவித இரத்தினங்களையெடுத்து மகாகோடரச்சம்புடத் திற் புதைத்து வைப்பதுபோலக் காலமூர்த்தியென்பதாம். மிருகஸ்வாமியாய் வாஞ்சை யால் அந்நோக்குற் றிருப்பதேபோலக் காலனு மிருத்தலின் என்பதுணரக் கிடந்தது. பிரளய ஆர்ணவங்களாகிய ஓடைகள் பலவாதல் போல் அங்குற்றவடவா நலமும் பல வாதலின் கமலவனம் வடவனலாம். ஜாங்கல ஜாலம் = நிர்ஜலாரண்யம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வேட்டையாடியதா லுண்டாய சிரம அபநோதப் பொருட் டுப் புஷ்கரணியைக் காண்பித்துக் காலராஜகுமாரனுக்கு வேட்டை நிர்க்கமனத்தின் முன்போஜனங் காண்பிக்கின்றார்:—கைப்பென.

கைப்பிஞெடு புளிப்புக்கார்ப் பிவைமுதலாஞ் சுவைபடைத்த கனபூதத்தா
லொப்பரிய பாறயிரை யாதியாய் வருகின்ற வுதிதன்ஞல்
துப்புடையன் விவிதமாந் தோற்றமுள சகங்களினுற் சுற்றிச் சுற்றி
வைப்புடைய வவற்றவற்றும் பெருங்கற்பம் பலகாலும் வட்டஞ் செய்யும். (97)

(ப - ரை.) கைப்பிஞெடு புளிப்புக்கார்ப்பு = கடு ஆம்ல திக்தம், இவை முதலாஞ் சுவைபடைத்த = என்பதாதிய இரசங்களுற்ற, கனபூதத்தால் = கனமான பூதாதிக ளால், ஒப்பரிய = உவமித்தற்கு வேறுபொருள் விசால முதலியவற்றி லில்லாத, பால் தயிரையாதியாய் = பாற்கடல் ததிக்கடன் முதலாக, வருகின்ற வுதிதன்ஞல் = எண் ணவரும் சமுத்திரங்களால், துப்புடையன் = கல்யவர்த்தன மூடையவனவன், விவித மாந்தோற்றமுள = நானவகையான தோற்றத்தோடு கூடிய, சகங்களினுற் சுற்றிச் சுற்றி = உலகங்களினுற் சுற்றிச்சுற்றி, வைப்புடைய = இருப்பையுடைய, அவற்றவற்றும் = அவற்றவற்றின் சம்பந்தமாய, பெருங்கற்பம் = பெரிய கற்பத்தை, பலகாலும் = அநேக முறை, வட்டஞ் செய்யும் = ஆவர்த்தனஞ் செய்துகொண் டிருக்கும். (97)

(ஸ்ரீ - வீர.) கடுதிக்த ஆம்லங்களாய பிராணிகண் முதலியவற்றை யுடையவற்று லென்பதாம். நானரச யுக்தபூத உபதம்சமுற்ற ததி க்ஷீரசாகரங் கலந்தவுலக அன்னத் தின்வைப்பி லேதுவுரைப்பார் வைப்புடைய வென்றார். எவையெவை கற்பாதியிற்றி தங்களாமோ அவையவையேயாயஜகங்கள் கற்பாந்தத்திலும் இருக்கின்றன வென வைப் புடையதாம். கல்யவர்த்தனம் என்பது அதிகாலைப் போஜனமாம். உபதம்சமென் பது அதற் குபகரணமாய ஊறுகாய் முதலிய வியஞ்சனமாம். அபநோதம் = நீக்கம். வட்டஞ்செய்தல் துப்புடைமைபோற் றோற்றுகின்றது என்றமைக. கைப்பாகவும், கார

மாகவும், புளிப்பாகவும், இராநின்ற அப் பூதங்களோடும், தயிர்பான் முதலிய கடல்களோடும் தனித்தனி ஏகவடிவமாகி நெடுநாளா யிராநின்ற இந்தஜகத்தானது அவனுக்குக் காலேப்போஜனமாம். கைப்புக் கார்ப்புத் தயிர் முதலியவற்றோடு பழைய அன்னத்தைக் காலையிலுண்ணல் திராவிடர்பாற் பிரசித்தமேயாம்.

(ச.) கடிதிக்த ஆம்லாதி பூதங்கள் = பிராணிகள், ஆதிசப்தத்தால் மதுராதி சங்கிரகமாம். கடு = வேம்பு முதலியவை, திக்தம் = காரம் = மிளகு முதலியவை, மிகக் காய்ந்தவை = வரகு முதலியவை. விசேஷதாகமுடையவை கடுகுமுதலியவை இவ்வண்ணம் நாலுரசங்களோடு கூடிய ததிக்ஷீராதிசாகரசகிதமாய அவற்றுனே "தாதா முன்பு ளபடியே சமைத்தான்" என்னுஞ் சுருதியினுல் அத்தகையன வேயாய அநாதன அந்தப் பூதாதி ஜகங்களால் காலே சம்பந்தபோஜனமானது சம்பவிக்கும் என்பதாம். சாகரசகிதமான சகல சகத்துகளும் காலனுக்குப் புராதன அன்ன வியஞ்சன ரூபமாகப் புசிக்கும் வஸ்துவாக ஆயிற்றென்பதாம். (97)

(ஸ்ரீ - வீர. அ - கை.) வேட்டம் ஆட்டமாகவுற்ற காலனுக்குச் சுனியின்றனத் துற்ற பெண்புலியைக் காட்டுகின்றூர்: சுனி = பெண்ணுய். அவனுக்கு அனுரூபமான பிரியையைக் கூறுகின்றூர். தொல்லென.

தொல்லுலகிற் ருேன்றுகின்ற சராசரமாம்பொருளனைத்துந் தொலைத்துமாற்றி
வெல்லரிய சங்கார காளராத்திரி மிகவும் வெருட்சி மிக்க
வல்லபமா நடையுடைத்தாய் மாதர்கண மனைத்துமுடன் மருவப்பட்டு
புல்லரிய சகமோகப் பொறிவனத்திற் புலிப்பேடு போலவாழும். (98)

(ப - ரை.) தொல்லுலகில் = பிராசீனமான உலகத்தில், தோன்றுகின்ற = பிரதீதியாகப்பட்ட, சராசரமாம் பொருளனைத்தும் = ஸ்தாவரஜங்கம ரூபமான சகலவஸ்துக்களேயும், தொலைத்து மாற்றி = சங்கரித்து வேறுபடுத்தி, வெல்லரிய = யாவராலும் ஜயஞ்செய்தற்கு முடியாத, சங்காரகாளராத்திரி = சண்டிகா தேவியானவள், மிகவும் வெருட்சி மிக்க = அதிகோர பயங்கரமான, வல்லபமா நடையுடைத்தாய் = சதுரசஞ்சார மூடையவளாகி, மாதர்கண மனைத்து முடன் மருவப்பட்டு = சர்வமாத்ரு கணங்களும் பின்றொடரப் பெற்றவளாய், புல்லரிய சகமோக = பற்றுதற்கரிய துர்மய வுலகமயல், பொறிவனத்தில் = இந்திரியங்கள் உலாவித்திரியும் மாவனத்தில், புலிப்பேடு போலவாழும் = பெண் புலியைப்போல வாழ்ந்து கொண்டிருக்கும். (98)

(ஸ்ரீ - வீர.) சண்டி = சுரை, சர்வதாய்க் கூட்டங்களோடு கூடியவளும், புலியைப் போலப் பிராணிக் கூட்டங்களேக் கொல்பவளும், சமுசாரவனத்தில் விளையாடும் பொருட்டு ஏவப்பட்டவளும், மகாசாமர்த்தியத்தோடு சஞ்சரிப்பவளும், ஆகிய சண்டியென்னும் மகாகாளராத்திரியம்மையேயவனுக்கு மனைவியாம்.

(ச.) சண்டியென்னுஞ் சங்காரசக்தி, பெண்புலிபோலச் சமுசாரவனத்தில் பிராணிக் கூட்டங்களேக் கொல்வள் என்பதாம். அச்சண்டிகையே காளராத்திரியாய் நடனஞ்செய்வள் எனமேற் புகல்வர். (98)

(ஸ்ரீ - வீர. அ - கை.) மத்தியபானப் பொருட்டு அக்காலனது கரதலத்தில் வைத்துக்கொண்டிருக்கும் பான பாத்திரத்தைக் காண்பிக்கின்றூர்:—படரென.

(ச-அ-கை.) இப்போது இனிதுசிதமான பயங்கர வேடத்தைக் கூறுகின்றூர்:—படரென.

படர்பூதந் தொலைத்திரதம் பயில்புவியாம் பானபாத் திரங்கைப்பற்றி
மடல்சூழ்ற் பலங்கழுநீர் வனசமென வுலகநிரை மாலைசூடி
விடுகோடை யிடிநகைக்கு நரவரியை விளையாட்டு விகங்கமாக
நெடுநீள்வன் புயமரம்பஞ் சரத்தினிடை யேந்துகின்ற நெறியளுகி. (99)

(ப - ரை.) பூதந்தொலைத்து = பூதக் கூட்டங்களே நாசஞ்செய்து, இரதம்பயில்= இரசம் பூரிக்கப்பெற்ற, படர் புவியாம் பானபாத்திரம் = பெரிதாகிய பிருதிவியென்னும் குடிகுடத்தை, கைப்பற்றி = கரதலத்திலேந்தி, மடல்சூழ்ற்பலம்=இதழ்நிறைந்த கருங்குவளை, கழுநீர் = செங்கழுநீர், வனசம் = தாமரை, எனவுலக நிரைமாலைசூடி = என்று சொல்லப்பட்ட வுலகலோல ஜாலமாலை வரிசைகளை யலங்கரித்து, கோடையிடி விடு = கோடைகாலத்திடியின் ஒலியும் அற்பமென்றுபேசுகிக்கத்தக்கபடி, நகைக்கும்= பேரொலியோடு சிரிக்கும், நரவரியை = நரசிங்கமூர்த்தியை, விளையாட்டு விகங்கமாக = கிரீடைச் சகுந்தமாக, நெடுநீள்வன்புயமாம்= மிகமிக மிகவும் நீண்டுள்ள வலியபுயமாகிய, பஞ்சரத்தினிடை = கூண்டினுள்ளே, ஏந்துகின்ற நெறியளுகி = தாங்குகின்ற தன்மையுடையவளுகி, அக்காலனிருப்பன்-நெறியளாகிச்சண்டி. (99)

(ஸ்ரீ - வீர.) பிருதிவி யென்னும் பூமியே காலனது கரதலத்தில் பானபாத்திரமாகும், அதுவும். அநற்பமாம் என்பார் படரென்றார், மத்தியரசம் பூரிக்கப் பெற்றதாம், வெண்ணறையின் நறுமணப் பொருட்டு அதிசுகந்தமான கமலோற்பலாதி லோலமாலைச் சமுதாயங்களால் அப்பாத்திரம் அலங்கரிக்கப் பட்டிருக்கு மென்பதாம். ஜகத்தடவியின்பால் ஆகேடகஞ்செய்யும் ஆற்றலுற்றதிற் றற்பரமான காலமகாபடனுடைய பிரசண்ட புஜதண்டத்தேந்திய அவன் கிரீடைக்குத்தக்க பக்தியைக் காட்டுவார், விடு கோடையென்றார். அந்நரசிங்கமானது, பெருங்கர்ச்சனைச் சத்தஞ்செய்வதாம், அன்றியும் மாறிமாறிக் கரபுடங்களால் வீராவேசத்தால் பெருந்தோள்க ளிடைதட்டுவதாம், அவ்வொலி அதிவிகட விரூபமாயிருக்கும். கிரீவ ரோமங்களால் விரூபத்தையண்டித்து பெருத்துள்ள கழுத்தை யுடையதாம் அந்நரவரி பெரும் பெரும் பிடரிரோமங்கள் பீதியைப் பெருக்கவைக்கும் என்பதாம். சகுந்தம் = பக்ஷி, இரசத்தோடு கூடியதும், மதுவானது சுகந்தமாயும் அழகாயு மிருக்கும் பொருட் டிலகவழக்கம்போ லலங்கரிக்கப் பட்ட செந்தாமரை கருங்குவளை செங்குவளைகளோடும் கூட்டமாமாலை களினைறைத்தும், ஆகிய பூமியென்னும் பெரிய அகன்ற மதுக்குடத்தைக் கரதலத்தில் வைத்திருப்பன். மகாகர்ச்சனத்தோடு கூடியதும், சகிக்கமுடியாத தோள்தட்டுமோசையை யுடையதும் கேசரங்களாலே பார்க்கமுடியாதபடி நிறைந்து பெருத்த கழுத்தோடு கூடியதும் ஆகிய நரசிங்கத்தைத் தோளிற் றொங்கவிட்டிருக்கும் கூண்டில் அசுரரைக் கொல்லும் பொருட்டு விளையாட்டுப் பறவையாக வைத்திருப்பன். நெறியளுகி யென்றது மூப்பத்தீராயிர வியாக்கியானம் வாசிஷ்ட சந்திரிகை வியாக்கியானபாட மனுசரித்தாம். சம்சாரதரணியை யனுசரித்தோ சண்டி விசேஷணமே யாதலின் நெறியளாகி யென்பதே பாடமாம். செய்யுள் மொழிபெயர்ப்பும் சம்சாரதரணி யுரைபற்றியதேயாம்.

(ச.) அச்சங்காரகால ராத்திரியின் கரதலத்தில் வைத்த கட்பானை சரித்சமுத்திராதி ரசபூரிதமா மென்க. கமலாதிவாசிதமாய விபுலபூமியேபான மென்மாம். நரசிங்கமே அவளது புஜபஞ்சரத்தில் இலங்காகின்ற கிரீடைப்பறவையாம். இவ்வுரைப்படி லோக ஜாலம் பாடமாம். (99)

(ஸ்ரீ - வீர. அ - கை.) நரசிங்கம்போல உருத்திர அனுசரபூத மகாகாலனெனப் பெயரியதேவனும் காலனுக்குக் கிரீடோப கரணமாமென்கின்றார்:—மன்னென.

மன்னுசரற் ககனம்போன் மாசின்றிச் சுரைவீணை மதுரமேவி
முன்னுயர் காலனைக்கேளீ இக்கோகிலக் குஞ்சாக் கொண்டு முழுதுமின்மை
யென்னுமடற் சிலைதாங்கி யெழுதுய ராகியகணை களேந்தி யெங்குந்
தன்னுநடனம் புரிந்துதன் வசமாய்மிக விளங்கிச் சுற்றுகிற்கும். (100)

(ப - பை.) மன்னுசரற் ககனம்போல் மாசு இன்றி = சரத்து இருதுவிற் பொருந்தும் ஆகாயம்போல களங்கமற்ற நின்மல ஒளியையுடைத்தாய், சுரைவீணை மதுரமேவி = அலாபுவீணையின் மாதுர்யத்தை நுகர்ந்துகொண்டு, முன்னுயர் காலனை = இலங்கும் மகாகால னென்னும் தேவனையே, கேளீஇ கோகிலக்குஞ்சு ஆகக்கொண்டு = விளையாட்டுக் குயிற்குஞ்சாகப் போஷித்துக் கொண்டு, முழுதுமின்மை யென்னும் = அத்தியந்தாபாவமெனப் பெயரிய, அடல் சிலைதாங்கி = வலிய கோதண்டந் தாங்கிக்கொண்டு, எழுதுயராகிய கணைகளேந்தி = விம்மிப்பொம்மிவரும்பெரும் துன்பங்களாகிய சரமாலைகளையேந்திக் கொண்டு, எங்கும் = எல்லா இடங்களிலும் சுற்றுவன், தன்னுநடனம் புரிந்து = நெருங்கிய வாத்தியகோஷ வபிநயங்களுடன் கூத்தாடிக் கூத்தாடி, தன்வசமாய் = நிஜ இச்சையுடன், மிகவிளங்கி = காளராத்திரி சுயமேயாகி யிலங்கி, சுற்றுகிற்கும் = சுற்றிக்கொண் டிருப்பன். (100)

(ஸ்ரீ - வீர.) "உருத்திராணுசரர் நந்தி மகாகாலன் பிருங்கியாம்" எனக்ஷீரசுவாமிகள் கூறியுள்ளார்கள். சுரைவீணைபோலும் மதுரத்தொனியாம். சரற்ககனமென்னு மிடத்தில், மதுரத்தொனி விண்ணெனவும் மூலபாடபேதமாம். கோகிலம்போலும் அவனுக்குக் கறுப்புநிறம் கூறுவார், சரற்ககன மென்றார். ஜகத்ஜீர்ண அடவியிற்புகுந்து பிராணி பிருகவதத்தில் முயற்சிசெய்யும் காலனுக்கு வில்லைக்காட்டுவார், சிலைதாங்கியென்றார். இந்திரனில்லை சந்திரனில்லை மேருவில்லை விந்தியமில்லை என்று நிரந்தரம் ஸ்பூர்ஜித ஆகாரமுடையவனும். திக்கங்களேயாய அம்புகளின் பந்திகளை விட்டுக்கொண்டே யிருப்பன். கோதண்டம் தனு, காலவடிவ பரமேசுவரருக்காமென்க. சிலைக்கதையில் மேற் கூறப்படும் சங்கார பயிரவனென்னும் மகாகாலனை விளையாட்டின் பொருட்டுக் குயிற்குஞ்சாகக் கொண்டிருப்பன், அக்குஞ்சானது பிரஹ்மாண்டங்களையே மாலைகளாகத் தரித்துக்கொண் டிருத்தலின் அதேகஞ் சுரைக்குடுக்கைக ளடங்கிய வீணையைப் போல வடிவத்தானும் ஓசையானும் இனிமையா யிருக்கும், அதன்சொரூபமுந் தொனியும் பிறருக்குப் பயத்தையுண்டு செய்வதேயாயினும் அதனினும் உக்கிரமிருந்தவரது திருஷ்டியில் அதுமதுரமாகவே தானிருக்கும், சரற்காலத்திருக்கும் ஆகாயம்போல நிர்மல நீலமேனி யுடையதுமாம். எப்போதும் டங்காரத்தொனி தொனித்துக் கொண்டே யிருப்பதும், துயரர்தரும் அம்புமாலைகளை யளவில்லாமற் கக்குவதும், ஆகிய சங்காரமென்னும் கோதண்டமானது எப்புறத்தும் விளங்கிக்கொண் டிருக்கும். வேறுவகையாலே ஜகத்தின் சங்காரலீலையை வருணிப்பார், தன்னுநடனமென்றார், பெருங் கற்பந்தனில் விளங்காநிற்கும் என்பதனாலே சர்வசங்கார சாமர்த்தியமுள்ள தமப்பிரதான சக்திகாளராத்திரி யெனப்படும். இக்காலாத்மாவாகிய பரமேசுவரர் சுயங்கால ராத்திரியாய் நடிப்பர் எனச் சம்பந்தமாம்.

(ச.) அலாபுயுத்த வீணைபோலும் சாலவினிய தொனியையுடையவன் என்பதாம். நிரந்தரம் டங்காரத்தொனியுத்த கோதண்டன். பூர்ணதுக்கரூப சரக்கூண்டை யுடையவன். (100)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கிரியை அதன்பல வடிவனும் கதையற்ற மற்றவனும், நியதியின் மனுளனும் ஆகிய காலனுடைய சித்திரடனங் காண்பித்து, அவனுடைய சக்தி

யில் நித்திய காமினியாய நீயதியென்னு மம்மையானவள் இடைவிடாமல் முயல்பவ ளாய்ச் சர்வப் பிராணிகட்கும் போக அனுகூலகாரியாய் தொடங்குபவளாய் மிகமிகவுங் கூத்தாடுவள்; தடையற்ற கிரியாசக்தி வடிவ அவ்வம்மைக்கு நிருத்திய வுபகரணங் களைக் காண்பிக்கின்றார்:—பொன்னென.

பொன்னுலகு தரியணியாம் புணர்பாவ மெனுநூலாற் பூட்டிக்கட்டும்
பன்னரகச் சிலம்புகளைப் பாதலமாம்பதத் தணியும் பானுத்திங்க
ளென்னுமணி சேரிமவரெனு மெழுப்புமணி மேருவென்னும் பொற்பூண்
டன்னிருகாதினுந் தரிக்குஞ் சக்கரவெற் பணிகலையாத் தழுவுமன்றே. (101)

(ப - ரை.) பொன்னுலகு தரியணியாம் = தேவலோக அந்தராவலியே அங்கங் களில் அணிந்துகொள்ளும் பூஷணமாம், புணர்பாவமெனு நூலால் = ஜீவர்களிடத்தே பொருந்திய துஷ்கிருத சூத்திரத்தால், பூட்டி = கோர்த்து, கட்டும் = பந்திக்கும், பன் னரகச் சிலம்புகளை = பலவிதமான கலகல உஜ்வலநரகாவியென்னும் மஞ்சீரங்களை, பாதலமாம் பதத்தணியும் = பாதாலசரணத்தில் அலங்கரித்துக்கொள்ளுவள், தன்னிரு காதினும் = தனதிரண்டு செவிகளிலும், ஹிமவானென்னும் எலுப்புமணி = தீர்க்கமான பனிமலையென்னும் அஸ்திமுழத்திரையையும், மேருவென்னும் பொற்பூண் = மகாமேரு வென்னும் சொர்ணமயகர்ணிகையையும், தரிக்கும் = அலங்கரித்துக்கொள்ளுவன், அதே காதின்கண், பானுத்திங்களென்னுமணி = சந்திர அருக்கர்கள் என்னும் லோல குண்டலங்களை, சேர் = அலங்கரித்துக்கொள்ளுவன், சக்கரவெற்பு = லோகாலோக அசலசிரேணியை, அணிகலையாத்தழுவும் = கடிமேகலையாக அலங்கரித்துக்கொள்வன்.

(ஸ்ரீ - வீர.) தேவலோக பேதங்களின் மாலை அக்காலராத்திரியின் அங்கங்களிற் பூஷணமாம். நரகாலியானது அவளது பாதாலசரணத்திருக்கும், மஞ்சீரமாலையாம், ஆலி = பந்தி, மஞ்சீரம் = நூபுரம், மஞ்சீரமாலையின் சாதர்மியத்தைச் சம்பாதிக்கு மென்பதாம். கலகலஉஜ்வலமாவது கோலாகலத்தால் தீப்தமாம். ஒருகாதின்கண் வெள்ளிய பனிமலை யென்னும் என்புவளையத்தை யணிவன் அது தீர்க்கமாம் = சிறிது குறைந்த லக்ஷியோஜனை நீட்சியுடையதாம். கர்ணிகை = கர்ண அலங்கார விசேடமா மென்க. ஈண்டே குண்டலங்களாம், முன்மொழிந்த சிரவணத்திலேயே அசையாநின்ற குண்டலங்கள் கண்டமண்டலங்களிற் கவின்காலும் சிரேணி = பந்தி, ஈண்டு, என்னு மணிசேர் தன்னிருகாதினும் பொற்பூண்டரிக்குமென்றுங் கொண்டு கூட்டலாம். மூலப் படி முன்னன் வயித்தாம். தேவசகித சர்வபுவனமாலைகளும் அங்கங்களிலணியும் பூஷ ணங்களாம், பாதாள பரியந்தமிருக்கும் ஆகாசமானது நீண்டு கறுத்துப் பெருத்த குழன் மண்டலமாகும், அழுகைக் கோலாகலத்தால் ஓங்கி யெரியாநின்ற நரக அக்கினிகளானே யொளிராநின்ற நரகமாலையானவை அவ்வம்மையின் பாதாளமாகிய சரணத்திலிருக்கும் பாவநூலாற் கோர்க்கப்பட்ட பாதகிங்கிணிமாலைகளாம். இங்ஙனம் நியதியம்மைக்குச் சாமக்கிரியோடும் நடனமாயின், அவளுடைய பர்த்தாவிற்கும் அதுவும் பூஷணங்களும் வேண்டுமேயெனின்? முற்கூறிய நாடகசாலையினுள்ளே, கூறப்படும் குண்டல வடிவமாய சந்திரமண்டலத்தாலே அழகு பொருந்தியவனும், நக்ஷத்திரங்களானும் சந்திரிகையானும் தாரகைசந்திரப் பிரதிபிம்பங்களானும் மனோகரமாய விண்ணேயாய மயிற்றோகையால் அலங்கரிக்கப்பட்ட கேசத்தையுடையவனும், நடனஞ்செய்பவனும், ஆகிய கிருதாந்த னுடைய இடது செவியில் என்பு மயமான முத்திரை வடிவக்குண்டலம் கபாலிகரைப் போலலங்கரிக்கப்பட்டுளது, வலதுசெவியில் மகாமேருவாகிய காந்தியையுடைய காஞ்சன கர்ணபூஷணமணியப்பட்டுளது; இவ்விருசெவிகளினின்றும் கன்னத்தலத்தில் சூரியசந்தி

ரர் குண்டலங்களா யசைந்துகொண்டிருக்கின்றனர், உலோகாலோக பர்வத வரிசைகள் எப்புறத்தும் கடிமேகலாபரணமாய்க் கவின் செய்யும்; வரிசைகள் என்றது, அநேகஞ் சிகரங்கள் கூடிய தன்மையாலேனும், கற்பப் பிரஹ்மாண்ட பேதத்தாலேனும் என்றுணர்க.

(ச.) தேவதைகளின் லோகாந்தரங்களாய அழகிய சுவர்க்காதி மாலைகளே தரியணியாம், தனதங்கத் தலங்கரிக்கும் ஆரகேயூராதி பூடணமாம். பாதாளமே சரணமாம், அங்குள்ள நரகாவலியே நூபுரப்பரம்பரையாம், துன்புறுஞ் சனமலறங் கலகலத்தொனி முழக்கத்தால் நரகம் சிலம்பாம். என்பு முத்திரைரசனை விசேடமாய,சித்திரிக்கப்பட்ட என்புச்சலிகை தாழம்பூப்போ லிருப்பதாம், சந்திர அர்க்கமண்டலங்கள் குண்டலங்களாகக் கூறப்படு மாதலின். ஆகவே பனிமலை தாழம்பூத்தீண்போலும், தாழம்பூ = கேதகீ புஷ்பம். பொன்மலை கமல கர்ணிகைபோலும் இருக்கும், இவையிரண்டும் கர்ணவதம் சங்களாக வுபயோகமாதல் காண்க. ஈண்டுச் சந்திரமண்டலம் சூரியமண்டல மிரண்டும் குண்டலங்களாகக் கண்டமண்ட லங்களிலாகும். சக்கரவெற்பு = லோகாலோக பருப்பதம்; கொடிமலைகளையுங் கூட்டுக.

(ஸ்ரீ-வீர-அ-கை.) காலஞ்கிய பதியினுடைய முகவிலாசங் கடைக்கண் பார்வை முதலியவற்று லுணர்த்தப்பட்ட திருக்கருத்தை யினிதுணர்ந்து அத்தேவியானவள் கற்பாந்தங்களில், மிக ஆகுலத்தோடு கூடியவளாய்மீண்டும் பர்வதங்களெல்லாம் உரத்த சப்தத்தோடு வெடிக்கும் படியாகப் பெருங்கூத்தாடுமவள், அத்தகைய அவளுடைய ரூபம் லோகத்தைப் பயப்படுத்துவது என்பதன் கண்ணே யியம்பவேண்டுவ தென்னுளது கூத்துத்தான் எத்தகைய தென்பது எனக்கருதிக் கூறுகின்றார்:—பின்னென.

பின்னுறத் தாழ்த்தலைந் திலங்கு முருகன்வாகன மயிலின் பீலிசூடி
முந்நயனப் பெருங்குழிகள் பயஞ்செய்யு மதிச்சடைதாழ் முடிகள்பூணுங்
கன்னியுமை குழற்கவரி மலைநிகர் பைரவராடுங் கவந்தமேவும்
பன்னயனக் குழிவிளங்கு மிந்திரன்றன் மேனியெனும் பலியோடேந்தும்(102)

(ப - ரை.) பின்னுறத்தாழ்ந்து இலங்கும் = பிற்பாகத்தில் அத்தியந்தந் தாழ்ந்து தொங்கி விளங்கும், முருகன் வாகனமயிலின் பீலிசூடும் = குமாரசம்பந்தி வாகனமாய மிருதபர்ஹிகளின் றோகைகளே யணிந்தலங்கரித்துக்கொள்வள், முந்நயனப் பெருங் குழிகள் = நேத்திரத்திரய பிருகத்திரந்திரங்கள், பயஞ்செய்யும்=மிகமகா பயத்தை யுண்டாக்கும்படி நிற்ப, மதிச்சடை தாழ்முடிகள் = சந்திராலங்கார ஜடாபாரங்கள் தொங்காநின்ற சிரங்களே, பூணும் = அலங்கரித்துக் கொள்ளுவள், கன்னியுமை = கன்யாபரமேசுரியாய கௌரியின், குழற்கவரி = கேசசாமரங்களையும், மலைநிகர் = அசலத்திற் கொப்பான, பைரவராடுங் கவந்தம் = வைரவ உதர தும்பகங்களையும், மேவும் = கையில் வைத்துக்கொண் டிருப்பள், பல் நயனக்குழி விளங்கும் = பல நூற்றுக்கணக்கான விழிக்குழிகளோடு கூடியிலங்கும், இந்திரன்றன் மேனியெனும் = தேவேந்திரருடைய சரீரங்களெனப்படும், பலியோடேந்தும் = பிக்ஷைக் கபாலங்களை வைத்துக் கொண்டிருப்பள். (102)

(ஸ்ரீ - வீர.) இத்தலை யலங்காரத்துடன் ஆகாயத்தில் வியாபித்திருப்பள். பிற்பாகத்தில் தோகை முதலியவை நீண்டு தொங்கி அலைத்துகொண் டிருக்கும் சண்முகமிருத மயூரங்கள் என்பதாம், பர்ஹி = மயில். ஹரஹூர்த்த விசேடமாய முக்கண்ணின் பெரும் பொந்துகளில் வாயுபூரிக்கும் வயத்தால் பெரியஜீங்கார பயங்கர ஒலிகள் இளம்பும் என்றறிக. நீண்டசையும் ஜடைகளில் மதிவீற்றிருக்கும், அத்தகைய சிரஞ்சிதறிக்கிடக்கும்

அதனையேந்தும். மேலேசரிக்கும் கவின்வாய்ந்து மணங்காலும் மந்தாரபுஷ்பங்கணிறைந்த கவுரியின் கபரங்களே சாமரைகளாம். கபரம் = கேசபாசம். மேற்கிளம்பிக் குதித்துப் புரளும் அசலாகிருதியை யுடையபைரவ உதரங்களேயாய தும்பகங்களேயேந்தும். தும்பகம் = சுரைப்பழம்= அலாபுப்பழம். கூறியகூறும் வேடங்களேத் தரித்துக் கொண்டு காலராத்திரியம்மன் கூத்தாடிக் கொண்டிருப்பள். தூற்றுக் கணக்காண நேத்திரந்திரங்களோடு கூடிவிளங்கும் இந்திரா தேகங்களே அநேகம் பிரேஷிக்கபாலங்களாம் பின்பக்கத்திற் பொருந்தித் தாழ்ந்து அலைந்து கொண்டு விளங்காநின்ற சுப்பிரமண்யருடைய வாகனமாகிய மயில்களின் இறகுகளே யணிந்தும், மூன்று விழிகளாகிய பெருந்தூளைகளினின் றுண்டாகும் பெருத்த பயங்கரமான உரத்த தொனியோடும், நீண்டலையும் மதிச்சடைகள் விரிந்த அரன் சிரங்களே யலங்கரித்தும், மேற்கிளம்பும் அழகொழுகும், மந்தாரமலர் நிறைந்த கௌரியின் கேசசாமரைகள் கொண்டும், பெருந்தாண்டவம் புரியும் பைரவருடைய மலைபோன்ற வயிறுகிய சுரைக்குடுக்கைகளேத் தாங்கியும், (சுரைக்குடுக்கையாற் காபாலிகரதுவிவகாரம் பிரசித்தமாம்) சப்தித்துக்கொண்டு ஆயிரத்தேழு தூளைகளோடு கூடியிலங்கும் இந்திரர் தேகங்களாகிய பிக்ஷா கபாலமேந்தியும், கூத்தாடுவள். சகஸ்ரரந்திரபாடமே சதரந்திரத்தினும் நலம்.

(ச.) ஆண்டுக் கௌமாரமயிலின் பீலிபின்னுறத் தாழ்ந்திலங்குதலால் கேசபாசமாக விநியோகிக்கப் பட்டது. ஹரசிரங்களின் மாருத பூரிதநேத்திர ரந்திரங்களில் தொனி தொனித்தலின் கடிதடத்தில் கட்டிய கண்டாமணிபோலப் பூணலாம். வீணதண்ட மண்டிதங்களாய பைரவ உதரங்கள் அலாபு மண்டலங்களெனவாம். இந்திர தேகங்கள் ஆயிரங் கண்களோடு கூடியிருத்தலின், அன்னத்தின் அக்ஷின்னதையின் பொருட்டுப் பிக்ஷா கபாலங்கட்கு ரந்திரத்தோடு கூடியிருக்குந் தன்மை பொருத்தமாம். க்ஷின்னம் = ஈரம். (102)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலும் அவ்வம்மையின் அலங்காரத்தையே வருணித்து அவள் நடனத்துடன் விளங்கலே முடிக்கின்றார்:—மிகவெனை.

மிகவுணங்கு சாரீரகட் வாங்கப் பங்குகளால் விளக்கந்துன்று
மகமுடைத்தாய்த் தனைத்தானே பயஞ்செய்து புவனமெலாந்தொலைத்துமாற்று
மகிலமுமா மொருவடிவின் முடிவட்ட மெனுங்கமலத் தலங்கலோடு
நிகரினடனம் புரிந்துபெருங் கற்பந்தமில் விளங்கா நிற்குமன்றே. (103)

(ப - ரை.) மிகவுணங்கு = அத்தியந்தஞ் சுஷ்கமாய, சாரீரகட்வாங்கப் பங்குகளால் = சரீரசம்பந்தமான கட்வாங்கப்பங்கங்களால், விளக்கந்துன்று மகமுடைத்தாய் = பூரிக்கப்பெற்ற அம்பரத்தோடு கூடிவிளங்கி, தனைத்தானே பயஞ்செய்து = தன்னைத்தானே பயப்படுத்திக் கொண்டு, புவனமெலாந் தொலைத்து மாற்று = சர்வசங்கார காரிணியாகி யிருப்பள், அகிலமுமா மொருவடிவின் = விசுவரூபமாகிய ஏகவடிவத்தின், முடிவட்டமெனுங் கமலத் தலங்கலோடும் = சிரச்சக்கர அழகிய தீட்சாமாலையோடும், நிகரினடனம் புரிந்து = ஒப்பற்ற தாண்டவத்தைச் செய்து, பெருங்கற் பந்தமில் = மகாகற்பங்களில், விளங்காநிற்கும் = மிகவும் இலங்கிக்கொண்டிருப்பள்-எ-று.()

(ஸ்ரீ - வீர.) காய்ந்திராநின்ற சரீரத்திருக்கும் என்புகளே கட்வாங்க பங்கங்களென்னும் பஞ்ச அவயவகண்டங்கள், அவற்றால் என்பதாம். குமாரசம்பந்த மயின்முதலியவை ஒவ்வொன்றேயாதலின் மயில்கள் என்பதாதி பன்மைவசனம் எங்ஙனம் பொருந்துமாலோவெனின், அச்சங்கையினி தன்றும், பெருங்கற்பந்தமில் விளங்காநிற்கும் . என

ஈண்டே பன்மை வசனத்தால் பரிகாரஞ் செய்யப்பட்டிருத்தலின், மகாகற்ப பேதத் தானே மயூராதிகட்குப் பன்மை சம்பவித்தலின். பின்னென்பது முதல் பங்குகளால் என்பது வரையுமுள்ள அச்சர்வ அலங்காரங்களாலும் ஆகாயமானது நிறைக்கப்பட்டிருந் தது. அதிகமாகக் கூறுவதாலென்னே காலராத்திரியின் பிரபாவத்தைச் சுருக்கமாகக் கேட்பீர்களாக என்னுங்கருத்தாற் கூறுவார் அகிலமென்றார். கீதைகளிற் பிரசித்தமாய விசுவரூபத்தின் அநேககோடி சிரங்களின் சமூகங்களே அழகிய புஷ்கரமாலைகளாம். நிகரில்லாத நடன அவசரத்திற் செய்யத்தக்கனவாய அபிநயங்களையெல்லாஞ் செய்து ஆடுவள் என்பதாம். மிகவுங்காய்ந்த சரீரசம்பந்தமாய கட்வாங்கமென்னும் முதுகெலும் புப் பாரங்களானே விண்ணேறைத்தும், பிறரஞ்சும்பொருட்டுத் தன்னுனே தன்னைப் பயப்படுத்திக்கொண்டும் சர்வத்தையுஞ் சங்காரஞ் செய்துகொண்டும் பலவகை ரூபங்க ளோடு கூடிய சிரக்கூட்டங்களாகிய அழகிய தாமரைமாலையால் அலங்கரிக்கப்பெற்று நாலுவகையாய்ச் சுழன்றுகொண்டும் மகாகற்பங்களிலுண்டாம் தாண்டவங்களில் அவ் வம்மை விளங்கா நிற்பள்.

(ச) காய்ந்த தண்டெலும்பினியில் கோர்த்த நரசிரக்கபாலம் கட்வாங்க மெனப்படும். சரீரசம்பந்தமான அத்தண்டின் எலும்பினியில் மாலைபோல நரம்புகளாற் கோர்க்கப்பட்ட நரச்சிரகபால கட்வாங்கங்களின் பங்கங்களாலும் பிறவற்றாலும் விண்ணேவியாபிக்கும் என்பதாம். தனேத்தானே பயஞ்செய்தல், பயப்படுத்துதற்கு அக்கால் வேறு பிராணிக ளின்மையால் என்க. விசுவரூப விஷ்ணுவின் சிரங்களின் சக்கிரசமூகமே அழகிய புஷ் கரமென்னுங் கமலமாலையாம் அதனுலலங்கரிக்கப்பட்டு விளங்கும் என்பதாம். (103)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இங்ஙனம் இயம்பிய காலாதிகளின் விருத்தாந்தத்தை யனு வதித்துக்கொண்டு அத்தோடத்தை நன்குணர்ந்த பயனைத் தெளிவிக்கின்றார்: காலாதி களின் பரதந்திரமா யிருத்தலினுனே தோடங்களே மிகமிகவும் நிறைந்த இச்சம்சார துர்த்தசையையே வைராக்கியம் உண்டாம்பொருட்டு வருணிக்கத்தொடங்கிக் காலனிவ் வாறு செய்தலினுனே காலாதி சர்வவஸ்துக்களிடத்திலும் எனக்கு விஸ்தாரமாய்த் தோடந் தோற்றலின் அதன்பயனுகிய வைராக்கியரூபப் பற்றின்மையி னடைவுண்டா கின்றதாதலின் இச்சம்சாரமெனப் பெயரிய இக்கால முதலியவற்றின் சரிதத்தில் எம் போலியர்க் கெவ்வாறு பற்றுண்டாதல் கூடும் என்கின்றார்:—பொருளென.

பொருள்களெலாம் பொருளன்றுங் கடியமன மகங்காரத்தின் பொருட்டே யாகுந், தெருளுறுபா வங்களெலாம பாவமாம் பவமுழிவு தெரியாதாகும், மருளுமதி யாருலத்தாலுள் வெதும்பு மாசைநோய் வளராநிற்கு, மிருண்மயதீர் பவரரிய ரெவ்வனந்தான் வருத்தத்தா லேகா நிற்கும். (104)

(ப - ரை.) பொருள்களெலாம் பொருளன்றும் = வஸ்துக்களெல்லாம் அவஸ்துக்க ளாக அறியப் பெறுகின்றன, கடியமனமகங்காரத்தின் பொருட்டேயாகும் = கொடூரசித்த மானது அகங்காரத்தினிடத்திற் கொடுக்கப்பட்டது, தெருளுறுபாவங்களெலாம் = உணர்வுறு பாவங்களெல்லாம் அபாவமேயடையப்பெற்றன, பவமுழிவு தெரியாதாகும் = பவாந்தங்கண்டு பிடிக்க முடியவில்லை, மருளுமதியாருலத்தாலுள் வெதும்பும் = மயங் கும் புத்தியானது சித்தாருலங்களால் உள்ளே தபித்துக்கொண்டிருக்கும், ஆசைநோய் வளராநிற்கும் = ராகரோகம் விஸ்தாரத்தை யடையும், இருண்மயதீர்பவரரியர் = விராகி ஜனங்கள் விரலராவர், எவ்வனந்தான் வருத்தத்தா லேகாநிற்கும் = தாருண்யமானது பெருமுயற்சியின் கஷ்டத்தாலேயே கழிந்தேகும். (எ-று.)

ஞான வாசிட்டம்

(ஸ்ரீ - வீர.) காலாதிகட்கும் சந்திராதிகட்கும் கூறிய பிரகாரமாக இவ்வகைச் சில மாயின் மற்றையர்கதியாதாம். காலாதிகளின் விருத்தம் மற்றையர்கட்கு முன்மொழிந்த சமுசாரதோடங்களின் உபலக்கணமாம். அற்றேல் சமுசாரமெனப் பெயரிய அகர்த்தத்தில் ஆஸ்தை நாஸ்தியாயின் அதை நிவிருத்திப்பதில் பரமயத்தினம் பற்றி நின்றிடுக, வாளா அலைத்துழல்வ தெற்றினுக்கென்றால், அதன் நிவிருத்திப் பிரதிகூலங்கள் எளிதாயிருக்கின்றன அனுகூலங்கள் அரிதாயிருக்கின்றன, என்னை, இந்திரியங்களே பரமசத்துருக்களாக இருக்கின்றனவாதலின். அடையத்தக்க சத்தியஞானாதி லக்ஷணம் வாய்ந்த வஸ்து நேரே தோற்றுவதேயாயின் இந்திரிய சத்துருக்கள் என்னசெய்ய முடியுமென்றால், சத்தியஞானாதி லக்ஷணம் வாய்ந்தவஸ்து மித்தியா தேகாதிரூபத்தன்மையை யடைந்தது பேரலாய்விட்டது. மனமானது தனக்கனுகூலமாயின் இந்திரிய சத்துருக்களே பிளந்தெறியலாமே யென்றால், தன்னைத் தன்னையே யடித்துத் துன்புறுத்துகின்றமை யின் மனத்திற்கு மனமே சத்துருவாகியுளது; அதாவது மனமே பகையாகவற்று மனத்தானே மனமாகிய தன்னைத் தாடனஞ் செய்கின்றது. தனக்கேதான் எங்ஙன் பகையாகுமெனின் இயம்புவர் பொருளென்றார். காரியகாரண சங்காத சாகூடிவடிவ வஸ்துவானது அவஸ்துவாகக் காரியகாரண சங்காதவடிவமாய்க் கவரப் பெறுகின்றது. சங்காதசாகூடியாக வஸ்துகிரகணம் சம்பவித்தலின், மாறுயிலே கிரகணம் நிவர்த்தியன்றோ வாமெனின் ? அறைவார் பொருட்டே யென்றார் காமாகுலமாய அச்சித்தம் விவேக ஆற்றல் அற்றிருத்தலின் அகங்காரத்தின் பின்னேயே யோடா நிற்கு மாதலால் அதன் சாகூடியைப் பின்பற்றுவ தின்றென்பது கருத்தாம். வஸ்துவரத்தை [illegible]கவர்ப்பெறுமாயின் உள்ளம் எவ்வகங்காராதி பாவங்களைக்கவர்கின்றனவோ ஆண்டே ரதியோடு கூடலாமே யெனின், கூறுவார், தெருளென்றார். பாவபதார்த்தங்க ளெல்லாம் அபாவத்தோடு கூடினவாய் அநித்தியங்களாம். ஆயின் விகாரம் விலகினிர்விகாரம தெஞ்சும் என்னும் நியாயத்தால் நாச அவதியாக அறியலாம் ஆத்மாவெனின் ? அறைவார், பாவமுடிவு என்றார். பாவங்களாகிய அநித்திய பதார்த்தங்களின் அந்த மென்னும் அவசான பூமியான் மாவாம், கவியிலுள்ள படிபவமுடிவு என்றும் சிலவிடத்தே பாடமாம். அகாத்மாவின்கண்ணே தோஷதிருஷ்டியான தூண்டாகியான்மாவும் அடையப் பெறுதாயின் வருபயனிது வென்பார், மருளுமதி யென்றார். உள்வெதும்பும் = வஸ்து அவஸ்துக்களின் அந்தராளத்தில் அழன்றுதியும். எல்லா ஆசைகளையும் வீட்டொழித்தலினனே தாபரீக்கமானது சம்பவித்தல் ஆகையாதின் பொருட்டுத்தபிக்கின்றாய் எனவினவ நுதலுவார், ஆசையென்றார். ஆயின் விரக்த சம்பந்தத்தால் ஆசையை விட்டொழிக்க லாமே யெனின் ? இருண்மயலென்றார்: ஆயின் வேகப்படவேண்டிய காரியமில்லை யிப்பொழுதெனின் ? உரைப்பார், எவ்வனத்தானென்றார். யவ்வனத்திலேயே காரியகாரணங்களின் புருடார்த்த சம்பாதன ஆற்றலுண்மை வார்த்தீகத்தி லின்றுமென்பது கருத்து. இந்திரியங்களே பகைவர்களாக இருக்கின்றார்கள், பரமார்த்தமாக ஆன்மாவெனத் தேகாதிகள் கவரப் பட்டிருந்தன விவேகிக்குங்கால், அபரமார்த்தி அல்ல ஆன்மத்தன்மையை யடைந்து விட்டன; சத்தியஞானாதி யிலக்கணம் வாய்ந்த வஸ்துவோ அசத்தியத்தையடைகின்றது பந்தஹேது வாதலினனே மனத்தையே பகையாகக் கொண்ட ஆன்மா மனோபிமானத்தால் மனோரூபமாகத் தன்னை மனோரூபமானதன்னுலே தூக்கப்படுத்துகின்றதுவிடயங்களோ விரும்பத் தகாதனவா யிருக்கின்றன, அலௌகிக வஸ்துவானது காரியகாரண சங்காதத்தவடிவதாகவே காணப்படுகின்றது, சித்தமோ அகங்காரத்திற் சுத்தத்தஞ் செய்யப்பட்டு அபிநிவேசத்தை யடைந்துள்ளது பொருள்களோ அழிவையலங்கரித்துக்கொண்டிருக்கின்றன, எல்லாப் பொருள்களின் முடிவிற்கிடமாய ஆன்மா

வோ அறிய ப்பெறவில்லை. மதியானதுள்ளே யாகுலப்பட்டுக் கேவலம் தபித்துக்கொண் டேயிருக்கின்றது, இராகரோகமானது எப்போதும் விலாசத்தை யடைந்துகொண்டே யிருக்கின்றது உலகில் வைராக்கியத்தை யடைபவரைக் காணும் மிகவுந் துர்லபமாய் விட்டது, பரமார்த்த திருஷ்டியானது இரஜோகுணத்தினுலே யதஞ்செய்யப் பட்டது தமசோ மேலும் மேலும் விருத்தியாகிக் கொண்டே வருகின்றது சத்துவகுணமடை வதே கிடையாது, கெட்டமுயற்சியினுனே யவ்வனங் கழிகின்றது. உபலக்ஷணமாக:— அகங்காரமானது அபிமானித்துக் களங்க முண்டாக்கிச் சொரூபதாஷணஞ் செய்கின் றது, நிச்சயகாரணமான புத்திவிருத்திகள் வெளிமுகமாகவே திரிதலின் மிகவும் மிருது வாகிச் சொரூபத்தின் கண்ணே நிலைக்குந் திடத்தன்மை யற்றனவா யிருக்கின்றன. தேகமோ கெடுதலைச் செய்கின்றது, மானசவிலாசங்களோ மங்கையர் மயலைமருவா நின் றன, மெய்ப்பொருளை யுணர்தலோ பிருதூரமாய்விட்டது, வாழ்வோ மாயமாகின்றது, மரணமோ எதிர்பார்க்கின்றது; என்பனவும் பிறவும்கொள்ளக்கிடந்தன, விரிவு பெரிய வாசிட்டத்தே காண்க:

(ச.) ஹேமகாமுனிவரே! மகத்துவமுடைய காலாதியரும் இத்தன்மையராகின் இச்சமுசாரத்தில் என்போலிகளுக்கோ என்ன ஆசையிருக்கின்றது கூறுங்கள். இந்திரி யங்களனைத்தும் அந்தரங்கமாக விசுவசிக்கப் பட்டிருந்தும் விடயங்களில் வீழ்தலினுலும் நம்பினவனை வீழ்த்தலினுலும், சத்துருக்களாக இருக்கின்றன. சத்தியமாய பாரமார்த் திக ஆத்மசொரூபம், அசத்தியமாய அபரமார்த்த தேகாதி ரூபத்தன்மையை யடைந்து விட்டது; மனமேயாகிய ரிபு, தனக்குத்தானே சத்துருவாய்த் தன்னுற்றன்னைத் தாட னஞ் செய்கின்றது. பொருள்களெல்லாம், பொருளன்றும் = பிராமாணிகமான ஆத்ம தத்துவம், தேகாதி வியதிரிக்த ஆத்மசொரூபம் நிஷ்பிரமாணமாக நிச்சிதமாம். எல் லாம் என்றது உபாதிபற்றி, இவ்வாறுகூறச் சத்திய அசத்தியங்கட்குத் தாதான்மியமும் வஸ்து அவஸ்துக்கட்கு பிராமாணிக அப்பிராமாணிகமும் ஆகலின் கூறியது கூறலின் ரூமென்றுணர்க. பொருட்டே யென்னுஞ் தேற்றத்தால், சித்தமும் அகங்காரத்தையே யனுசந்திக்கின்றது அல்லாமல் ஒருகாலும் ஆன்ம தத்துவத்தை யனுசந்திப்பதே கிடை யாது என்பதாயிற்று. பாவங்கள் = பதார்த்தங்கள், அபாவத்தான் மறைபட்டனவாம் அதாவது அபாவவுவயமா யில்லாமலே போகின்றன வென்பதாம். ஆயிற் சமுசாரம் தானு கவே நசிக்குமாவெனின், பவமுடிவு = சமுசார சாகரபாரம்; தெரியாதாகும் = காண முடியாததாம். அல்லது இதனை:—பொருள்க ளெல்லாம் = அந்தரங்கமாக விசுவசிக்கப் பட்ட இந்திரியங்க ளனைத்துமே, பொருளன்றும் = விடயத்தில் விழுமேது வாதலின் சத்துருக்களாம். பாரமார்த்திகமான ஆத்மசொரூபத்தை அபரமார்த்தமான தேகாதி ரூபதாதான்மியஞ்செய்து தேகாதி விலக்ஷணமான பிரத்தியக்ஷ ஆத்மதத்துவ சொரூ பத்தை அப்பிரத்தியக்ஷமாக நிச்சயித்துத் தனக்குத்தானே சத்துருவாய்த் தன்னுற் றன்னை நசிப்பித்தலின் கடியமனமென்றூர். மருளுமதி நிரர்த்தமாகவே = ஒருபயனு யின்றியே, மயங்கித்தபிக்கும். ஆசைநோய்=இராகரோகம், மயல்=இராகம், யவ்வனம் புருடார்த்தசாதன ஆற்றலுடைத்தேனும் அதனிமித்தம் விதித்த யத்தினத்தோடுமே யேகின்றது; யத்தினதசையிற்றூனே யேகின்றதன்றி மற்றூர் புருடார்த்தமும் பெற்ற தின்றூமென்பது கருத்து. (104)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆயின் இப்போதே தத்துவவித்துக்களைச் சேவிக்கலாமே சாதுசங்கமே சகலசன்மார்க்கமேதுவாதலின், யெனின் கூறுகின்றூர்:—பெரியவரென.

பெரியவர்கண் பதிதூரஞ் செல்கதிகிட் டாதுண்மை பெறற்கொ ணுதாங்
கரியமன மோகிக்கு முண்மகிழ்ச்சி தூரமதாங் கருணை தோன்று
விரியுமிழி வதிதூரத் தினுமணுகு நிலைமைபோய் வேரும் வீழ்வோர்
திரியவுட னெழுவர்சிறி யவர்கூட்ட மெளிதரிது தெளிர்தோர் கூட்டம். (105)

(ப - ரை.) பெரியவர் நண்பதிதூரம்=சற்சனசங்கதி மிகுதூரத்ததாம், செல்கதி கிட்டாது = எங்குமே செல்லத்தக்க கதியானது இருப்பதாகக் காணப்படவில்லை, உண்மை பெறற்கு ஒணுதாம்=சத்தியத்தன்மை யோரிடத்தினும் உதிப்பதைக்காணேம், கரியமனமோகிக்கும்=விடயங்களிற் களங்கமுற்றமனம் மயலையடையும், உண்மகிழ்ச்சி தூரமதாம்=உண்முதிதை வெகுதூரத்திற் சென்றுவிட்டது, கருணைதோன்று=தயருற் றவரிடத்தே உருகும் பெருங்கருணை யுதிப்பதையுங் காணேம், விரியுமிழிவு அதிதூரத் தினுமணுகும்=விஸ்தாரமான நீசத்தன்மை அதிசேய்மையினின்றும் வந்தடைகின்றது, நிலைமைபோய் வேரும்=நீரதையானது அதீரதையாகின்றது, வீழ்வோர் திரியவுடனெழு வர்=ஜனங்கள் வீழுதலையும் மாறி எழுதலையுமே யடைந்துகொண்டிருக்கின்றனர், சிறிய வர்கூட்டமெளிது = தர்ச்சனசம்பந்தம் சுலபமாம், அரிதுதெளிர்தோர்கூட்டம்=சற்ச மாகமம் துர்லபமாம். (எ-று) (105)

(ஸ்ரீ - வீர.) ஆயின் சற்சனசங்கதி யொழிந்த வேறுபாயத்தைத் தேடலாமே யெனின், விடைதருவார், செல்கதியென்றார். அன்னியகதி யெங்ஙனமின்றும், தருக்க பலத்தாற்றானுதல் தானேதானுதல் சுயம்பிரகாச ஆத்மா விளங்காநிற்குமெனின், உரைப் பார், உண்மையென்றார். சத்தியத்தன்மை சத்தியபாவமாம் சத்தியசொரூபமென்பது பொருள். அல்லது ஜகத்தைச் சத்தியமாக அங்கீகரிக்கில் துவைதிகட்கேபோலும். அன்னியகதியானதுண்டாம் என வுரைப்பார், உண்மை யென்றார். எங்குமே உலகத் துள்ள பொருள்களில் உண்மையானது உதிப்பதே கிடையாது; தோற்றுவதின்றும். சமுசார அசற்சன மத்தியவர்த்திகட்குச் சாமியம் துர்லபமா மென்பதைக் காட்டும் பொருட்டு அத்திதிக்கு அத்திரத்தன்மையை யறைவார், நிலைமையென்றார். விழுதல் = ஐசுவர்யாதிகளினீக்கம், எழுதல்=அவற்றின் ஆக்கம் அல்லது விழுதல்=நாசமாம், எழு தல்=உற்பவமாம். சாதுக்கள் சங்கமோ அதிதூரத்திலிருக்கின்றது, கதியோயாதொன் றையு மெங்கும்காணேம், நல்லது தார்மிகனுயிருக்கப்பட்ட உனக்குக்கதி யெங்ஙனமில் லாமற்போம் எனின், எங்கும் எப்பொருளும் சத்தியமாகக் காணப்படவேயில்லை சுவர்க்க முதலிய கதிகளும் அநித்தியங்களாகலின் கனவின்பம்போற் கழிவனவா யிருக்கின்றன. உள்ளேயுள்ளமானது அதிமோகத்தை யடைந்துள்ளது, பிறரின்பத்தைக்கண்டு மகிழ்த லாகிய முதிதையெட்டாமற் றூரத்தேகிவிட்டது, கருணையான தறித்தொளிர்வதே கிடை யாது, அதிகதூரத்தினின்றும் நீசத்தன்மையின் காரணங்களாய அருவை முதலியவைகள் வந்தடைகின்றன, நீசத்தன்மையானது அதீரத்தன்மையை யடைகின்றது, பிராணி களோ பிறப்பிறப்புகளிலும் கீழ்மேற் செல்வதிலும் தற்பரராகத் திரிகின்றார்கள். துஷ்ட சங்கமோ சுலபமாய் மலிந்துகிடக்கின்றது, சற்சனசங்கமோ துர்லபமாய் விட்டது.

(ச.) சர்வபுருடார்த்தசாதனமான சற்சனசங்கதியுந் துர்லபமாம், அன்னியகதி சிரே யசுமார்க்கமாகக் காணேம், மற்றையர் நட்புயர் மார்க்கமன்றுதலினுனே சத்தியமான ஆத்துமதத்துவம் விளங்கமாட்டாதென்பது கருத்தாம். சற்சங்கமின்றிச் சத்தியதத்துவ மூதயமாகாதாம். சித்தப்பிரசாதவேதுக்களான மைத்திரியாதிகளுங் கிடையாதென் பார் கரியமனமென்றார். பரர்களுடைய சுகத்திற் பாவிக்கவேண்டும் மைத்திரியை

மனம் பாவியாது, மற்றென் செயுமெனில், மோகிக்கும், மற்சரபாவத்தினுல் மூர்ச்சையை யடைந்ததுபோலாம். உண்மகிழ்ச்சி தூரமதாம் = பரர்களுடைய புண்ணிய கருமத்திற் சந்தோஷிக்கும் முதிதையென்னும் மனவிருத்தி தூரத்திற் செல்லும், அசூயையா லென்பது கருத்தாம். கருணை தோன்ரு = பரர்களுடைய துக்கத்திற்றுக்கிக்கும் நிரு பாதிகமான கருணை யுதிப்பதில்லை, துவேஷத்தாலென்பது கருத்து. பரர்களுடைய பாவகருமத்தில் உபேக்ஷை யுண்டாகவேண்டிய திருப்பினும் உண்டாகாமல் நிந்தித்தற் குச்சந்தோஷிக்கும் துர்ஜனத்துவம் தூரத்திருப்பினும் வந்துபொருந்தும்; பரநிந்தையால் பாவஞ்சம்பவிக்குமர்கலின், இதனுனே மைத்திரியாதி குணங்கள் சம்பவியாமையாற் சித் தந்தெளியாதென்பது தாற்பரியம். (உ-ம் ஸ்ரீபதஞ்சலி பகவான்) மைத்திரி கருணை முதிதையுபேக்ஷை யென்பது சுகதுக்க புண்ணியபாவ விஷய பாவனேயாமதனுற் சித்தந் தெளியும் என அருளிச்செய்துளார் என்பதாம். நிலைமைபோய் வேரு = தைரியங் கெட்ட தைரியமாம், பிரதிஷ்டையைப் பெரு தென்பதாயிற்று. திரியவுடன், சர்வ ஜனங்களும், மாறிமாறி, வீழ்வோர் = , அதோகதியை யடைபவரும், எழுவர் = ஊர்த்த கதியையடைபவரும் ஆவர்கள். ஒருபோதும் மோக்ஷத்தையடைய வாஞ்சியார்கள்.(105)

(ஸ்ரீ - வீர - அ - கை) சமுசாரம் யாவுமே துர்த்தசையை யடைந்து மடியுமென் கின்ரூர்:—கொண்டவென.

கொண்டபாவனே பிறவியாம் பூதங்கள் குலைந்துபோந் திசைதோன்ரு
கண்டதே சங்கள்பிற சொலாத்திரிந் திடுங்கன கிரிதுகளாகு
மூண்டெனுந் தன்மைவிழுங் கிடவுலகுபோமும் பர்போம் புவனம்போ
மண்டுவாரிபோ மூடுக்கள் போந்தானவர் வானவர் கணம்போகும். (106)

(ப - ரை.) கொண்டபாவனே பிறவியாம் = போக்குவரவுடைய பொருள்களாற் பெரிது கவர்ந்த பாவனே பவபந்தினியாம், பூதங்கள் குலைந்துபோம் = பூதபரம்பரை கள் சிதறி யெங்கேயோ ஓடிப்போய்விடும், திசைதோன்ரு = திசைகளுங் காணமற் போய்விடும், கண்ட தேசங்கள் பிறசொலாத் திரிந்திடும் = காணப்பட்ட தேசங்கள் யாவுமே வேறுவிதமாகச் சொல்லும்படி மாறி நூறிப்போம், கனகிரிதுகளாகும் = பல மான பருப்பதங்களும் தூளாகிப்போய் விடும், உண்டெனுந் தன்மை விழுங்கிட = சத் தத்தன்மையை யுடைய பரமாத்மா வுட்கொள்ள, உலகுபோம் = இவ்வுலகமும் காண மற் போய்விடும், உம்பர்போம் = அவ்வுலகமும் காணமற் போய்விடும், புவனம்போம்= இடையிலுள்ள புவனங்களும் காணமற் போய்விடும், மண்டுவாரிபோம் = கரைபொரு திரையெறி கடல்களும் போய்விடும், உடுக்கள்போம் = தாரகைக் கூட்டங்களும் இல் லாமற் போய்விடும், தானவர்வானவர் கணம்போகும் = சுராசுரக் கூட்டங்களுஞ் சுழன்று மடிந்துபோம். (எ - று.) (106)

(ஸ்ரீ - வீர.) பாவனே போக்குவரவுடைய பதார்த்த தேகாதிவிடயமாம், இவ்வண் ணம் புருடார்த்த அனுகூலங்கட்குத் துர்லபத் தன்மையையும், அதன் பிரதிகூலங்கட் குச் சுலபமாந் தன்மையையும் பிரதிபாதித்துப் பலதத்தைப் பகருவார். குலைந்துபோ மென்ரூர். கேவலம் புருடார்த்த சாதனுனுஷ்டான மில்லாத புருடார்த்த விரோதமான யாதாவதொரு மார்க்கத்தில் விதியாலிழுக்கப்பட்டுக் கொண்டுபோய்த் தள்ளப்பெறும் பெறவே இப்பாவங்களி யாவுமே போக்கு வரவுடையனவாம், தலையிற் நீப்பற்றிக் கொண்டவன் தண்ணீர்த் தடமடி மூழ்க அவாவலேய்ப்ப, சமுசாரப் பேரழற் சுவாலைப் பிணிம்பிற்பட்டுக் கரிந்துசோரும் அடியேனுக்கு நித்தியானந்த மகிவினிரந்தரம் மூழ்க

அத்தியந்தம் அதிக அவாவிருக்கின்றது எனக்காட்டும் பொருட்டுப் போக்குவரத்துடை யன பாவங்கள் எனக்கூறிய அநித்தியத்தையே விரித்து விளம்புவார் திசைதோன்ரு வென்ரூர். கொண்ட = பாவங்கள் போக்குவரத்தை யுட்கொண்டனவாம், என்றமைக் கலாம். ஈண்டுப் பொருள் வெளிப்படையா யிருத்தலின் சிலபதங்கட்குமாத்திரம் உரை யுரைப்பாம். பிறசொலாத் திரிந்திடும் = அன்னிய சப்தத்தைப் பழிப்பதாம், தேசமும் அதேச சப்தத்தைப் பழிப்பதாம் என்பதாயிற்று. அன்னிய உபதேசத்தைப் பழிப்பது எனச் சிலவிடத்தே பாடமாம், அங்கு அன்னியத்தி னுபதேசத்தையேபழிக்கும், சுயமே பிரதீதியாகாதாம், கஷ்டத்தன்மை யுண்மையின் என்பதாம். உண்டெனுத் தன்மை விழுங்கிட வெனக்கொள்க; கொள்ளவே தரை முதலியவை வைதூர்யமென்னும் அசத் தத்தன்மை விழுங்கிட இல்லாமற் போமென்பதாம். பொருள்களெல்லாம் போக்கு வரவுடையனவா யிருக்கின்றன சென்றழிந்த போதினும் அவற்றின் வாசனை அகல் வதேயில்லை மேலும் பந்தகாரணமாகவே வளர்கின்றது, பிராணிகளின் கூட்டங்களா னவை கேவலம் எப்பொழுதும் காலனுல் எங்கோ கொண்டு செல்லப்படுகின்றன. கால னுற் பயமற்றவையாய் திசைகளுங் காணவே காணேம், சத்விவகார உபதேசமும் வேறுய அபதேசமாய் முடிகின்றது, பிராணிகட் கவகாசங் கொடுக்கும் தேசமும் அதற்கு மாறுயதைத் தனக்கேயிடங் கிடையாமையிற் செய்யத் தொடங்குகின்றது. மலைகளும் பொடிகளாகின்றன ஆயின் எம்போலியர் பாலென்னே விசுவாசம். சன் மாத்திர இயற்கைவாய்ந்த ஈசுவரரானே ஆகாயமும் புவனங்களும் விழுங்கப் பெறுகின் றன, தரையும் தூளாகுமாயின் எம்போலியர் பாலென்னே விசுவாசம்.

(ச.) கொண்டபாவனை = சகலவாசனையும் மலினமேயாதலின் பிறவியாம் = பந்த வேதவேயாம். பூதங்கள் குலைந்துபோம், நியதியாலுதித்து ஒடுங்குவனவாதலின்என்க. பிரளயாதியில் திக்கின் விபாகவேதுவான சூரியாதிக ளின்மையின் திசையுந்தெரியாது. குருபாஞ்சாலாதி தேசமும் கற்பாந்தரத்தில், பிறசொலாத்திரிந்திடும் = வேறுவிய தேசத்தை யடையும், வேறுஷத்திரியராற் கிரகிக்கப் படுதலின் என்பது கருத்து. உண்டெனுந்தன்மை விழுங்கிட = இல்லையென்னும் அபாவத்தினுல், உலகு = பூலோ கம், புவனம் = புவர்லோகம், இவ்வாறுகவே எம்போலிய மனுடதேக தாரியின் கண் யாது விசுவாசம் என்பதாயிற்று. (106)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இத்தனை மாத்திரமல்ல மகாமகத்துக்களும் இலயத்தை யடைந்து விடுவர் என்கின்ரூர்:—சித்தரென.

சித்தர் பொன்றுவர் தருவனுஞ் சிதைகுவன் சிவனயன் றிருமார்பன்
றத்துவந்தனி லொன்றுவர் காலமுங்கருமமு முடிவாகு
மத்தவானும் போமயக்கமே தருவதாய் வாக்கொடு செவிக்கெட்டாச்
சுத்தமாம்பொரு ளொன்றினு லிகழ்வுறத் தொல்லுல கிழிவாகும். (107)

(ப - ரை.) சித்தர் பொன்றுவர் = சித்தர்களும் சிதைவுறுவர், தருவனுஞ் சிதைகு வன் = தருவனும் அத்தருவஜீவிதனுவன், சிவனயன் றிருமார்பன் = ருத்திரன் பிரஹ்மா விஷ்ணுவென்னும் பெரியார்; தத்துவந்தனி லொன்றுவர் = பரமமங்கலரூப மாக வொடுங்குவர், காலமுங் கருமமும் முடிவாகும் = காலமும் நியதியும் முடிவை யடையும், மத்தவானும்போம் = அநந்தமென் றறையப்பட்ட ஆகாசமும் அழிந்து போம், மயக்கமேதருவதாய்=பிரமத்தைக் கொடுப்பதாய், வாக்கொடு செவிக்கெட்டா-அதிராவ்யமாய் அவாச்சியமா யிருக்கும்; சுத்தமாம் பொருளொன்றினுல் = காணமுடி

யாத சுத்ததத்துவமாகிய ஞானமூர்த்தியினல், இகழ்வுறத் தொல்லுல கிழிவாகும் = நிந்திதமாமாறு. முன்னுள்ளதாய்ச் சொல்லு முலகம் வெறுந் தோற்றமாய் மாய்ந்து போம். (எ - று.) (107)

(ஸ்ரீ - வீர.) பரமேஷ்டியாகிய பிரஹ்மாநிஷ்டாவானுவன் அதாவது சொரூபத்தில் இலயமாவன், அஜனுகிய அரியும் நிஜவடிவாயிருப்பன், பவனுமுருத்திரனும் சிவமாய் வாழ்வன் என்பதாம். இப்பரமான்மாவினுலே காலமுஞ் சங்கரிக்கப்படும் என்பதா யிற்று. நியதி = தைவம் பூர்வகர்மம் என்பதர்த்தமாம், மரியாதைகளில் நியதியாம். காலமுஞ் சங்கரிக்கப்படுகின்றது அன்னியத்தா, லென்னச்சொன்ன அன்னியம் இன்ன தென வியம்புவார். வாக்கென்றூர். நிர்விகற்பமா யிருத்தலினுனே சுரோத்திராதி இந் திரியங்கட்கும் வாக்குமுதலிய இந்திரியங்கட்கும் எட்டாத தத்துவம் பாரமார்த்திக சொரூபமாம். காணமுடியாததாய் ஞானமே மூர்த்தியென்னும் சொரூபமாயிருப்பது. "அத்தர்சூக்ஷ்மம் அனுப்பிரவிஷ்டமாயதை" யெனமறையு மறைகின்றது. இழிவாகும் = இழிவற்ற விநோதம் காட்டப்படும், தத்துவத்தைமறைத்துக் கற்பிதத்தையே காட்டும் மாயாவியினுல் மிக வஞ்சிக்கப்படும் என்பதாயது. ஞானமின்றி யோகமந்திராசனுதி களானே சித்தியுற்ற சித்தருஞ் சிதைவர், நக்ஷத்திரங்களும் நாசமாகும், அலைகடலும் வறண்டுபோகுமாயின் எம்போலியர்பா லென்னே விசுவாசம். தானவரும் தத்தளித் தொழிவர், துருவனும் நிலையற்றவாழ்க்கையை யடைவன், அமரரும் அழிந்துபோவரா யின் எம்போலியர்பா லென்னே விசுவாசம். இந்திரனும் இனிதுட்கொள்ளப்படுகின் றனன், இயமனும் நியமமா யுபரதியுறுவன், வாயுவுமோயுமாயின் எம்போலியர்பா லாஸ் தையென்னே. சோமனுஞ் சூனிய மெய்துவன், சூரியனும் காரியமாகான், அக்கினியும் மக்கினத்தை யடையுமாயின் எம்போலியர்பாற் பற்றுதலென்னே. பரமேஷ்டியும் முடி பாய பரமேஷ்டையை யடைவர், கரியாத அரியும் கரியிலிருவர், பவனுமறிவில் அபா வத்தை யடைவராயின் எம்போலியர்மாட்டென்னே நம்புதல். முன்மொழிந்த மூவகைக் காலமுங் கோலமின்றியதாம், நியதியும் வயதாய் முடியும், அந்தமற்ற வெளியாவரண ஆகாயமுமொழியுமாயின் எம்போலியர் மாட்டென்னே விசுவாசம். செவிக்கும் வாக்கிற் கும் செவ்விய விழிக்குமெட்டாத தத்துவமாகிய எவனேவொரு மயக்கத்தைத்தரும் அறியப்படாத மூர்த்தியாந் தூலவடிவனுற் றன்பாலே மாயையினுற் றத்துவ மறைக்கப் பட்டுக் கற்பிதங்களே காண்பிக்கப் பெறுகின்றன. அபிமான அங்கிசத்தை யடைவுற்று லவும் பிராணிகளுக்குட்சர்வாந்தரியாமியா யெங்குமிருக்கும் பொருளாற் பாதிக்கப்படாத தொன்று இம்மூவுலகத்திலும் கிடையவேகிடையாதாம், அதற்குச் சர்வத்தையும் பாதிக் குந் தன்மையுண்டு, அதற்கேதுவாய தடையில்லாச் சுதந்திரமுளதாம்.

(ச.) ஒன்றுவர், பிரமாதி சகலரும் பரிமாணத்தாற் பரிமித ஜீவிகளே யாமென்பது கருத்து. பிரகிருதி புருடரின் கலக்கவடிவம் அல்லது நாசரூபம் ஆனபரமேசுரசக்தி யென்னும் காலமும், கருமமும், நியமனரூப சக்தியாகிய நியதியும் அழிந்துபோம். காலா திகளும் ஈசுர பரதந்திரமாகவின் மகாப்பிரளயத்திலோர் பொழுது நிவிருத்தியா மென் பது கருத்து. என்போன்ற மனுடதேக தாரியின் கண் இயாது விசுவாசமென்று அவ் வவ்விடத்துணர்க. இதுவென நிச்சயித்தற் கரிய மாயாவியாய் விளம்புதற்கும் வினவுதற் கும் காணுதற்கும் அரிய பரிசுத்தமான ஞானமூர்த்தியாய் அத்வைததத்துவமான பரமே சுரனுலிவ்விலக்கண மிகழ்ந்த புவனங்கள் நசிக்குமென்பதாயிற்று. (107)

(ஸ்ரீ-வீர - அ - கை.) அதிஷ்டானபூத பரமாத்மாவினுலே கொடுக்கப்பட்ட மயக் கத்தையே பற்றிச் சுழற்றிவைக்கும் அவனையறியாது உலகமானது நசிக்கின்றது என

வருத்தப்படுகின்றார்: ஆகாயத்தில் மாமிருக்குமாயின் அதிலிருக்கும் கொடியாற் கழுத்திற் சுற்றப்பெற்றுத் தொங்கிக்கொண்டு இருப்பதற் கொப்பாகச் சாரமற்றதும், பற்றுக் கோடின்றிய துக்கமும் வீழ்ச்சி முடிவினிலையை யுடையதும் ஆகிய சுவர்க்க நரகாதிகளைப் பயனுகவுடைய, முற்கூறிய தோடங்கணிறைந்த கெட்டகாமிய நிஷித்த ஒழுக்கங்களானே இவ்வுலகின் கண்ணே ஜன்மபரம்பரைகளில் இவ்வுயிர்களின் ஆயுளானவை மிகவும் கழிகின்றன; அதனை விருத்தி யுபாயமோ அதிதூரத்தி னிற்கின்றது அச்சிந்தையு முதிப்பதே கிடையாது விசாரவான்களாகிய யாங்களும் அறியவில்லை யென்கின்றார்:—இன்னபோதென.

இன்னபோது மங்கலங்களா மிருதுவீதி யாத்திரைக் கிதுகால
மன்னதேயுற விச்சக மிருந்தவா வற்புத முளபோக
மின்ன வென்னவா ளாநினைத் துலகங்க ளிறக்கின்ற வுயர்ந்தோரை
யுன்னிமுந்துறப் பகலெலாந் தேடிடா தோழியுமேற் றுயிலுண்டோ. (108)

(ப - ரை.) இன்னபோது மங்கலங்களாம் = இப்போது உற்சவங்களாம், இருது வீது = இது இருதுவாம், யாத்திரைக் கிதுகாலம் = யாத்திரை செய்வதற்கு இதுவே சமயமாம், அன்னதேயுறவு = அவர்களும் இவர்களுமே பந்துக்கள், இச்சுகம் இருந்தவாறு (என்னே) = இந்த இன்பம் எத்தகைய சிறப்புற் றிருக்கின்றது ஆ ! ஆ ! !, அற்புதமுள போகம் = விசேடத்தோடு கூடிய போகமானது அதிக விஸ்மயத்தைத் தரத்தக்கதாக விருக்கின்றது, என்ன என்ன = இந்த இந்த வண்ணம், வாளா நினைந்து = வீணுகவே யெண்ணி யெண்ணி, உலகங்க ளிறக்கின்ற = அநேக விகற்பமடைந்து நெகிழ்ந் நெஞ்சுடன் உலகங்கள் அழிகின்றன, உயர்ந்தோரை யுன்னி = விவேகிய ராகிய சாதுசீலரை நினைந்து, முந்துற = அவர் சம்சர்க்கம் பெற்று, பகலெலாம் = பகன் முழுதும், தேடிடாது = சிரவணுதி செய்யாமல், ஒழியுமேல் = வாளாபோழ்து போமாயின், துயிலுண்டோ = யாவர்தாம் கவலையின்றி நித்திரை செய்யமுடியும். (ஏ - று.) ()

(ஸ்ரீ - வீர.) உலகங்க ளிறக்கின்ற, உலகத்தார்தம் ஆலோல பேலவத்தி அதாவது பரிசஞ்சல தீனுபுத்தியானது நாசத்தை யெய்துகின்ற தென்பதாம், இங்ஙனம் அவிவேகிகளாய்ச் சமுசரிப்பவரைப்பற்றி யனுதாபப்பட்டுவிட்டு அவர்மத்தியில் நிகழாகின்ற முமுக்ஷுக்கள் எகாந்தப்பிரிய பிரஹ்மநிஷ்ட சந்நிதியின் கண்ணே சிரவணுதி யசம்பவத்தாற், சிந்தையிலெழு மாகுலங்கள் மிகுத்திடுதலின் இயற்கையாயதுயிலேயும் ஆதரிக்க மாட்டார்கள் என்பார், உயர்ந்தோரை யென்றார், விவேகியர் = பிரஹ்மவித்துக்கள், அவர்கள் அதீனமான நல்லொழுக்கங்கள் சிரவணுதிகள் கிடையாவிடில் முமுக்ஷுக்கள் உறங்குதல் எங்ஙன்கூடும் ? இன்று மகோற்சவம், இது நல்ல இருது, இது இனியயாத்திரை, இவர்களுறவினர், இஃதின்பம், சிறப்பாய போகமிது, என்பதாக வீணுகவே மடமையினுலே அநேகங்கோடி விகற்பங்களைக் கற்பித்துக்கொண்டு மகாசஞ்சலத்தையும் அதிபிரதுவையும் அடைந்த மூடரும் அவர்மதியும் இவ்வுலகிற் கெடுமாதலினுலே கெடும் சமக்கிரி மாத்திரம் கணக்தோறும் அதிசுலபமாம். இயம்பியும் இயம்பாமலும் இராநின்ற மோக்ஷவிரோதியாய பொருள்களில் மீண்டும் வைராக்கியப் பொருட்டு விஸ்தாரமாகத் தோடங்களே மேலுங் கூறத்தொடங்குபவரா யாதியில் சர்வதோஷ நிவர்த்தகரான பெரியாரைப் பேணுவிடிற் கண்கண்ட சுகமே காணுதென்பார், உயர்ந்தோரென்றார். இங்குமங்குமாக அதிதூரம் சுற்றித்திரிந்து பொழுது போம்போது வீட்டிற் புகுந்து பகலில் விவேகிகளினது அனுசரணத்தால் நல்லகரும ஒழுக்கமே யில்லாமலொழியின் மூடனேத்தவிர இரவில் யாவன், நித்திரைசெய்வன்.

(ச.) இன்றிது மதனஉற்சவமாம், இஃதின்பத்தரத்தக்க வசந்த இருதுவாம், இந்தப் பிரதேசத்தில் யாத்திரைசெல்லும் ஜனசமுதாயம் அதிசயமாகச் சவிசேஷசுகத்தை யனுபவிக்கின்றது. விகற்பஜ்ஞாலங்களே நினைந்து அற்பமதியுடைய வுலகங்கள் இறக்கின்றன வென்பதாம். சற்சரித்திரமில்லா தொழியுமாயின் எம்முடைய தான் நித்திரைசெய்வன், எவனுஞ்செய்யான், புருடார்த்த சாதனத்திற் குரியகாலம் நிரர்த்தகமாகவே நீங்கு மெனிற் பறிகொடுத்தவனைப்போல விழித்திருக்க வேண்டுமே யல்லாமன் மற்றெங்கு னம் கிருதகிருத்தியன்போல் நித்திரை செய்யத்தகும் என்பது கருத்தாம். (108)

(ஸ்ரீ - வீர. அ - கை.) சர்வஜனங்களும் புத்திரதாராதிகளே அபிருத சமானமாக நினைந்து அவர்கட்காகவேண்டி, யதன் கண்ணே முயலுகின்றனரே யன்றிச் சிரவணஜி யின் கண்ணே முயலுவதில்லை, அதுபோலவே நினது பிரவிருத்தியும் ஏன் ஆகக்கூடா தெனின் ? அதற்குக் கூறுகின்றார்: தராசையிஞலே கெடுக்கப்பட்ட சித்தவிருத்தியை யுடையவுலகர் எக்கருமத்தைப்பற்றி இஷ்டப்பாறு தலையடைவரோ அத்தகைய தெக்கரு மமும் எங்கும் எக்காலத்தும் கிலேசமும் நாசமும் அற்றதாய்ச் சமுசாரமுடிவு வடிவான மோக்ஷபலத்தை யுடைத்தானமையான அழிகியதாய்க் காணப்படுவதேயில்லை, " எவ்வா றிங்கே யெழிற்றெழிலானே, செவ்வாருக்கிய பயன்றின்றுநீரும், அவ்வாறங்கே யறத்தாற் றரித்த, செவ்வாரூய பயனுயின்றேரும்" என்பதாதி சுருதியை யனுசரித்துச் செயற் கையானுண்டான பயனுசமாமென்பது நியமமாம் இட்டங்கெட் டொழியிலே துக்கமே முடிவிலுண்டாகின்ற தென்பதும் வெட்டவெளியாம் என்கின்றார்:—மனையென,

மனையியம கரும்பொன்னு மமதைசெய் தமுதும் போல
நினைவினு னேயஞ்செய்து நீணிலத் துள்ள வெல்லா
மனையவர்க் காகச்செய்வர ருத்திக ளான வெல்லாம்
வினையுற முடியுங்காலை விடங்களின் மயக்கஞ் செய்யும். (109)

(ப - ரை.) மனையிய மகரும் பொன்னும் = தாரத்தையும் தனயரையும் தனத்தை யும், அமுதம்போல = இரசாயனத்திற்குச் சமானமாக, நினைவினுல் நேயஞ்செய்து = புத்தியினுலே அதிவிசுவாசப்படுத்தி, மமதைசெய்து = எனது எனது எனவபிமானம் வைத்து, நீள் நிலத்துள்ள வெல்லாம் அனையவர்க்காகச் செய்வர் = இவ்விஸ்தாரமாகிய ஜகத்தின் கண்ணுள்ள சர்வசுக சாதனங்களையும் மேற்கூறியவர்கட்காகவே சம்பாதித் துக்கொண்டே யிருப்பர், அருத்திகள் ஆனவெல்லாம் = ஆசையா லாக்கப்படுவன யாவுமே, வினையுற முடியுங்காலை = அனுபவித்துத் தீர்க்குங் காலத்திலும் கருமமுடிந்து செல்லுங் காலத்திலும், விடங்களின் மயக்கஞ்செய்யும் = அதிரம்மியம் என்பதற்குவிட மூர்ச்சனைபோலப் பெருந்துயரத்தையே யீயும். (109)

(ஸ்ரீ - வீர.) அதிரம்மிய விடமூர்ச்சனைபோலப் பெருந்துயரை யந்தகாலத்திற் செய்யுமென்பதாம். மோக்ஷோபயோக மின்மையின் அனையவர்க்காகச் செய்வது பழிப் பேயாம். எதன்கட்டுக்கமுண்டாயபோது விடமூர்ச்சனையும் அதிரம்மியமேயாமோ அத் தகைய துக்கத்தைச் செய்யுமென்பதாம். புத்திரர்களும், மனையிரும், தனங்களும் மயலினுலே அபிர்தத்திற்குச் சமானமாகக் கற்பிக்கப் படுகின்றனர், மரணகாலத்திலோ அவர்யாவரும் உதவுவதேயில்லை, அப்போது போகவிடயங்கள் மிக மனோரம்மியமா னவை யெனினும் விஷமூர்ச்சையைப் போற் றுக்கப் பொருட்டேயாகின்றன.

(ச.) புத்திராதி யாவுமே அவசானத்தில் அத்தகைய பலத்தைச் செய்யும், எத்த கைய பலத்தைக் குறித்து விடமூர்ச்சனையே இரம்மியமாமோ ! இதனினேவிட மூர்ச்

சனையினும் சகிக்க முடியாததும் மாற்றிக்கொள்ள முடியாததும் ஆனபெருந்துயரம் இறந்துபோம் புத்திர களத்திராதியா லுளதாம் என்பது குறிப்பிக்கப்பட்டது. (109)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நிலபாலோ துக்கத்தோடு கூடியதாயினும் அவ்விடய சுகம் அனுபவியாமலும், அதனைச் சம்பாதிக்கும் பிரயாச மாத்திரத்தை யனுபவித்தும் இருக்கும்போதே விடயபரன் மிருத்தியுவினிடத்தி லகப்பட்டுக் கொள்ளுகின்றான், என்கின்றார்:—பகையென.

பகையெலாந் துரந்துதள்ளிப் பாக்கியம் பலவுந் தெய்த
விகலறத் துய்க்குநாளி லெவ்விடத் திருந்தோ வந்து
மிகையறு காலன்கொல்லும் விதிதமா மிடத்தி னின்று
வகுந்தின்வந் தொன்றுவார்போன் மனுவீசேய் முதலா மாயை (110)

(ப - ரை.) பகை எலாந் துரந்து தள்ளி = சமக்கிர சத்துரு ஜனங்களையும் தூரத்திவிட்டு, பாக்கியம் பலவுந்தெய்த = சகல பாக்கியங்களாகிய அஷ்டலக்ஷ்மிகளும் இனிதாக வந்தடைய, இகலறத்துய்க்கும் நாளில் = யாதொரு விக்கினமுமில்லாமல் இவ்வின்பங்களைச் சேவித்துக்கொண்டிருக்கும்போது, எவ்விடத்திருந்தோ வந்து = எங்கிருந்தோ தெரியாமல்வந்து, மிகையறுகாலன் கொல்லும் = தனக்குமேலொன்று வலுவிலாத காலன் சங்கரிக்கும், விதிதமாமிடத் தினின்று = இங்கிருந்தும் பிறவிடத்திலிருந்தும், வகுந்தின் வந்தொன்றுவார்போல் = சமானசங்கேத எண்ண முடையவர்கள் வலிவந்துசேர்ந்து கொள்வதேபோல, மனுவீசேய் முதலாமாயை = களத்திர புத்திரமித்திராதி விவகார மாயையாம். (எ-று.) (110)

(ஸ்ரீ - வீர.) யாவையுஞ் சேகரித்துப் புசிக்குங்கா னமன்வரின் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போய்ப் பெருந்துயர்க்கே யிடமாம். ஆயினும் ஒருவனேபோக்தா மிருத்தியு வாயிலகப்படாமல் வாழ்வான், வாழினும் அவனது மயல்வடிவமாய களத்திராதி விவகாரம் அஸ்திரமாமென்பார், விவிதமாமென்றார். சாதாரண சங்கேதத்தாற் கட்டுப்பட்ட கருத்துடையபோகாதி விடயங்கள் விவகார மாயையில்லாம், பொருளிதுவாம்:—பங்குனிமாதத்தில் கிருஷ்ண சதுர்த்தசியில் ஸ்ரீவிசுவேச யாத்திரை செய்யத்தக்கது என்னுஞ் சங்கேதத்தாற் சர்வசாதாரணமாகவே நரர்கள் கட்டுற்ற கருத்துடைய ராய் க்ஷணிகயாத்திரைச் சமாசங்கமுறுவர்;அவ்வாறே விவாகாதி காலசம்பந்தமுற்ற சாதாரண சங்கேதத்தாற் கட்டுற்ற கருத்துடையராய்க் களத்திராதி விவகார மயல்கள்கணிசங்களாக வுண்டாம். எல்லாப்பகைவரையு மினிது வெற்றிகொண்டு அஷ்டலக்ஷ்மிகளும் நாற்புறமும் சூழ்ந்து வருமாறு சுகங்களைப் புருடனுபவிக்கும்போது எவ்விடத்திலிருந்தோ மிருத்தியுவானது வந்தழித்து விடுகின்றது. எவ்விதத்தினும் இன்னதென நிண்ணயிக்கமுடியாத காரணத்தினனே விருத்தியாகாதின்ற துச்சவடிவமுடையனவும், கண்டகணத்திலழிந்து போவனவும், ஆகிய இவ்விடயங்களானே மயங்கித்திரிபவராகிய ஜனங்கள் இவ்வுலகின்கண்ணே எங்கிருந்துதா னுற்பத்தியாகின்றார்களோ, எங்குபோய்த்தான் மடிகின்றார்களோ அறியமுடியவில்லை யென்பதாம். இம்மனுட வுலகத்தினின்றும், சுவர்க்க நரகாதிகளினின்றும் வந்து வீணுகவே யிங்கு நாமெல்லோரும் ஒன்றுசேர்ந்து நெடுநாள் வாழ்வோம் எனப்பரஸ்பரம் அபிப்பிராயங்கொண்டு சங்கேதஞ்செய்து அதற்குத்தக்க வடிவோடுகூடி மித்திர களத்திர விவகாரரூப மாயையானது தேவோற்சவ முதலிய யாத்திரைகளில் நரர்கள் ஒன்றுசேர்ந்து சுழல்வதேபோற் சுழலுகின்றது.

(ச.) பாஷாசாமியாதி நிபந்தனத்தால் சப்தார்த்த சம்பந்தத்தால் இயற்றப்பெற்ற பிரமாணிகளாய் ஒன்றுவார். விதிதமாமிடம் = இங்கிருந்தும் பிறவிடத்திருந்தும் எனக்

கமனூர்த்தத்தில் தேசகாகாத் தன்மை காண்பித்ததாயிற்று. தீர்த்தாதி யாத்திரையின் கண் சமாசங்கரா யொன்றுவார்போல் என்பதாம். மனவி சேய் முதலன வடிவமாயை யெனவறிக. (110)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நம்மனோராதி போக்தாக்கட்குப் போக்தவ்ய போகம்அவச ரத்திற்றானே மிருத்தியு சம்பவிக்கும், சம்பவித்தபோதினும் அநேக ஆயிரயுக ஜீவித பிரஹ்மாதிகட்கு அங்ஙனஞ் சம்பவியாதேயெனின், கூறுகின்றார்: ஸ்ரீ இரகுநந்தனர் சம் சார திருஷ்டிகளுக்குள் தோஷமில்லாத திருஷ்டிகளெவை, துக்கதாகமில்லாத திசைகள் தாமெவை, கணத்தில் நாசத்தை யடையாத பிரஜைகள் தாமியாவர், வஞ்சனையில்லாத இலௌகிகக் கிரியைதாமெவை, ஒன்றுமில்லவே யில்லையென்று சொல்ல, அன்னியர்க ளுடைய பிரஜைகட்கு அழிவிருப்பினும் பிரஹ்மாவினுலகத்தை யடைந்த பிரஜைகட்குக் கற்பகால மிருக்குந்தன்மை யுண்மையின் கணத்தில் அழிதலெவ்வாறு பொருந்துமெனின்? கூறுகின்றார்:—கற்பமாமென.

கற்பமாங் கணகாலத்திற் கமலயோ னிகளு மாய்வர்
சிற்பமாங் கலைகளாலே செறிந்தகா லத்தின் சால
வற்பமு மகத்துநாடி யளப்புறு புந்தி பொய்யாம்
பற்பல தீதின்மாலும் பயிலுமன் னுயிர்க ளெல்லாம். (111)

(ப - ரை.) கற்பமாம் கணகாலத்தில் = கற்பமெனப் பெயரிய ஓரணப்போழ்தில், கமலயோனிகளும் = பிரஹ்மாக்களும், மாய்வர் = வாழ்ந்து போவர், சிற்பமாங் கலைக ளாலே = கற்பிக்கப்பட்ட கலைகண் முதலியவற்றுனே, செறிந்த = அடுக்காகப் பொருந் திய, காலத்தின் சால = காலவீட்டத்துற்ற, அற்பமுமகத்துநாடி = லகுத்தன்மை தீர்க் கத்தன்மைகளேச் சிறிதுபெரிதாகப் பாவித்து, அளப்புறுபுந்தி பொய்யாம் = எண்ணும்மதி மித்தையேயாம், பயிலுமன்னுயிர்களெல்லாம் = காமாசக்தர்களாய் விவகரிக்கும் பிராணி கள் அனைத்தும், பற்பல தீதின்மாலும் = விவிதகுகலேச் சேட்டையாவார்கள். (111)

(ஸ்ரீ - வீர.) அநாதியாய சமுசாரத்தில் கற்பசமூக சங்கியையைக் கணக்கிடில் விரிஞ் சர்கள் கற்பகண ஜீவிகளேயாவர்கள்; ஆயினும் நம்மனோராதியின் லகுகாலத்தை யுத்தே சித்துத் தீர்க்கஜீவியே யாவர் பிரஹ்மாவெனின், விடைதருவார், காலத்தின் சாலமென் றூர்; கனவின்கண் முகூர்த்தத்தில் வருடக்கூட்டமயல் உண்டாவதேபோல நனவின் கண்ணும் லகுத்வமுதலவற்றின் பிராந்தியாம் என்பது கருத்து. இங்ஙனம் சமுசார விருத்தத்தை விளம்பி அதனிவிருத்தி யுபாய அலாபநிமித்த கேதத்தைத் தரிசிப்பிப்பார், மன்னுயிர் என்றூர். குகலை = கெட்டவித்தை. சென்றனவும் வருவனவும் ஆகிய அநந்த கற்பங்களின் எண்ணிக்கையை யறியாதபோது அநந்தமென்பது சமமாயிருத்தலினுனே கற்பங்களும் விஷ்ணுருத்திராதி திருஷ்டியானே கணங்களே யாமெனவாதலின் பிரஹ் மாக்களும் கற்பமென்னுங் கணவாழ்க்கையை யுற்றவர்களே யாவர்கள், ஆகவே அவயவத் தோடுகூடிய காலசமுதாயத்தில் குறுகல் நீட்சிமதிகளும், அற்ப அதிகவாழ்க்கை மதி களும், காண்போன் கற்பனையி னதீனமாயிருத்தலின் அசத்தியங்களேயாகும்; இதே நியா யத்தால் பிரஹ்மாண்டங்களும் அநந்தங்கோடி பிரஹ்மாண்டங்கண்டவர்களின் திருட்டி யால் அணுக்களேயாமென அணுமகத்தென்னும் மதிகளும் அசத்தியங்களேயாம். இவ் வாறே பிரகிருதி திருஷ்டியில் விகாரங்களியாவுமே அசத்தியங்களே யாமெனத் தோற் றும்; செந்தழல்கொண்ட சிவப்புவர்ணம், அந்தநற்றேஜசி லண்டியதாகும், தந்திடும் வெண்மையோ தண்ணீரதாகும், மந்தமாங்கறுப்போ மண்ணினதாகும், இந்தவாறனற்

கண் ணெரியாந்தகைமை, வந்தவாறந்தோ வழிகொண்டேகும், தொந்தவாக்காற் ரெடங் கிய விகாரம் மந்திர நாமமாத்திரமாகும், முந்திய மூன்றுமொழிதரு ரூபமே, அந்தமற்று ண்மையா யமர்ந்திடுமன்றே' என்னும் மறையும் இதனையே யறைகின்றது. கூறிய பொரு ளையே யனுவதித்து முடிப்பார் அதனிமித்தமாகத் தமது இளர்ச்சியைக் காட்டுகின்ரூர், பற்பலவென காமப்பற்றுடையவர்களோ பலவகையான குடிலத்தன்மைச் சாதரியங்க ளாலே விவகரிப்பதிற், றற்பரர்களாக இருக்கின்ரூர்கள் என்பதாம்.

(ச.) பூதபௌதிகற்பக் கூட்டங்களே எண்ணிக்கைசெய்து கோடிகரிக்குங்கால் விரிஞ் சனும் கற்பமென்பெயரிய கணஜீவியேயாவன் ஆகலின் வெகுவித கற்பஞசாலினி காலசாலத்தில் கற்பாயுள் தீர்க்காயுள் என்னும் புத்தியும் மித்தியாபூதமேயாம். அற்பம் மகத்து = அற்பாயுள் தீர்க்காயுள். பற்பலதீதும். பற்பலதீதின், பற்பலதீதும்=குற்றித கீதரிருத்திய விசித்திரங்களே விளம்பும் அறுபத்துநான்கு என்னுங் காமகலையின் றீதான சேட்டையில் சேட்டையும், மாலும் = வாஞ்சையடைகின்றன. அவைகளில் வாஞ்சையும், பயிலுஞ்சொருத்தும், மன்னுயிர்களெல்லாம்;=சர்வஜனங்களும், காமாசக்தர்களே யாவர் கள் என்பதாம்.

(ஸ்ரீ - வீர- அ-கை.) இப்போது விவேகிகள் துர்லபமென்றும் ஒரு செயலுஞ் செய்ய முடியவில்லை யென்றும் யாவுமனித்திய மென்றுங் கூறுகின்ரூர்:—கற்றவரென.

கற்றவ ரரியர் சாலக் கருமமுந் துயரினுலே
யுற்றரு னியமா மெல்ல முயிர்தரித் தூழல்வ தெங்ங
னற்றவத் தினமு மேலாஞ் செல்வமு மந்தச் செய்கை
மூற்றுமாய்ந் துளத்தே தோன்று மியாமுமம் முறையிற் செல்வோம்.

(ப - ரை.) கற்றவரரியர்சால = கற்கவேண்டியதைக்கற்று உணரவேண்டியதை யுணர்ந்த சுஜனங்கள் கனவினும் இவ்வுலகின்கண்ணே சுலபமாகக் காணப்படவில்லை, கருமமுந் துயரினுலேயுற்ற = கிரியையும் துக்காசங்கமாக விருக்கின்றது, சூனியமாம் எல்லாம் = யாவுமே விதுரவிதுரங்களாம், உயிர்தரித் தூழல்வதெங்ஙன் = ஜீவிதமயி தசையை யெங்ஙனந்தான் கடத்துவதோ தெரியவில்லை, நற்றவத்தினமும் = நல்ல அந் தத்தினங்களும், மேலாம் = அம்மேன்மையும், செல்வமும்=அச்செல்வங்களும், அந்தச் செய்கை = அத்தொழில்களும், மூற்றுமாய்ந் துளத்தேதோன்றும் = மற்றுமுள்ள யாவுமே நசித்து நினைவுமாத்திரமாய்ப் போய்விடும், யாமும் = நாமும், அம்முறையிற் செல்வோம் = அம்மார்க்கத்தையே செல்வோம். மேலோரெனின்=பெரியோ ரென்பதாம்.

(ஸ்ரீ - வீர.) சுஜனலாபத்தாலென்னே கிரியையிஞலேயே புருடார்த்தத்தைச் சாதிக் கலாமேயெனின் புகல்வார், கருமமுமென்ரூர். எல்லாக்கிரியைகளுமே துக்கங்களோடு கூடியவைகளாம், விதுரவிதுரங்களுமாம்=சுக சாதனங்களற்றவைகளும், அதுக்கபலன் கள் அற்றவைகளுமாம், துக்காசங்கம்=துக்கங்களோடு மூற்றினும் கூடியது, விதுரவிது ரம்=புருடார்த்தம் அத்தியந்தம் இல்லாதிருப்பது; இவ்வண்ணம் அநாத்மவர்க்கம் அநித் தியம் என விஸ்தாரமாகப் பிரதிபாதித்ததைச் சுருக்கிக்கூறுவார், நற்றவென்ரூர். இவ் வுலகின்கண்ணே கனவிலும் விவேகிகளிப்போது எளிதாகக்கிடைப்பது அரிதாக இருக் கின்றது, தொழில்கள் யாவையுமோ அத்யந்தந் துக்கரகித சாதனங்களோடும் பலன்க ளோடும், சோதனவா யவசியம் துக்கத்தையே கொடுப்பனவாகவே யிருக்கின்றன, ஆக லின் இவ்வாழ்க்கையமாயிருக்கும் தசையை யெங்ஙனந்தான் கழிப்பதோ தெரியவில்லை. சர்வபோக்கிய வஸ்துக்களிலும் வைராக்கியமுண்டாகும் பொருட்டு எல்லாப் பொருள்கட்

கும் மாறுபாடான இயற்கை யியம்புவார், நற்றவென்னூர். நல்ல உற்சவ வைபவத்தோடு கூடிய அத்தினங்களும் அப்பெரியோர்களும், அச்சம்பத்துக்களும், அத்தொழில்களும், பிறவாவும், நினைவுமாத்திர நெறியை மருவினின்றன, இனியாமுங் கணத்திலிந்த வழியே தான் செல்லப்போகின்றோம். தினந்தினம் அழிந்துகொண்டே யிருக்கின்றது, தினம் தினம் மீண்டு மூண்டாகிக்கொண்டே யிருக்கின்றது. கெட்டுப்போன இந்த வெந்த சம் சாரத்திற் கின்றளவும் அந்தத்தையே காணேம். புருடர்கள் மிருகங்களாகின்றார்கள் மிருகங்கள் புருடர்களாகின்றன, தேவதைகளும் அதேவதைகளாகின்றார்கள் ஆகலின் ஈண்டெதைத்தான் நிலையெனக் கூறமுடியும்.

(ச.) கற்றவர் கனவினும் காணக்கிடையார். சகல கருமங்களுமே சித்தவிகேப வேதுக்களேயாம், எங்ஙன் = எப்படியோ யானறியேன். ஜீவரது வாழ்க்கை புருடார்த்த நிமித்தம் சேடிக்குத் தன்மையைத் தேவரீர் அனுக்கிரகிக்க வேண்டுமென்பது கருத் தாம், மேலோர் = மகான்கள். செல்வோம் = இனிமேற் போவோம். (112)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வடவாமுக அக்கினியினுனே நீரானது வற்றுவதேபோலப் பிரஹ்மா விஷ்ணு ருத்திரன் பிறபிராணிகள் யாவும், லயத்தையே யடைகின்றனர், சுவர்க்கம் பூமிவாயு ஆகாசம் மூலயாறு திசையென்னு மிவையாவுமே லயமுறுகின்றன வென்னூல் எவைதாங் கணத்திற் போகாதன வில்லை யென்கின்றார்:—பிணியென.

(ச.) சலம் வடவாநலத்தா னகிப்பதே போன்று பிரஹ்மா விஷ்ணுருத்திரனும் சகல பூதசாதிகளும் நாசமே யடைவரென்கின்றார்:—பிணியென.

பிணிசெயா பத்துச் செல்வம் பிறப்பிறப் பென்ப வெல்லாங்
கணிதமாங் கணத்திற் போகா தனவில்லைக் கடிய சூரன்
றுணிவனே ரேழையாலே நூறுட றுணியு மொன்றுற்
பணிதரு கீழோர் மேலாம் பலவட்டம் வருமிவ் வாறே. (113)

(ப - ரை.) பிணிசெய் ஆபத்து = துயரத்தை யுண்டாக்கும் ஆபத்துக்கள், செல் வம் = சம்பத்து, பிறப்பிறப்பு = ஜன்மமரணம், என்பவெல்லாம் = என்று சொல்லப் படும் பொருள்களியாவுமே, கணிதமாம் = க்ஷணிகங்களேயாம், கணத்திற் போகாதன வில்லை = கணகாலத்திற் கழியாதனவே காணேம், கடிய சூரன் = அதிசாமர்த்திய சூரனையினும், ஓரேழையாலே துணிவன் = அசூரனொருவனுல் அதமாக்கப்படுவன், ஒன்றுல் நூறுடல் துணியும் = ஏகத்தால் அநேகசரீரங்கள் அதமாக்கப்படும், பணிதரு கீழோர் மேலாம் = வணங்கும் படியான தன்மைவாய்ந்த பிராகிருதர் மேன்மையாகிய பிரபுத்தன்மை யடைவர், இவ்வாறே பலவட்டம் வரும் = இங்ஙனந்தானே சகல சகத் தும் அநேகமுறை சுற்றிக்கொண்டே யிருக்கும். (எ - று.) (113)

(ஸ்ரீ - வீர.) எதுதான் கணத்தில் நசிக்கவில்லை மற்றே எல்லாமே கணத்தில் நசிக்குமென்பதாம்; வரவுபோக்கினையே யுடைத்தாகி யிருப்பதும் கணமிருப்பையும் நாசத்தையும் உறுவதும் ஆகிய இதனுல் இச்சமுசாரத்தில் எத்தீரன்னூன் அஞ்சவில்லை: கணம் ஆபத்துக்கள் வந்தடைகின்றன, கணம் சம்பத்துக்கள் வந்து சார்கின்றன, கணம் பிறப்புறுகின்றது, கணமிறப்புறுகின்றது, கணமாயினும் என்னதான் மாறும மிருக்கின்றது. முன்னர் வேறுகவே யிருந்தவொருவன் சிலதினங்களில் வேறுகவே யாய்விடுகின்றன் ஆகலினிவ்வுலகில் எப்போதும் ஏகரூபமாயும் நன்னிலையுற்றதாயும் ஒரு பொருளும் இல்லவேயில்லை யென்பார் கடிய என்னூர். சூரனல்லாதவனுலே சூரன்

கொல்லப்படுகின்றன், ஒருவனும் நூறுபேர் கொல்லப்படுகின்றனர். அற்ப அறிவி லர்களும் பிரபுத்தன்மையை யடைந்து விடுகின்றனர் ஆகலின் எல்லாவுலகும் மாறிக் கொண்டே யிருக்கின்றது.

(ச.) சகலமும் கணிகமாதலேயன்றி நிலையுறுதா மென்பார் கணத்தில் என்றார். சகல சலிலமெல்லாம் வடவைக்கினி யடைவதேபோலும், கணத்திற் காலன்பாலடையும்; ஆண் டாகாயத்தினின்றும் வீழாநின்ற சகல சலிலங்களுமே சிறுசிறுயாறுவாகிக் கடலை யடைந்து வடவாக்கினியின்பால் வீழ்கின்றன வென்பதாம்; சகல சகத்தும் மாறிமாறிச் சுற்றும். (113)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இங்ஙனம் வெகுவிதமாகச் சம்சாரதோஷங்களை நிரூபித்து அதன்பயனுகிய நிரதிசய வைராக்கியத்தைக் கூறுகின்றார்.—சர்வ பதார்த்தங்களிலுந் தோடங்களைக் கண்டமையின் தமக்கு வைராக்கிய முண்டாகி யிருத்தலையும் தமது சித்தத்திற் றோடத்தைக் கண்டமையையும் வருணித்து, அவைசாந்தியாம் பொருட்டும் தத்துவத்தையறியும் பொருட்டும் உபதேசிப்பான் பிரார்த்திக்கத் தொடங்குகின்றார்:— அனேயவென.

அனேயகுற் றங்களாங் காட்டெரியினுலறவும் வெந்த
நினேவினீ ரிற்கானற்போ னெடியபோ கங்க டோன்ற
வினேயுறு மரணம் வாணுளிர ண்டையும் விரும்புகில்லேன்
இனேயதோ ரிடருமின்றி யிருந்தவா றிருக்கின் றேனுல். (114)

(ப - ரை.) அனேய குற்றங்களாங் காட்டெரியினுல் = மேற்கூறிய தோடங்களாய தாவாக்கினியினுலே, அறவும் வெந்த = அத்தியந்தம் வெதுப்பப்பட்ட, நினேவில் = சித்தத்தின்கண்ணே, நீரிற் கானற்போல் = மிருகதிருஷ்ணை சரங்களிற்போல, நெடிய போகங்கள் தோன்ற = பெரும்போகங்கள் பொருளாகப் புலப்படவில்லை, வினேயுறு மரணம் வாணுளிரண்டையும் = கருமசம்பந்தத்தானே வாராநின்ற மரணம் ஜீவிதம் என்னு மிரண்டின் கண்ணும், விரும்புகில்லேன் = விருப்பத்தை யடையமாட்டேன், இனேயதோரிடருமின்றி = இத்தகைமைத்தாய் எவ்விடருறு சுரமுமேயில்லாமல், இருந்த வாறிருக்கின்றேன் = இருந்தவண்ணமே யிருக்கின்றேன். (114)

(ஸ்ரீ - வீர.) போகங்களில் இச்சை யில்லாவிடினும் ஜீவனுதிகளிற் பிரீதியுண்டா மெனின் உரைப்பார், வினேயென்றார். கூறியவகையாக உண்டாய தோடதிருட்டியான காட்டுத்தீயாலும், என் விவேகமதியில் நிறைந்த தோடங்களாகிய காட்டுத்தீயாலும், ஆசை விரைகளெல்லாம் அடியோடு தகிக்கப்பட்டும், விவேக விஸ்தாரத்தோடு கூடியும் இராநின்ற என்மதியில் மலர்த் தடாகத்திற் கானனீர் தோற்றுதலே போலப் போக ஆசையானது தோற்றுவதில்லை; அவிவேக மருப்பூமியிலன்றே போக ஆசைக் கானனீர் தோற்றும். எனக்குத்யானவனும் ஆனந்தத்தின் பொருட்டாகவில்லை, மங் கையரும் சுகப்பொருட்டாகார், தனவடைவும் மகிழ்ச்சிசெய்யாது மனஞ்சாந்தியடை வதே நலமாகின்றது, சாந்தியன்றி வேறுசுகவேதுவைக்காணேம். உலகமோ அநித்தி யம் ஆனந்தமல்ல, ஆசையோ தாண்டமுடியாமற் பெருகுகின்றது, சித்தமோ அதிசஞ்சலத் தாற் கெடுக்கப்பட்டுளது ஆகலின் எங்ஙன் சுகமுண்டாம். இறப்பதினும் இச்சையில்லை, வாழ்வதினும் வாஞ்சையில்லை, எவ்வாறிருக்கின்றேனே அவ்வாறேதாபமற்றவனு யிருக்கின்றேன்.

(ச.) போகங்கள் = போகாசைகள், வினையுறு = ஊழால் வரும். இருந்தவாறு = இப்போது தேவரீரது திருச்சன்னிதியில் வழங்கியவகையே பரிசுத்தசித்தனுக விருக்கின்ற படியே இருக்கின்றேன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) விடயத்தில் வீழ்ந்து சுழலும் சித்தத்தின் சிகிச்சை விருத்த அவஸ்தையிற் செய்வதே தகுதியாம் தாருண்யத்தில் யாதின்பொருட்டுக் கட்டப்பட்டு அதைச் செய்யவேண்டும் எனின் கூறுகின்றூர்:—தெரியென.

தெரிவுறு வயதில் வந்த புந்தியாற் சித்தந் தன்னைப்
பரிகரி யாது விட்டாற் பரிகரிப் பதுமற் றெந்நாள்
விரிவிடம் விடம தன்று விடயமே விடமாந் துன்பம்
புரிவிடங் கொல்வ தோர்மெய் புலன்மறு பிறப்புங் கொல்லும். (115)

(ப - ரை.) தெரிவுறு வயதில்வந்த = விவேக திடத்தோடுகூடிய தாருண்யத்திற் கிடைத்த, புந்தியால் = தெளிந்தமதியால், சித்தந்தன்னை = விடயத்தை நாடும் மனத்தை, பரிகரியாது விட்டால் = சிகிச்சைசெய் தடக்காவிடில், பரிகரிப்பது மற்றெந்நாள் = மறு படி சித்த சிகிச்சைக்குக் காலம் வாய்ப்பதெப்போதோ, விரிவிடம் விடமதன்று = துய ரத்தை விஸ்தரிக்கும் விஷம் விஷத்திற்குரிய ஹிகிருஷ்ட வேலையைச் செய்கின்றதென்று சொல்ல முடியாதாம், விடயமே விடமாம் = திருஷ்ய சப்தாதியே விடவேலையை யோ யாது செய்வதாம், துன்பம் புரிவிடம்கொல்வதோர்மெய் = துயரைத்தரும் விடம் நஷப் பிப்பது ஒரு சரீரமாம், புலன் = விடயங்கள், மறுபிறப்புங் கொல்லும் = வாதனைவடிவ மாகி மறுமறுபிறப்புகளிலும் கொன்று கொண்டே யிருக்கும். (எ - று.) (115)

(ஸ்ரீ - வீர.) பாலியத்தின் பின் மதிதெளிதலின் வயதில்வந்த என்றூர். யவ்வனத் திற் சிகிச்சை சித்தஞ்செய்யப் படாதாயின் மற்றொரு போதுமே திருத்தப்படாதாம். விடயங்களி லிச்சித்தஞ் சிகிச்சை செய்யப்படவே வேண்டுவதேன் எனின் இயம்புவார், விரிவிடமென்றூர். விஷமானது விஷயவைஷம்யமாம், விடயங்களில் விடமத்தன்மை யாவது, சோபனு சோபனத் தன்மைவடிவ இராகத்வேஷ ஹேதுபூதமாம். இந்தப் பாலியவயதில் தெளிவான மதியினனே மனதானது சிஷிக்கப் படாவிடின், மறுபடி சித் தத்தைத் திருத்துவதற்கு அவகாசம் எவ்வாறு கிடைக்கும், " மரம் தருத்தனைச் சிறுத்தறத் தரித்திட லெளிதே, பருத்திடின் மரத்தினைப் பறித்திட லெவரே " என்னும் நியாயமு முளதாம். விடம் விடமெனக் கூறப்பட மாட்டாது, மிகக்கோணலால் விடயமே பெரிய விடமாம், விடமானது புசித்த தேகத்தை மாத்திரம் நஷப்பிக்கும், விடயமோ ஜன்மாந் தரங்களிலும் கெடுக்கும்.

(ச.) இப்போது நீர் பரிகரியாது விட்டால் பரிகரிப்பது மற்றெந்நாள். சாதனசது ஷ்டய சம்பத்தியும் சற்குரு சம்பத்தியும் அநேக ஜன்மசஞ்சிதமாகிய மகத்தான சுகிர்த புஞ்சத்தின்பலமாம், ஆகலின் அவைகிடைத்த இப்போதும், சித்தல்ய உபாயம் உபதே சியாவிடின் இனி யொருபோதும் பத்த நிவிருத்தியின்றென்பது கருத்து. கொல்லும், ஆலகாலாதி விடமெந்தத் தேகத்தைத் தீண்டிற்றே அந்தத் தேகத்தையே கெடுக்கும், கிஷித்த விடயபோகமோ சன்மாந்தர சிகஸ்ரங்களையும் கெடுக்கும்; ஆதலால் விஷதுன் பத்தினும் விஷயதுன்பம் சகித்தற் கரியதாமென்க. (115)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஞானவைராக்கிய ஔடதங்களால் சிகிச்சை செய்யப்பட்ட சித்தத்தால் என்னபயன் அடையப்படும், எதனுல் நின்னுல் சித்த சிகிச்சை செய்யப்படு

கின்றதோ வெனின், கூறுகின்றார்; தத்துவஞானிகளும் விடயங்களைப் புசிப்பவராய்ச் சுகாதிகளை யுடையவராய்க் காணப்படுகின்றனரே அவர்களிடத்தில் யாது விசேட மெனின் கூறுகின்றார்:—மகிழ்வென.

மகிழ்வுசோர் வுறவு சார்வு வாழ்வுசா வென்ப வெல்லாம்
திகழ்வதா மறிவு சான்றோர் சிந்தையிற் பந்த மாகாப்
புகலுறு மாயு வாயுச் சிதறிய புயனீ ரொக்கும்
நிகரறு போகமேக மிசையெழு நெடுமின் போலும். (116)

(ப - ரை.) மகிழ்வு = சுகங்கள், சோர்வு = துக்கங்கள், உறவு = மித்திரர்கள், சார்வு = பந்துக்கள், வாழ்வு = ஜீவிதம், சாவு = மரணம், என்பவெல்லாம் = என்றியம்பப் பெற்றயாவுமே, திகழ்வதா மறிவுசான்றோர் சிந்தையில் = விளங்காநின்ற பரிபூரண ஞானத்தினை யுடைய பெரியோரது சித்தத்தில், பந்தமாகா = கட்டுப்பாட்டைச் செய்யப்பட்டன வாகமாட்டாவாம், புகலுறுமாயுள் = பெரிதாக இருக்கின்ற தென்று புகழ்ந்து கொள்ளும்படியான ஆயுளானது, வாயுச்சிதறிய புயனீரொக்கும் = காற்றினால் றாற்றப்பெற்ற அப்பிரபடல லோலாப்பு போலும் பங்குரமாம், நிகரறுபோகம் = நமக் கொப்பாகப் போகம்படைத்தா ரெவரெனும் போகம், மேகமிசை யெழுநெடுமின் போலும் = மேகவிதான மத்தியில் விலாசஞ் செய்யும் நீண்ட மின்னலைப் போலும் சஞ்சலமாம். (எ - று.) (116)

(ஸ்ரீ - வீர.) பிரஹ்ம வித்திற்கும் பேதமின்மையின் கூறிய யாவையுமே யறிவாம். சித்த சிகிச்சையினது சாபல்யத்தைத் தரிசிப்பித்துப் பலிதத்தைக் கூறுவார், புகலென்றார், விதானம் = மேற்கட்டி. மின்னல் = வித்யுத்து. சுகங்களும் துக்கங்களும் மித்திரர்களும் பந்துக்களும் வாழ்வும் சாவும் ஆன்மஞானியின் மனத்தைப் பந்தப்படுத்த மாட்டாவாம். சர்வதுக்கங்களு மில்லாமல் மூலத்தோடுங் கெடுத்தலின் ஞானமுடைமையே மகாபுருடார்த்தமா மாதலின் அதன்பொருட் டுபதேசம் வேண்டிய தவசியமாக விருக்கின்றது, உபதேசங் கிடைக்கின் யான் ஞானியா யிருந்துகொண்டு சோகபய ஆயாசமுதலிய வற்றைக் கடந்து விரைவிற் சுகமடைவேன் சந்திரனுலே நீங்காத இரவிருட் டில்லாததேபோல, உத்தமமனத்தையுற்ற மகான்களினுடைய சங்கத்தாலும், சங்கபலமாகிய வுபதேசத்தாலும், அழியாதனவாய கெட்ட மனோவியாதிகள் உலகத்திற் கிடையவே கிடையாவென, சாந்தியாதி தாட்டியமில்லாத பாலகனுகிய உனக்குபதேசித்தபோதினும் யாங்ஙனம் பலப்படுத்துவா யெனின், சாந்தியாதி தாட்டியம் தங்கள் கிருபையால் மிகவுமுளது, அரசனுனவன் அதிகாரம்பார்க்கும் ஆவலுடையவர்கள் அநேகர்கள் இருந்தபோதினும் எவர்களிடத்தில் லோபம் அச்சம் முதலிய தோடங்களால் தேசத்தில் மீடை பகைவர் படையெடுப்பு முதலியவையாமென்னுந் தோற்றமுளதோ அவர்களை விடுத்து, எவனேனுமொரு வல்லவனுகிய குணவானுக்கே முக்கிய அதிகார முத்திரையைக் கொடுப்பதேபோல என்னுலின்று இத்தவயதிலும், ஆயுள்போகம் யவ்வனம் முதலியவற்றின் கண்ணே, ஆசை சஞ்சலம் முதலிய தோடங்களானே சித்தத்திற் நுக்கம் நாசம் முதலிய அநர்த்தத்தை யெண்ணி அவைகளை விடுத்து எல்லாத்தோடங்களு மற்றதும், வல்லமையுற்றதும், ஆகிய சாந்தியின் பொருட்டுச் சித்தவிடயத்தில் திட அசஞ்சலமாய அதிகாரமுத்திரை கொடுக்கப்பட் டிருக்கின்றது; கூறியவற்றுள் ஆயுளோ வாயுவினு லலைக்கப்பட்ட மேகக்கூட்டங்களிற் நெருங்கும் நீர்த்துளிபோற் பொன்றுவதாம், போகங்களோ மேற்கட்டியைப் போல விரிக்கப்பட்டிருக்கும் மேகங்களுக்குள் மின்னுகின்ற மின்னற் கொடிபோற் சஞ்சல மானவையாம்.

(ச.) சுகதுக்காதி யனேத்தும் அஞ்ஞனேயே பந்திக்குமன்றி ஞானியினது சித்தத் தைப் பந்தியா வென்பதுணர்க. (116)

(ஸ்ரீ - வீர - அ - கை) பரம சாந்தர்களாகிய தாங்கள் பேராகந்தம் பிரியாதிருப்பத் தேவரீரை யடைந்த அடியேன் பரதந்திரமாய்த் துயருறல் நீதியன்றென்கின்றார்:— மாந்தரென.

மாந்தர்த மிளமை நில்லா தினை யெலா மனத்தி னெண்ணிச்
சாந்திகொள் பெரியோர் நீவிர் சமாதியோ கத்தைச் சார்மி
ஞய்ந்தவென் சிந்தை சீவ நாயகன் வசமா கைக்கே
யேய்ந்தது நிலையு மெய்தாதி றைவனைப் பிரிந்தாள் போல. (117)

(ப - ரை.) மாந்தர் தமிளமை நில்லாது = அதிசஞ்சலமான மக்களின் யவ்வனலா லனே நீர் வேகம்போல நிலையாததாம், இவையெலாமனத்தினெண்ணி = கூறிய யாவற் றையும் சித்தத்தின் கண்ணே சிந்தித்து, சாந்திகொள் பெரியீர் நீவிர் = பரமசாந்தியை யடைந்த பெரியோர்களாய தாங்கள், சமாதி யோகத்தைச் சார்மின் = நிர்விகற்ப சமாதியில் நிலைபெற்று வாழ்ந்து சுகியுங்கள், ஞய்ந்தவென் சிந்தை = இவற்றை யெல் லாம் விசாரித்துப் பார்த்த அடியேனது சித்தம், சீவநாயகன் வசமாகைக்கே யேய்ந் தது = ஜீவேசுவரன் வசமாருவதற்கே பொருந்தியது, நிலையுமெய்தாது = அவஸ்திதி யையு மடையாது, எதுபோலெனின், இறைவனைப் பிரிந்தாள்போல = பிரிய நாய கன் இல்லத்திற் காந்தையைப் போலவாம்.

(ஸ்ரீ - வீர.) யவ்வனலாலனே = யவ்வனவுபலாலனம், அதுவே அதிசஞ்சலமாத லின் ஜலவேகம் போன்றதாம். இவையெலா மனத்தின்கண் அடியேன் சிந்தித்து, அற் புதமாக விடயத்திற் ரூவுறுதலே நீக்கும் பொருட்டு விவேகலோக காரனு லாற்றப்பட்ட வைராக்கிய முத்திரைதரிளீர்சாந்திப் பொருட்டு அடியேனுற் சித்தத்திலின் றார்ப்பிக் கப்பட்டது, என்றுணர்ந்து கொள்க. இவ்வண்ணம் முத்திரை ஆர்ப்பிக்கப் பட்டதா மேலாயின் நினக்குச் செய்யவேண்டியது செய்து முடிந்ததேயாயது, இதற்குமேல் என்ன எஞ்சியுளதெனின்கூறுவார் நிலையுமென்றார். உம்மையால் வாஞ்சித்தபடியும் பெரு தென்பதாம். ஜீவனே விவேகித் தன்மையானே ஈசுரன் = நியந்தாவாம், வசம்=அவ னததீனமாம். ஜீவனது ஈசுரகத்வப்பிரணவ புத்தியானது நிர்த்துக்கபதத்தில் அவஸ் திதியை யடையாது. காந்தைபக்கத்தில் ஜீவேசுவரன் = பிராணநாதன், இறைவன் ஆவன், அவளும் பர்த்தாவினுடைய பவனத்தில் தன்னிச்சைத் திதியைப் பயாதியால் அடையமாட்டாள், இட்டப்படியும் வெளியேயேகவும் மாட்டாள், சித்தமெனினும் புத்தி யெனினும் ஒன்றென்க. விமலமான ஒருபதத்தில் சித்தவிசிராந்தியே சிட்டமென்பது பாவமாம். யவ்வன சம்பந்திகளாய மனோவிநோதங்கள் நீரின் வேகம்போல மிகவேகமு மலைவு முடையனவாம் என இவற்றை யெல்லாம் விசாரவிலெண்ணித் தான் மனத்தின் நீள்சாந்தியின் பொருட்டு உரைத்ததுபோல முத்திரையானது கொடுக்கப்பட்டுளது. தமது சித்தத்தின் கிளர்ச்சியையும் உத்வேகத்தையுமே அநேகம் ஹேதுக்களானே விஸ் தாரமாகப் பிரகாசப்படுத்தி அதனீக்கப் பொருட்டும் இளைப்பாறுதற் பொருட்டும் ஹேதுவா யிராநின்ற தத்துவஞான உபதேசத்தையே விஸ்தாரமாய்ப் பிரார்த்திப்பார், நிலையுமென்றார். ஜீவநாயகனே யடைந்த காந்தையான சிந்தையானவள் நாயகனது வீட் டில் அவனதீனமா யிளைப்பாறுதலே யடையாமல் வாஞ்சித்த தேயத்தையும் விடயத்தை யும் அடையாம லிருக்கின்றனள் என்பதாம்.

(ச.) இவையெலா மனத்தின் எண்ணி, யவ்வனமும் அதிலுதிக்கும் போகேச்சை ஆயுள் ஆதிகளும் கணபங்குர மெங்ஙீரமென்றனு சந்தானஞ்செய்து சித்தத்தில் விசிராந்தி நிமித்தம் கோசகிருகாதியில் விவகாரநிவிருத்தி நிமித்தந் திடமுத்திரை, அதாவது அக்ஷராதிவிந்யாசபந்த விசேடம் வைப்பதேபோல வென்னல் வைக்கப்பட்டே யிருக்கிறது. ஜீவப்பிரஹ்மைக்கியவிடயசிந்தை நிலையுமெய்தாது, என்னை, அசம்பாவனை விபரீதபாவனைகளாலென்க. நிலையுமென்ற வும்மையால் இச்சைப்படியு மியங்காது, என்னை, தோடதாரி சனத்தால் வெளியில் விரக்தியுடைமையின் என்க. இதற்குத் திருஷ்டாந்தம் இறைவனைப் பிரிந்தாள்போல வென்பதாம்; பிராணேசுவர பரதந்திரமான காந்தை பிரியநாயகன் இல்லாத வில்லத்தில் துக்கவேதுத்தன்மை யுண்மையின் நிலைத்திருக்கவுஞ் சகியாளோ, பதிவிரதாதர்மத்தை மேற்கொண்டொழுகலின் பிறவிடத்தும் இச்சைப்படி சஞ்சரியாளோ அதுபோலவாமென்பதாம். (உ-ம்) ஸ்ரீயாஞ்ஞவற்கியர்:—கிரீடையையும் சரீர சமஸ்காரவர்ணனையையும், தேர் திருவீழாமுதலிய தரிசனத்தையும், நகைத்தலையும், பரிகருத்திற் சேர்தலையும் விடல்வேண்டும் பதியைவிட்டுப் பிரிந்தவள். (117)

தன்னுடைய (ஸ்ரீ - வீர - அ - கை) சிந்தையுடையவராய் ஸ்திதி ஸ்தானத்தை அதிவாதப் பெரும்பொருட்டு வினவுகின்றார்: சுயமாகவே சஞ்சலமும் நானுபோகவாசனையால் விஸ்தீர்ணமும் ஆகியசித்தம் புவனத்து ளெங்குந் திரிதலானே திடமாகப்பயின்ற சஞ்சலத்தோடு கூடியிருத்தலின் பலாத்காரமாக நிறுத்தியபோதினும் தத்துவஞானப் பற்றின்மையினே சஞ்சலத்தை விடுவதில்லையாகலின் விடுமாறடையும் நிலைமையாதென வினவுகின்றார்:— ஆதலாலென.

ஆதலால் வருத்தங் குற்றமுபாதி யோடைய மின்றி
மீதுறுமோக மின்றி விளங்கிய நிலைமை யேது
காதல் செய்யின்ப மிக்க விடயமாங் கனலில் வீழ்ந்துந்
தீதுறு நிலைமையேது தீயினுளிரதம் போல. (118)

(ப - ரை.) ஆதலால் = அதனால், வருத்தம் = ஆயாசம்; குற்றம் = துச்சம், உபாதியோடு = உபாதியுடன், ஐயம் = சங்கை, இன்றி = இல்லாமல், மீதுறுமோகமின்றி = மேலோங்கி வாராநின்ற மயக்கமில்லாமல், விளங்கிய நிலைமையேது = இலங்குகின்ற ஸ்திதிபதம் யாதாம், காதல்செய்யின்ப மிக்க = விரும்பும், ஆனந்தமதிகரித்த, விடயமாங் கனலில் = விடயமாகிய பேரழலில், வீழ்ந்தும் = பதனமாகியும், தீதுறுநிலைமை = கெடுதலில்லாத ஆஸ்பதமியாது, எதுபோலெனில், தீயினுள் இரதம்போல = அக்கினியின்கண்ணே ரசம்போலுமென்க. (எ-று.) (118)

(ஸ்ரீ - வீர.) அதனால், எதனுற்சித்தம் ஸ்திதியை யடையமாட்டாதோ அதனால் வினவுகின்றேன் எனஅத்தியா காரஞ்செய்க: துச்சம் = பரமார்த்த சத்துரூபம், ஆயாசம் = துக்கம், ஆயாசத்தின் கட்காரணம், மயக்கமாம், மயக்கத்தின்மாட்டேது உபாதியாம், உபாதி = மனமாம், மனமன்றே எல்லா மயக்கங்கட்குங் மூலமாவது, அவ்வாறே முன்னரும் மொழியப் பெற்றது பின்னரும் ஆதியின்மனம் அதனனுபந்த விமோக்ஷதிருஷ்டிபின்னர்ப் புவனப்பெயரிய பிரபஞ்சரசனையெனப் பேசவும் பெறும். சோபனமாயானந்த ரூபமாயிருக்கப்பட்ட நிலைமையேது; எப்பதத்தின் கண்ணே மறித்தும் துக்கசம்பந்த சங்கையே வந்தணுகாதோ அத்தகைய நிலைமையேது. சித்தவிசிராந்தி ஸ்தானத்தை வினவிச் சித்தவிக்ஷேப முறினுங் துக்கம் பக்கமுமூராத வுபாயத்தை வினவுவார், காதல் என்றார், தாகப்பிராப்தியைக் காட்டுவார் காதல் என்றார்; இரமிக்கத் தக்க நெய்முதலிய வாசனைகளோடு கூடி விளங்கி விரும்புந் தீரவீர்: சமுசாரப்பெயரிய

பேரழலில் வீழ்ந்தும் சமுசாராக்கினிச் சுவாலைகளால் எவ்வுபாயத்தால் தகிக்கப்படாம லிருக்கின்றார்கள். (இரதம் = இரசம் = பிரதம், = பாரதம்,) தகிக்கத்தகாததா மென்பது வெளிப்படை. இது கட்டையாகள்வலு என்னும் உண்மையின்மைப் பக்கமிரண்டாற் சலிக்கப்பட்டும் சலிக்கப்படாமலும் இருக்கின்ற சமுசய ஹேதுவினாலே புத்தியானது துன்புறுவதே போல இது தத்துவமா அல்லது இது அதத்துவமா என்னும் ஐயத்தாற் றுன்புறுகின்றது தோஷதர்சனஜன்னிய வைராக்கிய திடத்தால் இராகாதிக ளெல் லாமகன்றும் ஐயம் நீங்காமையின் மூலாஞ்ஞானங் கெடாமையானே வாசனையைக் கிளப் பும் ஹேது விருத்தலினாலே வெட்டுப்பட்ட விருக்ஷம் மூலங்கெடாமையின் மீண்டுமுளைக் கும் வாயிலாய்த் துன்புறுத்த விரிவதேபோல விரிந்துகொண்டே யிருக்கின்றது; சுயமா கவே சஞ்சலமும் நாளுபோக வாசனையால் விஸ்தீர்ணமும்ஆகிய சித்தம் புவனத்துளெங் குந்திரிதலானே திடமாகப்பயின்ற சஞ்சலத்தோடு கூடியிருத்தலின் பலாத்காரமாக நிறுத்தியபோதினும் தத்துவஞானப்பற்றின்மையினாலே சஞ்சலத்தை விடுவதேகிடை யாது; ஆதலின் பரமார்த்தசத்தியமும் ஜன்மமரண ஆயாசமற்றதும், தேகாதி யுபாதி சூனியமும் மயக்கஹேது நீங்கி யிருத்தலின் மயக்கமில்லாததும், இஃப்பாறுமிடமும், அடைந்தவர்க்கென்றுமே சோகத்தை யுண்டாக்காததும் ஆகிய அத்தகைய பதமியாது? சர்வகாரியங்களையும் நன்குதொடங்கினவர்களாகி எம்மனோரைப்போலவே சர்வதிருஷ்ட அதிருஷ்டபலங்களைத் தருமாறுமுடித்து அவற்றிற்கனுகூலமாய இலௌகிக வைதிக விவகார தற்பரர்களாயே நின்றும் கல்லோர்களாகிய ஜனகாதியர் எவ்வாறு உத்தமோத் தமத்தன்மையை யடைந்தன ரென்பதாம் மழைகாலத்தில் பெருங்காட்டில் ஜீவிப்பதற் கொப்பான துர்ஜீவன சமுசாரத்தில் எதனால் சௌக்கியத்தை யடையலாமென்பார், காதல் என்றார். மூலிகை ரசத்தோகூடிய இரசமானது அக்கினியிற்றகிக்கப்படாததே போல அக்கினியைப்போற் றகிக்குஞ் சம்சாரத்தில் விழுந்து கிடந்தபோதினும் எந்த ஞானமுதரச மேய்த்தலால் எங்ஙன்றகிக்கப்படாம லிருக்கமுடியும் ?

(ச.) ஆதலால் = விசிராந்தி பெறுமையால், சித்தவிசிராந்தி ஸ்தானத்தை யனுக் கிரகிக்கவேண்டுமென்பது விஞ்ஞவின் பொருளாம். வருத்தம் = துக்கம், குற்றம் = விக்ஷே பம், மோகம் = பிரமம், அங்கிலேமையினையே தெளிவுற வினவுவார், காதல், என்றார். அஃ தெத்தகைய இஃப்பாறுமிடமென்றால், காதல் செய்யின்பமிக்கோர் = பிரஹ்மானந்தா னுபவ ரசத்தை ஆசுவாதித்து மகிழும் சத்துக்கள், விடயமாங்கனலில் = தாபத்திரய நிலய மான சமுசாரத்தில் வீழ்ந்தும் தாபமுறுகின்றார்கள், அக்கினியில் வீழ்ந்த பாதரசமானது தாப முறுது ஓடிப்போவதுபோலவாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சமுசாரத்தில் நிர்வியாபாரமாக அவஸ்தானமே தாகவுபாய மென்கின்றார்: விவகாரந் துக்கமாயின் விட்டுவிடலாமே யெனின் கூறுகின்றார்:—வசன மென.

(ச - அ - கை.) துக்கஹேதுவான விவகாரத்தைவிட்டுச் சுகமாக விருவெனின், கூறுகின்றார்:—வசனமென.

வசனமாந் தொழிலே யன்றி வருபவந் தான்வே றில்லை
யசைவுறு புனலே யன்றி யளக்கர்வே றிலாததே போ
னசைதரு பெரியோ ரெங்ஙன வையுறு துயரந் தீர்ந்தா
நிசையறீ யுணர்ந்த தந்த நிலையினை யெனக்குச் சொல்வாய். (119)

(ப - ரை.) வசனமாத்தொழிலேயன்றி = பற்பலவகையாகச் சொல்லப்படுந் தொழில் களைவிட்டு, வருபவந்தான் வேறில்லை = வராநின்றவிவகாரமானது அயலாகவிலதாம்,

அசைதருபுனலேயன்றி யளக்கர் வேறிலாததேபோல் = சலியாநின்ற சலத்தைவிடுத்துச் சலதியல்ல இல்லாததேபோலவாம், நசையுறுபெரியோர் = யாவரும் விரும்பத்தக்க சாதுக்கள், எங்ஙன் நவையுறு துயரந்தீர்ந்தார் = எவ்வித்தத்தினுல் தீர்க்கமுடியாத பெருந் துயரத்தை முற்றினும் அகற்றினர், இசைய = மோமேலிச்சுகம் பொருந்துறுமாறு, நீ யுணர்ந்ததந்த = தேவரீர் அறிந்த அவ்விசாரந்திபதத்தை, எனக்குச் சொல்வாய் = அடியேற்கருள்வாய். (எ-று.) (119)

(ஸ்ரீ - வீர.) அம்புப்பரிசமின்றிச் சமுத்திரமத்தியில் ஸ்திதி எங்ஙனஞ் சம்பவியாதோ அங்ஙனமென்பதாம். கடலிலுண்டாகிய மீன்முதலியவற்றிற்கு நீரில்லாமல் நிலபேறில்லாததேபோல, இவ்வுலகத்திலிருப்பவர்க்கும் விவகாரத்தொழிற் செய்யாமலிருக்கமுடியாது; கெட்ட விவகாரத்திற்றானே துயரம் உண்டாகின்றது நற்றொழிற் செய்யினே அவ்வாறில்லை யல்லவாவெனின்? தாகமற்றிருக்கும் அக்கினிச் சுவாலையானது இல்லாததேபோல ஈண்டு இராகத்வேஷமற்றதும் சுகதுக்கநீங்கியதும் ஆகியநற்றொழிற் கிடையாது. பாகியத்தில் நல்லவிவகார மிருந்தாலிருக்குக; மனதினுடைய சஞ்சலமானது மகாதுக்கமாயிருத்தலால், அதனுடைய சிகிச்சையை யருளவேண்டும். விவகாரத்தோடு கூடியிருந்தபோதினும் கூடாமலிருந்தபோதினும் எந்தயுக்தியினுல் எனக்குத் துயரம் வராமட்டாதோ அந்த உத்தமமான யுக்தியைக்கூறியருளவேண்டும். மேன்மையும் பவித்திரமுமாய மனமானது எதனுல் இளைப்பாறுதலையடையுமோ, அந்த யுக்தியால் மோகநீக்கமானது எவ்வுத்தமசித்தமுடையவனுல் முன்னெவ்வகையாற் செய்யப்பட்டது அதனுலெதனை யடைந்தான் இவ்வுண்மையைத் தாங்களறிந்தபிரகார முபதேசித்தருள வேண்டும்; எதனுற் சாதுக்கள் துக்கமே சிறிதுமில்லாம லுலகுகின்றார்களோ அதனைத் திருவருள் செய்யவேண்டும்.

(ச.) சலமயஞ் சமுத்திரமாவதேபோல விவகாரமயஞ் சம்சாரமாமென்பது கருத்து. எனக்கு மோக நிவிருத்தியாகு நிபித்தஞ் சொல்வாய்; மோகநிவிர்த்திக்குந்தன்மையைத் தேவரீர் உணர்ந்தபடி உபதேசிக்கவேண்டுமென விரும்பினதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அத்தகைய யுக்தியானவை கிடையாவிடின், எனது தேகத்தியாக பரியந்தம் பிராயோபவேசனத்தையே அதாவது பிராணனீங்கும்வரை யுண்ணுமற்றிருப்பாசனத்திற் சயனித்தலையே, செய்வேனன்றி ஜீவனவிவகாராதிகளைச் செய்யமாட்டேன் என்கின்றார்:—இங்நிலையென.

(ச - அ - கை.) உபதேசியாவிடின் அதனலுறுந் தோடம் இவையெனத் தெரிவித்துத் தேவரீர் எப்படியு முபதேசிக்கவேண்டுமென வாஞ்சித்தல்:—இங்நிலையென.

இங்நிலை யிலதா வேனு முளதியம் பாரா வேனு
மங்நிலையைய மின்றி யகங்கர மின்றி யானே
தன்னுற மாட்டேன் செய்வதே தெனிற் சோறும் வேண்டே
னன்னய நீரும்வேண்டே னலம்பெறு துகிலும் வேண்டேன்.

முழுகுத ருனமாதி நியமங்கண் முழுதுஞ் செய்யேன்
விழுமிய கருமஞ் சம்பத்தா பத்தின் மேவே னியாக்கை
நழுவுவ தன்றி யொன்று நயக்கிலன் மவுனி யாகி
யெழுதுமோ வியம்போற் காமங் கோபம் பற்றின்றி நிற்பேன். (120. 121.)

(ப - ரை.) இங்நிலையிலதாவேனும் = இத்தகைய யுக்தியானது இல்லாமற்போனுலும், உளதியம்பாராவேனும் = இருந்தும் உபதேசிக்கமாட்டீரேனும், அங்நிலை = உத்த

மோத்தமமாகிய அந்தவிசிராந்தி பதத்தை ஐயமின்றி = சமுசயமில்லாமல், அகங்கரமின்றி = நிரகங்காரமாய், யானே = சுயமாகவே, துன்னுறமாட்டேன் = அடையமாட்டேன், செய்வதேதெனில் = மாட்டாயேல் என்செய்வாயெனின், சோறும்வேண்டேன் = அன்னத்தையுமயிலேன், நல்நயீரும் வேண்டேன் = குளிர்ச்சியும் வாசனையும் மிகுந்த நீரையும் பருகேன், நலம்பெறுதுகிலும் வேண்டேன் = மிகவும் அழகு பொருந்திய பீதாம்பராதிகளு மணியேன்; முழுகுதல் = ஸ்நானம், தானம் = தன்னதைப் பிறராதாக்கும் தொழில், ஆதி = முதலிய, நியமங்கண்முழுதும் = பிறநியமங்களாய்ச் செய்யவேண்டிய யாவற்றையுமே, செய்யேன் = இயற்றமாட்டேன், விழுமியகருமம் = பெருங்காரியங்களிலும், சம்பத்து = சம்பத்துகளிலும், ஆபத்தில் = ஆபத்துகளிலும், மேவேன் = பொருந்தமாட்டேன், இயாக்கை நழுவுவதன்றி = தேகத்தை விட்டொழிப்பதேயல்லாமல், ஒன்றும் நயக்கிலன் = மற்றொன்றையும் விரும்புகில்லேன், மவுனியாகி = மவுனத்தையே யுடையவனுய், எழுதுமோவியம்போல் = பித்தியிலமைத்த சித்திரம்போல, காமம் கோபம் பற்றுஇன்றி நிற்பேன் = இச்சை கினம் எனதாக்கல் இல்லாமலிருப்பேன்.

(ஸ்ரீ - வீர.) மேற்கூறிய யுக்தியாதொன்று பிராவிடின், அத்தகைய திருத்தபோதினும் வெளிப்படையாக எனக்குபதேசியா திருப்பின், அவ்வுத்தமோத்தமமாகிய விசிராந்தி பதத்தை யானே விசாரித்தேனும் அடையாமற் போவேனுயின், பின் யான் சருவஇச்சைகளையும் அகங்காரத்தையு மொழித்து உண்ணேன்; நீருங்குடியேன், வத்திரமுந்தரியேன், ஸ்நானதான அசனமுதலிய எந்தத்தொழிலையுஞ் செய்யேன், எக்காரியங்களிலுமிரேன், சம்பத்து ஆபத்துத் தசைகளிலுமிரேன், தேகம்விடுவதை யொன்றையன்றி யொன்றையும் வாஞ்சிக்கவே மாட்டேன். கேவலம் யாதொரு ஆசங்கையுமற்றவனுகி மமதைமற்சராதிகளற்றவனுய்ச் சித்திரக்கிரியைகளாற் பித்தியிலர்ப்பிக்கப்பெற்ற ஓவியம்போல வாக்குமுதலிய சர்வவிகாரங்களையும் விட்டிருப்பேன், பின்முறையே மூச்சுவிடுதல் வாங்குதல் சத்தாதிஞானங்களை விடுத்து, அவயவச் சேர்க்கை வடிவமாயிராநின்ற இவ்வகர்த்தமாகிய தேகத்தைவிட்டொழிப்பேன், யானிதனுடையவனு மல்லேன் என்னுடையதுமிஃதல்ல, அன்னியரும் எனக்கில்லை யாதலின், தைலந்தீர்ந்த தீபமேபோலச் சாந்தியையடைவேன்; யாவற்றையுமே பரித்தியாகித்து இக்ஷ்வாகு வரத்தை விட்டொழிப்பேன்.

(ச.) இந்நிலை = சித்தலயவுபாயம், இலதாவேனும், உளது = உண்டாயினும், இயம்பாசேனும் = எனக்கொருவரு முள்ளபடி யுபதேசியாராயினும், அந்நிலை = அவ்வுத்தமமான விசிராந்தியை. (120. 121.)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீவான்மீகிகூறல்:—

எனவுரைத்த மலசீதமதி யெனவினி யோனின் சொல்
வினவுநல் விவேகந் தன்னுல் விரிந்தலர் மனத்தி ராமன்
மனமகிழ் முனிவர் முன்னர் வாய்மொழி யமைந்து நின்ருன்
கனமுகின் முன்னர்க்கே காரவந்த விர்கலாபி போன்றே. (122)

(ப - ரை.) எனவுரைத்து = இவ்வண்ணமியம்பி, அமலசீதமதியென வினியோன் = அமல சீதகரபிராமாகி இன்சொல் = இனிமையான மொழிவிருந்திட்டு வினவுநல் விவேகந்தன்னுல் = அதிவிசாரத்தோடுகூடிய மகத்தர விவேக மிருதியால், விரிந்தலர் மனத்திராமன் = விகாசமாய் மலர்ந்தமனத்தையுடைய ஸ்ரீஇராகவர், மனமகிழ் முனிவர் முன்னர் = இனிமொழி விருந்தால் மனமகிழ் முனிநாதர் சந்நிதியில், வாய்மொழி யமைந்துநின்ருன் = தாஷ்ணீம்பூதமாகவிருந்தார், எஃதொத்ததெனின், கனமுகின் முன்

னர்=சப்திக்கும் பெருமேகமண்டலத்தின் சந்நிதியில்கேகாரவந்தவிர் = கேகாரவ மென்னும் கூவுதல் நிவிர்த்தியான, கலாபிபோன்று = நீலகண்டப் பறவைபோலு மிருந்தது. (எ-று.) (122)

(ஸ்ரீ - வீர.) கேகாரம்= மயூரத்தொனி.=நீலகண்டம் மயூரம், ஹேபரத்வாஜ! இவ் வண்ணம் மகத்தினும் மகத்தாகிய விசாரத்தாலே மலர்ந்த மனத்தையுடையவரும் அமல சீதள அமுதகிரண மதிபோன் றழகுவாய்ந்தவருமாகிய ஸ்ரீஇரகுநந்தனர் இயம்பிக் கேகாரவத்தைச் செய்துகொண்டிருந்த மயூரமானது மேகங்களின் முன்பாகச்சிரமவயத் தால் மவுனமடைந்திருந்ததேபோலத் தேஜிகோத்தமர்களாகிய ஸ்ரீவசிஷ்டமுனிவர் முத லிய பெரியோர்கள் சந்நிதியில் மவுனமாக இருந்தனர். ஆகுதிருவிருத்தம் (136)

வைராக்கியப் பிரகரணம்

முற்றிற்று.

வைராக்கியப் பிரகரணத்தில் சுகர் கதை.

(*)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சென்ற கிரந்த சந்தர்ப்பத்தால் நித்தியா நித்தியவஸ்து விவேகத்தினின்றும் வைராக்கியம் பிரதிபாதிக்கப்பட்டது, அது வித்வத்ஜனமனோகர மென்பதும், ஆகாசவாசிகட்கும் துர்லப மென்பதும், ஸ்ரீராமரது துதியின் பொருட்டுக் கூறப்படுகின்றது:—ஸ்ரீ இராமரது திருமொழிகளே யிருசெவி குளிரக்கேட்ட மானிடர் தேவர்கள் வானவர்களுடைய அளவுகடந்த ஆச்சரியம் அறையப் பெறுகின்றது:—மைம்மலமென. தமது விவேக நல்விசார மூலமா யிராநின்ற இந்த ஸ்ரீ இராமரது வாக்கியா மிருதங்கள் தாமாக விசாரஞ்செய்யும் ஆற்றலில்லாத முமுக்ஷுக்கட்கு உபதேசரூபமா யிருத்தலின், ஆதரவுப் யாசங்களால் உயர்வாகக் கவரத்தக்கதெனக் குறிப்பிக்கும் பொருட்டுப் புகழ் பவராய் அவர்மேலினும் வாதராயண ரமைதலின், அதாவது, மனுடர்கட்கும், மேலாய தேவதைகட்கும், பிரஹ்மவித்தையின் கண்ணே அதிகார மூளதென, வாதராயண ஆசாரி யர் அங்கீகரித்தலின், என்னும் நியாய சித்தமாய தேவதைகட்கும் கூறப்படும் பிரஹ்ம வித்தை யதிகாரத்தைத் தரிசிப்பிக்கும் பொருட்டு அவர்கள் மகிழ்ச்சியை ஸ்ரீவான்மீகி பகவான் கூறத்தொடங்கல்:—மைம்மலமென.

(ச.) அத்தருணத்தில் திவ்யாதிவ்ய சபையிரண்டும் சந்தோஷிக்கப்பட்ட ஸ்ரீஇரகு நந்தனனைக் குறித்து மிக வுற்சாகித்தவராகி யுற்சாகப் படுத்துவான் ஸ்ரீ விசுவாமித்திரர் விசித்திரமான சுகர் விருத்தாந்தத்தை இனிது கூறத்தொடங்குகின்றார்:—மைமலமென.

மைம்மல மாமோகத்தை மாய்த்திடும் புதுமைத் தான
செம்மல்வா சகங்கள் கேட்டுத் திருந்தவை யிருந்தோ ரெல்லா
மிம்மொழி கேட்பபோல வெழப்புள குவகை மிக்கார்
விம்மல்சேர் சித்தர் சேனை விண்மிசைக் களித்த வன்றே. (1)

(ப - ரை.) மைம்மல மாமோகத்தை = அஞ்ஞான மாகிய மலத்தினுலே யுண்டா கிச் சர்வ சோகங்களையும் தருவதிற் பெரியதாகிய மோகத்தை, மாய்த்திடும் புதுமைத் தான = நிவிருத்தி செய்யும் அற்புத மகிமைவாய்ந்த, செம்மல் வாசகங்கள் = செந்தா

சுகர் கதை

மரை யிதழ்போலும் திருநேத்திரங்களை யுடைய ஸ்ரீ இராகவரது திருவாக்கியங்களை, திருந்தவை யிருந்தோ ரெல்லாங் கேட்டு = கலகணிறைந்து மதிதெளிந்த சபையின் கண்ணிருந்த விவேகிக ளெல்லாருமே சிரவணித்து, இம்மொழி கேட்பபோல = ஸ்ரீ இராகவரது இனிய மொழிகளைச் சிரவணிக்க வருவனபோல, எழப்புளகுவகை மிக்கார் = எழுந்து வராகின்ற ரோமங்களால் வத்திரத்துளைபடச் சிலிர்த்து உற்புல்ல லோசனராய் மிகமகிழ்வுற்றனர், விஸ்மயமுற்றனர், விம்மல் சேர்ந்தார் சேனை = மிகவும் அற்புதமுற் றுப் பூரித்த சித்தர் கூட்டம், விண்மிசை = ஆகாயவீதியில், களித்தன = சந்தோடத்தை யந்தமில்லா தடைந்தன. (எ-று.) (1)

(ஸ்ரீ - வீர.) தேகருகங்கள் மயிர்க்கால் எழுந்து நின்றதோற்றம் சிரவணிக்க வந்ததுபோ லிருந்தது. இவ்வாறு மனோமோகத்தை நீக்கத்தக்கதாய திருமொழிகளைத் தாமரையிதழ்போலும் விழிகளையுடைய இராஜகுமாரராகிய ஸ்ரீ இராமர் கூறியபோது, அச்சபையின் கண்ணிருந்த யாவரும், விஸ்மயத்தால் விரிந்த விழிகளையுடைய வராகவும், ஸ்ரீ இராமபிரானது வாக்கியாமிருதத்தைக் கேட்கவேண்டு மென்று ஜாட்டியத்தைக் கடத்தியெழுந்து வத்திரத்தைத் தூளைத்து வெளியே யெட்டிப்பார்க்கும் மயிர்க்கூச் செறிதலையுடையவ ராகலின், பீறல் ஆடையை யுடையவராகவும், வைராக்கிய வாசனையினாலே சமஸ்தசமு சாரகாரணங்களாய இராகத் வேஷாதி வாசனைகளையும் நீக்கினவர்களாகவும், ஒரு மூகூர்த்த பரியந்தம் அமிருதசாகர அலையால் அலைவிக்கப் பட்டவர்கள்போலவும் ஆனார் கள்; சித்திரத் தமைத்த பதுமையேபோலக் கேட்குஞ் சமர்த்துடையோர், ஆனந்தத் தைக் குறிப்பிடுவதாகப் பூரித்து ஸ்ரீ இராமபத்திரருடைய திருமொழியை யினிமையா கக் கேட்டனர். (1)

(ஸ்ரீ - வீர - அ - கை.) யாவரானும் ஸ்ரீஇராமருடைய விசித்திரப் பொருணிறைந்த மகா உதாரமான திருவாக்கானது கேட்கப்பட்ட பின்னர், ஆகாயத்தி லிருந்து புட்ப மாரியுண்டாயிற் றென்றும், ஸ்ரீ இராகவர் திருவாக்கியங்கள் புகழப்பட்டன வென்றுங் கூறுகின்றார்:—நன்றென.

நன்றுநன் றென்னுஞ் சொல்லு நன்மலர் மழையுங் கூடி
யொன்றியோர் கடிகை பாதி யிழிந்தபின் னூழிகாலம்
வன்றுய ருழன்று சிந்தை மயங்கிய யாங்க ளெல்லா
மின்றி ராகவன்சொ லென்னு மின்னமு தமையப் பெற்றேம். (2)

(ப - ரை.) நன்று நன்றென்னுஞ் சொல்லும் = நன்கு நன்கு என்றுற்சாகப்படுத் தும் சாதுவாத வாணியும், நன்மலர் மழையுங்கூடி யொன்றி = நல்ல வாசனைபொருந் திய புஷ்பவிருஷ்டியும் ஒன்றுசேர்ந்து, ஓர் கடிகைபாதி யிழிந்தபின் = கான்முகூர்த் தம் பெய்தபின்னர், ஊழிகாலம் = கற்பபரியந்தம், வன்றுயருழன்று = வலியதுயரங் களை மிகமிகவு மடைந்து, சிந்தைமயங்கிய = மனமயலுற்ற, யாங்கள் = சித்தர் கூட்டங்களாகிய யாங்களாவாவருமே, இன்று = இப்போது, இராகவன் சொலென்னும் இன்னமுது அமையப்பெற்றேம் = ஸ்ரீ இராகவரியம்பிய சொற்களாகிய அபூர்வ அற்புத சீருதிரசாயனவினிய அமுதத்தைச் செவிகளில் நிறையப்பொருந்தப்பெறும் பெரும்பாக் கியத்தை யடைந்துய்ந்தோம். (2)

(ஸ்ரீ-வீர.) இரகுகுலமாகிய ஆகாயத்திற்குப் பூரணசந்திரரும், பூர்ணசந்திரர்போல மிகச் சுத்திரரும், தாமரையிதழ்போன்ற நேத்திரத்தை யுடையவரும் ஆகிய ஸ்ரீ இராமர் மவுனமாயிருந்தபோது, நன்றுநன்று என்னுஞ் சொல்லோடு முமூகூர்க்களாகிய சித்தாதி

தேவகணங்களியாவரும் இறைத்த மலர்மாரியானது விண்ணினின்றும் மேற்கட்டிபோல விழுந்துகொண்டே யிருந்தது. அம்மலர்மாரி வண்டினங்கள் ரீங்காரம் பாடப்பெற்றும் மாதுர்யம் மணம் அழகு முதலனவற்றும் யாவரையும் பரவசப்படுத்தியும் நக்ஷத்திரகணங்க ளுதிரும் அலங்காரத்தைச் செய்துகொண்டும் மற்றும் பலவிதமாயுமிருந்தது. அக்குசும விருஷ்டி என்றுங் கண்டறியப் பெறுததாய் யாவருக்கும் ஆச்சரியத்தை விளைவிப்பதாய் அற்புதமாக அரைநாழிகைவரை பெய்தது, அது அச்சபையையும் அதன்கண்ணிருந்தவ ரையும் மந்தாரமலர்களால் நிறைத்துச் சாந்தியானபின் அச்சபையிலிருந்த யாவரும் இச் சித்தகணங்களின் இவ்வாக்கியங்களைக் கேட்டனர்:—சித்தசேனைகளுள்ளே சுவர்க்கத்தி னுடைய எல்லா இடங்களிலும் கற்பமுடியும்வரை சுற்றிக்கொண்டுதிரியும் நம்மனோரால் அபூர்வமாகிய இச்செவிக்கமுதான வேதசாரம் கேட்கப்பட்டது. இரகுகுலதிலவாகிய இந்த ஸ்ரீ இராமரால் யாதுதாரமாக வைராக்கியத்தோடுங் கூறப்பட்டதோ அது பிரகற் பதிக்கும் விளங்காத பொருளுடையதேயாம். மதிமான்கட்கும் மகத்தாகிய மகிழ்வை மலர்விப்பதும் ஸ்ரீ இராமரது முகாம்புஜத்தினின்றும் எழுந்ததும் ஆகிய இத்திருமொழியை யின்று கேட்டோம் ஆச்சரியம்! ஆச்சரியம்!! நாம் என்னமகத்தாய புண்ணியஞ் செய் தோமோ தெரியவில்லை அந்தோ! இத்தகைய வாக்கியத்தைக் கேளாத சென்மம் என்ன சென்மம் வீணே. (2)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வீதராகஉக்தி சாரார்த்த விடயம் சுரோதாக்களிடத்தில் உடனே பயன்படும் என்னும் அபிப்ராயத்தாலுரைக்கின்றார்:—திருந்தியவென.

திருந்திய விவன்சொ லாலே தெளிவுறு சிந்தை பெற்றோம்
பெருந்தகை முனிவர் சொல்லும் பொருளினிப் பெறுது மென்னப்
பொருந்திய விண்ணி னின்று பூதலத் திழிந்த லோடு
மிருந்தபே ரவையோ ரெல்லா மெழுந்தெதிர் கொள்வ தானார். (3)

(ப - ரை.) திருந்தியவிவன் சொல்லாலே = அதிவிசார திருஷ்டியோடுரைத்த உப சம அமிருத சுந்தர வாக்கியங்களாலே, தெளிவுறு சிந்தைபெற்றோம் = சர்வவிடயங்களுஞ் சுகமயங்களன்றென்றும் சொரூபமே நித்தியமென்றும் தோற்றும்படியான அதிநிர்மல மனத்தை யடைந்தோம், பெருந்தகை முனிவர்சொல்லும் = பரமமகத்துவத்தை யடைந் துள்ள மகரிஷிகளுபதேசிக்கும், பொருளினிப் பெறுதும் = நிர்ணயவத்துவை யிப்போது கேட்டுப் பரமானந்தத்தை யடைவோம், என்ன = என்றுகூறி, பொருந்திய விண்ணி னின்று = தாங்களிருந்த ஆகாயவீதியிலிருந்து, பூதலத்திழிந்தலோடும் = பூமண்டலத்தே யிலங்குந் தசரதரது புண்ணியசபையை நோக்கி யிறங்கிவரவும், இருந்தபேரவையோ ரெல்லாம் = அவ்வுயர்ந்த அவையின்கண்ணே யிருந்தபெரியோரியாவரும், எழுந்தெதிர் கொள்வதானர் = வந்தவர்கட்கு மரியாதைசெய்யும் பொருட்டு எதிர்கொண்டு வணங் கினர்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ இராகவர் வாக்கியம், பரமபுருடார்த்தத்தை யடைவித்துப் பரமவுப சாந்தி யமிருதத்தைப் பயப்பதாம். ஞானூர்த்திகளான் கன்கு நண்ணத்தக்கதும், சத்துக் களாலினிது சார்ந்து கவரத்தக்கதுமா மாதலாற் சர்வஅனுகூலமாயிருத்தலின் ஆண்டிருக் கத்தக்கதெனப் பிரதிபாதிக்கப்பட்ட பொருளாம். ஸ்ரீ இராகவர், தேரின் கொடிபோல இரகுவம்சத்தின் அலங்காரத்தால் இரகுகேதுவெனப்படுவர். ஜாதிகுல ஆசாரதரும ஞானமுதலியவற்றுனே யடைந்திருக்கும் மிகமேன்மைக்குப் பெரும்பயனை நல்கிக்காக்கு மிலக்கணம் வாய்ந்ததும், மிகயோக்கியமானதும், உபசாந்தியமிருதம் பொழியுமழகு வாய்ந்ததும் ஆகிய ஸ்ரீ இராமர் ஆதரவோடுகூடி யுரைத்த இத்திருவாக்கால் விரைவில்

யாங்கள் சுவர்க்காதி சுகங்கள்யாவும் சாரமற்றனவென அறிந்தோம். சித்தர்களானே செய்யப்பட்ட ஸ்ரீ இராம வாக்கியாதியின் புகழையே மகிமைப்படுத்திக்கொண்டு விஞ்வியதற்கு நிர்ணயமாகும் உத்தரத்தைக்கேட்டும் அவாவுடையராய அவர்களது சபைப்பிரவேச முதலியவற்றை வருணிப்பார், பெருந்தகையென்றார். இரகுவம் சத்தைப் பிரகாசிப்பிக்கும் கேதுவாகிய ஸ்ரீ இராமரால் கூறப்பட்ட அதிவித்திர மாகிய இவ்வாக்கினதுத்தரமாக மகரிஷிகளால் கூறப்படும் தக்க நிர்ணயம் கேட்கத்தக்க தாதலின் நாரதர் வியாசர் புளகர்முதலிய முனிபுங்கவர்களே சர்வமகரிஷிகளே! விரை வில் விக்கினமின்றிக் கேட்பான் வாருங்கள் "சிறந்தவைதடைகள் செய்றிந்தனமிகவே" என்பதால் காலதாமதமாக்காதீர்கள்; என அச்சித்தர்கள் கூறக்கேட்ட விண்ணை வாசஸ் தானமாகவுடைய அவ்விமானங்களிலிருக்கும் திவ்யமுனிக்கூட்டமியாவுமே விஸ்தீர்ண மாய் அச்சபையின்கண்ணே ஸ்ரீ இராமர் முதலியோரிருந்த இடத்திலிறங்கினர். அச்சித் தர் சேனையானது நாரதர் வியாசர் பிருகு அங்கிரர் புலஸ்தியர் சியவனர் உத்தாலகர் உசீரர் சரலோபர் முதலிய முனிநாயகர்களாரனே யலங்கரிக்கப்பட்டு ஆகாயத்தினின்றும் பூமியிலிறங்கும்போது மகாமுனிவர்கணிறைந்த தசரதருடைய பெருஞ்சபையானது எழுந்தது, விண்ணவரும் மண்ணவரும் கலந்தவராய்ப் பரஸ்பரம் கலந்த தேககாந்திக ளானே பத்துத் திசையையும் ஒளிர்வித்து விளங்கினர். (3)

(ஸ்ரீ - வீர - அ - கை.) விண்ணினின்றும் வந்துபுகுந்த விண்ணவர்க்கு மண்ணவர் எம்முறையில் மரியாதை செய்தனரென்னும் அவாநிகழக் கூறுகின்றார்:—வந்தென.

வந்துறு சித்தர்க் கெல்லாம் வசிட்டனுங் காதி சேயு
முந்துபூ சனைகள் செய்தார் முனிவருக் கவருஞ் செய்தார்
அந்தநல் லவையின் வேந்து மருச்சனை யவர்க்குச் செய்தா
னந்துமன் னவர்க்கு மன்னர் நன்சொலாற் பூசை செய்தார். (4)

(ப - பை.) வந்துறு சித்தர்க்கெல்லாம் = ஆகாயத்தினின்று மிறங்கிவந்த சித்த சேனைகளெல்லாம், வசிட்டனும் காதிசேயும் ஸ்ரீவசிஷ்ட விசுவாமித்திர மகரிஷிகளிரு வரும், முந்து பூசனைகள் செய்தார் = முந்திக் கணத்திற் பூசைசெய்தனர், முனிவருக்கு = ஸ்ரீவசிஷ்ட விசுவாமித்திரமகரிஷிகட்கு, அவரும் = அச்சித்தசேனைகளும், செய்தார் = பூசையாதரவோடுஞ் செய்தனர்கள், அந்த நல்லவையின் வேந்தும் = அத்திவ்யசபைக் குக் கர்த்தாவாக விருந்த தசரதபூபதியும், அருச்சனையவர்க்குச் செய்தான் = சர்வாதரத் தோடும் சித்தர்க்கு அருச்சனை செய்தனன், நந்துமன்னவர்க்கும் = சர்வஜகுவரியங்க ளும் வீருத்தியாகப்பெற்ற தசரதமன்னவர்க்கும், அன்னர் = அச்சித்தர், நன்சொலால் பூசைசெய்தார் = குசலப்பிரசினவார்த்தையால் பூசைசெய்தனர்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீவசிஷ்ட விசுவாமித்திர மகரிஷிகள் வந்திறங்கிய எல்லா விண்ண வர் கூட்டத்தையும் முறையே அருக்கியங்களானும் பாத்தியங்களானும் நன்மொழிகளா னும் பூசித்தனர்; அந்த விண்ணவர் மகாகணங்களும் ஸ்ரீவசிஷ்ட விசுவாமித்திரரை யாதர வோடும் அருக்கியங்களானும் பாத்தியங்களானும் இன்மொழிகளானும் பூசித்தனர்; எல்லா ஆதரவோடுஞ் சித்தர் கூட்டங்களைப் பூபதியானவர் பூசைசெய்தனர், சித்தர் கூட்டமும் பூபதியைக் குசலம்வினவும் இன்மொழிகளாலும் அக்காலத்துக் கேற்ற கதைகளாலும் மகிழ்வித்தனர்.

(ச.) நந்துமன்னவர் = இன்பமயமான அரசர், நன்சொல் = குசலப்பிரசனத்தோடு கூடிய தத்கால வுசிதவார்த்தை. (4)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வானவரும் மானவரும் பிரீதிக்குரிதமான பெருமிதானதி தானமாஞதி முயற்சிகளானே பரஸ்பரம் பூசித்துக்கொண்டு ஆசனங்களிலுட்கார்ந்தபின்னர் நடந்ததைக் கூறுகின்றார்:—தொழுதென.

தொழுதுமுன் னிருந்த செங்கட் டோன்றற்கு முபசாரங்கள்
பழுதில்பூ மழையானல்ல மொழிகளாற் பரிந்து செய்து
விழுமிய குணத்தான் மிக்கோன் விரத்தியாய் விளம்புஞ் சொற்கள்
முழுதுநல் லுதார மாகி முடிவிலற் புதமா மென்றார். (5)

(ப - ரை.) தொழுது முன்னிருந்த = நமஸ்கரித்து வணக்கத்துடன் எதிரில் நின்று கொண்டிருந்த, செங்கட்டோன்றற்கும் = செந்தாமரை மலரினிதழ்போலும் திருநேத்திரங்களையுடைய ஸ்ரீ இராகவருக்கும், உபசாரங்கள் = பூசைகள், பழுதில்பூமழையால் = குற்றமற்ற புஷ்பவர்ஷத்தாலும், நல்ல மொழிகளால் = சாதுவாதத்தாலும், புகழ்தல் வாயிலாலும், பரிந்துசெய்து = மிகவும் அன்புடன் செய்து, விழுமியகுணத்தான் மிக்கோன் = பெருமைவாய்ந்த அநந்த கல்யாண குணங்கட் காதாரமாகி மேன்மைமிக்க விக்ஞமரன், விரத்தியாய் விளம்புஞ் சொற்கள் = வைராக்கியரசம் நிறைந்தனவாய்க் கூறும் வாக்கியங்கள், முழுது நல்லுதாரமாகி = அத்தியந்தம் பரம உதாரமாய், முடிவில் அற் புதமாம் என்றார் = அளவில்லாத அதிதயம் வீஸ்மயத்தை யளிப்பனவாம் என்று கூறினர்கள்-எ-று.

(ஸ்ரீ - வீர.) முன்பாக நமஸ்கரித்து நின்று கொண்டிருக்கும் ஸ்ரீ இராமபிரானே, நாற் புறங்களிலும், தக்க கதாலாபமாகிய இன்மொழிகளாலும், புட்பமாரியினலும், புகழ்தலினலும், அவர்யாவரும் பூசித்தனர். பின்னஞ்ஞை பெற்று ஆண்டெழுந்தருளி யிருந்த இருடிகள் மத்தியில் இராஜ்ய இலக்ஷ்மி வீற்றிருக்கும் ஸ்ரீ இராகவர் வீற்றிருந்தனர். விநயத்தால் வணக்க வதனத்தோடுற்ற ஸ்ரீ இராமச்சந்திரரைப் பார்த்து ஆசிரியரிடத்தில் விதிப்படி அங்கசுத்தி செய்த வேதாத்தியயனஞ் செய்த அங்காதாதி யிருடியார் இவ்வசனத்தை யியம்புவாராயினர்:—அகோ ஆச்சரியம்! இக்குமரனல், பதினறு கல்யாண குணங்களோடு கூடியிலங்கும், பரம உதாரமாகியழகுவாய்ந்த வைராக்கியரசத்தை வயிற்றிற்றரித்த வாக்கியமானது வழங்கப்பட்டது; விசாரித்து இவ்வாறேயென விவத்தை செய்யப்பட்டுக் கூறத்தக்கபொருளோடு கூடியதும், கற்பனைமாத்திரையானே விவத்தை செய்யப்பட்ட பொருளோடு கூடாமல் பதார்த்தவயோதத்தோடு கூடியதும் அதனானே வித்வத்சபைக்குத் தக்கதும் வியக்தமாய வர்ணங்களோடு கூடியதும், மேன்மைதங்கிய அநேகங்கருத்துக் களடங்கியதும், இருதயத்திற் கானந்தத்தைச் செய்வதும், பூச்சியர் கட்குரித்தானதும் சித்தசஞ்சலத்தா லுண்டாய தோடமற்றதும், பொருளால் வெளியானதும், இலக்கணத்தாற் பரிசோதிக்கப் பட்ட பதங்களோடு கூடிப் பிரகாசிப்பதும், இதமானதும், வர்ணலோப முதலிய குற்றங்களற்றதும், ஆசையழிதலாலுண்டாய மகிழ்ச்சியோடு கூடியதும் ஆகிய ஸ்ரீ இராகவராற் கூறப்பட்ட இம்மொழியானது யாருக்குத்தான் வீஸ்மயத்தை யுண்டாக்கமாட்டாது?

(ச.) முனிகள் மொழிதல் (விழு) உதாரம் = கம்பீரம். (5)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நீயசமூசாரத்திற் துக்கம் வருவது அதி துர்லபமாம் என்பதை ஸ்ரீ இராமரேயறிந்தது யாவரே யுணர்ந்தாரெனல்:—ஈசனேயென.

ஈசனே படைத்த தாகி யெண்ணிறீ முயற்சி மிக்க
மாசுறு மாயை தன்னில் வருசுக மரிது சாலத்
தேசுறு சதுரச் சிந்தைச் செல்வனுக் குணரற் பாற்றேற்
பேசுறு நாங்க ளெல்லாம் பேதைய ரென்னச் சொன்னர். (6)

வைராக்கியப் பிரகரணத்தில் சுகர் கதை

சுகர் கதை

(ப - ரை.) ஈசனே படைத்ததாகி = தைவநிர்மாண நிர்மிதமாகி, எண்ணில் தீமை யற்சி மிக்க = அளவில்லாத கொடிய விவகாரங்கள் மிகுந்து நிறைந்த, மாசுறு மாயை தன்னில் = குற்றம் பொருந்திய தக்த சம்சாரத்தின் கண், வருசுகமறிது சால = வரா நின்ற சாரமாயசுகம் அத்தியந்தந் துர்லபமாக விருக்கின்றது, சாலத் தேசுறு சதுரச்சிந்தை = அத்தியந்தம் ஒளிமிகுந்து சகலலோக சமற்காரம் நிறைந்து விளங்குஞ் சித்தத்தோடு கூடிய, செல்வனுக்கு = ஸ்ரீ இராகவருக்கு, உணரற்பாற்போல் = உப தேசியோமா யின், பேசுறு நாங்களெல்லாம் = ஹே துவிஜேந்திரர்களே! பரஸ்பரம் சம்பாஷித்துக் கொள்ளும் நாம் யாவருமே, பேதைய ரென்னச் சொன்னர் = வெளி யாகவே யதமதியுடைய ராவோம் என்று கூறினர்கள். (எ-று.) (6)

(ஸ்ரீ - வீர.) இச் சமுசாரமானது அதி விஸ்தாரமா யோங்கிக் கெடுக்கமுடியாத தாய்த் தடையாதொன்று மின்றித் துர்வடிவமாய் விருத்தியாகி, தைவநிர்மாண நிர்மித மாய் அதாவது அநிர்வாச் சியமாகி, விளங்குகின்றது, இதன் கண்ணின்பம் எளிதினிற் கிடையா. யாதொரு தடையுமற்றுக் கெட்ட வடிவையுடைய தெய்வமென்னும் மூற்கரு மத்தை யனுசரித்த வீர்மாவின் சிருஷ்டியா லுண்டாகிய இச்சாம்பற் சமுசாரத்திற் சாரமாகிய விவேகத்தா லுண்டாம் ஆன்மலாபமானது ஹேது விஜேந்திரர்களே! அத்தி யந்தந் துர்லபமாக விருக்கின்றது. எக்கீர்த்தி நிதிகள் எப்போதுந் தத்துவசிந்தன பரர்க ளாகி ஆன்மலாப ரூபமாய சாரத்தை யடைவதில் முயலுகின்றார்களோ அவர்களே தன் னியர்கள், புருடோத்தமர்கள், சாதுக்களுள் முதலில் எண்ணப் படுபவர்களாவர்கள், விவேக முடையவரும் உதார கம்பீரவடிவும் மனமு முடையவரு மாகிய ஸ்ரீ இராமருக் கொப்பாக ஒருவருமே யிவ்வுலகிற் கிடையாது; இப்போதுங் காணும், முற்போதுங் கண்டதில்லை, பிற்போதும் வரப்போவதே கிடையாது, என்பது எமது துணிபாம். ஸ்ரீ இராமரது மஹோதய சம்பத்தியை அவசியஞ் செய்விக்க வேண்டு மென்பதை அவ ரைப்புகழும் வாயிலாகவும், உத்தம அதிகார அடைவு அவர்க்குண்டா யிருப்பதைவெளிப் படுத்தும் வாயிலாகவும் கூறி அவரை யுபேக்ஷிக்கிற் றேடமா மென்பார், சாலத்தேசுறு வென. சர்வஜனங்கட்கும் அதிசய குணசீல விநயாதிகளாணும் உசிதமாக வினவத்தக்க இரகசியத்தை வெளிப்படுத்தலானும் ஆனந்தத்தைச் செய்வித்த ஸ்ரீ இராகவர் மனத் தில் விரும்பிய தத்துவத்தை யறியும் வேட்கை வடிவமனோரதம், நம்மனோராகிய அறி வாளிகளின் உபதேசத்தாற் பயிற்சிகாமற் போகுமாயின் முனிவர்களாகிய யாமே வெட்ட வெளியாய்க் கெட்டமதி யுடையவர்க ளாவோம், நமதறிவுண்மையும், பயனற்றதேயா கும்; ஆதலின் அவசிய முபதேசிக்க வேண்டும். செல்வனுக் குணரற்பாற்றேல் = ஸ்ரீ இராகவருக்கு உணரவேண்டிய பரம்பொருளே யுணர்த்தாமலு பேக்ஷிப்பமேயாஞல்.

(ச.) மாயைதன்னில் = சமுசாரத்தில், சாலவறிது = அத்தியந்தந் துர்லபம், சுகம் = ஆத்மலாபம், சதுரச்சிந்தை = சமத்காரம் சேர்ந்தமனம், உணரற்பாற்றேல் = அறிதற்பாலதை உபதேசியேமாயின். இங்ஙனம் வலிந்து பொருள் கூறினது மூலசுலோ கத்திற் கியையவென்க. பேசுறும் (அவ்வுணர் வின்றி) வசனிக்கும், நாங்களெல்லாம் = முனிகளான யாங்களேவரும். (6)

பெரியவாசிட்டத்தில் இனி முமுக்ஷுவிவகாரப் பிரகரணம்.

அஜமொடுஞ் சரையற்ற நாதியாயொன் றுயகில வின்பங்க ளுந்தமது
நிஜசுகலேச மெனநிகழ்ந் திதயநிகித மாயாத்து மசார
யஜுர்முதல் வேதமுடி பெழுமமுத வெழிலிர சாயன வடிவாங்
கஜமுகவீர மாதவன் கமழ்க்கழன்மலர் கருத்தில் வாழ்த்துதுமே.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ இராமாதிவசன வாயிலாய்ச் சாதன சம்பத்தானது வருணிக்கப் பட்டபோதினும், முமுக்ஷுக்களால் எம்முறையால் விவகரிப்பவர்களாய்ச் சம்பாதிக்கத் தக்கன, அதஞல் தத்துவ விசிரோந்தி இலாபந்தா னெங்ஙன முண்டாம் எனத்தனித் தனியாகப் பிரித்து அவற்றை யுபதேசிக்கும் பொருட்டு இரண்டாவது பிரகரணத்தை ஸ்ரீ வான்மீகிபகவான் ரெடங்குகின்ரூர்:—ஈதவரென.

ஆண்டாதியில் மந்த வைராக்கியாதி சாதன முடையவர்கள், எல்லாம் வந்ததுபோலவே விரைவில் அதிகார அடைவின் மயக்கத்தாற் கேள்வி முதலியவற்றே முயலுதல் கூடாதெனச் சுகர் கதையிஞனே அந்தப்பரிபாக இலக்கணங்களைக் காண்பித்து, "குரு வருளானே குணமதாயறிந்த, பெருமொரு வித்தையே பெரும்பயனுடைத்தாம்" என் ஹஞ் சுருதியிஞனே குலகுருவாகிய ஸ்ரீ வசிஷ்டபகவானே ஸ்ரீ இராமருக்குபதேசிப் பான் பூர்வவிருத்தாந்த நினைவிஞலும், தத்துவவுபதேச வுபக்கிரமத்தாலும் மிகவுமுற் சாகப் படுத்துபவராய்த் தமது பிரயோஜன சித்தியின் பொருட்டே சிரவணஞ்செய்யும் பொருட்டும் விரைந்து ஸ்ரீ விசுவாமித்திர முனிவரே முதலிற் கூறத்தொடங்கிஞரென ஸ்ரீவான்மீகி பகவான்கூறல். ஈதவரென.

ஈதவ ருரைத்த பின்ன ரிராமனே யினிது நோக்கிக்
காதிசே யுரைப்பா னீயே களங்கமில் புந்தியாலே
தீதற வனைத்துங் கண்டாய் தெளிவுறப் பிறிதொன் றில்லைப்
போதமார் சுகனு நீயும் புந்தியா லொப்பீ ரன்றே. (7)

(ப - கை.) ஈதவருரைத்த பின்னர் = இவ்வண்ணம் உரத்தகுரலோடும் அச்சபையிலுள்ளவராற் கூறப்பட்ட பின்னர், இராமனே யினிதுநோக்கி = முன்னரிருந்த ஸ்ரீ இராகவரைநோக்கி, காதிசே யுரைப்பான் = ஸ்ரீ விசுவாமித்திரர் கூறுவதாவது, நீயே களங்கமில் புந்தியாலே = நீதானே மாசற்ற அதிருக்கும மதியிஞனே, தீதறவனைத்துங் கண்டாய் = விபரீதமில்லாமல் அறியவேண்டிய வனைத்தையும் அறிந்தாய், ஆதலின், தெளிவுறப் பிறிதொன்றில்லை = அறிந்து கொள்ளத் தக்கதாக வயலொன்றையுங் காணேம், போதமார் சுகனும் நீயும் = ஞானமயமாய சுகனென்னும் ஸ்ரீமத் பகவத் வியாசபுத்திரனும் நீயும், புந்தியீல் ஒப்பீர் = மதியின் கண்ணே விசிரோந்திமாத்திரத்தை விரும்புதலால் ஒப்பாக இருக்கின்றீர். (எ - று.) (7)

(ஸ்ரீ - வீர.) சபைக்கு விஜயஞ்செய்த முனிவர்களானே இவ்வண்ணம் உரத்தகுரலோடும் வாக்கியங்கள் வழங்கப்பட்ட பின்னர் முன்னரும் அதிகார எல்லையிலும் உட்கார்ந்திருக்கும், முக்கிய அதிகாரிகள் கிடைப்பது அருமையாதலின் ஸ்ரீ இராமரிடத்திலும் பிரஹ்மசாத்தை யறிந்தவர்களுக்குள் ஞத்தமரானவ ராதலின் நிகழப்போகின்ற பிரஹ்மவிசாரத்திலுங், பிரீதியுடையவராய் ஸ்ரீ விசுவாமித்திரர் ஸ்ரீ இராமரை நோக்கிக் கூறுவதாவது:—ஹே இராகவ! ஹே ஞானவான்களுக்குள்ளே மேன்மை மிக்கோய்! அவசிய மறியத்தக்கது உனக்கு அயலொன்று மில்லை; சுயமாகவே அதிருக்குமமான சாராசாரத்தைப் பருக்கு மாற்றலுற்ற மதியிஞனே தள்ளத்தக்க கொள்ளத்தக்க இரகசிய முழுவதையும் பரமார்த்த சாரபூத அகண்ட அத்வயசின்மாத்திர ரூபமாகிய ஆன்ம தத்துவத்தையும், நீயறிந்தே யிருக்கின்ரூய்; ஆயினேன் இனைப்பாறுதல் உண்டாகவில்லையெனின்? எப்போது மியற்கையாகவே நிர்மலமா யிராநின்ற நினது மதிக்கண்ணடியிற் கேவலம் அவரம்பிக்கையாலாய ஐய அழுக்கை யகற்றன்மாத்திரம் ஒரு சிறிதே பொருந்த வேண்டியதா யிருக்கின்றது, தனது மதியாலறிந்த போதினும் பிரமாண ஆசி

சுகர் கதி

ரியர் முதலிய சம்வாதமில்லாமல் விசுவாசம் வரமாட்டாதன்றே! "வலுவதாய்ச் சிக்கித்து வழங்கிய பேர்க்கும், நலமதாயான்ம னினன்னிலை யுளம்பெறு" எனவுமன்றே கூறுகின்றனர். ஸ்ரீ வியாசபகவானுடைய மைந்தனாகிய சுகனுடைய மனம்போன்றதாம் நின்னுடைய மனதும், அறியவேண்டுவது யாவற்றையும் அறிந்தபோதினும் உள்ளே விசிராந்தி மாத்திரத்தையே அபேக்ஷிக்கின்றது. ஈண்டு ஸ்ரீ வியாசர் சுகர் என்பவர், ஒவ்வொரு துவாபரமுடிவினும் ஸ்ரீ வியாசாவ தாரபேதம் பிரசித்தமாதலின் முன்னுள்ளது துவாபரமுடிவி லுண்டானவர் கவரப்படுவர்.

(ச.) நீயே = ஞானவான்களிற் சிரேட்டனை ஸ்ரீ ராமா நீயே, களங்கமில் புந்தியாலே = சுஷுமபுத்தியினாலே, சுகனும் = ஸ்ரீ வியாசபகவானது புத்திரனை சுகமுனிவரும். (7)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இங்ஙனங் கூறிய முனிநாயகரை நோக்கிச் சுகர்சரிதத்தை வினவுகின்றார்:—இகலறவென,

இகலற வுணர்வுற் றோனு மிளைப்பற நயந்தா னென்று
மகமுனி யுரைப்பக் கேட்ட வள்ளலு முரைப்பா னையா
வகமறு முணர்வுண் டாயு மாறுதன் முன்ன மின்றிச்
சுகமுறப் பின்னுண்டான தெங்ஙனஞ் சுகனுக் கென்றான். (8)

(ப - ரை.) இகலற வுணர்வுற்றோனும் = விபரீத மில்லாமல் அறியவேண்டிய வத்துவை யறிந்தவனு யிருந்தபோதினும், இளைப்பற = முதலில் விசிராந்தியடையாமல் நயந்தான் = மதியான் மீண்டும் விசிராந்தியை யடைந்தான், என்னுமகமுனியுரைப்பக் என விவ்வண்ணம் யாகஞ்செய்வதன் கண்ணே மிகவுந் தற்பரரான ஸ்ரீ விசுவாமித்திர மகாமுனிவர் கூற, கேட்டவள்ளலும் = வினவிய ஸ்ரீ இராகவரும், உரைப்பான் = கூறுவதாவது, ஐயா = ஹே தேசிகோத்தமரே! அகமறும் உணர்வுண்டாயும் = தற்போதமிழந்த ஞானமான துற்பத்தியாகியும், ஆறுதன் முன்னமின்றி = விசிராந்தியானது முன்னர்க் கிட்டாமல், சுகமுறப் பின்னுண்டானது = பிரஹ்மானந்தம் பெறுமாறு பின்னர் விசிராந்தி யுண்டானது, எங்ஙனஞ் சுகனுக்கென்றான் = சுகப்பிரஹ்ம ரிஷிக்கு எவ்வண்ணம் என்று ஸ்ரீ இராகவர் வினவினர். (8)

(ஸ்ரீ - வீர.) சர்வக் கிலேசங்களு மற்றதாய் அளவைகள் விவகரிக்கும் முன்னரே தானே பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரமானந்த ரூபமாய்ச் சொரூபம் அறியப்பெற்றதாகியும் மதியில் இளைப்பாறுதல் என் உண்டாகவில்லை? இவ்வா றியம்பக்கேட்ட ஸ்ரீ இராமர், ஹேபகவன்! ஸ்ரீ வியாசபகவான் மைந்தராகிய சுகருக்கு ஆதியில் தமது விசாரத்தானே தத்துவம் அறியக்கூடியதா யிருந்தும் எவ்வாறு விசிராந்திவரவில்லை? பின்னர், குரு உபதேசித்த பலத்தோடுகூடியமதியினானே எவ்வாறு விசிராந்தி கிடைத்தது எனவினவினர்.

(ச.) நயத்தல், அறியவேண்டியவனைத்தும் அறிந்தவரும் சித்தவிசிராந்தி மாத்திரத்தையே யகத்தில் அபேக்ஷிப்பர் என்பதாயிற்று. (8)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தனது மதியினானே விசாரித்தினிதுணர்ந்தும் தந்தையாலுபதேசிக்கப்பெற்றும் நம்பிக்கை யற்றவராகி ஜனகரது உபதேசத்தாற் சுகர்தத்துவத்தில் இளைப்பாறினரென்று கூறத்தொடங்குகின்றார்:—என்னலுமென.

என்னலும் முனிவன் சொல்வா னெழுபிறப் பறுக்கு ஞானந்
துன்னிய சுகனு நின்போற் றொல்லுல கியல்பை நாடி
மன்னிய விவேக முண்டாய் மாசறு முணர்வு பெற்று
மந்நிலை யைய மாகி யாறுத லற்ரு னன்றே. (9)

(ப - ரை.) என்னலும் = என்றிவ்வண்ணம் ஸ்ரீஇராகவர் விஞ்ஞதலும், முனிவன் சொல்வான் = ஸ்ரீவிசுவாமித்திர மகரிஷிகூறுவதாவது, எழுபிறப்பறுக்கும் ஞானம் = எழு வகைத்தோற்றங்களாகிய தேவநரதிரியக்காதி யோனிகளிற் பிறக்குந்துயரைத் துடைக் கும் பிரஹ்மவித்தையை, துன்னியும் = விசாரதிருவுள்ளியினுனே சுலபமாக அடைந்தோம், சுகனும் = சுகப்பிரஹ்மரிஷியும், நின்போல் = உன்னைப்போலவே, தொல்லுலகியல்பை நாடி = அநாதியசிர்வசயேமாய உலகிலுள்ள அநித்திய அசுத்த கண்டித துக்கமயத்தகை மையை ஆலோசித்துப் பார்த்து, மன்னியவிவேகமுண்டாய் = நிறைந்த விவேகமானது உதயமாகி, மாசறுமுணர்வுபெற்றும் = விபரீத மில்லாத பூர்ணஞானத்தைச் சுயமாகவே யடைந்தும், அந்நிலை = அந்தச் சொரூபநிலைமையானது, ஐயமாகி = சமுசயத்தாலே பிறழ்ச் சியையடைந்து, ஆறுதலற்ரு = சித்தவிசிராந்தியை யடைந்தானில்லை, அன்று எ அசைநிலைகள். (9)

(ஸ்ரீ - வீர.) மேற்கூறிய பிரகாரம் ஸ்ரீராகவர் வினவியபோது.

ஸ்ரீவிசுவாமித்திரர் கூறுகின்ரூர், ஹே இராமச்சந்திர! உன்னுடைய விருத்தாந்தத் திற்குச் சமமும், மோக்ஷகாரணமும் ஆகிய ஸ்ரீவியாசமைந்தன் விருத்தாந்தத்தைக் கூறக் கேட்பாயாக, உனதுதந்தைக்குச் சமீபத்தில் பிரசித்த நீலகிரிக்குச் சமானமாய்ப் பொன் ஞசனத்திற் சூரியனேப்போற்பிரகாசித்துக்கொண்டு இதோ உட்கார்ந்திருக்கும் ஸ்ரீவியாச பகவானுக்கு, சர்வசாஸ்திரங்களேயு முணர்ந்தவனும், சந்திரவதனனும், சரீரத்தோடு யாகம் எழுந்தருளியதுபோன்றவனும், பேரறிவாளனும், ஆகிய சுகனென்னும் ஒருமைந்த னுண்டானுன்; இந்தச் சம்சாரசங்கடங்களேயெல்லாம் இருதயத்தின்கண்ணே நன்ரூக ஆராய்ந்த அவனுக்கும், உனக்குநித்ததுபோலவே இத்தகைய விசாரமானது உதித்தது. அதனுல் மகாமனத்தையுடைய அவன் சுயமாகவே தனது விவேகத்தினுல் நெடுங்காலம் ஆராய்ந்து மிகவும் அழகாக, எப்பரமார்த்த சத்தியமாய ஆன்மதத்துவம் அத்விதீய சின் மாத்திர ரூபமாயிருக்கின்றதோ அதையறிந்தடைந்தனன். ஞானமேயன்ரோ ஆன்ம லாபம், தானேயடைந்த பரவஸ்துவின் கண்ணே இதுதான் வஸ்துவென விசுவாசம் தனக்குப் பிறவாமையானே இளேப்பாறுதலடையாத மனத்தையிருந்தான்.

(ச.) நின்போல் இவ்வுலகயாத்திரைசெய்து, மன்னிய விவேகமுண்டாய், அவ்விவே கத்தாற் சுயமாகவே, தொல்லுலகியல்பைநாடி மாசறுமுணர்வுபெற்றும், அந்நிலை, = சுயமாக அடைந்த, அந்தப்பரவஸ்துவில், ஐயமாகி = இதுவேவஸ்துவென மனதில் விசு வாசம் பிறவாமல் சித்தவிசிராந்தி பெற்றிலன். (9)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அச்சுகவிருத்தாந்தத்தையே, தொடர்ந்து கூறுகின்ரூர்:— விடலென.

விடலரு மசைவு விட்டு விடயத்தின் மீண்ட நெஞ்சன்
வடவரை யுறையுந் தாதை மருங்குற வெய்தி யிந்த
விடருறு மாயை வந்த தெங்ஙன மிறப்ப தெங்ஙன்
றொடர்பிலா ருடைய தெம்மட் டென்றிது தோன்றிற் றென்ரூன். (10)

(ப - வை.) விடலரும் அசைவுவிட்டு = விடுவதற்கு முடியாததான சஞ்சலத்தை விடுத்து, வீடயத்தின் மீண்ட நெஞ்சன் = சர்வபோகங்களினின்றும் நிவிருத்தியான மனத்தையுடைய அச்சுகப்பிரஹ்மம், வடவரை யுறையுந்தாதை = சுமேருபர்வதத்தில் ஏகாந்தமாக எழுந்தருளியிருக்கும் தந்தையினது, மருங்குறவெய்தி = சமீபசந்நிதியை யடைந்து, இந்தஇடருறுமாயை = இத்துன்பமயமான சம்சார ஆடம்பரம், வந்ததெங் ஙனம் = எழுந்தது எவ்வண்ணம்? இறப்பதெங்ஙன் = ஒடுங்குவது எவ்வண்ணம்? தொடர் பிலாருடையது = எவரைத் தொடர்பாக உடையது? தொடர்விலாத எவரை யாசிரயத் திருப்பது? எம்மட்டு = எதுவரையுளதாம்? என்றிது தோன்றிற் றென்ரூன் = எக்கா லிது தோற்றியது? என்று சீடவிதிப்படி வினவினன். (எ-று.) (10)

(ஸ்ரீ - வீர.) பூமியின்கண் ணீருக்கும் நீரருந்துவதிற் நிரும்புவதாய பக்ஷிவிசேஷ மாம் சாதகம் மகிழ்ந்தபின் மழைத்தாரைகளி னின்றும் உபராமத்தை யடைதல்போலப் போகங்களினின்றும் உபராமத்தை யடைந்தான் என்பதாம். அவனுடைய சித்தமானது சஞ்சலத் தன்மைகளை யெல்லாம் விட்டுக் கேவலம் அகால மழைத்தாரைகளி னின்றும் சாதகப் பக்ஷியானது விலகுவதே போலப் பலவகை விகாச துக்க ஹேதுக்களாய போகங்களினின்றும் வைராக்கியத்தை யடைந்தது; ஒருகால் நின்மலப் பிரஞ்ஞை யையுடைய அவன் மேருவின் கண்ணே ஏகாந்தமாயிருந்த தந்தையாகிய ஸ்ரீகிருஷ் ணத்வைபாயன ரென்னும் ஸ்ரீ வியாசமகா முனிவரை நமஸ்கரித்துப் பக்தியோடும், ஹே தந்தையாகிய ஆசிரியரே! பரவஞ்சனையின் பொருட்டு வஞ்சகமாக ஆட்டிவிடப் பட்ட இந்தச் சமுசார ஆடம்பரம் எம்முறையாக உண்டாயது? எக்காலிது அத்தியந்தம் எவ்வாறு அழியும்? எவ்வளவுபெரியது? எத்தூணைக்காலமிருப்பது? இது யாருடையது? தேகத்தினுடையதா? இந்திரியத்தினுடையதா? மனத்தினுடையதா? பிராணனுடையதா? சங்காதத்தினுடையதா? அதனினும் அயலாய வீகாரியினுடையதா? நிர்விகார சின்மாத் திரத்தினுடையதா? என வினவினன்.

(ச.) விடயத்தின் = களங்க மிருந்த போகங்களி னின்றும், தரைச் சலங்களின்றும் சாதகப்புள்மீளல் போல, மீண்ட நெஞ்சன். வடவரையுறையும் = மேருவில் ஒரு காலத் தேகாந்தமாக இராநின்ற, தாதை = கிருஷ்ணத் வைபாயன முனிவரென்னும் பிதாவினிடத்தில், மருங்குறவெய்தி = சீட ஒழுங்கின்படி பக்தியுடன்சென்று, மாயை = சம்சார ஆடம்பரம், அனுக்கிரகிக்க வேண்டு மென்ரூன். (10)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இங்ஙன் வினவிய மைந்தனை விளித்துத் தந்தையருளியது இஃதென்கின்ரூர்.—அன்னவனென.

அன்னவன் கேட்ட வெல்லா மறிவுற வுரைத்த போது
முன்னரா னுணர்ந்த வாறே மொழிந்தனை யெனவச் சொல்லா
னன்னிலை பெருமை கண்டு நல்லுணர் வெனக்குத் தோன்ரு
மன்னவன் சனக னென்பான் வழுவறு முணர்வின் மிக்கான். (11)

ஆயவன் றனையே கேட்கென் றருளொடு தாதை யேவப்
போயினன் சனகன் வாழும் பொன்மனை வாயிற் சேர்ந்தான்
றூயவன் வரவு கேட்டுச் சோதிப்பான் கருதி மன்னன்
ஏயின னில்லை காளே ழிருந்தனன் விகற்ப மில்லோன். (12)

(ப - வை.) அன்னவன் கேட்ட வெல்லாம் = அந்தமைந்தன் வினவியவாவற்றிற்கு முத்தரத்தை, அறிவுற உரைத்தபோது = ஞானமுதய மாகுமாறு உபதேசித்தபோது,

முன்னம் நான் உணர்ந்த வாறே மொழிந்தனை யென=பூர்வம் அடியேன் தெரிந்திருந்த பொருளையே நீரும்கூறினீர் என்றுகூற, அச்சொல்லால் = கூறிய அம்மொழிகளால், நன்னிலை பெருமைகண்டு = சமூசயமற்ற சுபாவசொரூப ஸ்திதியை யடையாதது கண்டு, நல்லுணர்வு எனக்குத் தோன்ற = தத்துவமான ஞானம் எனக்கிலங்கா தாத லின், மன்னவன் சனகன் என்பான் = ஜனகமகாராஜா என்றொருவர் மிதிலையி லிருக் கின்றார், வழுவறு முணர்வின் மிக்கான் = சமூசய விபரீதமில்லாமல் உள்ளபடியே யெல்லா முணர்ந்தவர் அவர்; ஆயவன்றனையே = அத்தகைய சர்வஞ்ஞ அரசரையே, கேட் கென்று = வினவித் தெரியவிரும்பியதைத் தெரிந்து கொள்ளுதி என்று, அரு ளொடுதாதையேவ = பரமகருணையோடு பிதா நல்லாசியோடு வழிவிட, போயினன் = மிதிலையை நோக்கிச் சென்றனன், சனகன் வாழும் பொன்மனை வாயிற் சேர்ந்தான்= ஜனகமகாராஜன் எழுந்தருளி யிருக்கும் சர்வஜ்ஞசுவரியம் நிறைந்த அரண்மனை வாயிலில் வந்து சேர்ந்தான், தூயவன் வரவுகேட்டு = பரிசுத்த பிரஹ்மசரிய முடைய சுகபிரஹ் மம் வந்து வாயிலில் நிற்பதாக யாஷ்டிகரா லறிவிக்கப் பெற்று, சோதிப்பான் கருதி = பரிசோதிக்க வேண்டுமென் றுத்தேசித்து, மன்னன் = இராஜாதிராஜன், எயினன் இல்லை = போயழைத்து வரவில்லை, நாளேழிருந்தனன் விகற்பமில்லோன் = எழுதி னம் வரை சும்மா இருந்துவிட்டனர். (11-12)

(ஸ்ரீ - வீர.) யாஷ்டிகர்= தண்டாயுத பாணியர். சுகப்பிரஹ்மத்தால் விஞ்ஞப்பட்ட யாவு முணர்ந்த ஸ்ரீ வியாசபகவானால் அம்மைந்தன் பொருட்டுப் புகலவேண்டிய தனைத் தும் உள்ளபடியே தெளிவாகப் புகலப்பட்டது. உபதேசித்த அதைச் செவியுற்ற சுகர் அம்ம ! இதை முன்னரே யானறிந்துளேன் எனத் தனது தந்தையினது வாக்கியத்தை அபூர்வ அர்த்தமொன்றுங் காணுமெனச் சுயபுத்தியினனே பகுமானிக்க வில்லை. ஸ்ரீ வியாசபகவானும் மைந்தனது கருத்து இத்தகையதென வுணர்ந்து அவன்மதியையே யனுசரித்துப் புத்திரனை நோக்கி மீண்டுங் கூறுவதாவது:—ஹேமைந்த ! கூறியதினும் அயலாக உண்மையா யொன்றையும் யான் நன்றுகவுணரேன் ; பூமியின்கண்ணே ஜனக னென்னும் அரசனிருக்கின்றனன் ; அவனுண்மையாக உணரவேண்டிய யாவற்றையு முணர்வான் அவனிடத்தி னின்றும் நீ யாவற்றையும் அறிவாய் ; என்பதாகத் தந்தை யாற் கூறக்கேட்ட சுகர் மேருகிரியினின்றும் பூமியிற் சென்று ஜனகனுற் காப்பாற்றப் படும் விதேக தேசத்திலுள்ள மிதிலையென்னும் நகரத்தை யடைந்தனர். ஹே மன்னவர் மன்ன ! வாயிலின் கண்ணே ஸ்ரீ வியாச பகவானுடைய அருமை மைந்தராகிய சுகப் பிரஹ்ம இருஷியானவர் வந்து நிற்கின்றனர் என்று மகாத்மாவாகிய ஜனகரிடத்தில் துவாரபாலகர்களாற் றெரிவிக்கப் பட்டபோதினும் ஜனகரும் சுகர் வீருத்தாந்தம் தெரிந்தவராய் விரைவி லுபதேசிக்கின் ஸ்ரீ வியாசவசனம்போல அவமதிப்பால் அவ னுக்குக் கிருதார்த்தத் தன்மையை யுண்டாக்க மாட்டாது, அவ்வாறென் மொழியும் போகலாகாதென வெண்ணிச் சுகருடைய வைராக்கியாதி சாதனங்களின் விசுவாச திடத்தன்மைகளை அறியும் வேட்கையுற்று உபேக்ஷையாக அவர் ஆங்கேயிருக்குக வெனக் கூறி ஏழுதினம்வரை ஒன்றுங் கூறாம லிருந்து விட்டார்.

(ச.) அண்ணவன், ஸ்ரீ வியாசர் வாய்மொழி. ஈதனைத்தும் தன் விகற்பசன்னியஞ் சித்தவிருத்தி நாசத்திலுல் நசிக்கும் பொய்யான சம்சாரம் சாரமின்மையதென நிச்சய மாம் என்று அறிவுறச் சொல்ல வேண்டிய வனைத்தும் உள்ளபடி யுரைத்தபோதும் உண ராமல். முன்ன—கண்டு. புத்திரனைநோக்கி மீட்டும் மொழிதல். நல்—மிக்கோன். பூவுல கத்திருக்கின்றனன் அவனுல் அனைத்தும் பெறுவாய். ஆயவன் ; மேருவினின்றும் பூவு

லகைநோக்கிப் போயினன், சனகன் (ஆளும் விதேகநகரியில் வாழும். வரவு = தனது வரவை, மகாமனதுடைய சனகராசனுக்குத் துவாரத்தரால் அரசனே ! இவ்வரண்மனை வாசலில் வியாசபுத்திரராகிய சுகமுனிவர் வந்து நிற்கின்றரென வறிவிக்க, மன்னன் கேட்டுச் சோதிப்பான் கருதி, நிற்கட்டுமென் றவமானித் துரைத்தவராய், எனினன் இல்லை = சும்மா இருந்தார். யாஷ்டிகர் = வாயிலாளர். (11-12)

(ஸ்ரீ-வீர - அ - கை.) பின்னர் என்னுற்ற தென்னும் ஆகாங்ஷை யுண்டாகக் கூறுகின்றார்:—மற்றென.

மற்றுநா ளேழும் வேறோ ரிடத்துற வைத்த பின்னர்
பொற்றிர ளழகா ரந்தப் புரத்திடை நாளேழ் வைத்துச்
சிற்றிடை மகளிர் போகஞ் சிறந்தவு ணசரிப்பத் துய்த்தான்
குற்றமுங் குணமு நாடான் குளிர்நிறை மதியமொத்தான். (13)

(ப - ரை.) மற்று = அதன் பின்பு, நாள் ஏழும் = சப்ததினங்கள் வரை, வேறோ ரிடத் துறவைத்த பின்னர் = மற்றோ ரங்கணத்தின் கண்ணே இருக்கும்படியாக நியமித்து அதன்பின்பு, பொற்றிரள் அழகு ஆர் அந்தப்புரத்திடை = பொன்முதலிய ஐசுவரியங்கள் நிறைந்து அழகுவாய்ந்த உள்ளங்கணத்தின் கண்ணே, நாளேழ்வைத்து = ஏழுதினங்கள் வரை இருக்கும்படி செய்வித்து, சிற்றிடை மகளிர்போகம் = சிறிய இடையையுடைய மங்கையர் போகமும், சிறந்தவுண் = அறுவகையாய இரசங்களோடுற்ற நால்வகை யுண்டியையும், அளிப்ப = ஈயும்படி செய்விக்க, துய்த்தான் = அனுபவித்தான், குற்றமும் குணமும் நாடான் = புன்மையையேனும் நன்மையையேனும் எண்ணவேயில்லை, குளிர் நிறைமதிய மொத்தான் = தண்ணென்று நிறைந்த பூரண சந்திரனை யொப்ப விளங்கினன்.

(ஸ்ரீ - வீர.) ஜனகதரிசன உற்கண்டையோடு மிருந்தாரே யல்லாமல் வேறொன் றையும் எண்ணவேயில்லை. அதன்பின்பு அரண்மனை உண்முற்றத்தில் விடும்படியாகச் செய்தனர், அவ்விடத்திலும் ஏழுதினங்கள் அவ்வாறே தத்துவத்தை யுணரவேண்டு மென்னும் இச்சையின் மிகுதியினால் அதீதாதரவு யாவற்றையுமறந்து இருந்தனர். பின்னர் அந்தப்புரத்தில் விடும்படியாகச் செய்தனர். எதுவரையுணவு முதலியவற்றாலே நீர் பூஜிக்கப் பெறவில்லையோ அதுவரை யரசர் தெரியார்என்னும் வாக்கின் வஞ்சனையாலே ஏழுதினங்கள் வரை அந்தப்புரத்திலேயே யவ்வனத்தால் மதத்துலவும் அழகியமங்கையராற் போஜனாதிகளானும் போகக் கூட்டங்களானும் பூர்ணசந்திரனுக்குச் சமான ஞான சுகரை யுபசரிக்குமாறு செய்வித்தனர்.

(ச.) போகஞ்சிறந்தஃபுசித்தற்கினிய, ஊண் = போஜனங்கள். (13)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆயின் மேனடந்த மாஞவமானங்கள் மனத்தைக் கனத்த மகிழ்விற் றுயரில் ஆழ்த்தி யிருக்குமே யெனின், திருஷ்டாந்த பூர்வகமின்றென் கின்றார்:—மன்னவனென.

மன்னவன் சனகன் றந்தபோகத்தின் மகிழ்ச்சி யாவு
மன்னவன் முன்னஞ் செய்த வவமதித் துன்ப மியாவு
மின்னவன் மனத்தைச் சற்று மிழுத்தில விளமென் றென்றல்
பொன்னச லத்தின் மிக்க பொருப்பினை யிழுக்க வற்றே. (14)

(ப - ரை.) மன்னவன் சனகன்றந்த = இராஜாதிராஜ ஜனகர் தரும்படி செய்வித்த, போகத்தின் மகிழ்ச்சியாவும் = போகங்களின் சந்தோடங்கண் முழுவதும்,

அன்னவன் = அவ்வரசர், முன்னஞ்செய்த = பூர்வஞ் செய்வித்த, அவமதித் துன்பமி யாவும் = அவமானத்தின் றுயரங்கண் முழுவதும், இன்னவன் மனதை = இச்சுகமரீரிவி யின் உள்ளத்தை, சற்றுமிழுத்தில = ஒரு சிறிதும் அசைத்திலவாம், இளமென் தென் றல் = அற்பமான பிருதுவான தென்மந்தா நிலம், பொன் அசலத்தின் மிக்க பொருப் பினை = சுமேருவைப் பார்க்கினும் அதிகமாக வூன்றியிருக்கும் பர்வதத்தை, இழுக்க வற்றோ = அசைக்க வல்லமை யுடைத்தான தாருமோ, ஆகாததுபோலவாம்.(எ-று) (14)

(ஸ்ரீ - வீர.) வூன்றி யிருத்தல் = பத்த அதிஷ்டானமா யிருத்தல். ஜனகர்தந்த அப்போகங்களும் அத்துயரங்களும் ஸ்ரீ வியாசமைந்த ராகிய அச்சுகரைத் திடமூலத் தோடு கூடிய பெருங்கிரியைத் தென்றற் காற்றுனது அசை வியாததேபோல அசைக்க வில்லை, கேவலம் போகங்களிலும் அநாதரவுகளிலும் நல்ல சமமுடையவ ராகவும் அத னுனே சுவஸ்தராகவும் அதற்கு ஹேதுவாக வாக்கு முதலிய இந்திரியங்களை யடக்கிக் கொண்டும் சந்தோடத்தோடு கூடிய மனத்தை யுடையவராகப் பூர்ண சந்திரன்போல அங்கேயே சுகரிருந்தார்.

(ச.) சுகர் அத்தியந்தம் சமத்துவமடைந்து சுவஸ்தராய் மௌனியாய்ச் சந்தோஷ மனதுடையராய்ச் சந்திரனைப்போலப் பரிபூர்ணராய் நிர்மலராய் இருந்தாரென்பதாயிற்று.

(ஸ்ரீ - வீர. அ - கை.) இவ்வண்ணம் அரசர் பெருமான் பரீக்ஷை செய்தபின் சத்கா ரித்தீரன் அழைத்து நமஸ்கரித்து வந்தகாரியம் வினவினரென்கின்றார்:—ஆங்கவன் என.

ஆங்கவ னிலைமை நோக்கி யடிபணிந் தரசன் போற்றித்
தாங்குல கத்தின் செய்கை தவிர்ந்துபே றனைத்தும் பெற்றோய்
ஈங்குறு பொருளே தென்ன வெங்ஙன மாயை தோன்றிற்
றோங்கிய தெங்ஙன் போவ துள்ளவா றுரைசெய் யென்றான். (15)

(ப - ரை.) ஆங்கு அவன் நிலைமைநோக்கி = அந்நிருபர் அவ்விடத்திலச்சுகரிருந்த நிலைமையைப் பார்த்து, அடிபணிந்து = திருவடியில் முறையே நமஸ்காரஞ்செய்து, அரசன்போற்றி = ஜனகர் பிரியவசனங்களைக்கூறி, தாங்குலகத்தின் செய்கை = ஒன்றற் கொன்றுதவித்தரிப்பதுபோன்ற உலககாரியமனைத்தையும், தவிர்ந்து = மறந்து, பேற னைத்தும் பெற்றோய் = சர்வப்பிரயோஜனங்களையும் அடைந்த பெரியோய், ஈங்குறு பொருளேதென்ன! = என்னை நாடியிவ்விடத்திற்கெழுந்தருளிய காரிய மென்னென்ன! எங்ஙனமாயை தோன்றிற்று = இச்சமுசார ஆடம்பரம் எவ்வண்ணம் எழுந்துவந்தது, ஓங்கியதெங்ஙன், போவது = விஸ்தரித்த இது எவ்வண்ணம்போம், உள்ளவாறுரைசெய் யென்றான் = உள்ளபடியே அனுக்கிரகிக்க வேண்டுமென்றனன்.

(ஸ்ரீ - வீர.) காரியமனைத்தையும் = உலகத்தின்கண்ணே சிரேயசின் பொருட்டுள்ள சர்வகாரியங்களையும் ஒரு சிறிதும் எஞ்சாமல், என்றும், மிச்சமே யில்லாமலெல்லாக் காரி யங்களையும், என்றும், பொருள்கொள்ளலாம். சமுசார ஆடம்பரம் = சமுசார விவகார வுற்சாகம். இவ்வாறு பரீக்ஷித்தலினுனே சுகரது தத்துவதரிசனம்வரை நிலையாயிருக்கக் கூடிய விசாரவைராக்கியாதி பரிபாக இயற்கையை யறிந்து அச்சுகரை அவ்வரசர் வர வழைத்து மகிழ்ச்சி பொங்கி யிருக்கப்பட்ட அவரைப்பார்த்து ஆச்சரியப்பட்டு நமஸ்கரித் தனர்; எஞ்சுதலில்லாமலுலகின்கண்ணே அவசியஞ்செய்யத்தக்கனவாய பிரசித்த காரி யங்களாகிய பரமபுருடார்த்த சாதனங்கள் முழுவதையும் செய்து கிருதகிருத்தியத்தன் மையை யடைந்தவரே! எல்லா ஆனந்தலேசங்களும் ஆன்மசுகத்திலடங்குதலின் அத

னடைவிஞனே எல்லாமஞ்ஞதங்களையுமடைந்தவரே ! நீர் விரும்பியது யாதென விரைவிற் சுகமாக விருக்கின்றீராவென வினவிய அச்சுகரை நோக்கிக்கூறினர்; அரசர் கூறியதைக்கேட்ட ஸ்ரீவியாசமைந்தர், ஹே குருவே! இச்சம்சார ஆடம்பரமானது எவ்வாறுண்டாயது? எவ்வாறுபசாந்தியையடையும்? என்பதை யுள்ளபடி யடியேனுக்கு விரைவிற் கூறுவீராகவென்றனர்.

(ச.) மாயை = சம்சார ஆடம்பரம், தோன்றி யோங்கியது. குருவே யெனக்கு உள்ள. (15)

(ஸ்ரீ - வீர- அ - கை.) ஸ்ரீ சுகர் வினவியதற்கு மன்னவர் விடைகூறுதலும் சுகர் அங்கீகரித்தலும் கூறப்பெறுகின்றது:— மெய்ம்முறையென.

மெய்ம்முறை முனிவன் கேட்ப வேந்தனும் வியாசன் சொன்ன
வம்முறை யுரைத்த லோடு மறிஞனும் விவேகத்தான்முன்
னிம்முறை யறிந்தே னீயு மெந்தையு மதுவே சொன்னீர்
மொய்ம்முறை நூல்களெல்லா மொழிபொரு ளொன்றே யென்றார். (16)

(ப - ரை.) மெய்ம்முறை = உண்மையான மார்க்கத்தைக் கேட்கவேண்டிய நெறியே, முனிவன்கேட்ப = மனனசீலராகிய சுகர்வினவ, வேந்தனும் = ஜனகராஜாவும், வியாசன் சொன்ன = ஸ்ரீவியாசராகிய மகாத்மா கூறிய அம்முறை யுரைத்தலோடும் = அந்தப் பிரகாரமே அனுக்கிரகித்த மாத்திரத்தில், அறிஞனும் = விவேகியாகிய சுகரும், விவேகத்தான் முன்னிம்முறை யறிந்தேன் = விவேகமாகிய விசாரத்தினாலே பூர்வமே சுயமாகவே இந்நெறி யித்தகையதெனத் தெரிந்துகொண்டேன், நீயும் எந்தையும் அதுவே சொன்னீர் = யான் முன்னர் வினவியபோது என்னருமைத்தந்தையும் இப்போது தாங்களும் யான் நிர்ணயித்தவண்ணமே உபதேசித்தீர்கள், மொய்ம்முறை நூல்களெல்லாம் = வேதங்களும் அவற்றைப் பிரமாணமாக வுடைத்தாய் நல்யுக்திகணிறையப்பெற்ற மற்றைய அத்தியாத்ம சாஸ்திரங்கள் யாவும், மொழிபொருள் ஒன்றே யென்றார் = பிரதிபாதிக்கப்பட்ட அர்த்தம் ஒன்றே யாமென்றார்.

(ஸ்ரீ - வீர.) மேலுரைத்தவண்ணம் வினவப்பட்ட ஜனகரால் அச்சுகருக்கு மகான் மாவாகிய அவர்தந்தையாற் பூர்வங் கூறப்பட்ட அதுவே கூறப்பட்டது. அதைக்கேட்ட சுகர் கூறுவதாவது:—சுயமாகவே என்னால் விவேகத்தாலிது பூர்வமுணரப்பெற்றது, இதனையே வினவப்பட்ட எனது பிதாவும் எனக்கு நன்றாக அநேக உதாகரண ஸஹகங்களானேவிரித்துரைத்தார்; உபதேசிப்பவருள்ளெல்லாம் மேன்மைமிக்கவரே! தங்களாலும் இதே பொருள் கூறப்பட்டது, இதுவே சர்வஉபநிடதத்துள்ள மகாவாக்கியார்த்தமெனச் சாஸ்திரங்களாகிய வாக்கியார்த்ததாற்பரியத்தை நிர்ணயிக்கும் நியாயங்களைக் காட்டுவதிற் றற்பரமாஞ் சூத்திரபாடியாதிகளிலுங் காணப்படுகின்றது.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சுகர் தாந்துணிந்து தந்தையருளிய பொருளைக் கூறித்துணிபு வேறு
விஞ்தல்:—தன்னுள்ளென.

தன்னுள்விகற் பித்தெழுந்த விகற்பம் போகிற் றனிர்த்திடு மாயையிற் பய
ஞேர் சற்றுமில்லை, யின்னவகைத் தோருண்மை யியம்பவேண்டு மியாவர்
மயக் கமுமாற்று மிறைவ வென்ன, மன்னனதற்குரை செய்வான் முனிவ நீயே
மதித்துணர்ந்தும் பிதாவுரைக்க மறுத்துங் கேட்டா, யங்கிலையே நிச்சயமிங்
ஙகண்டஞான வாகாய புருடனுள ணயலொன்றில்லை. (17)

(ப - ரை.) தன்னுள் விகற்பித்தெழுந்தமாயை = தாபத்திரய மயமாய இச்சம்சாரம் தனக்குள்ளே எழும் விகற்பத்தால் எழுந்ததாம், விகற்பம் போகிற் றவிர்ந்திடுமாயையில் = தன்விகற்ப நிரூபணத்தால் க்ஷீணித்தேகும் இச்சம்சாரத்தில், பயனேர் சற்றுமில்லை = ஒருசிறிதும் பிரயோஜனமில்லை சாரமற்றதாம், இன்னவகைத் தோருண்மை = இத்தகைய ஐயப்பாடுற்ற விடயத்தில் ஒப்பற்ற சத்தியத்தை, இயம்ப வேண்டும் = சஞ்சலம் நீங்கும்படி இதுதான் துணிபென அருளல்வேண்டும், யாவர் மயக்கமும் மாற்றும் இறைவ என்ன = இலௌகிகா லௌகிகப் பிரஜைகளின் லௌகிக வைதிக மயக்கங்களை மாற்றியருளும் அரசரே உம்மால்யான் இனைப்பாறவேண்டு மென்று சுகர்கூற, மன்னன் அதற்குரை செய்வான் = அரசர்பெருமான் அவ்விஞவிற்கு விடைகூறுவதாவது, முனிவ ! நீயே = மனனசீலராகிய நீரே, மதித்துணர்ந்தும் = நிச்சயித்துத் தெரிந்து கொண்டும், பிதாவுரைக்க = உமது தந்தையாகிய ஸ்ரீவியாசபகவான் உபதேசிக்க, மறுத்துங்கேட்டாய் = மீண்டும் சிரவணித்தாய், அந்நிலையே நிச்சயம் = அந்தமெய்யான ஸ்திதியே நிண்ணயமானதென்றுணர்தி, இங்கு அகண்டஞான ஆகாயபுருடனுளன் அயலொன்றில்லை = இவ்விடத்தில் கண்டிதப்படாத சிதாகாச புருடனே யிருக்கின்றனன் அன்றி மற்றொரு பொருளும் இல்லவே யில்லை. (எ-று.) (17)

(ஸ்ரீ - வீ.ர.) அகண்டம் = அவ்யுச்சின்னம் = அவிநாசி கூடஸ்த நித்திய சிதாத்மாவானது சுயம் அத்விதீயமாயினும் சத்விதீயமாகத் தன்சங்கற்பவயத்தாற் பரிணமித்தமாம். அங்ஙனமே ஸ்ரீசுரேசர ஆசிரியரானும் அருளப்பட்டுளதாம்:—"இக்கிரியாகாரக பலான்மக ஆபாசம் அற்பமும் பரமார்த்தவத்துவைத் தீண்டவேமாட்டாதாம், அதற்கு மோகமாத்திரவுபாதானத்தன்மை யுண்மையின், நாமமில் லபிமான நயத்தினுனேம மெய்த்தனேயே மாற்றுமிங்கிது, தாமமில் லருமைப்பொருடம்மினும், சோமசன்மனின் றந்தையைச் சொல்லலாம்"(இதன்பொருள்) மூரணுறுதருமங்கள் ஆன்மாவிற் சம்பவிக்குமாயின் அதற்கு அசங்கத்தன்மை வியாகாதமாம் எனக்கடாவ விடையளிக்கப்படுகின்றது:இக்கிரியையென மூரணுறு தருமங்கள் சுகதுக்காதியாம். அநிர்வசநீய அஜ்ஞான பரிகற்பித துவைதப்பிரபஞ்ச சம்பந்தத்தானே ஆன்மாவினது அசங்கத்தன்மை அழிக்கப்படாதாம், உண்மையாக அதனைத்தீண்டாமையின்; அவித்தையாற் பரிகற்பித நீலப்பண்பாற் ககனம் கருப்பாவதில்லையாம், அதனனும் அசங்கத்தன்மையழிவு பெறுதாம் என்பதாயிற்று. நாமமில் = அசத்தியமாய துவைதப் பிரபஞ்சத்தின்கண்ணும் பொய்யபி நிவேசத்தானே யானின்பி துன்பியெனத் தன்னைத்தானே இவ்வுலகம் வஞ்சிக்கின்றதென்பதாம். அதன் கட்டிருட்டாந்தம் சோமனன்பது. ஒரு அதிதரித்திர பேராசைப் பிச்சைக்காரப் பிரமசாரி ஒருபஞ்சகாலத்தில் சத்துமாவைப் பிடையாகட்டியபடி தூரதேசம் புறப்பட்டு இலந்தைதருவின் சாயையிற் சயனித்துக்கொண்டு இவ்வண்ணம் மனோராச்சியஞ் செய்வானனன்:—சத்துமூட்டிக்கட்டைவிட்டு அதனுல் அநேக ஆக்கள் வாங்கிவளர்ப்பேன், அவையும் ஐந்தாறு வருடங்களில் அநேகங் கன்றுகளீயினும், அதனுல் யதேஷ்டமாய்ச் சேகரிப்பேன், அதனுல் தனதானியாதி சகலமும் உண்டாம், அதனுல் தாசிதாசாதிய கூட்டம் சிருகம் சம்பாதிப்பேன், இத்தகையபெருஞ் சம்பத்தைநோக்கி மிகமிகவும் யோக்கியனுகிய எவனேனும் ஒருபிரபு தனது கன்னியை என்பொருட்டுக் கன்னிகாதானஞ்செய்துவைப்பன், பின்னர்வீதிமுறையே இல்லறவாழ்க்கையை யினிதனுபவிப்பேன், அதனுல்வங்கிசம் விளக்குமிங்கித்புத்திரனீயீன்று சோமசன்மனென நாமகரணம் புரிந்து பின்னர், குடும்ப சௌக்கிய அனுபவசமயத்தில் அழுதுகொண்டு அன்னையைப் பின்றொடரும் சோமசன்மனைத்தன் காரியபரவசத்தையடைந்து அவனையாதாதரவுசெய்து

சுகர் கதை

செல்லும் என்பாரியைப் பார்த்துப் புத்திரமித்தலோபத்தால் அடிப்பேன்எனத் தன் பாரியையடித்தான், அதனைப் பயிக்கபாத்திரம் கீரிக்கத்தா விருபிளவாயது, சத்திரிகளும் வாயுவேகத்தால் அடித்துக்கொண்டுபோகப்பட்டன ; பின்னர் அந்தோ ? வெந்துயரம் நொந்துகெட்டேன் மந்தபாக்கியன்யான் சத்துமாக்களும் எனக்குவாய்க்கெட்டாமற் போய்விட்டனவே யினியென்ன செய்வேன் என விழித்துக்கொண்டு தந்தை புலம்பினன்; இதுதான் நிருட்டாந்தமாகக் கூறியதின் கதையென்றுணர்க. இதுதன்னிடத்திலிருக்கும் அஞ்ஞானத்தினுலுபகிதமாய தன்பால் நானுவகையைக் கற்பிக்கும் விகற்பமாகிய அநந்தகாம கருமவாசனைகளாகிய விரைகளானே விருத்தியடைந்து பிரளயசுழற்றிகளிற் சமஷ்டி வியஷ்டி சமஸ்கார பரிசேடமாக அவ்வியா கிருதத்தில் லீனமாகியமனுஜீவபாவவுபாதி வடிவமாம் அந்தக் காரணத்தினின்றும் பிரளய முறைக்குமாறிய முறையாக முதலில் அபஞ்சீகிருத ஆகாசாதி உற்பத்திக் கிரமமாகச் சமஷ்டி ஹிரணிய கருப்ப வடிவமாகவும் அதன்பின் பஞ்சீகரண விராட்டு வடிவமாகவும், அதன்பின் அன்னுதிக் கிரமமாக வியஷ்டி தூலதேக வடிவமாகவும், அதனுள்ளே துன்புறுத்தும் வியஷ்டிலிங்க சரீரவடிவமாகவும் ஆவிர்ப்பவித்து மகாஅநர்த்தரூபமாக விளங்கும், அதுவும் கருமஉபாசனைச் சமுச்சயமாத்திர அனுஷ்டானத்தால் அத்தியாத்மிக வியஷ்டிபாவ பரிச்சேதவாசனை மாத்திரம் ஒழியவே சமஷ்டிஹிரணியகருப்பபாவமாயெஞ்சாகிற்கும், சிரவணுதி பரிபாகத்தாலுண்டாய தத்துவசாக்ஷாத்காரத்தானே வாசனையோடுகூடிய காரியகாரண அவித்தை நாசமாங்காலோ மூலங்கெடலால் அத்தியந்தம் அந்தக்காரணங்கெடலால் அடியோடும் கெடுகின்றது; ஆகையாலிகழத்தக்க சம்சாரம் சாரமற்றதென்பதென்றுணிபாம். சுவப்பிரகாச ஆன்மாவின்கண்ணே நிலைபடாமையினும் பொய்யானமையானும் முன்னரே தடுக்கப்பட்டதன்மையை யுடையதுதான், ஆதலினுனே சாரமற்றதாம், அத்தகையது மறுபடியும் சாக்ஷாத்காரப் பிரளயாக்கினி யெங்கும் வியாபிக்கும்போது எவ்வாறிருக்கும்; மேலேதடுக்கப்பட்ட திருணமானது உள்ளே சாரமானது சேடித்தலின் மீண்டுமீண்டும் முளைப்பதற்கு முடியும் இச்சம்சாரமோ சாரமில்லாமலே தடுக்கப் படுவதாகத்தத்துவவித்துக்களின் அனுபவ விருத்தலின் எங்ஙனுண்டாகும் ? இதுவென்னுன் முன்னரே சுயமாகவே விசாரத்தால் அறியப்பெற்றது, இதுவேயுண்மையாவென் ? ஆயினதைச் சந்தேகமில்லாம விருதயத்தி லுறைக்குமாறு ஹே மகாபாகுவே ! எனக்குக் கூறுவீராக ; நானுவிடயங்களே இதுவரதத்துவம் அல்லது வேறுவென அவிசுவாசத்தால் உழலாநின்ற வுளத்தால் உழலாநின்ற யான்உமது வசன விசுவாசத்தினுலே ஆண்டே நிலைபெற் றிளைப்பாறுவேன், எனக் கூறியதைக் கேட்ட ஜனகர் கூறுவதாவது:—ஹே மகாமுனிவரே ! நீருணர்ந்ததைப் பார்க்கினும் அதி மேன்மையானது யாதென்றும் வேறு நிச்சயிக்கத் தக்கதாயில்லை; சுயமாகவே நீருணர்ந்தீர் குருவினுலும் மீண்டுங்கேட்டுக் கொண்டீர் அதுவே திடமெனத் துணிவீராக. அளவுகடந்த அறிவுவடிவ ஒரு புருடனே யிங்குள்ளான் ; அயலொன்றுமில்லை.

(ச.) அந்நிலையே நிச்சயம், என்றமையால் அதற்கு மேலான நிச்சயம் மற்றொன்றும் இன்றென்பதாயிற்று ; முன் ஸ்ரீ வியாசர் கூறிய வுத்தரத்தைப்பின் ஜனகருக்குத் தன்னுள் விகற்பித்தெழுந்த, என்னும் அடியாற் சுகர் சுவயமாகவே தெளிவுறக் கூறுதலால் அதன் சொரூபம் இவ்விடத்துச் சனகரும் அவ்விடத்து ஸ்ரீ வியாசரும் தெரிவித்திலர் என்றுணர்க. சம்சாரம் மித்தையாயின் றன்விகற்பத் துதித்தலும் தன் விகற்ப நாசத்திறத்தலும் கூடும் அதை மித்தையென்ப தெப்பெடியெனில், கூறுவார், இங்ஙகண்ட ஞானவாகாய புருடனுளன் அயலொன் றில்லையென்றார். தேசகால வஸ்துக்க

ளால் அபரிச்சின்னமான ஞான சொரூபனுகிய பரமான்மா ஒருவனே மிருக்கின்றான், இவ்வாகாசாதிப் பிரபஞ்சம் இல்லவேயில்லை, " ஒன்றே யத்துவிதீயமான பிரமம் இவ் விடத்து நாநாத்துவம் எவ்வளவு மின்று என்னுஞ் சுருதியால் என்றுணர்க.

(ஸ்ரீ - வீர.-அ - கை.) மேலும் ஜனக மன்னவரே இதோபதேசமாகத் தொடர்ந்து கூறுகின்றார்:—அவ்வறிவென.

அவ்வறிவு சங்கற்பத் தாற் கட்டுண்ணு மதுவிடில்வீ டுறுமந்தவறிவு தன் னைச், செவ்விதினீ யறிந்தனையாற் போகத் திச்சை செகக்காட்சி யனைத்தினையுந் தீர்தியாஞ, யெவ்வமற நிறைமனத்தா லடையற் பால யாவுமடைந் தாய்காட் சிக் கெட்டா தொன்றிற், கவ்வையற வடைகின்றாய் முத்தனெனச் கருத்திலுறு மயக்கமெனுங் கவலை தீர்வாய். (18)

(ப - ரை.) அவ்வறிவு = அந்தச் சித்சொரூபமானது, சங்கற்பத்தாற் கட்டுண் ணும் = தனது சங்கற்ப வசத்தாற் பந்தப்படும், அதுவிடில் வீடுறும் = அச்சங்கற் பத்தை விட்டுவிட்டதேயானால் மோக்ஷமுறும், அந்த அறிவு தன்னை = அறியத்தக்க அந்தப் பரம்பொருளை; செவ்விதின்நீ யறிந்தனையால் = மிகத் தெளிவாகச் சாக்ஷாத் கரித்திருக்கின்றீர், போகத்திச்சை செகக்காட்சி யனைத்தினையுந் தீர்தியாஞய் = போ கங்களினின்றும் இச்சைதீர்ந்துள்ளீர் உலகத்திருஷ்டி மெல்லா வற்றினின்றும் காட்டம் தீர்ந்துள்ளீர், எவ்வமற = குற்றங்கள் யாவுமற்ற, நிறைமனத்தால் = பரிபூரணமனத்தி னாலே, அடையற் பாலயாவு மடைந்தாய் = அடையவேண்டிய அகிலத்தையும் அடைந் துள்ளீர், காட்சிக் கெட்டா தொன்றில் = அதிருஷ்டியமான வஸ்துவின்கண்ணே, கவ்வை யற அடைகின்றாய் = களங்கமில்லாமல் உபஸ்திதி பெற்றிருக்கின்றீர், முத்தனெனச் = கேவலம் மோக்ஷ சொரூபமாகவே விளங்குகின்றீர், கருத்திலுறு மயக்கமெனுங் கவலை தீர்வாய்=சித்தத்தின் கண்ணேயுற்ற பிராந்தியாகிய கவலையைவிட்டொழிப்பீராக-எ-று.

(ஸ்ரீ - வீர.) தற்சங்கற்பத்தாலே தளையுறும், நிர்ச்சங்கற்பத்தாலே நீங்கும். என்ப தாம். தனது சங்கற்பத்தினாலே கட்டுறுகின்றான் விட்டானேல் சங்கற்பத்தை விடுபடு கின்றான்; அதனால் வெட்டவெளியாக உம்மால் அறியவேண்டியது அறியப்பட்டது, மகான்மாவாகிய உமக்கு முன்னர் எல்லாப் போகங்களினின்றும், இப்போது எல்லாத் திருஷ்டியங்களினின்றும் அதிவிரக்தியான துண்டாகி யிருக்கின்றது. ஹே பாலகாயினும் விடயத்தியாக சூராதலின் மகாவீரரே! உமதுமதியானது கீண்ட ரோகங்களாகிய போகங்களி னின்றும் விரக்தியை யடைந்துளது, நீர்வேறென்ன கேட்கவேண்டு மென் றிச்சிக்கின்றீர்? உமக்குப் பூர்ணத்தன்மை யுண்டானதே போலச் சர்வஞானங்களின் மகாநிதியாகியும் எப்போதும் அபாரமான தவத்தையே செய்துகொண்டிருக்கும் உம் முடைய பிதாவிற்கும் பூர்ணத் தன்மையானது உண்டாகவில்லை. (இதுவும் இதுபோன் றனவும், சுகருக்குத் திடப்பொருட்டுக் கூறியவாம்) யான் வியாசரினும் அதிகனே யாவேன், அவருடைய சீடராயும் மைந்தராயும் இருக்கும் நீர் போகேச்சைகள் யாவற் றையும் அடியோடு விட்டிருத்தலின் என்னினும் அதிகமேயாவீர்; பூர்ண சித்தத்தை யுடைய உம்மால் அடையத்தக்க யாவுமே யடையப் பெற்றனவாம், திருஷ்டதரிசனமே சமுசாரத்திற் றள்ளுவதாதலின், பாக்கியதிருஷ்டி விடயத்தில் வீழவேண்டாம், ஹே பிரஹ்மசொரூபரே! முக்தராய்விட்டீர், மயக்கத்தை விட்டுத் தொலைத்துவிடும். "அற்ப மதேனும் வேற்றுமை யாற்றிடின், அற்பனக்காலேயச்சமதடைவன்" என்னுஞ்சுருதி யினாலே அறியத்தக்க தயலொன் றுளதென்னும் மயக்கத்தையும், திருஷ்டி தரிசன மயக்கத்தையும் விட்டொழித்து விடும்.

(ச.) ஆதலால் = அவ்வறிவு சங்கற்பத்தாற் கட்டுண்ணும் அதுவிடில் வீடுறும் ஆதலால், ஆன்மாவிற் கன்னியமான சம்சாரம் மித்தையாகலின் விகற்பமாத்திர கற்பித மும், அது நிவிர்த்திக்கின் பர நிவிர்த்தியும் கூடுமென்பது கருத்து. இவ்வியாவு மும் மால் உணரப்பெற்றதே யாமென்பார், செவ்விதினீ யென்றார். ஆல் = ஆதலால், கவலை = பிராந்தி. யாவற்றினின்றும் வைராக்கிய முண்டாயிருக் கின்றபடியினாலே உமக்கொரு குறையுமின்றும். (18)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வாறு மகாராஜாவாலுபதேசிக்கப்பட்டபின் அச்சுக முனிவர் என்ன செய்தாரென்பதை யறியும் அவாநிகழ அறைகின்றார்:—சனகனென.

சனகனெனு மன்னவர்கோ னிவ்வாறோதத் தன்னிலையாம் பரம்பொரு ளிற் ரளர்ச்சியாறி, யனகசுகன் பயநீங்கிச் சோகமாறிய யர்வகன்று செய லடங்கி யையந்தீர்ந்து, கனகவரையேறி நிருவிகற்பமான கலங்காத சமாதியிற் சிற்ககனத்துற்றான், தினகரனைச் செறிவருட மீரைஞ் ஞாற்றிற்றிரியொடு நெய்ம்மாண்டவிந்ததீபம்போன்றே. (19)

(ப - ரை.) ஜனகனெனும் மன்னவர்கோன் = மகான்மாவாகிய ஜனகமகாராஜா வானவர், இவ்வாறோத = இத்தவண்ணம் உபதேசித்தபின்னர், தன்னிலையாம் பரம் பொருளில் = தன்வடிவமாகிய பரமவஸ்துவின்கண்ணே, தளர்ச்சியாறி = விசிராந்தியை யடைந்து, அனகசுகன்பயநீங்கி = பாவமற்ற அச்சுகமுனிவர் அச்சமகன்று; சோகமாறி = சோகத்தைவிட்டு, அயர்வகன்று = ஆயாசமகன்று, செயலடங்கி = பரமவுபரதியுற்று, ஐயந்தீர்ந்து = சின்னசமுசயமுடையவராய், கனகவரையேறி = மேருவின்சிகரஞ்சென்று, நிருவிகற்பமான கலங்காதசமாதியில், = யாதொருவசைவுமில்லாத விகற்பமற்ற சமாதி யின்கண்ணே யழுந்தியிருந்து, தினகரனைச் செறிவருடம் = சூரியசம்பந்தமாய்வரும் வருடங்கள், ஈரைஞ்ஞூற்றில் = ஆயிரங்கழிந்தபின்னர், திரியொடு நெய்மாண்டு அவிந்த தீபம்போன்று = இத்தனங்களாகிய திரியும் எண்ணெய்யும் தீர்ந்து அணைந்தவிளக்கே போல, சிற்ககனத்துற்றான் = சிதாகாசமாத்திரமாக எஞ்சினர்.

(ஸ்ரீ - வீர.) மகாராஜர் வுபதேசித்தபின் ஞானஅடைவினாலே பிரதிபிம்பமெனப் பட்ட தன்பால் அதிஷ்டானத்தன்மையைக்கண்டு சொஸ்தமாய்ச் சுகமாயினரென்பதாம். ஜனகராகிய மகாத்மாவால் அம்முற்கூறிய அளவுகடந்த சிதாத்மஸகரூபரீர் என்பதாக உப தேசிக்கப்பட்ட அச்சுகர் திருநியமவினமற்ற நிர்மலமான பரமவஸ்துவின்கண்ணே சும்மா விருந்தனர். சோகம்பயம் ஆயாசங்கண் முழுவதுமற்றுச் சேட்டையற்றுச் சம்சயமற் றுச் சாத்விகதேவதைகள் வாசஞ்செய்தலான் விசேஷபம் யாதொன்றுமின்றி யிருத்த லின் அஸ்திதமாய்ச் சமாதிக்குகூலமான மேருவின் சிகரத்தைநோக்கி நிருவிகற்ப சமா தியின்பொருட்டுச் சென்று, ஆண்டு நிருவிகற்பசமாதியிற் பதினாயிரவருடமிருந்து தைலந்தீர்ந்த தீபமேபோல ஆன்மாவின்கண்ணே விதேகமுத்தியையடைந்தார்.

(ஸ்ரீ.) சனகமகாராசாவானவர், சுகமுனிவரே! நீர், அதிபாக்கியமும் அவ்வாறே அபா க்கியமும் அந்தரத்திற்கும் மிகவந்தரமுமான வஸ்துவைப் புத்தியாற் பார்த்தும் பாராதவர் சாக்ஷி பரிபூரணர் கேவலர் என்றிவ்வாறு சுகப்பிரஹ்மத்திற் குபதேசித்தருள, கனகவ ரையேறி = மேருவின் சிகரத்திலிருந்து, சிற்ககனத்துற்றான் = சிதாகாச சொரூபமாகிய ஆன்மாவிலக்கியமானார். வருட நீரைஞ்ஞூற்றிற் சிற்ககனத்துற்றரென்பதனால் ஆயிர வருடம் திருசியத்திலிருந்தாரெனக் குறிப்பித்தாம். (19)

(ஸ்ரீ - வீர - அ - கை) சுகரடைந்த விதேகமுக்தியை வருணித்துக்கொண்டு ஸ்ரீ இராகவரைச் சுகர்க்கொப்பாக்கி ஸ்ரீவிசுவாமித்திரமகரிஷி கூறுகின்றார்:—சிந்தனேயென.

சிந்தனேயாங் களங்கமறச் சுத்த ஞகித் திரைகடலிற் செறிந்தொன்றாந் திவலே போல, வந்துறுவா தனேபோய்த்தற் பதத்தொன்றுனன் மாயாமோகந் தீர்ந்து வருத்தந் தீர்ந்தான், அந்த நெறி யுனக்குமா றறிவ தெல்லா மறிந்த மனத்திற் குரியவடைவே தென்னிற், சந்ததமு மகிழ்ச்சி செறி போகமெல்லாந் தனதென்னுஞ் சுதந்தரத்தைத் தவிர்ந்து நிற்றல். (20)

(ப - ரை) சிந்தனேயாம் களங்கமறச் சுத்தஞகி = எண்ணங்களாகிய மாசுகளெல்லாந்தீர்ந்து தூயவுருவாகி, திரைகடலிற் செறிந்தொன்றாந்திவலேபோல = அலைகடலதனிற் றுளியானது சேர்ந்து ஐக்கியபாவத்தை யடைதலேபோல, வந்துறுவாதனேபோய் = வந்துசேர்ந்திருந்த வாதனைகணீங்கி, தற்பதத்தொன்றுனன் = பவித்திரமான வமலபரமான்மாவில் ஐக்கியத்தை யடைந்தான், மாயாமோகந்தீர்ந்து வருத்தந்தீர்ந்தான் = மாயையாலுண்டாகியிருந்த மோகம்போய்ச் சோகங்களெல்லாம் விட்டொழித்தான், அந்த நெறியுனக்குமாம் = அம்மார்க்கமட்டுமே உனக்கும் ஆம் அதிகம் வேண்டியதில்லை, அறிவதெல்லாமறிந்த மனத்திற்கு = தெரியவேண்டியதைத் தெரிந்த சித்தத்திற்கு, உரிய அடைவேதென்னில் = பொருத்தமான இலக்கணம் யாதென்றால், சந்ததமும் மகிழ்ச்சி செறிபோகமெல்லாம் = எப்போழ்தும் சந்தோடத்தைப் பயக்கும்போகங்கள் யாவும், தன்தென்னும் = தன்னுடையனவென்பதானசுதந்தரத்தைத் தவிர்ந்து நிற்றல் = சுவதந்திரமதியைத் தியாகஞ்செய்து சொஸ்தமாகி யிருத்தலேயாம். (எ-று.) (20)

(ஸ்ரீ - வீர.) சிந்தனே = சங்கற்பம், அதுவேகளங்கம் = அபவாதம். சிந்தனேயாங் களங்கமற வென்றமையான் தூல அஞ்ஞானநீக்கம் கூறப்பட்டது, சுத்தஞகியென்றமையாலே மூல அஞ்ஞானநீக்கம் கூறப்பட்டது என்பதாம். பிரஹ்மமும் அநாதியாகத்துகிலமாகிய இருமலரகிதமென்பார் அமலபாவனே ஆன்மாவாகிய தற்பதத்தென்றார். எல்லாப்போகக் கூட்டங்களேயும் மீண்டும் ஆசைப்படாமல் விடுவதே அறியவேண்டியதை யறிந்தமனதிற்கு இலக்கணமென்பது துணிபாம். திருசியவுன்முகத்தன்மையும், அதற்கு மூலமாகிய அஞ்ஞானமும் அகன்றமையின் சுத்தஞகி, அதனுனே சஞ்சித ஆகாமியங்கள் காணப்பெறுமையானும், புண்ணியபாவங்கள் பற்றுமலும் அற்றுப்போய்விட்டமையானும் அமலான்மாவும், பிராரப்தகருமத் தேய்ந்துவிட்டமையின், அசுத்தத்தேகாதி நீங்கிவிட்டமையின், புனிதபதமும் சுயமாகவே நிருமலமும் ஆகிய பரமான்ம வஸ்துவின்கண்ணே நீலமேக சம்பந்தம் விட்டுப்பிரிந்து கடலில்விழுந்து ஒன்றுகும் நீர்த்துளியேபோல மகாத்மாவாகிய சுகர் சர்வவாசனேயும் ஒழிந்தவராகிப் பேதஞ்செய்யு முபாதியற்றமையின் உண்மையாய அகண்டஜக்கியத்தை யடைந்தனர்; பேதத்தையுண்டாக்கும் அஞ்ஞானமானது அடியோடும் அழிந்துபோனபின்பு ஆன்மாவிற்கும் பிரஹ்மத்திற்குமில்லாத பேதத்தைச் செய்விப்பவன் யாவனென விஷ்ணுபுராணமுங் கூறுகின்றது. சுகர்கதையைப் பிரகிருதத்திற் பொருத்திக் கொண்டு ஸ்ரீ இராமருக் குபதேசிக்கும் பொருட்டு ஸ்ரீ வசிஷ்டரை மூயல்விக்குமாறு தொடங்கிய ஸ்ரீ விசுவாமித்திரர் கூறுகின்றார், அந்தநெறியென. அந்த வியாசமைந்தனுக்கு மலமாத்திர நீக்கும் எவ்வளவு வகையாய யூகத்தோடு கூடிய வுபதேசம் பொருந்தியதோ அவ்வளவே யுனக்கும் வேண்டியதாக இருக்கின்றது. ஹே முனீசுவர்களே! இந்த நல்லமதிமானுகிய இராமனுக்குப் போகங்களியாவும் சோகங்களேப்போல ருசிக்கவில்லே யாதலின் இவனுல் அறியவேண்டியது முழுவதும் அறியப்

பட்டதே யாய்விட்டது. போகக்கூட்டங்கள் யாவும் சுவைக்காமற் கைத்ததே அறிய வேண்டியதை யெல்லாமறிந்த மனத்திற்குத் திடமான இலக்கணமாகும்.

(ச.) வாசனேபோய் = வாசனூயமாய், தற்பதத்தூ = பரிசுத்தமான தற்சொரூபத்தில், மாயாமோகம் = கெடாத சந்தேகம். (மலம் = சம்சயரூப களங்கம்) அந்த நெறி = அவ்வியாச புத்திரர்க் குரித்தான சந்தேக நிவிர்த்தி மாத்திரமே இராகவ! உனக்கும், ஆம் = உரித்தாம், உரிய அடைவு = உரித்தான இலக்கணம், தவிர்ந்து நிற்றல் = மீட்டனுகாது துடைத்திருத்தலாம். (20)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வாசனேயே பந்தகாரண மெனவும் அது தீர்தலே மோகூ காரணமெனவும் அஃதின்றியவரே ஜீவன் முக்தரெனவும் கூறுகின்ரூர்:—போகமென.

போகமுறு பாவனேயாற் பொருளல்லாத பொருளிலெழு பந்தநிலை பொருந்த வன்பாஞ், சோகமுறு பாவனேதான் சாந்தமாகிற் றுயர்பந்த மிகத்தேய்ந்து துலேந்து போகு, மிராகவனே வாதனேயி னேர்மைவீடா மிகப்பொருளின் வாதனேயி னிறுகல்பந்தஞ், சேகறவென் றவர்க்கேது வின்றிப் போகத்திரள் வெறுப்பா மேலவரே சீவன்முத்தர். (21)

(ப - ரை.) போகமுறு பாவனேயால் = போக பாவனேயினுலே, பொருளல்லாத பொருளிலெழு = அவஸ்து ஜன்னிய, பந்தநிலை = பந்தமானது, பொருந்தவன்பாம் = மிகவுந் திடமுடையதாம்; சோகமுறு பாவனேதான் = துயர்செய்யும் பாவனேயானது, சாந்தமாகில் = உபசாந்தியுற்ரூல், துயர் பந்தம் மிகத்தேய்ந்து துலேந்துபோகும் = துக்கமய சமுசாரம் அத்தியந்தந் தேய்ந்துபோய் அடியோடு அழிந்துபோம்; இராகவனே! = ஹே இரகுவம்ச கேதுவே! வாதனேயின் நேர்மைவீடாம் = வாசனே சிறுகலே மோகூமாம், இகப்பொருளின் வாதனேயி னிறுகல்பந்தம் = காணப்பட்ட பதார்த்தங்களின் வாசனேயின் றிடத்தகைமையே பந்தமெனப்படும், எதுவின்றி = கீர்த்தி முதலிய காரணங்களே மூன்னிட்டு வராமல், சேகறவென்றவர்க்கு = அடியோடு நீங்கும்படிச் சயித்தவர்க்கு, போகத்திரள் வெறுப்பாம் = போகக் கூட்டங்களில் இயல்பாகவே துவேடந்தோற்றும், மேலவரே = அத்தகைய பெரியோரே, சீவன் முத்தர் = ஜீவிக்குங் காலத்திலேயே முத்தரெனப் படுவர். (21)

(ஸ்ரீ - வீர.) கீர்த்திலாபாதி நிமித்தத்தானே எவர்க்குப் போகங்கள் பிரியமாகமாட்டாவோ அவர் ஜீவன்முக்தர் ஆகார் என்பார், எதுவின்றி யென்ரூர். கீர்த்தியாதியின் பொருட்டன்றியே வைராக்கியம் வேண்டற் பாலதாம். போகவாசனேயினுலே பொய்ப் பொருள்களா லாயபந்தம் மிகத்திட மாகின்றது; அவ்வாசனே தேயத்தேயப் பந்தமும் உலகின் கண்ணே மிகவுந்தேய்ந்து விடுகின்றது. ஹே இரகுவீர! வாசனூயமே மோகூமென மகான்களாற் கூறப்படும், பதார்த்த வாசனேகளின் றிடத்தன்மையே பந்தமெனப் பகரப்படும், எத்துணே விடயவாசனே யழிகின்றதோ அத்துணே விடுபடுகின்ரூன், எல்லாவாற்ரூலும் அழியினே எல்லாவற்றி னின்றும் முக்தியை யடைகின்ரூன். அற்பசிரவணுதி யாயாசத்தினுலும் அபரோகூ திருக்கு சொரூபம் திருகிய விவேகமாத்திரத்தினுலும் நன்கு பரிசயித்தல் கூடுமாதலினுலும், தனதாத்ம தத்துவத்தின் தொடக்க ஞானமுண்டாதல் கூடும், விடய வைராக்கியமோ மிகக்கிலேசமுற்றே யுண்டாகின்றது. ஆனலந்த ஞானமே போதுமே வைராக்கியத்தினுல் யாதபயனெனின்? இராகாதிகளின் றடையில்லாமல் யாவன் காண்கின்றனனே அவனே தத்துவஞான

ஜன்னிய அவித்தையழிவின் பலத்தை யுடையவனும் அறியவேண்டியதை யறிந்தவனும் பண்டிதனும் ஆவன்: தொடக்கஞானியோ மூர்க்கத்தன்மையை யகற்றுமையின் அத்த கையனுகான். அறைந்த பண்டிதனுகிய மகாத்மாவின் பொருட்டோ போகங்கள் பலாத் காரத்தானும் ருசியையுண்டாக்க முடிவனவாகா; கீர்த்தி பூஜை இலாபம் முதலிய யாதொருபல உத்தேசமு மில்லாமலே, கேவலம் யாவனுக்குப் புவியிலுள்ள போகங்க ளெல்லாம் அருசியாகத் தோன்று கின்றனவோ அவனே ஜீவன்முக்த னெனப்படுவன், இடாம்பீக போகத்தி யாகத்திலுனே இஷ்டசித்தி யெங்ஙனுண்டாம் ? வைராக்கிய ஞானவுபரதிகள் மிக விருத்தியாயின் பரஸ்பர சகாயத் தன்மையிலு னுண்டாம் ஞான பரிபாக அதிசயத்தானே மூலமானது கெடுதலின் அத்தியக்த ஆசைநாச முண்டாகும். எத்துணை எத்துணை அறிவு அறியப்பட வில்லையோ அத்துணை யத்துணை ஜந்துக்கட்கு விடயங்களில் வைராக்கியம் மருத்தலத்திற் கொடிபோல உண்டாவதில்லை. "இரதமு மிவற்கிங் கிறைகண்டேகும் " எனக்கீதையு மிதையே கூறுகின்றது. வாசனை

(ச.) பாவனை = வாசனை. பொருளல்லாத பொருளிலெழும் = அஞ்ஞானத்திற் சனிக்கும். பாவனைதான் = போகவாசனைகள். எதுவின்றி = தவவிரதாதி நியமங்க ளைத்தவிர எவற்குப் போகங்கள் ருசிக்கவில்லையோ அவன் ஜீவன்முக்தன் எனப்படு வன் என்பதாம். (21)

(ஸ்ரீ - வீர - அ - கை) இந்த ரம்மியமான போகவிடயங்க ளியாவும் எதனுல் இரகு நந்தனை இரஞ்சிக்கச் செய்யவில்லையோ அதனுனே யறியவேண்டியது முழு வது மறிந்தவனுகவே தெரியவேண்டும் என ஸ்ரீ இராமர் தத்துவ முணர்ந்தவர் ஆயின் உபதேசிக்க முயலல் யாதுகாரணம் பற்றியோ வெனின் கூறுகின்றூர்:—இராமனை.

இராமன் மனத் துணர்பொருளே பொருள்வே றில்லை யெனவுயர்ந்தோர் வாக்கினு லியம்பக் கேட்டு, மாமனத்தி னிளைப்பாறி யைய நீங்கு மகத்தான விவனுக்கு மதித்துச் சொல்வா, னேமமுறு காலமூன் றறிந்தோனுகி யிரவிகுல குருவாகி யெல்லா நோக்கி, நாமவுரு வனைத்துக்குஞ் சான்றாய் நின்ற நல் வசிட்ட னெனச் சபையி னவின்ற பின்னர். (22)

(ப - ரை.) இராமன் மனத்துணர் பொருளே பொருள் = இராகவன் மனத்தில் உணர்ந்தபொருளே பொருளாகும், வேறில்லை = அயலில்லை, என = என்பதாக, உயர்ந் தோர் வாக்கினுல் = சத்துக்களின் திருவாக்கினுலே, இயம்பக்கேட்டு = கூறச்சிரவணித்து, மாமனத்தினிளைப்பாறி யையநீங்கும் = மகாமனத்தின் விசிராந்தி யடைந்து சமுசய நீங்கிச் சுகரூபமாவன்; மகத்தான இவனுக்கு = பேரதிகாரியாகிய இவன்மதியை, மதித்து = அனுசரித்து, சொல்வான் = உபதேசிக்கக்கூடியவர் யாரென்றால், ஏமமுறு காலமூன்றறிந்தோனுகி = திரிகாலங்களிலுமுள்ள அழகிய யாவற்றையும் நன்கறிந்தவ ராகி, இரவிகுலகுருவாகி = சூரியவங்கிச அரசர்க்கெல்லாம் குலகுருவாய், எல்லாம் நோக்கி = சர்வஜ்ஞராய், நாமவுருவனைத்துக்குஞ் சான்றாய் = சர்வநாம ரூபங்கட்குஞ் சாக்ஷியாய், நின்ற = இலங்காநின்ற, நல்வசிட்டன் = பிரஹ்மபுத்திரராகிய மைத்திரி யாதிநிறைந்த ஸ்ரீவசிஷ்டபகவானே யாவர், எனச்சபையில் நவின்றபின்னர் = ஹே முனீசுவர்களேயென்று அப்பேரவையின்கண் னியம்பினர். (22)

(ஸ்ரீ - வீர.) ஹே முனிநாயகர்களே ! இராமச்சந்திரன் யாதையுள்ளே யறிந்துள் ளானே அதுவேவஸ்துவென்பதாகச் சற்புருடர்கள் வாயிலாய், முன்னர் விசுவாசத்திட

மில்லாமையினாலே அடையாததுபோலிருந்தது, இப்போதுகேட்டு விசுவசித்து அதன் கண்ணே சித்தவிசிராந்தியையடைவன். அதன் மூலமாய் அன்னிய அதிகாரிகளுங் கேட்டுத் தத்துவத்தை யடையலாம். ஆகவே யுபதேசம் சர்வயுபகாரமாகும். சரத் காலமாகிய இலக்ஷ்மி மேகமற்ற நிர்மல ஆகாசமாத்திரமாக எஞ்சியிருப்பதை வாஞ்சிப் பதேபோல இரகுநந்தனனுடைய மதியும் துவைதமியாவற்றையும் நீக்கி அத்விதீய சின் மாத்திரமாய்ப் பரிசேடித்து நிற்றலாகிய விசிராந்தியைக் கேவலம் விசுவாசத்தால் வாஞ் சிக்கின்றது. ஈண்டு இம்மகாத்மாவாகிய இராகவனுக்கு இஷ்டப்பாறுதலுள்ளத்தி லுண் டாவதற்காக இப்பகவானுடைய ஸ்ரீமான் வசிஷ்டரே யுக்தியை யுபதேசிக்கவேண்டும் நீரே யேன் உபதேசிக்கக்கூடாதெனின்? இக்ஷ்வாகுகுல முழுவதிற்கும் எப்போதும் குல குருவாகவும் நியந்தாவாகவும் இருப்பவரிவரே; இந்நியந்தாவைக் கடந்தன்றே, திரிசங்கு முதலியோர் பெருந்துயரை யடைந்தனர், சர்வசாஸ்திரங்களையுமிவர் அறிந்தவர், உண் மையாகச் சர்வசாக்ஷியா யிருப்பதோடும், யோகபலத்தாலும் பிரிவுபிரிவாகவும் இவர் யாவற்றையும் அறிந்துகொண்டே யிருப்பவர், அதற்கேதுவாக மூன்றுகாலங்களிலும் நிருமலமாகிய மோகங்கடந்த தரிசனசாதனமாய மனத்தையுடையவரு மிவரேயாவர்.

(ச.) மகத்தான இவனுக்கு = மகாமனதினையுடைய இராகவனுக்கு, மதித்து = விசிராந்தியிதுவேயென நிச்சயித்து. (22)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீவசிஷ்டபகவானேநோக்கி ஸ்ரீவிசுவாமித்திரர் ஸ்ரீஇராகவர் உத்தமோத்தம அதிகாரியாக இருக்கின்றபடியினாலே இனிதுபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தல்:—நல்லென.

நல்லவிசிட்டன் முகநோக்கி யுணர்தி யோமுன் ஞமிருவர் பகை நீங்க நல்லோ ரெல்லாந், தொல்வினைபோய் முத்திபெறக் கமல வேதா சொன்னதனி ஞானத்தின் றொகுதி யெல்லாங், கல்விமிகு மிராமனுக்குச் செப்பல் வேண் டுங் காதலீர் மாணுக்கன் கருத்திற் சொல்லுஞ், செல்வவுப தேசமே தகுவே ஞானச் செழுநூலின் பொருளுமிது சிறப்பு மீதே. (23)

(ப - ரை.) நல்லவிசிட்டன் முகநோக்கி = சத்துவசீலராய்ப் பரமசாந்தராய ஸ்ரீவசிஷ்ட பகவானுடைய திருவதனத்தை நோக்கி, உணர்தியோ = ஞாபகமிருக்கின்றதா? முன் நாமிருவர் பகைநீங்க = பூர்வம் நம்மிருவரின் வைரசாந்தியின் பொருட்டும், நல்லோ ரெல்லாந் தொல்வினைபோய் = நல்லமகாத்மாக்களெல்லாம் அநாதியாய் அஞ்ஞானம் நீங்கி, முத்திபெற = மோக்ஷத்தை யடையும் பொருட்டும், கமலவேதா = தாமரையின் கண்ணே எழுந்தருளி யிருக்கும் வேதநாயகர், சொன்ன = உபதேசித்தருளிய, தனி ஞானத்தின் = ஒப்பற்ற பிரஹ்மவித்தையின், தொகுதியெல்லாம் = சாரார்த்தங்களெ யெல்லாம், கல்விமிகும் இராமனுக்கு = வித்யாவிநயகுணசம்பன்ன பரமஉத்தம சீடனு கிய இராகவனுக்கு, செப்பல் வேண்டும் = உபதேசித்தருளல்வேண்டும், காதல் தீர்மா ணுக்கன் கருத்தில் சொல்லும், = சகலஆசைகளையும் நீக்கிய உத்தமசீடனது மனதில் ஞானமுதிக்கும்படி யுபதேசிக்கும், செல்வவுபதேசமேதகுவே ஞானம் = எந்நல்லவுப தேசமுண்டோ அதுவே ஞானமாம், செழுநூலின் பொருளும் = ஞானப்பிரதிபாதக வளமையாய்ந்த வேதாந்தசாஸ்திரத்தின் அர்த்தமும், இது = இஃதேயாம், சிறப்பு மீதே = அகண்டித விசேடமும் இதுவேயாம். [23]

(ஸ்ரீ - வீர.) ஹே வசிஷ்டபகவன்! முன்னம் நம்மிருவருடைய வைரமுஞ் சாந்தியா கும்பொருட்டும் மகாமதிமான்களாகிய முனிவர்களின் சிரேயசின்பொருட்டும் நிடதமலை

யினுடைய சோலையடர்ந்த விசாலமான இடத்தில் பகவானுகிய ஸ்ரீ பிரஹ்மாவால் வீரி வாகவுபதேசிக்கப்பட்ட மேன்மையாய யுக்திநிறைந்த ஞானமானது தங்களுக்கு ஞாபகத் திலிருக்கின்றதா? எந்த யுக்திப்பிரவாகம் நிறைந்த ஞானத்தினுலே இந்தச்சம்சார சம் பந்தமாய வாசனையானது சூரியனு லிருளானது மூற்றினுமொழிவதேபோல மூற்றினுஞ் சாந்தமாகுமோ, அதேஞானத்தைப் பரமசீடனுகிய இராமமூர்த்திக்கு விரைவில் விசிராந் தியானதுண்டாதற்பொருட்டு நீருபதேசிக்கவேண்டும். இவ்வுபதேசமானது அற்பபல அதிகப் பிரயாச முடையதாகாது; ஏனெனின்; இராகவன் கல்மஷம் நீங்கினவனுக இருக்கின்றன். நிர்மலமான கண்ணுடியில் முயல்வில்லாமலே முகமானது பிரதிபிம் பிக்குமல்லவா? இவ்வுபதேசம் பயனின்மையை யுண்டாக்க மாட்டாது; மாறுக. உம் முடைய ஞானத்தன்மை தலைய முதலியவற்றிற்குப் பயனுடைமை கிடைத்தலானே மேன்மையே யுண்டாகும், வீரக்தனுகிய நல்ல சீடனுக்கு யாதுபதேசிக்கப் படுமோ அஃதே ஞானமூஞ் சாஸ்திரார்த்தமும் ஆகும் அஃதே புகழத்தக்கதும் பாண்டித்தி யத்தை விளக்குவது மாகும். சுபாத்திரத்தி லீயாவிடின் வீணுகப் போதலின் இகழ்வே யன்றேவாம்.

(ச.) கல்விமிகு மிராமனுக்கு = கல்வியால் அமித காந்தியையுடைய இரகுநந்தன னுக்கு, மாணுக்கன் = சற்சீடன், அதுவே ஞானம், சிறப்பும் = அகண்டித மகிமையுஞ் ஆமென்பதாம். (23)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அதிகாரிக் குபதேசித்தல் அடாத காரியமெனவும் ஸ்ரீ இராமருக் கவசியம் உபதேசிக்க வேண்டு மெனவும் ஸ்ரீ விசுவாமித்திர முனிவர் கூற ஸ்ரீ நாரதாதியர் அவசியம் செய்யத்தக்க தென்கின்றனர்:—காதலென.

காதல்செறி பொல்லாமா ணுக்கனுக்குக் கற்பித்த வுபதேசங் கருநாய்த் தோலுண், மேதகுபா லெனவசுத்த மேவுமென்று மிகுகாதி சேய்பலவும் விளம்பக் கேட்டுத், தீதறுநா ரதன்வேத வியாதனுதித் திரண்முனிவர் நன்றி தெனச் சிறப்புச் செய்தார், காதிபுதல் வனைநோக்கிக் கமலத்தோனேர் கமல முனி புதல்வனிவை கழறலுற்றன். (24)

(ப - ரை.) காதல்செறி பொல்லா மாணுக்கனுக்கு = அவிரக்தனுகிய துஷ்ட நிஷ்டைப்படாத சீடனுக்கு, கற்பித்தவுபதேசம் = அனுக்கிரகித்த வுபதேசமானது, கரு நாய்த்தோலுள் = கறுத்துக் கழிபட்ட நாய்த்தோலா லாக்கப்பட்ட தூருத்திப்பையுள்; நிரப்பிய, மேதகுபாலென அசுத்தம்மேவும் = மேன்மைதங்கிய காராம் பசுவின்பாற் போற் றூய்தின்மையை யடைந்து நிந்திதமாம், என்று = என இவ்வண்ணம், மிகுகாதி சேய்பலவும் விளம்பக்கேட்டு = தவமேன்மை மிக்க காதிபுத்திரராகிய ஸ்ரீ விசுவாமித் திரர் அநேகமாக எடுத்துக் கூறியபோது அதைக்கேட்டு, தீதறுநாரதன் வேதவியாதனு தித்திரண் முனிவர் = அச்சபையின் கண்ணிருந்த யாதொரு மாசுமற்ற ஸ்ரீநாரத வியாதாதி, மகரிஷிக ளெல்லாரும், நன்றிதெனச் சிறப்புச் செய்தார் = நல்லது நல்லது என்பதாக விசேடமாக ஆமோதித்தனர், காதிபுதல்வனை = ஸ்ரீ ஜகன்மித்திர பகவானை, நோக்கி = விளித்து: கமலத்தோனேர் கமலமுனி புதல்வன் = பிரஹ்மாவுக்கு சமான மான பிரஹ்ம புத்திரர் ஆகிய ஸ்ரீ வசிஷ்டபகவான்; இவைகழறலுற்றன் = இம் மொழி களைக் கூறத்தொடங்கினர். (எ-று.) (24)

(ஸ்ரீ - வீர.) சீடனும் வீரக்தனும் அல்லாதவனுக்கு ஏதேனுஞ் சிறிதை யுபதேசஞ் செய்யினே அது கருநாய்த்தோலிற் கவிழ்த்த காராம்பசுவின் பாலைப்போற் களங்கத்

தையே யடையும். இராகாதிகளின் காரணம் அவித்தையாக விருத்தலின் அவ்வவித்தை நீங்கலானே இராகம் பயம் குரோதம் முதலியவை நீங்கினவரும், அபிமான மற்றவரும், பாவமற்றவரும் ஆகிய உம்மைப் போன்றவர் எவர்க்குபதேசஞ் செய்கின்றீரோ அப் போதே அவ்விடத்திலேயே அபரோக்ஷ ஆன்மாவின் கண்ணே கேட்டமதியானது இளைப்பாறுதலே யடையும். காதிமைந்தராகிய ஸ்ரீ விசுவாமித்திரரானே இவ்வாறியம் பப்பெறவே ஸ்ரீ வியாசகாரதர் முதலிய முனீசுவர்களெல்லாம் அப்பொருளேயே நல்லது நல்லதெனப் புகழ்ந்து கொண்டாடிப் பேசினர்கள்; அதன்பின் சக்கரவர்த்தியின் சமீபத்தில் வீற்றிருப்பவரும் மகாதேஜசை யுடையவரும், பிரஹ்மாவின் மைந்தரும் பிரஹ்மாவிற்குச் சமான மானவரும், மகாமுனிவரும் ஆகிய ஸ்ரீ வசிஷ்ட பகவான் பிரஹ்மாவின் மைந்தராய்ப் பிரஹ்மாவைப் போலவே மகாதேஜசு முதலிய குணங்களோடு கூடி விளங்குதலின் திவ்யதேஜசோடு கூடிய மகரிஷிகளினது முன்னிலையிற் பிரஹ்மாவைப் போலவே புகலத் தொடங்கினர். (24)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தத்துவ ஞானிகட்கு இலக்கணபூதமாய அபிமான மின்மை முதலிய நற்குணங்களைத் தமதொழுக்கத்தானே விளக்கிப்பித்துக் கொண்டு விநயமான மொழிகளானே ஸ்ரீ விசுவாமித்திரராற் பிரார்த்திக்கப்பட்டதைச் செய்கின்றேன் எனப் பிரதிஞ்ஞை செய்தல்:—கலேமுனியென.

கலேமுனியே நீர்மொழிந்த படியே செய்வேன் கற்றுணர்ந்த பெரியோர் சொற் கடப்பா ரியாரே, நிலையில்பவ மயக்கமறப் பதுமவேதா நிடதமலை மேலுரைத்த நிமலஞானம், அலைவின்மனத் திருக்கின்ற தூரைப்பே னென்ன வஞ்ஞானத் தொகுதிகெட வகண்ட ஞானத், தெலைவில் பரபதமெவர்க்குந் தோன்று மாறு சுத்தவிந யத்துடனே சொல்வதானுன். (25)

(ப - ரை.) கலேமுனியே = சர்வசாஸ்திரங்களையும், அறிந்த மகரிஷியே! நீர்மொழிந்தபடியே செய்வேன் = தாங்கள் ஆணையிட்ட பிரகாரமே செய்யக்கடமைப் பட்டுளேன், கற்றுணர்ந்த பெரியோர் சொற் கடப்பாரியாரே = கற்கவேண்டியதைக் கற்று, அதனுல் உணரவேண்டியதை யுணர்ந்த மகான்களினுடைய திருமொழியைச் சமர்த்தரேயாயினும் யாவரேகடக்கச் சமர்த்தர், நிலையில் பவமயக்கமற = கைசுவரமான சமுசாரப்பிரம சாந்தியின் பொருட்டு, பதுமவேதா = தாமரை மறையோனிய என்னரும் பிதா, நிடதமலைமே லுரைத்த நிமலஞானம் = நிடதபர்வதத்தின் மீதெழுந்தருளி யிருந்து முன்ன ருபதேசித்தருளிய நின்மலமான ஞானோர்த்தங்களியாவும், அலைவின் மனத் திருக்கின்றது = நிச்சல சித்தத்தில் ஒன்றும் மறையாது இருக்கின்றன, உரைப்பேன் என்ன = இராகவனுக் குபதேசிக்கின்றேன் என்று, அஞ்ஞானத் தொகுதிகெட = அஞ்ஞானக்கூட்டங்கள் யாவுமிரிந்தோட, அகண்டஞான தொலைவுஇல்பரபதம் = கண்டிதமில்லாத ஞானமயமான அழிவில்பரம கைவல்யபதம், எவர்க்குந்தோன்றுமாறு = எல்லாவித அதிகாரிகட்கும் புலப்படும் வண்ணம், சுத்தவிநயத்துடனே சொல்வதானுன் = ஸ்புடமாய அர்த்தவாணிகளோடும் அதிகவணக்கத்தோடும் உபதேசிக்கத் தொடங்கினர். (எ-று.) (25)

[ஸ்ரீ - வீர.) ஆணையிடல்=ஆஞ்ஞாபனஞ்செய்தல். உபதேசிக்க உபயோகியா யிராநின்ற சர்வசாமக்கிரிகளின் சேகரத்தால் உபதேசிகர் தேசசையடைந்து ஸ்ரீவசிஷ்டபகவான் விளங்கினர் என்பதாம். ஹே மகாமுனிவரே! நீர் ஆணையிட்டபடியே யாதொரு தடையுமில்லாமற் செய்வேன், சமர்த்தராயினும் கற்றுணர்ந்த பெரியோர் சொற்கடக்

குஞ் சமர்த்தர்யாருளார் ? யானீப்போதே அதிவிரைவில் அரச குமாரர்களாகிய இராமாதிகளினது மனத்திலிருக்கப்பட்ட அஞ்ஞானத்தை ஞானத்தினுலே, தீபத் தினுலே இரவினிருளை அகற்றுவதேபோல அகற்றுவிப்பேன்; அஞ்ஞானத்தை நீக்கு வதிலும் ஞானத்தை யாக்குவதிலும் யாதொருதடையுமே கிடையாது. நிடத மலை யின்கண்ணே சம்சாரமயக்க நீங்கும்பொருட்டு முன்னர் எந்தந்தையாகிய பிரஹ்மாவி னுல் எந்தஞானமானது உபதேசித்தருளப்பட்டதோ அவையாவற்றையுமே சிதருமற் கிரந்தத்தோடும் அர்த்தத்தோடும் ஸ்மரித்துக்கொண்டே யிருக்கின்றேன்; அபரிச்சின்ன மாதலினுனே பூர்ணமாக எந்தஞானசொரூப ஆத்மதத்துவமுளதோ அதை நிரந்தரம் அனுசந்தானஞ் செய்துகொண்டே யிருக்கின்றேன். இந்தமகாத்மாவாகிய ஸ்ரீவசிஷ்ட பகவான் இந்தப்பிரகாரம் வெளிப்படையாகப் பிரதிஞ்ஞையைச்செய்து,சூரனும் நடனும் ஆயுதாதிகளைத்தரித்தல் பூடணுதிகளைப் பூணன்முதலிய சாமக்கிரிகளைச் சேர்த்துக் கொண்டு இனிதாகவிளங்குவதேபோலச் சீடனுக்கான்மஞான மெளிதிலுண்டாவதற் காகவேண்டிய உபாயங்களான திருஷ்டாந்தம் கதைபிரமாணம் தருக்கம் முதலியவற் றின் அனுசந்தான உற்சாகாதிசாமக்கிரிகளைச் சேர்த்தலானே உபதேசஞ் செய்பவர் களின் மிகுந்த அழகைக்கொண்டு இனிதாக விளங்குபவராய்ச் சகத்திலுள்ள சர்வப் பிராணிகளின் அறியாமையினது வேரைப்பிடுங்குவதும் பரமபதத்தை முக்கியமா யறிவிப் பதும் ஆகிய இந்தச் சாஸ்திரத்தைக் கூறத்தொடங்கினர்.

(ச.) சமுசாரமயக்கஞ் சாந்தியாக, உரைத்த = முன்பு உபதேசித்த பரிகரம்பரி யங்க யோகபட்டிகையாதியாம், அவற்றுலாக்கப்பட்ட சுகாசனம் அதனுல் ஆரியரழகை யமைந்திலங்கினு ரென்பதாம்.

ஆசுரிருத்ரம் (1கி) (25)

சுகர் கதை முற்றிற்று.

முமுக்ஷுப் பிரகரணம்.

(*)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஓம்சுவஸ்தி. ஸ்ரீகணேசாயநம: பூர்வப்பிரகரணத்தானே நித்யாநித்திய வஸ்துவிவேகத்தினின்றும் வைராக்கியம் சமாதியங்குரபீஜம் முமுக்ஷுபல பரியவசாயி முக்கியத்தன்மையானே பிரதிபாதிக்கப்பட்டது; இப்போது முமுக்ஷுவி வ காரம், சமாதி இங்ஙன் செய்யற்பாலதா மென்பதை யுடைத்தாய், மனனநிதித்தியாசன அங்கமுடைத்தாய், சிரவணவடிவ உத்தரப்பிரகரணத்தால் அறையப்பெறுகின்றது; பிர சங்கத்தால் வந்ததுஞ் சிறிதுசிறிது. ஆண்டுமுதற்கவியினுலே தைவாதீனம் சர்வம் பருகும் பொருஷம் வியர்த்தம் ஆகலின் விசாரவிஷயப் பிரயத்நபரத்தன்மையைப் பற்றலாகாது பந்தீம் எனப்பகர்ந்துகொண்டு திரியும் படிப்பாளிகளின் சங்கையாகமத்தை நிமித்தமாகக் கொண்டு பரிகரிக்கின்றனர் ஸ்ரீவசிஷ்டபகவான்:—இராகவ என. ஸ்ரீ வசிஷ்டபகவான் முன்னுற்ற யாவற்றையும் அனுசந்தித்துப் பார்த்து விஸ்தாரமாக அவற்றையுபதேசிக்க விரும்பிச் சற்குருவின் றியானவடிவ மங்கலத்தைச் செய்துகொண்டும், வித்தையின் சம் பிரதாய சுத்தியைக்காண்பித்துக்கொண்டும், சீடரை யொருமைப்படுத்திக்கொண்டும், முன்னர்ச் சிருஷ்டியினுதியில் என்றந்தையாகிய பிரஹ்மாவான பகவானுல் யாவருக்கும் சர்வசம்சார துக்க உபசாந்தியின்பொருட்டு எந்த ஞானசாதனமான சாஸ்திரம் அருளப் பட்டதோ அவ்விதையே கூறுகின்றேன் கேளென்கின்றனர்:— இராகவகேள் என. சமை தமை முதலிய சாதனசம்பத்தோடுகூடிய சுகர் முதலியோருக்குச் சிரவணம் பலிதமாம்

இப்போதுள்ள மற்றையர்கட்கு யாங்ஙனம் அநுபவிக்கும், சாதனஞ் சம்பாதித்தல் முடியாதகாரியமன்றேவெனின்? எளிதென்கின்றார்:—இராகவகேளென. ஸ்ரீவசிஷ்டர் கூறல்.

இராகவகே ளிப்பவத்தி லென்று மெல்லா மியல்புறுநன் முயற்சியினு லியார்க்கு மெய்து, மாகலேநன் னூன்முயற்சி யொன்று மொன்று வருநூலி லாமுயற்சி மற்றி வற்றின், சோகமினால் வழிவீடா நூலி லாமை தன்பமாஞ் சைசவத்திற் றொடரு மிந்நூன், மோகமினல் லோர்கூட்டங் குணங்க ளாலே முயற்சியுறு பெரியோர்க்கு முத்திபேரும். (1)

(ப - ரை.) இராகவகேள்! =ஹே இரகுகுலதிலகனே ஒருமையுடன் கேட்பாயாக, இப்பவத்தில் = இச்சமுசாரத்தில், என்றும் = எப்போதும், எல்லாம்=யாவுமே, இயல்புறு நன்முயற்சியினுல் = இடைவிடாது செய்யப்படும் நல்ல முயற்சியினுலே, யார்க்கும் எய்தும்=எவ்வகையினரும் அடைவர், மாகலேநன்னூன் முயற்சி யொன்றும் =முதலாவது மாகுமைதங்கிய உபநிஷத் வேதாந்த சாஸ்திர சம்பந்தமான ஆன்ம முயற்சியாம், வரு நூலிலாமுயற்சி மற்று ஒன்று = சாஸ்திர சம்பந்தமில்லாமல் வரும் அநாத்ம முயற்சி இரண்டாவதாம், இவற்றின்=இவ்விரண்டினுள், சோகமில் நூல்வழிவீடாம் = துயரமில்லாத சாஸ்திரமார்க்கம் மோக்ஷத்தைத் தருவதாம், நூலிலாமை தன்பமாம் = சாஸ்திரவழியிற் செல்லாமை பந்தத்தைத் தருவதாம், சைசவத்திற் றொடருமிந்நூல் = பாலியமுதலாகவே பயின்றுவந்த இத்தச் சாஸ்திரம், மோகமில் நல்லோர்கூட்டம் = மயக்கங்களே யொழித்த சாதுக்களின் சங்கம், குணங்களாலே = மைத்திரியாதி சற்குணங்கள் முதலிய இவற்றினே, முயற்சியுறு பெரியோர்க்கு = மிகவும் முயற்சிக்கப்பட்ட மகான்கட்கு, முத்திபேரும் = மோக்ஷமே பிரயோஜனமாக அகப்படும். (1)

(ஸ்ரீ - வீர.) முயற்சி = பௌருஷ மென்னும் புருஷகார உத்தியோகமாம், முயற்சியுடையார் பயனே யடையவே யடைவர், பௌருஷத் தன்மையால் யாவும் நன்கு அடைதற்பாலனவாமேல், அசாஸ்திரீயப் பௌருஷத்தானும் பரமார்த்தப் பிராப்தியாம் ஆகலின் அதுவும் முமுக்ஷுக்களால் அனுஷ்டிக்கப் படவேண்டும் என வாசங்கிப்ப விடைதருவார், மாகலேயென்றார், பரமார்த்தப் பொருட்டுச் சாஸ்திரிதமாம் என்பதை விரித்துணர்த்துவார், சைசவமென்றார். புருடமுயற்சியாற் சாதிக்க முடியாத தொன்றில்லேயாம், இச்சம்சாரத்தின் கண்ணே எப்போதும் எல்லாராலும் விடாதனுட்டிக்கப்பட்ட புருடமுயற்சியினுல் எல்லாப் பொருள்களும் அடையப்படும். யாவரானும் எப்போழ்தும் யாவுமே அடையப்படு மேலாயின் எங்ஙனஞ் சிலவிடத்தில் முயற்சி பயன்படாமற் போதலுகூடும்? விடாமுயற்சி வேண்டுமென்றுணர வேண்டும், வேண்டவே யுபேக்ஷிக்காமன் முயலிற் கூடாதகாரிய மென்னே! முயற்சியானது ஈண்டே யவசியம் முக்கியமாகிப் பலன்தரும், தெய்வமானது முயற்சியினும் வேறுகவோ இன்றும், இலதாகவே முயற்சிக்குவேறுகத் தெய்வத்தின் இன்மை தெய்வத்தினும் முயற்சிக்கு முக்கியத்தன்மை, முயற்சியினுனே புருஷார்த்த சித்தியுண்மையென்னு மியாவற்றையும் ஊகங்களானே யுணர்த்துவான் முயற்சியை யிருவகைப்படுத்துவார், மாகலேயென்றார். எவ்வாறு எவன் முயல்கின்றனனே அவ்வாறு அவன் தன்கருமத்தையே அனுபவிக்கின்றனன், தெய்வத்தாலுபய விபரீதத்தன்மை வரலாமேயெனின்? முன்னியற்றிய கருமமே பலத்தைக் கொடுக்கவந்தபோது தெய்வமெனப்படுகின்றது, அதனினும் அயலாகத் தெய்வம் காணப்படவில்லே. இன்னுந் தெளிவாகக் கூறுங்கால் சாஸ்திரத்தைக் கடந்ததும், சாஸ்திரத்தைத் தொடர்ந்ததும் என

டும், வைத்த சுபமசுபமெனும் வழியிரண்டால் = பழக்கத்தால் வராநின்ற சுப அசுப மார்க்க மிரண்டிலுலே, வாதனேயா நதிபெருகில் = வாசனேகளாகிய நதிகள் பெருகி யோடுமாயின், வருத்தத்தாலே = எத்தனேச் சிரமப்பட்டேனும், மெத்தமுயன்று = மிகமிகவும் புருடப் பிரயத்தினஞ் செய்து, அசுபவாதனேயைத் தள்ளி = கெட்டவாத னேயை யடியோடு விட்டு, மிக்க சுபவாதனேயின் மேலிற்பாய் = அதிகரித்த நல்லவா சனேயையே யனுசரித்து வாழ்வாயாக. (எ-று.) (3)

(ஸ்ரீ - வீர.) அவ்விரண்டினுள் வாசனே தூயதேற் பலமுந்தூயதாம், தீயதேற் பல முந்தீயதேயாம். வாசனே. = பாவம், சுப அசுபவாசனேச் சமூகங்களுள் எதாவதொன் ருல் புருடன் எவப்படுவனேல் மோக்ஷவடைவின் வகையை மொழிந்து, இரண்டாலும் எவப்படுவனே லாயினும் அதனேக் கூறுவார், வைத்தவென்ருர். கூறிய பொருளேயே விரிப்பார், வருத்தமென. புருடார்த்த ஹேதுவாய சுபவாதனேயையே அனுசரிப்பாய். கூறிய இரண்டனுள் சுத்தவாதனேயின் கூட்டத்தானே யேவப்படுவையேல் இப்போது அம்முறையாகச் சுபத்தினுனே அழியாத பதத்தை யடைவாய். மற்றதேலோ, சுதந்திர மாக வாதனேகட்கு எழுச்சியோ கிடையாதாம், மற்ருரால் வெளிப்படுத்துவதன் வாயிலா கவே யெழும், அசாதுக்களுடைய சங்கமத்தானே தெய்வத்தால் அசுபவாசனே யொன் றெழுந்து உன்னே மகாசங்கடத்தில் அழுத்துமாயின், அதையும், அதற்கு விரோதியாய சாதுசங்கஞ் சற்சாஸ்திர முதலியவற்றின் நிடசேவையானே விரோதி வாசனேயைக் கிளப்பி விரைவில் தூரத்தே தள்ளித் திரஸ்கரிக்க வேண்டும். முயற்சியினுற் கிடைத்த பலத்தாலவசியம் வெற்றி கொள்ளலாம். " எவன் மனத்திருந்தும் அம்மனத்தயலாம், எவனே மனந்தான் அறியாதாமோ, எனமனதின் பிரேரகமாய பிரஞ்ஞாத்மா அன்னிய மெனவே கேட்கப் படுகின்றமையின் அதனதீனமாகவே மனேவாசனே யுற்பவமாங்கால் யாங்ஙனம் எனக்கு நல்லவாசனே யுண்டாக்குஞ் சுதந்திரங் கூடுமெனின் அறிவுமாத்திர இயற்கை வாய்ந்த பிராஞ்ஞனெனப் படுமதுவே நீயாவாய்; ஜடவடிவமாய சூக்குமதூல தேகங்கள் அன்னியனுய்; விடுமாறு நீயாகாய் " இதனினும் வேருய்க் காண்போனின் ரும், அதுவே நீயாயமர்ந்தனே " என்பதாதி சுருதியு மிதையேயன்ருே கூறுகின்றது. ஆதலின் இவ்வாறு சின்மாத்திர சொரூபமாயிருக்கு நினக்கு அன்னியமாய சேதனத்தா லறியப்படுந் தகைமை எவ்வாறு கூடும்? பிராஞ்ஞன் உன்னினும் அன்னியன், ஆவனே லாயின் சித்திற்கு மற்ருெருசித்தால் ஒளிர்தல் கூடாமையின் உன்னேப்பாராமல் சர்வஞ் ஞமேயது ஆகாதாம் ஆதலின், நீயேயதுவென மாற்றிக் கோடலானே ஒருமையானது சித்திக்கும். அன்னியத்தால் நீ விளக்கப்படுவையே யாயின் உனக்குச் சேதனத்தன்மை எங்கேயிருக்கும், சித்தாலொளிர்வதற்கு வந்தடையும் ஜடத்தன்மையை நீக்கலுமே லுமோ? சித்திற்கு வேறுசித்தால் விளங்குதல் கூடுமேல் அதுவும் அன்னியத்திற்கு லீடயமாம், ஆகவே எல்லையில்லாது செல்லுந் தோடமுமாம், அன்னிய மூன்னே யறி யுமேயாயின் அது தனேயறிவது யாதோவேறு? அவ்வறிவதையு மறிவதுயாதோ? அதற்குமயலதேல் அநவஸ்தையாகும், அதுவும் உண்மையாக மாட்டாமல் வஸ்து சித்தி யைச் செய்யாதாம், ஆகவே உனக்குச் சத்வாசனேயை வெளிக்கிளப்பும் முயல்விற் சுதந் திரத்தன்மை தடையற்றதே யாகும். புருடசுதந்திரத் தன்மையின் முக்கியத்திற்குப் பயனென்னெனின், சுபஅசுபங்களாகிய வழிகளில் பெருகிவரும் வாசனேநதியை முயல் வினுலே சுபவழியிலேயே திருப்பிவிட வேண்டும். வீரியவான்களுக்குள் மகாவீரிய! அசுபங்களிற் றிரிந்துகொண் டிருக்கும் உனதுமனதை முயற்சியின் வலியினுலே சுபங் களிலேயே புருத்தவேண்டும், சுபங்களில் அவ்தாரணப் பொருட்டுத் தருதியைக் காண்

பித்துக் கொண்டு கூறியதையே நிகமனஞ்செயயும் பொருட்டுச் சித்தமாய நதியானது புண்ணியத்தின் பொருட்டும் பாவத்தின் பொருட்டும் என இருவகையாய்ப் பிரவாக முற்று வருகின்றது, அவற்றுள் ஒருதோரையைத் தடைப்படுத்தின் மற்றதன்கண் ணிருமடங்காகப் பெருகும் என்னும் யோகசாஸ்திரத்தின் கூற்றை யனுசரித்துக் கூறுவார் மேலிநிற்பாய் என்றார். அசுபத்தினின்றும் நீக்கியது சுபத்தைச் சென்றடை யும், சுபத்தினின்றும் நீக்கியது அசுபத்தைச் சென்றடையும், ஜந்துக்களுடைய சித்த மானது சிசுக்களைப் போலாகும், ஆதலினதனை யசுபத்தினின்றும் பலமான முயல்வான் நீக்கவேண்டும் என்பதாம். சுபவிடயம் பௌருடத்தை யபேக்ஷியாமலே சுயமாகவே அசுபத்தினின்றும் மனத்தைச் சலிப்பிக்கும் ஆகலின், பௌருடம் வீண்போமோ வெனின் போகவே போகாதாமெனக் கூறியதாயிற்று.

(ச.) தூயவாதனை நினைத்தொடரின், அதனால், அது மோக்ஷமடைவதற்கு ஏது வாதலினால், மெல்ல = யத்தினபேக்ஷை யின்றிக் கிரமமாகச் சிக்கிரத்தில், துன்பமாக் கும் ஆதலால், இதனை = இம்முற் பிறப்பின் அசுத்தவாசனையை, பெரிது வருந்தியும் = அதிப் பிரயத்தினத்தால் நீதானே போக்கவேண்டும், செயித்தலேகாரியம். அசுபக்ஷத் திலும், அசுபத்தை யத்தியந்தங் கெடுத்து அதனாற் சுபத்திற் பிரவர்த்திக்க வேண்டு மென்பதாம். இதனாலிதுவரை புருடப்பிரயத் தந்தத்தினாலே சுபமார்க்கத்திற் செல்ல வேண்டு மென்றதனையே வற்புறுத்துவார் வைத்த சுபமென்றார். புருடார்த்தப்பொருட் டப் பலமான புருடயத்தன சாதனம் வேண்டு மென்பதாம். (3)

(ஸ்ரீ - வீர. அ - கை.) சித்தமானது சிசுப்போல விருக்கின்றபடியினாலே அதற்குத் தக்க அடக்குமுறை காட்டுகின்றார்:—மிகவென.

(ச-அ-கை.) அசுபத்தோடு கூடியமனதை அதினின்று நிறுத்தலால்நிராலம்பமாய் (பற்றின்றி) ச் சலிக்கின்றதெனில், சித்தஞ்சிசுப்போல நிராலம்பமாதலால் ஒன்றினும் உறைத்து நில்லாதுசுபத்தினின்று அசுபத்தினும் அசுபத்தினின்று சுபத்தினும் செல்லு மாதலின் றனது வலியால் அசுபத்தினின்று நிறுத்தின் சுபத்தையே நிகழ்க்கும் அங் ஙனம் அதை நிறுத்துதன் மெல்ல மெல்லவே செய்யவேண்டு மென்கின்றார்:—மிக முயன்றென:

மிகமுயன்று வருந்தாமற் சமமாகின்ற வேண்டுகொளாற் றன்முயல்வால் விநோதந் தன்னால், பகர்மனமாஞ் சிறுமகவை நிறுத்தல் வேண்டும் பலபிறப் பிற்பரிசயங்க ளகலப் பண்ணி, யகல்சுபவா தனையுதித்தான் முயற்சிபேரு மையுறினுஞ் சுபமுயல்வை யதுநீதல்ல, திகழ்மனம் போய்த் தற்பதத்தைத் தெளியு மட்டுந் தேசிகனூற் சொல்வழியிற் செல்லு வாயே. (4)

(ப - ரை.) மிகமுயன்று வருந்தாமல் = மனத்தை நிறுத்த அதிப் பிரயத்தினஞ் செய்து, நிற்காவிடினும் கஷ்டத்தையடைந்து முயற்சியை விட்டுவிடாமல், சமமாகின்ற வேண்டுகொளால் = சமத்வப் பிரார்த் தனையினாலும், தன்முயல்வால் = இடைவிடா தியற்றும் தனது பௌருடப் பிரயத்தினத்தினாலும், விநோதந்தன்னால் = அதற் குத மான கதா சல்லாபத்தாலும், பகர்மனமாம் சிறுமகவை = சிறு பாலக னெனப்பகரும் உளத்தை, நிறுத்தல் வேண்டும் = பையப்பைய விரையாது இலயப்படுத்த வேண்டும், பலபிறப்பில் பரிசயங்கள் அகலப்பண்ணி = அநந்த ஜன்மங்களிலுண்டான பழக்கங்களை அகலுமாறுசெய்து, அகல் சுபவாசனை = விஸ்தாரமான தூயவாசனை, உதித்தால் = உதயமா னால், முயற்சிபேரும் = அப்யாசமானது பெரும்பயனை யுடையதாம், ஐயுறினும் = சந்

லையை நீக்கி, நிறைசாந்தி = பூர்ண உபசாந்தியும், இன்பம் = சந்தோஷ சுகமும், வழுவாமல் = இடைவிட்டு நீங்காமல், உதாரமா மதியாலெய்தி = உதார புத்தியினாலே யடைவுற்று, ஆயமொழிப் பொருள் = முன்பின் கருது நெஞ்சை = அனுகூலமான வாக்கியார்த்தத்தைப் பூர்வாபரம் விசாரியா நின்றமனத்தை, அமர் சமஞ்செய்து = அடங்குமாறு சமரசப்படுத்தி, ஆன்மாவி லனுசந்திப்பாய் = தனது சொரூபத்தின் கண்ணே நிலைபெற்று நிற்றி. (எ-று.) (5)

(ஸ்ரீ - வீர.) இராகாதிகளை யெல்லாம் கொன்ற விவேகியினாலே சுபமும் விடத்தக்கதேயாம்என்ற. தூயது அதிசோபன மகாத்மிய மூடையதாம். சுபவாசனைச் சாலத்தையனுசரித்து மனவிசோக பதத்தை அடைதி; அடைதலும் ஞானத்தன்மை விசிட்டமதியினாலே யறிதலாம்; மனைகர அபிப்பிராய மதியான் மருவுதலாம். குருசாஸ்திரப் பிரமாணங்களால் நிர்ணயிக்கப் பட்டதையே ஆசரிப்பாயாக எனப்புதன்றதை விவரிணித்துக்கொண்டு சிரவணிக்கத் தக்கதான ஞானசாஸ்திரத்திற்கு விசிஷ்டசம்பிரதாய மூலத்தன்மையும் பரமபுருடார்த்தத்தை யுண்டாக்குந் தன்மையும், உண்டென்பார் மீட்டென்றார் பாவனை = வாசனை உதாரம் = மகா உத்தமம். சோபனமான பூர்வாபரவாக்கியார்த்த விசாரமேயாய விடயத்தில் ஆதரவுற்ற நெஞ்சை யென்பதாம், தன்னால் நிர்ணயிக்கப்பட்ட பூர்வாபர வாக்கியார்த்தங்களில் விசாரவிடய ஆதரமுற்ற நெஞ்சை யெனினுமாம். மனைவிசாரவிடய ஆதரமுற்ற சமரசத்தன்மையும் ஆன்மாவின் கண்ணே நிலை பேறுடைமையும் நெஞ்சிலுண்டாகு மாறுசெய்தி. ஆடையிற் சேர்ந்த அழுக்கானது வெள்ளாவி வைத்தல் சாரமண்ணிடல் முதலியவற்றினே தீர்தல்போல இராகாதி வாசனைக்கஷாயங்க ளெல்லாம் நீங்கப்பெற்ற பின்னர் ஆன்மவஸ்துவை யறிந்தவனுகிச் சகலதுயரங்களும் நீங்கப்பெற்றுப் பூர்ணமாக விருக்குமுன்னுல் நல்வாசனைக் கூட்டமும் விடத்தக்கதே யாகும். அவ்வாறே மிருதியும் " பக்குவங்கஷாயம் படவேவினைகளாற் பக்குவவுணர்வுபின் பவித்திடலாமே " எனக் கூறுகின்றது. கூறியபொருளையே சுருக்கி யுபசங்கரித்துக் கொண்டு ஆசரிக்கத்தக்க சுபத்தை யுபதேசிப்பார்; தூயதாயென்றார். மகாமங்களமாயும் பெரியோராற் பேணப் பெற்றதாயும் இருக்கும் சுபவாதனையை யனுசரித்து அதனை யடைவுற்ற மதியினுனே எப்போதும் சோகமற்ற பரமார்த்த வஸ்துவைச் சாக்ஷாத் கரிப்பாயாக ; அதன் பின்னர் அச்சுபவாசனையை யனுசரித்தலையும் விட்டுப் பரமானந்த மாகவே சமூசாரவாதனையை மீண்டுங் கவராதபடி உள்ளேவிடுத்துயிருத்தி உதாரமான மதியினுலே சாந்திவைராக்கிய சுகத்தை நிறையக்கொண்டு கருமகாண்ட சுருதிகள், உபாசனை பரசுருதிகளின் ஞானசாதகத் தன்மையைக் காண்பிப்பதும் அவ்விடயங்களாற் கெடுக்கப் படாததும், ஆன்மாவின் கண்ணே யனுசந்தானத்தை யுடையதும் குருசாஸ்திர முபதேசித்த கிரமமாகக் கிடைத்த சுவானுபவத்தையும் ஏகரசத்தையும் சம்பாதிப்பதும் சுகதுக்கங்களைக் கெடுப்பதும் பேரானந்தத்திற்கு முக்கிய காரணமாவதும் மோக்ஷத்திற்கு முக்கிய சாதனமாயதும் ஆம் இவ்வியம் பும் மகாசங்கிதையை மனவொருமையுடன் கேட்பாயாக எனத்தொடரும். அதனைக் கேட்பதில் மந்த விரக்தனுக்கும் அதிகாரம் கிடையாதெனக் காட்டுவார், மீட்டனுகா நெறியதாக என்றார்.

(ச.) பரிபக்குவ அந்தக்கரணமாய், மிகவினிதாய், இங்கே மனைக்கியமாய் மேவும் சுபத்தினுல் = பெரியோரா லடையப்படும் சுபத்தை முன்பனுசரித்து, மகாசத்தாவலம் பனமான பரிபூரண புத்தியால் மனவழுக்கும் = வாசனையும், தூயரும் = ஆதியும், அற்ற, நேயமாம்பதம் = ஞேயவஸ்துவை, மேவி = அப்பதப் பிராப்தியகந்தரம், அது

வந்தள்ளி = அச்சுபத்தையும் விடுத்து, நிலைநிற்பாய். இருகுநந்தனு நீ பரிபக்குவ அந்தக் கரணனுய் ஆத்மதத்துவஞ்ஞனுய் நிர்வாசனனுய் நிராதியுடையனுய் அதன்பின் அச்சுப வாசனையையும் நியாகம் செய்யவேண்டு மென்பதாம். ஸ்ரீ வசிஷ்டர், மீட்டணுகர நெறியதாக, மாயை நினைவு = சமுசாரபாவனைகளை ஒழித்து, நிறை = சம்பூர்ணமான, சாந்தி = நிர்விகார சித்தத்தையும், இன்பம் = நிராசையினு லுண்டான சுகத்தையும், வழுவாமல் = தவருமல், உதாரமாமதியால் எய்தி = மகத்துவமான மதியாலடைந்து, ஆய = யான் உபதேசிப்பதான, மொழிப்பொருள் = வாக்கியார்த்தத்தினது, முன்பின் கருதும் = பூர்வாபரவிசாரத்தில் ஆதரமுடைய, அமர் சமஞ்செய்து = ஏகப்பிரகார மாகச் சிரவணைச்சையோடுஞ் சேர்த்து, ஆன்மாவி லனுசந்திப்பாய். இஃதனைத்துஞ் சிரவணசாமக்கிரி நிரூபணம். (5)

(ஸ்ரீ - வீர.-அ - கை.) சர்வ விவேகிகளோடும் இம்மோக்ஷ கதையை நீகேட்டு என்றும் அழிவேயில்லாது துயரஞ் சிறிதுமில்லாத பரமபதத்தை யடைவாயாக வென்றிவ்வாறு அங்கசங்கிதமாகச் சிரவணத்தைக் கூறியபின் கேட்கத்தக்க சாஸ்திராதிகள் இல்லையென்பதைக் குறித்து அகண்டானை பிரகாரத்தைக் கூறுகின்றூர்:—தேங் கமலத்தென.

தேங்கமலத் தயனுரைத்த மொழிகே ளென்னச்செப்பிய காரணமேதென் றிராமன் கேட்ப, வோங்குமுனி யுரைசெய்வான் முடிவற்றெங்கு முளதாகி யணைத்தினுக்கு முறையுளாகி, வீங்குபொருள் களில்விளக்கமாகி மேவுமெய்ஞ் ஞான விண்ணினின்று விண்டுவந்தா, னுங்கவன்றன் மனக்கமலத் தயனுண் டாகி யகிலமன விகற்பம்போ லளித்தானன்றே. (6)

(ப - ரை.) தேங்கமலத் தயனுரைத்த = தேனிறைந்து வாசனை பரிமளிக்கும் தாமரையி லெழுந்தருளி யிருக்கும் பிரஹ்மா அனுக்கிரகித்த, மொழிகேளென்ன = சர்வ துக்கங்களையும் போக்கும் வாக்கியத்தைக் கேட்பாயாக வென்று ஸ்ரீ வசிஷ்டபகவான் கூற, இராமன் = ஸ்ரீ இரகுகுலதிலகர், செப்பிய காரணம் ஏதென்று = அனுக்கிரகித்த காரணமியாது கொலாமென்று, கேட்ப = வினவ, ஓங்குமுனி யுரைசெய்வான் = தவம் பெருக்கிய மனனசீல மகரிஷியானவர் கூறுகின்றதாவது, முடிவற்று = அந்தமின்றி, எங்குமுளதாகி = சர்வகமாய் விளாசாத்மாவாய், அனைத்தினுக்கும் உறையுள் ஆகி = சர்வங்கட்கும் ஆசிரயமாய், வீங்குபொருள்களில் விளக்கமாகி = உண்டாகிவளரும் எல்லா வஸ்துக்களிலும் நல்விளக்கந்தந்து, மேவும் மெய்ஞ்ஞான விண்ணின்று = பொலி யும் உண்மை யறிவானந்த ஆகாயத்திலிருந்து, விண்டுவந்தான் = ஸ்ரீ மகாவிஷ்ணுவா னவர் அவதரித்தனர், ஆங்கவன்றன் மனக்கமலத்து = அத்தகைய ஸ்ரீமந் நாராயண ரது இருதய தாமரையினின்றும், அயனுண்டாகி = பிரஹ்மதேவர் அவதரித்து, மனம் விகற்பம்போல = மனமானது விகற்பத் தொகுதிகளை யுண்டாக்கலேபோல, அகிலம் = சகல சிருஷ்டியையும், அளித்தான் = உண்டாக்கினர், அன்று, ஏ, அசை. (6)

(ஸ்ரீ - வீர.) பிரஹ்மவித்தைச் சம்பிரதாய கர்த்தாவாகிய பிரஹ்மாவிற்கு மகத்து வம் மலர்த்தற் பொருட்டுப் பரமகாரணத்தி னின்றும் உண்டாயதன்மையும் உலகத்தை யுண்டாக்குந் தன்மையும் காண்பித்துக் கொண்டு செப்பிய காரணமேது என வினுவிய வினுவிற்கு விடைதருவார், முடிவற்றென்றூர். ஆன்மாவை யறிந்தலேவற் றென்பதிறுக. முடிவற்றெங்கு முளதாகி = அநந்தகாரிய சொரூபபூதமாகி அவ்வியாவற்றையு மிலக்கி வைப்பதாகி. ஜகத்துருவமாக விரிந்தும் உண்மையில் விரியாமலும் சமவடிவமான விண்

ணிலிருந் தென்பதாம். சிருஷ்டிக்கப்பட்ட வுலகத்திற்கு மெய்ம்மைச் சங்கையை மெலி
வித்துத் திருஷ்டாந்தந் தெரிப்பார், மனவிகற்பம் போல வென்னூர். மனவிகற்பக் கூட்
டம் = மனோரதசமூகம். கற்பத்தின் ஆதியில் பிரஹ்மாவாகிய பரமேஷ்டியால் எல்
லாத்துயரங்களையு மெரிப்பதும் மதிக்குப் பரமசமாதானத்தைச் செய்விப்பதும் ஆகிய
இஃதியம்பப்பட்டது என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் கூற, ஸ்ரீ வசிஷ்டபகவானுடைய
அபிப்பிராயத்தைத் தொடர்ந்து அறியும் அவாவுற்று, முன்னர்ச்சுயம்புவால் இது என்ன
காரணத்தானே கூறப்பட்டது? எங்ஙனந் தங்களா லடையப்பட்டது? இதனை யடி
யேனுக் குரைத்தருளல் வேண்டும் என்று ஸ்ரீ ஜராகவர் பிரார்த்திப்ப ஸ்ரீ வசிஷ்டபக
வான் கூறுவதாவது:—ஆண்டாதியில் பரமேஷ்டியின் ஜன்மத்தைக்கூற அவர் மூலகா
ரணத்தைத் தெரிவிப்பார் முடிவற்றென்னூர். அநந்தமாயிக விலாசங்களின் அதிஷ்டா
னபூத ஆன்மாவுளது, அதுயாவற்றினும் அயலாயுள்ளாயிருப்பது, சருவாதாரமாயது,
மாயை யதன்காரிய மியாவற்றையுங் கடந்தது, பிரத்தியக்குச் சித்திரூபமாய் நித்திய
அபரோக்ஷமாகி எல்லாப் பிராணிகளினது இருதயத்தி லொளிர் விளக்காயிருப்பது,
சிதம்பரமா யிருப்பது அழிவிலா வடிவமுற்றதுமாம். மாயையதன் காரியங்கள் அசையும்
போதும் அசையாதபோதும் ஒரே ஆகாரமாயிருப்பதும் ஒரேயியற்கையா யிருப்பதும்
ஆகிய நிர்விகார அதனினின்றும் சர்வகாரியங்களிலும் வியாபித்திரா நின்ற பிரஹ்
மாண்ட வடிவமாய விராட்டு என்னும் விஷ்ணுவானவர் சூக்குமபூதச் சிருட்டிக்கிரமமாக
பெருகிவராநின்ற நீர் நிறைந்த அசைவு அசை வின்மைகளிலும் அழியாத ஒரே நீரியற்
கையை யுடைத்தான கடலினின்றும் அலையுண்டானதே போல உண்டானூர். நிர்விகா
ரத்தினின்றும் உலக உதயம் விவர்த்தரூபம் ஆகுமேயல்லாது பரிணமமாக மாட்டாதாம்
மேருகிரியைக் கர்ணிகையாகவும், திசைகளைத் தளங்களாகவும். நக்ஷத்திரங்களைக் கேச
ரங்களாகவும் உடைத்தாகி விளங்காகின்ற அவருடைய இருதயதாமரையி னின்றும்
பரமேஷ்டியானவருண்டானூர். வேதவேதார்த்தங்கள் யாவற்றையு மூணர்ந்து தேவ
முனி மண்டலங்களா லலங்கரிக்கப்பட்ட அவர் எல்லாப் பிராணிக் கூட்டங்களையும்
மனது விகற்பக் கூட்டத்தைச் சிருட்டிப்பதே போலச் சிருஷ்டித்தார்.

(ச.) முன்னுரைத்த புத்திக்குச் சர்வதுக்கோப சாந்தமும் பரமானந்தமுமான
மொழி இராகவா நீகேளென்ன; செப்பிய காரணமேது=முன் சுயம்புயாதுகாரணத்தா
லுபதேசித்தார், தேவரீர் பெற்றதெப்படி அடியேற் கருளவேண்டும் என்று கேட்ப
உரைசெய்வான், அநந்தமாய்ச் சர்வகதமாய்ச் சர்வாசிரயமாய் விவர்த்தமான சகலவஸ்
துக்களிலும் பிரகாசமாய் இருக்கும் சச்சிதம்பரம் விஷ்ணு விஷ்ணுபங்களின் நுல்லிய
ரூபமான அதில் நின்று, சகல சர்க்கத்தையும் அளித்தான் = சிருஷ்டித்தான். (6)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஜம்புத்தீவின் ஒருகோணத்தில் பாரதவர்ஷமெனப் பெயர்
பெற்ற இதன்கண் தேகவியாதி மனோவியாதிகளாற் கஷ்டப்படும் ஜனக்கூட்டங்களின்
பரம்பரையை நோக்கி யின்னது செய்தாரெனல்:—உலகென.

உலகளித்த வயன்முனே நாநாவாக வோங்கியபா ரதவருடத் துயிர்க
ளெல்லா, மலகிறுய ருறக்கண்டு புதல்வர் நோவுக் கழுங்குபிதா வெனவழுங்கி
யவர்க ளுய்வான், பலகருமந் தவந்தான நதிமற் றெல்லாம் பவந்தீரா ஞானத்
தாற் பவம்போ மென்றே, கலகமிலா மனத்தளித்தா னென்னைத் தன்போற்
கமண்டலமுஞ் செபவடமுங் கையிற் காண. (7)

(ப - ரை.) உலகளித்த அயன்முனே = சகல லோகங்களையும் சிருஷ்டித்த பிரஹ்ம தேவரே, ஞானவாக வோங்கிய = பலவித வேறுபாடென் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் பாரதவருடத் துயிர்களெல்லாம் = பாரதகண்டத்தின் கண்ணே வாழும் ஜீவர்களெல்லாம், அலகில்துயர் உறக்கண்டு = அளவில்லாத துன்பம் அடைவதைப் பார்த்து புதல்வர்கோவுக் கழுங்குபிதாவென = மைந்தர்கள் அடைந்த துன்பத்திற்கு வருத்தப்படும் தந்தைபோல, அழுங்கி = துயரடைந்து, அவர்களுய்வான் = அவ்வுயிர்கள் நன்மையடையும் பொருட்டு, பலகருமம் = நானவகையான கிரியைகளையும், தவம் = தவங்களையும், தான = தானங்களையும், நதி = தீர்த்தங்களையும், மற்றெல்லாம் = வேறும் அநேக சாதனங்களையும், உண்டாக்கியும் இவையாவுமே, பவந்தீரா = சமுசாரதுன்பம், முழுது நீங்காவாறைக் கண்டு, ஞானத்தாற் பவம்போம் என்றே = பிரஹ்மவித்தையினலே யவசியம் ஜனனமரணம் நீங்குமென்று, திண்ணமா யெண்ணி, என்னே = என்றனே, தன்போல் = தம்மைப்போல, கமண்டலமும் செபவடமும் = ஜலபாத்திரமும் ஜபமாலையும், கையில் காண = கரத்தில் தரித்திருக்குமாறுற்ற ஆகிருதியாக, கலகிலா மனத்தளித்தான் = ஒருமையோடு கூடிய உள்ளத்தினின்றுந் தோற்றுமாறு செய்தார். (7)

(ஸ்ரீ - வீர.) ஜபமாலை கொண்டு ஜபித்துக்கொண்டே தோற்றினேன் என்பதாம். சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்கள், இலாப நஷ்டங்களான் மகிழ்வு கவலையுற்ற மனத்தையுடையவர்களாகவும், உண்டாகி யழிந்துகொண்டிருப்பதிற் றற்பரர்களாகவும், அற்ப வாழ்க்கை யுடையவர்களாகவும், திரிந்துகொண்டிருக்கும் இப்பூதஜாதிகளின் சிருஷ்டியில் பற்பல விதமான விஷயபோக வீசனங்களாலவதிப்படும் பிராணிகளின் துயரைப் பார்த்துச் சகல லோகங்களையும் சிருஷ்டித்து எல்லாத்துயரங்களையும் நீக்கும் சமர்த்துடைய அவர் மைந்தன் வசிட்டன் துயரைநோக்கி யிரங்கும் தந்தையைப்போலக் கருணையினால் இரங்கினர். ஆசையாற் கெடுக்கப்பட்டு அற்பஆயுளோடு கூடியிருக்கும் இவர்களுடைய துக்கத்தின் நீக்கத்தின் உபாயம் எஃதாமெனக் கண்ணப்போது ஒருமையோடு கூடிய மனத்தராய்ப் பூதியின் மகாசக்தியின் பொருட்டுச் சிந்தித்தனர். முதற்சுத்தி சாதனமாகச் சிருட்டித்தது யாதெனின், ஈசுவரரான அவர் இவ்வாறு இனிது சிந்தித்துச் சுயம்தவத்தையும் தருமத்தையும் தானத்தையும் சத்தியத்தையும் தீர்த்தங்களையுமே சிருஷ்டித்தனர், இவற்றைச் சிருஷ்டித்து மீண்டும் பிராணிகளைப் படைக்கும் பிரமதேவர் நம்மாற் சிருஷ்டிக்கப்பட்ட புருடர்கட்குத் தவமுதலியவற்றுனே வேறோடுந் துயரமாயவில்லையெனத் தாமே சிந்திப்பாராயினர். ஜீவன் எதனுன் மீண்டு பிறப்பதும் இறப்பதும் அற்றிருப்பதோ அத்தகைய பரமசுகவடிவ நிர்வாணபதம் ஞானத்தானே கிடைக்கும்; சமுசாரத்தைக் கடப்பதில் ஐந்துக்கட்கு உபாயம் ஞானமேயாம், தவந்தானந் தீர்த்தமுதலியவை உபாயங்களல்லவென, " நிரமா மருத்துத்தினுன் மைந்தரானுந் தீராது கருமத்தினுனும் " " மகவடிவான வங்கங்களாமிவை " புகுறிறமற்ற நிறத்தனவேயாம்; என்பதாதி சுருதிகளிற் கூறப்பட்டுள்ளன. ஆகையால் ஆண்டு துயரைத் தொலைக்கவேண்டித் தன்னேமறந்து திரியும் பிராணிக்கு நலமாய்த் திடமாயிருக்கும் தாண்டுமோபாயத்தை விரைவில் வெளிப்படுத்தா நிற்பேன். தாமரையின்கண் வீற்றிருக்கும் ஸ்ரீ பகவானுனை பிரஹ்மாவானவர் இவ்வாறு சிந்தித்து உன்னெதிரிலிருக்கு மிவ்வென்னை மனத்தினுற் சங்கற்பித் துண்டாக்கினர்; அசிர்வசநீய மாயையின் வயத்தினுலே யுபாதி யுற்பத்தியாயுண்டாய யான் விரைவில் அலையினிடத்தினின்றும் மீண்டோரலையுண்டாவதேபோல விரைவிற் பிதாவின் சங்கற்பியை லடைந்தேன் ஜபமாலையையும் கமண்டலத்தையும்

கையிற்றரித்திருக்கும் நாதராகிய பிரஹ்மாவானவர் ஜபமாலையோடுங் கமண்டலத்தோடு பிருக்கப்பட்ட என்னுல் வணக்கத்துடன் நமஸ்கரிக்கப்பட்டனர்.

(ச.) அழுங்கி = கருணை கூர்ந்து, உய்வான் = துக்க நிவிருத்தித்தற்கு உபாயம் யாதென்று கணகாலம் எகாக்கிரஞுய்ச் சிந்தித்துப்பின், பவந்தீரா = சம்சாரதுக்கம் எவ்வளவுஞ் சாந்தியாகாது, என்றே நிச்சயித்து, மனத்தளித்தான் = மனத்தாற் சங்கற் பித்துச் சிருஷ்டித்தான்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்வாறு அவதரித்த தங்கட்குற்றதுயாது உபதேசித்த தெங்ஙன் எனக் கூறுகின்ருர்:—வந்தென.

வந்திறைஞ்சு மென்னைத்தான் மகிழ்ந்து மேவும் வனசத்தின் வடபா லோர் மடன்மேல் வைத்தென், சிந்தைதனை நாழிகையோ ரிரண்டு மாயை சேர்கவெனச் சபித்தலுமே தியக்க முற்ற, புந்தியுடன் மெய்யுணர்வை மறந் தேன் கல்லாப் புல்லரைப்போற் புலம்புமெனைப் போதன் பார்த்து, வெந்துய ரென் னெனமாயை விளைந்த வாறும் வீடுறுமா றுங்கேட்டேன் விளங்கச் சொன்னன். (8)

(ப - ரை.) வந்திறைஞ்சு மென்னை = அவதரித்துவந்து நமஸ்கரித்து அபிவாத னஞ் செய்யும் என்றனை, தான்மகிழ்ந்து மேவும் = தாம் சந்தோஷத்துடன் வீற்றிருக் கும், வனசத்தின் வடபால் = தாமரையின் உத்தரபாகத்தி லிருக்கும், ஓர் மடன்மேல் வைத்து = ஒரு தளத்தின்பேரி லிருக்குமாறு வைத்து, என் சிந்தைதனை = எனதுள்ளத்தை, நாழிகையோரிரண்டு = முகூர்த்த மாத்திரம், மாயை சேர்கவென = அஞ்ஞானம் அடையும்படியாக, சபித்தலுமே = எண்ணியவுடன், தியக்கமுற்ற புந்தியுடன் = மயக் கத்தோடுற்ற மதியுடன், மெய்யுணர்வை மறந்தேன் = உண்மையறிவை மறந்தேன், கல்லாப் புல்லரைப்போல் புலம்புமெனை = படியாத மூடரைப்போலப் புலம்பாநின்ற என்றனை, போதன்பார்த்து = பிரஹ்மதேவர் நோக்கி, வெந்துயரென் என = மைந்த என் கொடுந்துய ரடைகின்றனை என வினவ, மாயை விளைந்தவாறும் = துக்கமய சமு சாரம் தொடங்கிய முறையும், வீடுறுமாறும் = தொலைபும் வண்ணமும், கேட்டேன் = வினவினேன், விளங்கச் சொன்னன் = அபரோக்ஷமாயறிய வருள்புரிந்தார். (9)

(ஸ்ரீ - வீர.) வந்து நமஸ்கரித்த வென்னைப் "ஹேமைந்த" வெனக்கூறித் தாமி ருக்கும் தாமரையின் வடதளத்தில் வெண்மேகம், சந்திரனை விடுவதேபோலத் திருக் கரத்தால் என்னையுட்காரப்போகச் சொன்னர். மான்ரூலைத் தரித்திருக்குந் தந்தையா மவர் மான்ரூலை வஸ்திரமாகவுடைய என்னைப் பார்த்து நல்லன்னமானது சாரசப் பக்ஷிக்குக் கூறியதுபோற் கூறியதாவது; ஹேமைந்த! நினதுமனதை ஒருமுகூர்த்தம் வரை சூரங்கைப்போலச் சஞ்சல ஹேதுவாய அஞ்ஞான மானது சந்திரனைக் களங்க மடைவது போலடைக. இவ்வாறு தந்தையால் விரைவிற் சபிக்கப்பட்டுப் பரமேஷ்டி யினுடைய சங்கற்பத்தின் பின்னர், அந்தோ ஆச்சரியம் பூர்ணநிர்மல சொரூபத்தை மறந்தனன்யான். பின்பொன்னைப் பறிகொடுத்தவன் போலத் தீனத்தன்மையை யடைந்தேன், போதமற்ற புந்தியோடு மிருந்தேன், தனமற்றவன் போலத் துக்கசோ கங்களாற் றபிக்கப் பட்டவனனேன். அந்தோ கஷ்டம்! சமுசாரமென்னு மித்தோடம் இங்கெங்ஙன மப்பாவந்தது, என இவ்வாறு சும்மாவே யாதொருதொழிலும் செய்யாம லிருந்து கொண்டுள்ளே சிந்தித்தனன்; பின்பென்பிதா என்னே நோக்கிக்குழந்தாய்! துயரமடைந்தனன் போலிருக்கின்ருயே அஃதென்னே துயரம் நீங்குமுபாயத்தைக்

கேட்பாயாக ! அதஞனித்தியம் சுகியாகவே யாவாயெனக் கூறினர். அதன்பின் சகல லோகங்களேயும் சிருஷ்டிக்கும் பிரஹ்மாவை வணங்கிப் பொற்றமைாத்தளத்தி லிருந்த யான் சமுசாரநோய்க்கு மருந்தை ஹேநாதரே ! மகாதுக்கமயமாகிய சமுசாரம் எங்ஙனம் வந்தது ? பிராணிகட்கிது எவ்வாறு நீங்கும் ? என வினவினேன், வினயியவளவில், எதையறிந்து தந்தையினுடைய சர்வ உற்கிருஷ்ட தத்துவஞானம்போல நிர்மலபரி பூர்ண இயற்கையஞ யிருந்தேனே அத்தகைய பரமபவித்திரமாகிய ஞானத்தை யந்தோ ஆச்சரியம் ! அதி விஸ்தாரமாக என்பொருட் டருளினர். சம்பிரதாயத்தானே கிடைத்த ஞானத்திற்கே மூத்தியீயுந் தன்மையாமன்றி மற்றவற்றிற் கின்றும் என்பதைக் காட்டும் பொருட்டும் பிரஹ்மவித்துக்கு லோகானுக்கிரகம் விட்டு வேறுசெய்யற்பாலது இல தாம் என்பதை யறிவித்தற் பொருட்டும், புருடார்த்த சித்தியின் கண்ணே பாரதவரு டத்திற்குப் பிறவற்றினும் சிறப்புளதாந் தன்மையைத் தெரிவித்தற் பொருட்டும், கூறுவார், கேட்டேன் என்றார்.

(ச.) வந்திறைஞ்சும் = சாஷ்டாங்கமாகப் பாதத்திற் றண்டம்போல வீழ்ந்து வணங்கி (பிரணமத்துடன்) க் கோத்திர நாமகீர்த்தன பூர்வகம் பாதக்கிரகணஞ் செய்யும் (அபிவாதனஞ் செய்யும்) மகிழ்ந்து = தத்துவ முபதேசித்தற் கிசைந்து (இச்சையுற்று) தான்மேவும்படிவைத்து. கேட்டற்குரிய அதிகாரியைச் சம்பாதித்தற்கு அவ்வதிகாரியைப் பொருந்தும் அஞ்ஞானத்தை இப்போது கற்பித்தல்:—என் சிந்தையென. வெந்துயரென் = புத்திரனே நீ துக்கியா யிருப்பதென்ன ? துக்கியாயிருக்கும் நீ என்னைக் கேட்கிற்சதா சுகியாகுவையென். மாயை = மகாதுக்கமயமான சம்சாரம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ வசிஷ்டபகவானைப் பிரார்த்துப் பிரஹமதேவர் செய்ய வேண்டிய பணிவிடையைக் கட்டளேயிடல்:—ஆன்மாவென.

ஆன்மாவை யறிந்தலேவற் றிருந்த வென்னை யயன் பார்த்து நாமேநின் னறிவை மாற்றி, யூன்மாயை பின்பொழித்தே முயிரெலாநின் னுபதேசம் பெற்றுய்ய வுபாயஞ் செய்தோ, மேன்மாயும் வினைநிறைந்த சம்புத்தீவின் மேவியபா ரதவருடம் விரைவின்மேவித், தான்மாளாக் கிரியினர்க்குக் கிரியை சாற்றிச் சாதனமூள் ளோர்க் குணர்வைச் சாற்று கென்றான். (9)

(ப - ரை.) ஆன்மாவையறிந் தலேவற்றிருந்த என்னை = அறியவேண்டிய ஆத்ம சொரூபத்தை யுணர்ந்து யதார்த்தநிலையிற் சஞ்சலமில்லாம லிருந்த என்றனை, அயன் பார்த்து = பிறப்பற்ற பிரஹ்மதேவர் நோக்கி, நாமே நின்னறிவை மாற்றி = உன்னுடைய பிரஞ்ஞையை மாறுபடித்தி, ஊன்மாயை பின்பொழித்தேம் = தேகாதிமாயையை உணர் வுதித்தபின்னர் நீங்கும்படி செய்தோம், உயிரெலாம் = ஜீவர்களெல்லாம், நின்னுபதேசம் பெற்றுய்ய = உன்னுடைய அனுக்கிரகத்தை யடைந்து பவங் கடப்ப, உபாயஞ் செய்தோம் = உபாயத்தை யியற்றினேம், மேன்மாயும் வினைநிறைந்த சம்புத்தீவில் = மேலும் மேலும் இறந்து பிறந்துழலுவதற் கேதுவான கருமங்களேச் செய்துகொண்டிருக்கும் பிரஜைகணிறைந்த உப்புக்கடல் சூழ்ந்த தீவில், மேவிய பாரத வருடம் = சிறப்பாக விருக்கும் பாரதகண்டத்தை, விரைவின்மேவி = அதிசிக்கிரமாக அடைந்து, தான் மாளாக் கிரியினர்க்கு = தன்னே யறிந்துகொள்ளும் வகையின்றித் தொழிற்படும் மக்கட்கு, கிரியைசாற்றி = கருமகாண்டத்தை யுபதேசித்தும், சாதனமுள்ளோர்க்கு = நான்கு சாதனங்களேயு முடைய அதிகாரிகட்கு, உணர்வை = பிரஹ்மவித்தையை, சாற்றுகென்றான் = உபதேசித்தும் விளங்குவாயாக என்றருளினர்.

(ஸ்ரீ - வீர.) அருளியபிறகு அறியவேண்டியதை யறிந்து உண்மையான இயற்கை நிலையி லிளைப்பாறும் என்னைநோக்கி அந்த உலககர்த்தாவாயும் ஆசிரியராயும் இருக்குந் தந்தையாகிய பிரஹ்மதேவர் சகலகாரணத்தையும் கூறியருளினர். சாபத்தால் அஞ்ஞ பதத்தையடைந்து ஹேமைந்த ! இந்த ஞானத்தினது சாரத்தை எல்லா அதிகாரிகட்கும் ஞானஞ் சித்திக்கும் பொருட்டு நீ வினவுமாறு யாமேசெய்தனம்; இப்போது நீசாபந் தீர்ந்தவனாகி, கனகம் நெடுங்காலம் களங்கப்பற்றுற் கனகமல்லாததே போலடைந்து மீண்டும் புடம்போடலானே மூதற்போதிருந்த சுத்தகனகத் தன்மையதாகவே யிருப் பதேபோலப் பரமஞானத்தை யடைந்து அகண்டானந்த ஆன்மவடிவமா யெம்போல இருக்கின்றனை. இப்போது உலகத்திற் கனுக்கிரகிக்க வேண்டிய காரணம் பற்றிப் பூமி யின்மீது சம்புத்தீவின்கண் ணிருக்கும் பாரதவருடத்திற்கு நீசெல்வாயாக. ஆண்டு, மகாமதியையுடைய நீ முறையே செல்பவனுதலின் கருமகாண்ட தற்பரர்கட்குக் கிரியா காண்ட முறையாகவே உபதேசம் புரிவாயாக, இவ்வாறே "விஷ்ணுமாயை வெண்மை பிக்கார்த, மூளமயலியற்ற லுரித்தன்றுமால்" என்னும் நியாயமுமுளதாம்; விரக்தமனத்தரும் சூக்குமப் பொருளாக்கவருஞ் சமர்த்தரும், மிகஆராய்ச்சியோடு கூடிய வரும் ஆய அதிகாரிகட்கு நீ ஆனந்தத்தைக் கொடுக்கும் ஞானத்தை யுபதேசிப்பாயாக.

(ச.) ஸ்ரீ பிரமதேவர் சகலகாரணமுங் கூறல்:—சுகியாயிருந்த நாமே சாபத்தால் நின்னறிவைமாற்றி = அஞ்ஞனாய் வினவும் அதிகாரியாக்கி, பின்சாப நிவிர்த்திசெய்து, ஊன்மாயை யொழித்தேம், உயிர்—பெற்று = ஞானசாரஞ் சித்தித்து, உய்ய—தோம், இப்போது பரமபோதப் பிராப்தனான நீ, மேன்மையும்—வருடம், உலக அனுக்கிரக ஹேதுவால், விரைசென்றனை; கன்மபரர்க்குக் கன்மயோகத்தையும், விரக்தராய பிராஞ் ஞருக்கு ஞானயோகத்தையும் உபதேசிக்க வேண்டுமென்பது கருத்து. (9)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கற்பபரியந்தம் கருமபூமியி லிருக்கவேண்டியதானது, குரு வாக்கியத்தைப் பரிபாலனஞ்செய்யுந் தங்கட்கு உலக அனுக்கிரகப் பொருட்டே கேவ லம் ஆவதில்லை, மற்றே செய்யவேண்டியதின் சேடமும் செய்தற்பொருட்டுமாம் என்னு சங்கிப்ப விடைதருகின்றார்:—அவனென.

அவனுரைப்ப வந்துயிர்க ளுளநா ளெல்லா மாகுவனிங் கொருசெயலு மாசையில்லை, யிவணிருந்து சுழுத்தியுறு செய்கையாலே யிடர்மனத்தைக் கட ந்துசெயல் யாவுஞ் செய்கேன், கவருறுமென் செயலொன்று மில்லைவீர கலை நிறைவும் பேதைமையுங் கருமத்தாலே, விவரமதா யாராய்ந்து மேன்மையான மெய்க்குருவைக் கொண்டுணர்வோர் மேதை மிக்கோர். (10)

(ப - ரை.) அவனுரைப்ப = பிரஹ்மதேவராகிய பிதா எவியருள, வந்து = இவ ணுற்று, உயிர்கள் உள நாளெல்லாம் = ஜீவர்களின் பரம்பரை வாழுங் காலபரியந்தம், ஆகுவன் = அனுக்கிரகஞ் செய்துகொண் டிருப்பேன், இங்கொருசெயலு மாசை யில்லை = ஈண்டு இதுசெய்து தீரவேண்டு மென்பதாக யாதொன்றினு மிச்சைகிடை யாது, இவணிருந்து = நிராசையுட னிங்கிருந்துகொண்டு, சுழுத்தியுறு செய்கையாலே = நித்திரை மிகுந்திருந்தவன் செய்கையை யனுசரித்து, இடர்மனத்தைக் கடந்து = துயர் செய்யும் உள்ளத்தையடக்கி; செயல்யாவுஞ் செய்கேன் = சருவகாரியங்களையுஞ் செய்யா நிற்பேன், கவருறும் என்செய லொன்றும் இல்லை = சுதந்திரமாய்ச் செய்யும்படியான எனது கர்த்தவ்ய மியாதொன்றையுமே காண்கிலேன், வீர = போகாதி பகைசாய்ப் பதில் வீரியமிகுந்த குழந்தாய்!, கலை நிறைவும் = சாஸ்திரஜன்னிய பூரணவுணர்வும்,

பேதைமையும் = அறியாமையும், இருப்பதை, கருமத்தாலே = காரியத்தாலே, விவரமதா யாராய்ந்து = நன்முக நிர்ணயித்து, மேன்மையான மெய்க்குருவை = பிரஹ்ம நிஷ்டையும் அசேஷசாஸ்திர பாண்டித்தியமு மடைந்துள்ள உண்மையான ஞானஸிரியரை, கொண்டு = சேவையாற் சந்தோஷிப்பித்து உணர்வோர் = அனுக்கிரகம் பெற்றறிவோர், மேதைமிக்கோர் = மகாமதியை யுடையவராவார். (10)

(ஸ்ரீ - வீர.) மனத்தைக் கடத்தல் = அதிமனன் ஆதலாம், அதிக்கிராந்த மனன் ஆதலாம், வெற்றிகொண்ட மனனுதலாம் மகாமனத்தனுதலாம். தூர்மனன் ஆகாதிருத்தலெனினுமாம், அஞ்ஞரைப் போலத் தங்களுக்கும் காரியங்களில் பிரவிருத்தி காணப்படுதலின், எங்ஙனம் தாங்கள் கிருத கிருத்தியராக முடியும் எனின் விடைதருவார், சுழுத்தியென்றார்; பரமசார்தமாய் இஷ்டம் அநிஷ்டம் எய்துங்காலத்தில் மகிழ்ச்சி வாட்டமற்று எப்போதும் துயின்ற பிரஞ்ஞையுடைய விருத்தியானே நிகழ்ந்து. பரமார்த்த நிருஷ்டியால் பிராதிபாசிக நிருஷ்டியால் காரியத்தைச் செய்துகொண்டிருப்பேன், அங்ஙனிருத்தலான் பாரமார்த்திக நிருஷ்டியால் அஃதொன்று மின்றென்பார், செயலொன்று மில்லையென்றார். பிரஞ்ஞை துயிலுதலாவது, சத்திய அத்வைத விஷயத் தன்மையை யுடைத்தா யிருத்தலாம், இவ்விடயம் ஸ்ரீ உபதேச சகஸ்ரியிலும் ஸ்ரீ மதாசாரிய சுவாமிகளாலும் அறையப் பெற்றுளது.—துவிதத்திற்குப் பாதிதத்தன்மை யுண்மையின் யாவன் நனவின்கட் டுவித்தத்தைக் கண்டுங் கண்டிலனே துயில்பவனுப்போலொன்றுங்காணாது, அறிவாகவே காண்கின்றனனே அங்ஙனமாக யாவன்பயிக்காதி செய்யினும் நிஷ்கிரியனே அவனே ஆத்மவித்தாம் அன்னியனன்றென நிகமாந்தங்களில் நின்மல நிச்சயமாம், மேன்மிழற்றிய ஆன்மவித்தின் சொரூபங் கூறுவார். துயில்பவனென்றார். நனவின்கண் = விசுவ அவஸ்தையின் கண், துவிதத்தை = துவைதப் பிரபஞ்சத்தை முன்வாசனை வயத்தாற் கண்டும் = விவகரித்தும், விசேடமாகக் கண்டிலன் = விவகரித்திலன். மற்றே, துயில்பவனைப்போல, எல்லாவுலகங்களையும் பிரத்தியக்காத்மாவில் இலயஞ்செய்து தான்மாத்திரமே யிருப்பதாகக் காண்பன். அதன் கண்ணேது வறைகின்றார்:—துவிதத்திற்கென. அத்வயத் தன்மையிலுனே யென்பதாம். அங்ஙனமே முன்போலவே முழுக்கு சௌச பிரஷாடனாதி செய்தபோதினும், நிஷ்கிரியனுவன் = நிர்விகாரனுவன் அகர்த்தாத்ம சுபாவ ஆவிர்ப்பாவத்தானென்க. யாவன் இவ்விதனே அவனே ஆத்மவித்தாவன். விசேஷபதசையின் மாட்டும் நழுவாத ஆன்ம உண்மைத் தரிசனமுடைமையான் பிரஹ்மவித்துக்களி லுத்தமன் இவனேயாவன்; அன்னியனல்லன், சாஸ்திரார்த்தங்களே யுணர்ந்தவனேனும் யாவன் விவகாரகாலத்தில் அறியப்பெற்றதாந் தன்மை செய்யப்பெற்றதாந் தன்மை முதலிய அபிமானவானுவன் அவனல்லன், என்றிவ்வண்ணம் வேதாந்த சாஸ்திரங்களில் விசேடமாக நிச்சயிக்கப்பட்டுளதாம். மேலும், யானென்னும் ஆத்மபுத்தியும் எனதென்னும் ஆத்மீய புத்தியும் எவனுக்கெக்காலும் பிரயோஜன மற்றவாமோ அவனக்காலாத்ம வித்தாவன். மமதையற்றதாய் அகங்காரமற்றதாயுள்ள ஆத்மாவை யாவன் நன்குணர்வானே அவனே தத்துவதரிசியாவன் என முன்பருளியதை வெளிப்படை யாக்கிக்கொண்டு ஆன்மாவை யறிந்தவனுடைய இலக்கண மியம்புவார். யானென்றார். சாஸ்திர ஆசாரிய அனுக்கிரகம் பெற்ற பதார்த்த மிரண்டன் விவேகமுடைய யாவனுக்கு யான் எனதென்பதான ஆத்ம ஆத்மீய விடய ஞானங்கள் பயனற்றனவாக எக்காலாமோ அதாவது அவற்றாலுண்டாக்கப்பட்ட விவகார ஹீனனுகப் புமான் எப்போதாவனே, அப்போது அவன் ஆத்மவித்தாவன்; தேகாதிகளிலும் அவற்றின் அனுபந்தத்திலும் விவகார காலத்திலும் முன்போல வஸ்

துத்தன்மையனவாக விவகாரம் புரியாமல், அவ்விவகாரத்தும் ஆன்மா மாத்திரத்தைத் தரிசித்துக்கொண் டிருப்பவனே நல்ல ஆன்மவித்தாவன் என்பதாம். அவ்வாறே "யாதொரு பொருளே யெல்லாவுயிர்களுமென்றுங் காண்பார், காதலின் ஞானியத்தைக் கண்ணினுஞ் தெரியக்காணுன்" என்னும் ஸ்ரீ பகவத் வசனமுமுளதாம். இவ்வண்ணம் எக்காரணத்தாற் கூறப்பெற்ற தென்ப தாதி விஞவிடைகளேக்கூறிப் பிரசங்கத்தால் வந்த சிலவுற்றையுங் கூறித் தேங்கமலத் தயனுரைத்த மொழிகேள் என்னும் வாக்கியத் தானே அபிமுகீபூதமான ஸ்ரீ இராமர் பொருட்டு உபாயத்தோடுகூட ஞானத்தை உபதேசிக்க விழைந்தவராய் விசிஷ்ட வினவுவான் விளம்புவான் என்னும் நம்பிருவர் சம்வாதம் அவசியம் பலத்தின் பொருட்டே கற்பிக்கப்பெறும் எனக்காண்பித்தற் பொருட்டு வினவுவோனேயும் விளம்புவோனேயும் கூறுவார், கலிறைவு மென்றார். இவ்வாறு தாமரையிலுதித்த தந்தையின் ஆணையைப் பற்றியான் அதிகாரிகளின் பிரவாக மிருக்கும்வரை யிருப்பவனு யிருக்கின்றேன். செய்யத்தக்க தொழிலின்பயன் எனக்கீண்டு ஒரு சிறிதுமே கிடையாது, இருக்கவேண்டியதற்காக மனமற்றவனுகிப் புவியின் கண்ணே யிருக்கின்றேன். அதனுனே எப்போதும் உறங்குவதேபோல அபிமானமற்ற விருத்தியாற் கிடைத்து கிகழ்கின்றபடி காரியத்தைச் செய்கின்றனன்.மிகச்சாந்தியோடு கூடிய விருத்தியினுனே வாழ்கின்றேன், எப்போதும் சமூசாரத்தி லுறங்கும் அஞ்ஞர்களது புத்தியினுனே காரியத்தைச் செய்விக்கின்றேனேயன்றி என் மதியைக் கொடுத்து ஒருகாரியமும் செய்வதே கிடையாது. ஆரிய நிலக்கணமறைவார், வீர, என்றார். தத்துவத்தை யுணர்ந்திருக்குந் தன்மையையும் உணராத தன்மையையும் முன்னருபதேசகாலத்தில் விவகாரக் குறியினுலே நிர்ணயித்து சுக்ரன் வினவுகின்றனனே அவ்வினவுவோன் மிகவும் மதிமானுவான்.

(ச.) இவண் இருக்கவேண்டு மென்பதின்றி யிருத்தும், சுழுத்தியுறு செய்கையாலே = சந்ததம்பாகிய அனுசந்தானம் இன்மையினுலே நிர்விகார விருத்தியால், இடர்—இல்லே, எனக்குச் செய்யவேண்டுவ தொன்றுமின்று, யானுன்றுஞ் செய்திலனுதலாற் கன்மங்களாற் சலியேனென்ப தாயிற்று; கருமபலன்கள் பற்றுறுவென்பதையு முணர்க, இங்ஙனந்தனக்கு ஞானுபதேசாதிகார நிரூபித்துக் கேட்போர் இலக்கணமுன்புகன்று பின்மோக்ஷவுபாயங் கூறுவார், வீர, என்றார். ஹே வீரராகவ! அல்லது வீர = உபதேசிப்பவரது, கலேயாராய்ந்து = முன்பு நிர்ணயித்துப் பின்பு, மேன்—மேதைபிக்கோர்= மகாமதியுடையர்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அதிகாரியின் இலக்கணமும் வீட்டின் வாயிற்காவலரையும் கூறுகின்றார்:—ஒதுகின்றவென.

ஒதுகின்ற பொருண் முழுதுமுன்பின் கூட்டியுணர்பவர்க் கல்லது பசுவை யொப்போர்க் கெல்லாந், தீதகன்ற குருவுண்மை செப்பாரன்றே திகழ்சாந்தி விசாரமொடு செறிசந் தோடஞ், சாதுசங்க மெனவீட்டின் வாயில்காக்குஞ் சதுட்டயரு முறவாகிற் றடைலே றுண்டோ, மேதினிகாவலர் மனையிற் கடைகாப்பாளர் விடுவதுபோல் வீட்டிலவர் விடுவரன்றே. (11)

(ப - பை.) ஒதுகின்ற பொருண்முழுதும் = உபதேசமுகமாகச் சிரவணித்த சகல பதார்த்தங்களேயும், முன்பின் கூட்டி யுணர்பவர்க் கல்லது = பூர்வாபர சமாதானசாமர்த்திய மதியையுடைத்தாகி யுணர்ந்துகொள்ளு பவர்க்கல்லாமல், பசுவையொப்போர்க் கெல்லாம் = பசுதர்மத்தையுடைய அதமர்த்தமக்கு, தீதகன்ற குரு உண்மை செப்பார்=

குற்றமற்ற குருதத்துவத்தை யுபதேசியார், அன்றே = இஃதுண்மையே யல்லவா! திகழ் சாந்தி விசாரமொடு செறிசந்தோடஞ் சாதுசங்கம் = சாதனமாக விளங்கும் சாந்தி விசாரம் சந்தோடம் சாதுசங்கம், என = என்றுபெரியோராற் கூறப்பட்ட, வீட்டின் வாயில் காக்குஞ் சதுட்டயரும் =. மோக்ஷத்தின் துவாரத்தைக் காத்துக் கொண்டிருக்கும் நால்வரும், உறவாகில் = நேசித்தணுகில், தடைவேறுண்டோ = புகுதற்கிடை யூறுவேறுளதோ, இன்றும், மேதினிகாவலர் மனையில் = பூபாலரது அரண்மனையில், கடைகாப்பாளர் = வாயிற்காவலாளர், விடுவதுபோல் = உள்ளே விடுவதையொப்ப, வீட்டில் = மோக்ஷத்தில், அவர்விடுவர் = அந்நால்வரும் விடாநிற்பர், அன்று, ஏ, அசைநிலைகள். (11)

(ஸ்ரீ - வீர.) முன்பின்கூட்டி யுணர்தலாவது, குருவினுலே பூர்வாபர வாக்கியார்த்த சுருதிகள் சேர்க்கையின்றி வைத்தவழி அதன் சமாதானத்திற் சாமர்த்திய மூடைய மதியுடைத்தாதலாம், ஈண்டுப் பூர்வாபர சமாதான சாமர்த்தியபுத்திக்கே புகலுக, அதிந்தனைய சீடனுக்கே மொழிந்திடுக, வினவுவோனுக்கே விளம்பிடுக, என்னுமிவை நியமமாம். சம்வாதசாபல்லிய முணர்த்தற் பொருட்டுக் கேட்போன் கிளத்துவோன் வடிவ ஆக்கியாயையாதிகளில் முமுக்ஷுத்வத்தை மொழிவார், திகழ் என்றார். ஒழுசெறியென்பன, ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்றலேயும் ஒன்றற்கொன்று சாதகமாதலேயும் ஒன்றையடையினும் மற்றவை யுறவாதலேயும் உணர்த்தியவாறு காண்க. முன்பின் கூறியவற்றையும் கூறுதவற்றையும் பகுத்துணர்வதில் ஆற்றலுடைய மதியையுடையஞ்ப் புகழத்தக்கவ ஞனவனுக்குப் பிராஞ்ஞன் வினவியதைக் கூறவேண்டும், பசுதரு மத்தோடுற்ற அதருமத்தினனுக் கறையொணுதாம். "இருளுமவித்தையி னிடையிற் பட்டே, மருளுந்தாமே தீர்பண்டிதர், தெருளரெனவே தேரித்திரிபவர், உருளுங்கோணல் வழிபலவுலவிப், பொருளறு துயரைப் பொருந்துவர் அறிவிலர், வெருளுங்குருடனுற் கொடுபோங் குருடர்கள், சுருதியை யனுசரித்து அநாரியனைத் தியாகிக்க வேண்டும். மோக்ஷத் துவாரத்தில், சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கமம் என நான்கு துவாரபாலர்கள் கூறப்படுவர்கள். இந்நால்வரும் முயல்வினுனே சேவிக்கத் தக்கவர்களாவர்கள். முடியாவிடின் மூவரைச் சேவிக்கவேண்டும், அதுவு முடியாவிடின் இருவரை யேனுஞ் சேவிக்கவேண்டும், சேவிக்கின் மோக்ஷராஜக் கிருகத்தில் இவர்கள் கதவுதிறந்து விடுவார்கள்.

(ச.) சதுட்டயருளர் அவரில் மூவர் இருவர் ஒருவர் உறவாயினும் வீட்டில் விடுவர் சதுட்டயரும், கடைகாப்பாளர் வகேரமாயின் விடுவர், அன்றேற் பிரதிபந்திப்பர் அதுபோற் சாந்தியாதிகளும் ஆமென்பதாம். (11)

(ஸ்ரீ - வீர - அ - கை) அந்த நால்வருள் ஒருவரையேனும் பற்றவேண்டு மென்பதையும் அதற்கேதுவாம் பிரஞ்ஞையை வளர்க்கவேண்டு மென்பதையும் வற்புறுத்தல்:—அந்நால்வரென.

அந்நால்வர் தமிலொருவ ரன்பா னுலு மனைவருமொத் தன்பாவ ராதலாலே, பன்னுரு மிகமுயன்று யாது நீத்தும் பற்றியொரு வரையேனும் பழக வேண்டு, மன்னுத பிறப்பறுக்க நல்லோர் நன்னூன் மாதவத்தா லறிவைமுதல் வளர்க்க வேண்டு, மின்னுத மாயையெனு நஞ்சம் போத மென்கின்ற காருடமந் திரத்தான் மீளும். (12)

(ப - ரை.) அந் நால்வர்தமில் ஒருவர் = அந்த நான்குபெயருள் ஏகர், அன்பாஞ ஹும் = நேயமாயினும், அனைவரும் ஒத்தன் பாவர் = நால்வரும் ஒருமித்த நேயமாவர், ஆதலாலே = ஆகையினாலே, பன்னூலும் = பலகாலமும், மிகமுயன்று = பெரும் பிரயத்தினஞ் செய்தும், யாதுநீத்தும் = எதனைத் தியாகஞ் செய்யவேண்டு மானாலும்செய்தும், பற்றி யொருவரை யேனும் = ஒருவரையேனும் பின்பற்றி, பழகவேண்டும் = நேயஞ்செய்து கொள்ள வேண்டும், மன்னுத பிறப்பறுக்க = அநித்தியமாகிய சனன மரண சமுசாரத்தைக் கெடுக்க, நல்லோர் = சற்புருடர், நன்னூல் = சற்சாஸ்திரம், மாதவத்தால் = மகாதவம் முதலியவற்றால், அறிவை = பிரஞ்ஞையை, முதல்வளர்க்க வேண்டும் = ஆதியில் விருத்திசெய்ய வேண்டும், இன்னுத மாயையெனும் நஞ்சம் = துயரைத் தருவதான சமுசாரமெனும் விடம்; போதமென்கின்ற காருட மந்திரத்தான் மீளும் = ஞான மென்னப்பட்ட காருடதேவதா சம்பந்த மந்திரத்தினாலே தொலைந் தபோம்.

(ஸ்ரீ - வீர.) மிகவளர்ந்த பிரஞ்ஞையாலே என்னுமென்னின் இயம்புவார், இன்னுத வென்றூர். சகிக்க முடியாத துயரைத்தரும் சமுசாரமேயாய விடவேகத்தால் உற்பன்ன மாய விடிசிகையென்னும் ரோகம்; போதம்=பிரஹ்மாத்மைக்கிய விஞ்ஞானம், அதுவே காருடமந்திரம், அதனாலகலும் என்பதாம். போதம் = யோகம், போதமே யோக சப்தார்த்தமாம், என்னே, ஆசிரியரிடத்துச் சிரவணித்துச் சகபாடிகளோடு சாஸ்திரவிசாரஞ்செய்தலானே பரமார்த்த ஞானமய (மந்திர) மாகிய அவ்வியோகம் அவசியங்கிடைத்துப் பலத்தையுங் கொடுக்கும், என்னும் பெரிய வாசிட்டத்துள்ள இச்சுலோகத்திற் கடுத்த சுலோகத்தால் அறியப் பெறுதலினென்க. சம்சார ரோகத்தைக் கெடுக்கும் திடப் பிரஞ்ஞையின் பொருட்டுச் சமாதிகளோடு கூடி, ஆன்மாவை யாராய வேண்டும் எனக் கூறப்பெற்றது. எல்லா முயற்சிகளானும் பிராணனே விடுத்தேனும் மென்றது (முயற்சியி னுதரவி னதிசயத்தைக் காண்பிக்கும் பொருட்டாம்) ஒருவனே யேனும் நன்குபற்ற வேண்டும், ஒருவன் வயப்பட்டானுயின், நால்வருமே வயப் பட்டவர்களாவர்கள். சமுசாரத்தை விடற்பொருட்டு முதலில் நூல் நல்லோருறவு களின் வாயிலாகவாம் தவத்தோடு கூடிய சமதமங்களால் விவேகத்தைக் கவர்ந்து வைத்துக்கொள்ளும் ஆற்றலுடைய மதியையே நன்குவளர்த்தல் வேண்டும், அதன் வளர்ச்சியின் கண்ணும் இந்நூற் பரிசீலனமே யுபாயமாம். சிறிது சீர்படுத்திய மதியினனே இந்நூலை நன்காராயின் இதுவே யதிகாரியின் அஞ்ஞானத்தைப் பரமகாசஞ் செய்யும். "பேதிக்கு மிருதயப் பெருங்கிரந்திகடாம், சேதிக்கப்படுமாற் செறியைய மெல்லாம், வாதிக்குமிவனது கருமங்கண் மாயும், ஆதிக்கரியப்பரா வரமறியினே" என்பதாக அறையும் மறையால், சகிக்கமுடியாத சமுசார விஷசம்பந்தத்தாற் பிரவேகித்த விடிசிகை வியாதியானது, ஜீவப்பிரஹ்மைக்கிய ஞானமாகிய காருடமந்திரத்தானே விட சோதனஞ் செய்யவே தீர்ந்துவிடும்.

(ச.) சமாதிகளின் மத்தியில் ஒன்று வயமாகியவழி அதனை யனுசரித்துப் பிறவும் வசமாம் ஆகலின் ஒன்றையேனும் அகப்படுத்த வேண்டும். ஆயின் சாங்கியாதிகள் யாவையென அபேக்ஷாவரச் சாங்கியாதிகளே நிரூபிப்பவராய் அவற்றின் மூலரூபமான பிரஞ்ஞையைக் கூறுவார் மன்னுதவென்றூர். மன்னுத—மாதவத்தால், தமையாதி மகாதவங்களினாலும், அறிவை = பிரஞ்ஞையையே சம்சார நிவிர்த்தி நிமித்தம், வளர்க்க வேண்டும். நினைப்பு, அதீத விடயமுடையது ; மதி, ஆகாமிகோசரம்; புத்தி, தாற்காலிக முடையதென் றறியவும் ; பிரஞ்ஞை, திரிகாலத்திலும் உள்ளதென்று மதிக்கப்படு

மென்பது பிரஞ்ஞை இலக்ஷணம். பிரஞ்ஞையும் யோகமும் மோக்ஷ உபாய மென்பார் போதமென்றார். சமுசாரமே விடவேகஜன்னிய விடுதிகையாம், துயரமிகுந்த பிரவிருத்தி ரூபமாதலின் ; அத்தகைய அதுகருடமந்திர தில்லியமாகிய பாவனபவன நிரோத சன்னியமான யோகமென்னுஞ் சித்தவிருத்தி நிரோதத்தாற்றீரும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலும் புகன்ற விட விடுதிகையையே விரித்துரைக்கின்றார்:—கூறியவகையே இப்போது ஆன்மாவை ஆராயாதவனுக்கு நிரதிசய துக்கம் உண்டென்கின்றார்:—சரமழையென.

(ச - அ - கை.) சொல்லப்பட்ட உபாயங்களாற் சம்சார நிவிர்த்தி செய்யாவிடின் அதனாலுந் தோடத்தைக் கூறுகின்றார்:—சரமழையென.

சரமழைக ணெய்தன் மலர் மழையை யொக்குந் தழற்பள்ளி பனிநீரிற் சயன மொக்குஞ், சிரமரிதற் சுகமுறுநித் திரையை யொக்குந் தேகமரி வது கலவைச் செறிபூச் சொக்கும், நிரவதிக நாராச மருமம் பாய்த னெடுங் கோடைச் சிவிறியினன் னீரை யொக்கும், விரவரிய விடயமெனும் விடவி டுதி விவேகமிகுத் தவர்க்கல்லால் விலக்கொ ணாதே. (13)

(ப - ரை.) சரமழைகள் நெய்தன்மலர் மழையையொக்கும் = ஆயுதவர்ஷங்கள் குவளைமலர் வருஷம் போன்றும், தழற்பள்ளி = அக்கினிசயனம், பனிநீரிற்சயனமொக்கும் = பனிநீர் பரப்பிய சயனம்போன்றும், சிரமரிதல் = கழுத்தரிதல், சுகமுறு நித்திரையை யொக்கும் = ஆனந்தமேலிடும் தூக்கத்திற் கொப்பாம், தேகமரிவது = அங்கத்தைச் சேதிப்பது, கலவைச்செறி பூச்சொக்கும் = சந்தனக்குழம்பைப் பூசிக்கொள்வது போலவாம், நிரவதிக நாராசம் மருமம்பாய்தல் = அளவற்ற நாராசங்கள் மருமஸ்தலங்களிற் பாய்தல், நெடுங்கோடைச் சிவிறியின் நல்நீரை யொக்கும்= பெருங்கோடைகாலத்தில், வெப்ப விநோதன தாரைக்கிருகம் வீசும் சுகந்தத்தண்ணீர் போன்றிருக்கும், விரவரிய விடயமெனும் விடவிடுதி = நீண்டுதற்குக்கூடாத விடயமாகிய விடமய விடுதிகை, விவேகமிகுத்தவர்க் கல்லால் = அதிக விவேகிகட்கே யல்லாமல் மற்றையர் கட்கு, விலக்கொணாதாம் = விலக்க முடியாததேயாம். (13)

(ஸ்ரீ - வீர.) விடயமே விடமவிட விடுதிகையாம். இதற்குச் சிகிச்சை செய்யாதிருப்பின், நிரந்தரம் நரகங்களேயாய நகரங்களின் சமுதாய மேயாய பயன்களுக்கொடுத்துக்கொண்டே யிருக்கும், அவற்றுற் றுயரத்தை யீந்துகொண்டே யிருக்கும். அவையென்ன துக்கத்தைச் செய்யும் எனவினவ விடைதருவார் சரமென. விடயவிடமவிட விடுதிகையா லுளதாய எத்துயரைக்குறித்து, சிலகளையும் பிளக்கும் தேஜசோடுகூடிய வாளாயுதங்கள் கோடிகூடித்தாக்கின் அங்கங்களில் அது உற்பல தாடனமொக்குமோ, எவ்வன்னியின்றீம் சரீரத்தில் பனிநீர்பெய்த லொக்குமோ; அவயவங்களைத் துண்டித்தலோ சந்தன லேபனமாமோ; சர்வலோகமய பாணங்களாகிய நாராசங்கள் பாய்தலோ, வெப்பம் விலகற்பொருட்டு யந்திரமேவிய நீர்த்தாரையுள்ள கொடிவீட்டில் பெய்யும் சிறு நீர்த்துளிகளை யொக்குமோ; அத்தகைய பெருந்துயராம். சரமழைகண் முதலியவை பெருந்துயரங்கட்குக் காரணங்களாக இருந்தபோதினும் எத்துயரைக் குறித்து நோக்குங்கால் சுக ஏதுக்களாக வழங்கப் படுகின்றனவோ, அத்தகைய நிரதிசய துக்கத்தை விடயவிடம விடவிடுதிகை உண்டுபண்ணும் என்பதாம். இவ்வண்ணமாதலின் விடய ரோக சிகிச்சையில் மிகவும் முயலவேண்டு மென்பார் விவேகமென்றார். அலகுயமாக

வினோயாட்டாக விவேக மிருத்தவர்க்கு விலருமென்க. நரகம்போன்று மலமூத்திரங்க ளின் நகரம்போன்ற சரீரங்களிடத்திலும் அவற்றினுறவினர் அன்னபானாதி வர்க்கமுத லிய சமுதாயங்களிடத்திலும் ஆசைவைத்தலானே புருடனைப் பந்தப்படுத்தும். இயற் கையனவாய விடயவடிவ விடவிதிகைகளாமிவை அந்தோ! மூடிபின்றியவையாம்; இவைகளைச் சிதைசைசெய்து மாற்றுவிடின் நிரந்தரம் மேற்கூறப்படும் ஆயிரக்கணக் கான அவ்வந்நரக துர்த்தசைகளையே கொடுக்கும். அவைகளாவன:—கற்களாத்தின் னல், வாட்களால் வெட்டுண்டல், மலைச்சிகரங்களி னின்றும் உருளல், கற்கனங்களா லடிபடல், அக்கினியாற் ருகமுறல், பனியாலெப்போதும் கூனைந்திருத்தல், கோடாரி கத்திரி முதலியவற்ருல் சரீரங்கள் சேதிக்கப்படல் (பிளக்கப்படல்) சிலப்பலகைகளில் உடல்கள் சந்தனக் கட்டையைப்போற் றேய்தல், வாளிலைமரங்கணிறைந்த வனத்திடை யோடல், காஷ்டத்துள் விருக்கும் புழுக்கட்கேபோல அங்கமுழுதும் காஷ்டயந்திரத் தாற் றுன்புறல், பழுக்கக் காயவைத்த இரும்புமுட்சங்கிலியினுலே சுற்றுண்ணல், மூட்டு டைப்பங்களால் அங்கமுழுவதும் தோலெழும்பும்படி துடைக்கப்படல்; எப்போதும் அக் கினிச் சுவாலைகளைக் கக்கும் போரிற்பொழியா நின்ற பாணங்களின் முரையிடைவிடாது தைக்கப்பெறல், நிழல் நீர்குடித்தல் இடைக்கப்பெருமல் உஷ்ணகாலங் கழிக்கப்பெறல்; அவ்வாறே சீதகாலத்தில் நீருள்நிறுத்தி நீரைத்தாரையாகப் பொழியப் பெறல், வெட்ட வெட்ட உண்டாகிக் கொண்டிருக்குஞ் சிரசு மீண்டு மீண்டும் வெட்டுப்படல், சுகநித் திரை விடயத்திலோ வார்த்தையு மில்லாமை, முகத்தை மூடிவிதெலான் மூச்சுவிடமுடி யாமை, அங்கங்களைவ்குங் கொப்பளம் இளம்பி மேடும்பள்ளமுமாய் விவகரிக்க முடி யாமை, தேகம் மற்றைய ஒவ்வோ ரங்கங்களும் மலைபோல வீங்கப்பெறுதல் அல்லது கற்களைத் தின்னன் முதலிய நான்கையும் பனிதெளித்தல் போற் சகிக்கத்தக்கதாம் அங்கத்தைக் கத்தரித்தலைச் சந்தனப்பூச்சே போலவும், வாளிலைத்தருவனுதி மூன்றை யும் தேகசமஸ்காரம் போலவும், விசிட்ட சரதாரை வீழ்தலையோ வேனிற்காலத்தில் வினோயாடு நிமித்தங் கொடிவீடு முதலியவற்றி லிருந்து ஜலதாரையைப் பொழிவித்தல் போலவும், தலைவெட்டலாலாய மரணத்தைச் சுகநித்திரைபோலவும், முகத்தை மூட லான் பலாத்காரமாய்ப் பேசாமையைச் செய்தலைச் சகஜ விருத்தியினுலே வதனத்தை மூடிக்கொண்டதே போலும், உடம்பெல்லாங் கொப்பளித்து மேடும்பள்ளமு மாத லையோ மகாசம்பத் துதயமானதைப் போலவும், அவசியம் பொறுத்துக் கொள்ள வேண்டியதாம். துக்கஸ்தானங்கள் அளவிறந்தனவா யிருத்தலின் ஒரு திசைமாத்திரம் இவையெனக் காண்பிக்கப்பட்டன. அவற்றை யீண்டு காண்பித்தலானே யாதுபயனே வெனின்? கூறிய இவ்வகையான கஷ்டகேஷ்டைகள் ஆயிரங்கோடியாற் கொடிய சமுசாரத்துற்ற அழியப்பட்ட காயங்களாற் பரிச்சின்னப்பட்டுப் பரவசமா யிருப்பதில் அநாதரவாய்க் கவனியாமல் விட்டிவிடப்படாது. அவசியம் மேற்கூறும் பிரகாரம் விசா ரிக்கத்தக்கது மேற்கூறும் வகையாக அறியவும் வேண்டும்.

(ச.) அப்போதவர்க் கஃதித்தன்மையான சகித்தற்கரிய துக்கங்கொடுக்கும்; அத் துக்கத்தை விசாரிக்கு மிடத்துச் சரமழைகண் முதலியவை நெய்தன் மலர்மழையாதி போற் சகிப்பனவா யிருக்கின்றன வென்பது தாற்பரியம்: (ஒக்கும் ஒக்குமென்பது பரி காசம்) மூகீகரணம் ஜனன மூத்திரையாம் = வாக்கின் பந்தனத்தால் மூகத்தன்மையின் சம்பாதனம் வதனவிரோத்தியேயாம். பாதிர்யம் மகாஜுபசயமாம் = மந்திர ஔஷ தாதியால் செவிடாந் தன்மையும், சித்தவிக்ஷேபத்தை யியற்றும் சத்தப்பிரபஞ்சங் கேளாமையின் மிகுந்த மேன்மையானதுண்டாம். விவேக—விலக்கொணு தென்றமை யால் சாத்திரவிசாரம் நிறைந்தோரே யதைத்தவிர்ப்பர் அதேமோக்ஷமாம். (18)

(ஸ்ரீ - வீர - அ - கை.) எதாவது சிஷ்சை விடயரோக நீக்கப்பொருட்டுச் செய்யத்தக்கதாம் என, கூறுகின்ரூர்:—எவ்வாறறிய வேண்டுமென் ரூசங்கை யுண்டாகக் கூறுகின்ரூர்:—ஊனமென.

(ச - அ-கை.) சாஸ்திர விசாரத்தாற் சிரேயசுண்டா மென்னப்பட்டது. அஃதும் ஆத்மசாக்ஷாத்கார பரியந்தம் சந்ததமும் செய்யவேண்டு மென்கின்ரூர்:—ஊனமென.

ஊனமிலா ஞானநூல் விசாரத் தாலே யுயர்வீடு நண்ணுமென லுண்மை யன்ரே, தானறியு மனுபூதி ஞான நன்னூற் சற்குருவும் மூவகையுந் தம்மி லொத்தே, யானவகை யியற்றில் விடா தான்மாத் தோன்று மற்பவறி வினர் கற்ற வரிய மெய்க்நூ, லீனமுறு மடமைதெறு மிதுபோன் மற்ற வெந்தநூல் களும் மடமை யிகவா தன்ரே. (14)

(ப - ரை.) ஊனமிலா ஞானநூல் = குற்றமற்ற ஞானசாஸ்திரங்களின், விசாரத் தாலே = ஆராய்ச்சியானே, உயர்வீடு நண்ணுமெனல் = உயர்ந்த மோக்ஷம் கிடைக்கு மென்பது, உண்மையன்ரே = சத்தியமேயல்லவா, தானறியும் அனுபூதி = சுவானுபூதி, ஞானநன்னூல் = ஞானசாஸ்திரம், சற்குரு = ஞானாசிரியர், இம்மூவகையும் = இந்த மூன்றுவிதமும், தம்மிலொத்தே = ஏகவாக்கியத் தகைமையை யடைந்து, ஆனவகை யியற்றில்விடாது = அனவரதம் மூடிந்தவிதம் பயிற்சிமுயலின், ஆன்மாத்தோன்றும் = ஆன்மா சாக்ஷாத்கரிக்கவரும்; அற்பவறிவினர் கற்றவரிய மெய்ந்நூல் = சிறிது சமஸ்கரிக்கப்பட்ட மதியினர் சிரவணித்தி அருமையாகிய இத்தத்துவ சாஸ்திரம், ஈனமூறுமடமைதெறும் = சனனமரணத்தை யுண்டாக்கும் அறியாமையைப் போக்கும், இதுபோன்மற்ற வெந்தநூல்களும் = இதற்கு விரோதமாக வேறு எச்சாஸ்திரங்களும், மடமையிகவாதன்ரே = அறியாமையைக் கெடுக்கமாட்டாதாம். (எ-று.) (14)

(ஸ்ரீ - வீர.) அன்ரே என்றது, சுருதி யிதிகாச புராணப்பிரசித்தியை யிலக்குவதற்காம். சகல அநர்த்த நிவிருத்தியையும் பரமானந்த பதப்பிராப்தியையும் இச்சிக்கப்பட்டவரால் சாஸ்திரார்த்த விசாரம் நன்குசெய்யத் தக்கதாம். அற்றேல் சாஸ்திரவிசாரத்தால் நன் ஞானவிசார வாயிலாகவே மேன்மையானது மிரும், அந்நன்ஞானம் விசாரஞ்செய்யு மியாவருக்குமே என் உண்டாவதில்லை யெனின் ? கூறுவார், தானறியு மென்ரூர். எவ்வதிகாரிக்கு இடைவிடாப் பயிற்சியால் சுவானுபூதியாதி மூன்றும் சபலமாகப் எளிதாக பொருந்துமோ அவனுல் ஆன்மாச் சாக்ஷாத் கரிக்கப்பெறும், மற்றவனுல் ஆகாதாம். எச்சாஸ்திரத்தின் அர்த்த விசாரம் மேன்மை விரும்பியவனுற் செய்யத்தக்கதாம் எனக்கடாவ விடைதருவார், அற்பவென்ரூர். சாஸ்திரம் மூர்க்கத்தன்மையைக் கெடுக்கும் என்பதாம். எவ்வாறு சாஸ்திர விசாரத்தாற் நிடமாய் மேன்மையான துண்டாமோ அவ்வாறேயாம்; அவ்வாரூயின் சாஸ்திர விசாரத்தான் மேன்மைபெறல் எங்ஙனங் கூடுமென்று துணியமுடியும், சாஸ்திரவிசார தற்பரர்களாகிய மாண்டவ்யாதி மகரிஷிகட்கும் ஆயிரக்கணக்கான துர்த்தசை காணப்படுதலின் எனவினவின், வித்தைக்குக் கண் கண்ட பலனுண்டென்க; எனவே பிராணனுள்ள வரையும் அதிகாரியால் ஆன்மாவே விசாரத்தாற் சிரவணிக்கத் தக்கது, மனனிக்கத்தக்கது, தியானிக்கத் தக்கது, அறியத் தக்கது, அன்னியமொன்றுமன்ரும். எவ்வதிகாரிக்குச் சிரவணதிகளின் பயிற்சியினுலே தன்னனுபூதியும் சாஸ்திரமும் குருமொழியும் ஒரு பொருணிச்சயத்தை யுறுகின்றனவோ அவனுலான்மா எப்போதுமே யறியப்படுவதாகும். சாஸ்திரார்த் தங்களைத் தெரிந்து கொள்ளுதன் மிகக்கஷ்டமா யிருத்தலின் எங்ஙனம் மூர்க்கத் தன்மையின் நீக்கமா

மெனின், சிறிது சீர்திருத்தப்பட்டுச் சிறிது விற்பத்தியுடைய மதியுடையவர்கட்கு இந் நூற்சிரவணம் எவ்வாறு மூர்க்கத்தன்மையை நீக்குமோ அவ்வாறு வேறு ஒருநூலுங் கிடையாது ; மகாவாக்கிய அர்த்தரூபமாய பரமாத்மாவை யவசியம் அடையவேண்டு மென்னு மிஷ்டமுடையவனுல் தக்கதிருஷ்டாந்தங்களால் அழகாயும், முரணில்லாமலும் சுகந்தருவதாயும் இருக்கு மிந்நூல்யாவுமே, அவசியஞ் சிரவணஞ் செய்யத்தக்கதாம்.

(ச.) விடாதியற்றில் = சந்ததம் அப்யாசிக்கில் ஆன்மாத் தோன்றும். சொற்ப அப்பியாசத்தா லறுந்தோடத்தைக் கூறுகின்றூர்:—அற்ப அறிவினர் கற்ற வரியமெய்ந் நூலீன முறுமடமைதரு மிதுபோன் மற்ற வெந்தநூல்களு மடமை யியற்றுதன்றே. (இது ஸ்ரீ மும்மடித்தேவர் பாடத்தை யனுசரித்ததாம்) சந்திரிகைப் பாடமும் பெரிய வாசிட்டப் பாடமும் செய்யுளிலமைந்தபடி யென்றறிந்து கொள்க) மடமைதரும் = அப் பியாசத்தினது குறைவு சந்தேக விபரீதமிருதியால் அறியாமையையே மிஞ்சவைக்கு மென்பதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மூர்க்கத்தன்மை யவசியம் தள்ளத்தக்கதாம், நீக்கமுடியா தனவாய ஆபத்துக்களும், துயரைத் தருவனவாய அதீமப் பிறவிகளும் அதனுல் உண் டாகின்றமையின், சர்வதுர்த்தசைகளின் காரணத்தைக் குறித்து ஒவ்வொரு துர்த்தசை யும் மேலானதேயாம் என்கின்றூர்:—மடமையென.

(ச - அ - கை.) அவ்வறியாமையும் மகத்தான கட்டமென்கின்றூர்:—மடமையென.

மடமையொடு வாழ்கின்ற வாழ்வி னீசர் மனைதொறுமோட் டிரந்துழல் கைவரிசை யாகு, மடர்தனஈட் புறவுபர தேசந் தீர்த்த மாச்சிரம மெய்வருத்த மனைத்தி னுலுங், தொடருதவி யில்லைமன வருத்தத் தாலே தூயபத முறுமுத் தித் துவார பாலர், கடவகுணங் கேட்டியுயர் சாந்தி வந்தாற் காதலுந்துன் பமுங்கதிர்முன் கங்குல் போற் போம்.

(ப - ரை.) மடமையொடு வாழ்கின்ற வாழ்வின் = அறியாமை யுடன்கூடி மூர்க் கத்தனமாய் ஜீவிப்பதைக் காட்டினும், நீசர்மனைதோறும் ஓட்டிரந்துழல்கை வரிசையா கும் = சண்டாளர்கள் வீதிகள் நிறைந்த வீதிகள்தோறும் திரிந்து ஒடெடுத்து இரந்து குடித்தல் மேன்மையதாகும், அடர்தனம் = பூர்ணதனங்கள், நட்பு = மித்திரர்கள் உறவு = பந்துக்கள், பரதேசம் = அயல் நாட்டேகுதல், தீர்த்தம் = தீர்த்தங்கள், ஆச்சிரமம் = ஆச்சிரமங்கள், மெய்வருத்தம் = காயக்கிலேசம், அனைத்தினுலும் = என்னும் இவ்வியாவற்றுலும், தொடருதவியில்லை = பற்றியுண்டாம் உபகாரம் ஒன்று மின்றும், மனவருத்தத்தாலே = கேவலம் மனோமாத்திர ஜயத்தினுலே, தூயபத முறும் = பரிசுத்த பரமபதம் கிடைக்கும், முத்தித் துவாரபாலர் கடவகுணங்கேட்டி = மோக்ஷத் துவாரபாலகர்கட்கு உரியகுணங்களை முறையே கூறக்கேட்பாயாக, உயர்சாந்தி வந்தால் = மேலாய சாந்தியான தூண்டாயின், காதலும் துன்பமும் = ஆசைகளும் துயரங்களும், கதிர் முன் = சூரியன் சந்நிதியில், கங்குல்போற்போம் = தமம் போல நசித்துப் போய்விடும். (15)

(ஸ்ரீ - வீர.) சாஸ்திரார்த்த, விசாரம்போலவே சற்பாத்திரத்தில் தானுதிதானமும் பிரஹ்மப்பிராப்தியின் கண்ணே தகுதியாணவுபாயம் ஆமாலோவெனின் அன்றென்பார் அடரென்றூர். தானுதிகள் பிரஹ்மப் பிராப்தியின் கண்ணே சாதகமாகாதன போலவே விசாரமும் அதனே யடைவியாதாம், விசாரிக்கப்பட்ட பேர்களுள்ளும் அநேகர்கள்

அதனை யடையாதிருத்தல் காணப்படுதலின் எனக்கடாவ விடைதருவார் மனமென்றார், மனத்தை ஜயிக்காமையானே விசாரவான்க ளிடத்திலும் பிரஹ்ம பிராப்தி காணப் பெறுவதில்லை யென்பது கருத்தாம். மோக்ஷத்துவாரத்தில் துவாரபாலர்முன் யாவர் கூறப்பட்டனரோ, எவரோடு நேயமாயின் புருடார்த்தமும், எவரோடு நேயமாயின் அநர்த்தமும் கூறப்பட்டதாமோ அவரை விரித்துரைப்பான் ரொடங்குவார் முத்தியென்றார். அவர்தம்முள் ஆண்டுச் சாந்திபலந் தொடர்பாய்க் கூறுவார் காதலும் என்றார், நீசச்சேரித் தெருக்களில் ஒட்டைக் கையிற்றாங்கிப் பிக்ஷுவாங்கிக் குடித்துச்சீவித்தல் மேலாகுமே யல்லாமல் மடமையோடு கூடிவாழும் கெட்டவாழ்வானது மேலாகாதாம்; விசாரப் பிரவிருத்தியானது கிடைத்தபோது கெடாததும் ஐயமற்றதும் தன்வடிவமா யிருப்பதும் உபத்திரவ மற்றதும் மயலற்றதும் உத்தமமும் ஆகிய கைவல்ய பதப் பிராப்தியாற் கிலேச முண்டாகாது; தஞ்திகளினனே கைவல்யமானது உண்டாகலாமே விசாரத்தினாலே யாகவேண்டிய தென்னே யெனின்? தஞ்திகளேனும் மித்திரர்களே னும் பந்துக்களேனும் உபகாரமாக மாட்டார்க ளென்றறிக, கரசரணாதி யசைவுவடிவ காயசம்பந்தமான நமஸ்காராதியேனும், தேசங்கள் சுற்றும் யாத்திரை முதலியவையே னும் உபாசனை முதலியவற்றிற் காயக்கிலேசத்தால் பலம். உற்சாகம் நித்திரை முதலிய வற்றை யற்றிருத்தலேனும், புண்ணிய தீர்த்தங்க ணிறைந்த க்ஷேத்திரவாசமேனும், உபகாரத்தைச் செய்யமாட்டாவாம். ஆயின் அஸீதெதனுற்றான் கிடைக்குமெனின்? சிரவணமனன நிதித்தியாசன வடிவப் புருடப் பிரயத்தனத்தினுற் சாதிக்கத்தக்கதும், துவைதவாசனையின் விரோதியாய பிரஹ்மாகார திடவாசனையின் சமவிடயத் தொழி லாஞ் சமாதியாற் சாதிக்கத்தக்கதும் ஆகிய சாக்ஷாத் காரத்தானே மனோமாத்திரமாய துவைதத்தின் மூலத்தைக் கெடுக்கும் வெற்றிகொண்டு கைவல்யபதத்தை யடைந்து விடலாம். "அருமருந்தாய நோய்களனைத்தையு மகற்றல்போல, வொருபரம் பொரு ளேயா மென்றுணர்ந்தே யிடைவிடாமல், உரைவகை யுணர்ந்தோர்ந்த வாசனை யொருங்கு கூடி, முரணுறு மவித்தையென்ற மூழுத்துயர் நீக்குமன்றே" என்றுங் கூறியுள்ளார். "காரணகன் றிருவருள் காட்சியாகவே, யருமையி னெத்தனை யணுகவில்லையோ, குரு பரனெடு மறைக்கோதினால தூஉம், ஒருவனுமத்தனை யுறுவதில்லையால்" என்பதாற் கடவுள் கருணையும் வேண்டும். சகிக்க முடியாதனவாய துயரங்களும், ஆசையும் கெட்ட காமக் குரோதாதிகளும், மற்றும் பிறவும் சாந்தமான மனங்களில் சூரியர்கள்பால் இருள் போல நசிக்கும். "சத்துமில்லாவாம் அசத்து மல்லவாம், ஒத்தசிவமே கேவலமாகும்" என்னுஞ் சுருதியாற் சாந்தஞ் சிவமென்றறிக.

(ச.) உரைத்த வுபாயத்திற்கு வேறானதஞ்திகள் உபகாரியாதெனல், அடர் என்பது, பரதேசம் = தேசாந்திர சங்கமம், தீர்த்தம் = தீர்த்தாடனம், ஆச்சிரமம் = முனிவர் ஆசிரியம், (க்ஷேத்திரங்கள்.) மெய்வருத்தம் = காயக்கிலேசம், கைகாற் சலனமுமாகிய நமஸ்காராதி யனேத்தினாலும், தொடருதலியில்லை, மனவருத்தத்தாலே = மனோசய மாத்திரத்தால், தூயபதமுறும் = மோக்ஷமடையப்படும்; இதற்கிதரமான சாந்தியாதி களைக் கிரமமாகக் கூறுவார், மூத்தியென்றார். காதலும் = துராசைமுதலிய ஆதிகளும், துன்பம் = நட்டமான பொருள்களாற் றோன்றுந்துக்கங்கள், துராசை = வர்த்தமான விஷயபோகங்களிற் றிருப்தியின்மை, துராதிகள் = மேல்வரும் போகவிடயசிந்தைகள் அருக்கர்கள், மாதந்தோறும் வேறுதலின் மூலத்திலாம். (15)

ஸ்ரீயான (ஸ்ரீ - வீர - ஆ - கை.) சமத்தை யுடையவனும், எல்லாப் பிராணிகளிடத்தும் நேயமுள்ளவனு மாகிய சாதுவின்பால் பரமதத்துவமானது அநாயாசமாய்த்தானே பிரகாசிக்கின்ற தானபடியால் சர்வானர்த்தமும் உண்டாமென்கின்றார்:—நல்லவரென.

நல்லவருந் தீயவரு மன்னே போல நம்புதற்கா யமுதுண்ண நண்ணி னலு, மல்லன்மலர் மகட்புணர்ந்த போது மொவ்வா மகிழ்ச்சிதருஞ் சாந்தியுளோர் மரணஞ் செல்வங், கொல்லமெய் தினும சையார் புலனைந் தாலுங் குற்றமு நன் மையுதுகர்ந்து குளிரார் வாடார், தொல்லறிஞர் மகம்புரிந்தோர் முனிவர் மொய்ம்பர் தூயவரியா ரினும் விளங்குந் தூய்மை யோரே. (16)

(ப - ரை.) நல்லவரும் தீயவரும் = வீடமங்களும் மிருதுக்களும், அன்னேபோல = தாய்போன்று, நம்புதற்கு = விசுவாசஞ் செய்வதற்கு, ஆய் = சமமானது சாதகமாய், அமுதுண்ண நண்ணினலும் = ரசாயனம் பருகக் கிடைப்பினும், மல்லன்மலர்மகள் புணர்ந்தபோதும் = வளப்பம் பொருந்திய தாமரைச் செல்வியாம் இலக்ஷ்மி அளவற்று வந்தபோதிலும், ஒவ்வாமகிழ்ச்சிதரும் = உவமையற்ற ஆனந்தத்தைச் சமந்தரும், சாந்தியுளோர் = சமசாலிகள், மரணஞ்செல்வம் கொல்லமர் = மரண உற்சவயுத்தங்களில், எய்தினும் அசையார் = இடர்முதலியவையுறினும் ஆகுலமெய்தித் துயருரார், புலன்ஐந் தாலும் = ஐம்பொறிகளாலும், குற்றமும் நன்மையும் = சுபத்தையும் அசுபத்தையும், நுகர்ந்து = அனுபவித்தும், குளிரார் வாடார் = இன்பிடர் அடையார், தொல்லறிஞர் = தவத்தினர் பேரறிவாளர், மகம்புரிந்தோர் = யாஜகர், முனிவர் = மனனசீலர், மொய்ம்பர் = மன்னவர் வலுமிருத்தோர், தூயவர் = குணட்டியர், யாரினும் = இத்தகையர் எல்லாரினுமே, விளங்குந் தூய்மையோரே = சமமுடையவரே அத்தியந்தம் பரிசுத்தமா யிலங்குவர். (16)

(ஸ்ரீ - வீர.) சாந்திக்குப் பலத்தைப் பகர்ந்து சொரூபத்தைக் கூறுவார் புலனைந் தாலுமென்றார். அசையார் = பூர்ணசந்திர பிம்பம்போல மலமிலாத மனமுடையராகி நிராகுலமாயிருப்பர் என்பதாம். திடவிவேகவானும், மகத்தாம் வைராக்கியத்தை யுடையவனும், வருவதைத் தடுக்கமுடியாமையையும் அறிந்தவனுய அதிகாரிக்குச் சுகதுக்கம் அடைந்த காலத்தில் மகிழ்ச்சி வாட்டமின்மை யுண்டாம், அதுவே சமம் எனப்படும், சமத்திற்குத் தொடர்பாய அயற்பயன் அறைவார், - தொல்லறிஞரென்றார். குரூரமாயும் கோணலாயும் இருக்கும் உள்ளத்தினரும் சாதுக்களும் ஆகிய எல்லா வுயிர்களும் ஈண்டுச் சமசாலியினிடத்தில் அன்னேயினிடத்திற்போலப் பரமவிசுவாசத்தை யடைகின்றன. மனமானதுள்ளே சாந்தியினுற் சுகமடைவதேபோல இந்திரபதத்தி லமிருதரசாயன பானத்தானும், விஷ்ணுபதத்தில் இலக்குமி யாலிங்கனத்தானும் சுகமடைவதில்லை. இடாம்பிக சாத்துவிக பரீக்ஷையின் பொருட்டுச் சாந்தன் இலக்கணங்களியம்புவார் புலனைந்தாலு மென்றார். சுபாசுபங்களாகிய பிரியாப் பிரியங்களைக் கேட்டுந் தீண்டியுங் கண்டும் உண்டும் முகர்ந்தும் மகிழ்ச்சி வாட்டங்களே யடையாதவனே சாந்தனெனக் கூறப்படுகின்றன். மரணஉற்சவ யுத்தங்களின் அச்சம் ஆசை சினம் என்பவற்றல் ஆகுலமின்றித் தபியா மனமுடையவனும், அதனுனே சந்திரபிம்பம்போலக் குளிர்ந்திருப் பவனும், எவனே, அவனே சாந்தனெனப்படுகின்றன். உலகத்திலும் எல்லாக் குணங் களினும் மேன்மையதாய்ச் சமமே யிலங்குகின்றதாம்; தபசிகள் மிகத்தெரிந்தவர்கள், மகம்புரிபவர்கள், அரசர்கள், பலமுடையவர்கள், குணமுடையவர்கள் என்னும் யாவரி னும் சமமுடையவனே யிலங்கா நிற்பன்.

(ச.) சாந்தமான கோக்கன்று முதலனவும், துன்பஞ்செய்யும் சிங்கசி முதலனவும் ஆகிய சர்வப்பிராணிகளும் எப்படித் தம்மாதாவின்கண் ணதிகவிசுவாச மடைகின்ற னவோ அப்படியே சகலஜீவருஞ் சாந்தியுடையரின்கண் ணதிக சுகமடைவர். அமுது =

ஆரோக்கிய ஹேதுவான ஔஷத விசேடம். மலர்மகட் புணர்தல் = இராஜ்ஜிய இலக்ஷ்மி சம்போகம். ஆயிற் சாந்தர்யாரெனிற் கூறுவார், சாந்தியுளோர் என்றார். மரணத்திலும் மகோற்சவத்திலும் போரிலும் பொருந்தியும், ஆகுலமின்றிச் சந்திரபிம்பம்போல நின்மலமாயிருக்கு மனமுடையரே சாந்தர். சுரோத்திராதியாற் சப்தாதியின் சுபத்தையாவது அசுபத்தையாவது புசித்துச் சந்தோஷக் கிலேசத்திற் பிரதிபந்தமுறுத லிர் விகாரசித்தரே சாந்தர். முனிவர் = தபசிகள், மொய்ம்பர் = பலவந்தரான நிருபர், ஐயவர் = குணசாலிகள். (16)

(ஸ்ரீ - வீர-அ - கை.) சமத்திற்கு மகாபலத்தைக் காண்பித்து மகானுபாவர் கவர்ந்திருக்குந் தன்மையானே அஸ்தவசியம் அனுஷ்டிக்கத் தக்கதாமென்கின்றார்; பெரியோராயும், குணவான்களாயும், சமத்தோடு கூடிய மனமுடையவராயும், இருப்பவர்தஞ் சித்தத்தினின்றும், பூர்ணசந்திர னிடத்தினின்றும் ஒளி நிகழ்வதேபோலச் சுகம் நிகழ்ந்து கொண்டே யிருக்குமாதலின் அவசியம் கவரத்தக்கதா மென்கின்றார்:— ஆரியரென.

ஆரியர் பேணுவதாகி யயலோர்க்கெல்லா மரிதான சாந்தியமுதருந்திமே லோர், சீரியவீட்டினையுற்றார் நீயுமந்தச் செயல்புரிவாய் நன்னூலாற் றெளிந்த சுத்த, நேரிய புந்தியினாலே விசாரந்தன்னை நிறைத்திடுக வதுநிறைந்தா னிகரில் புந்தி, கூரியதாய் வீடுணரும் விசாரந்தானே கொடும்பவநோய்க் கருமருந் தாங்குறிப்பு ளோர்க்கே. (17)

(ப - ரை.) ஆரியர் பேணுவதாகி = மேலோர்கள் விரும்பி யனுஷ்டிப்பதாகி, அயலோர்க்கெல்லாம் அரிதான = மற்றவர்க் கெல்லாம் அருமையினும் அருமையாய்க் கிடையாதான, சாந்தி யமுதருந்தி மேலோர் = உபசம அமிருதத்தைப் பானஞ்செய் துயர்ந்தவர், சீரிய வீட்டினையுற்றார் = சிறப்புப்பொருந்திய கைவல்ய பரமபதத்தை யடைவுற்றார், நீயும் அந்தச் செயல்புரிவாய் = ஹே இரகுதய ! நீயும் மகானுபாவர் வழியையே அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருதி, நன்னூல் தெளிந்த சுத்தநேரியபுந்தியினாலே = நல்லவேதாந்த சாஸ்திரங்களின் ஆராய்ச்சியினாலே நின்மலமாகிய பரமபவித்திர மதியினாலே, விசாரந்தன்னை நிறைத்திடுக = ஆத்ம விசாரத்தை யகர்நிசம் அனுஷ்டிப்பாயாக, அது நிறைந்தால் = அந்த விசாரம் கூர்மையாய்ப் பூரணமானால், நிகரில் புந்தி = உவமையற்றமதி, கூரியதாய் வீடுணரும் = அதிசூக்குமப்பட்ட பான்மையால் பரமபதத்தைத் தரிசிக்கும், விசாரந்தானே = ஆராய்ச்சியே, கொடும்பவநோய்க்கு = தீர்க்க சமுசார ரோகத்திற்கு; அருமருந்தாம் = மகா ஔஷதமாம்; குறிப்புளோர்க்கே = எப்படியாவது பரமபதத்தை யடைந்து விடவேண்டு மென்னும் ஆசையுடன்; ஒருமையுடன் காரணஞ்ஞராய் ஆராய்பவர்க்கு மாத்திரம், மற்றையர்க்கன்று மென்பதாம்.

(ஸ்ரீ - வீர.) கவரத்தகுதியதாய் அநாரியர் பேணுவதாய் அபரம் அமிருதம் பற்றித் தேவர் அபரமேயாய பதத்தை யடைந்தனர்; மகானுபாவரோ அயலாய் எவரானும் அபகரிக்க முடியாததாய் அறிஞர்களாற் காப்பாற்றப் பெறுவதாய்ச் சமமெனப் பெயரிய பரமமிருதம்பற்றி அதற்குத் தக்கபடியேயாய பரமபதத்தையே அடைந்தனர்; அவ்வண்ணமே பரமபதஞ் சித்தித்தற் பொருட்டு மகான்களின் முறையே சம இலக்கண உபாயத்தைச் சேவிப்பாயாக; அல்லது சமவிசார சந்தோஷ தியானாதிகளின் கிரமத்தை யனுஷ்டிப்பாயாக. சமாதிகளின் மத்தியில் சமத்தை விஸ்தாரமாகக்கூறி விசாரத்தை விளக்குவார் நன்னூலா லென்றார். ஆண்டு முதல் விசாரம் எங்ஙனமென்னின், புந்தியி

ஞலேயென இலக்குகின்றார். முதலில் ஈசுரனுக்கு அர்ப்பணஞ்செய்த கருமங்களினாலே பரமபவித்திர மடைந்தபின் நிவிருத்தி சாஸ்திரார்த்த உணர்ச்சியால் நின்மலமான புத்தியால் என்பதாம். இஃதிதன் காரணம், இஃதிதன் காரியம் எனக் காரணாதி யுணர்ந்த வனுல் விசாரம் பூரிக்கப்படவேண்டும். விசாரபலத்தைவிரிப்பார், அது என்றார். மோக்ஷமாம். சற்குணங்களின் சமூகங்கட்கெல்லையாயும், புருடார்த்த முக்கிய பூடணமாயும், சர்வகுணங்களின் சம்பத்துக்களோடு கூடியதாயும், நிகழுஞ்சாந்தியே சங்கடங்களிலும் பயஸ்தானங்களிலும் விளங்கா நிற்கும். பிறராலபகரிக்க முடியாததாயும், பூசிக்கத்தக்க வரால் சாவதானமாய்க் காக்கப் பெற்றதாயும், மேலானதாயும் இருக்குஞ் சாந்தியாகிய அமிர்தமய சாதனத்தை யினிதுபற்றி மகானுபாவர்கள் எம்முறையானே பரமபதத்தை யடைந்தார்களோ அதேமுறையைப் பின்பற்றி ஹே இராகவா! நீ அடையவேண்டிய தடையும் பொருட்டுக் காப்பாயாக. சாதுசங்க சற்சாஸ்திர சித்தசுத்தி யென்பவற்றால் வளர்த்தப்பட்டு மோக்ஷவாயிற் காவலாய சமசந்தோஷங்கட் கேதுபூதமாய விசாரம் புகழப்படுகின்றது, நன்னூலாலென. ஆண்டார்த்த அநர்த்தங்களைப் பின்பற்றியதாம் விசாரம், சார அசாரவிசாரம், தள்ளத்தக்க கொள்ளத்தக்கதாம் விசாரம், பிரமாண தாற்பரியவிசாரம், பரம ஆன்மதத்துவப் பரீக்ஷையென விசாரம் ஐந்துவிதமாம். அவற்றுள் இயற்கையாய பிரவிருத்தியும் விடயங்களும் அனர்த்தத்தைப் பின்பற்றினவாம், சாஸ்திர சம்பந்தமான பிரவிருத்தியும் வைராக்கிய யாதிகளும் புருடார்த்தத்தைப் பின்பற்றினவாம் என்றுடன்பாடெடுத்தோதிர்மறைகண் முதலியவற்றுனே பரீக்ஷைவழிவமாயது முதலதாம். மனவிமக்கள் தன்றேக முதலியவற்றுள், சுயமாகவும் காரணத்தானும் பரிணமத்தானும் அசுசியாய மலமூத்திராதி அமங்களத் தன்மை வாய்ந்தனவெனச் சோதிக்கும் வழிவதும், பிரஹ்மலோகம் வரையும் உள்ளனவாய சுகங்களினிடத்தில் அநித்தியத் தன்மை யச்சந் துக்கங்கலந்த தன்மை முதலியவற்றைச் சோதிக்கும் வழிவதும் ஆனதிரண்டாவதாம். இவ்விரண்டும் வைராக்கிய மூமுக்ஷுத்தன்மைக் கேதுக்களாம். மோக்ஷச்சை வந்தபின்னரும் மோக்ஷசாதனம் கருமமா? உபாசனையேதானு? அவையுங் கலந்ததா? அல்லது ஞானத்துடன் கலந்ததா? அல்லது ஞானமேயா? என்னும் பரீக்ஷைவழிவது மூன்றுவதாம். ஞானமே சாதனமாக வாயினும் அஃதென்னே? சாங்கிய வைசேடிகர் கருதத்தக்க கீழ்ல கௌதமர் முதலியோர் கூறிய அவ்வச் சாஸ்திரங்களைப் பிரமாணமாக வுடையதா? அல்லது சுருதியை மாத்திரம், பிரமாணமாக வுடையதா? சுருதியையே பிரமாணமாக வுடையதாயினும், சுருதிகட்குத் துவைதத்திலா? அத்வைதத்திலா? விசேஷத்தோடு கூடியதிலா? விசேஷமற்றதிலா? ஆன்மாவிலா? அநான்மாவிலா? தாற்பரியம், எனச் சோதிக்கும் வழிவது நான்காவதாம். அதுவும் சிரவண மெனக்கூறப்படும். சுருதியாதிப் பிரமாணங்கட்கும் அத்விதீயசச்சிதானந்தப் பிரஹ்மான்மாவின்கண்ணே தாற்பரியம் எனத் துணிவிருந்தபோதினும், தன்ஞன்மாவின்கண்ணே யுண்மையாக அவ்வாறுந்தகைமை சம்பவிக்குமா? சம்பவியாதா? என்னும் இரத்தினப் பரீக்ஷை நியாயத்தானே அநுபவநிஷ்ட ஆசிரியர் தன்னுடு கற்றூர் முதலியோருடன் சம்வாதத்தாலும் ஜீவேசுவர ஜகத்தத்துவ பரிசோதனையாலும் துணிவுபிறக்கும்வரை சோதிக்கும் வழிவினது ஐந்தாவதாம். அவற்றுள் முதன் மூன்றன்பலம் சாதனசதுட்டய சம்பத்தியாம்; பின்னிரிரண்டினுக்கோ முறையேபிரமாணப் பிரமேய அசம்பாவனைகளின் நீக்கமாம். அவற்றுண் முன்னவை மூன்றும் பாக்கியவயத்தினுலே தாமாகவும் வருதல் கூடுமாயினும், அவைகள் மாருமற் றிடப்படும்பொருட்டு மீண்டுங் குருசாஸ்திர வாயிலாகச் செய்யத்தக்கனவேயாம். பின்னவையிரண்டும் குருசாஸ்திரங்களாலே வரு

வனவாம் எனச் சர்வசாதாரணமாகச் சாஸ்திரமிருக்கும். சாஸ்திரத்தாலுணர்த்தப் பெற்று அமலமாயும் மனத்தூய்மைவந்து பரம பவித்திரமாயும், இருக்கும் மதியிலேலே, விடயசமூசய பூர்வபக்ஷ சித்தாந்த பிரயோஜன வேறுபாடுகளே யுணர்ந்துள்ள சகபாடி களோடேனும், பிரமாணப்பிரமேய தத்துவங்களைப் பிரதிபாதிக்கு முபாய சாமர்த்தியத் தோடுகூடிய ஆசிரியரோடேனும் எப்போதும் ஆன்மாவின் விசாரஞ் செய்யத்தக்கதாம். புத்தியானது விசாரத்தாற் சூக்குமதத்துவத்தைக் கவருங் குசலத்தன்மையை யடைந்து பரமபதத்தைக் காண்கின்றது; நீண்ட சமூசார ரோகத்திற்குவிசாரமே பேரவுடதமாம்.

(ச.) அந்தச்செயல் புரிவாய் = பரமபதஞ் சித்தித்தற் கச்சாந்தியையே யவலம்பிப் பாய். (விசாரம்) நன்னூலால் = அத்தியாத்மசாத்திர போதத்தால்.' அமலமாய = பரிசுத்தமான, கூர்ந்தபுத்தியால், ஆத்மவிசாரத்தை யனவரதஞ் செய்யவேண்டும். இனி விசாரத்தின துபயோகத்தைக் கூறல், அதுகூரியதாம் வீணெரும் = பரமாத்மாவைச் சாக்ஷாத்கரிக்கும் குறிப்புளோர்க்கு, இதற்கிது காரணமென்னும் காரியகாரண பாவத் தறிவஞ்ஞர்க்கு (அறிந்தோர்க்கு) இதனாலாத்ம விசாரத்திற்கு அதிகாரிகள் நிரூபிக்கப்பட் டார்கள். (17)

(ஸ்ரீ - வீர - அ - கை.) விசாரத்தினது சொரூபத்தைக் காண்பித்து அதன்கண் செய்யத்தக்க தின்னதென்பதைத் தெளிவுறுத்துகின்றார்:—கருகியவென.

(ச - அ - கை.) இப்போது விசாரத்தினது சொரூபத்தைக் கூறல்:—கருகியவென.

கருகியகங் குலின்மறையாக் கதிர்க்குமட்காக் காண்பரிய பொருளெல் லாங் காணுங் கண்ணும், நெருளுறுநா ளுருலகம் வந்தவாறென் செறிபிறவி யாரதெனுந் திகழ்விசார, மிருளுறுமாபத்தினுக்கு மருந்தாமப்பா லேற்றமூள சந்தோட மேதென்றேதில், வருபொருளி லின்பமறத் துய்த்துவாரா வன பொருளிற் றுன்பமிலா மகிழ்ச்சிதானே. (18)

(ப - ரை.) கருகிய கங்குலின் மறையா = இருண்ட இரவிருளில் மறைபடாமலும், கதிர்க்குமட்கா = சூரியன்றன் பேரொளியால் மங்காமலும், இலங்கி, காண்பரிய பொரு ளெல்லாம் காணும் = வியவகித பதார்த்தங்களேயும் தெரிந்துகொண்டிருக்கும், கண் ணும்= ஆராய்ச்சியாகிய அழகிய விழியால், தெருள்உற = ஞானமுதயமாமாறு, நாளுர் = யாவனென்பது யாது பொருள், உலகம் வந்தவரென் = இத்தோஷமய சமூசாரம் வந்தவகையென்னே! செறிபிறவி யாரது = துயரம் நிறைந்த இப்பிறவி எதைச் சம்பந் தித்தது, எனுந்திகழ் விசாரம் = என்று விளக்கமாக வுண்டாகின்ற ஆராய்ச்சி, இரு ளுறும் ஆபத்தினுக்கு மருந்தாம் = பெரு மயக்கத்தை யீயும் ஆபத்துக்கட்குகற்றும் விடயத்தில் ஔஷதமாம், அப்பால் = அதன்பின், ஏற்றமூள சந்தோட மேதென்றே தில் = மேலான சுகத்தை யீயும் சந்தோஷம் யாதெனக் கேட்பிற் கூறுவாம், வரு பொருளி லின்பமறத் துய்த்து = கருமவயத்தாற் கிடைத்தவஸ்துவை ஆசையின்றி யனுபவித்து, வாராவன பொருளில் துன்பமிலா மகிழ்ச்சிதானே = கிடையாத பொருள் களில் வருத்தமின்றிய சந்துஷ்டியே சந்தோஷமாம். (18)

(ஸ்ரீ - வீர.) சர்வதடைகளும் நீங்குமாறு திருத்திக்கொண்ட கருத்தாலாராயத் தக்க தாம். ஆராய்ச்சியைப் புகழுகின்றார் கருகிய வென்பதால். அழகியவிழி = சாருலோசனத் தைச்சாதித்தற் பொருட்டே சிறப்பு மூன்றுமாம். அவ்விலோசனம் காரியம்போல கஷ் டம் நண்ணுதாம், மறைக்கவும் முடியாதாம். விசாரசொரூபத்தைத் தெளிவிப்பார் யாரு ரென்றார். விசாரத்தின்பின் விளம்பிய சந்தோடத்தை விரிப்பார் அப்பாலென்றார்.

சந்தோடத்தைத் தோத்தரிப்பார் சந்தோடமென்றூர். சந்தோடத்தாற் பரமவிசிராந்தி யானது கிடைக்கும். ஆபத்துவருங் குடும்பாதி வியாபாரத்தும் புத்திமானுல் யானியா வன், யாவனுக்கிச் சமுசாரம் எனச் சமுசாரத்தை யகற்றுஞ் சிரவணுதி யனுஷ்டானத் தோடு கூடியவனுய்த் தானே முயல்வினுற் சிந்திக்கத்தக்கதாம். விசாரமாகிய அழகிய விழியானது, சரும நேத்திரம் அந்தகாரத்தில் நஷ்டமடைவதேபோல அந்தகாரங்களில் நஷ்டமடையாமலும், அதிமிகப் பிரகாசமய சூரியாதிகளில் ஒளிமழுங்குவதேபோல ஒளி மழுங்காமலும் அத்தூரத்திலிருக்கும்பொருளைக் கிரகிக்க முடியாததே போல வல்லாமற் கிரகிக்கக்கூடியதாயும் விளங்கும். பரமான்மாவாயும் பிரஹ்மானந்தத் தைச் சித்திசெய்வதன்கண் முக்கியமாயும் பூசிக்கத்தக்கதாயும், இருக்கும் ஆராய்ச்சியாற் றலை ஒருகணமேனும் பரித்தியாகஞ் செய்யவே கூடாது; "அற்பமதேனும் பேதமதாற் றும் அவன் பயந்தன்னை யடைந்திடுவானே" என்னுஞ் சுருதியையும்; எக்கணமேனு மெம் முகூர்த்தமதேனும், மூக்கணஞெருவனை முன்னிலனுயின், அக்கணமானியது பெருஞ் சித்திரம், அக்கணிலாமையா மதுவுமூகதையுமாம்" என்னும் இலிங்கபுராணத் தையும் காண்க. விசார சொரூபந்தான் விளக்கமாக யாதென்றூல்; யான் யாவன்? தேகாதிகளேயாஞ? அல்லது, அதனினும் வேருயவனு என்பது துவம்பதார்த்த விசார மாம், இத்தோஷரூப சம்சாரம் எவ்வேதுவினுலே அதிஷ்டானத்தில் வந்துற்றது? என்பது தற்பதவிசாரம். இவ்வண்ணம் சுருதி முனியாசார்ய சம்பிரதாய முறையிற் காட்டியபடியாய நியாயத்தான் ஆராய்ச்சிசெய்வதேவிசாரமெனப்படும். வைராக்கியமாகிய கற்பகவிருக்ஷத்தின் நிழலேப்போன்று சுகமாயுஞ் சீதளமாயுமிருக்கும் மூன்றுவது துவார பாலனுய சந்தோஷத்தை வீரிப்பார், ஏற்றமுளவென்றூர். சந்தோஷமே பரமமோக்ஷ மென்றும் சுகமென்றும் மற்றைய இனியவையுமென்றும் கூறப்படும், இதனிலக்கணம் இனியியம்பப்படும்; ஆயுள்நெய்யென்பதுபோலச் சாதனத்திற்பலத்தின் அபேதஆரோபத் தாற்புகழ்ந்ததாம் மிகவும் மேன்மையான அத்தியந்த துக்கவிரேஷ நீக்கமாகிய விசிராந் தியைஈன்றூகச்சந்துஷ்டன் அடைவன். சந்தோஷசொரூபத்தை யறைவார், வருபொருள் என்றூர். கிடையாத இஷ்டவஸ்துவில் வாஞ்சையைவிட்டு, கிடைத்த இஷ்டவத்துவில் விகார ரகிதத்தன்மையை யடைதலாம். கிடைத்த இஷ்டபோகத்தில் அற்பத்தன்மை அஃதின்மைகளானே மகிழ்ச்சிவாட்டமில்லாமையாம். சந்தோஷமுடையவனைக் கூற லானே சந்தோஷ இலக்கணத்தையும் தெரிந்துகொள்ளலாம்; விஷயம் அடைவுற்றபோ தினும் பொய்யாதலின் அடையாததே போன்றமையையும், அதனடைவா லுளதாய மகிழ்ச்சிமுதலியவை யின்மையினுனே முன்னவஸ்தை போன்றமையையும், அடையாத தில் ஆசையற்று அடைந்ததேபோன்றமையையும், அடைந்தவனுய்ச் சுகதுக்கங்களற்ற வன் ஈண்டுச் சந்துஷ்ட னெனப்படுகின்றூன்.

(ச.) வாசியலோசனம், அந்தகாரங்களிற் றெரியாது, மிகுந்த மின்னலாதி பிரபை களில் எதிர்நில்லாது, வில்லும் வஸ்துவைப்பாராது, இவ்விசாரம் அத்தன்மையதன் றென்று, வாசியலோசனத்தினும் விசாரலக்ஷணமான அந்தர லோசனத்திற்கு விசேஷந் தெரிவித்ததாம். ஈஞர் = அகஞ்சப்தார்த்தம் யாது. உலகம் = சம்சாரம், வந்தவாறென், செறிபிறவியாரது, சம்சாரம், தேகத்திற்கா? அந்தக்காரணத்திற்கா? அதற்கு வேருன ஆத்மாவிற்கா? தெருளுற வென்றதனுற் சம்சார நிவிருத்தி யெத்தாலாம்? எனுந் தெரு ளுறத்திகழும் விசாரம், இருளுறுமாபத்தினுக்கு மருந்தாமென்றதனுல், புத்திமான்க ளால் ஆபத்துக்காலத்தும் தெருளுறத்தன்னுற்றூனே சிந்திக்கவேண்டுமெனத் தெரி வித்ததாம். சந்தோட சொரூப நிரூபித்தற்குமுன் அதனது மகிமையைக் கூறுவார்

அப்பால் என்றார். ஏற்றமுளபரமலாபமும் சுகமும் சித்த விசிரோந்தியைத் தருவதுமாகிய மேன்மை நிறைந்தது சந்தோடம். ஏதென்றேதில் = ஹே அரிமர்த்தன! நீ அது யாதெனக் கேட்கில், வருபொருளில் = கிடைத்த பிரியவத்துவிலும் அப்பிரியவத்துவிலும் சமத்துவமடைந்து இன்பமறத் துய்த்து சுகதுக்காளுபவமின்றி, வாராவன பொருளில் = கிடையாதவத்துக்களில், வாஞ்சையை விட்டு துன்பமிலா மகிழ்ச்சிதானே? 18

(ஸ்ரீ - வீர - அ - கை.) மகிழ்ச்சியின் மகிமைமலர்தல். நிகர் என,

நிகரறுசந்தோட வமுதமையப் பெற்றுனெடும்போக நஞ்சாமந் நிறை சந்தோட, மகலுறவாசையில் விழுநெஞ்சறிவை நோக்கி வழுக்குறு கண்ணுடியிலாக நம்போற்றுன்று, மகிழ்குண மெய்திய புருடமகிமையோனே மாதவ ருநராதிபரும் வணங்கா நிற்பர், சகமெனு மாயையை வெல்லத் தக்கோர்க் கெல்லாந் தப்பாத சகாயமாஞ் சாதுசங்கம். (19)

(ப - ரை.) நிகரறு சந்தோடவமுது அமையப்பெற்றால் = உவமையில்லாத சந்தோடமாகிய அமிர்தபானஞ் செய்ததாற் சாந்தராகித் திருப்தியடைந்தவர்க்கு, நெடும் போகம் நஞ்சாம் = விஸ்தார போகபாக்கியமானது, விடம்போலாம், அந்நிறை சந்தோடம் அகலுற = அந்தப்பரிபூரண சந்தோடமில்லாமல், ஆசையில் விழுநெஞ்சு = ஆசை வசமாகிப் பரவசமூற்றசித்தம், அறிவை நோக்கில் = சிதான்மாவைப்பார்க்கில், அழுக்குறு கண்ணுடியில் ஆனனம்போல் தோன்று = மலினதர்ப்பணத்தில் வதனம்போலத் தோன்றுதாம், மகிழ்குணம் எய்திய புருட மகிமையோனே = சந்தோஷமாகிய உயர்ந்த குணமடைந்த புருடராஜப் பெருந்தகையனே, மாதவரும் நராதிபரும் வணங்காநிற்பர் = தபோதிரரும் நரேந்திரரும் நமஸ்காரஞ்செய்து தோத்தரிப்பர், சகமெனு மாயையை = சனன மரண சமுசாரமயக்கத்தை, வெல்லத்தக்கோர்க்கு = ஜயிக்கவேண்டுமென்று முயன்று கொண்டிருப்பவர்கட்கு, எல்லாம் தப்பாத சகாயமாஞ் சாதுசங்கம் = எவ்விடத்தும் எல்லாவாற்றலும் மாறுதவுதவியாவது மகத்துக்களின் கூட்டமேயாம்.

(ஸ்ரீ - வீர.) சந்தோஷ அமிருதபானத்தால் திருப்தியை யடைந்தவர்கட்குப் போகங்கள் பிரதிகூலவிடம்போற் றோற்றும். சந்தோஷமிலதாயின் ஞானமுளதாகாதாம் ஆகலின் சந்தோஷஞ் சம்பாதிக்கத்தக்கதாம் என்பார், அந்நிறை யென்றார். ஆசையின் பரவசத்தால் சுவஸ்தமற்ற நெஞ்சம், அழுக்கு = மலினத்தகைமை. கூறிய சந்தோட சொரூபத்தை மீண்டும் அவ்வுணர்வு திடப்படற்பொருட்டுக் கூறுவார் மகிழ்குணமென்றார். கிடையாததை அவாவாமலும், கிடைத்ததை ஒழுக்கமுறை தவறுமல் அனுபவித்தும் இருக்கும் யாவன் அழகுபொருந்திய நல்லொழுக்கமுடையவனுவனே அவன் சந்துஷ்டனெனப்படுவன். சந்தோடத்தினது மகாமகிமையைத் தெரிவித் துபசங்கரிக்கின்றார், எய்தியவென. குணசாலிகளெல்லாம் புகழுமாறு சந்தோஷத்தை யடைந்துள்ள புருடராஜனே யென்பதாம். சாதுசங்கமத்தை விரிப்பார், சகமென்றார். சாதுசங்கமபலன் ஓதுவார், தப்பாதவென்றார். மேல் இனிது துதித்து சாதுசொரூபங் கூறும் வாயிலாக அவர் சேவையை வியந்து விதிப்பார் என்றுணர்க. சந்தோஷ அமிருதபானத்தால் சந்ததந் திருப்தியை யடைந்த சாந்தர்களுக்கு ஒப்பிலாப்போக ஐசுவரியங்களும் பிரதிகூலவிடம்போ லாய்விடுகின்றன. ஆசைதனிய முதலிய தோஷங்களை நாசஞ் செய்யும் சந்தோஷம் அதிமதுர ஆனந்தத்தைத் தருவதொப்ப அமிருதரச அலைகள் சுகத்தைச் செய்யாவாம். ஆசையின்பரவசமுகி அதனுல் வியாகுலமூற்றுச் சந்தோஷ மற்றிருக்கும் மனத்தில் ஞானத்தை யுபதேசித்தபோதினும் அழுக்கு நிறைந்த கண்ணுடி

யில் ஆனனம்போல வெளிப்படத் தோன்றுதாம். முன்மொழிந்த இலக்கண அனுவாத பூர்வகமாக வேறிலக்கணத்தை விளம்புகின்றார், மகிழ்குணமென. கிடையாதபொருளை யவாவாமலும், முறையே கிடைத்த சுகத்தையும் துக்கத்தையும் அனுபவித்துக் கொண்டும், உலகத்திற் கின்பந்தரும் நல்லொழுக்கத்தில் நடந்துகொண்டும் இருப்பவனே சந்துஷ்டனெனக் கூறப்படுவன். விடயசம் பாதனமில்லாமலே கேவலஞ் சந்தோஷ மாத்திரத்தானே எங்ஙனந் தேகவாழ்க்கை கூடுமெனின், கேட்டி! சந்தோடத்தால் நிறைந்த மனமுடையவனே மகாசம்பத்துக்கள் யாவும் தாசர்கள்போலக் கர்த்துக்கொண்டிருக்கும். "ஆசைக்கடிமையே யகிலலோகத்தடிமை, ஆசையடிமையார்க் ககிலலோகமும் அடிமை" எனவும் கூறுவர். உலகிலுள்ளோர் சந்தோஷத்தாற் சகலரிடத்திலும் விஷமபுத்தியில்லாத சமத்தகைமையால் அழகு நிறைந்த புருடனுடைய முகத்தைத் தரிசித்து எங்ஙனமானந்த மடைகின்றனரோ அங்ஙனஞ் சர்வதன சம்பத்துக்களாலும் அடைவதில்லை. சந்தோஷ முடையவனே யாவரினும் மேன்மை யுளவன். இவ்வுலகத்தில் குணசாலிகட் கிஷ்டமான சந்தோஷத்தாற் சகலரிடத்திலும் சமமானபுத்தி செய்வதால் இனிமையாக அலங்கரிக்கப் பட்டவனும் மகாபரிசுத்தனு யிருக்கும் புருடராஜாவைத் தேவதைகளும் மகாமுனிவர்களும் நமஸ்கரிக்கின்றனர். நான்காவது துவாரபாலகனுகிய சாதுசங்கத்தை வருணிப்பார், சகமென்றூர். நரர்கட்குச் சமூசாரத்தைத் தாண்டுவதி லீண்டுச் சாதுக்களின் உத்தமமான சமாகமமானது சகல அவஸ்தைகளினும் விசேடமாக வுபகரிக்கின்றது.

(ச.) அமைய = சித்தசாந்திவர, பெற்று = பானஞ்செய்து, ஆல் = அதனுல், திருப்தியானவர்கட்கு, நெடும்போகம் நஞ்சாம் = அநுகூலமின்றிய விடம்போலாம். நெஞ்சு = சித்தத்தில், அறிவை = குரு உபதேசித்த ஞானத்தை, நோக்கில் = தான் விசாரிப்பினும்; தோன்றூ = அந்த அறிவு பிரதிவிம்பியாது, மாதவரும் = மகாமுனிவரும், நராதிபரும் = நரோத்தமரும், தப்பாத = உபாயஞானத்திலும் உபேயஞானத்திலும், அவற்றை யடைவதிலும் தவறுத சகாயமாம் சாதுசங்கம். ஆசையின் பரதந்திரப்பட்டுத் தூடிதமாய் அதனுனே சந்தோடமில்லாத சித்தத்தில் ஞானம் குருவினுலே யுபதேசிக்கப்படினும் பிரதிபிம்பியாதாம், மலின ஆதரிசத்தில் வத்திரம்போலும். முன்னர் பிரியாப் பிரியங்களில் உதாசீனப்பான்மை யுரைக்கப்பெற்றது, இப்போது பிராப்தமான பிரியாப் பிரியங்களில் விகாரமடையாமல் புசிப்பன் என்பார் மகிழ் என்றூர். மகிமையோன் = குணசாலிகளுக்குள் இவன் உயர்ந்தவன் எனக் குணவான்களாற் கொள்ளப்பட்ட பெருமையை யுடையவன். (19)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சாது சங்கத்தைப் பலவகையானும்புகழ்ல்:=அறவென.

அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பத்தாக்கு மாபத்தைச் சுபமாக்கு மசுபந்தன்னைச், சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னுங்கங்கைச் சீத சீராடினர்க்குச் செந்தீவேள்வி, யிறக்கரிய தவந்தானந் தீர்த்தம்வேண்டா மிடர்பந்தமறுத் தெவர்க்கு மினியோராகிப், பிறப்பெனும் வேலைப்புணையாம் முணர்வு சான்ற பெரியோரை யெவ்வகையும் பேணவேண்டும். (20)

(ப - ரை.) அறக்குறைவை நிறைவாக்கும் = அத்தியந்தம் குறைந்த இடத்தைப் பூர்ணமாக்கும்; ஆபத்தைச் சம்பத்தாக்கும் = ஆபத்தினைச் சம்பத்தாக ஆக்கிவைக்கும், அசுபந்தன்னைச் சுபமாக்கும் = அமங்கலத்தை மங்கலமாக்கும், சிறக்கும் உயர்ந்தவர் கூட்டம் = யாவராலு மூடியாததை முடித்துவைக்கும் விசேடம் வாய்ந்த மேலோர்சங்

கம், என்னுங்கங்கைச் சீதநீர் ஆடினர்க்கு = என்னப்பட்ட அதிசீதளபாவன ஸ்ரீ கங்கைத்தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்தவர்கட்கு, செந்தீவேள்வி = மந்திராக்கினி மகமும், இறக்கரியதவம் = கெடாதபயனைப் பயக்கும் தபமும், தானம் = தன்னைதைப் பிறர்தாக்குந்தானமும், தீர்த்தம் = பரிசமாத்திரத்திற் பாபத்தைப் படுத்தும் தீர்த்தமும், வேண்டாம் = அவசியமில்லை, இடர் பந்தமறுத்து = துயரைத்தரும் அகங்காரக்கட்டை யகற்றி, எவர்க்கும் இனியோராகி = சர்வசம்மத சாதுக்களாய், பிறப்பெனும் வேலைப்புணையாம் = சனனமரண சமுசார சமுத்திரவங்கமாய், உணர்வுசான்ற பெரியோரை = அறிவுமயமா யிலங்கும் ஞானிகளாகிய மகான்களை, எவ்வகையும் பேண வேண்டும் = எல்லாவு பாயங்களானும் இனிது சேவிக்கவேண்டும். (20)

(ஸ்ரீ - வீர.) சூன்ய ஸ்தலத்தைப் பிராணிகளின் கூட்டம் சமுதாய முடையனவாகப் போலுஞ் செய்விப்பர். அதிசீதள பவித்திரத் தகைமையானே சமுசாரதாப நிவாரகஞ் செய்விப்பதாந் தகைமை காட்டப்பட்டது. அகங்காரத்தை ஆத்ம அநாத்மக் கிரந்திரூபமாதலினனும், கிரந்திபோலும் கெடுத்தற் கெளிதன்மை யதானும், கிரந்தி = கட்டு என்றதாம். அறிஞர்களாகிய சாதுசங்கங் கிடைப்பின் மைந்தராதி பந்துக்கள் தனுதிகள் இல்லாமல் மகாதுயரந் தருமிடமும் அவற்றால் நிறைவுறுகின்றது மரணமும் உற்சவமங்கலமாகின்றது, ஆபத்துக்களும் சம்பத்துப்போல விளங்குகின்றன. ஆபத்துத் தாமரைக்குப் பனியும், மோகப்பனிக்கு மாருதமும் ஆம் சாதுசங்கம் மனுதுக்கங்களை யதிதூரத்திற் றள்ளும். எவன்தாபத்தை நீக்குவதாற் குளிர்ச்சியாயும் அழுக்கையகற்றலால் வெண்மையாயும், இருக்கும் சாதுசங்கமாகிய ஸ்ரீ கங்கையின் கண்ணே மூழ்கினனே அவனுக்குத் தானங்களாலும், தீர்த்தங்களாலும், தவங்களாலும், யாகங்களாலும், ஆகவேண்டிய தென்னே ? ஹே அனகனே ! ஆசையற்றவர்களாய், ஐயமற்றவர்களாய், அந்தக்கரண அதன் றன்மங்கட்கு ஆன்மாவுடன் ரூதான்மிய சம்சர்க்க அத்தியாச இலக்கணச் சிற்சடமுடிச்சு அவிழ்ந்தவரும் ஆகி விளங்கும் சாதுக்கள் கிடைத்துவிடுவராயின் தவந்தீர்த்த முதலியவற்றைத் தேடுவதா லாகவேண்டிய தென்னே, பிரஹ்மத்திலிலேப்பாறிய மனத்தோடு கூடித் தன்னியர்களாகிய சாதுக்களை முக்கியமுயற்சியினனே பூஜிக்கவேண்டும்; பிரஹ்மான்ம வஸ்துவை யடையவிரும்பி முயலும் அதிகாரியானவன் சாதுசங்கத்தை விடவே கூடாது. அகத்திலுள்ள சித்து சித்துப்பிரார்த்தி முடிச்சுகளை யறுத்தவர்களாயும், பிரஹ்ம சொரூபத்தை யறிந்தவர்களாயும், பவசாகரத்தைத் தாண்டச் சகாயஞ் செய்பவர்களாயும், யாவரானும் போற்றத் தக்கவர்களாயும், பிரசித்தர்களாயும் இருக்கும் சாதுக்கள் முமுக்ஷுக்களால் தானத்தாலும் பகுமானத்தாலும் சேவைகளாலும் மற்றுமுள்ள எல்லா வுபாயங்களாலும், நன்றுகச் சேவிக்கத் தக்கவர்களாவர்கள். நரகாக்கினியை யணைக்கும் மேகம்போன்ற சாதுக்களை யாதரவுசெய்பவர்கள், நரகாக்கினிக்குக் காய்ந்த கட்டைகளாவர்கள். தரித்திரம் மரணந் துக்கம் முதலிய ரோகங்கட்குச் சாதுக்களே பரம ஔடதமாவர்கள்.

(சு.) சூன்ய ஸ்தானத்தையும், நிறைவாக்கும், எங்கும்பூர்ணமான பிரஹ்மமேயெனப் புத்தியுதய மாதலின் என்க. ஆபத்தைச் சம்பத்தாக்கும் = அநிஷ்டப் பிராப்தியும் வைராக்கிய ஏதுவினனே முமுக்ஷுவிற் குபகாரஞ்செய்தலின் என்றுணர்க. அசுபந்தன்னைச் சுபமாக்கும் = மரணத்தை யுற்சவமாக்கும், தேக விலக்ஷணமான ஆத்மஞானத்தாற் பந்தரூபமான தேகாதி நிவிருத்திவரின் உற்சவப் பிரதீதியாதலின் என்பதாம். இடர்பந்தம் = அகங்காரக்கிரந்தி. பெரியோரை = பிரஹ்ம வித்துக்களை, எவ்வகையும் = சர்வ வுபாயங்களாலும், பேணல் வேண்டும் = நன்றுகச்சேவை செய்யவேண்டும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சந்தோடம், சாதுசங்கம், விசாரம், சமம், என்னும் இவை களே நரர்கட்குச் சமுசாரசாகரங் கடப்பதற்குப் பெரியவுபாயங்களாம்; சந்தோஷமானது பரமலாபத்தைத் தருவதாம், சாதுசங்கமானது பரமகதியைத் தருவதாம், விசாரமானது பரமஞானத்தைத் தருவதாம், சமமோ பரமசுகத்தைத் தருவதாம், எல்லாவிடங் களிலும் பலத்தின் அபேத ஆரோபமாம் என்று கருதியிப்போது சர்வ துவாரபாலரையும் ஒருமித்துத் துதிக்கவிழைந்து அனுவதிக்கின்றார்:—நிறையென.

நிறைபவர் தீருபாயநான்கா மிவர்களோடு நிறைநட்பார் பவக்கடலே நீத் தாரன்னுய், குறையுமன மோகந்தீரிச் சொற்கேட்பாய் குணம்விரும் பாதிச் சொல்லைக் குறிக்கொண் டோர்க்கு, மறையுணர்வு வலிதின்வரும் காமமாதி மயக்கமறுஞ் சரற்கால வாவிநீர்போற், கறைதவிர்ந்து மனந்தெளியுங் கவசத் தோரைக் கணைகள்போன் மிடிமுதலாங் கவலைதாக்கா. (21)

(ப - ரை.) நிறைபவர்தீர் = நெருங்கிய பவபேதனஞ் செய்யும், உபாயநான்காம்= இவ்விமல உபாயங்கள் நான்காம், இவர்களோடு நிறைநட்பார்=இந்நால்வரோடும் பூர்ண சிநேகமுடையவர்கள், பவக்கடலே நீத்தார் = மோகநீர் நிறைந்த பவார்ணவத்தைக் கடந் தவர்களே யாவர்கள், அன்னுய் = இவ்வகண்டித குலலகூஷமியோடு கூடி அத்தகைய ஞ் நீ விளங்குகின்றனை, ஆகலின் குறையுமன மோகந்தீர் இச்சொல் கேட்பாய்=மலின வாசனை பொதிந்தமனத்தின் மோகத்தை யரிக்கும் உபதேசிக்கப்பட்ட இவ்வாக்கியத் தைக் கேட்பாயாக, குணம்விரும்பாதிச் சொல்லைக் குறிக்கொண்டோர்க்கும் = பயனை விரும்பாமல் இம்மோகூஷவுபாய கதையைச் சிரவணித்தவர் கட்கும், மறையுணர்வு வலி தின்வரும் = பலாத்காரமாகவே வேதபோதித பரபோதம் உண்டாம், காமமாதி மயக் கமறும் = லோபமோகாதி தோடங்கள், இலயத்தை யடையும், சரற்காலவாவி நீர் போல் = சரத்திருதுவில் தடாகத் தெண்ணீர்போல, கறைதவிர்ந்து = களங்கம்நீங்கி, மனந்தெளியும் = உளம் தெளிவையடையும், கவசத்தோரைக் கணைகள்போல் = சங்கா கந்தரித்தவரை அம்புகள் அதஞ் செய்யாவாறுபோல, மிடிமுதலாங் கவலைதாக்கா = தனிய தாரித்திரிய தோடங்களோடு கூடிய திருஷ்டிகளாகிய கவலைகள் உபத்திர வியாவாம்.

(ஸ்ரீ - வீர.) மயல் நீர்நிறைந்த பிறவிக்கடல் தாண்டவைப்பனவாய இவற்றோடியான் சேர்ந்துளஞ இலஞ வென ஆலோசிக்கும் ஸ்ரீஇராகவரை நோக்கிக்கூறுவார். அன்னுய் என. குணஇலக்குமியோடு கூடியதஞற் செய்யவேண்டுவதைத் தெரிவிப்பார் குறையு மென்றார். கேட்பாய் எனத் தொடங்கிவைத்துக் கூறும் ஞானகதைக்குச் சிரவண பலத்தை யொளிர்வித்தற்பொருட்டு அடைவின் முற்றும் என்பதுவரை கூறுதலாம். திருஷ்டிகள் = தள்ளக் கொள்ளத்தக்கனவாய விடயவிகற்பங்கள், மர்மபேதனப் பொருட்டுப் பிரகாசித அவ்சரங்களாம். சங்நாகம் = கவசம். சமுசார துக்கத்தைத் துடைப்பதற்கு உபாயங்களான இந்நான்கு நின்மலப் பொருள்களையும் பயின்ற அதிகா ரிகள் மோகநீர் நிறைந்த சமுசாரசாகரத்தைக் கடந்தவர்களே யாவார்கள். யாவற்றையும் அப்யசிக்க முடியாவிடினும், ஒன்றையேனும் அப்யசிக்கலாம், ஒன்றைப் பயின்றபோதி னும் நான்கையும் பயின்றதாகவே முடியும். கூறிய குணசம்பத்தெனக்கின்றென்று நினைக்கவேண்டாம், நீ இவ்வகண்டிதமான குணஇலக்ஷமியோடு கூடி விளங்குகின் றனை, இனிக்கூறப்படுவதாகிய மனத்தின் மோகத்தைக் கெடுக்கும் இவ்வாக்கியத்தைக் கேட்பாயாக. நித்திரையில்லாது விழித்திருப்பவனுக்கு எதிரே தீபம் பிரகாசித்துக்

கொண்டிருப்பின் இச்சியாதபோதினும் ஆலோகமானது பதார்த்த தரிசனத்தை யெப் படி நன்றுய்ச் செய்விக்கின்றதோ அப்படிச் சிரவணித்த இதனுனே மோக்ஷசாதனபூத மாய ஞானம் இச்சையின்றியவனுக்குங் கிடைக்கும். இப்போது இதன் மகாபலத்தையும் குணத்தையும் காட்டுவோர், காமமாதி யென்றூர். சரற்காலத்தை யடைவுற்ற திசைகளி னின்றும் பனிகள் ஓடுவதேபோல, மதியினின்றும் உலோப மோகாதி தோடங்களெல் லாம் பையப்பையக் குறைவை யடைந்துபோம். சரற்காலத்திற் பெரியதடாகம்போல மனது மிகவும் தெளிவை யடையும். தீனத்தன்மை தரித்திர முதலியதோடக் கூட்டங் கள் தனுதி விடயங்கள் சாரமற்றனவெனத் தெரிந்த திருஷ்டியுடையவரை, இருப்புக் கவசந் தரித்தவரது மருமங்களை யம்புகள் தூளக்க வல்லன வல்லனபோலக் கெடுக்க வல்லன வல்லவாம்.

(ச.) நட்பார்=இச்சாந்தியாதிகளைப் பூரணமாக அப்பியசித்தவர்கள் பிறவிக் கடலி னின்றும் கரையேறுவர்கள், அன்னுய் = இவ்வகண்டித குணஇலக்ஷணமியால் நன்று யாசிரிதனுனீ, இச்சொல் = மேலே சொல்லப்படும் இந்த வாக்கியத்தை, கேட்பாய், இனி யிவர்க்கு மோக்ஷோபாயகதைச் சிரவணத்தின் பலந் தெரிவிப்பார், குணமென் றூர். குணம் விரும்பாது = அறிவை வாஞ்சியாது, இச்சொல்லை = இம்மோக்ஷ உபாய கதையை, குறிக்கொண்டோர்க்கும் = சிரவணஞ் செய்தவர்க்கும், வலிதின் = பலாத் காரமாய் வரும், மிடிமுதலாங்கவலை = நான்தனவான், நான் தரித்திரன், என்பன முதலிய பேததிருஷ்டிகள், தாக்கா = இருதயங்களைப்பேதியா, மிடிமுதலியவைகளே விசார சத்துருக்கள், பரிபூரணமான சொச்சொரூபத்தில் தோற்றப்படும் பேதமாதலின் என்க. மிடிமுதலிய தோஷங்களால் அவற்றின் அதீனமான ஆன்மாவின்கட் பேதந் தோற்றப்படுகின்றதாகையால் சொரூபபேத வேதுக்கள்: அவைகள், இம்மோக்ஷ உபாய கதையைச் சிரவணஞ் செய்தவர்கள் இருதயங்களைக் கவசத்தோரைக் கணைகள்போலப் பேதியா வென்பதாம். தைரியம் உற்சாகபங்கத்தா லொளியிலாமையாம். (21)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலும் அவற்றையே புகழ்தல்:—தருவென.

தருபயஞ்செய் மாயைமன மீராதாகுஞ் சமபாவந் தரங்கந்தீர் சாகரம் போன், மருவலுறும் விசாரத்தான் மிக்கோர்க் கெல்லாம் வாரிதிபோ லாழ மும் பொன்வரை போன் மொய்ம்புந், திருமதியின் குளிர்ச்சியும் வந்தெய்து நன்னூற்செய்கையி னல்லோர்புந்தி செவ்வையான, கருமவழி மகிழ்வெய்து மறுவிலாத கற்புடையா டன்மனையிற் களிக்குமாபோல். (22)

(ப - ரை.) தருபயஞ் செய்மாயை = பயங்கரஞ் செய்யும் சமுசாரம், மனம் ஈரா தாகும்=மனத்தைக் கெடுக்கமாட்டாதாம், சமபாவந் தரங்கந்தீர் சாகரம்போல் மருவலு றும் = சமத்தன்மையானது மந்தரபர்வதத்தை யெடுத்துவிட்ட அலைதீர்ந்த கடல் போல உண்டாம், விசாரத்தான் மிக்கோர்க் கெல்லாம் = ஆராய்ச்சி மிகுந்த மகான்கட் கெல்லாம், வாரிதிபோ லாழமும் = சமுத்திரம்போற் கம்பீரப் பான்மையும், பொன் வரைபோன் மொய்ம்பும் = மேருகிரிக்குச் சமானமான ஸ்திரபாவமும், திருமதியின் குளிர்ச்சியும் = அழகிய பூர்ணமதிபோலும் அந்தர் சீதளத்தன்மையும், வந்தெய்தும் = வலிதிற்கிட்டும், நன்னூல் = நல்ல சாஸ்திரங்களையும், செய்கையின் நல்லோர் = நல்ல கிரியைகளையும் உடையவர்களது, புந்தி = மதியானது, செவ்வையான கருமவழி மகிழ் வெய்தும் = அவிரோதமாய கருமத்தில் இரமிக்கும், மறுவிலாத கற்புடையாள்=களங்க மற்ற கற்பையுடைய ஸ்திரீயானவள், தன் மனையில் களிக்குமாபோல் = தன்னுடைய அந்தப்புரத்தில் ஆனந்த மூறுவதேபோலும்.

(ஸ்ரீ - வீர.) ஈராதாகும் = சேதியாதாம், அந்தப்புரம் = அஜிரம் அங்கணம் உண்மனையென்பதாம். பயவேதுக்கட்கு எதிரிலிருந்த போதினும் இந்நூலுணர்ந்தவனது மனதை அம்புகள் மகா ஜடமாகிய பெருமலையைத் துளையாததே போல, சமுசாரபயங்கள் துயர்ப்படுத்தாவாம்; கடைந்தபின் மந்திரகிரியோடு கூடாத பாற்கடல்போல ஏற்றத்தாழ்வின்றிய பரமசாந்தத்தை யடையும். இந்நூலே யாராயு மகானுக்குப் பாற்கடல் போன்ற கம்பீர இயற்கையும் மகாமேருவைப் போன்ற தீரத்தன்மையும், பூர்ணசந்திரன் போன்ற அந்தக்கரண சீதளத்தன்மையும், அதிதிடமாக வுண்டாம். இவை சம்மந்தித்த பயன்களாம்; முக்கியமான பயனே இனிவரும்: அந்தப்புரத்திலிருக்கும் பதிவிரதை போல அறிஞனுடைய மதியானது நன்னூல் பெரியோராசாரங்கட்கு, விரோதமில்லாத கருமங்களிலும் தானுய்க் கிடைத்த பொருள்களிலும் இரமிக்கும், ஆகையால் அவனுக்கு இஷ்டம் போற்றிரிதல் கூடாதாம்.

(சு.) தருபயஞ் செய்மாயை = பயங்கரமான சம்சாரமும், சமுசாரந் தாரா நின்ற பீதியும், மனம் = இருதயத்தை, ஈராதாகும் = அரியாதாம், கலக்காதாம், சமபாவம் = சமபாவத்தை, மருவலுறும் = மனம் சலனமின்றிப் பொருந்தும், அந்தக்கரணத்திற் றரங்கந்தீர் சாகரம்போல் தரங்கந்தீர் சமபாவபுத்தி யுதிக்குமென்றுமாம். ஆழமும் = கம்பீர பாவமும், மொய்ம்பும் = திடதைரியமும், குளிர்ச்சியும் = சீதளமும், வந்தெய்தும் = அந்தக்கரணத்தின்கண் வந்துதிக்கும். நன்னூல் = சற்சாஸ்திரங்களால், செய்கையினல்லோர் = நன்னடையுடையோரது, புந்தி = புத்திக்கு, செவ்வையான = அவிரோதமான, கருமவழி = கன்மத்தில், மகிழ்வெய்தும் = புத்தி சந்தோஷமா யிரமிக்கும்.(22)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இனி முக்கியமான பயனைக் கூறுகின்றார்.—அற்புதவென.

அற்புதங்களனைத்துமிலா வினனுக்கந்த வருஞ்சீவன் முத்திபத மடைவின் முற்றுஞ், சொற்புலனுக் கதீதனுயுலகர் போலத் தோன்றிடுவோன் புந்தியிலோர் தொழில்பற்றுதோ, னற்பயன் பொல்லாப் பயனுற் சுகஞ்சோர் வில்லோ னண்ணியது புசித்தினிதி னன்றுய் நிற்போன், பொற்புறு நல்லாசார விரோதமான போகங்கடமிற் சிறிதும் பொருந்திடாதோன். (23)

(ப - ரை.) அற்புதங்கள் அனைத்தும் இலா இவனுக்கு = சேஷமில்லாமல் விசேஷங்கள் சாந்தமான இவனுக்கு, அந்த அரும் ஜீவன்முத்திபதம் = அந்த அருமைவாய்ந்த ஜீவன் முக்தித்தன்மை, அடைவின் முற்றும் = மெதுவாகப் பரிணதியடையும்; சொற்புலனுக் கதீதனுய் = வாக்கிற் கெட்டாதவனுய், உலகர்போலத் தோன்றிடுவோன் = லோகசாமானியமாகக் காணப் பெறுவன்; புந்தியிலோர் தொழில்பற்றுதோன் = அபிமானமாக ஒருதொழிலேயும் செய்யாமல் நேர்ந்ததில் நிற்பன், நற்பயன் பொல்லாப்பயனுல் சுகஞ் சோர்வில்லோன் = இஷ்ட அநிஷ்டபல மடைவதில் மகிழ்ச்சி வாட்டமில்லாமல் மனம் வென்றவன் ஆவன்; நண்ணியது புசித்து = கிடைத்ததை அயின்று, இனிதின் நன்றுய் நிற்போன் = சுகாசனத்திருந்து வாழ்வன், பொற்புறு நல்லாசார விரோதமான போகங்கடமில் = அழகுபொருந்திய சதாசார விரோதமான போகங்களில், சிறிதும் பொருந்திடாதோன் = கிஞ்சித்தும் வாஞ்சை வையாதவனவன்.

(ஸ்ரீ - வீர.) சாஸ்திரத்தினுலும் லோகத்தினுலும் கிடைத்த விவகாரத்தின்படி தொடர்ந்து நிற்பன். மனத்தால் வெற்றிகொள்ளப்படாதவன். மோக்ஷ உபாயகதையை என்னுமிடத்தில் மொழிந்த சிரவணம் நிர்வாணம் அதிகாரியாற் செய்யத்தக்கது

என்று காண்பித்து அதன்பயனை ஆத்மதத்துவ அபரோக்ஷ ஞானத்தைக்காண்பிப்பார், நன்றும் நிற்போன் என்றார். சர்வசங்கற்ப விசேடங்களும் சாந்தியானவனுக்குப் பையப் பையப் பூமிக்கிரமமாகப் பரிபக்குவத்தை யடைந்து வந்து வாக்கிற் கெட்டாத ஜீவன் முக்திப்பதமான துண்டாம், இந்நூலையாராயும் அதிகாரி மதியானது பரமான்மாவின் நிசனத்தைத் தந்து சர்வவிடயங்களிலும் தூய்மையாயும் தண்மையாயும் இலங்கி சரற் கால சந்திரப் பிரகாசம்போலப் பரமப்பிரகாசத்தை யடைகின்றது. இஷ்டமில்லாதவை தன்னை வந்தடையின் துவேஷிப்பது மில்லை, இஷ்டமுள்ளவை தன்னைவிட்டு நீங்கின் ஆசைப்படுவது மில்லை, காரியபல, மூதலியவற்றின் சொரூபத்தை யறிந்திருந்த போதி னும் அதையறியாத தருப்போலவே யிருக்கின்றான்; முயல்வில்லாமற் கிடைத்ததை யனுசரிப்பவனும், இஷ்ட அநிஷ்டபலங்கள் கிடைத்தபோது மனோவிகார மற்றவனும் உலவி மற்றையர்களைப் போலவே காணப்படுவன், மதியை யடக்கும் வாயிலாய் எவற் றையுமடக்கிச் சுகாசனத்திருந்து தானே கிடைத்தபோகக்கூட்டத்தைப் புசித்து சாஸ்திர விருத்தமார்க்கங்களிற் செல்லாம லிருப்பவனுல் மோக்ஷமடையப்படும். இதற்கு இந்நூலே சாதகம் ஆம், இது முழுவதையும் ஆராயின் பிரஹ்மாதிகளின் வரம்போ லனு பவிக்கலாம். இந்நூலைச் சிரவணித்தும் மனனித்தாராய்ந்தும் அறிந்தவனுக்கு மோக்ஷம் அடைவதில் தவம் தானம் சீலம் முதலியவை ஒரு சிறிதும் உபயோக மாவதில்லை, அவ் வப்பயன்க ளெல்லாம், இப்பயனுள் ளடங்கிப் போவதா லென்றறிதல் வேண்டும்.

(ச.) அடைவின் = கிரமமாக, (சீக்கிரத்தில்) நற்பயன் பொல்லாப் பயனுல் = இட்டானிட்ட பலப்பிராப்தியால், (இருதயத்தில்) சுகஞ்சோர்விலோன், நண்ணியது = உரித்தாய்க் கிடைத்ததை, நல்லாசார விரோதமான = சத்துக்களின் ஆசாரத்திற்கு விருத்தமாகிய. (23)

(ஸ்ரீ - வீர - அ - கை.) விசாரயோகியர் பெருமையும் அவிசாரப் போகியர் சிறுமை யும் கூறல்:—ஒருவென,

ஒருகணமு மொழியாமற் சுகமதாகி யுடல்கடவாளுய்ச் சான்றோ ருசாவி ஞலே, பெருகியவிவ் வீட்டுநெறி விசாரஞ் செய்வோன் பிறவிதீர் மெய்ஞ்ஞா னம் பெற்றேனுகி, வெருளுமறு பிறப்பினுருன் தாயர்யோனி விதனமுருன் சிறிதாகிமிளிர் போகத்தின், மருளுமனப் பாவியராய் வெருள்வோர் தாயர் வயிற்றின்மலப் புழுவென்றே வழங்கற் பாலோர். (24)

(ப - ரை.) ஒருகணமு மொழியாமல்=எத்தேசத்திலும் எக்கணத்திலும் மாறுமல், சுகமதாகி = கவலையில்லாமல், உடல் கடவாளுய் = சுகாசனத் திருப்பவனுய், சான் றோர் உசாவினுலே = சாதுசங்கத்துடன் கூடியாராய் பவனுய், பெருகியவிவ் வீட்டு நெறி = விசாலமான விம்மோக்ஷ மார்க்கத்தை, விசாரஞ் செய்வோன் = விசாரித்துக் கொண்டே யிருப்பவன், பிறவிதீர் = ஜனனந்தீர்ந்த, மெய்ஞ்ஞானம் = தத்துவஞா னத்தை, பெற்றேனுகி = அடையப் பெற்றவனுகி, வெருளும் = பயமுறுத்தும் மறு பிறப்பினுருன் = மீண்டு மூண்டாகான்; தாயர்யோனி விதனமுருன் = அதனுனே மாதாவின் யோனியந்திரத்திற் கரும்பெனத் துயரமுடையான், சிறிதாகி மிளிர்போகத் தின் = அற்பமாகத் தோற்றும் போகங்களில், மருளுமனப் பாவியராய் வெருள்வோர்= மயங்கிவீழும் உள்ளப் பாவிகளாகிப் பயந்து நடுங்குவோர், தாயர்வயிற்றின் = மாதா வின் உதரத்தில், மலப்புழு என்றே வழங்கற்பாலோர் = தன் தாயகட்டிலுறும் மலக் கிருமிகள் என்றவ்வதமர்கள் விவகரிக்கப்படுவர்கள்.

(ஸ்ரீ - வீர) மனன நிதித்தியாசன அங்கத்தோடும், சமாதி இவ்வாறு செய்யத் தக்கதாந் தன்மையோடும் கூடிச் சாஸ்திர சிரவணஞ் செய்பவனுக்கு அதன்பயனைக் கூறி, அதைச் செய்யாதவரை நிந்திப்பார், சிறிதாகி யென்றூர். பயந்துநடுங்குவோர், சுக ஆசனத்திருத்தலாதி, நியாயமாகச் சாஸ்திர சிரவணஞ்செய்வடிவப் பிரயாச மகத்பலந்தரும்சிறிய காரியத்திலும் செய்யப்பயந்தவர் என்பதாம். எக்காலத்திலும் எத்தேயத்திலும் சம்பவித்த சாதுக்களோடுகூடி இச்சாஸ்திரத்தையாவது உபதிடத மோக்ஷ தருமாதிகளையாவது, ஒருகணமும் விடாமல் ஆனந்தமா யாராயும் அவனுற் சமூசாரத்தைச் சாந்தப்படுத்தும் அபரிச்சின்ன பரமான்ம அபரோக்ஷஞான மடையப்படும், யோனியந்திரத்தில் நெருக்குண்டு வரும்படியான பெருந்துயர்ப் பிறப்பை மறுபடி யடையவே மாட்டான். இவ்வண்ணங் குணத்தினுலும் பலத்தினுலும் சுலபமா யடையத்தக்க தன்மையாலும் இச்சாஸ்திரத்தைப் புகழ்ந்து இதிற் புகாதவரை யிகழுவார் சிறிதாகியென்றூர். போகரசத்தில் அழுந்துபவர்களாயும், பாவிகளாயும், இச்சாஸ்திரம் படிப்பதிற் கூடப் பயமுடையவர்களாயும், ஆன்மாவைக் கொல்பவராதலின் கூறுவதற்குந் தகுதியற்றவர்களாயும், இருக்கும், கெடுதலைச் செய்யப்பயப்படாத அவ்வதம சிரோமணிகள் தங்கள் தாயின் வயிற்றினின்று வந்த மலக்கிருமிபோற் பிறந்தவர்களே யாவர்கள்.

(ச.) உடல் கடவாளுய் = சுகாசனத் திருப்பவனுய், சான்றூர் உசாவினுலே = சற்சங்க சிரவணத்தால், பெருகிய இவ்வீட்டு நெறி = இம்மோக்ஷ கதையின் கிரமத்தை, ஒருகணமும் ஒழியாமற் சுகமதாகி = வருத்தமின்றி; விசாரஞ்செய்வோன், பிறவிதீர்= சம்சாரசாந்தியைத் தாராநின்ற, மெய்ஞ்ஞானம் = பரிபூரண ஞானசொரூபப் பிரஹ்ம சாக்ஷாத்காரத்தைப் பெற்றூனுகி வெருளான். இங்ஙனம் மோக்ஷம் சுலபமாயிருக்கவும் அம்மூயற்சியினின்றும் நீங்கி வெருள்வோர் = பயப்படி நராதமர்கள். (24)

(ஸ்ரீ-வீர-அ-கை.) எவ்வளவுகாலம் விசாரம் அனுஷ்டிக்கத் தக்கது, என்னுஞ் சங்கையோடு கூடினவனே உபகரணத்தோடும் அனுவதித்து நிராகரிக் கின்றூர்—தகுமென.

தகுமவர்க டம்மிற்ரு மெய்தப்பட்ட தருமமொடு பொருடேடுஞ் சரிதையோராய்த், துகடீர்தம் மிடத்தி லிளைப்பாறி மாறுத் துரியமெனுஞ் சாந்திநிலே தோன்றுமட்டு, மிகுநூல்க ளுபசாந்தி யொழுக்கம் போத மிக்கவர்கூட்டரவி வற்றுல் விசாரம்வேண்டும், நிகரிலா விசாரத்தாற் ரூன்றி நிற்கு நிமலதுரியத்தினிலே நிகழ்த்தற்பாற்ரே. (25)

(ப - ரை.) தகும் அவர்கள் = அறிவுடையோர், தம்மில் = தமதந்தரத்தில், தாம் எய்தப்பட்ட = அந்தரமாக அடைவதான, தருமமொடுபொருள் = தருமத்தையும் அருத்தத்தையும், தேடுஞ்சரிதை யோராய் = தேடுங்கிரியை யுடையவராகி, தம்மிடத்தில் = ஆன்மாவின் கண்ணே; இளைப்பாறி = விசிராந்தி யடைந்து, மாறுத்துகடீர் துரியமெனுஞ் சாந்திநிலே = பின் நாசமாகாத நான்காவதென்னுஞ் சாந்திஸ்தானம், தோன்றுமட்டும் = கிடைக்கும் பரியந்தம், மிகுநூல்கள் = அதிகசாஸ்திர விசாரங்களும், உபசாந்தி = மேலான உபசாந்தியும், ஒழுக்கம் = சந்தோஷமும், போதம் = மூன்மொழிந்த பிரஞ்ஞையும், மிக்கவர் கூட்டரவு = மேலோர் சங்கமும், இவற்றுல் = ஆகிய இச்சாதனங்களினுலே, விசாரம் வேண்டும் = ஆராய்தல் வேண்டும், நிகரிலா = ஒப்பற்ற, விசாரத்தால் = ஆராய்ச்சியால், தோன்றிநிற்கும் = பிரதீதியாகி விளங்கும், நிமலதுரியத்தின்நிலே = நிருமலமான துரியபதத்தின் நிலைமை, நிகழ்த்தற் பாற்ரே = கூறுந் தரமதோ !

(ஸ்ரீ-வீர.) மத்தியில் மத்தியில் அறம்பொருள் சம்பாதித்துக் கோடற்பாற்ரு மென் றறிக. முமுக்ஷுவானவன் சாஸ்திரவுபதேசம் அதனப்பியாசம் நற்குணம் நன்மதிசாஸ் திராதிகளேயும் ஆன்மாவையும் அறிந்தவர்கள் சங்கமென்னு மிவற்ரோடு கூடிப் பூர்வ பூர்வ அந்தரங்க சாதனமுறையாக அடைவுற்ற "பன்பெருங் குருபரன் பணிவிடையோடு மன்பொடுந் தினந்தின மாற்றிடலான, முன்புருமறையின் முடிக் கேள்வியினுன், என்ன பது கிருச்சிரபலமெய்திடுமே" "மாதம்மாதம் மகிழ்சதவருடம் தாதெவன், வேட்பன்பரி மேதத்தால் சாதெவன் சினமேசருவர்பாலிலனே, ஓதிருவரினுஞ்சினமில னுயர்ந்தோன்" என்பதாதி மிருதிப்பிரசித்த தருமங்கள், குருபணிவிடை முதலியவற்றிற் குபயோகமான அருத்தங்கள், சாஸ்திரதாற்பரிய அதிசயந் தருமருத்தங்கள் என்பவற்றைச் சம்பாதிப் பதே தொழிலாக வுடையவனுய் விசாரிக்க வேண்டும் விவேகமுடையவன் மீண்டும் பிறப்பிறப்பைக் கொடாததும், துரியபதமென்னும் பெயரையுடையதும், "இருமையில் சிவத்தை யெண்ணுவர் நான்காதாய்', என்னுஞ் சுருதியில் நான்காவது துரியபதமெனப் பெயரிட்ட ஏழாவது பூமியிலிருப்பதா மிலக்கணம் வாய்ந்ததும், சாந்திவடிவதும் ஆகிய ஆன்மாவி லிளேப்பாறுவதா மோக்ஷமடையும் பரியந்தம் ஆன்மவிசாரஞ் செய்தல் வேண்டும்.

(ச.) துரியமெனும் = விசுவாதித் திரயத்திற்கும், ஜாக்கிராதிபதத் திரயத்திற்கும் அதீதமான சதுர்த்தமென்னும், சின்மாத்திர லக்ஷணமுடைய சாந்திநிலே = பதம் தோன்றுமட்டு மென்பதாம். (25)

(ஸ்ரீ - வீர - அ - கை.) புஷ்பங்களிற் புணர்ந்த நூற்போலப் பிரிந்திருக்கும் விசுவ தைஜசப் பிராஞ்ஞர்களிடத்தில் தொடர்ந்து விளங்கும் நிருவிகற்ப சைதன்யத்தைத் தனிப்படுத்தித் துரியத் தன்மையினின்றும் கிளப்பிச்சர்வதுவைத ஜாலங்களும் அகன்ற அனந்தாகாசம் அதன்கண்ணே அகம்பாவத்தோடு நிச்சலமா யிருக்கைவடிவ துரிய விசிராந்தியோடு கூடியவனுக்குச் செய்யவேண்டுவது யாதேனுஞ் சேடமுண்டோ என்னுஞ் சங்கையை நீக்கி யாவனேனும் அவ்வவஸ்தையை யடைந்தாற் செய்யத் தக்கனயாவும் செய்துமுடிந் ததாம் என்கின்ரூர்:—பாவனேயென.

பாவனேதீர் துரியமதி னிளேப்பு நீங்கிப் பவமென்னுங் கடல்கடந்து பாரஞ் சேர்ந்தோன், சீவனென நின்ரூலுஞ் சீவத்தன்மை தீர்ந்தாலு மில்ல றத்திற் செறிவுற்ரூலுங், கேவலஞ்சந் யாசியாயிருந்த போதுங் கிளர்சுருதி மயக்கத்தாற் கிடைப்பட்டாலு, மியாவதுஞ்செய் தந்தவிர்ந்தும் பயனென் றில்லே யிமகிரியு ரூக்கடல்போ லியல்பினிற்பன். (26)

(ப - ரை.) பாவனே தீர்துரியமதில் = எண்ணமெல்லாம் நண்ணுத துரிய அவஸ் தையின்கண், இளேப்புநீங்கி= விசிராந்தியை யடைந்து, பவமென்னுங் கடல்கடந்து= ஜனன சமுத்திரத்தினின்று மேறி, பாரஞ்சேர்ந்தோன் = முத்திக்கரை யடைந்தவன், சீவனெனநின்ரூலும் = ஜீவத்தன்மையுடன் விவகரித்த போதிலும், சீவத்தன்மை தீர்ந் தாலும் = அகம்பாவமற்றுச் சமாதியில் மூழ்கியபோதிலும், இல்லறத்தில் செறிவுற்ரு லும் = மனேவிமக்களுடன் கிருகஸ்த ஆச்சிரமத்திலுற்றுத் தர்மத்தை நடத்தியபோதி னும், கேவலஞ் சந்நியாசியா யிருந்தபோதும் = சர்வசங்க பரித்தியாகியாயபரிவிராஜகஸ்ட் ஞய் விளங்கியபோதினும், கிளர்சுருதி மயக்கத்தால் கிடைப்பட்டாலும் = யாவரையும் சிக்ஷிக்கும் சுருதிமிருதிகளேப் படித்தும் படிப்பித்தும் விளேயாடித் திரிந்தபோதினும், இயாவதுஞ் செய்தந் தவிர்ந்தும் = மற்றும் பிறவற்றையும் செய்தபோதினும் செய்

யாது வாளாவிருந்த போதினும். பயனொன்றில்லை = யாதொரு பிரயோஜனமுமே கிடையாது, இமகிரியுருக் கடல்போல் இயல்பில் நிற்பன் = பனிநிறைந்த மந்திரபர்வ தம் மதனஞ்செய்யாத பாற்கடல்போற் கம்பீரமாய்ச் சுபாவ சித்தசித்தாகவே விளங் குவன். (26)

(ஸ்ரீ - வீர.) தூரியபத அடைவிஞலடைந்த விசிராந்திச் சுகத்தை யுடையவனுய்ப், பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற் படர்ந்தவனுய், இருப்பவன் இல்லினிற்போ னென்னினும், துறவைத் தொடர்ந்தோனுயினும் அவனுக்கு இகலோக அருத்த பலன் கள் பரலோக அருத்தபலன்கள் என்பன எவையுங் கருமஞ்செய்யினும் செய்யாவிடினும் புண்ணிய கருமத்தாலேனும் பாவகருமத்தாலேனும் கிடையாவாம், சுருதிஸ்மிருதிகளின் சிரவண மனனவடிவ மனுவிருத்தி விசேஷங்களு மில்லையாம்; அவன் மந்தரபருவத மில்லாத பாற்கடல்போல எவ்வாறிருந்தானே அவ்வாறே யிருக்கின்றன், இப்போதி யம்பிய இது முரண்பட்டதா யிருக்கின்றது, இல்வாழ்வோன் துறவியென அவ்வவ் வாசிரம நியததரும நிஷ்டத்தன்மை, பாவத்தானும் புண்ணி யத்தானுங் தொழில் செய் யினும் செய்யாவிடினும் பயனிலையென நியதமில்லாத தருமநிஷ்டத் தன்மை, ஆண்டு மந்தரமின்றிய மாக்கடல்போலென அத்தியந்த விசேஷ நீக்க பரமான திருஷ்டாந்தம் எவ்வாறு பொருந்தும் எனின், ஆன்மதத்துவ விடயத்தில் முற்கூறிய ஏகதேசமான ஒப்புமையைக் கவரவேண்டும்; அதனுற்றான் இவ்வாறு கூறியதாகும், உபமானங்களின் ஏகதேச அங்கிசம் உபமேய சமதருமமாமென இங்குகருதியதாம், அறியத்தக்கபொ ருளே அறிவதற் கனுகூலமா யிருத்தலின் அவசியம் இவ்வாறே யறியத்தக்கதாம். (26)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஹே இராகவ ! மதியினுலெவை முடிவான ஞானவாமோ அவைகளுக்குள் அந்தரங்கமுந்தமும், விவேகமதியினுற் கவரத்தக்க சாரத்தினுஞ் சாரங் கட்கெல்லையா யிருப்பதும், புத்தியினுஞ் சாரதரமாயுள்ளா யிருக்கும் பிரத்தியக் காண்ம வடிவமும் ஆன்மத்துவை விடயஞ்செய்வதும். ஞானத்தை வித்தரித்து விளம்புவதும், இப்போதென்ஞற் கூறப்படுவதும் ஆகிய இச்சாஸ்திரத்தைக் கேட்கவேண்டு மேகாக் கிரத்துடன் என்றுஞ்செய்யத்தக்கது அதன்கண் ணின்றதென்றுங் கூறுகின்றுர்: சுருக்க மாகவும் விரிவாகவும் கூறப்படும் ஞானசாஸ்திர சிரவணபலத்தை முன்மொழிந்து, இனிக்கூறத் தொடங்கும் நீ சிரவணிக்கத்தக்க சாஸ்திரம் விஸ்தாரமா யிருத்தலின் ஒரு மையுடன் கேட்கவேண்டும், விஸ்தீர்ணமா யிருந்தபோதினும் அசாரமாயின் அதன் கண்ணே சித்தம் ஒருமைப்படாது. ஆலுலிதுவோ அத்தகையதன்றும், மற்றே, மதியி னுள்ளுள்ளும் ஞானசாரமா யிருப்பதாமிது, இதனையும் நீ எம்மனேரது கௌரதையை யுத்தேசித்துக் கவரவேண்டு மென்பதாக இன்றும், மற்றே, பிரமாணங்களையனுசரித்து ஊகத்தோடு கூடியதாக இருந்தாற் கேட்கலாம் அவ்வாறே யுளதென்கின்றுர்:— ஊகமென.

(ச - அ - கை.) அந்தராந்தரங்க சாரமாய் ஞானவித்தார முடையதாய் எம்மால் இனிச்சொல்லப்படும் இதனை இராகவ !நீகேட்பாயாக வென்கின்றுர்:—ஊகமென.

ஊகமுள தேற்சிறுவ ருரையுங் கொள்க வொழிந்ததய னுரைசெயினுந் திரணமொப்ப, வேகவிடு வாய்ஞான மெளிதுதோன்ற வியம்புமுவ மான மெலா மேகதேச, மாகுமினை வாயுருவ மற்றஞான மாகார மாமுவமைக் கண் டாதென்னு, மூகரனு பவமில்லா விகற்பத் தாலே மொழிருதர்க்க மறிவழிக்கு முயல வேண்டாம். (27)

(ப - ரை.) ஊகமூளதேல் = யுக்தியோடு கூடியிருக்குமானால், சிறுவருரையும் = பாலகவசனமும், கொள்க = கொள்வாயாக, ஒழிந்தது = இவ்வாறில்லாதது, அயனு ரைசெயினும் = பிரமதேவர் அருளிய போதினும், திரணமொப்ப வேகவிடுவாய் = துரும்பிற்குச் சமானமாகப் போகவிட்டு விடுவாய், ஞானமெளிது தோன்ற = பிரஹ்ம வித்தை சுலபமாக வுதிக்கும் பொருட்டு, இயம்பும் = தோன்றக்கூறும், உவமானமெ லாம் = ஒப்புமைகள் யாவுமே, ஏகதேசமாக = ஒருவாறாக, நினைவாய் = கொள்வா யாக, உருவமற்றஞானம் = உருவமில்லாத வுணர்வு, ஆகாரமாம் உவமைக்கண்டாது = ஆகிருதியுவமைகட்குப் பொருந்தாது, என்னும் = என்றுகூறும், மூகரனுபவமில்லா = மூர்க்கரது அனுபவமற்ற, விகற்பத்தாலே = விபரீத கற்பனையாலே, மொழிகுதர்க்கம் = சொல்லப்படும் கெட்டதருக்கம், அறிவழிக்கும் = விவேகத்தைக் கெடுக்கும், மூயல வேண்டாம் = அதில்நீ முயற்சிக்க வேண்டாம். (27)

(ஸ்ரீ - வீர.) பிரமாதத்திஞலே குருகூறியதின் பாலும் பொருந்தாத திருந்தால் விட்டுவிடலா மென்றியம்பிப் பிரஹ்ம உபதேசப் பொருட்டுப் புகலுந் திருஷ்டாந்தங்க ளில் கொள்ளத்தக்க அங்கிசத்தைத் திருஷ்டாந்த தார்ஷ்டாந்த விடமத்தன்மையைக் காட்டும் வாயிலாய்க் கூறுவார், இயம்புமென்றார். குதர்க்கப் பிரபல மூர்க்கவிகற்பங்களை நீ பற்றவேண்டாம், அவைவிஞ்ஞான விநாசகங்களாம், கிடைத்த பிரசங்கசேடரைச் சிக்ஷிப்பார் குதர்க்கமென்றார். அக்குதர்க்கம் அனுபூதியைக் கெடுக்கும் முடிவையுடை யது, அப்வித்திர அர்த்தவிஷய மூடையதாதலின் தூய்தற்றது ; அஃதிங்ஙனமாம்:— பிரஹ்மம் சத்வித்தீயமா ? அத்வித்தீயமா ? துவித்தீயத்தோடு கூடியதாயின் அபசித்தாந்த மாம்; அத்வித்தீயமாயின் குருசாஸ்திராதி அபாவத்தால் ஞானம் உண்டாக மாட்டாது; பிரஹ்மம் சப்பிரமாணமா ? அப்பிரமாணமா ? பிரமாணத்தோடு கூடியதாயின் அத் வைத ஆனியாம், பிரமாண மற்றதாயின் அப்பிரமேயத்தை (அதனது) அசித்தியாம் ; என் பனவாதிய குதர்க்க விகற்பங்களாம். ஆறுபிரகரண வடிவமா யிலங்கும் இம்மோக்ஷ வுபாயசம்மிதையைச் சிரவணித் தறிந்தமாத்திரத்திற் கெடாத சக்தியோடும் நல்ல க்ஷேத்திர நல்லகாலங்களோடும், கூடியவிரையினின்றும் அவசியம் பலிக்குங் கெடாத பலமுண்டாவதேபோல மெய்ஞ்ஞான மினிதுண்டாம் அநேகஞ்சாகைகளின் வேறுபாட் டால் வேறுவேறுயுள்ள அநேகம் சுருதிகளிருப்ப அவைகளை விட்டுப் புருடபுத்தியினுற் செய்யப்பட்ட இதனையே கொள்ளவேண்டு மென ஏன் கூறுகின்றீரெனின் ? கேட்டி ! ஊகங்களினுலே தத்துவ நிர்ணயத்தைச் செய்விக்குமாயி னச்சாஸ்திரம், புருடபுத்தியி னுற் செய்யப்பட்டதா யிருந்தபோதினும் கொள்ளத்தக்கதேயாம், மற்றையது வேதசம் பந்தமா யிருப்பினும் தள்ளத்தக்கதேயாம். நியாயத்தை விடாததே முக்கியமென அனு சரிக்கும் புருடனு லாதரிக்கத்தக்கதாம் அருமறைகள் புகழத்தக்க மேன்மையுடைய னவே யாயினும், அதிரகசிய அபிப்பிராயத்தோடு கூடினவாதலின் விரைவி லனுப விக்க முடியாதாம். ஆகவே சாதாரண அதிகாரிகளானே கொள்ளத்தக்கன வாகாவாம், அவற்றின் சாரங்களை யுணர்ந்த பெரியோர் தம் மனுபவத்தை மூலமாகவுடைய ஊகங்க ணிறைந்த இந்நூலோ வெட்டவெளியான கருத்தோடு கூடியிருத்தலின் அனுபவத்தில் ஒட்டிவருமென அவசியம் ஆதரவோடுஞ் சேவிக்கத்தக்கதாம். வேறு பொருட்கூறும் வாயிலாக இதனையே திடஞ்செய்வார் ஊகமென்றார், ஊகத்தோடு கூடிய வசனத்தைப் பாலகனிடத்தி னின்றும் கொள்ளவேண்டும், மாறுயினை, மலரோன் மலர்ந்தபோதி னும், திருணமொப்ப விடவேண்டியதேயாம். புருடமுயல்வா லுண்டுபண்ணப்பட்டதும் கொள்ளத்தக்கதா மேலாயின் எங்கள் வங்கிசத்தி லிருந்தவர்களே யெழுதிய நூல்க

ளவற்றையேனும் கேட்பேன், இக்காதை கேட்கத் தக்கதன்றெனின், நன்று நவின் ரூய், தன் முன்னிகழும் ஸ்ரீ கங்கையைவிட்டு எனதுதந்தை தோண்டிய கூபமிது வென்று அக்கூபரீரை யாவனருந்து கின்றனனோ ஆசைமிக்க அவனையெவுரேசிகுயிார். திருஷ்டாந்தங்களில் விளம்பவிச்சித்த ஒப்புமை விவேகப் பொருட்டுத் தள்ளத்தக்க அங்கிசத்தைக் கூறுவார் ஞானமென்றூர். இப்போதெவ்வெத் திருஷ்டாந்தங்களால் யானுனைக் குணர்த்து கின்றேனோ அவையாவுங் காரணங்களே யுடையன, ஜன்னியங் கள், அதனுனே பொய்யாயினவாம். அறியத்தக்கதோ பரமார்த்த சத்தியமாயும் அகாரண மாயும் நித்தியமாயு மிருக்கின்றது. பொய்யாயே யிராநின்ற மண் பொன் முதலிய உபா தான திருஷ்டாந்தங்களாற் சத்தாகிய பிரஹ்மகாரண முணர்த்தப்படும், படவே ஜன்னி யத்தன்மை பொய்த்தன்மை முதலிய திருஷ்டாந்த தருமங்கள் விடத்தக்கனவாம். பரப் பிரஹ்ம திருஷ்டாந்தத்தில் மாத்திரம் இந்தியமாம். அன்னிய திருஷ்டாந்தங்க ளில்லே யென வுணர்க, பரப்பிரஹ்மத்தைவிட்டு மற்றைய வுபமான வுபமேயங்கள் யாவற்றிற் குமே காரியத்தன்மை காரணத்தன்மை முதலியவற்றுனே முற்கூறிய வொப்புமை யுளதேயாம். ஆராய்ச்சி முதலியவற்றுனே பிம்பத்தைக் கவரும் உணர்வுண்டாகின்ற தெனக் கூறப்படுமாயின் அவ்வாறே ஞானத்தாற் பிம்பமூற்பத்தியாம் எனக்கூறுதல் கூடாதாம், பிரஹ்மத்திற் குற்பத்திகூற முடியாதன்றே. பரப்பிரஹ்மத்தை விடித்து என்றதனுனே அறியவேண்டியதிதுவாம், பிரஹ்மோபதேசத்தில் திருஷ்டாந்த மியா தனக்கீண்டு கூறப்படுமோ, அவற்றுள் ஏகதேசதருமஞ்சமானமா யிருப்பதுகொண்டே பிரகிருத நிண்ணயஞ் செய்யப்படும், பிரஹ்மஞ் சகத்தின்விவர்த்த அதிஷ்டான மென் பதை யுணர்த்தப் பாம்பின் விவர்த்த அதிஷ்டானத்தை யறிவிக்கும் பழுதைத் திருஷ் டாந்தத்திற்கு அதிஷ்டான விவர்த்த அங்கிச மாத்திரையானே திருஷ்டாந்தத் தன்மை யாம். தார்ஷ்டாந்தத்திற் சம்பந்தித்த நித்தியத்தன்மை சுகித்தன்மை முதலிய எல்லா அங்கிசத்தானு மன்றும், அத்திருஷ்டாந்தம் ஏகதேசத்திலேயே கொள்ளப்படுவ தென்னே யெனின், எல்லா அங்கிசத்தும் ஒப்புமையெங்கும் பிரசித்தமில்லே யென் றறிக. பிரஹ்மதத்துவத்தை யறிவிப்பதற்காக எவ்வெத்திருஷ்டாந்தம், ஈண்டுக்கூறப் படுமோ அவையாவுங் கனவிலுண்டானவைபோலப் பொய்யுலகி லடங்கினவேயன்றி மெய்யாயின வல்லவாம், வேறொருபர மார்த்தவஸ்து சச்சிதானந்தமாய் வெளிப்படை யில்லே யல்லவா ? இருந்தாலன்றே உவமை கொடுக்கலாம். இவ்வாறுகவே உருவமில் லாத பிரஹ்மத்திற்கு வுருவத்தோடு கூடியவை யெவ்வாறு திருஷ்டாந்தமா மென்னும் மூர்க்கர்களுடைய விகற்பத்தாலுளவாய வாக்கியங்கள் உதியாவாம், பிரஹ்மம் இருமை யோடு கூடியதா ? இருமையோடு கூடாததா ? இருமையோடு கூடியதெனின் சித்தாந் தங் கெட்டுப்போம், இருமையோடு கூடாததெனின்? குருசாஸ்திராதிகள் ஒன்றுமில்லா மையின் ஞானமுண்டாகாதாம், என்பனவாய விகற்ப வாக்கியங்களும் உதியாவாம், இதனுனே திருஷ்டாந்த உபயோசத்தை அனுமானப்படுத்தி யுணர்த்தும் போது திருஷ் டாந்தம் ஹேது வியாப்தி முதலியவை பொய்யாயிருத்தலின் வியாப்பியத் தன்மைய சித்தி சொரூபசித்தி முதலிய ஏதுப்போலிகளும்பிரபஞ்ச சம்பந்தமான ஏதுக்களைக் கொண்டு சத்தியத்தன்மை முதலியவற்றைச் சாதிக்கும்போது விருத்தத்தன்மை முத லிய ஏதுப்போலிகளும்அப்பிரயோஜக தோடங்களாக ஆதல்கூடும் என்னும் தார்க்கிகரது சங்கைக்கு மிடங்கிடையாதென நீக்கப்பட்டது, அசித்தி விருத்தமுதலிய தோஷதிருஷ் டிகளையுடைய மற்றைய தார்க்கிகர்கள் செய்த திருஷ்டாந்தப் பெருந்தூடணங்களாற் றூஷிக்கப்பட்ட ஏதுத்தன்மை முதலிய ஜகத்தானது கனப்போல் விருத்தலின் வஸ்து

வின் கண்ணே யொருசிறிதுந் தூடணங்கிளம்பவே மாட்டாதாம்; உணர்தல் உணர்த்துவித்தல் விவகாரமோ வியாவகாரிக சத்தியத்தன்மை மாத்திரத்தானும் சாத்திய சித்திபரியந்தம் பொருந்தும். உலகம் கனுமுதலிய திருஷ்டாந்தங்களாற் பொய்யாம்போது ஆன்மாவிற்கு ஆகாசசூரியாதி திருஷ்டாந்தமும் பிரஹ்மத்திற்கு மண்ணிரும்பாதி திருஷ்டாந்தமும் எகதேச அங்கிச மாத்திரத்தாற் பதார்த்த பரிசோதனத்தால் அறியத் தக்கதாகிய இலக்கியார்த்தப் பொருட்டாம்; அதன தூணர்வுதிக்கவே காரியசகித அவித்தை கெடும் பொருட்டு அவசியங்கொள்ள வேண்டியதாகச் சர்வசுருதி சாஸ்திர மகா தாற்பரிய விஷயமாயயான் பிரஹ்மமா யிருக்கின்றேன் என்னும் மகாவாக்கியார்த்த நிச்சயம் நிரகிக்கத் தக்கதாம் யான் வெள்ளையன், தூலன் என்பதாதிப் பிரத்தியகூத்தாலும் ஆரோக்கிய இலாளையர்யும் பாதிகட்காக ஒளடதபானஞ் செய்ய முயற்சிக்கும் பலதரிசனக் குறியாலும், பிறர்விவகார சமமாக வுவமிக்கப் படுதலினுலும், சருவ விவகாரங்களேயுஞ் செய்யும் மகாஜனவாக்கியங்களாலும் "மறையோன் வேட்க" என்றற் றொடக்கத்துச் சுருதியினுலும் மிருதியினுலும் தரும சாஸ்திரங்களாலும், அநேகத் தார்க்கிகரது ஊகங்களாலும், தேக வீமனும் அதனின யலேனும் கருத்தாத்தன்மை போக்தாத்தன்மை முதலிய இயற்கை வாய்ந்த ஆன்மாவாகக் கவரப்பெறும், ஆகலின் எங்ஙனம் பிரத்தியகூத்தாதி யநேகம் பிரமாணவிருத்த அருத்தம் மகாவாக்கிய மாத்திரத்தானே, கொள்ளற்பாலது என வினவுதியேல்? கேட்டி, சுதார்க்கிகரது மதத்தை யனுசரித்து அறிஞரது பிரத்தியகூ அனுபவத்தைக் கெடுக்கும் மூடிவானபயனே யுடையனவும், அசுத்தமாய் தேகாதி யான்மபாவ விஷயத். தன்மையினுனும், பவித்திரமில்லாத நாய் பன்றி முதலியவற்றின் பிறப்பின் பலத்தையே யுடைமையினுனும் அசுத்தமும் ஆகிய பிரஹ்மம் பிரமாணத்தோடு கூடியதா? பிரமாணத்தோடு கூடாததா? பிரமாணத்தோடு கூடியதெனின்? அத்துவிதத்திற் காணியாம், பிரமாணத்தோடு கூடாததெனின், பிரமேய ஆனியாம் என்பனவாதி விகற்பங்களானே பரம புருடார்த்தத் தன்மையைக் கொடுப்பதாகிய ஞானயோக்கிய வுணர்வுடைமையைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது தேகாதிகட் காண்மத்தன்மை சம்பவியாதா மென்பது மேற்கூறப்படும்.

(ச.) மேற்கூறும் கதைகளினுடைய திருஷ்டார்த்த தார்ஷ்டாந்திகங்களினது விரோதபாவத்தைச் சங்கித்தும், பரிகரிக்கின்றூர் ஞானமென்பதாக, இயம்பும் = நினைக்குப் பிரஹ்ம உபதேசஞ் செய்யும், உவமான மெலாம் = திருஷ்டாந்தம் அனைத்தும், காரணசகிதம் அதனுலடையும் மெய்ப்பொருள் காரணசொரூபமாதலின், எகதேசமாக = எகதேச தருமமுடையதாக, நினைவாய் = அகத்திற் நிரகிப்பாய், உருவமற்றஞானம் = நிராகாரமாகிய பிரஹ்மம். மூகர் = விகற்பத்தால் வியாத்தியாதி யங்கவிகற்பாதிகளால் திருஷ்டாந்த தார்ஷ்டாந்தங்கள் சர்வப் பிரகாரத்தாலும் சமானபாவமா யிருக்கவேண்டுமென் றூக்கிரக மூடையவன் மூர்க்கன்; அவனது பேதநிருஷ்டியான வசனங்கள் பயன்படாது. உயர்வு தாழ்வானவைகட்குச் சமானசாதி துல்லியமாதலின் என்பது கருத்து. முயலவேண்டு மென்றதனுல் இதமுப தேசித்ததாம். (உ4)

(ஸ்ரீ - வீர - அ - கை) முமுக்ஷுவினுற் செய்யத் தக்கதாகச் சமாதியுடன் எவ்வாராய்ச்சி முன்மொழியப் பெற்றதோ அது நிதித்தியாசனமென வேறுபெயர் வாய்ந்த ஞானப்பயிற்சியோடு கூடவே முமுக்ஷுவால் அனுஷ்டிக்கத் தக்கது, வெளிமுகச்சித்தத்தாற் கூடாதாம் என்னும் இப்பொருளே யுக்தியோடும் கூறுகின்றூர்: ஒரேபோழ்தினில் ஒன்றினுலொன்று விருத்தியடைவதற் கொத்த திருஷ்டாந்தத்துடன் மீண்டுமதனையே கூறுகின்றூர்:—தங்கிரியென.

தந்திரியி லெழுமிசைபோற் சாந்தி முன்னுஞ் சற்குணத்தின் ஞானமெழுந் தம்மிற்றுமா, மிந்தவிரண் டுங்குளமு மலரும்போல வினிதுவளர்ந் திடுமொக்க விரண்டுங் கற்கில்,வந்தணுகுந் தனித்தனியே யிரண்டுங் கற்கில் வருபயனென் றிலதாமிவ் வாய்மை கேள்வி, முந்துமறம் பொருளின்பங் கீர்த்திவாணுண் முழுதளிக்கு மனத்தெளிவான் முத்தி நல்கும். (28)

(ப - ரை.) தந்திரியலெழு மிசைபோல் = யாழ்நரம்பில் எழாநின்ற சப்தசுரம் போல, சாந்திமுன்னுஞ் சற்குணத்தின் = உபசாந்தி முதலிய கல்யாண குணங்களால், ஞானமெழும் = ஞானம் உதயமாம், ஞானத்தால் சமாதியாம், இந்த இரண்டும் = இவ் வுபயமும், தம்மில்தாம் ஆம் = பரஸ்பரம் விருத்தியாம், குளமும் மலரும்போல இனிது வளர்ந்திடும் = தடாகமுந் தாமரையும் போன்று நன்றாகவளரா நிற்கும், ஒக்க இரண்டுங் கற்கில் வந்தணுகும் = சமமாயிரண்டையும் அப்யசிக்கில் மோக்ஷம் சுலபமாம், தனித் தனியே யிரண்டுங் கற்கில் = ஒவ்வொன்றாக இரண்டையும் அப்யசித்த போதினும், வருபயன் ஒன்றிலதாம் = வராநின்ற பிரயோஜனம் ஒன்றையும் கண்டிலோம், இவ் வாய்மை கேள்வி = இந்த உண்மையைச் சிரவணித்தால், அது, முந்தும் அறம்பொருள் இன்பம் கீர்த்தி வாணுள் முழுதளிக்கும் = முதன்மையான தருமம் அர்த்தம் காமம் புகழ், ஆயுள் முதலியவற்றை நிறையத்தரும், மனத்தெளிவால் = புத்தி நிர்மலத்தன்மை யைத்தந்து அதனால், முத்தி நல்கும் = வலுவில் மோக்ஷத்தைத்தரும். (28)

(ஸ்ரீ - வீர.) எத்துணை யெத்துணை யுண்முகமாகி ஆன்மதத்துவத்தைக் காண்கின் றானே அத்துணை யத்துணை சமாதி மானுகின்றான், எத்துணை யெத்துணை உண் முகத் தோடும் சமாதிமானுவனே, அத்துணை யத்துணை ஆத்ம தத்துவத்தைக் காண்கின்ற னன் என்பது அனுபவ சித்தமா யிருத்தலின் நிருவிகற்ப சித்தேகாகார அந்தக்கரண விருத்தியாவிருத்திவடிவ ஞான அப்யாசத்துடனே சற்புருடக் கிரமமென்று சொல் லப்படும் சமாதியோடு கூடிய ஆத்ம விசாரத்தை மீண்டும் மீண்டும் ஆவிருத்தி செய்ய வேண்டும். அல்லது, "என்றவாணியை யத்திறனியற்று மாறென்னென வினவ்கேட் கத், துன்றுசிந்தையும் வசனமு முசாவு மத்தொல்பொருட் பொருட்டாகி, நின்றவின் பமு முதாரமும் விராகமுநிறைந்து நீள்சகமென்று, மொன்றுமில் லெனக் கலவழி யுகமாயுணர்வர் சாதகராரேனர்." எனக்கூறப்படும் ஞானப்பயிற்சியும் சமசந்தோஷப் பயிற்சியும் சமகாலத்திலேயே செய்யத் தக்கனவாம் என ஊகத்தோடு கூறுவார் சாந்தி யென்றார். சிரவணதியானே மதிநிர்மலமாதலானே; மகாவாக்கியத்தானே முத்தியாம், ஒருமுறை தற்பதப் பிராப்திவடிவ ஞானமுளதாகவே மீண்டும் அதன் மறப்புண்டாம் என்று சங்கித்துக் கூறுவார், நல்குமென்றார். தனது வடிவமாகவே கிடைத்ததாகும் என்பது அறிஞரனுபவமாம் அதுவும் வலுவிலேயே கிட்டுமென்க. அது ஞானக்கண்ணு ரக் கண்டதாகும், அன்றியும் தேசகால வஸ்து பரிச்சின்ன மற்றதாகும், அதனானே ஆவரணமற்ற பரிபூரண போதரூபமாம் அப்பரமாத்மா, அறிஞரது மனோவிருத்தியியாப் பியத்தன்மையை விட்டுவிடாமல்விளங்குமென்க. சாந்தியாதி குணங்களானவை ஞானத் தால் விருத்தியை யடைகின்றன, ஞானமுஞ் சாந்தியாதி குணங்களால் விருத்தியை யடைகின்றது, இவை பரஸ்பரம் தாமரையுந் தடாகமும்போல விருத்தியடையும், நீராற் றுமரைபோலத் தாமரையாலும் தடாகம் தண்மை நன்மணம் அழகு முதலிய குணங்க ளானே விருத்தியடைவது வெளிப்படை யேயன்றே ! இவ்வாறே ஞானமும் நல்லொ ழுக்கமும் பரஸ்பரம் காரணமாய் விருத்தி யடைவனவேயாம், நல்லொழுக்கத்தானே

ஞானம்வளரும், ஞானத்தானே நல்லொழுக்கம் வளரும், இந்தமெய்யுணர்வும் நல்லொழுக்கமும் ஒன்றற்கொன்று சாதகமாகியே வளரும்; மதிமானுனவன் சாந்தியினலும் பிரஞ்ஞையினலும், மகாபுருடத் தன்மையினலும் திடமுயற்சியினற் சிரவணாதி முறையாய் ஞானத்தையும் நல்லொழுக்கங்களையும் பயிலவேண்டும் இவ்வுலகத்தில் ஞானம் நல்லொழுக்கம் என்பவற்றைச் சமமாகப் பயிலாதவரை அதிகாரிக்கு அவ்விரண்டிலொன்றுகூடச் சித்திக்கமாட்டாது. சாதனகலாப வுபதேசத்தைப் பயனேப்பகரும் வாயிலாய் முடித்துக்கூறுவார், இவ்வாய்மை யென்றார். மதிமானுய முமுக்ஷுவால் கீர்த்தியையும் ஆயுளையும் கொடுப்பதும், புருடார்த்த பலத்தைக் கொடுப்பதும் ஆகிய இவ்வுத்தமோத்தமமான ஸ்ரேஷ்டத்தை ஆத்தராயும் ஆன்மஞானியாயும் இலங்கும் ஆசிரியரிடத்தில் இனிதன்போடு சிரவணஞ் செய்யவேண்டும். குருசம்பிரதாயமாய்ச் சிரவணஞ் செய்தாற்றான் பெரும்பயனைக் கொடுக்கும். கலங்கிய நீரானது தேற்றான் பொடியாற் றெளிவை யடைவதுபோல நீயுபிச்சாஸ்திரத்தைச் சிரவணித்து மதியின் தெளிவினலே சாதனமகிமையின் பலத்தால் அந்தப் பரமபதத்தை யடைவாய்: கூறிவந்த சாதனசம்பத்தோடு மனனசீலனுய் வாழும் முனிவனுடைய மனது அறியத்தக்க ஆன்மசொரூபத்தை யறிந்து அதன்வலுவினற் சுதந்திரமாய்ப் பரமபதத்தை யிச்சியாவிடினும் அடைகின்றது; கேவலஞ் சாதனமகிமையாலே யிவ்வாறுகின்ற தென்பதாகவில்லை! மற்றோ, அறியத்தக்க தத்துவ வியற்கையினுனும் என்றறிக. ஞானுனமாய் ஞானவடிவ அகண்டப் பிரஹ்மாகார விருத்தியோடுகூடிப் பிரகாசித்துக் கொண்டிருத்தலின் அஞ்ஞானத்தையும் அதன் காரியங்களையும் உதறி யெறிந்து விட்டு யாவற்றையு மறிந்துகொண்டே விழித்திருக்கும் அகண்டமாய உத்தமோத்தம பதமானது மனதை விடுவதேயில்லை, அஞ்ஞானம் அதன்காரிய முதலியவற்றோடு மனதும் பாதிக்கப் படுவதேயாகும், இது மெய்ஞ்ஞானிகட் கனுபவமேயாகும். அவ்வாறே "உடலினை யகமென் றுணர்ந்திடு மூணர்வை யொழித்திடு மெய்யுணர்வுதா, னுடலினை யகமென்றுணர்ந்திடு முணர்வையொத் ததிதிடமதேயாகி, விடலருந் தனதுவடிவிலே யெவற்கு விளைந்திடுமென்னவன் வேண்டாம், விடறுயரெனினும் விட்டொளாத் துயரும் வீட்டினையடைந்து வாழ்குவனே.

(ச.) தம்மில் = ஞானத்தில், தர்மம் = சாந்தியாதி சற்குணமுதிக்கும், ஒன்றலொன்று இனிது வளர்ந்திடும், பதமங்கள் சரசரல் வளர்கின்றன, சரசரும் பதமங்களாலேயே பிரகாசிக்கின்றது, அதுபோற் சாந்தியாதிகளும் ஞானமும் ஒன்றற்கொன்றுபகரிக்குமென்பதாம், இவ்-நல்கும், சர்வப்பிரயோஜனங்களையும் தருவதான இதனை இராகவாதி சிரவணஞ்செய்து திடமானபுத்தி நிர்மலத்தினல் மோக்ஷமடைவா யென்பதாம்.

முமுக்ஷுப் பிரகரணம் முற்றிற்று.

ஆதிருவிருத்தம் ஷ(189)

ஆகமேய்ப்பஸ் + 189

உற்பத்திப் பிரகரணம்.

ஞான விண்மகன் கதை.

சத்தியஞான வநந்தவொன்ற ஜரசாஸ்வத நித்தியவிபுவாய்ச்
சுத்தவுட்பிரம ரசாயனமாகிச் சுககனம் பூரணபரமாய்
மத்தியுற்பத்தி முடிவிறற்சோதி மாயையின் விரிவிஞன் மீண்டும்
தொத்தியவுலகாய் மாயையும் பயமிறாய விநாயகற்றொழுவாம்.

(ஸ்ரீ - வீர் - அ - கை.) ஓம் சுவஸ்தி. ஸ்ரீ கணேசாயநம்: ஓம் பரமாத்மநேநமः இவ் வுற்பத்தி யென்னும் பிரகரணத்தில் ஒன்பது கதைகள் உள்ளனவாம், ஆதியது ஞான விண்மகன்கதையாம், பின்லீலை கதையாம்,முறையே சுற்கடிகதை, ஐந்தவர்சதை, வஞ்ச விந்திரன்கதை, மனத்தின்கதை, பாலன்கதை, சித்தன்கதை, எழுபூமிகளின் வர்ண னம், அலங்கரிக்கப்பெற்ற இலவண மன்னவன்கதை, என்பனவாம்; என்னுமிவற்றுள். பூர்வத்தாற் சுருக்கமாகப் போத்தியங் கூறப்படும். பூர்வப்பிரகரண விருத்தாந்தத்தை யனுவதித்து உத்தரப்பிரகரண தாற்பரியங் கூறுகின்றார்: ஞானத்திஞலேயே யான்மா விற்கு மோக்ஷமல்லாமற் கருமசமாதிகளிஞலே யில்லையென்பதையும், ஆன்மாவானது தன்னேத்தானே யறியாமல் தன்பால் அசத்தாய திருசியவுலகத்தைச் சிருஷ்டிக்கின்ற தென்பதையுங் கூறுகின்றார்; சாஸ்திரங்களி லுரைத்த சாதனங்களோடு கூடிய அதி காரிக்கு "விவேகமுடையவன் மீண்டும் பிறப்பிறப்பைக் கொடாததும், துரியபதமென் னும் பெயரையுடையதும், சாந்திவடிவமும் ஆகிய ஆன்மாவி லீலைப்பாறுவதா மோக்ஷ மடையும் பரியந்தம் ஆன்மவிசாரஞ் செய்தல்வேண்டும்" என்பதாகத் தத்துவ அப ரோக்ஷஞானம்வரை செய்யவேண்டியதாய் விதிக்கப்படும் விசாரப் பிரகாரத்தை முன் னிரண்டு பிரகரணங்களில் வருணிக்கப்பட்ட எல்லாச் சாதனங்களேயும் உடையவரும் அதிகாரிகளுக்குட் சிரேஷ்டரும் ஆகிய ஸ்ரீ இராகவர் பொருட்டு "இப்போது ஞானத் தின் முறைமையானது இனிதாகச் சாதன முபதேசிக்கப்பட்டது போலவே யுபதே சிக்கப்படும்" எனப் பதிஞ்ஞுவாயிலாக இனி யியம்பப்படும் கிரந்தத்தால் விஸ்தார மாக விளம்பமுயலும் ஸ்ரீ வசிஷ்டபகவானுனவர் சிருஷ்டிப் பிரகாரத்தைக் கூறும் வாயி லாகப் பிரஹ்மாத்வைதத்தை விளம்புவதற்காக முற்பட்ட உற்பத்திப் பிரகரணத்தைத் தொடங்குகின்றார்:—முத்தியென.

(ச - அ - கை.) அதில் ஞானவிண்மகன் லீலைகற்கடி ஐந்தவர் வஞ்சவிந்திரன் மனது பாலகன் சித்தன் சத்தபூமிகையுடைய லவணன் என்னு மொன்பது கதைகளாம், அவற்றினுடைய அன்னியோன்னிய சங்கதிகளும் அவசரப்படி மேற் சொல்லப்படும். ஆண்டு ஜகதுற்பத்தி மனச்சங்கற்பத்தா லாதலினுலும், மனதுஞ் சீவவிவர்த்தமாதலினு லும் இப்போது ஜீவசொரூப மிதுவென்கின்றார்:—முத்தியென.

முத்தியை நயந்தோர் செய்கை மொழிந்தனஞ் சகங்க டோன்று
மத்திற மினிது கேட்பா யனுபவப் பேற்றினுலே
யொத்தமுன் னிலைப்பேர் பெற்ற வுணர்வுகஞ் சீவனித்தைச்
சித்தொடு புமானகந்தை முன்னிலைச் சீவனென்ப. (1)

(ப - பை.) முத்தியை = மோக்ஷத்தை, நயந்தோர் = விரும்பினவர், செய்கை = விவகாரத்தை, மொழிந்தனம் = இயம்பினேம், சகங்கள் தோன்றும், அத்திறம் = உல

கங்களின் உற்பத்தியை, இனிது கேட்பாய் = விளம்ப ஒருமையுடன் வினவுதி அனுபவப் பேற்றினுவே = அனுபவம் வேதனம் பிரதிபத்தி என்பவற்றோடு, ஒத்த = பொருந்த, முன்னிலேப்பேர் பெற்ற வுணர்வு = பிரத்தியக்ஷம் என்று பெயரிடப்பட்ட அறிவு, நஞ்சீவன் = நமதுஜீவனும், அத்தை = அதனையே, சித்தொடு புமான் அகந்தை முன்னிலேச் சீவன் என்ப = சம்வித்தென்றும், புமானென்றும், அகந்தை யென்றும் பிரத்தியக்ஷ இயற்கைய னென்றுஞ் சொல்வார்கள்.

(ஸ்ரீ - வீர.) " ஆன்மாவையே காணல்வேண்டும் " என்பதாதி சுருதி கூறியதும், சமாதி இவ்வாறு செய்யத்தக்க தென்பதோடு கூடியதும், மனன நிதித்தியாசன அங்க முற்றதும், சிரவணவடிவ விவகாரமே முமுக்ஷு விவகாரம் என்னப்படும். சகங்கள் = சர்வதிருசியங்களும், விண்ணினின்றும் கந்தர்வநகரம் உண்டாவதேபோல், அறியாம லிருக்கப்பட்ட அதிஷ்டானப் பிஹ்மத்தினின்றும், உண்டாகின்றன வென்று கூறப் படும் முமுக்ஷுவினுலே காணத்தக்கதாகப் பிரஹ்மாத்ம தத்துவம் முன்னர் மொழிந்த வழி, காக்ஷிமுதலிய அளவைகளான் அளக்கப்பெற்ற வுலகவண்மைச் சங்கையால், அதற் கப் பரிபூர்ணத் தன்மைச் சங்கையுளதாக, அதனே யகற்றுவான், உலகத்திற்குக் காரண பரமாத்மாவை விடுத்துண்மை யின்மையைப் புகலும்பொருட்டு, அதனினின்றும் சிருஷ் டியைப் பின் வருணிக்க வேண்டியதாமெனக் கருதி ஜீவசொரூபத்தில், வாதிகள் விவா தம் காண்புறுதலின் தமதுகருத்திற் கிசைந்த ஜீவசொரூபத்தைக் கூறும் வாயிலாய், அதற்குப் பிரஹ்மைக்கியத்தை யறைவார் அனுபவமென்றூர். அல்லது ஏகான்மத் தன் மையை யறியவேண்டுமென் றிச்சித்த முமுக்ஷுவிற்கு அதுவே முதலிற் கூறத்தக்க தாம், அதற்கங்கமாகச் சிருஷ்டி பின்வருணிக்கத் தக்கதாம் எனக்கருதிப் போதிக்கும் வழிமுவுவினேய முன்னரே அதன்சாக்ஷியதாக வொளிர்வதாய், சாக்ஷிப்பிரமாண மெனப் பிரசித்தமாயிலங்கும் அபரோக்ஷ சைதன்யவடிவ ஜீவனுேடு; அதனினும் விருத்தமாய்ப் பரோக்ஷமாயுள்ள பிரஹ்மத்திற்கு ஒருமை சம்பவியாதாம் என ஆசங்கித்து, அதற்கு அபரோக்ஷசைதன்ய ஆத்மத் தன்மையைக் காண்பித்துப் பிரத்தியக்கைக்கியம் பேசு வார், அனுபவமென்றூர். அல்லது, முமுக்ஷு அறிய இச்சித்த ஜீவபரமாத்மைக்கியத் தைக் கூருமல் அறியவிரும்பாத ஜகதுற்பத்தியை யினிது கீர்த்திக்கும் பிரதிஞ்ஞை பொருந்தாததாம் என ஆசங்கையுண்டாக்க கூறுவார், அனுபவமென்றூர். இவ்விவகார பூமியின்கண்ணே அனுபூதிவேதன பிரதிபத்தி சப்தங்களாற் கூறப்படும் அபரோக்ஷசை தன்யத்திற்குக் கூறியபடியே அனுபூதிப் பிரத்தியக்ஷம் வேதனப் பிரத்தியக்ஷம் பிரதி பத்திப் பிரத்தியக்ஷம் என்பதாகவாம். பிரத்தியக்ஷமென்பது தனித்தனிவாதிகளிஞலே தாமங்கீகரித்த விசேஷணம் பெய்யும் வாயிலாய்ச் செய்யப்பட்டதாம், அதுவே நமது உபநிடத வாதிகட்கு ஜீவனும், அங்ஙனமே " அனுபூதி வேதனப் பிரதிபத்தி என்று கூறப்படும் அபரோக்ஷசை தன்யம் யாதோ அது ஜீவனென்று கூறப்படும் " என்று மகத்துக்களா லியம்பப்பட்டுளது, இதனுனே வாதிகளால் வேறுவகையாகக் கற்பிக்கப் பட்ட ஜீவசொரூபம் நிராகரிக்கப் பட்டதாம். பிரஹ்மபகுத்திலோ இஃதிங்ஙனுரை யியம்பிக் கொள்ள வேண்டும்:—அனுபூதி சப்தத்தால் பிரஹ்மம் கூறப்படும், வேதன பிரதிபத்திகளால் அதுவே விசேடிக்கப்படும், வேதனமெனப்பிரஹ்ம அபரோக்ஷஞானம் நவிலப்படும், பிரதிபத்தியென லெளகிகப் பிரத்தியக்ஷம் ஆம், மகாவாக்கியத்தா லுண் டாய அந்தக்கரண விருத்தி யாரூடமாகிய பிரஹ்மமே அபரோக்ஷ ஞானசப்தத்தா லியம் பப்படுவதாம்; விழிமுதலியவற்றினே உண்டாய அந்தக்கரண விருத்தியாரூடமாய அதுவே லெளகிகப் பிரத்தியக்ஷ மெனப்படும் வேதனப் பிரதிபத்தி வடிவமாகிய அனு

பூதிப்பிரஹ்மம் பிரத்தியக்ஷபரியாயத்தைத் தாண்டாமல் மோக்ஷசாஸ்திரத்தில் பிரத்தியக்ஷமெனப் பிரதிபாதிக்கப் பட்டுளதாம், "அபரோக்ஷத்தினும் அபரோக்ஷம் சக்ஷுர்நேத்திரம்" என பிரத்தியக்ஷ அர்த்தங்களின் பிரதிபாதக சுருதியாம். பிரத்தியக்ஷமெனப்பெயரிய அந்தப் பிரஹ்மமே நம்முபநிடத சம்பந்திகட்கு ஜீவபத இலக்கியமாம். தனித்தனி குறிப்பிடவேண்டிப்பால் மாறு பட்டதுணர்க. அச்சிவனென்னும் அபரோக்ஷசைதன்யாத்மா பிரஹ்மமேயாம். அற்றேல் மோக்ஷகாமனுக்கு அதுவே யுணர்வுருவெனப் பிரஹ்ம ஒருமை யுபதேசிக்கப்படினும் முக்தியாவா தாண்டாக மாட்டாதாம்; பரிபூர்ணவடிவமாக நிலைபெறுதலே முக்தியாம், பிரஹ்மத்தினும் வேறுய பிரபஞ்சமானது இருத்தலால் அஃதொவ்வாமையின் என ஆசங்கிப்ப, சர்வப்பிரபஞ்சத்திற்கும் பிரஹ்ம விவர்த்தத் தன்மையைக் காட்டுவார் புமான் என்றார். சித்தத்திருக்கும் சிற்பிரதிபிம்பவடிவ ஜீவன்புமான் எனப்படும். அகந்தையாற் புலப்படுவதனால் அகங்காரமாம். உணர்வுவடிவப் பரமாத்மாவானது, ஒடுவென்பதாற் கொள்ளப்படும் அதுவென்பதால் எண்ணப்பெறும், அச்சம்வித்துருவப் பரமாத்மா தன்னவித்தையினானே பூர்வம் சித்தவுபாதியையுடைய புமானாகிப் பின்னர் அகந்தையுணர்வு வடிவமாம் இஃது பலக்கணமாம், புத்திவடிவமாய மனவடிவமாயும் ஆமெனவுங் காண்க. முமுக்ஷு விவகாரத்தை மொழியும் முற்பிரகரணத்தினும் வேறுக இனி இவ்வுற்பத்திப் பிரகரணங் கூறப்படும் என்பதன்கண் இனியென்னும் பின்னரென்பதால் ஏதுத்தன்மைச் சம்பந்தங்காண் பிக்கப்பட்டதாம். உத்தமர்கள் சர்வப்பிரமாணங்கட்கும் இந்திரியங்கள் சாரமாவனபோலச் சர்வ இந்திரியங்கட்கும் அபரோக்ஷஞானம் சாரமாமென்பர், அதுதான் முக்கியமான பிரத்தியக்ஷம் யாது அவச்சேத பூதமாயும் ஆசிரயபூதமாயும் விடயபூதமாயும் குடத்தை யானுணர்கின்றேன் என்னும் திரிபுடியுணர்வாற் சித்தமாமோ அதுவும் பிரத்தியக்ஷமே, திரிபுடியை யனுசரித்துப் பிரகாசவடிவமா யிருப்பது அனுபூதி, அறியப்படுவதாய திரிபுடியை யுணர்வது வேதனமாம், மூன்றன் பொருட்டுப் பிரகாசவடிவமாக வியாபித்திருப்பது பிரதிபத்தியாம், அக்கரப்பொருளைத் தாண்டாமல் திரிபுடியை வியாபித்திருக்குஞ் சாக்ஷியாகிய சின்மாத்திரத்திற்குப் பிரத்தியக்ஷமென விவகாரபூமியில் நாமகரணிக்கப் பட்டது அச்சாக்ஷியே ஜீவனுமென்று பிராணனைத் தரிக்கும் நிபித்தங்கொண்டு கூறப்படும், அச்சாக்ஷியே விருத்தியுபாதி கொண்டு ஞானமெனப்படும், அகந்தை ஞானமுடையவனாகிய புருடனுயோ பிரமாதாவெனப்படும்.

(ச.) செய்கை = விவகாரம், அனுபவப்பேற்றினாலே = அனுபவம் பெறுவதாகிய வாகியார்த் தானுபவமான அநுபூதியும், ஞானசொரூபஸ் பூரணமான வேதனமும், ஆன்ம சொரூபப் பிரகாசமான பிரதிபத்தியும், என்னும் திரிவிதபேதத்தால், ஒத்து = அனுபூதி வேதனம் பிரதிபத்தியாகிய இம்மூன்றிற்கு இசைய முன்னிலைப் பேர்பெற்ற = முறையே அனுபூதிப் பிரத்தியக்ஷம், வேதனப் பிரத்தியக்ஷம் பிரதிபத்திப் பிரத்தியக்ஷம் என அதனோடுகூடவே நாமகரணிக்கப்பெற்ற, உணர்வு = சைதன்யமே, எம்சிவன் = எமதுஜீவனும், பேர்பெற்ற என்றமையால், யாவரால் எனச் சங்கைவரின், பிரமாணிகரான வாதிகளால் எனத்தொலையும். அவரில் தார்க்கிகர் பிருது வியாதிகளுக்கும், ஞானத்திற்கும், ஆத்மாவிற்கும், பிரத்தியக்ஷத்வம் அங்கீகரிக்கின்றவரேயாவர். சாலிகாதன் சாக்ஷாத்பிரதீதிப் பிரத்தியக்ஷம், மேயம் மாதருமானமுமாமென்று சொல்லியிருக்கின்றமையால் மீமாம்சகரும் திரிபுடிப் பிரத்தியக்ஷ வாதியரேயாவர். எமதுமதத்திற் பலப் பிரமாணவாதிகளால் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் அங்கீகரிக்கப்பட்ட உணர்வே ஜீவசப்தார்த்தமாம். ஞானத்திற்குவேறுக ஆத்மாவின்மையான் என்றுணர்க,

அணுபூதியாதி பதவாச்சியம் அங்கியாறாற் பிரத்தியட்சமெனப் பிரமாணத்தால் அங்கீகரிக்கப்பட்டது, அபரோக்ஷசைதன்யமே எமது ஜீவனென்பது இதன் பொருள். இத்தை = இந்தஜீவ சைதன்யத்தையே, சித்தொடு = சுழுத்தியிற் சின்மாத்திரரூப மென்றும், சொப்பன சாக்கிரங்களில் அகந்தை = கிலேசி, பிரத்யபசுபாவன், புருடனுமவனேயாவன், முன்னிலைச் சீவன் = பிரத்தியக்ஷ சுபாவன் என்றும் சொல்லுவார்கள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அதுவேபாகிய பதார்த்த ரூபமாகவும் விவர்த்தத்தை யடைகின்ற தென்கின்றார்: = சீவனென.

(ச - அ - கை.) இத்தன்மையான ஜீவனே ஜகதாகாரமாக விவர்த்தமாவன் என்கின்றார்:—சீவனென.

சீவனெவ் வறிவினுலே தெரிவுறு மதுப தார்த்தந்
தாவுறும் விவிதமான சங்கற்ப விகற்ப மூற்று
மேவிய மயக்கந் தன்னுல் விரிந்தநீ ரலையா மாபோற்
பூவலயங்க ளாகிப் பொலிந்தது புகன்ற சீவன்.

(ப - ரை.) சீவன் = அந்த ஜீவனனவன், எவ்வறிவினுலே = எவ்வுணர்வினுலே, தெரிவுறும் = அறியாகிற்கும், அது பதார்த்தம், அதுவேபதார்த்தமெனக் கூறப்பெறும், தாவுறும் விவிதமான = மாறிமாறி யுண்டாம் பற்பலவகையான, சங்கற்ப விகற்பமூற்று மேவிய மயக்கந்தன்னுல் = சங்கற்ப விகற்பாதிகளாக ஆக்கப்பட்ட மயக்கங்களால், விரிந்தநீர் = அசைந்தஜலம், அலையாமாபோல் = தரங்கமாவதேபோல, புகன்றஜீவன் = மொழிந்த சேதனம், பூவலயங்களாகிப் பொலிந்தது = ஜகதாகாரமாகி விளங்குகின்றது. (எ-று.) (2)

(ஸ்ரீ - வீர.) எவ்வறிவினுலே = கடபடாதி யாகாரத்தினுலே, தெரிவுறும் = அறிவாகவே விவர்த்தமாகத் தோற்றும் கடபடாதிவடிவ வுணர்வே பதார்த்த மெனப்படும். எல்லாப் பதார்த்தங்களுமே மனோவிலாசங்களேயாம் என்பதுவே சாஸ்திரமரியாதையாம். கூறியபொருளையே வெளிப்படையாக்குவார், தாவுறுமென்றார்; அந்தப்பரமாத்மா, சங்கற்ப விகற்பங்கள் பிரமசமுசயங்கள் முதலியவற்றால் அபிமானாதிகளால் ஆக்கப்பெற்ற நானுபூத அவஸ்தைக் கிரமங்களையடைந்து, விளையாடும், அவ்வவஸ்தை முறையிவ்வுணர்வு பவிக்கும்:—பரிபூர்ண அறிவுருவப் பரமாத்மா சிருஷ்டிகாலத்திற் பூர்வம் சாமானியமாகத் திருசியத்தன்மை யவஸ்தையை யடையும், பின்னர்ச் சித்த அவஸ்தையையடையும், பின்னர் அகங்கார அவஸ்தையை, பின்னர்ப் புத்தியவஸ்தையை, பின்னர் மனோ அவஸ்தையை, எனவடையும், இம்முறைதானே மேலும் மேலும் வெட்டவெளியாம், எவ்விடயாகார விருத்தியினுல் புறவிடயத்திலுள்ள ஆவரணநீங்க வெளிப்படுகின்றதோ அதுவிடயம் எனப்படும். இவ்வாறு சாக்ஷியே முறையாக மூன்றுவித்தையுமடையும், வியஷ்டியின் கண்ணே யிவ்வாறுகச் சமஷ்டியின் கண்ணும் இரணிய கருப்பரிடத்தி லிவ்வாறே காணவேண்டும் நீர் அலைமுதலிய வடிவமாக எங்ஙனம் விளங்காகிற்குமோ அங்ஙனமே நானுவிதம் முறைமுறையாய் மயல்களைச் செய்விக்கும் சங்கற்ப விகற்பப் பிரதானமான அந்தக்கரணங்களினுலுயாஞ் சமஷ்டிகளால் உலகவடிவமாகச் சாக்ஷியே விளங்கும்.

(ச.) சீவன் = அந்தச் சீவனே, எவ்வறிவினுல் = பகிர்முகமாய் விளங்காகின்ற ஞானத்தினுல், தெரிவுறுமது = பாவிப்பது, பதார்த்தம் = ஆகாசாதிப் பொருளாம், விகற்பமூற்று = விகற்பாதிகளை யடைந்து, மேவிய மயக்கந்தன்னுல் = கிரமமாக வந்து

பொருந்திய பிரமங்களால் அலையாமாபோல் = தரங்காதியாக விளங்குவதுபோல முற் கூறிய சிவசைதன்யமே, பூவலயங்களாகி = மனம் புத்தி யகங்காரமுதலிய செகங்களாகி பொலிந்தது = விளங்குகின்றது, எந்தஞானத்தினால் விளங்குகிறதோ அந்த ஞானமே ஆகாசாதி பதவாச்சியமாம்.

(ஸ்ரீ - வீர-அ - கை.) அற்றேல், பிரஹ்மமானது இவ்விதம் உலகமாகத் தோற்று மாயின் உலக காரணமாகிய பிரஹ்மத்தோடு அதனினும் விபரீதமாய ஜீவனுக்கு ஐக்கியம் பொருந்தாதாம் என ஆசங்கித்துக் கூறுகின்றார்:—பன்னென.

(ச - அ - கை.) அவிக்கிரியமான வாத்மாவிற்குக் காரணத்துவ மெப்படியென்னுஞ் சங்கையை நிவிர்த்திசெய்து விசித்திரமான ஜகத்திற்கு அவிசித்திரமான ஆத்மசொரூப முபாதானமெப்படி யாமெனச் சங்கித்துக் காரிய வைசித்திரியத்தினுற் காரணவைசித்திரியம் அனுமான சித்தமெனல்: —பன்னென.

பன்னுகா ரணமொன் றில்லைப் படைக்குமுன் படைக்க வேண்டு
மென்னும்லீ லையினுற்றனே யையங்கா ரணமதாகி
முன்னுறு பொதுவாங் காட்சி மொய்ப் பொருட் டிரள்க ளாகித்
தன்னுளே சகமாய்க் காற்றுட் சலனம்போ லறிவுட் டங்கும். (3)

(ப - ரை.) படைக்குமுன் பன்னுகாரண மொன்றில்லை = யாவற்றையும் உண்டாக்குவதற்கு முன்பு சொல்லத்தக்க காரணம் யாதொன்றுமே கிடையாது, படைக்க வேண்டு மென்னும் லீலையினால் = உண்டாக்க வேண்டு மென்னும் விளையாட்டினால், தானே இயைந்த காரணமதாகி = சுயமாகவே பொருந்திய காரண மென்னவாகி; முன்னுறு = காரிய உன்முகமான, பொதுவாங்காக்ஷி = பிரத்தியக்ஷமான ஆத்மசொரூபம், தன்னுளே = தன்னிடத்தில், மொய்ப்பொருட்டிரள்களாகி = நெருங்கிய பொருட்கூட்டங்களாகி, சகமாய் = அவை நிறைந்தவுலகமாய், காற்றுட் சலனம்போல் = வாயுவின்பாலசைவுபோல, அறிவுட்டங்கும் = சித்தின்பா லிருக்கும். (3)

(ஸ்ரீ - வீர.) பிரத்தியக்ஷப் பிரமாணவடிவப் பிரத்தியக்கபின்னத்தன்மை யுண்மையின் பிரத்தியக்ஷப் பெயரியதாம் பிரஹ்மம், அல்லது நேராகவே பிரத்தியக்ஷப் பெயரியதாம் பிரஹ்மம் தொழிற்படவெதாகி விகாரமென்னும் நியாயத்தால் சிருஷ்டியின்முன் கிரியையின்மையின் அகாரணமாகவே யிருந்தது. அல்லது காரணத்தன்மைக்குப் பொய்ம்மை யேற்படுதலின் அகாரணமாகவே யிருந்தது. சர்க்காதியின் கண்ணே விரைவிற் சருக்கப்பொருட்டு ஈக்கணப்பியற்றும் மாயாமயமான விளையாட்டால் விளங்கி, காரணப்படி நிர்வகிப்பதால், தன்பால் நிகழுமுலகின் விளக்கம்புரிந்து, தன்பாற் சமஸ்காரரூபத்தால் இருக்கு மூலகினுக்குத் தானே காரணவடிவம்; அல்லது சிருஷ்டிபால ஞதிகளில் அகாரணமாகி, வாஸ்தவ சககாரி காரணமற்றதாகி, சிருஷ்டியின்முன் சர்க்கலீலையாற் புரித்து, காரண நிர்வாகிகையான மாயையால் தன்பால் நிகழும் உலகிற்குக் காரணபூதமாம்; பிரபஞ்சவடிவமாக விவர்த்தமான மாயையதிஷ்டானத் தன்மையே பிரஹ்மத்திற்குக் காரணத்தன்மையாம். பிரஹ்மத்திற்கே காரணத்தன்மை மாயைத் துவாரத்தன்மை எனக்குறிப்பிக்கும் பொருட்டு அது தன்னேத்தானே ஆக்கியது என்னும்மறையைக் குறிப்பிக்கும் பொருட்டுத் தானேயெனச் சாற்றப்பெற்றது; அதைவிரிப்பார், மொய்யென்றார். அல்லது பிரஹ்மத்திற் குலகவுற்பத்தியை யுரைத்து, ஆண்டே திதியைக்கூறுவார் மொய்யென்றார். பொருட்டிரள்கள் சகமாய் = ரூபம், ஆலோகம், மனோவிஸ்தாரம் மற்றையபதார்த்தங்கள் என்னுமிவற்றனே வியாகுலப்பட்டுக் கலப்

புற்ற உலகமாய், அல்லது, ரூபதரிசனஞ் செய்யும் ஈஞ, மஞுவிஸ்தார வடிவக்கஞ, என்னும் இரண்டவஸ்தைகளிலும் உற்ற பதார்த்தங்களால் வியாகுலப்பட்ட வுலகமாய், பிரஹ்மவடிவ அறிவுள் சமக்காரரூபத்தாஞதல் தூலரூபத்தாஞதல் நிகழாநிற்கும் பிரஹ்மத்தின்பால் தாதாத்பியமாக வுலகம் நிகழ்கின்றது என்றுணர்த்தற் பொருட்டுத் திருட்டாந்த மறைவார் காற்றென்றார். அச்சாக்ஷிரூபமாய பிரத்தியக்ஷமே முன்னர்ச் சிருஷ்டியிஞதியிற் காரணமியாதொன்று மின்றியே யுலகலீலையால் விரைவில்தானேவிளங்கி யுலகவடிவமாகி யதன்பாலே தானேகாரண வடிவமாயது. ஓரிடத்தில் உண்மையான காரிய காரணத்தன்மை கூடாமையிஞல், அசத்தாயினும் அஞ்ஞானத்தாலாகிய ஜீவனுக்குச் சத்துப் போன்றுளது, அவிசாரத்தோடு கூடிய ஆன்ம சொரூபத்தையுடைய இப்பிரகிருதியின் கண் உலகரூபமும் வெளிப்படையாய் வரும், இங்ஙன மிவ்வுலகம் ஆரோபிக்கப்படும். இதற்கபவாதமோ இங்ஙனமாம்; இவ்வண்ணம் விசாரமும் அதனால் விளக்கப்பட்ட சாக்ஷாத்காரமும் சுயமாகவே யிருந்து தன்னிடத்தி லிருந்துண்டாகி உண்மையாய்த் தன் வடிவமாகவே யிருக்கின்ற வுலகதேகத்தை அஞ்ஞானதேகத்தாலே யழித்துத் தன்வடிவமாயும், ஆவரணமற்றதாயும், மகத்தாயும், அபரிச் சின்னமாயும், பிரத்தியக்ஷமாயும் இலங்கும் பரமபுருடார்த்த ரூபமாய்ச் சீக்கிரம் செய்கின்ற தென்பது உபசாரமாத்திரமாம். மனஞ்சஞ்சலிப்பதற்கு விடயமின்றிய வேதனதேதுவாகாமையின் விடயத்தோடு கூடியதாகவே அது கூறப்படவேண்டும். வேண்டவே, ஆண்டு மனதசைவதற்கு முன்னரும் விடயஞ் சித்தித்திருப்பதாகக் கூறவேண்டும்; விடயங்கள் மஞுமயமென முன்ன ருரைத்திருத்தலின் அவ்வாறே விடயஞ் சித்திப்பதற்கு முன்னரே மனத்தின் சித்தியாமெனக் கூறவேண்டும். வேண்டவே, அன்னியோன்னிய ஆசிரயமாம், எனின் ? மாயையோடு கூடிய சிதாகாசத்துக்குட் சர்வமுஞ் சமஸ்காரரூபமாக அதிஷ்டான சத்தையைப் பற்றியிருக்தே தோற்றுகின்றது; காற்றினுள் ளசைவிருப்பதேபோல வேதனத்திற்குள்ளும், புறப்பொறிகளாற் கவரப்படுதல் மனதாற் சிந்திக்கப்படுதல் என்னும் இரண்டினுக்கும் விடயங்களாய பதார்த்தங்களால் நிறைந்து வியாகுலஞ் செய்யப்பட்ட வுலகமான துளதாம்.

(ச.) படைக்குமுன் பன்னுகாரண மொன்றில்லை பொதுவாங்காக்ஷி = பிரத்தியக்ஷமான ஆத்மசொரூபம், உண்மையாக அகாரணமாயினும், லீலையால் = இச்சாரூபமான தன் சக்தியால், முன்னுறு = காரியோன் முகமான, தன்னுளேதானே யியைந்த காரணமதாகி, மொய்ப்பொருட் டிரள்களாகிச் சப்தாதி குணங்க ளைருங்கிய வியோமாதி பதார்த்தங்களும் அந்தக் காரணத்தின் விரிவான வீருத்தி ஞானங்களும் வாசனைத் திரள்களும் ஆகிய இவைகளால், விசித்திரமா யிருக்கின்ற சகமாய் = சகத்தவ் வியக்தமாய், காற்றிற் சலனம்போ லறிவுட்டங்கும். சகமாய் = நீலபீதாதியவற்றை யுடைய னதரிசனகாரணங்கள் அந்தக்கரண விகாரங்கள் விருத்திஞானங்கள். சமஸ்காரங்கள் வியதாதிகள் என்பவற்றால் வியாகுலப்பட்ட வுலகமென்பதாம்

(ஸ்ரீ - வீர - அ - கை.) பிரஹ்மமானது ஜகதுபாதான காரணமாயின் தரங்காதி வடிவத்தாற் சலம்போலும் கடம் பிரஹ்மம் படம் பிரஹ்மம் என அவ்வவ்வடிவமாக வன்றே தோற்றவேண்டும், அவ்வாறு தோற்றக் காணுமையின் உபாதானமாகாதாம், மற்றே, நிமித்தமேயாமெனக் கடாவ விடைதருகின்றார்:—ஆயின் எங்ஙனம் ஒரோரு காற்றேற்றல் அதனுற்பத்தி முதலியவற்றின் விவத்தையாதல் எனின் அறைகின்றார்:—எல்லையென;

(ச-அ-கை,) சர்வஜகத் வைசித்திரியமும் சர்வான்மாவாகிய தனது சொரூபத்திருக்கின் எப்படிச் சிருஷ்டி விவத்தையாமெனிற் கூறுகின்றார்:—எல்லையென.

எல்லையி றிசைகள் காலம் புறம்பெனு மிவற்றிற் கேற்ற
பல்லுரு வாயெங் கெவ்வா றெழுந்ததப் படியங் காங்குஞ்
செல்லுமிங் நெறியா லிந்தச் செகமெனும் பிரம கற்பம்
புல்லுகா ரணமிலாத பொருளெனப் புந்தி செய்க.' (4)

(ப - ரை.) எல்லையில் = வரம்பற்ற, திசைகள் = திக்குகள், காலம் = சமயம், புறம்பு = பாகியம், எனுமிவற்றிற்கேற்ற = என்று கூறும் இவைகட்குத்தக்க, பல்லுரு வாய் = அநேகவடிவங்களாய், எங்கு = எவ்விடத்தில், எவ்வாறு = எவ்வகையாக, எழுந்தது = உதயமாயதோ, அப்படி = அவ்விதம், அங்கு = அவ்விடத்தில், ஆகும் = ஆகியவிரும், இங்நெறியால் = இம்மார்க்கத்தால், பிரமகற்பம் செல்லும் = பிரஹ்மகற்ப பரியந்தம் சென்றுகொண் டிருக்கின்ற, தென்னும் மயல்மயமான இச்சமுசாரத் தோற் றம், 'புல்லுகாரணமிலாத = பொருந்தாதின்ற காரணமிலாத, பொருளென = வஸ்து வென்று, புந்திசெய்க = மதியின்மாட் டாரூடப்படுத்துக். (எ - று.) (4)

(ஸ்ரீ - வீர.) சர்வான்மக ஞானரூபமாய பிரஹ்மம் எவ்வகையானே எக்காரியவடி வத்தானே விவர்த்தமாமோ அக்காரிய சொரூபமாகவே யிலங்காநிற்கும்; கடம் இருக் கின்றது படம் இருக்கின்றது என்றன்றே, அவ்வவ்வடிவமாகச் சத்ரூபப் பிரஹ்மம் இலங்குகின்றது; ஆகலின் பிரஹ்மத்திற்கு உபாதான காரணத்தன்மையும் பொருத்த முடைத்தேயாம், ஆகவே விரிந்ததிசையாய்க் காலமாய் உட்பொருளாய் வெளிப்பொரு ளாய் வடிவுற்றுத் தோற்றுமது. கூறியபொருளேயே தெளிவிப்பார், எங்கென்றூர். எத் தேயத்தில் எவ்வகையானே எக்காரிய வடிவமாய் நன்கிலங்கா நிற்குமோ அவ்வகையே யாம், படைக்குமுன் பன்னுகாரண மொன்றில்லை யென்பதாலியாற் கூறியபொருளேயே தெளிவிப்பார், காரணமில்லாத என்றூர். மாயைவாயிலில்லாமல் பிரஹ்மத்தின் கண்ணே காரணத்தன்மை பொருந்துறுதாம். ஆகலின் வாஸ்தவ காரணமற்றதேயா யிவ்வுலகம் திருஷ்டிக்கு முன்னர் வெளிப்படாத நாமரூபத்துடனுகிப் பிரஹ்மசொரூபம் போலு மிருந்தது. பிரஹ்மகற்பம் = பிரஹ்மசமம் என்பதாம். அதிஷ்டான வடிவமாய பிரஹ் மத்தின்கண் சமஸ்காரசேடமாய் விலீனமானஜகத்து அதனினும் வேறுபடுத்த முடியாத வாறு வேற்றுமையுற்று நின்றதாமென்பது பொருள். தூய்தாயும் எல்லாவடிவமாயுமிருக் கும் சேதனம் கருமபரி பாகத்தாலாம் விவஸ்தையாலே பிராணிகள் கருமபோகப் பொருட்டுத் தோன்றுகின்றபடியே யவ்வவ்வடிவமா யுண்டானதுபோல விரிந்த திக்கு காலவெளியுட் பதார்த்தவேட தேகங்களைத் தரித்து விளங்குகின்றது; எல்லாவடிவ மான ஆன்மா மோகத்தாற் தன்னைத் தேகாதி திருஷ்யம்போலக்கண்டு, அவையே யெனது சொரூபமெனக் கருதி ஜீவரூபமாயிருந்து விளையாடும்; இதுபொருத்த மூடை யதேயாம். எவ்விடத்தில் எவ்வடிவமா யெவ்வாறு புலப்படுகின்றதோ அவ்விடத்தில் அவ்வடிவமா யவ்வாறேதான் தோற்றுகின்றது, வெளிப்படையாகவிளம்பினேனு, சர்வாத் மகமாய பொருள் எவ்விடத்தி லெவ்வாறு இனிய வல்லாசத்தை யடைகின்றதோ, அவ்விடத்தி லவ்வாறே அவ்வடிவ மூடையதுபோல அதிவிரைவில் விளங்கிக்கொண் டிருக்கும், காணும்பொருள் எல்லாவடிவமாகவு மிருத்தலினுனே, காணப்படுபவற்றின் றன்மையை யடைந்ததுபோற் றேன்றுகின்றது. போலெனக் குறிப்பித்த திருஷ்யம் பொய்யேயாமென்பதில் என்னேயம், திருஷ்டா விருத்தாற்றுன் திருஷ்யமிருக்கும், இல் லாவிடினிராதா மாதலினுனே திருஷ்யம் மெய்யாகாதாம், திருக்குவடிவமான திருஷ்டா திருக்கு சொரூபத்தினின்றும் நழுவித்திருஷ்யத்தன்மையை யடையுமாயின், திருஷ்டா வில்லாமல் திருஷ்யசித்தியே யுண்டாகமாட்டாது, நழுவாமலிருக்கினுனே அத்திருஷ்டா

விற்குத் திருஷ்யமாயிருக்குந்தன்மை, பழுதையின் இயற்கையினின்றும் நழுவாததற்குப் பாம்புப் பான்மைபோலும் விவர்த்தமாத்திரமாய்ப் பொய்யேயாகும்; ஆகவே காரியப் பொய்ம்மையானே அதனே யபேக்ஷித்த காரணத் தன்மைக்கும் பொய்ம்மையே சித்தித் தலின் பிரஹ்மம் காரணத்தன்மை யற்றதேயெனச் சித்திக்கிறது.

(ச.) சர்வான்மாவாயும் சுத்தமாயுமுள்ள தன்னுல் வியாபிக்கப்பட்ட திசைகாலங்களால் அபரிச்சின்ன மாதலின், இவற்றிற்கு = இத்திசைகாலத்துக்கு புறம்பெனும் = பாகியஞ் சுத்தசைதன்யமேயாம், பல்லுருவாய் = சர்வான்மகமாயிருத்தலின், எங்கு= எந்தத்தேசத்தில், அன்றி, எந்தக்காலத்தில், எவ்வாறு = எத்தன்மையான சுபாவம் எழுந்தது = உல்லாச சக்தியாற் சம்சாரமென்று மேற்கூறுதலால், உல்லாசசக்தி யுதித்ததோ, அப்படியங்கு, ஆகும் = அவ்வகையாய் இயற்கையதாய் அதனனுகூல ஞாலசூக்கும தேகமுடைத்தாய்த் தோற்றிக்கொண்டிருக்கும். ஆண்டிருக்கும் என்றதனுற் கேவலம் பிரதிதிமாத்திரம் அன்று, மற்றே, அர்த்தக்கிரியா சித்தியும் உண்டெனத் தெரிவித்ததாம். சிருஷ்டிக்க வேண்டு மென்னும் இச்சைவசத்தினுற் சிருஷ்டி விவஸ்தையா மென்பது கருத்து. செல்லுமிக் நெறியால், பிரமகற்பமெனும் இந்தச்சகம் = பிரமகற்ப பரியந்தம் இருக்கப்பட்ட தென்னும் இச்சகம், புல்லுகாரண மில்லாத = ஆரம்பகாரண ரகிதமான, பொருளெனப் புந்திசெய்க. (4)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சர்வஜகத்தும் பிரஹ்மகாரியம் எனக் காண்பிப்பவராய்க் காரணப் பிரஹ்ம வியதிரேகமாகக் காரியமாகிய ஜகத்து அசத்தேயாமென மறையப் பட்டது, விகாரமானது வாக்காற் றொடங்கப்பட்ட நாமதேய மாத்திரத்தை யுடையது மண்மாத்திரம் உண்மையெனக் காரணத்தினும் அயலாய்க் காரியத்திற்கு அசத்துவத் தைப் பிரதிபாதிக்குஞ் சுருதியினுல் இப்போது பந்தம் அதன் நீக்கங்கட்குக் காரணத் தைக் காட்டும் வாயிலாக அதேபக்த காரணபூத திரிசியஜகத் தசத்துவத்தைப் பிரதிஞ் ஞைவாயிலாக இவையாவும் பிரஹ்மமேயாம் என்பதாதி சுருதிகளே யனுசரித்து விரித் துரைக்கின்றூர் ! பந்தத்தை நீக்குமுபாயத்தை விரும்பிய எனக்குத் திருவெய்த்தைப் பொய்யென்று சாதிப்பது கொண்டு ஆகவேண்டிய தென்னேயெனச் சங்கிப்பத் திருவெய் யம் சங்கற்பமாத்திர மானபடியால் சங்கற்பநீங்கத் திருவெய மித்தியாபந்தமும் நீங்குமென் றெண்ணிக் கூறுகின்றூர்:—இதனேயென.

(ச.) சங்கற்ப மாத்திரத்தாலே சித்தியெனல்:—இதனேயென.

இதனேமுன் னிலையாஞ் சீவ னிமைப் பினிற் படைத்த தாகு
மதன்வடி வாகிநிற்கு மனுமான முதல வெல்லாம்
விதமுறு காட்சி மெய்ம்மை பந்தமஃ தின்மை வீடாந்
திதமறு மிதுபோமாறு செப்புதுந் தெரியக் கேட்பாய். (5)

(ப - ரை.) இதனே = இத்தோற்றத்தை, முன்னிலையாஞ் சீவன் = பிரத்தியகூ சைதன்யம், இமைப்பினில் = கணத்தினில், படைத்ததாகும் = சிருஷ்டித்ததாகும், அதன்வடிவாகி = அதனங்கி சங்களாகி, அனுமான முதலவெல்லாம் நிற்கும் = அனுமை முதலியவைக ளெல்லாம் இருக்கும், விதமுறுகாட்சி மெய்ம்மை பந்தம் = திருவெயமுள தென்னும் எண்ணமே கட்டாம், தீ அஃதின்மை வீடாம் = அவ்வெண்ணமறவே விடுத லேயாம், திதமறுமிது = நிலையற்றவிது, போமாறு = நீங்குமாறு தெரியச் செப்புதும் கேட்பாய் = விளங்கக்கூறுவேம் ஒருமையாய்க் கேட்குதி.

(ஸ்ரீ - வீர.) சிருஷ்டிகாலம் அடைவுற்றபோது பிரத்தியகூப் பிரமாணவடிவப் பிரஹ்மமே ஜகத்தை யுண்டாக்குவதாகும், கட்கான் முனிவராதி தரிசனத்திற்போல அநபரோகூசம சித்துருவம் நிர்மாதா வாகாதாம், அபரோகூ சைதன்யமே ஜீவனும் எனக்காட்டற் பொருட்டே பிரத்தியகூப்பிரமாணமே ஜீவனென்னப்பட்டதாம். அதன் வழக்கால் அனுமானுதி சொரூபமறைவார், அதன் என்ரூர். அல்லது அபரோகூசைதன்யம் பிரஹ்மமேயெனக் காட்டற் பொருட்டுப் பிரத்தியகூமெனப் பெயரிய பிரஹ்மம் எனக் கூறப்பெற்றது. அதன்வழக்கால் அனுமானுதி சொரூபத்தைக் கூறுகின்ரூர், அதன்என. அனுமானுதிகள் அந்தப்பிரத்தியகூப் பிரமாணமாகிய அபரோகூசைதன்ய வடிவப் பிரஹ்மத்தின் அழகம் அங்கிசங்கள்போன்ற அங்கிசங்களாம். பரிபூர்ண ஞானமாத்திரப் பிரஹ்மம் அந்தக்கரணப் பிரதிபிம்பிதமாகிப் பிரமாதா வெனப்படும். அதுவே இந்திரிய லிங்காதியாலுண்டாய அந்தக்கரண அங்கிச ஆரூடமாய்ப் பிரமாணமென் றறையப் பெறும் என்பதே வேதாந்த மரியாதையாம். ஜகத்து நீயான் என்பதாதி சர்க்கவடிவம் திருஷ்டியமெனப்படும் எனக்கூறப்பெறும் திருஷ்டித்தின் இருப்பால் இதுகேரேயனுபவிக்கப்பட்ட கர்த்துருத்துவ போக்துருத்துவாதி வடிவப்பந்தமாம். அற்றேல் திருஷ்டியம் அபாவமாயின் கட்டுண்டாக மாட்டா தென்பதுண்மையே. அந்தத்திருஷ்டிய அபாவமே சம்பவிப்பது முடியாத காரியமன்ரே எனக் கடாவுக் கூறுவார் இதுபோமாறு என்ரூர். நிதமறு மென்றதனுனே கடாவையகற்ற, ஹேதுகர்ப்பமாய தென்க. இத்திருஷ்டியம் எவ்வாறு சம்பவியாதோ அவ்வாறு கூறக்கேட்குதி யென்பதாம். பிரத்தியகூதத்துவத்தை யாராயின் அத்வைதமா யிருக்கும் பிரஹ்மமே சித்திக்கும், சித்திக்கவே இங்கிலபெற்ற பிரத்தியகூமே யுண்டாக்குவதெனத் துணியப்பெறும். அனுமானுதிகளோ பிரத்தியகூ வாயிலாகவே யுண்டாகின்றமையினுனும், அதுவதுவாக முடிவுபேறடைதலினுனும், அதனங்கிசங்களேயாகும்; ஆகவே சர்வப்பிரமாண தத்துவம் ஆன்மாவே யென்பதாம். திருஷ்டியமிருத்தலினுலே இப்பந்தமுண்டாகி யிருக்கின்றது, திருஷ்டியமில்லாவிடிற் பந்தமு மிலதாகும், எவ்வாறித்திருஷ்டியஞ் சம்பவியாதோ அவ்வாறு முறையாய்க் கேட்பாயாக. திருஷ்டியமில்லாத மாத்திரையானே பந்த நீக்கமாகாதாம், உற்பத்திவிருத்திநாச சுவர்க்க நரகாதி பந்தமானது காண்போன் றருமமாகத் தோற்றலா லான்மாவிற்குள்ளடங்கியிருத்தலின் திருஷ்டியம் நீங்கியபோதினும் அது நீங்காமையின் எனின் ? உண்மையாக யாவனுலகி லுண்டாவதே அவனேவிருத்திநாச சுவர்க்க நரகாதிகளேயும் பந்தமோகூங்களேயும் அனுபவிப்பன். ஆன்மா வுற்பத்தியாதி யியற்கையுடைய தன்ரும். தனதுசொரூபத்தை யுள்ளபடி தெரிந்து கொள்ளாமையானே அதற்குற்பத்தியாதி மயல் தோற்ரு நிற்கும். எதனுற் றன்னே யறியாமையினுனே பந்தமாமோ அதனுல் தன்னேயறியும் பொருட்டு உனக்கு அத்திருஷ்டியஞ் சம்பவியாமையை ஆண்டுவிளம்ப விழைந்தவகையாகவே விளம்புகின்றேன், உற்பத்தி சம்பந்தம் திருஷ்டியசமுசார கோடியின் கண்ணே பொருந்துமாறும், ஆன்மகோடியின் கண்ணே பொருந்தாதவாறும் கூறுவாம். ஆன்மாவோ திருஷ்டி வுற்பத்திக்குமுன் எவ்வாறே அவ்வாறே யுளதாம். அணுமாத்திரமும் விகாரப்படுவதே கிடையாது, அங்ஙனமே "உற்றதனிலயமில்லை யுறுவதுமில்லை கட்டை, யுற்றவனில்லை மற்றைப்பயில்பவ னுயர்வீட்டாசை யுற்றவனில்லை வீட்டையுற்றவனில்லை யென்னும், நற்றிறமிதுவே கண்டாய் கண்ணுவதுண்மையனும்." என்னும் மறையும் அறைகின்றது.

(ச.) முன்னிலையாஞ் சீவன் = அபரோகூ ஆத்மசைதன்யமே, இமைப்பினில் = கண் இமைத்தற்குமுன் படைத்ததாகும் திருஷ்டியே சிருஷ்டியாகலின் என்பதாம் பிரத்

தியகூமே நிருமாதுருவென்ப தெப்படி அனுமானுதிகளுக்கு நிருமாதிருத்துவ மிருத்த வின் எனின்கூறுவார், அனுமான மென்றூர். அதன் = அந்தப் பிரத்தியகூஷாத்ம சை தன்யத்தினது, வடிவாகிநிற்கும் = அம்சங்களாகியே யிருக்குமன்றி வேறுருவாகா வென்பதாம். சகத்தினதுற்பத்தி யுபசாந்தி வர்ணனையினது உபயோகத்தைக் கூறுவார் விதமென்றூர். திருசியங்கற்பித மாதலின் அதன் சம்பந்தரூபமான பந்தமும் கற்பித மென்பது கருத்து. (5)

(ஸ்ரீ - வீர - அ - கை.) முன்னரே யாது எவ்வாறுமோ வெனக் கூறப்பட்ட பொரு ளைக் கூறும்பொருட்டுப் பிரளய அவத்தையில் எஞ்சிநிற்கும் ஆன்மசொரூபத்தை யறை யும்பொருட்டு மூற்சிருஷ்டிக்குக் காரணத்தில் இலயப் பிரகாரத்தைத் திருஷ்டாந்தத் தால் தெரிவிக்கக்கேட்குதி யென்கின்றூர்:=மண்டியவென.

(ச-அ-கை.) திருசியங் கற்பிதமென்ப தெப்படியெனச் சங்கித்து நாசமுடையதா தலின் என வுத்தரங் கூறுகின்றூர்:—மண்டியமென.

மண்டிய சுழுத்தி தன்னில் வருகளுப் போவ தென்னைக்
கண்டன வுலகமெல்லாங் கற்பனை முடிவிற்போக
வெண்டரு மலைவு தோற்றம் பெயரெலா மின்றியாழ்ந்து
தண்டலி லிருடேசின்றித் தனித்ததோ ருண்மை நிற்கும். (6)

(ப - ரை.) மண்டிய சுழுத்திதன்னில் = நெருங்கிய துயிலின்கண் நித்திரைத் தோடவயத்தால், வருகளுப் போவதென்ன = வாராநின்ற சொப்பனம் மறைந்துபோ வதேபோல், கண்டன வுலகமெல்லாம் = திருசியமாய்த் தோற்றும் ஜகங்களெல்லாம், கற்பனை முடிவிற்போக = கற்பனையானது அவசானத்தில் அழிந்துபோக, பின், எண் தரும் அலைவு = அநேகசஞ்சலம், தோற்றம்=பிரதீதி, பெயர் = நாமம், எலாமின்றி= இவையாவுமற்று, ஆழ்ந்து = கம்பீரமாய், தண்டல் இல் = வியாபகமாய், இருள் தேசின்றி = அப்பிரகாச பிரகாசங்கள்கடந்து, ஒருண்மை = அகோசர சத்தொன்று தனித்து நிற்கும் = எஞ்சியதாக விருக்கும். (6)

(ஸ்ரீ - வீர.) விவாதத்திற்கிடமாய திருசியம், அசத்து, விநாசித்தன்மையின், கனுப் போலும்; விவாதத்திற் கிடமாயது, விநாசியாம், திருசியத்தன்மையான், கனுப்போலு மென்பதாம். திருசியம்போலும், பிரஹ்மத்திற்கு விநாசித்தன்மையை யாசங்கித்துக் கூறுவார், எண்டரும் என்றூர். கற்பனையாவு மின்றியபோது வியாபகமாயும் இருளொளி கடந்ததாயும், நிச்சலமாயும் அபரிச்சின்னமாயும் பெயரற்றதாயும் இந்திரியங்களுக் கெட் டாமையின் விளக்கமற்றதாயும், இன்னபடிதா னிருக்கின்றதென ஒருநிறியும் நிரூபிக்க முடியாமையின் அகோசரமாயு மிலங்கும் சத்பிரஹ்மம் எஞ்சாநிற்கும். "இவையாவை யுமே யெழுவதன் முன்னர், சவுமியசத்தே சாந்தமாயுளதாம்" எனமறையு மறைகின் றது. தாவரஜங்கம வடிவமாகக் காணப்பட்ட இவ்வுலக முழுவதும் கனுவானது துயி லின்கட்போலக் கற்பாந்தத்தில் கன்கழிந்துபோம்; சாங்கிய நையாயிகாதியர் கருதிய பிரதான பரமாணுமுதலியவை யெஞ்சாநிற்கும்வடிவப் பிரளய வேற்றுமைப்பொருட்டே கூறிய திருட்டாந்தமாகும். அதன்பின்னர், அமூர்த்தமாதலினாலே தொழிலற்றதாயும், பரிச்சின்னப் படாமையினாலே கம்பீரமாயும், உருவமற்றமையானே தேயுவல்லாததாயும், பிரகாசவடிவ மாதலினாலே இருளல்லாததாயும், தருமமற்றமையானே சாற்றவொண் ணுதாயும் அஞ்ஞானத்தான் மூடப்பட்டமை யானேயும், பிரபஞ்சசமஸ்கார ஆதார

மானமையானேயும், வெளிப்படாததாயும் இருக்கும் யாதோ ஒரு சத்வத்துவானது எஞ்சியிலங்கும்.

(ச.) கண்டன வுலகமெல்லாங் = திருசியங்களான தாவரசங்கமமாகிய சர்வசகத்தும், கற்பனைமுடிவிற் போகும் = கற்பாந்தத்தில் நசிக்கும், சுழுத்தியில் நசிக்கும்சொப்பனத்திற்கு எப்படி மித்தியாத்வம் அப்படிக் கற்பாந்தத்தி - னசிக்குந் திருசியத்திற்கு மென்பது கருத்து. அதன்பின் சத்துரூபமான பிரஹ்மமே சேடித்திருக்கு மெனல்; எண்டரும் - தோற்றம். இஃதென அறியத்தக்கது, பெயரெலாமின்றி, நாமஜாதியாதிய பாவத்தினுல் என்க. ஆழ்ந்து தண்டலில் = கம்பீர வியாபகமாய், பிரகாசசொரூபமாதலின் இருளின்றி, அநுஷ்ணத்துவ மாதலின் தேசின்றி, ஒருண்மை = ஏகாகாரமான சத்தாமாத்திர சைதன்யமே, தனித்து நிற்கும் = சேடித்திருக்கும். அதனுனே யப் பொருள் அறிவது மிகவும் அருமையினும் அருமையாம். (6)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பெயரற்றதெனக் கூறியது பிழையாகும் பிரஹ்மாதிகாமங்களிருத்தலின் அதற்கு எனச் சங்கித்துக் கூறுகின்றூர்:—சத்தியமென.

(ச.) ஆயின் விவகாரம் எப்படிக் கூடுமெனச் சங்கித்துக் கற்பிதங்களான நாமங்களால் என்கின்றூர்:—சத்தியமென.

சத்தியம் பிரமமான்மா பரமுதற் சாற்ற வேண்டி
யித்திறப் பெயர்மேலோ ராலிடப் பெற்றவிந்த வான்மா
சித்திர மாகத்தானே வேறுபோற்றி கழ்ந்துதீது
மெத்திமேல் வருசீவப் பேர்மேவிய போலவாகும். (7)

(ப - ரை.) சத்தியம் = உண்மை, பிரமம் = பெரிதினும் பெரிது, ஆன்மா = சொரூபம், பரம் = உயர்ந்தது, முதல் = ஆதியவாக, சாற்றவேண்டி = விவகரிக்கும் பொருட்டு; இத்திறப்பெயர் = இத்தன்மை யனவாய நாமங்கள், மேலோரால் = மகான்களால், இடப்பெற்ற = வைக்கப்பட்ட, இந்த ஆன்மா = இப்பிரஹ்மம், வேறுபோல்= அன்னியம்போல, சித்திரமாகத்தானே திகழ்ந்து = விசித்திர வைபவங்களாகி, விலாசமாய்ச் சுயமிலங்கி, தீதுமெத்தி = பெருத்துயருற்று, மேல்வரு ஜீவப்பேர் மேவியபோல வாகும் = பாவி ஜீவநாமம் பெற்றதுபோல ஆகித்தோற்றும்.

(ஸ்ரீ - வீர.) இவ்வண்ணம் எல்லாவுலகிற்கும் அறியப்பட்ட பிரஹ்மான்மத் தன்மையி லயமியம்பிச் சொரூபத்தினின்றும் நழுவாததான அதனினின்றுமே சிருஷ்டி காலத்தில் ஜகத்தின் எழுச்சியாதலே ஆகாயத்தினின்றும் கந்தர்வநகர மெழுதலேப் போலக் காண்பித்துக்கொண்டு ஆதியிற் சமஷ்டிஜீவ ஹிரணியகருப்ப உற்பத்தியை யுரைப்பார் இந்த ஆத்மாவென்றூர். பரிபூர்ண கம்பீரப் பேரொளியேயாய அந்தப் பரமான்மா, தெளிந்தநீரில் விண்டோற்றலேபோலத் தானே யன்னியம்போல வுல்லாசித்துத்தோற்றி வருஞ்சீவாதி நாமங்களால் கிலேச களங்க முதலவற்றையுற்ற ஜீவத்தன்மையை யுற்றதே போலவாம், போலபோல வென்றதனுனே அன்னியத்தன்மை மாயையா லாயதென்பதைக் காட்டியதாம். ஈண்டிது சிருஷ்டிக் கிரமமாம்:—சிருஷ்டிக்கும் மூன்னத்விதீய பரமாத்மா, சிருஷ்டிகாலத்தில் பூர்வம் அகாலிங்கித விசேடதிருசிய (சிறப்பின்றிய) திருசிய மாத்திர வடிவமாய் விவர்த்தமாம்; அதன்பின் சமஷ்டி சித்திரவடிவமாயும், அதன்பின் சமஷ்டி ஜீவவடிவமாயும், பின்னகங்கார வடிவமாயும், பின்புத்தி வடிவமாயும், பின்மன வடிவமாயும், பின்றன்மாத்திரை பூதபௌதிக வடிவமாயும் விவர்த்தமாம். அவ்வாறே

பெரிய வாசிட்டத்திற் கூறப்பட்டுளதாம்: —விஸ்தாரமாயும், விகாரத்தா லாக்கப்பட்ட எற்றத்தாழ்வற்ற மாயா சபளத்தன்மை யுண்மையாற் சமமாயும், சர்வாதிஷ்டானமாயும், உண்டாகாத ஆகாயதேயுத்தமாதிகளின் காரணவடிவமாய சத்தையாயும், சிதாத்மாவாயும் இருக்கும் பரப்பிரஹ்மத்தின் கண்ணே சித்திற்கு அறிபவனுந்தன்மை யிலக்கண ஜீவத். தன்மையானது விடயகரண சித்திவாயிலாகவே சித்திக்கவேண்டி யிருத்தலின் அதனத் தியாசம் முதலிலேயே யமையுமாதலின் முன்னர்த் திருஷ்டியத்தகைமைக் கற்பனேயாம், அதன்கணணே எது யாதோவெனின், சத்வஸ்துவிற் கலீத்துண்டாத வியற்கையே யாகு மன்றே? ஆகவே சத்திற்குச் சேத்தியாங்கிச சேதனத்தாலாம், சிதிசக்தித் தன்மைச் சேதனத்தாற் சித்தகற்பனே யுதிக்கும், யாதுயாது அத்தியசிக்கப் படுகின்றதோ அதன தன் வெளிப்பாட்டியற்கை சித்தினிடத்தின் முன்னரே சித்தித்திருத்தலின் யாண்டும் நிமித்தத்தன்மையாம். அதன்பின்னர்ச் சேத்யசையோக சேதனத்தாற் சீவத்வகற் பனேயாம், சேத்தியத்தின் ஏகபரத்தன்மை வசத்தால் அதன்பின் மாயையென்னும் அகம்பாவ கற்பனேயாம், அதுவும் ஜீவபாவத்தின் நிரூட அவஸ்தையாகும், ஏகபரத்தன் மையும் அத்துணை மாத்திரத்தின் யானென்னும் அபிமானமாம். அதன்பின் அகந்தை யின் விருத்தியினுலே புத்தித்தன்மைக் கற்பனேயாம், இதுவே மனஸ்தாதி சப்ததன் மாத்திர காதிமானும்; அதாவது இவ்வண்ணந் தருமசித்தியாகவே சப்தாதி விடயமாத்தி ரைகளாய் வாதனைவடிவமாகத் தன்பாலடங்கிய வற்றிற்குக் கனவிற்போல மனனத்தால் அமீதடங்கு முனேரூபமிதுவே யமையும் என்பதாம். உயர்ந்த பிரமாணமாய மறையா லறியப்படுதலின் இருதம், "எதனினுனிறைந் தேய்ந்திடு மேற்றிடும், எதனினுல் விட யங்க ளிலங்கிடும், எதனினு லெந்தனூன்று மிருந்திடும், அதனினுலிதை யாத்துமா வென்பரால்" என ஸ்ரீ வியாசபகவான் விளம்பிய முறையாய் ஆன்மா சத்தியத்தன்மை யின் மேன்மை யெல்லையாதலின் பரம், பெரிதாதலினுனும் உலகாகாரமாகப் பெருத் திருத்தலினுனும் பிரஹ்மம், நூன்முறையே அறிஞர்களானே யனுபவிக்கப் படுதலின் சத்தியம், என்பனவாதியாய நாமங்கள் அதற்கு மகான்களாகிய அறிஞர்களானே உப தேச விவகாரப்பொருட்டு, இடப்பட்டனவாம்: சிருஷ்டியினுதியில் அதற்குப் பொய் யாகச் சமஷ்டி ஜீவபாவமுளதாம். அவ்வாறுய்ச் சிற்சுபாவமாகவே யிருக்கும் ஆன்மா வானது மோகத்தினுலே தானே அன்னியஜடமாய ஆகாசாதி முறையிலுண்டாய இலிங்கசூக்ஷ்மசமஷ்டிவடிவமாய் அதனுட் புகுந்தமையின் அதனபிமானம் பெற்று அதுபோ லொளிர்ந்து அதனுட்கிடந்த பிராணதாரணை யுபாதியினுனே தேகமுண்டான பின்பு வரும்வாக்கு விளக்கவதீனமாக வருஞ்சீவப் பெயரானே நிந்தைக்கிடமாகச் சம்பாதித் துக்கொண்ட ஜீவத்தன்மையை மயக்ககத்தினுலே யடைந்தது போலாம், உண்மை யாகவோ அவ்வாறடைவதில்லை.

(சு,) சாற்றவேண்டி = விவகரிக்கு நிமித்தம், பரமுதல் = அநந்தம் அகூரம் என் பது முதலிய, மேலோரால் = அறிஞரால், இடப்பெற்ற = கற்பிக்கப்பட்ட, இந்தஞான மய ஆன்மா இப்பரமாத்மாவே தம்மாயையாற் சீவத்துவமானுரெனல், சித்திரமாக - திகழ்ந்து, நீதமெத்தி = ஆபாசத்தை யடைந்து, மேல்வரு - தேகாபிமானேத்தர காலம் பெறுவதான, சீவப்பேர் = தேவதத்தாதி நாமங்களே, மேலியபோலவாகும், போல வென்பதனுல் சீவபாவத்துக்கு மித்தியாத்துவங் குறிப்பிக்கப்பட்டது. (7)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இம்முறையையே மூற்றினும் மொழியாத தலத்தும் காணத் தக்கதாம், திருஷியத்வசித்த வாயிலாய்ச் சமஷ்டி ஜீவபாவத்தை யடைந்த பரமாத்மா விற்கு அகங்காரபுத்தி வாயிலாய்ச் சமஷ்டி மனேபாவத்தைக் கூறுகின்றூர்:—இவ்வாறு

ஞானசத்தி மாத்திரத்தாற் சாதிக்கப்பட்ட சிருஷ்டியானது கூறப்பட்டது, இனிக்கிரியா சக்தியின் சகாயம்பெற்ற அது சாதிப்பது கூறப்படுகின்றது:—சீவனென.

(ச - அ - கை.) ஆன்மாவிற்கே ஜீவபாவத்தின்பின் மனோபாவங் கூறுகின்றார்:—சீவனென.

சீவனென்கின்ற சொல்லும் பொருளுமாய்ச் செறிந்த வான்மா
பாவனை மனனத் தாலே பருத்தெழு மனமதாகு
மேவரும் பிரமந் தன்னில் வேலையிலலை போல்வந்து
தாவுறு மூள்ளந்தானே நினைந்த வாசகங் கற்பிக்கும். (8)

(ப - பை.) ஜீவனென்கின்ற சொல்லும் பொருளுமாய்ச் செறிந்த வான்மா = சீவ சப்தார்த்தமாய்க் கலனையாகுலத் தன்மையைப் பொருந்திய ஆன்மாவானது, பாவனை மனனத்தாலே = எண்ணையிகும் மன்னவிவகாரத்தாலே, பருத்தெழு மனமதாகும் = தூலித்துநிக்கும் மனமெனப்படும், மேவரும் பிரமந்தன்னில் = அடைதற்கரிய மகத் தாகிய பிரஹ்மத்தில், வேலையிலலை போல்வந்து = கடலின் கண்ணே கல்லோலம் போலக் இளம்பி, தாவுறும் உள்ளந்தானே = விடயங்களே நாடும் மனந்தானே, நினைந்த வாசகங்கற்பிக்கும் = தான் எண்ணியபடியே யுலகத்தைக் கற்பனைசெய்யும்.

(ஸ்ரீ - வீர.) பூதங்களின் காரணத் தன்மையாற் பூதாத்மாவாகியவது ஜீவசப்தார்த் தமாம், கலனையாகிய சங்கற்பத்தால் ஸ்ரீ ஆகுலத் தன்மையாகிய கலக்கமுடைமையை யடைந்து மனமாகவாகும், மனனமென்னுஞ் சங்கற்பத்தால் தூலத்தன்மையையடையும். கூறியதையே தொடுத்துக் கூறுவார், மனமென்றார். மனமென்னும் அற்பப் பொருளாம் அதன்பின்னர்ச் சீவசப்தத்தின் அர்த்தமான கிரியாசக்தியைப் பிரதான மாகவுற்ற பிராண தாரணையைச் செய்தலாற் சஞ்சலத்தன்மையை யடைந்ததாய், பௌதிகமான லிங்கவடிவினதாய், சங்கற்ப விகற்ப மனனத்தானே ஜாட்டியத்தான் மந்தத்தையடை ந்து மனமாம். அம்மனோ பாவத்தான் மகத்தாகிய பரமான்ம பாவத்தை மறந்துமனோ தருமங்களாகிய சங்கற்பாதிகளைத் தன்னுடையனவாக வெண்ணும்; எவ்வாறெனில் சலனமின்றிய கடலினின்றும் சலனமயமாய அலைகள் எழுவனபோலவா மென்றறிக. மனத்தின் இயற்கையைக் காண்பித்து அச்சமட்டி மனத்தாற் சப்தாதி பஞ்சதன்மாத் திராகாசாதி பஞ்சபூத பிரஹ்மாண்டாதி பௌதிக இலக்கண ஜகத்திந்திரஜாலம் விசேஷ மாகச் செய்யப்படுகின்ற தென்பார், தாவுறுமென்றார். இவ்வண்ணம் சமஷ்டி மனோ பாவத்தையடைந்த ஹிரணியகருப்ப னென்னும் பிரஹ்மம், அன்னியாரலே யறிவிக்கப் படாம லிருந்தபோதிலும் தானுகவே பூர்வவாசனையை யனுசரித்து விராட்பாவத்தையும் புவனாதிபாவத்தையும் அதன் கண்ணே நான்குவிதமாய பூதக்கூட்ட பாவத்தையும் நித்தியம் தன்னிச்சைப் படியே விரைவிற் சங்கற்பிக்கும்.

(ச.) பாவனை மனனத்தாலே = சங்கற்ப விகற்பாதி மாநவியாபாரத்தினால், பருத் தெழும் = ஆகுலமுற்றுச் சடமாயுதிக்கும், விசேஷித்தெழும் அச்சீவனே பூதான்மகத் தன்மையான் ஜர்ஜரத் தன்மையுற்று மனனலக்ஷண வியாபாரத்தான் மனமாமென்க. இவ்விதமன்னமயமே சௌமிய மனமென்னுஞ் சுருதிப்படி, மனதன்னமயத்துவ மாத லின் அதனுற்பத்தியில் ஆத்மாவினுற் பூதத்துவ மாதிரியிக்கப்பட்ட தென்றுணர்க. நிட் கிரிய சுபாவத்தோடுகூடி யிருந்த ஜீவன் சங்கற்ப விகற்பாதி கற்பனையினலே விசேஷ பத்தையடைந்து மனமாதலை மருவுவன் என்றுணர்க. கூறியமனோபாவத்தையே திருவ்

டாந்தத்தால் வற்புறுத்தல்: மேவரும் பிரமத்தன்னில், வேலையில் = திராகாரமான சமுத்திரத்தில், அலைபோல் = அத்திராகாரமான தரங்கம்போல, உள்ளம் வந்து தாவுறும் = மூற்கூறிய பிரகாரம் மனம், அத்திராகாரமாய் வந்து பொருந்தும் இம்மனதே ஜகத்பிரதீதியின் நிமித்தம் எனல்; தானே = அம்மனது தானே, நினைந்தவர் = எப்போதும் தனதிச்சைப்படி வருத்தமின்றிச் சங்கற்பிக்கும். (8)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வுலக இந்திரஜாலம் தோற்றுதலும் அதற்குவமையும் வலியுறுத்தல்:—உன்னுறு மென்பது.

உன்னுறு மனத்தினுலே யுலகமா யிந்திரஜாலம்
தன்னுறும் பணிகளென்னுஞ் சொற்பொருட் பொன்னையன்றி
யன்னிய மில்லைப் பொன்னுற் பணியென வறையவேண்டா
பன்னிய வுலகாஞ் சொற்குப் பரமன்றிப் பொருள்வேறில்லை. (9)

(ப - ரை.) உன்னுறு மனத்தினுலே = வாசனையோடு கூடிய உள்ளத்தினுலே, உலகமாம் இந்திரஜாலம் = ஜகத் சம்பந்தமான இந்திரஜால ஜகவரியமானது, தன்னுறும் = விசேடமாகி விரிந்து நெருங்கித்தோன்றும், பணிகளென்னும் சொற்பொருள் = கடகசப்தார்த்தம், பொன்னையன்றி = காஞ்சனத்தைக் காட்டினும், அன்னியமில்லை = வேற்றுமையுறத் தக்கதன்றும், பொன்னுற் பணியென வறையவேண்டா = பொன்கங்கணத்தினு மயலாம், பொற்றிருட்டியா னேக்குங்காற் கடகமெனக் கழறவேண்டாம், பன்னியவுலகாஞ் சொற்கு = உரைத்தவுலக மென்னுஞ் சப்தத்திற்கு, பரமன்றிப் பொருள்வேறில்லை = பரமாத்மாவைத் தவிர அருத்தம் யாதொன்றுமே கிடையாதாம்.

(ஸ்ரீ - வீர.) அம்மனத்தினுலே மிகமிகவும் விஸ்தரிக்கப்படுகின்றது, இவ்வண்ணம் சமஷ்டி சித்தஜீவ அகங்கார புத்தி மனபாவமடைந்த பரமான்மாவினின்றும் உண்டாய ஜகதிந்திரஜாலம் மித்தையாமாயின் அதனேடு அபின்னமுற்ற பிரஹ்மமும் மித்தையாம் பிரஹ்மத்திற்குச் சத்தியத் தன்மையாற் சகத்திற்கும் சத்தியத்தன்மையாம் எனக் கடாவிக் கூறுகின்றூர்: பணியென கடகசப்தார்த்தம் காஞ்சனத்தினும் பேதார்த்தகமாகாதாம், நியமமாக அஃதின்றிய வழியில்லாமையின், கயிற்றரவுபோலும், நன்றுகப் பகுத்துணரும் விழியால் பொன்னினும் அயலாகக் காணப்பெறுமை = == யானும், ஹேமங்கடகத்தின் வேற்றுமைத் தகுதியாகாதாம், மனவாகாதாம், அஃதின்றியும் உண்மையின் இரஜ்ஜு சர்ப்பம்போலும். இத்திருஷ்டாந்த மிரண்டேபோலப் பரமாத்மாவின் கண்ணே ஜகத்சப்தார்த்தத் தன்மை பலிக்கும், பரமும் ஜகத்சப்தத்தின் என்பது சேடமாம், உலகினுமயலாய்ப் பரமிருக்கலாம், ஆரோபிதத்திற்கு இருப்பு விளக்கப்பொருட்டு அதிஷ்டான அவாவிருத்தலின், அதிஷ்டானத்திற்கு இருப்பு விலக்கப்பொருட்டு ஆரோபித அவாவின்மையின்; பிரஹ்ம ஜகத்துக்கட்குப் பிறங்கியது விலக்ஷணமுடையதேயாம், அச்சத்திய சங்கற்பத்தினுலே இவ்வாரூயவிஸ்தாரமான இந்திர ஜால ஜகவரியமான இது விஸ்தரிக்கப்படும். இவ்வண்ணம் அத்தியாரோபம் ஆயிரமானலும் அதிஷ்டானத்தினுடைய உண்மையாய நிலையானது பங்கப்படாதாம் என்பதனைரும் பொருட்டுத் திருஷ்டாந்தங் கூறுவார் பணியென்றூர். பொற்கங்கணவடிவப் பொன்னினும் கங்கணசத்தப் பொருள் தனிப்படுத்தத் தகுதியாகாததேபோலப் பரப்பிரஹ்மத்தின் கண்ணே தோற்றுகின்ற ஜகத்சப்தார்த்தத் தன்மையும் அதனினும் அயலாகத் தகுதியதாகாதாம். இரண்டற்குந் தனிப்பட்டிருத்தல் தகுதியாகாமையானே ஏகசத்தையுடைமை சித்தமாம். அதுவும் என்றுமுள்ள பிரஹ்மபாவத்தின் கண்ணே தானுகவே

யுளதாம். இடையிலுற்ற வுலகபாவத்திலோ அதன தீனமாயுளதாம். தானுகவே யின்றும்; இவ்வுலகமானது பரிச்சேத சுபாவத்தை விட்டொழித்ததாய்ப் பிரஹ்மசுபாவத்தின் கண்ணே யிருக்கும் உலக சத்தார்த்த பரிச்சேதமுடைய வடிவ இயற்கையிலோ இராதாம்; கங்கணவடிவத் தகைமை பொற்சுபாவத்தி லிருக்கும் கங்கண சுபாவத்திலிராததேபோலு மென்றறிக.

(ச.) உன்னுறும் = சங்கற்பிக்கின்ற, அறையவேண்டாம் பொன்னே பணியாம், காஞ்சனத்துக்கும் அதன் விகாரங்களான கடகாதிகட்கும் போற் பரமான்மாவுக்கும் ஜகத்துக்கும் ஒன்றற்கொன்று அந்நியபாவ மின்றென்பதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேன் மனத்திற்குச் சாயைப் பேயைப்போல இன்மை யுண்மையின் ஜகதிந்திரஜால ஜனகத்தன்மை பொருந்தாதாம் எனின் ? ஆண்டுக் கூறுகின்றூர்:—இதுதானுகவே யில்லாதிருக்குமாயின் எங்ஙன மிருப்பதுபோலப் பொலிதல் கூடுமெனின் ? அறைகின்றூர்:—செல்லென.

(ச-அ-கை.) மாயாமயத்வ மாதலின் ஜகமாத்திரம் மித்தையன்று, மற்றென்னெனின் அதனைக் கற்பிக்கும் மனமுமித்தை யெனல், செல்லென.

செல்லுறு கானலாற்றிற் ரேன்றிடுந் திரைகள்போல
வில்லையா மனத்திலுண்டு போலெழு மிந்தஞால
மல்லல்செய் மோகம் பந்தந் தமமல மவித்தை மாயை
புல்லுசம் சாரமென்றே ஞானிகள் புகலப்பட்ட (10)

(ப - ரை.) செல்லுறு கானல் ஆற்றில் = செல்வது போன்று தோன்றுகின்ற தாப நதியால், தோன்றிடுந் திரைகள்போல = பிரதீதியாகும் லகரிகள்போல, இல்லையாம்= அத்தியந்தம் இல்லாததாகவே யிருந்தும், மனத்தில் = உள்ளத்தில், இந்தஞாலம் = இவ்வுலக இந்திரஜாலம், உண்டுபோலெழும் = சத்தியம்போல விரியாநிற்கும், அல்லல் செய் = மிகத்துன்புறுத்தும் பொருட்டே, புல்லு = அறியாமற் பொருந்திய, அதற்கு, அவித்தை, சம்சாரம், மோகம், பந்தம், மாயை, மலம், தமம், என்றே = என்பன நாமங்கள், ஞானிகள் புகலப்பட்ட = பேரறிவாளிகளாற் பேசப்பட்டனவாம். (26)

(ஸ்ரீ - வீர.) இச்சமுசாரத்தில் மரீசிநதியின் சஞ்சல ஊர்மியொப்ப அசத்தாகிய மனத்திலுலே சத்துப்போன்ற ஜகத்திந்திரஜால ஸ்ரீயானது விஸ்தரித்து விளங்குகின்றது. ஜகத்திற்கு நாமகற்பனையைக் கூறுதலாலும் பொய்ம்மையையும் தள்ளுபடுதலையும் சாதிப்பார் அல்லல் என்ரூர் மகான்களாற் கற்பிக்கப்பட்ட நாமங்கள் வாய்ந்தது உலக விந்திரஜால ஐயிசுவரிய மென்பதாம். கூறவும் - படும் - பட்டது.—மனத்தின் வடிவுசங்கற்ப மற்றிவ்விரண்டு மொன்ரூகு, மனர்த்த மோக மலம்பந்த மவித்தை மாயை தமமூதலாமினத்தபெயர் சற்கற்பதற்குக் கேற்றபெயரா மிதுதழுவிற், கனத்தசகக்காட்சியும் போகுங்கதிர் விட்டொறிக்கும் பரவடிவம், விதமுறு காகுமெய்ம்மை பந்தமஃதின்மை வீடாந், திதமாறுயிது போமாறு செப்புதுந் தெரியக் கேட்பாய்" எனவாம்; மருமரீசியிலுலே கற்பிக்கப்பட்ட கானனீர் நதியின்வேகப் பிரவாக தரங்கங்களேபோல வுலகசம்பந்த இந்திரஜால ஐசுவரியமானது இல்லாதிருந்த போதினும் இருப்பதேபோல் ஈண்டு மனதிலுலே விஸ்தரிக்கப் படுகின்றது. அதற்கு அசத்துத்தன்மையானதும் அவித்தையிலுண்டாவதாகி அவித்தை வடிவமுடைமையின் எனக்கருதி அதையனுசரித்த நாமங்களானே அவித்தையைக் காட்டுவாம்; வித்தையாணீக்க யோக்கியமாதலின் அவித்தை

யாம்; மேல்கீழ் குறுக்குகளிற் சுழற்றுவிக்கு மேதுவாதலின் சமுசாரமாம், சுதந்திர மில்லாதிருத்தலைச் செய்வித்தலின் பந்தமாம், பொய்யா யிருத்தவின் மாயையாம், மயக்க வேதுவாதலின் மோகமாம், தாண்டமுடியாமையின்மகத்தாம், தற்சொரூபத்தை மறைத்தலின் தமமாம், என்பனவாதியாய நாமங்கள் யாவற்றையு முணர்ந்த பெரியோர்களால் அவித்தைக்கிடப் பட்டனவாம்.

(ச.) செல்லுறும் = சூரியகிரணத்தால் ஓடாநின்ற (அசத்தான) நதியால் மருமரீசி கையால், தோன்றும் அசத்தான திரைகள்போல் = தரங்கபரம்பரைபோல் இந்தஞாலம் = இச்சகமென்னும் இந்திரஜாலம் உண்டுபோலெழும், இச்சகம் மோகாதிபதவாச் சியமெனல். இச்சகத்திற்கு அல்லல்செய் மோகம், ஞானிகள் = சகலதரிசிகளால், புகலப்பட்ட கற்பிதநாமங்களாம், விவர்த்த வாதத்திற் காரிய காரணங்களுக்குப் பேதமின்மையினுன் மோகாதிகள் திருசியப் பிரபஞ்ச பரியாயமாதல் விருத்தமன் றென்பது கருத்து.

(ஸ்ரீ.- வீர - அ - கை.) இதனு லியம்பப்பட்டதையே விரித்தல்:—

பந்தத்துருவங் கேட்டுணரிற் பரவீட்டுருவு மேல்வெளியா
மிந்தச்சகநீ நான்முதலா மிவையெமெய் யென்றல் பந்தமதா
மந்தக்கருத்து நிற்பளவு மரிதாமுத்தி வித்தினிடைத்
தொந்தத் தருப்போற் காண்பவன்பாற் றோன்று துறையுங் காண்பவெலாம்.

(ப - ரை.) பந்தத்துருவங் கேட்டுணரில் = பந்தத்தின் உருவத்தைக் கூறக் கேட்டறிந்து கொள்ளுதியேல், பரவீட்டுருவு மேல்வெளியாம் = பின்மேலான மோக்ஷத்தின் சொரூபம் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம், இந்தச் சகம் = திருசியமய இவ்வுலகம், நீ நான் = திருஷ்டாமயதுவம் அகம், முதலாமிவை = ஆதியிவற்றை, மெய்யென்றல் = சத்தென் றெண்ணுதல், பந்தமதாம் = பந்தமென்று பகரப்படும், அந்தக்கருத்து நிற்பளவும் = அச்சடாசடக் கருத்திருக்கும் வரையும், அரிதாம் முத்தி = மோக்ஷம் கிடையாதாம், வித்தினிடைத் தொந்தத் தருப்போல் = பீஜத்தின் கண்ணே மரங்கொடி பிறங்குவதொப்ப, காண்பவன்பால் = திருஷ்டா வினிடத்தில், காண்ப வெலாம் = காணப்பட்டவையாவும். தோன்றுதுறையும் = அடங்கியிருக்கும். (11)

(ஸ்ரீ - வீர) திருசியம் = துவைதப் பிரபஞ்சம், கட்டுறுத்தலாற் பந்தமாம், கூறிய தைத் தெளிவித்து ஞானத்தாற் நிருசியமொழிந்தவழி காண்போனுந்தன்மை நீக்கத்தாற் கைவல்லியமாம், என்பார் இந்த என்றார். யாதுபந்தத்திற்குக் காரணமாமோ அத் திருசியம் யாது கொலாமாலோ வெனின் உரைப்பார் சகமென்றார், அற்றேல் நையாயிகாதிகட்கே போலும் திருசிய மிருந்தபோதினும் மோக்ஷம் என் ஆகமாட்டாதெனக் கடாவிக் கூறுவார் அந்தவென்றார். " அற்பமும் பேதமே யாற்றிடப்படினும் அளவிலாவச் சமவனுக்காமே " என்னுஞ் சுருதியினுலே துவைதிகட்கு முக்தி ஆமைப்பாலல்லவோ. எத்துணைத் திருசியஞ் சம்பவிக்கும் அத்துணைமோக்ஷம் காணப்பெறு தென வாயின் துயிற்பிரளயங்களிற் சருவதிருசியம் அசம்பவமாயவழி மோக்ஷமேனுகாது, துயின்முதலியவற்றே சுருதியாற் சருவதிருசிய அபாவப் பிரதிபாதனத்தான், ஆண்டஞ் ஞான சற்பாவத்தாலெனின் ? அன்றும், அது உகிருதிர்த்த வுரகமொப்ப வொன்றுஞ் செய்யாதாதலின் அங்கீகரிக்கப் படமாட்டாதாம் ஆண்டு மோக்ஷமெனச் சங்கிப்பக் கூறுவார் வித்தென்றார். பதுமினியின் பீஜபூதமான அதிவிஸ்தார நில்லாதை வடிவம் பதுமமணியின் உள்ளவகாசத்திற் சமஸ்காரரூபமாக எங்ஙனமிருக்கின்றதோ அங்ஙனம்

திருஷ்டாவின்பாத் நிருசியதீ யிருக்கும், பிராதிபாசிகத் தன்மையானே திருசியஞான மெனப் பட்டதாமென்க முதலில் பந்தத்தின் உருவத்தைப்பற்றிப் பகருமிதனைக் கேட்குதி பின்மோக்ஷத்தின் சொரூபத்தை யறிந்துகொள்வாய், ஞானத்திலுலே யுடைவதற்கும் அடைவதற்கும் தகுதியாய பந்தமோக்ஷங்களின் சொரூப மியாதென்னின் அறைவார் இத்தவென்றூர் காண்போனுக்குக் காண்பொருளின் மெய்யாய விருப்பே பந்தமெனப் பகரப்படும், காண்போன் காண்பொருளின் வலுவால் கட்டுற்றவனுவன். காண்பொருளிலதாங்கால் விடுபடுவன்; உலகம் நீயான் என்பனவாதியாய இப்பொய்வடிவமே காண்பொருள் எனப்படும், எதுகாறும் இதுதோற்றிக் கொண்டிருக்குமோ அதுகாறும் மோக்ஷமான துண்டாக மாட்டாது, அற்றேல் திருசியந் தோற்றுமையே மோக்ஷமாயின் அவ்வப்போ தெதிர்வரும் திருசியங்களே இஃதில்லை இவ்தில்லையெனு நீக்குவதனுனே ரோகநீக்கத்தானே ஆரோக்கிய முண்டாவதேபோல மோக்ஷமான துண்டாம்போது தத்துவஞான ஆயாசத்தா லாகவேண்டுவ தென்னே யெனின் ? இத்திருசிய ரோகமானது இஃதில்லை இஃதில்லை யென்னும் சங்கற்பத்தையாக்கும் வீணான புலப்பத்தால் நன்கு சாந்தியை யடையமாட்டாது, மாருக விருத்தியையே யடையும் இஃதில்லை யென்னும் புலப்பமானது திருசியமான திருக்குமாயின் பாதிதப்பொருட்டன்மை யுறுதலின் அதன்விரோதியாய வேறு திருசியத்தை யுண்டாக்குஞ் சங்கற்பத்தால் அதனை யுண்டாக்கலான் முற்றிருசியத்தை நீக்குவதாக மொழியலாம், ஆகவே ஒருதிருசிய நீக்கப்பொருட்டு இருதிருசிய மெழுப்பலின் விருத்தியே யன்றேவாம், அவித்தையோடு கூடியிருக்கும் காண்போனிடத்தில் காண்பொருளிருக்கும் வகையை யுவமித்துரைப்பார் வித்தென்றூர். கமலவிரையி னிடையில் இனிவருந் தாமரைக் கொடிக்கேதுவாய சூக்குமமான பதுமக்கொடி வடிவம் எவ்வாறு இருக்கின்றதோ, அசத்திற்குதயம் பொருந்தாமையானே, அவ்வாறு திருஷ்டாவின் கண்ணே திருசிய சகிதமதியுளதேயாம்.

(ச.) இந்துசம ஆகா நீ ! யாமனுக்கிரகிக்கும் பந்தத்துருவம், வெளியாம். மூன்விதமுறுகாட்சி மெய்ம்மை பந்தமெனக் கூறியதை விரித்துரைத்தல், இந்தச்சகம் = இவ்வுசேத ஞத்மகமான பிரபஞ்சமும் நீ நான்முதலாஞ் சேதனப் பிரபஞ்சமும் ஆகிய இவையே திருசியமாம், மெய்யென்றல் = இத்திருசியத்தைத் திருஷ்டா வுண்மை யென்று கருதுதல் பந்தமாம், அந்தக்கருத்து நிற்பளவும் = திருஷ்டா திருசியவசமாய்த் திருசியம் உண்மையென்னும் அந்நினை விருக்குமட்டும், முத்தியரிதாம், பந்தமாம், அந்நினைவின்ருயின் முத்தியாமென்ப தருத்தாபத்தி, வித்தினிடை = ஆலம்விரையாதியினகத்தில், தொந்தத்தருப்போல் = பத்திரபுஷ்ப பலாதி பேதங்களோயுடைய விருக்ஷம் சூக்ஷுமரூபமாய் வெளிப்படாதிருக்கும் அன்றெனில் உபாதான காரணத்துவங் கூடாமையின், அதுபோல் காண்பவன்பால்= திருஷ்டாவென்னுஞ் சீவனிடத்தில், காண்பவெலாம் = திருசியபுத்தி சூக்குமரூபமாய்த் தோன்றுதுறையுமென் றங்கீகரிக்கவேண்டும். வடநூலாசிரியர் அற்ப நீலரூபமான வல்லிரூபத்தையுடைய கமலத்தினது சூக்குமரூபம் பதுமத்தினது கர்ணிகை மத்தியிலிருக்கும் பீஜத்தினகத் திருப்பது போலென விசேஷத் துரைத்த திருஷ்டாந்தத்தை இந்நூலாசிரியர் வித்தினிடைத் தொந்தத் தருப்போல் எனப் பொதுப்படக் கூறினுரென்றுணர்க.

(ஸ்ரீ - வீர - அ - கை.) விரையின் கண்வருந் தருவாதியிருத்தல் போல எல்லாவுலகும் பரத்தில் மறைந்திருக்கும் = எனவுருவகப்படுத்திக் கூறுகின்றூர்:—பிறிவென.

பிறிவாம் பொருளின் மரத்திருந்த பேதப்படியே யுதரத்திற்
செறிவாஞ் சிருட்டி சமத்காரஞ் சிதைவற் றுண்டாய்ச் செறிவதுபோ

லறிவாஞ் சரீரியெனும் பொருளி னகன்றவுதரத் தங்குரமாய்
நெறியார் சகத்தின் வடிவமெலா நீங்காவியல்பாய் நிறைந்திருக்கும். ()

(ப - ரை.) பிறிவாம், பொருளின் = காரணதிர வியத்தின், உதரத்தின் = அகட்டினுள்ளே, மரத்திருந்த பேதப்படியே = தருவிற்கண்ட வைசித்திரியப் பிரகாரமே, செறிவாஞ் சிருட்டி சமத்காரம் = பொருந்தியிராநின்ற சிருஷ்டி சாமர்த்திபம், சிதைவற்று = கெடாமல், உண்டாய்ச் செறிவதுபோல் = உதிதமாகி யடைவதுபோன்று, அறிவாஞ் சரீரியெனும் பொருளின் = சித்துரூப சரீரியென்னும் வஸ்துவின், அகன்றவுதரத்து = விசால அகத்து, அங்குரமாய் = அங்குரரூபமாய், நெறியார் = அநேகவித மார்க்கங்கள் பொருந்திய, சகத்தின் வடிவமெலாம் = உலக ஆகிருதிகளெல்லாம், நீங்காவியல்பாய் = மாறுத வியற்கைத்தாய், நிறைந்திருக்கும் = பூரித்திருக்கும். (12)

(ஸ்ரீ - வீர.) எங்ஙனம் திரவியமாகிய பதுமமணியாதிகளின் உள்ளேயே உண்டாமாச்சரியம் அதன் சமமான வருந்திரவியத்தின் பரமசூக்ம அவஸ்தை சமஸ்காரப்பெயருடன் அஸ்தமயமறைந்து அதனதுதரத்தின் கண்ணே யுறைந்துளதோ, அங்ஙனமே சின்மாத்திர சொரூபமாய பரமாத்ம திரவியத்தின் உதரத்துள்ளே சுபாவபூத அதன் சொரூப அபின்ன உலகஸ்திதியுளதாம், இஃதின்னபடி யென்னற் தருக்கிக்க முடியாமற் காரியத்தை யுண்பெண்ணும் ஆற்றல் சமத்கிருதியாம், அதுவிரைமுதவிய பொருள்களின் உதரச்சார பாகத்திலேயே யிருப்பதுபோலச் சின்மாத்திர இயற்கைவாய்ந்த அவித்தைச் சரீரமுற்ற ஆன்ம திரவியத்தினுடைய வுதரத்துள்ளும் ஜடாஜடங்களைக் கிளப்பு மியற்கையமைந்த ஐசுத்திதியாகிய சென்றவரும் உலகசத்தை யுளதாமெனக் கூறியதே நிலைபெற்றதாம்; கூறிய சமத்கிருதியானது எப்போது மிலங்குவதும் அஸ்தமனமில்லதும் ஆம்.

(ச.) பிறிவாம் பொருளின் = வடபீஜ முதலிய காரணரூபத் திரவியத்தினது, உதரத்தின் = கருப்பத்தினுள்ளில் மரத்திருந்த பேதப்படியே விருக்ஷத்தினதுவை சித்திரியப் பிரகாரமே, சிருட்டி சமத்காரம் = ஆச்சரிய காரணியான சக்தி, சிதைவற்று = அஸ்தமித்தலின்றி, உண்டாம் = சதோதிதமாய், செறிவதுபோல் = அவிச்சின்ன சுபாவமா யிருப்பதுபோல், சித்துரூப ஆன்மவஸ்துவின் பூர்ணைதரத்தில், நெறியார் = கிரமமாகப் பொருந்தும், வைசித்திரிய ஆகாரமான சகல சகத்தும், அங்குரமாய் = ஆச்சரிய காரணியான சக்திரூபமாய், நீங்காவியல்பாய் = அத்தமித்தலின்றிச் சதோதிதமாய். அவிச்சின்ன சுபாவமாய் நிறைந்திருக்கும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல் திருஷ்டாவின் கணணே திருஷியம் சமஸ்கார ரூபமாகப் பிரளயாதியின்கண்ணி கழுமாயின் விசித்திர சமஸ்காரங்களாற் சித்திரிக்கப்பட்ட அஞ்ஞாததிருஷ்டாவினின்றும் திருஷிய அபிவியத்தி யப்போதே யேன் ஆவதில்லை யெனச் சங்கித்துத் திருஷ்டாந்தத்தாற் பரிகரிக்கின்றார் :— சருவ திருஷியங்களும் இருதயத்தி லிருக்குமாயின் இப்பொழுதே யாவராணும் அனுபவிக்கப்படாத தென்னைகொல் லெனிற் கூறுகின்றார் :— பருவவென திருஷ்டாவின் கண்ணிருக்குந் திருஷியத்தினது சிருட்டிப் பிரகாரத்தைக் கூறல்:—பருவவென.

பருவங்களிலே விதைமூலைக்கும் படிபோற் காணப்படுமவற்றிற்
கருதுங் கருத்து முடலெடுக்குங் ககனத் துதித்தோன் கதையாலே
யிருளுஞ்சகத்தி னுற்பத்தி யெளிதாய் விளங்கு மிதுகேட்பாய்
பெருகுங்ககனம் பிறப்பிடமாய்ப் பிறந்தான் மறையோர் பெருங்குலத்தோன்.

(ப - ரை.) பருவங்களிலே = தேச காலங்களை யனுசரித்து, விதை = பீஜம், மூளைக்கும் படிபோல் = அங்குரபாவத்தை யடைவதேபோல, காணப்படுமவற்றிற் கருதுங் கருத்தும் = திருஷ்டாகாரமாக வாசனைப்படி யெண்ணும் எண்ணமும், உடலெடுக்கும் = விஸ்தார ஆகிருதியை யடையா நிற்கும், ககனத்துதித்தோன் = கதையாலே கூறப்படும் ஆகாசஜன் சரித்திரத்தானே, இருளுஞ்சகத்தின் = மோகமய சமுசாரத்தின், உற்பத்தி = உற்பத்தியை யுரைக்கும் பிரகரணம், எளிதாய் விளங்கும் = சுலபமாகவிளங்கும், இது கேட்பாய் = இக்கதையை யியம்பக் கேட்பாயாக, பெருகுங்ககனம் = விசாலமான விண்ணே, பிறப்பிடமாய் = உதயஸ்தானமாய், பிறந்தான் = உதித்தான், மறையோர் பெருங்குலத்தோன் = பரமதார்மிக துவிஜோத்தமன்.

(ஸ்ரீ-வீர.) பீஜத்தினுள்ளே சமஸ்கார ரூபமாக இராநின்ற அங்குரம், நியமிக்கப்பட்டதாகிக் காண்டசாகை பத்திர புஷ்பாதிகளோடு மிலங்குவதாகித் தூலரூபமாய் விரிவதேபோலத் திருஷ்டமதியும் நியதமாய தேசகாலங்களானே தூலரூபத்தை மருவும்; இதனற்றான் அக்காலே ஜகத்துற்பத்தி வழக்கில்லையாம். இவ்வண்ணம் ஆண்டு ஜீவப் பிரஹ்மங்களின் ஒருமையைத் தாற்பரியமாகச் சர்வ வேதாந்தப் பிரதிபாத்தியமறைந்து விருத்த தருமங்களோடு கூடியிருத்தலினனே, அவற்றின் ஐக்கிய அசம்பவ சங்கை நீக்கப்பொருட்டும், அதனினும் வேறாய ஆகாசாதி பதார்த்த சற்பாவசங்கை நீக்கப்பொருட்டும், சர்வவிருத்த தருமக்கூட்டத்திற்கும், ஆகாசாதிப் பிரபஞ்ச சற்காரணத்திற்கும். அதனினின்றும் உண்டாந்தன்மை முதலியவற்றுற் பிரஹ்மத்தினும்வேறாய் அசத்துவங்கூறி, இப்போது பிரஹ்மாத்மைக்கிய அபரோக்ஷ ஞானத்திற்குக் கரும அதன் பலவடிவ சமுசாரநிவிருத்தி யிலக்கணபலங் காட்டற்பொருட்டு ஸ்ரீவசிட்டபகவான். ஆண்டுமிருத்தியு யமசம் வாதவியாஜமாக அறிஞராகியஹிரணிய கருப்பரிடத்தில் வித்தியாபலங்காட்டியவழி வேறறிஞரிடத்தும் நியாய ஒப்புமையாற்காட்டிய அதுவேயாமெனக்கருதி ஆகாசஜாக்கியானத்தைத் தொடங்குவார் ககனமென்றார். அபூத அர்த்தவாதமிது பிரமாண சம்வாதாதிபோலும் பிராந்த திருஷ்டியினனே கரும அதன் பலவடிவமாய சமுசாரமாம் தத்துவநிருஷ்டியினனே உண்டாகவு மில்லை உளதாகவுமில்லை உளதாகவு மாட்டாது என்னுமிப் பொருளைப் பிரதிபாதிப்பதாய உற்பத்தி யெனப் பெயரிய பிரகரணம் எவ்வாகாச ஜாக்கியானத்தைக் கேட்டமாத்திரத்தா லுணர்ந்துகொள்ளுவாயோ அவ்விவ்வாகாசஜாக்கியானத்தைக் கேட்குதி ! " ஆகாசமே நாமரூபங்களின் நிர்வாகத்தைச்செய்வதாம், " என்னு மறையுண்மையின், ஆகாசம் பிரஹ்மம் அதினின்றும் உண்டாகின்ற படியினாலே ஆகாசஜன் பிரஹ்மாவாம், இருபிறப்பாள னுத்தன்மைமுதலிய கற்பனையோ கதையின் சௌந்தரியப் பொருட்டாம். அங்குரமானது பீஜத்தினுள்ளே நன்னிலை பெற்று அது வெளியாவதற்குச் சகாரியாய தேசகால கருமபரிபாகங்களை யனுசரித்து விளக்கமான ஆகிருதியைச் செய்கின்றது, அதுபோலவே திருஷ்டமதியும் பெருக்குகின்றது. பூதமயமான தேகத்தை யாத்மாவாகக் கொண்ட அறியாதவன் காலனுற்பக்ஷிக்கப்படுவன் என்றும், தத்துவத்தை யுணர்ந்தவன் சின்மாத்திரமே யாத்மாவென்றிருத்தலின் ஆகாசஜனுகிய மறையோன் போலக்காலனுற் பக்ஷிக்கப்படா னென்றும் இயம்புவார்க் ககனமெனத் தொடங்கினர். காமகரும வாசனைகள் நன்கு நிறைந்துள்ள அவித்தையை யுபாதியாகவுடைய ஆன்மாவே யுலகபீஜமும் காலபீஜமும் ஆம், வித்தையினாலே அந்தப் பீஜசக்தி தகிக்கப்படினனே காலன் வசப்படுவதில்லை யெனமுற் கூறியபொருளில் விசேடத்தைக் காண்பிக்கும் பொருட்டு உலகத்தையுதியிற் படைப்போன் றத்துவசோதனத்தால் விளம்பப்படும் பொருளுபோற் காதசங்கதியுற்ற ஆக்கியாயிகையை வருணித்

துக்கொண்டு ஸ்ரீ வசிஷ்டபகவான் விளம்புகின்றார், ககனமென. உற்பத்தியெனப் பெயரிய பிரகரணப் பொருளை யுணர்வதற்குச் சாதகமாகிச் செவிக்கரியபூஷணம் போன்றிலங்கும் இவ்வாகாசஜ ஆக்கியானத்தைக் கேட்டி! ஆகாசத்தினின்றும் அத்தியஸ்தமாகிய அவித்தைக்கருமையின், ஆதாரத் தன்மையானே ஆகாயத்திற்கொப்பாயதும் அவித்தையான் மறைபட்டமையின் ஒளிருன்றியதும், ஆகிய பிரஹ்மத்தினின்றும் உண்டானவன் ஆகாசஜனுவன், இலிங்கசமஷ்டியான்மாவாகிய இரணியகருப்பன் என்னும் அவனது ஆக்கியான மெனவுணர்க.

(ச.) விதை = பீஜத்தினகத்திருக்கும் அங்குர நிமித்தபூதமாய், பருவங்களிலே = தேசகாலங்களே யனுசரித்து, மூலைக்கும்படிபோல் = பிரசன்னரூபமா யுண்டாவது போல, கருதுங்கருத்தும் = ஆன்மாவின்கண்ணிருப்பதாக நினைக்கும் திருஷியுத்தியும், காணப்படு மவற்றின் = திருஷியங்களினது, உடலெடுக்கும் = பிரசன்னரூபந்தரிக்கும்; இது = இஞ்ஞான விண்மகன் கதையை. ஆகாசஜனென்னும் நாமமுடையனு மென்பதாயிற்று. (13)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆகாசஜன் பெருமையும் காலன் ஆலோசனையின் அருமையும் அறைதல்:—ஒழியென.

ஒழிவிற்றி யானமுயிர்க்கி தம்வீறுடையோ னெடுஞாளுய்ந் திருப்ப
விழியுமுலகை விழுங்குறு நாமிவனே விழுங்கா திருந்தமையென்
னழிவுசெய்யு மெனதுவலி யழுந்துங் கல்லின்வாண் முனேபோற்
கழியமழுங் கிற்றென வெண்ணிக் காலனவனூர்கடிதினேந்தான். (14)

(ப - ரை.) ஒழிவில் தியானம் = எப்போதும் தியான எகநிஷ்டனுய், உயிர்க்கிதம் = பிரஜைகட் கிதமேவிரும்புவனுய், வீறுடையோன் = அதிசாமர்த்திய பரமதர்மவானுகிய அத்தருமமூர்த்தி, நெடுஞாளுய்ந்திருப்ப = சிரஞ்சீவியாகி வாழ்ந்து கொண்டுவர, இழியுமுலகை = அற்பமாய இவ்வுலகத் துள்ளவரை யெல்லாம், விழுங்குறுநாம் = எளிதாக முறையாய்க் கவளீகரிக்கும் யாம், இவனே விழுங்காதிருந்தமை யென் = இவ்வாகாசஜனேயேன் அயிலாமலிருந்தோம், அழிவுசெய்யு மெனதுவலி = யாவரையும் கெடுக்கும், எமதுசாமர்த்தியம், அழுந்துங் கல்லின்வாண் முனேபோல் = கடினமான பாறையின்பால் இட்ட கட்கதாரை மழுங்காநிற்பதேபோல, கழியமழுங்கிற்று = அத்தியந்த மழிந்து கெட்டுப்போய் விட்டது, என எண்ணி = என்று நினைந்து, காலன் அவனூர் கடிதினேந்தான் = யமனுதன் அவன் புரத்தை விரைவிற்கொல்லும்பொருட்டு அடைந்தான். (14)

(ஸ்ரீ - வீர.) ‘அஃதெங்ஙனங்கிருதின்’ என்பதாதி சுருதியினனே இரணியகருப்பதத்தை யடைவிப்பதாய சம்வர்க்கவித்தை முதலிய தருமத்தில், பிரஜைகள் யாவருஞ் செய்த தருமங்களின் உள்ளடக்கங் கழறப்பெறுதலின் பரமதருமமூர்த்தியாம். ஆன்மசிந்தனை செய்வதிலேயே தற்பரராய், எப்போதும் பிரஜைகட்கிதத்தையே செய்பவராய், ஆகாசஜன் எனப்பெயர் படைத்த பிராஹ்மண ரொருவர் இருக்கின்றார்; அவர் மிருத்தியுவின் வயப்படாமல் நீளுள் வசித்துக்கொண்டிருந்தபோது மிருத்தியு நினைக்கின்றனன், எல்லாப் பிராணிகளையும், யான் முறையாக அக்ஷயஞக விருந்து பக்ஷிக்கின்றேன்; இவ்வாகாசஜ னென்னும் இவ்பிரானேயேன் பக்ஷிக்கமுடியவில்லை? கடகத்தின் மூனையானது கல்லில் மழுங்குவதேபோல இவனிடத்தில் என்னுடைய ஆற்றல் குன்றிப் போகின்ற

தென்னே என, நெடிது நினைந்து அக்கணமே அவரைக் கொல்லும் பொருட்டுச் சத்திய லோகத்திற் புகுவதற்கு மிருத்தியுவிற்கு ஆற்றலின்மையின், மேருவின்மத்தியிலிராகின்ற பிரசித்தமான அவரது புரத்தைநோக்கிச் சென்றனன்,

(ச.) உவம்ந்திருப்ப, வீறு = பரமதருமம், மிருத்திபு இவ்விதஞ் சிந்தித்தானெனல் இழியுமுலகை = சர்வப் பிராணிகளையும், கிரமமாக விழுங்குறுதாம் அன்றே அஷ்டயன் இவனை = இவ்வாகாச சனென்னும் விப்பிரனை, என் = யாதுகாரணம், அவனூர் = அவனைக் கொல்லுவதற்கு அவன் புரத்தைக் கடிதணைந்தான்.

(ஸ்ரீ - வீர - அ - ஸை.) காலனது அதிதீவரப் பிரயத்தனந் தெரிவித்தல்:=வினைய னென.

வினையின் முயல்வார் தங்கருமம் விடுவதுண்டோ வெனமறையோன்
மனையின்வாயிற் புகுமளவின் மண்டுமூழிக் கடுங்கனல் போற்
கனையுங் கடுந்தீயெரித் திடவுங்கடிது புகுந்து கண்டவனைப்
பனைசெய் கரமாயிரத் தாலும்பற்றி யிழுத்துப் பயனற்றான். (15)

(ப - ரை.) வினையின் முயல்வார் = ஒரு காரியத்திற் றற்பரராய் முயலும் தீரர், தங்கருமம் விடுவதுண்டோ=தாங்கள் தொடங்கிய காரியத்தை முடிக்காமல் விடுவது தூர்லபமல்லவா, என = என்பதனால், மனையின்வாயிற் புகுமளவில் = அவர்வீட்டுவாயி லிற் புகுங்கால், மண்டு மூழிக்கனல்போல் = வியாபித்து நெருங்குங் கற்பாந்தக் கனல் கடுப்ப, கனையுங்கடுந்தீ யெரித்திடவும் = சப்தித்தெரியுஞ் சுவாலைத்தீ தகித்திடவும், கடிதுபுகுந்து = வேகத்துடன் புகுந்து, கண்டவனை = தருமமூர்த்தியைப் பார்த்து, பனைசெய் கரமாயிரத்தாலும் = பனைமரங்கள் போன்ற ஆயிரங்கரங்களாலும், பற்றி யிழுத்துப் பயனற்றான் = பிடித்திழுத்து யாதொரு பிரயோஜனத்தையும் அடைந்தா னில்லை. (15)

(ஸ்ரீ - வீர.) பிரஹ்மாவின் அரியமனைக்காவற்பொருட்டு நாற்புறமும் பிரகாரரூப மாக விளங்கிக்கொண்டிருக்கும் அக்கினி இம்மிருத்தியுவைத் தகித்தது. அல்லது ஆகா சஜனுகியது விஜோபித்தமனுல் வெகுகாலம் பணிவிடை செய்யப்பட்ட படியினுலே சந் தோஷமடைந்த அக்கினியானது அக்கினி யாகாரமாகவந்து தனது பக்தனைமரிக்கச் செய்வதின் முயன்ற இம்மிருத்தியுவை மிகவுந்தகித்தது. வலுவையுடையவ ஞயினும் மிருத்தியு முற்கண்டபோதினும் ஆயிரங்கரங்களானும் வவ்வுதற்கு முடியாதவனுயினுன், சாமரத்தியமுடைய எவருமே தமது தொழிலின் முயற்சியைத் தியாகிக்கமாட்டார்க ளன்றே ! பின்னக் கிரகத்தை யடைந்து காலன்தானே புரும்போது, சமாதிவிக்கினத் தைத் தடுக்கும் பொருட்டு முன்னரே பிரஹ்மாவினுலே கிரகத்தை வளைந்துகொண் டிருக்குமாறு சங்கற்பிக்கப்பட்ட பிரளயகால அக்கினிபோன்ற அக்கினியானது இம்மி ருத்தியுவைச் சுடத்தொடங்கியது, அந்த அக்கினிச் சுவாலைகளின் மகத்தான மாலைவடி வக்கோட்டையைப் பிளந்து மிருத்தியுவானவன் உள்ளேசென்று பிராஹ்மணரைப் பார்த்து மிகு முயல்வுடன் கரங்களாற்பற்ற இச்சித்தான் ; பிராஹ்மணர் எதிரேகாணப் பட்டபோதினும் நூற்றுக்கணக்கானகரங்களால் அகப்படுத்தக் கூடாமற்போய்விட்டனர்

(ச.) வினையின் முயல்வார் = தன்கருமத்தின் முயற்சிப்பவர் யாவரேனும், தன் கருமம் = தனது முயற்சியை, தான் புகுமளவில் கனல்போல் = வன்னிபோன்ற, கடுந்தீ = காலனனுகா திருக்குநிமித்தம் ஆகாசஜன் மகிமையாற் கற்பிக்கப்பட்ட வக்

கினி யென்றுணர்க, மனோயினகத்துக்கடிது புகுந்து. வடநூலாசிரியர் அத்த சதங்களா லென்றது அளவற்ற கைகளாலென்பது தோன்ற இந்நூலாசிரியர் சுமாயிரத்தாலும் மென்றார்.

(ஸ்ரீ-வீர-அ-கை.) முயல்கை வீணுதலும் யமனே யுபாயம்விளைதலும்:—அவன் என.

அவன் சங்கற்ப புருடனேப்போ லசைவற் றிருப்ப வடர்ப்பரிதா
யிவனங் ஙகன்று நமன்பாற்போ யிவ்வாறுரைப்ப யமனுரைப்பான்
புவனங் கருமத் தாலன்றிப் பொன்று தவிப் பொருளவையே
தவறும் படிசெய் கருமங்கள் சகாய மாகச் செல்கென்றான். (16)

(ப - ரை.) அவன் = அவ்வாகாசஜன் = சங்கற்ப புருடனேப்போல் = மனோராச் சிய மானவனேமான, அசைவற்றிருப்ப = சலனமிலாது நிலைபெற்றிருப்ப, அடர்ப்பரி தாய் = கெடுக்கமுடியா தொழிய, இவனங்ஙகன்று = காலன் அவ்விடம் விட்டேகி, நமன்பாற்போய் = தருமராஜாவையணுகி, இவ்வாறுரைப்ப = நடந்த வரலாற்றைக் கூற, யமன் உரைப்பான் = தருமராஜர் கூறுகின்றார், புவனம் = புவனத்துள்ளவர்கள், கருமத்தாலன்றி = கருமமில்லாமல், பொன்றுது = மரியார்கள், உதவிப்பொரு ளவை யே = சகாயமான வத்துக்கள் கருமங்களேயாம், தவறும்படி செய்கருமங்கள் = மாற ணீயமான கருமங்களை, சகாயமாக = உதவியாகக்கொண்டு, செல் கென்றான் = நீ செல் லுவாயாக வென்று கூறினர். (16)

(ஸ்ரீ - வீர.) சங்கற்ப புருடன் = மனோரத நிர்மிதபோலிப்புருடன், நீ யொருவனு கவே பலாத்காரமாக எந்தப் பிராணியையுங் கொல்ல முடியாதவனுவாய் என்பதன் கண் ணே ஹேதுவைக்கூறுகின்றார்:—தவறுமென மாரணவிடய ஹேதுக்களாய கருமங்கள். அக்கருமங்களினுள்ளும் மிகமிக முக்கியமான கருமசகாயத்தால் அல்லது சகாயபாவத் தால் செல்வதுநலமாம். சங்கற்பமாத்திர கற்பிதபுருடனேயெத்துணைப் பலவானுயிருந்த போதினும் நீண்டக்கூட முடியாமை வெளிப்படையேயன்றே, பின்னர் மிருத்தியுவான வன் ஐயத்தையகற்றும் யமன்பால்வந்து, ஹேவியாபகரே! அவ்வாகாசஜனேப் புசிக்க யான் சமர்த்தனுகாத காரணம் என்னே! யெனவினவினன். அதைக்கேட்ட யமன், ஹேமிருத்தியுவே! நீ சகாயமற்றவனுய்ப் பலத்தாற் கொல்வதற்கு ஒரு சிறிதும் சமர்த் துடையவனுகமாட்டாய், மரணத்திற்கேதுவாய கருமங்களே மரணத்தைச் செய்விப்பன வாகு மன்றி மற்றவை யாகாவாம். நினதாற்றல் குன்றியதன் கண்ணும் இதுவே காரண மல்லாமல் மற்றதொன்று மின்றும். ஆகையால் முயல்வினுலே கொல்லத்தக்க இவ்விப் பிரானுடைய கருமங்களேத் தேடிவாயாக, அவற்றின் உதவியினுனே இவனே நீ புசித்து விடலாம் என்றனன்.

(ச.) அவன் நமன்பாற் = சந்தேக சாந்திசெய்யும் யமனிடத்தில், போயிவ்வா றுரைப்ப. பிரபுவே! நான் ஆகாசஜனேப் புசித்தற்குத் தர்ப்பலன் ஆனேன் இஃதென்னே யென்றுகேட்ப, யமன் காலனது கருவம் நாசமா நிமித்தம் அவனேக் கன்மான் வேடனை (கன்மத்தைத் தேடுதல்) யிற்செலுத்தல்: யமனுரைப்பான், உதவிப்பொருள் = கொல் கின்ற கருவிப்பொருள், அவையே = அக்கன்மங்களேயன்றி வேறின்றும் ஆதலின்நீ யவ்விப்பிரானேப் பலத்தினுற் கொல்லுதற்கு அற்பமுஞ் சக்தனுகாய். தவறும்படிசெய்= அவனேக் கொல்லுதற்கு, கருமங்கள் சகாயமாகக் கருமங்களேத்தேடி அவைகளே சகாய மாகச் செல்கென்றான் = சென்றவனேப் புசிப்பாயாக வென்றான். (16)

(ஸ்ரீ - வீர - அ - கை.) எனக் கேட்ட மிருத்தியு மரணகாரண கருமங்களைத் தேட மண்டலமெங்கணுஞ் சுற்றல்:—காலனென்பது.

காலனிதுகேட் டவன்செய்த கருமந்தேடி நதியோடை
ஞாலந்திசைக ளெலாமுழன்று நண்ணுதாக மீண்டெய்திச்
சீலநமனுக் குரைசெய்யச் சிந்தித்தவனு முரைசெய்வான்
மூலவிசும்பிற் பிறத்தலிஞன் முடிவிலவனும் விசும்பன்றே (17)

(ப - ரை.) காலன் இதுகேட்டு = இவ்வண்ணம் இயம்பியதை மிருத்தியுகேட்டு, அவன்செய்த = அம்மறையவன் ஆற்றிய, கருமந்தேடி = கருமத்தை யாராயலுற்று; நதியோடை = புண்ணியநதிகள் புஷ்கரணிகள், ஞாலம் திசைகள் = மண்டலங்கள் திசைகள் திக்கந்தங்கள், எலா முழன்று = எல்லாவிடங்களிலுஞ் சுற்றிப்பார்த்தும், நண்ணுதாக = ஒன்றுமே கிடையாமற்போக, மீண்டெய்தி = மறுபடியும் தருமர் சந்நிதியுற்று; சீல நமனுக்குரைசெய்ய = எல்லாப் பொருள்களையு மறிந்துள்ள யமனுக்கு நடந்தவற்றைக்கூற, சிந்தித்தவனும் = தியானித்துத் தருமரும், உரை செய்வான் = இதை யியம்புவாராயினர், மூலவிசும்பிற் பிறத்தலிஞன் = கேவலம் சிதாகாசத்திலிருந்துண்டாயிருத்தலான், முடிவிலவனும் விசும்பு அன்றே = அனந்தமாய அவனும் அச்சிதாகாசமே யாவனல்லவா. (17)

(ஸ்ரீ - வீர.) அறிஞர் திருவுள்ளியை யனுசரித்து அறைவார் ஆகாசஜனுக்குக் கருமங்கள் யாண்டுமே யில்லையென்றார், இதனைக் கருமங்கள் பண்ணிற்றிலன் எனப்பின் காட்டுவர். அதன்கண் ணேதுவென்னை கொலோவெனின்? உண்மையாய்ச் சககாரிகாரணமின்றிய சிதாகாயமாகிய பரமாத்ம பிம்பத்தினின்றே பிரதிபிம்பமாகக் கேவலமுண்டாய காரணத்தால் என்க. பரமாத்மாவினின்றும் உண்டானபோதினும் இரணியகருப்ப ஜீவனுக்குயாங்ஙனங் கருமாபாவம் எனிற் கூறுவார் மூலவிசும்பென்றார். வாஸ்தவசககாரி காரணமின்றிய பரமாத்மாவினின்றும் யாதுபிரதி பிம்பமாகவுண்டாயதோ வெளிப்பட்டதோ அது கருமாதிமலரஹித அமலமாகிய ஆகாசமாகவே பவிக்கும். ஆகாசஜன் தனது காரண வஸ்துவினின்றும் வேறுகான், வாஸ்தவ சககாரி காரணமிலாதாதலோடுண்டாயிருத்தலின், நீர்நிலாப்போலு மென்பதுபொருள். அதன்பின் அம்மிருத்தியு வானவன் அக்கருமங்களைத் தேடுவதன்கண்ணே மிகவும் ஆதரவுடையவனுய் மண்டலங்களையும், திக்கந்தங்களையும், தடாகங்களையும், நதிகளையும், திசைகளையும், வனக்கூட்டங்களையும், காட்டின் கூட்டங்களையும், மலைகளையும், கடற்கரைகளையும், தீபாந்தரங்களையும், ஆரண்யங்களையும், நகரங்களையும், மகா நகரத்துள்ளடங்கிய சாகா நகரங்களையும், கிராமங்களையும், எல்லாத் தேயங்களையும், தேயங்களுக்குள்ளிருக்கும் காடுகளையும் சுற்றினன்; எத்தேயத்தின்கண்ணே யிவன் எக்கருமம் முன் செய்துளான் என வொருமையோடும் ஆலோசனை செய்தலேயே பெருமுயல்வாற் பெறத்தக்கதாதலின் சுழன்றதாகக் கூறியதாம், தேசசஞ்சாரமென அதற்குப் பொருள் கொள்ளலாகாதாம் கருத்தாவின் சூக்கும சரீரத்திலபேதப்பட்டிருக்கும் அதிருஷ்டங்களைப் புறத்திற்றேடுதல் கூடாமையின் கூறியவண்ணம் பூமண்டலம் முழுதும் சுழன்று முயன்று மிருத்தியு எவ்விடத்தும் ஆகாசஜனது கருமங்கள் எதனையுமே பிராஞ்ஞன் வந்தியா புத்திரனைப்போலும் சங்கற்பமலையைச் சங்கற்பித்தலினும் அயலான்போலும் அறியவில்லை. பின்னர் வந்து எல்லாப்பொருள்களையும் அறிந்த யமனை நோக்கி தாதர்கட்கு ஐயுற்ற இடங்களில் பிரபுக்கள் கதியாகவிருக்கின்றபடியினுலே, ஹே பிரபுவே! ஆகாசஜனுடைய கருமங்கள் எவ்விடத்திருக்

கின்றன வென்பதைக் கூறவேண்டுமெனவினவ, தருமராஜாவானவர் நெடுநேரம் நன்கா லோசனைசெய்து இதனைக் கூறத்தொடங்குவாராயினர்:—ஹே பிருத்தியுவே! ஆகாசஜ னுடைய கருமங்கள் யாதொன்றுமின்றும், இவ்வாகாசஜனுகிய விப்பிரன் கேவலம் ஆகா சத்திலிருந்தே யுண்டானவனுவன், பிராரப்த அதிகார பலங்கட்குப் பலத்தொடக்கத் தானே நாசமுண்மையினுனும் சஞ்சிதங்கட்கு ஞானத்தானே பாதமுண்மையினுனும், வருங்கருமங்கட்கு விரையின்மையினுனே இருப்பின்மையினுனும் யாதொரு கருமமு மில்லையென்றுணர்க. ஆகாயத்தினின்றே யாவனுண்டாயினனே அவன் நின்மலமாய ஆகாயமே யாவன்.

(ச.) அவனும் வெகுகாலம் சிந்தித்து சககாரிகாரணமின்றி யுதித்தவன் தற்காரணத் திற் கன்னியனுகா னென்பதாயிற்று. மூலத்தே பராயண மென்றது வேறு பொருள் வைப்பாம். (17)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கூறியபொருளையே தெளியச் செய்கின்றூர்:—விண்ணென·

விண்ணிற் பிறந்தோன் காரணத்தை மேவா மையினுற் கருமங்கள்
பண்ணிற் றிலன்கா ரணமிலதேற் பண்ணுங் கரும மூளதாமோ
வெண்ணற் குரிய சகாயமுனக் கிலதா மென்று யமன்கூற
நண்ணற் கரிதென் றுயர்கால னடந்தான் மனையி னனிவியந்து. (18)

(ப - ரை.) விண்ணிற்பிறந்தோன் = ஆகாயத்தினின்றுஞ் சனித்தோன், காரணத்தை = சககாரிகாரணத்தை, மேவாமையினுல்=பொருந்தாமையினுல், கருமங்கள்= தொழில்கள், பண்ணிற்றிலன் = செய்திலன், காரணமிலதேல் = சககாரிகாரணமில்லா தொழியவே, பண்ணுங்கருமமூளதாமோ = செய்யாகின்ற வினைகிற்குமோ, எண்ணற் குரிய= நினைத்தவண்ண முடிக்கத்தக்க, சகாயம்=சககாரிகாரணம், உனக்கிலதாம் = கொல்ல முயலுமுனக்கில்லையாகும், என்று யமன்கூற = என விவ்வண்ணம் தருமராஜா சொல்லியவுடன். நண்ணற்கரிதென்று=நாம் பிடித்தற்கு முடியாதகாரியமென்று, உயர் காலன் = தன்னுத்யோக முயல்விற் பெருமைவாய்ந்த பிருத்தியு, நனிவியந்து=நன்றுக ஆச்சரியப்பட்டுப் புகழ்ந்து, மனையின் நடந்தான் = தனது அரண்மனையை நோக்கிச் சென்றனன்.

(ஸ்ரீ - வீர.) சககாரி காரணமில்லாமல் யாதுண்டாகின்றதோ அது தனது காரணத் தினும் அயலாக ஆவதில்லையென்பது பிரதிபிம்பாதி ஸ்தலங்களில் அனுபவிக்கப்படுகின் றது. பயனுக முடிந்தது இன்னதென்பார் சகாயமுனக்கிலதென்றூர். எக்காரணத்தால் அறிவின் பிரதிபலன வடிவமாய இவ்வாகாசஜன் உண்மையாய்ப் பரமான்மாவாகவே யிருத்தலின் கருமரகிதனுவனே அக்காரணத்தான் முயல்வை யொழித்தி யென்பதாம், பிருத்தியுவசமாதல் நீக்கப்பட்டமையானே இரணியகருப்பரிடத்தில் அதன் அவிஞ்ஞூத மாய எல்லாச் சமுசாரசம்பந்த தருமமும் நீக்கப்பட்டதாம் மெனத் தெரிந்துகொள்ளுக. அற்றேல், "பூதாத்மாதான் ஒன்றுயேயும் பூதேபூதே புருந்தேவாழும், ஒதொருவகையாற் பலவகையானே, நீததுநீர் நிலாத்தெரிவதேபோலும்" என்னும் வசனத்தான் இரணிய கருப்பனுெருகூடச் சர்வ ஜீவர்களுமே அறிவின் பிரதிபிம்பமாவதும், உண்மையாகப் பிம்பபூத அறிவுருபமாவதும், கரும அதன் பலவடிவ சமுசாரசகிதமாவதும் ஒப்பாயிருப்ப என்ன சிறப்பைப் பின்பற்றி இரணியகருப்பனுக்கே அகர்மிகத்தன்மை (வினையிலாமை) முதலியவற்றைக் கூறுவதோ வெனின்? ஈண்டுக்கூறுவாம், இரணியகருப்பனுக்குத் தத்துவவித்தாந்தன்மையேயாய விசேடம்பற்றி வினையிலாமை முதலியவற்றை விளம்ப

லாம். அங்ஙனமே சுருதியும் அவனுக்குத் தத்துவவித்தாந் தகைமையையே சாற்று கின்றது " சகாயந்தன்னைத்தானேபார்த்தது, யாதெம்மினுமே அயலாயிலதாம், எதனைக் குறித்திங்கஞ்சா நிற்பேன்; அதனனே இவற்குப்பய மென்பதகலுமால்" என்றுணர்க. சககாரிகளாய அபிமான இராகாதிகளேனும் மிருத்தியுவாகிய நீ கொல்வதற்குச் சககாரி களாகிய இப்போதியற்றிய கருமங்களேனுமில்லையாம், வேறெக்கருமங்களுமே யில்லை யாம். ஆகிருதிபடையாதவனுக்கும் மலடி மைந்தனுக்கும் சம்பந்தம் உளதாவதிலதே போலும் முன்னியற்றிய கருமத்தோடும் இவனுக்கு அணுவளவேனுஞ் சம்பந்தமே கிடை யாது அவ்வாறே சூத்திரமும் "அதனே யறிந்திடப்பின் முன்னகங்கள், துதையாமை யழி வுகள் சொலவதுபடுதலின்" என்பதாகக் கூறுகின்றதாம். இவ்வந்தணனுக்கு இப்போது சம்பாதிக்கப்பட்ட கருமங்களேனும் சஞ்சிதங்களேனும் கிடையவேகிடையா; பூர்வ கரு மங்கள் இவனுக்கில்லாமையானே யிவன் ஈண்டுச் சம்சார வசப்படவில்லை, கரும அசம்ப வத்தின் பயனேயன்றே சமுசாரவயப்படாமை, பிரசித்தமான வெள்ளியாங் காரணத்தி னின்றும் உண்டாகாத இப்பி வெள்ளிக்கேபோலும் அவனது தேகாதிகட்குப் பொய்ம் மைநிண்ணயமுறவே, அதனலுள்ள கருத்திருத்தகைமை பாதிக்கப்படுதலின் மிருத்தியு பீடிக்கமுடியாதாம் சககாரி காரணங்களில்லாமலே யாவனுண்டாகின்றனவே அவன் றனது காணத்தினின்றும் பின்னமாக ஆகான்என அனுபவிக்கப்படுவன். காரணமின்மை யினனே இவன் சுயம்பு ஆவன். இவன் முன்னருங் கருத்தாவல்ல இப்போதுங் கருத்தா வல்ல வாகலின் நீ யெங்ஙனமிவனைப் பிடிக்க முடியுங்கூறுதி. ஆகவே நீ பிடிக்கவேண்டு மென்னு மிச்சையே செய்யத்தகாததாம். இவன்பால் மிருதியாதிகளின் சம்பவம் எத் தகையது, எங்ஙனந்தான்கூடும், அகோ! இவனைப் பிடிப்பதுதான் எங்ஙனம் எலும்? ஆகையாற் பிடிக்கவேண்டுமென்னும் முயற்சியை யடியோடு விட்டுவிடுவாயாக; எவனலும் ஆகாசம் ஒருகாலும் கவருதற்குக் கூடாதன்றே என்றிதனைக் கூறக்கேட்ட மிருத்தியு மிகவும் ஆச்சரியமுடையவனலய்த் தன்னரண்மனைக்குச் சென்றனன்.

(ச.) சககாரிகாரணத்தை, எண்ணற்குரிய=அவனைப் புசிக்கவேண்டுமென்னும் நினது நினைப்பிற்குரிய கன்மசகாயம், நினக்கிலதாம். ஆகலினீ முயற்சியை விடுவாய் என்று சககாரிகாரணமின்றி யுதித்தவன் றற்காரணத்துக் கண்ணியனுகான் என்பதா யிற்று. (18)

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஆகாசஜப்பிராஹ்மணனென வேறு பெயர் பெற்றுப் போற்றப் பட்ட பிரஹ்மாவே என்னல் ஆக்கியாயிகையின் கருத்துரை யென்பதும் உலகம் பொய் யென்பதும் இனிதறிந்துகொள்ளப்பட்டன என்பதைக் குறிப்பிக்கும் வாயிலாக ஆசிரி யரை மகிழ்வித்துக்கொண்டு ஸ்ரீஇராகவர் கூறுகின்றார்:—என்னுவென.

என்னுரைத்த முனிமுகம்பார்த் திராமனுரைப்பா னியிசைத்த
வன்னுன் சுயம்பு விஞ்ஞான மங்கமாலே னென்றுகத்
துன்னுகின்றேன் பிரமனெனத் துணிந்தேனெனலுந் தூயமுனி
மூன்னுமுரைத்த தியன்றனையே மொழிந்ததையின் முறைகேளாய். ()

(ப - கை.) என்னுவுரைத்த = இவ்வண்ணமியம்பிய, முனிமுகம் பார்த்து = ஸ்ரீ வசிட்ட பகவானது திருவதனத்தை நோக்கி, இராமன் = ஸ்ரீஇராகவர், உரைப்பான் = கூறுவதாவது, நீயிசைத்த அன்னுன்=தேவரீர் அருளிச்செய்த அம்மறையவன், சுயம்பு= தானே யுண்டானவன் விஞ்ஞானமங்கமாலேன் = பேரறிவே வடிவமானவன், ஒன்று கத்துன்னு கின்றேன் = ஒரே வடிவமாக விளங்குபவன், பிரமன் = பிரபிதாமகனுகிய

அஜன், எனத்துணிந்தேன் = என்று நிச்சயித்தேன், எனலும் = என்று கூறலும், தூய முனி = பரிசுத்த மகாமுனீந்திரர், முன்னும் உரைத்தது = பூர்வம் யாம் புகன்றது, அயன்றனையே = பிரஹ்மா வினையேயாம், மொழிந்ததையின் = கூறியசரிதையினது, முறைகேளாய் = கிரமத்தைக் கூறக்கேட்குதி.

(ஸ்ரீ - வீர.) தந்தையின்றந்தை யென்பதாதி சிறப்புநான்கும் பிரமனது பெருமையைத் துலக்கும்பொருட்டாம். பேரறிவே வடிவமானேனென்றது சொரூபத்தைக் கூறுதற்பொருட்டாம். பிதர்தம்பிதரர் பிதாமகர் பிதாமகர் தம்பிதா பிரபிதாமகன்; சர்வ பூதங்களின் ஆதிகர்த்தாவென்பது பொருள். அவற்குற்பத்தியினாலே சிறப்புண்மை கூறுவார் சுயம்புவென்றார். சுயமே உண்டாதலிற் சுயம்புவாம், இதனானே அஜன், சுக்கில சோணித பீஜாதியானே உண்டாகாமையின் என்க. ஒருவனுகவே எல்லாக் காரியங்களையும் வியாபித்திருப்பவன் என ஏகாத்மாவான் பிரதானுத்மா வெனினுமாம். விஞ்ஞானத்மா = விஞ்ஞானம் புத்தி ஆத்மா சொரூபம் எதற்கோ அது அங்ஙனமாம், பிரஹ்ம சொரூபம் என்றேனுமாம். சுயம்புவாயும் அஜனுயும் ஏகான்மாவாயும் விஞ்ஞானுன்மாவாகிய ஜீவசமஷ்டி ரூபமாயும், இருக்கும் பிரஹ்மமாகிய இப்பிரபிதாமகனே தேவரீரால் ஹே தேசிகோத்தமரே! கூறப்பட்டவனுவன் என, ஹே ஆசாகவ! இவ்வண்ணம் எம்மால் இப்பிரஹ்மா வுனக்குக் கூறப்பெற்றான்.

(ச.) பிதர்க்கள் = கசியபாதிகள், அவர்கட்கும் பிதாவாகிய புண்மையின் பிரஹ்மாவிற்குப் பிதாமகத்தன்மையாம் என்றறிக. அயோனிஜத்தன்மையானே அஜன், எல்லாத் தேகங்களிலும் ஒரே யாத்மாவா யிருப்பவன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) முன்னடந்த விருத்தாந்தத்தை மொழியத் தொடங்கல்:— செயல் என.

செயல்செய் காலன் யமனுடனே செப்பும் வழக்குத் தாமுணர்ந்தே
மூயரு மனுவி னந்தத்தி லுலக மெல்லா முண்டெழுந்த
வயர்வில் கால னயன்றனையு மடர்ப்ப முயன்ற வப்போதிற்
றுயரில் காலன் முகநோக்கித் துங்க யமனுங் கிவைசொன்னான். (20)

(ப - பை:) செயல் செய்காலன் = யாவரையுந் தொலைக்குந் தொழிலே யாற்றும் மிருத்தியு வானவன், யமனுடனே = தருமராஜாவுடன், செப்பும் வழக்குத்தாம் = சம்பாஷித்த விவாதத்தையே, உணர்ந்தேம் = இன்னதன் பொருட்டென யாமுணர்ந்தோம், உயருமனுவினந்தத்தின் = மேன்மையான மன்வந்தரத்தில், உலகமெல்லா முண்டெழுந்த = சர்வபக்ஷகனுகி எல்லாப் பிரஜைகளையுமுண்டு நிமிர்ந்துலவிய, அயர்வில் காலன் = பலம்படைத்தமிருத்தியு, அயன்றனையு = பிரஹ்மாவையும், அடர்ப்ப முயன்ற தாக்குவதற்காகத்தானே பிரயத்தனஞ்செய்த அப்போதில் = அக்காலத்தில், துயரில் காலன் = துக்கமில்லாத காலனுடைய அல்லது தன் முயற்சிவாளாபோனமையின் துக்கத்திற்கு இல்லமாகிய மிருத்தியுவினுடைய, முகநோக்கி = வதனத்தைப்பார்த்து, துங்கயமனுங் கிவை சொன்னான் = பரிசுத்த தருமராஜாவானவர் அவ்விடத்தே யிவ்வுபதேசஞ் செய்தனர்.

(ஸ்ரீ-வீர) இப்பிரஹ்மாவின் பொருட்டே முன்னர் யமனுடும் மிருத்தியு சம்வாதஞ் செய்ததாகும், மனுக்களின் சந்திகாலத்தில் எல்லாவற்றையும் பக்ஷிக்குமிருத்தியு எல்லாப் பிரஜைகளையும் கொன்றுகொண்டு வலுவைப்பெற்றுத் தாமரையிற் பிறந்தோனைப் பிடித்துக் கொல்லத் தொடங்கினன் ருஷகவே, அப்போழ்தே தருமராஜாவாகிய யமனுலே

விரைவி லுபதேசிக்கப்பட்டவனுவன். முடியாத காரியத்திலும் பிருத்தியுவிற்கு அடிக் கடி முயற்சி யாங்ஙனங்கூடுமெனின்? கவலையினுலே கூடுமன்றே எதனேயாவன் நித்திய மியற்றுகின்றனனே அதன் கண்ணே ஆதரல் உண்டாகிக்கொண்டே யிருக்கும்.

(ச.) உலகமெல்லாம் = பிரசைகளனேத்தையும், அயர்வில் = பலம்பொருந்திய என்பதாம்.

(ஸ்ரீ-வீர-அ-கை.) யமதருமராது அனுசாசன ரூபமான வுபதேசத்தையே தொகுத் துக்கூறல்; ஆக்கியாயிகை வாயிலாய்க் கூறியபொருளைக் கண்டத்தானும் கூறி அஜன் சரீராதிகட்கு மனேமாத்திரத் தன்மையைக் கூறுகின்றார்:—நிகரிலென.

நிகரில் பரம வாகாய நிமல வடிவாய் நிற்கின்ற
விகலி லயனே யடர்த்தற்கென் றெண்ணு மெண்ண மெளிதாமோ
திகழும் வெளியே வடிவாகிச் செறிந்த பூத வடிவிலனுப்
புகல்சங் கற்ப புருடனேப்போற் பொன்ரு தயனும் பொலிந்திடுமால் ( )

(ப - ரை) நிகரில் = உவமையற்ற, பரமவாகாய = மேலான சிதாகாச, நிமலவடி வாய் = நிருமலமான வடிவமாய், நிற்கின்ற = எழுந்தருளியிராநின்ற, இகல்இல் அயனே = பகையற்ற பதுமாதனே, அடர்த்தற் கென்று = கொன்றுவிட வேண்டுமென்று, எண் ணும் எண்ணம் எளிதாமோ = நினேயா நின்ற நினேவு சுலபமாமோ, திகழும் வெளியே வடிவாகி = விளங்காநின்ற அறிவாகாயமே ஆகமாகி, புகல் சங்கற்பப்புருடனேப்போல் = சொன்மாத்திரமாய நினேவு மனுடனேயொப்ப, செறிந்த பூதவடிவிலனுய் = ஒன்ரே டொன்று உறைந்த பிருதிவியாதி பூதசம்பந்த வுடம்பில்லாதவனுகி, அயனும் = பிரஹ் மாவும், பொன்ரூது = கொல்லப்படாது, பொலிந்திடும் = விளங்கிக்கொண் டிருக்கும் ஆல் அசை.

(ஸ்ரீ - வீர.) இகலில் என்றதனுனே அடர்த்துப் பிடித்தன் முடியாதென்பதைப் புலப்படுத்தும்; பராகாச பரமான்மாவையே பிரஹ்மா சொரூபமாகவுடைய பிரஹ்மா வாதலி னென்பதாம். பிரஹ்மா பரப்ரஹ்ம சரீரத்துடனிருப்பின் யாங்ஙனம் நான்முக சரீரத்தன்மை அவற்கென ஆசங்கித்து விடைதருவார், திகழும்வெளியே யென்ரூர். பர சித்த ஆகாசத்தில் விளங்காநின்ற ஆகாரம் சிரம்பாணியாதிமான் எம்மனேரத கற்பித புருடனுக்கோ அவன் அங்ஙனமாவன். பிராதிபாவிகம் பிரஹ்மாவின் சரீரத்தன்மை, உண்மையாயோ சங்கற்ப புருடனேப்போல இலாததேயாம் என்பதப்பிராயமாம். பரம ஆகாச சரீரமாயும் மனேமாத்திரமாயும், சங்கற்பரூபமாயும், பிருதிவியாதியற்ற ஆகிருதி யாயும், இருக்கும் பிரஹ்மாவானவன் எங்ஙனம் பீடிக்கப்படுவன். சிதாகாச சமத்காரமே ஆகார அனுபூதிமானுய்வர அவன் சிதாகாசமாகவேதானிருப்பன்; அவனுக்குக் காரணத் தன்மை யேனும் காரியத்தன்மையேனுங் கிடையா. ஆகாயத்திற் கீழ்மூகமான இந்திர நீலமகாகடாக ஆகாரம் பிருதிவியாதி யற்றதாய்த் தோற்றுவதேபோலும், சங்கற்ப புருடன் பிருதிவியாதியின்றியே தோற்றுவதே போலும் இச்சுயம்புவும் விளங்கு கின்ரூன்.

(ச.) வெறுஞ் சுத்தியாதிகளின் உற்பத்தியான இராஜதாதிகள் சுத்தியாதிகளுக் கன்னிய மாகாததுபோ லென்பது கருத்து. பூதவடிவு = பிருதிவியாதி யாகாரம். சங் கற்பமாத்திர கற்பிதனுன புருடன் எப்படியாகாச மாத்திரதேகனும் பிருதிவியாதி சதுட்டய ரகிதனும் ஆய்ப்பிரகாசிக்கின்ரூனே அப்படிச் சுயம்பு மென்பதாம். (21)

(ஸ்ரீ-வீர - அ-கை.) கூறியதைத் தெளிவித்து முடிக்கின்றார்: ஆண்மனத்திற்கு அவ்வாகாரகற்பனைப் பரிணமம் உண்மையாக வின்றும், மற்றே, தாய்தாய பிரஹ்மமே அஞ்ஞானத்தால் அவ்வாறு விவர்த்தத்தை யடையுமென்கின்றார்: = ஞானவென.

ஞான விண்ணுய்க் கேவலமாய் நடிவு முடிவுமுதலில்லா
தான சுயம்பு வாம்பிரம மடித்த தனது மனவசத்தான்
மான மூருவ முடையதுபோன் மன்னு புமான்போல் வயங்குமோ
ஈனு மலடி மகன்போல விதுமெய்ம்மையினுல் வடிவிலதாம். (22)

(ப • ரை.) ஞானவிண்ணுய் = சிதாகாசமாய், கேவலமாய் = தனித்ததாய், நடிவு முடிவு முதலில்லாதான = ஆதிமத்யாந்த ரகிதமான, சுயம்புவாய் = தானேயிலங்கும், பிரமம் = பெரிதினுக் கெல்லாம் பெரிதாய வஸ்துவானது, அடித்தனது மன்வசத்தால் = தன் பாலத்திய சித்த சித்தவயத்தால், மானவுருவமுடையதுபோல் = யாவரும் புகழும்படியான ஆகாரவான் போலவும், மன்னுபுமான்போல் = நிலைபெற்ற புருடோத்த மன்போலவும், வயங்கிடுமால் = விவகாரயோக்கியமாக பிரமன் சுயம்புவென விளங்கா நிற்கும், ஈனு மலடிமகன்போல = பயவாத வந்தியையின் மைந்தனென்ன, மெய்ம்மை யினுல் = வாஸ்தவமாக, இது = இதற்கு, வடிவிலதாம் = தேகமில்லையாம், ஆல் அசை, மாலெனின், மான்மைந்தனுக அழகு நிறைந்த பெரியோனுக என்க; எனலே, திருமான் மைந்தனுகிய பிரமன் எனவும் சுயம்பு வெனவும் விளங்காநிற்கும் பிரமமெனவாம்.

(ஸ்ரீ - வீர.) தனது மனவசத்தால் = திருஷ்டாவின் சித்தவயத்தால் கேவலமாயும், அநந்தமாயும், முதலிடை யில்லாததாயு மிருக்கும் சிதம்பரமானது தனது சித்தவசத்தாற் சுயம்புவாகிய பிரஹ்மாவென ஆகாரமுடையது போலும், புருடன்போலும், விளங்காநிற் கும், உண்மையாயோ மலடிமைந்தனுக்கே போலும் அவனுக்குத் தேகமேகிடையாது.

(ச.I இது = இப்பிரஹ்மத்திற்கு, விசுத்த சின்மாத்திரமே சித்தமாத்திரோபாதி வசத்தினுற் சுயம்புவான பிரமனென விளங்கு மிதனதாகாராதிகள் வாஸ்தவமன் றென்பதாம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) மனோமாத்திரமாயும் சங்கற்பரூபமாயும் பிருதிவியாதியற்ற ஆகிருதியாயும், என்முன் மொழிந்தமுறையானே பிரஹ்மாவிற்கு மனோரூபத்தன்மையை யங்கீகரிக்கில், மனத்திற்கு வாசனைக்கூட்ட ரூபத்தன்மை யுண்மையின் பழையவாத னைக்குவால் அற்பமும் இவனுக்கில்லையெனல் எங்ஙனங்கூடும் ? இப்பிரஹ்மாவினுடைய தேகத்தில் முன்சரீரத்தை விடுங்காலத்தி லுண்டாம் நினைவு, உமக்கும் எனக்கும் அன் னியருக்கும் பசுவாதிகட்கும் தத்தஞ் சரீரத்திற் பழைய நினைவு காரணமாவதேபோல எங்ஙனங் காரண மாகாமற்போம் ? பழைய நினைவு இருக்குமாயின் அஃதுண்டாவதற் காதாரமான சமஸ்கார தேகாதிகளும் முன்னுள்ளனவாகவே தள்ளத் தகாதனவாம்: பூர்வதேகாதி இருந்தாற்றுன் ஆண்டனுபவித்ததைக் கவரும் நினைவுகாரணமாகும், அதுவே அசித்தமாம், பிரஹ்மாவிற்குப் பழையகருமமும் பழையநினைவும் ஒரு சிறிது மில்லையாம் என்னின் ? இரணிய கருப்பபதத்திற்குக் கருமவுபாசனே யென்னும் இரண் டன் கூட்டுப் பலத்தன்மை யுண்மையின் எங்ஙனம் முன்னுடம்பு வாதனையாதியில்லை யெனக்கூடும் ? எங்ஙனந்தான் மனோமயமாகிய அவன் தேகத்திற்குப் பிருதிவியாதிமயத் தன்மையின்மை யெனக்கூடும் ? மனம் பூதகாரிய மென்பது முரணன்றே ஆதல் கூடும்? எனின் ? உண்மையே, " அஞ்ஞதிருஷ்டியினுனே யங்ஙனம், என்னினும் அன்னியமில் லாதபோழ்து, எதினின்றும் யான்பயம் எய்துவன் கொல்லோ என்னுஞ் சுருதியாதிக

ளாற் சித்தமாய அவனது, தத்துவ திருஷ்டியாலே பிரபஞ்சத்திற்கு மூக்காலத்தியபாத முண்மையின் பூர்வதேகவாதனை முதலியவற்றின் இருப்பின்றும்; பாதித அனுவிருத்தி யினலே மனத்தின் கண்ணும் அத்தேகத்தின் மாட்டும் வெந்த ஆடையின்கண் நூலிருக் குந்தகைமையேபோலும் பிருதிவியாதி மயத்தகைமை முன்போலின்றுமென யாதொரு விரோதமுங் காணேம். யாண்டுப் பாதிக்கப்படாத அஞ்ஞமனச் சங்கற்ப நகராதிகட்கும் சத்தியத்தகைமையும் பௌதிகத்த கைமையுமின்றுமோ,தத்துவஞானத்தாற் பாதிக்கப் பட்டுத் தொடர்ந்திருக்கும் விரிஞ்சனது மனச்சங்கற்பத்தாலாய விசுவத்திற்கு அவ்வா ருந்தகைமை யென்பதன் கண்ணே யென்னை கூறக்கிடக்கின்றது? அஞ்ஞதிருஷ்டியை யனுவதிக்கும் உபாஸ்தி பல சுருதிவாயிலாயன்றும் அகாரணமாகவே விளங்குகின்றது, அல்லது தனது சித்தமாகிய தேகத்தைக்காணும் சித்தமே முக்கியகாரணமாகும், அவ னுக்குச் சுயமாகவோ சித்தங்கிடையாதாம், சுயம்பு தனது காரணத்தினும் அனன்னிய வடிவமாம், சுயம் ஆத்மவடிவமாம், இச்சுயம்புவிற்கு ஆதிவாகிகதேகமே இருக்கின்றது, இவ்வஜனுக்கு ஆதிபௌதிக தேகம் பொருத்தமாகாதாம், தேவபிதர் மார்க்கத்தானே லோகாந்தரத்தை யடைவதற்குச் சாதகமாகி நம்மனோரது விங்கதேகம்போ லிருப்பது அதிவாகிக சூக்குமமாம் ஆதிபௌதிகமோ தூலபூதஜன்னியமாம். என்று சமாதானங் கூறக்கேட்ட ஸ்ரீ இராகவர் ஆதிவாகிக தேகமென்ப தொன்றுளது ஆதிபௌதிகதேக மென்பதொன்றுளது எல்லாப் பிராணிஜாதிகட்கும், பிரஹ்மாவிற்கு மாத்திரம் ஒன்றே யென்பதென்னே? என்று வினவுகின்றார்:—என்று எனை.

என்றுகாலன் றனக்கியம னிசைத்தா னென்றோன் முகநோக்கி
நின்றவாதி வாகியமாய் நிகழ்ந்தவாதி பௌதிகமா
யொன்றுமுடல முயிர்க்கெல்லா முபயவிதமாம் பிரமனுக்குத்
தன்றுமாதி வாகியமாஞ் சூக்கவுடலொன் றுயதென. (23)

(ப - ரை.) என்று காலன் தனக்கு = முன்னியம்பியடிபடி பிருத்தியுவை நோக்கி, இயமன் இசைத்தான் = தருமராஜர் கூறினர், என்றோன் முகநோக்கி = என அருளிய ஸ்ரீவசிஷ்டபகவானைப் பார்த்து, நின்ற ஆதிவாகியமாய் = ஆதிவாகிய மௌனநிலைபெற்ற, உடலம் = தேகம், ஒன்றும் = ஏகமும், நிகழ்ந்த ஆதிபௌதிகமாய் = அவ்வப்போது வந்துபோயிலங்கா நின்ற ஆதிபௌதிக மென்னும் தேகம் ஏகமும், ஆக, உயிர்க்கெல் லாம் = ஜீவர்கள் யாவருக்கும், உபயவிதமாம் = இரண்டுவகையாக விருக்கும், பிரம னுக்கு = அஜனுக்கு, தன்னும் = பொருந்தும், ஆதிவாகியமாம் = ஆதிவாகியமென் றறைந்த, சூக்ஷ்மவுடல் = சூக்ஷ்மசரீரம், ஒன்றுயதென = ஏகமாத்திரமாக விருப்பது என்னகாரணம்? (23)

(ஸ்ரீ - வீர) சித்வியோம் = ஞானவிண்ணுய், என்னும் சுலோகத்தின் பின்னர் விராட்டவஸ்துவையை யடைந்த ஹிரண்யகருப்ப விடயமாய்ப் பெரியவாசிட்டத்திருக்கும். சுலோக அபிப்பிராயம் அவதாரிகையில் வேண்டிய அளவுகாட்டப்பட்டது பிரஹ்மா விற்குச் சீவத்தன்மை யுண்மையின் வேறுஜீவன்போல ஆதிபௌதிக தேகம் என் உண் டாக வில்லையென வினவுவார், தன்றுமாதி வாகியமாமென்றார். அவ்வத்தேயத்தை யடையும்படி கொண்டு செலுத்தத் தக்கதாகின்றது. இருதெறியிலு முற்றதேவதைக ளால் என ஆதிவாகிகம் சூக்குமதேகமாம்.

(ச,) உயிர்க்கெல்லாம் நின்றவாதிவாகியமாய், ஒன்று முடலம் = ஒருதேகமும், நிகழ்ந்தவாதி பௌதிகமாய், ஒன்று முடலம் = ஒருதேகமும், ஆக உபயவிதமாம் =

ஆதிவாஹிக சரீரமென்பது லோகாந்தர கமனப்பிரயோஜன நிமித்தமுள்ளதாமென லோகாந்தரகமன சாதனமான லிங்கசரீர மெனப்படும்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) ஸூக்ஷ்ம தூலதேக ஆரம்பஞ்செய்யும் ஆகாசாதி பூதசத்துவ அசத்துவங்களால் ஜீவர்கட்கு தேகமிரண்டாம், இரணியகருப்பனுக்கோ தூலதேக அசத்துவமின்மும் மாம், என உத்திரம் ஸ்ரீ வசிஷ்டபகவா னருளுகின்றார்:—பிரமவென.

பிரமவொளியாற் பிறந்தசகம் பிறக்குமுயிர்க்குக் காரணமாய்
விரவுமதனு லுயிர்க்கெல்லா மேவுமுடல பிரண்டாகும்
பரமபிரமத் தினையொழியப் பயில்காரணம்வே றிலாமையினுல்
வரவிலயனுக் கோருடலாய் மருவுமாதி வாகியமே.

(ப - கை.) பிரம வொளியிற் பிறந்தசகம் = பிரஹ்மப் பிரகாசத்தினுல் உண்டான வுலகம், பிறக்குமுயிர்க்குக் காரணமாய் = தேகமெடுக்குஞ் சீவர்கட்குக் காரணமாய், விரவுமதனுல் = கலந்துகொண் டிருக்கும் அக்காரணத்தால், உயிர்க்கெல்லாம் = சர்வப்பிராணிகட்கும், மேவுமுடலம் = பொருந்தா நின்ற தேகங்கள், இரண்டாகும் = இரண்டாம், பரமப்பிரமத்தினை யொழிய=மேலாய பிரஹ்ம சொரூபத்தை யொழிந்து, பயில்காரணம் = உபாதான காரணம், வேறிலாமையினுல் = அயலொன்றும் இல்லாமையினுல், வரவில் அயனுக்கு = போக்குவர வில்லாத பூரணப்பிரஹ்மாவிற்கு, ஓருடலாய் = ஓரேசரீரமாய், ஆதிவாகியமே = ஆதவாகியம் மாத்திரம், மருவும்=பொருந்தாற்றிகும். (24)

(ஸ்ரீ - வீ ர.) உபாதான இலக்ஷண காரணவடிவம் எவைகட்கோ அவை அத்தகையனவாம், அவ்வெல்லாப் பிராணிகட்கும், இதனுனே இருதேகங்களோயுந் தொடங்குங் காரண இருப்பு வியஷ்டிஜீவர்கட்குக் குறிப்பித்ததாம் அஜனுக்குக் காரணமின்மையின் தூலதேகந் தொடங்கும் காரண அசத்வமாம். கூறிய பொருளோத் தெளிவுபடுத்துவார் உயிர்க்குக் காரணமாய் என்றார். பிரஹ்மப் பிரகாசத்தினுல் உண்டானவுலகம்=பிரஹ்மாவாகிய இரணியகருப்பனுடைய பிரகாசமாகிய சங்கற்பத்தினுல் உதயமாகிய ஜகமென்னும் சூக்குமபூத தூலபூத வடிவவுலகம்; அதனுல் அவை இரண்டு தேகங்களோடு கூடியவையென வறிக. அஜனுக்கோ பிரஹ்ம பரமாத்மாவே காரணமாம் பூதங்களல்லவாம் நேத்திரமுதலிய வியாவகாரிகப் பிரமாணத்தா லறியத்தக்க பஞ்சீகிருதபூதரூப காரண வடிவினையுடைய எல்லாப்பிராணிகளுக்குமே மூன்மொழிந்த இரண்டு தேகங்களுமுண்டு. அஜனுக்கு அவித்தையு பஞ்சீகிருத பூதங்களின் அனன்னியமாகிய சுத்தி=மலி நேத்திர முதலியவற்றினே விளக்கப் படாமையானும் சாக்ஷிக்குமாத்திரம் விடயமாகுந் தகைமையானும் தோற்ற மாத்திரத் தன்மையானே வியவகாரிக சத்தியத் தன்மையின் மையின் அல்லது முன்மொழிந்த முறையே காரணமில்லாமையின் ஒரே ஆதிவாகிக சரீரந்தானுளது. வேறுவகையாக விளம்புவாம், எல்லாப்பிராணி ஜாதிகட்கும் அஜன் ஒருவனே முக்கிய காரணமாவன், அதனுனே அவன் ஓரேதேகத்தை யுடையவனுவன் அவ்வஜனுக்குக் காரணங் கிடையாது, முதலிலுண்டாய பிரஜாபதிக்குப் பௌதிக தேகங் கிடையவே கிடையாது, சிதாகாச மாத்திரவடிவனுய்த் தோற்றுவன் இவன் ஆதிவாகிக தேகவானே யாவன், ஆரோபித பதார்த்தத்திற்கு அதிஷ்டானத்தைத் தவிரக் சொரூபமில்லையல்லவா ? இவ்வீரூகவே அவன் சங்கற்பத்தாற் கற்பிக்கப்பட்ட வுலகிற்கும் அதனதிஷ்டான சின்மாத்திரத் தன்மைபலிதமாம்.

(சு) பிரமப் பிரதிபாச மென்னுமொளியால் = பிரமசங்கற்ப மாத்திரத்தால், பிறந்தசகம் = ஆகாசாதிகள்; காரணமாய் = ஆரம்பகாரணங்களாய். காரணத்மகாம்= காரணங்கள் ஆரம்பகவியதாதிகள், காரணங்களே ஆத்மா = தேகம், எவைகட்கோ. காரண அசத்வாத் = பிரஹ்மத்திலும் அயலாய காரணத்தின் இன்மையான். (24)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல் சூக்கும பூதவிகாரமாய மனத்தினின்றும் சூக்கும பூதாதி சர்வஜகத் தற்பத்தி எங்ஙனம் பொருந்தும் எனின் ? அற்றன்றும், மனத்தைச் சூக்குமபூத விகாரமெனத் திருஷ்டி சிருஷ்டி பக்கத்தில் அங்கீகரியாமையின், நம்மான் முன்னரே ஆண்டு ஜீவசிருஷ்டிப் பிரக்கிரியை காட்டப்பட்டதேயாம், திருஷ்டியே சிருஷ்டியென ஸ்ரீ வசிஷ்ட சித்தாந்தந் திகழ்ந்தவழி சூக்குமபூத முதலிய எல்லாவுலகமும் மனோவிகார மென்பதில் முரணின்மையின் " எக்காற்றுயில் வோன் நனவாசனைவடிவ அநேகவத்துக்க ளெவற்றையுமே கண்டிலனே, அக்கனக் காணுதபோது ஞானசக்தி யற்றுமூகாதி சஞ்சாரியாய கிரியாசக்தியின் கண்ணே பிறவிடமில்லாது ஒருமையை யடையும், பிராணோபாதிகன் பிராண சப்தயோக்கியன்புருடன் ஆவன் என்பதுபொருள் அற்றேல் அக்கால் வாக்காதிகளாகிய கரணங்கள் யாண்டுச் செல்லுகின்றனவென ஆசங்கை நிகழச் சமாதானித்தல், அந்தப் பிராணனிடத்தில் ஒருமையை யடையுங் காலத்தில் இந்தப்பிராண உபாதியையுடைய ஆன்மாவை வாக்காதது சர்வநாமங்க ளோடும் அடைகின்றது, விழியானது சர்வரூபங்களோடும் அடைகின்றது, செவியானது சர்வசப்தங்களோடும் அடைகின்றது, மனம் சர்வத்தியானங்களோடும் அடைகின்றது. இந்நான்கும் விடயங்களோடு மடங்கும். என்னும் கௌஷீதகி சுருதியும் (இம்மந்திரம் பொருளொடுங் காட்டப்பட்டது) மனத்தின் லயமான துயிலில் எல்லாவுலகிற்கும் பிரளயத்திற்போல இலயத்தைக் காட்டுகின்றன, என்பதை யனுசரித்தே திருஷ்டியே சிருஷ்டியென அறிந்து கொள்ளலாம். அற்றேற் சுழுப்தியில் பிரளயம் போலப்பிரபஞ்சம் விலயப்படுவதின்றும், மற்றே காரணமில்லாமையினாலே தோற்றுவதில்லை யென்னுங் கருத்தாலாம், ஆங்கே சுருதியும் கூறியது எனின் ? அற்றன்றும் ஆண்டிலயத்தைப்பிரதி பாதனஞ் செய்யாதொழியில் ஜகத்திற்கு விழிக்குங்காலையில் சிருஷ்டிசெப்பா தொழியும் வழக்காதலின், செப்பவே செய்கின்றது செம்மறை ? சருவசிருஷ்டிப் பிரபோதத்தில், " பிராணனிடத்தில் விலீனமான அவைகட்கீழ்க் கடல்போல நதிகட்குயாங்ஙனம் மீண்டு முண்டாதல் எனக்கடாவிக் கூறல், பிராண உபாதியையுடைய புருடன், எக்கால் விழிப்பையடைவனே, ஜாக்ர அவசரத்தில் இதனினின்றும் உற்பத்தியின் கண்ணே திருஷ்டாந்தங் கூறப் பெறுகின்றது: திருஷ்டாந்தமாவது:—மிகமிகவுஞ் சொலித்துக்கொண்டெரியா நின்ற அக்கினியினின்றும் எல்லாத்திசைகளிலும் துச்சமாய அக்கினி கணங்கள் நானாவிதமாகச் செல்லுகின்றன, இவ்வகையாலே வேறுவகையானன்றி இப்பிராணோபாதியை யுடைய ஆனந்த ஆத்மாவினின்றும் எல்லாப் பிராணன்களென்னும் வாக்காதிகள் எதற்கு எத்தகைய இடம் நாமுதவியவை அதைக்குறித்து விதம்விதமாகச் செல்லுகின்றன, பிராணன் களினின்றும் அக்கினியாதி தேவதைகள் விதம் விதமாகச் செல்லுகின்றார்கள், அக்கினியாதி தேவதைகளினின்றும் காமாதி விடயங்கள்," என்னும் வேறு சுருதியும் (இதுவும் பொருளோடுங் காட்டப்பட்டது) திருஷ்டி சிருஷ்டி விடயத்ததாகும், அசத்தத்தினனத்தையாற்ற அம்மனம் பிரஜைதங்கள் அதிபதியதனைச்செய்ய, அப்பிரஜாபதியும் பிரஜைகள் தம்மையாற்ற, எவ்விவையாவை கொஞ்சம் எதிரினிற் காணலாமோ அவ்வெலாம்மனத்தின் மாட்டேயிகமிக வமராநிற்கும். மேலும் கற்பிதமாய இப்பிவெள்ளியா திக்கேபோலப் பிரதிதிமாத்திர சரீரமாய

உற்பத்திப் பிரகரணம் ஊநுகூ

இருமைக்குத் தோற்றுந் தசையின் கண்ணே தன் கற்பனையின் அதிஷ்டான சன்மாத் திரத்திற் கயலாகச் சொரூபமா யிருத்தல் அசம்பவ மாதலினுனும் எனவிஞ்ஞான உத்த மாசார்யர் வசனத்தினுனும் ஆத்மசித்தத்தானே அசையாதின்ற ஜீவக்கூட்டம் ஆகாசாதி பிருதிவி யீருகவுங்காணும் என்னும் சங்க்ஷேப சாரீரக வசனத்தினுனும் அறியலாம். இதன் கண்ணே யிம்பிப்பட்டவேண்டியது வெகுவாக விருந்தபோதினும் விஸ்தாரமாய்விடு மென்னும் பயத்தினுலே விளம்பவில்லை. பிரஹ்மாவிற்கு மனுமாத்திர சரீரத்தன்மை யானே அந்தப் பிரஹ்மா வண்டாக்கிய வுலகம் மனுவிகாரமாயிருத்தலின் மனுராஜ்ஜி யம் மானும் அசத்தேயாம் எனக்கருதிக் கூறுகின்றூர்:—சகவென,

சகக்காரணமா மயனுக்குத் தானேதோன்று மனவடிவாய்
மிகத்தாஞ் சகத்து விரிந்திடலால் விரிந்தவெல்லா மனவடிவென்
றுகப்பாலுரைத்த வசிட்டனீப்பார்த் துலகமாயை தனைவிரித்த
மகத்தாமனத்தின் வடிவுதனை வருத்தோ தென்ன முனிசொல்வான்.

(ப - ரை) சகக்காரணமாம் = மூலுகத்திற்கும் காரணத்தன்மை வாய்ந்த, அய னுக்கு = பிரஹ்மாவிற்கு, தானே மனவடிவாய் = கேவலம் சித்தமாத்திர ஆத்மாவாய் பிருதிவியாதி ரகிதாகிருதி சங்கற்ப புருடசமமாய், தோன்றும் = சுயமுண்டாம், மிகத் தாம் = மேன்மை மிருந்த தமது மனத்தினுலே, சகத்து = விசுவமானது, விரிந்திட லால் = விஸ்தரித்துக் காணப் பெறுதலானே, விரிந்தவெல்லாம் = விரிவாக விவித மாகக் காணப்பெறுவனயாவுமே, மனவடிவு = மனுமயமாம், என்று = இவ்வண்ண மாகத்தானே, உகப்பாலுரைத்த = அதியுற்சாகத்தோடு முபதேசித்தருளிய, வசிட்ட னைப்பார்த்து = தேசிகோத்தமராகிய ஸ்ரீ வசிட்டபகவானை நோக்கி, உலகமாயைதனை விரித்த = அகிலதோஷ மஞ்சரியை விரிவுறுமாறு புரிந்த, மகத்தாமனத்தின் = பெருமைவாய்ந்த மனத்தினது, வடிவுதனை = உருவத்தை, வருத்தோதென்ன = இத்த கையதெனப் பிரித்தனுக்கிரகிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்ட ஸ்ரீ இராகவரை நோக்கி, முனிசொல்வான் = ஸ்ரீ தபோதன மனனசிலர் கூறத்தொடங்குகின்றூர். (25)

(ஸ்ரீ - வீர.) சங்கற்பபுருட சமமா யென்றதையே தெளிவிக்கும் பொருட்டுப் பிருதி வியாதிரகிதா கிருதியென்றதாம்; தூலதேகத்தைத் தொடங்கும் பிருதிவியாதி ரகிதா காரமென்பது பொருள். மனத்திற்கு விசுவகாரணத் தன்மையுளதாயவழிப் பிரஹ்மம் போலச் சத்துவமாம் என்னுங் கருத்தினுலே வினவுவார், மனத்தின் வடிவுதனையென் ரூர், விஞவாளா போமென ஆசங்கித்துக் கூறுவார், உலகமாயை யென்ரூர். பிரஹ்மா சங்கற்பபுருடர் பிருதிவியாதியற்ற ஆகிருதி யுடையவர், கேவலஞ் சித்தமாத்திரவடி வினர், மூலுகத்தின் நிமித்தகாரணர். எக்கற்பத்தில் எதனுல் பிரஹ்மா மனோமாத் திரம் ஆவரோ பிருதிவியாதி மயான்மக மாகாரோ அதனுல்விசுவமும் மனுமாத்திரமே யாகும்; எதனினின்றும் யாதுண்டாகின்றதோ அது அதுவேயாகும். இவ்வாறுகவே உலகிற்கு மனுமாத்திரத் தன்மையாம், மனத்திற்கும் பிரஹ்மமாத்திரத் தன்மையாம், எனவே பிரஹ்மாத்வைதம் பலிதமாம், ஹேபகவன்! மனதினது உண்மையான வடிவம் எத்தகையது என்பதைப்பற்றி வெளிப்படையா யனுக்கிரகிக்கவேண்டும், அம்மனத் தினுலன்ரோ இவ்வெல்லா வுலகமாகிய பூங்கொத்துகள் இயற்றப் பெறுகின்றன; மனத் திற்கு எந்தரூபங் கூறப்படுமோ அதேரூபம் அகிலத்திற்கும் ஆம், தத்துவமற்றதாம் வடிவ மித்தியாத் தன்மையானது பொருந்தாதா மென்பது ஸ்ரீ இராகவரது ஆசயம்.

(ச.) சகக்காரணமாம் = திரிஜகத்துக்குங் கரணமாய்ப் பிருதிவியாதி ரகிதாகிரு தியான, அயனுக்கு தோன்றுமனவடிவாய், சங்கற்பமாத்திர கற்பிதமான சித்தமாத்தி ரோபாதி மயமாய், தான்ரூனே= அந்தப் பிரமன்தன் மனதிஞலே தானே, சகத்தை விரித்திடலால், எல்லாம் = திருசியமான விசுவமும், உலகமாயைதனே = பிராந்திபரம் பரையான வகிலத்தை, சங்கற்பபுருடன் = சங்கற்பமாத்திர கற்பிதபுருடன் சித்தமாத் திர வுபாதிகன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வாசாரம்பண சாஸ்திரத்தான் விகாரமாகிய மனதிற்கு நாம மாத்திரமேயல்லாமற் சத்துவங் கிடையாதென் றுத்தரங் கூறுகின்ரூர்:—சடவென.

(ச.) மனதாகாச துல்லியமெனல்:—சடவென

சடசூ னியமா யெங்கணுஞ்சேர் தனிநெஞ் சுக்குப் பேரொழிய
வுடனங் ககனந் தனைப்போல வுள்ளும் புறம்பு முருவிலதாம்
படர்தீர் மெய்பொய் யெனும்பொருளிற் பயிறோற் றரவே மனமாகுந்
தொடர்சங் கற்ப மெங்குளதாந் தோன்று மனமு மங்குளதே.

(ப - ரை.) சட சூனியமாய்=சுயமறிவற்றுச் சொரூபமற்றதாய், எங்கணுஞ்சேர்= ஆகாவசத்தால் எல்லாவிடத்திலும் சேராகின்ற, தனிநெஞ்சுக்கு = துயர் செய்வதி லொப்பற்ற மனத்திற்கு, பேரொழிய = நாமமாத்திரமே யல்லாமல், உடனங் ககனந் தனைப்போல=வியாபகமாகிய வியோமத்தை வியப்ப, உள்ளும் புறம்பும் உருவிலதாம்= இருதயத்தும் பாகியத்தும் மெய்வடிவ மில்லையாம், படர்தீர்= எவ்விடத்திதுந் தோற்ரு நிற்கும், மெய்பொய் எனும் பொருளில் = சத்தசத்தான வத்துக்களில், பயில் = அவ் வவ்வாகாரத்தை யடைந்து, தொற்றரவே = புலப்படுவதே, மனமாகும் = மனமென மலரப்பெறும், தொடர் சங்கற்பம் = விடயங்களைப் பின்பற்றும் சங்கற்பமானது, எங் குளதாம் = எவ்விடத்தி லுண்டாகி நிற்குமோ, தோன்றுமனமும் = புலப்படா நின்ற மனதும், அங்குளதே = அவ்விடத்தி லிருப்பதேயாம்.

(ஸ்ரீ - வீர.) வியோமத்திற்கும் பாமரரானும் வாசாரம்பணதி சாஸ்திர சமஸ்காரம் வாய்ந்த சித்தரானும் சிறிதுஞ் சித்துரூபம் பார்க்கப்படுவதே யில்லையாம். அசத்தமூல மாகிய மனம் இல்லையாயின் அதன் மூலத்தைக் கெடுக்கும் பொருட்டு முயலாநின்றயாம் கிருதார்த்தர்கள் ஆகேம் எனவினவ மயலோன் திருஷ்டியாலென விடைதருவார், எங் கணுஞ்சேர் என்ரூர். யாண்டுங்கூடி யிருத்தல் கூடாததாம் எனவுண்டாஞ் சங்கையை மங்கவைப்பார் படர்தீர் என்ரூர். தோற்றரவு = பிரதிபானம் = ஞானம், எத்தகைய ஞானமெனிற் கடஞானம் படஞானம் எனப் பிரசித்தமா யிருப்பதென்பார் பயில் என் ரூர். சூனியஜட ஆகிருதியையுடைய ஆகாயத்திற்குப் பெயர்மாத்திரமே யல்லாமல் யாதொன்றுங் காணப்படாததேபோல இம்மனதிற்கு மொருவடிவத்தையுங் காணேம் இதஞனே யதன் காரியங்களில் "விகாரம் வாக்கால் விரித்தபெயரதே" எனக்கேட்ட மித்தியாத் தன்மை பொருந்தும். சூனியஜடாகிருதித் தகைமை பூதாகாசத்திற்கும் மனத்திற்கும் பொதுவாகப் பொருந்தும், விண்போன்றமையையே மேலும் விரிப்பின், எல்லாவிடத்திலு மிருந்துகொண் டிருந்து மிவ்வாகாயம் சத்ரூபமாகாததேபோல இம் மனமும் சத்ரூபமாக வெளியிலு மிருப்பதில்லை; உள்ளிருதயத்திலு மிருப்பதில்லை; இம் மனதிஞின்றுங் கிளம்பியிருக்கின்ற ஜகத்தானது மயற்கு விஷயீபூதமா யத்தியஸ்த மாய்த் தோற்றுங் கானனீருக்குச் சமானமாய்த் தோற்றும். இதன்ரூபமானது கனசங் கற்பத்திஞலே இரண்டாவது சந்திரனைப் பார்க்கும் மயற்குச் சமானமாம். உண்மை

யாக மனமெனப் பெயரிய பதார்த்தமொன் றில்லவேயில்லை யெனினும் சாஸ்திரசம் பந்தமான விவகார சாதகமாகக் கற்பனேயா யதனுருவஞ் சொல்லவேண்டியதேயாகும், பிரத்தியக்ஷத்தில் எதிரேயிருப்பதும் பிருதியாதி பரோக்ஷத்திலில்லாததும்ஆகிய அருத் தத்தினிடையில் எவ்விவ்வவ்வாகாரத் தோற்றமுளதோ, எல்லாஜனங்கட்கும் பிரசித்த மாகத்தெரியவருமோ அதுமனமென அறியத்தக்கதாம், மற்றொன்றுமல்லவாம், தொகுத் துக் கூறுமிடத்து எப்பொருட் டோற்றமுண்டோ அதுவே மனமென வறையப்பெறும், மனமெனப் பெயரியவஸ்து வேறொன் றொருகாலுங் கிடையவே கிடையாது; மற்றோர், நிராகாரமாய் சித்திற்கு யாதொரு அருத்தாகாரமான அத்தியாசமுளதோ அதுவே மனதாம்.

(ச.) சட சூனியமாய் = சடாகிருதியாய் அற்பமுந் திருசியமாகாததாய், பேரொ ழிய = நாமமாத்திர மன்றி, சடசூனியமாய உடலுங் ககனந் தனேப்போல, உருவில தாம் = சத்துரூபமின்றும், உள்ளும் புறம்புஞ் சத்துரூபமாகத் தோன்றுத தாயினும் எவ்விடத்தும் தற்காரியந் தோற்றுதலான் மனதும் வியோமம்போ லிருப்பதென்பதாம். பொருளினது, பயில் = பிரதீதிமாத்திர ஆகாரமாகப் பொருந்திய, தோற்றரவே = ஸ்புரணமே, மனமாகும். ஆந்தரவியாபாரஞ் சங்கற்பம், பாகிய வியாபாரம் பொருளின் றோற்றமென்றுணர்க.

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணம் விருத்தி சாமானியமாக இவ்விலக்கணங் கூறப்பட்டது, இனி அசாதாரண விருத்தியினுற் கூறுகின்றார்:—மனத்தினென.

மனத்தின் வடிவு சங்கற்ப மற்றிவ் விரண்டு மொன்றுகு
மனர்த்த மோக மலம்பந்த மவித்தை மாயை தமமுதலா
மினத்த பெயர்சங் கற்பத்துக் கேற்ற பெயரா மிதுநழுவிற்
கனத்த சகக்காட் சியும்போகுங் கதிர்விட் டெறிக்கும் பரவடிவம்.

(ப - ரை.) மனத்தின் வடிவு = மனத்தினது சொரூபம், சங்கற்பம் = சங்கற்பன மாம், மற்றிவ்விரண்டும் = இதனுனேயே இந்த இரண்டும், ஒன்றாகும் = ஏகதேயாதாம், அனர்த்தம் = சமுசாரம், மோகம் = மயக்கம், மலம் = பாசம், பந்தம் = அகங்காரக் கிரந்தி, அவித்தை = பிரஹ்மவித்தையைப் பிரதிபந்தித்துக் கொண்டிருந்து அதனுலேயே கெடுவது, மாயை = சர்வவிக்ஷேபகாரணம், தமம் = ஆவரணம், முதலாம் = என்பன வாதிய, இனத்தபெயர் = இன்னுரென்ன நாமங்கள், சங்கற்பத்துக்கு = மனேவிகாரத் திற்கு, ஏற்றபெயராம் = பொருத்தமான நாமங்களாம், இது நழுவில் = இந்த சங்கற்ப சாலமானது நசிக்கில், கனத்த சகக்காட்சியும் போகும் = ஒருவிதத்தினும் நீராதான நிடதரூன பூமியாகாசரூபத் தோற்றத் திருசியமும் தொலைந்துபோம், பரவடிவம் = மேலானதனது ஒளியுருவம், கதிர்விட் டெறிக்கும் = நிருமலப்பிரகாசமயமாய்ப் பிரகா சித்துக்கொண் டிருக்கும். (27)

(ஸ்ரீ - வீர) சங்கற்ப மனங்கள் ஒருகாலத்திலும் எவரானும் எவ்வகையானும் வேறு பிரியாவென்பதாம். இவ்வண்ணம் மனதிற்குப் பந்தமூலத் தன்மையையும் சொரூப விசேஷத்தையும் புகன்று ஞானத்தானே மூலத்தோடு கூடிய அதற்கு நிவிருத்தியுள தாயவழி, ஆன்மாவிற்குக் கைவல்லியமாம் என்பார், இது நழுவிலென்றார். ஜகத்தென்று சொல்லப்பெற்ற சங்கற்பஜாலங் கழிந்தபோது எவ்வான்மவடிவம் எஞ்சாநிற்குமோ அதை அபூதி உபமானத்தானே தெளிவுபடுத்துவார், கனத்தவென்றார். தோற்றுந் தோற்றமொழிந்த வழிதொல்லே யொளியே தோற்றிடமால். சங்கற்பிக்கின்றதே மன

மென அறிந்துகொள்ளல் வேண்டும், சங்கற்பத்தினுமது வேறுவதே கிடையாது, எது போன்மெனின் ? கெகிழ்ச்சியானது நீரினும் வேறுகாததேபோலும், அசைவானது வாயுவினும் வேறுகாததே போலும் என்றுணர்க. அதனையே விஷயபேத விவஸ்திதி யைக் காட்டும் வாயிலாய்த் திடப்படுத்துகின்றார், மற்றென, யாண்டுச் சங்கற்பமுண்டா கின்றதோ ஆண்டு அம்மனம், அங்கமாம், அவ்வாறே நிலைபெறும் சங்கற்பமனதுகள் ஒரு காலும் ஒருவராலும் பிரிவுபடுவதே கிடையாது. அங்ஙனமாயின் சித்தோடு கூடியிருக் கும் விருத்தியே பதார்த்தத் தேற்றமெனப் பகரப்படுகின்றது, ஆண்டுச் சித்திற்குச் சத் தியத்தகைமை யிருப்பின் அதனுகூடிய மனதிற்கு மித்தியாத் தகைமையுறல் எங்ங னங்கூடுமெனின் ? பொய்விடயாகாரத்தாற் பொய்யாயின் ஆகுக, சத்தியசித்தின் சேர்க்கையாற் சத்தியமாயினும் ஆகுக, எவ்வாறுகூறினும், இஷ்டமேயல்லாமல் இவ் வாறுதானிருக்கவேண்டு மென்பதாக ஆக்கிரகமில்லை, பதார்த்தத்தோற்றம் எங்ங னிருந்தாற்றா னென்னே, அத்துணைமாத்திரம் மனமென அறிந்துகொள்ளல் வேண்டும். அவித்தை சமுசாரம், சித்தம், மனம், பந்தம், மலம், தமம், என்பனவாய பரியாய நாமங் கள் திருஷ்டித்திற் குண்டென உத்தமாக ஞரைப்பார்கள், திருஷ்ய ஜாலமாகிய சங்கற்ப ஜாலமொழியவே சொரூபமாத்திரம் எஞ்சாநிற்கும், விடயமில்லாமல் ஞானத்தின் நிதி சம்பவிக்கமாட்டா தென்னும் எண்ணத்தினைத் திருஷ்டாந்தத்தால் அநுபவப் படுத்து வார் கனத்தவென்றார், ஒளிர்விக்கப் படுவனவான திக்குப்பூமி யாகாசரூபங்களியாவு மில்லாதபோது ஒளிக்கெத்தகைய நின்மலரூபம் பவிக்குமோ, அதுவே மனமற்ற நினது வடிவமாம்.

(ச) மனத்தின் வடிவு—மொன்றாகும், மனச்சங்கற்பம் மனமெனக் காரியகாரணங் களுக் கபேதத்தினுற் கூறப்பட்டது. உண்மையாகப் பொருளின் றோற்றமுஞ் சங்கற் பமுமுடையது மனமென்பது லக்ஷணார்த்தம். சம்சாரம் மூதலாம், பெயராம், இவ்வித மானமனது நசிக்கிற்றானே சொரூபானுபூதி யுதிக்குமெனல். இது நழுவில், கனத்தசகக் காட்சிக ணழுவும், திசைபூமி யாகாசரூபங்களான திருஷ்யத் தோற்றங் கணசிக்கும்; மனுலய வேதுவினுற்றிசையாதி ரூபசராசராத்மகத்திருஷ்யம் அப்பிரதீதியாயின் பர வடிவம் = சித்ரூப ஆத்மாவினது நிர்மலரூபம், கதிர்விட் டெறிக்கும் = சொயஞ்சோதி யாய்ச் சொலிக்கும். (27)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அத்திருஷ்யம் அறுதலேயே தனிக்கேவல நிலைமையெனத் தர்ப்பணதிருஷ்டாந்த வாயிலாகத் தெளிவுபடக் கூறுகின்றார்:—நிற்பவென.

(ச) அதனையே விரித்துரைத்தல்:—நிற்பவென.

நிற்ப நடப்பவெனு மனைத்தி னிழலா டாது வெறிதிருக்குந்
தற்ப ணந்தா னெப்படியோ தானே விளங்குமப் படியே
கற்ப முறுநீ நான்முதலாங் காட்சி விகற்ப மெலாமடங்கி
யற்ப மெனினுங் காட்சியறி லதுவே தனிக்கே வலநிலைமை. (28)

(ப - ரை.) நிற்பநடப்ப வெனுமனைத்தின் = ஸ்தாவரஜங்கம ரூபமென்னும் எல் லாவற்றின், நிழலாடாது = பிரதிபிம்பங்கள் தோற்றாது; வெறிதிருக்குந் தற்பணந் தான் = சும்மாவிருக்குங் கண்ணுடியானது, எப்படியோதானே விளங்கும் = தான் மாத்திரம் தெளிவாய் விளங்குவ தெவ்வண்ணமோ, அப்படியே = அவ்வண்ணமே, கற்பமுறு = ஆயிரங் கோடியாய்க் கற்பனை செய்துகொண் டிராநின்ற மூவுலகம், நீநான் முதலாம் = துவம் அகம் முதலான, காட்சி விகற்பமெலாம் = திருஷ்ய விபரீதங்கள்

யாவும், அடங்கி = அசத்துவத்தை யடைந்தவழி, அற்பமெனினும் காட்சியதில் = ஒருசிறிதும் அத்திருசிய வாதனையே யில்லாமற் றெலெயுமாயின், அதுவே தனிக்கேவல நிலைமை = அவ்வாளா வாழ்வதே ஒப்பற்ற பரிசுத்தமான அவஸ்தையாம்; வெறுஞ்சொரூபமே யிருத்தலின் என்றுணர்ந்து கொள்க. (28)

(ஸ்ரீ - வீர.) திக்குப்பூமியாதி, சகலவிளங்குறும் பொருள்கள் இல்லாதபோது வியாபியாயும் சலனமில்லாததாயும் உள்ள சூரியனது பிரகாசம் இருக்குமாயின் அதனது சொரூபம் கைவல்லிய அவத்தையின் மாட்டு ஆன்மசொரூபத்தினது திருஷ்டாந்தம் ஆம் பூத உபமானத்தினுனும் அதன் சொரூபத்தைத் தெளிவு படுத்திக்காட்டுவார், தற்பணமென்றார், அகில அசலாதி பதார்த்தங்களின் பிரதிபிம்பங்களே யடையாமலிருக்கும் கண்ணாடி, அக்கண்ணாடியின் கண்ணே தாரண விசேடத்தான் பிரதிபிம்பப் பெருமயற்குத்தக்கவிழியின் கூட்டின்மையானே கவரப்பெறுத அகிலப்பிரதி பிம்பமாம், அத்தர்ப்பணத்தின்பால் எத்தகைய தர்ப்பணத் தன்மையோ, அத்தகையதே திருஷ்டாந்தமாம், எத்தகையது அஃதெனின் ? கேவலம் தர்ப்பண சொரூபமாயிருப்பதாம். ஒன்றையு முன்னும லிருத்தலினுலேயே அவ்விடயப் பார்வையற்றிருப்பச் சாக்ஷியினிடத்தில் அத்தகைய கேவலத் தன்மையான துண்டாம் என்றறிக, மூவுலகம் நீயாம் என்பனவாய திருசியங்களிலாதபோது விமலவடிவமாய திருஷ்டாவிற்கு அத்தகைய கேவலீபாவமானது உண்டாம். சைலமுதலிய சருவப்பிரதி பிம்பங்களுந் தோற்றுதிருக்குந் தருப்பணத்தில் தருப்பணத் தன்மையானது கேவலந்தருப்பணன்ம வடிவமா யெப்படியிருக்கின்றதோ அப்படியே, நீயும் யாமும் உலகமும் பிறவும் ஆகிய திருசியசம்பிரமம் எல்லாம் ஒழிந்தபோது திருஷ்டாவினிடத்திற் றிருசியத்தைக் காணவேண்டுமென்னும் நோக்கம் இலதாகவே திருஷ்டாவினிடத்திற் கேவலத்தன்மை யிருக்கும்.

(ச.) நிழலாடாது = பிரதிபிம்பத்தைப் பொருந்தாமல் எப்படித்தானே விளங்குமோ. அப்படியே சகமென்பது முதலாம், காட்சி விகற்பமெலாம் = திருசியப்பிரான்தியனைத்தும், திருஷ்டாவி லடங்கி, அறிவி = அத்தியந்தம் அப்பிரதீயமானமாயின், சின்மாத்திரரூபந் தானே விளங்கும், அதுவேதனிக் கேவலநிலைமை (ஸ்திதி) பிரதிபிம்பத்தைச் சாராத தர்ப்பணம்போற் றிருசியத்தைப பற்றுத சைதன்யதிருஷ்டா கேவல சொரூபமாகவே பிரகாசிப்பன் என்பதாம். (28)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்விதமான கைவல்யப் பிராப்தியில் மனமேவிரோதியாம் ஆகலின் அதனழிவின் பொருட்டுப் பெருமுயற்சியைச் செய்யவேண்டு மெனக்காட்டற் பொருட்டு அதனது துராத்மத் தன்மையையே விரித்துக்காட்டு கின்றார்:— காண் பரியவென.

வே று

காண்பரிய மனங்காட்சிப் பொருளே யெல்லாங் கனவுதரு கனவுபோற் காட்டா நிற்கும், பூண்பதிலா மனஞ்சலன சத்தியாலே பொலியுமசை யுந்தியங்கும் போதுமீளும், வீண்பயிலுஞ் செருக்குமிகு மதங்கரிக்கும் வேற்றுருவாம் பெருங்கற்பமேவும் போதிற், சேண்படவெல் லாப்பொருளுந் தீரமாய்ந்து செறியுமுப சாந்தமே சேடமாகும். (29)

(ப - ரை.) காண்பரிய = முக்காலத்திலு மில்லாததேயும், காட்சிப் பொருளெயெல்லாம் = இருப்பதுபோற் பொலியாநின்ற கூடியவடிவ இத்திருசிய மயத்தோடங்கள் யாவற்றையும், கனவுதருகனவுபோல் = சொப்பனம் சொப்பனந்தரத்தைக் காட்டுவதேபோல, மனம் = உள்ளமானது, காட்டாநிற்கும் = வாதனைவய மாய்த்தோற்று

வித்துக்கொண்டே யிருக்கும், பூண்பதிலாமனம் = பூரண சொரூபத்தைகாட உண்முக மாகாத சித்தம், சலனசக்தியாலே = அலைவுதரு மாற்றலாலே, பொலியும் = விலங்கும், அசையும் = சஞ்சலிக்கும், தியங்கும் = மயங்கும், போகும் = செல்லும், மீளும் = மொத்துண்டு திரும்பும், வீண்பயிலும் = வாளாதிரியும், செருக்குமிகும் = களிப்புமி கும், அகங்காரிக்கும் = கருவிக்கும், வேற்றுருவாம் = உயிர்வை விட்டுத் தாழ்வையடை யும், பெருங்கற்ப மேவும்போதில் = மகாப்பிரளயமானது வந்தடையுங் காலத்தில், சேண்படவெல்லாப் பொருளும் = ஆகாயமுட்பட அகிலதிருசியங்களும், தீரமாய்ந்து = முற்றினும் அசத்தாகி, செறியும் = சருக்காதியில், உபசாந்தமே = பரமசாந்தமே, சேடமாகும் = எஞ்சியிருக்கும். (29)

(ஸ்ரீ-வீர.) தாழ்வை யடைதலாவது. தேகாதி யகாத்மரூபத் தன்மையையேனும் அதமத்தன்மையையேனும் அடைதலாம். இங்ஙனம் சஞ்சலசக்தியோடு கூடி கேவலம் மனமே சலிக்கின்றதே யன்றி யாத்மா அலைவதே கிடையாதாம். முன்மொழிந்த கைவல் லியப் பிராப்தியானது பரமாத்ம தரிசனத்தா லுண்டாகின்றது என்றியம்புவதற்காகப் பிரகிருதி சம்பந்தமான பிரளயத்தைப்பற்றி யாதியிற் பரமாத்மரூபத்தைப் பிரஸ்தாபிப் பார். பெருங்கற்பமென்றார். பராபரமா மப்பொருளே வயங்கக்கண்டால் என்பதற்கு முன்னுள்ளவற்றால் என்றுணர்க. சருக்காதியில் என்றதற்குச் சிருஷ்டியின் முற்போதி லென்றேனும், சிருஷ்டிக்கப் படுகின்றது இதனாலெனச் சருக்கம் காரணமாம் அது ஆதியில் நிருவிகாரப் பிரஹ்மமே காணப்பெறு கிற்கும். காண்பரியமனம் = அசத்தாய மனமெனினுமமையும் அசத்தாகவே யிருந்து சதாகாரத்தைக் காட்டும் என்பதாம், இந் தத் துவைதமானது தொனிசெய்யும் மலடிமகன்போல அசத்தே சிருஷ்டியின் முன் னுண்டாகவே யில்லை கனப்பட்டணம்போல் மனத்திற் றோற்றும், மனது திருசியமய மாயழிவு வடிவமாயிருந்து தோடமிதனை யுண்டாக்கும், கனவானது வேறு கனவைத் தோற்றி வைப்பதேபோல அசத்தையே சத்தாகாரமாய்த் தோற்றிவைக்கின்றது, அம் மனது சுயமாகவே இஷ்டப்படி விரைவில் தேகத்தைச் சங்கற்பிக்கின்றது, நீண்டபா வனை விஸ்தாரத்தையுடைய அம்மனதினுனே இவ்விந்திரஜால இலக்குமி விரிக்கப்படு கின்றது; கேவலம் மனதே சஞ்சலசக்தியினுலே எங்கு எப்போழ்து சலிக்கின்றதோ அங்கு அப்போழ்து விளங்குகின்றது, சுற்றுகின்றது, செல்கின்றது, பிரகிக்கின்றது, மூழ்குகின்றது, கொல்கின்றது, சுயம் சம்சாரதசையிலுற்ற தாழ்வை யும், கைவல்ய இலக்கண மேன்மையையும் அடைகின்றது, என்பதாக மயக்கத்தாலே தோற்றுகிற்கும். இங்ஙனம் வீசுவத்தின் மூலமான மனப் பொய்ம்மையின் வருணனை யின் பிரகரணப்பொருள் துணிவுற்றவழி யதனதிஷ்டான தத்துவத்தையும் அதன் ஆரோபப் பிரகாரத்தையும், அது பொய்யாவதிற் காரணத்தையும் விரிவாக அறிய வேண்டுமெனக் கூறுவார் பெருங் கற்பமென்றார், மகாப்பிரளயம் வரும்காலத்தில் உலகம் சூக்குமமாய் விட்டபடியால் அருத்தக்கிரியை யசமர்த்தத் தன்மையை யடைந்த போது வருஞ்சருவதிருசிய சிருஷ்டியின் ஆதியில் விசேஷமற்ற சாந்தமே எஞ்சி யிருந்தது.

(ச) காண்பரியமனம் = அசத்தாகாரமான மனதே அசத்தாகாரமான சூட்சி, தியங்கும் = பிரமிக்கும், (ஸ்ரீ வசிஷ்டர்) பெருங்கற்பம் = காட்சி, திருசிய மயதோ ஷம் = திருசியரூபவிகாரம். (29)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல் திருசிய அசத்துவம்போலத் திருஷ்டாவிற்கும் அசத்துவமே பொருத்தமாம், "அசத்துத்தான் இதற்குமுன்றிருந்தது, அசத்துமிருந்

திலது சத்து மிருந்திலது அப்போது " என்பதாதி சுருதியிலுலே யென ஆக்ஷேபிக்க உத்தரங் கூறுகின்றார்:—அத்தமியென, வேறு

அத்தமி யாத சோதி யருக்கனு ளளவி லாதாய்
மெத்திய பிணியி லாதாய் மேவரும் பிறப்பி லாதா
யெத்தலங் களினு மென்று மியாவுமா யாவுஞ் செய்து
முத்தியு மாகி யோங்கு முதற்பரம் பொருளொன் றுண்டு. (30)

(ப - ரை.) அத்தமியாத = மறைவுபடாது, சோதி = பரப்பிரகாசமாய் விளங்கும், அருக்கனுய் = ஞானசூரியனுய், அளவிலாதாய் = அளவிட முடியாததாய், மெத்திய பிணியிலாதாய் = துயர்ப்படுத்தும் ரோகமொன்றும் ஒன்றுதாய், மேவரும் பிறப் பிலாதாய் = பிணிக்கிடமாய தேகங்களில்லாததினுலேயே பிறப்பு முதலியவை யற்ற தாய், எத்தலங்களினும் = எவ்விடத்திலு மிருந்து தேசபரிச் சேதமற்றதாய், என் றும் = எல்லாக்காலங்களிலு மிருந்து காலபரிச் சேதமற்றதாய், இயாவுமாய் = சர்வான் மகமாயிருந்து வத்துபரிச்சேத மற்றதாய், யாவுஞ்செய்து = உபாதிவயத்தாய்ப் பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்து, முத்தியுமாகி = ஓங்கும் சர்வ அநர்த்தங்களும் விடுபட் டுப் பரமானந்தரூபமாகி விளங்குவதாயுள்ள, முதற்பரம்பொருளொன்றுண்டு = அநாதி ஜகத்ததிஷ்டான மேன்மையுற்ற அத்விதீய உண்மைப் பொருண்மாத்திர மிருக்கின்றது. (30)

(ஸ்ரீ - வீர.) மறைப்பற்றது தோற்றமற்றது என்பதாக முதற்கடைப்பாவ விகாரங் களை நிடேதஞ்செய் துள்ளமையின் இடையினிகழும், நான்கு பாவவிகாரங்களும் நிடே திக்கப்பட்டன வென அறிந்துகொள்ளல் வேண்டும். அப்பொருள் தேவசொரூபமா யிருத்தலால் அஜடமெனவறிக, விளங்கி விளக்குவதாதல் ஒரொருகாலா மாலோவென வினுதல் விலக்குவார், சோதியருக்கனு யென்றார். அது துக்கமூடைய தன்றென்பார் பிணியிலாதாயென்றார். என்று மென்றது எல்லாப் பதங்களோடும் புணர்ந்து சிறப்பாயி னும் சிறப்பேயாம். அதற்குப் பூர்ணத் தன்மையைக்காட்டும் பொருட்டே சர்வான்மக யாவும் என்றதாம்; மற்றையரைப்போலச் சர்வகதத்வம் சர்வமூர்த்தம் சம்போகத்வம் பூரணமென்ற தன்றுமென்க. எல்லாமாயிருப்பதன் கண்ணே எது யாவுஞ்செய்தலாம், எல்லாரூபமாகவும் விவர்த்தமாகத் தோற்றலாம், இதுவே சர்வசிருஷ்டி யென்ப. அல் லது நிமித்தகாரண மென்றேனு நிகழ்த்திக்கொள்க, அதுவேமகேச்சுரனுகி யிருத்தலின் யாவுஞ் செய்தலொப்ப எல்லாவற்றையும் நியமிப்பதாமெனவும் தெரிந்துகொள்க. சத் தான அத்தமியாத சோதிச்சித்தாய அருக்கனுய், ஆதிமத்தியாந்த ரகித தேவனுய் இன்பமயமாய் நோயற்றுப் பரிபூர்ணமாய் எப்போதும் சர்வக்கிரியா சக்திசம்பன்னனுய்ச் சருவமாய் நித்தியமாய மகேசுரனுய்ப் பரமான்மா விருக்கின்றது.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பரமாத்மா யாவுஞ்செய்து சருவேசுரராயின். காரிய நியமிய சாபேக்ஷத் தன்மையானே சவிகற்பமாம் என ஆசங்கித்துச் சருவ கருத்துருத்துவாதி களும் அவித்தையா லாவனவே, உண்மையாயோ நிருவிகற்பகமே அதனது சொரூபம் எனக்கருதிக் கூறுகின்றார்:—பகரென, வேறு

பகர்வரிதாய் முத்தராற் பயில்வ தாகிப் பரமுதலாம் புகிதான பலபேர் பெற்று, மிகவுணர்சாங் கியர்புருட னென்றுஞ் சுத்த வேதாந்தம் விளங்கினேர் பிரம மென்றுங், துகளறிவிஞ் ஞானிகள்விஞ் ஞானமென் றுஞ் சூனியர்சூனிய மென்றுஞ் சொல்லப் பட்டுந், திகழிரவி தேசுக்குந் தேசாய் நின்று தேசளித் தத் திகழ்வித்துத் திகழாநிற்கும். (31)

(ப - ரை.) பகர்வரிதாய் = வர்க்கால் வசனிக்க முடியாததாய், முத்தராத்பயில்வ தாகி = அவ்வாறுயினும் ஜீவன் முக்தர்களாற் தற்சொரூபமாய்க் காண்பதாகி, பர முதலாம் புதிதான பல பேர்பெற்று = இயற்கையிலேயே யில்லாததா யுபதேசப் பொருட்டாக நவநவமாய்ப் பரமாத்மா முதலான செல்வத் திருநாமங்களே யலங்கார மாக உடையதாகி; மிகவுணர் சாங்கியர் = மிக்க மேதாவிகளாகிய சாங்கிய சாஸ்திர முடையார், புருடன் என்றும் = புருடன் என்னவும், சுத்தவேதாந்தம் விளங்கினோர் = தூய்தாகிய மனத்தினர்க்குரிய மறைமுடி யுணர்ந்த பெரியோர், பிரமமென்றும் = பெரிதினுக் கெல்லாம் பெரியதாய பிரஹ்மமென்னவும், துகள் அறுவிஞ்ஞானிகள் = குற்றமற்ற தவம்புரியும் விஞ்ஞான வாதியர், விஞ்ஞான மென்றும் = கணிகவிஞ்ஞான மென்னவும், சூனியர் = சூனியவாதியர், சூனியமென்றும் = சூனிய மென்னவும், சொல் லப்பட்டும் = பெயர் பலவேந் தலங்கரிக்கவும் பெற்றதாகி, திகழ் = ஆயிரங் கிரணங்களு டன் விளங்காகின்ற, இரவிதேசுக்கும் = மார்த்தாண்டன் ஒளிக்கும், தேசாய்நின்று = ஒளியாயுள்ளும் புறம்புமிருந்து, தேசளித்து = பிரகாசத்தையீந்து, திகழ்வித்து = ஒளிர்வித்து, திகழா நிற்கும் = பிரகாசியா நிற்கும். (31)

(ஸ்ரீ - வீர.) மூலத்தில் யதோவாச என்பதாதிகளில் பதினேந்து எது என்னும் சப் தங்களையும் தத்சப்தங்களையும் கொண்டு கூட்டி ஆஸ்தேயென்னும் மூன் சுலோகத்தோடு சேர்க்கைசெய்து அருத்தங்காண்க. அல்லது தஸ்மின் திருவுடே பராவரேபராபர மாமப்பொருளை வயங்கக்கண்டால் என்னும் கூறப்படும் அது என்னும் சப்தத்தோடே னும் சேர்த்தியுணர்க. வாக்காதிகட்கு எட்டாதாகுமாயின் நேரேகாணமுடியாததன்றே வாகுமெனின்? அறைவார் முத்தரால் என்றார். வாக்கிற்கெட்டாத பிரஹ்மத்திற்கு யாங் ஙனம் ஆன்மாவென்பதாதி பெயர்கள் கூடல் எனின்? கூறுவார் பரமுதலா மென்றார், இந்நாமங்கள் சுவாபாவிகமாக இல்லாதனவாம். அற்றேல் முக்தர்களானே யநுபவிக்கப் படுவதேயாயினும் அவ்வாக்காதி யகோசர வஸ்துவினிடத்தில் எம்மனோர்க்கு விசுவா சம் எங்ஙனே யெனவினவ அதனது விசிஷ்டகேவலரூபங்களானே சம்பவித்தபடி சகல சாஸ்திரக் கவர்ச்சியுண்மையின் அங்ஙனமன்று மென்னுங் கருத்தானே கூறுவார், மிக வுணரென்றார். அல்லது, கூறிய பரமார்த்தத்தின் மாட்டு ஐயப்பாட்டைக் காணும் வாதி யர்க்குப் பற்றுக்கோடற்ற தன் கண்ணே ஐயப்பாடு கூடாதையின் ஐயப்பாட்டின் முன் னரே அதன் பற்றுக்கோடுண்டாதலின் நித்தமாய வதன்கண்ணே விசுவாசஞ்செய் யவே தக்கதாம் என்பார், மிகவுணரென்றார். யோகாசாரர் மதங்கூறுவார் விஞ்ஞானி கள் என்றார். விஞ்ஞானமாத்திரம் வடிவானது நியமமாக நிர்மலமானது. மாத்தியமிக மதம் மலர்வார் சூனியர் என்றார். உண்மையாகச் சூனியமே தத்துவமோ எனவரும் ஆசங்கையை யகற்றுவார் திகழிரவியென்றார். "எதனினின்றும் கோசரிக்கமுடியாமல் வாக்கானது திரும்பு கின்றதோ, யாது ஜீவன்முக்தர்களாற் பிரத்தியக்ஷமாக அனுப விக்கப் படுகின்றதோ, எதற்கு ஆன்மாமுதலிய பெயர்கள் கற்பிதங்களாமோ அநாரோ பித ரூபங்களா யுண்டாகவில்லையோ, மற்றே ஆரோபித தரும ஜன்னியங்களாமோ, விடயமென்பது விவாதமற்றதாம் சருவாதிஷ்டானமான அதன் கண்ணென்றுணர்க, யாதுசாங்கியதிருஷ்டி யுடையவர்கட்குப் புமானுகியும், வேதாந்த வாதிகட்குப் பிரஹ்ம மாயும், விஞ்ஞான முணர்ந்தவர்கட்கு ஏகாந்த நிருமலமாய கணிகவிஞ்ஞான மாத்திரமா யும் (கணிகம் = கணகாலமிருந்து கழிவது) யாது சூனியவாதிகட்குச் சூனியமாயும் இருந்து யாது சூரியன் அக்கினிகளையும் விளக்கிவைப்பதாமோ அது சகலபிராணிகட் கும் பிரத்தியக் காண்மாவாம்:

1. தம் வலாதிகளிடுதுதாளை யவ்வப்புத்திகளும்பித.
விதகடங்களி வுலகிதகாந்த.

(ச.) பயில்வதாகி = பொருந்துவதாய், பரம் = ஆத்மாமுதலாம், பலபேர்பெற்று, சப்தப்பிரவிருத்தி நிமித்தங்களான நாமசாதியாதிக ளின்மையின் எப்படிப் பரமாத்மா முதலிய நாமங்கள் எனில் ? கற்பிதங்களென்பது கருத்து தரிசனமென்னுஞ் சாஸ்திர பேதத்தால் நாமபேதத்தைக் கூறல், விஞ்ஞானம் = விஞ்ஞானமாத்திரம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அருக்கன் றேயுப்போசகத் தன்மையானே பிராப்தமாம், அத னினும் வேறுய ஜீவனினும் பரமான்மாவிற்குப் பேதத்தை நீக்குகின்றார்:—உரையென.

உரைபகர்வோ னுசாவிடுவோன் கேட்போன் காண்போன் உண்பவன் சிந்திப்பவனு யுகின் மெய்யிற், றிரமுறமே வியுமேவாப் பொருளி னின்றுங் தினகரன்றே சனச்சித்தின் நிகழ்ச்சி யுண்டாம், விரைமனம்வேர் கரணமல ரண்டங் காயாய் விண்ணெழுமா யையக்கொடியை விதிர்க்குங் காற்றும், புரை செயுடற் செப்பனைத்துண் மணியாய் நிற்கும் புணர்புரியட் டகவுடலைப் போய் மீள் விக்கும். (32)

(ப - ரை.) உரைபகர்வோன் = சொல்பவன், உசாவிடுவோன் = ஆராய்பவன், கேட்போன் = செவிசாய்ப்பவன், காண்போன் = பார்ப்பவன், உண்பவன் = போக்தா, சிந்திப்பவன் = எண்ணுபவன், ஆய் = இங்ஙனமாகி, உலகில் = ஜகத்திலும், மெய் யில் = தேகத்திலும், திரமுற மேவியுமேவாப்பொருள் = முறையே இருந்தும் இராப் பொருள்இருந்தும் தூரத்திருக்கும் பொருள், பொருளினின்றும் = இவ்வத்துவிலிருந் தும், தினகரன்றேசு என = சூரியனது பிரகாசம்போல, சித்தின் நிகழ்ச்சியுண்டாம் = சிற்பிரகாசமானது எங்கும்பரவும், விரைமனம்வேர் = வேகமானமனம் வேராகவும், கரணமலர் = இந்திரியங்கள் தளபுஷ்பங்க ளாகவும், அண்டம் காயாய் = பிரஹ்மாண் டம் நற்பலமாகவும், விண்ணெழும் = வியோமத்தில் விரிந்த, மாயைக்கொடியை = பிரகிருதி யென்னும் வல்லியை, விதிர்க்குங் காற்றும் = ஆட்டிவைக்கும் வாயுவாம், புரைசெய்யுடல் = எகாதசத் "துவாரங்களும் குற்றங்களும் பூணைந்த தேகங்களாகிய, செப்பனைத்துள் = நிமிழ்கள் யாவற்றினுள்ளும், மணியாய் = சின்மணியாகி, நிற்கும் = விளங்கும், புணர் புரியஷட்டகவுடலை = தூலதேகத்திற் பொருந்தியுள்ள சூக்குமதே கத்தை, போய்மீள்விக்கும் = இங்கும் அங்கும் கமனகமனப் படித்தும். (32)

(ஸ்ரீ - வீர.) மூலபதம், இருதம்போக்தா என்பதை இருதத்தின் போக்தாவென வேற்றுமை விரியாக்குக. இருதசப்தத்தானே கருமபலங் கழறப்பெறும், "ஏயபே ருல கில் வினைப்பய னுகர்ந்தங் கிதயமே மருவுவா ரிருவர்" என்னுஞ் சுருதியில் இருதசப் தம் வினைப்பயன் எனக்காட்டி யிருத்தலின், மந்தாருதமென்பது புணராதிருப்பது இருடிவாக்கியம். இருதம் என்னுமிடத்தில் ஸ்வயம் என்றும் பாடமுண்டாம். எல்லா விவகாரங்கட்கும் சாதகமாய சோதியையும் இலக்குவதாகி முற்றினுங் காட்சிப்படும் தத்துவத்திலும் யாங்ஙனம் வாதிகட்கு ஐயப்பாட்டின் இடங்கிடைத்தலோவென வாசங் கிப்ப, விரும்ப முதலியவற்றுனே தூடிக்கப் படுதலின் சூக்குமவத்துக் கவர்ச்சி யாற்ற விலா மதியுடைமையின் அதற்கிடங் கிடைக்கும் என்பதாகக்கருதிக் கூறுவார், உலகி லென்றூர். உலகத்தின்மாட் டிருந்தபோதினும் பரமாத்மா இலாததுபோன்றதே யா மென்க ; " சூக்குமமாய நுண்ணிய மதியினுனே சூக்குமத்தைக் காண்பவராலே காண வும் பெறும்" என்னுஞ் சுருதி கூறிய விசிஷ்டபுத்தி யில்லாதவர்கட்குச் சத்துவபலமின் மையின் அசத்துப்போலவாம், உடம்பிலிருந்தபோதினும் தூரத்தி லிருப்பதாகவேயாம். அவர்கட்கு ஆயிரங்கோடி வருடங்க ளானபோதிலும் அவர்களால் அடைய முடியாமை

யின். அப்பரமான்மாவிற்கே ஜடப்பிரகாசகத்தன்மை நியாமகத்தன்மைகள் முறையாகக் கூறுவார் தினகரனெனத் தொடங்கினர். குடம்விளங்கு கின்றது ஆடை விளங்குகின்றது என அனுபவிக்கப்பெறும் சிற்பிரகாசம் எச்சித்தாத்மாவி னின்றும் பரவாநிற்கும், அதுவே சோதியாம். பருதியே ஸ்தையாம், அல்லதையிற் பிரமாண்டமே நல்ல அழகிய பலமாம். அற்றேல் உலகத்தை யொளிர்வித்தலானும் நியாமகத்தானும் பரமான்மாவிற் கும் அதனினும் விபரீதமாய ஜீவனுக்கும் வேற்றுமை பொருத்தமாம் என ஆசங்கித்து, "அவ்விவளிங்கு புகுந்தவ ளுவன், இதனினு மயலாய்க் காண்போ னிலையாம்" "வன் னிதா னெருவனுயிருக்க மற்றவ, னுன்னிய வுருவமாய்த் தோன்று மாறுபோ, லின்ன தெனுமனுட் புகுந்துமேகனு, யன்னியனுகியொன் றேடுமோர்ப் புருன்." என்பதாதி சுருதிகளினுலே அடைவிக்கப் பெற்றதாய் அதற்கே ஜீவரூபமாக விருக்குந்தன்மையை யறைவார். புரைசெய்யுட லென்றூர், நிற்கும் = சித்தாயொளிரும், சிமிழ் = சம்புடம். விரைமனம் வேர் என்பதனுனே ஆதிதெய்வ அபிப்பிராயத்தானே நியாமகத்தன்மையை நிகழ்த்தி ஆதியாத்மிக அபிப்பிராயத் தானே போய் மீள்விக்குமென்றூர். இங்குமங்கு மாகக் கலங்கிக்கொண்டு திரியும் புரியஷ்டக (சூக்குமஉடம்பு) காய்த்தைச் செலுத்தும். "கண்முதற் பொறிகளோந்தும் கருமவிந்தியங்களோந்தும், உண்மனமாதி நான்கு மூயிர்ப்பெண்ப தாதி யைந்தும், விண்முதற் பூதமைந்தும் விருப்பொடு வினையவித்தை, யெண்முறை யிதனைக் கூறுமெனப் புரியட்டகந்தான்" என்று புரியட்டக சொரூபம் பெரியோர்களால் அரு ளப்பட்டனது. சொல்வதும், கினைவதும், உண்மையும், போகிப்பதும், காண்பதும், தொழிற்செய்வதும், எப்போதுமே யதுவாம்; யாதொன் றுலகின்கண்ணே யிருந்த போதினும், இல்லாதது போலாமோ, யாது தேகத்தின்கண் ணிருந்தபோதினும் அசத் வாபாதக அவித்தையான் மறைபட்டபடியாற் பாமரதிருஷ்டியானே இல்லாததாமோ, அதனுனே தூரத்ததாமோ, சூரியனிடத்தினின்றும் பிரகாசமான தண்டாவதேபோல எதனினின்றும் இச்சிற்பிரமையான தண்டாகின்றதோ, எதனினின்றும் பிரகாசத் தோடு கூடியிராகின்ற விஷ்ணுமுதலிய தேவதைகள் சூரியனிடத்தி னின்றுங் கிரணங் கள் உண்டாவதேபோல உண்டாகின்றூர்களோ; எதனினின்றும்; கடலிலிருத்து குமிழி கள் உண்டாவதேபோல அசேதனமான அநந்தஜகங்க ளுண்டா கின்றனவோ, பெருங் கடலை நதிகள் அடைவன போலத் திருஷ்யக்குழுக்கள் எதனைப் பிரளயத் தடைகின் றனவோ; யாது தீபம்போலத் தன்னையும் பிறவற்றையும் சுவப்பிரகாசத் தன்மை யுண் மையின் தன்னையும் பிறிதையும் விளக்கிவைக்கும் ஆற்றலினுலே ஒளிர்விக்கின்றதோ தன்னை யொளிர்விக்கின்ற தென்பது அபேதத்திலும், இராகுவின் சிரமென்பதேபோ லும் உபசாரமாம். யாதுதத்தம் வியாபாரங்களில் முயன்று கொண்டிருக்கும் கருமேந் திரியங்கள்; ஞானேந்திரியங்கள், பூதசூக்குமங்கள், பிராணன்கள், அவித்தை, காமம் கருமம், அந்தக்கரண மென்னும் புரியஷ்டகத்தை யுள்ளும் வெளியும் தன்னுடைய சித்துவியாப்தியினுனே அலைக்குமோ, சேதனங்கட்குச் சேதனத்தன்மை எதனுலுண் டாமோ, இங்ஙனமே அசேதனவ்களின் விசித்திரத் தன்மையின் கண்ணே யாது கார ணமோ அதுவே பரமான்மாவாம். சருவபூதங்களுஞ் சாரிதன் பாதமாம், பருவமா மூன்று பாதமமிர்தமாம் என்று மறைகூறுகின்ற எவ்வறிவாம் வாயுவினுலே, சுத்தசிதா காசத்திற் பிரகிருதியாகிய கொடியானது, மனமாகிய வேருடையதாய்ப் பொறிகளாந் தளிர்கணிறையப் பெற்றுப் பிரஹ்மாண்டங்களாம், நற்கனிகளைத்தந்து நடிக்கும், எச் சின்மணியானது ஒவ்வொரு தேகங்களாகிய சம்புடங்களில் விளங்கிக்கொண்டிருக்குமோ அதுவே பரமான்மாவாம்.

(ச.) உரைபகர்வோன், அளவிடுவோன், கேட்போன், காண்போன், உண்பவன், சிந்திப்பவனுய், இவைகளால் பாகியாந்தர காரணங்களின் பிரவர்த்தகத்வம் தெரிவிக்கப் பட்டது. திரமுறமேவியும் = சர்வாதிஷ்டான சொரூப மாதலாற்றிண்ணமா யிருந்தும், மேவா = சருவவிலக்ஷண மாதலால் பிரதீதியாகாத, பொருளினின்றும் = பரமான்மா வினின்றும், தினகரன்றே சென = ஆதித்தனினின்றும் பிரகாச முண்டாவதேபோல, சித்தின் றிகழ்ச்சியுண்டாம் = சிற்பரிணுமரூப ஞான விவகாரமுதிக்கும்; வேர் = மூலம், பிரமாண்டம், விண்ணெழும் = சிதாகாசத்திலுதித்த, மாயை = பிரகிருதி, கொடியை விதிர்க்குங் காற்றுய், என்றமையால் பிரகிருதியானது பிரவர்த்தகன் அப் பரமான்மாவேயாம். தினகரன்றேசென என்றமையால் சக்திரூபமான பிரகிருதிக்குச் சக்திமானுன பிரஹ்மத்தோ டபேதந் தெரிவித்ததாம். அப்பரம்பொருளே தூலசூக்கும தேகங்களையும் பிரேரணைசெய்வதெனல்: புரைசெய், நிற்கும் = இருந்து பிரகாசிக்கும், புரியட்டகவுடல் = சூக்குமசரீரம், செப்பு=பேடிகை. புரியட்டக இலக்கணமும் அகங் கார காளாயுக்தமென முன்னரே மொழியப்பட்டது. (32)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பரமான்மாவே சரீரத்துட் புகுந்து சமுசாரத்தை யாற்று வாராயின் அதற்கு யாங்ஙனங் கைவல்லியம் எனச் சங்கித்து உண்மையாக அசம்சாரியா யிருக்கும் அதன்கண் விபரீதபாவனையா லடைவுற்ற அச்சமுசாரத்திற்குத் தத்துவபா வனையினுலே நிவிருத்தி கூடலின் பொருந்து கின்றதேயாகுங் கைவல்லியம் .என்கின் ருர்:—சிருஷ்டிகாலத்தில் அவசியம் சிருஷ்டி பிரளயகாலத்தி லவசியம் பிரளயம் உண் டாக வேண்டுமென்னும் நியமமாகிய நியதி, அதனை வரைந்துகொள்ளும் தேசகாலங்கள், அவையடையுற்றவழி விரையாதியி லுள்ளிருக்கும் காரியத்தின்விரை, யுப்புதல்வாயிலாய சலனம், பீஜபுடத்தைப் பிளந்து முளைமுதலிய வற்றின் வெளிப்போதலாம் அசைவு, அதனினின்றும், பின்றண்டு தளிர்கிளைமுதலாய முறையாற் பலபரியந்த வியாபாரமாய கிரியை, என்னுமிம் முறையானே சர்வபாவங்களும் எதனுல் ஜீவகார, அர்த்தக்கிரியா சமர்த்தடைத்தாஞ் சத்தையை மருவினவோ அதற்கு உலகவிலக்ஷண பரமார்த்த சத் தையே கூறப்படும்; அல்லது அதுவே மாயிக, வியோமாதி பாவசித்தையினுலே வியோ மாதி பாவமா யடைவுற்றதாகும், அதனினும் அயலொன்று வியோமாதி சத்தமுடைய தாகாதாம் என்கின்ருர்:—சுத்தவென.

சுத்தவறி வாதலா லாகாய பாவனையாற் சூழ்விண் ணுகு
மத்திறனே யெப்பொருளும் பாவித்த போதுள்ள தத்துவா மந்தச்
சித்திடையே மூவுலகுந் திடர்கான லெனத்தோன்றிச் சிதையும் பல்கா
லித்தனையுஞ் செய்யவுந்தா னித்தனையுஞ் செய்யாம லிருக்கு மன்றே.(33)

(ப - ரை.) சுத்த அறிவாதலால் = தூய அறிவு மயமாதலான், ஆகாயபாவனை யால் = விண்ணெண்ணத்தான், சூழ்விண்ணுகும் = வியாபகமான வியோமமாகும், அத்திறனே = அம்முறையாகவே, எப்பொருளும் = சருவ பதார்த்தங்களும், பாவித்த போது = பாவனை செய்தகாலத்தில், உள்ளதத்துவாம் = அவ்வவ்வாகாரமாக அவ்வப் பொருள் உண்மைபோலத் தோற்றும், அந்தச் சித்திடையே = அவ்வறிவு வடிவ ஆன் மாவின்கண்ணே, மூவுலகும் = திரிபுவன ஊர்மிகளும், திடர்கானலென = மருப்பூமி யின்மாட்டுப் பேய்த்தேர் தோற்றுவதே யென்ன, தோன்றிச் சிதையும் பல்கால் = அநேகமுறை ஆவிர்ப்பாவ திரோபாவத்தை யடையாநிற்கும், இத்தனையுஞ் செய்யவும் தான் = அசங்கமாகிய தான் இப்பெருமூலகங்கள் யாவற்றையும் தோற்றிவைத்து

வினையாடின போதிலும், இத்தனையுஞ் செய்யாமல் இருக்கும் = இவ்வளவையும் எப் போதுமே செய்யாமல் சும்மாவிருக்கும். அன்று. எ. அசைநிலைகள். (33)

மனத்தன்மை (ஸ்ரீ - வீர.) அவித்தை யதன் காரியரகித அறிவுருபத் தன்மையானே ஆகாசகற் பத்தன்மைச் சிந்தையால் ஆகாசம்போலாம், அல்லது ஜீவபாவத்தை யடைந்த பரமாத் மாவானது சிதாகாச பிரஹ்மசிந்தையால் அறிவம்பரம் பிரஹ்மமேயாம். அநாத்ம பதார்த்த சிந்தையால் பெருஞ் சம்சாரத்தின்மேற் பெருகாநிற்கும். அல்லது பதார்த்த சிந்தையானே விடயீகரிக்கப்பட்டு ஆகாசாதி பதார்த்தப் பான்மையைப் பற்றியது போலவாம். பதார்த்த சிந்தையானே அருத்தத்தன்மை போன்றுயது என்றதையே விரிப்பார் தோன்றியென்றார். அற்புதமாக வியாபித்திருக்கும் சித்தர்ணவத்தில் ஞானதல் ஆவிர்ப் பாவ திரோபாவப் பிரதானங்களாய திரிபுவன தரங்கங்கள் விளங்கும் அத்தகைத் தாய்ப் பரமாத்மாவுளதாம். பராபரமாம் அப்பொருளே வயங்கக்கண்டால் கட்டறுமென இனிவருவதோடு பொருத்தினும் பொருத்தமே, உலகப்பெருங் கூட்டத்தை மாயை யாற்செய்யினும் உண்மையி லொன்றுஞ் செய்திலதாம். யாது சுத்தஞான மயத்தன்மை யோடு கூடியிருத்தலின் விண்ணெண்ணத்தால் விண்ணும், பதார்த்த சிந்தையிலுலே பதார்த்தத் தன்மையுற்றது போலாம்; "உருவ மியாவையுமுன்னியே யுரனுறும்பெயர்க, டருவதாகியே சாற்றி மெய்யிலகிடந்தானே" என மறையும் அறைகின்றது, தோற்றல் மறைதல் வடிவமான திரிபுவன தரங்கங்கள் அத்தியந்தம் விஸ்தீர்ணமாய எவ்வத்து வின்கண் ணிலங்குதல் மருப்பூமியிற் கானனீர் இலங்குவது போலுமா மென்றுணர்க. ஜகத்தாரோபப் பிரகாரத்தைக் காட்டி அதனது பொய்மையிற் காரணங்கூறுவார் இத்தனையு மென்றார். எப்போது மூள்ள தன்னிடத்திற் றன்மாத்திரமா யிருப்பதானே பெரும்பெரும் பிரமாண்டங்களின் அநந்தமான கூட்டத்தில் விசித்திர லீலகளைச் செய்துகொண்டிருந்த போதினும் ஒன்றுஞ் செய்யவேயில்லை யாதொரு கிரியையும் கிடையவே கிடையாது எனவே நிருவிகார வுபாதான முடைமையே காரியப்பொய் மையிற் காரணமாம்.

(ச.) உள்ளது = சன்மாத்திரமான பிரஹ்மம், சுத்தவறிவாதலினுல் = ஞானகார சர்வான்மக மாதலினுல், அதுவாம் = அப்பொருளாம், பிரமம் ஞானமயம் ஞானஞ் சர் வான்மக மாதலின் வியோமாதி பாவத்தால் அவ்வவ்வுருவா மென்பதாம், திடர்=மருப் பூமியில், கானலென = கானலிற் கற்பிதமான் ஜலங்கள்போல், இத்தனையும் = சகல கற்பனையும், இத்தனையும் = அற்பமும், ஓர்போதும் செய்யாம லிருக்கும், ஜகத்பிரதீதி பிராந்திமாத்திர கற்பிதமாதலின் என்பதாம், திடர் = உவ்ணம் பொருந்திய தடாகத் தில் என்றும் பாடபேதமாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வீரிஞ்சன் முதலாகிய ஜகத்திற்கு மூலமென நிரூபிக்கப் பெற்ற வத்துவினது தத்துவத்தைக்கூறி அதனையறியிற் சகல துக்க நிவிருத்தியுண்டா மென மறைமுறையே யறைகின்றார்:—நிருவிகற்பவென.

நிருவிகற்ப வான்மாவிற் சகத்தோற்ற மொடுக்க மிவை நேராயில்லை, மரு விகற்ப பேதமுறுப் பராபரமா மப்பொருளே வயங்கக் கண்டாற், பெருமனக் கட் டறுமைய மறுங்கரும மறுமென்றுன் பெரியோன் வள்ள, லொருகடுகிற் பொன்மேரு புகிலன்றே பிரமாண்ட மொடுங்கு மென்றுன்.

(ப - ரை.) நிருவிகற்ப ஆன்மாவில் = விகற்பமில்லாத ஆன்மாவினிடத்தில், சகத் தோற்ற மொடுக்கமிவை = உலகின் உதயதிதிபங்க மென்னுமிவை, நேராயில்லை =

வாஸ்தவமாக வில்லை, மருவிகற்ப பேதமுரு = யாதொரு அஸ்தமயாதி பேதமும் மருவாது அறிவாகவே யிருக்கும், பராபரமாம் = பரங்களும் அபரமாகும்படி யிலங்கும், அப்பொருளே = அத்தகைய பரமாத்மாவை, வயங்கக் கண்டால் = ஐயந்திரிபறத் தரிசித்தால், பெருமனக் கட்டறும் = இருதயப் பெருங்கிரந்தியானது இரியும், ஐயம் அறும் = சருவசமுசயங்களும் போம், கருமம் அறும் = கருமங்கள் யாவுமே கழிந்தேகும், என்ருன் பெரியோன் = என்றிந்தப் பிரகாரம் ஸ்ரீ வசிஷ்டபகவான் கூற, வள்ளல் = ஸ்ரீ இராகவர், ஒருகடுகில் = அற்பமான ஒருசர்ஷப உதரத்தில், பொன்மேரு = அதிவிசாலமாகிய சுவர்ணபர்வதம், புகுலன்றே = நுழைந்தாலல்லவோ, பிரமாண்டம் = சருவ திருசிய மயமாய பிரமாண்டம், ஒடுங்கும் என்ருன் = காணும லொழிந்தோடி விடுமெனச் சங்கித்தார். (34)

(ஸ்ரீ - வீர.) நிருவிகற்ப ஆன்மாவானது சருவ சங்கற்பங்களையும் விட்டுவிட்டிருக்கின்ற தென்பதாம், அது உதயமற்றதாம் எப்போதும் நிச்சலமாக விருப்பதாம், நாசரகித சித்துருவமான தன்னிடத்திலேயே நிராதாரமா யிருப்பது என்றுணர்ந்து கொள்க. இங்ஙனம் ஆத்ம சொரூபத்தைப் பிரதிபாதித்து, அதனை நன்குணரும் பிரயோஜனத்தைக் கூறுவார், பெருமனக் கட்டறுமென்ருர். மனக்கட்டு = அகங்காரம், பராபரம் = பரம் உயர்ந்தது அபரம் தாழ்ந்தது அவ்வடிவ மெனவே சருவான்மக மாகுமென்பதாயிற்று. பரமாத்மாவினும் வேருயபாவுங் கற்பிதமாதல் அசம்பவமாதலின் அத்வைத ஞானம் அரிதுபெறுவதும் அமையாதாம் என ஆக்ஷேபிக்கின்ருர். வள்ளல் ஒருகடுகி லென. நிருவிகாரமாயும், அஸ்தமனமற்ற வறிவாயும், அதனுனே சுவஜாதியாதி பேதங்களையும் உதயஸ்திதி முதலிய வற்றையும் விட்டிருப்பதாயும் உள்ளது தன்னுடைய சொரூபமேயாம்; உலககாரணமாகிய மாயையும் சிறிதென்னுமாறு பெரிய பிரஹ்ம சொரூபமாகிய தன்னே யதார்த்தமாக வறிந்தபோழ்து, மூல அஞ்ஞானங் கெடுதலானே அதன் காரியமாகிய அந்தக்கரண தாதாத்மிய அத்தியாசவடிவ இருதயக்கிரந்தி நசிக்கும், அது நாசமாதலினுனே அதனை மூலமாகவுடைய எல்லா ஐயமுதலியவையும் சிதையும், இவனது கருமங்கள்யாவும் நசிக்கும் எனமறையும் அறைகின்றது. யாது அளவைகளானே எங்ஙனம் அறியப் பெறுகின்றதோ அது அங்ஙனமே யிருக்குமன்றி வேறுரூபமாகமாட்டாதாம், பிரஹ்மமோ அறியப் பெறுவதில்லை, அதனைச் சத்துரூபமெனத் துணிவான் கூடுதல் யாங்ஙனம்? ஜகமோ அவ்வாறறியப் பெறுவதா யிருப்பதால் அசத்தென்று கூறுதல் யாங்ஙன மேலுமென, வினவிய முன் வினுக்கள் இரண்டில், முதலாவதற்குச் சமாதானஞ் செய்து கொண்டேவந்து, இத்திருசியத்தின் பொய்ம்மை யின்றிப் பிரமதத்துவமானது எத்தகையனுலும் எக்காலத்தும் அறிய முடியவே முடியாதாமென்பது திண்ணமே யாமென முடித்தவழி, சிறிது அதிக விசேடத்தைக்கருதி ஸ்ரீ இராகவர் இரண்டாவது வினுவைக் கிளப்பல்:—வள்ளல் என்றதாம். ஹேமகாமுனிவரே! பிரஹ்மத்தின்கண் உலக முத்தியஸ்தமாயின் இவ்வாறுகலாம்; ஆனலதுவே சம்பவியாத காரிய மன்றே: என்னே, திருசியக் கூட்டமாய பிரஹ்மாண்டமான இத்துணையுலகின் நிலைமைக்குப் பொய்ம்மை யெங்ஙனம் உளதாகும்? பரமசூக்குமப் பிரஹ்மத்திற் சின்மாத்திர ரூபத்தன்மை யுண்மையின் இத்துணைப் பிரஹ்மாண்ட விஸ்தார ஸ்தூலப்பிரபஞ்சத்தின் அத்தியாசம் பொருந்தாமையின்; ஏனெனின்கடுகின் உதரத்தில் மேருகிரி நுழைதல் எங்ஙனந்தான் முடியும்?

(ச.) நிருவிகற்ப ஆன்மாவில் இல்லை, நித்தியஞான சொரூபனை தன்னில் ஒருவனே யிருக்கின்ருன் என்பதாம். உலகம் மயன்மாத்திர மாதலினுனே பரமாத்மா உத

யஸ்திதி மிருதிகளே விட்டிருக்கின்ற தெதனுல் அத்தகைத்தாம். பராபரம் = பரம் = பிரஹ்மாதிகள், அவரம் = நிக்கிருஷ்டர்கள் = தாழ்ந்தவர்கள் எதனிடத்தோ அது பராவரம், சர்வோத் கிருஷ்டம் என்பதாம் மனக்கட்டு = இருதயக்கிரந்தி, ஐயம் = சர்வ சமுசயம், பெரியோன். முன்றிருஷியத்துக்கு வெளியில் அசத்துவமும் திருஷ்டாவாகிய ஆன்மாவின் கண்ணே சத்துவமும் கூறப்பட்டது அவ்விரண்டுங் கூடாதெனல் ஸ்ரீ இராகவர் = வள்ளல், பிரமாண்ட முதலிய திருஷியத்திதி, ஒடுங்கும் - வாகியத்தினசிக்கும் திருஷ்டாவிலடங்கும், என்றுன், ஆதேயப் பிரபஞ்சத்தைக்குறித்து அதன் ஆதாரமான திருஷ்டாவாகிய ஆத்மாவின் பரிச்சின்ன சூக்ஷமமாதலின் என்பதகருத்து.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பிரஹ்ம ஞானியரது சமாகம வாயிலாக அத்வைத சாஸ்திரத்தினது நிரந்தர அப்யாசத்தான் அநுசுலபம் அத்வைதஞானம் எனப்பரிகரிக்கின்றார். உலகில் ஸ்தூலத்தகைமை ஆராய்ச்சியின்முன் நிற்குமாயின் நீ கூறியது சரியாம், அஃதவ்வாருகாதாம், உனக்குலகிலிருக்கும் ஸ்தூலத்தன்மை ஞானம் எம்மால் நாட்கு நாள் ஊகங்களாலே திடஞ்செய்யப்படவே யக்கால் நீயாம் கூறியதைத் துணிவாயென ஸ்ரீ வசிஷ்டபகவான் உபதேசிக்கின்றார்:—அருந்தவனென.

அருந்த வன்சொல் வானூலா னல்லோ ராற் றிங்களா லன்றிநாளாற்
றெரிந்துவிடும் பன்னூலின் சித்தாந்த மிதுவிதனைச் சிந்தை செய்யிற்
புரிந்தபுவி யிராகிற்கப் போயொளிக்கு நிட்டையுடன் போதஞானம்
விரிந்துணர் வோர்க்கு குயர்சீவன் முத்திபெற லாமிதுவே விதேகமுத்தி. ()

(ப - ரை.) அருந்தவன்சொல்வான் = அரிய தவத்தினையுடைய ஸ்ரீ வசிட்டபகவான் உத்தரங் கூறுவதாவது : நூலால் = நன்ருன அத்தியாத்ம சாஸ்திரங்களாலும், நல்லோரால் = அருமையான சாதுசமாகமத்தாலும், திங்களாலன்றி = மாதங்களால் அல்லாமல், நாளால் = தினங்களாலேயே, தெரிந்துவிடும் = இப்பரபோதத்தை யடைவாய், பல்நூலின் சித்தாந்தம் இது = எல்லா இதிகாசங்களின் சாரம் இதுவேயாம், இதனைச் சிந்தைசெய்யில் = இதனையே சந்ததம் விசாரித்துக் கெண்டிருந்தால், புரிந்தபுவி = மஞ்ஞு கற்பனையினலே தோற்றிய திருசிய ஜாலம், இராகிற்கப் போயொளிக்கும் = இருக்கும் போதே அஸ்தத்தை யடைந்துவிடும், நிட்டையுடன் போத ஞானம் விரிந்துணர் வோர்க்கு = ஞாத எக நிஷ்டர்களாய் லௌகிகவைதிக கருமத்தியாகிகளாய் ஆத்மஞான விசாரிகளாய் உள்ள மூதுணர்வோர்கட்கு; உயர் ஜீவன்முக்தி பெறலாம் = மேன்மைமிக்க ஜீவன்முக்தி திசையை யடையலாம், இதுவே விதேகமுக்தி = இது விதேகத்தான் முக்தையையாம், தேகேந்திரிய சதசற்பாவமாத்திரத்தான் முக்தியிரண்டின் சிறப்பாம் அனுபவத்தானே, அன்றும் துவைதப்பிரதிதி யிரண்டிடத்து பின்மையின். (35)

(ஸ்ரீ - வீர.) எதனது பரமாயிருத்தால் உயர்போதமானது உறுமோ அச்சாஸ்திரம் யாதாங்கொலோ வெனக்கடாவ விடையளிப்பார், பன்னூல் என்றூர். பாரதாதி இதிகாசங்களின் மத்தியிற் சாரத்தன்மை யுளதாவதன் மாட்டேதுவைக் கூறுவார் இதனை யென்றூர். ஜீவன்முக்தத் தன்மையுமுண்டாம் விதேகமுக்தத் தன்மையு முண்டாம். அத்வைத ஞானப்பொருட்டுத் துவைதவிலயமே அதற்குத்தக்க வுபாயமாகச் செய்யத் தக்கதாம், விசாரத்தானே யென்னேபயன் எனின் ! இராகிற்கப் போயொளிக்கும் என் பதேயாம். விசாரஞ்செய்தன் மாத்திரையானே திருசியம் இருக்கும்போதே மறையும், மண்ணினுங்கடம் பொன்னினும் பூடணம் வேறிலாமைபோலு முணர்க. உலகதிருசியம்

அதிவ்டான சாஸ்ஹாத்கார பரியந்த மிருப்பதாம், ஆராய்ச்சியினனே நிழலிலாரோபித்த பேய்போல அஸ்தம் ஆய்விடும், பொடியாங் தடியடி முதலியவற்றுற்போலு மல்லவாம், ஆண்டும் இருந்தபடியே அஸ்தமாய்விடும், அவயப்பிரிவு முதலிய வாயிலாயல்லவாம், இதனைச் சிந்தைசெய்யில் என்பதையே விரித்துரைப்பார் நிட்டையுட னென்றார். சில தினம்வரை கிளர்ச்சியின்றிய மனத்தனுகிச் சாதுசங்க சற்சாஸ்திரப் பயில்வுட னிருத்தி யென்னின், யாமொரு நொடியில் நினது சித்தருவத்தில் திருஷ்டியமெதுவு மில்லாமற் கானனீரை யாராய்ச்சியாற் றுலைத்தல்போற் றுலைத்துவிடுவேம். திருஷ்டியமொழியவே திருஷ்டாத் தன்மையும் ஒழிந்துபோம்; கேவலமறிவு மாத்திரம் எஞ்சாநிற்கும், திருஷ்டி யிலதாகவே கேவலம் திருஷ்டாமாத்திரம் இல்லையென்பதாக இல்லை மற்றே இருமை யொருமைகளும் இல்லாமலேகும், தத்துவஞானமானது சற்சாஸ்திரத்தினுலேயே யாமல் லாது மற்றொன்றினுலு மாகாதாம் ஆகலின் சாதுசங்க சற்சாஸ்திரபரனு யிருத்தியென் னின் பரமபதத்தை மாதங்களென்பதாக இல்லாமற் சிலதினங்களிற்றுனே அடைவது திண்ணம், ஆனல் முக்கியமான சாஸ்திரம் யாதாமெனின்? சுபமாகிய இம்மகாராமா யணமேயாம், உத்தமமான இதைக் கேட்டமாத்திரையானே ஞானமுண்டாம், எல்லா வற்றினு மிதுமாத்திரம் எங்ஙனம் உத்தம மாருமெனின்! எல்லா இதிகாசங்கட்குள்ளு மிதுசாரமெனக் கூறப்பெறும், வாக்கிய சந்தர்ப்ப வடிவமாய இதனைச் சிரவணஞ் செய்த மாத்திரையானே கெடாததாய ஜீவன் முக்தத்தன்மையானது அவசியம் முயல் வின்றியே யுதிக்கும், ஆகலின் இதுவே மிகவும் பலித்திரமாம். கனவு முதலியவற்றின் கண் ணிருந்துகொண்டே இது கனவென் றுணரின் கனுமெய்யென்னும் பாவனை யொழிந்து பேசவதேபோல வுலகமாகிய திருஷ்டியமானது இருக்கும்போதே ஆராச்சியி னனே யொழிந்துபோம் ஞானத்திற்குச் சாதகமாகிய ஹேகக்கூட்டம் யாவை இந்நூலின் கண்ணே யுளவாமோ அவை பிறநூலின் கண்ணும் உளவாம், யாவை யீண்டிலவோ அவையெதன் கண்ணும் இராவாம், ஆகலினிதனை யறிஞர் சமஸ்த மெய்ஞ்ஞான சாஸ்தி ரதனங்கணிறைந்த களஞ்சியமென வுணர்வர். அவ்வான்மாவிலேயே சித்தமுடையவர் களும் அதையடையும் முயற்சியாலேயே வாழ்நாளைக் கழிப்பவர்களும், ஒருவருக்கொரு வர் அதனையே போதிப்பவர்களும், அதனையே யெப்போதும் பேசுபவர்களும், அதைக் கொண்டே நித்தியம் சந்தோஷிப்பவர்களும் அதிலேயே இரமிப்பவர்களும், ஆகிய ஞானசாதன சிரவணதியின்கண் ணயலொருதொழிலு மிடையிலிலாமல் ஒரே நிஷ்டை யையுடைய ஆத்மஞான ஆராய்ச்சிபுடையோர் தமக்குப் புகன்ற ஜீவன்முக்தத் தன்மை யான துண்டாம், அது தேகத்தை விட்டபின்புண்டாம் தூயமுத்தத் தன்மையேயாம், அயலன்றும்.

(ச.) ஸ்ரீ வசிட்டர். அருந்தவன் தெரிந்துவிடும், சாதுசங்க முதலிய வுபாயங்க ளால் மனனநிதித்தியாசனங்களின் அப்பியாசத்தினுல் அசம்பாவனுதி நிவர்த்திக்கிற் சிலதினத்தாலே ஆத்மாவொருவனே யீதனைத்து மெனவுணரும் பரபோதத்தை இராமா! நீ பெறுவாயென்றதாம். அந்திய வுபாயங்களைவிட்டு அவ்வுபாயங்களால் நிறை ந்த இவ்வாகாச ஜாக்கியானத்தையே பாவனைசெய்யிற் சகல ஜீவர்க்கும் ஆகாசஜ சாதாரணத் தன்மையினுற் சீவன்முக்தியே சித்திக்குமெனல்! பன்னூலின், சித்தாந் தம் = சர்வ இதிகாசங்களின் சாரம், புரிந்த = கற்பிதமான, புவி = ஜகத்து, நிற்கப்போ யெனிக்கும் = இருந்து மில்லாததாம். சம்சாரஞ் சித்துருபமாகப் பிரதீதியாயின் ஜகத் தாகாரம் சத்தியமாகவே லயமாதலின் என்பது கருத்து. சத்தியமே சம்சாரஞ் சித்து ருபமாகப் பிரதிதியாயின் சகத்தாகாரம் லயமாதலி னென்பது கருத்து; இது பாட

பேதம், நிட்டையுடன் - தொடர்ந்த ஆன்ம சாக்ஷாத்கார விருப்போடுகூட (போத) ஞானம்—ஆன்மஞானத்தை - விரித்துணர்வோர்க்கு - சிரவணப்படி சாஸ்திரீய ஞானத்தால் விசாரித்தறிபவர்க்கு; ஜீவன்முக்தி பெறலாம் = ஜீவன்முக்தி பெறக்கூடும், இது விதேகமுக்தி போதநிட்டையுடன் - சாக்ஷாத் காரத்தோடு, போதஞானம்-ஆத்மஞானத்தையும், விரித்துணர்வோர்க்கு - சிரவணப்படி சாத்திரசம்பந்த ஞானத்தால், விசாரித்தறிபவர்க்கு - பெறலாம் = சித்திக்கும்; அருந்தவன் சொல்வா னூலானல்லோராற் பல சமயமனேத்து மாய்ந்து, தெரிந்துணருங் காலத்துச் சித்தாந்தமேதினைச் சிந்தை செய்யில்—என்னும் பாடத்திற்கு மிதுவே பொருளாகவுணர்க, புவியார், புவி=சகமும், ஆர் = நீகான் முதலாம் யாவரும் ஆகிய திருஷியமும். இவைபாடபேதம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சிரவணதி பலக்கூறு விரிக்க வற்றபோது ஜீவன்முக்த விதேகமுக்த இலக்கணங்களே யறிய விரும்பிய ஸ்ரீ இராகவர் வினவல்:—என்பதென.

என்பதுசொல் லியமுனியை யுடனிறந்த வீடுமுட னிருந்த வீடு
நன்பழநூல் வழியியற்ற நவில்கென்ற விராமனுக்கு நல்லோன் சொல்வான்
வன்பலசெய் கையிற்பயின்று முன்ரேன்றும் விண்டோன்ரு வகைமையுற்ரே
ரின்பமுற வருஞ்சீவன் முத்திபதம் பெற்றுயர்ந்த வியல்பி னேரே. ()

(ப - ரை.) என்பது சொல்லியமுனியை = மேற்கூறிய வகையே ஜீவன்முக்தர் பெருமையைக் கூறியபோது பெருந்தவ ஸ்ரீ வசிட்டபகவானே நோக்கி, உடலிறந்த வீடும் = விதேகமுக்தியும், உடலிருந்த வீடும் = ஜீவன் முக்தியும், நன்பழநூல் வழியியற்ற = இனிய பிராசீன சாஸ்திர முறையே யான்முயன் றப்யசிக்கும்பொருட்டு, நவில் கென்ற இராமனுக்கு = அவ்விரண்டினையும் அவற்றை யடைந்தோர் இலக்கணத்தையும், உபதேசித் தருளவேண்டு மென்று பிரார்த்தனை செய்துகொண்ட ஸ்ரீ இராகவருக்கு, நல்லோன் சொல்வான் = ஸ்ரீ வசிஷ்டபகவான் றிருவருள் செய்கின்றார், வன் பலசெயகையிற் பயின்றும் = அநேகமான கஷ்டாநுஷ்ட லாபத்தொழில்களோடு கூடி விவகரித்தும், முன்ரேன்றும்= முன்பிரதீதியாம், விண்டோன் ரூவகைமை=ஆகாயந் தோன்ரு முறையையுற்ரோர், இன்பமுற வருஞ் சீவன் முத்திபதம் = ஆனந்தம் பெருக வாராநின்ற ஜீவன்முத்தி பதத்தை, பெற்றுயர்ந்த = அடைந்துயர் வடைந்த, இயல்பி னேரே = சுபாவத்தினரேயாவர்.

(ஸ்ரீ - வீர.) விஞவெளிப்படை, ஜீவன் முக்தனது சுவானுபவத்தானே தெரிந்து கொள்ளப்படும் இலக்கணங் கூறுவார் வன்பலவென்றார். தோற்றமாத்திரத் தானுதல் பரதிருஷ்டி யானுதல் விவகாரத்தோடு கூடியிருந்த போதினும் யாவனுக்குத் தோற்ரு கின்ற(படியான்)இவ்வுலகம் தத்துவ திருஷ்டியானே அஸ்தமாகியதாமோ வியோமப் பிரஹ்மம் இருப்பதேயாமோ அவன் வாழும்பொழுதே முக்தன் எனப்படுவன்; எனப் படவே எப்போதும் பிரத்தியக்ஷமாகவே சிதாகாச மிருக்கும், முன்ரேன்ரூவுலகம் என்பதாயிற்று, விதேக முக்தனுடைய இலக்கணத்தையும், ஜீவன்முக்தனுடைய இலக் கணத்தையும் கூறவேண்டும், கேட்டபின் சாத்திரமாய நேத்திரத்தா லுண்டாம் மதி யால் அவ்வாறே யான் முயலவேண்டும் என ஸ்ரீ இராகவர்கூற, ஜீவன்முக்தி வாயிலா கவே விதேகமுக்தி யுண்டாதலின் சொன்முறை தன்னினும் பொருண்முறை வலிதே யென்னும் நியாயம்பற்றி விஞவிய முறையைப் பற்ரூது முதலிற் சீவன்முக்தன் இலக் கணமியம்புவாம்; சாஸ்திர நிஷித்தமில்லாத விவகாரவானுயினும், எவனுக்குலகம் உண்மை விழியானே பாதமாதலின் இலய மடைந்ததாய் விண்போலச் சூனியமாமோ

கண்ணுடிநிகரம்போலப் புலப்படினும் இல்லாததேயாமோ அவன் ஜீவன்முக்தன் எனப் பெறுவன். தோற்றுகின்ற இக்கிரிந்தி சமுத்தாதி யுலகம் உணர்வோனது தேகேந் திரிய விவகாரத்தோடுகூட மகாப் பிரளயத்தில் பரமேசுரரால் உபசங்காரிக்கப்பட்டுச் சொரூபம் பொடியாக அஸ்தமாகிப்போம். ஈண்டோ அங்ஙனமன்றும் மற்றே தேகேந் திரியாதி விவகாரம் இருக்கின்றதேயாம். கிரிந்தியாதிகளோ ஈசுரரால் உபசங்காரிக்கப் படாமையின் முன்போன்றே யிருந்துகொண்டே மற்றைய எல்லாரானும் வெட்டவெளி யாக அனுபவிக்கப் படுகின்றனவேயாம். ஜீவன்முக்தனுக்கு அவற்றைக்கவரும்விருத்தி யில்லாமையின் தூயிலிற்போல யாவும் அஸ்தமாகியே யிருக்கின்றன. சுயம்பிரகாசமாகி விளங்கும் சிதாகாசம் கேவலம் எஞ்சிநிற்கும், பத்தனுக்குத் தூயிலின்கண்ணே அக்கா லத்திய விருத்தியுபாவ சாமிய மிருந்தபோதினும் வருமதிவிருத்தி விரையிருப்புண்மை யின் ஜீவன் முக்தத்தன்மை யின்றும்.

(ச.) இராமனுக்கு ஸ்ரீ வசிஷ்டர் சீவன்முக்த நிலக்கணங் கூறல்:—நல்லோன், முன்விண்டோன்று, திருசியமான விசுவத்தை, வியோமாதி ரூபமாகக் காணுமல், தோன்றும் = சிதாகாரரூபமாகக் காணும்,

(ஸ்ரீ - வீர - அ - கை.) அச்சீவன்முக்தர்களது இலக்கணத்தையே மீண்டுமிரண்டு செய்யுட்களாற் கூறல்:—மிகவென.

மிகவருகா மாதிகளாம் விகாரமடைக் தும்விண்போன் மிகநொய்தாளே
ரகமெனலின் றிச்செயல்கள் செய்தாலுந் தவிர்ந்தாலு மழுத்த மற்றோர்
சகநெறிகள் செய்திடினு மங்கியர்போற் கண்டுகுளிர் தன்மை சான்றோர்
திகழ்மனமு நினைவுமிருந் துஞ்சிறிது மில்லாதோர் சீவன் முக்தர்.
துக்கசுகங் களிலமிழ்ந்தி மிதவாத புந்திநிலே சுபாவ மானேர்
புக்கசுழுத் தியினனவாய் நனவின்றி வாதனைதீர் போத முற்றோர்
மிக்கசம மாயுலகால் வெருளாம லுலகினையும் வெருட்டா மேலோர்
சிக்கறநன் னினைவிருந்து நினைவிலா தவரிவரே சீவன் முக்தர். (37-38)

(ப - ரை) மிகவரும் = நுகர்வினைவயத்தால் வாராநின்ற, காமாதிகளாம் விகார மடைந்தும் = இராகத்துவேட பயாதிகளை யடைந்து விகாரப்பட்ட போதினும், விண் போல் = உள்ளே ஆகாயம்போல, மிகநொய் தானேர் = மிகவுந் தெளிந்து பற்றற்ற வர் சீவன்முக்தர். அகமெனலின்றி = அகங்கிருத பாவமில்லாமல், செயல்கள் செய் தாலுந் தவிர்ந்தாலும் = விவகாரங்களைச் செய்தபோதினும் செய்யாத போதினும், அழுத்தமற்றோர் = மதியில் யாதொருவிதமான பற்றுமற்றவர் சீவன்முக்தர், சகநெறி கள் செய்திடினும் = உலகபதார்த்த மியாவற்றினுடும் விவகரிப்பவராயினும், அங்கியர் போல் = செய்யாதவர் போலவே, அல்லது அயலார் பொருள்களில் விவகரிப்பவர் போலவே, கண்டு = எண்ணி, குளிர்தன்மை சான்றோர்|= தண்மைவாய்ந்த திண்மைய ரானேர் சீவன்முக்தர், திகழ்மனமும் நினைவும் = சமுசார சம்பந்தமாகி யிலங்கும் சங் கற்பவிகற்பங்களும் பல எண்ணங்களும், இருந்தும் = இருந்தபோதினும், சிறிதுமில் லாதோர் = அற்பமும் இல்லாதவரே, சீவன்முக்தர் = ஜீவிக்கும்போதே விடுபட்டவர் ஆவர், (37)

துக்க சுகங்களில் அமிழ்ந்தி மிதவாத = அஸ்த மூதயமாகாத, அல்லது அமிழ்ந்தி = இன்பத்துன்பங்களில் மூழ்கி, மிதவாத = வாட்டமகிழ்ச்சிகளை யடையா மல், புந்திநிலே சுபாவமானேர் = மதித்திதியானது சத்துவமாகியே நிலைக்குமியல்பினர்

சிவன்முக்தர். புக்க சுழுத்தியி னனவாய் = சர்வேந்திரியங்களும் மனதியும் தத்தங் கோளகத்தடங்கிய துயிலுற்று விழித்துக்கொண்டே யிருந்து, நனவின்றி = ஜாக்கிரத் தைக்கடந்து. வாதனைதீர் போதமுற்றோர் = நிர்வாசனை யுணர்வுற்றவரே சிவன்முக்தர். மிக்கசமமாய் = மூற்றினும் சமதிருஷ்டியை யடைந்து, உலகால் = உலகத்தினரால், வெருளாமல் = பயப்படாமல், உலகினையும் = ஜகத்தி லிருப்பவர்களையும், வெருட்டா = பயப்படுத்தாது, மேலோர் = உயர்ந்தோர் சிவன் முக்தர், சிக்கற நன்னினை விருந்தும் = பயாதியும் சமுசாரத் தொழிலாதியும் அற்றுக் கலாவாஞ்யினும், நினைவிலாதவ ரிவரே = நிட்கலராகிய இத்தகையரே, சிவன்முக்தர். (38)

(ஸ்ரீ - வீர.) அவனது பரரா லறிந்துகொள்ளக் கூடியதாய இலக்கணத்தையும் கூறுவார், துக்கசுகங்களி லென்றார். அடைந்தபடி விவகாரத்தில் அமைதியுற்றவ ரென் பதாம், மீண்டும் சுவானுபவ கம்மியமான இலக்கண மியம்புவார் புக்கசுழுத்தியென்றார். தன்னினும் வேறுய துவைதமானது உண்மையாக அநுபவிக்கப் படாமையின் சிவன் முக்தன் துயிலுற்றவனவன். விடயசந்நிதானுதியை யடைந்தபோதினும் விகாரத்தினை யடையாமையின் எங்ஙனந் துயிலுற்றவனே அங்ஙனம் துவைத ஆபாசம் புலப்படுத வின் நினைவுற்றவனு மாவன் என்பதாம் அல்லது, சாக்ஷத் தநுபவரூபமாகவே பிரஹ்மம் அநுபவிக்கப் பெறுதலின் நனவையு மடைந்துளான் என்பதாம். அவ்வாறே " ஓதரு ஞானியத்தை யுளங்கையிற் கனிபோற்காணும் " எனச் சருவேச்சுரனுலே கூறப்பெற்று முளது, இவனுக்கு நனவு அஞ்ஞனுக்கேபோலு மிலதாம், சுருங்கிய வாதனையனுதலின் சகலவாசனை விலயமாகச் சிவன்முக்த சம்பவமாதலின். பிராரப்தகரும வேகத்தானே வந்தடைந்தனவாய இராகத்வேஷ பய ஆபாசாதிகட்குத் தக்கபடி எங்ஙனம் வேண் டுமோ அங்ஙனம் நடித்தபோதினும் எவ்வறிஞனது உள்ளாத்ம வடிவம் வியோமம்போல அதி நிர்மலமாகத் தெளிந்துளதோ அவன் சிவன்முக்தன். விண்ணனது நிருமலமா யிருத்தல் போலவே ஆன்மாவும் இராகாதி மலரகிதம் ஆமென அறிந்துகொள்க. எவ் வறிஞனுக்கு யான் கருத்தா என்னும் வகையினதாகப் பாவனைஞானம் உண்டாகாதோ, இந்திரியார்த் தங்களி லிந்திரியங்கள் ஈடுபடுகின்றன யானல்லன், யாலை அவற்றின் வியாபார சாக்ஷி அகர்த்தாவாவேன் என்று யாவன் காண்பானே அவனே சிவன்முக் தன். எவனது அந்தக்கரணம் ஆழ்ந்து தாழ்ந்து போவதிலையோ, அதாவது யான் இந் நிடேதத்தைச் செய்துவிட்டேன் இவ்விதானத்தைச் செய்திலேன் ஆகலின் நரகத்தில் வீழ்ந்து வருந்துவேன் என்பதாக எவனதுமதி வாதையுறுவதில்லையோ அவனே சிவன் முக்தன், கலாவானுயினும் = அவித்தையினனே அவயவத்தோடு கூடினவனுயினும், நிட்கலன் = உண்மையாக அவயவமற்றவன், சிந்தையா பாசத்தோடுகூட நிகழ்பவனே யாயினும் உண்மையாகச் சிந்தையற்றவன். அன்னியர்தமதாம் பொருள்களில் விவகரிப் பவனைப்போலத் தண்மையன் தாபமற்றவன் துயரற்றவன், மகிழ்ச்சியற்ற மாண்பிற்று மிஃதுபலக்கணமாம், அபிமான மில்லாதவனுகிய ஜீவன் முக்தனுக்கு, சமஸ்த அநுத் தக் கூட்டங்களினது பெருக்காலுஞ் சுருக்காலும் மகிழ்ச்சியேனும் வாட்டமேனு முண் டாகாதாம், மாலை சந்தனம் பூசைமுதலிய இன்பமுண்டாகிய போதும் சமுசாரிக்கே போலும் மகிழ்ச்சி யுண்டாகாதாம், தனஹானி திக்காராதி துக்கமுண்டாகிய போதும் தீனனுகான், இப்போதியதாய தன்முயற்சி விசேடமில்லாமலே நுகர்வினை கொணர்ந்த முற்பிரவாகத்தில் வந்த பிக்ஷான்னுதிகள் கிடைத்தபடி தேகரக்ஷை, சமாதிதாட்டியத் தான் மாலை சந்தனுதித் தோற்றமின்மையின், ஒருகால் எழுந்தசையில் தொடக்கத் தோற்ற மேற்படினும் விவேகதாட்டியத்தானே தள்ளுங் கொள்ளும் புந்தியின்மையின்

மகிழ்ச்சி முதலியவற்றின் இன்மை யேற்படும். விழி முதலிய இந்திரியங்கள் தத்தமது கோளகங்களிலே யிருத்தலின் உபரதியின்மையின் விழித்திருப்பன், மனோவிருத்தி ரகிதமா யிருத்தலின் துயிலுற்றோன், இதனாலே இந்திரியங்களானே பொருட்டோற்ற மென்னும் ஜாக்கிர இலக்கண மில்லாமையின் சாக்கிரமவனுக்கின்றும். போதமுளதாய போதினும் உண்டாய பிரஹ்மவித்தாந் தன்மை யபிமானுதியும் போகார்த்தந் தொடங்கிய காமாதியுந் தீதோஷமாம், வாசனாவிருத்தி ரகிதத் தன்மையானே அத்தோட மில்லாமையின் நிர்வாசனத் தன்மையாம், இராகமூர்த்தித வண்ணம் போஜனாதிப் பிரவிருத்தி, துவேஷமுண்டாகிய பிரகாரம் பௌத்த காபாலிகாதிகளினின்றுந் திரும்புதல், பயமூர்த்தித அளவு பாம்பு புலியாதிகளி னின்றும் அகலுதல் ஆம். ஆநிசத்தத்தானே மாச்சரியாதி, மாச்சரிய மூர்த்தமானம் மற்றைய யோகிகளினும் அதிகமதாகச் சமாதியாதியனுஷ்டானம், எழுந்தசையை யடைந்த போதினும் இத்தகைய ஆசரணம் முற்பயிற்சியானே யடைவுற்றபோது விசிராந்த சித்தனுக்குக் களங்கமியாது மின்மையின் உட்டெளிவுறைந்து நிற்கும். விண்ணின்கண் தூமதூளிமேகாதி கூடினும் பற்றிலாவியற்கையானே அதிசயமாகத் தெளிவுளதாந் தன்மை யாதல்போலும். எப்பிரஹ்ம வித்தின் பாவம் = சத்தை = இயற்கை = ஆத்மா, அகங்காரத்தோடு தாதாத்மிய அத்தியாசத்தால் உள்ளே மறைபடவில்லையோ, எம்மதியில் ஐயமேகிடையாதோ ; ஐயமிலதாயவழி மூவுலகவத்தானும் பந்திக்கப் படமாட்டான்; என்றால் அன்னிய கருமத்தால் மற்றென்னே யியம்பவேண்டும். உலகத்தில் பந்தமடைந்த புருடன் சாஸ்திரஞ் சாற்றிய கருமம் ஆற்றுபவனுகி யான் கருத்தா வென்னும்போது சிதாத்மா அகங்கிருதமாகும், துறக்கத்தை யடைவேன் என்னும் மகிழ்ச்சியானே மீதிபற்றுறும். செய்யாதவனே விட்டொழித் தேனேயென அகங்கிருதத் தன்மையையும் துறக்கலாப மின்மையால் வாட்ட முதலிய பற்றுகளையும் அடைந்திருப்பன், இங்ஙனம் வேண்டா மென்ற வினைகளினும் உலகசம்பந்த கருமங்களிலும் பொருத்தமானபடி பொருத்திக்கொள்க, ஜீவன் முக்தனுக்கோ தாதாத்மிய அத்தியாச மில்லாமையானும் மகிழ்ச்சி முதலியவை யில்லாமையானும் தோடமிரண்டு மில்லையாம். திரஸ்கரித்தல் வைதல் அடித்தல், முதலியவற்றின்கண் முயலாமையின் இவனேநோக்கி யிவ்வுலக மஞ்சாதாம், இதனாலே இவன்பால் உலகருக்குத் திரஸ்காராதிப் பிரவிருத்தி யிலதாதலினாலும், ஒவ்வொருதுஷ்டன் அங்ஙன் முயன்றபோதினும் இவனுடைய மனத்தில் அத்தகைய விகற்ப முண்டாகாமையானும் இவனும் பயப்படான் என்க. சத்தூரு மித்தூரு மான அவமானாதி விகற்பங்கள் சமுசாரக் கலக்கங்களாம், அவையிவன் பாலிலவாம், அறுபத்துநாலு கலைஞானமுணர்ந்தவனேனும் அவற்றின் அபிமான விவகார மில்லாமையின் கலையிலாத் தன்மையாம். சித்தமானது சொரூபமாக இருந்தபோதினும் விருத்தி யுதயமாகாமையின் சித்தமற்ற தன்மையாம். சிந்தையென மூலபாடமாயினே வாதனை வயத்தினாலே ஆத்மத்தியான விருத்தி யிருந்தபோதினும் லௌகிக விருத்தி யில்லாமையின் சிந்தையற்ற தன்மையாம் என்க. அயலாரது இல்லத்தில் விவாக உற்சவாதிகளில் தானேசென்று அவர்தம் பிரீதியின் பொருட்டு அவரது காரியங்களில் தலைப்பட்டு விவகரித்த போதினும் இலாபாலாபங்களில் மகிழ்ச்சி வாட்டவடிவ புத்தி சந்தாபத்தை யடையான்; இங்ஙனம் இம்முக்தன் தன் காரியத்திலும் சீதளனாகியே யிருப்பன் ; கேவலம் சந்தாபமில்லாமையான் மாத்திரம் சீதளத்தன்மை யென்பதாக வின்றும்; மற்றோ பரிபூரண சொரூப அனுசந்தானத்தானும் ஆமென்றுணர்க. " ஆன்மனிலாடியும் ஆன்மனிற் சுகித்தும், தேன்மலி தொழிலனே திகழ்தரும் பிரமவித், தான்மனினிலைத்தோன் ஆரமுதடைந்தோன் " எனமறையருளிய, யாவன் விவகரித்துக்கொண் டிருந்தபோதினும் " யான் யாதொன்

றுஞ் செய்கின்றிலேன் எனச் சொரூப நிட்டனெ யர்ன் றத்துவவித் தெனப்படுவன்'' என மிருதியருளிய நெறியானே சிற்சொரூபத்தின் மாட்டே நிட்டையை யடைந்து ளானே அவன் விழித்துக்கொண் டிருந்தபோதினும் தூங்குவோன்போல் நிர்விகாரனே யாவன், அத்தகையன் ஜீவன் முத்தன் எனப்படுவன். கிடைத்ததைக்கொண்டு மகிழா நிற்கும் எவனுடைய முகக் காந்தியானது இன்பத்துன்பங்கள் எய்திய காலத்தும் வீரித லும் குவிதலுமடைய மாட்டாதோ அவன் ஜீவன்முக்த னெனப்படுவன், யாவன் நிர்வி காரமான தன்பாற் றுயில்பவன்போல இருப்பினும் அவித்தையாம் நித்திரை யழிந்தபடி யால் தன்பால் விழித்தே யிருப்பனே தேகேந்திரியாதிகள் பாதிக்கப்படுதலின் பொறி களால் விடயங்கள் புலப்படும் நனவானது யாவனுக்கில்லையோ; நனவின் வாதனையை நிःசித்தமாகக் கொண்டுண்டாம் கனவும் யாவனுக்கு இல்லையோ எவன் வாதனையற்ற மெய்ஞ்ஞான வடிவமாகவே யிருப்பனே அவன் ஜீவன்முக்தன் எனப்படுகின்றன். இரா கத்துவேஷ பயாதிகளின் நெருடர்ந்த வடிவமாய்ச் சுழன்று நடனேப்போலத் தக்கதக்க வாறு நடித்துக்கொண் டிருந்தானெனினும் யாவன் உள்ளே விண்போல நிர்மலமறைப் பற்ற ஆன்மாவின்கண் ணிலைபெற்றிருப்பனே அவன் ஜீவன்முக்தன் எனப்படுகின் றன். விவகரித்துக்கொண் டிருந்தபோதினும் விவகரியாம லிருந்தபோதினும் அகங் காரத்தோடு கூடாத தன்மை யாவனுக்குளதோ, அவனதுமதி செய்தேன் செய்யவில்லை யென்னும் அபிமானத்தாற் பற்றுறுதோ அவன் சீவன் முக்தனெனப் படுகின்றன். எச் சிதாத்மாவினுடைய மறைப்பின துபாதி நீக்கத்தானே மூன்றுலகங்களினுடைய பிரள யத்தையும், எதனதுயாதி மறைப்பை யடைந்ததனனே அவற்றின் முற்சம்பவத்தையும் யாவன் காண்கின்றனனே, தனக்குத்தானே யொப்பானவனு யிருக்கின்றனனே அவனே ஜிவன்முக்தன் எனப்படுகின்றன்; விதேகமுக்தியின் கண்ணேயே எஞ்சுதலில் லாமல் ஆவரணங் ஏகலின், சாக்ஷியாகிய ஈசுவரிடத்திலோ ஆவரணம் இன்மையினு னும் மேற்கூறிய இரண்டன் கண்ணும் பாதியெனக் கூறியதாகும். எவனேநோக்கி யுலகர் அஞ்சாரோ, யாவன் உலகருக்கஞ்சானே, மகிழ்ச்சி பொறுமை பயமேதுவாய அஞ்ஞான அபிமானத்தினின்றும் லிடுபட்டானே அவன் ஜீவன்முக்த னெனப்படு கின்றன். சருவசமுசார சத்தியபுத்தியி னின்றுஞ் சாந்தியானவனும் அன்னியர்க ளுடைய பார்வைக்குத் தேக அவயவங்களோடு கூடியவனு யிருந்தபோதினும் அவயவ மற்றவனுவனே யாவுந்தெரிந்தவனுயிருந்த போதினும் மனமற்றவனு யிருக்கின்றனனே அவன் ஜீவன்முக்தனெனப் படுகின்றன், யாவன் எல்லா வத்துக்களோடும் விவகரித் துக்கொண் டிருந்தபோதினும் இராகாதி தாபமின்றிக் குளிர்ந்திருக்கின்றனனே, இரா காதி விடயங்களாகிய பதார்த்தங்களிலும் அவற்றின் வடிவமாதலின் நிறைந்திருக்கின் றனே அவன் ஜீவன்முக்தனெனப் படுகின்றன்; தள்ளக்கொள்ள முடியாத தனதான் மாவின் கண்ணே அத்தியஸ்த மாயேனும் பொய்யென நிச்சயிக்கப் பட்டதாயேனும் இருக்கும் பொருள்களில் இராகாதி சம்பவித்தல் கூடாதன்றே !

(ச.) காமாதிகளாம் விகாரமடைந்தும் = இராகத்துவேட பயாதிகளுக்கு யோக் கியமாக நடந்தும், மிகநொய்தானேர் = இராகாதிகள் அத்தியாரோபிதமாதலின் அந்தக் காரணத்தில் ஆகாசம்போல அதி நின்மலர். அகமெனலின்றி = அகங்காரபாவ மின்றி, நான் செய்தே னென்னும் அபிப்பிராயரூப அந்தக்காரண விருத்தியுடைய அகங்காரியன் றாய் அழுத்தமற்றோர், அந்தக்காரண விசேடமான புத்தி நலியாதவர். சந்தோடாதிக ளாற் பரிசிக்கப்படாதவர், செயல்கள் செய்தாலுந் தவிர்ந்தாலும் என்றமையால், செய் கைசெய்யாமைகளில் சாமானியங் கூறல், சகநெதிகள் செய்திடினும் மன்னியர் போற்

கண்டு = சர்வார்த்த ஜாலங்களில் விவகரிப்பவராயினும், பரப்பிரயோஜனங்களிற்போல் தற்பிரயோஜனத்திலுஞ் சமதிருஷ்டி வைத்து, குளிர்தன்மை சான்மூர் = ஆனிவிருத் திகளால் தபிக்கப்படாத சீதள நிறைந்த மனமுடையோர், மனமிருந்துஞ் சிறிது மில்லா தோர், சித்தமுடையரேனும் நிற்சித்தர், சம்சார்பிமான சித்த தோடங்க ளின்மையால் ஜீவன் முக்தர். நினைவிருந்தும் = தேகபந்தராயினும், சிறிது மில்லாதோர் = பந்தரகி தர் = தேகபந்த நிமித்தமான துக்கங்க ளின்மையாற் சீவன்முக்தர். (37)

துக்க சுகங்களில் = விஷய சம்பந்தமான துக்கசுக வேதுக்களில், அழுந்தி மித வாத = மறைந்துதியாத, துக்கவேதுவில் இலேச மின்மையால் மறையாததும், சுக வேதுவில் சந்தோஷ மின்மையால் உதியாததுமாகிய, புந்தி = நின்மல சித்தராய், சுபாவ நிலையானேர் = பிராரப்தகன்ம வசத்தினுல் எப்போது எது பொருந்திற்று அம் மட்டாலே ஜீவனஸ்திதிபெற்று அதிக விச்சை சேட்டையின்மையர். புக்கசுழுத்தியில் = அந்தர் முகத்திற்றூனே பொருந்திய, நனவாய் = விவகார முடையராயினும், நன வின்றி = வாயியானு சந்தனமற்று. (அதினேது) வாசனேதீர் = நிர்வாசனேயான போத மென்பது; போதத்தின் நிர்வாசனத்துவம், பூர்வவாசனேகள் சனியாமையின், வாசனுந் தரத்தைச் சனிப்பியாமையின் என்க. வெருளாமல் = தனக்கன்னிய மின்மையினுல் பயப்படாது, தன்னுல் உலகினேயும் வெருட்டா = சர்வபூதங்களுக்கும் அபயப்பிரதா னத்தினுற் பயப்படுத்தாத, மேலோர், சிக்கற = சந்தோடக்கிலேசாதி பந்தங்கண்ங்கிய, நன்னினேவிருந்தும், ஆன்மாகாரமாகவே விளங்குதலின், நினேவிலார் எவர் அவரே சீவன்முக்தர். (38)

(ஸ்ரீ - வீர - அ-கை.) இப்போது முதலில் வினவிய விதேகமுக்த இலக்கணம் கூறத் தொடங்குகின்றூர்:—நிலையென.

(ச.) இனி விதேகமுக்தியி னிலக்கணங் கூறல்:—நிலையென.

நிலையான விச்சீவன் முத்தியைவிட் டுடலிறந்தா னிறைந்தவாயு
வலையாம னிற்பதுபோ லுடலில்லா முத்திபெறு மதனின் றன்மை
தொலையாது மறையாது தோன்றுது ணணித்தல்ல தூரத்தல்ல
வுலையாது முடியாது நானல்லப் பிறனல்ல வொன்று மல்ல. (39)

இருளன்றி யொளியன்றி யளவன்றி யலவன்றி யியல்பொன் றின்றிப்
பொருகின்ற பூதங்கள் பலபொருள்க ளன்றி நிறை புரணமாகி
யுருவன்றி யருவன்றி யுளதன்றி யுண்டில்லை யன்றி யொன்றாய்
வருகின்ற திரிபுடியி னடுத்தோன்று மறவாது மதித்துக் கொள்வாய். (40)

(ப - ரை.) நிலையான இச்சீவன் முத்தியை விட்டு = நூகர்வினை வரையிருக்கும் இந்த ஜீவன்முக்தி யவஸ்தையைத் தீர்த்து, உடலிறந்தால் = தனதுதேகம் காலவச மானபின், நிறைந்தவாயு = பரந்தபவனம், அலையாமல் நிற்பதுபோல = சஞ்சலப்படா மல் நிரபாவத்தை யடைதல்போல், உடலில்லா முத்திபெறும் = அதேகமுக்தத் தன் மையை யடையும், அதனின்றன்மை = அவ் விதேகமுக்தியின் றகைமையாதெனின் ? நூதலுவாம், தோன்றுது = விதேகமுக்தன் உதயமாகான், தொலையாது = அஸ்தமா கான், மறையாது = சாமிய மடையான், உலையாது = சத்தாகான், முடியாது = அசத் தாகான், நணித்தல்ல தூரத்தல்ல = அண்மையனும் சேய்மையனுமல்லன், நானல்ல = அகமுமல்லன், பிறனல்ல = இதரனுமாகான், ஒன்றுமல்ல = மற்றெரு பொருளு மாகான். (39)

இருளன்றி = அவ்விதேகமுக்த பதமானது, தமமல்லதாய், ஒளியன்றி = தேயு வல்லதாய், அளவன்றி = பரிமித மடையாததாய், அலவன்றி = அசையாததாய், இயல்பு ஒன்றின்றி = தருமமியாதொன்று மணுகாததாய், பொருகின்ற பூதங்கள் பல பொருள்கள் அன்றி = ஒன்றோடொன்று மூரண்பட்ட பூதங்கள் பதார்த்தக்கூட்டங்கள் ஆகாரதிருரிய தரிசனங்கள் அல்லதாய், நிறைபுரணமாகி = தேசகாலத்தில் பரிச்சேத பூரணமாய், உருவன்றி = வெளிப்படாததாய்; அருவன்றி = சூனியமற்றதாய், உளதன்றி = சத்துமல்லாததாய், (இலதன்றி = அசத்து மல்லாததாய்) உண்டில்லையன்றி = சதசத்து மல்லாததாய், ஒன்றுய் = ஆதிமத்யாந்தரகித சைதன்ய சேத்திய ரகித சிவமாய், வருகின்ற திரிபுடியின் = மாறிமாறி ஓயாமல் வினைவயமாய் வராகின்ற திருட்டா தரிசன திருரியங்களின், நடுத்தோன்றும் = மத்தியில் எத்தரிசனமான திருந்திலங்குகின்றதோ அதனை, மறவாது = இடைவிடா தனுசந்தித்து, மதித்துக்கொள்வாய் = நினது வடிவமாயும் விதேகமுக்தி வடிவமாயும் அறிந்து கொள்வாயாக. (40)

(ஸ்ரீ - வீர.) அவ்விதேக முக்தன் காரியமுமல்லன் காரணமும் அல்லன். சூனிய மற்றதாய் = நிராகாரம் அற்றதாய் இவ்வண்ணமென வியம்ப வியலாமற் சத்தசத்தமாயிருக்கும், சத்தாகாதாம், குடமுதலியவற்றிற் போலச் சத்தாஜாதியை ஆண்டங்கீகரியாமையினனும், சற்புத்தியொளிரியாமையினும் என்க. அசத்தாகாதாம் = பரமார்த்த சொரூபத் தன்மையான். சத்தசத்தாகாதாம் விரோதத்தானும், அசிந்தையு மாகாதாம் சிந்தையுமாகாதாம். சேத்தியம் = திருரியம். அதற்காதியுமில்லை, மத்தியுமில்லை, அளவு பரியந்தமுமில்லை, அது மனப்பீடையும் அற்றது சரீரபீடையு மற்றது. மேற்கூறியவகையாக இருப்பதுயாதோ அச்சின் மாத்திரம் விதேக முத்தமாம், இவ்வண்ணம் விதேக முக்தமெனப் பெயரிய பரமார்த்த ரூபத்தைக்கூறி அதனது சாக்ஷாத்கார வுபாயங் கூறுவார், திரிபுடியென்றார். ஞாதாஞானம்ஞேயம் என்பவற்றின் மத்தியில் எத்தரிசனம் அவற்றின் சாக்ஷியாக விளங்குமோ, அதாவது திருட்டா விளங்குகின்றது, தரிசனம் விளங்குகின்றது, திருரியம் விளங்குகின்றது, என்னும் வகையாக ஸ்புரணவடிவமாய் அவற்றுட்டொடர்ந்து விலக்ஷணமா யிருக்கும் நிருவிகற்பம் பிரத்தியக்குச் சைதன்யம் யாதோ அதன்கண்ணே யுளத்தை யொருமைப்படுத்தி நின்னேயுணர்தி, அல்லது, அவ் வாறொருமையுறவே துணிந்தவழி பரிசோதிக்கப் பெற்ற துவம்பதார்த்த சாக்ஷாத்காரம் உண்டாம், உண்டாகவே முன்னருரைத்ததும், இப்போ தியம்பியதும் ஆகிய பரமார்த்த சொரூபம் நன்குணர்வா யென்பதாம்; ஜீவன்முக்திப் பதத்தைவிட்டுத் தேகமானது பிராரப்தம் தீர்தலானே காலத்தாற் பீடிக்கும்போது வாயுவானது அசைவின்மையை யடைதல்போல, இச்ஜீவன்முக்தன் விதேகமுக்தியை யடைகின்றான். அவ்விதேகமுக்தனது சொரூப லக்ஷணத்தைக் கேட்பாயாக, விதேகமுக்தஞானவன் வளர்வதுமில்லை குறைவதுமில்லை, நாசமடைவதுமில்லை வெளிப்படுவதுமில்லை வெளிப்படாமலுமில்லை, தூரத்திலு மிருப்பதுமில்லை, நானென்பதுமில்லை, நானல்ல னென்பதுமில்லை, மற்றவனென்பதுமில்லை, அவனது தடஸ்தலக்ஷணம், சூரியனுகவிருந்து உலகத்தையொளிர் விக்கின்றான் என்பது முதலவாய்ப் பெரியவாசிட்டத்தில் விரிவாம். நிச்சலமாயும், கம்பீரமாயும், ஒளியற்றதாயும், இருளற்றதாயும், விஸ்தாரமாயும், பெயரற்றதாயும், வடிவற்றதாயும் இலங்கும். அவாங்மானச சத்தோன்று சேடித்து நிற்கும் பெயரையும் வடிவையும் நீடேதிக்கில் நாமரூபசூனிய வஸ்துவிற்கு உலகத்தில் அத்தியந்தம் பிரசித்தி காணப் பெருமையின் சூனியத்தன்மையன்றோ வாமெனின் ? அது சூனியமாகாதாம், ஆகாதாயின் சூனியமாகாத அதற்கு ஆகாரத்தன்மை திருரியத்தகைமை தரி

சனத்தனைமை முதலியவை எஞ்சுதலாமே யெனின்? அது ஆகாரமுடையது மல்ல, திருசியமுமல்ல, தரிசனமுமல்ல அசந்தமாயிருத்தலினனே, பூதபதார்த்தக் கூட்டமுமல்ல, பெயரில்லாதபடியினாலே எவ்வாற்றானும் கூறமுடியாத வடிவதாம், பூரணத்தினும் பூரணவடிவதாம், எப்படி யியம்பமுடியா தெனின்? கேட்குதி ! அது சத்துமன்று அசத்துமன்று சதசத்துமன்று காலசம்பந்தமும், காலசம்பந்தமுடையதுமன்று உற்பத்தியும் உற்பத்தியுடையது மன்று, அதுகின்மாத்திரமா யிருப்பதும் திருசியமற்றதும், அந்தமின்றியதும் ஜரையற்றதும் சிவமும்முதலிடைகடையற்றதும், காரணமற்றதும் நோயற்றதுமாம். எதன் கண்ணே யிந்தவுலகமானது, மூத்திக்களே யுட்கொள்ளும் அன்னப்பகுதிகள் அதன்பரிணாம மாதலின் முன்னர் மூத்துவடிவமாயும் பின்னர் அன்னவடிவமாயும் காணப்பட்ட அவ்விரண்டுந் தொடர்ந்த திரவியம்போலும் சித்திரமயக்க முதலியவற்றே காணப்பட்ட மூத்தமய அன்னம்போலும் காணப்படும், யாது அத்தியாரோப திருஷ்டியினனே யாவுமாமோ, அபவாத திருஷ்டியினனே யாவுமாகாதோ அத்தெய்வம் வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருக்கு மவஸ்தை யிரண்டைத் தொடர்ந்து விளங்கும்•எங்ஙனம்.வாயுவானது ஒருகாற் சலனத்தைவிட்டு நிச்சலரூபமாக இருக்குமோ அங்ஙனம் மூக்தாத்மாவும் உபாதியாலாக்கப்பெற்ற சமுசாரத்தைவிட்டுச் சொரூபமாகவே யிருப்பனெனபதாம். ஆண்டு மகிழ்ச்சி வாட்டங்களுமின்றும் அவற்றின்றியாகமு மின்றும், என்னை, லிங்கதேகத்திற்கு ஈண்டே லீனத்தன்மை யுண்மையின். சத்வாச்சியங்களாய உலகவேதுவாம் அவித்தை மாபைகளே யுபாதிகளாகக் கொண்ட பிராஞ்ஞ ஈசுவர்களின்றும், அசத் வாச்சியங்களாய பூதபௌதிகங்களு மின்றும், தூரத்தல்ல வென்னும் கூற்றுன் மாயாதீதமன்றும், நணித்தல்ல வென்றமையானே தூலபுக்குச் சமீபத்திருக்குந்தன்மை நிடேதிக்கப் படுகின்றது, நானல்ல வென்பது சமட்டியுமன்று, பிறனல்லவென்பது வியட்டியுமன்று என்றுணர்த்தும். ஒன்றுமல்ல வென்றமையானே விவகாரயோக்கிய விகற்பம்யாதுமே கிடையாதென்பது பொருளாம், இவ்வித விதேகமுக்தியோடு ஒப்புமை மேன்மைக் கூற்றுல் ஜீவன் முக்தியின் கண்ணும் எத்துணை எத்துணை நிர்விகற்ப அதிசயமாமோ அத்துணை அத்துணை உத்தமத்தன்மை கண்டுகொள்க.

(ச.) (அதனை வர்ணித்தல் சக்கியமன்றுயினும் கிஞ்சித்துவருணிக்கின்றார்.) தோன்றுது தொலையாது = ஜனனமரணங்கள் தேகதன்மங்கள் ஆகலின் விதேகமுக்தியில் அதன் இன்மை பொருந்தும், மறையாது = மறைதல் சித்த நிர்விகாரத்துவம் சித்துமின்மையாற் பொருந்தாது ; சர்வகதத்துவ மாதலின், நணித்தல்ல தூரத்தல்ல; உலையாது = இருப்பதாக விவகார மின்மையின் இருப்பதன்றும், முடியாது = சத்துரூபமாக விருத்தலின் இராததன்றும், அகங்கிருதிக்க விடயமாகலின் நானல்ல, சர்வான்மகமாகலின் பிறனல்ல. ஒன்றுமல்ல. 39 ஆஞலதன் சொரூப மெதுவெனில் இதுவெனல்; இருளன்றி. இயல் பொன்றின்றி, இயக்கொன்றின்றி என்னும் பாடமேயேற்கும், எண்டரு மலைவுதோற்றம் பெயரெலா மின்றி யாழ்ந்து, தண்டலி விருடேதின்றித் தனித்ததோ ருண்மைநிற்கும். இதற்கு முன்னமே பொருள் சொல்லி யிருக்கின்றது. பெயரெலாமின்றி யென்றதையே விரித்துரைத்தல், பொருகளன்றி, அசடமாகலின்; பொருகின்ற பூதங்களென்றமையால் ஆகாரியும் திருசியமும் தரிசனமும் இன்றியென்றிசைய ஒட்டுக. ஆகாரியன்று, அமூர்த்தமாதலின்; திருசியமன்று, திருக்காயிருத்தலின்; தரிசனமன்று, தனக்கன்னியமான திருசிய மின்மையின் ; நிறைபுரணமாகி =ஆகாசாதிகட்கும் வியாபகமாய், உருவன்றி = ஆகாரமன்று, ஜாதியாதி விதிக்கப்படாத சொரூபமாதலின், அருவன்றி = நிராகாரமன்று, சித்கணரூபமாதலின், உளதன்றி யிலதன்றி=

சத்துமன்று அசத்துமன்று: எதிற்காரிய சமூகஞ் சனிக்கின்றதோ அது சத்து என்னும் வசனத்தால் சத்துகாரண மெனவும் அசத்துக்காரிய மெனவுஞ் சொல்லப்படும். இது நிருவிகாரமாதலின் அவ்வுபாய லிலகூணமென்பது பொருள். உண்டில்லையன்றி = சதசத்தன்று, சத்தும் அசத்தும் ஒன்றற்கொன்று விரோதமாதலின் உபயரூபமும் பொருந்தா தென்பது பொருள். ஒன்றுய் வருகின்ற = பாவரூப திரவியாதி சட்பதார்த்த லிலகூண மாதலின் பாவமன்று, திரவியாதி சட்பதார்த்த மாவன:—திரவியம் = பொருள், குணம் = பண்பு. கன்மம் = வினை = தொழில், சமானியம் = ஜாதி, விசேடம் = நித்தியத்துள்ள நிறப்பு, சமவாயம் = பிரிவுபடாச் சம்பந்தம், என்பனவா மென்றுணர்க. சத்துரூபமாதலின் அபாவமும் அன்று, ஆகலின் அநந்தமா யிருக்குஞ் சன்மாத்திரமே. (பொருள்களன்றி, அசடமாதலின், இதனுனே அநந்தமாயிருக்குஞ் சன்மாத்திரமே யென்பது பாடபேதம்) ஆதிகள் = மானதரோகங்கள், ஆமயங்கள் = சரீர சம்பந்த ரோகங்கள், மநோதேக பின்மையின் அவ்வுபயரகிதமான அநாதி நிராமயமாய், திருசியசம்பந்த ரகிதமான திருக்குமாத்திரமாய். ஆதிமத்தியாந்த ரகிதமான சிவமாய், திரிபுடியினடித் தோன்றும் = திருஷ்டா வென்னுங் கர்த்துரு சைதன்யமும், திருசிய மென்னுங் கருமமும், தரிசனமென்னுங் கிரியாரூபமான அவஸ்தாத் திரயத்தும் பிறிவற் றிருக்கும் ஞானமும் ஆகிய திரிபுடியின் மத்தியில் விளங்கும் அச் சின்மாத்திரத்தைச் சாதுவான இராமா ! நீ மறவாது அனுசந்தானஞ்செய்து கூறிய விதேகமுக்திரூபத்தை, மதித்துக் கொள்வாய் = அறிந்து கொள்வாய். (40)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பெருங்கற்பம் மேவும் போதில் என்பதாதியால் எப்பரமார்த்தசொரூபம் பிரதிபாதிக்கப் பெற்றதோ மீண்டும் விதேகமுத்த ரூபமாகப் பின்னரே யாது நிரூபிக்கப்பெற்றதோ அஃதுவென கரதலாமலகம் போலும் விசேடமா யறியும்பொருட்டு ஸ்ரீ இராகவர் விஞ்தல்:—அந்த ஆத்மாவினின்றும் திருசியங்களானவை நீரிற்றிரைமாலைபோல வேறன்றிவும் வேறுபோலுண்டாம், காலசம்பந்தியாய அறுவகை விகாரங்களுமாம், அதனுனே திருசியத்தின் தரிசனபலவியாப்தி யுண்டாம், அதனுனே இஷ்ட அநிஷ்டங்களின் அடைதல் அகலுதல் விடயங்களாய மநோரத விகற்பங்களாம், முறையே அதனது சச்சிதானந்த ரூபத்தன்மையே அறிவிக்கின்றதாம் அந்த மூன்றும் அதனது பிரகாசத்தினுலே ஜகத்தாகவே யிலங்கும் அயலாக உலகங்' கிடையாதாம் அறியப்படாததிற் பொதுவதா யென்று நிறைந்திருப்பது சத்தாம், மறைபடாததின் மாத்திர மிருப்பது தரிசனமாம், அவற்றுள் அநுகூலமா யறியத்தக்கதின் மாத்திர மிருப்பது ஆனந்தமாம், இவ்வண்ணம் உட்பட்ட வுபாதி லிலகூணமா யிருந்த போதினும் ஒளிரூப இருப்பு ஒரேமாதிரியா யிருக்கும், கருமேந்திரியவுபாதியிற் கிரியையையும் ஞானேந்திரிய வுபாதியில் ரூபரச கந்த சத்தப் பரிசங்களையும், அந்தக்கரண வுபாதியில் அறிவையும் பிரமாதாவையும் எவ்வடிவமாயிருந்து அறிகின்றனையோ அந்தப் பிரமாதாவினும் வேறுய அவ்வடிவம் பரமான்மாவி னுடையதேயாம். எவ்விடயலியாப்தி விருத்தியினும் வேறுய அறிவுருவத்தா லுணர்கின்றுயோ அதுவும் அப்பரமான்மாவேயாம். காண்போன் காட்சி காண்படு பொருள்களி னிடையிற் சாக்ஷியாக எத்தரிசனமுளதோ அதனே யொருமைப்பட்ட மனத்தால் உபாதிகளினின்றும் வேறுபடுத்திக் காணும் வகையினுனே நினதுவடிவமென உணர்தியென விதேகமுக்தியின் கூற்றின் பின்னிதுவுபதேசஞ் செய்தலும் ஸ்ரீ இராகவர் ஒருமைப்பட்டமனதில் எவ்வடிவத்தானே அஃதபரோக்ஷமா யனுபவித்தல் கூடுமோ அவ்வசாதாரண ரூபத்தைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்னும் அவாவுடையவராய் மீண்டும் விஞ்தல்:—அவ்வகையென.

அவ்வகையாம் பரவடிவை யறிவுநிறை வுறவிரிவா யருள்வா யென்ற
செவ்வியவள் ளலுக்கு முனி செப்புவான் பெருங்கற்பஞ் சேர்ந்த போதி
லெவ்வகைமூ லங்களுக்கு மூலமாம் பிரமமே யிலங்கா நிற்கும்
வவ்வுமனத் தொழின் மாற்றித் தனைமாய்த்தாற் பெயரிறந்த வஸ்துவாகும்.(ஏ)

(ப - ரை) அவ்வகையாம் பரவடிவை = அவ்வாகந்த சித்தாகிருதி வாய்ந்த பரமார்த்த வடிவத்தின் சீர்த்தியை, அறிவு நிறைவுற = நிபுணமாக ஞானம் நிறைந்து விருத்தியாதற் பொருட்டு, விரிவாய் = விஸ்தாரமாக, அருள்வாயென்ற = அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்த, செவ்விய வள்ளலுக்கு = சிறந்த குணங்கள் வாய்ந்து திகழுந்தலைவள்ளலாகிய ஸ்ரீஇராகவருக்கு, முனி = தபோந்திராகிய ஸ்ரீவசிட்ட பகவான், செப்புவான் = அருளுவதாவது, பெருங்கற்பஞ் சேர்ந்தபோதில் = மகாப் பிரளயமானது மன்னுறும் போதில், எவ்வகை மூலங்களுக்கும் மூலமாம் = சர்வகாரண காரணமாய, பிரமமே = பரப்பிரஹ்மமே, இலங்காநிற்கும் = எஞ்சி யிருந்திலங்கும், அவ்விதனை வருணிக்கின்றேன் கேட்குதி. வவ்வுமனத் தொழின்மாற்றி = விடயவாதனையானே தாவியோடாநின்ற மநோவிருத்திகளை நன்குகூயஞ் செய்து, தனைமாய்த்தால் = தற்போதம் இழக்குமாறு செய்தால், பெயரிறந்த = நாமமற்ற சத்தாருவம், வஸ்துவாகும் = அவ்வஸ்துவின் வடிவமாகும்.

(ஸ்ரீ - வீர.) பரமார்த்த சொரூபத்தைக் கொம்புக் கவர்ச்சியாய யுக்தியானே (கொம்பைப்பிடித்து மாட்டைக் காட்டுவதேபோல) காண்பிக்கும் பொருட்டுக் கூறுவார் பெருங்கற்பமென்றார். அப் பரப்பிரஹ்மத்தைப் பிரத்தியகூஷமாமாறு வருணிப்பாம் என்பதாம். ஆண்டு மனத்தொழின் மாற்றி யென்பதாதியாற் சமாதி யவஸ்தையைப் பற்றிப் பரமார்த்த சொரூபத்தைக் கூறுவார். சமாதி யவஸ்தையின் கண்ணே மநோவிருத்திகள் நசிக்கின்றன மகம் நசிப்பதில்லை யென்பார் மநோவிருத்தி = மனத்தொழில் என்றார். சப்தாதி யாகாரங்களாய் வரும்மனோ விருத்திகட்கு நன்றாகூயம் எற்பட்டவழி சரீரத்திரய வடிவமாய் நிகழும் நிகழ்ச்சியைக் கெடுத்து, முத்தேகத்திலும் ஆத்மதன்மை அபிமான மாத்திரத் தடைவுற்றதாம், சமாதியின்கண் ணபிமானம் அழிவுற்றவழி அழியும். கேவலம் ஆன்மாமாத்திர மிலங்கும். அவ்விதனை யறிவிப்பார் தனைமாய்த்தால் என்றார். தன்னை மாய்த்து எஞ்சி யிருந்திலங்கும் தனது மெய்யுருவத்தில் ஜாதி குணக்கிரியாதி ரஹிதத் தன்மையானே சொல்லமுடியாத எச்சத்தாருவம் விருத்தி சம்ஸ்ருயமாகச் சாகூஷி ரூபமாக விருக்கின்றதோ அது அந்தப்பிரஹ்மவஸ்துவின் சொரூபமெனப்படும். அநந்தமாயும் அறிவாகாரமாயும் பரமார்த்தமாயு மிருக்கும் அதனது ரூபமியாதாம் என்பதை மீண்டும் அடியேனுக்கு நல்லுணர்வு வளர்தற்பொருட்டு மிகத்தெளிவாகத் திருவாய் மலர்ந் தருளவேண்டும் என்ன; கூறுகின்றார், மகாப்பிரளயம் வரும்போது சருவகாரண காரணமும் பரமும் ஆகிய பிரஹ்மமே சேடித்திலங்கும்; அஸ்தபரோகூஷமா மாறு கூறக் கேட்பாயாக: சமாதியின் கண்ணே தடைப்படுத்தலால் விருத்திகள் ஒடுங்கியவழி விறகிலாத கனல்போல மனத்தினது சொரூபத்தையுங் கெடுத்துவிடின் இன்னபடியென வியம்ப வொண்ணுததாய ஸ்வப்பிரகாச சத்தாருபம் யாது எஞ்சாநிற்குமோ அது அந்தப் பரமான்மாவினது வடிவமாம் இவ்வண்ணம் நிருவிகற்ப சமாதி யாரம்பத்தில் திருசிய வுலகமில்லை திருசியமின்மையின் காண்போனாகிய பிரமாதாவும் விலீனமானதேபோற் றோற்றும் என்னுந்திரிபுடைய விளக்கமாகிய சாகூஷிசொரூபமே அந்தப் பரமான்மாவின் வடிவமாம். பெயரிறந்தவத்து = சப்த அகோசரசிவம்.

(ச.) வவ்வுமன மென்பதாதியா யெட்டுச்சுலோகங்களால் பரவஸ்து சொரூப நிரூபணம்: ஸ்ரீ இராமர், அவ்வகையாம் பரவடிவை = அந்தச் சிதாகிருதியினது பரமார்த்த ரூபத்தை, அறிவு நிறைவுற = பூர்ணபோதஞ் சித்தித்தற்காக, விரிவாய் மீட்டுமெனக் கருள்வாய் எவ்வகை மூலங்களுக்கு மூலமாம் = சர்வகாரண காரணமாம், பிரமமே யிலங்கா நிற்கும் = பரப்பிரஹ்மமே சேடித்திருக்கும். அத்தன்மையான வினைவருணித்தல். வவ்வும், மனத்தொழில் = மனத்தின் விருத்தி, தனைமாய்த்தால் = தன்மனதையும் நாசஞ்செய்யின், நாசயோக்கியமான திருசியத்திற்குஞ் சொரூபமாதலின், பெயரிறந்த = நிரூபாதிகமாதலின் சொல்லுதற் கசக்கியமான சத்துரூபம், வத்துவாகும் = பரவஸ்துவினது சொரூபமாம்.

(ஸ்ரீ - வீர - அஸ்தி ஸித்தி.) அந்தப் பரமாத்ம வஸ்துவின் வடிவத்தையே சமாதி நிலையிலும் விவகார அவஸ்தையிலும் இருக்கும் வண்ணம் அறிவித்தல்:—தெரித்தறியுமென்.

தெரித்தறியும் பொருணேக்கச் சீவவறி வதுவாகச் செப்பலாகும்
விரித்தபுல னனுபவித்து மனுபவியா மனமதுவாய் விளம்ப லாகும்
புரித்தவுணர் வொளிநெஞ்ச முலகிவற்றி னறிவதுவாய்ப் புகல லாகும்
பருத்ததொழிற் செய்யினுங்கற் போலிருக்கு நிலையதுவாய்ப் பகரலாகும்.(42)

மூடிவுசன வஞ்ஞான மில்லாநீ டியிலதுவா மும்மை யாகி
யடர்தருஞா தருஞான ஞேயமெழுந் தொடுங்குமிட மதுவே யாகுந்
திடவிசும்பன் றுயிருந்தும் விசும்பான நிலையதுவாஞ் சித்தம் புந்தி
படர்மனம் போய்த் தாவரம்போற் பெறுமுளறி வொப்பாமப் பரமரூபம்(43)

(ப - ரை.) தெரித்தறியும் பொருணேக்கா = திருசியத்தை நாடாத வடிவதரியிலகும், சீவ அறிவு = ஜீவ இயற்கை அறிவான சின்மாத்திரம் யாதுளதோ, அதுவாக = அதுவே விமலசாந்த பரமாத்மாவின் வடிவதாக, செப்பலாகும் = சொல்லப்படும்; புலன் அநுபவித்தும் = காற்று முதலியவை காயத்திற்றோயினும், அநுபவியா = பரிசாதியனுபவமற்ற, விரித்தமனம் = ஜீவிப்பவனது சித்தத்தின் உருவம்யாதோ அதுவே, அதுவாய் விளம்பலாகும் = அந்தப் பரமாத்மாவின் வடிவாய் வழங்கப்படும்; புரித்தவுணர்வு = இந்திரிய விடயசம்பந்த ஞானம், ஒளி = பிரகாசம், நெஞ்சம் = வேதனம், உலகு = திருசியம், இவற்றின் = இயம்பியவற்றின், அறிவு = சாக்ஷியே; அதுவாய் = அநாதியந்தப் பரமாத்மாவின் வடிவமாய், புகலலாகும் = பகரப்படும்; பருத்ததொழில் செய்யினும் = மிகுத்த விவகாரத்தோடு கூடியிருப்பினும், கற்போலிருக்கும் நிலை = பாஷாணம்போ லசையாம லிருக்கும் ஸ்திதி, அதுவாய்= அந்தப் பரமான்ம வடிவமாய், பகரலாகும் = கூறலாம். (42)

மூடிவு கனவு அஞ்ஞானம் இல்லா = அந்தமின்றிய கனவின்றிய ஜடமின்றிய, நீள்துயில் = சிரநித்திரையின் எவ்வுருவ மூளதோ, அவ்வுருவம், அதுவாம் = அந்தப் பரமாத்மாவினது வடிவமாம்; மும்மையாகி = மூன்று வடிவாகி ஒன்றை விட்டு ஒன்றொழியாது, அடர்தரு = நெருங்கி விவகரிக்கும், ஞாதுரு ஞானம் ஞேயம் = மாதாமானம் மேயம் அறிவான் அறிவு அறிபொருள் என்பன, எழுந்தொடுங்குமிடம் = உதித்து ஒழியும் அதிகரணம், அதுவேயாகும் = அந்தப் பரமாத்மாவினது வடிவேயாகும்; திடவிசும்பு அன்றுயிருந்தும் = லௌகிக நித்திய விண்ணல்லாம லிருந்தும், விசும்பான நிலை = விண்ணதாந் தகைமை, அதுவாம் = அந்தப் பரமான்மாவினது வடிவமாம்;

சித்தம் புந்தி படர்மனம்போய் = விடய கோசங்களாகச் சிந்தித்தன் மதித்தல் சங்கற் பித்தல் என்பனநீங்கி, தாவரம்போல் = அசரத்திற்குச் சமானமாக, இருந்து, பெறும் உள் அறிவு = உள்ளுணர்வுமயம் பெற்றிருக்கும் பக்ஷத்தில், ஒப்பாம் அப்பரமரூபம் = அந்நிலைக்கு அந்தப் பரமாத்மாவினது வடிவம் சமானமாகும். (43)

(ஸ்ரீ - வீர.) ஜீவ இயற்கைவடிவ அறிவினது விடயத்தை நாடாத சின்மாத்திர விமல சாந்தவடிவம், நிருவிகற்ப சித்தேவடிவ அநாதி ஆகந்துக இருமலராகிதம் நிர்விகார மாகி நிகழும் அந்தப் பரமாத்மாவினது சொரூபமாகச் சொல்லப்படும். வாத ஆதபாதி கள் அவயவ சம்பந்தமுறினும் பரிசரூபாதிகளின் அனுபவமில்லாமல் சித்தவுபாதியோடு கூடிய ஜீவனுக்கு எவ்வுருவ மிருக்கின்றதோ, சரீரத்தைவிட்ட ஜீவனது சொரூபம் அங் கலக்கினமாயினும் பரிசாதி அனுபவரகிதமாம். அதன்பொருட்டுக் கூறுவார் ஜீவிப்பவ னது என்னும் பொருள் வாய்ந்த விரித்த என்றார். அது ஆத்மாவினது சமுசார அதீத சொரூபமாம். நனவும் நீண்டகனவென்பதனுனே கனவென்னுஞ்சப்தத்தாற் கவரப்பெ றும், பெறவே கனநனவற்றதாய் ஜடமாய்துயிலற்றதாய், அநந்தவஸ்து விஷயத்தன்மை யானே அநந்தமதாயுள்ள சிரநித்திரை = நீள்காலயோக நித்திரையினது, எவ்வுருவம் அவ்வுருவம், பரமான்மாவிற்காம். துரீய அவஸ்தைவடிவ யோகநித்திரையி லிருப்ப நிரு விகற்ப சித்துருவம பிரதீதியாம் அது பரமாத்மாவின் சொரூபமென அறைந்ததாயிற்று, விக்ஷேப தசையைப்பற்றியும் பரமாத்மசொரூபம் பகர்வார் புரித்தவுணர்வென்றார். வேத னம் = அந்தக்கரண விருத்திவடிவம், பிரகாசம் = ஆதித்தியாதி சம்பந்தி, திருஷ்யம் = சப் தாதி வேத்தியம், இஃதுபலக்கணம். பிரகாசத்திற்குத்தமமாகிய அஞ்ஞானம் என்பவற் றின் யாதொரு சாக்ஷிலக்ஷண ஞானமுளதோ அது பரப்பிரஹ்மத்தின் சொரூபமாம். மயலான் விகாரபரனுய ஜீவனுக்கும் வஸ்து விருத்தியால் பாஷாணம்போல அதாவது பெரும் பாறையைப்போல நிச்சலமாக இருக்குந்தன்மை யென்பதாம். அவ்வியோமத் திற்கே பொய்யாகப் பிரபஞ்சத்தோடு கூடியிருப்பதாகிய வியோமத்தன்மையாம் உண் மையாகவோ நிஷ்பிரபஞ்சத் தன்மையேயுளதாம், அல்லது, விசும்பன்றுயிருந்தும் = லௌகிக திருஷ்டியானே அநாகாச சதிருசத்திற்கே வியோமத் தன்மையாம், உண்மை யாயோ ஆகாச சதிருசத் தன்மையாதோ அது பரமாத்மாவின் வடிவமாம். வேத்தியத்வ வேதனத்வ, வேத்துருத்வ ரூபங்களின்மும்மை பிரத்தியக்ஷமாக எவ்வதிஷ்டானத்தின் கண்ணே உதயமாமோ அஸ்தமாமோ அவ்வுருவம் பரமாத்மாவின தருவமாம். அபூதவுப மானத்தானே பரமாத்மவுருவை வருணிப்பார் தாவரம்போ லென்றார். அசராதிகட்கு இயல்பாகவே மனுபுத்தியாதி விடுபட்டிருத்தல் வெட்டவெளியாம், எவ்வுருவமுளதோ அது வுணர்வுமயமாக வொருக்கால் ஆருமாயின் அச்சொரூபம் பரமாத்மாவோ டுவமிக் கப்பெறும் அதாவது அது பரமாத்மாவிற் குபமானம் எனக் கூறப்பட்டதாயிற்று. சமா திநின்றும், எழுமுன்வருஞ் சிவ இயற்கையதாய அறிவினுக்குத் திருசியத்தைப் பாராத எவ்வடிவமுண்டே, அந்தச் சின்மாத்திர விமலசாந்த வடிவமே அந்தப் பரமாத்மாவின் வடிவமாம். சமாதிமத்திய காலத்திலும் இலங்கா நின்றது பரமான்ம வடிவமேயாமெனி னும் அஃதிருக்குமமா யிருத்தலினுனே ஆருடபதவியை யேறவிழைந்து பயின்று கொண் டிருப்பவர்கட்கு அக்கால் அறிந்து கொள்ளுதல் முடியாதாமென முதலிலும் கடையிலும் காண்பிக்கப் பட்டது. இப்போது ஆருட அனுபவித்தசமாதி மத்தியிலிலங் கும் வடிவத்தானும் அதனைக் காட்டுவார் புலனனுபவித்து மென்றார். பிரஹ்மாகார அவச்சின்ன அபரோக்ஷ விருத்தி யுடைமையானே சித்தமான திருக்கும்போது பாஷீர் போலப் பிரஹ்மத்தின் கண்ணே ஏகரசமயமாக மறைபட் டிருத்தலின் சித்தத்தை யகா

தரவுசெய்து காற்று முதலியவை மேனியிற்படினும் அத்தப் பரிசாதி யனுபவமின்றி யிலங்கு மெவ்வடிவ மூண்டோ அதுவே பரமான்மாவினுடைய வடிவமாம். இப்போது யோகப்பயில்விலாருக்கும் எவ்வாறு அனுபவிக்க முடியுமோ அவ்வாறு கூறுவார் முடிவு என்றார். கனுக்காணுமலும் கொதுகு மூட்டைமுதலான துயருறுத்திக் கெடுக்காமலும் மனமிளைப்பாறுதற் கேதுவாயு மிருக்கின்ற சுழுப்தியே சித்தத்தின் ஜாட்டியமில்லாமல் நீள்காலங் கிடைக்கப்பெறின் ஆங்கிலங்கு முருவமே பிரளயத்திலும் எஞ்சாதிற்கும், ஆகாயத்தின் இரகசியவடிவ சூனியத்தன்மை காற்றின் இரகசியவடிவ உள்ளும் வெளியும் நிறைந்திருக்குந் தன்மை, நிலையின் கனத்தன்மை திருசியத்தினும் வேறுகித்திரு சியமற்றதாகிச் சிதாகாசமா யிருக்கும் பொருளிருப்பின் யாதொரு ரூபமாமோ அவ்வுரு வம் பரமாத்மாவிற்காம், எல்லாப் பிராணிகளுக்கும் திருசியத்தையும் சித்தத்தையும் பரித்தியாகஞ் செய்தபோது எந்தஸ்திதியானது எஞ்சா நிற்குமோ அதுவே அதன துருவமாகுமென்றறிதி, திருசியமற்று மனமற்று உயிர்கட் கியற்கையாயுளதா யாதொரு நிலையுண்டோ, பரமசாந்த சத்தையாமதுவே அம்முதன்மையான வஸ்துவின் வடிவமா மென்றுணர்தி, திருஷ்டாக்களின் கோடியில் அன்னமயம்வரை யான்மாவாக விரிந்த சிற்பிரகாசமானயாது, ஒவ்வொரு கோசவிவேகத்தால் ஆராய்ந்து பார்க்குங்கால் ஆனந் தமயத்திற்கு மூள்ளே யிருத்தலின் மத்யமமோ, திருசியகோடியிலோ மூர்த்தசாரபூத ஆதித்தியப் பிரகாசத்திற்கும், அமூர்த்தசாரபூத ககனத்திற்கும் லிங்க சமஷ்டியான்மா வாகிய அவ்வியாகிருத ஆகாயத்திற்கும், உள்ளானமையாளே யாதுமத்யமமாமோ, விழி யாதியாலாம் விருத்திகட்கும் உள்ளே விளக்கரூபமா யிருத்தலின் யாதுமத்யமமாமோ, இம்முறையே யாநந்த சத்துச் சித்துரூபம் யாதொன்று, பிரசித்தமாமோ அது பிரஹ்மத் தினது ரூபமாம் தைத்திரிய வுபநிடதத்தின் கண்ணே அன்னமயாதி கோசங்கட்குள் ளாக ஆனந்தமய கோசத்தைக் காண்பித்து அதற்குப் பிரியமே சிரம், மோதம் தக்ஷிண பக்ஷம், பிரமோதம் உத்தரபக்ஷம், ஆனந்தம் ஆத்மா, பிரஹ்மபுச்சம் பிரதிஷ்டையென அதற்கு மூள்ளாகப் பிரஹ்மம் காட்டப்பட்டது. பிருகதாரண்யகத்தின் கண்ணும் " பிரஹ்மத்திற் கிரண்டு பெருவடிவங்களுண் டருவமா மூர்த்தமு முயரமூர்த்தமுமே " எனத்தொடங்கி " அவ்வியம் மூர்த்தத் தினிதுரசமாகும், எவ்வியதுபிக்கு மெழிலிது ரச மாம், அவ்வியவ் வமூர்த்தத் தினறையெவ் வியதான், செவ்வியம் மண்டலஞ் செறிதரு புருடனே " என அவ்வுபய சாரத்தையுங் காண்பித்து, " ஆதலி னிவையா தேசநேதி நேதியாம் " எனமூர்த்த அமூர்த்த ஆரோப அதிஷ்டானமாகிய அவற்றினுமுள்ளான பிரஹ்மம் அவற்றின் நிடேதவாயிலாகக் காண்பிக்கப்பட்டது. " விருத்திகடோறும் விளங்கிடு மான்மா " எனக்கேளேப நிடதத்தின் கண்ணே யெல்லாப் புத்திவிருத்தி யினுள் விருப்பது எனக் கூறப்பட்டுளது; ஆகையாலவ்வுருவம் பிரஹ்மத்திற்காம், புத்தி விருத்திக்கும் பொருள் விளக்கத்திற்கும் விடயத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் சாக்ஷி வடிவமா யிராநின்ற எவ்வேதனமுளதோ அவற்றிற்கு ஆதியந்த மூண்மையினுனே எதிற்கு ஆதியந்தங்கிடையாதோ அது பரமான்மாவினுடைய ரூபமாம். மாயிக விவகா ரத்தைச் செய்து கொண்டிருந்த போதினும் ஞானிக்கேனும் ஈசுவருக்கேனும், யாதொரு கற்போன்ற அசலநிலைபேருமோ, சித்திரமற்றதாயே யிருந்தும் உலகங்கட் கெல்லா மிடங்கொடுத்த துண்மையின் ஆகாசத்தன்மையான தெதற்காமோ அவ்வடிவமே பரமான் மாவின் வடிவமாம். வேத்தியமூதலிய திரிபுடிஜன்மாதி நிமித்தமான எச்சச்சித்து ஆன்ம வடிவமுளதோ அதுவே அவ்வடிவமாம்; வேத்தியம், வேதனம், வேத்துருத் தகைமை, என்னுமிம் மூன்றுரூபமும் எவ்வத்துவினின்று மூண்டாகி யெதன்கண்ணே யொடுங்கு கின்றனவோ பரமதூல்பமாய அதுவே பரமான்மாவின் வடிவமாம்; நிமித்தமாயிருத்த

ஹும் பரிணமத்தாலன்றும், மற்றுவிவர்த்தத்தானேயாம். ஸ்தாவரங்கட்கு எவ்வசைவிலா வடிவமுளதோ எம்மனே புத்தியாதி விடுபட்ட வடிவமுளதோ அந்தரூபம் ஞானமய மாகவு மிருந்துவிடின் அது பரமான்மாவோ டுவமிக்கப் பெறும்.

(ச.) தெரித்தறியும் போருணேக்கா = திருசிய பரிசமற்ற சீவ அறிவு = ஜீவசை தன்யத்தினது சின்மாத்திரரூபம், அதுவாக = பரமான்ம சொரூபமாக, செப்பலாகும், விரித்தபுல னனுபவித்தும் = வாதாதிகள் அங்கத்திற் பரிசிப்பினும், அனுபவியா = சமாதியாதியில் பரிசாதி யனுசந்தான ரகிதமான, மனம் = மனத்தினுருவம், பரமாத்ம ரூபமெனலாம், புரித்தவுணர்வு = பாகியார்த்த ஞானம், ஒளி = ஞானசாதனம், நெஞ் சம் = அந்தக்கரணம், உலகு = ஞானவிடயமான கடாதிகள், ஆகிய இவற்றின், அறிவு = சர்வசாகஷிசைதன்யம் பரமாத்மவஸ்து சொரூபமாகச் சொல்லலாம். பருத்ததொழிற் செய்யினும் = விவகார முடையதேனும் கற்போலிருக்குநிலை = நிர்விகாரமாயிருப்பது, அதுவாய்ப் பகரலாகும் = பரமான்ம வஸ்துவின் சொரூபமாய்ச் சொல்லலாம், (42)

நீடியில் = சிரந்தரை, யோகநித்திரையின்ரூபம், அதுவாம் = பரமாத்ம வஸ்துவின் சொரூபமாம். அதிற்சுழுத்தி மரணம்மூர்ச்சைகளுக் கங்கியங்தெரிவித்தற்காக அஞ்ஞான மில்லாவென்னும் விசேஷணம், சொப்பன சம்பந்தம் நீக்குதற் பொருட்டுக் கனவிலா வென்னும் விசேடணம், அஃதந்தரகிதமான அநந்தமென்பது தோன்ற முடிவிலாவென் னும் விசேஷணமாம், இத்தன்மையான நீடியிற் சப்தத்தாற் சமாதியவஸ்தை யின்கண் யோகநித்திரையே சொல்லப்படுகின்றது, மும்மையாகி = அவஸ்தாத் திரயங்களாய, திருவுடா தரிசனந் திருசியம் உதித்து அஸ்தமாகும் இடம் = சர்வ அவஸ்தையின் அகர்த்தரகிதமான சைதன்யம் பரவஸ்து சொரூபமாம். திடவிசும்பன்ரு யிருந்தும் = பௌதிக ஆகாசபின்னமா யிருந்தும்; விசும்பான நிலை = வியோமம்போல் நிர்லேபமா யிருப்பது, பரவஸ்துவின் சொரூபமாம். சித்தம் = மனம்போய் = மனுதிவிருத்தி விகற் பரகிதமாய், தாவரமா மறிவு(பறில்) = தருக்கொடியாதிகளின் ரூபமான போதமயம், பெறின் = இலாபமாயின், ஒப்பாமப் பரமரூபம் = அப்பரமான்ம வஸ்துவின் சொரூபத் தோடு உவமிக்கப் படுகின்றதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மொழிந்த பிரளயான்ம தத்துவத்திதியை முடிக்கின் ரூர்:—அயன் என.

அயனெடுமால் சங்கரனுஞ் சதாசிவனு மிந்திரனு மருக்கன் ரூனும்
வியனிலுப சாந்தராம் வேலையினி லுபாதியெலா விட்டு நீங்கிப்
பயனில்சக மென்கின்ற பற்றகன்று சின்மயமாம் பரம ரூப
முயர்விகற்ப மிலாவடிவா யெங்குநிறை சிவமாகி யொன்ரூய் நிற்கும்.(43)

(ப - ரை.) அயனெடுமால் = பிரஹ்மாவும் விஷ்ணுவும், சங்கரனும் = உருத்திர னும், சதாசிவனும் = சதாசிவமூம், இந்திரனும் அருக்கன்ரூனும் = ஆயிரங்கண்ணனும் ஆயிரங்கிரணனும், வியனிலுப சாந்தராம் வேலையினில் = தத்தமது பேரைசுவரியங் களே மறைத்துப் பரம உபசாந்த நிலையைப் பெறும்போது, உபாதியெலாம் விட்டுநீங்கி = அவ்வவ் வதிகாரத்திற்குத் தக்கவேடங்க ளியாவற்றையுந் தியாகித்து, அவற்றினின்றும் அசங்கமாய், பயனில் சகமென்கின்ற பற்றகன்று = அதனுனே யாதொரு பிரயோஜனு மில்லாமல் வீணவதிக் கேதுவான உலகமென்று சொன்மாத்திரமாயுள்ள பற்றையுந்தொ லைத்து, சின்மயமாம் பரமரூபம் = சைதன்ய மாத்திரமயமான பரம்பொருள். உயர் =

யாவற்றிற்கு மேலாய், நிகற்பமிலா வடிவாய் = சர்வோபாதி வியயவயத்தான் அவிகற்ப ரூபமாய், எங்குநிறை = தேசகாலவஸ்து பரிச்சேத ரகிதமான, சிவமாகி = மங்கலவடிவ மாகி, ஒன்றுய் = அத்விதீயமாய், நிற்கும் = நின்றிலங்கும்.

(ஸ்ரீ - வீர) பிரஹ்மா விஷ்ணு ஹரர் ரஜாதிகுணங்கள் உபாதிகளாம், சதாசிவம் = குணசாமியசாகூடி ஆதிசப்தத்தானேசதாசிவனும் என்னும் உம்மையானே குணசாமிய உபாதி மகேசுராதிகள் கவரப்பெறுவர். சிவம் = மங்களம் ஆனந்தரூபம். அவிகற்ப ரூபம் = நிர்விகற்பசொரூபம் அதன்கண்ணேது சர்வோபாதி வியயவயத்தான் என்ப தாம், வியயவயத்தான் = நாசவசத்தான். சைதன்ய மாத்ரமயம் = சைதன்யமாத்ர சொரூபம். சகமென்கின்ற பற்றகன்று = சர்வசங்கங்களையும் விட்டு என்பதாம். இவ் வுலகில் யாவரானு மனுபவிப்பதர் பிராகின்ற பிரத்தியக் காண்மாவாகிய இந்தப் பிரஹ்ம மானது எல்லாவுபாதிகளின் இலயவயத்தால், பிரஹ்மா, சூரியன், விஷ்ணு, அரன், இந் திரன், சதாசிவன் முதலியோர் சாந்தியை யடையுங்கால் மேலுக்கு மேலாயும் மாயைவிடு பட்டிருத்தலிற் சைதன்ய மாத்திர மயமாயும் விசுவசங்கங்களையெல்லாம் விட்டொழித்த தாயும் நிருவிகற்பமாயும் ஏகமாயும் சாந்தமாயு மிருக்கும் பரமசிவமாத்திர மிலங்கும்.

(ச.) அருக்கன்ருனும், எனையவும், பிரஹ்மாதியுபதித ஆகாராதி நிவிர்த்தியில் சை தன்யமாத்திர சொரூபமான பரமாத்ம சொரூபம் அவிகற்பமாய் ஏகமாய் இவ்விடத் திருக்கு மென்பதாம்.

ஸ்ரீவீர சேகரத்துடன் ஸ்ரீ சம்சாரதரணி யென்னும் வாசிட்ட விவரணத்துடன் ஞானவிண் மகன்கதை சம்பூரணமாம். ஞான வி எனும் மகன் கதை முற்றும்

(லீலை கதை) மூன்றாவது ஆகாதிரு விருத்தம்முற்று.

(ஸ்ரீ - வீர - அ - கை.) முன்னர் ஆகாசஜாக்கியானத்திற் சின்மாத்திர சொரூபமாய பரமாத்மாவிற்கு மாயையே மனமாகி யுலகத்தைச் சிருஷ்டிப்பதாகக் கூறப்பெற்றது இப்போது மாயையினது அளவின் மகாதூர்க் கடவேதுத் தகைமை ஜகந்மாயிகத்வ நிச் சய திடத்தின் பொருட்டு விஸ்தரிப்பார் லீலகதையைத் தொடங்குகின்றார்; கூறிய பொருளில் ஸ்ரீ இராகவருக்கு ஜயந்திரிபு துணிபின்மைக விருப்பதைக் குறிகளாலுணர்ந் த ஸ்ரீ வசிஷ்டர் அவற்றை யகற்றும் பொருட்டு அதற்கு வேண்டிய யுக்திகோடிக ளிறைந்து கதை விசித்திரத்தால் அலங்கரிக்கப்பட்ட அதி விஸ்தாரமான மண்டப உபாக்கியானத்தைக் கேட்பிக்கும் பொருட்டுப் பதிஞ்ஞ செய்தருளுகின்றார்:—இந்தப் பொருளென.

(ச.) முன் ஞானவிண் மகன்கதையிற் சித்தரூபமான பரமாத்மாவின் மாயையா னது மனதாய்ச் சர்வசகத்தையுஞ் சிருஷ்டிக் கின்றதெனக் கூறப்பட்டது; இப்போது லீலகதையில் ஜகம் மாயாமய மென்றதை வெளிப்படையாக்க மாயையினுடைய வெகு தூர்க்கட கடனசாமர்த்தியமான தன்மை விஸ்தரிக்கப் படுகிறது:—இந்தவென.

இந்தப் பொரு ளையமறுத் திளைப்பாறு மாறோர்
மூந்தக்கதை கேள்குண முற்றி விவேக முற்றோன்
விந்தைப் புயத் தோன்பது மப்பெயர் வேந்தன் மண்மேற்
சிந்தைக் கினிதாங்குண லீலையச் செம்ம றேவி.

(ப - ரை.) இந்தப் பொருள் = மேற்கூறிய அருத்தம், ஐயமறுத்து = சந்தேக மில்லாமல், இளைப்பாறுமாறு = சித்தத்தின்கண் விசோகத்தியுறும் வண்ணம், ஓர் = ஒப் பிலாத, மூந்தக் கதைகேள் = முதன்மையும் பழைமையும் வாய்ந்து காதுக் கணியான

மண்டப ஆக்யானத்தை யொருமையுடன் செவிகொள்ளுதி, குணமுற்றி = சற்குண ஹம்சங்கட்குச் சீரமாயும், விவேகமுற்றோன் = மரியாதையைப் பாலனஞ் செய்வதிற் கடற் போன்றவனும், துர்க்குணத் துரும்புகட்குத் தூமத்துவஜனும், விந்தைப் புயத் தோன் = பகைத்திமிர பாஸ்கரனும், பதுமப்பெயர் வேந்தன் = விளங்கிப் பதுமராஜாவென நாமமுற்ற இராஜராஜன், மண்மேல் = புவியை யாண்டுகொண்டு, பூப்புகழப் பொலிந்தான், சிந்தைக்கினிதாங் குண = மனோகரமான அநந்தகல்யாண குணங்களா லலங்கரிக்கப் பெற்ற சர்வசௌபாக்கிய வதியாய, லீலை = லீலாதேவி யென்னும் பெயர்வாய்ந்த விலாசினி, அச்செம்மல் = அநேகம் புத்திரபாக்கியம் படைத்த அந்த ஸ்ரீ மானது, தேவி = பட்டமகிஷியாக இருந்தாள்.

(ஸ்ரீ - வீர.) "முன்னர் விண்மகன் கதையினின், மூதறிவாகச், சொன்னவப்பரம் பொருளினிற் றொடர்ந்திடு மாயை, அன்னதொண் மனமாகியே சிருஷ்டியை என்னவர் ணிதம் லீலையின் இனியகாதையிஞல். மாயையின் பருதுர்க்கட ஹேதுதை மலர்த்தித் தூயை லீலையை நோக்கியே தொகுத்து மேல்வகுத்து, வாய யாவையும் விரித்திடக் கருத்தினிலமைந்தே, மாயி கத்தன்மை யுலகினில் வெளியதாய் மலரும். என இவ்வாறு மகத்துக்களான் மலர்ந்தருளப் பட்டுளது. அப்பதுமராஜன்; குலபதுமன் குலாலங்கா ரன், விளங்கத்தெரிபவன் வெகுபகழுடையோன், முகவிகாச முடையோன் முகன் என் பதாகக்கொள்க. மரியாதையைக் காப்பதில் அவ்வரசன் கடற்கொப்பாக விருந்தனன், அதாவது கடலானது தன் மரியாதையாய கரைக்கடவாததேபோல இவனும் வருண சிரமமரியாதையைத் தாண்டுவதே கிடையாது. மேலுமவ்வரையன், சத்குரு வந்தகார ஞ்சுவன், சற்குணங்க ளென்னும் சோபன குணங்களாகிய அன்னங்கட்குத் தடமாவன், தோடங்களே யாகிய திருணக் கூட்டங்கட்குத் தீயாவன், அவன்மனைவியாகிய லீலா தேவி சோபனமான ஸ்ரீயையுடையவள், கமலையாகிய இலக்குமி அவளியிலுதித்தகொப் பாள். ஹே இராகவ! ஈண்டிந்தச் சிரவண பூஷணமா யிராகின்ற மண்டபோக்கியானத் தைக் கேட்பாயாக, கேட்ட மாத்திரையானே ஐயமில்லாம லிப்பொருள் சித்தத்தில் விசிராந்தியை யடையும் என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் கூற, போதத்தை விருத்திசெய்யும் மண்டபோக்கியான முழுவதையும் கல்லுணர் வுதிப்பான் திருவுளஞ் செய்யவேண்டு மென்று ஸ்ரீ இராகவர் பிரார்த்திப்ப ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறுகின்றார்: இம்மகீ பீடத் தில் விளக்கத்தோடு கூடியவனும் விவேகவானும், ஸ்ரீமானும், அநேகங் குமாரர்களை யுடையவனும், கீர்த்தியாகிய சுகந்த ஹேதுவாய வங்கிசகமலம் போன்றவனும், பத்ம னென்னும் நாமம்வாய்ந்த ஓரரசனிருந்தான், அவன்வருணசிரம மரியாதையையும் வயங் குந்தீபஸ்ரீமரியாதையையும் காக்குங் கருணைக்கருங் கடலாகியும், பகையிருளகற்றும் பாற் கரனுகியும், காந்தையா ழாம்பற்கலை மதியாயும் தோடத்துரும்பைத் தொலையெரியாயும், அறிஞர் அமரர் அருங்குழாத்திற் கோர் பொறிறிறை மேருவைப் போன்றவனும், பவக் கடலிற் புகழ் மான்மதியாயும், சற்குணவன்னச் சரமேயாயும், சம்பத்துருவத் தாமரை கட்கோர் விம்பமாம் விமல விண்மணியாயும், பகைவரைப் போரிற் பவனனைப்போல மிக நடுங்கிடச்செய்யும் வீரியனும், மனவடிவினவாம் ஆனைகடமக்கோ ராண்சிங்கமாகி யும், பெரும் வித்தை யனேத்தினும் பிரியோனுகியும், இருந்து வாழ்ந்தனன்; இத்தகை யிவற்குச் சுபகைபாரியை சொலும்பெயர் லீலையாள், விலாசினியாவாள் விளங்கெலாப் பாக்கியம் உடையவள் திருவெனவுதித்தவள் பூவில், நாயகன்சேவை நவில்வகை யனேத் தினும் தூயபரிஜனந் தழைத்தவ ரெவர்க்கும் சேயனுகுலஞ் செயினுங் கோமளை, ஆடல்பாடல் அமைமது மொழியாள், இளந்தளிர்க் கரமும் இன்மலரொளியுங் கொளும

தித் திருவெனக் கொளுந்திரு மேனியள், சொச்சத்தனுவினள் சொலிபுண்ணிய வதியாய்ப் பொருந்தி யிருந்தனள்.

(ச.) ஸ்ரீ வசிஷ்டர், ஐயமறுத்து = நிர்ச்சந்தேகமாய், இளைப்பாறுமாறு = நினது சித்தத்தில் விசிராந்திபொருந்த, ஓர் முந்தைக்கதைகேள் = ஒப்பற்றசிரவணபூடணமான முதன்மையாகிய மண்டபோபாக்கியானத்தை இப்போதுகேள். மண்மேல் இருந்தான், குணமுற்றி விவேகமுற்றோன் என்றதனால், சற்குண வம்சங்களுக்குத் தாமரைத் தடாகமா மென்றும், விந்தைப்புயத்தோன் என்றமையால், பகையந்தகார பாநுவாயென்றும், பதுமப்பெயர் வேந்தன் என்றமையால் தாமரைத் தடாகம்போற் குலவிருத்தியுடையவனும், குலத்துக்குத் தாமரைப் பூவொப்ப வலங்காரவானும் வெகுபுத்திர ஐசுவரிய சம்பத்தும் பதுமனென்னு நாமமுமுடையவனும் மரியாதையைப் பாலனஞ்செய்வதிற் சமுத்திரமா யிருப்பவ னென்றும், சிந்தைக்கினிதாங் குணலீலை என்றமையால் அதிசௌந்தரியாய்ச் சர்வசௌபாக்கிய வதியாய்ப் பூமியில் இலக்குமி போன்று உதித்தவளாய் லீலையென்னு நாமந்தரித்தவளாய் அச்செம்மறேவி இருந்தாள் என்றும் யூகித்துணர்க: கூடாதகை குயிற்றுவதாதி தோடங்களிலார் திருவ்ஷணக்குத் தீப்போனிவர்த்தகன். பாடபேதம். (1)

அன்னைனிழல் போன்மனம் போலய லற்ற வன்னு
ணன்னையகன் மூப்பிறப்பின்றி நற் காளையாகி
யெந்நாளுமொத் தின்புற வென்கொலுபாய மென்னத்
தொன்னுன் மறையோர்க்குரைத் தாளவர் சொல்லலுற்றார். (2)

(ப - ரை.) அன்னுன் = அப்பதுமராஜாவினது, நிழல்போல் = பிரதிபிம்பம்போல, மனம்போல் = உள்ளமொப்ப, அயலற்ற = வேறுகாத, அன்னுள் = அந்தலீலாதேவி, நல்நாயகன் = எழிலும் வீரமும் வாய்ந்த நமது நாதன், மூப்பிறப்பின்றி = விருத்தாவஸ்தை மரணவஸ்தை யடையாமல், நற்காளையாகி = நவயவ்வனம் நண்ணி, எந்நாளும் ஒத்தின்புற = எக்காலத்திலும் அபேதமாய்ச் சுகமடைய, என்கொலுபாயமென்ன = யாதேனும் உபாயம் உண்டுகொலோ வென்று, தொன்னுன் மறையோர்க்கு = அநாதியா நான்கு வேதங்களையும் அத்தியயனஞ் செய்து தேர்ந்த மறையவர்க்கு, உரைத்தாள் = தன்குறையைத் தெரிவித்தாள், அவர் = அம்முதுவேதியர், சொல்லலுற்றார் = கூறுவாராயினர்.

(ஸ்ரீ - வீர.) காளை = யவ்வன உல்லாசவான், போந்தெழும் புதுத்தாருண்யமுடையவன் என்பதாம். நான் மறையோர் = ஞானவிடயம், வித்தைவிடயம், தேவதைவிடயம், தருமாதிவிடயம் தெரிந்தவர் எனக்கொள்க. முதலிற்றோன் மனத்திற்சிந்தித்து விப் பிரரைநோக்கி ஹே விப்பிரரே! மானிடர்கட்கு அமரத்தன்மை யெங்ஙங்கிடைக்கும் எனமறித்தும் மறித்தும் வினவினுள். அந்த லீலாதேவி கலக்கங்காதலன் உறிற்கலங்கிடுவள், விலக்கமகிழ்வுறில் வியன்மகிழ்விரவுவள், ஆகுலம் பெரிதுறில் ஆகுலித்திடுவள், பதிவிம்பமொப்பப் பகர்ந்திடி காந்தை, சினந்திடினுதன் பயஞ்சேர்ந்திடுவள். காதலன் கலக்காதிகள் அடைந்தபோது அதிகலக்காதிகள் அடைந்தபோதினும் கோபமுறுங்கான் மாத்திரம் பீர்தொடுங்கி யொதுங்குவ ளெனவறிக: அநேகஞ் சுகத்தையடைந்து வாழ்ந்து வருமொருநாள் நல்லெண்ண முடைய அக்கல்யாணி இவ்வாறு சிந்திப்பதானுள்:—இவ்வுலக நாயகனுகிய எனது நாதர் எனது பிராணனைப் பார்க்கினும் எனக்குப் பிரியராவர், அவர்யவ்வன உல்லாசராயும் ஸ்ரீமானுயும். ஜனனமரண மற்றவராயும் எவ்வா

ருவர், ஆகிய அவரோடும், உன்னதமான ஸ்தன்னியங்களோடு கூடியயான்புட்பக்கொடி வீகெளில், அழகுவாய்ந்த தருணியாய் இஷ்டப்படி நூற்றுக்கணக்கான யுகங்கள் எப் போதும் எப்படி இரமிக்கமுடியும் ? முதலிற் சந்திரவதன அரசர் ஜரையும் மரணமும் அற்றவராகுமாறு வேண்டியபடி தவம் ஜபம் இயம நியம அனுஷ்டானம் முதலியவற் ருனே முயல்வேனுக. ஞான விருத்தர்களும் தபோவிருத்தர்களும், வித்தை விருத்தர்க ளும் ஆகிய பிராஹ்மணர்களே. நரர்கட்கு மரணமானது எங்ஙனம் வராமலிருக்கும் எனக் கேட்பேன் எனச்சிந்தித்து அத்தகையமறையவரை யழைத்துப் பூஜித்து மிகவும்வணக்க மாக ஹேவிப் பிரேந்திரர்களே ! அமரத் தகைமையானது எனக்கும் எனது நாயகருக் கும் எங்ஙனம் உண்டாகுமென மீண்டும் மீண்டும் அவள் கேட்டனள்.

(ச.) அன்னுன் நிழல்போல் = பிரதிவிம்பம் விம்பம்பொருந்திய வியல்பை அவ லம்பிப்பதுபோல் அப்பதியோடு சமரச சுபாவம் பொருந்தினவளாய், மனம்போ லய லற்ற அவன் மனம்போற் றன்மனமும் இலேசிக்கிற் சிலேசிக்கும், சந்தோஷமுறிற் சந் தோஷமுறும், ஆகுலமுறி லாகுலமுறும் சமமுடையளான, அன்னுள் ஓர் காலத்துச் சுபசங்கற்பம் பொருந்தினவளாய், நன்னயகன் = பிராணன்களினும் பிரியனுன இவ் வுலகபதியாகிய எனது கொழுநன், மூப்பிறப்பின்றி = அஜராமரணனுய், நற்காளை யாகி = ஸ்ரீமானுன யவ்வனேல்லாசனு யிருக்க, என்கொலுபாயம்; எந்நாளுமொத்தின் புற = நானெக்காலமும் பர்த்தாவோடுகூடி இரமிக்க என்கொலுபாயம். என்னு = என் றெண்ணிப் பின்தொன்னுன் மறையோர்க் குறைத்தாள் = ஞானவிருத்தரும் தவவிருத் தரும் வித்தியா விருத்தருமாகிய அந்தணரை வரவழைத்துப் பூசித்து வணங்கி அந்தணர் களே ! அமரத்துவ மெப்படியாமென மாறிமாறிக் கேட்டாள். அவர் சொல்லலுற்ருர்.(2)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மறையவர் கூறுதல்:—செபமென.

செபமுந் தவமும் முதலி யாவையுஞ் சித்தி நல்கும்
புவனங் களிற் பொன்றுதல் போக்கரி தியார்க்கு மென்ன
விவள் சிந்தை செய்வா ளிறைவற்கு முன்யா மிறந்தாற்
கவலொன் றறத்தற் பதவாழ்வு கைகூட லாகும். (3)

இறைவன் முதற் சாகிலச் சீவனே யிந்த வீட்டி
லுறையும் படிசெய் ததுவென்னே யுவந்து காண்க
நிறையின்ப மெய்தி யிருப்பே னீது நேருமாறு
மறைதந்த வாணிபத மேத்துவன் வாழ்த்தி யென்றே. (4)

(ப - ரை.) செபமுங் தவமும் முதல் யாவையும் = ஜபதபவியமாதிகள் சமஸ்தமும், சித்திநல்கும் = அணிமாதி சித்திகளேத்தரும், புவனங்களில் = எவ்விடத்திலிருந்தபோதி னும், யார்க்கும் = புகலரும் பெரியோர்க்கும், பொன்றுதல் போக்கரிது = மரணத் தைத் தவிர்த்தல் முடியாத காரியமாகும், என்ன = என்றந்த மறையவர் கூற, இவள் சிந்தைசெய்வாள் = இந்தலீலே ஆலோசிப்பதாவது, இறைவற்கு முன்யாமிறந்தால் = பர்த்தாவிற்கு முன்பு யாம்தெய்வ யோகத்தான் மரணத்தையடையின், கவலொன்றற = சர்வதுக்கங்களும் விடுபட்டு, தற்பதவாழ்வு = மோக்ஷவாழ்வை, கைகூடலாகும் = அடைந்து பரமானந்த முறுவேம் (3)

இறைவன் முதற்சாகில் = ஆயிரவருடங் கழித்துப் பர்த்தா நமக்குமுன் மரிக்கின், அச்சீவனே = அம்மன்னவனுயிரை = இந்த வீட்டில் = இந்த சுத்தாந்த மண்டபத்தில், உறையும்படி செய்து = இருக்குமாறு, அது = அவ்வுயிர், என்னே = எம்மை, உவந்து =

மகிழ்ந்து, காண்க = கண்டுகொண்டிருக்க, நிறையின்ப மெய்தி = பரிபூர்ண சுகத்தை யடைந்து, இருப்பேன் = மகிழ்வேம், இது நேருமாறு = இந்தப்பாக்கியம் கிடைத் தற் பொருட்டு, மறைதந்தவாணி = நால்வேதங்களையும் அனுக்கிரகித்த சரசுவதி தேவி யின், பதமேத்துவன் வாழ்த்தி = திருவடித்தாமரையை ஜபோபவாச நியமங்களானே மகிழ்வுறும் வரை புகழ்ந்து வணங்குவன், என்றே = என்றெண்ணி. (4)

(ஸ்ரீ - வீர.) இயமம் = கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பெண்ண்ய வாமை, ஏர்மையாம். அணிமாதிகள் சித்தர்களின் சித்திகளாம் யாந்துஞ்சின் அத் வீதிய ஆனந்தசொரூப ஆன்மாவின் கண் இனிதாக மீண்டும் எழாதவண்ணம் திதியைச் செய்வேன். நந்நாயகர் தேகத்தை, வீட்டபோது சுழலாநின்ற பதியின் உயிரைப் பரிசுத்தமாகிய அந்தப்புர மண்டபத்தில் இருக்கச்செய்வேம், சகலகலாவல்லி யின் மகிழ்ச்சிவரை பூசைசெய்வது வரப்பொருட்டாம், பின்செய்வது செய்ந்நன்றி காத் தற்காமெனவறிக. தவம் ஜபம் இயமநியம அனுஷ்டான முதலியவற்றுனே சமஸ்த சித் தர்தஞ் சித்திகளு மினிதாகவே கிடைக்கும்; ஆனால் அமரத்தன்மையோ ஒருகாலும் கிடைக்கவே மாட்டாது என்று சொல்ல அதைக்கேட்டதேவி மீண்டும் தனது நுண்ணு ணர்வானே வருமாறு விரைவிற் சிந்திக்கலானுள், பிரியநாயகர் பிரிந்து விடுவாரேயென மிகப்பயந்தனள், நாயகர்க்குமுன் எனதுமரணம் தெய்வயோகத்தா லுண்டாமேலாயின் அதன்பின் சர்வதுக்கங்களும் விடுபட்டவளாகி எனது சொரூபத்தின் கண்ணே சுகமாக வாழ்வேனுக. பரலோகத்திற் செல்லினும், இச்சன்ம ஸ்மரணமின்மையின் நாயகர் மரண வியோகத்துக்கம் அடையாமையின் ஆயிரக் கணக்கான வருடங்கள் சென்றபின் எனது நாயகர் எனக்கு முன்பு தேகம் விடுவரேலாயின் எவ்வுபாயத்தால் ஜீவன் வீட்டைவிட்டு வெளியேறும மிருக்குமோ அவ்வுபாயத்தைச் செய்வேன். எனது நாயகரது ஜீவன்சுற்றி விளையாடிக் கொண்டிருக்கும் எனது பரிசுத்தமாய அந்தப் புரமண்டபத்தில் நாயகரைப் பார்க்கப்பட்டவளாய் நித்தியம் இவ்விடப்படி வசிப்பேனுக. இப்பயன் சித்திக்கும் பொ ருட்டு இன்றுமுதல் ஞானவடிவமாக விளங்காநின்ற ஸ்ரீ சரசுவதிதேவியைச் சந்தோஷ முண்டாகும் வரை ஜப உபவாச நியமங்களினுலே பூஜிப்பேனுக; என்று நிச்சயித்து முயலலானுள்.

(ச.) செவ்வும் தவமும் இயமம் முதலியவையும் சித்திகல்கும், அவைகளால் புவ னங்களிற் பொன்றுதல் போக்கரிது இயார்க்கும், என்ன = என்றந்தணர் கூறக்கேட் டுப் பின் இவள் நாயகன் வியோகத்தில் அதிபய முடையளாய்த் தன் பிரஞ்ஞையால் இதைக்குறித்து, சிந்தைசெய்வாள், இறைவற்குமுன் நாம் தெய்வாநுகூலத்தினுல் இறந் தால், கவலொன்றற = துக்கத்தினின்றும் விடுபட்டவளாய்க் கிலேசமேயின்றி, தற்பத வாழ்வு = பரமான்மாவின் கண் சுகமாயிருத்தலே, கைகூடலாகும் = கிலேசமேயின்றிப் பரமான்மாவின் கண் லயிப்பே னென்பதாம். (3)

இறைவன் முதற்சாகி லக்சீவனே யிந்த வீட்டில் = இக்கிரகத்தினின்றும் நீங்காது, உறையும்படிசெய்து, அது, தனது சுத்தமான மண்டபத்தினுட் சஞ்சரியா நின்ற அக் கணவனுகிய ஜீவன், என்னையுவந்து நித்தியம்காண கணவனுற் காணப்பட்டவளாய் நான் நிறையின்பமெய்தி யிருப்பேனிதுநேருமாறு இன்றைத்தினம் இப்போதாரம்பித்து, மறையின்ப வாணிபதம் = வேதரூபியாய் ஆனந்தாகார ஜ்ஞாநமயமான ஸ்ரீ சரசுவதிதேவி யின் பாதத்தை, ஏத்துவன் வாழ்த்தியென்றே = செபவுபவாச நியமங்களாற் சந்தோஷ மிகப் பூசித்துத் துதித்து வணங்குவ னென்றெண்ணி அவள். (4)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தவம்புரிய முறைசாற்றுதல்:—மன்னென.

மன்னற்குரை யாதுநன் மந்திரங் கற்பம் வல்லோர்
சொன்னத்தி னின்று சுரர்பூ சுரர்பூசை பண்ணி
யன்னத்தை நாணுன்கி னுக்கோர் பகலற்ப மாயுண்
டின்னிட்டை யாலேமதி பத்து நடந்த வெல்லை. (5)

(ப - ரை.) மன்னற்கு = மகாராஜாவிற்கு, உரையாது = சொல்லாமல், நன்மந்திரம் கற்பம் வல்லோர் = நல்லமந்திர கற்பசாஸ்திரங்களிற் றேர்ந்தவர், சொன்னத்தினின்று = கூறியபிரகாரமே செய்து, சுரர் பூசுரர் பூசைபண்ணி = தேவப்பிராஹ்மண குருபிராஞ்ஞ வித்வான்களை வீதிப்படி பூசைசெய்து, அன்னத்தை = தான் அயிலும் ஆகாரத்தை, நாள் நான்கினுக் கோர்பகல் = தினம் நான்கினுக் கொருபகலாக, அற்ப மாயுண்டு = சிறிதாக அயின்று, இன்னிட்டையாலே = இவ்வினிமை பொருந்திய தவத்தினுலே, மதிபத்து = தசமாசம், நடந்தவெல்லை = சென்றபோது.

(ஸ்ரீ - வீர.) சொன்னத்தினின்று என்றமையின் நியமந்தவிராது பிடிவாதமாக விருந்து என்றதாம். பிராஞ்ஞர் = தருமாதி தெரிந்தவர். வித்வான்கள் = பிரஹ்மவித்துக்கள், விருத்தர்கள் எனவும் மூலபாடமேதமாம். ஸ்நான தானதபத்தியானங்களில் எப்போதும் முயலும் மேனியுடையவளாகவே யிருந்தனள். சர்வாஸ்திக்யத்தாற் சதாசாரஞ் செய்பவளாகவே யிருப்பன். எப்போழ்தும் தபோநிஷ்டையைப் பற்றியே நிகழுவள்; தவநிஷ்டையையே நிலைநிறுத்திக் கஷ்டப்பட்டுச் சாதித்துக் கொண்டிருப்பள் என்பதாம். அந்த லீலாதேவியாகிய சுந்தரியானவள் நாயகருக்குத் தெரிவிக்காமலே நூலில் கூறியபடி உக்கிரமான தவத்தைப் புரிந்தாள். அவ்வாறே அநேக நியமத்தோடுங் கூடியிருந்தாள். அற்றேல் " பதியிலுல் ஆணைசெய்யப் படாமலே மடமானேவுள், முதுபூவாச நோன்பு முத்துறச் செய்வளன்னுள், பதியுடை யாயுளீர்வள் பாரிடிலாவியந்தோ, கொதியுறு துயரமிக்க கொடுநர கடைவளன்றே " என நாயகருக்குத் தெரிவிக்காமலென்பது நிந்திக்கத்தக்கதாக விருப்ப நூலிற் கூறியபடி யென்றியம்பியது எங்ஙனங் கூடுமெனின் ? இங்ஙனம்.காட்சியாக வகாட்சியதாகவோ, மாட்சியென்று மனுளனுக்கெய்துற, நீட்சிநோன்புபவாச நியமங்கள், ஆட்சி லோகோபசாரமு மாற்றுவாள் " என்பதனுல் முன்னுல் நிந்தை, நாயகனிதத்திற் கயலாகத் தனது இஷ்டசித்தியின் பொருட்டு உபவாசாதி விஷயகமாமெனத் தோற்றின்மையறிக. மூவிரவுக் கொருமுறை மூவிரவுக் கொருமுறை பாரணை செய்பவளாய்த் தேவதைகள் மறையவர் ஆசிரியர் அறிஞர் கற்றோர் முதலியவரைப் பூசைசெய்வதிற் றற்பரையாய், ஸ்நாநம் தானம் தவம் தியானம் முதலியவற்றை நிரந்தரம் புரியும் முயல்வுடைய தேகியாய், எல்லாச்சாஸ்திரப் பொருள்களினும், அவசியம் பயனுண்டென்னும் எண்ண முடையவளாய்த் தவம்புரிந்து கொண்டு காலாகாலத்திற் செய்யவேண்டிய செய்கைப்படி நூற்படி முறைப்படி பார்த்தா தெரிந்து கொள்ளாதபடி நாயகரைமதிழ்வித்து வந்தனள். நியமத்தோடுகூடி யிவ்வண்ணம் அந்தப்பாலையாகிய லீலை பத்துமாத பரியந்தம் இடைவிடாமல் மிகவுங் கஷ்டப்பட்டுத்தபோ நிஷ்டையை யநுஷ்டித்து வந்தனள் இவ்வரிறுநூறுமூவிரவு செய்துகழித்தாள்.

(ச.) மன்னற் குரையாது, நன்மந்திரங்கற்பம் = மந்திர சாஸ்திரத்தில், வல்லோர், சொன்னத் தினின்று = விதித்த உக்கிரமான தபநியமங்களில் நிலைத்து நின்றவளாகி, சுரர்பூசுரர் பூசைசெய்து = தேவ அந்தணகுரு பிராக்ஞ வித்துவான் ஆகிய இவர்களைப் பூஜித்து — நாணுன்கினுக் கோர்பகல் = மூன்றிரவின் பரியந்தந்தோறும், அன்னத்தை

யற்பமே யுண்டு பாரணை செய்தவளாய், இன்னிட்டையாலே கிலேசத்தை யரிக்கும் அகண்டமான சிரத்தையோடு ஸ்நான, தான, தவ, தியான, நியமரூபமான சதாசாராநுட்டானமாகிய தபோநிஷ்டையால், மதிபத்து = திரிராத்திரி சதம், நடந்தவெல்லை = சென்றபின்பு.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அம்பிகை பிரசன்னமாதல்:—வானுரென.

வானுர்மதி போனிற வாணி மகிழ்ந்து தோன்றி
நீநாடிய தென்னென நீள்பவ மாநெருப்புக்
காணுவமு தக்கதி ரேயகத் துன்ப மென்னும்
பாணுளைகற் றுங்கதி ரேயெனப் பாத மேத்தி. (6)

(ப - ரை.) வானுர், மதிபோல் நிறவாணி = கரற்கால ஆகாயத்திற் பொருந்திய பூர்ண சந்திரனைப்போலும் வெண்காந்தி வீசும் ஸ்ரீ சரசுவதிதேவி, மகிழ்ந்து = இவள் செய்த தவத்தால் அதிக சந்தோடத்தை யடைந்து, தோன்றி = பிரசன்னமாகி, நீ நாடியது என்னென = ஹேகுழந்தாய்! நீ வாஞ்சித்த வரம்யாது கொலாமென்று கேட்டருள, நீள்பவமாம் நெருப்புக்கு = ஒன்றுகொண்டுங் கெடுக்கமுடியாதபடி நீர்க்கமான ஜன்ம ஜராமயமான ஜ்வாலைவீசும் பேரழலின் ரூகத்திற்கு, ஆனு அமுதக்கதிரே = கெடாத அமுதமயமான கிரணங்கள் வீசும் சசிப்பிரபையே! அகத்துன்ப மென்னும் பாநாள் = உட்டுன்பமயமாய ஹிருதய அந்தகாரக் கூட்டத்தை, அகற்றுங்கதிரே = நிவாரணஞ் செய்யும் ரவிப்பிரபையே! எனப்பாதமேத்தி = என்பவான பலதோத்திரங்களாற் றிரு வடியைப் பூசை முறைப்படிசெய்து.

(ஸ்ரீ - வீர.) மகிழ்ந்து = மிகவும் அதிசயமான ஆதரவோடும் நன்கு பூசிக்கப்பட்டு போற்றப் பெற்றதனுற் சந்தோஷித்து, நீ பர்த்தாவின் பக்தி அதிசயத்தோடு கூடியவளாக விருத்தலின் வேண்டிய மேன்மையைக் கேள். ஜன்மஜரையே சுவாலைகள் அவற்றுல் தாகமே தோடம் அதைக் கெடுப்பதில் நிலவொளியே என்றதாம். இருதய அந்தகாரம் அஜ்ஞானமாம். கூதியவண்ணம் விரதத்தை யநுட்டித்தலா லெழுந்தருளிப்பாகிய வுபசாரத்தாற் பூஜிக்கப்பெற்றவளும், பாவனோபசாரத்தாற் பகுமானிக்கப் பெற்றவளும் சர்வஜசுவரிய சம்பன்னையாய பகவதியும் கௌரியுமாகிய ஸ்ரீ சரசுவதிதேவி சந்தோஷித்து அந்தலீலையை நோக்கி ஹேபுத்ரி! பர்த்தாவி னிடத்திலிருக்கும் மிகுந்தபக்தியி னுல் நிரந்தரஞ்செய்த நீள்தபசால் மிகவும் அகமகிழ்ந்தோமாதலின் உன்னுளம் விரும்பிய வரத்தைக் கேட்டுக்கொள் ளென்றுகூற, உளம்பூரித்த லீலாதேவி வரும் நாயகஜீவன பிரஹ்மவித்தை யடைவுவடிவதும் பாக்கிய அனுரூபமாயதும் ஆகிய ஸ்துதியைத்தெய்வ யோகத்தாற் செய்கின்றனள்; ஜன்ம ஜராகளாகிய சுவாலையின் ரூபத்தை யகற்றும் சந்திரகாந்தியாகிய சரசுவதிதேவியே! நீடுழி நீ வாழ்க. இருதயாந்தகாரக் கூட்டத்தை யகற்றும் சூரியகாந்தியாகிய சரசுவதிதேவியே! நீ நீடுழி வாழ்க. ஹே அம்பிகே! ஹேமாதாவே! ஹேயுலகமீன்ற அன்னையே! இக்கிருபணையாகிய அடியாளைக் காப்பாயாக.

(ச.) வாணி = பகவதிதேவி யென்னும் வாக்கீசுவரி, மகிழ்ந்து = பூசையாற் பிரீதி மிகுந்து கனிந்தவளாய், தோன்றி = பிரசன்னமாய், லீலையை நோக்கி விரும்பும் வதுசையென்னும் வாலையே! நீமதிணை பக்தி யதிசயத்தாற் செய்த நிரந்தரதவத்தால் நான் சந்தோஷித்தேன், நீ நாடியதென்னென = வாஞ்சித்த வரமியாது அதனை வாங்கிக்கொள் ளென்று திருவாய்மலர்ந்தருள. லீலை நீள்பவமா நெருப்புக்காலுவமுதக் கதிரே = சன்மசரை மரணமென்னும் சுவாலையால் வரும்தாக தோடத்தைச் சாந்திசெய்யுஞ் சசிப்பிர

பையே ஐய, அகத்துன்ப மென்னும், பாளைகற்றுங் கதிரே = அந்தகாரக் கூழாத்தை நிவாரணஞ்செய்யும் ரவிப்பிரபையேஜய. திரிசகன்மாதாவே ! இவ்வேழையாகிய என்னை யிரக்ஷி எனப்பாதமேத்தி. (6)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வரப்பிரதானமருளல்:—என்ஞவென,

என்ஞயகன் றுஞ்சிலச் சீவனிவ் வில்லி னிற்க
மூன்ஞகவுன் னேகினே போதிலென் முன்பு தோன்ற
வன்ஞய வரங்க ளிரண்டு மளித்தி யென்ன
நன்ஞுமக ளன்பொடு நல்கி நயந்து போஞள். (7)

(ப - ரை.) என்ஞயகன் = எனது பர்த்தா, துஞ்சில் = உயிர்விடில், அச்சீவன் = அவ்வுயிர், இவ்வில்லில் நிற்க = இவ்வந்தப்புர மண்டபத்தை விட்டேகாமல் இங்கேயி யிருக்கவும், மூன்ஞக = பிரத்தியக்ஷமாகித் தரிசனந்தந்து வேண்டியதை யனுக்கிரகித் தற்பொருட்டு, உன்னே நினேபோதில் = எப்போது எப்போது உனதுபாதப்போதைச் சிந்தை செய்வேனே, அப்போது அப்போது, என் முன்புதோன்ற = அடியாளது முன்னர் பிரசன்னமாகவும், அன்ஞய் ! ஹேமாதாவாகிய மகாதேவி ! அவ்வரங்களிரண்டும் = அப்படியான வரங்கள் இரண்டையும், அளித்தி = திருவருள்செய்தி, என்ன = என்று பிரார்த்திப்ப, நல்நாமகள் = பக்தவாத்சல்யம் வாய்ந்த வாக்தேவியானவள், அன்வோடு கல்கி = மிகவும் பிரீதியுடன் கொடுத்து, நயந்து = ஆசீர்வதித்து விட்டு, போஞள் = அலைகடலெழுந்தங் ஙடங்குமாபோல் ஆங்கே யறிவிற் கரந்தனள்.

(ஸ்ரீ - வீர.) உயிர்விடல் = விதேகமாதல், வரப்பிரயோஜன ஹேதுவிஞலே தரிசனப்பொருட்டு எக்கால் உன்னேப் பிரார்த்திப்பேனே அக்கால் தரிசனம்தரல் இரண்டாவது வரமாம். ஹே தருணமங்களியே ! அடியாள் பிரார்த்திக்கும் இவ்விரண்டு வரங்களேயும் கொடுத்தருள்வாயாக; ஹே அம்பிகே ! அவற்றுள் ஒன்ரே அடியாளுடைய நாயகர் தேகநீங்கிய பின்னச்சீவன் இவ்வெனது அந்தப்புர மண்டபத்தினின்றும், அயலணுகா தொழிக, மற்ரொன்ரே ஹே மகாதேவியே ! அடியாள் தேவரீரை யெப்போது எப்போது பிரார்த்திக்கின்றேனே தரிசனத்தின் பொருட்டும் வரங்கொடுத்தற் பொருட்டும் அப்போது அப்போது எனக்குத் தரிசனங்கொடுத் தருளவேண்டும். என்பதைக் கேட்ட தேவியா மூலகமாதாவானவள் அவ்வாறே யுனக்குளவாகுக வெனத் தாமேகூறி யருளிக் கடலிலெழுந்த அலையானது அடங்குவதேபோல ஆங்கே யறிவின்மறைந்தனள்.

(ச) இவ்வில்லினிற்க = தனது இந்த அந்தப்புர மண்டபத்தினின்று நீங்காது எனது சமீபத்திருக்கவும், ஹேமகாதேவி ! நின்னே முன்ஞகத் தரிசித்தற்கு நினேபோதில் = பிரார்த்திக்குங் காலத்தில், என்முன்புதோன்ற = நீ யெனக்குத் தரிசனந்தரவும், (யான்வேண்டும்) அன்ஞயவ்—போஞள் = சமுத்திரத்தெழுந்த தரங்கம்போல் அந்தர்த்தானமாஞள். பின்பந்த ராசரிஷேட்டி (மகரிஷி) யான லீலை சந்தோடமிகுந்த இஷ்டதெய்வ மூடையளாய் அமிருத வருடத்தாற் பூரணமானவள்போல் ஆநந்தாரணியா யிருந்தாள் எனத்தேர்க. (7)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இஷ்டதேவதையைச் சந்தோஷிப்பித்து வரதானம்பெற்ற அவ்வரசியானவள் இன்கீதங்கேட்ட பெண்மான்போலப் பெருமகிழ்ச்சி யுடையவளா யிருந்தபோது காலத்தினின் கதிகழறல்:—பக்கத்தென.

பக்கத்தொடு திங்க ளுறும்பரு வங்க டேர்க்காற்
ரொக்கிச்செறி நாளதிற் கூம்பு தொடர்ந்த வாண்டு

புக்குற்றதோ ரச்சிமைப் போதகி ஞபி யாதி
மிக்குத்திரி காலவுன் றேர்விரைந் தோட லோடும். (8)

(ப - ரை.) பக்கத்தொடு திங்கள் உறும்பருவங்கள் = பக்ஷத்துடனே மாதம் அதன் இரட்டிப்பான இருதுக்கள், தேர்க்கால் = கடகமாகவும், தொக்கிச்செறிநாள் = கூறிய வற்றிற் றொடர்ந்து பொருந்தியதினம், அதிற்கூம்பு = அராவாகவும், தொடர்ந்த ஆண்டு = ஆறு இருதுக்கள் பொருந்திய வருடம், புக்குற்ற தேர் அச்சு = இடையிற் புகுந்து பொலியும் ஒப்பற்ற தண்டமாகவும், இமைப்போது = கணமானது, அதன் நாபி = அதனது நாபியாகவும், ஆதி = முதலனவாய அநேகஞ் சாமக்கிரிகளோடு சேர்ந்ததாகவும் உள்ள, மிக்குத்திரி காலவுன்றேர் = அதிக வேகத்தோடுமோடும் காலபகவானது இரதம், விரைந்தோடலோடும் = வெகுவேகமாகச் சென்றுகொண்டிருப்ப.

(ஸ்ரீ வீர) பக்கமாச இருதுக்கள் கடகம் = நாபிவளயம் தினங்கள் அராக்களாம், நாபிதொடங்கி நேமிபரியந்தம் எப்பக்கமும் சமர்ப்பிக்கப்பெற்ற அயவிகாரங்கள் அராவெனப் படுகின்றன. சம்வத்சரம் அக்ஷதண்டம். நாபி = சக்கிரமத்யம், சக்கிரமத்யஸ்த பிண்டியா மென்க. மிக்குத்திரிதல் = அசைவுவடிவமாக இருத்தலாம். இரவிகதிக்குக் காலவியஞ் சகத்தன்மை யிருத்தலானே உபசாரத்தாற் றன்மயத்வம் கூறப்பட்டது, இங்ஙனங் காலரதஞ் சென்றுகொண்டிருந்தபோது பக்கங்களாகிய நேமிகடகங்களும், மாதங்களாகிய மத்திய கடகங்களும், இருதுக்களாகிய நாபிகடகங்களும் உடையதும், "மூந்நாபி சக்கிரம் அஜரம்" என்னுஞ் சுருதியினனே மூன்றினுந் தொடர்ந்திராநின்ற தினங்களாகிய அராக்கள் குறுக்காகத் தொடர்ந்துநின்ற சங்குகள் கேசரம் போன்றவை யுடையதும், வருடமாகிய அக்ஷதண்டமுடையதும், மூப்பதுகலவடிவ நாபியாகிய மத்தியத் தினையுடையதும், ஆகிய சூரியாதி யசைவுமயமான காலசக்கிர மோடிக்கொண்டிருப்ப, அக்கால்.

(ச.) காலம் பிரமணினிலமாதலின் சக்கரசாமியஞ் சாற்றப்பட்டது. பக்ஷாதி கடகங்கள் = வளயங்கள், திங்கள் = அராக்கள், வருடந் தண்டம், கணம் நாபி, இவற்றோற்ற ஸ்பந்தமயமாய் மிகமிகவுஞ் சுழலாநின்ற காலசக்கிரம் நடந்து சென்றபோது.

(ஸ்ரீ - வீர - அ - கை) என்னுயிற்றெனிற் கூறுகின்றார்:—இன்பமென,

இன்பங் கரையற்றிட லீலையிருந்தவெல்லை
யன்பன் சிலகாளி லிறந்தன னன்னமன்னு
நின்பஞ் சுடும்வெம்மை பொறுதுயிர்துஞ்சுமுன்னே
முன்பின்றி விண்ணின்று சொன்னமாதிவண் மோகமாற்றி (9)

(ப - ரை.) இன்பங் கரையற்றிட = அமிருதவருடத்தால் நிறைந்தாள்போல ஆகந்ததாரிணியாய் கரையிலாவின்பக் காயமேயாகி, லீலை = லீலாதேவி, இருந்த எல்லை = வாழ்ந்து வந்தபோது, அன்பன் = தன்னுயகன், சிலகாளில் = சில காலங்கழித்து, இறந்தனன் = உயிர் துறந்தனன், அன்னமன்னும் = அம்சம்போன்ற அவ்வரசியானவள், துன்பம்சுடும் = சோகமானது தகிக்கும், வெம்மைபொறுது = சந்தாபம் பொருக்கமுடியாதவளாய், உயிர்துஞ்சுமுன்னே = தன் பிராணனைத் தியாகஞ் செய்துகொள்வதன் முன்னரே, முன்பின்றி = எதிரில் வராமலே, விண்ணின்று = வியோமத்திலிருந்துகொண்டே, சொன்மாது = ஸ்ரீவாக்தேவி, இவள் = இவ்வரசியின், மோகம் = சோககாரண மயக்கத்தை, மாற்றி = மாறுபடச்செய்து மயக்கம்நீங்கும் தேறுதல் கூறியென்றபடி. (9)

(ஸ்ரீ - வீர.) இவ்விடவியோக ஜன்னிய துக்கமாகிய சோகத்தினாலும் வேறு பெருந் துயரங்களாலும் நீரற்ற தாமரையோடை நிகர்ப்ப மிக மலினப்பட்டு வாடினள். முற்றினு முணர்வற்றுப் பரவசமாயிருந்தனள்; மடிக்காய்ந்தவழி சபரிமீன் மடிவதுபோற் பட்ட அவளை, சபரியென்பது மீனுட்பட்ட ஜாதிவிசேடம், மிகச் சிறுமீன் குஞ்சாம். அவ ளுடைய பதியின் மூச்சுவிடன் முதலிய சூறிகளானே பிரத்தியக்ஷமாய சேதனம் இலிங்க தேகத்தின்கண்ணே மறையலுற்றது; கண்டிகொண்டிருக்கும்போதே விரைவிற்காய்ந்த வீலையிரதம்போலும் ஆகியது. போரில் வெற்றிகொண்ட தேகமானது அவ்வந்தப்புர மண்டபத்தில் இறந்து போனவுடனே நீரில்லாத தாமரை யோடையைப்போல அவள் மிகுந்த வாட்டத்தை யடைந்தனள். விடம்போலும் அதிக வெப்பமான பெருமூச்சி னாலே வேறு வர்ணமாக்கப்பட்ட அதரபல்லவங்களே யெல்லா முடையவளானாள். முன் னையகணவனுகூடி மானவதியாயிருந்தவள் நாயகனிறந்தவுடனே மரணத்திற்கு முற்பட்டு நின்ற அவள் சக்கிரவாகப் புட்போல நாயகனது பிரிவாற்றுமையினாலே விரைவிற் கோ வென்றழுவள், விரைவிற் பேசாம லூமையைப்போன் மூர்ச்சையிலிருப்பள் ஆயினள். மடிக்காய்ந்துபோகத் துயருறும் மீன்குஞ்சை மூதன்மழைபோலும், இவ்வாறு அளவு மிகுந்த துயரத்தோ டிற்றிருக்கும் அந்த லீலையை, முன் அநேக ஜன்மங்களில் ஆராதித் திருத்தலின் தத்துவஞான தானஞ் செய்யவந்த கிருபா மூர்த்தமும் அசரீரியும் ஆகிய ஸ்ரீ சாரஸ்வதிதேவியானவள் பலன்கிட்டுங் குறிப்புண்டாக்கிக் கொண்டிற்றனள்.

(ச.) அன்பன் = அவளுடைய பதி, அம்மகீபாலன் றனுவிற் சேதனமிர்தமாகவே, அன்னமன்னள் உயிர்துஞ்சுமுன்னே சக்கிரவாகிபோல் மரணேன்முகியானபின். (9)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அசரீரிணியாகவே யிருந்து சமாதானித்தல் விரும்பும் வரந் தாதல்களால் அனுக்கிரகிக்கும் ஸ்ரீ சாரஸ்வதிதேவி கூறியருளல்:—மாய்வென,

மாய்வுற்ற வேந்தை மலரான் மறைவித்து வைப்பா
யேய்வுற்ற பூவுல ராமெய் யழியாது ஜீவன்
பாய்வுற்றகலாதுபொன் மண்டபம் பற்றி நிற்கும்
தோய்வுற் றிவன் றேள்விரை விற்றுயர் தீர்தி யென்றாள். (10)

(பத- னை.) மாய்வுற்ற வேந்தை = சவீபூதமாய இம்மன்னவனுயிய தின்கொழுனனே ஹேகுழந்தாய்! மலரால் = புட்பசமூகங்களால், மறைவித்து வைப்பாய் = ஆச்சாதனஞ் செய்து ஸ்தாபிப்பாய், எய்வுற்ற பூவுலரா = பொருந்திய புட்பங்கள் மலினமடையா, மெய்யழியாது = மேனியானியாகாது, ஜீவன் பாய்வுற்றகலாது = உயிர்பாய்ந்து வெளி யேசெல்லாது, பொன்மண்டபம் பற்றிநிற்கும் = நினது அழகிய பொன்மய அந்தப்புர மண்டபத்தையே யாகிரயித்து நிற்கும், தோய்வுற் றிவன்றேள் = மீண்டும் நினது நாய கனை யடைந்து ஆலிங்கனஞ்செய்து, விரைவிற் றுயர்தீர்தி யென்றாள் = சீக்கிரம் துக் கத்தை விடித்துச் சுகியாக வாழ்த்தியென அனுக்கிரகித்தாள்.

(ஸ்ரீ - வீர) ஹே குழந்தாய்! கவலையமாக இருக்கும் இந்நினது பர்த்தாவைப் புட் பக்குவியலுண் மறைத்து வைத்திருத்தி, மீண்டும் நீ இந்நாயகனை யடைவாய். புட்பங் கள் மலினத்தையடையா; இது கெடவுமாட்டாது; மீண்டும் நினது நாயகத்தகைமையை நீளுளில்லாமலே செய்யும், ஆனல் முன்றந்தவரம் பொய்யாமோவெனின்; ஆகாயத்தைப் போல நிர்மலமாக விருக்கும் இச்சரீர சம்பந்தி ஜீவன் இந்நினது அந்தப்புர மண்டபத்தி னின்றும் விரைவி லகலாது.

(ச.) ஸ்ரீ சரசுவதி வசனித்தல்:—மாய்வுற்ற வேந்தை = நினது பர்த்தாவை, மல சால் மறைவித்து = புட்பமண்டபத்தில் மறைத்து வைக்குதி, இவனுடைய சிவன் பொன்மண்டபம் பாய்வுற்றகலாது பற்றி நிற்கும். நினது அந்தப்புர மண்டபத்தினின் றும் ஓரிடம் விட்டோரிடந்தாவி நீங்காமற் றிதிபெற்றிருக்கும் விரைவிற் றோய்வுற்று.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ சரசுவதிதேவி கூறியபடி செய்துந் துயரமகலாமையின் மீட்டுந் தேவியை யழைத்தல்:—வாடாவென.

வாடாவச ரீரிதன் சொற்படி மன்னை வைத்தா
ளோடாதவா வியுடை யாளுளத் துன்ன வாணி
நீடாதுவந் தாளென தன்பினை நீங்கி வாழ்தல்
கூடாதவன் சேர்வுழி கூட்டுதி வல்லை யென்றாள். (11)

(ப - ரை.) வாடா வசரீரிதன் சொற்படி = கெடாத திவ்யபாரதியின் உத்தரவின் படியே, மன்னைவைத்தான் = தனது நாயகனைப் புட்பக்கூழுவினுள் மறைத்துவைத் தனள், ஓடாத ஆவியுடையாள் = மூர்ச்சையினுற் பிராண னைசவற்றவளாய், மிகுந்த துயரத்தினுல் மரிக்குந் தருவாயிலிருக்கும் அந்த லீலையானவன், உளத்துன்ன = ஞான தேவியாகிய சரசுவதியை மனத்தில் தியானஞ்செய்த மாத்திரத்தில், வாணி நீடாது வந் தாள் = ஸ்ரீ வாக்தேவி தாமதியா துடனே பிரசன்னமானுள், ஆகி வேண்டிய தென் னென, எனதன்பினை நீங்கிவாழ்தல் கூடாது = அடியாளது உயிர்போன்ற நாயகனை விட்டுத் தனியேவாழ்தல் முடியாத காரியமா யிருக்கின்றபடியால், அவன் சேர்வுழி = எனது பர்த்தா எத்தகையனுய் என்னசெய்துகொண்டு எங்கேயிருக்கின்றனனோ அங்கே அவன் சமீபத்தில், வல்லை = அதிவிரைவில், கூட்டுதியென்றுள் = அடைவிப்பாய் தயையினுல் என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

(ஸ்ரீ - வீர.) புட்பராசியினுலே மறைத்துப் பதியைத்தாபித்து நிதிகிடைக்கப்பெற்ற தரித்திரியானவன் மகிழ்ந்ததேபோலச் சிறிது மகிழ்வுற்றிருந்தனள்; அதேதினத்திற் பாதியிரவில் வேலைக்காரிகளெல்லாம் நன்றுயித் தூங்கும்போது ஞானமயமாய்ப் பக வதியா யிராநின்ற தேவியைச் சுத்தியான மகாமதியால் துக்கம் பொறுக்க முடியாமல் வரவழைத்தனள். அந்த ஸ்ரீதேவியானவள் அவளை யடைவுற்றுக் கூறுவதாவது, ஹே குழந்தாய் எதன்பொருட்டாக என்னைத் தியானித்தாய்; என் மிகச்சோகத்தோடு கூடி யிருக்கின்றாய், கானனீரானது பயனின்றியே தோற்றுமாபோலச் சமுசார மயக்கங்கள் தோற்றுகிற்கும், என்ன அதற்குலீலை கூறுவதாவது, ஹேதாயே! எனது நாயகரானவர் எங்கே போயிருக்கிறார், என்னசெய்கிறார், எத்தகையராக இருக்கிறார், என்னை யவருடைய சமீபத்திற் சேர்ப்பித்தருள வேண்டும். நான் ஒண்டியாய் வாழமுடியவே மாட்டாது என்றனள்.

(ச.) ஸ்ரீ வசிட்டர்: உளத்துன்ன ஞப்திரூபமான ஸ்ரீசரசுவதிதேவியைத் தியானஞ் செய்ய, வாணி நீடாது வந்தாள். லீலை: வாழ்தல் கூடாது = ஒண்டியாய்ச் சீவித்தற்குச் சகியேன், அவன் சேர்வுழி = அவனது சமீபம், வல்லை கூட்டுதியென்றுள் = எனது பர்த்தா எவ்விடத்திருக்கின்றார், என்செய்கின்றார், எத்தன்மையன் என்னும் விஷ யத்தை உத்தரந்தானுய் அறியச்செய்யுஞ் சமர்த்தியான ஸ்ரீ வாக்கேசுரியே! நீ யென்னைச் சீக்கிரஞ் சேர்க்குதி என்றாள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பிரஹ்மத்தை யறிந்தபோது அதன்கண்ணே சித்தவிருத்தி நிரோதவடிவ யோகத்தினுலே அயோகிகளாலே கவரமுடியாத பதார்த்ததரிசன சாமர்த்

தியம் சம்பவிக்கும் என்பதனுனே லீலைக்கு அந்தப் புருஷனுடைய ஆகாசத்திலிருக்கும் பர்த்தாவின் நிசன சாமர்த்தியசித்தியின் பொருட்டுப் பிரஹ்மபிரதிபாதித ஸ்ரீபகவதி சரசுவதிதேவி பிரதிபாதிக்கின்றூள்:—இகலோகம்போலப் பரலோக கற்பனைக்கும் சின் மாத்திர அதிஷ்டான முடைமையைக் காண்பிக்கும் பொருட்டுச் சிதாகாசத்தைப் பகுத் துக் காண்பிக்கின்றூர் தேவியார்:—மனவென.

மனவானமும் வானமும் மாசறு ஞான வானும்
மெனவான மூன்றின்முதல்வான பிரண்டு மின்றிக்
கனஞானவா னெய்துதல் கண்டதை விட்டுப் போத
நனவாயய லொன்றையுற் றுனடு ஞான வானும். (12)

(ப - ரை) மனவானமும் = சித்தாகாசமும், வானமும் = ஆகாசமும், மாசறு = குற்றமற்ற, ஞானவானும் = சிதாகாசமும், என=என்று சொல்லப்பட்ட, மூன்றில் = மூன்றுகாயத்துள், முதல்வான பிரண்டு மின்றி = முதலின் மொழிந்த உள்ளாகாசம் வெளியாகாசம் இரண்டினும் சூனியதரமாக, கனஞானவா னெய்துதல் = அறிவுமய ஆகாயம், இருப்பதாக அறிதி, போதம் = சம்வித்தானது, கண்டதைவிட்டு = கண்ட வத்துவைவிட்டு, அயலொன்றையுற்றுல் = அயலொருவத்துவை யெண்ணினுல், நடு = மத்தியிலிருப்பது, நனவாய்=ஜாக்கிரதையா யுற்று = நோக்கின், ஞானவானும்=ஞாஞ காசமாக அறியலாம்.

(ஸ்ரீ - வீர.) கூறப்பெறும் விதூரத பாரிவடிவ லீலைக்கேபோலப் பிரஹ்மப் பிரதி பாதனுதி யில்லாமலேயும் லீலையின்பொருட்டு வேறுசிருஷ்டியின் நிசன சாமர்த்தி யத்தையேன்சரசுவதி கொடுக்கவில்லை, பிரஹ்மப் பிரதிபாதனுதியின் கண்ணே யேன் பிரவிருத்திக்கின்றனள் எனின் ? அதலுதும், லீலையானவள் வரும் லீலைபோலச் சமு சாரசம்பந்த பலாபிலாஷையால் ஆராதியாமையினுலும், பரமேசுரியை சமுசாரத்தி னின்று விடுபடவேனுகவும் எனக்கருதி யாராதித்தமையானும் தேவியும் அதற்கனுகூல மாகவே பிரவிருத்திப் பாளாயினுள். சித்தமே சொச்சத்தன்மை சூக்குமத்தன்மை மூத லிய வற்றுனே ஆகாச கற்பத்தன்மையால் ஆகாசம், சிற்பரமான்மாவே யாகாசம் சிதா காசம், மகாபூதமெனப் பெயரிய ஆகாசம் என ஆகாசமூன்றும், சொச்சத்தன்மை சூக்கு மத் தன்மை முதலியவற்றுனே உலகிற் பிரசித்தமாய அம்மூன்றினுள் எச்சிதாகாசம் உளதோ அது அவ்விரண்டினும் அத்தியந்தம் மகாசூனியமென அறிதி. அல்லது வான முமென வியாகிருதம் விளம்பப்பட்டதாம், முதல்வான பிரண்டு மின்றி யென்றதனுல் பிரஹ்மத்திற்கு நிஷ்பிரபஞ்சத்தன்மை நிகழ்த்தப்பட்டது; சித்த அவ்யாகிருதத்தினும் அயலாக அகிலமில்லாமையின். சம்வித்தாகிய சித்தத்திற்கு ஒருதேசத்தை விட்டு ஒரு தேசத்தை யடைவதென்னும் ஒருவிடயத்தை விட்டு ஒருவிடயத்தை யடைவதாங்கால் மிக அற்பகாலத்தால் தோற்றுகின்ற எம்மத்திய முளதோ அதுவே சிதாகாசமென வுணர் ந்துகொள்ளுதி. சித்தத்தினது பூர்வவிருத்தி கட்டமாகியவழி உத்தரவிருத்தி யுண்டாம் வழி யிடையே எந்நிர்விடயம் சந்தி சாகூவிவடிவமான சைதன்யம் சுயமாகப் பிரகாசிக் கின்றதோ, விருத்திகளின் மத்தியிற் பிரதீயமான மாதலின் மத்தியம் எனமலரப்பெறு கின்றதோ, அது சிதாகாசமென வறிதியென வறைந்ததாயிற்று அங்ஙனமே ஏழுபூமி களை நிரூபிக்கும் அவசரத்தில் ஒருபொருணினைவை யொழித்து மேலப்பா வொருபொரு ணினைவுறி லந்த, விருபொருணடிவு ணினைவற விருக்குமிது சொரூபத்தியல்பு. எனக் கூறப்பெறும். "செறிதரு சந்திகள் விருத்திகலி ஞழிவு முழுதுந் திகழ்வனவாம்

விகாரமிலா வெவ்வறிவாலந்த, நிறையறிவே கூடத்தனெனலாகும் " எனப்பெரியோர்க ளாலும் கூறப்பெற்றுளதாம் விருத்தி சந்திகளும் விருத்தி யபாவங்களும் எச்சைதன்யத் திஞல் ஒளிர்விக்கப் படுகின்றனவோ அது கூடஸ்தமென் றறியப் பெறும் என்பது பொருள். வாதணேமயமாய சித்தாகாயமெனவும், பிரசித்த விவகாரசம்பந்தமான ஆகாய மெனவும், சாற்றிய இரண்டிற்கும் இடையில் உபயசூனியமா யிலக்கியமாஞ் சிதாகாச மெனவும், ஆகாசம் மூன்றுவித மென்றறிதி; சிதாகாசமே தன்ஞவரண அஞ்ஞானத்தி ஞும் வேறுபடுத்தப் படாததாய் விளங்கி அசத்துலக வடிவமா யிப்போ இலங்குகின் றது. சிதாகாசத்தினது எகாக்கிர சிந்தனத்திஞலே விரைவில் நினது நாயகனே ஈண்டே காணலாம், அதன்பொருட்டுச் சிதாகாச பாவனேயைப் பயிலுதி. ஓரிடம்விட்டு மற்ரோ ரிடமடையின் இடையே யிருக்கும் அறிவே நிமிட மூணரலாம், அதுவே சிதாகாசமாம் என்றறிதி முறையாக வரும் விடயபிரண்டாபாச சந்தியின் கண்ணே அதனுபய சூனிய சிதாகாசம் எளிதிலே யுணரலாமன்ரே.

(சு.) ஸ்ரீதேவி யணுக்கிரகித்தல்; மனவானமும் வானமும் மாசறுஞானவானும் என வானமூன்றின் முதல் வானமிரண்டு மிந்தக் கனஞானவா னெய்துதல்=சித்தம் வியோ மம் சைதன்யம் என்னும் மூன்றும் அமூர்த்தமாதலின் ஆகாச சப்தவாச்சியமாம், அவற் றில் சித்தம் ரூபாதி சூனியமாயினும் விகாரமிருந்ததுமடமுமாம், வியோமம், நிர்விகாரம் பரிபூர்ணமாயினுஞ் சடமாம், ஆகலின் சித்த பூதாகாசமென்னு மிரண்டினுஞ் சிதாகாச மிகு சூன்யமாம் என்று வரானணேரீ யுணர்தி. கண்டதைவிட்டுப் போதநனவா யய லொன்றையுற்ரு னடுஞானவானும், கண்டது=விடயம், பூருவம் கிருகித்த விடயத்தி னின்று நீங்கி மற்ரொருவிடயக்கிரகண சமயத்தில் போதநடு = போதத்தின் மத்தியம், பூர்வங் கிரகித்ததின் பரித்தியாகத்திஞலும் அன்னியத்தின் அக்கிரகணத்திஞலும் விடயசம்பந்தமற்ற போதத்தினுருவம் சிதாகாசமாம் என வரவர்ணினி நீயுணர்தி. வியப தேசிக்கப் பெறுகின்றது இதஞல் சம்வித்தெனத் தேசம் விடயமாம். அதனேயறியும் உபாய முபதேசித்தல். நனவால் என்பது. நனவால்=விழித்த நேத்திரத்தால் வாகி யார்த்தக் கிரகணமாயிற் சீக்கிரம் மூடப்படும் அதஞலென்பது பொருள். அப்போதிற் போதத்திற்கு வெளியிற்செல்லப் பிரதிபந்த மாதலினுலும் அந்தரத் தறியவேண்டும் பொருள்; அற்பமு மின்மையாலும் அடைத்த கதவுடைய கர்ப்பக்கிரகத்திற் பிரகாசிக்கும் தீபரூபம்போற் சின்மாத்திரமே சேடித்து விளங்கு மென்பதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) இங்ஙனம் பிரஹ்மாத்மகஞ் சிதாகாசத்தைப் பிரதிபாதித்து அதன் விடயபோகத்தையும் அதன் பயனேயும் கூறுகின்ரூர்:—ஆகலின் நினக்கு அதன் அடைவே அத்தன்மையை யடைந்திருக்கும் நாயகசமீப அடைவாம்; ஆண்டே நினது நாயகரின் பரலோக கற்பனே யாதலின் என்னுங் கருத்தாற் கூறுகின்ரூர்:— சங்கற்பவென.

சங்கற்ப சாலந் தவிர்ந்தா னுபசாந்த மாகித்
துங்கப் புவியாவையு மாகிய சோதி தோன்றும்
இங்கற்ப முழுங்காண் பனவில்லை வெறும் பொய்யென்ரு
லங்கப்பொழு தவ்வறி வாலது சேர்தலாகும். (13)

(ப - ரை.) சங்கற்ப சாலந் தவிர்ந்தால் = எல்லா எண்ணங்களையும் அடியோடு விட்டுவிடுவையே யாஞல், உபசாந்தமாகி = பரமசாந்தமாய், துங்க = பரிசுத்தமாய், புவியாவையுமாகிய = சர்வான்மகமாய், இராநின்ற, சோதி = சிவப்பிரகாச வடிவம்,

தோன்றும்=நின்வடிவமாய் நிகழும், இங்கு அற்பமும் காண்பன இல்லை= இவ்விடத்தில் தோற்றுகின்ற எவையுமே ஒருநிறுத்தும்கிடையவே கிடையாது, வெறும்பொய் என்றால்= அத்தியந்தம் மித்தையென அறுதிவந்தால், அங்கு அப்போழுது = அவ்விடத்தில் அக் காலத்திலேயே, அவ்வறிவால்=அந்த அகண்டப் பிரஹ்மாகார விருத்தினால், அது = அப்பரம் பொருளானது, சேர்தலாகும் = சொரூபமாகவே யடைதல்கூடும். (13)

(ஸ்ரீ - வீர.) அநாத்ம ஆகாரங்களாய எல்லாச்சங்கற்பங்களையும் அடியோடும் விடுதி யேலாயின், ஞான முடையவளாகிச் சகல துயரங்களினின்றும்விடுபடுவாய். "மனத்தினை விருத்தியின்றி மருவுறக்குயிற்றி யாலும், கனத்தினை யுணருவானைக் கருதரும் பரம மான, இனித்தனி லேகமாக்கி யிடரெலாங் களைந்தேயுய்க, முனித்தனி யோகமீதே முக்கிய மென்னலாகும்." எனவும், சகலமான பொருள்களையுஞ் சமாதியமர்வோன் காண்கிலனுயகல வசங்கப்பரம்பொருளி லழுந்தி யேகவறிவாகிச், சுகமதாக விருந்தொ ளிருந் தூயபோதிற் கேவலமா யகமதான பரசிவமா யகண்டவடிவா யமைகுவனால். என வும் அவ்வாறே அறையப் பெற்றுளது. சர்வான்மகபத அடைவின் கண்ணே யுபாய முரைப்பார், இங்கற்பமு மென்றார். உலகமானது அத்தியந்தம் அசத்திய மென்னும் துணிவினுலே இச்சர்வான்மக பதத்தை யடைவாய். அதன்கண்ணே சர்வசங்கற்பங் களையும் விட்டு நிலைபேறை யடைவையேயானால் எல்லாவடிவையு முடைய பதமாகிய தத்துவத்தை யடைவா யென்பதன்கட் சமுசயமே கிடையாது; ஆயின் எங்ஙனம் அதை யடையலாமெனின், அதற்குபாயத்தைக் கேட்டி, தத்துவதரிசனத்தினுலே அவி த்யுத யழிவுறவேதுவைத மனுதயமாகவே யுலகின் அத்தியந்த அபாவ அடைவாம்; ஆகவேயதனால் இஃதடையப்பெறும் அயனெறி யதற்கின்றென்னும் அருமறை முறைப் படி வேறொன்றாலும் முடியாது.

(ச.) சங்கற்பசாலம் அந்தச் சிதாகாசத்தில் தவிர்ந்தால் உபசாந்தமாகிய, துங்கப் புவி யாவையுமாகிய = சர்வான்மகமான, சோதிதோன்றும், சேரலாகும், மற்றொன்று லுஞ் சேரலாகாதென்ப தாயிற்று.

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஆயின் எனக்கு ஞானப்பிராப்தியானது எங்ஙனமாமென எண் ணுதே யெனல்:—நம்மாலென.

நம்மாலது சேர்கென நாமக ணல்கி யேக
விம்மாது விகற்ப மிறந்த சமாதி யெய்தித்
தம்மா லுறைகூட கல்புள் ளெனத் தாவுகெஞ்ச
மைம்மா லுறுகூட் டினைமாற்றி னளக் கணத்தில். (14)

(ப - ரை.) நம்மாலது சேர்கென = எமது வரப்பிரசாதத்தால் விரைவில் அதனைச் சாக்ஷாத்கரிப்பாயாக வென்று, நாமகள் நல்கி = ஸ்ரீசரசுவதிதேவி திருவருள்செய்து, ஏக = திவ்யவான தமது பரந்தாமத்திற் கெழுந்தருள, இம்மாது=இந்தலீலையானவள், விகற்பமிறந்த = நிருவிகற்பமான, சமாதியெய்தி=சமாதியை யெளிதாகவே யடைந்து, தம்மாலுறை கூடகல் புள்ளென = தாமாகவே இருக்குங் கூட்டினின்றுஞ் சென்று சுதந்திரமாய் வினையாடும் பக்ஷியைப்போல, தாவுகெஞ்ச மைமாலுறு கூட்டினை = விட யாகாரமாய்ச் சலிக்கும் மனமயக்கத்தைப் பேதித்து மயக்கங்கட் கெல்லாங் காரணமா கிய மூலதேகக் கூட்டினை, அக்கணத்தில் = அப்போதே, மாற்றினள் = விட்டகன் றாள், சுதந்திரமாயினள். (14)

(ஸ்ரீ - வீர.) எமது வரப்பிரசாதத்தினுலே விரைவில் நீயெவ்வறிவை யடைவாய்; என்றருளிச்செய்து அவ்வுல கன்னையானவள் தமது திவ்யஸ்தானத்திற்கு எழுந்தரு ளவே லீலையானவள் வரப்பிரசாத மகிமையால் பயிற்சியின் சிரமமில்லாமல் விளையாட் டாகவே நிருவிகற்ப சமாதியை யடைவுற்றனள். ஒரு நிமிடத்தினில் லோகபஞ்சரம் போலும் பேதிக்க முடியாததான அந்தக்கரண சகிதத் தூலதேகம் விடுத்துப் பறவை யானது கூட்டைவிட்டு வெளிப்போந்து ஆகாயத்திற் பறப்பதேபோலப் பறந்தனள்; சித்தத்தை நிலைநிறுத்தி அபிமானத்தியாகமேஈண்டு கூற விழைந்ததாம், மரணம்போலும் தேகம் விடுத்து வெளியே செல்லுதலல்லவாம்.

(ச.) ஸ்ரீவசிஷ்டர்: நம்மால் = எமதுவரத்தால் நீ சீக்கிரம் அது. திவ்யமான சொச் சோரூபா சிரபத்தைக் குறித்து ஏக. இம்மாது = இந்தலீலை லீலையிலுலேயே விகற்ப மிறந்த நெஞ்ச மைம்மாலுறு கூட்டினே = மனம் புத்தியாதிகட்குப் பஞ்சரம்போல் ஆசி ரயரூபமான தன்றூலதேகத்தை, அக்கணத்தின் மாற்றினள்; அதன்பின் தம்மாலுறை கூடகல் புள்ளென = சூக்ஷுமரூபியாய் ஆகாசத்திற் றன்மனோரதப்படி சஞ்சரிப்பவளா ஞள் என்பது பொருள்.

(ஸ்ரீ-வீர-அ-கை.) சென்ற நாயகன் நின்றநிலையை யறிவிக்கின்றார்:—மங்காதவென.

மங்காத ஞானவிசும் பூடொரு மாநகர்க்கே
வெங்கா தலனெட் டிரண்டாண் டுளவீர ஞகிச்
சிங்காதன மேற்செறி வேந்தருஞ் சேனை நாலும்
பொங்கா தரமாதரும் போற்ற விருத்த லோடும். (15)

(ப - ரை.) மங்காத்= கெடாத, ஞானவிசும்பூடு = சிதாகாசத்தின்ணே, ஒருமா நகர்க்கே = ஒப்பற்ற பெரியதேசத்திற்கு, வெங்காதலன் = பெருமாசைக்கு விடயீபூத மாய நாயகன், எட்டிரண்டாண்டுளே வீரனுகி = பதினுறுவயதுடைய காவலனுகி, சிங்கா தனமேல் = சிம்ஹாசன சமாரூடனும், செறிவேந்தரும் = நெருங்கிய மன்னவரும், சேனைநாலும் = நால்வகைச் சேனைகளும், பொங்காதர மாதரும்= மிகுந்த ஆதரவோடு கூடிய மங்கையரும்; போற்ற = ஜயஜீவவெனத் தோத்தரிக்க, இருத்தலோடும் = வீற் றிருப்பதைக் கோலாகல சம்பிரமத் தோடும் நோக்கி. (15)

(ஸ்ரீ-வீர.) தன்னுடைய நிருக ஆகாயத்தின் கண்ணே கண்டனள். ஜயஜீவ=வெற்றி யோடும் வாழ்க, சிதாகாயத்தின் கண்ணே யிருப்பவளாய் அவ்வாலய ஆகாயத்தின் கண் ணே வெளிப்பட்டதன் வாதனே கரும அனுரூபமாகத் தோற்றுந் தேக நிருகாதியோ டிற்றிருக்கும் தனதுநாயகனேத் தரிசித்தாள். அப்போதவன் அநேகமசர்கள் கூட்ட முற்ற ஆஸ்தான மண்டபத்தில் சிங்காதனத்தில் வீற்றிருக்கும் பூபாலனுய்க் காணப்பட் டான். நீ நீழி வெற்றிபெற்று வாழ்கவென வாழத்தப் பெற்றிருந்தான்; அவனதெதி நிற் கைகுவித்து மண்டலாளீகமானது காரியத்தை யினிது முடிப்பான் காத்துக்கொண் டிருக்கின்றது.

(ஸ்ரீ - வீர - அ - கை.) தனது நாயகனிருக்குங் கோலாகலத்தைக் காணுதலும் ஜயப்பட்டு ஸ்ரீவாக்குத் தேவியை வரவழைத்தலும் காட்டல்:—தன்னென.

தன்னுயிர்க்கேள் வேனியந்த லீலைநோக் கிச்சபைபுகுந் தாண்மிகவியந்தாள்
சபையைச் சூழ்ந்த, மன்னவரு முனிவரருமறை வல்லோரு மங்கையரு நாற்
படையு மற்றுளோரு, நண்ணிலமுங் குன்றுகளுமூரு நாடுநதித்திரளும் பல
பொருளு நண்ணிநோக்கி, மின்னனேயரண் மீண்டுதன திடத்தின்மேவி வெண்
ணிற வாணியை நினைத்தாள் விருப்பினேடும். (16)

(ப - ரை.) தன் உயிர்க்கேள்வனை = தனது பிராணநாயகனை, அந்தலீலை நோக்கி அந்தலீலாதேவி பார்த்து, சபைபுகுந்தாள் = அரசசபைக்குட் சென்றனள், மிகவியந் தாள் = மிகமிகவும் அற்புதத்தை யடைந்தனள், சபையைச் சூழ்ந்த = சபையின் கண் ணே நெருங்கிக்கூடி, மேற்குவாயிலை யனுசரித்திருக்கும், மன்னவரும் = அளவற்ற இராஜராஜேச மண்டலத்தையும், கிழக்குவாயிலை யனுசரித்திருக்கும், முனிவரரும் மறைவல்லோரும் = அளவில்லாத முனிவிப்பிர இருடிமண்டலத்தையும், தெற்குவா யிலை யடித்துப்பரவிய, மங்கையரும் = அளவில்லாத மதோன்மத்த மடந்தையரையும், வடக்குவாயிலை யனுசரித்து நிற்கும், நாற்படையும் = அசங்கிய ரதகஜதுரகபதாதி சேனைகளையும், மற்றுளோரும் = அன்னிய பிரஜைகள் அநேகரையும், கண்ணுறப்பார்த்து விட்டு, கல்நிலமும் = கல்லதேசங்களையும், குன்றுகளும் = பருப்பதங்களையும், ஊரும் = நகரங்களையும், நாடும் = நாடுகளையும், நதித்திரளும் = நதநதிக் கூட்டங்களையும், பல பொருளும் — மற்றும் பிறபொருள்களையும், கண்ணி நோக்கி = கண்ணுற உற்று உற்றுப் பார்த்து, பின்னையாள் = பின்னலைப்போன்ற அந்தலீலாதேவி, மீண்டுத் தனது இடத் தின் மேலி = மறித்துந் தன்னுடைய அரண்மனையை வந்துசேர்ந்து, விருப்பிஞெடும் வெண்ணிறவாணியை நினைத்தாள் = மிக்கன்புடன் சுவேதவரண ஹம்சவாணியைத் தியானித்தனள்.

(ஸ்ரீ - வீ.) லீலையிலே முன்னரனுபூத தேசாதிகளும் வந்தியாதிகளுமே ஸ்மரிக் கப்படுகின்றன. நகரமென்றதனுனே சாகாநகரங்களாகிய புரங்களையும். பட்டணமாகிய மூலநகர ராஜதானியையும் கொள்க. கொடிக்கூட்டங்களால் வியாபிக்கப்பட்ட இராஜ தானியின் பிரதான அரண்மனையின் கண்ணே அவன் எழுந்தருளியிருப்ப அவ்வரண் மனையின் கீழ்வாசலில் எண்ணில்லாத விப்பிரர் முனிவர் இருடியர் கூட்டங்க ளிறைந் திருந்தன; தெற்குவாசலிலோ எண்ணில்லாத இராஜ இராஜேசுர மண்டலங்கள் காத் திருந்தன; மேலைவாசலிலோ எண்ணில்லாத பெண்மணிக் கூட்டங்க ளிறைந்திருந் தன; வடக்குவாசலிலோ ரதகஜ துரகாதிகள் எண்ணில்லாதன கண்ணி நின்றன அக் காட்சியானது ஒரு நகரத்தினின்றும், மற்றெரு நகரத்திற்கு யாவரும் வந்திருப்பது போலத் தோற்றியது; அவர்களியாவரும் தன் தேசத்திலுள்ளவர்களிடம் ஆசாரத்தையே செய்பவர்களா யிருந்தார்கள்; பாலகர்களும் தன்றேயத்தினர்; சிறுமிகளும் தன்றேயத்தி னர்; மந்திரிமார்களும் முன் றன்றேயத்தி லிருந்தவர் ஆகவே காணப்பட்டனர். அப்பூ பாலரே, அப்பண்டிதரே, இரகசிய ஆலோசனை செய்யும் சகாய அம்மந்திரிமாரே அவ்வே லைக்காரரே இருக்கக்கண்டனள் தருநிகள் நதிகள் நதங்கள் சைலங்கள் புரங்கள் பட்ட ணங்கள் நிறைந்திருப்பதையும், நானு நகரங்கள் விந்யாசமாய காடுகள் கிராமங்கள்நிறைந் திருப்பதையுங் கண்டனள். பழைய ஜரைமுதலியவை யொன்றுமின்றி பதினுறு வயது டைய காளையாகப் பூபாலனைக் கண்டனள். சர்வபழைய ஜனக்கூட்டங்களையும் சர்வ கிராமவாசிகளையும். லீலையானவள் கண்டு மிகவுஞ் சிந்தையோடு கூடியவளானுள். அந்த வாசனு நகரத்தி லவர்களை யெல்லாங்கண்டு இஃதென்னே முன்னிருந்த நகரத்தி லிருந் தவர்க ளெல்லாம் இறந்துபோய் விட்டார்களா ? என்றுச்சரியப்பட்டு மீண்டும் ஸ்ரீசரசு வதிதேவியின் பிரசாதத்தினுலே யுண்டாகிய வுணர்வாற் சமாதியினின்றுங் கிளம்பிப் பழைய அந்தப்புரத்தை யடைந்தனள்; அவ்வர்த்தராத்திரியில் அங்கு முன்போன்று இருந்த யாவரையும் கணத்திற் கண்டனள். கண்டு சித்தத்திற் சிந்திப்பதாவது. அகோ! இம்மாயை ஆச்சரியமாகவன்றே இருக்கின்றது, எல்லாப்பிரஜைகளும் சமாதியிற்கண்ட உள்ளவகாச தேசத்திலும் வெளியிற்தேசத்திலும் அன்றே இருக்கின்றார்கள், மலையாதி

களும் ஆங்கேபோ லீங்குமுள. இம்மாயைத் தன்மையை யுவமித்துப் பார்க்கின் கண்ணு டியின் உள்ளும் புறம்பும் பர்வதம் அனுபவிக்கப் படுவதேபோலும் சிற்கண்ணுடியில் உள்ளிலும்வெளியிலும் உலகசிருஷ்டி யனுபவிக்கப் படுகின்றது, ஆனல் திருஷ்டாந்தத் தைப்போலவே இரண்டனுள் ஒன்றனுக்கே பொய்ம்மையாம்; இரண்டிற்கும் ஆகாதை ணச் சம்பவித்தலின் இதன்கண் ஐயமன்றே உளதாகின்றது, இவ்விரண்டனுள் மயக்க மயச் சிருஷ்டியாதாம் உண்மை யுலகமியாதாம் ? இவ்விஷயத்தை ஸ்ரீ வாக்தேவியை இனிதாராதித்து அத்தேவியின் சந்நிதியில் ஐயமாயிருக்கின்ற தென்று விண்ணப்பித்து அவ்வையம் நீங்கும் வண்ணம் வினவித் தெரிந்துகொள்வேன் '' எனத்துணிந்து அக் கணமே யன்போடும் அவள் அருச்சித் தேத்தினள்.

(ச.) மறைவல்லோரும் = விப்பிர இருடி மண்டலமும், ஊரும்=புரமும், நாடும்= பட்டணமும், அவனுலே இரக்ஷிக்கப்பட்ட மற்றுளோரும் = நூதனமான பண்டிதர்; சுகிர்தர் முதலான ஏனேயோரும், அவற்றின்றிசைகளும் சமாசாரங்களும், பலபொருளும் மேல்வாயிலின் மன்னவரும், கீழ்வாயிலில் முனிவரரும், தென்வாயிலில் மங்கையரும், வடவாயிலில் நாற்படையும் என்றுணர்க.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ வாக்குத்தேவி பிரசன்னமாதலும் தனதையம் விஞ்த லும், கூறல்:—வந்தென.

வந்துயரா தனத்திருந்த வாணிதன்னே வணங்கியெ னதன்பனுக்கு மரித்த பின்பு, பந்தமுறு மயக்கமே வடிவாய்நிற்கப் பழையபடி பிறப்புற்ற படியி தென்ன, விந்தவுலகுறு மயக்கம்போகச் சொல்வாயென லீலைகேட்டலுமே யிறைவிசொல்வாள், உந்து சிருட்டியின் முன்புமயக்க மட்டே யுருவாமிச்சிரு ருட்டி வேறுதித்ததாகும். (17)

(ப - ரை.) வந்து = எழுந்தருளி யாகிவந்து, உயர் ஆதனத்திருந்த = மேன்மை மிக்கு மேலான பத்ராசனத்தில் வீற்றருளியிருந்த, வாணிதன்னே = ஸ்ரீசரசுவதிதே வியை, வணங்கி = நமஸ்கரித்துத் தோத்தரித்து, என தன்பனுக்கு = எனது நாயக னுக்கு, மரித்தபின்பு = மரணசந்தரம், பந்தமுறு மயக்கமே வடிவாய் நிற்க = கட்டுறும் அமூர்த்தமாய் மயக்கமே யுருவமாயிருக்க, பழையபடி பிறப்பு — மீண்டும் வேறுசன்மம்; உற்றபடி = வந்தவகை, ஈதென்ன = இஃதென்னற்புதம் ! இந்தவுலகுறு மயக்கம்போ கச் சொல்வாயென — இச்சகம் தோற்றமோ மாற்றமோ வென்னும் பிராந்தி நீங்கும்படி யாக வுபதேசிப்பாய் என்று, லீலைகேட்டலுமே = லீலை வினவியபோது, இறைவி — ஜகன்மாதா, சொல்வாள் — திருவாய் மலர்ந்தருள்வாள், உந்து சிருஷ்டியின் முன்பு = முன் ஸ்ருஷ்டியினுல், மயக்கமட்டே யுருவாம் = பிராந்திமாத்திர வடிவமாய, இச் சிருட்டி = இச்சருக்கம், வேறுதித்ததாகும் = எப்படி யுதிதமாமோ. அப்படி யெனு வருங் கவியோடன் வயம். (17)

(ஸ்ரீ - வீர.) பத்திராசனம் = சிங்காசனம் = நிருபாசனம் — சுபாசனம். பதும நிருபனுல் மரணத்தின் பிற்கணத்திலேயே அதேயில்ல ஆகாசத்திலே கண்டவேறுபிரபஞ் சத்தின் உற்பத்தியின் கண்ணே தக்கதேச காலசாதனுதி யின்மையின் சொப்பனப் பிர பஞ்சம்போலப் பொய்ம்மை துணிந்து அத்திருஷ்டாந்தத்தானே சம்பவித்திரா நின்ற சகத்தின் மித்தியாத்துவத்தின் நிச்சயப் பொருட்டுப் பதியின் பிரபஞ்ச அயன்மயற் காரணம் வினவுகின்ருள், எனதன்பனுக் கென்பதாதியாய். அம்மயற்காரணம் அறிந்தவழி அக்காரணத்தையுடைய சர்வஜகத்திற்கும் மித்தியத்துவம் துணிதல் எளிதாகக் கூடும்

என்பதாம் மூர்த்தம் = அவயவத்தோடு கூடியது அஃதற்ற தமூர்த்தமாம். அமூர்த்தத் தன்மையிலது, மயக்கமே வடிவமா யிருத்தலின் என்பதாம். இவ்வுலகமியாவுமே மயல் வடிவமேயாம் ஆண்டு முன்மயலால் பின்பின் மயக்கவுற்பத்தியாம் எனச்சித்தாந்தம் நிலை நின்றவழி நினது நாயகனுக்கு மரணத்தினும் முன்பதான வுலகமயக்கம் எங்ஙனம் முன் சன்ம சஞ்சிதத்தா லுண்டாயதோ அங்ஙனமே மரணத்தின் பின் பவிக்கும் பிரபஞ்ச மயக்கமும் பூர்வஜன்ம பாவனையால் உண்டாயதாம் என்றுத்தரந் தந்தருளுகின்றுள் உந்து என்பதாதியாய். முன்றரிசனந் தந்தடைவுற்ற குமாரிவடிவ நிவ்யமூர்த்தியைக் கண்டு கண்களிகூர்ந்து பரமார்த்த மகாசக்தியும் பத்திராசனத் தெழுந்தருளி யவளும் ஆகிய அவ்வாக்தேவியைப் புவியிலுற்ற லீலாதேவி கைகூப்பி யினிதாகச் சந்நிதியி லிருந்து வினவுவாளாயினள்.—ஹே பரமேசுரி! எம்மஞ்ஞை தயோசித விடயத்திலல் லவோ உத்தமர் சாதுரியமாய்ப் பஜிப்பர், ஆகையால் தேவரீரது சந்நிதியில் விண்ணப் பித்துக் கொள்ளும்! விடயங்கட்குச் சமாதானத்தை திருவுளர் செய்யவேண்டும்! எங்ஙனம் பதிக்கு அமூர்த்தமாக இச்சர்க்கத்தினின்றுள் சர்க்கம் மயக்கவடிவமா யுண்டாமோ அங்ஙனம் உலகமயக்க நீக்கப்பொருட்டு அனுக்கிரகித்தருள வேண் டும். இச்சர்க்கமும் முற்சர்க்க கோசர சமஸ்காரஜன்ய மயக்கமேயாகும், எனக் கூறியபொருளை மெய்ப்பிக்கும் பொருட்டு மண்டப உபாக்கியான ஆரம்பத்தை ஸ்ரீ அம் பிகை பதிஞ்ஞைசெய்து கூறுகின்றுள், உந்து என்பதாதியாய். முன்பிருதியிஞ்ஞ மயக்க மாத்திரவடிவ இச்சர்க்க முதித்தது.

(ச.) உயராதனம் = பத்திராசனம், ஞப்திமயமான வாணிதன்னை வணங்கி, லீலை யின் பிரசினம், எனதன்பனுக்கு இச்சன்மத்தினின்றும், மரித்தபின்பு, சமாதியிலிருந்த வென்ஞல் இப்போது காணப்பட்டு, பந்தமுறும், அந்தியர்க்கு அதிருசியமாதலின் அமூர்த் தமாய் = மயக்கமே வடிவாய், பதிஞறுவயது முதலியவைகள் அசம்பவமாதலின், அயதார்த்தமாய், நிற்க = பழையபடி பிறப்பு = ஜன்மாந்தரம், உற்றபடி = வந்தபிரகா ரத்தை, ஈதென்ன = என்னென்று சொல்வேன் இஃதற்புதம் அற்புதம், இந்தவுலகமு மயக்கம்போக = சப்பிரமை நிவிருத்தியாக, சொல்வாய் = எனக்கு அருள்செய்வாய் எனலீலை கேட்டலுமே இறைவி சொல்வாள், உந்து சிருட்டியின் முன்பு = பூருவஜன் மத்தெழுந்த சமஸ்கார வேதுவினுல், மயக்கமட்டே யுருவாம் = பிராந்திமாத்திர ரூப மான, இச்சிருட்டி = இந்தச் சம்சாரம், எப்படி வேறுதித்த தாகுமோ. (17)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பதிஞ்ஞை செய்த அதனையே விரித்துரைத்தல்:—அப்படி யேயென.

அப்படியே யுன்கணவற் கிரண்டாஞ் சென்மமாயின தாலீதுரைப்ப வறிந்து கேட்பாய், மைப்படி விலாவிமலஞான விண்ணின்மற்றொரு பான்மாயா மண்டபமொன்றுண்டாஞ், செப்பரிப விசும்பென்னு மயூரபரீதித் திரை யாலே மறைத்திருக்குஞ் செம்பொற்குன்றங், கப்புறுபொற் றூணிலுறையுலக பாலர் காரிகையா ரெனும் பொறிகள் கலந்துறைக்கும். (18)

(ப - ரை.) அப்படியே = அவ்வாறே, உன்கணவற்கு = உனது நாயகனுக்கு, இரண்டாம் சன்மம ஆயினதால் = இரண்டாவது பிறப்பு ஆகியிருக்கின்றது, ஈதுரைப்ப = இதனையாம் தெளிவுபடுத்த, அறிந்து கேட்பாய் = உணர்வுடன் ஒருமையுடன் கேட்குதி, மைபடிவிலா = யாதொரு களங்கமும் உண்மையின்றோராத, விமலஞான விண்ணில் = நிருமல சிதாகாசத்தில், மற்றொருபால் = இன்னொரு பக்கத்தில், மாயாமண்டபம் ஒன்

றுண்டாம் = ஒரு சமுசாரமண்டப மானது இருக்கின்றது, செப்பரிய = சொல்லுதற் கொல்லாத, விசும்பென்னும் = விண்ணென்னும், மயூரப்பீலித் திரையாலே = மயிற் சிறகைத் திரைச்சீலையினாலே, மறைத்திருக்கும் = ஆச்சாதிக்கப்பட்ட ஆகிருதியுடைய தாகவிருக்கும், செம்பொற்குன்றம் = கற்பகம் பொற்றாணில = செம்பொன்னாலாய பருவத மென்னும் பலமுடி பொருந்திய ஸ்தம்பத்தின்கண், உறை = வாழும், உலகபாலர் = லோகேசர், காரிகையார் = அவர்தங் குடும்பினிகள் என்னும் = என்றுசொல்லாநின்ற, பொறிகள் = பதுமைகள், கலந்து நிற்கும் = கூடியலங்காரமா யிலங்காநிற்கும். மயூரப் பீலி கவிநாயகராதாம். (18)

(ஸ்ரீ - வீர.) திருவஷ்டாந்தமே பொருத்த மற்றதாமென ஆசங்கிப்ப விடைதருவார் ஈதுரைப்ப என்றார். இதனை வெட்ட வெளியாகத் தெளியுமாறு கூறுவாம் என்றதாம். பதுமலீலைகட்கு வேறு சருக்கத்தில் பிராஹ்மண தம்பதிகளாக முன்னர் இருந்தமையா தியை காட்டும் பொருட்டு அவர்தம் பூர்வ சமுசாரத்தை ஜீர்ண மண்டபமாகத் தள்ளும் பொருட்டு வருணிக்கின்றார் மைப்படிவிலா வென்பதாதியாய். ஆகாசமே நீலத்தகைமை யான் நீலக்கற்றள வடிவமான மறைப்பீட்டம்பொருளாம், அதனுல் ஆச்சாதிக்கப்பட்ட = மறைக்கப்பட்ட, ஆகிருதி = ஆகாரம் உடையதா யிருக்கும். மேருவே ஸ்தம்பமாம், அதன் கண்ணுள்ள லோகேசர்களாகிய இந்திராதிகளின் குடும்பினிகளே பதுமைகளா வார்கள் அவர்களே யுடையதாம். கனமயல் வடிவமா யிலங்குகின்ற இவ்விதத்தை யியம் பக் கேட்பாயாக, இச்சமுசாரமானது ஒரு ஜீரண மண்டபமேயாகும், எங்ஙனதெனின் ? அஞ்ஞானத்தான் மறைபட்ட அங்கிசமாய் அதனினும் சிருஷ்டிப்பவன்றன் அந்தக்கரண பாக சிதாகாசத்தில் அச்சமுசார மண்டப முளதாம், ஆகாசரூபமான யாதொரு காசகண் டம் போலும் நீலமேலவயவச் சேர்க்கையான் மறைவுற்ற ஆகிருதியுடையதாகும்; அதன் கண்ணிருக்கும் மேருகிரியாகிய தம்பத்தின்கண் ணமைக்கப் பெற்ற உலகபாலர்களாகிய இந்திரனிந்திராணி முதலிய பதுமைகள் மிக அலங்கிருதமாகும்; பதினுன்கு லோகங்க ளாகிய உள்வீடுகள் அதன் கண்ணுண்டு; திரிபுவன அந்தராளப் பள்ளமுமுண்டு; ஆண் டாதித்தனே யணையாத் தீபமாம்.

(ச.) அப்படியே நின்கணவற்கு இரண்டாஞ் சன்மமாம் = துவிதீய சிருஷ்டியும், ஆயினது = உதித்தது, அதிலும் பூர்வசன்ம சமஸ்காரமே காரணமென்பது பொருள். ஈதறிந்துரைப்ப = இம்மாத்திரத்துஞ் சித்தித்தபடியான் அறிந்து மொழியக் கேட்பாய், மைப்படிவிலா நிமலஞான விண்ணில் = சின்மாத்திர ரூபமான ஆன்மாவில், அவர்க்கே பிரபஞ்ச அதிட்டானத்துவ மாதலின், மற்றொருபால், மாயாமண்டபம் = சம்சாரமென் னும் மண்டபம் ஜஞரிரயத் துவமாதலின், ஒன்றுண்டாம் செப்பரிய விசும்பென்பன முதலியவை மண்டபசாமிய சாதகங்களான விசேடணங்களாம், செம்பொற் குன்றும் = மேருவே மண்டபாதாரத் தம்பமாம், கற்புறு பொற்றூணிலுறை = அம்மேருத் தம்பத் திற் பொருந்திய, உலகபாலர் = புரந்தராதிய ருடைய, காரிகையாரெனும் சசிமுதலி யரே, பொறிகள் = பிரதமைகளாக, கலந்துநிற்கும் ! காசதளம் = காசமென்பது பாக சித்தமண் விசேடமாம், ஆகாசமே காசதள கற்பித மறைப்பீட்டும் பொருளாம், அதனுல், பறைபட்ட ஆகிருதியை யுடையது.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மாயாமண்டப வர்ணனை:—ஒரு என.

ஒருகோணந் தனிற்பூதப் புற்றுமாங்கே யுறைகின்ற மலைகளெனு மோடு முண்டாம், வருகாதற் புத்திரர்சூழ்விருத்த வாலமறையவனுங் கொருவனுறை

மனையதாகும், குருவான வாயுவின் மார்க்கத்துலாவு கோலவிமானப் புழுவின் குழுவைமேவு, மருகான விண்ணிலுறை சித்தர்கூட்ட மானகொது கிரைகின்ற வரவ நண்ணும். (19)

(ப - ரை.) ஒரு கோணத் தனிற் பூதப்புற்றும் = ஒரு மூலையிற் பூதவன்மீகங்களும், ஆங்கே = அவைகளால் உறைகின்ற = வியாப்தமா யிராகின்ற, மலைகளெனும்=பருவதங்கள் என்னும், ஓடி மூண்டாம், லோஷ்டங்களுந் இருக்கின்றனவாம்; வருகாதற்புத்திரர் சூழ் = வாராகின்ற அன்பிற்கு விடயீபூதராய அநேக புத்திரராற் சூழப்பெற்ற, வீருத்தவால மறையவன் ஆங்கு ஒருவனுறை மனையதாகும் = ஜரடப்பிரஜேசப் பிராஹ்மணன் வாழும் இல்லமும் அங்கிருக்கின்றது, குருவான = கனமான, வாயுவின் மார்க்கத்துலாவும் = வாதமார்க்க மகாவம்சத்தில் இங்கு மங்குமாய்த் திரியும் கோலவிமானப் புழுவின் குழுவைமேவும் = நாலுவித அலங்காரம் நண்ணிய விமானங்க ளுடனுகிய கீடக்கூட்டங்களுடன் கூடி விளங்கும், அருகான விண்ணிலுறை=கண்ணிற்கெட்டாத ஆகாயவீதியில் நெருங்கி வீளையாடும், சித்தர் கூட்டமான=சித்தர் கூட்டமென்று சொல்லப்பட்ட, கொதுகு=மசகம், இரைகின்ற = சப்திக்கின்ற, அரவம் நண்ணும்=கும்கும் ஒலி நிறைந்திருக்கும். (19)

(ஸ்ரீ - வீர.) மண்டபம் நெடுங்காலம் ஆய்விட்டதாயின் வன்மீக நிறைந்த லோஷ்ட முடையதாய் விடும்; அவ்வாறே சமுசார மண்டபமும் மூலையிலுள்ள பூதவன்மீக வியாப்த பர்வதலோஷ்ட முடையதாம், லோஷ்டம்=மட்பிண்டம், தூளிக்கட்டி பர்வத கோணங்களில் இராகின்ற பிராணிகள் பூதசப்தத்தானே கூறப்படுகின்றன, பர்வதங்களே லோஷ்டங்களாம், கோணத்திருக்கும் பூதங்களேயாய வன்மீகங்களால் வியாப்தங்களாய பர்வதலோஷ்டங்களே யுடையதாம். அல்லது கோணத்திரா கின்ற பூதவன்மீக வியாப்த பர்வத லோஷ்டங்களே யுடையதாம். ஜரடம் = ஜரையோடு கூடியிருத்தல், அநேகபுத்திரர் மரீசியாதியர், ஜரையையும் அளவிலா மைந்தரையு முடையவராய் பிரஜைகட் கீசரா யிருக்கும் பிராஹ்மணரது இருப்பிடமாம். மண்டபமானது மேற்பாகத்திற் குறுக்கில் நீண்ட பெருமூங்கிலிலுள்ள கீடமுடையதாம், அவ்வாறே சமுசார மண்டபமுமாம். மேகமார்க்கத்திற்கும் சௌரமார்க்கத்திற்கும் இடையில் வாயுமார்க்கம் பிரசித்தமாம் எம்மார்க்கத்தைப் பற்றிப் பீமசேனனுல் எடுத்தெறியப்பட்ட அநேக ஆயிரங்கஜங்கள் பஞ்சுகள் போலப் பறந்தனவோ. விமானத்திற் செல்பவரே புழுக்கள் ஆவர்கள், வாயுமார்க்கமே பெருமூங்கிலாம் அதன்கண் ணிராகின்ற விமான சம்பந்திப் புழுக்களே யுடையதாம். ஆகாயத்தில் வசிக்கும் சித்தக் கூட்டங்களே மசகங்கள், அவற்றால் ஆக்கப்பெற்ற குங்குமத்தொனியை யுடையதாம். ஒரு கோணத்தனிற் புற்றுண்டாக்கும் உபதிகைவம்ரி என்னுஞ் சந்துக்களின் வன்மீகங்களேயாய நகராதி வியாப்த மலைமட்கண்டங்கள் அங்குண்டு, அநேகம் புத்திரர்களோடு கூடிய விருத்தரான பிரஜைகட் கீசராம் பிரஹ்மாவென்னும் பிராஹ்மணர் வீடும் அங்குளதாம். ஜீவக்கூட்டங்களாகிய கோசகாரப் புழுக்களின் ஈட்டமங்கதிகம், இவைகள் தம்பந்தனைக் கூடுசெய்யும் புழுக்களாம்; விண்மேற்றலங் கருமையா யிருக்கும், ஆகாய வீதியிலுலாவும் சித்தக் கூட்டங்களாகிய கொதுகுகள் கும்கும் என இரைந்துகொண் டிருக்கும்; வாயுமார்க்கமாகிய மகாவம்சத்தின் கண்ணே (மதுவித்தையின் கண்ணே சுவர்க்கமே குறுக்காயிருக்கும் வமசமாருமாதவின் என்க) இருக்கும் விமானத்தேறி யுலவும் புழுக்கள் எண்ணிறந்தனவாம், மேகங்களாகிய இற்புகைகளின் உக்கிரக் கூட்டத்தாற் சூழப்பட் டிருண்டிருக்கும் ஒரு கோணமாம்.

(ச.) ஒரு கோணத்தலில் பூதப்புற்றும் இருக்கின்ற பூதங்களென்னும் வன்மீகங் களும், ஆங்கேயுறைகின்ற = அலைகளால் வ்யாப்தமான, மலைகளெனும் ஓசிம் = மட் பிண்டங்களும், உண்டாம், வருகாதல் = அதேகராய் வராநின்ற அன்புள்ள புலத்திய புலஹாதிகள் என்னும் பிரஜாபதிகள் ஆகிற புத்திரர்சூழ், குருவான = கனமாகிய, வாயு வின் மார்க்கத்து = அந்தரிக்ஷ மென்னும் வம்சத்தில், மூங்கிலில் = தோற்சாரத்தில் உலாவும் கோல விமானத்தையுடைய, (தேவர்களென்னும்) புழுவின் குழுவை, கபோ தாதிரூப ஜந்துக்களே மேவும், அரவம் = குங்குமத்தொனி, நண்ணும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சமுசாரமண்டப வர்ணனையை யுபசங்கரித்து பிரகிருதந் தொடங்கல்:—வானவரென.

வானவர்தா னவரென்னுந் தீய மக்கண் மதத்தவிளை யாட்டோசை மாறு தாகும், ஆனதொரு மாமாயா மண்டபத்தி லாங்கொருபா லொருகோணத் தகத்தி னுள்ளே, மானமிகு மலையென்னு மோட்டி லொன்றின் மலைகளினு லாறுகளால் வனங்கடம்மான், மேனலமார் நகரொன் றுண்டதனில் வாழ் வோன் வெங்கனலோன் வேதியரின் மிகவு மிக்கோன். (20)

(ப - ரை.) வானவர் தானவ ரென்னும் = சுர அசுரர்களென்று சொல்லப்பட்ட, தீயமக்கள் = தர்ப்பாலாதது, மதத்த = கலகஞ்செய்து கொள்ளும், விளையாட்டோசை = லீலாகலகல ஆகுலமானது, மாறுதாகும் = எப்போது மூளதாம், ஆனதொரு மாமாயா மண்டபத்தில் = இத்தகையதாகிய மாகூழிமைதங்கிய சமுசாரமண்டபத்தில், அங்கொரு பால் = குறிப்பான ஓரிடத்தில், ஒருகோணத் தகத்தினுள்ளே = ஒரு மூலையினது அகட்டி னுள்ளே, மானமிகு மலையென்னும் = யாவரானும் புகழுதன் மிகுந்த வளப்பமும் வனப் பும் வாய்ந்த பர்வதமாகிய, ஓட்டில் ஒன்றில் = லோஷ்டதல மொன்றில், மலைகளினுல் = சூன்றுகளால், ஆறுகளால் = நதிகளால், வனங்கள் தம்மால் = பூங்காவனங்களினுல், மேல் நலமார் = மேன்மையான நன்மைமிகுந்து விளங்கும், நகர் ஒன்றுண்டு = கிரிக்கிராம மென் றோருசிறு பட்டண கர்த்தமூளதாம், அதனில் = அந்நகரின்கண், வாழ்வோன் = இல்வாழ்க்கையை நடத்தப் பட்டவனுகி, வெங்கனலோன் = அக்கினி கோத்திரஞ் செய் பவனுகி, வேதியரின் மிகவும் மிக்கோன் = மறையை நிறையவுணர்ந்து நடையுடையினுக ளின் மறையவர் யாவரினும் மிகமிகவும் மேன்மையுற்றவனுகி ஒரு பிராஹ்மண சிரேஷ்ட டன் மனையாளுடன் வாழ்ந்தான். (20)

(ஸ்ரீ - வீர.) சுராதியரே துஷ்டபாலர் அவர்தம் லீலை கலகலவென அரவமிருத்திக் கோலாஹலத்தால் ஆகுலமாம், அகடு = அபூவரக உதரம் = கர்ப்பாகாரம் பர்வத லோஷ்ட கீழ்பாகம் மலையோட்டின் சரிவு, கிரிக்கிராமம், கிராமநாமம் = அக்கிராமம் பர்வ தத்தின் கீழ்ப்பிரதேசத்தில் இருப்பதைக் காட்டும் பொருட்டே கர்த்தமெனப் பதவுரை யில் இடப்பெற்றது, கர்த்தம் = பள்ளம். ஒருபால் சுரர் அசுரர் முதலிய தீயமக்களின் விளையாட்டோசை கலகலவென மாறுது நிறைந்துறையும்; பூவாதிலோகங்களின் உள் ளடங்கிய புரம் கிராமங்களாகிய மண்டபத்துற்ற பாண்டபதார்த்த அதிசயங்களாம், எரி நதி, கடல், தடாகஜலங்களால் சுரப்படுத்தப்பட்ட மஹீதலமு மாங்குண்டு, பாதாளம் பூத லம் சுவர்க்கம் என்னும் பாகங்களா யிலங்கும் பொருட்களு மாங்குண்டு, அத்தகைய மண்டபத்தின் கண்ணே ஏதோ ஒரு ஏகதேசகோணத் தேகதேச பொருட்காகாயத்தி லிருக்கும் மலையோட்டடியில் ஒரு சிறிய கிரிக்கிராமக் குழியுளதாம்; ஆறுகளாலும் சூன் றுகளாலும் உபவனங்களாலும் சூழப்பெற்ற அந்தக்கிராமத்தில், யாகாக்கினியை யுடை

யவனும் கற்புக்கரசியை யுடையவனும், அநேகம் மைந்தர்களை யுடையவனும், அரோக திடகாத்திரனும் பாற்பசுக்களும் வாகனங்களும் உடையவனும், அரசபய மணுகாதவனும், எல்லாவருண ஆசிரம அதிதிகளையும் பூசிப்பவனும், போஷிப்பவனும், அறநெறி நின்றோனும், ஆகிய அருமறையோன் ஒருவனிருந்தனன்.

(ச.) வானவர் தானவர் என்னும் = சுராசுராதிக ளென்னும், நீயமக்கள் = துட்ட பாலகர் கலகசீலராதலின், அவர்களுடைய மதத்த விளையாட்டோசை = லீலா நிமித்த மான கலகலத்தொனி மாறுதாகும்; கோணத் தகத்தினுள்ளே = திக்கென்னுங் கர்ப் பக்கிரக மத்தியில், ஓட்டில் ஒன்றில் = மட்பிண்டத்தோர் தலத்தில், நகர் = கிரிக்கிரா மம், கிரியிலிருக்கும் கிராமரூபமான சுவதேசம், ஒன்றுண்டு; பெண்டு பிள்ளைகளோடும் அரோகனாகி வாழ்வோன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) உவமான பூர்வகமாக அம்மறையவனையும் அவன்மனைவியையும் புகழல்:—வடிவென.

வடிவுபொருள் வயதொடுக்கஞ் சேட்டை விஞ்சை வசிட்டனுக் கொப்போனந்த வசிட்டனென்றே, படியுமுணர் வினனல்லன் பெயரா லித்தப்பனவனையும் வசிட்டனெனப் பகரலாகும், அடிபரவு மருந்ததியை யொப்பா ளந்த வருந்ததியி னுணர்வினளன் றமைந்த பேரா, னெடியவருந்ததியாகு மிவற்குத் தேவி நிலத்திலிவள் விண்ணிலவ ணிகர்வே றில்லை. (21)

(ப - ரை.) வடிவு பொருள் வயது ஒடுக்கம் சேட்டை விஞ்சை = வேஷம் வித்தம் வயசு அடக்கம் நடை வித்தை வைதிகரூபம் ஐசுவரியம் என்னும் இவற்றானே, வசிட்டனுக் கொப்போன் = பிரசித்த வசிட்டமுனிவற் கொப்பானவன், ஆனால், அந்தவசிட்டன் என்றே படியும் உணர்வினன் அல்லன் = வசிஷ்ட சம்பந்தமான சேதனன் அல்லன், பெயரால் = வசிட்டன் என்னும் நாமத்தால், இத்தப் பனவனையும் = இம்மறையோனையும், வசிட்டனெனப் பகரலாகும் = வசிட்டன் என்று சொல்லிக் கொள்ளுவார்கள், அடிபரவும் அருந்ததியை = அவ்வசிஷ்ட முனிவரது பதங்கட்கு அன்புடன் பணிசெய்யும் அருந்ததிதேவியை, ஒப்பாள் = ஒப்பிடத்தக்க இந்து சுந்தரியானவள், இவற்குத்தேவி = இம்மறையவனுக்கு மனைவியாக இருந்தனள், ஆனால், அந்த அருந்ததியின் உணர்வினள் அன்று = அருந்ததி சம்பந்தமான அறிவுடையவள் அல்லள்: அமைந்தபேரால் = நீடற்கமை வுற்றநாமத்தால், நெடிய வருந்ததியாகும் = நீண்ட கலியாணகுண அருந்ததியாவள், அதிகமாக அறைந்தென், நிலத்திலிவள் விண்ணிலவள், நிகர்வேறில்லை = பூமியில் இவ்வருந்ததியும் வியோமத்தில் அவ்வருந்ததியும் இருக்கின்றார்கள் என்பதேயல்லாமல் உவமிக்க அயலொன்றுமே யின்றும். (21)

(ஸ்ரீ - வீர) வசிட்டனுக் கொப்போன் = வசிட்ட சதிருசனேயாவன். வசிட்ட சதிருசனே யல்லாமல் வசிட்டசம்பந்தி ஜீவனல்லவேயாம், பிரசித்த வசிட்டனினும் வேறொருவனேயாவன் வசிட்டனென்னும் பெயர் மாத்திரையானே இவன் விக்கியாதியுடையவன், தெய்வதனம் மநுஷ்டதனம் வடிவம், வயது, தொழில், வித்தை, பெருமை, சேட்டை முதலியலற்றில்வசிட்டனுக்கே அம்மறையவன் ஒப்பாவான், என்னும் வசிட்டனது கிருத்தியங்களாகிய இக்ஷ்வாகு வங்கிசத்திற்குக் குருத்தன்மை செலுத்தல் ஸ்ரீ இராம உபதேசாதிகள் இல்லாதவனுவன்; வசிட்டனென்னும் பெயரானே வழங்கப் பெறுவன். அவனது அடிபரவும் இந்து சுந்தரியாய மனைவி அருந்ததியெனப் பெயர் பெற்றவளேயாவள்; ஆனலவள் விண்ணருந்ததி இவள் மண்ணருந்ததியாவள்; வித்தம்,

வேஷம், வயதுகருமம், வித்தை, விபவம், சேஷ்டை முதலியவற்றினே இவளும் அவ் வருந்ததியையே யொப்பாவாள் எனினும், சேதன சொரூபஸ்திதியி லொப்பாகாள்; அம்மறையவன்பால், மிகமெய்யன்புடையவள், விலாச மந்த நடையுடையவள், வெள் ளாம்பல்போலும் புன்னகை உடையவள் இத்தகைய இவள் அவனது சமுசார சர்வைசு வரியமாக இருந்தனள். இவ்விருவருக்கும் அவ்விருவருக்கும் வேற்றுமை, தத்வஞானம் வரும்பிறப்பில உளதாவதாக இருக்தலால் அக்கால் அஞ்ஞாதலின் கட்டுப்பட் டிருத்த லினனும், தத்வஞானம் அப்போதே யிருத்தலின் ஜீவன்முக்தத் தன்மையோடு கூடி யிருத்தலினனும் என்றுணர்க.

(ச.) வடிவு பொருள் வயது ஒடுக்கம் சேட்டை விஞ்சை ஆகிய விவற்றால் விப்பிர தம்பதிகள் வடிவு பொருன் அனேத்தினனும் நாமத்தானும், அருந்ததி வசிட்டரோடு சமா னராம் அன்றி யவர்களது சேதனத்தினுற் சமானரன் றென்பதாம்.

(ஸ்ரீ வீர - அ-ஸை.) அம்மறையவனது அரசதரிசனமும் அரசாக்ஷி யாசையும் கூறு கின்றார்:—இந்தவென.

இந்தவருந் ததிகணவ னென்று சொன்ன விவ்வசிட்ட னம்மலியி னிலங்கு சாரன், முந்தியொரு நாளிருப்ப வேட்டைக் காங்கோர் முடிநிருபன் சேனை யொடு முன்வந் தெய்த, வந்தகிரு பனேநோக்கி வசிட்டன் றேர்வா னகோ வகோ மன்னவர்வாழ் வறவுநன்றுஞ், சுந்தரமாம் புவிக்கரசாய்ச் சேனைசூழத் தூணைக்கவரி பரிமாறச் சுகிப்ப மெந்நாள். (22)

(ப - ரை.) இந்த வருந்ததி கணவன் = இப்பூலோக வருந்ததி நாயகன், என்று சொன்ன = எனமேன்மைப் படுத்தி மிழற்றிய, இவ்வசிட்டன் = இவ்வசிட்டப் பிராஹ் மணன், அம்மலையின் = அபபர்வதத்தின், இலங்குசாரல் = விளங்காநின்ற சார்பிலுள்ள பசும்புற்றரை சூழ்ந்த பாறையில், முந்தியொருநாள் இருப்ப = முன்னெரு சமயத்தில் உல்லாசமா யமர்ந்திருப்ப, வேட்டைக் காங்கோர் முடிநிருபன் = மீழ் த ழ்வரைப் பக் கத்தில் நவரத்நகசித கிரீடந்தரித்த ஓரரசன் வேட்டையாடும் பொருட்டு, சேனையொ டும் = நால்வகைச் சைனியங்களோடும், முன்வந்தேய்த = தன் விழிபட வழிகொண்டு செல்ல, அந்தநிருபனே நோக்கி = அந்த இராஜராஜேசுரனைக் கண்குளிரக்கண்டு, வசிட் டன் றேர்வான் = வசிட்டப் பிராஹ்மணன் நிந்திப்பதாவது; அகோ அகோ = அந்தோ அந்தோ! மன்னவர் வாழ்வு அறவும் நன்றும் = அரசனுக விருந்து அரசாக்ஷி செய்யும் தன்மை அத்தியந்தம் ரம்மியமாம், சுந்தரமாம் புவிக்கரசாய் = சர்வ சௌபாக்கியங்க ளோடுகூடி எல்லாத் திசைகட்கும் மகாராஜாவாய், சேனைசூழ = சதுரங்க சைனியஞ் சூழ, தூணைக்கவரி பரிமாற = இருபுறமுஞ் சாமரமிரட்ட, சுகிப்பம் எந்நாள் = ஆநந்திக் கும்படியாகவும் ஒருகாலங் கிட்டுமா? (22)

(ஸ்ரீ - வீர) மூலத்தில் சாத்வலம், சாதஹரித மென்பதால், சாதத்தால் = இளம்புற் களால், ஹரிதமான = நீலமான தேசம் சாத்வல மென்பது அமரமாம். ஸ்ரீ பாணினிபக வானும், சாதம் இருக்கின்றது இவ்விடத்தில் என என்னு மிப்பொருளில் நடசாதாத்ட் வலச் என்றுட்வலச் விருதி கூறியுள்ளார், அதாவது சேறு முதலிய அருத்தங்களைச் சாதசப்த முணர்த்தாது கேவலம் இளம்புல் வாசகமாகிப் பாலதிருணத்தை மாத்திரம் உணர்த்துமானுல் சாதத்தினின்றும் ட்வலச்விருதியா மென்பார், எனினும், அப்பொருட் கிண்டை சம்பவமாதலின் சாத்வலசப்தத்தாலே ஹரிதத்தன்மையே கொள்ளவேண்டும்,

வேண்டவே சரல விருக்ஷங்க ளென்னும் பூதிகாஷ்ட, தேவதாரு, செம்பிளிச்ச, கடு விருக்ஷங்களா ஹரிதமான சைலப்பிரதேசத்தில் என்பதாம். மஞ்சள் கடுமரம் சலரம் பூதிகாஷ்டமென்ப தமரமாதலின். அம்மறையவன் அம்மலையின் சார்பின் சோலையிற் பசும்புற் சூழ்ந்த சமநிலத்தில் ஒருகால் உட்கார்ந் திருந்தபோது பூமியிற்செல்லும் பூபதி யொருவனே நன்குகண்டனன்; அந்த பூபதியானவன் எல்லாப் பரிவாரங்களோடும் வேட்டையாடும் வேட்கையோடும் பெருஞ்சேனையின் ஆரவாரத்தோடும் மிருகங்களைப் பிளக்கும் ஆசையோடும் மேருகிரிக்கொப்பாகச் சென்றான். சென்ற அம்மகிபாலனைக் கண்ணுற்று இதனைச் சிந்தையோடு மெண்ணின்றான்:—சர்வ சௌபாக்கியங்களோடுங் கூடி விளங்காநின்ற அரசியற்கை என்ன இரம்மியம் அகோ ஆச்சரியம்! இரதகஜதுரக பதாதிகளாலும் கொடி குடை வெண்சாமரைகளாலும் சோபிக்கப்பெற்ற இதுவன்றோ மகாபாக்கியம்! பத்துத் திசைகளிலும் பரந்த இராச்சியங்கட்குச் சக்கிரவர்த்தியாக எப்போது ஆவேன்.

(ச.) சர்வ சௌபாக்கிய சாலியராகிய மன்னவர் வாழ்வு, தூணைக்கவரி பரிமாற = சத்திரசாமரங்களினால் வாயுக்கள் மகரந்த சுகந்தங்களை வீச, சுகிப்பே மெங்காள். (22)

(ஸ்ரீ - வீர - அ - கை) அந்தணனது ஆசைப் பெருக்கமும் அப்பெருக்கத்துடன் மரித்தலும் விரித்தல்:—கொடியென·

கொடிகுடையி னிழனெருங்க வாழ்ந்து மாதர் குங்குமக் கொங்கையின் மூழ்கிக் குளிப்போ மெந்நாண் முடிவதுமிப் பயனென்று பெறுவ மென்றே மொய்காத லன்றுமுதன் முளைத்த நெஞ்சன், மடியறுதன் கருமத்தினின்றான் மூப்பு வனசஞ்சேர் பனியின்வர மினவி நிற்போ, லடிபரவி யெனவேட்டும் வழமு மீந்தே னந்தணனு மிறப்புற்று ணைசையோடும். (23)

(ப - ரை) கொடி குடையின் நிழல் நெருங்க வாழ்ந்து = பதாகை சத்திரசாமரை களினது சம்பிரமம் பூரிக்கச் சாம்பிராஜ்ய வாழ்க்கை யடைந்து, மாதர் = யவ்வன உல்லாச தருணியரது, குங்குமக் கொங்கையில் மூழ்கி = குங்குமப்பூ, கலந்த செங்கலவை நிறைந்த தனங்களில் காடாலிங்கனஜியா லாழ்ந்து, குளிப்போ மென்காள் = எக்காற் காமரசத்தால் ஸ்நானம் செய்வோம், முடிவதும் இப்பயன் = அந்த மில்லாத இந்தப். பலனுனது, என்று பெறுவம் = எப்போது அடைவோம், என்று ஏ = என்பதாகவே, மொய்காதல் = மூற்றினும் பற்றிய பேராசை, அன்று முதல் = அரசனைக் கண்ட அக் காலந்தொடங்கி, முளைத்த, = உதித்த, நெஞ்சன் = மனத்தையுடைய அவ்வந்தணன், மடியறுதன் = கெடாததனது, கருமத்தின் = லௌகிக வைதிகத் தொழிலை, நின்றான் = செய்துகொண் டிருந்தான், வனசஞ் சேர்பனியின் = பங்கஜத்துற்ற பனியே போல, மூப்புவர = விருத்த அவஸ்தை எய்த, மினவி = அவ்வருந்தி, நிற்போல் = உன்னைப்போல, அடிபரவி எனவேட்டும் வரமும் = நின்தேன் = என்னை யுபாசனைசெய்து விரதத்துடன் பாதங்களில் வணங்கி வரமுங்கேட்பதாஞள் யானுந் திருவுளையும் செய்தேன், அந்தணனும் = அம்மறையவனும், காலகதியால், இறப்புற்றான் ஆசையோ டும் = முன்மொழிந்தபடி பேராசையுடனே மரணத்தை யடைந்தான்.

(ஸ்ரீ - வீர.) அம்புயத் தன்மை யழிக்குந்தன்மை பனிக்கேயிருத்தலின், பதுமத்திற் குப் பனியிடியாம். மரணமெனினும் பஞ்சத்தன்மை யெனினும் ஒரு பொருள் = அந்தப் புர அழகியர்களோடே ஆலிங்கன லீலைகள் ஆற்றியதாலுண்டான சுரமத்தெழுந்த வேர் வைத்துளிகளை, புட்பங்களின் மகரந்தப் பொடிகளுடன் கலந்து சுகந்தமடைந்த வாயுக்

கள் எப்போது மாற்றுகிற்குமோ ! இவ்வண்ணம் அவ்வேதியன் இச்சித்துப்பின் அது முதல் இஷ்டவிடயத்தை நினைந்துகொண்டே யிருந்தான் ; வாழ்நாள் முழுதும் சோம் பலின்றி நித்யம் தனது தருமத்தில் வழுவாதவனுகவே இருந்தான், தாமரையைப் பணி யிடி தகர்ப்பதேபோலும், தடாகநீரைக் கரையிடுதல் கெடித்தலேபோலும் அம்மறைய வனை ஜர்ஜரஞ் செய்யுமாறு ஜரையானது வந்தடைந்தது, மரணத்தையடைய நெருக்க மாக விருக்கும் அம்மறையவனது மனைவி வசந்த இருதுவானது சென்றபின் உஷ்ண இருதுவின் பயத்தால் வாடுங்கொடிபோல வாட்டத்தை யடைந்தனள். அதன் பின்னை வள் உன்னைப்போல எம்மை யன்புடன் ஆராதித்தனள், சாவாதிருத்தல் அடையமுடி யாதென் வெண்ணி இவ்வரத்தை எம்பால் வேண்டிக் கொண்டான். ஹே இராஜ இராஜ ஈசுரி ! எனது நாயகர் மரித்தபின்னர் அவ்வுயிர் இம்மண்டபத்திலேயே யிருக்கவேண் டும், இதனைவிட்டு வெளியி லேகலாகாது எனப் பிரார்த்தித்துக்கொண்ட அளவில் அவ் வாறே யாகுகவென வரமீந்தேன், பின்பு அவ்விப்பிரன் காலவசத்தால் மரணத்தை யடைவுற்றனன்.

(ச) மாதர் = அந்தப்புர மங்கையருடைய, வரமும் = பிருதபர்த்தாவின் சீவன் தனது மண்டபத்தினின்று நீங்காதவரத்தையும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பின்னத்தம்பதிகள் என்னுஞ்சொல் என அறியும் வேட்கை யுண்டாக அவர்கள் அடைந்த நிலைமையைப்பற்றிக் கூறல்:—அவனென.

அவன் மனையாகாசத்திற் சீவாகாசமாய் நின்ற ஞகாசவடிவா னேனே, கவருறுமுன்னாள் எழுந்து சங்கற்பத்தாற் காவலன்றானேயாகிக் கலந்துநின்றான், றவமறையோன் சமமாக மனைவிசோர்ந்து தன்னிதயத் திரண்டாகிச் சரீரந் தன்னை, யுவமையுறு கணவனுடன் சமமாய்ப் போக்கி யுயர்சூக்கவுடலோ டவ னுடன் போயுற்றாள். (24)

(ப - ரை.) அவன் = அம்மறையவன், மனையாகாசத்தில் = அதேகிருக ஆகாசத் தில், சீவ ஆகாசமாய் நின்றான் = ஜீவ ஆகாசவடிவமாக இருந்தான், ஆகாசவடிவ ஆனே னே = ககனவடிவம் வாய்ந்த அவ்வந்தணனே, கவருறுமுன்னாள் அழுந்து சங்கற்பத் தால் = வாதனையேறும் படியாகக் கிரகித்துக்கொண்ட பூர்வகாலத் தழுந்திச் செய்த மனோராச்சிய வயத்தால், காவலன் = இராஜாதி ராஜன் தானேயாகி = எனச் சுயமா கவே ஆய், கலந்து நின்றான் = பரமசக்தியாதிகளைப் பற்றி விளங்கினன், தவமறை யோன் = தவதனனுகிய அவ்வந்தணன், சமமாக = பிணமாகி வீழ்ந்த அளவில், மனைவி சோர்ந்து = அவ்வருந்ததி சோகமிகவுற்று, தன்னிதயத் திரண்டாகி = தனது இதயத் தால் இருவகையாகி, சரீரந்தன்னை = தனது தூலதேகத்தை, உவமையுறு = தனக் கேற்ற கல்யாணகுண மமைந்த, கணவனுடன் = நாயகனுடன், சமமாய்ப் போக்கி = அமங்கலமாக விடித்து, உயர் சூக்கவுடலோடு = பதிவிரதா தருமாதிகளால் யாவரும் புகழும் மேன்மைதங்கிய இலிங்கதேகத்துடன், போய் அவனுடன் உற்றாள் = எகி அந் நாயகனுடனே யமர்ந்தனள்

(ஸ்ரீ - வீர.) ஜீவ ஆகாசமாக = ஜீவனே சொச்சத்தன்மை சூக்ஷமத்தன்மை முத லியவற்றினே ஆகாசம் போலிருத்தலின் ஆகாசமாம், அதன் றன்மையதாக என்பதாம். சுயம் ஆகாசவபுவேயா யிருந்தும், பழைய அற்பமல்லாத சங்கற்பவயத்தால் பரம சக்தி மாஞகிய பூபதியாய் நின்றனன் என்பதாம். அக்கிருக ஆகாயத்திலேயே அந்தக்கரண வாசனைவச்சின்னப் பிராஹ்மமாய ஜீவாகாசத் தன்மையானே யிருந்தனன், பின்றனை

கவே முன்செய்த அளவில்லாத திடபாவனையின் வயத்தினாலே ஆகாய சரீரமுடைய னுகவே னினது பதியுயர்ந்த தெய்வமானுட சக்திமானுன மன்னவனுனன்; மனுடப்பிர பாவத்தாற் பூமண்டல முழுவதையும் வெற்றிகொண்டும், தெய்வப்பிரதாபத்தால் தெய்வ லோகத்தையும் அடக்கிக்கொண்டும், பாதாளத்தை வெற்றிகொண்டு கிருபைபாலித்தும் மூவுலகவிஜய மன்னவனு யிலங்கினுன். அக்கிருகத் துள்ளிருக்கும் ஆகாயத்தில், சித்த சமஸ்கார அவச்சின்னப் பிரஹ்மாகாசப் பிரசுரவடிவப் பூதாகாசவடிவம் வாய்ந்த அம்ம றையவன் தேகம் நீங்கியபோது, அவனது மனைவியாகிய பார்ப்பினியானவள் சோகத்தா லத்தியந்தம் மூர்ச்சித்து வாடிகாய்ந்த உளுந்து இரண்டாக வெடிப்பதேபோல இருதயம் பிளந்திறந்தாள். நாயகனுடு சவமாய தேகத்தைசேய்மையில் விட்டுவிட்டுப் பரலோகத் திற்குக் கொண்டுசெலுத்தும் மானச தேகத்தோடும் நாயகன்பால் நண்ணினன்.

(ச.) அந்த மனையாகாசத்தில், சீவ ஆகாயமாய் = சீவசொரூபமான சிதாகாசரூப மாய், நின்ருன், அழுந்து சங்கற்பத்தால் = மிருந்த துங்கற்பவசத்தினுல், தானே = சுவ யம், காவலனுகி = பரமசக்தி மானுன பூமிபாலனுய், சோர்ந்து = சோகத்தினு லத்தி யந்தம், தளர்ந்தவளாகி, தன்னிதயத்து = அந்தப் பிராஹ்மணப் பெண் தனதிருதயத் தில், இரண்டாகி = துவிதமாய், கணவன் = பர்த்தா, போக்கி = தூரத்திற்றள்ளி, உயர்சுக்க வுடலொடு = ஆதிவாகிய தேகத்தோடு (தால்) அவனுடன் போயுற்ருள் = பர்த்தாவை யவள் அடைந்தாள், உ-ம்: மனம் புத்தி யகங்காரம் பிராணுதி பஞ்சவாயுக் கள் சீவனுகூடச் செல்கின்றன தத்துவ மறியாதமட்டும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அங்குற்ற வைபவமும் காலக்குறுக்கமும் அறைந்து அவ் விருவரும் நீங்களே யாவீரென் றுரைத்தல்:...ஆயவென.

ஆயமறை யோன்மக்கண் மனையும் பூமியடவிகடா வரங்களெலா மங்கே யுண்டாய், மேயவுயிர் போயவற்கு நாளெட் டாகும் விண்வடிவாஞ் சீவனு மவ் வீட்டி னிற்கும், போயபவத் தினக்கன்பனை வந்தப் பூசுரன்பூ பதியா கிப் புணர்ந்தா னன்று, தூயவருந் ததிப்பெயர்கொள் பனவி யாகித் துணை வியா மந்தமடத் தோகை நீயே. (25)

(ப - ரை.) ஆயமறையோன் = அவ்வாரூய மறைவல்லானது, மக்கள் = மைந்தரும், மனையும் = கிருகமும், பூமி = பூவும், தனங்களும், தானியங்களும், அடவிகள் தாவரங் கள் = வனங்கள் விருக்ஷாதிகள், எலாம் = முதலியயாவும், அங்கே உண்டாய் = அவ் விடத்திலேயே அப்படியே யிருப்ப, மேயவுயிர்போய் = அவன் தேகத்திற் பொருந்திய பிராணன் நீங்கி, அவற்கு = அவ்வந்தணனுக்கு, நாள் எட்டாகும் = தினங்கள் எட்டா யிருக்கின்றன, விண்வடிவாம் = ஆகாய ரூபமாம், சீவனும் = உயிரும், அவ்வீட்டில் = அக்கிருகத்திலேயே, நிற்கும் = இருக்கின்றது, போயபவத்து = சென்ற ஜன்மத்தில் உனக்கன்பனை = நினக்கு நாயகனை, அந்தப் பூசுரன் = அந்த அந்தணன் பூபதி யாகி = அரசனுகி, புணர்ந்தான் = இராஜ்ஜிய சம்பத்தை யடைந்தான், அன்று = அப்போது, தூய = பரிசுத்தமான குணத்துடன் கூடி, அருந்ததிப் பெயர்கொள் = அருந்ததி யென்னும் நாமம்கொண்டு விளங்கி, பனவியாகி = பிராஹ்மணியாகி யிருந்த, துணைவியாம் = தருமபத்தினியாம், அந்த மடத்தோகை நீயே = அந்த அழகுவாய்ந்த அன்னநடை மயிலியலினள் நீயேயாவாய்.

(ஸ்ரீ - வீர.) கிரிக்கிராம கந்தரத்தி லிருக்கும் அம்மறையவன் பூபத்தன்மையை யடைந்து இப்போதுனக்குப் பர்த்தாவா யிருக்கின்றுன்; அந்தக் கிரிக்கிராமத்தின் கண்

ணே அம்மறையவனுடைய வீடுகளிருக்கின்றன; பூஸ்தாவராதி தனங்களு மிருக்கின்றன மரணமாகி யிப்போது எட்டுத்தினங்களாயின; உயிரும் கிரிக்கிராமகிருக மண்டபத்திற்ரு னிருக்கிறது. அம் மறையவன்ரூன் இப்போது மன்னவனுந் தன்மையை யடைந்து தினக்கு நாயகனுக விருக்கின்றனன், அருந்ததியாகவிருந்த அவளே இப்போது லீலையா கிய நீயாயிருக்கின்ரூய்.

(ச.) ஆயமறையோன் = இந்த வீப்பிரனது, மனை = கிருகங்கள் தனங்கள் எலாம், ஆங்கே யுண்டாயிருக்க, ஆங்கேயுண்டால் பாடபேதம், மேயவுயிர் போயவற்கு = மிர்த மானவனுக்கு, நாளெட்டாகும் = எட்டா நாளாயிற்று, அவ்வீட்டில் = கிரிக்கிராம மனையாகாயத்தில், சிவனும் நிற்கும் = இருக்கின்றனது. ஸ்ரீ தேவி வாக்கியம்: போயப வத் தனைக்கு அன்பனுன = பர்த்தாவான அந்தப்பூசுரன், இன்று = இப்பவத்து உன் கணவனுன பூபதியாகிப் புணர்ந்தான்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கூறிவந்ததை யுபசங்கரித்தல்:—புதியென.

புதியனசக் கரவாகந் தூணைய தென்னப் பூதலஞ்சே ருமையொடு புராரி யென்ன, வதிகநலத் தூணைவரா மிருவராயிங் கரசுசெயு நீரவரே யாதலாலே, மதிநுதலாய் முதற்பிறப்பின் மயக்கஞ் சொன்னேஞ மற்றிதுதான் மயக்கமாத் திரமதாகு, முதிதமுறு மாகாய வுடலாஞ் சென்ம மொளிபெறத் தோன்றிய தென் ரூலகி லன்னே. (26)

(ப - ரை.) புதியன சக்கரவாகம் தூணையதென்ன = பிரியதம சுவசக்கரவாகப் புட்கள்கூடி வாழ்வதே போலும், பூதலஞ்சேர் உமையொடு புராரியென்ன = பூமண்ட லத்தை யலங்கரிப்பான் எழுந்தருளி யிருக்கும் ஜகன்மாதாவாகிய சிவை திரிபுரசங்கா ரன் ஆகிய சிவன் என்னும் ஜகத்பிதா என்பவர்களே போலும், அதிக நலத்தூணைவ ராம் = பேராநந்தத்திற்குப் பரஸ்பரம் சகாக்களாம், இருவராய் = ஓருளமீருடம் பெனப் பெற்றவராய், இங்கு அரசுசெயும் = இவ்விடத்தில் அரசாஞ்சி செய்யும், நீர் = நீங்கள், அவரே = அவ்வந்தண தம்பதிகளே, ஆதலாலே = ஆகையினுலே, மதிநுத லாய்=நிலவுபோலும் நெற்றியாய்! முதற் பிறப்பின் மயக்கஞ் சொன்னேஞம் = பழைய சமுசார மயக்கசருக்கம் இன்னவிதமென வியம்பினேம், மற்றிது தான் = கேவலத் தோற்றம், மயக்கமாத் திரமதாகும் = பிராந்தி மாத்திரமேயாம். உதிதமுறும் ஆகாயவு டலாம் = பொய்யாகப் பொலியா நின்ற, ஆகாய தேகமாம்; சென்மம் = சர்க்கம், ஒளி பெறத்தோன்றியது = மெய்போல மிளிர்ந்தது, என்ரூள் உலகிலன்னே — ஜகன்மாதா இங்ஙன மியம்பினுள்.

(ஸ்ரீ - வீர.) சிவை சிவன் = பார்வதி பரமேசுரர். ஆயின் எமக்குப் பழையசமுசா ரம் சத்தியம் ஆமென்னுஞ் சங்கையை நீக்கும் வாயிலா யுபசங்கரித்துப் பலிதங்கூறு வார் மயக்கமென்ரூர். சொரூபமற்றதா யிராநின்ற மயன்மாத்திரமே யாமிது. எத்தோற் றம் தோற்றுகின்றதோ அது இங்ஙனங்கூறிய நியாயத்தானே ஆகாயதேகமாம்=பொரு ளற்றதாம் வெட்டவெறு மயலாம். நீங்கள் இருவருந்தா னிப்போது அரசனும் அரசியும் ஆகவிருந்து அற்புதமான சக்கரவாகப் புட்களைப்போலும் புவியின்கண் ணெழுந்தருளிய உமையும் உமாநாயகனும் போலும் மகிழ்ந்து அரசுசெலுத்து கின்றீர்கள். மூடிவாகக் கூறுமிடத்து இரண்டு சிருஷ்டிகளைப் போலும் பழைய சர்க்கமும் மயக்கமாத்திரமே யாகும்; இங்ஙனம் முன்னடந்த சிருஷ்டிக்கிரம மூழுதையும்கூறினேம்; அதன்கண்ணே பிரஹ்மாகாசத்தைச் சிவரூபமாகப் பார்த்த மயலே மூலமாகுமென்றறிந்தி, மயன்மாத்தி

சத்தை யடைந்த ஆகாசந்தான் இங்ஙனம் ஜீவரூபத்தைத் தரித்தாடுகின்றது. பின்பின் மயல் கட்கு முன்முன் மயலே காரணமாகும், இம்மயலினின்றும் சிதாகாயத்தின் கண்ணே இம்மயக்கம் பிரதிபிம்பித்த தென்றறிக, தனது திருஷ்டியினாலே அசத்தியமேயாகும் அதிஷ்டான திருஷ்டியினாலோ சத்தியமேயாகும் என்றுணரின் பவம் நீங்கிச் சுகம்பெறலாம், இவ்வாரூகவே மித்தையான அனர்த்த உணர்ச்சியாலுல் எல்லாச் சர்க்கங்களுமே தல்லியமேயாகும் ஆகையால் சிருஷ்டிமயன் மயமியாதாகும் மயலற்றது தான் யாதாகும் இவ்வண்ணம் இடரிலாது அநர்த்தத்தை யுணரின் அயலொன்றுந் தோற்றவே தோற்றுதாம்.

(ச.) புதியன சக்கரவாகக் துணையதென்ன, பூதலஞ்சேர் — பூமியை யடைந்த நலத்துணைவராம் = இன்பத்துக் கிணைந்தவராய், இருவராயிங்கு, அரசுசெயும்=இராக்சியத்தை யாளாகின்ற; முற்பிறப்பின் = பூர்வம் விப்பிரஜன்மத்தி லுண்டான, மயக்கம் = சம்சாரப் பிரமையை, சொன்னேம், மற்றிதுதான் = இந்த நிருபஜன்மமும், மயக்க மாத்திரமதாகும்—பிராந்திமாத்திரத்தா லுதித்ததாம், ஆதலாலே யுதிதமுறும்= எந்தக் காரணத்தால் பிராந்திமாத்திரத் துதித்ததோ அந்தப்பிரமையே ஆகாசவுடலாஞ் சன்மம் = மித்தியா கற்பித சொரூபமான சர்க்கமாய்; ஒளிபேறத் தோன்றியதென்ரு ளுலகிலன்னே = மூன் விப்பிரஜன்மத் துதித்த நிருபதி சம்சாரசங்கற்பமே அத்தன்மையான சர்க்கமாய் விளங்குகின்ற தென்பது கருத்து.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பொருத்த மில்லாப் பொருளெனப் புகன்றதை யாக்ஷேபித்தல்: இங்ஙனங் தேவி கூறியதைக்கேட்டு அசம்பாவனையால் நெடுநேரம் மிகவும் விஸ்மயத்தால் மலர்ந்த நேத்திரத்தினை யுடையவளாய் லீலையானவள் தத்தளித்த அக்ஷர மொழிகளாற் றேவியை நோக்கிக்கூறல்:—இந்தவென.

இந்தவுரை கேட்டலுமே லீலை சொல்வா னிறைவி பொய்யே யியம்பினையே தெங்ஙன் கூடு, மந்தணன் வீட்டுறை சீவனதுவெங் கேயோ வன்னியமா யிருந்தயா மடைந்ததெங்கே. மூந்துறுமவ் வேற்றுலகத் திருப்பாரந்த மொய்கிரிக டசதிசைகண் முற்றுஞ்சேர, வந்தினிதிங் கியாங்களுறை வீனயினூடே மருவு மடை வெப்படியோ மாசிலாளே. (27)

(ப - ரை.) இந்த உரை கேட்டலுமே = இங்ஙனந் தேவி யனுக்கிரகித்ததைச் சிரவணித்தவுடனே, லீலை சொல்வாள் = லீலையானவள் கூறுகின்றுள், இறைவி = ஹே ஜகன்மாதாவே ! போய்யே யியம்பினை = மித்தையே சொன்னாய், ஈதெங்ஙன்கூடும் = இத்தகைய விவகாரம் யாங்ஙனம் பொருந்தும் ? அந்தணன் வீட்டுறை சீவனது வெங்கேயோ = விப்பிர ஜீவனுனது தனது கிருகத்தில் இருக்கின்றது எவ்விடத்திலேயோ, அன்னியமா யிருந்த யாமடைந்த தெங்கே = அயலாக இங்கே யிருக்கின்றயாம் பொருந்தி நிற்பதுதான் எவ்விடத்தில், மூந்துறும் அவ்வேற்றுலகத் திருப்பார் = கண்காணத் தோற்றிய அந்த அன்னியமாகிய லோகத்திருக்கப்பெற்றவர், அந்தமொய்கிரிகள்=அந்த வளப்பம் பொருந்திய விஸ்தாரமலைகள், தசதிசைகள் = பத்துத்திசைகள், முற்றுஞ் சேரவந்து= யாவுங்கூடிவந்து, இனிது இங்கு யாங்கள் உறை= இனிமையாக யாங்கள் வசிக்கு மிவ்விடமாகிய, மனையினூடே = எங்கள் வீட்டின் உள்ளே, மருவும் அடைவு எப்படியோ = பொருந்தும் பொருத்தம் எங்ஙனமாமோ ? மாசிலாளே = இயற்கையாகவே யாதொரு குற்றமுமற்ற தேவியே ! என்று பிரார்த்தித்தனள்.

(ஸ்ரீ - வீர.) இவ்வியாம் எத்தேசாந்த ராதிகளில் இப்போ திருக்கின்றேமோ அத்த கைய தேசாந்தராதிகள் வசிஷ்டவிப்பிர கிருகத்தினுள்ளே எவ்வாறடங்கும், எங்ன மும் அடங்காதாம் என்க. வசிஷ்ட விப்பிரதேசத்தைக் குறித்து வேற்றுலகு என்றதாம். '' எங்ணமடங்கு மில்லத்தினுள்ளேயெவற்றில், என்பர்த்தா விருந்திடுவாளே" என்றும் கூலோக பாடபேதமாம். ஹே ஜகதிசுரியே ! உம்முடைய திருமொழி பொய்யேயாகும் மெய்யேயாயினும் இத்தகைய விருத்தமானவிது எங்ணஞ் சம்பவிக்கும்; மறையவனு யிர் தன்வீட்டி லெங்கே ! இங்காமெங்கே யிருக்கின்றோம்; விஸ்தாரமான தேசத்தில் அற்புதம் ! சமாதியிற் கண்ட நாயகரது சர்க்கமும் என் வீட்டிற்று னெவ்வாறு சம்ப விக்கும் ? அத்தகைய வேறு உலகமும், அப்பூமியும், அம்மலைகளும்; அப்பத்துத்திசைக ளும் ஆகிய எனது நாயகரிருக்கும் அவைகள் எல்லாம் இவ்வீட்டகத்தே யெங்ணம் இலங்கா நிற்கும் ?

(ச.) இறைவி = தேவி ! நீ, ஈது = இத்தன்மை, அன்னியமாய் இவ்விடத்திருந்த யாம்,= நாங்களிருவரும், அவ்வேற்றுலகம் = அத்தன்மையான லோகாந்தரம் நதி பார் = ஆறும் பூமியும், மனையினூடே=கிருகத்தி னகத்தின், மருவுமடை வெப்படியோ மாகிலாளே.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அசம்பாவனை புஷ்டியாமாறு ஸ்ரீதேவி கூறிய பொருளில் திருஷ்டாந்தங்களினுல் நன்மையின்மையை லீலை கூறுகின்றாள்:—மத்தவென.

மத்தவயி ராவதமோர் கடுகினுர்பான் மறிபடுமோ வடமேரு வந்தோர் கஞ்ச, வித்தினிடைப் புகுந்திருந்தோர் வண்டின்குஞ்சான் மிகுெரியு மோ கொதுகு வெகுண்டு மோதி, யுத்தமியற் றிடச்சிங்கமநேகமத்தோ டோரணுவி னிடைப்புகுமோ வுரைத்தநின்சொல், லித்திறமே யொன்றுக்கு மிசையாதாகு மெனலீலை சொல்லுதலு மிறைவி சொல்வாள். (28)

(ப - ரை.) மத்த வயிராவதம்=மதோன்மத்த ஐராவணம், ஓர்கடுகின் ஓர் பால் = ஒரு சிறுகடுகினது ஒருபாகத்தில். மறிபடுமோ = பத்தப்படுமோ, வடமேருவந்து = பொன்மேரு கிரியானது வந்து, ஓர் கஞ்சவித்தினிடை = ஒரு தாமரைக் கொட்டையி னுள்ளே, புகுந்து = பிரவேசித்து, இருந்து = வாசஞ்செய்து, ஓர் வண்டின் குஞ்சால் மிகுெரியுமோ = ஒரு அற்பவண்டின் இளங்குஞ்சினுலே தூள்தூளாய்ப் போய்விடுமோ, கோதுகு வெகுண்டுமோதி யுத்தமியற்றிட = மசகம் சினந்து தாக்கிப் போர்புரிய, சிங் கம் அநேகம் = சிங்கக் கூட்டங்கள், அத்தோடு — அக்கொதுகோடு போர்புரிய முடி யாமல் ஓடி, ஓரணுவினிடைப் புகுமோ = ஒரு அணுவின் பொந்திற் புகுந்தொளியுமோ, இத்திறமே உரைத்த நின்சொல் = இங்ணமே கூறிய தங்களது திருவாக்கியம் ஒன்றுக் கும் இசையாதாகும் = ஒருவகைக்கும் யொருத்தமற்ற தாகும், என லீன கொல்லுத லும் = என்று லீலை கூறியதைக் கேட்ட' இறைவிசொல்வாள் ஸ்ரீதேவியானவள் திரு வருள் செய்கின்றாள்.

(ஸ்ரீ - வீர.) ஐராவதமெனினும் ஐராவணமெனினும் பரியாயம். ஹே சருவேசுர ஈசுரியே ! மதத்த ஐராவதமானது ஒருகடுகின் றூளியிற் கட்டுப்படுவது போலும், ஒரு புன்கொதுகாற் செய்யப்பட்ட போர்க்காற்றது வீரசிங்கக் கூட்டங்கள் அணுவின் றூள யிலடைக்கலம் புகுந்ததுபோலும்; தாமரைவிரையிற் ரூபித்த மேருகிரியானது அங்கி ருந்த ஒரு சிறுவண்டின் குஞ்சால் நெரிந்து தூளானதே போலும், கனமேகங் கர்ச்சிப் பக்கேட்டுச் சித்திரமயில் ஆடுவதேபோலும் அருளியது அனைத்தும் அசங்கதமேயாகும்,

வீட்டிற்குள்ளே பிருதிவியும் பர்வதங்களும் எங்ஙனந்தா னிருக்கும்? பிரசாதத்தை யனுக்கிரகிக்கும் விடயத்திற் பெரியோர்கள் சிறிதும் வருந்தார்க ளல்லவா? ஆகலின் இது எவ்வாறு பொருந்துமோ அவ்வாறு நின்மலமான திருவுள்ளத்திற்கருணைபுரிந்து அருளல் வேண்டு மென்று லீலை கேட்ப அதற்குத்தேவி யனுக்கிரகம் செய்கின்றாள்.(28)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஈசுரியாகிய எமது பரம ஆப்தத்தன்மை வண்மையானே நன்குதெரிந்து வினவியதேயாகு மிவ்வினா வென்னுந் திருக்கருத்தானே பரிகாரந்தேவி செய்தல்? பொருந்தாததை யுண்டாக்கும்படியான பொய்யைப் பரிகரித்துத் தேவி கூறல்:—பொய்யென.

பொய்யாக வுரைத்திலம்யா மிதனினுண்மை புகலக்கே ளெமைப்போல் வார் புத்தேணீதி, மெய்யாகக் கொள்வதலாற் பேதியார்கள் வேதியன்றன் சீவனவ னூரில்வீட்டி, லெய்யாமை யுறைகின்ற திந்தநாடு மிவ்வரசும் விண் வடிவே யிவற்றையெல்லா, மையாரும் விழிமடவா யந்தவிண்ணே வடிவான வவன்றனே மகிழ்ந்து பார்க்கும். (29)

(உ - ரை.) பொய்யாக வுரைத்திலம் யாம் = மித்தையாகக் கூறினே மில்லையாம், இதனின் உண்மை = இது விடயத்தினது யதார்த்தத்தை, புகலக்கேள் = கூறக்கேட் குதி, எமைப்போல்வார் புத்தேள் — எம்மைப் போன்றவர்களாகிய தேவதைகள், நீதி மெய்யாகக் கொள்வதலால் பேதியார்கள் = நியதியை உண்மையாகப் பாலிப்பதே யல் லாமல் வேறுபடுத்த மாட்டார்கள், வேதியன்றன் சீவன் = அத்துவிஜ ஜீவாத்மா, அவ னூரில் வீட்டில் = அக்கிரிக் கிராமத்திலுள்ள அவனது வீட்டில், எய்யாமை = விவர்த்த மாதலின் பொருந்தாதாயும், உறைகின்றது = பொருந்து கின்றதாகிய, இந்த நாடும் = இந்தத்தேசமும், இவ்வரசும் = இவ்விராஜ்யமும் சம்பத்தும், விண்வடிவே = சிதாகாச வடிவமேயாம், இவற்றை யெல்லாம் = இத்திருஷ்ய சம்பத்துக்களி யாவற்றையும், மையா ரும் = அஞ்சனந் தீட்டிய, விழிமடவாய் = நீள்விழி மடந்தையே! அந்த விண்ணேவடி வான = அவ்வாகாசமே வடிவமா யிராநின்ற, அவன்றனே = அம்மறையவனே, மகிழ் ந்து = சந்தோஷித்து, பார்க்கும் = காணும். (29)

(ஸ்ரீ - வீர.) நியதி = ஜகத்தின் மரியாதை. கிரிக்கிராம பிராஹ்மண ஜீவாத்மாவே வியோமாத்மா = சித்தசரீரம்; சித்தாகாசம் சிதாகாச மென்பது முன்னே சொன்னோம். அல்லது வியோமாத்மா = நிராகாரம், வியோமமே யாய இம்மகிராஷ்டிரத்தை = நிஜ சொரூபமேயாய இம்மகி சகிதராஷ்டிரத்தைக் கனக்காண்போன்போலக் காண்கின்றது வியோமாத்மா = ஆகாசவடிவம். ஒருகாலும் பொய்மொழியே யாங்கள் புகலேம்; உள்ள படியே கூறக்கேட்டி "பொய்ம்மொழி புகலற்க" வென்னும் நியதிகளை எம்போலியர் கடந்து நடவார்; அன்னியர்களாற் பேதிக்கப்படும் மரியாதையையாமே ஸ்தாபிப்போம்; யாம் அம்மரியாதையைக் கடந்தால் மற்றெவர் காப்பர்? அக்கிராமத்திருக்கும் மறையவ னாகிய ஜீவான்மா அத்தன் வீட்டின் கண்ணே விண்ணின்கண்ணே இம்மகாராஜ்யத்தை அரசவாசனை யுபஜித சிதாகாச வடிவமாக விருந்தே காண்கின்றது?

(சு) புத்தேணீதி = நியதிசொரூபமான பரமேசுரசக்தியை பேதியார்கள், எங்க ளால் மற்றொரு பிரகாரமாகக் கூடா தென்பதாம், வேதியன்றன் சீவன் = முற்கூறிய கிரிக்கிராமவாசியான, துவிஜனுடைய ஜீவாத்மா, அவனூரின் வீட்டில் = அந்தக்கிரு கத்தில்; இந்த நாடும் = இந்த மகாராட்டிரமும்; வியோமவடிவே.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆயின் எங்களுக்குப் பூர்வசம்சார விஷயஸ்மிருதி யேன் ரெடர்வதில்லை, ஏன்ரூன் அதனினும் அயலாய இப்பிரவிருத்தி யுதித்தது? எனக் கடாவ விடைதருகின்ரூர். அவர்களே யாங்களாக விருக்கும் பக்ஷத்தில் அவ்வாறு பிரத்தியபிஞ்ஞை யேன் உண்டாகலாகாது, மரணத்திற்குத்தான் என்னவடிவம் எனக் கூறுகின்ரூர்:—தொன்மையென.

(ச.) யாங்களிருவரும் அந்தவிப்பிர தம்பதிகளேயாயின் அத்தன்மையான ஸ்மிருதியே னின்றெனில்? தொன்மையென,

தொன்மையா மந்தநினை வுங்களுக்குத் தோன்ரூது வேரூகித் தோன்றுங் கண்டாய், பன்மையா நனுகினைவு கனவிற்ரோன்ரூப் பரிசெனவம் மரணத்தின் பான்மை தோன்ரூத், தன்மயமாஞ் சத்ததினுல் விளங்கு மந்தத்தடஞான விசும்பிடையோர் தனிமூலக்கே, வன்மையா மிப்பூமி தோன்றி நிற்குமன நினைவிற் கண்ணடியில் வயங்கு மாபோல். (30)

(ப - ரை.) தொன்மையாம் = பழைமையான, அந்த நினைவு = அந்தஸ்மிருதி, உங்களுக்குத் தோன்ரூது = உங்களுக்கு மறைந்துபோம், வேரூகித் தோன்றுங் கண்டாய் = அயல்வகையாகப் பிரதீதியாம், பன்மையாம் நனுகினைவு = அநேக விதமான ஜாக்கிரசம்பந்தி ஸ்மிருதிகள், கனவில் = சொப்பனத்தில், தோன்ரூப் பரிசென = பிரதீதியாகாத தன்மைபோல அம்மரணத்தின் பான்மைதோன்ரூ = அவ்விறப்பின் றன்மை பிரதீதியாகாதாம், தன்மயமாஞ் சத்ததினுல் = தன்மயமாகிய உண்மையினுலே, விளங்கும் அந்தத் தடஞான விசும்பிடை = பிரகாசியாநிற்கும் அவ்விசால அறிவாகாயத்தின் மாட்டு, ஓர்தனி மூலக்கே = ஒரு சிறிதான அற்ப கோணத்திலேயே, மன நினைவில் கண்ணடியில் = உள்ளத்தின் எண்ணத்தில் தருப்பணத்தில், வயங்குமா போல் = தோற்றுவதேபோல, வன்மையால் = கடினுதி சிறப்புகள் வாய்ந்த, இப்பூமி தோன்ரூ நிற்கும் = இந்தப் பூமண்டலம் பிரதீதியாகா நிற்கும். (30)

(ஸ்ரீ-வீர.) நனவில் அனுபவித்த பதார்த்த விடயஸ்மிருதி கனு அவஸ்தையின்கண் ணே உண்டாவதில்லையாம். வேறுவகையாய்த் தோற்றமு முண்டாகின்றது, அதுபோ லவே மூற்பிறப்பின் கண்ணே யனுபவித்த பதார்த்த விடயஸ்மிருதி இப்பிறப்பில்லோப மாய்ப் போய்விடுகின்றது, தொடர்வதில்லையாம், பூர்வஜன்மத்திற் பாவனை விசேடத் தானே வேறுவகையாகவும் பிரதீதியாகின்றது, இந்தமரணமே அதன்கண்ணே காரண மாம். மரணமோசமஸ்காரவடிவ ஸ்மிருதி பீஜத்தை மாறுபடுத்தி மறைப்பதாம், ஆகலின் ஸ்மிருதி தொடர்வதில்லை யென்பது கருத்தாம். மருவும் அடைவெப்படியோ வீட்டி னூடே என்னும் விஞவின் பரிகாரத்தைத் தெளிவுபடுத்தும் பொருட்டுத் தன்மயமென் பதாதியாம். உண்மையானே விளங்கா நின்ற அத்விய்பரமாத்ம ஆகாசத்தின் ஜீவத்வ உபாதிபூத அந்தக்கரணத்தின் உள்ளேயுள்ள தனினும் உள்ளே இப்பூமி சைலவன காணனத்துடன் உளதாம். சங்கற்ப சப்தத்தானே மஞ்ரோஜ்யம் செய்யாநின்ற புருட னுடைய சங்கற்பம் கவரப்பெறு கின்றது, அல்லது மூலத்தில் அந்தரிருப்பது என்ப தற்கு மனத்திலிருப்பது எனப் பொருள்கொள்க, கொள்ளவே இப்பக்ஷத்தில் இச்ச லோகத்தின் பிற்பாதிக்குமே லன்வயமாம். அப்பழைய ஸ்மிருதியானது உங்கட்கு உண் டாக மாட்டாது, வேற்றெண்ணமே யுண்டாகும், கனவின்கண்ணே நனவின்மிருதி எங் ஙன முண்டாக மாட்டாதோ அங்ஙனமே மரணப்பான்மையுந் தோன்ரூதாம்; கனவிற் றிரிபுவனம் போலவும், மனநினைவிற் றிரிவித' வுலகம்போலவும் கதைப் பொருட்போர்

போலவும்(மரும்பூமியில் மன்னுநீர் போலவும் அம்மறையவனது வீட்டினுள்ளே பர்வத வனபட்டணத்தோடு கூடிய பூமிமுழுதும் மனத்தினுங் கண்ணுடியிலும் வயங்குமாபோ லிருந்து விளங்குகின்றது. கனமான இச்சிருஷ்டியானது சத்தியம்போல அசத்தியமா கவே தோற்றுகின்றது, அசத்தியமா யிருந்தபோதினும் சத்தியமாகத் தோற்றுவான் என் எனின் ? பஞ்சகோசத்துள் ளிருக்கும் பரமசத்தாஞ் சிதாகாசத்தின் நிமித்தத் தானே சத்தாகத் தோற்றுகின்றது.

(ச.) உங்களுக்கு = உங்களிருவருக்கு, தொன்மையா மந்தநினைவு, மரணதுக்கமகி மையால், தோன்றுது, மறைபட்டதாகி, வேறுகி = சம்ஸ்கார வசத்தினுஞ் மற்றொரு பிரகாரமாகத் தோன்றும், கண்டாய், பன்மையா நனினைவு கனவித்றொன்றுப் பரி சென = சொப்பனத்தில் ஜாக்கிரஸ்பிருதி (சாக்கிர சம்பந்தமான சம்ஸ்காரஜந்நியமாகிய சவிஷய (விடயசகித) பிரத்யயமானது சொப்பன மென்னும் வசனத்தினுல்) மற்றொரு பிரகாரமாகத் தோன்றுவதுபோல, இம்மரணத்தின் பான்மை தோன்று = பூர்வானு சந்தானரகிதமாய் மற்றொரு பிரகாரமாகவே இந்தஸ்மரண முதிக்கும். இல்லாதவஸ்து இவ்விடத் தெப்படித்தோன்று மெனின் ? வன்மையாமிப் பூமியென்பது உபலக்ஷணம், திருஷியமாய்த் தோன்றுகின்ற இந்தப்பிரபஞ்சம் மனதினைவிற் கண்ணடியில் வயங்குமா போல எப்படிச் சங்கற்பத்தகத் திருக்குமோ, எப்படித்தர்ப்பணத்திற் பிரதிபிம் பிக்கு மோ, அப்படி தன்மயமாஞ் சத்தினுல் விளங்கும் அந்தத் தடஸ்தான விசும்பிடை = சிதாகாசத்தினகத்தில், ஓர்தனி மூலக்கே தோன்றி நிற்கும், சத்தினுல் விளங்கும் = சத்திய சங்கற்பத்தோடுகூடி விளங்கும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஜகத்துள்ளே யிருக்கின்றது என்னுமிது ஒருபாலேதான் எல்லாவிடங்களிலும் என்றெண்ணக்க என்கின்றார்: ஆகாசாதி ஜகத்சர்க்கமாவதில் முன் னுள்ளது நிரவகாசத் தன்மை விரோதியன்று மெனப் பரமாணு வவச்சின்ன சிதான்மா வின் கண்ணும் அது சம்பவித்தவழி யசம்பவ ஆசங்கை யுளதாவதே கூடாதா மென் கின்றார்:=தெளியென.

தெளிபரம வணுவாஞ்சிற் சொரூபத் தொன்றுஞ்சகமெலா மொளியுரு வாய்ச் செறிந்திருக்கு, மொளிபெறவுள் ளேயுள்ளே யாதலான் முன்னுரை செய்த பூமியுஞ்சித் துள்ளே தோன்றும், வெளிபெறவீ தறியென்றே வாணி கூறவேதிய னெட்டாம் பகலில் வீந்தானென்று. யெளிதிலெமக் கநேகவரு டங்கள் போன தென்னென லீலைங்கு மீண்டிறைவி சொல்வாள். (31)

(ப-ரை.) தெளிபரம அணுவாஞ் சிற்சொரூபத்து=அதிசூக்கும சொச்சபரம அணு வெனப்படும் அறிவுருவத்தின் கண்ணே, உள்ளே உள்ளே யொன்றுஞ் சகமெலாம் = அந்தர் அந்தர் இராகின்றதிருஷிய வர்க்கங்க ளெல்லாம், ஒளியுருவாய்ச் செறிந்திருக்கும்= பிரதிதி மாத்திர வடிவமாகப் பொருந்தி யிருக்கும், ஆதலான் = ஆகையினுலே, முன் னுரைசெய்த பூமியும் = பூர்வம் புகன்ற பூமியாதியும், ஒளிபெற = தோற்றுமாத்திர மாய், சித்துள்ளே = அறிவினிடத்தே, தோன்றும் = பிரதீதியாம், வெளிபெற =சமூ சயரகிதமாக, ஈதறியென்றே = இதனைத் தெரிந்துய்வராயாக என்று, வாணி கூற = ஸ்ரீ சரசுவதிதேவி திடமாகத் திருவுருள்செய்ய, வேதியன் = அம்மறையவன், எட்டாம் பகலில் = எட்டாவது திவசத்தில், வீந்தான் என்றும் =இறந்தான் என்றருளினையே, எமக்கு = எங்களுக்கு, அநேக வருடங்கள் எளிதில் போனதென் = வருடகணங்கள் சுலபமாக விரைவிற் சென்ற காரணமென்னே, என = என்று, வினவிய, லீலைக்கு =

தன் அன்புடைய அவளுக்கு, மீண்டு=மறித்தும், இறைவி = பரமேசுரி, சொல்வாள்= திருவாய் மலர்ந்தருளுவாளாயினள். (31)

(ஸ்ரீ - வீர.) சிதாத்மாவாய்ப் பிரஹ்மமாய்ப் பரமசூக்கும அந்தக்கரண வுபகிதத்தன் மையானே பரமாணுத் தன்மை யுற்றதா யிலங்கும் ஜீவனிடத்தில் எல்லாந் தோற்று மென்பதாம். " மயிர்நுனி யொன்று நூறுவகுத்ததை நூறதாக்கினுயி ரொருபாகங்கூட வொப்பிலா நுண்ணிதாகும்" என அதனது சூக்கும மிகுதிப்பாட்டை மறைய மறைகின் றது. உள்ளே உள்ளே பிரதிபாச மாத்திர காரணங்களாய்ச் செல்லுவன வாயிருக்கின் றன, இங்ஙனமான வுலகங்கள் இருக்கின்றன, சமுசாரமானது அநாதியாக இருத்த லின். திருஷ்டிக்கே சிருஷ்டித் தன்மை யுண்மையின் சொப்பன அவஸ்தையின் மாட்டு அதிசூக்கும நாடியின்கண் ணிருத்தலினானே அணுவெனப்படுஞ் சீவனிடத்தில் உள் ளுள்ளே ஜகத்துகள் காணப்பெறுகின்ற படியினானும் கூடும். இதனானே ஜீவன்றோறும் உள்ளுள்ளே யுலகங்க ளிருக்கின்றன வெனக் கூறியது மிகப் பொருத்தமுடையதேயாம் பரமாணுவிற் பரமாணுவித் சிதாத்மாவின் கண்ணே உள்ளுள்ளே உலகங்க ளிருக்கின் றன வாதலின் இதன் கண்ணென்ன சங்கிக்கக் கிடந்ததோ அறியேம். ஹே என்றுயே ஏட்டாந்தினத்தில் விப்பிரன் வீழ்ந்தான் என்றுயே, எமக்கு அநேகவருடங்கள் சென் றுள்ளனவே இஃதெங்ஙனம் பொருந்தும் உரையாய் என லீலை பிரார்த்தித்தனள்.

(ச.) தெளிபரம அணுவாஞ் சிற்சொரூபத்து = உபாதியினாலே பரிச்சின்னரூப பரமாணுமாத்திர பரிணமமான சிதாத்தமாவின்கண், உள்ளேயுள்ளே யொன்றுஞ் செக மெல்லாம் ஒளியுருவாய்= தோற்றரவுமாத்திர சொரூபமாய், செறிந்திருக்கும், ஆதலால் முன்னுரைசெய்த பூமியும் = பிரபஞ்சமும், சித்துள்ளே = ஆன்மாவின்கண், ஒளிபெற வெளிபெறத் தோன்றும் = மனோரூபமாக ஆவது; நிரீடைரூபமாக ஆவது பரிணமிக் கும், பரமேசுவரிநீ வேதியன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) தேயம்போலக் காலமும் அதிகமதல்ல வெனச் சமாதானித் தல்:—தேயமென.

தேயநீடியில் லாமைபோற் காலமுஞ் சிறிதுநீ ளியதல்ல
மாயபேதமிற் சிற்சுடர் தோன்றிடு மாத்திர மொழிந்தில்லை
மேயபொய் மரணத்தினு லொருகண மெய்ம்மறக் திடச்சீவன்
போயதன்னபா வனைமறந் திப்பவம் பொருந்து பாவனை யெய்தும். ()

(ப - ரை.) தேயநீடியிது அல்லாமைபோல் = தேசதீர்க்கத் தன்மை யில்லாததே போல, காலமுஞ் சிறிது நீளியதல்ல = காலதீர்க்கத் தன்மையுங் கிடையாதாம், மாய பேதமில் = மாயமாகிய வேற்றுமை சிறிதுபற்றுத, சிற்சுடர் தோன்றிமாத்திரம் ஒழிந் தில்லை = அறிவொளியின் விவர்த்த வடிவமேயாகி வெறுந்தோற்று மாத்திரமே யல்லா மல் ஒரு சிறிதுங் கிடையவே கிடையாது, மேயபொய் மரணத்தினுல் = பொருந்திய பெய்யான மரணமூர்ச்சையை யனுபவித்து, ஒருகணம் =ஒருகணப்போது, மெய்மறந் திட=உண்மை விஸ்மிருதி யுண்டாகியவழி, சீவன் = உயிரானது, போயதன்ன பாவனை மறந்து = பழைய பாவனையை யடியோடு மறந்து, இப்பவம் பொருந்து பாவனை யெய் தும் = இச்சமுசாரத்திற் செறியாநின்ற அன்னிய பாவனையை யடையும்.

(ஸ்ரீ - வீர.) சித்விவர்த்தைக சொரூபமாதலின் சுக்தியவச்சின்னசைதன்ய விவர்த்த இரஜதமேபோல அத்தியந்தம் மித்தையா மென்க. ஆயினெங்ஙனம் தோற்றுமாத்திர மென்னப்பட்ட மயலின் முறையென அறைகின்றார் மேயபொய் யென்பதாதியாய்.

மரணத்துவார மூர்ச்சனையை கணநேர மனுபவித்தென்பதாம். தேயநீடிய தல்லாமை போற் காலமும் நீடியதாகாதாம் என்பதன் நியாயத்தை யாம்கூறக் கேட்பாயாக, ஜகத் சிருஷ்டியின் ஸ்ரோத்ரரவானது எங்ஙனந்தோத்ரரவு மாத்திரமாய் நிகழுமோ அங்ஙனமே, கணங்கற்ப முதலியவற்றின் ஸ்ரோத்ரரவும் கேவலந் தோத்ரரவு மாத்திரமேயாகும், தோத்ரரவு மாத்திர மென்பது எங்ஙனங் கூடுமெனின்? கணங்கற்பாதி யெல்லாவுலகும் நீயாந்தகைமை எனதாந்தகைமை யத்தியாச அதீஞத்ம ஜன்மப் பிரமவான்களுக்கே தோத்ரநிற்கு மென்றறிதி; அத்தோத்ரரவின் முறையைக் கூறக்கேட்பாயாக, ஜீவனுவன் பொய்மரண மூர்ச்சையைக் கணகால மனுபவித்து முன்னிருந்த நிலைமையை மறந்து மற்றொன்றையே காண்பன்.

(ச.) தேய நீளியதில்லாமைபோல, சிற்சுடர்= சித்தின் விவர்த்த மாத்திரரூபமான திருசியம், தோன்றிமாத்திர மொழிந்தில்லை, பிரதிபாச மாத்திரமே யாதலின், பிரதி பாசமாத்திரம் பிரதிபாமாத்திரம் பிரதீதிமாத்திர மென்பதும் தோற்ரரவுமாத்திரமென்ப தாம்; பிரதிபா மாத்திரத்தின் வேருகத் தேயநீளியது = தேசத்தினது வித்தாரம், இலாமைபோல், காலமிருதியுங் கற்பிதமேயன்றி வாஸ்தவமன் றென்பதாம். இதன் கருத்து: சிதாகாசத்திற் சர்வப்பிரபஞ்சமும் அடங்கி நிற்றலின் சிருகாங்கணமாத்திரத் தில் எப்படி மகாராஜ்ய விஸ்தாரப் பிரதீதியோ அப்படி எட்டாம் பகலினும் அநேகவரு டப் பிரதீதியாமென்பது. பாலசௌந்தரியே கேள் என்றுபிரதிபாசத்தின் கிரமமுழுது மிஃதெனல்: சீவன் மெய்ப்பொய் மித்தியாமயமான மெய்மறந்திட மூர்ச்சையை யனுப விக்து, போயசன்ம பாவனை மறந்து, இப்பாவம் = இத்தேகாந்தரம் பொருந்துபாவனை யெய்தும். (32)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இப்பவத்துறு முறையைக் காட்டுதல்:—தாங்கென.

தாங்குகின்றதீங் கிதுவித ஞன்மிகத் தாங்கிடப் படுவோ நாம்
வீங்குகின்றநம் மெய்யிது பிதாவிவன் வீந்ததித் தனையாண்டிங்
கோங்குகின்றநஞ் சுற்றமீ தின்பமா யுறைவிட மிதுவென்றே
தேங்குகின்ற பொய் மரணமூர்ச் சைத்திறந் தெளிந்த பின்சித்திக்கும்.

(ப - ரை.) தாங்குகின்றது ஈங்கிது = இவ்விடத்திலிது ஆதாரமா யிருப்பதாம், இதனுன் மிகத்தாங்கிடப் படுவோம் நாம் = இவ்வாதாரத்தினுலே மிகமிகவும்யாம் ஆதேயமாக்கப் படுகின்றோம், வீங்குகின்ற நம்மெய்யிது = பருத்திருக்கின்றசரீரமீது, பிதாவிவன் = இவன் எனது தந்தை, வீழ்ந்தது இத்தனை யாண்டு = சென்றன பிறந்த பின் னித்தனைவருடம், இங்கோங்குகின்ற = இவ்விடத்திற் பலகிளையிலும் பரவும், நஞ்சுற்றம் ஈது = நம்மூறவினர் இவர், இன்பமா யுறைவிடமிது = இரம்மியமாய் வசிக்கும் கிருகமிது, என்றே = என்றிவ் வண்ணமாகத் தானே, தேங்குகின்ற பொய்மரண மூர்ச் சைத்திறம் = கரணங்க ளெல்லாம் உபரதி யடையாகின்ற மித்தையான மரணமோகமா னது, தெளிந்தபின் சித்திக்கும் = தீர்ந்து தெளிவடைந்த பின்னர் பிராந்தியினுலே சித் தனை செய்யும். (33)

(ஸ்ரீ - வீர.) ஆதேயமாக்கப் படுகின்றோம் = ஆதாரமாகக் கொண்டிருக்கின்றோம், வீங்குகின்ற = ஹஸ்த பாதாதிமானுகப் பருத்து வருகின்ற இவனுக்கும் இவளுக்கும் யாம் குழந்தையாகப் பிறந்து இத்தனை காலமாயிற் றென்று அக்கணத்திலேயே கனவிற் போலக் கருதுமென்பது கருத்தாம். ஓரிமைக்கொட்டு மாத்திரைக்குள்ளே வியோமத் தின் கண்ணே வியோமத்தைப் போல ஆதார தேகாதி சூனியமாயினும் இது ஆதேய

மென்றும் இவ்வாதாரத்தின் கண்ணே யானிருக்கின்றே னென்றும் சமஸ்காரம் உற் பன்னமாகின்றது. ஹஸ்த பாதாதியோடு கூடியிருக்குந் தேகமாகிய இது என்னுடையது எனப் பார்ப்பன்; எத்தேகத்தைச் சிந்தை செய்கின்றனனோ அத்தேகத்தையே காண் குவன்! இத்தந்தையின் மைந்தன்யான் எனக்கித்தனை வருடமாயிற்று, இவர்கள் எனது மனோரம்மியமான பந்துக்கள், இஃதெனது அழகிய வீடாகும் யான் பிறந்திருக்கின் றேன் யான்பாலன், யான் விருத்தியடைந்துளேன், யான் இத்தகையன், இவர்கள் யாவரும் என்னுடைய பந்துக்களாவார்கள், இவர்களிவ்வாறு நடக்கின்றார்கள் எனக் காண்பன்.

(ச.) தாங்குகின்ற தீங்கிது = இவ்விடத்திற் பாலாதி ரூபமாக யானிருக்கும் ஆதார மிது, படுக்கையாதி கருப்பாதி ரூபமாகத் தாங்கிடப்படுவோம் நாம் = ஆதேயன்யான், எனவே மூலத்தகம் சப்தமிரண்டுங் கோதாகாதாம் கருப்ப ஆதேயன் சிசு, யான், சய்யையாதேயன் பாலகன்யான், வீங்குகின்றநம் மெய்யிது = அத்த பாதாதியுடைய எனது தேகமிது, பிதாவிவன் = இப்பிதாவினது புத்திரன்யான், வீய்ந்ததித்தனை யாண்டு = எனக்கித்தனை வயதாயிற்று, ஓங்குகின்ற = இன்பமிருந்த, நஞ்சுற்ற மீது = எனது பாந்தவர் இவர், தேங்குகின்ற இச்சகத்தில் சிந்திக்கும், உயிர் கொடியில் பொய்மயமாய மரணரூப மூர்ச்சையை யனுபவித்து பழைய பாவனையை மறந்து. தேகாந்தரத்தையும் அச்சம்பந்தமான பிதாவாதிகளையும் நான் எனதென்று அபிமானிக்கு மென்பது தாற் பரிய அர்த்தம். (33)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சிதாத்மாவிற்கு வேறாக இருக்கும் யாவுமே வெறும்பொய் என் னும் நல்லுணர்வு தன் பாலதாகப் புரிந்து லீலை கூறுகின்றாள்: மாயாசபள ஈசுரகாரியம் அந்தக்கரணமாம், இவ்விரு உபாதிகளையும் பேதமாய் நாடின் உபகிதங்களின் பாலும் பேதகற்பனையாம், ஆகவே காரியசத்தை காரணசத்தையின் அதீன சன்மத்தை யுடை யது, என மயலால் முன்காரணம் பின்காரியம் என்றறிதலாம், அது கூடாதாம், மற்றோ மாயையந்தக்கரணங்களே யுபேக்ஷித்து அவ்விரண்டினுந் தொடர்ந்திருக்கு மறிவைக் காண்க, பிரத்தியக் சாக்ஷியாகிய அதனைக்கண்ட வளவில் காரிய காரணப்பான்மை யிராதாம், பிண்டவஸ்தையைக் குடத்தகைமையை யெண்ணில் காரண காரியமதியாம், மண்மாத்திரமா யெண்ணினோ அம்மதியிலையாம், இங்ஙனம் ஈசுவுலக் கற்பனையேற் காரண காரியமதியாம், சன்மாத்திரம் ஒன்றேயென எண்ணின் அம்மதியிலையாம், ஆகை யினற் சம்பாவனை மாத்திரமே யிச்சமுசாரம் பிரத்தியக்கில், ஐயப்பாடேல் பிரத்தியக் சாக்ஷியா யிருந்தால் நீங்கும், எத்திருஷ்டியும் ஒரு சிறிதும் உண்டாகவேயில்லை சிதாகா சத்தில் சிதாகாசம் கேவலம் தன்பாலே யிருக்கின்றது இதனைத் தன்மகிமையிலே தா னிருந் துளதாமென மறையும் அறைகின்ற தென்றதைக் கேட்ட லீலை அவ்வாறுளதாய திருஷ்டியினாலே தெளிவடைந்து கூறுகின்றாள்:—ஆதலான் என.

ஆதலான் முதற் பவமறைந் திற்றப்பவ மறியலா யினதென்னப்
போதமாம்விழி நீதர வகோவகோ புரணமாய்த் தெளிவுற்றேன்
காதறீர்வுற வனேயவ ருறைவிடங் காட்டென விவளோத
வேதநாயகி யுரைசெய்வா ளதற்கிந்த வினையுடல் விலங்காகும். (34)

(ப-ரை.) ஆதலான் = ஆகையினால், முதற் பவமறைந்து, இப்பவமறியலாயினது = மூன்றிய சமுசாரமறைந்து இந்தச் சமுசாரம் அறியலாயது, என்ன = என்று ஸ்ரீதேவி யாருள் செய்தபோது, லீலை கூறுகின்றாள், போதமாம் விழி நீதர = ஞானநேத்திரத்

ந்தைத் தாங்கள் அருள, அகோ அகோ = ஆச்சரியம் ! ஆச்சரியம் !! புரணமாய்த் தெளிவுற்றேன் = வெளிப்படையாக அறிந்து கொண்டேன், காதல் தீர்வுற = அவர்களைக் காணவேண்டும் என்னும் ஆசை தீரும்படியாக, அனேயவருறைவிடம் = அம்மறைச் சிறுவர் இருக்குமிடத்தை, காட்டென இவளோத = காட்டவேண்டு மென்று லீலை பிரார்த்திப்ப, வேதநாயகி = மறைச்செல்வி, உரைசெய்வாள் = திருவருள் செய்கின்றாள், அதற்கிந்த = அங்ஙன் காண்குதற்கு, இந்த வினையுடல் விலங்காகும் = கருமசரீரம் பிரதிபந்தகமாகும். (34)

(ஸ்ரீ - வீர.) இங்ஙனம் ஆப்தர் கூற்றால் உலகப் பொய்ம்மையை யுணர்ந்து கூறிய பொருளைப் பிரத்தியக்ஷஞ் செய்தலாதியால் அதன்றூட்டியப் பொருட்டுமிகமுயலுவளாயினள் லீலையென்பார் காதல் தீர்வுற ஸ்ரீதியாய்த் தொடங்கினர். அப்பியாச மில்லாமல் இத்திருவஷ்டியில் இப்போது எதுவரைப் பக்குவப்பட்டுப் பிரவேட்டமாயாகேனே அதற்குள் இக்குதூகலத்தைச் சேதிக்குதி. நீ மகேசுரியா யிருக்கின்றமையால் மறையவர்தம் பதிதம்பிரபஞ்சத்தைக் கொண்டுபோய்க் காட்டவல்லவளா யிருக்கின்றாய். ஹே ஜகன்மாதாவே ! அற்புதம் ! அற்புதம் !! உலகசம்பந்தமாய ரூபஜகவர்யம் காலைப்பிரமையினாலே வெட்டவெளியாகப் பார்வையாற் பிரகாசிக்கப் படுவதேபோல நின்னால் எனக்கு அத்திருவஷ்டியானது காட்டப்பட்டது. இப்போது யானிதன்கண் நிருக்கின்றேன் திருக்கின்கண்ணே அப்யாசத்தா லல்லாமல் விற்பத்தி நிடமுடைமை வாராமைக்குள் கூறப்படும் மனே எழுச்சியைத் தவிர்த்தருளல் வேண்டும்; அதாவது எவ்வீட்டில் அம்மறையவன் மறையவளோடும் இருந்தனனே அதனேயான் காணவேண்டும் அச்சர்க்கத்தையும் அக்கிரிக் கிராமத்தையும் காண்பான் அவாவுளது ஆகலின் என்னே ஆங்கு கூட்டிக் கொண்டுபோய்க் காட்டியருளல் வேண்டும் என்றனள்.

(ச) அனேயவர் = பிராஹ்மண தம்பதிகள், இவ்வுண்ணற் காட்டப்பட்ட திருவஷ்டியின் கண் யான் அப்யாச அபாவத்தாற் பரிணதியாகாம லிருக்கும் போதே பிராஹ்மண தம்பதிகளின் சர்க்கத்திற்கு என்னைக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டவேண்டும் என்னும் இக்குதூகலத்தை நீக்கிய ருள்வாயாக. சர்க்கம் = ஈண்டுறைவிடம். (34)

(ஸ்ரீ - வீர - அ - கை.) லீலைக்குக் தூலசரீரத்தோடு சர்க்காந்தரத்துட் செலுத்துங் காரண கருமத்தைக் காணும் பகவதி, பிரஹ்ம வித்தைத் தானத்தில் முதிர்ந்து நிற்கும் அவளது புண்ணியக் கூட்டத்தை யெண்ணி அதனே யனுசரித்துக் கொண்டே திருவாய் மலர்ந்தருளுவாள்: அச்சர்க்கத்தைக் காணும் பொருட்டு முன்போலச் சமாதியில் இத்தேகத்தை மறத்தல் அனிசியமெனல்:—இந்தவென.

இந்த யாக்கையை மறந்துவே றறிவதற் நிலங்குசிற் சுடர் மெய்யா
மந்தநல்லறி வேவடி வாய்மல மறுத்தியே லதுகூடிந்
தந்தமக்கொரு வடிவிலா வுலகங்க டமனியம் பணியாகி
வந்தவாறென வுங்கண்மோ கத்தினுன் மதித்திடப்படுமன்றே. (35)

(ப - ரை.) இந்த யாக்கையை = இத்தேகத்தை, மறந்து = நினேயாமல், வேறறிவதற்று = மற்றொரு திருவியத்தையும் காடாது, இலங்கு = சுயம்பிரகாசமாக விளங்கும், சிற்சுடர் மெய்யாம் = அறிவுருவ மேனியான, அந்த நல்லறிவே = அகோசர பரம பவித்திரமான ஞானமே, வடிவஹாய் = சொரூபமாயிருந்து, மலமறுத்தியேல் = மலமற்றவளாதியேலாயின், அதுகூடும் = அச்சர்க்கத்தைக் காணலாம், தந்தமக்கொரு வடிவிலா வுலகங்கள் = உண்மையாகக் காரணத்தை விடுத்துத் தமக்கென அமூர்த்தமாக

இருக்கும் இச்சகங்கள், உங்கள் மோகத்தினுல் = உமது அறிவின்மையினுலே, தமனீயம் = பொன், பணியாகி = ஆபரணங்களாகி, வந்தவாறென = விவகரிக்க வந்தவகையேபோல, மதித்திடப்படும் = மூர்த்தமாக எண்ணப் படுகின்றன, அன்றே = அறிவைத்தவிர இவை அல்லவே யல்லவாம்,

(ஸ்ரீ - வீர.) திருஷ்யங்களாகிய சப்தாதிகள் ஒன்றுமில்லாத அறிவுருவப் பிரதானமாய் அதனையே வீடாகரித்து நிற்கும் திருஷ்ட்டியைப்பற்றி மலமறுத்தியேல் என்பதாம் உடன் உண்டாகிக் கெடாத அதனைத் தடையொன்று மின்றிக் காணல்(திய அது) கூடும் என்றறிக, தூலதேகத்திற்கு வேறுசர்க்க தரிசன வாயில்வடிவச் செல்கைத் தடைத்தன்மை யாங்ஙன மாங்கொல் தீனவினு நிகழ்ந்தவழி கூறுகின்றார்: தந்தமக்கென. மூர்ச்சித அவயவங்கள் இல்லாதன அமூர்த்தங்கள் இச்சகங்கள், உம்போன்ற அஞ்ஞஜீவர்களால் வீணை அபிநிவேசத்தால் அவயவமூர்ச்சன மூடையனவான மூர்த்தங்களாகப் பார்க்கப் படுகின்றனவாம். மூர்ச்சனம் = மூர்த்தி. தத்துவவிபரீதக் கவர்ச்சியில் திருஷ்டாந்தங் கூறுவார், தமனியமென்றார், பணி = மோதிர கங்கணாதி, பொன்னுலாய பூஷணத்தகைமை கூறிய புந்தியாலே விழுமியினுலே நன்றுகப் பார்க்கப்படின் சேர்க்கைச் சிறப்பாய்ச் சேர்ந்த அவற்றினும் வேறுகப் புலப்படுவதின்றும். ஆகையினுலவை பூஷண புந்தியால் மூடர்களால் விபரீதமாகக் கவரப்பெறுகின்றன; அதுபோல நிராகாரங்களாயினும் உலகங்கள் ஆகார மூடையனவாக மயலாற் கவரப்பெறுகின்றன. ஆகலின் மூர்த்தமாய சரீரம் வேறுமூர்த்தியால் தடைப்படுத்தப்படின் வேற்றுலகின் காட்சிவாயில் வடிவச் செல்கைத் தடைப்படும். திருஷ்யமற்ற சித்துருவமயப் பரமபவித்திர திருஷ்டியான் காரணப் பிரஹ்மரூபத் தன்மையைப் பற்றிக்கொண்டு அமலையாகுதி இத்தேக ஆகாரத்தை விடுதி. அதன் பின்னர் பூமியின்கண் ணிருக்கும் நரசங்கற்பம் கண்டத்துட் புரங் கதிவிலே போலும் சிதாகாயத்தின்கண் ணிருக்குங் மாயாகாசவடிவ அச்சர்க்கத்தை ஐயமில்லாம லடையலாம். இவ்வண்ண மிருப்பையேல் அவ்வியாவற்றையும் என்னுடு கூடவந்து யாதொரு தடையுமில்லாமற் காணலாம்; அதைக்காணும் விடயத்தில் இத்தேகமானது பெருந்தடை யென்றுணர்தி, ஹே புவனேசுரி ! இத்தேகத்தோடும் வேற்றுலகை என் அடைய முடியாதென்பதை யருளவேண்டு மென அம்பிகை யருளுவதாவது: மாயாமாத்திரமாக இருப்பதனுனே உலக சம்பந்தமான இவைகள் அமூர்த்தங்களாக இருந்தபோதினும் பொய்யுணர் வினுனே மூர்த்தமூடையனவாக நீங்கள் பூஷண புந்தியினுனே பொன்களைப் போலும் இவைகளை யுணர்கின்றீர்கள் பூஷணரூபந்தரித்த பொன்னின் கண்ணேயும் பூஷணத் தன்மையாகிய பொன்னலாத் தன்மை இல்லாததே போலும், உலக உருவப் பிரஹ்மத்தின் கண்ணே யுலகமில்லவேயில்லையென்றுணர்தி.

(ச.) இந்த யாக்கையை = இந்தப் பௌதிகா காரத்தை, மறந்து வேறறிவதற்று = சடசம்பந்த ரகிதமாய், இலங்கு சிற்சுடர் மெய்யாம் = சித்துருபமயமான, அந்த நல்ல நிலவே = பரமபாவனமான போதமே, வடிவாய் மலமறுத்தியேல் = அமலையாயின், அது கூடும் = அச்சர்க்கத்தைப் பார்க்கலாம். தூலதேகம் சர்க்கரந்தர தரிசனப் பிரதிபந்த மாதலின் அதனை யவசியம் விடவேண்டு மென்பது கருத்து, ஆயின் நின்தேகம் எப்படிப் பிரதிபந்த மின்மையதெனச் சங்கித்து லீலைக்குந் தனக்கும் ஞான தாரதன்மியங் கூறல்: உலகங்கள் = இந்தச் சகங்கள், தம்தமக் கொருவடிவிலா = அமூர்த்த மென்னுஞ் சிதாகாச சொரூபமேயாம், உங்கள் மோகத்தினுல் = உங்களாற் பிராந்திஞானத்தினுல், தமனியம் பணியாகி வந்தவாறென மதித்திடப்படும் = மூர்த்தங்களை யுடைய னபோ லகத்து அறியப்படும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கேவலம் தேகம் வேறுசர்க்கத்துவார கமனப்பிரதிபந்தகம் என்பதுமாத்திர மன்றும், மற்றே, தத்துவஞானப் பிரதி பந்தகமுமாம் எனல்.— தத்தென.

தத்துவம் பயில்வாதனே யன்றியே சகங்கடன் மயமாகா
மெத்து செய்தொழில் விட்டிலே யாதலான் மேவுதற் கரிதுன்னற்
சுத்ததற்பத மெம்மனோர் நிற்பது தொடர்மன வடிவாக
வைத்தருக்க மெய்தீர்க்கபா வனையினால் வளர்ந்துபே ருடலாகும் (36)

(ப-ரை.) தத்துவம் பயில்வாதனே யன்றியே = பிரஹ்ம தத்துவத்தைத் தியானஞ் செய்யும் சுத்தவாசனையா லல்லாமல் ஒருக்காலும், சகங்கள் தன்மயமாகா = உலகங்கள் தனது அறிவுரு வாகமாட்டா, மெத்துசெய் தொழில் விட்டிலே = கர்த்தா போக்தா வென மிகவுஞ் செய்யாகின்ற வினையினை விட்டுத் தொலைத்தாயில்லை, ஆதலால் = ஆகையி னால், மேவுதற் கரிதுன்னல் = சென்று காணுதற்கு உன்னல் முடியாது, சுத்ததற்ப தம் = தூயபரமாத்ம பதமே, எம்மனோர் நிற்பது = எம்போலிய ஹரிபிரமாதியர் ஸ்தி தியாம், தொடர்மன வடிவாக = வாதனை தொடர்ந்த மனத்தின் ரூபமாக, வைத்தருக் கமெய் = இருக்கும் ஆதிவாகிக சரீரமே, தீர்க்கபாவனையினால் = திரட்சி அப்யாச எண்ணத் தால், வளர்ந்து பேருடலாகும் = விரூத்தியாகி ஆதிபௌதிக ஸ்தூலதேகமாகக் கவரப் பெறும். (36)

(ஸ்ரீ - வீர.) நினது ஆகிருதி இனிக்கூறப்படும் ஞானப் பயிற்சியின்றி அதிஷ்டான பூத பிரஹ்மத் தன்மையை யடையமாட்டாது, என்னை, அதிஷ்டானப் பிரஹ்ம வியதி ரேகமாக அசத்தென்னும் நிச்சயமின் றுதலினென்க. கற்பனை வடிவத்தையே நினது வடிவமாய் நினைத்துக் கொண்டிருத்தலின் மேவுதற்கரிது = அந்தப் பிரஹ்மத்தை நீபார்த்தன் முடியாதாம். அப்பியாச யோகத்தாலே நினதுபேதபுத்தியானது எதுவரை சாந்தமாக வில்லையோ அதுவரையும் அப்பிரஹ்மமான தேகாதியான்மபுத்தி யிருத்தலின் அவ்வடிவமா யிலகும் நீ பிரஹ்மத்தைக் காணல் முடியாததே யாகுமன்றே; எனப்பெரிய ஞானவாசிட்டத்து அவ்வாறே கூறப்பட்டுளது. ஆயின் தங்களைப் போன்றவர்கள் சரீ ராதி மயற்றடையுளதாக யாங்ஙனம் அந்தப் பிரஹ்மத்தை யநுபவிக்கின்றீர்கள் என ஆசங்கிப்ப உத்தரம் அருளுவார் சுத்ததற்பத மெம்மனோர் நிற்பது என்றார். எம்போலி யர் பிரஹ்ம ஞானத்தின் பயிற்சியால் ஞானப்யாசத்தில் பிரசித்தியை யடைந்துள்ளேம் ஆகலின் அந்த ஞேயப்பிரஹ்மத்தை யனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். பிரஹ்ம ஞான அப்யாச பரிபாகத்தால், தேகாதி யாத்மத்தன்மை மயற்காரணபூத வாசனை லய மாகவே, தடையொன்று மில்லாமையின் எம்மனோரால், பிரஹ்ம ஆத்மதத்வம். உள் ளங்கை நெல்லிக் கனிபோல அனுபவிக்கப் பெறுகின்றது; என்பது அபிப்பிராயமாம். தேகத்திற்குக் கற்பனை வடிவத்தன்மை யசித்தம் என ஆசங்கித்துக் கூறுகின்றார், மன வடிவாக என. அவ்வத்தே யங்களே யாதொரு தடையுமில்லாத கதியால் அடைவிக்கின்ற படியினாலே சூக்கும சித்ததேகம் ஆதிவாகிகம் எனப்படும். அச்சூக்கும தேகமே, நின் போன்ற அஞ்ஞர்களால், நின்போது—விபரீத பாவனை செய்யப் பெற்றவழி, ஆதிபௌத கிமிதென்னும் படியான ஆகார புத்தியாற் கவரப் பெறுகின்றது. ஆண்டித்திட உபஸ் திதியை அடைந்திரா நின்ற இவ்வெம் போலியாதியரோ பயிற்சியின் முதிற்சியாற் பிர ஹ்மசம்பத்தியி லிருத்தலின் எப்போதுந் தற்பரவடிவமான அதனையே சொரூபமாகக் கண்டுகொண் டிருக்கின்றோம். மனோமாத்திரமாய் நகரங்களைக் காணும் எமக்குடலமோ சுத்த சிதாகாச மயமேயாகும் இத்தேகத்தோடும் தற்பதவடிவமான பிரஹ்மத்தையே

யுள்ளே பார்க்கின்றோம், எம்போலவே இப்பதுமஜாதியரு மிலங்குவர். "இதனதுபாத மிவ்விசுவ பூதங்களே, இதன் மூப்பாத மின்னமூதந்திவி" என்னுமறையை யனுசரித் துலகத்தை யெகதேசமாய்க் காண்பேம். நினக்குப் பயிற்சியில்லாமல் ஆகாரம் பிரஹ்மத் தன்மையை யடைந்திலது; அந்தக்காரணத்தி லிருக்குஞ் சிதாபாசரூப வடிவமாக நின் றனை; அதனால் அந்தப் பிரஹ்மத்தையும் முன்மொழிந்த கிரிக்கிராமத்தையும் நீ காண முடியாதவளா யிருக்கின்றாய்; இத்தேகத்தோடும் போய்க்காண முடியாமைக்குச் சங்கற் பத்தா லாகியிருப்பதே காரணமாகும், யாண்டு தன்னுடைய சங்கற்பப்பட்டணத்தைத் தன்றேகத்தாலேயே யடைய முடியாதோ ஆண்டு அன்னிய சங்கற்ப பட்டணத்தை யன்னிய தேகமடைய முடிவ தெங்ஙன்கூறுதி, ஆகலின் இத்தேகத்தை விட்டொழித்து எச்சிதாகாச வடிவமாக இருந்தாற் பார்க்க முடியுமோ அதனையே அதிவிரைவி லடைய முயலுதி, இத்தேகத்திற்கும் மானசத் தன்மையே யுளதாகுக, உளதாயின் பாரத்திவத் தன்மை யெங்ஙன்கூடும்? ஆதிவாகிகமேயாகிய இச்சித்த தேகத்தை நம்போலியர் ஆதி பௌதிகத்தன்மைப் புத்தியினால் நீண்ட பாவனையைக்கொண்டு கவர்ந்துள்ளீர், கனவிற் போலும், நீள்காலத் தியானத்திற் போலும் மயலிற்போலும், மனோராஜ்ஜியத்திற்போ லும், கந்தர்வ பட்டனத்திற் போலும், என்றுணர்க.

(ச.) தத்துவம்பயில், வாதனையின்றியே = அப்பியாச மின்மையினால், நினக்குச், சகங்கள் = சகத்தாகாரம்; தன்மயமாகா = பிரமரூபமாகாது, ஆயின் என்னெனில், மெத்துசெய் தொழில் விட்டிலை = கற்பித வியோமாதிரூப சுபாவமாகவே யிருக்கின் றது, ஆதலான் = அந்தவேதுவால், தத்துவம் = பிரஹ்மத்தை அறிந்து, மேவுதற்கரி தாகும்; சுத்ததற்பத மெம்மனோர் நிற்பது = பிரஹ்மமே யீதனைத்து மென்னும் ஞானப் பியாசத்தினும் பிரமாப்பியாசத்தில் நிட்டையடைந்த யாங்கள் சுத்ததற்பதத்தையே யறிந்து அடைந் திருக்கின்றனம்; தொடர்மன வடிவாக வைத்த சூக்கமெய்=லோகாந்தர கமன யோக்கியமான இந்தச் சித்ததேகமென்னும் ஆதிவாகிகமே உன்போல் பவர்களால். தீர்க்கபாவனையினால் = சிரசித்த பாவனையினால், வளர்ந்து பேருடலாகும் = ஆதிபௌ திக புத்தியினால், கிரகிக்கப்பட்ட தென்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ - கை) ஆயின் ஆதிவாகிகத்தன்மை சகஜமாகச் சித்ததேகம், எப் போதடையும் என்றுசங்கிப்ப உத்தரமருளல். ஆயின் எப்போது இதனது பரிபாத்திவத் தன்மை நிவிர்த்தியாகு மெனின்! கூறியருளல்:—கட்டியென.

(ச-அ-கை.) ஆயின் ஆதிவாகிக சித்திக்குபாயம் யாதெனிற் கூறுகின்றார்:— கட்டியென.

கட்டியாம்பனி வெம்மையாற் கரைந்துபோங் கணக்கென மெய்ஞ்ஞானஞ்
சுட்டிநோக்கலும் வாதனை விடுதலுந் தூலமா முடல்விட்டுத்
திட்டமாகிய சூக்கமெய் நிலைபெறுஞ் சீவன்முத் தியுமாகு
மூட்டஞானமே நிறையுமுன் னிவ்வுட னீறுபத்திறமும் பவங்காண்பாய். (37)

(ப - ரை.) கட்டியாம் பனி = பனிக்கட்டியானது, வெம்மையால் = வெப்பம் படப்பட, கரைந்துபோம் கணக்கென = நெகிழ்ந்து நீராகு நேர்மையேபோல, மெய்ஞ் ஞானஞ் சுடடிநோக்கலும் = சுத்தசத்திய ஞானநீத் வடிவத்தை யிடைவிடாது தியா னஞ் செய்தலினாலும், வாதனை விடுதலும் = வாசனாக்ஷயஞ் செய்தலினாலும், தூலமா முடல்விட்டு = தூலசரீரத்தை மறந்து, திட்டமாகிய சூக்கமெய் நிலைபெறும் = முன்னி யபிதமாகிய ஆதிவாகிக மென்னும் சூக்ஷுமசரீரம் மீண்டு ஸ்திதிபெறும், சீவன்முத்தியு

மாகும் = அதிற்பிரீவிடியடையவே ஜீவன்முக்திப் பதத்தையு மடைந்து சுகிப்பாய், மூட்டஞானமே, நிறையுமுன் = சேதளபோத மதியானது பூரிக்குமுற்போதே, இவ்வுடல் நிறுத்தி = இத்தேகத்தை ஸ்தாபிதஞ்செய்து, மூற்பவங் காண்பாய் = சர்க்காந்தரத் தைக் காண்பாயாக.

(ஸ்ரீ - வீர.) ஞாஞப்யாசத்தானே இருமை வாசனையின் அற்பத்தன்மை எப்போ தூனக்கு நன்றாகத் திதிபெறுமோ அப்போது சித்ததேகத்தின் கண்ணே ஆதிவாகிக சூக்குமபாவம் அடையப் பெறுவாய்; முன்னுள்ளதையே மீண்டும் வரச்செய்து கொள் வாய் என்பதாம். கூறியதையே தெளிவிப்பார் சுட்டி நோக்கல் என்றார். இரஜதமம் என்பவற்றுன் மறைபடாத சுத்த சத்துவமனத்தில் விகற்பமறத் தெளிதல். சொப்பன தசையிற்போலச் சாக்கிரத்தும் சரீராதிப் பிரபஞ்சரூபமாக நிகழுஞ்சித்தம் ஞாஞப்யா சத்தால் வாதனை சுருங்கியவழி சரீராதி ரூபத்தன்மையை விடுத்து தோற்றமாத்திர வடி வத்தனது சூக்குமரூபத் தன்மையை யடையும். இதனுனே ஜீவன்முக்திச் தசையின் கண்ணே பிராஜபாகிகம் ஜகத்துளதாமெனப் பெரியார் பேசினர். வாதனை சுருங்கிவந்த வழி சித்தத்திற்குப் பருமைகுறையும் ஆகலின் அது சித்திக்கும் பொருட்டு ஞானப் பயிற்சிவடிவ முயற்சி மிகுதியும் செய்யவேண்டும் என்பார் வாதனை விடுதலும் என்றார். வாதனையின் வன்மை வந்தபோது கேவலம் சித்தத்திற்கு மாத்திரம் பருமைகுறையும் என்பதாக இன்றும். மற்றே அனுபவபரியந்த ஞானமுதய மாதலின் பந்தமும் லீனப படும் என்பார் ஜீவன்முக்தி யென்றார். இங்ஙனம் ஞானப்பரிபூர்த்தி யுபாயம் புகன்று அதன் பரிபூர்த்தியின் முன் மூற்சர்க்க தரிசனப் பொருட்டுச் செய்யவேண்டியதை நினைப்பூட்டுவார் நிறையுமுன் என்றார். போதமானது பூரணமாவதற்குள் தூலதேகத்தை யிங்கே நிலைநிறுத்தி வேறு சர்க்கத்தைக் காண்குதி யென்று கூறியருளுந் தேவியார் போதம் பூரணமாயின் தேகத்தை யிங்குநிறுவாமலே பிரபஞ்சாந்தர தரிசனம் செய்யலா மெனத் திருவுளர் பாலித்தது போலன்றே காணப் பெறுகின்றது; அஃதொவ்வாதாம், பூர்ணபோதத்தாற் ககனகமனுதி உதயமாகாமையின் அதேதேகத்தானே சர்க்காந்தர தரிசன அசம்பவத்தாற் பூரணஞானத்தை யடைந்த சூடாலேக்கும் ஆகாசகமனுதி சித்தி யின் பொருட்டு வேறுமுயற்சி யிருந்ததாகக் காணப் பெறுகின்றமையின் எனின்† இஃ தொரு தோடமாகாதாம், ஞானமார்க்கத்தில் லீலைக்கு ஆதர அதிசய முண்டாக்கற் பொருட்டு அங்ஙனம் அறைந்தமையின் என்றுணர்க. எப்போது சமாதியின் பயில்வி னலே நினது வாசனையானது சுருங்கிச் சொரூபஸ்திதி யடையப் பெறுமோ அப்போது தான் மீண்டுந் தேகத்தில் ஆதிவாகிகத் தன்மையை யடையலாம். முன்மொழிந்த சுத்த சத்துவ முற்றுச் சமாதியின் சாமர்த்தியத்தால் நெடுங்காலம் நிலைபெற்றதும், நன்றாக வாசனை குறைந்ததும் ஆகியசித்தம், பனிக்கட்டியானது வெய்யிலினலுருகி நீர்மையை யடைவதேபோல ஆதிவாகிகத் தன்மையையடையும்; ஆகையால் அநிந்திதமாகிய வாசனை க்ஷயத்தில் முயற்சிசெய்வாயாக, அதுமுதிர்ந்துவளர்ந்த அளவிற்ஜீவன்முத்தையாயிருந்து வாழ்வாய் நிரிக்நிராமத்தைக் காணவேண்டு மென்னு மாசையிற்றடைபட்ட சித்தத்தின் கண்ணே உணர்வின் நிறைவேனும் வாசனையின் நீக்கப் பயிற்சியேனும் உண்டாகாதாம் என்னுந் திருக்கருத்தால் உரைத்தருளப் பெறுகின்றது ஞானமேநிறையு முன்னென. இவ்வதி சீதளமாய போதசந்திரன் பூரணமாவதற்கு முன்னரேதேகத்தை யிங்குவைத்து விட்டு லோகாந்தரஞ் சென்று காண்பாயாக.

(ச.) மெய்ஞ்ஞானத்தையும் வாசனாக்ஷயத்தையும் உடையமனம் ஆதிவாகிகத்தை யடையும். வெம்மையால் = ஆதவனுல் ஜலமயமாய்க் கரைந்துபோம், ஆதலின் வாசனை

சூயம்திடமுறிற் சீவன் முத்தியுமாகும், முட்டஞானமே நிறையுமூன் = பூரணபோத முதியாதமட்டும், இவ்வுடல் = இத்தூலதேகத்தை, நிறுத்திச் சர்க்காந்தரத்தைக் காண வேண்டு மென்பதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) தத்துவம்பயில் வாதனையன்றியே சகங்கடன் மயமாகா, என்பதாதியானே கூறப்பட்ட போதபூரக ஞானுப்யாசத்தின் சொரூபத்தையும் அதன் பிரகாரத்தையும் அதன் பரிபாக ஹேதுவையும் அதன்பரிபாக பலத்தையும் முறையாக விளுவுகின்றனர் லீலை: இங்ஙனம் நிர்மலமாகிய ஞானமானது உன்னுல் அடியாட்குபதேசிக்கப்பட்டது, அவ்வுபதேசத்தைச் செவிகுளிரக் கேட்ட மாத்திரத்தானே திருசியவிடு சிகையானது பரமசாந்தியை யடைந்தது, அவ்வுணர்வுற காருண்யம் உரைத்தருளல் வேண்டுமென. வேண்டல் அரசே லீலை:—என்றவென.

> என்றவாணியை யத்திற னியற்றுமா றென்னென விவள்கேட்கத்
> துன்று சிந்தையும் வசனமு முசாவமத் தொல் பொருட் பொருட்டாகி
> நின்ற வின்பமு முதாரமும் விராகமு நிறைந்துநீள் சகமென்று
> மொன்றுமில் லெனக் கலிவழி யூகமா யுணர்வர்சா தகராளுர். (38)

(ப - ரை.) என்றவாணியை = மேற்கூறிய பிரகாரம் அனுக்கிரகஞ் செய்தருளிய ஸ்ரீசரசுவதிதேவியை, அத்திறன் இயற்றுமாறு என்ன ? = அந்தப் பேரறிவை யடைவ தற்குச் சாதகமாக என்ன அப்யாசஞ் செய்யவேண்டும், என = என்பதாக, இவள் = லீலை, கேட்க = வினவ, துன்று சிந்தையும் = அதைப்பற்றிய சிந்தையும், வசனமும் = அதனையே பேசுதலும், உசாவும் = ஒருவர்க்கொருவர் தெளிவித்தலும், அத்தொல் பொருட் பொருட்டாகி = அப்பழம் பொருளின் சம்மந்தமேயாகி, நின்ற வின்பமும் = பொழிந்துகொண் டிருக்கும் ஆநந்தமும், உதாரமும் = பெருஞ் சௌந்தரியமும், விராக மும் = வைராக்கியமும், நிறைந்து = பூரித்த மதியோடு கூடி, நீள்சகம் = சர்வதிருஷி யங்களும், என்றும் = முக்காலத்திலும், ஒன்றும் = ஒரு சிறிதும், இல்லென = இல் லவே யில்லையென்று, கலிவழி = சாஸ்திரோக்த யுக்திப் பிரகாரம், யூகமாய் = அதி சூக்ஷ்ம விருத்தியானே, சாதகராளுர் = பிரஹ்ம அப்யாசிகளானவர்கள், உணர்வர் = உணர்வுறு முயற்சி செய்வார்.

(ஸ்ரீ - வீர.) ஈண்டுப்போதம் பூர்ணமாக எவ்வப்பியாசம் உபகாரஞ் செய்யுமோ அதுயாதாம் ? ஆண்டு அப்பியாச சொரூபமறைவார் துன்று எனத்தொடங்கினர். அந் தப் பிரஹ்மத்தைக் குருமுகமாகக் கேட்டதன் சிந்தனம் = யுகத்தாற் பரியாலோசன மாம்; சுணசம் பன்னளுய சீடனுக்கு அதனையே கூறுதல் வசனமாம், தெளிதல் என்ற மையானே நிதித்தியாசனமும் கொள்ளக் கிடந்ததாம், எத்தகை யப்பியாசமென விளுவ விடையளிக்கக் கருதுவார் நின்ற வின்பமெனத் தொடங்கினர். உண்டாகிய ஒளதார்ய மென்னும் மகத்துவத்தினுற் சௌந்தரிய முடையதும், வைராக்கிய சாரத்தை யுள்ளே வைத்திருப்பதும், ஆனந்த வர்ஷிணியா யிருப்பதும் ஆகிய மதியை யுடையவர்கள் பர மாத்மாவின் கண்ணே அப்யாச முடையவர்கள் ஆவார்கள் மந்த அதிகாரியின் ஞானுப் யாசத்தைக் கூறுவார் ஒன்றுமில் லென்னுர். அல்லது இயற்றுமாறென் என்னும் விளு விற்கு, விடையாகக் கருதியேகூறுவார் ஒன்றுமில் லென்னுர். திருசியவஸ்துக்கள் ஒன் றுமே யின்றென நினைக. அந்த ஞானத்தையடைய உபகாரமென்ன ? என்னபயிற்சி வேண்டும் ? எத்தகையது அது ? அஃதெங்ஙனம் விருத்தியை யடையும், அது விருத்தி யாளுல் அதனுலுண்டாவ தென்னே ? உரைத்தருள வேண்டுமென வேண்ட ஸ்ரீ ஜகன்

மாதா கூறுகின்றதாவது; எக்கால் எக்கால் எதனுல் எதனுல் யாது யாது சிறிதுசெய்யப் படுமோ அவையெல்லாம் ஒரு காலத்திலும் பயிற்சியில்லாமல் ஈண்டு சித்தியுறுவாம், ஆண்டு அப்யாசசொரூப மென்னினின், ஐயமில்லாமல் தனது புத்தியில் ஏறுவதற்காக அதனது சிந்தனமும், அறிவார், அயலார் மதிச்சம்வாதப் பொருட்டு அதனது கூறுதலும், ஒன்றற்கொன்று அறியாத அங்கிசங்களைத் தெளிவித்தற் பொருட்டுப் பரஸ்பரம் அதனது அன்னியோன்னிய இனிது தெரிவிக்கையும் ஆகிய இவ்வுபாயங்களால் சமுசயங்களின் நிவிருத்தியானபின் விபரீத பாவனையின் நீக்கப்பொருட்டு அதனுடனே ஒருமையுற்றிருக்குந் தியானத்தைச் செய்து வருவதையும் அதனது அப்பியாசமென்று பெரியோர் சொல்லுவர், இனிதுண்டாய சர்வ பரிக்கிரகங்களின் நியாக இலக்கண சௌந்தரியத்தாலும் வைராக்கிய இரசத்தினுலும், இரஞ்சிதர்களாய் ஆனந்த அமுத ஊற்றெடுக்கும் மதியுடையவர்களாய் அதனுனே மேன்மை தங்கியவர்களாகி யிருப்பார்கள் அப்பியாசிகள். சிரவணுதி பிரத்வமா யிருத்தலும் அதனப்பியாச இலக்கணமாகும் என்றுணர்தி, ஞாதா ஞேயாதி திரிபுடிப் பொருள்களின் அத்தியந்த அபாவ, சம்பத்தியின் கண்ணே பிரமாணதத்துவ நிச்சய அநுகூல யூகத்தினுலும், வேதாந்த சாஸ்திரங்களாலும் யாவர்முயலு கின்றனரோ அவர் பிரஹ்மாப் பியாசிக ளென்றுணர்தி.

(ச.) என்ற வாணியை யத்திற மியற்றுமா றென்னென விவள் கேட்ப = பரிபூரண போதமடைவதில் உபகரிக்கும் அப்பியாசம்யாது ? அஃதெத் தன்மையது ? எப்படியது விருத்தியாம் ? அது விருத்தியாயிற் பலமியாது, என லீலாவினுவ, ஸ்ரீ தேவி துன்று— அத்தொல் பொருள் பொருட்டாக நின்ற = பிரமமே முக்கிய தாற்பரியமாக இராநின்ற அதைச் சிந்திப்பதும் உரைப்பதும் உசாவும் அன்னியோன்னியம் அதைப் போதிப்பதும் ஆகியஅ பிரமாப்பியாசத்தை அறிவர் அறிஞர். இன்பமும் உதாரமும் விராகமும் நிறைந்து = எவர்க்கு ஆனந்தப் பெருக்கினையுடைய மகத்துவத்தையும் சந்தோடத்தையும் உபசாந்தியையும் நிறையக் கருப்பங்கொண்ட மதியுதிக்குமோ அவர் பிரமாப்பியாசமுடையர் என்பதுபொருள். நீள்சகமென்று மொன்று மில்லெனக் கலைவழி யூகமாயுணர்வர் சாதகராஞர் = ஞேயவஸ்து வென்னுந் திருஷியப் பிரபஞ்சம் அத்தியந்தா பாவமா மென்று யுக்தியாலும் சாஸ்திரங்களாலும் அறிய எத்தனஞ் செய்பவர் பிரமாப்பியாசிக ளென ஸ்மரிக்கப் படுகின்றார்கள். உசாவு நிறைந்து யூகமாயுணர்வர் சாதகராஞர் எனக் கூட்டுக.

ஸ்ரீ மத்பம அதிகாரியின் ஞானப்பியாசம் கூறல்: முக்காலத்திய திருஷியபாத தரிசன ஆவிருத்தியும் அதன் பயிற்சியே யென்றுணர்தி யென்கின்றார்:—அகமென.

அகமிதங்களிச் சிருட்டியின் முன்வரும பாவமா தலினென்று
மிகவுமில்லெனத் தெளிதரு போதமும் வேறுகாண் பனவற்று
நிகழுஞானத்தாற் காமமே முதற்பகை நீங்கிட வந்தெய்துஞ்
சுகமுமென்றிலை சாதக மாகவே தொடர்வர் சாதகராஞர் (39)

(ப - ரை.) அகம் இதங்கள் = யான் இச்சகத்திருஷியங்கள், இச்சிருட்டியின் முன் = இச்சர்க்காதியிலேயே, வருமபாவம் = உண்டாகவே யில்லை, ஆதலின் = ஆகையால், என்றுமிகவு மில்லெனத் தெளிதரு போதமும் = சந்ததம் அத்தியந்தம் இன்றேயாம் என்றுராய்ந்தறிதல் ஞானப்பியாச மெனவும், வேறு காண்பனவற்று = அன்னியமான திருஷியங்கள் ஒன்றையுமே கருதாமல், நிகழுஞானத்தால் = தனித்து விளங்குந் திருக்கேதா ஞென்னும் உணர்ச்சியால், காமமே முதற்பகை நீங்கிட = இராகத்துவேடாதி

இலயமாகியவழி, வந்தெய்துஞ் சுகமும் = தானேவந்து தானும்பும் பிரமானந்த மேலீட்டுப் பயிற்சியும், என்றிவை = என்னப்பட்ட இவைபோன்ற பயிற்சிகளே யெல்லாம், சாதகமாகவே = உபகாரமாகவே, தொடர்வர் சாதகராஞர் = அப்யாசிகள் அனுசரிப்பார்கள். (39)

(ஸ்ரீ - வீர.) இவ்வுலகமும் யானென்னு மித்திருசியமும், உண்மையாக சர்க்காதியிலேயே உண்டாகவில்லை யாகலின் அத்திருசியம் எப்போதுமே கிடையாது என்று அப்யாசஞ்செய்தல் பரமாத்ம விஷயத்தில் போதாப்யாசமென்று புகல்வர். மகத்துவம் சௌமியம் உண்டாய மதியுடையராய் எனக்கூறியது. பிரபஞ்ச மித்தியாத்துவத்தை அதிதிடமாக அறிந்துறைகின்ற படியினாலே நிட்பிரபஞ்சப் பிரஹ்மானந்தத்தில் மூழ்கிய சித்தமுடைய உத்தமர்களே வியத்தகா மென்றுணர்க. திருசிய மித்தியாத்துவத்தை நன்கறிந்து அதுபிகத் திடமாதற் பொருட்டு முயல் கின்றவர்கள் மத்தியமர்கள் ஆவர்கள். உலகமித்தி யாத்துவத்தை இனிதறிதற் பொருட்டுச் சாஸ்திரயுக்திகளாற் பிரயத்தினஞ் செய்பவர்கள் அதமர்கள் என விவேகித்துணர்க. அஃதெங்ஙனம் புஷ்டியையடையும் என்பதற்கு விடைதருவார் வேறு காண்பனவற்று என்றார். திருசியம் திருஷ்டாவின் கண்ணே முக்காலத்திலும் சம்பவிக்கவே யில்லை யென்னும் போதத்தானே இராகத்து வேட லோபாதிகளின் இளைப்பெய்தியவறி அப்யாசவலுவால் வெளிப்பட்டதாய் பிரஹ்மானந்த லக்ஷணரதி (நிதித்ரல்) யாதுளதோ, அந்தப் பிரஹ்மாப்பியாசம் பரிபக்குவ பிரஹ்மஞான அப்பியாசம் எனப் பகரப்பெறு மென்க. இஃதுலகம் இது நான் என்னும் இத்திருசியம் சிருஷ்டி யனுபவியிலேயே யுண்டாகவில்லை யாதலின் எப்பொழுதுமே கிடையவே கிடையாதென்று பயில்வர் பிரஹ்மசாதகர்; திருசியம் அத்தியந்தம் இல்லையென்னும் போதத்தால் இராகத்துவேடாதிக ளெல்லாம் குறைந்து வரவே மனத்தாலுண்டாய வித்தை வாசனைத் திடத்தன்மையாலாகும் ஆன்மரதி (நிதித்ரல்) யாதோ அதனைப்பிரஹ்மாப்பியாச மென்பர்.

(ச.) அக மிதங்கள் = யான் இச்சகமென்னும் திருசியமானது, இச்சிருட்டியின் முன் = சர்க்காதியில் வருமபாவம் = ஆத்ம வியதிரிக்தமான (நிதித்ரல்) வஸ்துவின்மை யினனும், ஆத்மா அவிக்கிரியன் ஆதலால் அகாரண ஞதலினனும் உண்டாகவேயில்லை, ஆதலின் என்று மிகவு மில்லெனத் தெளிதரு போதமும் = அநவரதம் அஃதின்றே யின்றெனும் அதிசயமே பிரமாப்பியாசமாம். வேறுகாண்பன அற்றறிகழு ஞானத்தால் = திருசிய அசம்பவ போதத்தால், காமமே முதற்பகை நீங்கிட = இராகத்துவேடாதி யடங்கிய போது, வந்தெய்துஞ் சுகமும் = புருடப் பிரயத்தினத்தா லுதித்த பேராநந்தமே பிரமாப்பியாசமாம். (39)

(ஸ்ரீ - வீர - அ - கை.) திருசிய அசம்பவ போதத்தினது பரிபக்குவ ஹேதுவைத் துதித்துக்கொண்டு அது புஷ்டியாயின் என்னே யுண்டா மென்னும் வினவிற்கு விடை பகருகின்றார்:—திருசிய மித்தியாத்வ தாட்டியத்தாலாய (நிதித்ரல்) காதியின் அழிவின்கண்ணே முன்னர் ஞாஞேபயோகி யாதலின், அக்கால தனப்பியாச இலக்கணமாம் அயல்வகையா யாகாதாமென்கின்றார்.—ஞேயமென

ஞேயமின்றிய ஞானமே ஞானமு நினைத்து மேற் பெறும்பேறு
மாயவந்நிலைப் பரிசய முத்தியென் றுதிற்பரி சயம்பண்ணற்
றாயதோற்றர வென்றந்த விரவிலே கொன்னவ நிருவோருங்
காயவாதனை யறிவறச் சமாதியைக் கலந்தசை வறுகின்றார். (40)

உற்பத்திப் பிரகரணம்

நாநாக

(ப - வி.) ஜ்ஞேயமின்றிய ஞானமே ஞானமும் = திருஷ்டிய அசம்பவ போதமே மெய்புணர்வும், நினைத்து மேற்பெறும் பேறும் = தியானித்துப் பின்னர் அடையத் தக்க பிரயோஜனமும், ஆம், ஆய அந்நிலைப் பரிசயமுத்தி = இயம்பி யவண்ணமாகிய அந்தநிலையில் நின்று அப்யஸித்தலேபரம் நிர்வாணத்தைப் பயக்கும், என்று = என்பதாக எண்ணி, அதிற் பரிசயம் பண்ணல் = அதன்கண்ணே பயிற்சிசெய்தல், நூய தோற்றரவு = மகோதயமாம், ஸ்ரீ வசிட்டர், என்று = என இவ்வண்ணம், அந்த இரவிலே = அவ்விரவின் கண்ணே, சொன்ன வரிருவோரும் = சம்பாஷித்துக் கொண்ட லீலையும் ஸ்ரீ தேவியும், காயவாதனை யறிவற = முற்சரீரவாசனை யுணர்வு அற, சமாதியைக் கலந்து = நிருவிகற்பசமாதியை யடைந்து, அசைவற நின்றார் = நிச்சல அங்கமுடைய வராயினர்.

(ஸ்ரீ - வீ.) திருஷ்டிய அசம்பவ போதத்தின் பயிற்சியினாலே யுண்டாம் பிரஹ்மஞானப்பியாச பரிபாகத்தானே அபரோக்ஷஞான முண்டாயவழி மோக்ஷமாம். மகோதயமாவது = எப்பயிற்சியானே பிரஹ்மானந்தப் பிராப்திவடிவ பேரைசுவரியமுண்டாமோ அதுவாம்: திருஷ்டிய அசம்பவபோத மில்லாமல் துவேஷாதியின் குறைவு தவமென்று கூறப்பெறும் ஆகலின் ஞானமாகாதாம், அத்தவமும் வீணுதத் துவேஷாதிகளைத் தடுக்கையும் துயரத்தை விரித்துக் கொண்டே யிருக்கும், அதன் கண்ணே காரணத்தையும் அவ்வப்பியாச பலத்தையும் காட்டி யுபசங்கரிப்பார் ஜ்ஞேயமெனத் தொடங்கினார். எக்காரணத்தால் முடிபான சாக்ஷாத்கார வடிவ ஞானமும் அதன் ஜ்ஞேயமாகிய பிரஹ்மமும் திருஷ்டியத்தின் அசம்பவம் எதனால், அல்லது எதன் கண்ணே அவ்விதமானதே போதமென்று சொல்லப்படும், அதன்பயில்வினாலே நிர்வாண பதவியானது கிடைக்கும் என அப்பயிற்சி பெரும்பயனை யுடையதாம். யோகத்தினாலே தூலயாக்கையை விடுத்துக் கிரிக்கிராமத்தைப் பார்க்கவேண்டு மென விசர்ஜித்துச் சமாதிகூடுதலை ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறல்:- இங்ஙனம் அவ்விரவின் கண்ணே அந்தப் புரமண்டபத்தில் திடமாகச் சகலசாஸ்த்ரவாயின் மூதலிய வற்றின் நூற்கள்போட்டு மிருந்த சாமர்த்தியத்தோடுங் கூடியமனச் சேடியர் தூங்கியபின்னர் அவ்விருவரும் இனிதுற மொழிந்து பின் சமாதிநிலையை யடைந்து இரத்தின தம்பத்தமைந் திருக்கு மிரத்தினப் பதுமைகள் போலவும் சித்திரபித்தியிலமைத்த சித்திரப் பாவைகள் போலவும் காயங்க ளசைவற்றுக் கலங்காதிலங்கினர். விளக்கிதர்

(ச.) ஜ்ஞேயமின்றிய ஞானமே = திருஷ்டியத்தின் அசம்பவ போதமே ஞானமும்அதனாது வாதலின் என்க, மேற்பெறும்பேறும் = அறிதற்கு யோக்கியமான வஸ்துவும் அதுவேயாம். ஆயதன்னிலைப் பரிசய முத்தியென்றதிற் பரிசயம் பண்ணல் நூயதோற்றரவு = அதனப்பி யாசத்தினாலேயே மோக்ஷமென்னு மேதுவினாற் பிரமவிஷயாப்பியாசமே மகோதய மென்னும் மோக்ஷவேது வென்பது பொருள். ஸ்ரீ வசிட்டர், என்றந்த இரவிலே = என்றறுக்கிரகித் தன்றிரவில், சொன்னவர் இருவோரும் = வாக்கீசுரியும் லீலையும், சமாதியைக் கலந்து = நிருவிகற்ப சமாதியை யடைந்ததனால், காயவாதனை யறிவற = அந்தப் பூர்வவாசனை விட்டவர்களாய், அசைவறநின்றார் = நிர்ச்சலாங்கிகளா யிருந்தார்கள்.

(ஸ்ரீ - வீ - அ - கை.) காற்றற்ற சரற்காலத்திற் பர்வதத்தின் கண் ணிறங்கிய மேகங்கள் எங்ஙனந் தூய்தாயும் மங்களமாயும், சாந்தமாயும், சீதளமாயும், அசைவற்றதாயும் இருக்குமோ அங்ஙனமிருந்த அவ்விருவரும் மற்றென் செய்தார்கள் எனவினவ விடைதருகின்றார்:—அங்ஙுலமென.

அங்குலங்கள் பத்தளவென வறிவினு லாகிய வடிவுற்ற
மங்கைதன் னெடுமுன் னுளஞானத்தால் வயங்கிய கலைமாதுந்
துங்கவிண் ணிடை யெழுந்தன ளளவறு தூரநீங்கிட வேகிப்
பொங்கு மூழியி னெடுங்கட லனையவான் புகுந்திவையிவை கண்டார்.

(ப - ரை·) அங்குலங்கள் பத்தளவென = ஒரு ஒட்டையளவாக, அறிவினுலாகிய= ஞானத்தினுலாகிய, வடிவுற்ற மங்கை தன்னெடும் = தேகாந்தரத்தை யடைந்த லீலை யோடும், மூன்னுள ஞானத்தால் = இயற்கையாகவே யிருக்கின்ற வுணர்வுவபுவினுல், வயங்கிய = விளங்கிய, கலைமாதும்=ஞானதேவியும், துங்கவிண்ணிடை யெழுந்தனர்= பரிசுத்தமான ஆகாயத்தின்கண் ணெழுந்தனர், அளவறுதூர நீங்கிட எகி = தூரத்தி னுந் தூரமாகவுள்ள இடங்களே யெல்லாங் கடந்து சென்று, பொங்குமூழியின் நெடுங் கடல் அனையவான் = பொய்காணின்ற பிரளயகாலத்துப் பெருங்கடல்போல விளங்கும் ஆகாயத்தினுள்ளே, புகுந்திவை இவைகண்டார் = பிரவேசித்து இன்னின்னவற்றைப் பார்த்தார்கள். (41)

(ஸ்ரீ - வீர.) சமாதிக்கு முன்னர் யானென்னும் வகையாகார ஞானம் நிருவிகற்ப சமாதியினுலே நீங்கப்பெற்று அங்குலங்கள் பத்தளவாயாயினள் லீலை. ஞானமாதாவோ அதேஞானப் பிரதானத் திருமேனியோடு மிலங்கினள். சிற்பிரஹ்மாகார ரூபத்தோடு கூடிய அவ்விருவரும் சங்கற்பத்தானே ககனத்திற்செல்லும் ஆகிருதி யுடையவராயினர். காணப்பட்டதன் இயற்கையானே சென்றனரே யன்றிச் சிற்காண்போன் இயற்கையாற் சென்றிலர்; அறிவாந் திருட்டாவிற்குச் சர்வ வியாபாரங்களையும் பொடித்தலாந் தன்மை யுண்மையின். பரிச்சின்ன பிராஹ்மண தத்தமண்டப ஆகாசத்திற் பெரிய பிரபஞ்சம் பிறங்குகின்ற படியால் அது பொய்யேயாம் என்னும் நிச்சயப் பொருட்டுக் காட்டுவார் பிகவருணிக்கத் தொடங்கிக் கூறுவார் பொங்குமூழியெனத் தொடங்கினர். வசந்தாதியி லிருக்கும் மநோகர கற்பல்லதைகள் பழந்தளிர்வாடக் காண்டலின் பூர்வ இரசத்தை விடு கின்றனவென்ன நிர்விகற்ப சமாதியினுனே வெளியுணர்வுகள் யாவற்றையும்விட்டொழிந் திருந்தனர். அத்தியந்த திருசிய சாந்தியால் நிருவிகற்பசமாதி நிலைபெறுவதில் தத்துவ சாக்ஷாத் காரத்தால் மூலத்தோடும் முக்காலத்திய திருசியபாதமே நிலைபெற முற்றிய காரணமாகும்: யான் உலகமென்னுந் திருசியமயல் = முதலிலுண்டாகவே யில்லையாக லின் அத்தியந்தங் கிடையவே கிடையாது என்றவர்கள் அறிந்ததும் இத்திருசியப்பேயா னது இருவரிடத்தும் இல்லாமலே போய்விட்டது. கூறப்படும் விண்செல்வதில் அவர் தம் தேகவேற்றுமை யெவ்வாறிருந்த தெனின் ? ஸ்ரீ ஞானதேவியானவள் முன்னிருந்த ஞானதேகத்தோடு மூலவினள், லீலாதேவியோ அயலான தியானஞான அனுரூபமாய தேகத்தோடு மூலவினள் விரைவில் அத்தூரவிண் செல்லுங் கற்பனையும் தனதகிருக மண்டப ஆகாசப் பிரதேச மாத்திரத்திலேயே கடந்ததல்லாமல் வெளியிலன்றும், வீட் டிற்குள்ளேயே பிராதேச மாத்திரமேறி (தேகாந்த பாடமேல் இருதயத்தினின்றுங் கண்டதேச பரியந்தமான பிரதேசமாத்திர நாடி மார்க்கத்தையுற்று எனப் பொருளு ரைத்துக் கொள்க) வெளிப்பட்ட பூர்வசங்கற்ப சமஸ்கார வுணர்வினுனே சிதாகாச ரூபமா யிராகின்ற அவ்விருவரும் வீண்செலு மாகிருதிக ளுடையராயினர். கிருபாதிருவுந் டியையுடைய அம்மையாரும் வீநோதப்பிரிய லீலாதேவியும் விஷ்ணுவுணர்வின் இயற்கை யாய விடயத்தை யனுசரித்த வியவகார கற்பனையின் வசத்தால் அங்கிருந்து விண்ணில் மிகுதூரஞ் சென்றனர், அவ்வீட்டி லிருந்து கொண்டே விண்ணில் அதிதூரம்

செல்வோம்யாம் என்னும் சிற்பிரதானமானச கற்பனு விருத்தியிலுனே கோடி யோஜனே விஸ்தீர்ணம் தூரத்தினும் தூரத்தினும் அதிதூரஞ் சென்றனர். உண் மையாகச் சிதாகாச தேகமுடையவரா யிருந்தபோதினும் முன்சங்கற்பித்த திருசிய அனுசந்தானசகித சித்தவடிவத் தன்மையை யடைந்திருக்குந் தம்பியற்கையிலுனே ஆகாசதேகத்தோடு கூடியவரா யிருந்தபோதினும் ஒருவருக்கொருவர் ஆகாரத்தைக் கண்டுகொண்டு அன்பின் மேலீட்டால் நேயமுற்ற இருவரும் சென்றனர். தூரத்தினும் அதிதூரங்களம்பி மெதுவாக மேலிடஞ் செல்பவரும், கரத்தோடுகரம் இனிதுபற்றிச செல்பவருஞ் ஆகிய தேவிமாரிருவரும் அநந்தவிசுவ விசித்திர விலாசங்களோடு கூடி யிருக்கும் ஆகாய நெறியிற் கண்ட அதிசயமாவன: அவ்வாகாயமானது ஒருபெருங் கடலே போலும் மிக விசாலமுற்றுக் கம்பீரமாயிருந்தது.

(ச.) அறிவினுல் = ஞானமகிமையால் சமாதிக் கிரகத்தகத்திற்ருனே மாறுடதே கத்தைவிட்டு, அங்குலங்கள் பத்தளவெனவாகிய வடிவுற்ற = பிராதேச (ஒட்டை) மாத் திர பரிமாணமான ஆதிவாகிக தேகத்தைப் பொருந்திய, மங்கைதன்னெடு முன்னுள ஞானதேகத்தால் வயங்கிய கலேமாதும் = ஞப்திதேவதையும், துங்கவிண்ணிடை யெழுந்தனர் = சிதாகாச சொரூபிகளாய், வியோமகம ஞகிருதியர்களாய், நிருவிகற்ப சமாதியினின் றம்பரத்து, அளவறுதூரம் நீங்கிடவேகி = ஞப்திக்கு ஞானமய தேகமாத லின் அதனுலேயே சஞ்சாரம் பொருந்து மென்பது பொருள். பொங்குமுழியி னெடுங் கடலனைய வான்புகுந்து, = ஏகார்ணவம் போன்றிராகின்ற அம்பரத்தையடைந்து இவை இவைகண்டார், என்பதாதியாய் விண்ணின் வர்ணனம் இவ்வீடமெனத் தோன்றும் திருசியப் பிரபஞ்சத்தினின்றும் விண்ணில் வெகுதூரம் சென்றனர். மேலே வியாபித் திருக்கப்பட்ட ஏகார்ணவம். (41)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலும் ஆகாச நெறியையே பல காட்சிகளுடன் வருணிக் கின்ருர்:—மட்டென.

மட்டிலாததாய்த் தெளிக்துகோ மளமதாய் மந்தமா ருதத்தின்ப
முட்டிலாததாம் விசும்பிடை மனத்தினு முடுகுசித் தர்கடுன்றி
யட்டமெங்கணு மரக்கரும் பிசாசரு மளவின்றி நாய்காக
மொட்டகங்கரும் போன்முக யோகினி யொழுங்கு விண் ணுழல்வுற்ரு. ()

கனிகொணு டகத்திடாகி னித்திரள்களுங் காற்றினுற் றிரிகின்ற
வெளிறு கங்கையுஞ் சுவரிலாடி மணியிடை மேவிவீணை யின்பாட
நெளியுநாரதர் தும்புரு கானமுஞ் சித்திரத்தினிற் கோட்டுக்
குளிகொள் கற்பத்தின் முகில்களு மாதர்தந் தொகுதியுமாகி. (43)

எல்லையின்றிய யோசனே தூரங்களி யார்க்குமெய் தரிதாகிக்
கல்லையொத் தறவிறு குறத்திரண்ட நீள்காரிரு ளுடைத்தாகி
யொல்லையோடு தேரிரவியுங் கனலுமே யொப்பதா மொளியுண்டாய்ச்
சொல்லுமித் திருளியா வையும் பற்பலவிடந்தொடர்வுற்ரு. (44)

கொதுகுனீ டிருளத்தி யின்கா யிடைக்கு முறுவதென வெங்குஞ்
சதுமுகன்ற ருமுயிரெலா மணவுறுந் தன்மைமூன் றுலகுண்டா
மதலவானகங் கடந்தனர்மீட்டு மோரவனியின் வரவெண்ணிப்
பதுமவண்டத்தை நீக்கிவே றண்டத்திற் பருப்பத நகர்புக்கார். (45)

(ப · பை.) மட்டிலாததாய் = அளவற்றுக் கம்பீரமாய், தெளிந்து = மலமற்றதாய், கோமளமதாய் = அதி மிருதுவாய், மந்தமாருதத் தின்பம் முட்டிலாததாய் = கோமள மிருதுவான வாயு சமீர சம்பந்தமான சுகபோகத் தருவதாகிய, விசும்பிடை = விண்ணின் கண்ணே, மனத் தினுமூடுகு சித்தர்கடன்றி = மனவேகத்தினும் வேக மிகுந்த மகாசித்தராளே வெற்றி கொள்ளப்பட்ட வாதத்தின் கமனகமனம் பொருந்தி, அட்டமெங்கணும் = மேலிடங்கள் எவ்விடத்திலும் பூகரும், அரக்கரும் = இராக்ஷசரும், பிசாசரும் = அலகைகளும், அளவின்றி = அளவில்லாமல் திரிந்தார்கள், நாய்காகம், ஒட்டகம் கரம்போல் = சுவானம் வாயசம் ஒட்டை கழுதை யிவற்றைப்போல், முகயோகினி யொழுங்கு = வதனங்கள் படைத்த யோகினிக் கூட்டங்கள், விண்ணுழல்வுற்று = ஆகாயத்தி லுழன்றுத் திரிந் தன வீண்பாடமேல் வாளாதிரிந்தன எனவாம். (42)

களிகொள் நாடகத் திடாகினித் திரள்களும் = மகிழ்ச்சியுடன் நிர்த்தனஞ் செய்து கொண்டு திரியும் டாகினிக் கூட்டங்களும், காற்றிலுல் திரிகின்ற வெளிறுகங்கையும் = காலிலுலே விளையாடிக் கொண்டிருக்கும் மிகவும்வெளுமைவாய்ந்த திரிபதகைநீரும், சுவ ரிலா மனையிடைமேவி = பித்தியற்ற கிருகத்தின்கண் ணடைவுற்று, வீணையின் பாடல் தெளியும் நாரதர் தும்புருகானமும் = யாழின் சுரங்கள் விளக்கமாக்கும் நாரதர் தும் புருக்களின் கானவிசேடமும், சித்திரத்தினிற் கோட்டும் = சித்திரத்திற் றீட்டியதற்குச் சமாலுகார, துளிகொள் கற்பத்தின் முகில்களும் = ஜலம் நிறைந்து மூகமாயிருக்கும் கற்பாந்த மேகங்களும், மாதர்தந் தொகுதியும் = நிரந்தர உன்மத்த மாதருமண்டலங் களும், உளதாகி = ஆங்காங்கு அந்தெறியிலிருந்து விளங்கிக் கொண்டிருந்தன. (43)

எல்லையின்றிய யோசனை தூரங்கள் = அளவற்ற யோசனை தூரங்கள், யார்க்கும் எய்தரிதாகி = எப்பிராணிகளுமே கிடைப்பது துர்லபமாய், கல்லையொத்து = பாஷாண கர்ப்ப உபமமாய், அறவிறு குறத்திரண்ட = அத்தியந்த மிறுகித்திரண்டழிவற்ற, நீள் = விசாலமான, காரிருள் = கறுப்பான அந்தகாரம், உடைத்தாகி = உடையதாய், ஒல்லை யோடுதேர் = வேகமாகச் செல்லும் இரதத்தையுடைய, இரவியும் = பாஸ்கரனும், கன லுமே = அக்கினியுமே, ஒப்பதாய் = சமானமாய், ஒளியுண்டாய் = பிரகாசமானது பிரகடமாய், சொல்லுமித்திரள் யாவையும் = மேற்கூறிவந்த யாவையும் கூட்டம் கூட்ட மாய், பற்பலவிடங்டோறும் = ஒவ்வொரு இடங்கள்தோறும், தொடர்வுற்று = தொடர்ந் திலங்கிக் கொண்டிருந்தன அவ்வாகாய மார்க்கத்தில்: (44)

கொதுகினீன் திரள் = மசகத்தின் வித்தாரக் கூட்டம், அத்தியின் காயிடை = உதும்பரவித்திரத்தில், குழுறுவதென = சப்திப்பதேபோல, எங்கும் சதுமுகன்றரு = நான்முகனுற் சிருஷ்டிக்கப்பட்டு எல்லாவிடத்திலு முள்ள, உயிரெலாம் = பிராணிகள் யாவும், அணைவுறுந் தன்மை = வாழ்ந்து கொண்டிருக்குந் தன்மையவாக, மூன்றுல குண்டாம் = திரிவித வுலகமுளவாம், அதுலவானகங் கடந்தனர் = உவமையற்ற அவ் வாறுய வானகத்தை யிருவருங்கடந்து, மீட்டுமோ ரவனியில் வரவெண்ணி = மீண்டு மொருபூமியையடைய இச்சித்து, பதும அண்டத்தை நீக்கி வேறண்டத்தில் = பத்மாண் டத்தை விட்டு மறையவனிருந்த அண்டத்திலுள்ள, பருப்பத நகர்புக்கார் = அந்தக் கிரிக்கிராமத்தை யடைவுற்றனர். (45)

(ஸ்ரீ-வீர.) கோமளம் = கடினமின்மை, மந்தமாருதம் எவ்விடத்திலும் நிழ்ந்தலால் ஆனந்தானுபவத்தைத் தருவதாம், மனோவேகத்தினுலே மகாசித்தராளே வாயுவின் போக்குவரத்தும் வெற்றி அடிவைத்துக் கொள்ளப் பட்டதாம், வெற்றிகொள்வதில் மனோவேகத்

தன்மை யேதுவாம், ஆகாயத்தின் கண்ணே வாயுவோடுகூட வரப்போக இச்சித்து முயலுஞ் சித்தர் மநோவேகத் தன்மையானே பூர்வமே செல்லுகின்றனர் வருகின்றனர் என்பதாம். கூஷ்மாண்ட மண்டலங்கள் = பூதவிசேடங்கள், டாகினிகள் = கிரகவிசே டங்கள், இவைகள் அடிக்கடிக்காய் அலையலையாய்த் திரிந்தாடிக் கொண்டிருந்தன ஒரு பிரயோஜன மில்லாமலே நூறுயோஜனை சென்று மீண்டுகூடித்திரியும். மேகமார்க்க சௌரமார்க்கத்திடையே வாதமார்க்கம் செல்கின்றது, ஆண்டுள்ள காற்றுகளின் அங்கி சங்களின் மேற்பாகங்களில் உள்ளும் புறனும் வியாபித்துக் கங்கைசெல்லும்; அல்லது ஸ்கந்தமென்னும் மூலபதத்திற்குக் கற்பதரு வசனப்படி பிரபேதங்கள் எனவுங் கொள் ளலாம், அல்லது க்ஷீரசுவாமி கூறியபடி ஷை பதத்திற்குச் சமூதாயம் எனவுங்கொள்ள லாம், கொள்ளவே வாயுப்பிர பேதங்களில் வாதசமூதாயத்தில் உள்ளபள்ளங்களில் உள் ளும் வெளியும் பூரித்துக் கங்கை பிரவகிக்கும் என்னலாம் கீழ்முகமுற்றுப் பிரவகிக்கும் சுராதி நீர்கள் என்பதாம், சித்திர அர்ப்பித துல்லிய ஆகிருதிகளே யுடையனவாய்க் கார்ஷி யாதன வாய்ப் பிரளயமேகங்கள் ஒருபா லிருந்தென, மாதர் பிராஹ்மியாதியர். மிக நெருக்கமாக உன்மத்த மாதாக்களின் மண்டலம் மாலையின் ஆகாரமாக ஒருபாலிருந்தது சிலபால் இலக்ஷயோஜனை விஸ்தீர்ணம் ஒரு பிராணிகளும் காணப்படவேயில்லை. யார்க்கு மென்பது யாருமெனவிருப்பின் பொருள்கோடல் எளிதாமென வுணர்க. யாரும் = எப் பிராணியும். அநேக லக்ஷயோஜனைகளில் எவ்விடத்திலுமே பிராணிரகிதமாகச் சிலபா லிருந்தது. காலநெறி முற்றினும் ஒற்றுமை யென்னுஞ் சூத்திரத்தானே மூலயோஜன லக்ஷணியிருமையாம். கல்லின் கருப்பம்கெடுக்குற்ற தொப்பக்கடிய இருளாம். கெடாத பெரிதினும் பெரிதாய பேரொளியாம், அதனனே அருக்க அனல் உவமையாம். அத்திக் கனிக்குள் எருக்கும் மசகுமுறைப்படி மூலுலகத்துள்ளும் பிராணி சமுதாயங்கள் சப்தித் துச் சுழன்றுதிரியும். பிராஹ்மஞ்ஸ்பதம் வர வர்ணினிகளாகிய உத்தமோத்தம தேவி மார்கள் புருந்தார்கள். அவ்வாகய நெறியானது கம்பீரமாய் அதி நிருமலமாய் அதிகோ மள மனோகரமாய் மந்தமாருதக் கலப்பாற் சுகபோகந் தருவதா யிருந்தது; ஆங்கு மநோ வேகத்தோடிற்ற மகாசித்தரானே வாயுசஞ்சார வேகமானது வெற்றிகொள்ளப்பட்டதா யிருந்தது, விமானங்களிலும் வீட்டகெளிலும் உள்ள தேவஸ்திரீகளின் வாத்தியங்களின் கும்கும் என்னும் தொனி நிறைந்திருந்தது, அநேகம்பூத அரக்கர் கூட்டங்களும் பேய்க் கூட்டங்களும் நிறைந்திருந்தன; வாயுவின் போக்குவரவு வேகத்தாற் செல்லும் விமானக் கூட்டங்கள் கோடானுகோடி விளங்கின. காகங்கூகை முதலியவைகூடிப் பறந்த தோற்றமும் டாகினித் திரள்கள் கூட்டங்கூட்டமா யாடிக்கொண்டிருந்த தோற்றமும் கடலிலெழும் அலைபோலிருந்தது. நாய்காகம் ஒட்டை கழுதை முகங்களோடு கூடிய அலையும் யோகினி கணங்கட்கு அணிமாதி சித்திக ளிருப்பதால் தாங்களிருக்கு பிடத்தி லேயே தங்களுக்கு வேண்டியவை கிடைத்தபோதினும் வீணுகவே நூறுயோசனைக் கணக்காக வெகுதூரஞ் சென்று மீண்டுகொண்டிருந்தன. எப்போதுஞ் சென்று கொண் டிருக்கும் ருக்ஷத்திரங்கட்கு வாசஸ்தானமா யிராகின்ற சோதிச் சக்கிரத்தில் இரவியாதி களின் கதியாற் குறிப்பிக்கப்பட்ட சுக்கில கிருஷ்ணபக்ஷாதி காலவிபாகம் நடந்து கொண்டிருந்தது; வாதஸ்கந்தபேதரூப அச்சக்கிரத்தின் கண்ணே கற்பிக்கப்பட்ட தாழ்ந்தகேயத்துள் கங்கையின் நீர்ப்பிரவாகம் வீலையாடிக் கொண்டிருந்தது. ஆச்சரி யங்காண்டலால் தெய்வக் குழந்தைகள் பயந்து சென்றுகொண் டிருந்தன. வஜ்ஜிராதி தரித்தத் தேவதைகள் உலாவியிருந்தனர், ஒருபாற் சுவரில்லா மாளிகையில் தும்புரு நாரதர் பாடிக்கொண் டிருந்தார்கள். மேகமார்க்கப் பிரதேசத்தில் மகாமேகங்களாகிய புஷ்காராவர்த்தகாதிகளின் பெரும்பிரளய விருஷ்டி யாரம்பத்தால் ஒருபால் ஆகுலமிகுத்

கிருந்தது; மற்றொருபால், சித்திரத்தி லெழுதியதுபோல வியாபாரமற்றதாய்ச் சப்த மற்றதாய்க் கற்பாந்த மேகங்கள் கூடியிருந்தன. மேலும் பலபால் பலமேகங்களிருந்தன. சிலபால் நிரந்தரங் குதித்துக் கூத்தாடும் மாத்ருகணங்கள் சூழ்ந்திருந்தார்கள், நித்தியம் நவநவமான மதங்களால் மதப்பட்ட யோகேசுரீ கணங்கள் நிறைந்திருந்தார்கள். லோகா லோக பர்வதத்திற் கப்பால் இலக்ஷம் யோஜனைவரையும் அடையப்படா அசலமாயிருந் தது, சிலபாலோ கற்கர்ப்பம் நிகர்ப்ப அழிவிலாத் தமம் நிறைந்திருந்தது, சிலபாற் சூரிய அக்கினிகட் கொப்பாக அழிவிலாப் பேரொளியா யிருந்தது; சந்திராதி வீதிகளில் பனிக் கூட்டமே போலும் கடுமையான சூளிராக இருந்தது. பூகோளத்தைச் சுற்றிலுஞ் சுற் றும் ஆதித்தியன் சுழலப் பூமியின் சாயையும் சுற்றிலும் சுழலும், பாதாளஞ் சென்ற சூரி யன்மேலே கிளம்பும், அதுவே கறுப்பாக இருத்தலின் காகமாம், அதனது ஆக்ரமணத் தாற் சிற்சிலபான் மண்டலங்களிற் பீடிக்கப்பட்டது சந்திரமண்டலமாம், அவ்விது சந்தி ரக்கிராசத்தில் ஊகமாம் சூரியக் கிராசத்திலோ இவ்வூகமாகாதாம், மற்றோசந்திரனது தடைப்பிற் பாகத்தில் அருக்கன் செல்லில் சந்திரமண்டலத்திற் சனித்த எப்பூமிச் சாயைப் பிரதிபிம்பமோ அதனுல் கறுப்புக் கதுவலின் காகம் போன்றுற்ற சந்திரனது ஆக்கிரமணத்தாற் சிற்சிலபான் மண்டலங்களிற் பீடிக்கப்பட்டது அருக்கமண்டலமாம்; என்பது சோதிடப் பிரக்கிரியையாம். மேலேகூறிய பிரகாரம் ஆகாயத்தில் அநேகவிசித் திர வர்ணவேயால் விண்ணேர்த்தம் வாழ்வில் ஆசை நண்ணலாகாது அதனித் துச்சமாக எண்ண வேண்டும் என்பார் அத்திக்கனி திருவ்டாந்தங் காட்டினுர். அத்திப்பழத் தகட் டில் வியோயாடும் கொதுகின் முறைபோலும் மூவுலகத்துட்பட் டுலவும் பிராணிக்கூட் டங்களென வுணர்க, இவ்வியாவற்றையும் அவ்விருதாய் மார்களும் தாண்டி ஆகாயமேற் சென்றபின் மீண்டும் மஹிதலத்தை யடையும்பொருட்டு முயன்றுர்கள். பின்னவ்விரண்டு சுந்தர மூர்த்திகளும் பத்மபூபாலப் பிரபஞ்ச ஆதார பிரஹ்மாண்ட மண்டலத்தினின் றும் அன்னிய பிரஹ்மாண்ட மண்டலத்தை மேற்கூறிய பிரகாரம் அடைந்து அம்மறை யவனது இடம் நோக்கிச் சென்றனர்.

(ச.) அம்பரவர்ணினே: மட்டிலாததாய் = கெம்பீரமாய், தெளிந்து = நிருமலமாய், கோமளமதாய் = மிருதுவாய், மந்தமாருதத்தின்பம் மூட்டிலாததாம் = கோமளவாயு வின் சம்பந்தமான சுகபோகத்தைத் தருவதாகிய, விசும்பிடை = வாயுசஞ்சார மின்றிய ஆகாயத்தின் மத்தியில் ஓரிடத்தில், மனத்தினும் மூடுகுசித்தர்களின்றி = மனோவேக மூடைய மகாசித்தர்களாற்செயிக்கப்பட்ட வாயுக்களின் போக்குவரத்து, நிறைந்து அரக் கரும்பிசாசரும் = குரூரதேவயோனிபேதங்கள், நாய் காகம் ஒட்டகம், கரம்போல் = முக யோகினி யொழுங்கு = ஆனனங்களே யுடைய நிர்த்தனஞ் செய்கின்ற யோகினி சங்கங் கள், விண்ணுழல் வற்று வீணுழல்வற்று = விண்ணில் வீணுகச், சுழலுதலையடைந்து. களிகொள் நாடகத் திடாகினித் திரள்களும், ஓரிடத்துத் தரங்கிதம்போல் நிர்த்தனஞ் செய்கின்ற டாகினித் திரள்களும், காற்றினுற் றிரிகின்ற வெளிறு கங்கையும் = வாயு மண்டலங்களா னிறையப்பட்ட உள்வெளியு முடையதும் அத்தன்மையான நிரிபதகா சல இருப்பிடமும், சுவரிலாமனே யிடைமேவி வீணையின்பாடல் தெளியும் நாரத தும்புரு கானமும் = ஓரிடத்து நிர்ப்பித்தி சதனமு (வீடும்) நாரத தும்புரு கீர்த்தனமும். எல்லே யின்றிய யோசனே தூரங்களியார்க்கு மெய்தரிதாகி = பிராணி சூனிய மென்பது பொ ருள், கல்லையொத் தறவிறுகுறத் திரண்ட = அவிகாசியான நீள்காரிருள் உடைத்தாகி ஓரிடத்துச் சூரியசஞ்சார மின்மையின், ஒப்பதா மொளியுண்டாய் நிரந்தரஞ்சொலிக்குஞ் தேசசை யுடைமையாற் சூரியாக்கினி சமானம். கொதுகு =: மூன்றுலகுண்டாம், ஸ்ரீ

வசிட்டர்: அதுலவானகங் கடந்தனர் = இத்தன்மையான கணித்தற்கரிய வியோமத்தி னின்னும் எகினர்களாய், பதுமவண்டம் = பிரஹ்மாண்ட மண்டலம், பிராஹ்மஞ்சிரய மான பருப்பதநகர் புக்கார். சித்திரத்திலமைத்த சமாகாரங்களாய்ச் சப்தமற்றனவாய்க் கற்பாந்த மேகங்கள் என்னும் புஷ்கலா வர்த்தாதிகள் ஒருபா லிருந்தனவாம். (45)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்வந்தணன் மனைபுகுந்து ஆங்கு லீலை செய்ததைக் கூறு கின்றார்:—வினையென.

வினையர் சுற்றமுந் தனையருந் துக்கமாய் வெம்பு
மனையவே தியன்மனை புகுந்தார் கண்ணி லணுகார்
நினையபோ தின்மெய்ச் சங்கற்ப மெய்திய லீலை
மனையுளோ ரெமைக் காண்கெனச் சங்கற்பம் வகுத்தாள். (46)

(ப - ரை.) வினையர் சுற்றமும் தனையரும் = வேலைக்காரிகளும் உறவினரும் மைந் தரும், துக்கமாய் வெம்பும் = பெருந்துயரை யடைந்து தபிக்கும், அனையவேதியன் மனைபுகுந்தார் = அத்தகைய அந்தணனுடைய கிருகத்திற் புகுந்தனர், கண்ணில் அணு கார் = கண்ணுக்குத் தெரியாமல் நின்றனர், இனையபோதில் = இச்சமயத்தில், மெய்ச் சங்கற்ப மெய்தியலீலை = சத்திய சங்கற்பத்தை யடைந்த லீலாதேவியானவள், மனை யுளோ ரெமைக்காண்க = இருக்கிருகத்தி லிருப்போர் எங்களிருவரையுங் தரிசிக்குக, எனச்சங்கற்பம் வகுத்தாள் = என்பதாகச் சிந்தித்தனள். (46)

(ஸ்ரீ - வீர.) வேலைக்காரிகள் சிந்தையால் இஷ்டார்த்த வர்ஜிதர்களாக இருந்தார் கள். கண்ணீரால் நனைக்கப்பட்ட முகங்களை யுடையவர்களாகப் பெண்மணிக ளிருந் தார்கள். இடியாற்றக்கமான தருவேபோலப் பூர்வஜன்மாசங்களை விட்டிருந்தனர். அந்த லீலையானவள் தெய்வம்போலச் சத்திய சங்கற்பமும், சத்தியகாமமும் அடைந்திருந்த வள். சித்தயோகினிகளாகிய அவர்கள் மற்றெருருவருக்கும் தெரியாவண்ணம், நின்று அம்மறையவனது இடமாகிய மண்டபமாம் லீலையினது கிருகத்தைக் கண்டார்கள். அக்கால் அம்மண்டபமானது சிந்தாகுலத்தை யுடைய அடிமைகளாற் சூழப்பட்டும், கண் ணீர் ததும்பித் துயருற்றுவாடும் முகங்களை யுடைத்தாகியும், கண்ணீர்த் துளி முதலியவற்றினே மலினமுற்றும், பூஷ்ணங்கள் திலகங்கள் இன்றியும் இருத்த லின் அருவற்றது மேன்ற ஜனங்களுடைய முகங்களை யுடைத்தாகியும், சோரணமான இலக்ஷணமொத்த லக்ஷணங்களை யுடைத்தாகியும் கிருந்தது, அழிந்த உற்சவ புரத்தை யொத்தும், ஸ்ரீ அகத்தியர் பானஞ்செய்த கடலையொத்தும், வெய்யிற் காலத்தால் வெதுப்பப்பட்ட உத்யானலனத்தை யொத்துப், இடியால் தீக்கப்பட்ட விருக்ஷத்தை யொத்தும், பனியால் வெம்பிய பங்கயமொத்தும், தைலங்குறைந்த தசை விளக்கொத் தும், பார்வையதற்ற படிருமி டொத்தும் இருந்தது: ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறல்: நீண்ட நிர்மலஞானப் பயிற்சியினுனே சத்திய சங்கற்பத்தையும் சத்திய காமத்தையும் தேவி யைப்போ லடைவுற்றிருந்த அச்சுந்தரியாகிய லீலையானவள் இங்குள்ளவர்களாகிய பந் துக்கள் என்னையும் சாமானிய மங்கையுருவந் தரித்திருக்கும் ஸ்ரீ சரசுவதிதேவியையும் கண்ணுறுக வெனச் சிந்தை செய்தனள்,

(ச.) இனையபோதில், அந்த லீலை சிரோப்பியாசத்தினல் தேவர்போல் நிர்மலஞான முடையளாதலின் சத்திய சங்கற்பமும் சத்தியகாமமும் பொருந்தினவளாய், என்னையும் தேவியையும் லலனை (ஸ்திரீ) மாத்திரரூபமாக. எனது பாந்தவர் (பந்துக்கள்) பார்க்கக் கடவராக எனச் சிந்தித்தாள் என்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ - ஸை.) தேவிமார்களைக் கண்டு அங்குள்ளார் வணங்கலும் அவர் துயரந்தீர்த்தலும் கூறல்.—பூமகளென.

பூமகளும் மலைமகளும் போல்வாரை வனதெய்வம் போலு மென்றே
தாமவர்கண் டருச்சித்தரர்த் தலைமகன்பார்த் தெமதன்னை தாதைமாய
யாமணுகுந் துயரொழிப்பீ ருயர்ந்தோரை யெதிர்ந்தோருக் கெய்தாதுண்டோ
மாமதியி னீரென்னத் தலைதடவித் துயரொழித்தாள் வயங்கு லீலை.

(ப - ரை.) பூமகளும் மலைமகளும் போல்வாரை = லக்ஷ்மியையும் கௌரியையும் போன்ற அத்தேவிமாரை, வனதெய்வம் போலுமென்றே = தாம்=வனதேவதைகள் போன்மென்றே தாம் ஐயமிலாது, அவர் = அக்கிருகத்துறைவோர், கண்டு = தரிசித்து, அருச்சித்தார் = பூசனை செய்தார், தலைமகன் பார்த்து = ஜேஷ்டசருமன் நோக்கி, எமதன்னை தாதைமாய = எங்களுடைய அன்னையும் பிதாவும் பரமபதமடைய, யாமணுகுந் துயரொழிப்பீர் = யாங்கள் அடைந்த துக்கத்தைக் கெடுப்பீர், உயர்ந்தோரை யெதிர்ந்தோருக்கு = மேன்மை மிக்கவரைத் தரிசித்தவர்க்கு, எய்தாது = கிடையாத பொருள், உண்டோ = எங்கேனும் உளதோ, மாமதியினீரென்ன = மிகுந்த மேதைவாய்ந்த பெரியோர்களே யென்றுகூற, தலைதடவி = சிரத்திற் கரம்வைத்து அன்பொடுந்தழுவி, துயரொழித்தாள் = துன்பத்தைத் துடைத்தாள், வயங்குலீலை = அம்பிகையின் பரிபூர்ண கிருபையை யடைந்து விளங்கும் லீலாதேவி, [47]

(ஸ்ரீ - வீர.) எங்கள் தாய்தந்தையர் எல்லா ஜனங்களையும் அதிதிகளாகப் பூசிப்பர்; குல்த்தை வளர்ப்பவர், மறையவர் மரியாதையில் வாழ்பவர். மறையவர்க் கெல்லாவிதத்திலும் ஆதாரபூத மானவர். புணர்ந்தபாவ மெலாம் பரிபூரண முணர்ந்த ஞானி விழிபடவோடுமே யென்பது பிரசித்தமன்றே சிரங்கரம் வைத்த அதனாலே துக்கமேயாய துர்ப்பாக்கிய சம்பந்த சங்கடமியாவுமே கணத்திற் றொலைந்ததா மென்க. கிருகத்திலிருந்த அவர்கள் இருதேவிமார்களையும் கண்குளிரக் கண்டார்கள்; அவ்விருவரும் அலைமகளும் மலைமகளும் ஒருங்கு வந்ததுபோலும் அவ்வீடு முழுவதையும் ஒளிர்வித்துக் கொண்டு மிருந்தார்கள். இருவரையுந் தரிசித்து ஹே. வனதேவதைகளாகிய தாய்மார்களே! உங்கட்கு நமஸ்காரம் நமஸ்காரம் என்று அங்கிருந்த ஜனங்களோடும் புஷ்பாஞ்சலியை மூத்தகுமாரன் செய்தனன்; இல்லத்தில் எழுந்தருளிய அவர்களது பாதபதுமங்களில் அந்தப் புஷ்பாஞ்சலியானது, ஹிமநீர்க்கணமழை பதுமவல்லியிற்போலத் தூவியது. மூத்தசருமர் முதலியோர் கூறுவதாவது: அடியேங்களுடைய துக்கங்கள், எல்லாம் நீங்கும் பொருட்டு எழுந்தருளிய வனதேவிமார்களே! ஜயமுறுவீர்களாக. நல்லோர்களுடைய நடைக ளெல்லாம் அயலார்துயரைக் களைவதேயன்றே! இங்ஙன் பூசித்தபின் நீங்கள் பெருந் துயரடைந்திருத்தற்கு யாது காரணம்? எனவினவ மூத்தகுமாரராதியர் மொழிவராயினர்: ஹே தாய்மார்களே! சர்வ அதிதிகளையும் பூஜிப்பவர்களும் சந்ததியைச் செய்தவர்களும் மறையவர்தம் மரியாதையைக் காப்பாற்றத் தம்பம்போலும் ஆதார பூதமானவர்களும் மிகுந்த நேயமூற்றவர்களும் ஆகிய பிராஹ்மண தம்பதிகள் ஈண்டிருந்து கொண்டிருந்தார்கள், எந்தாய் தந்தையராகிய அவ்விருவரும் இன்று (நீள்கால மில்லையென்பதைக் குறிப்பிக்கும் பொருட்டு) புத்திர பசு பந்துக்களோடு கூடிய இவ்வில்லத்தை விட்டுச் சுவர்க்கத்தை யடைந்தார்கள். அதனால் மூவுலகமும் சூனியம்போல எங்கட் கிருக்கின்றது; "பூர்ணனுலகைப் பூர்ணமாய்க் காண்பன், காமுகனுலகைக் காமுகங் காண்பன், ஆர்த்தியுலகை யார்த்திமயமே,

லுத்தன் லுப்தமாய்த் தன்மனம்போன்றே" என்னும் நியாயத்தை யனுசரித்துக் கூறியதாம். ஆகையினாலே நீங்கள் எங்களுடைய சோகங்களே யெல்லாம் நாசஞ் செய்வீர்களாக; பெரியோர்களுடைய தரிசனமானது ஒருகாலத்திலும் வீணுகமாட்டாதல்லவா எனக் கூறிய அந்த மூத்த மைந்தனே நோக்கி லீலாதேவியானவள் நீர் நீங்கும்போது தாமரைத் தடாகத்தில் இலையினால் மிக வணங்கிய தன்சந்தானமூலக் கிரந்தியைப்போல அழகிய கரத்தால் தலையைத் தடவித் துயரொழித்தாள். அந்த லீலாதேவி யவ்வாறு தடவியதால் அம் மைந்தனுடைய துக்க, துர்ப்பாக்கிய சங்கடங்களெல்லாம் பெருமழையின் சம்பந்தத்தால் வெய்யில் வெப்பம் பர்வதத்தைவிட்டு நீங்குவதுபோலும் நீங்கின; அத்திருவை (லக்ஷ்மி) யொத்த தேவிமார்களின் திருபா திருஷ்டியினால் அவ்வீட்டிலிருந்த ஜனங்கள் யாவரும் அமிர்தபானஞ் செய்தவர்கள்போல எல்லாத் துயரங்களினின்றும் விடுபட்டனர்.

(ச.) அவரருச்சித்தார்=சேட்ட (மூத்தவன்) சர்மனெடு கிரகசனங்கள் வனதேவதாரூபமாகத் தரிசித்தவராதலின் வனதேவிகளுக்கு நமஸ்காரமென்று குசுமாஞ்சலி செய்தார், தலைமகன்=பின்புசேட்ட சருமன் என்னும் நாமம் பொருந்திய புத்திரன், உயர்ந்தோரையெதிர்ந்தோருக் கெய்தாதுண்டோ=மகான்களின் தரிசனம் என்பது ஒருபோதும் நிஷ்பலமாகாதென்பதாம். மாமதியினென்ன=என்று சொன்ன அந்தப் புத்திரனது, தலைதடவி, லீலை கார்காலமேகம் உஷ்ணகாலதாபத்தைத் தவிர்ப்பதுபோல, துயரொழித்தாள் வயங்குலீலை, துயரொழித்தது புத்திரன் மாத்திரமன்று, அவ்விடத்துள்ள அன்னிய சனமும் அவள் திருபாதிருஷ்டி மகிமையால் துடைத்தற் கரிய துக்கத்தைத் துடைத்தார்கள் என்பது பொருள்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அங்கிருந்து மறைந்த பின்னர் தேவியை ஐயம்நீக்கு மாறு பிரார்த்தித்தல் லீலை:—இரு என.

இருவருமவ் வயின் மறைந்தா ருலகத்தின் சற்பாவ மிவ்வாறுகுங்
கருதியது முடித்தனமேற் கருத்தென்கொ லென்றுகலைக் கன்னிகேட்ப
மருவுசமா தியிற்கண்ட மன்னவையோ ரெனைக்காணு வகையுமிந்தத்
திருமனையோர் கண்டமையு மென்கொலெனச் செப்பென்ரு டெய்வமன்னாள்.

(ப - பை.) இருவரும் = இரண்டு தேவிமார்களும், அவ்வயின்=மறைந்தார் = அவ்விடத்திலேயே, உருக்கரந்தனர், உலகத்தின் சற்பாவம் இவ்வாறுகும் = ஜகத்தின் பிரஹ்மசத்தை வடிவமாயிருக்குந் தன்மை கூறியவண்ணமேயாகும், கருதியது முடித்தனம் = வாஞ்சித்ததைப் பூர்த்திசெய்தேம், மேற்கருத்தென் கொலென்று=இன்னும் வேறே தர்வது கேட்கவேண்டியதாக எண்ணம் உண்டுகொலோ என்பதாக, கலைக்கன்னிகேட்ப=ஸ்ரீ சரசுவதிதேவி வினவ, மருவுசமாதியில் = பொருந்தா நின்ற சமாதியின் கண், கண்ட = தரிசித்த, மன்னவையோர் = அரசனது சபையிலுள்ளவர், எனைக் காணு வகையும் = என்னைப் பாராத பிரகாரத்தையும், இந்தத் திருமனையோர் = இத்தவமறையந்தணன்றன் அழகுபொருந்திய இல்லத்திலுள்ளவர், கண்டமையும் = கண்டதன்மையையும், என்கொல் என = என்னகாரண மென்று, செப்பென்ரு ள் தெய்வமன்னாள் = ஸ்ரீதேவியின் கருணையினால் தெய்வத்தன்மையை யடைந்துள்ள லீலாதேவியானவள் சொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

(ஸ்ரீ - வீர.) பிரபஞ்ச மித்தியாத் தன்மையின்கண் திருஷ்டாந்தமிருஷிகள் கிடைத்திருத்தலின் உலகம் பிரமசத்தே, பிரஹ்மரூப பூதசத்தை இத்தகைய சத்திய சகத்துரு

வம் அல்லது கிட்பிரபஞ்சம், அந்தக் கிரித்தடக்கிராமத்தில் அம்மறையவனது கிருகத்தின் மண்டப ஆகாசத்தில் அவணின்று கொண்டிருந்த ஜேஷ்டசருமாதி களின்முன்பே அவ் விருதேவிமாரும் மறைந்து விட்டனர், மறைந்தபின்னர் ஸ்ரீ சரசுவதிதேவி லீலையை நோக்கி ஹே சுழந்தாய், கண்டபொருள்களின் காணுப்பொருள்களின் உணர்வுகளாகிய அறியத்தக்கவை யாவுமேயறியலாயது, இத்தகையது இந்தப் பிரஹ்மசத்தை யென்று தெரிந்து கொண்டனை, யினியுனக்கு வேறுயாது வினவவேண்டுமோ அதனைக் கூறுதி யென்ன அதற்குலீலை கூறுவதாவது ஹே இராஜராஜேசுரி! இறந்து எனது நாயகனீவன் யாண்டு அரசுபுரிகின்றதோ ஆண்டுயான் அவர்களாற் காணப்படாத காரணமென்னை? ஈண்டுமைந்தனுற் காணப்பட்ட காரணமென்னை? அருளல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். இச்சம்பாஷணை தேகத்தோடா, வெனின்? இல்லையாம், சங்கற்ப சரீரத்த ஆகாயவடிவினரை நோக்கி ஞானவிண் வடிவத்தேவி கூறியதாம் என்க; எனினும் அன்னியோன்னிய சங்கற்பத்தாற் றோன்றியவர்கட்குச் சம்வாதங்கூடல் யாங்ஙனமெனின்? உலைஞ அறிருத்தர்கட்கே போலும் திருவருளால் சமானமாகவே பரஸ்பரம் பயன்பற்றிய சங்கற்பமாதல் கனவாதல் உண்டாயின் பரஸ்பரம் சம்பாஷணம் பயனுறுதலே போலும் சம்வாதமா மென்றனர்க.

(ச.) இருவரும் = சித்தகன்னிகள் இருவரும், அவ்வயின் மறைந்தார் = அக்கிரிக் கிராம மண்டபமத்தியிற்றோனே அந்தர்த்தான மாயினர்கள், தேவிலீலையை நோக்கி மற்றைய மோகனிவீர்த்தி நிமித்தம் மீட்டுங்கூறல்: பிரமத்தின் சற்பாவம் இவ்வாறுகும் = பிரஹ்மசத்தியித் தன்மையதாம், கருதியது முடித்தனம் = அறியவேண்டிய வனைத்தும் அறியப்பட்டது (அறிந்தாய்) பார்க்கவேண்டிய வனைத்தும் திருஷ்டாந்தமாகப் பார்க்கப்பட்டது (பார்த்தாய்); மேற்கருத்தென்கொல் சொல்லென்று கலைக்கன்னி கேட்ப, லீலை பிரசினஞ் செய்தல்: மருவுசமாதியிற் கண்ட = பதும நாமத்துடனின்று பிருதமான பர்த்தாவின் சீவன் இராச்சிய பரிபாலனஞ் செய்யும் அவ்விடத்துள்ள அவர்களால் நான் பார்க்கப்படாத தென்ன இவ்விடத்திற் சுதனுற் பார்க்கப்பட்ட தென்ன வென்பது பிரசினார்த்தமாம். பிரஹ்ம சக்திபாடபேதம் பிரஹ்ம சத்தை.

(ஸ்ரீ - வீர - அ - கை) காணுவகைக்கும் கண்டமைக்கும் காரணம் அகங்கார ஆக்கமும் அகங்கார நீக்கமுமே யாமெனச் சமாதித்தல்:—சாதகமென.

சாதகத்தா லன்றியிரண் டொன்றுகா தகம்பாவந் தானீங் காமற்
போதமடைந் தானெதனும் சத்தியமாஞ் சங்கற்பம் பொருந்திற்றில்லை
யாதலினு லவர்காணு ரகம்பாவ மற்றவறி வறிதலாலே
பேதமற நீவிதிக்க விவர்கண்டா ரெனவாணி பேசலோடும். (49)

(ப - ரை.) சாதகத்தாலன்றி = அப்பியாச மில்லாமல், இரண்டொன்றுகாது = நினதுதுவைத நிச்சயம் நிர்ச்சேடமாய்ச் யஸ்தமாகவில்லை, அகம்பாவந்தானீங்காமல் = போதமடைந்தானெ யதனுல் = லீலையா னென்பது பயிற்சி யின்மையினுனே நினக்கஸ்த மாகவில்லை யாதலின், சத்தியமாம் சங்கற்பம் பொருந்திற்று இல்லை = சத்தியசங்கற்ப மானது உண்டாக வில்லை; ஆதலினுல் = ஆகையினுலே, அவர்காணுர் = அவ்வரசசபை யினர் நின்னைக் கண்டிலர், அகம்பாவமற்ற அறிவறிதலாலே = பயிற்சியின் முதிர்ச்சி யானே அகங்காரமற்ற அறிவையறிந்து கொண்டமையானே, பேதமற = துவைத மறவே, சத்திய சங்கற்ப சம்பன்னையாய், நீ விதிக்க விவர்கண்டார் = நீ சுதன் எனைக் காண்கவெனச் சங்கற்பிக்கச் சுதன் முதலிய யாவரும் கண்டனர், என்வாணி பேசலோ

மும் = இப்போது நீயங்கே செல்லினும் விலகரிக்கலா மென்று ஸ்ரீ சரசுவதிதேவிகூறிய போது லீலை கூறுகின்றாள்.

(ஸ்ரீ - வீர.) ஞானுப்யாச மில்லாமல் நினது லீலையா யிருக்கின்றேன் என்னும் பாவனை யஸ்தமாகாதபோது நினக்குச் சத்திய சங்கற்பம் பொருந்திற்றில்லை. அத்வைதப் பிரஹ்மத்தின் கண்ணே சித்த விருத்தி நிரோதவடிவ யோகப் பிரதிபந்தபூத துவைதத்தின் மிகுலயத்தால் இப்போது சத்திய சங்கற்ப முடையவளாயினை. அப்யாசமில்லாமல் நினது துவைத எண்ணமாகிய வுலகவுண்மை நிச்சயம் நன்றாக முழுதும் நாசமாகவில்லை, அத்வைதத்தைப் பேதப்படுத்தும் அவித்தையை யழிக்கும் வாயிலாக அடையாதவர் சத்திய சங்கற்பம் முதலிய பயனுறுங் கிரியைகளோடு பொருந்த லெங்ஙனங்கூடும்? வெய்யிலில் உழல்பவனுக்கு நிழலின் குணமாகிய தண்மையின் அனுபவமும், நிழலின் கண்ணே யிருக்கும் புருடனுடைய மகிழ்ச்சியனுபவமும் எங்ஙன்றெரியும், நான் லீலையா யிருக்கின்றேன் என்பது பயிற்சி யின்மையினுனே யுனக்குக் கெடாமலிருந்தது; லீலா தேகத்தில் மாத்திரம் யானிருக்கின்றேன் என்னும் திடசமஸ்கார்ம் இருந்தபோ துனக்குச் சத்திய சங்கற்பம் உண்டாகவில்லை. இன்று சத்திய சங்கற்பத்தை யடைந்திருக்கின்ரு யாதலின் மைந்தன் என்னைக்காண்குக என்னும் நினது விருப்பம் சப்லமாய் முடிந்தது, இப்போது நீ அந்நாயகனது சமீபத்தை யடைவையேயானுல் கூறியகாரணங் கொண்டு முன்போன்றே வீவகாரத்தை மூற்று மாறுசெய்து கொள்ளலாம்.

(ச.) தேவிகூறல்: சாதகத்தாலன்றி = அப்யாசத்தாலல்லது, இரண்டு = துவைத நிச்சயம், ஒன்ருகா = சேடமற ஒழியாது இது நிச்சயம், அகம்பாவந்தனை நீங்காமல் = பூர்வநினைக்கப்யாச திடமின்மையினுல் லீலை நான் என்னும் அகம்பாவத்தினது நீக்கமின்றி, போதமடைந்தனை = தொய்த நிச்சய நீங்கவில்லை, அதனுற் சத்தியமாஞ் சங்கற்பம் பொருந்திற்றில்லை, ஆதலினுல் அவர்காணுர்; நீ விதிக்க, இப்போதுநீ சத்திய சங்கற்பத்தால் புத்திராதியர் என்னைப் பார்க்கக்கடவர் என்று சங்கற்பிக்க, இப்போது சத்திய சங்கற்பத்தால் நினக்கபிமதம் பலித்த தென்பதாம், இப்போது நீ அந்தப் பர்த்தாவின் சமீபஞ்செல்லின் நினக்கதனுல் அவ்வியவகாரம் முன்போற் பிரவிர்த்திக்கும், என வாணி பேசலோடும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ சரசுவதிதேவியின் பிரசாதத்தினுலே சாதிக்கப்பெற்ற அஸ்பரிச யோக (நிருவிகற்ப)த்தினுலே உண்டாகிய லௌகிகப் பிரபாவமுடைய லீலை பூர்வஜன்ம பரம்பரைகளை நினைந்து உண்டாகிய பரமவைராக்கியத்தை யடைந்து இச் சமுசாரமானது தன்னுற் சடிதியில் நீக்குறுவதாக அறிவிக்கும் பொருட்டுப் பூர்வஜனமங்களை வருணிக்கின்றாள்.

பெருவெளியா யுன்னருளான் முழுதுணர்ந்தேன் மூக்குணத்தின் பிறப்பு மற்றே, னிருவடிவாய்ப் பிரமத்தி லிகன்றெண்ணூற் றுடல்பலவா யெடுத்தேன் மூன்ன, மொருதனிமா யாவிகற்பத் தோருலகாந் தாமரைமே லுறைவண்டாக, மருவிய விஞ்சையர் மகளாய் வாதனைதீ தான்மனித வடிவுமானேன். (50)

(ப - ரை.) பெருவெளியாய் = பேராகாச (முதித்து) வடிவமான ஜகன்மாதாவே ! உன்னருளால் = தேவீரது திருவருளால், மிகவுணர்ந்தேன் = மிகவும் ஸ்மரித்தேன், மூக்குணத்தின் பிறப்புமற்றேன் = எனது இச்சன்மம் இராஜசமாம் தமமுமல்ல சாத்விகமுமல்ல, இருவடிவாய்ப் பிரமத்திலகன்று = பிரஹ்மாவி னின்றும் பிரிந்து வேற்று வடிவ

மாய், எண்ணூற்றுடல் = அஷ்டசதசரீரம், பலவா யெடுத்தேன் = அநேக யோனிகளிற் சம்பந்தித்துக் கொண்டேன், முன்னம் = பூர்வம், ஒரு தனிமாயா விகற்பத்து = ஒப் பற்ற மகாமாயா விச்சமூசார மண்டலத்தில், ஒருலகாந் தாமரைமேல் = லோகாந்தரத் தாமரையில், உறைவண்டாக = உலவும் பிரமரியாக, மருவிய விஞ்சையர் மகளாய் = பொருந்திய வித்தியாதர வர அங்கனேயாய், வாதனே நீதான் = துர்வாசனேயினுலே கலக்கத்தை யடைந்தபடியால், மனிதவடிவு மானேன் = மானுடியாக அவதரித்தேன்.

(ஸ்ரீ - வீர.) அந்தோ ! அந்தோ !! இந்நிகழ் காலப்பிறப்பு ரஜோகுணத்தா லாக்கப் பெற்றதாம் = தன் ஜன்மபரம்பரையை நினைந்து பரிதபித்தாம், பிரஹ்மாவினின்றும் = கமலாசனனி னின்றும் இக்கற்பாதியி லிறங்கியது முதல். மறுடலோகா பேக்ஷயாய் லோகாந்தரம் = வேறுலகம், வித்யாதரஸ் தானம் அதுவே கமலம் அதன்கட் பிரமரி, வித்யாதர லோகத்தில் வசிப்பவளாய் என்பது திரண்டபொருள் இச்சகத் விஷயமெல் லாம் இப்போது யானுணர்ந்தேன், இவ்வெனது ஜன்மம் இராஜசமாம், தாமசமல்ல சாத்விகமும் அல்லவாம், இந்தஜன்மம் இராஜனின் காரியமாம், துக்கசந்தாப மிகுதியி னுல், " இடையே யிருப்ப நிராஜசத்தாரே " என்றும் மனுடஜன்மங்கட்கு ராஜசத்தை யுணர்த்தும் ஸ்மிருதியு முளது, ஹிரணிய கருப்பரது ஆதியாய அக்கற்பத்தினது முத லில் அந்தக்கரண உபாதி யுற்பத்தியாகிப் பிரதிபிம்ப முளதாய் வந்த எனக்கு எண்ணூறு ஜன்மங்கள் நாலுவித யோனிகளில் ஒழிந்தன, இப்போது அவற்றைக் காண்பது போன்றே வெளியாக ஸ்மரிக்கின்றேன். முன்னொருபோது ஒரு சமுசாரமண்டலத்தில் வித்யாதர லோகமாகிய தாமரையின் கண்ணே வித்யாதர வராங்கனேயாகிய வண்டாக இருந்தேன், துர்வாசனேயினுலே கெடுக்கப்பட்டுப் பின்னர் யான் மநுட்தேக முற்று இருந்தேன்.

(ச.) ஸ்ரீலவாக்கியத்தில்)லீலை கூறல்: பெருவெளியாய் = ஒப்திமயமான தேவியே! உணர்ந்தேன் = இவ்விடத்திப்போது ஸ்மரித்தேன், முக்குணத்தின் பிறப்பு மற்றேன் = எனக்கிந்த ஜன்மம் இராஜதமன்று, தமமும் சாத்வீகமுமன்று, பிரமத்திலகன் றிருவடி வாய் எண்ணூறு உடல் = ஜன்மம், பலவாய் = நாலுயோனிகளில் எடுத்தேன் இப் போது மீட்டு நினைந்தேன், முன்னுமோரு தனிமாயா விகற்பத் தேதாருலகாந் தாமரைமே லுறைவண்டாகி மருவிய விஞ்சையர் மகளாய் = பூர்வஞ் சம்சார மண்டலத்தில் லோ காந்தரங்கள் என்னுங் கமலங்களிற் பிரமரம்போன் மநோரத யோக்கியமான வித்தியா தர வராங்கனேயா யிருந்தேன், வாதனேதான் மனிதவடிவ மானேன் = துர்வாசனை ளங்கத்தால் அதன்பின் ஞன்மாநுடியா யிருந்தேன். மநோரத யோக்கியம் = இவ்டப் படி சஞ்சரிக்கத் தக்கணம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலுமகேக சன்ம பரம்பரையைப் பகர்ந்தபின் னிருவருஞ் செல்லல்:—வேறென.

வேறொருமாயா விகற்பத்தர மகளாய்த் தழையுடுக்கும் வேடப்பெண் ணுய்ச், சூறைவலிப் புள்ளரசாய்க் கொதுகு முதற்பல பிறப்பிற் சுழன்று சோர்ந்து, சீறுகடற் றிரையிலசை திரணம்போன் மாயையிலே தியங்கினேனே, யேறுவித்தாய் கரையென்ன விவள்சொன்னு ளிருவரும் விண்ணெழுந்து போனார். (51)

(ப - ரை.) வேறொரு மாயாவிகற்பத்து = வேறுசமுசார மண்டலத்தில், அரமக ளாய் = பன்னகேசுர காமினியாய், தழையுடுக்கும் வேடப் பெண்ணுய் = பத்திராம்பர

அதியாகிய வேடர்குலமாதாய், சூறைவலைப் புள்ளரசாய் = வைரியினுலே வீசப்பெற்ற வலைப்பட்டட்ட பறவையரசாய், கொதுகுல முதல் = மசகாதி, பலபிறப்பில் = அநந்த ஜன்மங்களில், சுழன்று சோர்ந்து = சுற்றிச் சுற்றிச் சோர்கமுற்று, சிறுகடற்றிரையி லசை திரணம்போல = சப்தியாகின்ற சமுத்திரத்தின் தரங்கங்களி லகப்பட்ட தரும் புக் கொப்பாக, மாயையிலே = சமுசாரத்தின் கண்ணே, நியங்கினேனே = மயங்கிக் கலங்கிக்கொண் டிருந்தவென்னை, கரையேறு வித்தாய் = முத்தியங்கரையிற் படர்வித் தாய், என்ன = என் றிவ்வண்ணம், இவள்சொன்னுள் = லீலைசொன்னுள், இருவரும் விண்ணெழுந்து போனர் = ஆகாயத்தி லெழுந்திரண்டு தேவிமாரும் எகினர்.

(ஸ்ரீ - வீர.) புங்கவிருகூஷம் முதலிய ஜன்மங்களையும் அடைந்தேன். பறவையாக இருந்த என்னுல் வைரியாகிய வேடனுல் வீசப்பட்ட ஜாலமானது வாசனுகூயமே போலக் கிலேசத்தானே கெடுக்கப்பட்டது. ஸ்ரீவாகுராவென்பது மிருகபந்தினியெனவாயினும் ஈண்டுப் பொருந்தாமையின் கொள்ளவில்லை. அரண்ய பூமியின்கண் ணிவ்வாறு துய ருற்றே னென்பதாம் கமலத்திடை நிகழும். பீஜகோசங்களின் மத்திய இடங்களையே சய்யையாகக் கொண்டு வண்டோடு பிளப்பாறி யிருந்தேன், அப்பதுமமுகுல கேசரங் களே அயின்று துயின்றேன். பின்னுண்மைப் பயன்தரும் வினைவாயிலாய் அரசனுயி னேன், ஸ்ரீமானுய்ச் சுராஷ்டிரத்தை நூறுவீடனும் ஆண்டேன். பசும்புற்றரையிலும் புற் றளத்திலும் ஆவினின் சலனத்தாற் ஆறாத்திரத் தன்மையை யவலம்பித்துக் கொது காய்க் கொதுகுட னிருந்தேன். சமுசார கடற்றிரை விடய ஆசையாம். நீக்கமுடியாத காற்றுடனுற்ற ஓடத்தின் கமனமோயாத் துயருறுதலே போலும், அதாவது விஸ்தார மான கடலிலுள்ள சஞ்சல அலைகட் குட்பட்டு அதிவிடமமாய் மோகப்பட்டு அலைந்து பிரசண்ட வாயுவினுலே சுற்றப்பட்ட ஓடஞ்செல்லுங் துயர்முறை போலும், சமுசார விசால சமுத்திரத்திலுள்ள விடயதிருஷ்ணைலகூணைலகரியினுலே சுழலுகட்குச் சமான மான யோனிகளில் அலைந்து திரிந்தேன். பெருநீர்ப்பட்ட ஓடம் திரும்பொத்தகின் தரணியைத் திரணமென்றூர். யோகத்தினு லேற்பட்ட அதிசயப் பிரமணக் கிரமங்களி னுலே பிராஹ்மண மண்டபத்தி னின்றும் மேலே சென்றனர். மற்றொரு சமுசாரமண் டலத்தில் பன்னகேசுர காமினியாக விருந்தேன், கடம்பு, குருக்கத்தி எலுமிச்சை மாதுளை புங்கவனங்களிற் சுற்றிக்கொண்டு தனியாடையைக் கட்டிக்கொண்டு கறுத்தவ ளாகிய வேடச்சியா யிருந்தே னியான், வனத்தில் வசிக்கும் வாசனே மிகுத்து அதனுலே மூடையாய்த் தருமமரியாதைகளை யறியாதவளாகி யிருந்தமையானே கெட்ட காரியங் களை நிறையச்செய்து பூங்கொத்துகளாகிய கண்களையும் இலைகளாகிய கரங்களையும் உடைத்தாகி வனத்தில் விலாசஞ்செய்யும் கொடியாகி யமர்ந்தேன்; முனிவரது சங்கத் தால் பவித்திரத்தை யடைந்துவாழும் புண்யாசிரம ஸ்தையா யிருந்தேன், வஞ்சினி யால் அக்கொடி தடிக்கப்பட்டு மகாமுனிவருக்குப் பெண்ணுகப் பிறந்தேன், புண்ணி யத்தர் லாண்மகவாய் இராஜ்ஜியாதி போகபுயங்களைத்தரும் முன்சஞ்சிதகருமங்களினது பரிணமத்தால் நூறுவருடம் சுராஷ்டிர தேயத்தில் சகல ஐசுவரிய சம்பன்ன அரசனுக யானிருந்தேன். பனைகளுந் தாழைகளும் நிறைந்து ஜலம்நிறைந்த பிரதேசங்களில் அரச னுகவிருந்து பரதனங்களை யபகரித்த தோஷ விசேஷங்களால் குஷ்டத்தால் கஷ்ட அவயவங்களையுடைய கிரிப்பிள்ளையாக ஒன்பதுவருட மிருந்தேன், சுராஷ்டிரத்தில் எட்டுவருடம் பசுமாடாகி மிகு துன்பமடைந்தேன், பெருங்காட்டிற் பகுயாகிக் காரண மின்றிய வைரத்தினுனே வேடர்களாற் போடப்பட்ட வலையிலகப்பட்டு, அதமமாகிய துவைதவாதனையை யறுக்க யாளிப்போது பட்ட கட்டம்போலக் கட்டப்பட்டு அவ்வ

லக்கட்டை யறுத்தேன். கர்ணிகையின் புஷ்பரேணுக்களிடையே அவற்றையே சையாகக் கொண்டு ஆண்வண்டோடு இளைப்பாறி யிருந்தேன், விழித்துப் பதுமமொட்டுகளி லிருக்கும் மகரந்தத் தேன் முதலியவற்றை மாந்திக்கொண்டு துயருற்றேன், மாலுகித் திரிந்தேன், மச்சமாய்ப் பட்டதுயர் மாகோடிகோடியாம், பறைக்குட்டியாக இருந்து சுரதலீலைகட் கீடுபட்டுக் கட்குடித்துப் பாடியாடித் திரிந்தேன் பின்னு மனந்த முறை பிறந்துழன்ற பின்னர், அன்னமானேன் ஒரு, இலந்தையிலை நிறைந்த தேயத்தில் ஆடிக் கொண்டிருந்த வெருகொதுகுகளின் மத்தியில் அதனினின்றுமுகழுவிய ஒருகொதுகிற்கு அவண் புகுதும் ஆற்றலின்மையின் வினையாடுந் தரித்திரத் தன்மையைக்கண்டு அச்சமஸ்காரத்தானே மரணத்தை யடைந்த ஹம்சத்தால் கொதுகுஜன்மம் எடுக்கப்பட்டு அதினீனத்தோடு மிருந்தேன் எத்தன்மை எத்தன்மையை நினைத்துக் கொண்டு தேகத்தை விடுவாரோ என மிருதியுமுளதாம். சுருக்கிக்கூறு மிடத்து நூற்றுக்கணக்காக அநேக வகைத் துக்கங்களோடு கூடிக்கூடி அநேகம் யோனிகளில் சமுசாரமாகிய நீண்டநதியின் சஞ்சலமான லகரிகளானே தடுக்க முடியாததான வாதப்பிரமியின் வேகமான ஓட்டத்திற் கொப்பாக ஓடியோடித் தராசின் தட்டுகள்போல மேற்கதி கீழ்க்கதிகளே யடைவுற்று அதனுனே ஆகுலமிகுந்தமன அங்கத்தை யுடையவளாகி மயங்கிச் சுழன்று திரிந்தேன். வாதப்பிரமியானது இயற்கையாகவே வாயுப்பிரவாக அனுசாரிணியா யிருப்பது மேற்கீழ்தேசங்களில் ஆயாசமில்லாமலே ஓடுவதென்பது வெளி, இவ்வண்ணம் லலிதாகிருதிகளோடு கூடியதேவிமா ரிருவரும் சம்பாவித்துக் கொண்டே யோக சாமர்த்தியத்தினுலே அந்தணர் வீட்டினின்றும் மேலே கிளம்பி விண்ணின் கண் வெகுதூரஞ் சென்றனர்.

(ச.) மாயா விகற்பத்து வேறொரு வரமகளாய் = இந்தச் சமுசார மண்டலத்தில் அதன்பின் அமரேசுர காமினியாய் (பன்னகேசுர காமினி யிடபேதம்) இங்ஙனமீண்டு லோகக்குச் சன்மாந்தர பரம்பரை முன்வித்யாதரி பின்மனுஷி பின்னிந்திராணி; தழையுடுக்கும் வேடப்பெண்ணுய் = அதன்பின் யான் சண்பகாதி பத்திராம் பரத்தைத் தகிக்குஞ் சியாமளரூப சபரியென்னும் வேடப்பெண்ணுய், சூறைவலைப்புள் = அதன்பின் பக்ஷிப்பேடி, வனத்தில் வைரியான கிராதனுல் வீசப்பட்ட வலையானது இப்போது எனது வாசனைபோல் என்னுல் மகத்தான கிலேசத்தாற் சேதிக்கப்பட்டது. மரைமேலுறை வண்டாகி கமலங்களின் மகரந்தம் (கேசரம்) புசித்து என்னுல் அளியோடு கூடக் கர்ணிகா கர்ப்பசய்யைகளிற் றளர்ச்சியாறப் பட்டது, அரசாய் = அதன்பின் பெண்டன்மையை நிவர்த்திக்குங் கர்மபரி பாகத்தினுற் சௌராட்டிர தேசங்களில் நூறுவருட மிராஜாவா யிருந்தேன், கொசுகு முதல் = பின்மசகாதி வாசனையால் மசகமுதலிய பல பிறப்பில் = அநேக வித்துக்கமயமான யோனிகளில், திரணம்போல் ஊர்த்துவ அதோகதியை மாறிமாறி யடைந்தேன், உயர்வு தாழ்வானயோனி யையடைந்து நியங்கினேனே, ஸ்ரீ வசிட்டர் இருவருமவ்விடத்தினின்றும் விண் எழுந்துபோனர். மசகவாசனை = பசும்புன் மிருந்த பூமித்தல அதிசய ஆலிங்கனத்தில் மசகத்தின் பேராசைச் சஞ்சலமே தாரித்திரியமாம், அதை அன்னமா யிருந்த யான்கண்டு அவ்வாசனையினுலே மசகஜன்மத்தை யடைந்தேன் என்பதாம். பாடபேதம் = ஓடுங்கால் ஊர்த்த அதோகதியை மீண்டு மீண்டும் வாயுவைப்போலும் வேகவியற்கை வாய்ந்த பெண்மான் அடைவதேபோலும் மேற்கீழ் பிறப்புகளே யானடைந்தே னென்பதாம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) மீண்டும் அந்தப்புரம்போய் மீண்டு வேறு பிரமாண்டத்திற் கேகிச் சூராதிசந்தத்த சேனையைக் காணல்:—யோகமென.

யோகநெறியால் விண்போய்ப் பதுமனிடஞ் சேர்த்து சவவுடல் கண்டப்பா
லேகியிவன் மறுபிறப்பாம் வேந்தனை யெய்தலு மவன்மே லெதிர்ந்துவந்து
வேகவினையாகி யொருவேல் வேந்தனமர் தூடங்கி மிகவுமோத
மாகமயி லனையார் கணைக்கிரு நிருபடையு மலைந்தவன்றே.

(ப - ரை.) யோக நெறியால் = யோகப்பயிற்சியால் வாய்ந்த விசித்திர கதிவிசேஷத்தால், விண்போய் = பிரஹ்மாண்ட கர்ப்பகூஞ் சென்று, பதுமனிடஞ் சேர்த்து = திலேசமில்லாமலே கடந்து சர்க்காந்தரம்போய்ப் பதும மண்டபமாகிய அந்தப்புரத்திலிருந்த, சவவுடல் கண்டு= இராஜதேகத்தைப் பார்த்துவிட்டு, அப்பாலேகி = விசாரத அண்டத்திற்குச் சென்று, இவன் மறுபிறப்பாம் = இம்மன்னவனது புநர்ஜன்மமாகிய, வேந்தனை யெய்தலும் = விசாரத வேந்தனை யடைதலும், அவன்மேல் = அவ்வரசன் மேல், எதிர்ந்துவந்து = எதிர்த்துவந்து, வேகவினையாகி = அதிபல சத்துருவாகி, ஒருவேல் வேந்தன் = ஒப்பற்ற வெற்றி வேலாயுதந்தரித்த இராஜன் ஒருவன், அமர்தொடங்கி = போரையாரம்பித்து, மிகவும்மோத = அதிகமாக நெருங்கியடிப்ப, மாகமயில னையார்கள் = விண்ணிலிருந்த மயிலியல் தேவிமார்கள் இருவர்களும், கோக்கிஞர் = கண்டார்கள், இருபடையும் மலைந்தவன்றே = இரண்டு சேனைகளும் தொந்தயுத்தஞ் செய்யத் தொடங்கியது; அன்று ஏ அசை நிலைகள். (52)

(ஸ்ரீ - வீர.) சர்க்காந்தரம் = இரண்டாவது பதுமராஜ சம்பந்தியாய சருக்கம். மீண்டும் லீலா சரசுவதிதேவி மார்களின் பிரபஞ்சப் பொய்மை நிச்சயகிடத் தன்மையைச் சம்பாதிக்கும் பிரவிருத்தி பிராப்தி பிரதிபாதனதிகள் ஆகியான சமாப்தி வரையுமாம். அநேக விசித்திர அற்புதப் பேருற்சாகப் பெருமையதாயினுஞ் சமுசாரம் பொய்யெனக் காண்பிக்கும் பொருட்டுப் பதுமநிருபதி மண்டபாகாசத்தி லுள்ளடங்கிய சமுசாராந்தரத்தில் இருக்கும் ஆடம்பரத்தோடு கூடிய போரின் வருணனை யாதெனவுணர்க. எதிர்த்து வந்து =வரும்போதே இராஜ்ஜியத்தைக் கெடுத்துக்கொண்டுவந்து. சாமந்தர்களுக்குள் உயர்ந்த சாமந்தனும் பூமிபனும் ஆவன் அவ்வேல் வேந்தன். கடல்போலும் சுந்தரமாய்ப் பெரும்போரைத் தொடங்கு மேதுவினாலே மிகநெருங்கிக் கனமாய்க்கு மூறிக்கொண்டிருந்த அச்சேனை யுத்தசங்கத்தமாயிற்று, என்பார் தூடங்கியென்றார் அக்கினிபோலுந் தீப்தமடைந்தது. வேகமாக ஆயுதங்கள் வீசத்தொடங்கவே ஒன்றோடொன்றுறைந்து அழல்கிளம்பி மின்னலாகாரமாகச் சொலித்தனவாம். மதத்தோடு கூடிய மாதங்கங்கள் வீழ்ந்தபோது பூமியசைந்து நடுங்கிய ஜலங்களும் கல்லோலப் பட்டாடினவாம். யந்திரங்களி னின்றும் விடுபட்ட கற்களும் சக்கிராயுதக்கூட்டங்களும் ஆகாயத்தில் தேவாதிகளைத் தூரத்தி லோடும்படிசெய்தனவாம். கட்கக்கண்டங்கள் சிதறி மேலே வெகுதூரத்திற் கிளம்பி மிகவொளிர்ந்து ஆகாயத்தில் வியாபித்த தோற்றம் அநேக நக்ஷத்திரங்களால் அலங்கரிக்கப் பெற்றதே போலும் அம்பரம் இருந்தது. வஜ்ஜிரசமமான மூஷ்டிகளானே மிகவு மடிபட்டு கொறுங்கித் தூள்தூளாகிப் பெரும்வீரர் தங்கவசங்களும் போயினவாம். சர்வலோக மயபாணங்களின் மழைபெய்தலைச்செய்யும் வீரக்கூட்டங்களே அப்போர்ச் சம்பிரமத்தில், மதோன்மத்த மேகங்களாகச் சஞ்சரித்தார்கள்; அம்மேகங்களின் சஞ்சாரத்தால் கபந்த மயூரங்கள் ஆங்காங் காடிக்கொண்டு திரிந்தனவாம். மதோன்மத்த மேகங்களின் நிமித்தத்தினுனே சம்பிரமத்துடன் கபந்த மயில்கள் ஆடிக்கொண் டிருந்தன வெனினும் ஆம். கபந்தமென்பது தலையில்லாமல் ஆடித்திரியுந் தேகமாம். கற்பாந்த காலம்போல வேகமாக இங்குமங்கு மோடிச்சுழலும்

கஜபர்வதங்களானே வியாபிக்கப் பெற்றது அப்போரின் சம்பிரமம், என்பதாதிகள் மலைந்த வென்பதாற் கொள்ளக் கிடந்தனவாம். மூற்பவித்த ஜகத்தைத்தாண்டிக் கூறிய வண்ணம் அநந்தகோடி பிரஹ்மாண்ட விசித்திரங்களைக் கண்டு கொண்டேயேகி அவற் றுள் ஒரு பிரஹ்மாண்டத்தின் கண்ணே யவ்விருவரும் விரைவிற் புகுந்து அந்தப் புரத் தைக் கண்டார்கள், ஆண்டு நெடுநேர மிராமல் உடனே கிளம்பிப் போயினர். அவ்வந் தப்புரமானது, புஷ்பபாரத்திலுலே நிறைந்த மகாராஜ மகாசவத்தோடு கூடியிருந்தது சவத்தின் சமீபத்தில் வீற்றிருக்கும் உட்சமாதியி லாரூடமா யிருக்கும் சித்தத்தோடுற்ற லீலையின் சரீரத்தோடு கூடியிருந்தது அதனைப் பார்த்தபின் அத்திவ்ய யோகினிகள் மீண்டும் யோகசக்திகொண்டு சென்று சிறிது விரிந்திருக்குஞ் சமுசார ஆவரணத்தைப் பிளந்து பிரஹ்மாண்ட கபாலத்தையும்பிளந்து லீலையினது பர்த்தாவினுடைய சங்கற்ப சமுசாரத்திற் புருந்தார்கள்; அச்சமயத்தில் அந்த மண்டலத்தில் அநேக நகரங்கள் நெருங்கியிருக்கு மிடத்தில், தனக்குச் சகாயமாய் வந்திருக்கும் மண்டலேசுரர்கள் பெரு கப் பெருகியிருக்கும் சிந்துராஜனென்பவன் சேனையுலுல் ஆக்கிரமணஞ் செய்திருந்த னன். சங்கற்பத்தாலாய விமானத்திருக்கும் இரண்டு தேவிமாரும் போர்முகமாகி நின்ற பூபதிகளின் இருசேனையும் மலைந்ததைக் கண்ணுற்று ரென்பார் நோக்கிஞரென்னூர். லீலா நாயகராற் பரிபாலிக்கப்பெற்ற சுவராவஷ்டிர மண்டலத்தில், சதுரங்க சைனியத் தோடுகூடியதும், சிங்கந்தேள் அரக்கபிசாசாதி கட்டாதாரமாதலின் துவிதீய ஆகாசம் பொன்பீவணமுற்றதும் ஆகிய ஒருவிஸ்தார ஆரணியத்தில் அவ்விருசேனைகளும் நிறைந்திருந் தன அவ்விரண்டும் கலக்க மற்றனவாயும் அழகிய இருகடற் கொப்பிடத்தக்கனவாயும், மகத்தாய காரியங்களில் முயன்றுகொண் டிருப்பனவாயும், மதம் பிடித்தனவாயும் இரண்டு மன்னவர்களால் அலங்கரிக்கப் பெற்றனவாயும் இருந்தன. போரின்பொருட்டு வரிந்து கட்டுவனவும், பெருங் கர்ச்சனையுடன் யுத்தசந்நாகஞ் செய்வனவும் அக்கினி யைப்போலத் தீப்தமுற்றனவும், அற்புதமுற்றனவும் முன்னர் பாணப்பிரயோகஞ் செய் வதை யெதிர்பார்த்துக்கொண்டு இருப்பதானே மூடாத செங்கடல்கலக்கமுற்றிருப்பன வும் ஆகியிருந்தன. அத்தேவிமா ரிருவரும் சத்திய சங்கற்பத்திஞற் கற்பிக்கப்பட்டதும் மிக அழகியதும் விமல வீண்ணின்கண் ணிச்சலமாய் நிலைத்து நிற்பதும் ஆகியவிமானத் தில் இருந்து விநோதமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தனர். பகைப்பட்டவனுவன் பய மற்றவனுய்த் தன்படனேத்தாக்க வீதாரதன் அப்படனே முசலத்தாற் மல்லஅசுரன் தனன், அரசனிவ்வாறு செய்தபின் பிரளயக்கடல் பொங்கியதுபோலப் பாணப்பிரயோ கங்கள், அக்கினிக்கும் மின்னலுக்கும் சமானமாய்ச் சொலித்து மின்னும் கொடூர அஸ் திரசஸ்திர வர்க்கங்களால் காற்பக்கங்களிலும் இருசேனைகளிலும் மிகமிகவும் உண்டா யின. மதம்பிடித்த யானைகளும் அவற்றுல் வீழ்த்தப்பட்டவர்களும் துடித்துக்கொண்டு ஓடமுடியாமல் பூமியிற் புரண்டு நிகழ்ந்தவேகம் மிகுத்திருந்தது. கவண்களினின்றும் விடுபட்ட கற்களாலும் சக்கிரக்கூட்டங்களாலும் பறவைகளெல்லாம் மூலைக்கு மூலை மிகுதூரமோடின. கட்கக்கண்டங்கள் வெகுதூரத்தி லுயரக்கிளம்பி மின்னி யாகாயத் தில் நக்ஷத்திர அழகைச்செய்து கொண்டிருந்தன, மிகுந்த வலுவுடன் பிரயோகிக்கப் பட்ட வேற்கூட்டங்களானே பிளக்கப்பட்ட யானைக்கூட்டங்கள் பூமியை மறைத்துக் கொண்டிருந்தன. வஜ்ஜிரமுஷ்டி மல்லர்கள் கசக்குங் கசக்கிஞலே கசங்கிய அநேகம் வீரர்கள் தன்புற்றுக் கொண்டிருந்தனர். நாராசங்களாகிய மழைகளே அளவின்றிப் பெய்யும் நிறைந்த வீரசுரவடிவ மதத்த மேகங்களின் சம்பிரமங்களைக் கண்டு கவந்த வடிவ மயில்கள் எழுந்தெழுந்து, கூத்தாடிக் கொண்டிருந்தன. இந்தப்பிரகார மிருந்த

அந்தரணசம்பிரமானது வேகத்தோடு சுற்றிக்கொண்டு திரியும் மதம்பிடித்த யானைகளாகிய பர்வதங்களா லலங்கரிக்கப்பட்ட கல்பாந்த காலத்தைப்போலு மிருந்தது. இங்ஙன்மலைந்த,

(ச.) லீலைஞப்தியோடு, யோக—பதமனிடம்=அந்தப் புரம் புட்பமண்டபச் சவவுடல் எய்தலும், கண்டமாத்திரத்தில், அவன்மே லெதிரிவந்து வேகவினையாகி, யொரு வெவ்வனத்தில், அம்மண்டபத்தில் ஓரலங்கிருத பூமியில் அமர்தொடங்கி மிகவு மோத, மரீக மயிலனையார்கள் = ஆகாயத்தினின்று லீலையும் ஞப்திதேவியும், இருபடையும், யுத்தத்தாற் சலியாததும், அதனாலே நித்தரங்க சமுத்திரத்திற் கொப்பானதும், யுத்தயத்தின மிகுந்ததும் நிரந்தர விசாரமுடைய அரசர் இருவரொடு கூடினதும், யுத்தத்தக்கு மிகு வர்மமுடையதும், (வர்மம் = கவசம்) அக்கினியைப்போ லுற்புதமும் ஆகிய இத்தன்மையான இரண்டுசேனையும் மலைந்தது நோக்கினர். யோகநெறி = யோகசித்தகதி விசேஷம். ஆயுதம் வீசல் = மின்னலையும் வன்னிச்சுவாலையு மொத்திருந்தது. மதயானைகள் வீழப்பூமி நடுங்கச்சனம் நடுங்கியது. யந்திரத்தினின்றும் விடுபட்ட பாஷாணங்களாலும் கூட்டமான அயோமயநேமிகளாலும் கேசரங்கள் தூரவிலகின. விளங்காநின்ற கட்கண்டங்களால் உண்டாய வுடைவையுடையதாய தம்பரம், மூஷ்டிப்போரால் வீரர்வர்மங்கள் பொடிந்தன சரவிசேஷங்களின் வர்ஷமே நரமேகமுக்த வாரிபூரமாம் அதனாலே மத்தங்களாய் ஆகாயத்திற் சம்பிரமத்தோடும் சிரஞ்சித காயங்களேயாய மயில்கள்விசேட நடனஞ்செய்தன வென்பதாம். வேகவிவகார மாதங்க சைலங்களாலே வியாபிக்கப்பட்டிருந்தது அப்போர். (52)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இருபடையும் வெம்போர் புரிந்தபின் சூரிய அஸ்தமனமாதலும் இருபடையும் இளைப்பாறுதலும்:—மட்டென.

மட்டிலா விருபடையு மறலிநடுக் குறவெம்போர் மலைக்குங் காலை
யெட்டிலோர் கூருக வெதிர்ந்தவனு லிவன்சேனை யிறத்தலோடும்
பட்டுளோர் பிணக்குன்றுன் மறைந்தனனே சமர்கண்டு பயப்பட்டானே
தட்டிலா வெய்யவன்போ யிருணிறைந்த திருபடையுந் தணந்துபோன.

(ப - ரை)) மட்டிலா விருபடையும் = அளவில்லாத இரண்டு சேனைகளும், மறலி நடுக்குற = யமனும் அஞ்சுமாறு, வெம்போர் = கொடியயுத்தம், மலைக்குங்காலை = கொடூரமாகச் செய்யும்போது, எட்டிலோர் கூருக = அஷ்டபாகத்தில் ஒரு அங்கிசமாக, எதிர்ந்தவனுல் = பகைவனுல், இவன்சேனை = இம்மன்னவன் சேனை, இறத்தலோடும் = இறந்து சென்றபின், பட்டுளோர் பிணக்குன்றுல் = இறந்து போனவர் தம் பிரேத பர்வதத்தால், மறைந்தனனே = ஆச்சாதிக் கப்பட்டனனே, சமர்கண்டு பயப்பட்டானே = போரைக்கண்டு தான் பயந்து நடுங்கினனே, தட்டிலா வெய்யவன் போய் = பூரணப் பிரகாசத்தோடு கூடியிருந்த சூரியன் அஸ்தமாகி, இருணிறைந்தது = அந்தகாரம் வியாபித்தது, இருபடையுந் தணந்துபோன = இரண்டு சேனைகளும் தம்மிடஞ்சேர்ந்தன.

(ஸ்ரீ - வீர.) மூலமனுசரிதத்து:—அஷ்டபாக தசாதேஷ பிரதாப மதுராகிருதி மூப்பதுபாகமாந் தினத்தின் அஷ்டபாக தசையைச் சேடமாகவுடைய சிறந்த தாபத்தால் மதுரா கிருதியையுடைய இரவி, அஷ்டபாகங் கிழிந்த அவஸ்தையைச் சேடமாகவுடைய தும் பிரதாப முடையதும் ஆகிய அதனுல் தரிசிக்க யோக்கிய ஆகிருதியுடையதாம், வீர

பக்ஷத்திலோ தூரத்திலேயே பகைவர்க்குப் பயமுண்டாக்குகின்ற பாவமே பிரதாபமாம் அஷ்டபாகத்தை யுடையதும் மரணதசையைச் சேடமாக வுடையதும் ஆகிய பிரதாப மதுராகிருதி, அஷ்டபாகம் எத்தசையின் கண்ணே அதுசேடம் எவ்வீரனுக்கோ என விக்கிரகிம்மாம். அஷ்டபாக விசரணவஸ்தை, சேடமெப் பிரதாபத்திற்கோ; அதனால் தரி சனீய ஆகிருதியை யுடையது (விசரணம் = அழிவு.) சூரியாஸ்தமனத்தில் தந்தீயப் சாந்தமாயின அத்தமிக்கு மிரவி வீரனேப்போலாயது செக்கர் வானிரவி யென்பதாம், வீரனும் உதிரந்தோய்ந்த மேனியனுதலி னென்க. இருளின் சமுதாயமே பெருஞ்சேனை யின்முகமாரு மிரவிறைவன் வியாபித்தனன் என்பார் இருணிறைந்த தென்ரூர். இவ் வண்ணம் மிகவும் ஆகுலம் நிறைந்த போரானது நிகழ்ந்தபோது, வெற்றியுடன் விளங் கும் வீரர்கள் தோள்தட்டுவதைக் கேட்ட தோல்வி யடைந்தவர்கள் மிகவும் பயத்தை யடைந்தார்கள், உதிரப் பெருக்கைத் தடுக்கும்படியான கடினகவசங்களில் அவ்வுதிர நீரானது பொங்கிவழுந்து கொண்டிருந்தது, இருளானது மிகுதியாக ஆதித்தியனும் மறைய ஆரம்பித்தனன், அஷ்டபாகத்தைச் சேஷபிரதாபமாதுரிய ஆகிருதியானது சஸ் திர அடியினுன் மொத்துண்ட இரக்தகாந்தியினுலே சூரனேப்போல மெலிவை யடைந் தது. பின்னர்ச் சேனையின் அதிபதிகள் மந்திரிமார்களோடு விசாரஞ்செய்து போரை நிறுத்தவேண்டு மென்று தூதர்களைப் பரஸ்பரம் அனுப்பினுர்கள். பின்னிரு சேனைகளி லும் தருவனேப்போலும் ஒவ்வொரு போர்வீரன் பெருந்தேரின்மேலே கொடிக் கட்டு மிடத்தில் ஆதாரமாகச்செய்திருக்கும் நீண்ட மூங்கிற்றம்பமிரண்டிலேறிப் பூரணசந்திரப் பிரகாசம் போன்ற வெள்ளைக் கொடியைப் போரை நிறுத்துங் குறியாக எத்திசைகளி னும் வீசினுர்கள்; பின்னர் மகாப்பிரளயத்தில் இடிக்கும் பெருமேகங்களேபோல் எல் லாத்திசைகளிலும் பிரதித்தொனி கேட்கும்படியாகத் தொனித்த துந்துபிக ளெல்லாம் ஓய்ந்தன. இருசேனைகளும் பிரளயாகாசத்தில் நாற்றிசைகளிலும் உள்ள நாற்கடலும் ஒரு பெருங்கட லிணைவதேபோல நாற்றிசைகளிலும் பிரிந்து சென்றன. அக்கால் அஸ்தமித்த ஆதித்யன் வீரரைப்போலும் இரக்தமயமாக இருந்தனர், நிர்மலமான ஆகாயத்தில் மந்த இரஸ்மி யுடையவராயினர் மேற்குக்கடலில் ஸ்நானஞ் செய்யப் புகுந்தனர் வீரர்தம் ஆயுத வர்க்கங்கள் பிரபையாவு மிழந்து சமுத்திரஞ் சென்று வீழ்ந்தன வீரருமாங்கே. கையிற் பிடிக்க முடிவதேபோலும் நெருங்கியிருக்கும் இருட்பிண்டத்தால் பிரகட பூதங்களாய சூட்டியங்கள் அங்கிலங்கின.

(ச.) இருபடையுந் தளர்ந்து போனபின் சேனுதிநாதர்கள் மந்திரிகளோடு ஆலோ சித்துத் தூதரை அன்னியோன்னியம் அனுப்பி யுத்தத்தைப் பிரிந்தா ரென்பதாம். மூலம், அஷ்டாங்களின் பாகம் அதனுற்றசையே சேடம் எதன்பால், அப்பிரதாபத்தால் மதுராகிருதி யெதற்கோ அஸ்தங்ஙனமாம். இருட் கூட்டத்தை சேனையின் புரோபாக மாகவுடைய அத்தன்மைய தாயது இரவு என்பதாம்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) இரணங்கண ஸ்துதியைக்கூறி நகரஸ்துதியை நவில்கின்ரூர்:—

பகைவென்தன் படைவாங்கப் படாதசிறு படையோடும் பரிந்துமீண்டு
தகைவேந்த னரபியத்திற் றுயிலுதலு மிவர்களுமத் தலத்திலெய்த
நகையார்ந்த நிலவீனைய விவரொளியா லிளைப்பாறி நயனக்கஞ்ச
முகைதோன்ற விழித்தெழுந்து புகழ்ந்திறைஞ்சி யருச்சித்தா மின்னின்றேரை.

(ப - ரை.) பகை வேந்தன் = சத்துரு மன்னவன், படைவாங்க = சேனையைக் கரந்து கொள்ள, படாத சிறுபடையோடும் = போரின்மாயாது சேடித்த சிறியசேனை

யோடும், பரிந்து = சிறிது கவலையுற்றவன் போன்ற மனத்தோடும், மீண்டு = நகர்நோக்கிச் சென்று, தகைவேந்தன் = தக்கதருமம் மன்னவன், அரமியத்தில் = அரண்மனையில், துயிலுதலும் = நித்திரை செய்தலும் முகூர்த்தநேரம், இவர்களும் அத்தலத்திலெய்த = இவ்விரு தேவிமார்களும் அவ்விடத்திற் போய்ச்சேர, தகையார்ந்த நிலவனைய விவரொளியாஸ்விளைப்பாறி = புன்னகையோடு கூடிய சந்திரிகைபோன்ற இவர்களுடை பிரகாசக் குளிர்ச்சியால் தளர்ச்சிமாறி, நயனக்கஞ்ச முகைதோன்ற = விழித்தாமரை யரும்பு அரும்பியதென்ன, விழித்தெழுந்து = நனவையடைந்து விஸ்மித மனத்தனாய், புகழ்ந்து = ஸ்தோத்தரித்து, இறைஞ்சி = நமஸ்கரித்து, முன்னின்றேரை = தரிசிக்குமாறு இரண்டாசனங்களி லமர்ந்திருக்கு மத்தேவிமாரை. அருச்சித்தான் = புஷ்பங்களாற் பாதங்களிற் புஷ்பாஞ்சலி செய்தனன். (54)

(ஸ்ரீ - வீர.) உதாராத்மாவா யுத்தம சித்தனுய லீலாபதி மறுதின் மாகவேண்டியதை மந்திரிமாரொடு மாய்ந்து பின்றுயின்றனன் என்பதாம். அவ்விடத்தில் அதிகோமளமாயும் மந்தமந்தமாயும் நிருமலமான மணத்தோடு கூடியும் மந்தார புஷ்புங்களின் மாருதம் வீசிக்கொண் டிருந்தது. நிலவின் கிரணங்கள் போன்று சீதளமான அவர்களது தேகப் பிரபையினுற் பூரிக்கப்பெற்றுத் தளர்ச்சிமாறினன் சுகியாயினன் என்பதாம். புஷ்பங்களின் ஹாரத்தை யுடையவன் போலவும், மாலாகாரன் (மாலைகட்டுபவன்) போலவும், விகாசித புஷ்பாஞ்சலியைக் கவர்ந்து, வஸ்திரம் விரியாதிருந்த தேயத்தில், பத்தபதுமாதனனுய், ஜனுதி தோஷ துஷ்டசித்தத் தன்மையானே அக்கினியினுற் றகிப்பதே போன்ற எத்தோடமுளதோ அதைக் கெடுப்பதில் சதிப்பிரபைபோன்ற தேவிமார்களே வெல்வீர்களாக, பாகிய அந்தர பதார்த்த விடயாஞ்ஞுன அந்தகாரத்தை யழிப்பதில் ஆதித்தியப் பிரபைபோன்ற தேவிமார்களே வெல்வீர்களாக, எனக்கூறி அவர்களுடைய பாதபதுமங்களிற் குசுமாஞ்சலியைச் செய்தனன், உதாரவடிவமான லீலாபதி விஜாரதன் சிறிது துயரடைந்த மனத்தினன் போலும் எல்லா இரகசியங்களையும் உணரும் படியான ஆற்றலோடு கூடிய மந்திரிமார்களுடனே காலையில் நடக்கவேண்டுங் காரியங்களை யாலோசித்து விரைவில் சந்திரோதயத்திற்சூச் சமானமாகிய அழகிய வீட்டில் குளிர்ந்த ஒடுக்கத்தில் நீண்டசந்திர சமாகாரமான ஹிமசீதள சயனத்தில் ஒருமுகூர்த்த நேரம் கழுண்டாமரையை மூடி நித்திரைசெய்தனன் அக்கால் அம்பிகையும் லீலாதேவியும் தமது ஆகாய இருப்பைவிட்டுத் தாமரையின் மொக்கில் காற்று ரேகைகள் புருந்தனபோல அவ்வரசனிருப்பைச் சாளரவாயிலாக அடைந்தனர். அவ்விரு தேவிமாரும் இருசந்திரர்போலிருந்ததால் மிகவும் ஒளிராகின்ற அதி வெண்மையான உதரத்தோடும் அது மிகவும் அழகாக பதுமன் அரண்மனை போலும் இருந்தது; இன்பப் பரிசமுடையதாய் நிருமல நறுமண முடையதாய் மிகமிருதுவதாய் சங்கற்பத்தா லுண்டாய மந்தாரபுஷ்ப மாருதம் வீசிக்கொண் டிருந்தது அவர் மகிமையினுல் மன்னராதியாவரும் நித்திரையின் மூழ்கினர் சகிரணங்களைப்போலும் அதிசீதளமாய அத்தேவிமாரது திருமேனிகளின் பிரபைப் பிரவாகத்தால் மிக மகிழ்வடைந்த அவ்வரசன் அமிருதத்தால் தெளிக்கப் பெற்றவனைப் போல விழித்தனன் இரண்டு மேருவின் சிகரத்தில் இரண்டு சந்திரபிம்பங்க ளிலங்குவ போலிலங்கும் திவ்வியமான தேவிமாரிருவரும் சங்கற்பத்தாற் கற்பிக்கப்பட்ட இரண்டு பொன்னுசனங்களில் வீற்றிருப்ப அம்மன்னவன் கண்டனன்; நீளகினையின் பூசைமுதலியவற்றின் முடையால் அபராதம் நேருமென நிமிடகாலம் உண்ணினைந்து அம்மன்னவன் விஸ்மயத்தை யடைந்து, சத்ரகதாதரன் சேஷசயனத்தினின்று மெழுத்தேபோலச் சயனத்தினின்று மெழுந்தனன். நித்திரைப்போது வேறுபிரித்திருந்த மாலையாரம்

அம்பர முதலியவற்றைக் கண்டோதியதத் தம திசித ஸ்தானத்திலணிந்து இருகரங்களி லும் மலர்ந்த புஷ்பங்களேக் கொணர்ந்து அன்புடன் புஷ்பாஞ்சலி செய்வான் தன்னு டைய புஷ்பசயனத்தி னின்றுங் கிளம்பிப் பூமியின்கண்ணே பத்தபதும ஆசனத்தி லிருந்து கொண்டு இதனேக் கூறத் தொடங்கினன்; ஜன்மம் துக்கஜீவனம் மூவிததாப முதலிய தோடங்களேக் கெடுக்கும், சந்திரப் பிரபைகளே வெல்வீர்களாக; வெளியுள் தமங்களே விலக்கும் ஆற்றலோடு கூடிய சூரியப் பிரபைகளே தேவிமார்களே வாழ்வீர்க ளாக, என இயம்பித்தானே குடலேயில் மலரைக் கவர்ந்து அவர்களுடைய பாதங்களிலும் புஷ்பாஞ்சலியைச் சமர்ப்பித்தான்; அதுதீர விருசூம் தன் புஷ்பங்களேப் பதுமினி களின் பதுமங்களி லுதிர்த்தனபோ லிலங்கியது.

(ச.) துயிலுதலும் = புத்திமான்களான மந்திரிகளோடு பகற்காலத்திற் செய்யத் தக்கது விசாரித்துக் கொண்டு ஒரு முகூர்த்தம் நித்திரைசெய்தான் அதன்பின் இவர்க ளும் = அந்தத்திவ்ய யோகினிகளான இவரிருவரும், நிலவனேய நகையார்ந்த = சந்திர கிரணம்போல் நின்மலமான மந்தார குசுமவாசனே நிறைந்த மந்தமாருத சம்பந்தமாகிய, அத்தலத்தில் = அக்கிரகத்தில், எய்த, இவரொளியால் = இவர்களது பிரபாவத்தால், நிலவனேய நகையார்ந்த மந்தாரகுசும வாசனே நிறைந்த மந்தமாருத சம்பந்தமானது இவர் பிரபாவத்தா லென்றுணர்க. (பிரபாவத்தாலேயே) நிருபதிக்கந்தியரான நரரு மங் கையருங் காட நித்திரைசெய்ய இந்தராஜன் இளேப்பாறி நயனக் கஞ்சமுகை தோன்ற விழித்தெழுந்து, முன்னின்றேரை = ஆசனத் துவயத்தில் விசிராந்தியாய் இருந்த கன னிகையிருவரையும் தரிசித்த கணத்து அப்பூபாலன் சந்தோஷ சித்தனுகித் தியானஞ் செய்து, புகழ்ந்திறைஞ்சி யருச்சித்தான், விழித்தெழுந்து = சேஷசயனத்தி னின்று மெழுந்த சக்கர கதாதரனேப்போல உணர்ந்தெழுந்து, சுத்தபூமியில் வஸ்திராசன மின் றிப்பத்ம பத்மாசன யுக்தனுயிருந்து தியானஞ்செய்து ஜபிப்பவரின் தாபத்திரய தாக தோஷத்தையும் தாரித்திரிய தாகதோஷத்தையும் சாந்திசெய்யும் சகிப்பிரபைகளே, வாகியாந்தர தமத்தை யரிக்கு மிரவிப்பிரபைகளே, என்று இறைஞ்சிப் புகழ்ந்து அருச் சித்தான் = அத்தேவிகளுடைய பாதங்களில் புஷ்பாகாரம்போல் விஜயீபவ எனக்கு சுமாஞ்சலி செய்தான். பிராதக்காலம். பாடபேதம் = ஜபதாம், பாடபேதம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மந்திரி யெழுதலும், தொழுதலும்:—இவனென.

இவனது நற்குலப் பழமை லீலேக்கு விளம்புவிப்ப வெண்ணிவாணி
யவனருகிற் றுயிலமைச்சன் விழிக்கவென வெண்ணுதலு மவனப்போதே
கவர்துயில் விட்டெழுந் திறைஞ்சக்கண்ட கலேமகள வனேக்கருணே கூர்ந்து
புவனபதி குலத்தொன்மை புகலென்ற லமைச்சனிவை புகலலுற்றான். ()

(ப - ரை.) இவனது = இம்மன்னவனது, நற்குலப்பழமை = புகழ்வாய்ந்த புரா தன குலபரம்பரையை, லீலேக்கு விளம்புவிப்ப வெண்ணி = லீலே கேட்குமாறு செய் விப்பான் கருதி, வாணி = ஸ்ரீ சரசுவதிதேவி, அவனருகிற் றுயிலமைச்சன் = அம்மன் னவன் சமீபத்தில் நித்திரைசெய்து கொண்டிருந்த மந்திரி, விழிக்கவென = எம்மை யுணர்கவென்று, எண்ணுதலும் = சிந்தித்தலும், அவனப்போதே = அம்மந்திரி அக் காலே, கவர்துயில் விட்டெழுந்து = மறைத்திருந்த நித்திரையினின்றும் ஜாக்கிரத்தை யடைந்து எழுந்து, இறைஞ்ச = தோத்தரித்துப் பாதங்களிற் குசுமாஞ்சலி செய்ததை, கண்டகலேமகள் = நோக்கிய வாக்குத்தேவி, அவனேக்கருணே கூர்ந்து = அவன்பேரிற் கிருபாகடாக்ஷம் வைத்து, புவனபதி = மகாராஜாவே, நின் குலத்தொன்மை புகலென்

ரூள் = குலபரம்பரையைக் கூறுவாயாக வென்றனள், அமைச்சன் = மந்திரியதனைக் கேட்டு, இவைபுகல லுற்ருன் = வருமாறு கூறத்தொடங்கினன். (55)

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ சரசுவதி தேவியானவள் மந்திரியைக் கொண்டு லீலாதேவிக்கு அரசனது பிறப்பின் பரம்பரையைத் தெரிவிக்கக் கருதிப்பக்கத்தில் நித்திரை செய்த மந்திரியைச் சங்கற்ப மாத்திரையானே எழும்புமாறு செய்தனள், எழும்பியதும் அத் திவ்யமான தேவிமார்களைத் தரிசித்துத் திருவடியின் கண்ணே நமஸ்கரித்துப் புஷ்பாஞ் சலியைச் சமர்ப்பித்துச் சந்நதியில் மிகவும் வணக்கத்துடன் உட்கார்ந்தனன். ஹே அரசனே ! நீயார், யாருடைய குமாரன். எப்போதிங்கு பிறந்தனை யெனத்தேவிவினவிய தைக் கேட்டமந்திரி இவ்வாறு மொழியலுற்ருன்:

(ச.) வாணி = பின்பு வாக்கீசுவரி, இவனது = இப்பூபனது, நற்குலப்பழமை = சென்மத்தை, எண்ணுதலும் = சங்கற்பித்த மாத்திரத்தில், கவர்தூயில் விட்டெழுந்த வனப்போதேகண்ட = தரிசித்த தேவிகளே, இறைஞ்ச = குசுமாஞ்சலி செய்து வணங்கி முன்பிருக்க, கலைமகளவனைக் கருணை கூர்ந்திப் புவனபதி குலத்தொன்மை (குலத் தோரை) புகல் கென்ருள் அமைச்ச னிவையுகலலுற்ருன். தினதராஜன் எவனுடைய சுதன் எப்போது எப்படி யிவ்விடத்துப் பிறந்தான் சொல்லென்று கலைமகள் ஆசீர்வதித் தாளென்பது வடமொழிப் பொருள் = ஹே அரசனே யென்பதும் தினது மன்னவன் என்பதும் மூலபாட பேதமாதலின் "ஹேராஜன் ! தினராஜ," அனுசரித்து ஸ்ரீ வீரசே கரமும் சமுசார தக்ரணியுஞ் சென்றதென வுணர்க.

(ஸ்ரீ - வீர - அ - கை.) குலபரம்பரையை மந்திரிகூறுதல்:—மன்னவரென.

மன்னவ ரெண்மனு குலத்தின் மன்னவனுங் கும்பரதன் மன்னர்மன்ன
னன்னவன் பத்திரரதனை யளித்தான் மற்றவனகி லரதனைத்தத்தா
னின்னிவன் பேரிரதனைத் தானீன்ருனிங் கிவன்சிந்துர தனைப்பெற்ருன்
சொன்னவன் சேய்சைலரத னவனுக்குக் காமரதன் ரூன்றலானுன்.

இனையவன்சேய் மகாரதன் மற்றிவன் சிறுவன் விண்டுரதனிவன் குமாரன் விநயமிகு மனுரதனிங் கிவனளித்த விடுரதனிவ் வேந்தர் வேந்த
னனையிவற்குச் சுமித்திரையா மையிரண்டு வயதிலிவற் கரசுநல்கி
நினைவொடுங்கும் பிதாவனமே நீங்கினனிவன் செங்கோ னெறியினின்ருன்.

(ப - ரை.) மன்னவரெண் = மன்னவர் யாவரும் வணங்கும், மனுகுலத்தின் = இக் குவாகுவம்சத்தின், மன்னவனும் = அரசனுகி வந்த, கும்பரதன் மன்னர் மன்னன் = இராஜாதிராஜனுகிய ஸ்ரீமான் கும்பரதன், அன்னவன் = அக்கும்பரதன், பத்திரரதனை யளித்தான் = பத்ரரதனை யீன்றனன், மற்றவன் = அவ்விந்து பிம்பன், அகிலரதனைத் தந்தான் = விசுவரதனைப் பெற்றெடித்தான், இன்னவன் பேரிரதனைத்தான் ஈன்ருன் = இவ்விந்துசன் பிருகத்ரதனைப் பெற்றனன், இங்கிவன் சிந்துரதனைப் பெற்ருன் = இவ்வ ரையன் சிந்துரதனைச் சனிப் பித்தனன், சொன்னவன் சேய்சைலரதன் = கூறிய விறைவன் குமாரன் சைலரதனுவன், அவனுக்குக் காமரதன் ரூன்றலானுன் = அவ்வர சனுக்குக் காமரதன் உற்பவித்தனன். (56)

இனையவன்சேய் = இம்மன்னவன் குமாரன், மகாரதன் = மகாரதனுவன், மற்றி வன் சிறுவன் = இவ்விறைவனது சுதன், விண்டுரதன் = விஷ்ணுரதனுவன், இவன் குமாரன் விநயமிகு மனுரதன் = இந்தராஜாவினது மைந்தன் அடக்கம் வணக்கம்முத

லிய குணங்கணிறைந்த மகோரதனுவன், இங்கிவன் அளித்த விரேதன் இவ்வேந்தர் வேந்தன் = முன்னிலையில் வீற்றிருக்கும் இம்மன்னவர் மன்னனுகிய விதூரதன் மஞ்ஞரதன் பெற்றெடுத்த மாண்புடையவனுவன், இவற்கு அனை சுமித்திரையாம்=இவ்வெம் மேந்தலின்ரூய் சுமித்திரையாவள், ஐயிரண்டு வயதில் இவற்கு அரசுகல்கி+பத்துவயதில் இவ்விறைவனுக்கு ராஜ்யாதி பத்தியத்தைக் கொடுத்துவிட்டு, தினைவொடுங்கும் பிதா = மனத்தைத் தம் வயப்படுத்திய இவரது தந்தையானவர், வனமே நீங்கினுன்=வனத்தை நோக்கித் தவத்தைக் குறித்துச் சென்றனர், இவன் செங்கோனெறியில் நின்ரூன்=இம் மன்னவன் அதுமுதலாகத் தருமத்தோடும் பூபீடத்தைத் தாங்கிவருகின்ரூன். வங்கிச பரம்பரையிற் பாடபேதமுளது. +ஹே தேவிமார்களே! தங்களுடைய பிரசாதமே யிதுவாம், தங்களுடைய சந்நிதியிலும் அடியேன் பேசும்படியான பாக்கியத்தை யடைந்தேனல்லவா, அடியேனுடைய பிரபுவின் ஜன்மபரம்பரையைச் சொல்லக் கேட்பீர்களாக, இக்குவாகு வம்சத்திற் பிறந்தவனுய்த் தாமரை யிதழ்போன்ற நேத்திர முடையவனுய்த் தன் புயநிழலிலுலே மறைத்ததேபோலச் சத்துரு தாரித்திரமுதலிய சந்தாபங்களை நீக்கிப் பூமண்டலத்தைப் புரப்பவனுய் ஸ்ரீமான் குந்தரதன் என்னும் பேரிறைவன் முன்னிருந்தனன், அவனுக்குச் சந்திரவதன மூற்ற பத்திரரதன் என்னும் நாமம் வாய்ந்த மைந்தன் உண்டானுன், அவனுக்கு விசுவரதன் என்னும் மைந்தனும், அவனுக்குப் பிருகத்ரதன் என்னும் மைந்தனும், அவனுக்குச் சிந்துரதன் என்னும் மைந்தனும், அவனுக்குச் சைலரதன் என்னும் மைந்தனும், அவனுக்குக் ஷகாமரதன் என்னும் மைந்தனும், அவனுக்கு மகாரதன் என்னும் மைந்தனும், அவனுக்கு விஷ்ணுரதன் என்னும் மைந்தனும், அவனுக்கு நபோரதன் ஆநாயம் என்னும் மைந்தனும், அவனது மகத்தாகிய புண்ணிய புஞ்ச பரிபாகத்தால் இவ்விதூரதன் என்னும் எங்களது பிரபுவானவர் உண்டானுர், இவர் பூரண அமல ஆதிருதியுடையவர், அமிருத திருவ்ருஷ்டியினுலும் சிதேகமாதாரிய ஔதாரியாதி குணங்களினுலே யாவரையும் மகிழ்வீப்பவர், பாற்கடற்குப் பூரணசந்திரனைப்போன்றும் யாவரையும் பூரிக்கச் செய்பவர், சுமித்திரை யென்னும் தாய்க்கு ஸ்ரீ பார்வதிதேவியாருக்குக்குகன் உண்டானதேபோல அபராஜிதன் எனனும்படி யுதித்தனர், இவரது பிதாபத்தாவது வயதில் இவ்வீராஜ்ஜிய பாரத்தை யிவர்பாற் கொடுத்து வைராக்கியத்துடன் வனஞ்சேன்றனர், அதுமுதலாகத் தருமத்துடன் இப்பூபீடத்தைக் காப்பாற்றி வருகின்ரூர், எங்களுடைய அறத்திருமம் பலந்தர வருங்காலம் போலும் நீங்கள் எழுந்தருளினீர்கள். +தருமமாதியமரம்

(ச.) மன்னவரெண் மனுகுலத்தில் = இக்ஷுவாகு வம்சத்தில், அகிலரதன்=விசுவரதன், பேரிரதன் = பிருகத்திரதன், சிந்துரதன் = சிங்கரதன், 56 - இனையவன் சேய், விண்டுரதன் = விஷ்ணுரதன், அரசுகல்கி = இராச்சியத்தைக் கொடுத்து, அதுமுதல் இவன் செங்கோல் நெறியில் நின்ரூன், பூபீடத்தைத் தர்மமாகப் பாலனஞ் செய்தான்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மந்திரி யுபசங்கரித்த பின்னர் அரசனைத் தன் முற்பிறவிக் காணுமாறு ஸ்ரீ சரசுவதிதேவி யனுக்கிரகஞ் செய்தல்:--என்பளவென.

என்பளவில் வேந்தனினின் முதற்பிறவி ஞானத்தா லெளிது காண்கென்
றன்பினெடு கையிலைவன் முடியை காமகெடாட் டருளலோடுங்
தன்பகையா மனவிருள்போய் லீலையுடன் வாழ்பதுமன் முனைக்கண்டா
னின்பமுற வியப்புற்ரூன் மாமாயை யிருந்தபடி யென்னே யென்ரூன். (58)

(ப. ரை.) என்பளவில் = என்று மந்திரிகூறி மௌனத்தை யடைந்தபோது, வேந்தனே = மன்னவனே, நின்முதற்பிறவி = உனது பூர்வஜன்மத்தை, ஞானத்தால் = விவேகத்தால், எளிது காண்க = சுலபமாய்க் காண்பாயாக, என்று அன்பினொடு = என்று புகன்று பிரீதியொடு, கையினுல் = திருக்கரத்தால், அவன் முடியை = அவ்வீரதனது சிரத்தை, நாமகள் = ஸ்ரீ வாக்தேவி, தொட்டருளலோடும் = பரிசித்தருளிய வுடனே, தன்பகையா மனவிருள்போய் = தனது விவேகத்தடையாகிய இருதய அந்தகாரமாயை நீங்கி, லீலையுடன் வாழ் பதுமன்தானும் = லீலா நாயகியோடு கூடிவாழும் பதுமராஜா தானுகவே, கண்டான் = பார்த்தான், இன்பமுற வியப்புற்றான் = ஆநந்த முண்டாகும் வண்ணம் ஆச்சரியத்தை யடைந்தனன், மாமாயை இருந்தபடி யென்னே யென்றான் = மாண் புடைத்தானமாயை இச்சமுசாரத்தைத் தோற்றிவைக்கும் விதம் எவ்வளவு விசித்திரமாகத்தா னிருக்கின்றது என்றனன்.

(ஸ்ரீ-வீர.) அந்தகாரத்திற்கு வெகுதூர்க்கடகாரித் தன்மைத் தரிசனப்பொருட்டு விசேடணம் மாயை யென்றதாம். லீலையாகிய பாரியோடு விலாசமா யிருப்பதாகக்கண்டு இம்மாயை அதிவிலாசமாக வியாபித் துளதென வுரைத்தான். என்பளவில் = தங்களுடைய தரிசனம் துர்லபமல்லவா ! இத்தகைய தரிசனத்தையன்றே இப்பாக்கியவான் அடைந்து பரமபவித்திரத்தை யடைந்தனர் எனக்கூறி மந்திரியானவன் மௌனமாக விருந்தனன், அவ்வாறே மன்னவனும் நமஸ்கரித்து வணங்கிய முகத்தோடும் பூமியின் கண்ணே பத்தபதும ஆசனத்திருந்தனன், அவனேநோக்கி ஹே அரச ! முன்ஜன்ம வரலாறெல்லாம் நினைதிரீ விவேகத்தால் எனச் சுயமாகவே சரசுவதி தேவியானவள் தமது திருக்கரத்தால் அரசனது சிரத்தைத் தடவிக்கூறினள், கூறவே ஹிருதய ஆகாசத்திலிருந்த ஜீவனே மறைக்கும் இருண்முதலியவை நஷ்டமாயின. ஞானதேவியார் பரிசித்த மாத்திரத்தில் அவன் மனமானது சாந்தப் பிரகாசத்தோடு கூடியதாயிற்று, இருதயத்தின் கண்ணே விளங்கித் தோற்றுகின்ற பூர்வ விருத்தாந்தம் யாவற்றையும் நினைந்து கண்டனன், விடித்ததேகத்தையும் சக்கரவர்த்தியாக இருந்து ஆண்டமையையும், லீலாதேவியோடு விலாசித்துக் கொண்டிருந்த தன்மையையும், ஞானதேவியாரது திருவருளினது வலுவினுலே அனுபவிக்காத வாயினும் அறிந்தனன், மகாதேவியாரது விருத்தாந்தத்தையும் லீலாதேவியினுடைய விசேட விருத்தாந்தத்தையும், தன்னுடைய முற்சரித்திரத்தையும், கண்டு ஆனந்த சமுத்திரத்தின் கண்ணே மூழ்கியவன்போல ஆயினன், ஆ ! ஆ !! சமுசாரமயமாய் நமது மனதில் இம்மாயை இவ்வண்ணமன்றே விரிந்து கிடக்கின்றது என்ன அற்புதம் அற்புதம் என்றனன்.

(ச.) என்பளவில் = என்று சொல்லி மந்திரி சும்மாவிருந்தபோது, வேந்தனே = அஞ்சலித்த கையினுய் வணங்கிப் பத்மாசனத்திற் சும்மாவிருந்த நிருபனே, நாமகள் = ஸ்ரீசரசுவதி, நோக்கி ராஜனே நீ, நின் முதற்பிறவி — அருளலோடும், தன்பகையாமன விருள்போய் = இருதயத்திலிருக்குந் தமமென்னும் பதுமனது விபரீதரூபமாயை நீங்கி, விபரீதரூபமான மாயை பதுமனது இருதயத்திருக்குந் தமமாதலின் தன்பகையான விருளென்பது பொருள். (சீவசேதன மறைத்துத் தமமயலாகிய வுலகத்திறத்திற்கெல்லாம் மேவு காரணமாகி மாயை என்னும் பிரமாணத்தை யிவ்விடத்து ஊகித்துணர்க) லீலையுடன் வாழ்பதுமன்றனுய்க் கண்டான் = மற்றேருலகராஜனுய் அந்தப்புரத்தில் லீலையோடு இரமித்திருந்த பூர்வ விருத்தாந்தத்தை நினைத்தான், மாமாயை யிருந்தபடி யென்னேயென்றான் = ஆன்மாவில் விஸ்தீரணமான சம்சாரத்திலிருந்த மாயையிருந்தபடி

யென்னே யென்ரான், இன்பமுற வியப்புற்ரான் = தேவிகளே உங்களுடைய பிரசாதத் தினால் இப்போது இவ்விடத்தென்னால் அறியப்பட்டதென் றறிசயித்தான், ஆன்மா வில் = தன்னிடத்தில் விகாசமான சம்சாரத்தில், இந்த மாயைதேவிகளுடைய அனுக்கி ரகத்தினால் என்னால் அறியப்பட்ட தென்று சொன்னானென்பது சம்பந்தம். (58)

(ஸ்ரீ - வீர - அ - கை.) முற்பிறப்பும் மாயாமகிமையுங் கண்டு ஐயங்கொண்டு வினவுதன் வினாதல்:—தாயரென.

தாயரிவராற் றெளிந்தே னெனநாடி யவர்சரணந் தலைமேற்சூடிப்
போயபவத் துடனீங்கி நாளொன்ரு மிவ்வுடலிற் புக்கபின்னைச்
சேயவெழுபது வருடஞ் சென்றதாற் செய்ததெலாந் தெளியாகின்றேன்
மாயமிது வென்கொலென மன்னவன் கேட்டலுங் கருணைவாணி சொல்வாள்.

(ப - கை.) தாயரிவராற் றெளிந்தேன் = தாய்மார்களாகிய இவர்களது திவ்யகிரு பையால் தெளிவை யடைந்தேன், எனநாடி = என்றெண்ணி, அவர் சரணந்தலைமேற் சூடி = அவர்தந் திருவடிகளைச் சிரமேலணிந்து, போயபவத்துடனீங்கி = சென்ற சென் மத்துத் தேகம்போய், நாள் ஒன்ரும் = தினமேகமாம், இவ்வுடலிற் புக்கபின்னை = இத்தேகத்திற் புகுந்தபின்னர், சேய எழுபதுவருடம் சென்றது = நீட்சியான எழுபது வருடங்கள் சென்று விட்டன, ஆல் அசை, செய்ததெலாம் தெளியாகின்றேன் = செய்த அநேககருமங்களை எண்ணுகின்றேன், மாயமிது என்கொல் என = மன்னவன் கேட்ட லும் = இது என்னமாயமோ திருவருள் செய்யவேண்டு மென்று அரசன் வினவுதலும், கருணைவாணி = தயைவடிவமான சரசுவதிதேவி, சொல்வாள் = அனுக்கிரகஞ் செய் வாளாயினள். (59)

(ஸ்ரீ - வீர.) தேவிமார்களது திருவருளாலன்ரே இப்போது யாவற்றையும் கண்ட னன். ஹே தேவிமார்களே ! முன்னிறந்த எனக்கு ஒரு நாள்தானே ஆகியிருக்கின்றது இப்போதெனக்கு எழுபதுவருடம் கழிந்துளதே இஃதென்னே ! அநேக காரியங்களை ஸ்மரிக்கின்றேனே, மூப்பாட்டனையும் நினைகின்றேனே பாலியத்தையும் தாருண்யத்தை யும் மித்திரர்களையும், நெருங்கிய பந்துக்களையும் நினைக்கின்றேனே இஃதென்னே என்று மன்னவன் விண்ணப்பிக்க, அதற்கு ஞானதேவியார் கூறுவாராயினர்.

(ச.) தாயரிவரால் தெளிந்தேன் எனநாடி அவர் சரணம் தலைமேற்சூடி, போயபவத் துடனீங்கி நாளொன்ரால் = தேவிகளே பதுமரூபத்தான் மிருதமான எனக்கு ஒருதினம் சென்றது, இவ்வுடலில் புக்கபின்னை = இவ்விடத்திற்போது இவ்விரோத ஜன்மத்தில், சேயவீரெட்டாண்டு சென்றதால் = பதினாறு வயதாயிற்று, சேயவெழுபது வருடஞ் சென்றதால் என்றும் பாடமுளது. செய்ததெல்லாந் தெரியாகின்றேன் = அநேக கரு மங்களையும், மித்திரபந்து பரிஜனங்களையும் ஸ்மரிக்கின்றேன், மாயமிது வென்கொ லென = தேவிகளே யிதுவென்ன மாயமென்று மன்னவன் கேட்டலும், கருணைவாணி சொல்வாள் = ஞப்திமய ஸ்ரீதேவி வசனிப்பாள் என்றவாறு. தமிழ்மொழிபெயர்ப்பா னது மும்மடித் தேவர்பாடத்தையே யனுசரித்த தாதலின் ஈண்டப்பாடமும் இருவகை யாகியது போலும், ஆயினும் லீலைமுன்வந்து கண்டது ஈரெட்டாண் டாதலினாலும் பின் வசிட்டப் பிராஹ்மணரி கிருகாதி யாத்திரை முதலியன நடந்திருத்தலினாலும் பெரிய வாசிட்டத்தில் பால்யத்தை ஸ்மரிக்கின்றேன் தாருண்யத்தை ஸ்மரிக்கின்றேன் என்றி ருத்தலினாலும் சேயவெழுபது வருடம் என்றபாடமே தருமென்றுணர்க.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஞானதேவியார் சர்வப்பிரபஞ்சமும் சொரூபத்தானே அதிஷ்டான சின்மாத்திர சொரூபமாகவே யிருக்கின்றது தோற்றமாகிய மற்றையதோஷயாமாத்திரமேயாம் என்னும் உண்மையை யுபதேசிக்கும் பொருட்டு முதலில் தூரதேசகாலத்திலிருக்கும் லோகாந்தர கமனமயக்கமுகற்றி யுபதேசிக்கின்றார்.—இறப்பென.

இறப்பென்னு மாமூர்க்சை யெய்தியபின் னப்பொழு தவ்விடத்திற்றானே
பிறப்பென்னு மாமோகம் பெரிதுண்டாம் விண்போலப் பிறங்கித்தூய்தாஞ்
சிறப்புள்ள வுன்மனதிற் செய்தொழிலா மயக்கமே தெரியாகின்ற
துறத்துன்னு மெழுபதாண் டினக்ககன்ற தென்பதனே யுணர்ந்துநோக்காய்.

(ப - ரை.) இறப்பென்னும் மாமூர்ச்சை எய்தியபின் = மரணமகா மோகமூர்ச்சையின் பிராப்தியின் பின்னர், அப்பொழுது அவ்விடத்தில் தானே = அம்முகூர்த்தத்திலேயே அவ்வுலகத்திலேயே, அவ்வீட்டிலேயே, பிறப்பென்னும் மாமோகம் = ஜன்ம மென்னும் மகாமயக்கம், பெரிதுண்டாம் = மிகமிகவு முண்டாகும், விண்போலப் பிறங்கித்தூய்தாம் சிறப்புள்ள வுன்மனதில் = நிருமல ஆகாசம்போல நிருமலமாக விளங்கும் உன்னுடைய சித்தத்தில், செய்தொழிலாம் மயக்கமே தெரியாகின்றது = செய்யாகின்ற விவகாரவித்தாரப்பிரமமே தோற்று கின்றது, உறத்துன்னும் எழுபதாண்டகன்றது உனக்கு = அநேகவித்திட விவகாரத்துடன் பிருதிகளுடன் எழுபது வருடம்கழிந்த தன்றே வுனக்கு, என்பதனே யுணர்ந்து நோக்காய் = என்னும் இதனே நீயே உய்த்து நோக்குவாயாக.

(ஸ்ரீ -வீர.) பார்க்கப் படுவதனுனே லோகம் என்னும் விற்பத்திகொண்டு உலகம் தேகமாம். பிறப்புமுதலன அதிவிஸ்தாரமாக வுற்பன்னமாம். அதேவீட்டில் அதேமனதில் அக்காலத்திலேயே தோற்று மென்பராம். விவகாரமயக்கங்களினுலே வியாபிக்கப் பட்டிளதாம். தோற்றுவதையே லேசமாகக் காண்பிப்பார் எழுபதாண்டென்றார். மறுடர்க்குவருடம் நூறல்லதில்லையெனக் கூறப்பட்ட ஆயுளைச் சம்பந்தித்த எழுபது வருடங்கள் சென்றுவிட்டன வென்னுந் தோற்றம் உண்டாகி யிருப்பதை யாராய்வாய். மரணமகா மூர்ச்சையின் பின்னரே அதேகாலத்தில் இந்நினது வீட்டிலேயே இதனதிஷ்டான சிதாகாசத்திலேயே இருப்பதும் மாயாவரணத்தான் மறைபட்டதாய கிரிக்கிராமத்த அந்தணன் வீட்டினுள்ளே யிருப்பதும் அப்பதுமாண்டத்திலிருப்பதும், அவ்வரண்மனையிலேயே யிருப்பதும், அதனினும் பிரதான கிரகத்தினுள்ளே யுள்ளகனத்தேயிருப்பதும் ஆம் இப்பிரமாண்ட மண்டபம், இந்தப்பிரமாண்ட மண்டபத்தினுடைய உள்ளே இப்போது காணப்படும் நினது ஜன்மாதிபுதிதாகவே தோற்றும்; ஆனுலவ்வந்தணன் ஜகத்தே இங்ஙன்றேற்றுகின்றதோ வெனின், இன்றும், மற்றேவேறுவேறுகவே இவ்வுலகவீடானது தோற்றுகின்றது; மறையவனில்லத்தே எமது பக்தனுகிய ஜீவனுளன், ஆண்டேயவனது பூபீடம் அம்மண்டபத்தேயுளது, அவ்வில்லத்தே இப்பதுமசமூசாரமண்டலமுளது, அப்பதுமக்கிரகமண்டபத்தியேயடையவே யாரம்பிக்கப்பட்டதாயிந்த நினது வீடிருக்கின்றது, மூவுலகமுமே மனோவிகாரமாத்திரமா யிருக்கின்றதாதலின் நினது நிருமல ஆகாசம்போலாகிய நிருமலமனத்தின் கண்ணே இவ்விஸ்தார விவகாரமயக்கத்தினுடைய பிரதிபிம்பமான தண்டாகி யிருக்கின்றது (நிருமலக்கூற்றுப் பிரதிபிம்பப் பொருட்டாம்) விவகாரமயக்க விஸ்தாரம் கண்கண்டதைக் கொண்டே கருதலாமன்றே ! என்ஜன்மம் வெளியாயிருப்பதே போலயான் இக்குவாகுகுலத்தன் என்பதும் வெளியேயாம், என்பெயரின்னது, எனக்குமுன்னே பாட்டன்மாரிருந்தார். யான்பிறந்து

பாலனென்; திகுந்தேன் எனக்குப்பத்து வருடத்தில் பிதாராஜ்யமீந்து பரிவிராட்டாய்த் தவப்பொருட் செய்சென்றனர், யான் அரசனுய்த் திக்குவிஜயஞ்செய்து சக்கிரவர்த்தியாகி இம்மந்திரி மாரோடும் நீதியாய்ப் பிரஜாபரிபாலனஞ் செய்கின்றேன் யாகாதிகளும் தருமாதிகளும் முறைபிறழாது செய்கின்றேன், இப்போதெனக்கு எழுபது வருடமாயிற்று, பகைவராற் பெரும்பயமுளது, போர்புரிந்தலுத்துச் சயனித்தேன், தேவிமாரைப் பூசித்தேன், ஒரு தேவி பூர்வஜன்ம மறியுமாறு உணர்வளித்தாள். என்னிதயம் உணரவேண்டியதை யுணர்ந்து திருதிருத்தியத் தகைமையை யடைந்துவிட்டது, ஜயங்களும் சர்வதுக்கங்களும் நீங்கிவிட்டமையின் மகாசாந்தனுயினேன், நிரதிசய சுகமுற்றுப் பொங்கித்ததும் பிப்பூரித்தேன், கேவலம் எகரச சுகரூபமாகவே துலங்குகின்றேன் என்பதாக இங்ஙன் பெருமயக்கம் மிகதிறைந்துண்டாகி யிருக்கின்றது இதனை யுய்த்துணருதி.

(ச.) ஞப்தி, இராஜனே, இறப்பென்னும் மாமூர்ச்சையெய்திய பின் = மகாமோக மூர்ச்சையின்பின், அப்பொழு தவ்விடத்திற்றனே, பிறப்பென்னு மாமோகம்பெரிதுண் டாம், அக்காலத்து அக்கிரகத்திற்றனே இந்தச் சனனசர்க்க மென்னும் அபாரப்பிரமை யாம், அதுவே விண்போலப் பிறங்கித் தூய்தாம் சிறப்புள்ள வுன்மனத்தில் = நிர்மலா காசம்போல் நிர்மலமான வுனது சித்தத்தில், செய்தொழிலா மயக்கமே தெரியா நின் றது = இந்தப் பிரதிபாச மாத்திரமான விவகாரமென்னும் பிரமையை அறிகின்றது, உறத்துணும் ஈரெட்டாண்டு உனக்ககன்றது என்பதனை யுணர்ந்து நோக்காய். (மo)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மருட்சியானே காலதீர்க்கந் தோற்றலைக் கூறி ஞானோபதேசஞ் செய்தல்:—கடிகையென.

கடிகையிரண் டினினெடிய காலமுறும் கனவொக்குங் கழிந்தவாணாட்
படியுறுமாயா விகற்பநனவிலே வெகுவிதமாய்ப் பரந்து தோன்றும்
நெடியபிறப் பிறப்பென்று நினக்கில்லை மெய்ஞ்ஞான நினக்குரூப
முடிவில்பதத் திருக்கின்றாய் சகமெல்லாங் கண்டிருந்து முழுதுங்காணாய்.

(ப - ரை.) கடிகை யிரண்டினில் = முகூர்த்த மாத்திரத்தில், நெடியகாலம் உறும் = சம்வத்சர சதப்பிரமம் உண்டாம் படியான, கனவொக்கும் கழிந்தவாணாள் = சொப்ப னத்திற்குச் சமானமாம், சென்ற நினது வாழ்நாள், படியுறுமாயா விகற்பம் = எல்லாத் தோற்றங்கட்குங் காரணமாய மாயாவிலாசம், நனவிலே = ஜாக்கிரத்தின் கண்ணே, வெகுவிதமாய் = அநேகவகையாக, பரந்து தோன்றும் = விஸ்தரித்து விளங்கும், நெடிய பிறப்பிறப் பென்று நினக்கில்லை = உண்மையாகவோ ஜனனமும் மரணமும் ஒருபோது முனக்குக் கிடையவே கிடையாது, மெய்ஞ்ஞானம் நினக்குரூபம் = சுத்த விஞ்ஞானரூபமே உண்மையா யுனது வடிவமாம், முடிவில் பதத்திருக்கின்றாய் = பரம சாந்தமான ஆன்மாவின் கண்ணே நீ நிலைபெற் றிருக்கின்றாய், சகமெல்லாங் கண்டிருந் தும் முழுதும் காணாய் = இவ்வியாவற்றையும் நீ யெப்போதும் பார்த்துக் கொண்டிருந்த போதிலும் ஒன்றையுமே காணாம லிருக்கின்றாய்.

(ஸ்ரீ - வீர.) ஆயின் என்னே உண்மையா யிருத்தல் எனக்கடாவ விடையளிப்பார், நெடிய பிறப்பென்றார். தத்துவ திருஷ்டியைப் பற்றிப்பகருவார் காணுமென்றார். ஒவ் வொருகால் திருஷ்டி லக்ஷணமியானது சேர்ந்தும் சேராமலும்வளரும், நனவின்கண்ணே வேறுஜீவர்களுடைய சர்க்கத்தோடு சேரும் கனவின் கண்ணே சேராதாம், அம்மரண மூற்ற முகூர்த்தத்தில் ஞானபானுவாய நினக்கு இத்தோற்றமெல்லா முண்டாம், இவ்வ சத்துரூபக் கூட்டமெல்லாம் உண்டாம், கனவினிற் கடிகையொன்றிற் கண்டாமன்றே

நூறுவருடமயல், சங்கற்ப நிர்மாணங்களில் ஜீவனம் மீண்டும் மரணங்கண்டாம், கந்தர்வ நகரத்திற் குட்டியங்களையும் அதன் கண்ணுற்ற சித்திரங்களையும் கண்டாம், ஓடமோட அதனுள் எிருப்பவனுக்குப் பக்கத்திருக்கும் விருக்ஷமும் பர்வதமும் ஓடுவதன் காண்கை யுங் கண்டாம், தன்னுடைய தாதுக்களாகிய வாத பித்த சிலேஷ்மங்கள் கலக்கமுறவே சங்கிபாதமுண்டாக அபூர்வமாகப் பர்வதநர்த்தன முண்டாதலுங் கண்டாம், கனவின் கண்ணே விவகாரத்திற்குப் பொருத்தமறப் பொய்யான தன்றலெவெட்டித் தன் கரங் கொண்டேகலும் கண்டாம், இவ்வண்ணம் மித்தையாகவே மிகப்பெருமையதும், அகற் றலாகாததும். ஆகிய பெரும்பிராந்தி யிதுவாம், ஆயின் பரமார்த்த சத்தியமாயிருப்பது யாதெனின், உண்மையாக நீயொருகாலத்திலும் உண்டாகவு மில்லை மரிக்கவுமில்லாதாய நல்லறிவு மயமாயிருக்கின்ற நீ சாந்தனுய் நின்வடிவின் கண்ணே நிலைபெற்றுளாய், திரு சியமியாவும் பொய்யாகுங்கால், அதனைகூடிச் சிதாபாச வடிவமாகக் காண்குதலும் பொய்யேயாகலின் நிர்விஷய சின்மாத்திரமே சேடித்து நிற்கும், எவ்விவ்வியாவற்றையும் காண்கின்றனையோ இவ்வியாவற்றையுமே காண்கின்றிலாய்

(ச.) கடிகை யிரண்டினி னெடியகாலமுறுங் கனவொக்கும் = ஒரு முகூர்த்தத்திற் சதவருஷம் இராச்சிய சுகத்தை யனுபவித்தே னென்பது முதலிய பிராந்தி மாயாவிலா சத்தால் எழுஞ் சொப்பனத்துக் கொப்பாம் கழிந்தவாணாட் படியுறு மாயாவிகற்ப நன வீலே வெகுவிதமாய்ப் பரந்து தோன்றும், படியுறும் = பூமியிற் சயிக்கும், நன வீலே வெகுகாலப் பிரமையினுல் பரந்துதோன்றும், சர்வசம்சாரமும் மாயிகமாதலி னென்பது பொருள். நெடியபிறப் பிறப்பென்றும் நினக்கில்லை = நீ யொருபோதும் பிறந்தவனு மன்று இறந்தவனுமன்று, மெய்ஞ்ஞான நினக்குரூபம் = நீ சுத்தவிஞ்ஞானரூபன், முடி வில் பதத்திருக்கின்றாய் = ஆன்மாவிற் சாந்தனுயிருக்கின்றாய், ஆன்மா நிர்விகாரத்தால் எப்போதும் சொரூபமாகவே யிருக்கின்ற தென்பது கருத்து. எப்படி யான்மாவிற்குச் சகநமரணாதி மித்தையோ அப்படிச் சகசிருட்டியும் மித்தையெனல்: சகமெலாங் கண் டிருந்தும் முழுதுங்காணாய், முழுதும் = எவ்வளவும், பிராந்தியால் அனைத்தும் பார்க்கி றாய் உண்மையாக அணுவும் பார்த்திலை, யென்பது பொருள். (61)

(ஸ்ரீ-வீர - அ-கை.) வஸ்துவின் நிதியானது அங்ஙன மிருந்தபோதிலும் மூகரறிவ தில்லை யென்கின்றார்:—எல்லாமென.

(ச-அ-கை.) ஆயின் தோற்றுவ தென்னெனில் உத்தரம்:—எல்லாமென.

எல்லாமா மியல்பினுலுன்னு லுன்னிடத்தி லிருந்திலங்கா நின்றாய், சொல் லாமைந் தரைப்பிடித்த தொட்டிலிற் பேய்சுடலையிற் போந்தொன்மை போ லப், பொல்லாத மூகர்க்குப் புனியுறுதியாய்த் தோன்றும் பொன்காணுதோ, ரல்லாது பணியென்பர் தற்பரத்தைக் காணுதோ ரகிலமென்பர்.

(ப - கை.) எல்லாமாம் இயல்பினுல் = சர்வான்மகத் தன்மையினுலே, உன்னுல்= ஆன்மாவினுல், உன்னிடத்தில் = ஆன்மாவினிடத்தில், இருந்திலங்கா நின்றாய் = நித் தியம் விளங்குகின்றாய், சொல்லாமைந்தரைப் பிடித்தபேய் = மூகபாலகரைப் பீடித்த வேதாளம், தொட்டிலிற் சுடலையிற் போந்தொன்மை போல = தொட்டிற் காலமேமுத லாக மயானம் போம்வரை தொடர்ந்து துயர்தருவதே போல, பொல்லாத மூகர்க்கு = அசுத்தமதிவாய்ந்து மூடராகிப் பரம்பொருளே நாடாதவர்க்கு, புனி உறுதியாய்த் தோன் றும் = அசத்தாகிய மூலகம் சத்தாய் வஜ்ரசாரம் போற்றிடதரமாய்த் தோற்றுநிற்கும், பொன்காணுதோர் = கனகத்தைக் காரணமா யறியாதவர், அல்லாது = பொற்றிருட்

டியைவிட்டு, பணியென்பர் = அணியென அறைவர், அதுபோலத் தற்பரத்தைக்காணுதோர் அகிலமென்பர் = அதிஷ்டான பரமாத்மாவாகிய தம்மையுள்ளபடி கண்டறியாதவர் திருஷ்யகாமரூப மூளதெனக் கண்டுதிகைப்பர்.

(ஸ்ரீ - வீர.) விளங்குகின்றீர் = விஸ்புரண மாகின்றீர், இப்போது உபதேசித்த அறிஞனது திருட்டியைப் புகழுதற் பொருட்டும், அதன்மாறுபட்ட திருஷ்டியை விடுதற் பொருட்டும் வித்வத் திருஷ்டியைப் புகழுவார் பொல்லாத வென்றார். எங்குநிறைந்த பதத்தின் கண்ணே அழுத்தமற்றவர் உண்மையாக வுலகம் இன்மையதாகவே யிருந்த போதினும் அம்மகா மூடனுடைய திருஷ்டிக்கு பரமார்த்த சத்தாகவும் வஜ்ரசாரமாகவு மிருக்கும், வஜ்ரத்தின் ஸாரம்போல் அதிதிடதரமாக விருக்கும். பாலவேதாளமென்பது பாலன்தன் சரீரையில் ஆரோபித்ததாம், மரணபரியந்தம் துக்கத்தைக் கொடுத்துக் கொண்டே யிருக்கும் அது சத்தியமாகத் தோற்றுவதேபோல மூடமதிக்கும் உலகம் சத்தியமாகவே தோற்றிக்கொண்டிருக்கும், மருப்பூமியிற் றோற்றும் தாபசீரையேமயலான் மான் நன்னீரென மயங்கும். கடகதற்பனைக் கதிஷ்டான பூதமாய கனகவிடயத்தில் அவிவேக முடையவனுக்குக் கனகவிகிருதமான கடகத்தில் கடகபிஸ்தா மென்னும் மாறுபட்ட வுணர்வேயுளதாம், ஒரு சிறிதும் ஹேமமதியே யின்றும், இது கடகமன்றும், மற்றேபொன்னே யாமென்னும் மதியுளதாவதே கிடையாது. இத்திருஷ்டாந்தம் போன்றே அஞ்ஞனுக்கும் அதிஷ்டானப் பிரஹ்மஞான மில்லாமையின் திருஷ்டியப் பிராந்தியே யுளதாம் அயலாகப் பரமார்த்த திருஷ்டியே கிடையாதாம், இதுதிருஷ்டியம் இல்லை, மற்றே பிரஹ்மமேயாம் என்னும் பிரமிதியுண்டாவதே கிடையாது. காடாகவும் மலையாகவும், கயமாகவும் பாம்பாகவும், மாடாகவும் மரமாகவுமே காண்பன் என்பதாம். நின்னுலேயே நின்னிடத்தில் நித்தியம் 'எல்லா வடிவமாகியே யிலங்குகின்றீர்' விகாரம் வாக்கினல் விரிந்திடும் பெயரே, உகாமண்டானே யுண்மையதாகும், எனயாவும் வாசிகமேயாம். வித்வான்களது திருஷ்டியினனே உலகின்பொய்ம்மையை விஸ்தாரமாக வருணித்து அதனைத் திடப்படுத்தும் பொருட்டு அஞ்ஞ திருஷ்டியினனே அதற்கத்தியந்த திடசத்தியத் தன்மை கூறுவார் பொல்லாத வென்றார். அறியாமதியனும் மூடனும் விஸ்தாரபதத்தில் திடமான விற்பத்தியில்லாஞ யிருக்கும் அவனுக்கு, இவ்வுலகமானது அசத்தாக இருந்தபோதினும், திடமான வஜ்ரசாரத்திற் கொப்பாக அதிதிடமான சத்தாகவே யிருக்கும்: இவ்வுலகத்தின் கண்ணே அர்த்தக்கிரியா காரித்தன்மையானே சத்தியத்தன்மை பிரசித்தமாமென்க. அசத்தாயினும் அஞ்ஞனுக்கு அர்த்தக்கிரியா காரித்தன்மையானே சத்வமாதல் கண்டதுண்டோ வெனின் ? உண்டாம், பாலகனுக்குத் தோற்றிய வேதாளமானது மரணபரியந்தம் துக்கத்தைக் கொடுப்பதே யாமன்றே, அதுபோல அசத்தேயாய ஜகத்தானது மூடபுந்தியனுக்குச் சத்துவடிவமாகத் தோற்றுகின்றது; மருப்பூமியாதபன்றனே அஞ்ஞமிருக திருஷ்டியால் உண்மை நீராய் மிருகங்கட்கு மயக்காரண மாவதேபோல அசத்தியமேயாய இவ்வுலகமானது மூடமதியனுக்குச் சத்தியமாகத் தோற்றும். ஜந்துக்கட்குக் கணமரணமானது அசத்தியமாகியும் சத்தியமாகத் தோற்றுவதேபோல மூடமதியினர்க் குலகமானது சோக மோதனுதியர்த்தக்கிரியா காரியாகத் தோற்றும்; தொடர்ந்து தோற்றும் கனக சொரூபத்தை யறியாதவனுக்குக் கனகத்தாலாய கடகத்தே, கடகவுணர்வே யிருக்கின்றதன்றித் தங்கமதி சிறிதுங் கிடையவே கிடையாதாம்; அஃதொப்ப அறியானுக்கு வீடுகளும் மலைகளும் விருக்ஷங்களும் கஜங்களும் நாகங்களும் புரங்களும் ஆகிய இவற்றின் அதிஷ்டானமா யிலங்கும் சர்வ அனுகத ஏகசற்பிரஹ்ம திருஷ்டி கிடையவே கிடையாது இவற்றின்கண் மாறுபதிருஷ்டி மென்னும் திருஷ்டியே யுளதாம்.

(ச.) எல்லாமாயியல் பிஞுலுன்னு லுன்னிடத்தி லிருந்திலங்கா நின்றுய் = தற் சொரூபமே சர்வான்மகமாதலின் அப்படி யப்படிப் பிரகாசிக்கின்ற தென்பது பொருள். உன்னுலுன்னிடத்தில் = ஆன்மாவால் ஆன்மாவில்; பாமரன் பிரபஞ்சத்தையே பரமார்த் தம்போல் நினைக்கின்றனனுலோ வெனின்? சொல்லாமைந்தரைப் பிடித்த தொட்டிலிற் பேய் அசத்தேயான வேதாளஞ் சத்தாகாரமாய்ச் சுடலையிற் போய் தொன்மைபோல் = மரணபரியந்தந் தக்கங் கொடுப்பதுபோல, பொல்லாத மூகர்க்குப் புலியுறுதியாய்த் தோன்றும் = பிரஹ்மத்தி லிரமியாத அசுத்தமதியுடைய மூடர்க்கு அசத்தான சகமே சத்தாகாரமாகப் பிராமாணிகமாகத் தோன்றித் தக்கங்கொடுக்கும், மருமரீசிகாரூபமான ஆதபமே மிருகங்களுக்குப் பிரமையாற் சலமாவதுபோல மூடமதியுடையோர்க்கு அசத் தியமான சகத்தே சத்தியம்போலா மென்றுணர்க. பொன்காணுதோ ரல்லாதார் பணி யென்பர் தற்பரத்தைக் காணுதோ ரகிலமென்பர் = அல்லாதார் = விற்பன்னமற்றவர், பொன்காணுதோர் = கனகசம்பந்தமான கடகத்திற் கனகத்தைக் காணுதவராய், பணி யென்பர் = ஆபரணமென் றெண்ணுபவராவர். கடக ஞ்தியினரேயன்றி எவ்வளவும் ஏமபுத்தியினர் அல்லர்; அதுபோல, தற்பரத்தைக் காணுதோர் = இத்தத்திருஸியந் திருக் கேயாம் அன்னியம் அன்றென்னும் பரமார்த்த திருட்டியின்றிய அஞ்ஞர் அகிலமென் பர் = புராகார நராகாகேந்திரராக விலங்காகின்ற அபரமார்த்த திருஷ்டியை யுடையவ ராவர், காரணசொரூப மறியாத காரியபுத்தியே யுடையார்க் கக்காரியமே பரமார்த்த மாகத் தோன்று மென்பது பொருள். (62)

(ஸ்ரீ - வீர - அ - தை.) இங்ஙனந் தள்ளத்தக்கதாகிய அஞ்ஞதிருஷ்டியைக் காண் பித்துக் கொள்ளத் தக்கதாகிய தஞ்ஞதிருஷ்டியை விஸ்தரிக்கின்றுர்:—தஞ்ஞன் = அதையறிந்தவன்—தனேயென.

தனேமுதலாய்க் காண்கின்ற சகமெல்லா நீள்கனவாஞ் சகத்திற்றேன்று
மினேயபொருள் களுங்கனவிற் காண்கின்ற பொருள்களா மென்றுதேர்வா
யினேயபொருள் களுங்காணு வறிவுமாத்திரம் வடிவாய னேத்துமேவி
வினேயில்செறி வாய்க்கனமாய்ச் சுத்தமாகிப் பிரமவிண்ணே யுண்டாம்.

(ப - ரை). தனேமுதலாய்க் காண்கின்ற சகமெல்லாம் = சித்த அகங்தை முதலிய வற்றுடன் கூடியிலகும் இவ்வுலகம் யாவும், நீள்கனவு ஆம் = தீர்க்கசொப்பனமாம், சகத்தில் தோன்றும் இனேயபொருள்களும் = சாக்கிரத்தின்கண் ணுண்டு புலப்படும் பதார்த்தங்களும், கனவிற் காண்கின்ற பொருள்களாம் என்று தேர்வாய் = கனவிற் றேற்றும் பொருள்கள்போலவே யாமென்ன வெண்ணுதி, அனேயபொருள்களும் காணு = அத்தகைய பதார்த்தங்களும் புலப்படா, அறிவுமாத்திரம் வடிவாய் = சின்மாத்திர வடிவாய், அனேத்துமேவி = சர்வகதமாய், வினேயில் = சாந்தமாய், செறிவாய் = பர மார்த்தமாய், கனமாய் = ஏகரசமாய், சுத்தமாகி = சுசியாய், இலங்கும், பிரமவிண்ணே யுண்டாம் = வியாபக பரம ஆகாசமே யுளதாம். (63)

(ஸ்ரீ - வீர.) ஈண்டிலேகில் கனவுகாண்பவர் கயலாகச் சொப்பன திருட்டாப் புருடர் எங்ஙனம் மித்தையோ அங்ஙனமே, கனவுப்புருடனுக் கயலாய இப்புருடர் மித்தையே யாவர். கனம் = நிரந்தரமெனவுமாம், அவிடயசின்மாத்திர சொரூபமாய்ப் பரம ஆகாச மாயிருக்கும் பரம்பிரமம் சர்வகதமாகி நிரங்குசமா யுளதென வுணர்க. அகந்தாதிகளு டன்கூடி யிராகின்ற தீர்க்கசொப்பனமாம் இவ்வுலகம், தன்னினும் அயலாயிருக்கும் சத் தியஜனங்கள் கனவிற்கண்ட வேறுபுருடர்களே, ஆயின், அவர்கள் எங்ஙனம் சாஸ்திரங்

நாகசுவ

ஞான வாசிட்டம்

களிற் கூறிய வேட்டல் வாங்கல் கூறன் முதலிய அர்த்தக்கிரியா சமர்த்தர்களாய்ச் சத்தியர்களெனச் சாஸ்திரங்களி லங்கீகரிக்கப் பட்டுளார்கள் ? சத்தியர்கள் ஆகுமாறுகூறக் கேட்குதி ! சர்வாதிஷ்டானமாயும் சாந்தமாயும் " பிராணன்களே சத்தியம் அவற்றினு மிது சத்தியம் " என்னும் மறைமொழியின்படி நிரதிசய சத்தியமாயும் சுசியாயும் திருஷ்ய மற்ற சின்மாத்திர வபுவாயும் விஸ்தாரமாய பரமாகாசமாயும் அப்பொருளிருக்கும்.

(ச.) தானமுதலாய்க் காண்கின்ற சகமெல்லாம் நீள்கனவாம் = அகங்காராதியாய்த் தோற்றும் இந்த விசுவத்தைத் தீர்க்க சொப்பனமா மென்றறி, கனவிற் காண்கின்ற பொருள்கள் சகத்திற்றோன்று மினைய பொருள்களுமா மென்று தேர்வாய் = சொப்பனத்திற் சொப்பன புருடாதிகள் நினைக்கன்னியமாகத் தோற்றுவனபோல் இச்சாக்கிர சம்பந்தமான புருடாதி வஸ்துக்களும் பின்னமாகத் தோற்றுகின்றன வென்றுணர்தி; சேதநா சேதந விடய மனைத்துமான பேதாபாசம் மித்தையேயாமென்பது பொருள். சாக்கிரத்திலென்பது சகத்தில் என்று மயங்கினின்றது. அனைய பொருள்களுங் காணுவறிவு மாத்திரவடிவா மனைத்துமேவி னினையில் செறிவாய்க் கனமாய்ச் சுத்தமாகிப் பிரமவின்னே யுண்டாம் = திருஷ்ய சம்பந்தமற்ற திருக்குமாத்திர ரூபமான சிதாகாசான்மகமே சர்வகதமாய்ச் சாந்தமாய் வியாபகமாய் பரமார்த்த கனமாய்ச் சுசியாயிருக்கின்றதாம். (௬)

(ஸ்ரீ-வீர-அ-கை.) அதனது மாயாசபல ரூபத்தைக் கூறுகின்றார்:—முழுதுமென.

முழுதுமாய் முழுதுடைத்தாய்ச் சத்திமுழுது மூள்ள மூர்த்திதானே
பழுதிலாதெவ் விடத்தெப் படிதோன்று மவ்விடத் தப்படியேதோன்றும்
வழுவிலா மெய்ஞ்ஞானநிலை லீலைபொருட் டானும் வழங்கப்பெற்றுய்
நழுவிலா வுண்மையொடுந் தெளிந்தனையாம் போதுமென நவிலலோடும்.

(ப - ரை.) முழுதுமாய் = யாவுமாய், முழுதுடைத்தாய் = சர்வகமாய், சத்திமுழுது மூள்ள = சர்வசக்தியு முடைய, மூர்த்திதானே = பரமேசுவர்தானே, பழுதிலாது = குற்றமிலாது, எவ்விடத்து = எங்கு எங்கு, எப்படி = எவ்வாறு, தோன்றும் = புலப்படும், அவ்விடத்து = அங்கு அங்கு, அப்படியே = அவ்வாறே, தோன்றும் = புலப்படும், வழுவிலா = கெடாததான, மெய்ஞ்ஞானநிலை = உண்மை யுணர்வின் நிதியை, லீலைபொருட்டால் = நினது நாயகியினது நிமித்தமாக, நாம் வழங்கப்பெற்றுய் = யாமனுக்கிரகிக்க நீ பெற்றுக்கொண்டாய், நழுவிலா உண்மையொடுந் தெளிந்தனை = மாறுத திருஷ்டாந்த திருஷ்டிகளையும் அடைந்தனை சொரூபமறிந்தனை, உனக்குச் சுவஸ்தியுளவாகுக, யாம்போதுமென நவிலலோடும் = யாம்செல்வேமாகவெனக் கூறியபோது.(மு)

(ஸ்ரீ - வீர.) யாவற்றையு முணர்தலிற் சர்வகமாம், அதுயாவுமாம் என்பது வாதையில் ஒரு நிலைக்களம் மருவுதலாம், அதுவே சர்வங்களிலும் ஆத்மசொரூபமாய் உட்கோர்த்திருத்தலின் சர்வான்மகமுமாம். லீலைபொருட்டு = லீலைக்குப் பிரபஞ்ச மித்தியாத்தன்மையில் திருஷ்டாந்த சித்தியின் பொருட்டு அல்லது லீலையானது பிரீதியின் பொருட்டு இங்ஙனுபதேசிக்கப் பெற்றுய், திருஷ்டாந்த திருஷ்டிகள் = பிரபஞ்ச மித்தியாத்தன்மையில் திருஷ்டாந்த நிச்சயங்கள் அடையப் பெற்றுய். எங்குமிருப்பதும் எல்லா ஆற்றலுடையதும் எல்லாமாவதும் எல்லாவடிவ மாவதும் சுயமும் மாயையினுலே எங்கெங்கு எத்தகைய எத்தகைய எத்தகையரூபத்தில் அர்த்தக்கிரியா யோக்கியமாக ஆவிர்ப்பவிக்கின்றதோ அங்கங்கு அவ்வத்தகைய தாகவேயாம், ஹேமன்னர் மன்ன ! இவ்வியம் பியதத்துவமானது லீலையின் பொருட்டாக இனிதருளினேம், நினக்கு வாஞ்சித சித்தி

யானதுண்டாகுக, உரைத்தவுலகம் பொய்யென்பதனது திருஷ்டாந்த திருஷ்டிகள் மண்டபத்தடங்கிய நினது பிரஹ்மாண்ட கற்பனை யிலக்கணங்கள் லீலையாற் காணப் பெற்றன, யாம்செல்கின்றேம் என்பதாம்.

(ச.) முழுதுமாய் முழுதுடைத்தாய்ச் சத்திமுழுதுடைய மூர்த்திதானே = சர்வகதமாய் அதிற்றோற்றுவதான வாகிய வஸ்துரூபமுடைய சர்வான்மகமாய் சர்வசக்திமானுகிய அந்தரியாமிரூபமான வத்துசககாரி நிரபேக்ஷியாகவே, பழுதிலா தெவ்விடத்தெப் படிதோன்றும் அவ்விடத் தப்படியே தோன்றும் = எவ்விடத்து எவ்விடத்து எந்தப் பிரகாரமாக வுதிக்கின்றதோ அவ்விடத்தவ்விடத்து அந்தப்பிரகாரமாக விருக்கும்; சத்தியசங்கற்பத்தினு லென்பது கருத்து. வழுவிலா மெய்ஞ்ஞானநிலை லீலைபொருட்டா ணும் வழங்கப்பெற்றாய் = இராஜனே இத்தன்மையான அவ்வஸ்துவையே உன்லீலார்த்தம் யான் உபதேசிக்க நீபெற்றாய், நழுவிலா வுண்மையினைத் தெளிந்தனை = சித்தாந்த திருஷ்டிகளை யறிந்தனை, நீசுகமாயிருவென் றுரீர்வதித்து, இயாம்போதுமென நவிலலோடும் = யாங்கள் போவோமென்று சொல்லவும்;

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணம் ஸ்ரீ சரசுவதி தேவியினுல் மதுரவர்ணங்களினிறைந்த வாணியானது நிகழ்ந்தபோது மகாமஹிமானுயும் பூமிபாலனுயு மிலங்கும் விநாதன் இயம்பத் தொடங்கல்:—இது என.

இதுபுகலக் கேட்டரச னெனையடைந் தோர்களும் வேண்டிற் றெய்தா நிற்பர், புதுமணி நேருமைப்பணிந்து புகழ்ந்தேன் வேண்டிய தெய்தல் புதுமைத்தாமோ, பதுமவுட ஞனடைவ தென்றென்ன விப்போரிற் படுவை பட்டா, லதுபுகுவை யெனக்கிலமா தளித்தலுமேற் றலத்தொருவ னறைவ தானுன்.

(ப - ரை) இதுபுகலக்கேட்டு அரசன் = மேன்மிழற்றிய வண்ணங் கேட்டுக் கொண்டிருந்த இராஜன் எனை அடைந்தோர்களும் = அடியேனிடத்திற் சரணுகதியுற்றவர்களும், வேண்டிற் றெய்தாநிற்பர் = வேண்டிய வேண்டியதைத் தடையின்றிப் பெறுவர் என்றல், புதுமணிநேர் உமைப்பணிந்து புகழ்ந்தேன் = நவசிந்தாமணியொத்த உம்மை நமஸ்கரித்துப் பூசித்துத் தோத்தரித்த அடியேன், வேண்டியது எய்தல் புதுமைத்தாமோ = விரும்பிய தடைதல் அற்புதமென் றறையலாகுமோ, பதுமவுடல் நான் அடைவது என்று என்ன = பகர்ந்தருளிய பதுமராஜ சரீரத்தை யடியேன் கிட்டுவது எப்போது என்று கேட்ப, ஸ்ரீதேவி கூறல்: இப்போரில் = இந்தயுத்தத்தில், படுவை பட்டால் = இறப்பாய் இறந்தவுடனே, அதுபுகுவை = அதனையடைவாய், எனக்கிலமாது அளித்தலும் = என்று ஸ்ரீவாக்குத்தேவி யருள்செய்து முடியவும், மேற்றலத்தொருவன் அறைவதானுன் = மேற்றலத்திருந்த ஒரு நரன் விண்ணப்பிப்பதானுன். (65)

(ஸ்ரீ - வீர.) ஹே பரமேச்சுரியே! அற்பமான சாமர்த்திய முடைய எம்போலிய மனுடமாத்திர ரிடத்தும் வேண்டினுர் பயனற்றவராக ஆகார் என்றல் மகா பலன்களை யருள் செய்யும் தங்களுடைய தரிசனம் எவ்வாருமென, என்சொல்வது? யான் இதன் பின்னர் இவ்வுலகத்தை விடுத்துஸ்ரீ தேகத்தை யொழித்துப் புராதனமானதைக் கனவினின்றும் வேறுகனவை யடைவதேபோலத் தடையில்லாமல் என்று அடைவேன்? அடையும்போது இம்மனவி மந்திரியாதியரும் கூடவே வருதல்வேண்டும். என்ன, அவன் விரும்பியுவரும் பொருள்களையும் வெளிப்படையாகக் கூறிச் சேஷவரங்களையும் ஸ்ரீதேவி கொடுக்கத் தொடங்கிக் கூறுவதாவது: ஹே ராஜாவே இந்தப் போர்க்களத்

தில் இப்போது உயிர்விடுவாய் விட்டபின் பழைய இராஜ்யத்தை யடைவாய் நினைக்கு யாவும் பிரத்தியக்ஷ மாகவேயாம் மனைவி மந்திரி யாதியரோடும் பழையபுரத்தையே யடைவாய், ஆதிவாகிகங்கொண் டதிவேகமாகச் சென்று அத்தேகத்தையே யடைவாய் என்று இவ்வண்ணம் மாதர்ய வாக்கை யுடையவர்கள் பரஸ்பரம் பேசிக்கொண்டிருந்த போது வீட்டின் மேன்மாடி முதலிய உன்னதப் பிரதேசங்களிலேறி யிரவின் கண்ணே வெளிப்புர வீருத்தாந்தங் காணும் சேவகர் இராஜசந்நிதியை யடைந்து திக்குமுக்காடி நின்று கூறுகின்றார்.

(ச.) இது—புதுமைத்தாமோ, உமை = மகாபலப் பிரதையான தேவியேயும்மை, பதுமவடனனடைவ தென்றென்ன = நான் இந்தத் தேகத்தைவிட்டுப் பதுமராம முடைய அத்தேகத்தை எப்போதறுவேன் அதையெனக்கு உண்மையாக அநுக்கிரகிக்க வேண்டுமென்று வினவ; ஸ்ரீ தேவி: இப்போரிற் படுவைபட்டால், அது புருவை = பூருவராச்சிய சம்பந்த சென்மத்தைப் பிரத்தியக்ஷமாகவே பொருந்துவாய், ஸ்ரீவசிட்டர் எனக்—அறைவதாஞ்ஞை மேலும் பார்த்து ஊர்த்துவத் திருக்கும் ஒருநரன் சொல்கின்றான்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பகைவர் செய்யும் பரிதாபத்தை அவன் பரபரப்புடன் பகர்தல்:—அப்பு என.

அப்புமழை சொரிந்து வருமடர் சேனைதீட்டலெங்கு மடர்ந்துநிற்க
வெப்புடைய கனற்கொழுந் தாலிந்நகரஞ் சாம்பராய் வேகாநின்ற
திப்புதுமை கண்டிலேகொ லிகல்வேந்தே யென்பளவி லிறைஞ்சார்சேனை
முப்புவனங்களு நடுங்கமோ கரிக்குமோசை செவிமுடுகக் கேட்டான்:

(ப - ரை.) அப்புமழை சொரிந்துவரும் = சக்ர அக்னியாதியாயுத விருஷ்டியைப் பொழிந்து வராநின்ற, அடர்சேனைக் கடல் = நெருங்கிய படைக்கடல், எங்கும்=எவ்விடத்திலும், அடர்ந்து நிற்க =ஆர்ப்பரித்துச் சூழ்ந்துநிற்ப, வெப்புடைய கனற்கொழுந்தால் = வெப்பம் மிகுதியும் வீசும் அக்கினியின் சுவாலையால், இந்நகரம் = இப்பட்டணம் சாம்பராய் = பஸ்மமாய், வேகாநின்றது = தகிக்கப்படுகின்றது, இப்புதுமை கண்டிலேகொல் இகல்வேந்தே = பகைவரை வெல்வதில் வலிமைவாய்ந்த ஹேராஜ ராஜாவே ! இந்த அற்புதத்தைப் பார்த்திலீரோ, என்பளவில் = என்று கூறியபோது, இறைஞ்சார் சேனை = பகைவரதுபடை, முப்புவனங்களும் நடுங்க = திரிபுவனத்துறவரும் கம்பிதமுற, மோகரிக்கும் ஓசை = மகாகோலா கலஞ்செய்யும்சப்தம், செவிமுடுகக் கேட்டான் = செவி செவிடுபடக் கேட்டனன்.

(ஸ்ரீ - வீர.) இருபாலுங் கூர்மைவாய்ந்த பட்டிசம், இரும்புப் பூண் கட்டிய தண்ட முசலாதி யாவற்றையும் ஆயுத சப்தத்தாற் கொள்க. பர்வதசம்பந்தியாய அப்பட்டணம் தீப்பற்றிப் பிரளயமேக சமூக துல்லியமாகப் புகையத் தொடங்கியது மேலேவானமெங்கும் வியாபித்தது; அவ்வகையே அதிகடின சப்தங்களும் எங்கும் வியாபித்தன. ஹே மகாப்பிரபுவே ! அம்புநேமி யரியவாள், கதையுலக்கை முதலியவற்றின் மழைகளோடு கூடிமகத்தாகிய சேனையானது மிகவும் கோலாகலத்துட னெழுந்து பெருங்கடல் போலும் வந்தடைந்துளது; கதைவேல் அக்கினியந்திர முதலியவற்றின் மழைகளைக் கற்பகால அக்கினிகளால் எடுத்தெறியப்பட்ட குலாசல சிலைக்கொப்பாக மகாஉற்சாகத்துடன் மாற்றார்சேனை கொட்டுகின்றது; உன்னதமானமேன்மாடி சிகரங்களாலும், திருணகாஷ்டாதியை சுவரியங்களாலும் பர்வத சமானமான சுகரத்தில் அக்கினிவைக்கப்பட்டு எட்டுத் திக்குகளிலும் தீவியாபித்துவிட்டது: ஆகாயத்தின் கண்ணே கற்பமேகங்களா

கிய சம்வர்த்த மேகங்களின் கூட்டங்கட்குச் சமானமாய புகைமுகா மலைகள் கருடனைப் போல வலுவிற் கிளம்பத் தொடங்கிவிட்டன மிகுந்தபயத்தோடு மிங்ஙனியம்பியபோது ஜனங்களின் நிஷ்டுரபாஷணவடிவ சப்தங்களின் கோலாகலங்கள் மிகமிக வெளியில் எத்திசைகளிலும் எழுந்து நிறைந்து நின்றன. (66)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சர்த்தம் அக்கோலாகலமே சம்பந்திகளின் பேதத்தால், நாஞவித மான சிறப்புற் றிருந்ததெனல்:—ஒட்டென.

ஒட்டலர் சேனையின் முழக்குமூலந் தலறுநகரொலியு முருமேறென்ன
மூட்டியெழ வடவனல்போன் முழங்கனலின் புகையெங்கு மூடிக்கொள்ளக்
கெட்டன கண்களுஞ் செவியுங்கிளர் நகரமழிந்தது விக்கேடியாவுந்
திட்டமுற லீலையும் வாணியும் வேந்துமந்திரியுந் தெரியக்கண்டார்.

(ப - ரை.) ஒட்டலர் சேனையின் முழக்கும் = பகைவரது படைகளின் கர்ச்சனையும், உலந்தலறும் நகரொலியும் = அதனுனே பயந்து துயருற்றுக் கதறும்படியான நகரஜனங்களின் அழுகையும், உருமேறென்ன மூட்டியெழ = சப்தியாநின்ற இடியைப் போல முதிர்ந்து கிளம்ப, வடவனல்போல் = வடவாநலம்போல, முழங்கனலின் = எரியாநின்ற எரியின், புகையெங்கு மூடிக்கொள்ள = தூமமெவ்விடத்திலும் மறைத்துக்கொள்ள, கெட்டன கண்களுஞ் செவியும் = நேத்திரங்கள் குருடுபட்டன செவிகள் செவிடுபட்டன, கிளர் நகரமழிந்தது = வளப்பமிகுந்த பட்டணம் பாழ்பட்டது, விக்கேடியாவும் = இவ்வளவு அலங்கோலங்களையும், திட்டமுற = மிகவும் நன்றாக, லீலையும் வாணியும் வேந்தும் மந்திரியும் தெரியக்கண்டார் = லீலாதேவியும் சரசுவதிதேவியும் மகாராஜாவும் மதிமந்திரியும் கண்கூடாகக் கண்டனர்.

(ஸ்ரீ - வீர.) பலத்தோடும் வேகத்தோடுங் கூடிய மத்தகஜங்களின் கர்ஜனைகள் மிகுத்திருந்தன. சர்தம் சட்சட்டாஸ் போடங்களினுலும் ஹலஹலாரவங்களினுலும் தனுஷ்களின் குஞ்சரங்களின் கோலாஹலம் மிகமிகவும் கிளம்பியது. வாதாயன (சாளர) வழியாகப் பார்த்தனர். பிரளய பிரசண்ட மாருதத்தாற் கலக்கமுற்று ஒருங்குற்ற எழுகடல் வேகம்போன்ற வேகத்தை அப்பகைப் படையுடைத்தா யிருந்தது, உக்கிரங்களாகிய பிரளய மேகங்கள் என்னத் தாங்கங்களை யுடைத்தா யிருந்தது, கற்பாந்த வன்னியினுலே தக்தமாதலின் விப்பிரமத்தை யடைந்தமேரு மந்தராதிபர் வதங்களைப்போல விளங்கிக்கொண் டிருந்தது தகிக்கப்பட்ட அந்நகரமென்க. முஷ்டிகிராகியங்களாகிய மகாமேகங்களின் கர்ஜனைகளைப்போ லுண்டாய பயங்கரமான சப்தங்களும் உபத்திரவங்களும் மிகப்பெருகி யவற்றுன் மிகக்கோரமாக இருந்தது அத்தோற்றம். கோலாகலங்கள் மிகுந்தும் பகைகள் வீரமொழிகளாற் சர்பித்துஞ்செய்தன் மிகுந்தும் கோரமிகுத்திருந்தது. பகைகளின் ஜல்பித ஹேதுக்களினுனே மிகவும் அதிகரித்த கலகலாரவங்களினுனே கோரமிகுத்திருந்த தெனினும் அமையும் அப்புரத்தில் தாண்டா நின்ற உன்முக (கொள்ளி) கண்டங்களேயாய உக்கிரகஷத்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது அவ்வாகாயம்.. க்ஷேரசுவாமிகள் பிரமாணம் உடுப்பற்றுடைய தென்பதற்காம் மூலம் அங்காராகிகள் வீழ்ந்தளவில் நரநாரிகளது உக்கிரமாய ரோதனம் மிகுந்திருந்தது. வலுவாகக் காதளவு இழுத்து வளைக்கப்பட்டுச் சரமழைகளைப் பெய்யும் தனுஷ்களின் மகாஹலஹலா அரவங்களும், மலைபோலப் பருத்துமகாமதம் நிறைந்த மாதங்கங்களின் அதிவீர கர்ஜனைகளின் கோலாகலங்களும், புரத்தின்கண்ணே கடகடவெனச்சப்தித்து

வெடித்தெழுந்தியும் பெருந்தீயின் பெருமோசைகளும் வீடும் மனைவிமக்களும் எரியத்தது ரும், புரத்திலுள்ளோர் கூக்குரலும், இங்குமங்குங் கிளம்பும் அக்கினிக் கண்டங்களின் டாங்கார ஓசைகளும் நாற்புறங்களிலும் சுழன்று அக்கினிச் சுவாலைகளின் தகதகத் தென்றெரியும் பேரோசைகளும், ஜனங்கள் பரிதாபப்பட்டுப் பேசிக்கொள்ளும் ஓசை களும், ஒருங்குகூடி யெழுந்து கொண்டிருந்தன; சாளரங்களின் வழியாகத் தேவிமார்க ளும் மந்திரியும் விதூரத மன்னவனும் பேரிருளையும் பேரோசைகளையும் பெரும்பட்ட ணத்திற்குமுக்கையும் கண்டார்கள். பிரளய அநலத்தாற் சுவறுகின்ற பூர்ண ஏகார்ணவ வேகத்தோடும். பரசைனியத்தால் உக்கிரமாக விடப்பட்ட உக்கிர அம்பின் மேகதரங் கங்களோடும் கூடி நிறைந்திருந்தது. மேருமுதலிய பர்வதங்களையு முழுங்கும், கற்பாந்த அக்கினியைப் போலும் அக்கினி வீசிக்கொண்டி ருந்தது; ஆகாயம் அளாவிய அந்தமகா சுவாலைகளின் சிகைகளால் யாவும் வெந்துகொண்டிருந்தன, பிறர்பொருளைக் கொள்ளை யிடும்பொருட்டு மற்றவரைப் பயமுறுத்துவான் மகாமேக கர்ஜனையைப் பார்க்கினும் அதிககர்ஜனை யுடையவராய், மிகுந்த கோபத்தோடும் உபத்திரவஞ் செய்பவராய் பிரா பல்ய முடியவராய், அதிபுஷ்டராய்த் திரியும் சோரர்களின் கோரமான சோரத்தாலும் அதட்டுகளாலும் கலகலவெனப் பயங்கரசப்தம் நிறைந்திருந்தன். ஆகாயத்தின்கண்ணே தொள்ளிக் கட்டைகளின் துண்டங்களே உக்கிரமாய அசுபங்காட்டுங் குறியாகச் செவ் வழிக் கூட்டமாகச் சென்று நிறைந்தன; சுவாலைகள் நாற்புறமும் சூழ்தலானே வீட்டுக் கூட்டங்கள் பரஸ்பரம் பற்றிச் சுவாலைமேலே யுயர்ந்திருந்தது. அக்கினிக்குவியல் வீழ்த லானே நரநாரியர் பெரிய கூக்குரலுடன் அழுதுகொண் டிருந்தனர்.

(ச.) வீற்களின் குஞ்சரங்களின் வெம்பரிகளின் வீமரிசை விரிந்த கோலாகலங்க ளும், பௌராணர்களின் மகாகலகலா அரவங்களும் ஒருங்கு சேர்ந்து புரத்தின் வெளியி லும் புரத்திலும் நிரம்பின. பிரளய அனிலங்களால் கலக்கமுற்ற கடலேழின் சமுதாய ரூப ஏகார்ணவசமான வேகத்தோடும், காலமேகதுல்லிய ஹஸ்தியசுவாதி தரங்கத் தோடும் கூடியிருந்தது; அத்தியந்தம் நிபிடமாயிருத்தலினாலே முஷ்டிகளாற் கவர முடியும்போலு மிருந்த பெருமேகங்களின் கர்ஜனையானது பயாதிகளைத் தருவதே போலப் பலவலவா யதிகரித்துப் பேசாநின்ற பகைவர் பாவகணங்களால் நிறைக்கப்பெற் றிருந்தது. அங்காரகலகளேயாய உக்கிர தாரைகளால் அம்பரம் வியாபிக்கப் பெற்றி ருந்தது. அரசர் முதலியோர் காணும்போது என்க. (ஏ)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பயந்த பட்டத்து ராணியைக்கண்டும் அந்தப்புரத்தில் நடக் கும் அலங்கோலங்களைக் கேட்டும் அரசன் போர்க்குச் செல்லுதல்:—செருவென.

செருவிறல் வேந்தன் றேவிதெரு மந்துகடுங்கி வந்தாள்
வருமிவள்பாங்கி மன்னுமாளிகை மகளிர் யாரும்
பெருகிய நிதியுங் கொண்டார் பேணலா ரென்னக் கேட்டா
னருகுறு தேவியுங் களடைக்கல மென்னப் போனான்.

(ப - ரை.) செருவிறல் வேந்தன்றேவி = போரில் வெற்றிவீரனுகிய பூபதியின் மனைவி, தெருமந்து நடுங்கி = சுழன்று பயந்து நடுநடுங்கி, வந்தாள் = சரணகதியாளள், வரும் இவள்பாங்கி = இங்ஙனுற்ற இத்தேவியினது சேடி, மன்னு = ஹேதேவ! மாளி கைமகளிர் யாரும் = அந்தப்புர ஸ்திரீகள் யாவரையும், பெருகியநிதியும் = அளவிறந்த தனங்களையும், பேணலார் கொண்டார் = பகைவர் கைப்பற்றினர், என்ன = என்று விண்ணப்பிக்க, கேட்டான் = கேட்ட ஜயசீலன், அருகுறு தேவி = உங்கள் பாதாம்

புஜ அறுகாற் போன்றதேவி, உங்கள் அடைக்கலம்=தங்கள் காப்பில்வாழ்க, என்று= எனக்கூறிப் பிரார்த்தித்து, போஜன் = போர்க்குச் சென்றனன். (68)

(ஸ்ரீ - வீர.) சேடி = தோழி, விண்ணப்பித்தல் = அறிவித்தல். அந்தப்புரத்திலிருந்த காவலாளர் பொடியாக்கப் பட்டனர் ஆதலின் யாவற்றையும் பகைவர் கைப்பற்றினர். யாதொரு தடையுமில்லாமல் அபகரித்துக் கொண்டனர் என்பதாம். ஹே தேவி மார்களே தங்கள் பாததாமரைவண்டாய ராணியை ரக்ஷிப்பீர்களாக, போஜன்=மாளவன மழிக்கும் மதயானையின்மேல் குகைநின்றுபாயுங் குரூரகேசரிபோல் பகைமேற் பாய்ந்தான். மேற்கூறிய வண்ணம் நடந்துகொண்டிருக்கும் வேளையின் மதோன்மத்த யவ்வனம் வாய்ந்த பட்டத்து ராணியானவள் தாமரைத்தவிசை மகாலக்ஷ்மி யடைந்ததை நிகர்ப்பத் தன் னரண்மனையை யடைந்தனள் (அந்த லீலையின் பிரஞ்ஞையாலதிஷ்டித மாயதாம் அவ்வரசனரண்மனை) பின்னமுற்ற ஹாரலதை யாதிகளாலாகுல முற்றவளாகிச் சகிமார்களோடும் தாஸிமார்களோடும் பயமிகவுற்றவளாகித் தளர்ந்து சென்றனள்: அம்மன்னவனை நோக்கி, அத்தேவியின் சகிகளிலொருத்தி விண்ணப்பிக்கத் தொடங்கியதாவது:—ஹே தேவ! அபிஷேகஞ் செய்யப்பெற்ற முக்கிய மகிஷியாகிய தேவியான வள் எங்களோடுகூட அந்தப் புரத்துள்ளிருந்து ஓடிவந்து காற்றினு லடிபட்ட கொடியானது தருவைச் சரணடைவது போலத் தேவரீரைச் சரணடைய நிற்கின்றனள். பெருங் கடலின் பேரலைகளால் தீரத்தருக் கொடிகள் போலப் பலமுடைய ஆயுதந்தரித்த பகைவர்களானே மனிவிகளாகிய மற்றைய போகமாதர் அபகரிக்கப் பட்டனர். அந்தப்புரத்திற்கு அதிபர்களாக இருந்தயாவரும் மதோன் மத்தர்களாகிய சத்துருக்களானே பொடிப் பொடியாக ஆய்விட்டார்கள். பயமற்று வந்தசத்துருக்கட்கு அளவுகிடையாது அவர்களானே காற்றால் உயர்ந்ததருக்கள் அழிவதொப்ப நம்மவர் அழிந் தொழிந்தனர். தூரத்திலிருந்து பயமில்லாமல் வந்த சத்துருக்களானே நமது புரம் நிறைந்துள்ளது, வீணரதமன்னன் இவ்வாறு கூறக்கேட்டுத் தேவிமார்களைப் பார்த்து வேண்டுவதாவது ஹே தேவிமார்களே! யான் போரின் பொருட்டுச் செல்கின்றேன் தேவிமார்களுடைய உத்தரவில்லாமலே இடையிற் போர்க்குச் செல்லும் அபராதத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள். இவ்வெனது மனைவி தங்கள் பாததாமரையின் வண்டாக இருந்து தங்களாற் காப்பாற்றப் பெறுக: இவ்வண்ணம் பிராத்தித்துக் கொண்டு சினத்தாற் சிவந்த விழிகளையுடையவனாகி மதம்பிடித்த யானைகளி அதஞ்செய்யும் வனக்குகையி னின்றும் சினந்த சிங்கம் கிளம்பியதுபோலப் போர்க்குக் கிளம்பினன்.

(ச.) யுத்தத்திற் கேகுகின்றனனதலின் பொறுக்கவேண்டு மென்று, பின்பு, போஜன்; மகான்களின் நிரிசனகாலத்திற் பிரயாண முசிதமன்றுதலின் பொறுக்கவேண்டு மென்று பிரார்த்தனை. மகான்களின் சேவாவசரத்தில் மற்றொன்று கூடாதன்றே! இப்பட்டமகிஷி தங்களது பாததாமரை வண்டாக விருத்தலின் இவள் ஆண்டேயடைக் கலமாகுக, தங்களது தூளிகள் பற்றியே வாழ்கவென அநுப்பித்தனன்; போர்க்குப் போயின் என்னுமோ?

(ஸ்ரீ - வீர - அ - கை.) புராதனலீலை புதியலீலையை நோக்கி யற்புதமுற்று ஐயம் விளைதல்:—எதிரென:

எதிர்நிழல் போலவந்த லீலையையிந்த லீலை
யதிசயமெய்தி நோக்கியருங் கலைமாதை நோக்கி
புதிதுநானிங்கு வந்தபொரு ளென்கொ லென்றலோடு
மதிகிறவாணி யந்தமயக் கந்தீர்த் துரைப்ப தானுள்.

(ப - ரை.) எதிர் நிழல்போல வந்த லீலையை = எதிரேதோற்றும் பிரதிபிம்பம் போலத் தனதாகார சமான ஆகிருதியுடன் வந்த புதியலீலையை, இந்தலீலை = இப்புரா தனலீலை, அதிசயமெய்தி நோக்கி = அற்புதத்துடன் பார்த்து, அருங்கலைமாதை நோக்கி = அரிய ஸ்ரீவாக்குத் தேவியை நோக்கி, புதிது ஈனிங்குவந்த பொருளென் கொல் என்றலோடும் = புதிதாகயா னிவ்விடத்தில் வந்தவகை யாதுகொலோ வென, வேண்டிக் கேட்டலும், மதிநிறவாணி = பூர்ண நிலாவர்ண ஸ்ரீ சரசுவதிதேவி, அந்த மயக்கந்தீர்த்து — அம்மயலை யகற்றி, உரைப்பதானாள் = அனுக்கிரகஞ் செய்யத் தொடங்கினாள். (69)

(ஸ்ரீ - வீர.) இவள் எனக்கொப்பாக எப்படி யிருந்தனள்? இவள் யோகமகிமையா லுண்டானவள் மானுட சரீரத்தோடு கூடிய உனக்கொப்பாக ஆகாள், என ஆசங்கித்துக் கூறுகின்றாள், நானிங்கு என. கண்ணாடியினின்றும் கண்ணுளிரக் காணப்பெற்ற பிரதி பிம்பம் போன்றவளும், தனது ஆகிருதிக்குச் சமானமான ஆகிருதியை யுடையவளும் ஆகிவந்த லீலையை யுணர்ந்த லீலைகண்டு கூறுவதாவது. ஹே பரமேசுரி! இஃதென்ன அற்புதம் இவளாக யானிருந்த தெவ்வாறே! முன்யான் எவளாக இருந்தேனே அவளா கிய இவளாக யானிருந்தவா றென்னேயோ! வயதும் ஒன்றுகவே காணப்படுகின்ற தீதென்னேயோ! (தனக் கன்னியத்தன்மை கூடாமையானும் சென்ற அவஸ்தைக்கும் ஸ்திதி கூடாமையானும் என்பது கருத்தாம்;)

(ச.) எதிர் நிழல்போல வந்தலீலையை = தர்ப்பணத்திற் பிரதிபிம்பம் போலத்தன் னொடு சமானாகிருதியாய் எதிரேகாணும்படிவந்த விசித்ர பாரிரூபமான லீலையை, இந்த லீலை = பத்மபாரியான லீலை, நோக்கி அதிசயமென்ன = பார்த்து இஃதென்னென்று இவள் எந்த ஹேதுவினால் எனது உருவா யிருக்கின்றாள், நான் இப்போது ஆதிவாகிய நேகத்தோடுங் கூடியிருத்தலின் அவட்கு அவ்வுருவம் எப்படிக்கூடும் எனச் சங்கித்து விஸ்தரித்தல்; புதிது ஈனிங்கு வந்த பொருளென்கொல் — நான் முன் எத்தன்மை யான தூலதேகத்தோடு கூடியிருந்தேனே அத்தன்மையான எனது தூலதேகத்தோடு கூடினவளான இவளானது எங்ஙனமென்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சிற்சக்தியினுற்பத்தியான் தருக்கிக்க முடியாதனவாக விருத்த லின் சமானகருமத்தாற் கிளப்பப் பட்டவர் கட்குச் சமானமாகவே தோற்ற முண்டாம் சிற்சிலபா லிதனைக் கண்டாமென ஸ்ரீதேவியார் திருவுள்ளம் சிருஷ்டிவாதத்தை யவலம்பித் துச் சமாதானிக்கின்றார்:—நின்னேயென. (69)

(ஸ்ரீ - வீர-அ - கை.) ஆத்மாக்தாத்தில் நினதுபாவனை பாவித்த நினது நாயகனால் நினக்கொப்பாகக் கற்பித்தலின் நிற்கொப்பான லீலை நின்றனள் என விடை விளம்பக் கருதிக் கூறல்:—நின்னே யென.

நின்னை நீங்காது வாழநினைத் தனன்மரண காலத்
தன்னதவ் விடத்தே பெற்ரு னன்பினு னுனதுகாந்த
னின்னல் கூர்மரணந் தன்னிலெண்ணிய தெய்த் பியார்க்குந்
தன்னெதிருற்ற தன்றித் தோன்றுமோ தருப்பணத்தில்.

(ப - ரை)) நின்னை நீங்காதுவாழ நினைத்தனன் = உன்னை ஒழியாதுவாழ வுன்னி னான், மரணகாலத்து = மரணகாலத்தில், அன்னது அவ்விடத்தே பெற்றான் = எண் ணிய வதனையே அத்தலத்திலேயே யடைந்துதனன், அன்பினுனது காந்தன் = வாஞ் சையினால் நினது மணாளன், இன்னல்கூர் மரணந்தன்னில் = பெருந்துயர் வாய்ந்த

மரணவஸ்தையில் எண்ணியது = சிந்தித்தது, எய்துமியார்க்கும் = எவர்க்கும் அடையப்படும், தன் னெதிரூற்றதன்றி = தன்னெதிரே அடையப்பட்ட தல்லாமல் அயலொன்று தோன்றுமோ தருப்பணத்தில் = கண்ணுடியின் கண்ணே பிரதிதியாமோ ஆகாதாம் அதுவே தோற்றுமதுபோல் என்பதாம்,

(ஸ்ரீ-வீர.) எத்தகையதாக இக்களேபரம் விடும்போது எண்ணுகின்றனனே அத்தகையதாக யடைவன். இந்தலீலே கற்பிதை யாவளேல் இப்பிவெள்ளி யாதியிற்போல் இவண்மாட்டு விசம்வாதம் எங்ஙன முண்டாகாமற் போம், எனக்கடாவ விடைதருவார். தன்னெதிரென்னூர். விவகார தசையின்கண் பாதமெனப் பெயரியவிசம் வாதரகித சர்வ பதார்த்த சொரூபம் அவனதுமனத்தின் கண்ணே பிம்பிதமாம், அதாவது நினது நாயகனது சித்தத்தின் மாட்டித் தோற்றியதாம்; அதுவே அத்தகைய அவிசம்வாதியாக இருந்து சித்தமாகிய தருப்பணத்திற் காலாந்தரத்தில் பிரதிபிம்பித்தது; அவிசம்வாதியதாக யாதுமுன் னனுபவிக்கப் பெற்றதோ அது சமஸ்கார வடிவமாக நிகழ்வதாய்க் காலாந்தரத்தில் மனக்கண்ணுடியில் அவ்வாறே தோற்று மெனபதாம் எவ்வாறெண்ணம் உள்ளே யுண்டாகின்றதோ அவ்வாறே கணகாலத்தி லனுபவமாம், மனமானது கனு முதலியவற்றே சித்தத்தா லனுபவிக்கப்பட்ட நனுப்பொரு ளாகாரத் தன்மையையடைவதேபோலச் சித்தானது அத்தியாசத்தானே திருஷ்ய ஆகாரத் தன்மையை யடையும். எவ்வாகாரப் பொருள் தன்கண்ணே அவ்வகையாய சமஸ்காரவடிவ ஜகத்தருவம் ஆண்டுச் சித்தத்தின் கண்ணும், சித்தின் கண்ணும் உளதாம், அவ்வகையாகவே கணத்திலுண்டாம்; போக்தாவின் அதிருஷ்டத்தால் கிளப்பப்பட்ட மாயையோடு கூடிய சிற்சக்தியானது செய்யாததையும் செய்விக்கும், தேசகால தீர்க்காதியும் மயலேயாம். மனப்புரத்தோற்றம் வெளியிலுள்ள தென்பதும் உண்மை யென்பதும் நீண்ட பழக்கத்தானேயாமென்க. எத்தகைய பாவனேயுடன் அக்காலத்தில் அவ்விடத்தில் நினது நாயகனிருந்தானே அத்தகைய பாவனேயுடன் இறந்தான் ஆகையினல் பாவித்தபடியான அப்பொருள்களேயே அங்கேயே அடைந்தவனுன். சொப்பன சங்கற்ப சனியம் போலும் இவர் யாவரும் சிற்சத்தியானே சத்ரூபமே; இவ்வளவே கனுப்பொருள்களிலும் நனுப்பொருள்களின் விலக்ஷணத் தகைமை, யாது அவிசம்வாதி சர்வபுருஷ சாதாரணூர்த்தத் தன்மையோ, இத்தூண மாத்திரையானே சத்தியத் தன்மைச் சித்தியாகாதாம், சந்திரன் ஒட்டையளவு தோற்றுதல் இந்திரஜால முதலியவை கூட அவிசம்வாதியாய் யாவருங், கண்கூடாக அனுபவிக்கக் கண்டாம், பாதிதமாதல் இருபாலு மொப்பேயாம்.

(ச.) ஞப்தியோதல்: நின்னே + உனது காந்தன் = நினது பர்த்தா, லீலையின் பர்த்தானெனப் பாவித்தவனுகி இறந்தானுதலிற், சன்மாந்தரத்திலும் அப்பாரியையே அடைந்தானென்பது பொருள். இன்னல் கூர் + தருப்பணத்தில்; எண்ணியது = நிர்ச்சந்தேக சர்வார்த்தரூபமான சித்தை யென்னும் பாவனரூபமான ஞானம், அதுவேயெய்தும் = அத்தன்மையான வஸ்துரூபமாகச் சித்தத்தில் ஸ்புரிக்கும், பிரதிபிம்பிக்கும் என்பது பொருள். தர்ப்பணத்தில் என்பது அதன் திருஷ்டாந்தமாம், யார்க்குமென்றது நிர்ச்சங்கையை யுணர்த்துகின்றது. (70)

(ஸ்ரீ - வீர - அ - கை,) ஆற்றேல் விவகாரதசையில் விசம்வாத மில்லாதவழி கற்பிதத்தன்மையே அசித்தமாம் என ஆசங்கித்து வியபிசாரித் தன்மையானே திருஷ்ய மாத்திரத்திற்கு மித்தியாத் தன்மையைச் சாதிக்கின்ரூர். பரஸ்பரகால அசத்வமும் சிறப் பற்றதேயாகு மென்கின்ரூர்:—நாசமென.

(ச.) ஆயினிது பிராந்தி தானுவெனச் சங்கித்துச்சத்தியமென (பிராந்தியே யெனச்) சாற்றல்:—நாசமென.

நாசமுற்பத்தி மூர்ச்சை னனுக்கனுச் சுழுத்தி யெல்லா
மேசுறவொன் றினுள்ளொன் றில்லேயாலி லதுண்டென்ன
மாசுறு மயக்கமட்டே மட்டறவள ராகின்ற
தாசறுமனு பவங்களிரு வகைய வற்றைக் கேட்பாய்.

(ப - ரை.) நாசம் உற்பத்தி மூர்ச்சை னனு கனு சுழுத்தி எல்லாம் = மிருதி ஜன்மம் மூர்ச்சை ஜாக்கிரம் சொப்பனம் துயில் முதலியயாவும், ஏசுற = குற்றமுற, ஒன்றினுள் ஒன்றில்லே = னனுமுதலிய வற்றுள் கனுமுதலியவை யிலவாம், ஆல், அசை இலது உண்டு என்ன = இல்லேயெனவும் உண்டெனவும், மாசுறு மயக்கமட்டே = குற்றமுற்ற பிராந்தி மாத்திரமேயாம், மட்டற வளராகின்றது = மயலே அளவின்றி வீருத்தியாகின்றது, ஆசறும் அனுபவங்கள் = குற்றமற்ற அனுபூதிகள், இருவகை அவற்றைக் கேட்பாய் = இரண்டு விதமாம் அவ்விரண்டையும் கூறக்கேட்பாயாக.

(ஸ்ரீ - வீர.) கனவின் கண்ணே னனவானது அசத்திய ரூபமேயாம், னனவின் கண்ணே கனவானது அசத்திய ரூபமேயாம், பாதத்தைப்போல நாசத்தின் கண்ணும் பரஸ்பர காலு அசத்துவம் சமமேயாம்; ஜன்மத்தின் கண்ணே மரணம் அசத்து வடிவமாம், மரணத்தின் கண்ணே ஜன்மமும் அசத்து மயமேயாகும், நாசத்தில் அவயவங்கள் நாசமுடையன வாதலின் திரவியமானது நசிக்குக, பாதத்திலோ அனுபூதி பலத்திலுலே நசிக்குக; இங்ஙனம் நிமித்தமேத மிருப்பினும் அழிவதிற் சிறப்பொன்றையுங்காணுமே; முன்னர் சத்தியத்தன்மை சாற்றப்பெற்றது ஈண்டோ அசத்தியத் தன்மையென அநிர்வசனீயத் தன்மையாம் இரண்டும் சமமேயாம், இவ்வண்ணமாக இதுசத்துமல்ல அசத்துமல்ல, மயன் மாத்திரமாகவே மலர்கின்றது; மலர்ந்துறவே, சிருஷ்டிகாலத்திலும் பிரளயகாலத்திலும சிறப்பின்றிய சத்துரூபப் பிரஹ்மம் சித்தமேயாம். உபோற்கீத சம்பந்தமாகவுரைத்து விவகரித்த வினுவின் விடையை யளிக்கின்றூர், அனுபவங்கள் என.

(ச.) நாச + இல்லேயால் = ஒன்றினுள் ஒன்றில்லேயால் = சொப்பனஞ் சாக்கிரத்தில் அசத்துரூபம், சாக்கிரமும் மிருதியில் = மரணத்திற் பொய்யுருவம், மிருதிஜன்மத்தில் அசத்துரூபம், ஜன்மமும் மிருதியில் அசன்மயம், இலது உண்டென்ன மாசு = இவ்விதஞ்சத்து அசத்தென்று சொல்லக்கூடாத களங்கம் பொருந்திய இவை, உறுமயக்கமட்டே மட்டறவளரா நின்றது, இது வுண்டென்ன மிகவும் பிராந்திமாத்திரத்தில் விசிரிம்பித்ததாம்; இவ்விதம் சத்தும் அசத்தும் அன்றிய இஃதுண்டெனல் பிராந்தி மாத்திரமாக விசிரிம்பித்ததாம், சொப்பனுதிகள் மேன்மேன் உத்தரோத்தர அவஸ்தையில் இன்மையினுற் பிராந்தி மாத்திரமேயாயிது பரிசேடிக்கு மென்பதுபொருள். காசுறு மனுபவங்க ளிருவகை கழறக்கேட்பாய் = அனுபவங்கள் என்பது அனுபூதிகள். (71)

(ஸ்ரீ - வீர - அ - கை.) உலகமயல்களின் விசித்திரத் தகைமையைக் காட்டும் வாயிலாய் அபிநவலீலேயின் ஒப்பான மயற்கவர்ச்சியையும் முன் மொழிந்ததையும் தெளிவிக்கின்றூர்,—முன்னென.

முன்னனு பவத்துக்கேற்ற மூறைமையாய்ச் சிலவை தோன்றும்
பின்னுறு புதுமைத்தாகிப் பேதமாய்ச் சிலவை தோன்றும்
நின்னுட னின்ஞசார நின்குல நின்னெழுக்க
மென்னவே றன்றிநின்ரு ளெதிர்நிழல் போலஷீலை,

(ப - வை.) முன் அனுபவத்துக் கேற்ற முறைமையில் = பூர்வ அனுபூதியை யனுசரித்து அவ்வகையாகவே, சிலவைதோன்றும்=சிற்சில பொலியும், பின்னுறு புதுமைத் தாகிப் பேதமாய்ச் சிலவை தோன்றும் = அபூர்வ அனுபூதியை யனுசரித்து அற்புத மாகச் சமமாகவோ அசமமாகவோ, சிலசில பொலியும், நின் உடல் நின் ஆசாரம் நின் குலம்நின் ஒழுக்கம் = உனதுவபு உனது சமாசாரம் உனதுகுலம் உனதுசீலம், என்ன வேறன்றி லீலை எதிர்நிழல்போல நின்றுள் = என்பதாகத்தானே அபேதமாய் லீலை யானவள் பிரதிபிம்பம்போல நிலைபெற்றுள். (72)

(ஸ்ரீ - வீர) சில அனுபூதிகள் மயல்களாய்ப் பூர்வ அனுபூதியி னின்றுண்டாம் சம ஸ்காரவாயிலாக உண்டாம்; சிற்சில அபூர்வ அனுபவங்களாம், பூர்வ அனுபவங்களைக் காரணமாகக் கொண்டு உண்டாகாதனவே அபூர்வ அனுபவங்கள் எனப்படும்; சில ஒப் பனவாயாம் நினது சமானசீலமாய் நினது சமானகுலமாய் நினது சமானசரீரமாய் உண் டாயிருப்பதே போலும் பிரதிபிம்பமாக வுண்டாகி நினது பர்த்தாவின் கற்பனையாக இந்தலீலை தோற்றுகின்றுள். முன்னனுபூதியோடு ஒப்பாகவோ ஒப்பில்லாமலோ சிற்சில அபூர்வ அனுபவமாகவோ விரைவில் அனுபவிக்கின்றுர்க ளென்றுணர்தி, சிலபால், ஒரொருகால் சர்வ அவ்வாசனை யுண்டாங்கால், பேதத்தைப் பிரித்துப் பாராமையின் அவைகளேயெனத் தோற்றும், சிலபாலோ பாதிவாசனை யுளதாயின் பாதிசமமாகவே தோற்றும், ஜீவாகாசத்தின் கண்ணே அனுபூதிகள் அசத்தியங்க ளாயினும் சத்தியங் கள்போலத் தோற்று கின்றனவாம். ஆகவே நினது சீலத்தளாய் நினது ஒழுக்கத்தளாய் நினது குலத்தளாய் நினதுதேகமயத்தளாய், இவள்வரற்குரித்தேயாவள். மொழிந்த முறையிற் பிரதிபிம்பஜன்னியம் பிரதிபையாக இந்த லீலை யிலங்குகின்றனள்; எங்கு நிறைந்திருக்கும் அறிவாங் கண்ணுடியில் பிரதிபை பிரதிபிம்பிக் கின்றபடியால் யாண் டும் இதுவே முறையெனக் காணலாம்.

(ச.) முன் + தோன்றும் = இவ்வநுபூதிகள் சில பூருவானுபூதியினின்று சமன்க ளாகவே யுதிதனவாம், பின் + தோன்றும்=இந்தச் சர்வாவஸ்தைகளினும் மட்டற வளராநின்ற அனுபூதிகள் சில பூர்வானு பூதியினின்றும் தோன்றுவனவாம்; சில அபூர் வானுபவங்கள், பூர்வ அனுபவ சமஸ்காரத்தை யபேக்ஷியாமலே யுதித்தன வென்னும் அசமன்களாம். சமன்களென்பன பூர்வானுபவ காரணத்தை யுடையனவாம் அதாவது அவற்றை யனுசரித்து வருகின்றனவாம், அசமன்களென்பன சுதந்தரங்களாம் என்றும் இருவிதமென்பது பொருள். நிறுத்த முறையை யனுசரித்தல்; நின் + லீலை = ஒழுக்கம் = யோக்கிய சீலத்துவம், முற்கூறிய பிரகாரத்தால் உனது பாவனையால் எப்போதும் உன் போன்ற நடையுடையவளா யிருக்கிற, உன்னையே காரணமாக வுடைய, சர்வப்பிரகாரத் தாலும் சமானமான இந்தலீலை யுனது பர்த்தாவினுடைய பிரதிபையில் பிரதிபிம்பமாய் விளங்குகின்றுள் என்பது பொருள். (பிரதிபை=புத்தி). (72)

(ஸ்ரீ-வீர-அ-கை.) தோற்றத்தின் முடிபும் விதாரதன் பதுமனெனக் கேட்ட நவீனலீலை பிரார்த்தனையும்:—புரவலனென.

புரவலனினை வானுன்னப் போலிவ டோன்றி நின்றுள்
விரவுமிப் போரிற்பட்டு விதாரதன் பதும னென்னும்
நரபதியாகு மென்ற நாமகள் வசனங் கேட்டுப்
பரவின புதியலீலை பணிந்திது பகர்வதானுள்.

(ப - ரை.) புரவலன் நினைவா லுன்னைப்போ லிவள்தோன்றி நின்றுள் = மன்னவ னது திடசங்கற்பத்திலுலே நின்னைப் போலவே இந்தலீலை புலப்பட்டு நிற்கின்றுள், விரவுமிப்போரில் = கைகலந்து நடக்கும் இந்த யுத்தத்தில், விரோதன்பட்டு = விதூரத மன்னவன் இறந்து, பதுமனென்னும் = பதுமராஜா வென்று பிரசித்த பூர்வ, நரபதி = நரேந்திரன், ஆகும் = ஆவன், என்ற நாமகள் வசனங்கேட்டு = என்று திருவாய்மலர்ந் தருளிய ஸ்ரீ சரசுவதிதேவியின் திருவாக்கைச் சிரவணித்து; பரவின புதியலீலை = முன் பூசித்துநின்ற புதியலீலை, பணிந்திது பகர்வதாளுன் = நமஸ்கரித்து வருமாறு பிரார்த் தித்துக் கொண்டனள்.

(ஸ்ரீ - வீர.) விதூரதபுரத்திலிருந்த புதியலீலை புஷ்பாஞ்சலி செய்து வேண்டுவா ளாயினள். ஸ்ரீ சரசுவதிதேவி விதூரதனுகிய நினது இந்நாயகன் போர்க்களத்தில் இத் தேகத்தை விட்டு அந்த அந்தப்புரத்தையே யடைந்து பதுமபூபால வடிவினனு யிருப் பன் என்று கூறியதைக் கேட்ட இரண்டாவது லீலையானவள் எதிரில் நின்று இருகரங் கூப்பி மிகுந்த பக்தி வணக்கத்தோடும் அநேக நமஸ்கார பூர்வகம் இவ்வசனங்களைக் கூறத் தொடங்கினள்.

(ச.) புரவலன் + ஆகும், விரோதன் விரவுமிப் போரிற்பட்டு = அங்ஙனமே! நினது பர்த்தாவான இவ்விரோதராஜன் தேகத்தைவிட்டு அவ்வந்தப்புரத்தையே யடைந்து பதுமனென்னும் நரபதியாகும் = அத்தன்மையான பதுமரூபனுனவன். ஸ்ரீ வசிட்டர், என்றே நாமகள் வசனங்கேட்டு = நாமகளது அருகில் அப்புர ஆசிய விரோதபரியான லீலையானவள் தேவியால் அத்தன்மையான வசனங்களைச் சிரவணஞ்செய்து, பரவினள் புதியலீலை பணிந்திது பகர்வதாளுள் = பின் விதிதாஞ்சலியாய் வணங்கி யிருந்து இவ் வசனத்தைச் சொல்லுகின்றுள். விதிதம் = செய்யப்பட்டது. (79)

(ஸ்ரீ-வீர-அ-கை.) அபிநவலீலை வரந்தர வேண்டலும் ஸ்ரீதேவி வேண்டியவாறருள் புரிதலும்: —பண்டு என.

பண்டுநான் பூசைசெய்த பாமகள் போலு நீயே
விண்டவரா லென்காந்தன் வீடினு லுறைவ தெங்கே
கண்டுநா னங்கே யிந்தக் காயத்தோ டெய்திவாழத்
தண்டலில் வரநல் கென்னத் தந்தன மென்றலோடும்.

(ப - லா.) பண்டு நான்பூசை செய்த = ஹேஞானரூப பகவதியே! பூர்வம்யான் பூசித்த, பாமகள்போலும் நீயே = ஸ்ரீ சரசுவதிதேவி தேவீரேபோலும், விண்டவரால் என் காந்தன் = பகைவர்களால் எனது நாயகன், வீடினுலுறைவ தெங்கே = சரீரத்தி யாகஞ் செய்தால் எவ்விடத்திற் சென்றிருப்பதாமோ, கண்டு நானங்கே = யான் அவ் விடத்தைத் தெரிந்து, இந்தக் காயத்தோ டெய்தி வாழ = இத்தேகத்துடனே அடை ந்து வாழும்படியாக, தண்டலில் வரநல்கென்ன = யாதொரு தடையுமில்லாமல் வரந் தந்தருள வேண்டு மென்றிரப்ப, தந்தனமென்றலோடும் = தந்தருளினேம் மவ்வாறே யென்று ஸ்ரீதேவி புகன்றருளினள்.

(ஸ்ரீ - வீர.) ஹேதேவி இக்கிருபணி யிடத்திற் காருண்யம் வைத்து வரந்தரல் வேண்டும்; முற்றினும் லோபப் பொருட்டு வெகு அவமானம் சகித்தல் கிருபணமாம் ஹே ஞானசொரூபமாகிய பகவதித்தாயே! இத்தகைய தேவியை யான் நித்தியம் அருச் சித்துக்கொண்டிருந்தேன், அத்தேவி யிரவிற் கனவில் இனியதரிசனத்தைக் கொடுத் துக்கொண் டிருந்தனள், அத்தேவி எத்தகையினளா யிருந்தனளோ அத்தகையினளா

உற்பத்திப் பிரகரணம் நூளக

கவே நீ யிருக்கிறாய் ஆகலின் ஹே அம்பிகையே! அழகிய திருமுகத்தாய்! கிருபணர் கள்மேல் வைக்குங் காருண்யத்தால் வரந்தரல் வேண்டும். நீதான் அந்தத்தேவி யென்ப தில் ஐயமேயில்லை, இந்தப் பிரகாரம் அவள் வேண்டிக் கொண்ட அளவில் ஸ்ரீ ஞான தேவியானவள் அவள் அன்பினுற் சிந்தித்ததையும் பூசித்ததையும் கருதி அந்த லீலையை நோக்கி மிகமகிழ்வுடன், அனன்னியமாகிய பாவனையினாலே யிடைவிடாமல் சாங்காறும் நோன்புற்றுள நின்மேல் பரமதிருப்தியை யடைந்தேன், ஆகலின் ஹேருமுந்தாய்! உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள் என்றருளை, போர்க்களத்திற்றேகத்தை விட்டு எனது பதியானவர் எங்கே போயிருப்பாரோ அங்கு இத்தேகத்துடனே இவ்வங் ஸ்ரீலஸ்ரீ நாதவள் கனையா யிருக்குமாறு திருவருள் செய்யவேண்டு மென்று அத்தேயத்து லீலை வேண்டிக் கொள்ள, அதற்கு ஸ்ரீ ஞானதேவி, அவ்வாறேயாகுக, நீயாதொரு தடையும் படாமல் மிகச்சிறந்த பக்தியோடும் சகலசாமக் கிரியோடும் மிகநன்றாக நெடுநாள் பூஜித்து வந்தாய் என அருள்செய்தாள்.

(ச.) பண்டு + நீயே ஞப்திதேவி நீ யென்னுல் முன்பர்ச்சிக்கப்பட்டாய் அந்தநீயே பகவதி யம்பிகையாய் விளங்குகின்றாய், ஆதலின், விண்டவரால் + எங்கே = இரணத் திற் சத்துருக்களாற் றேகத்தை விட்டு எனதுபதி எவ்விடத்திருப்பன், கண்டு + நல் கென்ன = வரானனேயே? நீ கிருபண காருண்யத்தினுல் (தீனஜனிடத்திற் கிருபையி னுல்) இவ்வரந்தரல் வேண்டுமென்ன, எனதபிமதிப்பிரிய கொடையால் என்னை இரகஷிக்க வேண்டு மென்பது பொருள். தந்தன மென்றலோடும் என்று தேவி யனுக்கிரகித்தாள் அப்போது. (74)

(ஸ்ரீ - வீர - அ - கை.) புதியலீலையானவள் கிடைத்தவரத்தின் சிறப்பால் மகிழ்வு டன் முகமிகமலர்ந் திருப்பதைக்கண்ட புராதனலீலை தூலதேகத்துடன் இவளுக்கு நாயகலோகப் பிராப்தியும் தனக்குத் தூலதேகம் விட்டுப் பிராப்தியும் உண்டாவதன் சிறப்பென்னே யென்னும் சந்தேகத்துடனுற்ற மனத்தினளாய் ஸ்ரீதேவியை நோக்கி வினவுகின்றுள்:—புகன்றவென.

புகன்ற நாமகளே நோக்கிப் புராதன லீலைசொல்வா
ணிகழ்ந்த வெண்ணுட லோடன்றி நின்றவேற் றுடலேமேவி
யுகந்தலோ காந்தரத்து முயர்கிரி நகரினூடு
மகன்றவா றென்கொ லென்ன வாரணத்தன்னே சொல்வாள்.

(ப-ரை.) புகன்ற நாமகளே நோக்கி = உரைத்த வண்ணம் வரந்தந்த ஸ்ரீசரசுவதி தேவியைப் பார்த்து, புராதனலீலை சொல்வாள் = பழையலீலை பகர்வதாவது, நிகழ்ந்த வெண்ணுடலோடன்றி = அப்போதிருந்த எனது தூலசரீரத்தோ டல்லாமல், நின்றவேற் றுடலே மேவி = யோகத்தாற் கிடைத்த அங்குலங்கள் பத்தளவாந் தேகத்தையடைந்து, உகந்த லோகாந்தரத்தும் = மகிழ்வுடன் பிரஜைகள்வாழும் வேற்றுலகத்தும், உயர்கிரி நகரினூடும் = வளப்பமுற்ற மேம்பட்ட கிரிக்கிராமத்தின் கண்ணும், அகன்றவாறென் கொல் என்ன = சென்று சேர்ந்தவிதம் என்னேயென்று விண்ணப்பிக்க, ஆரணத் தன்னே சொல்வாள் = வேதப் பிரதிபாத்திய சின்மாதா அருளுகின்றுள்.

(ஸ்ரீ-வீர.) சத்தியகாமமும் சத்திய சங்கற்பமும் உடைய ஹே தேவியே! பிரஹ்மரூப மாகிய தேவீர் நினைத்தபடி முடிவது திண்ணமாக இருப்ப, அதேதேகத்தோடும் யான் அவ்வேறுலகத்தி லிருக்கும் கிரிக்கிராமத்தையேன் அடையவில்லை இவள்மாத்திர மிப் போது தேகத்தோடும் அடையும் வகையாதோ கூறுதியென்று பிரார்த்தித்தனள்.

(ச.) புகன்ற + என்ன = பூர்வசரீரத்திலேயே யான் செல்லாதது என்னிமித்தம் ஈசுவரி யென்றாள், புராதனலீலை = பதமபாரி, உகந்த லோகாந்தரத்தும் = இவ்வு லோகாந்தரத்தும், கிரிநகரிஞாடும் = கிராமத்தும், என்கொல் = என்னிமித்தம் ? ஆரணத்தன்னே சொல்வாள். (75)

(ஸ்ரீ-வீர-அ-கை.) உயிர்கள் தங்கள் தங்கள் முயல்விஞலேயே வேண்டியவற்றை எமதருளால் அடைவர் எமக்குதன்கண் யாதொரு கர்த்தவ்யமு மில்லை யெனல், எமக்கு யாதொரு இச்சையும் சுயமாகக் கிடையாது, பூர்ணகாமத் தன்மை யிருத்தலின், பிராணிகளின் கருமானுசாரமாகவே யுதிக்கும் அவ்விச்சை அதனது விவத்தையாளே விவத்திதியாம் என்னுங் கருத்தால் ஞானதேவி சமாதானிக்கின்றாள்:-ஒருவருக்குமென.

ஒருவருக்கு நாமொன்று நல்கல மூணர்வின் வண்ணமே யுயிர்களெய்துமாற்
கருதிமுந்திநீ கதிவிரும்பிஞய் காதலித்தசிற் கண்ண ளித்தனம்
பெருகுகாதலா லிந்தவண்ண மிப்பேதை வேண்டவிப் பேறுநல்கின
மிருதயத்திலே நினைந்த தெய்திடு மெமதுபார்வையா லியார்க்கு மென்றனள்.

(ப-ரை.) ஒருவருக்கும் = எவர்தமக்கும், நாம் = யாம், ஒன்றும் நல்கலம் = யாதொன்றையு மிஷ்டப்படி கொடுப்பதில்லை, உணர்வின் வண்ணமே யுயிர்கள் எய்துமால் = பிராணிகளின் சங்கற்பமே விரைவில் தானே சர்வத்தையுஞ் சம்பாதித்துக் கொடுக்கும், முந்தி = முன்னர், கருதி = எண்ணே நன்காராதித்து, நீ கதிவிரும்பிஞய் = நீ முக்தையாக வேண்டுமென்று எண்ணினாய், காதலித்த சிற்கண் ணளித்தனம் = விரும்பிய மோக்ஷத்திற்குச் சாதகமான போததிருஷ்டியைத் தந்தேம், பெருகு காதலால் = பேராசையால், இந்த வண்ணம் = நீ செவியுற்ற வகையாக, இப்பேதை வேண்ட = இம்மடந்தை இச்சிப்ப, இப்பேறு நல்கினம் = இந்தப்பயனைத் தந்தேம், யார்க்கும் = எத்தகையர்கட்கும், இருதயத்திலே நினைந்தது = மனத்தின்கண் ணத்தியந்தம் எண்ணியது, எமது பார்வையால் எய்திடும் என்றனன் = நமதுகிருபா திருஷ்டியாளே அடையப்பெறலாம் என் றனுக்கிரகித்தனள். (76)

(ஸ்ரீ-வீர.) யாவருக்கும் ஒரு சிறிதும் யான் கொடுப்பதே கிடையாது, ஜீவர்கள் தாங்களே தங்களிச்சைப்படி யாவற்றையும் விரைவிற் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். ஞானதேவியாகிய யான் பிராணிகள் வாஞ்சித்தவருஞ் சுபத்தை வரதான வாயிலாகப் பிரகாசிப்பிப்பேன் அறிவுமாத்திர அதிதேவதையா யிருப்பன், காம கரும வாசனையோடுகூடிய மாயாசகித சிற்சத்தியனு சாரமாகவே பயன்தருவேம்; நின்பாலுதயமாய ஜீவசக்தி எம்மை யினிதாராதித் துறைந்து யான் முத்தையாவேன் என்னும் வருங்கரும அதன்பல சூக்கும அவஸ்தையைக் கருப்பத்திற்ற காமத்தால் வரைந்துகொண்ட அறிவுருவமாகும், இத்தகைய நீள்பாவனையால் அத்தகையவீடக்காலடையும்; அவ்வவ்வகையானே நீ யெம்மாலுணர்த்தப் பட்டாய், அந்த யுகத்திலுலே உணர்விஞலே யொதுக்கப்பட்ட அஞ்ஞான ஆவரணங்களால்நிருமலவடிவ அவஸ்திதிவடிவ அமலத்தகைமையை நியடைந்தனை, யான்முக்தையாவேன் என்பதான பாவனையாளே நீள்போது கூடினவளானபோது முற்போதித்த யுகத்தானே தெளிவிக்கப்பட்டாய், அவ்வெண்ணிய பொருளேயே சிற்சக்தியினனே யடைந்தனை.

(ச.) தேவிசொல்கின்றாள், ஒரு + மால் = வரவர்ணினியே ! நான் யார்க்கும் அணுவுஞ் செய்யாதவள் பிராணிகள் தஞ்சங்கற்பத்தின் படியே எளிதிற் சகலத்தையுஞ் சம்

பாதிக்கின்றன, கருதி + தனம் = முன்பு என்னை நன்றாய் ஆராதித்த நினக்கு இத்தன் மையான முக்தி வேண்டுமென்று சங்கற்ப முதித்தது ஆதலால், நீ முற்கூறிய போதப் பிரகாரங்களாற் போதிக்கப் பெற்றாய், பெருகு + நல்கினம் = இவளால் யாசிக்கப் பட்ட நான் இவ்வரத்தத்தையே கொடுத்தவளானேன், இப்பேறு = இவ்வர்த்தத்தையே, இத்தேகத்திலேயே பர்த்தாவின் சமீபஞ் செல்லவேண்டு மென்னு மிப்பேற்றையே, இருதய + என்றனள் = நாரத சங்கற்பம் எமது பிரபாவத்திலு லித்தன்மை பலிக்கு மென்று ஸ்ரீதேவி சொன்னாள். நல்கிலேம், நல்கினேம், நினைவது, என்பன பாடபேத பதங்கள். (76)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணம் அவர்கள் அவ்வீட்டிற் பேசிக்கொண் டிருந்த போது அவ்வீட்டினின்றும், மிகச் சினமுடையவனாகி வெளிப்போந்த விதாரதன் யாது செய்தான் என்று ஸ்ரீ இராகவர் கேட்ப ஸ்ரீ வசிஷ்டபகவான் விடையருளுகின்றார்:— திறலென.

திறல்விரேதன் சினமிருத்தனன் றேரிலேறினன் சேனையோடுபோய்
மறலியூர் புகும்வழி நெருக்கமாய் மருவலாரெலா மடியமோதிஞ
னிறலுறுங் கொலென் றெண்ணி யன்பருளீலை வாணிதாளேத்தி யன்னையே
விறன்மிகுந்து நின்கருணை மேவியும் வினையின் மாளுமோ வேந்தனென்னவே.

(ப - ரை.) திறல் விரேதன் = ஆற்றலோடு கூடிய விதாரத மகாராஜா, சினமிருத் தனன் = கோபம் அதிகரித்தனன், தேரில் ஏறினன் = உத்தமமாகிய ரதாரோகணஞ் செய்தான், சேனையோடுபோய் = சைனியங்களோடுஞ் சென்று, மறலியூர் புகும்வழி நெருக்கமாய் = யமபுரம் செல்லும் மார்க்கம் இடைஞ்சலாய், மருவலாரெலாம் மடிய மோதினான் = பகைவர் யாவரும் இறப்பப் பெரும்போர் வினைத்தனன், இறலுறுங்கொ லென்றெண்ணி = இறந்துவிடுமோ என்று நினைந்து, அன்பு அரு = வாஞ்சைமாறாத, லீலை வாணிதாளேத்தி = லீலாதேவிகள் ஸ்ரீசரசுவதிதேவியின் திருவடித்தாமரையைத் தோத்தரித்து, அன்னையே = ஹேமாதாவே, விறன் மிகுந்தும் = சுயம் ஆற்றன் மிகப் படைத்தும், நின்கருணை மேவியும் = தேவரீரது தயவைப் பெற்றும், வேந்தன் = எங் கள் பர்த்தா, வினையின் மாளுமோ என்ன = வினைவயமாகவே யிறந்து விடுமோ என்று வணக்கமாய் வினவினாள்கள். (77)

(ஸ்ரீ - வீர.) கிரிசிருங்கம்போலு மிருக்கு மாகாரத்தோ டொப்பான ஆகாரமுடை யது அத்தேர் கூடாகாரமயகிருகம் போன்ற ஆகாரமுடையதும்அத்தேரெனினும் தகும். இடியிடித்துக் கொண்டு இளம்பும் அநேகமேகங்களின் பெருஞ்சப்தம் போலுஞ் சப்தம் மிகமிகவும் இளம்பியது அக்கால்; திங்துபித் தொனியானது பர்வதபக்கப் பாறைப் பித் திகளிற் பிரதித்தொனி தொனித்து அதிபயங்கரமாக விருந்தது. சஸ்திரங்கள் ஒன்றோ டொன்று மோதி டங்காரஞ்செய்து கொண்டிருந்தன. வலுவில்வலிந்த மடந்தை யுடைத்தழும் ரோதனமிருத்தது. நிபிடமான அவயவ பாஷாணங்களால் பூரிக்கப் பெற்றதால் அசேஷ பிரஹ்மாண்ட பொந்திற்றொனி; அதிமகத்தான தொனியினாலே எல்லாப் பக்கங்களிலும் நிறைக்கப்பெற்ற பிரஹ்மாண்டப் பொந்தானது சிலாகனத்தாற் பூரிக்கப் பெற்றதேபோல இருந்தது. மிகுந்தகோர பயங்கரமானது பத்தத்திசையி லும் பூரித்திருந்தது. இருளானது மிகமிகவும் அதிகரித்திருந்தது. உன்முகங்களொப்ப சஸ்திரசங்கட்ட அக்கினிகள் சொலித்துக் கொண்டிருந்தன. சரசேனைக் கூட்டங்களே வருஷிக்கும வீரமேகங்கள் கர்ஜனைகள் செய்துநின்றன. வீரர்மேலும் குரூரமானலோக

பிற்பாகற்கழுகுமுதலியவைபோல, அம்புகள் நிரந்தரம்வீழ்ந்தன, ஆகாயத்தில் அம்புகள் பொடிந்து பொடிந்து படபடவெனச் சப்தித்து வீழ்ந்து கொண்டிருந்தன. தூளிகள் சக்கரத்திற் சார்ந்தியற்றன, தமங்களும் சப்தபயங்களும் முறையாக ஆயுதவன்னி ரஸ்மிகளாலும் போரிலேயே தியான மிருத்தலினாலும் மிருதி நிச்சயங்களாலும் சார்ந்தியடைந்தன. நிச்சப்த மூண்டாகுமாறும் அசம்பிரமம் அடையுமாறும் கேவலம்போரே நடந்தது. ஒரேகாலத்திற் சமசமவெனச் சப்த மூண்டாகுமாறு சரக்கூட்டங்கள் அப்போரில் வீழ்ந்துகொண்டே யிருந்தன. சமவேகங்களோடும் பரஸ்பரம் சமசம சப்தங்களோடும் சரக்கூட்டங்கள் பாய்ந்தன. டகிடகிதவென கலகலவென புசுண்டி யென்னும் ஆயுதஞ் சப்தம்செய்து கொண்டிருந்தது. திமிகிதியென்னும் சமுத்திரம்போல அப்போர்தாண்ட முடியாததா யிருந்தது. எங்களுடையபதி உமது திருவருளுற்றும் போரின் மத்தகயங்களைத் துவம்சம்புரிந்தும் வெற்றியுமற்ற போமாறெங்ஙன் ? மகத்தான பரிவாரங்களாகிய நக்ஷத்திரக் கூட்டங்களோடு பூர்ணசந்திரன் வெளிக்கிளம்பியதேபோல விதூரதன் மிகுந்த பரிவாரங்களோடு தனதாரண்மனையி லிருந்து வெளிக் கிளம்பினன்; வீரகணங்களைப் பார்த்துக்கொண்டு அரசன் அழகியதேர் ஏறினன், அத்தேர்மேருவாதி சிகர ஆகாரத்தோடு சமமாய ஆகாரமுற்றதாயும், முத்து மாணிக்க முதலியவற்றினே யலங்கரிக்கப் பெற்றதும் ஐவகைக் கொடிகளானே யலங்கரிக்கப் பெற்றதும் சுவர்க்கத்திற் பிரசித்தமாய தெய்வவிமானத்திற் கொப்பானதுமாகி யிருந்தது; சர்வதிசைகளிலும் எவப்பட்டுச் செல்வனவாய் எட்டுக் குதிரைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மத்த கஜவடிவ மேகங்களின் சப்தங்கள் பின்னதிசயமாகக் கிளம்பின, துந்துபித்தொனிகளோ மலைகளின் தாழ்வரை முதலியவற்றிற் பிரதித்தொனி கிளப்பிக்கொண்டு மிகு கோரமாகக் கிளம்பின, மதம்பிடித்த போர்வீரர்தமினின்றும் உண்டான கலகல சப்தங்கள் வியாபித்திருந்தன, கிங்கிணிக் கூட்டங்களின் சப்தங்களும், ஆயுதங்கள் ஒன்றோடொன்று அடிபடும் பெருஞ்சப்தங்களும் நிறைந்திருந்தன, வில்லின் சடசடவென்னுஞ் சப்தங்களும், சரங்கள் சீறுஞ்சப்தங்களும் வீரப்பாட்டுகளும் ஒருவருக்கொருவர் அங்கங்கலந்து நடக்கும் போராற் கவசங்கள் தூளியாதலாலாம் ஜணஜண சப்தங்களும் கிளம்பின: ஓங்கி யெரியாகின்ற சுவாலைகளின் டணத்கார சப்தங்களும் வீராவேசத்துடன் வீரர்கள்செய்யும் பெருஞ் சப்தங்களும், வீரர்கள் ஒருவருக்கொருவர் கூவிக்கொள்ளுஞ் சப்தங்களும், வந்திமார்களால் வீரர்கள்தம் உற்சாகப் பொருட்டுக் கூறுஞ்சப்தங்களும், போரிலடிபட்டுக் கைகாற்போய்த் துயரத்தாலழுஞ் சபதங்களும் மிகவியாபித்திருந்தன. பிரஹ்மாண்டத் துள்ளெலாம் தன்னிறைவானே கற்போன் றிடைவீடின்றித் தொனி தொனித்துக் கொண்டிருந்தது, கனத்தன்மையானே கையாற் கவர்வதே போலு மிருந்தது, பத்துத் திசைகளிலுமுள்ள கொடிவீடு முதலியவற்றில் நிறைந்து அந்தப் பயங்கரத் தொனியானது வியாபித்தது, பின்னர்ச் சூரியமார்க்கமானது அத்தியந்தம் மூடும்படியாக விருந்தது, தூளிவேடத்தோடும் பூமீடமே ஆகாயத்தின் கண்ணேயெழுந்து பறந்துகொண் டிருந்ததுபோற் றோற்றிற்று; அத்தூளிகளானே அம்மகாபுரமானது கர்ப்பவாசத்தி லிருப்பதுபோ லாயிற்று, வீரியமிகுத்த யவ்வனத்தில் இயற்கையாய் அவிவேகம் மிகுவதேபோல மிகக்கொடிய இருளானது பரவியது, மெதுவாகச் சேனைகளைச் சேகரித்துக்கொண்டு அவ்விதூரதனுவன் சைந்தவர்களுடைய பலத்தையும் தன்பலத்தையும் சீர்தூக்கி யேற்றத்தாழ்வு பாராமலே ஒருமித்து நிரம்பியுள்ள பிரளயக் கடலிற் பக்கத்தோடு பறக்கும் மேருகிரியானது புகுவதேபோலப் பகைவரது சேனையிற் புகுந்தனன். புகுந்தளவே வின்னுணி ணெஞைகள் சடசடவெனக் கிளம்பின, கொள்ளி யெரிபோலச் சஸ்திரங்கள் ஒன்றோடொன்று பட்டுண்டாம் அக்கினியானது

உற்பத்திப் பிரகரணம் நூளெடு

சொலித்துக் கொண்டிருந்தது, வீரமேகங்கள் சரதாரைக் கூட்டங்களைக் கர்ச்சனையோடும் பெய்தன. வீரர்களுடைய தேகங்களில் ரம்பம்போல அதிகூர்மையான பாணங்கள் புகுந்தன, கட்கங்களின் ஒன்றோடொன்று மோதும் ஓசை படபடவெனச் சப்தித்து ஆகாயத்தின் கண்ணே பரவியது, சஸ்திர சம்பந்தமான அக்கினிப் பிரகாசங்களால் விரைவில் இருள்கள் சாந்தியடைந்தன. யம ஆராதனயாத்திரை யுற்சவத்தில் நடம்புரி வனபோலக் கவந்தபந்திகள் எழுந்தன, இரக்தங்களானே நதிகள் சேருயின, ஆயுத வன்னிகளா லிருள்கள் ஒளிந்தன, போரின் எகினேவானேசப்தங்கள் ஓய்ந்தன, மரண நிச்சயத்தாற் பயங்கள் பறந்தன, போரானது கேவலம் ஓய்ந்த சப்தமுடையதாயும், சம்பிரமமற்றதாயும் ஆகியது. வாயுவாதிகளாலே ஆகுலமில்லாத வர்ஷாமேகவொளியை யுற்றது, கட்கமின்னற் றரங்கங்கள் பளீர்பளீர் என மின்னிடாங்கார சகிதமாயின, சரக்கூட்டமானது கதகதவென வொலித்தது, அக்கினியந்திரம் டகடகவெனக் கதறிக்கொண்டிருந்தது, பெரிய அஸ்திரங்கள் ஒன்றோடொன்று கலந்து ஜணஜணவெனச் சப்தித்தன, இவையல்லாமல் பிறவற்றானே திமிதிமியெனச் சப்தங்கள் உண்டாயின இவ்வண்ணம் அப்போரானது பயங்காளிகட்குத் தாண்டமுடியாததா யிருந்தது. இந்தப்பிரகாரம் அதிகோரமான பெரும் போரானது நிகழ்ந்தவழி மீண்டும் ஞானமயமான பகவதியைநோக்கி இருலீலைகளும் இவ்வாறு கேட்கத்தொடங்கினர் மீண்டும் என்றதனானே கூறப்படும் விஜயவிடைகள் முன்மொழிந்த ஊகங்களானே அடங்கிக் கிடத்தலின் கூறியது கூறலென்னும் கோளேவருதலின் கூறியபொருளின் வெளிப்படையாகக் கும் பயன்மாத்திரத்தைக் கருதியதாம். ஹே பரமேசுரியே! யாவர்களையும் அடித்து ஓடும்படிசெய்யும் பெரும்போரில் எங்களுடைய நாயகரானவர் தங்களுடைய கிருபையைப் பெற்றிருந்தும் அகஸ்மாத்தாக யாது காரணத்தால் வெற்றிபெறவில்லைகூறுதி.

(ச.) ஸ்ரீவசிட்டர்: திறல் + போய் = விரோதன் வீட்டினின்றும் வெளிப்பட்டு வீரகணங்களே யேறிட்டுப் பார்த்துச் சினமிருந்தனன், மறலி + மோதினன், ஸ்ரீ வசிட்டர்: இற + லீலை = லீலையிருவரும், பகவதிதேவியே யெங்கள் பர்த்தா இக்கோரமான சமரிற்சயிப்பனே அலனெவெனக் கருதி, வாணிதாளேத்தி + என்னவே, கூடாகார சமாகாரம் பிராசாத விசேஷம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வீதாரதன் பிரஹ்மவித்தையை அடைதற்கும், சிந்துரதன் செல்வவெற்றி யுறுதற்கும் காரணமுண்டென ஸ்ரீ சரசுவதிதேவி கூறல்:—கதியென.

கதிவிரும்பலாற் கலிவிரோதன் கப்பிலாப் பதங்கலப் பதாயினை
னெதிரியான வீச்சிந்து வென்பவனி கலில்வெல்லவென் றெனையிறைஞ்சலால்
விதியில் வென்றவன் வேந்தனெமன விளம்புபோதிலே விடியரேறன்றனு
மதிரமோதிமே லடர்ந்தவெங் களத்தனிக பெற்றுமற் றழிந்துபோனதே.

(ப - ரை.) கதிவிரும்பலால் = மோக்ஷத்தை வாஞ்சித்தெம்மை யாராதித்திருத்தலால், கலிவிரோதன் = சாஸ்திரஞ்ஞனை வீதாரதமன்னவன், கப்பிலாப் பதங்கலப்பதாயினன் = களங்கமற்ற சிவபதமடைய லாயினன், எதிரியான = வீதாரதனது பகைவனை, இச்சிந்து வென்பவன் = இந்தச் சிந்துரத மன்னவன், இகலில் வெல்ல என்றனை யிறைஞ்சலால் = போரிற் பகைவரை வெற்றிகொள்ள வேண்டுமென்று எம்மைப் பூசித்திருத்தலால், விதியில் = விதிப்படி, வென்று = ஜயித்து, வேந்தனும் = அரசனுவன், எனவிளம்புபோதில் = என்று அம்மையார் கூறியபோது, விடியல் தோன்றலும் = சூரியவுதயம் ஆதலும், அதிரமோதி = தொம்சமாம்படியாக அடித்து, மேல

டர்ந்த = மேல் நெருங்கிய, வெங்களத்து = கொடியபோர்க் களத்தில், அனிகமொன்று மற்று = சர்வசேனைகளும் அத்தியந்தம் பொடியாகி, அழிந்துபோனதே = இறந்து போயிற்று. (78)

(ஸ்ரீ - வீர) மனோமயமாகப் பாவிக்கப்பெற்றேன் விதூரதனுல். இருபக்கத்தாருஞ் செய்யும் பெரும்போரை ஆச்சரியமாகப் பார்க்கவந்தான் பாற்கரன், மைக்கடலுக் கொப் பாயிருந்த புவனத்திற் றங்கச் சலாகைகள் போலச் சூரியகிரணங்கள் வீழ்ந்தன. சேனை யிற் சேர்ந்தவர் சிலரே யிருபாலும் எஞ்சினரென்பார் போனதே யென்றூர். சிலதப்பிப் போயிற்றென்றபடி. விதூரத மன்னனது பகைவனுகிய இம்மன்னவன் வெகுகாலம் வெற்றிபெற என்னை யாராதனைசெய் திருக்கின்றூன், விதூரத மன்னவனே அவ்வாறு செய்யவில்லை, ஆகலின் சிந்துராஜாவே ஜயம்பெறும் விதூரதன் வெற்றிபெறுன், எல் லாப் பிராணிகளின் மனத்துள்ளடங்கிய ஞானவடிவமாகியே யானிருக்கின்றேன் இத்த கைய என்னையாவர் எக்காலம் எவ்வண்ணம் காமகரும வாசனைப்பலத்தான் பலதானஞ் செய்யுமாறு பிரேரிக்கின்றூரோ விரைவில் அவ்வண்ணமே யக்கால் அவருக்கு யான் அவ்வப் பிரயோஜன வடிவமாக விவர்த்தமாகியே யுபகரிப்பேன். இவ்விதூரதனே ஞான மயமாகிய என்னையான் மூக்தன் ஆகவேண்டு மென்று உபாசித்திருக்கின்றூன் ஆகலின் அவன் முக்தனே யாவன், இவனுடைய சுயஞ்சத்துரு சிந்துமகிபதி வெற்றியாற் சத்து ருக்களைப் போரிற் பீடிப்பேனுக யானுகவேண்டு மென்று என்னை யுபாசித்துளான் ஆகையால் விதூரதனுனவன் அத்தேகத்தைப் பார்ஸ்வமாகிய உன்னேடும் இவளோடும் அடைந்து காலாந்தரத்தில் மோக்ஷத்தையு மடைவன், இவனுடைய சுயஞ்சத்துருவாகிய சிந்து மகிபதியானவன் இவனைக்கொன்று இப்பூபீடத்தில் வெற்றிபெற்றவனுகி இராஜ்ய பரிபாலனஞ் செய்துகொண் டிருப்பான். என்றிவ்வாறு தேவிமார்கள் இருவரும் பேசிக் கொண் டிருந்தபோது இரண்டு பலவான்களும் போர்செய்து கொண்டிருந்த ஆச்சரியத் தைப் பார்க்கும் பொருட்டுப்போல இரவி உதயாசலம் வந்தது. புவனம்மைக்கடலினின் றும் எடுத்துவந்து வைத்ததுபோ லிருந்தது, சூரியனுடைய கிரணங்கள் பொன்னைப் பாலாக்கி யெங்கும் பரப்பினபோற் செய்தன. இச்சமயத்தில் எல்லாப்படைகளுமே இளைத்திளைத்து களைத்தன, இரண அங்கணமானது சூனியம்போலாயது இருபாலிலும் ஒரு சிறு வீரரேயெஞ்சி நின்றனர்.

(ச.) ஸ்ரீதேவிசொல்கின்றூள்: கதி + வேந்தனும் = விரோத பூபதியால் மூக்தனே யாகவேண்டு மெனப்பாவிக்கப் பட்டவள் நானுனேனுதலின், கலை = ஞப்திமயவாக் கீசு வரிதேவி, பிரதிபைரூபமான முக்தியடையப்படும் அவ்விரோத நிரூபாரியால் நான்யுத்தத் திற்செய நியித்தமாக வெகுகாலம் ஆராதிக்கப் பட்டேனுதலின் இவனேஜயிப்பன் விரோதன் ஜயிக்கப்படுவன். இத்தன்மையான இச்சத்துரு ஜயமுடையனுகி இராச்சியத் தையாளுவன். ஸ்ரீவசிட்டர்: என ÷ தோன்றலும் = இத்தன்மையாகத் தேவிவசனித்த நேரத்தில், பலமுள்ள சேனைகளுடைய ஆச்சரியத்தைப் பார்த்தற்கு இரவி உதயாசலத் தைக்குறித்து எழுந்தருளினன்போலும், சூரியகிரணங்கள் விகசிதங்களாகவும், அதிர + அடர்த்த + போயதே = அதற்குட் சர்வசேனைகளு நாசமாய் ரணகளம் அற்போய்பயை னிகமாய்சூனியம்போ மிருந்தது.

(ஸ்ரீ - வீர - அ - கை.) விசித்திர மாயையை உண்டாக்குவன வாகியமந்திரஅஸ் திரங்களானே அகிலத்தை மயக்கும் சிந்துபதம மன்னவர் நேரிற்கலந்து போர்செய்யத் தொடங்கல்:—சிந்துவென.

சிந்துராமனுந் திறல்விடேரதச் செல்வ வேந்தனுஞ் சிலகளேங்கினு
நீந்துபானுவுந் திசைகள் வானமு மெய்யும் வாளியா லெங்குமூடினர்
மூந்துவெங்கணைத் திரளெரிந்து தீமுடுகி யூழியின்முடிவை யொத்தது
மூந்துபாகனுந் தேரும்வில்லு மற்றுயர் விடேத னொருவனுயினன்.

(ப. ரை.) சிந்துராமனும் = சிந்துரதராஜனும், திறல்விடேரதச் செல்வவேந்தனும் = வலிமைமிகுந்த விதூரத னென்னும் ஐசுவரிய மிக்க மகாராஜாவும், சிலகளேங்கினுர் = தனுஷ்களே வளைத்தனர் அம்புதொடுத்தனர், நீந்துபானுவுந் திசைகள் வானமும் எய்யும் வாளியால் எங்கும் மூடினுர் = பிரயோகியா நின்ற பாணவருஷங்களால் சந்திரசூரிய திக்காகாசமென்னும் எவ்விடங்களேயும் மறைத்தனர், மூந்து வெங்கணைத்திரள் எரிந்து தீமுடுகி = வேகமாகப் போகும்கோடிய அஸ்திரக் கூட்டம் எரிந்து அழன்முதிர்ந்து, ஊழியின் முடிவை யொத்தலும் = கற்பாந்த காலத்திற்குச் சமானமாதலும், உந்துபாகனும் தேரும் வில்லும் அற்று = செலுத்துஞ் சாரதியும் செல்லும்ரதமும் வெல்லும் வில்லும் இல்லாதவனுய், உயர் விடேதன் ஒருவனுயினன் = உயர்வாகிய மிகுந்த விதூரதமன்னவன் ஏகனுயிருந்தான். (74)

(ஸ்ரீ - வீர.) உன்னதக் கிரீவன்மூற்றந்து நாமகன். வில்நாண் பூட்டித்தொனித்தனர்; திசைமுகங்க ளெல்லாம் பிரதித்தொனி செய்தன. மேருகிரிதடத்திற் கற்பாந்த பவன மடித்ததுபோலப் பலவானுகிய விதூரதன் காலையிலருக்கன் கிரணங்களேப்போல விடுத்தனன் சாயகங்கள். நிமிர்ந்த கழுத்தோடுகூடிய சிந்துமன்னவனே முன்னுற்று அவ் விதூரதமன்னனின் மத்தியான தீபனசமான கோபத்தோடும் அதிவேகத்தை யுடையவ னுயினன்; வில்லெடுத்து நாணேசை செய்ய அது நெடுநேரம்வரை எல்லாத்திசைகளி லும் சப்தித்துக் கொண்டிருந்தன, மேருகிரியின் தடத்தைக் கற்பாந்த சண்டமாருதம் அடித்ததுபோ லிருந்தது; மிகவும் விக்கிரமம் பொருந்திய இராஜாவானவர் அம்புமூத் தூணியாகிய இரவிலிருக்கும் முகுளித பதுமங்களில் பந்திக்கப்பட்டிருந்த பாணங்களா கிய வண்டுகளின் பரம்பரைகளேப் பிரளய மார்த்தாண்டன் கிரணங்களே விட்டதேபோல விட்டனர்; அவரது நாணினின்றும் விடுபடுங் காலத்தில் ஒரேபாணமாக விருந்தது ஆகாயத்தின் கண்ணே போகும்போது ஆயிரமாக விருந்து இலக்ஷக்கணக்காய் வீழ்ந்தன; எளிதாகவே சிந்து மன்னனுக்கும் அவ்வாரூகவே யிருந்தது ஆற்றல்; இத்தகைய போர்க்கவுசலம் அவர்கட் கெங்ஙன முண்டாயதெனின் ? வரதராஜாவாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவைத் தவத்தா லாராதனை செய்து பெற்ற வரப்பிரசாதத்தால் இவ்வில்லாண்மையான தது இவர்கட்கு நேர்ந்தது. அச்சிலீமுக பரம்பரை அதிதீக்ஷணங்களாய் மிகத்தீண்டப் பெறுதவா யிருந்தன. அநேகவிதமாகச் சிந்துவாகிய பெருந்தோளான் நெடுநேரம் சமர்க் களத்திற் சிரோபூதமாய் வீளையாடினன்; தேரின்கண் ணேறியிருந்த ஆரியபுத்திரராகிய எனது நாயக விதூரதரை அதிவிரைவில் அச்சிந்து சரமழைகளால் வீளையாடி ஆ ஆ! அந்தோ ! கஷ்டம் ! துன்புறுத்து கின்றனன். கொடியற்றனர், தேரற்றனர், குதிரை யற்றனர், கொள் சாரதியற்றனர், வில்லற்றனர்.

(ச.) சிந்து + எந்தினர் = சிந்து என்னும் விடேதப் + பிரதிபலிக்கும் விடேதன் போலவே சக்தி (சாமர்த்தியம்) லாகவம், ஹஸ்தலாகவமும் ஆயிற்றென்பது அர்த்தம் + ஒன்றுக்கு பத்தாகும் ஏகவாக்கியம். இந்து + வாளியால் = சரவருடங்களால், ஒருவனுகினன்.

(ஸ்ரீ-வீர - அ-கை.] பூபதி வீழ்தலும் புதியலீலை பூபதியிற்போக ஆணைதருமாறு ஸ்ரீதேவியைத் தாழ்தலும்:—பிறையென.

பிறைநெடுஞ் சரங்கவசம் வீழ்வுறப் பிரித்துமெய் யெலாம் பிளந்து சிந்தலும், பொறையழிந்து வீழ்ந்தவனை நோக்கி வெண்புண்ட ரீகையைப் புதிய லீலையார்த், திறைவனுவிபோ மெல்லியாயி ஞனிவனை நண்ணனானேக நல்கெனு, வறைதலோடு மவ்வன்னை நல்கினளவளும் விண்ணினெய் தாகியே கினுள். (80)

(ப - ரை.) பிறை நெடுஞ்சரம் = பிறைபோன்ற வஜ்ரசமமான பாணங்களால் விடீரதன் பாணங்களையும், கவசம் = வர்மத்தையும், வீழ்வுறப் பிரித்து = தூள் தூள் ஆகும் படியாகப் பிளந்து, மெய்யெலாம் பிளந்து சிந்தலும் = சர்வாங்கமும் ஆகுலப்படும்படித் துண்டந்துண்டமாக்கி யெறிதலும், பொறையழிந்து = பிரஞ்ஞை யில்லாமல், வீழ்ந்த வனை நோக்கி = வீழ்ந்த நாயகனைப் பார்த்து, வெண்புண்டரீகையை = வெண்டாமரைத்தேவியை, புதியலீலை பார்த்து = நவீனலீலை நோக்கி, இறைவன் = எனது தேவன், ஆவிபோம் எல்லையாயினுன் = உயிர்பிரியுந் தறுவாயிலிருக்கின்றனன், நான் இவனை நண்ண = இவ்விறைவனது சேவடியையான் சேரும்படியாக, எனகல்கெனு = போக அனுக்கிரகம் செய்தருள வேண்டுமென்று, அறைதலோடும் = பிரார்த்தித்துக் கொண்டபோது, அவ்வன்னை = அந்த ஜகன்மாதா, நல்கினுள் = அனுக்கிரகித்தாள், அவளும் விண்ணில் நொய்தாகி யேகினுள் = அந்தலீலையும் ஆகாயத்திற் சுக்குமமாகிச் சென்றனள். (80)

(ஸ்ரீ - வீர.) அகன்ற பாறைக்குச் சமானமாகத் திடமாய்ப் பருத்திருந்த மேற்பாகம் எதன்ஹ்ருதம் அதைப் பிளந்தென்பதாம். பாண்டங்களின் உபகரணங்களின் பாரக்கூட்டங்களோடும் சகடங்களின் சமூகம் ஓடிக்கொண் டிருந்தன, எங்கேபார்த்தாலும் அழுங்குரல் அதிகரித்துக் கொண்டே யிருந்ததை நோக்கிக் களத்திரக் கூட்டங்கள் துக்கித்துக் கத்தின. நகரத்திலுள்ளவர்களின் கூட்டம் ஓடிக்கொண் டிருந்தது. கனமற்றதனு ஆகாரத்துடன் மேற்கிளம்பிச் சென்றனள். கவசமற்றனர் அங்கமுழுவதும் அழிவுற்றனர் ஆகுலமுற்றனர் உடைக்க முடியாத கற்பாறையைப்போல அதிவலுமையான அதிதூல மாய மூர்த்தன்யத்தை வஜ்ரசமமான பாணங்களாற் பிளந்து பூதலத்தில் வீழ்த்தினன். விதூரத மன்னவன் மாண்டனன் விதூரதமன்னவன் மாண்டனன் வேற்றரசனுஞ் சிந்துவாற்போரில் வீழ்ந்தனன் என்னுஞ் சப்தமானது மிகமிகக்கிளம்பிய அளவில் தேசமெல்லாம் அதிபயமடைந்தது, கூட்டங் கூட்டமாக வண்டிகள் பாண்டங்களும் பிறவுமேற்றப்பட்டனவாய்ச் செல்லத்தொடங்கின, கூவிக்கொண்டு திரியும் மனைவி மக்களை யழைத்துக் கொண்டு அதிதூர நகரங்கட்கு செல்லத் தொடங்கினர். ஹே இராகவ ! இப்படியாய வேளையில் ஸ்ரீசரசுவதிதேவியை நோக்கிலீலை ஹே மாத ! இங்கு எனது நாயகர் இத்தேஹத்தைவிட முயலுகின்ற ரென்று முன்னிருக்கும் மூர்ச்சித்த நாயகரது மூடிவுமூச்சை நோக்கிக்கூறி ஸ்ரீ ஞானதேவியாகிய பரமேசுரியே ! எனதுபர்த்தாவைப் பின்றொடர்ந் தடையுமாறு திருவருள் புரியவேண்டும், புதிய லீலாதேவியானவள் கிடைத்தவரத்தினளாகி முன் வர்ணிக்கப்பட்ட வாசனு மயமாகவே தேகமுடையவளாகி மகேதியாகிய பதியை யடையும் பொருட்டு விண்ணேறியானே லோகங்களைக் கடந்து செல்வாளாயினள். கூறியபடி சிந்தித்து ஸ்மரணத்தோடும் தேகாதியவத்தையடைவுற்றுப் பதியடைவினுற்சாகத்தால் மிகுந்த ஆனந்த முடையவளாய் மகத்தான மகரத்வஜமாய் ஆகாயத்தலத்திற் பக்ஷியைப்போல இலகுவான சரீரமுடைத்தாய்ப் பறந்தனள்.

உற்பத்திப் பிரகரணம்

(ச.) பொறையழிந்து வீழ்ந்தவனே = சுவாசம் எவ்வளவும் அற்று மூர்ச்சையடைந்த பர்த்தாவை, நல்கெனு, அம்பிகையே = ஹேமகேசுவரியே! தயைசெய்ய வேண்டுமென்ன அறைதலோடும், எகினுள் நொய்தாகி = ஞப்தியை நிரந்தரந் தியானஞ்செய்து அதனுற் கணத்திற் சாமர்த்திய வதியாய்ச் சூக்கரூபமாய் வீண்ணில் யக்ஷிணிபோல் பேய் எகினுள். மூடம் = மூர்ச்சிதம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) வழியிலிருந்த குமாரியோடுங் கூடிசெல்வோம் வருதியென அக்குமாரி கூறி முன்பு நெறிகாட்டப் பின் செல்லுகின்ற புதியலீலையின் நெறிநீக்கம்:— கருவென.

கருமுகிற் றடங்கடந்து வாயுவின் கதிகடந்து வெங்கதிரி னெல்லைவிட்
டருகுதாரகர் பதமகன்று மேலயனை யாதியாமமரர் நாடொரீஇ
மருவுமிந்த வண்டம் பிளந்துபோய் வாரியாதியாய் வளைந்த யாவையு
முருவியெல்லையு முடிவுமற்றதா முண்மை ஞானவிண் ணெல்லையெய்தினுள்

(ப - ரை) கருமுகிற் றடங்கடந்து = நீலமேக நெறியைத்தாண்டி, வாயுவின் கதி கடந்து = வாதமார்க்கத்தையும் வலிந்து, வெங்கதிரின் எல்லைவிட்டு = சூரியமார்க்கத்தினின்றும் இளம்பி, அருகுதாரகர் பதம் அகன்று = சமீபித்த உபதெறியையும் உல்லங்கனஞ்செய்து, மேல் அயனையாதியாம் அமரர் நாடு ஒரீஇ = உயர்ந்த பிரஹ்மாதி தேவதைகளின் பதங்களையுங் கடந்து, மருவும் இந்த அண்டம்பிளந்துபோம் = பொருந்தும் இவ்வண்டத்தைப் பிளந்து சென்று, வாரியாதியாய் வளைந்தயாவையும் உருவி = கடன் முதலனவாய்ச் சூழ்ந்த எல்லாவற்றையும் தாண்டி, எல்லையும் முடிவும் அற்றதாம்) = வரம்பும் அந்தமு மில்லாத, உண்மை ஞானவிண் = சத்திய சித்தாகாசத்தை, ஒல்லையெய்தினுள் = விரைவில் விரவினுள்.

(ஸ்ரீ - வீர) அண்டத்தை = பிரஹ்மாண்ட கபாலஸ்தானத்தை? பெருஞ்சித்தே யாய பரமாத்மாவெனப் பெயரியகனமாம் அதன் மத்தியில் எய்தினுளென்பதுபொருள் மேக மார்க்கத்தைக் கடந்து வாதஸ்கந்தத்தினுட் சென்றனர், சூரியமார்க்கத்தைத் தாண்டி நக்ஷத்திர மார்க்கத்தையும் கடந்து சென்றனர், வாயு இந்திரசுரசித்தர்களின் லோகங்களே யெளிதிற்முண்டி பிரஹ்ம விஷ்ணு மகேசர்களின் லோகங்களையுந் தாண்டிப் பிரஹ்மாண்ட கபாலத்தை யடைந்தனர். இமநீர்ச் சீதளத் தகைமையானது உள்ளிருப்பதாயினும் கும்பத்தி லபின்னமாகத் துவாரமொன்று மிராதிருந்தும் வெளியில் வெளிக்கிளம்புவதே போலச் சங்கற்ப சித்தமான அவள் பிரஹ்மாண்டத்தி னின்றும் வெளியே கிளம்பினள். இக்கமனமும் சித்தத்தின் கற்பனை மாத்திரமேயாகும், தன் சித்தமாத்திரத்தி னின்றும் தன் சங்கற்ப வியற்கையாலாம் இம்மயக்கம் ஈண்டு இவ்வண்ணம் வெட்டவெளியாக உள்ளேயே யனுபவிக்கப் படுகின்றது; இவ்வண்ணப் பிரஹ்மாதி ஸ்தானங்களைக் கடந்து, பிரஹ்மாண்டகபாலத்தை யடைந்தபின்னர் பிரஹ்மாண்டத்திற்கு வெளியிலிருக்கும் ஜலாதியாவரணங்களைக் கடந்து பெரிதுக்கும் பெரிதாய மாயையோடு கூடிய சிதாகாசத்தை பின்படைவுற்றனர்.

(ச.) வாயுவின்கதி = வாயுமண்டலங்கள், இந்த வண்டம் = பிரஹ்மாண்ட கடாகாசகண்டம், வாரியாதியாய் வளைந்த யாவையும் = பிரஹ்மாண்டத்துக்குச் சல அநல ஆகாசாதிகளும் வாயுமகதகங்கார பிரகிருதி ரூபங்களும் சத்தா வரணங்களாம், உண்மை ஞானவிண் ஒல்லை = சிதாகாச மத்தியம் அச்சிதாகாசத்தில் அதிவேகமாக எய்தினுள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மகாத்மாக் கட்கும்பிருதிவியாதியாவரணம் போலும் பரிச் சேதம் ஆசங்கித்துக் கூறுகின்றார்:—கற்பமென. கருஷிஜ்ஞா

கற்பகோடி வெங்கருட ஞெடினும் கடக்கொணாவத்திக்காடு காய்த்தபோ
லுற்பவங்களா மண்டகோடி யொன்றொன்றை நோக்குறு தூளவவற்றினு
ளற்பமின்றி யாவரண பேதமே யயல்வளைப் புறுமண்ட மொன்றனுட்
டற்பதங்கடந் தெய்தியம்புயச் சவங்கிடந்த மண்டப மடைந்தனள்.

(ப - ரை.) கற்பகோடி = கற்பகோடி சதங்களானும், வெங்கருடஞெடினும் = அதிவேகத்தோடு கூடிய கருடன் பறந்து சென்றாலும், கடக்கொணா = தாண்டமுடி யாதபடி, அத்திக்காடு காய்த்தபோல் = அத்திவனங்காய்த் திருப்பதேபோல், உற்பவங் களாம் அண்டகோடி = உண்டாகி மண்டிமண்ட கோடிகள், ஒன்றைபையொன்று நோக்கு றுதூள = அன்னி யோன்னியம் அதிர்ஷ்டங்களாக உள்ளன, அவற்றினுள் = அவைக ளுள், அற்பமின்றி = விஸ்தாரமாய், ஆவரணபேதமே = மறைப்பின் வேற்றுமைகளே, அயல்வளைப்புறும் = அயல் வளைந்துகொண் டிருக்கும், அண்டமொன்றனுள் = ஓரண் டத்தினகண், தற்பதங்கடந்தெய்தி = பிளந்து புகுந்துன் பதுமபட்டண மடைந்து, அம்புயச் சவங்கிடந்த மண்டப மடைந்தனள் = ஆண்டு அப்பதும சரீரமிருந்த மண்ட பத்தைச் சார்ந்தனள்.

(ஸ்ரீ - வீர.) கருடஞலுங் கரைகாண முடியா வண்டகோடிகள் என்பதாம், அதி வேகத்தோடு செல்லும் பெருங்கருடஞலும் கற்பகோடி சதகாலஞ் செல்லினும் எல்லா வற்றையுங் கரைகாண இவ்வளவென வியையவே யியையாதாம்; ஆண்டநேகங்கோடி பிரஹ்மாண்டங்கள் கணக்கிட முடியாதனவாய் அளவற்று நிறைந்திருந்தன. அவைகள் மகாவனங்களில் பழங்கள்போல அன்னி யோன்னியம் காணமுடியாதனவா யிருந்தன, ஆண்டொருபுரத்தில் விஸ்தாரமான ஆவரணங்களோடு கூடியதா யினிது முன்னிருந்த அண்டத்தில் வாஸ்தவமாய்த் துவார அபேக்ஷை யில்லாதபடியுலே இலந்தைக் கனி யிற் புழுநுழைவதே போலத் துவாரஞ் செய்தே புகுந்ததுபோற் புகுந்தனருள்ளில்; மீண்டு அதிகவொளி வாய்ந்த பிரஹ்மாதி பதங்கடந்து கீழேயிருக்கும் அப்பதுமமன்ன மகீமண்டலத்தை யடைந்தனர், அச்சவமண்டப மடைந்தபோது அக்குமாரி மறைந்த னள் மாயையாற் றோன்றி மார்க்கம் காண்பித்தனள்போலுஸ்ரீதேவி திருவருளால்.

(ச.) கற்பகோடி சதங்களானும், அதில் = அச்சிதாகாசத்தில், மகாவனத்திற் பலங் களைப்போல், அண்டகோடி = பிரஹ்மாண்ட லக்ஷங்கள், அசங்கைகள், வெகுவாய் அவை கள் ஒன்றை யொன்று காணுதனவாம், தற்பதங்கடந்து சித்திரஞ்செய்து பிரவேசித்து, அந்தப்புர மண்டபத்தை யடைந்தனள் = பொருந்தினவளாய்ச் சவத்தின் அருகி லிருந்தாள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) நவீனலீலை அம்மண்டபக் காட்சியா லாச்சரிய முற்றிருப்ப நாயகன் ஜீவன் ஆண்டுவந்து சேர்தல்.—தமரவென.

தமரவண்டு சூழ்மலரின் மூடுமிச்சவ சரீரமாந்த ரணிபாலனே
யெமதுநாயகன் கருணைவா ணியாலென் கொன்முன்ன மிங்கெய்தினேமெனு
வமர வெண்ணிவெண் கவரிவீசி யங்கன்பனோர் புறத்தவ ளிருந்தபின்
விமலஞானியாம் விறல்வீரதன் மேவுசீவன் விண்மீது போயதே.

(ப - ரை.) தமரவண்டு சூழ் = சப்தியா நின்ற அளிகள் மொய்த்த, மலரின்மூடு மிச்சவ சரீரமாந்தரணி பாலனே = புஷ்பங்களிலுலே ஆச்சாதித் திருக்கப்பட்ட இந்த

உயிரில்லாத தேகமேயாய பூபாலனே, எமது[ஒப்பு]=நம் நாயகன், கருணை வாணியால் = தயைவடிவமான ஸ்ரீ சரசுவதிதேவியால், என் கொன்முன்னம் இங்கெய்தினெமெனு= என்ன ஆச்சரியம் பூர்வம் இவ்விடத்தில் அடைந்தோமே யென்று, அமர எண்ணி = பொருமையாயுன்றிச் சிந்தித்து, வெண் கவரிவீசி=அழகிய வெண்சாமரத்தை எடுத்து வீசி, அங்கு = அவ்விடத்தில், அன்பன் ஓர்புறத்து = நாயகனது ஒருபக்கத்தில்; அவ ளிருந்தபின் = அந்த லலிதயவ்வனே யிருந்த பின்னர், விமலஞானியாம்=நிருமல அறிஞ ஞன, விறல் விரேதன் மேவுசீவன்=வெற்றிபொருந்திய விதூரத மன்னவன் பொருந்தி யிருந்த வுயிரானது, விண்மீதுபோயதே = ஆகாயத்தின் கண்ணே இளம்பிச் சென்றது. (83)

(ஸ்ரீ - வீர.) என்கொல் = விஸ்மயமுற்று விதிர்விதிர்த்தும் புளகாங்கிதையாய்ப் புந்தியா லோர்ந்தாள். அந்நாயகராகிய சவரூபத்தை அவளினிதாக நோக்கி யுண்மையா கவே இதனைத்தானே தர்க்கித்து எண்ணுவாளாயினள், அவ்விவ்வெனது நாயகர் சிந்து வாற்போரிற் கொல்லப்பட்டு வீரலோகமாகிய விதையடைந்து கணம் இஷ்டப்படிதுயில் கின்றூர் போலும் யான் ஸ்ரீதேவியினது திவ்வியமான திருவருளானே சரீரத்தோடு கூடி னவளாகவே இவ்வண்ணம் இங்குன் ஈண்டு எனது நாயகரை யடைந்தேனுதலின்யானே தன்னியை எனக்குச் சமமாக எவளையுமே யியம்பமுடியாது எனவெண்ணி அவள் தாம ரைக்கரத்திற்கவின் சாமரந்தாங்கிச் சந்திரனுல் விண்போல் அவனி மண்டலம் வீசிக் கொண்டிருந்தனள். இச்சமயத்தில் மன்னவன் கண்களின் விழிகள் சுழலப்பெற்றவனும் எல்லாக் காரணங்களும் மூர்ச்சிதனுகவே அதிசூக்குமமான பிராணன் மாத்திரம் எஞ்சிய தேகமுடையவனும் காய்ந்து வெளுத்த உதட்டினனும் ஜீர்ணபர்ணவர்ண வொளியின னும் ஆயினன், சேதனமற்றனன், தேகத்தை விட்டுச்சென்றது ஜீவன்; நிராணஜன்னிய விருத்தியுப நிதவுணர்வானது காற்றிலிருக்கும் கந்தலேசத்தைச் சூக்குமமாயினும் கவர் வதேபோல ஆகாயத்திற் செல்லும் அச்சீவனைத் திவ்யதிருவஷ்டிகளோடு கூடிய அத்தேவி மார் இருவரும் கண்டனர். அந்தஜீவ சித்தானது ஆகாயத்தில் ஆதிவாகிகப் பிராண னுடு சேர்ந்துகொண்டு வாசனையின் வாயிலாக ஆகாயத்தில் அதிதூரம்போக ஆரம்பித் தது, காற்றிற் குறிக்கப்பட்ட கந்தகலையை இருவண்டுகள் இனிது தொடர்வதேபோல அந்தஜீவசித்தை இருதேவிமார்களும் அனுசரித்தே தொடர்ந்தனர்.

(ச.) அச்சவசரீரத்தைப் பார்த்து, வீரவராக்ரணீயான வித்தரணிபாலனே, தேவி யின் பிரசாதத்தினுல் அங்குநின்று இங்கு நிர்மலமான சித்தத்தால் நன்றுய்ச் சிந்தித்து, அவள் = அவ்விளங்கொடி யென்னும் ராஜேந்திரலீலை, ஸ்ரீவசிட்டர் பின்.

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஆகாயத்திற் சென்ற அரசனைத் தொடர்ந்து தேவிமார்கள் மண் டபமடைதல்:—ஞானவென.

ஞானநோக்கினு லவனைநோக்கி விண்ணடந்து பின்வரு நங்கைமார்[ஜ] தமைத் தானறிந்திடா தகன்ற ஜீவன்போய்ச் சவமிருந்த மண்டப மடைந்திடப் போனமாதரும் புதியலீலையைப் புரிந்து நோக்கினுர் பொன்செய் மண்டபத் தானசீவனைத் தகைத்து மீளவுமம்பு யாசனத் தவணிறுத்தினுள்.

(ப - ரை.) ஞானநோக்கினுல் = உணர்வுவடிவ திவ்யதிருவஷ்டியினுலே, அவனை நோக்கி = அவ்வரசனைப் பார்த்துக்கொண்டு, விண்ணடந்து = ஆகாயத்திற் சென்று, பின்வரும் = பின்னர்வராகின்ற, நங்கைமார் தமை=தேவிமார்களை, தானறிந்திடாது= தான் அறியாமல், அகன்றசீவன்போய் = சென்ற அவ்வரையனது உயிர்போய், சவ

மிருந்த மண்டப மடைந்திட = பதுமசரீர மிருந்த மண்டபத்தை யுற்றிட, போனமாத ரும் புதியலீலையைப் புரிந்து நோக்கினர் = பின்சென்ற தேவிமாரும் நவீனலீலையை, ன்குகண்டனர், பொன்செய் மண்டபத்தான சீவனை = பொன்னுலாய பதுமமண்ட பத்தை யடைந்துள்ள வுயிரை, தகைந்து = தடுத்து, மீளவும் = மீண்டும், அம்புயாச னத்தவள் = தாமரைச் செல்வி, நிறுத்தினள் = நிற்குமாறு செய்தாள்.

(ஸ்ரீ - வீர.) உயிர் = விதூரத சம்பந்தி சீவன். இச்சீவன் சவசரீரத்தை யடையா தொழிக, ஆகாசத்திலாண்டு இருக்குக என்றிவ்வகையான வடிவ சங்கற்பத்தால் நிற்கு மாறு செய்தனள். அப்போது ஜீவகலையும் லீலையும் ஞானதேவியும் ஆகமூவரும் ஆகா யத்தே சென்றனர் மன்னவனுடைய ஜீவரேகையானது இருதேவிமார்களும் உருவ மூடையவர்களாக இருந்த போதினும் அவர்களைப் பார்க்கவில்லை அவர்கள் அதனைப் பார்த்துக்கொண்டே சென்றனர், அக்கலையை யனுசரித்தே அவர்கள் ஆகாயமார்க்கங் கடந்தனர், அதிவிரைவில் லோகாந்தரங்களைக் கடந்து இந்தப் பிரஹ்மாண்டத்தினின் றும் வெளிப்போந்து வேறு பிரஹ்மாண்டத்தை யடைந்து பூமண்டலத்திற் சேர்ந்து சங்கற்ப மாத்திரத்தாலுருவம் பெற்ற அவ்விருவரும் ஜீவரேகையோடுற்று பதுமாராஜ புரத்தை யடைந்து லீலையின் அந்தப்புர மண்டபமுற்றனர், காற்றின்ரேகை தாமரையிற் புகுந்ததுபோலும் சூரியப்பிரபை கமலத்திற் புகுந்ததுபோலும் சுகந்தம் காற்றிற்புகுந் ததேபோலும் இவ்விடப்படி யிருவரும் கணத்திற் புகுந்தனர் அதன்பின் ஆண்டுச் சவ சய்யையின் ஒருபக்கத்திலிருந்த மூன்மரித்த விதூரதலீலையாகிய மூன்வந்தவளை ஞான தேவியும் லீலாதேவியும் கண்டார்கள்.

(ச.) ஞானநோக்கினுல் = திவ்யதிருஷ்டியினுல், ஜீவகலையைப் பார்த்துக்கொண்டு, நங்கைமார்தமை = லீலையையும் ஞப்தியையும், பொன்செய் மண்டபம் = அந்தப்புர மண்டபம், (விரோத) சீவனை, அம்புயாசனத்தவள் = ஞப்தி, மீளவும், மனத்தின் சலனத் தைப்போல் (சங்கற்பத்தால்) தகைந்திருந்தனள், தன்மகிமை வெளியாக வென்பது கருத்து.

(ஸ்ரீ - வீர - அ - கை.) புராதன லீலையின்ரேகம் காணுதாகவே அம்பிகையை விஞ தலும் விடைதருதலும்:—பண்டையென.

பண்டைலீலை தன்மேனி கண்டிலாள் பாமடந்தையைப் பணிந்து கேட் டலு, மண்டுசிந்தை போய்நிறை சமாதியான் மறிந்து வீழ்ந்தமெய் மாண்ட தாமெனக், கொண்டமைச் சர்வெங்கனல் கொளுத்தினுர் குரம்பையோடு நீகுவ லயத்துறி, லண்டர்வாணி னின்றுடலொ டேகினுளந்த லீலையென்றதி சயிப் பரால். (85)

(ப-ரை.) பண்டைலீலை = புராதனலீலை, தன்மேனி கண்டிலாள் = தனதுதேகத் தைக் கண்டிலள், பாமடந்தையைப் பணிந்து கேட்டலும் = ஸ்ரீ வாக்தேவியை நமஸ் கரித்து வினவியபோது, மண்டு சிந்தைபோய் = நெருங்கிய சிந்தாகுலங்களிலந்து, நிறை சமாதியால் = பூர்ணமான சமாதியினுலே, மறிந்து வீழ்ந்தமெய் = நிற்கமுடியாமல் நிர்ச் சீவமாய்ப் பூமியிற் சாய்ந்த சரீரத்தை, மாண்டதாம் என = இறந்துபோயிற் றென்று கருதி, கொண்டமைச்சர் = மயானத்திற்குக் கொண்டுபோய் மந்திரி முதலாயினோர், வெங்கனல் கொளுத்தினுர் = சந்தன நெய்யிவற்றுற் சொலித்த நெருப்பிற் சாம்பராக் கினுர், குரம்பையோடுநீ = இப்போது சரீரத்தோடுநீ, குவலயத்துறில் = பூமண்டலத் தடைவை யோரினுல், அண்டர் வாணினின்று = தேவதைகளின் சுவர்க்கவுலகத்தி

விருந்து, உடலொடு எகினுள்=சரீரத்தோடும் வந்தனள், அந்தலீலையென்று அதிசயிப் பரால்=அதேலீலாதேவி யென்று ஆச்சரியத்தை யடைவார்கள்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீபகவதியை நோக்கியெனது பழையதேகங் காணுமே யென்று சுத்தாலோசனத்தையுடைய புராதனலீலை கேட்ப? ஹேமகத்தாக்கருத் தோடிற்றலீலையே கேட்டி! எனச் சம்போதித்துத் தேவியுத்தர மருளுகின்றாள்:—ஈண்டிருந்த நினது தேகமானது என்ன ஸ்திதியையுடைத்தென்றால் அந்தத்தேகம் பதினைந்து நாளாகவும் வேர்த்து நனைந்து பிராணத்தடையா லோங்கி யெரியும் சாடராக்கினியால் தகிக்கப்பட்டு நீராவியாகப் போய்விட்டது: விட்டபின் முறையாகக் காய்ந்து ஜீவனற்றதாகி நன்றாகக்காய்ந்த சருகுபோலப் பூமியின் கண்ணே விழுந்தது, காட்டகுட்டியம் ஒப்பதாகிப் பனிபோற் சீதளித்துச் சவமாகிக் கிடந்தது, கிடந்தபின் மந்திரிமார்க ளெல்லாம் கூடிவந்து தேகமிருந்து மிகவும் கெட்டுக்கிடக்கும் நிலைமையைக்கண்டு இறந்தனளிந்த இராணியெனத் துணிந்து தாமேயிருகத்தை விட்டு வெளிப்படுத்தினர்கள், இதுவிஷயத்தில் அதிகமாகச் சொல்லிப் பயனென்னே, கொண்டுசென்று சந்தனக் கட்டைகளாற் சிதைசமைத்து நெய்வார்த்தும், நீமூட்ட விரைவிற் சாம்பன் மயமாயது. யாவரும் மேலுலகிற்குச் சென்றன ரென்று எண்ணிக்கொண் டிருக்கின்றார்கள். இப்போது தேகத்தோடு வந்திருக்கும் உன்னைப்பார்த்துப் பரலோகத்தி லிருந்து இங்கே வந்துற்றனள் என்று பேராச்சரியத்தை யாவருமே யடைவார்கள், நினது திவ்யசரீர தரிசனத்தானும் பரம ஆச்சரியத்தை யடையார்கள். முன்னர்லீலையின் தனதஞ்ஞான கற்பிதமாய்த் தனதனுபவ சித்தமாய தேகத்திற்குத் தத்துவஞானத்தானே பாதித்தன்மை யிருந்த போதினும் பிராரப்த சேடபோகப் பொருட்டுத் தோற்றுகின்ற ஆதிவாகிகத் தகைமை வருணிக்கப்பட்டது இப்போது அன்னியரது அஞ்ஞான கற்பிதமாய் அன்னியரது அனுபவசித்தமாய தேகத்தின் விருத்தாந்தம் விளம்பப்பட்டது என்றுணர்க. இராஜ சரீரமானது விகாரப்படாம விருந்தது ஞானதேவி சங்கற்பத்தினாலும் அம்மன்னவனது அதிஷ்டீவசத்தானு மென்றுணர்க.

(ச.) லீலா விளங்கொடி தன் றேகத்தைக் காணுதவளாகிப் பகவதிதேவியைப் போற்றி, தேவியேயென தப்பூர்வஜன்ம தேகங்காணவில்லை யென்னென்று கேட்டாள்? அதன்பின் ஞப்தி சொல்லுகின்றாள். மகாகுணமுடைய லீலாதேவியே தேகத்தின் சரிதை யென்னெனிற் கேள்!. சமாதியில் நீயடங்கியிருக்க அப்போது உனதுகளேபரம் பூமியில் மிகவுலர்ந்த பல்லவம்போல் காட்டகுட்டிய சமமாய்ச் சவம்போலுஞ் சீதளமேயின்றி நிர்ச்சீவனுயிருந்தது அதன்பின் மந்திரிகள் வந்து இவள் மிருதமானுளென்னு நிச்சயராய் அவர்களாற் சந்தனக் கட்டையோடு வைத்துக் கிருதங்கூட்டித் தகிப்பிக்கப் பட்டது. இப்போது உன்னை இவ்விடத்துப் பார்த்துச் சரீரத்தோடு கூடினவ ராய்ப் பரலோகத்தினின்று வந்தாளென்று மகாச்சரியப்படுவார்.

(ஸ்ரீ - வீர - அ - ஸை.) அத்தேக வாசனைப்படியே நினக்குருவந் தோற்றும் ஆகலின் நினக்குவடிவம் முன்போன்றேயாம் என்ன அத்தேக வாசனைத் தன்மையேல் என்னுல் அதேதேகம் மன்னவனுக்கே போல என் அடையப்படவில்லை யென லீலைகேட்டலும் உத்தரமருளிப் பின்புதிய லீலைக்குத் தரிசனந்தரல்:—சூக்கவென.

சூக்கமெய்யினை டிருந்து வாதனைத் தோற்றமாற்ற லாற்றாலகாயரீ, போக்கலாய தென்றிவளுக் கோதியப் புதியதேகம் யிப்போது காண்கெனு, வாக்கின் செல்வியுண் ணினைந்த வெல்லையின் மறைந்து நின்றவர் நிறைந்து தோன்றலும், பாக்கியங்கள் போற்கண்ட லீலையப்பாவை மார்பதம் பணிந்து நிறைஞ்சினள்.

(ப - பை.) சூக்கமெய்யி னெழிருந்து = ஆதிவாகிக ஆகத்தோடிருந்து, வாதனைத் தோற்றம் மாற்றலால் = வாசனையின் எழுச்சியைத் தீர்த்தால், தூலகாயம் நீ போக்க லாயது = தூலசரீரம் உண்ணற் போக்கப்பட்டது, என்றிவளுக்கோதி = என இவ்வண் ணம் பழையலீலைக் கணுக்கிரகித்து,. அப்புதியலீலை யிப்போது காண்க எனு = அந்த நவீனலீலை இப்போது எம்மைத் தரிசிக்கவென்று, வாக்கின் செல்வி புண்ணினேந்த வெல்லையில் = ஸ்ரீ சரசுவதிதேவி திருவுள்ளத்திற் கருதியவுடனே, மறைந்து நின்றவர் நிறைந்து தோன்றலும் = கண்ணுக்குத் தெரியாமல் நின்றவர் ஒளிகிரப்பிப் பூரணமாகத் தெரிசனந்தரலும், பாக்கியங்கள் போற்கண்ட லீலை = பாக்கியங்கள் வந்தெய்தின போலத் தரிசித்தலீலை எழுந்து சம்பிரமத்துடன், அப்பாவைமார் பதம் பணிந்து இறைஞ்சினுள் = அந்தத் தேவிமார் பாதாம்புஜங்களை யருச்சித்து நமஸ்கரித்துத் தோத்தரித்தாள்.

(ஸ்ரீ-வீர.) குறியாகத் தோடும் (சூக்ஷ்மசரீரம்) தோற்றமாத்திர ரூபமாகக் காணப்பெறுவா யிப் போது நீயோக ஜசுவரிய ஆற்றலினிறைவினால், தூலதேக வாதனையின் பரிக்ஷயத்தால் நினது தூலதேகம் மறக்கப்பட்டதாகும், அதிதிடமான குறியாகம்கல்லுணர்வினனே அதாவது கனவாகமேபோலும் கருத்தினுமயலாய் ஆதிபௌதிக ஆகம் இல்லையாம் என்னும் திரப்பிரமையானே ஆதிபௌதிகம் சாந்தியை யடையும். அதனானே "சீவன் முக்தன் தேகம் பிராதி பாசிகமாகத் திகழாநிற்கும்" என்பர் பெரியார். சங்கற்ப வீனையாட்டால் நமது தரிசனங் கொடுத்ததும் விவகாரந் தொடங்கப் படுமென லீலை காண்பான் சிந்தித்தனள், ஞானதேவியினுலே இங்ஙனவள் காணத்திருவுளம் நயந்த மாத்திரத்தில் அவள் கண்டெழுந்து நமஸ்கரித்தனள் என்பதாம்; ஹேதத்துவஞானப் பெரும்பே றுற்ற சுந்தரியே! நீ ஆதிவாகிக தேகத்தை யடைந்துவிட்டாய் இத்தேகம் மறந்தறியாரும் பழையவாசனை யில்லையென்று சொல்லமுடியாது எல்லாவாற்றனுமேமறந்திருக்கும் பக்ஷத்தில் ஆதிவாகிக தேகத்தில் அதனுகாரத் தன்மையே யபித்தியாரு மாதலின் அத்தீபவாசனை யதுவாமென்றறிதி. அவ்வாசனை யத்தியந்தம் அகன்று விட்டதென்று கூறமுடியாதாம்; ஆயினிதற்கு ஆதிபௌதிகத் தன்மையும் ஏனுண்டாக மாட்டாது எனின்? ஆதிவாகிக திருவுடிரூட மானவர்கட்கு ஆதிபௌதிகம், மிகவுஞ் சாந்தியை யடையும், ஞானிக்கு ஆதிபௌதிக மிருப்பதாக அன்னியர்கள் பார்த்தபோதினும் ஆகாயத்திற் சரற்கால மேகம்போலவாம், ஆதிவாகிகத் தகைமைரூடமான யாவருமே தேக மூடையவர்தாம், ஜலமிலாத அம்போத சமானமும் கந்தமற்ற புஷ்பசமானமும் ஆவர் சத்திய சங்கற்பவிலாசத்தால் லீலையின் பொருட்டு நாம் தரிசனந்தருவோம் வருதிவிவ காரங்களையும் ஒழுங்குபடுத்தி நடத்துவாம், என்றிந்தப் பிரகாரம் ஹே இராகவ! இந்த எம்மை வினாரதலீலை காணுகவென ஞானதேவி நினைத்த மாத்திரத்தில் பிரகாசித்துக் கொண்டிராநின்ற ஞானதேவியும் லீலாதேவியுங் காணப்பெற்றனர்; பின் அவ்விதூரத லீலையானவள் நல்லூர் குலவிலோசன முடையவளாய் அத்தேஜஸின் பெருக்கால் விளக்கமுற் றிருக்கும் வீட்டை இனிது பார்த்தனள். அவ்வீடானது நெகிழ்ந்த சீதளச் சுவாலையின் பிரகாச வசத்தாற் சந்திர பிம்பத்தினின்றும் மிகவெளுத்தகிளம் பிய வொளிபரவியதுபோ லிருந்தது; அவர்களுடைய அங்கத்தொளி நெகிழ்வு நிறைந்த சுவர்களோடு கூடியிருத்தலின் பொற்பால் பூசியதுபோல இருந்தது, வீட்டை யிவ்வாறு நோக்கியபின் முன்னர் லீலாதேவியையும் ஞானதேவியையும் கண்டு எழுந்து மிகமகிழ்வுற்றவளாகி அவர்களுடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தனள்.

(ச.) சூக்க + போக்கலாயது = பிரதிபை மாத்திரரூபமான சூக்குமு ஆதிவாகிக

தேகத்தால் யோகமதித் திருடமுடையளாய் நீ யிப்பொழுது காணப்படுகிறாய் வாசனை யின் அத்தியந்த நாசத்தினால் நினக்கு இத்தேகம் மறந்தது, ஆதிபௌதிக சரீரமானது அதிரூடமான ஆதிவாகிக திருஷ்டி யுடையவர்க்கு நசிக்கிறது என்றிவளுக்கோதி, காண் கெனு = சங்கற்பலீலையோடு என்னேப்பார்க்கக் கடவாயென்று நினேந்த வெல்லையில், நிறைந்து தோன்றலும் = தேஜக்குழாப் பிரபையான நிருகத்தையும் லீலையையும் ஞப்தி யையும் பார்த்து, எழுந்திருந்து, இறைஞ்சினள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) தடை நீக்கியுயிரைத் தரணிபன் சரீரஞ் சேர்த்தபின் மன் னவனெழுதல்:—போதவென.

போதவாணியும் பழையலீலையும் புதியலீலையும் புணர்ந்திருந்துழி
சாதிமென்மலர் வாசம்விட்டெனச் சலசமாதுயிர்த் தடைவிடித்தலும்
வாதரூபமாய் நாசியூடுபோய் வறந்தமெய்யெலா நிறைந்துலாவிடச்
சீதமாகிநெய்த் துளிபரந்துகண் டிறந்தெழுந்தனன் செத்தமன்னவன். ()

(ப - மை.) போதவாணியும் = ஞானமயமாய ஸ்ரீ சரசுவதிதேவியும், பழையலீலை யும் புதியலீலையும் = புராதன நவீனலீலக ளிருவரும், புணர்ந்திருந்துழி = சேர்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது, சாதிமென்மலர் வாசம்விட்டென = பதுமசங்கா தம் ஆமோதம் விட்டதொப்ப, சலசமாது = ஸ்ரீ தாமரைச் செல்வி, உயிர்த்தடை விடித் தலும் = ஜீவத்தடையை விட்டதும், வாதரூபமாய் = காற்று வடிவமாய், நாசியூடு போய் = நாசிக்குட் சென்று, வறந்த மெய்யெலாம் = காய்ந்த காயமெல்லாம், நிறைந் துலாவிட = பூரணமாய் நிலவ, சீதமாகி = தண்ணியதாகி, நெய்த்துளிபரந்து = ரச நிறைந்ததாகி, செத்தமன்னவன் = முன்னுயிர் துறந்துசென்ற அரசன், கண்டிறந் தெழுந்தனன் = விழிகளே விழித்து விந்தியம்போ லெழுந்தனன்.

(ஸ்ரீ - வீர.) அன்னமன்னதோர் மநோகர நடையுடைய லலிதலோசன லீலகளே இப்போது அரசனே யெழுப்புவாமெனக் கூறித் தடைவிடித்தனள், ஆமோதம் = நாசத் துள போழ்தே மனத்தைக் கவரும் பரிமளம், வாதம் = சமீரம், உயிர் சேர்தலும் அங் கங்களெல்லாம் விளக்கமுடையன வாயின், இரதஞ்சேர உஷ்ணித்து மிருதியுற்றன. மதோன்மத்த யவ்வனத்தோடு கூடிய அம்மானினிகள் கொடிகள் மேருவின் சிகரத்தி லுட்கார்ந்தன போலப் பொற்பீடத்திற் பொலிய வீற்றிருந்தார்கள். ஞானதேவி இருவ தையும் பார்த்துக் கூறுவதாவது:—மான்போன்ற அழகிய நோக்கையும் அன்னத் தைப் பழிக்கும் நடையையும் உடைய லீலகளே! சலசயனத் ஞானத்தினின்றும் இந் நரபதியை யெழுப்புவோமாக வென வுரைத்துப் பதுமினிவாசனையை விடுவதேபோல முன்சங்கற்பத்தாற் றடைப்பட்ட அரசனது உயிரை விடுத்ததும் அவ்வுயிர் காற்றைப் போலக் காணப்படாத தாயினும் மனிராகாதி வாசனே யிலகளோடு கூடியிருத்தலின் கொடியாகாரமுற்று மன்னவனது நாசியின் சமீபத்தை யடைந்து, மூங்கிலின்றுவாரத் தில் வாயுநுழைவதே போலக் கிராண கோசத்தினுள் நுழைந்தது, கடல் மணிகளே வைத்திருப்பதே போல நூற்றுக் கணக்கான தன் வாசனைகளே யுள்ளே யுடைத்தா யிருந்தது; ஜீவன் உள்ளேசென்றதும் அப்பதுமனுடைய முககாந்தி முன்போலவே வந்து விட்டது மழையில்லாமல் வாடியபதுமம் மழைபெய்தவுடனே மலர்வதே போலு மிருந்தது, முறையாக எல்லா அங்கங்களுமே ரசத்தோடு கூடியதாய்ப் பிரகாசித்தன, கொடிக் கூட்டங்கள் வசந்தகாலத்தில் மலர்வதேபோல அம்மன்னவனுடைய அவயவங் கள் விளங்கின, பொன்போன் மெனினும் காந்தியையுடைய இரசமுறுமிருது பல்லவங்

தலை யசைப்பதேபோல அம்மன்னவன் தன்னுடைய இரசமூற்றனவாய் மிருதுவாயின வாயிருக்கும் அங்கங்களை யசைக்கத் தொடங்கினன், நிருமலமாயுருளும் விழிகளையும், மனோகரத்தையும், சௌபாக்கிய லக்ஷணசாலி நன்னிலைமையையும், உடைத்தான கண்களைச் சர்வபுவன வடிவ விராட்டித் தன்னேத்திர வடிவமான சந்திர சூரியர்களைத் திறந்து பார்த்ததேபோலத் திறந்து பார்த்தான், விந்தமலை விருத்தியா யெழுந்ததே போல மிகமலர்ந்த காயத்தோடும் எழுந்தனன்.

(ச.) ஞப்திசொல்கின்றார், உயிர் = ஜீவன், நாசியூடுபோய் = நாசியைச் சமீபித்து ஆக்கிராணு காசத்தைக் குறித்து வாயுவம்ச (மூங்கில்) ரந்திரத்தைப்போற் சீக்கிரம் பிரவேசித்ததாய், மெய்யெல்லாம் = சர்வாங்கங்களும், சீதமாகி நெய்த்து தளிபரத்து = கிரமமாக ரசங்களை யுடைத்தாய் மிருதுவாய்ப் பாரரூபமாயின கைகா லசைக்கப்பட்டன, விந்தைகிரிபோல் எழுந்திருந்தனன், கண்டிறந்து = பார்வைக்கு விமலகாரணமான கண்டிறந்து.

(ஸ்ரீ - வீர - அ - கை.) எழுந்தமன்னன் விஞ்ஞியதற்குப் புராதன லீலை விடை புகலல்:—இங்கு என.

இங்குநின்றுளா ரெவர்கொ லென்றுவா னிடிமுழக்க மொத்திவ ணுரைத்தலு, மங்குநின்றுளாள் வணங்கியிப்பவத் தடுத்ததேவிகா னருகுதாழ்ந்தவிம், மங்கையாரென வெண்ணை யொப்பநீ மனத்தி லெண்ணலான் மகிழவந்துளா, துங்கவாணியிங் கிருந்துளா ளெனத் தொல்லை லீலையே தோன்றவோதினாள். ()

(ப - ரை.) இங்கு நின்றுளார் = இவ்விடத்தி விருக்கப்பட்டவர்கள்! எவர்கொ லென்று = யாவர்கள் என்று, வானிடிமுழக்க மொத்து = ஆகாயத் திடிக்கர்ஜனையை நிகர்த்து, இவணுரைத்தலும் = பதும மன்னன் கனகம்பீரமாய்க் கேட்டலும், அங்கு நின்றுளாள் = அவ்விடத்தி லிருந்த புராதன லீலாதேவியானவள், வணங்கி = நமஸ்கரித்து, இப்பவத் தடுத்ததேவி = நான் = இச்சனனத் தமைந்த மகிலையான், அருகு தாழ்ந்த இம்மங்கையாரென = நினக்குச் சமீபத்தில், நமஸ்கரித்து நிற்கும் இவ்வங்கனை யாவள் என்ன, எண்ணையொப்ப நீ மனத்தில் எண்ணலால் = என்னைப்போன்று தேவீ ரது மனத்தின் கண்ணே சிந்தித்தலால், மகிழவந்துளாள் = சந்தோடத்தைத் தரவந்த மகிலையாமிவள், இங்கிருந்துளாள் = சிரோபாக மகாசனத்தெழுந்தருளி யிருப்பவள், துங்கவாணியு = சுபமாகிய திரிலோக ஜனனியாம் ஸ்ரீ சரசுவதி தேவியென்று தொல்லைலீலையே தோன்ற ஓதினாள் = பிராசீன லீலாதெவியே தெரியும்படியாகக் கூறினாள்.

(ஸ்ரீ - வீர.) யாரிருப்பதெனக் கேட்டவுடனே இரண்டு லீலைகளும் கனகம்பீரமாயாணையிடலா மென்றார்கள், மகிலை = வனிதை, தங்களுடைய பிரயோஜனப் பொருட்டுத் தாங்கள் எண்ணிய படியே என்னைச் சம்பாதிக்கப் பட்டவளிவள். யாவர் அங்கே யிருக்கிறவர் எனக் கன கம்பீரத் தொனியோடும் கேட்டனன், கேட்டதும் இரண்டு லீலைகளும் முன்னின்று மகாராஜா என்னுத்தரவோ அதுசெய்யக் கடமைப் பட்டிருக்கின்றோ மென்றார்கள், அப்போதவ்வாசன் எதிரில் மிகவணக்கத்துடன் இரண்டு மனை யிரு மிருக்கக்கண்டனன், அவ்விருவரும் சம ஆசாரம், ஆகாரம், ரூபம், ஸ்திதி, வாக்கியம், முயற்சி ஆனந்தம், உதயம், உடையவராயு மிருந்தனர். மன்னவன் நோக்கி, நீயார் இவள்யார் இவள் எங்கிருந்து வந்தனள் எனக்கேட்டனன், கேட்கவே பூர்வலீலை அம்மன்னவனை நோக்கி ஹேதேவ! அடியாள் கூறுவதைக் கேட்பீர்களாக வெனக் கூறத்

தொடங்கினள், தங்களுடைய பழையபட்ட மகிஷியாகிய, சக்கதர்மிணிலீலையான் ஆவேன் வாக்கும் பொருளும் போலச் சேர்ந்திருந்தேன், இத்தலீலையோ இரண்டாவது பட்ட மகிஷியாக விளையாட்டாய்த் தங்களுடைய உபயோகப் பொருட்டுப் பிரதிபிம்பமாய்ச் சுபமாய் என்னுற் சம்பாதிக்கப் பட்டவளாவள். மூன்றுலகங்களையும் உண்டாக்குபவளாய்ச் சிவையாய்த் தங்கள் சிரோபாகத்தி லிருக்கும் பொன் மகாசனத்தில் வீற்றிருந்தருளும். நமைக்காக்கும் இவ்வம்மை ஸ்ரீசரசுவதி தேவியாவள். நமது புண்ணியமுதிர்ச்சியினுனே ஈண்டு நேரே எழுந்தருளி யிருக்கின்றனள். இவளுடைய பெருந்தயையினுற் றுன் அயலண்டமாம் பரலோகத்தினின்றும் மகிபதியாகிய தாங்களும் யானும் கொண்டு வரப் பட்டோம்.

(ச.) இங்கு = சிரோபாகத்தில், இருந்துள்ளாள் = சொர்ணநிர்மித மகாசனத்தில், இருக்கின்ற வி வள், துங்கவாணி திவ்விய மங்களரூபியாய்த் திரைலோக்கிய சௌனியான ஸ்ரீசரசுவதி தேவியென்று; மூலமூன்று வினவும் முத்தேவிகளைப் பற்றியதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கேட்ட அரசன் ஸ்ரீ தேவியைப் பணிந்துபோற்ற அம்பிகையாசீர்வதித்துத் தமதுதிருத்தானத்திற்கு எழுந்தருளினுளென உபசங்கரிக் கின்றார்:— பகருமென.

பகருமெல்லையிற் பதமிறைஞ்சு மிப்பதும வேந்தனைப் பாமடந்தைதன்
றிகழுமங்கையாற் சென்னி தீண்டிநீ தேவிமாரொடுஞ் சிறந்துவாழ்வுறப்
புகழுஞ்செல்வமும் பெருகவையகம் பொலிக தீதெலாம் போகவுங்கணு
திகழுமேன்மையோர் நிறைகநீடெனு நிமலவாணிதன் னிலயமேவினுள்.

(ப - ரை.) பகருமெல்லையில் = மேற்கூறியபடி புராதனலீலை கூறியபோது, பதமிறைஞ்சும் இப்பதும வேந்தனை = பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிக்கும் இந்தப்பதும ராஜாவை, பாமடந்தை = ஸ்ரீவாக்தேவி, தன் திகழுமங்கையால் = தமது ஒளிபொருந்தி விளங்கும் அழகிய திருக்கரத்தால், சென்னிதீண்டி = சிரந்தீண்டி, நீ = ஹே குழந்தையே, தேவிமாரொடுஞ் சிறந்து = இரண்டு தேவிமார்களோடும் கூடிச் சர்வசிறப்பையு மூற்று வாழ்ந்து கொண் டிருப்பாயாக, புகழும் = கீர்த்தியும், செல்வமும் = ஐசுவரியமும், பெருக = நிறைந்து பொங்குக, வையகம் பொலிக = நினது இராஜ்யம் அந்தணர் முதலியவராலும் ஆனின முதலியவற்றுனும் விளங்கிக்கொண் டிருக்குக, தீதெலாம் போக = ஆழ்க தீயதெலாம்; எங்களும் = எவ்விடத்தும், நிகழுமேன்மையோர் = மைத்திரியாதி நிறைந்து விளங்கும் உயர்ந்த மகான்கள், நிறைக = பூர்ணமாகுக, நீடெனு = இங்ஙனம் வெருகாலம் நீராஜ்ஜிய சம்பத்தி லிருந்து விதேகமுக்தியை யடைவாயாக வென்று திருவருள் செய்துவிட்டு, நிமலவாணி = நின்மலமான சிற்சொரூப ஸ்ரீவாக்தேவி, தன்னிலயமேவினுள் = தமதுபரந் தாமத்திற்கு எழுந்தருளினுள். (89)

(ஸ்ரீ - வீர.) அந்தணர் முதலிய வென்றமையானே மற்றைய ஜனசமுதாயங்களையுங் கொள்க, என்பதைக் கேட்டுத் தாமரைக் கண்ணனுகிய அம்மன்னன் நன்கெழுந்து தனது நீண்டமாலைகளும் ஆடையாதிகளும் தாழும்படி, ஸ்ரீ ஞானதேவியாரது பாதபதுமங்களில் வீழ்ந்து நமஸ்காரஞ்செய்து கூறுவதாவது: சர்வஹிதத்தையும் கொடுக்கும் படியான ஹே சரசுவதிதேவியே! தங்கள் பொருட்டு நமஸ்காரம், வரங்களைக் கொடுக்கப்பட்டதாயே; கேட்ட பரமார்த்த தாரணையை யுடைய மதியையும் தீர்க்கமான ஆயுளையும் தனங்களையும் கொடுப்பாயாக; என இங்ஙண் வேண்டிக்கொண்ட மன்னவனை ஸ்ரீ ஞானதேவியார் திருக்கரத்தாற் றீண்டிக் கூறியருளுவதாவது: — ஹே மைந்த! நீ இக

லோகத்தி லுண்டாவதாய நீண்ட ஆயுள் தனுதி இஷ்டப்பட்ட திரவியம் அருத்தங்கள் மிகமிகவு முடையவனுஷி யிருத்தி, தத்துவமேதை யபிவியக்தபிவுனித்தானும் பாரமார்த்திகாத்ம தன்வடிவத் திதியினுலும் அலங்காரிக்கப் பட்டிருத்தி, சர்வ ஆபத்துக்களும் சகல கெட்ட காரியங்களும் பாபபுத்திகளும் விநாசமெய்துக, உனக்கு நன்முக அனந்தமான பெரும்பெரும் ஆநந்தங்கள் உண்டாகுக, உன்னுடைய ராஜ்ஜியத்தில் ஜனசமூகங்கள் நித்தியம் மகிழ்வுடையவர் ஆகுக, உனது பிரஜைகளிடத்தில் எப்போதுமேசம்பத்துகள் வளர்ந்தோங்குக நிலைபெற்றும் நிலவுக; நீ வேண்டிக்கொண்ட வண்ணமே யாவும் உனக் குளதாகுக வெனக்கூறி ஸ்ரீ சரசுவதிதேவி அவ்வரண்மனை யிற்முனே மறைந்தருளினள்.

(ச.) பகருமெல்லையில் எழுந்திருந்து பதமிறைஞ்சும், ஞப்திமய சரசுவதி உனக்கு நமஸ்காரமென்று பாதகமலங்களில் வீழ்ந்து வணங்கும். தீதெலாம் போக = சர்வாபத் துக்களும் சகல துர்க்கிருத திருஷ்டிகளும் நசிக்க, நீடு = எப்போதும், தன்னிலயம், அவ்விடத்திற்முனே, மேவினுள் = அந்தர்த்தானமானுள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ சரசுவதிதேவி மறைந்தபின் அம்பிகையை வாழ்த்திமற வாதினிது நினைந்து வெகுகாலஞ் சென்முக்தராய்ப் பின் விதேகமுக்தர் ஆனரெனல்:— வாழியென.

வாழிவாணிநா மங்கைவாழி சொன்மாது வாழ்தியென் றினிதுவாழ்த்தியே
யாழிமன்னனுந் தேவிமார்களு மயுதமெட்டியாண் டரசுசெய்தபின்
னேழிரும்பவந் துடைத்து வாணிமுன் னியம்பு சீவன்முக் தியிலிருந்துபே
ரூழிபேரினுஞ் சிறிதுபேர்விலா வுடலிறத்தவீ டொன்றி மேவினுர். (90)

(ப - ரை.)) வாழிவாணி = ஸ்ரீ சரசுவதிதேவி வாழ்க, நாமங்கை வாழி = ஸ்ரீபிர ஹ்மதேவர் நாவில் எழுந்தருளி யிருக்கும் பரமேசுரி வாழ்க, சொன்மாது வாழ்தி = கல் விக்கதிதெய்வமாகிய சொல்வளச் செல்வந்தருந் தேவி வாழ்க, என்று = என்பதாக, இனிது வாழ்த்தியே = அன்புடன் மாதுரியமாக வாயார வாழ்த்தி, ஆழி, மன்னனும் = சக்கரவர்த்தியாகிய இராஜ இராஜே சுவரனும், தேவிமார்களும் = லீலையும் லீலையும், அயுதமெட்டு இயாண்டு = எண்பதினுயிர வருடம், அரசு செய்தபின் = ராஜ்ஜியபால னஞ் செய்தபின்னர், ஏழிரும்பவந் துடைத்து = கெடுக்கமுடியாத எழுவகைத் தோற் றத்தையுங் கெடுத்து, வாணிமுன் இயம்பு = ஸ்ரீ சரசுவதிதேவியார் பூர்வம் புகன்றருளிய, சீவன் முக்தியிலிருந்து = சீவன்முக்திப் பதத்திலிருந்து, பேரூழிபேரினும் = மகாப் பிரளயம் மாறிமாறி வந்தபோதினும், சிறிதுபேர்விலா = அணுவும் குறைவுநேராத, உட லிறந்த வீடு = விதேகமுக்தியை, ஒன்றிமேவினுர் = அடைந்து பேரானந்த சொரூப மாகவே யிருந்தார்கள்.

(ஸ்ரீ - வீர.) சக்கிரவர்த்தி யெழுந்த சந்தோடமும் லீலாதேவி மீண்டுமுற்ற மகிழ்ச் சியும் எங்கும் பொங்கியது, ஜயஜய வென்றும் மங்களம் மங்களமென்றும் புண்ணியதி னம் புண்ணியதினம் என்றும் உண்டான கோஷமானது கும்கும் எனவும் கர்கர் எனவும் மிக வியாபிக்கப்பட் டிருந்தது. சந்தோஷத்தினுலே புஷ்டியை யடைந்த ஜனசமூதா யம் நிறைந்ததாயிருந்தது, அரசசேவக ஜனங்கள் அரசனைக் காணும்பொருட்டு நகரங் களினின்றும் கிராமங்களினின்றும், வந்துகூடிய மண்டபங்களை யுடையதாயது. பதும மன்னனின் இனிது கொணர்ந்த நாற்கடனீரில் மூழ்கியபின் தேவிப்பிரமுகரும் மந்திரிகளும் மன்னவர்களும் அம்மகாராஜனை அபிஷேகித்தார்கள். ரெப்பிரவாசத்தினின்றும் வந்த வனுக்கேபோலும் பரலோகத்தி னின்றும் வந்தவனுக்கு மீண்டும் பதாபிடேகம் மங்க

ளப்பொருட்டாம், பழையலீலையும் புதியலீலையும் இராஜாவும் ஜீவன்முக்த மகாபுத்தி யுடையவர்களாய்ச் சுரதங்களாற்போலப் பூர்வ விருத்தாந்தங்களைப் பேசுவதால் ரமித் துக்கொண் டிருந்தார்கள். அம்மன்னவன் ஸ்ரீ ஞானதேவியார் உபதேசித்ததாலுளதாய ஞானத்தால் தன் வடிவுணர்ந்தவனுகி இரு லீலாதேவி மார்களோடு கூடியெண்பதினு யிரவருடம்வரை யங்கு மிருந்த புகழோடுகூட ஜீவன்முக்தர்கள் இவர்கள் என்று சொல் லும்படியாக இடரின்றி அரசுபுரிந்து பின்னர் விதேகமுக்தியை யடைந்து ஆநந்த அறிவு மயமே யாயினர். கும்கும் கர்கர் என்றது சப்தானுகாரமாம்; ஜயகோஷத்தினுலும் மங் கள புண்ணியாஹின் கோஷத்தினுலும் அத்தொனியாம். உபதேசத்தால் = ஸ்ரீ ஞான தேவியா லுபதேசிக்கப் பட்டஞான வாக்கியங்களினுல் நன்முகச் சொரூபத்தை யறிந்தனன்.

(ச.) ஆழிமன்னனும்—மற்றுமுள்ள விப்பிரர் மந்திரிகள் அரசர்களும் பட்டாபிஷே கஞ்செய்யவே. உடலிறந்த வீடு = சுத்தமெய்ஞ்ஞானரூப விதேகமுக்தி. ஆதிரூபிருத்தம் (3ல் 3)

லீலோ பாக்கியானம் முற்றுப் பெற்றது.

கற்கடியுபாக்கியானம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீவிண்மகன் கதை லீலகதைகளினுல் விஸ்தாரமாகப் பிரதிபா திக்கப்பட்ட அருத்தத்தை சுகமாய்த் தெளிதற் பொருட்டுச் சுருக்கமாகக் கூறத் தொடங்குகின்றூர்:—காட்சியென.

(ச-அ-கை.) முன் லீலகதையிற் பிரபஞ்சதிருஷ்டிக்கு காசம்பர, மாயிகத்வஞ் சொல்லப்பட்டது இனிக் கற்கடிகதையிற் பிரஹ்மதிருஷ்டியைத் திருடஞ்செய்தற்காக அந்தப் பிரஹ்மத்திற்கே பாரமார்த்தி கத்துவஞ் சொல்லப்படுகிறது அதன் பிரயோஜ னத்தைதன்முகத் தெரிவிப்பவராய்ப் பூர்வகதையை யுபசம்மரிக்கின்றூர்:—காட்சியென.

காட்சியென்னுங் குற்றமறக் கதிதலீலை கதையாலே
யாட்சியான சகமென்னு மதியாரத்தை யறவிடுவாய்
சூட்சியான வுலகமெனுந் தோற்ற மூடைத்தாய்ப் பேதமற
மாட்சிஞான சுகவடிவாய் வயங்கும் பிரமமேயுளதே.

(ப - ரை.) காட்சி யென்னுங் குற்றமற = திருசியதோஷ நிவிருத்தியின் பொருட்டு, கதித லீலகதையாலே = கூறிய லீலோ பாக்கியானத்தினுலே, ஆட்சியான சகமென் னும் அதிபாரத்தை அறவிடுவாய் = விவகாரயோக்கிய சத்தியமாய் உலகமுளதாமென் னும் பெருங்கனதை மதியை மூற்றினும் விட்டுத் தொலைப்பாயாக; சூட்சியான வுலகமெ னுந் தோற்ற மூடைத்தாய் = அசத்தா யிராகின்ற அகிலமென்கின்ற வெறுந்தோற்ற மூண்டாதற் கதிஷ்டானமாய், பேதமற = ஒரு சிறிதும் வேற்றுமையே யிலாது, மாட்சி ஞான = யாவற்றையு மிலக்கும் மகிமைவாய்ந்த ஞானமயமாய், சுகவடிவாய் = பேரா னந்த வடிவமாய், வயங்கும் = விளங்காகின்ற, பிரமமேயுளதே = பிரஹ்மமாகியதானே யிருக்கின்றது மற்றொன்றுமே யில்லையாம்.

(ஸ்ரீ - வீர.) திருசியமே சத்தியமாகத் தோற்று கின்றபடியினுலே தோஷமாம் அதன் நீக்கப்பொருட்டு என்பதாம் கனதை சத்தியத் தகைமையாம். அசத்தாயிருக்கும்

அநிர்வசநீயப் பிரபஞ்சத்தின் ஆபாசத்தோற்றம் எதனினின்றும் விவர்த்தமா யுண்டாமோ அது விவர்த்த அதிட்டானமாம்: அதன் அசமசத்தை யுறலாதல், காரணவிஷம விலக்கண மாறுபாடு பெற்றியாதல், அதன் அபேதமின்றியே அதனின் அயலாக ஓத வொண்ணுததாகிய காரியமாதல், விவர்த்தமாம். இல்லாததேயான ஆபாசத்திருஷ்டியும் இருப்பதேபோலத் தன்னினவீற் றோற்றும், பிரஹ்மமாகிய தான் அதி நிருமலமாகவே யிருக்குமது மாயிகப் பிரபஞ்சத்தானே புஷ்டியடைந் திருத்தலின் பிரபிரும் மிதமெனப் படும், தடையற்ற பெருமையையுடைய தாதலின் பிருகத்தெனப்படும், தத்துவதிருஷ்டி விபரீத திருஷ்டிகளிலுல் கூறிய விரண்டுமே ஓரிடத்தமைதல் விரோதமாகாதாம். அது அறிவுருவமாம், பயங்கர வுருவமாம், செங்கதிர்வாரிதியமன் வாயுச்செய் தொழில்களி லொருகாலும் பங்கியா தீராமுகும் பரிசது பரனைப் பற்றியுண்டாகிய பயத்தால், அது தானறியார்க்கிடர் நல்கும், என்பதாதி மறைமுதலனவும், எதனது பயத்தான் வாதமித மூடனியங்கா நிற்கும், எதனது பயத்தால் வெய்யோ னிலங்கிடு மினிதேயாக, எதனது பயத்தாற் பூவுங் கிரிகளாலிழிந்திடாதா, லதுவழற்பீப்பிமாகு மழிவிலாப் பிரமந்தானே என்னும் ஸ்ரீ மத்பகவத் வசனமும் அளவைகளாம். திருசியமில்லை யென்னும் உணர்வி ஞனே மனத்திலுள்ள திருசியவாசனை கழியுமாயின் அக்கான்மேலான மோகூஷம் அடை யப் பெற்றதாகும் என்பதாக நூற்றொடக்கத்தில் பிரதிஞ்ஞை செய்யப்பட்டதன் சித் தியே இதனது முக்கியப் பிரயோஜனம் என்றுணர்க; ஹே இராகவா! இதற்காகத் தான் இப்பவித்திரமான லீலகதை யுனக்கியம்பப் பட்டது, ஆகலின் ஜகத்தின் சத்தி யத்தகைமையை விட்டொழிப்பாயாக. ஹே பகவன்! அகண்ட அத்விதிய சொப்பிரகா சப் பிரஹ்மத்தின் கண்ணை சகண்ட சத்விதீய ஜீவசத்தை யெப்படிக்கூடும்? சுவானு பூதியாகிய பிரமாணத்தாற் றெரிந்துகொள்ளத் தக்கதும், பெரிதுக்கெல்லாம் பெரிதா யிருப்பதனுனே நிரதிசய அபரிச்சேதவடிவ விருத்தியுற்றதும் துவைதங்கள் சிறிதுமில் லாததும் ஆகிய இப்பிரஹ்மத்தின் கண்ணை அற்பஜீவன் பூர்வசித்த பிரஹ்மத் தன் மைக்கு முரண்பாடான தனிச் சத்தையை எங்ஙன மடையாநிற்பன் என்று ஸ்ரீ இரா கவர் வினவ, சத்தியமாய் அவித்தையற்றதா யிருக்கும் பிரஹ்மத்தின் கண்ணை பர மார்த்த திருஷ்டியானே ஜீவசத்தையானது சம்பவியாதாம் அவித்தையோடு கூடியதன் மாட்டோ அதன் சம்பவமானது விரோதப்பட மாட்டாது எனப்பகுத்துப் பகரும் வேட்கை வாய்ந்த ஸ்ரீ வசிஷ்டபகவான் முதலில் சாதாரணமாக அதன் சொரூபத்தைக் கூறுகின்றார்: சூட்சியென, துவைதப் பிரத்யயங்கள் அத்தியந்தம் இல்லாததாகி, அதி நிருமலமாகிப் பெரிதுக்கெல்லாம் பெரிதாகி, மிகப்பெரிதான சிற்பைரவகாய மூடைத் தாகி, பரமானந்த நாமமுடைத்தாகி, நாசமற்றதாகி யந்தப்பிரஹ்ம மிருக்கும். அநாத்ம யோகிகளைப் பயப்படுத்துதலால் பைரவ ஆகிருதியுடையதாரும்; "பூணுணுத தாய்ப் பொலிந்திடு மிந்தமாயோகம், காணுணுதது யோகிய ரெவர்க்கு மேகருத்தில், தாணு வாகிய வதனினு மஞ்சுவர் தவத்தோர், வீணதாகவே வெருவுவர் வெருவலில்லினே" எனவிது ஓதவும் பெற்றுளது.

(ச.) ஸ்ரீ வசிட்டர்: காட்சியென்னுங் குற்றமற = திருசிய தோஷ நிவிர்த்திக்காக, விகாரரூபமாதலின் திருசியமே தோஷமாம் அதனது நிவிர்த்திக்குப் பிரபஞ்சதிருஷ்டி சிதைதற் கென்பது பொருள் கதித்த = இராமா உனக்குயான் அனுக்கிரகித்த ஆகூழி யான லீலகதையாலே = அனகமான லீலோ பாக்கியானத்தினுலே, செகமென்னும் = ஜகத்தினது, அதிபாரத்தை = பிராமாணிக புத்தியை, ஆயிற் பிராமாணிக மியாதெனில்? சூட்சியான = நிஷ்களங்க சொரூபமாகிய, உலகமெனுந் தோற்ற முடைத்தாய் = அசத்

தென்னுஞ் சகத்தாகாரமாய் விளங்குவதாகிய, பேதமற = அத்வயமாய், மாகஷி ஞான சுகவடிவாய் = வியாபக சிதானந்தரூபமான ≠ பைரவமென்னும் நியாமதாகாரமாய், வயங்கும் = பரிபூரணமாகி விளங்கும், பிரமமேயுளது ≠ ஆண்டுப் பிரமரூபத்துக்குப் பைரவத்துவம் இந்தப் பிரமத்தினின்றும் பயத்தினுல் வாதமான்து வீசுகிறதென்கிற விடத்தில் சுருதிசித்த மென்றறியத்தக்கது

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல் இவ்விதமாய பிரஹ்மம் உளதாமேலாயின் இதுதானது வெனப் பகுத்துப் பகரலாமே யெனக்கடாவப் பகருகின்ருர்:—அதனுக்கென.

அதனுக் கிணையாய்ப் புகலரிதாயகன்று நிறைந்தாழ்ந்த மலமதாய்ச்
சதமதறிந் தோர்களு மியல்புசாற்றற் கரிதாய்ச் சாந்தமதாய்த்
திதமுற்றசை யாக்கடலென்னத் தீபமென்னத் திகழ்கின்ற
முதன்மைப் பிரமத்தொளி தானேமுடிவில் பரமாகிய ஜீவன்.

(ப-ரை.) அதனுக் கிணையாய் = அதற்குச் சமமாய், புகலரிதாய் = கூறமுடியாதாய், அகன்று = விசாலித்து, நிறைந்து = பூரித்து, ஆழ்ந்து = ககனித்து, அமலமதாய் = நிருமலமாய், சதமதறிந் தோர்களும் = அந்தப் பிரஹ்மத்தை நன்முயறிந்தவர்களும், இயல்பு சாற்றற்கரிதாய் = இதுவென இன்னதெனக் குறித்துக்கூறமுடியாதாய் இருக்குமது, சாந்தமதாய் = சாந்தமாகப் பரமபதரூபமா யிருக்கும், திதமுற்று = வாயுவீன் கலக்கமற்று, அசையாக் கடலென்ன = சலனமில்லாத சமுத்திரமெனவும், தீப மென்ன = காற்றற்ற விடத்திலிருக்கும் விளக்கெனவும், திகழ்கின்ற = விளங்காகின்ற, முதன்மைப் பிரமத்தொளிதானே = அநாதியாய பிரஹ்மத்தினது பிரகாசந்தானே, முடிவில் பரமாகிய சீவன் = அநந்தவுயர்வாகிய ஜீவனுவன். (2)

(ஸ்ரீ - வீர.) இணை = சமம் = திருஷ்ய உற்பத்தி நாசங்களில் ஏகரூபம், சர்வபூதங்களிலும் சமம். குறிக்கப்படாதது அது பான் மாதுரியமானதும் ஞானிகளானும் பகரப் பாலதாகாதாம் சாந்தம் = நிருவிகாரம். அது விஷ்ணுவின் பரமபதம் என்பதாதி சுருதியளவையையுடையது அது என்பதைக் குறிப்பிக்கும் பரமபதமென்பது. கூறிய பிரஹ்மதத்துவத்தை அத்தியாரோப அபவாதங்களா லிதமுதற் றெளிவீப்பார் திதமுற்றென்ருர். காற்றற்ற கடற்போலிருக்கும் காற்றற்ற தீபம்போ லிருக்கும் பிரஹ்மத்திற்கு யாதொரு சிறிது சலனமுளதோ அது ஜீவனென அறியத்தக்கதாம். ஆதியதெங்ஙனமெனின், அதற்கு, சமமாயும் எங்கும் நிறைந்ததாயும் தூய்தாயும் சத்துவமாயும் குறிக்கப்படாததாயும், அதை யுணர்ந்தவராலும் கூறமுடியாததாயும் இருக்கும் எத்தகைமையுளதாமோ அத்தகைமை சாந்தமாயும் பரமபதமாயு மிருக்கும் இரண்டாவ தன்றன்மையோ, அதற்கோ மோக்ஷபரியந்தம் உற்பவபீஜ மிருத்தலின் கிளம்புகை போன்ற எவ்வடிவமுளதோ, அதற்குபாதி யியற்கையினுனே சலனசக்திவடிவப் பிராணதாரண அசைவுயாதுளதோ அதுவே ஜீவசப்தத்தாற் கூறப்படும் அது சாந்தமற்றவுணர்வுவடிவ மாயிருக்கும். ஜகத்வைசித்திரிய கற்பணைக்கனு கூலமாகிய கிரியாசக்திப் பிரதான பிராணபாவமே ஜீவபாவசித்தாம், இதன் கட்டிருட்டாந்த மிதுவாம் காற்றற்றலவிலாக் கடலேபோலும், காற்றற்றசை வினாத் தீபமேபோலும் இருக்கும் பிரஹ்மத்தினுடைய இயக்கஞ்சிறிதுயாதோ அதுவே ஜீவனென அறிதி.

(ச.) அதனுக்கு = அந்தப் பிரஹ்மத்துக்கு, அமலமதாய் = சுத்தசத்துவ மென்னும் விசுத்தஞானுத்மகமாய், புகலரிதாய் = அசின்னித்தி மென்னும் நிருவிசேஷமாய் இருத்தலினுலே, சதமதறிந் தோர்களும் = பிரஹ்ம வித்துக்களும், இயல்பு சாற்றற்கரி

+ அதனுல் ஜீவபரமபதத்தை நிரூபிக்கிறது.

தாய் = நிதானித்தற் கசக்கியமாய், இனையாயகன்று நிறைந்தாழ்ந்து—நிர்த்தரங்க சாகரம் போற்சமமும் பரிபூரணமும் கெம்பீரமும் ஆகிய, அது (ரூபம்யாது) அது சாந்தமாம் = நிர்விகாரமான பரமபதமாம் என்பதன்னுவயம். நிதமுற்றசையாக் கடலென்னத்தீபமென்னத் திகழ்கின்ற = அவாதாம்புதியும் நிவாததீபமும்போல் நிஷ்கம்பமாய்ப் பிரகாசிக்கின்ற, முதன்மைப் பிரமத்தொளிதானே = பிரமத்தினது ஓர் ஸ்புரணமே, முடிவில் பரமாகிய ஜீவன் (என்றி ராகவா கீ யுணர்தி),

(ஸ்ரீ - வீர - அ - கை:) அதற் குகங்காராத்மகருத்ரபாவ முண்டென் கின்றூர்:—தனேயென.

தனேயுண்டாக்கு நீள்விறகாற் சற்றுநெருப் புத்தடிப்பதுபோ
லினேயசீவன் கனவறிவா லியானென் றுணர்ந்து சங்கற்ப
நினேவினுலே யகங்கரிக்கு நிறைந்த சீவன் காரணமாய்
வனேயுஞ்சித்த மனம்பகுதி மாயை யெனும்பேர் வகுத்துரைப்ப. (3)

(ப - ரை) தனேயுண்டாக்கும் நீள்விறகால் = தன்னேவிளேவிக்கும் அதிக இந்தனத்தால், சற்றும் நெருப்பு = வன்னியணு வானது, தடிப்பதுபோல் = விருத்தியாவதே போல, இனேயசீவன் = மேற்கூறப்பட்ட சீவன், கனவறிவால் = நிடவுணர்ச்சியினுல், யானென்றுணர்ந்து = அகமென்றறிந்து, சங்கற்ப நினேவினுலே யகங்கரிக்கும் = சங்கற்போன்முகத்தை யடைவுற்று அகங்கார மென்றூரும், நிறைந்தசீவன் காரணமாய் = வியாபித்த வுயிர் ஏதுவாய், வனேயுஞ் சித்தம் = சிந்திக்கும் சித்தம், மனம் = உளம், பகுதி = பிரகிருதி, மாயை = மாயா, எனும்பேர் வகுத்துரைப்ப = என்னும் நாமங்களால் விரித்துக் கூறுப.

(ஸ்ரீ-வீர.] அந்தஸ்புரண்மே நெருங்கிய நினேவினுனே அதாவது நிநிடமாய அகங்காரபாவனேயினுனே, அகங்காரத் தகைமையை யடையும். வன்னியணு= அக்கினியின் சூக்கும அங்கிசம். சங்கற்போன்முகத்தகைமை = மனேபாவனுபிமுகத்தகைமையை யடைந்து அகங்காரமும் ஆம், அகங்காரமும் சங்கற்போன்முகத்தகைமையை யடைவுற்றதாய்ச் சித்தமென்பதாதி நாமங்களால் உரைக்கப்படும் வத்துவாம் எனக்கொண்டு கூட்டிமுடிக்க, அக்கினிகணமானது தன்னே விருத்திக்குங் காஷ்டதைல ஆதிக்கத்தால் அதிகரித்து மிகவொளி யுடையதாவதேபோல அச்சீவனே நிடவாசனேயிற் கனமான வுணர்வினுலே முறை முறையாகப் பேரகங்தையதாகும். அகம்பாவமோ ஆண்மாவைத் தேசகாலத்தாற் பரிச்சின்னப்படுத்தித்தானே சங்கற்பவயத்தால் தேகாதியா கிருதியெடுத்துக் காற்றினசைவுபோல விளங்கும். சங்கற்பத்தின் முன்னிலேப்பட்ட மாத்திரத்திலேயே அகங்காரமெனப் பெயர்பெற்று நிற்கும் அகம்பாவ அத்தியாச மூலமாகச் சித்தாதி பேதங்களாம், அவ்வகங்காரம் ருத்திரனும், சித்தம் விஷ்ணுவாம்,ஜீவன் பிரஹ்மாவாம், அவைகட்கே முறையாக மனம்மாயை பிரகிருதியென்பன கிரியைநாமங்களாம் ஆண்டுச் சங்கற்பவடிவமான சித்தப்பிரஹ்மா சங்கற்பத்தாற் பூததன்மாத்திரைக் கற்பனையைப் புரிந்து அதனுனே சேதனுன்மகபூர்வ அவஸ்தையினின்றும் நழுவியதேயாகி ஜடப்பிரபஞ்சத் தகைமையையும் அடைகின்றது.

(ச.] இனேயசீவன் = ஜீவரூபமாய் ஸ்புரிக்கும் பிரஹ்மமே, சற்றுநெருப்பு = வன்னிகணம், தனேயுண்டாக்கும் நீள்விறகால் = சுவேத்தனுதிக்கியத்தினுல், தடிப்பது போல் = தற்பிரகாசாதிக்கிய மாவதுபோல், கனவறிவால் = நிபிடமான பகிர்முக ஞானத்தினுல், யானென்றுணர்ந்து = அகங்கார ரூபத்தை யடைந்து, அதன் பின்பு

சங்கற்ப நினைவினாலே, சங்கற்போன்முகரூபத்தால், அகங்கரிக்கும் = அகங்காரமாம், அகங்காரமே சங்கற்போன்முகமாய்ச்சித்தமாதி நாமங்களோடு சேர்கின்றது; மனோரூப மாயிற்றென்பது பொருள். சுவ + இந்தனம் = சுவேந்தனம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) போக்கிய வருக்கக்திற்கும் போக்தாவிற்கும் மூலமாகிய மனத்தினது தத்துவத்தை விசாரித்துச் சின்மாத்திர பரிசேடங் காட்டுவதற்காக ஆதியில் எல்லாக் கற்பனைகளும் சித்திற்கு வேறன்றென்று கூறும்பொருட்டு மூலபூதமாய மனத்தினது உற்பத்தி ஸ்திதிகளிற் காரணசத்தையைக் காட்டினும் அன்னிய சத்தை பெருமையின் அதுமாத்திரமாக இருக்குந் தன்மை யுண்டாமென் றோதல்:—இனத் தாலென.

இனத்தாற் படரு மனம் பர மனேதுவாயிப் படித்தோன்று
மனந்தால் விரிந்த சகமெல்லா மனனவடிவே மற்றில்லை
கனத்தாற் கரைதீர் பலவறிவாங் கல்லோலச்சிற் கடல்பொங்குந்
தினத்தானீண்ட கனவொப்பச் சித்தவசத்தாற் சகந்திரமாம். (4)

(ப - ரை.) இனத்தால் படரும் மனம் = வாசனையினாலே விரிந்துகொண்டு செல்லாகின்ற உள்ளமானது, பரமனேதுவா யிப்படித் தோன்றும் = பரம காரணத்தினின் றும் இங்ஙனம் கூறிய முறையாய் முதலிலுண்டாம், மனத்தால் விரிந்த சகமெல்லாம்= உள்ளத்தினாலே யுன்னி விஸ்தரித்த வுலகமெல்லாம், மனனவடிவே மற்றில்லை=நினைவு வடிவமேயாமன்றி வேறுகக் கிடையாதாம், கனத்தாற் கரைதீர் = அதிவிஸ்தாரமாய்க் கரைகடந்து, பலவறிவாங் கல்லோலச் சிற்கடல் பொங்கும் = நானாவித விருத்திகளாகிய தரங்கங்களானே ஓலமிட்டுச் சின்மயமாக விளங்கும் சமுத்திரமானது சகத்துருவமாய்ப் பொங்கிக்கொண்டே யிருக்கும், தினத்தால் நீண்டகனவொப்பச் சித்தவசத்தால் சகம்திரமாம் = நீள்காலத்தை யுள்ளடக்கித் தோன்றும் சொப்பனமொப்ப நாட்பட நாட்படச் சித்தனையின் ஆதிக்யவயத்தால் மித்தையான வுலகம் சத்தியம் போலத் தோன்றும். (4)

(ஸ்ரீ - வீர.) கூறிய முறையானே பரமகாரணமாகிய பிரஹ்மத்தினின்றும் மனம் முதலிலுண்டாயது அதுவும் சங்கற்பரூபமாகி விரிந்து வளர்ந்தது; அதாவது தனது காரியமாகிய சக முழுதினும் நினைவுக் கன்னிய மின்மையின் நிறைந்திருந்தது மொழிந்த அதனது வியாபகத்தன்மையையே விளக்கி விளம்புவார், கனத்தால் என்னும் இக்கரையும் அக்கரையும் அற்றினைவாய் அதிக விஸ்தாரமாய்ச் சங்கற்ப அபரரியாயங்கள் வாய்ந்தனவாய உணர்வுமயச் சலிலங்கள் நிறைந்து பெருகியிருக்கும் சிதேக அர்ணவமேயாகிய இவ்வான்மா மனமாகி, எண்ணுத வெண்ணங்களே யெண்ணுதலால், தானே ஜகத்துருவமாக விஜ்ரும்பணத்தை யடையும். " வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் " என்னும் மறையும் இதன் முற்று மின்மையை மொழிகின்றது. பரம்பொருளாகிய காரணத்தி விருந்தே மனம் முதலிலெழுந்தது, மனனுன்மகமா யதிவிஸ்தாரத்தை யடைந்து அதன்கண் ணிருப்பதாகவே ஸ்திதியடைந் துலவும்; துவைத ஆபாசம் மனதினின் அதீனமேயாகும், ஆருக ஆகாதொழிக வெனவுலையும், உளத்தாலுற்ற வேற்றுமையானது உளத்தை யொழித்தால் ஒழிந்துபோம். உண்மையிற் பேதமொன்று மில்லவே யில்லையாம் இலதாகவே சேடித்து நிற்பது தானேயாம், கரையற்று விஸ்தார மாயிராகின்ற அறிவுவடிவ நீரின் பரிச்சின்னப்படாத பரவுதலால் அறிவு ஏகசமுத்திரமே ஆய இவ் வான்மாச் சுயம் விளங்காகிற்கும். திருஷியம் பாதமாகியவழி சத்தெங்ங னெஞ்சுமெனின்?

அத்திராங்கிசத்தை யழியுமா செய்யவே திரமெஞ்சுதல் பொருத்தமேயாம். சொப்பன்த்தில் அஸ்திர விடயாங்கிசம் பாதமாயினும் திரமாகிய அதைக் காண்போனது பரிசேட்டதரிசனமாதலின், இங்ஙனம் சித்தம் ஜகத் சத்தசத்தான்மகமாம். அத்தியந்த அசத்திற்கும் பாதங்கண்டதில்லையே யெனின் ? அவற்றின் கண்ணே பாதயோக்கியமாய அநிர்வசநீயத் தன்மையைக் கேட்டி ! இது சதசத் விலக்ஷணமாம், பொய்யாயினும் அநேகருக் தேகாரூடமாகத் தோற்றலோ சமாஜமடைந்த தீசமூதியங்கள் இந்திரஜால மாயையாற் கலங்கினவாகி ஏகாகாரமடைதல் மயல்போல வெழுந்ததா மென்றறிக. ஆயின் எங்ஙனம் நீண்காலமிருப்பதாகத் தோற்றுதல் கூடுமெனின் ? மனமியற்றிய ஆசக்திபலத்தினுலிச் சமூசாரமானது நீண்ட கஞஸ்திதியை யடையாகிற்கும்.

(ச.) இப்படி தோன்றும் = முற்கூறிய பிரகாரம் சர்வசகத்துக்கு மூன்புதிக்கும், அதனுல் இச்சகமுதித்தது; கனத்தால் = விஸ்தாரத்தினுல், கரைதீர் = பாராவார மற்ற, பல வறிவாரங் கல்லோலச் சிற்கடல் = விரித்தி ஞானங்களென்னும் சலிலங்களினது பேரலைகளினுற் சிதேகார்ணவ ரூபமான வான்மாதானே, பொங்கும் = விரிந்திதிம்தாம், நீண்டகனவு = தீர்க்க சொப்பனம், சித்தவசத்தால் = மனே மகிமையால், சகம் = சம்சாரம், திரமாம் = திருடஸ்திதி பெறும், பாரம் = அந்தக்கரை, அவாரம்= இந்தக்கரை.

(ஸ்ரீ - வீர - அ - கை.) திருஷ்டாந்த வாயிலாக அநர்த்தம் வருதலைக் காட்டி, இவ் வெல்லா அநர்த்த பரம்பரையும் ஜீவப்பிரஹ்மபேத மியன் மூலித்தாலாதலின் அதனைக் கியபோதத்தால் அம்மயல் பாதிக்கப்படும்போது பாதிக்கப்படி மாதலின் பேதத்தையே தள்ளவேண்டி மென்கின்றூர்:—தெரியென.

தெரியாத்த றியிற்கள்வ னெனத் தெளியாமையினு லுலகுண்டா
மரியாப்பிரமத் தொடுசீவன் மறந்தும் பேதமிலா தபோல்
பிரியாச் சீவசித்தங்கள் பேதமில்லை யிதுபோலத்
தரியாச் சித்தஞ் சகங்களுக்குச் சற்றும்பேத மூளதாகா.

(ப - ரை.) தெரியாத்தறியில் கள்வன் என = நன்கிலா ரூட்டத்தானே கட்டையிற் சோரனதுணர்வு எழுதல்போல, தெளியாமையினு லுலகுண்டாம் = ஆராய்ந்து நோக்காமையினுல் ஜகத்தானது தோற்றும், மரியாப் பிரமத்தொடு சீவன் = நித்திய மாகிய பரப்பிரஹ்மத்துடன் சீவனுக்கு, மறந்தும் பேதமிலாததுபோல் = மறந்தேனும் வேற்றுமை யுறுதலதுபோல, பிரியாச் சீவசித்தங்கள் பேதமில்லை = ஒன்றேடொன்று வேறுபிரியாத வுயிருள்ளங்கள் வேற்றுமைப் படாவாம், இதுபோல = இஃதொப்பவே, தரியாச்சித்தம் சகங்களுக்கு = சஞ்சலமான மனசர்க்கங்கட்கு, சற்றும் பேதமூள தாகா = ஒரு சிறிதும் வேற்றுமை யுண்டாகவே மாட்டாதாம்.

(ஸ்ரீ - வீர.) சிதான்மதத்துவங்களாய ஜீவப் பிரஹ்மங்க ளென்னும் காரிய காரணங்கட்குப் பேதமெங்ஙன மின்றே அங்ஙனம் ஜீவமனங்களாகிய காரணகாரியங் கட்குப் பேதமிலதாம், இவ்வண்ணம் மனப்பிரபஞ்சங்களாகிய காரணுதி வடிவங்கட்கும் பேதமிலதாம். பிரஹ்ம கூடஸ்தர்கட்குப் பேதமில்லாததேபோல ஜீவசித்தங்கட்கும் பேதமில்லையாம், ஜீவசித்தங்கட்கும் பேதமில்லாததே போலத் தேக கருமங்கட்கும் பேதமில்லையாம். துணிபாகக் கருமமே தேகமாம், தேகமே சித்தமாம், அதுவே யானென இங்கு ஜீவனுகும், அச்சீவனே ஈசுரசித்தாம், அது ஆன்மாவாம், யாவுஞ் சிவமாம், என்னுமிதுவே சகலசாஸ்திர விசார இரகசியமென்ப. தெரியாத்தறியில் இது

வெனச் சாமானிய வுணர் விருந்தபோதினும் இன்னதென விசேடவுணர் வின்மையின் ஆரோபமாம்.

(சு.) தெளியாமையினால் = அசம்மியத்தி தரிசனத்தினால். தெரியா = ஜடமான, தறியிற்கள்வனென = தாணுவிற் புருஷப் பிரதிதிபோல் உலகுண்டாம். ஆன்மாத் தானே விரிந்ததென்ற தெப்படி என்று ஆகாங்ஷைவரில் காரிய காரணங்கட்கு அபேதத்தினால் எனல்: சித்துரூபமான பிரஹ்மத்தினின்றும் சீவன், சீவனிற் சித்தம், சித்தத்திற் சகம், உற்பன்ன மென்றதாதலிற் பிரமசீவர்க்கும் சீவசித்தங்களுக்கும் பேதமின்மைபோற் சித்த சர்க்கங்களுக்கும் பேதமின் றென்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) நூதலிய பொருளிற் சூரியுபாக்கியானம் தரிசிப்பிக்கின்றார். விரிவாயும் சுருக்கமாயும் வருணித்த பொருளில் திடமுண்டாகும் பொருட்டுக் கற்கடியுபாக்கியானமெனப் பெயரிய இதிகாசவாயிலாக இராக்கதியோடு வேடராஜ மந்திரி சம்வாதத்தை விஸ்தாரமாக விளம்பவேண்டுமென வேட்கையுற்ற ஸ்ரீ வசிஷ்டபகவான் அதனைக் கூறத்தொடங்குகின்றார்; —இது என.

இதுகாரண மாமொரு கதைபண்டிக லாரூரக்கி யியம்பியது
முதுவாம் விஞவா லறிபொருள் கண்முழுதுந் தெளியத் தெளிவிப்ப
தது நீகேட்பா யிமவானுக் கயலுத்தரபா லமர்கிற்பாள்
விதுவாமெ யிற்றுக்கற் கடிப்பேர் பேழ்வாயரக்கி மின்கண்ணுள்.

(ப - ரை) இதுகாரணமாம் = இயம்பிய விடயம், நன்றாக விளங்குவதன் பொருட்டு, ஒருகதைபண்டு = ஒப்பற்ற புராதன இதிகாசம் உதாகரிப்பர், இகலார் அரக்கியியம்பியது = வலுமைபொருந்திய இராக்ஷசி கூறியது, முதுவாம் விஞவால் = மகாப் பிரசினஜாலங்களால், அறிபொருள்கள் முழுதுந் தெளியத் தெளிவிப்பது = தெரிய வேண்டிய வத்துக்கள் யாவற்றையும் நன்றாகத் தெரிந்து கொள்ளுமாறு தெளிவிக்கச் செய்வது, அது = ஆகிய அக்கதையை, நீ கேட்பாய் = ஹே இராகவ நீ சிரவணஞ் செய்தி, இமவானுக்கு அயல் உத்தரபால் = ஹிமாசலத்தினுக்குச் சமீபித்த வடதிசைக்கத்தில், அமர்கிற்பாள் = வசித்துக்கொண் டிருப்பவள், விதுவாம் எயிற்று கற்கடிப் பேர் பேழ்வாய் அரக்கி மின்கண்ணுள் = பிறைபோலும் வளைந்த கோரதம்ஷ்டிரைகளையும் அகன்ற பெருத்த வாயையும் மின்னலுக் கொப்பான நேத்திரங்களையும் உடைய கற்கடியெனப் பெயரிய இராக்ஷசியாமவள்.

(ஸ்ரீ - வீர.) ஒவ்வோரிடத் தொவ்வொருகால் ஹிம்சை செய்தே வாழ்பவர்களாகிய தாமசர்கட்கும் எவ்வரறேனு முண்டாய ஹிம்சையநபிசம்பந்தி பூர்வபிரயத்தினுதிசயத்தால் அபவர்க்கமார்க்கம் இனிதினுண்டாம். எனத் தெரிவிக்கும் பொருட்டும் இந்த ஆக்கியானமென வுணரத்தக்கதாம். முழுதும் = சுரோதாக்களிக்கப்பட்டயாவும், கூறிய விடயத்தின் கண்ணே புராதனமான இக்கதையை யுதாகரணமாகக் கூறுகின்றனர், இராக்ஷசியினுலே கேட்கப்பட்ட மகாவிஞக் கூட்டம் உண்மையாக ஆராயுங்கால் உலகமெல்லாம் வியாபியாநிற்கும். மைக்குழம்பு மலைபோலும் உக்கிரமான ஆகிருதியையுடையதா யாக்கப்பட்ட பதுமைபோன்ற கொடுந்தொழிற் கற்கடியென்னும் அரக்கி ஹிமகிரியின் வடக்கின் சார்பிலிருந்தாள்; அவளுக்கு விடுசிகையென்றும் அரியாய பாதிஷ்கி யென்றும் வேறிரண்டு நாமங்களுண்டு.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவண்மேனி யவயவங்களின் வர்ணனை —கருவென.

கருமேருவைப் பெண்வடிவாகக் கைகால் வகுத்ததெனத் திரிவா
ளுருமேறனைய சிறுநகையா ளோடாமீன் போலுழல் கண்ணுள்
பெருமேனி யைத்தாங் கிருகுறங்கும் பேரீச்சென்னப் பெரிதுடையாள்
வருமேகத்தைப் பிளக்குநகம் வயிரியத்தின் சூளகொப்பாள். (7)

(ப - ரை.) கருமேருவைப் பெண்வடிவாக = மைப்பங்க மலையை மங்கையுருவ மாக, கைகால் வகுத்ததென = கரசரணங்கள் பிரித்திருப்ப தொப்ப, திரிவாள் = சுற் றிக்கொண் டிருப்பாள், உருமேறனைய சிறு நகையாள் = கர்ஜியாநின்ற இடிக்குச் சமா னமான சிறுசிரிப்பை யுடையவள், ஓடாமீன்போல் உழல் கண்ணுள் = ஸ்திரமாகிய வித்யுத்கொடி போன்று உழலும் நேத்ர முடையவள். பெருமேனியைத் தாங்கு இரு குறங்கும் பேரீச்சென்ன பெரிது உடையாள் = அதிதூல காயத்தைத் தாங்கும் இரண்டு பெருந்தொடைகள் பெருங்கர்ஜரித்துக்களுக்குச் சமானமாகப் பெரிதாகவுடையவள், வருமேகத்தை = நீர் குடித்துக் கடலினின்றும் வாராநின்ற மேகங்களை, பிளக்குநகம் = போழும் உகிர், வயிரியத்தின் சூளகு ஒப்பாள் = வயிரியத்தாற் செய்யப்பட்ட முறத் திற்குச் சஜாதீயமாக வுடையவள்.

(ஸ்ரீ-வீர.) திரமாகிய வித்யுல்லதைகள் போலும் விழிகளை யுடையவள் என்னுமிது அபூத உவமையாம். கர்ஜரா தருவென்பது திருணப் ப்ரதான விருக்ஷவிசேஷமாம் அதுவும் நீட்சியாயும் கரடுமுரடாயும் இருக்கும் அதுபோலும் ஜானுக்களை யுடையவள். வைதூர்ய ரத்நத்தா லாக்கப்பட்ட சூரியனைப்போலும் அக்நிநகங்களை யுடையவள். வைதூர்ய சூர்ய உக்நிநகமெனவும் பாடமுளது, நரம்பெலும்புக் கிரந்திகளானே பூரிக் கப்பட்ட தேகத்தையுடையவள். தமாலதருவை யொத்தஜானுவையுடையவள், வைரேய வர்ணச் சூளகின் அக்ர ஆகார நகத்தையுடையவள். பஸ்மப்பனி நகைப்பையுடையவள், மாம்சமற்ற தரதேகக்கூட்டப் புஷ்பரதமாலையை யுடையவள். (7)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவள் விருத்தங் கூறப்பெறுகின்றது:—பாழிப்பென.

பாழிப்புவி மேலுயிரை யெலாம்பகலு மிரவுஞ் சொரிந்திடவு
மூழிக்கனல் போலவியாத வுதரக்கனலா லுள்ளழிந்து
காழிக்கிளர் நாவலன்தீவிற் காணப்படு மன்னுயி ரெல்லா
மாழிக்கிடை வீழ்நதித்திரள் போலருந்திற் சிறிதாருயிர் நிற்கும்.

(ப - ரை) பாழிப்புவிமேல் = ஒருபயனு மற்றுத் துயரமே நிறைந்த இந்த வுலகத் தில், உயிரையெலாம் = ஜீவர்களுடைய சரீரங்களை யெல்லாம், பகலுமிரவுஞ் சொரிந் திடவும் = தினமும் ராத்திரியும் வாரிக்கொட்டிக் கொண்டே யிருந்தபோதினும், ஊழிக் கனல்போல் அவியாத உதரக்கனலால் உள்ளழிந்து = பிரளயாநலம்போலக் கெடாத ஜாடராக்கினியினுலே சிந்தாகுலமுற்று, காழிக்கிளர் நாவலன்தீவில் காணப்படு மன்னு யிரெல்லாம் = ஜம்புத்வீபத்திற் பார்க்கப்பட்ட சரீரங்களை யெல்லாம், ஆழிக்கிடை வீழ் நதித்திரள்போல் = கடலினுள்ளே விழும்படியான நதிகளின் கூட்டங்கட் கொப் பாக, அருந்தில் = புசிக்கில், சிறிது ஆருயிர் நிற்கும் = அற்பம் அருமைப் பிராணன் நிதியாம்.

(ஸ்ரீ - வீர.) தனதன்னமாகிய நரமாம்ஸ முதலியவை கிடையாமையின் அவளது ஜாடர அநலமென்னும் ஔதர்ய அக்நியானது வடவாநலம்போல்தத்திருப்தியடையாம லிருந்தது. இத்தகைய அவளுடைய காயம் பெரியதானதால் தன்னுடைய ஜாதிக்குரிய

ஆகாரம் கிடைப்பது அரிதாய் விட்டபடியால். திருப்தியற்றவளாகிக் கடலிலிருக்கும் வடவாநலம் போலவும் கடற்றிரை போலவும் பசியைத்தரும் ஜாடராக்கினியானது மிகவும் அலைத்துத் துயர்தந்தது. பெரிய வயிற்றையுடைய அவள் ஒருகாலத்திலும் திருப்தியை யடையவேயில்லை, வடவாநல, நீர்வானது எக்காலத்தேனும் திருப்தியை யடைந்தண்டோ அத்தகையள் ஒருகாலத்தில் இங்ஙனஞ் சிந்தை செய்வாளாயினள்:—இடைவிடாமல் சுவாசந்தோறும் ஜலராசிகள், சமுத்திரத்திற் சேருங் கணக்கேபோல ஜம்புத் தீவிலுள்ள சர்வஜனங்களையும் விழுங்குவேனேயாயின் மேகத்தினுலே திருகதிருவுஷ்ணை தூரும் யானது தன். னேதுவாய ஜீரண நிவாரண மானபோது அடங்குவதேபோல அது எனது பசியைச் சிறிதுதணிக்கும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆபத்திற் சீவிக்கும் யுத்தியாதாம், மந்திராதிகளானே காப்புறும் யாவரையும். எங்ஙன் விழுங்கல் கூடும் கூடாதாயின் யாவரையும் விழுங்குமெண்ணமெங்ஙனஞ் சித்திக்கும் எனச்சிந்தித்துத் தவமேயுபாயமெனத் தீர்மானித்துத் தொடங்கல்:—மழையென.

மழையாலவியுங் கானலென வயிற்றிலெரியுஞ் சிறிதவியும்
பிழையாதி தனைத்தவம் புரிந்து பிரமனருளாற் பெறுதுமெனு
முழையாரி மயகிரிமேவி மூழ்கியொரு காலுற நின்று
புழையார் விழியான டவானிற் பொலிபுங் கதிரைவெஃதிர் நோக்கி.

(ப - ரை.) மழையாலவியுங் கானலென = விருஷ்டியினுல் சாந்தமாகும் பேய்த்தேரேபோல, வயிற்றிலெரியும் சிறிது அவியும் = யாவற்றையும் சந்ததம் கிரசனஞ்செய்தால் உதரத்தில் அக்கினியும் அற்பந்தணியும், பிழையாதினைத் தவம்புரிந்து = தவருமல் இம்மனோரதத்தைப் பெருந்தவஞ் செய்து, பிரமனருளால் பெறுதுமெனு = நான் முகரது திருவருளினுலே பெற்றுக்கொள்வேன் என்று, முழையார் இமயகிரிமேவி = குகைகள் நிறைந்த இமாசலத்தை யடைந்து, மூழ்கி = ஸ்நாநாதிகள் செய்து, ஒருகாலுறநின்று = ஒரு காலூன்றி நின்று, புழையார் விழியால் = பொந்துபோன்ற நேத்திரங்களால், நடவானிற் பொலியுங்கதிரை எதிர்நோக்கி = ஆகாயமத்தியிற் பிரகாசியாநின்ற சூரிய சந்திரர்களை எதிராகப்பார்த்து.

(ஸ்ரீ-வீர.) மிருகதிருஷ்ணை யென்னும் மருமரீசிகை மேகம் பெய்தலானே நன்கு சாந்தியை யடையுமாபோல யாவற்றையும் விழுங்குவேனுயின் சிறிது தணியும் பசியென்பதாம். சர்வப்பிராணி சமுதாய ஹிரண இச்சையானே தவம்புரிவேன் எனச்சிந்தித்தாள். சந்திர அருக்கர் தங்கதிகளில் நோக்கமுற்ற விழியினளாய் அவர்தங் கதியையனுசரித்த பார்வையுடன் நின்றுள். துயர்ப்படாத மனங்கொண்டு பெருந்தவத்தைச் செய்வேனுகவும் மகா உக்கிரமாகிய தவத்தினுலேயே கிடையாத வத்துவுங் கூடக்கிடைத்துவிடுகின்றது என இவ்வண்ணம் சிந்தனைசெய்து, அவள் அகிலப் பிராணிக் கூட்டங்களையும் உண்ணவேண்டு மென்னும் ஆசையினுலே, தவஞ்செய்யும் பொருட்டுப் பிராணிகள் செல்ல முடியாததான ஹிமவான் பர்வதத்தை நினைந்தனள். சந்திர சூரியர்கள்போலத் தேஜோமயமாய் அசையாத நேத்திரங்களையுடைய அவள் ஆண்டுச்சென்று ஸ்நாநஞ் செய்து தவஞ்செய்யும் பொருட்டு ஒரே நிலைமையை யடைந்து ஒருகாலால் நின்று தவம் புரிந்தனள்.

(ச.) இதனை = சர்வஜந்து சமூக சேகரத்தை, பெறுதுமெனு = என்றெண்ணி, விழியால் = நிச்சலமான நேத்திரங்களால், கதிரை = இரவிற்சந்திரனையும் பகலில்

அருக்கனையும் (பிரசண்ட சூரியனையும் எனினும் ஒக்கும் என்றும் பாடமுளது) சேகரத் தைப் பெறுதும் = கொல்ல வேண்டும் என்ற அபிப்பிராயம், சண்டார்க்க பாடபேதம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வருந்தித் தவம்புரிதலும் ஸ்ரீ பிரஹ்மதேவர் பிரசன்னமாத லும் வருணித்தல்:—வருந்தியென.

வருந்திநின் றுயர்தவத்தில் வருடமோ ராயிரஞ் செலுத்தத்
திருந்துக மலத்தயன் வந்தான் றீயோ ரெனினு மருந்தவத்தாற்
பொருந்துறுத பொருளுண்டோ புண்டரீகன் போதவுமுன்
னிருந்தபடியே யிருந்தரக்கி பிதியத் திறைஞ்சியிது நினைந்தாள்.

(ப-ரை.) வருந்திநின்று = கஷ்டப்பட்டு ஒரு காலினின்று, உயர்தவத்தில் = மேலான தவத்தினாலே, வருடமோராயிரஞ் செலுத்த = ஒரு ஆயிரவருடம் கழிப்ப, திருந்து கமலத்தயன் வந்தான் = எல்லா அழகும் வாய்ந்த உந்தியந் தாமரைமலரில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ பிதாமகன் வந்து பிரசன்னமானார், தீயோரெனினும் = மகா பாதகரே யெனினும், அருந்தவத்தால் = பாவங்கள் நீங்கும் அரியதபசினாலே, பொருந் துறுத பொருள் உண்டோ = கிடைக்கத்தகாத வத்துவும் உளதுகொல்!, புண்டரீ கன் போதவும் = தாமரைக் கடவுள் நீழுந்தருளிவந்து தரிசனமளித்தும், முன்னிருந்த படியே யிருந்து = பூர்வமிருந்த தவநிலையிலேயே திதிபெற்று, அரக்கி = கற்கடி, இத யத்திறைஞ்சி = மனத்தினாலேயே பிரணமஞ் செய்து, இது நினைந்தாள் = என்னவரம் வேண்டினால் பசி நீங்குவதற்குப் போதுமான தென்று இங்ஙனஞ் சிந்தைசெய்தாள். (10)

(ஸ்ரீ - வீர.) அவளுக்கு முறையே தினங்களும் பக்கங்களும் மாதங்களும் ருதுக்களும் நடந்தேறின, சைலமாகிய உபாதான காரணத்தினாலே செய்யப் பட்டவள்போல; இருந்து சீத ஆதவங்களில் மூழ்கிச் சிறிதும் கலங்காமல் தவக்கிலேசங்களெல்லாம் சகித்தனள். ஆயிரவருடங்கள் சென்றதன் பின்னர் அவளுக்கருளப் பிதாமகன்வந்தார், கெட்ட நடத்தையோடு கூடிய அவளுக்கு மிகமிகத் துர்லபமான பிதாமகன் பிரசாதம் எங்ஙனங் கூடுமெனிற் கூறுவார், அருந்தவத்தா லென்றார், கொடூரமான தபமானது சித்தியின் பொருட்டாருமன்றே தபமானது! சித்திக்கின் விஷசகித அக்கினியும் சீதளமாய் விடுகின்றது, தவத்தினாலாகாதது ஒன்றுமே யின்றும். அவள் அவ்வாறே யிருந்துகொண்டு தாதாவை மனத்தினாலேயே நமஸ்கரித்து இதனை யெண்ணினாள்.

(ச.) தீயோரெனினும் = நீசர்களாயினும், போதவும், அவனையிதயத்து = மனதி னால், இது = இப்பசிபோதற் குரியவரம் யாதென்று.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வேண்டியதைத்தானே சிந்தித்தலும் ஸ்ரீ பிரமதேவர் விஞ தலும் கூறல்:—தாவுமென.

தாவுமுதரக் கனறணியச் சற்றுமிரும் பாற்சமைந்த வொரு
சீவலுசிவடி வாளுற்சகத் தோருடலங் களிற்புகுந்து
மேவுபிரைகள் வேண்டியது விழுங்கலா மென்றுணர் வாளே
யாவதெண்ண முனக்கென்ன விசைத்த வயனுக் கிவளிசைப்பாள்-

(ப - ரை.) தாவும் உதரக்கனல் தணிய = ஓங்கியெரியா நின்ற ஜாடராக்கினி சாந் தமாக, சற்றும் இரும்பால் சமைந்த = சுக்குமமா யிரும்பினு லாக்கப்பட்ட, ஒரு சீவ லுசிவடிவ ஆனல் = ஒருயிருசி வடிவமாக ஆயின், சகத்தோர் உடலங்களிற் புகுந்து = உலகத் துள்ளவர்களுடைய தேகங்களிற் பிரவேசித்து, மேவுபிரைகள் வேண்டியது

விழுங்கலாம் = பொருந்தா நின்ற ஆகாரங்கள் வேண்டிய அளவு உட்கொள்ளலாம், என்றுணர்வாரே = என எண்ணுவாரே, யாவதெண்ண முனக்கென்ன = நின்னுடைய நினைவுயாது எதையுத்தேசித்து இத்தவம்புரிந்தாய் கூறுதியென்று, இசைத்த அயனுக்கு இவள் இசைப்பாள்-வினவிய பிரஹ்மதேவருக்குக் கற்கடி கூறுகின்றாள்.

(ஸ்ரீ - வீர.) அலோக மயமாயினும் லோகமயம் போன்ற சீவர்களைத் தைக்கும் ஊசியாவேன், இவ்வரத்தினாலே உலகத்தை இஷ்டப்படிமுறையே பசிநீக்கப்பொருட்டு விழுங்குவேன். ஆ ! நினைவு வந்தது இவ்விபுவைப் பிரார்த்தித்து ஒருவரம் வாங்குவேன் ரோகரூபமாகவும் இரும்பின் விகாரரூபமாகவும் இருக்கும் ஜீவலோகு கூடிய ஊசியாக யானிருப்பேன், வேதாவின் வரத்தினாலே இருவகையான ஊசியாக உற்று எல்லாப் பிராணிகளினுடைய இருதயத்தின் கண்ணெளியே போதில் கிராணத்தாற் கவரப்படும் மணம்போலப் பிராணனுடன் தெரியாமற் புகுந்து காரியத்தை முடிப்பேன், இம்முறை யுபாயத்தாற் பசிநீங்கும் பொருட்டுக் கிரமமாகச் சகலஜகத்தையும் இவ்விடப்படி விழுங்குவேன். பசிநீங்குதலே பரமசுகமாம் இங்ஙனஞ் சிந்தித்துக் கொண்டிருக்கும் அவளைக் கமலாலயன், சாந்தி தாந்திதயாதி தபஸ்வித்ருப விருத்த லோகஹிம்சா அபிலாஷிணியா யிருத்தலின் அன்னிய வகையினாலே அவ்வாறு அபிலாஷை யுற்றிருப் பதைக்கண்டு, ஹே அரக்கர்குலமேயாய அசலத்தின் மேகமாலையாகிய கற்கடியென்னும் அருமைக் குமரியே ! (புகழ்ந்தது வரும் மங்களத்தை விளக்குதற் பொருட்டாம்) எழுந்திருப்பா யாக நீ யான்மிக மகிழ்ந்தேன் வேண்டிய வரத்தைக் கேட்குதி.

(ச.) சிவசூசி = உண்மையில் அயவடிவா யில்லாதிருந்தும் அயோமுகம்போற் கூர்மையான சைதன்யமுள்ள சூசிகை, சகத்தோ ரிதயங்களிற் புகுந்து = சர்வப்பிராணிகளுடைய இருதயத்திற் பிரவேசித்து, உணர்வாரே = சிந்திக்கும், அக்கற்கடியை நோக்கி அரக்கர்குலமேயாய கனகன மாலையேபோல அலங்காரபூதமாயிருக்கும் குழந்தையே.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கற்கடிவரம் வேண்டலும் ஸ்ரீ பிரஹ்மதேவர் வரமருளலும் வருணித்தல்:—துதியென.

துதிப்பார் துணையே நான்சிவ சூசியாக வேண்டுமென
விதிப்பான் விகார பூருவமாம் விடுசியாக மெய்க்கொண்டு
குதிப்பாய் துர்ச்சேட்டையர் மூர்க்கர் கொடியோர் கொடியதலத் துறைவோர்
கதிப்பால் விரும்பாவுண வுண்போர் கருத்திற் சுவாசத்துடன் கலந்து.

(ப - ரை.) துதிப்பார் துணையே = ஹே விதியே ! ஹே பகவன் ! ஹே முக்கால முமுணர்ந்து தோத்தரித்துப் பூசிப்பவர்க் கருளும் உயிர்ச்சகாயமே !, நான் = அடியாள், சிவசூசியாக வேண்டும் என = உயிரூசியாக வேண்டு கின்றேன் என்ன, விதிப்பான் = யாவரையும் சிருட்டிக்கும் ஸ்ரீ பிரமதேவர் அருளுகின்றார், விகாரபூருவமாம் விடுசியாக மெய்க்கொண்டு = வியென்னும் உபசர்க்கத்தை முன்புடைத்தாய விஷயஞ்சி கையாகத் தேகந்தாங்கி, துர்ச்சேட்டையர் = கெட்ட சேட்டையுடையவர், மூர்க்கர் = மூடர், கொடியோர் = துட்டர், கொடியதலத் துறைவோர் = துர்த்தேச வாசியர், கதிப்பால் விரும்பா வுணவுண்போர் = நன்மைக் கேதுவாகாதென நிடேதிக்கப்பட்ட ஆகாரத்தைத் தின்பவர், கருத்திற் சுவாசத்துடன் கலந்து குதிப்பாய் = ஹிருதயத்தில் பிராணனுடன் கலந்து பிரவேசித் துண்ணுகி. (12)

(ஸ்ரீ-வீர.) விதி = விரிஞ்சன். கற்கடியினாலே பிரார்த்திக்கப் பெற்ற லோகசித்த சிவசூசித்தன்மைத் தானத்தாற் சகல ஜனங்கட்கும் அபூர்வதக்க சாகரத்தின் மூழ்குதல்

உண்டாகக் கூடாதென ஜகத்தில்தானுகவே இராகின்ற விஷூசிகை வியாதிபாவத்தை யிவள் பொருட்டுத்தரும் விருப்பினராகிய அடைவுற்ற கருமானுசாரி ஸ்ரீபகவான் பிதா மகர் மீண்டுங் கூறத்தொடங்குகின்றார்:—விதிப்பான், வி + சூசிகை, இகரத்தைநோக்கி, ச, ஷ, ஆக. விஷூசிகையென ஆம். ஷ - ட ஆம், விடூசிகை. ஹே கமலப்பிரபுவாகிய திரிகால முணர்ந்த தேவதேவரே! ரோகரூபியாயும் இரும்புரூபியாயு மிருக்கும் ஜீவ ஊசி யானுரும்படியான வரத்தைக் கொடித்தருள வேண்டும் என்று கற்கடி விண்ணப் பிக்கவும், அவ்வாறே யுண்டாகுக வென அவளை நோக்கிக் கூறிப் பிரஹ்மா மீண்டுங் கூறுவதாவது; நீ உபசர்க்கத்தோடு கூடிய சூசிகையென்னும் விஷூசிகையாக ஆகக் கடவாய்! ஜனங்களாற் பார்க்கமுடியாத படியான மாயையால் எல்லாலோக ஹிம்சை யைச் செய்தி. ஆனால் நிடேதித்த அபக்வ அகாலபோஜனமும் அதிபோஜனமும் செய்யப்பட்டவர், அந்தியருக்கு அநிஷ்டம் செய்யப்பட்டவர், அசாஸ்திரீய மார்க்கத்தி னிற்பவர், கெட்ட தேசத்தில் வாசம்பண்ணப் பட்டவர், துஷ்டர் என்னு மிவர்தமை ஹிம்சை செய்வாயாக; பிராணவாயிலாக அபானந்தொடங்கி ஹிருதயபரிந்தம் புகுந்து இருதயபதுமத்திற்குகையில் வர்மபக்கத்திருக்கும் மாம்சபிண்டம் பஸ்தி சிரமுதலியவற் றைப் பீடைசெய்து வாதரோகை வடிவமான விஷூசிகை வியாதியாய் ஆகக்கடவாய்; பத்மம் எனப்பெயரியரோகம், குன்மம் என்பவற்றால் வாதிப்பதால் விஷூசிகை வியா தியாவாய் என்றும் பொருளாம் சாஸ்திர சதாசார நிஷ்டர்களையும் வேறு இகல்புடை யவர்களையும் நீபற்றிப் பீடைசெய்வாய்.

(ச.) வேண்டுமென = வரந்தரவேண்டு மென்று கற்கடிகேட்க, கதிப்பார் = தூர்ப் புத்தி யுடையோரும், விரும்பா வுணவுண்போர் = தூர்ப்போஜனரும், ஆதிய குணமிலிக ளது, விதிப்பான் = பிரமதேவர் அப்படியே விடூசியாவா யென்றருளிப்பின்பு அவ்விடூசி சொரூபத்தையே விதிக்கின்றார், சுவாசத்துடன் = தேகாந்தரவாத்தி வாயுக்களோடு, கருத்தைக் கலந்து = இருதய கமலத்தைக்கூடி, மெய்க்கொண்டு = குதமுதலிய தேகா வயவங்களின் வாதனை யேதுவாய் அதனால், விகாரரூபமதாம் = வாதவிகார ரூபமான, விடூசியாகி = விடூசிகா வியாதியாகி, குதிப்பாய் = சஞ்சரிப்பா யென்பது அன்னுவயம்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) குணமுடையவரிடத்திற் செல்லின் நீங்கமந்திரம் தருதல்:— நல்லென.

நல்லாரிடத் தினீயெய்தி ஞமேவித்த மந்திரத்தாற்
கொல்லா தொழிவாய் தீயோரைக் கொன்றுதின் பாயெனமலரோன்
சொல்லாமுன்ன மலைபோல்வாள் சூசியுருவாஞ் சீவனுமாய்ப்
பொல்லாத வரஞ்சினத் தடித்தோர் பொன்றும்படி யுள்ளுறப்புகுந்தாள்,

(ப - பை.) நல்லாரிடத்தில் = குணவான்களிடத்தில், நீ யெய்தில் = நீ அடைவா யேயானுல், நாமேவித்த = எம்மால் விதிக்கப்பட்ட, மந்திரத்தால் = மந்திரத்தினுல், கொல்லா தொழிவாய் = அவர்தமை உயிர்வாங்காது நீங்குவாய், தீயோரைக் கொன்று தின்பாய் = கொடியோர் தமைக்கொன்று பகுதிப்பாய், எனமலரோன் = என்று கம லாலய நாயகன், சொல்லா முன்னம் = திருவாய் மலர்ந்தருளிய வுடனே, மலைபோல் வாள் = பர்வதாகிருதியா யிருந்த அந்தக் கற்கடி, சூசியுருவாம் சீவனுமாய் = ஊசிவடி வமா முயிராகி, பொல்லாதவர் = கொடியவர், அஞ்சினத் தடித்தோர் = மிகப்பயந்தவர் பெருமிதம் பிடித்தவர் கொடுங் கோபமுடையவர், பொன்றும்படி = அழியுமாறு, உள் ளுறப் புகுந்தாள் = தேகங்களுள்ளே பிரவேசித்தனள்.

கற்கடி கதை

(ஸ்ரீ - வீர.) குணங்களோடு கூடியவர்களின் பீடையானது நீங்கும்பொருட்டு இம் மந்திரத்தையுங் கூறுகின்றேன்: — ஹிமகிரியின் வடபாகத்தில் கற்கடியென்னும் இரா க்ஷசி இருக்கின்றனள் அநியாயபாதிகை யெனவும் விஷ்ணுசிகை யெனவும் அவளுக்கு இரண்டு நாமங்களுண்டு அநியாயபாதிகை = நியாயமார்க்கங் கடந்து நடப்பவர்களைப் பாதிப்பவள், அவளது மந்திரம்

" ஓம் ஹ்ரீம் ஹ்ராம்ரீம்ராம் விஷ்ணுசக்தியை நமஃ
ஓம் நமோஹமவதீ விஷ்ணுசக்தியை நாம
ஓம் ஹரஹர நயநய வஹவஹயேயேய உத்தாபயோத்தாபய
கூர்ம்வஹாஹரிவந்தம் முஹ்ஜீவ வஃவஃவஃ ஸ்வாஹா "

விஷ்ணுசக்தி இருவகையாம் முதலது மாயையாம் அதனதனினுங்களேயாம் அன்னிய சர்வசக்திகளும், மற்றதோ அதனதனினுமாகி ஒவ்வொரு வஸ்துவையும் நியதஞ் செய்வதாய்ச் சாத்விகாதி பேதத்தாற் பின்னமுமாம், அதனுள் தாமசமான சங்காரசக்தியின் அங்கிசங்கள் பிராணிகளின் கெட்டகர்ம பலஜனனசக்தி விசேடங்கள் ரோகங்களாம், அதனால் அவற்றின் நீக்கப்பொருட்டு முதன் மாயாசக்தி பிரணவமாயாதி ரகசிய பீஜமைந்தால் விளிக்கப்பட்டு நமஸ்கரிக்கப்பட்டுப் பிரார்த்திக்கப் படுகின்றது ! ஓம் முதலாக. நான்காம் வேற்றுமையீற்றுக நம: சப்தயோகத்தால், பரப்பிரஹ்ம வடிவமாயிருக்கப்பட்டவள் பொருட்டு நமஸ்காரம் என்பது பொருளாம்; பகமாகான்மியம் சர்வ நியமன வீரியமாம், அதனையுடைய ஆதியாய விஷ்ணுசக்திக்கு நமஸ்காரம், நீ இரண்டாவதா யிருக்கும் இந்தினது அங்குச வடிவமான ரோகமய விஷ்ணுசக்தியைக் கெடுத்தி, ஓங்காரவாச்சிய காரண சொரூபத்தில் அத்தியந்தம் உபசங்காரிப்பாயாக ஹரஹர என்றது அத்தியந்த மென்பதைக் காட்டற்கு, நய = சொந்தஸ்தானத்தை யடைவாயாக, பச = பாகத்தினுற்போல இப்போதே மிருதுவாக்கு, மத = தயிரைப்போலக்கடைதி, உத்சாதய = இந்தஸ்தானத்தி லிருந்து வேறிடத்திற்குப் போதி, கூறிய அல்லது அயலாய வகைகளானே தூரஞ்செய்தி, ஸ்வாஹா என்பது ஹவிர்தானாதிகளால் பூஜ்ஜியத்தன்மையை விளக்குதற் பொருட்டாம். இங்ஙனம் ஆதிசக்தியை யினிது பிரார்த்தித்து அதன் அதீனமான ரோகசக்தி பிரார்த்திக்கப் படுகின்றது, ஹிமவான் பர்வதமாகிய சொந்தஸ்தானத்தையடைதி, பின்ரோகியின் பொருட்டுக் கூறப்படுகின்றது, ஸ:= பழைய கெட்ட கருமத்தால் மறைபட்டவனும், ஸ:=ரோகத்தால் மறைபட்டவனும், ஸ:=மிருத்தியுவாற் பீடிக்கப்பட்டவனும் நீ மந்திர சாமர்த்தியத்தினுலே ஜீவனசமர்த்தமாய அமிருதத்தால் சம்பூர்ணம் சந்திரமண்டலம் எனது பாவனையினுலே அடைந்தவனுகின்றாய், அந்தத்தில் ஸ்வாஹா ! என்றது தீபமாய அக்கினியின் கண்ணே ஹவிஷ் விதேபோலப் பூர்ணசந்திர மண்டலத்தில் ரோகியைப் பாவனையால் வைப்பதை விளக்குதற்காம்; இம்மகா மந்திரத்தை மந்திரிப்பவன் எழுதிவாமகரத்தின் உதரத்தலத்தில் வைத்து, அக்கரத்தோடு கூடியவனுய்ப் பிணியாளனைத் தீண்டுக, மந்திரமாகிய மூத்திரத்தாலடிபட்டுக் கட்டப்பட்டு ஹிமாசலத்தை நோக்கி ஓடாநின்ற அந்த விடுகையாகிய கற்கடிகையைச் சிறப்பாகச் சிந்தனைசெய்க, சந்திரனுகிய அமிருத கருப்பமாம் மதிவின்கண் ணுளையாளி யிருப்பதாகச் சிந்திக்குக, சமாதித சித்தமுடையவனுகிச் சர்வ ஆதிவியாதி மயல்களும் விடுபட்டவனும் ஜராமரண மற்றவனு யிருப்பதாக எண்ணுக ஆனு லிம்மந்திரத்தைச் சாதகஞ் செய்யப்பட்டவன் மிகவும் சுசியாகி நிருமலமன

முடையவனுய் விசேஷபமற் றேகாக்கிரமன முடையவனுகிச் சௌச ஆசமனதிகளேமுன் னரேசெய்து கொள்ளவேண்டும், வேண்டவே இம்முறையாகச் சகல விசேஷைகையும் அத் தியந்த மில்லாமற் கழிந்துபோய் விடும் இவ்வாறருளி விண்ணிற்சென்ற மூன்றுலகத் திற்கும் நாதனுக இருக்கும் பிரஹ்மாவானவர் ஆகாயத்திற் கமனஞ்செய்யும் சித்தர்க ளாலே கவரப்பட்ட கெடாததான மந்திரத்தை யுடையவராய், காரியாந்தர சித்தியின் பொருட்டு அடைந்த இந்திரனுல் வந்திக்கப் பெற்றவராய் மற்றவரால் கெடுத்தற்கு முடி யாத சத்திய சங்கற்ப சித்தமாய்ப் பரசித்த சங்கற்பத்தாலுண்டாய பிதாமாதா சகோ தரன் சந்தனம் மாலே முதலிய லோகவடிவங்களாம் விசித்திர யோக்கிய மாயைகளே யுடைத்தாகி யிருந்து மிகப்பிரகாசத்தோடு கூடி விளங்கும் தமது சத்தியலோகத்தை யடைந்தனர். ஹேவிஷ்ணு சக்கியே ! ஆதூரன் விளித்தல். ஹேஜீவ ! சந்திரமண்டலம் அமிருதமயம் சென்றவனுகின்றீர், ஸ்வாஹா = சுயம் ஈண்டுவருக என்னு லழைக்கப் பட்ட ஜீவான்மகமான ஹவிஷ் சந்திரமண்டலம் சுயம்செல்க. இம்மந்திரமானது மந்தி ரங்களின் மத்தியில் மகாமந்திரமாகும். பூதசிருங்கம்போற் பிரணவத்தின் பிரமையுள்ளவளாகிப் பேரி ருண்மயமான இராகூசியானவள் மைம்மேக ரேகைபோலச் சூக்குமத் தன்மையை யடையத் தொடங்கினள், எவ்வாறென்றீர் மேகம்போல ஆயினள் பின்னிருகூசாகை வடிவமாயினள், ஒருபுருடப் பிரமாணமாயினள், பின்னே அஸ்தமாத்திர பூமண்டலத்தின் மாயினள், அதன்பின் னெட்டைரூப மாத்திரமாகி, அங்குலிரூபியாகி, உளுந்துப் பருப்பெனவாகி, தூல ஊசிபோலாயினள். பின்பட்டுத் தைக்கத்தகுதியான சூக்குமதம ஊசியாகப் பதும கேசர சுந்தரியாகிய அவளடைந்தனள். அதன்பின் முன்னையல் நோயினுற் பரவசமான சில அங்கத்தினும், சில இளைத்ததேகத்தினும் சிலபருத்த தேகத்தினும் உள்ளேபுகுந்து வாயுவீனமாய் இரும்புருவ ஊசியாய் அதிசயமான விசேஷைகைப் பிரவிருத்தி ரோகமாய் ஆயினள்; சிலசிறிய தேகத்திலும் ஸ்வஸ்ததேகத்திலும் நல்லபுத்தியையுடைய தேகத்தி லும் புகுந்து ஜீவசூசியாய்த் தீர்ப்புத்திரூபமான அந்தர் விசேஷைகையாம்.

(ச) நல்லோர் = குணசாலிகள், விதித்த = தினக்குச் சிலித்சார்த்தஞ் சொல்லிய இம்மந்திரத்தால், மலரோன் சொல்லாமுன்னம் = ஸ்ரீ பகவானுனை வேதாசொல்லி அவ் விடத்திற்றூனே அந்தர்த்தானமான பின்பு, மலேபோல்வாள் ஒட்டையாகாரியாய், பின்பு அங்குலரூபியாய் பின்புளுந்தின் பீசலேசப் பிரமாணியாய்ப் பின்பு சூசியுருவாஞ் சீவனு மாய், பொல்லாதவர் = சிலவிவசாங்காகிய மூர்க்கர், அஞ்சினர் தடித்தோர் = சிறியர் பெரியர் ஆயினும், இத்தன்மையான மந்திரத்தை மாந்திரிகனுகிய சாதகன் சுசியாய்ச் சுவச்சாந்தக்கரணனுய் சமாதான சித்தனுய் வாமகரமத்தியில் வைத்துச்சபித்து அந்தக் கரத்தால் வியாதிக்கிரஸ்தனேத் தடவிக் கற்கடியை மந்திரமென்னும் இருப்புலக்கை அல்லது சம்மட்டியால் அடிபட்டு இமகிரியைநோக்கி யோடினவளாயும், வியாதிக் கிரஸ் தனே அமிர்தமயமாதலின் சந்திராசாயன மத்தியி லிருப்பவனுயும், சர்வ ஆதிவியாதி விப்பிரமைகளால் முக்தனுயும், அஜராமரணனுயும், சிந்திக்கவேண்டும் இக்கிரமத்தாற் சகலவிசேஷைகளும் ஓடிப்போ மென்பார் மந்திரத்தால் என்றூர்.

அதுனல் அதுவின் = வியாதிக்கிரஸ்தன்

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணம் அவ்வுசி சிலபாலருந்தியும் மந்திரவசத்தாற் சிலவரிடத்தினின்றும் நீங்கியும் நீன்போது சுழன்று பின்மிகவருந்திய தென்கின்றூர்:— வாயுவென.

வாயுவடிவா யுட்புகுந்து மண்ணில்[விண்ணிற் பல்லுயிர்க
ளாயுவெல்லா மிருவடிவாய நேககால மருந்தியபின்

னையுமனத் தாளாயவமே யுழன்று வருந்தி யூசியுமாய்த்
தேயும்படியே கெடுத்ததென மச்சீசியாசை யெனத்திகைத்தாள். (14)

(ப - ரை.) வாயுவடிவாய் உட்புகுந்து = காற்றுருவமாயுள்ளே பிரவேசித்து, மண்ணில் விண்ணில் பல்லுயிர்கள் = பூமும்மேலும் பலவுயிர்களின், ஆயுவெல்லாம் = பிராணன்களே யெல்லாம், இருவடிவாய் = தேகத்துவயத்துடன், அநேககாலம் அருந்திய பின் = அநேகவருடம் புசித்தபின்னர், ஓயுமன்த்தாளாய் = வைராக்கிய சித்தத்தையுடையவளாய், அவமேயுழன்று வருந்தி=வீணுகவே யலைந்து துயருற்று, ஊசியுமாய்= அற்ப ஊசியாகி, தேயும்படியே =தேய்ந்து போமாறு, எமையாசை கெடுத்தது=ஆசையன்றே பெருமை வாய்ந்திருந்த எம்மைக்கெடுத்து விட்டது, சீசியெனத்திகைத்தாள்= திக்திக்கென வாடினள்.

(ஸ்ரீ - வீர.) எமையென்றது தன்பெருமையை யெண்ணியதாம். தேகத்துவயத்தால் = இராக்ஷசரூபதேகம் நஷ்டமாய் விட்டமையின் ஊசிரூப இருதேகத்தால் எனக்கொள்க. பெரியவாசிட்டத்தில் பிரசங்கத்தால் நீதியைக்காட்டி பின் பிரகிருதத்தையனுசரித்து சீவசூசியெனப் பெயரிய வியாதி சொரூபத்தைக் கூறுமிடத்து இங்ஙனங் கூறப்பெற்றுளது:—இலித்தினமாய் லகுவாய் அவள் அன்னியமாயினள் அவ்வாறே வியோமவடிவமாய் ஆகாரமற்று ஆகாசம்போலச் சூக்கும இயற்கையோடு கூடிய இலிங்க சரீரமாய் ஜீவவிதேஹிகையென நின்றனள். இத்தப்பிரகாரம் இரண்டு ஊசிமயமாய்ச் சரீரங்கள் அவளுக்குண்டாயின, அவள் பனியினம்சம்போலக் குறுகியவளா யிருந்தனள், பனியின் அம்சம்போல மிருதுவானவளா யிருந்தனள், அவளுடைய சுருங்கிய சரித்திரமிதுவாம். இரண்டு சரீரங்களோடு கூடிய அவள் நரர்தம் இருதயத்தில் நுழைந்து மிகவுங்குரூரமாத் துன்புறுத்திக் கொண்டு பின் பத்துத்திசைகளிலும் இங்ஙனமே மிகமிகவும் சுழன்று திரிந்தாள். அநேக வருடங்கள் சுழலுவதிலே மிகவுந்தப்பரையா யிருந்து விண்ணின் கண்ணும் மண்ணின் கண்ணும் இருதேகத்தோடுஞ் சென்றுகொண் டிருந்தனள். இவ்வண்ணம் அந்தக் கற்கடியெனப் பெயரிய இராக்ஷியானவள் அநேககாலமாகச் சர்வஜாதி நரமாமிசங்களேயும் அருந்தியும் சிறிதும் போதுமென்று திருப்தியையடையவேயில்லை; பூர்வபகலிலேயே (புசிக்கத்தொடங்கும் அக்கணத்திலேயே) அவள் உதரத்துளி யொன்றுனே பசிநீங்கித்திருப்தியை யடைந்திடுவள், ஊசியினுள்ளே யெவ்வளவுதான் கொள்ளக்கூடும் ஆசையூசியோ அடங்குவேயில்லே. அவள் சிந்திப்பதாவது. அந்தோ ! கஷ்டம் யான்என் ஊசியாகவானேனே, மிகச் சூக்குமமாக இருக்கின்றேனே தின்னும் ஆற்றல் எல்லாம் குறுகிப்போய் விட்டதே ! என்னுதரத்தில் ஒரு கவளங் கூடக் கொள்ளவில்லேயே ! தூண்மதியையுடைய என்னுடைய விசாலம் பொருந்திய அந்தப்பழைய ஹஸ்தபாதாதிக ளெல்லாம் எங்கே சென்று விட்டனவோ ! காளமேகம் போல விசாலமாகிய அங்கங்களெல்லாம் வனத்திற் சருகுகள் போலக் காய்ந்து போயினவே இத்தசையை யடைந்திருக்கப்பட்ட மந்தபாக்கியத்தையுடைய என்னிடத்தில் ஒரு சிறிதுங் கொள்ள வில்லேயே ! வசையினுலே வாசனை கட்டப்பட்டதாய் மாதுரியமாயிருக்கும் மாங்கிசரசக் கவளங்கூட வீழுங்க இடத்தைக்காணேமே ! இஃதென்னே யான் இயற்றினேன் திக்திக்கெனத் தன்னே நிந்தித்துக்கொண்டாள் என்பார் சீசீஎனத் திகைத்தாள் என்றார்.

(ச.) வாயுவடிவாய் = வாதசூசிரூபமாய், சீவசூசிரூபமும் வாதசூசிரூபமும் ஆக இருவிதத்தானும் உட்பிரவேசம் நிரூபித்தற்கு இருகவிகளில் மூன்சூசியுருவாஞ் சீவனுமா

யுள்ளுறப் புகுந்தென்னும், பின்வாயு வடிவாயுட்புகுந்து என்றும் பாடம் ஓதப்பெற்றது, மண்ணில் விண்ணில் இருவடிவாய் = பூமியில் விடுசிரூபதேகமாயும், வியோமத்தில் சூசி ரூப இராக்ஷசி தேகமாயும், என்பது பொருள். அநேககாலம்=வெகுவருடம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அந்தச் சோகபராயணத்தோடு கூடிய ஊசியானது மௌன மூற்று அஹிம்சா விரதங்கொண்டு ஏகாக்கிரத்தோடுந் தவஞ்செய்து பாவந்தீர்தலையும், அதை ஸ்ரீ நாரதபகவானைற் கேள்வியுற்ற இந்திரன்கண்டு ஸ்ரீ பிரஹ்மதேவரைப் பிரார்த் திப்ப அவர்வந்து வரந்தருதலையு மிருசெய்யுட்களிற் றொடர்பாய்த் தரிசிப்பித்தல்:— தீய—பாவ—வென. (வேருசுந்தம்)

தீயமனத் தொடியாமவமே பலசீவ னருந்தினமா
லேயது விட்டனமென் றிமவானிடை யெய்தரிதானதவ
மேயினளொன்று நினைப்பிலள் சஞ்சலம் விட்டுணவற் றொருமித்
தாயிரமாவரு டங்கள் செலுத்தலு மற்றது வல்வினையே. (15)

(ப-ரை.) தீயமனத்தொடு = ஜீவகாருண்ய மில்லாத சித்தத்துடன், யாமவமே பல சீவனருந்தினமால் = ஆசையினாலே நம்பெருமையையும் தியாகித்து அளவற்ற பிராணி களைக் கொன்று தின்றோம், எய்தது விட்டனம் = அடைந்திருந்த அவ்விழிவானதொழிலை விட்டுத் தொலைத்தோம், என்று = எனச் சங்கற்பித்துக்கொண்டு, இமவானிடை = ஹிமாசல சிருங்கத்தில், எய்தரிதான தவம்மேயினள் = அடைதற் கருமைத்தான பெருந்தபசைச் செய்யத் தொடங்கினள், ஒன்று நினைப்பிலள் = சங்கற்ப மற்றவளாய், சஞ்சலம் விட்டு = நிஸ்தரங்க மனோமயத்தினளாய், உணவற்று = நிராகார முடையவ ளாய், ஒருமித்து = ஏகாக்கிரசித்த முடையவளாய், ஆயிரமாவருடங்கள் = சகஸ்ரமகா சம்வத்சரங்கள், செலுத்தலும்= தவம்புரிதலும், அற்றது வல்வினையே = கன்மமடங்கன் யாவுங்கழிந்தன. (15)

பாவமகன்று மனந்தெளியப் பரபாவனை தன்வயமே
மேவலுமிவ் வுலகத்தை யிகழ்ந்து விருப்புவெறுப் பிலளாய்
மாவருடங்க ளொராயிர நின்றபின் மன்னுணர் வற்றதெனக்
கேவலம் வந்திவளுக் கொருவாய்மை கிளர்த்தினன் மாமலரோன். (16)

(ப - ரை.) பாவம் அகன்று = துரிதந்தொலைந்து, மனம்தெளிய = சித்தம் நிர்மல மூற, பரபாவனை = பிரஹ்ம சாக்ஷாத்காரம், தன்வயமே = சுயமாகவே, மேவலும் = உண்டாதலும், இவ்வுலகத்தை யிகழ்ந்து = இந்தவுலகத்துள்ள திருஷியங்களை யுபேக்ஷி த்து, விருப்பு வெறுப்பிலளாய் = இராகத்துவேட மற்றவளாய், மாவருடங்கள் ஓராயிர நின்றபின் = மாண்புடைத்தான ஓராயிர வருடங்களைப் பெருந்தவத்தாலே கழித்த பின்னர், மன்னுணர் வற்றதெனை = யதார்த்த ஞானம் உண்டாய் விட்டதென்று, கேவ லம்வந்து = இவள் வேண்டாமலே யெழுந்தருளியாகி, இவளுக்கு = கற்கடிக்கு, ஒரு வாய்மை = ஒப்பற்ற வுண்மையை, மாமலரோன் கிளர்த்தினன் = பெருமைபொருந்திய ஸ்ரீ பிரஹ்மதேவர் திருவாய் மலர்ந்தருளினர். (16)

(ஸ்ரீ - வீர.) மேற்கூறிய பிரகாரமாகவும் தன் றேகாதிகளைப்பற்றிமிகப் பெரிய வாசிட்டத்திற் கூறும் வகையாகவுஞ் சிந்தித்து, மீண்டும் அவ்வகையாய தேகங்கிடைக் கும் பொருட்டு விரைவில் தவஞ்செய்ய முயற்சி யுடையவளாவேண் என்றெண்ணிச் சித் தத்தின் கண்ணே ஜனங்களைக் கொல்லும் ஆசையை யுபசங்காரஞ் செய்துகொண்டு,

மூன்னேயிருந்து தவஞ்செய்து கொண்டிருந்த அதேஹிமாசல சிருங்கத்தை நோக்கிச் சென்றனள். சருவவிடயங்களி னின்றும் உள்ளத்தை யுள்ளேதிருப்பி வைராக்கிய சாரத்தை யுள்ளே யுடையவளாய்ச் சந்தப்தமில்லாதவளாய் ஊசித்தேகத்துடன் பெருங் கடின தவத்தைச் செய்தனள்; நிர்ச்சங்கற்ப நிராகார நித்தரங்க மநோமயியாய் அசையா மல் நிர்விகார மனப்பிர தானேயாய் நிலைத்துச் சித்தத்திலுள்ள திடநிச்சயத்தோடுங் கூட ஆயிரவருடங்கள் பெருந்தவத்தைச் செய்தனள் அருந்தவத்தைச் செய்துகொண்டிருக் கும் அவ்வூசிக் கற்கடியின் பாவங்க ளெல்லாம் கழிந்துபேய் நீண்டகாலம் இராகாதி ரகித சித்தமானது ஒருமைப் பட்டதால் விசாரபூர்வகமாக ஞானமானது உதயமாயிற்று. வெளியசைவுகள் யாவுமே யடியோடற்றுத் தேசகாலங்கள் அகேஞ் சென்றபின்னர், சத்தியமாயும் நல்ல அறிவுருவமாயும் இருக்கும் தன்னே விசாரிக்கப்பட்ட அவளுக்குத் தானுகவே ஞானப்பிரகாச மென்னும் பிரஹ்மான்மைக்கிய சாக்ஷாத்கார விருத்தி சம் பந்த போதாத்மாவானது இனிதாக வுதயமாயது, பரத்தையும் அபரத்தையும்கண்டனள் அதிநிர்மல மனமுடைமையாளே பரமபவித்திரத்தை யடைந்தனள், தான்தானே தவத் தானே அதிசூக்கும மதியினுலே அறிய வேண்டியதை யறிந்தனள், அருந்தவத்தினுலே பெரும்பாவங்கள் யாவுந் தொலையவே தனது சொரூப சுகத்தையறிந் தடைந் தமர்ந்த னள். இங்ஙனம் ஏழாயிரவருடம் யாவரும் அதிசயிக்கத் தாருணதவமாற்றினள். வெகு காலஞ் சங்கற்ப மற்றவளாய் அகில திருஷ்யங்களையும் உபேக்ஷித்த இருதய முடையவ ளாய் உள்ளே யிருக்குஞ் சைதன்ய சொரூபமாகிய தன்னே நன்காராய்ந்து பரமகாரண பிரஹ்மத்தைச் சாக்ஷாத்கரித்து அவ்வடிவமே யாயினள், யார் குருவெனின் ? தன் சயுக் திகளோடு கூடிய விசாரத்தினுலே எப்போதுந் தன்னையே தியானஞ் செய்துகொண் டிருத்தலே பரமாசிரியர் ஆம் அக்கற்கடிக்குப் பரபோதமுண்டாகி யாயிரவருடங்கழித்து ஸ்ரீ பிரஹ்மதேவர் எழுந்தருளியாகி ஆகாயத்தி லிருந்துகொண்டு, ஹே புத்திரியே! வரம் வாங்கிக்கொள்ளுதி யென்று கூறியும் கரண அபாவத்தாலும் விடயா சாபாவத்தா னும் மௌனமாகவே யிருந்தனள். (15-16)

(ச.) சீவனருந்தினம் = ஜனமாரணத்தைச் செய்தேம், இமவானிடையேய் = இம கிரிக்கண் சென்று, பின் சூசிதேகத்தால், அரிதானதவம் = கடினமான தவத்தை, சஞ் சலம்விட்டு = நிஸ்தரங்க மனேமயியாய், ஒருமித்து = பரமதசையைப் பெற்று. பரபா வனே = விதித வேத்தியத்துவம் (அறிய வேண்டியதை யறிந்து) தன்வயமே = தனது புத்தியாற்ருனே, மேவலும், உற்றதெனு = பிராப்தமானுள் என்று, அறிந்து, இவ ளுக்கு = அத்தன்மையான பரமபதத்தை யடைந்த இக்கற்கடி யென்னும் இராக்ஷசிக்கு மாமலரோன் = பகவானுகிய பிரமன், கேவலம் வந்தொருவாய்மை கிளர்த்தினன் என் பது அந்வயம். (15-16)

(ஸ்ரீ - வீர-அ - கை.) ஸ்ரீ பிரஹ்மதேவர் பூர்வசரீரந்தந்து மெய்யுணர்வை யுடைய நீ பரிநீக்கப் பொருட்டுப் பூரியரைக் கொள்ளென வேகலும் தற்சொரூப நாட்டத்தே நிலைத்திருந்தாள் கற்கடியெனல்:—சீவனென.

சீவனின் முக்தியடைந்தனே சிந்தை தெளிந்தனே தொல்வடிவாய்ப்
பூவலயத்தறி வில்லவர் தீயவர் பூரியர்மெய் யிரையா
யாவிவளர்த் தறைகென் றயனேகலு மத்துவிதப் பரமே
பாவனையுற் றுருசெய் தொழிலற்ற பதத்தி லிருந்தனளால். (17)

(ப - ரை.) சீவனின் முக்தி யடைந்தனை = ஹேவற்சையே நீ ஜீவன் முக்தையாக விளங்குகின்றனை, சிந்தைதெளிந்தனை = உள்ளிருளற்றாய், தொல்வடிவாய் = பழைய ஆகிருதியுடன், பூவுலயத்து = பூவுலகின்பால், அறிவில்லவர் = மூடர், தீயவர் = துராசம்பர், மூர்க்கர், பூரியர் = தூர்த்திதியர், துர்த்தேசவாசியர், என்னுமிவர்தம், மெய் = தேகங்களை, இரையாய் = பக்ஷணமாகக் கொண்டு, ஆவிவளர்த்து உறைக என்று = உயிரையோம்பி வாழுதியென்று கூறி, அயன் எகலும் = ஸ்ரீ பிரமதேவர் செல்லுதலும், அத்துவிதப் பரமே = சச்சிதானந்த சிவத்தையே, பாவனையுற்று = தியானஞ் செய்து கொண்டு, ஒரு செய்தொழிலற்ற பதத்தில் இருந்தனள் = நிட்கிரியமாகிய பதத்திற் பாகியகல்லோல வர்ஜிதையாகி வீற்றிருந்தனள். ஆ:—அசை. (17)

(ஸ்ரீ - வீர.) மூடர் = அப்பிரஹ்ம வித்துக்கள். மூர்க்கர் = ஹிதாஹித விவேகரஹிதர். பாகிய அநாத்மவத்துக்களிற் பிரவிருத்தமாய அந்தக்கரண சம்பந்திகள் யாவையுளவோ அவைகளே பூர்வீகளாம் அவையற்றவளாகித் தொழிலிலாப்பதத் திலைப் பாறி யிருந்தாள் என்பதாம்.

(ச.) பூரியர் = துராசாரர்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சமாதியினின்றும் கிளம்பிய கற்கடியின் பாகியப் பிரவிருத்தி யுணர்த்தல்:—விகற்ப என.

விகற்பமிறந்த சமாதிநெடும் பகன்மேவினண் மீளவிடா
வுகப்பொடு நெஞ்சொடுகூடின டொல்பசி யுன்னின ணெனனுமா
றிகத்துளமட்டு மூடற்குளதான வியற்கை விடாததனற்
சகத்திலழக்கர் குலத்தொழிலான தசைப்பலி கொள்வனெனை. (18)

(ப-ரை.) விகற்பமிறந்த சமாதி = நிருவிகற்ப சமாதியில், நெடும்பகல் மேவினள் = சிரகாலம் விசிராந்தி யடைந்திருந்தனள், மீளவிடா வுகப்பொடு நெஞ்சொடு கூடினள் = மீண்டுவிடமுடியா சந்தோஷத் தோடுற்ற மனத்தோடு கூடினள், தொல்பசி யுன்னினள் = பழையபசியை யெண்ணினள், நானெனுமாறு = இகத்துளமட்டும் = அகமென்னும் அபிமானத்துடன் இவ்வுலகில் வாழுங்காறும், உடற்குளதான இயற்கைவிடாது = தேகத்திற் குண்டான சுபாவம்விட்டு நீங்காது, அதனால் = அக்காரணத்தால், சகத்தில் = இவ்வுலகத்தில், அரக்கர் குலத்தொழிலான = இராக்ஷதர் வம்சப்பழக்கக் கிரியையான, தசைப்பலி = மாம்சபக்ஷணம், கொள்வன் எனை = கொள்ளுவேனென்று சிந்தித்து (18)

(ஸ்ரீ - வீர.) வாழுதல் = பிராணதாரணஞ் செய்திருத்தல், பலி = ஹாரம் ஆகாரம், அவள் நிஷ்பிரபஞ்சமா யிருக்கின்ற அறிவுருபமான ஆத்மாவை அகண்டவிருத்தி தாரையினாலே ஆகரியித்துத் தியானித்துக் கிரிகூடம்போலச் சலனமின்றிப் பதுமாசனத்திருந்து ஆங்கே யுறைந்தனள்; பின் ஆறுமாதங் கழித்து மழைக்காலத்தில் மகாமேகத்தினுடைய நாதத்தால் மயிலானது காம உத்போதத்தை யடைவதேபோலப் போதமுற்றுச் சமாதியைவிட்டு எழுந்திருந்தனள்; எழுந்து பாகியவிருத்தியை யடைந்து பிருந்த பசியுடையவ ளானாள். இத்தேகத்திற்குத்தான் உள்ளவரைக்கும் பசிமுதலிய இயற்கைகள் நிவிருத்தியாவ தில்லையன்றே ! யாதைவிழுங்கலா மென்று சிந்தைசெய்தனள். வெகுவாகச் சிந்தைசெய்தும் தோன்றுமல் மௌனமாயிருப்ப "நீ போதித்தும் உணராத மூடன் உனக்குக் கவளமாவது உசிதம்" என்று தோன்றுமல் வாயு வாணியைக் கேட்டுக் குலத்தொழில் செய்வேன் என்று துணிந்தாள்.

(ச.) விகற்ப விறந்தசமாதி = வாகிய வீருத்தியின் பரம்பரையற்ற நின்மயமான நிர்விகற்பசமாதியை, நெஞ்சொடு கூடினள் = சித்தமசைந்து வாகிய வீருத்திமயியாய், பின் நானெனுமாறு, சத்துவம் = பிராணனுள்ள வரையில், உடற்குளதான = தேகத்திற் குரித்தான, தொழிலான = நடத்தைக்குசிதமான.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வாயுபகவான் வழங்கியதும் தான் உத்தேசித்ததும் ஒப்பப் பிரஹ்மதேவருங் கூறினரென்று சிந்தித்துக்கிராதமண்டலம் வந்தமர்தல்: —அயனென.

அயனுரை செய்தது மப்படியாதலி னந்தவுரைப் படியே
கயவருடற் பலிகொள்ளுவ னென்று களித்தி மவானயல்போய்
வயமிகுவேடுவர் மண்டலமேவி வனத்திலுறைத் திடுநா
ணயமுறு மந்திரிதன் ஞெடுமங் கொருநரபதி நண்ணினனால். (19)

(ப - ரை.) அயனுரை செய்தது மப்படியாதலில் = ஸ்ரீ பிரஹ்மதேவர் திருவருள் செய்ததும் அவ்வண்ணமே யாகவின், அந்த வுரைப்படியே = அவ்வசனம் போலவே, கயவருடற்பலி = தீயோர்தம் தேகபக்ஷணம், கொள்ளுவனென்று = செய்து கொள்ளுவேன் என்று, களித்து = மகிழ்ந்து, இமவான் அயல்போய் = ஹிமாசலத்தின் ருஷ்ய வரையிலேகி, வயமிகுவேடுவர் மண்டலமேவி = சர்வவளப்பங்களும் பொருந்திய கிராதமண்டலத்தை யடைந்து, வனத்தில் உறைந்திடுநாள் = அங்குள்ள காட்டில் வாசஞ்செய்து கொண்டிருந்தபோது, நயமுறு மந்திரிதன்ஞெடும் = சர்வதந்திர சுதந்திர மந்திரியோடுங் கூட, அங்கு = அவ்வனத்தில், ஒரு நரபதி நண்ணினன் = அத்விதீயமான மன்னவன் வந்தனன்.

(ஸ்ரீ - வீர.) அயனுரை செய்தது மூடைதீன்ன செய்யலாமென்பது. களித்து = தேடித்தின்னவிரும்பி உற்சாகமரும்பி. சைலபாதமாகிய பர்வதமூலக் குறுங்குன்றுக் காட்டிலுள்ள வேடர்நாடு. சைலசிகரத்தினின்றும் எழுந்து கிரமமாகக் கீழே இறங்கி அப்பர்வதத்தினுடைய மேல்பாகத்தை விரைவிற் கடந்து மற்றப்பருவத பூமியையுங் கடந்து ஹிமாசலத்தின் பாதபர்வதங்ஙளி விராகின்ற கிராதஜன மண்டலத்திற் புகுந்தனள் இருந்தனள்.

(ச.) என்று களித்து = என்று சிந்தித்து அக்கிரிசிருங்கத்தினின்று நீங்கி, வேடுவர் = கிராதசனம், வனத்தில் உறைந்திடுநாள் = அதிலுள்ள மகாரணியத்தோரிடத்தில் வசித்திருக்குங் காலத்தில்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) மன்னமந்திரிகள் சோதனையின் பொருட்டுலாவ இவர்களைப் பக்ஷிக்கலாமா ஆகாதாவென ஆலோசனை செய்தல்:—முச்சுடர்—மீளவு—என.

முச்சுடர்வந் துறினுங்கருகத் தகுமுற்றிருண் மூடிடவு
டச்சமுரூரவர் சோதனைசெய்தலு மங்கவள் கண்டளவே
பச்சிரையாமிவர் மெய்யறிவில் லவர்பாமர ராகியுளா
ரிச்சகமேலுயிர் வாழிலிகம்பர மெங்குமி டும்பையெனு.

மீளவுநின்றுணர் வாளயன் முன்னம் விதித்தது மிப்படியே
கோளறவந் தபயன்கவ ராதவர் கொச்சை மனத்தினரே
நீளநினைந்துணர் புந்தியுநற்குண நீர்மையு மெய்தியுளார்
மாளவதஞ்செய நெஞ்செழு மோவிவர் வன்றுயர் மேவுவரோ.

(ப - ரை.) முச்சுடர் வந்துறினும் = சோம சூரியாக்கினிகள் ஒருங்கே வந்தடைந்த போதினும், கருகத்தகும் = இருளத்தகும் படியான, மூற்றிருள் = காடாந்தகாரம், மூடிரவு = வியாபித்த பேரிரவில், அச்சமுரூர் அவர் = சிறிதும்பயமற்ற அவர், சோதனை செய்தலும் = பரிசோதனை செய்துகொண்டு வருதலும், அங்கவள் கண்டுளவே = அவ்விடத்தில் லக்கற்கடி கண்டதும், பச்சிரையாயிவர் = பச்சியமாயிவர், மெய்யறிவில்லவர் = உண்மை யுணர்வற்றவர் இவர், பாமரராகியுளார் = அத்தியந்தம் மூடராகியிருக்கின்றார், இச்சகமே லுயிர்வாழில் = இவ்வுலகத்தின் கண் வாழ்வார்களேயானால், இகம்பரமெங்கும் இடும்பையெஞ = இம்மை மறுமை முழுதுமே துயரமயமாகுமென்று ஆலோசனை செய்தனள். (20)

மீளவு நின்றுணர்வாள் = மீண்டுஞ் சாவதானமாக ஆலோசிக்கின்றாள், அயன்முன்னம் விதித்ததும் இப்படியே = ஸ்ரீ பிரஹ்மதேவர் முன்பு விதானஞ் செய்ததும் இவ்வண்ணமேயாம், கோளறவந்த பயன் கவராதவர் = சுற்றமற்றுத் தானேவந்த பயனைக் கிரகியாதவர், கொச்சை மனத்தினரே = மங்களமில்லாத மனத்தவரே யாவர், ஞானநீர்மையும் = ஆழ்ந்தாலோசித் துணரும் மகாசயமும், குணநீர்மையும் = கல்யாணகுணங்களும், எய்தியுளார் = அடைந்திருப் பவர்களேயாயின், மாளவதஞ்செய நெஞ்செழுமோ = அத்தகையர் உயிர்துறக்குமாறு கொல்வதற்கு மனமுதயமாமோ, இவர் வன்றுயர் மேவுவரோ = இவர்வலிய துன்பத்தை யடைவரோ.

(ஸ்ரீ - வீர.) முற்றிருண் மூடிரவு = காலராத்திரி, மெய்யறிவில்லவர் = அஞான மஞ்ஞர், ஆன்மாவாகக் கவரப்பெற்ற தேகம் அவசியங் காப்பாற்றத் தக்கதா யிருத்தலின், அதனையும், எங்கும் எப்போழ்தும் உபத்திரவத்தோடு கூடியதாகக் காப்பாற்றுவதற்கு முடியாத காரியமா யிருத்தலின் தேகம் பாரம்போலும் துக்ககாரணமே யாகுமென்க. இடும்பை = புருடார்த்தருபமான சுகங்கிடையாது துயருறல். ஆதிசர்க்கத்தில் அயன் விதித்தது " ஹிம்சனசீலர்க் கிவ்வழித்மன ரின்னுணவாம் " என்பது, கொச்சை மனத்தினர் = அயோக்கியரே, இவர் ஒருகாலும் குணயுக்தராய் மகாசயராயு மிருந்து விடலாகாது, இருப்பராயின் என்ஞல் போக்தவ்யரே யாவர். அக்கால் அக்ருதாத ஜன மண்டலத்தில் கரத்திலுலே கவரத்தக்கதான பிண்டம்போலிருக்குங் காரிருளிரவானது உண்டாகியக் கற்கடியின் ரோழிபோலும் மற்றொரு ராக்ஷியாக இருந்தது. காடாஞ் ஞானம்போலுங் கவின்வாய்ந்தும் மூலாஞ்ஞானம் போலும் முற்றுங் கனமுற்று மிருந்த பேரிருண்மயமாய பயங்கர அவ்விரவின் கண்ணே கற்கடி சஞ்சரித்துக்கொண்டிருக்கும்போது அந்தக்கிராதஜன மண்டலத்தையாளும் பூபாலன் மந்திரியோடும் வந்தான். மிகவும் தீரவடிவமாயிரா நின்ற அந்தவிக்கிரமன் என்னும் மன்னவன் ஜனங்கள் யாவரும் நித்திரை செய்யும்போது ககரத்தைத் தாண்டிக் கள்வர்களைக் கொல்வதின் பொருட்டாக விடமமான அக்காட்டை யடைந்தனன். அக்காட்டிற் கற்கடியானவள் தையரிய சாலிகளாயும், அஸ்திரங்களே ஹஸ்தத்திற் றரித்தவர்களாயும், கிராமத்துக்கு வெளியிலிருக்கும் கிராம தேவதையாகிய வேதாளத்தைப் பார்க்கவேண்டுமென்னும் முயற்சியோடும் சஞ்சரித்துக்கொண்டு வருகிற அந்தராஜ மந்திரிகளைக் கண்டாள்; பின் அக்கற்கடி நிந்திப்பதாவது எனக்கு ஆகாரங்கிடைத்தது, அந்தோ ! இவ்விருவரும் மகாமூடர் ஆத்மதத்துவத்தை யறியாதவர் இவருடைய தேகமிங்கே யிருப்பது பாரமாம்; மூடர் இகலோகத்திலும் பரலோகத்திலும் ஆன்மாவை யறியாம லிருப்பதால் அழிவின் பொருட்டும் துயரத்தின் பொருட்டும் ஜீவிப்பவராவர், முயற்சியினுலே கொல்லத்தக்கவரிவர், அனர்த்தத்தை வைத்திருத்தல் தகாது. தன்னுடைய யதார்த்த சொரூபத்தை யறியாத

மூட்ருக்கு ம்ரணமே ஜீவிப்பதைக் காட்டிலும் உயர்ந்ததாம்; எவ்வாறென்ரூல், மரண மடைந்திடின் பாவமூண்டாதற்குக் காரணமில்லாமையிஞலே உயர்வானது உளதாம். சிருஷ்டியின் ஆதியில் பதுமத்து உதித்தபகவான் ஆத்மாவை யறியாதமூடர் இம்சை செய்யும் பிராணிகளுக்குப் போஜனம் ஆகுகவென நியமஞ்செய்துளார். ஆகையால் இன்று இவ்விருவரும் என்ஞலேயே புசிக்கத் தக்கவராவர். இப்போதே புசிப்பேன் நிர்த்தோஷமாக அடைவுற்ற பொருளே உபேக்ஷிப்பவர்கள் அமங்கல மூடையவர்களே. ஒருகால் இவ்விருவரும் ஆன்மஞான வடிவகுணத்தோடு கூடியவராயும் பெரிய ஹிருதய மூடையவராயும் இருக்கவுங்கூடும், அவ்வாறிருக்கின் அத்தகைய நரரை விநாசஞ்செய் வதில் இயற்கையாகவே எனக்குப் பிரியமில்லை. ஆகையால் இவ்விருவரையும் யான்பரீ க்ஷிப்பேனுக. மேற்கூறிய குணங்களோடு கூடியே யிருப்பார்களாஞல் அக்காலிவர்களே யான் பக்ஷியேன் குணமூடையவர்கள் எங்கும் என்ஞல் ஹிம்சிக்கப் படமாட்டார்கள்.

(ச.) இரவூடு = கிருஷ்ண பக்ஷத் தர்த்தராத்திரியில், அச்சமுறுதவர் = பயஜயத் துக் கிருளிரவீற் கட்கந்தரித்துத் தனியே சஞ்சரிக்கும் வீரபுருடர், அவள் = தைரிய வதியான அக்கற்கடி, மெய்யறிவில்லவர் = அநான்மஞ்ஞர், பாமரர் = மூடர், இடும் பையெனு, நாசநிமித்தமும் துக்கநிமித்தமும் ஆமென்றெண்ணி.

முன்னம் = ஆதிசர்க்கத்தில், விதித்ததும் = நியமஞ்செய்ததும், (இம்சைப் பிரா ணிகள் ஆத்மஞானமில்லாத மூடர்களேப் பக்ஷிக்கட்டும் என்பது நியமம்) ஆதலால் இவர் கள் அவசியம் புசிக்கத்தக்கவர்களே. கோளற + மனத்தினரே = நிர்த்தோடமாய்க கிடைத்தபொருளே யுபேக்ஷிப்பவர் அயோக்கியரே யாவர், நெஞ்செழுமோ = என்மன துக்குச் சுபாவமாக ருசியாது, அவர்வன்றுயர் மேவுவரோ = அக்குணசாலிகள் ஒரு போதும் இம்சிக்கப்படார். (குணம் = ஆன்மஞான வடிவம்,)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கற்கடி பெரியோரைத்தானே புகழ்தலும் அடைந்தார் அடையார் பயன்களேயுரைத்தலும் வருணிக்கப்படுதல்:=வஞ்ச—அரக்கியென.

(வெஞ்சுடர்) வஞ்சமினீள் புகழ்வாணுள் வகுப்பரிய சுகமமர்ந்தோர் வணங்கலாவா
ரெஞ்சலிலா வாவியினு மினியவராதலி னவருக்கிடரே வந்தா
லஞ்சலென வுயிர்கொடுத்து மளித்திட வேண்டினராவ ரன்பாளுர்க்குத்
தஞ்சமுறக் காலனையுமுற வாக்குந்தன் மையினர்தக்க சான்ரோர்.

அரக்கியெனு மியாமுதலா யுயர்ந்தோரை யாதரிக்கு மன்புகண்டா
ரிரக்கமுறப் பொன்போல யாவரேனும் பாதாரிக லோகத்திற்
புரக்கவரு நிறைமதிபோற் புணர்ந்தோ ரைக்குளிர்விப் பதர்புணராதோரே
பரக்கழியா விறந்தோராம் புணர்ந்தோரே முத்திமுதற் பயன்பெற்ரோரே.

(ப - மை.) நீள்புகழ் வாணுள் = விசாலமான கீர்த்தியையும் நீண்ட ஆயுளையும், வஞ்சமில் வகுப்பரிய சுகம் = ஏற்றத்தாழ்வால் வஞ்சிக்கப் பெறுத அளவற்ற ஆனந்தத் தையும், அமர்ந்தோர் = அடைய அவாவினேரால், தக்கசான்ரோர் வணங்கலாவர் = குணன்விதர் சர்வாபீஷ்ட தானத்தானே பூஜனீயராவர், எஞ்சல் இலா ஆயினும் இனிய வர் = கெடாத ஜீவிதத்தினும் இன்பம் இயற்றுபவர் சாதுக்கள், ஆதலின் அவருக்கி டரே வந்தால் = ஆகலின் அச்சாதுக்கட் கேதாவது துயரம் நேரிட்டால், அஞ்சல் என = பயப்படாதீர்கள் என்று, உயிர்கொடுத்தும் அளித்திட வேண்டினராவர் =

ஞான வாசிட்டம்

ஜீவிததானத்தானும் குணமுடையவர் பரிபாலிக்கப் பெறுவர், அன்பாளர்க்கு = குண வான்களின் சங்கமென்னும் ஔடதத்தை யடைந்தவர்க்கு, தஞ்சமுறக் காலனையும் உற வாக்கும் = அடைக்கலம் அடையும்படியாக மிருத்தியுவையும் மித்திரஞ் செய்விக்கும், தன்மையினர் = பெருமை வாய்ந்தவர், அரக்கியெனும் யாமுதலாய் உயிர்த்தோரையாத ரிக்கும் அன்புகண்டால் = இராக்ஷியா யிருக்கும் எம்போன்றவரும் குணசாலிகளைக் காப்பாற்றும் நேயத்தை யுற்றுநோக்கின், இரக்கமுற = இரக்கத்தோடுகூட, பொன் போல = அமலமான ஹாரம்போல, யாவரே விரும்பாதார் = யாவர்தாம் இருதயத்தின் மாட் டன்புரூர், இகலோகத்தில் = இவ்வுலகில், புரக்கவரும் = இரக்ஷிக்க வாராநின்ற, நிறைமதிபோல் = பூர்ணசந்திரன்போல, புணர்ந்தோரைக் குளிர்விப்பர் = சேர்ந்தோ ரைச் சீதளப்படுத்துவர், புணராதோரே = குணவான்களைத் திரஸ்காரம் புரிந்தவரே, பரக்கழியா இறந்தோராம் = பரம்பொரு ளடைவதை யிழந்து மிருத்யுற்றவராவர், புணர்ந்தோரே முத்திமுதற் பயன் பெற்றோரே = குணவான்களை யினிதாக அடைந்த வரோ சுவர்க்காதி பலன்களை யடைந்துய்ந்தவரே யாவர். (23)

(ஸ்ரீ-வீர.) அமானித்வாதி குணவான்களாகிய பிரஹ்ம வித்துக்களைத் திரஸ்கரித் தல் குணிதிரஸ்காரமாம், அதுவே மிருத்யு—ஜீவன பலநாசகமாதலின் மரணமாம்; குணி களை சந்தோஷப்படும் படியாக நன்றுகச் சேவித்தடைதல் குணிசம் சிரயமாம் அதுவே ஜீவிதம்—சகலபுருடார்த்த மூலமாதலின் வாழ்வாம். குணிகளின் பேராசிரயம் பெற்று வாழ்பவனே சுவர்க்காதி பயன்களை யடைவன். வஞ்சனை செய்யப்படாத பேராகாந்தத் தையும், கீர்த்தியையும், ஆயுளையும், மிகவும் விரும்பப்பட்டவன் குணங்களோடு கூடிய வர்களை விரும்பப்பட்ட யாவற்றையுங் கொடுத்துப் பூஜிக்க வேண்டும். ஆத்மாவானது அவிநாசியா யிருத்தலால் எனதுதேகம் நாசத்தையடையினும் குணத்தோடு கூடிய வரை யான்புசிக்கவே மாட்டேன். சாதுக்கள் ஜீவிதத்தைப் பார்க்கிலும் சித்தங்களைச் சுகப்படுத்துகின்றார்கள். பிராணனைக்கொடுத்தேனும் குணமுள்ளசாதுக்களை இரக்ஷிக்க வேண்டும் குணவான்கள் சங்கமென்னும் வசீகரண ஔஷதத்தினாலே மிருத்தியுவும் மித்திரத்தன்மையை யடையும்; இராக்ஷியா யிருக்கப்பட்ட யானும் குணசாலிகளை இர க்ஷிப்பேனென்றால் அக்குணசாலிகளை அன்னியன் செய்வன்றன் ஹிருதயத்தில் நிர்மல மூத்தாரம்போல இரக்ஷிக்கமாட்டான் நிவ்வுலகத்திற் சிறந்த குணங்களோடு கூடியவர் களாக யாவர்கள் சஞ்சரிக்கின்றார்களோ அத்தராதலி சந்திரர்கள் சங்கத்தினாலே அத் தியந்தம் அன்பர்களைச் சீதளப்படுத்துகின்றார்கள். குணவான்களின் திரஸ்காரமே மரண மாம் குணவான்களைச் சேர்தலே ஜீவிதமாம், குணவான்களைச் சேர்ந்து ஜீவித்தினாலே சொர்க்க அபவர்க்காதி பலமுண்டாம.

(ச.) சுகப்பரிய சுகம் = அகிர்த்திரிம சுகம், அமர்ந்தோர் = அடைய இச்சைபொருந் தினவர்களால், வணங்கத் தக்கவராவர் (ஆகலின் யான் இறந்தாலும் இறப்பனே யல்லா மல் கொல்லமாட்டேன்) எஞ்சலிலா ஆயினும் இனியவர் = சுகந்தருபவர், உயிர்கொ டுத்தும் = சர்வாபிமத தானத்தாலும். உயர்ந்தோரை = குணசாலிகளை, ஆதரிக்கும் = இரக்ஷிக்கும், பொன்போல = ஹாரம்போல, யாவரே = அந்நியர் யார்தான், பரக்கழி யாய் = குணதிரஸ்காரராய்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மன்ன மந்திரிகளைப் பரீக்ஷிக்க முயலுதல்:—ஆதலி—மீட்டு—என.

ஆதலினுலிவர் தம்மை யறிஞரோ வறிவிலரோ யார்கொலென்னச்
சோதனையாம் வினுவுரைகள் சொல்வோ மென்றுரு மேறுந்துணுக் கென்றஞ்ச
மீதுறநின் றுர்ப்பரித்து வெவ்விடிக்குப் பின்னுலிவீழ்க்குங் கார்போ
லோதரிய கொடியவன விசும்புக்கு மதியிரவி யொப்பீரென்னு. (24)
மீட்டுரைப்பாண் மாயையெனும் வெவ்விருட் பாறையின் கீழுமிளிர்ந்துமாயு
மீட்டமுறு புழுப்போல் வீரெனக்கிரையா யிக்கணத்தே யிறக்கவந்தீர்
சேட்டமுளார் போலிருந்தீர் தீயவர்போன்றீ ரெவர்நீர் செப்புமென்னக்
கேட்டளவே கொலையரக்கி கேளென்னத் திறல்வேந்தன் கிளத்தலுற்றான். (25)

(ப - ரை.) ஆதலினுல் = ஆகையால், இவர்தம்மை = இவ்விருவரையும், அறிஞரோ அறிவிலரோ யார்கொல் என்ன = விவேகியரோ அவிவேகியரோ யாவர்தாமிவர் என்றறியும் வண்ணம், சோதனையாம் = பரீக்ஷை செய்யும்படியான, வினுவுரைகள் = பிரசினவாக்கியங்களே, சொல்வோமென்று = கற்கடி பிரயோகிப்போ மென்றெண்ணி, உருமேறுந் துணுக்கென்றஞ்ச = பெரிய இடியும் திடுக்கென்று பயப்படும் படியாக, மீதுற நின்றுர்ப்பரித்து = கம்பீரமாக விநாதஞ்செய்து வெவ்விடிக்குப் பின்னுலி வீழ்க்குங் கார்போல் = கர்ஜனைசெய்த பின்னர் கரகத்தை வீழ்த்துங் கார்மேகம்போல, ஓதரிய கொடியவன விசும்புக்கு மதியிரவி யொப்பீர் என்னு = சொல்லுதற்கு முடியாத கோராடவி வியோமபதவிச் சசி பாஸ்கரர்கள் போன்றவர்களே யென்று அதிகோர வசனத்தால் விளித்தாள் மீட்டுரைப்பாள் = மீண்டும் புகல்வாள், மாயையெனும் வெவ்விருள் பாறையின் கீழு மிளிர்ந்துமாயும் ஈட்டமுறு புழுப்போல்வீர் = மகாமாயா தமப்பிடரிலேக்கோடரத்தில் தோற்றிமாயும் கூட்டமாய கீடமொப்பீர்! எனக்கிரையாய் = என்றனக்குப் பக்ஷணமாக, இக்கணத்தே இறக்கவந்தீர் = இந்நிமிடத்தே மரணமுறவந்தீர், சேட்டமுளார் போலிருந்தீர் = மகாமதி மான்கள்போலவுங் காணப்படுகின்றீர், தீயவர் போன்றீர் = துர்ப்புத்தி யுடையவர்போலவுங் காணப்பெறுகின்றீர், எவர்நீர் செப்பும் என்ன = யாவர்நீவிர் சொல்வீர்களாக வென்று, கேட்டளவே = கற்கடிபு வினவிய மாத்திரத்தில், கொலையரக்கி கேளென்னத் திறல்வேந்தன் கிளத்தலுற்றான் = இம்மை செய்யு மியற்கையாய்ந்த இராக்ஷசியே! உத்தரங் கூறக்கேட்பாயாக வென்று பராக்கிரமம் பொருந்திய அரசன் கூறத்தொடங்கினன்.

(ஸ்ரீ - வீர.) யார்கொல் = எத்துணைமாத்திர முணர்வுடையவர்? கற்கடி = அரக்கர்குல கானனத்தின் மஞ்சரியானவள். கோரவசனம் = உங்காரத்துடன் கடோரவசனம். கரகம் = ஆலங்கட்டி, அதுவேயாய அசனி. கர்ஜனையின் அநந்தர முண்டாயயாதொரு கரக அசனியின் சப்தமுளதோ அதுபோலத் தோற்றும் வசனம். கோர அடவியே ஆகாயமார்க்கம் அதன்சசிபாஸ்கரர். மகாமாயையேயாய அந்தகாரத்திருக்கும் பீடவடிவ சிலையின் சித்திரத்தி லுழலும் புழுக்களே! எனக்கிரையாய் = என்கவளத் தாணமாய்; ஆகையால் இவ்விருவரையும் எதாவது வினுவிளையாட்டால் யான் பரீக்ஷிப்பேன், இத்தாமரை யிதழ்போன்ற நேத்திரமுடைய இவர்கள் எத்துணைமாத்திர ஞானமுடையவர்க ளென்பதையும் யான் பரீக்ஷிப்பேன். ஆதியில் குணமுள்ளவனு குணமில்லவனு குணலேசத்தோடுங் கூடியுள்ளவனு என்பதை விசாரித்துப் பின்னர் தன்னைப் பார்க்கிலும் அதிகதர குணமுள்ளவனுவென விசாரித்துக் குணமில்லாதவனு யிருப்பின் அதன் பின்னர் நன்றுகச் சாஸ்திரத்தில் ஓதப்பெற்ற திருஷ்டியாலும் உபபத்தி வசத்தாலும்

யுக்திக்குப் பொருத்தமானபடி தண்டிக்கயோக்கியனை தண்டனைசெய்க; தன்னைப்பார்க்கிலும் குணங்களால் அதிசய மூற்றவனுயினை தண்டனை செய்யாதொழிக வென்னும் நியமத்தை யனுசரித்துச் சோதனைசெய்ய மூயன்றதார். பின் னரக்கர்குலமாகிய ஆரண்யத்தில் போதசுகந்த மகரந்த மதுரத்தன்மையாற் பூங்கொத்துப்போல்வீளங்கும் அந்த ராக்ஷசியானவள் அவ்விருளிற்றூனே மேகம்போலக் கம்பீரமாய்க் கர்ச்சனை செய்தனள். கர்ச்சித்த பின்னர் உண்டாகின்ற ஆலங்கட்டி இடிச்சப்தம்போலத் தன்கர்ச்சனையின் ஈற்றில் சப்தத்தினுலே ஹுங்கார பீஷணத் தன்மையை யுடையதேனும் அர்த்தத்தினுலே நிஷ்டூரமில்லாததான இவ்வசனத்தைக் கூறத்தொடங்கினுள்; போ ! போ !! அதிகோரமான அடவிவடிவ வியோம பதவிக்குப் பிரகாசத் தன்மையானே சந்திர சூரியர்கள் போன்றும், மகாமாயாதமவடிவ சர்வபூத ஆதாரபீட பூதமான பாறையின் கீழிருக்குங் கோடரத்துள்ள கீடம்போன்றும் உள்ளீர் ! என்றதனுனே தான் ஆன்மாவையறிந்திருக்குந் தன்மையையும் குறிப்பித்தனள். நீவிர்யார் புத்திக்குச் சாபல்யமான ஆன்மஞானத்தை யடைந்து பூஜ்யபுத்தி யுடையீரா, அஃதில்லாமல் புத்திக்குவியர்த்தத் தன்மையைச் சம்பாதித்துத் துர்ப்புத்தியுடையீரா, நீர் இங்கு என்வந்தீர் எனக்குணவாகுந் தன்மையை யடைந்தீர், இதோகணத்தில் மரணமா யுபத்திரவப்படத் தக்கவராயினீர் எனக்கேட்ட அரசன் கூறத்தொடங்கினுன்.

(ச.) சோதனையாம் = எப்பூமியில் வர்த்தமானர்கள் இவர்கள் என்னும் பரீக்ஷைக்கேதுவாகிய. கொடியவனவிசும்புக்கு = கோராடவி யென்னும் வியோமத்துக்கு; என்ஞ = என்றுசொல்லி.

மாயை = மகாமாயை, என்னும், வெவ்விருட் பாறையின் கீழே = அஞ்ஞானஸ்தானத்தின் கோடரத்தில், சேட்டமுளார் = மகாபுத்திமான்கள், தீயவர் = துற்புத்தியுடையவர், எவர் நீர் = என்பது வினு. (25)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கற்கடியினுடைய பயங்கரமான சப்தத்தினுலும் பயத்தையடையாத மன்னவன் கற்கடியைக் கண்டு வருந்த வேண்டாமெனல்,—எவ்வுழியென.

எவ்வுழி நின்றனீ யிங்கிஃசத்த வெலாமிள வண்டினிரைச் சல்போலச்
செவ்விது கேட்டன மென்னவரக்கியு நன்றென்றதி ரேசிரித்தலோடும்
வெவ்விய பல்லொளியாலே வெளியாகக் கண்டிறையும் வெருவலின்றி
மைவரைபோல் வாய்திறந்து வாளாநீ வருந்தலெனு மன்னன்சொல்வான்.

(ப - ரை.) போ ! போ !! பூதமே ! எவ்வுழி நின்றனை = எங்கே நிற்கின்றனை, நீயிங் கிசைத்தவெலாம் = நீ இவ்விடத்தி லிப்போது கூறியவையாவும், இளவண்டின் = வண்டுக்குஞ்சின், இரைச்சல்போல = அற்பசப்தம்போல, செவ்விது கேட்டனம் = நன்குசெவி கொண்டோம், என்ன = என்றுபயமின்றி யரசன்கூற, அரக்கியும் = கற்கடியும், நன்றென்றதிரே சிரித்தலோடும் = கூறியது இரம்மியமாக இருக்கின்றதென்று சிந்தித்து எதிரில் கர்ச்சித்துச் சிரித்தலோடும், வெவ்விய = கொரோமான, பல்லொளியாலே = தந்தகாந்தியினுலே, வெளியாகக் கண்டிறையும் = சப்தமுண்டான இடத்தில் அவள் ஆகிருதியை இறைவன் நோக்கிய போதினும், வெருவல் இன்றி = ஒரு சிறிது மஞ்சாதவனுகி, மைவரைபோல் வாய்திறந்து = அஞ்சனசலம் போல வாய் திறந்து, வாளாநீ = வீணுகநீ, வருந்தல் எனு = வருந்தவேண்டா மென்று, மன்னன் சொல்வான் = அரசன் சொல்லுகின்றன்.

(ஸ்ரீ - வீர.) பெண்வண்டுக் குஞ்சின் அற்ப ஓசைக்குச் சமானமாம் நினது கூச்சல். சப்தத்தோடு கூடிய பிரசண்டமான சிரிப்பின் பிரபையிருதியால் தூரத்தில் அவள் ஆகிருதி தோற்றியதெனக் கொள்க. சிரித்தலினாலே தந்தப்பிரபை பரவுதலின் அங்ஙனமாதல் கூடுமன்றே. கர்ச்சித்தசப்தம் பிரளய இடிக்கொப்பாகத் தெரிவித்தபோதினும் கலங்காது கண்டனர். போ! போ!! = சம்போதனம். அற்பபூதமே, நீயார் சொல், நீ யெங்கே நிற்கின்றாய், நினது அற்பதேகத்தைக் காட்டுவாயாக, இளவண்டின் இரைச் சல்போன்ற நினது கூச்சலுக்கு யார் அச்ச முறுவார், ஒருவருமஞ்சார், ஹே கல்லவிரதத் தையுடைய பூதமே உனக்கு யாது வேண்டும், நீ ஆன்மஞான மடைந்திருப்பதை யானறிந்து கொண்டேன், பயங்கர சப்தங்களினாலே யெங்களைப் பயப்படுத்துகின்றாயா? அல்லது நீதான் பயப்படுகிறாயா? எதிரேவா பார்ப்போம், என்று அரசன் அறைந்த போது இவன் இரம்மியமாகக் கூறினனென்று நன்கு சிந்தித்துக் கற்கடியானவள் அவ்விருவருக்கும் விளக்கமாய்த்தான் தெரிவதற்காகவும் அவர்களுக்கு அதைரியமுண்டாக்குவதற்காகவும் பெருங்கர்ச்சனை செய்து பெரிது நகைத்தனள். அதன்பின் அவளை அவர்கள் கண்டார்கள். அவள்செய்த சப்தமானது எட்டுத்திக்குகளையும் கிடுகிடாய்த்து விட்டது, அட்டகாசஞ் செய்ததினாலே தோற்றிய தந்தங்களின் காந்தி மிகுதியாற் பெரிய ஆகிருதி யுடையவளாகக் காணப்பட்டனள். அப்போதவள் பிரளய காலத்து மேகத்திலிருந்து வீழாநின்ற இடியினுடைய உறைதலாலே பிடிபடுத்தலாலே பொடிபண்ணப்பட்ட பருவதத்தின் தாழ்வரைபோலவும் தன்னுடைய கண்கள் என்னும் மின்னற்களாலேயும், சங்குவளையல் வடிவக்கொக்குகளாலேயும், ஆகாயத்தை விளக்கிக்கொண்டு மிருந்தனன். அவளைக் கண்டபின் அம்மகா வீரர்களிருவரும் சிறிதும் கலங்காதவர்களாகி நின்றவண்ணமே யிருந்தார்கள், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பகுத்துணர்ந்த விவேகிகளினுடைய சித்தத்தை மிக மயக்குதற்குரிய வஸ்து ஒன்றுமில்லை யன்றே.

(ச.) என்ன = இத்தொனிக் கெவன் பயப்படுவன் என்று கூற, நன்றென்று = இரம்மியஞ் சொல்லப்பட்ட தென்று, சிரித்தலோடும் = அவர்கட்குத் தன்வடிவு பிரகாசித்தற்கும் அதைரியமாதற்குங் கர்ச்சித்து அட்டகாசஞ் செய்யவும், வெளியாக அக்கற்கடியைக் கண்டு. (26)

(ஸ்ரீ-வீர - அ-கை.) நீ பெரியவளாக இருப்பின் அற்பகாரியத்தில் இவ்வளவு படபடப்பு வேண்டியதில்லை யென்பதாகப் பரமசாந்தத் தோடும் சாமத்தாற் சமாதானப்படுத்த வேட்கையுற்ற மந்திரிகூறல்:—எய்தாவென.

எய்தாநின் றுளபயனுக் கியற்றுதா நில்லையா மென்றபோது
நொய்தான கருமத்தி னெய்தாரே விரைந்திடுவர் நொய்மைதோன்ற
வைதானபுந்தியினு லாறுதலா லறிவுடையோ ரனைத்துஞ் செய்வர்
வெய்தாவுன் போல்வாரைக் கொதிகென வீசிடுமெங்கள் வீரக்காற்று.

(ப - ரை.) எய்தாகின்றுள பயனுக்கு = அடையவேண்டிய பிரயோஜனத்திற்கு, இயற்றுதாரில்லையாம் = முயற்சி செய்யாதவரிலராவர், என்றபோதும் = என்றபோதினும், நொய்தான கருமத்தில் = அற்பமான காரியத்தில், நொய்தாரே = அற்பமதியினர், நொய்மை தோன்ற விரைந்திடுவர் = தமது அற்பத்தகைமை வெளிப்படும் படியாக ஆத்திரப்பட்டு முயல்வர், ஐதானபுந்தியினால் = பொறுமையோடு கூடியழகாகிய மதியினால், ஆறுதலால் = பரமசாந்தத்துடன், அறிவுடையோர் = விவேகமிருத்தவர், அனைத்தும் செய்வர் = யாவற்றையும் செய்து முடிப்பர்; வெய்தாவுன்போல் வாரை =

கொடியாராகிய வுன்போன்றவரை, கொதுகென வீசிடும் எங்கள் வீரக்காற்று = எங்களது தைரியவாயுவானது மசகத்துக்குச் சமானமாகத் தூச எறிந்துவிடும்.

(ஸ்ரீ - வீர.) நீனது கோபாதி யாடம்பரத்தை யொழித்துச் சாந்தமடைதி யென்பார் நொய்மை யென்னூர். அனேத்தும் = சாத்திய யோக்கியமான யாவற்றையும்; என்ற தால் வெற்றி யெங்கள்பாலதேயென்றதாம். தீரதையேயாகிய சக்கிரவாதத்தால் விசேடமாகத்திருண பர்ணமொப்பத் துட்டராகிய வுன்போல்வார் ஊற்றப்படுவார். ஹே மகா இராக்ஷசியே! நினக்கு நீ விரும்பியது சித்திப்பதில் நிரதிசய சொரூபமான இக்கோபம் யாதின்பொருட்டோ! வாக்குமாத்திரத்தானே லபிக்கும்படியான ஆகாரலாபவடிவ காரியத்தில் குரோத சாகசாதிக்கு யாதொரு பிரயோஜனத்தையுங் காணேமே, நீசின னவளாக இருப்பின் நாங்கள் பயப்படவும் மாட்டோமே, அற்பர்கள் அற்பமான காரியத்திலும் தங்கள் அற்பத்தன்மை தோன்ற அதிசம்பிரமத்தோடும் ஆரம்பிக்கின்றனர். என்று மந்திரிகூறிச் சாமத்தால் மீண்டும் முதற்கற்பத்தையே பின்பற்றிக் கூறுகின்றார் ஜதான, கோபத்தோடு கூடிய இந்த ஆடம்பரத்தை விடுதி, இந்த ஆடம்பரமானது நினக்கு அழகாக இல்லை, தங்களுடைய காரியத்தைச் சாதிக்கமுயலும் மதிமான்கள் விஷயங்களிற் சாந்தமாக முயலுகின்றார்கள்; அதாவது மதிமான்கள் சாமத்தாற் சாதிக்கக்கூடிய பொருளில் தண்டத்தை யனுசரிக்க மாட்டார்கள் என்பதாம். மீண்டும் இரண்டாவது கற்பத்தைப் பின்பற்றி நினது தண்டமுயற்சி வீணுகுமென மந்திரிகூறுகின்றார். வெய்தா, ஹே அபலே! கொதுகுபோன்ற நின்னையொத்த ஆயிரக்கணக்கானவர்கள், எங்களுடைய தீரத்தன்மையாகிய காற்றிலுலே தூரும்பு சருகுகள் போலுப் பறந்தோடிப் போவார்கள். பெரியவள் முதற்கற்பம், சின்னவள் இரண்டாவது கற்பம். ஜதானவென்றது முதலதை யனுசரித்தது, வெய்தா வென்றது இரண்டாவதை யனுசரித்தது என்பது விவேகம்.

(ச.) எய்தாநின்றுள பயனுக்கு = சுவப்பிரயோஜன சித்திக்கு, இயற்றுதார் = ஆரம்பிகாதவர். நொய்மைதோன்ற = நிஷ்பலத்தைத் தெரிவிக்க, யோரம்பமிருதியை விடு நினக்கு இவ்வாரம்பந்தகாது, ஜதான = சுவார்த்தசாதகமாகிய, அனேத்துஞ்செய்வர் = விஷயத்திற் பிரவிர்த்திப்பர், வீரக்காற்று = தைரிய பிரசண்டம் = வாயுக்களின் சமூகம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆயின் எங்ஙனம் தான் விரும்பிய பொருள் சித்திக்குமெனின்? மந்திரிகூறல்:—ஆதலாலென.

> ஆதலால் விரைவை யொழியுன் கருத்தையுரை யெங்களருகு வந்தோர்
> காதலாலிரந்த பொருள் கனவிலுங்கு வமென்று கழறலோடும்
> போதமுங் கல்வியும்வலியும் பொறையு மளவிலரென்றே புந்திசெய்தாள்
> மேதகமா மவருரையை மிகவியந்தா ளிழிவிலாமெய்ம்மை கண்டாள்(28)

(ப - ரை.) ஆதலால் விரைவையொழி = ஆகையால் உனது அவசர ஆடம்பரத்தை விடுதி, உன்கருத்தையுரை = உன்னுடைய அபிப்பிராயத்தைக் கூறுதி, எங்கள் அருகு வந்தோர் = எங்களுடைய சமீபத்தில் யாசகார்த்தம் வந்தவர்கள், காதலால் = இச்சையால், இரந்தபொருள் = யாசித்தவத்துவை, கனவிலும் = சொப்பனத்தின் கண்ணும், நல்குவம் = கொடுப்போம், என்று கழறலோடும் = என்றிவ் வண்ணம் கூறியபோது, போதமும் கல்வியும் வலியும் பொறையும் அளவில்ர் என்றேபுந்தி செய்தாள் = ஞானமும் சாஸ்திர பாண்டித்தியமும், சரீரசாமர்த்தியமும், மனத்தி ரபசாந்தியும் அபரிமித

மாக வுடைத்தா யிருக்கின்றார்கள் என்றறிந்து கொண்டாள், மேதகமாம் அவர் உரை யை = மகாமேன்மைதங்கிய அவர்தம் வாக்கியங்களே, மிகவியந்தாள் = அதியற்புத மெனக் கேட்டாச்சரியப் பட்டாள், அழிவிலா மெய்ம்மை கண்டாள் = கெடாத உண் மையைத் தரிசித்தாள்.

(ஸ்ரீ - வீர) விவகார அநுகூலமாகிய ஊகங்களால் விவேகிகள் தற்பொருள் சாதிப்பராதலின் நீ விரைதல் நலனன்றும். ஞான மூடமையானே இவர்மனம் சத்துவமாயும் சகிப்புற்றதாயும் உளதெனத் துணிந்தாள். கோபாதிகளே வாயி லாய் வைப்பதை விடுத்துச் சமத்தோடுந் தெளிவோடுங் கூடியபுத்தியினலும் யுக்தியினலும் அறிஞர்கள் விவகரிப்பதேபோலத் தக்கபடி அறிவுடையோர் விவகரித்துத் தங்கா ரியத்தை மூடிப்பர். காரிய சித்தியின் சம்சயமிருப்பினும் அநாதி நியதிசித்தமான சாம உபாயத்தை விடக்கூடா தென்றல், அது நிச்சயமாகி யிருந்தவழி யென்ன சொல்ல வேண்டியதுளது, தானுமே விவகாரத்தினலே காரியம் சித்திக்குக அலது சித்தியா தொழிக, மகாநியதி யிவ்வாறே யிருக்கும். மயங்கியவனுக்குத் தக்கதா யிராகின்ற கோ பத்திற்கு உன்பாலிடமேது கூறுதி, ஆயின் எங்ஙனம் சாமத்தாற் சித்திக்குமெனின் ? உன்கருத்தையுரை நினது அபிப்பிராய மென்ன கூறுதி, விரும்பியதினைக்கு என்னவேண் டும் கூறுதி, யாசித்தவன் கனவினும் எங்கள் முன்பு விரும்பிய பொருளே யடையாமற் போனதே கிடையாது. இவ்வண்ணம் அமைச்சன் அறைந்ததைக் கேட்ட ராஜரிஷி சிந் திப்பதாவது:—அகோ ! அற்புதம், சிங்கம்போன்ற இவர்தம் தைரியமும் புத்திபலமும் நிருமலமான ஆசாரத்தோடு கூடியிருக்கின்றது. இவ்விருவரையும் யான் சாமானியமாக எண்ண முடியாது, என்னையிவர்தம் சமத்கிருதியானது விசித்திரமாக இருக்கிறது என்று சிந்தித்தாள்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) அறிகுறிகளாற் பெரியோரை யறிதலும் அவரெதிர்ப்படின் சந்தேகநீக்கஞ் செயவேண்டிய அவசியமும் உரைத்தல் —வாக்கென.

வாக்குமுகங் கண்களான் மாறுபடா துயர்ந்தோர்தம் மறுவில்சித்த
மேக்குயரு மிவற்றுலே யுண்ணினவு மறியலாமே லோர்தாமே
பாக்கியம்போல் வந்தெய்திற் சந்தேகந் தெளியாதார் பதகராகுந்
தாக்குமுரையா லிவரையறிது மெனுயாவர் நீர்சாற்றுமென்றுள்.

(ப - ரை.) வாக்கு முகம் கண்களால் = வசனம் வக்திரம் ஈக்ஷணங்கள் என்பவற் றால், உயர்ந்தோர்தம் மறு இல் சித்தம் மாறுபடாது = பெரியோர்களுடைய குற்றமற்ற உள் நிச்சயம் திரிபையுறுது, மேக்குயரும் இவற்றுலே = மேன்மை பொருந்திய இவ் வாக்காதிகளாலே, உண்ணினவும் அறியலாம் = உட்கருத்தையும் உணரலாம். மேலோர் தாமே = பெரியோர்கள் தாங்களே, பாக்கியம்போல் வந்தெய்தில் = பெரும்புண்ணி யத்தால் ஐசுவர்யங் கிடைப்பதேபோல வந்து தரிசனந்தரில், சந்தேகந் தெளியாதார் பதகராகும் = ஐயத்தைத் தீர்த்துக் கொள்ளாதவர் நராதமர் ஆவர், தாக்குமுரையால் இவரை அறிதும் எனு = வினுவசனத்தால் இவர்தமை அறிந்துகொள்ளுவோ மென்று, யாவர் நீர் சாற்றும் என்றுள் = எவர்கொனீவிர் உரைப்பீராக என்று கூறினுள்.

(ஸ்ரீ - வீர.) வாக்கினலும் வதனத்திற் காணப்பட்ட தெளிவு முதலிய குறிகளா லுமே உள்ளேயிருக்கும் தத்துவ நிச்சயமானது குறிப்பிக்கப் படுகின்றது, வசன வக்திர ஈக்ஷணவாயிலால் மதிமான்களுடைய கருத்துகள் நதிகளின் நீர்கள் ஓடியோடிச் சங்க மித்தாலொன்று சேர்வதேபோலப் பரஸ்பரம் ஒன்றுக இருக்கின்றன. இருதயங்களி

னுடைய அபிப்பிராயங்களின் பரஸ்பரமுள்ள ஒருமைப்பாடே தன்கருத்தைக் காட்டும் ஆகலின் என்னுடைய அபிப்பிராயமானது இவர்களாற் பெரும்பாலும் ஒன்றுக அறியப் பட்டது. இவர்களுடைய கருத்தும் என்னுல் இனிதுணரப் பெற்றது, என்னுலிவர்கள் கொல்லத்தகாதவர்கள்; அவிநாசியாகிய பிரஹ்மரூபத் தன்மையானே தாமாகமவே அவி நாசியாக இருப்பவர்கள்; இவர்கள் ஆத்மஜ்ஞானிகளாக இருப்பார்களென் றெண்ணுகின் றேன். பொய்ம்மைத் துணிவானே ஜீவனமரணங்களைத் துணித்து தள்ளும்படியான ஆத்மஜ்ஞானமானது இல்லாதிருக்கும் பக்ஷத்தில் மரணத்தின் கண்ணிவ்வாறு பயமற்றி ருக்கும்படியான புத்தி யுண்டாக மாட்டாதன்றே ! ஆகையால் இவ்விருவர்களையும் சிறிது எழுந்த சந்தேகங்களைப்பற்றி இனிதாகவினவுவேன். அறிஞரை யடையப்பெற்று எம்மூடர்கள் வினவி ஐயம் தெரிந்துகொள்ள வில்லையோ அம்மூடர்கள் நராதமர்களாவர் கள்! என இவ்வண்ணஞ் சிந்தித்துக் கேட்பதற்கு அவசரத்தைப் பெற்றுப்பின் அகாலத் திலுண்டான பிரளயகால மேகம்போலக் கர்ஜிக்கும் பரிகாச முதலியவற்றை யடக்கிக் கொண்டு இவ்வாறு கூறினுள். ஹே பாவமற்ற நீர்களாகிய புருடோத்தமர்களே ! நீங் கள் இருவரும் ஏத்தகையர்கள் என்பதை எனக்குக் கூறுவீர்களாக. தெளிந்த சித்த மூடையவர்களுக்குத் தரிசனத்திலுலேயே மைத்திரியான துண்டாகின்ற தன்றே என் றனள்.

(ச.) சித்தம் மாறுபடாது = கருத்தொன்றுக் கொன்று பேதமுறுது, இவற்றுலே = வசன வதனேக்ஷணத் துவாரங்களால், உண்ணினைவும் = அகத்துறு நிச்சயமும் அன் னியோன்னியம் அறியலாம், இங்கிதா காரங்களாற் பரஸ்பராபிப் பிராயத்தைப் பரீக்ஷித் துப் புத்திமான்கள் சமரச சுபாவத்தை யடைவரென்பது பொருள், பதகர் = நராதமர், இவரை = பாவரகிதரான இத்தீரபுருடரை. எனு = என்று சிந்தித்து. (29)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தாங்கள் இன்னுர்கள் என்பதையும் வந்தகாரியம் இன்ன தென்பதையும் மந்திரிகூறல்:—வினையென.

வினையமுற வரக்கியிது விளம்பிடமந்திரி விளம்பும் வீரர்க்கெல்லா
மினையவன் மன்னவனமைச்ச னுகுமிருட் போதி லெங்குநாடி
யுனைநிகர்வாரைச் சோதித்தொறுக்கவுயிரொடுக்க வுயிர்நிறுத்த வந்தோம்
நினைவிது வந்ததற்கென்னு லிவன்கூற மீண்டந்த நிருதிகூறும்.

(ப - ரை) வினையமுற = வணக்கத்துடன், அரக்கியது = இராக்ஷசி இதனை, விளம்பிட மந்திரி விளம்பும் = கூறியவுடனே மந்திரி கூறுவதாவது, வேடர்க்கெல்லாம், நிராதர்கட் கொல்லாம், இனையவன் மன்னவன் = இவர்அரசர் ஆவர், அமைச்சன் நானு கும் = யான் ஆமாத்தியனுவேன், இருட்போதில் = அந்தகார சமயத்தில், எங்கும் நாடி = எவ்விடத்திலுஞ் சுற்றிப்பார்த்து, உனை நிகர்வாரைச் சோதித்து ஒறுக்க = உன் போன்ற தட்டரைப் பரீக்ஷித்து நிக்கிரகஞ்செய்ய, மீறினுல், உயிர் ஒடுக்க = பிராணு பகரணஞ் செய்ய, உயிர்நிறுத்த = சிட்டருக்கு வந்துற்ற ஆபத்தை நீக்கிக் காப்பாற்ற, வந்தோம் = ஈங்குற்றோம், நினைவிது வந்ததற் கென்னு = இரவினும் பகலினும் இறை வருக் குறனெனல், பரவுறு கயவரைப் பண்படுத்துவதே என்னும் இந்நினைவே வந்திங் கடைந்த காரணம் என்று, இவன்கூற மீண்டந்த நிருதிகூறும் = இம்மந்திரியிபம்ப மீளவும் அவ்விராக்ஷசி கூறுவளாயினள்.

(ஸ்ரீ - வீர.) ஹே இராக்ஷசியே ! வேடர்களுக்கெல்லாம் இவன் அரசனுவன் இவ னுக்கு யான் மந்திரியா யிருக்கின்றேன்; நின்னைப்போன்ற இம்சைசெய்யும் ஜந்துக்களை

இரவிற் பரிசோதனைசெய்து நன்முக நிக்கிரகிக்கும் பொருட்டு முயன்று வந்திருக்கின் றோம். இரவும் பகலும் மன்னவனுக்குத் துஷ்டப்பிராணிகளே நிக்கிரகஞ்செய்வதே தர்ம மாம், சுதர்மத்தை எவர்கள் தியாகஞ் செய்கின்றார்களோ அவர்கள் விநாச அக்கினிக்கு விறகு ஆவர்கள். (30)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இனிச் செய்யப்படும் விஞ்ஞாபனத்திற்கு உபோத்காதம் வரைந்து கொண்டு கூறுதல்:—தீயவென.

தீயவனு மந்திரியானல் வேந்துக்தீ வேந்தாந் தீமையில்லாத்
தூயவனு மந்திரியாற் றீவேந்து நல்வேந்தாந் தொடர்ச்சிபோல
வாயநெறி மன்னவரா லமைச்சருமப் படியாகு மாதலாலே
நேயவிவேகத் தமைச்ச னுண்டாகி லெப்பயனு நிருபர்க் குண்டாம்.

(ப - ரை.) தீயவனு மந்திரியால் = கெட்ட எண்ணத்தோடு கூடிய அமைச்சனுல், நல்வேந்தும் தீவேந்தாம் = நல்லகுண அரசனும் தீக்குண இறைவனுய் விடுவன், தீமை யில்லாத் தூயவனும் மந்திரியால் = தூராலோசனை யின்றிய பரிசுத்த குணமுடைய ஆமாத்தியனுல், தீவேந்தும் நல்வேந்தாம் = கொடுங்கோன் மன்னனும் செங்கோன் மன்னனுய் விடுவன், தொடர்ச்சிபோல = இச்சம்பந்தமேபோல, ஆயநெறி மன்னவ ரால் = மனுநூன் மார்க்கப் பிரகாரம் ஆட்சிசெய்யு மரசரால், அமைச்சரும் அப்படியா கும் = மந்திரிமாரும் அவ்வாறேயாவர், ஆதலாலே = ஆகையினுல், நேயவிவேகத் தமைச்சன் = தலைவனிடத்தன்பும் அறிவும் கருணையும் உள்ள மந்திரி, உண்டாகில் எப்பயனும் நிருபர்க்குண்டாம் = பிராப்தமானுல் அரசருக்கு இகபர சர்வப்பிரயோஜனங் களுமே பிராப்தமாம்.

(ஸ்ரீ - வீர.) நிருபன் துர்மந்திரி யுடையவன் ஆகலாகாது, மந்திரியும் நன்னிருபன் உடையவனே ஆகவேண்டும், நன் மந்திரியுடையவனே யரசனும் ஆகவேண்டும் என்ப தாம். அரசனுக்குச் சன்மந்திரியோடு கூடியிருப்பது சிறப்பாகவே காணத்தக்கதாம் எனக்கருதிக் கூறுவார், நேய—உண்டாம் என்றார். விருத்தர்களோடும் விரவியேயுறுக வென்பது மன்னவர் நீதியாம். துஷ்டமந்திரியை யுடையவன் நல்ல அரசனுகான், நல்ல அரசனுக்கே நல்லமந்திரி கிட்டுவன், நல்லமந்திரிக்கே நல்ல அரசன் கிடைப்பன். அர சன் முதலில் நல்லமந்திரியால் மிகுந்த விவேகத்தை யடைவன் அதனுல் மிகவும் சிறப் பையுஞ் செறிவன்.

(ஸ்ரீ-வீர-அ-கை.) ஞானநூற் கற்றவரே யமைச்ச ராகாகத் தகுதியராகலின் அவ் வாறிலராயினே நீர்நல மிழந்தீரெனல்:—மன்னவென.

மன்னவனெப்படி யுலகின் மன்னுயிரு மப்படியா மகிமைதானு
நன்னடுவுநிலைமையு மெய்ஞ்ஞான நூறெளிந்த வர்க்கே கண்ணுகிற்கு
மன்னது கற்றிலரென்னி லரசரமைச்சர்க ளென்போ ரபத்தராகு
மின்னகலையிலதாகி லெனக்கிரையா யினமைநல மிழந்தீரின்றே. (32)

(ப - ரை.) மன்னவனெப்படி யுலகில் மன்னுயிரும் அப்படியாம் = ஜகத்தில் எப் படி ராஜாவோ அப்படியே பிரஜையும் ஆம், மகிமைதானும் நல் நடுவுநிலைமையும் = பிர புத்தன்மையும் சமதிருஷ்டித் தன்மையும், மெய்ஞ்ஞானநூல் தெளிந்தவர்க்கே கண்ணு கிற்கும் = உண்மை ஞானத்தை யுணர்த்தும் அரசவித்தைச் சாஸ்திர சிரவணஞ்செய்த அரசருக்கே யுண்டாகும், அன்னது கற்றிலரென்னில் = அந்தராஜ வித்தையை யறிந்தி

லராகில், அரசர் அமைச்சர்க ளென்போர் அபத்தராகும் — ராஜாமந்திரி யெனப்படுபவர் பெயர்ப்போலியரே யாவர், இன்னகலே யிலதாகில் = இந்தராஜ வித்தையை நீங்கள் படித்துணர்ந்திரா திருப்பீரேல் எனக்கிரையாய் இளமை நலம் இன்றே இழந்தீர் = என் றவனுக் காகாரமாய் யவ்வஞ்தி நன்மைகளே இப்போதே இழந்தவராவீர்.

(ஸ்ரீ-வீர.) ராஜவித்தை = ராஜநீதி பரிஞானம், அல்லது, வித்தைகளுக்குள் ராஜா வாதலின் ராஜவித்தை பிரஹ்மவித்தையாம். '' ராஜவித்தை ராஜகுஹ்யம்'' எனஸ்மிருதி யிருத்தலின் என்றுணர்க. இதுவே பொருள் இதற்கெனப் பிருகத் வாசிஷ்டபத்தியத் தாற் புடமாகப் புலப்படும். எவ்வாறரசனுளனே அவ்வாறே பிரஜைகளும் ஆம், சமஸ்த குண ஜாலங்களுக்குள்ளும் அத்யாத்ம ஞானமே உத்தமோத்தமமாம் அந்த பிரஹ்மஞான னத்தை யடைந்த ராஜாவே ராஜாவாவன், ஞானத்தையடைந்த மந்திரியே விசாரசகியங்களே யுணர்ந்தவனவன் '' எந்தக்கருமமானது பந்தத்தை யுண்டாக்காதோ அதுவே நல்லகருமமாம், எதுமோக்ஷத்தைக் கொடுக்குமோ அதுவே வித்தையாம், அந்நியகரு மங்க ளெல்லாம் ஆயாசத்தின் பொருட்டாவனவாம், அந்நியவித்தைகள் சிற்பசாஸ்த்தி யம் போன்றனவாம் '' என்று கூறியிருக்கின்றார் பெரியர். பிரபுத்தன்மையானது சம திருஷ்டித்தன்மையின் அதீனமா யிருத்தலின் ஆயுள் நெய்யென்பதுபோல அவ்வுருவ தாக ஆரோபித்தலால் சமதிருஷ்டித் தன்மையாம். வித்தைகளுக்குள் ராஜாவாயிருக்கும் ராஜவித்தை யென்னும் ஆத்மவித்தையினுலே அச்சமதிருஷ்டியு முண்டாம் அதனையே யாவன் அறியவில்லையோ அவன் மந்திரியுமாகான், ராஜாவு மாகான், நாயின்பாலும் நாய்க்கறிப் போர்பாலும் அறிஞர்கள் சமதிருஷ்டியை உடைத்தா யிருப்பார்கள், என ஸ்ரீ பகவானுங் கூறியுள்ளார், நீங்கள் அந்த ஞானத்தையடைந்து சாதுக்களாக இருப்பீர்களேயானுல், அதற்குத்தக்க மேன்மையையே யடைவீர்கள், அவ்வாறின்றேல் எவ்வாறு அரசனே அவ்வாறு பிரஜைகளும் ஆம், என்று முற்கூறியிருத்தலின் அரசன்மூர்க்கனுயின் பிரஜைகளும் மூர்க்கராதல் விலக்கக் கூடாமையின் அவர்களுக்கும் அனர்த்தத்தையே கொடுத்துக்கொண்டிருக்கும் உங்களேயான் பகஷித்தேவிடுவேன், துஷ்டர்களேப் பகஷிப்பது என தியற்கையாகும்.

(ச.) மஹிமைதானும் = பிரபுத்துவமும், நன்னடுவு நிலைமையும் = சமதிருஷ்டித்துவமும், அன்னது = அந்தப் பிரபுத்துவமும் சமதிருஷ்டித்துவமும், அபத்தராகும் = நிருபனுமன்று மந்திரியுமன்றும்; இன்னகலே = முற்கூறிய இராஜமந்திரிகளின் குணம், அஃதுண்டெனிற் சிரேயசை யடைவீர்க ளென்பதருத்தாபத்தி எனக்கு = இராக்ஷத சுபாவத்தையுடைய எனக்கு

(ஸ்ரீ - வீர - அ - கை.) விஞவுக்கு விடைதரின் மங்களமும் அல்லாக்கால் அமங்களமும் ஆம் எனல்:—சிங்கமென.

சிங்கமெனு முங்களேயான் செப்புகின்ற வினுக்கூட்டிற்சிறை செய்கின்றே
னுங்கண் மதியாற்றிறந்தாலுயிர் வாழ்வீரென வகுத்தென்னுரைசெய் கென்ஞத்
துங்கநரபதி யுரைப்பத்தொல்லரக்கி நல்லமுதத்துளிகள்போல
வங்கவருக்குரைத்த வெலாமிராகவ கேளென வசிட்டனருளலுற்றான்.

(ப-ரை.) சிங்கம் எனும் உங்களே = சிங்கத்திற்குச்சமான சூரத்தன்மையுற்ற உங்களிருவரையும், யான் = இராக்ஷியாகியயான், செப்புகின்ற வினுக்கூட்டில் = கேட்கின்ற வினுக்களாகிய பஞ்சரத்தில், சிறைசெய்கின்றேன் = அடைக்கப் போகின்றேன், உங்கள் மதியால் = உங்களுடைய விசாரபுத்தியால், திறந்தால் = வித்தாரணஞ் செய்வீ

சேல், உயிர் வாழ்வீர் = ஜீவிதாதியை யடைவீர், என = என்றுகூற, வசுத்து என் உரை செய்க = பிரித்துப் பிரித்து நீயாதயாது கேட்கவேண்டு கின்றனையோ அவற்றையெல் லாம் கூறுவாயாக, என்னுத்துங்கரபதி = என்றுபரிசுத்தகுண நரேந்திரன், உரைப்ப = கூற, தொல்லரக்கி = நீள் காலந்தவம்புரிந்த இராக்ஷசியாகிய அக்கற்கடி, நல்ல மூதத் துளிகள்போல = இனிய அமிர்த பிந்துக்களைச் சிதறினற்போல, அங்கு = அவ்விடத்தில், அவருக் குரைத்தவெலாம் = அம்மன்ன மந்திரிகளை நோக்கிக் கூறிய விஞ்சுகளை யெல் லாம், இராகவ ! கேளென = ஹே இராமச்சந்திர ! கேட்பாயாக வென்று, வசிட்டன் அருளுற்றான் = ஸ்ரீ வசிட்டபகவான் திருவருள் செய்யத்தொடங்கினர்.

(ஸ்ரீ - வீர.) ஹே பெற்றோர்களுக்குப் பிரீதி விடயங்களாகிய பாலகர்களே ! ஒரு பாயத்தினுலே என் பக்கத்தினின்றும் நீங்கள் தப்பித்துக் கொள்ளுதல் கூடும், மிகவும் சாரமான என்னுடைய விஞ்சுப்பஞ்சுரத்தை விசாரம் மிருந்த புத்தியினுல் சேதிப்பீர்களா யின் தப்பலாம், ஹே இராகவ ! இராக்ஷசி இவ்வண்ணம் இயம்ப அதைக்கேட்ட மன்ன வன் கேள்விகளைக் கேட்கலாமென்று ஆக்ஞை செய்தவுடனே கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனன், அக்கேள்விகளை நீ கேட்பாயாக.

(ச.) மதியால் = முக்கிய வுபாயத்தினுல்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆன்மஞான மில்லாதவர்கட்கு வஜ்ஜிரம் போன்றனவும், ஆத்மஞானிகட்கு மஞ்சரம்பியங்களும் ஆகிய கற்கடிசெய்த ஏழுபத்திரண்டுவிஞ்சுக்களுள்-10. முக்கியமானவற்றை இங்கு கூறல்:—அண்ட—வ:னிடை யென.

அண்டநிரைபலகோடிபலவாயுமொன்றுமெவ்வணுவினுள்ளே
விண்டகடற்குமிழிகள்போல்விரிந்தொடுங்கும்விண்ணையும்விண்ணன்றேது
தீண்டறவுண்டாயிருந்துமிலாததெதுசரித்தேயுஞ்சரியாதேது
கண்டிடநில்லாதாயுநிற்பதெதுசித்தாயுங்கல்லாமேது. (34)

வானிடையோவியமெழுதுகின்றதெதுவித்திடையின்மரங்கள்போல
வீனமிலாவெவ்வணுவிலுலகமெலாமிருக்கின்றதியாதினின்று
மானகடற்றிரைதுரைபோலொருபொருளும்பிரிவாகாதமைந்தரீரு
மீனமறுகெகிழ்சியும்போலேதான்றியிருமையுமெங்கொருமையாகும். ()

(ப - ரை) பலவாயும் ஒன்றும் எவ்வணுவினுள்ளே = அநேகமாயும் ஏகமாயிருக் கும் எந்த அணுவின் உள்ளே, அண்டநிறை பலகோடி = அண்ட வரிசைகள் அநேகங் கோடி, விண்டகடற் குமிழிகள்போல் = கடலில் எழுந்து தோற்றும் புற்புதங்கள்போல விரிந்தொடுங்கும் = விவர்த்தமாகத் தோற்றி லயமடையும் ? விண்ணையும் விண்ணன் றேது = ஆகாசமாயும் அநாகாசமா யிருப்பது யாது ? தண்டறவுண்டாயிருந்தும் இலா ததெது = தடையற சிறிதிலாததா யிருந்தும் சிறிதிருப்பதுயாது ? சரித்தேயுஞ் சரியா தேது = கமனம்புரிந்தும்கமனம் புரியாததுயாது ? கண்டிட நில்லாதாயும் நிற்பது எது = காணும்படியாக நில்லாதது ஆயினும் நிற்கின்றது யாது ? சித்தாயும் கல்லாம் எது = சேதனமாயினும் பாஷாணமாவது யாது ?

10 ஹிரண்யக்ஷ 10 ஹிரண்ய வரம்

வானிடை யோவிய மெழுதுகின்றதெது = வியோமத்தின் கண்ணே சித்திரமெ ழுதுவது யாது ? வித்திடையின் மரங்கள்போல = விரையிற் றருக்கள் வீற்றிருப்பன போல, ஈனமிலா = கெடாத, எவ்வணுவில் = எந்த அணுவின் கண்ணே, உலகமெலாம், இருக்கின்றது = ஜகத்துகள் யாவும் இருக்கின்றன, இயாதினின்றும் = எதனினின்றும்,

ஆனகடற்றிரை நுரைபோ லொருபொருளும் பிரிவாகாது = சமுத்திரத்தி லுண்டாய தரங்கபேன புற்புதாதிகள் போல எவ்வத்துவும் வேற்றுமையை யடையாது ? அமைந்த நீரும் ஈனமறு நெகிழ்ச்சியும் போலேதோன்றி இருமையு மெங்கொருமையாகும் = ஜீவன ஹேதுவதாகப் பொருந்திய தண்ணீரும் அதன்கட் கெடாது தோற்றும் திரவத்தன்மை யும் போலவே பிரதீதியாகா நின்ற துவைதமும் எதனினின்று பிருதக்குத் தன்மையை யடையாது ? (35)

(ஸ்ரீ - வீர.) உபாதி பேதத்தால் அநேகசங்கியை யுடைய ஏகமான அபரிச்சேதத் தாற் கடல்போன்ற துர்லக்கிய எத்த அணுவினுள்ளே கடலிற் குமிழிகள்போலப் பிரஹ் மாண்ட லக்ஷங்கள் தோற்றியழியும் ? 1. ஆகாசமாயும் ஆசூன்ய அநுகாசமா யிருப்பது யாது ? 2 லௌகிகப் பிரசித்தம் சிறிதுமில்லாம லிருந்தும் தத்துவவித்துப் பிரசித்தம் சிறிதேயாவது யாது ? 3. நடந்தும் நடவாதது யாது ? 4. கதிநிவிருத்தியைச் செய்யா திருந்தும் அல்லது அசத்தாக இருந்தும் நிற்பதெது சத்தாயிருப்பதெது ? 5. இவ்வினு வாக்கியத்திற் கிதுவே பொருளென்பது பின்றெரியும். சேதனமாயினும்யாது கற்போல அசேதனம்(சைதன்யப் பற்றுஷ் கோடாகாது)? 6. சிதம்பரத்தில் விசித்திரகாரியத்தைச் செய்வதெது ? 7. ஜகங்கள் அணுற்பன்னங்களாயினும் பிரளயத்தில் பீஜத்தில் விருக்ஷங் கள்போல எவ்வணுவின் கண்ணே யிருக்கின்றன ? 8. ஒருதருவிற் றூதாத்பியத்தால் இருப்பதன்கட்டிருட்டாந்தமாம், காரணத்திலாண்டு காரியமுண்டாவதற்கு மூன் சூக் குமரூபமாக இருப்பதாய் அங்கீகரிக்க வேண்டும், ஆண்டஃதின்றேல் அதனினின்றே யதனுற்பத்தி யென்னும் நியம அநிசன வழக்குண்டாதலின்; காணவுமன்றே பகின் றது:—எள்ளுகளினின்றே யெண்ணே யுண்டாதல், மணல்களினின்றே இல்லையாம், பாலினின்றே நெய்யும் மண்ணினின்றே கடமும் உற்பத்தியாதல் நியமமாம், இங்ஙன மாகவே ஒரே விரையின் கண்ணே தன்குகந்நிக்ஷிப்தமாய அநேக விருக்ஷங்கள் இருக் கின்றனவென விரையிலே தருமம்போல் என்று பொருத்தமாகவே கூறப்பெற்றதாகும் சிறிதும் எதனினின்றும் தனியாக ஆகாதோ வெனப் பேதியைக்கொண்டு வினவி, பேதங்கொண்டு வினவல்:—பெரியநீர் நிலயத்தினின்றும் அலைமுதலானவை சிறிதுந் தனித்திலாதனபோல எதனினின்றும் ஒரு சிறிதும் வேறுகவில்லை ? 9. தேசகாலாதி யிஞல் வரைவுபெறாது ஏகமாய் அஸ்தூலத் தன்மையால் அசத்துல்லியமாய்ச் சத்தா யிருக்கும் எதனினின்றும் மகாஜலத்தின் நெகிழ்ச்சியேபோலத் துவைதமும் பிருதக் காக இராது ? 10. விஞக்களின் அபிப்பிராயங்கள் விடைதரும்போது நன்றுகவெளி யாம் என விரித்திலம்.

(ச.) தண்டற வுண்டாயிருந்தும் இலாததெது = இலதாயிருந்தும் உளதெது, வானிடை = சிதாகாயத்தில், இருமையும் = துவைதமும், அண்டநிரை என்பது முத லிய கற்கடிவிஞக் கவியிரண்டும் விடைய வசரங்களில் மந்திரியாற்றூனே தெளிவிக் கப்படும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) விளம்பிய விஞக்கட்குவிடைதரின் மேன்மையுண்டா மென் றும் தராவிடின் கீழ்மையுண்டா மென்று மறைதல்:—இந்தவென.

"இந்தவினுவின் பயனே நும்முணர்வாலேதோன்றவியம்புவீரேற்
கந்தமுறவென்குழன்மேலெப்போதுமிருக்கின்றகமழ்போதாவீர்
மந்தமுறுபுத்தியினுல்வகுத்தரைக்கமாட்டாதுமயங்குவீரேல்
வெந்தவயிற்றெரிகனற்குவிறகாவீரென்றரக்கிவிளம்பலோடும்.

உற்பத்திப்பிரகரணம்

(ப - ரை.) இந்த விஞ்ஞவின் பயனே = இயம்பிய விஞ்ஞக்களின் விடைகளே, நும்முணர் வாலே = உங்களுடைய விசாரஞானத்திஞலே, தோன்ற இயம்புவீரேல் = விளங்குமிம் படியாக விளம்புவீர்களாயின், கந்தமுற = மணம்பொருந்த, என்குழன்மேல் = எனது கூந்தலின்மீது, எப்போதும் இருக்கின்ற = எக்காலத்திலும் இருக்கின்ற, கமழ்போதா வீர் = நற்கந்த புஷ்ப மாவீர்கள், மந்தமுறு புத்தியினால் = பிரஞ்ஞைமந்தாதி தோடங் களினால், வருத்தரைக்க மாட்டாது மயங்குவீரேல் = பிரித்துத்தரங்கூற முடியாமல் மயங்கி விழிப்பீர்களாயின், வெந்தவயிற் றெரிகனற்கு = கொளுத்தாகின்ற வயிற்றி லுள்ள ஜாடராக்கினிக்கு, விறகு ஆவீர் = இந்தனம் ஆவீர்கள், என்று = என இவ்வண் ணம், அரக்கி = கற்கடி, இயம்பலோடும் = கூறியபோது.

(ஸ்ரீ-வீர.) விருத்தார்த்தமதாக விஞ்சுக்கட்கு நலமிலாமையை விலக்குவாள், இந்த விஞ்ஞவென்ருள் = இவ்வெனது பிரசினங்களின், ஜாடராக்கினிக் கிந்தனத்தன்மையைச் சுடுதியில் அடைவீர் கணத்தி லென்பதாம். இவ்வண்ணம் கிரமமாகக் கூறப்பட்ட பரம சாந்தியைக் கொடுக்கும் அதிலகுதரமான எனது இவ்வையத்தை நன்மதியுடைய நீங்கள் நீக்காமற் போவீர்களாயின் அக்கால் இராக்ஷச சாதியையுடைய என்றேகத்தின் சாட ராக்கினிக்கு எளிதரும் பெண்ணும் பக்ஷணமாக ஒருகணத்தில் ஒரு தடையுமில்லாமல் ஆகிவிடுவீர்கள். ஆத்மாவை யுணராமல் தேகமாத்திரத்தில் ஆத்மபுத்தியை வைத்துக் கொண்டிருக்கப் பட்டவர்கள் அரக்கர்கட்கு அன்னமாந்தன்மையை நீக்கிக்கொள்ளமாட் டார்கள்; முன்னுங்களே விழுங்குவேன் பின் உங்கள் ஜனபதமண்டல முழுவதையும் விழுங்குவேன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பேரிருள் இரவின்கண் பெரியகாட்டில் மகாராக்ஷச கன்னி கையால் மேலே யியம்பியவிதமாகப்பெரிய விஞ்சுக்கள் வினவப் பட்டபோது ஷி விஞ்சு கட்கு நியாயமாக அதிசுக்குமமான யுக்திகளோடும் பெரியமந்திரி யானவர் சமாதானங் கூறல்:—மந்திரியென.

மந்திரிமுன்னுரைசெய்வான்மாசிலாப்பரம்பொருளேவருத்துச்சொன்னுய்
சிந்தைமுதலாம்பொறிகளாருலுமேட்டரிதாந்திறத்திஞலே
யந்தமில்சின்மாத்திரமாய்விண்ணிலுநொய்தாம்பரமமணுவேயாகு
முந்துபிரமாண்டமெலாமேவணுவிலேதோன்றிமுதிர்ந்துமாயும்.

(ப - ரை) மந்திரிமுன் உரைசெய்வான் = முதலில் மந்திரி விடைசெய்யத் தொடங் கிக் கூறுகின்ருர், மாசிலாப் பரம்பொருளே வருத்துச் சொன்னுய் = குற்றமற்ற பர மாத்ம வத்துவையே பிரஹ்மவித்துக்கள் உணரத்தக்கதான வாக்குப்பங்கியால் விரித் துரைத்தாய், சிந்தை முதலாம் பொறிகளாருலும் எட்டரிதாந் திறத்திஞலே = மனமுத லிய இந்திரியங்கள் ஆராலுலும் கோசரிக்க முடியாததாந் தன்மையினலே, அந்தமில் சின்மாத்திரமாய் = முடிவில்லாத அறிவுமாத்திரமாய், விண்ணிலு நொய்தாம் = ஆகா யத்தினும் அதிசூக்குமமாம், பரமம் = பரமாத்மா, அணுவேயாகும் = அணுரூபமேயா கும், முந்து பிரமாண்டமெலாம் = பிராசீன பிரமாண்டகோடிகள் எல்லாம், அவ்வணு வினலேதோன்றி = அச்சித்தணுவினின்றுந் தோற்றமுற்று, முதிர்ந்துமாயும் = திதி பெற்று லயமாகும்.

(ஸ்ரீ - வீர.) எல்லாவிஞக்கட்கும் பொதுவதாக உத்தரங் கூறுவார் பரம்பொருளே யென்ருர். பங்கி = பாகம் = பங்கு. "ஒன்றே அத்விதீயம்" என்னும் சுருதியினலே வாஸ்தவ ஏகத்வமும், "இந்திரன் மாயைகளினல் எண்ணிலுருவுற்றனன்" என்னுஞ்

சுருதியினுல் மாயிக அநேகத்வமும்பரமான்மாவிற்குப் பகர்தல் எளிதாம் எனக்கருதி, ஆகியவினுவின் பாகத்திற்கு உத்தரங் கூறலாம் சிந்தையென்பதாதி. வாசக ஆக்கியான ரகிதத்தன்மை யுண்மையானும் அதாவது உரையாட முடியாமையானும், மன முதலிய பொறிகட் கெட்டாமையானும், மனம் ஆருவதுபொறி எவற்றைக் குறித்தோ அச்சு ரோத்திராதிகளின் மரியாதை யென்னப்பெற்ற கலப்பிலாமற் பதார்த்தப் பிரகாசன சாமர்த்தியத்திற்கு ஹேதுவாகி யெட்டாமையானும், அணுவாமாத்மா சூக்குமம் அணு வே போலுமென்க ! நிரவயவத் தன்மையினுனே ஆகாசம் போன்றதாம். ஆகாசமும் குணன் மிகமாதலின் அதனினும் அதிசூக்கும வியாபகம் ஆன்மாவாம். மாயும் = திதி சத்தியைத் தாண்டி யுபசங்கார சக்திவியமாம். இதனுனே அஷ்டமப் பிரசினத்துக்கும் விடையளித்தவாறு காண்க. ஹேஹேஹே மகமலாகுமி ! எல்லா வினுக்களையும் நிதிலமாக்கற் பொருட்டு எல்லா வினுக்களின் அபிப்பிராயத்தை முதலிற் கூறக்கேட்குதி ! வினுக்களை யுணர்பவர்க்கு ஞானத்தைக் கொடுக்கத்தக்கதான நீ கூறிய இவ்வாக்கு முறையால் உன் னுல் பரமான்மாவே சொல்லப்பட்டது, எவ்வணுவிற் கடலிற்போல என்னும் முதல் வினுவிசேடியத்தில் அணுசப்தப் பிரயோகத்தின் அபிப்பிராயத்தைக் கூறக்கேட்பா யாக:—வாக்கினுல் வசனிக்க முடியாமலும், மனமுதலிய ஆறிந்திரியங்களால் அறியமுடி யாமலும் இருத்தலின் அணுவாம். இவ்வண்ணம் சின்மாத்திரமே வடிவமான அணுவாகி னது ஆகாயத்தினும் அதிசூக்குமமாக இருக்கின்றது; இங்ஙனமே " அணுப்தாவிதாம் அணுபுராணம் " என்பதாதி சுருதிகளிற் பிரசித்தமாம், உள்ளே பிரஹ்மாண்ட லகூங்கள் என வினவிய அங்ஙிரசித்திற் கூறக்கேட்டி, பரமமாய் அறிவாயிலங்கும் அணுவினுள்ளே விரையினுள்ளே தருவிருப்பதேபோலச் சத்தைப்போலாதல் அசத்தைப் போலாதல் இந்தவுலகத் திதியானது இலங்குகின்றது; இதனுல் எவ்வணுவின்கண்ணே விரையில் மரம்போல ஜகங்களிருக்கின்றன என்னும் வினுவிற்கும் விடையிறுத்தியதாயிற்று.

(ச.) ஸ்ரீ வசிட்டர். மந்திரி முன்னுரைசெய்வான் = மகாநிசியில் மகாரணியத்தில் மகாராட்சத கன்னிகையால் இத்தன்மையான மகாவினுவைக் கேட்டு மந்திரிமுன்னுரை செய்வான், பரம்பொருளே = பரமான்மாவை, இதனுல் வாக்கு விவகாரத்துக்கு விடய மன்று இந்திரிய கோசரமன்று ஆதலின் ஞானவிவகாரத்துக்கு அவிட்டயமா மென்பதா யிற்று. இத்தன்மையாய் ஆகாசதினுஞ் சூட்சுமமும் சின்மாத்திரமுமானவான்மா அணு வெனப்படுவ னென்பது பொருள். அவ்வணுவிற் சின்மாத்திரரூபமான பரமாத்மாவி னகத்தில் கோடிபிரமாண்ட புற்புதங்க ளுற்பவித்திருந்து சக்திநாசவேதுவினுல் இலய முறும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) விண்ணுயும் விண்ணன்றேது என்னும் இரண்டாவது முத லிய வினுவின் தாற்பரியத்தை வெளிப்படுத்தல்:—

(ச.) விண்ணுயும் விண்ணன்றேது என்பதாதியின் பொருளே விவரணஞ் செய் தல்:—தடமென.

"தடமானவதன்புறமில்லாமையினுல்விண்ணுகுந்தனிப்போதத்தா
லிடமானவிண்ணன்றுமின்னதெனத்தெரிவரியவியல்பினுலே
திடமாகவிலதாகுஞ்சற்பாவத்தாலுளதாய்ச்செப்பலாகும்
புடமாகவிளங்குதலாற்சித்தாகுமறிவதிலாப்பொருட்டாற்கல்லாம்.

(ப - ரை.) தடமான = விசாலமான, அதன்புறம் = அதன் பாகியம், இல்லாமை யினுல் = சூனியமாதலின், விண்ணுகும் = ஆகாசமாகும், தனிப்போதத்தால் = ஒப்பற்ற

சித்துத் தகைமையால், இடமான = வாயுவாதிகட்கு இடந்தரும், வீண்ணன்றும் = ஆகாயமாகாதாம், இன்னதெனத் தெரிவரிய வியல்பிஞலே = இவ்வண்ணந்தான் இருக்கின்றதென நிர்த்தேசஞ் செய்ய முடியாமையின், நிடமாக இலதாகும்=அஞ்ஞித்தாம், சற்பாவத்தால் உளதாய்ச் செப்பலாகும் = வஸ்துசத்தையால் இஞ்ஞித்துளதென்று முரைக்கலாம், புடமாக விளங்குவதாற் சித்தாகும் = பிரகாசவடிவமாக வெளியா யிலங்வின் சேதனமாகும், அறிவதிலாப் பொருட்டாற் கல்லாம் = வேத்திய மிக்கமையின் சிலைக்குச் சமானமாம்.

(ஸ்ரீ - வீர.) பாகியம் சூனியமாதலின் = தற்பகிர்பூத வத்து சூனியமாதலின். அறிவுவமா யிருத்தலிற் பூதாகாசமாகாதாம். மூன்றுவது வினவிற்குவிடைதருதல். அஞ்ஞித்தென்றது. எக்காரணத்தாற் பிரஹ்மவஸ்து வானது குறிக்கத்தகாமற் கூறத்தகாமலிருக்குமோ அக்காரணத்தாற் ஞ்ஞித்தாகாதாம். பரமார்த்த சத்தாமாத்திர வடிவது என்பதனால் அது ஞ்ஞித்தாம். ஆறுவது வினவின் விடைதரல்: புடமாக என்றது. மாறிவிடை மலர்தல் இராக்ஷியின் மதிப்பரிக்ஷையின் பொருட்டாம். இப்பரமான்மா வானது ஏதனைற் சைதன்யப் பிரகாசாத்மாவாமோ அதனைற் சேதனமாம் உண்மையாக ஞேயமிக்கமையினனும் கற்பிதஞேய சங்நிதியுற் நிருந்தபோதிலும் விகாரமற் நிருத்தலினனும் சிலோபமம் ஆம். விண்ணுயும் வீண்ணன்றேது என்னுமவினவின் ஈற்பரியத்தை விளம்பல்: பாகிய சூனியத்தன்மை யுண்மையின் ஆகாசமாம் சித்துத்தன்மையோடு கூடியிருத்தலின் அகாகாசமாம். சிறிதில்லாதிருந்தும் சிறிதேயாவது யாது என்னும் வினவின் உத்தரம். இந்திரியங்களால் அறியப்படாததாற் சிறிதன்றும்; அதாவது இந்திரியங்களால் அறியப்படும் அற்பதிருமியமே யல்லவாம், அவ்வனுவே முடிவற்றதாம்; சிறிதாயிருந்தும் சிறிதல்லாதது யாது ஆத்மபாவத்தில் அது எனவினவிற்பொருள் செய்யினும் பாதகமில்லை, என்னை? தானே சர்வான்மகமா யிருத்தலின் தன்னையே சாக்ஷாத்கரித்ததால் யாவற்றையும் விழுங்கியபோது அதுவேசிறிதாம். ஆன்மாவுக் கயலாகயாதொன்றுமே எஞ்சுவதில்லை ஆன்மாமாத்திர மிருக்கும் அதனைற் ஞ்ஞித்தாகியும் ஞ்ஞித்தன்றும். பலவாயும் ஒன்றும் என்பதன் அபிப்பிராயம். ஏகமேயாய சித்தனுவிற்கு நீ கூறிய அநேகத்தன்மை தோற்றுமாத்திரமே யாம் வாஸ்தவமன்றும் பொய்யேயாம். சேதனமாயினும் யாது கற்போலாம் என்னு வினவின் விடை:—சித்திருவமும் ஜடவுருவமும் எனவிருத்த உபயவடிவம் உடையது என்பதாகப் பொருள் கொள்ளின் உத்தரம் ஜடமாகவே யிருக்குந் தேகாதிகள் ஆத்மதர்த்மிய அத்தியாசத்தினலே சேதனத்திற்குப் பிரகாச சுபாவத்தன்மையும் ஜடத்தன்மையும் தன தனுபவத்திற்குத் தெரியவருதலின் ஆராய்ச்சி யின்மையினலே ஜடம் போதம் என்னும் உபயரூபமும் உண்டாகவே செய்யும். சேதனமாயினும் கற்போலக் கனரூபம்யாது எனப் பொருள்படுத்தின் விடை: பாரமார்த்திகமான ஆத்மரூபமேயாய சிற்கணம் அதுவாம், சேதனபாஷாணம் இருப்பதேபோல ஆத்மா சிற்கனவடிவமே யுடையது என வினப்பொருள் ஆமாயின் அக்கால் சேதனமேயாய இவ்வான்மா பாஷாணம்போலக் கனமாம்.

(ச.) அதன் புறமில்லாமையினல் = நிரஞ்சகத்தக்க வஸ்து சூனியமாதலின் பிரஹ்மமே ஆகாயசத்த வாச்சியம், தனிப்போதத்தால் = சித்துரூபத்தினல் ஜடாகாய விலக்ஷணமும் ஆம். 3-வது வினு தண்டற வுண்டாயிருந்தும் இல்லாதெது? இன்னதெனத் தெரிவரிய வியல்பினலே = இத்தன்மைய தென்று நிர்ணயித்தற்கு அசக்கியமாதலின், இலதாகும், சற்பாவத்தால் = சர்வவஸ்துவுஞ் சத்தின் ஆரோபமாதலின், உளதாய்ச் செப்பலாகும், = 6 வினு சித்தாயுங் கல்லாமேது? என்னும் வினவிற்குத்தரம் = புட

மாக விளங்குதலாற் சித்தாகும், பிரகாசரூபமாதலின் சேதனமாம், அறிவீனாலாப் பொ
ருட்டாற் கல்லாம் = தனக்குவேறாய் அறியத்தகுந்த வேத்திய மின்மைதலின் சிலைக்
கொப்புமாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலுஞ் சிலவினுக்கட்கு மந்திரி விடைதருதல்:—தானுகு
மென.

"தானுகுமிக நொய்தாமா காயத்திற் சகத்திரளாஞ் சித்திரத்தைத் தானே
கோட்டு, மானுத வுலகமெலாந் தனது சோதியாதலினு லதற்குவேறய லொன்
றில்லே, நானுஞ் சகபேத வடிவந்தானு நிற்கின்றவதன் வடிவாய் நீங்காதென்
றும், நானாவாம் பொருட் புணர்வா னடந்ததாகு நடக்கவிட மிலாமையினு
னடவாதாகும். அதற்குவேறுஅல்லன்என்றில்லை (39)

(ப - ரை.) தானுதும் மிகநொய்தாம் ஆகாயத்தில் = சொச்ச வியோமாத்மாவில், சகத்திரளாம் சித்திரத்தைத் தானேகோட்டும் = சகக்கூட்டங்களாகிய ஓவியங்களைச் சுயமாகவே வித்தாருஞ் செய்யும், ஆனுத வுலகமெலாம் = ஞானத்தாலன்றிக் கெடாத வுலகமுழுவதும், தனது சோதியாதலினுல் = தன்னறிவு வடிவமே யாகலின், அதற்கு அயலாக அன்னியம் ஒன்றுமே கிடையாது, நீ நானுஞ் சகபேத வடிவந்தானும் = துவம் அகம் என்பதாதியாய்த் தோற்று மூலகபேத வடிவமும், நிற்கின்ற வதன்வடிவாய் நீங்காதென்றும் = நிலைபெற்ற அதன் பிரகாசமயமாய் அயலாகாமல் ஒன்றும் என்றும், நானுவாம் பொருட் புணர்வால் = பற்பலவாம் வத்துக்களின் சம்சர்க்கத்தால், நடந்ததாகும் = எங்கும் சென்றதாகும், நடக்க இடம் இலாமையினுல் நடவாதாகும் = வியாபகமாதலின் கதிசெய்வதற்கு இடமின்மையின் கதிசெய்யாததாகும். (39)

(ஸ்ரீ-வீர.) ஏழாவது வினுவின் விடை தானுகுமென்பது கோட்டும் = அபிவியக்தி செய்யும். ஒன்பதாவது வினுவின் விடை ஆனுதவென்பது. இவ்வுலகமெல்லாம் பிரஹ்ம சைதன்ய மாத்திரம், அந்த பிரஹ்ம சைதன்யத்திற் கயலாக இதற்குச் சத்தை சம்பவியாதாம். இது அந்த அதிஷ்டானத்தின் அயலாற்றுற் றோற்றுமாத்திரம் ஆமென்றுமேது வினுலே அதனினும் தனியாகாதாம்! பத்தாவது வினுவின்விடை: நீயென்பது, வடிவாய் = சொரூபமாய் அதனினும் பிருதக்காகாதாம் நான்காவது வினுவின்விடை நானாவென்பது. கம்மியசம்பந்தமே கமனபலமாம் பரமாத்மாவோ சருவ கம்மியத்தோடும் சம்பந்தமுடையதாம் ஆதலின் சர்வகமாம். விபுத்தன்மையானே கதித்தன்மை யசம்பாவிதமாதலின் வாஸ்தவமாகக் கந்தவ்ய அபாவத்தானும் கமனஞ்செய்யாதாம் சிதம்பரத்தில் விசித்திர காரியத்தைச் செய்வதெது. என்னும் வினுவிற்கு விடை. அனுதியாய் அநந்தமாய் இருக்கப்பட்ட பரம ஆகாசத்தில் சின்மாத்திரமாய பரமாத்மாவால் மூன்றுலக சித்திரமானது சித்திரிக்கப்பட்டுளது; அதனுல் இது மித்தையாதலின் செய்யாமலே செய்யப்பட்டுளது, பெருநீரினின்றும் சிறுதரங்கம் சிறிதும் தனித்திராத தேபோல் எதனினின்றும் ஒரு சிறிதும் வேறுகவில்லே யென்னும் வினுவிற்கு விடை; சித்தவடிவமா யிருத்தலாற் பெருங்கடல்போல விகாரப்பட்டிருக்கும் அணுவினிடத்தில் நீரின்கண்ணே நெகிழ்ச்சியால் சுழற்சி தோற்றுதல் போலச் சித்தவிகற்பமாத்திர ரூபங்களான மூவுலகச் சிறுதரங்கங்களாகிய இவைகள் கசிந்துகொண்டிருக்கும் என்பதாம். இவ்வண்ணம் பூகத்தோடும் பிரசங்கத்தில் வந்த யாதுசேதனம் அசேதனம் என்னும் வினுவிற்கு விடைபகர்ந்து எஞ்சிய வினுக்களின் உத்தரத்தை யரசன்பொருட்டு நிறுத்தி வைத்து அதனஞ்ஞான சங்கையை நீக்கும்பொருட்டு அவற்றுள் இரண்டொன்றெடுத்து

உத்தரங்கூற விழைந்து துவைதமித்தியாத்துவ உபவர்ணனம் விரிந்த துவைதமாயினும் அப்பிருதக் கெதனுல் என்பதன் உத்தரத்தைக் கூறல்: பிருதக்தன்மைச் சமஸ்காரத் தினுலே சமஸ்கரிக்கப்பட்ட புத்திவிருத்தியினுள்ளே யிருக்கும் ஆத்மப் பிரகாசத்தின் வேற்றுமையை வெளிப்படுத்தும் ஆற்றல்வடிவ சமத்கார யோகத்தால் துவைதம் தோற் றினபோதிலும் வேற்றுமையே யின்றும்; அதன்கண் ணேதுவென் னெனின் ? பரமான ஆத்மப் பிரகாசமானது விருக்ஷவடிவப் பீஜம்போல எல்லாவடிவமாகவு மிருக்கின்றது என்பதாம். நடந்தும் நடவாதது எது என்னும் விஞவின்விடை: எவ்வணுவானது ஆகாயம்போல அநேக யோஜனதூரம் வியாபித்திருந்த போதினும் இருந்த இடத்தி லேயே யிருக்கின்றது; அவ்வணுவிற்குள்ளே அநேகயோஜனை தூரதேசமானது சொப் பனம் போலக் கற்பனையால் ஆம்.

(ச.) வானிடை யோவிய மெழுதுகின்ற தெது ? விடை: தானுகி மிகநொய்தா மாகாயத்தில் = சிதாகாச சொரூபமான சொச்சொரூபத்தில். யாதினின் + பிரிவாகாது என்பதை விவரணஞ்செய்தல், ஆனதவுலகமெலாம் = இந்த விசுவம், தனது சோதி யாதலினுல் = பிரஹ்ம ஸ்புரணமேயா மாதலின், அதற்கு வேறயலொன்றில்லை. அமைந்த + ஆகும் என்பதற்கு விடை. நீனு + தானும் = ஜகபேதமும், நிற்கின்ற வதன்வடிவாய் நீங்காது = திருக்குரூபமான ஆன்மாவின் ஸ்புரணமேயாம், தன்மயமே திருசியமாம், திருக்கின் விவர்த்த ரூபமாதலின் என்பதுகருத்து. சரித்தேயுஞ் சரியாதேது என்பதன் அர்த்தத்தை விவரணஞ் செய்கின்றூர்:—நானுவாம் பொருட்புணர்வால் = சர்வசம்பந் தத்தினுல், நடந்ததாகும் = சகலத்தைக் குறித்துஞ் செல்வதாம். (39)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மந்திரியின் வார்த்தையைக் கேட்டுப் பரமசந்தோடத்தை யடைந்த கற்கடி மன்னவன் வார்த்தையைக் கேட்க விரும்பலும் அவரைத்தலும்:— அடையென.

நீ அடைவதற் கொன்றிலாமையினு லில்லையாகு மனவரதஞ் சத்தையிலுண் டாகுமென்று, புடைபெயர் நன்மதியமைச்சன் புகலக்கேட்டுப் போதவியந்த தற்பின்பு பூபனேயுன், னுடைபவுணர் வுரையென்னவ வனுஞ்சொல் வானுல கத்திலுறுதியிலா வுறுதிதானே, தடையறுசிற் பரம்பொருளி னுறுதியாகுந் தற்பரத்தி னியல்பின்னுஞ் சாற்றக் கேளாய்.

(ப - ரை.) அடைவதற்கு ஒன்றிலாமையினுல் = ஆசிரயம் யாதொன்று மில்லா மையினுலே, இல்லையாகும் = இது நாஸ்தியாம், அனவரதஞ் சத்தையிலுல் உண்டா கும் = எப்போதும் உண்மையினுல் அஸ்தியாம், என்று = என இவ்வண்ணம், புடை பெயர் நன்மதியமைச்சன் = அநேகவித யூகங்களானே காரியத்தைச் சாதிக்கும் நல்ல புத்தியையுடைய மந்திரி, புகலக்கேட்டு = கூறச் செவியுற்று, போதவியந் ததற்பின்பு = மிகமிகவும் புகழ்ந்ததன் பின்னர், பூபனே = நரேந்திரனே, உன்னுடைய வுணர்வு = நினதுபோதத்தை, உரையென்ன = கூறுவாயாக வென்று கற்கடிவினவ, அவனுஞ் சொல்வான் = அம்மன்னவன் கூறுவான், உலகத்தில் உறுதியிலா உறுதிதானே = ஜகத் திற் பிரத்யய மில்லாதபிரத்யயத்தானே, தடையறு சிற்பரம்பொருளின் உறுதியாகும் = தடையிலாத சின்மயப் பரமாத்ம வத்துவின் பிரத்யயமாகும், தற்பரத்தின் இயல்பு இன்னும் சாற்றக்கேளாய் = அந்தப் பரப்பிரமத்தின் சுபாவத்தை மேலும் கூறக் கேட்பாயாக. (40

(ஸ்ரீ - வீர.) ஐந்தாவதன் விடை: உலகத்தில் யாதொன்றுளதாமோ அதுவோ பிரகாசியமும் நன்காசிரயிப்பதும் ஆம், இப்பரமாத்மா அன்னிய அப்பிரகாசியத் தன்மையானும் நிராசிரயத் தன்மையானும் இல்லையென்று சொல்லலாம், ஆயினும் பரமார்த்த சத்ரூபத் தன்மையாலே உளதென் றுரைக்கலாம். விஞ்ஞறையை யனுசரித்து மந்திரியிருலேயே உத்தரந்தத்தஞ் செய்திருத்தலின் அதனை யுபேக்ஷித்து வேறுமுறைபற்றிக் கூறுவான் ரெடங்குகின்றார் உலகத்தி லென்பதாதி, பரம்பொருளின் உறுதி = பரமபுருடார்த்த சாதனமாதலின். பிரத்யயம் = ஞானம், விழித்திருக்கும் விவேகிபுருடனுக்கு வாஸ்தவ துவைதஞான மின்மையின் உண்டாம் பிரஹ்மஞானம் என்பர். துவைதம் வஸ்துவாயிருக்கின்ற தென்னும் உணர்ச்சி அத்வைதஞானத் தடையாதலின் விழித்திருந்த போதினும் விவேகிக்கு அத்தன்மை யிருத்தலின் அத்வைதஞான மூண்டாயிருத்தல் பொருத்தமாம். விழித்திருக்கும் விவேகியினது எவ்வாஸ்தவ துவைதப் பிரத்யயுாபாவ மூளதோ அதனை யதன் காரணமாதலின் பரமவுணர் வென்பர். நேரேதுவைதத்தைக் கண்டபோதினும் எவனுக்குத் துவைதவிடய போத முதயமாவதில்லையோ அவனே யுண்மையாகக் கண்டோனுவன். சாக்ஷியானது விகாரமற்றிருத்தலின் துவைதஞான வடிவமாகப்பரிணமியாதாம் சொரூப சைதன்ய ஞானமானது கேவலஞ் சமுசார அதீத மானதாம். நடந்தும் நடவாதது யாது என்பதற்கே போலும் நில்லாதேயும் நிற்பதெது வென்னும் ஐந்தாவதற்குமாம்; இவ்வணுவானது தனது சத்தாரூபமான ஆகாசகோசத் துள்ளே தேசகாலங்க ளிருத்தலினல் ஒரு தேசத்திற் சென்றபோதினும் செல்லவில்லை, ஒருதேசத்திற்கு வந்தபோதினும் வருவதில்லை. அடையத் தக்கதேசம் இவ்வணுவி னுள்ளேயே யிருக்கும்போது இது எங்கே போகவேண்டும்; கும்பமுக மூடிக்கொண்டு போய்க் கொண்டுவரினும் அதிலிருக்கும் ஆகாயத்திற்குக் கமனாகமனங்கள் இல்லாததே போல ஆன்மாவிற்கு மில்லையாம் உண்டாயிருத்தும் இலாதது எது என்பது தனியினு வாயின் விடையிதுவாம்: சூக்குமமாகி, இவ்வணு குறிக்கப் பெறுததாய்ப் பரம ஆகாச மாக இருக்கும், இது சருவான்மகமாக இருந்த போதினும் மனுதிகட்கதீதமாகி யிருக்கும். இவ்வினுவில் இல்லாததா மென்னும் அங்கிசம் பாதிதமேயாம், சர்வான்மகத் தன்மை யுண்மையின் இது எக்காலும் எங்கும் சூனியமாவதேயில்லை; பாதிதமாமாறு:— எக்காரணத்தால் இருக்கின்ற தென்றும் இல்லையென்றும், கூறுபவனுயும் நினைப்பவனு யும் அவ்வான்மாவே யாமோ அக்காரணத்தால் வக்தாரமந்தாதி வடிவமாய் அதுபிரசித்த மாம், ஆகவே தன்வடிவத்தைத் தள்ளத் தகாமையின் இல்லை யென்னுந்தன்மை அதற் குப் பொருந்துவதே யில்லை, சத்திற்கு அசத்து விரோத மிருத்தலினனும் இது பொருந் தாதாம்; இருப்பதேயாயின் என்காணப் பெறவில்லை யெனின் ? வெட்டவெளியாகக் காணப் பெறுவிடினும் எல்லாவற்றினும் தொடர்ந்து நிற்கும் சத்துரூபத்தால் கற்பூரம் மூடிவைப்பினும் கூத்தத்தாற் காணப்படுவதேபோலகாணப் பெறவேயாம். மந்திரிவசன சமத்கார தரிசனத்தானே அரசனுக்கும் தத்துவஞான மிருப்பதாக நன்றுய்த் தெரிந்த போதினும் அரசனறைவதிற் சமத்கார அதிசயம் சம்பவிக்கும் எனக்கருதி அதனைக் கேட்கவேண்டுமென் றிச்சித்து இராஜரி கூறுகின்றார் போதவிதுவும் தென்பதாதி யாய். அகோ ஆச்சரியம் ! ஹே மந்திரியே ! கினது பரமார்த்த பாவநணமானது அதி பவித்திரமாக இருக்கின்றது, தாமரை யிதழ்போலும் நேத்திரமுடைய இவ்வரசன் இனிமற்றவற்றிற் குத்தரம் தருகவெனக் கற்கடி கூறுதலும் அரசன் கூறத்தொடங்கி அவ்வபிப் பிராயத்தைக் குறித்து எல்லாவினுக்களின் முக்கிய தாற்பரியவிஷயமான பிரஹ்மத்தை விரோத ஆபாசயுக்திமுக சமத்கார அதிசயத்தால் தரிசிப்பித்தல்; உலகத்

தில் என்பதாதி, அவஸ்தாத்திரய தரிசன இலக்ஷண ஜகத்சம்பந்தப் பிரத்யயத்தின் அபாவமாகிய போத இலக்ஷணையின் நிவிருத்தியே சுயமாகவிளங்கும் அதிஷ்டானரூப துரியலக்ஷண எதனதுதரிசனம் ஆமென்று புகல்வரோ அந்தப் பிரஹ்மத்தையே ஹே கல்யாணி ! நீ கூறினாய்.

(ச.) 5-வது, அடைவதற்கு = ஆசிரயிப்பதற்கு, ஒன்றில்லாமையினால் = தனக்கு வேறொன்றும் இன்மையினால், இல்லையாகும் = எவ்விடத்தும் நில்லாததாம், சத்தையி லுண்டாகும் = எவ்விடத்தும் இருக்குந்தன்மையினால் நிற்பதுமாம். எவ்வணுவி லுலக மெலா மிருக்கின்றது என்னும் விஞ்ஞுக்குப் பிரதமவிஞ் விவரணத்தினுற்றூனே அர்த்த மாயிற்றுதலின் விவரணஞ் செய்ததின்று; என்று இத்தன்மையான வாக்கியத்தைகேட்டு =கற்கடிவினவி, அவணுஞ்சொல்வான் = அரசன் பிரஹ்மசொரூபத்தை நிரூபிக்கின் றூன், உலகத்தினு+தானே = புருடனது.வாகிய பதார்த்தாணுசந்தான ராகித்தியமே, தடையறு சிற்பரம் பொருளினு றுதியாகும் = தானே விளங்குஞ் சைதன்யத்தின் பகிர் விஷேபராகித்தியமே ஏகஸ்வரூப ஸ்புரணமென்பது கருத்து. (40)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அதுவும் அதன்கண்ணேயே நிஷ்டையை யடையும் வடிவ மான அதன் பரிக்கிரகத்தால் ஆம் எனப் பரிக்கிரகத்தை லக்ஷணத்தோடுங் கேட்டி யென அரசன்கூறல்:—கருத்தென.

கருத்ததனுற் சங்கற்பவிகற்பமெல்லாங் கைவிடுதல் கைக்கொள்ளப் படுவ தாகுந், திருத்தமுறு தன்விரிவுங் குவிவுதானுஞ் சிருட்டியுங் கற்பமுமாகுந் திரள்வேதாந்தத், தருத்தமுறு வாக்கியத்தி னிட்டையாகு மவ்வேதவாக்கியத் துக்கயலுமாகு, முருத்திகழு முள்ளதில திரண்டினுக்கு முள்ளாகு மவையிரண் டினுருவுமாகும். (41)

(ப-ரை.) கருத்ததனுல் சங்கற்ப விகற்பமெல்லாம் = சித்தத்தினுலே சர்வசங்கற்ப விகற்பங்களையும், கைவிடுதல் கைக்கொள்ளப் படுவதாகும் = சங்யசித்தலே அதனைப் பற்றும் பரிக்கிரகமாம், திருத்தமுறு தன்விரிவும் குவிவுதானும் = மிகநிருமலமா யிரா கின்ற அதனது சங்கோச விகாசங்களாமே, சிருட்டியும் கற்பமும் ஆகும் = சகற்சிருட் டியும் பிரளயமுமாம், திரள்வேதாந்தத் தருத்தமுறு வாக்கியத்தின் நிட்டையாகும் = சாந்தோக்கியாதி வேதாந்தவாக்கியங்களின் நிரந்தரத் திதியாகும், அவ்வேதவாக்கியத் துக் கயலுமாகும் = அம்மறைமொழிகட் கசோசரமுமாகும், உருத்திகழும் உள்ளது இலது இரண்டினுக்கும் உள்ளாகும் = வடிவுபொலியும் உண்மையின்மை யென்னும் இருகோடிகளின் அந்தராளத் திருப்பதாகும், அவையிரண்டின் உருவுமாகும் = அவ்விரு கோடிகளின் மயமுமாகும்.

(ஸ்ரீ - வீர.) அந்தக்கரணத்தினுலே சருவசங்கற்ப சங்யாசமென்னும் சர்வதுவை தப் பிரத்யய சங்கத்தியாக நிருவிகற்ப சமாதியானது பரமாத்ம சாக்ஷாத்கார ஹேது வாதலின் ஆண்டே பரமான்மாவைக் கவர்தல்கூடுமென்றறிக. சங்கோச விகாசங்கள்= சங்கற்ப விகற்பலய உதயங்கள். நிட்டையாகும்=இலக்கணை விருத்தியாற் பரியவசான பூமியாகும்; ஆயினும் சப்தப்பிரவிருத்தி ஹேதுக்களாகிய ஜாதியாதிகள் இன்மையின் வாசாமகோசரமுமாம். அல்லது வாக்கிய ஜன்னிய விருத்தி வியாப்பியத் தன்மையானே அதன்கோசரத் தன்மையாம், அதனலுண்டாய பூல அவ்யாபகத் தன்மையால் அதன் அகோசரத் தன்மையாம், துவைத அத்வைத கோடி யந்தராளத் திருப்பதாகிய பிரஹ்

மம், துவைதாத்வைத கோடிகளாகிய பரஸ்பர அபேக்ஷிதத் தன்மையானே கற்பிதங் களினும் விலக்ஷணமாம், அதிஷ்டானமதாக அவற்றின் மத்தியிலிருப்பது ஆம். அல்லது சத்தசத்துக் கோடியந்தராளத் திருப்பதாம் " சத்தன்றத சத்தன்றெனச் சாற்றப்பெற லாகும் " என்னும் ஸ்ரீ பகவத்வசனத்தான், என்பதாம். காரிய காரணகோடியந்தராளத் திருப்பதெனவேனும், திருஷ்டாதிருசிய கோடியந்தராளத்திருப்பதெனவேனும் பிம்பப் பிரதிபிம்பகோடியந்தராளத்திருப்ப தெனவேனும், பந்தமுக்திகோடியந்தராளத்திருப்ப தெனவேனும் நியமியநியாமககோடியந்தராளத் திருப்பதெனவேனும், ஆம்; இவ்வெல்லா வற்றிற்குமே கற்பிதத்தன்மை யிருத்தலின் பிரஹ்மத்திற்கு அவற்றினும் விலக்ஷணத் தன்மையுண்மையின் அவற்றின் அந்தராளத்திருக்குந்தன்மை பொருந்துவதேயாம். அங் ஙனமாயினும் மாயையினாலே மலர்ந்தகோடியிரண்டன் வடிவமாம். அதனது பரிக்கிரகம் சுத்தசத்துவத்தால் சர்வசங்கற்ப சந்யாசமாம், எதனதுமாயிக சங்கோச விகாசங்களால் ஜகத் தின் பிரளயசிருஷ்டிகள் ஆமோ, வேதாந்த வாக்கியங்கட்கு நிரந்தரஸ்திதி யெஃதாமோ எது வாசாமகோசரமாமோ அதுவே அந்தப் பிரஹ்மமென்றுணர்தி, சத்துவ அசத்துவ பான அபானமென்னும் இரண்டு கோடிகளின் அந்தராளத் திருப்பதாம், வசனிக்க முடி யாததாம் அது, அதனானே ஆதி அந்தங்கள் அசத்துக் கோடியினாலே பீடிக்கப்படினும் மத்தியில் தேசிகபரிக்ரஹசம்பந்தமாகச் சிலபால் உளதுசிலபால் இலது எனக்கோடித் வமீமாம்சாந்தி மாம். இவ்வண்ணம் ஆதியந்தங்கள் அபானத்தாற் பீடிக்கப்படினும் மத்தியில் அவ்வவ் விந்திரியயோக்கிய ரூபமாக விளங்குகின்றது. வேறுவடிவமாய்த் தத்துவமாயும் விளங்குகின்றதில்லை என மத்தியில் கோடித்துவ மீமாம்சாந்தி மாம்.

(ச.) கருத் + விதல் = மனதாற் சர்வசங்கற்பங்களின் சந்நியாசமே, கைக்கொள் ளப்படுவதாகும் = வஸ்துவின் பரிக்கிரகமாம், கண்டஸ்தசாமீகர நியாயத்தால் நித்திய சங் கற்பம் நிஷித்தத்துக்குப் பகிர்சங்கற்ப வசத்தினால் மறதிவருதலின் அதற்கே சர்வசங்கற்ப பரித் தியாகம்வரின் சங்கிதானத்திற்றானே விளங்குமென்பது கருத்து. திருத்தமுறுதன் = வஸ்துவினது, விரிவு குவிவதானும் = விகாச சங்கோசங்களினாலேயே = விஸ்தார சம் க்ஷேபங்களினாலே, சிருஷ்டியும் கற்பமுமாம் = ஜகங்களினது உற்பத்திகளும் பிரளயங் களும் ஆம், திகழ்வஸ்து வேதாந்தத் தருத்தமுறும் வாக்கியத்தின் நிட்டையாகும் = வாக் கியங்களினது தாத்பரிய அவசான பூமியாம், தந்து வெள்ளறிவுதபுருஷனைக் கேட்கின் றேன் என்னுஞ் சுருதியினால், தம்துவா = அந்த உன்னை, ஔபநிடதம் = உபநிடதத் திற் சொல்லப்பட்டது. அவ்வேத வாக்கியத்துக் கயலுமாகும் அன்றியும் வாசாமகோ சரமுமாம், நாஞவித சப்தப்பிரவிருத்தி நிமித்தங்களான ஜாதியாதிகளின் அபாவமாத லின், உருத்திகழுமுள்ள திலதிரண்டினுக்கு முள்ளாகும் = வஸ்து பரஸ்பர விருத்தங்க ளான சத்துத்தன்மை அசத்துத்தன்மை ஸ்தூலத்வ சூக்ஷ்மத்வாதி விசேஷங்கள் என் னும் பக்ஷத்துவயங்களின் மத்தியத்திருப்பதாம், பக்ஷத்வயங்களைப் பரிசியாத சொரு பத்தி லிருக்கும் அஸ்தூலம் அனணு என்பன முதலிய சுருதிவாக்கியங்களால் நிஷில பக்ஷத்துவய நிடேதத்தினால் அவையிரண்டின் உருவமாகும், அன்றியும் ஸ்தூலசூக்ஷ் மாதி ரூபமுமாம் பிரமமே மீதனைத்தும் என்ற சுருதியில் பிரமஞ்சர்வப் பிரபஞ்சாதிஷ் டானமாதலாற் சர்வான்மகமாதலின். (41)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அரசன்கூறி முடித்தலும் கற்கடி சந்தோடித்துக் கூறத் தொடங்கலும்:—சராவென.

சராசரமா முலகனைத்து மனரூபத்தாற் ருன்செய்யும் விளையாட்டாஞ் சக மாய்கின்றும், புராதனமா மொருமையினிற் பிரியாதாகும் பூரணசின் மூத்திர

மாம் பொருளே சொன்னீர், நிராசையுளத் தவரறியும் பரமீதென்று நிருபனு ரைத்திடநிருதி நெஞ்சுட்கொண்டு, விராவமுத மழைசொரியக் குளிர்ந்தவா போன் மிகக்குளிர்ந்தாள் சாந்தமுற விளம்பலுற்றாள்.

(ப - ரை.) சராசரமாம் உலகனைத்தும் = ஜங்கம ஸ்தாவர வடிவமான ஜகத்தியா வும், மனரூபத்தால் தான் செய்யும் வியாபாரமாம் = அவ்வணுவின் சித்தமயீலீலையே யாகும், சகமாய் நின்றும் = விசுவான்மகத் தன்மையை யடைந்தபோதினும், புராதன மாம் ஒருமையினிற் பிரியாதாகும் = எப்போது மிருக்கும் ஏகபிண்டத்தன்மை கண்டிக் கப்பட மாட்டாதாம், பூரணரின் மாத்திரமாம் பொருளே சொன்னீர் = நிறைந்தசச்சின் மாத்திர சாசுவதப் பிரஹ்மத்தையே ஹேகல்யாணியே நீயுரைத்தனை, நிராசையுளத்தவர் அறியும் பரமீதென்று நிருபன் உரைத்திட = ஆசைதீர்ந்த சித்தத்தவர் தெரிந்துகொள் ளத்தக்க பரம்பொருள் இது என்று அரசன் கூறியபோது, நிருதி = கற்கடி, நெஞ்சுட் கொண்டு = கருத்துள்ளிருத்தி, விராவமுத மழைசொரியக் குளிர்ந்தவாபோல் மிகக் குளிர்ந்தாள் = அமுதங்கலந்த மழைபொழிய மயூராதி பரமதண்மை யடைந்ததேபோல அந்தர் சீதளத்தையும் பரம விசிராந்தியையும் அடைந்து, சாந்தமுறவிளம்பல் உற்றாள் = பரம சாந்தத்துடன் கூறத்தொடங்கினாள்.

(ஸ்ரீ - வீர.) இவ்வுலகமானது அவ்வதிஷ்டானத்தின் விவர்த்தபூத சித்தமயீலீலை யாம். அது சர்வான்மகமாக இருந்தபோதினும் ஏகசொரூபத் தன்மை கண்டிக்கப்பட மாட்டாது. மாயிகமாய அநேகசர சர்வீதாத்மியத்தானே வாஸ்தவத்தன்மை வாய்ந்த ஏகரசத்தன்மை கெடமாட்டா தென்பது பொருள், நெஞ்சுட்கொண்டு என்றதனால் பிரஹ்மாத்ம ஞானமானது பிரத்யக்ஷபலமெனக் காட்டற்பொருட்டாம். சத்து அசத்துச் சந்நிரூபமாயும் சித்து அசித்துச்சந்நிரூபமாயும் இராநின்ற இரணியகர்ப்பவடிவ அதனது சித்தத்தின் விகாரமாதலின் சராசரமான இவ்வுலகம் லீலைவடிவமாம் அது விசுவவடி வமா யிருந்தபோதினும் அதன் அகண்ட வஸ்துத்தன்மை கண்டிக்கப் படுவதின்றும். அத்தகைய சன்மாத்திர சாசுவதப் பிரஹ்மமே உன்னால் வினவப்பட்டது. ஒவ்வொரு வினவிலும் ஆன்மாவின்கண் அணுசப்தப் பிரயோகத்திற்கு மந்திரியாலே எவ்வப்பி ராயமானது "பெயரின்மையானும் மனமுதலியபொறியாறன் நிலைமைக்கு மன்னி விட யமாகாமையானும், சின்மாத்திரமேயாய ஆத்மாவானது இங்ஙனம் ஆகாயத்தைப் பார்க்கினும் அதிசூக்ஷ்மத்தாம்" என இவ்வண்ண மியம்பப் பெற்றதோ அதுவே கற் கடியானுங் கருதப்பட்டது, அங்கிகரிக்கவும் பட்டது, என்பதாகத்தானே. யாதன்று அணுத்தன்மை னிந்து தனக்கிருக்கும் வியாபக ஞானத்தன்மையைக் காண்பிப்பான் அதனைத்தூடிப் பான் பூரணமென்றதாம். சுத்தசம் வேதன ஆகாசரூபத்திற்குப் பரம அணுவோடு மேரு விற்குங் கடுகுக்குமே போல ஒப்பிட்டுக் கூறியது அழகாகவில்லை; சூக்குமத்தன்மை மாத்திரத்தானே பரிச்சின்னமாகாதாம் பரிச்சேத வுற்கர்ஷ அவதி பரமாணு சாதிருஷி யம்பற்றிக் கௌணீ விருத்தியினாலே அணுவென வியம்புதற்குக் கூடுமென்றுணர்க, ஆயின் எங்ஙனம் அணுவுக்கணுவு மகத்துக்கு மகத்து, இவ்வணுவாத்மா சித்தத்தாலுண ரத்தக்கதாம்" என்பதாதி சுருதிகளில் அவ்வாறுபதேசங் கூடுமெனின்? சர்வசக்தி யோடு கூடியிருத்தலின் மகத்தன்மையைப்போல அணுத்தன்மையும் ஆன்மாவின் கண் ணே மாயையால் உண்டாக்கப்பட்டு நிற்குந்தகைமைத்தாதலின் முக்கிய விருத்தி யேயா மீண்டணுச் சப்தம்; ஈண்டுச் சமத்தன்மை நிமித்தமாகாதாம்; மாயையாற் பூஷித மாய்ச் சபளமாயுதலால் அணுத்தன்மை பரமாத்மா வின்கண் நிர்மிக்கப்படுளது, அதன்

பால் கனகத்திற் றன்னிர்மித கடகாதித் தன்மையைப்போல் அணுத்தன்மைச் சமத்துவ மாக மாட்டாதாம்; இன்னணம் மாதலினன்றே " மயிர்நுனியின் நூற்றி லொருபாகத்தை நூற்றிலொன்றுய்க் கற்பிப்பின் அப்பாகம் ஜீவனென வறிந்துகொள்க " என்பதாதி சுருதிகளும், மயிர்நுனியின் சதபாகம் ஆத்மாவென்னும் நினது வசனமும் மணம்பெறு வதாகும். விரையிற் றருவிருப்பதேபோல எவ்வணுவின்கண் ணுலகங்க ளிருக்கின்றன வென்னுஞ் சங்கைக்குச் சிறிது கூறுவாம்: சிதாத்மாவாகியபரமாணுவின்கண் ணுலகங்க ளெல்லாம் இருக்கின்றன. அதனுனேயே ஜகத் சம்பந்தமான தோற்றங்கள் தோற்றுகின்றன. யாது எதன்கண் ணுளதாமோ அது அதனினின்றும் உண்டா கின்றது அது அதுவே யாகின்றது, ஸ்தம்பத்தினின்றுந் தோற்றுகின்றபதுமை ஸ்தம்ப மாத்திரமாகவே இருக்கின்றதன்றே ! நிருமலமாக நிஷ்கிரியமாக விருக்கும் ஆகாயத்தில் விகாராதிகள் யாதொன்றுங் காணப்படுவ தில்லையன்றே ! அவ்வண்ணம் ஜகதாதிகள் யாதொன்றும் நிர்மலமாகிய தன்னிடத்தில் இல்லையாம், இல்லையெனின் வேதாந்தங்க ளில் திருஷ்டிசிருஷ்டிவசத்தால் திருஷ்டிவசத்தால் திருஷ்டிவசத்தால் தி

யன்றி வாஸ்தவ அசத்துவ அபிப்பிராயத்தாலன்றும். துவைதமானது அபேக்ஷையோடு கூடிய வடிவமாதலின் பொய்யாகுக, ஐக்கியமோ இருமையின் அபேக்ஷையை யெய்தா மையின் உண்மையே யாமென்றுக எங்ஙனம் இரண்டு மில்லையென்று கூறலாமெனின்? கூறுவாம், யாதேனுமொரு துவிதீயம் உண்டாகுமாயின் அக்கால் எகத்திற்கு ஒருமை யாம், துவைத ஐக்கியங்களின் பரஸ்பர சித்தியானது ஆதிப்ச் சாயைகட்கே போலுமாம் துவிதீய விலக்கப் பொருட்டுக் கற்பிதமாய சங்கைரூபமும் துவிதீய சாபேக்ஷம் துவித் வாதி துல்லியமேயாம் என்னுங்கருத்தாற் கருதில், யாண்டிரண் டென்பதே யிலதோ ஆண்டு ஒன்றன் ஒருமையாங்ஙனம்? ஒருமையானது அசித்தமாகவே இரண்டே யிரா தாம். இருமையும் தனித்தது ஆதல் யாங்ஙனம் மகாஜலத்தின் திரவத்தன்மைபோல வென்னும் அங்கிசம் விவரணிக்கப்படும்: இவ்வண்ணம் துவைத ஐக்கிய சூனியத்தன் மையதாகத் தத்துவமிருந்த வழி யாது அத்தகைய துவைத ஐக்கியமுடையதே போல வும் துவைதஐக்கியம் போலவும் இருந்திலங்குமோ அதனினின்றும் அந்தத்துவைத ஐக்கியரூபம் நீரில் நெகிழ்ச்சியே போலும் வேறுகமாட்டாதாம். விரிவு பெரியவாசிட் டத்திற்காண்க. இவ்வண்ணம் இறைவன் வாயிலாகக் கற்கடியாகிய வண்மற்கடியான வள் கேட்டுப் பிரஹ்மபதத்தை யுணர்ந்ததனுலே மூல உச்சேதத்தால் நாசமான தன் ஜாதிக்குரிய மற்சரசாபலத்தை விட்டொழித்தனள். உட்சீதளத் தன்மையை யடைந்து, பாகியதிருஷ்டி சந்தாபத்தன்மை தீர்ந்து பரம விசிராந்தியை, மழையை யடைவுற்ற நன்மயூரம்போலவும், குளிர்மதி யொளிபெற்ற குமுதவதீபோலவும் அடைந்தனள்.

(ச.) சராசரமா மூலகனேத்தும் = இச்சராசரப் பிரபஞ்சம், மனரூபத்தால்=சித்த விலாசமாத்திரமாம், சகத்துச் சித்தசலன மாத்திரமாதலின், தான் செய்யும் விளையாட் டாம் = வஸ்துவின் லீலையாம், சகமாய் நின்றும் = சகத்துரூபமாயிருப்பினும், ஒருமை யினிற் பிரியாதாகும் = சிற்கனரூபத்துவங் கண்டமாகாது, புராதனமாம் = விவர்த்த மாய்த்தோற்று மிடத்தும் பூர்வரூபத்தை விடாததாலின், பூரணசின்மாத்திரமாம் பொ ருளே சொனனுய் = சன்மாத்திரமும் அத்விதீயமும் சாசுவதமும் ஆன பிரஹ்மவஸ்து வையே மங்களரூபமான கற்கடி நீ வினுவினுய், ஸ்ரீ வசிட்டர்: கிருதிநெஞ்சுட்கொண்டு= கற்கடிகேட்டு அவ்வஸ்துவை உள்ளத்துணர்ந்து, குளிர்ந்தவாபோல்=வருடகாலத்தை யடைந்த மயூரிபோலும், சந்திரிகையால் ஆம்பலோடை போலும், மிகக்குளிர்ந்தாள் = மச்சர சாபலத்தைவிட்டு இருதயத்து அதி சீதளத்தை யடைந்தவளாய், சாந்தமுற்று= விசிராந்தி பதத்தைப்பெற்று, விளம்பலுற்றுள்,

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்வண்ணம் அரசனது வாக்தாரையினுலே அக்கற்கடிக்கு ஆகாயத்தில் மேககர்ச்சனையினுலே பலாகை யென்னும் பறவைக்கு உள்ளே களிப்பம் உண்டானதேபோல அத்தியந்தம் ஆனந்த முண்டானபின் அவள் அறையத் தொடங் கல்:—அற்புதவென.

அற்புதமா யமுதமாயறிவே யாகியத்த மனமுதயமிலா வருக்கன்போ லாய்ப், பொற்புமிகும் புந்தியுளவும்மைப் போல்வார் பொன்னடியை முடியா கப் புனைந்தாரன்றே, தற்பரமா மூலகாளும் வேந்தராவோர் தமையுணர்ந்தோ ரைச் சேர்ந்தாற் ளுளர்வுண்டாமோ, நற்பயன்போல் வருமுமக்கிங் கதிகின் றேனு நான்செய்யுங் கைம்மாறு நவிலுமென்றுள்.

(ப - ரை.) அற்புதமா யமுதமாய் = அதிபவித்திர ஆச்சரியகரமாய் அத்தியந்தங் கெடாத சாரபூதமாய், அறிவேயாகி யத்தமனம் உதயம் இலா அருக்கன் போலாய் =

எழுதல் விழுதலில்லாத சிற்கனப் பிரபோதசூரியனு லிலக்கப்பெற்றதாய், பொற்புமிகும் புந்தி = உங்களதுமதி மிகக்கவின் வாய்ந்து மிளிர்கின்றது, உள உம்மைப்போல் வார் பொன்னடியை = அத்தகைய மதிமான்களாகிய உம்போல்வாரது அழகிய திருவடியை, மூடியாகப் புனைந்தார் அன்றே ! = சிரத்திற் கிரீடம்போலத் தரித்தவர் அல்லவோ, தற் பரமாம் உலகாளும் வேந்தர் ஆவோர் = அதிசுந்தர உலகபரிபாலன மன்னவராவோர், தமையுணர்ந்தோரைச் சேர்ந்தால் = தமதுண்மை யுணர்ந்த மகத்துக்களைச் சேவித்துக் கொண்டிருந்தால், தளர்வு உண்டாமோ = மீண்டுந் துக்கம் பாதிக்குமோ, பாதியாதாம், நற்பயன்போல் வரும் உமக்கு இங்கு = இச்சாங்கலத்தில் நற்றவத்தின் பிரயோஜனத் திற் கொப்பாக எழுந்தருளி வந்த உங்கட்கு, அரிதின்றேனும் = இவ்வுலகத்தில் கிடை யாதது ஒன்றின்றேனும், நான்செய்யும் கைம்மாறு நவிலும் என்றாள் = அடியாள் தங் கட்குச் செய்யத்தக்க பிரதியுபகாரத்தைக் கூறவேண்டும் என்றனள்.

(ஸ்ரீ - வீர) சிறந்த ஞானமுண்டானவர்க்குக் கருமலோப மின்றேனும் தேகவீழ்ச்சி வரையும் நன்னெறியிலேயே நிலையான துண்டாம் என்பதை அற்புதமென்பதாற் காட் டியதாயிற்று. அற்புதம் = சந்தோஷ அறிகுறி, மதி = சேமுஷி = புத்தியென்பன ஒருபொருளைக் காட்டுவன, கெடாதசாரம் = நட்டமற்ற ஆற்றல், சாங்கலம் = மருப் பூமிவனம், அகோ ஆச்சரியம் ! தங்களுடைய பவித்திரமாகிய இம்மதியானது அத்தமி யாத சாரத்தோடுற்ற பிரபோத அருக்கனுல் விகசிக்கப்பட்டதாகி, யொளிர் கின்றது; சீதளமாகிச் சமரசமாகித் தாய்தாகிச் சசிமண்டலத்தினின்றும் பிரவிருத்தமாய குளிர்ந்த அமுதகிரணம்போல ஒளிர்கின்றது. தங்களுடைய புத்தியின் சம்பந்தமாகவரும் வாக்கு வாயிலாக விரியும் விவேக அமிருதத்தின் கணிகையைக் கேட்டுக் கற்கடியாகிய யான் தங்களைப்போன்ற விவேகிகள் ஜகத்பூஜ்ஜியர்கள் சேவைசெய்ய யோக்கியர்கள் மூமு க்ஷுக்களால் என்றெண்ணுகின்றேன் பெரியோர்களுடைய சங்கத்தினுலே ஒரு மூறை விவேகபாதித மாகியதுக்கம் மீண்டும் பாதிக்கமாட்டாது, தீபசிகையைக் கையில்வைத் துக் கொண்டுள்ள யாவர்தாம் தமத்தாற் றளர்ந்து வருந்துவர் ! இப்பாலவனத்தில் விரும்பாமலே வந்துற்ற பூமி பாஸ்கரர்களாகிய தாங்கள் என்னுல் இவ்வார்த்த தானத் தானே பூஜிக்கத்தக்கவர்கள் ஆவீர்கள், ஆகலின் வாஞ்சிதசுபத்தை விரைவி லுரைப் பீர்களாக. (43)

(ச.) அருக்கன்போலாய், பொற்புமிகும் = பிரபோதப் பிரகாசமிருந்த, தளர்வுண் டாமோ = பின்புதுக்கம் வராது.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அரசன் அவாவியது கேட்டலும் கற்கடி யளித்தலும் கூறல்:—சிலையென.

சிலையரக்கர் குலமென்னு மெட்டிக்காட்டிற் செறிகனித்தே மாவனையாய் சகத்திலொன்றுங், கொலைபுரியா தொழியென்று வேந்தன்கூறக் கொலையொ ழிந்தே னென்றரக்கி கூறலோடுந், தொலைவரு மூனுணவாரீ செய்யுமாறென் சொல்லென மன்னவன் கேட்பத்தொல்லை நாளி, லலைவில்சமாதியி லிருந்து பசியைவென்றே னவ்வகையே யின்றுமிருந் தாற்றலுற்றேன். (44)

(ப - கை.) சிலையரக்கர் குலம் என்னும் எட்டிக்காட்டில் = விற்றுங்கிக் கற்போ லும் கடினமனத்தோடு முழுலும் இராக்ஷதர் குலமாகிய எட்டிக்காட்டில், செறிகனித் தேமா அனையாய் = பழங்கள் நிறைந்த தேமாவுக் கொப்பாய், சகத்திலொன்றுங்கொலை

புரியாதொழி = இவ்வுலகத்தி லொன்றையும் கொலைசெய்யாது விட்டுவிடுவாயாக, என்று வேந்தன்கூற = எனமன்னவன் சொல்ல, கொலையொழிந்தேன் என்றரக்கிகூற லோடும் = ஹிம்சையை விட்டுவிட்டேன் என்று கற்கடி கூறியபோது, தொலைவரும் ஊன் உணவா நீ = அபரிமிதமான தேகங்களே ஆகாரமாகக் கொள்ளும் நீ, செய்புமாறு என்சொல்லென = இனியாகாரஞ் செய்யும்விதம் எவ்விதம் என்று சொல்லுவாயாக வென்று, மன்னவன் கேட்ப = அரசன்வினவ, தொல்லைநாளில் = முன் அநேககாலம், அலவில் சமாதியிலிருந்து = நிர்விகற்ப நிட்டையில் நிலைத்து, பசியை வென்றேன் = ஜாடராக்கினியைச் சாந்தி செய்தேன், அவ்வகையே இன்றும் இருந்து ஆற்றல் உற் றேன் = அவ்விதமே இனிமேலும் சமாதியிலிருந்து பசியைவெல்ல உத்தேசிக்கின்றேன்.

(ஸ்ரீ - வீர.) ஹே அரக்கர்குலமேயாய கானனமஞ்சரீ ! உன்னுல் இனிப்பிராணி யாதுமே ஹிம்சிக்கத் தகாததாகவேண்டும் என்பதனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகின் றேன், ஒழிந்தேன் என்பதுண்மையே. எமதிஷ்டத்தை நிறைவேற்றின் நின்னுலேக் காப்பாற்றுவதற்குச் செய்யுமாறென் ? ஹே அரக்கர்குல கானன அத்வைத ரசமஞ்சரி ! இத்தேசத்தில் எப்போதும் அத்தியந்தம் இருதய சூலனம் பாதிக்கின்றது; ஆகலின் எல் லாப் பிராணிகளுமே திடவிரேகையினுலே தாக்கப்பட்டு மிகவுந் தபிக்கின்றனர், அக் காரணங்கொண்டே மண்டலத்தில் இராச்சோதனையின் பொருட்டு யான் வெளிப் போந்து வந்தேன், ஆகலின் மந்திர அடைவு சம்பவியா விடினும் வேருென்று வேண்டு கின்றேன், என்னெனின் ? ஹே மங்கள மங்கையே! இத்துணைமாத்திரவசனம் உன்னுல் அவசியம் அங்கீகரிக்கப் படவேண்டும், இனிமேல் எப்பிராணியுமே உன்னுல் ஹிம்சிக் கப்படா திருக்கவேண்டும் என்பதே. என்பதைக்கேட்ட கற்கடிகூறல்; ஹே பிரபுவே ! இன்று முதலாக நிச்சயமாய் நீர்புகன்ற வண்ணமே செய்கின்றேன் இது சத்தியமேயா கும் மித்தையேயன்று இக்கணமுதல் என்னுல் ஒரு பிராணியுமே ஹிம்சிக்கப் படமாட் டாது, இவ்வண்ணம் எனது வேண்டுகோட் கிணங்கிய யுன்புகன்ற அஹிம்சாவிரதத்தில் இருப்பையே யாயின் ஹே விரிவிரைமரை விழியாய், பரதேகத்தையே பக்ஷிமனவுடை யாய் ! நினது சரீரவிவகாரம் நிகழுவது எவ்வாறுகூடும் ? கற்கடிகூறல்: ஹே இராஜ இராஜனே ! ஹிமகிரியில் பெருஞ் சமாதியினின்றுங் கிளம்பி ஆறுமாதமாகத் தியானஞ் செய்துகொண்டே யிருந்தேன், போஜன சங்கற்பத்தால் இன்று எனக்குப்போஜன இச்சையான துண்டாயது.

(ச.) அரசன்: இன்றுமுதற் கொலை யொழிந்தேன் சத்தியமே என்று, ஊன் = பர தேகங்களே, உணவாநீ = முக்கிய போஜனமாகக் கொள்ளும் நீ, செய்புமாறென் = நினது சரீரவிருத்தியாதற்கு என்செய்வாய், தொல்லைநாளில் = இமகிரி முடியில் வெகு காலம், அலவில், பசியை = போஜன வாஞ்சையை.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கற்கடி பதிலுரைக்கும் விதங்கூற அரசன் வேறுபாயங் கூறல்:—தெள்ளென.

தெள்ளமுத தாரணையால் வேண்டுங்காலந் தேகமுடனிருந்தப்பாற்றேகந் தீர்வேன், உள்ளதிறை யுணர்வுடையே னென்றுங் கொல்லே னுண்மையென வுரைத்தேதக வுன்னுவாளேக், கொள்ளரிய நட்பெளிதிற் கொண்டேம் நீ யெங் குலமகளா யெம்பதிக்குக் கூடவேகிற், கள்ளருட விரைதருது முடல்போமட் டுங் கருதுமுடல் வரதனேகள் கழலாகண்டாய், (45)

(ப - ரை.) தெள்ளமுத தாரணையால் = சமாதியிற்றெளிந்த அமுததாரணையினாலே, வேண்டுங்காலம் = ஆயுள்வரை, தேகமுடனிருந்து = சரீரத்தோடிருந்து, அப்பால் = பின்னர், தேகம் நீர்வேன் = உடம்பை விட்டொழிப்பேன், உள்ளதிறையுணர்வு உடையேன் = மனத்தின்கண் பரிபூர்ண சிவஞான முடையவளாக இருத்தலின், ஒன்றுங் கொல்லேன் = ஒருயிரையும் ஹிம்சியேன், உண்மையென = இது சத்தியமென்று, உரைத்து = பிரதிஜ்ஞை செய்துவிட்டு, ஏக உன்னுவாளே = செல்ல முயன்ற கற்கடியை, கொள்ளரியநட்பு எளிதிற் கொண்டேம் = கிடைத்தற் கருமையான சிநேகம் அதிசுலபமாக அடைந்தேம், நீ எம் குலமகளாய் = எமதுகுல குமரியாய்நீ, எம்பதிக்கு = எமதுநகர அரண்மனைக்கு, கூடஏகில் = கூடவருதியேலாயின், கள்ளர்உடல் இரைதருதும் = தீயோர் சரீரங்களே உணவாகக் கொடுப்பேம், உடல்போமட்டும் = சரீரம் நீங்கும் பரியந்தம், கருதும் உடல் வாதனைகள் = எண்ணுஞ்சரீரவாசனைகள், கழலாகண்டாய் = நீங்காதென்பது நினக்கேதெரியும்.

(ஸ்ரீ - வீர.) இச்சரீரமாகிய பதுமை யிருக்கும்வரை ஹிம்சாரிச்சிகரத்தில் தியானஞ் செய்துகொண்டே யிருப்பேன். அரிதிற்கிடைத்த சிநேகத்தை வீணே போக்குதல் உரித்தன்றன்றே. உங்கள் ஆகாரம் எமக்குப் பிரீதிகரமாகா தெனின் விடைதருவார் கள்ளர் உடல் என்றீர் இதிற்கள்ளர் என்றது விதியால் இன்னுசெயினு மினிதியாம் என்றபடி, இப்போதே ஹிமசிகரஞ் சென்று முன்போன்றே தியான நிச்சலசமாதியைக் கைக்கொண்டு இச்சையுள்ள பரியந்தம் சுகமாகவே மரத்தாற்செய்த பதுமைபோன்ற உயிரொடுடம்பொடு மிருப்பேன், சாங்காறும் அமுத தாரணையைப்பற்றித் தேகத்தைத் தரிப்பேன், இப்போது முதல் தேகத்தை வீழ்த்தும் பரியந்தம், அமிருதாத்ம பாவனை வடிவதாரணையைப் பற்றியயான் அயல் உயிர்களைக் கொல்லவேமாட்டேன், எங்ஙனுஞ் சிவமேயென்று நோக்கிடுவேன். பரமஞானியாய்ப் பரத்தையே நாடிக்கொண்டேயிருந்து இஷ்டமானபோது தேகம்விடித்து விதேகமுக்தியை யடைவேன்; என்று சிநேகபாவத்தை யடைந்த அவ்விருவரையும் நோக்கிக்கூறிய பின்னர் அவரை விடுத்துச் செல்லமுயலும் கற்கடியை நோக்கி யரசன் கூறுவதாவது. ஹேமகா தேகத்தையுடைய கற்கடி! ஹேசுந்தரி! நீ பெரியவளாயும் சிநேகிதையாயும் இனியவளாயு மிருக்கின்ற படியினாலே எங்கள் கிராமத்திற்கு வரும்பொருட்டு மிகமுயல்வுடன் விருந்தளிப்பான் அழைக்கின்றேம். சுந்தரியென்றது இருதய சௌந்தரியம் பற்றியாமென்க. நாம்கொண்ட அதிப்பிரியபரம் நேயத்தை வீணுக்குவது தருதியல்ல, நல்லோர்தம் நேயபரவம் நாட்டமாத்திரத்தானே வளர்ந்தோங்கு மன்றே. அற்பப்பிரமாணமாய்ச் சௌந்தரிய அலங்கார முதலியவற்றோடு கூடிய மனோரம்மிய தேகத்தைக் கொண்டு எமது அரண்மனைக்கு வந்து அவ்விடத்தில் இஷ்டப்படி சுகமாக வசிப்பாயாக. ஹேமன்னவனே! சாதாரண மங்கை வடிவமுற்ற குமரிக்கு மனுடயோக்கிய அன்னபானாதி கொடுக்க உமக்குமுடியும், இராகூசாகார தாரிணியாகிய என்னை யெவ்வாகாரங் கொண்டு சுந்தோடிக்கச் செய்வாய், எனக்கு அரக்க அன்னமே சந்துட்டியைத்தரும், சாமானியசன அசனம்சந்தோஷியாது பூர்வசித்த சுபாவமாகிய இது உடம் புள்ளவரை நீங்கமாட்டாது. அரசன்கூறல் எமது வீட்டில்வந்து ஹேம மாலைகளையும், ஹேம சூத்திரங்களையும் அலங்கரித்துக் கொண்டு சிலதினம் யாவரும் புகழும்படியாக எங்கள் பெண்போலிருந்து வருதியேல்; பின்கொடுந் தொழில் புரிவோர் கொலையினைப் புரிவோர் களவினைச் செய்வோர் வதஞ்செய வுரியோர் என்னு மித்தகையரை நூறுயிரக்கணக்காக உனக்கு இச்சையுள்ளவரை மண்டலங்களினின்றும் தருவித்து நற்போஜனமாகத் தருவேம்.

(ச.) உள்ளதிறை யுணர்வுடையேன் = சிவஞ்சர்வகத மென்னும் போதமுடையவன், ஒன்றுங் கொல்லேன் = இனித் தேகாந்தமட்டும் ஒருயிரையும் இம்சியேன், ஏக = அச்சுகிர்தரை வீட்டுப்போக உன்னுவாளை; நோக்கி யரசன்கூறல்: எளிதில் = தரிசனமாத்திரத்திலுல் கொண்டேம், நீ யெங்குலமகளாய், நீ எம் விசுவாச சிநேகத்தை வியர்த்தஞ் செய்தற் குரியையாகாது, மநோகர சௌபாக்கியவதியான சிறுபெண்வடிவாகி, வாதனைகள் பூர்வசித்தமான சுபாவம், கழலா = நிவிர்த்தியாகாது, கண்டாய். (45)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மன்னவன் வேண்டிக்கொண்ட வண்ணம் கற்கடிசென்று பாதகரைப் பற்றியேகல்:—ஆதலினென.

ஆதலினுற் பதகருடலிரைகீயக்கைக்கொண் டரும்பசிபோய்ச்சமாதிதனையடைபிவ்வாறு, காதலுடன் பலகாலுஞ் செய்தியென்று காவலன் கூறவுமுரக்கிகளிகூர்ந்தேகப், போதகமன்னர் தமது நகரமேவிப் பொன்மணிபுக் காரிரவி பொலியவந்தான், பாதகர் மூவாயிரரை யாறுநாளிற் பார்த்திபனீ தானரக்கி பற்றிக் கொண்டாள். (46)

(ப - ரை.) ஆதலினுல் = விதேகமுக்திவரையும் வாதனைகள் இருக்குமாதலினுல், பதகருடல் இரையை கைக்கொண்டு = பாதகருடைய ஆகாரத்தைப் பெற்றுக்கொண்டு, அரும்பசிபோய் = கொடியபசி நீங்கி, சமாதிதனையடை = சமாதியை யடைந்து சுகித்திரு, இவ்வாறு காதலுடன் பலகாலும் = இவ்வண்ணமே அன்போடும் எப்போதும், செய்தியென்று = செய்வாயாக என்று, காவலன் கூறவும் = மன்னவன் மொழிந்தபோது, அரக்கி களிகூர்ந்தேக = கற்கடி மகிழ்ச்சியுடன் செல்ல, போதகம் அன்னர் = சிங்கக்குட்டிக்குச் சமானமான அம்மன்ன மந்திரிகள், தமது நகரமேவிப் பொன்மணிபுக்கார் = தங்களுடைய பட்டணத்தை யடைந்து தங்கமய அரண்மனை புகுந்தார்கள், இரவிபொலியவந்தான் = சூரியன் இவ்விருத்தாந்தத்தை யொளிர் விப்பான்போல உதயமாயினன், ஆறுநாளில் = ஆறுதினங்களில், பாதகர் மூவாயிரரை = மூன்றுயிரந் துட்டரை பார்த்திபன் = அரசன், ஈந்தான் = கொடுத்தான், அரக்கி பற்றிக்கொண்டாள் = கற்கடி கவர்ந்து கொண்டனள்.

(ஸ்ரீ - வீர.) பின்னர் காந்தாரூபத்தைப் பரித்தியாகஞ்செய்து, இராகூஷ சரீரத்தைக் கவர்ந்து, சேர்க்கப்பட்ட நூற்றுக்கணக்கான கள்ளபுருடரை யெல்லாம் கொண்டு ஹிமாசல சிருங்கத்தை யடைந்து ஆண்டு இன்பமூறுமாறு புசிப்பாயாக; பெருந்தீனிக் காரருக்கு ஏகாந்தத்திற் போஜனஞ்செய்தல் இன்பத்தைத் தருவதாகுமன்றே ! ஆகாரத்தாற் றிருப்தியை யடைந்தபின் சிறிது நித்திரைசெய்து விட்டு மறுபடியும் சமாதியை யடையலாம், சமாதியினின்றுங் கிளம்பில் மீண்டும் ஒருகாலத்தில் வந்து சேர்தியேல் வதஞ்செய்ய யோக்கியரைச் சேர்த்துத்தருவேம் கொள்ளலாம்; தருமசாஸ்திர மரியாதையாய் ஹிம்சைசெய்வது அவரை ஹிம்சை செய்ததாகாது. சுவதருமமாகச் செய்யும் ஹிம்சையே பெருங் கருணைக்குச் சமானமாம். சமாதியிற்சை யொழிந்தபோது நீயவசியம் எம்மைவந் தடைவாயென் றெதிர்பார்க்கின்றேம், அசத்துத்துட்கட்கும் உற்ற அருமேயமானது அகலுவதே யில்லை. கற்கடிகூறல்: ஹே நேயமிகுந்த மன்னர்மன்ன ! நீர் நிகழ்த்தியது பொருத்தமாகவே யிருக்கிறது, யான் அவ்வாறே செய்கின்றேன்; நேயபரவத்தோடு முயன்றவர்க்கு எவ்வாக்கியந்தான் ஆநந்தருசியைத் தராது: ஸ்ரீ வசிட்டபகவான் கூறல்: இவ்வண்ணம் இயம்பிய கற்கடியானவள், ஆண்டு அதிசுந்தரியான ரூபத்தை யடைந்து ஹாரகேயூர கடக காஞ்சிபட்டம் பட்டவஸ்திரம் அநேக விசித்திர ரத்நமாலை

கள் சுகந்தமாலைகள் முதலியவற்றை யலங்கரித்துக்கொண்டு, ஹே அரசரே! வாரும் போவோம் எனப்புகன்று பூபமந்திரிகளை முன்னர்ப் போகவிடுத்துப் பின்னர் அவ்விர விலேயே தானும் பின்றொடர்ந்து சென்றாள். அவர்கள் பார்த்திவன் அரண்மனையை யடைந்து அவ்வீரவை இரம்மியமான ஒருசாலையிலிருந்து பரஸ்பரம் ஞானநற்கதைக ளானே மிக ஆதரவோடுங் கழித்தனர். விடிந்தபின் மந்திரியும் அரசனும் தாங்கள்செய்ய வேண்டிய ஜனபாலன வுத்திய சம்பாஷணைதி வியாபாரங்களிற் சென்றனர், கற்கடியோ அங்குள்ள ராணீமார்களுடன் விளையாடிக் கொண்டு அந்தப்புரத்தில் மகிழ்ந்திருந்தனள். பின்னுறு தினங்களுக்குள் மன்னர்மன்னன் தன் மண்டலங்களி னின்றும் அன்னிய அரசர் புரங்களினின்றும் தருவித்துச் சேர்த்த மூவாயிரம் பாதகரைக் கற்கடிக்குக் கொடுத்தனன்.

(ச.) பதகர் = துஷ்டகிருத்தியரும், சோரரும், கொலைசெய்பவரும் ஆகிய இப்பா விகளது, கைக்கொண்டு = காந்தரூபத்தை விட்டுக் கிரகித்து, மிகப் புழுப்பவர்க்கு ஏகாந்தபோஜனமே சுகநிமித்தமா மாதலின் நீ ஹிமகிரிமுடியை யடைந்து புஜித்து, அரும்பசிபோய் கொஞ்ச நித்திரைபோய பின்பு சமாதியினையடை, காதலுடன் = சுதர் மத்தினுலே செய்யுமிக்கொலை மகாகருணையோடு சமமாதலின் அன்புடன் = களி கூர்ந்துநிநேகபாவத்தால் உன்னுற் சொல்லப்பட்ட வாக்கியம் நன்றென்று சந்தோஷ மிகுந்து, ஏக = அவருடன் பின்னுலே செல்ல

(ஸ்ரீ - வீர - அ - கை.) திருடரைக் கைப்பற்றித் தின்றிமகிரியில் மீண்டு மீண்டும் வந்துபோய் நேயமிக்கனரெனக் கதையை யுபசங்கரிக்கின்றார்.—பூமகளென.

பூமகள்போலங் கிருந்தவடிவைக் கங்குற்போதி லொழித்தாக் கர்குலப் பூவையாகிப், பாமரராம் பாதகரைத் தோண்மேற் கொண்டு பார்த்திபனே டணைமச்சனுக்கும் பண்புகூறி, யேமமூறுமிமகிரியிற் சமாதிமேவ வேகினுளின் றளவுமிந்தவாறே, கோமகனு மழக்கியுரட் பாணரென்று குரிசிலுக்கு வசிட்ட முனிகூறினனால். (47)

(ப - ரை.) பூமகள்போல் அங்கிருந்த வடிவை = ஸ்ரீதேவிக்கொப்பாக அவ்வரண் மனையி லிருந்த காத்திரத்தை, கங்குற்போதில் ஒழித்து = இரவுவந்ததும் விடுத்து, அரக்கர்குலப் பூவையாகி = இராக்கதர் வங்கிச மங்கையாய், பாமரராம் பாதகரை = ஒன்றுந்தெரியாத மிருகசமான மூடரை, தோண்மேற்கொண்டு = தோளின்மீதுவைத் துக்கொண்டு, பார்த்திபனெடு அமைச்சனுக்கும் பண்புகூறி = அரசனுக்கும் மந்திரிக் கும் இனிய வசனங்களைக் கூறிவிட்டு, ஏமமூறு இமகிரியில் = பொன்மயமாகி யழகு நிறைந்த ஹிமாசலத்தில், சமாதிமேவ = சமாதியையடைய, ஏகினுள் = சென்றாள், இன்றளவும் = இன்றையதின பரியந்தம், இந்தவாறே = இவ்வண்ணமே, கோமகனும் அரக்கியும் நட்பாளர் = மன்னவனும் கற்கடியும் நேயமிக்கு வாழ்கின்றனர், என்று = என இங்ஙனம், குரிசிலுக்கு = ஸ்ரீ இராமச்சந்திரருக்கு, வசிட்டமுனி = ஸ்ரீ வசிட்ட பகவான், கூறினன் = திருவாய் மலர்ந்தருளினர். ஆல் அசை.

(ஸ்ரீ - வீர.) நிசாகாலம் உற்றபோது சுந்தரிவடிவத்தை விடுத்துக் கோரமான கறுப்பு இராக்ஷியாய், கோடரத்திற் றொங்காகின்ற தாராகிக்ர ஜாலங்களே மேகமாலை போலும், ஸ்ரீமூவாயிரம் பாதகரையும் புஜமண்டலத்திற் சுகவர்ந்து மன்னமந்திரிக் காசி கூறி முன்னிருந்த ஹிமாசல சிருங்கத்திற்கேசென்றனள்! தரித்திரனுக்குப் பொற்புதை

யல் கிடைத்ததேபோலப் பூதனை ரக்ஷ பிசாசுமுதலிய கிரங்களுக்குள் பெரியகாத்திரம் படைத்த சிறந்த அக்கற்கடியானவள் அங்கிருந்துமுழுவதையும் சந்தோடத்துடன் புசித்துத் திருப்தியை யடைந்து சுகமாக மூன்றுநாட் டேங்கி யெழுந்து சொஸ்தமாக நனவை யடைந்து மீண்டும் சமாதியின் கண்ணே பிரஹ்மோபஸ்திதி மதியை யுடையவளானாள். அதுமுதலாக இன்றுவரை 4 ஐந்து வருடத்திற் கொருமுறை சமாதியினின்றும் எழுந்து கிராதஜனமண்டல மடைந்து மன்னமந்திரிகளோடும் அளவளாவிப் பாதகரை வாங்கிக் கொண்டு போவதும் வருவதும் ஆக இருக்கின்றனள் சுபம்.

கற்கடிகதை முற்றிற்று.

ஐந்தவர் கதை.

(ஸ்ரீ-வீர - அ-சை.) பிரவிருத்த அநுவாத பூர்வகம் ஜகத்தின் மநோவிலாசிதத்தன்மையின் விரிவின்பொருட்டு அயல் ஆக்கியானம் ஆரம்பிக்கின்றார்:—உரையென.

(ச.) முன் கற்கடிகதையில் பிரஹ்மமே ஈதனேத்தும் என்று பிரஹ்மதிருஷ்டிசொல்லப்பட்டது, இப்போது அயிந்தவர் கதையில் அவ்வருத்தத்தினையே சமர்த்திக்கு நிமித்தம் விசுவதிருஷ்டிக்கு மனோமயத்துவஞ் சொல்லப்படுகின்றது, அதில் முற் கூறியதை உபசம்மரிப்பவராய் மற்றொருகதையை வர்ணிக்கின்றார்:—உரையென.

உரைசெயுசி கதையாலே யுண்மையாகிப் பரமான
கரையில்பிரமமே யுளதாங்காணப் படுவதொன்றில்லை
வகையில் சிருட்டிகளின் முதலாய்மனமே விளங்குமிது பொருட்டோர்
புரையில்கதை கேளென வசிட்டன் புயன்மேனியற்குப் புகல்கின்றான்.

(ப - ரை.) உரைசெய் ஊசிகதையாலே = முன்னர் மொழிந்த கற்கடிகதையினாலே, உண்மையாகிப் பரமான கரையில் பிரமமேயுளதாம் = சத்தியமாகி மேலான அபரிச்சின்ன ஆத்மாவே யிருக்கின்றது, காணப்படுவது ஒன்றில்லை = அன்னிய சம்சாரதிருஷ்டிகள் கிடையவே கிடையாவாம், வகையில் சிருட்டிகளின் முதலாய் மனமே விளங்கும் = அளவில்லாத சிருஷ்டிகளிற் காரணமாய்ச் சித்தமேதிகழும், இதுபொருட்டோர் = இப்பொருள் இனிது தெளிதற் பொருட்டு ஒப்பற்ற ஒரு, புரையில்கதை = குற்றமற்றகதை, கேளென = கேட்பாயாக வென்று, வசிட்டன் = ஸ்ரீ வசிட்டபகவான், புயன்மேனியற்கு = மேகமேனிய இராகுநாயகனுக்கு, புகல்கின்றான் = கூறத்தொடங்குகின்றார்.

(ஸ்ரீ - வீர.) பிரஹ்மத்தினும் அன்னியமாய் ஆன்மாவே யிருக்கின்றதா வெனக் கடாவியன் றென்பார்: உண்மையாகிப் பரமான என்றார். சத்தியம் பிரஹ்மம், சமுசார திருஷ்டிகள் = சமுசாரபிராந்திகள். ஏன் சமுசார திருஷ்டிகள் இருப்பதில்லை யெனக் கடாவி விடைதருவார் மனமேவிளங்கும் என்றார். இம்மனந்தானே செய்யத்தக்கனவாய சிருஷ்டிகளில் இவ்வகையானே சர்வஜகத்தான்மகமாக இலங்குகின்றதாதலின் சமுசாரமயல்கள் இல்லையாம். ஈண்டு ஜகத்து மநோவிவர்த்த மென்பதில், இந்துவெனப் பெயரிய பிராஹ்மணரின் மைந்தர் ஆகிய ஐந்தவரது ஆக்கியானத்தைக் கேட்டியென்பதாம். இக்கற்கடிகதை யியம்பும் வாயிலானே உனக்குயாவுமே யியம்பலாயது, பரமாய்ச் சத்திய

மாய ஆத்மாவேயுளதாம் அன்னிய சம்சார திருஷ்டிகளின்றும். இவ்வியாவுமே மனோ மாத்திரம், இம்மனமே யிவ்வண்ணம் சிருஷ்டிகளிற் சுழல்கின்றது. ஈண்டுச் சிரவண பூஷணமாய இந்த ஐந்தவ ஆக்கியானத்தைக் கேட்டி! இது பிரஹ்மாவாகிய உலகபிதா மகரால் எனக்களனுக்கிரகிக்கப்பட்டது. ஆகையாற் புகழத்தக்க இதனை நினக்குரைக் கின்றேன் என்பதாம்.

(ச) பிரமமே = ஆன்மாவே, காணப்படுவது = சம்சார திருஷ்டிகள், ஒன்றில்லை = அற்பமும் வேறின்றும், மூதலாய் = வியதாதி ரூபமாய், இது பொருட்டு = மனமே யீதனைத்தும் என்றதினியித்தம், ஓர் புரையில் கதை = சிரவணபூடணமாய் நிந்தையற்ற அயிந்தவர் கதையை.

(ஸ்ரீ - வீர - அ-கை.) கதையால் வரும்பயனையும் மனம்பேய் பிடித்தாடிப் பந்த மோக்ஷங்கள் அடைதலையும் கூறுகின்றார்:—மேவுஎன:

மேவுகதையாற் சிற்சத்திவிரி வேயுலகென் றறுதிவரும்
வாவுமனமாஞ் சிறுமகவு மடமையாலே வெறும்பொய்யே
தாவுசகப்பேய் வரக்காணுந் தனைப்போதிக்கி லறிந்திடர்போம்
பாவம்விகாரம் பலசேரிற் பவமாமவற்றை விடல்வீடாம்.

(ப - ரை.) மேவுகதையால் = உரைக்கப்படும் உபாக்கியானத்தால், சிற்சத்தி விரிவே = சிதிசக்தியின் உல்லாசமே, உலகென் றறுதிவரும் = ஜகத்தென்ற நிச்சய மூண்டாம், வாவுமனமாம் சிறுமகவு = உற்றதைப்பற்றுஞ் சிறுசித்தபாலன், மடமை யாலே = அறியாமையாலே, வெறும்பொய்யே தாவுஜகப்பேய் வரக்காணும் = அத்தியந் தம் மித்தையாகவே தோற்றுகின்ற வுலகயகூனை உண்மையாக இருத்தல் போலவே பார்ப்பன், தனைப்போதிக்கில் = தனதுண்மையை யுணர்த்தினை, அறிந்திடர்போம் = நிராமயப் பரரூபத் தன்னையுணர்ந்து ஆநந்திப்பன், பாவும் விகாரம்பலசேரில் பவமாம் = இராகாதிக் கிலேசங்கள் அநேகம் அமைவதாற் சமுசாரமாம், அவற்றைவிடல் வீடாம் = அக்கிலேசங்கள் அறுதலே மோக்ஷமாம்.

(ஸ்ரீ - வீர.) இந்த ஐந்தவ ஆக்கியானத்தைக் கேட்பதானை ஜகத்தானது, பரமாத் மாவினுடைய, மநோபாவத்தையடைந்து மாயாசக்தியினது, விஜ்ரும்பணம் விவர்த்தம் என நிச்சயிப்பாய். ஞானத்தில் ஆற்றலையுடைய மனமெனினும் அமையும் ஆக்கியான தாற்பரியங் கூறுவதாம் வாவுமனமென்பது, சித்தமேபாலன், ஜகத்தேயகூன் எங்ங னம் பாலன் உணராமையினானே தன் சாயையைப் பொய்ப்பூதமாய்ப் பார்ப்பனை, அங் ஙனம், சிதாபாச விசிஷ்டமாய சித்தம் அறியாமையோடு கூடியதாய்ப் பொய்யுலகைக் காணும், உணர்த்தப் பெறினை நிருபதீவமான அதிஷ்டானத்தையினதுகாணும் வீடு = பவாந்தம் = சமுதாராந்தமெனத் தற்சாதனத் தன்மையாற் சாற்றப்பெறும் மனமே யென்பதாம். இதன் சிரவண மாத்திரத்தானே சிதிசக்தியின் சிறந்த உல்லாசத்தைச் சகமெனத் துணிவாய்; சித்வியாப்தியுமையானே சித்தத்திற்கு அவிசார முண்டாகச் சகத்தைக் காணுந்தன்மையும் விசாரமுண்டாக ஆன்ம தரிசனமாதலும் ஆமென்பார் காணும் இடர் போமென்றார். சித்தபாலன் ஜகத்தியக்கனை அபோதத்தால் பொய்யா கவே காண்பன், இவன் போதிதனுகவே தனது நிராமயமான பரமரூபத்தைக் காண் பன் இராகாதிக்கிலேச தூஷிதமாய சித்தமேதான் சமுசாரம், அவற்றோடு கூடாத அதுவே பவாந்தமென அதாவது சமுசாரநாசமெனப் பகரப்பெறும்.

R.G.

உற்பத்திப் பிரகரணம்

(ச.) மனோரூபமான சித்தத்தி லிரிவே = விஸ்தாரமே; உறதிரும் = நிச்சயம் பிறக்கும்; மனமாஞ் சிறுமகவும் = சித்தமென்னும் பாலன் மாட்டையாலே = தனக்கென விவேகமின்மையின் அவன் போதிக்கப் படாவிடின், போதிக்கில் = போதிக்கப்படின், தனேயறிந்து = பரமரூபமான தன்னேத்தானே யுணர்ந்து, இடர்போம் = நிராமயமாவன், விகாரம்பல சேரின் = இராகாதி கிலேசங்களாற் றூஷிக்கப்படின் பவமாம், வீடாம் = பவாந்தமெனப்படும்; விகாரமும் விகாரரகிதமும் ஆன சித்தமே பவத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஏதுவென்பது பொருள். (ட)

(ஸ்ரீ-வீர-அ-கை.) சிருஷ்டிசெய்ய முயன்ற தாதா பத்துப் பிரமாண்டங்களேக் கண்டதிசயித்தல்:—ஒரு எண.

ஒருகால்விரிஞ்சன் சிருட்டியெலா மொடுக்கியிரவி லுறங்கியபின்
வருகாலையின் மீண்டுலகளிப்பான் வாஞ்ஞைக்குதலு மனத்தாலே
பெருகாகின்ற விண்ணிடையே பேதமான பலசிருட்டி
யருகாகின்ற படிகண்டானூர் செய்தனரென் றதிசயித்தான்.

(ப - ரை) ஒருகால் = ஒருசமயத்தின் திரஞ்தத்தில், விரிஞ்சன் = நான்முகன், சிருட்டியெலாம் ஒடுக்கி = அகில சர்க்கத்தையுஞ் சங்கரித்து, இரவிலுறங்கியபின் வருகாலையில் = நிசியில் நித்திரையிலிருந்ததன் பின்னர் வராகின்ற நிசாந்தத்தில் விழித்து, மீண்டுலகு அளிப்பான் = மீளவும் பிரஜைகளேச் சிருட்டிக்கும் பொருட்டு, வாஞ்ஞைக்குதலும் மனத்தாலே = சித்தத்திஞலே சேணேநோக்கும்போது, பெருகாகின்ற விண்ணிடையே = விஸ்தாரமாய வியோமத்தின் மத்தியில், பேதமான பலசிருட்டி = விசித்திரமான பற்பல சர்க்கங்களே, அருகாகின்றபடி கண்டான் = நிரர்க்கலமாய் நிலேத்தவண்ணத்தை நோக்கினன், ஆர்செய்தனர் என் றதிசயித்தான் = யாவரே இவற்றைச் சிருட்டித்தனர் என விஸ்மயத்தை யடைந்தான். (இ)

(ஸ்ரீ-வீர) நைமித்திகப் பிரளயத்தில் மகலோகாதிகட்கு இருப்புண்மையின் எலா மென்னுஞ் சப்தம் சில பலவிடயமாம். மகத்தான வரஞேக்குதலும் பேதமான பல சிருட்டி = பெருத்த வியாபாரங்க ணிறைந்து வேற்றுமையுற்ற நானவித சர்க்கங்கள் = சிருஷ்டிக்கப் படுதலிற்சர்க்கம் பிரபஞ்சம்; அவைதம்மிருப்பிற் பாதமற்றனவாயிருந்தனவென்பார் அருகாகின்றபடி யென்றார். நிரர்க்கலம் = நிர்பாதம் பிரஹ்மா கூறுகின்றார்—ஒருகால் அகிலசர்க்கத்தையும் திவசக்ஷயத்திற் சங்கரித்து ஒருவஞகவேயான் எகாக்கிர மூடையவஞகி நிசியைச் சொஸ்தமாகக் கழித்தேன்; நிசாந்தத்திற் பிரபோத முற்றவஞகிவிதிப் பிரகாரம் சந்தியோபாஸ்தியை முடித்தவஞகிப் பிரஜைகளேச் சிருட்டிக்கும் பொருட்டு விலாசமாய விண்ணின்கண் திருஷ்டிகளேப் பரவச்செய்தன் அக்கால் ஆண்டு விஸ்தார அவ்யக்த வியோமத்தில் மனத்திஞலே பிரஹ்மாண்டங்களேக் கண்டேன், அவை தனித்தனியே யிருந்தன, பெருங்காரியங்களி லீடுபட்டிருந்தன, ஆண்டுள்ள விஷ்ணு முதலிய தேவதைகளால் உருத்தப்பெற்ற பாலஞதி விவஸ்தையிஞலே பிரதிபந்த மற்றனவாக விருந்தன. இங்ஙனம் அவற்றை யெல்லாம் தாய்தாய்ப் பரமாயிருக்கும் எனது சித்தத்திஞலே கண்டு அத்தியந்தம் யான் விஸ்மயத்தை யடைந்து, இஃதென்னே! யாங்ஙனமுற்ற திச்சிருஷ்டி! எவராற்ருன் உற்றதோ! எனக்குத் தெரியாததுதான் என்னகாரணம்? விஸ்மயத்தையே ஹேதுவோடும் விரித்துரைத்தல்; யாங்ஙனம் மாங்கிசமயமா யிராகின்ற சஷுகோளகத்துட் புருத்தப்பட்ட கண்களால் ஒரு சிறிதையுங் கண்டிலேன், எதனேக் கண்டிலனே அதனே மனத்

தானே காண்கின்றேன் இஃதெங்ஙனம் பொருந்தும், ஒப்பற்ற அம்மாயா ஜாலமனைத் தையும் யாங்ஙனங் காண்கின்றேன் என்பது விஸ்மயமாம். அதிசயம்

(ச.) விரிஞ்சன் = பகவானுடைய பிரமன், இரவில் = திவசாந்தத்தில் உறங்கிய பின் = எகாக்கிரனுய்ச் சுழுத்தியை யடைந்தபின்பு, இரவு நீங்கிவருகாலையில் விழித்து விதிப்படி அநுஷ்டானஞ் செய்து, மீண்டு = மறுபடியும், உலகளிப்பான் = பிராணி களைச் சிருஷ்டித்தற்கு, வானேக்குதலும் = கண்களான் மாயோமத்தைப் பார்க்கவும், பேதமான = வேறுவேறான, அருகாகின்றபடி = மகா ஆரம்பமா யிருக்குந்தன்மையை கண்டான் = பார்த்தவனுகி. (3)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ பிரஹ்மதேவர் கண்ட ஆகித்தியனை யழைத்துச் சம் சயநீக்கப் பொருட்டு வினதலும் ஆதித்தன் கூறலும் வருணித்தல்:—அதிலென.

அதிலோரிரவி வருகென்னு யாரேயளித்தா ரெனக்கேட்பக்
கதிரோன் வணங்கியுரை செய்வான் கரைதீருலகின் காரணமாம்
விதியாநீ யீதறிந்திலையேல் விளம்பக்கேட்பாய்;வெண்கயிலைப்
பதியாகிய நாவலந்தீவிற் பரப்பாமிடத் தோர்பக்கத்தில்.

(ப - ரை) அதில்! ஓர் இரவிவருக என்னு = அச்சகசாலத்தில் ஒரு சூரியனை வர வழைத்து, யாரே அளித்தார் எனக்கேட்ப = நீயார் உன்னையும் இச்சகஜாலத்தையும் தந்ததுயார் என்று வினவ, கதிரோன் வணங்கியுரை செய்வான் = சூரியன் நமஸ்கரித் துச் சொல்லுவதாவது, கரைதீருலகின் காரணமாம் = எல்லையற்ற சகத்தின் ஹேது வாம், விதியாநீ = பிரஹ்மதேவராகிய தேவரீர், ஈதறிந்திலையேல் = இதனைத் தெரிந்தி ரில்லையேல், விளம்பக்கேட்பாய் = கூறுகின்றேன் கேட்பீராக, நாவலந்தீவில் ஓர் பக் கத்தில் = ஜம்புத்தீவின் ஒரு கோணத்தில், ஆகிய = இராகின்ற, வெண்கயிலைப்பதி = வெள்ளிய ஸ்ரீ கைலாச சைலத்தின் அவயவபூதமாய, பரப்பாமிடத்து = சமபூப் பிர தேசத்தில்.

(ஸ்ரீ - வீர.) பின்னர் நீள்போது மனத்தினுலேயே பார்த்து அச்சகசால அப்புவன அம்பரத்திலேகும் அருக்கனைச் சத்திய சங்கற்பத்தானே முன்னர்ச் சங்கிலிப்படுத்திக் கேட்டேன். எங்ஙனமெனின், ஹே தேவதேவேச! போபாஸ்கர! பெரும்பிரகாசமுடை யோய்! இங்குவருவாயாக நீ சுகமாக வாழ்த்திநீழி.யென்றுபகன்று பின் பிறங்கப்பெ றும் பொருள்களை வினவினேன்; அப்பொருள் யாதெனின், நீயார்? நினது சம்பந்தமான ஜகத்தெங்ஙன முண்டாயது? இங்ஙனமே அன்னிய நவஜகங்கள் எங்ஙனந்தான் உண் டாயின? எச்சிருட்டாக்களாற் சிருட்டிக்கப் பெற்றன? ஹே பாவமற்ற பகவன் நீயறிந் தனையாயின் அவ்விடயத்தை நன்குகூறுதி, எனவினைய என்னை நன்முகப்பார்த்து இப்பிரஹ்மாண்டத்தின் பிரஹ்மா. இவர் என. நன்முகத் தெரிந்துகொண்டு நமஸ்காரஞ் செய்து புகழத்தக்கபதங்களோடுகூடிய வாக்கியங்களால் இனிதாக இயம்பியதாவது.—பானுபகரல்; இத்திருநியப் பிரபஞ்சத்திற்குச் சாசுவதமான காரணமாயுற்ற தேவரீர், சென்றதை யெங்ஙனம் உணராமற் போவீர், ஹே ஈசுரரே! என்னைக் கேட்குங் காரண மென்னே! ஹே எங்கும் வியாபகமானவரே எனது வாக்கிய சந்தர்ப்பத்தைக் கேட்க வேண்டுமென்னும் குதூகலத்தன்மை தங்கட் கிருக்கும் பக்ஷத்தில், உம்மால் சங்கற்பிக் கப்படாத எனது உற்பத்தியையும் என்சம்பந்த உலக வுற்பத்தியையும் யான்கூறக் கேட் பீராக. ஹேமகாதேவரே! கற்பமெனப் பெயரிய தங்களுடைய தினுர்த்தத்தில் ஜம்புத் தீப ஏதுகோணத்துற்ற ஸ்ரீ கைலாச சைலத்தின் றலத்தில்,

(ச.) அதிலோரிரவி = அச்சக சமூகத்தினின்றும் ஓரருக்கன், வருகென்னு = வாவென்றழைத்து, ஆரேயளித்தார் = இச்சக சமூகத்தை யார்சிருட்டித்தார் நீயாவன் என, பகவாளுன நீ யறிந்தனேயாயிற் சொல் என்று, காரணமாம் = நித்தியகாரணமும் சர்வகதமுமான விதியாநீ யீதறிந்திலேயேல் = நீயறிவாய் லீலையான் என் வாக்கியங் கேட்க வேண்டுமாயின், வெண்கயிலைப் பதியாகிய = கைலாச சைலத்தினது அடிவாரத்திருக்கும், நாவலன்றீவில் = சம்புத்தீவில். (4)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்விருத்தாந்தத்தையே பானு விரித்துரைத்தல்:—சிறக்கு மென்பதாதி.

சிறக்குஞ்சுவர்ண சடமென்னுந் தேசமொன் றுன்மைமந்தர்களா
னிறக்குஞ்சிருட்டி படைத்ததனி னெடுங்காசி பன்றன் குலத்திடையே
பிறக்குமறையோ னிந்துவெனும் பெரியோன் மக்கட்பேறின்றிப்
பறக்குங்கருத்தாற் றேவியொடும் பரமன்கயிலைப் பதிமேவி. (5)

தவமேற்கொண்டு பாதவம்போற் சலமேயருந்தி வருந்திடுநாட்
சிவனுண்மகிழ்ந்து வேண்டியதென் செப்புமென்னச் சிரம்பணிந்து
கவலீதீரவீரை வர்கலேதர் புதல்வர் வேண்டுமென
வவனங்களிப்ப விவர்களிப்போ டகன்றூர்புதல்வ ரவதரித்தார். (6)

(ப-ரை.) சிறக்குஞ் சுவர்ணசட மென்னுந் தேசமொன்று = வளப்பங்கள் பொருந்திய சுவர்ணசடமென்னும் ஒருதேசம், உன்மைந்தர்களால்=மரீசியாதிதங்களது புத்திரர்களால், நிறக்குஞ் சிருட்டிபடைத்தது = ஸ்ரீமத் விஸ்தார சுகசுந்தரமாய்க் கற்பிக்கப் பெற்றது, அதில் = அம்மண்டலத்தில், நெடுங்காசிபன்றன் குலத்திடையே=பெருந்தவத்தின் மிக்க கஸ்யப ரிஷியினுடைய குலத்தின் கண்ணே பிறக்கும் மறையோன் = உற்பவமாகிய பிரஹ்மவித்தமப் பிராஹ்மணன், இந்துவெனும் பெரியோன்= இந்துநாம அதிசாந்தாத்மா அதிதருமாத்மா, மக்கட்பேறின்றி = மைந்தரில்லாமல், பறக்குங் கருத்தால் = சிந்தாகுலத்தினால், தேவியொடும் = தருமபத்தியோடும், பரமன் கயிலைப்பதி மேவி = ஸ்ரீ பரமாத்மா எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ கைலாசபர்வதத்தை யடைந்து. (5)

தவமேற்கொண்டு = தவஞ்செய்யத் தொடங்கி, பாதபம்போற் சலமேயருந்தி = தருத்திதியற்று நீராகாரங்கொண்டு, வருந்திடுநாள் = கோரதவஞ்செய்தபோது, சிவன் உண்மகிழ்ந்து = ஸ்ரீசசி கலாதரராகிய மகாதேவர் பரமசந்தோடத்தை யடைந்து, வேண்டியதென் செப்புமென்ன = நீங்கள் விரும்பியதுயாதோ அதனைக் கூறுவீர்களாக வென்று சிரம்பணிந்து = நமஸ்கார அர்ச்சனை தோத்திரங்கள் செய்து, கவலீதீர ஈர் ஐவர்கலேதர் புதல்வர் வேண்டுமென = சிந்தாகுலஞ் சிதைய மகா மதிமான்களாய்ச் சகலசாஸ்திர சம்பன்ன பத்துப்புத்திரர் உதயமாக வரந்தரவேண்டு மென்று வேண்ட, அவனங்களிப்ப = ஸ்ரீமகாதேவர் அவ்வாறே வரந்தர, இவர் களிப்போடு = தம்பதிகளிருவரும் மிகமகிழ்ச்சியுடன், அகன்றூர் = சுவஸ்தானத்திற்கு எகினர், புதல்வர் அவதரித்தார் = மைந்தர் பிறந்தனர். (6)

(ஸ்ரீ-வீர.) தருத்திதி = மரம்போல அசையாம லிருத்தல், நீராகாரம் = ஜல ஆகாரம் மரம்புரிதல் வெளியாம். யோகியர்கள் ஆகிய எத்தனைமைந்தர்கள் உண்டான மாத்திரையால் யாங்கள் மறுபடி சோகமே யடையமாட்டோமோ அத்தகைய மைந்தர்கள் வேண்டும். எப்பிரதேசம் சுவர்ணஜட நாமத்தாற் பிரசித்தமாமோ, எப்பிரதேசத்தில்

சந்ததிகளே யுண்டாக்கிய உமது புத்திரர்களாகிய மரீசியாதிகள் இருக்கின்றார்களோ அவர்கள் பிரஜைகள் மகிழ்ந்துவசிக்கும் பொருட்டு ஸ்ரீமத் அநற்ப சுகசுந்தர அம்மண்டலத்தைக் கற்பித்தார்கள்; அம்மண்டலத்தில் அதிதருமாத்மாவாயும் வேதவித் சிரேட்டனுயும், அதிசாந்தாத்மாவாயும் கசியப குலோற்பவனுயும் விளங்கிய இந்துவென்னும் அந்தண னிருந்தான். அங்கு அக்கால் தன்னுறவினர் கூட்டத்தில் நித்தியம் நிவாசஞ் செய்து கொண்டிருந்த அம்மறையவனுக்கு உயிர்க்குயிராக ஒருபாரியையும் மிருந்தனள், அவள்பால் அம்மகாத்மாவிற்குச் சந்ததிகள் இல்லாமல் இருந்தன மருப்பூமியின் மாட்டுத் திருணமுண்டாகாததே போலும். அவனுடைய மனைவி நிட்பலபுட்பிதையா யினிது சோபியாம லிருந்தாள், மிக நல்லவளாயும் கௌரியாயும் அதி பரிசுத்தையாயும் அவள் இருந்தபோதினும் சீரல்லதைபோலும் அதாவது காசஸ்தம்பம் போலும் பலமற்றவளா யினள். பின் அத்தம்பதிகள் துக்கிதர்களாகிப் புத்திரப்பொருட்டுத் தவம்புரிவான் ஸ்ரீ கைலாசகிரியின் மேற்பாகத்தில் புதுத்தருமங்கள் ஏறுவதுபோல வேறி அக்கைலாச சிருங்சத்தில் எப்பிராணிகளும் இல்லாத நிர்ஜனப் பிரதேசத்தில் விருக்ஷம்போல நிலை பெற்றுநின்று தினம்போம் காலத்தில் ஒரு கைநீரருந்தி விருக்ஷம்போல் வேறருந்தாமல் நீராகாரத்தினராகி அதிகோரமான தபத்தைச் செய்தனர், அசையாமனின்று விருக்ஷசம் பந்தி விருத்தியைப்பற்றி சுசி விரத பராயணராயிருந்தனர். இங்ஙனம் தருவிரதத்தினரா கிய அவர் பெருந்தவத்திலங்கும்அக்கால் திரேதா, துவாபரம் என்னும் இரண்டு யுகங்க ளேயே கழித்தனர், கழிந்தபின் விசிஷ்டபுத்திர லாபப்பொருட்டு அவ்வளவுகாலம்நீங்கி ஸ்ரீ நிலவுலாவிய நீர்மலிவேணியராகிய மகாதேவர் அதிசங்தோடத்தை யடைந்து தின ஆதபத்தினுலே பெருந்தாப மடைந்த சூழ்ந்துகட்குதயமாகிவந்த இந்துவென்ன அவ் விப்பிர தம்பதிகள் தவஞ்செய்யும் பவித்திர தேசத்திற்கு ஸ்ரீ பார்வதி தேவியாரோடும் விருஷபாரூடராகி யெழுந்தருளி வந்தனர் அக்காட்சியைத் தரிசித்துத் தவதம்பதிகள் வீழ்ந்து நமஸ்கரித்துத் தூய்மலர் தூவித்தோத்தரித்து நிற்ப திருவருள் பாலித்து எந் தந்தை கூறுவார். ஹே விப்பிரசிரேட்ட! விரைவில் வரம் வேண்டிக்கொள் நின்றவங் கண்டு மகிழ்ந்தேம் நினது வாஞ்சிதத்தைக் கூறுதியென்ன விப்பிரர் ஹே பகவன்! தேவதேவேச! மிகத்தகுதி யுடையவராய் கலியாணகுண ஆசாரராய் மகாமதியராய் மீண்டு எனக் கெக்காலும் சோகமேயுறுமற் காக்கக்கூடியவராய பத்துப்புத்திரர் தர வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவ்வாறே யுண்டாகுக வென்றருள்செய்து ஆங்கே அறிவிற் கரந்தனர் அம்பிகாநாதர். அதன்பின் சிவபெருமான் திருவருள்பெற்ற அவ்விரு வரும் பேராநந்தத்தை யடைந்து தெய்வதம்பதிகள் போலும், மாயிக திவ்யசரீர கற்ப னையாற் கீர்வாண சதிருசர்களான உமாமகேசுவரர்கள் வாஸ்தவமான பிரஹ்மாகாசத்தை யடைந்ததேபோலுந்தமது சிருகத்தை யடைந்தனர்; புதல்வரவதரித்தார் இனிவரும்.

(ச.) நிறக்கும் + ஒன்று = சுகாதிசயத்தாற் சுந்தரமான ஒருமண்டலம், உன்மைந் தர்களால் = சிருட்டிப் பிரவிருத்தியிற் சிரேட்டரான பிருகு புலத்தியாதி நவப்பிரமர்க ளால் என்பது பொருள். நிறக்கும் சிருட்டிபடைத்தது = அழகாய்க் கற்பிக்கப்பட்டது, மறையோன் = பிரஹ்மவித்துக்களுக்குள் அதிக சிரேட்டனுன பிராஹ்மணன், அந்த மகான்மாவிற்குப் பிராணசமமான பாரியின்கண் மருப்பூமியிற் றருப்போல மக்கட்பே றின்றி புத்திரசிமித்தம், பறக்கும் - கயிலைப்பதி யென்பது = கயிலாயத்தின் அடிவாரத் தில் ஜீவசஞ்சார சூனியமான கொடிகள் நிறைந்த ஓரிடத்தில் மேவி. (5)

பாதவம் = தரு, சிவன் = சகிகலாதரனுகிய தேவன், அவ்விடத்திற் பிரசன்ன மாய் வேண்டியதென் = விரும்பிய வரம்யாது, மகாபுத்திமான்களாகிய புதல்வர், அவ

னங் களிப்ப = சிவன் வரங்கொடுத்து அவ்விடத்திற்றானே அந்தர்த் தானமானபின்பு, அகன்றார் = கிருகத்தை நோக்கிச்சென்றார், பின்பு புதல்வரவதரித்தார் சிலகாலத்தில்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மைந்தர்கள் பிறந்து வளர்ந்து வந்தபின் றந்தைதாயர்செல் லலும் மைந்தர்கள் பெரும்பத முறுதலும் வருணித்தல்:—மைந்தர்—பிரம-என.

மைந்தரொரு பதுளராகி மறைநூனிறைந்து வளர்ந்ததற்பின்
றந்தைதாயரிறந் தேகத்தநயர் கயிலைத்தல மெய்திச்
சிந்தைசெய்வார் நல்குரவு தீரவுயர் வன்னியராவோ
மந்தரிலை சற்றுதலினு லதிகரிலை மன்னவராவோம். (7)

அதுவுஞ்சிறிதாம் புவியனைத்துக் கரசராவோ மதுசற்று
நிதிதன்னிய விந்திரராவோ நீகழ்த்து மதுவுநெடிதல்ல
பதுமஞ்செறியு மயனுதல் பழுதில்பதவி யெனத்துணிந்தா
ருதிதமனத் துப்பதின்ம ருமொத் துயரும்பதுமா தனத்திருந்து (8)

பிரமனுமே சிருட்டியெலாம் பிறப்பதெம்பா லென்றுள்ளே
திரமதான மனத்தாலே சிந்தித்துடலிற் சிந்தையற
மரமதென்ன விருத்தலுமே வருநாட் பலபோய்மனுபாவ
மூமதாகிய யனுவொரு பதுலக முளதான. (9)

(ப - ரை.) மைந்தர் ஒருபதுளராகி=காலத்தில் தசபுத்திரர் உதயமாகி, மறைநூல் நிறைந்து வளர்ந்ததற்பின் = சர்வவேத சாஸ்திரங்களைப் பூரணமாக அடைந்து பிரௌடர்கள் ஆனபின், தந்தைதாயர் இறந்தேகத் தநயர் கயிலைத்தலம் எய்தி = பிதாமாதாக்கள் மோக்ஷமடைய மைந்தர்பின் ஸ்ரீ கைலாசபர்வத சிகரத்தை யடைந்து, சிந்தை செய்வார் = சிந்திக்கலாயினர், நல்குரவுதீர = துயரந்தீர்ந்து மேலான சிரேயசுற, உயர் = மேலான, வன்னியராவோம்=சாமந்தர் ஆவோம், அந்தரிலைசற்று ஆகலினும் அதிகரிலை மன்னவர் ஆவோம் = அச்சாமந்தபதம் அற்ப ஐசுவரியமுடையது ஆகலின் அதனினும் அதிக செல்வந்திகழ்ந்த அரசபத மடைவோம் அதுவுஞ் சிறிதாம் = அப்பதமும் அற்பமாம், புவியனைத்துக் கரசராவோம் = சர்வபூமண்டலத்தையும் ஆட்சிசெய்யும் சக்கிரவர்த்தியாவோம், அது சற்றும் = அச்சாம்பிராட்டின் சாம்ராஜ்யமும் அற்பமாம்; நிதி துன்னிய இந்திரர் ஆவோம் = சங்கநிதி பதுமநிதி முதலிய செல்வம்பெருகிய தேவேந்திரபத மடைவோம், நிகழ்த்தும் அதுவும் நெடிது அல்ல = கூறிய அத்திருவும் அதிகப் பெரிதாகாதாம், பதுமஞ்செறியும் அயன் ஆதல் = தாமரையில் உறையும் பிரமதேவன் ஆதலே, பழுதில்பதவி = கெடாதபதமாம், எனத்துணிந்தார் = என்று நிச்சயித்தார், உதிதமனத்துப் பதின்மரும் ஒத்து = தமையனோடு கலந்தாராய்ந்து துணிந்த மனத்தையுடைய தசமரும் ஒருமைபெற்று, உயரும் பதுமாதனத்திருந்து = எண்பத்து நான்கு ஆசனங்கள் உள்ளும் சிறந்த பத்மாசனத்திறைந்து.

பிரமன் நாமே=சதுர்முகப் பிரஹ்மா யாமே, சிருட்டியெலாம் பிறப்பது எம்பால்= சர்வசிருஷ்டிகளும் உண்டாவது எம்மிடத்தினின்றும், என்றுள்ளே = என்றந்தரத்தில், திரமதான மனத்தாலே = திடமான சித்தத்தினுலே, சிந்தித்துடலிற் சிந்தையற=தியானித்துத் தேகத்தில் உணர்ச்சியற்று, மரமதென்ன விருத்தலுமே = தருவிதர்களாய் இருந்து தவம்புரிந்தபோது, வருநாட்பலபோய் = அநேககாலங் கழிந்தபின், மனுபா

வம் உரமதாகி அயன் ஆஞர் = மதிபாவனே அதிதிடமாகிப் பிரஹ்மாவாயினர், ஒருபது லகமுளதான = இப்பத் தண்டங்களும் உண்டாயின. (9)

(ஸ்ரீ - வீர) அவ்வுத்தமப் பிராஹ்மணியானவள் இல்லத்தில் உதாரகர்ப் பிணியாய் நீரால் மேகரேகை கருக்கொண்டு கறுத்துநின்ற தொப்பப் பூர்ண உதரையாகிப் பிரதி பதசந்திர கோமளர்களாகிய புத்திரர்களே நல்லகாலத்திற் பெற்றெடுத்தனள் என்பார் புதல்வர் அவதரித்தார் என்றார். பூதேவி நவாங்குரங்களே யீன்றனள்போலும் அதிசுத்தர மான தசபாலர்களே யீன்றனள். இக்ருஹஸ்தைகள் முறையே ஜாதகரும, நாமகரண, அன்னப்பிராசன, சௌள, உபநயன, வேதவிரதாதிய யஞ்திகளாகிய பிராஹ்மண சமஸ்காரங்களாற் சமஸ்கரிக்கப் பெற்றவர்களாகி மகாதேஜசோடும் வளர்ந்து வந்தார் கள். வருஷருதுவில், நவமேகங்கள் போலும் சொற்பகாலத்திற்றானேஅவாங்மயமாகிய சர்வசாஸ்திரங்களேயும் கற்றுணர்ந்து எழுவயதை யடைந்து ஆகாயத்தின் கண்ணே கிருமலகிரகங்கள் சஞ்சரித்திலங்கலேபோலும் தேஜசோடு விலங்கினர். பின்பெருங் காலங்கழித்து அவர்கள் பெற்றோர் தருக்களேவிட்டு மூக்கியதமகதிபூத பிரஹ்மரூபத் தைத் தங்கள் வடிவமாக வுணர்ந்தவராதலின் விதேக கைவல்யத்தை யடைந்தனர். அப்பத்துமறையவர் மைந்தரும் தாய்தந்தைய ரற்றவராய்த் துக்கிதராய் கிளர்ச்சியுற்றவ ராய் பிதராதி பந்துஹீனராய்க் கிருகத்தைவிடித்து ஸ்ரீ கைலாச சிகரத்தை யடைந்த னர். அவர்கட்குப் பாக்கியவசத்தானே வரும் ஹிரண்யகருப்ப சம்பந்தஜசுவரிய அடை வுக்குரியதாய ஆராய்ச்சி யுதித்ததென்பார் சிந்தைசெய்வார் என்றார். ஆண்டிருந்து இனிது சிந்தித்தனர். ஈண்டு மேலான ஜசுவரியம் யாது ? மேலான சுகமியாது ? எனச் சிந்தைசெய்து இனிவரும் வாக்கியங்களேப் பரஸ்பரம் பகர்ந்தனர்; ஹே சகோதரர்களே இகலோக பரலோக சுகசாதனமாக அங்கீகரிக்கத்தக்க இனியதுயாது ? ஜகிகசுக ஹே துத்தன்மை யதன்மையதேனும், பரிணமத்தில் துக்கந்தரா திருப்பதுயாது ? ஹேதுவா யினும் எனவும் பாடம். இங்ஙனம் சாமானியமாக ஆராய்ந்து விசேடமாயும் ஆராய்வா ராயினர். யாது பெருமை யாது செல்வம் யாது சுபமான பேரைசுவரியம்? கிருகக்கிராம அதிபதிகளாக இருக்கும் இச்சனங்களுடைய ஜசுவர்யங்கள் அற்பம், இவற்றினும் உயர்ந் தது யாது ? மண்டலாதிபதியா யிருக்கும் சாமந்தபதமே மகா ஜசுவரியமுடைத்து என லாம். சாமந்த சம்பத்துத்தான் எவ்வளவு ! தேசாதிபதியா யிருத்தலே பெருஞ்செல்வ மாம். பூபர் செல்வந்தான் என்னே ! சம்ராட்டாக இருப்பதே மேலான ஜசுவரியமாம். அதுதான் என்னே ! ஆனல் மகேந்திரபதமே மகா ஜசுவரியம் எனின் ? அதுதானும் எத்துணேயதாம் ? பிரஜாபதிக்கது ஒரு மூகூர்த்தமாம் யாது கற்பத்தில் நசியாதிருக் குமோ அதுவே ஈண்டு சோபனமெனலாம். இவ்வண்ணம் சம்வாதஞ்செய்த பிராதாக் களுள் மூற்பிறப்பில் செய்த ஹிரண்யகர்ப்ப உபாஸ்தியானது தடைகளா லிடையில் தவறிப்போனமையின் அடைந்தவுத்தம ஜன்மத்தினனும், சகோதரரின் சம்வாதத்தா னேயே வெளிப்பட்ட பழைய உபாஸ்தி சமஸ்காரத்தை யுடையவனும் ஆகிய மகாமதி யெனப் பெயரிய மூத்தசகோதரன் முன்னுன் அனுட்டித்த உபாஸ்திமுறையை அதன் கண் ணதிகாரிகளான சகோதரர்கள் பொருட்டு உபதேசிக்கு மிச்சையுடையவனுய்க் கூறல்:—பதமஞ்சிறியு மென்பதாக. பதவியென = பதவியென்று மூத்தவன் உபதே சிக்க, துணிந்தார் மற்றொன்பதின்மரும் நிச்சயித்தார் எனக்கொள்க. பேசிக்கொண் டிருந்த இவர்களுள் ஜேஷ்டப் பிராதா மகாமதி, கலிமான் கூட்டத்தை நோக்கித் தலே மான் கழறியதேபோலும், வழங்குங் கம்பீரமான வாக்கினலே கூறத்தொடங்கினன்: ஹே சகோதரர்களே! எல்லா ஜசுவரியங்களுள்ளும் யாதுகற்ப மென்னும் பிராகிருதப்

ஐந்தவர் கிளை

பிரளயபரியந்தம் நசிக்கமாட்டாதோ அத்தகையது ஹிரண்ய கருப்பத்தகைமையென்று எனக்குத் தோற்றுகின்றது மற்றதொன்று மல்லவாம். பாக்கியவசத்தினுலே மற்றை யர்கட்கும் அதன்கண் அதிகருசியானது உண்டாயிற் றென்பார் துணிந்தா ரென்றார். ஜேஷ்டனும் சிரேஷ்டனுமாகிய மகாமதி யுத்தமோத்தமன் இங்ஙன மியம்பியதைக் கேட்ட அவ்வுத்தம ஐந்தவமறையவர் மைந்தர் யாவரும் ஆண்டின் மொழிகளினுலே சாது சாது எனப்பூசித்து இதனே யியம்புவாராயினர்: அதாவது இதனுனே யதனுபாயத்தைக் கேட்பாராயினர்: ஹே தாத! சர்வஜரை மரண சாதிசயத்வாதியாலாய துக்கங்கள் ஒடுங்கும் இடமாய பதுமாசன சகற்பூச்சிய விரஞ்சித் தன்மையை யாங்ஙனம் சீக்கிரம் அடைவோம். அப்பிராதாவால் மீளவும் மிகத்தேசசுற்ற பிராதாக்கள் வினவப் பட்டார்கள்; உபதேச மூட்கொள்ள உடன்பட்ட அவர்கள் பொருட்டு ஹிரண்யகருப்ப அகங்கிரக உபாஸ்தியைச் சாமகிரியுடன் உபதேசிப்பான் அதனதங்கமாக மரணபரியந்தம் தாரண திடத்தன்மை விதித்தல்: யாணியம்பும் இவ்வியாவற்றையுமே நீங்கள் அதிதிட நிச்சயத்துடன் காப்பூற்ற வேண்டும் பதுமாசனத்திருக்கும் மகாதேஜசையுடைய நமக்குப் பிரமரீட நியாயமாக அத்தன்மை யுதயமாகும்வரை பிரஹ்மாவேயானென்னும் பிரபாவத்தினுலே சிருஷ்டிக் கின்றேன் சங்கரிக்கின்றேன் என்றுதியானம் உளதாக வேண்டும்; சிருஷ்டிக்கின்றேன் சங்கரிக்கின்றேன் என்னும் விங்கத்தாற் சம்வர்க்க வித்தையாமிது உபதேசிக்கப் பட்டதென் றுணரத்தக்கது, என்று என்றதனுனே கூறப்பெறும் பிரகாரமுறை யாவுமே உபதேசிக்கப் பெற்றதென உணர்தல் வேண்டும். தமையனுனே இங்ஙனம் இயம்பப் பெற்றதை யுண்மையெனத் திடமாக அங்கீகரித்த அவ்வுத்தமர் தமையனுடு கூடவே பலராக அதிசயத்தால் தியானுதீனமதியராயினர். பித்தியிற்றீட்டிய சித்திரங்களொப்ப ஆகாரமுடையவராய்த்தியான ஆசக்த மதியையுடைய அவர் உள்ளேயுள்ள வுள்ளத்தானே மிக ஆதரவோடும் உள்ளுவாராயினர். அச்சிந்தனப் பிரகாரம் யாங்ஙனமென அறையத்தொடங்கல்; பின் மலர்ந்த கமல கோசவதன மேனுஞ்கியிருந்த அத்தவர், பிரஹ்மாயான் உலகங்களைச் சிருஷ்டிப்பவன் யான் கருத்தாபோக்தா மகேசுரன்யான். லோகபால புரங்களோடு கூட இப்பதினுன்கு புவனங்களும் என்னுனே நிர்மிக்கப்பட்டன, அவற்றுள் யானிருக்கின்றேன். இவ்வண்ணம் அந்தப் பிராஹ்மணர்கள் அதிதிடப் பிரஹ்மாவின் பாவனையில் ஈடுபட்டவர்களாகித் தேகங்களை மறந்துவிட்டார்கள், அவைகள் பூர்வபாவனைக்கு விடயங்களாய் அர்ப்பிக்கப்பட் டிருந்தமையின் உத்தரபாவனை அதிதிடப்பட மறக்கப்பட்டவைக ளாயினவாம். அவர்களுடைய அத்தேகங்கள் வெய்யிலினுலும் காற்றினுலும் வெகுகாலமாகவுலர்ந்து உலர்ந்து சீர்ணபர்ணம் போலும் க்ஷீணித்துப் போயின. அங்ஙனம் பாவனைப் பரிபாகப் பெருஞ்சமாதியானே அவர்கள் பத்துப் பிரஹ்மாக்களாகிப் பத்துவகையான சர்க்கத் தோற்றங்களும் உண்டாயின. மன்னவர் = மண்டலேசுரர். எவன் ஆணையால் அரசர் அரசுசெலுத்துவரோ அவன் சம்ராட்டெனப்படுவன். பிரஜாபதியின் பகலிலோ பதினுன்கு இந்திரர்கள் பலிக்கின்றார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முகூர்த்தமாத்திரம் மூவுலகத்தையும் ஆளுவர். தாத என்றது, தந்தைசமத் தன்மையானே ஜேஷ்டனைச் சம்போதித்ததாம், பழுதில்பதவி = சர்வதுக்கங்களும் உபசாந்தியுற்ற இடம்.

(ச.) இறத்தலுமே = தனுவைவிட்டுத் தற்கதியை யடையவும், துக்கத்தினுற் கிருக்கத்தைவிட்டுக், கயிலத்தலையெய்தி = கயிலாச சிகரத்தை யடைந்து, நல்குரவுதீர = துக்கமற்றதுயாது பரமசௌக்கிய மியாது இந்தச் சனசம்பத் தெவ்வளவு, வன்னியர் =

சாமந்தர், அந்தகிலே = அந்தச் சாமந்தசம்பத்து. அதுவும் = அவ்வரசர் சம்பத்தும், அது = அந்தச் சமிராட்டைசுவரியமும், இதுவும் = அமரேந்திரத்துவமும், நெடி தல்ல = பிரஜாபதிக்கு ஒரு முகூர்த்தமும் பிரஜாபதியின் கற்பத்தில் நசிப்பது மாதலிற் சோபனமாகாது, பழுதில்பதவி = சகல ஐசுவரியங்களுள்ளும் நாசமற்றதாம், என, அதுவேயெனக்கு ருசிக்கின்றது மற்றொன்றுமன்று என்று தமையன்கூற, துணிந்தார்= இதரரும் உம்மாற் சொல்லப்பட்டது யுக்தமேயென்று உறுதிப்பட்டார் பின்பு.

பிரமன் நாமே = ஜகதிருஷ்டிசெய்பவனுய்ப் பதுமாதனத் திருக்கும் பகவானுகிய பிரமதேவனே நாம், சிருட்டியெல்லாம் புரப்பது = லோகபால புரங்களோடு சதுர்த்தச புவனங்களு முதித்தொடுங்குவ தெமதிடத்தாம், என்றுள்ளே நிரமதான = அவைகளின் அகத்து வசிப்பவனும் கர்த்தாவும் போக்தாவும் மகேசுவரனும் நாமேயாம் என்று அகத் துறுதிப்பட்ட, மனத்தாலே சிந்தித்து = பிரமதேவ பாவனை செய்து, உடலிற் சிந்தை யற = பூர்வதேகங்களை மறந்து சித்திரம் போலிருந்த வரனைவரும் அதிகராய், மரம தென்ன = காற்று வெயில்களினுற் சிலகாலத்தில் உலர்ந்தமரம் போன்று, சிருசித்தி ருக்கவும், மனோபாவமூரமதாகி = பரிபாகப்பட்டு, அயனுர் = தசப்பிரமாணுர், அவர் களால் ஒருபது உலகம் உளதான = தசவித சர்க்கந்தோற்று மாத்திரமா யுதித்ததாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சூரியன் கூறி யேகலும் கதையின் உபசங்காரங் கூறல்:— மன என.

மனவானகத்தி லிவர்பத்து வகையிற் சிருட்டிதந்தனரா
லினமாமவற்றி லோரிரவியானு மென்னு வேகினனுற்
கனமாமனத்தின் விரிவாலே காணுஞ்சகங்க ளுளவாமென்
றனவாகனத் தோன்மனத்தாலே யளித்தானிராமற் கருள்செய்தான் (10)

(ப - ரை.) மனவானகத்தில் = மனோவியோமத்தில், இவர் பத்துவகையில் சிருட்டி தந்தனர் = இத்தசப் பிரஜ்மர் தசப்பிரகாரமாக அண்டங்களைச் சிருட்டித்தனர், இன மாம் அவற்றில் = ஒன்றையொன்று ஒன்றிநின்ற அவற்றுள், ஓரிரவி = ஒரு சூரியன், யானும் என்னு = நானும் ஆவேன் என்று, எகினனுல் = சென்றனன், கனமாம் மனத் தின் விரிவாலே = நிடபாவனையோடு கூடிய மனத்தின் விசாலத்தாலே, காணுஞ் சகங் கள் உளவாமென்று = தோற்று மூலகங்கள் இருக்கின்றனவாம் என்று, அனவாகனத் தோன் மனத்தாலே யளித்தோன் = ஸ்ரீ பிரஹ்மதேவரது மானசபுத்திரராகிய ஸ்ரீ வசி ஷ்டபகவான், இராமற் கருள்செய்தான் = ஸ்ரீ இராகவருக் குபதேசித்தனர்.

(ஸ்ரீ - வீர) யானும் என்றது தனதுகிருத்தியமாகிய தினபிரவு செய்தலே யியம்பிய தாம், பாற்கரனல்லவோ, மேருவின்றடைபடாமற் றினஞ்செய்பவனும், தடைபட்டு இரவு செய்பவனுமாவன். இது பிருகத்வாசிட்டத்திலு முளது:—அருக்கனியற்றிய கோராத் திரி தெரிக்கு முருக்களை யெங்ஙனந்தானே, சுரிக்குமறிவுஞ் சதசத்தாக்கி, மரிக்குமுருக் களை மலர்த்தியே காட்டும். அவர்கள் தசசமுசாரங்களை மனோவியோமத்திற் சிருஷ்டித் தார்கள், இத்துணைக் கிரந்தத்தானே இஃதெங்ஙன முண்டாயது என்னுங் கேள்விக் குப் பதிலளித்து நீயார்என்றதற்கு விடையளித்ததாம் இரவியானும் என்றது. அவ்வைந் தவ சர்க்கங்களின் இடையில் ஏக தம் பிரஹ்மாண்டத்தின் ஆகாசபூத ஆகாசவடிவ மந் திரத்தில் இருப்பவனுகிய பானுயான், புவியிற் காலகேயத்தொழிலில் ஏவப்பெற்றவன். புவியென்றது மூன்றுலக உபலக்கணம் ஆம், பூலோகத்திலேயே கருமாங்கமாகக் கால விபாக ஞானத்திற்கு விசேட உபயோகமிருத்தலின். இவ்வண்ணம் ஸ்ரீ பிரஹ்மதேவரை

வஞ்சவிந்திரன் கதை

நோக்கிக்கூறி நமஸ்கரித்துவிட்டுப் பானுதன்மந்திர மடைந்தனன், தேவேசராகியவிரிஞ் சியும் தமது வியாபாரபரமாயினர்.

(ச.) இரவி = பாஸ்கரனென்னுந் திவாகரன், எகினஞல் = தன்மந்திரத்தைநோக் கிச் சென்ருன், பின்பு, அனவாகனத்தோன், மனத்தாலே, யளித்தோன் = சிருட்டித்தான், கனமாமனத்தின் விரிவாலே காணுஞ் சகங்களுளதா மென்றிராமர்க் கருள்செய்தான் என்பது கவிநாயகர் கருத்து.

இந்நூலில் ஐந்தவர் உபாக்கியானம் முற்றிற்று.

வஞ்சவிந்திரன் கதை.

———— * ————

(ஸ்ரீ-வீர-அ - கை.) சென்றகதையாற் ரூற்பரியமாகப் பிரதிபாதித்த அர்த்தத்தைக் காட்டுகின்ரூர்:—மூன்ருரியனுல் ஐந்தவர் விருத்தாந்தத்தைக் கேட்ட ஸ்ரீ பிரஹ்மதேவர் இனியான் படைக்கவேண்டிய அவசியம் ஒன்றையுங் காணுமேயென அதற்குப் பாற் கரன் விநோதமாத்திரமாகத் தாங்கள் சிருஷ்டிக்கலாம், பற்றின் நியமனத்தாற் செய் வது பந்தமாகாது, மனமேயல்லவோ பந்தமோக்ஷ, காரணம் என்பதற்குத் திருஷ்டாந்த மாக வஞ்சவிந்திரன் கதையைக் கூறல்:—பொருவில் என.

(ச.) மூன் ஐந்தவர் கதையிற் பிரபஞ்சத்திற்குமனோமயத்துவஞ் சொல்லப்பட்டது, இப்போது, கிருத்திரிம இந்திரன் கதையில் வாகியேந்திரிய வியாபாரத்தைக் குறித்து மனோவியாபாரத்திற்கே பிரபலத்துவம் பிரதிபாதிக்கப் படுகின்றது:—பொருவில் என.

பொருவில் சகத்தையளிப் போனும் புருடன்ருனும் புகன்மனமே
கருதுமனத்தின் செயல்செயலாங் காயச்செயல்கள் செயலன்ரும்
பருதியுரைசெய் புதுமறையோர் பதுமாதனராய்ப் பார்படைத்தார்
பெருமாமனத்தி னுயர்சத்தி பிறரூலறிதற் கெளிதாமோ.

(ப - ரை.) பொருவில் சகத்தை யளிப்போனும் = விசித்திரஜகத்தைச் செய்பவ னும் புருடன்ருனும் = பரபுருடனும், புகன்மனமே = கூறிய வுள்ளமேயாம், கருது மனத்தின் செயல்செயலாம் = எண்ணுகின்ற சித்தஞ்செய்ததே செய்ததாம், காயச் செயல்கள் செயலன்ரும் = சரீரஞ்செய்ததுசெய்ததாகாதாம், பருதியுரைசெய் புதுமறை யோர் = சூரியனுற் சொல்லப்பட்ட அற்புத அந்தணர் சாமானியராக இருந்தும், பதுமா தனராய்ப் பார்படைத்தார் = மனோபாவனையின் வலுமையாலே தாமரைத்தவிசினராகி யுலகங்களை யுண்டாக்கினர், பெருமாமனத்தின் உயர்சக்தி = பெரிய மாகிமைபொருந் திய மனத்தினது மேலான ஆற்றலானது, பிறரால் அறிதற்கு எளிது ஆமோ = சாமானி யரால் தெரிந்துகொள்வதற்குச் சுலபமாமோ ஆகாதாம்.

(ஸ்ரீ - வீர.) மனதாற் செய்யப்பட்டதே நன்ருகச் செய்யப்பட்டதாம் அதாவது மனமியற்றியதே பயனுடையதாம் என்பதாயிற்று. பத்தமோக்ஷமனத்தின் பரமத்தனத்தா லசையாத்தன்மையை இந்திர அஹல்யை மனோவிருத்தி கதையாற்றெரிவிப்பான் விரும் பியபானு முதலில் மனத்தின் பெருமையை மனமே யென்று தெரிவித்ததாம்: மனமே ஜகத்துகளின் கருத்தா; மனமே பரபுருடன், அதாவது சமஷ்டிபாவத்தை யடைந்த மனமே ஹிரணியகருப்பன், உலகில் மனங்கிருத்தமே கிருதமாம், சரீரங்கிருதங் கிருதமன்

ரும். கண்டோமல்லவா! சாமானிய பிராஹ்மணராகியும் மனோபாவனையினாலே ஐந்தவர் பிரஹ்மத்தன்மை யடைந்ததை; ஆகலின் மனத்தினது பேராற்றலைப் பாருங்கள் என்று ஸ்ரீ பிரஹ்மதேவரை நோக்கிப் பானுபகருவதாம்.

(ச) பொரு + போனும் = ஜகங்களின் கருத்தனும், புதுமறையோர் ஐந்தவனும் சாமானியப் பிராஹ்மணர், பதுமாதனராய் = பத்மாசனயுக்தராய்ப் பிரமபாவனையினற் றசப்பிரமராய், எளிதாமோ இராமாநீபார். (குறித்து = பார்க்க)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சரீரஞ்செய்த கருமங்கட்குப் பயனுடைமையானது காட்சி முதலிய வற்றாலே துணியப் பெற்றமையின் சரீரகிருதஞ் சார்த்தகமன்று என்று சாற்றியது சாராதரம் என ஆசங்கித்துக் கூறல்:—உள்ளம் என.

உள்ளமுடலைப் பாவிக்க வுடலாயதனு லுள்ளயரும்
வெள்ளஞானத் தவருள்ளே மேவாநின்ற பாவனையாற்
பொள்ளவுடலி னலந்தீதுபுந்தி செய்யார் புராதனநாட்
கள்ளவினைசெய கலிகையுங் கரவிந்திரனு மிதற்கொப்பாம். (2)

(ப - ரை.) உள்ளம் = மனம், உடலைப் பாவிக்க = தேகத்தைப் பாவித்தலும், உடலாய் = தேகமாகி, அதனால் உள்ளயரும் = அக்காரணங்கொண்டு சித்தாகுலஞ் செறியும், வெள்ளஞானத்தவர் = பூரணஞானமுற்ற புண்ணியசீலர், உள்ளே மேவாநின்ற பாவனையால் = அந்தரத்திற் பொருந்திய அதிதிட பாவனையினாலே, பொள்ளவுடலின் நலந்தீது புந்திசெய்யார் = அநித்திய ஆகத்தினது நன்மைதீமைகளை மதியின் மாட்டு மதியார், புராதனகாள் = பூர்வப்போதில், கள்ளவினைசெய் அகலிகையும் கரஇந்திரனும் இதற்கு ஒப்பாம் = கூடாவொழுக்கம் ஒழுகிய அகலிகைமாதும் வஞ்சக இந்திரவிடனும் இதனுக் கிணையாவார். (2)

(ஸ்ரீ - வீர.) தேகங்கள் மனத்தினாலே பாவிக்கப் பட்டவனுடித் தேகித்தன்மையை யடைவன் தேக உதிதகாரிய, காரியாவன் என்பது பிரசித்தம், அன்வயமறைந்து வியதிரேகம் விளம்பல், வெள்ளமென்பதாதி. தேகபாவனையினின்றும் விடுபட்டபுருடன் தேக தருமங்களாகிய சீத உஷ்ணமான அவமானாதிகளினாலே பாதிக்கப்படான். யாண்டிதனைக் கண்டதோவெனக் கடாவி விடைதருதல்; புந்திசெய்யார் என்பதாதி, மனோபாவனையானது இருக்குமாயின் சரீரத்திற் பலமுடிபு வரையாய உண்ணலாதி காரியங் காண்டலான், அஃதிலதாய வழியோ நிருவிகற்பசமாதியவத்தையில் அதுகாணுமையின்; கனவு அவத்தையில் மனோமாத்திரவடிவ சரீரஞ்செய்த திருப்தியாதி பலமுடிபு வரையாய் போஜனாதி காணப்படுதலினாலும், விவேக முற்றவனாலும் அற்றவனாலும் தேகத்தாற் செய்யப்பெற்றதாகப் புலப்படும் பயனுறு காரியம் கனக்காயஞ் செய்தகாரியம் கடுப்பமன மியற்றியதேயாம் என்பதுபொருள் மனமே பிரியாப் பிரியங்களைச் செய்வது தேகமல்ல என்னு மிதன்பொருட்டு அதன் நிக்கிரகத்தில் பிரயத்ந அதிசயத்தை விதிப்பான் வேறுகதையால், புஸ்தம்புரியப் புகல்வார் இதற்கொப்பாம் என்றார். மனத்தால் எண்ணி யெண்ணியுயிர் உடம்புண்மையை யடையும், தேக எண்ணத்தினின்றும் விடுபட்டவனோ தேகதருமங்களாகிய ஜன்மமரணாதிகளால் பாதிக்கப்படான் தேகாதியின்பால் யான் எனது திருஷ்டியை யுடையவனே யவசியம் சுகதுக்காதியை யடைவன், அந்தர் முகத்தோடு கூடியிருக்கும் யோகிதேகத்திற் பிரியாப் பிரியங்களையறியான். இனியியம்பும் கதையைத் தொடங்குவான் முடிபுரைத்தல்: ஆதலால் நானுவித வுலகமயக்கிற்கு

மனமே காரணமாகும், அஹலியையோடு இந்திரனது விருத்தாந்தம் இதன்கண் நிதர்சனமாம்.

(ச.) உள்ளம் = மனத்தினால் உடலாய் = அதேதகன் தேகத்தை யடைந்தவனும், அதனால் = தேகபாவனையால் உள்ளபரும், எனவே தேகபாவனையில் நிலைபெற்றவன் தேகதருமங்களால் வருந்தான் என்பது அருத்தாபத்தி; வெள்ளஞானத்தவர் = ஞான யோகிகள், உள்ளே மேவாநின்ற பாவனையால் = அந்தர்முக திருஷ்டியால், உடலில் = தேகத்தின்கண் வரும் நலந்தீங்கு = பிரியாப் பிரியங்களை, புந்திசெய்யார் = அறியார் ஒப்பார் = திருஷ்டாந்தமாவார். (ச)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கதை தொடங்கல்:—என்னவென.

என்னவிவர்களா ரென்னுவிராமன் கேட்பமுனி சொல்வான்
முன்னர்மகத நாடுடையோன் மொழியிந்திரத் துய்ம்மனென்றோர்
மன்னனவனுக் குயிர்போல மகிழ்ந்தேவி யகலிகையாஞ்
சொன்னகரி லொருவனுளன் றூர்த்தனவன் பேரிந்திரனும்.

(ப-ரை.) என்ன = என்று திட்டாந்தப்படுத்த, இவர்கள் ஆர் என்ன = கூறிய வர்கள் யாவர் என்று, இராமன்கேட்ப முனிசொல்வான் = ஸ்ரீ இராகவர்வினவ ஸ்ரீவசிஷ்டபகவான் கூறுவார், முன்னர் = பூர்வம், மகதநாடுடையோன் = மகத நாட்டை ஆண்டு கொண்டிருந்த, மொழி இந்திரத்துய்ம்மன் என்று ஓர் மன்னன் = கீர்த்திபெற்ற இந்திரத்யும்நன் என்னும் ஒப்பற்ற ஓரரசன் இருந்தனன், அவனுக்குயிர்போல = அவ் வரசனுக்குப் பிராணன்போல, மகிழ்ந்தேவி = சந்தோஷமூறுமனைவி, அகலிகையாம் = அகலிகையென்னும் நாமத்தினளாம், சொன்னகரில் = அதேபட்டணத்தில், ஒருவனுளன் தூர்த்தன் = ஒருவீடன் இருந்தனன், அவன்பேரிந்திரனும் = அவன் இந்திரன் என்னும் பெயரினன் ஆவன்.

(ஸ்ரீ-வீர.) ஸ்ரீ பிரஹ்மதேவர்: ஹே பகவன், பாணுவே ! ஹே அந்தகார மகற்று வோய் ! அஹல்யை என்பவள் யாவள், இந்திரனென்பவன்ருன் யாவன், எவர்தம் விருத்தாந்த சிரவணத்தாலே பவித்திரமான திருஷ்டியான தூண்டாமோ ! பூர்வம் ஹே தேவ தேவ! மாகதங்களின் மகீபதியொருவன் இருந்ததாகக் கேள்வி, இந்திரத்யும்நன் எனப் பெறுவன், புராணந்தரப் பிரசித்த இந்திரத்யும்நனைப் போன்றவன்; அவனுக்கு, சசாங்கனுக்கு ரோகிணியைப்போலும், இந்துபிம்பப் பிரதிமையென்னக் கமலலோசனப் பார்யையகல்யை யென்பவளிருந்தனள். அதேபுரத்தில் ஒரு விடனிருந்தான் அவன் விடமண்டலேசுரன், விடவித்யா குசலன், விப்பிரகுமாரன், இந்திரனென்னும் பெயரினன்.

(ச.) ஸ்ரீ இராமர், அவர்கள் = எவர்களது விருத்தாந்தத்தைத் தெரியின் என்னைப் பாவனமான திருஷ்டிவந்து பற்றுமோ அவர்கள்யார், அந்த வகலிகையாவள், இந்திரனியாவன், என்ன = இவ்விடத்து உமக்குச் சம்மதமாமென்று, முனி = ஸ்ரீ வசிட்டர், இராமா நீ கேளென் றுரைப்பான், மகதநாடுடையோன் = மகதங்களின் மகிபதி, இந்திரத்துய்மன் என்று, மொழி = பிரசித்த மூள்ளவன்போல், ஓர் மன்னன் = மற்றோர் இந்திரத்துய்ம்ந னென்னும் அரசன், மகிழ்ந்தேவி = சந்திரவிம்பப் பிரதிமையாய்க் கமலலோசனியான பாரி, அகலிகையாம் = அகலிகை யென்பவள் சந்திரனுக்கு ரோகிணிபோ லிருந்தாள் தூர்த்தன் = நாரிகளுக்குப் பிரியனான விடன், அவன் = அவ் விடவரசிகாமணி, பேரிந்திரனும் = இந்திரனென்னும் பெருடைய மற்றொருவனும். (ஞ)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கதையைத் தொடர்ந்து கூறல்:—அன்ஞ.

அண்ஞளந்த வகலிகையுமவ் விந்திரனுஞ் செறிகதைகேட்
டின்ஞளிந்த வகலிகையுமிவ் விந்திரனே யினிதணைந்தா
டொன்ஞட் பிரிந்தோர்கூட்ட மெனத்தூர்த்த சூடாமணியுடனே
சின்ஞண் மகிழ்ந்தொன்ரு மளவிற்செங்கோ லரசன்செவிப்படுத்தார்.

கேட்டவேந்தன் மிகமுனிந்து கிளருநீரி லமிழ்வித்துங்
கோட்டுமதமா வெதிரிட்டுங் கொடுந்தீக்கொழுந்திற் குளிப்பித்தும்
வாட்டுங்கசையான் மோதுவித்தும் வருத்தஞ்செய்ய வருந்தாம
ஞட்டமெதிர்பார்த் துளமொன்றி நகைசெய்திருந்தார் நலிவுணரார். (5)

(ப - ரை.) அந்நாள் = பூர்வகாலத்தில், அந்த அகலிகையும் அவ்விந்திரனும், செறிகதை கேட்டு = கௌதம பத்தியாகிய அஹல்லையும், தேவேந்திரனும் கூடியசரித்திரத்தைக் கேள்வியுற்று, இந்நாள் = இக்கால், இந்த அகலிகையும் இவ்விந்திரனே யினிதணைந்தாள் = கூறியராணியும் இத்தூர்த்த சூடாமணியுடன்கூடி இரமித்தாள், தொன்ஞட் பிரிந்தோர் கூட்டமென = வெகுதினம் பிரிந்திருந்தவர் சேர்க்கையேபோல, தூர்த்த சூடாமணியுடனே = விடஹர மணியோடும், சின்ஞண் மகிழ்ந்தொன்ரும் அளவில் = சிலகாலஞ் சந்தோஷித்து கனதரநேயமுற் றிருக்கும்போது, செங்கோலரசன் செவிப்படுத்தார் = தரும அரசன் சந்நிதியில் அவ் விருத்தாந்தத்தைத் தெரியப்படுத்தினர்.

கேட்ட வேந்தன் மிகமுனிந்து = செவியுற்ற செந்நெறிமன்னன் சினத்தை மிகவு மடைந்து, கிளரும் நீரில் அமிழ்வித்தும் = ஆழ்ந்தமடுவில் மூழ்கடித்தும், கோட்டுமதமா வெதிரிட்டும் = கொம்புகளையுடைய மதயானையைக் கொண்டு மிதிக்குமாறு செய்வித்தும், கொடுந்தீக் கொழுந்திற் குளிப்பித்தும் = கொடிய தீச்சுவாலையிற் போட்டு வாட்டியும், வாட்டுங் கசையான் மோதுவித்தும் = துன்புறுத்துங் கசையினாலே இரக்தம் கிளம்ப அடித்தும், வருத்தஞ்செய்ய = இவ்வாறு அநேக துன்பங்களைத் தந்தும், வருந்தாமல் = துயரத்தை யடையாமல், நாட்ட மெதிர்பார்த்து = ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு, உளமொன்றி = மனமானது ஒருமைப்பட்டு, நகைசெய்திருந்தார் நலிவுணரார் = சிரித்துக்கொண் டிருந்தாரே யல்லாமல் ஒருசிறு துயரத்தையும் அடைந்திலர். (5)

(ஸ்ரீ - வீர.) அகல்யையாகிய கௌதமபத்நீ முன்னர் இந்திரனது இஷ்டையாயினள் என்பதாக இராஜமஹிஷியாகிய அகலிகை இதிகாசஞ் சிரவணித்தபோது கதைப் பிரஸ்தாவத்திலே கேள்வியுற்று இந்திர அந்தராகிணியாயினள். கூடினள், யாவரும் அதிசயிக்கும்படியாக நிரந்தரங் கனதரநேயமுற்று மகற்பின்றிய சேட்டையராகி இரமித்தனர். இவ்வாறிருக்கும் இவரது விருத்தாந்தத்தை அரசனது சந்நிதியிற் தெரியப்படுத்தினர். அதைக்கேட்ட மன்னவன் சகிக்கமுடியாத துயரத்தையடைந்து அவர்களிருவரும் அன்னியோன்னியம் பற்றுற்றிருக்கும் பான்மையைப் பார்த்துப் பூபதியானவன், அவ்விருவருக்கும் அநேகவிதமான தண்டனையாற் பீடனம் செய்வித்தனன். என்னபீடனம் விசேடமா யியற்றுவித்தனன் எனின்? அவ்விருவரையும் ஹேமந்த இருதுவில் பெருநீர்மடுவில் மூழ்கடித்தனன். ஆண்டு லௌகிகமாயும் அசத்தியமாயும் இகழத்தக்கதாயும் உள்ள விடயத்திற் சித்தம் நிரபாவத்தை யடைந்த அளவில் துக்கமும் தோற்றவில்லை ஆநந்தத்

தையும் அடைவதாயின் பரமாத்மாவின்பாலவ்வாறு நிலைபெறுவதாயின் துக்கமுறுமென்னும் சம்பாவனையும் தூரத்திற் றள்ளப்படும் பேராநந்தம் நிரதிசயமாக நிரந்தரம் அடையப்படும் அதாவது தானுமேவே சித்தமாம் என்னுந் தாற்பரிய இரகசியத்தைக் குறிப்பித்துக்கொண்டு அவர்தம் சித்தத் திரிலேயின் பயனிரண்டையும் விரிப்பார் நகைசெய்திருந்தார் நலிவுணரார் என்றார், பரம சந்தோஷத்துடன்[illegible] சிரித்துக்கொண்டே யிருந்தனர் ஒரு சிறிதும் கேதமடைந்திலர். கடகீயக் கழலகளிற் கட்டிவிட்ட போதினும் கடகளவுந் துயரையே கண்டாரில்லை. கசைகளால் ஹதம்பண்ணப் பட்டபோதினும் யாதொருந் துயரையுமே யடைந்திலர் சுழுக்கக்காய்ந்த பாத்திரத்திட்டும் கொழுக்கச் சுடர்விடுஞ் சுவாலையிற் றோய்த்தும் சிறிதுந் துயரமடைந்திலர்; பணிப்பாறைகளி லிருப்பதுபோ லிருந்தனர். பேதங்களால் = பிரகாரங்களால்.

(ச.) கேட்டு = இதிகாசங்களினுல் வினவி, மகிழ்ந் தொன்றுமளவில் = மிகுந்த சிநேகமாய் லக்ஷையைவிட்டு ஆவரண அபேக்ஷையின்றி அந்தியோந்தியம் பார்வையாகி சேட்டை ஒருமித்திருக்குங் காலத்தில், மூலபதம்: பேதங்களால் = பரஸ்பர அனுராக மழிக்கும் பேதோபாயங்களால். (4-5)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அரசன் ஆச்சரியமடைந்து வினுதலும் அதற்கவர் கம்பீரமான சமாதானஞ் செய்தலும் வருணித்தல்:—அரசனென.

அரசனேக்கிமிக வியப்புற்ற றவம்வருத்த வருந்தாவா
றுரைசெய்திடுமி னென்றலுமே யுள்ளங்களிப்பா ருரைசெய்வார்
வரைசெய்புயத்தா யெங்கண் முகமதியினமுதம் விழியருந்தக்
கரைசெயரிய களிப்பான்மெய் காணேம்வருத்தங் காண்பேமோ. (6)

(ப - ரை.) அரசன் நோக்கி = இராஜாவானவர் பார்த்து, மிகவியப்புற்று=அதிக அற்புதத்தை யடைந்து, அறவும் வருத்த வருந்தாவாறு = அத்தியந்தம் துன்புறுத்தவும் துன்பினை யடையாதவண்ணம். உரைசெய்திடுமின் என்றலுமே = கூறுவீர்களாக என்று வினவுதலும், உள்ளங்களிப்பார் உரைசெய்வார் = மனமகிழ்ச்சியில் மூழ்கிக் கிடக்கும் அன்னர் இன்னவாறு சொன்னர், வரைசெய் புயத்தாய்=மலைபோலும் புயங்களையுடைய மன்னனே! எங்கண் முகமதியினமுதம் விழிருந்த = எங்களுடைய ஆனன அமுதகிரணன் அமுதத்தை யக்கங்கள் அயில, கரைசெய்யரிய களிப்பால் = அபாரமான ஆநந்த மிகுதியால், மெய்காணேம் = சரீரத்தை நினைந்திலேம், வருத்தங் காண்பேமோ = அதனுலெய்துந்துயரை யெங்ஙன மடைவேம், அடையேம் என்பதாம்.

(ஸ்ரீ - வீர.) பின்னிறைவன்! ஹே துன்மதிகளே! இத்துணைத் துயருறுத்தியும் நீவிர் துயருறுவாறென்னே யென்ன, மகிழ்நிறைமதி அவர் கூறுவர் தரணீபாலனை நோக்கி: ஹே மகீபால! யாங்கள் எங்களுடைய அநிந்திதமுக காந்தியை நினைந்து நினைந்து அன்னியோன்னியம் ஆநந்த மடைகின்றேம், பரஸ்பரம் பாவனையின் நிடத்தினுலே எங்களுடைய தேகத்தையும் எண்ணிலேம் எங்களுடைய மனச்சம்பந்தம் பேத சங்கைச் சூனியஹேதுவால் உம்மாலாக்கப்பட்ட பீடனங்களில் மகிழ்ந்துளேமே யல்லாமல் ஒரு சிறிதுந் துயருற்றிலேம் என்பதாம்.

(ச.) உள்ளங்களிப்பார் = சந்தோஷசித்தர், விழியருந்த = நேத்திரங்கள் அந்தியோந்தியம் புஜிக்க. (6)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மீண்டும் அவர்மனத்தின் செயலை விரித்தல் அரிந்தமாண்டு எனு.

அரிந்தபொழுது முடற்றுன்ப மறியேமொன் றிலன்பாகிப்
புரிந்துபற்று மனத்தினுடல் பொன்றவரினுந் துயர்தோன்றுத்
தெரிந்தபொருளின் மனமழுந்திற் றேகத்தொழில் வேறெவர்காண்பார்
விரிந்தமுனிவர் சாபமும்பல் வினையுமதனை மீட்பரிதாம்.

மாண்டுவாளா போனவுடன் மட்டொன்றில்லை பவையெல்லாந்
தாண்டுமனத்தா லுண்டாகுஞ் சலத்தாலன்றிக் காடுண்டோ
தூண்டுமனமே முதல்வடிவாய்த் தூலவுடலம் போனலும்
வேண்டுமுடல்கள் விரைந்தெடுக்கும் விரியுங்கனவிற் செயல்போல.

(ப - ரை) அரிந்த பொழுதும் = எங்களுடைய அங்கங்களை கத்தரித்தபோதும், உடற்றுன்பம் அறியேம் = சரீரதுக்கத்தை யுணரேம், ஒன்றில் அன்பாகிப் புரிந்துபற்று மனத்தினுடல் பொன்றவரினும் துயர்தோன்று = ஒருபொருளின் கண்ணே மிகுந்த பிரியமாகி அழுத்தமாகப் பற்றுதும் மனத்தின்பால் தேகங் கெடும்படியான துன்பங்கள் வந்தபோதினும் அத்துயரங்கள் தோன்றுவாம், தெரிந்த பொருளில் மனமழுந்தில் = பிரியமாகத் தேர்ந்தெடுத்த வத்துவில் உள்ளமானது அழுத்தமாக மூழ்கில், தேகத்தொழில் வேறு எவர் காண்பார் = சரீரம் வருந்துவதாதியை வேறுயாவரேகாணுவர், விரிந்த முனிவர் சாபமும் = பெருந் தவத்தினையுடைய மகரிஷிகளது சாபமும், பல்வினையும் = எத்தொழிலும், அதனை மீட்பரிதாம் = அதுதனை மீளச்செய்தல் கூடாத காரியமாம்.

மாண்டு வாளாபோன வுடல் = வீணாக இறந்துபோன தேகங்கள், மட்டொன்றில்லை = கணக்கே கிடையாது, அவையெல்லாம் தாண்டுமனத்தா லுண்டாகும் = அத்தேகங்கள் யாவையும் ஒன்றைவிட்டொன்றிற் றுவிக்கொண்டே யிருக்கும் உள்ளத்திலேயுண்டாகும், சலத்தாலன்றிக் காடுண்டோ = ரீரைவிடித்து வனத்திற் றருவுங் கொடியுங் கனியும் உளவாமோ, தூண்டுமனமே முதல்வடிவாய் = விடயங்களே யுளவாக்கும் உள்ளமே முக்கிய வுடலாய், தூலவுடலம் போனலும் = தூல ஆக்கைகள் தொலைந்தாலும், வேண்டும் உடல்கள் விரைந்தெடுக்கும் = வேண்டிய சரீரங்களைச் சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளும், விரியும் கனவில் செயல்போல = விரித்த சொப்பனத்தில் மாறிமாறிச் செயல்கள் செய்வதே போலவாம்.

(ஸ்ரீ - வீர.) எங்கள் அங்கங்களைத் துண்டந் துண்டமாக வெட்டியபோதினும் ஹே மகிபால யாங்கள் மோகியேம். இஷ்டப்பொருளில் நீண்ட அபிநிவேசஞ் செய்து அதன் கண்ணே வுன்றிற்கும் மனத்தை பாதை செய்வதற்குச் சரீரசம்பந்த பாவ அபாவங்கள் சமர்த்துடையன வாகாவாம். அதிதீவிர வேகத்தோடு கூடியமனத்தினுலேயாது பாவிக்கப்படுமோ அதனையே அது மிகத்திராமாகக் காணும் சரீரவிசேஷ்டைகளைக் காணுது. எக்கிரியைகளும், வரசர்பதிகளும், அதிதீவிர வேகத்தோடும் பற்றியமனத்தை யசைக்கச் சமர்த்துடையன் வாகாவாம் அன்னி யோன்னியம் அவ்வவ் வாகாரங்களே யடைந்துள்ள யாங்கள் அதிதீவிரமாகப் பாவித்து அவற்றுள் அழுந்திக் கிடக்கின்றேம். ஹே பூபதே ! ஒரு தீரனுடைய மனமானது ஒருமையுடன் ஒருகாரியத்திற் புகுந்துவிட்டதேயாயின் அது அநேக உபத்திரவங்களாலும் வரசாபவலுமைகளாலும் சுமேருவைப்போல அசைக்கமுடிய யோக்கியமே யாகாதாம்; மான்களுறைந்தோ மாமலைவீழும். அற்றேல் தேகமே மனத்தின் காரணம் தேகமீட்டினமாகப் பிடிக்கப்படாதது யாது காரணமோ வெனின் ? அன்றென்பார் மாண்டெனத் தொடங்கினர். இங்கேகாணப் படுவனவாய

உற்பத்திப் பிரகரணம்

பிராணிகளின் சரீரவடிவ வீணைவெழுந்த ஏகதேச அற்பகற்பனைகள், மனங்கட்குக் காரணமாகாவாம், மற்றே, சர்வவன கண்டலதை ரசங்களில் வாரியே காரணமாவது போல, இத்தேகங்கள் யாவற்றிற்கும் சித்தமே உபாதான காரணமாம். இதனனே தேக காசமெய்தினும் மீண்டும் மீண்டும் உடலுற்பவமாம் சித்தகாசமாயினே கைவல்யமேயாம் மீண்டும் பவமுண்டாகாதாம் என்பது வெட்டவெளியா மென்பார் விரைந்தெடுக்கு மென்றார். தேகம் சுத்தமாகுமாயின் விவிததேக கணத்தைச் சித்தஞ் செய்யுமாதலின் சரீரங்களின் மாட்டுச் சித்தம் உபாதான காரணமென்றது விபரீதமுடையதாக என் ஆக மாட்டாதென்னுஞ் சங்கைக்கிடனின்ற மென்றுணர்க. கண்டாமன்றே கனவிடத்தின் மனம் விரைவில் சுவரவமாகச்செய்து வினையாடுவது; சித்தமானது சுத்தமாய் விடின் காயம் ஒரு சிறிதுமே உண்டாக்கவே மாட்டாது, ஆகையினாலே சித்தவடிவ சர்வ அருத்த காரணமாய சிந்தாமணி யதார்த்தத்தைப் பரமபுருடார்த்த சமாதானத்தான் இர கஸ்திப்பீராக, துச்சக்குரோதாதி வயத்தானே விகாசஞ் செய்யாதீர்.

(ச.) ஒன்றிலன்பாகிப் புரிந்து = ஓர் பொருளில் நேசமாய் விருப்புற்று, பற்றும் = நிரமாயிருக்கும், மனத்தில், வரினும் = சரீரத்துண்டாகா கின்ற பிரியாப்பிரிய ரூபங்களான கிரியைகள் வந்தாலும், துயர்தோன்றே = பிரியவஸ்துவில் வெகுகாலங்கூடினதர்யிருக்கும் மனதைச் சரீரசம்பந்தமான பிரியாப்பிரிய ரூபங்களாகிய கிரியைகள் வாதித்தற்குச் சத்தியுடையனவாகா என்பதுபொருள், தெரிந்தபொருளில் = பாவனரூபமான வஸ்துவில், மனமழுந்தின் = மனது தீவிரவேகமுறில் அப்பொருளேயே புருடன் சலன மறப்பார்ப்பன். தேகத்தொழில் வேறெவர் காண்பார் = அரசனே மற்றோர் கிரியையும் பாரார் என்பது பொருள். வீரிக்தமுனிவர் சாபமும் பல்வினையும் = முனிசாபாதிகளும், அதனை = ஒருகாரியத்தில் தீவிர வேகத்தோடுகூடின தீரனது மனதை, மீட்பரிதாம் = அநேகவச்சிராயுத அடிகளும் மேருவைச் சலிப்பியாததுபோற் சலிப்பியாது. (7-9)

அவையெல்லாம் = அச்சரீரங்கள் அனேத்தும், மனத்தா லுண்டாகும் = விருதாவாக வுதிக்கும், சலத்தாலன்றிக் காடுண்டோ = சகலவனசமூக லதையினுடைய ரசங்களுக்கு வாரிபோல், அச்சரீரங்களுக்குச் சித்தமேகாரணமாம், ஆதலின், தூண்டுமனமே முதல் வடிவாம் = இவ்விடத்தில் மனதே முக்கியமான சரீரமாம்; என்றுமகாத்மாவே நீயறி, வேண்டு மூடல்கள், அம்மனமே நவரவமான விவிததேக கணங்களை, விரைந் தெடுக்கும் = சீக்கிர முண்டாக்கும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கதையை உபசங்கரித்தல்:—இத்த னை.

இந்தமனமே யொடுங்கிலுட லேதுமறியா தெனக்கேட்ட
வந்தநிருபன் பரதனெனு மருகின்முனியை முகநோக்கிச்
சிந்தைமயலுற் றிருந்தபிவர் சிற்பாவனை செப்பினரென்னு
புந்திமகிழ்ந்து புறநாட்டிற் போமென்றவரைப் போக்கினனால்.

(பதவு.) இந்தமனமே யொடுங்கில் = இம்மனமானது இலயமானால், உடல் ஏதும் அறியாது = தேகம் எதனையுமே யுணராது, எனக்கேட்ட அந்த நிருபன் = என்றுகூறியதை வினவிய அம்மன்னவன், பரதன் எனும் அருகின்முனியை முகம்நோக்கி = சமீபத்தில் வீற்றிருந்த ஸ்ரீ பரதமுனிவரது திருமுகத்தைப் பார்த்து, சிந்தை மயலுற்றிருந்தும் இவர் சிற்பாவனை செப்பினர் என்ன = மனோமயக்கத்தை யடைந்திருந்தும் இவர் பரமார்த்தரச சம்பந்தமான மொழிகளைக் கூறினர் என்று, புந்திமகிழ்ந்து = மதிமகிழ்வுற்று,

புறநாட்டில் போமென்று அவரைப் போக்கினன் = வேறு தேசத்திற்கு ஓடிப்போங்கள் என்று அவரைத் துரத்திவிட்டனன்.

(ஸ்ரீ - வீர.) பரமார்த்தரச சம்பந்தமான = பரமார்த்த சாரஸ்யமான, அவர்களால் இவ்வண்ணம் இயம்பக்கேட்ட அரசன் அருகிலிருந்த ஸ்ரீபரதமுனிவரை நோக்கிக் கூறுவதாவது; ஹே பகவன்! சர்வதருமங்களையும் உணர்ந்தவரே! காமக்குரூடரேனும் இவர்தம் வசனம் பரமார்த்தரசம் பூரித்து மனங்களே யிரமிக்கச் செய்கின்றது. சாஸ்திரத்திற் சாற்றியபடி வெகுதண்டனையும் அடைந்தனர் இவரை யினித்தேயப் பிரட்டஞ் செய்கின்றே னென்றுரைத்து இராஜசார்த்தூலன் அவ்விருவரையும் தன்றேச எல்லைக்கப்புறம் போம்படி ஆணையிட்டான். பெரியவாசிட்ட முறையோ: அவன் கூறியதைக் கேட்ட மன்னவன் ஸ்ரீ பரதமுனிவரை நோக்கி இப்பாவியரைச் சபிக்கவேண்டுமென்று வேண்ட அவ்வாறே அழியுமாறு சாபமிட, அவர் தேகவஷ்டமாயினும் அந்தக்காண வடிவினராய எமக்கு யாதொரு கட்டமு மின்றென்றனர் என்பதாகச் செல்கின்றது, விரிவு அங்குகாண விரித்துளேம் முதலடிக்கு மூன்னுரையிற் சேர்த்தி விரித்தாம்.

(ச.) இந்தமனமே யொடுங்கில், உடல் ஏதும் = ஒருதேகமும், அறியாது = உண்டாகாது, ஸ்ரீவசிட்டர்: என = ஆதலின் அரசனே! நீ சித்தரத்தினத்தைப் பரிபாலனஞ் செய்யென்றவர்கள் கூற, கேட்ட அந்த நிருபன், புந்திமகிழ்ந்து = இவ்வாக்கியம் பரமார்த்தரசப் பரிசமுள்ள தென்று இருதயம் இமித்து, இவர் சிந்தைமயலுற்றிருந்தும் = காமாந்தகராகிய இவ்விருவரும் என்னுல் வேண்டும் வண்ணம் சிகூடிக்கப்பட்டும் என்ன ஆதலின் இவரைவிட்டு விடுகிறேன் என்று சொல்லி. (4)

வஞ்சவிந்திரன் கதை முற்றிற்று. ஆக விரதம் (384)

மனத்தின் கதை.

(ஸ்ரீ-வீர - அ-கை.) கடந்த கதையிலுலே விரிவாக விளம்பப்பட்ட அருத்தத்தைச் சங்கிரமாகக் கூறல்:—தூலத்திற்கே கெடுதலைக் கண்டோம் சூக்குமத்திற்கின்று மென்னும் லோகதிருஷ்ட அனுசாரமாக தங்கூற்றைக் கூறுவார் வேறுவேறு இயற்கைகள் வாய்ந்த இருதேகங்களைக் காட்டி மனேசக்தியை விரித்தல்:—இந்தவென.

(ச - அ - கை.) முன் வஞ்சவிந்திரன் கதையில் மனேவியாபாரத்திற்கே பிராதானியத்வம் ஆதலின் அதுவே சுகதுக்க போகாயதனத்துவமாதலின் முக்கியமான சரீரமென்று சொல்லப்பட்டது. இப்போது மீட்டும் அதன்சொரூப நிரூபித்தற்குச் சித்தத்தின்கதை ஆரம்பிக்கப் படுகின்றது:—இந்தவென.

இந்தக்கதையை வினோயாட்டென்ன விசைத்தோ மெவர்க்கு
மந்தத்தமதா முடலொன்ற யலாமுட லொன்றவற்றிற்
சிந்தைச்சரீரம் விரைவிற் செயல்க ளெல்லாஞ்செய்து
தொந்தித் தலையுமற்ற தூலவுட லொன்றறியா.

(ப - ரை) இந்தக் கதையை = இவ்வஞ்சவிந்திர வுபாக்கியானத்தை, வினோயாட்டென்ன = விநோதமாக, இசைத்தோம் = கூறினேமும், எவர்க்கும் = எல்லாவுயிர்கட்கும், அந்தத்தமதாம் உடலொன்று = உள்ளேயிருக்குந் தேகம் ஒன்று, அயலாம் உட

மண்டூகன் கதை

லொன்று = மற்ற தேகமொன்று, அவற்றில் = அவ்விரண்டனுள், சிந்தைச்சரீரம் = மனோசரீரம், விரைவில் = சீக்கிரத்தில், செயல்கள் எல்லாஞ்செய்து = தொழில்கள் யாவற்றையுமே தொடங்கி, தொர்ந்தலேயும் = சம்பந்தித்துச் சுற்றிக்கொண்டே திரியும், மற்றதூலஉடல் ஒன்றறியா = அயலதாகிய இத்தூலதேகம் யாதொன்றையுமே தெரிந்துகொள்ள மாட்டாது.

(ஸ்ரீ - வீர.) பிரஹ்மா முதல் ஸ்தாவரபரியந்தம் எல்லாஜாதி சரீரிகளுமே எப்போதும் இவ்வுலகின்கண் ணிருசரீரங்களை யுடைத்தா யிருக்கின்றன, ஒன்றேமனச்சரீரமாம் வேக காரியாம் எப்போதுஞ் சஞ்சலமாம், மாம்ச நிர்மிதமாய மற்றையது யாதொருகாரியமும் செய்யவல்ல தல்லவாம்.

(ச.) ஸ்ரீ வசிட்டர்: இசைத்தேம் = இராமா உனக்குச் சொன்னோம், எவர்க்கும் = இச்சகத்திற் சகலசரீரிகளுக்கும். அந்தத்தமதாம் உடலொன்று = மனச் சரீரமொன்றும் அயலாம் உடலொன்று = மாம்ச நிர்மிதமான தூலசரீர மற்றொன்றும், ஆகவிரண்டே சரீரங்கள், அலையும் = சதாசலிக்கும், ஒன்றறியா = எவ்வளவுஞ் செய்ய அறியாது. (1)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சம்சாரரோக காரணமாகிய மனத்தை நன்முக வுணர்ந்தாற்றான் அதற்குச் சிகிச்சைசெய்தல் சுகசாத்தியம் என்றெண்ணி ஸ்ரீ இராகவர் விஞ்ஞதல்:—அனுபவிக்கப்பட்ட அருத்தங்களின் பாவனை விபாவனை யெனப் பெயரிய விகற்பமாத்திரமே மனமாகும், அப்பாவனை அசையுத்தருமத்தை யுடையதாய் விதிநிடேத வினைவடிவமாம், அதிசுக்குமமான அதிர்ஷ்ட பாவத்தையடைந்த அவ்வினைக்கே ஜன்மாந்தராதி ஜன்மகமாக யாது வரும் ரூபமுளதோ. அதுவே பயனரும், அதனையே எல்லாஜந்துக்களும் அனுசரிக்கின்றார்கள், அம்மனமே முறையாக உபயபாவத்தை யடைகின்றது என ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறியதைக் கேட்ட ஸ்ரீ இராகவர் விஞ்ஞதல்:—என்முன் என.

என்முன்வசிட்டன வனையிந்தச் சடமாமனத்துக்
கொன்முவடிவ மிலதாமுள்ள வடிவை விரித்து
நன்முயுரைப்பா யென்று ஞானக்குரிசில் கேட்பப்
பொன்முவிதி சொற்படியே போதமுனிவன் புகல்வான்.

(ப - ரை.) என்முன் வசிட்டன் = திருவருள் செய்தனர் ஸ்ரீ வசிட்டர், அவனை = அவ்வாசிரியரை, சடமாம் = ஜடமாகியும்; ஒன்று = அஜடமாகியும், வடிவமிலதாம் = நிராகிருதியாகியும், இந்த மனத்துக்கு = இருக்கும் இம்மனத்தினுக்கு, உள்ளவடிவை = ஆரூடசங்கற்பரூபத்தை, விரித்து = விஸ்தாரமாக, நன்முய் உரைப்பாய் என்று ஞானக்குரிசில் கேட்ப = மனத்திற்படும்படி யனுக்கிரகிக்க வேண்டுமென்று ஞானதாதாவாய் ஞானமயமாய் ஒளிரும் ஸ்ரீ இராமச்சந்திரர் வினவ, பொன்முவிதி சொற்படியே போத முனிவன் புகல்வான் = கெடாத ஸ்ரீ பிரஹ்மதேவர் தமக்தனுக் கிரகித்த வண்ணமே ஞானசிரியராகிய ஸ்ரீ வசிட்டர் திருவருள்செய்யத் தொடங்கினர்.

(ஸ்ரீ - வீர.) மனம் நிராகிருதி = உண்மையாகச் சொரூபமற்றதாம், அதன் கண்ணேது ஜடமாயிருத்தலாம், அஜடத் தன்மையைச் சாதிப்பார் இந்த என்முர். திருஷ்ய மென்பது பொருள். ஆரூடம் சங்கற்பம் எதனால் அது ஆரூட சங்கற்பமாம் = சங்கற்பப் பிரதானம் என்பதுபொருள். ஆரூடம் சங்கற்பம் எதற்கென்றேனும் கொள்க. ஹே பிரஹ்மந்! ஜடமாயும் அஜடமாகிருதியதாயும் நிராகிருதியதாயும் இருக்கும் மனத்தினது சங்கற்பப் பிரதான வடிவத்தை விஸ்தாரமாக அடியேனுக்கு அனுக்கிரகம் செய்வீராக, என்பது பிரஷ்னம்.

(ச.) அவனே ஞானக்குறிகில் நோக்கி. உருவமிலதாய் = ஆகாரசூனியமாய் உண்மையுள்ள வடிவை = ஆரூடமான சங்கற்பரூபத்தை, எனக்கு உரைப்பாயென்று கேட்ப.

(ஸ்ரீ - வீர-அ - கை.) அகிர்வாச்சியமாய மனத்தினது சொரூபத்தைக் காண்பித்துக் கொண்டு துயில்வரை சாங்காறும் சிவஞ்தனுதிவடிவ மோக்ஷ உபாயத்திலேயே அம் மனத்தைப் பயில்விக்கவெனக் கூறுகின்றார்:—அகிலவென.

அகிலசத்தி யுடைத்தாய நந்தமான பரமம்
புகல்சங்கற்பத் தோடே பொருந்தும் வடிவேமனமா
மிகலுஞ்சத் தோடசத்தா யிரண்டினுள்ளுந் தோன்றிப்
பகருந்தொழில் களோடே பயில்பாவனையு மஃதே. (3)

(ப - கை.) அகில சத்தியுடைத்தாய் = சர்வசக்தி உடையதாய், அநந்தமான = நாச மற்றதாகிய, பரமம் = ஆத்ம தத்துவமாகிய மகாத்மாவினது, புகல்சங்கற்பத்தோடே பொருந்தும் வடிவே மனமாம் = சொல்லாகின்ற சங்கற்பசக்தியுடன் கூடும் எவ்வுருவ மூளதோ அது மனமெனப்படும், இகலும் = முரண்படும், சத்தோடசத்தா யிரண்டினுள்ளுந் தோன்றி = சத்தசத்துக்களின் இடையில் இருப்பதாய், பகருந்தொழில்களோடேபயில் பாவனையும் = சொல்லும் வினை மூன்னிலப் பட்டுச் சலனமுடைத்தாய வடிவம், அஃதே = அம்மனமே.

(ஸ்ரீ - வீர.) சர்வசக்தி = சர்வகாரணபூத மாயாசக்தி, சர்வபதார்த்தங்களிலும் இருப்பனவாகப் புலப்படாகின்ற சர்வசக்திகளையும் உடையது ஆத்மதத்துவம், அதற்குச் சங்கற்ப சக்தியுடன் சம்பந்தித்த எக்கற்பித ரூபமூளதோ அதனை மனமென்பர். சத்தசத்துக்களின் மத்தியிலுள்ள பதார்த்தம் அது. சஞ்சல இயற்கையினாலே அதிலோலமான நரர்களின் எவ்வகப்பிராய காரணமூளதோ அதுசங்கற்ப அபிமுகத்தன்மையையடைந்து சத்தசத்துக்களின் மத்தியிற் சலிக்கின்றது, ஆன்மா அஞ்ஞான்மாக்களி னிடையில் ஊஞ்சலாடுகின்றது; பன்மைப்பாரம் தாங்கி மனக்கண்ணுடியில் அதிரூடமாகி ஆன்மா அஞ்ஞான்மா காண்போன் காண்பொருட் பாவத்தைப் பழிக்கின்றது, மனோலய மான துயிலில் ஆன்ம அஞ்ஞான்மக்கட்குக் காண்போன் காண்பொருட் பாஞ்மைகாணுமையின் என்றுணர்க. அநந்த ஆத்மதத்வ மகாத்மாவாய்ச் சர்வசக்தியையுடைய மாயாசத்தின் மூதற்றோற்ற சங்கற்பசக்தி யெவ்வுருவம் அதுமனமாம். இப்போது இங்குற்ற நரர்தம் விவகாரத்தும் அது பிரசித்தமாம், நரர்கட்குத் தாணுவா புருடனு எனவுண்டாம் விகற்பத்தில் சத்தசத்துக் கோடிகளி னிடையில் எப்பாவம் ஊஞ்சற்போலச் சஞ்சரிக்கின்றதோ கோடித் துவயத்தின் நினைப்புப் பூர்வகத்தன்மை யடைகின்றதோ அவ்வுருவமே மனமென அறைவர். எப்போதும் அறிவுருவத் தன்மையானே விளங்குகின்ற ஆன்மாவின்கண்ணும் யான் அறிந்திலேன் என்னும் உணர்வும், அகர்த்தாவின் கண்ணும் கர்த்தாத்தன்மை யுணர்வும் எதனால் உண்டாகின்றதோ அது மனமெனப்படும்.

(ச) அகில + மான = சர்வசக்திமானுயும் அநந்தமுமான, புகல் பிரமம் = ஆன்மதத்துவ மென்னும் பரமாத்மா, சங்கற்பத்தோடு = சங்கற்ப சக்தியுடன், ஆன்மாவின் கண்ணே சர்வசக்திகளும் உள அவற்றுட் சங்கற்பசக்தி சம்பந்தமான ஆன்மாவின் ரூபமியாது அதுவே மனமென்பது பொருள். சத்தோடசத்தாம் இரண்டினுள்ளும் = சேதஞ சேதனங்களின் மத்தியில், எந்தப்பதார்த்தந் தோன்றி, பகருந் தொழில்களோடே பயிலும் = சங்கற்போன் முகமாய்ச் சலிக்குமோ, பாவனையஃதே = அந்தப் பதார்த்தம் மனோரூபமென்றறி.

(ஸ்ரீ - வீர - அ-கை.) நித்தியமுக்தமாய ஆன்மாவிற்கும், அஜ்ஞானத்தானே மலே பிராந்தியா லாக்கப்பெற்றது பந்தபுந்தி யென்பதாக நிண்ணயிப்பான், மனத்திற்கு அறியப்பெறுத ஆன்மாவினின்றும் உற்பத்தி வித்தாரமாக உரைக்கப்பட்டது, ரோக தத்துவ நிர்ணயப் பொருட்டே போலும் ரோககாரண அபத்திய ஆகாரா அறைந்ததா மிது; நிர்ணயம் மனத்தத்துவம் ஆனபின் னிப்போதோ அதன் சிகித்சைப் பிரயத்தி னமே அவசியம் செய்யத்தக்கதாம், மீண்டு மீண்டும் காரண சிந்தைக்குப் பயனின்றும் என்னுங்கருத்தாற் கூறுகின்றார்:—எங்கே யென.

எங்கேயெனினுத் தோன்றுமிந்த மனத்தை முத்திச்
சங்கேதத் தாலுகந் தன்னிற் கூட்டினன்றும்
பங்கேருக ணேநியதோர் பழையகதை நீகேட்பாய்
வெங்கேதமு மச்சமுமாய் வெறும்பொய்யா மோர்வனமே. (4)

(ப - ரை.) எங்கே யெனினுத் தோன்றுமிந்த மனத்தை = எக்காரணத்தாலேனும் மயலாற் புலப்படும் இம்மனத்தை, முத்திச் சங்கேதத்தால்=மோக்ஷம் அடைவதற்காக ஊகந்தன்னிற் கூட்டினன்றும் = முக்தி யுக்திகளிற் சேர்ப்பிப்பின் மிக்க நலமுடைத் தாம், இதன் பொருட்டாக, பங்கேருகன் ஒதியதோர்=ஸ்ரீ பிரஹ்மதேவர் கூறியதாகிய ஒப்பற்ற ஒரு, பழையகதை நீ கேட்பாய் = புராதன ஆக்கியானத்தை நீ சிரவணஞ் செய்து, வெங்கேதமும் அச்சமும் ஆய் = பெரிதாய் அசாந்தமாய் அதிபீஷணமாய், வெறும் பொய்யாம் ஓர் வனமே = அத்தியந்தம் சூனியமாம் ஒரு அடவியிருக்கின்றது.

(ஸ்ரீ - வீர.) ஆராயாது இரமணீயமென நாடுங்காரணத்தால் உற்பன்னமாம், அத ஞனே சித்தம் அவிசாரித ரமணீயமேயாம். ஆராய்ந்து நோக்கினே, நிழற்கற்பித வேதா ளமேய்ப்ப விநாசமாம் இது மெய்யறிவாளரது அநுபவ கம்மியமாம். முக்தியுக்தி = மோக்ஷசாதக ஊகங்கள்; தற்சிந்தனுதி யிலக்கண மோக்ஷ உபாயங்களில் அதனைச் சேர்க்க இங்ஙனம் அவிசாரிதரமணீயமாய் விசாரத்தானே விநாசமாம் மனமே சம் சாரகாரணம் அதன் நிவிருத்தியின் பொருட்டே அதுவே மோக்ஷயுக்திகளில் யோஜிக்கத் தக்கதாம் என வியம்பப் பெற்றதாயிற்று. இப்போது இதனே யுணர்த்தற் பொருட்டே சித்தாக்கியானத்தை யவதரிப்பித்து விரிப்பார்: கதைகேளென்றார் கூடார்த்த பத்தியங் களே ஸ்ரீபகவான் வசிட்டர்தாமே வியாக்கியானிப்பர் ஆயினும் மதிசௌகரியப்பொருட்டு வியாக்கியானிப்பாம்; இதன் கண்ணே ஜீவர்கள் சுற்றுகின்றமையின் அடவி =சமுசார பதவியாம்; அது அதிவிஸ்தீர்ணமாம், சூனியம் = சர்வபதார்த்த வர்ஜிதமாம், ஆங்குத் தோற்றும் பொருட்கட்கு மாயிகத்தன்மை யுண்மையின், மூலத்திற் சாந்தமெனவே பிரிக்கின், தாமசத்தன்மையைத் தரிசிப்பான் சூனியமெனவும், சாத்விகத்தகைமையைத் தரிசிப்பான் சாந்தமெனவும், இராஜசத் தன்மையை யறிவிப்பான் அதிபீஷணமெனவும் கூறப்பட்டதென அறிக. எவ்வாசனையினுலேனும் எதையேனும் பற்றிக் கிளம்பும் சித் தம் மிகவும் அற்பமேயாம், ஆயினும் நித்தியம் ஆன்ம விமோக்ஷப் பொருட்டு ஹே அநக! அதிமுயற்சியினுல் ஆன்மாவின் கண்ணே சமாதானப்படுத்துக. சமாதியின்பலபியாதோ வெனின் ? பரத்திற் சமாதியையடைந்த சித்தமானது தூய்தாய் வாசனை யற்றதாயாம், அதன்பின்னே கற்பனையற்றதாய் ஆன்மத்தன்மையை யடையும் சித்த நிரோதமாத்தி ரத்தானே யாங்ஙனம் வெளியுட் சர்வதுவைத பந்தநிவிருத்தி யெனின் ? சராசரவடிவ மாக இருக்கும் இவ்வுலகமுழுவதும் சித்த அதீனமேயாம்; ஆகலின் பந்தமோக்ஷங்கள் சித்த அதீனங்கள் என்பது புடமாம் கூறியபொருளிற் சாதகமான ஆக்கியானத்தைக்

கூறுகின்றார் பங்கேருகன் என. இப்பொருளில் ஸ்ரீ பிரஹ்மதேவர் எமக்கு முன்னர்த் திருவாய்மலர்ந்தருளிய அநுத்தமமான சித்தாக்கியானத்தைக் கூற அதியத்தினத்தோடு கேட்பாயாக. ஸ்பாரமாய்ச் சூனியமாய் அசாந்தமாய் அதிபீஷ்ணமாய் அடவியொன்றுளது. அடவியாதி சப்தங்கட்குத் தாற்பரியப் பொருளைப். பின்னர்த் தாமேயருளுவர். சூனியம் = மிருக பக்ஷியாதிரஹிதம், மித்தைவடிவம், அசாந்தம் = மிக விக்ஷேபம் விரிந்தது. திக்குமுடிவுகள் அற்றதுமாம்.

(ச) எங்கேயெனினுந் தோன்றும், சித்தம் எங்கேயாவது உற்பன்ன மாகட்டும், யாதாமொன்றாகட்டும், காரண விசாரஞ்சொரூப விசாரத்திற்குப் பயனில்லையாம் என்பது பொருள். எங்கேயாவது = எக்காரணத்தாலாவது முத்திச் சங்கேதத்தால்= மோக்ஷ நிமித்தம், ஊகந்தன்னில் = மோக்ஷ உபாயங்களிலும் ஆன்மாவினிடத்தும் சேர்க்க வேண்டும், கூட்டினனன்றும் = மனதை நித்தியம், மோக்ஷ வுபாயங்களிலும் ஆன்மாவிடத்துஞ் சேர்ப்பதே பிரயோஜனம் என்பதுபொருள் பங்கேருகன் = பங்கஜஜன்ம ஞான பகவான், உனக்குயான் ஒதுவேன் நீ கேட்பாய், வெறும்பொய்யாம் = சுத்த சூனியமான, ஓர்வனம் = அடவி இராமா இருக்கின்றது. அடவியாதிகளின் யதார்த்த ரூபத்தை ஸ்ரீ இராமர் விஞவின்பின் ஸ்ரீ வசிட்டர் தாமே தெளிவிப்பர்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வனத்தையும் கதாநாயகனையும் அவனது செய்கையையும் வருணித்தல்:—அதி—தனை—மீட்டும்—என.

அதினெர்கோடி நீளமகந்த கோடிகாத
மிதிலோர் புருடன்கண்கை யெண்ணிலாத துடையோன்
சிதருகின்ற கினைவோன் சேணுயகன் றவடிவோன்
பதருகின்ற கணையம் பலவுங் கரத்தாற்பற்றி.

தனைத்தான் சிதறமோதித் தகர்ந்தே யுலறியலறி
யனைத்தாந் திசையுமோடிய வசமாகிய சடிபட்
டெனைத்தா முறுப்புந் தூளாயிருளாய் நடுக்கமிகுந்த
வினைத்தாழ்வுறு பாழ்ங்கிணற்றில் வீழ்ந்துநெடு நாண்மெலியும்.

மீட்டுமெழுந்து வந்துமெய்யின் மோதிக்கதறி
யோட்டந்தனிலே சுழலுமுயர் முண்ணிறைந்த கருவேற்
காட்டின்முறிய விழுந்து கனலிற்புழுப் போற்பதைக்கும்
வாட்டந்தவிர்த்து கதலிவனத்தின் மகிழ்வுற்றிருக்கும்.

(ப - ரை.) அதினெர்கோடி நீளம் அநந்தகோடி காதம் = அதனது ஒரு கோண மாத்திரத்தின் அளவு வெகுகோடி யோஜனை யுற்றதாம், இதில் ஓர்புருடன் = இவ்வடவியில் ஒரேபுருடன், கண் கை எண்ணிலாதது உடையோன் =சகத்திர கரலோசனன், சிதருகின்ற கினைவோன் = ஆகுலம் நிறைந்த வுளத்தன், சேணுயகன்ற வடிவோன் = விசாலமான ஆகிருதியை யுடையோன், பதருகின்ற கணையமும் பலவும் கரத்தாற்பற்றி= அதிசஞ்சல ஆயிரக்கணக்கான அத்தங்களால் ஆயுதவர்க்கங்கள் பற்பலவும் கொண்டு.

தனைத்தான் சிதறமோதி = தன்னுடைய பின்பாகஞ் சின்னபின்ன மாகத்தானே தாடனஞ்செய்து, தகர்ந்தே யுலறியலறி = அவதிப்பட்டு ஓலமிட்டு, அனைத்தாந்திசையும் ஓடி = எல்லாத் திக்குகளிலும் ஓட்டமிட்டு, அவசமாகி = தன் வயமற்று, அடி

மனத்தீர்ச்சை

பட்டு = தாடன தாவனுதிகளால், எனைத்தாம் உறுப்புந் தூளாய் = சர்வ அங்கங்களும் பொடியாகி, இருளாய் நடுக்கம் மிகுந்த = அந்தகார மயமாய்க்கம்பித, மதிகரித்த வினைத் தாழ்வுறு பாழ்ங்கிணற்றில் = ஏறமுடியாததான பாழுங்கிணற்றில், வீழ்ந்து நெடுநாள் மெலியும் = பதிதனுகி வெகுகாலம் துன்புறுவன்.

மீட்டுமெழுந்து வந்து = அதினின்றும் மீண்டும் உத்திதனுகிவந்து, மெய்யின் மோதிக்கதறி = சரீரத்தின் கண்ணே யடித்துக்கொண்டழுது, ஓட்டந்தனிலே சுழலும் = அநேக இடங்களில் ஓடிக்கொண்டே சுற்றுவன், உயர்முள் நிறைந்தகருவேல் = அதிகூர்மையான முட்கள் நிறைந்துள்ள கருவேன்மரங்கள் நெருங்கிய, காட்டில் = வனத்தில், முறியவிழுந்து = பிளந்துபோமாறு வீழ்ந்தவனுகி, கனலிற் புழுப்போல் பதைக்கும் = நெருப்பிற் பாய்ந்த விட்டிற்போலப் பெருந்துன்புறுவன், வாட்டந்த வீர்ந்து கதலிவனத்தின் மகிழ்வுற்றிருக்கும் = தளர்வுதீர்ந்து கன்னிவனமுற்று களிப் படைந்திருப்பன்.

(ஸ்ரீ - வீர.) புரியாகிய சரீரத்தில் இருத்தலினாலும், வெகுதூயர் உறுதலினாலும் புருடன் மனமாம்; சகத்திர கரலோசனன் = அநந்தஹஸ்த நயனன். ஈண்டு அளவற்ற வீடயாகார விருத்திகள் கரலோசனங்களாகக் கழறும் வேட்கையாம்; சகத்திர நேத்திர அத்தத்தன்மைகள் யாவைபுருடனுக்கு நன்குவருணிக்கப் பெற்றனவோ அவை சித்தத்திற்கு அநந்த ஆகிருதித்தன்மைகளே நன்கு காட்டப்பெற்றனவாம் எனப்பெரிய வாசிட்டத்திற் கூறப்பட்டிருத்தலின் நானுயோனிகளே யடைவிக்கும் குகற்பனைகளின் சகத்திரங்களால், எப்புறங்களிலும் இடரேதரும் ஆத்தியாத்மிகாதி துக்கஹேதுக்களைத் கொண்டு தனது பிருட்டத்திற் புடைத்துக்கொள்ளும், அதாவது மயலாற் கவரப்பட்ட அத்தியான்மிகாதி துக்க ஹேதுக்களானே தன்னைத்தானே கிலேசப்படுத்து மென்பது பொருள். ஓடல், குகற்பனையிஞலே யடைவுற்ற துக்கஹேதுக்களினுற் பயமுற்றும். பாழுங்கினற்றில் = விவேகரகித அந்தகூப ஆழ்ந்த நரகத்தில், இகழத்தக்க துயரங்கள் நிறைந்துள்ளன இதன் கண்ணைனக் கூபசப்த விற்பத்தியினுல் ஆகாயம்போலக் கம்பீரமாம் அபரிச்சேத்தியமும், உள்ளவகாசமும் உடையதாம். கருவேல்வனம் = மநுடஜன்மம் கூறப்படும். நிறைந்த முட்செடிப் புதருற்ற அவ்வனம் முண்மயமாகவே யிருத்தலின் இறையுமின்பந்தராமல் துன்பமேபொதிந்து கிடக்கும் என்பதாம். கதலிகானனம் சுவர்க்கமாம், அதுபோற் ரோற்ருமாத்திர ரமணீயமாயிருத்தலின். அவ்வடவியை நோக்கின் நூற்றுக்கணக்கான யோஜனைகள் அணுமாத்திரம் போற்ரோற்றும், அங்கு ஒரே புருடன் சகத்திரகர லோசனனுய், ஆகுலநிறைந்த புந்தியனுய், பயங்கரனுய், விஸ்தார ஆகிருதியனு யிருந்தனன். அவன் ஆயிரக்கணக்கான கரங்களால் ஆயிரம் ஆயிரம் ஆயுதவர்க்கங்களைத் தாங்கித் தனதுமுதுகில் அடித்துக்கொண்டு தானே ஓடித்திரிவன் திடமாகிய அடிவர்க்கங்களால் தன்னுல் தன்னில் சுயமாகவே புடைத்துக்கொண்டு பயந்த ஆகிருதியனுகி யோஜனை சதங்களாகச் சுழன்றுதிரிவன். ரோதனஞ் செய்துகொண்டு ஓடுகின்ற இவன் இங்கும் அங்குமாக வெகுதூரம் ஓடியோடி, வெகுசிரமத்துடன் பரவசமாகிய ஆகிருதியனுய்ச் சரணுங்கங்கள் பொடிந்து பொருமுவன். ஆகாயம்போலும் கம்பீரகோடாகோடி முற்ற கிருஷ்ணபக்ஷ இராத்திரிபோலும் இருண்ட இருளால் அதிபயங்கர மூற்ற அந்த கூபத்தில் மிகுந்த அவிவேகியாகிய, அவன் விரைவில் பரவசமாகவே வீழ்ந்தனன். பின் வெகுகாலங்கழித்து அவன் அந்த கூபத்தினின்றும் வெளிப்போந்து மீண்டும் அடிவர்க்கங்களால் அடித்துக்கொண்டு தன்னிமித்தத்திஞலே தானே ஓடிக்கொண்டு திரிவன். மீண்டும் அதிதூரமோடி முள்ளுகளும் கொடிகளும் செடிகளும்

நிறைந்த பிறவாண் மூட்களும் பெரிதற்ற சிறுகிழலும் பெருந்துயரும் பொருந்திய கரு வேல்வனத்திற் புகுந்து தீப்பாய்ந்த ஈப்போலத் தன்புறுவன். அக்கருவேலங் காட்டி னின்றும் கணம் வாழ்ந்ததுபோல வெளிப்போந்து மீண்டும் தாடன வர்க்கங்களாற் பீடனமாகித் தானே தன்னிபித்தத்திலுலே யோடித்திரிவன். மீண்டும் வெகுதூரம் ஓடி கந்தரிலின் கிரணத்திலுலே மிகக்குளிர்ந்து ஒளிகாலும் வாழைத்தோப்பில் இனிது பிரவே சித்துச் சிரித்து மகிழ்ந்து வினையாடும்.

(ச.) ஓர் கோடி = கோணமாத்திரம், நினைவோன் = மதியன், பதருகின்று = பயப்பட்டவனு யிருந்து, கணையம் பலவும் = வளைதடிகளே, கரத்தாற்பற்றி = கைகளி னுற் பிடித்து சந்திரகிரணம்போன் மகிழ்வுற்று. (5-6-7)

(ஸ்ரீ - வீர - அ - சை.) சுழலும் அவனை நிறுத்தி யுபதேசித்தலும் அவன் சாந்தி யுறுதலும்:—

கதலிவனத்தை விட்டுக்கருவேல் வனத்திற்சுழலும்
பதறிக்கிணற்றில் வீழும்பலகா லுழலக்கண்டு
விதருவகையாம்பற்றி வீணே வருந்துயீ
ரெதுசெய்கின்ரு யிங்கெவன் னென்னவ வனிதிசைத்தான்.

யானென் ரொருவ னில்லையிங்கோர் செயலுங்காணே
னீகின்றுரைக்க நினைந்து நின்னுற் றளராகின்றே
னுனெனன்றிய வெம்பகை நீயுன்னு லின்பதுன்ப
நானின்றறிந்தே னென்று நல்குந்தன்னை நோக்கி.

இடிக்குமுகிலின் மழைபோ லிரங்கிக் கதறியழுதா
னெடிக்குளமுகை விட்டுநுணுக் கந்தன்னைநோக்கி
வெடிக்கநகைத்தா னெடிதாமீள வெமதுமுன்னே
தடிக்குமங்க மனைத்துந்தானே யடைவேத வித்தான்.

(ப - ரை.) கதலிவனத்தை விட்டு = வாழைத்தோப் பினின்றும் நீக்கி, கருவேல் வனத்திற் சுழலும் = கருவேலங் காட்டிற் றிரியும், பதறிக்கிணற்றில் வீழும் = நடுங்கி யந்தகூபத்தில் பதிதலுவன், பலகால் உழலக்கண்டு = அநேகமுறையிங்ஙனம் அவதிப் படுதலைப் பார்த்து, விதருவகையாம் பற்றி = ஓடிப்போகாத விதமாக யாம்பிடித்து, வீணேவருந்து நீயார் = வாளா துயருறும் நீயாவன், எது செய்கின்ரு ய் = என்ன செய்கின்ரு ய் ? நினைவென் = நினது அபிமதம் யாது, என்ன = என்று கேட்ப, அவன் நிதிசைத்தான் = அவன் இதனைக் கூறத் தொடங்கினன். யானென் ரொருவனில்லை = அகமென வொருவனுமில்லை, இங்கோர் செயலுங்கா ணேன் = இவ்விடத்தில் ஒரு தொழிலையும் கண்டிலேன், நீ கின்றுரைக்க = நீர் உற்றுப தேசிக்க. நினைந்து = அவ்வாறெண்ணி, நின்னுற் றளராகின்றேன் = உம்மால் துயருரு கின்றேன், ஊன் ஒன்றிய வெம்பகைநீ = இத்தேகத்திற்குப் பொருந்திய கொடிய சத் துருநீர், உன்னுலின்பதுன்பம் = உம்மால் சுகம் துக்கம், நானின்றறிந்தேன் = யான் இப்போ துணர்ந்தேன், என்று = என்றியம்பி, நல்குந்தன்னை நோக்கி = கெட்டுப் போன தனது அங்கங்களைப் பார்த்து.

இடிக்கு முகிலின் மழைபோல் = இடியாகின்ற மேகத்தின் வீருவ்டிவியப்ப, இரங் கிக்கதறி யழுதான் = இரக்கமுற்று வாடி வோலமிட்டு அழுதான், நொடிக்குள் அழுகை

விட்டு= கணமாத்திரையில் ரோதனத்தைவிட்டு, நுணுக்கந்தன்னை நோக்கி= நுணுக்க மான தன்னங்கங்களைப் பார்த்து, வெடிக்க நகைத்தான் கெடிதாய் = சிகாலம் அட்ட காசத்துடன் சிரித்தனன், மீள எமது முன்னே = தன்றுயர் தீருமாறு எம்முடைய சன்னிதியில், தடிக்கும் அங்கம் அனைத்தும் தானே அடைவே தவிர்த்தான் = தூலித்த அங்கங்கள் யாவற்றையும் சுயமே முறையே தொலைத்தான்.

(ஸ்ரீ - வீர.) யாம் = வசிஷ்டர், வசிஷ்டசப்தத்தானே தேஜசுரைக்கப் பெறும், அத்தியந்தம் தேஜசுருவமாம், வசிஷ்டர் என்றதனனே பரமவிவேகம், பகரவிழைந்த தாம். விவேகத்தால் வலிதிற்சித்தம் சடிதியில் நிறுவப்பெறும் என்பதை யுணர்த்துவார் விதரூவகைபற்றி யென்ரூர். வலிதிற் பிடித்தே முகூர்த்தம் உணர்த்தினேம் என்பதாம், விவேகப் பொருட்டுச் சித்தத்தாற் கூறப்பெற்றதையே தரிசிப்பிக்கின்ரூர் யானென்ப தாதியாய். நீ = விவேகம், தளர்தல் = அவிசாரித ரமணீயமேயாகுஞ் சித்தம் அதன் காரியாதிகள் விவேகத்தாற் கெடுக்கப் பெற்றனவாகி யசத்தேயாதல். உன்னுல்=விவே கத்தால் வசிகரிக்கப் பட்டியான் துக்கத்தின் பொருட்டும் சுகத்தின் பொருட்டும், இறந் தேன் = நட்டன் ஆனேன் = சுகலுக்க உற்பாதன அசமர்த்தனனேன். இன்றறிந் தேன் என்பதில்வர்ணவிபர்யயம் செய்துகொள்க. விவேகம் பாதியேய்தலின் போகங் களைப் போக்க முடியாமையின் சித்தமானது சந்தாபங்களைச் செய்தது என்பதன்பொ ருட் டறைவார் அழுதான் என்ரூர். எங்கும் கேட்கும்படியாக நன்ரூபுரக்க அழுதான். பூர்ணவிவேகத்தானே தனதங்கங்களாகிய அகங்காரமமகாரவடிவங்கள் பாதிக்கப்பட்ட அவற்றை நோக்கிப் பரமானந்ததை யடைந்ததாய சித்தம் மகிழ்ச்சியையுற்றது என் பார் நகைத்தான் என்ரூர். பூரணவிவேக முதயமாகியவழி விருத்தியோடுற்ற சித்தவில யத்தின் முறையை யுணர்த்துவார் அடைவேத விர்ந்தான் என்ரூர் எமதுமுன்னே = விவேகத்தின் கண்ணுக் கெதிரில். சித்தத்தினது சிரமாகிய அகங்காரம் அதுவும் அதி பயங்கரமானது, பின்பாகுகளாகிய கெட்டகற்பனைகள் வீழ்ந்தன, பின், பொருளாசை வடிவ வகூமுதலியவை வீழ்ந்தனவாம். பெரியவாசிட்டத்தி லிதுபெருகும் பின்னுரை யில்வரும். ஈண்டர்த்தாசை அகங்கார கூகற்பனைகட்கு பலக்கணமாம். தனதங்கங் களைத் தக்கவாறு பூர்வாதிதிசைகட்குப்பலியாக இட்டுவிட்டுச் செல்லமுயன்ரூன், கதலீ கண்டத்தினின்றும் கணத்தில் வெளியேகிளம்பி மீண்டும் சுயம் தன்னுற்றன்னிற்ரூடன வர்க்கங்களானே புடைத்துக்கொண் டோடினன்: மீளவும் வெகுதூரமோடி நவின்ற மகாந்தகார அந்த கூபத்திலேயே விரைவில் வீழ்ந்தனன், அவயவங்க ளெல்லாம் பொ டியான ஆகிருதியுடைய வனனன். அந்த கூபத்தினின்றுங் கிளம்பிக் கதலீவனத்தை. யடைந்தனன், கதலீகானனத்தினின்றும், கர்த்தம்போலக் கம்பீரமான கரஞ்சவனகுல மகத்தை யடைந்தனன் (கருவேலங்காட்டை) கரஞ்சகானனத்தினின்றும் கழறிய அந்த கூபத்தையும், அந்த கூபத்தினின்றும் தம்பாவனந்தரத்தையும் (கதலீவனமத்யம்) சுயம் தன்னுல் தன்பால் அடித்துக்கொண்டு மாறிமாறிப் புகுந்து துயருற்றுக் கொண்டிருந்த னன். இவ்வண்ணமாய தனதாசாரமுடைய அவனை நெடும்போதுயாம் விவேகதிருஷ்டி யினுலே நோக்கி யோகபலத்தினுலே நிறுத்தினேன், அந்நெறியில் முகூர்த்தம்வரை ரோதனஞ் செய்தனன். நீயார்? தன்னைத்தானே யடித்துக் கோடலும் தானே கூபந் தன்னில் வீழ்தலும் ஆதிய இச்செயல்யாதின் பொருட்டோ? எவ்வுருத்தத்தால் இயற்று கின்றனைதான்? எண்டு நின்னவாத்தா னிருந்தவா றென்னை? வீணைமிகுமயல் வேய்ந் தனையென்கொல்? என்றவனை யாங்கேட்பக் கூறுவான், யானென்பதர்க வொருவ னில்லை, இதுவென்பதாகவு மில்லை, யான் நிறுத செய்வதாகவுங்காணும், உம்மால்

யான் வெந்துயருற்றேன். அந்தோதுயரம்! நீரே யென்னுடைய பகையாக இருக்கின்றீர். உம்மால் துக்கத்தின் பொருட்டும் சுகத்தின் பொருட்டும் திருட்டனேன் நட்டனேன் என்றுபுகன்று சிதைந்துபோன தன் அங்கங்களை நோக்கிப் போகங்களில் திருப்தியொன்றும் அடையாதவனாகி மேகமானது சப்தித்துக்கொண்டு அவியிற்பொழிவதேபோல அதிதீனனாய் மிகுந்தசப்தத்துடன் அழுதனன். கணமாத்திரையில் ஆண்டு அவன் சோதனத்தை யொழித்து தன்னுடைய அங்கங்களை யினிதுநோக்கிச் சிரித்தனன் தொனித்தனன், நீள்போது அட்டகாசமுஞ் செய்தனன், பின்னப்புமான் எமது முன்னிலையில் முறையாகத் தனது அவ்வங்கங்களை யெல்லாம் தவிர்ந்தனன். பிரதமம் அவனது சங்கற்பவடிவமான சிரம்விழுந்தது அதுவே சருவ அநர்த்தமூலமாதலின் பரம தாருணமாம்; பின்விகற்ப ஆசயங்களாகிய பாகுகள் விழுந்தனவாம், பின்விடய அபிநிவேசமாகிய வகூம் விழுந்தது, பின்றிருஷ்ணையாகிய உதரம் விழுந்தது, என்னுமிது தக்கவாறு கற்பித்ததாம்.

(ச.) தானே தன்னை யடித்துக்கொண்டு, கருவேல், விதருவகை = பலத்தினால், யாம்பற்றி = நாம்பிடித்து, யாதகாரணத்தால், எதுசெய்கின்றாய், நினைவென், இவ்விட மியாது, உரைக்க = ஒருமுகூர்த்தம் போதிக்க, நானின்றறிந்தேன் = நான் இன்றறிந்து நஷ்டமானேன், நல்குந்தன்னை = அடிபட்டுச் சிதறிய ஜீர்ண அங்கங்களை, நுணுக்கந்தன்னை = தனதங்கங்களை, செடிதாய் வெடிக்க நகைத்தான் = வெகுகாலம் அட்டகாசஞ்செய்தான். அடைவே = கிரமமாக, முன்பு அவனது பிருதாருணமான சிரசும் பின்பு புஜங்கள் பின்புரம் பின்புதரம் பின்மற்ற வங்கங்களை தவிர்ந்தான்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) முன்னவன் போதலும் பின்னவன் வந்து திருவருள்பெறுதலுங் கூறல்: — விதியென.

விதியின்வசத்தா லிவனெ நிடமே மேவலுற்ற
னெதிர்வந் தொருவனயலே யிவன்போ லடியுண்டேக
முதல்வந்தவனைப் போனமொய்ம் பாயுணர்த்தவந்தப்
பதிகன்றனும் போனன் பழையவடிவ மொழிய.

(ப - ரை.) விதியின் வசத்தால் = நியதியின் சக்தியால், இவன் ஓரிடமே மேவலுற்றான் = இவன் எங்கோ ஓரிடத்திற்செல்லமுயன்றனன், எதிர்வந்தொருவன் அயலே இவன்போல் அடியுண்டேக = ஏகாந்தத்தில் மீளவும் அயல் ஒருநரன் முன்னவன் போன்று அடித்துச்சுழன்று ஆரூலத்துடன் போவதையாம்பார்த்து, முதல் வந்தவனைப் போல் நாம்மொய்ம்பாய் உணர்த்த = முன்வந் துற்றவனுக்கு அனுக்கிரகித்ததுபோல யாம்சாமர்த்தியமாக விழுபூர்வகம் அருள, அந்தப் பதிகன்றனும் போனன் பழையவடிவம் ஒழிய = அவ்வழிப் போக்கனும் அழுது சிரித்து அகன்றான் அங்கங்கள் குலைந்து அலம் அலக்ஷியமாயினன்.

(ஸ்ரீ - வீர.) நியதியின் = தெய்வத்தின் சக்தியால் விஞ்ஞான ஆகாரமாக அபிவியக்தியாதற் பொருட்டு என்பதுபொருள். செல்ல முயன்றனன், செல்லவில்லை யென்றமையான் ஜீவன்முக்தத்தன்மை யுணர்த்தப் பெற்றதாம். எக = அத்தியந்தம் ஆரூலம் நிறைந்த சிந்தையுடன்போக. அலம் = அத்தியர்த்தம், அலக்ஷியமாயினன் = அதிருசியமாயினன், விதேகமுக்தியையடைந்தனன் என்பதாம்கணத்தில் அவன் அவ்வங்கங்களை முறையாக நன்குதியாகித்து ஞானத்தால் அஜ்ஞான வதன்காரியபாத நியதியின் சக்தியால் செல்லவிட்டில்லாமையின் ஒன்றும் எஞ்சாமல் இலயமானமையின் பாதிதமாகிய

அவன் இச்சொரூப மற்றவனுய்ச் சிற்சொரூபமே யாயினன் என்பதாம் தன்மனத்திற்கே போல அன்னியமனங்கட்கும் இதுவே முறையாமெனக் காட்டுவார் அயலேயென்றார். யாம் ஏகாந்தத்தில் அவ்வாறே மீண்டும் அன்னிய ரஹஸ்யக் கண்டேம் அவனும் தன்னில் தானேதன்னுல் அடித்துக்கொண் டெங்கும் ஓடிய வதிப்பட்டனன்; அவனேயான் பல மாகப்பிடித்து முன்போலவே வினுவினேன் அவனும் முறையாக முன்போன்றே கூறி யழுது சிரித்து, அங்கங்களெல்லாம் விசீரணத் தன்மையையடைந்து அத்தியந்த அதிரு சியத்தகைமையை யடைந்து போனுன் நியதியின் சக்தியை விசாரித்துப் பின்னடக்க முயன்றனன்.

(ச.) விதியின் பயனுல் = நியதியின் சக்தியால், பழையவடிவம் = சீர்மையான அங்கங்கள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மற்றொருவன் அக்கூபத்தில் வீழ்ந்தேறுமையும், ஏனைய னுக் குபதேசித்தல் ஏறுமையும் கூறல்:—பிறிது —ஒதிற்றென.

பிறிதுமொருவன் வந்தப்பெரிய கிணற்றில் வீழ்ந்தான்
சிறிதல்லாத காலந்திரும்பி யேறக்காணேம்
வெறிதுன்றி யவ்வனத்தில் வேறுமொருவன் வரலும்
மறிதுமென்ன தகைந்தேதையான தெல்லாமுரைத்தேன். (12)

ஒதிற்றொன்றுங் கேளாதுரப்பி யிகழ்ந்து மேன்மேன்
மோதிக்கொண்டு போனுன் மூர்க்கரவனைப் போல்வார்
வாதிப்புறுவார் நிறைந்து வயிரமுள்ளாற் செறிந்து
பீதிக்கிடமாயிருள் சூழ்பெருங் காடின்று முளதால். (13)

(ப - ரை.) பிறிது மொருவன் வந்து = மற்றொருவன் ஓடிவந்து, அப்பெரியகிணற் றில் வீழ்ந்தான் = அம்மகத்தான அந்த கூபத்தில் விழுந்தனன், சிறிதல்லாதகாலம் = நீள்காலமாகியும், திரும்பியேறக் காணேம் = மீளவும் ஏறிவரக் கண்டிலேம், வெறிதுன் றிய அவ்வனத்தில் = பித்துப் பிடித்தகாடும், அக்காட்டில், வேறும் ஒருவன் வரலும் = மற்றொருவன் எதிர்ப்படலும், அறிதுமென்ன = அறிவிக்கலா மென்று, தகைந்தே = வலுவிற்றடுத்தே, ஆனதெல்லாம் உரைத்தேன் = எம்மான் முடிந்த பரியந்தம் சருவப் பிரகாரத்தானு முபதேசித்தேம்.

ஒதிற்று ஒன்றும் கேளாது = உபதேசித்தவற்றுள் ஒன்றையுமே செவிகொள்ளா மல், உரப்பி இகழ்ந்து மேல்மேல் மோதிக்கொண்டு போனுன் = எம்மை அதட்டித் திட்டிவிட்டு மிகவும் அதிகமாக அடித்துக்கொண் டழுதுகொண்டு போனுன், மூர்க்கர் அவனைப்போல்வார் வாதிப்புறுவார் நிறைந்து = அவனைப்போன்று அநேகம் உபத்திரவத் திற் குட்பட்டுச் சுழன்று கொண்டுதிரியும் மூர்க்கர்களானே வியாபிக்கப் பெற்று, வயிர முள்ளால் செறிந்து = வயிரம்போன்ற முட்களால் பூரிக்கப்பெற்று, பீதிக்கிடமாய்= அதிகபயம் அதிதிபீஷண ஆஸ்பதமா யிலங்கும், இருள்சூழ் = மகாந்தகாரம் நிறைந்த, பெருங்காடு இன்றும் உளதால் = மகாகோர அடவி இப்போதும் இருக்கின்றது.

(ஸ்ரீ - வீர.) மகாபாதகத்தோடு கூடியமனமே, அந்த கூபமெனப்பட்ட நரகத்தில் வீழ்ந்து அக்கூபத்திலிருந்து வெருகாலமாகியும் ஏறவேயில்லை யென்பதாம். தூய்மை சிறிதுமேபெறுத அநாத்மஞ்ஞ அன்னியமனம் தன் விவேகத்தைத் திரஸ்கரித்தது என் பார் உரப்பியென்றார். துர்மதியாகிய அவன் எம்மை நோக்கி ஹேமூடதுர்துவிஜ ! உமக்

கொன்றுமே தெரியாது துர்மதியரே என்னை விட்டுப்போம் என்று இகழ்ந்து தனது வினைப்பரவசனுபினன். துவிஜன் = இருபிறப்பாளன். அக்காடானது, நானாவிதமாய கண்டகங்களாய் கடுந்தியர்களினும் பாதித்துக்கொண்டே யதிபயங்கரமாக இருப்பது; உபத்திரவ அங்கங்களை யுடைத்தா யிருப்பது என்பதாம். கனதமசாய கொருங்கிய அஞ் ஞானத்தான் மூடப்பெற்று ஒருவரும் புகுதப்போதர முடியா தாழ்ந்திருப்பதாம். யாம் ஏகாந்தத்தில் மீளவும் அன்னியன் ஒருவனை யவ்வாறே கண்டோம், முன்போன்றே இவ னும் மோதிக்கொண்டு தானே யோடிக்கொண்டு திரிந்தான். ஓடியோடிப்போய் எவர் விழியையும் மூடச்செய்யும் இருணிறைந்த பெருங்கூபத்தில் விழுந்தனன்; ஆண்டு யாம் நீள்போது வீழ்ந்தவன் எறிவருவானென்று பார்த்துக்கொண்டே யிருந்தோம்; அச்சடன் எவ்வளவோ காலமாகியும் அக்கூபத்தினின்றும் எறிவரவேயில்லை. பின்னர்யாம் எழுந்து செல்லலாம் என்று முயன்றபோது மீளவும் ஒருவனைக் கண்டோம் அத்தகைய அலங் கோலமுடையவனும் அவ்வாறே வீழ்ந்தமுது திரிபவனு யிருப்பதைப் பார்த்து முன் போன்றே யசையாமற்பிடித்து அவ்வாறே விரைவில் ஆனவரையில் அவனுக்குபதேசஞ் செய்தோம், ஹே உற்பலபத்ராக்ஷ, இராகவ ! எவ்வளவு சொல்லியும் அவன் சிறிதும் அறிந்து கொள்ளவேயில்லை, அம்மா...ன் எம்மைநோக்கி ஓய் கெட்டுப்போன மகாபாபி யாகிய பிராஹ்மணனே ! உனக்கொன்றுமே தெரியாது என் எதேதோ பிதற்றுகின்றாய் என்று வைதுவிட்டுக் கேவலம் தான் செய்துகொண்டிருந்த வினையையே செய்யமுயன் றோடிப்போனான். வைததென்றது, கேவலம் சுயம்விவேகந் தெரியாதவனல்லன் மற்றை விவேகிகளாகிய பெரியோரையும் அலக்ஷியமாய்த் திரஸ்கரிப்பதிற் றற்பரனுயிருந்தனன் என்பதைக் காட்டுதற்காம், பின்னர் அந்தமகா ஆரண்யத்தில் அவ்வாறே சஞ்சாரம் செய்துகொண் டிருந்தயாம், அத்தகைய தோடமே செய்துகொண்டு துயர்மயமாய்த்திரி யும் அநேகரைக் கண்டோம். இவ்வண்ணம் சுழன்று துயருறும் அநேகர் நிறைந்த விச மான வித்தாரமாய அம்மகா அடவியின்று திருக்கின்றது.

(ச.) வந்து = அப்படியே யோடிவந்தவனும் இகழ்ந்து = துட்டப் பிராமண நீ ஒன்றும் அறியாயென்று நிந்தித்து, அவனைப் போல்வார் = அவனைப் போன்று, மூர்க் கர் = மூடராய், வாதிப்புறுவார் = துக்கிக்கும் அநேகரர், வயிரமுள்ளால் = வயிர முள்ள நானாவித கண்டகங்களினுல், பெருங்காடு=கோராடவி.

(ஸ்ரீ - வீர -அ - கை.) புகன்ற ஸித்தாந்தஸ்தாபகத்தின் முற்பரியப்பொருளை முறை யானும் முறையின்றியும் ஸ்ரீ இராகவனுவாயிலாக இனிது வருணிக்கத் தொடங்கல்:— அறவேயென.

அறவேகொடிதாய் வெந்தவடவி யெனினுமறியார்
நறவேகமழ்ந்து குளிர்ந்ததந்தவனம் போன்மகிழ்வர்
மறவேலரசே யென்றவகிட்ட முனியைநோக்கித்
துறவேபுரிவா யிவற்றைத் தோன்றச் சொல்வாயென்றான்.

(ப - ரை.) அறவே கொடிதாய் வெந்த = அத்தியந்தம் கோரமாய்த் தகதகாயமான, அடவியெனினும் = காடேயாயினும், நறவே கமழ்ந்து குளிர்ந்த = தேனும் மணமும் பொங்கித் தண்மையாய்ந்த, அறியார் நந்தவனம்போல் மகிழ்வர் = தத்துவமுணராதார் உத்யானவனம்போல அதன் கண்ணுல்லாச சந்தோடத்துடன் உலாவுவர், மறவே லரசே = பகைவரைக் கோறல் புரியும் வேலாயுதந்தரித்த இளவரசே, என்ற = என அருளிய, வசிட்டமுனியை நோக்கி = ஸ்ரீ வசிட்ட பகவானைப்பார்த்து, துறவேபுரி

வாய் = எனதையங்கள் யாவற்றையும் நீக்குவதே கடமையாகப் பூண்ட எனதாண்ட வனே ! இவற்றை = கூறியவற்றை, தோன்ற = மனதிற் படும்படியாக, சொல்வா யென்றான் = திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்றும் பிரார்த்தித்தனர் ஸ்ரீ இராகவர்.

(ஸ்ரீ - வீர) பகர்ந்தபடி அவ்வடவி யிருந்தபோதினும் ஆன்மஞான மடையாப் பிராணிகளால் இன்பமையைப் பெற்று, பூந்துணர்தருமித் தேன்றுளிதறும் பூஞ் சோலை நிறர்ப்ப அதிருதலத்துடன் சேவிக்கப்பெறும். அவ்வடவி, பயங்கரமாய் விவிதகண்டக சங்கட அங்கியாய், கோரமாய், கனதமோ கனமாய் இருந்தபோதினும், விவேகதிருஷ்டியினனே தருமப் பிரமதத்துவத்தைக் காணும்படியான அதிகாரிஜன் மத்தில், சாதனசம்பத்திச் சுகத்தை யடைந்தும் பாக்கிய மில்லாமையானே பரமாத்ம போதமடையப் பெறுதவரால், பூங்காவனமெனப் போற்றப் பெறும், ஆபாதரம்மியமெ னத் திருஷ்டாந்தமாம். அவ்வடவி உன்னிற் பார்க்கப்பட்டது என்றதைக் கேட்ட ஸ்ரீ இராகவர் கூறுவதாவது:—ஹே பிரஹ்மன் ! இம்மகாடவி யென்பது யாது, எக்கால் எங்ஙனம் என்னிற் பார்க்கப்பட்டது, அப்புருடர் யாவர், ஆண்டியாதின்பொருட்டு அவ் வாயுத வர்க்கங்களால் தந்தேகத்தில் அடித்துக் கோடலேயும், கூபகரஞ்சனவனுதிப் பிர வேசத்தையும் செய்யமுயன்றவர் ஆயினர் ? தாமேதமது அநிஷ்டத்தில் முயல்கைகூடா மையின் பிறிதாலது பேசப்பெறும் என; எவ்வக் கருத்தாவானே அத்தகைய அநிஷ்டத் தில் வலுவிற் செலுத்துங் காரணத்தால் தமது அடிமுதலியவற்றே முயன்றவராகி நின் றனர் ? எவ்வக்கருத்தாவா லேவப்பெற் றியங்காநின்றனர்.

(ச.) அறியார் = நிஜபோத மிலாதவர், மகிழ்வர் = அநுபவித் தாநந்திப்பர், துறவே புரிவாய் = சர்வசந்தேகங்களேயும் நிவிருத்திசெய்யும் ஆண்டவனே, இவற்றை = அந்த மகாடவியாது எவ்விடத் திருக்கின்றது அப்புருடர் யார் அவ்விடத்து என்செய்தற்கு எத்தனித்தார்கள் ஆகிய இவைகளே.

(ஸ்ரீ - வீர - அ - கை.) உண்மையாகப் பிரஹ்மமே, மித்தியாபூத சொர்க்க நரகாதி வைசித்திரிய கற்பனையானே சமுசார அடவி, அதனைக் கற்பிப்பனவாய மனங்களே அந்நரர் என்பதாக அவை தூரத்தனவாக, எம்மாற் கூறப்பெற வில்லையெனக் கூறத்தொ டங்கல்:—கேட்டவென.

கேட்டகுரிசி லறியக் கிளர்மாமுனிவ னுரைப்பா
லூட்டவடியு முடியுநடுவு மின்றிப் பொய்யாங்
கூட்டமாகி யாழ்ந்து கொடிதாய் விகற்பநெடிதா
மீட்டவுலகத் தியல்பே யாமுன்சொன் னவனமே.

(ப - ரை.) கேட்டகுரிசில் அறிய = வினவிய அரசபாலன் அறிந்துகொள்ள, கிளர் மாமுனிவன் உரைப்பான் = மைத்திரியாதி நிறைந்த மகத்தான ஸ்ரீ வசிஷ்டபகவான் திருவாய் மலர்ந்தருளுவதாவது, நாட்ட அடியும் முடியும் நடுவும் இன்றி = ஸ்தாபிக்க முதலிடைகடை யிலதாய், பொய்யாங் கூட்டமாகி = அத்தியந்தம் சூனியவிகாரமுற்ற தாய், ஆழ்ந்து கொடிதாய் = கம்பீர அபார கோடரமாய், விகற்பநெடிதாம் = அநேக விகற்பங்களோடு கூடியதாம், ஈட்டவுலகத் தியல்பேயாம் முன்சொன்னவனமே = சமு தாயப் பிரபஞ்சத்தியல்பே முன்னர்யாங் கூறிய அடவியாம். (15)

(ஸ்ரீ - வீர) சூனிய விகாரமுற்றது = அசத்காரியத் தோற்றது, ஹே மகாபாகு வாகிய இரகுநாத ! உனக்குயாவும் கூறவேங் கேட்குதி, அம்மகா அடவியானது வெகு

தூரத்தல்ல, அந்தரரும் வெகுதூரத்தர் அல்லர், அச்சகலருமறிந்த சமூசார பதவியானது அதிகம்பீரமுடையதும் கரையற்ற இடமுடையதும் ஆம்; பரமார்த்த திருஷ்டியினே அசத்தன்மையால் சூனியமாம், மயற்றிருட்டியினே சத்தன்மையால் விகாரமுடையதாம் எனமுன் மொழிந்த மகாடவியை யறிதி, எப்போது அது சூனியமாம் எவ்வுபாயத்தாற்றான் அதுகிடைக்கும் எனின்? எக்கால் ஏக அத்விதீயமேயாய வத்து வால்நிறைந்து அன்னியத்தோடு பொருந்தாதோ அக்கால் கேவலம் சூனியம்போலவாம். போலென்றது கேவல சூனியாதி சப்தங்கட்கும், ஆண்டு உபசாரத்தாலாய பிரவிருத்தியாம் பிரதியோகிய நீரூபணமாங்கால் சூன்யத்வாதிகட்கு நிரூபண அசம்பவத்தால் என்பதை வீலக்கற் பொருட்டாம். அத்தகையதேயாய இத்தத்துவம் பதார்த்த சோதன வடிவமாய விவேக ஆலோகத்தாற் கிடைக்கத் தக்கதாம்.

(ச.) பொய்யாங் கூட்டமாகி = சுத்தசூனிய விகாரத்தோடு கூடினதாய், வனம் நீரத்திருப்பது மன்று, மற்றென்னெனின் சம்சாரபதவியாம். (15)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அதனையே வீளக்கியுரைத்தல்:—புகையென.

புகையார் வனத்திற் புருடன் புலம்பிச் சுழலுமனமே
தகையாகின்ற நாமுந் தனிவிவேகந்தானே
பகையாமிதனு ளுள்ளம் பரத்தையறிந் தாரிணதான்
மிகையார்மனங் களிகழ்ந்து வேட்கைவசத் தோடினவால் (16)

(ப - ரை.) புகையார் வனத்தில் = புகைந்தெரியும் அவ்வடவியில், புருடன் = புருடனென் றுரைத்தது, புலம்பிச்சுழலு மனமே = அழுதுதிரியும் சித்தமேயாம், தகையாகின்ற நாமும் = தடித்துப் பிடித்த நாமென்றதும், தனிவிவேகந்தானே = ஒப்பற்ற விவேகமேயாம், பகையாம் இதனுல் = சத்துருவா மிதனுல், உள்ளம் பரத்தையறிந்து ஆரினது = சித்தம் பரத்தை யுணர்ந்து விசாரந்தி யடைந்தது, மிகையார் மனங்கள் = மற்றைய அடங்காவுள்ளங்கள், இகழ்ந்து வேட்கை வசத்தோடின = நிந்தித்துவிட்டு ஆசையின்வசமாக ஓடிமாய்ந்தன. ஆல்—அசை. (16)

(ஸ்ரீ - வீர.) ஆண்டு எம்மகாகாரபுருடர் சுழன்றனரோ என்றது. மனங்களே அத்தியந்தம் தூயரங்களில் வீழ்ந்து வருந்தினவென்றதாம் அவற்றை எக்கண்டபாமுண்டோ, ஈண்டு விசாரமாம், விசாரரூப விவேகமாய எம்மானே அவைகாணப் பெற்றனவாம் அன்னியத்தால் அல்லவாம், ஹே மகாமதியையுடைய அக ; பரமிய பிரகாசத்தோடுற்ற பானுவினுலே பங்கஜங்கள்போல எப்போதும் விவேகமாகிய எம்மால் அம்மனங்களே யுணர்த்தப் பெறுகின்றன. தத்துவஞானத்தை யடைந்து விவேகப் பிரசாதத்தினுலே மனோபாவ நாசமுற்று அம்மனங்களுட் சில மோக்ஷமடைந்தன. மற்றுஞ்சிலவோ மகாமோகத்தினுலே விவேகமாகிய எம்மைக்கண் டானந்தப் படுவதேயில்லை, விசார உபேக்ஷையின் வயத்தினுலே கூபங்களிலேயே கீழே விழுகின்றன.

(ச.) புலம்பிச் சுழலும் புருடன், புருடரன்றும், மற்றென்னெனின் மனமே, துக்கத்தழுந்து மனங்களேயாம், விவேகந்தானே, என்னுல் அவைகள் போதிக்கப் படுதலின் போதவேது இவ்விவேகமே யென்பது பொருள். இதனுல் = எனது அனுக்கிரகத்தினுல், உள்ளம் = சிலமனங்கள், பரத்தையறிந்து = பரமபதத்தைப்பெற்று, ஆரியதால் = பரம உபசமத்தை யடைந்தனவாம், சிலமனங்கள் உபசமம் அடைந்தன வென்பது விசுத்தமும் பரிபக்குவமுமான சித்தங்க ளென்பது பொருள்; மிகையார் மனங்கள் = பரிபக்குவமற்ற சித்தங்கள். (16)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மற்றவற்றையும் தெளிவுபெறுத்தல்:—விதறியென.

விதறியோடு மனங்கண்மேவு நரகங்கிணறு
கதலிவனம் விண்ணுலகாங் கருவேல்வன மண்ணுலகாஞ்
சிதறிவிழுந்த கிணற்றிற்றிரும்பியேறு தொழிந்தோன்
பதறிநரகம் புகுந்துபாவந் தொலையாததுவாம். (17)

(ப - ரை.) விதறியோடு மனங்கள் = பதறிக் கட்டுப்படாமல் ஓடாகின்ற சித்தங்கள், மேவுநரகம் கிணறு = அடையாகின்ற நரகமேகூபமாம், கதலிவனம் = வாழைத் தோட்டம், விண்ணுலகாம் = சுவர்க்கலோகமாம், கருவேல்வனம் மண்ணுலகாம் = கரஞ்சவனம் பூவுலகமாம், சிதறிவிழுந்த கிணற்றில் திரும்பி ஏறுதொழிந்தோன் = பெருந்துயரங்களோடும் வீழ்ந்தகிணற்றினின்றும் மீண்டும் மேலேவராது போனவன் என்றது, பதறிநரகம் புகுந்து பாவந்தொலையாதது ஆம் = கடவினைகளாற்றி ரௌரவாதி புக்குப் பாதகங்களின் பயன் அனுபவித்து முடியாதது ஆம். (17)

(ஸ்ரீ - வீர.) அந்த கூபங்கள் என்று கூறப்பெற்றவை ஆழ்ந்த நரகங்களாம், கதலீ கானனத்தை அவர் புகுந்தனர் என்றது மனங்கள் சுவர்க்க ஏகரசத்தை யனுபவித்துக் கொண்டிருந்தன வென்றதாம்; அந்த கூபத்தினுள்ளே புகுந்தன மீண்டுந்திரும்பி யேற வில்லையென்றது, மகாபாதகத்தோடு கூடிய சித்தங்கள்.

(ச) கிணறென்றது = நரகங்களாம், துக்கஹேது வாதலின்; விண்ணுலகாம் = சுவர்க்கமாம், சுகாநுபவ ஹேதுவாதலின்; மண்ணுலகாம், சாயை = நிழல், மனவி = கண்டகம் = முள், வயிரம், சாயைகண்ட காதியாற் சுகதுக்க வேதுவாதலின் மநுட லோகமாம், பாவம் = மகாபாதகமாம். அநுபவம் = உபயோகம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கூறியதையே விரித்துரைத்தல்:—மூனெனென.

(ச.) கருவேல் வனத்திற்கும் மநுடலோகத்துவம் வித்தரிக்கப் படுகின்றது:—

மூனெயார்முள் ளென்றதுதான் மோகமனிதர் மடவார்
நினெயாவின்ப துன்பநின்ஞ லடைந்தேனீயே
வினெயாமென்ற துணர்வால்வீயு மனநொந்துரைத்த
தனெயாழுத தென்றதாசை யறுக்குமலக்கண். (18)

(ப - ரை.) மூனெயார்முள் என்றதுதான் = கூர்மையோடு கூடிய முள் என்று கூறியதானது, மோகமனிதர் மடவார் ஆவர், மடவார் = அக்கருவேல் வனமானது களத்திராதி ஸ்திரீ இராக கலுஷமுற்றதாம், மோகமனிதர் = மநுடசம்பந்தமான அநேகவித ஆசைகணிறைந்ததாம், இவையே அக்காட்டிற் கடுமுட்கள்; நினெயா இன்ப துன்ப நின்ஞல் அடைந்தேன் = எண்ணுத சுகதுக்கம் உம்மால் அடைந்தனன், நீயே வினெயாம் = நீயேசத்துருவாம், என்றது = எனவியம்பியது, உணர்வால் வீயுமனம் நொந்து உரைத்தது = தத்துவ அவபோதத்தால் விசீரணமாம் விடயசித்தம் விலாபனஞ் செய்ததாம், அனெயார் அழுதது என்றது ஆசையறுக்கும் அலக்கண் = அவர்போ தனஞ் செய்தனர் என்றுரைத்தது போகஜாலங்களேவிடும் மனங்கள் புலம்பியதாம் (18)

(ஸ்ரீ - வீர.) எவ்வுக்தரஞ் சுகதனமென்னும் மர்த்யமண்டல முளதோ அதுகளத்தி ராதி குடும்பநேயத்தோடு கூடியதாம், அதனுனேயே மநுடலோகசம்பந்த அநேகவித ஆசாபாசங்களாகிய துயரமய முட்களானே வாதனே செய்வதாம். எம்மனங்கள் கரஞ்ச காணனத்தின் கண்ணே புகுந்தனவோ அவை மநுடலோகத்தில் உண்டாயினவாய்

ஆண்டே இரதமுறுவனவாய் இரமிக்கும், அபிநிவேசன முடையனவாய் விடயாசை ஆசுவாதனமோக முடையனவாம். யாம் எவ்வநியாத புருடரால் புத்திகளாலும் சித்தங்களாலும் உபேக்ஷிதமாயினேம், துணிதலுமில்லை நினைதலுமில்லை யென்றது, அநாண்ம போதமுற்ற அம்மனங்களால் தம் விவேக திரஸ்காரமாம். உம்மாற் கண்டேன் விஷ்டமாயினேன் நீரேயெனது பக்கமென வேகமாக யாதோதப் பெற்றதோ அதுவோதத்துவ அவபோதத்தால் தத்தளித் தழியாநின்ற சித்தத்தால் விலபிதமாம் பெருங்குரலொடு விரைவில் வெகுவாக ரோதனஞ் செய்யப்பெற்றது புருடனு லென்றது, போக ஜாலங்களே விடும்மனத்திலுனே ரோதனஞ் செய்யப்பட்டதாம்

(ச.) முனையார் முள்ளென்றது = கருவேல்வன மென்று முற்கூறியது, மோகமனிதர் மடவார் = மநுடலோகமேயாம், களத்திரசத்தோடு கூடுதலினும் துக்ககண்டக சம்பந்தத்தானும் என்பதுபொருள். மனிதர் என்றதனால் அவர் சம்பந்தமான லோகமும் மடவார் என்றதனால் அவரால் ஜனிக்கும் சுகமென்னும் இரசமும் மோகமென்றதனால் ஈடணத்திரயரூபமான அதிதுக்கமின்னுங் கண்டகமுங் குறிக்கப்பட்டது. அறியாத புருடராற் றுட்டப்பிரா ஹ்மணு வென்றுயாம் நிந்திக்கப்பட்டேம் என்றது அநாண்ம ஞானமுள்ள மனங்களால் தன்விவேக நிந்திக்கப் பட்டதாம் நினையா - நொந்துரைத்தது = துக்கித்து ஸ்துதித்தது, உன்னுற் பார்க்கப்பட்டேன் ஆதலினுல் கஷ்டமேயானேன்; விசாரமே மலேலய வேதுவாகலின் நீயே யெனக்குச் சத்குருவென்னும் வசனமானது நசிக்கின்ற சித்தத்தின் அழுகையேயாமென்பது பொருள். ஆசையறுக்கு மலக்கண் = மனம் போகேச்சாத்தியாக நிமித்தம் வருந்துவதே யாமென்பது பொருள்.

(ச - அ - கை.) அதனையே விரித்துரைக்கின்றார்:—போதவென.

போதம்பாதியாகிப் புராணமாகா மனந்தான்
காதல்விடி ஞெந்தயர்தல் கதறியழுத தறுவாஞ்
சீதமாக மகிழ்ந்து சிரித்துநின்ற தென்ற
தேதமில்லா ஞானத்தேக மானமகிழ்ச்சி. (14)

(ப - கை.) போதம் பாதியாகி = அர்த்தவிவேக மடைந்து, புராணமாகா மனந்தான் = அமலபதத்தை யடையாததான மனமானது, காதல் விடிஞெந்தயர்தல்= போகங்களே விஷம்போது பரிதாபப்படுதல், கதறியழுததறுவாம் = உரக்க ரோதனஞ்செய்தது அதுவாம், சீதமாக மகிழ்ந்து சிரித்துநின்றது என்றது = தண்மையாகச் சந்தோஷித்து நகைத்துலவியது என்றது, ஏதமில்லா ஞானத்தேகமான மகிழ்ச்சி = குற்றமில்லாதுண்டாய பூர்ணஞானத் தேகமாகிய சந்தோடமாம். குற்றம் = தடை. (14)

(ஸ்ரீ - வீர.) புருடரின் ஆநந்தியாய எந்நகைப்புளதோ அது உணர்விஞனே நன்கடைந்த விவேகமாகிய சித்தத்திஞனே சந்தோடமடைந்ததாம். பாதியடைந்த விவேக முடையவனும் அமலபதத்தை யடையாதவனு யிருப்பவன் சித்தம் போகங்களே விடும்போது அத்தியந்தம் பரிதாபத்தை யடையும்; நேயலோ பாதிகளே விடும்போது அதுல பரிதாப முண்டாமென்பதாம். யாமுணர்த் தியதானே யுணர்ந்தா நந்தியாகி நகைத்தது புருடன், பூரணவிவேகம் பொருந்திய சித்தம் ஆரணமுறையிலா நந்தமடைந்ததாம்.

(ச.) போதம் + அயர்தல் = அர்த்தப் பிராப்த விவேகத்திஞற் பரமபதத்தை யடையாத சித்தம் போகத்தியாகஞ் செய்யுமிடத்து அதிதாபத்தை யடையுமென்பது பொருள். ஏதமில்+மகிழ்ச்சி = பூரண விவேகமுள்ள மனது ஆன்மஞானத்திஞற் சந்தோடமுற்றதேயாம்.

(ஸ்ரீ - வீர - ச - அ - கை.) அதுவே புடமாக விவரணஞ் செய்யப் படுகின்றது:—

மூடிவின் ஞானத்தாலே மோகம்விட் டமனந்தான்
வடிவைமாய்க்கும் பொழுது மகிழுமதுவே மகிழ்வாம்
நெடியமொய்ம் பினுலே நிறுத்திக் கேட்டோமென்ற
தொடிவின்ஞான வலியாலுள்ள மொருப் பட்டதுவே. (கூ0)

(ப - ரை.) மூடிவின் ஞானத்தாலே = பரிபூரண பிரஹ்ம சாக்ஷாத் காரத்தாலே, மோகம் விட்டமனந்தான் = மயல்விடித்த சித்தமானது, வடிவைமாய்க்கும் பொழுது = உருவத்தை விடும்பொழுது, மகிழும் அதுவே மகிழ்வாம் = சந்தோஷிப்பதுவே ஆனந்த விருத்தியாம், நெடிய மொய்ம்பினுலே = அதிமுயற்சியினுலே, நிறுத்திக் கேட்டோம் என்றது = நிற்குமாறியற்றி வினவினேம் என்றது, ஒடிவின்ஞான வலியால் உள்ளம் ஒருப்பட்டதுவே = கெடாத விவேகவலுவினுலே மனமானது அடங்கியதென்பதாம். (கூ0)

(ஸ்ரீ - வீர.) உருவத்தை = சங்கற்ப விகற்பரூப விக்கிரியையை பரிபூரண விவேகத்தை யடைவுற்றுச் சமுசார நிலைமை யாவற்றையுங் கடந்த சித்தமானது தன்னுருவத்தை விடும்போது ஆனந்தமே யதிகரிக்கும். முன்மொழிந்த புருடன் எம்மால் பலாத்காரமாய் நிறுத்தப்பட்டுக் கேட்கப்பட்டான் என்றது, விவேகமானது வலிதிற் சித்தத்தைத் தகைத்து நிறுவியதெனத் தெரிவித்ததாம். நம்முன்பாகவே அங்கங்கள்யாவும் விசீர்ணமாகிப்போய் மறைந்த தென்றது, அருத்த சகித ஆசையாவும் ஒழிந்து சித்தமானது சாந்தியடைந்ததெனக் காட்டியதாம், மனமானது பாதமாகவே விடயங்களோடு விடய அவாவும் பாதிக்கப் படுமெனக் காட்டியதாம்.

(ச.) மூடிவின் ஞானத்தாலே = பூரணவிவேகத்தினுல், மோகம் விட்ட = சமுசாரத்திதியினின்றும் விடுபட்ட, சித்தம், வடிவை=சங்கற்ப விகற்பரூபத்தை, மாய்க்கும் போதுஓவிட்டநேரம், நெடிய மொய்ம்பினுலே, வசிட்டராகியயாம் பிரயத்தினத்தினுல், ஞானவலியால் = விவேக பலத்தினுல், உள்ளம் ஒருப்பட்டதுவே = சித்தம் வசீகரணமானதேயாம். (வசீகரண மென்பது புணர்ச்சிக் கிணக்கம்)

(ஸ்ரீ-வீர-அ-கை.) அதனையே நன் கிலக்கியுபசங்கரித்தல்:—அங்க—கோச—ஏன.

அங்கத்தறைந்து கொண்ட தடர்கற்பனை களாலே
பங்கப்படுவன் முயராம் பரந்தோடின தென்றதுதான்
மங்கத்தரு வாதனையான் மருண்டு சுழல்வதாகுஞ்
சங்கற்பமும் வாதனையுந் தனைத்தான்வலை போற்றலைக்கும். (கூ1)

கோசகாரப் புழுப்போற் கொடுங்கற்பனை வாதனையாற்
பாசமடைவ தியாரும் பகர்ந்தமனத்தின் கதையை
மாசிலாத மனத்தான் மதித்துமனத்தை மாய்ப்பாய்
தேசமுடையா யென்று தெளிந்த வசிட்டனுரைத்தான். (கூ2)

(ப - ரை.) அங்கத்தறைந்து கொண்டது = தானே தன்னங்கத்திற்றுடன வர்க்கங்களால் அறைந்து கொண்டதென்றது, அடர் கற்பனைகளாலே பங்கப்படுவன் துயராம் = நெருங்கிய கற்பனு ஜாலங்களினுலே கட்டப்படுபவன் படுந்துன்பமாம், பரந்தோடின தென்றதுதான் = தன்னே யடித்துக்கொண் டோடித்திரிந்தான் என்றதோ,

மங்கத்தகும் வாதனையான் மருண்டு சுழல்வதாகும் = மலினஞ்செய்யும் வாதனையினாலே மயங்கிச் சுற்றுவதாகும், சங்கற்பமும் வாதனையும் தனைத்தான் வலைபோல் தளைக்கும்= சங்கற்பவாசனை ஜாலங்களினாலே வலையிற் கட்டுண்பதே போலத்தானே கட்டுப்படுவன்.

கோசகாரப் புழுப்போல் கொடுங்கற்பனை வாதனையால் = கோசகாரக் கிருமியே போல மநோலீலாமய பந்தங்களினாலே பாசமடைவர் யாரும் = எவரும்தாமே பந்த மூறுவர், பகர்ந்தமனத்தின் கதையை = கூறிய சித்தோபாக்கியானத்தை, மாசிலாத் மனத்தால் = குற்றமற்ற சித்தத்தால், மதித்து = சிந்தித்து, மனத்தை மாய்ப்பாய் = சித்தத்தியாகஞ் செய்வதிற்றிர முடையவனுதி, தேசமுடையாய் என்று = எல்லாத் தேசங்கட்கும் இறையவனே என்பதாக, தெளிந்த வசிட்டன் உரைத்தான் = சத்துவ உற்கர்ஷம் நிறைந்த ஸ்ரீவசிட்டபகவான் கூறியருளினார்.

(ஸ்ரீ - வீர.) அதீதப் பிரகரணத் தடங்கிய, தாற்பரியங் கூறுவார் சங்கற்பமும் என் பதாதியாய்க் கூறினர். சங்கற்பங்களே வாதனைமூலத் தன்மையினாலே வாசனைகளாம், அவற்றின் ஜாலங்களாலே தம்மவற்றாலே தாமே பந்தமுறுவ ரென்பதாம். தங்கள் சங் கற்பத்தாலே சாலமோகிப்பர் தீயோர். கோசகாரக் கிருமியானது, வினாவிரு கூதி யினிதுலக்கினங் கொண்டு தனது இருப்பிடமாகக் கோசங்குயிற்றி வெளிப்போந்து வரும்வாயிலையும் அடைப்பதாய லீலாமய பந்தத்தால் கட்டுப்பட் டுழல்வதேபோலு மென்றுணர்க. சகத்திர நேத்திர அத்தமுடைமை யாது புருடனுக்கு இனிது வருணித் தாமோ அது சித்தத்திற்கு அநந்த ஆகிருதித் தகைமை தெரிவித்த தாமென்பார் அங்க மென்றார். தன்பாற்றாடனுதி சமூகங்களாலே தானே அடித்துக்கொண்டான் புருடன் என்றது மனமானது கெட்டகற்பனைக் கூட்டங்களாலே தானேதன்னை யடித்தவதிப் பட்டதாம் தானே தன்னையடித்துக் கொண்டு புருடன் ஓடித்திரிகின்றான் என்றதோ,, தன் வாசனை யடிதடிகளினாலே மருண்டு மனமுருண்டு திரிந்ததாம், சங்கற்பவாசனைச் சாலங்களினாலே சுயம்பந்தனம் வந்து சேரும், மனமானது, தன்வாயினின்றும் ஒழுகு தல் வடிவமாய விகாரவலை மயஜாலங்களால், கௌசேய உற்பத்தி பூமியின்கட் பிர சித்தமாய கோசகாரக் கிருமிபோலும் தன்புறும். இங்ஙனம் இச்சித்த உத்தம உபாக் யானமானது ஹே இராகவா ! உனக் குபதேசிக்கப் பெற்றதெம்மால், சித்தத்தினாலேயே இதனைச் சிந்தித்துப் பார்த்துச் சித்தத்தியாகத்திற் றிரத்தை யடைந்திடுவாய். கௌ சேயம் = பட்டு.

(ச.) அங்கத்தறைந்து கொண்டது = தன்னைத்தானே யடித்துக் கொண்டான் என்றது அடர் கற்பனைகளாலே = மனத்தின் கற்பனை சமூகங்களினால், மங்கத்தகு வாதனையால்மனதுவாசனை ஜாலங்களினால், மருண்டு சுழல்வதாகும். அதனையே தெரி வித்தல்:—சங்கற்பமும் வாதனையும் = தனது சங்கற்ப வாசனைஜாலங்களே, தளைக் கும் = பந்தப்படுத்தும்.

அதனையே தெரிவித்தல்:—கோச + யாரும் = யாதொன்றின் கோசத்தினின்றும் உற்பவித்த தந்துக்களாற் பீதாம்பராதி வஸ்திரங்கள் செய்யப் படுகின்றனவோ அது கோசகாரகிருமி யெனப்படும், அது எப்படித் தன்னுடலின் கண்ணே முகவாயிலாக ஊறிவெளிப்படுஞ் சலரூபங்களாகிய தந்துக்களாற்றானே கோசஞ்செய்து, தன்னைப் பந்திக்கிறதோ அதுபோன்று மனமுந்தனது சங்கற்பவாசனை , சாலங்களாற்றானே தன் னைப் பந்திக்கும் என்பதுபொருள். இவ்விடத்திற் புருடனுக்கு யாதொரு அளவற்றகை கண்கள் முற்கூறப்பட்டதோ அதுமனதுக்கு அநந்தவிதமான கருமஞானேந்திரிய சத்தி

பாலன் கதை

புண்டெனச் சூரிப்பிக்கு நிமித்த மென்பதாதி ஊகிக்கவேண்டும். மனத்தால் மதித்து = சித்தத்தாற்றானே சிந்தித்து, மனத்தை மாய்ப்பாய் = சித்தத்தியாகியாய்த் திரமூ முறுவாய்.

ஆகிருஷ்டிதம். (411)

மனத்தின் கதை முற்றிற்று.

பாலன் கதை.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கடந்த சருக்கக்கடையில் மனம் கோசகாரக் கிருமியைப் போலப்பந்த முறுகின்றது எனத் திருஷ்டாந்தங் கொண்டமையினும், மனதைத் தியாகிக்க வேண்டுமென்று கூறப்படுதலினும், அசத்தைத் தியாகஞ்செய்த லஞ்ஞு காமையானே, அதற் குண்மையமையும், அது சத்தியமாகவே, அதன் விசாரமாய வுல கிற்கும் சத்தியத் தன்மையாம், எனத்துணைத் தியாவற்றிற்குமே சத்தியத்தன்மையை யாசங்கித்து, அதற்குப்பாலக ஆக்யானச் சலத்தாற் றுச்சத்துவம் பிரதிபாதிக்கும் பொ ருட்டுத் தொடங்குகின்றார்:—முழுது என.

(ச.) முற்கதையிற் சித்தசொரூப நிரூபிக்கப்பட்டது, இப்போது பிரபஞ்சமித்தியா ரூபமாயினும் மனச்சங்கற்ப மாத்திரத்தால் விசாரமற்ற மதியினோர்க்குப் பாரமார்த்திக புத்தி அதிதிடப் படுவதெனப் பாலகண்கதை நிதரிசனத்தாற் சாதிக்கப் படுகின்றது அதில் இப்போது பிரமமே விவேகிகளுடைய மனமெனல்:—

முழுதுசத்தியுமாய்ப் புராணமாயென்று முடிவறு பிரமமாவதுதான்
பழுதின்ஞானிகடம் மனமலாதில்லைப் பரமமாமிதி லிலாதில்லை
யெழுதருஞ் சத்தியாவுமா யிலங்குமிவைக ளோர்கால மொன்றுளதாம்
வழுவிலாப் பிரமமுடைய சிற்சத்திமறிதரு முடல்களிற் றோன்றும். (1)

(ப - பை.) முழுது சத்தியுமாய்ப் புராணமாய் = சர்வசக்தி யுடையதாய் ஆபூர்ண மாய், என்று முடிவறு = நித்தியமா யவ்வியயமாய், பிரமமாவதுதான் = இலங்கும் பிர ஹ்மசொரூப மாவதுவே, பழுதில் ஞானிகள் தம்மனம் = தடையறவுணர்ந்த பிரபுத்தர்க ளின்மனம், அலாதில்லை = அது பிரஹ்மமே யாமலது அயலென்றுகாதாம், பரமமாம் இதில் இலாதில்லை = உயர்ந்ததாகிய இதன் கண்ணிலாததது இல்லை, எழுதருஞ்சத்தி யாவுமாயிலங்கும் = கணக்கில்லாத சக்திகளுடன் கூடியபடி எல்லாமாகி விளங்கும், இவைகள் = இச்சக்திகளுள், ஓர்காலம் ஒன்றுளதாம் = ஒவ்வொருபோதில் ஒவ்வோ ரிடத்தில் ஒவ்வொருசக்தி யுல்லாசமுறும், வழுவிலாப்பிரமம் உடையசிற்சக்தி = கெடாத பிரஹ்ம சம்பந்தியாய சிற்சக்தியானது, மறிதருமுடல் களிற்றோன்றும் = தன்புரு ரின்ற சரீரங்களிற் புலப்படும்.

(ஸ்ரீ - வீர.) பிரபுத்தர்களாகிய பிரஹ்ம வித்துக்களின் இவ்வுலகாகாரமாக விரிந்த மனமானது பிரஹ்மமேயாம், அதனினும் அன்னியமாகவேணும் அனன்னியமாகவேணும் இன்றும், மற்றென்னெனின் துச்சமேயாம் என்பதுபொருள், மனம் பிரஹ்மமெனப் பாதத்திற் சாமாஞாதி காரண்யம், இவையாவும் அத்தியந்தம் இல்லவேயில்லையாம் மஞாதி கட்குப் பிரஹ்மமாய் மாத்திரமாகி யிருக்குந்தன்மை யாங்ஙனமெனச் சங்கித்து அதன் காரணத்தன்மை யுண்மையின் அதற்கு அம்மாத்திரத் தன்மை பொருத்தமா மென்பார் முழுதுசக்தியுமா யென்றார். எல்லாமஞாதி காரியத்தில் மாயையெனப் பெயரிய சக்தி

யெதற்கோ அது சர்வசக்தி யுடையதாம், சருவசக்திகள் சருவகாரிய விடயங்கள் எதன் கண்ணே அது வெனினுமாம். அவ்வியயம் = அப்ரக்ஷய மற்றதாம் விசித்திரபதார்த்தங் களின் மத்தியிற் சில அப்ரஹ்மகாரியமா யிருத்தலும் சம்பவித்தலின் யாங்ஙனம் யாவற் றிற்கும் பிரஹ்மமாய் மாத்திரமாகியிருக்கும் பெற்றிகூடு மெனக்கடாவ விடைதருவார், பரமமாம் இதிலிலாதில்லை யென்றார். விஸ்தாரவடிவமாய அவ்வதிஷ்டான வத்துவில் எக்காரியமுளதாவதில்லை அஃதில்லை, சர்வசக்தி பரப்பிரஹ்மம் என்பதன்கண் எவ் வெல்லாசக்திகள் பிரஹ்மத்தின்கண் நிரூபணவாகக் கூறப்பெற்றனவோ அவை அக் காரியங்களில் அஸ்பஷ்டமாக அவிர்கின்றன என்பார் ஓர் காலமென்றார். இப்பரமாத்மா தன்னையாகியயித் திருக்கும் சர்வசக்திகளின் மத்தியில் எச்சக்தியோடு கூடிவிவர்த்த மாகின்றதோ அதுவாய்த் தோற்று மென்பதாம். மலேதீனமேயாம் பந்தமோக்ஷ கற் பனையென யாதோதப் பெற்றதோ அதன் கண்ணுக்தியாதெனின் ? பிரஹ்மமாகிய பரமபதத்தினின்றும் சித்தமாகிய இஃதுண்டாயது, அப்பிரஹ்மபூத அஞ்ஞான விகார மும், தூயபிரஹ்ம விவர்த்தமுமாமிது, தரங்கம் தண்ணீர் விகாரமும் அதன்சத்தை விவர் த்தமும் ஆதலேபோலும். ஈண்டித்தத்துவஞானி யனுபவங்கொண்டு நோக்கின் தெளிந் தணர்ந்தவரது மனமானது பிரஹ்மமேயாம் இதரமாகாதாம், ஜலசத்தாபுத்தி யுடைய வர்கட்கு அப்தியினின்றும் அலையல் அல்லவே, சர்வஜகத் காரணத்தன்மையும் அறி யப்பெறுத பிரஹ்மத்திற்கேயாம், அறியப்பெற்றதற் கின்றுமென்னுங் கருத்தாற் சர்வ சக்தி சரீரித்தகைமை அதற்கே கூறுவார் முழுதுசத்தியு மாயென்றார். நித்தியமாயும் என்றும் நிறைந்ததாயும் நாசமற்றதாயும் இலங்கும் பிரஹ்மம் சகல சக்திகளையும் உடைத் தாகி மேலுக்குமேலாய் விளிரும் அவ்விஸ்தாரமாய சொரூபத்தையுடைய சத்தையில் யாது இலதோ அது இலதாம்; அதனினும் அயலொன்றுளதாகாதாம் சர்வசக்திகளையு முடையவராதலின் ஸ்ரீ பகவான் எதைக்கொண்டு யாதையியற்ற விரும்புகின்றாரோ அச் சர்வகர் அதேவித்தார சக்தியைக் காரியவடிவமாகப் பிரகடனமாக்குகின்றார் பிரஹ்மத் தினுடைய சித்சக்தியானது சதுர்வித பூதக்கிராம சரீரங்களில் இனிது காணப்பெறு கின்றது.

(ச.) ஸ்ரீ வசிட்டர்: பிரமம் பழுதின் ஞானிகடம் மனம் = இராமா! பிரமமே ஆன்ம ஞானிகளது மனமாம், அலாதில்லை — இது வேறேயன்று, சர்வசக்தியும், நித்தியமும், பரிபூரணமும், அத்துவயமும் ஆகியவென்பது, பிரமமேமனம் என்பதில் ஹேதுகர்ப்ப விசேடணமாம், பரமமா மிதிலிலாதில்லை, சர்வசக்தியை யுடையதாதலின், மனமுதலிய விசுவம் பிரமத்தின் கண்ணே இருக்கின்ற தென்றதாயிற்று, எழுதருஞ்சத்தி யாவுமா யிலங்கும் = இப்பரமாத்மா சர்வசத்தியாலுஞ் சகலமுமாம், இவைகளோர் காலமொன் றுளதாம் = இச்சக்திகளில் ஓர்காலத்து ஓர் சக்தியுல்லாசமாம், அதிப்பிரகாசமாமென்ற தாயிற்று, அதில் திரவியபேதத்தாற் சத்திபேதமாமெனல் பிரமத்தினதுசித்சக்தி சரீரங் களிற் காணப்படும்,

(ஸ்ரீ - வீர - அ - கை.) அச்சக்திகள் எங்கெங்கு புலப்படுகின்றன வெனக் கூறு கின்றார்:—காற்றிலென.

காற்றிலேயசைவுங் கல்லிலேதிட முங்கனலிலே சூடும்வான்றனிலே
தோற்றலாமையு நன்னீரிலே நெகிழ்வுந் தொலைவுறுமாய் விலேமாய்வு
மூற்றமாம்மிதையின் மரங்களும் போலவுள்ளுறை பிரமசத்திகடா
மாற்றல்சால் காலதேசசித் திரத்தாலவனியிற் சாலிபோற்றோன்றும், (2)

(ப - ரை.) காற்றிலே யசைவும் = வாயுவின்கண் ஸ்பந்தசக்தியும், கல்லிலேதிட மும் = பாஷாணத்திலே தார்ட்ய சக்தியும், கனலிலேரூபம் = அநலத்திற் ரூபசக்தியும், வான்றனிலே = ஆகாயத்திலே, தோற்றலாமையும் = சூனிய சக்தியும், நன்னீரிலே நெகிழ்வும் = அம்புவின் மாட்டுத்திரவ சக்தியும், தொலைவுறுமாய்விலேமாய்வும் = கெடும் படியான விஷசப் பொருள்களில் நாசசக்தியும், ஆகிய, உள்ளுறை பிரமசக்திகள்தாம் = அந்தர்ஸ்திதிபெற்ற சித்சக்தியே முதலிய சகல சக்திகளும், விதையின் மரங்களும் போல = பீஜத்தில் அநேக அவயவதருக்களும், முட்டைக்குண்ணீரில் விசித்திரம யூரங்களும் இருப்பனபோல, ஊற்றமாம் = பதிந்து கிடக்கும், ஆற்றல்சால் காலதேச சித்திரத்தால் அவனியிற் சாலிபோற் ரோன்றும் = சக்திகள்போதிய தூற்றவழி ஒவ் வொருகாலத்தில் சிற்சிலபால் தேசகால சாமக்கிரிகளின் வைசித்திரியத்தால் பூமியின் மாட்டு நெற்கூப் போன்று தோன்றும்,

(ஸ்ரீ - வீர.) பாஷாணம் = உபலம், சூனியசக்தி = அமூர்த்த நிட்பாதனசக்தி, சர்வதுவைதஜாதமும் பிரளயகாலத்தில் வெளிப்படா காமரூபமதாகப் பிரஹ்மத்தின் மாட்டே நிகழும், உற்பத்திகால மூற்றபோது, முட்டைக்குண்ணீரி னின்றும் மயூரம் போல அம்மாயாவியி னிடத்தினின்றே முறையே வெளிப்படும். ஆண்டும், திருஷ்டிக்கே சிருஷ்டித் தன்மையுண்மையின் மன ஆதிமுறையானே விரியும், அம்மனஞ்சுதுவைதமும் அவிசாரதசையில் பாலகனேச் சீராட்டும் பொருட்டுப் புகன்ற கன்கலாக் கதையருத்த மொப்ப உண்மைபோல் ஒளிர்வதாயினும் தத்துவ நிரூபணமாங்கால் துச்சமேயாம் என் னும் இப்பொருள் யாவற்றையு மியம்புவார் விதையில் மரங்கள் என்ரூர். விருக்ஷம் = பலபத்ரலதா புஷ்பசாகாவிடப மூலவான், லதை = கோமளசாகை; ஈண்டு விடபசப் தத்தானே கூறியதுகூற லென்னும் குற்றம் வராதிருக்கும் பொருட்டு விருக்ஷஸ்கந்தம் கவரப்பெறும்; தோன்றும் = அந்தப் பிரஹ்மத்தினின்றும் காரியரூபமாகப் பிரகாசிக் கும். வாதங்களில் ஸ்பந்தசக்தியும், உபலத்திற் சடசக்தியும், நீரிற்றிரவசக்தியும், அந லத்திற் றேஜஸாற்றலும், ஆகாயத்திற் சூனியசக்தியும் = மறைப்பதாந்தன்மையின்மை யினூனே யாவற்றிற்குந் தடையின்றி யிடங்கொடுக்குந் தன்மையாற்றலும், சமுசாரஸ் திதியில் விவகாரயோக்யதை வடிவப் பாவசக்தியும், விநாசங்களில் நாசசக்தியாகிய காரணத்திலடங்குஞ் சக்தியும், சோகிகள்பால் எல்லாச் சோகமுந்தரும் தேகஜனன சக் தியும் சோகசக்தியும் இருக்கும். பிரஹ்மத்தின் சர்வசக்தியானது தசதிசையினும் விரிந்ததாகிக் காணப்படும் முட்டையுண்ணீரின் முழுமையிலுறல்போல் இவையாவுமே ஆன்மாவின் கண்ணுளவாம். பலம் புஷ்பம் கொடியிலை சாகைவிடபம் மூலம் என்பவற் றையுடைய விருக்ஷம்=தருவிரையிற்றங்கியிருப்பதேபோல இச்சம்சாரம் யாவும் பிரஹ் மத்தின் கண்ணே யிருக்கின்றன. எல்லாஜீவ எண்ணங்களும் பிரஹமசக்திகளாமாயின் யாவும் எல்லாவுயிர்க ளிடத்தும் கலந்துறுதலென்னே யெனின்? சர்வ இருதுபுஷ்ப சக்திகளாலும் வியாபிக்கப் பெற்றிருந்தபோதினும் பூமி, அவ்வத்தேசங்களில் பீஜசம்ஸ் காராதி விதிபேதத்தினூனே விவத்தைகொண்டே கலப்பின்றிப் புஷ்பாதிகளைக்கொடுப் பதேபோல உலக முண்டாக்கும் பிரஹ்மமும் சித்தசக்தி விவத்தை கொண்டே கொடுக் கும்; ஆகலின் சிற்சிலபால் ஒவ்வொருகால் ஆற்றல்கள் விவஸ்தை செய்யப்பெற்ற பயன் வடிவங்களாய் உதித்துலாவுகின்றன; தேசகாலாதி வைசித்திரியத்தானே பூதலத்தி னின்றும் நெற்பயிர் ஆற்றல்கள் உண்டாவன கண்டாமன்ரே. (எதிர்மறை பகுக்கும்) எண்ணிக்கை யுருவாதி பேதரூபஉலகவைசித்திரியமிதனை யங்கீகரித்தே இக்கலப்பி

லாமை காட்டப்பட்டது, உண்மையாயோ அதன்றோற்ற மாத்திரத்திற்குக் காரணத் தகைமை கூடாமையானும், தோற்றுந் தனிப்படுத்திய காரகம் வேறு சித்தியாமையா னும், தோற்றுமாத்திரம் ஒரு சிறிதும் உண்டாகவுமில்லை, ஒருவரானும் ஒன்றுமே பார்க் கப்படவுமில்லை, எனமனச் சத்தகற்பித பிரஹ்ம ஜங்களானவை பிரஹ்மமேயாம் என் றறிதல் வேண்டும்.

(ச.) காற்றிலேயசைவும் = வாயுக்களிற் சலனசக்தியும், கல்லிலே திடமும் =சிலை யிலே தார்ட்டிய சக்தியும், சூடும் = தாகசக்தியும், தோற்றலாமையும் =சூன்யசக்தியும், கெகிழ்வும் = திரவசக்தியும், மாய்வுலே மாய்வும் = காசவத்துவில் = காசசக்தியும், தோன்றுமென முற்கவி யந்தத்தோடு முடிக்குக. ஒருவத்துவில் எப்படி இந்தச் சக்தி பேதமாமெனச் சங்கித்துத் திர்ஷ்டாந்தத் துவயத்தாற் றெளிவித்தல்; ஊற்றமாம் விதை யின் மரங்களும்போல் = முட்டையினுட் சலத்தில் பெருத்தவிசித்திர இறகுடலுடைய மயிலும், வடாதீபீஜத்திற் பலபுட்பலதை பத்திரசாகை விடபமூலமாகிய இவைகளை யுடைய விசித்திரமான வடாதி விருக்ஷமும் எப்படிச் சூக்ஷுமருபமாக விருக்கிறதோ அப்படியே ஆன்மருபமாகிய பிரமத்திற் சகத்திருக்கின்ற தென்பது பொருள். மரங் களும் என்றவும்மையால், முட்டைக்குள் மயில் வருவிக்கப்பட்டது, காலதேச சித்திரத் தால், தேசகால விசித்திரத்தினுல், தோன்றும் = சிலவிடத்திற் சிலசத்தி சிலகால முதிக்கும், பூதலத்திற் றேசகால பேதத்தால் விசித்திர சாலிபோற் பிரமத்தினின்றும் விசித்திர சத்திகள் உற்பவிக்கும் என்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பரம்பொருளின் விசாலத்தையும் மஞ்மையக்க வல்லமை யையும் கூறி அதன்பொருட்டுப் பாலன்கதை தொடங்கல்:—பரமமென.

பரமமே யெங்குமென்று முண்டாகும் பயின்மனனத்தினுன் மனமாந்
தரமறுபந்த முத்திபேருலகாஞ் சத்திகளனைத்து மாய்நிற்குந்
திரமறு தனையர்க் கன்னைசொற் கதைபோற் செப்பிய வினைவியலாந்திரமாந்
கரமலர் முகிலேயென்றலு மந்தக்கதையினை யிராகவன் வினவ. (3)

(ப - ரை.) பரமமே எங்கும் என்றும் உண்டாகும் = ஆன்மாவே எவ்விடத்திலும் எப்போதும் இருப்பதாகும், பயின்மனனத்தினுன் மனமாம் = மனனஞ் செய்தல் கொண்டு மனனசக்தியுறுதலின் மனமாம், தரம் அறுபந்த முத்திபேருலகாம் = மேன் மையின்றிய பந்தம் மோக்ஷம் விஸ்தாரப் பிரபஞ்சம் ஆகிய, அனைத்துமாய்ச் சத்திகள் நிற்கும் = யாவுமாய்ச் சக்திகள் பிரதிட்டை யுற்றிருக்கும், திரமறு தனையர்க்கு = திட மதியில்லாத குழந்தைகட்கு, அன்னைசொற் கதைபோல் = தாய் வார்த்தையாற் கட்டிச் சொல்லுங் கதையொப்ப, செப்பிய இவையெலாம் திரமாம் = கூறிய இவையாவும் திட மாம், கரமலர் முகிலே = ஹே செந்தாமரைத் திருக்கரம் திகழும் அப்பிரமொப்பாய இராகவ ! என்றலும் = என்று ஸ்ரீ வசிட்டபகவான் கூறுதலும், அந்தக்கதையினை இராகவன் வினவ = அவ்வாக்கியாயிகையை ஸ்ரீ இராகவர் எவ்வண்ணமென்று கேட்ப.

(ஸ்ரீ - வீர.) பூர்ண ஆத்மாவானது எப்போதும் சுயமாகவே யிலங்கிக்கொண் டிருக்கு மென்பதாம். யாது எக்காற் சிறிது மனனவதியாகிய சக்தியைத் தரிக்குமோ, அதாவது விவர்த்தமான மனனத்தாற் சக்தி யவச்சின்னமதாமோ, அது அக்கான்மன மெனச் செப்பப்பெறும். முதலின் மனமெனக் சமஷ்டிரூபம் விளம்பும் வேட்கையாம், அதன்பின் பந்தமுக்திஞானங்கள் உண்டாம், அவையுளவாகா வழிபோக அபவர்க்கப் பொருட்டுச் சிருஷ்டியசம்பவ வழக்காதலின்; " போக அபவர்க்கார்த்தம் சிருட்டி மதி

உற்பத்திப் பிரகரணம்

பாலன் கதை

யிந்திரியம் மனம் பிராணன்களை, விதிவிபு ஜனங்கட்கு விதித்தனனன்றே, மாத்திரப் பொருட்டும் பவித்தினற் பொருட்டும், ஆத்துமாவின் அகற்பனப் பொருட்டும்" எனஸ்ம ரிக்கவும் பெறுகின்றது. அனேத்தும் என்றதனுனே சித்தாதிகளையுங் கொள்ளலாம், நல் லழகிய பாலஜனப் பொருட்டு திதமாய ஆக்யாயிகைபோலக் கூறிய வண்ணமாய துவை தஸ்திதி சலனமின்றிய அவஸ்திதியை யடைந்துளதாம், அதாவது அவிசாரகாரணத் தானே திடசத்தியபுத்தி விஷயத்தன்மையை யடைந்துளதாம். இவ்வுலக மியாவும் பிர ஹ்மமே யாமெனவும், யானெனத் தோன்றுகின்ற ஜீவதத்வமாகிய பிரத்தியக்குச் சித்து ருவும் பிரஹ்மமே யெனவும் காணுதி; அவ்வான்மா சர்வகமாம் நித்யப் பிரகாசப் பேரா கிருதியதாம். பிரஹ்மமே அவ்வச் சக்திவாயிலாக மயலான் மன ஆதிசப்தங்களான் மல ரப்பெறும் அயலல்லவா மென்பார் மனமாம் என்றார். யாதுசிறிது மனனசக்தியை மரு வியதாமோ அது மனமெனப்படும். கூறிய பொருளின் பாலகாக்யாயிகையைக்கூறி யுபசங்கரித்தல்:—தாமெனலாதி. ஆதியின்மனம், அதன்பின் பந்தவிமோக்ஷ திருஷ்டி, பின்னர்ப் பிரபஞ்சசனை, உட்பட்ட புவனப் பெயரிய உள்ளடங்கியவை, என்பன வாதியாய இந்தப் பந்தத்திதியானது, குழந்தைகள் பொருட்டுத் தாத்திரியாற் கூறப் பெற்ற இனியியம்பப் படுங்கதைபோலத் திடமூலத்தன்மையை யடைந்துளது, சங்கற்ப விகற்பான்மகமான மனத்திற்குச் சங்கற்பம் மூலம், அதன் நிரோதமாகிய வழிமூலங் கெடலான் விகற்பங் கிளம்பாமையின் நிர்விகற்ப பதபிரதிட்டைச் சித்தியெனக் குறிப் பித்தற்பொருட்டு முன்னவ்தாரித்த பலகோக்யா யிகையைச் சிரவணிக்க விரும்பிய ஸ்ரீ இராகவர்வினுதல்:—அந்தக்கதை: ஹே முனிவருட் சிறந்த முனீசரரே! பாலக ஆக் கியாயிகை யிலக்கணக் கிரமமென்னுந் திருட்டாந்தம் என்னவகையில் லோகத்திலுரைப் பர் இதனை முறையாகக் கூறியருளல் வேண்டும்.

(ச.) பரமமே = அவ்வான்மாவே, என்றும் = நித்தியோதித மகாவடிவமாய், எங்கு மூண்டாகும் = சர்வகதமாம், பயின்மனனத்தினுன் மனமாம் = சர்வசத்திமானை ஆன்மா மனனைக் கற்பிப்பவராய் மனனசக்தியைப் பொருந்துங்கால் மனமெனப்படு மென்பது பொருள்; தரமறு பந்தமுத்தி = இங்ஙனம் மூன்புமனது பின்பு பந்தமோக்ஷ திருஷ்டியென்னும் ஜீவபரமான்ம விபாகமென்பது பொருள்; பேருலகாம் = மூன்பு புவ னாதி பிரபஞ்ச கற்பனையாம், செப்பிய இவையெலாந்திரமம் = சொல்லிய இச்சகஸ்திதி யாவும் பிரதிட்டையை யடையும்: நீலமாய்

(ஸ்ரீ-வீர - அ-கை.) கதையைத் தொடங்கல்:—சித்தவென.

சித்தவஞ்சனையின் மூலமாங்கதையைச் செல்வனுக் கருந்தவனுரைப்பான்
மெய்த்தகவிலாதோர் சிறுவனீயன்னை விரும்பியோர்கதை விளம்பென்னச்
சத்தியம்போல வெறும்பொய்யே யுரைப்பாடரணிபன் குமரோர்மூவர்
சுத்தவீரமுந்ற் குணங்களுஞ் சிறந்தோர் சூனியநகரிலே யுறைவோர். (4)

(ப - கை.) சித்த வஞ்சனையின் மூலமாம் கதையை = மனோவஞ்சனையின் காரண மாங் கதையினை, செல்வனுக் கருந்தவன் உரைப்பான் = ஸ்ரீ இராகவனுக்கு ஸ்ரீவசிஷ்ட பகவான் அருளுவார், மெய்த்தகவிலாதோர் சிறுவன் = மூடமதியையுடைய பாலகன் ஒருவன், அன்னேநீ = தாயேநீ, விரும்பியோர் கதை விளம்பென்ன = அன்புடன்விநோத மான ஒருகதை சொல்வாயாக வென்று தாத்திரியைக் கேட்ப, சத்தியம்போல வெறும் பொய்யே யுரைப்பாள் = உண்மைபோல அத்தியந்தம் மித்தையே கூறுவாள், தரணி பன்குமரர் ஓர் மூவர் = ஒப்பற்ற ; அரசமைந்தர் மூன்றுபேர், சுத்தவீரமும் நற்குணங்க

ளும் சிறந்தோர் = புண்ணியராய் சௌரியவீரியாதி யுடையராய், மூதிதை மூற்குணங்க ளாற் சிறப்புடையராய், விளங்குபவராய், சூனியகரியிலே யுறைவோர் = அத்தியந்த அசத்துப் பட்டணத்தி லமர்வோர்.

(ஸ்ரீ - வீர.) சித்தவஞ்சனையின் மூலம் = மனோவர்ணன காரணம் = விலாசத்தோடு கூடியமனம் துச்சமாயினும் விசாரமற்ற சித்தமூடையவர்கட்குச் சத்தியம் போலத் தோன்றுகின்றது என்னும் இவ்வகையாய மனோவர்ணனமாம் மனச்சொரூப போத னத்தின் காரணம். தாத்ரி = உபமாதா, அசமஞ்சச = சமத்வ சித்தியின் பொருட்டுப் பட் டணத்தைச் சிறப்பிப்பார் சூனியமென்றார். துச்சமென்பது பொருள். தக்கது தகாத தாம் விவேகமற்ற ஒரு பாலகன் தாத்திரியை நோக்கி, ஹே அன்னாய்! யாதாவதொரு விநோதமான கதையை எனக்குக் கூறுவாயாக வெனக்கேட்ப, அக்கைத்தாய் அக்குழந் தையின் விநோதப் பொருட்டித் தெளிந்த மதுராக்ஷரம் நிறைந்ததை கூறுவதாவது: பிரதான ராஜதானியாகிய அத்தியந்த அசத்துப்பட்டணத்தில் மகாத்மாக்களாய்ச் சுபர்க ளாய்த் தார்மிகர்களாய் சௌரியர்களாய் சந்தோஷ சித்தர்களாய், இனிய குணமுடை யவர்களாய், இலங்காநின்ற இராஜபுத்திரர் மூவர் இருக்கின்றனர்.

(ச.) ஓர் கதை = ஒரு விநோதமான கதையை, வீளம்பென்ன; அவள் அப்பாலக னுக்கு விநோத நிமித்தம், சூனியகரியிலே = அத்தியந்தம் அசத்தென்னும் பட்ட ணத்தில். (4

மூவரிலிருவர் பிறந்திலரொருவன் மூலமாங் கருவினுமில்லை
யாவதுகருதித் திரிபவர்விண்ணி லளவறு பழமரச்சோலை
மேவலுமதனிற் செழுங்கனி துய்த்துவெம்பசி தணிந்துமேற் சென்றார்
காவருகாகமூன்று நன்னதிகள் கரைபொரு திரையொடுங் கண்டார். (5

(ப - ரை.) மூவரில் = உரைத்த மூன்றுபேரில், இருவர் பிறந்திலர் = இரண்டுபேர் உற்பத்தியாயிலர், ஒருவன் = ஏகன்; மூலமாங் கருவினுமில்லை = காரணமாங் கருப்பத் தினும் உளதாகவேயில்லை, ஆவது கருதித்திரிபவர் = உத்தமலாபத்தை யுத்தேசித்து தெளிந்த அபிப்பிராயமுற்ற அம்மூவரும் தம் சூனியநகரை விட்டுச் செல்பவராய், விண்ணில் அளவறு பழமரச்சோலை மேவலும் = ஆகாயத்தில் அபரிமிதமான கனிவர்க் கங்களிறைந்த தண்டலையை யடைதலும், அதனிற் செழுங்கனி துய்த்து = அத்தோப் பில் இனிப்பாறி இனிப்பாறிச் சுவாதாய கனிகளையுண்டு, வெம்பசி தணிந்து = கடும் பசியினைச் சாந்தப்படுத்தி, மேற்சென்றார் = விலாசமாக இன்பமுற்றேகினர், காவரு காக மூன்றுநல் நதிகள் = அப்பூந்தோட்டத்தின் சமீபமாக மூன்று நல்லாறுகள், கரை பொரு திரையொடும் கண்டார் = கரைகளிற் போராடுந் தரங்கங்களுடன் பார்த்தார்.

(ஸ்ரீ - வீர.) மாலையாகாரமான கல்லோலங்களோடு கூடினவாம் அந்நதிகள். சந்தி ராம்சத் தன்மையானே ஜலமயமாய தாரகைகள் விண்ணி லிருப்பனபோல அநேக சூனிய சாகாநகரங்கள் வாய்ந்த அவ்வசத்துப் பட்டணத்தி லிருந்தார்கள். அரசகுமாரர் மூவரில் இரண்டுபேர் உண்டாகவேயில்லை அவ்வாறே ஒருவனேகருப்பத்திலேயே யுண் டாகவில்லை. ஒருகால் அம்மூவரும் தெய்வத்தாற் கழிந்த பந்திக்கை யுடையவராய், பஞ்சமுதலிய வற்றுனே கிலேசத்தோடு கூடிய மூகத்தினாய் சோகத்திலுலே கெடுக் கப்பட்ட சித்தமூடையவராய் தம் நகரசமாஜத்தாலாதல் பரஸ்பரம் ஏகமதியினுதால் ஒருங்கு சேர்ந்தவராய் உத்தமமான நகராந்தரத்தின் லாபப்பொருட்டு வெளிக்கிளம்பிப்

போயினர். கனகத்தினின்றும் சேர்ந்து சென்ற புதன் சுக்கிரன் இனியென்பவரைப் போல அச்சுனிய நகரத்தினின்றும் அம்மூவரும் வெளிப்போந்து விரிந்தவுல்லாச முகத் தினராய்ச் சென்றனர். மார்க்கத்தில் மிருகபக்ஷி கணநாரமான மஞ்சரி, ஜாலரைறைந்து பலபல்லவஞ் சூழ்ந்த தருத்திரயத்தை யடைந்தனர். கூறியதருக்கள் மூன்றனுள் இரு தருக்கள் உண்டாகவேயில்லை சிறிதும், சுகமாக ஏறக்கூடியதாய மூன்றுவதற்கோ விரை யே கிடையாதாம். இளைப்பை மிகவு மடைந்துள்ள அம்மூவரும் அம்மூன்றனுள் ஒருதரு வின் கீழ்நிழலில், சுவர்க்கத்தில் பாரிஜாத விருக்ஷநீழலில் இந்திரன் வாயுயமன் இம்மூவ ரும் இளைப்பாறியதேபோல இளைப்பாறி யிருந்தனர், அமிருத சமானமாய கனிகளை யருந்தி அவற்றின் இரசத்தைமாந்தி அங்குள்ள பூங்கொத்துகளானே மாலைசெய்து சூடி நீள்போது வீசிநீராந்தியுற்றுச் சென்றனர். மீள வெருதூரஞ் சென்றபின் மத்தியான கால மானது வந்துற்ற வேளையில், தரங்கசஞ்சலங்களானே அரவிப்பெற்ற நதிகள் மூன் றைக்கண் டாநந்தித்தனர்.

(ச.) ஆவது கருதி = அவர் உத்தமலாப நிமித்தம் ஒருகாலத்துச் சுபசிந்தையுடைய வராய், திரிபவர் தமது சூனியநகரத்தினின்றும் புறப்பட்டு, மேவலும் = கண்டுபொருந் தவும், பசிதணிந்து = இளைப்பாறி இளைப்பாறிச் சுகலிலாசத்தோடும்.

ஓடிநன்னதியி லிரண்டுநீரில்லை யொன்று வெண்மண லதாமிதனி
லாடிநீர்துளைந்து பருகினுரந்தியாகிமேல் வருநகரடைந்தரீர்
வீடுமூன்றெதிர்ந்தா ரதிலிரண்டில்லை மேன்மரஞ் சுவரிலாதொன்று
கூடியவவற்றிற் சுவரிலாவீட்டிற் குடிபுகுந்திருந்தனர் குமரர். (6(4)

ஒருவருங்காணு நகரிலே வெளிவீட்டு றைபவர் கனகபாத்திரமூன், றரு குறக்கண்டா ரதிலிரண்டோடா மறவிலுந்தூளியாமொன்று, சொருபமில் கடத் திற் றுரோணமூன்ற தனிற்றுரோண மூன்றகன்று மிக்கிருந்த, பருவரிசியைத் தாஞ்சமைத் துவாயில்லாப் பனவரெண்ணிலர்க்கு மூன்படைத்தார். (7(5)

(ப - ரை.) ஓடி நல்நதியில் = பிரவகித்துச் செல்லாநின்ற யாற்றனுள், இரண்டு = இருசரித்துக்கள், நீரில்லை = தண்ணீ ரேயிலதாம், ஒன்று வெண்மணலதாம் = ஏகமோ வெள்ளமணல் நிறைந்ததாம், இதனில் = மணனிறைந்த இதில், ஆடிநீர் துளைந்து பரு கினுர் = ஸ்நாநஞ்செய்து நீள்போது ஜலக்கிரீடை புரிந்து பாலொத்த நீரைமாந்தினுர், அந்தியாகி = பகன்மூடிவாகி, மேல்வரு நகரடைந்தார் = இனியுண்டாகப் போவதாய பவிஷ்யக்நகரத்தைச் சேர்ந்தார், வீடுமூன்றெதிர்ந்தார் = இரம்மியங்களாகிய மூப்புவ னங்களைக் கண்டனர், அதிலிரண்டில்லை = அம்மூன்றினுள் இரண்டுண்டாகவே யில்லை, ஒன்று = மற்றொன்றே, மேன்மரஞ் சுவரிலாது = நிஸ்தம்ப நிர்ப்பித்தியதாகி யிருக் கிறது, கூடிய அவற்றில் = அடைந்த அம்மூன்றில், சுவரிலாவீட்டில் = நிர்ப்பித்தி பவ னத்தில், குடிபுகுந்திருந்தனர் குமரர் = அம்மூன்று அரையகுமாரரும் நிரகப்பிரவேசஞ் செய்து வாழ்ந்தனர். (8(6)

ஒருவருங் காணுநகரிலே = எவரும்பாராத பட்டணத்திலே, வெளிவீட்டுறைபவர் = வெட்ட வெளியாய இல்லத்திருப்பவர், கனகபாத்திர மூன்று = காஞ்சனபாத்திரம் மூன்று, அருகுறக்கண்டார் = சமீபத்தி லிருக்கப்பார்த்தனர், அதில் இரண்டோடாம் = அம்மூன்றனுள் இரண்டு கபாலமாம், ஒன்று அறவிலும் தூளியாம் = அத்தியந்தம் பொடி யாம் மற்றொன்று, சொருபமில் கடத்தில் = வடிவமற்ற பானையில், துரோணமூன்ற

தனில் துரோணமூன்றகன்று மிக்கிருந்த = மூன்று துரோணத்தில் மூன்றுதுரோணங் கழிப்பச் சேடித்திருந்த, ஒன்றுமில்லாத, பரு அரிசியைத்தாம் = பருத்து நீண்டுமிகுத்த அரிசியை அக்குமாரர், சமைத்து = பக்குவப்படுத்தி, வாயில்லாப் பனவர் = வயிறும் வாயுமில்லாத வைதிகமறையவர், எண்ணிலர்க்கு = அளவில்லாதவர்கட்கு, முன்படைத்தார் = முன்னர் விருந்து செய்தனர்.

(ஸ்ரீ - வீர.) அம்மூன்று நதிகளுள் ஒன்று அத்தியந்தம் காய்ந்ததேயாம். மற்றிரண்டன்பாலும் ஒருதுளிநீரும் கிடையாதாம், நதியினீர்க் காட்சியானது அந்த லோசனங்களாற் சம்பவியாததேபோல அத்தியந்தம் அசத்தாயிருந்தது, அந்தனது கோளகத்திலிந்திரிய மில்லாததேபோல் அந்நதியில் அறல் அத்தியந்தம் இல்லாதிருந்தது. வெண்மணலாய் வறண்டு கிடந்த அந்நதியில் அம்மூவரும், வெம்பிய ஜனங்கள் ஸ்ரீ கங்கையில் வீழ்ந்து குளிப்பதேபோலும் ஸ்ரீபிரஹ்ம விஷ்ணு ஹரர்கள், ஸ்ரீகங்கையின்கண் மூழ்கிச் சுகிப்பதே போலும் ஆதரவுடன் குளித்துச் சுகித்தனர். சிரகாலம் ஜலக்கிரீடைசெய்து, க்ஷீரோபம நீரைப்பருகி அவ்வரைய குமாரர்சுயம் மகிழ்ந்த மனத்தராய்த் தாங்கள் வாஞ்சித்த நகரத்தையடையும் பொருட்டுச் சென்றனர். பின்திஞ்சுத்தில் திவாகரன் அத்தமிக்கும்போது இனிமேற் புதிதாகப் பண்ணப்படுவனவாய்க் குன்றுகளோடு கூடிக்குன்றங்கள் போன்ற மாளிகைகளோடு கூடிய மூன்றுநகரங்களை யடைந்தனர். அவைமேலே பதாகைகளாலும் கீழேப்பத்மினிகளாலும் வியாபிக்கப் பெற்றிருந்தன; நீலாகாசங்கள் போலும் சுந்தரங்களாயும் சூனியங்களாயும் விளங்கும் ஜலாசயங்கள் அங்கு நிறைந்திருந்தன. தூரத்திலேயே கேட்கும்படியான பரஸ்பரம் உரக்கப்பேசுஞ் சப்தங்களும், சுரமூர்ச்சனை முதலிய இராகத் தொனிகளும் அங்கு நிறைந்திருந்தன; அந்நகரத்துள்ளவர்கள் ஆடியும் பாடியும் அருமகிழ்வுற் றிருந்தனர்கள். ஆண்டு அதிரம்மியமாய அழகிய மாளிகைகள் மூன்றிருக்கக்கண்டனர், மகாகிரியின் சிருங்கங்கள்போல அவைகள் இரத்தினங்கள் பதித்த மாதங்கச் சுவர்களோடு கூடிவிளங்கின. அம்மூன்றினுள் ஒன்று சுவரிலாததேயாம், மற்றிரண்டு மனைகளோ இன்னும் நிர்மிதமே யாகவில்லை அம்மூவரும் அந்த மூன்றினுட் சுவரிலாமனையில் மிகவும் மகிழ்வுடன்புகுந்து இளைப்பாறினர். எழுந்து புகுந்து அற்புதங்களைக் கண்டு கண்டி அங்கு மிங்குமாக அம்மனையுள்ளே சுற்றிச் சுற்றிப் பார்த்தனர், ஆண்டு, அழகிய வதனம் வாய்ந்த அவ்வந்திமைந்தர் மூவரும் தப்தமாய தங்கத்தா லாக்கப்பட்ட பாத்திரமூன்றை யடைந்தனர், அம்மூன்றினுள் இரண்டு ஓடாயிருந்தன, ஒன்று சூரணமயமாயிருந்தது, அந்நீண் மதிமிக்கோர் அச்சூர்ணமுபமாய பாத்திரத்தை யோக்கியமெனக் கைக்கொண்டனர், அப்பாத்திரத்தில் அநேகருக்கன்னமிடும் பொருட்டு ஒன்று குறைந்த நூறில்லாத தொண்ணூற் றொன்பது துரோண அரிசியையிட்டுச் சமைத்தனர், போஜனஞ்செய்ய மூன்று பிராஹ்மணர்களை அவ்வரைய குமாரர் அழைத்துவந்தனர், அம்மறையவர் மூவரில் இருவர் தேகமேயில்லாதவர், ஒருவன் முகமேயற்றவன், வாயில்லா மறையவன் நூறுதுரோண அரிசிகொண்டு சமைத்த அன்னம் முழுதையுமே உண்டனன் இதிற் பாடபேத முண்டென்றறிக. எட்டாடகக் துரோண மெனப்படும், பலம் பிரகுஞ்சகம் முஷ்டிகுடவம் அதன் சதுட்டயம், நான்கு குடவங்கள் பிரஸ்தமாம் நான்குபிரஸ்தம் ஆடகம் எட்டாடகம் துரோணமாம், இருது ரோணம் சூர்ப்பமெனப்படும், சிலதேசத்தில் நான்காடகம் துரோணமெனவும், 32சேரது வெனவும் வழக்கம். அரசகுமாரால் எம்முத் துரோணம் சமைக்கப்பட்டதோ அதிமுத் துரோண மற்றதாம் என்பது பாடபேதம்.

(ச.) நதி மூன்றில் நீரில்லை = எவ்வளவுஞ் சலமின்றும், ஆடிநீர்துளைந்து = வெகு காலஞ் சலக்கிரீடைசெய்து பருகினர்=க்ஷீரதோர் நீரைப்பானஞ்செய்தவராய், குமாரர்= இராஜபுத்திரர் மூவரும், பனவர் = பிராமணர்.

(ஸ்ரீ - வீர - அ - கை) தொடங்கியதை யுபசங்கரித்தல்:—அவரென.

அவரெலா நிரம்பவுண்டபின் மிருந்ததருந்தினர் வேட்டைகளாடி
யிவர்கண் மூவருமங் கிருந்தனரென்ன விளமையா னம்பினன்சிறுவன்
புவனமுமிவ் வாறறிவிலோர் காண்பர் புகன்மனவிரிவு சங்கற்பம்
விவரமாமிதனு லுலகமாமிதனே விடுநிருவிகற்ப மாயிடுமீ. (3)

(ப - ரை.) அவரெலாம் = முகமற்ற பகுபோஜிகளாகிய பிராஹ்மணர் யாவரும், நிரம்ப உண்டபின் = பூர்ணமாக அருந்தியபின்னர், மிருந்த தருந்தினர்=சேடித்ததை யுண்டனர், வேட்டைகளாடி = வேட்டைக் குதூகலத்துடன் விநோதித்து, இவர்கண் மூவருமங்கிருந்தனர் = இவ்வரைய குமாரர் மூன்றுபேரும் அப்பவிஷ்யத் ஸகாத்தில் வாழ்ந்திருந்தனர், என்ன = என்று தாத்திரிகூற, இளமையால் நம்பினன் சிறுவன் = விசாரமில்லாத மதியினுல் அப்பாலன் நிச்சயமாகவே விசுவசித்தனன், புவனமும் இவ் வாறு அறிவிலோர் காண்பர் = இச்சமுசார ரசனையையும் இங்ஙனமே விசாரமில்லாத சித்தமுடையவர் பார்ப்பர், புகன் மனவிரிவு சங்கற்பம் = சொல்லாநின்ற மனோவிலாசமே சங்கற்பஜாலமாம், விவரமாமிதனு லுலகமா மிதனே = சங்கற்பஜாலமே யாய இத் தொழிலாலே உலகமியாவுமாம், இத்தகைய பீஜபூதமாய சங்கற்பமாத்திரத்தை, விடுமீ= நீ விட்டொழித்தி, நிருவிகற்பமாயிடு = நிருவிகற்பத்தைப் பற்றி நிச்சயமாகச் சாந்தியை அடைந்து சுகிப்பாய்.

(ஸ்ரீ - வீர.) எல்லாவுலகமும் சங்கற்பஜாலப் பிராந்தியேயாம், சங்கற்ப புஞ்சவினை யேயெனக் கூறல் யாதுகொலோ வெனின் ? மனவிரிவு என்பதாம், பயன்றெரிப்பார் இதனைவிடு என்றார். நிருவிகற்பத்தைப் பற்றி = நிருவிகற்ப வஸ்து ஆகாரமாகி சமுசய மில்லாமற் பிரஹ்மாத்ம விடயநிச்சயத்தை யடைதி, சமுசார உபரதிரூபச் சாந்தியையும் அடைதி, பிராஹ்மணர் அயின்றபின் எஞ்சிய பிரசாதத்தை நிருபமைத்தர் உட்கொண்டனர், அம்மறையவர் மூவரும் அரசகுமாரர் மூவரும், மகிழ்வுடன் பரமானந்தத்தையடைந்தனர், வேட்டைகளானும் மற்றைய வினோயாட்டு களினுலும் காலங்கழித்துக் கொண்டு அம்மன்னர் மைந்தர் மூவரும் பரமானந்த பரிதர்களாய்வரும் பெரும்பட்டணத்தில் இன்றும் வசிக்கின்றார்கள். இச்சுபமான பாலக ஆக்கியாயிகையைத் தாத்திரி பாலகனுக்குக் கூற அவிசாரத்தாற் கதையிதை மெய்யென வெண்ணி பரமசந்தோஷத்தை யடைந்தனன்பாலகன். சித்தாக்கியானத்தின் பின்னர்ப் பிரவிருத்தமாய எச்சகத்பிரத்ய யத்தின் விகற்பமாத்திரத் தன்மைக் கதையுளதோ அதன் பொருட்டு உதாகரணமாக இப்பால காக்கியாயிகை யானது ஹே கமலலோசன உன்பொருட்டு எம்மாற் கூறப்பட்டது. இங்ஙனம் விகற்பமாத்திர வடிவ இப்பாலக ஆக்கியாயிகைக் கொப்பாகக் கேட்டபாலகனது பிரதீதிக் கொப்பாகத் திடமாகக் கற்பிக்கப்பட்ட உக்கிர சங்கற்பங்களானே இச்சமுசாரவிலாச ஆடம்பரமானது மகாதிடதரத் தகைமையை யடைந்து விட்டது. முதலிற் பரமாத்மாவினது சங்கற்பமாத்திரம் கிளம்பியது அதன் பின்னரே ஜனவியாபாரங்களினுலும் சூரிய வியாபாரங்களினுலும், திவசம்போல வெகுவித்தாரத்தை யடைந்து விட்டது, வீடவே சங்கற்பத்தியாக மாத்திரத்தினுலே நிருவிகற்ப சொரூப அவஸ்திதி யாமெனக் காண்பித் துபசங்கரிப்பார், நிருவிகற்பமாயிடு மீ யென்றார். சங்கற்பஜால

பனேயே சகல ஜகத்துமாம், சங்கற்பஜால தெய்ய்ை தலனேயாலோ மநோவிலாசமாம், இராகாதி விருத்தி விசேடங்களும் அதன் விசேடங்களும் சங்கற்பமே யென்றுணர்ந்தி, அத்தியந்தம் சங்கற்பமாத்திரத்தை விட்டொழித்தி, சங்கற்பத் தியாகத்திலோ நிருவிகற்ப ஆத்ம நிச்சயமே காரணமாதலின், நிருவிகற்பத்தை நன்குபற்றி நிட்டைபெறுதியேல் துணிபாகப் பரமசாந்தியையே யடைவாய்.

(ச.) அங்கு = இனியுண்டாகும் ஈகரத்தில், இருந்தனரென்ன = சுகமாகவசித்தார்களென்று மாதாசொல்ல, சிறுவன் = பாலன், இளமையால் = நிர்விசாரபுத்தியால், நம்பினன் = உண்மையாக நிச்சயித்தான், புவனமும் = இச் சமுசாரகற்பனையையும், இவ்வாறு = இத்தன்மையான பாலகன்கதைபோல், அறிவிலோர், விசாரமற்ற சித்தத்தினர், காண்பர் = திரமுறுவதாய் நிச்சயிப்பர், மனவிரிவு = மநோவிலாசம், சங்கற்பம் = சங்கற்பஜால கற்பனேயாம், விபரமாமிதனால், சங்கற்பஜால கற்பனேயே, உலகமாம் = சகல ஜகத்துமாம், இதனேவிடு = சங்கற்பமாத்திரத்தை மிகவும்விட்டி, நிருவிகற்பமாயிரு = நிர்விகற்பத்தை யாசிரயித்து இராமா நீ சாந்தியையடைவாய் நிச்சயம்.

பாலன் கதை முற்றிற்று. ஆக திரு வரிதீதம் (114)

சித்தன் கதை.

(ஸ்ரீ - வீர - அ - கை) மூற்சர்க்கவீற்றில் இயம்பிய நிருவிகற்ப நிச்சயத்தைப் பற்றும் பொருட்டுச் செய்யத்தக்கது யாது எனச்சங்கித்து, சத்தியாதி யிலக்கண பிரஹ்ம விசாரம் செய்யத்தக்கதாம் எனவூகத்தோடுங் கூறுகின்றார்:—தங்களென.

(ச - அ - கை.) முன் பாலன்கதையிற் பிரபஞ்சமித்தையே யாயினும் அவிசார தசையில் பரமாத்மாப்போல் தோற்றுமெனப் பட்டது, இப்போது சித்தன்கதையில் கேவலந் தோற்றுமாத்திரமன்று மற்றென்னெனிற் சுகதுக்க அநுபவ மூண்டாகவின் அர்த்தக்கிரியாதியு முளதாமாயினும் மநோவிலாச மாத்திரம் பிரபஞ்சமெனப் படுகின்றது. அதிற் சமுசாரம் அவிசாரசித்த மாகையால் விசாரத்தால் நிவிர்த்தியா மாதலின் விசாரமுபதேசித்தல்:—தங்கள் என.

தங்கள்சங்கற்பத்தா லறிவில்லோர் சாலமோகிப்பர் நல்லறிஞர்
பொங்குநல் விசாரமதியினுன் மயங்கார்புந்தியாற் பொய்மையை யொழித்துத்
துங்கமெய்யுணர் வாய்பந்தமற் றிருந்துந்தொடர்புறு பந்தமுண்டென்று
பங்கமுற்றயரே லமலமாயழியாப் பரம்பொருள் பந்தமுற்றிடுமோ. (1)

(ப - ரை.) அறிவில்லோர் = மூடர், தங்கள் சங்கற்பத்தால் = தமது சிந்தனேவயத்தால், சால்மோகிப்பர் = மிகவும் மயக்கத்தை யடைவர், நல்லறிஞர் = மெய்யுணர்வினர், பொங்குநல்விசாரமதியினுல் மயங்கார் = ஆராய்ச்சிமிகுந்த மோகஞ்சிறிதுமில்லாத மதியினுலே மயக்கத்தைமருவுரூர். புந்தியாற் பொய்ம்மையை யொழித்து = தெளிந்த மதியினுலே அசத்தையகற்றி, துங்கமெய் உணர்வாய் = பரிசுத்தமான சத்தைவிசாரித்தறிவாய், பந்தமற்றிருந்தும் = அபத்தனுகியிருந்தும், தொடர்புறு பந்தம்உண்டென்று = அநாதியாய்த் தொடர்ந்த பந்தமுடையவனென்று புலம்பி, பங்கமுற்றயரேல் = துன்புற்று வாளாசோகிக்க வேண்டாம், அமலமாய் அழியாப் பரம்பொருள் = நிருமலமாகிக்

கெடாத ஆத்துமதத்துவம், பந்தம் உற்றிடுமோ = பந்தத்தையேன் எங்ஙனம் எதனை லடையும்?

(ஸ்ரீ - வீர.) தருமத்தைப் போலுஞ் சந்தகம் அநுஷ்டிக்கத்தக்க விசாரமிருந்து, மோகாடம் பரஹீனமான மதியாற் பண்டிதன் மோகத்தை யடையான், கயிற்றுக்கட்டுப் பட்ட சகுந்தப்புட்போல யூன் கட்டுப்பட்டுளேன் என்னசெய்வேன் எனின்? அயரேல் தன் சங்கற்பவயத்தினுலே அஞ்ஞன் மோகத்தை யடைவன் பண்டிதன் அடையான்; நாசமாகாத பரமாத்மாவி னிடத்தில், நாசவடிவையுடைய தென்னுஞ் சங்கற்பத்தாற் குழந்தையே யன்றே அச்சமுறும்! அசம்யக் தரிசனத்தையகற்றிச் சம்யக்தரிசனத் தைப்பற்ற யாதுகொலோ வுபாயமெனின்? மோகஞ்சிறிதும்பற்றுத விசாரதருமத்தோடு கூடிய மதியினுனே யிப்போது சத்தியவத்துவையே விசாரிப்பாயாக, அசத்தியவத் துவை யகற்றுவாயாக; அபத்தனுக இருந்தும் பத்தனென வெண்ணிக் கரைந்து வீணு கவேயேன் சோகிக்கின்றுய், அநந்த ஆத்மதத்துவமானது என் எதனுல் எங்ஙனம் தானு யிருத்தலின் அன்னிய மின்மையின் அசங்கமாதலின் கட்டுப்படும்?

(ச.) பொருநல் விசாரமதியினுல் = வேதாந்த வாக்கியார்த்த மீமாம்சையோடு கூடியதனுல் (பிரமாணத்தா லுண்மையறிதல் மீமாம்சையாம்) அவித்யாவிலாசரஹிதமான புத்தியோடு கூடினமையின், நல்லறிஞர் = பண்டிதர், மயங்கார் = மோகியார், அறி வில்லோர் = விசார சூன்யரான மூடர், தங்கள் சங்கற்பத்தாற் சாலமோகிப்பர் என்பது அன்வயம், பொய்மையை = அசத்தியமான திருசியத்தை யொழித்து, தங்களெய் = சத்தியமான பிரஹ்மத்தை, விசாரித்து உணர்வாய், பந்தமற்றிருந்தும் = பந்தரஹித மான ஆன்ம வை, பந்தமுண்டென்று = பந்தமுடையனுக வறிந்து, பங்கமுற்றயரேல்= எந்நிமித்தம் மிகமோகிக்கின்றுய், பந்தராஹித்தியத்தைக் கூறல், பந்தமுற்றிடுமோ = எப் படி எதனுல் என்ன பந்தத்தையடையும், என்னபந்தத்தையடையுமென்பது, கர்மவிஷய ஆட்சேபமும், எப்படியென்பது, உபாயாட்சேபமும், எதனுலென்பது, காரணட்சேபமும் என்பதாம்,

(ஸ்ரீ-வீர - அ - கை.) உண்மையான நிலைதோன்ற அதனையே விரித்துரைத்தல்:—

அந்தமற்றொன்றுய் விகற்பமற்றறிவா யழிவிலாப் பரம்பொருளிருக்கப்
பந்தமுற்றவரார் முத்திபெற்றவரார் பாவனைவிகற்பமே யனைத்துஞ்
சித்தனிவிரிவு பந்தமாமதனைத் தீர்ந்திடன் முத்தியா மனத்தின்
சொந்தலீலையினுற் றூரமாமணித்துக் தூரமுமண்ணிதாய்த் தோன்றும். (கூ)

(ப - ரை.) அந்தம் அற்று = அகந்தமாய், ஒன்றுய் = ஏகரூபமாய், விகற்பமற்று அறிவாய் = நிர்விகற்ப சிற்கனனந்தமாய், அழிவிலாப் பரம்பொருள் = நித்தியமாகிய மேன்மையாமான்மவஸ்து மாத்திரம், இருக்க = இரண்டாவதின்றி யிருப்ப, பந்தமுற்ற வரார் முத்திபெற்றவரார் = கட்டுற்றவர் யாவர், விடுபட்டவர் யாவர்; பாவனைவிகற்ப மேயனைத்தும் = நானுவிதமான வெண்ணங்களே யாவுமாம், சித்தனை விரிவுபந்தமாம்= மனத்தின் உல்லாசமே பந்தமெனப்படும், அதனைத் தீர்ந்திடன் முத்தியாம் = அம்ம னைத்தை யொழித்தலே மோக்ஷமாம், மனத்தின் சொந்த லீலையினுல் = சித்தத்தினு டைய தன் விளையாட்டுகளினுலே, தூரமாம் அணித்தும் = சமீபத்ததும் தூரத்தாம், தூரமும் அண்ணிதாய்த் தோன்றும் = சேய்மைத்ததும் அண்மைத்தாய் தோன்றும்.

(ஸ்ரீ - வீர.) உண்மையாய்ப் பந்தம் அசம்பவமாகிய வழித்தி, மனத்தின் விஜ்ரும்பண மே பந்தமென்றும் அதன் அடக்கமே மோக்ஷம் என்றும் பலிதப்பொருள் தணியப்

பெற்றது. அற்றே லுண்மையாகப் பந்தமிலதாகியவழி மனத்திற்குப் பந்தமோதுத் தன்மை யாங்ஙனஞ் சம்பவிக்கும் என ஆசங்கித்து அதன்பொருட்டு அதற்கு முடியாத தையுஞ் செய்யுந்தகைமை கூறப்படுகின்றது:—மனத்தின். தற்சம்பந்தமாய லீலைகளில் பிரவிருத்தமான மனத்திற்கு யோஜன சமூகமும் கோவின்பீதம் போலுந் தோற்றும்= கோவின்பாதமும் யோஜனசமூகமாம்; கண்டாமன்றே கனமுதலியவற்றே தேசகால தீர்க்கத்தகைமை முதலியவற்றின் பெருமையல். அநந்த சிற்கனாநந்த நிர்விகற்ப ஏகரூப பரமான்மா மாத்திரமிருப்ப இரண்டாவ தொன்றும் இன்மையின் பத்தன்யாவன் ? முக்தன் யாவன் ? ஆகலின், மனத்தினது உல்லாசமாகிய ஆத்மவத் நாடகமே பந்தமாம்' விவேகத்தோடு கூடியமனம். தன்சங்கற்ப விகற்பாங்கிசம் விட்டு ஆன்மாவை யறிதலே மகோதயமென்னும் மோக்ஷமாம், மனத்தினது அடித்த கடனுசக்தி பிரசித்தமேயாம்; மனோரதத்திலும் சொப்பனத்திலும் சங்கற்பகல்பனைகளாகிய தன் லீலைகளில் மனத்திற்குச் சேய்மையும் அண்மையாம், அண்மையும் சேய்மையாம். திருஷ்டாந்தம் கோவினடி, அநேகயோஜனை தூரமாம், அநேக யோஜனை தூரமோ கோவினடியாம்; அற்பமாம், அநந்தம் = பரிச்சேதமற்றது, நித்தியம் = அபாவமற்றது.

(ச) அந்தமற்று = அநந்தமாய் = தேசகால வஸ்துக்களால் அபரிச்சின்னமாய், ஒன்றாய் = ஏகரூபமாய், விகற்பமற்று நிர்விகற்பரூபமாய்ச் சஜாதீய விஜாதீய சுவகதபேதராகித்துவ ரகிதமாய், அறிவாய் = சிற்கனாநந்தமாய், அழிவிலாப் பிரமமேயிருக்க = அநந்தான்ம தத்துவமுள்ளளவில், துவிதீய வஸ்துவாகிய பந்தவேது இன்மையின், பந்தமுற்றவரார், பந்தமியாது மின்றென்பது பொருள். முத்திபெற்றவரார், பந்தமின்மையின் மோக்ஷமு மின்றென்பது பொருள். உபசங்கரித்தல், பாவனை விகற்பமே யனைத்தும்= பந்தமுதலிய யாவும் மனத்தினுல்லாச மாத்திரமான சங்கற்பமேயாம், சித்தனை விரிவு பந்தமாம், வாஸ்தவமான பந்தவேது வின்மையின், மனதின் சங்கற்ப விகற்பமே பந்தமாம், அதனைத் தீர்ந்திடின் = மனதின் சங்கற்ப விகற்பத்தை விடின், விட்சேபமின்மையின் முத்தியாம்; விசுத்தமான ஆன்மசொரூபமே சேடிக்குமென்பது பொருள். தொந்த லீலையினுல் = சங்கற்ப விலாசத்தினுல், அணித்தும் = பசுவின் குளப்படியாகிய சமீபதேசமும், தூரமாம் = அநேகயோஜனை தூரதேசமாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) செய்ய முடியாததையும் செய்விக்கின்றது மாயாமயம் மன மெனக்கூறிய பொருளைக் கதைதொடங்கித் தெளிவித்தல்:—கருத்தின் எனை,

கருத்தின் வல்லமையாற் கற்பமோர் கணமாங்கண மொருகற்பமா மிவற்றைத்
திருத்தமா யுணர்த்து மொருகதை யதனுற் செகமெனு மிந்திரசாலங்
குருத்துவமான மனத்தினுள் ளிருக்குங் கொள்கை தோற்றிடு மெனவுரைப்பா
னொருத்தனிங் கரிச்சந்திர குலத்துள்ளானுத் தரபாண்டவ நாட்டோன். (3)

செந்திருவாணி புகழ்மகன் விந்தைசெறி புயன்லவணனும் பெயரோன்
மந்திரமிறைந்த வமைச்சர்தற் சூழமணிகொள் சிங்காதனத்திருப்ப
விந்திரசால வல்லவனெருவ னெய்தினனி றைஞ்சி நின்றேத்திச்
சந்திரனேய பீலிகையேந்தித் தராபதிகாண் கெனச்சுழற்ற. (4)

(ப - ரை.) கருத்தின் வல்லமையால் = மனத்தினது ஆற்றலால், கற்பமோர் கணமாம் கணமொரு கற்பமாம் = கற்பகாலம் ஒருகணமென அற்பமாம் கணகாலம் ஒரு கற்பமெனமகத்தாம், இவற்றைத் திருத்தமாயுணர்த்து மொருகதை = இவ்விடயங்களை

உற்பத்திப் பிரகரணம்
கீர்த்தன் கதை

மிகத்தெளிவாகத் தெரிவிக்கும் ஒப்பற்ற ஒருவிருத்தாந்த மூளது கூறுகின்றேன், அதனால் = அவ்வுத்தமமான கதையினால், சகமெனும் இந்திரசாலம் = உலகசம்பந்தமான இந்திரஜால ஸ்ரீருகுருத்துவமான மனத்தினுள் ளிருக்குங்கொள்கை, தோற்றிடும் = கனமான வாசனைநிறைந்த அந்தக்காரணத்தின் கண்ணே திதிபெற்றிருந்த இயல்பு இலங்கிடும், என உரைப்பான் = என்று கூறத் தொடங்குகின்றார், உத்தரபாண்டவ நாட்டோன் = உத்தரபாண்டவ மென்னும் விசாலதேசத்தை யரசாண்டவனும், அரிச்சந்திர குலத்துள்ளான் = ஹரிச்சந்திர குலோற்பூதனும், இங்கு ஒருத்தன் = இவ்வுலகில் ஓரரசனிருந்தான்.

செந்திருவாணி புகழ்முகன் = செவ்விய இலக்குமியும் கலைமகளும் புகழும்படியான மிக்கசெல்வமும் கல்வியும் வாய்ந்தவன், விந்தைசெறியுயன் லவணனும் பெயரோன் = அற்புதம் நிறைந்த அதிபுஜபலத்தையுடைய இலவணமகாராஜன் என்னும் பெயரினை வாய்ந்தவன் மந்திரநிறைந்த அமைச்சர்த்தற்சூழ = இராஜநீதியில் வல்லவர்கள் ஆகிய மந்திரிமார்கள் தன்னைச் சுற்றியிருப்ப, மணிகொள் சிங்காதனத்திருப்ப = நவரத்நகசிதமய சிங்காசனத்தின்கண் வீற்றிருந்தபோது, அக்கொலு மண்டபத்தில், இந்திரசால வல்லவன் ஒருவன் எய்தினன் = இந்திரசாலவித்தையிற் றேர்ந்தவன் ஒருவன் உற்றனன், இறைஞ்சி நின்றேத்தி = நமஸ்கரித்து நின்று தோத்தரித்து, சந்திரன் அனைய = சந்திரனுக்குச் சமானமான, தராபதி = பூபதியே, காண்கென = நீ யிவ்வித்திரத்தைப் பார்ப்பாயாகவென்று, பீலிகையேந்தி = மயிற்றோகையைக் கரத்திற்கொண்டு, சுழற்ற = சுற்றிய காலத்தில்.

(ஸ்ரீ - வீர.) கற்பங்கணஞ் செய்யுமுள்ளம் உள்ளே கணத்தையுங் கற்பமாக்கிடும், ஆகலின் தேசகாலத் நிரமம்யாவும் மனத்தின் அதீனமென யாவருமேயறிவர். மனமரனது சர்வநிர்மாண சமர்த்தமாயின் யாங்ஙன மிப்போது நம்மனோர்க்குச் சர்வசர்க்க அசக்தியெனின்? இரஜோகுண உத்கர்ஷமாங்கால் நீவிரத்தனமை, தமத்தின் உத்கர்ஷ மாம்போது மந்தத்தன்மை, யென்னும் சம்வேக வேற்றுமையானும் ஆகாரம் விசேடமாக விருத்தியாகிப் பருத்தன்மை, குறைந்தபோது அற்பத்தன்மை யெனப் பேதமாதலினாலும், அவ்வவ்வஸ்துசர்க்க அநுகூல உபாசனாதி விலம்பனத்தினாலும், அடைவுற்ற சர்க்க அசக்தியினாலே, மனத்திற்குள்ள வாஞ்சித சர்வ சர்க்கசக்தியையில்லாமற்செய்ய ஆற்றலுடையே மல்லோம். இதுவிடயத்தில் உத்தமமான ஆக்கியானம் ஒன்று கூறக்கேட்பாயாக கேட்டமாத்திரையானே ஜகத்சம் பந்தி இந்திரஜால இலக்குமி மனத்தினுள்ளே மருவியிருக்கும்வகை மலர்ந்து தோன்றும்; நீயேயவ்வகையை நன்கறிந்து கொள்ளலாம், இவ்வசுதாபீடத்தில், நானுவன சமாகுலமாயும் விசாலமாயும் சர்வ ஐசுவர்யங்களாலும் பிரஜைகளாலும் நிறைவுற்றதாயும் உத்தராபாண்டவம் என்னும் பெயருற்றதாயும் இலங்கும் ஒரு பெருந்தேயம் உண்டு. ஆண்டுப்பரம தார்மிகனும் ஹரிச்சந்திரகுல உற்பவனும் இலவணமகாராஜன் என்னும் அரசன் பூமியில் இறங்கிவந்துள்ள இரவிக்கொப்பாக இருந்தனன். அந்த இலவண மகாராஜனுடைய கீர்த்திகளேயாகியபுஷ்பகேசரங்களான் மகரந்தங்களான் அதிவெண்மைவாய்ந்த ஸ்கந்த மண்டலங்கள் வாய்ந்த அங்குள்ளசைலங்கள், மிகவும் விபூதியுத்தூளனஞ்செய்து விமலாகிருதியுடன் விளங்கும் ருத்திரர்கட் கொப்பாக விளங்கிக்கொண் டிருந்தன. உலகிலும் குசுமகேசரங்களான் மகரந்த வீட்சியான். ஸ்கந்த மண்டலங்கள் பாண்டுரங்கள் ஆவது வெளியேயாம், திக்கந்தங்களில் வியாப்த கீர்த்தியுடையவன் அவ்வரசன் என்பதாகருத்து சிரத்தில் வீற்றிருப்பது சேகரமாம். அம்மன்னவன் சுபடத்தன்மையை யறியவேண்டி

ஞான வாசிட்டம்

யான், வணக்க மின்மையைக் கண்டதேயில்லை, பரர் ஐசுவரியங் கொள்ளும் பேராசை யை நண்ணியதே கிடையாது. மூலம் க்ருத்ஸ்நதை = க்ருத்ஸ்ன=பேராசைகாட்டும் பருதி; க்ருவிகுதியுற்றுத் தன்மையைக் காட்டும்போது க்ருத்ஸ்நதையாயது. அவ்வரையன் கொ டையையும் பெருமையையும் மூகமானது வசனிக்குந் தொழிலை யுடைத்தாயிருப்பது போலும், ஸ்ரீ பிரஹ்மதேவர் படிகமாலையை யுடைத்தா யிருப்பதேபோலும் உடைத்தா யிருந்தான். ஆகாயத்திற் செல்லும் திவசாதிபஞ்சிய அதிக்கன்தினஃ அட்டமபாகமாக, அதாவது மூகூர்த்தத் தூவயமாக அம்மன்னவன் ஒருக்கால் சபாஸ்தானத்தில் இங்கா தனத்தில் வீற்றிருப்புழுஞனன். ஆண்டு ராஜநீதியில் வல்லுகர்களான மந்திரிமார் முதலா யினோர் சூழ்ந்திருப்பச் சுகமாக அம்பரத்தில் இத்துவைப்போல அவ்வரைய னமர்ந் திருந்தபோது, சாமந்த சேனைகள் சம்பிரமத்துடனுட்புகுந்து தலைதாழ்த்தி நின்றிருந்த போது அச்சபையில் இந்திரஜாலக் காரனுக்குத் தக்கவேஷ அலங்கார விருதாடம்பர சம்பன்னனுயொரு ஐந்திரஜாலிகன் மேகமானதுவரும்மழை பெய்வதற்குரிய இடியின்ன லாதியைக் காட்டிக்கொண்டுபூமியைவந் தடைத்ததுபோலும் புகுந்தனன். பிரதசமீபத்தி லிருப்பதாய பல்பாரத்தோடு கூடிய தருவானது அதிக வீளக்கத்தோடும் சிருங்கங்களா னே யலங்கரிக்கப்பெற்ற மேற்பாகத்தோடு கூடியசைலத்தை வணங்கியிருப்பதே போ லக் கிரீட கூடத்தோடுகூடிச் சர்வ அலங்காரங்களோடும் விளங்கும் உதார உத்தம கண் டத்தோடியை மகீபாலனை அவன் வணங்கினன். வாசனையோடு கூடி நிமிர்ந்தபது மத்தை நோக்கிய அறுகால்வளி ரீங்காரஞ் செய்வதேபோலஸ்ரீயருத்தங்களின் வாசனைச் சுகமாருத்தத்தோடேற்று நிமிர்ந்து நோக்கிய பூபனைநோக்கி சபலலம்பட அவன் கூறியதா வது; ஹேவியாபக மன்னர்மன்னனே, தாங்கள் பீடத்திலிருந்தபடியே ஈண்டு ஆச்சரியத் தோடு கூடிய ஒருமுக்கியமான இந்திரஜாலவித்யா அப்யாசத்தினின்றும் உண்டாயதான மித்யாகெள்துக்கிரீடையை விண்ணிலிருக்கும் சந்திரன் அவனியைப் பார்ப்பதே போலப் பார்ப்பீர்களாக என்று புகன்று பிரமத்தைத் தரும்படியான மயிற்றோகையைச் சுழற்றினன்.

(ச.) வல்லமையால் = சங்கற்பலிலாசத்தினுல், கற்பம் = பிரமகற்பமும், கணம்= க்ஷணம், மனச்சங்கற்பம் தேசகாலங்களையும் மற்றோர் விதமாகச் செய்யுமென்பது பொ ருள். ஒருகதை ... உத்தமமான இந்த விருத்தாந்தத்தை, யான்சொல்வேன் இராமா நீ கேட்பாயாக. குருத்துவமான = மகத்துவமான, செகம், இங்கு=இப்பூப்பிரதேசத்தில் இருப்ப = அம்பரத்திற் சந்திரன்போற் சுகமாயிருப்ப, எய்தினன் = அவ்விராஜ சபை யிற் பிரவேசித்தவனுஞ அப்பூபனை, சந்திரனைய தராபதி = பூமியிற் சந்திரோதயம் போன்ற மகீபாலனே, காண்கென = நீ இவ்விடத்தி லிருந்துகொண்டே இவ்விடத்து ஆச்சரியமான வித்தையைப் பார்ப்பாயாக என்று சொல்லி, மீலியின் = பிரமையைத் தாராநின்ற மயிற்றோகையின், சூழல் = கூட்டத்தைச் சுழற்ற, உத்தராகுரவ என்பது போலும உத்தரா பாண்டவ என்பதும் பருவசனந்தமே, தேசவிசேடத்தின் பெயர்= இலவணனது கீர்த்தியேயாய புஷ்பமாலையால் மலையின் மேற்பாகம் பாண்டுரமா யிருந் தது. மூலம்வாசகேந யயிபிதா = சாக்ஷாத் சங்கேதிதம்யொ அர்த்தம் அபிதத்தே ஸவாசக, தஸ்ய சங்கேதிதார்த்த கோசரவ்யாபாரோபிதா. வாசகம் வாச்சியத்தை யுடைத்தா யிருப்பதேபோலும் உதாரத்தன்மையை யுடைத்தாயிருந்தான்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சித்தன் செய்த செயலைச்சிறப்பித்து மன்னவனிருந்த நிலை மையை யுணர்த்தல்:—சுத்தவென.

சித்திரன் கதை

சுத்தமாம் பரத்தாற் பலவிதசிருட்டி தோற்றிட மாயைதோற்று தல்போற்
சித்தஞற்காட்டிச் சுழற்றுறுபீலித் திகிரியை மன்னவன் பார்த்தா
னத்தலத்தனிலே சயிந்தவதேசத் ததிபதிவிடுத்த வோர்தூதன்
றத்துறுபுரவியொன்று கொண்டெய்திச் சதமகன் பரிக்குநேரென்று. (5)

மன்னவவுனக்கென் றெங்கள்கோன் விடுத்தவயப்பரி யென்றலுஞ்சித்த
னின்னது போல்வதில்லை நீயிதனிலேறுவா யென்றன னினையோன்
சொன்னவை கேட்டுச் சித்திரம்போலத் தூரகமே நாட்டமாய் வேந்தன்
கன்னலீரிரண்டங் கிருந்தனணுகிஞர் கவலைதீர் சமாதியுற் றென்ன. (6)

(ப - ரை.) சுத்தமாம் பரத்தால் = பரமான்மாவால், பலவித சிருட்டிதோற்றிட, = நானுவீத நாமரூபம் புலப்பட அவற்றின் பீஜமாய, மாயைதோற்றுதல்போல் = மாயையானது பிரதீதியாதல்போல, சித்தஞல் காட்டி சுழற்றுறு பீலித்திகிரிபை = இந்திரஜாலக்காரனுலே காண்பிக்கப் பெற்றுச் சுழற்றப்பட்ட மயிற்றோகையின்பிரமணத்தை, மன்னவன்பார்த்தான் = அரசன் நோக்கினன், அத்தலத்தனிலே = அவ்விடத்திற்றானே, சயிந்தவ தேசத்ததிபதி விடித்தவோர் தூதன் = சயிந்தவதேச அரசன் அனுப்பிய ஒரு சாமந்தன், தத்துறுபுரவி ஒன்று கொண்டு எய்தி = பரம வேகத்தையுடைய குதிரை ஒன்றைக் கவர்ந்து வந்து, சதமகன் பரிக்கு நேரென்று = தேவேந்திரனது உச்சைசிரவ சமான ஹயரத்தினமென்று கூறி,

மன்னவ உனக்கென்றெங்கள் கோன் = ஹே இராஜாதிராஜனே, தங்களுக்குக் கொடுக்கும்படியாக எங்கள் பூபதியாகிய பிரபு, விடுத்த வயப்பரி என்றலும் = அனுப்பிய இலக்கணமும் வேகமும் பொருந்திய அசுவம் என்று கூறியபோது, சித்தன் = இந்திரஜாலிகன், இன்னதுபோல்வதில்லை = இதற்கொப்பான நற்பரிகிடைப்பரிது, நீ இதனில் ஏறுவாயென்றனன் = மன்னவனே இதில் ஆரோகித்து புவனஞ்சுற்றிப்பார்க்கலாம் எனக்கூறினன், இனையோன் சொன்னவை கேட்டு = இந்திரஜாலிகன் சொன்னவாக்கியங்களைக் கேட்டவுடனே, சித்திரம்போல = ஓவியமொப்பிய ஆகிருதியனுய், தூரகமே நாட்டமாய் = குதிரையையே நோக்கிக்கொண்டு, வேந்தன் = மன்னவன், கன்னல் ஈரிரண்டு அங்கு இருந்தனன் அறிஞர் கவலைதீர் சமாதியுற்றென்ன = மகான்கள் இலேசமறக்கழிந்த நிர்விகற்ப சமாதியையடைந்திருந்ததுபோல இரண்டுமுகூர்த்தம் அச்சிங்காதனத்திலேயே அசையாம லிருந்தனன். (5-6)

(ஸ்ரீ - வீ.) பரமான்மாவால் நானு நிர்மாணங்கட்குக் காரணமாயிரா நின்ற மாயைபோலும் நானுவர்ணக் காந்திவாய்ந்த படலங்களாற் தேஜோரூபத்தைக் கணிறைத்து விளங்கும் அதனை அரசன் சுரவிமானத்தி லிருக்கும் இந்திரன் தன்வில்லதையைக் கண்டதுபோலுங் கண்டனன். அச்சமயத்தில் சிந்துதேசிய நிருபசாமந்தனும் அசுவபாலகனெருவன் சபையிற்புகுந்தனன்; அவன் பரமவேகத்தோடு கூடியதும்மிக அழகுவாய்ந்ததுமாகிய ஓரசுவத்தையும் தன்னெடுங் கொணர்ந்திருந்தனன்; அவ்வசுவபாலகன் அக்குதிரையை எதிரில் நிறுத்தி அரசனேநோக்கிக் கூறுவதாவது:—ஹே மஹாபதே! இவ்வயரத்நமானது தேவேந்திரனது உச்சைசிரவம்போன்று பிரக்கியாதியானது, வேகமாகப்பாய்தன் முதலிய குணங்களாலே மாருதம் மூர்த்தமடைந்தது போன்றதாம் இதனைப்பார்ப்பீராக என்றனன். என்றதுபோல மேலுமேலும் அரசனே. மயலுற்றனன் என்பதாம் ஹே பிரபுவே! எங்கள் பிரபுவாகிய அரசரால் தங்கள் பொருட்டிக்குதிரை அனுப்பிக்கப்பெற்றது; யோக்கியமாகிய மகாத்மாக்கட்குத் தானுர்ப்பணஞ் செய்தலானே பதார்த்

தத்தினது அழகு மிகவும் சுபமாக விளங்குகின்றது. என்றிவ்வண்ணம் அவன் கூறிய போது அரசனேநோக்கி இந்திரஜாலக்காரன் கூறுவதாவது; ஹே பிரபுவே ! நல்லகுதிரையாகிய இதன்பேரிலேறிப் புவனஞ்சுற்றி வரலாம். இவ்வண்ணங் கூறக்கேட்ட பார்த்திவன் குதிரையையே பார்த்துக்கொண் டிருந்தனன். இமைக்கொட்டாத திருஷ்டியோடும் சித்திரவுமை யாகிருதியடையவனுகிச் சித்திரத்திற் றீட்டியதுபோலும் நிச்சலனுகிக் குதிரையையே பார்த்துக்கொண் டிருப்பது, முதலவாக சபையிலுள்ளவர்தம் பிரதிதிசித்த ஆர்த்தி அறுவாதமாம், இராஜப்பிரதிதி திருஷ்டமோ இனியரசனே கூறுவன். அம்மன்னவன், ஆத்மாவின் பாற்றியான ஆசக்தன் நிலைபெற்றிருப்பது போலவும், இராகாதியற்றுப் பாசியதிருஷ்டியில்லா முனிவன் பரமாநந்தத்தில் மூழ்கியிருப்பதே போலவும் இரண்டுமுகூர்த்தம் அசையாம லிருந்தனன்.

(ச.) சுத்தமாம் பரத்தால் = பரமான்மாவால், தோற்றிடுமாயை = ஜகிப்பிக்கும் பீஜரூபமானமாயை, அத்தலத்தினிலே, அப்போது, காந்திமிகுந்த அந்த இராசசபையில், அக்கணத்தில் தூதன் = சாமந்தன், தத்துறுபுரவி = பரமவேகமுள்ள அழகுடைய குதிரை, சதமகன்பரிக்கு நேரென்று = இவ்வய இரத்திரம் பிரசித்தமுள்ள இந்திரன் பரியாகிய உச்சைச்சிரவமென்று சொல்லி, உனக்கு = பிரபுக்கட்கும் பிரபுவாகிய வுனக்கு, என்று = பதார்த்த இலக்ஷணமி மகத்துக்களுக்கு அர்ப்பித்தலால் சுபமாய் விளங்கும் அல்லவா ! என்றெண்ணி, சித்தன் = அயிந்திரசாலிகன், பிரபுவே நீ ஏறுவாய், ஏறிப் புவனத்திற் சுற்றுவாய், கன்னலீரிரண்டு = இரண்டு முகூர்த்தம், சமாதியுற்றென்ன = பரமாத்மாவிற் றியானுபேக்ஷு மிகுந்தவன்போல், அங்கிருந்தனன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவையோர் ஆச்சரிய முறுதலும், அரசன் அகந்தெளிந்து துணிர்தலும்:—வேத்தென.

வேத்தவையிருந்தோரையமும்வியப்புமிகுந்தனரும்பியகமலப்
பூத்திரளோடைபோற்குவிந்திருந்தார்போதமோருபாதியோடலைந்து
மூர்த்தமோரிரண்டுசென்றபின்றவிசின்முன்னுறவீழ்வுறுகின்ற
பார்த்திபன்றன்னையலுளோர்தாங்கப்பரந்தழன்மனந்தெளிந்துணர்ந்தான் (7)

(ப - ரை.) வேத்தவை யிருந்தோர் = மன்னவனது சபாமண்டபத் திருந்தோர் யாவரும். ஐயமும் வியப்பும் மிகுந்தனர் = சந்தேகத்தையும் சிந்தையையும் விஸ்மயத்தையும் பெரிதடைந்தனர், அரும்பிய கமலப்பூத்திரள் ஓடைபோற் குவிந்திருந்தார் = மூகுளிதமாய பத்மபுஷ்ப வனமுற்ற தடாகம்போலக் குவிதலையுற்றிருந்தனர், போதமோருபாதியோடலைந்து = உணர்வானது ஒரு உபாதியுடன் றிரிந்து, மூர்த்தமோர் இரண்டு சென்றபின் = கன்னல் நான்கு கழிந்தபின்னர், தவிசின்முன்னுற வீழ்வுறுகின்ற = ஆசனத்தினின்றும் முன்பாகத்தில் வீழ்வதற்கு முயலாநின்ற, பார்த்திபன்றன்னை = அந்த மன்னவனை, அயலுளோர் தாங்க = சமீபத்தில் இருந்தவர் அணைக்க, பரந்தழல் மனம் தெளிந்து உணர்ந்தான் = சுற்றியுழலும் உள்ளம் தெளிந்து முன்னிலையை யறிந்தான்.

(ஸ்ரீ - வீர.) அச்சபாசதர்யாவரும் விஸ்மயம் றிறைந்தவராய்ச் சலனமற்றிருந்தனர்; அச்சபாஸ்தானத்தில் ஜனங்களுடைய கோலாகலமானது மெதுவாகச் சாந்தியடைந்தது; நன்மந்திரிகள் சந்தேக சாகரத்தில் மூழ்கிச் சிந்தாபரவசரா யிருந்தனர். பூபதியானவன் அசையாம லிமைக்கொட்டாமற் பார்த்துக்கொண் டிருந்தபொழுது விஸ்தாரமான விஸ்மயத்தாலே உற்சாகஞ் சிறிது மில்லாதவராய், அச்சத்தானும் மோகத்தானும் அதிதுக்கிதராய், அவ்வாஸ்தானத்தி லிருந்த ஜனங்கள்யாவரும், கூம்பிய தாமரைவனத்

தின் சோபையை யடைந்திருந்தனர், மகீபதி, மகாவிஸ்மயத்தோடு கூடிய ஐந்திரஜாலிக குடிலதையின் காரணத்தானே விழிகளை அசைவற்றுப் பார்த்துக்கொண்டிருப்பப்பய மோகத்தானே தூக்கிதஜனங்கள் முகுளித அப்ஜவனகாந்தியை யடைந்திருந்தனர். பூபதி நான்கு நாழிகைகழித்து உணர்ச்சியை யடைந்தனன், உணர்ச்சியையுற்ற அவன், பூமியைத் தாங்கும், திக்கஜபாதால வாரணம் சஞ்சலமுற்றபோது ஸ்ரீ சங்கராசலமாகிகைலாய பர்வதம்போல, சிங்காசனத்தின்மீது கம்பிதத்தை யடைந்தனன்: முன்னிருந்தவராலே தாங்கப்பெற்றவனுகிப் பர்யாகுலமதியை யுடையப் பார்த்திவன், கலஷிறைமதி கிளம்பக்கண்ட, கல்லோல மெழுங்கடல், பொங்குநீரி னுவமையழகை (சோபையை) யடைந்தனன்.

(ச.) வேத்தவை யிருந்தோர் = அரசசபையி லிருந்த மந்திரிகள், ஒருபாதியோடு, மோகவசத்தால்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பிரஞ்ஞையுற்ற அரசன் மயங்கியவனுகி மெதுவாக இது என்ன பிரதேசம் இதுயாருடைய சபை என்றுகேட்டலும் அதற்குமந்திரிமார் ஹேமகாராஜாவே ! இஃதென்ன இவ்வாறு கேட்கின்றீர்கள் தங்களுக்குற்ற மயக்கமியாதென வினுதல்:—அனேயவென.

அனேயவன்றன்னே யமலநெஞ்சினீயயர்வுறவந்ததென்னென்ன
வினேயமந்திரியர்வினவலும்வேந்தன்விழித்திதுகேளுமென்றுரைப்பான்
மனேயுறப்பிலிசுழற்றியிச்சித்தன்சொல்லிடமயங்கியிப்பரிமே
னினேவுறவேறிவேட்டையின்பொருட்டானீணெறிகடிதுறச்சென்றேன்(இ)

(ப - ரை.) அனேயவன்றன்னே = அவ்வரசனே, வினேய மந்திரியர் = அதிருக்ஷ்ம மதியுடைய விநயமுற்ற அமைச்சர், அமலநெஞ்சினே நீ = தெளிர்த்த மதியையுடைய தேவரீர், அயர்வுறவந்ததென் என்ன = மயங்கும்படியாக நேர்ந்தது யாதோ வென்று, வினவலும் = கேட்டலும், வேந்தன் = அரசன் விழித்து = ஆச்சரியத்துடன் உன்மீலிதலோசனனுய், இது கேளுமென்றுரைப்பான் = இவ்வாச்சரியமான கதையைக் கேட்பீர்களாக வென்றுரைக்கத் தொடங்கினன், தூனேயுற = அதிவிரைவில் மோகமாக, பிலிசுழற்றி = மயிற்றோகையைப் பிரமாணஞ்செய்து, இச்சித்தன் = இவ்விந்திரஜாலிகன், சொல்லிடமயங்கி னினேவுற = கல்லருகிரை ஏறலாமென் றிவன்கூறிடப் பிராந்தசித்தனுகி, இப்பரிமேல் = இச்சைக்தவ அசுவத்தின்மீது, ஏறி = ஆரோகணித்து, வேட்டையின் பொருட்டால் = வேட்டையாட வேண்டு மென்னும் எண்ணத்தால் ஒருவனுகவே, நீள்நெறிகடிதுறச் சென்றேன் = வெகுதூரம்வெகு வேகமாகச்சென்றனன்.

(ஸ்ரீ - வீர.) அரசனே மந்திரிமார்களும் புரவாசிகளாகிய சபையோர்களும் வேண்டி வினவுவாராயினர்; அப்போது நன்றாக வுணர்வுபெற்று விநயத்துடன் ஆதரவோடும் வினவுவோரை நோக்கிச் செவிசாய்த்தனன்; தேவரீர் இவ்வண்ண மிருந்ததைக் கண்டயாங்கள் அத்தியந்தம் பரிதாகுலமுற்றோம், அபேத்தியமாயினும் மனம், அதனே மயலுணர்ச்சிகள் வெளிக்காரணம் யாதொன்றையும் வீரும்பாமலே அச்சம் வாட்டம் மூதலிய வற்றுனே கலக்கிவிடுகின்றன; எப்போதும் உதார வீருத்தங்களிலும் விவேகசர்ச்சைகளிலும் பரிசீலனே செய்தலாலே அதி சீதளமடைந்த நிர்மலமான தங்கள் மனது எங்ஙனம் மயல் பயமூதலியவற்றே மூழ்கியது ? ஆயின் எத்தகையமனம் மோகயோக்கியமாகும் எனின் ? துச்சமாகிய விடயங்களைப் பற்றுதலினுனே, அவை அவிழ்ந்தால் அவிர்ந்தால் அழிந்தால் அயர்ந்தால், அவிழ்தல் அவிர்தல் அழிதல் அயர்தல்போலவும் லோக

விவகார விருத்திகளில் மகாமோகத்தை யடைகின்றது, விவேகத்தினுலே பரிஷ்காரஞ் செய்யப்பெற்றப் பெருமைவாய்ந்த மனமோ மயங்கிடாதாம். தங்களுடைய மனதோ தைரிய நன்மனதாயிற்றே ! என்றுபசரிப்ப, உன்மீலிதவிலோசனஞகிச் சௌமிய வதனத்துடன் அரசன் விளங்கினன். ஹே எனது அன்பர்களே ! சம்பரனது மாயையையுடைய வஞ்சகனை இந்திரஜாலக்காரன் ஈண்டு சொற்பகாலத்திற் காட்டிய எனது இவ்வெனது ஆச்சரியமான கதையைக்கூறக் கேட்பீர்களாக ! இம்மாய வித்தைகாரன் இங்கே இன்று சுழற்றிய தேஜசோ டோங்கியொளிரும் சஞ்சல மயிற்றோகையை யான் கண்டு முன்னிலிற்கு மிக்குதிரையின் மீதேறி யொருவஞுவே மயங்கிய மனத்தஞய் வேட்டையாட வேண்டுமென்று அதிவேகத்துடன் சென்றனன்.

ஈ. :(ச) அமல செஞ்சினேரீ = நிர்மலமான போதமுள்ள நீ, அபரறவந்தது = பிரமைகளின் மூழ்கிமயங்கும்படி வந்தகாரணம், வினவலும் = ஆதரத்தோடு கேட்கவும், இது = இவ்வாச்சரியமான கதையை, நினைவுற = பிராந்த சித்தனுய், நிணைறி = அதிதூரம்.

(ஸ்ரீ-வீர-அ-கை) அதன் பின்னடந்தவற்றைக் கூறத்தொடங்கல்:—அறிவென.

அறிவறுமனத்தாலயர்வுறுபோகத்தறிவிலார்மருண்டுபோவதுபோற்
செறிதெடுந்தூரம்பரியினற்சென்றுதீயினுலியாவையும்வெந்து
பொறியெழும்பாலவனத்திலேபுகுந்துபுரவியுமியானுமெய்வருந்தி
யெறிசுடர்மேற்பாலெய்துறுமளவுமிடருறமயங்கிநெஞ்சினேனத்தேன். (ழ)

(ப - ரை) அறிவறுமனத்தால் = விவேகமில்லாத சித்தத்தினுலே, அயர்வுறுபோகத்து = மயங்கும்படியான போகங்களில், அறிவிலார் = ஜடமூடர் மருண்டுபோவதுபோல் = மயக்கமுற்றவதிப்படுவதேபோல, செறிநெடுந்தூரம் = பொருந்தா நின்றவெகுதூரம், பரியினுல் = அதிவேக அசுவமதினுல், சென்று = போய், தீயினுலியாவையும் வெந்து = அக்கினியினுலே எல்லாம் தக்தமாகி, பொறியெழும் பாலவனத்திலே = அக்கினிகணம் கிளம்பும்படியான வெம்பிய பாலவனத்தில், புகுந்து = பிரவேசித்து, புரவியும் யானும் மெய்வருந்தி = குதிரையும் யானும் சரீரம் களைத்துப்போய், எறிசுடர் = கிரணங்களை வீசும் சூரியன், மேற்பால் எய்துறும் அளவும் = மேற்குத்திசையிற் செல்லும்பரியந்தம், இடர் உறமயங்கி நெஞ்சினேனத்தேன் = துன்பம்பொருந்த மயக்கமுற்று மனங்கன்றினேன்.

(ஸ்ரீ - வீர.) அவ்வாயுவேக அசுவத்தானே வெகுதூரம் கொண்டு செல்லப்பட்டேன், தோற்றமாத்திரமணீயமாயமாய விடயசமூதாயங்களின் போகப்பயிற்சியினுனே ஜடமாகிய மனத்தினுலே அஞ்ஞன இழுக்கப்படுவதுபோலும் இழுக்கப்பட்டேன், விடய சம்பந்தமான சுகானுபவ விருத்தியானே ஜடனுகி, அதனினும் அன்னிய புருடார்த்தம் அறியாதவனுகி, அதனுனே அநாத்மாக்களே யகமென்றறிந்தவனுகி, பசுவைப்போல இலௌகிகப் பிரஞ்ஞயு மற்றவனுகி, இருக்கும் மூர்க்கன்றன், மனத்தானே யலமரல் போலும் அலமந்தேனேன்- பின்னெரு பெருங்காட்டையடைந்தேன், அக்காடானது, ஒன்றையும் பற்றுதயதிகளின் மனம்போலும் நிர்விடயமாய் மங்கையர் தம்மனம்போல அற்பமாயும் விடமமாயும், பிரளயத்தினுலே பஸ்மம் பண்ணப்பட்ட பிரஹ்மாண்டம் போலும் அதிபயங்கரமாயும், பக்ஷியேனும் விருக்ஷமேனும்சேனும் இல்லாததாயும், மகத்தாயும்; மகத்தாய பனியினுலே மூடப்பட்டுப் பொறுக்கமுடியாத குளிர்ச்சியாயும், ஜனஸம்சர்க்கம் காணுததாயும் திருடபல்லவங்கள் என்று முண்டாக்காததாயும், புலப்பட்ட இத்தகைய அரண்யத்தை யடைவுற்று என்மதி அதிகேதத்தை யடைந்தது; இத்தகைய

பெருங்காட்டை யடைவுற்ற யானுங்குதிரையுமடைந்த துயரமெவ்வளவென்பது ! அக் காற் சூரிய அஸ்தமய சமயமாயது, பெருங்குளிரானது படித்தியபாடு இன்னபடியென்று சொல்லவும் படுமோ !

(ச.) அறிவறும் = ஜடமானதன் மனத்தால், போகத்து = போகாப்யாசவசத்து, எறிசுடர், சூரியன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலும் பட்டபாட்டை யேபகர்தல்:—குடும்பவென.

குடும்பபாரத்தைவிவேகிகள்கடக்குங்கொள்கைபோற்பாலையைக்கடந்து
தெடும்பணைநாவற்கடம்பெலுமிச்சநிறைந்துபுட்குரலினுரம்பி
யிடும்பைதீர்சோலை யெய்தலுமாங்கோரிளங்கொடிபிணித்ததென்கழுத்திற்
கடும்பரியெனவிட்டகன்றதுகங்கைகலந்தவர்பாவமேயென்ன. (18)

(ப - ரை.) குடும்பபாரத்தை = சம்சாரபாரத்தை, விவேகிகள் = ஆத்மாநாத்ம விவேகியர், கடக்குங் கொள்கைபோல் = தாண்டுந்தன்மைபோல, பாலையைக்கடந்து = அப்பாலை வனத்தைத்தாண்டி, தெடும்பணைநாவல்கடம்பு எலுமிச்சம் நிறைந்து = நீண்ட சாகோப சாகைகள் பரப்பியஜம்பு கதம்புஜம் பீராதி நெருங்கிவித்தரித்தோங்கி, புட்குரலினுல் நிரம்பி = பக்ஷிகளினது ஆரவாரங்களான் ஆகுலமிருத்து, இடும்பைதீர்சோலை = துயரைத்துடைக்கும் குளிர்ந்த சோலையை, எய்தலும் = அடைதலும், ஆங்கோர் இளங் கொடி = அவ்விடத்தில் ஒரு இளையசாகை, பிணித்ததென் கழுத்தில் = எனதுகண்டத் திற் சுற்றிக்கொண்டது, கங்கைகலந்தவர் பாவமேயென்ன = ஸ்ரீ கங்கையில் ஸ்நாநம் செய்தவரது பாதகங்கள்போல அக்கால், கடும்பரியெனே விட்டகன்றது = அதிவேகக் குதிரை என்னைத் தனியே விட்டுவிட்டுச் சென்றது.

(ஸ்ரீ - வீர) அப்பாலை வனத்தை யநேகங்கஷ்டங்களோடுந் துன்பங்களோடு மடைந்து, மத்திய சூனியவீஸ்தார ஆகிருதியோடுகூடிய சம்சாரத்தை விவேகிகள் கடப்பதேபோல் யான் கடந்தேன். கடந்துபுகுந்த சோலையானது சம்புகதம்பசாதி அநேக விருக்ஷங்க ணிறைந்து இருண்டு குளிர்ந்து நெறிச்செல்பவர்க்கு நீண்ட உறவினர்போலக் கலகல வெனச் சப்தித்துக்கொண் டிருக்கும் பறவைகள் நிறைந்து விளங்கின. யான் அத்தகைய எலுமிச்சந் தோப்பையடைந்தது, கடல்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து பொங்கும்போது ஸ்ரீ மகாவிஷ்ணு வீற்றிருந்தருளும் விருக்ஷரேஷ்டமான ஆலந்தருவை ஸ்ரீ மார்க்கண் டேயமுனிவர் அடைந்ததேபோலு மிருந்தது. தாபத்தாற் றப்தமான பர்வதத்தினுலே மேகமண்டலம் பற்றப்பெற்றதேபோலப் பெருங்கொம்பிற் பின்னிக்கொண் டிருக்கும் நீலக்கொடி யென்னுல் அசுவபரித்தியாகப் பொருட்டுப் பிடித்துக் கொள்ளப்பட்டது (பெரியோர் கூறியிருத்தல் பற்றிலதையைச் சாகையென்றது.) ஸ்ரீ கங்கையைப் பற்றிக் கொண்டவன் பாவினின்றும் தூஷ்திருத்த தொருதிகளெல்லாம் ஓடிவிடுவதேபோல யான் அக்கொடியைப் பற்றிக்கொண்டவுடனே அக்குதிரையானது என்னைவிட்டோடி விட் டது. " கடவுட்கங்கை நதிப்படி வான்செல்ல வொருவன் கருதுமுனம் இடர்கூர்பாவ மவனே யொழிந்துயாண்டு செலுவோமெனக் கருதும் " என்பது ஸ்ரீகாசிகாண்டம்.

(ச.) குடும்பபாரத்தை = சம்சாரத்தை, பாவம் = பாதகசமூகம். அற்பஜலத்தொடு சொற்பதருத்தலுஞ் சாங்கலம் மூலம்,

(ஸ்ரீ - வீர - அ - கை.) அன்றிரவிற்பட்ட வருத்தயரைக்கூறல்:—கழுத்தென்

கழுத்துறுகொடியாலுசல்போற்றாங்கிக்காவுறைதென்றலாற்குளிர்ந்து
முழுத்திறமோகத்தழுந்திநெஞ்சயர்ந்தேன்முழுக்குநற்பூசணியமம்
விழுத்தகுநல்லுணின்றியேநியாம்வீண்பொழுதணையவப்பொழுதிற்
பழுத்தவல்லிருளுந்துன்பமுங்குளிரும்பல்லறையோசையுந்துணையாய். (1)

(ப - ரை.) கழுத்துறு கொடியால் — கண்டத்திற் பற்றிக்கொண்ட லதையினால், ஊசல்போல் தூங்கி = ஊஞ்சலைப்போல்த் தொங்கி யாடிக்கொண்டு, காவுறை தென்றலாற் குளிர்ந்து = அச்சோலையில் வீசும் தென்றற்காற்றினாலே சீதளத்தையடைந்து, முழுத்திற மோகத்தழுந்தி = அத்தியந்தம் பெருமயக்கத்தில் அமிழ்ந்து, நெஞ்சயர்ந்தேன் = மனமழுங்கினேன், முழுக்கு நற்பூசனை நியமம் = ஸ்நானம் நல்லதேவார்ச்சனை முதலிநியமங்களைச் செய்யாமலும், நல்லுணின்றியே = இராஜபோஜனஞ் செய்யாமலும், நிசியாம் வீண்பொழுதணைய = இரவாகிய வீண்காலம்வந்துற, அப்பொழுதில் = அக்காலத்தில், பழுத்தவல்லிருளும் = காடாந்தகாரமும், துன்பமும் குளிரும் பல் அறையோசையும் துணையாய் = துயரமும் சீதளமும் தந்தபந்திகளின் டங்காரமும் சகாயமாயிருந்தேன்.

(ஸ்ரீ - வீர.) நீண்மார்க்கத்தைக் கடந்துவந்ததனாலே நெடுந்தூர எய்தியுள்ளபரன் ஆண்டவெருநேரம் இளைப்பாறிக்கொண்டிருந்தேன், ஆண்டு மோகத்தின்கண் மூழ்கிக் கிடக்கும் எனக்கு அவ்விரவானது கற்பசீமாகச் சென்றது, ஸ்நானசந்திகளுமில்லை அருச்சனை யாதிகளுமில்லை அக்காற்போஜனமுமில்லை, ஆபத்துக்களின் பாரம் நிறைந்து ஆபத்துடைய ஜனங்களுக்குள் மூதன்மையாக இருந்த எனக்கு அந்த இரவானது கேவலம் வீணாகவே சென்றது, வேதாளங்களினுடைய சிங்கநாதங்கள் ஓய்ந்து கழுதுகண் படுக்கும்பாகாள் வந்ததும் அத்தீர்க்காரண்யத்தில், சீதளத்தினாலே வருத்தப்பட்ட எனது தந்தபந்திகளின் டங்காரங்களும் சீத்காரங்களும், அவற்றினாலே இருட்கூட்டங்களும் ஒருங்குசேர்ந்து அதிதீர்க்கமான அவ்விரவானது கழிந்துகொண்டிருந்தது: சலிக்கமுடியாததான சீதபீடிதங்களாகிய பிராணிகளின் தந்தபந்திகளின் அடிகளாம் டங்கார சீத்காரங்களானே, சீதத்தினுமிருட்டினும் மோகத்தினும் பற்கடகடவென்னும் மூழ்கிக் கிடக்கும் என்னையேபார்த்துச் சிரித்துக்கொண்டிருந்ததுபோலிருந்த பூர்வதிசையை, கட்குடித்தவன் கதவிய கண்ணிருளைக் கடுப்பயான் கண்டனன். அவ்விரவு முழுதும் சிறிதும் நித்திரையே கிடையாது, சிறிதும் தைரியமில்லாமலே கஷ்டத்துடன் இலகலோடு சேர்ந்தசைந்து கொண்டேயிருந்தேன், அச்சார்வரியானது கடக்கமுடியாத அதிநீட்சிபெற்று விட்டதாற் கடப்பது அதிகஷ்டமாயிருந்தது.

(ச.) நிசி = கற்பசமமான இராத்திரி, துன்பமும் = மிருகபக்ஷி சப்தங்களாற் றுன்பமும். மூலம்: ஸ்வாபதாம் துரிதிஷ்டத்வம் = துஷ்டப்பிராணிகளின்முன்னிலையில் இருந்த இதுவே தருவினின்றும் கீழிறங்காமைக்குக் காரணமா மென்றுணர்க. வேட்டையின் மிருந்த ஆபத்தையுடைய ஜந்துசுவாபத், ஆரும்வேற்றுமை, சுவாபதாம்,

(ஸ்ரீ - வீர - அ - கை.) பின்னிவிடியற்றோன்றலும் பகலில் வருந்தியது பற்றிப் பகரல்:—மனவென.

மனத்திருளகற்றுமறிவுபோலந்தவல்லிருளிரவிவந்தகற்றப்
புனைத்தறுகொடியையறுத்தவணிறங்கிப்பொழில்புகுந்தொருவரைக்காணேன்
கனத்ததோர்பகலிலெட்டிலொன்றுனகடிகையங்ககன்றதற்பின்ன
ரினத்தலாலொருத்திதன்னைமுன்னெதிர்ந்தேனிரவினைமதியெதிர்ந்தன்ன. (12)

சித்திர கூடி

(ப - ரை.) மனத்திருளகற்று மறிவுபோல் = இருதய அந்தகாரத்தை நீக்கும் எழி லுணர்வுபோலும், அந்தவல்லிருள் = அக்கொடிய பூதாந்தகாரத்தை, இரவிவந்தகற்ற = சூரியன்வந்து நீக்க, புனைத்துறு கொடியை = வேய்ந்திருந்தலதையை, அறுத்து = சேதித்து, அவணிறங்கி = அவ்விடத்தில் இழிந்து, பொழில்புகுந்து = சோலையிற் பிர வேசித்து, ஒருவரைக்காணேன் = ஒரு பிராணியையும் சந்தித்திலேன், கனத்ததோர் பகலில் = பெருத்ததானதினத்தில், எட்டி லொன்றுனகடிகை = அஷ்டபாககாலம், அங்கு அகன்றதற்பின்னர் = அவண் நீங்கியபின்பு, இனத்தலாள் ஒருத்தி தன்னை = தாழ்ந்தசாதியானமங்கை யொருத்தியை, = முன்னெதிர்ந்தேன் இரவினமதி யெதிர்ந் தன்ன = சந்திரன் இருண்ட இரவைச்சந்தித்ததேபோல யான் அவளைச் சந்தித்தேன்.

(ஸ்ரீ - வீர.) அருணன் ரேருன்றியகணத்தில், அஞ்ஞானீக்குஞானங் கிடைத்ததே போலும் தரித்ரனுக்குத் தங்கக்கட்டி கிடைத்ததேபோலும், கீழ்த்திசையில் ஐராவத மெனப் பெயரியதிக்கஜத்தின் மேற்பாகத்தில் ஆரோகணித்ததிரே ஆகாயத்தில் அருக் கன் வருவதையான் கண்டேன். பின் அந்தவிஸ்தாரமாய ஜங்கிலஸ்தலத்தைச் சுற்றிப் பார்க்க முயன்றேன், அந்த ஜீர்ணமான மகாவனத்தில் ஒருபிராணியுமே காணப்பெற வில்லை; மூர்க்கதேகத்துள்ள இருதயத்தில் குணலேசமும் காணப்பெறுததே போலும் சிறிதும் பயமற்றனவாய, கேவலம் நிஷ்பலவன கண்டப் பிரமணத்தானே ஜாதிக்குரிய சஞ்சல முடையனவாய் பறவைகள்சீசூசீ என்னும் வசனங்களைச் சப்தித்துக்கொண்டு வீளையாடித் திரிவதைக் கண்டேன். சீசீ = சப்தானுகரணம். திவசநாயகன் மூப்பது பாகமுடைய ஆகாயத்தில் எட்டுப்பாகதேசம் வந்தபின், அதாவது 8 நாழிகையானபின், அங்கு சுற்றிக்கொண்டு திரியும் ஒரு கன்னிகையையான் கண்டேன்

(ச.) ஒருத்தி ... பதினுறுவயசுப் பெண்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) நீச கன்னிகையைச் சந்தித்தன்ன பிரத்தலும் அவள் கொ டாமையும்:—கருவென,

கருகியநிறமுங்கருநிறத்துகிலுங்கைத்தலத்தன்னமுமாகி
யருகுவந்துறலும்பசிப்பிணியாற்றுதவளாநான்னமேயுன்னத்
தருதியென்றிரந்தேன்பசியினுலெவர்க்குந்தாழ்வுவந்துறுமெனல்கண்டேன்
வருதவஞ்செயாதோர்விரும்பியபொருட்போன்மற்றவளளித்திலளன்னம்.(13)

(ப - ரை.) கருகியநிறமும் = கறுப்புவன்னமும், கருநிறத்துகிலும் = கறுப்பான அழுக்குப்புடவையும், உடையவளாய், கைத்தலத் தன்னமுமாகி = கரத்திற்கஞ்சிப்பானை யைத் தாங்கினவளாய், அருகுவந்துறலும் = அம்மடந்தை சமீபத்தில் வந்தெய்தலும், பசிப்பிணியாற்றுது = பசிநோய் பொறுக்க முடியாமல், அவளாநான் = அக்குமரியை யான், அன்னமே = அன்னப்பேடு போன்றவளே ! அன்னந்தருதி யென்றிரந்தேன் = இதுதுசோறு கொடுவென்று யாசித்தேன், பசியினுல் எவர்க்குந்தாழ்வு வந்து உறுமெ னல் கண்டேன் = க்ஷுத்பாதையினுலே எத்தகையவர்கட்கும் கட்டம்வந்து கிட்டு மென்பதைக் கண்கூடாகக் கண்டேன், = வருதவஞ்செயாதோர் விரும்பியபொருட் போல் = லாபத்தை யுத்தேசித்து சகாமியதவம் செய்யாதவர் இச்சித்த போக்கியம் போல், மற்றவள் = தாழ்ந்த அந்தக்கறுப்பி, அளித்திலள் அன்னம் = அன்னஞ் சிறி துந்தந்திலள்.

(ஸ்ரீ - வீர.) அக்கன்னிகை கரத்திற்கஞ்சிப் பானையைத் தாங்கி ஒய்யாரமாய் வரு தலை, ஜகன்மோகினி வேடந்தரித்து இனிய அமுதகும்பந் தாங்கிவரும் ஸ்ரீ மகாவிஷ்ணு

வைத்தானவன் கண்டதொப்ப யான்கண்டேன். கருவிழிகளே யுருட்டியுருட்டிப் பார்த்துக்கொண்டும் கறுத்த தேகத்துடனும் அழுக்குக் கிழிந்த சேலையுடனும் வந்த அந்தக் கறுப்பியை, சந்திரன்வந்திரவை யெதிர்ந்ததே போல ஆண்டியான் சந்தித்தேன். அழகு பொருந்திய ஹேமடந்தையே! இந்தப் பலமாயஉயிர்போம் ஆபத்துச் சமயத்தில் என் பொருட்டுச்சிறிது அன்னந்தருவாயாக, தீனர்கட்குற்ற கஷ்டத்தை நீக்குவதானே அளவற்ற சம்பத்துண்டாம் என்றிரந்தேன் = உயிர்நீங்கும் ஆபத்துவரின் எவ்வன்னமும் எற்கலாம்: அவ்வாறே "இதமதாமுயிரே குறவேவரின், விதமதெங்கு மெவ்வன்னமும் வேண்டலாம், பதமெதாலுணினும் மவன்பாவமே, பதுமபத்திர நீரெனப் பற்றுறுன்" எனபிருதியுங் கூறுகின்றது. ஸ்ரீ பாதராயண சூத்திரமும் உளதாம்:—சர்வான்நாநுமதி பிராணுத்யயே தத்தர்சனுத்; பிராண அத்யயே = உயிர்போவதாக ஆபத்துவந்தபோது, சர்வ அந்நம் = கள்ளொழிந்து மற்றெவ்வன்னமும், அநுமதி = அறிஞனுக்கேனும் அறியானுக்கேனும் உண்ணலாமென ஆணையுண்டு, சொஸ்தன் பொருட்டில்லை; என்னே, தத்தர்சனுத் = அது காணப்படுதலின், சாந்தோக்கியத்தில் சாக்கிராயண உபாக்கியானத்தில் உஷஸ்தாகிய சாக்கிராயணருக்கு, ஆபத்துக்காலத்திலேயே கரிகாப்போன உச்சிஷ்டமாய காராமணி பக்ஷணம் காணப்பெறுதலின். கதையிதுவாம்: குருதேசத்தில் வெட்டுக்கிளிகளாற் பயிர்கள் அழிக்கப்பட்டுப் பஞ்சமுண்டாகியபோது பாலையாகிய ஜாயையோடும் முனிவர் தேசாந்தரம்போய் இப்யக்கிராமத்தி லிருந்தார், கரிகாப்போன் பாதியயின்ற காராமணியை வேண்டி வாங்கித்தின்றார், அவ்விப்பியனுல் குடித்தபிச்சஜலங் கொடுக்கும்போது வேண்டாமென்றார், இபக்காப்போன் காராமணி யுதவி நீருதவாதது என்னேயென அன்னும்சத்திற்றான், எனக்காயத்து நீரம்சம் தடாகாதியிலும் கிடைக்கும் அதில் ஆபத்தில்லை யென்றார். உதாந்தின்ற பிச்சத்தை ஜாயைக்குக்கொடுத்தார், ஆபத்தற்ற அவ்வுத்தமி பதியினுபத்தை யெண்ணிக் காராமணியைக் காப்பாற்றிக் காலையில் நாயகனுக்கே தந்தனள். என்பதாம். கிழத்துருமத்தின் பொந்தில் மூட்டையிட்ட கருநாகம்போல அளவில்லாத பசியையுள்ளே யானடைத்துள்ளேன் எனக்குச் சிறிதன்னம் தந்தால் நீ நன்றுக விருத்தியடைவா யென்றேன். சர்ப்பமானது பசியிருதியானே தனது அண்டங்களையும் விழுங்குகின்றது எனப்பசியின், செய்யக்கூடாததையுஞ் செய்விக்குந் தகைமையைக் காட்டற்பொருட்டே விசேடித்ததாம். "மேவரும்பசியனன்மேவுகட்டின்பொருட் டேவர்தாமெங்கே யென்செய்வினைதான்" எனப்பெரியோருங்கூறுவர். வெகுமுயல்வுடன் ஸ்ரீதேவியைப் பிரார்த்தனை செய்தபோதினும் பாவிசட்குத்தனம் இலக்ஷ்மி கொடாததே போல, வெகு பிரார்த்தனை செய்தபோதினும் அக்கன்னிகை ஒரு சிறிதன்னமும் எனக்குக் கொடுக்கவேயில்லை.

(ச.) வருதவஞ் செயாதோர் = பாவிகளுக்கு, விரும்பியபொருட்போல் = யத்தநப்பிரார்த்தனையாலும், இலக்குமி தனங்கொடாததுபோல். எனக்கு.

(ஸ்ரீ - வீர.) நீச கன்னிகையின் செல்வமும் நிச்சயதாம்பூலபலமாக அன்னந்தருதலும்:—சோலையென.

சோலைதோறுழலுமவள்பிறகேகிச்சோருமென்பசித்துயர்சொல்ல
நீலைகின்றுரைப்பாணீசர்கன்னிகையானினக்கெனதன்னமாமென்னின்
மாலையிட்டெங்கள்சேரியிற்பிதாமுன்வந்தெனைப்புணர்தியேலிந்த
வேலையிலளிப்பேனென்றுமியைந்தேன் விருப்பொடுமளித்தனளன்னம்.

உற்பத்திப் பிரகரணம்

திருநாள் முதல்

(ப - ரை.) சோலை தோறுழலும் அவள்பிறகு எகி = சோலையினின்றும் சோலை போய்ச் சஞ்சலித்து மறைந்து வீளையாடித்திரியும் அக்கன்னிகையின் பின்னர்ச்சென்று, சோரும் என்பசித்தியர் சொல்ல = வாட்டும் என்னுடை பசித்துக்கத்தைக் கூறியாசிக்க, நீலகின்று உரைப்பாள் = கழுப்பிசற்று நின்று கழறுவாள், நீசர்கன்னிகையான் = யான் புலையர்தம்மகள், நினக்கு = உனக்கு, எனதன்னம் ஆமென்னின் = என்னுடைய சோற்றுக்கஞ்சி உண்ணலா மென்றால், எங்கள் சேரியில்வந்து = நாங்கள்வாழும் நத்தத்துள் வந்து, பிதாமுன் = என்றந்தை யுத்தரவின் மூலமாக, எனை மாலையிட்டு = என்னை விவாகஞ்செய்துகொண்டு, புணர்தியேல் = என்னேடுகூடி வாழச்சம்மதிப்பையேல், இந்தவேளையில் = இவ்வபாத்தக் காலத்தில், அளிப்பேன் என்றலும் = அன்னந்தரு வேன் என்று கூறுதலும், இயைந்தேன் = சம்மதித்தேன், விருப்பொடும் அளித்தனள் அன்னம் = அன்போடும் அன்னந்தந்தனள். (14)

(ஸ்ரீ - வீர.) கேவலம் நெடும்போது அத்தியந்தம் பின்னொடர்ந்து நிழல்போல மூன்னின்று ஒருவன் கண்டத்தினின்றும் வேறுகண்டத்திலும் ஒருவிருகூசமுதாயத்தினின்றும் மற்றொருதரு சமுதாயத்தும் யான் தொடர்ந்து சென்றவளே யிரந்தேன். அப்போதவள் கூறுவதாவது: ஹேஹார கேயூரியே! என்னேநீர் புருஷ அசுவகஜாதிகளே புண்ணும் சூரரமுடைய ராக்ஷஸிபோலச் சண்டாளப் பெண்ணென அறிந்துகொள்ளுதிர்; ஹாரகேயூரியே யென்றமையானே உத்தமஜாதி சூசனத்தால் எனதன்னம் புசிக்கத்தக்கதன்றும் மென்றுணர்த்தப்பட்டது; ஸ்ரீஆத்ம சுகாகிரியர் ஹாரகேயூரி யென்பதை அவள் பெயராக ஒப்புவர். ஓராஜாவே! வேண்டுதன் மாத்திரையானே என்னிடத்தினின்றும் போஜனத்தை நீயடைய மாட்டாய், வாஞ்சையை நிறைவேற்றுதபோது நரம்பு ஸ்நாயுஸ்ரீ கிரந்தி ஜனங்களிடத்தினின்றும் சுந்தரமான சுஷ்ருதத் தன்மையைப்பெற முடியாதபோலும். இவ்வாறு கூறிக்கொண்டு சிறிது சிறிது சென்றுசென்று வீளையாடி நின்றுநின்று கொடிவீடுகளில் மறைந்துநின்று கனிபொருக்க நுழைத்தும் குன்றிமணி பொருக்கியும் கழுத்திலுள்ள அம்மாலையை வீலக்கி வீலக்கிப்பார்த்தும் தான் கருதியதைக் குறிப்பிக்கும் கடைக்கண்ணைடித்தன் முதலிய சேஷ்டைகளானே யபிநயம் செய்தும் வணக்கத்துடன் நடித்தும் நாணியும் சொல்லுகின்றாள்:—எனக்குக்கணவனாகி யிருப்ப இவ்விடப்பறவையேயாஞல் இவ்வன்னந் தருவேன், சாமானிய லோகமாகிய தனிச்சனமானது நேயமெகிழ்ச்சி யில்லாமல் பொருள்களாலே யுபகரிப்பதில்லை யல்லவா. இவ்விடத்திலுள்ள கோதாரத்தில் என்னுடைய புற்கைப் பிதாமேழியிற் பழகிய எருதுகளைப் பூட்டியுழுதுகொண்டிருக்கின்றான், மயானத்தில் வேதாளம்போலத் தூளியோடு கூடிய உடம்பினனுப்ப பசியோடு மென்னை யெதிர்ப் பார்த்திருப்பன்; அவனுக்காக இவ்வன்னத்தைக் கொண்டுபோகின்றேன் நீ யென்னைக் கல்யாணஞ் செய்துகொள்வதா யிருந்தால் ஈவேன், எனென்றால் மனையியாயிருப்பவள் உயிரைக் கொடுத்தேனும் கணவனைக் காப்பாற்றவேண்டும். பிராணனைப் பார்க்கிலும் கொழுநன்பிகவும் உயர்ந்தவன். இவ்வண்ணம் அவள்சொல்வதைக் கேட்டயான் ஹே நல்லலரித முடைய பெண்ணே! உனக்குயான் பர்த்தாவாக இருக்கின்றேன், யாவர்தாம் ஆபத்துக்காலத்தில் வருணதரும குலமுறைகளை விசாரிப்பார்! என்றபின்னர் அப்பெண்ணைனக்குக் கொண்டுவந்த அன்னத்திற் பாதியைக்களிப்புடன் கொடுத்தாள்; ஜகன்மோகினிவடிவ ஸ்ரீ பகவான் முன் இந்திரனுக்கு அமிருதத்திற்பாதி யளித்தபோது அவன் பேராசைத்தம் அடைந்ததேபோலப் பசியால் வருந்திக்கொண்டிருந்தயான் அவ்வன்னங் கிடைத்தவுடனே யதையமிருதம்போல எண்ணி யளவில்லாத மகிழ்ச்சியை யடைந்தேன்.

(ச.) எகி = நிழல்போற் சென்று.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அன்னமுண்டிஷப்பாதியபின் னருந்தாதைபாற் கொண் டேகல்:—நல்கியென.

நல்கியபாதியன்னமுமருந்திநாவலின்கனிச்சுவைபருகி
யொல்கியதுயர்போயிருத்தலும்புறத்திலுலாவுநல்லுயிரெனவெண்ணப்
புல்கியகரத்தாற்பற்றினள்பிதாமுன்போயினள்யாதனுசரீர
மல்கியபயஞ்செய்நரகிலேகொடுபோய்மறுக்கமேசெய்யுமாறென்ன. (15)

(ப - ரை.) நல்கிய பாதியன்னமும் அருந்தி = அவள் அன்புடன் அளித்தபாதி யன்னத்தையும் புசித்து, நாவலின் கனிச்சுவைபருகி = ஜம்பூபலங்களின் ரசத்தைமாந்தி, ஒல்கியதுயர்போ யிருத்தலும் = பொருந்துறு துன்பம்போ யிளைப்பாறி யிருந்தபோது, புறத்திலுலாவு நல்லுயிரென = பாகியத்திற் சுற்றுகின்ற இனிய பிராணனைப் போல, என்னைப் புல்கியகரத்தாற் பற்றினள் = என்னை அநாசாரம் பொருந்திய கையினாலே பிடித்துக்கொண்டு, பிதாமுன் போயினள் = அவள் தந்தையின் முன்பாகப் போய்ச் சேர்ந்தனள், யாதனுசரீரமல்கிய பயஞ்செய் நரகிலே கொடுபோய் = துயரஞ்செய்யும் பொருட்டு யாதனுசரீரம் கொடுத்து நெருங்கிய அச்சத்தை மிகவும் உண்டாக்கும் நரகத் திற் கொண்டு போய்ப்போட்டு, மறுக்கமே செய்புமா றென்ன = வெந்துயர் தந்துழற் றுவதேபோலு மிருந்தது.

(ஸ்ரீ - வீர.) அந்தச் சபராலயமாகிய புக்கசவீட்டுப் பக்கண அன்னத்தை யின்ப மாய்ப் புசித்தேன் பின், நாவற்பழரசத்தை நன்றாய்க் குடித்தேன் போகநீங்கிய சித்த முடையவனாகி அங்கேயே சிறிதுகோரம் இளைப்பாறினேன். வெளியில் நின்ற பிராண னைப்போலக் கையினாலே பற்றிச் சூரியனை மேகமறைத்ததேபோல மேகமெனக்கறுத்த அம்மங்கை மறைத் தென்னைக் கொண்டுபோனாள். அவளுடனான ஆகிருதியனும், அநாசாரம் நிறைந்தவனும், அதிபயங்கரத்தைத் தருபவனும், பிசப்பருத்தவனும் ஆகிய தந்தையின் முன்பாக யாதனை செய்யும் பொருட்டு நரகத்திற் கொண்டுபோய்ச் சேர்ப் பதேபோலச் சேர்த்தனள்-

(ச.) உயிரென = பிராணனைப்போல்,

(ஸ்ரீ - வீர - அ - கை.) தந்தை சம்மதித்து மணமகனைச் சேரிக்கழைத்துச் செல் லுதல்:—நண்பென.

நண்புறுமிவனென்னையகனக நல்கெனத்தாதையும் பொருந்திப்
பண்புறவிருவர் தமையும் வேதாள பந்தனவனத் தினின்றகன்று
கண்புகத்தோன்றுங் காலதூதரைப்போற் கருநிறத்தவன் கொடுபோகி
யுண்புலால்வீசுஞ் சேரியிலடைந்தா னெருப்படி மணஞ்செய்வானுன்னி.

(ப - ரை.) நண்புறும் இவன் என் நாயகன் ஆக நல்கு என = நேசத்தோடுற்ற இம் மன்னவனை எனது மனைவியாக மணஞ்செய்து வைப்பாயாக வென்று அவள் வேண்ட, தாதையும் பொருந்தி = தந்தையுமிசைந்து, பண்புற இருவர்தமையும் = அன்போடுங் கூட அவ்விரண்டு பேரையும், வேதாளபந்தன வனத்தினின்றகன்று = வேதாள பந்தன மென்னும் அவ்வனத்தினின்றும் புறப்பட்டு, கண்புகத்தோன்றும் காலதூதரைப் போல் = விழிப்புலனுக் கெதிரே புலப்படும் யமகிங்கரரைப்போலும், கருநிறத்தவன் = கறுப்பு வண்ணத்தவன், கொடுபோகி = கொண்டுபோய், உண்புலால் வீசும் = உண்ணு

நின்ற புலால்நாற்றம் வீசும், சேரியில் அடைந்தான் = சேரியிற் சேர்ந்தான், ஒருப் படும் = ஒருமைப்பட்டு வாழும், மணம் செய்வான் உன்னி = விவாகஞ் செய்யும் பொருட்டு உத்தேசித்து.

(ஸ்ரீ - வீர.) என்னே யழைத்துக்கொண்டு சென்ற அப்பெண் தன்னுடைய இவ்விட அருத்தத்தை அம்மாதங்கன் காதுக்குள் ஆண்வண்டின் பக்கஞ்சென்று தொனிசெய்யும் பெண்வண்டுக் குஞ்சுபோலும் மெதுவாயோதினள்; (மாதங்கன் சண்டாளன்) ஹே தந்தையே! இவனை யெனக்குக் கணவனாகத் தங்கட்கிட்ட பிருந்தால் விவாகஞ்செய்து தருவீர்களாக; என்றனள், அதைக்கேட்ட அவனும் அவ்வாறே செய்கின்றேன் என்று கூறிப் பொழுதுபோய்மாலையில் யமன் கிங்கரர்களை விடுவதேபோல எரினின்றும் எருதுகளை யவிழ்த்து விட்டனன். பனிமேகங்களென்னும் சந்தியாப்ரங்கள் கபிலமாக வியாபித்தூறத் திக்குகள் உத்தூளிதமேனி யுற்றதுபோ லாகத்,திகாந்தத்தில் யாங்கள் வேதாளங்கட்கு வாசஸ்தானமாகிய அவ்விடத்தினின்றும் புறப்பட்டோம். ஒரு மயானத்தினின்றும் மற்றொருபெரிய மயானத்திற்கு வேதாளங்கள் செல்வதுபோல அதிவிரைவில் அம்மாலைப்போதில், அந்நீள்வனம் விட்டு புற்கசன் ஆலயமாய பக்கண மடைந்தோம். ஒத்தமணஞ்செய்ய உன்னிக்கொண்டேயடைந்தான், (16)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பறையர்சேரியை வருணித்தலும் விவாகஞ் செய்யத் தொடங்கலும்:—வானரவென.

வானரம் புரவிகுக்குடங் காகம்வராக மென்பனவரிந் தெடுப்ப
வூனரம்புணங்கப் பறவைவீழ்ந் தலைப்பவுலவிய சிறுவர்கைத் தசையி
லீனவீரைப்ப வுதிரமுமென்பு மெல்லியில் சேரியிலெய்திக்
கானரம்பைகளே நாட்டியகுடிலிற் கடிமணந் தொடங்கினர் களிப்பால்.()

(ப - ரை.) வானரம் புரவி குக்குடம் காகம் வராகம் = கபி அசுவம் கோழிவாயசம் பன்றி, என்பன வரிந்தெடுப்ப = என்னும் ஜந்துக்களின் றசையைப்பிரித் தொதுக்குபுற மெடுப்ப, ஊனரம்புணங்க = கறியும்பொருட்டு நரம்புகளிற் கோர்த்துக் கட்டிய தோரணங்களில், பறவை வீழ்ந்தலைப்ப = பருந்து முதலியவை படித்தலைத்துக் கொண்டிருப்ப, உலவிய = விளையாடித்திரியும், சிறுவர் கைத்தசையில் = பாலர்கரத்தில் வைத்திருக்கும் மாம்சத்துண்டத்தில், ஈனவீரைப்ப = தாழ்ந்த வீக்கணங்கள் சப்தமிட, உதிரமும் என்பும் எல்லையில் சேரியிலெய்தி = இரக்தமும் எலும்பும் அளவற்றுமலியும் அந்நீசச்சேரியை யடைந்து, கானரம்பைகளே நாட்டியகுடிலில் = காட்டுவாழைகளே நாட்டிய குடிசைகளில், கடிமணந் தொடங்கினர் களிப்பால் = சந்தோஷத்துடன் விவாகஞ்செய்ய ஆரம்பித்தனர்,

(ஸ்ரீ - வீர) அச்சேரியில் வராக, அசுவகபிகுக்குட, வாயசங்களைக் கத்தரித்து நாஞ்விதமாகத் துண்டித்துக்கொண்டு ஒருபக்கமிருந்தனர். மற்றுஞ் சிலபாகங்களில் இரத்தமானது சிந்தி ஈக்கணங்கள் மொய்த்துச் சத்தித்துக்கொண்டிருந்தன. காயவைத்துச் சரக்காக்கற் பொருட்டு நரம்புகளிற் கோர்த்துப் பரப்பிய மாம்சதுண்டங்கள் நிறைந்த மாலைகள்காயும் வீட்டுவாசல்களில் பருந்து முதலியவை வீழ்ந்தலைத்துக் கொண்டிருந்தன. காரியப்பொருட்டுக் காயவைத்திருக்கும் நரம்புஜாலங்களில் எனினும் அமையும். வீட்டுக் கொல்லைகளிலிருக்கும் பிரகண்டங்கட்கு நோகச் சுற்றிச்சுற்றிப்பறவைகள் தொனிசெய்து கொண்டிருந்தன, பாலஹஸ்தத்திலுள்ள தசைப்பிண்டத்தின் மொய்த்த வீக்கூட்டச்சப்தம் பலபக்கம் ஒலித்தது. இத்தகைய சேரியிலுள்ள எனதுபுதியமாமனார்

வீட்டில் அதிக உதாரசம்பிரம உற்சாக அதிசயத்துடனே வீரிக்கப்பெற்ற ரீண்ட கன்றவாழையிலை யாசனத்தின்மேல் யான் உட்கார்ந் திளைப்பாறினேன்.

(ச.) கானரம்பைகளே நாட்டிய = வனத்துள்ள கதலியிலைகளாற்றூபித்த.

(ஸ்ரீ - வீர - அ - கை) மாமியார் முதலாயினோர் மருகனே மெச்சி விவாகஞ் செய்தல்:—மலினனென.

மலினவூன் றுண்ணுஞ் சிறுகணுலோக்கி மருகனல்ல னவனென மகிழ்ந்தாள்
கலியினுங்கறுத்த கூன்கிழமாமி கடையர்மற்றி யாவருங்கூடி
யொலிபடுபறைகண் முழக்கினர்மதுவு மூன்களுஞ் சமைத்தனரவளே
நலிதருபாவம் யாதனுசரீர நல்குமாறென வவனளித்தான்.

(ப - ரை.) மலினவூன் தின்னும் சிறுகணுல் நோக்கி = மலினமாமிசம் மன்னும் சிறிய விழிகளால் கன்றுகப்பார்த்து, மருகன் நல்லவன் எனமகிழ்ந்தாள் = மருமகன் நம் மகளுக்கேற்ற மன்மதன் என்று சந்தோஷித்தாள், கலியினுங் கறுத்த கூன்கிழமாமி = கலிபுருடனைப் பார்க்கினும் மிகவுங்கறுத்து விற்போல் வளைந்த கிழட்டுமாமியார், கடையர் மற்றியாவருங்கூடி = அவர்தம் முறவினராகிய நீசர்யாவரு மொருங்குகூடி, ஒலிபடு பறைகள் முழக்கினர் = சப்திக்கும்படி தம்பட்டம் முதலவற்றைக் கொட்டினர், மதுவும் ஊன்களுஞ் சமைத்தனர் = கட்சேகரித்து மாமிசம் பலவகையட்டனர், அவளே = அக்கன்னிகையை, நலிதருபாவம் = துயரீயும் அதருமம், யாதனுசரீரம் = துயரருந்துந் தேகத்தை, நல்குமாறென = கொடுப்பதேபோல, அவன் அளித்தான் = அம்மாமன் நல்லோரையிற் கன்னியாதானஞ் செய்தான்.

(ஸ்ரீ - வீர.) எனது மாமியாராகிய கேகராக்ஷியினால் இரக்தமயமானசிறுகண்களாற் பார்க்கப் பெற்றவனுகி இம்மருமகன் மிகவும் நன்றாக இருக்கின்றான் எனச் சன்மானிக்கப்பெற்றேன், அவளும் தன் மகளுக்கேற்ற காளையெனக்கண்டு களித்தனள் மிகவும். அதிகமாகக் கூறுவானேன், மேகங்களின்றி யாகாயந்தெளிவாயிருப்ப நல்ல நக்ஷத்திரத்தில் நல்லதொருதினத்தில், அவ்வச்சண்டாள உற்சவ உசிதமத்தியமாம்சாதி சேகரிக்கும் பெருமுயற்சியோடுங்கூடி அச்சாதிக்கேற்ற சிற்சிறப்புகளாகிய வஸ்திர ஸ்ரீதனமீதன் முதலியவற்றோடும் அம்மாமன் பயத்தைப் பயக்கும் அக்குமாரியை எனக்குக் கன்னியாதானஞ்செய்து கொடுத்தான், அக்கறப்புருவத் தவனுன், அந்நற்கறுப்பியை யெனக்குத் தந்தது பாவமானது துயரின்பொருட்டு யாதனுசரீரம் கொடுத்ததுபோலு மிருந்தது. அந்த விவாக உற்சவத்தில் அந்நாய்க்கறிப்போர் எங்கும் அநேகவிதமான விசேஷ காதங்களைச் செய்தனர், வாத்திவருமாறு கன்னுகளையும் அன்ன சுவாதுரசமாகிய சுராவையும் கரும்பின் சாற்றுரசங்களையும் அளவுக்குமிஞ்சிக் குடித்துவிட்டு மிகவும் மதங்கொண்டு தம்பட்டங்களைக் கொட்டியும் கொம்புகளை யூதியும் குடமுழாமுழக்கியும் கூத்தாடியும், பெரிய பிரஹ்மஹத்தியாதி பாவக்கூட்டங்கள் நேரே ரீசவுருவங்கொண்டு வந்து திரிவதுபோல விலாசவந்தர்களாகத் திரிந்தார்கள் அப்புலையர்கள். ஸ்ரீ கூரசுவாமிகள் சுவாதுர சம்மதிரா வென்றுளார்கள். (ஸ்ரீ)

(ச.) மாமி, இவ்விடத்து வெகுவாகச் சொல்லியென்ன, சிலதினத்தின் பிற்பு.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கலியாணமுடிந்து சாந்தியாகிச் சந்ததி யுண்டாதல்:—கடியவென.

உற்பத்திப் பிரகரணம்

கடியபாதகங்க ளுருவுகொண்டனைய கடையர் கல்யாணநாளேழின்
முடிதலுமவளோ டெண்மதிகழித்தேன் முகிண்மூலி பூத்தவள்வாணாள்
கொடியதோர்விபத்துதருந்துயர்போலோர் குழந்தையை யளிக்கவக்குழந்தை
வடிவறவெந்தகட்டைபோனிறத்துவளர்ந்தது மூர்க்கர்தம்மனம்போல்.

(ப - ரை.) கடியபாதகங்கள் உருவுகொண்டனைய கடையர் = கொடிய பிரஹ்ம ஹத்தியாதி மகாபாதகங்கள் மறுடவடிவங்கொண்டு வந்தனபோன்ற நீசரது, கல்யாண நாள் ஏழில் முடிதலும் = விவாக உற்சவம் ஏழிரவில் முடிந்தபின், அவளோடு எண்மதி கழித்தேன் = அம்மங்கையோடு எட்டுமாதங்கள் செலுத்தினேன், முகிண்மூலிபூத்து அவள் வாழ்நாள்=மூகீள்போன்ற தனங்கள் வாய்ந்த அக்குமரி புஷ்பவதியாகி வாழும் போது, கொடியதோர் விபத்துதருந்துயர்போல் = மிகவுங் கொடிதாகிய ஒரு ஆபத்தானது துயரந் தருவதேபோல, ஓர் குழந்தையை யளிக்க = ஒருபெண் குழவியைப் பிரசவிக்க, அக்குழந்தை = அக்குழவியானது, வடிவற = அழகுசிறிது மில்லாமல், வெந்த கட்டைபோல் நிறத்து = வெந்தவித்த கொள்ளிபோல் மிகக்கறுத்து, வளர்ந்தது மூர்க்கர்தம் மனம்போல் = அம்மூர்க்க நீசரதுமனம் தூலித்து வளர்வதேபோல வளர்ந்தது.

(ஸ்ரீ - வீர.) ஈண்டு வெகுவாகக் கூறியதாலென்னே, உற்சவசகித விவாகத்தானே கல்யாணம்
சித்தமானது வயமாகி அதுமுதலாக ஆண்டுப்பின் புஷ்டபுற்சகன் ஆயினேன், சப்தராத்திரியுற்சவ ஈற்றிலிருந்து மூறையே எட்டுமாதங்கள் சென்றபின்பு அவ்வெனது பார்யை புஷ்பவதி = ருதுமதி ரஜஸ்வலையாயினள், அதன்பின் கருத்தரித்தனள், விபத்தானது துக்கக்கிரியையைத் தருவதேபோலத் துயரந்தருங் கன்னியைப் பெற்றெடுத்தாள், அக்கன்னை மூர்க்க சிந்தையைப்போல மிகப்பருத்து விரைவில் வளர்ந்தனள்.

(ச) ஆனுள் = பின்புகர்ப்பவதியானுள், குழந்தை = பெண்பிள்ளை, வளர்ந்தது = சீக்கிரம் பெருத்து விருத்தியடைந்தது.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சந்தான விருத்தியும் சரைவந்தெய்தலும் உரைத்தல்:— பின்னென.

பின்னர்மூவாண்டிற் பேதைமை யளிக்கும் பிறப்பென வொருமகப்பெற்ற
ளன்னவண்மீட்டு மாசையிற்றோன்று மனர்த்தமே யென்னவோர் குழவி
தன்னையுமளித்தா ளிவளொடுநெடுநாட் டங்கினன் குடும்பபாரத்தி
னின்னலாலுற்றா பத்திலுல்வருந்து மிடும்பையாற் சரைத்ததென் யாக்கை.

(ப - ரை.) பின்னர் மூவாண்டில் = பெண்குழந்தையளித்து மூன்று வருடங் கழித்தபின், பேதைமையளிக்கும் பிறப்பென = அறியாமைதரும் ஜன்மமேபோல, ஒரு மகப்பெற்றாள் = ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தாள், அன்னவள் மீட்டும் ஆசையிற் றோன்றும் அனர்த்தமேயென்ன = அந்த எனதுமனைவி மறுபடியும் ஆசாபாசத்தினாலே தோற்றும் அநர்த்தமேபோல, ஓர் குழவிதன்னையு மளித்தாள் = ஒருகுழந்தையையும் பெற்றாள், இவளொடுநெடுநாள் = இக்குடும்பத்தொடும் நீள்காலம், தங்கினன் = வாழ்ந்தேன், குடும்பபாரத்தின் இன்னலால் = சம்சாரபாரத்தின் துக்கத்தால், அவர்தாபத்தினால் = களத்திரசிந்தையினால், வருந்தும் இடும்பையால் = மிகத்தபிக்கும் மதியுடன் அநேக கஷ்டங்களால், சரைத்ததென் யாக்கை = எனது சரீரமானது சராவஸ்தையையடைந்தது,

(ஸ்ரீ - வீர.) மீண்டும் அம்மங்கை மூன்றுவருடங்கழித்து, தூர்ப்புத்தியானது ஆசை யேயாய பந்தனஹேதுவான பாசத்தை யுண்டாக்கும் அநர்த்தத்தைத் தருவதேபோல அசோபன மைந்தனைத்தந்தனள். மீண்டும் ஒரு பெண்ணைப் பெற்றனள், பின்னரும் ஒருகுழந்தையைத் தந்தனள். யாஞருபெரிய குடும்பியாகி அவ்வனத்திற் கிழப்புற்க ளனுபவிப்பதேபோல, யான் அவளோடுகூட அவ்விடத்தில் அநேகவருடங்களைக் கழித் தேன். சேற்றுக்குட்டையில் கிழ ஆமையானது கிடந்து நீள்காலம் புரண்டுழல்வதே போல அவ்வகாந்தரத்தில் சீதவாத ஆதபக் கிலேசங்களின் வசமாகி அவ்வவ் விருதுக்க ளில் மிகவும் கஷ்டப்பட்டேன். குடும்பசிந்தையினுலே மதம்பண்ணப்பட்டதாய் மிக மிகவும் வெந்துகொண் டிருக்கும் மதியினுலே யான் மிகக்கஷ்டத்துடன் தொடங்கிய தொழில்க ணிறைந்த திசைகளை மிக மிகவும் ஜொலிப்பனவாகக் கண்டேன்.

(ச.) இன்னலால் = சீதவாத ஆதபக் கிலேசவசத்தால், அவர் தாபத்தினுல் = களத்திரசிந்தையா லடிபட்டுப் புத்தி தபிப்பதனுல், வருந்து மிடும்பையால் = அதிகட்ட வாரம்பத்தால்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மழையின்றித் தூர்ப்பிஷ்டம் மூண்டாகிக் கிளைஞர் யாவரும் பிரிதல்:—வெம்பென.

வெம்புறு மூப்பான் மெலியுநாளந்த விந்தவெற் பருகுறுசாரற்
பைம்புயன் மறுத்து மண்ணினீர்சுண்டிப்பசியினு லுயிரெலாம்பதைப்பக்
கொம்பொடு கொடியும்புல்லும் வெந்தெங்குங் கோடையாற் பொடிபடவரலு
மெம்புதுக்கிளைஞ ரிறந்தவ ரநேக ரெங்கணு மேகின ரநேகர்.

(ப - ரை.) வெம்புறு மூப்பான் = தாபங்களாற்றபிக்கும் ஜரையினுலே, மெலியு நாள் = வாடுங்காலத்தில், அந்த விந்தவெற்பு அருகுறுசாரல் = அவ்விந்தியாசலத் தருகேயிருக்கும் பொழில்களில், பைம்புயல் மறுத்து மண்ணில் நீர்சுண்டி = கார்மேகங் கள் பொழியாம லொழியவே பிருதிவியிற் சலமற்பமுமிலாது வறண்டு, பசியினுல் உயி ரெலாம் பதைப்ப = க்ஷுத்பாதையினுலே பிராணிகளெல்லாம் தடுமாற்ற மடைந்து தபிப்ப, கொம்பொடு கொடியும் புல்லும் வெந்து = சாகாபலலதை திருணுதியாவும் கருகி, எங்குங் கோடையால் பொடிபட வரலும் = மிகுந்த தாபத்தினுலே தூள்தூளாகப் போய்ப் பஞ்சமுண்டாதலும், எம்புதுக்கிளைஞர் = எனது ஸ்வீநஉறவினர், இறந்தவர் அநேகர் = பலபேர் உயிர்துறந்தனர், எங்கணும் எகினர் அநேகர் = பலபேர் பல இடங்கட்கும் ஓடிப்பிழைத்தனர்.

(ஸ்ரீ - வீர.) இங்ஙனங் காலங்கழிய ஆண்டு ஜரையினுலே ஜர்ஜரிதமாகிக் கிழ அவஸ்தையெய்த, பனியினுன் மூடப்பட்ட புற்கூட்டம்போல மீசைதாடிக ளெல்லாம் வெளுத்து நிறைய; முகத்திலுற்ற ரோமங்களெல்லாம், திருணத்தினின்று மூண்டாய அக்னியிச் சுவாலையானது சுவேதமா யிருப்பதேபோல வெள்ளியநிற மூற்றன. அக்கால் அவ்விடத்தில் புன்முதலியவை யாவுங்காய்ந்து தீய்ந்து மகத்தாகிய பஞ்சமான துண்டா யது. அதுகாலத்தில் துர்ப்பிக்ஷமான துண்டாகி மரணமேற் பட்டதனுல் அதிக்குரோதி கள் நிறைந்த அந்தச் சண்டாள மண்டலமானது குலவுற்றலந்தது. மேகமண்டலங்கள் சிறிதும் பெய்யாமையின் அகாலத்தில் மரணத்தினுலே பரலோககமனம் உறுமாறு மஞ் சம் உற்றது, சண்டாஞ் சண்டாள மண்டலம் நிறைந்த விந்தியபர்வதத்தின் நீர்வளம் நிறைந்த பிரதேசமானது புல் அண்ணத்தோடு புனல் இலையெல்லா மில்லாமல் வெம்பி

யலுவுற்றது. அந்நீசக்கூட்டம் விந்தியச்சமென்னும் வேறுதேசத்தை நோக்கியோடியது மழைபொழியாமையினாலே என்கண்காணவே வெகுஜனம் மடிந்துபோயது வஸ்திரத்தினாலே வடிகட்டி யெடுத்ததேபோலச் சூக்குமத்தினும் அதிசூக்குமமாகிய தீக்கணங்களோடுகூடி வெம்பிய வாயுவானது வீசிக்கொண்டிருந்தது. அகாலத்திலுற்றது அவ்வதிபயங்கரமானபஞ்சம், அடக்கமுடியாததான வன அக்கினியானது ஆகாயமளாவி யெழுந்தது, அவ்வாரண்யம் முழுதும் ஒன்றுமில்லாமற் போயது, புல் கொடி கல் முதலியயாவுமே வெறுஞ்சாம்பலாய்ப் போயது. அப்போது, அவ்விடத்தில் அறைந்த வண்ணம் பாக்கியம் விபரீதமுற்றுத் தெய்வம் பிரதிகூலமாகத் திரும்பக் கஷ்டங்கள் வளர்ந்து விருத்தியானபோது, அகாலத்திலே அதிதீப்தமான பிரளயமான தண்டாகி யத்தியந்தம் பெருர்தாபத்தைத்தரும் அவ்வேளையில், சிலஜனங்கள் தங்கள் மனைவி மக்களோடும் உறவின்ரோடும் வெளிப்போந்து, விண்ணினின்றுஞ் சற்காலத்தில் மேகங்கள் போல வேறுவேறு தேசங்கட்கு ஓடினர்கள்; தேக அவயவங்கள்போல விடக்கூடாத வர்களாய புத்திரதார பந்துக்களுடன்கூடி யங்கேயே சிலர் வெட்டுப்பட்டவனவிருக்ஷங்கள்போல அழிந்தனர் சிலர் மிகவுஞ் சொலித்தெரியாதின்ற அக்கினியில் விட்டில் பூச்சிகள்போல வீழ்ந்திறந்தனர், சிலர் படுகுழியில் மலையினின்றும் நழுவிய ஜீவகள்போல வீழ்ந்து பதைத்தனர். சிலர் மூர்ச்சையடைந்து கிடந்தனர்.

(ச.) வெம்புறும் = பேராசையாலுதித்துச் சுடுஞ் சுவாலையால் வாடும், மெலியும் காள் = ஓளைப்புறும்போது நான் அஸ்திரஜீவியா யிருக்கும் காலத்தென்பது பொருள். பஞ்சப்ப, அநவசரத்தின் மரணநிமித்தம் அதிமுயற்சியுற, யாவும் = பஞ்சம்வர, இறந்தவர் அநேகர் = காட்டுக்கினீபில வீழ்ந்தும், கிணற்றில் வீழ்ந்தும், மூர்ச்சையடைந்தும், மடிந்தனர். பொருள்கள் கணிகமாயின தங்குதடையில்லாத தாவாநலமும் பெருங் கஷ்டமும் பெருகியது.

(ஸ்ரீ-வீர - அ-கை.) தான்செய்ததையும் தாலவிருக்ஷ கிழற்சென்று இளைப்பாறியதையும் கூறல்,—தனையென.

தனையரிலிருவர் தோள்களி லிருப்பத் தலையின்மீ தொருவனைத்தாங்கி
மனைவியோடேகி மெய்யெரி கொளுத்தமாய்வுற தந்தநாடகன்றேர்ர்
பனையடிநிழலின் மைந்தரையிறக்கிப் பதைப்பொரு சிறிதொழிந் திருந்தேன்
வினைநரகேறிப் பழவினையோடே மேவிய இன்பம தென்ன.

(ப - ரை.) தனையரில் இருவர் = குழந்தைகளுள் இரண்டு, தோள்களிலிருப்ப = இரண்டு தோட்பக்கங்களிலு மிருந்துகொள்ள, தலையின்மீ தொருவனைத்தாங்கி = சிரத்தினிடத்தே யொருபையனைத் தூக்கிக்கொண்டு, மனையியோடேகி = களத்திரத்தோடுஞ்சென்று, மெய்யெரிகொளுத்த = தேகத்தில் தாகமிருதியும் வியாபிக்க, மாய்வுறுதல் = சாவுறுமல், அந்தநாடகன்று = அந்தத்தேசத் தெல்லைகடந்து, ஓர்பனையடி நிழலில் மைந்தரையிறக்கி = ஒரு பனைமரத்தினது சாயையில் குழந்தைகளைக் கீழேவிட்டு, பதைப்பு ஒருசிறிது ஒழிந்திருந்தேன் = அற்பநேரம் இளைப்பாறி யிருந்தேன், வினைநரகேறிப் பழவினையோடே மேவிய இன்பமதென்ன = பாபத்தாலே ரௌரவத்தில் வீழ்ந்து வருந்தி வெளிப்போந்து நரகசேடபாவகருமத்தோடு மறுபிறப்புற்றடைந்துள்ள அற்பசுகம்போலும்.

(ஸ்ரீ - வீர.) யாஞ்ஞ மாமனுர் முதலிஞ்ஞரை விட்டொழித்து, என்ஞேடுகூட வரச் சமர்த்தை யாயிராகின்ற களத்திரமாத்திரத்தை யழைத்துக்கொண்டு மிருந்த உபத்திர

வத்தோடு கூடிய அத்தேயத்தினின்றுங் கட்டப்பட்டு வெளியேறினேன். மனோவீமக்களோடும் அத்தேச எல்லைகடந்து ஆண்டு தால தருத்தலத்தில், நாஞவிதமான பெரும் பெரும் அரத்தங்களை இறக்கிவிடுவதேபோல, தோள்களினின்றும் சுதர்களை இறக்கிவிட்டேன். பின் ரௌரவத்தினின்றும் இளம்பியவன் சிறிது இளைப்பாறியதேபோல நெடுநேரம் இளைப்பாறினேன்.

(ச.) நரகு = ரௌரவத்தினின்றும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மனவிகளைத்தத் துயில இலையவன் இடர்ப்படுத்தப் பொறுக்க முடியாது அக்கினி பாய்ந்ததைக் கூறி யரசன்கதையை யுபசங்கரித்தல்:— வளை—இட்டமென.

வளைதருமூப்பால் வழிவருந்துயரான் மைந்தர்க ளிருவரை யணைக்கக்
களைகொலோ துயிலோசாய்ந் தனன்மனவி கண்டுளங்கரைந்து நானிருந்தே
னிளையவன் றுயிலா தென்மடியேறி யிருந்துநீர் சொரிதரவழுது
விளைபசியாற்றே னுதிரமுமூனும் வேண்டுமிப்போது தாவென்ன. (23)

இட்டமாமிளவலென் னெதிர்பதைப்ப வென்செயலேது மற்றுயிர்போய்க்
கட்டைபோலிருந்தேன் விடாதவனழுத கண்ணினீர் கண்டறக்கரைந்து
மட்டிவன்வாரா னென்றுயிர் விடுவாண்வனக் கனல்வளர்த்ததில் வீழக்
கிட்டிநின்றுகைத் தேனித்தவா சன்தின்கீழ்வுற வீழ்வுமளவில். (24)

(ப - ரை) வளைதருமூப்பால் = வியாபித்துள்ள கிழத்தன்மையானும், வழிவருந் துயரால் = வெகுதூரம் நடந்துவந்த தக்கத்தானும், மைந்தர்க ளிருவரையணைக்க = இருபாலகரை யணைத்ததும், களைகோலோ = ஆயாசமோ, துயிலோ = நித்திரையோ, சாய்ந்தனள் மனவி = கீழ்படித்தனள் சண்டாள கன்யை, கண்டுளம் கரைந்து யானிருந்தேன் = அதனைப்பார்த்து மனமுருகி யான் கவலைப்பட்டிருந்தேன், இளையவன்றுயிலாது என்மடியேறி யிருந்து = கடையனுகிய பிருச்சகன் என்னும் தநயன் தூங்காது எனதுமடிமீது எறிநின்றுகொண்டு, நீர்சொரிதர அழுது = கண்ணீர்பெருக ரோதனஞ் செய்து, விளைபசியாற்றேன் = உண்டாகா நின்றபசிபொறுக்க முடியவில்லை, உதிரமும் ஊனும் = இரத்தமும் மாமிசமும், வேண்டுமிப்போது தாவென்ன = உண்பதற்கு வேண்டும் இப்போதே தருதியென்றுகூறி, இட்டமாம் இளவல் என்னெதிர்பதைப்ப = மிகவும் பிரியனான கடைக்குட்டி என் எதிரில் நின்றுகத்தித்துள்ள, என்செயலேது மற்று = யாதொரு உபாயமும் செய்யமுடியாதவனுய், உயிர்போய்க் கட்டைபோ லிருந்தேன் = உயிர்சென்று விட்டதேபோலக் காஷ்டம்போலிருந்தேன், விடாதவன் அழுத கண்ணின் நீர்கண்டு அறக்கரைந்து = ஓயாமல் அக்குழந்தை ரோதனஞ்செய்த விழிகளினீரைப்பார்த்து அத்தியந்தம் பரிதாபத்தை யடைந்து, மட்டிவன்வாரான் என்று = எவ்வளவுசொன்ன போதினும் இவன் அடங்கமாட்டான் கத்திச்சாவான் என்று, உயிர்விடுவான் = பிராணத்தியாகஞ் செய்துகொள்ளும் பொருட்டு, வனக்கனல் வளர்த்ததில் வீழ = காட்டக்கினியை யுண்டாக்கி அதன்கண் வீழும்பொருட்டு, கிட்டிநின்றுகைத் தேன் = அதனருகாமையினின்று குதிக்கும் முயற்சியைச் செய்தேன், இந்த ஆசனத்தின் கீழ்வுற வீழ்வுறும் அளவில் = இச்சிங்காதனத்தி னின்றும் பூமியிற் பதனமாதற் குரியவளும்போது.

(ஸ்ரீ - வீர.) பின் அச்சண்டாள கன்யை அத்தருத்தலத்தில் விசிராந்தியடைந்து, தேளச்சாயையில் இருகுழந்தைகளை யினிதுற ஆலிங்கனஞ் செய்துகொண்டு நித்திரை

போயினள். அத்தியந்தம் எங்களுக்குப் பிரியனும் கடைக்குழந்தையாயும் அறியாதவனும் தழுதழுத்த வசனமும் இனியவசனமும் உடையவனும் இராகின்ற பிருச்சகன் என்னும் குமரன் என்முன்பே நின்றுகொண்டு மிகவுந்தீனனும் விழிகளில் நீரைப்பெருக்கியவனும் என்னை நோக்கிக் கூறுவதாவது. ஓ அப்பா! எனக்குச் சீக்கிரம் தின்ன மாமிசமும் குடிக்க இரக்தமும் கணத்திற் கொடுப்பாயாக, அந்தப்பாலகனுகிய என்றனயன் மீண்டுமீண்டும் இதனையே கூறிக்கொண்டு மரணவஸ்தையை யடைந்தனன், பசியினுலே கோவென்றலறி மீளவும் ஓலமிட்டான். அவனுடைய அந்தக் கஷ்டத்தைக் கண்ணுற்பார்த்துப் பொறுக்க முடியாத பெருங் கஷ்டத்தை யடைந்தனன், அத்தீவிரமான ஆபத்தைச் சகிப்பதற்கு முடியாமல் மதிமுதலியவை ஹதமுடையவனுகி, அக்காலத்திற் குசிதபந்துவாகிய மரணத்தின் பொருட்டு உண்ணிச்சயத்தை யடைந்தேன். ஆண்டு கிடந்த காஷ்டங்களைக் கொணர்ந்து பெருஞ்சிதையை யடுக்கியுண்டாக்கினேன், அச்சிதையானது சடசடவெனச் சப்தித்துக்கொண்டு என்னுடைய இஷ்டம்போல ஒங்கியெரிந்தது. அச்சிதையின் கண்ணே யென்னை வீழ்த்தும்பொருட்டு வேகமாகக் குதிக்க முயன்ற அளவில், அரசனுகியயான் இச்சிங்காதனத்தினின்றும் மிகச் சலிதனுய்க் கீழ் விழப்போனேன்.

(ச.) என்ன = என்று மாறிமாறிக் (கேழ்க்த, கேட்க, என்செயலேதுமற்று = துக்கமிகுதியால் அடிபட்ட மனதுடைய என்னுற்றீவிரமான அவ்வாபத்தை நீக்குதற்குச்சக்தியின்றி, உயிர்போய் = மூர்ச்சித்து, மட்டிவன் வாரான் என்று = இவ்வேளையிவன் ஜீவியானென்று சிந்தித்து, இந்தவாசனத்தின் = சிம்மாசனத்திருந்து.

(ஸ்ரீ - வீர - அ - ங்க.) மன்னவன் மயக்கந்தீர்ந்தெழுந்ததும் அதனலுண்டாகிய விவேகமும் உரைத்தல்,—தாங்கென.

தாங்கினீர் பலருஞ்சயசய வென்னத் தாக்குறு பல்லியமுழக்க
வீங்குணர் வுற்றேனீசனன் முகிலவணனு மன்னவ னுனேன்
நீங்குறுசித்தன் செயலின்மோ கித்தேன் சீவனுக்கவத்தைக ளநேகம்
பாங்குறவுள வென்றறிந்தன னென்று பகர்வுழி யொளித்தனன் சித்தன்.

(ப - ரை.) தாங்கினீர் பலரும் = அநேகர் என்னை விழாமற் பிடித்துக்கொண்டீர், சயசயவென்ன தாக்குறு பல்லிய முழக்க = ஜயஜயவென்று நீங்களுரைத்த சப்தத்தானும் தூர்யமுதலிய வாத்தியங்களைக் கோஷித்ததானும், ஈங்குணர்வுற்றேன் = இவ்விடத்திற் பிரஞ்ஞையை யடைந்தேன், நீசனன்முகி = தீக்குருத்த புற்சனல்லனுகி, லவணனும் மன்னவன் ஆனேன் = லவணமகா ராஜாவாயினேன், நீங்குறு சித்தன்செயலின் மோகித்தேன் = தீதைத்தோற்று விக்கும் சாம்பரிகனது மாயச்செய்கையினல் மிகவும் மோகத்தை யடைந்தேன், சீவனுக்கவத்தைகள் அநேகம் = ஜீவனுக்கு அவத்தைகள் அளவில்லன, பாங்குறவுளவென் றறிந்தனன் = அஞ்ஞானத்தினும் திரமாகவிருக்கின்றனவென்று தெரிந்து கொண்டேன், என்று பகர்வுழி = என இவ்வண்ணம் கூறியபோது, ஒளித்தனன் சித்தன் = சித்தன் மறைந்து விட்டனன்.

(ஸ்ரீ - வீர) அதன்பின் தூர்ய நிநாதத்தானும் ஜயசப்தத்தானும் உணர்த்தப் பெற்றேன், இவ்வண்ணம் இவ்விந்திரஜாலிகனல் இம்மோகம் எனக்குண்டாக்கப் பெற்றது, அஞ்ஞானத்தினல் ஜீவனுக்குத் தசைகள் நூற்றுக்கணக்காய் நன்றுகவுறுவன போலும். மிகுந்த தேஜசோடுகூடிய ராஜேந்திரனுகிய லவணன் இவ்வண்ணம் கூறியபோது ஆண்டு விரைவில் அச்சாம்பரிகன் ககனத்தில் மறைந்துபோய்விட்டான்.

(ச.) அவத்தைகள் = அஞ்ஞானத்திலுலேயே தசைகள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சித்தன் காட்டியமாயச் செயற்கு மந்திரிமார் கருத்துரைத்தல்:—இருந்தென.

இருந்தமந்திரிகள் சித்தனின்றிவனென் றேறற்றிலனிமைப் பினுண்மறைந்தான்
பொருந்தியவுலக மனவிரிவென்றே புலப்படக் காட்டுவான் விடுத்த
திருந்தியதெய்வ மாயையீதாகுஞ் செப்புமிச் செயலிலுற்றீரப்
பெருந்தகைபரத்தின் விகாரமே மனமாம் பேருலகென்றன ரென்றான்.

(ப - ரை.) இருந்த மந்திரிகள் = அவ்வவையின் மாட்டு வீற்றிருந்த அமைச்சர்கள், சித்தனன்றிவன் = இவன் இந்திரஜாலக்காரன் அல்லன், ஒன்றேற்றிலன் = ஒருவெகு மதியும் வேண்டிலன், இமைப்பினுண் மறைந்தான் = நொடியில் அந்தர்த்தான மாயினன், பொருந்தியவுலகம் = தோற்றுகின்ற ஜகத்தானது, மனவிரிவென்றே = மநோவிலாசமாத்திர மென்றே, புலப்பட = தெளிவுறும்படி, காட்டுவான் = தெரிவிக்கும் பொருட்டு, விடுத்த = ஏவிய, திருந்திய தெய்வமாயை யீதாகும் = எல்லாவல்லமையுமுள்ள தெய்வசம் பந்தமான மகாமாயையே யாமிது, செப்புமிச் செயலிலுல் = சொல்லாநின்ற இந்தச் செய்கையிலுல், தீரப்பெருந்தகை பரத்தின் = சர்வசக்தியையுமுடைய அநந்தமாய பூர்ண பிரஹ்மத்தினது, விகாரமே மனமாம் பேருலகு = விலாசமே மனம் மனோவிருத்தியே பெரியவுலகம், என்றனர் = என்றிவ் வண்ணம் அமைச்சர் அறைந்தனர், என்றான் = என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் ஸ்ரீ இரகுநந்தனனை நோக்கிக் கூறினன்.

(ஸ்ரீ - வீர.) ஆண்டுற்ற அமைச்சர் முதலிய அவையோர் விஸ்மயத்தானே விரிவுற்ற விலோசனராய் இவ்வாறியம்பினர்: போதேவ ! இவன் சாம்பரிகனல்லன், இவன்றனத் தையொரு சிறிதும் வாஞ்சிக்கவில்லை யல்லவா ! மற்றோ, சமுசாரத்தின் நிலைநித்தகை யது என இலக்குவித்தலினுனே தேவதைகளால் அனுக்கிரகத்தின் பொருட்டு ஏவப் பட்ட மகாமாயையிது ஒன்று என்றுதெரிதல் வேண்டும். இதனுலே, இச்சமுசாரமானது, மநோவிவர்த்தமெனப் புலப்படாநிற்கும் சர்வசக்தியையுடைய மகாவிஷ்ணுவின் விலாசமே மனஞ்சகத்தாம்; மனமேயுலகாம்; ஜகத்திற்கு மநோவச்சின்ன சைதன்ய விவர்த்தத்தன்மை யுண்மையின் மனஞ் சகத்தெனச் சாமானாதிகரண்யம் பொருத்த முடைத்தேயாம்.

(ச.) இருந்த மந்திரிகள் = அமைச்சரோ டிருந்த அவையோர், அரசனை நோக்கி, சித்தனன்றிவ னென்றலும், ஸ்ரீ வசிட்டர் இமைப்பினில் மறைந்தான், அந்தர்த்தான மாயினன், தனவிச்சையின் மையின் சித்தனன்று, பரத்தின் = சர்வசக்தியுடைய அநந்த மானபிர்மத்தினது, மனம் = மனத்தின், விகாரமேஉ விலாசமே, பேருலகா மென்றன ரென்றான் என்பதன்னுவயம். (பெருந்தகை யரசனெனினும் அமையும்) (26)

சித்தன் கதை முற்றிற்று. அ க வீருத்தம் (445)
(பதிப்பித்தது)

உற்பத்திப் பிரகரண இதோபதேசம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) இங்ஙனம் ஞான ஆக்கியானங்களானே பரமான்ம ஆசிரய ரீயா லிவர்த்சபூத மநோலிலாச வடிவமாயதுவைத அநர்த்த சமூதாயம்பொய், அதன திஷ்டான பிரஹ்மாத்ம தத்துவமேமெய், எனப் பிரதிபாதிக்கப் பட்டது இப்போது இவ்வண்ணம் இயம்பியதான். உற்பன்ன மாயினும் பிரஹ்மாத்ம தத்வப்பிரதீதி மனத்தின், ஒருமையில்லாமையின் அதிநபவமுடிவு பேறுடையதாக வாகாதாம், ஆகலின் சித்த வொருமையின் சித்தியின் பொருட்டு அதனது பாகியுவிருத்தி நிரோதம் செய்யத்தக்கது என்பதாக ஆங்காங் குறிவித்திருந்த போதினும், ஈண்டுச் சிறப்பாக அறிவிக்கும்பொ ருட்டுக் கூறுகின்றார்:—ஆயமனத்தென:

(ச.) மூன் சித்தன்கதையிற்றன் சங்கற்பத்தால் அற்பகாலத்திற்றானே அநேகவரு டம் மனதிற்குச் சம்சாரஞ் சொல்லப்பட்டது, அஃதெங்ஙனமென் றுகாஞ்சைவரின் அதனைச் சாதிக்குமிபித்தம் மனச்சாமர்த்தியம் இதிற்சொல்லப்படுகின்றது:—ஆயவென.

ஆயமனத்தின் செயல்செயலா மதனலொழிந்த தொழிந்துளதா
மேயமனத்தினலே வொழித்தோர் மிகவுநல்ல தியானத்தோர்
தூயமனமாயிடில் வெற்பாற் சூழலாக்கடல்போற் பிறப்பிறப்பா
மாயைமயக்கங் கெடுமென்ன வசிட்டன்மீண்டு முரைசெய்வான்.

(ப - ரை.) மனத்தின் ஆயசெயல் = மனத்தினல்யாது ஆற்றப்பெற்றதோ அதுவே, செயலாம் = ஆற்றப்பெற்றதாம், அதனலொழிந்தது ஒழிந்துளதாம் = மனதினலே யாது தியாகிக்கப் பெற்றதோ அது தியாகிக்கப் பெற்றதேயாம், மேயமனத்தின் அலே வொழித்தோர் = வாசனேவசமாகப் பொருந்திய மனத்தினது சஞ்சலத்தைக் கெடுத் தவர், மிகவு நல்லதியானத்தோர் = உத்தமோத்தமமான தியானமுடையவர், தூயமன மாயிடில் = மனத்தினது சஞ்சல நீக்கத்தால், வெற்பாற் சூழலாக்கடல்போல் = மந்தர மலேயால் அசைவுறுத பாற்கடல்போல், பிறப்பிறப்பா மாயைமயக்கங் கெடுமென்ன = சம்சாரவிப்பிரம சாந்தியுண்டா மென்றுரைத்து, வசிட்டன் மீண்டும் உரைசெய்வான் = ஸ்ரீ வசிட்டபகவான் மீளவும் பகருவாராயினர்.

(ஸ்ரீ - வீர.) உலகினும் வெளியல்லவோ இது! யாதுமனத்தாற் செய்யப்பெற்றதோ அது செய்யப்பெற்ற தென்றும், யாதுமனத்தால் விடப்பெற்றதோ அத்தினேயானே யது விடப்பெற்றதென்றும். ஹே அநக இராகவ நீயுணர்தி! ஸ்தம்பனஸ்திரம் செய்த கட்டிலகப்பட்டுப் பகைவன் அசையாம லிருப்பதேபோல எவனது உத்தமமான மனமா னது அசையாம லிருக்கின்றதோ அவனே பரமார்த்தமாகப் புருடனெனப் படுவன், மற் றையரோ சேற்றுப் புழுக்களாவர். எவனதுமனம் சபலத்தன்மையை விட்டுவிட்டதோ, ஓரிடத்தில் நிலேபெற்றதோ, தியானமாகிய ஹேதுவினலே அம்மனம் அநித்தமபதத் தோடு ஒற்றுமையுற்றதாய்ப் பிரஹ்ம சொரூபமாகவே நிகழும். அலேவொழிவு = அசப லத்தகைமை = அசஞ்சலத் தகைமை, அதனது தத்துவ மியாதெனின் ? சங்கற்பாதி வர்ஜித மென்பதாம். இவ்வதிகாரி, சர்வோத்தம உபாயத்தானே, சித்தத்தின் சின்மாத் திர சேடத்தன்மை வடிவத்தியானத்தோடு சேர்ந்து வாழ்ந்திடுவன்; ஆகலின் பெரும் பயனுண்மையானே மனத்தின் அசாபல்யம் சம்பாதிக்கத் தக்கதாம். அற்றேல் தியான

பலத்தானும் மனத்தினது சாபல்யத்தானே சமுசாரத்தான் முழுகுவிற்கு ஆவதென்னே யெனின் ஆண்டியம்பல், தூயவென மனத்தினது சம்யமத்தாற் சமுசாரமயக்கம் சாந்தியையடையும், மந்தரபர்வதம் அசையாதபோது க்ஷீரமகர்ணம் போலுமென்பதாம்.

(ச,) மனத்தின் = மனதினுல், ஆயசெயல் = யாதுசெய்யப்பட்டதோ, செயலாம் = அதுவே செய்யப்பட்டதாம், அதனுல் = மனதினுல், ஒழிந்தது = எது விடுபட்டதோ, ஒழிந்ததாம் = அது எப்போதும் விடுபட்டதாம், என்று புண்ணிய சொரூபமான இராமா நீயறி; செயல் செயலின்மைகளுக்கு மனச்செயலானே பிராதான்யம் அல்லாமல் சரீரச் செயல்களாகப் பிராதான்யம் இன்றென்பது பொருள். மேயதியானத்தோர் = சங்கற்பாதிரகிதமாய் நித்தியமான (கதசாபல) மனதே உத்தமபதமான தியானமென்பது பொருள். வெற்பாற் சுழலாக்கடல்போல் = மந்தரபருவதம் நிச்சலமாயின் க்ஷீரம கார்ணவஞ் சாந்தியாவதுபோல், மாயைமயக்கங்கெடும் = சமுசாரப் பிரமைசாந்தியாம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) சப்தாதி யாகாரங்கள் வாய்ந்த சித்தவிருத்திகட்குச் சமுசார சம்பந்தமான தேகசதஹேதுத் தன்மையினிது புலப்படுத்தும் வாயிலாக அதனது நிரோத உபாயங்கூறல்:—தளையாவென.

தளையாநிற்கும் பலபோகச் சங்கற்பஞ் சேர்மனவிருத்தி
மூளையால்வளரு மாமாயைமோக மென்னு நச்சுமரம்
விளையாநின்ற மனநோய்க்கு மேலோர் விதித்தபரிகார
மிளையாதெளிதா யதனுலே யியற்றலாகு மிதுகேட்பாய். (2)

(ப - ரை.) தளையாநிற்கும் பலபோகச் சங்கற்பஞ்சேர் மனவிருத்தி மூளையால் = பந்திக்கும் போகசங்கற்ப விப்ரமங்களா (விகற்பங்கள்) லே விருத்திகளேயாய அங்குரபந்திகளால், வளரும்மாமாயை மோகமென்னு நச்சுமரம் = விருத்தியாகி யோங்கும் சம்சாரவிஷவிருக்ஷங்கள், விளையாநின்ற மனநோய்க்கு = உண்டாகாநின்ற இச்சித்தமகா வியாதிக்கு, மேலோர் விதித்தபரிகாரம் = சிகிச்சைசெய்வதில் மகாஜ்ஞர்கள் நியமித்த அருமருந்து, இளையாது எளிதாயது தனுலே யியற்றலாகும் = இனிது நிச்சயிக்கப் பெற்றது சுலபமாகச் சாதிக்கப்பெறுவது மற்றொருவரது அபேக்ஷையின்றித் தன்னுனே செய்து கொள்ளத்தக்கது, ஆகிய இது கேட்பாய் = அவ்விது தன்னைக் கூறக்கேட்குதி.

(ஸ்ரீ - வீர.) போகங்கள் விடயசங்கற்பங்கள் என்பனவேயாய விப்பிரமங்களாமேதக்களானே யுண்டாகாநின்ற சப்தாதி விருத்திகளுஞ் சப்தாதி விடயங்களுமே, சமுசார விஷவிருக்ஷங்கட்கு அங்குர வரிசைகளாம். இச்சித்த மகாவியாதிக்குச்சிகித்சை செய்வதின்பர ஔஷதம் உளது கூறக் கேட்பாயாக = ஔஷதத்தின் பரத்தன்மையையே சாதிக்கின்றூர். இளையாதென்பதாதியால். உலகிற் சிறிதெளடதம் சகாயமின்றித் தன்னுனே சாதிக்க முடியாதாம், இஃதங்ஙன மல்லவென்பார் தன்னுலே யியற்றலாகுமென்றூர். சுவாயத்தம் = சுவாதீனம் = தன்னுனே சாதிக்கத்தக்கது என்பதாம். சுவாதீனமாயினும் சிறிது துயருற்றுச் சம்பாதிப்பதாகும், இஃதங்ஙன மல்லவென்பார், எளிதாயதென்றூர். சுசாத்யம், சுவாதீனமும் சுசாத்யமும் ஆயினும் உபயோக காலத்தில் சிறிதெளடதம், சுசுவாதீ ஆவதின்றும், இஃதத்தகையது அல்லவென்பார், இளையாதென்றூர். இத்தன்மைய இனிதாயினும் சிறிது ஔடதம் பிறழ்ந்தபயனதாம், இஃதன்னை மல்லவென்பார். இளையாதென்றூர். நிச்சயிக்கப் பெற்றது = பலத்தானே நிர்ணயிக்கப்பெற்றது; அவசியம் சாதிக்கும் புருடார்த்தத்தை யென்பதாம்.

(ச.) பலபோகச் சங்கற்பஞ்சேர் = நாநாபோகங்களின் சங்கற்பங்களின் விலாசத் தோடுகூடிய, மனவிருத்தி முளையால் = மனதின் விருத்திகளாகிய அங்குரபந்திகளால்; வளரும் = வளராநிற்கும், மர்மாயையோக மென்னு நச்சுமரம் = மகத்தான சம்சாரப் பிரமையென்னும் விடவிருக்ஷங்கள், விஷயாதின்ற மனநோய்க்கு = விஷத்திற்குக் காரண மாய் நின்ற சித்த மகா வியாதிக்கு, மேலோர் விதித்த = சாதுக்கள் நிச்சயித்து நியமித்த, பரிகாரம் = சிகித்ஸை உளது, இயற்றலாகுமிது = சாத்தியமான பரம அவுடதத்தை, கேட்பாய்யீன் கூற இராமா நீ கேட்பாய். அல்லது, போகம் = போகங்களின் எழும், சங்கற்பஞ்சேர் = சங்கற்பங்களின் விலாசத்தோடு கூடிய, மனோவிருத்தி = மனதின் விருத்திகளே, முளையாய், மரம் = சம்சாரவிட விருக்ஷங்களுக்கு அங்குரபந்திகளாம். சிகித்ஸையில் இயற்றலாகுமிது எனச்சிறிது விகற்பித்துணர்க.

(ஸ்ரீ - வீர - அ - கை,) உள்ளாசை விடயத்தையும் வெளிவிடயத்தையும் விட்டுத் தொலைத்து, தன்னுன்மமாத்திர ஆகாரவிருத்தி தாரைவடிவமான புருடப்பிரயத்தினத்தி னுனே விரைவில் தன்னுனே சித்த வேதாளத்தைச் செயிக்கவேண்டும், ஆண்டு இஷ் டத்தியாகம் பிரதம பீடிகையுதிதிடஞ் செய்தல் வேண்டுமென்னுங் கருத்தாலுரைக்கின் றார்:—மிகவென.

மிகமாலுறுபல் பொருள்களையு மேவாதொழித் தோர்மனம் வென்றோர்
சுகமாயெளிதாய்த் தனக்குரித்தாந் துயர்தீர் நிராசையறி வரியோர்
சகமார்மனிதப் புழுவொப்பார் சான்றோருரைத்த நூற்பழகி
யகமாநினைவுதீர் மனத்தாலயரு மனதைத் திருப்பிடலாம். (3)

(ப - ரை.) மிகமாலுறு பல்பொருள் களையும் = பேராசைக்கு விஷயீபூதமான பல பொருள்களையும், மேவாதொழித்தோர் = பற்றுது விட்டவர்கள், மனம்வென்றோர் = சித்தத்தைச் செயித்தவராவர், சுகமாய் எளிதாய் தனக்குரித்தாம், = இன்பமாய்ச் சுலப மாய்த் தனததினமாய், துயர்தீர் நிராசையறிவரியோர் = துன்பந்துடைக்கும் நியாக வுணர்வானது யாவருக்கு முடியாததாமோ, சகமார்மனிதப் புழுவொப்பார் = அவர் உலகத்தி லிகழத்தக்க புருடகீடமாவர், சான்றோருரைத்த நூற்பழகி = பெரியோர் பேசிய சாஸ்திரங்களையப்யசித்து, அகமாநினைவு தீர்மனத்தால் = நானென்றெழும் எண் ணந்தீர்ந்த மனத்தினுலே, அயருமனதைத் திருப்பிடலாம் = விடயங்களின் மயங்கும் மனதைவயப்படுத்தலாம்.

(ஸ்ரீ - வீர.) இஷ்டமான வஸ்துவை விட்டொழித்து யாவன் பச்சாத்தாப மில்லாத வனுய் இராகாதி சித்தரோக சூனியனு யிருக்கின்றனனே, அவன்பாகிய விடயங்களில் மனத்தைச் சஞ்சரிக்க விடாதவனுப்த் தந்தமற்ற யானையைத் தந்தமுற்றயானை வெற்றி கொள்வதேபோல, மனத்தை வெற்றிகொண்டவனே யாவன் இஷ்டவிடயத் தியாகத் தில் மிகவும் உற்சாகமுண்டாதற் பொருட்டு அதனைச்செய்யாத அவிரக்தரை நிந்திப்பார் மனிதப்புழுவொப்பா ரென்றார். தனததினமாய், நியமமாக ஹிதமாய், ஒருபோதினும் அஹிதமற்றதாயிலகும் தனதிஷ்ட விடயத்தியாகமேயாயவேதனம் (வேதன உபாயத் தன்மையானே) தனதிஷ்டத்தின்றியாக விடயகமாய வேதனம் அதாவது வைராக்கிய விருத்தி, யாவனுக்குச் செய்யமுடியாததாமோ அப்புருடகீடம் நீயென் றிகழத்தக்கதே யாம். இட்டவத்துத் தியாகமென்பது ஜய உபாயமேலாயின் அத்தியாகத்திற்கு உபாயம் யாதோ எனின் ? உரைப்பார்: சான்றோர். சாதுமகாசங்கத்தை யடைந்து அத்தியாத்ம சாஸ்திர சிரவணநிதிதிசெய்த தீக்ஷணதீரமாகிய சாந்தமனத்தினுலே சிந்தையுற்று வெம் பும்மனத்தைத் திருத்திவிடலாம்.

(ச.) மால் = இட்டம், விரும்பாதொழித்தோர் = விட்டு ஸ்மரியாதிருப்போர், மனம்வென்றோர் = நிராமயராம், பகிர்முகப் பிரவிருத்தியை விட்டவரால் மனஞ்சயிக்கப்பட்டதேயாம், இஷ்டவஸ்துத் தியாகமான மனதால் பகிர்முகப் பிரவிருத்தி நிவிருத்திக்குமென்பது பொருள். தனக்குரித்தாய் = சுவாதீனமாய், எளிதாய் = ஏகாந்தமாய், சுகமாய் = இதமாகிய, துயர்தீர் நிராசையறிவரியோர் = தனது இஷ்டத்தியாக பாவனமும் எவர்க்குச் செய்தற்கு அசக்கியமோ அவர், மனிதபுழு = மனுடகீடமாம், ஒப்பார் = சமத்துவநிறைந்த, சான்றோருரைத்த, நூல்பழகி = சாஸ்திரசற்சங்கமங்களால் விவேகமுற்றதாய், அகமாநினைவுதீர் = அதனாலே சுத்தாபரகிதமான, மனத்தால் = மனதினாலேயே, அயருமனதை = சாம்சாரிக சிந்தைகளால் தபிக்கும் மனதை திருப்பிடலாம் = மனனகீலனே நிஷேதிப்பாய் மனோவிருத்தியிவ் விடத்துமன மெனப்பட்டது. அசக்கியமோ அவரை மனிதப்புழுவொப்பார் = புருடகீடக மென்று நிந்திக்கலாம் என்பது பாடபேதமாம். (3)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அத்திருத்தத்தையே திருஷ்டாந்த பூர்வகமாகத் தெளிவித்துத் தன்னு லியற்றலாம் சிறப்புகளையே வற்புறுத்தல்:—இரும்பென.

இரும்பாலிரும் புதிருந்துவபோ லியற்று மனத்தான் மனந்திருந்துந்
திரும்பாநிராசை வடிவாகிச் செறியுந் தன்னு லியற்றுவதாய்
விரும்பா நின்றோர்க் கெளிதான வெய்யமனத்தி னுபசாந்தி
பெரும்பாரந்தீர் நற்கதியாம் பிறிதோர் கதியு நன்றுகா.

(ப - ரை.) இரும்பால் இரும்பு திருந்துவபோல் = தண்மையுற்ற அயத்தினுலே வெம்மையுற்ற அயம்திருத்தப் படுவதேபோல, இயற்று மனத்தால் மனந்திருந்தும் = சத்வாசனு விசிஷ்டமனத்தினுலே சாந்த மில்லாத மனதுதிருத்தப்பெறும், திரும்பா நிராசைவடிவாகி = மாறுபடாத வைராக்கிய வுருவமாய், செறியுந்தன்னு லியற்றுவதாய் முயலாநின்றதனது முயற்சியினுனே சாதிக்கத் தக்கதாய், விரும்பாநின்றோர்க்கு எளிதான = பேராநந்தத்தை வாஞ்சிப்பவர்கட்கு அதிசுலபமான, வெய்யமனத்தின் உபசாந்தி = மலினவாசனு விசிஷ்டமனத்தினது பரமசாந்தியானது, பெரும்பாரந்தீர் நற்கதியாம் — பெரியசமுசார பாரத்தைத் தீர்க்கும் சுபகதியாம், பிறிதோர் கதியும் நன்றுகா = மற்றெக்கதியும் நலமுடையதாகாது,

[ஸ்ரீ-வீர.) எங்ஙனம் கொல்லன் அக்கினியிற் காயவைத்த இரும்பை, அதன்மாறுய சம்ஸ்திரசம்பந்தியாம் பாஷாணதிகளின் சங்கம ஆதாரத்தான் வெட்டும் ஆற்றலுற்ற இரும்பால் வெட்டுவானே (திருத்துவானே) அங்ஙனம், யோக சூக்ஷமசிந்தைகளினுனே தபித்துக்கொண் டிருக்கும் அவிவேகமனத்தை, சிந்தைகளானே கலங்காமலிருக்கும் விவேகசாலி மனத்தானே சேதிப்பாயாக; சிந்தாகுலவடிவமாய பேராழலில் மிகமிகவும் அழற்றப்பெற்ற மனோரூப இரும்பை, தாபங்களெல்லாம் சாந்தியடைந்த மனமேயாய இரும்பினுலே(சாதனத்தினுலே)சேதிக்குதி யென்பதாம். மனோநிக்கிரக மில்லாமலும் புருடார்த்தப் பிராப்தியை யாசங்கித்துக் கூறுகின்றார்:—திரும்பா தனதுபுருடப்பிரயத்தனமாத்திரத்தினுலே சாதிக்கத்தக்கதாய், தனதிஷ்டவத்துத் தியாகரூபமாய், உள்ள மனப்பிரசாந்தி மாத்திரத்தா னல்லாமல் சுபகதியில்லையாம். தனதிட்டவத்துத் தியாக சாத்தியத் தன்மையுண்மையின், உபசாரமாகத் தனதிஷ்ட வத்துத் தியாகரூபம் என்றதாம்.

(ச.) இரும்பால் = காய்ச்சாத அயத்தால், இரும்பு = காய்ச்சியவயம், நிராசைவடி வாகி = தன திஷ்டத் தியாகரூபமாய், இயற்றுவதாய்=சாத்தியமாய், நற்கதி= சுபகதி, இஷ்டத்தியாகமே மநோபசாந்தி அதுவே சுபகதியென்பது பொருள். (4)

(ஸ்ரீ-வீர-அ-கை.) அச்சுபகதியானது யாதுகொலாமாலோ வெனின் ஓதல்.— வாவென.

வாவுமனத்தையசங்கற்பவாளாலறுக்கினிறைந்தெங்கு
மியாவுமதுவாம்பொருடோன்றுமிந்தவழிகின்றறிவாலே
மேவுமனதைவிழுங்கியதின்மேலாமாயாவிகற்பமெலா
மோவுமதியாலறிவுகடந்துளத்தைவிழுங்கும்பொருளுணர்வாய். (5)

(ப - ரை.) வாவுமனத்தை =விடயங்களைச் சங்கற்பித்துக் கொண்டிருக்குஞ் சித் தத்தை, அசங்கற்பவாளால் = அசங்கற்ப மென்னுஞ் சஸ்திரத்தால், அறுக்கின் = சின் னஞ்செய்யின், நிறைந்தெங்கு மியாவுமது வாம்பொரு டோன்றும் =சர்வகதமாய்ச் சர்வ மாய்ச் சாந்தமாய பிரஹ்மத்தை யடையலாம், இந்தவழி நின்று = இம்மகாபதவியில் நிலைத்து நின்று, அறிவாலே மேவுமனதை விழுங்கி = சித்தத்தைச் சிற்பகுதிமாக்கி, அதின்மேலா=சித்தத்தினு மேலான, பொருளாதி, மாயாவிகற்பமெலாம் ஓவுமதியால்= பவபாவனையினின்றும் விடுபட்ட பரமதியினாலே, அறிவுகடந்து = எண்ணங்கடீர்ந்து உளத்தை விழுங்கும் பொருள் உணர்வாய் = மனோசாக்ஷியாய நிருபாதிக ஆன்மசைதன் யத்தை நின்வடிவமாகச் சாக்ஷாத் கரிப்பாய்.

(ஸ்ரீ - வீர.) சோபன அசோபன அத்தியாச வடிவசங்கற்பன அபாவமாகிய அசங் கற்பனமேயாய சஸ்திரத்தாற் சின்னப்பட்ட சித்தம் மூலத்தோடுகூட எக்காலழிவுற்ற தாமோ, அக்கால் எங்குமுள்ளதாயும் எல்லா மானதாயும், சாந்தமாயும் இலங்கும்பிரஹ்ம சொரூபமடையப் பெறும் சங்கற்ப சப்தத்தானே சாற்றப்பெற்ற சோபன அசோபன அத்தியா சங்களானே விருப்பு வெறுப்புகள் உண்டாவனவாம், அதனைவிடின் அவை வியோயா வாகலின் சித்தஞ்செயிக்கப் பெற்றதேயாம், எனக்கருதியே அசங்கற்பனமே சஸ்திரமென வறையப்பெற்றதா மென்றறிக. மநோநிக்கிரக மில்லாமற் சுபகதியானது இலதாமாதலின் அதன்பொருட்டு அதன் நிக்கிரகம் செய்யத்தக்கதா மென்பார்: இந்த வழி நின்றென்னூர். அல்லது அசித்தத்தன்மையைச் சம்பாதிப்பதில் யாதுகொல்லுபாய மெனின் அதனைக்கூறல்; இந்தவழி யென்பதாம். சித்தத்தை நெடுங்காலம், அத்விதீய மாய் வாக்கு மனத்துக் கெட்டாததாய அம்மகா பதவியாம் பிரஹ்மரூபத் தன்மையை யடையும்படி செய்வித்து முடிவிற் சாக்ஷாத்கார விருத்தியாவிர்ப்பூத சித்தால் மனத் தோடு அவித்தையின் பாதத்தானே சித்சகிதமாக்கிச் சித்தத்தினும் பரமானபூர்ணசின் மாத்திர ரூபமாயாவாய். எம்மகா பதவியின்பால் அநந்தஜீவர் ஒரேபோதில் யாதொரு பாதமுமில்லாமல் சஞ்சரிப்பாரோ, தருக்கிக்க முடியாததான அதன் மாட்டுறுதியாயுற்று வாழ்தி = அதன் கண்ணே சுவசொரூபமாக மனத்தைத் தரித்திருத்தி யென்பதாம், சித்சகிதமாக்கி = சிந்தாகுலத்தாற் பீடையுற்ற சித்தத்தைச் சின்மாத்திர சேடமாக்கி யென்பதாம். ஆண்டு முதலிற் சின்மாத்திர பாவனையோடு கூடினவன் ஆதி, அது நிரமு றற்பொருட்டு அதி சாவதானமான புத்தியோடு கூடினவன் ஆவாய், பின் உளத்தை விழுங்குதி. பின் சித்தத்தினுற்பரமாய ஆத்மாவை யொருமையோ டுற்றவனுய் ஸ்தாபிப் பாயாக, மற்றொன்றையும் நிலைபெறுத்தாதொழிதி. பரபாவாயாமுக்த: என்றும் பாடம், ஆண்டு ஆத்ம ரூபம்சித்தத்தைப் பிரஹ்மத்தின் கண்ணே தரிப்பாயாக, அதன் பின் சித் தம் சிந்தையோடு கூடியதாம் இதனை மூலமனுசரித்துணர்க

(ச.) அசங்கற்பவாளால் = சங்கற்பங்களின் உதயமின்மையே வாளாம் அதனால், எங்குநிறைந்து = சர்வகதமாய், யாவுமதுவாம் = சர்வான் மகமான, பொருள் = சாந்த மாகிய பிரஹ்மம், தோன்றும் = சங்கற்ப நாசத்தான் மனோ நாசமாம்போது பிரஹ்மம் பிரகாசிக்கு மென்பதாம். இந்தவழி நின்று = பரிபூர்ண பிரஹ்மதிருஷ்டியே மகாபதவி யாம் அதனை வெகுகாலம் பாவிப்பவனு யிருந்து, அறிவாலே மேவுமனத்தை விழுங்கி, சித்துரூபமான பிரஹ்மத்திற் சித்தத்தையடக்கி, அதின்மேலா = சித்தத்தின் மேலான வஸ்து ஆவாயென்பது பொருள். மாயாவிகற்மெலா மோவுமதியால் = பவபாவனையொ ழிந்தபரம புத்தியால், அறிவுகடந்து = சித்தத்திற்கு மேலாய், உளத்தை விழுங்கும் பொருள் = சித்தோபாதி ரகிதமான ஆன்மாவை, உணர்வாய். (5)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மனத்தைவெல்ல அதிமுயற்சி செய்யவேண்டு மென்றும், வென்றால் இன்னபயனென்றும் வெல்லுதற் குபாயமும் கூறல்:—வருந்தியெனः

வருந்திமுயன் றுமனந்தன்னை மாற்றியில்லையுண்டென்ன
திருந்தபதத்திலிருந்திடுவாயிடர்தீர்செல்வமிடரின்றிப்
பொருந்தவேண்டுமனம்வென்றுற்புவனமூன்றுந்தரும்பாகுந்
திருந்தவினிதென்றனவெல்லாந்தீதாய்தோன்றின்மனமாளும்.

(ப - ரை.) வருந்தி முயன்று மனந்தன்னைமாற்றி = பரமபௌருஷத்தைப்பற்றிச் சித்தத்தைச் சித்த மில்லாததாகச் செய்து, இல்லை உண்டு என்னுதிருந்த பதத்திலிருந்திடுவாய் = நீயும் மற்றொன்றும் இல்லாததாயிலகும் அம்மகாபதவியி லுபஸ்திதி பெறுவாய், இடர்தீர் செல்வம் இடரின்றிப் பொருந்த வேண்டும் = கலங்காதிருத்தல் அயோத்தி ஸ்ரீயின் மூலமாம் கலங்காமலே முயன்றடைய வேண்டும், மனம்வென்றுற் புவனமூன்றும் தருபாகும் = சித்தத்தை வெற்றிகொண்டால் மூப்புவனத்தையும் வெற்றிகொள்வது திருணமொப்பாம், திருந்த இனிதென்றன வெல்லாம் = மிகவும் நல்லதெனத் தோற்றுவனயாவும், தீதாய்த்தோன்றின் மனம்மாளும் = அத்தியந்தம் ஜனன ஏதுவாகவே புலப்படுமானால் (மோக்ஷனையை வளர்த்தலானே) உள்ளம் ஒழியும்.

(ஸ்ரீ - வீர.) மேலான புருடப் பிரயத்தினத்தைக் கொண்டு, சித்தத்தைச் சங்கற்ப விகற்பவடிவ மற்றதாகச் செய்வித்து, மநுடன்யான் இன்னுமகன், கருத்தாபோக்தா வென அபிமானிக்கும் நீயில்லாததும், உன்னினும் அன்னிய மாயவுகமும் இல்லாததும், ஆகிய அவ்வத்விதீய பிரஹ்மமென பெயரிய பெரிய பதவியை அடைந்து வாழ்தி; அதனை யடைந்தால் அழிவென்று மில்லை. இன்றளவும் மநோஜயம் சித்திக்கவில்லை, விசேஷமானது அதன்வெற்றியைக் கெடுத்துக்கொண் டிருத்தலின், மநோவெற்றியில் முயன்றுகொண் டிருப்பவன் அதனைச் செய்யாதொழிக வேண்டினால்: இடர்தீர், நீள்காலம் மநோநிக்கிரகத்திற் பிரவிருத்தித்துக் கொண்டிருப்பவன் மநோலயமிதுவரை கிடைத்திலதே யெனக்கலக்கமுற்று, அதனுனேனும் முயல்வை விட்டுவிடக் கூடாது என அதில் உற்சாகம் அதிகரிக்கக் கூறல்: இடர்தீர். கலங்காது முயல்வதே இராஜ்யாதி சம்பத்தின் மூலமாம், விசேஷமிடையி லடையாமற் சாவதானமாய் முயலவேண்டு மென்பதாம். இது திருஷ்டாந்தப் பொருட்டாம், கலக்கமுறுமல் பொறுமையுடன் ஒருமையுடன் முயன்றால் மநோஜயம் அவசியஞ் சித்திக்கும் அதிகாரிக்கென்றுணர்க. இதனை ஸ்ரீபகவானும் பகர்ந்தருளி யுள்ளார்:—"வஞ்சர்வேல்கொடு மார்பி னெறியினு, மெஞ்சவேதழன் மூடியெரியினு, நஞ்சிஞ்சீழுகலியினு, மஞ்சிடாரது வாநந்தமாவதே, போகமாய புலன்களைப் போக்கறுத், தாகமாமெய்யறி விடையேயந்த,

யேகமாய மனத்தினைமெல்லவே, யேகமாகவிருத்திகலாது நீ." எம்மநோ வெற்றியானே மும்மையுலக ஜீஜயமும் திருணம்போலு மிலங்கித்தோன்றும். வெளியே வீளையாடிக் கொண்டிருத்தலே சித்தத்திற்கு இயற்கையாதலின் ஆத்மத்தியானமே சம்பவியாதா மெனின் ? கூறல்:—திருந்தவென்பது. தோற்றுமாத்திரத்தில் இரம்மியங்களாகிய விட யங்களில் தோஷ அநுசந்தானத்தானே அரம்மியத் தன்மைத் தரிசனநம்மூதலில் தேடத்தக்கதா மெனல்:—திருந்தவென்பது விவேகியாகிய உன்னுல் இரமணீயமான வஸ்து, அரமணீயமதாக, மலினமதாக வுணரப்பெறுமாயின், நல்லது நல்லது என்று கவர்ந்த யாவற்றையும் நீயது நீயது எனக் கவருதியேலாயின்; ஆசைக்கு மூலமாக யெழாநின்ற விஷயங்களில் இரமணீயத் தன்மை யத்தியாசத்தின் நீக்கத்தானே ஆசைநீக்க முண்டாதலின் சித்தத்தின் அவயவங்களாகிய விருத்திகள் சேதிக்கப்பெற் றனவே யாமென்பது எமதபிப்பிராயமாம்.

(ச.) வருந்தி முயன்று = இயமநியமாதிரூபமான யத்தன வீசேடத்தை ஆசை யித்து, மனந்தன்னை = சித்தத்தை, மாற்றி = சங்கற்பாதி ரகிதமாக்கி, இல்லையுண் டென்னுது = அபாவதிருவஷ்டியும் பேததிருவஷ்டியும் அற்ற, இருந்த பதத்திலிருந்திடு வாய் = மகாசத்தையைப் பொருந்துவாய் இடர்தீர்செல்வம் = தைரியமே செல்வ ஹேதுவாம், இடரின்றி = தைரியத்தினுலேயே, பொருந்த வேண்டும் = மனோஜய மாம், மனம்வென்றால் = மனோஜயத்தால், புவனமூன்றும் = திரிலோக விஜயமும், தரும்பாரும் = திருணம்போற் சுகமாய்ப் பெறப்படுமென்பது பொருள்; திருந்தவினி தென்றன வெல்லாம் = இரம்மியமானவஸ்து, நீதாய்த்தோன்றின் = அரம்மியமுடைய தாய் நின்னுற் பாவிக்கப்படுமாயின் அப்போதே, மனமாளும் = சித்தத்தினுங்கள், சேதிக்கப்பட்டவைகளாம், சின்னங்களாம் என்றெமது மதமென்பது பொருள். (6)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மநோவிலயமாத்திரத்தானே விசோந்தியான துண்டாமா தலின் மீளவும் மநோநிக்கிரக வுபாயத்தையே வற்புறுத்தல்:—சித்தவென.

சித்தவிண்ணிற்றிகழறிவாந்தியானத்தாலேயறிவென்னு
மொத்தபடையாலேயமறவுளத்தையறுப்பாயறுத்ததற்பின்
மெத்துதுயர்போமவனிவனுன்மேவுமென்னதுவிதுவாய்
வைத்தவிவையேமனமிதனைமறப்பாம்வாளாலறுத்திடுவாய்.

[ப-ரை.] சித்த வீண்ணில் திகழ் அறிவாம் தியானத்தாலே = இருதயாகாயத்தில் விளங்கா நின்ற சித்தாந்தி யானத்தினுலே, அறிவென்னும் ஒத்தபடையால் = பகையைக் கெடுக்கமகா ஆற்றலுற்ற சித்சக்ரதாரையினுலே, ஐயமற உளத்தை யறுப்பாய் = சங்கை யில்லாமல் மனத்தை வெட்டித்தள்ளுதி, அறுத்ததற்பின் = மாய்த்ததன் பின்னர், மெத்து துயர்போம் = துன்புறுத்திக் கொண்டிருந்த ஆதிகள் துன்புறுத்தமாட்டா, அவன் இவன், நான்மேவு மென்னது அது இதுவாய்வைத்த வீவையேமனம் = அவன் இவன் அகம்மம அது வீது என்பதான எண்ணங்களே யடைந்துகொண் டிருப்பதே மன மாம், இதனை மறப்பாம்வாளால் அறுத்திடுவாய் = இம்மனத்தினை அவ்வெண்ணங்களே யாற்றுதிருக்கும் கட்கத்தினுலே சேதித்துத் தள்ளுவாய்,

(ஸ்ரீ - வீர.) இருதயாகாசத்தில் அந்தக்கரண வீருத்திகளின் பாவ அபாவங்கட்கும் சந்திக்கும் சாக்ஷியாகப் பிரதீதி யாகாநின்ற சித்வீடயகத் தியானத்தினுலே பிரவிருத் திப்பிக்கப்பட்ட ஞானசக்கிர தாரையினுலே மனத்தை மாய்ப்பாய். அத்தியந்தம் விஸ் தீர்ணமாய இருதயா காயத்தில்சுகராகாசரூபப் பிரஹ்மசித்தில் அர்த்திய வீருத்தி யென்

ணும் அகண்டப் பிரஹ்மாகார வீருத்தியி லிலக்கும் அறிவுவடிவமான சக்திரப்படையின் கூர்மை அக்கிரபாகத்தால் மநத்தைமடியப் பொடிப்பாய் நீ இது விடயத்தில் யாதொரு ஆலோசனையும் வேண்டாம்; பின்னுன்னே மாநசதுக்கங்க ளென்னும் ஆதிகள் பந்தனப்படுத்த மாட்டா. முன் அசங்கற்பன சஸ்திரத்தானே சின்னமென்னயாது ஓதப் பெற்றதோ, அதனே மனச்சொரூபங் கூறும்வாயிலாகவிஸ்தரித்தல்,—அவனிவன் என்பது. மணதின் சேதிக்கத் தக்கனவாய் அங்கங்களே யறைந்து, சரீரத்தைச் சாற்றல்:—அவனிவன் என்பது: காணப்பெற்ற, தந்தை முதலியோரான் உண்டாக்கப் பெற்றிருக்கும் அவ்வித்தேக மியானெனவும், முன்னர்த்தந்தை யாதியோராற் சம்பாதிக்கப் பெற்றுள்ள இத்தேகசம் பந்தி கிருகக்கிராம க்ஷேத்திராதி என்னுடைய தெனவும், எழாநின்ற எம்மையுளவோ, அவ்வளவு மாத்திரமே சரீரமாகவுடையது மனமாம். இவன்யாஞ யிருக்கின்றேன் அவன் யாஞயிருக்கின்றேன் என்பன அபிஞ்ஞை பிரத்யபிஞ்ஞைகளாம், இது வென்னும் சமீப வஸ்து, அது வென்னும் சேய்மைப்பொருள் இடையிலுள்ளது, என்னுபிவை என்னுடை யன, என்பது மாத்திரமாய பரிமாணம் மனமெனப்படும், சங்கற்பத்தியாக மென்னும் அசங்கற்பமாத்திரமாகிய அரிவாளால் [சேதனசாதனத்தால்] அம்மனம் நன்ருகச் சேதிக்கப்படும்.

(ச) சித்த வீண்ணில் = இருதயாகாசத்தில், திகழ், அறிவு தியானத்தாலேயாம்; ஆன்மத்தியானத்தினுலே பிரகாசியா நின்ற, அறிவென்னும் ஒத்தபடையால் = சித்தே ஒப்பமுள்ள சக்காயுதமாம் யாவையும் பரிச்சேதஞ் செய்யும் எதுவாதலின், அச்சாத னத்தால், ஐயமற = சங்கையைவிட்டு, உளத்தையறுப்பாய் = ஆண்மாவின் கண்ணே யொடுக்குவாய், அறுத்ததற்பின் = அங்ஙன மொடுக்கின், மெத்து துயர்போம் = ஆதி கள் நின்னைப் பந்தியாதனவா மென்பது பொருள், இவனவனுன் = இவனுன் அவனுன் என்ன திதுவதுவாம் = இஃதெனது அஃதெனதாம், வைத்தவிவையே = என்னும் சமீபதூர விஷயங்களான அகமமாபிமாணங்களே, மனம் = அகங்கார மமகாரங்களே மநோவியாபாரங்க ளென்பது பொருள், மறப்பாம் வாளால் = வாட்கொப்பான அகந் தைமமதைகளின் அபாவனையினுலே, இதனே யறுத்திடுவாய், மனதலயிக்கு மென்பது பொருள் திகழறிவாந் தியானத்தாலே = சித்துரூபமான ஆத்மத் தியானத்தால் பாட பேதம், பரிச்சேத மென்பது பிரிவு இன்மை நீக்கம். (7)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மனமிறந்தால் இடரில்லையென்று உரைத்தல்:—பெருகவென

பெருகத்திரண்டமுகிலெல்லாம்பெருங்காற்றுலேயொருவுதல்போல்
வருகற்பனைநாசத்தாலேமனம்போயிறக்குமனமிறந்தாற்
பொருகற்பாந்தமாருதமும்பொங்குகடலும்புவியனைத்து
முருகச்சுடுபன்னிருகதிருமொருகால்வரினுமிடருண்டோ. (8)

(ப - ரை.) பெருகத்திரண்ட முகில் எல்லாம் = விஸ்தாரமாகச சூழ்ந்து நிற்கும் மேகமண்டலங்கள் யாவும், பெருங்காற்றுலே யொருவுதல் போல் = பிரசண்டவாதத்தி னுலே சிதறியோடிப் போவதேபோல, வருகற்பனை நாசத்தாலே = வாசனையின் வய மாக எழுந்துவரும் எண்ணங்களின் அழிவு பாட்டினுலே, மனம்போயிறக்கும் = மனமா னது நசித்துப்போம், மனமிறந்தால் = சித்தானது சாவுற்றுல், பொருகற்பாந்த மாருத மும் = யாவற்றையு மழிக்கும் பிரளயகாலப் பிரசண்டவாதமும், பொங்குகடலும் = எல்லாக்கடலும் ஒன்றுகி யோங்கியெழும் ஏகார்ணவமும், புவியனைத்தும் உருகச்சுடு பன்னிருகதிரும் = சர்வபூப்பிரதேசங்களையும் பொடியாம்படி தகிக்கும் பன்னிரண்டு

சகஸ்திர கிரணன்களும், ஒருகால் வரினும் இடருண்டோ ! ஒருபோதுற்ற போதினும் துயரஞ்சிறிதும் உண்டாமோ ! உண்டாகா தென்பதாம்.

(ஸ்ரீ - வீர.) எங்ஙனம் சரற்காலத்தில், ஆகாயத்தில் வாயுவினுலே சின்னமான அப்பிரமண்டலம் நீக்கப்பெறுமோ அங்ஙனம் முன்னர் மொழிந்தயான் எனது என்னும் கற்பனையைச் செய்யாமையானே அதாவது அசங்கற்பத்தானே, மனமானது நீக்கப்பெறும். கற்பாந்தபவனம் வீசுக, கடல்கள்யாவும் ஒன்றுப்பொங்குக, துவாதச ஆதித்தியர்களும் தாபஞ்செய்க. நிர்மனத்தினனுக்கு ஏதுஞ் சிறிதும் கிடையாதாம்.

(ச.) பெருகுத்திரண்ட முகிலெல்லாம் = சரற்கால வியோமத்திற் சிறியமேகமண்டலம் = அப்பிர மண்டலமானது, பெருங்காற்றுலே = வாதத்தினுல், ஒருங்குதல் போல் = அழிருதல்போல, வீருகற்பனை நாசத்தாலே = அசங்கற்பனையினுல், மனம்போயிறக்கும், உள்ளிலுள்ள மனதழியும் என்பதுபொருள். ஏககாலத்திற் கற்பாந்தக் காற்றடிப்பினும், உததிகள் ஒன்றுபடினும், துவாதச ஆதித்தியரு மெரிப்பினும் நிர்மனதுடையவனுக் கழிவின் றென்பதாம், நிர்மனதுடையவன் = மனமற்றவன். (8)

(ஸ்ரீ-வீர - அ-கை.) கற்பனையற் றிருப்பிற் சுகத்தையே யடையலா மென்றும், கற்பனையுற்றால் அம்மனந்தனக்கே பகையென்றும் கூறல்:—தன்னையென.

தன்னைக்கொண்டேதனையறுக்கிற்றுணிச்சகலபூமிக்கு
முன்னைத்தலைமைபோலின்பமுதிரநிறைந்துவகற்பனைக்கே
துன்னித்திகழ்தற்பதம்பற்றிச்சுகத்தையடைவாய்பலவாக
வுன்னிப்படர்கற்பனைச்செல்வமுடையமனமேயுயிர்ப்பகையாம்.

(ப - ரை.) தன்னைக்கொண்டே தனையறுக்கில் தானும் = அசங்கற்ப மாத்திரமொன்றினுலே சாதிக்கத்தக்கதாய், சகலபோல் இன்பமுதிர நிறைந்து = சகல சித்தியுந்தருவதாய், அகற்பனைக்கே பூமிக்கு முன்னைத்தலைமை = கற்பனையற்றநிலைமைக்கேயுரித்தாய அதிசயமானதலை பூண்ட சாம்ராஜ்ஜிய சம்பத்தில், துன்னி = உபஸ்திதியடைந்து, திகழ்தற்பதம் பற்றிச் சுகத்தை யடைவாய் = ஆண்டாவரண நீங்கிவிளங்காநின்றதினது சொரூபமாகிய தற்பதத்தை நீயாகவே யடையப்பெற்றுப் பிரஹ்மாநந்தத்தை யடைந்துவாழ்தி, பலவாக உன்னிப்படர் கற்பனைச் செல்வமுடைய மனமே = நானுவிதமான வாசனைகொண்டு எண்ணுதவற்றை யெல்லாம் எண்ணி ஜனனமரணத்திற் கீடுபட்டுத் துயருறுஞ்சங்கற்ப ஐசுவரியத்தை யடைந்துள்ள சித்தமே, உயிர்ப்பகையாம் = ஜீவனது ஜன்மசத்துருவாம்.

(ஸ்ரீ - வீர.) சகல எண்ணங்களையுங் களைந்துண்டாம் சம்பிரஞ்ஞாதத்தில் வருமின்பமியாவும் பொய்யாதலின் போலின்ப மென்றார். சுகத்தையென்றதோ அசம்பிரஞ்ஞாதத்தில் விளங்கிய சொரூபாநந்தத்தையேயாம் என்றறிந்து கொள்க. கற்பனைச் செல்வமெதுவாயினும் பிரஹ்மாநந்தத்தடையாம். அசங்கற்பன மாத்திரம் ஒன்றினுனே தேடத்தக்கதாய், சகல சித்திகளையுந் தருவதாய், நிருவிகற்ப சமாதியேயாகிய அதிசயித சாம்ராஜ்யத்தின் கண்ணே பிரஹ்மசொரூபத்தைப் பற்றினவனுய்ச் சுகமாக வாழ்தி. அந்தப்பரமாத்மபத சிங்காசனத்தைப் பற்றினவனுகி அசங்கற்பன சாம்பிராஜ்ஜியத்தில் வாழ்வாய் என்பதாம்.

(ச.) திகழ்தற்பதம் பற்றி = பிரஹ்மபாவஞ் சுவீகரித்தவனுய், தன்னைக்கொண்டே தனையறுத்தால் தாமாய் = அவ்வசங்கற்ப மொன்றினுலே சாத்தியமாய், அகற்பனைக்கே

இன்பமுதிர நிறைந்த = சங்கற்பங்களின் அபாவமான நிர்மனஸ்கதை மனமில்லாமை யென்னும் சகல சித்தியுந் தராநின்ற சாம்பிராச்சியத்தில், துன்னி = இருந்து, சுகத்தையடைவாய், கற்பனைச் செல்வமுடைய மனமே = சங்கற்பமாத்திர சாமர்த்திய முள்ளமனமே, (9)

(ஸ்ரீ - வீர - அ - கை) மனப்பகைவன் வெல்ல முடியாதவனுதலும் முடிந்தவனுதலும் இன்னவகையெனல்:—உள்ளவென.

உள்ளப்பகைவன் பலவிதமாயுறுகாட்சிகளால்வெல்லாமற்
றெள்ளத்தகுசந்தோடமெனுஞ்செல்வமுடையநிராசையினாற்
கள்ளத்தனிநெஞ்சினைவெல்வாய்கற்றோர்க்கன்பாய்நின்மலமாய்க்
குள்ளக்குளிர்ந்தாங்காரத்தாற்கூறுகாதசமபாவம்.

(ப-ரை.) உள்ளப்பகைவன் = மனச்சத்துரு, பலவிதமாயுறு காட்சிகளால் = நாநாவிதவஸ்து நிதர்சனத்தானே, வெல்லாமல் = உன்னை வென்றுவிடாமல், தெள்ளத்தகு சந்தோடமெனுஞ் செல்வமுடைய நிராசையினால் = எப்போது மிலங்குவதாய, நிலைத்ததுகொண்டலம் பேணும் மகிழ்ச்சியென்னும் ஐசுவரியத்தோடு கூடிய ஆசையின்மையினாலே, கள்ளத்தனி நெஞ்சினை வெல்வாய் = ஜீவனைக் கெடுப்பதில் ஒப்புயர்வற்ற மகாவஞ்சகமுற்ற மனத்தினை நீ வெற்றிகொள்வாய், கற்றோர்க்கன்பாய் = ஆன்மவித்துக்கட்குச் சம்மதமாய், நின்மலமாய் = பரமபாவனமாய், குள்ளக்குளிர்ந்து = பனிபோலும் அதிசீதளமாய், சமபாவம்ரினது = பரமாத்வை தபதமானது, ஆங்காரத்தாற் கூறுகாது = அகந்தையினாலே பரிச்சின்னப்படாது.

(ஸ்ரீ - வீர.) சங்கற்பமாத்திர வடிவமாயதனது ஐசுவரியத்தால் பிரஹ்மாண்ட கோடியாதி பதார்த்தங்களைத் தோற்றிவைத்துக் கொண்டிருப்பதும், அதனானே சங்கற்பமாத்திர ஐசுவரியத்தானே ஜனனமரண நரகாதி யநேகம் பெரிய அநர்த்தங்களைச் செய்விப்பதும் ஆகிய மனத்தை, நிரந்தரம் பாவித்துக் கொண்டிருக்கும் நிர்ச்சங்கற்பமாகி சந்தோஷமாத்திர ஐசுவரியத்தால் விஜயஞ்செய்து சர்வோத் கர்ஷத்தை யடைவாயாக. சந்தோஷமாத்திர வைபவமான மனத்தினாலே மனத்தை நன்றாகவென்று சுகிப்பாய் அம்மனமானது எவ்வபிலாஷையும் அற்று இல்லாமல் சுயம்பிரகாசத் தன்மையானே எப்போது மிலங்கிக்கொண்டிருக்கும் துரியத்தையே நாடிக்கொண்டிருப்பின் வெல்லும் என்பதாம். சந்தோஷமுடைய சமதைக்கும் மநோநிக்கிரக முண்டாந்தன்மையைத் தரிசிப்பித் துபசங்கரித்தல்: —கற்றோர்க் கென்பது, பரமபவித்தரமாயும் ஹிம்மம்போலும் அதிசீதளமாயும், ஆன்மாவை யறிந்தவர்கட்கோ சம்மதமாயும், இஷ்டம் அநிஷ்டம் வந்துறுபோது மகிழ்ச்சி வாட்டமின்மை வடிவசமதை யுற்றதாயும், அதன்வாயிலாய்நியான அப்பியாசத்தினாலே கொண்டாடத் தக்கதாயும், பரிச்சின்னமான அகம்பாவமானது அழிந்துபோன காரணத்தினாலே ஆனந்த மயமாயும், அபரிச்சின்னமாய்ச் சத்தியமாயும் யாது எந்நிலையிலங்கு கின்றதோ அது உன் வடிவாயுளதாகுக என்பதாம் சமதைபூர்வகத்தியாணப் பயிற்சியானே, அகங்காரமான தவிர்ந்தொழிய எதிர்த்தம் ரூபமாய்த் துரிய மெனப் பெயரிய ஜன்மமற்றபதம் எஞ்சியுளதோ அது நினதுவடிவமாக விளங்குகவென்பதாம் பரமபுனிதமாய் மனமற்றதாய் ஆன்மவித்துக்கட்குச் சம்மதமாய ஏற்றத்தாழ்வற்ற விருத்தியினாலே உள்ளேயுள்ளவெகுவிதமான அகந்தைகளும் நீங்கப் பெற்றதாய் ஜன்மாதி விகாரசூனிய அவசிஷ்டபதமியாதோ அதுவே உனக்கடையத் தக்கதாகுக.

(ச.) உள்ளப்பகைவன் = அம்மனமென்னுஞ் சத்துரு, பலவிதமாயுறு காட்சிகளால் = நாவிதவஸ்து நிரிசனத்தால், வெல்லாமல் = நின்னைச் சயிப்பது அயுக்தமாத

வின் ஜயிக்காமல், தெள்ளத்தகு = நித்தியோதிதமான, சந்தோடமெனுஞ் செல்வமு டைய = சந்தோடமாத்திர சகாயமுள்ள, நிராசையினால் = நிர்ச்சங்கற்பத்தால், நெஞ் சினை வெல்வாய் = மனதைச் சயிப்பாய், கற்றோர்க்கன்பாய் = ஆத்ம வித்துக்களுக்குச் சம்மதமாய், நின்மலமாய் = பரமபாவனமாய், குளிர்ந்து = அதிசீதமாய், குள்ளவஞ்சக அகங்காரத்தால் = தாழ்வுயர்வான உளத்தகந்தையாலும், கூறுகாது = அபரிச்சின்ன மாய், சமபாவமாம் = சின்மாத்திரம், சேடிக்குமென வருவித்துக் கொள்க. ஆன்ம வித் துக்கட்குச் சம்மதமான பரிபூர்ண பிரஹ்மபாவனையினாலே பரிச்சின்ன விடயமாய அகந் தையானது உள்ளேயில்லாமல் நீக்கப்பெற்றவழி எவ்வபரிச்சின்ன சின்மாத்திரம் சேடிக் குமோ, அவ்வஜ நித்தியபத மூனக்குளதாகுக, (10)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஹே பிரஹ்மசொரூபமாகிய ஆசிரியோத்தமரே ! அதிவேக மாய் அதிசஞ்சலமாய், தீவிரவேகத்திற்கு மூக்கிய காரணமாய் மிக வலிதாயிராநின்ற அதிலோலமாய இந்த மனத்தினுடைய மகாசாஞ்சல்யத்தை எங்ஙனம் வலிதுடன் நன் றாக நீக்குதல் கூடும் ? என்று ஸ்ரீ இராகவர்கேட்ப அதற்கு ஸ்ரீ பகவான் மூன்னுரைத் ததை முடித்துத்தாங் கூறுகின்றார்:—தாழ்வென,

தாழ்வுமுயர்வுமில்லாதசமபாவனையாற்பிறப்பில்லா
வாழ்வுநல்கும்பரமபதமாமுப்பதமாமலைவாலே
வீழ்வுறுதமனமரிதாம்வெம்மைகனலெவிடாததுபோ
லாழ்வுசெய்யுமலைவுமனமகலாவறிவினலைவுமனம். (11)

(ப - ரை.) தாழ்வும் உயர்வுமில்லாத = வைஷம்ய மின்றிய, சமபாவனையால் = யாவுமறிவென்னும் ஒரேதிருஷ்டியால், பிறப்பில்லா வாழ்வு நல்கும் = ஜன்மமின்றிய பேராநந்தப் பெருவாழ்வினைத் தரும்படியான, பரமபதமாமுப்பதமாம் = என்றும் அழி தலில்லாத பரமபதம் உண்டாம், அலைவாலே வீழ்வுறுதமனம் அரிதாம் = சஞ்சலத் தன்மையற்றமனம் எங்ஙமே யுளதாகாதாம், வெம்மை கனலெவிடாததுபோல் = உஷ் ணத்தன்மை அக்கினியை விட்டிராததேபோல, ஆழ்வுசெய்யும் அலைவு = விடயங்களில் மூழ்கச் செய்யும் சஞ்சலத்தன்மை மனத்தின் தருமமாதலின், மனமகலா = மனத்தை விட்டு நீங்கியிருக்க மாட்டாது, அறிவின் அலைவுமனம் = சித்தாந்தத்துவத்தி லிருக்கும் ஸ்பந்தசக்தியே சஞ்சலமனமாம்.

(ஸ்ரீ - வீர.) முற்பாதியுரை முன்னுரைக்கப் பெற்றது. ஈண்டு எவ்விடத்திலுமே சஞ்சலத்தன்மையை விட்டிருக்கும் மனத்தைக் காண்பது முடியாதாம்; வன்னியினது தருமம் உஷ்ணத் தன்மையேபோலச் சஞ்சலத்தன்மை மநோதருமமாம். ஜகத்காரண மாயாசம்வலிதசை தங்யத்தின்கண் ணன்னிலேபெற்ற யாதொரு சஞ்சலமான கிரியா சக்தியுளதோ அதுவே மநோரூபமாகப் பரிணைதையுற்ற மாநசசக்தியென அறிதி.

(ச.) தாழ்வும் உயர்வு மில்லாத சமபாவனையால் = பரிபூரண பிரஹ்மபாவனையால், பிறப்பில்லா = அஜமான, பரமபதம் = தற்பதம், மாறுப்பதமாம் = நித்தியமாம். அலை வாலே வீழ்வுறுதமனமரிதாம் = சஞ்சலத்துவ மற்றமனது எங்குங் காணப்படாததல் லவா ! வெம்மைகனலே விடாததுபோல் = வெப்பம் வன்னிக்குத்தர்ம மாவதுபோல், அலைவுமனம் அகலாது = சஞ்சலத்துவம் மநோதருமமாம், அறிவினலைவுமனம் = சித் தத்துவத்திருக்குஞ் சஞ்சலசக்தியே மனச்சத்தியாம். (11)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பரமசித்தாந்தமும் செய்யத்தக்கதும் இன்னதெனல்?— அலையுமென.

அலையுமந்தமன முலகாமலவுபோகின்மனங்கெடுமிக்
கிலேயேதவமுநூற்கருத்துநிமலவீடுத்துணிபொருளுந்
தொலைவிலலிவேமனமாயைதொடர்வாதனையுமதன்பெயரா
மலையுமனமுமதுவதனைமாறுவிசாரத்தான்மாய்ப்பாய்.

(ப - ரை.) அலையுமந்தமன முலகாம் = ஸ்பந்த சக்திமயமான அம்மனமே ஜகதாடம்பரவடிவமாம், அலவுபோகின் மனங்கெடும் = சஞ்சலத்தன்மை நீங்கின்மனம் மிருதமாம், இங்கிலையே = இத்தஸ்திதியே, தவமும் நூற்கருத்தும் நிமலவீடும் துணி பொருளும் = தபமும் சாஸ்திரமும் சித்தாந்தமும் துயரற்றமோக்ஷமும் ஆமெனப்படும், தொலைவில் அலைவேமனமாயை தொடர்வாதனையும் அதன்பெயராம் மலையுமனமுமது = கெடாததான மனத்தின சஞ்சலத்தையே அவித்தை யென்றும் வெகுகாலமாகச் சம்பந்தித்துள்ள வாசனையென்றும், அதற்கு நாமங்கள் உண்டு=அல்லாமலும், தன்புறுத்தும் சித்தசத்தையும் அதுவேயாம், அதனைமாறு விசாரத்தான் மாய்ப்பாய் = அவ்வசைவை இடைவிடாத ஆராய்ச்சியானே நாசஞ்செய்தி.

(ஸ்ரீ - வீர.) அசைவு அசைவின்மைகளின்றி காற்றினிருப்பே யெங்ஙனங் கருதமுடியாதோ, அங்ஙனம், சஞ்சலஸ்பந்தனத்தை விட்டுச் சித்தசத்தை யிலதாகும். யாதொரு சஞ்சலதையின் ஈனமனமுளதோ அது மிருதமெனப்படும்; அசைவற்றமனமிறந்ததென்பதாம், அம்மனத்தின் இறப்பே, சாஸ்திர சிரவணம், அதன் பலத்தன்மையால், பிராமாணிகத் தன்மையானே அங்கீகரிக்கப் பெற்ற அருத்தம் சித்தாந்தமாம், அதுவே மோக்ஷமெனப்படும் அதனுபாயத் தன்மையால். அதனது சஞ்சலத்தன்மையே, இச்சாசக்தி பீஜ கத்தன்மையானே, அவித்தையின் காரியத் தன்மையானே அவித்தை யென்று சொல்லப் பெறும், வாசனை மூலத்தன்மையானே வாசனை யென்றும் ஒரு பெயரைப் பெறும், அதனை விசாரத்தானே விநாசஞ் செய்வாய்.

(ச.) அந்தமன முலகாம் = அம்மனதே ஜகதாகாரமாய் விளங்குவதாம், அலைவு போகின் = சஞ்சலத்துவமழியின், மனங்கெடும் = மனதழியும், இங்கிலையே = இம்ம நோலயமே, நூற்கருத்தும் = சாஸ்திரசித்தாந்தமும், நிமலவீடும் = மோட்சமுமாம், சங்கை: வாசனையோடு அவித்தியா நிவிர்த்தி மோக்ஷரூபமாதலின் மநோநிவிர்த்தி மோட்சமென்றது, எப்படிக் கூடுமெனச் சங்கித்து; மனதின் சாஞ்சல்லியமே அவித்தை அதுவே வாசனையுமா மாதலின் அதன் நிவிர்த்திக்கு மோக்ஷரூபத்துவம் யுக்தமென்னுங் கருத்தாற்கூறல்: தொலைவிலலிவேமனம் = மனதின் சஞ்சலத்துவமே, மாயை = அவித்தை, மனமும் = சித்தசத்தையும் ஆம், ஆதலின், அதனை = மநோசஞ்சலத்தை, மாய்ப்பாய் = நாசஞ்செய்வாய். (2)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஞானப்பியாசத்தானே மனதிற்கு மார்ணீம் மார்ணீயத் தன்மையை மலருவராய் அதனது சொரூபத்தைக் கூறும் வாயிலாய்ப் பயிற்சிக்குத் தக்கபடியாக அடைவுறும் வடிவத்தன்மையைக் கூறல்:—மெத்து என. இங்ஙன மியம்பத்தக்க வுபயோகியதாக மனத்திற்குச் சாஞ்சல்யதன்மகத்தன்மையைச் சமர்த்தித்து, வாஸ்தவ அவாஸ்தவரூப மென்னும் இரண்டன் வடிவதாந்தன்மையை, அவாஸ்தவ அங்கிசமகற்றலேக்காட்டும் பொருட்டும், வாஸ்தவரூபப் பிரதிஷ்டையின் அழிவடைவை யகற்றற் பொருட்டும் கூறல்:—மெத்து என.

மெத்துகின்றவாதனையைவிட்டான்மேலாநலமூளதாஞ்
சத்தினசத்தினிடைநின்றுசைதன்னியத்திற்சாட்டியத்தி
லொத்தாடுநின்றலைவதுவேயுள்ளமாகுமிவ்வுள்ளஞ்
சித்தின்முயல்வாற்சித்தாகுஞ்சடத்தின்முயல்வாற்சடமாகும்.

(ப - ரை.) மெத்துகின்ற வாதனையை விட்டால் = அவித்தையின் மயமாயடைந்து கிடக்கும் துட்டவாதனையை விட்டுத்தொலைத்தால், மேலாம் நலமூளதாம் = பரமசிரேயசு இனிதாக எய்தும், சத்தின் அசத்தின் இடைநின்று = உளதிற்கும் இலதிற்கும் மத்தியிலிருந்து, சைதன்னியத்தில் சாட்டியத்தில் ஒத்து ஆடுநின்று = சேதனத்தில் அசேதனத்தில் ஒத்தமத்தியிலிருந்து, அலைவதுவே = ஊசலாடுவதே, உள்ளமாகும் = மனமெனப்படும், இவ்வுள்ளம் = இம்மனமானது, சித்தின் முயல்வால் = அறிவினனுசந்தானத்தால், சித்தாகும் = சின்மயமாகும், சடத்தின் முயல்வால் = திருகியத் தியானத்தால், சடமாகும் = காஷ்டலோஷ்ட சமானமாம்.

(ஸ்ரீ - வீர.) விரும்பியபொருளை விடுதல் வாயிலாக, அவித்தை வாசனையென்னும் உட்சித்த சத்தையானது விலீனமுறவே மேலான மேன்மையானது அதாவது மோக்ஷமானது அவசியமுண்டாம். விடுதல் முன்னர் "மிகமாலுறுபல் பொருள்களையு மேவா தொழித்தோர் மனம்வென்றோர்" என வியம்பப்பெற்றது. விடுதல் வாயிலாக = பாபியவிடயானுசந்தானத்தியாக பலத்தால் = சத்தசத்துக்களாகிய ஆன்ம அனுஆன்ம மத்தியஸ்தமாய், உலகத்தில் மத்தியஸ்தனுனவன் உபயானுகூலனுக இருப்பதேபோல ஆத்மாநாத்ம அனுகூலமாய், இருப்பது மனமாம்; ஆகவின் உபாயவிசேடத்தினுலே செயிக்கத்தக்கது என்பது கருத்தாம். ஆத்மாநாத்ம தருமங்களாய சைதன்ய ஜாட்டியங்கட்கும் அனுகூலம் மனமென்பார், சைதன்னியத்தில் சாட்டியத்தி லென்றார். சேதனுசேதனங்களின் இடையிலிருப்பது மனமாம். யான் இது என்னும் விருத்தித்துவயவடிவமாகப் பரிணுமலீலைத் தன்மையால் உரைத்த இரண்டில் ஆதிம ஆகாரத்தையுடையது மனமென்று கூறப்பெறும். சத்தசத்துக்களின் மத்தியம் = மிதுநீபாவரூப மந்தராளம், அதனுனே அன்னியரூபப் பிராதான்யத்தில், தோளுயிதாகிருதியதாம் = இலேப்பாறு நிலைமையற்றதாம். ஆயின் எதனுல் ஏகதேசோடி விசிராந்தியா மெனின் ? கூறுகின்றார்: சித்தின் என்பதாதியால் ஜாட்டிய அனுசந்தானத்தானே யபகரிக்கப் பெற்றதாய அதாவது ஜடசிந்தாபரவசே கிருதமாய சித்தமானது திடஅப்பியாச வசத்தால் நீப்தமாய் மிக வளர்க்கப் பெற்றதாய், மிக்கூன்றியதாய்ச் சாட்டியான் மகமாகச் சடபாவத்தையடையும் அதாவது ஜடதேகாதி முக்கியத் தகைமையை யடையுமென்பதாம். புலப்படுகின்ற தன்றே பிராகிருதர்தம் மூள்ளம் அத்தகைத்தாய் ! அனுசந்தான ஹதமெனவும் பாட மூளது = விசிஷ்ட போதமாகிய சாக்ஷி யொன்றன்பாலே யனுசந்தானத்தால் அதாவது அறிவங்கிசத் தியானத்தால், அநிதமங்கிச சொரூபத் தன்மையானே, அகம்பிரஹ்மாஸ்மி யென நிரந்தர அனுசந்தானத்தானே, பயிற்சியின் மிகுதிப்பாட்டானே, நீப்தமாய் மிக வளர்க்கப்பெற்றதாய் மிக்கூன்றியதாய், மனமானது அறிவாகாரமாய், வேற்றுமைப் பாகுபாடொன்றையுஞ் செய்யாத கேவல சிற்சொரூபமாய் இனிதுநிலைபெற்றிருக்கும்.

(ச.) மெத்துகின்ற வாதனையை = அவித்தையோடு வாசனையென்னு நாமமுள்ள மநோசஞ்சலத்தை, விட்டால் = இஷ்டத்தியாக வசத்தினுல் நாசஞ்செய்யின், மேலா நலமூள்தாம் = பரமசிரேயசு உண்டாகுமென்பது பொருள். சத்தினசத்தின் = சத்தென்பது கேடின்மையது திருக்குரூபமான பிரஹ்மம், அசத்தென்பது கேடுள்ளது திருகியம்

ஆகிய இடைகளினது, இடைநின்று = மத்தியில் உபயசம்பந்தமாய் அநுபயானமகமான வஸ்துவாய், சைதன்யத்திற் சாட்டியத்தில் = சித் சாட்டியங்களினது, நடுவொத்து நின்று = மத்தியிற் கூடினதாய்ச் சித்கனவியல்பாலும் உண்மையாக ஜடத்துவத்தாலும் கற்தாயபிண்டம்போல் உபயான்மகமாய், அலவதுவே = சித்து அசித்துக்களிரண்டினும் ஊஞ்சல்போல அலையும் ஆகிருதியுள்ள வஸ்துவே, உள்ளமாகும் = மனமெனப்படும்; என்பது சம்பந்தம். சிதசித்ரூபமான மனதிற்கு இங்ருண்டாக்கப்பட்ட வுபயோகங் கூறல். இவ்வுள்ளம் = இச்சித்தமானது, சடத்தின் முயல்வால் சடமாகும் = அசித்து ரூபத்வ ஏதுவினுற் சடானுசந்தானத்தால்! வாகியத்தை மாறிமாறிப் பற்றுவதாய் வாகிய சேட்டையோடு கூடினதாய்த் திடாப்பியாச வசத்தாற் சடத்துவத்தையடையும். சித்தத்திற் சடாம்சமிருத்தலிற் சடபாவனையாற் சாட்டியத்தையடைவதுபோற் சிதம்சமிருத்தலிற் சிற்பாவனையாற் சித்தோடைக்கிய மாமெனல்? சித்தின் முயல்வாற் சித்தாகும் = சிதம்சத்துவரூப வேதுவினுற் போதத்தின் எகாநுசந்தானத்தின் நிடாப்பியாச வசத்தினுற் சைதன்னியத் தோடைக்கியமாம். (13)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தெரிவித்ததையே கன்குதெளிவித்தல்:—ஊக்கமென.

ஊக்கமுளதாய்மனமொன்றிலுறைக்கிலதுவாமாதலினுற்
றூக்குமனத்தைமனத்தாலேதள்ளியேறித்தளர்வின்றி
யாக்கமழிவில்பதம்விரைவிலடைவாய்மனத்தைமனத்தாலே
நீக்கவலதாந்தகைமைத்தாநிருபனிறுத்துநெறிபோல.

(ப - ரை.) ஊக்கமுளதாய் = புருடப் பிரயத்நத்தினுலே, மனம் ஒன்றில் உறைக்கில் = மனமானது ஒருபதத்தில் ஊன்றில், அதுவாம் = அப்பதமாம், ஆதலினுல் = ஆகையினுல், தாக்குமனத்தை மனத்தாலேதள்ளி = அசுத்தமனத்தைச் சுத்தமனத்தினுலே யகற்றி, ஏறி = மேற்போய், தளர்வின்றி = விசோகமாய், ஆக்கம் அழிவு இல் பதம் = உண்டாகியுயர்ந் தொழியுஞ்சடங்கற்ற பதத்தை, விரைவில் அடைவாய் = வேகமாகப் பொருந்துவாய், மனத்தை மனத்தாலே நீக்கவலதாந் தகைமைத்தாம் = மனத்தினது திடநிக்கிரக வீடியத்தில் மனமே சமர்த்தையதாம், நிருபன் நிறுத்தும் நெறி போல = ராஜாவை நிக்ரஹம் செய்வதில் அராஜாசமர்த்தனுவனுவென்? ஆகான் அது போலவாம், பதம் = வஸ்து,

(ஸ்ரீ - வீர.) இயற்கையானுதல் சாஸ்திரீயமாயாதல் உண்டாம் பௌருஷப் பிரயத்நத்தினுலே எப்பதத்தின் கண்ணேமனஞ் சேர்க்கப்பெறுமோ பயிற்சியின் வலுவால் அப்பதத்தை யடைந்தின்புறும், ஆகலின் மிகுந்த பௌருஷப் பிரயத்தனத்தைக் கைக்கொண்டு நல்லவிவேக சித்தத்தினுலே கெட்டசித்தத்தைக் கடந்து சோகமின்றிய பதம் பற்றி ஆபாயமற்றவனுய் உபத்ரவமற்றவனுய், ஆசங்கையற்றவனுய், அதிதிரமாய்ச் சுகிப்பாயாக; என்பது பலிதமாம், சமுசாரபாவனையினுலே மூழ்கிக்கிடக்கின்ற மனதை மனதினுலேயே வலிதில் எடாமல் விடின் ஹே இராகவா! அதனுபாயம், அயல் ஒன்று கிடையவே கிடையாது. சித்தத்தினும் அயலொன்றுனும் சித்தத்தின் நிக்ரஹணசங்கையுண்டாகக்கூறல். மனத்தை யென்பதாதி மனத்தினது திடநிக்கிரகத்தில் மனதேசமர்த்துடையதாம், அரசனே நிக்கிரகஞ்செய்யும் விடயத்தில் அரசனல்லான் சமர்த்தனுவனு! ஆகான், சமபல மில்லாமையின் என்றறிக

(ச.) மனம் = இத்தன்மையான மனது, ஊக்கமுளதாய் = புருடசம்பந்தப் பிரயத்தனத்தால், ஒன்றி னுறைக்கினதுவாம் ஜடபதத்தாவது அஜடபதத்தாவது சேர்க்கின்

அப்பதமடைந்து அப்பியாசத்தினால் அதுவேயாம், ஆதலினால், ஏறி = புருடப்பிரயத்தனத்தையாசிரயித்து, தளர்வின்றி = சோகமற்று, அடைவாய் = சங்கையற்றவனுய்ச் சாருவாய், மனத்தாலே, மனமே, நீக்க, திடநிக்கிரகஞ்செய்ய, வலதாகும் = சாமர்த்தியமுள்ளதாம், தானே = அப்பிரபல மூடவரசனே, நிருபன்தானே = பிரபல புத்திசாலியாயிருக்கிற்வரசனே, நிறுத்தும் = நிக்கிரகிக்கும், நெறிபோல = தளர்வன்றி சோகமற்ற பதம் அடைவாய், பாடபேதம். (14)

(ஸ்ரீ - வீர - அ - கை.) உரைத்த வுபாயத்தையே உவமான பூர்வகம் உறுதிப்படுத்தல்:—பிறவியென.

பிறவிக்கடலிற்காதலெனும்பெருவாய்முதலைபிடித்தீர்க்க
விறவுச்சுழியாற்சுழலுமவர்க்கிதயநாவாயெட்டாதீர்
மறமுற்றுளத்தையுளத்தாலேமாய்த்துப்பிறப்பில்வருந்தாம
லுறவுற்றுனேயுய்விப்பாயுயிர்க்குப்பிறராலுய்வுண்டோ.

(ப - ரை.) பிறவிக்கடலில்=சம்சார ஆர்ணவத்தில், காதலெனும்பெருவாய் முதலையிடித்தீர்க்க = திருஷ்ணையென்று சொல்லப்பட்ட யாவற்றையும் விழுங்கும் பெரிய வாயையுடைய கிராகம் பற்றிவலிதில் இழுக்க, இறவுச் சுழியால் எட்டாவாறு சுழலுமவர்க்கு = சூழ்குறச் செய்யும் ஆவர்த்தத்தாற் றூரத்திற் சுற்றுற்றவர்க்கு, இதயம் நாவாய் = தன்மனமே மரக்கலமாம், மறமுற்று உளத்தை உளத்தாலே மாய்த்து=பரமபந்தன பாசமாமனத்தை மனத்தினுனே சேதித்து பிறப்பில் வருந்தாமல் உறவுற்றுனேயுய்விப்பாய் = சமுசாரத்தில் அவதிப்படாமல் தன்னைக் காப்பதில் நேயமடைந்து உன்னை நீயே உத்தாரணஞ் செய்தி, உயிர்க்குப் பிறரால் உய்வுண்டோ = இவ்வாத்மாவிற்கு அயலோராற் றாரணமிலதாம்.

(ஸ்ரீ - வீர.) கிராகம் = நக்கிரம், ஆவர்த்தம் =சுழி, திருஷ்ணையாகிய கிராகத்தாற் கிரகிக்கப்பெற்றவராய் சமுசார சமுத்திரத்தில் வீழ்ந்தவராய், மனவிமக்களாதி சுழிகளால் வெகுதூர மிழுக்கப்பட்டு அழுபவர்கட்குத் தன் மனதேதரியாம்- மகாகட்டாகிய மனப்பாசத்தை மனத்தினுனே யறுத்தெறிந்து ஆன்மாவைச் சமுசாரத்தினின்றுங்கட்டத் தேற்றுவாய். இவ்வான்மா அன்னியத்தாற் ரூண்டப்பெறுதாம். இவ்வாத்மா இதனால் விடுபடாவிடின் மற்றெதனாலும் விடுபடா தென்பதாம். தானேதனக்குச் சுற்றமும் என நினைக. ௧௬

(ச.) பிறவிக்கடலில்=சம்சாரார்ணவத்தில், வீழ்ந்தவர்களாய், காதல்=திருஷ்ணை, இறவுச்சுழியில் = புத்திரகளத்திராதி மமதாப் பிரமைகளால், இதயநாவாய் = தன்மனதே மரக்கலம், எட்டாவாறு = அதிதூரம், மறமுற்றுளத்தை = பரமபந்தனமான மநோரூப பாசத்தை, மாய்த்து = நிதைத்து, உயிர்க்கு = தனக்கு, உய்வுண்டோ = ஈடேற்றமின்று, தானே தனக்குப் பந்துவென்னும் நியாயத்தினு லென்பதாம். பிரமைகளால் அதிதூரம் சுழலுமவர்க்குத் தன்மனதே மரக்கலமாம் என்றுசேர்க்க. (15)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மனத்தான் மனச்சேத வகையையே சுருக்கிப் பெருக்கிக் கூறல்:—எந்தவென.

எந்தவெந்தூவாதனைகளிதயத்தெழுந்தவவையெல்லா
மந்தவந்தஞ்டத்தழிக்கிலதுவேமாயைக்கழிவாகு
மூந்துபோகபேதமெனமொழிந்தவிருவாதனைவிட்டு
வந்தபாவாபாவங்கள்மாற்றிவிகற்பமறமகிழ்வாய். (16)

(ப - ரை.) எந்த எந்த வாதனைகள் = எவ்வெச் சமஸ்காரங்கள், இதயத்தெழுந்த = இருதயத்தினின்றும் விருத்திரூபமாய் எழுந்தனவோ, அவையெல்லாம் = அவ்வியாவற்றையும்; அந்த அந்த இடத்தழிக்கில் = எழுந்த அவ்வவ்விடத்திலேயே பரிகரிக்கின், அதுவே மாயைக்கழிவாகும் = அம்மூயற்சியே அவித்தையைக் கெடுப்பதாகும், முந்து போகபேதமென் மொழிந்த = முன், முன்பின் ஆலோசனையில்லாமல் திடீரென்றுதிக்ளம்பி வரும், போகத்திலுள்ள சமஸ்காரமென்றும் பேதசம்பந்த சமஸ்கார மென்றும் சொல்லப்பட்ட, இருவாதனைவிட்டு = இருவித வாசனைகளையும் தொலைத்து, வந்தபாவா பாவங்கள்மாற்றி = அதனற் றேற்றவரும் பாவ அபாவங்களையும் தியாகித்து, விகற்பமற மகிழ்வாய் = நிர்விகற்பமாகிச் சுகிப்பாய். (46)

(ஸ்ரீ - வீர.) பாகியார்த்த மனனமெனப் படுவனவாகிய வாசனைமூல விருத்திகள் மனப்பிரதேசத்திற் சமஸ்காரத்தை யேற்றுவனவாய் யாவை யாவைதிளம்பி வருமோ அவ்வியாவற்றையும் பொய்ம்மை யதுசந்தானத்தானே அகற்றல் வேண்டும்; நஷ்டமான விருத்தியினுலே அந்தக்காரணத்தில் சமஸ்காரமானது உண்டாகின்ற தென்பது வேதாந்திகள், கூற்றும், தார்க்கிகரோ, ஞானமெனப் பெயரியவிருத்தியினுனே என்பர். பிராஞ்ஞன் பரிகரித்தபின் அவித்தை க்ஷயத்தையடையும்; ஔஷ்ணீயம் க்ஷீணமாகிய வழி வன்னி சாந்தமாவதேபோல, வாசனைக்ஷயமாகியவழி மனத்துடன் அவித்தைக்ஷீணமாம் என்பதகருத்து. வாசனைத்தியாகத்தில் முறைகூறல்:—முந்து என்பது. போகக்கூட்ட வாதனைகளை விட்டுப் பேதவாதனையையும் நீவிடுதி; பேதமதித் தியாகத்தின் பின்னர், பாவாபாவங்களாய பேதிகளை, அதன் வீடயவிகற் பங்களை, சித்தசேத்தியங்களை வீட்டு, கற்பனை மறுமுறை கழற்றியெறிந்து, நிருவிகற்பஞஞச் சுகியாவாய், (16)

(ச.) இதயத்தெழுந்த = மநோரூபமாய் எப்போதெப்போ துதிப்பனவோ, அவையெல்லாம் = அம்மனோரூபமான வாசனைகளை, அந்த வக்தவிடத்து = அப்போதப்போதே, மாயைக்கழிவாகும் = அவித்தியா வாசனையின் நாசமாம். அவையெலாம் எனச் சூசிப்பித்தவாசனு பேதத்தை விவரணஞ்செய்தல்; முந்து—விட்டு = முன்புபோக வாசனைத்தியாகமும் பின்பு பேதவாதனையின்றியாகமும் செய்து, பாவாபாவங்கண் மாற்றி = பின்பாவாபாவ வாசனையின் றியாகஞ்செய்து, விகற்பமற வாழ்வாய் = இங்ஙனஞ் சர்வவாசனைத் தியாகமாகின் நிருவிகற்பமாய்ச் சுகிப்பாய்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சித்தசேத்தியத் தியாகமாயினும், அவற்றின் காரணமாய அஞ்ஞானம் எஞ்சாதிற்கும் என ஆசங்கித்துக் கூறுகின்றார்:—அறியென.

அறிபவற்றுசையறிலதுதானேயவித்தையுமனமுமாண்டதுவாம்
பொறிபயிலாசைதுன்பமாநிராசைபுகலருமுத்தியாமின்பம்
பிறிவறுதனதுமுயற்சியாலுண்டாம்பேதையருண்டெனுமவித்தை
செறிதருபொய்யாய்நாமமாத்திரமாய்ச்சித்தெனத்தேர்ந்திடிலிலதாம்.

(ப - ரை.) அறிபவற்று ஆசையறில் = சுட்டும் பொருள்களில் இச்சைநீங்கில், அதுதானே = அதுவே, அவித்தையும் மனமும் மாண்டதுவாம் = அவித்யா நாசமும் மநோநாசமுமாம், பொறிபயிலாசை துன்பமாம் = விடயங்களில் உழலும் ஆஸ்தையே துயரமாம், நிராசைபுகலரு முத்தியாமின்பம் = அநாஸ்தையே அறைதற் கருமைவாய்ந்த நிர்வாணபதமாம், பிறிவறுதனது முயற்சியாலுண்டாம் = இடைவிடாதியற்றும் தன்னுடைய பிரயத்தனத்தினுலே தனதிண்மைவடிவம் அடையப்பெறும், பேதையர் உண்டெனும் அவித்தை = இல்லாததேயாயும் சுட்டப்பிரஞ்ஞர் இருக்கின்ற தென்னும்

அவித்தையானது, செறிதருபொய்யாய்=அத்தியந்தம் மித்தையாய், நாமமாத்திரமாய்=பெயர்மாத்திரத்தாற் பிறங்கப்பெறுவதாகி, சித்தெனத்தேர்ந்திடில் = அறிவுமாத்திரமென்னும் ஆராய்ச்சியில், இலதாம்=நற்பிரஞ்ஞரிடத் தஃதெங்ஙனமிருக்கும்; இராதாம்.

(ஸ்ரீ - வீர.) எவ்வவித்யாவரணத்தானே பூர்ணமாகத் தன்னையநுபவிக்க முடியவில்லையோ அதனைத்தத்துவ சாக்ஷாத்கார ஹேதுவிஞலே விடுத்துச் சுகமாயிருத்தல் எங்ஙனங் கூடுமெனின் ? ஒன்றையும் எண்ணுதிருத்தலிஞலேயே கூடும், இத்தனையே வாசஞ்ஞேயம், இதுவேமநோநாசமும் அவித்யாநாசமுமா மென்பர். நோகவேனும் சித்தவாயிலாகவேனும் யாதுயாது சிறிதுசிறிது சாக்ஷியிஞலே யநுபவிக்கலாமோ, ஆண்டாண்டு அறியப்பெறுவதன் அறியப்பெறுமை அத்தியந்தம் உற்கிருஷ்ட மநோநாச நிர்வாணமென்பது சுருக்கம். ஒன்றையும் உன்ஞதிருத்தலே மோக்ஷமாம் = பேராநந்தமாம்; உன்னுதலிஞனே துயரமுண்டாம். அவ்விடயங்களை யுன்ஞதிருத்தலும் புருடப் பிரயத்நத்திஞலேயே பொருந்து மென்பார். தனதுமுயற்சியாலென்றார். முயற்சியால்=விடயங்களில் இரமணீயத் தன்மையுத்தி யாசத்தியாக விடயகப் பிரயத்நத்தால். அத்தகைய தன்னுடைய பெருமுயற்சியினனே அதிகாரி தன்னறிவைக் கணத்திலறிவன். எதனையும் எண்ணுதிருத்தலிஞலே எய்தரும் பூதியெய்துறலாகும்; ஆகலின் தனதுமுயற்சியை எப்போதும் பயின்றேவுருக, அற்றேல், அவித்தையானது இருத்தலிஞனே மனம் போல ஞானத்தானே நிவிருத்திய சம்பவத்தால், அதன் நிவர்த்தக ஞானலாபப்பொருட்டு மநோநிரோதம் அதனுபாய மெனவுபந்யஸித்தல் வாளாபோமாலோ வெனின் ? அற்றன்ரு மெனல்: பேதையரென்பதாதி, விவேகவிஞ்ஞான சூனியர்பால் அவித்தை பரமார்த்த சத்தியம்போல இருக்கும், நற்பிரஞ்ஞை யுடையவரிடத்தோ அபரமார்த்தத்தன்மையாரனே வந்தியா புத்திரன்போல நாமமாத்திரத்தானே யங்கீகரிக்கப் பட்டதாகும், ஆதலின் அதுயாண்டையதாம் ? நாமத்தானே = அவித்தை யென்னும் பெயரானே, அபாவமேயன்ரே அப்பெயரின் முக்கியப்பொருள். எனவே தத்துவஞானி யாதலேயே ஆராய்ச்சிசெய்து சம்பாதிக்க வேண்டுமென்ப தொருதலை.

(ச.) அறிபவற்று = அறியப்படுகிற வஸ்துவில், அதுதானே = ஆசாநிவர்த்தியே, அவித்தையும் மனமும் மாண்டதுவாம் = அவித்யாநாசமும் மநோநாசமும் ஆம், பொறியில் = அறிவின்கட் டாதான்மியமாகிற பொருட்கட் பொருந்துமெனினும் ஒக்கும், முயற்சியால் = பிரயத்நத்தால், உண்டாம் = புருடனுக்குக் கணத்திற் றலைப்படும், செறிதருபொய்யாய் நாமமாத்திரமாய், பேதையருண்டெனும் = ஞானஹீனரிடத்துச் சுவயமிருப்பது போற்றிருஷ்ய மாகாதின்ற, அவித்தை, தெளிந்தஞானிகளுக்கு இலதாம், அஃதவிசாரசித்த மாதலின் என்பதாகருத்து. (17)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நல்லபிரஞ்ஞையருக்கு அஃதெங்ஙனமிருக்கும் எனக்கூறிய பொருளை ஆண்டு வன்பவக்குழியில் என்பதாதியாளே விஸ்தரித்தற்காக ஸ்ரீ இராகவரது பிரசினத்தைக்கிளப்பல்:—என்றலுமென.

வாசஞ்ஞேயவுபாயம் வினவி அதன்மூல அவித்யாவரண க்ஷயவுபாயம் வினவல்:—என்றலுமென.

என்றலுமிராமனவித்தையின்செல்வத்தெழுந்தறகெருங்குமிவ்விருடா
ஞென்றுமிங்கின்றியெவ்வகைநீங்குமுரைத்தருளின்னநீயென்ன
வன்றவனுரைப்பான்வன்றுயர்மூட்சேர்வன்பவக்குழியின்மன்னுயிரை
யொன்றவீழ்த்ததனேடொக்கவீழ்மாயையுண்டெனினுண்மைநோக்கில்லை

(ப - ரை.) என்றலும் = இவ்வண்ண மியம்பலும், இராமன் = ஸ்ரீ இராகவர், அவித்தையின் செல்வத்தெழுந்து = அவித்யாவைபவமாகக்கிளம்பி, அறநெருங்கும் இவ்விருடான் = அத்தியந்தம் நிபிடமாகிவிவேகியையும் மறைக்கும் இந்த அந்தகாரம், ஒன்றுமிங்கின்றி எவ்வகை நீங்கும் = ஒரு சிறிதுமில்லாமல் எங்ஙனம் அகலும் = அழியும், இன்னம் = மீளவும், நீ = ஸ்ரீ பகவாஞ்சிய தேவரீர், உரைத்தருள் = திருவாய் மலர்ந்தருள வேண்டும், என்ன = என்றுவினவ, வன்றவன் உரைப் பான் = அபாரமான பெருந்தவத்தையே யலங்காரமாகவுடைய ஸ்ரீ பிரஹ்மபுத்திரர் கூறுவார், வன்றுயர் மூட்சேர் = கொடிய துக்கத்தைக் கொடுக்கும் கண்டகங்கள் கதுவிய, வன்பவக்குழியில் = ஏறமுடியாத சமுசாரப்படுகுழியில், மன்னுயிரை = தேகாபிமானத்தோடுற்ற ஜீவனை, ஒன்றவீழ்த்து = துயரையே யநுபவிக்கும்படியாகத் தள்ளி, அதனோடு = அவ்வுயிரோடு, ஒக்கவீழ் = சேர்ந்துவீழும், மாயை = அவித்தை, உண் டெனில் = இருக்கின்ற தென்றுழலும்வரை, உண்மைநோக்கில்லை = யாதார்த்தமான தனது தரிசனமுண்டாகவே மாட்டாது. (18)

(ஸ்ரீ - வீர.) அஞ்ஞான ஜலவரியத்தா லோங்கியெழுந்த மகத்தாகிய ஜீவரது நிபிட மாகிருந்த இருண்மறைப்பானது ஹேபிரஹ்ம சொரூபமாக விளங்கும் ஆகிய உத்த மரே! எங்ஙனந்தான் விநாசத்தையடையும், அருளல்வேண்டும் என்ற ஸ்ரீ இராகவரை நோக்கி ஸ்ரீ வசிஷ்டபகவான் முதலில் அவித்தையின் கூடியவுபாயத்தையருளல்: ஹே இரகுநந்தன! எங்ஙனம் அற்பப்பனியானது பாற்கரோலோகனத்தானே கணத்திற் கழிந்துபோமோ அங்ஙனம் இவ்வவித்தையும் ஆன்மாவலோகனத்தானே அழிந்துபோம் இடையிடமிலாது நெருங்கிய துன்பமய முண்மரங்களே நிறைந்த் இச்சமுசாரமாகிய சாணுக்களில், மலைப்பெரும் பள்ளங்களில், யதார்த்தத்தைக் காணும்பரியந்தம், தேகாபி மானமுடைய அகங்காரத்தைத் தன்னோடு கூட கீழேழேழுயுருண்டு விழுமாறு உருட்டிக் கொண்டேயிருக்கும்; அல்லது ஊசலாட்டிக் கொண்டேயிருக்கும், இந்த அவித்தையா னது, கூயத்தை யுண்டாக்குவதும், மோகத்தை யடியோடுகெடுத்து ஆனந்தத்தை வீளைவிப்பதும் ஆகிய, ஆன்மாவைக்காணும் இச்சைசுயம் உண்டாகாதவரை உபத்திர வஞ் செய்துகொண்டே யிருக்கும்.

(ச.) நீங்கும் = புருடனுக்கு நசிக்கும், பகவனே நீ! வன்றவன் ஸ்ரீ வசிட்டர், குழியில் = கிடங்குகளில், மன்னுயிரை = தேகியை, மாயை = அவத்தை உண்டெனில் = இருக்குமட்டும், உண்மைநோக்கில்லை = ஆன்மதரிசன இச்சையு முதியாது. ஆன்மஜிஞ்ஞாசையானது எதுவரை யுளதாவதிலேயோ அதுவரையுமே அவித்தை தேகியைச் சமுசார ஆரண்யங்களில் மலைக்கிடங்குகளில் தன்னோடுகூடச் சுழற்றிச் சுழன்று கொண்டிருக்கும். என்பது பொருள். (18)

(ஸ்ரீ - வீர - அ - கை.) திருஷ்டாந்த பூர்வகமாக அவித்தையழிவின் உபாயம் உரைத்தல்:—

பிறப்பெனுமாயைக்கரையதாயெங்கும்பிறிவுறுபெரும்பொருடோன்றி
லிறப்புறுமாயைக்கிச்சையேவடிவாமிதனுடைநாசமேவீடு
சிறப்பில்சங்கற்பஞ்சிதைந்திடிலிதுதான்றேய்ந்திடுஞ்சித்தெனுங்கதிரோன்
புறப்படிலிதயவிசும்பில்வாதனையாதிபொங்கிருள்போமெனப்புகல்:

(ப - ரை.) பிறப்பெனுமாயைக் கரையதாய் = ஜனனமரண சமுசாரத்தின் பார மாய், எங்கும் பிறிவுறுபெரும் பொருள் = எவ்விடத்திலும் நிறைந்துபொங்கித் ததும்

பும் பூரணவஸ்து, தோன்றில் = சாக்ஷாத்கரிக்கவரின், இறப்புறும் மாயைக்கு = இல்லா மற்போகும் அவித்தைக்கு, இச்சையேவடிவம் = ஆசையே சொரூபமாம், இதனுடை நாசமேவீடு = இவ்விச்சையை யிரித்தலே மோக்ஷமாம், சிறப்பில் சங்கற்பஞ் சிதைந்திடில் = பிரஹ்மாகாரமற்ற வீண்சங்கற்பங்க ளெல்லாந் தொலைந்திடின், இதுதான்தேய்ந்திடும் = இது சுயமே கெட்டுப்போம், சித்தெனும் கதிரோன் புறப்படில் = ஆத்மஞான மாகிய ஆதித்தியன் பிரகாசிக்கில், இதயவிசும்பில் = மஹாகாயோமத்தில், வாதனையாதியும் பொங்கிருள்போம் = வாதனையாகிய (இரவாலுண்டாகிய) இருளானது க்ஷயமாம், எனப் புகல = என்று கூறியபோது.

(ஸ்ரீ - வீர.) யாவற்றினும் சேடரூபமாய்த் திகழ்பெற்ற அவித்தையினும் பரமாயிரா நின்ற பரமாத்மாவை நன்குசாணப்பட்ட இதற்குத்தனது நாசமேயுண்டாம், அதனையே தெளிவித்தல்: சர்வகதமாகிய போதரூபத்தைக் கண்டபோது சுயமாகவே இதுலயமாய் விடும், ஆதிப் அநுபவார்த்தியாய சாயையேபோலும்; துவாதச அருக்கக்கூட்டம் சர்வ திசைகளிலும் நிறைய உதயமாயிடின் சாயையேபோலும் என அதனுவமையறிக. சர்வ கதபோத மென்று சொல்லப்பட்ட பிரஹ்மத்தினது தரிசனத்திற்கு யாதுபாயம் என ஆசங்கித்து, விடயங்களிடத் திச்சையிருப்பின் சிரவணாதி செய்தபோதினும் வீணுதலின் அவற்றில் ஆசையின்மையே அதனுபாயமாம் என்னும் அபிப்பிராயத்தாலறைதல்: இச்சையே யென்பது காரண அவித்யாநாச உபாயம் உரைத்து காரிய அவித்தையின்ஜயோபாயமறைதல்:—இச்சையே யென்பது. இவ்வவித்தையானது இச்சைமாத்திரமேயாம் இதன் அழிவே மோக்ஷமெனப் பெறும். " இதயந்தனி லிசையாசைகளி வனியாவையும் விடவே, லிதமுந்துறுமது போதினில் லிரிவாயறிவுறுவோன், அதநந்திய வமுதாகுவன் கமே சிவமதெனு, வுதயந்தரு மூணர்வாலுறு மூயர்மாசுகமுறுமே " எனமறையு மறைகின்றது. ஸ்ரீ கணேசகீதையிலும் " எனதிதெனு டகங்காரத்தை யீர்த்தவன், மனதினை டெந்தவாஞ்சையு மாய்த்தவன், தனது ஞானத்தினுனிதஞ் சார்ந்தவன், இனிதுஞானத்தினுன் மூத்தியேய்வனுல் " ஸ்ரீ பகவத்கீதையிலும் " யானெனதென்பதின்றி யெவ்வகைப்பொருளும் விட்டான் ருனெனச்சரிக்கின்ருன் யாரவனேயே யடையுஞ்சாந்தி, யீன மதடையாரித்தை யுஞ்சித்தை யடைந்தவரி றக்கம்போது, ஞானமேயுடையா ரென்னை நண்ணுவர் பிறவிநண்ணுர் " இப்பொருள் திருவாய்மலர்ந்தருளப் பெற்றுள்ளது. ஆயின் ஆசையின் அழிவு எதனுல் அடையலாமெனின்? அறைகின்ருர்: சிறப்பில் என ஹே இராகவ! அதுவும் அசங்கற்பமாத்திர சத்திரத்தானே சித்தமாய்விடும், விடயங்களில் இாமணீயத்தன்மை யத்தியாசம், சங்கற்பமாம், அதனபாவம் அசங்கற்பமாம், அதுவே சத்திரம், அதனு லென்பதாம். சிறிதுறும் வைராக்கியமும் பலத்தின் பொருட்டுப் பற்று வதாகும் என்றுல் பரிபூர்ண வைராக்கியமிருப்பிற் கூறவேண்டிய தென்னேயுள தென்னுங் கருத்தாற்கூறல். சித்தென. ஒருசிறிதேனும் விடய இச்சை அல்லது காமவாசனை ரஜோ = இரவு, மஹாகாயோமத்தில் அகலுமாயின் திமிரசமூகாயமாய அவித்தை யாவரணம் குறைந்துதோன்றும். வாசனையேயாய இராத்திரியானது அற்பமேனும் க்ஷயமாகுமாயின் சித்தேயாய ஆதித்தியனது பிரகாசத்தினுல் அவித்தையிருளானது கிருசத்தன்மையை யடையும் என்பதாம்.

(ச.) எங்கும் பிரிவற = சர்வகதமான, பரம்பொருள் = பரமாத்மபோதம், தோன்றில் = தரிசனமாயின், இறப்புறு மாயைக்கு = நாசமாகும் அவித்தைக்கு, இச்சையே = இச்சைமாத்திரம், வீடு = மோக்ஷமாம், சங்கற்பஞ்சிதைந்திடில் = அசங்கற்பமாத்திரத்தால், அதுதான் = இச்சைதானே நசிக்கும், சித்தெனுங் கதிரோன் புறப்படின் = சிதா

தித்தியன் பிரகாசிக்கின், அவ்வேதுவினால், இதயவிசும்பில் = மனோவியோமத்தில், வாதனையாற் பொங்கிருள் = வாசனை யிரவாலாய சகப்பிரமை ரூபமாகிய கறுப்புத்தோ மெனப்புகல = இருசமுறுமென்க. மெய்த்து (14)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தத்துவத்தைத் தரிசித்தால் மாயாகாரியமுட னீங்குமென் னின் ? அவ்வாத்துமதத்துவ மெத்தகையதென ஸ்ரீ இராகவர் வினதலும் ஸ்ரீ வசிஷ்ட பகவான் விடைபகரத் தொடங்கலும்:—கண்டவென,

கண்டனவீனைத்துமாயையேயென்றுய்கண்ணெனுந்தத்துவத்தாலே
தண்டறவதுதான்கரைந்துபோமென்றுய்ததத்துவமாவதேதென்ன
வெண்டவனுரைப்பான்காண்பவற்றிடைசென்றெய்திடாதெங்கணுஞ்சமமா
யுண்டெனலாகிநாமமற்றுயர்ந்தவுணர்வுதற்பரமமாமுணர்வே.

(ப - ரை.) கண்டன அனைத்தும் மாயையே என்றுய் = இத்திருசியங்கள் யாவையும் அவித்தையே என அருளிச்செய்தீர், கண்ணெனுந் தத்துவத்தாலே = அறிவுரூப ஆன்ம பாவனையினாலே, தண்டற அதுதான் கரைந்துபோ மென்றுய் = யாதொருதடையு மில்லாமல் அத்திருசியம் யாவும் இல்லாமற்போம் எனவும் அருளிச்செய்தீர், தத்துவம் ஆவது எதென்ன = அவ்வான்ம தத்துவம் எத்தகையது என்று ஸ்ரீ இராமச்சந்திரர் வினவ, எண்டவன் உரைப்பான் = பிரஹ்மாண்டத்திற் பெருந்தவத்தோன் என்று கணிக்கத்தக்க ஸ்ரீ வசிஷ்டபகவான் அருள்வர், காண்பவற்றிடை சென்றெய்திடாது = திருசியங்களுக்குள் ஒன்றுயில் லாததாய், ஈங்கணுஞ் சமமாய் = சாமானியமாகச் சர்வ தமாய், உண்டெனலாகி = சத்தத்துவமாய், நாமமற்று = யாதொருவித்தினுங் கூற முடியாததாய், உள்ள உயர்ந்தவுணர்வு = அறிவுக்கும் அறிவானபொருளே, தற்பரம்மா முணர்வே = தனது சொரூபமாகிய பரமேசுரராம்.

(ஸ்ரீ - வீர.) ஒரு சிறுதோற்றம் இத்திருசியம் எம்மாத்திரம் உளதோ அது அவித்தையாம், அதுவும் ஆன்ம பாவனையாகிய சொச்சொரூப தரிசனத்தானே கணத்தில் க்ஷீணமாம் என்று ஹே பிரஹமத்தை யுணர்ந்த பேராசிரியரே ! தேவரீர் அருளினீர் ! இவ்வாத்மா ஏத்தகையதென நன்றுக அருளிச்செய்ய வேண்டும் என்று ஸ்ரீ இராகவர் வினவ அதற்கு ஸ்ரீ வசிஷ்டபகவான் அருளுவதாவது. அவ்வான்மதத்துவம் விடய வியாப்தி யென்பதற்றது, திருசியங்களோடு கூடியவற்றைக் கண்டும் விலக்ஷணமாகவே யிருப்பது, திரிபுடிக்கும் வேறுயது, ஞேய அறுகதி யில்லாதது, அந்தக்கரணமானது சப்தாதிஞேயங்களைப் பின்றொடரும், அங்ஙனம் சித்தத்துவம் அவற்றைப் பின்றொட ராது என்பதாம்; சாமானியமென்னுஞ் சமத்தன்மையானே, அதாவது குறைதல் கூடல் என்னுந்தன்மையின்றியே, எவ்விடத்தும் இருப்பது, பாதிக்கப்படாத அறிவுருவமா யிருப்பது, எல்லாத் திருசியங்கட்கும் காரணமாதலின் சாமானியரூபமான அவித்தையும் அற்றிருப்பது, அதனுனே ஆவரண விக்ஷேபங்களற்றது, எப்பொருளும் இல்லாமையி னுனே எங்கணுமிருப்பது எனவும் இயம்பொணாதது, சப்தப்பிரவிருத்தி நிமித்த மில்லா மையானே அதாவது எவ்வாசகத்திற்கு வாச்சியமல்லாமையானே மொழிய முடியாதது, விடயசன்னிதியி லிருந்தபோதினும் விகாரம் சிறிதும் இல்லாதது, எச்சிறப்புமே இயையா தது, தேசகால வத்துக்க ளில்லாமையானே பரிபூரணமாயது, சத்தியமாயிருப்பது; ஆகிய இத்தகைய எச்சைதன்ய ஆத்மாவுளதோ அதுவேபரமேசுரர் என்றதாம், என்றத னுனே, அவ்வான்ம தத்துவத்திற்குப் பிரஹ்மத்தோடு வேற்றுமை விலக்கப் பெற்றதா மெனவுணர்க.

(ச.) ஸ்ரீ இராமர், கண்டன வனைத்தும் = திருஷியமுழுதும், மாயையே = அவித்தையே, கண்ணெனுந் தத்துவத்தாலே = ஆத்மபாவனையால், அதுதான் = அவ்வவித்தை, கரைந்துபோம் = நசிக்கும், தத்துவமாவது = இவ்வான்மா, எதென்ன = எத்தன்மையனு மென்று ஸ்ரீ இராமர் கேட்ப, எண்டவன் = ஸ்ரீ வசிட்டர், காண்பவற்றிடை சென்றெய்திடாது = திருஷிய சம்பந்தரகிதமாய், எங்கணுஞ் சமமாய் = சின்மாத்திரத்தால் எவ்வீடத்தும் பரிபூரணமாய், உண்டெனலாகி = தத்துவமாய் நாமமற்று = திருபாதிகமாதலின் வியவகரிக்கத் தகாததாய், உயர்ந்த வுணர்வே = சித்தே, தற்பரமமாமுணர்வு = பரமேசுவர ரென்னும் ஆன்மாவாம். (20)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அதற்குவஸ்து பரிச்சேதமும் காலபரிச்சேதமும் அகற்றல்:—ஸ்ரீ பிரஹ்மாமுதல் ஸ்தம்பபரியந்தம் திருஷ்டிமயமாய எவ்விவ்வுலக முளதோ, அவ்வியாவுமே எப்போதும் ஆன்மாவேயாம், அவித்தையென்பது சிறிதுமே கிடையாதென அதனசம்பாவனை யகற்றும் பொருட்டுக்காரியசகித அவித்தைக்கு ஆண்டுப்பாதம் பகர்தல்:—இவையென.

இவையெனுமனைத்துஞ்சிற்கனமாகியிறப்பிலாப்பிரமமேயென்று
நவையுறுமனமாங்கற்பனையில்லைநாசமும்பிறவியுமென்னு
மவையெலாம்புவனமூன்றினுமில்லையறுவகைவிகாரமுமில்லைக்
கவையறுசமமாங்குறிபெறுமறிவுமாத்திரங்காணநின்றுளதால்.

(ப - ரை.) இவையெனும் அனைத்தும் சிற்கனமாகி = பிரதீதியாகா நின்ற சர்வதிருஷியங்களும் அறிவின்மயமாகி, இறப்பிலாப்பிரமமே = அவ்யயமாய பிரஹ்மமே, என்றும் = நித்தியமாயிருப்பதாம், நவையுறுமனமாம் கற்பனையில்லை = சங்கற்பித்துக்குற்றமேகொள்ளும் மனமென்னும் கற்பனையொருகாலத்திலும் இலவேயில்லை, நாசமும் பிறவியுமென்னும் அவையெலாம் புவனமூன்றினுமில்லை = இச்சகத்திரயத்திலும் ஒருசிறிதும் உண்டாவதுமில்லை ஒழிவதுமில்லை, அறுவகைவிகாரமும் இல்லை = ஷட்பாவவிகாரங்களுமில்லை, கவையறுசமமாம் குறிபெறும் அறிவுமாத்திரம் = ஷயமில்லாமற் சர்வசாமானியமான சித்துமாத்திரம், காணநின்றுளதால் = சேத்திய அநுபாத ரகிதமாயிருக்கின்றது. (21)

(ஸ்ரீ - வீர.) இவ்வியாவுமே யுரமாய்ப் பிரஹ்மமாம், அது நித்தியமாம் சிற்கனமாம், அபசயமற்றதாம்; சர்வமிதம் பிரஹ்மமென்றது வாதையிற் சாமானுதிகரண்யமாம் அதனுனேயே மனமேனப் பெயரிய வேறுகற்பனை யொன்றுங் கிடையவேகிடையாது சர்வகற்பனைகளும் மநோவிலாசங்களேயாம் என்பார் மனமாம் என்றார். அற்றேல் அசத்தாயவந்தியா புத்திராதிகட்கு ஜன்மாதி காணுமையின் ஜன்மாதிஷட்பாவ விகாரமுடைமையானே புலப்படாகின்ற ஜகத்துயாங்ஙனம் ஆண்டுளதாதல் எனின் ? இலதாமெனல் நாசமுமென. எதுவும் பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை இம்மூவுலகத்திலும், பாவவிகாரங்களின் இருப்புமெங்கும் இல்லவேயில்லை. எக்காரணத்தாற் சகற்சன்மாதி நிருபணம் அயோக்கியமாமோ அக்காரணத்தாற் சத்தை உளதாவதில்லை யெனக்கூறியது பொருத்தமேயாம், உபசங்கரித்தல்; கவையென. சர்வாநுகத சத்ரூபமாய், சர்வசாமான்யமாயிருப்பதாய், சமமே சாமானியமாம், பிரஹ்மாதி ஸ்தம்ப பரியந்தங்களில் குறைதன் மிகுதலின்றி ஒருபடித்தாயிருப்பதாய், சேத்திய அநுபாதரகிதமாய் = சேத்தியங்களில் = ஞேயங்களில், சப்தாதிகளில், அநுபாத = அவ்வாகாரபரிணமம், ரகிதமாய் = அப்பரிணம மற்றதாய் = நிர்விகாரசாக்ஷியாய், இலங்கும் சின்மாத்திரமே ஈண்டுளதாம்.

(ச.) மூற்கூறிய திருசியசம்பந்த ரகிதமான சின்மாத்திரமே பிரமமன்று, மற்றென் னெனில், இவையெனு மனேத்தும் = சர்வஜகத்துந் திருசியமாகத் தோற்றினும், பிர மமே = அத்தியாசம் அதிஷ்டானத்தைத் தவிர வேறுகாதாதலின் பிரமமேயாம், அங் ஙனமாயின் என்று நவையுறுகனமாங் கற்பனையில்லை — மனமென்னுங் கற்பனை அந்திய மாய் அற்பமும் உண்மையா யின்றேயாம், நாச — விகாரமுமில்லை = தோற்றங்களான ஜன்மாதிகளாய பாவவிகாரங்களு மின்றும், பாவவிகாரங்களுக்குஞ் சத்தையின்றும் என் பதுபொருள். கவையறுசமமாம் = சர்வசாமான்யமாகிய, குறிபெறும் = திருசியசம்பந்த ரகிதமான தோற்றம்பெற்ற, அறிவுமாத்திரங் காணநின்றுளதாம் = சின்மாத்திரமே பிரத்தியகூமா யிருப்பதாம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) கூறிய சொரூபத்தை யநுவதித்து அவ்வதிஷ்டானத்தின் கண் அதனினும் விபரீதத்வைத அகர்த்தகற்புகங்குமுறல்:—கேவலவென.

கேவலமாகிக்கேவலவொளியாய்க்கேடறுசுத்தமாய்விரிவா
யோவலிலறிவுமாத்திரமாகியுறுதுயரொன்றுமற்றறி
மேவருபிரதமசினத்தினுக்கொத்துவிகாரமற்றுளபொருளிடத்தே
தாவருந்தனதுநினைவையேவிரும்பித்தன்வயத்தெழுந்ததோரறிவு.

(ப - ரை.) கேவலமாகி = ஒன்றேயாகி, கேவல ஒளியாய் = தானேயொளிர்வதாகி, கேடறு = நித்தியமாய், சுத்தமாய் = தூய்தாய், விரிவாய் = வியாபகமாய், ஓவலில் அறிவுமாத்திரமாகி = ஓயாவொளிச் சின்மாத்திரமாகி, உறுதுயர் ஒன்றும் அற்று = சமு சாரத்துறுந்துன்பம் எதுவுமேயில்லாததாகி, ஆறி = சாந்தமாய், மேவருபிரதம் அனேத் தினுக்கொத்து = அத்தியந்தஞ் சமமாய்ப் பரிபூர்ணமாய், விகாரமற்று = நிர்விகாரமாய், உள = சதோதிதமா யிருக்கும், பொருளிடத்தே = ஆன்மாவின் கண்ணே, தாவருந் தனது நினைவையே விரும்பி = சத்தியாதியான தன்னுடைய இயற்கைக்குமாறுன திரு சியத்தை இச்சித்து, தன்வயத்து = சுயமாகவே, எழுந்தது ஓரறிவு = ஒருணர்வானது சங்கற்பித்தது.

(ஸ்ரீ - வீர.) கேவலம் = அத்விதீயம், கேவலவொளி = பிரமாண வியாபாரமில் லாமலே யிலங்குகின்றது அது, சொயம்பிரகாசம் என்பது பொருள். இவ்வாறாய், நித்திய மாய் வியாபகமாய்ச் சுத்தமாய்ச் சின்மாத்திரமாய் நிருபத்திரவமாயச் சாந்தமாய்ச் சமமாய்ப் பரிபூர்ணமாய் நிர்விகாரமாய்நிகழும், ஆன்மாவின்கண், ஆவரணசகித சித்தானது சத்திய சிற்சொரூப சுபாவவிருத்த, அசத்ஜாட்ய பரிச்சேதாதி சுபாவமுற்ற திருசியத்தைச் சுய மாகவே சங்கற்பித்தோடித்திரியும்.

(ச.) கேவலமாகி = உண்மையா யிருப்பதாய், கேவல, ஒளியாய் = தானே பிரகா சிப்பதாய், கேடறுசுத்தமாய் = நித்திய சுத்தமாய், விரிவாய் = வியாபகமாய், அறிவு மாத்திரமாகி = சின்மாத்திரமாய், துயரொன்றுமற்று = நிருபத்திரவமாய், ஆறி = சாந்தமாய், மேவரும் விரதம் = வேறுபாடற்ற, அனேத்தினுக்கொத்து = பரிபூரணத் தோடே கரூபமாய், விகாரமற்றுள = நிர்விகாரமாகிய, பொருளிடத்தே = பிரஹ்மத் தின்கண், ஸ்புரணமாம் ஓரறிவு, தனது நினைவையே விரும்பி = தற்கருத்தை யிச்சித்து, தன்வயத்து = திருசிய சம்பந்தமாய், எழுந்தது = தானே யுதித்தது. (22)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்புரணமான அவ்வறிவு முறையே மனமாதலும் அநந்தசக் திகளே யுடைத்தாதலும் உவமானபூர்வகமாக வுணர்த்தல்:—செப்பென.

செப்பியவறிவுமுடிவில்சங்கற்பஞ்செய்ததிற்சென்றிடுமிதுதா
னிப்பிரமத்தின்மனமதாமிதனுக்கெண்ணில்சத்திகளுளவாகுங்
கப்பிலாதெங்குநிரந்தரஞ்செய்யுங்கடவுளாமிம்மனந்தனிலே
யப்பிலேதோன்றுந்திரைகள்போற்பேதமாகியவல்லபந்தோன்றும்.

(ப - ரை.) செப்பிய அறிவு = ஸ்புரித்தெழுந்த சித்தானது, முடிவில் சங்கற்பஞ் செய்து = அநந்த எண்ணங்களையாற்றி, அதிற்சென்றிடும் = அந்நினைவின் வழித்தாயே யோடித்திரியும், இதுதான் = இங்ஙனமுழுமிதுவே: இப்பிரமத்தின் மனமதாம் = மன னத்தான் மனமெனப்பெறும், இதனுக்கெண்ணில் சக்திகளுளவாகும் = இத்தேவதைக்கு அளவில்லாத சக்திகளுளவாம், கப்பிலாதெங்கும் நிரந்தரஞ்செய்யுங்கடவுளாம் இம்மனந் தனிலே = சேடமற எங்கும் நிறைந்து மகாத்மாவாயிருக்கும் இம்மனமாகிய தேவதை யினின்றும், அப்பிலே தோன்றுந் திரைகள்போல் = நீரிலே பிரதியாம் தரங்கங்க ளொப்ப, பேதமாகிய வல்லபந்தோன்றும் = பேதகற்பனைச் சக்தியானது கிளம்பும்.

(ஸ்ரீ - வீர.) ஜடாஜட இலக்ஷணம் வாய்ந்த அந்தச் சித்தானது தன்னுற் சங்கற்பிக் கப்பட்ட திருஷ்யத்தையே பின்னொடருமலாது அதிஷ்டான சின்மாத்திரத்தை யனுசரி யாதாம். அச்சித்தானது தானே பிரஹ்மரூபமா யிருத்தலிற் களங்கமற்றதே யாயினும், உபத்திரவமற்றதே யாயினும், உபாதியினுடைய சம்பந்தத்தினாலே மலினவிக்ஷேப மூற்றதேபோலும் பொலிவதாகிப் பிரசித்தமான மனதேயென மலரப்பெறும். " தனி யஃது பாதித்தன்மையானே, மனனித்தலானே மனமெனலாகும் " எனமறையும் உள தாம். சர்வகமாயும் சர்வசக்தியுடையதாயும் மகாத்மாவாயும் இலங்கும் இம்மநோதேவ தையினின்றும், நீரினின்றும் கல்லோலங் கிளம்பல்போல, எண்ணவடிவமாய பேதகற் பனைச் சக்தியானது எழும்பியலவும்.

(ச.) சங்கற்பஞ்செய்து = சங்கற்பித்து, முடிவில் சென்றிடும் = சிரமரகிதமாய்த் தாவும், அதுதானே = அவ்வறிவே, இப்பிரமத்தின் = இச்சங்கற்ப வேதுவினால், மன மதாம், இதனுக்கு = இம்மனோரூபமான அறிவுக்கு, எண்ணில் சக்திகளுளவாகும் = சர்வசக்தியுமுளதாம், நிரந்தரஞ்செய்யுங் கடமையாம் = சர்வகதமாய் மகத்தொரூபமான இம்மனந்தனிலே = இம்மனோரூப தேவனென்னும் பரமாண்மாவினின்றும், பேதமாகிய வல்லபம் = மநோரூபமான விபாகசங்கற்பசக்தி, தோன்றும் = உதிக்கும். (23)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணம் தூவைத அநர்த்தமூலத்தைத் தரிசிப்பித்து அதன் நாச உபாயத்தைக்கூறல்:—உள்ளென.

உள்ளுறுசங்கற்பத்தினுற்றோன்றுமுள்ளமற்றதனினுலொடுங்குந்
தள்ளுறுகாற்றலெழுந்ததீக்கொழுந்துசமிப்பதுங்காற்றினுற்போல
நள்ளுறுபிரமமன்றுநானென்றுநாடுதன்மனத்துறுபந்த
மெள்ளுறுமிடமும்பிரிவிலாப்பொருளேயாமெனுமழுத்தமேவீடாம்.

(ப - ரை.) உள்ளுறு சங்கற்பத்தினுற் றோன்றும் உள்ளம் = ஆந்தரத்தில் எண் ணும்படியான எண்ணத்தினுலே உள்ளம் பிரதியாம், மற்றதனினுல் ஒடுங்கும் = அச் சங்கற்பத்தினுலேயே நாசமாம், தள்ளுறுகாற்றல் எழுந்ததீக்கொழுந்து = யாவற்றை யும் அசைக்கும் வாயுவினுலே யோங்கிய அக்கினிச்சுவாலை, சமிப்பதுங்காற்றினுல் போல = சாந்தமாவதும் அவ்வாயுவினுலேபோல, நள்ளுறுபிரமம் = பெரிதிற்செல் லாம் பெரிதாய பிரஹ்மம், அன்று நானென்று = அகம் அல்லவென்ன, நாடுதல் மனத்

துறபந்தம் = காட்டமுறுதலே மனத்தின் கண்ணுற்ற பந்தமாம், எள்ளுறும் இடமும் பிரிவிலாப்பொருளே = அணுப்பிரதேசத்திலும் நீக்கமற நிறைகின்ற பிரஹ்மசொரூபமே, யாமெனும் அழுத்தமே வீடாம் = எமது வடிவமென்னும் திடஞானமே மோக்ஷமாம்,

(ஸ்ரீ - வீர.) நான் யாமென்றது இகழ்ச்சியும் புகழ்ச்சியுந் தோன்றவாம், எள்ளுவமித்தது, எல்லா எள்ளுள்ளும் நெய்போலும், ஒருதேகமன்றிச் சுரநரதிரியக்காதி சர்வசரீரங்களுள்ளும் யாம் நிறைந்துள்ளோம் என்பதற்காம், எள்வேறுறினும் நெய் ஒன்றுபோலும் திருமெய்யங்கள் வேறுறினும் திருக்கு ஒன்றேயாமென்க இதனை ஆண்டுரோரும் ஆள்வர் " பிள்ளைகணூறு பிழைகள் செய்தாலும் பெற்றவர் தாயரை முகிந்துதள்ளுத லுலகிலுண்டுகொ லடியேன்றவறினைப் பொறுத்தருள் புரிவாய், எள்ளுறுமிடமும் பிரிவிலாப்பொருளே யெந்தையே யெம்முயிர்த்துணையே , யுள்ளுதற்கரிய பொருள்வைமாநகர்வாழுகந்த தேசிகசிகாமணியே " சுவாநுபவத் திருவாக்கு எதனால், எச்சம்சாரம் ஒரேவிஸ்தார சாந்தபரமாத்மாவில் ஒருசிறிதுங்கிடையவே கிடையாதோ அது சங்கற்பமாத்திரத்தானே சித்தியையடைந் துளதோ அதனால்; எதனால் இம்மனமெனப்பெயரிய விபாககற்பனைசக்தி உசிதகாரண ரகிதமாமோ, நிர்விகாரமாய பிரஹ்மவஸ்து அதனுசித காரணமாவதற்குத் தகுதியதாகாதோ; அதனால்; சங்கற்பசித்தமாய தோற்றமாத்திர சித்தமாய அதுவும் மேற்கூறப்பெறும் சர்வம் பிரஹ்மம் என்னும் வடிவினதாய சங்கற்பத்திஞனே நசித்துப்போம். யாது எதனாலே யுண்டாமோ அது அதனாலே நசித்துப்போம் வாயுவினாலே யுண்டாய வன்னிச்சுவாலை அவ்வாயுவினாலே நசிப்பதேபோலும்: வாயுவினின்றும் வன்னியுண்டாம் என்னும் மறையிருப்பதனு னென்பது கருத்தாம். பௌருஷ உத்தியோக சித்தத்தானே போகாசையானது வடிவத்தை யடைந்துலவும் நிதித்தியாசன பரிபாக பௌருஷ உத்யோகத்தாற் சித்தமாய சாக்ஷாத்காரப் பிரதிஷ்டையை யடைந்துள்ள அசங்கற்பமாத்திரத்தானே அவ்வவித்யா மோகமான்னது அழிந்து போம்; அவ்வாறுகவே பந்தமோக்ஷங்களும் மநோதருமங்களே யாமன்றி யாத்மதருமங்களல்லவாம், எனல்: நள்ளுறுயான் பிரஹ்மசொரூப மன்றென்றுள்ளவன் நிட நினை வினாலே மனம்பந்திக்கப்பெறும்; யாவும் பிரஹ்மசொரூப மென்னும் அதிதிடமானபாவனையினாலே மனமானது மோக்ஷத்தையடையும், " தன்னைச் சிவபாவனையாகக் காணுகிறதே பிறவி தன்னைச் சிவரூபமாகக் காணுகிறதே மோக்ஷம் " என்பது ஸ்ரீ மதாண்டவர் திருவாக்கியம். ஈண்டுப்பாவனை ரூபமென்னுஞ் சொற்கள் யதார்த்த அயதார்த்தங்களை யுணர்த்தி நின்றன.

(ச.) உள்ளம் = மனோரூபமான விபாககற்பனை சக்தி, சங்கற்பசித்தமாதலின், அதனினால் = அச்சங்கற்பத்தினாலே, ஒடுங்கும் = நசிக்கும், தீக்கொழுந்து = வன்னிச்சுவாலை, ஆயின் எச்சங்கற்பத்தாற் பந்தம் எச்சங்கற்பத்தான் மோக்ஷம் எனச்சங்கித்துரைத்தல்?—பிரமமன்று நானென்னும்= அகம்பிரமமன் றென்னும், நாடுதல்=சுதிர்டசங்கற்பத்தினால், மனதறும் பந்தம் = மனதுபந்தமுறும், பொருளே யானெனும் = அகம்பிர்மமென்னும், அழுத்தம் = சுதிர்டசங்கற்பத்தினால், மனதேயுறும் வீடெனக் கூட்டுக. ஏ வீடு = அம்மனதுதானே மோக்ஷமுறும், சுதிர்டம் = தீர்க்ககால நைரந்தரிய (இடைவிடாமல்) சத்காரிய சேவையாம். சத்காரியம் = நற்றொழில், சத்கார பாடமேல் = ஆதரவென்பது பொருள். (24)

(ஸ்ரீ - வீர - அ-கை.) பந்தகற்பனைப் பேதங்களை விரித்துரைதல்:மடமையென, (ச.) அச்சங்கற்பத்வயத்தையே விவரணஞ்செய்கின்றார்?—மடமையென.

மடமையுந்துயருமவயவநிறைந்தவடிவமுமுடையனெனன்றே
படர்தருமவற்றிற்கேற்றபண்ணடையாற்பாசமும்பந்தமுமுளதாஞ்
சடமுறுமிவற்றிலேதுமொன்றல்லேன்றசைநரம்பென்புநீரல்லே
னுடலின்மேலான பரமநானென்னுமுறுதியோர்மாயைசெற்றுணர்ந்தோர்

(ப - ரை.) மடமையும்துயரும் அவயவம் நிறைந்தவடிவமும் உடையன் நான் = யான் அஞ்ஞன் யான்கிருசன் யான்பத்தன் யான் அதிதுக்கி யான்கரசரஞதியுடையவன், என்றே = என்பதாக, படர்தரும் இவற்றிற்கேற்ற பண்ணடையால்=பரவிவரும் இப்பா வாநுரூபமாகவுண்டாம் பலவிவகாரத்தால், பாசமும் பந்தமும் உளதாம் = வாதனையும் கடமும் உண்டாம், சடமுறுமிவற்றில் =ஜடமாய இவைதமில், ஏதும் ஒன்றல்லேன் = எப்பொருளும் யான் அல்லன், தசைநரம்பு என்புநீர் அல்லேன் = மாம்சம் சுநாயு அஸ்தி உதிரம் மூத்திரம் மலம் அல்லன், உடலின்மேலான = தேகத்தினும் விலக்ஷணமான, பரமநான் = பரம்பிரஹ்மமேயான், என்னும் உறுதியோர் = என்பதானதிட நிச்சய முடையவர், மாயைசெற்று உணர்ந்தோர் = அவித்தையையழித்து மோக்ஷமடைவர்.

(ஸ்ரீ - வீர.) இஷ்டத்வன்யான் அதிதுக்கியான், பத்தன்யான், ஹஸ்தபாதாதிமான் யான், என்னும் பாவானுரூபமாகச் செய்யும் விவகாரத்தாற் பந்தமுறும். அதன்மோக்ஷ உபாயகற்பனையைக் காட்டல் நான்துக்கியல்லன், எனக்குத்தேகம்யிடையாது, எதற்குப் பந்தம்? அசங்கமாய எனக்குப்பந்தம் எப்படிவரும் எனத் தன்வடிவையே தியானிப்பவன் இவ்வகையான கிட்டைகளைப் புரிந்து சுத்தவாசனை விவகாரஞ்செய்தலால் மோக்ஷத்தையடைவன். யான் எலும்புகள் அல்லன் அதனுண் மூளையேனும் மேன்மாமிசாதியேனும் அல்லன்; மற்றோ, தேகத்தினும் விலக்ஷணமாய பரமசிவமேயான் என்னுந்துணிபுள்ளுடையவன் க்ஷீண அவித்தையனுகி நிராவரண சொரூபமோக்ஷத்தையேயடைவன்

(ச.) மடமையும்—என்றே = நான் அஞ்ஞன் நான் கிருசன், நான்பெத்தன் நான் அதிதுக்கி நான் அஸ்தபாதாதிரூபன் என்று, இதனுக்கு=இக்கருத்தக்கு, நடையால்= விவகாரத்தால், சடமெனுமிவற்றிலேது மொன்றல்லேன், நான்றுக்கியன்று நான்றேகியுமன்று, நான்பெத்தனுமன்று, என்றேபடர்தருமிதனுக்கேத்த பண்ணடையால் வீடுளதாமென முடிக்குக. பரிபூரணமென்னும் அத்துவிதீய வான்மாவிற்குப் பந்தவேதுவின்மையிற் பந்தமின்றென்பது பொருள் மோசகசங்கற்பத்தை மீட்டு முரைக்கின்றார்? தசை, உடலின்மேலான = தேகத்துக் கன்னியமான பிரமநானென்னு முறுதியோர் = பரமாத்மா நான் ஆனேனென்னுந் நிச்சயமுடையவர், மாயைசெற்றுணர்ந்தோர், அவித்தை நசித்து வீடுற்றவராம். (25)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பூமியிலிருக்கப்பட்டவரானே தங்கள் சங்கற்பமாத்திரத்தானே இயற்கையாகவே விபரீதமானதூலமாக இருக்கின்றதெனக்கற்பிக்கப்படுவதேபோல, மூடரானே அஞான்ம வத்துக்களில் ஆன்மபாவனை கற்பிக்கப்படுமெனல்.—தானென.

தானலாதானவுடன் முதற்பொருளிற்றுனெனும்பாவனையாய
வூனமாமாயையுணர்விலோர்விதிக்கவுள்ளதாமுணர்வுளோர்க்கிலதா
மானதனிணைத்ததைம்பொறியியற்றுமன்னவர்க்கமைச்சர்போல்விரைவி
லானநன்மதியான்முயற்சியாற்போகத்தாசைவாதனையைவேரறுப்பாய்.

(ப - பை.) தானலாதான உடன் முதற்பொருளில் = அநாத்மாக்களாய ஆகமுத லிய வஸ்துக்களில், தானெனும் பாவனையாய ஊனமாம்மாயை = ஆத்மபாவனையாகிய நீசத்தனமான அவித்தை, உணர்விலோர் விதிக்கவுள்ளதாம் = விவேகமில்லாதவர் எண்ணுதலானே யிருப்பதாகும், உணர்வுளோர்க்கிலதாம் = ஞானமுடையவர்க் கில்லை யாகும், மானதம் நினைத்தது = மனது அநுசந்தானஞ் செய்ததை, ஐம்பொறியியற் றும் = சர்வேந்திரிய விருத்திகளும் கணத்திற் சம்பாதிக்கும், மன்னவர்க் கமைச்சர் போல் விரைவில் = அரசர்கட் கெண்ணியதை மந்திரிமார்கள் கணத்திற் சம்பாதித்துக் கொடுப்பதே போலும், ஆனநன்மதியான் முயற்சியால் போகத்தாசை வாதனையைவேர றுப்பாய் = நிட்காமிய ஆராதனையாலுண்டான பரமமான புத்தியினுனே யத்தனத்து டன் மேலான பௌருஷத்தை யாசிரயித்து சித்தத்தினின்றும் போகாசா பாவனையை மூலஞ்சிறிது மில்லாதபடி எடுத்தெறிந்து விடுவாய்

(ஸ்ரீ - வீர.) விண்ணேவியமே போலும் பிரபோத முறுதவனுனே அநாத்மாவின் கண்ணுத்மபாவனை வடிவமாய இவ்வவித்தை கற்பிக்கப்பெறும், ஹே இராகவ ! பிர போதமுற்றவனே கற்பியான். கேவலம் சங்கற்பித்தலானே மனத்திற்குப் பந்தகத்வம் என்பதாகவின்றும், மற்றே, சங்கற்பிதப் பொருள்களில் இந்திரியங்களே யேவுதலானே யும் பந்தகத்வம் ஆமென்கின்றார்: மானதம் மனதைத் தடைப்படுத்தினும் யாங்ஙனம் இந்திரியங்களால் வாசனையுற்பவ முண்டாகாது எனில்கூறல்: மானதமென மனமானது யாதையநுபவிக்க விரும்புகின்றதோ அதை ஐந்து புலன்களும் கணத்திற்றேடிக் கொ ணர்ந்துகொடுக்கும்; அரசனுணையை யமைச்சரேபோலும். ஆகலின் யாவன்மனோநுசந் தானம் பாவப்பொருள்களில் ஆக்காலே, உள்ளே பிரஹ்மாகம் பாவனையே முயன்று செய்வானே அவன் பரமசாந்தியை யடைவனென்பதாம்: எதனுன் இராகவாசனையிருந் தான்மாத்திரம் மனத்திற்கும் பந்தகத்தன்மையாமோ இல்லாவிடின் ஆகாதோ அதனுன் அது விடத்தக்கதாமெனல்: ஆனநன்மதி. பரமபௌருஷத்தைப்பற்றி யத்தனத்தானே பரமமானமதியால் போகவாசனையை அத்தியாசத்தோடுங்கூடச் சித்தத்தினின்றும் அத் தியந்தம் ஊனஞ்செய்து எடுத்துவீசுவாய்.

(ச.) தானலாதான வுடன் முதற்பொருளில் = அநான்மாவில், தானெனும் பாவனை யாலே = ஆன்மபாவனையால், உணர்விலோர் = அஞ்ஞர்கள், ஊனமாமாயை விதிக்க வுள்ளதாம் = கற்பிக்கப்படுகின்ற தவித்தையாம், அவ்வவித்தை உணர்வுளோர்க்கில தாம், மானதம் நினைத்தது = மனது அநுசந்தித்ததை, ஐம்பொறி = சர்வேந்திரிய விருத்திகள், விரைவிலியற்றும் = கணத்திற் சம்பாத்தியஞ் செய்யும், நன்மதியாலே = பரமபுத்தியால், ஆனமுயற்சியால் = மேலானபுருடப் பிரயத்தனத்தினுல், போகத்தாசை வாதனையே = போகேச்சா பாவனையை விட்டு, வேரறுப்பாய் = சமூலமாய் மனதை முற்றத்துறப்பாய், (26)

(ஸ்ரீ - வீர - அ - கை,) ஆயின் அத்தியாச லக்கணமூல ஊனத்தைப் பொருட்டு யாது செய்யத்தக்கதென ஆசங்கித்து, அதன்மூல வாசனேத்தரணம் செய்யத்தக்க தெனல்: பரமானமோகமாகிய தனதஞ்ஞானம் யாதொன்றுதயமாமோ அதுவே ஜரா மரணகாரணமாதலின், யாதுயாது காரியவடிவுமாக உதயமாமோ அஃதெல்லாமாக ஆசா பாசத்த உல்லாசவாசனையே விரிந்துதோற்றும், உண்மையாக ஒன்றுமின்று மாதலின் அதனையழிக்க முயலவேண்டு மெனல்:—என்னுடையென,

என்னுடைமைந்தரென்னுடைநிதிநானிவனவனிதுவதுவென்னு
மின்னுடைநிலைமையிந்த்ரசாலத்தால்வீங்கியவாதனேயோங்கும்
நன்னுடைநிலையஞ்ஞானமாகிலேபோய்நாசமாயையிற்கருத்தொழிவாய்
நின்னுடைவடிவிலவற்றைநீயென்றேநினைவிலார்போல்வருந்துவதென்.

(ப - ரை.) *என்னுடைமைந்தர்* = எனதுபுத்திரர், *என்னுடைநிதி* = எனதுதனம், *நான் இவன் அவன் இது அது என்னும்* = அகம் அயம் சஃ இதம் தத்மம என்பதாக, *மின்னுடைநிலைமை யிந்த்ரசாலத்தால்* = மின்னலன்ன அதிசாஞ்சல்ய இந்திரஜாலத்தினாலே, *வீங்கியவாதனே யோங்கும்* = நாட்குநாட் பருத்துவரும் வாசனையே விருத்தியாம், *நன்னுடைநிலை* = ஞன் என்னும் அறிஞன் நிலைமையை உடைத்தாயிருப்பாய், *அஞ்ஞானமாகிலேபோய்* = அறிவில்லான் நிலைமையை யடையவேண்டாம், *நாசமாயையிற் கருத்தொழிவாய்* = சமுசாரவாசனையை யடியோடும் விடுவாய் நீ, *நின்னுடைவடிவில் அவற்றை* = அநாத்மாக்களாய அவற்றை, *நீ என்றே* = ஆன்மாவென நினைந்து, *நினைவிலார் போல் வருந்துவதென்?* = அறியார்போல அழுவதென்னேஃ

(ஸ்ரீ - வீர.) *என்னுடையமக்கள்* = மமபுத்திரர், *என்னுடைய பொருள்* = மமதனம், *இவன்* = அயம், *அவன்* = ஸஃ, *யான்* = அகம், *இதம்* = இது, *என்னுடையது இது* = மம இதம், என்பதாக இவ்வண்ணமுண்டாகிற இந்திரஜாலத்தானே வாதனையே புரண்டுபுரண்டு திரியும். அஞ்ஞானப்போல இருக்கற்பனை செய்யவேண்டாம், பிராஞ்ஞனப்போலப் பிரஹ்மநிருஷ்டியே செய்வாயாக, சமுசாரஞ் சத்தியமாக இருக்கின்றதென்னும் வாதனையை யொழித்து, அநான்மாவின் கண்ணே யான்மபாவத்தானே அஞ்ஞரைப்போல என்றோதனஞ் செய்கின்றாய்.

(ச.) *இதுவது* = இஃதெனது, அஃதெனது, *வீங்கிய விந்திரஜாலம்* = விரிந்த இந்திரஜாலரூபமாய், *வாதனேயோங்கும்* = வாசனையே பலவிதம் நிர்த்தனஞ் செய்யும், *அஞ்ஞானமா நிலேபோய்* = (நீ) அஞ்ஞனாகாது, *நன்னுடைநிலை* = ஞானியாய், *நாசமாயையின் கருத்தொழிவாய்* = சமுசாரபாவனையை விடுவாய், *நின்னுடை வடிவிலவற்றை* = அநான்மாவில், *நீ யென்றே* = ஆன்மபாவனையால், *நினைவிலார்போல்* = அஞ்ஞன்போல, *வருந்துவதென்* = அழுவதென்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அநாத்மாவாகிய தேகத்தில், ஆன்மத்தன்மைமயக்கமேசர்வ துக்க நிதானமென முதலில் அதனையே விலக்கல்—மூகவென.

மூகமாய்ச்சடமாய்ச்சுகாசுகங்களிலேமூழ்கியோர்பயனறவருந்துந்
தேகமார்நீயாரகோவகோவீதோர்சித்திரமிருந்தவாகாணு
யேகமாய்மெய்யாயிலங்கியபிரமமெங்குமாயிருக்கவுந்தோன்றுச்
சோகமாய்ப்பொய்யாய்விளங்குறுமாயைதோன்றுதிருக்கவுந்தோன்றும்.

(ப - ரை.) *சடமாய் மூகமாய்* = அறிவற்றதாய் ஒன்றுந் தெரியாததாய், *சுகாசுகங்களிலே மூழ்கி* = இன்பத் துன்பங்களிலே யழுந்தி, ஓர் *பயனறவருந்தும்* = யாதொரு பிரயோசனமும் இல்லாமல் துன்புறும், *தேகமார் நீயார்* = உடல்யார் நீயார், *அகோ அகோ* = அந்தோ! அந்தோ! *ஈதோர் சித்திரம் இருந்தவாகாணுப்* = இஃதொரு விசித்திரம் இருந்தவாறு காண்பாயாக, *ஏகமாய் மெய்யாய் இலங்கியபிரமம்* = ஒன்றுய் உண்மையாய் ஒளிராநின்ற சிவஸ்வரூபம், *எங்குமாயிருக்கவுந் தோன்று* = எவ்விடத்திலும் சத்தாஸ்பூர்த்தியைக் கொடுத்துக் கொண்டிருந்தும் இறையளவும் இலங்கவில்லை,

சோகமாய் பொய்யாய் விளங்குமுமாயை = துன்பமயமாய் மித்தையாய் தெரிவுறுதிருந்த சமுசாரமய அவித்தை, தோன்றுமு திருக்கவுந்தோன்றும் = பிரதிதியாகத் தருதியற் றிருந்தும் முன்னர்வந் திருப்பதுபோல் நடிக்கின்றது,

(ஸ்ரீ - வீர.) யாது நினது இச்சடமாய மூகதேகம் உளதாதல் ? ஒரு சம்பந்தமுங் காணேமே, நீயறிவு இது அறிபொருள் ஜடம், ஜடத்தன்மையானே மூகமாம் = வாக்கா தீயதிஷ்டாதாவாகாதாம். இது நீயுமல்ல நினதுமல்ல எனவாயினும் இதன்பொருட்டா கச் சுகதுக்கங்களால் வசமற்று மகிழ்ந்துவாடல் என்னே ! தனியவியாஜமாக அவித்தை யகற்றற்பொருட்டு மிகவுற்சாகப் படுத்தல்: கானனீர் நேர்தோற்றுங், காயாதியை, யசத் தெனவுணர்ந்து, விடுதி, உண்மையுணர வுன்னையுற்றிடுதியெனல். அகோவென அந்தோ! அந்தோ ! சித்திரம், சத்தியமாய பிரஹ்மம்யாதோ அது உயிர்கட்கு மறந்துபோய் விட் டது; யாது அசத்தியமோ அவித்தையெனப் பெறுமோ அது அத்தியந்தம் எண்ணத்தி லெப்போதும் இலங்கியது; இஃதென்ன ஆச்சரியம் !

(ச.) சுபாசுபங்களிலே மூழ்கி = சுகதுக்கங்களின் விவேசமாய், தேகமார் நீயார் = தேகத்துக்கும் உனக்கும் என்ன சம்பந்தம் என்பதுபொருள். மாயை = அவித்யாகாரிய மாதலின் அவித்தையென்னுந் திருஷியமே, அகோவகோ வென்பதுவிளி, சித்திரம் = ஆச்சரியம். எத்தேகத்தின் பொருட்டுச் சுகதுக்கங்களால் விவசமாய் விவகரிப்பாயோ அதற்கும் உனக்கும் என்னசம்பந்தம் என்பதாம் பாரமார்த்திகப் பிரஹ்மம் பிறந்தது அசத்தியதிருஷியம் அநுபவிக்கப் பெறுகின்றது; இஃதாச்சரியமன்றே.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவித்தையை யகற்றுவான் முயன்றவனுல், தள்ளமுடியாத போகாதிகாரியங்கள் செய்யப்பெற்ற போதினும் அவற்றில் வீருப்பம் வைக்கலாகாது என்று கூறுகின்றார்: சர்வத்வைதாகாரஞ் சனமயமாய பவபந்தனவாதனையைப் பற்று மல் விடுத்து இராகசம்பந்தி மற்ற வெண்பளிங்குமணிபோலச் சொச்சமா யிருத்தியெ னல்:—படிகவென.

(ச.) இதமுபதேசித்தல்:—படிகவென.

படிகநன் மணிகள் பற்றிபாய்நிறங்கள் பற்றறப்பற்றுறும்படிபோன்
முடிவறுதொழிலிற்பின்விருப்பின்றிமுடித்தியென் றருந்தவவசிட்டன்
நெடிதுரைத்தலுமேபரத்துவகேளாய்நிறைகுணத்திராகவன்கேட்டு
மடியறுவிதயபங்கயமலர்ந்துவசிட்டனேநோக்கியீ துரைத்தான்.

(ப - ரை.) படிகநன்மணிகள் = வெண்பளிங்கு மணிகள், பற்றிபாய் நிறங்கள் = பிரதிபிம்பித்த சித்திரங்களின், பற்றறப்பற்றுறும் படிபோல் = சம்பந்தமின்றியே சம்பந் தித்துக் காட்டுவனபோல, முடிவறு தொழிலின் = நினது இன்றியமையாத காரியங்க ளில், பின்விருப்பின்றி = வரும்வாசனாரூப ராகானுரஞ்சனை யில்லாமல், முடித்தி யென்று — செய்வாயாக வென்று, அருந்தவ வசிட்டன் = பெருந்தவபூஷண ஸ்ரீவசிஷ்ட பகவான், நெடிதுரைத்தலுமே = வெகுவாக வுபதேசித்தபோது, பரத்துவகேளாய் = ஹே பரத்துவாசனே நீ யொருமையுட னிப்போது கேட்பாயாக, நிறைகுணத்திராகவன் கேட்டு = சர்வ கல்யாணகுணகரமாய இராகநந்தனன் சிரவணித்து, மடியறும் = விடய வாதனையற்ற, இதயபங்கயம் மலர்ந்து = விகாசித அந்தக்கரண முடையவனுய், வசிட் டனை நோக்கி யீதுரைத்தான் = ஸ்ரீ வசிஷ்டபகவானைப் பார்த்து வருமாறு கூறத் தொடங்கினன்.

(ஸ்ரீ - வீர.) அநேக விகித்திரங்களாய பிரதிபிம்பங்களைக் கவர்ந்த போதினும் வெண் பளிங்குமணியானது யாதொருபற்றையும் உறுதலேபோல நினது விவகாரங்களில் நீ நின்று விவகரித்தபோதினும் விரும்பத்தக்க விடயங்களிற் பற்றையுடைய வேண்டாம்; இராகாதுவேஷங்களே பந்தமாம். நிரதிசய ஆநந்தரூபத் தன்மையானே பரமதெள்ளிதுமான பிரஹ்மத்தை யுணர்ந்த தத்துவ வித்துக்களுடைய சமாஜத்திற்சேர்ந்து மீளவும் ஆராய்ச்சி செய்தலானே, திடதரபிரஹ்மாகும் பாவநிச்சயப் பிரதீபமாய, அதனானே யாண்டுஞ் சமதரிசனநி சுலேமவாய்ந்த வரமதியாம், அப்பற்றற்ற புத்தியால், எப்போதும் விவகரிப்பாயேயாயின் அவித்தையாலாய காரியங்களாம் ஜனனமரணதிவிப் பிரமங்கள் நீங்கப்பெற்றவனுந் தன்மையை யடைவாய், அதாவது நித்தியமுக்த சொரூபனுவாய், அக்கால், எம்மகாப் பிரபாவத்தோடு கூடிச்சீவன் முக்தராகிய பிரஹ்மாவினுடனுதல் ஹரியினுடனுதல் ஹரனுடனுதல் உவமிக்கப் படமாட்டாய், மற்றவரோடு ஒருவனுயிருப்பாய் என்றபடி. ஸ்ரீவான்மீகிபகவான் கூறல்:—ஹே பரத்துவாஜ ! மகாத்மாவாகிய ஸ்ரீ வசிஷ்டபகவான் இவ்வண்ணம் விரித்துக் கூறியபோது, கமலபத்ராக்ஷ இராகுகந்தனன் தாமரைமலர்ந்ததை யொத்தனன், விகசித அந்தக்கரணனுய், சமாதான சந்தோஷிதனுய், தமசுதனர்ச் தேகியவழி பதுமம் திருக்தாலோகன்தீ தாற்போலும், அத்தியந்தம் பரமசோபையை யடைந்தனன். பின், போதத்தாற்போந்த விஸ்மயத்தாலினிது சனித்த தெளிமையாய புன்னகையாற் ருவல்யமான திருமுகனுகி, தந்தாரஸ்பிச் சுதையாற்ற வுதபாவமுற்ற இத்திருமொழிகளே இயம்பத் தொடங்கினன்.

(ச.) படிக ரன்மணிகள் = படிகம், பற்றிபாய் நிறங்கள் = சித்திரங்களான பிரதிபிம்பங்களே, முடிவறு தொழிலில் = காரியங்களிற் சம்பந்தித்திருந்து நீ, விருப்பு = இராகத்தில் அதன்மயமாகும் பாவனையை, பின்னின்றி மூடித்தி = மீட்டொழாவண்ணம் ஒழிப்பாய், அருக்தவ வசிட்டன் = மகான்மா வென்னும் ஸ்ரீ வசிட்டபகவான், மடிவறு மிதய பங்கயமலர்ந்து = விகசித அர்த்தக்கரணனுகி, ஈது = இவ்வாக்கியத்தை, உரைத்தான்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீ இராகவர் இயம்புதல்:—அற்புதமென.

அற்புதமீதொன்றிருந்தவா றென்னேயம்புயஞாளநூலாலே
வெற்பினம்பிணிப்புண்டறநெரிவதுபோல்வெறும்பொய்யாமாயையாலுலகம்
பற்பலதுயரம்பயில்வதாற்றிணம்பருவயிரத்தின்வன்புறல்போ
லற்பவமிலங்குமதனிஞலேற்குமுறுதியையென்றுமீட்டுரைப்பான்.

(ப - ரை.) அற்புதம் ஈதொன்று இருந்தவா றென்னே = அகோ அகோ ஆச்சரியம் ஆச்சரியம் இவ்வண்ண மிருந்தது இஃதென்னேயோ ! அம்புயஞாளநூலாலே = தாமரைத்தண்டி லுண்டாமெல்லிய தந்துவாலே, வெற்பினம் = பர்வதசமூதாயம், பிணிப்புண்டு = கட்டுப்பட்டு, அறநெரிவதுபோல் = அத்தியந்தம் நொருங்குவதேபோல, வெறும்பொய்யாம் மாயையால் = அத்தியந்தம் இல்லாததேயாய அவித்தையினுல், உலகம் = விசுவத்தினுள்ளவர், பற்பலதுயரம் பயில்வதாம் = அநேகவிதமான துயரங்களே யநுபவிப்பர், திணம் பருவயிரத்தின் வன்புறல்போல் = திரும்பானது கடினமான வயிரத்தைப்போல மிகக்கடினப் படுவதைமானும், உற்பவமிலங்குமதனிஞல் = இல்லாத அவித்தையினுலும் உண்டாகிப் பிரதீதியாகும் இத்திருமியம், உறுதியையேற்கும் = இருப்பதுபோல மிகச் சத்தியமாய்த் தோற்றும், என்றுமீட்டுரைப்பான் = என்றிவ்வண்ணந் தனதனுபூதியை யுரைத்து மீளவும் கூறுகின்றனன். (30)

(ஸ்ரீ - வீர.) அகோ அகோவிசித்திரமிஃது என்னே! பதுமத்தினின்றுந் தோன்றிய தந்துக்களானே பர்வதக் கூட்டங்கள் பந்தப்பட்டனவே ! பதுமத்தினின்றும் இளம் பியதந்துக்களானே பர்வதபந்தன துல்லியமாக ஈண்டென்னுச்சரியங் கண்டாயெனின்? கூறல்: வெறும். அத்தியந்தம் அசத்தாயிராகின்ற எவ்வவித்தை உளதோ அதனுல் விசுவம் சூனியமாக்கப்பெற்றது அதாவது புருடார்த்த ரகிதமாக்கப் பெற்றது; யாவருமே மயங்கியமாக்கப் பெற்றனர் என்றபடி. அற்ப அவித்தையினுனும் இப்பிரபஞ்சம் மிக நெருங்கிய சங்கிலிப் பந்தனமதாக எதனுல் ஆய்விட்டதோ அதனுல் திருணமாத்திரமேயாய அவ்விம் மூவுலகமும் (பரோக்ஷாபரோக்ஷ என்றபடி) வஜ்ஜிரம்போலாய் விட்டதே இஃதென்னே! பிரசித்தமாய்க் காணப்பட்ட சமுசாரதுக்கம் உபாதான பூதமாய அவித்தையானே தோற்றிய போதினும் வஜ்ஜிரமாய தென்னே ! அவித்தையாற் ரோற்றிய அசத்தேயாயினும் சத்துப்போற் ரோற்றுகின்ற திஃதென்னே ! என்பதாம்.

(ச.) மாயையால் = அவித்தையால், உலகம் = விசுவம், துயரம்பயில்வது = துக்கத்வசம்பாதனம் பதும தந்துக்களாற் பருப்பத பந்தனம்போல் ஆச்சரியமென்பது பொருள். உறுவது = அவித்தையாற் சர்க்கத்திற்கு நிபிடபந்தனத்துவம் திரணத்திற்கு வச்சிரத்துவம் போலென்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ - கை) அயஃயம் வினுதல்:—ஈதென,

ஈதுமோரையமென்மனத்துளதாலியம்பியலவணனுமன்னன்
மாதயர்டைந்ததென்னெனக்கேட்பவசிட்டமாமுனியதற்குரைப்பான்
நீதகன்மனத்தாலியற்றலாலந்தச்செயல்பயனுடல்புசித்திலதா
லோதுமந்தமன்னனேர்நாளிலுபவனத்தொருவனுயிருந்து.

(ப - ரை.) ஈதுமோர் ஐயம் என்மனத்துளது = அன்றியும் இஃதோர் ஐயமானது எனது இருதயத்தி லிருக்கின்றது, இயம்பிய = முன்னருளிய, லவணனு மன்னன் = இலவணமகா ராஜாவானவன், மாதயர் அடைந்தது என் எனக்கேட்ப = பெருந்துக்கத்தை யடைந்தது யாதுகாரணத்தால் என்று ஸ்ரீ இராகவர் வினவ, வசிட்டமாமுனி யதற்குரைப்பான் = ஸ்ரீ வசிட்டபகவான் அதற்குத்தரம் கூறுவதாவது, நீதகல் மனத்தால் இயற்றலால் = குற்றமனத்தினுலே குயிற்றலால், அந்தச் செயல்பயன் உடல் புசித்திலதாம் = அக்கிரியா பலத்தைச் சரீரம் அநுபவிக்கவில்லை, ஓதுமந்தமன்னன் = கூறிய அந்த லவணமகாராஜன், ஓர் நாளில் = ஒருதினத்தில், உபவனத் தொருவனுயிருந்து = உத்யானவனத்துத் தனியிடத் தேகனுக வீற்றிருந்து.

(ஸ்ரீ - வீர.) ஹே மகாத்மாவாகிய ஆசிரியரே ! மேலும் கேட்கவேண்டியதுளதாம், எச்சம் சயமானது இருதயத்தி லிருந்து கொண்டே யிருக்கின்றதோ, மகாசமர்த்தனும் பாக்கியவானுமான இலவண மகாராஜன் பேராபத்தை யடைந்தது எந்நிமித்தத்தால்: என்று ஸ்ரீ இராகவர் வினவ ஸ்ரீ வசிஷ்டபகவான் விடைதரல்: நீதகல்: இவ்வற்புத விருத்தாந்தத்தைக் கூற நீ ஒருமைபுடன் கேட்குதியேல் இவ்வரசன் மநோமயன் மாத்திரையானே சண்டாளத் தன்மையை யடைந்தனன் என்பது வெளியாம். மனஞ்செய்த சுபகர்மபலமேனும் அசுபகர்ம பலமேனும் மனமேபுசிக்கு மன்றிச் சரீரம்புசியாது; ஆபாசசகித மனமே கருத்தா அதுவே கிரியாபலத்தைப் புசிக்கும், சரீரம்புசிக்க மாட்டாது, இது இனிக்கூறப்பெறும் விருத்தாந்தக் கூற்றின் பிரயோஜனமாம். எவ்விருத்தத்தானே எங்ஙனம் நீ யிதையறிந்து கொள்ளலாமோ அங்ஙனம் அவ்விருத்தத்தைக்

கேட்குதி, ஹே அகஸனே! முன்னர் ஹரிச்சந்திர குலத்தில் வந்த லவணமகாராஜன் தனியிடத்திற் றனியனாக இருந்துகொண்டு நீள்போது மனத்திற் சிந்திப்பதாவது.

(ச.) இயம்பிய லவணனுமன்னன் = மனப்பிரமையினுற் சண்டாளத்துவ மடைந்தா னென்ற லவணவரசன், தொழிலின் பலனைப் புசித்திலதால், மனதேகருத்தா, தான் புரிந்ததின் பலனைப் புஜிக்குஞ்சரீரங் கர்த்தாவன்றுதலின் கிரியாபலம் புஜியாதென்பது பொருள். இவ்வர்த்தசொரூபம் அறியும் வழிகூறல்: ஓதுறும் அந்தமன்னன் = அரிச் சந்திர குலத்துதித்த லவண அரசன், மூன் = ஓர் நாளில், உபவனத்து = பூங்காவி லோராசனத்தில், ஒருவனுயிருந்து = எகாந்தனுயிருந்து.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அரசனது சிந்தனையின் பிரகாரத்தைக் கூறல்:—இருத— கடவுளென.

இருதயத்துணர்வான்பிதாமகன்குருவாம்பிராசசூயஞ்செய்வோமென்னுக்
கருதியமனத்தான்மகத்தினுக்குரியகலப்பைகளனைத்துமுண்டாக்கிச்
சுருதிநூல்வழியேசாலையிற்புகுந்துதுறவரைவரித்தருச்சித்து
வருதிரென்றிமையோர்களைமறைமொழியால்வரவழைத்தாழழல்கிளப்பி.

கடவுளர்முனிவர்மறையவர்பூசைகடைப்பிடித்தாரொருவருடந்
தொடர்புறநடத்தித்தன்பொருண்முழுதுந்தொலைவுறத்தானமாவழங்கித்
திடமுறுமனத்தான்முடித்தபின்பகலுஞ்சென்றறுவிழித்தனனிதனு
லிடவியமனமேதன்பவின்பங்களெய்துறப்புசிப்பதென்றுணர்வாய்.

(ப - ரை.) இருதயத்துணர்வான் = மனத்தின் கண்ணே யிவ்வாறு சிந்திப்பானு யினன், பிதாமகன் குருவாம் = எனதுபாட்டன் பெரியமகானு யிருந்தார், இராசசூயஞ் செய்வோ மென்னு = அவர்செய்த இராசசூயயாகத்தை மனத்தாற் செய்யலாமென்று கருதி, கருதியமனத்தால் = எண்ணிய எண்ணத்தால், மகத்தினுக்குரிய கலப்பைகள் அனைத்தும் உண்டாக்கி = யாகத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகள் யாவற்றையும் சேகரித்து, சுருதிநூல்வழியே = சாஸ்திர மரியாதைப்படியே, சாலையிற்புகுந்து = தீக்ஷித்து யாகசாலைக்குட் சென்று, துறவரை வரித்தருச்சித்து = ருத்விக்குகளே வரவ ழைத்தருச்சனைசெய்து, வருதிர் என்றிமையோர்களை மறைமொழியால் வரவழைத்து = வந்தருளுவீராக என்று தேவர்களை வேதமந்திரங்களால் ஆவாகனஞ்செய்து ஆழல் கிளப்பி = யாகாக்கினியை யோங்கிச் சொலிக்குமாறு செய்து.

கடவுளர் முனிவர் மறையவர் பூசைகடைப் பிடித்தார் = தேவ இருடி துவிஜபூசை யோடு அந்தயாகத்தை, ஒருவருடம் = ஏகசம்வத்சரம், தொடர்புற நடத்தி = விடாமற் செய்து, தன்பொருண்முழுதும் = தன்னுடைய சருவ ஐசுவரியங்களையும், தொலைவுறத் தானமாவழங்கி = சர்வஸ்வித்தகஷிணை யென்னும்படி யாவருக்கும் தானமாகக் கொடுத்து, திடமுறு மனத்தான் = அதிதிடமாகிய சித்தத்தினுலே, முடித்தபின் = யாகசமாப்தி செய்தபின்பு, பகலுஞ்சென்றது = தினமும் அந்தமாயது, விழித்தனன் = உணர்ச்சி யுற்றனன், இதனுல் = இக்காரணத்தால், இடவியமனமே தன்பவின்பங்கள் எய்துறப் புசிப்பதென் றுணர்வாய் = சங்கற்பங்களைச் செய்யும் மனமே துக்கசுகங்கள் அடைவுற அநுபவிப்பதென்றறிவாய். (33)

(ஸ்ரீ - வீர.) இருதயத்துணர்வதாவது:—எனது பிதாமகர் பெரியமகானுயிருந்தனர் பெரிய இராஜசூயயாகத்தைச் செய்து முடித்தனர், யான் அக்குலத்தே யாயினன் அவ்

வாறு செய்யாவிடினும் மனத்திலுலேயே அந்த யாகத்தைச் செய்துமுடிப்பேன். பாகிய சாமக்கிரிதேடி முடிப்பது முடியாமையானுதல், ராஜாதிபீடா கிமித்த இராஜசூயத்தில் மந்திரி புரோகிதாதி அசம்மதியினுலுதல், மனத்திலுல் யஞ்ஞங்கற்பனை செய்யப்பெற்ற தென்றறிக. இவ்வாறு மனத்திலுலே யெண்ணி யாகத்திற்கு வேண்டிய சாமக்கிரிகளனைத்தையும் மனத்திலுலேயேதேடி, மனத்திலுலேயே தீக்ஷைசெய்துகொண்டு மதீபதியானவன் யாகசாலையுட் சென்று; முறையே இருத்துவிக்குகளை வரவழைத்து, மந்திரபூர்வகமாகத் தேவதைகளைப் பிரசன்னமாக்கி, முனிவர்களை வரவழைத்து தேவதைகளை மகிழ்ச்சிபொங்க மந்திரங்களா லருச்சித்து, யாகாக்கினியை மிகச் சொலிக்கும்படியாகச் செய்வித்து. இவ்வண்ணம் அம்மகத்தில் யஜமானனுக இருந்துகொண்டு அவ்வுபவனத்தினுள்ளேயே ஓரேகாந்த இடத்தில் தேவ இருடிமுனிவர் பூசையைக் கடைப்பிடித்து ஒருவருடத்திற்குமேற் கழிந்தது சம்வத்சரத்திற்கு மேற் சிறிது அதிகமாகக் கழிந்ததுபோல மனத்திற் றோற்றியது, உண்மையாக அங்ஙனம் ஒருவருடமாக வில்லை, பின்வருவதோடு முரணுறுதலின் மறையவர் முன்னுக எல்லாப் பிராணிகட்கும் தனது சர்வ ஐசுவரியங்களையும் தக்ஷிணையாகக் கொடுத்து விட்டுப் பகற்போனபோது தானுகவே அம்மன்னவன் அவ்வுபவனத்திற் றனேபாகிய திருஷ்டியை யடைந்தனன். இவ்வாறு அந்த லவணமகாராஜா இராஜசூயத்தைச் செய்து முடித்தனன், அதனை மனத்திலுலேயே ஆதரவோடுஞ் செய்து முடித்திருத்தலின் அம்மகபலத்தையும் மனதடைதலே தகுதியாம். ஆகலின் இன்பத்தின்பங்களின் போக்தாவாகச் சித்தத்தை நன்குணரலாம். அக்காரணத்தால் மனத்தின் விசோதன வுபாயத்தில்=விசார நிரோதாதிகளில், உண்மையில் அடைவிக்கவேண்டும் மனமேகிரியா சக்திப் பிராதான்யத்தால் கருத்தாவும் காரணமும் கிரியையுமாம், அதுவே சுகதுக்க பலவடிவமாகப் பரிணுத்மாகிய தன்பலமாம்; மனமே சேதபாச வியாப்தியானே சிற்சக்திப் பிராதான்யத்தாற் போக்தாவும் போகமுமாம். ஆகவே இம்மனத்தைப் பரிபூர்ண பரமாத்மாவிற் செலுத்தில் நிறைந்தேசுகிக்கும், தேகாதிகளிற் செலுத்தில் அவைபோல அழிந்தேகும்; ஆகலின் தேகோக மென்னும் நைசுவர அகம்பாவம்போதும் பிரயோஜன மில்லாமையின் விட்டுத்தொலைத் தின்புறுக வென்பதாம்.

(ச) இருதயத்தினர்வான் = மனதினெங்காலஞ் சிந்தித்தான், குருவாம்=மேன்மையான, பிதாமகன் என்னும் அரிச்சந்திரன் இயற்றிய இராசசூயத்தை, செய்வேம் அவனது குலத்திற்பிறந்த யான் மனதால் இயற்றுவேன், மகத்தினுக்கு = இராஜசூயத்திற்கு, கலப்பைகள் = சாமான்கள், உண்டாக்கி = ஆதரவாய்ச்செய்து, துறவரை = முஞ்சுவரரை, வரித்து = இருத்விக்குகளாக=யாகதீக்ஷிதராக நியமித்து; யாகத்தில் ஓம முதலியசெய்யும் அத்வர்யு முதலானவர்களாம் என்பது பொருள். அருச்சித்து = அர்ச்சித்து வணங்கி, மறைமொழியால் = மந்திரத்தால், ஆழல்இளப்பி = அக்கினி தேவனைச் சொலிப்பித்து.

தானமாய்வழங்கி = அத்தனரை முன்னிட்ட இலர்க்கும் தக்ஷிணையாகக்கொடுத்து, மனத்தால்=மனதினுலேயே, பகலுஞ்சென்றது = உபவனத்து அந்த நிருபனே திகாந்தத்தில் விழித்தனன், அதனுல் = இங்ஙன் இராஜசூயஞ்செய்த அந்த லவணராசன் மனதினுலேயே அதனது நிறைந்த பலத்தைதொடுங் கூடினுனல்லவா ! ஆதலின் இடவி+உணர்வாய் = சுகதுக்கங்களின் போக்தாவைச் சித்தமயனெனத் தெரிவாய். (33)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இலவண இராஜனுல், சண்டாளபாவாதி கற்பனைவடிவமாக இந்திரஜாலக்காரனுல் காட்டப்பெற்ற இராஜசூய சம்பந்தி நிஷ்டபலம், அடையப்பெற்

றதி, என்று ஐதிகமாகக் கூறப்பெற்ற பொருளின் கண்ணே பிரமாணஞ் சம்பவிப்பது துர்லபமாம்; காட்சியோகதுவாதாம். எனதுமானத இராஜசூயத்தின் பலமிதுவென இல வணராஜஞல் தானே யுணர்ந்துகொள்ள முடியாமையின்; தத்வியாப்பிய லிங்கங்கட்கும் அப்பிரசித்தமாதலின் அதனல் அன்னியரானும் அறிந்து கோடற்கு முடியாமையின், அதனே மூலமாகவுடைய சப்தத்திற்கேனும் ஐதிகத்திற்கேனும் ஆண்டு விவகாரமின்மை யின்; சித்தாகாயத்தில் கற்பனஜாலான் மகம் பலமெங்ஙன் கூடும்? என்று ஸ்ரீராகவர் கேட்ப அதற்கு ஸ்ரீவசிட்டபகவான் அன்னியர்கட் காண்டுப் பிரமாண விவகாரமின்றே னும் யோகபலத்தானேனும்கு அதுபிரத்தியகூம் ஆதல்கூடும் கூடவே அம்மூலமாகவே அன்னியர்கட்கும் வெளியாம் எனச்சமாதானஞ் செய்தல்:—சித்தனென.

சித்தனதியல்புசெப்பிடக்கேண்மோதிருந்தியலவணன்முன்னெய்தி
வித்தையான்மயக்கஞ்செய்துளசித்தன்மீண்டுபோயொளித்தனஞ்கே
யித்தனசெயலுங்கண்டுடனிருந்தவெம்மையிதென்னெனவினவ
வத்திறல்வேந்துமியாவருங்கேட்பவகத்துணர்ந்துரைத்தனமனத்தும்.

(ப - ரை.) சித்தனது இயல்பு செப்பிடக்கேண்மோ = இந்திரஜாலக் காரனது, நடத்தையைக்கூறக் கேட்குதி, திருந்திய லவணன்முன்னெய்தி = பயனேயுறுவதற்குத் தகுதிவாய்ந்த அந்த அரசனது சபையையடைந்து, வித்தையான் மயக்கஞ்செய்துளசித் தன் = தனது மாயாவித்தையினுலே மயக்கித் துயருறுத்தியசாம்பரிகன், மீண்டுபோய் ஒளித்தனன் = திரும்பிப்போய் மறைந்தனன், ஆங்கே = அவ்விடத்தில், இத்தனை செயலுங் கண்டுடனிருந்தவெம்மை = நடந்த விவகாரங்கள் யாவற்றையும் பார்த்துக்கொண்டு அவர் களோடு கூடவே யிருந்த, எம்மை = ஆசிரியராகிய நம்மை, ஈதென்னென வினவ = இஃதென்ன விருத்தாந்தமெனக் கேட்ப, அத்திறல் வேந்தும் = அந்தப் பராக்கிரமம் பொருந்திய மன்னவனும், யாவரும் கேட்ப = சபையோரும் செவிகொள்ளுமாறு, அகத்துணர்ந்து உரைத்தனம் அனைத்தும் = உள்ளே தெரிந்து யாவற்றையுஞ் சொன் னேம்.

[ஸ்ரீ - வீர.) இனிச் சாம்பரிகனது விருத்தாந்தம் ஹேராகுநந்தன கேட்குதி! எக் காற் சாம்பரிகன் = சம்பராசுர சம்பந்தமாய மாயைகற்றவன், இந்திரஜாலக்காரன், லவணராஜ சம்பந்தியவையில் வந்துற்ற காலத்தில் யாமும் ஆண்டிவீற்றிருந்தேம், அங் குற்றவற்றைக் கண்ணுரக் கண்டேம். ஆண்டு அச்சித்தன் இந்திரஜாலவகையிற் செய்த சரித்திரம் நடந்தேறிய பின்னர். அவையோராலும் லவணராஜாவாலும், இஃதென்ன அதிசயம் சுவாமிந்! உரைத்தருள வேண்டுமென வெகுவாக வேண்டிக்கொண்டபோது யாம்யோகபலத்தால் யாவற்றையும் கருத்திற்கண்டு உள்ளே யுணர்ந்தபடியே யாவருங் கேட்ப உரைத்தனம்.

(ச.) சித்தனதியல்பு = இராமா இனிச்சாம்பரிகனது விருத்தாந்தத்தை, லவணன் முன்னெய்தி = இலவணசபையை யடைந்து, வித்தை=இந்திரஜாலம், கண்டு = பிரத் தியகூமாகப்பார்த்து, உடனிருந்த = சபையாரொடு வசித்திருந்த, வினவ = மகிபதி யத்தருத்துடன் கேட்க, அகத்துணர்ந்து யான் தியானதிருட்டியிற் சித்தித்து. (34)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இராஜசூய யாகத்தின் பிரத்யகூ துக்கபலத்தை யுரைத்தல்:—

ஈங்கிதுபுகலவிராகவகேட்டியிராசசூயத்திலேலவணன்
பாங்குறுமனத்தாற்றொகுத்தவாயாரும்பன்னிருவருடம்வன்முயிற்
றீங்குறுவருத்தமுறுதலான்மகவான்சேணினின்றொருவனேயே
வாங்கவன்சித்தனுனியேலவணற்கருந்துயரளித்துமீண்டகன்றான்.

(ப - ரை.) ஈங்கிதுபுகல வீராகவகேட்டி = ஹே இரகுநந்தன ஈண்டு சாம்பரிக னது செயலைக்கூறக் கேட்பாயாக, இராசசூயத்திலே லவணன் பாங்குறுமனத்தாற் றெருத்தவா = இராஜசூயயாகத்திற்குக் கருத்தாவாக விருந்து லவணமகாராஜன் எகாக் கிரமாகிய மனத்தினாலே யாதொரு அங்கவீனமு மின்றிச்செய்து முடித்ததேபோல, யாரும் = எக்கருத்தர்கள் அவ்வியாகத்தைப் பாகியத்திற் செய்துமுடித்த போதினும், பன்னிருவருடம் வன்றுயரில் = துவாதசவருடம், நாளுகாரத சீமயமாக, தீங்குறு வருத்தமுறுதலால் = அதிதுக்கத்தை யடைதலால், மகவான் = இந்திரன், சேணி னின்று = விண்ணினின்று, ஒருவனேயேவ = ஒருதேவதூதனேச் செலுத்த, ஆங்கவன் சித்தனுகியே = அங்கு அத்தேவன் சாம்பரிகனுகின்று, லவணற்கு = லவணமகா ராஜனுக்கு, அருந்துயரளித்து = மகாபத்தைத்தந்து, மீண்டகன்றான் = அங்கிருந்து மீளவும் துறக்கத்திற்கேகினன்.

(ஸ்ரீ - வீர.) ஹே இரகுகுலதிலக! சாம்பரிக சேஷ்டையின் அபிப்பிராயகார ணத்தை யாம் கூறக்கேட்பாயாக, யாவர் இராஜசூயயாக கருத்தாக்கள் ஆவரோ அவர், பன்னிரண்டு வருடங்கள் நாளுவடிவமாம் தசைமயமாய அதிதுக்கத்தையடைவர். நாளு காரு அவஸ்தைமயமான பன்னிருவருடத்திய துக்கத்தையும் அடைவர் என்பதாக யாதோதப் பெற்றதோ அது புருடஹிதத்தின் பொருட்டே பிரவிருத்தித்த வேதவிதித இராஜசூயத்தின் பலமன்றும்மற்றே அக்கால் வெளிப்பட்ட முற்பாவத்தினதே யாமென் றறிக. பற்பலதுயர் வாய்ந்த ஆபத்தையடைவராதலின் தேவேந்திரனுல், துறக்கத்தி னின்றும் லவணனுக்குத்துயரீயும் பொருட்டு ஒரு தேவதூதனேயனுப்ப அவன்சாம்பரிக ஆகிருதியுற்று வந்து இராஜசூயக் கிரியையையியற்றிய கருத்தாவாகிய அரையனுக்கு மகத்தான ஆபத்தைக்கொடுத்து விட்டுச் சுரசித்த நிவேஷ்விதமா யெப்போது மூல்லாச மாயுலவும் விண்மார்க்கஞ் சென்றனன். சரீரராஜசூயபல துவாதசவருடத்திய ஆபத் தைக்குறித்து, அறுபது வருடக்கற்பனே வடிவதாதலின் ஐந்துமடங்கென்பார் அருந் துயர் = மகாபத்து என்றார். இதனுனே மானச இராஜசூயாதிக்கு, சுவாராஜ்யாதி சுகபல மும், சரீர அபேக்ஷையால், ஐந்துமடங்கதிகமென அறியப்பெறும். ஆகலினிது இராகவ பிரத்தியக்ஷமேயாம் இதிலேயம் யாதொன்றுமே செய்யலாகாதாம்.

(ச.) இராசசூயத்திலே தொகுத்தவரியாரும் = ராஜசூயத்தினது கர்த்தரனேவரும், வன்றுயரிற்றீங்குறு வருத்தமுறுதலால், = நாளுகார அவஸ்தைமயமான அதிதுக்கத் தையடைவர், அரிச்சந்திர தருமாதியர்க்கு அவ்விததுக்கானுபவங் கண்டிருத்தலின், ஆதலால் மனத்தால் லவணன்பாங்குற = லவணனுக்குத் துக்க நிமித்தம், ஒருவனே = ஒருதேவதூதனே, சித்தனுகியே = சாம்பரிகராகிருதியாய், லவணற்கு = இராஜசூயக் கிரியாகருத்தனுன அந்தலவணனுக்கு, அருந்துயரளித்து = மகா ஆபத்தைக் கொடுத்து, அகன்றான் = சுரசித்தர்வாழும் வியோமமார்க்கத்தை, அடைந்தான்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) பரமபுருடார்த்தப் பொருட்டுச் சித்தத்தைத் தெளிவிப்ப தாய எழுவிதியோகபூமிகள் இனியியம்பப் பெறுமென்ன, ஹேசர்வ தத்வவித்துக்களி னும் மேன்மையரே! ஹேபகவன்! அவ்வெழுவகைச் சித்தியைநல்கும் யோகபூமிகள் எத்தகையன வீரிவாகப் பின்கூறுவனவாயினும் முன்சங்கிரகமாகக் கூறவேண்டும், அவற்றின் இலக்கணவகைகளேயும் அவற்றிற் குபயோகியாய அர்த்தாந் தரங்களே யும் சுருக்கமாக அனுக்கிரகிக்க வேண்டும் என்று ஸ்ரீ இராகவர்கேட்ப, அதற்கு ஸ்ரீ வசி ஷ்டபகவான் ஞானபூமிகளின் போதம் எளிதிலுண்டாகும் பொருட்டு வேண்டியதாய

அஞ்ஞானபூமிகளின் பேதத்தை முதலில் மொழியும் வேட்கையுற்று ஞாஞ்ஞானபூமிகளைப் பிரித்துக் காட்டத்தொடங்கல்:—மற்றென.

(ச-அ-கை.) அந்த லவணனது மகத்தாகிய வாபத்துருவமான முற்கூறிய மநோவிலாசத்தையே விலாசமாகத் தெரிவித்தற்குப் பூமிகா நிரூபணங் கீர்த்தனிக்கின்றார்:—மற்றென.

மற்றுமொன்றுரைக்கவள்ளலேகேட்பாய்மடமையாம்பூமியேழ்பதமா
முற்றுளஞானபூமியேழ்பதமாமொழிந்தவிப்பதங்கடம்மிற்றும்
பற்றுளவாகுமொன்றெடொன்றளாவிப்பயில்வனபதங்கண்மட்டிலவா
மற்றமில்சொரூபநிலைபெறல்வீடாமதினழுவுறுதலெனனலே.

(ப - ரை.) மற்றுமொன்றுரைக்க=மேற்கூறியவற்றை யுணர்த்திச் சிவந்தரப்பூமிக் கிரமங்களைக்கூற, வள்ளலே கேட்பாய்! இராகவே கேட்குதி, மடமையாம் பூமியேழ் பதமாம் = அஞ்ஞானபூமிகள் சப்தபதங்களாம், முற்றுளஞான பூமியேழ்பதமாம்= சுக முழுவதும் முறையேபெறவுரிய ஞானபூமிகள் சப்தபதங்களாம், மொழிந்த விப்பதங்கள்=கூறிய இச்சப்தபதங்கள், தம்மிற்றும் பற்றுளவாகும் = பரஸ்பரம் பற்றுடையனவாம், ஒன்றெடொன்று அளாவி=அன்னியோன்னியம்கலீ, பயில்வனபதங்கண்மட்டிலவாம் = விவகரிக்கும் பதார்த்தரங்கள் சங்கையற்றனவாம், அற்றமில் சொரூபநிலைபெறல் வீடாம் = களங்கமில்லாத சொரூப அவஸ்திதியே முக்தியாம், அதின் நழுவுறுதல், நானெனலே = அதினின்றும் பிரமசமாதலே அகர்தை வேதனமாம்.

(ஸ்ரீ - வீர.) இனிமேல் வேண்டியயாவற்றையும் இயம்பக்கேட்குதி இராமச்சந்திர! முன்னர் என்னே யாபத்தை யடைந்தனன் என்னும் இடையிலுற்ற மோஹவுக்கு விடை தந்து இப்போது அவித்தை யில்லாததே யாயினும் பிரஞ்ஞை யில்லாதவரிடத்தில் உள்ளது போற்றோற்றும் பெயரான் மாத்திரம் அங்கிகிருத ஆகாரமுடைய அதுநன் ஞானியர்பால் எங்ஙனிருக்கும் " ஊனமாமாயை யுணர்விலோர் வித்திக்க வுள்ளதா முணர்வுளோர்க்கிலதாம் " என்னுமிடத்திற் றள்ளத்தக்கதாக அவித்தைசாற்றப்பெற்றது; யாது கொள்ளத்தக்க வித்தையுளதோ, பிரஞ்ஞான வேறு பரியாயத்தையுடைய உதிதமாய அதைச் சங்கிரக விஸ்தாரங்களால் அவஸ்தை யறைவதாதியால் விரிக்கின்றார்: மடமையாம் என. அஞ்ஞானமேயாய பூமிகள் ஏழுபதங்களாம். உலகத்தில் பூமியை யுடையோனுக்கு அப்பூமி அவனுக்கு கதாகூலமாய பலத்தைக் கொடுப்பதேபோல, அஞ்ஞானபூமியுந் தருமென்பதாம், அதுவும் ஏழுபதங்களை யுடைத்தா யிருக்கின்றபடியினலே, ஏழுபதாவஸ்தையை யுடையதாகும்; ஞானபூமியெனினும், ஞானியின் பூமியெனினும், ஒன்றே. ஞானபூமிகள் சப்தபதங்களே யாமென்பது பிரசித்தம் வித்வான்கட்காம். இப்பூமிகட்கந்நியோந்நியம் பதார்த்தரங்க ளென்னும் அவாந்தர அவஸ்தைகள் சங்கையற்றன வுளவாம், பெறுவனபேத மொன்றுநேரும் பேதைமை யவத்தையிவ்வேழும் என இனிக் கூறவும் பெறும், சுவாபாவிகப் பிரவிருத்தி லக்ஷணபுருடப்பிரயத்நமும் போதராகதார்ட்டிய லக்ஷண ரசாவேசமும், அஞ்ஞான பூமிப்பிரதிஷ்டையில் அசாதாரண ஹேதுவாம். சாஸ்திரீய சாதனசதுஷ்டய விசிஷ்ட சிரவணாதிப் பிரயத்நமும் முமுக்ஷுதார்ட்ய லக்ஷண ரசாவேசமும் ஞானபூமிப் பிரதிஷ்டையில் அசாதாரண ஹேதுவாம்: அதிஷ்டானப் பிரஹ்மசத்தை யுத்கர்ஷாதிசயமான தன் சத்தாலாபமோ இரண்டிடத்திற்சாதாரண ஹேதுவாம். இவ்வேதுக்களானே இப்பூமிகள் பிரதிபதம் தம்தம் விடயத்திற்பதித மூலங்களாய் தம்தமக்கு ஹிதமான சமுசாரஸ்திதி துக்கலக்ஷணம், அதன்முக்தியாய

நிரதிசயாநந்த அடைவுலக்ஷணம் ஆயபயனை யினிதுபயக்கும். கீழ்புவனபூமிகள் சப்த பதங்கள் உத்தரோத்தரம் இராஜஸ் தமோதுக்க பகுள நரகாந்தங்கள், மேற்புவனபூமிகள் உத்தரோத்தரம் சத்துவ சுகஞான பகுள சத்தியலோகாந்தங்கள் கிரமமுக்தி பலங்கள் எங்ஙன மிருக்கின்றனவோ அங்ஙனம் இவையுமாம் எனப்பொருளா லுணரலாம், சப்த பதங்களுந் தனித்தனியே பயன்பயப்பனவாம்; அவையும், பிரகிருதிமூலங்களேயாய்ப் பயன்றருவனவே யன்றிப் பிரசிதிலமூலங்களாய்ப் பயன்றருவனவலவாம். இவைபிரதி பதம் பத்தமூலங்களாய்ப் பிரதிபதம் தம்பயன்களைப் பயக்குமென்பதாம். பூமிகளின் சுவாமிகளைக் குறிக்கின்றார்: சொரூபவென்பது. ஆண்டுப் பூமியிரண்டிற்குந் தனித்தனிப்பலத்தாற் சாமானிய இலக்கணம் சாற்றல்: சொரூபவென்பது, சொரூப அவஸ்திதி முக்தியாம், சொரூப அவஸ்திதிவடிவ முக்தியில் நிலைபெறுமல் நழுவுதலின் சொரூபம் அகம்பாவஞானமாம் யானென்னும் பிராந்தியாம்.

(ச.) சுகமாய்க் கேட்பாய், மடமையாம் பூமியேழ்பதமாம் = அஞ்ஞாஞவஸ்தை சப்தப்பிரகாரமாம், ஞானபூமி = ஞானதசையும், பதங்கள் = ஞாஞஞ்ஞான பூமிகள், முன்பு ஞானியஞ்ஞானிகளின் இலக்கணஞ் சுருக்கிக்கூறல்:—அற்றமில் + வீடாம் = நிருபாதிக நின்மாத்திரரூபமான சொச்சொரூபத்திற் றிதியுறுவது முக்தியாம், நானெனல் = அகாண்மாவாகிய தேகாதியில், அகந்தையாற்றிதியுறல், அதில் = சொரூபத்தில், நழுவுறுதல் = பந்தமென்பது பொருள், (36)

(ஸ்ரீ - வீர - அ -கை.) சொரூபத்தினின்றும் நழுவாதவர் திருஷியதுக்கங்கடந்திருத்தலும், நழுவியவர் கடவாமையும் கூறல்:—அடக்கமென.

(ச - அ-கை.) இந்த ஞானி அஞ்ஞானி இலக்கணத்தையே விவரணஞ் செய்தல்:—அடக்கமென.

அடக்கமாயுரைத்தேமஃதறிந்தவர்க்குமறிகிலாதவர்க்குநற்குறிக
டொடக்கமில்சன்மாத்திரமதாமறிவின்சொரூபநின்றசைவிலாதவரே
விடற்கருங்காமமுதற்பகைகடந்தோர்மெய்யறிவிலார்கடப்பரியோர்
நுடக்குறுகாட்சிவிதத்தில்வீழறிவேநோக்கருஞ்சொரூபத்தினழுவல்.

(ப · ரை.) அடக்கமா யுரைத்தேம் அஃது அறிந்தவர்க்கும், அறிகிலாதவர்க்கும்; நற்குறிகள் = பரமாத்மாவை யுணர்ந்தவர் உணராதவர்தம் இனிய இலக்கணங்கள் இவ்வண்ணம் சங்ஷேபமாகக்கூறினேம், தொடக்கமில் சன்மாத்திர மதாமறிவின் = அசங்க சுத்தசத்தரமாத்திர சம்வித்தின், சொரூப நின்றசைவிலாதவரே = சொரூபத்தினின்றும் சலனமில்லாதவரே, விடற்கரும் காமமுதற் பகைகடந்தோர் = சாமானியராற்றியாகித்தற்கு முடியாத இராகத்துவேடாதி பகைகளைத் தாண்டினோராவர், மெய்யறிவிலார் = உண்மைஞான மில்லாதவர், கடப்பரியோர் = தாண்டமுடியாதவர், ஆவர், நுடக்குறுகாட்சி விதத்தில் வீழறிவே = பந்தத்தையும் அதிகவிதமான திருஷியப் பிராந்திகளில் மூழ்குதலே, நோக்கரும் சொரூபத்தில் நழுவல் = காண்டற்கரிய கரியாஞ் சொரூபத்தினின்றும் பரிப்பிரமசமாம்நிதி வதில்

(ஸ்ரீ - வீர.) தஞ்ஞத்வ அஞ்ஞத்வ இலக்கணம் இவ்வாறு சுருக்கமாக வியம்பப்பெற்றது. கேவலம் முக்திசாலியே தஞ்ஞன், அகங்காராதி பந்தசாலி அஞ்ஞன் என்பதாகமாத்திரம், அவர்தம் மிலக்கணங்கள் அலவாம்; மற்றோ, இராகாதி இன்மையும் உண்மையும் முறையே அவர்தம் மிலக்கணங்களாம் என்பார் தொடக்கமில் லெனத்தொடங்கினர். பரிசுத்த இருப்புமாத்திர அறிவுருவத்தி னின்றும் யாவர் அசையா மற்றிதிபெறு

வரோ, அவர்க்கு இராகத்வேஷாதி தோஷமே யிலதாம்: வேறுய அஞ்ஞருக்கோ, அவை உளவாம். அறிவுண்டாயிருக்கு அவையில்லாமையின் அஞ்ஞத்தன்மையு மிலதாம், இதுவே ஞானபூமியின் இலக்கண ஸ்புடமென வறிக, அஞ்ஞான பூமியின் இலக்கணஸ் புடமோ இங்ஙனமாம் :—சேத்தியப்பட்ட அர்த்தங்களாய அகமாதி ஜேயபதார்த்தங்களின் விடயஞ்செய்யும் பிராந்தியில் மூழ்கியதன் பரமாயாதல் சொரூபத்தினின்றும் பரிப்ரம்சமாதலாம்.

(ச) தொடக்கமில் = திருஷிய சம்பந்தரகிதமான, சன்மாத்திரம்தாம் = சன்மாத்திர ரூபமாகிய, அறிவின் சொரூபமின்று = சித்தென்னும் ரூபத்தினின்றும், அசைவிலாதவர் = எவர் சலியாரோ அவர்க்கு. விடற்கருங் காமமுதற்பகை கடந்தோர் = அஞ்ஞர்க்கிணக்கமான இராகத்துவேடாதிக ளின்றும், அவரே ஜீவன்முக்தர் என்பது பொருள். காட்சிவிதத்தில் = திருஷியவஸ்துவில், வீழறிவே = சித்துமூழ்குதலே, ஞானந் திருஷியதாதான்யியமுற்று அதன் சொரூபமாதல், சொரூபத்தினழுவல் இதுவே மகாமோக மென்பது பொருள். (37)

(ஸ்ரீ - வீர - அ - கை) சொரூபத்தை மறத்தல் பெருமோகமெனப் புகன்று அச் சொரூபத்தை நன்கறிவித்தல்:—சொரூபமென.

(ச - அ.) சொரூபஸ்திதியை மீட்டும் விவரணஞ் செய்தல்:—சொரூபமென.

சொரூபம்விட்டகலன்மோகமாம்வேறுசொல்லிடமுன்புபின்பில்லை
யொருபொருணினைவையொழித்துமேலப்பாலொருபொருணினைவுறிலந்த
விருபொருண்டுவுணினைவறவிருக்குமிதுசொருபத்தியல்பிதுதான்
மருவுகற்பனைமாண்டசைவில்கற்போலாய்வருநஞ்சுழுத்திதீர்வடிவாம்.

(ப - ரை.) சொரூபம் விட்டகலல் மோகமாம் = தனது சொரூபத்தை விட்டிருத்தல் பெருத்தமயக்கமாம், வேறு சொல்லிட முன்புபின்பில்லை = இதனினும் அயலான ஆபத்து ஒன்றுசொல்லுவதற்குப் பூதமுமில்லை பவிஷ்யத்துமில்லை, ஒருபொருள் நினைவையொழித்து = ஒருபதார்த்தத்தினுடைய எண்ணத்தைத் தியாகித்து, மேலப்பால் ஒருபொருள் நினைவுறில் = பின்னர் மற்றொரு பதார்த்தத்தினுடைய எண்ணம் எழுமானால், அந்த இருபொருள் நடுவுள் = அவ்விரண்டா காரங்களின் இடையில், நினைவற இருக்கும் இது சொரூபத்தியல்பு = மனனாகார மில்லாமல் இராகின்ற ஸ்திதியாகிய இதுவேசொரூபஸ்திதியெனப்படும், இதுதான் = இந்த சொரூபஸ்திதியானது, மருவுகற்பனை மாண்டு = சர்வசங்கற்பங்களும் நன்முகச் சாந்தமாகி, அசைவில் கற்போலாய் = சலனமிலாத சிலைபோலும் நிலைபெற்றதாய், வருநஞ் சுழுத்திதீர் வடிவாம் = ஜாட்டிய நித்திரை முதலியவை விடுபட்ட வடிவமாம். (38)

(ஸ்ரீ - வீர.) இதனினும் அபரமான மோகம் முன்னுமில்லை இனிமேலும் வாராதாம் மோகசப்தத்தானே மோககாரியங் கவரப்பெறும்; அகங்காராதி யத்தியாச பரத்தன்மையினும் வேறு அதிசயமான மோககாரியம் முன்னும் பின்னும் கிடையாதாம். இராகத்துவேஷாதி சகல தோஷகாரண மாதலின் இதுவே பரமமான மோககாரியமாம். சித்தமானது ஒருவிடயத்தினின்றும் மற்றொரு விடயப்பொருட்டுச் செல்லுங்கால் அவ்விரு விருத்திகளின் சந்தியில் விகற்பங்கள் ஒன்றுமின்றி யிருக்குந்திருஷ்டாவஸ்தையினுளதோ அதுவே சொரூபஸ்திதியாம். விருத்திசந்தி சாகூடியாக எந்நிர்விகற்பகம் சைதந்யமூளதோ அதுவே சொரூபமாம், அதன்வடிவமாக நிலைபெற்றிருத்தலே சொரூப

ஸ்திதி யென்பது பொருளாம். பூர்வவிடயத்தி னின்றும், நழுவியவனுக்கு விடயாந்தர மனனத்தின்மூன், மனனமற்றதாய்ச் சொரூப அவஸ்திதியிருப்பது பிரசித்தமேயன்றே. இது முதலிலவனைப் பூமியின் அப்பிரசித்தியை விலக்கியதாம். சொரூப அவஸ்திதி மூக்தி யென முன்மொழியப் பெற்றது, ஆண்டு, யாது இச்சொரூப அவஸ்திதியெனச்சங்கிப்பக் கூறல்: இது தானென்பது. சர்வசங்கற்பங்களும் பெரிது சாந்தமாகிச் சிலபோழும் அசையாமலிருத்தல் சொரூப அவஸ்திதியாம். ஜாகரத்தைவிலக்கல்: வருநனு. மூர்ச்சை சுழுப்திகளின் வாரணப்பொருட்டுச் சிறப்பித்தல்: வருநனு ஜாட்டிய நித்திரை விடுபட்ட நிலையாதோ அது சொரூபஸ்திதி யெனப்படும். அவஸ்தாத்திரயங் சுடந்து துரீயமதாக நிலைபெறுதல் சொரூபஸ்திதி யென்பதாம்.

(ச.) ஒரு+வேறப்பால் உறில் = சித்து பூர்வவிடயத்தினின்றும் விடயாந்தரத்தை யடையின், அந்த விருபொருணடவில் = விடயசம்பந்த மற்ற சின்மாத்திரத்தில், நினை வற விருக்கும் = சங்கற்பாதி களங்கம் விடுபட்டிருக்கும், இது, சொருபத்தியல்பு = சொரூபஸ் திதியென்பது பொருள், அசைவில் கற்போலாய் = சிலமத்தியி லிருப்பது போன்று, மருவுகற்பனை மாண்டு = சர்வசங்கற்போபசாந்தமாய், இருக்கு மிதுதான் எனக்கூட்டுக. சிலபோற் சடாவஸ்தை காடநித்திரை யென்னும் நஞச் சுழுத்திதீர் = சமாதிபோற் சாட்டிய நித்திரை விலக்ஷணமான, வடிவாம் = சொரூபஸ்திதியாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சொரூபநிலையை யுபசங்கரித்து அஞ்ஞான பூமிகளை வருணித்தல்:—நானென.

நானெனும்பிரிவும்பேதமுமற்றுநல்லறிவாயசையாத
மானதநிலையேசொருபமாமுன்சொன்மடமையாம்புவிபதங்கேட்பா
யீனமாம்விந்துநனவுமேனனவுமியன்றமாநனவுமந்நனவி
லானதோர்கனவுங்கனவுமிக்கனவிலடர்நனவுஞ்சுழுத்தியுமே.

(ப - ரை.) நானெனும் பிரிவும் பேதமும் அற்று = அகந்தையி னங்கிசம் கெட்டுப் பேதமானது சாந்தமாகி, நல்லறிவாய் = கேவலஞ் சிற்சொரூபமாய், அசையாத மானத நிலையே = மநோசங்கற்பங்கள் ஒன்றும் இல்லாத நிலைமையே, சொரூபமாம் = சொரூபம் என நிலைபெறும், முன்சொல் மடமையாம் புவிபதங் கேட்பாய் = பூர்வம்புகன்ற அஞ்ஞான சப்தபூமிகளைக் கூறக்கேட்குதி, ஈனமாம் = சர்வாகர்த்த வேதுவாதவின் தாழ்வாம், விந்துநனவும் = பீஜஜாக்கிரம், மேல்நனவும் = ஜாக்கிரம், இயன்றமாநன வும் = பொருந்திய மகாஜாக்கிரம், அந்நனவில் ஆனதோர் கனவும் = ஜாக்கிரசொப்பனம், கனவும் = சொப்பனம், இக்கனவில் அடர்நனவும் = சொப்பனஜாக்கிரம், சுழுத்தியும் = துயில் எனவாம். (39)

(ஸ்ரீ - வீர.) உள்ளே யகந்தையங்கிசம் கெட்டொழிய, வெளியில்வேற்றுமை சாந்தமாக, இருபாலும் அசைவிலாது போகவே, எவ்வசைவிலாத சித்தத் தகைமையுளதோ அதன் சாக்ஷியாய் ஒளிராநின்ற சொப்பிரகாச சித்சொரூபமே சொரூபமென நிலைபேறும். அந்தப் பிரத்யக்குச் சித்தின்கண்ணே அநாதியாகவே அத்தியஸ்தமான அஞ்ஞானத்தினது இப்பூமிகளைக் கேட்குதி! பீஜஜாக்ரத், ஜாக்ரத், மகாஜாக்ரத், ஜாக்ரத் ஸ்வப்நம், ஸ்வப்நம், ஸ்வப்நஜாக்ரத், சுழுப்தி; என்பனவாம்,

(ச.) நானெனும் பிரிவும் = பரிச்சின்ன தேகாதி அபிமானமும் அதனற் கற்பிதமான பேதமும், நல்லறிவால் = பரிபூரண பாவனையால், அற்று=நசிக்கின், அசையாத

மானதனிலேயே = சித்தத்தினது நிச்சலத்துவஞ் சிட்டிய சம்பந்தமின்மையாய்ப் பிரகாசிக்குமதுவே, சொரூபமாமென்பது பொருள். மடமையாம் புவிப்பதம் = அதில் ஆரோபிதம் அஞ்ஞானமாம், அதனது அவஸ்தாப் பிரகாரத்தைக் கேட்பாய்! இனியஞ்ஞான பூமியேழு நிதானித் துரைத்தல்: வித்துநவும் = பீசசாக்கிரமும், நவும் = சாக்கிரமும், மாநவும் = மகாசாக்கிரமும், சாக்கிரச் சுவப்பனமும், சுவப்பனமும், சுவப்பன சாக்கிரமும், சுழுத்தியும் என்னும்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) வேதாந்தங்களில் அஞ்ஞான பூமியேழெனப் பெற்றதையே விரித்துரைக்கத் தொடங்கிக்கூறியவற்றுள் முதலதை விளக்கிக்கூறல்:—இத்திறமென.

இத்திறமேழுமோகமாய்நெருக்குற்றிவைபலபெயர்களேயெய்துஞ்
சித்திலேகின்றேறிவுபேரின்றிச்செறிமலமின்றிமேல்வந்து
வத்தியாநிற்குஞ்சித்தசீவாதிவருபெயர்செயல்களுக்கிடமாய்
வித்துரூபமதாய்நின்றிடுமதனுல்விதைநவனவாமுதற்பதமே.

(ப - பை.) இத்திறமேழும் மோகமாய் நெருக்குற்று = இந்தப் பிரகாரமாய ஏழு மோகங்களும் பரஸ்பரம் ஒன்றுசேர்ந்து நெருக்குற்றனவாய், இவை பலபெயர்களேயெய்துதும் = இவைபல நாமங்களே யடைவதும், சித்திலேகின்று = சித்திலிருந்து, ஏறிவு = ஒருசேதனம், பேரின்றி செறிமலமின்றி = பெயரற்றதாய் மலமற்றதாய், மேல்வந்து வத்தியாநிற்கும் = இனிமேல் வெளிப்போந்து விவகரிப்பதற்கு யோக்கியமாய், சித்த சீவாதி வருபெயர் செயல்களுக் கிடமாய் = சிதஜீவாதி நாமசப்தார்த்த பாஜனமாய், வித்துரூபமதாய் நின்றிடுமதனுல் = பீஜரூபமதாய் ஸ்திதிபெற்றிருக்கும் தன்மையினுனே விதைநவனவாம் முதற்பதமே = முதற்பதமானது பீஜாக்கிரத் தென்றுசொல்லப்படும்.

(ஸ்ரீ - வீர.) என்று சப்தவிதமாய மோகமும் மீண்டுமே பரஸ்பரம் ஒன்று சேர்ந்து நிற்கும்,, அநேகம் பெயருடையனவாகும்: அவற்றின் இலக்கணங் கூறக்கேட்குதி; சப்த விதம் = ஏழுபிரகாரம். அஞ்ஞான அபரபரியாயமாய சப்தாவஸ்தை மோகமும் பரஸ்பரம் சம்பந்தம் உடையதாய் மறித்தும் அநேகம் பெயருடையதாகும். சப்த அவஸ்தைகளின் சம்பவித்தபடியாய கலப்பின் நிறப்பிரிவுலே மோகம்மீளவும் அநேக அவஸ்தையதாகும், அங்ஙனமன்றே :—இரண்டவஸ்தைகட்கு, மூன்றுகட்கு நான்குகட்கு, ஐந்துகட்கு, ஆறுகட்கு, ஏழுகட்குத் தாஞ்தல், கணத்தில் கணத்தில் வித்தியாசத்தால் உண்டாம்போது மீளவும் அநேகாவஸ்தையாம். மீண்டுமே பரஸ்பரம் சம்பந்திக்குமென்றது, பதாந்தரங்கள் எண்ணிக்கை யில்லாதன வெனயாது முன்னேதப் பெற்றதோ அதனைத் தெளிவுபடுத்துவதாம் இவ்வேழுவித மோகத்தின் தனித்தனி யிலக்கணத்தைக் கூறக் கேட்குதி! பீஜஜாக்கிரத் திலக்கணங்கூறல்: மாயாசபல சைதன்ய சம்பந்தத்தானே சர்க்காதியிலேனும் சாக்கிராதியிலேனும், பிரதமம், சேதனம்சிதாபாச சம்வலிதரூபமாய் யாதாமோ அது, பிராணதாரணுதிக் கிரியோ பாதியானே பலவிஷ்யத்சித்தஜீவாதி நாம சப்தங்களினதூஉம் அவற்றின் அருத்தங்களின தூஉம், பஜனையுறுவதாய்க் கூறப்பெறும் ஜாக்கிரத் பீஜபூதமா யிருந்துகொண்டு பீஜஜாக்கிரத்தெனப்பேசப்பெறும். துயிலினின்றும் எழுந்தவுடன், முதலில் சித்தினது விசுவரூபத்தின் சம்பந்தியான எச்சேதன முளதோ பிரதிபிம்ப வடிவமாக அது பீஜஜாக்கிரத் தெனப்படும், அச்சேதனம் எத்தகையது எனின்? நிர்மலம், ஜீவாதி நாமத்தானே அக்கால் தெரிவுறுத்தப் பெறுதது. வாராநின்ற சிதஜீவ சேதனுதி நாமான்மக சப்தங்களின், அவற்றின் அர்த்தங்களாய சித்

தத்துவ, பிராணபிருத்துவ (தாங்கல்) ஞான கருத்துருத்துவாதி வடிவங்களின் பாஜ னம் = பாத்திரம் = பற்றுக்கோடா யிருப்பது. பீஜஜாக்கிரத் சப்தப் பொருளோ, உத் தர அவஸ்தைகட்கு வீரைவடிவமாக இருந்துகொண்டு நனவாயிருப்பது என்பதாம்.

(ச.) எழும் = எழுபிரகாரமும், இவை தெருங்குற்று = இச்சத்வித மோகமும் ஒன்றோடொன்று புணர்ந்து; இம்மோகத்தின் இலக்கணத்தைக் கூறத்தொடங்கி அவற் றில் முதற்பூமியின் இலக்கணங் கூறல்:—சித்திலே கின்று = ஆண்மசொரூபமா யிருந்த சுத்தமான சித்தினின்று, செறிமலமின்றி = திருஷ்ய உபாதிகளங்கரகிதமாய், அதனாலே யினதென விவகரித்தற் கரிதாய், மேல்வந்து + செயல் (பொருள்) களுக்கிடமாய் = பின் புறுஞ்சித்தம் ஜீவனென்பன முதலிய நாமங்களுடைய சப்தார்த்தங்களுக்குப் பாத்திர மாய், அதன்ரூபமாக மென்மேற் றெளியப் படுவதாய், ஓரறிவு முன்றோன்றி = முன்பு யாதோர் வாகியஸ் புராணமுதித்து, வித்துரூபமதாய் நின்றிடும் = காரணரூபத்தோடு கூடினதாய் ஸ்திதமுறும், ஆதலாலது, விஜாகனவாம் = பீஜஜாக்கிர மெனப்படும் என்பதற்நுவயம். (40)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஜாக்கிரத் மகாஜாக்கிரத்துகளின் இலக்கணங்களைக் கூறல்:—இது என.

இதுவறிவுக்குமுதலவத்தையதாமிதத்தறப்பிறந்தபின்னிவனு
னிதுவெனதெனப்பண்டிலாமைபானெய்தாயெழுந்தளவறிவேயாகுவா
மிதுதனையொழியவிவனவனுனேயிதுவதுவென்னதென்றெண்ணு
மிதுமுதற்பிறப்பிற்றொடர்ச்சியாய்ப்பருக்குமிந்தநிச்சயம்பெருநனவாம்.

(ப - ரை.) இது அறிவுக்கு முதல் அவத்தையதாம் = நூதலிய இது ஞப்திக்கு நவ அவஸ்தையதாகும், இதத்தறப் பிறந்தபின் = பரத்தினின்றும் நவமாயுண்டான பின் னர், இவன் நான் இது எனது என = அயம், அகம் இதம், மம, என்பதாக, பண்டிலா மையால் = முன்னில்லாமையின், நொய்தாய் = சொச்சமாய், எழுந்துள அறிவே = உதித்துவரும் நிச்சயமே, நனவாம் = ஜாக்கிரத்தாம்; இது தனையொழிய = இது தன் னேத்தவிர, இவன் அவன் நானே இது அது என்னது = அயம் ஸோ அகம் இதம் தத் மம, என்றெண்ணுமிது = எனச்சிந்திக்கும் இது, முதற்பிறப்பிற் றொடர்ச்சியாய் = ஜன் மாந்தர உதிதமாய், பருக்கும் = பீவரமாம், இந்த நிச்சயம் பெருநனவாம் = இப்பிரத்தி யயம் மகாஜாக்கிரத் தெனப்பெறும்.

(ஸ்ரீ - வீர.) நூதலிய இது = செப்பிய இப்பீஜஜாக்கிரத்து, ஞப்தியாகிய ஜீவனது நூதன அவஸ்தையாம், தருவுக்கங்குர அவஸ்தைபோலும். இனி ஈ ஜாக்கிரத்தின் நன் னிலைமையைக் கேட்குதி! நவப்பிரரூதமாய பீஜஜாக்கிரத்தின் பின்னர் இத்தூலதேகமி யான், இதந்தேக போக்கியஜாதம் என்பதாக எப்பிரத்தியயமுளதோ அதுஜாக் கிரத்தாம். பரமாத்மாவாகிய பிம்பத்தினின்றும் அபிநவஜாதமாய ஜீவனுக்கு, முன் னுண்டாகாமையின் அயமகமிதம் மம என்னும் சொஸ்தமாய சொச்சமாய எப்பிரத்யய முளதாமோ அதுஜாக்கிரத் தென்பதாம். ஆண்டு இக்காரியகாரண சங்காதம் யாதுகின் றேன், இவ்வில்லம் முதலியவை யென்னுடையது இவ்வகையாய வடிவமுடைய எப் பிரத்யய மூளதோ அது ஜாக்கிரத்தென்னும் வேறு அவஸ்தையாம், பீஜஜாக்கிரத் தல்ல வாம்; எனெனின், அங்குர அவத்தையின் பின்னுண்டாம் இருதோ. அவஸ்தை போலும், மகாஜாக்கிரத்தும் ஆகாதாம், முன்னுண்டாகாமையின் = முன் அநுபவ மின்மையின்;

பூர்வ அநுபவ சமஸ்காரத்தை யபேக்ஷித்தன்றே பிரத்ய பிஞ்ஞைரூபமாய ஜாக்கிரத் தண்டாகின்றது. இவனவனியா னிதுவது வெனது எனவியம்பிய லிலக்கணமுற்ற ஜாக்கிரத்துப் பிரத்யயத்திற்கு, ஜன்மாந்தரம் உதிதமாய்ப் பருத்தபிரத்யயம் ஜாக்கிரத்தெனப்படும். சந்தசாதலின் ஜகாரலோபமென்ப. அல்லது சஜாதீயபூர்வ பூர்வஜந்ம சமஸ்கார உற்போதத்தானே அதிதிடமாக வுதிதமாய், அதனனே பயிற்மிகுதியாற் பருத்தவளர்ந்ததாய், இலங்கும் பிரத்யயம் பெருஞவெனப் பெறும். அங்ஙனமன்றேஃ பிராஹ்மணாதி ஜன்மம் சாதாரணமாக வீருந்தபோதினும், ஜன்மாந்தர அப்பியாசத்தால், சிலருக்கு, மறையவருக்குத் தக்கசிரியைகளில் அபிரிவேசமும் ஆற்றலதிசயமும் காணப் பெறுகின்றது, எல்லாருக்குங் காணப் பெறுவதில்லை, அங்ஙனமாகவே இப்போதுற்ற அல்லது முன்னுற்ற திடாப்பியாச சாமர்த்தியத்தால் விருத்தியான அபிரிவேச ஜாக்கிரத்துப் பிரத்யயம் மகாஜாக்கிரத் தெனப்பெறும். மூற்பிறப்புணர் முனிவன்பால் மகாஜாக்கிரத்தைக் காட்டல்: இவனவனனே யென்பது, அவனியானென்பது ஜன்மாந்தர அநுபவ சமஸ்காரத்தால் உண்டாய தென்பதாம். அல்லது, மூற்பிறப்பைக் குறித்து இப்பிறப்பே ஜன்மாந்திரமாம் அதன்கண் முன்பழக்கத்தா லுண்டாகித் தூலித்து அதிதிடமாய தென்பதாம். பெரும்போதைத் தீண்டிக் கொண்டமையானும், பெருத்திருத்தலினனும் இதற்கு மகாஜாக்கிரத் தன்மையா மென்றுணர்க, சிலரோ, ஜன்மாந்தர வுதிதமென்பதை அகந்தர மென்பதாகவும் வியாக்கியானித்துச் சர்வசாதாரண அத்தகைய பிரத்யயம் மகாஜாக்கிரத்தென வெண்ணு நிற்பர்,

(ச.) அறிவுக்கு = ஞப்திக்கு, மூதலவத்தையதாம் = பிரதமதசையாம், சாக்கிரஸ்திதியைக் கூறல்:=இதத்தறப் பிறந்த =பரமான்மாவினின்றும் முன்புதித்த, அறிவுக்கு= சிவர்க்கு, பின்னெழுந்துள, இவனனிது வெனது, என = என்னும், கொய்தாயுறுதியே = சொச்சமான நிச்சயமே; நனவாம் = ஜாக்கிரமெனப்படும், யாதினுலெனில் ? பண்டிலாமையால் = இத்தன்மையான பிரத்தியயத்திற்குப் பிராகபாவத்தினுல், முன்பூற்பன்னமான பிரத்தியயமே ஜாக்கிர மெனப்படும் என்பதருத்து. இவனவனுன் = இவ்னனவனுன், இதுவது வென்ன தென்றெண்ணுயிது=இஃதெனது அஃதெனது என்னுமிது, மூதற்பிறப்பின் றுடர்ச்சியாய் = ஜன்மாந்தர வாசனுவசத்தினுல் உதித்ததாய், பருக்குமிந்த நிச்சயம் = ஸ்தூலமாகா நின்ற இப்பிரத்தியயம், பெருஞவாம் = முற்கூறிய பிரகாரம் பிரகாசித்து மகாஜாக்கிர மெனப்படும். (41)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஜாக்கிரத் சொப்பனத்தைத் தெரிவித்தல்:—அறிர்தென.

அறிந்துளதெனினுமறிகிலாதெனினுமழுந்துறத்தானதுவாகிச்
செறிந்துளநனவிற்சித்தராச்சியமேசெய்வதுகனுக்கனுவாரு
மெறிந்தகானலினீர்சுத்திகைவெள்ளியிருமதியிவைமுதற்பலவாய்ப்
பிறிந்தபேதங்கணனவிலேபழகும்பெற்றியாற்கனவுபல்விதமாம்.

(ப - ரை.) அறிந்துளது எனினும் அறிகிலாது எனினும் = தெரிந்துளதெனினும் தெரிகிலா தெனினும், அழுந்துறத் தானதுவாகி = மிகவும் அழுத்தமாகத்தான் அதன்மயமாகி, செறிந்துள = பொருந்திய, நனவில் = ஜாக்கிரத்தில், சித்தராச்சியமே செய்வது = மனோராச்சியஞ் செய்தல், கனுக்கனுவாகும் = ஜாக்கிரத் சொப்பனமெனப்படும், எறிந்த கானலினீர் = தோற்றமாத்திரமா யிலவீசும் பேய்த்தேர், சுத்திகை வெள்ளி = இப்பிவெள்ளி, இருமதி = துவிசந்திரன், இவைமுதற்பலவாய் = இவை முதலாகப் பற்பலவாய், பிறிந்தபேதங்கள் = தோற்றும் வேற்றுமையால், கனவிலேபழ

கும் பெற்றியால் = ஜாக்கிரத்தப் பியாசத்தை யனுசரித்து, கனவுபல்விதமாம்=சொப்பனம் அநேகவிதமாம்

(ஸ்ரீ - வீர.) கண்காணுததாய்ப் பயில்விலாமையிற் கோமளமாய், கண்கண்டதாய் இலவணனுக்கென்ன அப்பியாசத்தாற் றிடமாய் எல்லாவகையானும் விடயசொரூபமயமாய், எச்சாக்கிரத்தின் மநோராச்சியமுளதோ அது சாக்கிரத்துச் சொப்பன மெனப்படும், மநோராச்சிய சப்தத்தானே யீண்டுப் பிரமைவடிவ, ஸ்மிருதிவிலகூண எல்லாப் பிரத்தியயங்களுமே கவரத்தக்கனவாம் இதனுனேகூறல்:—கானலினீர் என. துவிசந் திர சுக்திரூப்யாதி மயல்களும் ஜாக்கிரத்சொப்பன பேதங்களேயாம் எனல்:—கானலினீர் என்பது. துவிசந்திர, சுக்திரூப்பிய, மிருகதிருஷ்ணை முதலிய பேதத்தானே ஜாக்கிரத்தி னப்பியாசமுற்றச் சொப்பனம் அநேகவிதமாம். பூர்வம் ஒருகாலத்திலும் விடய அநுபவமிலதாயின் அதன்மாறுபாடு கூடாமையின் அப்பியாச முற்றெனச் சாற்றப் பெற்றது.

(ச.) அறிந்துளதெனினும் = வாசனுவிலாச வசத்தினுற் கிட்டினதைக் குறித்தாவது, அன்றி, அறியலாதெனினும் = வாசனுதிட பிண்மையாற் கிட்டாததைக் குறித்தாவது, அழுந்துற = சர்வப்பிரகாரத்தாலும், தானதுவாகிச் செறிந்துள = பாவிக்கும் விடயங்களோடு தாதான்மியம் பொருந்திய, நனவிற் சித்தராச்சியமே செய்வது=ஜாக்கிரத்திற் புருடனது மநோரத பரம்பரையின் முயற்சியே, கனுக்கனவாகும் = ஜாக்கிரத் சொப்பன மெனப்படும். அஞ்ஞானபூமியின் பேதமான சொப்பனலகூணம், பிரசித்த சொப்பனத்தைச் சார்ந்து வருவதாதலின் அதன் பேதத்தை யிப்போதுரைத்தல்: எறிந்த+பேதங்கள் = இதுகதி, இது இரஜதம், உபயசந்திரன், என்னும் இத்தன்மையான நதிமுதலிய பிராந்திவிடய பேதத்தினுல், அநேகப் பிரகாரமான பிராந்தியினுல், நனவிலேபழகும் பெற்றியால் = ஜாக்கிராவஸ்தையில் அப்பியாசிக்கும், மாறிமாறிப் பிரவிருத்திக்கும் தன்மையால். சாக்கிர சமஸ்காரத்தை யடைந்து சொப்பனஞ் சாக்கிரசமஸ்கார ஜன்னியமாதலின், கனவு = பிரசித்தமான சொப்பனலவஸ்தை, பல்விதமாம் = அநேகவிதமாம். (42)

(ஸ்ரீ - வீர - அ - கை) சொப்பனத்தைக் கூறல்:—அற்பவென.

(ச - அ - கை-) இப்போது பூமிபேதத்தினது சொப்பனலகூணங் கூறல்:—அற்பவென.

அற்பகாலத்திலநேகமாஞ்செயல்கண்டறிந்தனமெனுங்கனவழிந்து
முற்படுசெயலேநினைவதுகனவாமுந்துகண்டதனைநாளகன்று
பிற்படக்காணும்பொருள்களைமறந்துபெரும்பொழுதுணர்வுறநோக்குஞ்
சொற்பனநனவுபோனனவுக்கேதென்றுபுசிச்செயல்கனுநனவே.

(ப - கை.) அற்பகாலத்தில் = சிறிதுபோதில், அநேகமாம் செயல்கண்டு=பலபல வாகிய செயல்களைப் பார்த்து, அறிந்தனமெனும்=அறிந்தோ மென்னும், கனவழிந்து= சொப்பனந்தீர்ந்து, முற்படுசெயலே நினைவது = முன்கண்டசெயலே எண்ணுவது. கனவாம் = சொப்பனமாம், முந்துகண்டதனை நாளகன்று பிற்பட=நீள்போது நற்றரிசனமில்லாமையின், காணும் பொருள்களைமறந்து = காணும் வஸ்துக்களை மறந்து, பெரும் பொழுதுணர்வுற நோக்கும் = நீள்போது தொடர்வுற்றதாகப் பார்க்கும், சொற்பனம்= சுவப்பனம், நனவுபோல் = ஜாக்கிரத்துப்போலுதிதமாய், நனவுக்கேதென்றும் இச் செயல் = நனவின்கண்ணும் பெரிதுவிளங்கும் இவ்விவகாரம், கனுநனவே=சொப்பன ஜாக்கிரத்தென்று சொல்லப்படும். (43)

(ஸ்ரீ - வீர.) அற்பகாலம் என்னுந் காணப்பெற்றது இதுவோ இதுவல்லவோ, எனை, சொப்பனத்தினின்றும் இளம்பியவனுக்குப் பிராமிசம் எக்காலத்தில் உண்டாமோ அக்கால், அது சொப்பனமென்று சொல்லப்படும் இதுவோ இதுவல்லவோ என்னுஞ் சம்சயம் யாங்ஙனமெனிற் கூறல்:—முந்து என்பது. நெடும்போது சந்தரிசன மில்லாமையின், வெளிப்படையாய்த் தோற்றுத பெருந்தூலவடிவ மூடையதாகிச் சிரகாலம் அநுபவித்தமுமான சொப்பனம், ஜாக்கிரத்தேபோல வுதிதமாய் = விஸ்பஷ்டமாய்ப் புலப்படத்தோன்றி, நனவின்கண்ணும் அநிஸ்புரண ஆரூடமாக வெளிப்படையாய் விளங்குவதாகிச் சொப்பன ஜாக்கிரத்தென்று சொல்லப்படும், அற்பகாலம் என்னுங்காணப்பெற்ற திங்ஙனம் சத்தியமலவாம் என்பதாகவும்; நித்திரைகால அநுபூத அர்த்தத்தில் நித்திரைமத்தியிலேனும் நித்திரை முடிவிலேனும் பிரதீதியாகின்ற எப்பிரத்தியய மனுசந்திக்கப் பெறுமோ அது சொப்பனமெனப்படும். அஞ்ஞனுக்கதுவும் மகாஜாக்கிரத்தின் உள்ள டங்கிய தூலசரீரத்தின் கண்டாதி ஹிருதயாந்த நாடீப்பிரதேசத்தில் உண்டாம். கூறிய இலக்கணத்தைத் தெளிவிக்கும் பொருட்டுச் சொப்பனத்தையே மீண்டுஞ் சிறப்பித்தல்:—சிரசந்தரிசன மின்மையின் என்பது, சொப்பன ஜாக்கிரத்தின் இலக்கணம் இயம்பல்:—சொப்பனம் ஜாக்கிரமாக ரூடமாய் = திட அபிநிவேசத்தாலாதல், சிரகாலஸ்தாயித்தன்மைக் கற்பனையினுதல், அரிச்சந்திரனுக்குப் பன்னிருவருடவடிவ விவகாரம் போலும், விருத்தியுற்றதாய், மகாஜாக்கிரத் தொப்புமை யுற்றதாய், தேகங்கெடினும் கெடாவிடினும் அது சொப்பனஜாக்கிரத்தென்று சொல்லப்படும். அதுவும் இவனுக்குத் தெய்வவசத்தாற் றேகமேனினும் அவ்வாறே அக்கிரத்திலும் அனுவர்த்திக்கும் எனக் குறிக்கும் பொருட்டுத் தேகங்கெடினு மெனப்பெற்றது.

(ச.) அநேகமாஞ்செயல் = எந்தத்திசையில் இவ்வர்த்தசாலத்தை, அற்பகாலத்தில் = சொற்பகாலத்தில், கண்டறிந்தனமென்று = என்னுங் காணப்பட்டதென்று, தான் விழித்து, முற்படுசெயலை னினைவது கனவாம் = கண்டபுருடனுக்குங் காலவேறுபாட்டின் அநுசந்தான மூதியாமற் கேவலம் பரமார்த்தமென்று, தானே சொற்பனத்திற் கண்டபொருள் விளங்குமோ அத்திசையிசேடஞ் சொற்பனமெனப்படும். பெரும்பொழுதுணர்வுறப் பிற்பட=சிரகாலந்திடஞான மின்மையின், முந்துகண் டநேகநாளகன்று + அதனுலே அஞ்ஞான மிகுதியால், காணும்பொருள்களை = ஸ்தூலரூப பதார்த்தங்களை, மறந்து, நனவுபோல் = ஜாக்கிராவஸ்தைபோல், நோக்கும் = காணப்படுகின்ற, எந்தச் சொப்பனம், நனவுக்கே = ஜாக்கிர அவஸ்தையிலும், தோன்றும் = விளங்குமோ, அச்செயல் = அத்தன்மையான சொற்பனவிசேடம், கனுநனவு = சொப்பன சாக்கிரமெனப்படும் என்பதந்நுவயம். என்று தான்விழித்து, கண்டநேக நாளகன்று, எனப்பாடபேதங் கொண்டிவ்வுரையாம். (48)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சுழுப்தியைக் கூறி யுரைத்த பூமிகளை யுபசங்கரித்தல்:—அறுவகையென.

அறுவகையவத்தையகற்றியசீவனடைந்தளவவத்தையினியற்கை
யுறுசடமாகிமேல்வருந்துயர்கூருணர்வுளதாமிதுசுழுத்தி
துறுபுவனங்களினிடையிருளிற்றெரிவுறுமிப்பதமேழும்
பெறுவனபேதமொன்றுநூறுகும்பேதமையவத்தையிவ்வேழும்.

(ப-ரை.) அறுவகையவத்தையகற்றியசீவன்=கூறிய ஷடவத்தைகளையும் பரித்தியாகஞ்செய்த சீவன், அடைந்தள அவத்தையின் இயற்கை = பிராப்தியுற்ற ஸ்திதியின்

இயற்கை, உறுசடமாகி = திடமானசடமாய், மேல்வருந்துயர்கூர் உணர்வுளதாம் = பவிஷ்யத்துக்க போதத்தோடு கூடியதாய, இது = இக்கதி, சுழுத்தி = சுழுப்தியெனப் படும்; துறுபுவனங்கள் = ஒன்றோடொன்று விரவிய உலகங்கள், இதனிடையிருளில் = இவ்வவஸ்தையின் அந்த தமசில், தொலைவுறும் = விலீனப்படும், இப்பதமேழும் = உரைத்த அஞ்ஞானபூமிகள் ஏழும், ஒன்று நூறுகும் பெறுவனபேதம் = ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான வேற்றுமையை யடையும், பேதாதமையவத்தை யிவ்வேழும் = ஹே இராகவ! இவை அஞ்ஞான சப்தாவஸ்தைகளா மென்றறிந்து கொள்ளுதி.

(ஸ்ரீ - வீர.) ஆறு அவஸ்தைகளின் பரித்தியாகமாக, ஜடமாம் ஜீவனது எத்திதியுளதோ, பவிஷ்யத்துக்கபோதாட்டியமாய அக்கதி துயிலென்று சொல்லப்படும். புகன்றபூர்வ ஷடவஸ்தைகள், கருமபல போகபூமித்தன்மையானே கருமஜங்களாம்; துயிலோ, முன்னிளம்பிய வினைகட்குப் போகத்தானே க்ஷயமுண்டாயவழி, பின்னிளம்பு மவற்றின் உற்பவமில்லாத அந்தராளத்தில், குடைசுருக்கல் போலும், சர்வசுக்குமதூலப் பிரபஞ்சம் விலயமாக, அதன்பீஜ அஞ்ஞானமாத்திர பரிசேஷத்தானே, அதனுபகித ஆன்மமாத்திர பரிசேஷரூபமா மென்னுங் கருத்தா லறைந்ததாம், சடமாகி யென்றது. பவிஷ்யத் = வருந்துயரங்களே அநுபவிக்கச் செய்கின்ற வாசனைகருமங்களோடு, ஆட்டியம் = சேர்ந்தது துயிலேயாம், நனக்கனக்களின் வருந்துயரத்தின் அநுபவத்தின் பீஜமாய வாசனையோடு கூடியதாந் தன்மையை யுடையது, கதி = அவஸ்தை, இருளிற் றொலைவுறும் = தமமாய அஞ்ஞானத்தினுள்ளே சமஸ்காரசேடமாய் விலீனமாம். அகில மெல்லாம் அவ்வவத்தையில் அந்தத்தமசில் விலீனமாய். துயிலிற்காரணத்தில் விலீன மாய ஜகத்திற்குச் சமஸ்காரவடிவமாக இருப்பேயாம், அசத்வமிலதாம், மீண்டும் உற்பவ அபாவ வழக்காதலின் என்னுங் கருத்தாற் கூறியதாம், புவனங்கள் இதனிடை யென்றது. அவ்வவத்தையில் இத்திருண வேர்ட்ட சிலமுதலிய பதார்த்தங்கள் யாவும் பரமாணுப் பிரமாணங்களா யிருப்பனவாம். உபசங்கரித்தல்: — இவ்வேழுமென்றது; ஹே இராகவ! எம்மால் அஞ்ஞானத்தின் சப்தாவத்தைகள், இவ்வண்ணம் இயம்பப்பெற்றன, அவ்வேழில் ஒவ்வொன்றனுள் அன்யோன்ய ஆவிர்ப்பாவத்தானும், பரஸ்பரம் பற்றிக் கோடலானும், அநந்த பேதங்களாகச் சம்பவிக்கு மென்பார், ஒன்று நூறுகுமென்றார். ஈண்டு; நாநாவிதமான காரியங்களின் வடிவம் வாய்ந்த ஒவ்வொன்றும் சீதசாகையாம்; ஜாக்கிரத்சொப்பனமானது நீள்காலம் நீட்டமாகிச் சாக்கிரத்தின் கண்ணே கலந்துவிடுகின்றது.

(ச.) அறுவகையவத்தை யகற்றிய = முற்கூறிய ஆறவஸ்தைகளையும் பரித்தியாகஞ் செய்த, அதினதின் லிலக்ஷணமான, சீவனடைந்துள வவத்தையி னியற்கை = ஜீவனது ஸ்திதியின் இயல்பு, உறுசடமாகி = ஜர்ட்டிய மிகுந்ததாய், மேல்வருந்துயர் கூருணர்வுளதாம் = துக்காநுபவத்தில் ஏதுவாயிருப்பதாம், இது = இத்திதி, சுழுத்தி = சுழுப்தியவஸ்தை யெனப்படும். பீஜஜாக்கிர முதலிய ஆறவஸ்தைக்கும் லிலக்ஷணமாய்ச் சாட்டியமயமாய் மேல்வருந் துக்கவேதுவா யிருத்தலின் சமாதி முதலிய வவஸ்தாபேதத்திற்கு வேறான அவஸ்தை சுழுத்தியென்பது பொருள். இதனிடை யிருளிற்றுறுபுவனங்கள் = இச்சுழுத்திய வஸ்தையின் அசத்துச் சகமிருப்பினும், தொலைவுறும் = அவித்தையாரூபத்தில் இலயமாம், இப்பதமேழும் = இவ்வவஸ்தை யேழினுள்ளும், ஒன்று = ஒவ்வொன்று, பெறுவனபேதம் = அவாந்தர பேதத்திலில், நூறுகும் = அபரிமிதமா மென்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) ஞானபூமிகள் ஏழுபதங்களே யெனப் பெற்றதை விவரணஞ் செய்தல்:—ஞானவென.

(ச - அ.) இனி அரசனே நீ எதனையறிந்தாற் பின்பு சமுசாரசாகரத்தின் மூழ்காயோ அந்த ஞானசப்தாவஸ்தையைக் கேளென்று தெளிவிப்பவராய் மதாந்தரத்தைத் தெரிவித்துத் தன்மதத்தையே ஸ்தாபித்தல்:—ஞானவென.

ஞானபூமியைமுடிவிற்பேதமாகநவிலுவர்வாதியரவற்றினைமக்குநல்ல
தானதிவையிவையறிதன்ஞானமாகுமறித்தவிவற்றத்தேமையழிவில்வீடா [ற
மானமுறுசுபம்விரும்பல்விசாரமெய்தன்மனஞ் சிறுகலுண்மையிலேமன்னிநிற்
லீனமறுசங்கற்பமறல்பதார்த்தவெண்ணமறுத்திடுரியமிவையேழாகும்.

(ப - வி.) ஞானபூமியை முடிவில் பேதமாக நவிலுவர் வாதியர் = ஞானபூமியை வெகுவேற்றுமையாக விளம்புவர் ஞானியர், அவற்றில் நமக்கு நல்லதானவிவை = அவற்றுள் எமக்குச் சுகங்கொடுப்பன வெனத் தோற்றியவை யிவையேயாம், இவையறிதன் ஞானமாகும் = இவற்றின் அவபோதமே ஞானமென்பர், அறிந்த விவற்றந்தமே யழிவில்வீடாம் = ஜேடமாமிவற்றந்தமே நித்திய முத்தியாம், மானமுறு = புகழத்தக்க, சுபம் விரும்பல் = சுபேச்சை, விசாரமெய்தல் = விசாரணை, மனஞ்சிறுகல் = தநுமாநசை, உண்மையிலே மன்னிநிற்றல் = சத்வாபத்தி, ஈனமறுசங்கற்பமறல் = ஈனமில்லாத அசம்சக்தி, பதார்த்த எண்ணம் அறுத்திடல் = பதார்த்தாபாவநீ, துரியம் = துரியகை, இவையேழாகும் = இவையே யேழுஞான பூமிகளாகும்.

(ஸ்ரீ - வீர) அவபோதம் = அவகதி = சாக்ஷாத்தநுபவமாம். அற்றேல் யோகசாஸ்திரத்தில் இயமநியமாதியஷ்டாங்கபேத பின்னயோக பூமிகள் வெளியாயுள்ளனவே, அவையே ஏன் இவையாகாவென ஆசங்கித்துக் கூறல்:—யோகசாங்கிய வாதியர் யோக பூமிகளே பருபேதமாகப் பகர்வர், துச்சசித்தி பயன்களையுடைய அந்த யோகபூமிகள் அந்தியர்க்குஞ் சம்பாதி அபிமதங்களாம். எமக்கோ, சுபசுகங்களேயேதரும் இஞ்ஞானபூமிகளே அத்தியந்தம் அபிமதங்களாம், இவைகளே பரமபுருடார்த்த லக்ஷணசுபப்பிரதங்களாதலின். எப்பூமிகள் வருணிக்கப் பெறுகின்றனவோ அவற்றில் அறியத்தக்கது தானென்னே அறிவுதான் என்னே யென்னும் சங்கையுண்டாக அவை குறிப்பிக்கப் பெறுகின்றன:—இவையறிதல் என அவபோதம் ஞானமென்றறிவர், அவ்வித ஏழுபூமிகளையுடையதாம், அப்பூமிகளி லுண்டாவதாம். ஏழுபூமிகளினும் பரமானமுக்தியோ ஜேயமெனப் பெறும்; பூமிகைப்பூமிகாந்தரத்தில் முக்தியோ ஜேயமெனப் பெறும் அகண்ட சுவாகார விருத்தியோடு ரூடமாய பிரஹ்மம் அஞ்ஞான நிவர்த்தகத் தன்மையானே ஞானமாம், அஞ்ஞானம் நீங்கிய அதுவே ஜேயம் என வுபசாரமாக இருவகையாகக் கூறப்பெறும். உத்தேசம்:—ஞானபூமி, சுபேச்சையெனப் பெயரியது முதலாவதாக மொழியப்பெறும், விசாரணை யிரண்டாவதாம், மூன்றுவது தனுமாநசையாம், சத்துவாபத்தி சதுர்த்தியாம், அசம்சக்தி ஐக்தாவதாம், பதார்த்தாபாவநீ யாறுவதாம், துர்யகை சப்தமியாம்.

(ச.) ஸ்ரீ வசிட்டர்! ஞான+தானவிவை = ஞானபூமிகள் வாதிகளால் வெகுவிதமாக நிரூபிக்கப் படினும் எனக்கு மேற்கூறப்படும் இவ்வேழுமே சுகந்தருவன வாதலிற் சம்மதங்களா மென்பதுபொருள். இவை = அவ்விவ்வேழு பூமியையும், அறிதன் ஞானமாகும், அழிவில் வீடாம், வீடு = முக்தி = கைவல்லியம், அஃதான்ம சொரூபமாதலின் சாக்ஷாத்கரிக்க வேண்டும் வஸ்துவாம், அறிந்த அழிவில் வீடு = நினக்கறியத் தகுந்த

முக்தி, இவற்றந்தமேயாம் = மேற்கூறப்படும் ஞானபூமியின் மத்தியிலே யிருப்பதாம். ஞானசப்தபூமிகளே யுத்தேசஞ்செய்து கிரமமாக இலக்கணங் கூறல்:—ஈனமுறு சங்கம றல் = அசம்சக்தி, பதார்த்த மெண்ணமறல். பிற ஸ்ரீவீர சேகரத்திற்போலு முணர்க.

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவற்றை யறிந்தவரிடர்ப்படா ரெனவியம்பி இருபூமிக ளின் இலக்கணமியம்பல்.—இவையென

இவையறிந்தோர்மோகமெனு மளத்தில்வீழா ரிவற்றியலாமுத்திவரிலிடர் மீண்டில்லை, நவையுறுமோகத்தோடு நாமடைவதென்னே நல்லோரானன்னூ லானன்றுஞானச், சுவைபெறுதுநிராசையினுலென்று நாடல்சுபம்விரும்பலாரு மிந்தச் சுபேச்சைமுற்றிக், கவையறுநல்லோ ரியற்கையாசாரங்கள் கைவருதல் விசாரமாக் கருதல் வேண்டும். (46)

(ப - ரை.) இவையறிந்தோர் மோகமெனும் அளத்தில் வீழார் = இப்பூமிகளே யுணர்ந்தவர் மயலடைய சேற்றில் அழுந்தார், இவற்றியலா முத்திவரில் = இவற்றின் அந்தத்தில் முத்தியானதுளதாம், உளதாகவே; இடர் மீண்டில்லை = மீண்டும் சோக மான துண்டாக மாட்டாதாம், நவையுறு மோகத்தோடு நாம் அடைவதென்னே = குற் றத்தோடுகூடி மயக்கமுற்றுழன்று மூடனைப்போல் யாணிடர்படல் என்னே! நல்லோ ரால் நன்னூலால் நிராசையினுல் = சஜ்ஜனங்களாலும் சாஸ்திரங்களாலும் வைராக்கி யத்தினுலும், நன்றும் ஞானச்சுவை பெறுதும் = சம்யக்ஞானத்தைப் பெறுவாம், என்று நாடல் = என்று இச்சித்தல், சுபம் விரும்பலாரும் = சுபேச்சை யென்னும்முதற் பூமியரம், இந்தச் சுபேச்சைமுற்றி = இந்தப் பூமியானது திடப்பட்டு, கவையறு நல் லோர் இயற்கை ஆசாரங்கள் = குற்றமற்ற சாஸ்திர சஜ்ஜனசங்கமும் வைராக்கியப் பயிற்சியும், சதாசாரமும், கைவருதல் = முற்றுறவருதல், விசாரமாக்கருதல் வேண்டும் = விசாரணையென்று தெரிந்துகொள்ள வேண்டும்.

(ஸ்ரீ - வீர.) இவற்றின் ஈற்றில் முக்தியானது உளதாம் அவ்வவத்தையில் மீண்டும் சோகத்தைமேவான், உத்தேசித்தவைகளின் இலக்கணக் கூற்றை யியம்பப் பதிஞ்ஞை செய்தல்:—இப்பூமிகளினுடைய நிர்ணயமான இவ்விலக்கணத்தைக் கூறக்கேட்குதி! யான் மூடனுகவே எதன்பொருட் டிருந்தேன்! ஆராயும் வேதாந்த வாக்கியங்கள் ஆசிரி யர்கள் சற்புருடர்கள் முதலிய உபாயங்களானே ஆத்மதத்துவத்தை மிகமுயன்று நன்கு காண்பேன். வைராக்கிய வாயிலான இவ்விச்சை சுபேச்சை யெனப்படும். வைராக்கியத் தைக்கவர்ந்தது சாதனசதுட்டய வுபலக்கணமாம். இங்ஙனமாகவே, நிஷித்தகாரியத்தை விட்டு, நிட்காம யாகதானுதி யனுஷ்டானப் பிரயுக்தமாய், சந்யாச சாதனசதுட்டய சம்பத்தி சகிதமாய், முக்திமுடிவு பேறுடையதாய், சிரவணுதிப் பிரவிருத்தி பல உபகித மாய ஆத்மசாக்ஷாத்கார உத்கடமான இச்சையே, முதற்பூமியாம். இந்த முதற்பூமியா னது புண்ணியகரும பலபூத பிரத்தியக்கு விவிதிஷாரூபமாம். அறியவிரும்புவர் யாகத் தினுலும், தானத்தினுலும், தவத்தினுலும், உண்டிசுருக்கும் ஒருமையினுலும் என்னும் சுருதியாதிகளில் இது பிரசித்தமாம். "அவ்விதனே வேதாத்தியயனத்தானும், யாகத் தானும், தானத்தானும், தபசானும், உண்டியை யொடுக்கலானும், பிராஹ்மணர் அறிய விரும்புகின்றனர்" எனமறையும் உளதாம், அங்ஙனமே சைஷ்கர்மியசித்தியினும் அறை யப் பெற்றுளதாம்—சித்தன்னே யுணரும் வேட்கை செனிப்பித்துச் செயல்களெல்லாம், புத்திக்குச் சுத்தியானே பொருந்துதன் முடித்தவாகி, அத்தத்தையடையலாருமருந்துளி யளித்தபின்னர், சத்தித்த கலதெல்லா மீற்றினிற் சாம்புமாறே. அத்தியாத்ம சாஸ்திர

விசாரம் சதாசாரப் பிரவிருத்தி. விசாரணைப் பிரதானத் தன்மையான் விசாரணையென விளம்பப்பெறும் என்னும் நிர்வசனத்தைக் கருதிக்கூறல்:—கலையறு மென்பது அத்தியாத்ம சாஸ்திர விசாரணை, பிரஹ்மநிஷ்டர் சேவை, என்னும் இரண்டு பாயங்களாலும், வைராக்கிய ஹேதுபூத திருஷ்ய மித்தியாத்வ தோஷதரிசன அப்யாசவாயிலாக, எச்சதாசாரப் பிரவிருத்தியுளதோ அது விசாரணையென்னும் இரண்டாவது பூமியாம். ஆத்தாதி, யாரியன் சேவை, பயிக்கவுணவு ஆந்தரபாகிய சௌசாதி யதிதர்மபாலன சகிதசிரவண மனனங்களே ஈண்டு சதாசாரமாம், மற்றவற்றிற்கு மனத்தூய்மை மாத்திர ஹேதுத்தன்மையானே முன்னரே சித்தத்தன்மை யுண்மையின்,

(ச.) இவற்றியலா முக்திவரின் இடர் மீண்டில்லை, இப்பூமிகளுடைய அர்த்தநிர்வசனத்தைக் கேட்பாயெனக் கூறல்: நிராசையினால் = வைராக்கியத்தினால், என்பது சாதனசதுட்டய உபலக்ஷணம், சாதன சதுட்டயத்துடன் நல்லோரால் = சற்சனரென்னும் வித்துவான்களோடு, நன்னூலால் = அத்தியான்ம சாஸ்திர சித்தங்களான நியாயங்களால், ஞானச்சுவை பெறுதும் என்று கூடல், ஆன்மாநந்தத்தை அநுபவிப்போமென்று இச்சிப்பது, சுபம் விரும்பலாகும் = சுபேச்சையாம் என்பது பொருள். நல்லாசாரம் = இவ்விடத்து ஆத்மாநுசந்தானமாம், உக்தம்: யாஞ்ஞவற்கியர்: யோகத்தாலாத்மதரிசனமாயின் இஃதே பரமதருமமா மென்பது. (46)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ‘ கேட்கத்தக்கது, மனனிக்கத்தக்கது நிதித்தியாசனஞ் செய்யத்தக்கது ” எனச்சுருதி யியம்பிய சிரவணமனனரூப, நிதித்தியாசனவடிவ, மூன்றாவது பூமியை, நிர்வசனஞ்செய்தல்:—இனையவென.

இனையசுபம் விரும்பலொடு விசாரமென்ற விரண்டுநிறை தலும்விடயத்திச்சைமாற்றி, நினைவுகுவிவது சித்தஞ்சிறுகலரசு நிகழ்த்திய விம்மூன்றலு நெஞ்சத்தன்னில், வனைதருமவ்விரத்தியினை யுண்மைப்போத மன்னுதலேயுண்மைநிலைமருவலாகு, மனையனவிந் நான்கரலு முண்மைப் போதத்தழுந்திய யற்சங்கமறல சங்கமாகும்.

(ப - வை.) இனைய சுபம் விரும்பலொடு விசாரமென்ற விரண்டுநிறைதலும்=கூறிய இலக்கணம் வாய்ந்த சுபேச்சையுடன் விசாரணையென்னும் இரண்டாவது பூமியும் பூரணமாக அவற்றின் வலுவால், விடயத்திச்சை மாற்றி = இந்திரிய அருத்தங்களில் விரக்தியுண்டாகி, நினைவுகுவிவது = எண்ணங்கள் தனுத்தன்மையை யடைவது; சித்தஞ்சிறுகலாகும் = தநுமாநசையாம், நிகழ்த்திய இம்மூன்றலும் = உரைத்த மூன்றுபூமிகளின் பயிற்சியின் வலியால், நெஞ்சத்தன்னில் = மனத்தில், வனைதரும் அவ்விரத்தியினால்= உண்டாகா நின்ற முன்மொழிந்த வைராக்கியத்தினது முதிர்ச்சியினாலே, உண்மைப் போதம் மன்னுதலே = சத்திய சுத்த நித்திய ஆன்மாவிற் சித்தத்தினது நிலைபேறே, உண்மைநிலை மருவலாகும் = சத்வாபத்தியாம், அனையன இந்நான்காலும் = நவின்ற நான்குதசைகளின் அப்பியாசத்தானே, உண்மைப் போதத்தழுந்தி = சத்துவசமத்காரம் ரூடமாகி. அயற்சங்கமறல் = அசம்சர்க்க பலமுறல், அசங்கமாகும் = அசம்சக்தியாம்,

(ஸ்ரீ - வீர.) எந்த அவஸ்தையின் கண்ணே பூர்வபூமிகளாகிய விசாரணை சுபேச்சைகளின் ஏதுக்களானே இந்திரிய அருத்தங்களாகிய அநாத்ம பதார்த்தங்களில் விரக்தத் தன்மையானது உதிதமாமோ அவ்வவத்தை தநுமாநசை யெனப்படும்; மநம் தநுத்தன்

குருந்தம்

மையை யாண்டடைதலின். தூலமாய காரண இராக நீக்கத்தால் மாநசத்திற்குத் தநுத் தன்மைச் சற்பாவத்தானே பூமிகைக்கு நிதித்தியாசன ரூபத்தன்மையை வழங்குவர் ஸ்ரீ பகவான் வசிட்டர்:—"பண்டமனத்தின் பற்றற்ற பகர்பாவனை யுள்ளுறவுண்டாம், கொண்டவுயர் வாக்கியப் பொருளைக் குறிப்பாலழுத்து மனத்தோர்க்குக், கண்டவிது சாமானிய மாங்கவர் பற்றில்லா விந்தெறியா, லண்டுபெரியோர் கூட்டரவா லறிவிலா தோர் நீக்கத்தால் தானுமுணர்வினுட் டெளிவாற் றக்கபுருட வருத்தத்தா, லானுநன் னூற் பரிசயத்தா லங்கைகெல்லி தோன்றுதல்போ, லானுர்பிறவிப் பெருங்கடலினுயர் காரணமாம் பெரியகரை, தேனுரலங்கன் மணிகார்பா தெளியக்காண்கின்றநீ திடமாய், செய்வானுனன் றீசன்றன் செய்வானலதென் பழவினைதான், இவ்வாறுன சொற்பொ ருளி னெண்ணமெல்லா நிச்சயமாய்க், கவ்வாததிதூரத் தகற்றிக் கலந்த சாந்தமோன நிலை, பெய்வான் கருணைமுகிலே மூன்பேசு சேட்டப் பற்றின்மை. சேட்டமெனச்சொல் பற்றின்மை சேர்ந்தான் மூன்றும்பூமியதா, மீட்டு புருடன் சங்கற்பவெண்ண மொன்று மில்லென்ன." உரைத்த இத்தப்பூமிகள் மூன்றும் பிரஹ்மஞான சாதனமேயாமலது, ஞானகோடியி னுள்ளடங்காவாம், பேதசத்தியத் தன்மைப்புத்திக்கு ஆவிகவ்டத் தன்மையுண்மையின். இதனுனையே இதனைச் சாகரணமென வியம்புவர் ஸ்ரீ வசிட்டபக வான்:—விதமாஞ் சகத்தைச் சாக்கிரத்தின் மிகப்போதத்தீர் புந்தியினுற், பொதுவாய் நோக்குமதனு லிப்பூமிமூன்றுஞ் சாக்கிரமாம்; மூதற்பூமிகண் மூன்றுங் குமரனேசாக்கிர மாஞ்கூறுநரலாகாது கனவாம்." அவ்வாறே:—"ஈண்டுப்பூமிகை மூன்றும் பிரஹ்மவித் தையின் சாதனமேயாம், வித்யாகோடியின்கண்ணே உள்ளடங்காவாம்; பேதசத்தியத்வ புத்தியகலாமையின், இதனுனையிது சாகரணமென விளம்பப்பெறும்" என்பதாகப் பெரியாரும் பேசியுள்ளார். மூலத்தில் விசாரணையைமுன்வைத்தது மேன்மைபற்றியாம். பாவாத் = நிதித்தியாசனத்தால். இன்னணமாகவே சாதனசதுட்டய சம்பத்தியாதி பூர்வக சிரவண மகநங்களோடு கூடிய நிதித்தியாசனத்தினுலே மனத்திற்கு இந்திரிய அருத்தங்களில் அதாவது சப்தாதி விடயங்களில், அசக்தத்தன்மை = அக்கிரகண பரி யந்த தநுத்தன்மை = சவிகற்பசமாதிரூப சூக்குமத்தன்மை யாதலுதோ அது தநுமா நசையெனப் பெயரிய பூமிகையாம். தநு = சூக்குமதமம், மாநசம் ஏதனத்தண் அது தநு மாநசை யென்பது வியுத்பத்தியாம். அண்ணந்தத்திற்கு (மேலும்) உபசர்ஜனத் தன்மையானே நீப்பாகவில்லை. யோகசாஸ்திரத்தின் கண்ணும் அவ்வாறே கூறப்பெற்றுளதாம்:— "செவிமுதலிய கரணங்களாற் செறிசேண்மூன், கவையுறும் பொருள் கவர்ந்திடலாகு மக்காலும், அவமறுக்குந் தியானமென் றறைகுவ ரதன்பின், சிவமருவுசமாதியெனச் செப் புவர் தெளிந்தோர்," முதன் மூன்றினுக்கும் ஞானபூமிகைத்தன்மையோ சத்வ ஆன்மா வின்கண் அதன் சாதனத் தன்மையானே உபசாரத்தானே யெனவறிக. மூப்பூமிகளின் நிடப்பயிற்சியானே சித்தத்திலடைவுற்ற அநாத்ம பதார்த்தங்களில் அருசியின்வயத்தாற் சத்துவ ஆன்மாவின் கண் = சத்தாமாத்திர சொரூப சுத்தப் பிரஹ்மத்தின் கண் நன் னிலைபேறு சத்வாபத்தி யெனப்பெறும். அவ்வாறே யறையப்பெறும்:—"அமரநாலாம் பூமிதனையடைந்தோர் சிறக்குஞ் சத்பாவத்தானே சேடமாக நின்றிடுவர்." சொப்பன மெனப் பெரிய நான்காவதுபூமி அபரோக்ஷ ஞானமேயாம், சாதனகோடியின் கண் ணுள் ளடங்காதாம். கூறப்பெறுதலின்:— "மூன்று பூமிப்பரிசயத்தான் மூடத்தன்மை யிறந்துழியேயன்ற ஞானேதய முண்டாயாதி யந்தமறவிரிந்து, பூன்றமதியினுதயம் போற் பொலியுமனத்திற் போதமுற, வுன்று யோகத்துடன் சேர்ந்தவுள்ள முடைய யோகிக்கே சமமதாகச் சொப்பனம் போற்சகத்தி லினைத்துநோக்கிடுவர்." பஞ்சமியாதி பூமிகைமூன்றிலோ, ஜீவன் முக்தியின் ரூரதம்மிய மூளதாம், அவற்றுள் ஏழாவது பூமி

வீதேக கைவல்லிய சதிருசமாம். அங்ஙனமே யறையப்பெற்றுளது:—சீவன் முக்தியினேர்தலுந் தேர்தலும், மேவுபூமிகண் மூன்றினிதின் மேவுமால், காவல் காயமில் வீடு விதேகமுந்தி கடுப்பதாம், ஓவிலேழெனும் பூமியென்றோதுவார். அம்மேற்பூமிகண் மூன்றும் அசம்பிரஜ்ஞாதசமாதி யப்பியாசஞ் செய்தலானே சித்த உபரதிதார தம்மியத்தானே சித்திப்பனவாம். அதுவும் அறையப் பெற்றுளதாம்:—பஞ்சமியாதி மூன்றுபூமிகள் நிர்விகற்ப பூமியப்பியாசஞ் செய்பவனுற் சித்தவி சிராந்தி தாரதம்மியத்தானே அடைவனவாம். பாகிய அருத்தங்களாகிய விடயங்களிற் சமஸ்காரங் கெடுதலால், சித்தத்தில் ஆத்யந்திகமாய எவ்விரக்தியுளதோ அதன் வயத்தால் = அதன் நிரத்தன்மையால், மாயாதற் காரியத்தினின்றும், அவஸ்தாத்திரயத்தினின்றும் சோதித்தெடுத்த தூயசர்வாதிஷ்டான சன்மாத்திரரூப ஆன்மாவில், க்ஷீரோதகம் போலத்திரிபுடி விலயத்தால், சாக்ஷாத்கார பரியந்த நிர்விகற்பக சமாதிரூப சுத்தத்திதியுளதோ அதுசத்துவாபத்தி, மனத்திற்குப் பரமாத்ம சத்வவடிவத்தானே அடைவுற்றதாந் தன்மையுண்மையின்; ஈண்டேயிவன் பிரஹ்மவித்தெனப் பெறுவன். முன்னர் மொழிந்த அவஸ்தை நான்கன் அப்பியாசகாரணத்தால்; ரூடசத்வசமத்காரம் = நிடப்பிராப்த சத்துவமென்னும் அந்தக்கரணத்தின் சமத்காரம், பரமசூக்குமப் பிரஹ்மாநந்தக் கிரகணசாதுரியமது எப்பூமியாலாமோ அது அசம்சக்தியெனப்பெறும். அல்லது சத்வமென்பதானே சத்வகுணங் கவலாம், மிகவிருத்தியாய சத்வகுண சாதுரியேயாம் பஞ்சமபூமி. யாதின் பொருட்டு ரூடசத்வசமத் காரமென்றதெனின், அயற்சங்கமறும் பொருட்டா மென்க அசம்சர்க்கபலப் பொருட்டு = அசம்சக்திபலப் பொருட்டு, பிராதிபாசிக விடயத்திலும் இராக ஆபாசத்திற்ஸ்ரீம்ஷிவிருத்தி பலப்பொருட்டு என்பதாம்; நிரதிசய ஆனந்த அநுபவபலப் பொருட்டும் என்பதற்கே மூலத்திலும்மையாம். இப்பஞ்சமி பூமியோ தூயிலெனப்பெறும். அவ்வாறே யறையப்பெறும்:—உறக்குஞ் சுழுத்திப் பதமென்னவுரைத்தும் மைந்தாம் பூமியிற்போய்; நிறக்கும் விசேடமனேத்துமற நிற்பிணென்ற நிலைமட்டில். இதன்கட் சமாதியினின்றும் சுயமாகவே எழுந்திடுவன். அசம்சங்கம் = சித்தத்திற்கு, வெளியுள்ளா காரங்களானும் அவற்றின் சமஸ்காரங்களானும் நீண்டாமை, அவ்வடிவமாய, சமாதிபரிபாகபல, ஹேது விஞனே, ரூட = விருத்தியான. சித்தத்தில், நிரதிசயாநந்த நித்தியாபரோக்ஷ பிரஹ்மாத்மபாவ சாக்ஷாத்கார லக்ஷண சமத்காரம் எதன்கண், அது அசம்சக்தியாம். உத்தம அதிகாரிகட்கு இரண்டாவது பூமியின் கண்ணும் சாக்ஷாத்காரம், சாப்த அபரோக்ஷத்தானே பிரசித்தமாம், எனினும், ஐந்தாவது பூமிகையில் ஆத்யந்திக துவைத சமஸ்கார உச்சேதப் பிரயுக்த உத்கர்ஷ அதிசயத்தையும், மந்தமத்திம அதிகாரிகட்கும் நான்காவது பூமியீற்றிலுற்பன்ன சாக்ஷாத்காரத்திற்கு ஐந்தாவதில் நிரூடதரத் தன்மைப்பொருத்தத்தையும், குறிப்பிக்கும் பொருட்டு ரூடவென்பது சமத்கார விசேடணம், மூலத்திலாக்கப்பெற்றது. இதனுனே நான்காவது பூமியின் ஈற்றில் ஐந்தாவது பூமியையடைவுற்றதன் சிலபால் பிரஹ்மவித்வான் எனப்பெறுவன். அவித்தையதன் காரியசம்சக்தி எவ்வாற்றானும் இலவேயில்லை எதன்கண் அது அசம்சக்தியென்பதாம்.

(ச) இனைய+நிறைதலும் = அதனுல். பூர்வபூர்வ பூமிசித்தி உத்தரோத்தர பூமி சித்தி சாதனமென்பது பொருள். எந்தப்பூமியிற் சுபேச்சை விசாரணை சித்திரூபமான ஆன்மானுசந்தான நைரந்தரியத்தால், விடயத்திச்சை மாற்றி = விடயங்களிற் சித்தத்துக்கு அனுதாரமுண்டாமோ, அந்தப்பூமி, சித்தஞ் சிறுகலாகும் = தமமானசையெனப்படும், யாதினுலெனில்? நினைவுகுவீவது = மனதுக்குத் தமத்வமுளதாதலின், இந்திரியார்த்தங்களில் அநிச்சையே சித்தத்தைச் சிறுகச்செய்வதாம், மூன்றாலும் = பூமித்திர

யாப்பியாச வேதுவினுல், நெஞ்சந்தன்னின் வனேயும், விரதியினுலே, விடயங்களிற் சித்தத்திற் குண்டாகும் பிரவிருத்தி யொழிவின் சாமர்த்தியத்தினுல், உண்மைப்போத மண்ணுதலே = நிருபாதிகமாய்ச் சத்துரூபமான ஆன்மாவிற் சித்தம் நிச்சலமாயிருக்கும் பூமியே, உண்மைநிலை மருவலாகும் = சத்துவாபத்தி யென்பதாம், நான்காலும் = பூமி சதுட்டயாப்பியாச வேதுவினுல், உண்மைப் போதத்தழுத்தி = சுவான்மா ரூபத்திற் பிரதிட்டிதமாய், அதனுலே அயற்சங்கமறல் = விடயசங்க நிவிர்த்தி பலமான பூமி, அசங்கமாகும் = அசம்சத்தி யென்பதாம். (47)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இவ்வைந்தாவதற்கே பரிபாகமேன்மையினுல் உத்தர இரண்டு பூமிகள் உண்டாம் என்னுங் கருத்தாற் கூறல்:—அறைந்தவென.

அறைந்தபத மைந்தாலுந் தானும்போதத் தழுந்தியவின்பத் தமைவாற் புறனுமுள்ளு, முறைந்தபதார்த்தங்கண் மறந்தயலோர் வன்பாலுணர்வதுவே பதார்த்தநினே வொழிதலாகு, நிறைந்தவிவை யாருலும்பேதம் போக்கினிலே பெறுதற் சுபாவத்தே நிற்றருனே, மறைந்தபொருள் வெளியாக்குந் துரியமா குமாசறு சீவனின்முத்தர்வழியீதாகும்.

(ப - ரை.) அறைந்தபத மைந்தாலும் = பூர்வம்புகன்ற பூமிபஞ்சக அப்யாசத்தாலும், தானும் போதத்தழுந்திய இன்பத்தமைவால் = சுவாத்மா ராமத்தன்மையானேதிடமாக, புறனும் உள்ளும் உறைந்த பதார்த்தங்கண் மறந்து = வெளியிலும் உள்ளிலுமுள்ள பொருள்களின் பாவனே யின்மையின், அயலோர் வன்பால் = பரப்பிரயுத்த சிரப்பிரயத்தநத்தினுலே, உணர்வதுவே = அவபோதன மடைதலே, பதார்த்தநினே வொழிதலாகும் = பதார்த்தாபாவனே யென்னும் ஆருவது பூமியாம், நிறைந்த இவையாருலும் பேதம்போக்கி = ஆறு பூமிகளின் சிர அப்யாசத்தால், வேற்றுமை தோற்றுமன்மாற்றி, நிலைபெறுதற் சுபாவத்தே நிற்றல்தானே = நிலைபெற்ற தனது சுபாவ ஏகநிஷ்டத்வமே, மறைந்தபொருள் வெளியாக்குந் துரியமாகும் = மறைபட்ட பதார்த்தத்தை வெளிப்படுத்தும் துரியகாகியாம்; மாசறு சீவனின்முக்தர் வழியீதாகும் = இதுவே களங்கமற்ற சீவன் முக்தர்களிடத்தில் துரியாவஸ்தை யீண்டுள்ளது.

(ஸ்ரீ - வீர.) திடமாகப் பூமிஐந்தன் பயிற்சியால், அதிதிடமாகத் தனது அறிவுவடிவத்திலேயே இரமித்து ஒன்றையும் உன்னுவாற்றல், உள்ளிலும் வெளியிலும் உண்டென்பவற்றை யறிவாயே காண்டலால்; கூறிய ஐந்தாவது பூமியில் நிர்விகற்பத்தினின்றும் அக்காற்றுனுகவே எழுவன், ஈண்டு ஒன்றும் பிரதீதியாகாமையின் அந்நியனது முயற்சியா லாக்கப்பெற்ற அவபோதத்தால் சமாதியினின்றும் தனதெழுச்சியாம், இது வேபதார்த்த பாவனீ யென்னும் ஆருவது பூமியாம். சமாதியின்கண் மறந்த அநாத்ம பதார்த்தத்தின், பரப்பிரயத்தநத்தினுலே பாவனே, பதார்த்தபாவனே அது எதற்கோ அதுபதார்த்த பாவனீசதி = அவஸ்தை, இது அதிதிடமான சுவாத்மா ராமத்தன்மையாம் ஹேதுவினுனே, உள்ளிலெழும் சுகதுக்காதிகளின், வெளியிற்றோற்றும் கடாதி பதார்த்தங்களின் திடமான அபாவனேயினுலேயே யுண்டாம். நீள்போது அன்னியனுலாற்றப்பெறும் பெருமுயற்சியினுனே அவபோதனம் எக்காலுளதாமோ அக்கால் ஆருவது அவஸ்தை யுண்டாமென்றறிக. சிலரோ, சாஸ்த்ராத்ஸ்ரீசுத்தபதார்த்த ஞான சாத்தியம் மகாவாக்கியார்த்த விடயம், அதனுனே பதார்த்த பாவனீயென்னும் இவ்வவஸ்தை ஆதரிக்கத்தக்கது எனக்கூறுபவராய் ஆருவது பூமியைப் பிரஹ்மவித்யாசாதன

* தத்தேஸம்பதங்களின் லக்ஷியம்

கோடியி விருப்பதாக எண்ணுநிற்பர்; அஃதேலாதாம், நிர்வாணப்பிரகரண வசனவிரோ தத்தா னென்றுணர்க. அப்பூமியில் வாசனையற்றவனு யிருப்பன், அழுத்து தூரியமெனு நாமத்தாரும் பூமியடைந் தொழுங்கி, னெழுந்து பலவாதனையி லனுபிப்பூமியிலே பரிச யிப்ப, னுழைந்து நானென்பது மென்னுதாதுவு முளதுமில்லாதுங், கழிந்துவெறிதேகினை விலனுய்க் காணுனிருமையோடொருமைகளுஃ செறியுமுடிச்சுமையமும்போய்ச் சீவன் முக்த சுபாவத்தால், வெறிது வீடன்றியும் வீடுவிளைந்தோ வியத்தின் விளக்கொப்பான். அன்றியும், சுத்தசம்வின்மய ஆநந்தவடிவமான ஐந்தாவது பூமியையடைவுற்ற ஜீவன் முக்தன், பாதிதுயின்றும் விழித்தும் உளனுயாண்டு நிலைபெறுவன். உள்ளிலும் வெளியி லும் உளவபாவனத்தால், தெள்ளியபதார்த்தா பாவனை யெனவாப். ஆயின் யாங்ஙனம் ஆகயாத்திரை சித்தியாதல் எனின் ? விடை அறைவார், அயலோர்வன்பால் என்றூர். இப்பூமியின்கண் ணிவன் பிரஹ்மவித் வரீயான் எனப்பெறுவன், ஆறுவது பூமியின் அபேக்ஷையாற் ருழ்ந்ததாய ஐந்தாவது பூமியை யடைவுற்றவனது ஜீவன்முக்தத் தன் மையைக் கூறுபவரான், அதனினும் மேன்மைவாய்ந்த ஆறுவது பூமிக்கு வித்யாகோடி காடியேநி விஷ்டமாதனைக்கு அத்தியந்தம் அங்கீகரிக்கப் பெற்றதாந் தன்மையுண்மையி னுனு மென்றுணர்க: பூமிஷட்கதிர அப்யாசத்தானே, பேதத்தில் ரூற்றமில்லாமை யின் எச்சுபாவ ஏகநிஷ்டத் தன்மையுளதோ அதைத்துர்யகைகதியென அறியத்தக்க தாம். தற்சுபாவத்தே நிற்றருனே = ஸ்வபாவைக நிஷ்டத்வம் = தன்னுடைய சொரூப நிலையொன்றிலேயே யெப்போதும் தன்னுலும் பிறராலும், மீள ஏழச்சியில்லாமலே நிலைபெற்றிருத்தலாம்; சப்தமிய துயரிப்ரேஷ்டை விடயமிதன்கண் ஜீவிதத்தி னின்று மின்றும் என்னும் நிர்வாணப் பிரகரண வசனத்தால், ஏழாவது பூமியையடைந்தயோ கிக்குத் தன்னுலும் பிறராலும் மீண்டும் கிளம்புகையே இலதாமெனத் தோற்றுகின்றது. அவ்வாறே பெரியாருங்கூறியுள்ளார்: துரியமெனப்பெயரிய ஏழாவதுபூமியை அடைந்த யோகிக்குத் தன்னுலும் பிறராலும் வியுத்தானமே கிடையாதென, முழுக்ஷுக்களுக்குள் நிகழாகின்ற அவஸ்தாத்திர யாத்மகம் ஜாகரிதம், சதுர்த்த பூமியாத்மகம் சொப்பனம், பஞ்சீமஷஷ்ட பூமிவடிவமான சுழுப்தி என்பவற்றைக் குறித்துச் சொரூபமே துரியம் சதுர்த்தம், அது அடைதலிற்றுரியகை, கதி = அவஸ்தை = துரீயாவஸ்தை யென்பது பொருள் இத்தச் சப்தமபூமிரூப துரியாவஸ்தை ஜகத்தில் எங்கும் இல்லவே யில்லை யெனச் சங்கிப்ப உத்தரந்தரல்: சீவனின் முக்தர் என்பது. ஜீவன் முக்தர்களாகிய சுகப் பிரஹ்மம் முதலியவரிடத்தில், இவ்வுலகில் இத்துரீயா வஸ்தை நிகழ்வதாகும். ஏழாவது பூமியையினிதியம்பல்:—பரப்பிரயத்தினுலும் பேதத்தின் புலப்பாடின்மையின் என் பது பொருளாலறியலாம், " துர்யம் ஜாக்ரதாதியவஸ்தாத்திரய நிர்முக்தம்சீவம் அத் வைதம் சதுர்த்தம் என்றெண்ணுவர் " என்னும் சுருதியினுனே, அத்தகைய வித்வத் தநுபவசித்தத் தன்மையானே பிரதிபாதிக்கப் பட்டபிரஹ்மம் ஆன்மவடிவமாக அகண் டிதமாய் அநுபவிக்கப்பெறும் எவ்வவத்தையின்கண் அது துர்யகையாம். அதனையடைந் தவனே பிரஹ்மவித் வரிஷ்டன் எனப்பெறுவன். அவனும் பிரஹ்மவித்து முதலவருள் துரீயனுவன், அவனையடைதலின் துர்யகையாம், இத்தேகத்திலேயே என்றறிக.

(ச.) அறைந்த பதமைந்தாலும்=முற்கூறிய பூமிபஞ்ச வப்பியாசத்தினுல், தானும் போதத்தமுந்திய வின்பத்தமைவால் = சுவஸ்வரூப சுவாநுபவ நிகழ்ச்சி = லோலதை யாம் ஹேதுவால், புறனுமுள்ளு முறைந்த பதார்த்தங்கண் மறந்து = பாஹ்யாத்தர பதார்த்தாநு சந்தான மின்மையின், அயலோர் வன்பால் = பரப்பிரயத்தின் பலத்தால், உணர்வதுவே = வெகுகாலஞ்சென்று பகிர்முகம் எவ்விடத்தாமோ, அதுவே பதார்த்த

நினைவொழிதலாகும் = பதார்த்தா பாவனையென்னும் ஆரும்பூமியாம், நிறைந்த இவை யாரூலும் = மூற்கூறிய பூமிசட்சத்தின் சொப்பியாச வேதுவினால், பேதம்போக்கி = பிரபஞ்சத்தினது அப்பிரதீதியினால் விட்சேப மின்மையால், நிலைபெறுதற் சுபாவத்தே நிற்றரூனே = சொச்சொரூபத்தோடு ஏகமாயிருத்தலே, துரியமாகும். துரியபூமியாம், துரியஞ் சாக்கிராதிய வஸ்தாத் திரயாதீதமாதலின் நான்காவதான சொரூபத்தினது பிராப்தியானதினு லென்றகுத்து. ஈது = இத்துரியா வஸ்தை மாசறு சிவனின் மூக்தர் வஸ்தியீம் = சீவன்முக்தரிடத் திருப்பதேயாம், சொரூபத்தோடு ஏகமாயிருத் தல் = சொரூபமாகவே யிருத்தல் என்பதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஏழாவது பூமியைச் சர்வோத்யோகத்தான் புரிடதெளரேய ராற் சம்பாதிக்கத் தக்கது என அறிவுறுத்தற்கு அடைந்த அதைப் புகழல்:—சொன்ன வென. (48)

சொன்னதன்மே லுடலிறந்த முத்தர்மேவுந் துரியாதீதப்பதமாந் துரியச் செல்வந், தன்னுணர் வாற்றனையறிந்த பெருமைசான்ற தலைவனுலைய்தலுறுந் தன்மையாகு, மன்னியவிப் பதமடைந்த சீவன்முத்தர் மகிழ்ச்சிமறுக்கத் தழுந்தாமரபினுலே, யன்னியர்சொல் வழிதுயில்விட்டெழுந்தார்போல வடித்தனசெய்குவர் செய்யாராகிவாழ்வார்.

(ப - ரை.) சொன்னதன்மே லுடலிறந்த முத்தர் = கூறிவந்தவற்றின் மேலாக வீதேகமுத்தர், மேவும் = அடைவதுவுமான, துரியாதீதப் பதமாம் = துரியாதீத மென்னும் பதமாம், துரியச்செல்வம் = சப்தமபூமியானது, தன்னுணர்வால் தனையறிந்த = ஆத்மஞானத்தினுல் ஆத்மாவையறிந்து ரமிக்கும், பெருமைசான்ற தலைவனுல்=மகாத்மா வாகிய மகாபாக்கியவானுல், எய்தலுறுந் தன்மையாகும் = அடையப் பெறுந்தன்மை யையுடையதாம், மன்னிய விப்பதமடைந்த சீவன்முக்தர் = பொருந்திய இப்பதத்தை யுற்ற உடல்சேர் முத்தர், மகிழ்ச்சிமறுக்கத் தழுந்தா மரபினுலே = சுகதுக்காசஸ்பிருஹி யில் மூழ்காத தன்மையினுலே, அன்னியர் சொல்வழி = பக்கத்திருப்பவர் பகர்ந்த மார்க்கம், துயில்விட் டெழுந்தார்போல = நித்திரைவிட் டெழுந்தவர்போன்று, அடித் தன செய்குவர் செய்யார்(ஆகிவாழ்வர்)= தங்கட்குரியன சிறிது செய்தாலுஞ்செய்வர், செய்யாம லிருந்தாலு மிருப்பர்(ஆகிவாழ்வர்)= இவ்வாறுய நடையுடையவராகி இனிது மகிழ்ந்திருப்பர்.

(ஸ்ரீ - வீர.) இதன்மேலாக உளதுரியாதீதம் விதேகமுக்த விடயமாம் = கம்மிய மாம். இவ்வவஸ்தையின்மேல் வீதேகமுக்தி விஷயம் துரியாதீதம் !பிரஹ்மமே யெனப் பூர்ஞருக்குன் கணக்கிடவில்லை. ஹே இராகவ ! எம்மகாபாக்கியர் ஏழாவது பூமியை யடைந்தனரோ, அவர்மகத்தாகிய ஸ்தானத்தை யடைந்தவர் ஆவர், மஹாத்மத் தன்மை யின் பரியவசானபூமியை யடைந்தவர் ஆவர், மகாத்ம பதங்கதர் எனப்பாடம் பெறி னும், ஆண்டும் அதுவே பொருளாம். அவர் ஆத்மாராமர் மகாத்மானர் அவர் என்பதாம். ஏழாவது பூமியையடைந் தவனினும் வேறுயஜீவன் முக்தர் விக்ஷேபதசையில் எவ்வண் ணம் விவகரிப்பர் என்றுசங்கித்துக் கூறல்: மன்னிய என்பது. ஜீவன்முக்தர்கள். சுக துக்க அநுபவ ஸ்திதியின்கண் ஆசக்தியை யடையமாட்டார்கள், மகிழ்ச்சிவாட்டங்களை யடையார்கள் என்பதாம். அபிமானத்தை யடையார்கள் என்பதாகவும் கோடலாம். பிராகிருதமாய லோகசங்கிரக லக்ஷணப் பிரயோஜனமேயாய கார்ய ஹேதுவினுலே சிறிது செய்தாலுஞ் செய்வர் செய்யாமல் இருந்தாலு மிருப்பர். ஆர்யகார்யத்தாலென

மூலபாடமாயின் வித்வத் காரியமாகிய அநிஷித்தகாரியத்தால். சிறிதுசெய்வர் ஆறுவது பூமியின்கண் அதுவுஞ் செய்யார் ஏழாவது பூமியில் என்பது கருத்து. செய்வார் அலது செய்யார் என்றுரைத்ததில் யதேஷ்டா சாரபரத்வ ஆசங்கையைத் தடுத்துக்கொண்டு தமது கருத்தை வெளிப்படுத்தல்: அன்னியர் என்பது. அவ்வவ்வாசிரம நிட்டர்கட்கு, ஆசாரமுறையாக வந்த சதாசாரத்தையே ஆசரித்தே நடப்பர்கள் என இருவகையிலும் நியமம் ஈண்டியம்ப இச்சித்ததாம். அதுவும் பக்கத்தி லிருப்பவர்கள் போதித்தபடி நடப்பர்கள். தயின்றுணர்ந்தாண் போனும், அஷ்டமாய் = ஆசங்கத்தால் அதூஷிதமாய், பலாசக்தில்ஷண தூஷரஹித ஜ்ஞாநயநடப்பன். எனவே யதேஷ்டாசரண அடைவு இலதாம் என்பதுகருத்து. இதனைப் பெரியோரும் கூறியுள்ளார்.—வாக்கொடு மனமுமிறந்ததி மதுரவாரியா யொழிவற நிறைந்து போக்கொடு வரவதின்றிய வழுமைப் பூரணமாக வுண்டவர்தாம், வீக்கிய கானலீரெனும் விடயமேவுற முயல்வரோமுயலி, னேக்குறு மந்தஞானியு காயுமொத்திடும் வாசியொன்றிலதே. (சுப்ரபுத்தவத் தென்றும்பாடம்.

(ச.) சொன்னதன்மேல் = அதன்பின்பு, துரியாதீதப் பதமாம் = துரியாதீதமாகிய பரமபதம், உடலிறந்த முக்தர்மேவும் = விதேகமுக்தரிடத் திருப்பதாம், சிவன்முக்தரின் புகழ்ச்சி?—துரியச்செல்வம் = துரியமென்னும் ஏழாம்பூமி, தன்னுணர்வால் = மகாமனதினுல், தனேயறிந்த = ஆன்மாவில் ரமித்த, பெருமைசான்ற = மகிமைநிறைந்த, தலேவனுல் = மகாஞ்மாவினுல், எய்தலுறும் = பொருந்தப்பட்ட, தலேமையாகும் = மகாபதமாம், மகிழ்ச்சி மறுக்கத்தழுந்தார் = சுகதுக்க போகத்தில் மூழ்கார், தாதான் மியமுரூர், மரபினுலே அடுத்தனசெய்குவர் செய்யார் = தேகயாத்திரை நிமித்தம் அவசிய காரியவேதுவால் எதிர்ப்பட்ட சொற்பபோஜனுதியைச் செய்வரோ செய்யாரோ, அன்னியர் சொல்வழி = சீடர் முதலானவரது சொன்மூலத்தாற் சமாதியினின்றும் எழுந்திருந்தவராய், மரபினுலேயடுத்தன = முன்னோர்களுடைய ஆசாரக்கிரமத்தால் வந்த நித்திய நைமித்திகாதியை, தூயில்விட் டெழுந்தார்போல, செய்குவராகி செய்யாராகி, அசலசொரூபராய், வாழ்வர் என்பதற்குவயம். (49)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஞானபூமிகளின் அருமையும் பெருமையும் இவ்வகையென வியம்பி மெய்யுணர்வின் அறுதி யுரைத்தல்:— இஞ்ஞானமென.

இஞ்ஞானபத மேழுமிகவும் புந்தியெய்தினர்க் கல்லதுதோன்ரு விவற்றை யெய்தி, லஞ்ஞான மிலேச்சனே யெனினுந் தேகியதேகி யெனினும் முத்தனேய மில்லே, மெய்ஞ்ஞான மென்பதுதான் மனத்தின்கட்டு விடுதலிதுபெறிலிதுவே வீடு பேரும், பொய்ஞ்ஞானக் கானலினீர் முதலாமோகம் பொய்யெனப் போமடமை யும் பொய்யென்னிற் போகும்.

(ப - ரை.) இஞ்ஞான பதமேழும் = இவ்வேழுஞான பூமிகளும், மிகவும்புந்தி எய்தினர்க்கல்லது தோன்ரு = பெருந்தீமான்கட்கே கோசரமாம் அன்றிப் பிறர்க்கின்ரும், இவற்றையெய்தில் = இஞ்ஞான தசைகளே யடையில், அஞ்ஞானமிலேச்சனே யெனினுந் தேகியதேகி யெனினும் முத்தன் ஐயமில்லே = பசுமிலேச் சாதிகளாயினும் தேகத்தோடு கூடியிருப்பினும் கூடாதிருப்பினும் முக்தர் என்பதில் சமுசயமின்ரும், மெய்ஞ்ஞான மென்பதுதான் = உண்மை யுணர்வென் றுரைப்பதுதான், மனத்தின் கட்டவிடுதல் = அகங்காரக்கிரந்தி விச்சேதமாம், இதுபெறில் இதுவே வீடுபேரும் = இதனேயடையில் இதுவே மோக்ஷமாம், பொய்ஞ்ஞானக் கானலினீர் முதலாம் மோகம் = மித்யாஞானப் பேய்த்தேர் முதலான மயக்கம், பொய்யெனப்போம் = மித்தையென்று

பார்த்த அளவிலோடிப்போம், மடமையும் பொய்யென்னிற் போகும் = அறியாமையும் பொய்யென்று நாடிற்போய்விடும்.

(ஸ்ரீ - வீர.) இப்பூமி ஏழும்மதிமான் கட்கே கோசரமாம், பசுஸ்தாவராதி கட்கின்ரும், மிலேச்சாதிபோலும் தேகாத்மபுத்தியுடைய மநுடர் கட்குமின்ரும்; இந்தஞான தசைகளை யடைவுற்ற பசுமிலேச் சாதிகளும், தேகத்தோ டிருப்பினும், தேகத்தோ டில்லாவிடினும், முக்தர்களே யாவர்கள் என்பதிற் சம்சயமே கிடையாது. பசுக்கள், ஸ்ரீ மத்ஹநுமத் பிரபிருதிகள், மிலேச்சர்கள், தர்மவியாதாதிகள், ஆதிபதத்தால் அசுரர்கள், பிரஹ்லாத கர்க்கடி முதலவர்கள் கவரப்பெறுவர்கள். ஞானதசை யடைந்தவர்கட்குத் தேகத்தோடி கூடியிருக்குந் தன்மையேல் யாங்ஙனம் முக்தத்தன்மையெனச் சங்கித்துக்கூறல்:—மெய்ஞ்ஞான மென்பது, ஞானதசையே பக்குவமாக, அகங்கார இலக்கணக் கிரந்தியின் காரணத்தோடு விநாசமாம், காரணத்தோடி கூடிய அகங்கார அத்தியாசத்திற்கு நிவிருத்தியின்றி ஞானதசைக்கே பக்குவங் கூடாமையின். அதனால் என்னேயெனின் ஆண்டுக்கூறல்; இது பெறில்லண்பது. அந்தக்கிரந்தி விச்சேதமாகியவழி முக்தியாம் காரணசகிதகிரந்தி விச்சேதமாம். ஆயின், சத்தாதல், சதசதாத்மாவாதல், சதசத் வீலக்ஷணமாதல் என்பதாக எவ்வாற்றானுமே இயைபுறாதாம் எனக்கடாவ விடையளித்தல்; கானலினீர் என்பது. மரீசிகையுதித அத்தியாச நிவிருத்தி அதிஷ்டானமாத்திரம் ஆவதேபோல, இக்கிரந்தி விச்சேதமும் ஆமென்பது பொருள். மிருகதிருஷ்ணீர் மதி. இப்பிவெள்ளிமதி யென்பவற்றின் சாந்தியாகிய பாதமியாதுளதோ அதுவே மாத்திரை ஆன்மா துலை, எதற்கோ அதன்வடிவது. அதன்றுல்லியமாம். இரண்டாவதாதி பூமிகளிலேனும், நான்காவது பூமியிலேனும், ஞானம் உதயமாகவே அஞ்ஞான ஆவரண பங்கத்தான் மோகத்தினின்றும் நன்ரு உத்தீர்ணமானவரே யாயினும், பிரபலப்பிராரப்தப் பிரயுக்த வீக்ஷேபத்தினின்றும் பாவனமான ஆத்தியந்திக மநோநாச உபலக்ஷித மாய நிரதிசயாநந்த பூர்ணத்தன்மை வடிவவிதேக கைவல்யத்தை அடைந்திடா ரென் பதருத்தம்.

(ச.) இஞ்ஞானபதமேழும் = இந்த ஞானபூமியேழும், மிகவும் புந்தியெய்தினர்க் இல்லதுதோன்ரு = வித்துவான்களுக்கே விடயமாம், ஆயினும் பூர்வஜன்ம சம்ஸ்கார மகிமையால், அஞ்ஞானமிலேச்சரே யெனினும் = பசுமிலேச் சாதிகளாயினும், இவற்றை யெய்தின் = இஞ்ஞான பூமியையடைந்தாராயின், தேகியதேகி யெனினுமுத்தர் = சதேகமுக்தராயினும் விதேகமுக்தராயினும் ஆவர். ஐயமில்லை, எப்படிப் பாகவதத்தில் பசுவாகிய கஜேந்திரனுக்கும் மிலேச்சனுகிய அஜாமிளனுக்கும் மோக்ஷம். மெய் + விடுதல் = ஆத்மா நாத்மாக்களின் அந்நியோந்திய தாதான்மியாத்தியாச ரூபமான வவித்தைக்கு வித்தையால் நிவிர்த்தியாதலின், இதுபெறில் = அக்கிரந்தி நிவிர்த்தியாயின், இதுவே = இக்கிரந்தி நிவிர்த்தியே வீடுபேரும் = விடுபட்ட பந்தமே வீடெனப்படும். இக்கிரந்தி நிவிர்த்தி விபரீதஞான நிவர்த்திரூபமா மென்பது பொருள். கட்டு = கிரந்தி,

(ஸ்ரீ - வீர - அ - கை.) இப்பூமிகளிலிருப்பவர் இறைஞ்சுதற்குரிய ரெனவும், இதன் கண்ணீருப்பின் மேற் பெரும்பதங்களும் திருணத்திற் கொப்பாமெனவும் இயம்பல்:—

தனையறிவு நிட்டையுளோர்க் கெய்தலாகுந் தத்துவபூமிக ளறிந்ததலைமைமே
லோர்,நினையவந்தாழவு முரியார்பொறிக ளென்னுநெடும் பகைவென் ரேழழியா
நிலையினின்ரேர், தனைதருபல்லுயி ரிறைஞ்சுமேலாய் வாழுஞ்சரேந்திரரு நரேந்
திரரும் தருமம்பாய்த்தோன்று, மநியபெரும் பதம்பெற்ரே ரவரேயாகு மல்லா
தோர் பவக்கடலி லமிழ்ந்தாநிற்போர்.

(ப - ரை.) தனையறியு நிட்டையுளோர்க்கு = சுவாத்மலாப பராயணர்கட்கு, எய்தலாருந்தத்துவ பூமிகள் = பிரயாசைக்குத் தக்கபடி அடையத் தக்கனவாம் அறைந்த ஞானபூமிகள், அறிந்த தலைமைமேலோர் = இப்பூமிகளில் வாழும்மகாத்மாக்கள், நினைய வந்தாழவும் உரியார் = தியானிக்கவும் வணங்கவும் தக்கவர்கள், பொறிகளென்னும் நெடும்பகை வென்றோர் = சுரோத்திராதிகளாகிய பழம்பகையை வென்றவர்கள், அழியா நிலையில் நின்றோர் = என்றும் போன்றுதசாரமான நிலையில்வாழப் பெற்றவர்கள், தனை தருபல் உயிரிறைஞ்ச = தம்மைச் சூழ்ந்த அநேகம் பிரஜைகள் தோத்தரிப்ப, மேலாய் வாழும் = உயர்வாக வாழும், சுரேந்திரரும் நரேந்திரரும் தருமும்பாய்த் தோன்றும் = வானத்ததிபரும் வையத்ததிபதும் திருணசமான மாய்ப்பிரதீதியாவர்; அனையபெரும் பதம்பெற்றோர் அலரேயாகும் = அத்தகைய மகாபதவியை அடைந்தவர் அப்பாக்கிய வான்களேயாவர். அவலாதோர் = மாநுகத்திரிபலர், பவக்கடலில் = சமுசார சாகரத்தில், அமிழ்ந்தா நிற்பர் = மூழ்கிமாழ்குவர்.

(ஸ்ரீ - வீர.) தமது சொரூபத்திலேயே திதிபெற்று தற்பராயணராகி அதிவிரைவில் அப்பூமிகளில் நிலைபெற்று நின்றனர். சிலர் எழையுமே யடைவுற்றனர் சகரதியர். பிறர் பயிற்சிக்குத் தக்கபடி யெனவுணர்க, இந்திரிய சுகிதமனைத்தையமே சர்வசத்ருஜயத்திலும் மேன்மையானதாம், சுவாத்மசாம்ராஜ்யமே சர்வ உற்கிருஷ்டமான இராஜதையாம் அயலன்றும். கூறிய பொருளையே வெளியாய் விளம்பி யுபசங்கரித்தல்:—அறிந்தவென்பது. எம்மகான்கள் அப்பூமிகளில் சர்வ உற்கிருஷ்டமாக வீற்றிருப்பார்களோ, அவ்விந்திரிய சத்துருக்களை வெற்றிகொண்ட பாக்கியவான்களே போற்றி வாழ்த்தத்தக்கவர்கள் எவன் ராஜசூயயாகஞ் செய்து சம்பத்துற்றாளனை, யாவன் ஒருவனுகவே சர்வபூமண்டலாதிபதியோ, யாவன் அன்னிய அரசர்களையாள்பவனை அதாவது மண்டலேசுரர்களின் சாஸ்தாவோ, அவன் சம்ராட்டாவன் பிரதமவயதாகிய யவ்வனம்; அதுவும் சாதுவாயிருக்கவேண்டும், பதினறுக்குமேல் மத்தியவயது, அது, அங்குக்குன்றுத இந்திரிய சக்தியாம்; சரீராதி விகாரமில்லாமல் ரோகமில்லாமல், கந்தர்ப்ப சமானரூபத்தோடுற்ற யவ்வனமே சாதுவாம், சாங்கோபாங்க வேதந்தெரிந்து சர்வஞ்ஞனாயிருத்தல்; யாவரையும் சிகூப்பவனுகி எக்காரியத்தையும் விரைவில் மூடிக்கத்தக்க ஆற்றல்; விகாரமின்றிய வாக்காயமனம் பெற்றதிடமாயிருத்தல்; அதிசயமான பலசம்பன்னனுகி யிருத்தல்; என்னும் விசேஷணங்களோடு கூடிய அவனுக்கு, சப்ததீப அப்திவலயலோகமே கலையுற்ற பூமிமுழுதும், திருஷ்டாதிருஷ்ட சுககரமாய், உபயோக சாதனமாய் கர்மசாதனமாய கோஹிரண்யாதி தனத்தால் பரிபூர்ணத் தன்மையையும் உடையவன் பிருதிவீபதியாகியசக்கிரவர்த்தியாவன், அவனுக்குண்டாம் ஆநந்தம் மனுடர்களுக்குள் அதிமேன்மையான உவமையற்ற ஆநந்தமாம், இதற்குமேல் மநுடர்களுக்குள் ஆநந்தமின் றென்பதகருத்து. என்பதாகச் சுருதிகூறிய லக்ஷணமாநுஷா நந்தசம்பன்னன் சம்ராட்டாவன். விராட் = பிரஹ்மாசரீரம். சுராட் = தேவேந்திரன், இம்மூவர் பதமும் எவ்வேழாம் பூமியில் திரணமேயாமோ, பிராஜாபதிஹிரண்யகர்ப்பாநந்தபரம அவதியாயினும் சப்தம பூமியை நோக்குங்கால் துரும்பேயாம், அத்தகைய சாரமானபதத்தையும், அதனினும் பரமாய வீதேககைவல்ய சுகத்தையும் ஈண்டே அவர்கள் நன்கடைவர்கள். இச்சகலகாமாப்தி கூறுதல் வேதாந்த சூடாமணியிலுங் காணலாம்?—எல்லாவாழ் வினையுமுறுஞ் சார்வபௌமாதி, யிரணியகர்ப் பாந்தமாய் மேன்மேல் வேண்டுற்ற, நல்லா நந்தங்களெலாம் பற்றிலாவறி ஞனனுகுதலான் ஞாநங்கொண்டறி சிவத்தின் கூரும்த், தொல்லா நந்தங்களெலா நிற்கையினு லவற்குத் தோமிலகண்டாநந்தச் சித்தி தோன்றுதலே,

பொல்லாத வினைப்பகையைக் கடந்த பெருந்தவர்கள் புகன்றிடுவர் சகலகாமாப்திபென வன்றே

(ச) நிட்டை = நிச்சயம், அழியா நிலை = பரமபதம், சுரேந்திரரும் + தோன்றும் = சாம்பிராச்சியாதிகளும் திரணம்போல் துச்சமாய் விளங்குமோ, பெரும்பதம் = மகாசார முள்ளபதம். (51)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மனம் பரத்திலொடுங்க ஞானபூமிகள் சாதனமெனப் புகன்று, பரத்தின் உண்மைநிலையை வர்ணித்தல்:—உள—பாவனேயென.

(ச - அ.) ஞானபூமிகளே யோகபூமிகளெனவிவகரிக்கப் படுகின்றனவென்று அதில் முகாந்தரங் கூறல்.—உள—பாவ—என.

உளமொடுங்கு முபாயமே யோகமாகு மூணர்வுறு பூமிகளிந்த வுபாயமாகும் வளமிகுபிப் பூமிகளாலன்றி யிந்தமாதேவ பெரியபத மருவலாகா வளவறநீநான்றான் வேறென்று மின்றியபேதமாய நாமயமாய மூலமாகிக் கிளர்சுகமாய்ச் சாந்தமாயறிவாயொன்றாய்க்கேடின்றிப் பெயரின்றிக்கீழ்மேலின்றி.

பாவனேயும்பாவனேயு முதலுமீறும் பற்றுமுளதும் மிலதும்பலவுந்தேசு மேவறிவுமடமையு மென்றிவைகளின்றி விண்ணிலே யிருப்பதாய் விசாலமாகி யாவதுமாயன்றாகி மனத்தால் வாக்காலெட்டரி தாயிற்பத்தி லின்பமாகி யோவதியநிறைவினிறைவாகியாசையொழிவிடமாய்த்தன்னுற்றானுணருமொன்று.

(ப - கை.) உளமொடுங்கும் உபாயமே யோகமாகும் = மனதற் சாந்தியின் உபாயமே யோகமெனப்படும், உணர்வுறு பூமிகளிந்த வுபாயமாகும் = உரைத்த ஞானபூமிகளிவ் வுபாயமாகும், வளமிகுபிப் பூமிகளாலன்றி யிந்தமாதேவ பெரியபதமருவலாகா = பயிற்சி யின் முன்னும் பின்னும் இன்பமேபயக்கும் இஞ்ஞான பூமிகளாலல்லது இப்பெரிய பிரஹ்மானந்த பதமானது அடைய முடியாது, அனவற நீநான்தான் வேறு ஒன்று மின்றி = அளவின்றிதுவம் அகம் சுயம் அயல் ஒன்றுமே யில்லாமல், அபேதமாய் = பேதமின்றி, அநாமயமாய் = நோயின்றி, அமூலமாகி = காரணமின்றி, கிளர்சுகமாய்= பேரானந்தமயமாய், சாந்தமாய் = பரம உபரமமாய், அறிவாய் = ஞானமயமாய், ஒன்றாய் = ஏகமாய், கேடின்றி = ஆபத்தற்று, பெயரின்றி = அநாமமாய், கீழ்மேலின்றி= தாழ்வுயர் வில்லாமல்.

பாவனேயும் = பாவ எண்ணமும், அபாவனேயும் = அபாவ நிச்சயமும், முதலும் ஈறும் = ஆதியும் அந்தமும், பற்றும் = சங்கமும், உளதும் இலதும் = சத்தும் அசத் தும், பலவும் = நானவும், தேசும் = ஒளியும், மேவறிவும் = பொருந்தாநின்ற சம்வே தனமும், மடமையும் = அறியாமையும், என்றிவைகள் = கூறிய இவைபோன்றன வென்றும், இன்றி = இல்லாமல், விண்ணிலே யிருப்பதாய்=வியோமத்தமாய், விசால மாகி = விஸ்தாரமாகி, யாவதுமாய் = சர்வமுமாய், அன்றாகி = அல்லாததாய், மனத் தால் வாக்கால் எட்டரிதாய் = அவாங்மானச கோசரமாய், இன்பத்தில் இன்பமாகி = சுகத்தினும் சுகமாய், ஓவறிய நிறைவினிறைவாகி = கெடாத வியாபகத்தினும் வியாபக மாய், ஆசையொழிவிடமாய் = நிராசையின்றானமாய், தன்னுற்றான் உணருமொன்று = ஆத்மவேதனமா யிருப்பது ஒரு வஸ்துவாம்.

(ஸ்ரீ - வீர.) மனப்பிரச மநேர்ப்பாயம் யோகமென அறையப்பெறும், அறைந்த அந்த ஞானபூமிகள் ஏழும் உபாயமென வுணரத்தக்கனவாம், இந்த ஞானபூமிகளால் அடை

யத்தக்கது பிரஹ்மமெனப் பெயரிய பரமபதமாம். எத்தகையது அந்தப் பிரஹ்மப் பெயரியபரமவஸ்து வெனின்? கூறல்; நீ நான் என்பது. துவம்பாவம், அகம்பாவம், ஆத்மபாவம் பரபாவம், என்பனயாதொன்றும் யாண்டிலதோ, பேதஞானம் எதுவும் பாவாபாவ அபிவேசரஞ்சனை இராகம் அதன்காரியம், முதலன எவையும் யாண்டில வோ அதுபரம் பிரஹ்மமாம். சர்வம், அதனினும் வேறுய தொன்றின்மையின்; சாந்தம், அவித்யா இராகாதி மலரகிதம், நிராலம்பம், ஆதாராகிதம், சர்வாதாரம்; அதுவும மாயை யால் என்பதுபொருள்; விண்ணிலிருப்பது, தன் மகிமையி லிருப்பது; சாசுவதம், என்று மிருப்பது; சிவம், மங்கலம்; அநாமயம், நிருபத்ரவம், அநாபாசம், அப்பிரதிபிம்பம்; அநாத் மகம், அகாரணம்; சர்வம் ஜகத்வம், ஜகத்தின் பாரமார்த்திகரூபம், சாந்தம், அதிஷ்டா னசனமாத்திரம்; அந்தப் பிரஹ்மமாம். சத்துமல்ல, உற்பத்தியெனப் பெயரிய பாவ விகாரத்தை யுடையதாகாதாம், அசத்துமல்ல, நாசமெனப்பெயரிய அபாவவிகாரமுடை யது மாகாதாம்; அமத்தியாந்தம், ஆந்தராலிதபாவ விகாரமுடையது மாகாதாம், மத்தி அந்தமற்றதாம்; நஷ்டம் ஸ்திதம் என்பவற்றின் மத்யமாம்; உற்பத்திநாசங்கள் அந்தங் கள் அவதிகள் எதற்கோ அவ்வா றுறுவதாம்; சர்வமல்ல, பொய்மயமாய எல்லாவற்றி னின்றும் லிலக்ஷணமாம் ஆயின் வஸ்துவினுலே பரிச்சேதமா மாலோவெனின்? ஆகா தாம், சர்வமுமேயாதலின் மநோவாக்குகளாற் கவரமுடியாதது, அதன்கண்ணேது சூனியத்தினும் சூனியம், அத்தியந்த நிராகாரம், சூனியத்தினும் சூனியமாயின் புருடார்த் தபகிர்பூதம் அஃதாம் எனின்? ஆகாதாம், சுகத்தினும் சுகமாம், பரமாநந்தரூபத் தன் மையான்; ஆயினது வேத்தியம் ஆமாலோவெனின்? ஆகாதாம், அசம்வேதனமாம், எங் கும் எப்போதும் முற்றினும் சாந்தமாயிருப்பது, ஸ்வயம் பிரகாசமா யொளிர்வது, சர்வ வியாபகமா யிருப்பது, அந்தப் பிரஹ்மமாம்.

(ச.) உளமொடுங்கும் = மனதின் சாஞ்சல்லிய நிவிர்த்தியாகும், யோகம் = ஞானம், உணர்வுறு பூமிகள் = முற்கூறிய ஞானபூமிகளேழுமே, அந்தவுபாயமாகும். ஞானபூமி யேழுக்குமேல் ரோயசெர்ரூபங் கூறல்:—வளமிகும் ... மாட்சிமைமிகுந்த, அல்லதகண்ட செல்வமான அந்தமாரூத பெரியபதம் = பிரமவஸ்து, இப்பூமிகளாலன்றி மருவ லாகா = இப்பூமிகளாற் பேரூமென்பது பொருள். அஃதெத் தன்மையதெனச் சங் கைவர அதன் சொரூபத்தை விரித்துரைத்தல்:—நீநான்ரூன் வேறுளவு = நீயென்று நிச் சயவிடயமும் நானென்னும் பாவமும் ஆன்மாவென்னும் பாவமும், பரோயமென்னும் பாவமும், அற, ஒன்றுமின்றி = எவ்வளவுமின்றி, அவற்றில் நீ நானென்பன பிரத்தியகூ விவகாரவிடயங்கள் ஆன்மா பரமென்பன பரோக்ஷவிவகார விடயங்கள், அபேதமாய் = பேதப்பிரதிதி யற்றதாய், அநாமயமாய், நிர்த்தோடமாய், அமூலமாகி = காரணரகித மாய், கிளர்சுகமாய் = கல்யாணரூபமாய், பூரணாநந்தமாய், சாந்தமாய் = நிர்விகாரமாய், அறிவாய், அநாபாசம் = ஆரோபமற்றதாய், ஒன்றாய் = சர்வான்மகமாய், கேடின்றி = சாசுவதமாய், நித்தியசித்தமாய், பேரின்றி = நாமஜாதியாதி ரகிதமாய் கீழ்மேலின்றி.

பாவனையும் அபாவனையும் = பாவாபாவ நிச்சயமும், மூதலுமீறும் = ஆதிமத்தி யாந்தமும், பற்றும் = சம்பந்தமும், உளது மிலதும் = காரணங்காரியமும், பலவுந்தே சுமே வறிவுமடமையு மென்றிவைகள், அன்றி = சூனியமாய், நிராலம்பமென்னும் நிர் விடயமாய், விண்ணிலே யிருப்பதாய் = சிதாகாசரூபமான ஸ்வஸ்வரூபத்தி லிருக்குந் தன்மையதாய், விசாலமாகி = விரிவாய், யாவதுமாய் = சர்வப்பிரபஞ்ச அதிஷ்டான மாதலின் சர்வமுமாய், அன்றுகி = கற்பித நாமரூபப் பிரபஞ்ச லிலக்ஷணமாதலின் சர்

வுமமன்ருகி, மனத்தால் வாக்கால் எட்டரிதாய் = மனவசனங்களாற் கிரகிக்கத்தகாத தாய், இன்பத்தினின்பமாகி = நிரதிசயானந்த ரூபமாதலின் = விடயசுகத்தினுஞ் சுகமாய், ஓவறிய நிறைவினிறைவாகி = சூனியமான ஆகாயத்தினும் அத்தியந்தஞ் சூனியமாய், ஆசை யொழிவிடமாய் = பிரஹ்மாநந்தத்தினும் வேறபேட்சிக்கத் தகுந்ததின்மையின் சகலமநோரதங்களின் நிவிர்த்திக் கிருப்பிடமாய், தன்ஞற்ருணுணரும் = பிரமாஞ்தர சூனியமாதலின் தானே சர்வப்பிரமாணப் பிரசித்தமான, ஒன்று = ஏகமாகிய சிவமென்றுங் கல்யாணரூபமாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஹே மோர்மிதை நிதர்சனத்தானே வருணிக்கத்தக்க விசுவத்தின் பிரஹ்ம விவர்த்தத்தன்மை அதனைப் பரீக்ஷித்துப் பார்த்தலவணனுக்கு அநுபவசித்தமாயுதாகலின் உன்ஞலும் ஆராய்ந்து காணத்தக்கதா மென்னுங் கருத்தானே லவணன் விந்தச் சாரற்செல்லல் கூறப்படுதல்: — எழு என,

> எழுவகையாம் பூமியினுற் பெறும்பிரமமிதுமாயையேற்றங்கேண்மோ
> விழுமமுறுலவணனருன்மெய்ம்மறந்துமுன்கண்டவிந்தச்சாரற்
> பழுவமனக்கண்ணுடபயில்கின்றவுடலொடும்போய்ப்பார்க்கிற்கண்ணிற்
> றழுவுறுங்கொலெனவமைச்சருடனெண்ணித்தானேயுடன்சமைந்துபோனன்.

(ப - ரை.) எழுவகையாம் பூமியினுற்பெறும் பிரமம் இது = சப்தவிதமான ஞான பூமிகளினுலே அடையத்தக்க ஞானனைத்தப் பிரஹ்மம் கவிலப்பெற்றது இதுவரை இனி, மாயையேற்றங் கேண்மோ = மீளவும் அவித்தையினது மாகாத்மியம்கூறுதும் கேட்டி இரகுகுலதிலகனே ! விழுமமுறு லவணன்ருன் மெய்ம்மறந்து = பூர்ணமேதாவியாகிய இலவணமகாராஜனுவன் தேகத்தை மறந்து பிராந்தியினுல், முன்கண்ட = பூர்வம்பார்த்த, விந்தச் சாரற்பழுவம் = விந்தியாசலத் தாழ்வரையின் காடானது, மனக்கண்ணுடபயில் கின்றவுடலொடும் போய் = சித்த ஆதரிசத்தின் கண்ணே நிகழாகின்றது தேகத்தோடும் போய், பார்க்கில் = பார்ப்போமாஞல், கண்ணில் தழுவுறுங்கொல் ! = கண்ணுரக் காணலாமோ, என அமைச்சருடன் எண்ணி = என்று மந்திரிமார்களோடு ஆலோசித்து, தானேயுடன் சமைந்துபோனன் = நால்வகைச் சேனைகளுடன் சம்பிரமத்தோடு சென்ருன்.

(ஸ்ரீ - வீர.) பொற்பூடணுதிபோலும் பொய்யெனப் புகன்ற அவித்தையின் ஆராய்ச்சிமாத்திரையானே அழிந்துபோந் தன்மையையும், பேராச்சரிய பூதத்தன்மையையும் எத்தகைய தென்பதைக் கூறக்கேட்குதி. இதுகாறும் சப்தபூமி சம்பந்த ஞானத்தையும் அதனுல் அவித்தை யகலுதலையும் கூறிவந்தேம் இனி அவ்வவித்தையின் பெருமையைக் கூறக்கேட்குதி யென்பதாம். முன்னர் வருணித்த லவண அரசன் அக்காண்மயலை யவ்வாறுகண்டு, இரண்டாவது தினத்தில், இந்திரஜாலக்காரனுலே காண்பிக்கப்பெற்ற பேரடவியைக் காண்பான் செல்லமுயன்றனன். எங்கு என்ஞற்றுக்கம் அநுபவிக்கப் பெற்றதோ, மனக்கண்ணுடியி லிருக்கும் அத்தகையமகாரண்யத்தை யெண்ணுகின்றேன் ஒருகால் விந்தியாசலஞ் சென்று நோக்கின் கண்டாலு மதைக்காணலாமோ ! என்பதாக மந்திரிமார்களோடும் நிச்சயித்துச் சென்றனன்.

(ச.) ஸ்ரீ வசிட்டர், பூமி = ஞானபூமி, மாயை = அவித்தையினது, ஏற்றம் = மாகாத்மியத்தை, கேண்மோ = இராகவா நீ மீட்டுங் கேட்பாய்; அவித்தையின் மாகாத்மியத்தைத் தெளிவித்தற்கு மீட்டு மிலவணன் கதையின் சேடத்தை வியந்துவிரித்தல்:- எண்ணி = இரண்டாந்திவசத்திற் சிந்தித்து.

(54)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தென்றிசை நோக்கிச்சென்ற மன்னவன் அன்று கரண்ட பழையவழிவிகாணல்:—தென் என:

தென்றிசைசென்றனன்மீட்டுந்திக்குவிசயஞ்செய்யச்செல்வான்போல
முன்றிகழும்விந்தகிரிமுற்பட்டரீன் வடக்கொழிந்தமூன்றுதிக்கிற்
றுன்றிவளர்வனமெல்லாஞ்சுற்றினனினொந்தான்சூழலொன்றி
லன்றுகருதியகருத்துவடிவெடுத்ததெனப்பழையவழிவிகண்டான். (55)

(ப - ரை.) தென்றிசை சென்றனன் = தெற்கே நோக்கிச் சென்றனன், மீட்டுந் திக்குவிசயம் செய்யச் செல்வான்போல = மீளவும் திக்விஜயஞ் செய்வதற்காகப்போவ தேபோல, முன்றிகழும் விந்தகிரி முற்பட்டான் = முன்னர்த்தோன்றிய விந்தியமலை ரத்தையடைந்தனன், வடக்கொழிந்த மூன்றுதிக்கில் = கிழக்கு தெற்கு மேற்குத்திசை களில், துன்றிவளர் வனம் எல்லாம் சுற்றினன் = நெருங்கிவளர்ந்த மகாவன தடஸ்தல மெல்லாம் குதூகலத்துடன் சுற்றிப்பார்த்தான், நனிநொந்தான் = மிகவும் வருந்தினன், சூழலொன்றில் = ஆங்கொரு பிரதேசத்தில்; அன்று கருதியகருத்து = அப்போது சிந் தித்த சிந்தையானது, வடிவெடுத்ததென = ஆகிருதியாக வுற்றதேபோல, பழைய அடவிண்டான் = புராதன மகாரண்யத்தைப் பார்த்தனன்.

(ஸ்ரீ - வீர.) தக்ஷிணதிசைஞ் சென்றனன், மீண்டுதிக்கு விஜயத்தின் பொருட்டே போல விந்தியமலைதரத்தை யடைந்தனன். பூர்வதக்ஷிணபாகச் சாத்தியமகா வனதடஸ்த லங்கள் யாவற்றிலும் மிகவும் உற்சாகத்துடன் வியோமவீதியில் விண்மணி யுலாவியதே போலும் சுற்றிச் சுற்றிப்பார்த்தான். பின்னொருபிரதேசத்தில் முன்னிகழ்ந்த அச்சிந்தை முன்னின்றதேபோல உக்கிரமாய அம்மகாரண்ணியத்தை யெதிரே கண்டனன்.

(ச.) வியோமவீதி யெல்லாஞ் சூரியன்போலச் சுற்றினனென், சூழலொன்றில் = பின் ஓரிடத்தில், கருத்து = சிந்தை. (55)

(ஸ்ரீ-வீர - அ-கை.) லவண அரசன் முன்கண்ட காட்சிகளைக் காணுதலும் மன மயங்குதலும்:—காலவென.

காலனகர்நிகராமக்கடியவனத்துலாவுதலுங்கடையர்செய்கை
போலவன்முன்சஞ்சரித்ததலங்களுமச்சேரிகளும்பொருந்தக்கண்டான்
சாலவியந்தானந்தக்கடையர்கடைச்சியர்குடில்கட்பாவண்ணா
ஞாலநாபதிநோக்கிவியப்பினன்மனமயக்கநண்ணிநின்றனன்.

(ப - ரை.) காலன் நகர்நிகராம் = பரலோக பூமியைப் போன்றுள்ள, அக்கடிய வனத்துலாவுதலும் = அம்மகாரண்யத்திற் சுற்றிச்சுற்றிப் பார்த்தலும், கடையர்செய் கைபோ லவன்முன் சஞ்சரித்த = நீசர் செயல்கள்போல் அவ்வரசன் நீசனுயிருந்த போது திரிந்துசெய்த, தலங்களும் = இடங்களும், அச்சேரிகளும் = அப்பழையபறை யர் வீட்டுக் கூட்டங்களும், பொருந்தக் கண்டான் = முன்னிருந்தபடியே பார்த்தான், சாலவியந்தான் = அத்தியந்தம் ஆச்சரிய மடைந்தான், அந்தக்கடையர் கடைச்சியர் குடில்கள் = அந்தப்புலையர் புலைச்சியர் குடிசைகள், தப்பாவண்ணம் = ஒன்றும் விடா மல், ஞாலநரபதி = பூபதியானவன், நோக்கி = பார்த்து, வியப்பினுல் = ஆச்சரியத் தினுல், மனமயக்க நண்ணி நின்றனன் = மநோமயக்கத்தை யடைந்து நின்றனன்.

எனது கன்னிகையை மணஞ்செய்து கொண்டு கூடிக்குலாவி வாழ்ந்தாய், என்மகளும் நின்னோடு கூடிவாழ்தலே கன்னிலேயா யடைந்தனளில்லே. (59)

(ஸ்ரீ - வீர - அ -கை.) சமுசாரத்தின் றுர்க்கதியை நினைந்துபுலம்பல்:—வன்னென.

வன்பிறவிப்பேராற்றில்வல்வினையாருந்திரைகள்வந்துகூடித்
தன்பிறவியரசியற்கைதவிர்ந்தெமதுதையலுக்குத்தலைவனுகிப்
புன்பிறவிப்புலையரைப்போற்பூதலத்துப்புரந்தரனும்புன்மைபூண்டான்
மின்பிறவிநிற்கரிதுமிகக்கொடிதுமிகக்கொடிதுவிதியேயென்றுள்.

(ப - ரை.) வன்பிறவிப் பேராற்றில் = வலிமைபொருந்திய சமுசாரமென்னும் பெரியநதியில், வல்வினையாருந் திரைகள் வந்துகூடி = கொடிய வினையாருந் தரங்கங் கள்வந்துசேர்ந்து, விலாசஞ்செய்தலால் என்னகீழான காரியத்தைத்தான் இயற்றவில்லை தன் பிறவியரசியற்கை = தனக்கு க்ஷத்திரியவங்கிச பரம்பரையாய்க் கிடைத்த சாம் ராஜிய சம்பத்தையும், தவிர்த்து = தவிரவிட்டு, எமதுதையலுக்குத் தலைவனுகி = எங்க ளுடைய குலக்குமரிக்குக் கணவனுகி, புன்பிறவிப் புலையரைப்போல் = நீசசெண்மச் சண்டாளரைப்போல, பூதலத்துப் புரந்தரனும் = பூமண்டல நரேந்திரனுகிய சக்ரவர்த் தியும், புன்மைபூண்டான் = கீழானதன்மையை யடைந்தனன், என்றுள், மின்பிறவி நிற் கரிது = மின்னலைப் போன்ற செண்மம் நிலையற்றது, மிகக்கொடிது மிகக்கொடிது = மிகவும் கொடியது மிகவும் கொடியது, விதியேயென்றுள் = ஈதெல்லாம் தலைவிதியே யல்லவோ என்று புலம்பினுள். (60)

(ஸ்ரீ - வீர.) சமுசாரமாகிய நதியாற் றன்றரங்கபங்க ரீரிஸ உதித உத்திரிப்ப உப்காரசங்களே யுண் டாக்கா நின்றனவாய கருமபரிபாகங்களாம், என்னதான் கெட்ட நிந்தியபலங்காரியம் இயற்றப் பெறவில்லை, அஃதென்னே யெனின் ? எக்காரணத்தால் நிருபேசனும் புக்கச கன்னிகையினிடத்திற் சேர்க்கப் பெற்றனனே, இதனினும் நிந்திய பலமென்னென்ப தாம். ஒரேஜன்மத்தில் இராஜத்தன்மை புக்கசத்தன்மை கட்குக்காரணமா யிருத்தலி னுனே விவேகிகள் செய்யும் உபகாசத்தோடு கூடினவான தனது தரங்ககண்டரூபகரும விலாசங்களானே சமுசாரநதியால் எக்கெட்ட காரியந்தான் செய்யப் பெறவில்லை, எச் சாதனங்களாற்றான் எக்கெடுதல் தான் உண்டாக வில்லையென்பதாம். (60)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இவ்வண்ணம் புலம்பியதைக்கேட்ட அரசன் கிழவியை விளித லும் அவள் உரைத்தலும் வருணித்தல்:—என்றவென.

என்றழுதவள் புலம்பியிசைத்த வெலாநனிகேட்ட லவணனுங்கே
நின்றுளதன் சேடியரா லவடியரந் தணையாற்றி நேயத்தோடும்
கன்றியநின் னிடரேதுநீயார் நின்மகளார் நின்காதலோரா
ரொன்றுமொழி வறமொழியென் றிவன்வினவப் புலிக்கிழத்தி யுரைப்பதானுள்.()

(ப - ரை.) என்றழுத அவள் = என்று சொல்லியழுது கொண்டிருந்த அப்புலைச்சி, புலம்பியிசைத்த எலாம் = புலம்பிப் புலம்பிக்கூறிய யாவற்றையும், னனிகேட்ட லவணன் = ஒருமையுடன் செவிகொண்ட லவணராஜன், ஆங்கே நின்றுளதன் சேடியரால் = அவ்வி டத்திற்றானே நின்றுகொண்டிருந்த தனது பணிப்பெண்களால், அவள் தியரந்தனை யாற்றி = அவ்விருத்தையின் றுக்கத்தைத் தீர்த்து, நேயத்தோடும் = அன்புடன், கன் றிய நின்னிடரேது = வாட்டத்தையீயும் துயரமியாது, நீயார் நின்மகளார் நின்காதலோ ரார் = நீயாவள் நினதுதாகள் யாவள் நினதுமைந்தர்கள் யாவர்கள், ஒன்றும் ஒழிவற =

ஒரு விடயத்தையும் விடாமல், மொழியென்று = கூறுவாயாக என்று, இவன் வினவ = லவ்வணராஜன் கேட்ப, புலேக்கிழத்தி = புலேயர் குலவிருத்தை, உரைப்பதானுள் = கூறத் தொடங்கினுள்.

(ஸ்ரீ - வீர.) இவ்வண்ணம் புலம்பிக்கொண் டிருந்தவளும், புற்கசீபுத தனது போஷ்யர்களுக்குள் விருத்தையானவளும், ஆகிய அம்மாபியாகிய ஸ்திரீயை, அரசன் நேரேகூறல் கூடாமையின் தாசிகளானே துயராற்றி, வினவுவதாவது, ஈண்டுதானே நடந்த விருத்தாந்தம் என்னே ! நீயோர், நினது குமாரத்தியார், நினதமைந்தர் யாவர் யாவற்றையுங் கூறுதி.

(ச.) சேடியர் = தனதேவற் பெண்கள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) புலேச்சியாங்குற்ற விருத்தாந்தத்தை யரசனுக் கறைதலும் கேட்ட அரசன் அதிசயித்தலும் வருணித்தல்;—ஈது—நெடும் என.

ஈதுபுலேச்சேரியிதிலொருபுலேயனென்கணவனிவனுக்கிங்கோர்
மாதுபிறந்தனளவளோயிந்திரன்போலொருமன்னன்வந்துசேர்ந்தான்
போதுநெடும்புணர்வித்தவியாலேயவண்மூன்றுபுதல்வர்ப்பெற்ரு
ளேதுறுநல்வினேபோலத்தீவினேவந்தென்கிளேஞரிறந்துபோனுர்.
நெடுங்காலம்வாழ்ந்ததற்பின்னீலமுகிற்றுளிவறண்டுநிலனீர்சுண்டிக்
கடுங்காலனிகர்கலியாற்றிசைதிசைபோய்க்கடையரெலாங்கழிந்துபோனுர்
நடுங்காதின்றனதுயருந்தனிமையுமேதுணையானேநாங்களென்ன
வடுங்காலவேல்வேந்தனமைச்சரைப்பார்த்ததிசயித்தானவசனுகி. (62-63)

(ப - ரை.) அப்புலேச்சி அழுதுகொண்டே சொல்வதாவது, ஈதுபுலேச்சேரி = இது புக்கசபீஷப் பெயரிய கிராமமாம், இதில் ஒருபுலேயன் = இதன் கண்ணே ஒருபுக்கசன், என்கணவன் = என்நாயகன் இருந்தான், இவனுக்கு இங்கோர் மாதுபிறந்தனள் = இப்புக்கசபதிக்கு இவ்விடத்தில் ஒப்பற்ற ஒருகன்னிகையுற்பவித்தனள், அவளே = அக்குமரியை, இந்திரன்போல் ஒருமன்னன் வந்து சேர்ந்தான் = தேவேந்திரனுக்குச்சமானமான ஒருசேந்திரன் வலிதில் வந்தணுகினன், போதுநெடும் புணர்வித்த வியாலே = நீள்காலம் சேர்த்திவைத்த தெய்வயோகத்தாலே, அவள் = அக்குமரி, மூன்று புதல்வரைப் பெற்ரூள் = மூன்று புதல்வரைப் பெற்ரூள், ஏதுறு நல்வினேபோல = நல்வினேயின் காரணத்தா லுண்டாகும் புண்ணியபலன்போல, தீவினேவந்து = தீயகருமத்தின் பலன் முன்னுற, என்கிளேஞர் = எனது பந்துக்கள், இறந்துபோனர் = மாண்டு போனர்கள். ஏனென்னின் ?

நெடுங்காலம் வாழ்ந்ததற்பின் = நீண்டகாலம் ஒன்றுகூடி வாழ்ந்ததன் பின்னர், நீலமுகிற்றுளிவறண்டு = கார்முகில் வர்ஷியாமையின், நிலனீர் சுண்டி = பூமியிலுள்ள குளங்குட்டைகள் காய்ந்து, கடுங்காலன் நிகர்கலியால் = கடுமையான யமனேயொப்பான வறுமையினுலே, திசைதிசைபோய் = நாலுதிக்குகளிலும் ஓடிப்போய், கடையரெலாம் = புலேயர்யாவரும், கழிந்துபோனர் = அழிந்துபோனர்கள், நடுங்காதின்றன துயரும் தனிமையுமே துணையானேம் நாங்கள் என்ன = நடுக்கத்தைத்தரும் மகாதுக்கங்களும் காப்பாரின்மையுமே துணையாகக்கொண்டு யாங்கள் ஈண்டெயிர் வாழ்கின்றேம் என்றுகூற, அடுங்கால வேல்வேந்தன் = யாவரையும் கொல்லும் காலனிகர்த்த வேலாயுதத்தையுடைய லவணராஜன், அமைச்சரைப் பார்த்து அதிசயித்தான் அவசனுகி = மந்திரிமாரைப் பார்த்துப் பரவசனுயதிக ஆச்சரியத்தை யடைந்தான்.

(ஸ்ரீ - வீர.) பாஷ்ப விலோசனத்தோடிற்ற (கண்ணீர் நீர்) அவள் கூறுவதாவது: புக்கசகோஷ மெனப் பெயரிய கிராமமாயிது, ஈண்டுப் புஷ்கலகன் அல்லது புக்கசபன் என்னும்பதி எனக்கிருந்தனன், அவனுக்கு இந்து சமமான ஒரு சுதையுண்டாயினள். அவள் பாக்கிய வயத்தினாலே, எங்கள் சேரிக்குத்துரதிர்ஷ்ட வயத்தினாலே வந்து சேர்ந்த இந்திரதுல்லிய மன்னவனை மணந்து கொண்டனள் இவளுக்கு இந்தல்ல அதிர்ஷ்டமானது, வனத்தில் துச்சமான பெண்கழுதைக் கேனும் பெட்டையொட்டைக்கேனும் முகமுழுதிறந்த மதுகும்பம் கிடைத்தது போன்றதாம். அவள் அவ்வொப்பற்ற பூலோக இந்திரனோடு வெகுகாலம் பலவகைச் சுகங்களை யநுபவித்தனள் ஆண்மக்களையும் பெண்மக்களையும் பயந்தனள், சுரைக்கொடியானது பெருவிருக்ஷத்தைப்பற்றி விருத்தியானதேபோல இக்கானன கோடரத்தில் விருத்தியடைந்தனள். சிலகாலங் கழித்து இந்தக்கிராமத்தில் ஹேஜனேஸ்வர (ஹேஜனேஸ்வர்) ! மழைபெய்யாமற் பஞ்சமுண்டாகிப் பெருந்துயர முண்டாயிற்று, அத்தப்பயங்கரமான அவஸ்தையில் அநேக மநுடரிறந்தனர். மகத்தாகிய அத்துக்கத்தினாலே இந்தக்கிராமத்திலிருந்தஜனங்களி யாவரும் வெளிப்போந்து வெகுதூரம் ஓடிப்போனார்கள் யாவருமே மரணமடைந்திருப்பார்கள். ஹே பிரபுவே ! அந்தப்பஞ்சம் மரணத்தினாலும் துர்ப்பிக்ஷத்தினாலும், இவ்விடத்தில் மிகுந்ததுக்கத்தை யநுபவிப்பவர்களாய், குடிக்கக்கூடக் கஞ்சியில்லாதவர்களாய் யாங்கள் கண்ணும் கண்ணீருமாய்க் கரைகின்றோம்; பாஷ்பம் நிறைந்த நேத்திரங்களோடு கூடியயாங்கள் ஆசமன மியற்றியதே போல ஒழுகாநின்ற கண்ணீர்த் தாரையோடும் துக்கஜீவிதர்களாக இருந்து சோகிக்கின்றோம். என்றுகூறியவற்றை யெல்லாம் அக்கிழவியின் வாயிலாகக் கேட்டு லவணராஜாவானவன் அதிக விஸ்மயத்தை யடைந்தனன், மந்திரிமார் தம்வதனங்களை நோக்கிச் சித்திரத்தில் அர்ப்பித்த ஓவியம்போலாயினன்.

(ச.) ஈது = இக்கிராமம், தெய்வகதியால் இந்திரன் கணவனுகவந்து ஒரு பெண்ணும், இரண்டாணுமாக மூன்றுபுதல்வர்.

கலியால் = வறுமையால், வருமகாதுக்கத்தினால் இக்கிராமத்திலுள்ள கடையரெலாந்திசைதிசைபோய், கவிழ்ந்துபோனார் = மரணமடைந்தார் வேந்தன், இத்தன்மையான வசனங்களைக்கேட்டுச் சித்திரத்தெழுதிய பதுமைபோல், அவசனுகி அமைச்சரைப் பார்த்தநிசியித்தான். (63)

(ஸ்ரீ - வீர - அ - கை,) விருத்தையின் வெந்துயரந்தீர்த்தசன் நகரேகி ஞானியாணைதைக்கூறல்:- வேண்டி என.

வேண்டுவனகொடுத்திவளைவெந்துயர்தீர்த்தந்நகரின்மீண்டுமேவி
நீண்டவுலகத்தியல்புமாயையின்வல்லபமுமவனெடிதுகண்டான்
காண்டகையபரம்பொருளுநாமுரைப்பவறிந்தமைந்தான்கருணைவள்ளா
லீண்டியவிம்மாமாயைகடப்பரியவன்மோகமியற்றுங்கண்டாய்.

(ப - ரை.) வேண்டுவன கொடுத்து = விரும்பியயாவற்றையும் மகிழ்வுடன் கொடுத்து, இவளை = இவ்விருத்தையை, வெந்துயர் தீர்த்து = கொடிய துயரங்களையெல்லாம் இல்லாமற்செய்து, அந்நகரின் மீண்டுமேவி = அந்த விந்தியச்சாரலினின்றும் தனது நகரைமீளவும் அடைவுற்று, நீண்டவுலகத்தியல்பும் மாயையின் வல்லபமும் = நீடிய விசாலஜகத்தியல்பையும், மகாமாயையின் மகிமையையும், அவன்நெடிது கண்டான் = அவ்வரசன் நன்முகவுணர்ந்தனன், காண்டகைய பரம்பொருளும் = காணத்தக்கதான பரமசிவத்தையும், நாமுரைப்ப அறிந்து. அமைந்தான் = யாமுபதேசிப்பத்தனது வடிவ

மாகவுணர்ந்து பரமசாந்தன் ஆயினன், கருணைவள்ளால் = கருணைரூபமான இராகவ! ஈண்டிய இம்மாமாயை = இவ்வாறதாக இந்த மாட்சிமைபொருந்திய அவித்தையானது, கடப்பரிய் = தாண்டமுடியாத, வன்மோகம் இயற்றுங் கண்டாய் = மகத்தான பிரம தாயினியாம். (64)

(ஸ்ரீ - வீர.) அவ்வநுத்தமமான ஆச்சரியத்தை மீண்டுமீண்டும் ஆராய்ந்து பார்த்தான், அநேகவகை(வகை)விஞக்களை மீண்டுமீண்டும் வினவி அதிக ஆச்சரியமுடையவனாகி, அந்தப் பக்கணஜனங்கட்கு, அநேகவித இனியவார்த்தைகளாலும் தானசத்காரங்களாலும், கருணைநிறைந்த உலகில் மேற்கீழ் பாவங்கண்ட அந்த லவணராஜன், உற்ற சர்வதுக்கங்களையும் நீக்கி, ஆண்டு நெடும்போதிருந்து நியமியாகிய தெய்வத்தின் கதியையோர்ந்து பார்த்து, மீண்டும் பிரஜைகள் போற்றத்தன் நகரத்தையடைந்து அரண்மனைபுக்கான், விடிந்தபின் ஆண்டுள்ள சபாஸ்தானத்தில் அவித்தையின் சுபாவத்தைக்கண்ட அவன் எம்மைவேண்டிக் கொண்டி, ஹே முனீந்திரரே! சொப்பனத்தைப் பிரத்யக்ஷமாகக் கண்ட இவ்வித்தவரலாறு எங்ஙனங் கூடும்? என்று அதிவிஸ்மயனாய் வினவ அவனுக்கு வஸ்துவின் முறைப்படியேயாம் உண்மையையுபதேசித்ததும் அங்ஙனியதார்த்தமாய தன்னை யுள்ளபடியே மோகமின்றிக் கண்டனன், அந்தரிக்ஷத்தினின்றும் காற்றினுல் அம்புதம் அகற்றப் பெறுவதேபோல இருதயத்தினின்றும் சர்வசம்சயங்களையும் தூரத்தகற்றினன், ஒருமையுடன் அறிவேயாயினன். ஹே இராகவ! இத்தப்பிரகாரம் அவித்தையானது மகத்தான மயக்கத்தைத் தருவதென்று நீயறிந்து கொள்ளுதி.

(ச.) வித்தகிரியினின்று மீண்டு, மாயை = அவித்தை, தெடிதகண்டான் = விலாசமாயறிந்தான், கருணையால் நானுரைப்ப யறிந்தமைந்தான், ஸ்ரீவசிட்டர்: வள்ளால் = இராகவ! மாமாயை = மகா அவித்தை, வன்மோகம் = அதிப்பிரமையை. (64)

(ஸ்ரீ - வீர - அ-கை.) மாயையின் வைபவத்தைக் கேட்ட ஸ்ரீ இராகவர் கனவிற் கண்டது நனவிற்றோற்றும் வகையென்னே யெனவினவலும் ஸ்ரீவசிட்டபகவான் விடை தருதலும்:—இலதென.

இலதுளதாமுளதிலதாமிம்மாயைவல்லபத்தாலென்னலோடுங்
கலனமுறுசொப்பனத்திற்கண்டதெஞ்ஞான்சாக்கிரத்திற்கண்டதென்னே
குலமுனிவவெனக்கேட்டவள்ளலுக்குமுனியுரைப்பான்கொடியமாயை
யலகறுமோகம்புரியுங்காதிகதையாலிதுமேலறியலாகும்.

(ப - ரை.) இலதுளதாம் = இல்லாதது உள்ளதாகும், , உளதிலதாம் = இருப்பது இல்லாததாகும், இம்மாயை வல்லபத்தால் = இத்தகைய அவித்தையினது சாமர்த்தியத்தால், என்னலோடும் = என்று ஸ்ரீவசிஷ்டபகவான் அருளியபோது, கலனமுறு சொப்பனத்திற் கண்டதெலாம் = அஸ்திரமான கனவவத்தையிற் கண்டன யாவற்றையும், மீண்டும், சாக்கிரத்தில் = நனவவத்தையில் கண்டதென்னே = பார்த்ததன் காரணம் யாதோ, குலமுனிவ = எங்கள் குலத்திற்கு ஆசார்ய சுவாமிகளாகிய முனிநாதரே! எனக்கேட்ட = என்று வினவிய, வள்ளலுக்கு = சர்வபலதாதாவாகிய ஸ்ரீ இராகவருக்கு, முனியுரைப்பான் = ஸ்ரீ வசிட்டபகவான் அருளுவதாவது, கொடியமாயை, மிகத்துன்புறுத்தும் மகாமாயையானது, அலகறும் = அளவில்லாத, மோகம்புரியும் = மயக்கத்தைச் செய்யும், இது = இந்த விடயமானது, காதிகதையால் = காதிவிருத்தாந்தத்தால், மேலறியலாகும் = இனித்தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். (65)

(ஸ்ரீ - வீர.) இந்தமகா அவித்தையானது அதிவிரைவில் அசத்தைச் சத்தாக்கிவிடும் சத்தையோ அசத்தாக்கிவிடும் அத்தியந்தம் நிமிடத்தில். ஸ்ரீ இராகவர் வினவல்:—ஹே பிரஹ்மத்தையறிந்த முனீசுரரே! சொப்பனம் ஜாக்கிரத்கால அநுபவயோக்யதையை யடைந்த இஃதெங்ஙன்கூடும் அருளுவீராக, பிரமோதாரத்திற் போலும் இப்பொருள் சித்தத்தில் என்னுடைய ஐயத்தை நீக்கவில்லை, ஹேபகவன்! இவ்வையம் கரையாமல் உள்ளத்தி விருத்தொண் டிருக்கின்றது என்ன; ஸ்ரீ வசிஷ்டர் விடையருளல்:—ஹே இராகவ! இவையாவுமே அவித்தையின் கண்ணே சம்பவிக்கவே செய்யும் என்றுணர்தி, எவ்வாறு சம்பவிக்கு மென்னிற் காட்டல். கடத்திற் படத்தைக் கண்டாம் கனமயல் என்பதாதியில், கனவின் கட்டன் மரணத்தையுங் காண்பதுண்டு. ககனத்திற் செல்லலும் உண்டெனவில், இன்பநித்திரையேல் இரவுஞ்சிறிதாம், கட்குடித்தானுக்குக்கன்மேலியும் கதிசெய்யும், மேலும்பலவிதமும் மேவும், முகூர்த்த மிரண்டால், பன்னிரண்டு வருடத்திய லவணராஜன் விப்பிரமம் சொப்பனமெனப்படும். பொருந்துறுத் தன்மையவித்தையினுக்குப் பூஷணமாகுந் தூஷணமன்றும், பொருந்துறுமாயின் எங்ஙனமேனும், பொருந்துறுதன்றே வவித்தையாந் தகைமை என்னும் நியாயத்தான் பொருந்தாததையும் பொருத்திவைக்கும் ஆற்றலமைந்த அவித்தையில் இஃதசம்பாவிதமாகாதாம் எனப் பரிகரிப்பார், அலகறும் மோகம்புரியு மென்றார். சிங்காசனத்திலேயே வீற்றிருந்தலவண ராஜனுக்கு இரண்டுமுகூர்த்தத்தால் பன்னிரண்டு வருடசம்பந்தமான மயக்கம், காலாந்தரத்தில் அவனுக்குண்டாய அம்மயற்குச் சபலப்பிரவிருத்தி ஜனகத்தன்மை, லவணப் பிரதிபக்கும் சர்வபுக்க சப்பிரதிபைகட்கும் பரஸ்பரம் என்பனமுதலியவை அலகறு என்பதன் பொருளாம். இஃதனக்குக் காதிப்பிராமணவிருத்தாந்தத்தில் மேலேவெட்ட வெளியாகத் தெரிந்துவிடும்.

(ச.) ஓகோ, ஸ்ரீ இராமர், கலகமுறு சொப்பனத்திற் கண்டது = சொப்பனஞ் சத்தியத்துவமானது, என்னே, எப்படி, இச்சந்தேகம் என்மனதை விட்டேகும்படி தேவரீர் அநுக்கிரகிக்க வேண்டுமென்று, கேட்ட + புரியும், காதி + லாகும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவித்தையின்பால் இவையாவுமே சம்பவித்தல் கூடியதேயாயினும் எதேனுமுகம் இயம்பத் தகுதியதேயாம் எனச்சங்கித்துக் கூறல்:—அவ்வாறுகவே சற்பிதத்தன்மை சமமேயாயினும் சம்வாத விசம்வாதங்களானே உலகத்தில் சத்தியத்வ மித்தியாத்வ விவகாரம் ஆம், பரமார்த்த ஆராய்வாலின்றும் என்னுங்கருத்தாற் கூறல்:—காகன மன்னவென.

காகதாலீயம்போல்வாதனையின்வசத்திலுளங்கலந்துநிற்கு
மேகமுறத்தம்மிற்றுமென்றுணர்வினிலேநின்றேரியம்பாநிற்ப
ராகலினுன்முன்னுளிற்சித்தனுற்புலச்சேரியாகக்கண்ட
மோகமதேதபின்னுளுங்கண்டதுவேறன்றுகாமொழிந்தவேந்தன்.

மன்னவன்கண்டுளகனவின்மதிமயக்கந்தன்னையேமலியின்சார
லன்னவருநன்னிலைவாலறிவுற்றுர்லவணமுமறிவின்றேற்றந்
தன்னிவருகடையர்மனங்களிற்றேற்றக்கடையெனத்தோன்றும்போத
மின்னரபதிமனத்திற்றேன்றியதான்மாமாயையேதுசெய்யா.

(ப - மை.) காகதாலீயம்போல் = காகதாலீய நியாயம்போல, வாதனையின் வசத்தில் உளம் = சித்தத்தின் சமஸ்காரத்தின் வயத்திலுல், கலந்துநிற்கும் ஏகமுறத்தம்

மிற்றும் = தானுகவே பரஸ்பரம் பெருத்த விவகாரங்கள் பலருக்கும் விரவியுண்டாம், என்றுணர்வின் நிலேயின்றேர் இயம்பாகிற்பர் = என்று அறிவின் நிலேயில் நின்றவர்கள் கூறுவார்கள், ஆகலினுல் = ஆதலினுல், முன்னளிற் சித்தனுல் = பூர்வம் சித்தனுல், புலேச்சேரியாகக் கண்டமோகமதே = நீசக்கிராமமாகப் பார்த்தமயக்கந்தானே, பின்னு னும் = பிற்போதிலும், கண்டது = பார்த்தது, வேறன்று = அயலல்லவாம், காமொ ழிந்த வேந்தன் = யாமியம்பிய லவணராஜன்.

மன்னவன்கண்டுள கனவின் மதிமயக்கந்தன்னேயே = லவணராஜன் பார்த்ததான சொப்பனத்தின் புந்திமயக்கந் தன்னேயே, மலேயின்சாரல் = விந்தியபர்வதத்தின் தாழ்ந்த வரையில் வாழ்ந்த, அன்னவரும் = அக்கடையரும், நன்னினேவால் அறிவுற்றூர் = நின்ன எண்ணத்தால் தெரிவுற்றூர், லவணனும் அறிவின் றேற்றம் = லவணசம்பந்தி பிரதிபையானது, துன்னிவருகடையர் மனங்களில் தோற்ற = அச்சேரியில் நெருங்கி யிருந்த நீசர் உள்ளங்களில் ரூடமாக, கடையரெனத் தோன்றும் போதம் = விந்தியபுக் கசசம்பந்தியானபோதம், இன்ன நரபதிமனத்திற் றேன்றியதால் = இந்தலவணனது சித்தத்தில் தோற்றியது இது காரணங்கொண்டு நாடின், மாமாயை எதுசெய்யா = பெருமை பொருந்திய எக்காரியத்தைத்தான் செய்யமாட்டாது; எதனேயுமே செய்யுமென்பதாம்.

(ஸ்ரீ - வீர.) காகத்தின் தாலதருசம்யோக சமயத்திலேயே தெய்வயோகத்தால் அப்பனேயிலிருந்த பழம்வீழ்தல் காகதாலீயமாம், இங்கியாயம்போல; சித்தத்தின் ஒப்பா யமயினே யுண்டாக்கும் வாதனேயின் வயத்தினுலே, சுபாவமாகவே, வேறுநிமித்த மில்லா மலே அபிஞ்ஞைவிடிவ விவகாரம் பரஸ்பரம் சம்வாதஞ்செய்வதாக ஆம். அதிலுற்றவர் சமான அருத்தத்தைப் பஜிப்பவர் ஆவர். அவர்கள் மகாகாரிய சம்பந்தமான விவகாரங் களே யுடையவர்கள் ஆவர்கள் ஸ்ரீமகாபாரதத்தில் இங்ஙன் ஸ்மரிக்கப் பெறுகின்றது:= போரிற் பொன்றிப்போய் நானூலோகங்களே யடைந்தவர்களாகிய துரியோதனுதிகளே ஸ்ரீ வியாசபகவான் திருதராஷ்டிராதி சோகமகற்றற் பொருட்டு அந்த அந்தலோகங்களி னின்றும் தவமகிமையாற் கொண்டுவந்து சேர்ப்ப, அவர்கள் திருதராஷ்டிர ரோடும் பாண்டவரோடும் மங்கையரோடும் ஒருங்குகூடிய மகாரம்பவிவகாரங்கள் சம்வாதிகளா யினவாம்: சதசின்கண்ணே வீற்றிருந்த இராஜாவினுல் ஐந்திராஜாலிக சேஷ்டையால் எக்காற்சபாலயத்தில் காணப்பெற்றதோ அக்கால்எவ்வெவ்வர்த்தை யுல்லாசமாயதோ அதாவது விவர்த்தமாயதோ அவ்வதுவே அன்னியதினத்திலும் உல்லாசமாய தென்பது துணிபாம். அக்கால் இலவணனுல் விரைவாகக்கண்ட எச்சொப்பன விப்பிரமமுள்ளதோ அதுவே விந்திய புக்கசசித்தங்களாலே யுணரப்பெற்றதாம். பிரதிபை பேதகற்பமாயி னும் அவ்வாறே, ஒரிடத்தி லுண்டாயதற்குத்தானே ஈரிடத்திலும் புலப்பாடு சம்பவித் தலின் என்னுங்கருத்தால் உரைத்தல்:—லவணனும் என்பது. லவணராஜசம்பந்தி நியாய பிரதிபைவிந்திய புக்கசசித்தத்தில் ஆரூடமாயது அதாவது லவணனது சித்தத் தில் யாதுதோற்றியதோ அத்தகையதே விந்தியபர்வதத்திருந்த புக்கசசித்தங்களிற் றேற்றியது என்பதாம், விபரீதமென் ஆகவில்லேயெனின் ? உரைத்தல்: கடையர் என் பது விந்திய புக்கசவுணர்ச்சியானது பார்த்திவன் மனதிற் பாய்ந்தது. பிரதிபையதன் விடயங்களின் சம்வாதத்தில் திருவுடாந்த மிதுவாம்: வெகுகவிகளின் மாநச உற்பிரே ஷாரசித் காவியார்த்தப் பிரதிபாதகவசனம் ஒருகால் ஒப்பானதாகிச் சப்தத்தானும் அருத்தத்தானும் சம்வாதி யாதலேபோல லவணபுற்கச பிராந்திரூப சொப்பனத்திலும் காலமுந்தேசமும் கிரியையும் ஆமென்பதாம்.

(ச.) காகம் வருதற்கும் பனைவிழுதற்கும் உள்ள அநிச்சாசம்பந்தம் காகதாலீயமாம் அதுபோல், வாசனையின் வசத்தில் = வாசனைவசத்திலே, உளம் = சித்தத்தில், இருக்கும் விவகாரங்கள், தம்மிற்றும் = அந்தியோக்கியம், எகமுறக்கலந்து நிற்கும் = ஏகரூபமாயிருக்கும், ஆகையினன், அதனையே விவரணஞ்செய்தல், முன்னளில் = முற்றினத்தில். சித்தனுல் = ஐந்திரசாலிகனது மயிற்றோகையின் சுழற்சிரூபமான சேட்டையால், நாமொழிந்த வேந்தன், மோகமதே = அவித்தையே, பின்னளும் = மறுதினத்தும், கண்டது = கண்டவிலாசமாம்.

மன்னவன் = இலவண அரசனுல், அக்காலத்தில், கண்டனை, கனவின் மதிமயக்கந்தன்னையே = சொப்பனரூபப் பிராந்தியையே, அறிவற்றார் = அநுபவித்தார், அறிவின் றேற்றம் = சமஸ்காரத்தால் எழுந்தபிரதீதி, துன்னவரும் = விந்தகிரிபிலுள்ள தோன்றியதால், அன்னியனது பிராந்தி அன்னியனிடத்தில் ஸ்புரணமாமென்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) ஆயின் யாங்ஙனம் மயல் விவகாரத்திற்குச் சத்தியத்தகைமை யென ஆசங்கித்துக்கூறல். ஆயினென். அதுவிவகாரகதி அத்தியந்தமில்லாததா வெனின் இன்றெனில் :—தோன்றியவென.

(ச-அ.) பிராந்திக்கு விவகாரயோக்கியத்துவ மெப்படியெனிற் கூறல்:—தோன்றிய வென.

தோன்றியவைவிளக்கத்தாலுண்மையாமைம்பொறிக்குந்தொடர்பாய்நிற்கு
மான்றபதார்த்தங்களெலாமறிவினுலெழுந்துண்மையாகமாட்டா
வேன்றறிவானறிபொருளாமிரண்டினிடையறிவானுக்கியைந்தரூப
மூன்றியறிபொருளறிவானறிவினிலைவபுற்றிடுவதுயர்ந்தவீடு.

(ப - ரை) தோன்றியவை விளக்கத்தால் = தோற்றுகின்ற பதார்த்தங்கட்குப் பிரதிபானமாதலினுனே, உண்மையாம் = சத்தையுளதாம், ஐம்பொறிக்குந் தொடர்பாய் நிற்கும் = பஞ்சேந்திரிய விவகாரகதியை யடைந்துநிற்கும், ஆன்றபதார்த்தங்களெலாம் = எத்தகைய பெருமை பொருந்தினவாயினும் எல்லாப்பொருள்களுமே, அறிவினுலெழுந்துண்மையாக மாட்டா = சம்வேதனத்தை விடுத்து அயற்சத்தையாகாதாம், என்று அறிவான் அறிபொருளாம் இரண்டினிடை = திருஷ்டாதிருசியங்களின் சம்பந்த மூண்டாகியவழி அவற்றின் மத்தியில், அறிவானுக் கியைந்தரூபம் = திருஷ்டாவிற்கு எச்சொரூபமூளதோ, ஊன்றியறிபொருள் அறிவான் அறிவு இவையில் = அழுந்தியறியுந் திருசிய திருஷ்டாதிரிசனுதி வர்ஜிதமான அச்சொரூபமாய், உற்றிடுவது உயர்ந்தவீடு = துவம்பதலக்ஷிய தற்பதலக்ஷியங்கள் ஒன்றுபட்டுறைவது பரமமேயாய மோக்ஷமாம்.

(ஸ்ரீ - வீர.) விவகாரகதியையுடைய அதற்குப் புலப்பாட்டானே சத்தையுளதாம்; கேவலம் விவகாரசொரூபமாய இதற்கே பிராதிபாசிகசத்வம் என்பதாக இன்றும்மற்றை எல்லாவுலகுக்குமே யவ்வாறும் எனல்: ஆன்றபதார்த்தம். அதிஷ்டான சிற்சத்தையானே சர்வவஸ்துசத்தாஸ்ரீவாதந்திரியமாகவோ இலதாம் எனல்: ஆன்றவென்பது. கனுப் பொருட்கட்கேபோலும் நனவிலும் எல்லாப் பொருட்கட்கும் பிரதிபாசத்தையொழித்து அயற்சத்தை யிலதாம், சம்வேதனமே சத்தையாம், சம்வேதனதசையிலே யேசத்தையாமென்பதுபொருள், அல்லது விளக்கத்தா லென்பதேனும், அறிவினு லென்பதேனும், அதிஷ்டான சைதன்யத்தைக் கூறும், கூறுவதாகவே, கற்பிதங்கட்கு அதிஷ்டானமே சத்தையென்பது பொருளாம், சம்வேதன சத்தையே, பூதபவ்யபவிஷ்

யத் பிரபஞ்சத்திருப்பதாய்ச் சம்வேதனத்தினும் இதரமென்ன இலங்காநிற்கும்; அறிவிற் கூடம் நிரைபோலும் விரையிற்றருப் போலுமாம். பிரகரணர்த்தத்தைப் புத்திசௌகர்யப்பொருட்டு ஈற்றிற் சுருக்கியுரைத்தல்: —என்று என்பது. திருஷ்டாவிற்கும் சப்தாதி திருஷியங்கட்கும் காண்பான் காண்பொருள்வடிவ இலக்கண சம்பந்தமுண்டாயவழி உளவாய அநேகங்களின் மத்தியில், திருஷ்டாதிருஷிய தரிசனங்களின் உள்ளே, புட்பங்களிற் சூத்திரம்போலும் தொடர்ந்து நின்ற திருஷ்டாவின் எவ்வபு வுளதோ = சாக்ஷியின் எச்சொரூபமுளதோ, திருஷ்டா தரிசனதிருஷியாதி வர்ஜிதமாக எச்சொரூபமுளதோ, திருஷியாதியிலதேனும் சுழப்திசமாதிகளில் அதன் சாக்ஷிக்கிருப் புண்மையின்; திருஷ்டா தரிசன திருஷியபல வர்ஜிதமாய அவ்விச் சோதித துவம்பதார்த்தருபதற்பத லக்ஷியம் பரமேயாம். அல்லது திருஷ்டாவிற்கும் திருஷியங்கட்கும் முன்மொழிந்த சம்பந்தமுனதாகியவழி பவித்தவற்றின்மத்தியில், முன்பின் விருத்திகளின் சந்தியில், ஜீவனது எச்சொரூபமுளதோ அதுவும் காண்போனுந் தன்மையானே தரிசனதிகளாலேனும் வர்ஜிதமாம், அவ்விச்சோதிததுவம் பதார்த்தருபதற்பதலக்ஷியம்பரமேயாம். சலமொன்றே தரங்காதி. தாருவொன்றேசாலபஞ்சிகை = பதுமை. நிலமொன்றே கும்பமாதி. நிகிலமும்மய லொரேசிவம். கும்பாதியிற்றொடர்ந்து நின்ற அதிஷ்டான சாரபூத மண்வடிவமொப்பக் காண்போனுதிதிரிபுடியிற் றொடர்ந்து நின்ற அதன் சாக்ஷிசின்மாத்திரத்தைத் திரிபுடித்தியாகவாயிலாகக் காட்டல். என்றவென்பது. அம்முன் காட்டிய எப்பரம் பிரஹ்மமுளதோ அது இச்சாரபூதலக்ஷிய பிரத்தியக்குவின் சொரூபமேயாம் என அகண்டவாக்கியார்த்தம் காட்டப் பெற்றதெனக் கண்டுகொள்க.

(ச.) தோன்றியது = வெளிப்பட்டவவ்விவகாரகதி, விளக்கத்தால் = பிரதிபானத்தாலேயே, உண்மையாம், யாதொருகாரணத்தினுல் பதார்த்தங்களெல்லாம் = சர்வபதார்த்தங்களும், அறிவினுலொழிந்து = அறிவுக்குவேறாய், உண்மையாகமாட்டா = சத்தையாகாதோ அறிவேபகவதியாமென்பதும் விடயமுண்மையாதற்குச் சரணமென்பதும் நியாயமாதலின் என்பது கருத்து, இப்போது இராமரைநோக்கி யிதமுபதேசித்தல்: என்ற + இடை = திருட்டாதிருஷிய சம்பந்தங்களின் மத்தியில், அறிவானுக்கு = ஆன்மாவிற்கு இயைந்தரூபம்; யாது அஃதெத்தன்மையது எனச் சங்கைவரில் நிச்சயித்துத் தெரிவித்தல்: ஊன்றியறிபொருளறிவானறிவினையற்றிடும் = திருஷ்டா முதலிய உபாதிவர்ச்சிதமாம், சர்வகதமானசைதந்நியமாத்திரமென்பதுபொருள்; இதுவேயுயர்ந்த வீடு = இவ்விசுத்தசைதந்நியமே பரம்பிரம மென்பது பொருள். (68)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அதற்குத் திரிபுடிசூனியத்தன்மை யெப்போது பிரசித்த மெனிற்கூறல்:—ஓரிடமென.

ஓரிடம்விட்டோரிடத்தேயுள்ளமுறிலவற்றினுவண்மையாகிப்
பேரிலதாயுணர்விலதாய்ச்சடமிலதாயதுநீயாய்ப்பிரியேலென்றுங்
கூரியபுந்தியினுலேயுகித்துக்குடும்பியெனுங்குறிப்பைமாற்றித்
தூரியதாம்படிமனத்தின்றுவக்கறுத்தேயிருந்துபடிதுலங்குநிற்பாய்.

(ப - ரை.) ஓரிடம் விட்டோரிடத்தே யுள்ளமுறில் = தேசத்தினின்றுந் தேசம்பெயலடைதரிற்சித்தம், அவற்றினுவண்மையாகி = அவற்றின் மத்தியலிருப்பதாகி. பேரிலதாய் = பெயரற்றதாய், உணர்விலதாய் = சேதனமற்றதாய், சடமிலதாய் = ஜாட்டியமற்றதாய், யாதுளதோ, அது நீயாய் = அதுவே நினதுவடிவாய், பிரியேலென்

றும் = எப்போதும் தன்மயமாவாய்; கூரியபுந்தியினாலே = அதிசூக்கும மதியினாலே, யூகித்து = ஊகஞ்செய்து, குடும்பியெனுங்குறிப்பைமாற்றி = பலபாவனையின்றும் மூக்தனும், தூரியதாம்படி = வெகுதூரத்திலோடிப்போமாறு, மனத்தின்றுவக்கறுத்தே = மனத்தைப்பரித்தியாகித்து அமனஸ்கனாகி, இருந்தபடி தானிந்திரிப்பாய் = எதுவாயுள்ளாய் அதுவாகவேயெப்போதுமிருந்து நிரமாயிலங்குவாய்.

(ஸ்ரீ - வீர.) ஓரிடம்விட் டென்பது முன்னர் வியாக்கியானிக்கப் பெற்றது. சித்தமானது விடயத்தினின்றும் வேறுவிடயத்தை யடைந்தவழி, பூர்வ உத்தரவிடய ஞானங்களின் அந்தராளத்தில், சித்தத்தை யுபாதியாகவுடைய ஜீவனது எவ்வபுவானது = சொரூபமானது, உளதோ சுழப்திசொப்பனஜாகரித வர்ஜிதமான அதன் மயமாகவேத தான்ம நிஷ்டனாகவே பவிப்பாயாக வெப்போதும். அஜாட்யசம்விந் மனனமென்பதாய மூலத்திற்கு, ஜடபாவம் விவசாயஞானம் ஸ்மிருதி யென்பவற்றினும் விலக்ஷணமான தெனப்பொருள் கொள்ளினும், அல்லது விடயம் விடயஞானம் பிரமாணம், ஞாதாவென்னும் மூன்றும் அற்றது எனப் பொருள்கொள்ளினும் அமையும். இரண்டன்மத்தியில் ஒருவிடயமு மின்மையின் அஜாட்டியமாம், அதனாலே விடயகோசரஞானமும் இல்லை. அதனாலே விடயீகரிக்கும் வேலையுமில்லை யென்றுணர்க. நிருவிகற்பனுபூதி யென்பது தானு. ஜாக்கிரத் சொப்பன சுழுப்தியற்ற நினது எச்சுகாதன வடிவமுளதோ, சித்த விருத்திரகிதமாயும், சேதனதருமபூத அவஸ்தாத்திரய ரகிதமாயும், பிரஞ்ஞான கனமாயும், நிர்விகாரமாயும், எல்லாவஸ்துக்களையும் இலக்குவதாயும், உள்ள அதன்மயமாகவே = தத்தேகரசனாயே, சந்ததமும் சுகியாகவாழ்வாய். ஜடத்தன்மை யொன்றை யொழித்து. சிலையின் இருதயம் = கனம், சித்தேகனம் யாதுளதோ; பாஷாணத்தின் அப்யந்தர சொரூபமானது ஜடத்தன்மை யொன்றை விடித்து ஒருகாலிருக்குமாயின் எவ்விதமாயிருக்குமோ, இயற்கையாகவே மநோரகிதமாய அவ்விதமாகவே அதன் நிஷ்டாபரனாகவேயாதி; அதற்கொப்பான சொரூபநிஷ்ட னெப்போதும் ஆகிவாழ்வாய். அம்மயமாக இருக்கும் சமாதிஸ்தனாக இருந்தாலும் விவகாரபரனாக இருந்தாலும் சுகியேயாவா யென்பது திண்ணம். மூலத்தில் சிலையின்பாகிய சொரூபம் பதார்த்தாந்தர சங்கியாதலின் அசங்காத்ம சொரூபத்திற்குத் திருஷ்டாந்தம் ஆகாதெனக்கருதியே சிலையின் இருதயம் எனப்பெற்றது என்றறிக. எக்காரணத்தால் அவிவேகத்தாற் சமுசாரமாயதோ அக்காரணத்தால் விவேகத்தின் பொருட்டே முயற்சிசெய்ய வேண்டுமெனல்: கூரிய என்பது. சித்தத்தை யதிதூரத்திற் பரித்தியாகித்து எஃது ஆயிருக்கின்றாய் அஃது ஆகவே அதிதிடம் பெறுவாய்; சமுசாரபாவனையினின்றும் மூக்தனாகிச், சுருதியநுகூலமாயும் அத்தியந்தம் திடமாயுமுள்ள யுக்தியோடு கூடினவனாகி, மனனத்தியான பரனாகிச் சுகியாக வாழ்தி.

(ச.) ஓரிடம் விட்டோரிடத்தே யுள்ளமுறில் = சித்தம் விடயத்தினின்றும் விடயாந்தரத்தை யடையின், அவற்றினிடை = அந்தராளாவஸ்தையில், உண்மையாகும் = உள்ளதான: சித்தத்தின் சொரூபமியாது அஃதெத் தன்மையதெனில், மனனமென்னும் பேர் = மநோதன்மமும், உணர்வு = சேதனதன்மமும், சடம் = விடயதன்மமும், ஆகிய மூன்றும். இலதாம் = இன்மையதாம், சின்மாத்திர மென்பதுபொருள். அது நீயாய்ப் பிரியேயென்றும் = எப்போதுமதுவே ஆன்மாவின் சொரூபமெனப் பாவிப்பாய், அவஸ்தாத்திரியோபாதிரகிதமான நினதுசர்வா வஸ்தைகளினும் அநுகூதமும் திருஷ்டரூத்வோபாதிரகிதமும் திருகியவிலக்ஷணமும் ஆனசொரூபம்யாது, அதுவே என்றுணர்ந்தற்

சொரூபமெனப் பாவிப்பாய், சிலையினிருதயம்போலச் சங்கற்பவிகற்ப சூனியமும், ஜாட்டியவர்ச்சிதமும் ஆனரூபமே என்றுந் தற்சொரூபமாகப் பாவிப்பாய், குடும்பியென்னுங் குறிப்பைமாற்றி = திருசியப் பிரபஞ்ச வாசனையினின்றும் முக்தனும், கூரியயுந்தியி னூலே யூகித்து = பரமயோகத்தோடு கூடினவனும், தூரியதாம் படிமனத்தின்று வக்கறுத்து = சங்கற்பாதியை யத்தியந்தம் விட்டு, இருந்தபடி = எத்தன்மையான ரூபனு னூயோ அத்தன்மையான ரூபமேயோ மென்பதுபொருள். ஆதலின் துணிந்து நிற்பாய்= விகற்பித்த சித்தத்தை விட்டிருப்பாய். (69)

(ஸ்ரீ - வீர - அ-கை.) வாதனேயே யந்தமாதலின் அதனைப்பெரிதும் முயன்று க்ஷயம் செய்து மனதையடக்கெனல்:—பிறப்பென.

பிறப்பிறப்பாம்பூட்டைதனைப்பிணித்துழற்றும்வாதனையாம்பெரியபாச
மறப்பெரியமுயற்சியினுலறுத்திடுவாய்பரமமாம்நினின்முன்னே
புறப்படும்பொய்யாமுள்ளபுவனவிகற்பங்களெனும்பொய்யைக்காட்டுஞ்
சிறப்புளவின்னிலதாயுமிலதானீலநிறஞ்செறிவதேபோல்.

(ப - ரை.) பிறப்பிறப்பாம் பூட்டைதனை = சமுசாரமாகிய ஏற்றத்தை, பிணித்து ழற்றும் = பந்தித்து மேலுங்கீழும் அலேவிக்கும், வாதனேயாம் பெரியபாசம் = வாசனே யாகிய பெரியவடத்தை, அறப்பெரிய முயற்சியினுல் = அத்தியந்தம் பெரியபிரயத்நத்தி னுல், அறுத்திடுவாய் = சேதிப்பாய், பரமமாம் நினின்முன்னே புறப்படும் பொய்யாம் உள்ளம் = பரமாத்ம தத்துவத்தினின்றும் பூர்வம்பொய்யாகிய மனமானதுண்டாம், புவனவிகற்பங்களென்னும் பொய்யைக்காட்டும்= அதனது விகற்பஜாலங்களால் விஸ்தார இச்சகவிகற்பத்தை மித்தையாகவே தோற்றுவிக்கும், சிறப்புளவின்னிலதாயும் = அவ காசவிசேட வியோமம் ஆகிருதியற்றதாயும், இலதான நீலநிறஞ் செறிவதேபோல் = சூனியமான நீலவர்ண அத்தியாசத்திற்கதிஷ்டான மாவதேபோலும்.

(ஸ்ரீ - வீர.) சமுசார உக்கிர ஆரகட்டயந்திர இரஜ்ஜு வாசனையைக் கெடுத்தியென் பதாம்; பெருமுயற்சியானே வாசனேப்பாசமறின் சமுசாரயந்திரம் சிறிதுழசையாது கெடும். அரைக்கும் யந்திரக்கீழ்ச் சிலையிடைச்சங்கில், திரியக்குக் காஷ்டப்பிராந்தத்தில் ஆரோபிதமாம், இதனுனே மேற்பேஷண பாஷாணத்தை வகிக்கும் சிலமுடைய தாமக் கயறு; அவ்வாறே ! பிருதிவி கீழ்யந்திரசிலேபோலும், மேருவதன் சங்குபோலும், ஜோ திச்சக்கிரம் மேற்சிலையந்திரம் போலும், வாசனேயிற் கட்டுண்ட வுலகங்காணப் பெறு கின்றதென்பது கருத்தாம். விஸ்தாரமாக விளம்பியபிரகரண அருத்தத்தைச் சங்கிரகித் துக்காட்டி யுபசங்கரித்தல்:—பரமமென்பது. எங்ஙனம் சூனியமாகிய ஆகாயத்தால், அசத்தாயினும் நீலத்தகைமை சர்வஜன அனுபவத்தால் உல்லாசிதமாய், கீழ்முகமாகக் கவிழ்த்தப்பெற்ற, வர்ணமிகுந்த இந்திரநீலமணிமய மகாகடகம்போலும் நீலமாக ஆகா யம் காணப்பெறுகின்றது என உவமையிற் பிரேஷையாதி யோக்கியமாகமிக அழகாய்க் கூறும் வாக்குவிவகாரம் உடையதானவகையாய் வித்தரிக்கப் பெற்றுளதாமோ; அங்ங னம், பரமாத்மதத்துவத்தினின்றும் முன்னர் மனமானது நன்குண்டாயது, அம்மனத் தானும் இவ்விஸ்தாரமாய வுலகமானது தனது விகற்பஜாலங்களால் காட்டப்பெறுமென் பதாம். பரமான்மாவினின்று முண்டாய அற்பமான அநிர்வசனியமனத்தால் அநிர்வசனீய மானஜகத்துக் கற்பிக்கப்பட்டுளதென்பதாம்.

(ச.) பூட்டைதனை = ஏற்றமரத்தை, உருளையை யென்பதே சிறப்புபாசம் = கயிற்

றை, அறுத்திடுவாய், இராகவா நீ சேதிப்பாய், உற்பத்திப் பிரகரணத்திற் கூறியபொருளைச் சுருக்கிச்சொல்லுதல்?—பரமமாமறிவின் = பரமான்ம தத்துவத்தினின்றும், உள்ளம் = மனதே, முன்னே புறப்படும் = முன்புதித்தது, பொய்யாம், அம்மனம் உண்மையாகக் கற்பிதமேயாயினும், புவனவிகற்பங்களெனும் பொய்யைக் காட்டும் = சூனியமான அவாந்தர பேதமாகிய ஜகத்தைச் சிருட்டித்தது, விண்ணிலதாயும் = ஆகாயஞ் சூனியமாகினும், வியாபகமாய் இலதான = சூனியமான, சிறப்புள நீலநிறம் = காந்தியிருந்த நீலத்தன்மை, செறிவதேபோல்.

(ஸ்ரீ - வீ - அ - கை.) அதனானே நிமித்தம் நீங்கியவழி நைமித்திகம் நீங்கிப்போமாதலின், நிர்மலாத்மாத்திர பரிசேட சித்தியெனல்?—சோகமென.

சோகமுறுசங்கற்பநாசத்தான்மனமாளிற்றொன்றுநிதாட்ட
மோகமெனுமூடுபனிவிட்டகலுஞ்சரற்காலமுதிரவந்தான்
மாகம்விளங்குவதென்னநல்லறிவுமாத்திரமாய்மாயாதாகி
யேகமாய்வடிவின்றிப்பிறப்பிறப்பிலாப்பிரமமிலங்குநொய்தாய். 71

(ப - ரை.) சோகமுறு சங்கற்பநாசத்தால் = துயரைத்தரும் சங்கற்ப சங்ஷயவ யத்தால், மனமாளில் = சித்தம் கழியில், தொன்றுதொட்ட = வெகுகாலமாகப் பீடித்திருக்கும், மோகமெனும் மூடுபனி = சமுசாரமோக மூடுபனியானது, விட்டகலும் = விட்டுநீங்கும், சரற்காலம் முதிரவந்தால் = சரத்ருதுவானது வளர்ந்து வந்தால், மாகம் விளங்குவதென்ன = ஆகாயம் சொச்சமாக விளங்குவதேபோல, நல்லறிவுமாத்திரமாய் = கேவலஞ் சின்மாத்திரமாய், மாயாதாகி = அநந்தமாய், ஏகமாய் = ஒன்றாய், வடிவின்றி = நிராகாரமாய், பிறப்பு இறப்பு இலா = அஜமாய் அமரமாய், பிரமம் = சிவசொரூபமாகியதானே, இலங்கும் நொய்தாய் = அதிசூக்குமமாய் விளங்கிக்கொண்டிருக்கும்.

(ஸ்ரீ - வீர.) சங்கற்பமுற்றினும் அற்றொழியும் வாயிலாக மனமானது அழிவுறவே, சமுசாரமோக மிகுகை = பனி, மிகுகை = தூமாகாரமேகம், கழிந்துபோம் போகவே சரற்காலமானது நன்றாகவந்துவிடின், ஆகாயம் தெளிவாக விளங்குவதென்ன, அதி தெளிவாகப் பிரத்தியக் காண்ம வடிவமாய் இருதயத்திற்றானே சின்மாத்திர ஏக அஜராமரண அஜ ஆநாதியநந்த சதாநந்தப் பிரஹ்மமிலங்கும்.

(சு) சங்கற்பநாசத்தால் = சங்கற்பங்களின் அழிவு பாட்டால், சமுசாரமாகியமோகமெனு மூடுபனிவிட்டகலும், அன்றியும் சரற்காலம்வரின் வான்போல் சின்மாத்திரமான ஆன்மசொரூபஞ் சொச்சமாய்ப் பிரகாசிக்கும் என்பது பொருள் 71

உற்பத்திப் பிரகரணம் முற்றிற்று. அகதிருவிருத்தம் (5*1-6)

தி திப்பிரகரணம்

சுக்கிரன் கதை.

இங்கெதுதனது மகிமையாலுலக வெழில்வடி வினைத்தையுந் தாங்கிப்
பங்குறுபலவென் னுயிர்மதியதனுற் படர்மயலா லவற்றுடும்
பொங்குறு சுருதிவிதிதமாயபயபூரணனந்தமெய்யறிவாய்த்
தங்குயர்தனது வடிவதாம்வீரத் தந்தியினிணைமலர் பணிவாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) உற்பத்திப் பிரகரணத்தில் "எதினின் றிவையெலா மெழுகின்றனவோ" என்றற்றொடக்கத் தினவாய எல்லாச் சிருஷ்டிப்பிரதிபாதக வாக்கியங்கட்கும், அத்வயப் பிரஹ்மத்திற், சகத்தத்தியாரோபப்பிரதரிசன வாயிலாகத் தடஸ்த லக்ஷணத்தன்மையானே தாற்பரிய விசிராந்திப் பிரதரிசனமுகமாக, ஜகத்ஜீவாதி பேதத்தை விலக்கிப்பிரத்தியக்குப் பிரஹ்ம ஏகரசமுண்மை விசேடமாய் விளம்பப்பெற்றது. இப்போது, "உண்டாயின தெல்லை வாழ்வுறுமே" "வானும் மண்ணும் வற்புறுமெதனால்" "இவ்வக்கரத்தி னுணேயிதானே, செவ்வர்க்கன் மதிசெறிதர நிகழும்" "இவ்வின்பம் பரமில்லையேயாயின், கவ்வெவனின் பிணக்கதுவுவனலது, எவ்வெவன் வாழுவ னிவனேதானே, இவ்வெலாருக்கு மின்பினையற்றுவன்" "இவனுக் களிப்பையெயிலங்கிடுங்காற்றே" "ஒருவனே சருவவுலகையுந் தாங்குவன்" "எவ்வொருவன்ருன் ஜாலவானியக்கும் பவ்வியப்படத்தும் பரமசக்திகளால்" "அநுஞாதாவேயாமயமாத்மா, மனுமுயிரெவைக்கு மகிழ்தனேயீயும்." என்பதாதி நிகழ்காலத்திய நிகிலவுலகத்திதி நிர்வாககத்தன்மையை நிகழ்த்தாநின்ற நீண்மறைகட்கும், "சத்தேசௌமிய சகத்தின்முன் னிருந்தது." "ஆன்மாவொன்றே வகிலமுன்னிருந்தது" என்பதாதிப் பிரளயகாலிக ஜகத்சத்தா நிர்வாககத்வப் பிரதிபாதக சுருதிகட்கும், புருடமதி வைசித்திரியத்தாலுண்டான நாஞதாற்பரிய உற்பிரேக்ஷணத் தோடுற்றபிராந்தி வைசித்திரியநீகத்தால், சச்சிதாநந்த ஏகரசப் பிரஹ்மத்தில், சற்சித்ரூபத் தன்மையின் உபபாதனத்தால், தடஸ்த லக்ஷணதாற் பரியபரியவசானப்பிரதரிசனவாயிலாகவும், விஸ்தாரமாக விளம்பப் பெற்ற பிரஹ்மாத்மைக்கியஞானம் திடப்படும் பொருட்டுத் திதிப்பிரகரணத்தைத் தொடங்கும் ஸ்ரீ வசிஷ்டபகவான் ஏது சங்கதியைக் காண்பித்து உற்பத்திப் பிரகரணநந்தரம் திதிப்பிரகரணத்தைக் கேளெனப் பதிஞ்ஞைசெய்து பின்கூறல்:—எழுதுவோ னென்பது.

(ச.) முற்பிரகரணத்திற் சகம்மனே விலாசத்திலு லுற்பன்னமாயிற்று, அதுவும் யோகத்தான் மநோவிலாச நகிக்கின் நகிக்குமெனப் பட்டது. இப்பிரகரணத்தில் மனத்தினின்றும் உற்பன்னமான ஜகம்மனதின் கண்ணே இருக்கின்றதென்றும், மனதுந் தனக்குக் காரணமான ஆன்மாவின்கண் ணிருக்கின்றதென்றுஞ் சொல்லப் படுகின்றது; இதிற்சுக்கிரன், தாமாதி, வீமாதி, தாசுரன், உபதேசமும் என்னும் ஐந்துகதைகள் உள, அவற்றில் இப்போது மநோமயமான திருஷ்யமனதோடு ஆன்மாவின்கண் ணிருத்தலின், ஆதாரமாக ஆன்மாவைத் தெரிவித்தற்கு ஆதேயமான திருஷ்யத்தைக் கூறல்?—எழுதுவோன் என்பது.

எழுதுவோனு மெழுதிடமு மெதிர்காண் பொருளுமிலதாகி
வழுவிலாத விண்ணிடையே வந்துதோன்று மோவியந்தான்
பழுதின்மேவுந் தனேத்தானே பாராகிற்கும் பலபொறியு
நழுவுதுயிலி னுலன்றிநனவான் மேவுங்கன வொக்கும். (1)

(ப-பை.) எழுதுவோனும் எழுதிடமும் எதிர்காண் பொருளும் இலதாகி = கருத்தாவின்றியும், ரங்கபீடமின்றியும், திருஷ்டாவின்றியும், வழுவிலாத விண்ணிடையே = தெளிவாக இருக்கும் ககனத்தில், வந்துதோன்றும் ஓவியத்தான் = உதித்தெழுந்திலங்கும் சித்திரம், பழுதின்மேவுந் தனேத்தானே பாராகிற்கும் = குற்றமற்றிருக்கும் தன்னேத்தானே யநுபவிக்கும், பலபொறியும் நழுவும் = சர்வேந்திரியங்களும் உபரமமான, துயிலி

ஞலன்றி = நித்திரையிலுலன்றி, நனவான்மேவும் = ஜாக்கிரத்தான்மேவும், கனவொக்கும் = சொப்பன தரிசனமாம். (1)

(ஸ்ரீ - வீர.) அகர்த்ருகம் = ஹேது கரணேப கரணசம்பன்ன எழுதுவோன் இல்லாதது, அரங்கம் = உபாதானரஞ்சக திரவியமுற்றது, விண்ணிடையே என்றதால் ஆதாரச்சுவர் முதலன வில்லாமையும் சித்திரத்திற்குக் காண்பிக்கப் பெற்றதாம் திருஷ்டாவிற்கும் திருஷ்டத் துள்ளடங்குந் தன்மையுண்மையின் காண்போன் இல்லதாமெனப் பட்டது, மோகநித்திரையில் பிரமாதாவிற்குக் குன்றுதல் இருப்பினும் சாக்ஷிக்குக் குன்றுதலின்மையின் தூயிலுலன்றி யெனப்பட்டது. அகர்த்ருகமாயும் அரங்கமாயும் அத்ருஷ்டர்ருகமாயும் ககனத்தில் சித்திரம் இனிதெழுந்தது, சுவாநுபவமும் நித்திரையில்லாதிம் கனக்காண்பதுமாம், தூயிற்கனு வென்பதின்றி நனக்கனுக் காணும், அசனமயமே யாயினும் மயன்மாத்திரமாகத் தோற்றும், வரும்புர நிர்மாணமே போலும், சூரங்குருன்றி மணிக்கொத்திற் குளிர்காயலே போலும், கந்தர்வபுரத் தோற்றலேபோலும், கானனீர் தோற்றலே போலும், கற்பணைப் புரம்போலும், கனமிலபோலும், கதைப்பொருள் காணல்போலும் என அறிந்துகொள்க.

(ச.) ஸ்ரீ வசிட்டர். சித்திரமென்பது ஒருகருத்தனுல் ஒருபித்தி முதலிய மூர்த்த வஸ்துவிற் சிலவன்னத் திரவியங்களால் எழுதப் படுவதன்றே, ஓவியந்தான் = இச்சகத்துருபமான சித்திரமானது, ஆன்மா நிஷ்கிரியத்தால் அகர்த்தாவாதலின், எழுதுவோனும் = கர்த்தாவும்; ஆன்மா நிரவயவத்தால் அமூர்த்தமாதலின். எழுதிடமும் = மூர்த்தவஸ்துவும், ஆன்மா அத்துவிதீயனுதலால் வன்னத்திர வியாந்தர பின்மையின், எதிர்காண்பொருளும் = வன்னத் திரவியங்களும், இலதாகி. மூர்த்தமான ஓதிகரண பின்மையால் வழுவிலாத விண்ணிடையே = சிதாகாயத்தில், வந்துதோன்றும் உதித்தொளிரும். அன்றியும், சித்திரம் தனக்குவேறுன திருஷ்டா உண்டெனிலன்றே அநுபவிக்கப் படுகின்றது, இஃதங்ஙனமன்று, திருஷ்டா திருசியங்களுக்குப் பேதபின்மையின், பழுதின்மேவுந் தனேத்தானே பாராதிற்கும் = திருஷ்டாவின்றிச் சுவாநுபவமாம், அன்றியும் நித்திரையாலுலன்றே சொப்பன தரிசனமாம், இஃதங்ஙனமன்று, நனவான்மேவும் = சாக்ஷிரத்தின் கண்ணே தோற்றுதலின், தூயிலுலன்றிக் கனவொக்கும் = அநித்திரையுடைய சொப்பன தரிசனமாம், பலபொறியும் நழுவும் என்பது தூயில் விசேடணமாம். (1)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பரிபூரண பரமான்மாவில், உலகமெலாம் வெறுந்தோற்றுமாத்திரமாய்க் காரணகாரிய பாவமில்லாமலே தோற்று மெனல்:—கரி யென்பது.

கரியாய்ச் சமமாய் நொய்தாகிக் கலந்தவிகற்பந் தீரறிவிற்
பரியாகின்ற வுலகமெலாம் பற்றிபாய்தல் கண்ணடியிற்
றெரியாகின்ற பொருள்போலாஞ் செறிகாரண காரியமின்றிப்
புரியாகின்ற வுலகெல்லாம் பொலிந்து பிரமத்திடை யிருக்கும். (2)

(ப - ரை.) கரியாய் = சாக்ஷிபூதமாய். சமமாய் = எங்கும் ஒருபடித்தா யிருப்பதாய், நொய்தாகி = அதிருக்குமை அதிதெளிவாய், கலந்த விகற்பந்தீர் = நிர்விகற்பமாய், ஒளிரும், அறிவில் = சிதாத்மாவில், பரியாகின்ற வுலகமெலாம் = பயணின்றித்தோற்றுகின்ற ஜகங்களெல்லாம், பற்றிபாய்தல் = வாதனைப்படி மனத்திற்புலப்படல், கண்ணடியில் தெரியாகின்ற பொருள்போலாம் = முகுரத்திற் றோற்றும் பிரதிபிம்பப் பொருள்

போலவாம், செறிகாரண காரியமின்றி = பொருந்தாகின்ற காரணகாரியத் தன்மையை யடையாமலே, புரியாகின்ற வுலகமெலாம் = புலப்படாகின்ற ஜகங்களெல்லாம், பிரமத் திடை = தன்மயசீவத்தில், பொலிந்து இருக்கும் = பிரதிபை மாத்திரரூபமாய் விளங் கிக்கொண் டிருக்கும்.

(ஸ்ரீ - வீ.) சர்வவிருத்திகட்குஞ் சான்றாய், அபரிணுமியாதலின் எல்லா விருத்தி களிலும் ஒரேபடித்தாய் அதனனே அதிசூக்குமமாய், அதனனே அதிசொச்சமாய், அத னனே விகற்பமற்றதாய், இருக்கும், தன்மய சின்மயத்தில் இருப்பதுபோலப் பொலியும் உலகமெல்லாம், தர்ப்பணத்திற் றோற்றும் வத்துக்களைப் போலவாம்; காரணகாரிய பாவத்தைக் கதுவாமலே இப்பிரதீதிக ளெல்லாம் பிரஹ்மத்திருக்கும். இத்தன்மையை யிராகவ! நன்குகளில்வேம் கேட்டி! ஆகாயத்தினும் அதிசூக்குமமாய பரம்மொருளாம் பரமாத்மா, வாக்குமனமெதற்குமே யெட்டாதிருத்தலின் எக்காரியத்திற்குத்தான் எங் ஙனங்காரணத் தகைமையையருவும், ஆகாயதோற்றம் காகனுங்கத்தினும் அதிசொச்சமாய் மகாகுணிய மாய்ச் சத்தாசாமானியமா யிருக்கும் அத்தப் பரபதத்தில், சகன்மேரு சமுத்திரககனுதி கள் எங்ஙனமிருத்தல் கூடும்? ஆகாரத்தோடுற்ற ஆலம்விரையாதிகளில் அங்குராதிகள் இருக்கின்றனவெனின் ஊகத்தோடு கூடியதாம், நிராகாரத்தில் மகாகாரவுலகங்கள் இருக்குமெனல் ஊகமற்ற சொல்லாம். எங்ஙனமெனின்? உற்பத்தியின் முன்னர்க்கார ணத்தில் காரியமுளதா மென்பவன் கேட்கத்தக் கவனுவன், அதன் சத்தைசாமானிய மாக விருக்கிறதா? அல்லது, பீஜாதிசத்தை யானேயா? அல்லது அங்குராதிசத்தை யானேயா? ஆதியதேல், அவ்வங்குராதி எதனுடு அசம்பந்த முடையதாம், சாமான்ய சத்தைக்குச் சர்வவஸ்து சாதாரண்யத்தன்மையானே உண்டாகாகின்ற அங்குராதிகட்கு எல்லாவிடங்களிலுமே சம்பந்த வழக்காம். ஆகுக இட்டந்தான் எனின்? இவ்வங்குராதி க்ஷேத்திரத்தில் அங்குரித்த பீஜத்தில் வாஸ்தவமாகக் கண்கண்டதேயாம்; குருத்தி விருக்கும் பீஜத்திலாதல், சிலாசகலத்தி விருக்கும் பீஜத்திலாதல். ^ பிராந்திதிருஷ்டம் அவாஸ்தவம் என்னுமிது யாங்ஙனங்கூடும்? இரண்டாவதிலும், பீஜத்தைத்திக்குற்ற அங் குரசம்பந்தத்திற்கும், கடபடாதி சம்பந்தத்திற்கும் சொரூபமாக விசேடமொன்றும் விளம்பாமையின், என்னவஸ்து எப்பீஜத்தால் உண்டாகும் எனச் சம்பந்தமே யிராமை யின், நென்முதலிய பீஜத்திற் சர்வஜகத் திருப்புவழுக்காம்; இஷ்டமேலாயினு, அங்கு ரித்த பீஜத்தில் அங்குராதியே வாஸ்தவம், கடபடாதியன்றும் என்னுமிது யாங்ஙனமே லும்? என்பதாம். மூன்றாவதிலும், அங்குரசொரூப சத்தையோடி பீஜசம்பந்தத்திற்கும் கடாதி சம்பந்தத்திற்கும் விசேடம் கிருபிக்கமுடியாமையின் அசம்பந்த எவ்வத்து, எல் லாவிடங்களிலுமே அங்குரசற்பாவப் பிரசங்கமாம்; இட்டாபத்தியேலாயின், பீஜாதி களிலேயே அங்குராதி வாஸ்தவம்.மற்றிடத்தில்லை என்னுமிதுயாங்ஙனமேலும்? மேலும இச்சாங்கியாதியானே கற்பிக்கப்பெற்ற காரணத்திற் சகற்சற்பாவமாமது லௌகிகப் பிரமாண பலத்தாலா? அல்லது "சத்தேசௌம்ய சகத்தின் முன்னிருந்தது" என்ப தாதி சுருதிபலத்தினுலா? ஆதியதாகாதாம், எப்புத்தியாதி சர்வேந்திரிய சக்திதிருஷ்யம் கடபடாதியோ அதனதிகரண தேசத்தினும்தேசாந்தரத்திலும், அதனதிகரண காலத்தி னும் காலாந்தரத்திலும்,நேரேதானே காண்போனிடத்திலேனும், வேறு காண்போனும் நாணிடத்திலேனும், நிருஷ்டா இருந்தபோதிலும் இல்லாதபோதிலும், அவ்வவ்வகைக் காட்சிகருதலாதி புத்திவிருத்தி வடிவபோதத்தில் இல்லாததே, யிலங்காததே, அத்திரு கிய அதரிசனுதியோக்கிய அநுபலப்திவசத்தால் அசத்தேயாமெனச் சர்வலௌகிகப் பிராமாணிகர்களானே கூறப்பெறும், ஆகலின் சர்வலௌகிக அநுபலம்ப விருத்தம்,

பிரளயத்திற் சகத்சற்பாவ கற்பனமாம் இரண்டாவதும் பொருந்தாதாம், சத்தேசௌ மிய சகத்தின் மூன்னிருந்தது" என்பதாதி சுருதிகளில், காரணகாரியங்களின் இருசத் தையிலங்கக் காரணும், ஒன்றே அத்விதீயம் என்னும் வாக்கிய சேஷிவிரோத மாதலின். ஆண்டிஃதாராய்ந்தும்.—காரியமேசத்து, அக்காரிய சத்வமே காரணத்தன்மையை யடை வுற்றுக் காரணத்தி லாரோபிதமென மறையறைகின்றதா ? அல்லது காரணமே சத்து, அச்சத்வமே காரியத்தில் ஆரோபிதமாம் எனச்சுருதி கூறுகின்றதா ? அல்லது சத்தே சத்து, அச்சத்தையே காரிய காரணங்களில் ஆரோபிதமெனவா ? அவற்றுள் அச்சாங் கியனுடைய போதமாகியவது ஆதியபாஷ அனுசாரியெனின்? அவ்விமூடபோதம்மயலே யாம், " திகழுமுவாக் காலாக்கு நாமமாத்திரம்விகாரம் " என்பதாதி காரியப்பொய்ம்மை யயற்சுருதி யநுகுணத்தன்மை யின்மையானும், காரணப்பொய்ம்மைச் சம்பாதகத் தன் மையாலே தற்சித்தாந்த பாதகத்தன்மையானும் என்றறிக. காரணங்களாய இனங்க ளுக்கே பொய்ம்மையாயின் அம்மகதாதி காரியம் எக்காரணங்களாலே எழுந்துவருங் கொல் ! காரணமிலதாகவே காரியத்தை யுண்டாக்கவே யொல்லாமையின். இதனாலே யிரண்டாவது மியையாதாம், காரியமிலதாகியவழி, அவ்வக்காரணத் தன்மைக்கும், அத னாற்பொருந்துந் தன்மை யுண்மையானே, நிரூபிக்க மூடியாமையின். இவ்வாறுகவே, பரிசேஷத்தால் மூன்றுவது கற்பமே சுருதிகருதியதும், கருத்துப்பொருத்தமும், ஆமெ னக்கவர்தல் இனிமையாம். ஆகலின் காரியகாரணபேத சத்தியத்தன்மைக்குச் சுருதிய சம்மதத்தன்மை யுண்மையின் தூர்ப்புத்தியையுடைய சாங்கியாதிகளானே சங்கற்பிக்கப் பெற்ற காரணகாரிய பாவத்தை = உபாதான உபாதேய பாவத்தை, தமது சககாரிரூப காரணாதிகளோடும் நிமித்தப் பிரயோஜனாதி பேதங்களோடும் வெகுதூரத்திற் பொய் யெனவிலக்கி, ஆதிமத்தியாந்த ரகிதமாய்ச் சன்மாத்திரமாய வஸ்துயாது அவிசிட்ட மாமோ அதுவேதான் பிரான் குண்டலம் போலும் ஜகத்தென நிற்கும், அயலொன்றின்றி மெனவறிக,

(ச.) காரியாய் = திருக்குரூபமாதலிற் சாக்ஷியாய், பிரத்தியக்ஷமாய்ப் பார்ப்பவன் சாக்ஷியெனப்படுவன், சமமாய் = பரிபூரணமாய், நொய்தாகி = சொச்சமாய், கலந்த விகற்பந்தீர் = பேத சூனியமான, அறிவில் = சிதான்மாவில், பரியாகின்ற = தங்கிய, உலகமெல்லாம = ஜகங்களனைத்தும், கண்ணடியிற் றெரியாகின்ற பொருள்போல், பற் றிபாய்தலாம் = பிரயோஜன மின்றியே பிரதிவிம்பிப் பனவாம், ஜகங்கள் ஜடமாதலி னலும் ஆன்மா அசங்கோதா சீனனுதலினலும், இச்சை இன்றியே யெனினுமொவ்வும். புரியாகின்ற = தோற்றுமாத்திர ரூபமான, உலகெல்லாம் = விசுவமனைத்தும், செறி காரணகாரியமின்றி = காரியகாரண பாவமின்றியே, பிரமத்திடை, பிரதிபைமாத்திர ரூபமாய்ப் பொலிந்திருக்கும். இஃதிரகசிய மென்பது கருத்து.

(ஸ்ரீ - வீர - அ - கை.) யாவுமே பிரஹ்ம சொரூபமா யிருத்தலின் தன்மயமேயாவு மென அச்சின்மயத்தைப் பாவிக்க வேண்டுமென வுபதேசித்தல்:—சொன்ன வென்பது.

சொன்னவுலகங்களுக்குருவந்தோன்றுகின்றமாத்திரமாம்
பின்னமின்றியாவையுமாய்ப்பேராவறிவாய்ப்பெருவிண்ணாய்
மன்னுபிரமமொன்றென்றேவருந்திமுயன்றுபாவிப்பா
யன்னநிலையேகைவந்தாலிவற்றுள்ளமறிவுருவாம்.

(ப - ரை.) சொன்னவுலகங்களுக்கு = பிரஹ்மத்திடை யிருக்குமெனச் சொல்லிய ஜகங்களுக்கு, உருவம் = வடிவம், தோன்றுகின்ற மாத்திரமாம் = பிரதீதிமாத்திரமே

யாம் அதிஷ்டானத்தினும் வேறுசத்தை யின்மையின், பின்னமின்றி = அகண்டிதமாய், யாவையுமாய் = சர்வான்மகமாய், பேராவறிவாய் = சதோதித சிற்சொரூபமாய், பெருவிண்ணுய் = பெரிதிற்கும் பெரிதான அம்பரமாய், மன்னுபிரமம் = இராகின்ற பிரஹ்மசொரூபம், ஒன்றென்றே = ஏகமென்பதாகவே, வருந்திமுயன்று = மிகக்கஷ்டப்பட்டு யத்தனித்து, பாவிப்பாய் = தன்மய சிந்தனஞ்செய்வாய், அன்னதிலேயே கைவந்தால் = அத்தகைய ஸ்திதியானது சாக்ஷாத்காரிக்கவரின், அலைவற்றுள்ளம் அறிவுருவாம் = சித்தம் சாஞ்சல்யத்தை விட்டுச் சாந்தியாகிச் சின்மாத்திரமேயாம்.

(ஸ்ரீ - வீர.) ஆரோபிதமாய்த் தோற்றுகின்ற சர்வதிருஷ்யங்கட்கும் அதிஷ்டான இருப்பினும் வேறு இருப்பின்மையின் முக்காலத்திய அத்தியந்தாபாவப் பிரதியோகித் தன்மையுண்மையின், சர்வான்மக அகண்டித சிதாகாச ஏகப்பிரஹ்மமே தன்வடிவமாயுளதென வருத்தப்பட்டேனும் முயற்சிசெய்து பாவிக்கின் உள்ளம் ஓடாது உபரமமுற்றுப் பிரஹ்மானந்தம் பெறுமென்பதாம். "பிரஹ்மமேயாய இவ்வமுதம்முன்னும்" என்பதாதி சுருதிகட்கும் பாணினியிற் சாமாஞுதி கரண்யமாதலின் ஈண்டே தாற்பரியம் ஆம். எக்காலிச் சகத்திற்கு அத்தியந்த அபாவமே யுளதாமோ அக்காற்பிரஹ்மமே இவ்வியாவுமாம், அயலொன்றிராதாம். இவ்வாறுகவே மறையால் வந்தவாதையினும் முன்னர்ஜகத் சம்பந்த கடபடாதி உலக்கைபடி முதலியவற்றுனே யுண்டாம் பிரத்வம் சங்களாளும், வஸ்து அந்தரவடிவமாக உண்டாம் அன்யோன்ய அபாவங்களாளும் எவ்வுபசாந்தியுளதாமோ, இது இப்போது இல்லை இது இதுவாகாது என்பதாகக் கவரப்பெற்ற அபாவரூப உபசமம் பஜிக்கின்ற தென்பதுயாதோ அது சாந்தியேயாய வுபசமமாகாதாம், மற்றேறு, மறைவினுனே அதற்குச் சக்ஷுராதி திருஷ்யத்தன்மையின் உபரமமேயாம்; சித்தத்தின் கண்ணே வாசனை வடிவமாய்ச் சாந்தியடையவே யில்லையாதலின். இந்தியாயம், முன்னின்மை முற்றுமின்மை கட்கும் முன்னுறுக; தற்சத்தையாலாதல், பிரஹ்மசத்தையாலாதல் இராகின்ற கூடாதிகட்குப் பாதமில்லாமல் எவ்விடத்துமே அசத்வங் கூடாமையின் மட்பிண்ட பூதலாதிகளில் அதரிசனத்திற்கு மறைவினுலும் பொருத்தமிருத்தலின் என்றுணர்க திருஷ்யம், பாவகாமகரும வாசனுதி விரைகளோடு உபசாமியமடையுமாயின் அப்போது இத்திருஷ்யத்திற் கத்தியந்த அபாவமென்னும் ஆத்தியந்திக உச்சேதமே பவிக்கும், சித்தமிருக்குமாயின் காமாதிபாவங்கள் கடத்தமுடியாமையின் சாந்தியடைவதே யில்லையாம், ஆகலின் திருஷ்யத்தகைமை ஞானமில்லாமல் சாமியமாவது யாண்டையதென்க; அதனுபசமம் துர்லபமேயாம். இதனுனே சமூலமதோ நாசாந்த திரளித்தபாதத்தினும் அயலாகச் சருவதிருஷ்ய அகர்த்த சம்க்ஷயரூப மோக்ஷத்தில் ஒருபாயம் இலதேயாம் ஆகலின் வருந்திமுயன்று தன்மயம் பாவிக்க வேண்டுமென வற்புறுத்தப் பெற்றதாம்.

(ச.) பின்னமின்றி = அகண்டிதமாய், யாவையுமாய் = சர்வான்மகமாய், பேராவறிவாய்ப் பெருவிண்ணுய் = சிதாகாசமாய், பார்ப்பாய் = இராமா நீபாவனைசெய்வாய் உள்ளம் = மனது, அலைவற்று = சாஞ்சல்லிய சாந்தியாய், அறிவுருவாம். (3)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்படிகசிலையினுள்ளே நயனதோஷத்தால் தோற்றுகின்ற ரேகைள்போலப் பதார்த்த பேதங்கள் இலவாம் என்றும். காரணமயவின்மையின் இலவாமென்றும், கூறி, தெளியச் சுக்கிர உபாக்கியானந் தொடங்கல்:—கீற்றென்பது.

(ச - அ.) பிரஹ்மம் ஒன்றென்றே பாவிப்பாய் என்று சொல்லப்பட்டது, பேதந் தோற்றுமிடத் தெப்படி அயிக்கியங் கூடுமெனில் உத்தரம்—கீற்றென்பது.

கிற்றுப்பலசே ரொருகற்போற் கிளருஞ்சகங்கள் செறிபிரமத்
தோற்றப்படுமா விரண்டென்னத் தொடர்காரணம் வேறிலாமையினு
லாற்றச்சகமென் றொன்றிலதா மறிவேயுளதா மனேத்துலகுந்
தேற்றப்பிரமத் திருக்குமிவைதெளிய வெள்ளிகதை கேட்பாய்.

(ப - ரை.) கிற்றுப்பலசேர் = ரேகை யுவரேகைகள் கிறைந்த, ஒருகற்போல் = ஒரு பெரிய கிலேபோல, கிளரும் சகங்கள்செறி = மூவுலகவிதம், பிரமத்தோற்றப்படும் = பிரஹ்மம் ஒன்றென்றேகாணவேண்டும், இரண்டென்னத் தொடர்காரணம் வேறிலாமை யினுல் = துவிதீயகாரண மின்மையின், ஆற்றச்சகமென் றொன்றிலதாம் = இவ்வுலகம் உற்பன்ன மில்லாததேயாம், அறிவேயுளதாம் = உலக முண்டென வுன்னுந்தான் மாத்திர மூளதாம், அனேத்துலகுந் தேற்றப் பிரமத்திருக்கும் = விருத்திகண் மயமானதிரு சியமியாவும் பூரணப் பிரஹ்மத்தில் பிரதிபைமாத்திர ரூபத்தைக் கொண்டிருப்பது போலிலகும், இவைதெளிய = அறுற்பன்னம் இவ்வுலகம் என்பதாதி யுளத்திற்காணும் பொருட்டு, வெள்ளிகதை கேட்பாய் = பார்க்கவ விருத்தாந்தத்தையாம் கூறச் சிரவணஞ் செய்வாய்.

(ஸ்ரீ - வீர.) பலரேகைகள் சேர்ந்த தொரு படிகக்கல்லேபோலத் திருசியங்கள் போலிந்து பூரிக்கும் பிரஹ்மசொரூபம் பிறங்கும், வேறொருகாரண மில்லாமையின் உண்டாமுலகமென வொன்றிலதாம், அவற்றைக்காணும் அறிவேயுளதாம், சர்வதிருசிய மும் அறிவுக் கயலாகாமல் இருக்கும், இப்பொருள் நன்றகத் திடமாதற்பொருட்டுச் சுக்கிர உபாக்கியானஞ் சொல்லக் கேட்குதி: திருசியங்கள் உண்டாவனவுமல்ல, ஒழிவனவு மல்ல, வருவனவுமல்ல, போவனவுமல்ல, மகாசிலைகளில் லேகைகளின் சந்நிவேசங்கள் போலும் அசலங்களாம் தாளுகவே நிருமலமாந்தன்னில் இச்சர்க்கங்கள் இலங்குகின் றனவாம், ஆகாயபாகங்கள் ஆகாயத்திற்போலும், நிராகிருதியில் நிராகாரங்கள் போலும், எனத்திருஷ்டாந்த பாகங்கள் தனிச்சத்தை யில்லாமையிற் கோடத்தக்கனவாம். உதய சகிதா அஸ்தமய ஆரம்பமாமிச் சகத்துக்கூறிய திருஷ்டாந்தப் பிரகாரம் அநந்த சாந்த வத்வைத விஞ்ஞான கனமேயென விளிந்ததாம். இவ்வாறுகவே சககாரியிலதாகக் கருத்தா விருந்தபோதினும் உற்பத்தியாதி யசித்தியாதலின் சாங்கியர் தங்கற்பனே யுன்மத்த சேஷ்டைபோலு மாமென்பது துணிபாம். அறிந்தவனுக்கிது சாந்த அவ்யய கேவலப் பிரஹ்மமேயாம், அறியாதவனுக்கோ அநேக புவனங்களோடு கூடியதுபோல விளங்கும் தடஸ்தத் தகைமையதாகவேனும் அறியப்பெற்றீர் பிரஹ்மம் மேன்மைய தாமோ வெனின் ? இன்றும், எவ்விஞ்ஞாதைமா ஜீவனெனப் பெயரிய பிரத்தியக் காத்மாவோ, யாவன் விசுவத்தின் விரையாய்க் காரணமாய்ப் பஞ்சகிருத்தியனும் ஈச்சுரனுவனே, அவ்விருவரும், பரமார்த்த திருஷ்டியானே பரிசோதனஞ்செய்து பார்க்குங்காற் பரிபூர்ணமான பிரத்தியக்கேகரச சிதாகாசமாத்திரம் பிரஹ்மமேயாம் பாகியம் அந்தரமென்னும் இருபேதவுபாதிகளும், பிரஹ்மத்தினின்றுமே யுண்டாயின வாம் எனக்கேட்கப் பெறுதலின் யாது எதினின்றும் உண்டாமோ அது அஃதேயாம்; என்பதும் " அக்காரணப் பிரஹ்மத்தினின்றும் காரியமாய ஜகத்திற்கு அனன்னியத் தன்மைஜேயாம் அதாவது தனிச்சத்தை யின்மையாம். எங்ஙனமெனின் " திகழும்வாக் கிணுற் றொடங்கிய நாமமாத்திரம் விகாரமாதாகும், புகழுமண்ணதே சத்தியமிதன் மயம் பொலிவுறு முலகாரும், நிகழுமாங்கது சத்தியமாத்துமா நீயதுவேயாவாய், அகழுமிங்குள வீதெனுமனேத்துமே யறிவதாஞ் சிவமாமே " என்பதாதி ஆரம்பணசப்தாதிகளால்; என்னும் வையாசிக நியாயத்தானே தெளியலாம், ஆகலின், வேத்தியம் யாவுமேதன்னுட்

விளக்கம்

போதத்திற் சம்போதமாத்திரம்சுத்தம் சின்மாத்திரமெனவறிந்து கொள்க. இதுதெளிய ஐந்தவலவணை கற்பனைபோலும் சுக்கிர சொர்க்கபோக கற்பனையையும் கூறக்கேட்குதி.

(ச.) கிற்றுப்பலசேர் ஒருகற்போல் = பெருத்த மலக்கல்லானது கரிதரகராதி சித்திரவிசித்திர தேவாலயாதி ரூபமாய்த் தோற்றப் படுவதாகப் பேதஸ் புராணமாயிருப்பினும் உண்மையாகஒன்றேயாவதுபோல், இளருஞ்சகங்கள் செறி = திரைலோக்கிய ரூபமாக விஸ்தாரமாய் விவர்த்தமாயினும், பிரமந்தோற்றப்படும் = பிரமமொன்றேயென நிச்சயிக்கப்படும், ஆல், அசை. சகமென்றொன்று = இச்சகத்தென வோர் பொருள் இரண்டென்னத் தொடர்காரணம் வேறிலாமையினால் = பிரஹ்ம வியதிரிக்தமாய் இரண்டாவது காரணமின்மையால் பாவரூப காரியாரம்பகமான சமவாயி அசமவாயி நிமித்தங்களினது அசம்பவமான ஏதுவினால் ஆற்றவிலதாம் = உண்டானதே யன்றும், அறிவே யுளதாம். ஆயிற்றோற்றுவது எப்படிக் கூடுமெனில் உத்தரம், தேற்றப்பிரமத்து = வியாபகமான பிரஹ்மத்தில், அனேத்துலகும் தோற்றுமாத்திர ரூபமாயிருக்கும், பிரஹ்மத்தின்கண் அத்தியாசமாதலின் மருமரீசைகையில் நதிபோல் பிராதிபாசிகமாயிருக்கின்றதென்பது பொருள், இவைதெளிய = இந்த வீசுவந் தோற்றுமாத்திர ரூபமென்பதும் உண்டானதே யின்றென்பதும், தெரிதற்கு, வெள்ளிகதை கேட்பாய் = சுக்கிரவிருத்தாந்தத்தை இராகவா நீ கேட்பாய். (4)

(ஸ்ரீ - வீர - அ-கை.) ஹேபகவந் ! பிருகுபுத்திரனுக்குச் சுவர்க்கபோக மூண்ணும் விழைவால் யாங்ஙனம் அப்சரஸ்போக ஆசைவந்தது, அதன் பொருட்டுச் சொர்க்காதி செல்லுகையும் ஐன்மாந்தர முடைமையும் யாங்ஙனமுற்ற தென்பதை யருளிச்செய்தல் வேண்டுமென ஸ்ரீ இராகவர் வேண்ட அதற்கு ஸ்ரீ வசிஷ்டபகவான் அருளல்—முன்னமென்பது.

முன்னமொருநாட் பிருகுமுனி முதுமந்தரமால் வரைச்சாரல்
மன்னுதவஞ் செய்யுழிய வன்றன்மைந்தன் மதிமான்மதியினியோன்
றன்னதாதை கழற்பிரியான் றனிமெய்ஞ்ஞான மஞ்ஞான
மென்னுமிருபார்வை யினடுவே யியங்காநின்ற பெரும்பதத்தோன். (5)

செறியந்தரத்தே நிற்கின்ற திரிசங்குவைப் போற்சுக்கிரனு
மறிவோடறியா மையினடுவே யமருநாளி லவன்றுதை
பிறிவில்சமாதி யுறநிற்பப் பிரியாவெள்ளி தனியிருந்து
வெறியவிசும்பை நோக்குதலும் விண்மாதோருத்தி வரக்கண்டான். (6)

(ப - ரை,) முன்ன மொருநாள் = முன்னொருகாலத்தில், பிருகுமுனி = பகவான் பிருகு, முதுமந்தரமால் வரைச்சாரல் = அநேகமகிமை வாய்ந்து பெருத்திரா நின்ற மந்தரசைலத்தின் தாழ்வரையில், மன்னுதவஞ் செய்யுழி = கோரமான தவத்தைச் செய்துகொண் டிருந்தபோது, அவன்றன்மைந்தன் = அம் மகாமுனிவனது குமாரன் மதிமான் மதியினியோன் = மகாமதியை யுடையவன் பூர்ணசந்திர அழகன், தன்னதாதை கழற் பிரியான் = தன்னுடைய தந்தையின் திருவடியைப் பூசித்துக்கொண்டே யிருப்பவன், தனி = ஒப்பற்ற ஒருவன், மெய்ஞ்ஞான அஞ்ஞானம் என்னும் இருபார்வையின் நடுவே யியங்காநின்ற பெரும்பதத்தோன் = வித்தை யவித்தையென்னும் இரண்டு திருஷ்டிகளின் இடையிலிருந்து எய்தாத மகாபதத்தினன்;

செறியந்தரத்தே நிற்கின்ற = பொருந்தா நின்ற பூசுவர்க்கமத்தியி லிருக்கின்ற, திரிசங்குவைப்போல் = திரிசங்குவென்னும் அரசனைப்போல, சுக்கிரனும் = பிருகு

மைந்தனும், அறிவோடறி யாமையினடுவே = ஞாளஞ்ஞானங்களின் மத்தியில்; அமரு நாளில் = உறையுங்காலத்தில், அவன்தாதை = அவனுடைய தக்தை, பிறிவில் சமாதி யுறறிற்ப = நிருவிகற்ப சமாதியில் நீள்போழ் தழுந்தியிருப்ப, பிரியாவெள்ளி தனியி ருந்து = நீங்காத சுக்கிரன் எகாங்கியா யிருந்துகொண்டு, வெறிய விசும்பை நோக்குத லும் = நிருமலமான ஆகாயத்தைப் பார்த்தலும், விண்மாதொருத்தி வரக்கண்டான் = தேவாங்கனையாகிய மடந்தையொருத்தி வரப்பார்த்தான்.

(ஸ்ரீ - வீர.) ஹே இராகவ! முன்னர் சானுவில் நடந்த பிருகுகாவர்களின் சம்வாத ரூப விருத்தாந்தத்தைக் கூறக்கேட்குதி! பூர்வம் பூஞ்சோலைகணிறைந்து சூழ்ந்த மந்தர சைலத்தின் ரூழ்வரையில் ஸ்ரீ பகவாளுகிய பிருகுமகாமுனிவர் ஒருவர் கோரமான பெருந்தவத்தைச் செய்துகொண் டிருந்தனர். திவ்யவருட சகத்திரம் நிருவிகற்பமாய்த் திருகிய நாட்டமே யின்மையின் தவம்கோரமெனப்பட்டது சுக்கிரனென்னும் அவரது மைந்தன், மகாமதி யுடையவனுய்த் தேஜஸ்வியாய், பூர்ணசந்திரப்பொலி, பிரயையனுய், பிரகாசித்துக்கொண் டிருக்கும் பேரருக்களுப் பாலகளுகத் தனது தந்தையின் பாத கமலங்களைப் பரவிவாழ்ந்து கொண்டிருந்தான். பிருகுமுனிவரோ அவ்வுயர்ந்த வனத் திலேயே சமாதியிலேயே வீற்றிருந்தனர், சுக்கிரன் பாலகளுனபடியால் அதேவித விளையாட்டுகளுடன் கூடியிருந்தனன், பாரமார்த்திக ஆத்மதத்வதரிசனமாகிய வித்தியா திருஷ்டி, பாமராப் பிரசித்த ஜகத்சத்யதா தரிசனமாகிய அவித்தியா திருஷ்டி, என் னும் இரண்டன்மத்தியில், உள்ள மகாபதத்தை யடைந்திருந்தனன் எனினும், மத்தியில் நின்றபடியால் அடையாத மகாபதத்தினன் எனினும் அமையும், மத்தியிலுள்ளதுமொரு மகாபதமாதலின்; தேவுலக பூவுலகமத்தியில் ஸ்ரீ விசுவாமித்திரரானே நிர்மிக்கப்பெற்ற சுவர்க்கத்தில், திரிசங்குவாகிய ராஜரிஷி யிருந்ததேபோல இருந்தனன். அதனுனே இராகாதியால் ஆகுலமுற் றிருந்தனன். தனது தந்தையானவர் நிர்விகற்பமான சமாதி யில் வீற்றிருப்பத் தானுருகால், சத்துருக்களைச் சயித்த பூபாலனைப்போல யாதொரு கவலையு மில்லாமல் விடயாந்தரத்தில் நாட்டமில்லாமல் ஏகாந்தத்தே இருந்தனன். பாற் கடற்கடைய அதன் மத்தியிலெழுந்த பகவதி லக்ஷ்மிதேவியைப் பகவான் ஜனர்த்தனன் கண்குளிரக் கண்டதேபோல், மேலே நோக்கியபோது ஆகாசமார்க்கமாய்ச் செல்லா நின்ற பாற்கடலினின்றும் உண்டாகிய அப்சரசைக்கண்குளிரக் கண்டனன். ஸ்ரீதேவி யைப்போலவே அமரமங்கையரும் பாற்கடலினின்றும் உண்டானது பிரசித்தமாதலின் உபயவிசேஷணமாக வுரைக்கப்பெற்றது.

(ச.) இயங்காதின்ற = இசைத்துநிற்கும்: திரிசங்குவைப்போல் = திரிசங்குவென் னும் ராஜா விசுவாமித்திர மகிமையாற் சண்டாள தேகத்தோடேயே சுவர்க்கத்தை யடைந்தவனுய்த் தேவர்களாற் றள்ளப்பட்டுச் சுவர்க்கபூமிகளின் மத்தியி லிருப்பது போல, சுக்கிரனும் பிரஹ்மபாவத்தைப் பெறுமையினுல், வித்தையவித்தைகளினது மத் தியில், அமருநாளில் = இருக்குங்காலத்தில், பிறிவில்சமாதி = நிர்விகற்பசமாதி, வெள்ளி சத்துருவைச் சயித்ததராதிபன்போல், தனியிருந்து = ஏகாந்தத்திலிருந்து.

(ஸ்ரீ - வீர - அ - கை.) தேவாங்கனையின் உல்லாசத்தைக் காணுதலும் மனோராச் சியஞ் செய்தலும் வர்ணித்தல்:—மந்தாவென்பது.

மந்தா நிலத்தா லசைகின்ற மந்தாரஞ் சூழ்மலர்க் குழலா
டந்தா வளத்தின் பிடிபோலத் தனியேவரலு மெதிர்நோக்கிச்
சிந்தா வசனு யவள்வடிவைத் தியானித் திருகண் முகிழ்த்திருந்து
மூந்தா நின்ற வேட்கையினுண் முடிவின் மனோராச்சிய முயன்றன். (7)

(ப - ரை.) மந்த அகிலத்தால் அசைகின்ற = மெதுவான தென்றலினாற் சலியா நின்ற, மந்தாரமலர்சூழ் குழலாள் = மந்தாரபுஷ்ப மாலைகணிறைந்த அளகத்தை யுடையவள், தந்தாவளத்தின் பிடிபோல = பெண்யானைபோல, தனியேவரலும் = அவண் மாத்திரமாத வருவதை, எதிர்நோக்கி = முன்னிலையிற்கண்டு, சிந்தாவசனுய்=உல்லாச தாலமன்த்தனுய், அவள்வடிவைத் தியானித்து = அவ்வங்கனையின் வடிவத்தையே தியானஞ்செய்து, இருகண் முகிழ்த்திருந்து = இரண்டு நேத்திரங்களையும் மூடிக் கொண்டு, முந்தாகின்ற வேட்கையினுல்=முதிர்ந்தெழுந்த ஆசையினுல், முடிவில்மனே ராச்சிய முயன்ருன்=அந்தமில் மனேராச்சியஞ் செய்யத்தொடங்கினுன்.

(ஸ்ரீ - வீர.) மந்தாரமாலை யலங்கரித்தவளாய் மந்த அகிலத்தாற் சஞ்சல அளகபாரத்தையுடையவளாய், ஹாரஜங்காரி யழகு நடையளாய், நிதம்பத்திற்குங் காற்றுக்கும், நறுநாற்றம், நாட்டினளாய், லாவண்யத் தருக்கொடியாய், மதோன்மத்த விழியளாய் வந்த காந்தையைக்கண்டு அவனுடைய மனமானது மகா உல்லாச சாஞ்சல்யத்தையடைந்தது. ஆகாயக் கவர்ச்சிகொற்று நீங்கினும் அப்பிரதேசத்திற்கு நீன்போது சுகந்தித்தன்மை தோற்றுவதற்காம் ஆண்டே ஆமீலித்தலோசனனுய், அவளே மனத்தாற் றியானித்து, கூறும்வகையாக மனோராச்சியஞ் செய்யத் தொடங்கினுன்; அவ்வசனவின் அச்சிந்தனே யாகத்தையும் மறந்திருந்திடுமாறு.

(ச.) மனேராச்சிய முயின்ருன் என்றதன்மேற் சொல்லப்பட்ட சுக்கிரவிருத்தாந்தம் மானதமே யென்பது பொருள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அம்மனே ராச்சியத்தையே யினிது தெரிவித்தல்:— பொன்—இமையென்பன,

பொன்னுட்டணங்கேயி வளந்தப் பொன்னுட்டியாணும் போய்ப்புகுந்தே
னின்னுட்டமரிவர்போற்ற வெழில்கூர் சிங்காதனத்திலவன்
மின்னுற்செறியு முகிலென்ன வேந்தாமிவனைச் சூழ்ந்துமதன்
றன்னுற்களிக்கு மரம்பையர்ஞ் சமுகமிவையென்று ளத்துணர்ந்து. (8)

இமையோரிறையை யிவன்வணங்க விவனேயவனு மிறைஞ்சியபின்
னமையாவின்ப விண்ணுட்டி லகலாதுலவு மவ்வளவிற்
சுமைவாழ்கொங்கை யரம்பையருட் சொன்னவவண் முன்ரேன்றுதலுங்
கமையாவன்பாற் கண்களிப்பக் கண்டானவருங் கண்ணுற்ருன். (9)

(ப - ரை.) பொன்னுட் டணங்கேயிவள் = சுவர்க்கத்திலுள்ள தேவாங்கனேயே இக்கோமளாங்கி, அந்தப் பொன்னுட்டு இயானும்போய்ப் புகுந்தேன் = அந்தச் சுவர்ணமய வுலகத்தில் சுக்கிரனுகிய யானும் போய்ப் பிரவேசித்தேன், இன்னுட்டமரர் இந்நாட்டமரர் = இனிமையே வாய்ந்த இந்த நாட்டுத்தேவர், ஆகிய, இவர் = இத்தேஜோமயர், போற்ற = வணங்க, எழில்கூர் = கவின்வாய்ந்த, சிங்காதனத்தில் = அழகிய சிம்ஹாசனத்தில், வீற்றிருக்கும், இவன் = இத்தேவேந்திரன், வேந்தாம் = சதுர்த்தச புவனநாயகன் ஆவன், இவனைச் சூழ்ந்து = இத்தேவநாயகனே நெருங்கி, மின்னுற்செறியும் முகிலென்ன = மின்னலிளுலே ஆலிங்கிக்கப்பெற்ற மேகமொப்ப, மதன்தன்னுற் களிக்கும் அரம்பையர்தம் சமுகம் இவை=மத, மன்மதமா தங்கிகண் மருவிய மகிழ்பொங்கு கூட்டமிவை, என் றுளத்துணர்ந்து = என்பதாக மனத்தானே சிந்தனஞ்செய்து. இமையோர் இறைஞ்சியிவன் வணங்க = தேவநாயகனைச் சுக்கிரன் நமஸ்கரித்தலும், இவனேயவனும் இறைஞ்சியபின் = சுக்கிரனைத் தேவேசனும் நமஸ்கரித்தனன் அதன்

பின், அமையாவின்ப விண்ணுட்டில் = அடங்கா ஆநந்தம் நிறைந்த தேவ உலகத்தில், அகலாதுலவும் அவ்வளவில் = நீங்காது சுற்றிப்பார்க்கும் அச்சமயத்தில், சுமைவார் கொங்கை அரம்பையருள் = கனத்து நிமிர்ந்து கச்சணிந்ததனம் வாய்ந்த அமரமடந்தை யருள், சொன்ன அவள்முன் தோன்றுதலும் = கூறிய அம்மாது சந்நிதிப்படலும், கமையா அன்பால் கண்களிப்ப கண்டான் = அடக்கமுடியாத காதலோடும் நேத்திரா நந்த மிகப்பார்த்தான், அவளும் கண்ணுற்றருள் = அத்தேவமாதும் அவ்வாறே கண் குளிரக் கண்டனள்.

(ஸ்ரீ - வீர.) இந்த முன்னிகழும் தேவாங்கனை என்னும் பின்றொடரப் பெற்றவ ளாய் விண்ணில் சகஸ்ரநயன இந்திரனுடைய ஆலயமாகிய சுவர்க்கத்திற்குச்செல்லுகின் றனள், ஆலோலசுர சுந்தரமாய சுவர்க்கத்தையிவளடைந்தனள் இவளைப்பின்றொடர்ந்த யானும் அடைந்தேன். மதமன்மத மத்தாங்கிகளாகிய இவர்கடாம் அச்சராங்கனைகள், தேவேசரனுகிய இந்திரனை, வனக்கொடிகள் வனத்தைச் சேவிப்பனபோல இனிது சேவிக்கின்றார்கள் இந்திரநீல சமூக ரூபங்களாகவும், சந்திரகாந்த சமூகசதிருசங்களாக வும், உள்ள புட்பங்கணிறைந்த கற்பகவிருக்ஷங்கள் இவை, இவற்றிற்றொங்கும் மொக்கு களும் பிஞ்சுகளும் பூங்கொத்துகளும் சிந்தாமணிகளேயாம்; இவற்றிலுள்ள பக்குவப் பழக்கொத்துகள் உன்னத தந்தங்களைப்போல அழகுசெய்து கொண்டிருக்கின்றன. ஈண்டிப்போது மூன்று உலகத்தையும்படைக்கும் இரண்டாவது பிரஹ்மாவிற்குச்சமான மாகச் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவேந்திரனை யான் வணங்குகின்றேன்; எனச் சிந்தித்தினிது சுக்கிரனுல் மனத்தினாலேயே சகிப்தினவணங்கப் பெற்றான், அவனாலும் இவன் ஆண்டு விண்ணில் இரண்டாவது பிருகுவைப்போல வணங்கப்பெற்றான் பின் னர் ஆதரவோடும் எழுந்து சுக்கிரன் சுக்கிரனைப் பூசிக்கப்பெற்றான், இந்திரன் சுக்கிர னது கையைப்பிடித்துச சமீபத்தமைத்து,வந்து உட்காரவைத்துக் கூறுவதாவது: ஹே நாதனே ! உனது வரவினாலே யான் தன்னியன் ஆயினேன், ஹே சுக்கிர இச்சொர்க்க மானது மிகவும், சோபிக்கின்றது, ஈண்டே வெகுகாலமிருக்க விரும்புகிறேன் என்பதா கத் தேவேந்திரன் சுக்கிரனை நோக்கி வேண்டிக் கொண்டனன். கூறிய மனோராச்சிய வகையினாலே சுக்கிரன் விபுதர்கள் வசிக்கும் சுவர்க்கத்தைத் தன்னுடைய புண்ணிய விசேஷ சாமர்த்தியமாகிய தேஜசால் அடைவுற்று மரணதுக்கம் யாதொன்று மின்றியே பழைமையான தனது பாவத்தை மறந்துவிட்டனன். அந்தச் சபைமண்டபத்தின் பக்கத்தில் முகூர்த்தகால பரியந்தம் வீற்றிருந்து சுகாதிசயத்தால் எப்பக்கத்திலும் மகிழ்ந்தவனாகி, சுவர்க்கசஞ்சரணசீல தேவதைகளானே உற்சாகிக்கப் பெற்றவனாகிச் சுவர்க்கத்தைச் சுற்றிப்பார்க்க எழுந்து சுற்றிவரும்போது ஓரிடத்தில், காந்தைகளின் மத்தியிற் கூந்தி யுடனிருந்த தேவாங்கனையாகிய மூன்றாண்டை மான் கண்ணியைப் பார்க்கவன் விபினத் துள்ளிருந்த நூதலதையைப் போலும் கண்டெனித்தனன் அவ்வமரமங்கையும், அந்தப் பிருகுமைந்தனை நோக்கிப் பரவசமாயினள்; ஒளிராநின்ற லோலவிலாசத்தோடு கூடிய ஆகிருதியையுடைய அவளைப்பார்த்துச் சுக்கிரனும் பரவசமாயினன். (8-9)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இருவரும் உருகியவழி சம்போகத்திற் குரிய முயற்சி செய்தல்:—இருவர் என்பது.

இருவர் விழியுநினை வுகளுமேகமாக வுறப்பற்றி
யுருகுமளவிற் சங்கற்பத் தொன்றும் பிழையா வுயர்வெள்ளி
கருகுமிருண் மூடுகவென்று கழற்பித்திடலுங் கற்பாந்தப்
பருவம்போலு மிருள்சூழப் பலருமகன்றுர் பலதிசையும்.

(ப - வை.) இருவர் விழியும் நிணவுகளும் = இரண்டு பேர்களுடைய நேத்திரங்களும் எண்ணங்களும், ஏகமாக உறப்பற்றி = ஒன்றாக அழுந்திமூழ்கி, உருகும் அளவில் = கரைந்துருகியபோது, சங்கற்பத் தொன்றும் பிழையாவுயர் வெள்ளி = சத்தியசங்கற்பத்தோடு கூடிய உயர்ந்த தவமுற்ற சுக்கிரன், கருகுமிருண் மூடுக வென்று கற்பித்திடலும் = யாவற்றையு மறைக்கும். பேரந்தகாரம் வியாபிக்குக என்று சங்கற்பித்த மாத்திரத்தில், கற்பாந்தப் பருவம்போலும் = கற்பாந்தகாலம் போலும், இருள்சூழ = அந்தகாரம் ஆச்சாதனஞ்செய்ய, பலதிசையும் பலரும் அகன்றார் = தத்தமது இச்சைவய முற்ற திசைகளில் யாவரும் போயினர்.

(ஸ்ரீ -வீர.) அத்திபத்தம் அபேதமாய் அன்னியோன்னியம் ஆன்றசத்தம் வாய்ந்த அவர்களது, பிரேமை வதிசயத்தானே நன்குமலர்ந்த சோபையானது, பிராதக்காலத்தில் அருக்க அம்புஜங்களினது சோபையையே ஒத்திருந்தது, அத்தகைய அவளைச் சுக்கிரன்கண்டு எண்ணிய எண்ணத்தை முடிக்கவேண்டு மென்னும இச்சையை யுடையவனுகிப் பெருந்தவத்தின் பயனுகியசத்திய சங்கற்பவான் ஆனபடியினலே, சர்வப்பிராணிகளையும் சங்கரிக்கும் உருத்திரமூர்த்தி பிரளயகாலத்தில் ஒப்பத்தமத்தைச் சங்கற்பித்தனன்; சங்கற்பித்தலும் சுவர்க்கபோகமாகிய நந்தனமானது திமிரால் ஆகுலமுற்றது; உறவே அவளுடைய சகிஜனங்கள் யாவரும் அவளைவிட்டுப் பிரிந்து தாங்கள் வாஞ்சித்த திசையிற் சென்றனர்.

(ச.) உருகும் அளவில், வெள்ளி, அவளோடு சம்போக சங்கற்பநிறைவேற முயற்சித்தவனும் அதற்கு யோக்கியகற்பனைக்கு கற்பித்திடலும் = உருத்திரன் சம்மாரத்தைப் போல, சங்கற்பிக்கவும், இஷ்டமுள்ள, பலதிசையும். அந்த அப்சரசானவள் தன்னிடத்தில் மிகவும் ஆசையடைந் திருப்பதைக்கண்டு தன்னெண்ணம் நிறைவேறமுயன்றவனும் அவளையநுபவிக்க யோக்கிய காலகற்பனையின் பொருட்டுத்தமத்தைச் சங்கற்பித்தனன் என்பதாம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அமரமங்கை யிவனை வந்தணைதலும் இருவரும் சுகித்தலு முணர்த்தல்:—அன்னள் என்பது.

அன்னளிவனை வந்தணைய வழகார்தருநீழலி லொருபாற்
றுன்னமுயங்கி யோருயிராய்த் துன்பமில்லா வின்பத்தி
னன்னளாகச் சதுரியுக நாலுநாலு மடந்ததற்பின்
முன்னம்புரிந்த தருமமெலா முடியுமுடியு மெனுங்கருத்தால். (11)

(ப - வை.) அன்னள் = அந்த அப்சரசானவள், இவனை வந்தணைய = வந்து இவனையாலிங்கனஞ் செய்துகொள்ள, அழகார் தருநீழலில் = கவின்வாய்ந்த கற்பகத்தருவின் சாயையில், ஒருபால் = ஓரிடத்தில், துன்னமுயங்கி = காடாலிங்கனஞ் செய்துக் கொண்டு, ஓருயிராய் = இருதேகமாயினும் ஒருமனமுற்றவராய், துன்பமில்லா இன்பத்தில் = சிறிதுந்துயர் உறுத சிற்றின்பத்தில், நல்நாளாக = ஆனந்ததினங்களாக, சதுர் யுகம் நாலும் நாலும் கடந்ததன்பின் = எட்டுச் சதுர்யுகங்கள் அவளோடுங் கழிந்ததன் பின்னர், முன்னாம் புரிந்த தருமமெலாம் = பூர்வம்யாம் செய்த அறங்கள்யாவும், முடியும் முடியும் எனுங்கருத்தால் = எஞ்சுதலின்றி முடிந்துவிட்டது என்னும் அனுசந்தானத்தால்.

(ஸ்ரீ - வீர.) அத்தீர்க்க சஞ்சல அபாங்கியானவள் மதனவேதனை மிகுத்தவளாகிப் பிருகுமைந்தனது சமீபத்தில் மயூரிமேகத்தை யடைவுற்றதே போலத்தானே வந்த

டைந்தனள். இனிதாகக் கற்பிக்கப்பெற்ற படிகமகா மண்டப மத்தியிலுள்ள பரியங்கத் தில் இருவரும் ஆநந்தித்தபின் கற்பகலதைக் குஞ்சங்களிற் சிறிது விசிராந்திபையடைந் தார்கள். இந்தப்பிரகாரம் சித்தவிலாசத்திலுலே நெடுங்காலம் கற்பிக்கப்பெற்ற பிரி யப்பிரணயங்களோடு பார்க்கவனுக்குப் பரமசந்தோஷப் பொருட்டு இனிது சமாகம மானது உண்டாயது. சுக்கிரன் தனது விலாசினியுடன் அந்தப்புரந்தரபுரத்திற்றனே சுகமாக இருந்தனன்; இங்ஙனம் அம்மான் கண்ணியுடன் எட்டுச் சதுர்யுகங்கள் கழிந்த தும் புண்ணியகூய அநுசந்தானத்தாற்.

(ச.) மயில் நீர் கொண்ட மேகத்தைப்போல வந்தணைய, அழகார்தரு=கற்பகதரு, அவளோடுதானும், துன்னு, கருத்தால்=அநுசந்தானத்திலுல்,

(ஸ்ரீ - வீர - அ - கை.) இப்போது அமரலோகத்தினின்றும் பூமண்டலமடைந்த சுக்கிரன் ஜன்மபரம்பரையை யடைந்தான் எனல்?—வீழ்ந்தான்—அன்னன் என்பன.

விழுந்தான் புவனமண்டலத்தின் மெய்யைமறந்தா னிவன்சீவன்
கொழுந்தார் மதியின்கலேசேர்ந்து குளிர்ந்தபனியாய் நெல்லாகிச்
செழுந்தா ணெல்லைத்தசார்ணதேச மறையோன் சமைத்தருந்த
வெழுந்தாதுவு மாய்ச்சுக்கிரன் வந்திவன்பாரிணையின் மகவானன். (12)

அன்னன் முனிவர் தொடர்ச்சியினுலிய தவமோர் மனுக்காலம்
பொன்னூர் வரைசூழ்வனத்திடையேபுரிந்தானவனங் கொருபெடைமான்
றன்னுலொருசேய் நரவடிவாய்ச் சாதனனு னவனன்பாற்
பின்னுநின்ற பேதைமையாற் பேராவண்மை நிலேபெயர்ந்தான். (13)

(ப - ரை.) விழுந்தான் புவனமண்டலத்தில் = அவனிமண்டலத்தில் வீழ்ந்தனன், மெய்யைமறந்தான் = ஆகத்தை மறந்தான், இவன்சீவன்=இவனுடைய உயிர், கொழுந் தார் மதியின் கலேசேர்ந்து பிரகாசமிக்க சந்திரனுடையஜோதியை அடைந்து, குளிர்ந்த பனியாய் = சீதள நீகாரமாய், நெல்லாகி = சாலித்தன்மையை யடைவுற்று, செழுந் தாள் நெல்லை = கொழுத்த தாள்களேயுடைய அந்தநெல்லை, தசாரணதேச மறை யோன் சமைத்தருந்த = தசாரணதேசத்துப் பிராஹ்மணன் பக்குவஞ்செய்து அயில, எழுந்தாதுவுமாய் = சாரமாயுற்ற சுக்கிலமாய், சுக்கிரன்வந்து = பார்க்கவன் கருப்பத் தடைந்து, இவன்பாரிணையபால் மகவானுன் = துவிஜோத்தமனது மனேவியினிடத்தில் தநயனுயினன்.

அன்னன் = மைந்தனுய் வந்த அவன், முனிவர்தொடர்ச்சியினுல் = முனிவர்தஞ் சம் சர்க்கத்திலுல், அரியதவம் = உக்கிரமான பெருந்தவத்தை, ஓர் மனுக்காலம்=ஒரு மந்வந்தர பரியந்தம், பொன்னூர் வரைசூழ் வனத்திடையே = சொர்ணமயமாய மேரு கிரியைச் சுற்றியுள்ள வனத்தின்கண்ணே, புரிந்தான் = நோற்றனன், அவன் அங்கு ஒரு பெடைமான்றன்னுல் = அம்மறையவன் மைந்தனுக்கு அவ்விடத்தில் ஒருபெட்டை மானுல், ஒருசேய் நரவடிவாய்ச் சாதனுனன் =ஒரு குழந்தைமனுடாகிருதியா யினித்தண் டாயிற்று, அவன் அன்பால் பின்னுநின்ற பேதைமையால் பேராவண்மை நிலேபெயர்ந் தான் = அம்மறையவன் அக்குழந்தையின் நிநேகத்தால் அக்குழந்தைக்குத் தனமாயு ளாதி வேண்டுமென்று தொடர்புற்ற மோகத்திலுல் சத்தியமான நிலேமையைக் கைவிட் டான்.

(ஸ்ரீ - வீர.) அமரவுலகத்தினின்றும் அவனிமண்டலத்தில், பதனப்பிரதி சந்தான பயத்திலுலே திவ்யசரீரக்கரையப் பெற்றவனுய், அம்மானினியோடு கூடவே, வீழ்ந்த

னன்; சமஸ்த அங்கங்களும் நிரவீபாவத்தால் விச்சின்னமாகி, தேவர்களாலே பலாற் காரமாய் விமானம் நந்தனவனம் அலங்காராதி உபயோகாநந்த சாதனம் முதலன அப கரிக்கப் பெற்றவனுகி, சித்தாபரவசனுகி, போரிற்பொன்றிய பட்டனேபோல, கீழேவீழ்ந் தனன். தீர்க்கமான சிந்தையோடும், அவனியில் வீழ்ந்த அவனுடைய நெகிழ்ச்சிமயமாய தேகம், பெருஞ்சிலையின் மேல்வீழ்ந்த அருஞ்சலத் தாரையேபோல நூறுபாகுபாடாய்ச் சிதறிப்போயது. ஈண்டு மெய்யையிறந்தான் என்றேனும் இழந்தான் என்றேனும் பாட மிருத்தலே நலம். மூலமும் மிருதுமாகதா, எனவே பிரிக்கவேண்டும். தேகங்களிரண் டும் சிதறப்பெற்ற அவ்விரண்டு இலிங்கதேகங்களும் மிருந்ததுக்கத்தோடு கூடினவாகிக் கூண்டைவிட்டு வெளிப்போந்த விகங்கள்போல விண்ணிற் சஞ்சரித்தன. அந்த வியோ மத்தில் சந்திரசம்பந்தமான ரஸ்மீஜாலத்தை அச்சித்தங்கள் அடைவுற்றன, விரைவில் ஹிமஜலத் தன்மையை யடைவுற்றுப்பின் சாலித்தகைமையை யடைந்தன. தசார்ண தேச விசேடத்திருந்த துவிஜோத்தமனுனவன் அச்சாலியைப் பக்குவப்படுத்தி யுண்ட னன், அச்சுக்கிரசுக்கிரமென்னும் ரேதஸ்தகைமையை யடைந்து அவன்மனைவிக்கு மக னனுன். அதன்பின் முனிவரது கூட்டச் சேர்க்கையினுலே, மேருகணமாய இந்நூ விருதாதி வருஷத்தில் வசித்துக்கொண்டு மன்வந்தர பரியந்தம், புகழ்பெற்ற பெருந்த வத்தில் நிலைபெற் றிருந்தனன். ஆண்டு அவனுக்குப் பெண்மானுல் நராகிருதியாய்ப்பு திரன் ஒருவன் உண்டானுன். பெண்மான் = அந்த அப்சரசானவள் சாபத்தினுலே பெண்மான் ஆனுள்போலத் தெரிகின்றது, அக்குழந்தையினுடைய நிகேகத்தினுலே பெருத்த மோகத்தை மீளவுங்கணத்தில் அடைவுற்றனன்; இந்த என்னுடைய மைந்த னுக்குப் பெருந்தனமும் அருங்குணமும் சாசுவத ஆயுளும் உண்டாகுக வென்பதான இடைவிடாத சிந்தைகளாலே சுருதியாதிப் பிரமாணநியந்திரித அவஸ்திதியை விட்ட னன், அதனுனே தியானதாரணதி நிஷ்டையையும் விட்டொழித்தனன். புத்திரன் பொ ருட்டுப் போகநிந்தையானே தருமநிந்தை நழுவியபடியால் ஆயுள்கழிந்த அவனை அரவங் காற்றை வீழுங்குவதேபோலக் காலன் வீழுங்கினுன். போக எகநிந்தையோடு கூடப் பிராணன்கிளம்பிப் போனவதனுனே மத்திரராஜனுடைய புத்திரனுகப் பிறந்து மத்திர மகிபதியாயினுன். முன்னிருந்த பிராஹ்மணியத்தைக் குறித்துத் தாழ்ந்ததான சூத்ர திரயோனியை யடைந்தனன் என்பது கருத்து. மத்திரதேசத்தில் வெம்பிய பகைவரை வென்று வெருகாலம் அரசாண்டபின், அம்புஜத்தில் ஹிமாசனி வீழ்ந்ததேபோல அவனை ஜலதிவந்தடைவுற்றது. தவவாசனையுடன் அழகுபொருந்திய மத்திரராஜ தனு வையொழித்து விட்டதனுல் தாபசன்மைந்தனுய்த் தபசியாயாயினன் தவவாசனையுடன் வாநப்பிரஸ்த தருமநற் சிந்தையுடன் என்பது பொருள். நியந்திரித அவஸ்திதி = நியமிக் கப்பெற்ற நிலை. ஹிமாசனி = பனியீடி, தாபசன் = தவமிருத்தவன்; என்பதருத்தம்.

(ச.) புவனமண்டலம் = பூமண்டலம், மெய் = சரீரம்.

முனிவர் தொடர்ச்சியினுல் = முனிவரது சம்சர்க்கத்தினுல், அரியதவம் = அரிந் திதமான தபசை, அவனுக்கு, அவ்விடத்து, சாதனனுன் = பிறந்தான், அவனன்பால் = அவனது நிதேகத்தால், பின்னுல் = பின்பு, நிறைந்த பேதைமையால் = பரமமோகத் தினுல், எனது அப்புத்திரனுக்குத் தனமும்குணங்களும் சாசுவதமான ஆயுளுமாகவேணு மென்கின்ற அனவரத சிந்தைகளால், பேராவுண்மை நிலைபெயர்ந்தான் = புத்திரநிமித் தம் போகநிந்தைகளாற் றர்மநிந்தையினின்று நழுவினமையின் அவனதாயுளைக்கணத்து மிருத்து, சர்ப்பம் அகிலத்தைப்போல விழுங்கினுன் என்றுணர்க. (12-13)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வாதனையாற் பிறந்திறந்த சுக்கிரன் விருத்தாந்தத்தை யுபசங்கரித்து, அவன் பூர்வசரீரநிலையை யுணர்த்திப் பிருகுமுனிவர் தவத்தினின்றும் விழித்து மகனைப்பார்த்தான் எனல்:—மற்று - பிருகு என்பன.

மற்றுமளவில் பிறவிகளின் மருள் வாதனையாற் பிறந்திறந்து
முற்றுமுயர் கங்கையின் றடத்தோர் முனிவன்மகவாய் முனியாஞன்
பற்றுமுயிர்போய் முதற்காயம் பவனனுலும் வெயிலாலும்
பெற்றுவளர்த்த பிருகுவின்பாற் பெரிதுமுணங்கி யென்பாகி. (14)

பிருகுமுனிவன் பெருமையினைப் பிணங்குமிருகம் புள்ளினங்க
ளருகுமணுக லறமண்மேலங் கமுழுதுங் கெடாதிருப்பத்
திருகுமனந்தீர் சமாதியிலே தெய்வவருட மாயிரம்போ
யிருகண்மலரத் தவமுனிவ னிட்டமகவை யெதிர்நோக்கி. (15)

(ப - ரை) மற்றும் = மேலும். அளவில் பிறவிகளில் = அநந்த ஜன்மங்களில், மருள்வாதனையால் = மயக்கமிக்க வாசனையால், பிறந்திறந்து = ஜனித்துமரித்து, முற்றும் உயர் = அத்தியந்தம் மகிமைவாய்ந்த, கங்கையின்றடத்து = ஸ்ரீ தேவநதியின்கரையில், ஓர் முனிவன் மகவாய் முனியாஞன் = ஒரு மகரிஷியின் மைந்தனுகிப் பெருமுநீச்சுரஞயினுன், பற்றும் உயிர்போய் = அபிமானித்திருந்த ஜீவன்போய், முதற்காயம் = சுக்கிரசரீரம், பவனனுலும் வெயிலாலும் = காற்றுலும் ஆதபத்தாலும், பெற்றுவளர்த்த = ஈன்றுபோற்றிய, பிருகுவின்பால் = பிருகுமகரிஷியின் சந்நிதியில், பெரிதும் உணங்கி = மிகவும் ஜர்ஜரமாகி, என்பாகி = கங்காளமாய்.

பிருகுமுனிவன் பெருமையினுல் = பிருகுமகரிஷியினது மாகாத்மியத்தினுல், பிணங்குமிருகம் புள்ளினங்கள் = ஆண்டுச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பசுபக்ஷியாதிகள், அருகும், அணுகலற = சமீபத்திலும் வருதலிலதாக, மண்மேல் = பிருதிவியின் மீது, அங்கமுழுதுங் கெடாதிருப்ப = சரீரமுழுவது மழியாதிருப்ப, திருகுமனந்தீர் சமாதியிலே = சாஞ்சல்ய சித்தவிருத்தியிறந்த நிர்விகற்ப சமாதியின்கண்ணே, தெய்வவருடம் ஆயிரம்போய் = ஆயிரத்திவ்யவர்ஷங்கள் சென்றபின், தவமுனிவன் = பெருந்தவப் பிரஹ்மதரிசியாய முநீந்திரன், இருகண்மலர = விழிதிறந்து வெளிப்போகமுற, இட்டமகவை யெதிர்நோக்கி = பரமப்பிரியமான குமரனைச் சந்நிதியிற்பார்த்து.

(ஸ்ரீ - வீர.) அத்தீர்பசன் ஸ்ரீ கங்காமகாநதியின் நிருக்கரையில் சேர்ந்து இராகாதி சந்தாபங்களே யெல்லாம் சாந்தியாதிளாளே நீக்கியவனுகி, மகாருக்கும மதிமானுய் பெருந்தவத்தைப் புரிந்தனன். இவ்வண்ணமியங்கப்பெற்ற பிருகுகந்தனனுகிய சுக்கிரன் நானுவித வாசனைகளால் வாசிதனுகி, அவ்வவ்வாசனையை யனுசரித்த நானுவித ஜன்ம தசைகளையடைந்து, சரீரபரம்பரைகளே நன்கநுபவித்துத் தெய்வயோகத்தால் வைராக்கியாதிசாதன சம்பிராப்தியால் விவேஷபமெதுவுமேயில்லாமற் சித்தத்தைச் செப்பனிட்டு வரநதியாகிய சம்ங்கையின் சுத்தடத்தில் நிரமுறுமரமென்னச் சேதனபேதனுதி விவேஷப சகத்திரமுறினும் அசஞ்சல விருத்தியுடையவனுய் நிலைபெற்றிருந்தனன். பூர்வவிருத்தாந்தம்: கூறியபிரகாரமாக மநோராஜ்ஞியங்களாலே கற்பித்துக் கொண்டிருந்த அச்சுக்கிரனுக்குப் பிருகுமகரிஷியின் சந்நிதியில் வெருசம்வத்சர வடிவமான வெருகாலம்சென்றது. பின்மகத்தாகியகாலஞ் சென்றதும் பவன ஆதயங்களால் ஜர்ஜரமான அதாவது அதிசிதலிதமான சுக்கிரனது சரீரம் வேரற்றமரம்போலப் பூமியில் வீழ்ந்தது, சரீரம் = பிருசுசுக்ரசு முற்பவகாயம், ஆயின் அத்தநுவானது நாய்நரி கழுகுமுதலியவற்றுனே

யேன் பகஷிக்கப்படவில்லை யெனின் ? ஆண்டுக்கூறல்: பிருகுவென்பது. அம்மகரிஷியினது புண்ணீய ஆசிரமத்தின் கண்ணே இராகத்துவேடம் ஒன்றுமின்மையினுனேயும், அவரது பெருந்தவத்தன்மையினுனேயும், பிருகபக்ஷிகளானே அக்காயம் பகஷிக்கப்படவில்லை. சப்பிரமாணத் தன்மையானும் விசீர்ணமாகவில்லை யென்பதாகவும் கண்டு கொள்க. இவ்வயருட சகத்திரஞ்சென்றபின் பரமேசுவரராகிய பிருகு இருஷியானவர் பரமான்மாவை வெட்டவெளியாய்க் காணும் பெருநிருவிகற்ப சமாதியினின்றும் வெளிப் போந்தனர்.

(ச.) உயிர்போய்=வெகுகாலஞ் சென்றதனுல் முகற்காயம் என்பாகி, பூமியில் விழுந்தது.

பெரூமையினுல் = தபோமகிமையினுலும், அப்புண்ணிய ஆச்சிரமத்தில் இராகத்துவேஷ மின்மையினுலும், அணுகலற, புஜியாமல் கெடாதிருப்ப = அழியாது கிடப்ப, திருகுமனந்தீர் = பரமபோதமான சமாதியிலே; சமாதியினின்றும் இருகண்மலர்ந்த = விழித்த, அம்முனிவன் = பரமேசுவரனுன அப்பிருகுமுனி, இஷ்டமகவை=குணவெல்லக் கெல்லையான புத்திரனே எதிர்காணுன், (14-15)

(ஸ்ரீ - வீர - அ-கை.) தனது குமரன் எதிர்காணுது கங்காளமெதிர் கிடப்பக்கண்டு ஓராதுமைந்தன் பொன்றிப் போனதாக நினைதல்:—அற மென் என்பன.

அறத்தின்வடிவா யஞ்சலிசெய் தருகேயிருக்கு மகற்காணுன்
வறக்குமுடலின் கங்காளம் வறுமைவடிவா யெழுந்ததென
நிறக்குநிர்ப்பாக்கியம் வடிவாய் நிற்பதென்ன வெதிர்கிடப்பத்
துறக்குமனத் தான்பிருகு வெனுந்துய்ய தவத்தோன் றனிநோக்கி. (16)

மென்றேல் போர்த்தவெலுப்பு மினவெளிகடோறுந் தித்திரிப்புள்
சென்றேடுவது முதரகுகை செறியுமண்டுகத் திரள்க
ளொன்றேடொன்று பாய்வதுங் கண்டுற்றவா சின்னெனவறிவா
னின்றேர் கிலன்றுஞ் சினனென்றே நேயமைந்தன் றனிநினைந்தான். (17)

(ப - ரை.) அறத்தின்வடிவாய் = தருமமூர்த்தியாய், அஞ்சலிசெய்து = நமஸ்கரித்து வணக்கத்துடன், அருகேயிருக்கும் = சமீபத்தில் நிற்கும், மகற்காணுன் = மைந்தனைக் கண்டிலன், வறக்கும் உடலின் கங்காளம் = காய்ந்தகாயத்தின் என்புப்பஞ்சரம், வறுமைவடிவாய் எழுந்தது எனஃதரித்திரமானது மூர்த்திமத்தாய் எழுந்து வந்தது என்றுரைக்குமாறும், நிறக்கும் நிர்ப்பாக்கியம் வடிவாய் நிற்பது என்ன=அதிகரித்துத் தோற்றும் அபாக்கியமானது ஆகத்தோடு கூடியமர்ந்து நிற்கின்றதென் றுரைக்குமாறும், எதிர்கிடப்ப = சந்நிதியில் வீழ்ந்துகிடப்ப, துறக்குமனத்தான் = சகல வாதனைகளையு மொழித்த சத்துவமனத்தையுடைய, பிருகுவெனுந்துய்ய தவத்தோன் = பிருகுமகரிஷியென்று சொல்லப்பட்ட பரிசுத்தமான பெருந்தவத்தினன், தனிநோக்கி = கூர்ந்து பார்த்து.

மென்றேல் போர்த்த எலுப்புமனே = மெல்லிய சருமத்தால் வியாபிக்கப்பெற்ற எலும்பு இல்லத்தின், வெளிகடோறும் = இடமுள்ள பாகங்களில், தித்திரிப்புள் = தித்திரியென்னும் பக்ஷி, சென்றேடுவதும் = புகுந்து பாய்வதையும், உதரகுகைசெறியும் மண்டுகத்திரள்கள் = உதரமாகிய குகையின் நீழலின்கண் இளைப்பாறி யிருந்ததவளைக் கூட்டங்கள், ஒன்றேடொன்று பாய்வதும் = ஒன்றுக்கொன் றெதிர்த்துக் குதித்துப்

பாய்ந்து விளையாடுவதையும், கண்டு = நோக்கி உற்றவரென்னென = நிகழ்ந்த காரணம்யாது என்று, அறிவால் நின்றோர்கிலன் = நுட்பமதியால் முன்பின் ஆராய்ந்து பாராமல், நேயமைந்தன்றனை = பிரியமான புத்திரனை, துஞ்சினன் என்றே = இறந்தனன் என்பதாகவே, நினைந்தான் = எண்ணினான்.

(ஸ்ரீ - வீர.) பிருகுமகரிஷி யானவர், வணக்கத்திலுலே குனிந்த முகத்தையுடைய வனும் குணசீலமைக்குச் சீமாந்தனும் = குணக்கூட்டத்தின் றலைவனும், புண்ணிய மூர்த்தியைப்போல் இலங்குபவனும் ஆகியகுமரனை யெதிரிற்கண்டிலர்; மற்றோ, அபாக்கியம் ஆகமெடுத்து வந்ததுபோலவும், தாரித்திரியம் மூர்த்தீகரித்துற்றதுபோலவும் சங்கிதியில் மகத்தாய்க் கிடக்கும், கேவலம் காயவடிவ கங்காளமாகிய சவத்தைக்கண்டனர். கங்காளத்தையே வருணித்தல்:—

மென்றோல் (ருரியன்) என்பது. அது ஆதபத்தாலே (சரீரம்) காய்ந்தவுவை யுடையதாயும், சருமசித்திரங்களில் ஆக்கிய கூண்டையுடைய பகுதி விசேடங்களாகிய (பாரசுகள்) தித்திரிப் புட்களையுடைய தாயும், நன்றாகவுலர்ந்த நரம்புகள் வியாபித்த அகடாகுகையின் சாயையில் விசிராந்தியுற்றிருக்கும் தவளைக்குழுக்களை (லக்கம்) புடையதாயும் இருந்தது துக்கதந்தியின் பந்தனத் தம்பம்போ லிராநின்ற, அந்தச் சுஷ்ககங்காளத்தை நோக்கி அம் மகரிஷியானவர் முன்பின் (முன்னா) லோசனை செய்யாமல் எழுந்தனர். அதன்பின் அக்கங்காளத்தைப் பார்த்தபோதே அம்மகரிஷிக்கு என் (மே) னது இம்மைந்தன் (யிறந்) சிரஞ்சென்ற சீவனுனன் எனக்கணத்தில் விதர்க்கமான துண்டாயது.

(ச.) அறத்தின் வடிவாய் = புண்ணியம் மூர்த்தமாகியதுபோல், கங்காளம் = அஸ்திபஞ்சரத்தை.

மென்றோல் = ஆதபத்தால் உலர்ந்த சரீரத்தொக்கைப் போர்த்த, எலும்புமனை = அஸ்திபஞ்சரத்தின், வெளிகடோறும் = இரந்திரங்களில், தித்திரிப்புள் = பகுதிவிசேடங்கள் = தித்திரியென்பது சிச்சிலிக்குருவி பொன் வாய்ப்புள்ளென்ப நின்றோர்கிலன் = பூர்வீபர விசாரமற்றவராய். மிகக்காய்ந்த பரியந்தத்தையுடைய வயற்றுக்குகையின் சாயையில் மண்டுகவீட்டம் இளைப்பாறி யிருந்தது. (16-17)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மகரிஷி சினந்து சாபமிட நினைதலும் பயந்து தருமர்வேண்டிக்கோடலும்:—அடை-வதன என்பன.

அடைத் தகாலத்தன்றி யெனதரிய மகவைய காலத்திற்
றுடைத்தகாலன் றனைக்கணத்திற் றுடைப்பனென்னு விடைப்பாகன்
விடைத்தவாபோற் பிருகுமுனி வெகுண்டுசாப மிடநினைப்பக்
கிடைத்தகால னடுநடுங்கிக் கிளரைம்பூத வடிவெடுத்து. (18)

வதனமாறுங் கரமாறும் வாளுங்கயிறுங் குண்டலமும்
பதனகவசத் துடன்மேவிப் பரந்தசேண் புடைசூழ
விதனமுனியை வந்தணுகி வேண்டிக்கொள்வான் மெத்தென்ன
நிதனமூல மெனுங்கால னிமலமுனிவற் கிவையுரைத்தான். (19)

(ப-ரை.) அடைத்த காலத்தன்றி = நியமித்தகாலத் தல்லாமல், எனதரியமகவை = என்னுடைய கல்யாணகுணக்குழந்தையை, அகாலத்தில் = காலமல்லாக்காலத்தில், துடைத்தகாலன்றனை = சங்கரித்தயமனை, கணத்தில் = இமைப்போதில், துடைப்பன் என்னு = சங்கரிப்பேன் என்று, விடைப்பாகன் விடைத்தவாபோல் = இடபநாயகர்

மார்க்கண்டனுக்காகச் சிந்தித்தோப்ப, பிருகுமுனி = மகரிஷியானவர், வெகுண்டு = கோபித்து, சாபமிட நினைப்ப = சாபங்கொடுக்கக் கருதலும், கிடைத்தகாலன் = அதைத் தெரிந்தயமன், நடுநடுங்கி = கம்பிதமடைந்து, கிளர் = விளங்காகின்ற, ஐம்பூதவடி வெடுத்து = பஞ்சபூத சம்பந்த ஆதிபௌதிக சரீரத்தைத் தாங்கி

வதனமாறும் கரமாறும் = வதண்முகமும் ஷட்புஜமு முடையவராய், வாளும் கயி றும் = கட்கமும் பாசமும் தாங்கி, பதனகவசத்துடன் மேவி = காக்கும். கவசகுண்ட லாதிகளை யணிந்துகொண்டு, பரந்தசேனை புடைசூழ = நாற்புறமும் திங்கிரசைனியம் விஸ்தரித்துச் சூழ்ந்துகூடவர; விதனமுனியை வந்தணுகி = கிலேசமுற்றிருக்கும் மக ரிஷியின் சந்நிதிக்குவந்து சேர்ந்து, வேண்டிக்கொள்வான் = பலவிதமாகப் பிரார்த்தித் துக்கொண்ட யமதருமர், அல்லது வேண்டிக்கொள்ளும் பொருட்டு, மெத்தென்ன = பரமசாந்தமாய், நிதனமூலமெனுங் காலன் = 'சங்காரகாரண மாகியதருமர், நிமலமுனி வற்கு = பெருந்தவத்தால் அமலமாயிலங்கும் பிருகுமகரிஷியை நோக்கி, இவையுரைத் தான் = வருமாறு கூறத்தொடங்கினர்.

(ஸ்ரீ - வீர.) அவசியம் பலிக்கத்தக்க அருத்தத்தைச் சிந்தைசெய்யாமலே அந்த மக ரிஷிக்கு, பிருதமானத நயனேக்கண்டதும், விரைவில் மிகமிகவுங் கொடிதான பெருங் கோபமானது காலனேக்குறித் துண்டாயது; அகாலத்திலேயே எனதுமைந்தனை இக்கா லன் என்கொண்டுபோனுன் எனச்சிந்தவராகிப் பகவானுகிய பிருகுவானவர் காலன் பொருட்டுச் சாபங்கொடுக்கத் தொடங்கினர். பின் அரூபராயினும் கற்பிதரூபத்தை நிரம் யுடையவராகி, பிரஜைகளை யெல்லாம் கவனிகரிப்பவராய தருமர் ஆதிபௌதிக வபுவை யுடையவராய் மூனீந்திரரை வந்தடைந்தனர். கட்கபாசதரராகி ஸ்ரீமான் குண்டல முடையவராகிக் கவசமணிந்தவராகி, பக்கந்தோறும் ஆறுதோளாகத் துவாதசமாச புஜ முடையவராகி, ஆறு இருது முகத்தினராகி, வெகுகிங்கர சேனையால் வியாபிக்கப்பெற் றவராகி, அத்தருமதேவர், கற்பக்கலக்கடற் கம்பீரக்கடுஞ்சினமகாமுனிவரைக்கண்டு வேண்டிக்கொண்டு பரமசாந்த முடையவராய்க் குளிர்ந்த வசனத்தைக் கூறினர்.

(ச.) விடைத்தவாபோல் = பெருங்கோபங் கொண்டதுபோல, கிடைத்த = அரு பஞய்ச் சலப் பிரர்ணிகளையும் புஜிப்பாகப் பெற்ற, ஐம்பூதவடிவெடுத்து = ஆதிபௌ திக தேகத்தைத்தரித்து ? பதனகவசம் = இடரைக்களையுங்கவசம், படர்ந்தசேனை = வெகுகிங்கரர் (குற்றேவற்காரர்) சேனை, வேண்டுகோளான் வீரும்பிக்கோடலால், நிதனமூலமெனும் = அழிவுக்கேது வென்னும். (18-19)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தவத்தின் பெருமையைச் சாற்றித் தருமர்தம் பெருமையை யும் சாற்றல்,—ஈன்ற-குடும்ப வென்பன.

ஈன்றநியதி பாலிக்கு மியாங்கணிண்ணை யீறில்லா
வான்றதவத்தாற் றுதித்திடுது மல்லாதில்லை யாதலினுற்
சான்றதவத்தை வெங்கோபத் தழலாற்சுடு தறகவன்றுற்
றேன்றுமுழிக் கனலுமெமைச் சுடாதுநின் சொற்சுடவற்றே. (20)

குடும்பவலியிற் பிணிப்புண்ட கோடாகோடி யுருத்திரரு
நெடும்பங்கயக் கண்மாதவரு நிலையாமென்னுற் றெலிவுற்ரு
நிடும்பையுலகி லெண்ணக்கடந்தா ரில்லையாருமெனக் கிளையாம்
படும்பல் லுயிருமியாம் படுத்தல்பகுதி பாயபழநியதி. (21)

(ப - ரை.) ஈன்ற நியாதிபாலிக்கும் யாங்கள் = பரமேசுரனுல் ஏற்படுத்தப் பட்ட நியமத்தை மாறுமல் நடாத்தும் எம்போலியர், நின்னே ஈறில்லா ஆன்றதவத்தால் துதித் திடுதும் = உம்மை யந்த மில்லாத மகாமகிமைவாய்ந்த பெருந்தவத்தினுலே போற்றுவ தாம், அல்லாதில்லே = அது அல்லது அயலொரு உத்தேசத்தாலன்றும், ஆதலினுல் = ஆகையால், சான்றதவத்தை = எத்துணையோ கஷ்டப்பட்டு நோற்ற பெருந்தவத்தினை, வெங்கோபத்தழலால் சுடுதல் தகவன்று = அற்பமாகிய கொடிய சினத்தீயால் தீத்தல் உசிதமல்லவாம், தோன்றும் ஊழிக்கனலும் எமைச்சுடாது = பிருத்துவாரா நின்ற கற்ப காலமகாநலமும் எம்மையழற்றுது என்றல், நின்சொல் சுடவற்றே = உமதுசாபம் தகித்தற்குரியதாமோ. ஆல், அசை குடும்பவலியில் பிணிப்புண்ட = சமுசாரஜாலத்தில் அகப்பட்டிழலும், கோடாகோடி = அநேகங் கோடி, உருத்திரரும் = உருத்திர கணங் களும், நெடும்பங்கயக்கண் மாதவரும் = நீண்ட செந்தாமரை யிதழ்போன்ற நேத்திரங் கள் வாய்ந்த விஷ்ணுகணங்களும், நிலையாம் என்னல் = நிலையாக இருக்கும் எம்மால், தொலைவுற்றார் = மாய்வுற்றனர்கள், இடும்பையுலகில் = துயர்மயமாய இச்சகத்தில், எனைக்கடந்தார் = எம்மைத்தாண்டினவர், இல்லே = இலர், யாரும் எனக்கினையாம் = யாவருமே எமக்குப் பகூணமாவர், படும்பல்லுயிரும் யாம்படுத்தல் = இறவாநின்ற எல் லாப்பிராணிகளேயும் யாஞ் சங்காரித்தல், பகுதியாயபழ நியதி = சுயமேயாய புராதன புராந்தகன் நியமமாம்.

(ஸ்ரீ - வீர.) உலகின்றிதியை யறிந்தவரும், பராபரங்கண்டவரும் ஆகியபெரியோர் ஹே முனிவரே ! பராபராதாதி நிமித்தமிருந்தபோதினும் மோகிக்கமாட்டார், என்றல், அவ்வுத்தமர் காரணமில்லாமல் மோகியார் என்பதில் கழறவேண்டியது யாதுளது ! நீர் அநந்ததவத்தையுடைய வீப்பிரர், யாம் நியதிபாலகர், அத்தவத்தினுலே பூஜிக்கப் பெற கின்றீர் அலது ஹேசாதுவே ! சாப பயாதிநிமித்த இச்சையினுனே பூச்சியரல்லீர். சாபங் கொடுப்பின் மாறுக உமக்கே யகிட்டமீயும் எமக்கொன்று முறுதாம் என்னுங்கருத்தாற் கூறுதல்:—சான்றவென்றது, மிகக்கோபத்தினுலே மதியற்றவரே = வீண்புத்தியை யுடையவரே ! ஞானபாதிதத் தன்மையானே அவித்யமான மதியரே ! பெருந்தவத்தை வாளாகெடுத்துக் கொள்ளவேண்டாம்; கற்பகால மகாநலங்களானும் யாம் தகிக்கப்பட மாட்டோம் எனின், அத்தகைய எம்மை, நீர் சாபத்தீயானே தீக்கவல்லீரோ ! அல்லீர். தாம் எதனுலும் தகிக்கப்படாமலிருத்தலேச் சாற்றித்தமது அகண்டிதமான ஆற்றலே யறைதல்:—சுடும்பவென்பது. பிரஹ்மாண்ட பந்திகள் பீடிக்கப்பெற்றன, ருத்திரகோடி கள் விழுங்கப் பெற்றார்கள், விஷ்ணு விருந்துகள் விழுங்கப்பெற்றார்கள், எந்த வீடயத் திற்றுன் எமக்காற்றலில்லே அதனே நீர் நிகழ்த்தும் பார்ப்போம் எவ்வள ராதத்தாற்றுன் சபிக்கப்பெற்றேரும் சாற்றும். ஹேபிராஹ்மண உத்தமரே ! யாங்கள் போக்தாக்கள், உங்களேப் போன்றவர் எங்கட்குப் போஜனம், என்னுமிது இயல்பாய மரியாதையாம்; இது நம்மனேரால் இச்சைதுவேடாதி நிமித்தாந்தாங்களால் ஆக்கப்பெற்ற தொன் றன்றும்

(ச.) அல்லாதில்லே = அன்றி மற்றேரிச்சையாலன்று, சான்றதவத்தை = மாத வத்தை நின்சொல் = உமதுசாபம். என்ற நியதிபாடபேதம்- யாரும்=நீர் முதலியவனே வரும், பகுதியாய=இயல்பான. (20-21)

(ஸ்ரீ-வீர - அ-கை.) நியதியின் நிலைமையையுரைத்து அறிஞர் அஞ்ஞர் திருஷ்டிகளேக் காட்டல்:—எமதென்பது.

எமதுவிதியன் றிந்நியதி யென்றுமுள்ள படியாகு
மமலவிழியிற் செய்வோனு மருந்துவோனு மிலவாகும்
விமலமல்லா விழிக்கிவர்கண் மிகவுமுளவாம் விதிவயத்தாற்
றமதுநினைவாற் பல்லுயிருஞ் சனிக்குங்கற்ப முடிவிற்போம். (22)

(ப - ரை.) எமது விதியன்று இந்நியதி = இந்த நியமமானது எம்மனோரால் விதிக்கப்பெற்ற தல்லவாம், என்று முள்ளபடியாகும் = எப்போதும் பரம்பொருளால் ஆக்கப்பட்டுள்ளதேயாம், அமலவிழியில் செய்வோனும் அருந்துவோனும் இலவாகும் = களங்கங்கழன்ற கண்ணும் காணுமிடத்துக் கருத்தாவுமில்லை போக்தாவுமில்லை, விமலமல்லா விழிக்கிவர்கள்மிகவும் உளவாம் = களங்கங்கதுவிய கண்ணுற்காணினோ கருத்தாபோக்தா முதலிய சமுசாரிகள் வெகுவாக இருப்பனவாம், விதிவயத்தால் = விதிஹேதுவினால், தமது நினைவால் = தத்தமது வாதனையா லெழுந்த எண்ணத்தால், பல்லுயிரும் சனிக்கும் = சகலபிராணிகளும் உண்டாம், கற்பமுடிவிற்போம் = கற்பாந்தத்திற் செல்லும்.

(ஸ்ரீ - வீர.) அக்னிமேற்கிளம்புதலும் நீர் கெகிழ்க்தோடலும் பரமான்மாவின் நியதிபோலவாம்; பரமாத்மா தன்பால் தானுகவே உலகவடிவமாக உண்டாகித் தானுகவே உபசங்காரிக்கும். இதுவும் உபநிஷத்சம்பந்த வியவகாரதிருஷ்டியினுலே யுரைக்கப்பெற்றது பரமார்த்த திருஷ்டியினுற் பார்க்கினோ, களங்கமில்லாத திருஷ்டி அஃதாதவின் ஈண்டுக்கருத்தாவுமில்லை போக்தாவுமில்லையாம். கருமதிருஷ்டியாற் காணினோ, களங்கங் கழியாதபடியினுலே அத்திருஷ்டியில் ஈண்டு வெகுகருத்தாக்கள் தோற்றும். ஹேபிரஹ்மந் கருத்துருத்தகைமை அகருத்திருத்தகைமைகள் நன்கிலாக் காட்சியாளே கேவலம் கனிகற்பிக்கப் பெற்றவைகளாம், தத்துவ சாக்ஷாத்காரரூப கலமுறு காட்சியையுடையவனுக்கோ அவையிரண்டு மிலவேயாம் " கருத்துருத் தகைமையும் கருமங்களுமே, வருத்துலகுக் கிறைவழங்குவ தில்லையே " என்பதாதியவாக ஸ்ரீபகவானுற் காட்டியருளப்பெற்ற பக்கத்தைப் பற்றிப்பகர்தல், விதியென்பது தருகண்டங்களிற் புட்பங்களும், புவனங்களிற் பூதங்களும், சுயம்வருகின்றன வெனவும் போகின்றன வெனவும், ஈண்டுக்கருத்தாதி சப்தங்களாளே கற்பிக்கப் பெறுகின்றனவாம். பிராணிகளின் கருமமே தான் ஆக்ஷேபித்த ஹேதுவாகிய நிமித்தவடிவித்திரியத்தானே விசித்திரகாரியத்தி, லும் சமர்த்தமாகின்றது.

(ச.) எமது விதியன்று = நம்மிருவரது செய்தொழிலன்றும், அமலவிழியில் = விசுத்தஞானத்தால் விசாரிக்கும் பொழுதில், இச்சகத்தில் ஆன்மாவிற்கு நிர்விகாரத்துவ முதலான் கருத்துருத்துவ போக்துருத்துவங் கூடாதாதலின், செய்வோனும் அருந்துவோனு மிலதாகும் = கர்த்தாவும் போக்தாவுமின்றும், விமலமல்லாவிழிக்கு = பிராந்தி தரிசனத்துக்கு இச்சகத்தில், இவர்கண் மிகவுமுளதாம் = வெகுகர்த்தாக்களும் போக்தாக்களும் உண்டாம், கர்த்தாமுதலிய பேதத்திற்கு அவித்யாகற் பிதத்தாற் பிராந்தியுள தியல்பாதலின், பல்லுயிரும் = தருலதைகளிற் புட்பங்கள்போற் புவனங்களிற் சகலபிராணிகளும், தமது நினைவால் = தங்கள் கருமத்தினுல், சனிக்குங் கற்ப முடிவிற்போம், விதிவசத்தால், பிரமனது யாதொரு பிரவிருத்தி நிவிருத்தி யேதுவான காலமுண்டோ அஃதிசை இச்சை அதனுற் பிறப்பனவும் இறப்பனவும் ஆமென்பது பொருள், விதி = பிரமன். (22)

(ஸ்ரீ - வீர - அ-கை.) பெருத்தன்மையோடு கூடிப் பிரகாசிப்பதை விட்டொழித்து அற்பத்தகைமையை யவலம்பித்து அவிவேக முறலழகோவெனல்:—கற்பதென்பது.

கற்பதான மறைதருஞிற் கண்ணதெங்கே சிரத்தையதாய்
நிற்பதெங்கே யுயர்வெங்கே நெடியோர் விளங்கு மிந்நெறிக்கே
யற்பரானகுருட னெனவயர்வ தென்னத் தம்வினையா
லுற்பவிக்குஞ் செயல்பாரா துருத்துச் சபிக்கவுரியாயோ. (23)

(ப - ரை.) கற்பதான மறைதருஞிற் கண்ணது எங்கே = அத்தியயனஞ் செய்யத் தக்கதான உபநிடதந்தந்த ஞானமய திருஷ்டி எவ்விடத்தது, சிரத்தையதாய் நிற்ப தெங்கே = சிரத்தையாக நிலைபெறுதலான தீரதையாண்டையது, உயர்வெங்கே = பெருந்தன்மை எங்குள்ளது, நெடியோர் விளங்கும் இந்நெறிக்கே = மகான்கள் நிதிபெற் றுத்திகழும் சர்வப்பிரசித்தமாய இம்மார்க்கத்தில், நிற்கும்பேரும், அற்பரான குருடனென அயர்வது என்ன ? = சொற்பமதியையுடைய அந்தகர்போல மோகமுறுவது என்னகார ணம் ? தம் வினையால் உற்பவிக்கும் செயல்பாராது = தத்தமது கருமபரிபாகத்தினுலே ஜனித்தழலும் தசையை நோக்காது, உருத்துச் சபிக்கவுரியாயோ = கோபித்து எம் மைச் சபிக்க விழைதல் உசிதமாமோ.

(ஸ்ரீ - வீர.) அந்த ஞானமயமாய திருஷ்டியெங்கே, மகத்துவம் எங்கே, தீரதை யெங்கே, சர்வப்பிராஞ்ஞப் பிரசித்தமார்க்கத்தில் நிற்கு நீருங்கூட அவிவேகியர்போல மோகமுறுவது என்னேகொல் ! ஹே முநீச்வரரே ! தங்கருமபலபாகத்தினுலே யெழுந் தழலுந் தசையையோர்ந்து பாராமல், முற்றுணர் வுடையவராக இருந்தும் வாளா மூர்க் கரைப்போல எம்மைச்சபிக்க எனிச்சிக்கின்றீர் ?

(ச.) சிற்கண் = ஞானமயதிருஷ்டி, நிற்பது = தீரதை, உயர்வு = மகத்துவம் நெடியோர் விளங்கும் இந்நெறிக்கே = சர்வப்பிரசித்தமான இம்மார்க்கத்தில், அயர்வ தென்ன = மகாமதியினையுடைய நீர் மோகமுறுவதென்? பாராது = விசாரி யாமல் (23)

(ஸ்ரீ-வீர - அ-கை) மனத்தின் மகிமையால் யாவுமுண்டாக அதனை யறியாதிருத் தல் என்னேயெனல்?—மனமென்பது.

(ச - அ - கை.) பிருகுவுக்குப், புத்திரனது சித்தமயமான சமுசாரத்தை நிரூபித்தற் குச் காலன் சித்தத்தினது மகிமையை இப்போதுரைத்தல்:— மனமேயென்பது.

மனமேபுருடன் மற்றில்லைமனத்தின் செயலே செயலாகுங்
கனசீவனத்தாற் சீவனுமாங் கவர்நிச்சயத்தாற் புந்தியுமாஞ்
சினவும்பிமானத் தாலேதீய வகங்கார மும்மாகுந்
தனதுவிகற்ப சாலத்தாற்றானே சகமாந் தனிமனமே. (24)

(ப - ரை.) மனமே புருடன் மற்றில்லை = ஈண்டுச்சித்தமே புருடனும் பிறிது அல் லவாம், மனத்தின்செயலே செயலாகும் = சித்தஞ்செய்ததே செய்ததாகும், கனசீவனத் தாற் சீவனுமாம் = இவ்வுள்ளமே பெரிதான சீவனவிவகாரத்தாற் சீவனும் ஆகும், கவர் நிச்சயத்தாற் புந்தியுமாம் = ஈது இன்னது எனத்துணியுந் துணிபான் மதியுமாம், சின வும் அபிமானத்தாலே = கடுமையான அபிமானஞ் செய்தலானே, தீய அகங்காரமும் ஆகும் = கனற்றும் அகங்காரமும் ஆகும், தனிமனமே = சுயம் சித்தமே, தனதுவிகற்ப சாலத்தால் = தன்னுடைய விகற்பமான சிந்தைகளானே, தானே சகமாம் = தானே யுலகமாம்.

(ஸ்ரீ - வீர.) சித்தமே மீண்டு புருடனும் பிறவற்றிற் காற்றலின்மையின் அது செய்ததுதான் செய்ததெனப்படும், அசத்சங்கற்ப வடிவமேயாய ஹேதுவினால் அச்சித்தம் பந்தத்தையடையும், அதுவிடுபடின் இதுவும் விடுபடும். மனமே சீவனினின்றும் சீவப் பெயரையடையும், ஒரேமனமானது பூர்வபூர்வ ஜீவனினின்றும் ஜீவாந்தரப் பெயரையடையுமென்பது விரிவாக ஜீவடோபாக்கியானத்திற் கூறப்பெறும்; மனஞ்சங்கற்பித்த பொருளில் நற்றுணிபை நாட்டலானே மனமே யதன்பின்னர்மதிபாம், அபிமானத்தைச் செய்தலானே அகங்காரமெனவும் படும், இங்ஙனம் மனமானது தானேதானே தன்மையை யடையும்.

(ச.) மனமே = சித்தமே, புருடன் = ஜீவனும், மனத்தின் = சித்தத்தினால், செயலே = செய்யப்பட்டதே, செயலாகும் = செய்யப்பட்டதாம் எப்படிச் சீவத்வமெனிற் கூறல்: தனிமனமே = கனசீவனத்தால்=பிராணதாரணத்தினால், சீவனுமாம் = ஜீவனெனப்படும், நிச்சயத்தால் = நிச்சயவேதுவினால், புத்தியுமாம் = புத்தியாம், நிச்சயாத்மிகை புத்தியென்னும் லக்ஷணத்தினால், தினவும் = தேகாதிகளிற் பொருந்தும், அபிமானத்தாலே — அகம் மம அபிமான ஹேதுவினால். (24)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணம் பிருகுமகரிஷிக்கு அறிவுறுத்தி மஹாவிலாசமாத்திரத்தாலாக்கப்பெற்ற அவர் மைந்தன் கதையையெடுத்தல்:—ஆதலாலென்பது.

(ச - அ - கை.) சுக்கிரனது சுவர்க்கபோகத்தின் பின்வந்த ஜன்மபேதங்களைக் கூறல்:—ஆதலாலென்பது.

ஆதலாலுன் புதல்வனுநீ யிலவில் சமாதி யமர்போதிற்,
காதலாலே சுக்கிரனுங் காயந்தன்னையிவ ணிருத்தி,
மீதில்விச்சுவாசியெனும் விண்ணுட்டணங்கை மேவியபின்
னேதுபுவியிற்றே சார்ண வொருவேதி யன்பாலுற் பவித்து. (25)

(ப - ரை.) ஆதலால் = மனமே யாவற்றையு மியற்று மாகையால், உன்புதல்வனும் = நினதுமைந்தனும், நீயிலவில் சமாதியமர்போதில் = நீர் நிருவிகற்ப சமாதியை யடைந்திருந்தபோது, காதலாலே = காமபரவசத்தாலே, சுக்கிரனுங் காயந்தன்னை யிவன் இருத்தி = உசனசம்பந்தியான சரீரத்தை இவ்வாச் சிரமத்திலேயே யிருக்குமாறியற்றி, மீதில் விச்சுவாசியெனும் விண்ணுட்டணங்கை மேவியபின் = சுவர்க்கலோகத்தில் விசுவாசியென்னும் பெயர்வாய்ந்த தேவசுந்தரியை யடைந்தானந்தித்தபின், ஏதுபுவியில் = பூமண்டலத்திற் புகழ்பெற்ற, தசார்ண ஒரு வேதியன்பால் உற்பவித்து = தசார்ண தேயத்திலிருந்த ஒப்பற்ற மறையவனிடத்தில் அவதரித்து.

(ஸ்ரீ) - வீ.) நீர் அசம்பிரஜ்ஞாத சமாதியில் அமர்ந்திருந்த சமயம், உமதுமைந்தனது அம்மனமானது தன் மநோரதமார்க்கமாக வெகுதூரத்தினும் தூரம்சென்றது; உம்மாற்காணப்பெற்ற இந்த ஔசநஸ்தேகத்தை மந்தரகந்தரத்தில் விடுத்து, கூண்டினின்றும் பறந்தபறவையானது மேற்போதல்போல விபுரந்தரம் வாசஸ்தலமாகிய சுவர்க்கத்தையடைவுற்றது ஆண்டு மந்தரகுஞ்சத்துப் பாரிஜாத தலத்திலும், நந்தனோத்யான கண்டத்தும், லோகபால புரத்திலும், எட்டுச் சதுர்யுகங்கள் விசுவாசி யென்னும் அப்சரசை, அறுகால் அருமரையைப்போல, மகாதேஜசையுடைய சரீரகற்பனை செய்து அதிலிருந்து சேவித்து. பின்னர் பாவனை மாத்திரையானே பூமியையுற்று, அம்மனமானது அவ்வவ்வாசனை கரும அநுசாரமாய் முன்னர் மொழிந்த மொழியாத அநந்த

ஜன்மங்களே யடைந்ததென்பார், ஓது எனத்தொடங்கினர். தசார்ணதேசத்தில் விப் பிரன் மைந்தனுகி, மேலும், அகந்தம் பிறப்பையடைந்தது.

(ச.) உன் புத்திரனும் = உமது புதல்வனும், மநோமயமே யாதலால், இவணி ருத்தி = இவ்விடத்தில் விட்டு, மீதில் = சுவர்க்கத்திற் சென்று, அவ்விடத்தில், விண் ணுட்டணங்கை = தேவசுந்தரியை. (25)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தொடங்கிய ஜன்மபரம்பரையை வருணித்தல்:—கோச, சாலு, திரி, யென்பண.

வேறு

கோசலதேசந் தன்னிற் கொற்றவ னுகத்தோன்றி
வீசலர் வனத்தினூடே வேடனுயுதித்துக் கங்கை
மாசலமருவு பாரின் மராளமாய்ப் பௌண்டரத்திற்
பேசரு நிருபனுனன் பெருங்கதிர்க் குலத்துவந்து. (26)

சாலுவ நாட்டிற்பானு மந்திரத் தலைவனுனன்
மேலுயர் கற்பகாலம் விஞ்சையர் வேந்தனுனன்
வாலுணர் வுளதாயங்கோர் மாதவன் மதலையானுன்
சேலுகள் சவ்வீரத்திற் சேர்ந்தசா மந்தனுனன். (27)

திரிகத்த தேசந்தன்னிற் றிறலிகச் சைவனுனன்
மூருகர்சூழ் வேடரூரின் மூங்கிலா ரணியமானு
னரிணத்தோர் பிறப்பாய்ச் சீர்ணசாங்கலத் தமரலுற்றுன்
விரிவில்சூழ் பணையின்காட்டில் வெஞ்சினப் பாந்தளானுன். (28)

(ப - ரை.) கோசல தேசந்தன்னில் = அச்சுக்கிரன், கோசலமென்னும் நாட்டில், கொற்றவனுகத் தோன்றி = மகிபதியாகி, வீசலர் வனத்தினூடே = மணங்காலு மலர் நிறைந்த மகாடவியில் வேடனுயுதித்து = நீவரனுகி, சங்கைமாசல மருவுபாரில் = மாகூ மைதங்கிய ஸ்ரீ கங்காதீர்த்தம் பரவிய தடத்தில், மராளமாய் = ஹம்சமாகி, பௌண்ட ரத்தில் = பொளண்ட்ர மென்னுந்தேயத்தில், பெருங்கதிர்க் குலத்துவந்து = சூரிய வம்சத்திலுதித்து, பேசருநிருபனுனன் = சொல்லுதற்கரிய கீர்த்திவாய்ந்த அரசன் ஆனன்.

சாலுவநாட்டில் = சாலுவமென்னும் தேயத்தில், பானுமந்திரத் தலைவனுனன் = சௌரதேசிகன் ஆனன், மேலுயர் கற்பகாலம் விஞ்சையர் வேந்தன் ஆனன் = அதன் பின் கற்பகாலம் மேன்மைவாய்ந்த வித்யாதர ஸ்ரீமானுனன், வாலுணர்வுளதாய் = தீமா னுய் அங்கு ஓர் மாதவன் மதலையானுன் = அவ்விடத்து ஒருமகா தபசியினது மைந்தன் ஆனன், சேலுகள் சவ்வீரத்தில் = மீன்கள் விளையாடும் வயல்கள் சூழ்ந்த சௌவீர தேயத்தில், சேர்ந்த சமீந்தன் ஆனன் = பொருந்திய சமீந்தனுனன்.

திரிகத்த தேசந்தன்னில் = திரிகர்த்த மென்னுந் தேயத்தில், தேசிகச்சைவனு னன் = சைவதேசிகன் ஆயினன், மூருகர் சூழ்வேடர் ஊரில் = சூலைகள் சூழ்ந்திராத மண்டலத்தில், மூங்கில் ஆரணியமானுன் = மூங்கிற்புதராஞன், அரிணத்தோர் பிறப் பாய் = மான்சன்மத்தை யடைதலுற்று, சீர்ணசாங்கலத்தமரல் உற்றுன் = சீர்ணமான காட்டில் உழன்று திரிந்தான், விரிவில் சூழ்பணையின் காட்டில் = விஸ்தாரமான புத்து கள் சூழ்ந்ததா லக்காட்டில், வெஞ்சினப்பாந்தள் ஆனன் = கொடுங் கோபத்தோடு கூடிய பாம்பாயினன்.

(ஸ்ரீ - வீர.) உமதுசுதன் கோசலதேசத்தில் மகிபதியாயினன், பின்மகா அடவியில் வேணுயினுன், திரிபதகையின் தடத்தில் ஹம்சமாயினுன், சூரியவங்கிசத்தில் புண்டர தேசாதிபதியாயினன், சால்வதேயத்தில் செளரிமந்திர சித்தனுகி அனனியர்கட் குபதே சிக்கும் தேசிகன் ஆயினுன், இதனுனே மந்திர உபாஸ்தி மகிமைகொண்டு கற்பபரியந்தம் ஸ்ரீமானுன வித்யாதரன் ஆனுன், பின்றீமானுன முனியின் மைந்தனுனன், சௌவீர தேசத்தில் மண்டலேசுரனுனுன், ஆண்டாற்றிய பாவங்களானே திரியக்குத்தாவராதி ஜன்மங்களேயும் எடுத்தான் எனத்தொடங்கல், திரிகர்த்தவென்பது. ஈண்டுப்பாட பேத மூளது. திரிகர்த்த தேயத்தில் வேசரிப்பிறப்பை யடைந்தான், கிராதமண்டலத்தில் வம்சகுல்மமாயினுன், சீணுஜாங்கலத்தில் ஹரிணமாயினுன், தாலவிருக்ஷத்திற் சர்ப்பமா யினுன், தமாலத்தில் வனகுக்குடமாயினுன்.

(ச.) வனத்திஹாடே = மகாடவியில், கங்கைமாசல மருவுபாரின் = திரிபதகைத் தடத்தில், மராளமாய் = அன்னமாய், பெருங்கதிர்க் குலத்தில் = சூரியவம்சத்தில், தீவரன் = மத்தியாதிகாதகன். (26-27-28)

பாணுமந்திரித் தலவனுனன் = சூரியமத தேசிகனுனன், விஞ்சையர் வேந்தனுனன் = வித்தியாத ரேந்திரனுனன், வாலுணர்வுளதாய் = மகாபுத்திமானுய், ஆங்கு = அச்சாலுவராட்டில், ஓர் மாதவன் = ஓர் முனிவனது, மதலையானுன் = சுதனுனன். சாமந்தன் = மண்டலேசுவரன்.

தேசிகச் சைவனுனன் = சைவதேசிகனுனன், முருஷ்சூழ் = எலுமிச்சை முதலிய வற்றுல் அழகுசூழ்ந்த, = வேடரூரின் = கிராதநாட்டில், மூங்கிலாரணியமானுன் = வேணுத்தானுனன், அரிணம் = மான், தமாலத்தில் வனகுக்குட மானுனென வருவித் துக்காண்க. வம்சகுல்மம் = வேணுஸ்தம்பம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) இத்தனேயே அவனது பிறப்புகள் என எண்ணற்க, மற்றே, அன்னியஜன்மங்களும் ஈந்தமாயினவெனக் கூறி முடிவாய் வந்தபிறப்பையும் அதன் கண்ணே தவம்புரியு மகிமையையும் அறிவித்துத் தியான திருவ்ருத்தியானே காணுதிரெ னல்:—இவ், வரியென்பன.

இவ்வண்ண மநந்தயோனி யிழிவுயர் வாகவெய்தி
மைவண்ண மனத்தினுலே வாதனே வயத்தினின்று
மெய்வண்ணக் கங்கைமாட்டோர் மெய்ம்முனிக் குமரனுகிப்
பொய்வண்ணப் பொறிகளென்னும் புன்பகை யறுத்துவென்று. (29)

வரிசடை பரிவங்கட்டி வாசுதேவப் பேர்மேவிப்
புரிதவத்தெண் ணூருண்டு பொருந்தின னினதுமைந்தன்
றிரிதரு கனவையொத்த சித்தத்தின் மயக்கந்தன்னேப்
பரிவறக் காண்டியென்னிற் சிற்சுணற் பார்த்தியென்றன். (30)

(ப - கை.) இவ்வண்ணம் = இத்தப்பிரகாரம், அநந்தயோனி = அளவி லாத ஜன்மபரம்பரையை, இழிவு உயர்வு ஆக எய்தி = தாழ்வாகவும் உயர்வாகவும் அடைந்து, மைவண்ண மனத்தினுலே = வாதனே வயத்தினின்று = அதியாசையோடுற்ற உள்ளத் தினுலே வாசனேயின் வயமாகக் கட்டுற்று, மெய்வண்ணக் கங்கைமாட்டு = கெடாத பிரயோஜனத்தை யருளும் ஸ்ரீ கங்காநதியின் தீரப்பிர தேசத்தில், ஓர் மெய்முனிக்

குமரனுகி = ஒப்பற்ற ஒரு உண்மைத் தவத்தினன் மைந்தனுகி, பொய்வண்ணப் பொறிக ளென்னும் புன்பகையறுத்து வென்று = மித்தியாபூதமான சத்தாதிகளென்னும் அற் பப்பகையை வெற்றிகொண்டு.

வரிசடை பலவுங்கட்டி = நீண்டுதொங்கும் ஜடைகள் பலவற்றையும் ஒன்றுசேர்த் துப் பந்தித்து, வாசுதேவப் பேர்மேவி = வாசுதேவ முனிவனென்னும் திருநாமம்பூண்டு, புரிதவத்து எண்ணூறு ஆண்டு பொருந்தினன் நினதுலமந்தன் = உம்முடைய குமாரன் அஷ்டசத வருடங்களாகப் பெருந்தவத்தைப் புரிந்துகொண்டிருக்கின்றனன்; திரிதரு கனைவையொத்த = கிலேயின்றிய சித்திராதோஷஜன்னிய சொப்பனத்தைப் போன்ற, சித்தத்தின் மயக்கந்தன்னை = மனோவிப்பிரமத்தை, பரிவுறக் காண்டி யென்னில் = அன் புடன் பார்க்க ஆர்வமுற்றால், சிற்கணால் = ஞானநேத்திரத்தினால் பார்த்தியென்றான் = ஞானநேத்திரத்தினால் விரைவிற் காண்பீராகவென்று தருமராஜர் கூறினர்.

(ஸ்ரீ - வீர.) வேறும் பலபலவிசித்திர விடமங்களேயாய யோனிகளில் வாசனே வயத்தினுலே தான்றனே உமதுமைந்தன் பிறந்திறந்தெய்த்தனன். இப்போது விப்பிர குமாரனுகி வாசுதேவன் என்னும் பெயர்சூடி, மதிமான்களின் மத்தியிற் சகல சுருதிகளே யும் நன்றாக அத்தியயனஞ்செய்து, சமங்களையென்னுஞ் சரித்தின்றடத்தில் வீற்றிருந்து, பெருந்தவஞ் செய்துகொண்டிருக்கின்றனன். அதிர்ந்து மேலெழாநின்ற அலைக்கூட் டங்களின் பாங்கார மந்திரத்தொனிகளானே தொனித்துக் கொண்டிருக்கும் அகிலங்க ளோடு கூடிய சமங்களையென்னுந் தரங்கிணியினது நீரத்திலேயே இன்னும் உம்முடைய சுதன்றவம் புரிகின்றனன். விரிசடையுடையனுயும் விபூதியையுடையனுயும், அரன்மணி மூண்டோனுயும் அக்கமாவணியனுயும், புரந்திரி புலன்களெல்லாம் புரிமயல் வென்றோனு யும், வருடங்கள் எண்ணூருக வன்றிறத் தவத்தினின்றான், ஹே முனிவரே! உமக்கு சொப்பனம் போன்ற புத்திரசரித்திரவடிவ புத்திரமனோ மயக்கத்தைக் காணவேண்டு மென்னும் இச்சையெழின், அறிவதற்குச் சாதனமா யிராநின்ற விஞ்ஞானயோக நேத்தி ரத்தை விரிவுறவிழித்து விரைவிற் காணுவீராக,

(ச.) அனந்தயோனி = மற்றும் அளவற்ற யோனிகளில், கங்கைமாட்டு = கங்கை நதிக்கரையில், மெய்முனி குமரனுகி = விப்பிரகுமாரனுய், பொறிகள் = சர்வேந்திரி யங்கள் (29-30)

பலவும் = அட்சவலயமுதலிய தவச்சின்ன மனேத்தும், மைந்தன், அவனதுசித்தத் தின் மயக்கந்தன்னை = மனோப்பிரமையை, பரிவுறக்காண்டி யென்னில் — பார்க்க வேண்டுமென்று இச்சிக்கின்றனே யெனில், சிற்கணால் = இவ்வூனநேத்திரத்தை விட்டு ஞானநேத்திரத்தாற் பார்த்தியென்றான். (30)

(ஸ்ரீ-வீர-அ-கை) பிருகுமகரிஷியானவர் பாலகனது செய்கைகளே யெல்லாம் ஞான திருஷ்டியினுற் பார்த்து வியந்து காலதேவதையை வேண்டிக் கோடல்:—காலன், வானதி, யென்பன.

காலனீ தூதைப் பக்கேட்ட கலிமுனி ஞானக்கண்ணுற்
பாலகன் செய்கையெல்லாம் பார்த்தனன் கணத்தினெல்லை
மேலதா மொளியாற் ரேற்றமாத்திரம் விளங்கிநல்ல
சீலமார் புந்தியென்னுந் தெளிந்தகண் ணடியிற்பாய்ந்த. (31)

வானதிக் கரையினின்று மந்தரச் சாரலிற்றன்
மேனியில் வந்துசார்ந்த மெய்ம்முனி வியந்துசால
வூனமில் காலன்றன்னை யொன்றலா வேண்டுகோளா
லானதோர் காதலில்லா வருமுனி பகர்வதானன். (32)

(ப - ரை.) காலன் ஈதுரைப்பக் கேட்ட கலைமுனி —ஜகதீசனுடைய தருமதேவதை இவ்வாறியம்பக் சிரவணித்த சர்வசாஸ்திர சம்பன்ன மகரிஷியானவர், ஞானக்கண்ணுல்= ஞானதிருஷ்டியினுல், கணத்தின் எல்லை = முகூர்த்தமாத்திரத்தில், மேலதாம் ஒளியால் தோற்றமாத்திரம் விளங்கி = உயர்வாகிய பிரகாசத்தினுற் பிரதியான வயமாகத் தோற்றி, நல்ல சீலமார்புந்தி யென்னும் = சத்வீருத்தம் பூரித்த புத்தியென்னும், தெளிந்த கண்ணடியிற் பாய்ந்த = அதிசொச்சமான தர்ப்பணத்திற் பிரதிபிம்பித்த, பாலகன் செய்கையெல்லாம் = புத்திரசரித்திர மியாவற்றையும் பார்த்தனன் = கண்டார்.

வானதிக் கரையினின்று = பெருமை பொருந்திய ஸ்ரீ கங்காநதிக் கரையிலிருந்து, மந்தரச்சாரலில் = மந்தரசானுவின் கண்ணிருக்கும், தன்மேனியில் வந்துசார்ந்த மெய்ம்முனி = தமது திருமேனியின் கண்ணே திரும்பிவந்தடைந்த சத்தியதபோமுனிவர், வியந்துசால = அதியற்புதத்தை யடைந்த திருஷ்டியானே, ஊனமில் காலன்றன்னை = விருப்பு வெறுப்பற்ற தருமதேவதையை நோக்கி, ஒன்றலா வேண்டுகோளால் = அநேகவிதமான பிரார்த்தனைகளுடன், ஆனதோர் காதலில்லா அருமுனி பகர்வதானன் = யாதொருவிதமான ஆசையுமற்ற பெருந்தவத்தை யுடைய மகரிஷி கூறத் தொடங்கினர்.

(ஸ்ரீ - வீர.) இந்தப் பிரகாரம் சமதிருஷ்டியையுடைய ஜகதீசராகிய தருமரால் விளம்பக்கேட்ட மகரிஷியானவர் மைத்தனது சரித்திரத்தை ஞானசக்ஷுவினுலே நன்முகத்தியானிக்கத் தொடங்கினர்; முகூர்த்த மாத்திரையானே பிரதிபான வசத்தால், யோகஜதருமவிசுத்தபுத்தியாகிய தருப்பணத்திற் பிரதிபிம்பித்ததேபோலப் பிரத்தியக்ஷமாகத் தோற்றிய புத்திரனது சரித்திர முழுவதையும் கண்டனர். மீளவும் பிருகு மகரிஷியானவர், சமங்கையின் தடத்தினின்றும் அடைந்து; சுவஸ்தமாகக் காலஞ்சென்ற முன்னிலையில் மந்தரசானுவி லிருக்கும் தமது திருமேனியிற்புக்கார். ஈண்டு, பிருகு முனிவர் தமது தேகத்தினின்றும் வெளிப்போந்து சமங்கைத்தடம் வரையுற்ற அவ்வப் பிரதேசங்களில் மைந்தனது விருத்தாந்தத்தை முறையாகக்கண்டு மீண்டும் வந்ததமது சரீரத்திற் புகுந்தார் எனமயங்கற்க; யோகவலுமையால் தாமிருந்த இடத்திலேயே யாவற்றையுங் காணுதல் கூடுமாதலின். வெளிப்போந்து உலாவுவதாயினும் சென்றவருந் தரிசனங் கூடாமையின். ஆகையாற் சமங்கையின் தடத்தினின்றும் வந்ததமதங்கத்திற் பிரவேசித்தார் என்று கூறியதற்கு அச்சிந்தைத்தியாக தஞ்சரீரப் பிரதிசந்தான மாத்திரத்திற் முற்பரியமென வறிந்துகொள்க. அந்த மைந்தனது வாஞ்சையற்ற மகரிஷியானவர் பிருந்த விஸ்மய முடையவராகிப் புன்சிரிப்போடு கூடிப் பிரகாசியாநின்ற திருஷ்டியினுலே இராகமற்ற காலனுரை நோக்கி இதனைக் கூறத்தொடங்கினர்.

(ச.) ஜகதீசனென்னும் சமதிருஷ்டியை யுடையகாலன், ஈது + கண்ணுல், மேல + கண்ணடியில். பாய்ந்த = பிரதிவிம்பித்த, பாலகன் செய்கையெல்லாம் கணத்தின் எல்லை, பார்த்தனன் = சிந்தித்துக் கண்டான் என்பது அந்வயம். காலன்றன்னை = ஸ்தாராகனுடைய காலனைநோக்கி பிருகுவானவர் தியானதிருஷ்டியானே சமங்கைத்தடஞ்

சென்று மீண்டும்வந்து, காலசரீர புரோபாகவர்த் தினியாய தந்தனுவிற் புகுந்தனரென்பது மூலொன்னுவயம். (31-32)

(ஸ்ரீ-வீர - அ-கை.) காலனுர் மகிமையைக் கூறித்தமது அறியாமையைபுரைத்தல்:- முழுதென்பது.

முழுதுணர்தருமநீதி முதல்வனீ காலமூன்றும்
பழுதறத் தெரிதிரீயே பாலராய்ப் பரமஞான
மெழுதலி னினைஞராகு மெம்மனே ரென்றலோடுங்
கெழுதகை யுலகைநடக்குங் கேடறுநிலை மைக்காலன். (33)

(ப - ரை.) முழுதுணர்தருமநீதி முதல்வன்நீ = பூதபவ்யேசராகிய பகவான்தேவரீர் காலமூன்றும் பழுதறத் தெரிதிரீயே = தேவரீரே திரிகால அமலதரிசியாக உள்ளீர், பாலராய் = அறியாதவராய், பரமஞானம் எழுதலில் = பேருணர்வு தாபமில்லாதவர். ஆகிய, இளைஞர் ஆகும் எம்மனோர் = எம்போலியர் சிறியவர் ஆவேம், என்றலோடும் = என இங்ஙன மிசைப்பக்கேட்ட, கெழுதகை யுலகைநடக்கும் கேடறு நிலைமைக்காலன் = சந்ததம் பிறந்துகொண்டே யிருக்குந் தன்மைவாய்ந்த ஜகத்தைச் சங்காரஞ்செய்து கொண்டே ஸ்திதியுற்று நாசமற்றதருமர்.

(ஸ்ரீ - வீர) ஹே பகவன்! பூதபவ்ய ஈசரே! யாங்கள் இராகாதிமலின சித்தமுடையவர்கள் ஆகவின் அஞ்ஞர்கள் ஆவேம், ஹேதேவரே! தங்களைப் போன்றவர்களது மதியே மூன்றுகாலத்தையும் நின்மலமாகக் காணக்கூடியதாம்; அசத்தியரூபமாகிய இச்சகத்தின்றிதியானது பரமார்த்த ரூபம்போலத் தோற்றுவதாய் நானுகார விகாரங்களோடு கூடியதாய், தீனனுக்கும் விப்பிரமத்தை விளைவிக்கின்றது, அறிஞனுக்கும் பரமார்த்தவஸ்து சொரூபத்திலே மயலுண்டாக்குகின்றது? என்று இயம்பக் கேட்டதருமர்.()

(ஸ்ரீ-வீர - அ-கை.) காலனுர் மகரிஷியை யழைத்துக்கொண்டு வாசுதேவனிருக்கைசெல்லல்:—மாதவனென்பன.

மாதவன் மகீயைப்பற்றி மந்தரக் கந்தரத்தின்
மீதகன்ற மராறற்றை மேவினனிவரி லாங்கே
பேதமாம் வாசுதேவப் பெயரொடு பிருந்தசேயைக்
காதலான் முனிவன்கண்டான் காலனுமிதனைச் செய்தான். (34)

(ப - ரை.) மாதவன் = பிருகுமகரிஷியினது, கையைப்பற்றி = கரத்தைக் கரத்தாற்கவர்ந்து, மந்தரக் கந்தரத்தின் = மந்தராசல கந்தரத்தினின்றும், மீதகன்று = மேலெழியறங்கிவந்து, அமரர் ஆற்றைமேவினன் = சமங்கைச் சரித்தின்றடத்தை யடைந்தனன், இவரில் = இவ்விருவர்தம்முள், ஆங்கே = அவ்விடத்தே, பேதமாம் = சுக்கிரனினும் அயலாக, வாசுதேவப் பெயரொடும் = வாசுதேவன் என்னும் திருநாமத்தோடும், இருந்தசேயை = வீற்றிருந்த குமரனை, காதலான் முனிவன்கண்டான் = அன்போடும் மகரிஷிகண்டனர், காலனும் இதனைச் செய்தான் = தருமரும் இதனைச் செய்தனர்.

(ஸ்ரீ-வீர.) மகரிஷியானவர் மலர்ந்ததைக்கேட்ட, தருமதேவர் அநேகம்வகையான நியாயங்களை யெல்லாம் முனிவர்க் கெடுத்தோதி ஜகத்தின்றிதியையும் கதியையும் நோக்கி, புன்சிரிப்புற்றவர் போன்றுற்ற பகவானுகிய அக்காலதேவர், அம்சுமான் கிரணத்தால் இந்திலவ்போலக் கரத்தாற் பிருகுமகரிஷியின் கரத்தைப் பிடித்துச் செல்லத்

தொடங்கினர். பின்கால பிருகு தேவரிருவரும் மந்தராசல கந்தரத்தினின்றும் கீழே அவனியில் வந்துசேர்ந்து சமங்கைச் சரித்தின்றடமடைய முயன்றனர், சர்வ புஷ்ப மயமா யிருப்பது போன்றதும், மலர்மோல அலைகளோடு கூடியதும் ஆகிய சமங்கை நதியை ஒருகணத்தில் யாதொரு ஆயாசமுமிலாமல் அடைந்தனர். அந்நதிக்கரையில் ஒருபாகத்தில் தன்மைந்த னிருப்பதைப் பிருகுமகரிஷியானவர் கண்டனர், அம்மைந் தன் அக்கால் அன்னியபாவமாகிய அசுக்கிரத் தன்மையையடைந்து வேறுதேகத்தை யுடையவனாக மாறுபட்டு இருந்தனன். சாந்த இந்திரியனும், சமாதிஸ்தனும் அசஞ் சலமனமானே யுடையவனும் அநாதி சமுசாரசிரமத்தின் சாந்தியின் பொருட்டு நீள் காலம் விசிராந்தனும் அம்மைந்தனிருந்தனன்.

(ச.) மந்தரக்கந்தரத்தின் = மந்தராசலத்தின் குகைகளினின்றும், அகன்றுமீது = பிறப்பட்டுப் பின்பு, அமரர் ஆற்றை = தேவகங்காநதியை கணத்தில் மேவினன், ஆங்கே = அந்நதி தீரத்திலேயிடத்து, இருந்த = சிதேந்திரியனும் மநோசாஞ்சல்லிய மற்றவனுமாய்ச் சமாதியிலிருந்த, சேயை = தன்புத்திரனை

(ஸ்ரீ-வீர - அ-கை.) தருமதேவர் சங்கற்பத்தினால் விழித்தமைந்தன் இருவரையும் பூசித்தபின் னொருங்கு வீற்றிருத்தல்:—இங்கென்பது. (34)

இங்குற்ற சமாதிநீங்கி யிவனெமைக் காண்கவென்று
சங்கற்பஞ் செய்தலோடுஞ் சமாதிவிட் டிவரைநோக்கி
வெங்குற்ற மில்லாமைந்தன் பணிதலும் விரும்பியாருந்
துங்கத்தோ ரொருகன்மீது மூவருஞ் சூழ்ந்திருந்தார். (35)

(ப - ரை.) இங்குற்ற சமாதிநீங்கி = இவ்விடத்தில் கூடியிருக்கும் நிர்விகற்பசமாதி கலைத்து, இவன் = இப்பிருகுமைந்தன், எமைக்காண்க என்று = எம்மிருவரையும் பார்க் கக் கடவன் என்பதாக, சங்கற்பம் செய்தலோடும் = தருமதேவர் எண்ணியவுடனே; சமாதிவிட்டு = நிருவிகற்ப சமாதியினின்றுங் கிளம்பி, இவரைநோக்கி = இவ்விரு வரையும் தரிசித்து, வெங்குற்ற மில்லாமைந்தன் = கொடிய குற்றமொன்று மில்லாதபுத் திரன், பணிதலும் = நமஸ்கரித்ததும், விரும்பியாரும் = பரஸ்பரம் செய்யப்பெற்ற நல்லாசாரமுடையராய், துங்கத்தோர் = பரிசுத்த சரிதமுடைய அம்மூன்று பேரும், ஒருகன்மீது சூழ்ந்திருந்தார் = ஓர் ஒப்பற்ற சிலையின்மீது வீற்றிருந்தனர்.

(ஸ்ரீ - வீர.) சமாதியின்கண் வீற்றிருந்த அப்பிருகுமைந்தனைநோக்கிக் காலதேவர், அத்தித்தொனியென்ன வாக்கியத்தால் உமதுமைந்தன் இவன்றான் என்றுமகரிஷியைவிளித் துவிளம்பினர். பின்னிம்மைந்தன் சமாதியினின்றும் வெளிப்போந்து எம்மைக்காண்க வென்று கூறிய சப்தத்தினாலே அப்பார்க்கவன் மாமேக கோஷத்தான் மயூரம் மெது வாக விழிப்பதேபோலத் சமாதியினின்றும் விழித்தனன். கண்களை விழித்ததும், ஒரே போதில், சன்முகத்தித்தித்து வந்திருக்கும் சஹஸ்ரரச்மி சூரியசந்திரர்களைப்போலும் உள்ளகால பிருகுப் பிரபுக்களைச் சமீபத்திற் கண்டனன். ஹரிஹரர்களைப் போன்றவரும் விப்பிர வேடரும், சமானமானவரும், காந்திவாய்ந்தவரும், தன்னைநோக்கி வந்திருப்பவரும், ஆகிய அவ்வீருவரையும், கதம்பலதிகை பீடத்தினின்றும் திடீரென்றெழுந்து நமஸ்கரித் தனன். அன்னியோன்னியம் அக்காலத்திற்குத் தக்கபடியாய கௌரவ அபிநந்தநாதியா சாரமுடையராய், அம்மூவரும், மேருவின்மீது ஜகத்பூச்சியர்களாய பிரஹ்ம விஷ்ணு ஹரர்களைப் போலும் ஒரு சிலையின்மீது இனிது வீற்றிருந்தனர். (35)

(ஸ்ரீ-வீர - அ-கை.) வாசுதேவ முனிவன் அவ்விருவர் தரிசனப்பேற்றை வியந் தோதல்:—வாசு என்பது.

வாசுதேவப் பேர்மைந்தன் மற்றிவர்தம்மை நோக்கிக்
தேசுடையு மதுநல்ல தெரிசனப் பேற்றினுலே
மாசறுதவத்தா னுலோன்மகங் களாற் றனத்தாற்போகா
வேசுறுமோகந் தீர்ந்தே னிதிலமுதின்பஞ் செய்யா. (36)

(ப - ரை.) வாசுதேவப் பேர்மைந்தன் = வாசுதேவன் என்னும் பெயர்வாய்ந்த அம்முனிவன், மற்றிவர் தம்மைநோக்கி = வந்து தரிசனந்தந்த அவ்விரண்டு முனிவரையும் பார்த்து, தேசுடையுமது நல்லதெரிசனப் பேற்றினுலே = மகாதேஜசு பொருந்திய தங்களுடைய தரிசன விசேடங் கிடைத்ததனுலே, மாசறு = குற்றமற்ற, தவத்தால் = தபசினுல், நூலால் = சாஸ்திரத்தால், மகங்களால் = யாகங்களால், தனத்தால் = திரவியத்தால், போகா = நீங்காத, எசுறுமோகந் தீர்ந்தேன் = சோகந்தரலாவியாவருமிகழு மாசுவாய்ந்த மோகமென்னு மயல்தீரப் பெற்றேன், இதிலமுதின் பஞ் செய்யா = இதுபோல் இதனினும் அபிர்தம் ஆநந்தத்தைப் பயவாதாம்.

(ஸ்ரீ - வீர.) ஹே இராகவ! இவ்வண்ணம், சமாதியை மூடித்த அந்த மைந்தன், அக்கங்கையின் நீரத்துப் பாறையிற்றன்னுட னமர்ந்திருந்த அவ்விரு பெரியோரையும் நோக்கி, அமிருதப் பிரவாகம் போன்ற சாந்தமான சுந்தரமொழிகளைக் கூறத்தொடங்கினன்: ஐயன்மீர்! தங்களுடைய பரமதரிசன அடைவினுலே யான் இன்று பரம ஆநந்தத்தை யடைந்தனன்; சமமாகவந்திருக்கும் சூரியசந்திரர்களைப் போன்ற தங்களுடைய தரிசனமான திலகத்தில் யாவருக்குத்தான் இன்பம்பயவாது? சாஸ்திரங்களானும், தவங்களினுனும், உபாசனைகளினுனும், பிரஹ்மவித்தையினுனும், எவ்வெண்மனோ மோகமானது நீராதிருந்ததோ அது தங்களுடைய தரிசனத்தினுனே தீர்ந்தேபோயது. அதிசய உக்தியாகிய இது பிரசங்கமையின் பொருட்டாம். மகத்துக்களுடைய இத்திருஷ்டிகளே இவ்வாறு பேரானந்த மகிழ்ச்சியைப் பிறப்பிக்கும், நிருமலமான அமிர்த விருஷ்டிகளும் இங்ஙன் பெருஞ்சுகத்தைச் செய்வியாவாம். அம்பரத்தை அதிபவித்திரஞ் செய்விக்கும் அம்புலியருக்கர்கள் போலும் எங்களுடைய இத்தேயத்தைப் பாதப்பரிசங்களால் அதிபவித்திரஞ் செய்வித்த பரிபூர்ண தேஜசோடு கூடியதாங்கள் யாவர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள மிகுந்த ஆவலுடையவனுகிப் பிரார்த்திக்கின்றேன் என்றனன்.

(ச.) மோகம் = எனது மனோமோகம், இதில் = மகான்களாகிய உமது தரிசனப் பேறு சுகந்தருவதுபோல, அமுதின்பஞ்செய்யா = நிர்மலாமிர்த விர்ஷ்டிகள் சுகந்தாராவாம். (36)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வாறியம்பிய வாசுதேவனுக்கு மகரிஷியினது திருவருளால் நடந்தனயாவுந் தோற்றல்:—என்று என்பது.

என்றுரைசெய் தோன்றன்னை யியன்முனியினிது நோக்கி
நன்றுயர் ஞானஞ்சேர்க நவைதரு மடமைதீர்க
வன்றனக் கென்றலோடு மூனக்கண் ணிரண்டு மூடிப்
பொன்றலின் ஞானக்கண்ணுற் புராதனமெல்லாங் கண்டான். (37)

(ப - ரை.) என்றுரை செய்தோன் றன்னை = என இவ்வண்ணம் வேண்டிக்கொண்டமைந்தனை, இயன் முனியினிது நோக்கி = சகஜமாகவே பெருந்தவத்தை

யுடைய மகரிஷியானவர் கருணையோடும் பார்த்து, உன்றனுக்கு நன்று உயர்ஞானம் சேர்க = உனக்கு நன்மையான மேன்மை மிக்க உணர்ச்சி யுண்டாகுக, நவைதரு மடமை தீர்க = குற்றத்தைப் பொருத்தும் அறியாமைதீர்ந்தொழிக, என்றலோடும் = இவ்வாறியம் பியவுடனே, ஊனக்கண்ணி ரண்டுமூடி = சர்மசக்ஷுக்கள் இரண்டையும்குவித்து, போன்ற வில் ஞானக்கண்ணுல் = கெடுதலில்லாத ஞான திருஷ்டியினால், புராதனம் எல்லாம் கண்டான் = பழமையான சரிதமுழுதும் பார்த்தனன்.

(ஸ்ரீ - வீர.) ஹே இராகவ! இவ்வாறு வேண்டிக் கொண்ட ஜன்மாந்தர ஆத்மஜனு கிய அக்குழந்தையை நோக்கிப் பிருகுமகரிஷியானவர், அஞ்ஞன் அல்லேர், பிரபுத்தன் ஆயினீர் உன்னை யிப்போது நினைந்து பார்த்தி யென்றனர். பிருகுமகரிஷியினுலே பிர போதிதனுகிய அம்மைந்தன் தியானத்தானே நன்குதிறக்கப்பெற்ற திவ்யலோசன முடையவனுகி மூகூர்த்த மாத்திரத்தில் தனதுஜன்மாந்தர தசையை நன்கெண்ணினன்.

(ச) புராதனம் எல்லாம் = தனது பூர்வஜன்மாந்தர தசையனைத்தும், கண்டான் = கணமாத்திரத்திற் பார்த்தான். (37)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஞானதிருஷ்டியினுலே யாவற்றையுங் கண்டமைந்தன் பெரும் வியப்பை யடைந்திடல்:—நீத்தன வென்பது.

நீத்தன பிறவியெல்லா நிமிடத்தின் ஞானக்கண்ணுற்
பார்த்தபின் வியந்து சொல்வான் பகுதியா மிருதிமோகங்
கோத்த ஞரலங்களாகிக் கோரவென் மனத்தினூடே
யாத்தமாய் வளராநின்ற தகோவகோ வீதொன்றென்னே. (38)

(ப - ரை.) நீத்தன பிறவியெல்லாம் = சென்ற சென்மங்கள் அனைத்தையும், நிமி டத்தில் = சொற்பகாலத்தில், ஞானக்கண்ணுல் = ஞான திருஷ்டியினுல், பார்த்தபின் = கண்டபின்னர், வியந்து சொல்வான் = ஆச்சரியப்பட்டு அறைவதாவது, பகுதியாம், மிருதிமோகம் = மகாமாயையா லெழுந்த பிரமமயமாய திருஷ்டியானது, கோத்தஞரலங் களாகி = ஜகத் ஜாலங்களாய்ப் பிரவிருத்திக்குமாறு, கோர என்மனத்தினூடே = இர ஜோமய எனது சித்தத்தில், ஆத்தமாய் வளராநின்றது = சாங்கோபாங்கமாய் விருத்தி யாகின்றது, அகோ அகோ ஈது ஒன்று என்னே = அந்தோ அந்தோ இஃதொன்றிருந்த வாறு என்னையோ!

(ஸ்ரீ - வீர.) வாக்கில் வல்லவனுகிய அம்மைந்தன், ஆச்சரியத்தைக் கண்டவனுகி, மலர்ந்த முகத்தனுய், மகிழ்ந்த மனத்தனுய், விதர்க்கத்தைத் தமந்த மந்தமொழிகளை விளம் பத் தொடங்கினன், எதன்வயமாக இவ்விஸ்தாரமான ஜகத்சக்ரமானது பிரவிருத்திக் குமோ, அத்தகைய பரமாத்மாவினது கருமபல விவஸ்தை யேதுமாயா சக்தியென்னும் நியதியானது வெல்க; அந்நியதியானது எக்கால் எதைத் தொடங்குமென எவராலுமே யறிதல் எளிதாம்.

(ச.) நீத்தன = தான் முன்பெடுத்து நீக்கியதான; பகுதியாம் = பிரகிருதிமயமான, மிருதிமோகம் = விரிந்த மோகத்தினுல், கோளுறு மனத்தினூடே = குற்றமான சித் தத்தின் கண், ஈதொன்று = இத்தப் பிரமமயமான திருஷ்டி. (38)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஒன்றையுணர்ந்ததானேயே ஒருங்கனைத்து மூணர்ந்ததாகக் காட்டல்:—கற்பன வென்பது.

கற்பன வனைத்துங் கற்றேன் காண்பன வனைத்துங்கண்டே
னுற்பவத்த நேககால முழுன்றவெங் துயருந் தீர்ந்தே
னற்பய னறிவைப் பெற்றே ஞமினியை யவேகி
யெற்படர் மந்தரத்தி லிருக்கின்ற வுடலைக் காண்பேம். (39)

(ப - ரை.) கற்பன அனைத்துங் கற்றேன் = அறியவேண்டிய யாவற்றையும் அறிந்தனன், காண்பன அனைத்துங் கண்டேன் = பார்க்கவேண்டி யாவற்றையும் பார்த்தனன், உற்பவத்த நேககாலம் உழுன்ற வெந்துயரும் தீர்ந்தேன் = இச்சமுசாரத்தில் வெகுகாலம் பிறந்திறந்துலைந்த கொடியதுக்கங்களும் அகன்றேன், நற்பயன் அறிவைப் பெற்றேன் நல்லபிரயோஜனமாகிய ஞானத்தையுமடைந்தேன், ஐய ! எந்தையே! இனீ = இப்போது, நாமேகி = நாம்போய், மந்தரத்தில் இருக்கின்ற = மந்தராசலத்திருப்பதாகிய, எற்பு அடர் = என்புநெருங்கிய, உடலை = கங்காளத்தை, காண்பேம் = பார்ப்போம்.

நாதம் (ஸ்ரீ - வீர) இப்போது அறியத்தக்கதை யறிந்தனன், காணவேண்டியதாயதை மின்றியதைக் கண்டனன் வெகுகாலம் இலேப்புற்றயானிப்போது விசிராந்தியுற்றவனுயினேன், எனது சகலமயல்களுஞ் சென்றன. ஹே தந்தையே ! எழுந்திருங்கள். செல்வோம், சென்று, காய்ந்த வனலதைபோலும் மிகக் காய்ந்துலர்ந் திருக்கும் அந்தமந்திராசலத்திருக்குங் காயகங்காளத்தைப் பார்ப்பேம்.

(ச.) கற்றேன் = கற்றறிய வேண்டியதை யறிந்தேன், அற்புதமாய் காண்பன, நற்பயன் = சின்மாத்திரத்தைத் தவிரச் சிறிதுமின்றென்னும் நற்பிரயோஜனத்தையுடைய, உடலை = தேவகதி விலாசத்தைக் காண்போம். (39)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அத்தனுவால் உனக்காக வேண்டியது என்னேயெனீன் ? ஒன்று மிலதெனல்:...கருமமென்பது.

கருமமே யேதுவாகுங் காயகங்கா ளந்தன்னை
யிருகணுலேனுக்கி யின்பமெய்து வானினைந்தேனியாது
மொருசெயல் வேட்கையில்லை யொழிப்புறு செயலுமில்லை
வருதிரா லென்ன வன்னுர் மந்தரங்கணத்திற் சேர்ந்தார். (40)

(ப - ரை.) கருமமே யேதுவாகும் காயகங்காளந்தன்னை = நியதியின் இரசனையால் உண்டாவதா யிராநின்ற அவ்வுடலெலுப்புப் பஞ்சரத்தை, இருகணுல் நோக்கி = இரண்டு நேத்திரங்களாலும் காட்சியாகக் கண்டு, இன்பம் எய்துவான் = ஆநந்தத்தை யடையும் பொருட்டு, நினேந்தேன் = எண்ணினேன், யாதும் ஒருசெயல் வேட்கையில்லை = இவ்வுலகத்தில் எத்தொழிலைச் செய்யவு மிச்சையில்லை, ஒழிப்புறு செயலுமில்லை = எத்தொழிலை யெள்ளவு மிச்சையில்லை, வருதிர் = வாருங்கள், என்ன = என்றுகூற, அன்னுர் = அம்மூவரும், வந்தரங்கணத்தில் சேர்ந்தார் = மந்தராசலத்தை நொடிப்பொழுதிற் சார்ந்தனர்.

(ஸ்ரீ-வீர.) ஈண்டு இனிதியற்றத் தக்கதொன்றையும் கண்டிலேன், இனிதியற்றுது ஒழிக்கத்தக்கதையுங் காணேன், நியதியின் இரசனேயைக் கேவலங்காணும் பொருட்டு யான் வினேயாடிக் கொண்டிருப்பேன். அற்றேல் நியதியின் செயற்கையைக்கண்டு மகிழ வினேயாடும் நினக்கு ஆண்டு அபிநிவேசத்தான் மீண்டும் முன்போலத் தேவாங்கனே மநோரதங்கொண்டு பின்றொடர்தலாதி சமுசாரத்தின் அடைவு வருமேயெனச் சங்கையுண்டாக, அதிநிடமான தத்துவஞான பாதித அநுபவிருத்தி மாத்திரத் தன்மையானே

முன்போல அபிஷேக அடைவு இலதாம் என்று சமாதானித்தல்:—வருதிரால் என்றது. ஆல் அசையே யெனினும் பற்றற்ற பான்மையின் உல்லாசத்தைக் காட்டும் பொருட்டாம். எக்காரணத்தினுல் யான், ஒரேயாத்மா பரமார்த்த சத்தியம் அயலொன்றும் அன்று, என்னுங் திடநிச்சயத்தானே, அத்தியந்தஞ் சுபத்தையே செய்யும் எச்சரித்திரமானது, ஆரியர்களாகிய அண்ணியஜீவன் முக்தர்களாலும் சேவிக்கப் பெறுமோ, அச்சரித்திரத்தையே, அதிதிடமாக அநுசரிப்பேனே, முன்போல மூடவிருத்தனுயிரேனே; அக்காரணத்தினுலே, உங்களுக்கும் எனக்கும், அபிமதமாய பூர்வதேகஜீவனுதி ரூபமதி நன்காயுளதாகலாம்; அதனுலே யாதொருகோது முளதாகாதாம். அதனுலே பிரகிருதமான பிராரப்த சேஷபோஜக விவகாரத்தை ஆசரிப்பேன், மூடனைப்போல அபிஷேசத்தை யடையேன்.

(ச.) ஒழிப்புறும் = அதிஷ்டமாய் விடத்தக்க, செயலுமில்லை, ஸ்ரீ வசிட்டர், கங்கா தீரத்தினின்றும் மந்தரங்கணத்திற் சேர்ந்தார். சமீஹிதம் = இஷ்டம். (40)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மகரிஷியின் ஆசிரமத்தை வந்தடைந்தபின் மைந்தன் தன் காயத்தை நோக்கி வியத்தல்:—மூந்துறு என்பது,

மூந்துறு சகத்தினெல்லை தெளிதரு மூவர்தாமும்
வந்துழி முன்னைச்சென்ம மருவிய வுடலைமைந்த
னந்தமின் மகிழ்வாலேநோக்கி யருந்தவப் பிதாவைநோக்கி
யிந்தவன் கங்காளங்கொ லீன்றுநீ வளர்த்த தென்றான். (41)

(ப - ரை.) மூந்துறு சகத்தின் எல்லை தெளிதரு மூவர்தாமும் = பிராசீனமான ஜகத்தின் கதியை இனிது ஆராய்ந்தறிந்த தத்துவஞ்ஞர்களாகிய அம்மூன்று பேர்களும், வந்துழி = ஆசிரமத்தற்றபோது, மைந்தன் = பிருகுசுதன், முன்னைச் சென்மம் மருவிய உடலை = பூர்வஜன்மத் தடைவுற்றிருந்த சரீரத்தை, அந்தமில் மகிழ்வால் நோக்கி = அளவற்ற சந்தோடத்தோடும் பார்த்து, அருந்தவப் பிதாவைநோக்கி = அரியதவமகிமை வாய்ந்த தந்தையை விளித்து, இந்தவன் கங்காளங்கொல் ஈன்று நீவளர்த்தது என்றான் = இதோ நிகழும் வண்புமிக்க என்புக் கூண்டைத்தானு, ஹே தந்தாய்! தாங்கள் தவம்புரிந்து பெற்றுப் போற்றிச் சீராட்டி வளர்த்தது என்று புன்சிரிப்புடன் புகன்றனன்.

(ஸ்ரீ - வீர.) முன்மொழிந்த வகையாகச் சமுசார சம்பூர்ணிய கதியை விசாரிப்பவராய், சஞ்சலப் பிராணன்களோடு கூடியவராய், தத்துவமுணர்ந்தவராய அம்மூவரும், சமங்கையின் றடத்தினின்றும் பிருகு ஆசிரமத்தை நோக்கிக் கணகாலத்தில் வந்து சேர்ந்தனர். சஞ்சலப் பிராணன் என்றதனுல், பிராணனது கிரியையினுலேயே அவர் கட்குச் சலனோபசாரம், ஆத்மாவின் கண்ணே கிரியையில்லை யென்பதை விளக்கியதாம். பார்க்கவன் பூர்வஜன்ம உற்பவ சுஷ்கமானதனுவைக் கண்டபின், ஹே தந்தாய்! எவ் உடலானது தங்களால் சுகசம்போகங்களினுலே முன்னர் நன்னர் கொஞ்சிக்கொஞ்சிப் போற்றப் பெற்றதோ; அவ்வுடலான இது மிகவும் இளைத்தன்றே யிருக்கின்றது, என்பதாக இனிக்கூறும் வண்ணம் கூறத்தொடங்கினன்:

(ச.) தெளிதரு = விசாரித்துணர்ந்த தத்துவஞ்ஞராகிய. (41)

(ஸ்ரீ - வீர - அ-கை.) காய்ந்த கங்காளக் காயமிருந்த நிலையை நோக்கிப் பல்லாற்றலும் வருணித்தல்:—பின்-மன, மென்ப.

பின்னரு முரைப்பானே யபெறலருஞ் சுகங்களாலே
முன்னநீ வளர்த்தகாய மொய்துய ரூனத்துமாறி
யின்னல்கூர் காதலையமிதா கிதமெல்லா மின்றி
மன்னிய சுகமதாகி மனமிறந் திருந்ததன்றே. (42)

மனமிலா நிலையினன்றி மன்னுயிர்க் கின்பமுண்டோ
கனமுறு சுகசம்போகக் கடலிலே திளைக்கலாகு
மனகபேதறிவு சாந்த மறிவுளோர் தாபநீங்கித்
தனதுயர் நிலையாமிந்தத் தனியுடல் வாழ்ந்ததன்றே. (43)

(ப - ரை.) பின்னரும் உரைப்பான் = மீண்டும் பார்க்கவன் கூறுவதாவது, ஐய ! தந்தாய் ! பெறலருஞ் சுகங்களாலே = கிடைத்தற்கரிய அநேகவித சுகசம்போகங்களாலே, முன்னம் = பூர்வம், நீ வளர்த்த = தாங்கள் பாலனஞ்செய்த, காயம் = இத்தேகம், மொய்துய ரூனத்துமாறி = சம்பந்தித்த சர்வதுக்கங்களும் அகன்று, இன்னல் கூர்காதல் ஐயம் = துயரந்தரும் ஆசைசந்தேகம், இதாகிதம் = அநுகூலம் பிரதிகூலம், எல்லாமின்றி = என்பனயாவுமே யொழிந்து, மன்னிய சுகமதாகி = நிறைந்த ஆநந்தத்தையுடையதாகி, மனமிறந்திருந்தது அன்று ஏ = மநோலயத்தை யடைந்தன்றோ வாழ்கின்றது.

(ப - ரை.) மனமிலா நிலையினன்றி = சித்தமில்லாத திதியினல்லாது, மன்னுயிர்க் கின்பம் உண்டோ = இச்சமூசாரத் துழலும் ஜீவனுக்காநந்தலேசமும் உளதாமோ, அனகபேதறிவு சாந்தமறிவுளோர் = மனமற்ற தன்மையையுற்ற மகாமதியராய்ச் சாந்தராய்ச் சொரூப சாக்ஷாத்கார முற்றவர், கனமுறு சுகசம்போகக் கடலிலே திளைக்கலாகும் = ஞானகனமான ஆனந்த சம்போக சமுத்திரத்திலே மூழ்குவர், தாபநீங்கி = சர்வதுக்கங்களும் அகன்று, தனதுயர் நிலையாம் = அச்சீவன் முக்தரதுமேலான திதியிலிருக்கும் திருமேனிகள்போல, இந்தத்தனியுடல் வாழ்ந்ததன்றே = இவ்வேகாந்த வாசசரீரமும் வாழ்ந்து கொண்டன்றோ இருக்கின்றது. அன்று ஏ அசைநிலைகள், அல்லது ஏ என்பது ஓவின் பொருள்கொண்டு வியப்பினை யுணர்த்தினும் உணர்த்தும்.

(ஸ்ரீ - வீர.) ஐயாவே ! சந்தேகமற்று, சர்வ கௌதுகமும் விடுபட்டு, சர்வதொழில்களையுஞ் செய்யாமல், சுகமாக இத்தேகம் வனத்தில் எங்ஙனம் தூங்குகின்றது பாருங்கள் ! சர்வ ஆசைகளின் வடிவசுரங்களின் காரணபூதமாய மோக இலக்கண மேககாரணப்பனிக்குச் சரத்வரவு வடிவமநோநாசம் அல்லாமல் வேறு மேன்மையை ஜந்துக்களிடத்திற் கண்டிலேன். ஆசைதிசை யெனப்பொருள் படலின், சர்வ ஆசைகளின் அல்லது சர்வ ஆசைகளில் ஜ்வரபூதமாய மோகப்பனியின் சரற்காலவரவு எனப்பொருள் கொள்ளினும் அமையும் எவர்கள் மனமற்ற தன்மையை யடைந்துள்ளார்களோ, அவர்களே, இரணியகருப்ப ஆநந்தமீறுய விடய சுகபோகங்களின் பரம அவதியாகிய பூமாநந்தத்தை யடைந்தவர்கள் ஆவர்கள் அபரிச்சின்ன பிரஹ்ம சாக்ஷாத்காரத் தன்மையானே பூரணபுந்தியர்கள் ஆவர்கள், இராகாதிதோஷகார்ய, உபசமத்தானே சாந்தமதியினர்கள் ஆவர்கள். தனதுதேகத்தில் ஜீவன் முக்தேகசாமியம் அடைவித்துமகிழல்: = தாபநீங்கியென்பது. சர்வதுக்கதசைகளினின்றும் விடுபட்டுச் சுமாத்தியந்த மற்றுச்சுகநிலையிலிருக்கும் காயத்தை மகத் புண்ணிய வயத்தாற் கண்டனன்.

(ச.) இருந்தது = அங்கிக்கிடக்கின்றது.

மன்னுயிர்க்கு = ஜந்துக்களுக்கு, மனமிலா நிலையின்றி = சகல ஆசைகளுக்கு மூலமான துக்கமோகங்க ளென்னும் பனிகளினுடைய நிவர்த்தக ரூபமான சரற்கால மாகிய நிர்மனஸ் கதையினல்லது, இன்பமுண்டோ = மற்றொன்றினுஞ் சுகமின்றும், இந்தத்தனியுடல் வாழ்ந்தது. அனகபேரறிவு=புனிதமான மகாமதியும், சாந்தவறிவு= சாந்தமதியும், உளோர் = உடையவர்கள், தனதுதாப நீங்கி (தமதென்னும் பன்மை தொடை நோக்கித்தனதென விகாரமாயிற்று) கனமுறு சுகசம்போகக்கடலிலேதிளைக்க லாகும் = பேராநந்தாநுபவ சாகரத்தின் முழுகற்குரிய, உயர்நிலையாம், நிர்மனஸ்கதைக் கொப்பாம். அன்று ஏ இரண்டும் அசை நிலைகள். (43)

(ஸ்ரீ-வீர - அ-கை) இவ்வாறு இயம்பியதைக் கேட்டுக்கொண் டிருந்தகாலனுர் அதனைமாற்றி யாசீர்வதித்தல்:—அரு என்பது.

அருந்தவப் பயனுலிந்த வற்புதங்கண்டே னென்ன
விருந்தவக் காலனுக்கி யிவ்வுரை யிகந்து மாற்றிப்
பொருந்திய வுடலின்மன்னர் புரிபுகுமது போற்புக்குத்
திருந்தியவசுரர்க் கெல்லாந் தேசிகச் செய்கை செய்வாய். (44)

(ப - ரை.) அருந்தவப் பயனல் = பெரும்பாக்கிய வசத்தினுல், இந்த அற்புதம் கண்டேன் என்ன = இத்தகைய ஆச்சர்யத்தைப் பார்த்தேன் என்றுமைந்தன் கூற, இருந்தவக்காலன் நோக்கி = அதனைக்கேட்டுக் கொண்டிருந்த பெருந்தவத்தினையுடைய அத்தருமர்பார்த்து, இவ்வுரை யிகந்துமாற்றி = இவ்வாறு கூறுதலே நன்றன்று என்று புகன்றுதிருப்பி, பொருந்தியவுடலின் = முன்னர்ப் பொருந்திய பார்க்கவசரீரத்தில், மன்னர் = அரசர்கள் திக்குவிஜயாநந்தரம், புரிபுகுமது போற்புக்கு= தமது நகரத்திற் பிரவேசிக்குஞ் செயல்போலப் பிரவேசித்து, திருந்திய வசுரர்க்கெல்லாம் தேசிகச் செய்கை செய்வாய் = பெரும்பாக்கியம் பெற்ற அசுரேந்திரர்கட் கெல்லாம் குருத்து வத்தைச்செய்து நீடுழிவாழ்தி.

(ஸ்ரீ - வீர.) பாக்கிய உதயத்தால், வனத்தில் இந்தச் சிந்தையற்ற விந்தைக்காயத் தையான் கண்டனன் என்றனன். அம்மைந்தன் அளவில் சரீரங்களே யடைந்தனனே அவற்றுள் இத்தேகத்தின் மாத்திரம் பிரிய அநுதாபங்கள் வருவானேன், மேல் இதன் கட்புலக்காலனுர் ஆணைருதல் தானென் எனின் ? மற்றவற்றைக் குறித்து இதன் கண் ணுகர் வினையின் ஆதிக்கிய பிருத்தலின், சென்றகற்பத்திற் செய்த தவப்பயனுக இக் கற்பத்தில் நவக்கிரகத் தொன்றுயும் அசுரதேசிகனுயும் இருக்கவேண்டிய அமைப்பிருத் தலினுலும் என்றுணர்க. முன்வருணித்த பிரகாரமியம்பிய பிருகுமகரிஷியின் தனயனு கிய சுக்கிரனது பரிபூர்ணதேவனே வாக்கியத்தை அயுக்தத்தன்மை வருணனத்தால் அகற்றிக் கம்பீரத் தொனியோடுங் காலபகவான் கூறுவதாவது. சமங்கைக்கரையிற் றவம்புரிந்து கொண்டிருந்த இந்தத்தநுவை விடுத்து ஹே பார்க்வ ! வெளிப்போந்த பார்த்திவன் நகரியை வந்தடைதல்போல இம்மங்கலதநுவிற் பொங்குற மகிழ்ச்சி புருந்திடுதி, அதி காரஞ் செலுத்தும்படியான பிராரப்த எழுச்சிவரும்போது இம்முதற்றனு வினுலே பெருந்தவம் புரிந்து அதனுனே மீளவும், உன்னல் அசுரேந்திரர்களின் குருத்துவம் செய்யத்தக்கது.

(ச.) இந்த வற்புதம் = துக்கமின்றிச் சுகமாய் நிர்மனஸ் கதையாகிய இவ்வற்புத மான தேகத்தை இவ்வனத்தில் நான்கண்டேன் என்ன, அச்சுக்கிரனே. (44)

(ஸ்ரீ-வீர - அ-கை.) காலதேவரைப் பிரிந்த இருவரும் மறுகிற்றலும் மைந்தன் நியப்பிரவேசமும் உணர்த்தல்:—என்று என்பது.

என்றுசுக்கிரனேயே வியரிவரிருவரையும் வாழ்த்தி
நின்றுழிமறைந்தான் காலனீத்தவர்மறுகி நின்றூர்
பின்றையவாசு தேவப்பேருறு கருத்தைநீக்கி
வன்றகைவெள்ளி முன்னமரு வியவுடலிற்புக்கான். (45)

(ப-ரை.) என்று = கூறியவகையால், சுக்கிரனே யேயி = அப்பார்க்கவனே ஆதிசரீரத்திற் புகுமாறு கட்டளையிட்டு, இவரிருவரையும் வாழ்த்தி = பிருகுமகரிஷியையும் சுக்கிரனையும் சந்நிதியில் ஆசீர்வதித்து, நின்றுழி மறைந்தான் காலன் = நின்ற நிலையிலேயே யந்தர்த்தானமாயினர் தருமதேவர், நீத்தவர் மறுகி நின்றூர் = தரிசனபாக்கியமிழந்த அவ்விருவரும் கண்ணீர்விட்டுநின்றனர், பின்றையவாசு தேவப்பேருறுகருத்தை நீக்கி = பின்னரடை வுற்றவாசு தேவன் என்னும் நாமமமைந்த எண்ணத்தையகற்றி, வன்றகைவெள்ளி = பெருந்தன்மை வாய்ந்த சுக்கிரன், முன்னம் மருவிய = பூர்வம் பொருந்திய, உடலிற் புக்கான் = காயத்திற் பிரவேசித்தான், (ஸ்ரீ-வீர.) சுபமானது உங்கட்குண்டாகுக, யாமோ அபிமதமான திசை செல்வோம், யாமோ எதிர்த்து மரியாதையாலாதல், அதிசர சாகித்ய விவக்ஷையினாலாதல் ஒல்லும், அபிமத திசை விசேஷணம் அநபிமத விலக்கப் பொருட்டு அடைவுற்றதல்லவாம் பூர்ணத்மாவிற்கு அநபிமதமே அப்பிரசித்த மாதலின் ; எச்சித்தத்திற்குத் தான் இது அபிமதமெனவும், இஃது அநபிமதமெனவும் விகற்பமானதுண்டாமோ அதுவெறுப்பானதை விடுத்து விருப்பானதைத் தொடுத்துக் கொள்ளும், அச்சித்த மானது ஆராய்ந்து பார்க்குமிடத்து ஒருசிறிது வத்துருவத்தையும் உடையதாகாதாம் ஆகலின் அபிமதமானதிசை யென்பதற்குப் பரமப்பிரேமாஸ்பத ஆத்மபாவ அவஸ்தான மென்பதாம், ஆங்குச் செல்வோம், என்பதாகத்தமது கருத்தைத் தெரிவிக்கும் பொருட்டு விசேஷணம் தந்ததாம். விருப்பு வெறுப்புள்ள உள்ளம் ஒருபொருளாகாமையின், அஃதற்றயாம் அதிக விருப்பிற்கிடனுய எமது சொரூபத்தையே யடைவேம் என்பதாம். என இசைத்து, பிருகு மகரிஷியும் சுக்கிரனும் அன்பினுலே வெப்புற்று அருங்கண்ணீர் சொரிய, தப்தஅங்கங்களோடுற்ற மண்ணும் விண்ணும் கண்ணீர் சொரியக்கிரணங்களோடு கூடச்சகத்திரு கிரண நாயகன் மறைந்ததே போலும் அக்காலஞர் மறைந்தருளினர். அந்தக்கிருதாந்தர் ஆகியபகவான் சென்றதும பார்க்கவன் அவசியம் பலிக்குங்கன் மதியையும், பரமேசுர இச்சையின் பேதிக்கத்தகாத அதிவார்யததி யையும் விசாரித்து; வசந்த காலமானது ஹேமந்தசிரகால நிமித்தத்தானே நன்குகாய்ந்த, வரும்மலர்ப்பல முதிப்பிக்கத்தக்க, பூவுகுலதையிற்புகுந்த தொக்க; வெகுகால காரணத்தானே அத்தியந்தம் சுஷ்கமாகி, பாவி புஷ்ப சுபவுதயமாகி விளங்கும் அவ்வினந்தனுவிற் புகுந்தனன்.

(ச.) இருவரையும், உங்களுக்கு மங்களமுண்டாக வென்றுவாழ்த்தி, இஷ்டமான திசைக்குயாம் எகின்றேம் என்றகூறி நின்றுழி = அவ்விடத்திற்றானே. (45)

(ஸ்ரீ-வீர-அ-கை.) மேனியின்மைந்தன் பிரவேசித்த பின்னடந்ததை யறிவித்தல்:—வினையென்பது.

வினையது வயத்தினுலே வெள்ளிசே ருடலந்தன்னைத்
தனிநிகர் பிருகுவேத மந்திர சலத்தாலாட்ட
நனைதலு நாடியெல்லா நயம்பெறப் பிராணன்றுங்கி
யனையவ னெழுந்ததாதை யடிபணிந் தருகுநின்றான். (46)

(ப - ரை.) வினையது வயத்திஞலே = கருமவசத்திஞலே, வெள்ளிசேர் உடலந் தன்னை = சுக்கிரன் புகுந்தமக்கின சரீரமாமதனை, தனைநிகர் பிருகு = தமக்குத்தாமே யுவமிக்கத்தக்க மகரிஷியானவர், வேதமந்திர சலத்தால் ஆட்ட = வேதோக்த மந்திரங்களே மந்திரித்துக் கமண்டலுநீரால் ஆப்யாயன மாற்ற, நனைதலும் நாடியெல்லாம் = நரம்புகள்யாவும் பசைபற்றியவுடன், நயம்பெறப் பிராணன்முங்கி = சௌக்கிய முறுமாறு பிராணவாயுச் சஞ்சரித்து வினையாடலும், அனையவன் = அப்புராதன சுக்கிரன், எழுந்து = துயிலினின்றும் உத்திதமானவன் போலக்கிளம்பி, தாதை = அருமைப்பிதாவின், அடிபணிந்து = வினயமுடக்குத் திருவடியைத் தூதித்து நமஸ்கரித்து, அருகுநின்முன் = சமீபத்தில் வணக்கத்துடன் கைகட்டிக் கொண்டு நின்றனன்.

(ஸ்ரீ - வீர.) சுக்கிரன் எனப்பெயரிய அத்தநுஜன் றனுவின்கண்ணே சென்றுவந்த சீவன் புகுந்தபின்னர், அம்மகாமுனிவர், கமண்டலு வாரிகொண்டு மந்திரங்களாலே ஆப்யயனஞ் செய்தனர். அவ்வாப்யாயனஞ் செய்தபின்னர் மழைகாலத்திற் சந்து பொந்துக ளெல்லாம் நீர்பூரித்து நிரம்பிவரும் நதியேபோல அத்தேகத்தினது சர்வநாடிகளும் பூர்ணங்களாகி விளங்கிக்கொண்டிருந்தன. நீரிஞலும், புரோவாதத்தின் சையோகத்தாலும், பூரித்துநின்ற மேகமேபோலும், பிராணசமீரணன் நடந்து செல்லலும் சுக்கிரன் நன்கெழுந்தனன். முதலில் எழுந்தல்ல சித்தமேகமானது தான்ஒருனித்துப் பர்வதத்தையும், தொனிப் பித்ததேபோலப், புனிதமான திருமேனியை யுடையபிதாவின் சன்னிதியில் நாமகோத்திர கீர்த்த பூர்வகமாக நமஸ்கரித்து அன்பால் அவரையும் ஆசீர்வதிக்குமாறு செய்தனன்.

(ச.) வினையது வயத்திஞலே = நியதியினது வசத்திஞலே, வேதமந்திர சலத்தால் = வேதமந்திரங்களோடு கூடிய கமண்டலோதகத்திஞல். (46)

(ஸ்ரீ-வீர - அ-கை) ஸ்ரீ வசிஷ்டபகவான் பிதாபுத்திரரது சஞ்சாரங்கூறிக்கதையை யுஷ் சங்கரித்தல்:—பிருகுவென்பது.

பிருகுவு மைந்தன்முனும் பிறங்குமந்தரத்திற் கானிற்
றிருகிய சித்தமென்னுந் தீப்பகை தீரமாற்றி
வருதிரையி லாதநீர்போன் மாசறுநிலையில் வாழ்ந்தார்
கருணைமா முகிலேயென்று கற்றுணர் வசிட்டன் சொன்னன். (47)

(ப - ரை.) பிருகுவும் மைந்தன்முனும் = பிருகுமகரிஷியும் பார்க்கவ மகரிஷியுமாகிய, பிறங்குமந்தரத்தில் = தவத்திற்குத் தக்க சாமக்ரிகளோடு விளங்கும் அம்மந்தர சலத்தில், கானில் = இலங்கும் புனிதமான கானனத்தில், திருகியசித்தமென்னும் தீப்பகை = மாறுபாடாகத் திருகியங்களைக் கருதித்திரியும் மனமென்று சொல்லப்பட்ட வெய்யவிரோதியை, தீரமாற்றி = அத்தியந்தம் ஜயித்து, வருதிரையிலாத நீர்போல் = எழுமலைகளற்றநீர் நிறைந்த மடுவைப்போல, மாசறு நிலையில் = ஜீவன் முக்திப்பதத்தில், வாழ்ந்தார் = ஆநந்தித்திருந்தார், கருணைமாமுகிலே = அவ்யாஜதயாம் புதமே ! என்று = என இவ்வண்ணம்; கற்றுணர் = ஸ்ரீ பிரஹ்மதேவர் மூலமாகச் சகல வேதங்களையும் அத்தியாபனஞ்செய்து உணரத்தக்க பரமாத்ம வத்துவைச் சாக்ஷாத்கரித்தின் புற்றிலங்கும், வசிட்டன் = ஸ்ரீ வசிட்டபகவான்; சொன்னன் = ஸ்ரீ இரகுநந்தனனுக் குபதேசித்தருளினர்.

(ஸ்ரீ - வீர.) ஒரு முகூர்த்த பரியந்தம் அன்யோன்யம் மயூரஜலதங்கள் போலும் சம்பாஷித்துக் கொண்டிருந்தபின் னெழுந்து உலகத்தோடொத்து வாழ்பவராய் வாசு

தேவ சரீரத்தைத் தகனஞ்செய்தனர். செய்தபின் பிருகு பார்க்கவர்கள் இருவர்களும் அந்தமகத் புனிதமான வனத்திற்றனே, பெருந்தவத்தைச் செய்துகொண்டு அதிதீப்தர் களாய் விண்ணில் சதிபாஸ்கரர்கள் போல விளங்கிக்கொண்டிருந்தார்கள். சந்தோஷ விஷாதங்களில் ஒத்துவாழ்ந்த ஜீவன் முக்தர்களாகிய அவ்விருவருள் சுக்கிராசிரியர் சில காலங்கழித்து அசுரகுருத்துவத்தையும் கிரகாதிகார பதவியையும் பெற்று வாழ்ந்தனர், பிருகு மகரிஷியும் தமக்கு யோக்கியமாய பிராஜாபத்ய அதிகாரபதத்தில் ஆமயமற்று வீற் றிருந்தனர். இவ்வண்ணம் ஹேஇராகுநந்தன! உனக்கு இப்பார்க்கவ உபாக்கியானமானது வருணிக்கப் பெற்றது, உனதுள்ளத்தில் அதிதிடமாக இப்பொருள்களே யாராய்ந்து பார்த்து எவ்வண்ண மிச்சையோ அவ்வண்ணஞ் செய்தி.

(ச.) கருணைமா முகிலே = இராகுநந்தனு, இத்தன்மையாக நினக்குரைத்த சுக்கிரன் கதையைச் சித்தத்தில் நன்றாய், விசாரித்து இச்சைப்படிசெய், என்று கற்றுணர் வசிட் டன் சொன்னான். (47)

சுக்கிரன் கதை முற்றிற்று.

ஆகதிருஷிருத்தம். (46)

தாம வியாளகடர் கதை.

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஐயத்திரிபறப் போதமுற்றவனுக்குச் சர்வதோஷ பரிக்ஷயமும் சித்தப்பிரசாதமும், சுத்தத்தினும் அதி சுத்தமாய ஆன்மதரிசனமும் உண்டாதலே யுணர்த்த இதனைத் தொடங்கும் ஸ்ரீ வசிஷ்டபகவான். ஞானபல ஜீவன் முக்தாவஸ்தை வருப வப் பிரகாரத்தைப் பிரபஞ்சஞ் செய்பவராய்ச் சிரவணமனனுதி வளர்ச்சி முறையானே எவ்வாறெவ்வாறு ஞானதாட்டியமாமோ, அவ்வாறவ்வாறு தோஷக்ஷயப் பிரகர்ஷமும் உண்டாமென்பதைப் பிரதமம் தரிசிப்பித்தல்:—மீண்டென்பது

(ச - அ - கை.) முன் சுக்கிரன்கதையிற் சித்தமயஞ் சம்சாரமென்று தெரிவிக்கப் பட்டது, இந்தத்தாமாதி கதையிற் சித்தமயமான சம்சாரம் விவேகத்தாற் சித்தசாந்தி வரிற் சிதையுமென்றும், விவேகமின்றேல் வர்த்திக்கு மென்றுஞ் சொல்லுகின்றார்:— அதிற்சித்தப் பிரசாதத்துக்குரிய சாமக்கிரியைத் தெரிவித்தற்கு மூன்று கவியாலுரைத் தல்:—மீண்டென்பது.

மீண்டுரைசெய்வான் முற்றும்விசாரத் தோர்தொழிதீர் நெஞ்சோர்
நீண்டதோர் மனனம்விட்டோர் நிகழ்சுகவறிவை புள்ளோர்
பூண்டுளகாட்சி தன்னிற்போவ போய்க்கொள்வ கொண்டோர்
காண்டகுதன்னைக் கண்டோர் காணுதோர் தானைக்காணுதோர். (1)

(ப - ரை.) மீண்டுரை செய்வான் = மீளவும் ஸ்ரீ வசிஷ்டபகவான் அருளுகின்றார், முற்றும் விசாரத்தோர் = அத்தியந்தந் தவறையாராய்ச்சி புடையராயும், தொழில்தீர் நெஞ்சோர்=சித்தவிருத்திகளைச் செய்யாதவராயும், நீண்டதோர் மனனம் விட்டோர்= பூர்வம் அநுபவித்தன எவற்றையுமே எப்போதுமே யெண்ணுதவராயும், நிகழ்சுக அறி வையுள்ளோர் = விளங்காநின்ற ஆநந்த சித்சொரூபத்தில் விசிராந்தி யுற்றவராயும், பூண்டுள காட்சிதன்னில்=இருப்பதுபோ லிலங்கும் திருசியந்தன்னை யில்லாமல் விட்ட வராயும், போவபோய்க்கொள்வ கொண்டோர் = விடவேண்டியவற்றை விட்டவராயும் தொடவேண்டியவற்றைத் தொட்டவராயும், காண்டகு தன்னைக்கண்டோர் = காணத்

தக்க திருசிய மியாவற்றையும் சின்மயமாகிய தன்மயமாகவே கண்டவராயும், காணுதோர் தனை = விளக்குமறிவுக்கு வேறுய்வற்றை யெல்லாம், காணுதோர் = பாராதவராயும், இருப்பர் பெரியோர்.

(ஸ்ரீ - வீர.) சந்ததம் ஸ்ரீசாரசீலராய், சித்தவிருத்திகளை யெல்லாம் சிதைத்தவராய், சமாதியப்பியாசத்திஞனே கிரமமாகப் பாகியமனனத்தையும் ஆன்ம மனனத்தையும் தியஜித்தவராய், உனரவேண்டியதை யுணர்ந்து நித்தியம் வீசுத்தாத்ம ஆகாரமாக வீசிராந்த மனத்தையுடையவராய், இலங்கும் அதிகாரிகளுடைய, ஜாட்டியம் ஜீர்ணமாகிய வழி, ஆன்மதீரோடும் ஒரு நீர்மையுற்றுழி, விஞ்ஞானவயத்தால் மனமானது தெளிந்து சாந்தமாம் என ஏதமற் றெளிரிருமென்பதாகவருவதோடு சேரும். திருசியத்தை நன்கு தியஜித்தவராய் தள்ளத்தக்க அஞ்ஞான பூமிகளின் வேறுபாட்டைத்தள்ளின வராய்! கொள்ளத்தக்க ஞானபூமிகளின் விசேடங்களைக் கொண்டவராய், பிரமாதாவையும் சாகூஷித்வேத்திய திருசியமாகக் கண்டவராய், எல்லாத்திருசியங்களையுமே பாசகசின் மாத்திரமே யாகக்கண்டவராய், பாசகத்வியதிரிக்தத்தைப் பாராதவராய், இலங்கும் பெரியோரது மனமானது ஏதமற்றெளிரும்.

(ச.) முற்றும் விசாரத்தோர் = விசாரம் முற்றும் பெற்றவர், தொழிதீர் நெஞ்சோர் = மலினவிருத்தி யின்றிய சித்தத்தையுடையவர், மனனம் = சங்கற்பத்தை, பூண்டென் காட்சிதன்னில் = ஆன்மாவில் ஜீவாத்தமான திருசியமாகிய, போவபோய் = ஏயத்தைவிட்டவராய், கொள்வகொண்டோர் = உபாதேயமான பிரஹ்மமென்னுந் திருக்குமாத்திரத்தைக் கைக்கொண்டவர், காண்டகுதன்னை = திருஷ்டாவாகிய ஆன்மாவை, காணுதோர்தனை = அதிருஷ்டாவாகிய அநான்மாவை' (1)

(ஸ்ரீ - வீர - அ - கை.) விழிப்பு விழிப்பற்றவராய் வீழ்த்திய வாதனையர் எனல்:— சிவன் என்பது.

சிவனுயிருந்து காணுஞ்சிற் பரதத்துவத்தே
மேவிய நனவையுற்றோர் வெம்பவ மோகமார்க்கத்
தேவலில் சுழுத்தியுற்றே தோர்முதிர் நிராசையாலே
பாவனை நலனிற்றீங்கிற் பயிலும் வாதனையை மாய்த்தோர். (2)

(ப - ரை.) சிவனுய் இருந்துகாணும் = ஜீவனமுக்ததசையில் வாழ்ந்துகொண்டு இருந்தே சுவசொரூபமாகக் காணத்தக்க, சிற்பரதத்துவத்தே = சின்மய மேலானதத்துவத்தில், மேவிய நனவையுற்றோர் = பொருந்திய ஜாக்கிரத்தை யடைந்துள்ளவரது, வெம்பவ மோகமார்க்கத்து = கனசம்மோக மயசம்சார நெறியில், ஓவலில் சுழுத்தியுற் றோர் = நீங்காத நித்திரையை யுடையவரது, ஓர் முதிர் நிராசையாலே = ஒப்பற்றபரவைராக்கியத்திஞலே, நலனில் தீங்கில் பாவனைபயிலும் வாதனையை மாய்த்தோர் = சரசங்களிலும் அரசங்களிலும் சந்ததஞ் சிந்தித்தழலும் வாதனையை அடியோடும் அழித்தவரது அகமானது ஏதமற்றெளிரும்.

(ஸ்ரீ - வீர.) விழித்துச் சுகிக்கவேண்டிய பரவத்துவில் வாழ்ந்து விழித்துக்கொண்டிருப்பவரது, கனமான சம்மோகமய அஞ்ஞான விகாரோத்மக சம்சாரமார்க்கத்தில் நிரந்தரஞ் சுழுப்தியுற்றவரது, மனமானது தெளிவுற்றிருக்கும் இதன்கண் ஸ்ரீமத்பகவத்திருவாக்கியமு முளதாம் " யாதொரு பொருளையெல்லா வுயிர்களு மிருள்போற்காணு, மோதருஞானியத்தை யுளங்கையிற் கனிபோற்காணு, மியாதொரு பொருளையெல்லா

வுயிர்களு மென்றுங்காணும்மன், காதலின் ஞானியத்தைக் கண்ணினுற் றெரியக்காணுன்'' சர்வசுகலவ அவதியாய விரிஞ்சிபத பரியந்தம், அத்தியந்தமூற்ற பரவைராக்கியத்தாற் சரசங்களாய கிரமமுக்திரச முறுபொருள்களும், அரசங்களாய அஃதற்றவைகளும் ஆகிய, போக்காலம் வரையுமே இரம்மியங்களெனத் தோற்றும், போகசாதனங்களாகிய மாலைசந்தன வனிதாதிகளிடத்தே நிராசையுடன் விரக்தியுற்றவரது உள்ளம் தெளிவ டைந்தின்புறும்.

(ச.) சீவனுயிருந்து = ஜீவிப்பவனுயிருந்து, காணும் = அறிதற்குரிய, வெம்பவ மோகமார்க்கத்து = கொடிய சம்சாரமயமான மகாமோக வழியில் சுழுத்தியுற்றோர் = அஜ்ஞசந்தானரஹிதர், சுழுத்தியடைவதற் கேது, ஓர் முதிர்நிராசையாலே = அத்தியந்தம் பகுவமான வைராக்கியத்தினுல், பாவனை = பாவனுரூபமான, நலனில் = சுகபோக மிருந்த பரலோக விஷயங்களிலும், தீங்கில் = சொற்ப சுகபோகமான இகலோக விஷ யங்களிலும்: (2)

[ஸ்ரீ-வீர - அ-கை.) விரத்தியின் விருத்தியானே லோக அனுக்கிரகப் பொருட்டுச் செய்யாநின்ற கருமபலன்களின் மாட்டும், நகர்வினைவலித்திற் றந்த போகங்களின் மாட் டும், நிராசையினை யடைந்து, ஒன்றற்கொன்று மேன்மையுற்றுப் பதினெருவிதமாய்ப் பதுமன் பதத்தில் முடிவுபெறும் விடயசுகங்களில் வைராக்கிய முதிர்ச்சியாலே, அவ்வி டய சுகசாதனங்களாய அப்சரஸ் விமானாதி விடயங்களிலும், இகலோக போகங்களிலும் விரக்தியுற்ற பெரியவரது மனப்பெருமையைக் கூறி அது தெளிதலில் உவமையுரைத்து எடுத்ததை முடித்தல்:—வாதனை யென்பது.

வாதனை வலையைச்செற்று மனப்பந்த மாற்றிவிட்டாற்
காதல்செய் தேற்றின்வித்தின் கலங்குநீர் தெளிவதென்ன
மேதகுவிஞ்ஞானத்தான் மெய்ம்மையாஞ் சுபாவந்தானே
யேதமற் றெளிருமுன்ன மியம்பிய வியல்பினேர்க்கே. (3)

(ப - ரை.) முன்னமியம்பிய இயல்பினேர்க்கு = பூர்வம் புகன்ற கல்யாண குணங் கள் வாயந்த மகான்கட்கு, வாதனை வலையைச்செற்று = வாசனுமய சமுசாரகாலத்தைச் சின்னஞ்செய்து, மனப்பந்தம் மாற்றி விட்டால் = ஹிருதயகிரந்தியைக் கிதிலஞ் செய்து விடின் காதல் செய்தேற்றின் வித்தின் = தெளிவித்தற்குச் சாதகமாக விரும்பிய கதகப லத்தினுலே கலங்கும் நீர் தெளிவதென்னை = கலங்கியிருந்த ஜலம் நீர் மலமாவ தேபோல, மேதகுவிஞ் ஞானத்தால் = அஜ்ஞானத்தை யழிக்கும் மேன்மைதங்கிய அபரோக்ஷஞானத்தினுலே, மெய்மையாம் சுபாவந்தானே = சன்மாத்திரமாகிய மன மானது, ஏதமற்றெளிரும் = முன்னர் வந்து கலந்தர ஜதமங்கள் நீங்கிச் சுத்த சத்து வமாயிலங்கி யின்புறும்.

(ஸ்ரீ) - வீ.) அநாதிஜடமான அஜ்ஞான ஆகாசம் கழிந்து அசங்கசின் மாத்திர வத்துவில் அழிந்துபோக; சலத்திற்சைசந்தவ கண்டம் போலும் இராசாவசேட மாகவா, வெனின்; அன்றும், மற்றே, ஆதகபத்தில் இக்கண்டம் என்ன நிரவசேடமாக, ஆன்ம நீரோடு தேசூமையை யடைந்துபோக; அநேகவித சாஞ்சல்ய தரங்கங்கள் பொங்கியிரு பாலும் எடுத்தெறிந்து கோலாகலஞ்செய்து வீசியாடும் நதிகள் மேகநீர்ஸ்தபோது, அத்தியந்தம் அடங்கிவிடுவ தொப்பக் கல்லோல ஜலமென்ன லோலாந்தரங்களை யியற் றிச் சஞ்சலப்படுத்தும் திருஷ்ணைகள் யாவும் பரமசாந்தியை யடைந்து செல்ல; பகுதிபந் தனப் பன்முடிவலை மூஷிகத்தீற்போல, சம்சாரவாசனைச் சாலம், துண்டிக்கப்பெற்று,

வைராக்கிய வேகத்திஞலே இருதயகிரந்தியானது சிதலிதமடைந்தேக; கதகசய்பந்தி பலம் அதாவது அதன் பொடிசேரப்பெற்று வாரியானது மிகத் தெளிவுதல்போல, மண மானது விஞ்ஞான வசத்திஞலே மிகப் பிரசன்னமாகி விளங்கும்.

(ச.) வாதனைவலையச் செற்று = எலியிஞற் பகுதிகளின் சாலத்தைப்போலவைராக் கியமாகிய எலியிஞல் சம்சாரவாதஞ சாலத்தையறுத்து, மனப்பந்தம் = இருதயக்கிரந் தியை = அகங்காரரூபமான மூடிச்சை, மாற்றிவிட்டால் = வைராக்கிய மென்னும் வாளாற் சேதிக்கின், சுபாவம் = சொரூபம். எதன் பொடியின் சம்பந்தத்தானே கலங் கிய நீர் தெளிவையுறுமோ அது காதகபலமாம், அதனையடைந்து தண்ணீர் தெளிவ தென்ன, விஞ்ஞான வசத்திஞலே சுபாவமாகவே தெளிவாயிருந்த சொரூபமானது ஆவரணமகன்ற வழிதெளிந்தது போலாமென் றறிந்துகொள்க. (3)

(ஸ்ரீ - வீர - அ - கை.) திருஷ்டாந்த பூர்வகம் மனம் வெளிப்போதலே யுணர்த் தல்:—சங்கமென்பது.

சங்கஞ்செய் மயல்போய்த் தொர்ந்தந்தவிர்ந் தொன்றைச் சார்வதின்றிச்
சிங்கிசெய் கூட்டினின்றுஞ் சேணுறச் செல்லும்புட்போற்
றுங்கமோகத்தி னின்றுந்தூய் மனம்வெளியிற் போந்து
பங்கமாமையந்தீரப் பற்றெனும் மீனைத்துந் தீரும். (4)

(ப - ரை,) சங்கஞ்செய் மயல்போய் = இராகமியாது மிலாமற் சங்கமெவற்றினும் விடுத்து, தொந்தம் தவிர்ந்து = நிர்த்துவந்துவமாய், ஒன்றைச் சார்வதின்றி = நிராசெய மாய், சிற்றிசெய் கூட்டினின்றும் = பந்தப்படுத்திக் கொண்டிருந்த பஞ்சரத்தினின் றும், சேணுறச்செல்லும் புட்போல் = ஆகாயமார்க்கமாக இஷ்டப்படிபோம் பறவை யொப்ப, துங்கமோகத்தி னின்றும் = உன்னதமான மயக்கத்தினின்றும், தூய்மனம் வெளியிற் போந்து = பரிசுத்தமான மனமானது பாகியப்பட்டு, பங்கமாமையந்தீர = துன்புறுத்திய சந்தேகங்கள் தொலைந்து, பற்றெனும் அனைத்தும் தீரும் = பிராந்திகள் யாவுமேதீர்ந்து சுகிக்கும.

(ஸ்ரீ - வீர.) காமமற்றும், (மூலம்: விடங்களின் அருகில் வீரவுறுத்தலான் உபாசங் கம், அஃதின்மை நிருபாசங்கம்) விடய குணனுசந்தான மற்றும், பார்யாதி ஜனசாகித்ய மற்றும், மீளமீளப் பேரகலாப பூமியற்றும், உள்ள. உள்ளமானது, கூடியவற்றினின்றும் முதலில் வெளிப்போந்துபின் அஞ்ஞானத்தினின்றும், பஞ்சரத்தினின்றும் விடுபட்ட பறவையே போலும், விடுபட்டேகும், விடுபட்டேகிய அதுமீண்டும் எத்தகைய நிதியை யடைந்திருக்கும் எனின் ? அதனை வருணித்தல்: ஐயந்தீரவேண்டியது. சந்தேகதூரான்ம பாவஞ்சாந்தமானதாயும், கௌதுகவிப் பிரமம் கடந்ததாயும் அம்மனமிருக்கும்,

(ச.) சங்கஞ்செய்ய மயல்போய் = இச்சாரகிதமாய் அதனுலே விஷயசங்கரகித மாய், அதனுல், தொந்தந் தவிர்ந்து = சுகதுக்காதி பேதானுசந்தான ரகிதமாய், அத னுல், ஒன்றைச் சார்வதின்றி = நிராலம்பனமாய், மனம், துங்கமோகத்தினின்றும் = அஞ்ஞான சம்பந்தத்தினின்றும், தூய்வெளியிற் போந்து, பற்றனைத்துந்தீரும் = சங்கற் பங்களின் விலாசம் நசிக்கும், தூரான்மபாவம் = துட்டத்தன்மை, கௌதுகம் = சங்கற் பம், விப்பிரமம் = விலாசம். (4)

(ஸ்ரீ-வீர - அ-கை.) பூர்ணபாவத்தை யடைந்த மனத்துடன் பொலிகின்ற பெரி யோர் மூன்று மூர்த்திகட்கும் கருணை பாலிப்பரெனல்:—ஆன்றவென்பது.

ஆன்றவம்மனம் பூர்ணத்தையடைந்து பூரணவெண்டிங்கள்
போன்றுற விளங்குமிந்த நிலையிலே பொலிவுற்றோர்கண்
மூன்றுமூர்த்தி களாந்தேவ முதல்வர்க்குங் கருணைசெய்வ
ரூன்றியவிசாரத்தாலே யுயர்பொரு ளெய்தவேண்டும். (5)

(ப - கை) ஆன்றவம்மனம் = மேலேயியம்பிய பிரகாரம் பெருமை பொருந்திய அந்தமனமானது, பூர்ணத்தையடைந்து = பரிபூரணமாக நிறைந்து, பூரணவெண்டிங்கள் போன்றுற விளங்கும் = கலேமுழுவதும் நிறைவுற்ற வெள்ளிய மதிமயம்போல நன்கிலங்கும், இந்த நிலையிலே பொலிவுற்றோர்கள் = இயம்பிய இன்பத்திதியின் கண்ணேயிலங்கிக்கொண்டிருக்கும் பெரியோர்கள், மூன்றுமூர்த்திகளாம் தேவமுதல்வர்க்கும் = பிரஹ்மா விஷ்ணு சங்கரர் எனப்பெற்ற தேவதேவர்க்கும், கருணைசெய்வர் = தயை பாலிப்பர், ஆகலின் அவர்போலாக விரும்பில், ஊன்றிய விசாரத்தாலே யுயர்பொரு ளெய்தவேண்டும் = அழுத்தமிக்க ஆராய்ச்சியானே உத்தமோத்தம வத்துவைச்சாக்ஷாத் கரித்தல் வேண்டும்,

(ஸ்ரீ - வீர.) உள்ளும் புறனும் அறிவாகவே செறிந்து நிறைந்த சித்தமானது பூர்ணேந்துவைப் போலவே பொலியாநிற்கும், பொலியுமம் மனத்தில் உத்தமமான சௌந்தர்யமானது நிதமாகி, வெகுசேய்மையில் உன்னதமாய் மிதந்திருத்தன் மூதலியவை அஸ்தமயமாய், காற்றற்ற கடல்போலப் பரமசாந்தம் வந்து எங்குஞ் சமமாயிருக்குந் தகைமை யெழாநிற்கும். அம்மகானது மகாப்பிரபாவத் தகைமையைக் கூறல்:—மூன்றென்பது. ஆராய்ச்சியின் பிருதியானே தஞ்சுபாவத்தை நன்கறிந்து ஆன்மசாக்ஷாத்காரம்பெற்ற பெரியோரது கருணைக்கு. இவ்வண்டத்துற்ற அதிகாரபதத்திருக்கும் பிரஹ்மா விஷ்ணு சங்கர இந்திரர் பாத்திரதாவர். சர்க்க அவதாராதி அதிகாரக் கிலேச தரிசனத்தானே அனுகம்பிய ராவரென்பதாம், மூர்த்திகட்குந் தேவமுதல்வற்கு மென்று பாடமாயின் மூலப்படி பொருட்பெற வெளிதாம். பெரியோர் கருணாதரிசனமாவர்

(ச.) இந்த நிலையிலே பொலிவுற்றோர்க்கு = விசாரத்தால் ஆன்மதத்துவத்தைச் சாக்ஷாத் கரித்ததனாலே பரிபூரண சுபாவமானவனுக்கு, சுபாவமானவனால் எனினுமாம், மூன்று மூர்த்திகளும் தேவமுதல்வனும், பிரமன் மால் இந்திரன் சங்கரர், கருணைசெய்வர் = ஐயோ! சந்ததம் இவர்கள் துக்கிகள் எனச் சோகித்தற்கு உரியரானவர்கள் என்பது பொருள். (5)

(ஸ்ரீ-வீர - அ-கை) விசாரமிலதாயிற் பெறும் இடும்பையையும், உளதாயினுண்டாம் பெருமையையு முணர்த்தல்:—உலகென்பது.

உலகெது நாமாரென்ன வுற்றுநின்றுணரு மட்டுங்
கலகமார்பிறவி மோகங் கங்குல்போன் மூடிநிற்கு
மலகறு முலகுந்தாமு மழிவில்சிற் சோதியென்றே
சலனமில் கண்ணுற் கண்டோர் தத்துவ நிலைமைகண்டோர். (6)

(ப - ரை.) உலகெது = இத்தோற்ற மெங்ஙன முண்டாயது; நாமார் = யான் என்பதன் பொருள்யாது? என்ன = என இவ்வண்ணம், உற்றுநின்று = ஆசாரியர் அருளால் ஆராய்ந்து ஆராய்ந்து, உணருமட்டும் = உண்மையினையறியும் வரையினுமே, கலகமார் பிறவிமோகம் = இராகத்துவேட மயமான சமுசார ஆடம்பரமயக்கம், கங்குல்

போல் = அந்தகாரமெழீப்ப மூடிகிற்குங்ஃ = ஆச்சாதித்துக் கொண்டிருக்கும், அலகறும் உலகும் = அநந்த அண்டமாய ஜகத்தும், தாமும் = ஜீவசமுதாயமும், அழிவில் சிற் சோதியென்றே = கெடாத அறிவொளி யெனவே, சலனமில் கண்ணல் = நிருவிகற்ப சமாதியிற்பெற்ற ஆன்ம சாக்ஷாத்காரரூப ஞான திருஷ்டியால் கண்டோர் = தமது நன் மையைத் தரிசித்தவரே, தத்துவநிலைமை கண்டோர் = தத்துவத்தின் நிதியைத் தரி சித்தவர் ஆவர்.

(ஸ்ரீ - வீர.) யான்யார் எனவும் இஃதெங்ஙன மெனவும் எத்தணை நன்முகவிசாரம் செய்யவில்லையோ அத்தணை பேரிருள்போலச் சம்சார ஆடம்பரம் இருந்துகொண்டே யிருக்கும். ஆயின் எத்தலைய நிதியிலே சமுசார அந்தகாரமற்ற பூர்ணத்மாவைக் காணலாமெனின் ? அத்நிதியை யுணர்த்தல்: அலகறுமென்பது மித்தையாகிய மிரு மயலாலே வீளைத்ததாயும், சர்வ ஆபத்துக்கட்கும் ஆசிரயமாயும் உள்ளசரீரத்தில் அகம் புத்தியைப்பாதித்து, ஆன்மபாவனையாற் சிவத்தைக் கண்டவரே கண்டவர் தேசவசத் தண்டாய ஆதிபௌதிகங்களும், காலவசத்தெழுந்த ஆதிதெய்வீகங்களும், சரீரத்தழுந் திய ஆத்தியாத்மிகங்களும், ஆகிய சுகதுக்கங்களே எம்முடையன வல்லவென்று கண்டு மயநீர்ந்து தாமறிவென்று கண்டவரே கண்டவர். அப்பரபரியந்த ஆகாசம் நிக்குகா ரதி, பரிச்சின்னமாய உற்பத்தி சலனதிக் கிரியையோடுற்ற பொருள்கள், என்னப் பட்டயாவற்றினும் யாமேயிருப்பு வினக்கத்தை யீந்துகொண் டிருக்கின்றேம் என்றுகண் டவரே கண்டவர். வியாபியா யிருந்துகொண்டே கோடியெனப் பிரிக்கப்பெற்ற மயிர் நுனியின் இலக்ஷம் பாகத்தினும் யாம் அதிசூக்ஷுமம் என்று தம்மைக்கண்டவரே கண் டவர். சுவான்மத் தன்மையானே வெளியாய ஜீவர், வேறுய திருஷியங்கள் யாவையுமே சிற்சோதியே யாமென்னும் அபேத திருஷ்டியினானே நித்தியம் தம்மைக்கண்டவரே கண்டவர். தேசகால சரீரவச சுகதுக்கங்கள் இத்தகையனவெனப் பெரியாரும் கூறி யுள்ளார்ஃ—

இருவகையா மான்மிகமிக் காயத்தினெஞ்ஙின், வருமலவதா னேதக்கேண் மாணு, பொருவரிய, குன்மமதிசாரம் வெப்புக்கொடுஞ்சூலை, யன்னபிற வின்னவ்கேளாய், மக்க ளொடு துட்ட மிருகம்பேய் வன்பசுநற், பக்கிபறிப்போரசுரர் பற்பலவுந், தொக்கிலுறல், சோகமருயை யபிமான மாற்சரிய, மாருபலவுள்ளுறு நோயாம். சீதமுடன் வெம்மை செறிந்து மிகச்சலிக்கும், வாதமழைதடித்து வாளிலிடி, நீதிற், கௌரியொருபாகன் கருணையினுலாகும், பௌதிகமீ தென்றேபகர், கருவாயுதரத்திற் கட்டுண்டன் மண்ணி, லுருவாகியுற்பவித்த லோங்க, னைதிதைதான், மைவிரவஞ்ஞான மரணநரகஞ்சனனந், தெய்விகமீதென்றே தெளி. யாவுஞ் சிற்சோதியென்றதற் குதாரணம் பரம்பொருள்வாக் கியம்ஃ—உலகமியாவு முயிர்ச்சுவீநாளே சிறிதும் வேறில்லை யலகிலறிவாலாய்ந்திடினு மாயாவிடத்து மருத்தமிதே, திலகமாய மறைதுணிந்து திகழ்த்தும் பொருளுமிது வென்ற, னிலகுந்தன்மை யனுபவமுமிதிலோரைய மூளதன்ருல். தானேமுழுதுமெனை யொழிய நாடிற்சிறிதும் வேறில்லை, யானபொருளே யருமறை தானறையும்படி யானதனு லும், யானுமிசைத்தபடியாலு மிதுவே திடமாயுள பொருடா, ஞானமின்றி நான்முகனு முரைத்ததுங் கட்குண்மையிதே. இப்பொருளே யப்பட்டோ நிறப்பர்கள் கணத்தின் மெய்யே மெய்ப்படு பொருளேயென்றும் விதினிச் சயமதாகு, மிப்பொருளேயமின்றி யறிந்தவன் பவபரீசத்தை மெய்ப்பட வொழிந்துமேலா மொளியினே யடையுமன்றே. பிரஹ்மதேவரும் இப்பொருளே யுரைத்தல் காணலாம்: — எப்பொதிலு மாயையிலு லெனச்சிலவ ரியம்புவர்கண், மெய்ப்பரமன் றளையொழிய வேறொரு மாயையுமில்லை,

யொப்பரியபரஞ்ஜெழிய வொருமாயையுண்டாகி, லப்பரமன்றன் பெதுமைக் கதுநேரே யழிவன்ரே. பெரிதுமையினிற் சங்கோசம் பிறவாது பிறக்குமெனி, லதுமறைவாக்கியம் பொய்யாமப் பிரமாணமுமாகும், பொருவில் பரானந்த பரிபூரண மெய்ச்சுடராகுந் தெரிவருமா தேவனல்லாற் நிகழ்வதொழிருசிறிதுமில்லை.

(ச.) உலகு எது என்பது ஜகத்தை முன்னிட்ட விசாரம், நாமார் என்பது ஆன்மாவை முன்னிட்ட விசாரம், உற்றுநின்று = அந்தக்காரணத் துறைத்துநின்று, உணர மட்டும் = விசாரிக்கும் அளவும், மூடிநிற்கும்; விசாரத்தினது சொரூபந்தெரிவித்தல்:— காமும் = ஆன்மாவாகிய தன்னேயும் இதரபுரிவுஷனேயும், அழிவில் சலனமில் கண்ணல் = எப்போதும் பேதசூன்யமான ஞானத்தால், கண்டோர் = விசாரித்தறிந்தவர், அலகுறு மூலகும் = சர்வஜகத்தையும், சிற்சோதியென்றே = சைதன்ய மாத்திரமே யென்று, கண்டோர் = விசாரித்தவர் = இங்ஙனம் விசாரித் தறிந்தவப் புருடரே, தத்துவநிலைமை கண்டோர் = தத்துவதத்தைச் சாக்ஷாத்கரித்தவர் ஆவரென்னும் பொருள். (6)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அவ்வான்மதரிசனத்தையே வேறுவகையாக உபதேசித்தல்:— அகிலவெள்ளது.

அகிலசத்தியு மாயொன்று யநந்தமா மறிவுதானே
சகலபாவனைக்கு முள்ளாய்மெய்க் கண்டோர்தம்மைக் கண்டோர்
பகர்வுறுநானுமில்லை பிறிதிலைபரமே யுண்டென்
றிகழுறவுள்ள தில்லதிடையுறக் காண்டோர் கண்டோர். (7)

(ப - ரை.) அகிலசக்தியுமாய் = சர்வசக்தியுமாய், ஒன்றாய் = அத்விதீயமாய், அநந்தமாம் = அபரிச்சின்னமாம், அறிவுதானே = தமதுவடிவமாகிய சித்தே, சகலபாவனைக்கும் உள்ளாம் = என = சர்வபாவாந்தரமா யிருக்கின்றதென்று, கண்டோர் = தரிசித்தவரே, தம்மைக்கண்டோர் = தங்கள் யதார்த்த வடிவத்தைத் தரிசித்தவர் ஆவர், பகர்வுறுநானுமில்லை = அகம் அகமெனக்கூறும் பொருளுமின்றும், பிறிதிலை = இதரமுமில்லை, பரமே யுண்டென்று = நிராமயமாய பிரஹ்மமே யுளதாமென்று, இகழுற உள்ளது இல்லது இடையுற்று = சத்சித்துக்களின் மத்யமாக, கண்டோர் = தம்மைத்தரிசித்தவரே; கண்டோர் = தமதுண்மை வடிவினையுணர்ந்தவர் ஆவர்.

(ஸ்ரீ-வீர.) சகல சக்திகளையும் தனதிடத் தடக்கியதாய்: தேசகாலவஸ்துக்களாற் றடையுறுததாய், எல்லாப் பதார்த்தங்கட்கும் இருப்பு விளக்கத்தைக் கொடுத்துக் கொண் டுள்ளிருப்பதாய், இருக்தபோதிலும் இருமை விவர்ஜித்தமாதலின் இரண்டாவ தில்லாததாய், உள்ள அறிவே எமதுசொரூப மென்னுள்ளே யாவருண்மையை யுணர்ந்த வரோ, அவரே தம்மைத் தரிசித்தவர், சூத்திரத்தில், மணிகணங்கள் போலும், சித்தே யாகிய தத்துவினுற்கோர்க்கப் பெற்றலவுக் திருசியமியாவுமே எம்பிடத்தி லுள்ளனவாம், அதிரிக்த சத்தையின்மையின் யாமேயாம், அதிதக்காரணமோ யாமல்லவே யல்லவாம் என்று தமதுண்மையைக் கண்டவரே தம்மைக் கண்டவராவர், யாமேயெனக் காண்ப வரே காண்பவர் எனக்கூறப் பெற்றதில், சிற்பரித்தியாகத்தால் அகங்காரமே பரிக்கிரகிதமென ஆகவேண்டாம் என அகங்காரத்தோடுகூட அகிலத்தை யகற்றுதலானே சித்தேகரசமாய பிரஹ்மமே பரிசேடமாகக் காணவேண்டும், என்பதாகக்கூறல்: நானுமில்லை யென்பது யாமுமில்லை பிறவுமில்லை, ஆமயமெதுவுமில்லாத பிரஹ்மமேயுளதாம், என இவ்வண்ணம் நிகழ்வனவற்றின் சென்றனவற்றின் வருவனவற்றின், மத்தியில், வியக்

கத்தின் அவ்யக்தத்தின் மத்தியில், யாவர்காண்பரோ அவரேதம் முண்மையைக் கண் டவராவர்.

(ச.) சகலபாவனைக்கு முள்ளாந்தானே = சர்வபதார்த்தங்களின் அகத்திருக்கும் அந்தரியாமி யென்னும் புருஷனே, அகில சத்தியுமாய் = அகந்தசத்திமானும், அகந்த மாய் = அபரிச்சின்ன சொரூபனும், ஒன்றும் = ஆதலினாலே தனக்குவேறுகவொன்றுமின் மையால் அத்துவிதீயனும், அறிவென = சின்மாத்திர ரூபனுமாமென்று, அகத்தில், கண் டோர், தம்மை = தமதுதத்துவத்தை, கண்டோர். பகர்வுறுநானும் = அகந்தாபேதத்தோடு கூடிய வஸ்துவும், இல்லை, பிறிதில்லை = தனக்கு வேறுனதிருசியமும் இன்று, மற்றென் னெனில், பரமே யுண்டென்று = நிர்விகாரமான பிரஹ்மமே யிருக்கின்றதென்று, இக முற = இந்தப்பிரகாரமாக, உள்ளதில்லதிடை = ஆன்மா வுணர்மாக்களினது மத்திய மான திருஷ்டிருத்துவ திருசியத்வோபாதி ரகிதமான, சின்மாத்திரத்தை, உறக்கண் டோர், தத்துவத்தைக் கண்டோர். (7)

(ஸ்ரீ-வீர. அ. கை.) மாசற்ற மகாத்மாக்களினது மனமானது மாசின்றியே செயல் களிற் செல்லுமெனல் :—முயல்வு என்பது.

முயல்வறத் தாமேதோன்று மொய்திசைப் பொருள்க டம்மின்
மயலறச் செல்லுங் கண்போன் மாசறு தீரர்புந்தி
செயல்களிற் செல்லுமன்றே தெளிந்துபல் போகந் துய்த்தாற்
றுயர்செயா தறிந்துசேர்ந்தாற் சோரருந் தோழராவார். (8)

(ப - ரை.) முயல்வறத் தாமேதோன்றும் = யத்தனமில்லாமலே தாமேபுலப்படும், மொய்திசைப்பொருள்க டம்மில் = சகலதிசைகளினும் நெருங்கியுள்ள வஸ்துக்களில், மயலறச் செல்லும் கண்போல் = நீராகமாகவே செல்லாநின்ற சக்ஷுரிந்திரியம்போல, மாசறு தீரர்புந்தி = குற்றமற்ற தன்மைவாய்ந்த தீரர்தர்தியானது, செயல்களிற் செல் லும் = காரியங்களிற் பிரவேசிக்கும், தெளிந்துபல் போகந்துய்த்தால் துயர்செயாது = நன்கு தெரிந்து பலபோகங்களை யனுபவித்தால் அஞருறுத்தாமலாகந்தப் பொருட் டாம், அறிந்துசேர்ந்தாற் சோரருந் தோழராவார் = தெரிந்துகூடினாற் கள்வரும் மித்தி ரரேயாவர்.

(ஸ்ரீ - வீர.) நேத்திரமானது யத்தனமில்லாமலே புலப்படாகின்ற பர்வத வருஷத் கரணியாதிகளில், ஆங்குற்ற தருகுல்ம தாமரையாதி பதார்த்தங்களில் மமதை யபிமான மில்லாமையின் சேதபேத அபகாராதிகளைக் கண்டபோதினும் துயருறுதல் காணுமை யின் நீராகமாகவே வீழுதல்போல், அறிஞனுடைய தீரனதுபுத்தியும் தனது புத்திரமித்தி ராதி வியவகார காரியங்களிலும் நீராகமாகவே வீழ்வுறுமென்பதாம். அறிஞனுக்கு மாலை சந்தனவனிதாதி போகக்கூட்டம் சேவிக்கப்பெறினும் புனர்ஜன்மாதி துக்கப்பொருட்டு ஆகாவாம், கெட்ட பிராரப்த போகக்கூட்டமும், தாத்காலிக துக்கப்பொருட் டாகா வாம்; மாறுகவோ நன்கிலங்கும். தத்துவவித்துக்கட்குத் தவமுதலியவை, கிலேசங்கள் போன்றனவோ, அல்ல, மற்றோர், எதிரிடையாக, அஞ்ஞானநிசைக்கு மகாபலந்தந் தவை யிலங்குமென்ப; கடல்சூழ்புவி திவிகலக்குவதாயினும் காலகூடவிடம், கங்காதர பரமே சர் கவின்கண்டமுற்றுக் கிலேசந்தந்ததோ, இல்லை, மாறுகப் புகழையேதந்து பொலியா நிற்கும். இதற் குதாகரணம் சிவமகிமை :—மூவருட் கண்ணவகாலத்தி லண்டமுடிவறு மாபயஞ்சார், தேவர் தயித்தியர் மேற்கிருபாவயத்தேவிட முண்ணினதே, மாவழ கைச் செயலின்றெனலில்லை யெம்மாகளனிற் களங்க, மேவுலகின் பயமீர் விசனிக்கு

விகாரமு மேன்மையகோ. அறிந்து அநுபவிக்கின் அஞரிலதையலாய், அறிஞனுக்கு ஆகந்த காரணமேயாம் என்னுங் கருத்தாற் கூறல்:— தெளிந்து என்பது. போகங்கள், அவற்றின் சாரமறிந்து புசிக்கப்பெறின் சர்தோடத்தின் பொருட்டேயாம் ; இவனின்ஞ னெனத்தெரிந்து சேர்ந்து நேயமுறின் விவகரிக்கிற் கள்வன் மித்திரபாவத்துட னிருப் பனேயல்லாது சத்துருத்தகைமையைச் சாதியான். அன்று ஏ அசை. சேர்ந்தார் சோர ராயினும் : தோழரேயாவர்.

(ச) முயல்வறத்தாமே = அயத்தனத்திஞலேயே, கண்தோன்றும் = நேத்திரேந் திரியத்தை வந்து பொருந்தும், மொய்திசைப் பொருள்க டம்பின் = திசைகளிலுள்ள திரவியங்களில், மயலற = நீராகமாகவே, செல்லும் மனம்போல், மாசறு தீர்புத்தி = பிரஹ்மவித்துக்களுடைய புத்தியும், செயல்களில் = அவசியஞ் செய்யவேண்டுங் காரி யங்களில், செல்லும் = இராக ரகிதமாகியே பிரவிருத்திக்கும், அன்று ஏ இரண்டும் அசைகிலைகள். தெளிந்து பல்போகக் துய்த்தாற் றுயர்செயாது, இவ்விடத்து ஞானிகள் அறிந்து புஜிக்கும் போகவிசேடஞ் சுகநிமித்தமாங் கிலேச நிமித்தமன்ரு மென்பது கருத்து. அறிந்து சேர்ந்தாற் சோரரும் தோழராவார் = சோரர் சேரப்பட்டவராயி னும் அறிந்தவனை வருத்தமே செய்யார் மற்றென்னெனில் மித்திரபாவத்தா லுபகாரஞ் செய்வார் அதுபோலென்பதாம். (8)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அஃதெங்கு யாங்ஙனங் கண்டதோவென ஆசங்கித்து, சேய்மையிற் செல்லுஞ் சீலம் வாய்ந்து ஒன்றுசேர்ந்த நகரரீ நடக்கூட்டங்களின் யாத்தி ரைச் சேர்க்கைபோலும், சேர்க்கையின் பிரிவுபோலும், அறிஞனுல் அத்தியந்த மாநந் தப்படுத்தும் அதிவிஸ்தார போக்கிய புத்திரனுதி ஸ்ரீசேர்க்கை வியோகம் பார்க்கப்படு மென யாத்திரையை யுவமைப்படுத்திச் சமாதானித்தல்:—நெறியென்பது.

நெறியிடைவந் தோர்கூட்ட நெறிசெல்வோர் காணுநேர்போற்
செறிதரு போகமெல்லாஞ் சேதனர் காண்பரன்றே
யறிவினுன் மனனதெவென்ரே ரற்பமே பெரிதாய்க் காண்பர்
பிறகது துயராமென்றே பெரியன போகம் வேண்டார். (9)

(ப - ரை.) நெறியிடை வந்தோர்கூட்டம் = அகஸ்மாத்தாக மகா உற்சவநிமித்த மாக வந்துகொண்டிருக்கும் ஜனக்கூட்டத்தை, நெறிசெல்வோர் = அம்மார்க்கத்திற் செல்பவர், காணு நேர்போல் = யாதொரு பற்றுமற்றுக் காணும் தகைமைபோல, செறிதரு போகமெல்லரம் = நூகர்வினை வயத்திஞலே வலுவிற் ரூமேவந்து பொருந் திய போகங்களையெல்லாம், சேதனர் = உணர்வுவடிவ மாகினின்ற ஜீவன்முக்தர், காண் பர் = பற்றற்றுப் பார்ப்பர், அறிவினுல் மனனதை வென்ரோர் = யாவும் பிரஹ்மசொரூப மென்று சிந்திக்கும் திருஷ்டியினுல் உள்ளத்தையும் அறிவாக்கி ஜயித்தவர், அற்பமே = சிறிது கிடைத்தபோதினும், பெரிதாய்க் காண்பர் = மகத்தாக வெண்ணுவர், பிறகது துயராம் என்றே பெரியனபோகம் வேண்டார் = பின்பது துக்கமாம் என்பதாகவே பெரிதான போகங்களை விரும்பார்.

(ஸ்ரீ - வீர.) கினேயாமலே முன்வந்து தோன்றிய கிராம யாத்திரையானது மார்க் கத்திற் செல்பவரானே பார்க்கப்பெறுவ தொப்பாகவே, அறிஞர்களானும், விவகார மயத் தொழில்களும் போக ஐசுவர்யங்களும் பார்க்கப்பெறும் எல்லா வகையானுமே மனனதைவென்ற வீரசேகரனுக்கு, எப்பின்புண்டாம் போகமண்டனமுளதோ அதாவது பிஷாசஞுதி அற்பவிஷயார்ப்பணத்தானே லாலனம் உளதோ, அது தானே கிடைத்த

வித்தாரபழம் போகபாகத்தினும் அதிகமாகத் தோற்றும்; அடங்கிய மனமானது அற்பத்தையே அதிஷ்டி விஸ்தாரமதாய்க் கிலிஷ்டத் தன்மையானே பெரிதாக எண்ணுகிற்கும்.

(ச) நெறியிடை வந்தோர் கூட்டம் = மார்க்கத்தில் ஓர் கிராமத்தைக் குறித்து விவாகாதி மகோற்சவ வேதுவாற் செல்லுஞ் சனசங்கத்தை, நெறிசெல்வோர் = வழி நடப்பவர், இச்சையின்றி, காணு நேர்போல், செறிதரு போகமெல்லாம் = சகலபோகத்தையும், சேதனர் = ஞானிகள், நிராசங்கமாகவே காண்பர். அன்று ஏ இரண்டும் அசைநிலைகள், அறிவிஞல் = பிரத்தியாகாராதி யோகங்களால், மனதை வென்ரோர் = மனதை நிக்கிரகித்தவர், அற்பமே = அனுதாரமாகவே புழுக்கும் அற்பபோகத்தையும் பெரிதாய்க் காண்பர் = நிருத்தத்தன்மையானே கிடையாத விஸ்தாரமுடையதாய்க் காண்பர் = மனதிற் சிந்திப்பர் என்பதாம். (9)

(ஸ்ரீ - வீர - அ - கை,) கூறிய பொருளிற் திருஷ்டாந்தரங் கூறல்:—நலங்கென்பது.

(ச) இதற்குத் திருஷ்டாந்த மியம்பல்:—நலங்கென்பது.

நலங்கிய சிறைதீர் மன்னர்மட்டு மகிழ்வுகூரு
மலங்கல்வேல் வெற்றிவேந்த னவனியுஞ் சிறிதென் றெண்ணுங்
கலங்குறு மனதை வெல்வோர்கை கையாற் கால்கள்காலா
லிலங்கு பற்பல்லா லங்கமியாவு மிப்படிமூன் சேர்க்க. (10)

(ப - ரை.) நலங்கிய சிறைதீர் மன்னன் = வெகு துயருற்றிருந்து காராக் கிரகத்தினின்றும் விடுதலையை யடைந்த அரசனுனவன், நகர்மட்டும் மகிழ்வு கூரும் = அன்ன பானுதி சௌகரியப் பொருட்டு ஒரு கிராமங் கிடைத்த போதினும் சந்தோஷத்தையடைவன், அலங்கல் வேல் வெற்றிவேந்தன் = வெற்றிமாலை வேய்ந்து ஜயசீல வேலாயுதத்தை யுடைய ராஜ ராஜேந்திரன், அவனியும் சிறிதென்று எண்ணும் = பூமண்டல முழுதையும் கைவசப்படுத்திய போதினும் அற்பமென்பதாகத்தானே நினைவன், கலங்குறு மனதை வெல்வோர் = விடய விமோஷபமுற்ற சித்தத்தை வெற்றிகொள்ள முயன்றவர், கை கையாற் கால்கள் காலால் = பாணியைப் பாணியாலும் பாதத்தைப் பாதத்தானும், இலங்குபற் பல்லால் = விளங்காகின்ற தந்தத்தை தந்தத்தாலும், பிசைந்தும் உதைந்துஞ் சூரணித்தும், இப்படி = இவ்வண்ணம், மூன் = ஆதியில், அங்க மியாவும் = எல்லா அங்கங்களையும் எல்லா அங்கங்களால், சேர்க்க = ஒன்றுசேர்த்து வருத்துக. அங்கங்களை வருத்தியேனும் மனத்தை வெல்லுக வென்பதாம்.

(ஸ்ரீ - வீர) சிறையினின்றும் விடுபட்ட மகீபாலன், உணவுக்கு வேண்டிய ஒரு கிராமங் கிடைத்தலானே சந்தோஷத்தை யடைவன், பகைவராற் பந்தப் படுத்த முடியாமலும் வெற்றிகொள்ள முடியாமலும் சுதந்திரமாயிருக்கும் அரசன் தன்னுடைய அகண்ட இராஜ்ஜியத்தையும் பெரிதாக எண்ணுவதில்லை. ஆகலின் நீள்போது நிக்கிரகத்தாலும் போதத்தாலும், சமூல மநோஜயப் பொருட்டுப் பிரதமம் இந்திரியஜயமே சர்வப் பிரயத்தங்களாலும் செய்யத் தக்கதாம் என்பார் கலங்குறுமெனத் தொடங்குகின்றார். ஹஸ்தத்தை ஹஸ்தத்தால் அதிபீடனமாற்றி, தந்தங்களைத் தந்தங்களால் விசேடமாகச் சூரணித்து, அங்கங்களை யங்கங்களால் அடங்கும்படி செய்து இந்திரியங்களாகிய சத்துருக்களை ஜயஞ் செய்க, மநோஜயப் பொருட்டுமாத்திர மல்லவாம், மற்றோ, பாகிய சத்துரு ஜயப்பொருட்டும் இந்திரியஜயம் ஆவசியகமாம் எனக் காட்டுவார் இப்படி யென்றார்

ஈண்டு மிகுந்த உற்சாகத்தோடுற்ற பண்டித புருடர்களான் மற்றவற்றை வெற்றிகொள்ளும் பொருட்டும் பூர்வம் ஸ்ரீருதய சத்துருத் தன்மையானே அத்தியந்தம் இந்திரியங்கள் ஜயிக்கத்தக்கனவாம்.

(ச) கலங்கிய = வாட்டமுற்ற, நகர்மட்டின் = கிராம மாத்திரத்தால், அன்ன பானுதி மாத்திரத்தால் என்றுரியபாடம், அவனியும் = இராச்சியத்தையும், சிறிதென் றெண்ணும், மநோநிக்கிரக உபாயங் கூறல்:—கலங்குறு மனத்தை வெல்வோர், கை கையால் = அஸ்தத்தை அஸ்தத்தாலும், கால்கள் காலால் = பாதங்களைப் பாதங்களாலும், பற் பல்லால் = தந்தங்களைத் தந்தங்களாலும், அங்க மியாவு மிப்படி = அங்கங்களை யங்கங்களாலும், மூன் சேர்க்க = முன்பு சேர்த்துத் தன்மனதைச் செயிக்க வேண்டும்; அடயோகத்தர்ற் பவனஜயத் துவாரமாகத் தனது மனதைச் சயிக்க வேண்டுமென்பது தாற்பரியார்த்தம். பந்தப் படுத்திடும் பார்த்திபன் கிராச மாத்திரத் தானே மகிழுவன் என்பது மூலபாட பேதம். கிராச மாத்திரத்தானே = அன்ன பானப் பிரதான மாத்திரத்தானே யென்பது பொருள். (10)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மனவெற்றியலது மரக்கலமேலை யென்றும், மனவராக் கொன் ரூர் மகிமை யிதுவென்றும் கூறல்:—பகையென்பது,

பகைமன வெற்றியல்லாற் பவக்கடல் வங்கமில்லை
வகைபடு மூலகிற் செல்வர் வரிசையோர் மறுவிலாதோர்
மிகையுயர் புருடர்கீர்த்தி மிக்கவரென் போருள்ளக்
குகையிடைத் தொழில்க ணைஞ்சார் கொடுமனப் பாம்பைக் கொன்ரூர். (11)

(ப - ரை.) பகைமன வெற்றியல்லால் = சத்துருவாய சித்தத்தினது ஜயமல்லாமல், பவக்கடல் வங்கமில்லை = பவார்ணவங் கடக்க வேறு கப்பற்கிடையாது, உள்ளக் குகையிடை = இருதய பிலத்தில், தொழில் கணைஞ்சார் = குண்டலமிட்டுப் படுத்துக் கொண்டு, நஞ்சுடனமர்ந்த, கொடுமனப் பாம்பை = குரூரமான மன அரவை, கொன் ரூர் = அதஞ்செய்தவர்; வகைபடு மூலகில் = நானுவிதமாகத் தோற்றுஞ் சகத்தில், செல்வர் = பாக்கியவான்கள், வரிசையோர் = மரியாதை செய்யத்தக்கவர், மறுவிலா தோர் = களங்கமற்றவர், மிகையுயர் புருடர் = மிகவும் மேன்மைவாய்ந்த புருடோத்தமர், கீர்த்திமிக்கவர் = புகழ்மிகுந்தவர், என்போர் = என்னப் பெறுபவராவர்.

(ஸ்ரீ - வீர.) இந்திரியநிக்கிரக பலமாகிய மநோஜயத்தைப் பற்றியவனைப் பற்றிய பிரசம்சை யாதுகொலோ வெனின்? யாவர்கள் சித்தத்தை ஜயம் செய்கின்ரூர்களோ அவர்களே தஞ் சித்தத்தானே ஜயிக்கப் படாதவர்கள், இப் பூமண்டல மூழுதினும் அவர்களே சுபகர்கள், சாதுக்கள், அறிவு மிகுந்தவர்கள், புருடர்கள், புகழ்மிக்கவர்கள், புருடர்களுக்குள் தமது பந்தமோக்ஷ கௌசலங்களிற் கண்ணியர்கள், இருதய பிலத்தில் இயற்றிய குண்டல கலனேயானே கர்வ பரவசமாய மகா புஜங்க மனத்தை வென்றவர் கள் ஆவர்கள்.

(ச) பவக்கடல் = பவார்ணவத்தைக் கடத்தற்கு, வங்கமில்லை = கப்பன் மற் ரொன்றின்று, உளக் குகையிடை = இருதய பிலத்திற்குள், தொழில் கணைஞ் சார் = விருத்திகளென்னும் வட்டத்தோடு கூடியதும், கொடுமனப் பாம்பைக் = கொடிய மநோபுயங்கத்தை, கொன்ரூர். (11)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மனத்தை வென்றவரை வந்தித்து, அவ்வெல்கைக்குத்தடை செய்யும் அகூகங்கள் வலுமிகுத்தனவாம், ஆனபோதினும் ஜயோபாய முளதாம், அத

ஞனேயுண்டாம் பிரசாத போதங்களானே வாசனாக்ஷயம்வரும் எனக்கூறியருளக்கருதி, ஆண்டிந்திரிய ஜயத்தில் உபாயபிரயத்ந ஆதிக்யத்தை வித்தருள வீழைந்த ஸ்ரீவசிஷ்ட பகவான் அவ்விந்திரியங்களின் ஜயதுர்லபத்தை முதலில் அருளல்:—மனமென்பது.

மனமெனும் வினையை வென்றூர் மலரடி மூடிமேற் கொள்வா
மினநரகங்களென்னு மிராச்சியத்திருந்து வாழ்ந்த
முனமுறுபாவ மென்னு மும்மதக் களிற்றினுலுங்
கனமயற் படைகளாலும் கரணமாம் பகையை வெல்வாய். (12)

(ப - ரை.) மனம் எனும் வினையைவென்றூர் = மனமாகிய முன்னுரைத்த புயங்கத்தை ஜயித்தவரது, மலரடிமுடிமேல் கொள்வாம் = தாமரைமலர்போன்ற திருவடிகளைச் சிர அலங்கார பூஷணமாகத் தரித்துக் கொள்வாம், இனரகங்கள் என்னும் இராச்சியத்து = துக்கந்தருவதில் ஒருவகைப்பட்ட மகாநரக சாம்ராஜ்யத்தில், இருந்து வாழ்ந்த = அரசுசெலுத்திக் கொண்டு வாழ்ந்து வந்த, முனமுறுபாவ மென்னும் = வெருகாலந் தொடர்ந்த தீவினைகள் எனப்படும், மும்மதக் களிற்றினுலும் = முத்துயர் மயமதமொழுகும் யானைகளானும், கனமயற் படைகளானும் = கனமாகிப் பேதிக்க முடியாத ஆசாச்சர சலாகைகளாலும், தூணைவாய்ந்த, கரணமாம் பகையை = இந்திரியங்களாகிய சத்துருக்களை, வெல்வாய் = நீ வெல்வது மிகத்துர்லபம்.

(ஸ்ரீ - வீர.) இயம்பிய மநோபுயங்கமானது எவனுக் கத்தியந்தம் நாசத்தையடைந்துளதோ, அம்மகாமுனிவனை, அத்தீயந்தம் தன்வடிவத்தானே யொளிரும் நிகரிர்மலமான அறிவுருவ அந்தத்தத்துவ வித்தைப் பல்வகையானும் நமஸ்கரிப்பாம். தபனுவீசி மகாரௌரவ ரௌரவசங்காத கால, சூத்திரப்பெயர்கள் வாய்ந்த மகாநரகபேதலக்ஷண சாம்ராஜ்யத்தில் தனித்தனியே பட்டாபிஷேகம் பண்ணப்பெற்று, மதோன்மத்தகொடு வினைகளேயாய வாரணங்கள் சூழப்பெற்று, திருவுஷ்ணைகளேயாய சாசலாகைகளோடுங் கூடி, உள்ள இந்திரியங்களாய சத்துருக்கள் வெற்றிகொள்ள முடியாதவர்களாவர்கள். வெல்வாய் = வெல்லமுடியுங்கொல் முடியாதகாரியம், பாடபேதம்.

(ச.) இந்திரியங்களின் பிரவிருத்திக் கேதுவாதலின்பாவத்தை மதக்களிறு என்றூர், மயல் = ஆசைகளென்னும் மநோரதங்கள், ஆசைகளால் இந்திரியங்கள் பிரவர்த்தித்தலின் மநோரதங்களைப் படைகளென்றூர், இந்திரியங்களுக்குப் போகஸ்தானமாதலின் இனரகம் என்றூர், களிற்றினுலும் = ஆனைகளையுடைய தாதலினுலும், படைகளாலும் = ஆயுதங்களையுடையதாதலினுலும், வெல்லமுடியாத ஆகையால் நீ, கரணமாம் பகையை = சத்துருவாகிய இந்திரியங்களை, வெல்வாய் கஷ்டப்பட்டேனும் எனவொட்டுக. படைகள் = சலாகைவடிவச் சத்துக்கள். (12)

(ஸ்ரீ-வீர - அ-கை.) பொறிகளை வென்றூற்றூன் போகவாசனைகள்போம், ஆகலின் அவை யகலும்வரை ஆன்மானுசந்தானம் செய்துகொண்டே யிருக்கவேண்டுமெனல்:—தூனியென்பது.

(ச.) சித்தோபசமத்திற்கும் இந்திரியசமத்திற்கும் பலத்தைக் கூறல்:—தூனியென்பது.

தூனிமனச் செருக்குமாய்த்துத் தொடர்பொறிப் பகையை வெல்லிற்
பனிபடு பதும்மக்கான்போற் படர்ந்த வாதனைகண் மாளுந்
தனியறி வொன்றேயென்று சாதித்திம் மனம்வென் மட்டுங்
கனியிருள் செறியும் பேய்போற் கருத்தில் வாதனைவந் தெய்தும். (13)

(ப - ரை.) துனிமனச் செருக்கு மாய்த்து = துன்புறுத்தா நின்ற வாதனைகணிறைந்த சித்த தர்ப்பத்தை அதிக்ஷீணமாக்கி, தொடர் = அதனோடு சேர்ந்தாடும், பொறிப்பகையை வெல்லில் = இந்திரியச் சத்துருவை ஜயிக்கில், பனிபடு பதுமக் கான்போல் = ஹேமந்தகாலத்தில் தாமரைக் கூட்டங்கள்போலும், படர்ந்த வாதனைகள் மாளும் = நெருங்கி நிறைந்த போகவாதனைகள் தொலைந்துபோம், தனியறி வொன்றேயென்று சாதித்து = ஒப்பில்லாத சித்துருவ ஏகதத்துவ திடஅப்யாசத்தினாலே, இம்மனம் வெண்மட்டும் = இந்த மனதை ஜயஞ் செய்யாதவரையும், கனியிருள் செறியும் பேய்போல் = காடாந்தகாரத்திலுலவும் வேதாளங்கள் போல, கருத்தில் வாதனைவந்தெய்தும் = இருதயத்தில் வாசனைகள் சுழன்றேறிரியும்.

(ஸ்ரீ - வீர.) சித்ததர்ப்பத்தைக் கடிதுகெடுத்து, பொறிப்பகையைவென்ற புண்ணியனுக்குப் போகவாதனைகள் யாவும், ஹேமந்தகாலத்தில் தாமரைக் கூட்டங்கள் போலும் க்ஷீணமடைந்து விடும். ஏகதத்துவ திட அப்பியாசத்தால் எதுவரை மனம் வெல்லப்படவில்லையோ அதுவரை, பேரிர விருளிற்பெருத்த வேதாளங்கள் பிணங்கித் திரிதல் போலும் அஞ்ஞான அந்தகாரமய இருதயத்தில் வாசனைகள் வளைந்து வளைந்து விளையாடும். அஞ்ஞானந்தகாரமய வாசனை வேதாளங்கள் இருதயத்தில் விளையாடுமெனினுமாம்.

(ச) படர்ந்த வாதனைகள் = போக வாசனைகள், அவை மீட்டு மீட்டெழும் போகாசைகளாம், சாதித்து = ஆன்மதத்துவ மொன்றிலேயே திடமாக ரூடமூலமான தியானப்பியாசத்தினால் ; கருத்தில் = செறியும் வாதனைவந்தெய்தும். அத்துவய ஆன்ம தத்துவத்திற் திடதரமான தியானப்பியாசத்தினன் மனது ஜயிக்கப்படாதவரையும் நிசியில் வேதாளங்கள் போல் இருதயத்தில் வாசனைகள் கர்ச்சிக்கும் அல்லது கூத்தாடும் என்பதாம். (13)

(ஸ்ரீ-வீர-அ-கை.) தன் றேக நகரீ சாம்ராஜ்யத்தில் தாசமந்திரி சாமந்தாதிகாரியத்தைச் சுத்தமாய சித்தமே நிர்வாகஞ் செய்யுமென்று கூறல் :—மந்திரியென்பது.

(ச.) வசியமான மனம் வெகுவிதமாகப் பிராணிகளுக் குபகாரஞ் செய்யுமெனல்:—மந்திரியென்பது.

மந்திரியெனலா முண்மை மருவுறும் விசாரத்தாலே
யிந்திரியங்க ளென்னு மிடர்ப்பகை யறுத்தலாலே
தந்திரியெனலா மிட்டஞ் சமைத்தலா லேவலாளா
நொந்திரி கிலாதவுள்ள நோக்கிய விவேகத்தோர்க்கே. (14)

(ப - ரை.) மந்திரியெனலாம் உண்மை மருவுறும் விசாரத்தாலே = சத்காரிய காரணத்தானே மந்திரி யெனப்பெறும், இந்திரியங்கள் என்னும் இடர்ப்பகை யறுத்தலாலே தந்திரி யெனலாம் = பத்து இந்திரியங்கள் என்னும் படுபகை களைதலானே சாமந்தன் எனச் சாற்றலாம், இட்டஞ் சமைத்தலால் ஏவலாளாம் = வேண்டியவற்றைச் சம்பாதித்துத் தருதலானே பிருத்தியன் எனப்பேசலாம், உள்ளம் நோக்கிய விவேகத் தோர்க்கு = ஆன்மாவைத் தரிசித்த மகான்கட்கு, நொந்து இரிதலாத உள்ளம் = விடயங்களில் விக்ஷேபப்பட்டுக் கெட்டுப்போகாத சத்துவமனம் இவ்வாறிருக்குமென்பதாம்.

(ஸ்ரீ - வீர.) விவேகிகட்கு மனமானது அபிமத கர்த்துருத் தகைமையானே பிருத்தியனுகவும், சற்காரிய காரணத்தானே மந்திரியாகவும், இந்திரியங்களை யெதிர்த்துச் சயிப்பதில் சாமந்தனுகவும், இருந்திலங்கும்.

(ச.) உண்மை மருவுறும் விசாரத்தாலே = தானே சர்வார்த்தங்களையுஞ் (இதமான சகலகாரியங்களையுஞ்) சாதிப்பதாதலின், இந்திரியங்கள் = ஞானகருமேந்திரியங்கள், தந் திரி = வெகுவித அதிகாரிகளைப் பிரவிருத்திப்பிக்கும் புருடனுகிய சாமந்தன், இவ்ஷ் டஞ் சமைத்தலால் = சந்தோஷவேதுவான காரியங்களுக்குத் தானே முக்கிய காரண மாதலின், ஞானத்தைத் தருதலின் குருவாமெனவுங் கொள்க. மனமானது பிருத்தியாதி காரிய காரணத்தானே பிருத்தியாதிரூபத்தன்மையை யடையுமென்பது கருத்தாம். (14)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இன்னணமே அன்புற்றிருக்கும் நாயகி முதலுவாதலைக் கூறல்:—ஆலியென்பது.

ஆலிக்கு மின்பத்தாலே யன்புறு மனைவியாகும்
பாலிக்கு மியல்பினுலே பாவனத் தந்தையாகுஞ்
சீலிக்கு முறுதியாலே தேடரு நட்புமாகுந்
தூலிக்கும் வினைகளில்லாத் தூய்மனம் விவேகத்தோர்க்கே. (15)

(ப - ரை.) +ஆலிக்கும் இன்பத்தாலே = லாலனைசெய்யும் ஆநந்தமியுஞ் செயல்க ளாலே, அன்புறு மனைவியாகும் = நேயமிகுந்த தருமபத்நியாம், பாலிக்கும் இயல்பி னுலே = இரக்ஷிக்குந் தன்மையினுலே, பாவனத் தந்தையாகும் = பவித்திரமான பிதா வாகும், சீலிக்கு முறுதியாலே = மிகுந்த சீலத்தோடுற்ற விசுவாசத்தாலே, தேடரு நட்பு மாகும் = தேடிக்காண்பரிய சுகிருத்துமாகும், விவேகத்தோர்க்கு = ஆராய்ச்சி மிகுந்த அதிகாரிகட்கு, தூலிக்கும் வினைகளில்லாத் தூய்மனம் = தூலதேகாதி முதலியபொருள் களில் யான் எனதென்னும் அபிமானமில்லாத பரிசுத்த சித்தம்.

(ஸ்ரீ - வீர.) இன்சொற்களாலும் இனிய பணிவிடைகளினுலும் இங்கிதங்களாலும் போற்றி யின்பந்தருதலால் நிகேதமிகுந்த பார்யையென்றும், அறிவுதந்து அளித்தலானே அதிபுனிதமாய அருந்தந்தை யென்றும், உள்ளத்தை யுரைக்கலாம் உணர்வுடையவர்க்கு உத்தமோத்தம விசுவாசத்தானே சுகிருத்தும் இந்நல்லுள்ளம் மகான்கட்காம் என் றுணர்க.

(ச) அன்புறு மனைவியாகும் = இரமிப்பிக்கும் இரம்மிய வஸ்து தரிசனத்திற்சாந்த சிருங்காராதி இரசோல்லாசத்தாற் சதாநந்த வேதுவாதலின், சமஷ்டிவிடய ரூபமான இனம்பாவையர்போல் எப்போதுஞ் சந்தோடந் தருதலின் மனைவியென் றறியத்தக்கது. பாலிக்கு மியல்பினுலே = இதமிதமேத்தி யாசனத்தினுல் மனது வசிகரமாயின் ஆதி வியாதி யபாவமாதலின் தேகசம்ரக்ஷணை செய்தலினுல், பாவனத்தந்தையாகும், சீலிக்கும் உறுதியாலே = இரசதமசுக்கள் நீக்கத்தாற் சுத்தசத்துவப் பிரதான மாதலின் = விசு வசிக்கிறதற்கு யோக்கியமாதலான், தேடருநட்புமாகும், மனது மந்திரியாதி காரியங்க ளுக்கு முக்கியகாரண மாதலின் மந்திரியாதி ரூபத்தை யடையுமென்பது பொருள். (15)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மனத்திற்குப் பிதிருத்தன்மையில் வேறேதுவும் உண்டென் றுரைத்தல்:—நல்லனவென்பது.

நல்லன நூல்களாலே நல்லன நெறியைநோக்கி
நல்லன தியானஞ்செய்து நல்லனு பவத்தை நண்ணி
நல்லன சித்திநல்கு நல்லதாய்த் தன்மைமாய்த்து
நல்லதோர் தாதையாகி நல்லவர்க் குள்ளந்தானே. (16)

(ப - ரை.) நல்லன நூல்களாலே = வேதாந்த சாஸ்திரங்களாலே, நல்லனெறியை நோக்கி = நன்மார்க்க பரிசீலனைசெய்து, நல்லனதியானஞ்செய்து = நல்லதான தூணி புற்று, நல்லநுபவத்தை நண்ணி = சுவானுபூதி யடையப்பெற்று, நல்லன சித்தி நல்கு நல்லதாய்த் தன்னைமாய்த்து = தன்னை முற்றினும் அழித்து ஆநந்த மோக்ஷத்தையடை விக்கும், நல்லவர்க்கு = விவேகியர்க்கு, உள்ளந்தானே நல்லதோர் தாதையாகி = மனம் சுயமாகவே அருமைமிக்க தந்தையாகி.

(ஸ்ரீ - வீர.) மனமாகிய பிதாவானவன், சாத்திரத்தாற் காண்பிக்கப் பெற்றதேவதா திருஷ்டியினனே, தாண்டாச் சாசனத் தன்மையினனும், சின்மாத்திர ஸ்பந்தத்தன்மை யினனும், தன்னைக் காண்பவனாகி, நிரேகபுத்தியினனும் விவேகபுத்தியினனும், உள்ளே தன்னை யநுபவித்தவனாகி, தான் சம்பாதித்த தனாதி தத்துவஞானவடிவமேலான சித் திரை, தேகத்தையும் மநோரூபத்தையும் விடுத்து அடைவிப்பன் என்பதாம்.

(ச.) நல்லன நூல்களாலே = விசாரசித்தமாய அத்தியான்ம சாஸ்திரஜந்திய ஞானத் தால், நோக்கி = நன்றாக இனிது பரியாலோசனைசெய்து, தியானஞ்செய்து = நலமுறத் தூணிபுற்று, நல்லநுபவத்தை நண்ணி = சுவானுபவத்தை யடைந்து, நல்லவர்க்கு = விவேகியர்க்கு, நல்லதோர் தாதையாகும் உள்ளந்தானே = பாலிக்கு மியல்பினாலே பாவனத்தந்தையாகும் என்று முற்கூறினமையாற் பிதாவென்னுமனமே, தன்னை மாய்க் கும் = தான்கெட்டு, நல்லன சித்திநல்கும் = கைவல்யபதத்தைக் கொடுக்கும். இத்தன் மையாக எவன் உபகாரஞ்செய்வன் என்பது கருத்து. (16)

(ஸ்ரீ-வீர - அ-கை.) யாவும் அறிவுருவமே யென்று கண்டுகொண்டிருந்தால் மனமா னது மணியென விளங்குமெனல்:—துணிவென்பது.

துணிவுறு நிடமாய்ச் சாலத்துகளற நோக்கியாதும்
பிணியறக் கண்டுஞானப் பேருணர்வு ணர்த்தப் பட்டாற்
பணிவுறு மிதயத்தன்னிற் பழுதிறன் குணத்தினாலே
மணியென விளங்காநிற்கு மாசறு மூள்ளந்தானே. (17)

(ப-ரை.) துணிவுறு நிடமாய்ச் சாலத்துகளற நோக்கி = அத்தியந்தம் யாதொரு தோடமுமில்லாமற் பார்த்த அதனாலே மிகமிகவுங் நிடதரமாகி யையந்திரிபற்று, யாதும் பிணியறக்கண்டு = அதிதெளிவாயறிந்து, ஞானப்பேருணர்வு = சாவஞ் சின்மயமென் னும் சர்வான்மக திருட்டியைப் பயிற்றின், பணிவுறும் இதயத்தன்னில் = பரமசாந்த மான இருதயதாமரையில், பழுதில் தன்குணத்தினாலே = குற்றமற்ற தனதயர்ந்த கல் யாணகுணத்தினாலே, மாசறுமுள்ளம் தானே = திருசியகளங்கமற்ற மனமானது சுயமா கவே, மணியென விளங்காநிற்கும் = மணியைப்போலப் பொலியா நிற்கும்.

(ஸ்ரீ - வீர.) ஆதியில் கணிகள் என்னுமிடங்களில், பாக்கியவசத்தாற் திருஷ்டமா கிப் பின்னர் நன்றாகச் சாணைபிடித்துப் பளபளப்பாக்கப்பட்டுக், கண்காதசுகத்திரங்களா னாலே பேதிக்கப் பெறாமல், தேஜோவியஞ் சகரசஷோலஞ்திகளானே மிகவொளிவிடு வதா யிலங்கும் வஜ்ரிரமணியானது, சோபனகுணவதியாய சுவர்ண ஹாராதிகளில் இணைக்கப்பெற்று மார்பில் மலர்வதேமானும்; ஆதியிற் சாஸ்திரத்தினாலே தரிசிப்பிக் கப்பெற்ற, பரீக்ஷைத் திருஷ்டியினானே நன்றாகக் காணப்பெற்று, பின்னர் ஆசாரியர் முற்சரண்புகுந்தோர் முதலவர் பேருதவியினானே சுவானுபவம்வரையும் இனிதாக ஆரா யப்பெற்று, பின்னித்தியா சனத்தானே நன்றாகத் திடமாக்கப்பெற்று, பின்றத்துவ சாக்ஷாத் காரத்தானே இனிதாக வுணர்த்தப்பெற்று, பின்பஞ்சமாதி பூமிகா பேதத்தில் இணைக்கப்பெற்று, நின்றமனமானது உள்ளே நிருமலமாக நிறைந்தொளிரும்.

(ச.) சாலத்துகளறற நோக்கி = நன்ருய்ப்பார்த்து அதனுலே சமுசய விபரீத ரகித மாதலின், தணிவுறுதிடமாய், அதனுலே, யாதும் பிணியறக்கண்டு = சொச்சமாயுணர்ந்து, ஞானப்பேருணர்வு = சமீசீனமான போதத்தை, உணர்த்தப்பட்டால்=அடைந்ததாயின், பழுதின்றண்குணத்தினுலே=சமம் முதலான குணத்தால், மாசறுமூள்ளந்தானே இதயந்தன்னில் மணியென விளங்காநிற்கும் என்பதந்நுவயம். திடமாய் = அசைவின்றி. சொச்சம் = நிட்களங்கம். மநோமணியானது சுபேச்சையோடு கூடியதாய் உற்கிருட்ட மாயதென்றுணர்க. (17)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மேற்கூறியவண்ணம் ஸ்ரீ இராகவருக் குபதேசித்து, உரைத்தருளிய மணிரூபகத்தையேபற்றி யுபசங்காரித்தல்:—மனவென்பது.

மனமணி பேதச்சேற்றின் மறைந்தொரு வருக்குந்தோன்றுக்
கனமுறு விவேகநீராற் கழுவினுற் சித்திகாட்டும்
வினவுறு விவேகவன்பான் மெய்ம்மையை மதியாற்கண்டு
சினமுறு பொறியைவென்று தீர்வரும் பிறவிதீர்வாய். (18)

(ப - ரை.) மனமணி = மனமாகிய மணியானது, பேதச் சேற்றில் மறைந்து= பேதபங்கசகளங்கிதமாகி, ஒருவருக்குந் தோன்று= எவருக்குமே புலப்படாது, கனமுறு விவேக நீரால்=பிருதியாகப் பயிலப் பெற்ற பேறிவுதகித்தால், கழுவினுல் = சுத்தஞ் செய்தால், சித்திகாட்டும்= மோக்ஷத்தைத் தரிசிப்பிக்கும், வினவுறுவிவேகவன்பால்= ஆராய்ச்சியால் வரும் விவேகத்தைப் பரமாகப்பற்றி, மதியால் = புத்தியால், மெய்ம்மையை = சத்தியத்தைக்கண்டு = தரிசித்து, சினமுறு பொறியை = தடுக்குமதிகாரியைக் கண்டு கோபமூளும் இந்திரிய சத்துருவை, வென்று =அத்தியந்தம் ஜயித்து, தீர்வரும் பிறவிதீர்வாய் = தாண்டுதற்கரிய பவார்ணவத்தைத் தாண்டுவாயாக.

(ஸ்ரீ - வீர.) மணிமந்திர ஔஷதங்கட்கு அசிந்தியமான மகிமையிருத்தலின் மந்திரகாரியசித்தி வைசித்திரியங்கள் மணியினுலும் சம்பவித்தலின் மநோமணியையே மந்திரியெனவுங் கூறலாம். ஜன்மவிருக்ஷச் சேதமும் நிரதிசயாநந்த உதயமும், அதனது சித்திவைசித்திரியமாம், இங்ஙனந் தாற்பரியத்தானே மணிரூபக அநுசாரமாகவே சேர்க்கலாம். இராகவனே இவ்வண்ணம் வெகுபங்கத்தானே களங்க மடைந்துள்ள மநோமணியைச் சித்தியின் பொருட்டு விவேகவாரியினே அலம்பியினிதுகண்டு கொள்வாயாக. இங்ஙனம் விவேகத்திற்கு நிரதிசயசுப உதயமுரைக்கப் பெற்றது; இப்போது இயம்பிய இந்திரிய அரியின் ஜயோபாய உபதேசத்தை யுபசங்காரித்தல்:—வினவுறு என்றது. விவேகபதத்தைப் பலமாகப்பற்றிப் புத்தியினுலே சத்தியத்தை யினிது தரிசித்து, இந்திரிய சத்துருக்களை அத்தியந்தம் வென்று பவார்ணவத்தினின்றும் தீர்ணனுக்கக் கடவாயென்பதாம். (18)

(ச.) பேதச்சேற்றின் = வெகுமலின வாசனைகளினுல் களங்கத்தை யடைந்து, விவேகநீரால் = விசாரஜந்நியமான விஞ்ஞான ஜலத்தினுல் கழுவினுல், சித்திகாட்டும்= கைவல்லியத்தைத்தரும், ஆதலால் கைவல்லிய நிமித்தம் இராகவா நீ, பொறியை = இந்திரிய சத்துருக்களை, வென்று = நன்ருய்ஜயித்து, தீர்வரும் பிறவிதீர்வாய் = பவார்ணவத்தினின்றும் கரையேறினவனுவாய், விவேகவன்பால் = விவேகத்தைத் திடமாய்ப் பெற்றதனு லுண்டாகும் மதியால் மெய்ம்மையைக் கண்டு, தத்துவஞ்ஞனுய், சினமுறு.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அற்றேல் உற்பத்திப் பிரகரணத்தில் தேகேந்திரியாதிகட்கு அசத்வம் அறையப்பெற்றது; ஈண்டு அதன் ஜயோபாய முபதேசித்தல் யாங்ஙனங்கூடு

மெனச் சங்கித்து ! இந்த ஆகமுதலியவை அத்தியந்த மில்லாதிருந்தபோதினும் சுகதுக் காதிகள் அத்தியந்த மில்லாதனவா யிருந்தபோதினும் மயக்கத்தினுனே வாளா அயம் அகம் என்னும் நிச்சயமுண்டா கின்றதென்று சமாதானித்தல்:—இத்திறத்தென்பது.

இத்திறத்திவனு னென்றே யிறுகியவறுதிவீணு
மத்திறம் புத்தியாலே யழுத்தமா யகற்றிமற்ற
மெய்த்திறம் பற்றியீயா மதினின்று விழைந்தசெய்வாய்
பொய்த்திற மனத்தினுடே புசித்தவை பந்தமாகா. (19)

(ப : ரை.) இத்திறத்து = இத்தூல தேகாதிகளினிடத்து, இவன் நான் என்றே = அயம் அகம் எனவே, இறுகிய அறுதிவீணும் = திடப்பட்ட தணிபு ஒருபயனற்றதாம். அத்திறம் = அவ்வாறண்டா மயலை, புத்தியாலே = தனது விவேகமதியினுலே, அழுத் தமா யகற்றி = அறிதிடமாய் விடும்படிசெய்து, மற்ற மெய்த்திறம் பற்றி = ஜடவிலக ணமான சத்திய சித்சுகுணந்த தற்பதத்தைச் சொச்சொரூபமா யவலம்பித்து, நீயாமதி னின்று = சாக்ஷிரூபமாகிய நின்னுடைய திதியிலிருந்து கொண்டே, விழைந்தசெய் வாய் = நுகர்வினைவயத்தால் வந்ததை யநுபவிப்பாய் ? பொய்த்திற மனத்தினுடே புசித்தவைபந்தமாகா = விடயங்களைப் பொய்யெனக் கண்டு சங்கமின்றி நின்றமனத்து டன் அநுபவித்தவை கட்டுப்படுத்த மாட்டா.

(ஸ்ரீ - வீர.) திருசியபூதமா யிராநின்ற தேகாதியேயானென்னும் எவ்வீண்டுணிபாய; மித்யாபிமான மூள்தோ அதனைத்தன் றத்துவ நிச்சயத்தானே அத்தியந்தம் அகற்றி, மஹ மகாமதியையுடைய குழந்தாய் ! இதுவெனத் தோற்றும் யாவினும்வேறுப்பிரத் தியக் ஏகரசமா யிருப்பதுயாதோ அதையே பற்றி அதனியற்கையாயனே இருப்பதனுல் மனமற்றவனும் நீ நடப்பினும் குடிப்பினும் நற்போக முண்ணினும் இடர்ப்படமாட்டாய் எவ்வினகார மியற்றினும் விடுபட்டவனே யாவாய்.

(சு.) இத்திறத்தினன் = அகந்தா பரிச்சின்னகார விஷயன், நானென்றே = இறு கியவறுதி = விபரீதநிச்சயம், வீணும் = வியர்த்தமாம், அத்திறம் அதனை, புத்தியாலே = தமதுபுத்தியால்; அழுத்தமாயகற்றி, மற்றைமெய்த்திறம் = இதரமான அகந்தையினு லனவச்சின்னமாகிய சைதந்தியத்தை, பற்றி = அவலம்பித்து, நீயாமதில் அமநஸ்கனுய் நின்று, விழைந்த செய்வாய் = இச்சைப்படி விவகரிப்பாய், அங்ஙனமாயின், பொய்த் திற மனத்தினுடே புசித்தவை = அமனஸ்கனுய்ப் புசித்தபோகங்கள், பந்தமாகா = பந்தவேதுவாகாவாம்; நீ அமநஸ்கனுய் இச்சைப்படி விவகரிக்கிற் பந்தமுறுதென்பது பொருள். (19)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தத்துவதிருஷ்டியானே அசத்துவமா யிருந்தபோதினும், மோகதிருஷ்டியினுனே அதன் சத்துவமானது யாவருக்கும் அநுபவமா யிருத்தலின் நிச்சசெய்யாது விடின் வாசனை யின்மிடத் தன்மையானே தாமவியாளகட நியாயத் தானே அநர்த்தப் பிராப்தியானது அகற்ற முடியாதாம், விவேகாதியின் பயிற்சியானே அதன் நிச்சனமாயினு மேபாச திடநியாயத்தானே அநர்த்த அடைலிலதாம் என அந்த நியாயத்தை யருளத்தொடங்கல்:—தாமன் என்பது.

(வேறு)

தாமனுடு வியாளகடாசுரர் சாருநீதியை நீயணுகாதொழி
வீமபாசதிடா சுரர்நீதியை மேவிவேதசி நீர்கெனவோதலு
நாமமேபகர் தானவராரெனு ஞானவீரன் விஞவிடமாமுனி
யாமதோதிட வாதரமாகிய தேதுநீயதின் மேவெனவோதுவான். (20)

திதிப் பிரகரணம்

(ப - ரை.) தாமனுடு வியாளகடாசுரர் = தாமன்வியாலன் கடன் என்னும் பெயர்வாய்ந்த அசுரர்கள், சாருநீதியை = பொருந்திய நியாயத்தை, நீயணுகாதொழி = நீ பொருந்தாதிருத்தி, வீமபாசதிடாசுரர் நீதியை = பீமன்பாசன்திடன் என்னும் நாமம் வாய்ந்த அசுரர்களின் நியாயத்தை, மேவி = பொருந்தி, வேதனேதீர்கென வோதலும் = துயரந்தொலைத் தாநந்திப்பாயாக வெனக்கூறுதலும், நாமமேபகர் தானவராரெனு = ஹே பகவன்! தங்களால் அனுக்கிரகிக்கப் பெற்றபெயர் வாய்ந்தவராகிய அசுரர்யாவர் என்று, ஞானவீரன் = அறிவுருவமேயாய கம்பீர ஹாகவன், வினுவிட = கேட்ப, மாமுனி = பிரஹ்மரிஷ்டை மாகஷிமைதங்கிய ஸ்ரீ வசிஷ்டபகவான், யாமீதாதிட = அதன் விபரத்தையாம் கூற, ஆதரமாகியது ஏது = உனக்கவற்றுள் யாதுவிழைவோ, நீயதின்மேவு என ஓதுவான் = இராமச்சந்திரா நீ அதன்கண்ணே பொருந்துதி என்று கூறத்தொடங்கினர்.

(ஸ்ரீ-வி.) ஹே இராகவ! தாமவியாலகட நியாயமானது உனக்குண்டாகாதொழிக, பீமபாசதிடத் திதியினுனேநீ விசோகத்தகைமையை யெய்தலாம். வாசனை யற்றவனுக்கும் பையப்பைய வாசனைச் சேர்க்கையானே தேகாதியபிமானம் ஜநநமாகியவழி ஜந்ம மரண பரம்பரையாமென்றல், விவேகங்குறைந்த வாசனையனுக்கு அஃதாவதில் அறைய வேண்டுவதென்னே யென்னும் கைமுதிக நீயாயப் பிரதிசன முகத்தானே, சிறிது ஆத்மவிற்பன்னர்களாய், பூர்ணரிஷ்டை யடையாதவர்களாய், உள்ளமைந்த மத்யம அதிகாரிகளின் வாசனையுச்சேத முயற்சி முதிர்ச்சியின் இன்றியமையாமையைக் காட்டுவதீற் றற்பரமான தாமவியால கடாக்கியாயிகையைக் கூற விழைவுற்ற ஸ்ரீ வசிஷ்டபகவான் ஸ்ரீ இராமபிரானுக்கு அதனைக்கேட்கும் வேட்கை யுளதாக்கும் பொருட்டுப் புகன்ற தையே பிரித்து மீளவும் அநுவதித் தருளுவதாவது:—ஹே இரகுகுலதிலக! இவ்வுலகத்தின்கண் விநோதமாய் விவகரிப்பவனும், சகல ஜனங்களும் விசிராந்தியடைதற் கிடமானவனும், மதிமானும், சிரேயசின் பொருட்டுப் பெருமுயற்சியைச் செய்துகொண்டிருப்பவனும், உத்தமோத்தமமான சமதமாதி யருத்தங்களைத் தன்பா லொளிர்விக்கும் சில முடையவனும் ஆகிய உனக்குத்தாம வியாலகடந்யாயம் உண்டாக வேண்டாம், பீமபாச திடத்திதியானே நீ விசோகனுய் வீமோகனுய் வாழ்தி; என்றிவ்வண்ணம் புனரனுவாதத்தாற் ஜனப்பப்பெற்ற அறியும் வேட்கையையுடைய ஸ்ரீ இராகவர் அவ்விரண்டித்திதிகளின் வித்தரத்தை விளுதல்;—நாமமேபகர் என்பது. ஹே பிரஹ்மந்! பவதாபத்தை யபகரிக்குந் தங்களால், தாம வியாலகட ந்யாயம் உனக்குண்டாக வேண்டாம் என்றருளப் பெற்றதே அஃதென்? ஹே பிரபுவே! தாபத்திரயங்களையுஞ் சாந்தப்படுத்தும் தேவரீராற் பீமபாச திடத்திதியானே சோகமற்றவனுகி வாழ்திநீ யென்றருளப்பெற்றதே அக்கூற்றின் கருத்தென்னே? இக்கதை யிரண்டன் வர்ணனரூபமான உதார வுபதேசவாணியால், பெருமழைக்காலத்திற் கருவுற்ற மேகமானது, தாபங்களையெல்லாம் அகற்றும் இடிமுழக்கத்தான் மயிலினத்தை உல்லாசப் படுத்துவதேபோலத் தூயனுகிய அடியேனை யுணர்வுடையவனுகச்செய்து மகிழ்வுறுமாறு செய்வீர்களாக. எனவேண்டிக் கொண்டதைக்கேட்ட ஸ்ரீ வசிஷ்ட பகவான் அருளுவதாவது:—ஹே சுமந்தாய்! தாமவியாலகட நியாயத்தையும், பீமபாசதிடத் திதியையும் கூறுகின்றேம், அதனை நீ யொருமையுடன் கேட்டு எது இட்டமோ அதை யநுசரித்து வாழ்வாயாக.

(ச.) தாமன் வியாளன்கடன் என்னுந்தைத்தியர் மேற்சொல்லப்படுகிறார், அவர்கள் சாரும், நீதியை = விவேகருனியமான விவகாரத்தை, மகாமதியையுடைய இராகவா, நீயணுகாதொழி, வீமன் பாசன் திடன் என்னுந்தைத்தியர், அவர்களுடைய விவேகயுக்த

விவகாரத்தை, மேவி, வேதனை தீர்கென = சோகநீங்குவாயென்று, ஓதலும், ஞான வீரன் = ஸ்ரீ இராமன், காமமேபகர் = தேவரீர் உத்தேசமாயுபதேசித்த, தானவரார்= தாமாதியர் வீமாதியரியார், அவர்களது நீதிகளியாவை, என விஞவிட, மாமுனி = சமுசாரதுக்கத்தைத் தவிர்க்குஞ் சிலமுடைய ஸ்ரீ வசிட்டமுனிவர், யாமது, அவ்விருவரது நீதியையும், ஓதிட=இராகவாநீகேட்டு ஆதரமாகிய தேதத்தின் மேவெனவோதுவான்.(20)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சம்பராசுரன் பெருமையைப் பேசி வானவர் தானவர் போரை வருணித்தல்:—சஞ்சரி—ஆய—மேரு, என்பன.

சஞ்சரித்துயர் பாதலமேவிய சம்பரப்பெயரா னொருதானவன்
வஞ்சமுற்றிய மாயையில் வாழ்பவன் வன்படைக்கடலா லமரேசனை
யெஞ்சலித்திட வானவர்தாமுமே யிவன்சுழுத்தியி லாகியபோதினும்
விஞ்சவம்பர மேவியபோதினும் வெம்பியெற்றினர் தானவர்மாளவே.(21)

ஆயவன்பை யறிந்துயர் சம்பரனுருவன் றரு மன்றிறன் மூண்டிக
னேயவிங்கிவர் தம்படைமுன் செலவேவினன் பெரிதங்கெவரும்பட
மேயவண்டரடர்ந்தன ரென்றலும் வேகமிஞ்சிய சம்பரன்வந்திட
மாயைவிஞ்சை நிறைந்தவ னென்றெதிர்மாகர் நின்றிடவஞ்சியொதுங்கினர்.

மேருகந்தரமும்பரடைந்தனர் வீதியெங்கு மரம்பையர் நின்றழ
யாருமின்றி யவிந்திரன்றன்பதி யீசன்வென்ற புரங்களெனும்படி
நேருமங்கி சொரிந்து திரும்பின னீடகன்று ளவந்தணர் பின்றையு
மூருள்வந்தனரென்றுபெரும்படையோய்விலன்பெரிதுந்தினன்விஞ்சையால்

(ப-ரை.) சஞ்சரித்து = எல்லா வுலகங்களிலும் உலவிவந்து, உயர்பாதலமேவிய= சர்வசுவரிய மநோகரமான பாதாலஞ்சுரத்தில் வாழும், சம்பரப்பெயரான் ஒரு தானவன் = சம்பராசுரன் என்னும் பெயர் வாய்ந்த ஒப்பற்ற தைத்தியேந்திரன் ஒருவன் இருந்தனன், வஞ்சமுற்றிய மாயையில் வாழ்பவன் = வஞ்சனைகள் நிறைந்தமாயை வித்தைசெய்து கொண்டே தன் காலங்கழிப்பவன், வன்படைக் கடலால் அமரேசனை = பலம்பொருந்திய சேனைசமுத்திரத்தால் தேவேந்திரனை, எஞ்சலித்திட = துன்புறுத்திக் கொண்டிருப்ப, வானவர்தாமுமே = இந்திரனை யுள்ளிட்ட தேவர்கள் யாவர்களுமே, இவன் சுழுத்தியிலாகிய போதினும் = இச்சம்பராசுரன் துயின்றுகொண் டிருக்கும் போதும், அம்பரமேவிய போதினும்=தேசாந்தரஞ்சென்ற சமயத்தும், விஞ்சவெம்பி= மிகவும் கரேமாய்ச் சினந்து, தானவர்மாள எற்றினர் = அசுரர் அழியும்படியாக அடித்து விடுத்தனர். ஏ. அசை.

ஆயவன்பை யறிந்து=இவ்வண்ணம் இமையவர இமையவர் இயற்றிய இடும்பையை யெண்ணி, உயர்சம்பரன் = மாயைவித்தையின் மேன்மையுற்ற சம்பராசுரன், ஆருவன் தருமன்திறல் மூண்டிகன்=அங்கன் தருமன் வலுவுற்றமூண்டிகன், எய, இங்கு இவர்தம் பழமுன்செல = முதலவர்களாகப் பொருந்திய இவர்கள், தலைமைவாய்ந்து தமது சேனை பட்டிஷ்களைக் காக்கவேண்டி முன்பு போம்படியாயிச் சமரில், எவினன் = இவர்தமைச் செலுத்தினன், அங்கு=அவ்வாறனுப்பிய அமரில், எவரும் = யாவரும், பெரிதுபட= அத்தியந்தம் அழியும்படியாக, மேய அண்டர் = அத்தர்மடைந்த அமரர்கள், அடர்ந்தனர்=மோதிவென்றார்கள், என்றலும்=எனச்சாரணர் கூறக்கேட்டலும், வேகமிஞ்சிய=

அதிவேகத்தோடு கூடிய, சம்பரன் = மாயாசுரன், வந்திட = தேவதைகளைத் தேட வரவே, மாயைவிஞ்சை நிறைந்தவன் என்று = மாயைவித்தையில்வல்லவன் என்பதாக, மாகர் = அமரர், எதிர் நின்றிட அஞ்சி ஒதுங்கினர் = அவன் முன்னிலையில் நிலைத்துப் போர்புரியப் பயந்து விலகியோடினர்.

மேருகந்தரம் உம்பர் அடைந்தனர் = காஞ்சனமலைக் கானனகுஞ் சங்களையஞ்சி யமரர் சரணடைந்தனர், வீதியெங்கும் அரம்பையர் நின்று அழ = தெருக்களில் எல்லாம் தேவமங்கையர் அலங்கோலமாய் நின்று ரோதனஞ்செய்ய, யாரும் இன்றிய இந்திரன் தன்பதி = ஒருவருமில்லாம லோடிவிடச் சூனியமாகத் தோற்றும் தேவேந்திரனது பட்டணமானது, ஈசன்வென்ற புரங்கள் எனும்படி = கற்பகக்ஷீண ஜகத்சமமாய், அல்லது தானியை யனுசரித்துச் சிவபெருமான் சிரித்தெரித்த முப்புரங்கள் என்று சொல்லும் படியாக, நேரும் அங்ஙீசொற்றீந்து = தன்னிஷ்டப்படி இன்ன இடத்திற்றான் என்றில்லாமல் தீயைத்தீட்டி, திரும்பினன் = தனதாலயம் வந்து சேர்ந்தனன், நீடகன்று = வெகுகாலங்கழித்து, உள அந்தணர் = திக்குகளின் மறைந்திருந்த தேவர், பின்றையும் = மறுபடியும், ஊருள்வந்தனர் = பட்டணத்துள்ளே புகுந்தனர், என்று = என்பதாகக் கேள்வியுற்று பெரும்படை = பெரியசேனுதி நாயகரை, ஓய்விலன் = இடைவீடின்றியவனுகி, பெரிது = மீளமீளவும், விஞ்சையால் = மாயைவித்தையால், உந்தினன் = உண்டாக்கி யேவினன்.

(ஸ்ரீ - வீர.) சர்வ ஆச்சரிய மநோரமிமாய பாதாளகுகையின் கண்ணே மாயைவடிவ மணிகளுக்கு இடனுய மகார்ணவம் போலும் சம்பராசுரனெனப் பெயரிய ஒருதைத்தியேந்திரன் சர்வ ஐசுவர்ய சம்பந்நனுகி வர்ழ்ந்துகொண்டிருந்தனன். தேவதைகளே யெல்லாம் அடித்தோட்டிய சகிக்கமுடியாத அதிபயங்கர ஆகாயத்திற் சரிக்கும் ஆகிருதியையுடைய அச்சம்பராசுரனுக்கு, சுரர்களேயெல்லாம் நாசஞ்செய்யும்படியான அசுரர்தஞ் சைனியம் அதிவிஸ்தாரமா யிருந்தது. அம்மாயாபலத்தை யுடையவன் நித்திரையி லிருக்கும்போதும், தேசாந்தரங்களிற் சென்றிருக்கும் போதும் அம்மாயாமய னில்லாதசமயம் பார்த்து இடையிற்புகுந்து தேவர்கள் வெகுவிரைவாக அவனது சேனைகளைக் கொன்று வென்றார்கள். பின்னர்ச் சம்பரதைத்தியனுல் தன் சேனையைக் காக்கும்பொருட்டுச் சேனுதிபதிகளாய் முண்டி ருரோதன். துருமன். முதலாயினர் தன் சேனையினில் நியமிக்கப் பெற்றார்கள். விண்ணிடைச்செல்லும் சேனங்கள் ஆகுலமிருத்திருக்கும் சிறிய பறவைகளே யடித்தெறிவதே போல அத் தானைநாயகரையும் இடைப்படுத்திப் பயாணனுகராய் அமரர் கொன்று சென்றனர். அசுரர்களுக்குள் மேன்மை வாய்ந்திருந்த அச்சம் பிரன் மீளவும் சமுத்திரம் பேரலைகளே யுண்டாக்குவதேயோலப் போரிற் சபலமுடைய வரும் உற்சாகரும் மகாவீரரும் மகாட்டகாசம் செய்பவரும் ஆகிய வேறுசேனுதிகளே யுண்டாக்கிவைத்தனன், தேவர்கள் அவனது அத்தானை நாதரையும் சீக்கிரமாகவே நிதைத்துச் சென்றனர், அதலுல் அவன் அதிகமான கோபத்தையடைந்து அமரர்களே யெல்லாம் அழிப்பான் தேவர்களாற் பரிபூர்ணமான திரிவிஷ்டபத்தை யடைந்தனன். அடையவே அவனது மாயையிஞலே அவனிடத்தினின்றும் அச்சத்தை யடைந்தவர்களாய தேவர்கள், ஸ்ரீ கௌரியம்மையின் வாகனமாகிய சிங்கத்தைக்கண்டு பயந்து மறையும் மானினங்கள்போல மேருகானன்குஞ்சங்களில் மறைந்திருந்து கொண்டார்கள். அடிபட்டுப் புலம்பிக்கொண் டிருக்கும் அற்ப அமரகணத்தையும், அழுதுகொண்டு கண்ணீர் நிறைந்த வதனங்களேயுடைய அமரமங்கையர்களேயு முடைய சுவர்க்கத்தை அச்சம்பரன் கற்பகக்ஷீண சகத்துக்குச் சமமாய்ச் சூனியமாயிருப்பதைப் பார்த்தான். அவ்விடத்

தில் அதிகோபத்தோடு திரிந்துகொண்டே யிருந்து, அச்சொர்க்கத்தைக் கொள்ளையிட்டுக் கிடைத்த சுந்தரமான ரத்நாதிகளை யபகரித்துக்கொண்டு லோகபாலபுரியைத் தகித்தித்தனது ஆலயத்தை நோக்கிச்சென்றனன். இவ்வகையாகத் தேவர்கட்கும் தானவர்கட்கும் துவேடம் அதிதிடதரமாக மூளவே, தேவர்கள் சுவர்க்கத்தை விடுத்துத் திசைகளில் அந்தர்த் தானத்தை யடைந்திருந்தார்கள். பின்னர்ச் சம்பரதைத்தியனால் எவ்வெச் சேனதிநாயகர் முயல்வுடன் சிருஷ்டித்து அனுப்பப்படுவாரோ அவரையெல்லாம், சுரர்கள் அதிகமான வேறுமூயற்சி யுடனிருந்து கொன்றார்கள். ஈசன் வென்ற புரங்கள் எனக் கவிநாயகர் காட்டியதற் குதாகரணம்:—சிவமகிமை பூமிசயந்தன நான்முகனுந்துவன் பூதரவிந்திரன் வேணுமா, னேமியதிந்தொடு மாயிரமஞ்சுடர் நேமியுறுங் கரனேர் கோலாம், பாமரரின் புரமோர் திரணந்தகிபாலக சம்பரமீதேனே, சாமிதொழும்பரொடாடிடு புந்தியுஞ்சார் பரதந்திரமாகாதே. இரட்டையர்: — காணெண்ணுரைச் சிருக்கு நற்சாபங்கற்சாபம், பாணந்தான் மண்டின்றபாணமே, தாணுவே, சீராளுர்மே வுஞ் சிவனேநீ யெப்படியோ, நேரார் புரமெரித்தநேர்.

(ச.) உயர்பாதலம் = ஆச்சரிய மநோகரமான பாதாளகுகரத்தில், ஒருதானவன் = தைத்தியேந்திரன், உண்டிடந்த, வன்படைக் கடலாலமரேசனை = சுராசாஞ்செய்யும் ஆசுரசைந்திய மகரர்னவத்தானிறைந்த பயங்கரமான ஆகிருதியுள்ளதைத்திய இராஜனை எஞ்சவித்திட = குறைக்க, வானவர் = அமரர், தான் அசைவிலை, விஷ்ணுவன் = மாயாவலியுடைய வீரன், பாடபேதம், அம்பரமேகிய போதினும் = தேசாந்தரத்திற் சென்ற காலத்தும், விஞ்சி வெம்பி = மிகுந்தவராய்ப் பெருங்கோபங் கொண்டு, இடையிற் சென்று, தானவர் = அத்தைத்திய சைன்னியம், மாளவே எற்றினர் = கொன்றார்.

சம்பரனுகுவன் = சம்பராசுரன், திருமன்றிறன் மூண்டிகனேய வீரர் = ஹிரண்யாக்ஷ திருமன், திருத்திருமன் மூண்டிகன் முதலான வீரரை, மூண்டிகாங்கத் திருமாதிய ரென்பது மூலபாடம். இங்கு = இந்தயுத்தத்தில், தம்படைமுன் = தனது சேனைகளிடத்து, இரகூஷக்குச் சாமந்தராக, செலவேவினன், அடர்ந்தனர் என்றலும், இடையிற்சென்று பொருதாரென் றறிந்தபின்பு, சம்பரன், சுரபட்டணத்தைக்குறித்து தானே, வந்திட, அவனே மாகர் = சுரர், மாயைவிஞ்சை நிறைந்தவனென்று, அறிந்தவனது, எதிர் நின்றிடவஞ்சி, ஒதுங்கினர் = மறைந்தார்.

மேருகந்தர மும்பர் அடைந்தனர் = மேருகுகை வனங்களில் உம்பர் மிகுந்த பயத்தால் அடைந்தனர், யாருபின்றிய விந்திரன்றன்பதி, சூனியமான சுவர்க்கத்தை, ஈசன் வென்ற புரங்களெனும்படி = கற்பாந்தஜ்வலத்துக் கோப்பாகக் கோபித்து, அங்கிசொரிந்து = எரித்துத் தனதாலயத்தை நோக்கித்திரும்பினன், வந்தனரென்றறிந்து பெரும் படை = சேனுதிநாயகரை, பெரிது உந்தினன் = மாறிமாறிச் சிருட்டித் தனுப்பினன்.

(ஸ்ரீ-வீர - அ - கை.) சிருஷ்டித்த வீரரையெல்லாம் தேவர்கள் மோதிக்காதச் சம்பராசுரன் மிக வெகுண்டு அமரர் அழிக்கமுடியாத ஆற்றல் வாய்ந்த வீரரைச் சிருஷ்டித்தலையும் அவர்தம் பெருமையையும் கூறல்:—ஆவ—சாதல் என்பன.

> ஆவதாகிய தானவர்பற்றற வாதிதேவர்கண் மோதினர்மற்றது
> தாபமாயசுரேசன் விதித்துள தாமனேடுவியாள கடப்பெயர்
> மூவர்மாயையி னல்வரலுற்றவர் மூரிமேருவு லாவுவிதாப்பவர்
> பாவனுவச வாதனையற்றவர் பாசமாமபிமான நிஜப்பிலர்.

திதிப் பிரகரணம்

சூரிய

சாதல்வாழ்தல் களிப்புறவு கோர்வுறறுமவ்வகை கொள்வெற்றிகடோல்விகள்
போதன்மீடலனைத்தையுங்கடலர்போர்செய் வோரை முருக்குவர்கேவல
மாதலாலிவர் பற்றலர்சேனையை யாசுகங்கொ டழிப்பரழிப்புரூர்
பாதலாசுரன் வெற்பினர்வேலியர் பாருளாரிவர் பிற்செலவேவினன்.

(ப - பை.) ஆவதாகிய தானவர்பற்றற = சம்பராசுரன் சிருஷ்டித்துச் சிருஷ்டித் தனுப்பிய அசுரவீரரெல்லாம் அடியோடு மாயும்படியாக, ஆதிதேவர்கண் மோதினர் = இந்திராதிதேவர்கள் அடித்தனர், மற்றது தாபமாய் = அதனைக் கேட்டதனாற் பெரும் கோபத்தையடைந்த, அசுரேசன் = தைத்தியேந்திரனுல், விதித்துள = தேவரைக்கோற நியமிக்கப்பெற்ற, தாமனெடு வியாளகடப்பெயர் = தாமன் வியாளன் கடன் என்னும் நாமம் வாய்த்தவராய், மூவர் = மூன்றுபெயர், மாயையினுல் வரலுற்றவர் = மாயையித் தையினுலே வெளிவந்தனர், மூரிமேருவுலாவுவது ஒப்பவர் = பெரிது வலுமைவாய்ந்த சுமேருகிரி சஞ்சரிப்பதற்குச் சமானமானவர், பாவனுயச வாதனையற்றவர் = பாவிக்கப் பாவிக்கவளர்ந்துவரும் வாசனையேயில்லாதவர், பாசமாமபிமான நினைப்பிலர் = தேகாதிய வஸ்துக்களில் யான் எனதென்னும் அபிமான எண்ணமே யில்லாதவர். சாதல்வாழ்தல் களிப்புறல் சோர்வுறல் = மரித்தல் ஜீவித்தல் மகிழுதல் வாடுதல், (தாமவாகைகொள் வெற்றிகள் தோல்விகள் = தாமவாகைகொள் = வெற்றிமாலையைத் தரித்து வினையா கும், வெற்றிகள் = ஜயங்கள், தோல்விகள் =) அபஜயங்கள், போதல் மீடல் = முன் போதல் பின்போதல், அனைத்தையும் நாடலர் = என்பனயாவற்றையுமே நினையாதவர், போர்செய்வோரை = யுத்தம் இயற்றுவோரை, கேவலம் முருக்குவர் = மாத்திரம் தூரத்தி யடிப்பவர், ஆதலால் இவர்பற்றலர் சேனையை ஆசுகங்கொடு = ஆகையினுல் இம்மூவ ரும் சத்துருக்கள் சைன்னியத்தை யநேகவகைப் பாணங்கள்கொண்டு, அழிப்பர் = நாசஞ்செய்வர், அழிப்புரூர் = அவர்களால் இவர் அழிவுபடுத்தப்பெரூர், என்று சிக்கித்த, பாதல அசுரன் = பாதாளநாயகனுகிய தைத்தியேந்திரன், வெற்பினர் வேலையர் பாரு ளார் = மலையிடவாசிகள் அலைகடல் வாசிகள் பலவிடவாசிகள் ஆகிய அசுரர்களே ஆயுத பாணிகளாக, இவர்பிற்செல ஏவினன் = இவர்க்குச் சகாயமாகப் பின்பு தொடர்ந்து சுடந்திடப் பிரேரணை செய்தான்.

(ஸ்ரீ - வீர.) அசுரேந்திரன், (அனுப்பிய) அனுப்பிய சேனைகளை யழித்துவிட்டதைக் கேட்டதும், மிகுந்த உத்வேகத்தை யடைந்து, அத்தியந்தங் கோபவாளுய்த் திருணக் கூட்டத்திற் பற்றிவளர்ந்து சொலிக்கும் அனலச் சுவாலைபோலப் பெருமூச்சுடன் மிகக் கனன்று துடித்தனன். தீயவினை மேயவன் பெரும்பெரும் முயல்வினுலும் நிதானத்தை யடைய முடியாததேபோலச் சம்பராசுரன் மூன்றுலோகத்திற் றேடிப்பார்த்தும் தேவர் களை யடையவேயில்லை. பின்னர் மாயையினுலே அதிகோரர்களாயும், மகாபலவான்க ளாயும், சேனைகளின் இரகஷையின் பொருட்டுப் பெரும்பாடு படுபவர்களாயும், பூதபவிஷ் யத் வர்த்தமான காலங்கள் மூன்றும், மூர்த்திமான்களாய் வந்துற்றன போன்றவர்களா யும், உள்ளமூன்று அசுரவீரர்களைச் சிருட்டித்தான். மாயையினுலே ஆக்கப்பட்ட அவர் கள் அச்சத்தை விளைப்பவர்களாயும், பலம்பாத வாசிகளாயும், மகாமாயை யுடையவர்க ளாயும் பக்ஷத்தோடுகூடி யசையும் பர்வதங்கள் போன்றவர்களாயும் மேற்கிளம்பிவந்தார் கள். தாமன் வியாலன் கடன் என்னும் பெயர்களால் நன்குகுறிப்பிடப் பெற்றூர்கள், பகைவரைத் தமனஞ் செய்பவனுதலினுனேதாமன், வியாலன் = பெரும்பாம்புபோலும் பரசைச்சுற்றிக் கட்டலினுனே வியாலன், பகைவரது பாணங்களினின்றும் தம்மவரைப்

பாய்போன் மூடிக்காத்தலினுனே கிட்டின், என்பதான வியுற்பத்திப்படியே அருத்தங்க ளோடு கூடிய நாமங்களினுலே யலங்கரிக்கப் பெற்றிருந்தார்கள். எஃதடைவுற்றதோ அதைமாத்திரம் செய்பவர்களாயும், அறிவுமாத்திரம் உடையவர்களாயும் இருந்தார்கள். முன்னிருந்தவரினும் அவர்களிடத்தில் என்னே அதிசயகாரண மெனின் ? அத்தாமாதி கள் பூர்வசித்த சீவர்கள் அல்லர்கள், அவர்கட்கு வாசனேயிலதாம், என்னே கருமங்களா லுளவாய தருமங்கண் முதலியுவை யிலவாகலின்; மற்றே, பயசங்கை பிராயஞ்சித்திவிகற்ப சூனியமான எச்சின்மாத்திர சத்தியதான நிமித்ததேகவேக வசைவுளதோ, அவ்வொரே தருமமுடையவர்கள். அற்றேல் அவர்கட்குக் கருமகாம வாசனைகள் இலவாயின் ஜன்ம பீஜமின்மையின் ஜன்மமே யுண்டாகாதாம், பீஜமிலதாயும் ஜன்மம் உளதாயின், முக்தர் கட்கும் புனர்ஜன்மமாம்; அவ்வாறே மேலும் " யாண்டு வாசனேயர்ப் புற்றுளதாம், ஆண் டது பருமையை யடையாநிற்கும் " அறையப்பெறும், ஆகலின், கருமாதிய பாவவசநம் அசங்கதம் என ஆசங்கிப்பின் விடைவருமாறு:—இவர்கள் சுதந்திரஜீவர்கள் அல்லர்கள் மற்றே, உள்ளே பிரேரிக்கும்படியான அந்தரியாமி சித்தின் நிமித்தபூதத்தினுனே, கரும ஜீவசம்பிரனது, அற்பபரிமாணமுற்றதும், கருமவாசனுதிவளர்ச்சியையுற்றுப்புஷ்டியடை யாததும், மாயாகற்பனே வடிவதும், அதனுனே போகசார சூனியமும், சர்க்க சங்கற்ப விருத்தியதும், ஆகிய கெளசலரூபகலேயைக்கொண்டி ஆவிர்ப்பாவத்தை யடைந்தார்கள். அங்ஙனமாகவே ஐந்திரஜாலிக சிருஷ்ட புருஷாந்தரர்கட்கே போலும், சுதந்திர கரும மிலதேனும் ஆவிர்ப்பாவ லகூணஜன்மம் பொருந்துறும் என்பது கருத்தாம். அல்லது வினம்பப்பெறும் வீபசித்து பாக்கியான நியாயத்தானே சம்பரஜீவன்முனே அக்கினிப் பொறிகள்போலும், உள்ளிலும் வெளியிலும் பிரிந்திருத்தலின், கருமவாசனையாதிகளின் மிகவற்பத்தன்மையானே புஷ்டியுறுதலும், மனப்பிராயமும், நிருத்தியும், ஆகிய கரும ஜீவனுடைய கலியென்னும் அங்கிசரூபம் வேற்றுமையை யுற்றுத்தேகாதி யுபாதியுத யத்தானே யுதயம் என்னும் ஜன்மத்தை யடைந்தவர்கள் ஆனூர்கள். ஆகவே யோகிதேக பேதம்போலும் சம்பரகாம கருமவாசனுபீஜ வயத்தானே இவர்கட்குச் சன்மம் சித்தித் தலின், தனித்து அதனபேக்ஷை யிலதாம். ஆயினும் இத்துணைச் சிறப்புளதாம்:—யோகி களின் தேகபேதத்தில் தத்துவஞானத்தினுலே பாதிதத்தன்மை யுண்மையின் சரீரந் தோறும் காமாதிஜன்ம பீஜவிருத்தியிலதாம், தாமவியால கடாதிதேகத்திலோ அஞ்ஞத் தன்மை யிருத்தலினுலே அதுவளர்வுற ஜன்மபரம்பரைப் பிராப்தியாமென யாதொன் றும் பொருந்தாமை யின்றுமென்றுணர்க, இதனுனே போகிபோலுமே அவர்கட்கு வாசனைவளரும் வரைவிவகாரமாம், ஆகவே அந்தவீரர்களாய தாமாதிகள் வாதனை வயப் படாதவர்களாய், அந்தபாரம் பரியத்தானே காகதாலீய நியாயமென்ன நேர்ந்தநேர்ந்த காரியத்தைச் செய்து வருபவர்களாயினுர்கள். வெளிப்படாத வாசனை யுடையவர்களின் விவகாரம் கண்டது யாண்டுகொலோ வெனக் கடாவின் ? விடைதருதும், பாதிதயி லுற்ற பாலர்கள் கேவலம் தங்கள் அங்கங்களாற்சேட்டை செய்வதுபோலவே வாசனுத் மாபிமானங்கள் அற்றவர்களாய அவர்கள் விவகரித்தனர்கள். சமரசமயத்தில் எதிர்முக மாகச் சத்துருக்களின் வீழ்ச்சியு முணாார்கள். இளப்பாறு நம்பிக்கை யியைந்தவர்மேல் அகஸ்மாத்தாகச் சத்துருக்களின் வீழ்ச்சியு முணாார்கள். அவர்கள் ஓடுவதையும் அறி யார்கள், வாழ்வது முணாார்கள், மாள்வதும் உணாார்கள், போரையுமறியார்கள் வெற்றி தோல்விகளேயும் உணாார்கள். இங்ஙனம் உணாார்களாயின் தாமே யாங்ஙனம் பகைவர் களே எதிர்த்து வீழ்த்தலேலும் எனின் ? அடித்தற்கெடுத்த அசலங்களேயுடைய அவர் கள், போரிற் கேவலம் அடித்து கொல்லமுயன்று முன்வந்ததாக எதிரேகண்டபகைவர்

சேனைகளை மோதிக் காத முன்னுறுவார்கள். வீழ்ந்தடித்துச் சூழ்ந்து கோறவேண்டு மென்னும் எண்ணம் நண்ணும் சம்பராசுரனது சங்கற்ப வாசனைமாத்திர சரீரத்தன்மை யானே எதிர்முக சத்துருதரிசனத்தால் அவ்வளவு மாத்திர உற்போதத்தால் எதிர்த்துச் செல்பவர்கள் ஆயினர்கள் என்பது அபிப்பிராயம். மாயையினுலே செய்யப்பெற்ற அசு ரர்களானே னன்முகக் காப்பாற்றப்பெற்ற எனது பெருஞ்சேனையானது பகைவரை வென்றுவிடும் என்பதாக, அத்தியந்தம் சந்தோஷமடைந்த மனத்தினுகிய சம்பரா சுரன் சித்திப்பானுயினன். வென்றுவிடும் என்பதாகியாய் முன்மொழிந்தவகையே தைத் தியேந்திரன் நிர்ணயித்து, தேவாரிகள் கோரியாகிய தரமவியால கடர்களோடு கூடிய சேனையைப் பூதலத்தை நோக்கி யேவினன், தைத்தியர் ஆயுதங்களோடு கூடியவராகிச் சாகரங்களினின்றும், வேலைவனக்குஞ் சங்களினின்றும், கிரிகந்தரங்களினின்றும் மார்க் கங் கிடைத்தபடி மேலெழுந்தனர்.

(ச.) ஆவதாகிய வாதிதேவர்கண் = பூர்வ தேவர்களென்னும், தானவர் = தைத்தி யரை, பற்றற = சேடமற, மற்றவர் = சுரர்கள், மோதினர் = அடித்தார், அசுரேசன் என்னுஞ் சம்பாசுரன், தாபமாய் = மிகவும் வெப்பமுற்றவனுய், மாயையினுல், விதித் துள = நியமிக்கப்பட்ட, மூரிமேரு = இறகின்றிய வலிய பருப்பதங்கள், பாவனுவசவா தனை = லோகவாசனை, பாசமாம பிமானம் = தேகாபிமானம், கினைப்பிலர் = இல்லா தவர், (24)

ஆதலால், மனோவசமாகிய மாயாவசத்தால் ஏதுவின்றிப் பரமான்மாவினின்றும் பிரதம முதித்தவராதலாலே, அழிப்புரூர் என்று பாதலாசுரன் = தைத்தியேந்திரனென் னுஞ் சம்பராசுரன், சிந்தித்து வெற்பினர் வேலையர் பாருளார் = மலைகடல் பூமிகளி லுள்ள வசுரரை, வரவழைத்து. ஆதலாலே பகைவரை நோக்கிச் செல்லுதலேனும், பகைவர்களின் வருகையேனும் அறியாதவர்கள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) மூவர்சேனையும் தேவர்சேனையும் கலந்து, சரித்தல் மலைந்து கடும் போர் புரிதல்:—தான—ஆயுத வென்பன.

தானவாதிபன் விட்டநெடும்படை தாள்களோடு கிரித்திரள்வந்தென
மீனவேலைபரப்பில் விரிந்தென மேவினர்கள் சிருட்டி முடிந்தென
வானநாடருமப்படி வந்தனர்வாயு வோடுகெருப்பு மலிந்தென
வானசேனைகண் மூட்டியுடன் றனவாதலான் மறுகற்பம் விளைந்ததே. (25)

ஆயுதங்களெரிந்து நெருங்கிடவாக மெங்கும்விழுந்தன வெற்பென
மாயுமங்கமுமிழ் குருதிக்கடன் மாநிரங்கட தும்பியலைந்தன
காயும்வஞ்சரடர்ந்து முடுக்கினர் காதுமும்பர் தளர்ந்தோடவுற்றனர்
சாயுமண்டர்கள் பின்தொடர்வுற்றனர் தாமனும்பிறருந் திசைமுற்றுமே. ()

(ப - ரை.) தானவாதிபன் = அசுரநாயகன், விட்ட நெடும்படை = ஏவியபெரிய சேனைகள், தாள்களோடு கிரித்திரள் வந்தென = பாதங்களோடு பர்வதக் கூட்டங்கள் கூடிவந்தன போன்றும், மீனவேலை பரப்பில்விரிந்தென = மகரங்கணிறைந்த கடல் வீத்தரித்து விரிந்து வந்ததுபோன்றும், மேவினர்கள் = கூடிக்குழுமினர்கள், சிருட்டி முடிந்தென = பிரளயம் வந்துவிட்ட தெனும்படி, வானநாடரும் = அமரநாட்டாரும், அப்படி வந்தனர் = அசுரர்களைப் போலவே வந்துசேர்ந்தனர், வாயுவோடு நெருப்பு

மலைந்தென = காற்றிலேறு அக்கினி எதிர்த்ததுபோல, ஆனசேனைகள் = இங்ஙனம் ஒன்றான சைனியங்கள், மூட்டியுடன்றன வாதலால் = எதிர்த்துப் போர்செய்தன வாதலின், மறுகற்பம் விளைந்ததே = வேறுகற்பம் உண்டாயது.

ஆயுதங்கள் சரிந்து நெருங்கிட = அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகித்தபோது அவையக்கினிகான்று அடர்ந்திட, ஆகமெங்கும் வீழ்ந்தன வெற்பென = சரீரங்கள் எவ்விடத்திலும் மலைகள்போல் வீழ்ந்தன, மாயுமங்கம் உமிழ்குருதிக்கடல் = கழியும் காயங்கள் பொழியும் இரக்த சமுத்திரத்தில், மாதிரங்கள் ததும்பியலைந்தன = மலைகள் தத்தளித்துச் சலித்தன, காயும்வஞ்ச ரடர்ந்து மூடிக்கினர் = கோபதாபமுற்ற அசுரர் நெருங்கித் துரத்தினர், காதுமும்பர் தளர்ந்து = எதிர்த்தடித் தடிபட்ட தேவதைகள் மெலிதலுற்று, ஓடவுற்றனர் = பலாயனஞ் செய்தனர், சாயுமண்டர்கள் பின் = அங்ஙன மோடுந் தேவதைகளின் பின்னர், தாமனும் பிறரும் திசைமுற்றும் தொடர்வுற்றனர் = தாமவியால கடரும் மற்றசேனை நாயகரும் எல்லாத் திக்குகளிலும் தொடர்ந்தே யோட்டினர்.

(ஸ்ரீ - வீர.) பகைத்தோடுகூடிய பர்வதலீலையால் அச்சத்தைத்தரத்தக்க அதிகோர சப்தங்களுடன் அசுரக்கூட்டங்கள் மேற்கிளம்பின; தாம வியால கடர்களானே காக்கப் பெற்றுப் பெருத்து வளர்ந்த அத்தானவர் தங்கரப் பிராகாரங்களினூனே இரவியொளி நொறுங்குமாறு மண்வின் மத்தியில் நிறைந்திருந்தனர். பின்னர்த் துறக்கவாசிகளாகிய தேவகணங்கள், மிகப் பயங்கரர்களாய்க் கலக்கமற்ற தீரர்களாய், மேருகிரிமுதலியவற்றினின்றும் கந்தரங்களினின்றும் நிருஞ்சங்களினின்றும் பிரளயாந்தத்திற் போலப் போரின் பொருட்டுக் கிளம்பினர்கள். அகாலத்தில் சகிக்கமுடியாத பிரளயம் போலும் பயந்தரத்தக்க பெரும்போரானது புவனந்தரத்தில் அத்தேவாசுரர் தஞ்சேனைகட் குண்டாயது. அக்கால், அங்குநிகழ்ந்த அதிகோர சமர சம்பிரமத்தில், தேவாசுர சரீரங்களில் உண்டான விருணங்களில் அப்பிர வுதரங்களிற்போல ரக்தப் பிரவாகமான துண்டாயது. வீழ்ந்த அங்கங்களின் வேதனை பொறுதனவாய், பெருகிய வுதிரப்பே ரருவியினவாய், நிலைபெறுத தேவசைனியங்கள், கரைகளையுடைத்துப் புரண்டோடும் காட்டாறுகள்போலக் காணுமலோடத் தொடங்கின. தாம வியாலகடர் மூவரும் நீள்போது நெடுந்தூரம் ஒளிந்துகொண்டிருக்கும் அத்தேவசேனைகளைப் பெருங் கர்ச்சனைகளுடனே வீர மொழிகளுடனே பாவகர்கள் இந்தனங்களைப் போலப் பின்றொடர்ந்துகொண்டிருந்தார்கள்.

(ச.) வானகாடரும், வனத்திணும் குகையினும் மலையினும் நின்று, அப்படி வந்தனர் மறுகற்பம் = புவனந்தரம், மூடியுங்காலம். (27)

ஆகம் = சரீரங்கள், மாதிரங்கள் = திக்குகளில், உடைவுற்றனர் = சாய்ந்தார் திசைமுற்றுஞ் சாயுமண்டர்கள் பின் தாமனும் பிறரும் தொடர்வுற்றனர் என்பதற்றவயம்.

(ஸ்ரீ-வீர - அ-கை) தேவசைக்காணமன் மூவரும் சம்பராசுரன்பாற் சார்தலும் தேவர்களோடி ஸ்ரீ பிரஹ்மதேவரைச் சரண்புகுதலும்: — உம்பரென்பது.

உம்பரோடி மறைந்தமை கண்டிலருந்து மூவருநின்று திரும்பினர்
சம்பராசுரன் முன்புறவந்தனர் சங்கவானவ ரென்செய லென்றுகொ
டம்புயாசனன் முன்புநடந்தன ரன்பிலேறு பணிந்து புகன்றனர்
வெம்புதீநிகர் சம்பரன்வஞ்சமும் வெங்கண் மூவர்துரந்து தொடர்ந்ததும். (28)

(ப - ரை.) உம்பரோடி மறைந்தமை கண்டிலர் = தேவர்கள் ஓடிப்போய் ஒளித்துக்கொண்டதைக் காணுதவராய், உந்துமூவரும் = பின்ரொடர்ந்து சென்ற மூன்று பேரும், நின்று திரும்பினர் = முயன்று தேடிப்பார்த்து விட்டுச் சிறிது தாமதித்துத் திரும்பினர், சம்பராசுரன் முன்புறவந்தனர் = பாதாளலோகத்தில் வீற்றிருக்கும் பிரபுவினிடத்தில் வந்து சேர்ந்தனர், சங்கவானவர் = ஓடிக் கூடிய தேவர்கள், என்செயல் என்று கொடு = இனியாம் செய்யத்தக்கது யாதுகொலோ வென ஆலோசித்துக் கொண்டே, அம்புயாசனன் முன்பு நடந்தனர் = ஸ்ரீ பிரஹ்மதேவரது சந்நிதியிற் சரணாகதியாக வடைந்தனர். அங்ஙனடைந்தவர், அன்பினோடு பணிந்து = யிகுந்தபக்தியுடன் நமஸ்கரித்துத் தோத்தரித்து, வெம்பு தீங்கர் = சுவாலை விட்டெரியும் அக்கினியினை, சம்பரன் = தைத்தியேந்திரன், வஞ்சமும் = வஞ்சனையையும், வெங்கண்மூவர் தூரந்து தொடர்ந்ததும் = சினந்த செங்கண்கள் வாய்ந்த தாமாதிமூவர் தூரத்திப் பின்ரொடர்ந்து வந்ததையும், புகன்றனர் = விண்ணப்பித்தனர்.

(ஸ்ரீ - வீர.) அதிநிபிடமான லதாதி ஜாலங்கள் நிறைந்த வனத்திற் குதித்தோடியொளிந்துகொண்ட மான்களைச் சிங்கங்கள் அடையப் பெறுதலேபோல, ஓடியொளித்த தேவர்களை வெகுபிரயத்தினப்பட்டுத் தேடிப்பார்த்தும் அசுரர் அடைந்தாரில்லை. அமரக்குழுக்கள் அகப்படா தொழியவே தாமவியாளகடர் என்பவர் அக்கால் மிகச்சந்தோட முடைய கருத்தினராய், பாதாளகோசத்தின்கண்ணிருக்கும் பிரபுவை நோக்கிச் சென்றனர். நிர்வாசனைத் தன்மையானே தானுகவே பிரமுதித்த ஆசயத்தன்மை ஜயலாபநிமித்தகத் தன்மையானே உபசரிக்கப்பெறும், பின்னர்ப் பகைவராலே தோற்கடிக்கப் பெற்றுப்பெரும் வியாகூலம் அடைந்திருந்தவமரர், கணமிளைப்பாறித் தெளிந்து வெற்றியுபாயத்தை வினவும்பொருட்டு அளவிறந்த தேஜசையுடைய ஸ்ரீ பிரஹ்மதேவரை நோக்கிச் சென்றனர், மாலேக்காலத்தில் இரக்தகாந்தியினாலே சிவப்பாக்கப்பெற்ற நீர்கணிறைந்த செங்கடல் களுக்குப் பூர்ணசந்திரன் புறப்பட்டதேபோல, இரக்தத்தினாலே இரக்தானன ஸ்ரீயுடனிலங்கும் அத்தேவர்கட்கு ஸ்ரீ பிரஹ்மதேவர் பிரசன்னமானார். அந்நான்முகரை யமர் நன்முகவணங்கிச் சம்பரனது வஞ்சனையையும் அவன்செய்யும் அநர்த்தத்தையும், அவன் தாம வியாள கடர்களைச் சிருஷ்டித்துப் போர்க்கேவியதையும் அவரியற்றிய அவலத்தையும் சவிஸ்தாரமாக வினிது விண்ணப்பித்துக் கொண்டனர்.

(ச.) மறைந்தமை = ஒளித்தமையால், திரும்பினர், பாதாளலோகத் திருக்குஞ் சம்பராசுரன், என்றுகொடு, செயோபாயநிமித்தம், அம்புயாசனன் முன்பு தூரந்துதொடர்ந்ததும் = தூரத்திப் பின்ரொடர்ந்ததும். (28)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தேவர் சூறையிடுத்தலைச் செவிகொண்ட ஸ்ரீ பிரஹ்மதேவர் துயர்நீங்கு மவதியறைந்து அதுவரைசெய்யு முபாயத்தையருளி, நிராசையின் பெருமையையும் வாசனையின் நிறமையையும் அருளல்:—கேட்ட—என்ற—நிலை, என்பன.

(வெண்பா)

கேட்ட நான்முக னஞ்சலென் றிவ்வுரைகிளத்தா
னீட்டமாகிய வருடமோ ராயிர மிறந்தால்
வாட்டுசம்பரன் போரிலே யரியிழன் மடிவான்
வீட்டுமவ் வளவுஞ் செயத்தக்கது விதிப்பாகும். (29)

என்றதாமனும் வியாளனுங் கடனுமென் பவரைச்
சென்றழைத் தமர்செய்வது திரும்புவதாகத்
தொன்று தொட்டுநீர் தொந்திக்கின் வாதனை தொடர்ந்து
நின்றகண் ணடிநிற்பினே மனத்திலே நிற்கும். (30)

நிலைபெறும்படி நானெனும் வாதனைகின்றால்
வலைபுகுந்த புள்ளாமென மூவருமடிவர்
கொலைசெயற் கெளிதாசையே யுயிர்க்கெலாங் கூற்றாய்த்
தொலைவிறுன்ப மாநிராசையே துன்பமிலின்பம். (34)

(ப - ரை.) கேட்ட நான்முகன் = தேவர்தங் குறைகளைத் திருச்செவிகொண்ட ஸ்ரீ பிரஹ்மதேவர், அஞ்சலென்று = பயப்படாதீர்கள் என்றபயமருளி, இவ்வுரைகளைத் தான் = வருமாறுய இந்த இதவுபதேசத்தைச் செய்யத் தொடங்கினர், ஈட்டமாகிய வருடம் ஓராயிரம் இறந்தால் = திரளாகிய ஒருசகஸ்ர சம்வற்சரஞ் சென்றால், வாட்டு சம்பரன் = உங்களைக் கஷ்டப்படுத்தும் சம்பராசுரன், போரிலே = யுத்தத்தில், அரியினுண் மடிவான் = ஸ்ரீ மகாவிஷ்ணுவினுலே நாசமாவான், வீட்டுமவ்வளவும் = அவ்வாறு ஸ்ரீ பகவான் அவனைக் கொல்லும் அளவும், செயத்தக்கது விதிப்பாம் = செய்ய வேண்டிய வுபாயத்தைத் தெரிவிப்பாம்.

என்ற தாமனும் வியாளனும் கடனும் என்பவரை = நீங்கள் மூவர்வந்துளார் என்ற வரைவெல்லும் உபாயமோ இதுவாம் அத்தாம வியாலகடமூவரையும், சென்றழைத்து = போர்க்குச் சென்று கூப்பிட்டு, அமர்செய்வது திரும்புவது ஆக = போரைப்புரிவதும் திரும்பிப் போவதுமாக, தொன்றுதொட்டு = நெடுகாள், நீர்தொந்திக்கின் = நீவிர் தொடர்ந்து செய்யின், வாதனைதொடர்ந்து = வாசனையானது அவர்மனத்தைப் பற்றி, கண்ணடிநின்ற நிழலென = தர்ப்பணத்தின் கண்ணே பதிந்த பதிவிம்பம்போல, மனத்திலே நிற்கும் = உள்ளத்திலே இறுகும்.

நிலைபெறும்படி நான் எனும் வாதனை நின்றால் = அநிதிடமாகயான் என்னும்வாசனை பற்றிக்கொண்டால், வலைபுகுந்த புள்ளாமென = ஜாலத்தி லகப்பட்டுக் கொண்டபறவையேபோல, மூவரும் கொலைசெயற் கெளிதுமடிவர் = அம்மூவரும் அநிசுலபமாகவே வெல்லவும் பெறுவர் நாசமும் ஆவர், ஆசையே யுயிர்க்கெலாம் கூற்றாய்த் தொலைவில் துன்பமாம் = ஆஸ்தைமாத்திரமே யநந்ததுக்கங்கட்கு ஹேதுவாய்ச் சீவர்கட்கெல்லாம் யமனும், நிராசையே துன்பமிலின்பம் = அநாஸ்தைமாத்திரமே சர்வசுகங்கட்கும் ஆகரமாம், துன்பமணுவுந் துன்னுதாம்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ பிரஹ்மதேவர் தேவருரைத்த சகலத்தையும் சிரவணித்து, ஆராய்ச்சியின் மூதிர்ந்த அவர் நன்காராய்ந்து, தேவரீட்டத்திற்குப் பரமசுகத்தைத் தரத்தக்க இவ்வசனத்தைக் கூறத்தொடங்கினர்.

சதவருட சகத்திரவீற்றில் ஹரியின் நிருக்கரத்தால் சம்பராசுரன் மடிவன், சமரே சனது அக்காலத்தை யெதிர்பார்த்திருங்கள். இப்பொருளை யனுசரித்தே வாட்டு சம்பரன் போரிலே யரியினுண் மடிவான் எனப்பாடம் திருத்தப்பெற்றது; அவ்வாறே ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கரத்தாற்சம்பரன் பீமபாசதிட யுத்தாரம்பம் போர்புரிந்து மரித்தல் பெரியவாசிட்டத்திற் காணப்பெறுதலின், தாமவியால கடரோபின் போர்தொடங்கி 35 வருடம் 8 மாதம் 22 நாட்களுக்குள் மகவானுல் நாசமெய்தியதாகக் காணப்பெறுதலினுனும் என்றுணர்க. ஹே தேவோத்தமர்களே! இப்போது இத்தாமவியாலகடாசுரர்களைக் கொல்வதற்கோ இது உபாயமாம், மாயப்போரால் இவர்களோடு போர்செய்து கொண்டே யிருந்து திடீரென்று ஓடிப்போய் விடுங்கள். போர்ப்பயிற்சியின் வயத்தால் இவர்தம் உள்ளத்தில், தர்ப்பணங்களின் இடையிற் பிரதிபிம்பம் தோற்றுவதேபோல, அகமென்னும் ஆகாரம் வாய்ந்தபிரதம அந்தக்கரண விருத்திப் பிரதிவிம்பம் அடைவுறு

நிற்கும். இத்தாம வியாலகடர் அகம் விருத்தியிஞலே முறையேவளர் வற்ற வாசனையை யுடையவர்களாய், ஜாலங்களிற் சிறையுற்ற பறவைகள்போல எளிதில் வெல்லக் கொல் லப்படுவார்கள். ஆகலின் அசத்வஸ்துக்க ளீடத்தில் ஆசையைவிட் டொழிப்பதேயாவர்க் கும் நலமெனத்தெரிந்து கொள்ளுங்கள் எனல்:—ஆசையே என்பது. ஆஸ்தைமாத்திரம் அநந்தத்துக்கங்கட்கு ஆகரமெனவறிமின், அநாஸ்தைமாத்திரம் எங்கு மெய்போதுமே, ஆநந்தத்தின் ஆகரமெனவறிமின்.

(ச.) கேட்ட நான்முகன் அஞ்சலென்று கன்ருய் விசாரித்துத் தேவர்களேநோக்கி இவ்வுரை = இளைப்பாற்றும் இவ்வசனத்தை, அசுரரை=இந்தத் தாமவியாலகட ரென்னு மசுரரை. (30) 31

தொன்றுதொட்டு நீர்தொந்திக்கின் = முன்போல் ஆரம்பித்து நீர் மாறிமாறித் தொடரின் = மாறிமாறி யியற்றும் யுத்தமுயற்சியினுல், வாதனை = அகங்காரரூபமாகிய சமத்காரம் பிரத்யயவிசேடம், கண்ணடி நின்ற நிழலெனமனத்திலே தொடர்ந்து நிற்கும் பிரதிவிம்ப மாமென்பது அந்வயம்.

தொலைவிறுன்பமாம் = அநந்தத்துக்கங்களுக் காலயமாம், துன்பமிலின்பம் = அபி மத (சம்மத) சுகங்களுக்காலயமாம்.

[ஸ்ரீ-வீர - அ-கை.) தேகாதி யகம்பாவக்கிரா கிணியாகிய அந்தர் வாசனையினுலே தேகாதிராசத்தானை ஆத்மராச சம்பாவனையால் எவரும் தீனத்தன்மையை யடைவர், அத்தகைய வாசனையிலதே லேசமாகமாயினும் மாதங்கமலைபோல மலிங்காமலுறையும் எனக்காணப் பெறுதலின் வாசனையுறலாகாதென வற்புறுத்தல்:—வாதனையென்பது.

வாதனைப் பாசத்தாலே மன்னுயிரெல்லாங் கட்டுண்
டேதமா மந்தப்பாச மிறுகுமேலிடரைச் செய்யும்
வேதனை யிலதாந்தீர நழுவுமேல் வேட்கையாலே
தீதிலோர நேகங்கற்றேர்தீர ரென்னினுங் கட்டுண்பார். (31) உ

(ப - ரை.) வாசனைப் பாசத்தாலே = வாசனையென்னுந் தந்துவினுலே, மன்னுயி ரெல்லாங் கட்டுண்டு ஏதமாம் = உலகத்திலுள்ள பிராணிகள் யாவுமே பந்தப்பட்டுத் துன்பத்தை யடையாகிற்கும், அந்தப்பாசம் இறுகுமேல், அவ்வாதனை வளர்ந்துகொண் டேபோமேல், இடரைச்செய்யும் = அதிதுக்கத்தை யுண்டாக்கும், தீரநழுவுமேல் = அடியோடும் அது கெடுமேலாயினே, வேதனையிலதாம் = இன்பமே யுண்டாம், தீதி லோர் அநேகங்கற்றேர் தீரர் என்னினும் = தீரராயினும் மிகமிகவும் அறிந்தவராயினும் பிரவிருத்த ரென்னும் மகான்களா யிருந்தபோதினும், வேட்கையாலே = ஆசையாலே, கட்டுண்பார் = பந்தப்படுவர்.

(ஸ்ரீ) - வீ.) வாசனைத்தந்து பத்தனுகியாவன் இவ்வுலகத்தில் விபரீதமாகவிவகரிக் கின்றனனே அவனுக்கு அவ்வாசனை வளர்ந்துவளர்ந்து அதிதுக்கத்தின் பொருட்டே யாம்; அவ்வாசனை நன்குசேதிக்கப் பெறினேசுகத்தின் பொருட்டேயாம். தீரராயினும் அதிபருஞ்ஞராயினும், நற்குலத் தண்டானவராயினும், பெரியோராயினும், பிராணிகள் ஆசையினுலே கட்டுப்பட் டிழல்வார்கள்.

(ச.) பாசத்தாலே = தந்துவால், கட்டுண்டு = பந்தப்பட்டு, ஏதமாம் = கெடுகின் றது, தீரநழுவுமேல் = அத்தியந்தம் விலகின், வேதனையிலதாம் = சுகமாம், தீதிலர் = குற்றமற்ற சாதியர், அநேகங்கற்றேர் = மிகவுமுணர்ந்தவர், தீரர் என்னினும், வேட்

கையால், விலங்குறு சிங்கம்போற் கட்டுண்பாரென்று பிற்கவியோ டந்நுவயஞ்செய்க விலங்கினுற் சிங்கங்கட்டுப் படுவதுபோல

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீ பிரஹ்மதேவர் இதோபதேசஞ்செய்து சென்றபின் றேவர் சுவர்க்கஞ்சென்று போர்முயற்சி செய்தல்:—விலங்கென்பது.

விலங்குறு சிங்கம்போல வேட்கையா லுயர்ந்தோர் தாழ்வர்
கலங்கன்மி னென்றுவேதா கண்டுழிமறைந்த பின்னர்
புலன்கொள வினைத்துங்கேட்ட புங்கவர்பொன் னுட்டெய்தி
நிலங்கிழிந் தண்டம்பீற நெடியதுந்துமி யோடார்த்தார். (32)

(ப - பை.) வேட்கையால் = ஆசையால், உயர்ந்தோர் = மகத்துக்களும், விலங்குறு சிங்கம்போல = சிருங்கலையிற் சிக்குண்ட சிங்கம்போல, தாழ்வர் = துன்புடன் மற்றுமுறுவர், கலங்கன்மின் = நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம், என்று = என இவ்வண்ணமியம்பி, வேதா = ஸ்ரீ பிரஹ்மதேவர், கண்டுழி = பார்த்துக்கொண்டிருக்கும்போதே, மறைந்தபின்னர் = திருவுருக் கரந்தபின்பு, புலன்கொள வினைத்துங் கேட்ட புங்கவர் = புத்தியிற்படும்படி யாவற்றையும் வினவியதேவர், பொன்னுட்டெய்தி = சுவர்க்கலோகஞ் சென்று, நிலங்கிழிந் தண்டம்பீற = பூப்பிளந்து அண்டம் வெடிப்ப, நெடிய = பிரளய மேககர்ஜனைக் கொப்பாம் கொடூரசப்தஞ் செய்யும், துந்துமி யோடார்த்தார் = போர்ப்பறையென்னு மிரணபேரி முதலவற்றைக் கோரமாயடித்தனர்.

(ஸ்ரீ - வீர) இரும்புச் சங்கிலியினுலே யிறுகக்கட்டுண்ட சிங்கமானது அகப்பட்டுஞ்சுடரடைவதேபோல விழைவினுற் பிராணிவீக்குண்டு துன்புறும்; என்பதாகத் தேவரை நோக்கி இனியம்பிவிட்டுப் பகவானுகிய ஸ்ரீ பிரஹ்மதேவர், வேலையினீடத்திற் சப்தஞ்செய்துவிட்டு மறையும் கடற்கல்லோலம்போல அவ்விடமறைந்து சென்றனர். சுரர்கள் அவ்வாக்கியத்தைக் கேட்டுக்கொண்டு, அதில்விளங்குகமல ஆமோதங்கவர்ந்துகொண்டு, தாங்கருதிய வனமாலையை யடைந்ததேபோல, தாந்தாங்கருதிய அவ்வத்திக்குப் பல அதிஷ்டித திசையை நோக்கிச் சென்றனர். சிறிதுநாட் கழித்தொருசாள் தங்கட்கு மிகுந்த சுபத்தை யுண்டாக்கக் கூடியதா யிராகின்ற; பிரளய அப்பிர அரவத்திற் கொப்பான துந்துமி நிர்க்கோஷத்தைச் செய்தனர்.

(ச.) உயர்ந்தோர் = மகான்களும், என்றுகூறி வேதா, கண்டுழி = அவ்விடத்திற்றானே, அனைத்தும் = அவ்வாக்கியம் அனைத்தும், துந்துமியோடு நெடிதார்த்தார் = பிரளயமேகம் போன்றெலித்தார். (32)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அசுரரோடு சுரர் அமர்வெய்துதல்:—ஆர்த்தன வென்பது

ஆர்த்தன கேட்டவந்த வசுரர்பாத லத்தினின்றும்
வேர்த்தனர் பொங்கிவந்து வெம்படை யமரர்மீது
தூர்த்தனர் காலம்போக்குஞ் சுரர்பொரு துடைந்துபோகிப்
பேர்த்தும்வந் தமர்செய்தோடிப் பின்னும்வந் ததனைச்செய்தார். (33)

(ப - பை.) ஆர்த்தன = சப்தித்தனவாய சப்தங்களை, கேட்ட அந்த அசுரர் = செவி செவிடுபடச் சிரவணித்த அத்தாம வியாலகடாதியர், பாதலத்தினின்றும் = பாதாளலோகத்தினின்றும், பொங்கிவேர்த்தனர் வந்து = மிகச்சினந்து வேர்வை விட்டவராகியெழுந்துவந்து, வெம்படை யமரர்மீது தூர்த்தனர் = கொடியபாணப் பிரயோகங்களைத்

தேவர்மேற் பெய்தனர், காலம்போக்குஞ் சூரர் = பொழுதைக் கழிக்கவேண்டு மென்னுந்தேவர், பொருதுடைந்துபோகி = சிறிதுபோர் புரிந்து சிதறியோடி, பேர்த்தும் வந்து = திரும்பியும் வந்து, அமர்செய்து = சிறிதுயுத்தஞ்செய்து, ஓடி = மறைந்து சென்று, பின்னும் வந்து = பின்னரும் திரும்பிவந்து அநேகனச் செய்தார் = அப்போரைப் புரிந்துவிட்டுச் செல்லுதல் வருதலைச் செய்துகொண்டிருந்தனர்.

(ஸ்ரீ - வீர.) பின்னர்த்துந்துபி யாதியின் அரவத்தைக் கேட்டுப் போர்க்கோலம் பூண்டெழுந்துப்பாதாள லோகத்திலிருந்து மேலேகிளம்பிவந்த அவ்வசுரர்களோடு மகாவியோமபதமாகிய அந்த ரிக்ஷலோகத்தில், காலக்ஷேப கரமாகிய கோரப்போரை மீளவும் தொடங்கினர்தேவர். தேவரானே அப்போரானது ஒருகான் மாயையானும், வாக்குயுத்த மாத்திரத்தானும், தானுதியுபாயங்களாற் சந்தியினனும்; ஒருகால் விகிரகத்தானும், ஓரொருகால் ஓடிவிடுதலினனும், மறைந்திருந்து கொண்டு தங்களது ஜனங்களை மறைத்துக் காத்தலினனும், ஒருகாற் திரிபணர்போலும் சரணாகதியாஞ் சாதியானும், ஒருகால் தைரியத்தானும், அஸ்திரயுத்தத்தானும், பெரும்பான்மையுத் தாங்கள் பல வகை அந்தர்தான மாதலினனும் நடத்தப்பெற்றது. ஆண்டு நடந்த முதற்சங்கிராமம் மூப்பது ஆண்டுகள், நடந்தது; இரண்டாவதோ ஐந்துவருடங்களும், எட்டுமாதங்களும், பத்துத் திவசங்களும் நடந்தது; மூன்றுவதோ பன்னிரண்டு திவசங்கள் நடந்தது; அத்தினஞான்றும், இரண்டு சேனைகளிலும் விருக்ஷங்களின், அக்கினிகளின், ஆயுதங்களின், முக்கியங்களான அசனிகளின், அசலங்களின், விருஷ்டிகள் பெய்துகொண்டேயிருந்தன பொருது முதலாவது அமர்செய்து இரண்டாவது, அதனைச்செய்தார் மூன்றுவது, போர் என்பது விவேகமாம்; ஆனால் ஒவ்வொன்றினும் உபாயம் பலவாம்.

(ச) பொங்கி = கிளர்ந்து, மகாவியோமத்தில் வந்து. (33)4

(ஸ்ரீ - வீர - அ - கை.) தேவர்கள் செய்தபல வுபாயத்தானே தாமவியாலகடசூரர்க்கு அபிமான மெய்தியுள்ள மகப்படல்:—இவ்வென்பது.

இவ்வகைபலவுபாய மிறந்த நீள்காலஞ்செய்ய
நைவருதிடமதான நானெனும் பழக்கத்தாலே
மெய்வரநானென்றுன்னும் வேட்கையை விருப்பமூற்ற
ரவ்வகையாலேயுள்ள மகப்பட்டு நின்றதன்றே. (34)

(ப - ரை.) இவ்வகை = கூறியபிரகாரம், பலவுபாயம் = நானுவித வுபாயங்களை, இறந்த நீள்காலஞ்செய்ய = 35 வருடங்கள், 8 மாதங்கள், 22 நாட்கள் இயற்றிவரவே, நைவருதிடமதான நானெனும் பழக்கத்தாலே = ஊன்றி யூன்றிவளரும் அதிதிரமான அகங்கிருதியின் அப்பியாசத்தினுலே, மெய்வர = தேகத்திற்றோன்ற, நானென்றுன்னும் வேட்கையை விருப்பமூற்றார் = அகமென்னும் ஆசையையாற்ற அதிமுயற்சியுற்றார். அவ்வகையாலே = அத்தன்மை முயன்றதானே, உள்ளம் அகப்பட்டு நின்றதன்றே = மனமானது பந்திக்கப்பட்டு நின்றது. அன்று ஏ அசைநிலைகள்.

(ஸ்ரீ - வீர.) இவ்விதம் நானுவித வுபாயங்களையாற்றி வந்த இத்தனைக் காலத்துட்டானே அகங்கிருதியின்திட அப்பியாசத்தால், வாதனையினுலே பந்திக்கப்பட்ட சித்த முடையராகித்தாமாதியர் யாமென்னும் ஆஸ்தையுடையவராயினர். அபிமான அப்பியாசத்திற்கு அகங்கார தார்ட்டிய ஹேதுத்தன்மையில் இத்திருட்டாந்தத்தையும் வைத்துக் காணலாம்:—பிம்பமானது அதிசமீபத்திலிருக்கும் அதிசயத்தினுற் பிரதிபிம்பமுடைய

தாகத் தர்ப்பணமாவதே போல அப்பியாச அதிசயத்திஞலே அகங்காரமுடைமையை யவரடைந்தன ரென்பதாம்.

(ச) பலவுபாயம் = நாஞவித வுபாயங்களால், இறந்த கேர்காலம் = வெகுகாலம், யுத்தஞ்செய்ய, நானெனும்பழக்கத்தாலே=அகங்கிருதியினது அப்பியாசத்திஞல், தாமாதிகள், மெய்வர நானென்றுன்னும் வேட்கையை = நானென்னும் ஆசையை. (34)

(ஸ்ரீ-வீர - அ-ஸை) தாமாதியர் வாசனையின் வயத்திஞலே பயந்து மயங்கிப் பந்த முற்றுப் பலமில்லாமல் அழிந்தபோதல்:—பயம், சந்ததம், வலி என்பன.

பயம்வந்து பிடித்துக்கொள்ளப் படர்தரு மோகங்கட்ட
வயர்வுறுமாசா பாசத்தழுந்தி யென்செய்து மென்ஞ
துயருற விளைத்துக்காயந் துஞ்சுரு திருக்குமாறு
மயலுறு தனத்தாலின்பம் வருவது மெவ்வாறென்ருர். (36)

சந்ததமிவ்வாறெண்ணத் தளைப்புண்ட மனத்தராகி
யந்தமிறீரமின்றியம ரென்ரு லறவுமஞ்சிப்
புந்திகொந்திறப் போமென்றும் புகலிடமெமக்கே தென்றுஞ்
சிந்தனையாலேகெட்ட சித்தத்தாற் றியங்கிச் சோர்ந்தார். (37)

வலியெலா மிழந்துமுன்னே வந்தொருபெயர் நின்ரு லு
கலிவுறமாட்டாராகி நடுங்கினர் விறகுமாண்டாற்
பலிதருமவியையங்கி பருகிட வல்லதுண்டோ
வொலிதர வுரைத்தெனஞ்சி யோடினுர் பொன்றிபோனுர். (38)

(ப - ரை.) பயம் வந்து பிடித்துக்கொள்ள = பயவாசனையானது ஒன்ருகப் பற்றிக்கொள்ள, படர்தருமோகங்கட்ட = அதிவிஸ்தாரமயலானது பந்திக்க, அயர்வுறுமாசா பாசத்தழிந்தி = துயரைமிகுதியும் பயக்கும் ஆசைப்பாசத்திஞலழுத்தமாய்க் கட்டுப்பட்டு, என்செய்துமென்ஞ = இனியாம்யாது செய்வோமென்ஞ கிருபணத் தன்மையையடைந்து, துயருற வீளைத்துக்காயம் துஞ்சுரு திருக்குமாறும் = தன்பம் வெம்பிப் பம்பக்கிருச்சிரமடைந்து சரீரம் கெடாது கிலைபெறுதற்குபாயமும், மயலுறு தனத்தால் இன்பம் வருவதும் = மரணக்கத்தைத் தரவல்ல தனத்திஞலே சுகம் வந்தறுவதும், எவ்வாறு என்ருர் = எம்மார்க்கத்தாலெனக் கவலையுற்றெண்ணத் தொடங்கினர்.

சந்ததம் = எப்போதும், இவ்வாறெண்ண = இங்ஙனமே சிந்திப்ப, தளைப்புண்ட மனத்தராகி = கட்டுப் பட்டக்கருத்தையுடையராய், அந்தமில் தீரமின்றி = கெடாத தாகிய தைரியமுழுவதும் கெட்டு, அமரென்ருல் அறவுமஞ்சி = போர் என்னின் மிக மிகவும் பயந்து, புந்திகொந்து = சிந்தாகுலமுற்று, இறப்போ மென்றும் = மரித்துப் போவோமென்றும், புகலிடம் எமக்கேதென்றும் = சரணடையுந்தானம் எமக்கு யாதெனவும், சிந்தனையாலே = ஓயாமல் எண்ணுதலாலே, கெட்ட சித்தத்தால் = தீங்குற்ற மனத்திஞல், தியங்கிச் சோர்ந்தார் = மயங்கி வாடினர்.

வலியெலாமிழந்து = பலமுழுதும் பழுதாகி, முன்னே வந்தொரு பெயர் நின்ரு லும் = எதிரில் ஒருபடன் சண்டையிடவந்து நின்றபோதிலும், கலிவுறமாட்டாராகி = கெடுக்கவல்லவரல்லராகி, நடுங்கினர் = கம்பிதராயினர், விறகுமாண்டால் = இந்தனம் கூணமாயின், பலிதருமவியையங்கி = தேவதையை யுத்தேசித்துக் கொடுக்கும் ஆகு

தியை அக்கினி, பருகிடவல்லதுண்டோ = மாந்திடவாற்றல் உடைத்தாயிருக்குமோ, இராதாம், ஒவிதர உரைத்தென் = அதிகமாகக் கூறுவதாலாம் பயன் என்னே! அஞ்சி யோடினார் பொன்றிப்போனார் = மரணத்தாற் பயந்தமனத்தராய்ப் பலாயன ஏக சரண ராய் அம்மூவரும் அழிந்தொழிந்தனர்.

(ஸ்ரீ-வீர.) எக்காற்றுமாதியர் அகங்காரமே யாத்மாவென்னும் வாசனையுடையவராயி னரோ, அக்காரல் வாழ்க்கை யெமக்குண்டாக வேண்டுமென்றும், அதன்பொருட்டுத் தனமெமக்குண்டாகவேண்டுமென்றும், உதித்த ஆசையினாலே, தைனியத்தை யடைந்தனர். பின்னர் விதிதேடப் பிரவிருத்தியினின்றுண்டாம் வாசனையாற் கிரஸ்தராய், தேகமானது எமக்கு எப்போதுமே அரோகதிடமாக சமர்த்துடைய தாகுகவென்ப தாதி மோகவாசனையாற் கட்டுப்பட்டவராய், ஆசாபாச நிபத்தராகிய அவர் மூவரும் கிரு பணத் தன்மையையடை வுற்றனர். எம்முடைய தேகமானது நிரமாயுறைக, சுகத்தின் பொருட்டு எமக்குத் தனமுளதாகுக, எனக்கட்டுற்ற மதியர்களாகிய அவர்களுடைய தைரி யம் அடியோடு மகன்றொழிந்தது. மதோன் மத்தயானைகள் போரின் பொருட்டுக் கணமாகச் சினந்தவனத்தில் மானினங்கண் மானும், அத்தப்போரிற் பய்த்தாற் சீவனத்திற் சாபேக்ஷத்தன்மையை அவரடைந்தனர். இறந்துபோவோம் இறந்துபோவோம் என்னுஞ் சிந்தையினாலே கெடுக்கப்பட்ட மனமுடையராய், வெகுண்டு மோதும் ஜராவணரணத் தில் மந்தமந்தமாகச் சுற்றித்திரிந்தனர். ஜராவணம் = ஜராவதமென்னுந் தேவேந்திர கஜம். பலமிழுத்த அந்தமூவரும், எதிரில்வந்த வொருபகைவனையும் கொல்லுவதற்கு, இந்தனம் க்ஷீணமாகியவழி அக்கினிகள் ஹவியைத் தகிப்பதற்கு அசமர்த்தமாவனபோல அசமர்த்தராயினர். ஈண்டு மிகுதியாக விளம்புவதானே யாதுபிரயோஜனம், மரணத் தானே அஞ்சியெஞ்சினராய் அத்தைத்தியர், தேவர்கள் மேல்விழுந்து மோதிக்காதவே, போர்க்களத்தினின்றும் பறந்தோடியிறந்துபோயினர்

(ச) பவவாதனையால், பயம்வந்து, அவரைமோகம் = மோகவாசனை, ஆசாபாசத் தழுந்தி = ஆசாபாசத்தாலழுத்தமாய்க் கட்டுப்பட்டு, பின்பவர், காயந்துஞ் சுருதிருக்கு மாறும் = எனது தேகந்திரமாயிருக்கவேண்டும், மயலுறு தனத்தாலின்பம் வருவதும் = சுகநிமித்தமெனக்குத் தனம்வரவேண்டும் = இவைவருமவழி, எவ்வாறென்றூர் = யாதென் றெண்ணினார்.

கலிவுறமாட்டாராகி = கொல்லுதற்கு வலியின்மையராகி, ஒவிதரவுரைத்தென் = இவ்விடத்து வெகுவாகச் சொல்லியென்ன, அஞ்சி = மரணத்துக்குப்பயந்த மனதுடை யராய்; அத்திரிதசரிரிக ளென்னும் பாலிய கௌமார யௌவனமுடைய தேவசத்திருக்க ளென்னும், அத்தாமாதிகள், ஓடினார்பொன்றிப் போனார்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) முன்மொழிந்ததை ஸ்மரிப்பித்துக்கொண்டு பிரகிருதகதையை ஆண்டுப் பொருத்தல்:—தாமனுமென்பது.

தாமனும் வியாளன்றானுங் கடனுமுன் சரித்தமார்க்கந்
தோமறு முணர்வுண்டாகச் சொல்லினம் விநோதத்தாலே
மாமனம விவேகத்தை வரம்பறப் பழுகிவிட்டார்ற்
பாமரப் பிறவித்துன்பம் பற்றறுதிந்த வண்ணம். (39)

(ப - ரை,) தாமனும் வியாளன்றானும் கடனும் = தாமாதிமூவரும், முன்சரித்த மார்க்கம் = பூர்வஜன்மசரித்த நெறியானது, தோமறும் உணர்வுண்டாக = குற்றமற்ற

பிரபோதமுளதாக, உன்னைவந்து பற்றுதிருக்குமாறு, விநோதத்தாலே சொல்லினம் = லீலையாகக் கூறினேம்,(விநோதத்தாலே = விளையாட்டாக,) மாமனம் = வாசனைப்பெருமையான் மயங்கியவுள்ளம், அவிவேகத்தை = துர்வாசனையை, வரம்பற = அளவுக்குமிஞ்சி, பழகிவிட்டால் = அப்யசித்துக் கொண்டுவிடின், பாமரப்பிறவித்துன்பம் = அஞ்ஞஜனங்களால நுபவிக்கப்பட்டு வரும்ஜனனமரண துக்கம், இத்தவண்ணம் பற்றறுது = இவ்வாறு தொடர்ந்தே நிற்கும்.

(ஸ்ரீ - வீர.) ஹே மகாமதியையுடைய இராகவ! ஆகையால் உனக்குப் பிரபோதமுண்டாதற் பொருட்டு, தாமவியாலகட நியாயம் உண்டாக வேண்டாமென லீலையாற் கூறுகின்றேம், அவிவேகாநு சந்தானமென்னும் விவேக அநுசந்தான அபாவத்தால், உள்ளமானது இத்தகைய அபிமானவடிவ ஆபத்தை விளையாட்டாக அநந்தபவ துக்கப் பொருட்டு கன்குகவரும்.

(ச.) இத்தவண்ணம் = இத்தன்மையாகிய, பாமரப் பிறவித்துன்பம் பற்றறுது.

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீ இராகவர் தாமாதியர் உதயாதியைப் பற்றிச் சங்கித்தலும் அதற்கு ஸ்ரீ வசிஷ்டபகவான் சமாதானஞ் சாற்றலும்:—இனைய, எதிருறு, பரத்தினது, என்பன.

இனையவர் நியாயநீயிங் கெய்தலே யென்றலோடு
மனையவர் பரத்தினின்று முதித்தவா றறியவேண்டு
மூனைவகூ றென்றிராமன் மொழிதலு முனிவன் சொல்வான்
றுனையுறு தாமன்முன்னோர் தோற்றமாத்திர மெய்யானோர். (40)

எதிருறுதோற்ற மெய்யா யிவர்கள்போ லிங்குயாமும்
விதியதாய்ப் புறத்திலொன்று மேவலம் வீரனேகின்
மதியினனெனலும் பொய்யே மதியினீயெனலும் பொய்யே
யதிர்குரற்ற மன்முன்ன மவர்களுண் டெனலும்பொய்யே. (41)

பரத்தினதொளியே மெய்யாய்ப் பாரித்தோர் சீவசத்தி
நிரத்துறு சம்பரன்றன் நியானத்தா லசைந்துமூன்று
யுரத்தவுல்லாசு மேவிற்றுரைத்த வித்திறத்தினுலே
வரத்துறு மவருகாலும் வாய்மையே யெங்குமில்லை. (42)

(ப - ரை.) இனையவர் நியாயம் = இத்தாமாதி யரதநீதியை, நீயிங்கு எய்தலே = ஈண்டு இராகவனே நீ அடையவேண்டாம், என்றலோடும் = என்பதாக ஸ்ரீ வசிஷ்டபகவான் அநுக்கிரகம் செய்தபோது, அனையவர் = அத்தாமாதியர், பரத்தினின்று முதித்தவாறறிய வேண்டும் மூனைவகூறென்று = பரமாத்மாவி னின்றும் ஜனித்தவகையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென், அதனை முனிசிரேஷ்டரே தாங்கள் திருவருள் செய்யவேண்டும் என்று, இராமன் = ஸ்ரீ இராமச்சந்திரர், மொழிதலும் = வினவுதலும், முனிவன் சொல்வான் = அதற்கு ஸ்ரீ வசிஷ்டபகவான் உத்தரம் அருளுவதாவது, துனையுறு தாமன்முன்னோர் தோற்றமாத்திர மெய்யானோர் = தன்பத்தை யடைந்த தாமாதியமூவரும் பிரதிபாமாத்திர ரூபசரீரமுடையவர் ஆயினர்.

எதிருறு தோற்றமெய்யாய் இவர்கள்போல் = எதிரேதோன்றும் தோற்றுமாத்திரமே காத்திரமாய இம்மூவர்போலவே, இங்கு = இவ்வுலகிலுள்ள, யாமும் = யாமியா

வரும், வியதாய்ப் புறத்திலொன்றும் மேவலம் = பாவமா யிருப்பதாகப் பாகியத்தில் யாதொன்றையும் அடைந்திருந்திலேம், வீரனே = ஆந்தரசத்துருக்களாய காமாதிகளை ஜயித்தவீர சேகரனே, நின்மதியில் = நினதுபுத்தியில், நான் எனலும் = மத்பாவமும், பொய்யே = அலீகமே, மதியில் = புத்தியில், நீ எனலும் பொய்யே = துவத்பாவமும் அலீகமே, அதிர்சுரல் = பெருங்கர்ச்சகைகள் வாய்ந்த, தாமன் முன்னுமவர்கள் = தாம வியாளகடர்கள், உண்டெனலும் பொய்யே = இருந்தார்கள் என்பதூ உம்மித்தையேயாம்.

பரத்தினது = பரமாத்மாவினது சம்பந்தத்தினால், ஒளியே மெய்யாய்ப் பாரித் தோர் சீவசத்தி = பிரதிபாச மயமாய ஒரு ஜீவசக்தியானது, நீரத்துறு சம்பரன்றன் = அதிசமர்த்தனை சம்பராசுரனது, தியானத்தாலசைத்து = தியானத்தினாலே விக்ஷுப்த மாகி, மூன்றுய் உரத்த உல்லாசம்மேவிற்று = மூவகையான வுல்லாசத்தை யடைவுற் றது, உரைத்த வித்திறத்தினாலே = கூறிய இத்தத் தன்மையினாலே, வரத்துறும் அவ ரும் நாமும் = சம்பரன் மாயையினால் வந்த அத்தாமாதியரும் இத்தியாமும், வாய்மையே எங்குமில்லை = எவ்விடத்தினும் சத்தியமேயாயில்லை.

(ஸ்ரீ - வீர.) ஹேபகவன்! இத்தியாம் இருக்கிறவர்களாகவே திதிபெற்றவர்களா யிருக்கின்றோ மென்பது ஏனும், தாமாதியரோ இல்லாதவர்களாயினும் இருப்பவர்களா கத் திதிபெற்றிருந்தார்கள் எனத்தாங்கள் எங்ஙனம் கூறினீர்கள்? நம்மனோரது இருப்பு, பிரத்யக்ஷாதிப் பிரமாண சித்தமாம், தாமாதிகட்கோ, மாயா மாத்திரத்தன்மை யுண்மை யின் அசத்தாந் தன்மை யுண்மையைத் தாங்களே கூறினீர்கள், ஆகவே அவர்கட்கு மீளவும் சத்துவம் விப்பிரதிஷித்தம் விளம்புகின்றீர்கள், தங்களுடைய அபிப்பிராயந் தான் யாதோ? என்று ஸ்ரீ இராகவர் வினவ, நம்மனோரது சரீரங்கட்கு வியவகாரிகப் பிரமாண வியவகார யோக்கியத்தன்மை யுண்மையின் சத்துவம் எண்ணுதியாயின் தாமாதிகட்கும் அது துல்லியமேயாம்; இனித் தத்துவஞான பாத்தியப் பான்மையாஞ தல், பகரமுடியாமை யாஞதல், அசத்துவம் அங்கீகாரமேலாயினும் அதுவும் துல்லியமே யாம் எனவிப்பிரதி ஷேதமிலதாம் என்னுங்கருத்தால் ஸ்ரீவசிட்டபகவான் விடையிறுத் தல்:—எதிருறு என்பது. ஹே இராகுலதிலக! எங்ஙனம் தாமாதியர் கானனீர்ப் பிர வாகம்போல இல்லாதவர்களே யெனினும் இருப்பவர்கள் போன்று மாயாமயர்களாய்த் திதமாயினர்களோ; அங்ஙனமே, இவ்வியாமும் சுர அசுர அரக்காதியர்களும் அசத்தி யர்களேயாயும் சுழல்கின்றேம் செல்கின்றேம் வருகின்றேம் என்பவேயாயவிவகாரத்தைப் படுவேம். இராமசரீரபாவமும் பொய்யேயாம், வசிஷ்ட சரீரபாவமும் பொய்யேயாம், அறுபூதமாயினும் கணவிற்றனது மரணமேயென்ன அசத்தீபமாம். ஆயினும் நீஞட் பயின்ற கெட்டசமஸ்காரம், சாஸ்திரார்த்த தத்வாப்யாசமிலாது கெடுவதின் றென்று ணர்க. பிரகிருதத்திற் கூறிவந்ததை யுபசங்கரித்தல்:—உரைத்த வித்திறத்தினாலே யென்பது. ஆகலின், காட்சியாகக்கண்ட வசிஷ்டராமாதி தேகவடிவங்களாகப் பிரசித்த மாயயாம் சாஸ்திர திருஷ்டியானே சத்தியரல்லேம், அறிஞரது அநுபவதிருஷ்டியினு ணும் அசத்தியரேயாவேம்; யுக்தியினால் ஆராய்ந்து பார்க்கினும் நம்மனோருக்கு சற்பா வம் இலவேயில்லை யென்பதுண்மையேயாம். தாமாதியரும் ஒருபாலும் உண்மையிலுண் டாகவேயில்லை, அவரும் அசத்தியரேயாவர்.

(ச.) என்றலோடும் = ஸ்ரீ இராமர், அனையவர் = தாமவியாளகடர், கூறெனமொழி தலும், ஸ்ரீ வசிட்டர், தோற்றமாத்திர மெய்யானோர் = மாயாபரிகற் பிதத்தினாற் பிராதி பாசிகதேகராம். இவர்கள்போ லிங்கெதிருறுயாமும், தோற்றமெய்யாம் = தோற்ற

மாத்திரூபிகளாம், புறத்தில் = சிதாகாசத்துக்கு வெளியில், ஒன்றும் மேவலம் = எவ்விடத்துமிலேம்.

பரத்தினின்று = பரமான்மாவினின்று, ஒளியே மெய்யாய்ப் பரித்தது = பிரகாசமே சொரூபமாகிய, மூன்றாய் = தாமாதிரூபமாய், பேதப்பிரபஞ்ச மனைத்தும் அசத்தியமென்பது பொருள், பரமான்மாவினின்றும் பிரதிபாசமயமாய ஒருஜீவசக்தியானது, சம்பரத்தியானத்தானே சலனமுற்றதாகி, மூவகைத் தாமாதிரூபமாக வுல்லாசமுற்றதென்பதாம். (42)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆயின் உண்மையா யிருப்பதுயாது கொலோவெனின் ? உரைத்தல்:—அறிவதா யென்பது.

அறிவதா யறிவேமெய்யா யமலமாயனைத் தாயாறிப்
பிறிவுறுவர வுபோக்கில் பிரமமேயுளதா மந்தச்
செறிபொருட் சத்திதோற்ற மாத்திரஞ் சகமாய்நிற்கும்
பொறிகள் பல்காட்சி பொய்யே பொருண்மெய்யே யென்றுவாழ்வாய். (43)

(ப - வை.) அறிவதாய் = சம்வேதனமாய், அறிவே மெய்யாய் = போதாகாரமாய், அமலமாய் = நிரஞ்சனசுத்தமாய், அனைத்தாய் = சர்வகதமாய், ஆறி = சாந்தமாய், பிறிவுறுவரவுபோக்கு இல் = பேதமும் உதய அஸ்தமனமும் இல்லாததாய், ஒளிரும், பிரமமே = பரப்பிரஹ்ம வத்துவே, உளதாம் = இருப்பது ஆகும், அந்தச் செறிபொருட் சத்தி = அவ்வுளதாய வத்துவின் சக்தியினது, தோற்றமாத்திரம் = சூழல்லாசமாத்திரம், சகமாய் நிற்கும் = ஜகமெனத் திரியுருநிற்கும், பொறிகள் பல்காட்சிபொய்யே = இந்திரிய வேத்தியங்களாய சர்வதிருசியங்களுமே மித்தையாம், பொருண்மெய்யே = பரம்பொருள் சத்தியமே, என்றுவாழ்வாய் = எனத்துணிந்து அதுவேதானாய் மகிழ்ந்து சீவிப்பாய்.

(ஸ்ரீ - வீர) நித்தியம் சத்தியமாயும், சம்வேதனமாயும், சுத்தமாயும், போத ஆகாசமாயும், நிரஞ்சனமாயும், சத்தியமாயும், சர்வகதமாயும், சாந்தமாயும், அஸ்தமய உதயமற்றதாயும், இலங்கும் பரம்பிரஹ்மமேயுளதாம்; சம்வேதனமே சாஸ்திர திருஷ்டியினனும் சத்தியம் வித்வதநுபவத்தானும் சத்தியம்; யெளக்கிக திருஷ்டியினனும் அதுவே அநஸ்தமய உதயமற்றதாயினும் அஸ்தமய உதயமதாகவுளதாம், என்பது பொருள். சர்வஜகத்தும் உபரதமாம், சூனியபரிசேடமாகவோ எனின் ? அல்லவாம், மற்றே நிரஸ்த சூனியமாயே, ஆயின் யாங்ஙனஞ் சாந்தமெனின் ? சர்வசூனியம் போலும், சூனியமேயென வல்லவாம், சன்மாத்ர பூர்ணபாவத்தாற்றிதமாம் என்பது அருத்தம், ஆண்டு வியோமத்தில், இச்சிருஷ்டியென்னுந் திருஷ்டிகள், தன்னொளியாயே தன்கற்பனையானே அயல்வகையில் அமர்தல்போல் தோற்றுநிற்கும். அத்தியாரோபதிருஷ்டியில் எவ்விடத்திலுமுள்ள சிதாகாசத்தின் கண்ணே சர்வாரோபசம்பவத்தால் யாண்டு மெல்லாமுளவாம்; அபவாத திருஷ்டியிலோ எங்குமே எதுவுமே கிடையாதாம்; இவ்வண்ணம் கூறியவகை யிரண்டினும் இவ்வுலகு, சாந்தமாயும் பேதமற்றதாயும் அத்தனுனே யேகமாயும் சத்தாயும், சத்தாயும் பூர்ணமாயும் இருக்கின்றது, ஆகலின் நீயும் சோகபய பேதங்களே யடியோடும் விட்டவனுகிப் பூரணனுகவே பொலிந்து வாழ்வாய்.

(ச) அறிவதாய் = சம்வேதனமாய், அறிவே மெய்யாய் = போதாகாரமாய், அமலமாய் = நிரஞ்சனமாய்ச் சுத்தமாய், அனைத்தாய் = சர்வகதமாய்ச் சர்வான்மகமாய்,

ஆறி = சாந்தமாய், வரவுபோக்கில் = உதயாஸ்த மனமின்றிய, பிரமமேயுள்ளதாம் = சத்தியமாயிருப்பதாம், = சிதாகாசமாத்திரமான சம்வேதனமே சத்தியமென்பதுபொருள். அந்தச் செறிபொருள் = அந்தப்பூர்ண வஸ்துவினது, சத்திதோற்றமாத்திரம் = சக்தியினுல்லாச மாத்திரம், சகமாய் நிற்கும்; இந்தச் சகத்தந்தச் சின்மாத்திரத்தினுடைய சக்தி உல்லாசமாத்திர மென்பது பொருள். பொறிகள் பல்காட்சிபொய்யே = அநுபவாநுசாரமாய் ஈதனேத்து மெவ்விடத்திலு முண்டு, அநுபவமின்றேல் எவ்வளவு எவ்விடத்து மின்றுமென்பது பொருள். பொருண்மெய்யே யென்றுவாழ்வாய் = சாந்தரூபமான சத்தரூபமாகிய ஏகவஸ்துவே இங்ஙனம் வியாபகமாய் இச்சகத்தரூபமாக விளங்குகின்றது ஆதலினுல் இராகவா நீசங்கையையும் கேதத்தையும் பேதத்தையும் விட்டுச் சுகமாயிருப்பாய் என்பது பொருள். (43)

தாமவியாளகடர் கதை முற்றிற்று. (600-6)

ஆகதிருவிருந்தம்.

பீமபாதசிடர் கதை.

(ஸ்ரீ-வீர - அ-கை.) யாவர்கள் மகாவாக்கியாதி வடிவசாஸ்திரத்தானே சர்வதிருஷ்டியங்களையும் இலயஞ்செய்து பிரத்யக்கபின்ன பிரஹ்மாகம் புத்தியையே விருத்திசெய்து கொண்டே நிர்வாணஸ்திலையில் நிலைபெற்றிருக்கின்றூர்களோ அவர்கள் பரப்பிரஹ்மஞானத்தாற் பவாம்போதியைத் தாண்டுவர்கள்; ஆயின் மகாவாக்கியம் பற்றலெற்றினுக்குத் தருக்கங்களினுனே அந்நிர்ணயம் ஆகாதது என்னே கொல்லெனின் ? நானுதுக்க விகாரங்களோடுற்ற சுஷ்கதர்க்க மதங்களையுடைய மூடர்கள் யாவர்களோ அவர்கள், பள்ளத்தைநோக்கியேகும் ஜலங்களைப்போல, பாரமார்த்திக ஆத்மபாவத்திலக்ஷண பரம புருடார்த்த லாபத்தை யிழந்தவர்களாவர்கள்; அல்லாமலும் உபநிடத சம்பந்தமார்க்கம் அநுபூதியையும் நன்கு நவிலும், தர்க்கசம்பந்த மார்க்கஞ் சாற்றுவதில்லை; ஆகலின், சுருதியின் அநுசாரியாயிராகின்ற சுவாநுபூதிப் பிரசித்தத்தானே யுள்ளமார்க்கத்தானே, குழந்தாய் ! பரமகதியையே யடைவர்கள் விநாசத்தை யடையவே மாட்டார்கள் என்ன, ஆயின் எதனுற் பரமபுருடார்த்த விநாசமாமென்று சங்கிப்பக்கூறல்:—இது என்பது.

(ச - அ - கை) முன்பு தாமாதி உபாக்கியானத்தில் அவிவேகத்தினு லுளதான அகம்மம அபிமானங்களால், இச்சம்சாரம் வர்த்திக்குமென்று சொல்லப்பட்டது, இப்போது வீமாதி உபாக்கியானத்தில் தேகாதிகளில் அகங்காரமின்மை புருடார்த்தத்தைக் கொடுப்பதற்குச் சாமர்த்தியமுள்ள தெனக் கூறப்படுகிறது, அதில் முன்பு இதமுபதேசித்தல்:—இதுவென்பது.

இதுநமக்கிது நமக்கென் றிரங்குறு பொல்லாவாழ்வா
லுதவியோர் சாம்பரேனு முறப்பெரு துதாரமிக்குச்
சுதமுறுமுலக மெல்லாந் தருமபுபோற் காண்போர்த்தம்பால்
விதனங்க ளனேத்தும்வாரா பிருகங்களுலப் புற்றீண்டா. (1)

(ப - பை.) இதுநமக்கு இதுநமக்கு = இஃதெனக் குண்டாகுக இஃதெனக் குண்டாகுக, என்றிரங்குறு பொல்லாவாழ்வால் = என்பதாக இரக்கத்தை யடைந்தடைந்தேங்கிவேண்டும் பெருந்தியரைப் பெய்யும் தனிய ஜீவனத்தால், உதவியோர் சாம்ப

சேனும் உறப்பெறுது = சாதகமாக ஒரு அற்பசாம்பற்றாளேனும் கிடைக்கமாட்டாது, உதாரமிக்கு = மிகுந்த வுதாரான்மாவாய், சுதமுறும் உலகமெல்லாம் = துயரேபயக் கும் மூவுலகங்களேயும், துரும்புபோற் காண்போர் தம்பால் = திருணத்திற்குச் சமான மாகத் துச்சமாய்ப் பார்ப்பவரிடத்தில், மிருகங்கள் உலர்புற்றீண்டா = மானினங்கள் ஜாத்திருணத்தைத் தொடாத தொப்ப, விதனங்க ளனைத்தும்வாரா = சர்வ ஆபத்துக் களுஞ் சம்பந்திக்க மாட்டாவாம்.

(ஸ்ரீ - வீர.) ஹே மகாமதியையுடைய ராகவ! இது எனக்குண்டாக வேண்டும் இது எனக்குண்டாக வேண்டும் என்னும் மதியையுடைய புருடனுக்குத் தனது தெளர்ப் பாக்கியத்தா லெழுந்ததனியத்தானே, நஷ்டமான புருடார்த்தத்தின் பஸ்மமுங்கூடக் கிடைப்பதேயில்லை, இலதாகவே எல்லாவகையானும் நிராசையையே யடையவேண்டும். இவ்வண்ணம் ஆசையின் அநர்த்தத் தன்மையை யறைந்து வைராக்கியத்தின் சர்வா நர்த்த நிவர்த்தகத் தன்மையைச் சாற்றல்:—உதாரமென்பது. எவ்வுதாராத்மா மூவுலக ஐசுவரியங்களேயும் நித்தியந்திருண துல்லியமாக வுணர்வனே, அவனேச் சாப்பங்கள் பழஞ்சட்டையைப் பாறுவதொப்பச்சர்வ ஆபத்துகளும் விடுகின்றனவாம். மான்காய்ந்த புல்லும் பாம்புப் பழங்கஞ்சுகமும் பாடபேதமாம்.

(ச) இது நமக்கு = இந்தப்புத்திராதிகள் நமக்குவேண்டும், இது நமக்கு = இந்த க்ஷேத்திராதிகள் நமக்குவேண்டும், பொல்லாவாழ்வால் = இப்படியே உண்டானபுத்தி யென்னு மேதுவினால், உறப்பெறுது = சத்தியமான பிரமம் பிரகாயொ தென்பது பொருள். உதாரமிக்கு = எப்போதும் உதாரமிருந்த மனமுடையராய். சர்வசகத்தும் ஆன்மாவின் கண்ணே யுளவாம் ஆன்மாவோ சர்வான்மகமாம், இவ்வாறுகவே தன்னு டையதேயான தெளர்ப்பாக்கியதைனியத்தானே அதாவது துர்ப்பகன்யான் என்னும் நீனபாவத்தானே, இதுநமக்கு இது நமக்கென்னும் அற்பப்புத்தியால் உண்மைப் பிரஹ் மம் ஒளிராதென்பதாம். (1)

(ஸ்ரீ - வீர - அ - கை.) விரக்தனு யிருப்பவனுக்கு ஞானகலேயும் ஒருங்குகூடியிருப் பின், அவனுக்கு ஆபத்துச் சங்கையதிதூரமாம், மாருகச் சர்வதேவரும் சுவ உபஜீவ்ய மும் சுவ ஆதாரமும் ஆனபிரஹ்மாண்டத்தைப்போல எப்போதும் அவ்வதிருஷ்டனைக் காக்கவுஞ்செய்வர் எனல்:—உளத்தென்பது.

உளத்துறச் சமத்காரஞ்சே ருண்மையை யுணர்வோர்தம்மை
யளக்கரும் பிரமாண்டம் போலட்டதிக் காளர்காப்பர்
கிளப்பருங் குணத்தினன்பாய்க் கேள்வியில் விருப்பாயுண்மை
விளக்குறு வருத்தமிக்கோர் நரர்நின்மேரூர் மிருகந்தானே. (ஆ)

(ப - ரை.) உளத்துறச் சமத்காரஞ்சேர் = உள்ளத்தின்கண்ணதிதிடதரச்சி சமா திப்பயிற்சி யமைதலால், உண்மையை = சத்திய ஞானனந்தப் பிரஹ்மத்தை, உணர் வோர்தம்மை = சாக்ஷாத்கரித் தவர்களாகிய மகான்களே, அளக்கரும் பிரமாண்டம் போல் அட்டதிக்காளர் காப்பர் = அளவிடற்கரிதாய்ப் பெருத்த பிரஹ்மாண்டத்தைக் கர்ப்பதொப்பலோகேசர் இரக்ஷிப்பர், கிளப்பரும் குணத்தில் அன்பாய் = கிடைத்தற் கருமைவாய்ந்த சற்குணங்களிற் சந்தோஷமாய், கேள்வியில் விருப்பாய்=சிரவணத்தில் இராகமுடையவராய், உண்மை விளக்குறு வருத்தமிக்கோர் = சத்தியவத்துவைச் சாக்ஷாத் கரிக்கவேண்டுமென்பதில் வியசனமுடையவர், யாவரோ, அவரே, நரர்=பிற

விப்பயனைப் பெற்றவர் ஆவர், நின்றோர் மிருகத்தானே = வீண்காலங் கழிக்கும் மூர்க்கர் ஓரிருகாற் பசுவென்னவே வோதப்பெறுவர்.

(ஸ்ரீ - வீர.) எவர்தம்முள்ளே நித்தியம் சத்துவசமத்தி கிருதியானது நன்குபொலியுமோ, அவரை அகண்டப் பிரஹ்மாண்டத்தைப்போல லோகேசர்காப்பர். வைராக்கியாதி குணங்களில் எவர்தமக்கு. அசந்தோஷமோ = போதாதென்னும் புந்தியோ, அத்தியாத்ம சாஸ்திரசிரவண அப்யாசாதிகளின் பொருட்டு எவர்தமக்குச் சததம் இச்சையுளதோ, எவர்க்கு மெய்ம்மொழி புகல்வதன் கண்ணும் மெய்ப்பிரஹ்மத்தை மேவுவதன் கண்ணும் பெருங்கவலையுளதோ, அவரே நரஜன்மத்தைப் பயனுடையதாக ஆக்கலின் நரராவர், ஏனையோ நரராயினும் பசுப்போல வாளாபோம் பிறவியை யுடைத்தாயிருத்தலின் பசுக்களேயாவர்.

(ச.) உளத்து = அந்தக்கரணத்தில், உறச்சமத்காரஞ்சேர் = திடமான பிரமானுசந்தானத்தால், உண்மையை = சத்தியசொரூபமான பிரஹ்மத்தை, உணர்வோர் தம்மை = அறிந்தவர் பிரஹ்மகர்ப்பராதலின் அவரை, அளக்கரும் பிரமாண்டம்போல் = அகண்டமான பிரமாண்டத்தைப்போல், அட்டதிக்காளர் = லோகேசர், காப்பர் = வெகுமானிப்பர், குணத்திலன்பாய் = குணங்களிற் சந்தோடமாய், விருப்பாய் = இராகமாய், உண்மைவிளக்குறு வருத்தமிக்கோர் = சத்திய விசனிகள், நரர் = புருடராம், நின்றோர் = மற்றையர், மிருகத்தானேகுணமுடையரே புருடர் இதரர். பசுக்களாமென்பது பொருள். (ஈ)

(ஸ்ரீ - வீர - அ - கை.) எத்துணைத்துயர மெய்தினும் தகாதனவற்றைச் செய்தல் கூடாதெனவும், நல்லகுணங்களே நண்ணின் எல்லாத்துயரும் அகலும் எனவும் கூறல்:— செயல் என்பது.

செயலருந் துயருற்றாலுஞ் செயத்தகாச் செயல்களாகா
வியல்பலாவழியா லுண்ணவிரா குவைய முதங்கொன்ற
தயலெலாம் வசமாயாபத் தணைத்தும்போ யென்றுநன்று
முயலுநற் குணங்களாலே மொய்புக ழெய்தினோர்க்கே. (உ)

(ப - ரை.) செயலருந் துயருற்றாலும் = நீக்கமுடியாத ஆபத்தடைந்த போதினும், செயத்தகாச் செயல்கள் ஆகா = அக்கிரமத்திற் செல்லுதலாகாது, இயல்பலா வழியா லுண்ண = அக்கிரமத்தாலயில, இராகுவை = கரும்பாம்பை, அமுதங்கொன்றது = அமிருதமாயினும் அழித்தது, முயலுநற் குணங்களாலே மொய்புகழ் எய்தினோர்க்கே = பிரயத்நசாத்திய சமதமாதி குணங்களினாலே அமைவுறும் விக்கியாதியை யடைந்துள்ளவர்கட்கு, அயலெலாம் வசமாய் = அவசியமானவை யெல்லாம் வசியமாய், ஆபத்தனைத்தும்போய் = சர்வ ஆபத்துக்களும் க்ஷயமாய், என்றும் நன்றும் = அக்ஷயமான சிரேயசானதுண்டாம்.

(ஸ்ரீ - வீர.) வெகுதூர்க்கடமான ஆபத்து வந்துறினும் அசத்து மார்க்கத்திற் செல்லுதலே கூடாது, இராகுவும் இங்ஙனம் அசன்மார்க்கத்தில் அமிருதத்தை மாந்தியும் மிருதத்தை யடைந்தது. ஆயின் மார்க்கம்யாது கொலாமெனின் ? இதுவாம், சற்சாஸ்திரங்களாகிய உபநிடதங்களையும், அவற்றின் உபப்ரும ஹணங்களாம் புராணுதிகளையும், அவற்றின் அர்த்த நிஷ்டர்களாய சாதுக்களையும் எப்போதும் சேவிப்பதே யானதும், தயையில்லாமல் நிச்சோஷசம் சாரசங்காரகத் தன்மையானே உக்கிரனென்னும் பரமசிவ

மாகிய பரமாத்மாவின் சாக்ஷாத்கார ஹேதுவதாக இருளைக்கெடுப்பதும் ஒளியைக்கொடுப்பதும், ஆகிய ஞானசூரியனை, யாவர்கள் ஆசிரயம் செய்கின்றார்களோ அவர்கள் மீளவும் மோகலக்ஷண அந்தகாரத்தின் வசத்தை யடையமாட்டார்கள் என்பதாம். இப்போழ்து வைராக்கியாதி குணங்களே மறித்தும் புகழுதல்:—அயலெலாமென்பது. எந்தப்புருஷ சிரேஷ்டனால், வைராக்கிய சமதமாதி குணங்களினாலே கீர்த்தி = சற்புருடர்களுக்குள் அக்கிரகண்யத் தன்மையானே விக்கியாதி, இயற்றப்பெற்றதோ, அம்மகானுக்கு அக்ஷய மாகிய சிரேயசான துண்டாம், வசியமாகாதன வெல்லாம் வசியங்களாம், சர்வ ஆபத்துக்களும் க்ஷயத்தையடையும்.

(ச.) செயலரும் = நீக்கற்கரிய, துயருற்றாலும் = ஆபத்தடையினும், செயத்தகாச் செயல்களாகா = அக்கிரமத்திற் செல்லவே கூடாது, இயல்பலாவழியால் = அக்கிரமத்தினாலே, உண்ண = பானஞ்செய்ய, கொன்றது = இராகுவும் அக்கிரமத்தினாலே அமிர்தத்தைப் பானஞ்செய்தவனையினும் இறந்தா னென்றதாயிற்று, முயலும் = தான்முயற்சித்தடைந்த, நற்குணங்களாலே மொய், புகழ் = கீர்த்தியை, எய்திஞேர்க்கே, அயலெலாம் = வசமாகாத வனைத்தும், வசமாய், ஆபத்தனைத்தும் நாசமாய்ப்போய், என்றுகன்றும் = அட்சயமான சிரேய சுண்டாம் என்பதந்நயம்,

(ஸ்ரீ-வீர - அ-கை.) கீர்த்தி யெங்ஙனம் சம்பாதித்தற்கேலும் எனின் ஆண்டறைதல்:—ஒழிவறுமென்பது.

ஒழிவறு முயற்சிதன்னு லுகத்தா லுயர்ந்தநூலா
லிழிவறவியற்று வோர்கட் கெப்பய னெளிதினெய்தா
வழிபடு நன்னூலாளர் வருபயன் கருத்தாச்செய்யி
லழிவற மூற்றுமூற்றி யளவறுபயனே நல்கும். (4)

(ப - மை.) ஒழிவறு முயற்சிதன்னால் = இடைவிடாத பரமபுருடப் பிரயத்தனத்தினால், ஊகத்தால் = ஆராய்ச்சியினால், உயர்ந்தநூலால் — சற்சாத்திரங்களால், இழிவற = சாவதானமாய், இயற்றுவோர்கட்கு = காரியத்திற் பிரவிருத்திப்பவர்கட்கு, எளிதின் எப்பயன் எய்தா = அதிசுலபமாக எந்தப் பிரயோஜனந்தான் கிடைக்கமாட்டாது, வழிபடு நன்னூலாளர் = சாஸ்திரமுறையில் உதியமனஞ் செய்பவர், வருபயன் = சித்திகளில், கருத்தாச்செய்யில் = விரைவுறுமல் ஊகமாக நீன்போது ஆற்றில், அழிவறமூற்றும் = பரிபக்குவ சித்தியாம், முற்றியள வறுபயனே நல்கும் = சித்தியாயவது பூர்ண பலத்தைச் சேர்ப்பிக்கும்.

(ஸ்ரீ-வீர.) பரமபௌருஷயத்தனத்தைப் பற்றிக்கொண்டு, நலிக்க தொழில்களேயே புரிந்துகொண்டு, சாஸ்திரமுறைதவறுமல் வெகுசாவதானமாய் வருத்தமின்றிச் சாதனங்களே யாசரிக்கின் யாவர்தாம் எப்பயனைத் தாமடையப்பெறார். அடையத் தக்கனவாய சித்திகளில், நூன்முறையிற் செல்லும் அதிகாரிகள் அவசரப்படலே யாகாதாம்; சிரகால பரிபக்குவ சித்தியானது பூர்ணபலத்தைப் பயப்பதேயாகும்.

(ச.) ஒழிவறு முயற்சிதன்னால் = பரமபௌருடமான வெத்தனத்தால், இயற்றுவோர்கட்கு = ஆசரிப்பவர்க்கு, வழிபடு நன்னூலாளர் = சாஸ்திரப்படி யாசரிப்பவர், வருபயன் = சித்திகளில், கருத்தீர்= அவசரப்படாமல், செய்யின் = சிரகாலம் அப்யசிக்கின், அழிவறமூற்றும் = பக்குவசித்தியாம், முற்றியளவறு பயனேநல்கும். சிரகா

லம் பக்குவமாய் சித்தியானது புஷ்டபலம் போதுவதாகி மிகவுற்கிருட்டமாக மிளிரா நிற்கு மென்பதாம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) இன்னவண்ணம் இயற்றில் இரியாமல், இன்புறல் எலுமென வும், இன்பப்பெருக் கின்னதெனவு மியம்பல்:—வருத்த மென்பது.

வருத்தமற்றச் சஞ்சோக மதமின்றி நன்னூற்பின்போ
யொருத்தரா லேவலின்றி யுலாவுக நிக்கவேண்டா
வருத்தங்க ளநர்த்தமாகு மளவில்போ கங்களேயாம்
பெருத்தவாபத் தாஞ்செல்வம் பேரின்ப நிராசைதானே. (5)

(ப - ரை.) வருத்தமற்று = ஆயாசமகன்று, அச்சஞ்சோகம் மதம் இன்றி = பயம் துயரம் கருவம் இல்லாமல், நன்னூற்பின்போய் = சற்சாஸ்திரத்தினைப் பின்றொடர்ந்து, ஒருத்தரால் ஏவலின்றி = நிர்ப்பந்தரகிதனுய், உலாவுக = விவகரிப்பாய், நிக்கவேண் டாம் = விநாசத்தை யடையவேண்டாம், அருத்தங்கள் = அருத்த சம்பத்தியானது! அநர்த்தமாகும் = பெருந்துன்ப வேதுவாம், அளவில் போகங்கள் நோயாம் = போக சமுதாயம் பவரோகத்தைத் தருவதாம், பெருத்தவாபத்தாம் செல்வம் = சம்பத்துக்கள் யாவுமே மகத்தான வாபத்துக்களைக் கொடுப்பதாம், நிராசைதானே பேரின்பம் = ஆசை யின்மையே பேராநந்தமாம்.

(ஸ்ரீ - வீர.) சோகபய ஆயாசமின்றிக் கருவமின்றிச் சீக்கிரத்தகைமை நிர்ப்பந்த ரகிதமாய் விவகாரத்தைச் சாஸ்திரமுறையிற் செய்தல் வேண்டும் வீணே யழிந்துபோத லாகாதாம். அதிதீக்ஷணங்களான சரச்சிரேணி சதங்களானே சின்ன வாரணங்களை யுடைய போரின்கண்ணும், தற்போதே யேற்பட்டதாய மகாபய மிருத்தியுவாதி ஆபத் துக்களையும் நிவாரணஞ் செய்யும் அஸ்திரமாய, அஜராமர சித்திய நிரதிசய ஆநந்த ஆத்ம வஸ்துவை நன்குகாட்டும் இச்சாத்திரத்தை அவசியம் விசாரிக்கவேண்டும் என்பதாம். வெய்யிற்போதில் வெப்பத்தால் மிக வெம்பிய சிறுகுட்டைத்தோற்றச் சேற்றுக்கொப் பான சம்சாரத்தில் மறித்தும் மறித்தும்மரித்து முதித்தும் வாழும் பழையதவளைபோல வாழவேண்டு மென்னும் வாஞ்சையால் என்னேபயன்! அதிதுச்சமன்றே! என்றோ நிக்கவேண்டும்; வேண்டாமாதலின் போகவாசனையை இருதயத்தினின்றும் ஏகநீக்க வேண்டு மென்றுணர்க; அதன்பொருட்டாய அற்பநிரவியத்தால் என்னே காரியம்! ஹே ஆரியரே. யாவற்றையுமே விட்டுத்தொலத்து மோக்ஷசாஸ்திரத்தையே யாராய்ந் துய்தல் வேண்டும்; வீடியாகார விருத்திப் பிரதிபலித சிதாபாசர்களுக்கு அந்தக்கரணவ சின்னம் சைதன்யம்பிம்பம், அந்தக்கரண உபஹித சிதாபாசனுக்கோ சுத்தமாய பிரஹ்ம சைதன்யமே பிம்பமாம். பிரதிபிம்ப வதனுபாதி யசத்தியமாம், பிம்பமோசத்தியமாம், ஆண்டந்தக்கரணோபாதி யசத்தியத் தன்மையை யணுகியவழி அதனவச் சின்னபிம்ப சைதன்யத்திற்கும், அதன் சமஸ்திய சிதாபாச பிம்பபூத பிரஹ்ம சைதன்யத்திற்கும், இருந்தபேதமானது மித்தையேயாமென அகண்டசத்திய பிரத்தியக்கபின்னப் பிரஹ்ம சைதன்யமே இனிது எஞ்சாநிற்கும் என்பதாகப் பெரிதாராய்மின் அற்றேல், சாங்கிய பாதஞ்சல. கௌதம. கணாதபுத்த. அருகராதிய. பிறரோ பிரதிபாதித்த பிரதிபிம்பதைப் பிரக்ஞரியையை இச்சித்திலர், மற்றே, அயலாற்றானே அயலாற்றானே நிரூபிப்பவராகி ஆண்டே பிராணிகளைப் பிரேரணையுஞ் செய்கின்றனர், அத்தப் பிரேரணையையும் அங்கீ

கரிப்பதா வென்னெனின் : கூடாதாம், "இரவிதாளெருவனுயு மிலங்கிய சலங்களுடே, பரவிய வாறுபோலப் பலபலபலவேயாக, விரவிய சோதியான்மா வினங்குபல் லுபாதி தம்மால், திரவிஃதேகமாயும் பலவெனத் திகழுமாலோ " என்பதாதி சுதந்திரசருதிப் பிரமாண அநுசாரிகட்குப் பசுப்போலப் பரப்பிரேரணையானே செல்லுதல் அநுசிதமே யாம், பரப்பிரேரணை மதியோடு பசுக்களல்லவோ செல்லும், நீவிர்செல்லன்மின் ! இங்ங னம் சாஸ்திரார்த்த விசாரணையை விதித்து இப்போது ஜீவனதனபசு புத்திராதி சாம் சாரிக விசாரணையையும் தரிசனந்தர விசாரணையையும் விடுவிப்பார் இகழ்கின்றார்:— அருத்தக்க ளென்பதால், குட்டையிற் கிழட்டாமைபோலத் தூங்கிக்கொண்டே யிராதீர் எழுந்திருமின் எழுந்திருமின் ! ஜாமரண சாந்தியின் பொருட்டு வேதாந்த சாஸ்திரத் தையே விசாரியுங்கள். பொருள்களின் அடைவோபூரண அநர்த்தமாம், போகக்கூட் டமோ பவரோகந் தருவதாம், சம்பத்தெவையுமோ ஆபத்தளிப்பவாம், யாண்டுமநாதரம் ஈண்டுறும் வெற்றியாம். இதற்குதாரணங்கள் இவையாம்:—இன்னமரும்பொருளீட்டு தலுந்துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமே, அன்ன, தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா, விழத்தலுந் துன்பமேயாம். போகமுங்குலமும் பொருளொடுமானம் பொலிவுறு நூலொடுகுணமு, மாகமென்னிவற்றிற் பிணியழி வரசாலரிய தீனதைசரை யரியான், மோகவாதிய ராற்றீயரானமனுன் முற்றுறுபயம் புவிநரர்க்காஞ், சோகவெவ் வியாவும் பயத்தொடு விரவுஞ்சொல்பயமில் வைராகமதே. தன்பலவாதி வியாதியின் சதத்தாற் சனங்களின் சேமமதறுமான், முன்பினையாண்டு புகுமவன் விபத்து மூடிய திறந்தபோன் மூரணும், பின்பினுமுண்டாம் விவசரரியதம் பின்னெடிதன் வயங்கா லன், மன்புரிதருமந்திரங்குசவித்தியான் மனெயெதுவது வெதுதிரமே. காயிகள்போகங் கார்க்குழு நவிவுட்கதிர் மினலெனவலேகாலு, மாயுளும் வாயுவறை மரையிலையி லறலெ னப்பங்குரமாகுந், தேயுறுமெவன லரல்சையெனவே தேர்ந்தினித் துரிதமாய்ப்புதர்கா, ளாயதைரிய சமாதியார் சுலபவரிய யோகினின் மனமமைமின். ஆயுளுமலையிலழியுமெவ் வனச்சோளுஞ் சிலதினமனும் பொருள்க, டேயுளதினைவை யுறழுமின்மழையிற் நிகழ்மின லெனற்றிரள்போகம், மாயமங்கையராற் களமுறத்தழுவ மகிழ்வது கொடிபவப்பயநீ, சேயரிப்பாரங்கடந்திடப் பிரமத்தியைந்திடு மதியாயிருமின். துன்புறமலநடு நியமித தனுக்களாற் றுன்னுறுங்கருமீதி லன்பினள் பிறிதரவுறுதுயர் விஷமமாமரிய வவ்வன போக, மின்பெழில் விழியர்களி கணைகைக் கிலங்கிழமென்னல நரேரே, வன்பவ மது தனிலனுவுங்கிஞ்சிலுஞ் சுகம்வருமெனி னறைவீரே. பிரமனெடு மிந்திரனே மூதலன வானவராம் பெருங்கணங் கடமைத்திரண்கண மெனவெங்கிருந்தே, திரமெனுமோ வெதன் சுவையாற்றிரிலோக வரசாதியவிபவம் விரசமதாய்த்திகழ்வுறுமோயாதோ, பரம வனவரத மிளிரொன்றது வேயாகப்பனுபோக மிலங்கலுறுமையவருந்தவரே, யுரூற்றவே யொருகணபங்குர மானவதின்வேறுள போகங்களிற் களிப்பையுறுதிரு மினிருமின்,

(ச.) வருத்தமற்று = ஆயாசமின்றி, அச்சம் = பயம், சோகம் = துன்பம், மதம் = கர்வம், இன்றி = அற்று, நன்னூற்பின்போய் = சாஸ்திரத்தை யநுசரித்து, ஒருத்தரா லேவலின்றி, உலாவுக = விவகாரஞ் செய்வாய், நசிக்கவேண்டா, அருத்தங்கள் = அர்த்தசம்பத்தி = சம்பாதனம், அநர்த்தமாகும் = அநர்த்த நிமித்தமாம், அளவில் போகங் கள் = போகௌகம், நோயாம் = பவரோகத்தைத் தருவதாம், நிராசை சகலத்திலும் அநாதரம். போகௌகம் = போகக்கூட்டம். வருத்தமற்று என்றதானே ஆகாங்ஷை யின்மையையும், குடிலத்தன்மை யின்மையையும் கொள்க ஹ்ரூ என்பது அபி காங்ஷை, இதனினின்றும் ஹ்ரூ ரூபம்.

திதிப் பிரகரணம்

சூத்திரம்

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஜனவிவகாரங்களே யனுசரித்து முரணின்றியிருப்பதும் விசாரத்தால் விவகரிப்பவர்களின் சாஸ்திர ஆசாரங்களே யனுசரித்திருப்பதும் ஆகியகருமத்தானே கர்லங்கழித்தற் பொருட்டும், அதன்பயனுய சத்தையடையும் பொருட்டும் எழுகையையங்கீகரியுங்கள் எனப்பலவகையாகப் பகர்ந்ததைச் சுருக்கி யுபசங்கரித்தல்:— இடும்பை யென்பது.

இடும்பைகூர் சங்கமின்றி யியற்கையா சாரமெய்திக்
குடும்பமாந் துயர்சிற்றின்பங் குறித்திடாப் பெருமையோர்க்கு
நெடும்புகழ் வாணுள்செல்வ நிறைகுண மனைத்து மூண்டாய்ப்
படும்பலன் வசந்தகாலக் கொடிகள்போற் பலிக்குமன்றே. (6)

(ப - ரை.) இடும்பைகூர் துயரையுண்டாக்குங் கூட்டத்தோடு கூடுதலின்றி, இயற்கையாசாரம் எய்தி = அழகிய ஆசாரசரிதம் பொருந்தி, குடும்பமாந் துயர்சிற்றின்பம் = சமுசார சௌக்கிய பலதுக்கத்தை, குறித்திடா = விரும்பாமல், இருக்கும், பெருமையோர்க்கு = மகான்கட்கு, நெடும்புகழ் = நீண்டயஸசும், வாணுள் = ஆயுளும், செல்வம் = இலக்ஷ்மியும், நிறைகுணம் = சமதமாதி பூர்ணகுணங்கள், அனைத்தும் = யாவும், உண்டாய் = உற்பன்னமாகி, படும்பலன் = அவற்றுற் கிடைக்கும் நற்பலங்களே, வசந்தகாலக் கொடிகள்போல் = மாதவிலதையைமானும், பலிக்குமன்றே = அவையாநந்த முறத்தரும் அன்று ஏ அசை நிலைகள்.

(ஸ்ரீ - வீர.) ஆசாரசாரஞ்சரிதனுகி, ஏகாந்தத்தனுகி, விவேகமதியை யுடையனுகி, குடும்ப சௌக்கிய பலதுக்கதசை யபிலாஷையற்றவனுகி, ஒளிரும் மகானுக்கு, வசந்த காலத்தில் வளர்ந்த கொடிபோல உத்தமபலத்தைக் கொடுப்ப, ஆயுளும் புகழனும், குணங்களும் செல்வத்தோடுங் கூடவே யோங்கியொளிரா நிற்கும்.

(ச.) இடும்பைகூர் சங்கமின்றி, விரக்தசித்தனுய், வசந்தகாலக் கொடிகள் (மூல்லை) மாதவிலதைகள், படும்பலன்போல் = பலந்தருவதுபோல, பலிக்கும் = சத்பலத்தைத் தரும், அன்று ஏ இரண்டுமசை. (6)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சித்த சுத்தியின் பொருட்டுச் சேவிதங்களாய தவ முதலியவற்றிற்கும் சற்சன சேவனவாயிலாகவே ஞானோபயோகமாம், அயலாற்ருலாகாதாம் என்னுங் கருத்தாலுரைத்தல்:—தவமென்பது.

தவங்களாற் றெய்வநீராற் சாத்திரங்களினுற் போகாப்
பவங்களே யுயர்ந்தோர்பாதம் பணிந்துபற் றறுக்கவேண்டு
மவங்களாங் காமங்கோப மறவுந்தேய்ந் தியற்கையான
சுவங்களினடந்து நன்னூற் றுறைநின்றே ருயர்ந்த மேலோர். (7)

(ப - ரை.) தவங்களால் = கிருச்சிரசாந்திராய ஞதிகளால், தெய்வநீரால், தெய்வகங்கை முதலிய தீர்த்தங்களால், சாத்திரங்களினுல் = நூல்களினுல், போகாப்பவங்களே = கடக்கமுடியாத பவசாகரத்தை, உயர்ந்தோர் பாதம்பணிந்து = சற்புருடரைச் சேவித்து, பற்றறுக்க வேண்டும் = கடக்கவேண்டும், அவங்களாம் = தின்புழுத்தாகின்ற, காமம் கோபம் = லோபமோக ரோஷாதிகள், அறவுந்தேய்ந்து = அத்தியந்தம் அழிந்து, இயற்கையான சுவங்களினடந்து = தங்கருமங்களாகிய நல்லொழுக்கங்களில் ஒழுகி, நல்நூற்றுறை நின்றோர் = சற்சாஸ்திர முறைப்படி திதிபெற்றவர், உயர்ந்தமேலோர் = சற்சனராவர்.

(ஸ்ரீ - வீர.) சமூசாரசாகர உத்தாரத்தில், சற்சனசேவன மில்லாமல் தவங்களும் தீர்த்தங்களும், சாஸ்திரங்களும் ஜயத்தை யடையாதனவாம், ஞானஉற்பத்தியின் பொருட்டு நாட்டமுடையன வாகாவாம். இப்போது சற்சன இலக்கணமியம்பல்:—அவங்களாமென்பது. எவரது சேவனத்தானே அநுதினம் காமக்குரோத லோபமோகமதாதிகள் சிறுமையை யடையாநிற்குமோ. யாவர்தமது சுபகருமங்களில் நூன்முறையே ஒழுகுவாரோ, அவரேசற்சனராவர். எப்போதும் சற்சனசேவையிற் றற்பரனுக்கு ஒருகால் ஆத்மவித்தின் சங்கமும் அவசியம் உண்டாகும் அதனால் ஞானலாபமுமாம்; ஆன்மஞானிகளின் சங்கத்தானே சற்சனசேவை செய்துவந்த சாதுவிற்கு, தோற்றுநிற்கு பித்திருசிய வுலகிற்கு அத்தியந்த அபாவமே தோற்றுமாறு ஞானமுதயமாம். அதனானே அவனுக்குப் பரமபுருடார்த்தமும் உண்டாகாநிற்கும், திருசிய அத்தியந்த அபாவத்தானே பரம் பொருளே யெஞ்சாநிற்கும் அத்தியந்த அபாவவசத்தானே விரைவில் ஜீவன் ஆண்டே லீனப்படுவன்.

(ச.) தெய்வநீரால் = தீர்த்தங்களால், பற்றறுக்கவேண்டும் = சம்சாரசாகரத்தின் கரையேறுவதற்குச் சற்சனசேவையைத் தவிரத் தவ முதலியவை கைதராவென்பதாயிற்று; அவங்களாம் = பிரயோஜனமற்ற, காமகோபம் = லோபமோகங் கோபங்கள், அறிவுந்தேய்த்து = அநுதினம் அடங்கி, சுவங்களில் நடந்து = சுபகருமங்களிற் பிரவேசித்து, நன்னூற்றுறை நின்றோர் = சாஸ்திரவொழுங்கிற் சஞ்சரிப்பவர், உயர்ந்தமேலோர் = சற்சனராவர். (7)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இயல்பாகவே இச்சவிகற்பமாய சித்விருத்தியாஞ் சிதாபாசனது உன்மேஷம் ஜகத்தநுபூதியின் உதயமாம், நிமேஷம் அஸ்தமயமாம்; அல்லது இந்நிருவிகற்பரூபமாய சித்விருத்தி யென்னும் சமசாகூஷாத் காரத்தினது உன்மேஷம் ஜகத்ரூப அநுபூதியின் அஸ்தமயமாம், நிமேஷம் = அநாவிர்பாவமோ உதயமாம்; ஆகலின் நிமேஷமே பிரத்தியக்காண்மாவின் அவித்யாமலமாம், உன்மேஷமோ நிர்மலம் நந்நிர்மல லக்ஷண மோக்ஷமாம் என்னுங் கருத்தாலுரைத்தல்:—நான் என்பது.

நானெனும் பொருள்காணுதோர் ஞானவாகாயங் காணுர்
நானெனும் பொருளைக் கண்டோர் ஞானவாகாய மாவார்
நானெனு மகங்காரக்கார் ஞானவிண்மதியைமூடி
னானெனப் பரமவாம்ப னன்மலர் விரியாதன்றே. (8)

(ப - ரை.) நான் எனும் பொருள் காணுதோர் = அகஞ்சப்தார்த்தத்தை யறியாதவர், ஞானவாகாயங் காணுர் = பரமார்த்த அம்பரத்தைப் பாராதவர் ஆவர், நானெனும் பொருளைக்கண்டோர் = அகஞ்சப்தார்த்தத்தை யறிந்தவர், ஞானவாகாயம் ஆவர் = பரமார்த்த அம்பரம் ஆவர், நானெனும் அகங்காரக்கார் = யான் என்னும் அகங்கார மேகம், ஞானவிண்மதியை மூடின் = சிதாகாச சந்திரனை யாச்சாதிக்கின், நானெனப் பரம ஆம்பல் நன்மலர் = நிரகங்கார பரமார்த்த குமுதவியானது, விரியாது = மலர்ந்திலங்காது, அன்று ஏ அசைகள்.

(ஸ்ரீ - வீர.) அறியப்பெறுத அகமர்த்தமானது பரமார்த்த அம்பரத்தில் மலமாம், அறியப்பெற்ற அகமர்த்தமோ பரமாத்ம அம்பரமேயாம். அற்றேல் அகமர்த்தம் அகங்காரமாம் அதுயாங்ஙனம் அறியப்பெற்ற போதினும் பரமாத்மாம்பரமாதல் கூடுமெனின்? கூறுதும், எத்துணைதத்துவமாக அறியப்பெற வில்லையோ அத்துணையே யகங்

காரமாம், அஃதறியப் பெறினே அவ்வாறுகாதாம்,, நன்றுக அறிந்துகொள்ளினே அகம் பாவமாகாமல் அறிவாகாய வடிவமாயாய்விடும்; அம்புதன்னுடை அம்பானது ஒருமையை யடைதலேபோலும். உண்மையா யாராயின் அகமாதி ஜகத்திருசியம் இல்லவே யில்லை யாம்; நன்காராய்ந்தறியின் பாதிக்கப்படுமாயின் யாதுசேடிப்பதோ எனின்? கற்பிதமாத லின் இவ்வகம்பதார்த்தம் யாதுகொலாம் என்னும் அளவைவாயிலாயாற்றும் ஆராய்ச்சி யினுலாய அறிவினுல் ஒருதலேயேயாய் அச்சிதாகாசமே பரிசேடியா நிற்கும். ஆபிசாசிற் பிசாசுமதி நிருமலமான பிரௌட மதியினர்க்குப் பாதிக்கப்படும், அற்பமார்க்கப் பிரவி ருத்தபுத்தி யுடையபாலர்க்கோ, நூறுவகையானே இது பேயல்லவென் றுபதேசித்த போதினும் விசாரணை சம்சயமேயாம், பாதிக்கப்படவே மாட்டாதாம், பாலர்களின்மோ கம்போத நிரோதியாவதேபோலப் பிரௌடர்களின் அபிமானமும் அதன் நிரோதியே யாமெனுங் கருத்தாலுரைத்தல்,—ஞானவிண்மதியை யென்பது, எத்துணையுள்ளிருக்கும் அகங்காரமேக ஆவிருதமாகிச் சிற்சந்திரகையானது இருக்குமோ, அத்துணையுமே பர மார்த்த சூழுததடாகத்தை மலர்விக்கமாட்டாது; அகமபிமான மகன்றவழியோ, பய இராகமுமுணுஷியேதுக துவேட இராகதோசர நரகசுவர்க்க மோ ஷதிருஷ்ணையும் அகலாநிற்கும்.

(ச.) நானெனும் பொருள்காணுதோர் = அகஞ்சத்தார்த்தத்தை யறியாதவர், ஞான வாகாயமாகார் = சிதாகாசத்தில் களங்கராவதுபோல், நானெனும் பொருளைக்கண்டோர் அகஞ்சத்தார்த்தத்தை யறிந்தமேன்மைய ராயினவரே, ஞானவாகாயமாவர்; ஜீவப்பிரஹ் மங்களுக்கு ஐக்கியத்தா லென்பது கருத்து, மூடில் = அஃததனுண் மறைபட்டு நிற்கும் வரையும், பரமவாம்பனன்மலர் = பரமார்த்த கைவல்யமென்னும் சூழுதவதியை = ஆம் பலோடையை, மலராது = விகாசஞ்செய்யாது என்பதாயிற்று, அன்று ஏ அசைகள்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அகங்காரமானது கெடாவிடில் வருமகர்த்தத்தைக் கூறல்:— மடிவென்பது.

மடிவறுபிறவி யென்னு மரத்திரளென தீதென்னு
நெடியபல் பணைகளீட்டி நிரயமாங் காய்கள்காய்க்கு
மூடிவறுதுய ராங்காரமூலையாக வினையாநிற்கு
மிடியிலா ஞானத்தீயால் வேரொடும் வெந்துபோமே. (89)

(பதவுரை.) மூடிவறுதுயராங்கார மூலையாக வினையாநிற்கும் = அநந்த துக்க ஹேதுவாய் அகம்பாவத்தையே யங்குரமாகக் கொண்டுண்டாகா நிற்கும், மடிவறு பிறவி யென்னும் மரத்திரள் = கெடாத ஜன்மமென்னும் விருக்ஷசமூதாயம், எனது ஈதென் னும் = மம இதம் என்னும், நெடியபல்பணைகள் நீட்டி = நீண்டனவாய பலபுலவாயிர சாகைகளை விஸ்தீரணஞ்செய்து, நிரயமாம் = நரகங்களாம், காய்கள் காய்க்கும் = பக்குவ மற்றபயனைப் பயக்கும்; மிடியிலா = சர்வோதார, ஞானத்தீயால் = ஞானுக்கினியால், வேரொடும் வெந்துபோமே = காரணமுமின்றிக் கருகிநீரும்.

(ஸ்ரீ - வீர.) எவனுல் அகங்காரவடிவ துர்விருக்ஷ அங்குரம், விசாரபரிஷ்கிருதமனக் கலப்பையானேயே உழுதலான் மூலசிதிலத் தன்மையை யடைவிப்பதாகிப் பிடுங்கியெறி யப்பெற்றதோ, அவனுடைய ஆத்மக்ஷேத்திரத்தில், சமுசாராநாசனமாய ஞானப்பயிர் துச்சேதமாய் ஆயிரக்கணக்கான சாகைகள் உற்றதாய் மிதுவளர்ந்து பெரும்பயன்தரும். அங்ஙன் உழுது பிடுங்கியெறியா விடினே, ஞானகுடார மில்லாமல் அழிக்கமுடியாத

இயற்கைவாய்ந்த ஜன்மவிருக்ஷங்கட்கு, அகம்பாவமானது அங்குரமாய், எனது இது என்னும் விஸ்தீர்ண சாகைகள் ஆயிரக்கணக்கா யுண்டாம்.

(ச) மூடி + நிற்கும் = அகம்பாவமே யங்குரமாக மூளைத்த, மடிவறு பிறவியென் னுமரத்திரள் = ஜன்மமென்னும் விருக்ஷங்கள், எனதிதென்னும் பாவங்களானபலபணை கண்டிட்டி = பலசாகைகளே மிகவளர்த்து, நிரயமாங்காய்கள் காய்க்கும்=துக்கபலங்களே யுண்டாக்கு மென்பதந்நுவயம் மிடி + போமேயென்பது கவிநாயகர் கருத்து.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ அகங்காரவடிவத்தையும், ஜயோபாயத்தையும், ஜய பயனையும் விளைதல்:—என்றலு மென்பது.

என்றலு மிவ்வாங்கார மெவ்வுரு வுடைத் தெவ்வாறு
வென்றிட லாகுந்தேக மேவியு மேவாதாயு
நின்றொரு காலம்வென்ரு னேருறு பயனேதென்ரு
நன்றுணர் வள்ளல்கேட்ப ஞானமார் வசிட்டன் சொல்வான். (ம[illegible])

(ப - ரை.) என்றலும்=என இவ்வண்ணம் அகங்காரத்தின் கொடுமையையெடுத்து விரித் துபதேசித்தலும், இவ்வாங்காரம் = இயம்பியருளிய அகங்காரம், எவ்வுருவு டைத்து = என்ன ஆகிருதியையுடையது, எவ்வாறு வென்றிடலாகும் = எங்ஙனம் எக விடமுடியும், தேகமேவியும் மேவாதாயும் நின்று ஒருகாலம் வென்ரூல் = சரீரத்தோடு கூடியும் கூடாதாயும் உள்ள இதனை முயன்று ஒருபோது விட்டொழித்தால், நேருறு பயன் ஏதென்ரு = உண்டாகும்பலன் யாதாம் என்பதாக, நன்றுணர் வள்ளல்கேட்ப= நன்மையை யுணரும் வேட்கையிக்க ஸ்ரீ இராமபிரான் வினவ, ஞானமார் வசிட்டன் சொல்வான் = ஞானசொரூபமாகிய ஸ்ரீ வசிட்டபகவான் விடைதருவா ராயினர்.

(ஸ்ரீ - வீர.) அகங்காரம் என்ன ஆகிருதியை யுடையது, ஹே பிரபுவே ! எந்த வுபாயத்தால் அதை அத்தியந்தம் தியாகஞ்செய்வது சசரீரமாயேனும் அசரீரமாயேனும் இருக்கும் அதனைவிட் டொழிப்பின் எய்துறும் பயன்யாதோ ! சசரீரம் = நனவகங்கா ரம், அசரீரம் = கனவுச்சம்பந்தியகங்காரமும் மநோரதசம்பந்தி யகங்காரமும், அல்லது, சசரீரம் = தேகமாத்ர அகம்பாவவடிவது, அசரீரம் = தேகவியதிரிக்த புத்திமாத்திர வுபாதியையுடைய அகம்பாவவடிவது, சர்வாகம்பாவவடிவதும் என்பது பொருள். சசரீ ரமா ? அசரீரமா ? அவ்வகங்காரம்.

(சு.) ஸ்ரீ இராமர்: வென்றிடலாகும் = விடுபடும், தேகம் + காலம் = சரீரராயா வது அசரீரராயாவது, வென்ரூர் = அதனை விடினவர்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீ இராகவர் விளவுக்கு ஸ்ரீ வசிட்டபகவான் அகங்காரத்தை மூவகையாய்ப் பிரித்து விடைதருதல்:—மூவகை யென்பது.

மூவகை யுலகிலித்த வகங்கர மும்மை யென்று
மேவருமி ரண்டுநன்ரு மிகவுமொன் றீனமாகும்
யாவதும் பரமுநாமே யிதிலெமை யலாதோர்
பாவனையில தென்ரூரும் போதமே பரமாங்காரம். (11)

(ப - ரை.) மூவகையுலகில் = ஜகத்திரயத்தில், இத்தவகங்காரம் = கூறிய அகங் காரம், மும்மை = மூன்றுவகையாகும், என்றுமேவரும்=சாதாரணரால் எப்போதுமே அடைதற் கசாத்தியமான, இரண்டு மிகவும் நன்ரும் = இருவகை அதிமேன்மையது,

ஒன்றுமிகவும் ஈனமாகும் = இதரமோ அத்தியந்தம் தியாகிக்கத் தக்கதாகக்கீழாயதாம், யாவதும் = இவ்விசுவம் யாவும், பரமும் = பரமாத்மாவும், நாமே = அகமேயாம், ஈறு இலம் = அகமே அச்சுதம், எமையலாதோர் பாவனையிலது = எம்மைத்தவிர யாதொரு பொருளுமே கிடையாது, என்றோரும் போதமே பரமாங்காரம் = எனவெண்ணுஞ் சித்தனையேபரம அகங்காரமாம்.

(ஸ்ரீ - வீர.) ஹே இராகவ! இம்மூவுலகில் அகங்காரம் மூவிதமாக விருக்கும், இரண்டு நிரேட்டங்களாம், இதரம் தியாச்சியமாம், உனக்கு அதன் விபரத்தையறியக் கூறக்கேட்குதி நீ, அசாஸ்திரீயமாய அகங்காரத்தின் தியாஜனப் பொருட்டுச் சாஸ்திரீயங்களாய இரண்டகங்காரங்கள் வீகிதங்களாம், சுக்கும ஆத்மவிடயமும் சார்வாத்மிய விடயமும் ஆய அவற்றிற்குத் தத்துவதரிசன அப்பிரதிகூலத் தன்மையுண்மையானும், சாம்பிரதிகத் தன்மையானே சுத்தஜீவத் தன்மையாற் பரிச்சின்னமற்ற ஆத்மதரிசனவாயிற் றன்மையானும், மேன்மையிக்க தன்மையுளதாம்; இதரமாய தேகமாத்ர அகம்பாவரூபத்திற்கு அநர்த்தரூபத் தன்மையுண்மையின் தியாஜ்யத் தன்மையாம் என்பது பொருள். அகம்சர்வ இவ்விசுவமும் ஆவேன், இது காரியப் பிரஹ்மவிஷய மாயாதல் தற்பதவாச்சியார்த்த விடயமாயாதல் ஆம்; யான்பரமாத்மா அச்யுதன், இது காரணவிடய மாயாதல், தற்பதார்த்த லக்ஷியவிடய மாயாதல், ஆம். அகம்பூதத்திற்கு அயலாயதொன்று இவ்வுலகில் இலவே யில்லையாம், என்னுமிதுபரம அகங்கிருதியாம்.

(ச.) மும்மையென்னும் = திரிவிதமெனப்படும், இவற்றில், இரண்டு நன்றும் = சிரேட்டமாம், ஈனமாகும் = தியாச்சியமாம், யாவதும் = இந்தவிசுவம் அனைத்தும், பரமும் = பரமான்மாவும், நாமே = அகஞ்சத் தார்த்தமான நாமேயாம், ஈறிலமெனையலாது = அச்சுதமாகிய எம்மையன்றி, = ஓர் பாவனை யிலதென்றோரும் = மற்றோர் பதார்த்தமும் இன்றென்றறியும், போதமே பரமாங்காரம்; (11)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மற்றைய அகங்காரத்தின் இலக்கணமியம்பி, இரண்டகங்காரங்களும் சீவன்முத்தர்பாலிருந்து சுகந்தருவனவாம் எனல்:—செந்நெல்லென்பது.

செந்நெல் வாலினுஞ்சற்றுகிச் செகங்களுக் கயலாயென்று
மன்னுதுமெனக் கொள்போத மற்றையாங் காரமாகு
மிந்நிலையிரண்டுஞ் சீவன்முத்தர் பாலிருந் தீடேற்றிக்
துன்னரு முத்திநல்குஞ் சுழல்வுறு பந்தநல்கா (12)

(ப - ரை.) செந்நெல்வாலினும் சற்றுகி = வாலாக்கிரசதகற்பிதனாய், செகங்களுக்கயலாய் = சர்வத்தினும் வியதிரிக்தனாய், என்றுமன்னுதும் = எப்போது மிருக்கின்றேன், எனக்கொள் போதம் = என்று கவரப்பெறும் பேருணர்ச்சியானது, மற்றையாங்காரமாகும் = இரண்டாவது அகங்காரமாகும், இந்நிலையிரண்டும் = இத்தஸ்திதிகள் இரண்டும், சீவன்முத்தர்பாலிருந்தீடேற்றி = மகான்களிடத்திலிருந்து அவர்கட் கநுகூலஞ்செய்து, துன்னருமுத்தி நல்கும் = பெறுதற்கரிய மோக்ஷத்தைக் கொடுக்கு மேயலது, சுழல்வுறும் பந்தநல்கா = சுற்றித்திரியும் பந்தத்தைப் பயவாதாம்.

(ஸ்ரீ - வீர.) முதலது ஜீவன் முக்தனுகிய சதார்த்தபஞ்சம பூமியிலிருப்பவனுக்கு மோக்ஷத்தின் பொருட்டேயுளதா மலதுபந்தத்தின் பொருட்டேளதாகாதாம், இது அப்யாசதசை யடைந்தவனுக்கும் உளதாமெனினும் ஜீவன் முக்தரிடத்திற் பக்குவமாம்

என்பது கருத்தாம். வாலாக்ரசத கற்பிதனுய் = கேசாக்ரபாகத்தின் சததமபாகமாகக் கற்பிக்கப் பெற்றவனுகி, சோதனத்தானே நிரவயவன் எனச்சமர்த்திதனுகித் தூலத் தன்மையின்மையினுதல், புத்திசூக்குமத்தன்மை யுபாதிக சூக்குமத்தன்மையின் முடிவினுதல் இத்திருஷ்டாந்தம் ஆழுலது அணுபரிமாணத் தன்மையில்-ஆகாதாம், அதற்கு அவதிகத்தன்மை யுண்மை யினுலும், " அதுவும் அநந்தியப் பொருட்டுக் கற்பிக்கப் பெறும் " என்னும் சுருதியின் மூரண்பாட்டை யடைதலானும் எனவுணர்க. சர்வத்தினும் வியதிரிக்தனுகி யுள்ளோன்யான் எனவுண்டா மிவ்வுணர்ச்சியானது சுபமான இரண்டாவது அகங்கிருதியாம். இதனுனே ஆறுவது பூமியையடைந்துள்ள ஜீவன்முக்தனுக்கு இதுமோகுப் பொருட்டேயாமலது பந்தப்பொருட்டாகாதாம் எனக்கருதப்பெறும். யாவர்தாம் சப்தம ஞானபூமிகையில் ரூடரோ அவர்களிடத்தே ஜீவனம் வேரோடாற்றுற் பெறப்படாமையின் யாதுகற்பிக்கப் பெறுமோ, வாஸ்தவம் அலதாமோ அதுகற்பமாத்திரம், கற்பிப்பவனுற் ருனுதல், உணர்பவனுற்ருனுதல், பிரத்தியகூடமாக அனுபவிக்கப் பெருமையின்; ஆகலின் அத்தியந்தம் அசத்துவத்தால் அகங்காரமென நாமமாத்திர பரிசேடத்தால் அகங்கார அபிதைமாத்திரமாம்-தோன்மாத்திரம்.

(ச.) வாலினும் = வானுனியினும், சற்ருகி = சதபங்கற்பமாய், செகங்களுக்கய லாய் = சகலத்துக்கும் வியதிரிக்தமாய், அகஞ்சுத்தார்த்த மாகியயாம், மற்றைய ஆங்காரமாகும் = துவிதீயமான சுபாகங்காரமாம்! இஃலையிரண்டும் = இத்தன்மையான இரண்டகங்காரமும்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) மூன்ருவ்தைக் காட்டல்:—கரவென்பது.

கரசரணுதி மட்டா நானிது வென்றுகாணுங்
திரமதுதானே மூன்றும் கங்கரஞ் செகத்தோர்க் கெல்லாம்
முரியதாமிகவும் பொல்லா தற்பவ மென்னு நச்சு
மரமெழு மூலமாகும் வருந்தியு மொருக்க வேண்டும். 19

(ப - ரை.) கரசரணுதி மட்டாம் இது = பாணி பாதாதிமாத்திரமாய இத்தேகமே, நான் என்றுகாணும் திரமதுதானே = அகமென்னு மிந்திச்சயவடிவமித்யா அபிமானமே, மூன்ருமகங்காரம் = திருதீய அகங்காரமாகும், செகத்தோர்க் கெல்லாம் உரியதாம் = இது இலௌகிகமேயாகும், மிகவும் பொல்லாது = அத்தியந்தம் துராத்மாவாம், உற்பவ மென்னும் = சமுசாரமென்னும், நச்சமரமெழும் = விஷவிருக்ஷம் விருத்தியாம், மூல மாகும் = காரணமாகும், வருந்தியும் ஒருக்கவேண்டும் = வெகுபிரயத்தனப் பட்டும் தெடுக்கவேண்டும். (52)

(ஸ்ரீ-வீர.) கரங்கான் முன்னளவே யாமிதுயான் என்னுமிப் பிராந்தி மூன்ருவது அகங்காரமாம், லௌகிகமேயாம், துச்சமேயாம், துராத்மாவாய இது பெரும் பகையே யாமாதலின் தள்ளத்தக்கதேயாம்.

(ச.) கரசரணுதி மட்டாம் = பாணிபாதாதி மாத்திரமாகிய, நானிவனென்று காணும் = இவன் நான் என்றுணரும், திரமதுதானே = நிச்சயமே, உற்பவம் = சம்சாரம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) மூன்ருவ தகங்காரத்தின் கொடுமையைக் கூறிவெல்லும் உபாயத்தை விளம்புல்:—கொடிதென்பது.

கொடிதிது கொடிதுசாலக் கொடிதிதன் கொடுமையாலே
முடிவதும் முயிர்களெல்லா மோகமுற் றறிவுகெட்டார்
கடிதிலவ் விரண்டிலுஞ்சு கடிந்திதெவ் வளவுவிட்டாய்
படிவுறவ் வளவேயெய்தும் பரமமாந் தற்பதார்த்தம். (14)

(ப-ரை.) கொடிதிது கொடிது சாலக்கொடிது = மிகமிகவு முபத்திரவத்தையே தரத்தக்கதாயிது, இதன் கொடுமையாலே =, இவ்வகங்காரத்தினது கொடூரத்தினாலே, முடிவது முயிர்கள் எல்லாம் = முடிவில்லாத சகலபிராணிகளும், மோகமுற்று அறிவு கெட்டார் = மயக்கமடைந்து உணர்விழந்தார், கடிதில் = விரைவில், அவ்விரண்டிலு லும் = முன்னியம்பிய இரண்டுவித அகங்காரங்களானும், கடிந்து = கண்டித்து, இது = இம்மூன்றுவது அகங்காரத்தை, எவ்வளவு விட்டாய் = எத்தனை நன்குரியாகித்தாயோ, படிவுறவ்வளவே = தூலாகங்காரம் அடங்கிய அத்தனையே, பரமமாந்தற் பதார்த்தம் எய்தும் = மேலாகிய தற்பரம் பொருள் கிடைக்கும்.

(ஸ்ரீ-வீர.) இம்மூன்றுவது அகங்காரத்தானே அழிக்கப்பட்ட ஜந்துவானது மறு படியும் அபரிச்சின்ன சுபாவத்தானே ஆவிர்ப்பாகத்தை யடைவதில்லை; ஆகலின் இதைப்போலும் பெரும்பலப் பகையே கிடையாதாம், ஆதிவியாதிகளாய பலவகைப் பெருந்துயர்களே மீவதுமொன்றிலதாம். சுபாவத்தானே அநாதிகாலந்தொடங்கிச் சம் பந்தித்திராநின்ற இத்தத்துரகங்கிருதியானே கஷ்டகிருத மதியராய் அதாவது துர்வாச வளர்த்தி னைப்பிரசய துஷ்பிரவிருத்தியாதி சம்பாதனத்தானே பீடிதசித்தராய், உலகர் சங்கடங் களிலேயே மூழ்காநிற்பர். ஆயின் எவ்வகையானே அதனினின்றும் ஜந்துவிடுபடு மெனின் ? உரைத்தல்:—கடிதில் என்பது. சிட்டங்களென முன்புகன்ற எத்தாய வகங் காரங்கள் உளவோ அவற்றோடு கூடியதாய், மமதைப்பிரயுக்த இராகாதி தோஷங்களே முற்றிலும் கெடுப்பதாய், இச்சர்வான்மபாவ அகங்காரத்தின் கண்ணும், லோகப்பிர சித்த தேகாத்ம பாவாகங்காரம்போலத் திடமுடையதாய், ஜந்துவானது ஹிரண்யகர்ப்ப பகவானுயாதல் ஈசுவரனுயாதல், சூயமாகவே பாவனையாற் சம்பன்னமுற்றுத் தேகாகம் பாவாகங்கார முக்தத்தகைமையை யடையாநிற்கும். அந்தியப் பிரஹ்மநிஷ்டர்களின் சம்மதமும் இவ்வண்ணமேயாகும், அந்தியதேகாத்மபாவ அகங்காரம்போல நிரூடதமங்க ளாய் ஆதிய இரண்டகங்காரங்களேயும் முதலி லங்கீகரித்து, தேகமல்லேன் எனவிசா ரத்தானும் நிர்ணயித்து, அவ்வகங்கார வர்ஜனத்தைச் செய்யவேண்டும் என்பது பழைய மகத்துக்கட்கும் சம்மதமாம். ஆகலின் முதலில் அலௌகிகங்களாய இரண்டகங்காரங் களேயும் அங்கீகரித்துத் துக்கதர்யினியாய் லௌகிகமாயுள்ள திருதீய அகங்கிருதி யைப் பின்றியாகிக்க வேண்டும். இது இயம்பிய பொருளேயே மீண்டும் அனுவதித்து பச சங்கரித்ததாம், இதன்கண்ணியம்பிய உபாக்கியானமும் நிதர்சனமாகக் காணலாம்:— இத்துரகங் கிருதியுலன்றே தாமவியாளகடர் மூவரும் அத்தோ, கதைகளிலும் கேத த்தை வினவிக்கும்படியான அத்தகைய தசையைப் பெரிதடைந்தனர். இருவிஞக்கள் இனிது விடைபெற்றபோது ஸ்ரீ இராமர் பொருளான் மூன்றுவதகங்கார நிவிருத்தி பல விஞத்தன்மையானே முடிவுபேறுற்ற மூன்றுவது விஞவில் அத்தியவசியம் தெரியத் தக்கதாய அத்தகைய புருஷஸ்திதிவகை வேறுபாடுகளே விஞதல்:=ஹேபிரஹ்மந் ! சித்தத்தினின்றும் இத்திருதீயமாய லௌகிக அகங்கிருதியைத் தியாகித்துத் தனக்கித மாய ஏத்திதிப் பிரகாரங்களைப் புருடன் அடைவன் ? ஹே இராகவ ! இம்மூன்றுவதகங்

காரத்தை முதலில் முற்றினும் விடுத்துத் தொலைக்கவேண்டும். இத்துக்கதாயினீயாய அகங்காரத்தைத் தொலைத்தபின்னர், எங்ஙன் எங்ஙன் சர்வாகம்பாவத்தால், சுத்தாகம் பாவத்தால், சிரவணகுருகீசுரஷாதி பரமாகவாதல், சப்தபூமிகைப் பேதங்களிற்றூஞ தல், எவ்வெவ்வகையானே நிலைபெறுதல் கூடுமோ அங்ஙன் அங்ஙன் சொரூபசுக அபிவ் யக்திமேன்மை லாபத்தால் பரம்பொருளேயே யடையாநிற்பன்,

(ச.) கொடிதிது கொடிதுசாலக் கொடிது என்பது கவிநாயகர் கருத்து, இதன் கொடுமையாலே = பரிமிதாகார தேக விடயமான இத்துரகங்காரத்தால், கடிதிது = இவ்வகங்காரம் வருத்தத்தாலும் நீக்கற்கரிதாம், அவ்விரண்டினுலும் = சர்வான்ம கோகம் சர்வாதீதோக மென்னும், அவ்வளகீகமாய்ச் சிரேட்டமான அவ்விரண்டகங் காரங்களையும் அங்கீகரித் தவைகளால், இது = துக்கத்தைத்தாரா நின்ற லௌகிகமான மூன்றுவதாகிய துரகங்காரத்தை, எவ்வளவு = எப்போது, கடிந்து படிவுறவிட்டாய் = இராகவா நீ அழித்துவிடுவாயோ, அவ்வளவே = அப்போதே, பரமமாந்தற்பதார்த்த மெய்தும் = அடையப்படும், முத்தியடையப் படுமென்பதாயிற்று, ≠ எவ்வளவு = எம் மாத்திர மெம்மாத்திரம், அவ்வளவே = அம்மாத்திரம் அம்மாத்திரம் தற்பதமடையப் படும் என்றுமாம். அறிவுகெட்டார் என்னும் அபிப்பிராயத்தானே அடியோடு இதனை விட்டொழித்துப் பரமாங்காரத்தைப் பழகவேண்டும் என்பதாம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) சர்வாகங்கார நீக்கத்தை யுபதேசித்து, மோகூடத்தின் முக்கிய உபாயத்தை மொழிதல்:—ஏற்றமாமென்பது.

ஏற்றமாமகங்காரங்க ளிரண்டினுற் பரமமெய்தி
யூற்றமா மவற்றைநீக்கி யோரகங் கரமுமின்றி
யாற்றலா னிற்றியென்னி லறவுயர் பதமதாகுந்
தோற்றுட னெனைனமை சுருதிகள் சொல்லுமுத்தி. (15)

(ப - ரை.) ஏற்றமாம் அகங்காரங்கள் இரண்டினுல் = உயர்ந்தன வாயமூன் மொழிந்ததான அகங்காரங்கள் இரண்டின் பயிற்சியினுலும், பரமமெய்தி = பரமதற்ப தத்தையடைந்து, ஊற்றமாம் அவற்றைநீக்கி = தற்பதமடைவதற் கேதுவாயிருந்த அவ் விரண்டையும் அகற்றி, ஓரகங்கரமுமின்றி = சர்வாகங்கிருதிவர்ஜிதனுய், ஆற்றலால் நிற்றியென்னில் = திடமனதுடன் நிதிதெறுதியேல், அறவுயர் பதமதாகும் = அதியுச் சபதத்தையே யடையாநிற்பாய், தோற்றுடல் நானெனுமை சுருதிகள் சொல்லும் முத்தி = உடலில் நசையுடன் பிரதீதியாகும் அகமென்னும் அபிமானத்தைச் செய்யா மையே உபநிடதங்கள் உரையாடும் மோகூமாம்.

(ஸ்ரீ - வீர.) உரைத்ததையே விரித்துரைத்தல்:—இரண்டினுலென்பது. முன்னர் மொழிந்தனவாய ஆதிய இரண்டகங்கார திருஷ்டிகளையும் பாவித்துக்கொண்டே யிருக் கும் அநகனுகியபுருடன் பரமமான தற்பதத்தையே பற்றுகிற்பன். பின்னர் அவ்விரண் டையும் நன்குதியாகித்துச் சர்வாகங் கிருதிகளையும் வர்ஜித்துச் செய்தவனுகி நன்கு நிலைபெறுக, அவ்வாறு செய்தலா லவன் மேலுக்கு மேலாயுள்ள பதத்தையே யடையா நிற்பன், சுகமாயிருப்பன். நூறுமுறை யெனினும் கல்லதே சொல்லுகவென்னும் நியா யம் பற்றி மீண்டுந் தேகாத்மபாவனைத் தியாகருணங்களைக் கீர்த்தித்துக்கொண்டு அத னுவசியகத்தன்மையை யுணர்த்தல்:—தோற்று என்பது எப்போதும் எல்லாமுயற்சி யாலும், பரமானந்தபோதப்பொருட்டு இயம்பிய இம்மதியானே, லௌகிகமாய துரகங் கிருதியை வர்ஜனஞ் செய்யவேண்டும், வேண்டவே சரீர ஆஸ்தைமயமாய், ரூபபாவ

மாய், இருக்கும் எத்துரகங்காரமுளதோ அதன்வ்ஜனம், அத்தியந்தபரம சிரேயசாம், இதுவே பரமபதமுமாம், ஆராய்ச்சியின் மிகுதியிஞனே இந்த லௌகிகமாயதூல அகங் கிருதியைத் தியாகித்துவிடின் அம்மகான் இருப்பினும் விவகரிப்பினும் இழிவை யெய்து வதேயில்லை.

(ச.) பரமம் ஆனதற்பதத்தை யெய்தி, அவற்றை = அவ்விரண்டையும், நீக்கி, தூரகங்காரமுமின்றி = சர்வாகங்காரவர்ச்சிதனும், ஆற்றலானிற்றியென்னில் = இராகவா நீ இடமாயிருக்கின், பதமதாகும் = முத்தியடையப்படும், தோற்றிட ஞனெஞமை = மூற்கூறிய தூரகங்காரத்தை வர்ச்சித்துச் சரீரத்தில் விளங்கும், மகாபுண்ணிய ஹேது யாது அது யோகசாதனமாதலின் சுருதிகள் சொல்லு முத்தி = பரமபதமாம், இதுவே யதற்குச் சாதனமாதலின் மற்றொன்றும் பரமசிரேயசன்றும், என்றதாயிற்று. திரண்ட பொருள்:—மூற்புகன்ற தூரகங்காரத்தை வர்ச்சித்து எச்சரீர அவஸ்தையுளதாமோ அது மகத்தாயபுண்ணியத்தின் ஹேதுவாம் யோகசாதனத்தன்மையாற் பரமம் சிரேயசு பரமபத மென்பதூஉம் இதுவே அயலன்றுதற்சாதனத்தன்மையான்.

(ஸ்ரீ-வீர - அ-கை) ஞானவிவேகங்களின் அபாவம் உளதாயவழி நிர்வாசனைத் தகைமை நேர்ந்தபோதினும் தீப்பயிற்சியானே கெடுக்கப்படும், அவை மிகத் தாட்டிய மாயையினஞ "அவனுக்குத் தேவரும் அளித்திடாரிடரை, அவனிவர் தமக்கும் ஆத்துமா வாதலின்" என்று மறையறைந்தநிஜ்சே தேவரானும் மீண்டும் பந்தஞ்செய்யமுடியாதாம் என்னும் பொருளில் பீமபாசதிடரியாயத்தை யினிதுகாட்டத் தொடங்கல்: இத னென்பது.

இதனியல் புரைக்கக் கேண்முன் னிசைத்துள தாமன்முன்னே
ரதமுற மடிந்தபின்ன ரிணையசம்பரன் வேஞித்து
மதமுறு மிமையோர்சேனை வதஞ்செய்வா னுபாயந்தன்னை
விதமுற வினையவாறு நினைந்தனன் விஞ்சைவல்லான். (16)

(ப - ரை.) இதனியல்பு உரைக்கக்கேள் = இதனது தன்மையை நன்கு கவிலச் சிர வணஞ்செய்தி, முன் இசைத்துளதாமன் முன்னோர் = பூர்வம் புகன்ற தாமாதி மூவ ரும், அதமுற மடிந்த பின்னர் = கண்டங் கண்டமா யழிந்தபின்பு, அணைய சம்பரன் வேஞித்து = அம்மாயா வல்லவனை சம்பராசுரன் மிகச் சினக்து, மதமுறு மிமையோர் சேனைவதஞ்செய்வா னுபாயத்தன்னை = வெற்றிபெற்றுக் கர்வமடைந்துள்ள தேவ சேனையை அதஞ்செய்யும் பொருட்டு என்னுபாயமென்பதை, விதமுற = நானுவிதமாக, இனையவாறு = இத்தன்மைத்தாய், விஞ்சைவல்லான் = மாயையிற் பெருஞ்சமர்த்தனை அத்தயித்தியேந்திரன், நினைந்தனன் = எண்ணுவானுயினன்.

(ஸ்ரீ - வீர) விசாரத்தானே யகங்கிருதியைவிட்டு என்பதாதியாக வருணிக்கப்பட்ட பொருளில், தாமாதிகள் சென்றதன்பின், அச்சம்பராசுரனுடைய சம்பத்தான் மேருச திருசமான நகரத்தில் நடந்ததேயாய விருத்தாந்தத்தைக் கூறுவாம் கேட்டி! வருணித்த பிரகாரமாக, சரற்காலத்தில் அப்ரமண்டலம்போல, மரியாதைமாறிய சமஸ்த சம்பரா நீதமானது விநஷ்டமாகிக் ககனத்தினின்றும் விப்பிரட்டமாய்க் ஜீழே விழவே, தேவ நிர்ஜித சைன்யத்தையுடைய அச்சம்பரன் சில வருடங்களைப்போக்கி மீனவும் தேவவதத் தின்பொருட்டு முயன்றவனுகிச் சிந்திப்பானுயினன்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அச்சிந்தையின் பிரகாரத்தையே கூறல்:—தானவ னென்பது.

தானவரென முன்னுஞ்செய் தாமனே முதலாமூவர்
ஞானமில்லாமையாலே நானெனதென்று பொய்யாய்
வானவர் போரின்மாண்டார் மற்றினி ஞானநன்னூற்
போனவர் விவேகத்தோராய்ப் புணர்ந்த மாயத்தாற் செய்வேன். (17)

(ப - ரை.) தானவரென = அசுரசேஞ்ஞாயகராக, முன் நாம் செய்=பூர்வம் யாம் சிருஷ்டித்த, தாமனேமுதலாம் மூவர்=தாம வியால கடர் என்னும் மூவரும், ஞானமில் லாமையாலே=பிரஹ்மவித்யா விஹீனராஹபடியினாலே, நான் எனதென்று பொய்யாய்= மித்தையாகவே தூரகங் கிருதியைப் பாவித்தவராய், வானவர் போரில் மாண்டார்= தேவர்களோடு மெதிர்த்த யுத்தத்திற் பொன்றிப்போயினர், மற்றினி = இப்போது வேறு, ஞான நன்னூற்போனவர் = அத்தியாத்ம சாஸ்திர மூணர்ந்தவராய், விவேகத் தோராய் = ஆன்ம அனுன்ம விவேகம் நிறைந்தவராயுள்ளவரை, புணர்ந்த மாயத்தாற் செய்வேன்=என்னிடத்திருக்கு மாயாசக்தியால் உண்டாக்குவேன்.

(ஸ்ரீ - வீர) எத்தாமன் முதலாய அசுரர் என்னுன் மாயையால் உண்டாக்கப் பெற் றனரோ, அவர் மூர்க்கத்தன்மையினாலே யுத்தத்தில் மித்தையாகவே தூரகங் கிருதியைப் பாவித்தனர். இப்போது மாயையினின்றும் உதயமானவராக அன்னியுதானவரைச் சிருஷ்டிப்பேன், அவரையும் அத்தியாத்ம சாஸ்திரஞ்ஞராகவும், விவேக மிகுத்தவராக வும் செய்வேன்.

(ச.) நான்செய்=நாம் மாயையினு லியற்றிய, பொய்யாய்=அசுத்தமான அவித்தை யையே பாவித்தவராய், ஞானநன்னூற் போனவர்=அத்தியான்ம சாஸ்திரஞ்ஞர், விவே கத்தோராய்=விவேகசகிதராய், வேறு தானவரை நாம்.

ஸ்ரீ - வீர - அ - கை.) வருமவர் மகிமைகினைந்து சிருஷ்டித்தல்:—மெய்யென்பது.

மெய்யுணர் வுறுதலாலே வெறும்பொய் யாமகங்காரத்தி
னையுறுர் விண்ணேர்சேனை நலிவுற வெல்வரென்னு
மையுறு மனத்தினெண்ணி மாயையா லவரைச்செய்தான்
மொய்யுறு வேலைதந்த மொக்குள்போன் மூவர்வந்தார். (18)

(ப - ரை.) மெய்யுணர்வுறுதலாலே=தத்துவபரிஞானத்தினாலே, வெறும்பொய்யா மகங்காரத்தில் னையுறுர்=அத்தியந்தம் மித்தையான அகங்காரத்தில் அழுந்தி யுழியார், விண்ணேர்சேனை நலிவுறவெல்வர்=தேவர் சைன்யங்களை மூதுருகாட்டிப்பயந்து ஓடி விடும்படிசெய்து செயிப்பர், என்னு=என விவ்வண்ணம், மையுறுமனத்தின் எண்ணி ॥ =மிகவுந்தெளிந்த சித்தத்திற் சிந்தித்து, மாயையால் அவரைச்செய்தான்=மாயாசாமர்த்தி யத்தால் அத்தகையரை யாற்றினுன், மொய்யுறு வேலைதந்த மொக்குள்போல் மூவர்வந் தார்=தரங்கங்கள் நிறைந்து சப்திக்கும் வாரிதிபடைத்த புற்புதங்கள்போல மூன்றுபேர் வந்தனர்.

(ஸ்ரீ - வீர.) உண்டாக்கப்பெறு மவர் தத்துவபரிஞானத்தினாலே மித்தியாபாவ னையினின்றும் விடுபட்டவராய், அகங்காரத்தை யடைந் தழியார், அத்தேவரையும் வென்றுவிடுவார்; என்றிவ்வண்ணம் மகாமதியினாலே சிந்தித்துத் தைத்தியேந்திரன் அத் தகைய தானவர்களை, வரப்பிராப்தி லித்யாபல வசிகிருத அவித்தை வடிவமாயையி னாலே, வாரிதி புற்புதங்களைச் சிருஷ்டித்தல்போலச் சிருஷ்டித்தான்.

(ச) மெய்யுணர்வு = தத்துவஞானத்தை, வெறும்பொய்யாம்=மித்தியபாவனையாலாகிய, நலிஞ்ஞேற = வதங்க, வெல்வரென்ன = செயிப்பரென்று, தைத்தியேந்திரன், மனத்தினெண்ணி = புத்தியினுற் சிந்தித்து, அவரை = அத்தன்மையான தானவரை, மொக்குள்போல்—புற்புதங்கள்போல்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வந்த மூவாது பெருமையைச் சாற்றல்:—அனேத்தையு மென்பது.

அனேத்தையு மறிந்தோர்தம்மை யறிவென வறிவாற் கண்டோர்
வினேத்தொட ரிலாதோர்ஒன்றின் விருப்பமும் வெறுப்புமில்லோர்
நினேத்துள நிகழ்காலத்தி லெய்திய நிலையினிற்போர்
தினேத்துணை யெனினுமைய மிலாதவர் தெளிவுசான்றோர். (19)

(ப - ரை.) அனேத்தையும் அறிந்தோர்=முற்றையு முணர்ந்தவர், தம்மையறிவென வறிவாற்கண்டோர் = தங்களுடைய சொரூபத்தைச் சித்துருவமென விவேக திருஷ்டியாற் பார்த்தவர், வினேத்தொடரிலாதோர்=பாவசம்பந்தமற்றவர், ஒன்றின் விருப்பமும் வெறுப்பும் இல்லோர்=ஒருபொருளிலேனும் ஆசையாதல் துவேஷமாதல் இல்லாதவர், நினேத்துள நிகழ்காலத்தில் எய்தியநிலையில் நிற்போர் = எண்ணிய வர்த்தமானகாலத்தில் அடைவுற்றபடியே விவகரிப்பவர், தினேத்துணையெனினும் ஐயமிலாதவர் = அணுவளவேனும் சந்தேகமில்லாதவர், தெளிவுசான்றோர் = ஆன்மாவைச் சாக்ஷாத்கரித்த வுத்தமர்.

(ஸ்ரீ - வீர.) அம்மூவரும் எல்லாமறிந்தவராயும், அறியவேண்டியதை யறிந்தவராயும், ஆசையற்றவராயும், பாவமற்றவராயும், வந்து பொருந்தியதை மாத்திரம் செய்பவராயும், ஆன்மாவையே பாவித்துக்கொண்டிருப்பவராயும், உத்தமராயும், இருந்தனர். ஏகவிஞ்ஞானத்தானே சர்வவிஞ்ஞான முண்டாதலின் சர்வஞ்ஞரென்றதாம் அறியவேண்டிய ஆத்மதத்துவத்தை யறிந்திருக்குந்தன்மையானே வீதராகாதி விசேஷணங்களாம்.

(ச) தம்மை=தமது சொரூபத்தை, வினே=பாவம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அவர்கள் நாமங்களையும், நாமங்கட்குத்தக்க நடக்கையையும் நவின்று போர்க்கேவுதல்:—பேரிஞரென்பது.

பேரிஞல்வீமன் பாசன்றிடனெனப் பிரிக்கப்பட்டோர்
சீரிஞ லுலகையெல்லாந் திருணமாய்த் தேருஞ்சுத்தர்
போரிலே போமினென்று சம்பரன்புகலப் போகி
நேரிலா வமரரோடு நெடுஞ்சமர் புரியலுற்றார். (20)

(ப - ரை.) பேரிஞல் = நாமத்தால், வீமன் பாசன் திடன் எனப் பிரிக்கப்பட்டோர் = பீமன் பாசன் திடன் என்பதாக இனிது குறிப்பிக்கப்பெற்றோர், சீரிஞல் = பிரஹ்மவித்தையின் பெருமையினுல், உலகையெல்லாம் திருணமாய்த் தேரும்சுத்தர் = அசேஷமான ஜகத்தையும் பட்டதருமபுக்குத் துல்லியமாய்ப் பார்க்கும் பரிசுத்தர், போரிலே போமினென்று சம்பரன்புகலப்போகி = சமரிற்சென்று தேவரைச் சாய்மின் என்று சம்பராசுரன் ஆணையிடச்சென்று, நேரிலா வமரரோடும் நெடுஞ்சமர் புரியலுற்றார் = ஒப்பில்லாத தேவரோடும் உவமையில்லாத பெரும் போரைச் செய்யலாயினர்.

(ஸ்ரீ - வீர.) அம்மூவருள் பீமன் = கம்பீரசொரூபஷிட்டன், பாசன் = சதாசொரூபமாகவே யிலங்குபவன், திடன் = திரப்பிரஞ்ஞன், என்னும் காமங்களாற் பரிவாஞ்சிதராவர், சர்வப்பிரீபஞ்சத்தையும் சாம்பியசொரூபோலக் காண்பவர், பவித்திரமான இருதயமுடையவர், அத்தகைய அத்தயித்தியர், மழைகாலத்தில் மேகங்கள் மின்னிக் கர்ச்சித்துக் கோலாகலத்துடன் வீண்னை மறைப்பவேபோல, ஊர்த்தபுவனமுற்று ஆயுதங்களை வீசிக்கொண்டும் கர்ச்சனைசெய்துகொண்டும் அம்பரத்தை யாச்சாதனம் செய்தனர்.

(ச) திரணமாய் = துரும்புபோல், சுத்தர் = பாவனசீலர், அவர் சம்பரன் என்னுந் தைத்திய இந்திரன் போகி = அம்பரத்திற்சென்று.

(ஸ்ரீ - வீர - அ - கை) அம்மூவரும் போரியற்றலேயும் அன்னர் பெருமையையும் புகலல்:—எண்ணிலா—பன்மையாம் என்பன.

எண்ணிலா வருடம்வெம்போ ரியற்றின ரிவர்கணெஞ்சிற்
றுண்ணென வெனதியாஞந் தோற்றர வுதித்தபோது
நுண்ணறிவாலே யாமாரென்றுற நோக்கலோடும்
புண்ணியமிலாதோர் வாழ்வுபோலது பொய்யாய்ப் போகும். (21)

பன்மையாம் விசாரத்தாலே படராகங்கார மற்றோர்
சன்மமே மரணமேயென் றஞ்சுறு சலிப்பிலாதோர்
நின்மல மெளிதின்வந்த பொருள்கொள்வோர் நிகழ்ந்தவெல்லாந்
தொன்மையா நவமாங் கண்ணுற்றுகளறச் சமமாய்க் காண்போர். (22)

(ப - ரை.) எண்ணிலாவருடம் = வெகுவருட கணங்கள், வெம்போரியற்றினர் = அமரகணங்களோடும் கொடுஞ்சமரைச் செய்தனர், இவர்கள் நெஞ்சில் = இம்மூவர் உள்ளத்தில், துண்ணென = திடுக்கென்று, எனது யானும் தோற்றரவு உதித்தபோது = மம இதம் அகம் என்னும் வாசனை இளம்பியபோது, நுண்ணறிவாலே = சூக்குமவிசார திருஷ்டியினலே, யாமார் என்று உறநோக்கலோடும் = நாம் யாவர் இஃதென்னே என்பதாக. அழுத்தமாய் காடியவுடனே, புண்ணியமிலாதோர் வாழ்வுபோல் அது பொய்யாய்ப்போகும் = தருமமற்றவரது ஜீவனம் போனதுபோல அவ்வத்தியாசமும் அத்தியந்தம் மித்தையாய் ஒடிவிடும்.

பன்மையாம் விசாரத்தாலே = பலவகை விசாரத்தாலே, படராகங்காரமற்றோர் = வந்த அகம்பாவமகன்றோர், சன்மமே மரணமேயென் றஞ்சுறுசலிப்பிலாதோர் = ஜன்ம ஜராமரணங்கள் உண்டென்னும் அச்சமேயின்றி யசலமானவர், நின்மலர் = இராகத்துவேடமின்றி மிகத்தெளிந்தவர், எளிதின்வந்த பொருள்கொள்வோர் = அதிசுலபமாகக் கிடைத்த வத்துக்களைக்கொண்டே விவகரித்துக்கொள்பவர், நிகழ்ந்தவெல்லாம் (கொள்வோர்) = வர்த்தமான மியாவற்றையும் (அநுசரிப்பவர்) தொன்மையாம் நவமாம் கண்ணல் துகள்அற சமமாய்க்காண்போர் = பிராசீனமாய் அற்புதமாய் இலங்கும் ஞான திருஷ்டியாற் குற்றமின்றிச் சத்ததம் ஒப்பாகப்பார்ப்போர், அம்மூவருமாவார்.

(ஸ்ரீ . வீர.) தேவர்களோடுங்கூட அம்மூவரும் அநேகம் சம்வற்சரங்கள் போரைப் புரிந்தனர், விவேகவசமாகவே யிருந்தனரன்றி அகங்காரத்தை யொருக்காலும் அணைந்திலர், அவர் தமக்கு எப்போதாவது உள்ளத்தில் அகம் மம இதமென்ன வாதனை எழும்புமாஞல், இஃதென் யாமார் என வுண்டாம் ஆராய்ச்சியினல் அப்போதே அது அசத்தியத்தன்மையை யடைந்துவிடும். அகங்காரமற்றவராயும், ஜாமாரணபயம் இல்லாதவராயும்,

கிடைத்தபொருட் கொண்டியற்றுபவராயும், தீரராயும், வர்த்தமான அனுசாரியராயும், நித்தியம் அச்சுத்தப்பிரியராயும், அன்னியரை ஹதஞ்செய்தபோதினும் அதஞ்செய்தோ மென்னும் அபிமானமற்றவராயும், வாசனைக்கூட்டத்தால் வசீப்புருமல் விடுபட்டவ ராயும், காரியங்களை யியற்றியபோதினும் கருத்திருத்துவதில்லாதவரும், ஆகியே போர் புரிந்தனர்; ஆயின் அவர்கட்குச் சங்கீர்த்தத்திற் பிரவிருத்தியுண்டாயது யாங்ஙனம் எனின்? இங்ஙனமாம், பிரபுவாகிய சம்பரனுடைய திருஷ்டியானே இதுகாரியம் அவனுக்கஞ்ஞத் தன்மையுண்மையின், பிரபுவின்காரியம் ஆகலினிது செய்யத்தக்கதாம் என்றெண்ணிச் சங்கீர்த்தற்பரர்களாய், இராகத்துவேடமற்றவர்களாய், எப்போதும் சமதிருஷ்டி யுடைய வர்களாய் இலங்கிய அம்மூவரும் தேவசேனையை ஹதஞ்செய்யப் பிரவிருத்தித்தனர். சேவகர்களாய் இருப்பவர்கள், சத்தாகவாதல் அசத்தாகவாதல் இருப்பினும் பிரபுவின் காரியம் அவசியம் ஆற்றத்தக்கது, என்பது நியதியாம் என்னும் ஹேதுவினுற் சமரிற் றற் பரர்களானார்கள், பலாபிலாஷையின்பொருட்டு ஆயிலர்கள் என்பதாம்.

(ச) எனதியானும் = இஃதெனது இவன் நான் என்னும், தோற்றாவு = வாசனை பேதங்கள் உதித்தபோது = எப்போது உதித்ததோ அப்போது, நுண்ணறிவாலே யாமா ரென்றுறநோக்கலோடும் = சொச்சொரூப விசாரவேதுவினுல், அது பொய்யாய்ப் போகும் = அவ்வாதனைகள் அசத்தியத்துவமடையும், அவர்கள் பிரஹ்மவித்துக்களாத லால், ஞானத்தினுல், அகங்கை மமதைகள், இன்றென்பது பொருள்.

நின்மலர் = இராகத்துவேடமின்மையர், நிகழ்காலத்து, எளிதின்வந்த பொருள், கொள்வோர் = ரசிக்குந்தீரர்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அம்மூவரால் அமரர்சேனை வெந்திட்டோடி ஸ்ரீமந்நாராயண னைச் சரணடைய அவராலவர் மோக்ஷமடைதல்:—ஆதல்—அடையென்பன.

ஆதலால் வீரரான வவர்களா லமரர்சேனை
காதலாற்புசித்து மாய்க்குங் காமுகர் செல்வம்போலப்
போதலே புரிந்துதிக்கிற் போயொளித் துலகமுண்ட
மாதவா சரணமென்றே மாயனைச்சேர்ந்த தன்றே. (23)

அடைக்கலம் புகுந்தவாணர்க் கஞ்சலென் றபயநல்கி
விடைத்துவந் தமரின்றோ தும் விண்டுவோ டரும்போர்செய்து
படைக்கல நேமியேவப் பாய்க்கன றீய்க்கத்தீய்ந்து
தொடைத்துழாய் மார்பன்வாழுந் தூயவைகுந்தம் புக்கார். (24)

ப - ரை. ஆதலால் = மேற்கூறிய ஞானகுணசம்பன்னராதலினுல், வீரரான அவர்க ளால் = அதிதீரவீரசூரர்களான அம்மூவரால், அமரர்சேனை = தேவசைன்யம், காதலாற் புசித்துமாய்க்கும் = ஆசையால் அளவுகடந்து போகித்துக் கெடுத்துக்கொள்ளும், காமு கர் செல்வம்போல = ஆசாவான்களது ஐசுவரியம்போல, போதலேபுரிந்து = ஓட்டமே யெடுத்து, திக்கிற்போயொளித்து = திசைகளிற்போய் மறைந்து, உலகமுண்ட = பலவுல கங்களைப்பற்றிப் பவளத்திருவாயில்வைத்த, மாதவா = இலக்குமிகாயக, சரணமென்றே = தேவரீரே சரணரதியென்று, மாயனைச் சேர்ந்ததன்றே = மகா மாயாவியாகிய ஸ்ரீபக வானை அப்போதே அடைக்கலம் புகுந்ததது. அன்று ஏ அசை யெனினுமாம்.

அடைக்கலம் புகுந்த வாணர்க்கு = சரணரதியடைந்த தேவர்கட்கு, அஞ்சலென்ற

பயம் நல்கி = பயப்படாதீர்கள் என்று அபயஸ்தந்தருளி, விடைத்துவந்து கோபித்து எழுந்தருளிவந்து, அமரில் = போரில், மோதும் = போர்புரியும், விண்டுவோடு = ஸ்ரீமகாவிஷ்ணுவோடு, அரும்போர்செய்து = அம்மூவரும் சம்பராசுரனும் அருமையான யுத்தத்தைப்பற்றி, படைக்கலநெடியோவப் பாய்கனல் தீய்க்கத்தீய்ந்து = சர்வாயுத சிரோரத்நமாகிய சக்கிராயுதத்தை ஸ்ரீபகவான் ஏவியருள அதனினின்றும் எழுந்த அக்கினிஜ்வாலையாலே தஹிக்கப்பெற்றுப் பஸ்மமாகி, தொடைத்தழாய்மார்பன்வாழும் = துழாயலங்கல் திருமார்பில் வேய்ந்த ஸ்ரீயப்பதியெழுந்தருளியிருக்கும், தூயவைகுந்தம் = பரிசுத்தபரமபதத்தையும் ஸ்ரீவைகுண்டத்தையும் முறையே, புக்கார் = அடைந்தனர்.

(ஸ்ரீ - வீர.) அத்தெய்வசேனையானது, வீரர்களாய பீமபாசதிடாதி தானவர்களானே, போக்தாக்களானே தமந்நின்ன இலக்குமி, வேகமாக வசீகரிக்கப்பட்டு சேவாதிவால் அயிலப்படுவதேபோல, ஹதமாக்கப்பட்டது, அயிலப்பட்டது, தம்வயப்படுத்தப்பட்டது, பஸ்மமாக்கப்பட்டது. ஸ்ரீ கங்கையானது இமயமலையினின்றும் விழுந்து ஓடிவதையென்னக் கீர்வாண வாகினியானது, பீமபாசதிடர்களானே தூளாக்கப்பட்டுத் துன்புற்று அதிவேகத்தோடும் விழுந்தடித் தோடிப்போயது. வாதத்தினாலே பீடிக்கப்பட்ட அப்தமாலிகையானது சைலத்தைச் சரணடைவதேபோல, அந்தச் சுர அரீகீ = சைன்யம், பாற்கடலிற் பள்ளிகொண்டருளும் ஸ்ரீ பகவானுகிய தேவதேவனைச் சரணடைந்தது, விடபுருடரானே வலுவிற் புணர்வதற்காய்ச் சூழப்பெற்றதாற் பயந்துள்ள ஒண்டியாயிருக்கும் இரமணியை அவள் நாயகன் தேற்றுவதேபோல, அசுரர்களானே அச்சமடைந்த அமரசேனையை ஹரியானவர் ஆசுவாசமாற்றி யருளினர். பின்னர் சௌரிசம் பரர்கட்குத் தாருணமான யுத்தமான துண்டாயது, கற்பாந்தத்திற்போல அகாலத்திலும் இனிதெழுந்து செல்லும் குலாசலங்களேயப்போர் உடைத்தாயிருந்தது. அச்சமரில், பலவாகனத்தையுடைய தைத்தியன் இறந்தனன், ஸ்ரீநாராயணரால் ஹதம்பண்ணப்பட்ட சம்பரன் வைஷ்ணவபுரியை அடைந்தனன். "மூவுலகிறையா யாழி முதிர் சனர்த்தனனுன்மோத, யாவர்தா மசுரர்போனர் யாழி போன் மொய்ம்பகேட்டி, ஆவவ சேவரு மாயனரும்புர மடையலானர், தேவன் வெஞ்சினமும் நல்லவரமெனத் திகழுமன்றே" எனச் சாஸ்திரமுமுளதாம். அவ்விடயமான அமரில்; பீமபாசதிடாகளாகிய அவர்களோ, பவனனுலே தீபங்கள்போல ஸ்ரீமகாவிஷ்ணுவினுலேயே விதேக கைவல்யத்தை யடைந்தனர். அவர்கட்கும் சம்பரனுக்கேபோ லசைவுற்ற தேசார்த்தாகதியை நிடேதித்தல்:—சாமி யத்தன்மைமையடைவுற்ற தீபங்கட்குப் போங்கதியறியப் பெறுதலேபோல, நிர்வாசனையே யுடையவர்களாயிருந்த அம்மூவர்களும் சாந்நிலையடைந்தபோது இவர்தங் கதியறியப் பெறவில்லை. கதிகாரணம் வாசனையேயன்றே, அஃதின்மையின்கதி யாண்டைய தென்க. நிர்வாசனத்தன்மை யுண்மையின் அவர்கட்குக் கதியின்மையினுனே கதியறியப் பெறவில்லையென்பதாம். "பற்றுளனெனவனவன் பயில் வினையோடும் பற்றுதலடைவன் எவன் மனம் பற்றறும் பற்றுறவடைத லெங்ஙனமவனே" என மறையு மிருக்கின்றது.

(ச.) அவர்களால் = வீமாதி தானவர்களால், போதலேபுரிந்து = இமயகிரியினின்றும் விழாநின்ற கங்கைபோல அடிபட்டோடி, சேர்ந்தது = வாயுவாற் பீடையுற்ற மேகக் கூழாஞ் சயிலத்தை யடைவதுபோ லடைந்தது. விடைத்துவந்து = பெருங்கோபங் கொண்டெழுந்தருளி, விண்டுவோடு = க்ஷீரசாகர சயன தேவனோடு, அத்தயித்தியர், அரும்போர்செய்து, படைக்கலநெடியோவ = அம்மாயன் சக்கராயுதத்தை யனுப்ப, பாய்கனல் = அஃதுமிழும் அக்கினிச்சுவாலை. 23—24.

(ஸ்ரீ - வீர - அ - கை.) முதலிய கதையைப் பிரதிருதத்திற் பொருத்தி யுபசங்கரித்தல்:—மற்றென்பது.

மற்றினி யிந்தவாற்றால் வாதனையாலே பந்தம்
பற்றுறு மதனைநீங்கிற் பந்தம்போம் விவேகத்தாலே
யுற்றறி வுண்மைசேரி லுளத்தில் வாதனைபோம் போனு
லற்றமில் சித்தநெய்தீர் தீபம்போ லாகுமன்றே. (கூ 5)

(ப - ரை.) மற்றினி யிந்தவாற்றால்=நிர்வாசனையையுடைய மீமாதிகள் மோகூமே. யடைந்தவிதனால், வாதனையாலேபந்தம் = வாசனையினாலே பந்தமாம். பற்றுறு மதனை நீங்கில் = பற்றுற்ற அவ்வாதனையகலில், பந்தம்போம்=கட்டகலும், விவேகத்தாலே= பகுத்துணர்வானே, உற்று அறிவு உண்மைசேரில் = ஞானத்தையடைந்து சத்தியத்தைச் சார்ந்துவிடில், உளத்தில் வாதனைபோம்=சித்தத்திற் சேர்ந்துள்ள வாதனைதீரும், போனால் = தீர்ந்தொழியின், அற்றமில்சித்தம் = குற்றமற்ற நெஞ்சகம், நெய்தீர் தீபம் போலாகும் = தைலமில்லாத விளக்குப்போல ஆய்விடும். அன்று ஏ அசைநிலை. அன்றே=வாசனைபோன ஜீக்கணமே யெனினுமமையும்.

(ஸ்ரீ - வீர.) ஆகலின் வாசனையாற் பத்தமாம், நிர்வாசனை மனமுக்தமாம், ஹே ராகவனே! விவேகத்தானே நிர்வாசனைத்தன்மையை அவசியம் நீ சம்பாதிக்கவேண்டும். அச்சம்பாதனையின்கண்ணே யாதுகொலோ வுபாயமெனின்? அதனைக்கூறல்:—உற்றறிவென்பது. எவ்வாறிருக்குமோ அவ்வாறான அருத்தகோசரமாகச் சம்யக்காரு லோகனத்தால் இரத்தினத்தீத்தை போல சாக்ஷாத்காரம்போல நீண்டபோ தாராய்ச்சியினிரந்தரப் பழக்கத்தாலேயுண்டாய சாக்ஷாத்காரத்தால் வாசனையத்தியந்தம் லீனமாம், வாசனை விலயமாயெவழி மனமானது தீபம்போலும் காசத்தையடையாகிற்கும். சம்யக்காலோகனப் பிரகாரத்தை யிப்போது காட்டுவாம்:—பூர்ணமாகிய பரமார்த்த சத்திய சிதாத்மாவாண்டு எவ்விடத்திருஷியத்தைப் பாவிக்கின்றதோ அது ஒரு சிறிதுமே, மெய்யேயல்லவாம், ஆகலின் அத்திருஷியத்தின் பாவனைவடிவதரிசனமும் திருஷிய விசேஷிதாகாரமாக இலவேயிலையாம் என்பதான, ஸ்வப்பிரகாசசின்மாத்திர பரிசேடமாபித்தரிசனமே சம்யக்தர்சனமாம். ஆன்மாவே யிவ்வுலகமுழுவதும், யார்தான் எதைத்தான் எங்குதான் பாவிப்பதோ, முதலிரண்டும் திரிபுடிநிடேதம், மற்றது ஆதாரநிடேதம், ஆகலின் பாவனையென்பதுமே கிடையவே கிடையாது, இது அதன் சமஸ்காரநிடேதம், அங்ஙனமாய இதுவே சம்யக்தர்சனமாம். ஹே ராகவ இவ்வீக்ஷணம்பற்றிப் பீமாதியர்போலச் சுகமாகவாழ்தி, நினக்குபதேசித்த இது எமக்குமுன் எமது பிதாவாகிய ஸ்ரீ பிரஹ்மதேவரால் அருளப்பெற்றதாம்.

(ச.) ஆகும்=சமமாம். (கூ 5)

பீமபாசதிடர் கதை முற்றிற்று. (கூ 3991)

ஆகதிருவிருத்தம்.

தாகூரன் கதை.

(ஸ்ரீ-வீர - அ கை.) ஆண்மமோக்ஷிக்கிரகமே முக்கிய உபாயம், வேறுய பேர்களைத்தியாகம் சம்சாரங்கம் விவேகம் ஆத்மபோதரூட சமாதி பயிறல் என்பன வாதியெல்லாம் அதன்பொருட்டனவேயாம் என்னுங் கருத்தால் அதனையே முதலில், அவித்தை

யின் கர்த்திவாய்ந்த உல்லாசங்களால் விஷயோன் முகமாய தமதுமனத்தை யாவர் தான்கு வென்றனரோ அவரே மகாசூரர் சாதுக்கள் யாவற்றையும் வென்று விளங்குபவர் ஆவர் என்பதாகப், பிரசம்சைசெய்துகொண்டு, மாயுப்பத்தையொழிக்கும் மநோநாச உபாயத் தைக் கூறத்தொடங்கல்:—ஒழியாத என்பது.

(ச - அ - கை.) முன்பு வீமாதி கதையில் அகங்கார பரித்தியாகம் புருடார்த்தத்தைக் கொடுக்கச் சமர்த்தமாமெனப்பட்டது, இனித் தாசூரன் கதையில் அதனை ஸ்தாபித்தற் காக ஜகத்திற்கு மாயாமயத்துவம் விசதமாகச் சொல்லப்படுகின்றது, விசதம்=தெளிவு அதில் இப்போது உபாய முபதேசிக்கின்றார்:—ஒழியாத என்பது.

ஒழியாததுயர் மாயையெனு மாபத்தையொழிக்க மனநாசமோ ருபாயமாகு, மிழியாத மெய்ஞ்ஞானப் பொருளையெல்லா மியம்பக்கேட் டயராமவிதயங்கொள் வாய், பழியானபோகத்தி னிச்சைதானே பந்தமாமதுவிடலே பரமமாகும், வழி யான பன்னூலாற் பயன்கொலென்ன வருந்தாம லிவ்வழியே வருதல்வேண்டும்.(1)

(ப - பை.) ஒழியாத துயர் மாயை எனும் ஆபத்தை = எப்போதுமே துன்பத்தை விளைவித்துக்கொண்டிருக்கும் பொய்யாய சமுசாரமென்னப்பட்ட சர்வ உபத்ரவமீவதை, ஒழிக்க = அடியோடுங் கெடுக்க, மனநாசம் = தனது மனதின் நிக்கிரகம், ஒருபாய மாகும்=ஒன்றே யுபாயமாக உள்ளதாம், இழியாத=பயனிற் குறையாத, மெய்ஞ்ஞானப் பொருளையெல்லாம் = சத்தியஞான சர்வஸ்வ முழுவதையும், இயம்ப = உபதேசிப்ப கேட்டு=ஒருமையுடன் சிரவணித்து, அயராமல்=சமுசயாதியான் மயங்காமல், இதயம் கொள்வாய்=உனது இருதயத்தில் அவதாரணஞ்செய்தி, பழியான=நிந்தைக்கிடனான, போகத்தின் இச்சைதானே = போகங்களிலுள்ள இச்சைமாத்திரமே, பந்தமாம் = கட் டாம், அதுவிடலே பரமமாகும்=அதன் தியாகமே மோக்ஷமெனப்பெறும், வழியான= மார்க்கங்களான, பன்னூலால் = அன்னிய பல சாஸ்திரசந்தர்ப்பங்களால், பயன்கொல் என்ன = யாது பிரயோஜனங்கொல்? வருந்தாமல்=ஆயாசப்படாமல், இவ்வழியே வரு தல் வேண்டும்=இதனையே செய்துதீரவேண்டும்.

(ஸ்ரீ - வீர.) சர்வ உபத்ரவதாயியாயுள்ள இச்சம்சார துக்கத்திற்குத் தனது மன தின் நிக்கிரகரூபமாய ஓரேயுபாயமுளதாம். மநோநிக்கிரக உபாயங்களுள்போக இச்சைத் தியாகம் முக்கியம் எனக் கூறல்:—இழியாத என்பது. ஞானசர்வ ஐசுவரியத்தைக் கேட் பாயாக, கேட்டுத்தான்பின் இருதயத்தினிது துணிதல் வேண்டும், போக இச்சைமாத்தி ரமே பந்தந்தருவதாம், அதனது தியாகம் மோக்ஷமெனப் பெறும். அன்னிய சாஸ்திர சந்தர்ப்பங்களால் என்னே பிரயோஜனம், யாவற்றையும் ஒழித்து இதனையே செய்தல் வேண்டும்.

(ச.) ஒழியாததுயர்=அகவரதந் துக்கமயமான, மாயையெனும்=அசத்தியமான சம் சாரமென்கின்ற, ஆபத்தை=சர்வோபத்திரவத்தையும், ஒழிக்க=நிவர்த்திசெய்ய, மன நாசம்=தன் மனத்தினது நிக்கிரகம், ஒருபாயமாகும்=ஒன்றே உபாயமாம், இழியாத= குறையாத, மெய்ஞ்ஞானப்பொருளையெல்லாம்=மெய்ஞ்ஞானமாகிய சர்வசொத்தையும், போகத்தின் இச்சைதானே=போகேச்சைமாத்திரம், பரமமாகும்=மோக்ஷமாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அப்போக இச்சைத் தியாகத்தின் கண்ணும், விடயங்களிற் றோடதரிசனத்தினுல் அச்சமுண்டாதல் உபாயமாம் எனக் கருதிக்கூறல் :—இன்ப மென்பது.

திதிப் பிரகரணம்

சுலோகம்

இன்பமிதா மின்பமிதா மென்றவெல்லா மெரியென நஞ்சென்னினைகை,வேற்
றுத் தாழ்வாய்த், துன்புறுபோகம் பலகாற் றேர்ந்துநெஞ்சிற் ரூயாமலெளிதருந்
திற் சுகமேயாகும், வன்புபயின் மனத்தோற்ற நாசமாகு மனத்தினது நாசமே
மகத்தாந்தோற்றம், நன்பரமஞானிக ணெஞ்சிறந்துபோகு நடைவிலங்கா மறி
விலர்க்கு நலைகூர் நெஞ்சம். (2)

(ப - ரை.) இன்பம் இதாம் இன்ப மிதாம் என்றவெல்லாம் = யாது யாது சுவாது சுவாது எனத் தோற்றுகிற்குமோ அவ்வியாவற்றையும், எரியென நஞ்சென நினைக = வன்னி யெனவும் விட மெனவும் பார்த்தல் வேண்டும், ஏற்றத்தாழ்வாய் = விஷமமாய், துன்புறுபோகம் = துயர்மயபோகம், பலகால் தேர்ந்து = மீண்டும் மீண்டும் நன்கு விசாரித்து, நெஞ்சில் தோயாமல் = மனத்தால் நன்குபரித்தியாகித்து, எளிதருந்தில் = சுலபமாகச் சேவிப்பதாயின், சுகமேயாகும் = ஆனந்தத்தையே யளிப்பதாகும், வன்புபயில் மனத்தோற்றம் நாசமாகும் = அடங்காமற்றிரியும் மனத்தினது அப்புதயம் அழிவதாகும், மனத்தினது நாசமே மகத்தாந்தோற்றம் = மநோநாசம் மகோதயமாம், நன்பரமஞானிகள் நெஞ்சிறந்துபோகும் = நல்ல மேலான ஜீவன் முத்தரது மனம் நாசத்தைநண்ணும், நலைகூர்நெஞ்சம் அறிவிலர்க்கு = மலின வாசனாவிசிஷ்ட மனமானது அஞ்ஞானிகட்கு நடைவிலங்காம் = காலிற்பூட்டிய சங்கிலிக்கொப்பாம்.

(ஸ்ரீ - வீர) இவ்வுலகின்கண்ணே யாதுயாது சுவாதாமோ அவ்வியாவற்றையுமே, விஷம்,வன்னியென்னவே காணல் வேண்டும். ஆண்டாராயாமல் துரிதமாக விடயத்தியாகஞ் செய்யின் துயரத்தைத் தருவதேயாகும், விசாரித்துக் குருசாஸ்திரங்கூறிய முறையாகத் தியாகஞ் செய்யினோ, தொடக்கத்தில் துயரமாயிருப்பினும், பிற்போதில் மகத்தாஞ் சுகத்தை யளிக்குமெனல் :—ஏற்றமென்பது. விசாரமில்லாமல் விடயங்களின் அபோகமாய தியாகம் விடயமாம், மறித்தும் மறித்தும் நன்காராய்ந்து சகஜப்பியாசத்தால், மேலே முறையாக போகவாசனையைப் பரித்தியாகித்துச் சேவிக்கப்பெறுவதாயினோ பரிபாகத்தில் இன்பத்தையே யினிதீவதாம் காமாதி பிரவிருத்தியற்ற மனமானது யாதுசெய்யுமெனின்? கேட்டி! ஆத்மாவாது? எத்தகையதுதான்? எச்சாதனங்களாற்ருண் கிடைக்கும்? கருமங்களாற்ருனு அல்லது ஞானத்தினுற்ருனு? எத்தகையதுதானந்தஞானம்? அதனது சாதனங்கள்தாமெவை? என்னே, நானுவிதவாதிகளால் அயல்வகையாய் நிரூபிக்கப்பெறுதலின்; என்பனவாதி வெகுவித சந்தேகங்களேயாய உக்கிரமான கெட்ட மைந்தரையுடையதும், சாகோப சாகைகளாய்ப் பிரிந்திலங்கும் நானுமநோரத ஊரம்பங்களோடு கூடியதும், திருஷ்ணைகள் வடிவ அநேக மனைவியரையுடையதும், லாலசரீர பஞ்சரத்தையுடையதும், ஆகிய மனமாகீயதனது சொரூபத்தைக்கெடுத்து, தனது ஈசுரனுய பிரத்தியக்காத்மாவைச் சம்பந்தித்துள்ள ஜீவன் முக்திவடிவ பரமபுருடார்த்தத்தைச் சாதித்துவைக்குமென்றுணர்தி. மனமானது எம்முறையில் தன்னை நாசஞ்செய்யும் எனக்கடாவின் விடைதருதும், முதலில் மனது தனதுபுஷ்டிக்கேதுக்களாய சத்தரு மித்தரு அசாது சாது ஆதிவிகற்பங்களை விடுகின்றது, யாங்ஙனமெனின்? இவ்விகற்பங்களில் தனதுற்பத்தத்திற்போல நிக்கிரகத்தினும், சமர்த்தத்தன்மையை நன்கு சிந்தித்தென்க. அதன்பின் தேகாகாரமான தனது கற்பிதரூபத்தைத் திருணம் போலும் தியாகிக்கின்றது; எவ்வளவேதான் தேக அகம்பாவத்தால் வாசிதமாய மனமானது தேகாகாரமாமோ, அவ்வளவே, தேக அநுகூலபிரதிகூல விடயங்களில் இராகத்துவேடாதிகளாலுளவாம் ஆயிரக்கணக்கான விகற்பங்களானே வளராநிற்கும் அஃ

தொழிந்து கூணமாயினே கூணத்தை யடையும் என்பது கருத்து. அற்றேல், தன் ஞசத்திற்கு அப்யுதயத்தன்மை யின்மையின், மாறுகவோ, அசர்த்தரூபத்தன்மை யுண் மையின், ஆண்டு மனம் பிரவிருத்திப்பது யாங்ஙனம் எனின்? கூறல்:—வன்பென்பது. மநோநாசம் அப்யுதயம் ஆம்; இஃதபிப்பிராயம்:—மனம் சுதந்திரமதாக அப்யுதாயத்தை யிச்சிக்கின்றதில்லை, மற்றே, ஆத்மபூதத்தன்மையான், ஆத்மபூதத்திற்கும் மநோபாவம் அசர்த்தமாம் அதன் நாசமோ, சர்வ அசர்த்தவிநாசரூபத்தன்மையானும் நிரதிசய ஆநந்த சொரூப பரிசேடத்தானும் அப்யுதயமே யென்பதாம். பிரத்தியக் காத்மாவிற்கோ, சொரூபலாபத்தான் மகோதயத்தன்மை நிர்விவாதமேயாமென்னுங் கருத்தாலுரைத் தல்:—மனத்தினதென்பது. மநோநாசம் மகோதயமம். ஆயின் தேக அகங்காரத்தியாக மாத்திரஞ் செய்யத்தக்கதாம், பிரஹ்மான்மத்தன்மை ஞானத்தானே பிறங்கும்பயன் யாதுகொலா மாலோவெனின்? அதன்கண்ணிதுவாமெனல்:—சன்பரமவென்பது. பிரஹ் மாத்மைக்கியத்தை யுணர்ந்தவனது மனது நாசத்தை நன்கு நண்ணுகிற்கும்; அஞ்ஞனுக்கு அஞ்ஞானரூப மலமெனும் ஆவரணம் கெடாதபடியினால் அவன் மனம் மீளவும் உதித் துதித்து வளர்ந்துகொண்டே யிருக்கும்.

(ச.) இன்பமிதா மின்பமிதாமென்று = எந்தெந்தப்பொருள் இதமென்று மனதுக் குத் தோன்றுகிறதோ, அதெல்லாம் = அஃதனைத்தும், எரியென நஞ்சென = வர்ச்சி போலும், விடம்போலும், நினை = சந்தாப ஹேதுவாதலின் அஹிதமென்று விசாரிப்பாய், போகம் = விடயங்கள், பலகாற்றேர்ந்து = மாறி மாறி விசாரித்து, நெஞ்சிற்றேயாமல் = மனதினுற் பரித்தியாகஞ்செய்து, எளிதருந்தில் = சேவிக்கப்படின், சுகமேயாகும் = சுகத் தருவனவாம், வன்புபயின் மனத்தோற்றம் = மனத்தினது உதயம் = வித்தாரம்யாதது சொரூப தரிசனவேதுவன்றுதலின், நாசமாகும் = ஆன்மாவினது நாசமாம், மனத்தினது நாசமே = கைவல்லியவேதுவாதலின் ஆன்மாவினது மகத்தாந்தோற்றம் = மகோதய மாம். ஞானிகள் மனம் நாசமடையும், அஞ்ஞர்க்கு மனமே சிருங்கலேயா மென்றதாயிற்று.

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஞானியினது மனதை வியத்தலும் ஸ்ரீ இராகவர் ஜகத்தின் நிதியை விளைதலும்:—ஆனந்தமென்பது.

ஆனந்தநிராநந்த மிரண்டுமில்லை யசைவுமசை வின்மையுமா மவையுமில்லை, யீனந்தீர் சத்சதத்தின் றிவறிறுக்கெல்லா மிடையல்லஞானிமன மென்றலோடுந், தானந்தமிலா வறிவா யுலகின்மேலாந் தத்துவத்தி லுலகிருக்குந் தன்மைதன்னை, ஞானந்தான்வளர் பொருட்டா யுரைப்பாயென்று நாதனியம்பிடவசிட்டனவில்வ தானுன். (அ)

(ப - ரா.) ஆனந்த நிராநந்தம் இரண்டும் இல்லை = சுகாசுகமென்னும் இரண்டுமே அல்லவாம், அசைவும் அசைவின்மையும் ஆம் அவையும் இல்லை = சல அசலங்கள் இரண் டுமே அல்லவாம், ஈனந்தீர் சத்து அசத்து அன்று = கெடுதல் என்னுந் தாழ்மை யகன்ற சத்தேனும் அசத்தேனும் அலதாம், இவற்றுக்கெல்லாம் = கூறியவற்றிற்கெல்லாம், இடையல்ல = மத்தியும் அல்லவாம், ஞானி மனம் = ஜீவன் முக்தனது மனது, என்ற லோடும் = இவ்வாறு அருளவே, தான் அந்தமிலா அறிவாய் = தன்வடிவாய்ப் பரிச்சின்ன மில்லாத சிதாத்மகமாய், உலகின்மேலாம் = விசுவாதீதமாய், இலகுந் = தத்துவத்தில் = பர மான்மவஸ்துவில், உலகிருக்கும் தன்மைதன்னை = விசுவம் ஸ்திதமாக இருக்கும்பான் மையை, ஞானந்தான் வளர்பொருட்டாய் = போதமானது விருத்தியாதற் பொருட்டாக, உரைப்பாய் என்று = அருளிச்செய்வாய் என்று, நாதன் இயம்பிட = ஸ்ரீ இராமபிரான்

வீண்ணப்பித்துக்கொள்ள, வசிட்டன் னவில்வதானுன் = கூறியருளத் தொடங்குகின்றார் ஸ்ரீ வசிஷ்டபகவான்.

(ஸ்ரீ - வீர.) இவ்வியாவுமே, பந்தமோக்ஷதசையற்றதும், இருமை ஒருமையில்லாததும், ஆகிய பிரஹ்மசத்தையாம், என்னும் இதுவே பரமார்த்தத் தன்மையாம். எல்லா திருஷ்டிகளிலும் சம்பந்தமெய்தாததும், நிர்மலத்தகைமையின் அதிசயத்தானே சந்திக்கத் தன்னசமுற்றதும், இதனுனே மனத்தன்மையையற்றதும், ஆகிய மன்மானது இவ்வதிகாரி சரீரத்திலேயே பரப்பிரஹ்மத்தைக் காணும், அயலாறிதாம். இதனுனன்றே ஞானியின் மனமானது சுகாசுக, சலாசல, சத்தசத், திவற்றினிடையென்பனவொன்றும் அன்றும் எனப் பெறுகின்றது. இப்போது முக்கிய மாயுபிரகாரஞர்த்தமாஞ் சகத்திதி சொரூபத்தையறியும் வேட்கையுற்ற ஸ்ரீ இராகவர் விஞதல்ஃ—தாஞ்என்பது. ஹே பிரஹ்மந்! விசுவாதீதசிதாத்மாவின்கண் முன் வருணித்தவகையே விசுவமிருந்தபடியை, போதம் விருத்தியாதற்பொருட்டு மீளவும் கருணையால் அடியேற் குபதேசித்தருள வேண்டும்.

(ச) ஞானிமனம் = ஞானிகளதுமனது, வாசனையில்லாமையினுலும் விவகாரஹேதுவாதலினுலும், இஃதென நிரூபித்தற்காரிதாம், அஃதெங்ஙனமெனின்? ஆநந்தநிராகாந்த மிரண்டுபில்லை = ஜடமாதலின் ஆநந்தரூபமுமன்று, ஆநந்தாநுபவவேதுவாதலின் நிராநந்தமுமன்று, அசைவு மசைவின்மையு மாமவையுமில்லை = ஆன்மாவில் முக்கிய நிட்டையுடையதாதலின் சலமுமன்று, வெளியிலும் விளங்குவதால் அசலமுமன்று, ஈனந்தீர் சத்தசத்தன்று = சங்கற்பாதி அதன்காரியமின்மையினுலே சத்துமன்று, இந்திரியங்களுக்கு விடயங்களிற் பிரவிருத்திவருதலின் அசத்துமன்று, இவற்றுக்கெல்லா மிடையல்ல = பரஸ்பர விரோதமாயிற் பகாந்தரமுதியாதாதலின், ஆநந்தநிராநந்தாதிகளினது மத்தியமுமன்று, என்றலோடும் = பரஸ்பர விரோதமாயிற் பிரகாராந்தரத்திதி யின்மைதலின், அநிர்வசனீயம் ஞானியின் மனமென்றறியென்பது கருத்து. நாதன் = ஸ்ரீ இராமர், அந்தமிலாவறிவாய் = நித்திய சிதாகாரமாய், உலகின்மேலாம் = விசுவாதீதமான, தத்துவத்தில் ஆன்மாவின்கண், உலகிருக்குந்தன்மைதன்னை = இந்த விசுவத்திதிபெறுந் தன்மையை, ஞானம் வளர்பொருட்டு = போதம் விருத்தியாதற்கு, மீட்டும், உரைப்பாயென்றியம்பிட வசிட்ட னவில்வதானுன். நேர்ந்தவண்ணம் வெளியிலுமிலங்கலானே நியதமுமன்று என்றுணர்க.

ஸ்ரீ - வீர - அ - கை.) பிரஹ்மசத்தையினுலே ஜகத்தின்றிதி யாம் தனித்திலதாம், தனித்துத்தற் சத்தையானே உலகின்றிதி இருப்பதாகப் பிராணிகட் குணர்வுண்டாதலோ, பிரஹ்மசொரூபத்திதி யுணர்வின்மையின் நிபந்தனமேயாம், எனச் சமாதானிக்கும் வேட்கையுற்ற ஸ்ரீ வசிஷ்டபகவான் அதற்கொத்த வடிவதாய திருஷ்டாந்த மருளல்ஃ = வேறிலாதென்பது.

(ச - அ - கை) விசுவம் விவர்த்தபாவத்தாற் சிதான்மாவினிடத்து ஸ்திதி பெறுந் தன்மையைத் தெரிவிக்கும் இச்சையுடையராய்ச் சிற்சொரூபத்தை நிரூபித்தற்குத் தூலகூடியத்துவமெனல்ஃ—வேறிலாதென்பது.

வேறிலா தெவ்விடத்து மேவிநின்றுமேவாம லுண்மையினுல் வேறும்விண்போற்
கூறிலாச்சிற்பாவ மெங்குநின்றுங் கூறுபடுமவற் றொன்றுங் கூடிப்பற்றுப்
பேறிலாச் சங்கற்பமனைத்துமின்றிப் பேரின்றி யழிவின்றிப் பேதமின்றி
யூறிலா வாகாயங்கோடி கூருவுரித் தவற்றிலொரு கூற்றையொப்ப கொய்தாம்.(ட)

(ப - ரை.) வேறிலாது = அயலிலாமல், எவ்விடத்தும் மேவிநின்றும் = சர்த்தமா யிருந்தபோதினும், நுண்மையினால்=சூக்குமத்தன்மையானே, மேவாமல்=சம்பந்தமுறு மல், வேரும் = இலக்கியப்படுவதின்றிய, விண்போல்=ஆகாசம்போல, கூறிலாச் சித் பாவம் = நிரம்சமாகிய சித்தியற்கையானது, எங்கும் நின்றும்=எவ்விடத்திலும் நிறைந் திருந்தும், கூறுபடும் அவற்றொன்றும் = சாம்சிகப்தார்த்தங்கள் எவற்றோடும், கூடிப் பற்று = சம்பந்தித்துப் பற்றையடையாது, பேறிலாச்சங்கற்பம் = பயனற்ற எண்ணங் கள், அனேத்துமின்றி = யாவுமேயற்று, பேரின்றி=எந்நாமமும் இயையாததாய், அழி வின்றி=அழிவிநாசாத்மாவாய், பேதமின்றி=அபேதமாய், ஊறிலா ஆகாயம்=பரிசாதி யற்றிலுமேய மாயகனத்தை, கோடிகூறு உரித்து=நூறுகோடியங்கிசப்படுத்து, அவற் றில் ஒருகூற்றையொப்ப நொய்தாம் = அவ்வங்கிசங்களுள் ஓரங்கிசத்துக்குச் சமான மாகச் சூக்குமமாம்.

(ஸ்ரீ - வீர) வெளிப்படாதனவா யினீவருந் தரங்கங்கள் நீரின்கண்ணே யிருப்பன போலவும் வேருக இல்லாதனபோலவும், சித்துத்தத்துவத்தில், சிருஷ்டிகள் இருப்பன வாம், சத்துரூபமாய ஆன்மாவின் அன்னியத்தன்மையானும், தாமாக இருப்பின்மை யானும் இல்லாதனவாம். சித்தானதுயாண்டுந் தன்னிருப்பாலிருக்கும், அவ்விருப்பைப் பற்றி மற்றவை யொருவாறிருந்தால் இருக்கலாமேயலது தாமா யிராவாமென்பது கருத்து.

ஆன்மாவின் இருப்பிலேயே எல்லாவற்றின் இருப்பாயின் யாண்டும் ஆத்மா யாங்ஙனங் குறிக்கப்பெறவில்லையெனின்? ஆண்டு விடைதரல்:—நுண்மையினால் என் பது. எங்ஙனம் சர்வகத ஆகாசமானது சூக்குமத்தன்மையானே காணப்பெறுவதில தாமோ, அங்ஙனம் அங்கிசமற்று அதிசூக்குமமாய சித்துருவம் யாண்டுமிருந்தபோதினும் தெரிவதிலதாம். அதனது பிரதிபிம்பத்தன்மையும், அதன் அதீன காம சங்கற்ப நாம ரூபச்சேவையும் வாஸ்தவமாகவோமெனல்:—சங்கற்பமென்பது. சர்வசங்கற்பரகிதமும் சர்வசம்ஜ்ஞை விவர்ஜிதமுமாம் அவ்விச்சித்தானது அழிவிலாத வடிவதாம். ஆயின் ஜீவா திய நாமங்கள் யாதினாலாக்கப்பெற்றன வாமாலோவெனின்? இவற்றாலாமெனல் :— நன்றிதரு முண்மை முதற்பெயர்கள் பெற்றென்பது. இது சுலோகமுறையில் ஈண் டெடுத்துக்கொள்ளப்பெற்றது. அதுசேத்திய ஆபாசங்களால் ஆக்கப்பெற்ற நாமமுடை யதாம். சித்தினது சூக்குமத்தன்மையையும் விகத் தெளிவுற்றிருக்குந் தன்மையையும் பரியாலோசனைசெய்து பார்த்தால் ஆகாசமும் சதகுணந்தூலமும் அஸ்வச்சமும் ஆமெனல்:—ஆகாயமென்பது. ஆகாச சதபாக மமல சூக்குமமாம்.

(ச) மூன், விசுவத்திற்கு விவர்த்தபாவத்தாற் சித்வடிவமாக இருப்பதாகவே அத னைக் காட்டும்பொருட்டு, சித்சொரூபத்தை நிரூபிப்பார் முதலில் அதனது தூல்கூயத் தன்மையைக் கூறுகின்றார், என்ற அவதாரிகையில் வந்தவிவர்த்தத்தையும் அதனைச் சம்பந்தித்துவந்த பரிணாமத்தையும் இலக்கணத்தாற் றெரிக்தல்:—சுத்தி இரஜ தாகார மாக விவர்த்தமாவதுபோற் பூர்வரூபத்தைப் பரித்தியாகஞ்செய்யாது ரூபாந்தரத்தைச் சுவீகரிப்பது விவர்த்தமாம்; க்ஷீரம் ததியாகாரமாகப் பரிணமிப்பதுபோற் பூர்வரூபபரித் தியாகத்தால் ரூபாந்தரத்தைச் சுவீகரிப்பது பரிணாமமாம். ஸ்ரீ வசிட்டர்: விண் =சித்தி னைப் பிரகாசிக்கும் பூதாகாசம், வேறிலாதெவ்விடத்தி மேவிநின்றும்=சர்வகதமாயினும், நுண்மையினால்=சூக்குமத்தால், நிரவயவமாதலின், மேவாமல் வேரும்=ஆதலிற் குறிக் கக்கூடாததுபோல், கூறிலாச் சித்பாவம்=சித்துரூபப்பொருள், எங்குநின்றும்=சர்வக மாயினும் நிரம்சமாதலின், கூறுபடு மவற்றொன்றுங்கூடிப் பற்று = ஆதலிற் குறிக்கப்

படாது, பேரிலாச்சங்கற்ப மனைத்துமின்றி = சர்வசங்கற்பரகிதமாய், பெயரின்றி = சர்வ நாம விவர்ச்சிதமாய், சதகுணநிமலமாய். நூரு

(ஸ்ரீ-வீர - அ-கை.) சொச்சத்தன்மையில் ஞானிகளநுபவத்தை யுரைத்து, அதனனேயே ஆண்டுப் பிராந்தியினுற்கண்ட பாவவிகாரங்கள், அதற்கயலாக விலவாமெனல்:—நன்றியென்பது.

நன்றிதரு முண்மைமுதற் பெயர்கள்பெற்று ஞானிகள்பா னிமலமாஞான மாகி, யொன்றுமல வுருவான சூடும்பரூப மொன்றுகித் தனைத்தெரிவித் துணர்வே மெய்யாய்த், தன்றுணைச் சின்மாத்திரத்துக்கய லற்றிந்தத்தொத் தாமத்தாமய மாஞ் சகங்களெல்லாந், துன்றுதிரை முதலாகப் பிறந்தவெல்லாஞ் சூழ்கடலில் வேறுகாத் தொடர்ச்சிபோலாம். (5)

(ப - ரை.) நன்றிதரும் உண்மைமுதல் பெயர்கள்பெற்று = நண்மையைப் பயக்கும் சத்தியஞான அநந்த ஆநந்தாதிநாமங்களையடைந்து, ஞானிகள்பால் நிமலமாஞானமாகி = அறிஞர்களிடத்தில் நிஷ்கலசித்துருவமாகி,(அறிவிலாரிடத்தோ, ஒன்றும் = களங்க சகித மாய்ச் செறியும், மலம் = அஞ்ஞானம், உருவமான சூடும்பம் = அதன்காரியம், ரூபமொன்றுகி = அவைகளின் சொரூபத்தோடு ஐக்கியத்தையடைந்து, தனை = இலங்குந் தன்மைய தாகிய ஆன்மாவை, தெரிவித்து = தரிசிப்பித்து, உணர்வே மெய்யாய் = நிருபாதிக அறிவே திருமேனியாயிலங்கி, தன்றுணைச்சின்மாத்திரத்துக்கு = தனக்குத்தானேசமான மான விஞ்ஞானகனமாத்திரத்திற்கு, அயலற்று = வேறிலாமலே, இந்தத்தொத்தாமத்தா மயமாஞ்சகங்கள் எல்லாம் = பிரதியாகாநின்ற விசாலமான இந்நியனதென்னுந்தன்மை யான் எனதென்னுந் தன்மைமயமான நானுவித உலகங்களாவும், பிரதியாகும், எது போலாமெனின்?) துன்றுதிரை = கோர்த்தெழுங்கல்லோலம், முதலாக = நுரையாதிய வாக, பிறந்தவெல்லாம் = கிளம்பிய விசால நானுத்தகைமையாவும், சூழ்கடலில் = பூர்ண சலில ஆர்ணவத்தில், வேறுகா = அவ்வியதி ரேகமாகத் தோற்றும், தொடர்ச்சிபோலாகும் = திருஷ்டாந்தம்போலவாம்.

(ஸ்ரீ - வீர.) அறிஞரிடத்தே நிஷ்கலரூபமாம், சகலமாயினும் நிட்கலமான சம்சார சொரூபமியாண்டோ, அவ்வகையா மேகாத்மிய தரிசனசீலமுடையதாம்; இது வித்வத் தநுபவ அபிநயமாம். அமல்மென மூலபாடமாயிலை மாயாமலரகிதமெனப் பொருள் கொள்க. அலையாதிவிகாரங்கள் கடலின்வேறிலாதனபோலத் திருஷ்டியமல் விகாரங்கள் சித்தர்ணத்தினும் வேறுக இல்லையெனல்:—தன்றுணையென்பது, தரங்காதிமயமாய சலில ஆர்ணவத்தில் விசாலமாக விளங்கும் நானுத்தகைமை, அக்கடலினின்றும் எங்ஙனம் வியதிரேகமாகத் தோற்றுவதிலையோ, அங்ஙனம், பாவவிகாரிபோலவும் த்வத்தாமத்தா மயம்போலவும் சித்தர்ணவத்திற்றோற்றும் விசாலமான இப்பன்மை, சின்மாத்திர வியதிரேகமாக ஒருகாலும் பிரகாசிப்பதே கிடையாது.

(ச.) நன்றிதரு முண்மை முதற்பெயர்கள்பெற்று = அச்சித்துரூபம் அவாச்சியமாதலின் உண்மையாகச் சர்வநாமவிவர்ஜிதமாயினும், அவிநாசி, ஆன்மா, சுவாமி, சேதனன், என்பன முதலிய சத்தங்களாற் கற்பிதநாமங்களை யடைந்ததென்பது பொருள். ஞானிகள்பால் நிமலமாஞானமாகி = நிட்களங்கபோதரூபமாய, ஒன்று + தெரிவித்து = ஞான நிஷ்டைமூற்கூறினமையின் அஞ்ஞானிகள்பாற் களங்க ரூபத்தோடு. ஒன்றும் = பொருந்தும், அதனாலே, மலம் = அஞ்ஞானம், உருவானசூடும்பம் = அதன்காரியம், ரூபம் = அவைகளின் ரூபத்தோடு, ஒன்றுகி = ஐக்கியமுற்றுள்ளதனை = அத்தன்மையான ஆன்

மாவை, தெரிவித்து = அறிவித்து, அஞ்ஞானத்தற்காரியங்களோ டபின்னமான ஆன்மாவைத் தரிசிப்பிக்குமென்பது பொருள். மலசம்சாரங்களினது சொரூபத்தோடு அபின்னமான ஆன்மாவைத் தெரிவிக்குமென்பது கருத்து. இந்தச் சகங்களெல்லாம் = நீ நானெனும் ரூபமாய்விரிந்த இந்த ஞாதுத்துவம், தன்றனைச் சின்மாத்திரத்துக் கயலற்றுச் சத்தீமாத்திர மயமாமென்ப தந்நுவயம்:—அர்ணவத்திற் றரங்கபேனபுத்புதாதி சொரூபங்கள் கதிர்வியத்தால் விரிவாக விரிந்து ஞாதுரூபத்தகைமையவாகத் தோற்றிய போதினும் எங்ஙனம் அவ்வர்ணவத்தினும் அவ்யதிரேகமாகப் பிரகாசிக்கின்றனவோ; அங்ஙனம் த்வத்தாமத்தாமயமாயிலங்கும் விசால இஞ்ஞாதுமதங்களும், சித்தர்ணவத்திற் சின்மாத்திர அவ்யதிரேகமாகவே பிரகாசியாநிற்கும் என்பது மூலாநுசாரமாக அந்நுவயமாம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) சித்தானது, சேத்தியத்தை விளக்கின்றதென வெண்ணுதியோலாயின், ஞாதுத்ருத்வியம்பரவம் சித்துச் சித்தையே செனிப்பிக்கின்றதென வெண்ணுதி, சேத்தியம் அயலாகவில்லையென வெண்ணுதி, இவ்வண்ணம் மகாமாயவழி, அதனால் அறிவுக்குத்தன்பால் வியாபாரங் கூடாமையேயாய எதுவினால், இச்சித்சொரூபம் தன்பாலே நின்று கொண்டு ஒருநிமிதையு முண்டாக்கவில்லையென்றுபலமாம், அவ்விதபரமார்த்தநிருஷ்டியாம், அஞ்ஞனேயாகியும் ஞன்யான் என அபிமானமுற்ற அவனுக்கே, அல்லது, யாவன் அஞ்ஞனேயாவன் அவன் ஞன்யான் அல்லன் என அபிமானிப்பன், அவனுக்கே; சித்விய திரிக்தமாக சர்க்கங்களில் அயல் வர்த்ததெனவும், அன்னியமிருக்கின்றதெனவும் கற்பனையான துண்டாகின்றது என்று கூறும் வேட்கைவாய்ந்த ஸ்ரீ வசிஷ்டபகவான் அச்சித்தைத்தானே மீளவும் ஞானியஞ்ஞானிகளின் கற்பனையால் வருத்துரைத்தல்:—தினையென்பது.

தினைதரு பல்பிறப்பாகிக் கொடிதாய்ப்பொல்லாச் சுபாவமாந்தினை யறியாச் சுமடர்க்கென்றுந், தினையறிந்தோர்க் கொளியுருவா யெல்லாமொன்றுய்த்தானுகவனுபவிக்குந் தன்மையாலே, நினைவொடு செய்வோன் செய்கைசெயலிம் மூன்று நிகழ்விக்கும் பாவித்த நினைவுக்கெல்லா, மினையசுவையாய் நிற்கும் பிறவிப்போக மருந்துவோர்க் கப்போகமாகிநிற்கும். (6)

(ப - கை.) தினையறியாச் சுமடர்க்கு என்றும் = தம்முடைய சொரூபத்தை யுண்மையாயுணராத மௌட்டியர்க்கு எப்போதும், தினைதருபல் பிறப்பாகிக் கொடியதாய்ப் பொல்லாச் சுபாவமாம் = வீரைந்து துயரமேதரும் உக்கிரசமுசார கணகர்ப்பிணியாய் அசத்து இயற்கையதாம், தினையறிந்தோர்க்கு = தமது சொரூபத்தைச் சிவமாக வுணர்ந்த பெரியோருக்கு, ஒளியுருவாய் = பிரகாசரூபமேயாய், எல்லாம் ஒன்றுய்த்தானுக = சகல ஏகாத்மிகமாய், அனுபவிக்குந்தன்மையாலே = அநுபூதிவசத்தால், நினைவொடுசெய்வோன் செய்கைசெயல் இம்மூன்றும் நிகழ்விக்கும் = நித்தியம் கருத்தோடுசெய்யுங் கருத்தா முதலிய காரகக்கூட்டங்களையும் காரியத்தையும் பிரகாசிப்பிக்கும், பாவித்த நினைவுக்கெல்லாம் அனைய சுவையாய் நிற்கும் = எண்ணிய எல்லா எண்ணங்கட்கும் ஏற்றபடியாயரசமயமாயிருக்கும், பிறவிப்போகம் அருந்துவோர்க்கு அப்போகமாகிநிற்கும் = பலபோகிகட்கு அவ்வப் போகமாகிநின்றிலங்கும்.

(ஸ்ரீ - வீர.) அறியாதவரிடத்தில் அசத்துச் சுபாவமுடையதாகிக் கொடூரமான குணப்பக் கூட்டக்கருவாய்த்தாகி விளங்கும், அறிந்தவரிடத்தோ, பிரகாசரூபமேயாகிச் சகல ஏகாத்மிகமாகி யிலங்காநிற்கும். அச்சித்தினுக்கே ஜகத்பிரகாச யோகஜன்ம நிர்

வாககத்தைகமையை நிகழ்த்தல்: —வினைவொடு மென்பது அநாதிவசத்தால் சித்தியம் அருக்காதிகளையும் அவிர்விப்பதாம், சர்வஜ்ஞதங்கட்கும் விடயாகந்த ஹேதுவாய்ச் சுவாதாகி யிருப்பதாம், பவபோகிகளாய ஜீவர்கட்கு வாராகின்ற ஜன்மாதிகளில் நிமித்தபூதமாம். ஆநந்தத்தினின்றுமே உரமாயிவ் வுலகங்களெல்லாம் ஆகின்றனவெனச் சுருதியு மறைகின்றது.

(ச.) தனையறியாச் சுமடர்க்கு = அஞ்ஞர்க்கு, தனைதருபல் பிறப்பாகி = சம்சாரமுகமாய், கொடிதாய் = கோரமாய், என்பதற்கேது, பொல்லாச் சுபாவமாய் = இராகத்துவேடாதி களங்கமுடையதாதலின், தீவட்டச் சுபாவமாய், சம்சாரபரம்பரையினேது வென்பதுபொருள்: தனையறிந்தோர்க்கு = ஞானிகளுக்கு, என்று மொளியுருவாய் = விசுத்தஞானரூபமாய், எல்லாமொன்றாய் = சகலத்தினும் அபின்ன சுபாவமாய் = தாஞக வறிவிக்குந் தன்மையாலே, அவ்வவ்விடயாநுபவ வசத்தினால், வினைவொடு செய்வோன் செய்கைசெயலிம் மூன்று நிகழ்விக்கும் = கர்த்தா, கன்மம், கிரியைகளைப் பிரகாசிப்பிக்கும், : பாவித்த வினைவுக்கெல்லாம் = சகலபோக்கிய வஸ்துக்களினது, அனேயசுவையாய் நிற்கும் = இரசஞானவேதுவாம், பிறவிப்போகம் அருந்துவோர்க்கு = சம்சாரிகளுக்கு, அப்போகமாகி நிற்கும் = பிரவிருத்தி யேதுவாய், அறியாதவரிடத்தத்துக்க வியற்கையாயனே கோரமான சமுசாரசமுகத்தானே கருப்பவதியாம் = இத்தகையதாயிருப்பது அச்சித்தென்றறிக.

(ஸ்ரீ - வீர - அ-கை.) அஞ்ஞர்கட்கு ஜன்மாதி நிமித்தபாவமா யிருப்பினும், அறிஞரது திருஷ்டியானே கூடஸ்த அபரிச்சின்ன ஏகரூபமேயாம் அது எனல்:—அத்தமனமென்பது.

அத்தமனமுதய மில்லையெழு தனிற்றலயல் போதல்வருத லெனுமீனத்து மில்லை, யித்தலத்திலில்லையிலா திருக்கவில்லை யித்திறமாஞ் சித்துமலமில்லா மெய்யாய்ச், சுத்தமுறுதானே தன்னிடத்தினிற்குஞ் சொன்ன நெறியே சகமாய்ச் சொல்பேராலே, மெத்தவெகு ரூபமாந்தற்சுபாவம் விரிந்தெங்குஞ் சிற்பெயரால் விளங்கிநிற்கும். (7)

(ப - ரை.) அத்தமனம் உதயமில்லை = அஸ்தத்தையும் அடைவதில்லை உதயத்தையும் அடைவதில்லை, எழுதல் நிற்றல் அயல்போதல் வருதலெனும் அனேத்துமில்லை = எழும்புவதும் நிற்பதும் பிறவிடத்துக்குச் செல்லுவதும் வருவதும் என்பனவாதி பிறவெவையும் இல்லை, இத்தலத்திலில்லை = ஈண்டிருப்பதில்லை, இலாதிருக்க வில்லை = இல்லாமலுமில்லை, இத்திறமாஞ்சித்து = இத்தகைமைத்தாய அறிவானது, மலமில்லா மெய்யாய் = அமலாகாரமாய், சுத்தமுறுதானே தன்னிடத்தில் நிற்கும் = தூயதாய தன்பாற் சுயம் நன்னிலேபெறும், சொன்னநெறியே = கூறிய முறையே, சகமாய்ச் சொல் பேராலே = உலகமென்று சொல்லப்பட்ட நாமத்தாலே, மெத்தவெகுரூபமாம் = மிகமிகவும் விஜ்ரும்பணத்தை யடையும், தற்சுபாவம் விரிந்து எங்கும் சிற்பெயரால் விளங்கிநிற்கும் = அவ்வத்துவானது இயற்கையாய், சர்வகமாய்ச் சித்தென்னும் நாமத்தால் உதிதமாயொளிரும்,

(ஸ்ரீ - வீர.) ஒழிவதுமில்லை யுதிப்பதுமில்லை, எழுவதுமில்லை நிற்பதுமில்லை, வருதலில்லை போவதுமில்லை, இங்குள்ளதில்லை இங்கிலதில்லை, தங்கிய வறிவெனுந்தானும் வடிவே. அவ்விச்சித்தோ வமலாகாரமாம், செவ்விதிற் சுத்தனிற் சிறிந்து தானையும், இவ்விதம் விரிவாயிராகவ வுலகென, ஒவ்வியபெயரால் விவர்த்தமா யொளிரும், சித்வி

வர்த்தமதாயினும் பரமார்த்த திருஷ்டியானே சித்தேயாம், என்னே, ஒங்கியெரியுந் தீயி னீட்டத்தினின்றும் தீப்பொறி நிகழ்வதெனவும், ஓடியாடும் நீர்ப்பூரத்தினின்றும் திரை முதலியவை நிகழ்தல் போலவும், சர்க்கவிப்ரமங்களானே சித்தானது சித்தாகவேநிகழு மென்றுணரக. சுயம் சுத்தமேயாயினும், அவித்தையானேயாஞ்சர்க்க விப்பிரமங்க ளானே நன்றிலங்குதலே சர்க்ககருத் திருத்தசைமையாம், அயல்வகையா யிலதாமெனக் காட்டம் பொருட்டு அதற்குபயோகியாய் இரண்டு ரூபங்களேயியம்பல்:—தற்சுபாவமென் பது அது சுபாவமாகச் சித்து நாமத்தோடு நிகழும், வியவகாரங்கொண்டு யாண்டு மூள தாயுதிதமாம் வடிவதெனவும் உலவும்.

(ச.) இக்கிறமாஞ் சித்து,= அஸ்தமன மூதயமில்லை=நித்தியமாதலின், ஒடுங்காது, உதியாது நிர்விகாரமாதலின், எழுதல் நிற்றலும், நிஷ்கிரியமாதலின், அயல்போதல்வருதல் எனும் அனேத்துமில்லை, ஜீத்தலத்திலில்லை=நிராதாரமாதலின் இவ்விடத்திலின்று, இலா திருக்கவில்லை, பரிபூரணமாதலின் இவ்விடத்தின்றென்பதின்று, மலமில்லாமெய்யாய்= நிர்மலாகாரமாய், மெத்தவெகுரூபமாம் = பிரபஞ்சமாக விரியும், தற்சுபாவம் = தனது சுபாவத்தினுல், எங்கும் விரிந்து = சர்வமென்னும் பரிபூரணமாய், சிற்சக்தியால் = சித்தென்னு நாமத்தால், விளங்கிநிற்கும் = அஸ்தமனத்தை யடையாத அநந்தமிதரூப மாம். முன்மொழிந்த சித்து, அமலாகாரமாய்த் தன்னிடத்திலேயே நன்னிலையுற்று, இவ் விதம் விசுவப்பெயரான் நிரிந்தோங்கு மென்பது திரண்டபொருள். அச்சித்தேயாய பர வத்து, பரிபூர்ணமாகி எங்கும் மங்காவெளியா யிலகுமென்பது இயற்கையாம் என்றறிக.

(ஸ்ரீ - வீர - அ - கை.) இச்சித்தின் பெருமையையே பலதிறத்துரைத்து, இழிந்து வருமுறையை யினிதறிவித்தல்:—இன்னவென்பது.

இன்னசுபாவந்தானே யொளியாய்நிற்கு மிருளாகுமென் றுரைமீறில்கூறுந், தன்னுடைய தொழிலாலே தானேபூர்ண தத்துவம் விட்டிவனவனு னென்னுந் தன்மை, யுன்னியபாவனையாலே மெள்ளச்சிவ னுருவாகிக் குடும்பியெனு மூகத் தாலே, பன்னியநா நாத்துவத்திலழுந்திப் பாவாபாவம் பற்றுதல் விடலாம் பதத்தினிற்கும். (8)

(ப - ரை.) இன்ன சுபாவந்தானே = இச்சித் சொரூபமே, ஒளியாய் நிற்கும் = பிரகாசமா யிலங்கும், இருளாகும் = அப்பிரகாச மாயவிரும், என்றுரைமீறில் கூறும் = எகமாகி நிரங்கிசமாய் அங்கிசதாரியா யிருக்கும், தன்னுடைய தொழிலாலே தானே = கற்பனே யோகத்தானே சுயமாகவே, பூர்ணதத்துவம் விட்டு = அகந்த பதத்தினகன்று, இவன் அவன் நான் என்னுந் தன்மையுன்னிய பாவனையாலே = இவன் அவன்யான் என்னும் முன்னிலை படர்க்கைதன்மைப் பான்மையை யெண்ணிய சிந்தனையாலே, மெள்ள = மெதுவதாக, சிவனுருவாகி = அஞ்ஞபதத்தை யடைந்து, குடும்பியெனும் ஊகத்தாலே = சமுசார பூர்வகமாக, பன்னிய நாநாத்துவத்தி லழுந்தி = உரைத்த நானுத்தன்மையை மிகமிகவும் விருத்திசெய்து, பாவாபாவம் பற்றுதல் விடலாம் பதத் தில் நிற்கும் = பாவ அபாவகிரக உத்சர்க்கபதத்தில் ஸ்திதியையடையும்.

(ஸ்ரீ - வீர.) பரமார்த்தமாகப் பிரகாசமாய், யானதிகின்றிலேன் என்னும் விவகாரத் தானே அப்பிரகாசமாய், (இன்னணம் மேலுமுணர்க) நிரம்சமாய், அம்சதாரியாய், அவித் தையின் கண்ணே தற்பிரதிபிம்பமுற்று அவ்விலக்கணமாய விசால வஞ்சகலேடத்தாற் சுயம் அபரிச்சிந்நன்ன சொரூபத்தை யனுசந்தானஞ் செய்யாதது போலாய், யானிருக் கின்றேன் என்னும் பாவத்தானே ஜீவத்தன்மையைப் பையவடைவுற்று, சம்சாரி பூர்

வகமாக நாஞத்தன்மையாய இதுமென்மேலும் வளர்ந்தோங்கிவர, இஃதிருக்கின்றது இஃதில்லே யென்னும்பாவ அபாவங்கட்கும், இது கொள்ளத்தக்கது இது தள்ளத்தக்கது என்னும் இஷ்ட அநிஷ்டங்களின் கிரக உச்சர்க்கங்கட்கும், ஸ்தானமாகியதேகாத்ம பாவத்தில் அருந்திதியை வடைந்து நிற்கும்.

(ச) இன்ன சுபாவந்தானே = முற்கூறிய சித்தரூபமான பரம்பொருளே, ஒளியாய் நிற்கும் இருளாகும் = ஞான அஞ்ஞானரூபமாம், ஒன்றுகுமீறில் கூறும் = நிரவயவசாவ யவரூபமாம், தன்னுடைய தொழிலாலே = தனது சங்கற்பவசத்தினுல், தானே = சுவ யமே, பூர்ணதத்துவம் விட்டு = சொச்சொரூப ஸ்திதியை விடுத்து, பாவனையாலே = உபகிதாகார அபிமானத்தினுல், மெள்ள = மெல்ல, சீவனுருவாகி = ஜீவபாவத்தை யடைந்து, குடும்பியெனும் = சிற்பெயராஞ் சுபாவத்தாற் சம்சாரியென்னுங் கருத்தி னுல், பாவாபாவம் பற்றுதல் விடலாம் பதத்தில் = இது பாவரூபம், ஈதபாவரூபம், இது கிரகிப்பது விடுவிடுவது என்பதாகிய, இப்பேதரூபபதத்தில், நிற்கும் = ஸ்திதி பெறும். (8)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மேலும்விரியும் முறையை விரித்தல்:—அப்பதத்தென்பது.

அப்பதத்தினின்று புரியட்டகத்தை யளவிலைசவா லமைக்கு மமைத்திடாதா, மிப்பரிசினின்று ரவேவடிவமான வெழுபிறவி வகைமாலே யியற்றுமெங்கு, மொப்பரிய தற்பிரம சுபாவத்தாலே யுரைத்ததெலா மெழுமீண்டு மொடுங்கிப் போகு, மெய்ப்படிவமில்லாத விண்ணிற்கானல் விரிவதுபோற் சிதினினைவு விரிந்துதோன்றும். (9)

(ப-ரை.) அப்பதத்தினின்றும் = மேற்புகன்ற பதத்தினின்று, புரியட்டகத்தை = சூக்குமசரீரத்தை, அளவிலைசவால் = ஸ்ஷ்ந்த சதங்களால், அமைக்கும் அமைத்திடா தாம் = செய்யும் உண்மையிற் செய்யாதாம், இப்பரிசினின்றுரவே வடிவமான = இவ் வண்ணம் இதஸ்தூல பலாகாரமான, எழுபிறவி வகைமாலே யியற்றுமெங்கும் = எழுவ கைத்தோற்றமாம் சமுசார வலஞ்சுழி யெவ்விடத்துஞ் செய்யும், ஒப்பரியதற்பிரம சுபாவத்தாலே = உவமையில்லாத தனது பிரஹ்ம சுபாவத்தானே, உரைத்ததெலாம் எழும்மீண்டும் ஒடுங்கிப்போகும் = கூறியயாவையுமே மீளவும் வருவனவும் போவனவும் ஆம், மெய்ப்படிவமில்லாத விண்ணில் = ஆகாரமியாதொன்று மொன்றுத ஆகாயத்தில், கானல்விரிவதுபோல் = நிதாகத்தாற் சரித்துப்போல, சிதில்நினைவுவிரிந்துதோன்றும் = சித்தத்துவத்திற் சிருஷ்டிரூப திருஷ்டிகள் வித்தாரமாகி விளங்கும்.

(ஸ்ரீ-வீர.) அத்தியஸ்த ஆத்மபாவ புரியஷ்டக நூற்றுக்கணக்கான அசைவுகளால், விதிதிடேத கருமங்களால், போக்கியரூபஜகத்தை ஆற்றும், உண்மையாயோ ஆற்றுதாம். சித்சொரூபத்திதியே ஜகத்திதியாம், சித்திற்கே ஜகத்ரூபமாக அவஸ்தானத்தான், என வியம்பும் பொருட்டு, முன்மொழிந்ததை யநுவதித்தல்:—இப்பரி சென்பது, இவ்வனம் நிதாத ஆகாரங்கள் வாய்ந்த சர்வசம்சார்ய வலயங்களும் எங்கும் மீண்டுமீண்டும், பிர ஹ்ம சுபாவத்தால் வருவனவும் போவனவுமாம். நிராகாரமாய ஆகாயத்தின்கண் நிதாகத் தால், சரித்தானது = மிருக திருஷ்ணையானது, எழும்புவதென்னவே; இச்சிருஷ்டிரூப திருஷ்டிகள் = தேகாதி யெண்ணங்கள், நிராகார ஞானதத்துவத்தில் இலங்கா நிற்கும்.

(ச.) அப்பதத்தினின்று = மூற்கூறிய பதத்திற் றிதிபெற்றிருந்து, அளவிலைச வால் = அநந்த வீகற்பங்களால், புரியட்டகத்தை = மேற்கூறு மிலக்கணமுடைய சூக் ஷும சரீரத்தை, அமைக்கும் = விதிக்கும், அமைத்திடாதாம் = உண்மையாகக் காரணு

பாவமாதலின், விதியாததுவுமாம், இப்பரிசினின் ரூபப்பரிய தற்பிரம சுபாவத்தாலே அலவே வடிவமான = ஸ்திரசிலாகாரமான, எழுபிறவி வகைமாலே = சம்சாராவளிக ளென்னும் சர்க்கங்களே, எங்குமியற்றும் உரைத்ததெலா மெழுமீண்டும் ஒடுங்கிப்போ கும் = மெய்ப்படிவ மில்லாத = நிராபாசமான, விண்ணில் = வியோமத்தில், நிதாகாலந் தரம் = வெப்பத்தின் பின் னென்னிடத்தும், கானல் விரிவதுபோல் = விருஷ்டிகள் காணப் படுவனபோல, மழைத்துளிக ளென்பது வடமொழியருத்தம், மனநினைவில் — நிஷ்களங்க மான சித்தத்துவத்தில், சிருஷ்டிரூபமான திருஷ்டிகள், விரிந்துதோன்றும் = காணப் படுவனவாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வந்தபிராந்தியிற் றிட்டாந்த முரைத்து, ஆன்மாவை யறியு முறைமையையும் அதன் பெருமையையும் உரைத்தல்: = படர் என்பது.

படர்மதத்தாற் றனைப்பிறர்போற் ரோன்றுமாபோற் பகுத்தலிலாவந்தச் சிற் பாவந்தானே, யடர்பொய்போற் ரோன்றியதாற் சத்தமாதி யைம்புலனுமே தொன்று லறியாகின்றாய், தொடர்கின்ற வதுவிந்த வான்மாவாகுந் தோற்ற மெலாந் தானுகித் துன்னிநின்ற, விடமுடைய பரப்பிரமமிதுவே யிதிங்கிருப்பது வும் பெயர்மலமா மிதின்வேறில்லை. (10)

(ப - ரை.) படர்மதத்தாற் றனைப்பிறர்போல் தோன்றுமாபோல் = ஏறிய மதிரா பானமயக்கத்தால் அன்னியமாயதன்னை யன்னியமாய்க் காண்பதேபோல், பகுத்தலிலா அந்தச் சிற்பாவந்தானே = பிரிவுறுத அவ்வறிவியற்கையேயதான், அடர் பொய்போற் ரோன்றியது = அவித்தையினுல் நெருங்கிய அசத்துப்போலிலங்காநிற்கும், ஆல் அசை, எதொன்றுல் = எவ்வறிவினுல், சத்தாதி யைம்புலனும் = சத்தப் பரிச ரூப ரச கந்தமென் னும் ஐந்து விடயங்களேயும், அறியாகின்றாய் = ஹே இராகவ! நீ யுணர்கின்றனையோ? தொடர்கின்ற அது இந்த ஆன்மாவாகும் = யாவற்றுள்ளும் சத்தாஸ்பூர்த்திமயமாய் அனு சரித்திருக்கும் அவ்வறிவே அகமென்னு மிவ்வான்மாவாகும், தோற்றமெலா நந்தானுகித் துன்னிநின்ற இடமுடைய பரப்பிரமம் = இவ்வான்மாவே சர்வதிருசியங்களும் ஆரோபமா தலிற் சர்வான்மகமாய், சர்வகமாய், தேசகாலவஸ்து பரிச்சேதரகிதமாய் வியாபகமாய், மேலுக்குமேலாய பிரஹ்மமாம், இதுவே = இந்தப் பிரஹ்மமே, பெயர் = சீர்கூறும் வியதாதி நாம வேற்றுமையானே, ஈது = இவ்வுலகமாக, இருப்பதுவும் = திதி பெறுவதுமாம், இங்கு = ஈண்டு, மலம் = அவித்தையதன்காரியரூபம், இதின்வேறு இல்லையாம் = இந்தப் பிரஹ் மத்தினும் வியதிரிக்தமாக ஒரு சிறிதும் இல்லாததேயாகும்: ஆல் என்பதை யசை யெனக் கோடாமற்பெயராலெனக்கூட்டிப் பொருளுரைப்பினும் அமையும்.

(ஸ்ரீ - வீர.) மதவசத்தாயபுருடன் அவனுயினும் அன்னியனேப்போல எங்ஙனந் தோற்றுவானே, அங்ஙனமே, அதேசுவாத்மா, அன்னியம்போல ஜாட்டியபாவமயக் கத்தை யடையாததேனும் ஜாட்டியபாவமயக்கத்தை யடைந்ததுபோலச் சித்துத் தன் மையாற் சிற்சாரம், அசித்தென்னவிருக்கும் அறியாமையான், சத்தே அவ்வேடந் தரித் திருத்தலின் அசத்துவம் தர்வசனம், பாத்தியப்பான்மையாலே சத்துவந்தர்வசனம், ஆகலின், தோற்றம் அகிர்வசநீயமாம் என்றறிக. அற்றேல், பிரமஹ்மத்தினின்றும் ஜகத் விவர்த்தங் கேட்கப் பெறுகின்றதேயல்லாமற் பிரத்தியக்கினின்றும் கேட்பதில்லே யெனின்? அதுவே பிரஹ்மமென வறிவுறுத்தல். — சத்தமாதியென்பது. ஹே இராகவ! எதனுனே சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்பவற்றை யறிகின்றுயோ, அஃதில

வான்மா பரப்பிரம்மம் சர்வத்தையும் பூரித்து நற்றியடையும். "சத்தப் பரிச வுருவ ரஞ்சுக கந்தமுமைதன முதலா, யெத்தைக்கொண்டிங்கறிகின்ரு னதனே யொழியவே துளதா, மத்தற்பரத்தைக் கண்டிந்தவவத்தைமூன் றுங்காணுமை, சித்தித்திருக்கு மவ னலமூந் தீங்குமின்றித் திகழ்கின்ரூன்." என்னும் கடலல்லி காடகசுருதியிற் பிரஹ்மத்திற்கே பிரத்தியக் காத்மத்தகைமை இயம்பப்பெற்றிருத்தலின் என்பது கருத்து. ஆயின் ஆன் மாக்கட்கு நாலுத்தன்மையுண்மையின் பிரஹ்மத்திற்கோ ஏகத்தன்மை யுண்மையின் யாங்ஙன மைக்கியமாம் என்னற்க; நாலுஏகத்வங்கட்கு மித்தியாத்தன்மை யுண்மையின், இஃதொருதோடமல்லவாமென வுணர்க. தத்துவவித்துக்குத் தன்வடிவே பூர்ணமாகத் தோற்றும், காணினும் ஜகத்தைக்கண்டிலன் தத்துவத்தையே காண்பன்; அற்ரூயினும், தத்துவவித்துக்கட்கும், இலௌகிகங்களும் சாஸ்திரியங்களும் ஆகிய கருமங்களிற் கருத் திருத்துவங் காணப்பெறுகின்றதே, அதுவும் அவசியம் இஷ்டானிஷ்ட போக்தருத்தகை மையை யடைவிக்கும், எனவே, அறியாளினும் யாதுகொல் சிறப்பெனின்? இங்ஙன மிருப்பினும் சுகதுக்க போகபலந்தரும் கருமங்களிற்ரூஉதல், சமாதியப்பியாச பரிபாக பூமிகைப்பேதங்களிற்ரூஉதல், தத்துவவித்துக்கட்கு, எவ்விக்கருத்திருத்துவங் காணப் பெறுகின்றதோ, அவ்விக்காணப் பெறுங்கருமம் இல்லாதேயாம், மூர்க்கர்கட்கு அஃ தவ்வாறல்லவாம் என்னுமிதுவே சிறப்பென வுணர்க. யாதுள்ளேயிருக்கும் மநோ வீருத்தியின் நிச்சயமோ, உபாதேயத்தன்மை யுணர்வோ, வாசகப் பெயர்வாய்ந்ததோ, அதுவே கருத்திருத்வம் ஆம்; ஆகுக, வாசனையே கர்த்ருத்தன்மையேனும் போக்த்ருத் தன்மையேனும், ஆயினும் யாங்ஙனம் தஞ்ஞ அஞ்ஞர்கட்கு விசேஷ சித்தியெனின்? கேட்டி! இயற்றுவாரேனும் இயற்ரூரேனும் வாசனையிருத்தலின் தத்துவத்தை யறி யாதவர்கட்குக் கருத்திருத்தன்மை யிருந்துகொண்டேயிருக்கும், தத்துவத்தை யறிந்த வர்க்கோ அவாசனைத்தன்மையனே அங்ஙனிலதாம். அறிந்தவன்பால் விசேடத்தை நன்கிலக்குதும்:—தத்துவமுணர்ந்தவனே சிதிலீபூதவாசனையனுயியற்றினும் பலத்தை யநுசந்தியான், மற்ரோ, அசக்தமதியனுகி யசைவுமாத்திரத்தைக் கேவலம் ஆற்றுவன், இங்ஙனமே யவனது போக்த்ருத்தகைமையும் அசத்தேயாம், சம்பிராப்தமாயினும் பலம், இவ்வியாவும் ஆன்மசொரூபமேயாமெனக் கருமபலத்தையநுபவிப்பன், மக்கின மனத்த ராய்ப் போகாசக்தசித்தராய அஞ்ஞரோ செய்யாரெனினும் செய்பவரேயாவர். அச் சீவர்களுக்குள் ஆத்மவித்துக்களுடைய அம்மனமானது, மேகம் பொழியும் மழைகாலத் திற் காணனீரென்ன அத்தியந்தம் உபசாந்தியை யடைந்துறுவதாய், பிரசண்ட ஆதீயின் றில் இமகணமென்ன விலீனப்பட்டுத் துரியதசையைத் துதைந்துறுவதாய், அத்தன் மையதாகவே இருப்பதாகும் என்பதே வீசேடமென அறிந்துகொள்க. இதனுனன்ரோ "ஆநந்த நிராநந்த பிரண்டுவிலில்லை யசைவுமசைவின்மையுமா மவையுமில்லை, யீனந்தீர் சத்தசத்தன் றிவற்றுக்கெல்லா மிடையல்ல ஞானிமன" மெனக்கூறியதூஉம், விடயசுக விசிராந்தமுமல்ல, சொரூபாநந்த சூனியமுமல்ல, சொதிபோலும் ஜட்டாவஸ்தமுமல்ல, கூறிய ஆநந்த நிராநந்த சலாசலசத்தசத்துக்களின் சந்தியவஸ்தை வடிவமும் அல்ல, மற்ரோ, பரிசேடத்தாற் ஜீவன்முக்தசுகைகரசமாமென்பது பொருள். நிர்விகாரத்திலின்றும் யாதுண்டாயதோ அது நிர்விகாரமாகவே யிருக்கவேண்டும், அல்லாமற் சிதாத்மாவினும் வியதிரிக்தமாக இருக்குமாயின் நிட்களங்கமாய பரமேசுரருக்கு எச்சகற்பாவ ஆபத்தி தங்களாலருளப்பெற்றதோ, அவ்வீதகளங்காபத்தியருளியதே யாருமென ஸ்ரீ இராகவர் சங்கிப்பக்கேட்ட ஸ்ரீ வசிஷ்டபகவான் தத்துவதிருஷ்டியானே ஜகத்திற்குச்சிற்பாவத் தையும் இங்ஙனம் அவிகாரத்தன்மையையுங்கண்டு சமாதானித்தல்:—இதுவேயென்பது.

இப்பரமேசுரரே இச்சகமாயுண்மையாயுளர், ஹே அநக! ஈண்டுமல மிறையுமில்லவே யில்லை.

(ச.) படர்மதத்தால் = மிகவும் மோகாகாந்தங் கலந்த மதுவாதியால் செய்யப்பட்ட மதம்மாம் அதன் வசத்தினுல், ஆன்மா = புருடனுனவன், தனைப்பிறர் போற்றுன்று மாபோல், = தனக் கன்னியம்போல் விளங்குவதுபோல, தனக்கென்னும் நான்காம் வேற்றுமை தனையென, இரண்டாம் வேற்றுமையாயிற்று, பதத்தலிலா வந்தக்சித் பாவந் தானே = அந்தச் சித்துருபமான வான்மாவே, பொய்போற் றுன்றியது = தனது அஞ்ஞானமென்னும் ஏதுவினு லன்னியம்போல் விளங்குவதாம், ஏதொன்றுல் = வாகி யேந்திரியத் துவாரத்தினின்றும் வெளிப்புறப்படும் எந்தச் சைதன்யத்தினுல், சத்தமாதி யைம்புலனும் = சத்தாதி விடயங்களே, இராகவா நீ, அறியாதின்றுய் = தொடர்கின்ற வது இந்தவான் மாவாகும் = அத்தன்மையான சைதன்யரூபம் இவ்வான் மாவாகும், தோற்றமெலாந் தானுணர்த்துன்னி கின்றவிடமுடைய பரப்பிரமம் இதுவேயாகும் = இவ் வான்மாவேயாம், இஃதுள்ளும் புறனும் வியாபித்துளதாம் இப்பிரஹ்மமே வியதாதி காமபேதத்தானே இச்சகத்துருபமாகத் திதிபெறும், இந்த அவித்யாதற் காரியரூபம் பிரஹ்மத்தினும் வியதிரிக்தமாகக் கிஞ்சித்துமிலதாம்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) உரைத்ததற்கு உவமீனங்காட்டி, இங்கிலேயை அதிகாரிகட்கே யருளவேண்டுமெனல்:—பொரு என்பது.

(ச.) அங்ஙனமன்றே.

பொருகடலிற் றிரைமுதலாய்ப் பிறந்தவெல்லாம் புனலாகிவிளங்காமற் புழு தியாமோ, வொருபொருளாம் பிரமமாத்திர மேயல்லாலு பயமெனுங் கற்பனைப் பேரொன்றுமில்லை, யெரியிடத்திற் சூடுமாத்திரமே யல்லாலிரண்டுண்டோ வவ்வ கைபோ லென்றுமொன்றுஞ், சரியைகிரியாயோகப் பதத்தின்முற்றிச் சாதனங்க ணிறைந்தவர்க்கே சாற்றல் வேண்டும். (11)

(ப - ரை.) பொருகடலில் திரைமுதலாய்ப் பிறந்த எல்லாம் = பாரோடுபோர்புரி யும் வாரிதியில் அலையாதியாக உண்டாய அனைத்தும், புனலாகி விளங்காமல் புழுதி ஆமோ = வாரியேயாகி வயங்காமல் தூள் ஆகுமோ ஆகாதாம், அதுபோலவேருக இல் லையாம்) ஒருபொருளாம் பிரமமாத்திரமே யல்லால் = ஒப்பற்ற ஏகவஸ்துவாம் சீவமே யல்லாமல், உபயமெனுங் கற்பனை = இரண்டாவதாய கற்பனை, பேரொன்றும் இல்லை = பெயர்மாத்திரமுங் கிடையாது, எரியிடத்தில் சூடுமாத்திரமே யல்லால் = அக்கினியிடத் தில் ஔஷ்ண்யமாத்திரமே யல்லாமல், இரண்டுண்டோ = இரண்டாவ தொன்று மூளதோ, இல்லை, அவ்வகைபோல் என்றும் ஒன்றும் = அத்தன்மைபோல எப்போதும் ஒருபொருளேயுளதாம், சரியைகிரியா யோகப்பதத்தின் முற்றிச் சாதனங்கள் நிறைந்த வர்க்கே சாற்றல் வேண்டும் = சரியையுதலிய மூன்று பதங்களிற் பரிபாகமடைந்து மோக்ஷசாதனங்களைப் பூரணமாக உடையவர்க்கே யுபதேசிக்க வேண்டும்

(ஸ்ரீ - வீர) சித்துவின்கண் தரங்கபேத புற்புதாதி சமுதாயகணங்களுனே நீரே யிலங்குகின்றது அன்றிப் பொடிகளலவாம், ஹே இரகுகுலதிலக ராஜ்ய ஸ்ரீயே! வன்னியில் ஔஷ்ண்ய மாத்திரமலது மற்றொன் றில்லாததேபோலப் பிரஹ்மமாத்திரமலது இரண்டாவது கற் பனையே யீண்டுளதாவதில்லை யென்றுணர்தி.

(ச.) புழுதி என்பது உபலக்ஷணம், வஸ்து அந்நீரம் விளங்காததுபோல் என்பது பொருள். ஒருபொருளாம் = அத்வயமாகியவத்துவாம், பிரமமாத்திரமே யல்லால் =

சக்சிதாநந்தான் மகமான பிரஹ்மரூபத்தைத்தவிர, வன்னிக்கு உஷ்ணத்தைத்தவிரதுவி தீயகற்பனே யில்லாததுபோல், உபயமெனுங் கற்பனேப்பே ரொன்றுவில்லே = துவீதிய மெனுங் கற்பனாநாமம் எவ்வளவுமின்றும்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அஞ்ஞதிருஷ்டியிலேயே இருக்கும் ஸ்ரீ இராகவர், எல்லாவாற் றனும் ஆநந்தைகரச சுபாவத்திருத்தலின், அதன் விருத்தத்துக்க ஜகத்ரூபத்தன்மை பிரஹ்மத்திற்குக் கூறமுடியாததே யெனமன்றுபெவராய், பிரஹ்மம் நிர்த்துக்கம் நிர்த்வம், அதனினுண்டாயது துக்கமயம் ஜகதென்னும் அஸ்பஷ்டார்த்தமேய தங்க ளுடைய இவ்வசனத்தை யறிகின்றிலேன் என்றுசங்கிப்ப, இவ்வண்ணம் விடைவிளம் பாதபடி ஸ்ரீ இராகவராற் செய்யப்பெற்ற வசிஷ்டபகவான், இராமப்பிரபோதன உபா யத்தைச் சித்திக்கும் பிரகாரக்கத்தை ஸ்ரீவான்மீகிபகவான் அருளல்:—இயற்கையென்பது.

(ச.) இங்ஙனம் சேதனசேதனப் பிரபஞ்சத்திற்குச் சித்து விவர்த்தத் தன்மையுண் மையின், அதனோடபேத நிருபித்து அத்தகைய அதிகாரிக்கே இவ்வர்த்தம் பிரகாசிக்கு மென்றறிவித்தற் குரைத்தல்:—இயற்கை யென்பது.

இயற்கைகுணஞ் சோதித்து முன்னேபின்னே யாரவையுமாம் பிரமாணமென் னல் வேண்டும், வியப்புறவாசையி லுழல்வார்க்கிவ் வாறேதின்மீளா தகிகாரகில் வீழ்த்ததாகும், நியக்குறுபோகத் தாசைதீர்ந்து புத்திதெளிந்த மகத்தாவார்க்கே நிகழத்தோன்றும், மயக்கமற வுணர்த்தவல்ல குருவைக்கிட்டா வருந்தியுந்தன் பிறப்பறுக்கு மகனுமாங்கே. (1உ)

(உணர்ப்போல்வார்க்கே யென்பது 6000-ப் பாடம்.)

(ப - கை.) முன்னே = ஆதியில், இயற்கைகுணஞ் சோதித்து = சமதமகுணங்க ளாற் சீடனைப் பரீக்ஷித்து, பின்னே = அதன்பின், யாவையுமாம் பிரமாணமென்னல்வேண் டும் = சர்வமாயுமிருக்கும் இந்தச் சுத்தப் பிரஹ்மமேயென் றுபதேசிக்க வேண்டும், வியப்புற ஆசையில் உழல்வார்க்கு = விடயசக்திய புத்தியால் விஸ்மயமடைய விடய அவாக்களில் மோகமுற் றலைபவர்க்கு, இவ்வாறேதின் = எல்லாமாய சிவமேயெனை வுபதேசிக்கின், மீளாதகிகாரகில் வீழ்த்ததாகும் = மீட்சியில்லாத மகாகாரகஜாலங்களில் தள்ளியதாகும், நியக்குறு போகத்தாசைதீர்ந்து = மயக்கத்தைச் செய்யும்போகங்களில் அவாவொழிந்து, புத்திதெளிந்த மகத்தாவார்க்கே நிகழத்தோன்றும் = பிரபுத்தபுத்தி யையுடைய மகாத்மாக்கட்கே உபதேசித்தலுசிதமாம், வியக்கவெளியா மாதலின்,) மயக்கமற உணர்த்தவல்ல குருவைக்கிட்டா = மோகமேகுமாறு தெரிவிக்கும் ஆற்ற லுற்றதேசிகரை யடைதலும் தர்லபம், வருந்தியும் தன் பிறப்பறுக்கும் மகனுமாங்கே = அதுபோலவே சிரருஷ்யாலும்சிரவணதியாலும் சிரமமெடுத்துக்கொண்டு தன்னுடைய ஜனனமரணத் தீர்த்துக்கொள்ளும் முயற்சியுள்ள சீடனும் தர்லபமேயாம். தத்வஞ்ஞ னும் அதிகாரியும் தர்லபமாதலின் அத்வஞ்ஞன் அநதிகாரிக் குபதேசித்தல் வஞ்சனை யாதலின் சரகபாதவேதுவாம்,

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ இராகவருக் குபதேசிக்கும் விடயத்தில் ஸ்ரீ வசிஷ்டராகியமுனி சார்த்தூலர் சிந்திப்பதாவது:—எப்புருடன் வியுத்பந்ந மனமுடையவனும், ஜகத்திற்குச் சடபாவத்தை விட்சிதேகரசத்தன்மையைக் காணசமர்த்தனுவனே, அறியவேண்டி யதையறிந்தவனும், மதிமானும், மோக்ஷோபாய சாஸ்திரங்களின் கரைகண்டவனும், விவேகம் நிறைந்தவனும், உள்ள அத்தகைய அதிகாரியினது திருஷ்டியால் எவ்வத்து

விற்கும் எத்தோஷ்டமும் விரோதமும் உண்டாகாதாம், ஜகத்விருத்தரூபம் வித்யாத்மாவின்கண் ணெங்குமில்லையாதலின் நன்ருக எத்துணை எம்மனேரால் இராகவன் உபதேசிக்கப்பெருனே, அத்துணையுமே இளைப்பாறுதலே யெய்தமாட்டான், ஆகலின் அவசியம் அவனுக் குபதேசிக்கவேண்டும்; ஆனல், அர்த்த வியுற்பன்ன மதியுடையவன் திருஷ்டிக்கோ, முன்மொழிந்த சர்வம் பிரஹ்மமென்னும் இவ்வுபதேசம் வியக்தமாகச் சோபை செய்வதில்லே, எனினின், இவ்வரை வித்பத்தியுடையோன், திருஷியங்களேச் சம்பாதித்துக் சம்பாதித்துப் போற்றி வாழ்வானுதலின், அவ்வகையானே போகதிருஷ்டியானே எப்போதுமே திருஷியவத்துக்களேயே பாவித்துப் பாவித்துக்கெட்டித் தத்துவபோதத்தினின்றும் பிரட்டனுவன் என்பதாம். ஆயின் யாவனுக்குத் தகைய வுபதேசம் பொருந்துமெனின்? மேலான திருஷ்டி யடைந்துள்ளவனுக்குப் போகேச்சை யுண்டாவதே கிடையாது, அக்காலோ சர்வம் பிரஹ்மமென்னும் சித்தாந்த மாயபரிசுத்த வுபதேசம் அவனுக்குப் பொருத்தமுடைத்தாம். ஆயின்யாங்ஙனம் அர்த்த வித்பன்னன் உபதேசிக்கத்தக்கவன் எனின்? அறைதல்:—இயற்கையென்பது. ஆதியிற் சமதமப்பிரய குணங்கள் இருக்கின்றனவாவென்று சீடனே நன்கு சோதித்துப் பின்னர் இவ்வியாவும் சுத்தப் பிரஹ்மம் அதுவே நீயென் றுபதேசிக்கவேண்டும். அர்த்தப் பிரபுத்தனுய அஞ்ஞனுக்குச் சர்வம் பிரஹ்மமென னியாவ னுபதேசிப்பனே அவன் அதனுல் மகாநரகஜாலங்களில் விதியோஜிதனுவன். தெளிந்த புந்தியனும், மிகக்ஷீணமான போகேச்சையனும், சகலவித ஆசைகளும் அற்றவனும் ஆகிய மகாத்மாவிற்கு, அவித்யாமலம் இவ்லேயாம் எனவுபதேசித்தல் பொருத்த முடைத்தாம்.

(ச.) முன்பு சாதன சதுஷ்டய சம்பத்தியைப் பரீக்ஷித்துப் பின்பு அதிகாரிக்குப் போதிக்கவேண்டும் என்பது பொருள். அதிகாரிக்குப் போதிக்கின் மகாபாவமெனல்:—வியப்புற ஆசையிலுழல்வாருக்கு = அர்த்தப்பிரபுத்தனை அஞ்ஞனுக்கு, இவ்வாறேதின் = சர்வம் பிரமமென்று போதிக்கின் அப்போதகன் அவ்வஞ்ஞனே, வீழாத தீநரகில் வீழ்த்தாகும் = மகாநரக சாலங்களிற் புள்ளினவனுவன், உனைப்போல்வார்க்கு = நிர்ச்சங்கற்பமான வுன்னேப் போன்றவர்க்கே, அவித்தைமலமின்மையின், திகழாதீதோன்றும் = போதவுங் கோசரமாமென்பது பொருள். மயக்கம் + ஆங்கே என்பது கவிநாயகர் இருதயம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அஞ்ஞான திமிரங் கெடுக்கும் பூமிபாஸ்கராய் முனிசிரேஷ்டராய் இலங்கும் ஸ்ரீ வசிட்டபகவான் இவ்வாறு சிந்தித்து ஸ்ரீ இராகவரை நோக்கிக் கூறியருளல்:—விளக்குமென்பது.

விளக்குமிரவியுமலரு முண்டாயுண்டாம் வீசொளியும்பகற் பொழுதும்விரையும்போலத், தூளக்கமில் சித்துண்டாகி லுண்டாஞலங் தோற்றரவு மாத்திரமே சொரூபமாகுங், கிளத்தபரமார்த்தத்தா லில்லேயென்னக் கேட்டலுமேபாற்கடல் போற்கம்பிரத்தால், ளைக்கரிதாய்ச் சீதளமாயமலமாகி யற்புதமாநின் மொழியென்றண்ணல் சொல்வான். (13)

(ப - ரை.) விளக்கும் இரவியும் மலரும் உண்டாய் = தீபமும் அருக்கனும் புஷ்பமும் உண்டாயிருக்குமாயின், உண்டாம் வீசொளியும் பகற்பொழுதும் விரையும்போல = எறியாநின்ற பிரகாசமும் தினமும் வாசனேயும் உளவாகும், அதுபோல, தூளக்கமில் சித்துண்டாகில் = களங்கங் கலக்கமன்ற அறிவுண்டாகின், உண்டாஞலம் = பிரபஞ்சமுனதாம்; தோற்றரவுமாத்திரமே சொரூபமாகும் = பிரதிபாசமாத்திரமே வடிவமாகும்; கிளத்த பரமார்த்தத்தால் இல்லே என்னக்கேட்டலுமே = ஆராய்ச்சியாற் றேற்றும்

உண்மைநோக்கினு ஞேக்கின் உலகமில்லவேயில்லை என்றருளக் கேட்டபோது, பாற் கடல்போல் = க்ஷீரோதகுகூடி துல்லியமாய், கெம்பீரத்தால் அளக்கரிதாய் = அதிவித தகனகம்பீரமாய், சீதளமா யமலமாகி = சீதலாமலதீப்தியுடையதாய், அற்புதமாம் = அதிவிசித்திரமாம், தின்மொழி = தேவரீரது உபதேசத்திருவாக்கியம், என்று = என்பதாக, அண்ணல் சொல்வான் = ஸ்ரீ இராகவர் கூறுவார்.

(ஸ்ரீ-வீர.) ஹே அநக ! களங்கலனே பிரஹ்மத்தின் கண்ணேயுளதா இலதா என்பதை நீயேசுயமறிவாய், அறிஞர்களின் சித்தாந்தகாலத்தில் உரையாடத்தக்கதாம், இப்போது இன்றும். இப்போது அர்த்த விற்பத்தியுடையவனுக்குத் தக்கவாய, பிரஹ்மத்திற்கு மூற்புகன்ற சர்வசக்தித் தன்மையாதியையும், பிரத்தியக்குக்குச் சர்வாகம பாவதரிசனத்தையும் பிரதமம் கூறக்கேட்டி:—பிரஹ்மம் சர்வசக்தி, சர்வவியாபி, சர்வகதம், சர்வோகமே யென்பதாம், மாயையினுலேயே இதற்குச் சர்வசக்தித்தன்மையும் பிரத்தியக்கிற்குச் சார்வாத்மியமுமா மென்பதை விரித்தறிக: இந்திரஜாலக்காரர் மாயையால் விசித்திரக் கிரியைகளே யுண்டுசெய்பவராய், சத்தை யசத்தாக்குகின்றனர், அசத்தை யோசத்தாக்குகின்றனர் என்பதை யெங்ஙனங் காண்கின்றீரோ அங்ஙனமே, ஆத்மா அமாயாமயமாயினும் மாயாமயமடைந்ததுபோலப் பரமஜந்திர ஜாலிகனெனவாகிக் கடத்தைப் படமாக்கும் படத்தையோகடமாக்கும், பாறையிற் கொடியையும், பூயக்கும, மேருவிற் கனகதடத்தில் நந்தனவன மெனலதையிலுபலத்தை யுண்டாக்கும், இது அசம்பாவித சம்பாவனப் பொருட்டு லோகசாஸ்திரப் பிரசித்த திருஷ்டாந்தமாம், கற்ப பாதபங்களில் இரத்திநப் பூங்கொத்துகள்போல வியோமத்திற் கானனத்தை யத்தியாரோபஞ்செய்யும்; தேவசக்தியானே அசம்பாவிதங்களேயாய நந்தனவன ரத்நஸ்தபகாதிகளும் சம்பவிக்கின்றன வெங்ஙனமோ அங்ஙனமே ஆத்மசக்தியானும் சம்பவிக்கலாம் என்பதுகருத்து. அத்தகைய பரமார்த்தவத்துவும் உளதாயின், ஜகத்துண்டாம் என்பதிற் றிருட்டாங்கள் இவையாம்:—கேவலம் சான்றுயும், நிராமயமாயும், சர்வசமவடிவமாயும், நித்தியம் சிறிதும் கலக்கமிலதாயும் ஆன்மதத்துவும் இருக்கின்றபடியால் இவ்வாறுலகமுண்டாகின்றது; தீபமுளதாயின் ஆலோகம் உளதாதல் போலவும், அருக்கனுளனாயின் வாசரம் உளதாதல் போலவும், புஷ்பம் உளதாயின் ஆமோதமுளதாதல் போலவும், தானுகவேயுலக முண்டாகின்றது பரம்பொருளின்பால். ஆபாசமாத்திர மாகவே இவ்வுலகம் காணப்பெறுகின்றதே யல்லாமல் வேறில்லை, சமீரணனுக்கு ஸ்பந்தமென்னசத்துமல்ல, அசத்துமல்ல, விலக்ஷண அநிர்வசநீயமாய்த்திதமாம். பூர்வமாண்டும் கலனேயே மனுதிதுவைதகற்பனைக்கு மூலம் எனமொழியப் பெற்றது, இப்போதுநிர்விகார அத்வயவத்துவிற் கலனைக்கு நிமித்தம் சம்பவியாதென்று கொண்டு அதனைக்கேட்கும் வேட்கையராய ஸ்ரீ இராகவர், குருவின் ஆதரப்பொருட்டு முன்புகன்றருளியதைப் புகழல்:—இனத்தவென்பது, க்ஷீராப்தி யுதாத்தினின்றும் உதிதமாய அமிர்தகிரணனுக்குச் சமானமானவையும், அதனுனே அதிசீதல அமலதீப்தி யுடையனவும், எங்கணும் பரவிக்கம்பீரமானவையும், விசித்திர முற்றவையும், ஆய தங்களுடைய திவ்யவாக்குகளாற் பரம சந்தோஷமுற்றேன்.

(ச.) தீபமிருக்கிற் பிரகாசமும், அருக்களிருக்கி னுளும், புஷ்பமிருக்கில் வாசனையுமிருக்கும்; அதுபோற் சித்திருக்கிற் சகத்திருக்கும், இச்சகம் இல்லை, தீபப்பிரகாசாதிகள்போற் சிற்சங்களுக்குங் காரியகாரணமாதலினுல்; ஒன்றற்கொன்று வியோகமுமின்றுபேதமுமின்றென்பது கருத்து. என்ன, இராகவர் கேட்டலுமே, தின்மொழி =

உமது உத்திகளால், யான் போதிக்கப்பட்டேன், என்றண்ணல் சொல்லி மீட்டும் சொல்வான். (13)

(ஸ்ரீ - வீர - அ - கை.) உபதேசத்தாலுண்டாய நன்மையையும், தமது வியாமோக மிருக்குந் தன்மையையும் ஸ்ரீ இராகவர் உரைத்தல்:—இம்மொழி யென்பது.

இம்மொழிகளா விமைப்போ திருளாமீளவிமைப் போதோவொளியாகுமிவ் வாறுகி, மைம்முகிலா லற்பமாய்வெய் யிற்சீதம் வந்துவந்து போகின்றமழைகா லொத்தேன், மெய்ம்முனியே யநந்தமாய்ப் பலவாயொன்றுய் வியாதாயளக்கரி தாய் விளக்கமெய்திச், செம்முறையா மாத்துமதத்து வத்துக்கிந்தச் செய்தொ ழில்கள் வந்தவாசெப்பு கென்றான். (14)

(ப - ரை.) இம்மொழிகளால் = முன்னுபதேசித்த திவ்யவசனங்களால், இமைப் போதிருளாமீள விமைப்போதோ, வொளியாகும் = கணகாலம் ஆந்தியத்தையடைகின் றேன், கணகாலம் பிரகாசத்தன்மையை யடைகின்றேன்; இவ்வாறுகி = இங்ஙனமியை யுற்றவனுகி, மைம்முகிலால் அற்பமாய் வெய்யில்சீதம் வந்துவந்து போகின்ற மழைகாள் ஒத்தேன் = கார்மேகத்தா லிலவலேசமாய் ஆதபசாந்தம் தோன்றித்தோன்றிமறைகின்ற மழைகாலத்தியவாசர சமானமானேன், மெய்ம்முனியே, = சத்தியத்தை யுணர்ந்த தபோதனரே! அநந்தமாய் = அந்தமில்லாததாய், பலவாய் ஒன்றுய் = அநேகமாய் ஏக மாய், வீயாதாய் = அஸ்தமித மற்றதாய், அளக்கரிதாய் = அப்பிரமேயமாய், விளக்க மெய்தி = அதிபாசுரமாய், செம்முறையாம் = மிகச்சத்தா சாரமாயிலகும், ஆத்தும தத்துவத்துக்கு = பிரத்தியக்க பின்னப் பிரஹ்மத்திற்கு, இந்தச் செய்தொழில்கள் = இக்கலனே விசேடங்கள், வந்தவா = வந்துற்றது எங்ஙனமென்ன, செப்புக என்றான் = உரைத்தருள வேண்டுமென்றனர் ஸ்ரீ இராகவர்.

(ஸ்ரீ - வீர.) கணப்போது ஆந்தியம் = வியாமோக தமத்தையடைகின்றவன் போ கின்றேன், தங்கள் திருவாக்குகளால், கணப்போது பிரகாசத்தன்மையை யடைகின் றேன்; அடைவதான் மழைகாலத்தில் உழலாகின்ற மேகங்கள் உள்ளதினம் சாந்த ஆத பலவுத்துட னிருப்பதுபோலு மிருக்கின்றேன். அந்தமற்றதாயும், அநந்தத்தன்மை யானே அப்பிரமேயமாயும் = பிரமாண அபரிச்சேத்தியமாயும், சர்வமாயும், பூர்ணமாயும் ஏகமாயும், சுயமாகவே யெப்போதும் பிரகாசிப்பதாயும், அஸ்தமியாத பரமார்த்தசொரூ பப் பிரசித்தியுடையதாயும், இலகும் அத்விதிய பூர்ணசுபாவத்தில், பரிச்சின்ன கலனே வடிவவிகாரம் உண்மையாகக் கற்பனையாலுதல் சம்பவிக்கமாட்டாதாம் எனவதன் கண்ணே யேதுவை யருளல்வேண்டும் என்பதாம்.

(ச) இமைப்போது = கணம், இருள் = ஆந்தியம், ஒளி = பிரகாசம், இவ்வா றுகி = நான் இத்தன்மையனுய், வெயின் மந்தாரம் பாடபேதம், மழைகாள் ஒத்தேன் = வருஷாகால வாசரத்துக் கொப்பானேன், ஸ்ரீ இராமர்:—மெய்ம்முனியே, பலவாய் = சர்வான்மகமாய், ஒன்றுய் = அத்துவிதீயமாய், வீயாதாய் = நாசரகிதமாய், அளக்கரி தாய் = அப்பிரமேயமாய், விளக்கமெய்தி = நித்தியப் பிரகாசமாய், செம்முறையாம் = அநட்டசத்தியை யுடைத்தான, ஆத்மதத்துவத்துக்கு, = இந்தச் செய்தொழில்கள் = பந்தவேதுவான வவித்தை, வந்தவா செப்புகென்றான் = எப்படிவந்த திசைத்தருளு மென்றான், தேசுக்குத் திமிராவரணம் அசம்பவமாதலி னென்பதகருத்து, தீதலவங்க ளானும் ஆதபலவங்களாலும் உபலக்ஷிதமாய வருஷாகாலத்தில் மேலால அப்பிரங்களை

யுடைய வாசரம்போலக்கணம் ஆந்தியத்தை யடைகின்றேன், கணம்பிரகாசத் தன்மை யையடைகின்றேன் என்பதாம்.

(ஸ்ரீ-வீர - அலை.) உனக்கு இவ்வியாமோகம் எமதுவாக்கிய தோடத்தானே வந்த தன்ரும், மற்ரே, தாற்பரிய அவதானமின்மைத் தோடத்தானே யெனக்காட்டி ஸ்ரீ வசிஷ்டபகவான் ஸ்ரீ இராகவரைச் சமாதானித்தல்:—மெய்யென்பது.

மெய்யான பொருளுடைய வாக்கியத்தின் மெய்ப்பொருளாய் முன்னெடு பின் விரோதமின்றிக், கையாருநெல்லி யெனக்காட்டவல்ல கட்டுரையேயாமிங்கு கழறிற்றெல்லா, மெய்யான ஞானவிழி வெளியாய்ப்போதம் விரியவுதித்தாலென் சொன்மன்னும் வித்தை, கையாரவலிதெளி தென்றுள்ளவாறு கலக்கமற நிலை நின்றுங் காண்டியன்றே. (15)

(ப - ரை.) மெய்யான பொருளுடைய வாக்கியத்தின் மெய்ப்பொருளாய் = உள்ள படியேயான பொருளையுடைய தொடர்மொழியின் உண்மைப் பொருளாகி, முன்னெடு பின் விரோதமின்றி = பூர்வாபர விரோதமின்றி, கையாருநெல்லி யெனக்காட்டவல்ல = கதலா மலகம்போலக் காட்டக்கூடிய, கட்டுரையேயாம் = சத்தியசமர்த்த வசனமே யாம், இங்குகழறிற் றெல்லாம் = இவ்விடத் தனக்குபதேசித்த வுபதேசங்கள் யாவும், மெய்யான ஞானவிழிவெளியாய் = உண்மையான ஞான திருஷ்டி பிரசந்நமாய், போதம் விரிய உதித்தால் = பிரபோதம் விததமாகவுதயமாயில், என்சொல் மன்னும் வித்தை = எமது வாக்கியமும் அதனுலடையப்பெறும் ஞானமும், கையார = காட்சிப்பட, வலி தெளிது என்று = பலம் அபலம் என்பதாக, உள்ளவாறு = இருக்கின்றபடியே, கலக்கமற நிலைநின்று காண்டியன்றே = சுவஸ்தமாக அறிவாய். அன்று ஏ அசைநிலைகள்.

(ஸ்ரீ - வீர.) நிதமானபடியாய அர்த்தமே வாக்கியார்த்தமாகவுள்ள வெமதுபதே சங்கள்யாவுமே, பதங்களின் ஆகாங்ஷை யோக்கியதை ஆசக்திரகிதங்கள் அல்லன வாம், அவாந்தர வாக்கியங்கட்கு மகாவாக்கியார்த்த அபரியவசானம் அற்றனவாம், பூர்வாபர விரோதமற்றனவாம். உபக்கிரம உபசங்காரங்கட்குப் பரஸ்பரவியாகாதங்கள் அற்றனவாம். ஆயின் எக்கால் எமதுதாற்பரிய அவதானம் எனின் ? அதற்கறைதல்:— மெய்யென்பது. ஞான திருஷ்டியானது பிரசன்னமாகிப் பிரபோதமானது விஸ்தாரமாயு தயமானவுடனே எமது வாக்குகட்கும், அவற்றுலுளதாம் தத்துவதிருஷ்டிக்கும், இதர வாக்கு திருஷ்டி யபேக்ஷையால், பலாபலம் = பிராபல்யம், சுவஸ்தமாக வள்ளவாறே யறிக்துகொள்வாய். அற்றேல், எங்ஙனம், தன்ரூய்மலடி, என்வாயில் நாவில்லே, ஊமை யான், என்னும்வாக்கியம் ஹேது சுவசத்தாபார்த்த அர்த்தமுடையதாமோ, அங்ஙனம், "ரண்டற்பமும் நானுவில்லே, ஒன்றே அத்துவிதியம்" என்பதாதி சுருதிசாஸ்திரமும் தங்கள் வாக்கியங்களும் ஆம், ஆகலின்யாங்ஙனம் விரோதபரிகாரம் எனின் ? இங்ஙன மாம், உபதேசி யோபதேசார்த்தம், சாஸ்திரார்த்தப் பிரதிபத்தியின் பொருட்டு, சப் தார்த்த வாக்கியரசனே மயலாம், அம்மயமாக வேண்டாம்; அதாவது, அசத்தியமாய சொப்பனுதிகட்கும், சத்தியார்த்தப் பிரதிபத்தி யுபாயத்தன்மை காண்டலின், மித்தியா பூத சப்தார்த்த வாக்கியரசனைப் பிரமமும், சத்தியசாஸ்திரார்த்தப் பிரதிபத்தி ஹேது வாகச் சம்பவிக்கின்றதென வியாமூடத் தன்மையானே பிரமமயம் ஜகாதெழிதி யென்பதாம்.

(ச.) ஸ்ரீ வசிட்டர்:—யாமிங்கு கழறிற்றெல்லாம் = எமது வாக்கியமனைத்தும், மெய்யான பொருளுடைய வாக்கியத்தின் மெய்ப்பொருளாய் = அவிசம்வாதி வாக்கியார்த்தமேயாய், முன்னெடுபின் விரோதமின்றி = பூர்வாபரவிரோதத்தினால், அசங்கதார்த்தங்களும் விபரீதார்த்தங்களும், இன்மையதாய், கையா + யாம் = இங்ஙனமாயின், யாதினால் அங்ஙனந் தோன்றவில்லையெனின் ? உத்தரம், மெய்யான ஞானவிழி வெளியாய் = ஞானதிருஷ்டி பிரசன்னமாய், போதம் விரியவுதித்தால் = பிரபோதம் வியாபகமாகவுதயமாயின், கையாரக் கலக்கமற நிலைகின்று = உடனே சுவஸ்தனுகி, என் சொல்லென்னும் வித்து = எனது வாக்கையும் அதன் மூலத்தாற் கிடைக்கும் பொருளான ஞானத்தையும், வலிதெளிதென்று = பிரமாணியம் அப்பிரமாண்ணியம் என்று, உள்ளவாறு காண்டி = உள்ளபடியுணர்வாய், அன்று ஏ இரண்டும் அசைநிலை.(15)

(ஸ்ரீ-வீர - அ-கை) வாக்குப் பிரபஞ்சமில்லாமல், இச்சாதனுஞானமும், மூலாஞ்ஞானமும், பரஸ்பர சகாயத்தாலே பிராந்தி சகஸ்ரசாகைகளை மேலும்மேலும் உண்டாக்கும் வாயிலாக நன்றாய் வளர்ந்து கிடமாயிருக்கின்றன, இவற்றைப் பிளத்தற்கும், அதன் சாதனங்களிற் பிரயத்நம் செய்யவும் முடியாதாம்; எனினும், உபதேசவாக்குப் பிரபஞ்சத்திற்கும், அதனுலுண்டாய வித்தைக்கும், அவித்தையின் காரியத்தன்மை சமமாதலின், யாங்ஙனம் அவித்தை விரோதித்தன்மை ? தன்விரோதி வித்தையைத்தான் யாங்ஙனம், அவித்தை பிரார்த்திக்கும் எனின் ? ஆண்டுரைத்தல்:—தன்னென்பது.

தன்னுருவ மாய்வதற்கே முயல்வதாயுத்தமமான வவித்தையினும் சகலமான, வின்னலுறு குற்றமிலா வித்தையெய்து மெய்கணைகள் கணையாலே நஞ்சைநஞ்சாற், றுன்னுபகை பகையாலே தீதுதீதாற் றுடைப்பதுபோ லவித்தை தனைத்துடைத்தல் வேண்டு, முன்னியுறப் பார்த்தலுமே யிதன்சுபாவமொழிந்து போய்த்தன் மாய்வாலுதவு மின்பம். (16)

(ப - ரை.) தன்னுருவ மாய்வதற்கே முயல்வதாய் = சுவாத்மாசமுயற்கி உத்தம இச்சையுடையதாய், உத்தமமான = பரிபக்குவமடைந்த, அவித்தையினால் = அவிச்சையினாலே, சகலமான இன்னலுறு குற்றமிலா வித்தையெய்தும் = சர்வதுக்கந் தருந்தோஷ அபஹாரிணியாய வித்தையைப் பிரார்த்திக்கும், எய்கணைகள் கணையாலே = எவரின்ற அஸ்திரம் அஸ்திரத்தாலே, நஞ்சைநஞ்சால் = விடம் விடத்தினால், துன்னுபகைபகையாலே = நெருங்கிய சத்துருசத்துருவாலே, தீதுதீதால் = மலம் மலத்தினாலே, துடைப்பதுபோல் = கெடுக்கப்படுவதேபோல, அவித்தை தனைத்துடைத்தல் வேண்டும் = மாயையைக் கெடுத்தல் வேண்டும், உன்னியுறப் பார்த்தலுமே = ஆராய்ந்து அழுந்தி நோக்கலுமே, இதன் சுபாவமொழிந்து = இதனியற்கை யிழிந்துபோய் = அத்தியந்தாபாவமடைந்து, தன் மாய்வால் = தனதுசொரூப நிர்மையினாலே, இன்பம் உதவும் = ஹர்ஷத்தைத் தருவதாம்.

(ஸ்ரீ - வீர.) தன்வடிவழிவு முயல்வு விழைவதாமும், வெகுஜன்ம சஞ்சிதசகிருதவிசுத்த அந்தக்கரண ஆகாரபரணத முற்றதாமும், ஆகிய அவித்தையானே, சர்வதோஷ அபஹாரிணியாய வித்தையானது பிரார்த்திக்கப் பெறுகின்றது. பெறவே, தனது சரீரவிரோத மிருப்பினும், தனது ஆத்மஹித்தத் தன்மையுண்மையின், விவேகியாய புதிவிரதையினுக்குப் பதிதைதாரோகணமேபோல அதன் பிரார்த்தனைகூடும் என்பது கருத்து. விரோதித்தகையையை உபபாதித்தல்:—எய்கணையென்பது. அஸ்திரம் அஸ்தி

ரத்தானே சமிக்கின்றது, மலம் மலத்தானே = க்ஷீரத்தானே கழுவப்பெறுகின்றது, விடம் விடத்தானே சமமுறுகின்றது, நிபுவானே நிபுணரை செய்யப்படுவன். அதற்குத் தன்ஞசகத்தன்மையேல் கர்மகர்த்ருதை விரோதம் வருமேயென வாசங்கித்து, ஹரியையின் கண்ணவ்விரோதமாம், ஞானத்தானே யஞ்ஞானபாதத்தில் இலதாம் என்னுங் கருத்தாலியம்பல்:—போலவித்தையென்பது. இத்தகையதேயாகு பிராகவவிம்மாயை, யிது தனதழிவானே மகிழ்வதருமோ, இதனியற்கை குறிப்பிக்கப் பெறுதாம், இது ஓர்ந்து நோக்கும்போதே யழிந்துபோம்.

(ச.) தன்னுருவம் மாய்வதற்கே முயல்வதாகி = சொச்சொரூப நாசத்திற்குரிய எத்தனத்தா லுதித்ததாய், சரமசாஷாத்கார ரூபவித்தையும் அவித்தையின் பரிணாம ரூபமாதலின் அவித்தைக்குத் தன்னுருவமாய்வதற்கே முயல்வதாகுவது தகும்; அச்சரமமும் சுவசொரூப நாசப்பொருட் டண்டாயவுத்யமத்தானே யுதிதமான தாமென்றுணர்க. தமமொழித்த = பரிபக்குவமான, அவிச்சையினால் = அவித்தையால், சகலமான வின்னலுறு குற்றமிலா = சர்வதோஷ அபகாரிணியான, விச்சையெய்தும் = வித்தையடையப்படும், நீதுநீதால் = மலத்தை மலத்தால், இதன் சுபாவம் = பிராணிகளின் சம்சார மூலமான இத்தமாயையினது சொரூபம், அறிதற்கசக்கியமாம், யாதினுலெனில், உன்னியுறப்பார்த்தலுமே = விசாரிக்கும்போதே, ஒழிந்துபோம் = நசிக்கும், அசத்தியமாதலின் என்பதுகருத்து, தன்மாய்வால் = சுயநட்டமாயின், இன்பமுதலும் = பிரஹ்மானந்தத்தைத்தரும்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வாஸ்தவமாக மாயையிலதென்றும் அதுதெரியுங்கால மிஃதென்றும், அதுவரைசிரத்தைஃமது வசனத்தாற்றாக வென்றும் இயம்பல்:—நனியென்பது.

நனிமெய்யாய் மாயையிலதென் றிவ்வாறுநாடுவாய் ஞானியாய்ஞேயம்பெற்றுற், றுனிசெயுமீதுள மாயையறிதியன் றேதுகளிலா நற்போதந் தோன்றுமட்டும், பனிமாயையில்லை யெனவென் சொல்லாலே பழுதில்லாவறுதி யுறப்பற்றி நிற்பாய், புனிதமுறு பிரமமேயெல்லா மென்று புந்தியிற்கண்டோர் முத்திபொருந்தினரே. (74)

(ப - ரை.) நனிமெய்யாய் = மிகவும் உண்மையாய், மாயையிலதென்று = மாயையானது இல்லவேயில்லை யென்று, இவ்வாறு = இங்ஙனம், நாடுவாய் = சிந்திப்பாய், ஞானியாய்ஞேயம் பெற்றால் = அறியவேண்டியதையறிந்து அடையவேண்டியதை அடைந்தாயேயானால், துனிசெயுமீதுளமாயை அறிதியன்றே = அக்கணமேய ஞருறுத்தும் இம்மாயையினதியற்கையைத் தெரிந்துகொள்ளுவாய், துகள் இலாநற்போதம் தோன்றுமட்டும் = பிரதிபந்தகரகித உண்மையுணர்வு உதயமாங்காறும், பனிமாயையில்லையென என்சொல்லாலே = பனிபோல ஆவரணஞ்செய்து மூடிக்கொள்ளும் அவித்தை நாஸ்தியென்பதாக எமதுவாக்கினாலே, பழுதில்லா அறுதியுறப்பற்றி நிற்பாய் = நிச்சல நிச்சயமுடையவனாக ஆதி, புனிதமுறு பிரமமேயெல்லா மென்று புந்தியிற் கண்டோர் = பவித்திரமாய பிரஹ்மமேசர்வமும் என்று புத்தியிற் றரிசித்தவர், முத்தி பொருந்தினரே = மோக்ஷசொரூபமே யாவர்.

(ஸ்ரீ - வீர.) இம்மாயையானது வஸ்துவிருத்தியாகவோ, இல்லவேயில்லை, இவ்வண்ணம் ஆசாரிய சுருதிதருக்க சுவானுபவ அப்யாசப்பிரதீபித பாவனையினாலே, நீதத்துவவித்தாகிச் சுவாத்மவாஸ்த வரூபம், விஸ்மிருதசண்ட சாமீகரம்போலும், அடைவுற்றவ

ஞனி, எமது வாக்கியத்தின் ஆசயத்தை அறிவாய் நன்குபாவிப்பாய், இப்போதோ, எமது வசன விசுவாசத்தால், பரோக்ஷகற்பமாகவே யாங்கூறிய பொருள் கிரகிக்கத்தக்கதாம் எனல்:—நற்போத மென்பது. நீ யெதுகாறும் நன்குணரவில்லையோ அதுகாறும் எமது வாக்கியத்தானே உனக்கு அவித்தையே யில்லையென்பதான அதிநிரேஷ்ட நிச்சயமானது நிச்சலமாக வுண்டாகக்கடவது. நிச்சயத்திற்கு நிச்சலத்தன்மைச் சம்பாதனத்தில் உபாயங் கூறிமுடித்தல்:—பிரமமே யென்பது. மநோவிருத்தி ரூபம்யாது இது சாக்ஷி பிரத்யய வேத்யத்தன்மையை அடைவற்றது, சர்வவியவகார பீஜத்தன்மையானேமகத் மனனம் = அதீத அநாகத அநேகார்த்தப் பிரதிசந்தானம் இது அசத்துமாத்திரமேயாம் அதன்கண்ணே துயாதோவெனின்? மநோமாத்திர விஜ்ரும்பித மாதலின் என்பதாம். மநஸநிராசமருவியவழிமனம் நிரிந்தன அகிஞ்னியொக்கத் தானேசாந்தியாம், எனப் பிரஹ்மசன்மாத்திர பரிசேடமாக, முன்மொழிந்த நிச்சயநிச்சலத் தன்மையானே புரு ஷடார்த்த சித்தியாம் என்னுங்கருத்தானே கூறல்:—பிரமமே யென்பது. சத்தத்பிரஹ்ம மென எவனதுண்ணிச்சயம் அவனே மோக்ஷவடிவமாவன்.

(ச) ஸனிமெய்யாய் = பரமார்த்தமாக, மாயையிலதென்று, = அவித்தையே யின் றென்று; இவ்வாறு நாடுவாய் = இங்ஙனம் உதித்தபாவனையால் ஞானியாய் ஞானப் பேற்றால் = பிரமான்மைக் கியத்தினது லாபத்தினால், துனீசெயுமீதுள மாயையறிதி யன்றே = இவ்வவித்தையினது சுபாவத்தை நீயுணர்வாய், அன்று ஏ அசை, துகளிலா நற்போதந் தோன்றுமட்டும்= நீ பிரதிபுத்த ஞானதசையும், என்சொல்லாலே=எனது வசனத்தாலே, பனிமாயை யில்லையென அவித்தையே யின்றென்று, பழுதில்லா வுறுதி யுறப்பற்றி நிற்பாய் = இராமா நீ நிச்சலநிச்சயனுவாய், புனிதமுறு பிரமமேயெல்லா மென்று = சர்வம்பிரமமென்று, புந்தியிற்கண்டோர் = அகத்திற் பாவிப்பவர், முத்தி பொருந்தினரே. (17)

(ஸ்ரீ - வீர - அ - ஸை.) பேதமதியைக் கெடுத்துப்போதமுற வேண்டு மென்றும், போதம்புக்கா லிம்மாயையித்தகைத் தெனத்தெரிய மென்று மியம்பல்:—பேதமென்பது.

பேதமுறுபுந்தியே மாயையாகும் பெரிதுவருந்தியு மிதனைப்போக்கல் வேண் டும், போதமுறு பேற்றினுலன்றி மாயைப் பொருநதியின் கரைதோன்றுப் பொ ருந்தத்தோன்றி, லேதமறுமப் பதமேயிறவாவீடா மிம்மாயை பிறப்பிடமே தென்னவேண்டாஞ், சேதமுறக் கொல்வழியே தென்றுதேர்வாய் சிதைவுற்று லிதனியல்பு தெரியுமன்றே. (18)

(ப - ரை) பேதமுறு புந்தியே=வேற்றுமையோடு கூடியமதியே, மாயையாகும்= அவித்தை யெனப்படும், பெரிதுவருந்தியும் இதனைப் போக்கவேண்டும் = எவ்வகையா னும் முயற்சித்து இந்த மாயையை நிவர்த்திக்க வேண்டும், போதமுறு பேற்றினுல் அன்றி = ஆத்மபோதமடையும் இலாபத்தால் அல்லாது, மாயைப்பொருநதியின் கரை தோன்று = மாயையென்னுங் கோலாகலம் வாய்ந்த பேராற்றின்பாரம் அடையமுடியா தாம், பொருந்தத் தோன்றில் = நன்றாக அடையப்பெறின், ஏதமறுமப்பதமே யிறவா வீடாம் = குற்றமில்லாததும் மெய்யிடமே அக்ஷயமான மோக்ஷமாம், இம்மாயையிறப் பிடம் ஏதென்னவேண்டாம் = இந்தமாயையானது யாங்ஙனமுண்டாயது? என்னும் விசாரணையனக்கு வேண்டாம், சேதமுறக் கொல்வழியேதென்று தேர்வாய் = நாட்டம் அடையும் படியாக ஹதஞ்செய்யும் மார்க்கம் யாதென்பதாக விசாரணைசெய்தி, சிதைவுற்

ரூல் = க்ஷீணமடைந்த பின்னர், இதனியல்பு = இதனது இயற்கையானது, தெரியும் = அறிந்துகொள்வாய், அன்று ஏ அசை.

(ஸ்ரீ - வீர.) கூறியபொருளைத் திரமுறுத்தும் பொருட்டுப் பாஷியார்த்த மனன திருஷ்டிகட்குப் பந்தஹேதுத் தன்மையைப் பகர்தல்: — பேதமென்பது, எவ்வெத்திருஷ்டிகள் சலாசல ஆகிருதி யுடையனவாய் வேறுபட்ட வெளிப்பாவனை மயமாமோ, அவையாவுமே சமஸ்தஜகத்தினும் உள்ளஜீவபக்திகளின் பந்தவஹேதுகளாம்; வருவனசென்றனவென்னும் அசத்துகள், நிகழ்வனவென்னும் சத்துகள், ஆம். இருவகைமனனவிடயங்களிலும், சத்தேயிவை யென்றுதல், அசத்தேயிவை யென்றுதல் ஆகவேரூபதிட நிச்சயம், யாவனுக்கோ அவ்வித அதிகாரியாவன் ஜகத்சொப்பன பூமிபோலும் பிராந்திமாத்திரமெனப் பற்றற்றவனுய்க் காண்பனோ அவன்மூழ்கான். அவித்தை முதலியவை உண்மையில் இல்லாமலே யிருக்குமாயின் யாதின்பொருட்டுச் சாத்திரமெனின் ? கேட்டி ! அவித்தையாம் நதியில் அடித்து இழுக்கப்படும் ஆத்மா ஆன்மஞானமில்லாமல் ஈண்டு அநுபவிக்க அகப்படவே மாட்டாதாம்; அவ்வான்மஞானமும் சாஸ்திரார்த்தத்தானே நன்கடையப் பெறும். உண்மையாக அவித்தைச் சரித்தின்பாரம் ஆன்மலாபமின்றி அடையப்படாதாம், அடையப்படினதுவே அக்ஷயபதமென வறையப்பெறும். அற்றேல் இவ்வவித்தை பரமான்மாவின்கண் யாங்ஙன முண்டாயது எனின் ? எங்ஙனமாகவோ மலத்தைத்தரும் இவ்வவித்தை யுதயமாகிப் பரமான்மாவை யாசிரயஞ்செய்து பெருந்திதியடைந்து நன்றுக உட்கார்ந்துகொண் டிருக்கின்றது; இஃதெங்ஙன முண்டாயது என்னும் ஆராய்ச்சியானது உனக்கு வேண்டாம், அதனுலென்பயன் ? மற்றே, இதனை யாங்ஙனம் யான்கொல்வேன் என்னு மிவ்விசாரணை யுனக்கனவரத மிருக்கவேண்டும் ஆயின் இஃதென் அனுதியா சாதியா? முதலதேல், ஆன்மாவைப்போல நித்தியமேயாம், இரண்டாவதேலோ .ஹேது இயம்பத்தக்கதாம்; இவ்வண்ணம், இஃதென்னுண்மையதா ? இன்மையதா ? ஆதியதேல், ஞானத்தா னீங்காதாம், இரண்டாவதேல், சம்வாதிவிகார ஹேதுத்வங்கூடாதாம், என்பவாதியவாய சங்காசகத்திரமும் அதன் நாசத்தானேதீரும், என்னுங்கருத்தானே, = கூறல்: — சிதைவுற்றூல் என்பது. இது அஸ்தத்தையடைந்து க்ஷீணமுறில் இதனது இயற்கையின்னதென எளிதில் நீயுணர்வாய்.

(ச.) பேதமுறுபுந்தியே = பேதபுத்தியே, மாயையாகும் = இவ்வவித்தையாம், இதனை = இவ்வவித்தையை, பெரிதுவருந்தியும் = சர்வப்பிரயத்தனத்தாலும், போக்க வேண்டும் = தள்ளவேண்டும், போதமுறு பேற்றினலன்றி = சொரூபசாக்ஷாத்காரத்தைத்தவிர, மாயைப்பொருதியின் கரைதோன்றூ = அவித்தியா சரித்தினது பாரத்தையடையக்கூடாது, (சரித்து = நதி,) அவித்தியா கிவிர்த்தி சித்தியாதென்பது பொருள். ஏதமறு மப்பதமே = அவ்வவித்தியாபாரமே, இறவாவீடாம் = கைவல்லிய மெனப்படும், இம்மாயை = இவ்வவித்தை, பிறப்பிடமேது = எவ்விடத்தினின்றுஞ் சனித்தது, என்னவேண்டாம் = என்னும் விசாரணை நிஷ்பிரயோஜன மாதலின் இராமா நினக்கு வேண்டாம். சேதமுறக்கொல்வழியே தென்று தேர்வாய் = இவ்வவித்தை நின்னேமீளவுஞ் சென்மதுக்கங்களிற் சேர்க்காதபடி, இவ்வவித்தையைப் எப்படி நாசஞ்செய்வேனென்றே விசாரிப்பாய், இதுவேபிரயோஜனமாதலின் என்க. பிரயோஜனத்தையே சொல்லுகின்றூர்: சிதைவுற்றூல் இதனியல்புதெரியும் = இவ்வவித்தை க்ஷீணமாயொழியின் இதனது சுபாவம் வெளிப்படும். அன்று ஏ இரண்டும் அசை.

(ஸ்ரீ-வீர - அ-சை.) அவித்தையின் ரூபற்றூதிகள் அழிந்தாற் புலப்படுமாதலின் அதற்குரிய நிச்சைசெய்யெனல்:—யாதென்பது.

யாதினிற்ரோன்றிய தென்றும் யாதீதென்றுமிறந்த நெறியாதென்று மிறந் காற்ரோன்று, மாதவிஞல் வன்றுயரின் சாலியான வவித்தையெனு நோய்க்கு மருந்தருந்தச் செய்காற், நீதுபயில்பிறப்பென்னுங் கடலின்மூழ்காய் செறிகாற் றுத்தன்னுருவாஞ் சேணிறன்ஞற், சாதமுறத் திரிவதுபோற் றன்பாற்ரோன் றுஞ் சத்தியினுலாத்தும தத்துவநின்ரொல்லும். (19)

(ப - ரை) யாதினிற் ரோன்றியது என்றும் = எதனினின்றும் உண்டாயதென் றும், யாதீதென்றும் = எவ்வாறென்றும், இறந்தநெறி யாதென்றும் = கட்டமெங்ஙன மென்றும். இறந்தாற் ரோன்றும் = நசிக்கின்யாவுமே புலப்படும், ஆதலினுல் = ஆகை யால், வன்றுயரின் சாலியான அவித்தையெனு நோய்க்குமருந்து அருந்தச்செய்தால் = கொடியதுக்கங்களின் இடமான அவித்தையென்னும் ரோகத்திற்கு ஔடதம் புகிக்கப் பண்ணின், நீதுபயில் பிறப்பென்னும் = நீமையையவிளைவிக்கும் ஜன்மமென்னும், கட லில்மூழ்காய் = துக்கசமுத்திரத்தில் அழுந்தமாட்டாய், செறிகாற்று = பொருந்திய வாயுவானது, தன்னுருவாம் சேணில் = தனதுவடிவாம் வியோமத்தில், தன்ஞல் = தானு கவே, சாதமுறத்திரிவதுபோல் = தோன்றியோடி யாடுவதுபோல, தன்பால் தோன் றும் சக்தியினுல் = சுவாத்மாவினிடத்திலே பிரதீதியாகும் சுவாத்மசக்தியினுலே, ஆத் தமதத்துவ நின்ரொல்லும் = ஆன்மதத்துவமானது லோலத்தன்மையை யடையும்.

(ஸ்ரீ - வீர.) எதனினின்று மிஃதுண்டாகின்ற தென்றும், எவ்வாறி தண்டாகின்ற தென்றும், எங்ஙன் கட்டமுறுகின்ற தென்றும், கட்டமானபின் நன்ரூயறிவாய், உண் மையாயோ இஃதில்லவேயில்லை, ஆராய்ந்து பாராமையினுலே யிதுவிளங்குவது போன் றதாம். எத்தகைய சூரர்களாயினும் மதிமான்களாயினும் அவித்தையினுலே விவசமாய் விடுவார்களாதலின், ரோகசிலம்வாய்ந்த இதனை விகாசஞ்செய்வதில் முயற்சிசெய்வா யாக; எங்ஙனமிது ஜன்மதுக்கங்களில் மறுபடியும் உன்னைச்சேர்ப்பியாம லிருக்குமோ, சுயமாகவே கடஸ்தனிடத்திலும் அத்தியாசத்தாலாய சலனம்விரோதமற்றதாமெனல்?- செறிகாற்றென்பது. தன்னிடத்திலேயே தன்ஞலேவியோ மத்தில்மாருதம் உலாவுதல் நேருதல்போலஈண்டாத்மா ஆத்மசக்தியினுனே தன்னிடத்திலேயே லோலத்தன்மையை யடையாநிற்கும்.

(ச.) யாதினிற் ரோன்றியதென்றும் = பிறந்ததிப்படியென்றும், யாதீதென்றும் = சொரூபமித்தன்மைய தென்றும், இறந்தநெறியா தென்றும் = நஷ்டமானது இவ்வழி யென்றும், இறந்தால் = அவ்வவித்தை நஷ்டமாயின், தோன்றும் = அகிலமும் அறி வாய், ஆதலினுல் + செய்தால் = அந்தக்காரணத்தினுல் ரோகாதிகளுக்கு ஆசிரயமான இவ்வவித்தை நசிக்கும்படி சிகிஷிக்கவெத்தனஞ் செய்வாய், அங்ஙனஞ்செய்யின், நீது × மூழ்காய் = இத்தன்மையான அவித்தை ஜன்மதுக்கங்களில் மறுபடி நின்னைக்கூட்டாது, தன்னுருவாஞ் சேணிற்றன்ஞல் செறிகாற்று சாதமுறத்திரிவதுபோல் = மாருதம் உலாவுவதுபோல், தன்பால் = சுவான்மாவில், தோன்றுஞ் சத்தியினுல் = ஆன்மசத்தி யினுல், ஆத்துமதத்துவ நின்ரொல்லும் = ஆன்மாவேயுலாவுவன், துவளும். தன்னுருவாஞ் சேணில் மாருதமெப்படி ஆசிரயாந்தரமின்றி (ஆன்மாவின்கண்ணே) கரணந்தர மின்றித் தோன்றி நடக்கின்றதோ, அப்படி (ஆன்மாவும் சுவாபின்னமான) சிற்சத்தியாலே சுவான் மாவின் கண்ணே நின்ரொல்லும் = ஜகத்துரூபத்தை யடைவன்; ஆன்மாவேஜகத்துக்கதி காரணம் உபாதானம் நிமித்தமும் ஆமென்பது பொருள்,

(ஸ்ரீ-வீர - அ-கை.) பரமார்த்தமாக ஆத்மாவின் இயல்வகையாகவே யிருப்பதற்குக் கற்பிதரூ பாந்தரமாக ஸ்புரணமாவதில் திருஷ்டாந்த மிதுவெனல்:—நொய்யவென்பது.

நொய்யநெடுஞ்சிற் கடறன்னிடத்தே யற்பநுடக்கத்தாற் கணம்விளங்கு நுண்மைநோக்கா; லியமறத் தற்பதமொன் றகண்டமென்றே யழுந்துவாயக்கட வீலைசந்துசற்றே, மொய்யறிவாஞ் சிற்சத்திகண காலத்தின் முழுதுறு சத்தியி னூலு முழங்கத்தோன்றித், துய்யவிடங் காலமொடு தொழில்கண் மூன்றுதூயன சத்திகடம்மைத்துணையாய்ச் சேர்க்கும், (உ0)

(ப - ரை.) நொய்யநெடுஞ் சிற்கடல் = சொச்சமாய்ச் சூக்குமமாய் விசாலமாய சிதர்ணவம், தன்னிடத்தே = சுவாத்மாவின் கண்ணே, அற்பநுடக்கத்தால் = தனதுபரி ஸ்பந்தங்களால், கணம்விளங்கும் = க்ஷணத்தில் ஸ்புரிக்கும், நுண்மைநோக்கால் = சூக் குமதிருஷ்டியால், ஐயமற = சமுசய மில்லாமல், தற்பதம் ஒன்று அகண்டம் என்றே = பரமான்ம பதமானது ஏகாத்மகம் கண்டிதமற்றது என்பதாகவே, அழுந்துவாய் = திட தரமாயுள்ளே பாவிப்பாய், அக்கடலில் = அச்சிற் சமுத்திரத்தில், சற்றேயசைந்து = ஜிஞ்சித்துக் கலக்கமுற்று, மொய்யறிவாஞ் சிற்சத்தி = சிற்சத்திதன்மயமாகவேவிளங் கும், கணகாலத்தில் = கொடிப்போதில், முழுதுறு சத்தியினூலும் முழங்கத்தோன்றி = அத்தேவிசர்வ சக்தித்தன்மையாளே களர்ந்துவிளங்கி, துய்ய இடம்காலமொடு தொழில் கள் மூன்றுதூயன சத்திகள் தம்மைத்துணையாய்ச் சேர்க்கும் = பரிசுத்த தேசகாலக்கிரி யாசக்திகள் மூன்றையும் சகிகளாகக் கூட்டிக்கொள்ளுவள்.

(ஸ்ரீ - வீர.) எங்ஙனம் சரதாதபங்களின் சமுதாயங்களாளே யொளிர்ந்துகொண்டு தொங்கும் பொலி நெகிழ்ந்த கனகம்போலச் சாகரமிலங்குகின்றதோ அங்ஙனம் தன்னிடத்திற் சிற்கடல் நன்கமைவுற்ற இந்திரியகப் பிரகாசங்களாளே இலங்காகிற்கும். அதீந்திரியத்தில் ஐந்தி ரியகரூபஸ் புரணத்தினும் திருஷ்டாந்த மூன்றாம்; அதீந்திரிய வியோமத்தில் இந்திரிய கோசரமுத்து மாலயினசைவு காணப்பெறுவதேபோலச் சின்மகாம்பரத்திற் சிற்சத்தி பிரகாசரூபமா யிலங்கும். சிறிதுகலக்கரூபமாகவே அச்சிற்சக்தியானது, சின்மகார்ண வத்தில், அம்மயமாய சித்தாயிலங்கும் தெளிவாய் ஆண்டே, அர்ணவத்தில் ஊர்மிபோ லும். ஐந்திரியகசிற்சக்தி பரமார்த்தசித்தே, ஐந்தியத்தன்மை யாரோபமே, கேவலம் ஏனது கோல் தாமரை முதலியவற்றினும் ஒனபாதிகம், எனக்கருதல் வேண்டும், சூரீபாசாதி கற்பித ஆலோக சித்திரத்தில் உபாதி பாரவசியத்தையடைவுற்ற ஆலோக ஸ்ரீயைப்போல, ஆன்மாவினின்றும் அவ்வியதிரிக்த மாகவே யிருந்தபோதினும் வியதிரிக்தம்போலவே யிருந்து விளங்கும். இதனுனே யதற் குக்காலிக பரிச்சேதமும்; சக்திசக்தி மத்தாதிபேத விபாவனமும் பொருத்தமாம் என் னுங்கருத்தால் உரைத்தல்:—தணமென்பது கணத்தில் அத்தேவி சர்வசக்தித்தலைமை யாளாகவிளங்குவள், கலேந்துவின் சீதத்தன்மையைப்போல், சுயம்சக்தியாகிய தன்னைக் கற்பிக்கின்றது. அயற்சக்திகட்கும் சிற்சக்தி யுதயாதீனமாகவே பிரவிருத்தியாம் சுவாதந்திரியமாக வின்றும், எனல்:—துய்ய வென்பது. பரமான்மாவினின்றும் உதய மாய இச்சிற்சக்தியானது பிரகாசமென்னும் பெயரையுடையதாகி, தேசகாலக்கிரியா சக்திகளைச் சகிகளாகக் கொண்டுலவும்.

(ச.) நொய்ய நெடுஞ்சிற்கடல் = சிதருணவம், அற்பநுடக்கத்தால் = சிறிது சொரூப விசேஷங்களால், தன்னிடத்தே = சுவான்மாவின் கண்ணே, கணம்விளங்கும் = பிரகா சிக்கு மென்பதாயிற்று; நுண்மைநோக்கால் = அந்தக் காரணத்தினால், தற்பதம் = அந்த

வஸ்து, ஒன்று = ஏகாண்மகமும், அகண்டமூமாமென்று, ஐயமற வழுந்துவாய் = அகத்திற்றிடமாகப் பாவிப்பாய் விசாரிப்பாய், அக்கடலில் = சின்மகார்ணவத்தில், மொய் யறிவாம் = அவித்தியாரூபமான, சித்சத்தி, சற்றேயசைந்து = சொற்பஞ் சலனரூபமாய், கணம்விளங்கு மதினெடொட்டுக. சித்துரூபமாகவே யவ்விடத்திற்றானே கடவிலலைபோற் பிரகாசிக்கு மென்றதாயிற்று, அந்தச் சித்துரூபமானதேவி அநந்தமாதலின், முழுதுறு சத்தியினலும் = சர்வசக்தியினல், கணகாலத்தில் = கணம், முழங்கித் தோன்றி = அப்படிப் பிரகாசிப்பதாய், தூணையா = சகிகளாக = சகசாரிணிகளாக, துய்ய + கடம்மை = தேசகாலக் கிரியாசத்திகளை, சேர்க்கும் = பிரேரகஞ்செய்யும் சிருஷ்டி நிமித்தம் பிரவிர்த்திப்பிக்கும். (20)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சித்சத்தியானது பாவித்துப் பல்வகையா தலையியம்பல்:— தனதென்பது.

தனதுசுபாவத்தை யறிந்தநந்தமான தற்பதத்தி லிருந்துஞ்சிற்சத்திதானே, யெனதுருவிவ் வளவென்றே யறிவற்றுற்போ லெண்ணுறுமிப் படியுருவையிது பாவிக்கி, லனுகதமாயப் பொழுதே பெயர்களெண்ணே யாதியாம் பார்வைகள் வந்தடையாநிற்குங், கனவிகற்பந் தருவடிவாய்ச் சித்துரூபங் கவரிடங்காலந்தொழிற்குக் கலந்தபற்றும். (21)

(ப - ரை.) தனது சுபாவத்தையறிந்து = சுவசுபாவத்தை யுணர்ந்து, அநந்தமான தற்பதத்தி லிருந்தும் = அநாதியநந்தமான பரமபதத்தில் நிதமாயும், சிற்சத்திதானே = சிற்சத்தியானது சுயமாகவே, எனதுரு இவ்வளவு என்றே = என்னுடையவுருவம் இத்தூணைப் பரிமாணந்தான் என்பதாகவே, அறிவற்றுற்போ லெண்ணுறும் = விசாரரகித மானதுபோலப் பாவிக்கும், இப்படியுருவை யிதுபாவிக்கில் = இவ்வண்ணம் ரூபத்தை யிது பாவனைசெய்யின், அனுகீமாய் அப்பொழுதேபெயர்கள் எண்ணேயாதியாம் பார்வைகள் வந்தடையாநிற்கும் = தொடர்பாய் அக்கணத்திலேயே நாமசங்கை முதலான திருஷ்டிகள் வந்தொன்றுநிற்கும், கனவிகற்பம் தருவடிவாய்ச் சித்துரூபம் = விகற்பகற் பிதாகாரமாய்ச் சித்துரூபம், கவரிடம்காலம் தொழிற்குக் கலந்தபற்றும் = கொள்ளும் தேசகாலக் கிரியைகட்கு விரவிய ஆஸ்பதமாம்.

(ஸ்ரீ - வீர.) இங்ஙனம் ஸ்வஸ்வபாவம் தெரிந்து அநாதியநந்த பதத்தில்நிதமாம், அவிபாவிதமாய் இங்ஙனங்கூறிய இலக்கணங் கற்பிதரூபத்தைப் பிராந்தியினுலே ஸ்வஸ்வபாவமாகக் கவர்ந்து பரிச்சின்னமாக யானிருக்கின்றேன் என்று தன்னைத்தானே பாவிக்கும் நிடமாக வாசனைப்படுத்தும். அப்பரமசத்தையினுலே எக்காலிங்ஙனம் ரூபம் பாவிதமாமோ அக்காலேயிதனை நாமசங்கியாரூப பேதங்களும் இஷ்டாநிஷ்டாதி சர்வ ஜகத்கற்பனைகளும் ஆகிய திருஷ்டிகள் தொடர்ந்து நிற்கும். "உயிர்த்தே பிராணன் எனும்பெயருறுமால், வழங்கியே வாக்காம் கண்டேகண்ணும்" என்னும் சுருதியும் அவ்வாறே யியம்புகின்றது. இவ்வண்ணமாகவே சித்தினிடத்திற் கற்பிதமாய சர்வத்திற்கும் சின்மாத்திரத்தன்மையே பரமார்த்தரூபமென்பது பலிதமாம், பெருங்கடலில் அளவில்லாத அலைமுதலியவைகள் தோற்றியபோதினும் அக்கடலே யாமாபோல, ஆன்மாவிற்றோற்றியயாவுமே ஆன்ம அறிவேயாம்! சத்ரூப ஆன்மாவினின்றும் வியதிரிக்த கற்பனை அவஸ்துவே யாமாதலின் என்றுணர்க. தேசகாலாதியோடு கூடிச்சங்கற்பித்துக் கலனையை யடைகின்றபடியினுலே க்ஷேத்திர உபாதிகற்பனை யதினமான சித்தானது

க்ஷேத்திரஞ் ஞத்தன்மையை யடைகின்றது பிரசித்தமாமெனல்:—கனவிகற்பமென்பது. விகற்ப லவிதாகாரமூற்றுத் தேசகாலக் கிரியைகட்கு இடமாம்.

(ச.) சித்சத்திதானே = இந்தச் சித்துரூபமான தேவியே, தனது சுபாவத்தை = சுவ சொரூபத்தை, அறிந்து உன்னதமாய் அகந்தமான தற்பதத்தில் = கைவல்லியபதத்தில், இருத்தும், பிரமத்தமாய் = விசாரரகித்மாய், எனதுரு விவ்வளவென்றே காட்டுமாப் போ லெண்ணுறும் = பரிச்சின்ஞகாரமாகப் பாவிப்பள், இப்படியுருவை யிதுபாவீக்கில் = இத்தேவி பரிமிதாகாரமாகப் பாவிக்கில், அப்பொழுதே இத்தேவியைப்பெயர்க ளெல்லையாதியாம் பார்வைகள் = நாமசங்கியாதி திருஷ்டிகள், அநுகதமாய் வந்து = பின்வருவனவாய், அடையாநிற்கும், நாமசங்கியாதி பேதத்தையே பிரபஞ்ச (விசாலஞ்) செய்தற்குச் சொல்லுகின்றார்:—கன + பற்றும் என்றது = இப்பாதமினி யன்வயம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) இனிமுறைஸ்ரீக்ஷேத்ரஞ்ஞன், அகங்காரம், புந்தி, மனம், பொறியாதலை இயம்பல்:—ஈங்கென்பது.

ஈங்குரைசெய் சித்தினுடை யுருவந்தன்னை யாவருஞ்சேத் திரக்கியனென்றியம்பாநிற்ப, நாங்கதுவும் வாதனையைச் செய்யாநின்றே யகங்கார பாவனையை யடையாநிற்கும், வாங்கருமாங் காரமுநிச்சயிப்பதாகி மலினமுறுபுந்தியா மலஞ் சேர்புந்தி, வீங்கியகற்பனை வடிவாய் மனனெஞ்சாம் விகற்பமிகு மனம்பொறியா மெல்லவந்தே. (உ)

(ப - ரை.) ஈங்குரைசெய் சித்தினுடை யுருவந்தன்னை = முன்னர் உரைசெய்த சித்தினது ரூபத்தை, யாவரும் சேத்திரக்கியன் என்றியம்பாநிற்ப = க்ஷேத்ரஜ்ஞன் என்று இயம்புவர், ஆங்கதுவும் = அந்தக்ஷேத்ரஜ்ஞனும், வாதனையைச் செய்யாநின்றே = வாதனையைவளர்த்தி, அகங்காரபாவனையை யடையாநிற்கும் = அகங்காரத் தகைமையை அடையும், வாங்கரும் = கெடுத்தற்கரியதாய, ஆங்காரமும் = அவ்வகங்தையும், நிச்சயிப்பதாகி = நிண்ணயஞ் செய்வதாய், மலினமுறுபுந்தியாம் = களங்கபுத்தியெனக் கழறப்பெறும், மலஞ்சேர்புந்தி = அம்மலமயமதி, வீங்கியகற்பனை வடிவாய்மனன நெஞ்சாம் = பருத்தசங்கற்ப வடிவமாகி மனஞஸ்பதத்தைமருவும், விகற்பமிகுமனம் பொறியா மெல்லவந்தே = பையப்பைய மனங்கன விகற்பத்தையடைந்து இந்திரியத்தன்மையை யடையும்.

(ஸ்ரீ - வீர.) ஹே மகாபாகுவே! சித்தினதுருவம் க்ஷேத்திரஜ்ஞனெனச் செப்பப் பெறும், சரீரத்தை க்ஷேத்திரமென்பர், அதனையிது அகண்டிதமாய் அகமும்புறனும் அறிதலினுல் க்ஷேத்ரஜ்ஞனெனப் பெற்றதாம். க்ஷேத்திர கற்பனைக்கிரமம் தரிசிப்பித்தல்:—வாதனையென்றது. அதுவும் வாதனையை வளர்த்துக்கொண்டே மீண்டு மகங்காரத்தன்மையை யடைகின்றது, அகங்காரமும் அத்தியவசாதாவாய = நிர்ணேதாவாகி, அதனுனே கற்பஞ்சந்தர களங்கியாம் புந்தியாம், அப்புத்தியானது சங்கற்பங்களைச் செய்து மனத்தினது பதத்தை மன்னுகிற்கும், கனவிகற்பத்தோடு கூடியமனந்தானே மெதுவாக இந்திரியத் தன்மையை யடையும்.

(ச.) கனவிகற்பம் தருவடிவாய் — விகற்ப கற்பிதாகாரமாய் — சங்கற்ப விகற்பாதியோடு கூடினதாய், கவரிடங்காலக் தொழிற்குக் கலந்தபற்றும் — தேசகாலகிரியாஸ்பதமாகியது, — தேசகாலாதிகளோ டவச்சின்னமானது, சித்துரூபம் — சித்தினது ரூபம், ஈங்கு + தன்னை — இதனை, யாவரும் க்ஷேத்திரஞ் ஞனென்றியம்பாநிற்பர், =

க்ஷேத்திரக்ஞனென்று ஸ்ரீ இராமாமகான்கள் சொல்லுவர், ஆங்கு அசை, அதுவும் = க்ஷேத்திரக்ஞனென்னும் ஜீவன், வாதனையைச் செய்யாகின்றே = வாசனையைப் பாவிப்ப வனுய அகங்காரபாவனையை யடையாகிற்கும் = அகங்காரதையை அடைவன், வாங்கரு மாங்காரமும் = அகங்காரமும், மலினமுறும் = பின்வாசனு களங்கியாய், நிச்சயிப்ப தாகி = நிர்ணயிப்பதாய், புத்தியம் = நிச்சயாண்மிகை புத்தியென்னும் வசனத்திஞற் புத்தியெனப்படும், மலஞ்சேர்புந்தி = புத்தியும், வீங்கியகற்பனை வடிவாய் = சங்கற்பாதி களிஞற் கற்பிதமாகிய, மனனெஞ்சாம் = மனஞஸ்பதமாம், மனத்தன்மையடையும், மனம் = மனதும், விகற்பமிகும் = கனவிகற்ப முடையதாய் = நிர்விடவிகற்பமுற்று, பொறி யாம் = வாகியேந்திரியமாம், (22)

(ஸ்ரீ - வீர - அ - கை.) உடற்கற்பனையை யுரைத்து, கற்பனைக்கயற்றிஞலே கட் டுண்ட ஜீவன் பந்தப்படுதலை யுரைத்தல்:—கரவென்பது,

கரசரணமயவுட லும்பொறிக ளென்பர்கவல் வுறவிப்படியன்றே கலந்துசீவன் விரவியசங்கற்ப மெனும்பாசத்தாலே வீக்குண்டு தன்பவலை வீசப்பட்டுத் தரமறவீனதை யடைவேயடையா நிற்குஞ்சத்தி மயமாமனமித் தன்மையாகிப் பொரவகங்காரதைமேவிக்கோசகாரப்புழுப்போற்றன்னிச்சையிஞற்பூணும்பந்தம்

(ப - ரை.) கரசரண மயவுடல் ஐம்பொறிகள் என்பர் = பாணிபாதாதி மத்தேகம் இந்திரியங்கள் என்பர், கவல்வுற இப்படியன்றே கலந்துசீவன் = எல்லாச் சஞ்சலங் கட்குமிடஞக இவ்வாறல்லவோ விரவியுயிரானது, விரவியசங்கற்ப மெனும்பாசத்தாலே வீக்குண்டி = தன்னைப்பற்றிய சங்கற்பவாசனை யென்னும் இரஜ்ஜுவிஞலே வேஷ்டி தனுய், தன்பவலை வீசப்பட்டி = துக்கஜாலம் பரப்பப்பெற்று, தரமற = தன்யோக் யதையிழந்து, ஈனதையடைவே யடையாகிற்கும் = மூறையே நீசத்தன்மையை முற்ரு நிற்கும், சத்திமயமா மனமித்தன்மையாகி = சக்திமயமாஞ் சித்தம் இப்பான்மையையி யைந்து, பொரவகங்காரதைமேவி = துன்புறுத்த வகங்காரத் தன்மையையடைந்து, கோசகாரப் புழுப்போல = கோசகாரக் கிருமிபோல, தன்னிச்சையிஞல் = சுவ இச் சையால், பூணும்பந்தம் = பந்தனத்தை யடையும்.

(ஸ்ரீ - வீர) பாணிபாதமயமான தேகத்தன்மையை இந்திரியங்கள் அடைகின்றன வெனப் பெரியோர் உணர்வர்; இதனைத் தேகமெனவுலகர் அறிவர், பிறக்கின்றது இருக் கின்றது விகசித்து வாழ்கின்றது. இங்ஙனம் ஜீவன்ரூனே, சங்கற்பவாசனு ரஜ்ஜு வேஷ்டிதனுய், துக்கஜால பரீதாத்மாவாய், கிரமமாகப் பாதியார்த்த சேதன சமர்த்தத் தன்மையை யடையாகிற்கும். கூறியமுறையே, இராகத்துவேடாதி சக்திப் பிரசரமாய சித்தம், சாகோப சாகைகளாகக் கிளேத்துச் சதகோடி வேற்றுமைகளானே அபிமான அபிவிருத்தியாற்கன அகங்காரத் தன்மையே யடைவுற்றதாகி, கோசகாரக் கிருமிக் கொப்பாகத் தன்னுசையிஞலே கட்டிஞக்கதுவும்.

(ச.) கரசரணமயவுட லும்பொறிகளென்பர் = இந்திரியங்கள் பாணிபாதமயதேக மென்பர், இந்திரியங்களே தேகமென்பதுபொருள். வேறுவாக்கியம், கவல்வுறவிப்படிக் கலந்து = இங்ஙனங்கூறிய பிரகாரமாக, விரவிய சங்கற்பமெனும் பாசத்தாலே வீக் குண்டி = சங்கற்பவாசனு ரச்சுவிஞற் கட்டுப்பட்டவனுய், சீவனன்ரே = சீவனே, தன்பவலை வீசப்பட்டி = துக்கஜாலத்தி ல்கப்பட்டு, தரமறவடைவே = கிரமமாக. ஈனதையடையா நிற்கும் = நீசத்தன்மையைப் பொருந்துவன், இந்தன்மையாகி = பூர்

வோக்தப் பிரகாரத்தால், சத்திமயமாம் = விசித்திர சத்தியையுடைய, மனம்—சித்தே, பொரவகங்காரமதமேவி — கனகங்காரமாய், கோசகாரப் புழுப்போல், தன்னிச்சையி னல் — சுவேச்சையாலே, பந்தம்பூணும் — பந்தனமணியும், (23)

(ஸ்ரீ - வீர - அ - ஸை.) தனது சங்கற்பத்தினுலே தானேகட்டுண்டு துன்புறலும், பரியாய நாமங்கள் பெறலும் உரைத்தல்:—தானேயென்பது,

தானேசங்கற்பித்துத்தன்மாத்திரத்தாற் றனிவலையா முட்டொழில் கடன் னேக்கட்டக். கானேறுசிங்கம் விலங்குற்றதென்னக் கவலையினுன்மிகவு மனங்க ணைந்துசோரு, மாறுதமனம்புந்தி ஞானஞ்செய்கை யகங்காரம் வாதனேயுடலம் பகுதிமாயை, யூனமலங்கருமம் பந்தஞ்சித்தமோ தவித்தையிச்சை யெனவு ரைப்பரன்றே.

(ப - ரை.) தானே சங்கற்பித்து = சுயமாகவே சங்கற்பித்துள்ள, தன்மாத்திரத் தால் — சப்தாதிகளால், தனிவலையா முட்டொழில்கள் தன்னேக்கட்ட = ஒப்பற்றஜால மாம் உள்தொழில்கள் தன்னேயகப்படுத்த, கானேறுசிங்கம் விலங்குற்றதென்ன = சங்கி லியினுலே கட்டுப்பட்ட சிங்கம்போல, கவலையினுன் மிகவும் மனங்கரைந்து சோரும் — மனமானது மிகக்கிலேசப்பட்டு அத்தியந்தம் பரவசத்தையடையும், ஆறுதமனம்புந்தி— ஓரிடத்திற் கெடாதமனமெனவும் புத்தியெனவும், ஞானம்செய்கை அகங்காரம்(வாதனே உடலம் பகுதி மாயை)= ஞானமெனவும், கிரியையெனவும், அகங்காரமெனவும், வாதனே யுடலம் — புரியஷ்டக மெனவும், பகுதிமாயை = பிரகிருதியெனவும் மாயையெனவும், ஊனமலம் கருமம்பந்தம் சித்தம் = ஊனபிமானமுற்ற மலமெனவும் கருமமெனவும் பந்தமெனவும் சித்தமெனவும், ஓது அவித்தை இச்சையென உரைப்பர் — சொல்லா நின்ற அவித்தையெனவும் இச்சையெனவும் கூறுவர், அன்று ஏ அசைகள்.

(ஸ்ரீ - வீர.) தன்னுலே சங்கற்பிக்கப்பட்ட சப்தாதி விடயங்களாங் காய்ந்தவிறகு கள் வேய்ந்த இராகாதி சுவாலைகளுக்குள் ளகப்பட்டமனமானது வித்தையைவிட்டு அவித்தையைத் தொட்டுக் கட்டுப்பட்டதாக வெண்ணிச் சிருங்கலையாற் சிறையுண்டசிங் கம்போல அத்தியந்தம் பரவசத்தன்மையை யடைகின்றது. விசித்திரங்களாய விதி நிடேத நானூபகருமங்களின் கருத்துருத் தகைமையை முயற்சியுடன் சம்பாதித்து வாசனேயின் வசத்தால், தனது இச்சைமாத்திரத்தானே அனுசரிதமான நானூயோனி நரகாதி துர்த்தசைகளேயும், இனிக்கூறப்பெறும் மனுஜிதசைகளேயும் மிகமிகவு மடைந்து முற்றினும் பற்றுற்றுப் பரவசமாகித்திரியும். அதற்கே மனுஜிவிருத்திபேதங் களினுலே மனமுதலிய சப்தங்களேப் பஜிக்குந்தன்மையாம் அலது அயலொன்றிற்கு மில தாம் எனல்:—ஆறுதவென்பது. ஒருபான்மனம், ஒருபாற்புத்தி, ஒருபான்ஞானம், ஒரு பூர்கிரியை, ஒருபாலிது அகங்காரம், ஒருபாற்புரியஷ்டகம் எனப்படும்; ஒருபாற் பிர கிருதியெனப்படும், ஒருபான்மாயை யெனக்கற்பிக்கப் பெறும், ஒருபான்மலமென வோ தப்பெறும், ஒருபாற்கருமமென நன்னிலேபெறும், ஒருபாற் பந்தமென வொளிராகிற்கும், ஒருபாற் சித்தமெனப்புடமாம், ஒரு பாலவித்தையென உரைக்கப்படும், ஒருபாலிச்சை யென இனிதிருக்கும்.

(ச.) தானே தன்னிடத்தில் மனஞ்சலனமாகி — அதுவே மனஞ்சுவ சங்கற்பிதங்க ளான, தனிவலையா முட்டொழில் கடன்னேக்கட்ட — தன்மாத்திரைக ளென்னுஞ் சத் தாதிகளினுலுடைய ஜாலாப்பியந்தாத் திருப்பதுமாய், கானேறுசிங்கம் விலங்குற்ற

தென்ன = சிருங்கலையாற்பெத்த முற்றசிம்மம்போல், கவலையினுன் மிகவுமனங்கரைந்து சோரும் = பெரியவிவசதை (சுவாதீனமின்மை) யைப்பொருந்தும், வேறுவாக்கியம், ஆறுதமனம் = ஓரிடத்தில் மனம், புத்தி = ஓரிடத்திற்புத்தி, செய்கை = கிரியை, வாதனையுடலம் = ஓரிடத்திற் புரியஷ்டகம், பருதி = பிரகிருதி, ஊனுன = கற்பிதமான, சித்தம், ஓதவித்தை = சொல்லப்படுமவித்தை, ஓரிடத்தி லிச்சுசெயனவுரைப்பர் இதுவே = நானுசக்தியுக்தமான சைதன்னியமே மனுபுத்தியாதி ரூபத்தால் நானுத் தன்மையை யடைகின்றது என்பதுபொருள். அன்று ஏ இரண்டு மசை.

(ஸ்ரீ-வீர - அ-கை.) இங்ஙனமாகிய வழிபத்தத்தன்மையும் அதற்கே, யான்மாவிற் கோவிலதா மென்றும் அம்மனம் துயருறுவ திங்ஙனமென்றும் இயம்பல்:—அப்பரி சென்பது.

அப்பரிசோ ரோரிடத்தி லோரொன்றுக வாசாபாசத்திஞலமைத் துச்சொன்ன, வொப்பரிய சகவிரிவா மிவற்றையெல்லா முட்கொள்ளும் பலமிதனி லொன்றுமில்லை, கப்புடைய நெடுவடத்தை வடத்தின்வித்துக் கரந்திருப்ப தொக்குமிடர்க் கவலைத்தியின், வெப்பமிகக்கோபப்பாம்பெடுத்து நுங்கவேட்கை யெனுங் கடற்றிரையான் மெலியுமுள்ளம்.

(ப - ரை.) அப்பரிசு ஓரோரிடத்தில் ஒரொன்றுக = கூறியவகையில் ஒவ்வொரு தானத்தில் ஒவ்வொன்றுக, ஆசாபாசத்தினுல் அமைத்துச்சொன்ன ஒப்பரியசகவிரிவாம் — ஆசாபாசவிதாயகமாம் இச்சம்சாரம் அகிலமும், இவற்றையெல்லாம்=இவ்வியாவற்றையும், உட்கொள்ளும் = அந்தரத்திற்நரங்கும், பலமிதனில் ஒன்றுமில்லை = பலன்களால் ஈனமாம், கிட்பலமென்றபடி,) கப்புடைய நெடுவடத்தை வடத்தின்வித்து = சாகோபசாகைகளாய் விரிந்துள்ள விசால வாலவிருக்ஷத்தை ஆலம்விரையானது, கரந்திருப்பது ஒக்கும் = அடக்கிக்கொண் டிருப்பதற்குச் சமானமாம், இடர்க்கவலைத்தியின் வெப்பமிக = சிந்தையாம் அநலச்சிகை யினுற்றகமாகி, கோபப்பாம்பு எடுத்து நுங்க = வெவ்வியசினமாம் வெம்பாந்தளால் விழுங்கப் பெறுவதாய், வேட்கையெனுங் கடற்றிரையால் மெலியும் = காமக்கடற்கல்லோலத்தா லதங்கத்துவியதாய், உள்ளம் = மனமானதுவாகும்.

(ஸ்ரீ - வீர.) இச்சமுசாரம்யாவுமே ஆசாபாசங்களால் உண்டாகியிப்பவாம், சேதனத் துள்ளிருப்பவாம், புருடார்த்தங்களால் ஹீனங்களாம். வடபீஜம் வடதருவையடக்கி வைத்துக்கொண் டிருப்பதுபோலவாம்; எண்ணுத வெண்ணமெல்லாம் எண்ணும் பேரழிவின் சொழுஞ்சிகையால் எரிக்கப்பெறுவதாம் சித்தமானது, கோப அஜகரத்தானே பக்ஷிக்கப் பெறுவதாகிக் காமக்கடற்றிரையாற் கெடுக்கப்படும்.

(ச.) அப்பரிசென்பதற் கருத்தமுன் பாயிற்று. கப்பு + ஒக்கும் = வடபீஜங்கருத்தா, வடத்தைப்போல, ஆசாபாசத்தினு லமைத்துச்சொன்ன = ஆசாபாச விதாயகமும், பலமிதனி லொன்றுமில்லை = நசுவரபலமுமான, ஒப்பரிய சகவிரிவாம் இவற்றையெல்லாம் = இந்தச் சமுசாரத்தை, உட்கொள்ளும்= அந்தரத்திற் நரித்திருப்பதாம், உள்ளமுடன் மெலியுமென்பது முடிபு. கவலைத்தியின் வெப்பமுற = சிந்தைகளே யென்னும் அநற்சிகைகளினுற் றகிப்புற்று, கோபப்பாம்பெடுத்து நுங்க = கோபமே யென்னும் அசகரமாகிய மகாசர்ப்பத்தினுற் பக்ஷிக்கப்பட்டு, வேட்கையெனுங் கடற்றிரையாற் மெலியும் உள்ளம் = காமங்களே யென்னும் அத்தி (சமுத்திர) கல்லோலங்களால் அடிபட்டு.

(ஸ்ரீ - வீர - அ - கை.) கூறியதுயரங்களால் திகைப்புற்ற விஸ்நெஞ்சைக் கடைத் தேற்றுவதே கருணையெனல்:—பெருகிய வென்பது.

பெருகியவிஷ் துயர்களாலவசமாய்த் தன்பிதாமகனை மறந்து மிகப்பீடையுற் றுக், கருகியவிம்மனந்தன்னை யளற்றிலானைக்கரையேற்றி விடுவதுபோற் கரையி லேற்றுய், வெருவுசரமரணமெனும் விடத்தால் வெந்துமிகுநலந் தீங்கெனும் பகையான் மெலியுநெஞ்சுக், கருள்புரியா நரர்மனித வடிவமான வரக்கரே யருள் வடிவமான வள்ளால்.

(ப - ரை.) அருள்வடிவமான வள்ளால் = கிருபையே சொரூபமான தலைவள்ள லாகிய இராகவனே ! , பெருகிய இத்துயர்களால் = உரைத்தவிசாலமான இத்தத்துன் பங்களானே, அவசமாய் = பரவசப்பட்டு, தன்பிதாமகனை மறந்து = ஆத்மாதாமகனை அத்தியந்தம்மறந்து, மிகப்பீடையுற்று = பெரும் பெருந்துயர்களையடைந்து, கருகிய இம்மனந்தன்னை = இந்தச் சிந்தாகுலங்களால் வெந்தமனத்தினை, அளற்றில் ஆனைகரை யேற்றி விடுவதுபோல் = சேற்றினின்றும் மாதங்கத்தை வெளிப்பாகத்தில் ஏறுமாறு செய்விப்பதேபோல, கரையில் ஏற்றுய் = நன்குத்தாரம் புரிவாய், வெருவுசரா மரண மெனும் விடத்தால் வெந்து = பயப்படுமாறு சொலித்தெரியும் ஜராமரண விஷாதமூர்ச் சிதமாகி, மிகுநலந்தீங்கெனும் பகையின் மெலியுநெஞ்சுக்கு = விஸ்தரித்துவரும் சுபா சுபங்களாகிய சத்துருக்களானே திரஸ்கரிக்கப்பட்டு வாடும் மனத்திற்கு, அருள்புரியா நரர் = தயைசெய்யாத மனிதர், மனிதவடிவமான = நராகிருதியையுடைய, அரக்கரே = இராக்ஷசரேயாவர்.

(ஸ்ரீ - வீர.) ஆத்மசொரூப பிதாமகமூலகாரணத்தை முற்றிலும்மறந்து, தன்கிலேக் குழுவினின்றும் நழுவிய நல்வியெனச் சோருற்று, வெவ்வழல் வீழ்ந்த விட்டில்போல விடயபாவகத்தே வெம்பிப்புரளும் மனந்தன்னை ஹே தேவர்போற்றுங் காவலராகவ ! கர்த்தமத்தினின்றும் மாதங்கங்கடுப்ப நன்குத்தரம்புரிதி. ஆனைக்கரை யெனப்பாட மிட்டமாயின், மதனபலவலத்தில் வீழ்ந்து மக்கினமான மாட்டைமேட்டின் மீட்டல் போல் என்று பொருளுரைத்துக்கொள்க. தத்துவஞானம் அதன் சாதனங்கள் முதலிய வற்றில் அநாதரவு வடிவமான கடலின்கண் மூழ்கியிதக்கும் மனத்தையாதரவு பூர்வக மாகக்கரை சேர்க்கவேண்டும். அவ்வாறுதரவு செய்யாத மௌட்டியரை யிகழும்வாயி லாக மூடிக்கத்தொடங்குவார் வெருவு எனத்தொடங்கினர்; காமியசுகிருதங்களாய சுபங் களின், நிஷித்த கர்மங்களாகிய அசுபங்களின் நிரள்களால் மிகமிகவும் மலினம் பண்ணப் பட்ட ஆகிருதியுடையதாகிச் சொலியாநின்ற ஜராமரண துக்கங்களால் மூர்ச்சையடை ந்து கிடந்ததபிக்கும் மனத்தைக்கண்டும் அதனுத்தாரபல சிந்தையுய்திய பீடையாவனுக் கீண்டுண்டாக வில்லையோ அப்புமான் ஜகத்தில் மநுடவடிவுகொண்டு மறைந்துவந்த இராக்ஷனேயாவன் என்பதாம். தன்மனத்தை யனர்த்தப்படாமற் றடுப்பத் தயையில் லாத தாழ்ந்தோன் இரக்கமிலாத வரக்கனேயாவன் என்பது திரண்டபொருள்.

(ச.) பெருகிய + மறந்து = ஆன்மபிதாமகனை மறந்ததுமாகிய, மிக + தன்னை = அத்தன்மையான மனதை, அளற்றிலானை கரையேற்றி விடுவதுபோல் = மாதங்கத்தைப் போல், கரையிலேற்றுய் = ஸ்ரீ இராமா சம்சாரமாகிய பங்கத்தினின்று நன்குயுத்தரிப் பாய், அருள்வடிவமான ஐயா = ஸ்ரீ இராமா ! வெரு × மிக = சொலியா நின்றஜராமரண விஷாதங்களினால் மூர்ச்சித்து, நல × மெலியும் = புண்ணிய பாவங்களின்நிரளால் அடி

பட்டுமெலியும் ஆகிருதியுடைய, நெஞ்சுக்கு = தன்மனதினிடத்தில், அருள்புரியாகரர் = எவர்க்கு அருள் = தயை, அதாவது உத்தரிக்குமிச்சை யுதிக்கவில்லையோ அவர், மனித வடிவமான வரக்கரே = ஜகத்தில் நராகிருதியான இராக்ஷதரேயாம். (26)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஜீவர்கட்குக் கருமகதிகள் பலபலவெனவும், விவேகாதிகள் மிகமிகவுந் துர்பலமெனவும், என்பதனுனே முக்திலிலர்க்கேகூடுமெனவும், கூறவிழைந்த ஸ்ரீவசிஷ்டபகவான், கூறியவண்ணம் மனத்திற்குத் தன் பந்தகத்தகைமை வகையை யுபவர்ணனைசெய்து, அதனை யுபாதியாகவுடைய சித்துருவ ஜீவர்கட்கு மோகூபரியந்தம் சமுசாரஸ்திதிப் பிரகார வைசித்திரியத்தை வருணித்துக்கொண்டு அதன் சங்கதிகாட்டும் பொருட்டு முன்மொழிந்த ஜீவ உற்பத்தியைப் பிரகார பேதங்களானே அனுவதிக்கத் தொடங்கல்:—இவ்வகை யென்பது

இவ்வகையேசிற் பாவசீவபேத மியல்வடிவாம் பிரமத்தினிடையே நின்று, வவ்வியபாவனையாலே வந்தகோடி வாராநின்றனகோடி வருவகோடி, தெய்வ வரையருவி நீர்த்துளிபோல் வந்தோர்சிலர் பிறவியொன் றிரண்டுமூன்று சேர்ந்தோர், நைவருசென்மங்கள் சிலர்நூற்றின் மிக்கோர் நாடரியபவஞ்சிலர்க்கணண் ணிநின்றோர். (27)

(ப - ரை.) இவ்வகையே=கூறியவாறுகவே, சிற்பாவசீவபேதம்=உபாதிகளிலுலே வேறுவேறுபட்ட அறிவின்வடிவ ஜீவர்கள், இயல்வடிவாம் = சச்சிதானந்த நிர்விகார சோபாதிகவடிவ, பிரமத்தினிடையே நின்று = பிரஹ்மசொரூபத்தினின்றும், வவ்விய பாவனையாலே = பவபாவனையாலே யேவப்பெற்றவர்களாய், வந்தகோடி = சொரூபத்திற் காணியில்லாமலே உபாதி விவர்த்தகற்பித, ஆகாரமுடைய வர்களாய் வந்தவர்கள் கோடிக்கணக்கினர்கள், வாராநின்றனகோடி = வந்துகொண் டிருப்பவர்கள் கோடிக் கணக்கினர்கள், வருவகோடி = இனிவரப்பட்டவர்கள் சங்கியாதீதர்கள், தெய்வவரை யருவி நீர்த்துளிபோல் வந்தோர் = சுமேருகிரியின் தாரைத்தினின்றும் பெருகும் ஜலக் கூட்டம்போல வந்துகொண்டிருக்கும் இவர்களுள், சிலர் = சிலபேர்கள், பிறவியொன் றிரண்டு மூன்றுசேர்ந்தோர் = முதலாவது இரண்டாவது மூன்றாவது ஜன்மமுடைய வர்களாவர்கள், நைவருசென்மங்கள் = நான்புறுத்தும் பிறவிகள், சிலர் = சிலவர்கள், நூற்றின் மிக்கோர் = சத அதிகம் எடுத்தவர்கள் ஆவர்கள், நாடரியபவஞ்சிலர்கள் நண்ணிநின்றோர் = சிலகல்லர்கள் எண்ணிக்கையில்லாத ஜன்மங்கள் எடுத்தவர்கள் ஆவர்கள்.

(ஸ்ரீ - வீர.) இங்ஙனம் சிற்சொரூபத்தின் உபாதியினுலாய விபாவரூபமான சீவர்கள், சம்சாரவாசனையாலே பிரவாகிதர்களாகிப், பூர்வவாசனையின் அனுசாரப்படி கற்பிதாகாரப் பிரஹ்மசம்பந்தமாயிலக்ஷக்கணக்காயும் கோடிக்கணக்காயும் உண்டாகின்றார்கள். எண்ணிக்கையில்லாதவர்கள் முன்னர் உண்டானார்கள், இப்போதும் எண்ணிக்கையில்லாதவர்கள் உண்டாகிக்கொண்டே யிருக்கின்றார்கள், இனிமேலும் அளவில்லாதவர்கள் அருவியினின்றும் அம்புகணக் கூட்டம்போலும் உண்டாகிக் கொண்டே யிருப்பார்கள். தத்தம் வாசனைத்சாவேசத்தானே ஆசாபாசவசர்களாய அவர்களுட் சிலர்கள் பிரதம ஜன்மானர்களாவர்கள் அதாவது இக்கற்பத்தில் ஒரே பிறப்புற்றவர்களாவர்கள், சிலர்களோ ஜன்மசங்கியையேயற்றவர்கள் ஆவர்கள். சிலர்களோ இரண்டு மூன்று பிறப்பினை யடைந்தவர்கள் ஆவர்கள்.

(ச.) ஸ்ரீவசிட்டர்: சிவபேதம் — ஜீவர், சிற்பாவம் = சித்தினது பாவங்கள், வல்வியபாவனையாலே = பவபாவனையால், துளிபோல்=கணசமூகங்கள்போல், காடரிய= அசங்கியமான, தெய்வவதை யருவி நீர்த்துளிபோல் = பிரவாகத்தினின்று தெறித்த கணைளகங்கள் = ஜலகணிகை குழாங்கள்போல், இயல்வடிவாம் பிரமத்தினிடையே நின்று = மாயாசகிதமான பிரமத்தினின்று, பவபாவனையாலே = சம்சாரவாசனையோடு சகிதமான, சிவபேதம் = ஜீவரூபங்களும், சிற்பாவம் = சித்தினது விலாசங்கள், வந்த கோடிவாராநின்றன கோடிவருவகோடி = இலக்ஷாந்தரம் கோடிதரம் சங்கியாதீதங்களாய் மூன்புதித்தன இப்போதுஞ் சனிக்கின்றன மேற்பிறப்பனவுமாம், வந்தோர் = அவரும் ஜன்மகால பூர்வாபரத்தினுலும், புண்ணியபாவ தாரதன்மியத்தினுலும், ஞானவைச்சித்திரியத்தினுலும் பிரதம சரம பாவமாகவும், சுரநரதிரியக் காதிபாவமாகவும், ஜடபாவமாகவும், வெகுவீத பேதப்பட்டவராவர்.

(ஸ்ரீ - வீர - அ-கை.) வாதனையின் பலவகையினுனே வந்ததோற்றும் ஜீவர்களின் பிறவிகளுட் சிலவற்றை யியம்பல்:=சிலர்-சிலர் என்பவை.

சிலர்சிலர்கள் கின்னரர்கந் திருவராளுர் சிலர்விச்சாதரருகர் திரளாய்நின் ருரூர், சிலரருக்கரிம கிரணன் வருணனுனேர் சிலர்பிரமன்றிரு நெடுமால்சிவனுய் நின்ருரூர், சிலர்மறையோர் சிலரசராகிநின்ருரூர் சிலர்வணிகர் வேளாண்மைச் செயலினின்ருரூர், சிலர்விலங்கு பறவைகளுர் வனவாய்வந்தோர் சிலரிலகாய்பழ மூலந்திரணமானேர். (28)

சிலர்மயேந்திர சைலஞ்சைய மேருதென்மலய மந்தரமாய்ச் சிறந்துநின் ருரூர், சிலர்கடம்பஞ் செம்பீரந்தா லஞ்சாலஞ்சிறந்த தமாலங்களாய்ச் செறிந்து நின்ருரூர், சிலருவரிதயிர்நெய்பாற் கருப்பஞ்சாறு தேனெடுநீர் பெருங்கடலாய்ச் சேர்ந்துநின்ருரூர், சிலர்திசைகள் சிலர்நதிகளாகி நின்ருர்சிலர் மேலோர்சிலர் கீழோர் சிவராளுர். (29)

(ப - ரை) சிலர் சிலர்கள் — சிற்சிலர், கின்னரர் கந்திருவராளுர் — கின்னரர் கந்தர்வர் ஆயினர்கள், சிலர் விச்சாதரர் உரகர்திரளாய் நின்ருரூர் = சிற்சிலர் வித்யாதர மகோரகக்கூட்டங்கள் ஆய்நின்ருர்கள், சிலர் அருக்கர் இமகிரணன் வருணன் ஆனேர்= அநேகர் சூரியர் சந்திரன் வருணபகவான் ஆனர், சிலர் பிரமன் திருநெடுமால் சிவனுய் நின்ருரூர் = அநேகபுண்ணியர் அயன் அரியரன் ஆகிநின்ருர், சிலர்மறையோர் = அநேகர் பிராஹ்மணர்; சிலர் அரசர் ஆகிநின்ருரூர் = அநேகர்மன்னவர் ஆகிவாழ்ந்தனர், சிலர் வணிகர் = அநேகர்வைசியர் ஆகி, வேளாண்மை = கிருஷிவாணிஜ்ய கோபாலனுதி செய்துவாழ்ந்தனர், சிலர் செயலினின்ருரூர் =அநேகர் சூத்திரகணங்களாய் மூவருணத்தினர்க்கும் தொண்டுபுரிவாராயினர், சிலர் = அநேகர், விலங்குபறவைகள் ஊர்வன வாய் = மிருகபக்ஷி பாம்பாதியாய, வந்தோர் = பவமுற்று வருந்திவருவர், சிலர் இலகாய்பழம் மூலம்திரணம் ஆனேர் = அநேகர் புண்ணிய ஔஷதிபத்ர பலமூலதிருணங்கள் ஆயினர். (28)

சிலர்மயேந்திரசைலஞ் சையமேரு தென்மலய மந்தரமாய்ச் சிறந்துநின்ருரூர் = சிற்சிலர் மஹேந்திரமலையாகவும், சஹ்யபர்வதமாகவும், சுமேருகிரியாகவும், தென்றற்ருரூன்றும் மலயாசலமாகவும், சுந்தரமிருந்த மந்தரமலையாகவும், ஸ்ரீசைடம் பெற்றுவாழ்வீர் சிலர் கடம்பம் செம்பீரம் தாலம் சாலம் சிறந்த தமாலங்களாய்ச் செறிந்துநின்ருரூர் =

சிற்சிலர் கதம்பதருவாகவும், எலுமிச்சமரமாகவும் சாலவிருக்ஷமாகவும் பனைப்சிலை மரங்களாகவும் சிறப்புற நெருங்கிநின்று வாழ்வர், சிலர் = அநேகரோ, உவரிதயிர் நெய் பால் கருப்பஞ்சாறு தேனெனநீர் பெருங்கடலாய்க் சேர்ந்துநின்றோர் = லவணாதி திருதக்ஷீர சமுத்திரங்களாகவும் இக்ஷுரசசமுத்திரோதக பெரும்புறக் கடல்களாகவும் ஆகிருதியையடைந்து வாழ்வர், சிலர் திசைகள் = அநேகர் திக்குகளாகவும், சிலர் நதிகள் = சிலரோ ஆறுகளாகவும், ஆகிநின்றோர் = ஆகிவாழ்வர், சிலர்மேலோர் சிலர் கீழோர் வேராஞர் = அநேகர் உச்சர் அநேகர் நீசர் ஆகிச்சிலர்வாழ்வர்.

(ஸ்ரீ - வீர.) சிலர்கின்னர கந்தர்வ ஷித்யாதர மகோரகர் ஆவர், சிலரோ அருக்க இந்திர இந்துவருணராகவும் திரியக்ஷ அதோக்ஷஜபத மஜராகவும் ஆவர்; திரியக்ஷாதிக் கிரகணம் = சிவஞதிக்கிரகணம், திரியக்ஷாதி சாரூப்யப் பிராப்தஜீவ அபிப்பிராயமாம். திரியக்ஷன் = முக்கண்ணன்; அதோக்ஷஜன் = இந்திரியங்களைக் கீழ்ப்படுத்தி யுண்டானவன், ஜிதேந்திரியர்கட்குப் பிரத்தியக்ஷ மாயவன், இந்திரியஜன்னிய ஞானத்தைக் கீழ்ப்படுத்தியவன், விஷ்ணு; பதுமஜன் = சதுர்முகன்; அப்பதவிகளைக் கொண்டவரைக்கொள்க. சிலரோக்ஷ மாண்டவேதாளயக்ஷ ரக்ஷபிசாசகளாவர்; சிலரோ பிராஹ்மணபூபால வைசிய சூத்திரகணங்களாவர், சிலரோ நாய்க்கறிப்போர் சாண்டாளர் கிராதாவேசர் புக்கசர் ஆவர், சிலரோ திருணஜலஸ்தஜாதியர் ஆவர், சிலரோ பலமூலபதங்கர் ஆவர், கிராதஆவேசர் = வேடயோனியிற் புகுந்தவரும் அவரேயாவர், பல மூலக்கிரகணம் அவற்றுள்ளடங்கிய பீஜாவஸ்த ஜீவாபிப்பிராயத்தா னென்றுணர்க. சிலரோ சித்திரலதைகுல்மதிருண உபலதிருசர் ஆவர், மீண்டுந் திருணக்கிரகணம் அதனுட் பிரிவுச்சாதி விரித்தற்பொருட்டாம். உபலம் = கல்லே, திருசர் = காண்பர் தந்தேகமாக, என அவர் உபலதிருசர் = பர்வதாதி, சிலரோ நீபஎலுமிச்ச ஆச்சாபனை பச்சிலைமரங்களாவர். சிலரோ மந்திரி சாமந்தர், முனியாதியர், திருமிகீடர், பிருகேந்திராதி கொத்துக்குப்பாலர், கமலாதி, மத்தமாதங்க விருஷபாதி, துவிரேபமச்சர், ஆவர். சிலரோ கல்யாண பர்ஜன்யராஜிச் சீவன்முத்தராய்க் குலவுவர், சிலரோதாங்கேவலமாக வெறுப்பவராவர் சிலரோ விசாலமாயதிக்குத் தேவதைகளாவர், சிலரோ மிகவேகப் பிரவாகாதி தேவதைகள் ஆவர், சிலரோ ஞானோபதேசஞ் செய்யவர், சிலரோ சமாதிகைவந்தவர் ஆவர். இங்ஙனம் ஜீவர்தம் வாசனாவேசபரவச ஆசயத்தகைமையை யடைந்துநிற்பர். இவர்யாவருமே சம்சரண அநர்த்தவாசனை வசத்தானேயாகுவர் என்பதனானே மூலசுதமாக அதனையே கெடுக்கச்சந்ததம் முயலவேண்டும். வாதனைவயத்தால் அவ்வவ்வவத்தைகளில் எளிது கட்டுண்டிழலல் காட்டியருளவே ஸ்ரீ மணிவாசகப் பெருந்தகையாரும் அருளியுள்ளார்:—"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப்பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுராதி முனிவராய்த் தேவராய்ச் செல்லா அனின்றவித் தாவரசங்கமத்துள், எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான், மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" என்பதனானே இவ்வுலகிற்சிலர் புலியிற்கிரிடையிற்சரிப்பர், நரகில்வீழ்வர், துறக்கத்தோங்கி மகிழ்வர் என்பதாம்.

(ச.) விச்சாதரர் = வித்தியாதரர், உரகாதிரன் = மகோரகர், வேளாண்மைச்செயலினின்றோர் = சூத்திரர், பலங்கள் = பத்திரபலமூல, பதங்கங்கள் (பக்ஷிகள்) செடிகள் கொடி திருணமானோர் = ஓடதிகளானோர்.

மயேந்திரம் = மகேந்திரமலையுசைய மந்தரமேருக்களாய், கதம்பசெம்பீர சாலதால தமாலங்கள், க்ஷாரததிக்ஷீரகிருத இக்ஷுஜலராசிகள், திசைகள் = விசாலமான திக்கு

கள், நதிகள் = மகாவேகமுள்ள நதிகள், சிலர்மேலோர் சிலர்கீழோர் = உச்சகர்களாற் கீழுறுபவரும் மேற்போபவருமாக விளையாடப்படுகிறார்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) நுதலியவண்ணம் மேலுங்கீழுமாய் அலமருதலானே காலன் விளையாடுங் கந்துகமென வருணித்துச் சிவர்தம் மூர்க்கத் தகைமையை யறிவித்துமா மாயையின்செயலை யுரைத்தல்:—கையிலுலென்பது.

கையிலு லறையுண்ணும் பந்துபோலக் காலனுலறையுண்டு கணக்கிலாத மெய்யிலேபுகுந் தலுத்துவிவேகம் பெற்றும்விரகிலார் சிலர்பிறப்பின் மீண்டும் வீழ்ந்தார், மையினுன் மூன்றுலகாம் பணதிசெய்து வருகிற்கும்போமாகி வளர்ந்துவாளாப், பொய்யினுன் மிகவிரியும் வேலையூடே பொருதிரைபோற் பரபதத் தேபுரிந்தமாயை, (30)

(ப - ரை.) கையினுல் அறையுண்ணும் பந்துபோல = அத்தத்தினுலே யடிபட்டு எழும்பி அடிக்கடியும் அடிபடும் கந்துகங்கபோப்ப, காலனுல் அறையுண்டு = யமனுலே யிடைவிடாமல் அடிபட்டு, கணக்கிலாத = அனவில்லாத, மெய்யிலே புகுந்தலுத்து = காயத்திலே பிரவேசித்துக் கிலேசித்து, விவேகம்பெற்றும் = கடைத்தேறும் படியான பகுத்தறிவுற்றும், விரகிலார் சிலர் = முயற்சிசெய்யாத சிலர், பிறப்பின்மீண்டும் வீழ்ந்தார் = சம்சாரசங்கடத்தில் மறுபடியும் விழுந்துவருந்தினர், மையினுன் = மயக்கமாத் திரமாக, மூன்றுலகாம் பணிசெய்து = திரிலோகமாகிய ஆபரணங்களேயுஞற்றி, வேலையூடே பொருதிரைபோல் = வாரிராசியில் வீணுகவேபொருதும் தரங்கமென்ன, பரபதத்தே = பரமபதமென்னும் ஆன்மாவில், புரிந்தமாயை = மயல்செய்யும் மாயை, வாளாவளர்ந்து பொய்யினுன் மிகவிரியும் = வீணுகவேவிரித்தியை யடைந்து மித்தையாகவே நிரந்தரம் அதிவிஸ்தாரத்தையடையும், வருமாகிற்கும் = பற்பலவாறுக விபரீதத்தையடையும், போம் = விநாசத்தையடையும்.

(ஸ்ரீ - வீர.) இவ்வுலகின்கண் மண்ணுலகிற் சிலர் மாழ்கின்றனர், விண்ணுலகிற் சிலர் வீழ்கின்றனர் நரகப்புண்ணுலகிற் சிலர் புழுங்குகின்றனர், இதனுனே கரத்தாலடிபடும் கந்துகமேபோல மிருத்யுவினுல் நிரந்தரம் அதம்பண்ணப்படுவர்; ஆசாபாச சதபத்தராகி, வாதனை வடிவங்களாய வருந்தேகங்கண் முதலியவற்றைத் தாங்குஞ்சீலராய், அண்டஜங்கள் விதிக்ஷத்தினின்றும் விருக்ஷத்தைப்போ யடைவதேபோலக் காயத்தினின்றுங் காயத்தையடைவார்கள். விவேகப்பிரட்டர்கட்கு எக்கதியாமோ அக்கதியையருளல்:—கணக்கிலாத வென்பது. ஜன்மசகஸ்ரங்களே யனுபவித்து, விவேகித்தன்மையை நன்குபெற்றும் சிலவுணர்விலா ஆலசியர் மீண்டும் சமுசாரசங்கடத்தில் வீழ்கின்றனர். சிலரோ புகழத்தக்கஜன்மம் தேசகாலப்பிரதிஷேதமில்லாத விநயசத் சமாகமாதி சம்பன்னத் தகைமையை யடைந்தும், தேவகந்தர்வ பிராஹ்மணுதி மேன்மையான சம்பத்ரூபத்தையுற்றும், துச்சவிடயலம்பட மானதம் புத்தியினுனே நஹுஷனைப் போலமீண்டும் திரியக்குத் தகைமையை யடைந்து வருந்துவர், திரியக்குத் தகைமையினின்றும் நரகங்களேயுமடைவர். கூறியஜீவஜகத் சர்க்கத்தைச் சங்க்ஷேபித் திபசங்கரித்தல்:—மையினுன் என்பது இந்தத் திரிபுவனரசனைப் பிரார்திலகுண விமோகமாயை பரமபதத்தேவாளா வாரிராசியில் வளர்தரங்கம்போல, சந்ததம் வீணுகவே சர்க்கத்தானே விஸ்திருதமாம், பெரிதுவளரும், மிகமேன்மையுற்றபின் விபரிதமத்தை யடையும், விநாசத்தையும் விரவாநிற்கும்.

(சு.) காலஞல் அறையுண்டு = மிருத்துவால் அனவரதம் அடிபட்டும், கணக்கிலாத மெய்யிலே புருந்தலுத்தும் = ஆயிரஞ்சன்மம் அநுபவித்தலுத்தும், விவேகம்பெற்றும்= விவேகத் தன்மையைப் பொருந்தியும், விரகிலார் சிலர் = சிலபுத்தியீனர், பிறப்பின் மீண்டும் வீழ்ந்தார் = மீளவுஞ் சம்சாரசங்கடத்தின் மூழ்குகின்றார்கள், வேலையூடே பொருதிரைபோல் = சமுத்திரத்தினிடத்து லகரிபோல், பரபதத்தே = பரமபதத்தில் பிரமத்தில், மூவுலகாம் = திரிபுவனத்தைச் செய்கிற (இரசனு) ரூபியான, பொய்யினால் மிகவிரியுமாயை = விமோகமென்னும் மாயை, வாளா = சும்மாவே, பணிசெய்து வருநிற்கும்போம் = சிருஷ்டிதிதி லயமுமாம் என்பதந்நுவயம் அநிசமித்து மிருவினிவா யிருக்கும்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) காலக்கிரமமாக உண்டாகியுண்டாகித் தேகபரம்பரையை யநு பவித்துச் சுயமாகவே ஜீவராசிகள் பீஜபூதசாந்தபதத்தில் பிரளயத்தில் நிலையத்தை யடையுமென்றருளிய ஸ்ரீ வசிட்டபகவானே நோக்கி, அங்ஙனம் சுயமாகவே ஜீவன்பரம பதத்தில் தனது ஸ்திதியையடையின் அவன் மூக்தனேயாஞன், ஆகவேமீண்டும் யாங்ங னம் உடம்பெடுத்தல் கூடும் ? பரமபதமடைந் தானுக்கும்மீண்டுந் திரும்புகையாயின் மூக்தனிடத்திலும் அநாசுவாசவழக்காம்; அஞ்ஞானத்தால் மறைபட்டானுக்குப்பீஜபாவ நிராகரணம் பண்ணுவதற்பாலதன்று; அபீஜநிலாசகலாதிக்கு அஞ்ஞானமாத்திர ஆவர ணத்தானே அங்குராதி பீஜத்தகைமை காணப்பெறுமையின்- என்பதாக ஸ்ரீ இராகவர் மறுக்க, தமதி சமசத்தையுடையவற்றிற்குப் பீஜத்தன்மை காணப்பெறுவிடினும், ஆவ ரண சமசத்தையுடையசர்ப்பாதிகளின் மறைபட்ட இரஜ்ஜ்வாதிகட்குப் பீஜத்தகைமை காணப்பெறுதலின், மித்தியாபீஜத்வம் ஆவரணமாத்திரத்தா லாக்கப்பெற்றதெனச் சிறப்புறச் செப்பாதிருப்பினும் நின்மதியானே நீ யூகித்துணரலாமெ, மனோகற்பனைமாத் திரம் யாவுமாம், மனமேயித்தேகமுமாம் என்றுணர்ந்து, உத்தமகரும பரிபாகத்தானே உத்தமமேயாய தேகமுண்டானின்றது என்பது ஆதிசர்க்கத்திலாம் இதுவேபதுமகோச திருகத்திருக்கும் பிரஹ்மாவாம், இதன் சங்கற்பமுறையானே ஸ்திதியானதையிச் சிரு ஷ்டி அபரியந்தமாய்க் கன்மாயையால் அடையும் என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் விடை யருள ஸ்ரீ இராகவர் அருளியவிடயத்தை விரிவிலுணரும் பொருட்டு மீண்டுஞ் சங்கித் தல்—தெரிந்தென்பது.

தெரிந்துணர்ந் தோனிவ்வாறு செப்பலோடுஞ் சீவன்மூன்மனப் பதத்தைச் சேர்ந்துநின்றும், விரிஞ்சனெனும் பெயர்பெற்ற தெவ்வாறென்று வித்தரத்தா லுள்ளபடி விளம்புகென்ன, வரிந்தமன் கேட்டலும் வசிட்டனுரைப்பான் வள் ளாலந்தெறி கேட்டலுமே யகிலஞாலம், புரிந்தநெறி யறிதியிதன் றன்மையெல் லாம் புந்தியுறக்கேட்டுணர்வு பொருந்துவாயே. (31)

(ப - ரை.) தெரிந்துணர்ந்தோன் இவ்வாறு செப்பலோடும் = அறியவேண்டிய முழுவதையுமறிந்த ஸ்ரீ வசிஷ்டபகவான் மனோமாத்திரம் உலகமெனவும், சங்கற்பமே சதுர்முகனெனவும், அச்சங்கற்ப முறையானே யுலகின்றிதி யாமெனவும் அருளிச்செய்ய, சீவன்மூன் மனப்பதத்தைச் சேர்ந்துநின்றும் = சீவன் மனப்பதவியையடைந்திருந்தும், விரிஞ்சனெனும் பெயர்பெற்றது எவ்வாறு = விரிஞ்சபதவியை யடைந்தது எங்ஙனம் என்று வித்தரத்தாலுள்ளபடி விளம்புக என்ன = இங்ஙனமென்பதாக வெளியாமாறு யாவற்றையும் விஸ்தாரமாக விரைவில் யதார்த்தமா யருள்செய்தல் வேண்டுமென்று, அரிந்தமன் கேட்டலும் = வெற்றிபொருந்திய மகாவிஷ்ணுவின் அனுக்கிரக திவ்யமய

களமூர்த்தி கேட்டலும், வசிட்டன் உரைப்பான் = ஸ்ரீ வசிஷ்டபகவான் அருளுவதாவது, வள்ளால் = ஹே உத்தமோத்தம ஜாகவ ! அத்தநெறி கேட்டலுமே = அம்மார்க்கத்தைச் சிரவணித்தலுமே, அகிலஞாலம் புரிந்தநெறியறிதி = சகலஜகத்தும் திதியாகியிருக்கும் தன்மையை யறிந்துகொள்ளலாம், இதன்றன்மையெல்லாம் புந்தியுறக்கேட்டு உணர்வு பொருந்துவாயே = பிரஹ்மா சம்பந்தமான சரீரக்கிரகணக் கிரமத்தை யாமுப தேசிப்பச் சிரவணித்து ஞானத்தை யடைவாயாக.

(ஸ்ரீ - வீர.) ஹே பிரஹ்மந் ! எங்ஙனம் ஜீவன்மனப் பதத்தையடைந்து விரிஞ்ச பதத்தை யடைந்தனனே, அங்ஙனம் யாவற்றையும் விஸ்தாரமாக விரைவில் அடியேற் கருளல்வேண்டும் என்று ஸ்ரீ ஜாகவர் கேட்ப ஸ்ரீ வசிஷ்டர் கூறுகின்றார்:—ஹே மகாபாகுவே ! பிரஹ்மாசம்பந்தியாய சரீரக்கிரகணத்தில் முறையை நீ கேட்பாயாக ! அதே நிதர்சனத்தானே ஜகத்சம்பந்த மாயஸ்திதியை யறிந்துகொள்ளுவாய் !

(ச.) விரிஞ்சனெனும் பேர்பெற்று = விரஞ்சபதத்தைப் பொருந்தியது, எவ்வாறென்று = அவ்வாறானத்தும் இவ்வாறென்று, சீக்கிரம், விரிந்த மனவிகற்பமற, தேவரீர், விளம்புமெனக் கேட்குமெல்லை, இதன்றன்மை யெல்லாம் = இச்சகஸ்திதியை. புந்தியுறக்கேட் டுணர்வு பொருந்துவாய், அதனுலே, புரிந்தநெறியறிதி = பிரமசரீரக்கிரமத்தை உணர்வாய், (31)

(ஸ்ரீ-வீர - அ-கை.) முறையையோதல்:—திதியென்பது.

திதிகாலமாதிகளாற் றன்னுடைய சத்தியினுற் றிரியாச்சீவன்
பதையானலீலை யினுற்றிதிகால மாதிகளாற் பயின்றமேனி
யிதையாநின் றுளபோதே சீவனுக்குப் பரியாய மென்னப்பட்ட
வதையான வாதனையின் வசத்தாலே யுலையுமனம் வந்துதோன்றும். (32)

(ப - ரை.) திதிகால மாதிகளாற் றிரியாச்சீவன் = திக்குக்கால மாதிகளால் வரையப்பெறாத ஆத்மதத்துவம், தன்னுடைய சத்தியினுல் = தனது ஆற்றலினுனே பதையான லீலையினுல் = நதையான லீலையினுலே, திதிகாலமாதிகளால் பயின்றமேனி இதையா நின்றுளபோதே = தீக்குக்காலகலிதமாய எவ்வுருவை யெப்போதுதாங்குமோ அப்போதே, சீவனுக்குப் பரியாய மென்னப்பட்ட = அவ்விதஜீவனுக்குப் பரியாய மென்று சொல்லப்பட்ட, வதையான வாதனையின் வசத்தாலே = நிந்திதமான வாசனையின் வசத்தினுலே, உலையுமனம் வந்துதோன்றும் = லோலமாயமனது என்று புலப்படத்தோன்ரு நிற்கும்.

(ஸ்ரீ - வீர.) திக்குக்காலாதி அவச்சின்னமாய ஆத்மதத்துவஜீ சுவசக்தியினுனே லீலையினுலேயே எக்கால்திக்குக்கால கலிதமாய எத்தேகத்தையெடாகிற்குமோ அதுவே அக்கால், ஜீவபரியாயமாய் வாசனுவசே தற்பரமாய்லோல மனமெனுகனியாம்நுல்லதம்

(ச.) திதிகாலமாதிகளாற் றிரியாச்சீவன் = திதிகாலாதியவச்சின்னமான ஆன்மதத்துவக்குருதரு பதையான லீலையினுல், சுவசக்தியினிற எதுவினுல்திதிகாலமாதிகளாற் பயின்றமேனி யிதையாநின்றுளபோதே = திதிகாலசகிதமான திருவுருக்கொள்ளும் அப்போதே, சீவனுக்குப் பரியாய மென்னப்பட்ட = சீவசத்தபரியாய வாச்சியமாம், வதையான வாசனையின் வசத்தாலே = அவ்வுருவ வாசனையினுலே, உலையுமனம் வந்துதோன்றும் = கேவலம் லோலமான மனம்வந்து பொருந்தும். (32)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அம்மனம் கலஞகலஞேன் மூகமாயிருத்தலே விரித்துரைத்தல்:—செயல், பரிச, கண, என்பன.

செயல்செய வின்மைகளிரண்டுஞ் சேர்ந்தெழுந்த மனச்சத்தி செயலேமேவி
இயல்பின்முத லெஞ்தாகிச் சத்தவிதை யிரதத்தி லெழுவதான
வுயர்தருவிண் பாவனையைப் பாவிக்குங் கணத்திலே யுடனேயந்த
வியனலிவின் றன்னெறியா லந்தமனங்கனதை யீனேமேவுமன்றே. (33)

பரிசவிதையிரதத்தி லெழுவதாங்காற் றசைவைப் பாவித்துன்னும்
விரிதருவிண்காற் றிரண்டின்செய்ப் நெருக்கிலே நின்றுமீவந் தித்தோன்றி
யிருதிறச்சத்தப் பரிசந்திடமா கப்பழக்கமுறு மியல்பிஞலே
யுருவதன்மாத் திரைமேவுமிம் மூன்றினுடன் மேவுமுள்ளந் தானே. (34)

கணத்திலிரிதத் தியல்பைப் பாவிக்கநீரறிவக் கருத்திலுண்டாங்
குணத்தினைய நிறங்களொடுங் கூடுமனங் கணத்திலே குறித்துநாடி
மணத்தினைப் பாவித்தலுந் தன்மாத்திரத்தாற் பாரறிவு வருமிவ்வாறே
தனத்தபூதத் தன்மாத்திரம் வீனத்துவனைத் தூருவாய்ச்சகமாய்த் தோன்றும்.()

(ப - ரை) செயல் செயலின்மைகள் இரண்டும் சேர்ந்தெழுந்த மனச்சத்தி = தொழில் தொழிலிலாமை யுன்மூகமாய மனவாற்றலானது, செயலேமேவி = தொழிலே மேவி, இயல்பின் முதலெஞ்தாகி = எண்ணுவதாய் ஆதியில் தெளிவுறுவதாய, சத்த விதையிரதத்தி லெழுவதான = ச்ப்தபீஜரசோந் முகியான, உயர்தருவிண் பாவனையை = விசாலமாகிய விண்ணின்பாவனையை, கணத்திலேபாவிக்கும் = கணகாலத்திற் பாவனை செய்யும், உடனே யந்தவியனலே வின்றன்னெறியால் = செய்தவுடனே அக்கன அசை வின்முறையானே, அந்தமனம் = அம்மனமானது, கனதையினேமேவும் அன்று ஏ = அக்கனத் தன்மையையடையாகிற்கும் அப்போதே, அன்று ஏ அசைகிலேகன் எனினுமாம்.

பரிசவிதை யிரதத்திலெழுவதாங் காற்றசைவைப் பாவித்துன்னும் = ஸ்பரிசபீஜர சோந்முகமாகிய அகில்ஸ்பர்சத்தைப் பாவிக்கும், இருதிறச் சத்தப்பரிசம் விரிதருவிண் காற்றிரண்டின் = இருவகை சத்தப்பரிசரூப விசாலமான அவ்வாகாச வாதங்க ளிரண்டினுடன்; திடமாகப் பழக்கமுறு மியல்பினுலே = திடாப்யாச வசத்தால், மெய்ந்நெருக்கிலே நின்றும் = அவற்றின் சங்கர்ஷத்தினின்றும், வெந்தீத்தோன்றி = வெம்மையாகிய அகலமுண்டாகி, உருவதன் மாத்திரைமேவும் = ரூபதன்மாத்திரை யுறும், இம்மூன்றின் உடன்மேவும் உள்ளந்தானே = கூடியமூன்றேடும் மனமானது கூடும்.

கணத்தில் = கணகாலத்தில், இரதத்தியல்பைப் பாவிக்க = ரசதன்மாத்ரவேதன மாக, நீரறிவு அக்கருத்திலுண்டாம் = ஜலசம்வித்தானது அவ்வெண்ணத்தில் உதிக்கும், குணத்தினை = சத்தாதியை, அத்திறங்களொடும் = மேற்கூறிய தன்மையனவாக, கூடுமனம் = பொருந்திய வுள்ளமானது, கணத்திலே குறித்து நாடி = க்ஷணகாலத்தில் ஒருமையோடு கூடி, மணத்தினைப் பாவித்தலும் = கந்ததன் மாத்திரையைக் கருதிய மாத்திரையானே, தன் மாத்திரத்தால் = அதன்மாத்திரத்தானே, பாரறிவுவரும் = பூமிசம் வித்தானதுண்டாம், இவ்வாறே = இன்னணமே, தனத்த பூதத்தன்மாத்திரம் வீனத்து வீனத்தூருவமாய்ச் சகமாய்த்தோன்றும் = பிரிந்துபோந்த பூததன்மாத்திரம் சூக்ஷ்மசூக்ஷ்மம் சிற்றிசுற்றித் தூலவடிவமாய்ச் சகமாய்ப் பிரதியாகும்.

(ஸ்ரீ - வீர.) கலனுகலனுேன் முகமாக மனமெழுந்தபின், அம்மனவாற்றலானது எண்ணத்தொடங்கும் = பூர்வசர்க்கத்தில் ஆகாசாதிக்கிரம ஆவிர்ப்பூத ஹிரண்யகருப்ப அகங்கார உபாசனையினுலே சமஸ்காரிக்கப்பெற்ற மனமானது அவ்வாறே அவ்யாகிருதத்தில் லீனமாயிருக்கு மனமானது சக்தியெனப்பெறும், அது அதேமுறையானே சுவ ஆவிர்ப்பாவம் கற்பிக்கும்; ஆதியில், சப்தங்களின் பீஜபூதமாய சப்ததன்மாத்திர, ரசமாய சுரோத்திரேந்திரிய உன்முகமாகிச் சொச்சமான ஆகாசபாவனையைக் கணத்திற் பாவிக்கும்; பின்னர், அத்தகைய ஆகாசபாவனையை யடைந்து, விருத்தியை யடைந்தமனமானது கன அசைவின் முறையானே அநிலவடிவமாகிய அற்பசலனத்தை ஸ்பரிசபீஜரசோன்முகமாகிப் பாவனை பண்ணும்; சத்தப்பரிச சொரூபம்வாய்ந்த அவ்வாகாச வாதங்களாய, அபஞ்சீகிருதத் தன்மையானே அதிருக்குமதமமாதலின் மநோலக்ஷணின சைதன்ய வடிவஜீவனுற் காணக்கூடாத பொருள்களின் விருத்தியானும் அபிகாதத்தானும் ரூபபீஜரசான்மக அநலமானதுண்டாம். மனமானது அக்கனத் தன்மையையடைந்து, பின்னர் நொடிப்போதில் பிரகாசிய அமல ஆலோகத்தைப் பாவிக்கும், அதனுனே பேரொளி விருத்தியாம் மனமானது ஆகாசவாயுதேயுக்களானே குணவிருத்தியை யடையும், அது இரசதன்மாத்திர வேதனமுடையதாக அரைக்கணத்திலே அப்புவின்சைதன்யமாய இரசதன் மாத்திரத்தை யடைந்து ஜலமென வுணரப்பெறுகின்றது அதாவது உணர்வின் றோற்றத்திற் குரியதா மென்றுணர்க. கூறிய பிரகாரங்களாய நான்கன்குண சங்காதபாவத்தை யடைந்த மனமானது, கணத்திற்கந்தவத்தால சொரூபத்தைப்பாவிக்கும் அதனுனே மேதினியான துண்டாம், இவ்வண்ணம் பூததன்மாத்திர வளவினுனே = இவ்வைந்தும் சேர்ந்ததனுனே சூக்குமத்தகைமையை விட்டுவிடும்.

(ச.) மனச்சத்தி = மநோரூபமென்னுஞ் சத்தி, செயலேமேவி யியல்பின், விசாரஞ் செய்வதாய், முதல் = ஆதியில், நொய்தாகி = சொச்சமாய், சத்தவிதையிரதத்திலெழுவதான = சத்தமென்னும் பீஜம் = சத்ததன்மாத்திரை யென்பதுபொருள், இரதம் = அதன்விஷயமான ரசம், அதன்பாவனையாம், அதிலெழுவது = அதனைய பேகூழிப்பது + அதனை மூலமாகவுடைய தென்பதுபொருள், ஆன = அத்தன்மையாகிய, உயர்தருவிண் பாவனையைப் பாவிக்கும் = ஆகாயபாவனையைப் பாவிக்கும், முன்புசத்ததன் மாத்திரையைப் பாவித்துப் பின்பு ஆகாசபாவனையைச் செய்யுமென்பது பொருள். சத்ததன்மாத்திரை ஆகாசநிதானமாதலின் என்க. கணத்திலேயுடனே, அதன்பின்பு, அந்தமனம், கனதையினைமேவும் = கனத்தை யடைந்ததாய், வியனிலவின்றன னெறியால் = நிரந்தர சலனவசத்தினுல், அன்று - வ - இரண்டுமசை, பரிசவிதை யிரதத்திலெழுவதாம் = பரிசதன் மாத்திரையின் பாவனைபூர்வகமான, காற்றசைவைப் பாவித்துன்னும் = அநிலசலனத்தைப் பாவித்ததுவாம், இருநிறச் சத்தப்பரிசம் = சத்தப்பரிச சொரூபங்களான, விரிதருவின் காற்றிரண்டின் மெய்நெருக்கிலே நின்றும் = அவ்வாகாச வாதங்களினுலே, நிடமாகப் பழக்கமுறு மியல்பினுலே = திடாப்பியாச வசத்தினுல் வருஞ்சங்கருட வேதுவினுல்; உள்ளந்தானே = மனதே, வெந்தீத்தோன்றும் = அக்கினியைப்பாவித்து அதன்ரூபம் ஆமென்பது பொருள்; உருவதன் மாத்திரைமேவும் இம்மூன்றினுடன் மேவும் = ரூபதன்மாத்திரை சகிதமான அம்மூன்றுகளோடுங் கூடும்,

சத்தப்பரிசரூப குணயுக்தமானமனம், குணத்தினை = இரசதன் மாத்திரையைப் பாவித்துக் கிரமமாக, நீர்ச் சயித்தியத்தை = ஜலசயித்தியத்தையும், பாவிக்க = பாவிக்கும், பின், அக்கருத்தில் = அப்பாவனையினுல், நீரிவுண்டாம் = ஜலபோதமாம், அத்

திறங்களோடுங் கூடுமனம் = சத்தப்பரிசரூபரச யுக்தமானமனது = மணத்தினைப் பாவித்தலும் = கந்ததன் மாத்திரையைப் பாவிக்கும், பின், தன்மாத்திரத்தால் = இந்தப்பாவனையினால், பாரமிவ்வுரும் = பூமிசம்வித்தாம், மகாபூத சிருஷ்டியாந்தரம், இவ்வாறே = இந்தப் பிரகாரமாக, தணத்த பூதத்தன்மாத்திரம் வளர்த்துவளர்த்து = பூதங்களாலும் தன்மாத்திரைகளாலும் வேட்டிதமாய், = சூழப்பட்டு, அதனாலே, உருவாய்ச் சகமாய்த் தோன்றும் = சூக்குமத்தை விடும். (35)

(ஸ்ரீ-வீர - அ-கை) புரியட்டகத்தை வருணித்தல்:—திகழ்ந்த வென்பது.

திகழ்ந்தவனற்பொறி யென்னத் திகழ்வடிவை விண்ணிலே தெரியக்காணு
மகங்காரமாந் தொழின்மேவிப் புத்தியுடன் விதையோடு மணுகியந்தப்
புகன்றதெலாஞ் சேர்ந்து புரியட்டகமா யுயிர்களுளப் பூவில்வண்டா
மிகுந்தகடுங் கூட்டரவாற் பாவிக்கு மிகவிளங்கு மேனிதன்னை. (36)

(ப - ரை.) திகழ்ந்த அனற்பொறி யென்னத்திகழ் வடிவை = விளங்காநின்ற அக்கினியின் கணமென்று சொல்லும்படியாய் நிகழும் உருவத்தை, விண்ணிலே தெரியக்காணும் = ஆகாயத்திலே புலப்படநோக்கும், அகங்காரமாந் தொழின்மேவி = அகங்கார கலாயுக்தமாய், புத்தியுடன் விதையோடமணுகி = புத்திபீஜ சமன்விதமாய், அந்தப் புகன்றதெலாஞ் சேர்ந்தது = அந்தக்கூறிய யாவையும்கூடி, புரியட்டகமாய் = புரியட்டகதேக மென்று சொல்லுமாறு நிலவும், உயிர்கள் உளப்பூவில் வண்டாம் = பிராணிகளின் இருதயதாமரையறுகாலாம், மிகுந்தகடுங் கூட்டரவால் மிகவிளங்குமேனிதன்னைப் பாவிக்கும் = அதிதீவிர சம்வேகத்துடன் பாசுரமாகாகின்ற வசுபுவைப்பாவனைசெய்யும்.

(ஸ்ரீ - வீர.) அகங்காரகலையோடுகூடியதாயும், புத்திபீஜசமன்விதமாயும் விண்ணின் கண்ணே வன்னிகஞ்சாரமாயிலங்கும் வபுயாதுளதாய்க் காணப்பெறுமோ; அது இலிங்க மெனப்பெயரிய புரியட்டகமெனப் புகலப்பெறும்; அது பூதஹிரண்யகர்ப்பமாம். "கன்மஞானப் புலீன் ஹங்கணங்களும், மன்மபூதப் பிராணமநோகணம், கன்மகாமம விதையாய்க் காண்பவும், என்மனர் புரியட்டகலிங்கமே" கழறப்பெறுங் காயபாவனையுலே லிங்கத்திற்கே தான் பஞ்சீகரணத்தால் கனதையுண்டாகத் தூலதேகத்தன்மை வீபாவனமெனல்:—மிகுந்தவென்பது. அதன்கண்ணே பிரகாசமயமான தேகத்தைத் தீவிரசம் வேகத்தாற் பாவனைசெய்யும்.

(ச.) மனதகருத்தா, விண்ணிலே திகழ்ந்தவனற் பொறியென்னத் திகழ்வடிவை = வியோமத்தில் விளங்கும் வன்னிகணகார வபுவை தெரியக்காணும் = பாவிக்கும், அகங்காரமாந் தொழின்மேவி = அகங்காராம்சங்க ளென்னும் ஏகாதசேந்திரியங்களோடு சகிதமாய், புத்தியுடன் விதையோடமணுகி = புத்தியோடும் தன்மாத்திரைகளோடுஞ் சமன்விதமாய், இந்தப் புகன்றதெலாஞ்சேர்ந்து, அவ்வியோமத்தில் விளங்கும் வபுவாய், உயிர்களுளப்பூவில் வண்டாம் = பூதங்களின் இருதய புண்டரீகத்திருக்கும், புரியட்டகம், ஆம் என்று சொல்லப்படும், அப்புரி யட்டகத்தினின்று, சித்தம் = மனது, மிகுந்தகடுங் கூட்டரவால் = தீவிரவாசனை வேகத்தினால், பின், மிகவிளங்கும் மேனிதன்னைப்பாவிக்கும். (36)

(ஸ்ரீ-வீர-அ-கை) பாவனையின் பரிபக்குவத்தால் ஆகிருதிஜ்ஞதல்:-பாவனை யென்பது.

பாவனைமுற்றிடத் தூலமேனியாய் வில்வத்தின் பழம்போற்சித்த
மேவுகருவிற் பாய்ந்தபொன்னிறம் போன்மிகவிளங்கி விமலவிண்ணிற்

சுவரமுண்டாய் நிற்குமந்த வொளிதன்னுடைய சுபாவத்தன்னுற்
கேவலமேற்றலே கீழ்காற்பக்கங் கைகடுவயிரீர்க் கிளர்ந்தோனுகும். (37)

(ப - ரை.) பாவனேமுற்றிட = பாவனேயானது முதிர்ந்தபோது, தூலமேனியாய்= தூல ஆகிருதியுற்றதாய், வில்வத்தின் பழம்போல் = கூவிளங்கனிபோல், சித்தம்=மன் மானது, மேவுகருவிற் பாய்ந்த பொன்னிறம்போல் = பொருந்தவியற்றிய மூஷையிற் செலுத்தப்பெற்ற பொற்பாலின் பொலிவுபோல், மிகவிளங்கி = கனியிலங்கி, விமல விண்ணில் = நின்மலமான ஆகாசத்தில், அந்த ஒளி = அத்தேஜசானது, தன்னுடைய சுபாவத்தன்னுல் = சுவசுபாவத்தினுனே; தாவரம் உண்டாய்நிற்கும் = சங்கிவேசத்தை யடையாநிற்கும் கேவலம் மேல்தலே = ஊர்த்வம் சிரப்பிண்டமய மாத்திரமாயும், கீழ் கால் = கீழ்பாகத்தில் பாதமயமாயும், பக்கங்கை = பக்கங்களில் பாணிகளின் அமைப் பாயும், நடுவயிரும் = மத்தியில் உதரதருமியதாயும், கிளர்ந்தோன் ஆகும் = உடையதா யிலங்கும் அந்த ஆகிருதி.

(ஸ்ரீ - வீ.) வில்வப்பழம்போலும் மனம்பாகத்தால் ஸ்தூலத்தன்மையையடையும் மூஷையெனப் பெயரிய பிரதிமையாகார ஆகாயகர்ப்ப மிருத்துப் நிண்டம், ஆதனுள் ளேவார்த்த பொற்பிலொளிபோலும் ஒளிர்வதும், விமலாம்பரத்தில் விளங்குவதும், வெளியில் தூலமாயிலங்குவதும் உள்ளில் சூக்குமமாய்ச் சுடர்வதும் ஆகிய தூலதேஜ சம் வலிதமான சங்கிவேசத்தை, அத்தேயுங்கமானது தன்னியற்கையாளே அடையா நிற்கும், நின்றபோது மனமானது விசேடகற்பனு பிணிவேச சாகோபசாகையாய் விரிந்துவிருத் தியாம், அத்தேயுப் புஞ்சமயமான தன் சங்கிவேசத்தைச் செய்தபின்னர், மனமானது, மிகத்துணியாய் மிகவிரிவாயுள்ள அநேகங்கோடி பாவனைகளைச் செய்யாநிற்கும்; செய்வ தன்கண்ணும் முறையே சிரமுதலிய அவயவகற்பனே யறைதல் மேற்றலேயென்பது மேலேசிரத்தையும், கீழேபீடமயமாய பாதமயத்தையும், பக்கங்களில் ஹஸ்தசம் ஸ்தா னத்தையும், மத்தியில் உதரதருமியையும் பாவிக்கும். அங்குலியாதி யடைவதனுனே அழகொடு வெளியா மவயவப்பாலன் சுவாலமாலே யமலவாகிருதியாய்ச் சுடராநிற்பன்.

(ச.) பாவனே முற்றிட = பாவித்துப் பரிபாகவசத்தினுல், வில்வத்தின் பழம் போல் = வில்வபலம்போல், தூலமேனியாய் மேவும் = தூலரூபமாம், பின், மேவுகரு விற்பாய்ந்த பொன்னிறம்போல் = கருவென்பது, பிரதிமாதிகளினுடைய நிர்மாண நிமித்தமியற்றிய உள்வெளியுள்ள மண்மயாகிருதியாம், அதிற்பாய்ந்திருக்கும் தங்கசமா னம், விமலவிண்ணில் = விமலாம்பரத்தில், மிகவிளங்கி நிற்குமிந்தவொளி = மிகவிளங் கும் இந்தப் புரியட்டக ரூபமானதேசு, தன்னுடைய சுபாவத்தன்னுற் கேவலம் = சுபா வத்தினுலேயே, மேற்றலே = உபரிபிண்டமயமான, சிரசும், கீழ்கால் = கீழ்பாதமய மும், பக்கங்கை = பார்சுவங்களிற் கரங்களும், நடுவயிரும் = உதரதர்மமாய், கிளர்ந் தோன்றுகும் = தாவரமுண்டாய், நிற்கும் = சன்னிவேசத்தைத் தரிக்கும்.

(ஸ்ரீ - வீர - ன் - கை.) மநோரதவசமாக அடைவுற்ற வபுவோடு கூடியிருந்த, பூர்வோபாசிதப் பிரகாரமனன சீலப் பிரஹ்மதேவர் தமது வடிவத்தைப் பார்த்தார் எனல்:—மூர்த்தியென்பது.

மூர்த்தியகாலத்தினுல் வெளியாகி நின்மலமா மூர்த்தியாகிப்
பூர்த்தியொடு சத்துவமொய்ம்பு புச்சாகம் விஞ்ஞானம் பொறியுமேவு

மந்தவவனே யகிலபிதாமகனுய் முழுதுணர்ந்த வயனுமன்னுன்
சுந்தரமாயுத் தமமாய்த் திகழ்கின்ற தன்வடிவைத் தோன்றநோக்கி. (38)

(ப - ரை.) மூந்தியகாலத்திலுல் = காலபரி பக்குவத்திலுல், வெளியாகி = ஸ்பு டத்தை யடைந்து, நின்மலமாமூர்த்தியாகி = அமலவிக்கிரகனுகி; புந்தியோடி சத்துவம் மொய்ம்பு உச்சாகம் விஞ்ஞானம் பொறியும் மேவும் = புத்தி சத்துவ பல உற்சாக விஞ் ஞான ஐசுவர்யங்களோடி கூடியவனுகி, இருப்பன்,

அந்த அவனே அகில பிதாமகனுய் = அத்தகைய அவனே சர்வலோக பிதாமகன் என்னப்பெற்று, முழுதுணர்ந்த = சர்வஞ்ஞனுயிலங்கும், அயனும் = பகவானுகிய பிரஹ் மாவாம்; அன்னுன் = அப்பிரஹ்மதேவன், சுந்தரமாய் உத்தமமாய் திகழ்கின்ற = மிக அழ கும் மிகமேன்மையும் வாய்ந்திலங்கும், தன் வடிவை = தனது மேனியை, தோன்ற நோக்கி = நிகழக்கண்ணுற்று.

(ஸ்ரீ - வீர.) போதமேவுறப்புடைத் தகைமையைப் பொருந்தியமலவிக் கிரகனுகி யிலங்கும் பிரமதேவன்; "அத்தனர் விண்ணுணவு மற்றதா, மகத்தயிசொரியந் தருமம் முடன், இகத்திலங்குள வெள்ளிடலாவதுஞ், சகத்திறைக்குச் சகச மிந்நான்குமே" என்னும் ஸ்மிருதிப் பிரசித்த வீசுவரண சித்தியை அவனுக்குக் காட்டல்:—புந்தியென் பது. புத்தி, சத்துவம், பலம், உற்சாகம், விஞ்ஞானம், ஐசுவரியம் உடையவனுகி யொளிர் வன்; அவனே பகவானுகிய சர்வலோகபிதாமகன் என்னும் பிரமதேவனுவன். அவ் வயன் தன்னுடைய மகா காந்திவாய்ந்த உத்தமோத்தமான திருமேனியை ஊன்றிப் பார்த்துச் சிந்திப்பானுயினன்.

(ச) மூந்தி வந்தவவனே = மூற்புகன்ற சங்கிவேசனே, காலத்திலுல் வெளியாகி நின்மலமூர்த்தியாகி, அமலவிக்கிரகனுய், புத்தியாதி யுக்தனுய், அகிலபிதாமகனுய், பக வானுன அயனும் = பிரமனும் என்பதந்நுவயம். அவற்றில் புத்தி = நிகழ்காலத்துள்ள காரியாகாரிய நிச்சயவேதுவான மநீஷையும், சத்துவம் = வியவசாயமும், மொய்ம்பு = பலம், = சரீரசாமர்த்தியமும், உற்சாகம் = லோகோத்தர காரியங்களிற்றிதி பெறும் தன்னிச்சைப்படியான எத்தனமும், விஞ்ஞானம் = விசிட்டமான ஈசுவராஞ்ஞத் காரரூப ஞானமும், பொறியும் = அணிமாதி ஐசுவரியமும் ஆமவற்றிற்பிரதிஷ்டிதன், அன்னுன் = பிரமன், சுந்தரமாய் = காந்தியாய், திகழ்கின்ற தன்வடிவை = மிகவிளங்குமேனியை, தோன்றநோக்கி = நன்ருய்ப் பார்த்து (38)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சிந்தனையின் வகையையும் கண்டதையும் கூறல்:—குன்ருத வென்பது.

குன்ருதவறு குணத்தோன் மூன்றுகாலமும் வெளியாக் குறிக்கும்வேதா
வொன்ருகிச் சின்மயமே யுருவமாய்க் கரைகாணு வுயர்வானத்தின்
மூன்ருணுண் டாகியதென்னென நினைந்தா னமுக்கிலா முழுஞானக்கண்
ணன்ருவப் போதுதித்தோன் பலகோடி சிருட்டிமுத னடத்தக்கண்டான். ()

(ப - ரை.) குன்ருத அறுகுணத்தோன் = கெடாதனவாய வரட் கல்யாணகுணங் களே யுடையவனுய், மூன்றுகாலமும் வெளியாக் குறிக்கும்வேதா = திரிகால அமல தரி சியாய அவ்வயன்; ஒன்ருகி = ஏகமாய், சின்மயமே யுருவமாய் = அறிவுமயமே வடிவ மாகி, கரைகாணு = அபாரமான, உயர்வானத்தில் = பரமாகாசத்தில், முன்ருன் = பிரதமன்தான், உண்டாகியது என் என நினைந்தான் = ஜனித்தது யாதென்று எண்ணி

ஞன், அழுக்கிலா முழுஞானக் கண்ணுன்னு அப்போதுதித்தோன் = நன்குபெற்றவமல ஆத்மதிருக்காய்ச் சத்யோசாதனுன் அப்பிரமதேவன், பலகோடி சிருட்டிமுதல் நடத்தக் கண்டான் = சென்றனவாய அநேகவனைச் சர்க்கங்களைக் கண்டனன்.

(ஸ்ரீ-வீர.) கிரிகால அமலதரிசியாய பகவான் சிந்திக்கத் தொடங்கினன்; கரைகாணுதவண்ணம் விரிந்து விசாலமாகி, கருவண்டின் சமானமான கறுப்பாற் குறிப்பிக்கப் பெற்ற இவ்வாகாச சுகரத்தில், எனதுற்பத்தியின் முன்னர், யாதுண்டாகி யிருந்ததோ! என்பதாக, நிர்மலத்தன்மையானே அதீதவஸ்துக்களைத் தரிசனத்தில் ஆற்றலுற்ற அமல ஆத்ம திருஷ்டியை யுடைத்தாகி, அப்போதுதான் உண்டாகியிருக்கும் பிரஹ்மதேவன் சிந்தித்தனன்; பலகோடிக ளென்னச் சென்றனவாய சிருஷ்டி சமுதாயங்களைக் கண்டனன்.

(ச.) குன்றுதவறு குணத்தோன் = பகவான், மூன்று + வேதா = திரிகாலாமல தெரிசனன், ஒன்றுகி + வானத்தில் = ஏகசின்மயரூபமாய்ப் பரிபூரியந்தம் பார்த்தற்கரிய இப்பரம ஆகாயத்தில், முன் + நினைந்தான் = முன்பு இஃதாகியது என்னெனச் சிந்தையை யடைந்தான், இங்ஙனஞ் சிந்தித்தவன் பிரமா = அழுக்கிலா முழுஞானக்கண் = அமலான் மகதிருக்கு, கன்றுவிப்போ துதித்தோன் = சத்தியோஜாதன் = உடனுண்டானவன், பல + கண்டான் = அநேகந்தரஞ் சர்க்கபிருந்தங்கள் நன்றுசென்றனவாகப் பார்த்தான். (39)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சாதிமுதல் மோக்ஷமீறுய்ச் சாஸ்திரமுறை வேதாகற்பித்தல்:—சாதியென்பது.

சாதிகுலந் தருமமெலா மூணர்ந்தவற்றை லீலையினும் நன்கற்பித்தா
னேதரிய லீலையினுற் சங்கற்பத்தாற் பிறக்குமுயிரை யெல்லா
மேதமுறு கந்தர்ப்பநகரம் போலறம் பொருள்வீ டின்பமெய்த
மேதகைய பலகோடிசாத்திரங் களவர்க்காக விதித்தான்வேதா. (40)

(ப - ரை) சாதிகுலந் தருமமெலாம் = ஜாதிகுலம் தருமம்குணம் என்பவற்றின் முறையாவற்றையும், உணர்ந்து = ஸ்மரித்து; அவற்றை = அவ்வியாவற்றையும், லீலையினுற்றான் கற்பித்தான் = விளையாட்டாகத்தானே கற்பனைசெய்தனன், ஓதரியலீலையினால் = இளத்தற்கரிய கிரீடைமாத்திரத்தானே, சங்கற்பத்தாற் கந்தர்ப்பநகரம்போற் பிறக்கும் எதமுறு உயிரையெல்லாம் = நினைவினுனே கந்தர்வபட்டணத்திற்கொப்பாகவுண்டாம் களங்கம் நிறைந்த ஜீவர்கள்யாவரும், அறம்பொருள் இன்பம் வீடென்ற = தருமம் அர்த்தம்காமம் மோக்ஷம் என்னும் சதுர்விதமான புருடார்த்தங்களையு மடைய, மேதகையபலகோடி சாத்திரங்கள் விதித்தான் வேதா = மேன்மைமிக்க அநந்த விசித்திர சாஸ்திரங்களைப் பிரமாணமாகச் செய்துவைத்தான்.

(ஸ்ரீ - வீர.) தற்காரண சிந்தனையின் பின்னர்ச்சாங்க உபாங்கச் சர்வதர்மக்கணங்களையும், அதர்மக்கூட்டங்களையும், முறையாக நினைந்தனன்; வசந்தகாலம் மலர்களைப் போலச் சகலவஸ்துக்களையும் பிரதிபாதிக்கும், சகலரும்போற்றும், வேதங்களைக் கொண்டு மகிழ்ந்தனன். அதனுனே அவனுக்குத் தரகாலத்திற் சர்க்கமும் வேதமோதியு நீதியானே செயற்கெளிதாயாயது ஏனுனுக்குருத்தா லுரைத்தல்:—லீலையினால் என்றது லீலையினுலே, நாளுசாரசமாசார மாகக்கந்தர்வ நகரத்திற்போலச் சித்திரசங்கற்ப ஜனனியப் பிரஜைகளைக் கற்பித்தனன்; அவர்களுக்குச் சுவர்க்க அபவர்க்கப் பொருட்டும்,

தர்மகாமார்த்த சித்தியின் பொருட்டும், அநந்த விசித்திர சாஸ்திரங்களே யழகாகக்கற் பித்துவைத்தனன்.

(ச.) சாதிருலங் தருமமெலாம், அதனெடு சர்வதர்ம குணக்கிரமங்களையும், ஓதரிய லீலையினுற் சங்கற்பத்தாற் பிறக்குமுயிரை யெல்லாம் = சித்திரங்களாய்ச் சங்கற்பஜன் னியங்களான காகாசார சமாரம்பமுள்ள பிரஜைகளே, ஏதமுறு கந்தர்ப்பநகரம்போல்= கந்தருவ நகரம்போல், கந்தர்ப்பநகர் போற்றந்து என்றும் பாடபேதமுளது. அவர்க் காக = அப்பிரஜைகளுக்கு, வீடு = சுவர்க்கா பவர்க்கநிமித்தம், அறம்பொருள் இன்ப மெய்த = தர்மகாம அர்த்தஞ் சித்தித்தற்கு, மேதகைய பலகோடி சாத்திரங்கள் விதித் தான் = அநந்த விசித்திரசாத்திரங்களே உதிப்பித்தான். (40)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மனத்தினின்றே சர்வசிருஷ்டியென யாது பதிஞ்ஞைசெய்யப் பெற்றதோ அது இம்முறையானே சீமர்த்திதமாம் எனவுப சங்கரித்தல்: — விரிஞ்சன் என்பது.

விரிஞ்சனு ருவாமனத்தா லிச்சிருட்டியிற் சிருட்டிமேவி நின்றும்
புரிந்தலரு மலரெல்லாம் வசந்தகாலத் திணற்பூப்ப தொக்கும்
பிரிந்தசுரர் நரர்முதலோர் தத்தஞ்சங் கற்பத்தாற் பிறவியுற்றுர்
தெரிந்தனைய சங்கற்பமறிற் பிறவார்நெய் மாண்ட தீபம்போல. (41)

(ப - ரை.) விரிஞ்சனுரு வாமனத்தா லிச்சிருட்டி யிற்சிருட்டி மேவிநின்றும் புரிந்தல ரும் = பிரஹ்மாவின் வடிவமான சித்தத்தானே இச்சருக்கத்தில் அநேகவகைச் சிருஷ் டிகள் உண்டாகித்திதியாகி யொளிராநிற்கும், மலரெல்லாம் வசந்தகாலத்தினுல் பூப்பது ஒக்கும் = புஷ்பலக்ஷ்மியாவும் வசந்தகாலத்தை யநுசரித்துண்டாகி மலர்ந்து மணங் தருவதை யொப்பாமது, பிரிந்தசுரர் நரர்முதலோர் தத்தஞ் சங்கற்பத்தால் பிறவியுற் ருர் = வேறுவேருக வீளங்கும் தேவர் மநுடர் அசுரர் முதலியோர் தங்கள் தங்களது பாவனையானே ஜனனத்தை யடைந்தனர், தெரிந்தனைய சங்கற்பம் அறில்பிறவார் நெய் மாண்ட தீபம்போல = எண்ணத்தானே யிடர்ப்பிறப்பாகின்ற தென்றுணர்ந்து செய்து கொண்டிருந்த சங்கற்ப கற்பனைகளே யெல்லாம் தொலைக்கின் தைலந்தீர்ந்த விளக்குப் போலச் சனியார்.

(ஸ்ரீ - வீர.) ஹே இராகவ! இவ்வண்ணம் இச்சருக்கத்தில் இத்திருஷ்டியே, விரிஞ்சிரூப மனத்தினின்றும், மத்தினின்றும் புஷ்பலக்ஷ்மி யுண்டாகிப் பூத்திருப்ப தொப்பவே, உண்டாகித் திதியையடைந்து நிலவுகின்றது. விவிதவிசனக் கிரியாவிலா சங்களானே யலங்கரிக்கப்பெற்ற கமலஜரூப மனத்தினுனே தற்பரிகற்பனையினுனே ஹே இரகுசந்ததியே! காணப்பெற்ற இத்திருஷ்டியசருக்க இலக்குமி, சத்தியதச்ச வீலக் கணத் தன்மையானே யொப்பிலாத தாதியதிதியை இவ்வுலகில் அடையாநிற்கும். மனத் திற்கு ஸ்மிருதிமாத்திரத்தில் ஹேதுத்தன்மையானே அதனுலாக்கப்பெற்ற இது ஸ்மி ருதி துல்லியமே யாமாதலின் தான்றேன்றுங் காலத்தும் சதீர்த்தமல்லவாம், தேகாதி புவனத்திரய மியாவுமே மனத்தினுனே கற்பிக்கப் பெற்றதாம், பெறவே, சக்ஷுவானது ஆலோகனத்திற்போல இம்மனமும் சமுசாரத்திற் காரணமாம். இதனுனே தேவாதி சக்திகளினுனும் முக்தி தடைப்படுத்த முடியாதா மென்னுங் கருத்தொடுங் கூறல்:— பிரிந்த என்பது. தேவாசுர நராதிகள் யாவருமே, சுவசங்கற்பகிருதர் ஆவர், சுவசங்கற் பம் உபசமனமாகியவழியோ அஸ்நேகதீபம் போலும் உபசமமுறுவர்:

(ச.) விரிஞ்சனுருவா மனத்தால் = விரிஞ்சரூபமான மனதினுல், இச்சிருட்டி = இச்சகத்தில், இச்சிருட்டி = சிருஷ்டியான பிரபஞ்சம், மேவிநின்று, புரிந்தலரும் = ஸ்திதியைப்பெறும், அது, மலரெல்லாம் = புஷ்பலக்ஷ்மி, பூப்பதொக்கும் = ஸ்திதி பெறுவதுபோலாம், பிரிந்தசுரர் நரர்மூதலோர் = தேவாசுர நராத்மகரானவரும், தத் தஞ்சங்கற்பத்தாற் பிறவியுற்றூர் = சுவசங்கற் பிதாவர், தெரிந்தனைய சங்கற்பமறில் = சுவசங்கற்பம் உபசமமாயின், பிறவார் = உபசமமுறுவார். (41)

(ஸ்ரீ - வீர - அ - கை.) உண்மையிஃதென வுரைத்தல்:—வானவென்பது.

வானநிகரா மனைத்துங் கற்பனைமாத் திரம்வாளா வளராநிற்கு
மானசக நனவுதனிற் கனவுபோலி ராகவனே யறிதியன்றே
யினமுறப் பிறப்பில்லை யிறப்பில்லை யெவ்விடத்து மொன்றுமென்றும்
ஞானபரமார்த்தத்தா லிவையெல்லாம் பொய்யாக நண்ணுமன்றே. (42)

(ப - ரை.) வானநிகராம் அனைத்தும் = ஆகாசசதிருசு மாகயாவுமே, கற்பனைமாத் திரம் வாளாவளராநிற்கும் = கற்பனைமாத்திரமாய் வீணுகவே விருத்தி யடையாநிற்கும், ஆனசகம் = தோற்றலானவுலகத்தை, நனவுதனிற் கனவுபோல் = ஜாக்கிரத்தின் கண் ணே சொப்பனம்போல, இராகவனே அறிதியன்றே = மகாமதிமானுகிய இராமச்சந் திரா நீதெரிந்து கொள்ளுதி, ஈனமுறப் பிறப்பில்லை இறப்பில்லை எவ்விடத்தும் ஒன்றும் என்றும் = ஒருபொருளும் எங்கும் எப்போதுமே நீசமுறுமாறு பிறப்பது மில்லை இறப் பது மில்லையாம், ஞானபரமார்த்தத்தா லிவையெல்லாம் பொய்யாக நண்ணுமன்றே = சுமதியே! உண்மையாய திருஷ்டி யானேயுற்று நோக்குழி, இவையாவுமே மித்தையா கப்பொருந்துறும், அன்று, ஏ, அசைகள்.

(ஸ்ரீ - வீர.) ஆகாச சதிருசம் சர்வம் கற்பனைமாத்திரமாக விஜ்ரும்பிதமாம், ஹே மகாமதிமானே! மிக நீண்டகனுப் போலெழுந்த வுலகைக்காண்குதி; ஈண்டொரு சிறி தும், எப்போதுமே உண்டாவது மில்லை யொடுங்குவது மில்லை; ஹே சுமதியே! பர மார்த்தமாய்ப் பார்த்தால் யாவுமே பொய்யேயாம். (பிறப்பதிலை யிறப்பதிலை யென்றே பாடமிருக்கலாம்) இவ்வுலகமியாவுமே பிரஹ்மமேயாம், ஆகவே வேற்றுமையுளதாவ தில் அளவையுங்காணேம், காணின் என்னே பிரமாணம்? எத்தகையது அஃதென வழங்குவதோ? எவ்வடிவினதோவது? யாண்டுளதாவதோ அது? இஃதசலமெனவும் இதுஸ்தாணுவெனவும் வழங்கலோ வெறும் ஆடம்பரவிப்பிரமமேயாம், உபசயாவதி யாயகிரி அபசயாவதியாய ஸ்தாணு வென்பவற்றிடைப் பட்டபரிச்சேத ஆடம்பரவிப் பிரமங்கள் யாவுமே மனத்தினது பாவனுதார்ட்டியத்தானே அசத்தாயிருந்தபோதினும் சத்தெனத் தோற்றுகிற்கும்.

(ச.) கனவுபோல் = அதிதீர்க்க சொப்பனமென்று, இராகவனே = மகாமதிமா னை ஸ்ரீ இராமாரீ, நனவுதனிலறிதி = பார்ப்பாய், நனவுதனில் எனுங்கவி நாயகர் கருத்தை யூகித்துணர்க, பிறப்பில்லை = செனித்தலில்லை, இறப்பில்லை = மரித்தலில்லை, உளதிலது ஒன்றும் எவ்விடத்தும் ஒருபோதும், ஞானபரமார்த்தத்தால் = பரமார்த்த மாக, மகாநுபவனே, இவையெல்லாம் பொய்யாக நண்ணும், இதன் பொருள் வெளிப்படை. (42)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கனவின்கண் ணெத்துணை மகாரம்பங்க டோற்றினும் உண்மையாயிலவாகிப் பிராந்திமாத்திரமே யாதல்போலவே மனத்தினுலே மயக்கமாத்

திரத்தானே தோற்றுகின்ற வித்தீர்க்க சொப்பனசகம் வெறும்பொய்யே யாமென் றுணர்திபெனல்:—வெங்காதல் என்பது.

வெங்காதற் பெரும்பாம்பு நெளிபுற்றுங் குடும்பபரம் வெறும்பொய்யென்றே
யிங்காசை யறநீக்கி யெல்லையிலாப் பரமபதத் திருந்து வாழ்வாய்
சிங்காரக் கந்தர்ப்ப நகரிருந்தென் சிதைவுற்றென் றீதோநன்றே
பங்கான மனோமக்கள் வாழ்ந்தாலென் கெட்டாலென் பாசமாயை. (43)

(ப - ரை.) வெங்காதல் = கொடிய ஆசைகளாகிய, பெரும்பாம்பு = அதிதீர்க்க மாய அரவங்கள், நெளிபுற்றும் = சுழலும் வல்மீகமாய, குடும்பபரம் = சம்சாராடம் பரம், வெறும்பொய் என்றே = அத்தியந்தம் மித்தையென்றே, இங்காசை யறநீக்கி = இவ்விடத்திலுள்ள வத்துக்களில் எழாநின்ற நசையையத்தியந்தம் அகற்றி, எல்லையிலாப் பரமபதத்திருந்து வாழ்வாய் = தேசகாலவஸ்து பரிச்சேதமில்லாத பிரஹ்ம சொரூபத் துபதத்திதிபெற்றீச் சுகிப்பாய், சிங்காரக் கந்தர்ப்பநகர் = அதிவிசித்திரமான கந்தர்வ நகரம், இருந்தென் சிதைவுற்றென் = பூஷிதமாயின் என்னே தூஷிதமாயின் என்னே, தீதோநன்றே = துக்கமோ சுகமோ, பாசமாயை பங்கான மனோமக்கள் வாழ்ந்தாலென் கெட்டாலென் = அவித்தையின் அங்கிசங்களான சம்பாதிப்பதின் மாத்திரம் பங்காளி களான மனோவிமைந்தர்கள் வாழ்ந்தாற்றுனென் தாழ்ந்தாற்றுனென் சுகமோதுக்கமோ.

(ஸ்ரீ - வீர.) இச்சமுசார ஆடம்பரம் திருஷியமான அவஸ்தை யுடைத்தாய் மகா போகமாய் வெகுவிஸ்தீர்ணமாய் இரமணீயம்போலத் தோற்றும், இவற்றுள்ளுஞ் சிலவை யேகவர்த்தற்குக் கூடுமாதலின், கவர்ந்தவற்றுள்ளும் ஓரொருகால் ஏதாவதொன்றே யுப யோகத்திற்கு வருதலின், அதனுத்தரக் கணத்திலேயே க்ஷயமாதலினுனும், அவஸ்துக மாய துச்சமேயாம்; புஷியாதனவாய்ப் பூர்வங்கண்டனவாய் காணுதனவாய விடயங்களிற் றிருஷ்ணுவிஷ உற்கட்டங்களாய ஆசையரவங்கட்குக் கோசமாய புற்றென்னப் பொலிவ தாம். இத்தகைய சமுசார ஆடம்பரத்தை யடியோடும் விட்டுத் தொலைப்பாயாக. யாங்கு னம் விட்டுத்தொலைப்பது கொலோவெனின் ஆண்டுக்கூறல்: வெறும்பொய் யென்றே யென்பது. இஃதெலாம் அசத்தே யெனவறிந்து இதிற்கருத்தை இராகத்தைச் செலுத் தாதிருக்கவேண்டும். பேய்த்தேரை யுணர்ந்தபேரறிவாளி பின்னுடர்ந்தே கானன்றே. தொடர்வனேற் றுயரையே யெரிதுறுவன் அன்றியும் பரமபுருடார்த்தத்தையு மிழப்பன், இவ்டம் எய்தினன்றே ஹர்ஷ மூண்டாம், இவ்டமே மாயாமயத்தில் இல்லையாகும். அத்தியந்தம் பாண்டமே அசத்தியபூதமா யிராநின்ற இச்சமுசாரத்தில் யாதுதான்கொள் ளத்தக்கதாகவுள்ளது எதைக்கொண்டு அறிஞன் மகிழ்ச்சியை மருவுவானே. இவ்வண் ணம் சர்வமும் ஆநந்தைகரசமாகப் பார்த்துக்கொண் டிருக்கும் பாக்கியவானுக்குத் தள் ளத்தக்கதா கவொன்று மேயின்றும்; யாண்டுஞ் சத்தியபூதமாய் நிறைந்தொளிரு மித்தப் பிரஹ்மதத்துவமயத் திரிபுவனத்திலுந்தான் என்னே அறிஞன் தள்ளத்தக்கதுளது ? ஏதேனப் பரிகரித்துவிட்டு அறிஞன் மகிழ்ச்சியை மருவுவானே. இரண்டு பக்ஷங்களின் தூல்லியத் தன்மையில் உத்தியிதுவாம்:—" அசத்தாகத்தான் இதுமுன் னமர்ந்தது " ' இலதேயிங்கெதும் முன்னிருப்பதாய் " என்பதாதி சுருதிகளினுனே சகனபவன பூவ ஞதிகட்டீமூதலிலு மீற்றிலும் அசத்தன்மை கேட்கப்பெறுகின்றது, சடாதிகட்கோ காட்சியா யனுபவிக்கப் பெறுகின்றது, நீள்காலம் முன்னும்பின்னும் அசத்வம், அற்ப காலமிடையின் மாத்திரம் உண்மை வியக்திதோறும் வெட்டவெளியாம்; அவையும் பரஸ் பரங்கெடுக்கு மியற்கையான் உண்மை யின்மைகளானே ஏகவஸ்துவின் கண்ணே ஏக

திதிப் பிரகரணம் தாரூரன்கதை எனக

தாவிசேடஹான மின்றியே புருத்தப்பெறும் என அவசியம் ஏகதாங்கெடுக்கப் பெறும் வழி, ஆதியந்தங்களிற் சிரதாம் அசத்வப் பிரசித்தியானே வர்த்தமான தசையிலும் அசத்வமே சர்வவியக்திகட்கும் ஆமென அசத்வபக்ஷ இச்சுவானே அசத்வமே சுருதி யுக்தியனுபவங்களானே காணப்பெறலாம். " சத்தேசோம்ய இது முன்னிருந்தது யாங் ஙனம சத்திற் சத்துண்டாகும் " என்பதாதி சுருதிகளானே சத்துசத்து என்பதாகவே பிரமாணப் பிரவிருத்திகாலத்திற் சர்வவஸ்து அநுபவத்தால் ஆதியந்தகாலங்களில் சத் தஞபிவியக்தி திரோதான மாத்திர கற்பனையானும், அசத்துத்தான் இது முன்னுபத என்பதாதி சுருதியுக்திகளின் பொருத்தத்தானே, சத்வசுருதியுக்திகளே அயலோராற்றூல் அமைவுறுத்தற்கு ஆகாமையினுலும், எப்போதுமுள்ளதாயும் எங்குமிருப்பதாயுமான சர்வவஸ்துக்களின் சத்தையெளிதிற் கோடலானே யொன்றேயாம் என்பது பொருத்த முடைத்தாம், எனச்சத்தொருமையாய்ச் சித்தமாக ஆதியிலும் அந்தத்திலும் காரணப் பிரஹ்மசத்தையினுனே சர்வத்திற்கும் சத்தியத்தன்மை யுண்மையின் நிகழ்காலத்தில் அஃதவ்வாறே யாமெனச் சத்வாதியானே அகண்டம் பிரஹ்மசத்தையே யாண்டும் காணப் பெறுவதாகும். தேசகால பரிச்சின்ன சத்தையின் கற்பனை பரிஷ்கிருதமாம், சர்வசுருதியுக்தி விருத்தமாம், ஆயிரக்கணக்கான மூர்க்கரானே அந்தபரம்பரையாக மிகவுங்கற்பிக்கப் பெற்றதாகும், சர்வ அநர்த்தங்களையும் பயப்பதா கும், என்பதாகவே அப்பாலருக்கே யஃதுசிதமாகும், நினக்காகாதாம்; அசத்தியபூத மாய்த் தோயத்துட்டோற்றும் சந்திரவியோம தலாதிகள் மனோமோகப் பொருட்டுப் பாலர்களே மிகவாஞ்சிப்பர் உத்தமோத்தமர் வாஞ்சியார் மாயாமூடரானே ஆன்மத் தன்மையுடையதாகக் கற்பிக்கப்பெற்ற அகங்காரத்தோடுகூட இவ்வகிலவுலகும் அசத்தே யாமென வெண்ணிச் சுருதிருருயுக்தி சுவாநுபவங்களானே துணிந்து புத்திரமித்திரதா ரஞதி நாசமுற்றவழி சோகத்தையும், விடம்போலும் பரிணமித்துக்கந்தரும் விடயங்களேய யிலும் சீலம்வாய்ந்தழலும் இராகத்தையும், அடையவேண்டாம். அங்ஙனமாகவே சோகராகாதி நிராசவாயிலாக ஐக்காத்மிய தரிசனத்தில் உலக அசத்துவவாதம் பொருந் தும். இவ்வண்ணம் அன்னிய அர்த்தமாய அசத்வாதப் பிரஸ்தாவத்தானே ஜகத்தென வெண்ணலர்காது, மற்றே, சகலம் சத்தேயாம்; சத்வத்திற்கு அப்பிரசித்த மாயினை அதன் பிரதிக்ஷேபதமாய அசத்வத்திற்கும் அப்பிரசித்தி யாதலின், பிரசித்த மாயினை, அதன் பிரதிக்ஷிப்தத் தன்மையானே அசத்வம் அசித்தியாதலின். இங்ஙனம் யாண்டுமே சத்தையானே பிரதிக்ஷிப்தமாய அசத்வம் நிராஸ்பதமாய் யாண்டும் எதனையும் பரிச்சேதப் படுப்பான் ஆகாதாம் என அபரிச்சின்ன சித்தசித்பரசியம்சித்தமாக, கடபடாதி பரிச்சேதக ஆகாரத்திற்குத் தனித்து அவசேடமின்மையின், சோதிதசின்மாத்திர ஏக சமாய பிரத்தியக்கண்ட ஐக்கியத்தோடு கூடப் பூமாவெனப் பெயரிய சத்பிரஹ்மமே யான் என்பதாக நோக்கிச் சுவாத்மப் பிரதிஷ்டனுய உனக்கு மீண்டும் சாம்சாரிகஜன்ம மரணாதி விஷாதத்தன்மையின் அடைவு உண்டாகமாட்டாதாம், காலத்திரயத்தினுமே சம்பவியாதாம். சர்வவஸ்துக்க ளிடத்திலும் அநாஸ்தையானே நஷ்டவுபேக்ஷணம் வாராததில் வாஞ்சையின்மை வடிவகுணங்களோத் தொடக்கத் தேபயிறல் வேண்டும், இரம்மியமா யிராநின்ற தனங்களிடத்திற் ருணதல் தாராதிகளினிடத்திற் ருணதல் சோகத்தின் அவசரம் எங்கே ? கணங்கண்ட இந்திரஜால நட்டமாக நாடியழுதலென் னே ? வாராதனவற்றைக் குறித்துத்தான் என்வருந்தல் வேண்டும். கந்தர்வநகரப்பொரு ளில் தூடிதமாயினும் பூடிதமாயினும் என்னே ? அஃதொக்க, அவித்யாம்சங்களாய் சுதாதிகளிற் சுகதுக்கங்களின் பரவுதல் யாதுதான்கொலோ. இரம்மியமாய தனதாராதி கள் விருத்தியடையும் போதுதான் மகிழ்வின் அவகாசந்தா னெங்கே, கானனீர் பெருகி

வரக்கண்ட நீர்வேட்கையர்க்கு நீர்வீயாடன் முதலிய இன்னீருதானெங்கே. திரு வாசகம்:—பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப், பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணமாகாமே, தீர்த்தாய் நிகழ்தில்லையம் பலத்தே திருநடஞ்செய், கூத்தாவுன் சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம்.

(ச.) மாத்ரபாவம் நிவேசய (மூலம்) = அத்ர = சமுசார ஆடம்பரத்தில், பாவம்= தாற்பரியம், மாநிவேசய = செலுத்தற்க. கந்தர்வ நகரசப்தத்தின் அர்த்தம் பூஷிதமாயி னும் தூஷிதமாயினும் சுகமேனும் துக்கமேனும் உண்டாகாததேபோல் அவித்யா கற்பித சுராதிகளிலும் சுகதுக்கங்களின் அக்கிரமமாம். (43)

(ஸ்ரீ - வீர - அ - ை.) தாராதிவிருத்தியுறச் சமுசாரரோகம், விருத்தியாம் சம்பாவனை யால் துயருறுதலேதகும் மகிழ்வுறுதல் தகாதெனக் காட்டித் தாரதனுபியால் அறியார்க் குறுந்துயரும் அறிந்தார்க்குறும் உயர்வும் இன்னண மெனல்:—தாரதனமென்பது.

தாரதனமிகு மென்னிற் றனையாகு மப்பாசந் தனைத்துக்கொண்டா
லாரதனைய றுத்தகனும் விரகுடையா ரறிவில்லா ராசைவிஞ்சிக்
கூரிதையா மப்போகத் தூழன்றுழக்குங் கொடுந்துயரைக் குறித்தபோதே
தீரதையா மறிஞர்க்கு விரத்தியுளதாய்ச் சித்தந் தெளியுமன்றே. (44)

(ப - ரை.) தாரதனமிகும் என்னில் = தாரதனங்கள் விருத்தியாகுமாயின், தனை யாகும் = நடைவிலங்காகும், அப்பாசந் தனைத்துக் கொண்டால் = அந்த ஆசையாகிய வீலங்கையடைந்து விட்டால், ஆரதனையறுத்தகனும் விரகுடையார் = சிவருள்யாவர் தாம் அவ்வாசாபாசத்தைச் சேதித்துத் தவப்பொருட்டுச் செல்லும் ஆற்றலுற்றவர், அறிவில்லார் = மூர்க்கர், ஆசைவிஞ்சி = இராகமிகுத்து, கூரிதையாம் அப்போகத்து = ஜன்மவேது வாதலிற்கொடூரமான அந்தப் போகங்களில், உழன்று = அலைவுற்றுமூழ்கி, உழக்குங் கொடுந்துயரை = அடிபட்டநுபவிக்கும் பெருந்துக்கத்தை, குறித்தபோதே = நாடிய கணத்திலேயே, தீரதையாம் அறிஞர்க்கு = தைரியம்வாய்ந்த விவேகிகட்கு, விரத்தியுளதாய்ச் சித்தந்தெளியும் = வைராக்கிய முண்டாகி மனமானது தூய்மையையு றும், அன்று ஏ அசை.

(ஸ்ரீ - வீர.) தனதாரங்கள் மிகுந்து விருத்தியாயின் துயருறுதலே பொருத்தமன்றி மகிழ்வுறுதல் தகாதாம், மகாமோக மாயையானது விருத்தியாகிவர யாவர்தாம் ஈண்டு இன்புற்று வாழ்ந்தார், அபிவிருத்தியாகிவரும் எத்தாராதிகளானே மூர்க்கருக்கு இராக மானதுண்டாமோ, அப்போகங்களானே பிராஞ்ஞருக்கு விராகமானது. இனிதுண்டா கும். நகவர இயற்கைவாய்ந்த தனதாராதி வத்துக்களில் ஹர்ஷத்தின் அவசரந்தான் யாதோ, மேலுண்டாம் அழிவுபாடு நாகலோகத்வாதிகடு கதையைக்காணும் சாதுக்கள் இவற்றுனே வைராக்கியத்தை யடைவர் என்பதாம்,

(ஸ்ரீ-வீர - அ-கை.) எதார்த்தமயம் பிரஸ்தாவத் தற்றதோ அதனைக் காட்டல்:— ஆன வென்பது.

ஆனதிறத்தாற் குடும்பபார வியாபாரத்தி லணுகும்போது
போனபொருட் கிரங்காமற் பொருந்து பொருண்மாத்திரமே புசித்துவாழ்வாய்
தீனமுறவருபொருளைச் சிந்தியார் வந்தபொருட் டீதன்றெண்ணுர்
ஞானபரரா னேர்க்குச் சுபாவமாங் குணமிதுவே நளினக்கண்ணுய். (45)

(ப - ரை.) ஆனதிறத்தால் = ஆகியதன்மையினால், குடும்பபார வியாபாரத்தில் = சமுசார பாரவியவகாரங்களில், அணுகும்போது = வியவகரிக்கும்போது, போனபொருட்செங்காமல் = கஷ்டமான வற்றிற்காக வாட்டத்தை யடையாமல் உபேகூத்து, பொருந்து பொருண் மாத்திரமே = நூகர்வினேவயத்தானே கிடைத்தவத்து மாத்திரத்தையே, புசித்துவாழ்வாய் = அநுபவித்துச் சுகிப்பாய், தீனமுற = தனியமுற்று, வருபொருளேந் சிந்தியார் = அசாங்கங்களே வாஞ்சியார். வந்தபொருள் தீதென்று எண்ணுர் = வினேவயத்தால் வந்த போகத்தைக் கெட்டதென்று சிந்தியார், ஞானபராஜேர்க்குச் சுபாவமாம் குணம் இதுவே நளினக்கண்ணுய் ! = தாமரையிதழ்போலும் திருநேத்திரங்களேயுடைய இராகவ ! உணர்வுமயமாய் நின்ற ஜீவன்முக்தர் தமக்கு இயற்கையாய இலக்கணமிஃதேயாம் என்றறிதி.

(ஸ்ரீ - வீர.) ஆகலின் ஹே இராகவ ! தத்துவத்தை யுணர்ந்தவனுகிச் சமுசார விவகாரங்களில் நட்ட நட்டமானதை விட்டுபேகூத்து, கிட்டியதைக் கிட்டியதை யநுபவிப்பாயாக; பிராப்த உபயோக அர்த்தம் பிராப்தத்தன்மையானே விதேய குணமாகாதாம். குணந்தரங் கூறல்:—தீனமென்பது. அகாகத போகங்களின் இயற்கையாய இச்சையில்லாமையும், ஆகதங்களின் சம்போகமும் பண்டித இலக்கணமாம்.

(ச.) ஆனதிறத்தார் = தத்துவஞ்ஞர், சுபாவமாங்குணம் = இலக்கணம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) திருவயதிரிசன துரிஸ்தம் அதியிலக்கணம் அபரங்குணம் என்ற றைந்து, அங்ஙனமே பாகியார்த்த அபிவிவேசத் தியாகமும் குணமாம் என்னுங் கருத்தாலுரைத்தல்:—கண்டன வென்பது.

கண்டனவெல்லாம் பொய்யென் றுள்ளத்தி லனைத்தினும் வேங்காதனீத்த
பண்டிதராமுழு துணர்ந்த பெரியோரை யீராது பாசமாயை
யுண்டிலேயென் பவற்றிடையின் சுத்தமாம்பதம் புந்தியூன்றப் பற்றி
விண்டவுடற் குட்புறம்பா மூலகைநீ பற்றுதலும் விடலும் வேண்டா. (46)

(ப - ரை.) கண்டன வெல்லாம் = காணப்பட்ட திருவியவர்க்கங்கள் யாவற்றையும், பொய்யென்று = மித்தையென்று எண்ணி, உள்ளத்தில் = மனத்தில், அனைத்தினும் வெங்காதல் நீத்த = எழாதின்ற சர்வவிஷயக் கொடிய ஆசையையிலக்கிய, பண்டிதராம் முழுதுணர்ந்த பெரியோரை = வித்வான்களாகிய சர்வஞ்ஞர்களாம் மகாத்மாக்களே = ஈராது பாசமாயை = பந்தப்படுத்த மாட்டாது, யாவரையுங் கட்டுமாயை, உண்டிலேயென்பவற்றிடையின் = சத்தசத்துக்களின் மத்தியிலிருப்பதாம், சுத்தமாம்பதம் = தூயதாயுள்ள பதத்தை, புந்தி = மதியினுல், ஊன்றப்பற்றி = அழுத்தமாக அவலம்பித்து, விண்டவுடற்கு = யானல்லவென்று விட்டுத்தொலைத்த தேகத்திற்கு, உட்புறம்பா மூலகை = பாகியாப்யந்தர திருவியத்தை, நீ பற்றுதலும் விடலும் வேண்டா = கவரவும் தவிரவும் வேண்டாம் நீ,

(ஸ்ரீ - வீர.) யாவனுக்கு இஃதசத்தென்னும் நிச்சயத்தானே சர்வவஸ்துக்களிடத்திலும் ஆஸ்தையென்னு மபிவிவேசமானது அகன்றுளதோ அம்முற்றுணர் முனிவரனே அவாஸ்தவமாய அவித்தையானது ஒருபத்திரவமும் செய்யமாட்டாது. ஐக்கியாத்மதரிசனமும் குணமேயென்றறிதி, எங்ஙனமெனின் ! யானும் இவ்வுலக மியாவுமே ஒரேபரம் பொருள் என்னும் மதியானது யாவனுக்கோ, யாவன் ஆஸ்தையகாஸ்தைகளேப் பரித்தியாகித்துக் கிடைத்ததைக் கொண்டு வாழ்ந்திருப்பானே, அவன் மாயையின் மூழ்கான்.

கூறியதையே விரித்துக்கூறல்:—உண்டிலை யென்பது. சத்தசத்துக்களென்று சொல்லப்பெற்ற வியக்த அவ்வியக்தங்களின் மத்தியிற் றொடர்ந்திருக்கும், சுத்தமாய்ச் சத்தாமாத்திரமா யிருக்கும் சிவபதமியாதளதோ அதனையே பிரத்தியக்காத்மா வென்பதாக ன்மதியாற்பற்றி யுள்ளிலும் வெளியிலுமுள்ள திருசியத்தைப் பற்றுதலும் வேண்டாம் எற்றுதலும் வேண்டாம். உபரதி சந்தோஷாதிகேதனத்வா சங்கல்பவருணங்களாலும் பயிறல்வேண்டும், அத்தியந்த விரதனுய்ச் சுவஸ்தனுய் சர்வவாசனா விவர்ஜிதனுய் வியோமம் போலும், நிராகனுய், ஹே இராகவ! காரியபரனு யிருந்தபோதினும் இருந்தின்புற்று வாழுதி.

(ச.) பாசமாயையீராது = இழுக்காது = அவாஸ்தவமான அவித்தை மறைக்காது என்பதுபொருள், சுத்தம் = நிட்கலங்கம், உண்டிலதென்பவற் றிடையாய் = காரிய காரணரூபமான திருக்குத்திருசியங்களின் மத்தியமென்னுங் காரியகாரணன்மகமான சின்மாத்திரரூபமாகிய, பதம் = பொருள், புந்தியுன்றப்பற்றி = புத்தியினல் அவலம்பித்து, உலகை = திருசியத்தை பற்றுதலும் விடுதலும் வேண்டாம், எத்திருசியத்தையும் உபேக்ஷிப்பாயென்பது; யாவனுக்குச் சர்வவஸ்துக்களிலும் இச்சாதுக வென்னும் ஆஸ்தை விலகுவதாமோ அச்சர்வஞ்ஞனே அவாஸ்தவ அவித்தை மறையாதென்பதாம். (46)

(ஸ்ரீ-வீர - அ-கை.) யாங்ஙனம் நிராகனுதல், யாங்ஙனந்தான் அசங்கனுதல் எனின்? கேட்டியென்றருளல்:—எக்கருமத் தென்பது.

எக்கருமத்திலு மிச்சைய னிச்சையற நின்றுணர்வை யெய்திஞேர்க்கே
யக்கருமங்களி லறிவுபற்ற தாமரையிலை சேரம்புபோலத்
தொக்கபொறி விடயநலஞ் சுவையறநின் மனமாரத் தோன்றில்வீரா
தக்கவுணர் வுணர்ந்தோனுய்ப் பவக்கடல்கள் கடந்தன்றே சாகாந்தீர்ந்தாய்.

(ப - ரை.) எக்கருமத்திலும் = எந்தத் தொழில்களிலும், இச்சை அனிச்சையற = இச்சையேனும் அனிச்சையேனும் இல்லாமல், நின்று = ஸ்திதிபெற்று, உணர்வை எய்தினேர்க்கே = அறிவையடைந்துள்ளோர்க்கே, அக்கருமங்களில் = அத்தொழில்களில், அறிவு = பிரஞ்ஞை, தாமரையிலை சேரம்புபோல = நீர்த்துளிகளானே பதுமபத்திரம் போல, பற்ற = சம்பந்தியாது, தொக்கபொறி விடயநலம் சுவையற = தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் இந்திரியார்த்த ஸ்ரீரசவர்ஜமாக, நின்மனமாரத் தோன்றில்வீரா = ஹே வீராகவனே! உனது இருதய மிலையப் புலப்படில், தக்கவுணர்வு உணர்ந்தோனுய் = அவித்தை நீக்கற்பொருட்டு அறியத்தருந்த தென்னுஞ் சிற்சொரூபத்தை யறிந்தவனுய், பவக்கடல்கள் கடந்து அன்றே சாகாந்தீர்ந்தாய் = ஜனனசாகாங்களைத் தாண்டி அப்போதே பிறத்தலிறத்தல் கடந்தவனுவாய்.

(ஸ்ரீ - வீர.) பாதித அநுவிருத்தி மாத்திரத் தன்மையானே அமுக்கியத் தன்மையாற் கௌணமாய உனது இந்திரியசகிதமனம் தரிசனப் பரிசனதிகளைச்செய்க அல்லது செய்யாதொழிக, நீ யாசையற்றவனுய் ஆண்மவானுய் ஆகக்கடவாய். இந்திரியார்த்தத்தில் மமதைத்தியாக இலக்ஷணகுணத்தை நன் கப்யசிக்கவேண்டும், அநாஸ்தையையும் பழகவேண்டும், எனது இது என்று அசத்பூதமா யிந்திரிய அர்த்தத்தில் நினதுமனம் மூழ்கவேண்டாம், நீ யறியானு யிருந்துகொண்டு மனத்தை விடயத்தே மூழ்குவிக்காதே; மனம் விடயத்தின்கண் மூழ்காமற்செய்க செய்யாதொழிக. தனக்குச் சிவன்முக்தத்தன்மைப் பிராப்திப் பிரத்யயத்தில் இலிங்கங்கூறல்:—தொக்கபொறி யென்பது. எக்காணி

னைக்கு இந்திரியார்த்த ஸ்ரீ இருதயத்தில் அநர்த்த காரணத்தன்மைப் பிரதிசந்தானமன்றி யிலும் சுயமாகவே ருசிதாமலிருக்குமோ, அக்கால் இராகவ ! விஞ்ஞார்த்த விஞ்ஞானஞ்ஞி பவர்ணவத்தை யினிது கடந்தவனுய்ச் சுகிப்பாய், விஸ்தாரமான இகலோக சம்பந்த பரலோகசம்பந்த இந்திரியார்த்த விடயங்கள் அருசிவிடயீகிருதங்கள் ஆக்கப்பெற்ற தீரவீரன் வியுத்தானஞ்ஞத் தேகபாவத்தோடு கூடியிருப்பினும், சமாதியிஞனே அஃ தின்றியவனு யிருப்பினும், வாஞ்சியாதிருப்பினும் முக்தியகாயாசமாக வலிதினுண்டாம்.

(ச.) எக்கருமத்திலும் = அவசியஞ் செய்யவேண்டுங் கருமத்தில், நின்று = பிரவர்த்திப்பவனுய், உணர்வை யெய்தினேர்க்கே = ஞானகிஷ்டனுக்கே, அக்கருமங்களில் = விஷயங்களில், இச்சையகிச்சையறும் = இஷ்டசாதன புத்தியின்மையின் இச்சைபிற வாது, அநிஷ்டசாதன புத்தியின்மையின் அநிச்சையும் பிறவாது, அறிவு = அவனது பிரஞ்ஞை, மரையிலேசேர் அம்புபோல = ஜலங்களாற் பதுமபத்திரம்போல, பற்றுது = மகிழ்வு சோர்வாதிகளாற்றபியாது, சேராது, ஆம், அசை, அஃதலகொன்றேனும் இரண் டேனுங்கொண்டு சீர்க்குறப்பாய் வருவதுபகுதி லிருதியுமாம். வீர = ஸ்ரீ இராகவ ! தொக்க + அறம் = இந்திரியார்த்தலஷ்மி, நின் + நில் = இருதயத்திற் பொலியின், தக் + தோணுய் = அதுவாயதிய வுரியதையறிந்தோனுய், பவ + தாய் = பவார்ணவத்தின் பாரங்கடந்தாய். (47)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அந்தஜீவன் முக்தியின் கண்ணே வாதனைகளினின்றும் சித்தத்தின் நிஷ்கர்ஷமே முக்கியசாதனம் எனல்:—உச்சமென்பது,

உச்சமுறு பதம்வேண்டி லனைத்து வாதனையினு நின்றுள்ளந்தன்னை
நிச்சயமா முணர்வாலே நீக்குவாய் மலரின்மண நீங்குமாபோற்
றுச்சமுறு வாதனையாந் தரங்கநீர் பவக்கடலிற் றுளைவார்க்கெல்லா
மச்சமற நல்லறிவு மரக்கலமாய்க் கரையேற்று மயலொன்றுண்டோ. (48)

(ப - ரை.) உச்சமுறு பதம்வேண்டில் = மேலாகிய பதத்தைவிரும்பில், அனைத்து வாதனையினும் நின்றுள்ளந்தன்னை = சர்வவாசனைக் கூட்டத்தினின்றும் மனத்தினை, நிச்சயமாம் உணர்வாலே = மேலான பிரஞ்ஞையினுலே, மலரின்மணம் நீங்குமாபோல் = புஷ்பத்தினின்றும் கந்தம் அகலுவதென்ன, நீக்குவாய் = அகற்றுவாய், துச்சமுறுவாத னையாம் தரங்கநீர் = தள்ளத்தக்கதாகிய வாசனையென்னும் அலைசலகிறைந்த, பவக்கட லில் = சம்சாரார்ணவத்தில், துளைவார்க் கெல்லாம் = மூழ்குவோர்க் கெல்லாம், அச் சமற = பயம்நீங்கும் படியாக, நல்லறிவு மரக்கலமாய்க் கரையேற்றும் = பெரும்பிரஞ் ஞையானது நாவாயாக நின்று அவர்யாவரையும் முத்தியங்கரையிற் சேர்ப்பிக்கும், அய லொன்றுண்டோ = மற்றையதொன்றும் இவ்வாறுளதோ இலதாம் என்றபடி.

(ஸ்ரீ - வீர.) உயர்வாய பதப்பொருட்டுப் பரமானவுணர்வினுலே வாசனுகணத்தி னின்றும், மலரினின்றும் மணம்மான, விவேகவைராக்கிய உற்கிருஷ்டம் வாய்ந்த மனத் தினைத் தனிப்படுத்தி, வாசனையம்புபொங்கும் சமுசாரவாரிதியின் கண்ணே வீழ்ந்த யாவர் பிரஞ்ஞை நாவத்தைப் பெறுதற்பிரானோ, அவர்தாண்டினேராவர், பிறரோ மூழ்கிவருந்துவர். அந்தஞான வங்கம், விவேகவைராக்கியாதி தீக்ஷணமாக்கப் பெற்றுத் துவந்துவதகனத்திற் பரமதைரிய முடையதாம்.

(ச.) உச்சமுறுபதம் வேண்டில் = கைவல்லியம் பெறுதற்கு, நிச்சயமாமுணர் வாலே = பிரஞ்ஞாபலத்தால், ஏதுவால்; அனைத்து வாசனையினு நின்று = வாதனைஜா

லங்களினின்று, உள்ளந்தன்னை = சித்தத்தை, நீக்குவாய் = வேறுசெய் = கரையேற்றுவாய், மலரின் மணநீங்குமாபோல் = மலரினின்றுங் கந்தத்தைப்போல, வாதனையாந் தரங்கநீர் = வாசனையென்னுநீர் நிறைந்த, பவக்கடலில் = இந்தச் சாகசாகரத்தில், தனை × லொன்றில்லை = பிரஞ்ஞையென்னும் நாவாயை அவலம்பித்தவர் கரையேறிய பரமபண்டிதராம் என்றுயிற்று; பிரஞ்ஞை யவலம்பிக்கப் படாவிடின் ஒருபோதுஞ் சம்சாரத்தினின்றுங் கரையேறுவதின் றென்பது கருத்து. (48)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஹே இராகவ ! விவேகவைராக்கியாதியாற் கூர்மையாக்கப் பெற்றுத் திதிக்ஷை முதலியவற்றினே யலங்கரிக்கப் பெற்று மகாதைரிய வதியாயிலங்கும் மதியினுனே ஆன்மதத்துவத்தை நன்காராய்ந்து பின் சுவபதத்தையடைதி; தத்துவவித்துக்களாய் ஞானநிறைந்த சித்தர்களாயுள்ள பேரறிஞர் எங்ஙனமொழுகுவாரோ அங்ஙனம் ஒழுகவேண்டுமேயல்லாது மூடரைப்போல மோகிக்கலாகாது; ஜீவன்முக்தராய் மகாத்மாக்களாய் நித்தியதிருப்தரா யிலங்கும் பேரறிவாளர்தம் ஆசாரங்களையே பின் பற்றவேண்டு மல்லாது போகதிருபணராய் ஸ்வபரவஞ்சகராயுள்ள சடர்நெறியைப் பின் பற்றலாகாதென வுபதேசிப்பவராய்ப் பராபரங்கண்டோர் பெருமையை யதன்பொருட்டு பதேசித்து நியமித்தல்:—பராவென்பது.

பராபரங்கண் டோரனேத்தும் பின்செல்வ ருலகியல்புபற்றுர் நீங்கார்
சுராலயநந் தனவனத்தும் பற்றுர்கள் சூனியத்துந் துயரமெய்தார்
விராவுநியதி யுந்தள்ளார் வெய்யவன்போ லனுசரிப்பர் மேன்மைசான்றோ
ரிராகவனே யிவ்வாறு நடத்தியென வசிட்டமுனி யியம்பலோடும். (49)

(ப - ரை.) பராபரங் கண்டோர் = பாரவாரமீத்துக்கள், அனேத்தும் பின்செல்வர் = சர்வமுமே யனுவர்த்திப்பர்,, உலகியல்பு பற்றுர் நீங்கார் = ஜகத்திலுண்டாம் விவகாரத்தைத் தியாகியார் வாஞ்சியார், சுராலய நந்தனவனத்தும் பற்றுர்கள் = தேவோத்யான வனத்திலும் பற்றையடையார்கள், சூனியத்தும் துயரம் எய்தார் = விடயங்களில்லாத விடத்தும் விஷாதமெய்தார், விராவுநியதியுந்தள்ளார் = ஏற்பட்ட நியதியையுங்கடவாது பரிபாலிப்பர், வெய்யவன்போல் அனுசரிப்பர் = சூரியனேப்போலக் காப்பாற்றுவர், மேன்மைசான்றோர் = அதஞுனே மகாத்மாக்கள், இராகவனே = ஹே இரகுகுலதிலகனே ! இவ்வாறு நடத்தியென = இங்ஙனம் நீ யொழுகுவாயென்று, வசிட்டமுனியியம்பலோடும் = ஸ்ரீ வசிஷ்டபகவான் உபதேசித்தருளினர்.

(ஸ்ரீ - வீர) ஜகத்கதமாய விவகாரத்தைத் தியாகியார், வாஞ்சியார், பாரம் என்னும் பிரஹ்மத த்துவத்தையும், அவாரமென்னும் ஜகத்தத்து வத்தையும் உணர்ந்த பெரியோர் யாவற்றையும் பின்றொடர்ந்து விவகரிப்பர். அற்றேல், அறிஞர்கட்கும் சிலபாற் கிருபண மூடமையா மாலோவெனின் ? ஆகாதாம், வித்தைதபம் பராக்கிரமம் முதலியவற்றின் உற்கர்ஷவடிவப் பிரபாவம், அபிமானம், தாக்ஷண்ய குலசீலாதி குணங்கள், புகழ்ச்சி, சம்பத்து, என்னும் இவற்றின் விடயத்திலுண்டாம் உலகப்பிரசித்தமாய கீர்ப்பண்யமானது, பிரபாவாதிகள் பொய்யாயிருத்தலின் அபுருஷார்த்தமாக அவற்றைக் காணுந் தத்துவதரிசிகளாகிய மகாண்கட்கு இவ்வுலகில் யாண்டுமே உண்டாகமாட்டாது. அப்பெரியார் சர்வகாசமுற்ற போதினும் கேதத்தை யடைய மாட்டார், சர்வகாமங்களேயும் பயக்கும் சர்வஜகுவரிய சம்பத்தோடுகூடிய தேவோத்யானமென்னும் நந்தனுதிகளிலும் ஆசக்தியடைய மாட்டார் அம்மகாண்கள் பாஸ்கரன் ஆகாசத்தில் தன்மார்க்க மரியாதையைத் தாண்டாததேபோல நியதியாகிய சாஸ்திர

மரியாதையைத் தாண்டமாட்டார்கள். இச்சையற்றவர்களாய், நேர்ந்தபடியாய விவகாரந் தொடர்ந்தவர்களாய்ச் சஞ்சரிப்பார்கள், "மதியெனுஞ் சாரதிமனமெனும் பரியுமுரான்" என்பதாதி சுருதியுணர்த்திய சாதன சந்தத்தர்களாய்த் தேகத்தேரில் ஏறியவர்களாய்ச் சுவஸ்தர்களாய் மகான்கள் சஞ்சரிப்பர்கள். ஆயின் என்பால் அக்குணங்க ளிருக்கின் றனவா. இல்லனவா வென்னும் சந்தேககாதரராமரை ஆசுவாசனஞ் செய்வார் இராக வனேயென்னூர். நீயும் இவ்விஸ்தார விவேகத்தை யடைந்தவனேயாதி, ஹே சுந்தர ? இப்பிரஞ்ஞையின் பலத்தினாலே சுவஸ்தனாதி.

(ச.) பாராபரமென்பது பராபரம் என விகாரமாயிற்று, சம்சாரத்தினது பாரங்கரை யேற்றும் ஏதுவித்தை, அபாரம், சம்சாரவேதுவான அவித்தை, அஃதறிந்தவ னென்பது பொருள். உலகியல்பூனேத்தும் பின்செல்வர் = ஜகவியல்பான சகல விவகாரத்தையும் அநுசரிப்பர், பற்றூர் = வாஞ்சியார், தேவோத்தி யானத்திலும் பெரியருனியத்திலும் பேதியார், அசங்கிகள் அன்றே நியதி = நியதியையும், மேன்மைசான்றோர் = மகான்கள்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) உபதேசித்த அர்த்த ரகசியங்களின் ஸ்ரீ இராமரது உள்ளில் உன்மேஷத்தானேயுவிர்ப்பவித்ததை ஸ்ரீ வான்மீகிமகரிஷி யருளுகின்றூர்:—பரத்துவ என்பது.

பரத்துவ கேளிவ்வாறு பரமமுனி பரமபதம் பகரக்கேட்டுத்
திரத்துவமா நிறைந்தான்போற் சீராமனமலமாய்த் தீர்ந்துசித்தந்
தரத்துவமை யில்லாதமெய்ஞ் ஞானநல்லமுதாற் றதும்பித் தண்ணென்
றுரத்துவளர் சந்திரன்போ னிறைவுற்றூன் வசிட்டனுமீண் டுரைப்பதானான்.

(ப - கை.) பரத்துவ ! = ஹே குழந்தாய் ! கேள் = ஒருமையுடன் சிரவணிப்பா யாக, இவ்வாறு = இயம்பியவகையே, பரமமுனி = மேலாய்விமலாசய ஸ்ரீ வசிஷ்டபக வான், பரமபதம் = மோக்ஷபத சாதனங்களை, பகரக்கேட்டு = அநுக்கிரகித் தருளச் சிரவணித்து, சீராமன் = ஸ்ரீ இராகவர், திரத்துவமா நிறைந்தான்போல் = சபரிபுஷ்ட மைப்போல, அமலமாய் = நின்மலமாகி யொளிர்ந்து, தீர்ந்துசித்தம் = சகலவிகற்பங்க ளுமொழித்து, தரத்துவமையில்லாத = மாதுரியவகையில் உபமானமற்ற, மெய்ஞ்ஞான நல்லமுதால் = மகாமாதுரிய உண்மைஞான மிருதத்தானே, ததும்பி = சத்துவசித்தம் பெருகி, தண்ணென் றுரத்துவளர் = கலைகள் கூடக்கூடச் சீதளமிருத்து மிருத்து வளர்ந்து பூரணபாவமடைந்த, சந்திரன்போல் = இந்துவொப்ப, நிறைவுற்றூன் = அரு ளியதைச் சிரவணித்துச் சிரவணித்து ஆராய்ந்து ஆராய்ந்து அதிதிடமான பரமசாந்தத் தாற் சீதள பூரணபாவத்தை யடைவுற்றூர், வசிட்டனும் மீண்டுரைப்பதானான் = மீளவும் ஸ்ரீ இராகவர் சிருஷ்டி விஷயகமான பிரசினஞ்செய்ய ஸ்ரீ வசிஷ்டபகவான் உத்தரம் அருளத்தொடங்கினர்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ வான்மீகிபகவான் அருளல்:—விமலாசயத்தோடுகூடிய ஸ்ரீ வசிஷ்ட முனிவரது உபதேசித்த வகையாய நிருமலவுபதேசத்தானே ஸ்ரீ இராமர், இனிது விளக் கிய தருஷ்பணிகர்ப்ப அதிவிரைவில் நன்கிலங்கினர்; அதிமாதுரியமாய ஞானமிருதத் தானே விராஜித அந்தக்கரணமானது சம்பூர்ணமுற்றுச் சம்பூர்ண சசாங்கன் ஒப்பச்சித ளத் தகைமையைத் தாபத்திரயோப சாந்தியையடைவுற்றது, கேள் என்றதனாலே நீயுங் கேட்டு அத்தகைமைமைய யடைவாயாக வெனவுணர்த்தியதாம்.

(ச.) ஸ்ரீ வான்மீகிபகவான்:—பரமமுனி = விமலாசயரான ஸ்ரீ வசிட்டமுனீவரது விமலமானவாக்கினுல், ஆசீர்வாத பலத்தினுல், மகிழ்ச்சி, சித்தம் = சித்தமாய், அன்றி, சித்தந்தரத்து = சிதாகாயத்தில், மெஞ்ஞான நல்லமுதல்லால் = ஞானமிர்த மென்னு மதுரத்தால், சீராமனமலமனந்தெளித்து = விளக்கிய அந்தக்கரணனும், வளர்சந்திரன் போல் = பூரணசந்திரன்போல், ததும்பித்தண் ணென்றுரத்து நிறைவுற்றான் = பூரண சீதளத்தைப் பெற்றான். (50)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஹே பகவன்? சருவதரும முணர்ந்தவரே! சர்வவேதவேதாங்க பாரகரே! மிகத்தூய்மைமேவிய தங்களது உபதேசங்களாலே, பாரமிறக்கியவழி கடப் போன், மருவிய சிரமத்தை யொருவியதேபோல இளைப்பாறினேன்; உத்தமோத்தம பூரி யர்த்தங்களைத் தருவனவாய், வர்ணபதி வாக்கியப் பிரகரண பேதங்களானே வியக்தங்க ளாய் விசித்திரகதையுக்தி சந்தர்ப்ப சதுரங்களாய், ஆத்மதத்வப் பிரகாசகத் தன்மையா னும், இருதயபதும விகாசகத் தன்மையானும், சூரியாதிபோலும் உதிதங்களாய், இலங் கும், உபதேசிக்கும் தங்களுடைய திருவாக்கியங்களைச் சிரவணிக்கச் சிரவணிக்கத்திருப் தியான தண்டாகவில்லை, யென்றிவ்வண்ணம் புகழும் வாயிலாக ஆசிரியரை புத்சாகப் படித்திப் பிரசங்கத்துற்ற பிரஹ்மாதிதேவதை சுவரியதத்துவத்தை யறியும் வேட்கை யுற்றவராகி ஸ்ரீ இராகவர், இராஜச சாத்விகங்களான ஜீவஜாதிகளின் கதன அவசராந் தரத்தில், தேவரீரால், நானுவிதசிருஷ்டிப் பிரதிபாதக சுருதிபுராணுதிப் பிரமாணங்களி னுலே, கமலஜன்மாவின் உற்பத்தியாது கழறப்பெற்றதோ புகழப்பொற்றதோ அதனை வெளியாகத் தெளியுமாறு வருணித்தருளுவீராக வெனவினவ ஸ்ரீ வசிஷ்டபகவான் அருளல்:=ஒரு என்பது. சிருஷ்டியானது ஏகவிதமாகவே யாகின்றதா? அல்லது பகு விதமாகவும் ஆகின்றதா? என்பதையருளல் வேண்டும், அதனையுணர்தலானே மாயையி னதுரூபம் புடதரமாய்ப் பவிக்கும் என்றிராகவர் வினவ ஸ்ரீ வசிஷ்டமுனீவர் இயம் பல்:—ஒரு என்பது.

(ச - அ - கை.) ஒருகால் என்பது முதலிய மூன்றுகவியால், சிருட்டிக் கிரமத்திற்கு நியமமின்மையைத் தெரிவிக்கின்றார்; அவற்றில் கருத்தாநியம மின்றென்பதைத் தெரி விக்கின்றார்:—ஒரு என்றது.

ஒருகால மரன்படைப்ப ஞெருகால மயன்படைப்ப னுலகமெல்லா
மொருகால மரிபடைப்ப ஞெருகாலமுனிவர் படைப் புள்ளதாகு
மொருகாலம் புயத்துதிப்ப ஞெருகால் வாரியினுதிப்ப னுயர்ந்தவேதா
யொருகாலண்டத் துதிப்ப ஞெருகால் விண்ணகத்திலே யுதிப்பனன்றே.

(ப - மை.) ஒருகாலம் = ஒவ்வொருபோது, அரன்படைப்பன் = ருத்திரன் சிரு ஷ்டிப்பன், ஒருகாலம் அயன்படைப்பன் = சிலசமயம் பிரமன் சிருஷ்டிப்பன், உலகம் எல்லாம் = சர்வலோகங்களையும், ஒருகாலம் அரிபடைப்பன் = சிலபோது விஷ்ணு சிருஷ்டிப்பன், ஒருகாலம் = மற்றொவ் வொருபோது, முனிவர் படைப்புள்ளதாகும் = மகரிஷிகளே படைப்பைப் பண்ணுவார்கள், உயர்ந்தவேதா = மேண்மைவாய்ந்த பிர மன், ஒருகால் அம்புயத்துதிப்பன் = ஒரு சமயம் தாமரையினின்றும் வருவன், ஒருகால் வாரியின் உதிப்பன் = மற்றொவ்வொரு போதிற் சலிலத்தினின்று முதிப்பன், ஒருகால் அண்டத்துதிப்பன் = ஒருசமயம் அண்டோற்பனுவன், ஒருகால் விண்ணகத்திலே யுதிப் பனன்றே = ஒருபோது அம்பாத்தினின்றும் உண்டாவன் அன்று ஏ அசைநிலைகள்.

(ஸ்ரீ - வீர) இந்திரஜாலம் போலத்தோற்றும் தோற்றங்கட்கு என்னேகணக்கு! ஒருபோது சிருஷ்டிகள் ருத்ரபூர்வங்களாம், ஒருசமயம் பத்மஜோத்பவங்களாம், மூதலி ஞண்டாய பதுமஜனிடத்தினின்றே உற்பவமாயினவாம், ஒவ்வொரு சமயத்திலோ விஷ்ணுபூர்வங்களாம்; அவ்வாறே புராணத்திலும் அறையப்பெற்றுளது:—" தவம்புரிந் தீசனைத்தான் மகிழ்வித்தே, சிவனயன் விண்டுவுக் தேரிவர்த்தம்மின், பவமடைவாரும் பரப்பரம் வெற்றி, சுவமுறுகாதலி ருருமேயாவர்." ஒவ்வொருருகான் முனிநிர்மிதங்களாம்; முனிநிர்மிதங்கள் என்றது அவாந்தர சர்க்காபிப் பிராயமாம். பிரஹ்மாதிகட்கு ஆயிர்ப்பாவஸ் தானங்களும் அசியதங்களே யாமெனல்:—அம்புயத்தென்பது. ஒருகால்= பாத்மகற்பத்தில், பிரஹ்மா பத்மஜனவன், ஒவ்வொருகாற் சலிலோற்பவனவன் அப்புப் பெயரிய கற்பத்தில், ஒவ்வொருபோதோ அண்டோற்பவனவன் பிரசித்தமாம், ஒவ்வொருக்கால் அம்பரத்தினின்றும் வருவன், அங்ஙனமே ஆகாசப்பிரபவன் பிரமன் என்பதாகச் சூரியவம்சாதிப் பிரஸ்தாவத்தில் முன் இராமாயணத்தில் இயம்பப் பெற்றுள்ளது.

(ச.) ஒருகாலம், உலகமெல்லாம் = சிருட்டிகள், அரன்படைப்பன் = சிவசம்பந்திகளாம், அயன்படைப்பன் = பதுமனினின்றும் உதித்தனவாம், முனிவர் படைப்புள்ளதாகும் = நிர்மிதங்களுமாம், உயர்ந்தவேதா = பிரமா, விண்ணகத்திலே யுதிப்பனன்றே = அம்பரத்திற் சனிப்பவனுமாவன், பிரமாவுக்கு உற்பத்தித்தானமும் நியதமின்று என்றார் பாரியால். ஞசம்பவர் (51)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சிருஷ்டிதோறும் பலவகைப் படுதலே யுரைத்தல்:—வன் என்பது.

வன்மரங்களே நெருங்குமொரு படைப்பிலொரு படைப்பின் மனிதர் துன்னும்
பன்மலைகளே நெருங்குமொரு படைப்பிலொரு படைப்பிற்படர் மண்ணுகுங்
கன்மயமா மொருபடைப்பி லொருபடைப்பிற் றசைமயமாய்க் காணலாகும்
பொன்மயமா மொருபடைப் பிலிப்படியே பலவிதமாம் பூமிதானே. (52)

(ப - ரை.) ஒருபடைப்பில் = ஒரு சிருஷ்டியில், வன்மரங்களே நெருங்கும் = பூமியானது நிரந்திரதரு சங்கடத்தை யுடைத்தாகி யிருக்கும், ஒருபடைப்பில் மனிதர் துன்னும்=ஒருசிருஷ்டியில் இடையீடின்றி நரரேமிகுந்திருப்பர், ஒருபடைப்பிற் பன்மலைகளே நெருங்கும் = ஒருசிருஷ்டியில் பூதரங்களான் மறைபட்டிருக்கும், ஒருபடைப்பிற் படர் மண்ணுகும் = மற்றொரு சிருஷ்டியில் வெறும் மண்ணே வியாபித்திருக்கும், ஒருபடைப்பில் கன்மயமாம் = ஒரு சிருஷ்டியில் அத்தியந்தம் சிலைகளே நிறைந்திருக்கும், ஒரு படைப்பில் தசைமயமாய்க் காணலாகும் = ஒரு சிருஷ்டியில் மாம்சமயமாகக் காணப்பெறும், பொன்மயமாம் ஒரு படைப்பில் = ஒரு சிருஷ்டியில் காஞ்சனமயமாகவேகவின் பெறும், இப்படியே பலவிதமாம் பூமிதானே=இவ்வண்ணமே அநேகவகையாக அநேக சிருஷ்டிகளில் ஆகுமிப்பூமி. தான் ஏ அசைகள்.

(ஸ்ரீ - வீர.) ஒருபடைப்பில் இப்பூமி இடைவெளியின்றித் தருக்களாற்சங்கடமாய்ப் பிரதமமிருந்தது, பிரதமம் என்பது யாண்டுஞ் சேடமாம், ஒருபடைப்பில் நரரேநெருங்கியிருந்தனர், மற்றொரு சிருஷ்டியில் பலமலைகளே பரவியிருந்தன, சிலபடைப்பில் பூமியானது மண்மயமாகவே யிருந்தது, ஈண்டுமையட் பிராசுரியப் பொருளிலாம், மற்றொரு படைப்பில் கன்மயமாகவே யிருந்தது, சிலசமயம் ஹேமமயமாகவே யிருந்தது, சில போது தாமிரமயமாகவே யிருந்தது, இவ்வண்ணம் அநேகங்கோடி விசித்திரங்களாய்

அநேகமுறை அநேகங்காலத் தண்டாகி யுண்டாகி யொடுங்கிக்கொண்டே யிருக்கும். எல்லாப் பிரஹ்மாண்டங்களுமே லீலோபாக்யானத்திலியம்பியமுறையே இருதய ஆகாசத்திருக்கும் பிரஹ்மத்தின் கண்ணே கற்பனமாம்; இப்போதும் அநேகம் பிரஹ்மாண்ட பந்திகள், பிரஹ்மத்தைக் காணுமிடமாகவின் பிரஹ்மபுரமென்னும் சரீரத்துள் விளங்கிய இருதய புண்டரீக தேசத்திருக்கும் அத்தியந்த விஸ்தீர்ணப் பிரஹ்மபதத்திலேயே நிகழ்ந்துகொண் டிருக்கின்றோம்; "விண்ணும் மண்ணும் விரிந்தனவுள்ளிலே" என்னும் மறையும் இதனையே யறைகின்றது பிரஹ்மபுரோபலக்ஷித இருதயாகாசத்தின் சோபை பூதங்களாய பிரஹ்மசிர்மித பிரஹ்மாண்ட பந்திகள், தொனிபேதங்கள் ஆகாயத்தில் உண்டாகியுண்டாகி யொடுங்குகின்றன வென்ன, உண்டாகி யுண்டாகி யொடுங்கு மென்றறிக.

(ச.) பிருதுவி சொரூபமும் நியதமின் றென்றபடி.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஒருகாலம்புயத்துதிப்பன் உயிர்ந்தவேதாவென யாதோதப் பெற்றதோ அதில் ஏற்பட்டபடி புஞ்ஜீகரணேத் தர்பாவீஸ்தூல வியோமாதிகளின் பிரதம ஆவிர்ப்பாவக்ரமம் நியாமகமென்ல:—வான் என்பது.

(ச-அ-கை.) வியோமாதிக்குப் பூர்வாபரத் தன்மையும் நியதமின்றெனல்:—வான் என்பது.

வான்முதலா மண்முதலாநீர் முதலாந்தீ முதலாமற் றைவாயுத்
தான்முதலா மிப்படியே சிருட்டிதொறு மோரொன்று தலைமையாகும்
யான்முதலோரயன் சிருட்டி தரிசனமாவுனக் குரைத்தே னிந்தவாற்றான்
மேன்முதலா நியமமிதற்கொன்றாக விலதுபலவிதமாய்த் தோன்றும். (53)

(ப - ரை.) வான்முதலாம் = ஒருகால் பிரதமம் வியோமம் பிரதிஷ்டையை யடையும், மண்முதலாம் = ஒருகாற் பிரதமம் பிருதுவி, நீர்முதலாம் = ஒருபோது முதலிற் சலம், தீமுதலாம் = ஒருபோது முதலிற்றேயுவாம், மற்றைவாயுத்தான் முதலாம் = மற்றொரு சமயம் பிரதமம்மருத்தாம், இப்படியே சிருட்டிதொறும் = இவ்வாறே சிருஷ்டி தோறும், ஒரொன்று தலைமையாகும் = ஒவ்வொருபூதம் முதன்மைபற்றி நிற்கும், யான் = யாம், முதலோர் அயன்சிருட்டி = பிரஜாபதி யென்னும் ஒருபிரமனது சிருஷ்டியை, தரிசனமா = திருட்டாந்தப் பொருட்டாக, உனக்குரைத்தேன் = இராகவா உனக்குக்கூறினேம், இந்தவாற்றால் = இம்முறைபற்றி, மேல்முதலாம் நியமம் இதற்கு ஒன்றாக இலது பலவிதமாய்த் தோன்றும் = மேலாக முதலாகிய நியமம் இதற்கு ஒரு முறையாக இல்லையாகும், பற்பலவகையாகப் பிரதீதியாம்.

(ஸ்ரீ - வீர.) பதவுரை ஆறுயிரப்படி எழுதலாயது, வியாக்கியானம் மூப்பத்தீராயிரப்படி யெழுதப்பெறும்:—ஒரு காற்பிரதமம் வியோமம் பிரதிஷ்டையை யினிதாகவடையும், அதனினின்றும் பிரமனுண்டானான் இப்பிரஜாபதி வியோமஜனெனப் பெறுவன்; ஒருகாற் பிரதமம்வாயு பிரதிஷ்டையை யினிதாகவடையும், அதனினின்றும் பிரமன் உண்டாவன், இப்பிரஜாபதி வாயுஜன் எனப்பெறுவன்; ஒருகாற்பிரதமம் தேயுவினிதாகப் பிரதிஷ்டையை யடையும், அதனினின்றும் பிரமனாகிய கருத்தாவருவன் இப்பிரஜாபதிதைஜசன் எனப்பெறுவன்; ஒருசமயம் பிரதமம்வாரி பிரதிஷ்டையை யினிதாகவடையும், அதனினின்றும் பிரமன் உதிப்பன், இப்பிரஜாபதி வாரிஜன் எனப்பெறுவன்; ஒருபோது பிரதமம் பிருதுவி விசாலமாய் விரிந்தோங்கிப் பிரதிஷ்டையையடையும், அதனினின்றும் பிரமன்வருவன், இப்பிரஜாபதிபார்த்திவன் ஆவன், இதலியவியோ மாதிகளுள்

ஒவ்வொன்று பிரதமம் ஆவிர்ப்பாவம் ஆவதில் யுக்தியாது கொலாமெனின் ? நூதலுதும் இத்தன்னினும் பின்னமாய பூதசதுட்டயத்தைத் தன்னங்கிசப் பெருக்காமை மறைப்பதுமான, வித்திப் பஞ்சமமான எப்பூதந்தான் எக்கால்விருத்தியாமோ, அக்கால், அதனினின்று முண்டானவனேயாய இப்பிரமன் ஜகத் சம்பந்தமான அதனுத்தர சிருஷ்டியாதிக்கிரியையைச் செய்வன். முற்கற்பத்திற் சூரியாதிகளா யிருந்தவர்களும் இக்கற்பத்திற்பிரஹ்மாதிகளாய் வருவர்களாகலின், பிரத்தியக்காண் மாவின்கண்ணே விளைந்தனவாய விஷத்திரமா யீண்டுண்டாஞ் சிருஷ்டிகளுள் விவகரித்துவரும் இரணிய கருப்பன்றன் விசித்திர உற்பத்திகள் விவிதமாகப் போந்தனவரும். ஒருவன்று இவ்வர்ணனம் அன்னியர்களுக்கும் ஸ்தாவீபுலாக நியாயத்தானே நிதரிசனப் பொருட்டாம் எனல்:—

தரிசனமாவென்பது. சிருஷ்டியினது நிதரிசனப்பொருட்டு எம்மால் ஒருபிரஜாபதியின் உற்பத்தி நினக்கு நிகழ்த்தப்பெற்றது, அதில் நியமம் ஒன்றுமேயிலதாம் மநோவிஜ்ரும்பணம் இச்சமுசாரம் என்பது சித்தாந்தமாம் நன்றாக அறிவுறுத்தற் பொருட்டு நினக்குச் சிருஷ்டிக்கிரமம் உபதேசிக்கப் பெற்றதாம்,

(ச.) வான்முதலாம் = ஒருபோது முன்பு வியோமம் பிரதிஷ்டையைப் பெறும், யான் = நான், முதலோரயன் = பிரஜைகள்பதி யென்னும் ஒருவனது, சிருட்டி = சிருஷ்டியினது, தரிசனம் = திருட்டாந்தம், உற்பத்தியும் இதின் நியமமும் எவ்வளவும் இன்றென்று நன்றாய்த் தெரிவிக்கும் நிமித்தம் கூறிய அநியமத்தின் உபசங்காரமாயது. (நீ)

(ஸ்ரீ - வீர - அ - கை.) யாவுமே மாறிமாறி யுற்பவிக்கு மென்றுரைத்ததன் பொருட்டாகத்தாசூராத்தியாயிகையை யுதாகரித்தல்:—கிருதவென்பது.

கிருதமுதலுக நாலுமீண்டு மீண்டுற்ப விக்குங்கிளைத்து ஞாலத்
தொருபொருளும் வளைத்து வளைத்தநந்த மடங்கும் பவமாயுழலாதில்லை
யிருள்பெருகு மாமாயை வன்னனைக்கு முன்னிலையா யிமிக்கோத
வருமறைதேர் தாசூரன்கதை கேட்டியிராம வெனவறைவதாஞன். (54)

(ப - ரை.) கிருதமுத லுகநாலும் மீண்டுமீண் டுற்பவிக்கும் = கிருதமும், திரேதாவும், துவாபரமும், கலியும்மீள மீளவுமுண்டாகிக் கொண்டே யிருக்கும், கிளத்துஞாலத் தொருபொருளும் வளைத்துவளைத்து அநந்தமடங்கு உற்பவமா யுழலாதில்லை = சொல்லாகின்ற இத்தஜகத்தில் எத்தவஸ்துவுமே மீளவும் மீளவுமே அளவில்லாத முறைஜனித்து அவதிப்படாததே கிடையாது, இருள்பெருகு மாமாயை வன்னனைக்கு = அந்தகாரமயமாய் எல்லாரையும் மூடல்செய்யும் மாண்புடைத்தாய மாயையின் வர்ணனைக்கு, முன்னிலையா = வியப்தேசமாக, இயாமிக்கோத = எம்மா லியம்பப்பெறும், அருமறைதேர்தாசூரன் = அரியவேதங்கள் யாவையும் கற்றுணர்ந்த தாசூரமுனிவனது, கதை = ஆக்கியாயிகையை, இராம ! = இராகவனே ! கேட்டி = சிரவணஞ்செய்தி, என = என்பதாகக் கூறி, அறைவதாஞன் = கூறத்தொடங்கினர். அரியமறையின் ஆராய்ச்சி வடிவகதையெனினும் அமையும்.

(ஸ்ரீ - வீர.) மீளவும் கிருதம், மிண்டும், திரேதா, மீளவுமேதுவாபரம், மீளவுங்கலி, சக்கிரமானது மீளமீளவுஞ் சுழன்று திரிவதேபோல ஜகத்சர்வமும் மீளமீளவுமே சுழன்றுவரும். இரவும்பகலும் கலைகாஷ்டை கடிகைமுகூர்த்தம் முதலியவற்றுனே யளவிடப்பட்டனவே யாகியிவையாவும் மீளமீள உண்டாம், மீளமீள உண்டாகாதன எப்பொருளுமே யிலவாம். ஜகன்மாயா சொரூபத்தின் வருணனையின் உதாகரணமாகத்தாசூர ஆக்கியாயிகையை வருணிப்ப நீ ஒருமையுடன் கேட்பாயாக.

(ச.) நான்கு கங்களும் மாறிமாறி வருவனவென்பது பொருள், கிளர்த்து ஞாலத் தொருபொருளும், ஈதனைத்தும், வேள + இல்லை = மாறிமாறி வருவதுவேயாம், யாதொன்று மாறிமாறிவாராதின்று = காலாந்தரத்திலு மப்படியேயிருக்கு மத்தன்மையான கூடத்தம் நித்தியமானவத்து இன்று இருள்பெருகு மாமாயை வன்னனேக்கு = ஜகன் மாயாசொரூபத்தினது வர்ணனைக்கு, முன்னிலையா = வியபதேசமாக, யாமிங்கோதவ ரும் = என்னால் வர்ணிக்கப்படும், தாசூரன்மறை தேர்கதை = தாசூராக்கியாயிகையை. (54)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இச்சமுசார சக்கிரம் கற்பனைமாத்திரம் பிரஹ்மமே யுண் மையா யிருப்பது என்பதாயின், மேதைபிரதிபை கௌசலசாலிகளாகிய மகாஜனங்கட் குள்ளும் ஒருவனேனும். அவ்வகையாக ஏன்கருதுபதில்லை, அதன் கண்ணேது யாதெ னின் ? அதன் அபேக்ஷையும், அதனினும் விருத்தமாய போகஐசுவரியாதி யபிநிவேச மும் ஹேதுவாமெனக் காட்டற்குக் கதையைத் தொடங்கல்:—இந்த பரவென்பன்,

(வேறு)

இந்தப்புவனத் தூடேயெழிலார் மலரின் பொழில்வாய்
மந்தக்குளிர் காற்கமழு மகததேசந் தன்னிற்
கந்தக்கதலி கடம்பு கன்னிகாரஞ் செறிந்து
சிந்தைக் கினிதாகியதோர் சிறப்பாமலி யினிடத்தே. (55)

பரலோகஞ் சேர்தவமே பண்ணிய பன்போலுயர்ந்த
சுரலோமா வின்மைந்தன் முசூரப் பெயர்முனிவன்
சுரலோகத்தின் குருவின் முேன்றற்க சனையொப்பா
னரலோகத் திம்மேலா னவைதீர் தவத்தாற் பொரியோன். (56)

(ப - ரை.) இந்தப் புவனத்தூடே = இவ்வசுதைப் பீடத்தில், எழிலார் மலரின் பொழில்வாய் = விசித்திரகுசுமத்தருமங்க ளின் றுவாரமாக, மந்தக்குளிர்காற்கமழும் = மந்தம்மந்தம் சீதளமான தென்றல்வீசும், மகததேசந்தன்னில் = ஸ்ரீ மாஞ்மகத மென்னும் பிரசித்தமகா ஜனபதத்தில், கந்தக்கதலி கடம்புகன்னி காரஞ்செறிந்து = மணக்கும் மலைவாழைகளும் நீபங்களும் கோங்குகளும் செருங்கி, சிந்தைக்கினி தாகிய தோர் = மநோரம்மியமாகிய ஒப்பற்ற ஒரு, சிறப்பாம் மலையின் இடத்தே = பலசிறப் புற்ற பருப்பதத்தின்பால்.

பரலோகஞ் சேர்தவமே பண்ணி = மறுமைப்பயனைப் பயக்கும் மகாதவத்தைச் செய்து, அயன்போலுயர்ந்த = பிரஹ்மாவைப்போலப் பரமதருமாத்மாவாய் மேம்பட்ட, சுரலோமாவின் மைந்தன் = அயலயன் இவனெனக் கியாதியுற்ற சுரலோமமுனிவரன் றன் அருஞ்சுதன், தாசூரப்பெயர் முனிவன் = தாசூரமுனி நாதன் எனப்பெயரிய ஒரு முனிவன் இருந்தான், அவன், சுரலோகத்தின் குருவின்றோன்றல் கசனையொப்பான் = தேவலோக ஆசாரியராகிய பிருஹஸ்பதியின் குமாரன் கசன் என்பவனுக்குச் சமானமா னவன், நரலோகத்தில் = பூமண்டலத்தில், மேலான் = பூசுரசிரேட்டன், நவைதீர்தவத் தால் பெரியோன் = குற்றங்கடிந்த மகத்தான தவயோகத்தோடு கூடியவன்.

(ஸ்ரீ - வீர.) இந்த வசுதாபீடத்தில், விசித்திரமான பூஞ்சோலைகள் நிறைந்தலங் களிக்கப்பெற்ற, மகதர்கட்கு நிவாசமாய் மாகதமெனப் பிரசித்தமான நாமம்வாய்ந்த, அஷ்ட இலக்ஷ்மிகளானே யலங்கரிக்கப்பெற்ற ஒருபெருந்தேசமுளது. கதம்பவந விஸ்தாரலீலையால் வனாந்தரங்கள முடைத்தாய் விசித்திரலீலைகவிபூத சருவாச்சரியமநோ கரமானது அத்தேயம்; அதன்கண், கர்ணிகாரசமூ குலமுற்று, கதலீகண்ட மிடைந்

டின்றி நிறைந்து, கடம்பங்களும் அன்னியபூர்வங்களும் வியாபித்து விளங்கிக்கொண் டிருக்கும் ஒருகிரிதடமுண்டு. விசித்திர விகசத்திருமும் முற்ற மகா புண்ணியமயமான அவ் வரமுமுகிரியில், மகாதபரிசேஷ்டராய், பரமதருமாத்மரா யிலங்கும் ஒருமுனிவரிருந்தார் அவர் தாரூரமுனிவர் எனப்பெயர் வாய்ந்தவர், மகத்தான தபசுசிதயோகத்தோடு கூடிய வராய், இராகமற்றவராய், மகாமதியராய், ஒருகதம்ப அக்கிரப்பாகத்தில் வசித்துக்கொண் டிருந்தனர். ஹேபகவன் ! இத்தபஸி எவ்வேதுவானே அவ்விபினத்தில் கதம்பமகா தரு வின் பிருஷ்டத்தில் எப்பிரபாவத்தானே எப்பிரகாரத்தானே வசித்தார் எனின் ? கேட்டி ! ஹே இராமச்சந்திர ! சரலோமர் என விக்கியாதமாய் அம்முனிவரது பிதா அப்பர்வதத்திற்றானே, மற்றொரு மலரவன்போல வசித்துக்கொண் டிருந்தார்; தேவகுரு விற்குக் கசன் என்னும் ஒருகுமரன் இருந்ததேபோல இத்தாரூரர் அம்முனிவருக்கு ஏகபுத்திரராயிருந்தார்.

.. (ச.) சிந்தைக் கினிதாகியது = சர்வாச்சரிய மஞ்ஞரமான, பரலோகஞ் சேர்த வம் = மகாதவம், அயன்போலுயர்ந்த = பரமதர்மாத்துமா வென்று பிரசித்தியுள்ள வேறொரு பிரமன்போல் இராமா, சரலோமாவின் = என்றொருவ னுண்டவனது, தாரு ரப்பேர் = தாரூரனென்னு நாமமுள்ளவன், முனிவன் = மகாதபோயோக சஹிதன் அக் கிரியிலிருக்கின்றன் அவனுக்கிவன், சுரலோகத்தின் குருவின் = தேவகுருவினது, தோன்றல் = ஒரேபுத்திரன், கசனையொப்பான் = கசன்போன்றவன். (56)

(ஸ்ரீ - வீர - அ கை.) சரலோமமுனிவரின் சரிதையுரைத்தல்:—தனையன் என்பது.

தனையனொருவனெடுஞ் சரலோமா வாமுனிவ
னனையகிரியின் வனத்தி லநேகயுகஞ் சென்றதற்பின்
புனையுங்கூடு கழிந்துபுட் போவதுபோற் போகி
வினைசெய்யுடலை விட்டுவிண்ணோர் வடிவை யெடுத்தான். (57)

(மு - வை.) தனையன் ஒருவனெடும் = அவ்வேக புத்திரனெடும், சரலோம ஆமுனி வன் = சரலோமர் என்னும் அம்முனிவர், அனையகிரியின் வனத்தில் = பகர்ந்தபர்வ தத்திலுள்ள வனத்தின்கண் அநேகயுகஞ் சென்றதற்பின் = அநேககாலங் கழிந்ததன் பின்னர், புனையுங் கூடுகழிந்து = பந்தித்திருந்த நீடத்தைவிடித்து, புட்போவது போற் போகி = பறவை செல்வதுபோலச் சுவர்க்காரஞ்சென்று, வினைசெய்யுடலை விட்டு = கரும சம்பந்தகாயத்தை யொழித்து, விண்ணோர் வடிவை எடுத்தான் = தேவவடிவத்தைச் செறிந்தான்.

(ஸ்ரீ - வீர.) அம்மைந்தனெடு கூட அம்முனிவர் அவ்வனத்திற்றானே ஆயுளைக் கழித்து வந்தனர், பின்னுதலிய முனிவர் நாயகராகிய சரலோமர், யுகணம் = அநேகயுக லாந்தமகவத் சரகணம், சுகதுக்காதி துவந்துவகணம், அநுபவித்து, மூக்தடேகக்போ லத்யக்ததேகராய்ச் சுராகாரம் எய்தினர்.

(ச.) அனையகிரியின் வனத்தில், அநேகயுகஞ் சென்றதற்பின் = யுகணம் அனந் தஞ்சுவனம் புசித்துச்சென்றது, விண்ணோர் வடிவையெடுத்தான் = சுராகாரமானன்(57)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தாரூரர் தந்தையன்னை பிரிவாற்றுமையும் வனதேவதை கண் டருளுதலும் உரைத்தல்:—தனி, தந்தை, என்பன.

தனியே யந்தவனத் தேதாரூரப் பேர்முனிவ
னினியதாதை யிறவுக்கிரங்கி யுதகத்தி யற்றும்

புனிதமான பிரமபூசை முழுதும் புரியான்
கனியுநெஞ் சனன்றில் கதறு மாபோற் கதறி. (58)

தந்தை யன்னே பிரிவாற் சாலவெம்பித் தளர்ந்த
மைந்தன் றன்னே யருளால் வனதேவதை கண்டருளி
முந்துறுமு னின்றுமுனி மாமகவா முனிவா
சிந்தை தெளிந்தோய் தெளியாச் சிறியோரென நொந்தயரேல். (59)

(ப - ரை.) தனியேயந்த வனத்தே = ஒருவரேயாக அவ்வனத்தில், தாருரப்பேர் முனிவன் = தாருரன் என்னும் அம்முனிவர், இனியதாதை யிறவுக்கிரங்கி = அன்பு மிக்கதந்தையினது மரணத்திற்கு இரக்கமுற்று, உதகத்தியற்றும் = நீரிலாற்றும், புனித மான = பவித்திரமான, பிரமபூசைமுழுதும் = பிரமபூசையாவும், புரியான் = செய் யான், கனியுநெஞ்சன் = உருகுமனத்தினன், அன்றில் கதறுமாபோற் கதறி = அன்றில் என்னும் சிறுபறவை துயருற்றுக் கரையுமாறுபோலக் கரைந்து.

தந்தையன்னே பிரிவால் = பிதாமாதாக்களினது நீக்கத்தால், சால வெம்பித் தளர்ந்த = அத்தியந்தம் சோகசந்தாபித சிந்தையான் மெலிவுற்ற, மைந்தன்றன்னே = அக்குமாரனே, அருளால் = இருபையால், வனதேவதை கண்டருளி = அவ்வனத்தின் அதிதேவதை பார்த்தருளி, முந்துறுமல் நின்று = எதிர்ப்படாமல் நின்றருளி, முனிமா மகவாமுனிவா = சரலோம முனிவரின் மாண்புறு மைந்தனய ஹே தாருரமுனிவ!; சிந்தைதெளிந்தோய் = மகாப்பிராஞ்ஞனே, தெளியாச்சிறியோர் என = அற்ப அறிவி லார்போல, நொந்தயரேல் = துன்புற்று ரோதனஞ் செய்யாதே.

(ஸ்ரீ - வீர.) ஒருவராகவே அவ்வனத்திற் ருருரமுனிவர் அழுதுகொண் டிருந்தார், என்றதனனே தாய்தந்தையர் இருவருமே தொடர்ந்திருந்து போய்விட்டதாகத் தெரி கின்றது; தசப்பிராணன்களாற் றேகத்தினின்றும், சரமபாவ விகாரத்தால், கிரகதசா வீசேடத்தால், விடுபட்டுப் பரலோகஞ்சென்ற தந்தையை புடையவராய்க் கருணையோ டும் ருராப்பறவைபோலும் விடாமல் ரோதனஞ் செய்தனர். தாய்தந்தையர்தம் வியோ கத்தாற் சோகசந்தாபித ஆசயராகி, ஹே மந்தபக்கஜம்போலும் அத்தியந்தம் மலினபா வத்தை யடைந்தனர். அதி தீஷ்ணபுத்திமானாகிய இப்பாலகர் அவ்வனத்திலுள்ள, காணுது மறைந்து நின்ற, வனதேவதையானே அக்கால் வழங்கப்பெறும் வகையாகச்சமாதானப் படுத்தப் பெற்றனர். ஹேமகாப் பிராஞ்ஞனய இருடிகுமாரனே! அஞ்ஞனப்போ லென் அழுகின்றனை.

(ச) தனியே = ஒருவனேயாய் இரங்கிக்கதறி அழுதான் வெளிப்படை தந்தை யன்னேபிரிவால் = மாதாபிதா வியோகத்தால், சாலவெம்பித் தளர்ந்த = சோகசந்தாப சித்தனய்! பனிகால பங்கஜம்போன் மிகுவாட்டமுற்றான், மைந்தன்றன்னே = பின்பித் தப்பாலனே, வனதேவதை = வனத்தில், முந்துறுனின்று = அதிருசியசரீரியாய், அரு ளாற்கண்டருளி இங்ஙனம் அறுக்கிரகித்தான், ஸ்ரீராமா, சிந்தைதெளிந்தோய் = மகாப் பிராக்ஞனே, தெளியாச் சிறியோரென = அஞ்ஞன்போல், நொந்தயரேல் = அழுகிறு யென். என்றதாயிற்று. மூலம் தசாபீதபித்ருக: = தசை = ஜீவிதகாலத்தின் நற்றவத்தை அதனால், அபீத: = நீக்கப்பெற்ற, பித்ருக: = தந்தையை புடையவன் என்பதாம், ரார: = உத்க்ரோச மெனப்பெயரிய பக்ஷிவிசேஷமாம். இறப்புக்கிரங்கி = ஜீவிதகாலத் தின் அந்தத்திசையதனால் கிரகிக்கப்பட்ட பிதாவுக் கிரங்குமவன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) வனதேவதையின் சமஸ்ஞாபை ஆசுவாசனப் பிரகாரம்: — அனித்த மென்பது.

அனித்தமான குடும்பத் தபத்த முணர்கின் றிலையென்
சனித்தபொழுதே மரித்தல் சற்றுந்தப்பா கண்டாய்
பனித்தவிழி யோடயர்வாய் பகலோ னுதயஞ் செய்தா
னினித்தன் னிலையத்த மனத்தெய்தா னென்பாருளரோ. (60)

(ப - பா.) அனித்தமான குடும்பத்து = மித்தையான சமுசாரத்தினது, அபத்தம் = சஞ்சலசொரூபத்தை, உணர்கின்றிலையென் = எக்காரணத்தாற் றெரியாமலிருக்கின்றாய், சனித்தபொழுதே மரித்தல் சற்றுந் தப்பாகண்டாய் = எப்போது உதயமாயிற்றோ அப்போது அஸ்தமனத்தை யடைதல் ஒருநிதியும் தவிராதென்றே நீதெரிந்து கொள், பனித்த = விழியோடு அயர்வாய் = கண்ணுங் கண்ணீருமாய் அழுதுகொண்டு திரியுங்குழந்தாய்!, பகலோன் = தினகரன், உதயஞ்செய்தான் = எழுந்துவந்தான், இனித்தன்னிலை = இனிமேல் தனது நிலையாகிய, அத்தமனத் தெய்தான் — அஸ்தமயகிரியை யடையமாட்டான், என்பாருளரோ = என்று சொல்பவரும் இருப்பாரோ, இலர்.

(ஸ்ரீ - வீர.) ஹே குழந்தாய்! எதனால் நீ சமுசாரத்தினுடைய சொரூபத்தை அசாசுவதமென அறிந்தாயில்லை; ஹே சாதுவே! சமுசாரத்தில் எப்போதுமே இத்தகையதாய சம்ஸ்ருதிச் சலனமுளதேயாம்; உண்டாகும் வாழ்ந்திருக்கும், பின்பு அவசியமாகவே விநாசத்தையு மடையும்; விவகாரதிருஷ்டியில் எவ்வெப் பிரமாதியர் பிரசித்தராயுளரோ அத்தகையரும் ஹேமுனிவ! மற்றியாவருமே, விநாசத்தையடைய வேண்டியேவரும், இதில் ஐயமேகிடையாது; அக்காரணத்தினாலே, பிதாவினது மரணத்தைக்குறித்து வியர்த்தமான விஷாதத்தை யடையவேண்டாம்; அவசியம் பவிக்கும் அஸ்தமயம், உதயமாய தினகரனுக்கே போலும்.

(சு.) அனித்தமான குடும்பத்தபத்தம் = சம்சாரத்தினது சஞ்சலசொரூபத்தை, நீ உணர் கின்றிலையென் = யாதினால், சாதுவே சம்சாரத்தில் எப்போதும் இத்தன்மையாய்ச் சலிக்குந்திதி ஜநித்துச் சீவித்துப்பின்பு அவசிய நசிக்கின்றதேயாம் அதன் நிமித்தம், பனித்தவிழியோ டயர்வாய் அயரேல், பிதாமரணசோகம் வியர்த்த மென்ற தாயிற்று. (60)

(ஸ்ரீ-வீர - அ-கை) வனதேவதை யருளியதைக் கேட்ட தாரூரமுனிவர் தங்கடன் முடித்தல்:—வாளாவென்பது.

வாளாவயரே லென்று மறைந்து தெய்வ முரைப்பக்
கேளா வுணர்ந்து தளருங்கேத மொழித்து நிலையாய்
நீளாரணத் தின்படியே நீரின்கடன் கண் முடித்து
மீளாநெறி சேர்த்தவத்தின் மிகவும் விருப்பமானான். (61)

(ப - பா.) வாளா = வீணாக, அயரேல் = மயங்கித் துன்புறேல், என்று = என்பதாக, மறைந்து = அரூரியாய், தெய்வம் = அவ்வனதேவதை, உரைப்ப = அருள்செய்ய, கேளா = சிரவணித்து, உணர்ந்து = விவேகத்தைப் பெற்று, தளருங் கேதமொழித்து = வாட்டஞ்செய்யும் துன்பமோகத்தை விடுத்து, நிலையாய் = நித்தசுவாதீனஞ்சித் தையுடையவனும், நீள் ஆரணத்தின்படியே = பிராசீன பரமப்பிரமாண வேதங்களின்

விதிப்படியே, நீரின்கடன்கண் முடித்து = பிதிர்கார்ய முதலியவற்றை வழுவாமற் செய்து, மீளாநெறிசேர் = புநராவிருத்தியின்றியதை யடையும்படியான, தவத்தின் = தபத்தின்மாட்டு, மிகவும் விருப்பம் ஆனன் = அத்தியந்தம் பிரியமுடையவனானன்.

(ஸ்ரீ - வீர.) அசரீரியாகத் தெய்வமுரைத்த வாக்கியங்களைச்செவியுற்ற ஊர்த்தலோசனராகிய அத்தாசூரர், மேககர்ஜிதங்கேட்ட சிகண்டி யொப்பத் தைரியத்தை யடைந்தனர். உடனேயெழுந்து புத்திரனுலே அவசியம் செய்யத்தக்கதாய பிதாவின் மேலுலக சம்பந்த உத்தரக்கிரியையை ஆதரவோடும் செய்து முடித்தனர்; உத்தமசித்தியின் பொருட்டுத் தவம்புரியத் திடமதியையும் அடைந்தனர்.

(ச.) கேளா = விசாலரக்த லோசனன். தாசூரன் அசரீரவாக்கியத்தை இங்ஙனஞ் சிரவணஞ்செய்து, நிலையாய் = தைரியத்தை யடைந்தவனுய், தனிதத்திறுல் = மேக கர்ச்சிதத்தால், சிகண்டிபோல் = மயிற்போல், கேதமொழித்து நின்ருன், பின்வெளிப் படை, பிரமபூசை முழுதும் = பிதாவுக்குமேல் இங்ஙன மியற்றுங்கன்மம், இது முன் செய்யாதது, இதில் ஆதரனுய் எழுந்திருந் தவசியமாகச் செய்யவேண்டியதைச் செய்து முடித்து உத்தம சித்திதரும் தபசுக்குப் புத்திரனைத் திடமாகச் செலுத்தினன் என்ற தாயிற்று.

(ஸ்ரீ - வீர - அ-கை.) அம்முனிவருக்கு அவனியில் அகில இடங்களும் அப்பிரதிஷ்டிதமாகத் தோற்றல்:—தக்கவென்பது.

தக்கபிரம கருமந்தன்னுற் றவமே செய்வான்
றொக்க சங்கற்பத்தாற் சுத்தாசார மிருந்தான்
மிக்கஞான மில்லான் விசுத்தமான புவியிற்
புக்கவிடங்க ளெல்லாம் புனிதமன் றன்றென்ஞ. (62)

(ப - ரை) தக்கபிரம கருமந்தன்னுல் = தகுதியாய பிராஹ்ம கருமத்தினுலே, தவமேசெய்வான் = தவம்புரிய வெண்ணிய அவர், தொக்க சங்கற்பத்தால் = தொடர்ந்த அநந்த சங்கற்பத்தால், சுத்தாசார மிருந்தான் = ஸ்ரீய ஆசாரமிருந்தவர், மிக்கஞானமில் லான் = அறியவேண்டியதை யறியாத மனத்தினன், விசுத்தமான புவியில் = பவித்திர மாய தராதலத்திலும், புக்க இடங்கள் எல்லாம் = சென்றதலங்கள் யாவற்றையுமே, புனிதம் அன்று அன்று என்ஞ = பவித்திரம் அல்ல அல்லவென எண்ணினர்.

(ஸ்ரீ - வீர.) அவ்விபினத்தில் பிராஹ்ம கருமத்தானே தவம்புரியு மவருக்கு, அநந்த சங்கற்பமயமாய பருதராசுத்தி யசுத்தியாதி கற்பனைப் பிரசரம், வேதாத்தியயன அதனர்த்த விசார அநுஷ்டான நிஷ்டத தன்மையாகிய சுரோத்திரியத்வம் உண்டாயது. அவசியம் அறியத்தக்கதாகிய பிரஹ்மத்தை யறியாத மதியையுடையவரும் சுரோத்திரிய ரும் ஆகிய அவருக்குச் சுத்தி யசுத்தியாதி கற்பனையிலுலே தராதலம் பவித்திரமா யிருந் தும் அவரது சித்தம் இளைப்பாறு தலையடையவில்லை. இத்தராதல மியாவுமே கேவலம் சுத்தமாயிருந்தும் அசுத்தம் போலக்கண்டு அவர் ஒரிடத்திலும் இரமிக்கவேயில்லை.

(ச.) தவமேசெய்ய = வனத்திற் றவமியற்றும் அவனுக்கு, சங்கற்பத்தாற்றொக்க = அநந்த சங்கற்பமயமான சோத்திரியனுலுன், தபசில் இத்தன்மைய விசுத்தமான தேசத் தாற் கூடவேண்டும் இவ்விதம் பாவனமான சாதனங்களாற் சேரவேண்டு மென்னும் அநந்த சங்கற்பப் பிரசரஞ் சுத்தாசார மென்னுஞ் சோத்திரியத்துவம், சாந்தசத்துவம் மிருந்ததென்ருயிற்று. மிக்கஞானமில்லான் = அறியவுரியதை யறியாத புத்தியுள்ளவ

னது சித்தம் அச்சுத்தாசார மிகுதியால் வீசிராந்தி யாகவில்லை, வீசுத்தமான புவியில் = பவித்திரமான தராதலத்திலும், இத் தராதல முழுதுங் கேவல மசுத்தமே யென்று சிந்தித்து ஓரீடத்தும் இரமித்ததே யின்றென்ப தாயிற்று. (62)

(ஸ்ரீ-வீர - அ-கை) புனிதமான இடம் பெறுந்தவம் புரிய அத்தலத்தான் மகிழ்ந்த ஸ்ரீ அக்கினிபகவான் முனிமுன்ரோன்றல்: —வையம் உடலேயென்பன;

வையஞ் சுத்தமல்ல மரத்தினுனியே புனித
மையபுட் போலாங்கே யமர்தற்கான தவமே
செய்யகிற் போமென்னுச் சிந்தையார நினைந்து
வெய்யகனலை மூட்டி விண்ணேர் குழுவைநினைந்து. (63)

உடலை யரிந்துவாங்கி யோமஞ் செய்யலோடுங்
கடவுள வர்க்கென் முகத்தாற் கலிவேதியன் மெய்த்தசைகண்
மிடறும்புயமு முதலவே வதென்னே யென்னுச்
சுடருங்கன லோனினைந்து சுருதிமுனி முன்ரோன்றி. (64)

(ப - ரை.) வையம் சுத்தமல்ல = பூமண்டலம் புனிதமல்ல, மரத்தின் நுனியே புனிதம் = விருக்ஷாக்ரமே வெகுதூயது, ஐயபுட்போல் = அதிற் பொருந்துறுத லெனக்கு சிதமாதலின் பறவைகிகர்ப்ப, ஆங்கே யமர்தற்கான தவமே = சாகைகளிலும் தலங்களிலும் இருத்தற் குரித்தான தவத்தையே, செய்யகிற்போமென்னு = பண்ண முயலுவோமென்று, சிந்தையாரகினைந்து = புந்தியிற் பொருந்துற மதித்து, வெய்யகனலை மூட்டி = அதிபாசுவரமான ஹோதாசனமிகச் சுவாலிப்பித்தி, விண்ணேர் குழுவை நினைந்து = தீர்வாண விருந்தத்தைச் சிந்தித்து. (பட்டம்)

உடலையரிந்து வாங்கி = சரீரத்தைச் சேதித்துக் கரங்கொண்டு, ஓமம்செய்யலோ டும் = ஆகுதியை ஆற்றியபோது, கடவுளவர்க்கு = தேவதைகட்கு, என்முகத்தால் = எனது வாயிலாக, கலிவேதியன் = சாத்திரங்கற்ற சோத்திரிய மறையவனது, மெய்த் தசைகண் மிடறும் புயமும்முதல = உடம்பின் மாம்சங்கள் கனம்புஜம் முதலன, வேவ தென்னே = பஸ்மம் ஆகவேண்டாம், என்னுகினைந்து = எனச்சிந்தித்து, சுடருங்கன லோன் = சொலியாகின்ற ஸ்ரீ அக்கினிபகவான், சுருதிமுனி முன்தோன்றி = வேதமா முனிவர் எதிரிற் பிரசன்னமாய்.

(ஸ்ரீ - வீர.) பின்னர் அவர் தஞ்சங் கற்பத்தினுலேயே இவ்வண்ணம் சங்கற்பிப்பார் ஆயினர்: தருவீன் நுனியே இனிதுதூய்தாம், ஆண்டே திதி எனக் குதிதமாம். அதன் பொருட்டிப்போது தவத்தைத் தபிப்பேன், எத்தவத்தால் விருக்ஷங்களில் பக்ஷிபோலும் தெய்வம்போலும் அவஸ்தான சாமர்த்யத்தைச் சாகைகளிலும் தலங்களிலும் அடை வேன். என்றிந்தப் பிரகாரம் திரமூர்த்தி அவஸ்தைகளும் ஒளிராகின்ற தீவியுணியை நன்கு சொலிக்கச்செய்து, அதன்பால், தன்ஸ்கந்த பித்தியினின்றும் மாம்சத்தை அரிந்தெடு த்து ஆகுதிசெய்தார். தபத்தைத் தபிப்பேன் எனச் சங்கற்பம் காணப்பெறுதலின், தவத்தின் பின்னர், அதனுல் விரைவில் சித்திகாணப் பெருமையின் இவ்வண்ணமாய ஹோம சாதனசஞ்செய்யத் தொடங்கினு ரெனவுணரலாம். அதன்பின்னர் ஸ்ரீ பகவானு கிய சப்தார்ச்சியானவர்களும் வகையாகச் சிந்திக்கத் தொடங்கினுர். சிந்தையின் பிரதா ரத்தையே காட்டல். கடவுளவர்க் கென்பது, தீர்வாண விருந்தத்திற்கு "அக்கினி தேவர் முகர்துணிவுறுவமரே" என்னுஞ் சுருதியை யனுசரித்து அக்கினியாகிய எனமுகத் தானே சமக்கிரகண்ட தேசங்கள் ஆகுதி பண்ணப்பட்ட விப்பிர மாம்சத்தானே வெந்து

பஸ்மத்தன்மையை யடையவேண்டாம் என்பதாகச் சித்தித்து; அக்கினிபகவானுகிய தேவதை அத்தானூர் முன்னர் பாஸ்வரப் பிரபுவாகிய சூரியபகவான் பிருகஸ்பதி முன்னர் பிரசன்ன மானதேபோலப் பிரசன்னமாயினர்.

(ச.) பின்பவன் தன் சங்கற்பனையினுலேயே இங்ஙனஞ் சங்கற்பித்தான்: — ஐய, அற்றிதியெனக்கு உசிதமாம், ஆங்கே = சாகிகளிற் சாகைகளிற் றளங்களிலும், அமர்தற்கான = எந்தத்தவ சாற் றிதிபெறுவேன் அந்தத்தவமே, செய்யவிற்பேமென்ன = இப்போதே செய்கிறேனென்று.

செய்யலோடும் = செய்தான்பின், வேவதென்னே யென்ன = என்முகத்திருந்து சாம்பலாவதென் வேண்டாம், சுடரின் கனலோன் = அக்கினிபகவான், தோன்றி = பிரகஸ்பதிக்குச் சூரியன்போற் பிரசன்னமாய்ப் பின்பு. (64)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீ அக்கினிபகவான் பிரசன்னமாகி வரந்தரல்: — கருதிற் றென்பது.

கருதிற்றென்ன வென்னக் கைகண் முகிழ்த்துத் துதித்துப்
பரிசுத்த மதாமிடமிப் பாரிற்காணே னதனுற்
றருவித்தலி யிற்றளிர் மேற்றலந் தந்தருள்வா யென்ன
வரமுற்று தவிக்கனலோன் வாரித்திரை போன்மறைந்தான். (65)

(ப - கை.) கருதிற்று என்ன வென்ன = விரும்பியது யாதோவென்று ஸ்ரீ அக்கினி பகவான் கேட்ப, கைகள் முகிழ்த்து துதித்து = இருகரங்களைச் சிரங்கூப்பித் தோத்தரித்து, பரிசுத்தமதாம் இடம் இப்பாரில் காணேன் = பாவனமான தானம் இவ்வவனி மண்டலத்தில் அடைந்திலேன்; அதனுல் = அக்காரணத்தினுல், தருவித்தலையில் தளிர் மேல் = மரத்தின் நுனியின் இலைமேல், தலம் தந்தருள்வாய் என்ன = இருக்க இடம் தந்தருள்வாய் என்று பிரார்த்திப்ப, வரமுற் றுதவிக்கனலோன் = ஸ்ரீ அக்கினிபகவான் அவ்வாறே யாகுகவென்று வரந்தந்தருளி, வாரித்திரைபோல் மறைந்தான் = கடலிலலை போல உருக்கரந்தான்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ அக்கினிபகவான் கூறுவதாவது. ஹே தீரகுமார! வேட்கையுற்ற வரம் வேண்டுதி, நினது சங்கற்ப சித்தமாய் நின்பால் இருப்பதேயா யதைக்கவர்ந்து கொள்ளுதி, கோசஞ்ஞியம் உதரத்தினின்றும் மணியையதன் சுவாமிகவர்ந்து கொள்வதேபோலும். ஈண்டுத் தீரவென்றது சாஹசானுரூபம் சம்போதனமாம். என்பதாக வருளிய ஸ்ரீ அக்கினிபகவானே, அவ்விப்பிரகுமாரன், சோபிதமான அர்க்கீபுஷ்பத்தானும் ஸ்துதிவாதத்தானும், இனிதாக நன்குபூஜித்துப் பிரார்த்திப்பதாவது. ஹே பகவன்! விசுத்திஷடக சூத்திர சாண்டாள ஞாளிபூசையாதி பூதங்களானே நிறையப்பெற்ற பூமியிற்பவித்திரப் பிரதேசத்தை யடையப் பெற்றிலேன், அதனுனே எனக்கு விருக்ஷங்களின் மேலே உபரி ஸ்திதியுளதாகுக; எனமுனிமைத்தன் கூற, சர்வதேவமுகமாய ஸ்ரீஅக்கினிதேவர், உனக்கவ்வாறே யுளதாகுகவெனக் கூறியருளி அவ்வீசுரர் மறைந்தருளினர்; அத்தேவர் மறைந்தருளவே, கணகாலம் மாலையைக்கண்ட மஹர்மலர்போலாயினும், பூர்ணகாமமுற்ற அக்குமாரன் பூர்ண இந்துவைப்போலப் பிரபையுடையவனுனன்.

(ச.) கருதிற்றென்ன வென்ன = விப்ரகுமார சாதுவே இஷ்டமான வரத்தைக் கோசாகாரத்திற் ரூபித்த மணியைப்போல் வாங்கிக்கொள் ளென்றுரைப்ப, அக்கினி தேவனே விப்பிரகுமாரன் கைகண்முகிழ்த்துத் துதித்து, அருக்கியமலரோடு சோபிக்குந் துதிவாதத்தினுல் பூசித்துச் சொல்லுகிறுன், தலந்தந்தருள்வாய் = எனக்கு ஸ்திதிதந் தருளும், வரமுற்றுதவி = உனக்கிங்ஙனந் தர்தேனென்று சொல்லி, மறைந்தான் = கணத்திலந்தர்த் தானமானுன். (65)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இப்போது சாகைபல்லவ புஷ்பங்கணிறைந்து பல பக்ஷி மநோகர மாய்ப்பல அலங்காரங்களோடு கடம்பமிருப்பதை வருணித்து, அதன் கண்ணே, வாஞ் சிதவரம் வந்ததானே.கிளர்ந்த, ஆன்னமண்டல ஒளிமிருதியானே, வெண்புன்னகைக் கவின் வகையானே கலைக்குலம் நிறைந்தபூர்ண சந்திரனேயும், விகசிதமாய அம்புஜத்தையும், வெற்றிகொண்ட மகிழ்ச்சிமிருந்த அத்தாரூரமுனிவர் இருந்து தவம்புரிய விரும்பிரு ரெனல்:—கானத்தென்பது.

கானத்திடையோர் கடப்பங்காரின் பதத்தைக் கடந்து
வானத்துயர்ந்த தகன்மேல் வருபல்லவ மென்றவிரின்
ரூனத்தைய மின்றித்தா ரூரன்ரு னிருந்து
மேனற்றவமே செய்வான் மிகவும்விரும்பு மனத்தான். (66)

(ப - ரை.) கானத்திடை = கானகமத்தியில், ஓர் கடப்பம் = ஒப்பற்ற ஒரு கதம்ப தருவிருந்தது, அது, காரின்பதத்தைக் கடந்து = மேகமண்டலத்தைத் தாண்டி, வானத் துயர்ந்தது = ஆகாயத்தில் வியாபித்தது, அதன்மேல் வருபல்லவமென்ற விரின்ரு னத்து = அத்தருமீது தளிர்த்திருக்கும் மிருதுவாயதளிர் விஷ்டாத்தில், ஐயமின்றித்தா ரூரன்ரூனிருந்து = ஆசங்கையில்லாமல் தாரூரமுனிவர் வீற்றிருந்து, மேனற்றவமே செய்வான் = உயர்வாகிய இனியதவத்தையே செய்யும் பொருட்டு, மிகவும் விரும்பு மனத் தான் = அதிக ஆவலுற்ற உள்ளத்தினன் ஆயினன்.

(ஸ்ரீ-வீர.) கானன மத்தியிற் கதம்பமொன்றிருந்தது, அம்தம்புத மண்டலத்தைச் சும் பித்து நின்றது, மத்தியானத்தில் இளைப்படைந்தவைபோன்ற சூரியாசுவங்களாற் சேவிக்கப் பெற்ற ஸ்கந்தமண்டலங்களே யுடைத்தாயிருந்தது, விடபபாகுக்களானே திக்குகஜிதீர்க் கத்தை விதானமென்னச் செய்துகொண்டிருந்தது, விடபவிதான அகாவிருததேசம் பரி சிஷ்டமாக அயலொன்றுளதா ? இலதா என்பதாக நாற்புறங்களிலும் திசையை, விகாசி யாங்குசுமசுகணங்களால், பார்த்துக்கொண்டிருந்தது; புஷ்பபல பல்லவசாலியாயும், புஷ்ப ரூப அசல உபமமாயும், விண்மண்களின்றம்போன்றதாயும், ஏகார்ணவகதமாய்ச் சௌரிவட விருக்ஷம்போன் றுன்னதமாயும், வனத்தின்கண் வளப்பமிக்க அக்கடம்பில், ஆனந்தமந்தர மனத்தினராய் பூமி, அபவித்திரதாமதியுற்ற அந்தத் தாரூரமுனிவர், ஆரோகணித்து, அதன் கண்ணிலங்கும் வியோமமளாவிய சாகையின்பாற் செறி நறுந்தளிரிற் சங்கையில்லாதவராய், அதாவது அபவித்திர மென்னும் விக்ஷேப ஆசங்கையற்றவராய்ப் பிரவேசமாயினர், ஒருமை யுடன் அங்குத் தவம்புரியத் தொடங்கினர்.

(ச.) கடப்பம் = கதம்பம், நற்றவம் = ஏகாக்கிரமான தபசு. (66)

(ஸ்ரீ-வீர - அ-கை.) திசைநோக்கி யம்முனிவர் திருந்திய வாதனத்திருந்து, நகை போக்கிக் கருமமெலாமனமதனு னடத்திரெனல்:—ஒரு என்பது.

ஒருகணந் திசைகளனைத் தையுநோக்கி யுறைத்தபத் மாதனத்திருந்தான்
பெருகியதிசை கண்முழுதினுந் நிரும்பிப் பிரமபாவனை யறிவரிதாய்க்
கருமமாத்திரத் தினிற்பதாய்ப் பலமாங்கற்சம் விரும்புரு மனத்தால்
வருடமைந்நூண்டு மகங்களே நடத்திவான வர்க்கவியுண வளித்தான். (67)

(ப -ரை.) ஒருகணம் = கணமாத்திரகாலம், திசைகள் அனைத்தையும் = எல்லாத் திசைகளையுமே, நோக்கி = பார்த்து, உறைத்த பத்மாதனத்திருந்தான் = திடபதுமாதனத்

திருந்தான், பெருகியதிசைகள் முழுதினும் திரும்பி = விசாலமான சர்வதிசைகளினின்றும் பிரத்யாகரித்து, பிரமபாவனை யறிவினாய் = பரமார்த்த முணராமையின், கருமமாத்திரத் திணிற்பதாய் = கிரியாமாத்திரத்தில் நிலைபெறுவதாய, பலமாங்கற்க சம்விரும்புரு = பல காரப்பண்ய யுத்தமான, மனத்தினுல் = சித்தத்தால், வருடமைந்திரண்டு = தசசம்வத்சரங் கள், மகங்களே நடத்தியஞ்ஞுக் கிரியைகளேயே செய்து, வானவர்க் கவியுணவளித்தான் = சுரர்கட்கு அவியாகாரந் தந்தான்.

(ஸ்ரீ - வீர.) நவபல்லவகற்பித மிருதுவான ஆசனத்தில் உட்கார்ந்து கௌதுகத்தாற் சபல ஈக்ஷணமுடையவராகி அவர்கணப்போது திசையைப்பார்த்தார், அது, நதிவடிவங்களான ஹார பேதங்களானே ரம்மியமாயும், சைலேந்திரஸ் தனகுடமலர்களே யுடைத்தாயும், நிரு மல ஆகாசகபரத்தை யுடைத்தாயும், சஞ்சலமான நீலமேக அளகத்தை யுடைத்தாயும்: நீல பல்லவ வசனத்தை யுடைத்தாயும் இருந்தது; புஷ்பக்கூட்டங்களால் அலங்கரிக்கப்பெற்றும், கடல்களாகிய பூரணகும்பங்களைக் கரத்திற்றரித்தும், பகுபூஷண அலங்கிருதமாயும் இருந்தது. அது முதலாக அத்தாபச ஆசிரமத்தில் சதம்பதாசூரர் எனப் பிரசித்தராகித் தாருண மானதவத்தில் அபராங்முக சூராகி எப்போதும் தவம்முயன்றவராகி வாழ்ந்தனர். அந்த லதாதலத்தில் இருந்து திசையைநாடிக்கணம், திடபதுமாதனங் கட்டித்திக்குகளி னின்றும் திருப்பிய மனத்தராகி, உண்மை யின்னதென உணராதவராகி, கிரியாமாத்திரத்திலே நிலை பெற்றவராகிப் பலகார்ப்பண்ய யுக்தமனத்தினுலே அவர்மகம் புரிந்தனர். விண்ணில் வியா பித்த சாகையின் பத்திரங்களில் வீற்றிருக்கும் அத்தராத்மாவாகிய அஜராளே தம்மன்ங் கொண்டே ஆதானுதிய சுவமேதாந்தயஞ் ஞக்கிரியைகள் யாவும் முறையே செய்யப்பெற் றன. அங்விவரிங்ஙன் தசவருடங்கள் மனத்தினுலே தேவர்களே யஜிஞ்ஞுசெய்தனர்.

(ச.) நோக்கி = கௌதுகலீலையா னேக்கினவனும், திரும்பி = திரும்பினமனதுடை யனும், பலமாங்கற்கசம் விரும்புரு = பலகார்ப்பண்ய சகிதமான. (67)

(ஸ்ரீ-வீர - அ-கை.) பற்பலயாகங்கள் பயின்ற நற்பண்பால் விற்பனஞானம் விளங்கிய துளத்தேயெனல்:=கோத்திர ளென்பது.

கோத்திரள் புரவிமனிதரா லியற்றுங்கோதறு வேள்விகண் முற்றுஞ்
சாத்திரவிதியா லியற்றிநீள் காலந்தவறற நடந்தமை யாலே
மாத்திரமான மனமிகத்தெளிந்து வரம்பிலதாதலு மாங்கே
நேத்திரமான ஞானம்வந்தெய்தி நிறைந்தனன் வவிதினன் னெஞ்சம். (68)

(ப - ரை.) கோத்திரள் புரவி மனிதரால் இயற்றும் = கோ அசுவநர மேதாதிகளால், செய்யப்பெறும்,) கோதறுவேள்விகள் = குற்றமற்றயாகங்கள், முற்றும் = யாவற்றையும், சாத்திர விதியாலியற்றி = நூன்முறையே நிறைந்த தக்ஷிணையாதிக ளானேசெய்து, நீள் காலம் தவறு அற நடந்தமையாலே = சிரகாலம் குற்றமற நிற்றலினுனே, மாத்திரமான மன மிகத்தெளிந்து = சர்வதோஷ விநிர்முக்தமாய்ச் சுத்துவமாத்திரமான சித்தம் அத்தியந்தம் அமலத்தன்மையை யடைந்து, வரம்பிலதாதலும் = எல்லையற்றதாதலும், ஆங்கே = அவ் விடத்தே, வவிதில் = பலாத்தாக, நேத்திரமான ஞானம் வந்தெய்தி = ஆத்மப்பிரசாதஜ மாயஞானமானது, வந்தடையவே, நன்னெஞ்சம் = உள்ளத்துள்ளே, நிறைந்தனன் = பூர்ணபாவமுற்றன.

(ஸ்ரீ வீர.) விபுலதக்ஷிணைகளுடன் கோ அசுவநரமேதாதி யஞ்ஞங்க ளியற்றிவரச் சி காலஞ் செல்லவே அவருடைய விசாலமானமதியில் இராகாதிதோஷ சூனியமாய அமலத்

தன்மையடைவுற்றது; உறவே, ஆத்மப்பிரசாத ஜன்னிய ஞானமானது, மொழிந்தவகையில் தடைபடு பொடியாக, வலிதில் = முற்சன்மஞ்செய்த சிரவணசமஸ்கார உற்போதவலுவி னனே, உள்ளே தோற்றியது.

(ச.) இயற்றி = மிகுதகழினைகளோடு நடத்தி, மாத்திரமான = தனிமையான, மனம் = அவனது சித்தம், ஆங்கே = அம்மனதில், நேத்திரமான ஞானம் = ஆத்மப்பிர சாதத்தைத்தரும் ஞானம், வலிதின் பலத்தினல், வந்தெய்தி நெஞ்சம் நிறைந்தனன்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) தெளிந்திருந்த அம்முனிவர் முன் வனதேவதை தற்காரியப்பொ ருட்டுவருதல்:—பிறவியென்றது.

பிறவியாவரணங் கழிந்து வாதனைகள் பேரறமாண் டுளபெரியோ
னிறவியுதளிர்மே லிருத்தலுமொரு நாணிமலமாம் விழிகளுக் கெதிரே
யுறவிரிமலரின் மேகலையுடுத்த வுயர்வன தேவதைதோன்ற
வறிவனுநோக்கி யார்கொனீ யென்னவழகிய வணங்குரை செய்வாள். (69)

(ப - ரை.) பிறவியாவரணங் கழித்து = ஜநக ஆவரணந்தீர்த்து, வாதனைகள் பேரற மாண்டு = வாசனை மலங்களியாவும் அத்தியந்த மழிந்து, உளபெரியோன் = வாழ்ந்து கொண்டிருக்கும் மகாத்மா, நிறவியதளிர்மேல் = படர்ந்ததளிர்மீது, இருத்தலும் = வீற்றி ருத்தலும், ஒருநாள் = ஒரு சமயம், நிமலமாம் விழிகளுக்கு எதிரே = நிர்மலமான நேத்தி ரங்களுக்கு முன்னிலையில், உறவிரிமலரின்மே கலையுடுத்த = பொருந்துமாறு விரிந்தபுட் பங்களின் மேகலைதரித்த, உயர்வனதேவதைதோன்ற = மேலான வனதேவதை பிரதீதி யாக, அறிவனும் நோக்கி = உணர்வுமயமான தாரூரர்பார்த்து, யார்கொல் நீ என்ன = நீயாரென்று கேட்ப, அழகிய அணங்கு உரைசெய்வாள் = கவின்வாய்ந்த வனதேவி கூறத் தொடங்கினள்.

(ஸ்ரீ - வீர.) ஞானத்தினுலே அஞ்ஞானவரணம் அகன்றவராய், அதன் அப்யாசத் தானே வாசனைமலமகன்று ஜீவன்முக்தராய் வாழும் அத்தாரூரமுனிவர், ஒருகால், அந்த லதையின் அக்கிரிபாகத்தில் நின்றுகொண்டிருந்த வனதேவியைக் கண்டனர்; விசாலாக்ஷியா யும், ஆலோகசும அம்பர முடையவளாயும், அழகுநிறைந்த வளாயும், நீலோற்பல ஆமோத வதியாயும், அத்தியந்தம் சுமநோகரையாயும், காமினியாயும், காந்தவதனையாயும், மதகூர்ணித லோசனையாயும், கோலிலத்தானும் குசுமாபூரங்களானும் வணக்கமுற்ற வனலதைபோன் றவளாயும், பக்திபிரணமலஜ்ஜைகளானே வணங்கிய வதனத்தை யுடையவளாயும், குற்ற மற்றதாய மேனியளாயும், நின்றுகொண்டிருக்கும் அத்தேவியை நோக்கி அம்முனிவர், ஹே உற்பலபத்ராக்ஷியே காந்தி விக்ஷோபிதஸ்மரனையே. நீயார்? புஷ்பசம்பத்து நிறைந்ததோழி போலும் லஜ்ஜையைப் பிடித்துக்கொண்டு என்னகாரணம் பற்றிநிற்கின்றனை? என்றனர். எனவே மிருதுசாவாக்ஷியாய் கௌரபூன பயோதரையாய் மநோஹாரியாயிலங்கிய அத்தேவி அம்முனிவரை நோக்கி இத்தழுதழுத்த வசனத்தைக் கூறத்தொடங்கினள்.

(ச.) உற = அத்தளிரினுனியிற்றிதி பெற்றவளாய். (69)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தன்னேயின்னவளென வனதேவி தெரிவித்தல்:—பெரியவ ரென்பது.

பெரியவர் தம்பாற்பெற லருநேயம் பெற்றவர் விரும்பியவெல்லா
மரியனவெனினு மிமைப்பினி லெளிதிலணுகு மென்றய்ய மற்றறிந்தேன்
றெரிவருண் முனிவநீயுறை வனத்திற் செறிவனதே வதையிங்ஙன்
விரியலர் கொடியாம் விநோதவீட் டிடையே விருப்பொடு மிருப்பவணுனே.

(ப - ரை.) பெரியவர் தம்பால் = மகான்களிடத்தில், பெறலருநேயம் = பெறுதற் கரியகருணையை, பெற்றவர் = அடைந்தவர், விரும்பிய வெல்லாம் = அவாவிய அனைத்தும், அரியன எனினும் = அருமையாயின வென்றாலும், இமைப்பினில் = கொடிப்போதில், எளிதில் = சுலபமாக, அணுகும் என்று = பிராப்தம் ஆமென்று, ஐயமற்றறிந்தேன் = சமுசயமின்றி யறிந்துளேன், தெரிவருண்முனிவ = ஞானத்தை யனுக்கிரகஞ் செய்யும் முனீந்திரரே ! நீயுறைவனத்தில் = தேவரீர் தவம்புரியும் இவ்வனத்தில், செறி = வசிக்கும், வனதேவதையே நான் = வனதேவியேயான், இங்ஙன் = இவ்வண்ணம், விரியலர் கொடியாம் விநோத வீட்டிடையே = விரிந்த புஷ்பங்கணிறைந்த [1]கொடிகளின் விசித்திரலீலாலயத்தில், விருப்பொடும் இருப்பவள் = ஆசையோடும் வாசம்செய்பவள்.

(ஸ்ரீ - வீர.) இம்மதிதலத்தில் யாவையாவை கிடைக்கப் பெறுதனவாய் வாஞ்சிக்கப் பெறுவனவாமோ அவை அவையாவுமே விரைவிலேயே மகத்துக்களின் பிரார்த்தனையிலேயே கிடைத்து விடுகின்றன. தேவரீரது கதம்பதரு அத்தியந்தம் அலங்காரம்செய்து கொண்டிருக்கும் கொடிகள் நிறைந்த இந்த விபினத்தில், ஹே பிரஹ்மத்தையுணர்ந்த பெரியவரே ! லதாகுஞ்சங்களேயே லீலார்த்த ஆலயங்களாக வுடையவனை தேவதையான்,

(ச.) நீயுறை = கதம்பாதி யலங்காரமுள்ள வனத்தில், விநோதவீட்டிடை = லீலாலயத்தில். (70)

(ஸ்ரீ - வீர - அ - கை.) முனிவர் யார்கொல் நீ யென்று வினவியதற்கு விடைதந்து தனது ஆகமனப் பிரயோஜனத்தை வனதேவதை கூறல்:—மேட என்பது.

மேடமாதத்திற் பிறைபதின் மூன்றுகலியுற மேவியநாளி
னுடருமதன னுயர்திருநாளி னந்தனவனத் திலேவந்து
கூடியவனதே வதைக்கணந் தன்னைக்குறுகினேன் பாங்கியர்முழுதுந்
தேடருமைந்த ருடன்மகிழ்ந்திருந்தார் சிறுவனில்லாத யான்றளர்ந்தேன்

(ப - ரை.) மேடமாதத்தில் = சித்திரைமாதத்தில், பிறைபதின் மூன்று கலியுறமே விய நாளில் = சுக்கிலபக்ஷ திரியோதசிதினத்தில், நாடருமதனன் உயர்திருநாளில் = நாடுதற்கரிய ஸ்மரோற்சவத்தில், நந்தனவனத்திலே = பூங்காவனத்தின் கண்ணே, வந்துகூடிய வனதேவதைக் கணந்தன்னை = ஒருங்குசேர்ந்த வனதேவிகளின் கூட்டத்தை, குறுகினேன் = அண்மினேன், பாங்கியர்முழுதும் = தோழியரனைவரும், தேடருமைந்தருடன் மகிழ்ந்திருந்தார் = தவத்தினால் அருமையாய் அடையத்தகுந்த புத்திரர்களுடன் சந்தோஷித்திருந்தார்கள், சிறுவனில்லாத யான்றளர்ந்தேன் = குழந்தையில்லாத அபாக்கியவதியாய் யான்மெலிந்தேன்.

(ஸ்ரீ - வீர.) சித்திரைமாத சுக்கிலபக்ஷமதன திரியோதசியில், மதனோற்சவத்தில் = ஸ்மர ஆராதனையின் பொருட்டு முயன்ற தேவாத்திய நாட்டிய பலிபோச்சியோத்சவத்தில் அநங்கபூஜாவிரத அனுஷ்டானார்த்தம், நந்தனவனத்தில் வந்துசேர்ந்தது வனதேவிகளின் சமாஜம், மூவுலகத்தினின்றும் வந்துசேர்ந்த லலனைகளாகிய வனதேவிமார்களின் அச் சமாஜத்தையானு மடைந்தேன். ஆண்டம்மதன உற்சவத்தில் எல்லாச் சுகிமார்களையும் புத்திரர்கள் உடையவர்களாகப் புத்திரனில்லாதயான் கண்டேன், அபுத்திரத் தன்மையானே யான் அத்தியந்தம் துக்கிதையானேன்.

(ச.) மேடமாதத்தில் = சித்திரைமாதத்தில், பிறைபதின் மூன்றுகலியுறமே வியநாளில் = பூர்வபக்ஷத்தினது திரியோதசியில். (71)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வனதேவி முனிவர்பால் மைந்தனே வேண்டலும் பெரிவிடின் அக்கினிப் பிரவேசஞ் செய்வேன் என அடம்புரிதலும் காட்டல்:—காதலித்தென்பது.

காதலித்தவர்க்குக் கருதியதளிக்குங் கற்பகமனைய நீயிருப்ப
நாதனேநாத நில்லவர்போல நான்மகற் கிரங்குதனலனே
நீதரல்வேண்டும் புதல்வனையன்றி நின்னருளென் பொருட்டிலதேற்
றீதறுமதலை யிலதெனுந் துன்பஞ்செந்தழன் மூழ்கியே தீர்ப்பேன். (72)

(ப - ரை.) காதலித்தவர்க்கு = விரும்பியவர்க்கு, கருதியது அளிக்கும் = விரும்பிய யாவற்றையுந் தரும்படியான, கற்பகம் அனையநீ இருப்ப = பெருங்கற்பக தருவிற்குச் சமான மாகத்தேவரீர் எழுந்தருளியிருப்ப, நாதனே = காப்பாற்றுந் தேவதேவனே, நாதரில்லவர் போல = அநாதர் என்ன, நான் = அடியேன், மகற்கு இரங்குதல் நலனே = குழந்தைக் காக இரக்கமுறுதல், நன்றே, புதல்வனை நீதரல்வேண்டும் = மைந்தனைத் தேவரீர் அனுக் கிரகஞ் செய்தல்வேண்டும், அன்றி = அவ்வாறருளாது, நின்னருள் = தேவரீரதுதிருவருள், என்பொருட்டு இலதேல் = எழைபொருட்டு இல்லாது போமானால், தீதறுமதலை குற்ற மற்றகுழந்தை, இலதெனுந்துன்பம் = இல்லையென்னுந் துயரம், செந்தழன் மூழ்கியேதீர்ப் பேன் = சொலிக்கும் அக்கினியிற் பிரவேசித்தே தீர்த்துக்கொள்வேன்.

(ஸ்ரீ - வீர.) சர்வபுருடார்த் தங்களின் சங்கத்தினது பிரகத்கற்பதருவாகத் தாங்களி ருப்ப, ஹே நாதனே! நாதன் இல்லவன்போலப் புத்திரன் இல்லவளாய் எங்ஙனம்யான் சோகத்தை யடைந்திடுவேன்; ஹேபகவன்! நின்னடியவளுக்குப் புத்திரனைத் தந்தருளுதி, அருளிலதேலாயின், புத்திரதுக்கதாக ஔபசாந்தியின் பொருட்டு ஈண்டுத்தேகத்தை யக்கினி யில் இட்டாகுதியினிது செய்வேன்; மாநசதாகத்தைக் குறித்துச் சரீரதாகம், அற்பதுக்கத் தைத்தருவதாம், சுகந்தருவதாம், என்பதுகருத்து. (72)

(ச.) செந்தழன் மூழ்கியே = இவ்விடத்து அக்கினிக்குத் தேகத்தை யாகுதிசெய்து, புத்திரதாகத்தை, தீர்ப்பேன் = உபசாந்திசெய்வேன்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) முனிவர் மைந்தனுண்டாமா றருள்செய்து, வலித்து பெற்றதால் ஞானம் மெலிந்து பெறுவன் எனல்:—என்னலும் என்பது.

என்னலுமுனிவ னகைத்தொரு மலையீர்த்தொரு மதியிலேயெளிதா
யன்னமேமக வைப்பெறுதி யானீமுன்னருங் கனன்மூழ்குவே னென்ன
வின்னலால் வலித்துமகவு வேண்டுதலா லினிதுநீயீன் றிடுமகவும்
பின்னுறுவருத்த நெறியினுன் ஞானம்பெறு மெனப்பேசினன் பெரியோன்.

(ப - ரை.) என்னலும் = இவ்வண்ணம் வனதேவி யியம்பலும், முனிவன் = தாரூர முனிவர், நகைத்து = புன்னகை கொண்டருளி, ஒருமலரை = ஒருபுஷ்பத்தை, ஈந்து = தந்தருளி, ஒருமதியிலே = ஒருமாசத்திலே, எளிதாய் = அநாயாசமாய், அன்னமே = தன்வங்கியேசூமுன் = பூர்வம், அருங்கனலன்யான் மூழ்குவேன் என்னு = சோதித்தீயில்யான் பாய்ந்துதுயர் தீர்ப்பேன் என்று, நீ இன்னலால் = நீ துயரத்தால், வலித்து = பலாத்காரப் படுத்தி, மகவுவேண்டுதலால் = புத்திரனை யாசித்ததால், இனிது நீ யீன்றிடுமகவும் = இனி மையாக நீ பெற்றிடும் புத்திரனும், பின் = பிற்போது, வருத்தம் உறுநெறியினுல் = பிரயா சம் பெரிதுற்ற மார்க்கமாக, ஞானம்பெறும் என = பிரஹ்ம வித்தையையடைவன் என்று, பெரியோன் பேசினன் = தாரூரமுனிவர் அதுக்கிரகித்தார்.

(ஸ்ரீ - வீர.) இவ்வண்ணங் கூறிநிற்கும் அவ்வனதேவியாகிய தங்வியைநோக்கி, புன்னகைகொண்டு முகிபுங்கவர், தைரியத்தினின்றும் நழுவாத தியாகவிதராய், கரம்பொருந்தும் பூவைத்தந்து கூறுவதாவது:—செல்லுதி தங்கங்கியே ! ஒருமாதத்தில் ஜகத்பூஜ்யனுய் அளிலோசனனுய்ப் பிரகாசமயனுயுள்ள சுதனை நற்கொடிவாசனைப் பூப்பூப்ப தொப்பப் பிரசவிப்பாய்; ஆனல், ஆத்மகாத சங்கற்பத்தானே வந்தவுன்னல் எம்மிடத்தினின்றும் மைந்தன் யாசிக்கப் பெற்றன், அவ்வேதுவினுலே, இவன் பிராணசங்கடத்தை யடைந்து தத்துவஞ் ஞன் ஆவன், அன்னிய வனதேவிமார் புத்திரர்போல இவன் போகலம்படனுகான்.

(ச.) ஈயுந்து — தயவொடுகொடுத்து, மகவை = பூஜிக்கத்தகுந்த புத்திரனை, பெறுதியால் — நற்படர்கொடி பிரசூனத்தைப் பெறுவதுபோற் பெறுவாய், வலித்தின்னலால் = மரணவேசபாபத்தினுல். (73)

(ஸ்ரீ-வீர - அ-கை.) வரப்பிரசாதத்தாற் சந்தோஷமுற்றுப் பாதசேவை விரும்பிய வனதேவியை இனியாது விடுப்ப அத்தேவி தனதிடஞ்சென்று சுதனைப்பெறுதல்: — கேட்டவள் என்பது.

கேட்டவண் மகவுகிடைத்த தேயென்று கிளர்முகமதி நிலாக்குலாவ
மீட்டுமம்முனியை நோக்கிநின் னேவல்விரும்பி யீண்டுறைகுவ னென்ன
வாட்டமின் முனிவனியைக் நிலன்விடுப்ப வந்தனளணங்கு தன்னிடத்திற்
சேட்டமாமகவை யளித்தனள் கலையாற்செறி தருமதியென வளர்த்தாள். ()

(ப - ரை.) கேட்டவள் = முனிவரோதிய வசனத்தைக் கேட்டவனதேவி, மகவு கிடைத்ததே என்று = குழந்தையை யடையப்பெற்றேமே யென்று, கிளர்முகமதி நிலாக்குலாவ = விளங்காநின்ற பூர்ணசந்திரவதன சந்திரிகை பொலிய, மீட்டும் = மீளவும், அம்முனியைநோக்கி = அத்தாசூர மகாமுனிவரைப் பார்த்து, நின்னேவல் விரும்பி = தேவரீரது திருப்பணிவிடையை இச்சித்து, ஈண்டுறைகுவன் என்ன = இவ்விடத்திலேயே வசிக்கின்றேன் என்றுகூற, வாட்டமில் முனிவன் இயைந்தில = திருசியங்களில் வாடுதலில்லாத முனீந்திரர் சம்மதித்தில், விடுப்ப = போமாறுத்தரவு அளிப்ப, வந்தனள் = தனதிடமடைந்தனள், அணங்கு = அடைந்த அந்தவனதேவி, தன்னிடத்தில் = தனது வாசஸ்தலத்திலேயே, சேட்டமாம் மகவையளித்தனள் — சிறப்புவாய்ந்த குமரனேயீன்றனள், கலையால் செறிதருமதி எனவளர்த்தாள் = கலைகளினுலே நாட்குநாள் உயர்ந்துவளரும் சந்திரன் எனவளர்த்தனள்.

(ஸ்ரீ - வீர.) அம்முனிவர் இவ்வண்ணமியம்பி, பிரசன்ன முகமண்டலத்தோடு கூடிய வளாய்ச் சங்கமசேவாதி யுபசாரம்செய்கின்றேன் என்று பிரார்த்திக்கொண்டு நின்றதங்வியை வியசர்ஜனஞ் செய்தனர். அத்தேவி ஆத்மசந்தனத்தை யடைந்து தான்மாத்திரமாக வாழ்ந்திருந்தனள், அசுகாயம்மாயிருந்தனள். (74)

(ஸ்ரீ - வீர - அ - கை.) காலாந்தரத்தில் மைந்தனுடும் வனதேவிமுனிவர் தரிசனஞ் செய்தல்:—இருது என்பது.

இருதுவேயாண் டேயெனுங் குறிகளினு லிறந்தனவாறி ரண்டாண்டு
திருமுனிபாத மகவொடுமடைந்து சென்னிதாழ்ந் தெதிருறநின்று
பெருமைகண் டருள்வாய் நீதரயானே பெற்றவிப் பெருங்குணக்குழவ
னருமறைநூல்க ளனைத்தையு நானேயளித் திடவறிவினு லறிந்தான். (75)

(ப - ரை.) இருதுவே ஆண்டே = இருமாதம் பன்னிருமாதம், எனுங்குறிகளினுல் = என்னும் சின்னங்களினுல், இறந்தன ஆறிரண்டாண்டு = பன்னிரண்டாண்டுகள் சென்றன,

திருமுனிபாதம் = தாரூரமுனிவரது திருவடியை, மகவொடும் அடைந்து—மைந்தனோடும் வந்து சேர்ந்து; சென்னிதாழ்ந்து = நமஸ்கரித்து, எதிர் உறநின்று = சந்நிதியிற்கை கூப்பி நின்று, பெருமை கண்டருள்வாய் —தேவரீரது மகத்துவத்தைப் பார்த்தருள்வீராக, நீதர = தேவரீர் வரந்தந்தருள, யானேபெற்ற = வனதேவியாகிய யானே ஈன்ற, இப்பெருங்குணக் குமரன் = இந்தச் சாந்தியாதி யரியகுணங்களே யுடையமைந்தன், அருமைறநூல்க ளனைத்தையும் = அரியவேத சாஸ்திரங்களாம் கலைகள் யாவற்றையும், ஈனேயளித்திட = யானே போதித்திட, அறிவினால் அறிந்தான் = சுக்குமமதியினால் உணர்ந்து கொண்டான்.

(ஸ்ரீ - வீர.) இருது சம்வத்சர அங்கங்களால் அங்கிதமாகிக்காலம் முறையேகடந்து சென்றது, நீள் காலஞ் சென்றபின் உற்பல லோசனையாகிய அத்தேவியே, சுதனுக்குப் பன்னிரண்டாண்டு நிரம்பவே அவனுடன் முனீந்திரரைத் தரிசிக்கவந்தனள்; வந்து வந்தனம் புரிந்துசந்நிதியில் நின்றுகொண்டு இந்துசமானனே முனிவரைநோக்கி, சூதத்திருமத்தை நோக்கி அளிபோலும் செய்வதேபோலக் கலைவாக்கால் உரையாடத் தொடங்கினள்; ஹேபகவன், இப்பவித்திரமாய குமாரன் நம்மிருவருக்கும் புத்திரனவன், யான் இவனுக்கு, வேதாதிசர்வ வித்யாரூபக்கலைகள் யாவற்றையும் படிப்பித்துளேன், அவ்வியாவற்றையும் இவன் நன்கறிந்துள்ளான்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) எல்லாநூல் கலையும் இவன் உணர்ந்தான் எனினும், பிரஹ்ம வித்தையை யடையவில்லை, யதனையருளுதி யென்னவனதேவி, அம்மகனே முனிவர் மாணாக்கனுக்கல்:—கலையென்பது.

கலையெலா நிறைந்தும் பிறப்பிலாஞானங் கண்டிலன் கடற்பவத்துயரா
லலைவுறுநின்றான் றனையுணர்ஞான மளித்தியென் றணங்குரை செய்ய
நிலைகொண் மாணுக்க னமக்கிவ னுக்கிதீயகல்கெனவ வளகன்று
டலைமைசேர் முனிவன் முளரிணவிடாது சற்குண மதலையுநின்றான். (76)

(ப - பை.) கலையெலாம் நிறைந்தும் = சர்வசாஸ்திர சம்பத்து நிறைந்திருந்தும், பிறப் பிலாஞானம் = ஜனனமறுக்கும் பிரஹ்மவித்தையை, கண்டிலன் = அடைந்து பிரஹ்ம தரிசனஞ் செய்திலன், கடற்பவத்துயரால் அலைவுறுநின்றான் = பவசாகரத் துன்பத்தால் அலைந்து வெருளாநின்றான், தனையுணர்ஞானம் அளித்தி என்று = ஆத்மாவையறியும் அறிவை உபதேசித் தருளுவாய் என்று, அணங்குரைசெய்ய = வனதேவி கூறியபோது நமக்கு இவன் நிலைகொள் மாணாக்கன் ஆக்கி = எமக்கு இம்மைந்தனை ஸ்திரமாயிருக்கும் சிட ஞை இவண்விட்டு, நீ யகல்கென = நீ யுனது சுவஸ்தானத்தை யடைவாயாக என்றுகூற லும், அவள் அகன்றான் = அவ்வனதேவி தனதிடஞ்சென்றனள், தலைமைசேர் முனிவன் = முதன்மைவாய்ந்த முனீந்திரரது, தாளிணை = திருவடித்தாமரையை, விடாது = விட்டு நீங் காமல், சற்குணமதலையும் நின்றான் = நற்குணம் வாய்ந்தமைந்தனும் சேவைசெய்து கொண்டிருந்தான்.

(ஸ்ரீ - வீர.) ஹே பிரபுவே! யாவற்றையும் அறிந்தும் இவன் கேவலம் சுபமாகியபிரஹ்ம வித்தையை யடைந்திலன், அடைந்தானுயின் இச்சமுசார சக்கிரத்தில் மீளவும் அடிபட்டுழ லான், ஹேவிபுவே! இவனுக்குத் தேவரீரே ஞானத்தைக் கிருபையால் இப்போது உபதே சிக்கவேண்டும், யாவர்தாங்குலத்திற் பிறந்தமைந்தனே மூர்க்கத் தன்மையோடும் சேர்த்துவர்? இதரவித்தைகட்கு அதத்துவவிடயத் தன்மையுண்மையின் அவித்தையாத் தன்மையேயுள தாமென மெனார்க்கியநீக்கம் அவற்றுனே இலதாம் என்பது கருத்தாம். இவ்வண்ண மியம்பி யுவனதே வியைநோக்கி ஹே அபலையே! சுதனும், உத்தமசிஷ்ய குணசம்பன்னனும்,

இலகுமிவனே யிங்கேயே ஸ்தாபித்துவிட்டு நீயுன்னிடம் போய்ச் சேருதியென்று கூறியவனே விசர்ஜனஞ் செய்தனர். அவ்வாறே செய்துவிட்டு அவ்வனதேவி சென்றபின் அக்குமரன் பிதாவின் கீடத்தன்மையைப்பற்றிக் குருசுசுரூஷண விரதத்தானே திரிகியமமுடையவனுகி யிருந்தான் தீமான் அருணன் = கிருடாக்கிரஜன், அருக்கனது சந்நிதியில் இருந்ததே போலும்.

(ச.) தனேயுணர் ஞானம் = இவனுக்கு நீரே ஆன்மஞானத்தை, அளித்தி = கிருபையா விப்போதே உபதேசியும், சற்குணம தலேயும், மாணுக்க பாவத்தோடு கூடினவனுய் அருக்க னது முன்பு அருணன்போல் நின்றன் = அநுசரித்திருந்தான். (76)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அநேகவித உபாயங்களிஞல் முனிவர்மகற் குபதேசித்திடத் தொடங்கல்:—வருந்தி யென்பது.

வருந்திமெய்ஞ் ஞானம்பெறத் தகுமகவை மாதவனருளி ஞன்மெல்லத்
திருந்தியகதைக ளளவைகளிதி காசத்திலே செப்பிய திறங்கள்
பெருந்துணை மறையின்முடிவிலே துணிந்துபேசிய பழம்பொருண் மற்றும்
பொருந்திய நெறிகளநேக மாய்விரித்துப் பூரணபோதமே புகன்றன். (77)

(ப-ரை.) வருந்தி மெய்ஞ்ஞானம் = கஷ்டப்பட்டுத்தத்துவ அபரோக்ஷ ஞானத்தை, பெறத்தகும் = அடையத்தக்க, மகவை = குழந்தையை, மாதவன் = பெருந்தவத்தையுடைய தாசூரமுனிவர், அருளினுல் = கிருபையினுல், நோக்கி, மெல்ல = மெதுவாக, திருந்திய கதைகள் = திருத்தமான கதைகள், அளவைகள் = திருஷ்டாந்தங்கள், இதிகாசத்திலே செப்பியதிறங்கள் = இதிகாசங்களிலே சொல்லிய தன்மைகள், பெருந்துணை மறையின் முடிவிலே = மோக்ஷமடைய முயல்பவர் கட்குப்பெரிய அரியதுணையான உபநிடதங்க ளிலே, துணிந்துபேசிய = சித்தாந்தப் படுத்தியுரைத்த, பழம்பொருள் = பிராசீன அருத் தங்கள், மற்றும்பொருந்திய நெறிகள் = இன்னும் அநேக திருஷ்டாந்தங்கள் கொண்டு, அநேகமாய் = பற்பல ஆறுய், விரித்து = விஸ்தரித்து, பூரணபோதமே = நிறைதரு முணர்வையே, புகன்றன் = உரைத்தனர்.

(ஸ்ரீ - வீர.) சுசுரூஷை விரதசரியாதி கிலேசங்களிஞனே கஷ்டப்பட்டு, உபாயபூத சாஸ்திரஜன்னிய பரோக்ஷஞானத்தை யடைந்துறைந்த அக்குமரனே, அதன்பின் சிரகாலம், அபரோக்ஷ பாவப்பொருட்டுத் தெளிவித் துபதேசித்தனர், அல்லது பிதாமுன் தபக்கிலே சங்களானே வெகுகட்டப்பட்டு விஞ்ஞானத்தை யடைந்தனர், புத்திரனும் இங்ஙனம் கட் டப்படவேண்டாம் என்பதாக மைந்தனுக்குச்சுயம் அநேகவிசித்திர உக்திகளானே உணர்த் தினர். நூற்றுக்கணக்கான சுவ உபலப்தார்த்தகதை நிபந்தங்களாய ஆக்கியாயிகைகளானும், பராக்கியானுதிகதை நிபந்தங்களாய ஆக்கியானங்களானும், சாமியதரிசன கற்பிததிருஷ் டாந்தங்களானும், பாரதாதி இதிகாசப் பிரசித்த விருத்தாந்தங்களானும், வேதவேதாந்த நிச்சயவடிவ சித்தாந்தங்களானும், சாவதானமாக அமைதியாய் நித்தியம் விஸ்தாரமான கதைக்கிரமங்களானும், மைந்தனது அநுபூதிக்கொத்த அநேகவித உபாயங்களானும், பிரத் தியக்காத்மாவின் கண்ணே வியுத்பத்தி தார்ட்டியம், எங்ஙனம் மதியால் மைந்தன் அடைந் திடுவானே அங்ஙனம் உபதேசித்தனர். சுவாத்மபோத சமஸ்காரவசத்திஞலே சர்வாசங்களி னும் வேறுயதிசயமாய, பரமபுருடார்த்த ரூபத்தன்மையானே அவியபோதார்ஹ அருத்தம் களையுடையனவாய, வாக்கியகணங்களால் மகாத்மாவாய மகரிஷியானவர், போதிய அளவு விருக்ஷாக்கிரத்தில் எதிரிலிருக்கும் மைந்தனேநோக்கி அந்தரிக்ஷத்தில் மேகமானது, சிரவண மாத்திரத்தானே சிகண்டிகட்குப் பிரீதியுண்டாக்கலான் அன்னியாசம் அதிகரித்த, சிகண்

டிகளோடுகூட நிருத்தியாதி யருத்தங்கள் எவற்றுலாமோ, அத்தகையனவாய, கர்ஜிதசமூ ஹங்களானே, மேகமானது தன் முன்னிருக்கும் மயூரத்தையொப்ப, உபதேசம் புரிந்தனர்.

(ச.) கதைகள் — ஆக்கியாயிகை ஆக்கியானம் என இருவகை, அவற்றில் பிரத்தியக்ஷ மாகப் புலப்படும் பொருள் ஆக்கியாயிகை, பரோக்ஷ விருத்தாந்தம், ஆக்கியானம்; உவமை கள்—சுவஞான கற்பிதமான திருஷ்டாந்தங்கள், நெறிகள் — கதைக்கிரமங்களுமாகிய விசித்திரயுக்திகளால். (77)

(ஸ்ரீ-வீர - அ-கை.) வசிட்டர் தமக்கும் தாரூரமுனிவருக்கும் ஒருகால் உண்டாய சந்திப்பிற்கு மரனுக்குபதேசித்த பொருள்களைக் கேட்டபடி யுரைப்பேம் என ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறல்:—வானதியென்பது,

வான திமூழ்கவது நெறியாகவானிலே மறைந்துபோ யொருகா
லானவேழ்முனிவர் பதவிநின்றணுகி யனேயதாரூரன் வாழ்கடம்பின்
ரூனமேமேவி யிருட்பொழு திருந்துதாபதன் றனயனுக்குரைத்த
ஞானநற்பொருள்கள் கேட்டனமதனே நாமுனக்குள்ளவா றுரைப்பாம்.(78)

(ப - கை.) வான திமூழ்க—ஸ்ரீ கங்கையில் ஸ்நானம்செய்யும் பொருட்டு, அது நெறி யாக — அம்மார்க்கமாய், வானிலே மறைந்துபோய்= ஆகாயத்திலே மறைந்துசென்று, ஒரு நாள் — ஒருசமயம், ஆன எழ்முனிவர் பதவிநின்றணுகி — சர்வவளப்பங்களுடனும் விளங்கு வதான சப்தமுனி மண்டலம்வாழும் ஸ்தானத்தினின்றும் சென்று, அனேயதாரூரன் வாழ் கடம்பின் — மேலேகூறியபடியாய தாரூரமுனிவர் வசிக்கும் கதம்பதருவின், தானமே மேவி — இடமேயடைந்து, இருட்பொழுதிருந்து — அந்தகார சமயத்திற்றங்கி யிருந்து, தாபதன் தனயனுக்கு உரைத்த — தவமுனிவர் குமரனுக்குபதேசித்த, ஞானநற்பொருள் கள் =நல்ல ஞானார்த்தங்களே, கேட்டனம் அதனே — வினவினேம் அவற்றை, நாம் உனக் குள்ளவாறு உரைப்பாம் = யாம் இராகவா உனக்குக் கேட்டபடியே கூறுவேம்.

(ஸ்ரீ - வீர.) ஹே இராமசந்திர ! யாம் ஒருசமயத்தில், ஸ்ரீ கைலாசவாசினியாகிய மந் தாகினியில் ஸ்நானஞ்செய்யும் பொருட்டு அந்தத் தாரூரகதம்போபலக்ஷிதமாய மார்க்கத் தானே அதிருசிய ஆத்மாவாய் வியோமவீதி சென்று வந்தேம், சப்தமுனி மண்டலத்தை கோடரம்போல ஏகதேசமாக வடையதியூர்த்வலோக ஆகாசத்தைக் கடந்து, ஹேசுமதியே ! உன்னதமான தாரூரதருவை யிரவில் அடைந்தேம், குடமல அம்போஜலக்கினமாய அறுகா வின் ரெனிபோலும் விடபுகு கரத்தினின்றும் காணனத்தில் வாக்கியத்தை விடாமற் கேட் டேம், கேட்டமுழுதையுமே உனக்குக்கூறுவேம்.

(ச.) ஸ்ரீ வசிட்டமுனிவர்:—மறைந்து — யாம் அதிருசியரூபமாய், அணுகி—அம்பரத் தைக் கடந்து, உரைத்த, குவிந்த அம்போஜ மத்தியத்திருக்கும் வண்டின் ரெனிபோல் விடபகுகரத்திருந்து உபதேசித்தார்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ வசிட்டபகவான் எவ்வசனத்தைக் கேட்டுவந்தனரோ அவ்வ சனத்தையே கூறத்தொடங்கல்:—பிறப்பிலா வென்பது.

பிறப்பிலாப் பிரமமிது வெனவறுதி பிறப்பதோர் கதையிதுகேளாய்
சிறப்பதோ ராசன்வீரமும் புகழுஞ்சிறக் தவன்றெனி ஞமும்பெயரோ
னிறப்புறு மூலகபாலராயுள் ளாரவணுடை யேவலி முடிமே
னிறப்புறுமணிபோற் ருங்குவரெவர்க்கு நிலேபெறநிறுத்தினா ணெடியோன்.(79)

(ப - ரை.) பிறப்பிலாப் பிரமம் இது என — அஜமாயபிரஹ்மம் இஃதென்று, அறிதி பிறப்பது — நிச்சயம் உண்டாவதாய, ஓர் கதையிதுகேளாய் —ஒப்பற்ற ஒருகதையிதுவாம், யாம் ஓதக்கேட்குதி, சிறப்பது ஓர் அரசன்—ஒருமன்னவன் மிகவுஞ் சிறந்தவன், வீரமும் புகழுஞ்சிறந்தவன் — வீரியமும் கீர்த்தியும் மிக்கவன், தெளிஞனும் பெயரோன் — நாமத் தானே கோத்தன் என்னும் ஸ்ரீமான், இறப்புறும் உலகபாலராயுள்ளார் — அநித்தியமான புவநநாயகரா யிருப்பவர், அவனுடை யேவலேமுடிமேல் — அவ்வரசனுடையீ அநுசாசனத் தைச் சிரத்தின்மீது, நிறப்புறுமணிபோல் தாங்குவர் — தனிகர் சூடாமணியை உயர்வாகப் போற்றுதல்போலத் தரிப்பர், எவர்க்கும் நிலைபெற நிறுத்தொணு நெடியோன் —எவரானும் மூவுலகத்தின் கண்ணும் அம்மகாத்மா வசீகரிக்க முடியாதவன்.

(ஸ்ரீ - வீர.) ஹே மகாமதிமாஞுகியமைந்த ! இச்சமுசாரத்தின் உபமான பூதமாய மகா ஆச்சரிய ஒரு ஆக்கியாயிதை உனக்குரைப்பேம், இதனை யொருமையுடன் கேட்டி ! மூப்பு வனத்திலும் விக்கியாதனுய், மகாவீரியனுய் ராஜா ஒருவன் உளன், நாமத்தானே கோத் தன் = அவ்யாகிருத ஆகாசத்தினின்றேனும், காலத்திரயத்திலும் ஜகத்தில்லாத பிரஹ்மா காசத்தினின்றேனும், எழுந்தவன்; என்னும் ஸ்ரீமான், ஜகதாகிரமணக்ஷமன், இவனது அநு சாசனத்தை எல்லாப் புவனங்களிலு மிருக்கின்ற பிரஹ்மாதிகள் யாவருமே, தனிகர்சூடா மணியை உயரத்தரிப்பதேபோலச் சிரத்திற்றரிப்பர்கள். இவ்வுலகங்கள் மூன்றிலுமே எவரா லுமே அம்மகாத்மா வசீகரிக்கப்பட மாட்டான்,

(சு.) கேளாய் — இவ்வஸ்துவினது தன்மைக்குச் சமானமாக இவ்வாக்கியா யிகையை வர்ணிக்கின்றேன் என்றதாயிற்று, தெளிஞனும் பெயரோன் = சுகோத்தன் என்னும் நாம முள்ள ஸ்ரீமான், முடி — சிரங்களால், மேனிறப்புறு மணிபோல் — உத்தமமான உயர்ந்த சூடாமணிபோல், தெளிஞனென்பது முதலிய நாமபேதங்களாற் கோபித்தார்த்தமான ஆக் கியாயிகையைப் புத்திரனது விஞவின்பின் தாரூரன்றனே விரித்துரைப்பானுயினும், அங்ங னம் சிறிதுசொல்லப் படுகிறது. (79)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அம்மகாத்மாவின் பெருமையையே மீண்டும் எடுத்துரைத் தல்:—சாகசமென்பது.

சாகசமொன்றும் விரும்புவோன் பலவாச்சாலவும் வியப்புறு தொழிலோன்
சோகமுமகிழ்வுந் தருவதாய் முயலுந் தொழில்களின் றொகுதியை யெண்ணின்
மாகடலலைக ளெண்ணினுந் தொலையாவாட் படைவாயு வன்னிகளி
லேகமுமிவனை யடர்வுறுதாகு மிருகையால் விண்ணையென் செயலாம், (80)

(ப - ரை.) சாகசம் ஒன்றும் விரும்புவோன் — சாகசைகரதிகன், பலவாச்சாலவும் வியப்புறு தொழிலோன் — நானு அத்தியந்த ஆச்சரிய வீகாரவான், சோகமும் மகிழ்வும் தருவதாய் முயலும் — சுகதுக்கங்களே யீவனவாகச் செய்யும், தொழில்களின் தொகுதியை எண்ணில் — தொழிற்கூட்டத்தைச் சங்கையிடின், மாகடல் அலைகள் எண்ணினுந்தொ லையா — மகத்தான சமுத்திரத்தின் தரங்கங்களைச் சங்கையிடினும் முடியாதகாரியமாம், வாட்படை வாயுவன்னிகளில் ஏகமும் — கூர்மைபொருந்திய சஸ்திரங்கள் காற்றுகனல் என் பவற்றுள் ஒன்றேனும், இவனை அடர்வுறுதாகும் — இம்மகாத்மாவை யெதிர்த்துப்போராடி டாதது ஆகும், இருகையால் விண்ணையென் செயலாம்— இரண்டு முஷ்டிகளால் ஆகாயத் தையாது செய்தல் கூடும்.

(ஸ்ரீ-வீர.) அக்கோத்தன் பலாத்காரமான பிடிவாத மொன்றிலேயே மிகவும் ரமிப்ப வன், அநேகவகையான ஆச்சரியச் செய்கைகளைச் செய்பவன், அத்தியந்தம் மேலும்மேலும்

சுகதுக்கங்களைத்தரும் அவனது ஆரம்பசகத் திரங்கள் யாவராற்றும் எண்ணமுடியும், கட லின் கல்லோலங்கள் எண்ணமுடியா தனபோலும். மிக்கவீரியம் வாய்ந்த அவனது வீரியம், சஸ்திரங்களாலேனும் பாவகாதிகளாலேனும் புவனத்தில் எவராலும் அபிபூதமாயேனும் அதுசுருதமாயேனும் செய்யமுடியாதாம், முடியால் ஆகாயம் போலும்.

(ச.) சாகசம் — தான்பிடித்ததை விடாது நிறைவேற்றல்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அம்மகாத்மாவின் பெருத்த மகாத்மியத்தையே மீண்டுமியம்பல்:— வரம்பற வென்பது.

வரம்பறவிரிந்து லீலையாற் புரியுமட்டறு முயற்சிக ளனைத்துந்
திரம்பெறுதேவர் மூவராலெனினுஞ் சிறிதுபிற் செல்லவுமரிதாம்
பரம்பிய விவனுக்குடலமா யெல்லாம் பரிப்பவர் மூவருண்டனைய
ரூரம்பயி லுலகையடர்ந்து நிற்பவர் களுத்தமன் மத்திமனதமன். (81)

(ப - ரை.) வரம்பு அறவிரிந்து — எல்லையில்லாமல் விஸ்தரித்து, லீலையால்புரியும் — விநோதமாகச் செய்யும், மட்டறு முயற்சிகள் அனைத்தும் — இவ்வளவென்னுத ஆரம்பங்கள் யாவும், திரம்பெறு தேவர்மூவர் ஆலெனினும் — நிலைபெற்ற இந்திராதி தேவர்களாலேனும் பிரஹ்மாதி மூவர்களாலேனும், சிறிது — அற்பமும், பிற்செல்லவும் அரிதாம் — பின்னே டர்ந்து நேரவும் முடியாதனவாம், பரம்பிய இவனுக்கு — விரித்து விளையாடும் இம்மகாது பாவனுக்கு, உடலமாய் — தேகங்களாய், எல்லாம்பரிப்பவர் — யாவற்றையும் ஆக்கித்தாங்கு பவர், மூவருண்டு — மூன்றுபெயர் இருக்கின்றனர், அனையர் — அம்மூவரும், உரம்பயில் உலகை — அதிதிடமான இந்தஜகத்தை, அடர்ந்து நிற்பவர்கள் — ஆக்கிரமணஞ் செய்து வாழ்பவர், உத்தமன் மத்திமன் அதமன் — உத்தமமத்திம அதமாவர்.

(ஸ்ரீ-வீர.) அம்மகானுடைய, அற்பப்பிரயோஜனமாயினும் வெகுவெகு கற்பனைசகத்திர சங்குலத்தன்மையானே வித்தார ஆரம்பமாயும், கனமணிமண்டபாதி நிர்மாணங்களானே மிக மிகவுமிலங்குவதாயும், உள்ளலீலையை, இந்திர உபேந்திரருத்திராதியரும் சிறிதும் அநுசரித் துச் செல்லும் ஆற்றலற்றவராவர். ஹே மகாபாகுவே! அம்மகானுக்கு மூன்று தேகங்கள், சர்வவிவகாரக் கிரீடா சமர்த்தங்களாய், சாத்விக இராஜசதாமச பேதமுடையனவாய், அத னுனே உத்தமமத்தியம அதமங்களாய், ஜகதாக்கிர மணங்களாய், உளவாம்.

(ச.) இவனுக்கு = அக்கோத்தனுக்கு, உடன் முதலெல்லாம் பரிப்பவர் = திசைகளி னிறையுஞ் சக்தியுள்ள, மூவர் = மூன்றுதேகங்கள் சத்துவாதி குணரூபங்கள். சுவோத்தன் என்னும் பாடம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அம்மகாமகிமை வாய்ந்தகோத்தன் நிர்மிதநகரத்தை வருணித் தல்:—முடிவிலா வென்பது.

முடிவிலா விசும்பிற்றோன்றி யாங்குறைவோன் மூவகையுட லுடைமுதல்வ
னெடியவவ் விசும்பிலவன் றருநகரீண்ட வீதிகள்பதிஞலா
மொடிவறும் பகுதிமூன்றிஞ லெழிலாரு பவனம்வனங்கள் செய்குன்றங்
கொடிநிகர் முத்தமாலே யேழ்வாவி குளிர்கொடிப் புளவிருதீபம்.

(ப - ரை.) முடிவிலா விசும்பிற்றோன்றி யாங்குறைவோன் = அதிவிஸ்தாரமாய ஆகா யத்திலுதித்து அங்கிருப்பவன், மூவகையுடலுடை முதல்வன் = மூன்றுபிரகாரமாய சரீரஞ் சார்ந்தகருத்தன், நெடிய அவ்விசும்பில் = விசாலமாய அவ்வாகாயத்தில், அவன்றருநகரம் = அம்மகாத்மா நகரத்தை நிர்மித்தனன், அதன்கண், ஈண்டவீதிகள் பதிஞலாம் = சதுர்த்த

மகாமார்க்கங்கள் உளவாம், ஒடிவறும் பகுதிமூன்றினுல் = விபாகத்திரய பூஷிதமாய்க்கெடா திருக்கும், எழிலார் உபவனம் வனங்கள் செய்குன்றம் = வன உபவனமாலைக ணிறைந்து கிரீடாசிகரிசுந்தரம் வாய்ந்தது, கொடிநிகர் = லதைபோலும், முத்தமாலை = தாரளத்தார் என்னுங்க, எழ்வாவி = வீளைந்தவாபி ஏழால் எழின்மிகுத்துளது, குளிர்கொதிப்பு உள இரு தீபம் = சீதள உஷ்ணவடிவ இரண்டு தீபங்களையுடையது அந்நகரம். உள = அந்நகரில் இவையாவும் உள்ளனவெனினும் அமையும்.

(ஸ்ரீ - வீர.) இம்முச்சரீரங்களையுடைய மகாத்மா அதிவித்தமாய விபோமத்திலிருந்தே யுண்டாகி, ஆண்டேஸ்திதியையு மடைந்து, பக்கிபோலும் சப்தபாதினும் ஆவன், பக்ஷியா னது வியோமத்திலேயே அண்டபிண்ட சிறுமையத்தேகத்திரயான்மகமாய் முறையே உண் டாகி, யெவ்விடத்தும் அவமான ஐயமுடைத்தாகி, சாரமற்ற அரசுமுதலவற்றின்கனி சுவைக் கும் ஆசைமிக்குடைத்தாகி, சத்தமாத்திரத்தானே மேற்கிளம்பாநிற்கும், அருத்ததத்து வத்தை யாராய்ந்திடாது; அதுபோலவே இம்மகாத்மாவும், தூல சூக்குமகாரண வடிவமுச் சரீரமுடையவனுகிப் பிரஹ்மாகாசத்தின்கண்ணுண்டாகி யாண்டும் பீதியுடையவனுகி துச்சமான விடயாசக்தனுகி, விதிவிடேதசப்தாதி பாதியாய்ப் பிரமிப்பன். அபாரகனமாகிய ஆண்டே பிரஹ்மாண்டரூப நகரத்தை அம்மகாத்மா உண்டாக்கினுன், அது சதுர்த்தசலோக வடிவமகா வீதி களையுடையது, சதுர்த்தச வித்யாவடிவ வீதிமார்க்கவிபக்தமானது, விபாக மானதிரிலோக வடிவத்தானே பலங்கரிக்கப். பெற்றது, விபாகவேதத்திரயிவடிவத்தானே பூஷிதமாயது. வனங்களாகிய சுந்தனுதிகளானும் உபவனங்களானும் மாலைசூடிக்கொண்டும், சுமேருமுதலிய கிரீடாசிகரிசுந்தரமாயும், முத்துமாலைக் கொடிகளைச் சூடிக்கொண்டதே போலும் ஏழுகடல் வாபிகளானே எழில்பெறப் பூடிதமாயுமிருக்கும் அந்நகரம், சீதள உஷ் ணுத்மக கூஷ்ணமில்லாத தீபத்வயங்கள் என்னும் சந்திரசூரியர்களானே விராஜிதமுமாயியது.

(ச.) பக்ஷிவியோமத்திலே யுண்டாயிருந் தழிவதுபோல, மூவகை—மூவகைச் சத்து வாதிரூபங்களை, உடலுடை = சரீரங்களாகவுடைய, முதல்வன் = இக்கோத்தனும், முடி விலாவிசும்பில் = சிதாகாசத்திலே, தோன்றி ஆங்குறைவோன் லயிப்பவனுமாம் என்று ணர்க, அவன்றரும் = அவனுல் நிருமிதமான, நகரம் = பிரமாண்டம், நீண்டவீதிகள் பதி னுலாம்,=சதுர்த்தச புவனங்களே அதின்மகா வீதிகளாம், பகிர்ச்சிமூன்றினுல் = மேல் கீழ் நடுவுலக பேதத்தால் மூவகைப்பிரிவுள்ளதாய், செய்குன்றம் = கிரீடாசிகரிகள் மேருமந்த ராதிகள், முத்தமாலை = நதிகள், வாவி=சமுத்திரங்கள். இருதீபம்= சந்திராருக்கர். மூலம். சத்திக்கின்றது இதன் கண்ணெனச்சப்தம் வியோமமாம், ஆண்டே வீழ்கின்றதெனச் சப்த பாதமுமாம் பக்கிபோலும். முத்தமாலை = சரித்துகள், அவற்றினே தவலிதமான வாபிக ளாம் கடல்கள். இந்து இரவிகளா மிருசுடர்களானே இனிதாக இலங்குமந்நகரம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) நூதலிய நகரத்தில் அம்மகாத்மா நிருமித்த அபரகங்களை வரு ணித்தல்:—என்பன, மந்தமிவீன்பன.

என்பன நிறைந்த விந்நகரத்தி லிவன்றருமப வரகினங்கண்
முன்புறுகீழ் மேனடுவெனும் பதங்கண்முழுதினு முழல்வுறவிதித்த
வன்புறுதூண் கண்மூன்றுள வெலுப்புமரங்களாற் செறிந்தனபுண்ணீர்
மென்படர்தோலா னெய்த்தினிதான விரிமயிர்க் கற்றையான்மேய்ந்த.

மந்தமாருதஞ்சூழ் சாலகமொன்பான் மருவினவைம் பொறியென்னுஞ்
சுந்தரவிளக்கால் விளங்குவவிரண்டு தோளெனுந் தோற்றமுமுடைய

திதிப் பிரகரணம் தோரூரன் கதி எாசக

வந்தமில்பரம பாவணைக்கஞ்சு மகங்கரப்பேய்கள் காத்தளிப்பச்
சந்ததமிலாத மாயையாலந்தத் தரணிபன்சமைத்த பாவறைகள்.

(ப - ரை.) என்பன நிறைந்த = கூறியவற்றுனே நிரப்பப்பெற்ற, இக்கரத்தில் = இப்பட்டணத்தில், இவன்றரும் அபவரக இனங்கள் = இம்மகாத்மாவாற் சிருஷ்டிக்கப்பெற்ற இல்லங்களின் ஈட்டங்கள், முன்புறு = முன்னராக்கப்பெற்ற. கீழ்மேல் நடு எனும்பதங்கள் முழுதினும் = தாழ்ந்துயர்ந் திடைப்பட்டன வென்னும் புரங்களெவற்றினும், உழல்வுற விதித்த = சுற்றித்திரியும்படி விதிக்கப் பெற்றனவாம், வன்புறுதூண்கள் = வலிமைமிருத்த ஸ்தம்பங்கள், மூன்றுள = திரயங்களுளவாம், எலுப்புமரங்களாற் செறிந்தனசுக்கிலதாருக்களால் நிரம்பினவாம், புண்ணீர் மென்பட்டுத் தோலால் நெய்த்து = உதிரமுண்மேவ மென்மையாகப் போர்த்த சருமத்தானே பசைத்து, இனிதான = அழகான, விரிமயிர்க்கற்றையால் = விரிந்துள்ள கேசப்புற் கத்தையால், மேய்ந்த = மூடப்பெற்றனவாம்.

மந்தமாருதஞ்சூழ் = இளங்காற்றடிக்கும், சாலகம் ஒன்பான் மருவின = வாதாயனங்கள் ஒன்பது பொருந்தியுள்ளன, ஐம்பொறியென்னும் சுத்தரவிளக்கால் விளங்குவ = பஞ்சேந்திரியங்கள் என்னும் அழகிய தீபங்களால் இலங்குவன, இரண்டு தோளெனுந்தோற்றமூமுடைய = இருபுஜங்கள் என்னும் மார்க்கங்களும் உடையன. அந்தமில் பரமபாவனைக்கஞ்சும் = கெடாததான பரமபாவனைக்குப் பயப்படும், அகங்கரப் பேய்கள், அகங்காரயகூர்கள், காத்தளிப்ப = இரகூத்துப் போற்றுவன, சந்ததம் இலாத = எப்போது மின்றிய, மாயையால் = மகாமாயா சக்தியால், அந்தத்தரணிபன் = அம்மகாத்மா, சமைத்த = உண்டாக்கிய, பாவறைகள் = அபவரகங்கள் = கர்ப்பக்கிரகங்கள், ஆம்.

(ஸ்ரீ - வீர.) சாஸ்திரீய கருமங்களானே மேற்கதி, அசாஸ்திரீயங்களானே கீழ்க்கதி, என்னும்வடிவினவாய வணிங் மார்க்கங்களானே சங்குலமிகத்த தந்நகரம், அத்தகைய அதிவிபுலபத்தனத்தில் அம்மன்னவனுல், ஜங்கமங்களும், விடயலியா மூடங்களும், உண்மனே போலும் ஆத்மாகாசபரிச் சேதகத் தன்மையானே அபவரகங்களும், ஆகிய தேவமானுடாதி தேசகணங்கள், சிறப்புறவாக்கப் பெற்றனவாம்; மேலேசிலவும் கீழேசிலவும், சிலமத்தியினியோஜிதங்களாமே, சில சிரமிருந்தொழிந்திடும் சிலவோதாஞ் சீக்கிரம் ஆரோகிகளாகிப்போகும், கேசதிருணங்களால் வேய்ந்துளவாகும், நவத்துவாரங்களால் விபூஷிதங்களாம், நிரந்தரங்காற்று நிகழ்ந்து கொண்டிருக்கும், அளவறுமேற் சித்திரங்களான வீதங்களாம், தீபபஞ்சகஞானேந்திரியங்களால் வாளொளிமிருத்து வயங்காநிற்கும், இருதுடை யென்புகள் மூதுகென்பென்னும் முத்தம்பங்கள் நாட்டப் பெற்றனவாம்; வெள்ளென்புகளே வம்சதாரு ஸ்தானீயங்களாக வுடையனவாம், ஸ்நித்தமாம் ஆலேப்மிருத்திகரஸ் தானீயங்களான சருமங்களானே மிருதுக்களாம், மார்க்கரூப புஜங்களானே சங்குலங்களாம், இத்தகைய மனைகளே மாயையால் மகாத்மாவாகிய அம்மன்னவன் ஆற்றி அவற்றில், அவ்வபவரகங்களே அபிமானங் கொண்டு காப்பவர்களாய், காரியகரணங்களாற் பூஜ்ஜியர்களாய், சுவாமிபூதர்களாயுள்ள மகாயகூர்கள் என்னும் அகங்காரங்களேயும் மாயையினுலேயே சிருஷ்டித்துவைத்தனர்; அவ்வகந்தைகள் அனவரதம் ஆத்மவிவேகத்தானே பயமிகவடைந்தனவா யிருந்தன; அதனுனே அவைகட்கு கூயமெய்து மாதலின்.

(ச.) முன்புறுமிவன்றரு = அப்பூபதியா லியற்றப்பெற்ற, பாவறையினங்கள் = தேகரூபங்களே அந்தர்க்கிரகங்கள். உழல்வுற = அதிலதிலதிற் சிலசிலசில சஞ்சரிப்பனவாக, வன்புள தூண்மூன்று = ஆதாரபூதங்களான தம்பங்கள்; வாதபித்த கபரூபங்கள், அவைகளே தேகதாரணமாதலின் என்க; மயிர்க்கத்தை = கேசரூபமான திரணம்.

சாலகமொன்பான் = சுரோத்திராதிகள் என்னும், வாதாயணங்கள் = நாசியுட்டுளை முதலியன, பொறியெனும் = சட்சுராதி யிந்திரியபஞ்சக மென்னும், அந்தமில் பரமபாவ னைக்கஞ்சும், தத்துவஞானத்தால் நிவிர்த்திப்பதாதலின் என்க. வெள்ளென்புகளான தாருக்கள். மஸ்ருண ஆலேபம் மிருத்துவும் அவற்றிற்காம், அவற்றுள் ஆலேபம் = பாகியத்துவக்காம், மிருத் = மாம்சமாம், புஜாதியங்களுபங்கள் வீதிகளாம், மஸ்ருணம் = ஸ்நிக்தம், கசிவுறுவது. (84)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அம்மகாத்மா அகங்காரப் பேயுடன் கூடியுலாவி நடித்தல்:— அசைதருமெனபது.

அசைதருமினிய பாவறைத்திரளி லகங்கரப்பேய்க ளோடுலாவிக்
குஞ்சைதரு விநோதம்விவிதமா வியற்றிக்கூடுறை புள்ளெனவுறைந்து
விசையினு லவற்றைவிட் டகன்றயலே மேல்வருபாவறை விதித்து
நசையுறமேவிப் பூதவாவேச நண்ணினர் போலவனடிக்கும்.

(ப - ரை.) அசைதருமினிய பாவறைத்திரளில் = சலனமாயுலவும் இன்பாலய அபவரக ஈட்டங்களில், அகங்கரப் பேய்களோடுலாவி = அகங்காரங்களாகிய யக்ஷர்களுடன் சஞ்சரித்து, குசைதருவிநோதம் = கடிவாளமீயும் கிரீடைகள், விவிதமாவியற்றி = நாஞவகையாகச் செய்து, கூடு உறைபுள் என உறைந்து = நீடத்தில் வாழும் விகங்கம் என்றுரைக்குமாறு இருந்து, விசையினுல் = வேகத்தினுல், அவற்றைவிட்டு அகன்று = அவ்வபவரகங்களை விடுத்து வெளிப்போந்து, அயலே = வேருகவே பிறவிடத்தில், மேல்வருபாவறை விதித்து = இனிமேல் வாராநின்ற அபவரகத்தை விதானஞ்செய்து, நசையுறமேவி=ஆசையுடன் அதனேயடைந்து, பூத ஆவேசம் நண்ணினர்போல் = பூதம் பிடித்தாட்ட ஆடுமவர் போன்று, அவன் நடிக்கும் = அத்தரணிபன் நடனம்புரிவன்.

(ஸ்ரீ - வீர') பின் விவகாரவான்களாக இராநின்ற அதிசஞ்சல அபவரகக் கூட்டங்களில் மகீபதியாகிய சங்கற்பாத்மாஜீவன், கூண்டுகளிற் பறவைபோலும் நாஞவிதமான கிரீடையைச் செய்வன். திரிசரீரசதங்களில் உள்ளேயிருக்கும் யக்ஷர்களோடு லீலைகளால் வசமின்றி அசுவாதீனம் அடைந்ததுபோலு மிருந்து வாழ்ந்து மீண்டும் வெளிப்போந்து செல்வன். ஒருகால் அலையுமனத்தையுடைய அவனுக்கு, இல்லாததான பவிஷ்யத் நிர்மாணசொப்பனஜகத்துச்சிறிது போகந்தரும் வரைநிரமா யிருக்குமாறுசெய்து புகுந்து விளையாடாநிற்பேன் என்னும் இச்சையுண்டாம். பூதஆவிஷ்டனேப்போல நித்நிராதியா வேசத்தானே ஜாக்ரத்துத் தேகாதியபிமானம் விடுத்து அங்கிருந்தெழுந்தோடுவன்; கந்தர்வர்களானே நிர்மிக்கப் பெற்ற கந்தர்வநகரம் போலும் பொய்யாய புரத்தையதன்பின் அடைவன். ஒடுதலேச் சுருதியு மறைகின்றது:— " அவ்விவனிந்த நனவி லிரமித்தும், கவ்விச்சரித்துங் கண்டே யறத்தையும் ஒவ்வின் மறத்தையு மொழிவறமீளவும், ஒவ்வும்பிரதி நியாயம் யோனியே, செவ்விதிற் செல்லுங்கனு முடிபிற்கே" பொருள்:—எங்ஙனமிவன் கனவில் அசங்கத்தன்மையானே கனவழக்கினுலாம் தோஷங்களானே நனவில்வந்து நலியப்பற்று றுவதில்லேயோ, அங்ஙனம் நனவழக்கானண்ணிய தோடங்களானும் நலியப்பற்று றுவதேயில்லே யிந்நனவின் கண்ணும் என்பதை யிம்மந்திர மியம்பாநிற்கும். இங்குவிவகரித்துக் கொண்டுவரும் சுயஞ்சோதியாய புருடன் இச்சாக்கிரத்தின் மாட்டு இரதியையனுபவித்தும், மித்திரபந்து ஜனதரிசனதியானே என்பதாம், அநேகவகையாகச் சரணல்ல பிரமமிகவுற்றுச் சஞ்சரித்தும், புண்ணியத்தையும் பாவத்தையுங்கண்டே, செய்தன் றென்றபடி. புண்ணிய பலத்தையும் பாவபலத்தையுங் கண்டே யென்பதாம், புண்ணிய பாவங்களே நேரேகாண முடியாதன்ரே, காண்டலால் அறமறத்

தாற் கட்டுப்படான், யாவன்செய்வனே அவன் கட்டுறுவன் அவற்றால், அவ்வறமறங்களைக் கண்ணுறுதன் மாத்திரையானே அவற்றாற் கட்டுருனன்றே, ஆகலின் கனவையடைந்து மிருத்தியுவைத் தாண்டவே செய்வன், கேவலம் மிருத்தியு ரூபங்களே யல்லவாம், அதனனே மிருத்தியுவிற்கு ஆன்மவியற்கைத் தன்மைச் சங்கையின்றும், மிருத்தியு இவனுக்கு இயற்கை யாமேலாயின் கனவினுஞ்செய்க, செய்வதோ இன்றும், இயற்கையேல் வினேயாம், அதிர்மோ கூத்தன்மையேயாம், இயற்கையோ அல்லவாம், கனவிலின்மையின்; ஆகலின் இவனுக்கு மிருத்தியுவாகிய புண்ணிய பாவங்களினின்றும் விமோகூம் பொருத்தும். அற்றேல் கனவில் இவனுக்கு இயற்கையேயாம் எனின் ? அற்றன்றும், மதியாதி யுபாதியாலாக்கப் பெற்றதே யாமது, "சிந்திப்பதே சலிப்பதேபோலும்" என அதுவும் ஒப்புமையாலுரைக்கப் பெற்றது. ஆகலின் முற்றினுமே கனவில் மிருத்தியுரூப அதிக்கிரமணத்தால் சுவாபாவிகத் தன்மையர சங்கையேனும் அதிர்மோகூத் தன்மையேனும், இலதாம். நித்திதம் ஆயம் = நியாயம், அய னம் = ஆயம், நிர்க்கமனம், மீளவும், மூற்கமனமாமாக எவ்வாகமனம் உளதோ அது பிரதி நியாயமாம், சென்றபடி மீண்டும் வந்ததென்றபடி பிரதியோநி = யதாஸ்தானம், யதாஸ் தானத்தையே நோக்கிமீண்டும் வருகின்றது, கனுத்தங்குறித்தே ஓடிவரும். அவன் அக்னு வில்யாது சிறிதுகாண்பன், அதனுற்றெடர் புரூன், அசங்கனேயாவனு மிப்புருடன் என்பது சருதியாம், அற்றேற்கண்டேயென யாங்ஙனம் துணியப்பெறும், செய்கின்றனன்றே ஆண் டமறங்களே, அவற்றின் பயனேயும் காண்கின்றனன், எனின் ? அற்றன்றும், காரக அவபா சகத்தன்மையானே கருத்துருத்துவங் கூடலின், ஆன்மச்சோதியானே யிவனிருப்பன் என் பதாதியானே; ஆன்மச்சோதியால் கன்கிலங்கப் பெறுவதாய்க் காரியகாரண சங்காதம் விவகரிக்கின்றது, அதனுலிதற்குக் கருத்துருத் தகைமை யுபசரிக்கப் பெறுகின்றது, தானு கக்கருத்துருத் தகைமையிலதாம், தியானஞ்செய்வதே போலும் லீலைசெய்வதே போலும் என அவ்வாறு கூறவும் பெற்றிருக்கின்றது, மதியாதியுபாதி யாலாக்கப்பெற்றதேயாம் சுய மாயல்லவாம்; புண்ணியத்தையும் பாவத்தையும் கண்டே செய்தன்று என்னுமீண்டோ பர மார்த்த அபேகூயானே உபாதிநிரபேகூ முரைக்கப் பெறுகின்றது; அதனுல் மூன்றெடு பின்முரணும் வியாகாத ஆசங்கையிலதாம், எதனுல் நிருபாதிகம் பரமார்த்தமாகச் செய் யாதோபற்றுருதோ கிரியைப்பயனுல், அவ்வாறே ஸ்ரீ பகவானும் திருவாய்மலர்ந்தருளுவர்:-- உணர்வு விகாரியென்றும் வினேயெலா முடம்பிலுடே, புணர்வன வென்றுங் கண்டான் பொய்யிலா மெய்யைக்கண்டா, னிணர்மலர் முடியாயெல்லா வினேகளுஞ் செயினுமான்மா, குணமிலியாதலாலே யவற்றெடுங் கூடிநில்லான், என்பதாம், மூன்னும் அசங்கத்தன்மையே மொழியப்பெற்றதாம், ஆதலின் முத்தானங்களிலும் சுயம் அசங்கமேயாமிது, அதனுனே தானத்திரயதரும விலகூணமாம். கனுமுடிபிற்கே = நித்திரைக்கே, நித்திரையை நோக்கு யோடு மென்றபடி,

(ச,) குசைதரும் = தருப்பைகளா லியற்றப்பெற்ற, கூட்டு=கூண்டுகளில் பாவறை= தேகாந்தரம். (85)

இவற்றைவிட் டவற்றையெய்துவ மென்றேயெண் ணுறவப்படியெய்து
மவற்றினின்றிறப்போ மென்றெணு நினேவாலப் படியிறந்து போஞ்சித்தங்
கவற்றியாலலையப் பிறந்திறந் தழலுங்ககனமே யிவற்றினுக்கிடமாந்
தவற்றினேயெய்தி மீளவுந்தோன்றுந் தவழ்திரை நீரிலேவரல்போல்.

(ப - ரை.) இவற்றைவிட்டு = இவ்வபாவங்களே விடுத்து, அவற்றை = அப்பாவறை களே, எய்துவம் =யாமடைவேம், என்று எண்ணுற = என்பதாக இச்சைசெய்த அளவில், அப்படி எய்தும் = அவ்வாறே அடையும், அவற்றினின்று = அவ்வபவரகங்களி னின்றும்,

இறப்போம் என்று எணும் நினைவால் = இறந்துவிடுவோம் என்பதாகச் சங்கற்பிக்கும் சங்கற்பத்தால், அப்படி யிறந்துபோம் = அவ்வாறு மரித்துப்போம், சித்தம் = மனமானது, கவற்றியால் = வருத்தத்தால், அலைய = அலைவுற்காக, பிறந்து இறந்து உழலும் = ஜனித்து மரித்து அவதிப்படும்; ககனமே யிவற்றினுக்கு இடமாம் = ஆகாயமே இவ்வியாவற்றிற்குந்தலமாம், தவற்றினையெய்தி = தவறுதலையடைந்து; மீளவுந்தோன்றும் = மறித்தும் பிறந்திடும், தவழ்திரை நீரிலேவரல்போல் = கடலின் கண்ணேயழலும் தரங்கம் மாறிமாறி வருதல்போலும்.

(ஸ்ரீ - வீர.) ஒருகாற் சஞ்சலசித்தம் வாய்ந்த அவனுக்கு இச்சையிங்ஙனுண்டாம், விகாசம் நன்கடைவேன் என, அதனால் விரைவில் அவன் விகாசத்தை யடைவன்; அதாவது சங்கற்பலயா வஸ்தையாகிய துயிலெயடைவன் என்னும் அவாவால் விரைவில்காரண அவத்தையின்கண்ணே கர்மபீஜ சமஸ்காரசேஷம் கர்தருகடுப்ப விலீனமாம். மீண்டு முற்பன்னனுவன் விவேகமாக முன்னியற்கையினனே, அவனேயா னென்னும் துயின்றெழுந்தானுக் குண்டாம் பிரத்திய பிஞ்ஞையதுபவத்தா லென்பதாம், நீரிலூர்மி நிகழ்வதேமானும். (86)

மேனிமூன் றுடையோன் கிறந்தகந்தர்ப்ப விதித்தவுரனை யதற்புரத்திற்
றனினிதிருந்து தொலைவற மேன்மேற்றழைப்புறு காரியவசனை
யீனமாமொரு கானன்மையா மொருகாலென் செய்வோமென் றிடுமொருகான்
மானமாமொருகான் மயக்குறுந் தெளியும் வருந்துறு மகிழ்வுறும்பல்கால்.

(ப - ரை.) மேனி மூன்றுடையோன் = மூத்தேகங்களை உடையவன், சிறந்த = அநேக விசித்திர சம்பத்துடைய, கந்தர்ப்ப விதித்தவுரனைய = கந்தர்வர்களானே நிர்மிக்கப்பெற்ற புரம்போன்ற, தற்புரத்தில் = தனது நகரத்தில், தான் இனிது இருந்து = தான் ஆனந்தமாக வீற்றிருந்து, தொலைவற = ஒழியாமல், மேன்மேல் = மேலும்மேலும், தழைப்புறு காரியவசனைய் = விருத்தியாகுந் தொழிற் பரவசனைய், ஈனமாம் ஒருகால் = ஒரொருபோது கெடுதலையடைவன், நன்மையாம் ஒருகால் = ஒரொருபோது நலத்தை நண்ணுவன், என் செய்வோம் என்றிடும் ஒருகால் = செய்யற்பாலது யாதோ எனவோதுவனை ரொருபோது, மானமாம் ஒருகால் = அபிமானத்தை யடைவன் ஒரொருபோது, மயக்குறுந் தெளியும் வருந்துறும் மகிழ்வுறும் பல்கால் = பலபோது மயங்கித்திரிவன்; தெளிவுற்றலைவுவன், துக்கத்தையடைவன், சந்தோஷத்தை யெய்துவன்.

(ஸ்ரீ - வீர.) மிகமிகவும் மீளமீளவும் ஒங்கிவளரும்படியாக விவகாரத்தை விரிப்பன் மீண்டும் பையத்தொடங்குவன், தானே விவகரித்தொருகால் சத்துருரோக தரித்திர முதலியவற்றானே பெருந்துன்பத்தை யடைவன், யான் என்னசெய்வேன் என்றும், யான் அறியாதவனுயிருக்கின்றேனேயென்றும், துக்கியாயிருக்கின்றேனே யென்றும் சோகப்பட்டழல்வன், பூர்வமநுபவித்த சுகத்தைத் தேடியேனும் நினைத்தேனும் ஒரொருபோது சுயந்தீனத் தன்மையையடைவன், மூத்தசுகத்தையடைந்து ஒரொருபோது தானேயீனத் தன்மையைத் தரிப்பன் மேகங்கள் பொழிந்து தரங்கங்கள் எழுந்து உல்லாசமாய்ப் பெருகும் பூரணப்பிரவாகத்துப் பெருமையினால் நதியின்வேகம் போலும், அதன் சிறுமையினால் அஃதின்மைபோலும் கூறிய தீனத்தன்மை தீனத்தன்மைகளை யுணர்க. (87)

(ச,) கந்தர்ப்பர் = கந்தருவர்களால்,

தளர்ந்தனனென்னுந் தடித்தன னென்னுந் தாழ்ந்தன னுயர்ந்தனனென்னும்
வளர்ந்தனனென்னுங் குறைந்தனனென்னு மாருதமோதுறு கடல்போ
லுளந்தளுலைந்த மன்னவன் சுழல்வதுரைப்ப தெனைன்றலு மைந்தன்
ளிளந்தாதையை நீதெளிஞனென் றுரைத்த கீர்த்தியோ ரெனைக் கேட்டான்.

(ப - பை.) தளர்ந்தனன் என்னும் = இளைத்தேன் என்பன், தடித்தனன் என்னும் = பருத்தேன் என்பன், தாழ்ந்தனன் உயர்ந்தனன் என்னும் = கீழவன் ஆயினேன் மேலவன் ஆயினேன் என்பன், வளர்ந்தனன் என்னும் = நெடியவன் ஆயினேன் என்பன், குறைந்தனன் என்னும் = குறியவனாயினேன் என்பன், மாருதம் = பெருங்காற்றால், மோதுறுகடல் போல் = அடிபட்டுச் சிதறுஞ் சமுத்திரம்போல, உளந்தளர் அந்தமன்னவன் = மனத்தினால் அம்மகிபதியானவன், சுழல்வது = சுற்றித்திரிவது, உரைப்பது என் = சொல்வதென்னே; என்றலும் = என்று தந்தைகூறலும், மைந்தன் = குமரன், இளந்தாதையை = இவ்வாறருளிய மகிமைவாய்ந்த தந்தையாகிய ஆசிரியரைநோக்கி, கீ = தேவரீர், தெளிருன் = கோத்தன் = சுவோத்தன், என்றுரைத்த = எனவருளிய, கீர்த்தியோன் = கியாதிவாய்ந்தவன், ஆரெனக்கேட்டான் = யாரென்று வினவினன்.

(ஸ்ரீ - வீர.) ஹே மைந்த ! அம்மகாத்மாவாகிய முன்மொழிந்த மகீபதி, பிறரைமடக்குமாற்றல் மிருதியாயவழி பிறர்மேல் நடப்பன், ஓட்டெடுப்பிப்பன் வெற்றிகொள்வன் சுற்றித்திரிவன், சம்பத்தையடைந்து பெருமிதங்கொள்வன், பெருஞ்சஞ்சல மடைவன், நஞ்சுகளுக்களில் விளங்காநிற்பன், துயில் பிரளய சமாதிமுக்திகளில், விளங்கவுமாட்டான், உள்ளேயிராநின்ற ஆத்மச்சோதியினுலே விளக்கமுடையவனு யிருப்பன், அதனுனே மகாமகிமை வாய்ந்தவனுகி யிலங்குவன்; வாயுவேகத்தால் ஆகுலமுற்ற நதிகளின்பதியேபோல அலைவுறுவன். ஸ்ரீ விஷ்டபகவான் கூறல்:—அதன்பின் ஜம்புத்தீவில் மகாகிரியில், பெருங்கதம் பவிருகூ உச்சியில் சிரோபூஷணமா யிலங்கும் பவித்திர இருதயத்தையுடைய தந்தையைப் பணிந்து அந்தமைந்தன் ஆண்டுவினவுத்தொடங்கினன்; புத்திரன் புகலல்:—ஹே தந்தாய் ! கோத்தன் என்னும் பிரக்கியாதியையுடைய உத்தம ஆகிருதிவாய்ந்த அப்பூபதியாவன் ? இப்போது தேவரீராற் செப்பப்பெற்ற இச்சரிதமியாது ? இதனை யதார்த்தமாக அடியேனுக் கருள வேண்டும். கேட்டபடியாய அர்த்தத்திற்முற் பரியமில்லை, மற்றே, மற்றதிற்முற் பரியம் என உன்ன லுணரப்பெற்றது யாதுகாரணம் எனின் ? பவிஷ்யத்தாக நிர்மாணம்புரம் சிறிது போகந்தரும் வரைதிரமாமாறுசெய்து புகுகின்றேன் என்பதாதிய வாக்கியங்களில் இனி வருந்தன்மையிப் போதிருக்குந் தன்மைகட்கு ஒருபோதுறைதல் முரணுதலின் சேர்க்கைப் பொருளுடைமையின்மைகாணப் பெறுதலின், பவிக்கும் நிர்மாண மியாண்டையது வர்த்தமானப் புகுதல் யாண்டையது. இருபொருண் முரண்பாட்டால் அடியேன் மயற்பொருட்டேயாகின்றது தேவரீரது திருவாக்கியம்; என்றனன் மைந்தன் என்பதாம்.

(ச.) என = இம்முனைத்தும் உள்ளபடி எனக்கு உபதேசியுமென்று கேட்டான், (58)

(அ - கை.) தாரூரமுனிவர் கூறல்:—வண்மையென்பது.

வண்மையாலந்த மன்னனை யுரைத்தால் வரும்பிறப்பிறப் பெனும்பொய்யி
னுண்மைநன்குணர்தி யென்றுதாரூர னுத்தமமைந்தனுக் குரைப்பா
னெண்மயமாகிப் பொய்யெனத் தோன்றியிடமுற விரிமுயற்சியதாய்க்
கண்மயலான பிறவியினிலையைக் கட்டுரையாக முன்னுரைத்தோம்.

(ப - ரை.) வண்மையால் = உள்ளபடி, அந்த மன்னனை = அப்பூபதியை, உரைத்தால் = இன்னுனெனத் தெரியச்சொன்னுல், வரும்பிறப்பு இறப்பு எனும் = ஆரோபிதமாக வாராநின்ற ஜனனமரண சக்கிரமென்னும், பொய்யின் உண்மை = மித்தைமயக்கத்தின் றத்து வத்தை, நன்குணர்தி = நன்முக நீதெரிந்து கொள்ளுவாய், என்று = என்பதாக முன்னருளைத்துப்பின், தாரூரன் = அப்பெயரிய முனிவர்பெருமான், உத்தமமைந்தனுக்கு =

நான்கு சாதனங்களும் நிறைந்த தஞ்சீடனுக்கு, உரைப்பான் = உபதேசிக்கத் தொடங்கினர், எண்மயமாகி = சங்கற்பமாத்திர வருவுடையதாய், பொய் எனத்தோன்றி = அசத்தென வெழுந்ததாய், இடமுற விரிமுயற்சியதாய் = விலாசமாக வித்தரித்த யத்தனத்ததாய், கண் மயலான = தேசகாலாதிய வஸ்துமயமதாய், உள்ள, பிறவியின்நிலையை = இச்சமுசாரக் கட்டுப்பாட்டை, கட்டுரையாக = புனைந்துரையாக, முன் = பூர்வம், உரைத்தோம் = யாம் கூறினேம்.

(ஸ்ரீ - வீர.) தாசூரமுனிவர் கூறுவதாவது:—ஹே புத்திர ! இதனையுள்ளபடி உனக்கு யாமுரைப்பக் கேட்குநி, எதனுல் இச்சமுசார சக்கரத்தின் றத்துவத்தை யுணர்ந்துகொள்ளு வாயோ; பரமார்த்தசத்தா சூனியமேயாய அஞ்ஞானத்தினின்றும் ஆரோபிதமாய் விவர்த்த மாக மிகக்கிளம்பியதாய், அதனுனே அவஸ்துவாயமாயாமயமதாய், அதிவிஸ்தாரமாய், உள்ள, இச்சம்சாரப்பொய் சம்ஸ்தானத்தையே, இவ்வாறு, இப்பொருளின் போதனப்பொ ருட்டுப் பரோக்ஷகற்பனையானே வருணித்தோம். (89)

தற்பரவிசும்பி லுதித்தசங்கற்பஞ் சாற்றிய தெளிஞனு மன்னன்
பற்பலகாலுந் தோன்றியு மறையும் பரம்பிய வுலகதன்வடிவா
மற்பசங்கற்ப முளதெனி லுலகுண்ட துவிலதெனி லுலகிலதா
மூற்படுமூவர் முதலியதேவர் மொய்த்தமெய் யவயவமதற்கே.

(ப - ரை.) தற்பரவிசும்பில் உதித்த = தன்மயமான வியாபக ஆகாசத்தில் உதயமா கிய, சங்கற்பம் = எண்ணமே, சாற்றிய = உனக்குரைத்த, தெளிஞனும் மன்னன் = கோத் தன் என்னும் மகிபதியாவன், பற்பலகாலும் = பலபலபோதும், தோன்றியும் மறையும் = தானுகவே புலப்படும் தானுகவே இலயமாம், பரம்பிய உலகு = விஸ்தாரமாய இச்சகமுழு தும், அதன்வடிவாம் = அச்சங்கற்ப வடிவமேயாம், அற்பசங்கற்பம் = தோற்றரவுமாத்திர மாகிய நினைவு; உளது எனில் = உண்டாம் ஆயின், உலகு உண்டு = இச்சகமுளதாம், அது இலது எனில் = அவ்வெண்ணம் இலதாயின், உலகு இலதாம் = இச்சகம் இல்லதேயாம், முற்படு மூவர் = முன்னேசொன்னமுதன்மைவாய்ந்த மும்மூர்த்திகள், முதலியதேவர் = ஆதியேயாய தேவர்கள், மொய்த்த = நெருங்கிய, மெய் அவயவம் அதற்கே = அதனது சரீர அவயவங்களேயாம்;

(ஸ்ரீ - வீர.) பரமமாய ஆகாசத்தினின்றும் சங்கற்பப் பிரதானமாய மனமான்துண்டா யது, சமஷ்டி வியஷ்டி மனத்தினுக்கு, ஏகீகாரமாக, காத் = அவ்யக்த ஆகாசத்தினின்றும், உத்த = எழுந்தது, என்னும் வியுற்பத்தியினுனே கோத்தன் எனப்பெயராம்; சுவோத்தன் எனப்பாடமேல் தன்னினின்றும் எழுந்தவன் என்றுபொருள்கூறிக்கொள்க. தானுயெழுந் தது சுயம்பு எனினும் அமையும் சுயமாகவே தற்சங்கற்ப ஜன்னியப் பிரவிருத்திவாசனை யுற் பவத்தானே யுண்டாமது; நிவிருத்திவாசனை தாட்டியத்தானேயோ சுயமாகவேவிலீனமாம். இவ்வெல்லாவுலக வித்தாரமும் அதன்பரிணமமாகவே யிருக்கும், நுதலியபொருளே அதன் உடன்பாடெதிர் மறைத்தொடர்பு காட்டலானே திரப்படுத்தல்:—அஃதுண்டா மேலாயின் உண்டாம் அஃதொழியுமாயின் ஒழியும் என்பதாம், அற்றேல் பிரஹ்மவிஷ்ணு வாதிகளின் சமபந்தத்தானே ஜகத்துண்டாயது எனக்கேட்கப் பெறுகின்றது அங்ஙனமாக யாங்ஙனம் அன்னியத்தினின்றும் உண்டாகின்ற தென்றுகூறுதல் கூடும் எனச்சங்கித்து விடைதரு தல்,—பிரஹ்மா விஷ்ணு இந்திரன் ருத்திரன் முதலியவர்கள் அதற்கே யவயவங்கள் எனக் கூறப்பெறுவார்கள், கிளைகப்புக் கொம்புமுதலியவை விருக்ஷத்திற்கே போலும் சிருங்கங்கள் பர்வதத்திற்கே போலும்.

(ச.) பலகாலும் (தானே) தோன்றி, உலகு=இச்சகமனைத்தும். (90)

மேயதன்பத்திப் பாச்சன்மாத்திரத்தால் விரிஞ்சனும் பாவனைமேவி
யாயசங்கற்பம் வடிவிலாவிண்ணி லனமத்தது முப்புவிநகர
நாயகரீரேழாகிடு மீரேழ்ஞாலமே நகருறு தெருக்க
டியஞாலங்கள் செறிபொழிற் றிரள்கள்சொல்லிய வனமுபவனமே.

(ப - ரை.) மேயதன் பத்திப்பாச்சன் மாத்திரத்தால் = பொருந்திய தனது பிரதிபாச அநுசந்தான மாத்திரத்தானே, விரிஞ்சனும் பாவனைமேவி=விரஞ்சித்தன்மையையடைந்து; ஆயசங்கற்பம் = முன்னுளதாய சங்கற்பமானது, வடிவிலா விண்ணில்=சூனியமாய வியோமத்தில், முப்புவிநகரம் அமைத்தது = இம்முச்சகத்துப் புரத்தை நிர்மித்தது, நாயகர் ஈரேழாகிடும் = லோகாதிபர் பதினான்காயிடும், ஈரேழ்ஞாலமே நகருறுதெருக்கள் = பதினான்கு புவனங்களே அந்நகரத்திற் பொருந்திய வீதிகளாம்; தூயஞாலங்கள் = பரிசுத்தமாய அப்புவனங்களில், செறி = பொருந்திய, பொழில் திரள்கள் = உத்தியான பரம்பரை, சொல்லிய = கூறிய, வனம் உபவனமாம் = வனோபவனமாலையாம்,

(ஸ்ரீ - வீர.) முக்காலத்திலும் ஜகத்தில் லாததேயாய பிரஹ்மத்தின் கண் அதனால் இம்மூவுலகப்புரம் நிருமிக்கப்பெற்றது; அசேதனமாய இதற்கு நிர்மாணசக்தி யெங்கிருந்துண்டாயது எனின்? அநிஷ்டான சைதன்ய அநுக்கிரகத்தால் சேதன விரிஞ்சி யாகாரதைப் பிராப்தியாதலின் என்கவென்கின்றார்: பிரதிபாச அநுசந்தான மாத்திரத்தானே விரிஞ்சித்தன்மையை யடைந்து என்பது. அதேதிரிஜகத்புரம் முன்வர்ணித மென்கின்றார்: யாண்டு இவ்விஸ்தாரப் பிரபைமண்டல சூரியாதிப் பிரபையானே யொளிரப்பெற்றனவாய லோக கோசங்கள் பதினான்கும் உள்ளனவாமோ; பிரசித்தமாய வநோபவனமாலையும் யாண்டு உத்யானபரம்பரையாமென வர்ணிதமாமோ.

(ச.) நாயகர் = லோகேசர், (தூயஞாலங்கள்) = மாலையென்று சொல்லிய,

மேருமந்தரமே முதலவங்ககிரின் மேவியவிநோத வெற்பினமாஞ்
சூரியன்திங்கள் காற்றிலுலசையாச் சுடர்களா நித்திலமாலை
நீருயர்நதியின் றிரள்களாம்வாவி நிகழ்த்தியவே ழெனுமவைதாம்
பேரியல்வடவை கமலமாய்ப்பூத்த பெருங்கட லேழுமேபெரியோய்.

(ப - ரை.) மேருமந்தரமே முதல = சகியமந்தரமேருபருவதங்கள், அங்ககரின் = அப்புரத்தின்கண், மேவிய = பொருந்திய, விநோத வெற்பினமாம் = கிரீடாசலங்களாம், சூரியன்திங்கள் = சூரியசந்திரர்கள்; காற்றிலுலசையாச் சுடர்களாம் = பிரசண்டவாயுவிலுலமசையாத சீத உஷ்ணதீபங்களாம்; நித்திலமாலை = முத்துமாலை, நீருயர் நதியின்திரள்களாம் = ஜலப்பிரவாகம் நிறைந்தயாறுகளின் கூட்டங்களாம், வாவிநிகழ்த்திய ஏழெனும் அவைதாம் = ஏழுவாவிகள் என்று சொல்லிய அவைதாம், பேரியல் வடவை கமலமாய்ப் பூத்தபெருங்கடல் ஏழுமே=கடலேயும் பருகும் பெரியதன்மைவாய்ந்த வடவாக்கினிகளேயே தாமரைகளாக வாய்க்கப்பெற்ற பெரிய சமுத்திரங்கள் ஏழு என்பவைகளே ஆம், பெரியோய் = மகாமதியையுடைய மைந்தா!

(ஸ்ரீ - வீர.) யாண்டுச் சகிய மந்தரமேருகிரிகள் கிரீடாசிகரிகளாமோ, யாண்டுதான் சீத உஷ்ணதீப்திகள் வாய்ந்த சந்திர அருக்கதீபங்கள் காற்றிலுலே அக்ஷதங்கள் = அணையாதனவாமோ. கொடிநிகர் முத்தமாலையேழ்வாவி யென்பதற்குப் பொருள் கூறுகின்றார், சூரியகிரணங்களால் மாலோலதரங்க உத்துங்கமுத்துக் கணிறைந்த நதிகள் பிரவகிப்பதே

யாண்டு நன்முத்துமாலைகள் நடிப்பனவாமோ, தரங்கங்கட்குத் தீர்ளச்சாமியத்திற் பொருத்தம், சூரியகிரணங்காலு மாலோலத் தன்மையாம். வடவாக்கினிகளேயே அம்புஜங்களாகவும், மேன்மைவாய்ந்த மணிரத்தினங்களேயே தாமரையங்குரங்களாகவும், பொருந்திய இகூ-ரூ கூரிராதிசலிலங்கள் எந்நகரத்தின் கண்ணே வாபிகள் ஏழுமகா அர்ணவங்கள் ஆமோ. நூற்கிளர் வினைகளான் மேற்கதியாமே, தாழ்க்குறுமவத்தினுற் கீழ்க்கதியாமே, மங்கிலாவடிவாம் வணிகமா நெறிகளாற், சங்குலமிருத்த தாமந்தமா நகரம், எனயாது ஓதப்பெற்றதோ அதன் பொருளேக்கூறல்:—கீழிலும் பூமியிலும் அங்ஙன்மேலிலும் ஆகாயத்திலும், புண்ணியங்களாற் தன ஸ்ரீயையுடைய நரர்களாகிய கரும உபாசனே யதிகாரமுற்ற ஆரியர்கட்கும் அமரர்கட்கும் "செயல்வகையா னீங்களவர்திறம் போற்றுமாங்கவரும், புயல்வகையா லுங்களேயேபுரம் போற்றிப் புரந்தருள்வ, ரியல்வகையானது பிழையீரெனி லிரண்டுதிறத்தீரு, முயல்வகையான லனடைவீரென நிலத்தோர்க் குரைத்தனனுல்" என்று ஸ்ரீ பகவானருளிய நியாயப்படியே புண்ணியவதன் பலக்கிரிய விக்கிரயங்களாம்; தேசச்சுற்று வாகிகளாகிய கருமாதிகார வெளிப்பாடுற்ற கிராதர்களுக்குப்பாவ வதன்பலத்தாவரநிரியக் காதிகளோடு பரஸ்பர உபகாரமிருதிப் பாட்டால் கிரயவிக்கிரயங்களாமென வுணர்ந்து கொள்ளலாம்; இத்தகைய விவகாரம் எதன்கண்ணுமோ, (92)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இந்நகரத்தில் இவன்றருபாவறையினங்கள் எனக் கூறியதன் கருத்துரைத்தல்:—இனையவென்பது.

இனையமாநகராஞ் சகத்திடை முன்னமியம்பு சங்கற்பமன்னவனுல்
வினையினுல்வந்த வுடல்கள் பாவறையா மேற்பதத் திமையவரென்றும்
வனையகீழ்பதத்தி ஞகரேயென்று மனிதரீரடுப் பதத்தென்றுந்
தனைதருவாத வெந்திரவிலசயாற் சுழல்வனதசைச் சுவரகங்கள்.

(ப - ரை.) இனையமா நகராம் சகத்திடை = இத்தகைய மகாமகிமைவாய்ந்த பட்டணமாகிய இவ்வுலகத்தில், இயம்பு = முன்மொழிந்த, சங்கற்பமன்னவனுல் = சங்கற்ப அரசனுல், வினையினுல் = கருமவசத்தால், வந்த = தோற்றப்பெற்ற, உடல்கள் = தேகங்கள், பாவறையாம் = அபவரகங்களாம், மேற்பதத்து = உம்பருலகில், இமையவர் என்றும் = தேவர்கள் எனவும், வனையகீழ்பதத்தில் = அம்பராமதோ வுலகத்தமைக்கவே, நாகரேயென்றும் = நாகசாதிகளே எனவும், நடுப்பதத்து மனிதரே யென்றும் = மத்தியபூவுலகாமிம்பரில் மநுடரேயெனவும், தனைதருவாத எந்திர = வேகமிருத்த வாயுயந்திரத்தினது, விசையால் = பிரவாகத்தால், தசைச்சுவரகங்கள் = மாமிசமண் விகாரங்கள், சுழல்வன = சலித்துழல்வனவாம்,

(ஸ்ரீ - வீர.) அப்புரமேயாய இச்சகத்தின் கண்ணே சங்கற்பமன்னவனுல், தனதுவினையாட்டின் பொருட்டு விசித்திரங்களாய தேக அபவரகங்கள் செய்யப்பெற்றனவாம்; சில கீர்வாணப் பெயரினர் மேலேசேர்க்கப் பெற்றவராவர், சிலநாகாதியர் கீழேசேர்க்கப் பெற்றவராவர் சில நரரென்பவர் இடையிலே இயைவிக்கப் பெற்றவராவர், வாதயந்திரங்களாய பிராணன்களின் பிரவாகத்தானே, மாம்சங்களேயாய மண்களின் விகாரத்தானே யாக்கப்பெற்ற அபவரகங்கள் உழன்றுதிரிவனவாம். (93)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அநேகவகை யாகவமரும் அபவரகங்களில் அகங்காரத்தோடும் அவ்வரையன் அலைவன் எனல்;—பல்லென்பது.

பல்வகைதானே யியங்குறுமுடலாம் பாவறைதோறு மவ்வேந்த
னல்வழியுணர்வை நோக்குறகடுங்கு நலமிலாவகங் கூமென்னும்
வல்லவிப்பேய்கள் பொய்களாயிருந்தும் வந்துமெய்போ லெழுமவற்றோ
டொல்வதாம் விநோதம் புரிதருங்கணத்தி லுண்டுமாமில்லையுமாகும்.

(ப - ரை.) பல்வகைதானே = நானாவிதமாக, இயங்குறும் = விளங்காநின்ற, உடலாம் பாவறைதோறும் = தேகங்களாகிய வபவரகங்கள் தோறும், அவ்வேந்தன் = அம்மன்னவன், நல்வழியுணர்வை = நிட்காமிய கருமத்தான் மனத்தூய்மை வாயிலாய்ச் சிரவணஞ்செய்கொண்ட டையப்பெறும் பரமஞானத்தை, நோக்குற = காண்புற்றபோதே, கடுங்கும் = அச்சத்தை யடையும், நலமிலா = எவரும் அடரும் பிறவிக்கடி யென்றுணர்ந்த கற்றமுயலுந்தீய, அகங் காரம் = அகங்காரம், என்னும் = என்று பிரக்கியாதிபெற்ற, வல்ல = வலிமைவாய்ந்த, இப்பேய்கள் = இம்மகா இயக்கர்கள், பொய்களாயிருந்தும் = மாயாமயங்களாக இருந்தும், வந்து = சங்கற்பமன்னவனு லுண்டாக்கப்பெற்று, மெய்போல் எழும் = சத்தியம்போலச் சர்வாங்கமுடைத்தாம், அவற்றோடு = அம்மகா அகங்கார இயகூர்களோடும், ஒல்வதாம் = பொருத்தமாக, விநோதம்புரிதரும் = மிகவும் கிரீடைசெய்து கொண்டிருப்பன், கணத் தில் = கண்கரித்தில், இனிதுதயத்தை யெய்துவன், இல்லையும் ஆகும் = தனது இலயத் தையுஞ் சார்வன்.

(ஸ்ரீ - வீர.) அவ்வபவரகங்கள் ஊன்றப்பெற்ற வெள்ளெலும்புகளாம் தூண்களோடு கூடி னவாம், விசித்திர முற்றனவாம், தைலவர்க்கங்களானும் பசையுற்ற வாசனைத் திரவியங்களா னும் தோற்பூச்சுற்றனவாகிப்பளபளப் புற்றனவாம், வேண்டிய இடங்களில்மயிர்கள்நெருங்கித் தகாரமைகொண்டு கசித்து கண்கட்கு அமலமாய் ரமணீயமாயிருப்பனவாம்; இவற்றுட் சில சிரகாலமிருந்து போவனவாம், மற்றுஞ் சிலவோ விரைவில் மரிப்பனவாம், சிலவோகேச வடிவங்களாய கரும்புற்புதர்ச் சிறப்பினுல்லாசத்தா லாக்கப்பெற்ற மறைப்பின் கவினையுடை யனவாம். இது விரிமயிர்க் கற்றையான்மேய்ந்த என்பதன் விவரணமாம். மந்தமாருதஞ் சூழ்சாலகம் ஒன்பான் மருவின வென்றதை விவரணப்படுத்தல்:—காது கண்மூக்கு முதலிய நவத்துவாரங்களோடு கூடியவாம் எப்போதும் வீசிக்கொண்டிருக்கும் பிராணவாயுவினுலே உஷ்ணசீதளங்க ளுடையனவாம். பிராணனுக் குஷ்ணத்தன்மையும் அபானனுக்குச் சீதத் தன்மையும் பிரத்தியகூ சித்தமாம் ; கர்ணநாசி முகதாலு வாதிவாதாயனங்கள் என்னும் பலகணிக் கூட்டங்கள் நிறைந்து நிலவுவனவாம், புஜாதியங்க மார்க்கங்களையும் உடையன வாம், ஐந்து இந்திரியங்களாகிய குதீபங்களை யுடையனவாம், ஈண்டு மூலத்திற்குதீப மென்னும் விவாணத்தானே முன்மொழியப் பெற்ற தீபபஞ்சக மென்னுமிடத்திற் சங்கப் பொருளி லேற்பட்ட .கன். விருதிதந்திரத்தாற்குத்தையையும் இலக்குமென்னுங் கருத்து குறிப்பிக்கப் பெற்றதாமென் றுணர்ந்துகொள்க. பகர்ந்த சிறப்புகளனைத்தையும் கவிநாயகர் பல்வகையி லடக்கிப் பகர்ந்தார். அகங்கரப்பேய்கள் காத்தளிப்ப வென்பதன் விவரணம்:— ஹே மகாமதியை யுடையோய் ! அவற்றுள், பரமாலோகபயங்காளிகளாகிய அகங்காரமகா யகூர்கள் மாயையாற் சங்கற்பத்தா லாக்கப்பெற்றூர்கள். பரமாலோகப்பயங்காளிகள் என்ப தற்குப் பரமாத்ம தரிசனத்தான் ஹிருதயக் கிரந்திவிடிவ அகங்காரகூய சுருதியானே, பரமத் தின்பார்வையாற் பயப்படுவன என்பது !தாற்பரியமாம். தேக அபவரகங்களினுள்ளே அம் மன்னவன் அசத்தினின்றும் வந்தவர்களாயமகா அகங்காரயகூர்களோடு கூடி எப்போதுமே அத்தியந்தம் நன்குவினையாடிக் கொண்டிருப்பன். அற்றேல் தேகமே யகங்காரம் அயலன் றெனின் அற்றன் றென்கின்றூர்:—குதிர்க்குட் பூனைபோலும், தோற்பைக்குட் பாம்புபோ லும், வேணுவின்மாட்டு வெண்டாளம் போலும் தனுவின்கண் ணகங்கார மிருக்குமென்

றறியலாம். தங்கிரீடனப் பிரகாரத்தைச் சாதித்தல்:—தேகதேதங்களிற் சங்கற்ப விருத்திகள், சாகரங்களிற் தரங்கங்கள்போலவும் தீபம்போலவும் கணத்தில் நன்குதயங்களாம், கணத்தில் நனி நாசங்களாம்.

(ச.) தீபம்போல், உண்டுமாய் = கூணத்திலுதிப்பதும், இல்லையுமாகும் = நசிப்பதுமாம். (94)

காயமென்றுரைத்த பாவறைதோறுங் கடலிடையலைகள் போற்றோன்றி
மாயுமேலியற்று மனைகளில்விடாமல் வருமிவனியற் றியவெல்லா
மேயதோர்கணத்தில் வீண்களாய் நசிக்கும்வீணி லேதிரிதருமிவன்ரு
ஞயதன்சங்கற் பத்தினுலிருக்கு மவ்வளவருந் துயருழக்கும்.

(ப - ரை.) காயமென்றுரைத்த பாவறைதோறும் = சரீரமெனச் சாற்றிய அபவரகங்கள் தோறும், கடல் இடை அலைகள்போல் தோன்றிமாயும் = சமுத்திரத்தின் கண்ணே தரங்கங்கள் போன்று உதித்து நசிக்கும், மேலியற்று மனைகளில் விடாமல் = இனிமேலுண்டாக்கும். புரங்களில் இடைவிடாமல், வரும் = அவ்வப்போது வந்துசேரும், இவன் = இவ்வரையன், இயற்றிய எல்லாம் = செய்தயாவும், ஏயதோர் கணத்தில் = பொருந்தியது ஒரு கணத்திற்றானே, வீண்களாய் = வாளாவிரைவாகவே, நசிக்கும் = அழியும், வீணிலேதிரிதரும் இவன்ரூன் = இவன் ஒருபோதும் இன்பமென்பதே யில்லாமலேயுழலும், ஆயதன் சங்கற்பத்தினுல் = உண்டாகிய தனது சங்கற்பத்தினுல், இருக்கும் அவ்வளவு = உண்டாங்காறும், அருந்துயர் உழக்கும் = அநந்தந்துயரையே அடைந்தழும்.

(ஸ்ரீ - வீர.) மாயும் வரையுரையுரைத்தாமுன். அவற்கிச்சை உண்டாம் என்பதாதியின் ரூற்பரியம் முன்மொழிந்த விரோதபரிகாரத்தானே வருணித்தல்:—மேலென்பது. பவிஷ்யத்து நவகர்மாணபுரத்தை அவனக்காலடைந்திடுவன், எக்காற் சங்கற்பிக்கப்பட்ட வஸ்துவைக் கணமாத்திரையானே நோக்குறுமோ; அதனுல் விரைவில் அவன் விநாசமுறுவன் என்பதன் ரூற்பரியமுரைத்தல்:—நனுக்கனு அவஸ்தைகளில் அத்தியந்தம் சுழல்வதனுலுண்டாய ஆயாசமடைந்து விசிராந்தி சுகப்பொருட்டு அசங்கற்பன மாத்திரத்தானே துயிலின்கண் நாசத்தன்மையானே அதாவது மிகுதியாமிலயமாய காரணபூத அவித்யாமாத்திர பாவத்தானே சம்பவஞ் சத்தை யென்பதாம். தானே விரைவில் விநாசத்தையடையும். நானுஜன்ம கோடிகளில் ஆயாசப்பட்டவனுக்குந் தைவயோகத்தானே வைராக்கியாதி சம்பத்துண்டாகித் சாஸ்திர ஆசார்ய சமாதியப்பியாசாதி பலத்தானே ஆத்மதத்வ சாக்ஷாத்கார மூலதாகிய வழி சங்கற்பமூலஞ்சரீமபுதலானே, அசங்கற்ப மாத்திரத்தானே சிரேயசாய மோக்ஷப்பொருட்டுச் சம்பவம் நிர்விருதியாம். இவனது சங்கற்பநாசத்தானே வாசனை க்ஷயத்தாலுளதாய சூனியபாவமாக விருத்தல் பரமமேன்மையின் பொருட்டேயாம், மீண்டு மூதிப்பனென்பதன் கருத்துரைத்தல்:—சுயம் சங்கற்பமாத்திரமாகவே பாலயக்ஷனென்னனத் தோற்றுநிற்கும், அதுவந்தனது அநந்த துக்கப்பொருட்டேயாமலது ஒருபோதும் ஆகந்தத்தின் பொருட்டாகாதாம். (95)

இறையுமோர் சுகமற்றிரங்குவோன் ரூனுண்டென்பதோர் பாவனையாலே
நிறைசகமியற்றுந் தானிலதென்றே நினைத்திடிலக் கணத்திறந்து
குறைவுறுகதிர் முன்னிருளெனப் போருங்குறித்த சிற்றின்பமூற்றமிழு
முறைவுறுமிவனுக் குடல்கண் மூன்றுளவா முத்தமமத்திம மதமம்.

(ப - பை.) இறையும் ஓர் சுகமற்று = அணுவளவும் யாதொரு இன்பமுமில்லாமல், இரங்குவோன் = எங்கியிருப்போன், தான் உண்டு என்பதோர் பாவனையாலே = யானிருக்கின்றேன் என்னும் ஆன்மசத்தையினாலே, நிறைசுகம் இயற்றும் = விசாலமான விசுவத்தையுண்டாக்கும், தானிலதென்றே நினைத்திடில் = தான் இல்லையென்னும் அசத்தையினாலே, அக்கணத்து = அப்போதே, இறந்து = நாசமாக்கும், குறைவறு கதிர்முன் இருளெனப்போகும் = பூரணப்பிரகாசத்தின் சந்நிதியில் அந்தகாரம் இராதேபோதல்போல ஏகும், குறித்த சிற்றின்பம் உற்றமிழும் = வாஞ்சித்த சிறிய ஆனந்தங்கிடைத்த மாத்திரையானே அதுகொண்டே பெருமிதங்கொள்ளும், உறைவுறும் இவனுக்கு = தன்னதேயாயதுயர்தருஞ் சேட்டையினாலே பெரிதுபுலம்பித் திரியுமிம்மன்னனுக்கு, உத்தமம் மத்திமம் அதமம் உடல்கள் மூன்று உளவாம் = நல்லதென நடைப்பட்டதாயும் இடைப்பட்டதாயும் கடைப்பட்டதாயும் இலங்குந்தேகங்கள் மூன்று உள்ளனவாம்.

(ஸ்ரீ - வீர.) இந்த விசாலமான ஜகத்துக்கத்தை ஆன்மசத்தையினாலே மிகமிகவும் விரிக்கும், அசத்தையாலோ, தமமானது கனமான ஒன்றுந் தெரியாமையை யுண்டாக்கலே போலும் அழிக்கும், என்னசெய்வேன் என்பதாதி சோகக்கூற்றிற்கு விடைதான் தன்னுடையதேயான துயரந்தருவதாய நிஷித்தாசரண அபிமானத்திருப்சேஷ்டையினாலே மிகவும் சோதனஞ்செய்வன், கவட்டுத் தொன்மரத்திடுக்கில் விரைமாட்டிக்கொண்டு ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்குபோல வென்பதாம், இதன் வியாக்கியானம் பெரியஞான வாசிட்ட உற்பத்திப் பிரகரணத்திற் காட்டியுள்ளோம் ஆண்டுக்கண்டுகொள்க. சங்கற்பிக்கப்பட்ட ஆனந்தலேசங் கொண்டு தலைநிமிர்ந்து மிகமிதந்து மகிழும், அகஸ்மாத்தாக ஒழுகும்தேன் றுளியுண்ட கிழக்கழுதை மானும், இதனாலே கர்த்தபமென்னும் நீள்செவியனுக்கு விடயசுகமும் தேன்னக்கல்போல அதிதுர்லபமாயின்மற்றென்னே மோக்ஷ சுகத்தைப்பற்றிக்கூறுவது, எனத்தொனிக்கப் பெற்றதாம். பாலன்போலும் சங்கற்பத்தினாலேயே கணம்விரதியையடைவன், சுயங்கணம் இரதியையடைவன், கணம் விகாரத்தையடைவன். கோத்தனது ஆக்கியாயிகை வருணனப் பிரயோஜனங் கூறல்:—இவனைச் சர்வ பாகிய வஸ்துக்களினின்றும் திருப்பிச்சமாதி யப்பியாசத்தானும் தத்துவஞானத்தானும் ஆதரவுடன், வாசனைகயஞ் செய்து அஞ்ஞானத்தையழித்து மதியானது பிரத்தியக்கு வடிவமாய பிரஹ்மத்தை யினிது பற்றி இளைப்பாறுதலே யடையா நிற்கும்படிசெய்து மைந்தனீவாழ்தி. முன்னர் எம்மூன்று தேகங்கள் மொழியப்பெற்றனவோ அவற்றை விரித்தல்:—சங்கற்ப வடிவமாய அம்மனத்திற்கு அதம உத்தம மத்யமங்கள் என்னும் முத்தேகங்கள் உள்ளனவாம்.

(ச.) நிறைசுகம் = துக்கம் நிறைந்தசுகம், அக்கணத்து, சகமிறந்துபோகும், குறித்த = தனது துக்கமயமான சேட்டையால். (96)

(ஸ்ரீ-வீர - அ-கை.) முக்குணத்தின் முறைமையை மொழியல்:—முக்குணமென்பது,

முக்குணந்தானே மூன்றுடலாகி மூலமா மூன்றுலகிற்கு
மக்குணந்தன் னிற்றமங்கொள் சங்கற்பமாவது பகுதியின்செயலாற்
றுக்கமாய்வருந்திப் பாதலப்புழுவாந் தூயசத்துவங் கொள்சங்கற்ப
மிக்கநற்றருமஞானம் வீடுளதாய் வேந்தர்வேந் தெனமிகவிளங்கும்.

(ப - பை.) முக்குணந்தானே = சத்துவம் இரஜசுதமசு என்னும் மூன்றுகுணங்களே, மூன்று உடலாகி = முத்தேகங்களாகி, மூன்று உலகிற்கும் மூலமாம் = முச்சகத்திதியின் காரணமாம், அக்குணந்தன்னில் = அம்மூன்று குணங்களுள், தமங்கொள் சங்கற்பமாவது = தமோரூப சங்கற்பமானது, பகுதியின் செயலால் = பிராகிருதசேஷ்டையால், துக்கமாய்

வருந்தி = பரமகிருபணத் தன்மையை யடைந்து, பாதலப்புழுவாம் = கிருமிகீடத் தன்மை யையடையும், தூய = பரிசுத்தமாய, சத்துவங்கொள் சங்கற்பம் = சத்துவரூப சங்கற்ப மானது, மிக்க நல்தருமம் = இச்சையின்றிய மேன்மைவாய்ந்து மனத்தூய்மையாய நன்மை யைப்பயக்கும் நிட்காமிய புண்ணியம், ஞானம் = அதனுற் பரம்பரையா யுண்டாம் தத்துவ வுணர்வு, வீடு = அதனுலாம் மோகூம், என்பவற்றைப் பயப்பதாய், வேந்தர் வேந்தென மிக விளங்கும் = சாம்ராஜ்யம்போல இருந்திலங்கு மிகவும்.

(ஸ்ரீ - வீர.) தமசத்துவராஜப் பெயரியனவே உலகின்றிதிக்குக்காரணமாம், தமோரூப மாய சங்கற்பமோ நித்தியம் இயற்கையாலமைந்த பிரவிருத்தியினுலே நரகங்களிற் பிரசித்த மாய பரமகிருபணத் தன்மையை யடைந்து, பின் நரகசேடமாக கிருமிகீட ஸ்தாவராதி ஜன்மங்களையு மடையும். சத்துவரூபமாய சங்கற்பமோ தர்மஞானப்ராயணமாம், ஞானமாத் திர வுபரசனம்சாஸ்திரீயப் பிரவிருத்திநியமம் என்பதாம், சந்நிஹிதமோக்ஷமாம்ஜாண்யகர்ப்ப பாவாந்த தேவிதாபதமாம். இவையாவும் சத்துவ சங்கற்பத்தானே யுண்டாவனவாம்.

(க.) தமங்கொள் சங்கற்பம் = தமோரூப சங்கற்பம், பகுதியின் செயலால் = எப்போ தும் பிராகிருத சேஷ்டையால், பலவிதமாகும் = நாலுவித கிருமிகீடங்களாம். (97)

இராசதகுணசங்கற்ப மிவ்வுலகி லியல்புறுகும்பி யாயியங்கும்
விராவியவிந்த மூன்றையும் விட்டுமெய்ம்மை யாய்த்தானிலதென்னி
னிராகுலமாக வனேயசங்கற்ப நிமலமாம்பர பதமடையுந்
தூராசையாம் பார்வையணைத்தையு நீக்கித்துகண்மன மனத்திஞனி றுத்தி.

(ப - ரை.) இராசத குணசங்கற்பம் = இரஜோரூப மாய சங்கற்பமோ, இவ்வுலகில் = இச்சகத்தில், இயல்புறு குடும்பியாய் இயங்கும் = பொருத்தமான வியவகாரியாய்ச் சரிக்கும், விராவிய = கலந்த, இந்த மூன்றையும் விட்டு = இம்முக்குணங்களையும் விட்டு, மெய்ம்மை யாய்த்தானில தென்னில் = உண்மையாகத்தான் கூயமாயின், நிராகுலமாக அனேயசங்கற் பம் = ஆகுலமில்லாமல் அச்சங்கற்பம், நிமலமாம் பரபதமடையும் = தூயதாய பரமபதத் தைப்பெறும், தூராசையாம் பார்வை அனேத்தையும் நீக்கி = முடிவுபெறுத ஆசைவடிவங்க ளாய சர்வதிருஷ்டிகளையும் நன்ருக அகற்றி, துகள்மனமனத்திஞல் நிறுத்தி = குற்றமுற்ற மனத்தைக் குற்றமற்ற மனத்தாலே தகைந்து.

(ஸ்ரீ - வீர.) இராஜோரூப மாயசங்கற்பமோ மநுஷ்யஜன்மத்தால் அதற்குத்தகுந்த விவ காரத்தோடு கூடியதாகிப் புத்திரதாராதனரஞ்சிதமாய்ச் சிறுசாரத்தில் இனிதாக இருக்கும், ஹே மகாமதியையுடையோய் ! இம்மூவகையாய ரூபங்களையும் பரித்தியாகஞ்செய்து ஆத்தி யந்திக சங்கற்ப உச்சேதமாகியவழி அச்சங்கற்பம் பரமபதமென்னும் மோகூத்தையடையும் அற்ருயின், சங்கற்பகூயத்தில் யாதுகொல் உபாயம் எனின் அதனைக்கூறல்: சர்வபாகிய அர்த்த தரிசனங்களாய பாகிய இந்திரியங்களை வைராக்கியத்திஞனே அடங்குமாறு செய்து, நன்மனத்தாற் றுன்மனத்தை நிறுவி, உள்வெளிப் பொருள்களை யுடைத்தா யெழுந்தோடும் உள்ளத்தை கூயம்செய்தி.

(க.) இராசதகுண சங்கற்பம், இவ்வுலகில் = இச்சம்சாரத்தில், இயல்புறு = உலகவிவ காரியாய், குடும்பியாய் = புத்திரதாராது ரஞ்சிதமாய், இயங்கும் = திதிபெற்றுவிளங்கும். (98)

(ஸ்ரீ-வீர - அ-கை,) சங்கற்பகூயஞ் சாதிக்கப்பால தொன்றன்ருமும், ஆகலின் அய லொன்றே உபாயம் மோகூப்பொருட்டு உபதேசித்தருள வேண்டும் என்ரு சங்கிப்பக்கூடா தெனல்:—உள்ளென்பது,

உள்ளினும்புறத்து மெழுந்தசங்கற்ப மொருக்கிட வொருப்படநினைவா
யெள்ளருந்தவங்கள் கற்பகோடிகணீ யியற்றினும் பாதலம்பூமி
தள்ளருந்துறக்க மேவினுமுனக்குச் சாற்றுசங்கற்பமாய் வல்லாற்
றெள்ளியபரம பதத்தினேமேவத் தியக்கமிலுபாயம் வேறில்லை.

(ப - ரை.) உள்ளினும் புறத்தும் = ஆந்தரத்திலும் பாஹ்யத்திலும், எழுந்த = உதயமாகிய, சங்கற்பம் = எண்ணங்களே, ஒருக்கிட = கூடியுசெய்ய, ஒருப்பட நினைவாய் = ஒருமனப்பட முயல்வாய், எள்ளருந்தவங்கள் — தள்ளுதற்கரிய தாருணமாய தபசுகளே, கற்பகோடிகள் = அநேகங்கோடிகாலம், நீ இயற்றினும் = மைந்த நீசெய்தபோதினும், பாதலம்பூமி தள்ளரும் துறக்கம் மேவினும் = கீழுலகத்தையேனும் பூவுலகத்தையேனும் யாவரும் வாஞ்சைசெய்யும் மேலுலகத்தையேனும் அடைந்தீ, உனக்கு = நின்றனக்கு, சாற்று சங்கற்பமாய்வு அல்லால் = உபதேசித்த சங்கற்ப உபசமம் அல்லாது, தெள்ளிய பரமபதத் தினேமேவ = தெளிந்த மேன்மைவாய்ந்த நித்திய ஆநந்தபதத்தை யடைய, தியக்கமில் உபாயம்வேறு இல்லை = மயக்கமற்ற யாதொரு உபாயமும் மற்றொன்று கிடையாது.

(ஸ்ரீ - வீர.) வருட சகத்திரங்கள் நீ கடுந்தவம் புரிந்தபோதினும், விலயவியற்கை வாய்ந்தவுனது தேகத்தைச் சிலையின் கண்ணே அத்தியந்தஞ் சூரணமாக்கினும், அக்கினியின் கண்ணே பிரவேசித்த போதினும், வாடவக்கினியின் மாட்டுத்தான் வீழ்ந்தபோதினும், குழிக்கட்குப்புறவீழினும், கட்கதாரை மேகத்திற்கடிது வீழ்ந்திடினும்; சிவனே தான் விஷ்ணுவேதான் பதுமஜனேதான் உனக்குக் குருவாய்வந்து ஆநுக்கிரகஞ் செய்யினும், அல்லது, உலகநாதரென் ஞெண்டுறவியராம் ஸ்ரீ தத்தாத்திரேயர் ஸ்ரீ துர் வாசர்தாம் பெருங்கருணையை நிறைய மேவினராய் வந்துதிருவருள் செய்தபோதினும், அத்தியந்தங்கருணக் நிராந்தராய் ஆத்தியந்திக அகிம்சையை உபதேசித்தவராய யதீந்திராராம் புத்தரேவந்து போதித்தபோதினும், நீபாதாளத்தை யடைந்தபோதினும், பூதலத்தைப் பொருந்திய போதிலும், சுவர்க்கத்தை யடைந்தபோதினும், உனக்கு அந்தப்பரம பதத்தை யடையச் சங்கற்ப நாசத்தையொழித்து, அன்னிய உபாயம் யாதொன்றுமே கிடையாது. ஈண்டுப் புத்தரேவரைக் கவர்ந்தது யாதுகாரணங் கொல்லோ வெனின், அவைதிக மார்க்கங்களிலும். மோகமுண்டா மென்னும் வாஞ்சை காரணப் பொருட்டாமென்றறிக.(५५)

(ஸ்ரீ - வீர - அ - சை.) அச்சங்கற்ப உபசமமும் பிரஹ்ம சொரூபமேயாம் என்னுங் கருத்தாற் சிறப்பித்தல் துயர்களும் என்பது.

துயரகளும் விகாரங்களுமிலாப் பிரமசுகஞ்செய் சங்கற்பநாசத்தை
முயலுதிகனிசங் கற்பமாங்கயிற்றின் முடிவறு பாவனையெல்லா
மியல்புறுகோவை யா லெழுமந்தக் கயிற்றினை யெளிதினிலறுத்தான்
மயல்கொள்பாவனைக ளெங்ஙனேதூளாய் மடியுமோ வறிகிலமைந்தா.

(ப - ரை.) துயர்களும் விகாரங்களும் இலா = பாதங்களும் விகாரங்களும் இல்லாத, சுகம் பிரமசுகம்செய் = பிரஹ்மாநந்தத்தைப் பயக்கும், சங்கற்ப நாசத்தை = சங்கற்ப உபசமத்தை நனிமுயலுதி = நன்றுகமுயன்று தேடுதி, சங்கற்பமாம் கயிற்றில் = சங்கற்பமாகிய தந்துவில், முடிவறுபாவனை எல்லாம் = எண்ணமுடியாத சகலபாவனைகளும், இயல்புறு கோவையால் எழும் = சுவாபாவிகமாய்ப் பொருந்தும் நிரைநிரை கோத்தலினூலே நிகழும், அந்தக் கயிற்றினை = அச்சங்கற்பமாகிய தந்துவை, எளிதினில் அறுத்தால் = சுலபமாகச் சேதித்தால், மயல்கொள் பாவனைகள் = பிராந்தியினூலே கொண்ட அந்தப்பாவனைகள், மைந்தா =

ஹே குழந்தாய் ! எங்ஙனே தூளாய்மடியுமோ அறிகிலம் = எவ்வாறு பொடிப்பொடியாகி எங்குதான் பறந்தோடி விடுமோ யாமறிந்திலேம்.

(ஸ்ரீ - வீர.) யாதொருபாதமும் இல்லாததாயும் விகாரமில்லாததாயும் சுகமாயும் பரமபாவனமாயும் உள்ளசங்கற்ப உபசமத்தில், சாதனசதுஷ்டய சம்பத்தி சிரவணமனன நிதித்தியாசனவடிவ மேலான பிரயத்தினத்தைப் பெளருஷத்தாற் செய்தி அற்றேற் சங்கற்பமாத்திர உச்சேதத்தானே சர்வஜகத்பந்த நிவிருத்தியாங்ஙனம் எனின் ? உரைத்தல்:—ஹே அகக ! நிச்சயமாகச் சங்கற்பதந்துவின் கண் எல்லாப் பாவங்களும் பிரோதங்களாம்; ஆயின் அப்பாவங்கள் நஷ்டமாயின் யாண்டுச்செல்லா நிற்கும் எனின்கூறல்:—தந்துவானது சின்னமாகவே அவை கட்டுக்குலைந்தனவாகி யாண்டோடிவிடுமோ அறியேம்; ஆரோபிதமாய பாவங்கள் அதிஷ்டானத்திற் பாதமாகவே பிரண்டுக்கமனம் பிரசித்த மின்மையின் என்பது கருத்தாம்.

(ச.) சங்கற்ப நாசத்தை = பாவனமான சங்கற்போப சமத்தை, நீ நனிமுயலுதி, முடிவுறுபாவனே யெல்லாம் = அகிலபாவங்களும். (100)

(ஸ்ரீ-வீர - அ-னை) அற்றேல், இச்சங்கற்பாதி சர்வபாவ நிவிருத்தியானது அசத்தா ? சத்தா ? சதசத்தா ? ஆதியதென்மோகூ அசித்தியாம், இரண்டாவதேன் மோகூத்திலும் இருமையின் அடைவாம், மூன்றுவதேற் பக்கத்தாலாய் பந்தத்துவைதங்களின் நீக்கமின்மையாம் எனமுத்தியின் கண்ணும் நிர்த்துக்கத் தன்மைச் சித்தியிலதாம், என்பதாதி தோஷ கணங்களே ஒரேகூற்றுலகற்றி யியற்றத்தக்கதை யுபதேசித்தல்:—துனியென்பது.

துனிசெய்சங்கற்ப மின்றிமூன்வந்து தோன்றிய தொழில்வழிநிற்பாய்
பனிசெய்சங்கற்ப மாண்டிடிலறிவு பார்வைகளனைத் தினும்பற்றுத்
தனியுயர்பிரம பதமடைந்தகில விகற்பமாந் தனையெலாந்தள்ளி
யினியஞ்யேகத்து வத்திலேசுழுத்தி யிதயமுற்றின்பமே பெறுவாய்.

(ப - ரை.) துனிசெய் = துயரந்தரும், சங்கற்பமின்றி = சங்கற்பங்கள் ஒய்ந்தவனுகி, மூன்வந்து தோன்றிய = நுகர்வினேவயத்தால் வந்தடைந்த, ✻ தொழில்வழி நிற்பாய் = விவகாரபரனுவாய், பனிசெய் சங்கற்பம் மாண்டிடில் = தன்வடிவத்தை மறைக்கும் சங்கற்பமானது நன்முககூயமாயின், அறிவு = தன்சித்தானது, பார்வைகள் அனைத்தினும் பற்று = சேத்தியமென்னும் திருகிய உன்முகத் தன்மையை யடையமாட்டாது, தனி உயர்பிரமபதம் அடைந்து = ஒப்பில்லாத மேலான பரமார்த்தபதத்தை யறிந்தடைந்து, அகிலவிகற்பமாம் தனை எலாம்தள்ளி = சகலவிகற்பங்களாய ஜாலங்கள் யாவற்றையும் வலிதிற்றெலைத்து, ஏகத்துவத்திலே இனியஞய் = அவ்வத்விதீயபதத்தில் அன்புடன் அழுந்தி, சுழுத்தி இதயம் உற்று = சுழுத்தசித்தவிருத்தியுடையனுய், இன்பமே பெறுவாய் = விதசுகத்தை வீளை வித்தடைவாய்.

(ஸ்ரீ - வீர.) அசத்து, சத்து, சதசத்து, என்பனவாய எல்லாவிகற்பங்களும் சங்கற்பத்தானே பாவங்களுடன் உண்டாவனவாம் மற்றொன்றுலாகாவாம், அவை சங்கற்பத்தையே சத்தசத்தென்பதாக விகற்பிப்பான் சமர்த்துடையன வாகாவாம், ஈண்டு, பரமார்த்த சத்திய சங்கற்பப் பிரஹ்மத்தைத் தீண்டாவென வென்னே சொல்வது' காரியங்கட்கு யாண்டுத்தற் சம்பந்தியாய காரணத்திலும் ஆந்தரத்திற் குண்டுபாவமாமோ ஆண்டு என்னேயியம்புவது அசங்க பரமாத்மாவின் கண்ணென்பது கருத்தாம். எவ்வெதனே எவ்வாறு சங்கற்பிக்கின்றனேயோ, அவ்வது கணத்தில் அவ்வாறண்டாம்; ஆகலின் தத்துவமுணர்ந்த மைந்த ! ஒரு

போதினும் ஒன்றையுமே சங்கற்பியா தொழிவாய்; நிர்ச்சங்கற்பஞுகிக் கிடைத்தபடியாய வியவகாரபஞ்ஞதி, சங்கற்ப சம்க்ஷயமாகவே சித்தானது அசேத்திய உன்முகத் தன்மையையே யடையும். அற்றேல் மோக்ஷசம்பாதனத்தில் க்ஷுத்தியாது கொல்லாமாலோ வெனின் ஆண்டுரைத்தல்:—உண்மை யொன்றையே யியற்கையாக உடைய பிரஹ்மம், அசத்தியமாயாவையத்தானே சுரநரதிரியக்காதி எண்பத்து நான்கிலக்கமென்னும் யோனித்வாரத்தால், அவ்வப்பிராணிபேதரூபமாக வெழுந்துவாளாவே ஜகத்துக்கத்தை யநுபவிக்கின்றது. இஃது ஆன்மாவாகிய தனக்கு ஒவ்வாததேயாம். அங்ஙாஞயோனி ஜந்மநிமித்தத்தாலும் பெருந்துய ஹரப்பொருட்டேயாய மறித்துமறித்தும் மரித்தலிஞலும், ஹே அநக ! நினக்கென்னே பயன் ? யாது அதுக்கப்பொருட்டோ அதனைப் பிராஞ்ஞர் நன்குதொடர்வ ரீண்டியலல்வாம். ஆயின் அடியேனுற் செய்யத்தக்கது யாதுதானெனின், அருளல்:—தனியுயரென்பது. நீ தத்துவஞ்ஞத் தன்மையை யடைந்து மூலஉச்சேதவலுவானே விலக்கமுடியாத விகற்ப ஜாலத்தை விலக்கி, மோக்ஷமெனப் பெயரிய எவ்வத்விதீய பதமுளதோ அதனை, நிராதிசய ஆநந்த மடைதற்பொருட்டுச் சுழுப்த சித்தவிருத்தி யுடையவனுய் நனவிற்சுழுத்தி நிலைமேவி நன்ருயெல்லா முள்ளகற்றி, நினது பெருமுயற்சியிஞலே நீசாதித்தடைதி.

(ச.) பார்வைகளனேத்தினும் பற்ரு = அசேத்தியோன் முகமாம், இதயமுற்று = சித்தவிருத்தி சுழுத்தியடைந்து, இன்பமே = பேராநந்தத்தை, பெறுவாய். (101)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சங்கற்பத்தின், உற்பத்திப் பிரகாரத்தையும் ரூபமுடைமையையும், கனதைவகையையும், எவ்வித உபாயத்தானே விநாசமா மென்பதையும், குமாரன்கேட்ப முனிவர் யாவற்றிற்கும் உத்தரங்கூறத் தொடங்கல்:—என்னலுமென்பது.

> என்னலுமுயர் சங்கற்பமே தென்னவெழுந்ததும் வளர்ந்ததுமாய்ந்து
> சன்னமாகியது மெங்ஙனமென்று தவஞ்செய்தா ரூரனைமைந்தன்
> பன்னியேகேட்ப வதற்கவனுரைப்பான் பரமமாயுண் டெனல்வடிவா
> மின்னியசமமா மறிவுகாண்ப வற்றின்மேவுற வெழுதல்சங்கற்பம்.

(ப - ரை.) என்னலும் = கூறியவண்ணம் முனிவர் மொழிதலும், உயர் சங்கற்பம் எதென்ன = மேலாயசங்கற்பமாயது எத்தகையது, எழுந்ததும் வளர்ந்ததும் மாய்ந்து சன்னவ்யாகியதும், எங்ஙனம் = இதனது உற்பத்தியும் விருத்தியும் விநாசமும் யாங்ஙனம், என்று = என இவ்வண்ணம், தவம்செய்தாரூரனை = பெருந்தவம் புரியும் அருந்தாரூர முனிவரை, மைந்தன் = புத்திரன், பன்னியேகேட்ப = அழுத்தமாகவினவ, அதற்கு = அவ்வினவிற்கு, அவன் = அம்முனிவர், உரைப்பான் = கூறுவதாவது, பரமமாய் உண்டெனல் வடிவாய் = அநந்த ஆத்மதத்துவமாய் சத்தாசாமானிய ரூபியாய், மின்னிய = விளங்காநின்ற, சமமா மறிவு = எங்கும் விளக்கந்தருஞ் சித்தானது, காண்பவற்றின் மேவுறவெழுதல் சங்கற்பம் = சேத்திய = (திருஷ்டி) உன்முகத்தன்மை யுறுதலே = (நன்ஞட்டம் கண்ணுதலே) சங்கற்ப அங்குரமென்பர், சேத்தியோன்முகத்தன்மையாது முன்மனமென வியாக்கியானிக்கப்பெற்றதோ அதுவே சங்கற்பவிருக்ஷத்தின் அவித்யாபீஜ உற்பவமாய பிரதம அங்குரம் என உணர்வர், என்பதாம்.

(ச.) புத்திரன் வினவுக்கு உத்தரம்:— எதென்ன = ஏத்தன்மையது: சமமாம் = சர்வவியாபியாகிய, உண்டெனும் வடிவாய் = சத்தாமாத்ர ரூபமாய்; அதனுலே, பரமமாய் மின்னிய = அநந்தாத்ம தத்துவந்தனது ரூபமாய் விளங்கும், அறிவு = சைதந்யம், காண்ப வற்றின்மேவுற எழுதல் = சேத்தியோன்முகமாக (பகிர்முகமாக) வெழுவதே, சங்கற்பம் = சங்கற்பாங்குர மென்னுஞ் சூக்ஷ்மரூபமா மென்றதாயிற்று. (102)

அற்பமாயெழுந்து தானுளதாகி யடைவிலேபையப் பையப்பருத்துத்
தற்பரமனமாம் வெளியினைமூடிச் சடத்துவந்திடத்தி லுண்டாக
வற்பவமுகில்போல் வளர்வுறுமைந்தா வுணர்வுகாண் பவற்றினையுன்னி
நிற்பதாந்தனக்கு வேறுபோற்கண்டு நிகழ்த்துசங் கற்பமாய்நிகழும்.

(ப - ரை.) அற்பமாய் எழுந்து தானுளதாகி = லேசமா யுண்மைபெற்று, அடைவிலே = முறையே, பையப் பையப்பருத்து = அதுவே மெதுவுமெதுவாகக்கனத்தன்மை யையடைந்து, தற்பரமனமாம் வெளியினைமூடி — உண்மையிற் பரம்பொருள் வடிவமேயாய மனமென்னும் ஆகாயத்தை நன்குவியாபித்து, சடத்துவந்திடத்தி லுண்டாக — திடமான ஜாட்டிய முண்டாதற் பொருட்டு, உற்பவமுகில்போல் = ஆகாயத்தில் உண்டாயமுகில் ஆகாயத்தை மறைத்துவிரிவதேபோல, வளர்வுறும் = விருத்தியாகும்; மைந்தா ! = ஹேகுழந் தாய் ! உணர்வு = அறிவானது, காண்பவற்றினையுன்னி = திருஷியங்களைச் சிந்தித்து, நிற் பதாம் தனக்குவேறுபோல் = நிலையாகிய ஆன்மாவிற் கன்னியம்போல, கண்டு = பாவித்து, நிகழ்த்து சங்கற்பமாய் நிகழும் = சொல்லாநின்ற சங்கற்பத் தன்மையை யடையாநிற்கும்.

(ஸ்ரீ - வீர.) லேசமாக அடைந்த சத்தையை யுடையதாகி அதுவே மெதுவாகக்கன தையையடையும், யாதின்பொருட்டோவெனின் ? அந்தச் சித்தாகாசத்தையே எல்லாவாற் ரூனும் எங்கும் வியாபித்து, அதிஷ்டானசித்தினது சித்தியற்கையை மறைத்தலாற் சடப்பிர பஞ்ச ஆகாரசம்பத்தியின் பொருட்டு என்பதாம். எதுபோல் எனின்? மேகம்போலு மென்ப தாம். இவ்வண்ணஞ் சமஷ்டிசங்கற்பத்தாற் சகத்துற்பவ மூரைத்து அவ்வாறே மதியகங்கார வுயிர் புலனுடம்பாதியாகார வியஷ்டிசங்கற்ப உற்பத்தியை யுரைப்பார் உணர்வெனத் தொடங்குகின்றார், சித்தானது சேத்தியத்தை ஆன்மாவினும் அன்னியம் போலப்பாவித்துச் சங்கற்பத்தன்மையை யடையும்.

(ச.) அற்பமா யெழுந்து = சூட்சுமாங்கிசத்தால், உளதாகி = சொரூபமுள்ளதாய், தான் = அவ்வறிவே, சேத்திய உன்முகீபாவரூப மென்னுஞ்சங்கற்ப அங்குரமே, அடைவிலே பையப்பையப் பருத்து, தற்பரம் = சித்தினது சொரூபமென்னும், மனமாந்தெளிவு = சித் தத்துவத்தை, அறமூடிச் சடத்துவந்திடத்தி லுண்டாகி, உற்பவம் = சடான்மகப் பிரபஞ்ச பாவத்தாற் பரிணமித்தற்கு, வளர்வுறும், முகில்போல, = மேகமானது முன்பு அற்பமாயுள தாகிப் பையப்பைய ஆகாசத்தை யறமூடிச் சாட்டியமாய்ச் சடாகாரமாதற்கு வளர்வுறுதல் போலென்பது பொருள். உணர்வு = ஆத்மாவினது சைதந்யம், காண்பவற்றினை = திருசி யத்தை, நிற்பதாந்தனக்கு = ஆன்மாவுக்கு, வேறுபோல், உன்னிக்கண்டு, நிகழ்த்து = மேற் கூறப்படும், சங்கற்பமாய் நிகழும் = சங்கற்பபாவத்தைப் பொருந்துவது போலாம். (103)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மூலாங்குரத்தாற் சாகாங்குரங்கட்கே போலும், அதனினின்றும் பாகிய விடயாகார சங்கற்ப பரம்பரைகளானே விருத்தியைத் துக்கம்வரை யுரைத்தல்:— அறிவென்பது.

அறிவெனும்விதை சங்கற்பமாமூலையா மனையசங்கற்ப மாந்தன்னைப்
பிறிவுறத்தானே செய்துதான் பிறக்கும்பெரிதுற வளர்ந்திடுந்தானே
செறிதயரொழிய வின்பமொன் றில்லையாதலாற் செப்புசங்கற்ப
நெறியுறநினையே னிற்புறுநிலையி னிமிடமும் பாவனைநினையேல்.

(ப - ரை.) அறிவெனும் விதை = சித்தாகியபீஜம், சங்கற்பமாம் மூலையாம் = சங்கற்ப மாகிய அங்குரமாம், அனையசங்கற்ப மாந்தன்னை = அத்தகைய சங்கற்பமாகிய தன்னை,

பிறிவுறத்தானே செய்துதான் பிறக்கும் = பேதமாகத்தானே யியற்றித்தானுண்டாம், பெரி துறவளர்ந் திடுந்தானே = பெரிதாகவே சுயமேவிரைவில் விருத்தியாகும், செறிதுயரொ ழிய இன்பம் ஒன்றில்லே = பொருந்தாநின்ற துன்பமேயல்லாது இன்பமென்பது அணுவுங் கிடையவேகிடையாது, ஆதலால் = ஆகையினால், செப்புசங்கற்ப நெறியுற நினேயேல் = சொல்லிய சங்கற்பத்தைச் சங்கற்பியாதே, நிற்புறுநிலேயில் = இத்திதியில், நிமிடமும் = கணப்போதும், பாவனே = அநுபவித்ததை, நினேயேல் = எண்ணவேண்டாம்.

(ஸ்ரீ - வீர.) பீஜம் அங்குரத்தன்மையை யடைந்ததேபோல உணர்வானது சங்கற்பத் தன்மையை யடையும். சங்கற்பத்தானேயே சங்கற்பம் சுயமாகவே யுண்டாகாநிற்கும், விரை வாகச் சுயமாகவே விருத்தியடையும், வெறுந்துக்கப் பொருட்டே யல்லாமற் சுகப்பொருட் டல்லவாம். ஜலமாத்திரம் அர்ணவம் என்பதுபோலச் சங்கற்பமாத்திரமே ஜகத்தாம், சங்கற் பத்தைவிடுத்து அயலாக உனக்குச் சம்சாரதுக்கித் தன்மைகிை டயவேகிடையாது. அற்றேல் நிருவிகார அத்வயவத்துவில் யாங்ஙனம் நிர்ப்பீஜ ஜகத்துற்பவம் எனின் ' கேட்டி ! காகதா லீய யோகத்தானே அறிவின்மையினுனே யுண்டாகியுளதாம். விவர்த்தவாதங் கோடலானே இத்தோடம் பரிகரித்துக் கொள்ளலாமன்றே, கானனீர் இருநிலவாதல்போல அசத்தியமே விருத்தியாகின்றது ஆயின் இப்பிரமத்தினது நீக்கத்தில்யாது உபாயம் எனின் அதனேக்கூறுகின்றார்:—செப்பு என்பது சங்கற்பத்தைச் சங்கற்பிக்க முயலவேண்டாம், முன் னனுபவித்த சுகதுக்காதிபாவத்தை இப்போதுள்ள திதியின்கண்ணே யெண்ணவேண்டாம். மிருதிக்கு மூன்னிருப்பானது கிடைப்பினே அதன்கோடல் வீடலாதிப்பொருட்டாய சங்கற் பம் அவசிய முதயமேயாம் என்பது கருத்து.

(ச.) வடபீஜமங்குர மாவதுபோல் அறிவுசங்கற்பமாய், அனேயசங்கற்பம்; ஆந்தன்னே பீஜரூபமாகிய அறிவை, தானேபிறிவுற = சேத்தியபாவனஞ்செய்து, தான் =சுயமே, பிறக் கும்=உற்பவிக்கும், தானேபெரிதுறவளர்ந்திடும், அன்றியும் சங்கற்பம், செறிதுயரொழிய= கேவலத்துக்க நிமித்தமலது, இன்பமொன்றில்லே = ஒருபோதுஞ் சுகநிமித்தமாகாது, ஆத லால், ஏயமே யென்பதுபொருள். அதனது நாச உபாயத்தை யுபதேசிக்கின்றார் செப்புசங் கற்ப நெறியுறநினேயேல் = சங்கற்பத்தைக் குறித்துப் பிரவிருத்தியா திருப்பாய், நிற்புறு நிலேயில் = சகத்திதியில், பாவனே = தாற்பரியம்; நிமிடமுநினேயேல் = செய்யாதிரு பீஜம் அங்குரத் தன்மையை யடைந்ததேபோலச் சித்திற்குத்தன்னினும் அன்னியமாய சேத்திய பாவனமே சங்கற்பமாம் என்பதுபொருள். பொருந்துவது போலாமென்றதனுனே பிராந்தி மாத்திர கற்பிதமிது, உண்மையாயோ இலதாம் எனக்காட்டுவார் அனேய எனக்கூறினர். எக்காரணத்தானே சங்கற்பனம் = அசத்கற்பனமே சங்கற்பமாமோ, அக்காரணத்தானே அதற்கு நிமித்தாந்தர அபேக்ஷையின்மையின், சுயமேயுண்டா மென்பதாம். (104)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மநோநாசம் அநாயாசம் எனத்திருஷ்டாந்த பூர்வகம் தெரித் தல்:—இவ்வளவென்பது.

இவ்வளவான பாவனேயாலே யின்பமாமினேய சங்கற்பக்
தவ்வுறப் பெரியமுயற்சிகள் வேண்டாந்தாக்கு பாவனேயெலா மொழித்த
வவ்வகையாலே யிறந்துபோந்தன்னெஞ்சலர் வுறுபூவினேக்கசக்கிற்
கைவருவருத்த மொன்றுளதாகுங் கழறிய விதற்கது வேண்டா.

(ப - ரை.) இவ்வளவான பாவனேயாலே = முன்மொழிந்த அளவான பாவனேயினுலே, இன்பமாம் = பரமானந்த முடையவனே யாவாய், இனேயசங்கற்பம் = இச்சங்கற்பமானது, தவ்வுற = நின்னேவிட் டகலுவதற்கு, பெரியமுயற்சிகள் வேண்டாம் = அதிப்பிரயத்தங்கள்

எதுவும் வேண்டியதில்லை, தாக்குபாவனையெலாம் ஒழித்த அவ்வகையாலே = தோற்றும் எல்லாபாவனைகளின் அபாவமாத்திரத்திலுலே, இறந்துபோம் தன்னெஞ்சு = சுயமாகவே தனது சங்கற்பம் கூயமாய்விடும், அலர்வுறு பூவினைக் கசக்கில் = மலர்ந்தபுஷ்பத்தின் இதழினைக் கசக்குவதில், கைவருவருத்தம் ஒன்றுளதாகும் = கரத்துக்குண்டாகுங் கட்டமொரு சிறிதேனும் சேர்வதும், கழறிய இதற்கு அது வேண்டா = இயம்பிய இதனுக்கு அக்கட்டமும் அணுகாதாம்.

(ஸ்ரீ - வீர.) இத்துணையான பாவத்தானே பூதியின் பொருட்டுப் பவ்யனுவாய், சங்கற்ப நாசயத்தனத்திலுலே அச்சங்களுந் தொடரமாட்டாவாம், ஆகவே சங்கற்பகூயத்தானே சர்வ பயகூயமாம்; பூர்வபாவ அபாவனத்தாலும் சங்கற்பகூயமாம் என்னும் முறைதுணியப் பெறுமெனல், பாவனையென்றது. பாவனையபாவமாத்திரத்தானே சங்கற்பம் கூஷ்ணம் சுயமாகின்றது. இவ்வுபாயம் அத்தியந்தம் எளியதெனப் புகழுதல்: அலர் என்றது. காட்டுவாகை முதலிய புஷ்பங்களின் தளங்களைக் கசக்குவதாயினும், யாதேனுஞ் சிறிதுபிரயத்நம் எளிதாகவேனும் செய்யவேண்டுவதாகும், அபாவனை யென்பதன் மாத்திரத்தானே சாதிக்கத்தக்க சங்கற்ப நாசனத்தில் அதன் சம்பாவனையு மின்றும். வினம்பியதையே வீளக்குவார் கைவருமென்றார். புட்பத்தைக் கசக்குவதாயின் கையசைவுமுயற்சிமைந்த ! பொருந்தாநிற்கும், சங்கற்ப பரிகூயமாகிய இங்கற்பமிதில் அவ்வளவும் உபகாரம் ஒவ்வுதின்றும். சங்கற்பம் எதனுற் கெடுக்கத்தக்கதாமோ — அதனுல் ஸ்மிருதியினது அஸ்மரணமுண்டாகியபோது அரைநிமிடமாத்திரத்திலுலேயும் லீலையாகவே கெடுத்து விடலாம். அற்றுயின், சங்கற்பகூயத்தானே துக்ககூய முண்டாயினும் நிரதிசய ஆனந்த அடைவு எவ்பாயத்தானே சாதிக்கப்பாலதாம் எனின் ? நிரந்தரம் சுவபூர்ண ஆனந்த ஆத்மத்தன்மைச் சிந்தனமாத்திரத்தானே அடைவுற்றதன்பால், சொரூப நழுவாமை வந்துழியாது அசாத்தியமாமோ, அதுவும் சாதிக்கப்பெறும் எனலாம். அசாத்தியம் சாதிக்கப்பெறு மென்பது விப்பிரதிஷித்தமோமெனின் ? தானுகவே சித்தமாயுள்ளது என்னும் அது அகலமாட்டாது என்னுங்கருத்தாற் சாத்தியம் எனப்பெற்றதேயல்லாமல், உற்பத்தியாம் என்னுங்கருத்தால் உரைக்கப்பெறவில்லை; பாவங்களினது நீக்கமோ, அன்னியனுல் அபகாரம் அடைந்தவழியாதல்; நாசத்தால் பவாந்தரப்பான்மை பற்றியவழியாதல், என இருவகையாம்; ஹே குழந்தாய் ; நினதாத்மா அன்னியனுல் அபகரிக்கப் பெற்றதாய் எவனுடையதாம், அத்விதீய ஆன்மாவினும் அன்னியனெருவன் வெளியாவதில்லையல்லவா ! விநாசமாகித்தான் எது போற்றுனஃதாம் ? கடமோ அழிந்து கபாலமாவதுகண்டோம், ஆன்மாவோ என்னும், யாது ஆமோ அது நட்டத்தால் காணமுடியாததாம், ஆன்மா அயல்காண்பானுக உளதாதலுமிலையாம், ஆகலின் ஆன்மநாசம் சாகூியுடையதாகாதாய்ச் சித்தியுடையதே யாகாதாம், எனவேயாத்மரூப மோகூம்தானே சித்தமாகியகற்றவே முடியாததாம்.

(ச.) இவ்வளவான பாவனையாலே = சகத்திதியில் நிர்ச்சங்கற்பமான பாவனையால், நிராதரவான அபிப்பிராயத்தாலுமே, இன்பமாம் = கைவல்லியசுகம்பெற யோக்கியனுவாய், இனையசங்கற்பம் = இச்சங்கற்பம், தவ்வற = நாசமாக, பெரியமுயற்சிகள் வேண்டா = மிகுபிரயத்நம் வேண்டுவதின்று, தாக்குபாவனை யெலாமொழித்த அவ்வகையாலே = சங்கற்ப பாவனையின் அபாவமாத்திர மென்னும் அப்பிரவர்த்தனத்தாலே, தன்னெஞ்சு — சங்கற்பம் இறந்துபோம் = நசிக்கும். அலர்வுறுபூவினை = மாலதிமலரை, கசக்கின் = கொஞ்சங்கசக்குமிடத்தும், கைவருவருத்தம் ஒன்றுளதாரும் = அற்பயத்ந பேதமுண்டு, கழறியவிதற்கு = இச்சங்கற்ப நாசத்திற்கு, அது வேண்டா = ஓர் எத்தன பேதமுமின்று, யாதினுலெனில்? ()

எழுந்தசங்கற்ப பாவனைவிட்டா லிறந்துபோ மிதனையிங்கிதனு
லழுந்துறமாய்த்து மனத்தினுன் மனத்தையறுத்து நின்னறிவினீ நிற்பா
யுழுந்துருள்பொழுதின் முடியுமீதரிதோ வுலகமும் வானமுமொக்கு
முழுங்கியபொய்யாய்ப் போம்விகற்பத்தான் மூலத்தனையன்றி முன்னிலதால்.

(ப - ரை.) எழுந்த சங்கற்ப பாவனைவிடடால் இறந்துபோமிதனை = தோற்றிய சங்கற்பபாவனையை விடுதன் மாத்திரையானே இறந்துபோவதான இச்சங்கற்பத்தை, இங்கு = இவ்விடத்தில், இதனுல் = சங்கற்பத்தினுலேயே, அழுந்துறமாய்த்து = நன்றாகக்கெடுத்து, மனத்தினுன் = தூயசித்தத்தால், மனத்தை = நேயசித்தத்தை, அறுத்து = சிதைத்து, நின்னறிவில் = நின்சித்துருவத்தில், நீ = தானேயாமுடைய நீ, நிற்பாய் = நிலைபெற்றிருப்பாய், உழுந்துருள் பொழுதில் = ஒரு கணநேரத்தில், முடியும் ஈது அரிதோ = முற்றுப் பெறுமிது அரியதோரு காரியமோ' உலகமும் வானமும் ஒக்கும் = ஜகத்தும் ஆகாசமும் சூனியத் தன்மையானே சமமாம், முழுங்கிய பொய்யாய்ப்போம் விகற்பத்தால் = அத்தியந்தம் அசத்து மயமாகிய விகற்பத்தினுலே, மூலத்தனையன்றி = எழுந்தனவே யல்லாமல், முன்னிலதால் = பூர்வம் இல்லாததன்மையை யுடையனவே யாமாகலின்.

(ஸ்ரீ - வீர.) அசங்கற்பன சங்கற்பனத்தானே சர்வசங்கற்பத்தையும் பாதித்து, ஆத்ம தத்வ மஹரூபமனத்தானே தனது மனதைக்கெடுத்து, ஹே மனனசீலமைந்த ! நினது சித்துருவத்திலேயே நிலைபெற்று நிற்றிதீ இத்துணைமாத்திரஞ் செய்வதில் நினக்குமுடியாமையென்னுளது, அதிசுலபமான இதனைச்செய்வது மிகவும் எளிதேயாம், தேகாதி யியக்கமின்றிமநோமாத்திர விவகாரமாதலின் என்றபடி சங்கற்ப முபசாந்தமாயின் உபசாந்தமிதுவாம், சமூசாரதுக்கமகிலம் மூலத்தோடுங்கெடும் திடமதியோய் ! உரைத்த உபாயமிரண்டானே மூலமும் உபசாந்தமுறவே துக்கமும் அடியோடு மறுமென்பதாம். அத்றேற்சங்கற்பம் உபசாந்தமாயினும் ஜீவசித்தவாசனை முதலவற்றின் வயத்தானே துயரமுண்டாகவே செய்யும் என்றுசங்கித்து "அவற்றிற்குச் சங்கற்பத்தில் அந்தர்ப்பாவங் காட்டல்: அருத்த மறிந்தவரிலுமையோய் ! சங்கற்பமே, மனம் ஜீவன் சித்தம் புத்திவாசனை யெனவாம், காமத்தானே இவை வேரும், அருத்தத்தாலன்றும். சங்கற்பனத்தைவிட்டு ஈண்டுயாண்டுமே ஒரு சிறிதுமேயில்லவேயில்லை, அதனையே இருதயத்தினின்றும் சிதைத்தி, இதற்காகவேறு என்னைமிகச் சோதமுறுகின்றனை ! அற்றேற் சங்கற்பமே ஜீவஜகத்து விடிவமாயின் அது கூடியமாகவே கைவாத்மிய லக்ஷணசூனியத் தன்மையடைவுண்டாம், ஜீவனினும் அயலாக ஆன்மாவென்பது ஒன்றுளதாவ தில்லையன்றே வென்றுசங்கிப்ப, விடைதால்:—உலகமும் என்பது. எவ்வாறுதான் இவ்வாகாயம் சூனியமாமோ அவ்வாறுதானே ஜகத்துஞ் சூனியமாம். அசத்து மய விகற்பத்தினின்றும் எழுந்த இரண்டும் சமமேயாம், ஆரோபண விஸ்திருதமாதலின். மருமரீசிகை மறைப்பினும் மருப்பூமி சூனியவடிவ முடையது ஆகாதாம், இத்திருட்டாந்தமேபோல ஜகத்து ஜீவாதிதிருசியமாத்திர பாதமெய்தினும் திருக்குருவ ஆன்மா சூனியான்மகம் ஆகாதாம், கானனீர்போன்ற இவை ஒப்பேயாம் பொய்யேயாதலின்.

(ச.) பாவனை விட்டால் = சுகசாத்தியமான காரியமும் அன்றுதலினுனும், உபேக்ஷாமாத்திரத்தால் நிவிர்த்திப்ப தாதலினுனும், சங்கற்பம் இறந்துபோம் என்றதாயிற்று; இங்கிதனுல் = இவ்விடத்து அந்தர்முக சங்கற்பத்தினுல், இதனை = பஹிர்முக சங்கற்பத்தை, மாய்த்து = சேதித்து, மனத்தினுல் = சாஸ்திர சற்சங்கமாதி தீரத்தாற்றூபமற்றமனத்தால், மனத்தை = சிந்தாசந்தாபமான மனதை, அறுத்து = சேதித்து, நின்னறிவில் =

நினதான்மாவில், நீ நிற்பாய் = நீயிருப்பாய் என்பது விவேகம். உழுந்துருள் போதின் முடியுமீதரிதோ = இந்தமாத்திரத்தில் வருத்தம் என்னென்றதாயிற்று. சங்கற்பத்தினது பகிர்முகத்துவ நிவிர்த்திக்காகச் சகம் வியோமம்போற் சூனியமெனல். உலகமும் வானமும் = ஜகம் அம்பரம் என்னுமிரண்டும், முழுந்திய பொய்யாய்ப்போம் = அஞ்ஞானமய மாஷ, விகற்பத்தால் = விகற்பத்தினுலே, மூலத்து = எழுந்தவைகளாய், அளவின்றி மூடுதலால் = விஸ்தீரணங்களாதலால், கற்பிதத்துவ அவிசேடத்தினுல் இரண்டும், அற்று = சூனியத்துவ மென்பதுபொருள். (106)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தத்துவஞானிக்கு ஆயாசமியாதொன்று மில்லாமலே, உச்சேத யோக்கியமாகவே சமுசாரமலம் விஸ்தரித்திருக்கின்றதேயன்றிவேறல்ல; என்னை, அநாதியஞ்ஞானத்தாலுண்டாகியதிவிஸ்தீர்ணமாயதற்கும் இராஜதசுவப்பஞ்தி விப்பிரமத்திற்கும் பிரபோதமாத்திரத்தானே யுச்சேதங்காணப் பெறுதலின்; ஆனல் அசம்பாவனை விபரீத பாவனை முதலியமலமோ ஞானபூமிகை யப்பியாசவடிவப் புருடப்பிரயத்தத்தானும் நசிக்கும் என்னுங்கருத்தாற் கூறுதல்:—தண்டுலமென்பது.

(ச-அ - கை.) சீதங்கை, சுபாவிகமான மலத்திற்கு எப்படிப் புருடப்பிரயத்தனத்தால் நிவிர்த்திவருமெனச் சங்கித்துத் திருஷ்டாந்த முகத்தாற் றெளிவிப்பவராய்க் கூறல்:—தண்டுலமென்றது.

தண்டுலத்தோலுஞ் செம்பினிற் களிம்புஞ் சம்பந்தந் தொழில்விசேடத்தால்
விண்டுபோமதுபோற் புருடனுமலத்தை மேவியே போக்குதலியலுங்
கொண்டசந்தேக மொழித்துநீ முயல்வாய்குருவின் வல்லபவிளக்கந்தாங்
கண்டனமெனல் வீணுகுரீதானுங் கண்டனபரம் பொருட்பொலிவே.

(ப - ரை.) தண்டுலத்தோலும் = அரிசியின் உமியும், செம்பினிற்களிம்பும் = தாமிரத்தின் அழுக்கும், சம்பந்தம் = பற்றியதாம், தொழில் விசேடத்தால் = கிரியையின் சிறப்பானே, விண்டுபோம் = நசித்துப்போம், அதுபோல் = இத்திருட்டாந்தம்போல, புருடனும் = சேதனனும், மலத்தை = மொழிந்த களங்கத்தை, மேவியே = மயலாலுற்றே, போக்குதல் இயலும் = நீக்குதல்கூடும், கொண்ட சந்தேகம் ஒழித்து = உள்ளத்திலள்ளிய ஐயத்தையகற்றி, நீ முயல்வாய் = ஞானபூமிப்பயிற்சி யுடையவனுக நீயாதி, குருவின்வல்லப விளக்கந்தாம் = மகத்தான தென்னும் சம்பத்துக்களானே தீபியமானங்களாய போகவிலாசங்கள், கண்டனமெனல் வீணுகும் = சாசுவதங்கள் என்றுண்டாம் விப்பிரமம் நினக்காகாதொழிக, நீதானும் கண்டன = நீயுந்திருசிய மியாவும், பரம்பொருள்பொலிவே = அவ்வாத்மதத்துவத்தின் விலாசமேயாமென்பதே சத்தியம்.

(ஸ்ரீ - வீர.) விகற்பத்தானே மூலத்தமலம் சத்தியமாயின் கரியைக்கழுவுதல்போலாம் சிறிதுகழுவின் மலமேநிற்கும், முழுதுங்கழுவின் ஒன்றுமில்லாமற் போய்ப் புருடார்த்தமே எஞ்சாதாம். திஷ்கஞ சுகமானது அதண்டுல பூதமாயேதண்டுலத்தில் அகற்றப்பெறுதலே போல அசத்தாயே யுள்ளமலமகற்றத் தக்கதாகும், அநாதியாகவே அம்மலங் கற்பிதமாயினும் அநாயாசமாகவே யறிஞன் அறிவாலதை யகற்றுவன், தண்டுலத்தின் சருமமும் தாமிரத்தின் காலிமையும்கிரியையான்மைந்த இரிவதேபோலும் புருடனது மலமும் இரிந்தே போம். இதிற்சந்தேகமுற வேண்டியதே இல்லையாகலின் பெருமுயற்சியுடன் ஞானபூமி சம்பாதனமே செய்யவேண்டு மென்பதாம். சமுசாரி சுபாவத்தையுடைய வெனது, மகத்தாய சம்பத்துக்களினுலே விளங்குவனவாகிய இப்போக விலாசங்கள், சத்தியங்களும் சாசுவதங்க

ளுமாம் என்னும் பெருமயக்கம் வீணுகவே நினதுள்ளாகாதொழிக; — சமுசாரியாகிய நீயும் விஸ்தாரமாகிய அவ்விலாசங்களும், மற்றுமுள்ள இவ்வெல்லா ஜனனமாணுதி தீருசியமாத் திரங்களும், ஆக அவ்வாத்மதத்துவ மொன்றே விளங்குகின்றது, திருசியரூப மெதுவுமே சத்தாகிய அதற்கயலா யில்லவேயில்லை.

(ச.) தொழில் விசேடத்தால்=குத்துதன் முதலிய கிரியையால்; தண்டுலத்தோலும்= தண்டுலத்தினது சர்மமும், புளியுப்பாதிகளாற் றேய்த்து அலம்பலாதியால், செம்பினிற் களிம்பும் = செம்பினது களிம்பும், சகஜம் = சகஜமாயினும், விண்டுபோம் = நாசமாம், அதுபோல், புருடனும் = புருடனது மலஞ்சகசமாயினும், மலத்தை=அஞ்ஞானரூபமான அம்மலத்தை, மேலியே = சிரவணமனன நிதித்தியாசனுதிக் கிரியையைப் பொருந்தியே, போக்குதல் = விநாசஞ்செய்வது, இயல்பாம்=இயற்கையா மென்பது விவேகம், ஆதலின், கொண்ட சந்தேகமொழித்து நீ முயல்வாய், குருவின்=மகத்துக்களின், வல்லப =சம்பத்துக் களினுடைய, விளக்கத்தாற் கண்டனமெனல் வீண் — விளக்கமான விலாசங்களென தென்று அந்தக்காரணத்தில் வியர்த்தமாக விப்பிரமம் வேண்டாம், நானுநீதானுங் கண் டன = நீயும் விரிந்தவவ் விலாசங்களுமாகிய வீதனேத்தும், பரம்பொருட் பொலிவே = அவ்வான்ம தத்துவமே விளங்குகின்ற தென்றதாயிற்று. (107)

(ஸ்ரீ - வீர - அ - கை) ஸ்ரீ வசிஷ்டபகவான் ஸ்ரீ தாசூர முனிவருடன் கலந்து சம் பாஷித்ததை ஸ்ரீ இராகவருக் கருளல்:—என என்பது.

எனவவருரைத்த யாவையுங்கேட் டவ்விரவிலங் கவரைகாலனெய்த
மனமகிழ்ந்தருச்சித் தென்னெடுத்தளிர் மேல்வதிந்தன னிருவருமெய்ம்மைக்
கனகதைகளினும் காதலுற்றவர் போற்கங்குலைக் கணமெனக்கழித்தவ்
வனகனீங்கிக் கங்கையுற்றன னவன்கதை போலுமிச்சகமே.

(ப - ரை.) என = கூறிய பிரகாரம், அவர் உரைத்தயாவையும் கேட்டு = அத்தா சூரமுனிவரும் மைந்தரும் சம்பாஷித்துக் கொண்டிருந்த யாவற்றையுஞ் செவிகொண்டு, அவ்விரவில் = அந்தராத்திரியில், அங்கு = அவ்விருகூத்திடத்தில், அவரை = அவ்விருவ ரையும், நான் எய்த = யாமடைந்த மாத்திரத்தே, மனமகிழ்ந்து = பரமசந்தோடத்தையுள் ளத்தடைந்து, அருச்சித்து = பெரிதுபூசித்து, என்னெடுத் தளிர்மேல் வதிந்தனன் = எம் மோடுங்கூட அப்பத்திரத்தின்மீது அத்தாசூர முனிவரிருந்தனர், இருவரும் = யாங்கள் இரண்டுபேரும், மெய்ம்மைக்கனகதைகளினும் = தத்துவமயமான பெரும் விசித்திரக் கதைகளினும் பரஸ்பரம், காதலுற்றவர்போல் = ஆசைமிகுந்தவர் இரவினை நொடியிற்கழிப் பதேபோல, கங்குலை = அவ்விரவை, கணமென = சிறிது போதாக, கழித்து = அகற்றி, அவ்வனகனை = அந்தப் புண்ணியமுனியை, நீங்கி = விட்டு, கங்கையுற்றனன் = நான் = ஸ்ரீதேவநதியிற் புனிதமுறும் பொருட்டுச் சென்றேம் யாம், அவன்கதைபோலும் = அத்தா சூர ஆக்கியா யிகைபோலவேயாம், இச்சகமே=இவ்வுலகம் ஆமெனவே யெண்ணவேண்டும்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறல்:—ஹே இராகுல ககனசசாங்க இராகுநந்தன! யாம் இவ்வண்ணம் அவ்விருவர்தம் வியக்தமான சம்பாஷணத்தை அப்போது ஆண்டிரவிற் கேட்டு; பத்திரபுஷ்ப பலாகுலகதம்பதரு அக்கிரபாகத்தில், விருஷ்டிஜலவேடத்தை விடுத் துக் கீழேயிறங்கும் வடிவினதாய மேகமானது சிருங்க சிகரத்தில் மெதுவாகவந்து அமர்வதே போலக் ககனத்தினின்றும் சப்தமியாதொன்றுஞ் செய்யாமல் இறங்கினேம். இந்திரியநிக்ர கம் செய்வதில் மகாசூராய தாசூரமுனிவரை ஆண்டுக்கண்டேம், அவரும் அவணுற்ற வெம்

மைக்கண்டார், எழுந்தார் காதல்கூர்ந்தார் ஆசனம்விரித்தார் எம்மையெழுந்தருளச்செய்தார் வெகுபூஜா திரவியங்கள் கொண்டும் பத்திராபுஷ்ப பலாதிகள் கொண்டும் மிகவும் பூசைசெய்தார். பின்னர் அம்முனிவருக்கும் எமக்கும் பரஸ்பரம் உரைத்த சித்திரங்களாய தத்துவக் கதைகளானே ஆண்டே அவ்விரவானது மிகுந்த காதலுற்றவர்க்கேபோல முகூர்த்தமொத்துக் கழிந்தது. அவ்விடம் நின்று எழுந்துயாம் புறப்படவும் வெகுதூரம்வரை அவ்விருவரும் தொடர்ந்தனர், அவரையிரதினீங்கி அமரர் நதியையடைந்தேம். ஆக்கியாயிகையின் முன் மொழிந்த சங்கதியை நினைப்பூட்டுவார் அவன்கதைபோலு மிச்சகமே யென்றார். தாசூர ஆக்கியாயிகைபோலும் இதுவுமாம், என்னுமிது எம்மால் உனக்குப்போதப் பொருட்டு ஜகத்ரூப நீரூபணத்தில் உரைக்கப்பெற்றது, ஆகலின் வாஸ்தவம்போலத் தோன்றிமயக்கும் இரஞ்சனேயாய அவாஸ்தவமா மிதனைவிட்டுத் தாசூராரானே யுபதேசிக்கப்பெற்ற சித்தாந்த திருஷ்டியானே சந்தசம் உதாரமுடையவனுகி ஆத்மவானுகி வாழ்வாயாக.

(ச.) ஸ்ரீ வசிஷ்டமுனிவர்:—இரகுகுலாகாசச் சசாங்கனை இரகுநந்தனு! அவ்விரவில்; ஆகாயத்தினின்றிழிந்து, அங்கு = அக்கதம்பாக்கிரகத்தில் வசிக்கும் அவரை, யானெய்த, பின்பு அந்தத்தாசூரன் என்னைக்கண்டு மனமகிழ்ந்து. அதிக்கியாதிகளோடு வித்தாரமான கதம்பபத்திரங்களால், அருச்சித்து = அன்புற்றுப் பூசித்து, என்னைத்தளிர் மேல்வதிந்தனன், பின்னிருவரும் மெய்ம்மைக் கதைகளினுல் ஒருவருக்கொருவர், காதலுற்றவர்போல்= காந்தர்போல் கங்குலைக் கணமெனக்கழித்து, அவ்வனகனே = அத்தாசூரனே, நீங்கி, கங்கையுற்றனனுன் = நான் அமரநதியை யடைந்தேன், அவன்கதைபோலும் = அத்தாசூரனது ஆக்கியாயிகையேயாம் இச்சகமே — இச்சகமென்றே பாவிப்பாய். (108)

—:—

தாசூரன் கதை முற்றிற்று. ஆகதிரஷிருத்தம்.

(734)

கசன் கதை.

(ஸ்ரீ-வீர - அ-கை.) திருசியமானது சத்தா, அசத்தா, சதசத்தா, என்னுமிப் பகுத்திரயத்திலும் ஆண்டு அகந்தாதிரஞ்சனம் உசிதம் அன்றென்றும்; இவ்வுலகம் சகர்த்துருகமா அகர்த்துருகமாகர்த்துரு அகர்த்துரு சாதாரணமாய் உதாசீன ஆத்மசங்நிதி மாத்திரத்தானே கிடைக்கப்பெற்ற சொரூபத்தையுடையதா, என்னுமிம் மூன்று பகுங்களிலும் உனக்கு அவ்விரஞ்சனை பொருந்தாதென்றுங்கூறஇக்கதையைத் தொடங்குகின்றார்:=முடிவறு என்பது.

(ச - அ - கை.) முன்பு தாசூரன்கதையிற் சகஸ்திதிக்கு மாயிகத்துவஞ் சொல்லப்பட்டது, இப்போது திதிப்பிரகரண தாற்பரியஞ் சங்கிரகமாக உபதேசப் பிரகாரமாய்ச் சொல்லப்படுகிறது:—முடிவறு என்றது.

முடிவறுகாலந்தன்னின் மொழிதரு மாண்டுநூறு
நெடியளவெனினும் பற்றுதினையே நெடிதாய்நோக்கி
யொடிவறு பாரவேட்கை யுறுவதென் பொருள்களுன்னிப்
படர்வதா முள்ளத்தாசை பற்றறவொருக்கி நிற்பாய்.

(ப - கை.) முடிவறு காலந்தன்னின் = பரியந்தமில்லாத போதினது, அங்கிசமாக நோக்குமிடத்து, மொழிதரும் = பூரண ஆயுளாகப்புகலும், ஆண்டு நூறும் =சதசம்வற்சராங்

களும், நொடியளவு எனினும் பற்றுது = கணப்போதென்று கழறவுங்கட்டாது, இத னேயே = இவ்வற்பத்தினும் அற்பத்தையே, நெடிதாய் நோக்கி=மகா ஆயுளாக மகிழ்ந்து, ஒடிவறு பாரவெட்கை யுறுவதென் = கெடுக்க முடியாதபடியாய ஆசைச்சுமையை யடைவ தென்னே, பொருள்களுன்னிப் படர்வதாம் = அதுவேண்டும் இதுவேண்டும் என்று எண்ணி எண்ணி விசாலிப்பதாகிய, உள்ளத்தாசை = அந்தராஸ்தையை, பற்றற ஒருக்கிநிற் பாய் = அடியோடு நீங்கும்படியாகச் செய்து சுகிப்பாய்.

(ஸ்ரீ - வீர.) வரையறைவில்லாத காலத்தினதுயாதாவது ஒரு அணு அங்குசம்நூறுவருட மென்பது முடியாததே, சரச்சதம் = மாதுடதேக ஜீவனபரம அவதியாய நூறுவருடகால மாம், அநாதியநந்த பூர்வோத்தர காலங்களில் எப்போதுமே யின்மையின் அத்தியந்தம் அசம் பாவிதமாய அத்துணைக்கால மாத்திரத்தைப் பெரிதாயதிதிடமாய் நினைந்து மநுஷ்யதேக ஆன்மத்தன்மை யிலக்கண ஆச்சரியத்தை யுடையவனுகிய சர்வ இந்திரியத்ரக் அதீத ஆத்மா யாதின் பொருட்டோ அலைந்துதிரிவன், எல்லாவாற்றனுமே இது அநுசிதமாம்; ஆகலின் ஸ்திரீயாதி வஸ்துக்களின் சௌந்தரியத்தை நானுவகையாகச் சிந்தித்துச்சிந்தித்துளவாம் உள்ளத் திருஷ்ணையை யொழித் தாகந்திப்பாய்.

(ச.) நொடியளவெனினும் பற்றுது = அற்பமாம், இதனேயே = இந்நூறுண்டினை, நெடிதாய் நோக்கி = மகாயுளாகப் பார்ப்பவனுய், ஒடிவதுபார, வேட்கை = ஆதரம், உறுவ தென் = அநுசரிப்ப தென்னே, உள்ளத்து = அந்தக்கரணத்து, பொருள்களுன்னி=மகா சத்தாரூபமான பாவத்தை அநுசரித்தவனுய், படிவதாமாசை = சங்கற்பமயமான வாதரத் தை, பற்றறவொருக்கி நிற்பாய். (1)

மாலறவெங்ங னின்றுயங்ஙனே வாழ்வாய் பாரிற்
கோலநன்மணிகள் வேண்டா திருக்கவுங்கு றுகிப்பாயுந்
தூலநன்னிழல் போலுண்டா மாத்திரத் தோற்றமான
ஞாலமும் பரமந்தன்னி னலம்பெறத் தோன்றுமன்றே.

(ப - ரை,) மாலற = ஆசையாவும் அற்றமுறையில், எங்ஙன்நின்றுய் அங்ஙனே வாழ் வாய் = எவ்வாறுள்ளாயோ அவ்வாறே சச்சிற்சுகவானுயிருந்து விவகரிப்பாய், பாரில் = இவ் வுலகின்கண், கோலநல்மணிகள் = அழகியநல்ல இரத்தினங்கள், வேண்டா திருக்கவும் = இச்சையின்றி யிருக்கவும், குறுகிப்பாயும் தூலநல் நிழல்போல் = நெருங்கிப் பிரவிருத்திக்கும் ஆலோகம்போல, உண்டாமாத்திரம் = சத்தாமாத்திரமாக, தோற்றமான ஞாலமும் = இச் சகத் கணங்களும், பரமந்தன்னில் = பரமாத்ம தேவனிடத்தில், நலம்பெறத்தோன்று மன்றே = நன்மை பயப்பனபோலத் தோற்றும். அன்று ஏ அசைநிலைகள்.

(ஸ்ரீ - வீர.) ஆசையையடியோடு மழித்து யாதாய்ச் சேடித்து நின்றுய் அதுவாகவே யிருந்து இவ்வுலகின் கண்ணே ஹே அநகமைந்த ! லீலையாக விவகரிப்பாய் ! அகர்த்துருத்வ பதத்தையும் அதனிச்சையையும், கர்த்துருத்வ பதத்தையும் அதனிச்சையையும் மாந்திபரி ஷ்டமாக யாதானுய் அதுவாகவே நிற்பாய் என்றபடி லீலையாக விவகரித்த லியாங்ஙன மெனின், விவகாரத்தில் உதாசீனத் தன்மையுடைமையானே கர்த்துருபூதமாய், சர்வபாவத் துள்ளு மிருப்பதாய், சர்வத்தையுங் கடந்ததாய் உள்ள ஆன்மாவாகிய நினது, சங்கிதிமாத்திரத் தானே இச்சையில்லாமலே இங்ஙியதியானது விவகாராகாரமாக வெளியாகி விரிக்தோங்கு கின்றது; என்பதற்குத் திருஷ்டாந்தம்:—தீபசங்கிதி மாத்திரத்தானே இச்சையில்லாமலே பிரபை பிரகாசிப்பதே போலும்; நிரிச்சையுடையதாகவே இரத்தினம் இனிதிருப்ப ஒளியா

னது பிரவிருத்திப்பதே போலும்; பரமாத்மாவினிடத்திலே சத்தாமாத்திரமாக இச்சகத் கணங்கள் தோற்றும் என்பதாம்;

(ச.) மாலற = மநோபாவமற்று, எங்ஙனின்ரும் = எந்தரூபமாய்ச் சேடித்திருப்பாயோ, அங்ஙனே = அந்தரூபனும், அநகனே நீ லீலையினல், பாரில் = இச்சகத்தில், விவகரித்து வாழ்வாயென்பது பொருள், கோலநன்மணிகள் = இரத்தினம், வேண்டாது = பிரபைபிர விர்த்திக்கட்டு மென்று இச்சாரூனியமாய் இருக்கவும், குறுகிப்பாயுந்தூல நன்னிழல்போல்= பிரபைபிரவிர்த்திப்பதுபோல், பரமந்தன்பால் = பரமாத்மா நிரிச்சையா யிருக்கவும், அவன் சந்நிதியின், உண்டாமாத்திரம் = சத்தாமாத்திரத்தால், தோற்றமான ஞாலமுநலம் பெறத் தோன்றும். அன்று ஏ இரண்டும் அசை. (2)

(ஸ்ரீ-வீர - அ-கை.) கர்த்துருத்துவ அகர்த்துருத்துவக் கூற்றுகளின் விரைவையைக்காட்டி யுபசங்கரித்தல்:—ஆதலாலென்பது,

ஆதலாற் பரமந்தன் பாலகர்த்தனே கர்த்தனேயென்
ரோதுபாவனைக ளுண்டா முற்றபற்றி லாமையாலே
சாதமிலகர்த்த ஞகுஞ்சந்நிதி மாத்திரத்தான்
மேதகுகத்தனு மிவ்விரண்டலால் வேறுமேவா.

(ப - ரை.) ஆதலால் = ஆகையினல், பரமந்தன்பால் = சுவாத்மாவில், அகர்த்தனே கர்த்தனே என்ரோதுபாவனைகள் உண்டாம் = கருத்துருத் தகைமையும் அகருத்துருத் தகைமையும் நன்குதிதமாம், உற்றபற்றிலாமையாலே = நிரிச்சைத் தன்மையினுலே, சாதமில் அகர்த்தனுகும் = பிறப்பற்ற அகர்த்தனுமிவன், சந்நிதிமாத்திரத்தால் = முன்னிலை மாத்தி ரையானே, மேதகுகத்தனும் =மேன்மையையுடைய கருத்தனுவன், இவ்விரண்டலால் வேறு மேவா = இவ்விரண்டே ஆன்மாவின் மாட்டிருக்கின்றனவாம்,

(ஸ்ரீ - வீர.) ஆகலின் தனது ஆன்மாவின்கண் கர்த்துருத்தன்மையும் அகர்த்துருத்தன் மையும் சம்ஸ்திதங்களாம், நிரிச்சைத்தன்மையானே அகர்த்தாவாமிவன், சந்நிதிமாத்திரத் தானே கருத்தாவாம். விரைவேறு முண்டு:—சருவ இந்திரியாதி அதீதத்தன்மையானே சன் மயன் அகர்த்தாவும் அபோக்தாவு மாவன், இந்திரியாந்தர்க்கதத் தன்மையானேனு அவனே கருத்தாவுமாவன் போக்தாவுமாவன். ஹே அநகமைந்த ! கர்த்ருதை அகர்த்ருதை யென்னு மிரண்டுமே யான்மாவின் கண்ணிருக் கின்றனவாம்.

(ச.) பரமந்தன்பால் = ஆன்மாவின் கண், உற்றபற்றிலாமையாலே, நிரிச்சையியல் பாதலின், சாதமில் = களங்கமில்லாத விவன், இவ்விரண்டலால் வேறுமேவா = அனகனே ஆன்மாவின் கண் கருத்துருத்துவம் அகருத்துருத்துவம் என்னும் இரண்டுமே யிருக்கின்றன வென்றதாயிற்று. (3)

(ஸ்ரீ - வீர - அ-கை.) நிற்குந்துயரற்ற நிலையிதுவென நிகழ்த்தல்:—அகத்தனிலென்பது.

அகத்தனிற் கத்தன்றன்னி லமைந்ததே தகனினிற்பாய்
முகத்தமா மிரண்டுமின்றி முளைத்தெழு மனைதறுங்கி
மிகத்தனிதிரமாய் நிற்றியகத்தனு விளம்புதேரிற்
சுகத்தனு நிற்றியேனு நன்றிது துயரீண்டில்லை.

(ப - ரை.) அகத்தனிற் கத்தன்றன்னில் = அகர்த்ருதை கர்த்ருதை யென்னு மிரண் டில், அமைந்தது ஏது = மேன்மைப் பயன்யாதால் ஆமோ, அதனில் நிற்பாய் = அதைப் பற்றி நிலைநிற்பாய், முகத்தமாமிரண்டு மின்றி = முன்மொழிந்த கர்த்ருதை அகர்த்ருதை

யென்னும் இரண்டையும் அடியோடும் விட்டு, மூளத்தெழு மனதைதுங்கி = வாசனுவயத் தால் உதித்து உதித்துக் குதிக்குமுள்ளத்தை இலயம்செய்து, மிகத்தனித்திரமாய் நிற்றி = அத்தியந்தங் கேவலமாய்ப் பரிசேடித்தபடி அதிதிடமாய் அங்நிலைபற்றி நிற்பாய், அகத்தனு வினம்புநேரில் = அகர்த்தனுக மொழிந்த முறையில், சுகத்தனுய் நிற்றியேனும் = பரமா நந்தபரிதனுயிருந்து வாழ்வாயேனும், இதுநன்று = இம்முறையில் யாதொரு பாதகமுமில்லை, யாநந்தமாகவே யிருக்கலாம், துயரொன்றில்லை = சர்வ அநர்த்தமுமகன்று பரமாமிருத மெனப் பெயரிய சமத்தன்மையே பரிசேடிக்கும் என்பதாம்.

(ஸ்ரீ - வீர.) கருத்துருதை அகருத்துருதை யென்னும் இரண்டனுள் எதனுனேரிரேய சுண்டாமென்று உனக்குத் தோற்றுகின்றதோ அதனையே பற்றித் திடமுடையவனுகி; இரண்டிற்கும் சிரேயஸ்தன்மையைத் தனித்தனியே காட்டல்:—எல்லாவற்றினு மிருக்கு மியான் அகர்த்தனேயாவன் என்னும் இத்திடபாவனையோடு கூடிநின்று பிரவாகத்தில் வீழ்ந்தகாரியத்தைச் செய்தபோதினும் அவன்பற்றுருன். எங்ஙனம் பற்றுருன் என்னின் அதையறைதல்:—சித்தத்திற்குப் பிரவிருத்தியின்மையினுலேயே ஜந்து நீரசத்தன்மை வடிவ லைராக்கியத்தை யடைகின்றது; எந்தஜந்துவிற்கு ஈண்டுயானுெரு சிறிதுமே செய்கின்றே னில்லை யென்னுந் துணிபானதுளதாமோ, ஆண்டு, போகக்குழுக் காமவான் யாவன்றுன் செய்பவனுவன் விடுபவனுவன், அச்சென்று தொடாது விடாது. ஆகலின் நித்தியம் அகர்த்தா யான் என்னும் திடமான பாவனையினுலே சுகிப்பன், பரமாமிருத மெனப்பெயரிய அது சமதையாகவே எஞ்சாநிற்கும். முகத்த மாய்நிற்றி யென்பது இப்பதினெட்டாவது சர்க் கத்தின் 14 வது சுலோகமொழி பெயர்ப்பாம், கவிநாயகருக்குப் பாடம்மாறிக் கிடைத்திருக் கலாம் என்றுணர்க.

(ச.) அகத்தனிற் கத்தன்றன்னில் = இவ்விருவருக்குள், அதாவது இவ்விரண்டு தன்மை களுக்குன், ஏது = எதில், அமைந்தது = இயைந்தது = நினக்கிஷ்டமோ, அதனினிற் பாய் = அக்கருத்துரு பாவனையையாவது அகர்த்துரு பாவனையையாவது அநுசரித்து ஸ்தி ரனுவாய், மூளத்தெழு மனதை = விஷய இச்சையால் உதித்துவளரும் மனதை, அப்பிர விருத்தியாகிய ஏதுவினுல், நுங்கி — விஷய இச்சையறும் படிவிழுங்கி, அதனுல், வினம்பு நேரில் = ஒன்றன்பின் னெனன்றாய் வருங்காரியங்களிற் பிரவிர்த்திப்பினும், அகர்த்தனுய் = எவ்விடத்துமியான் அகர்த்தாவென்னுந் திடபாவனை யுடையவனுய். மிகத்தனித்திரமாய் நிற்றி, அலது, சுகத்தனுய் = அனைத்துஞ் செய்கின்றே னென்னும் மகாகர்த்துருபாவனை யுடையவனுய், நன்று = பரமாமிர்த ரூபமென்னுஞ் சமத்துவமே சேஷிக்கும், (4)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இரண்டாவது கற்பத்திற்கும் சிரேயஸ் தன்மையைக் காட்டல்:— முன்னியவென்பது.

முன்னிய கத்தனுகி யான்சகமுறை செய்கின்றே
னன்னிய நிஜனவிலாமை யாலதில் விகாரமில்லை
யென்னது நீகான்செய்தேன் செய்திலே னென்னும்பார்வை
யுன்னிய பொழுதேதுன்ப முடலிலா னென்பாருண்டோ.

(ப - ரை:) முன்னிய கத்தனுகி = முகாகர்த்துருதையுடையவனுகி, யான் சகமுறைசெய் கின்றேன் = நான்ஜகத் சம்பந்தமான பிரமம் யாவற்றையுஞ் செய்கின்றேன், அதில் = அதன்கண், அன்னிய நிஜனவிலாமையால் = அயல்நினைவே முற்றும் அசம்பவமாதலின், விகாரமில்லை = இராகத்துவேட முறையேயில்லை, என்னது = என்னுடையது இது, நீகான் = துவம் அகம், செய்தேன் செய்திலேன் = பண்ணினேன் பண்ணிலேன், என்னும்

பார்வையுன்னிய பொழுதேதுன்பம் = என்பதாய பாவானுசந்தான மயதிருஷ்டியைச்செய்த போதே துயரமாம், உடலே = இத்தனைக்குங் காரணமாய தேகத்தை, நான் என்பார் உண்டோ = அகமென நினைவாரும் உளர் ஆகலாமோ.

(ஸ்ரீ-வீர.) இனியாவற்றையுஞ் செய்கின்றேன் என்னும் மகாகர்த்ருதையாகிய தன்மையானே ஸ்திதியை விரும்புவாயாகின் அத்தகையதையும் உத்தமமெனவே யுன்னுவாய். இக்கற்பத்தில் இராகத்துவேடாதியடையாமையைக் காட்டல்:—யான் என்பது. யான் ஜகத்சம்பந்தமான மயலாய இவ்வியாவற்றையும் செய்கின்றேன், என்று யாண்டாமோ ஆண்டு இராகத்துவேடப் பிரசங்கம் எனக்கு யாங்ஙன முண்டாம், என்னினு மன்னியன்எவ்வாற்றலும் இயையாமையின்; மேலுமதனேயேயுணர்த்தல்:—தேகமோ அன்னியனுலேதக்தமாயது அல்லது அன்னியனுலேகொண்டாடப்பெற்றது என்றலும் அதுவும் எனதாரம்பமே அதாவது என்னுலியற்றப் பெற்றதேயாம், ஆகலின் வாட்டமகிழ்ச்சிகளின் முறையாண்டையதென்க. எனது சுக அசுக விஸ்தாரத்திலும் ஏதுவாய ஜகத்ஜாலத்தின் கூய உதயத்திலும் யானே கருத்தாவென உள்ளே யெண்ணிக்கொண்டிருக்கும் எனக்குக்கேத வல்லாசங்களின் கிரமமேதாகும். ஆகுகஅவ்வாறே ஆயினும்யாங்ஙனம் சமத்தன்மையின் இலாபமாதல் எனின் கேட்டி ! கேத உல்லாச விலாசங்கள், இச்சுவாத்ம கர்த்ருத் தன்மையானே சுயமாகவே விலயம் ஆகவே சமதையே அவசேடித்து நிலவும். சமதையென்பது சர்வபூதங்களிலு மிருக்கும் சத்தியமான பரம்பொருளின் நிதியேயாம்; அதன்மாட் டவஸ்திதியடைந்த சித்தமானதுமறித்தும் பிறப்பிறப்பைச் சிறிதுமருவாது. அப்பியாசதிருஷ்டியானே இரண்டுதிருஷ்டிகளேயும் விளக்கியுரைத்து ஆரூடமாய பின்னிகழுந் திருஷ்டியைக் காட்டல்:—ஹே இராகவ ! சர்வகர்த்ருத்வமும் அகர்த்ருத்வமும் ஆகிய யாவற்றையும் விட்டு மனத்தை மாந்தியாதானுய் அதுவாகவே சேடித்துத்திரமுற்றுவாழ்தி முகத்தமாய் நிற்றியென்றது இச்சுலோகப்பொருளேயாம், இத்திருஷ்டியைக் குறித்துப் பூர்வதிருஷ்டிகட்கு அற்பத்தன்மையைக் காட்டல்: என்னதென்பது. இத்தேகத்திற் பிரசித்தமாயயானே சர்வதேகாத்மக சமஷ்டிரூபனுகிய அவன் என்னு மிரண்டாவது கற்பத்தில், சமஷ்டி பரிச்சேதத்திற்கும் கர்த்ருத்வ அபிமானத்திற்கும் நீக்கமின்மையின் அபூர்ணதையாம், முதலாவது கற்பத்திலோ, இத்தேகேந்திரியாதிகள் யானல்லவாகவின் இவ்வொருசிறிதும் யான்செய்கின்றிலேன் என்னும் அத்தியாத்ம பரிச்சேதத்திற்கும் கர்த்ருத்வாதிகட்கு ம், நிரீசுதத்தானே, சோதிக்கப்பெற்றது வம்பதார்த்த மாத்திர நிஷ்டத்தன்மை யிருப்பினும் தற்பதார்த்த சோதனத்தையும் வாக்கியார்த்த நிஷ்டையையும் அடையப் பெறுமையானே அபூர்ணதையாம், எனத்திருஷ்டிகளிரண்டுமே மகிழ்ச்சியின் பொருட்டாகாவாம். இந்தநானே யந்தநான், இது நானல்ல; இதைச் செய்வேன் இதைச்செய்யமாட்டேன் என்பனவாயுளவாம் பாவானுசந்தானமய திருஷ்டிகள் சத்துஷ்டியின் பொருட்டாகாவாம் என்பதாம்.

(ச.) முன்னியகத்தனுகி = மகாகர்த்துரு பாவனேயுடையவனுய், சகமுறை = இச்சகலஜகப் பிரமையையும்; யானே = நானே, செய்கின்றேன், அதில் = என்னும் அபிமானத்தில்; நிற்கும் வாஞ்சையேலாயின், மகாகர்த்ருதைவடிவ அவ்வகங்கிருதியையும் உத்தமமெனவேயுணர்வர்; அதில் = என்னுமபிமானத்தில்; அன்னிய நினைவிலாமையால் = அங்நியகருத்தா வின்மையின்; விகாரமில்லே = இராகத்துவேடாதிகளின்று; எனது சரீரம் மாதாபிதா முதலானவராற் பேணப்பட்டது; புத்திராதியா லெரிக்கப்பட்டது; என்பதான ஜன்மவிருத்திநாசரூபம் எனதுகர்மவிபாகமேயாம்; ஆதலாற் சுகதுக்கமின்று; மகிழ்ச்சிவாட்டங்கட் கவகாசமே தென்றபடி. எனது சுகதுக்கங்களின் விஸ்தாரத்திலும், ஜகச்சாலத்தினது நாச உதயத்திலும் நானே கர்த்தாவென்று மதிக்கின் மகிழ்வுசோர்வுக் கவகாசமின்று

சுகதுக்க விலாசங்களில் நானே கர்த்தாவென்னும் அகண்டிதபாவனையால் இங்ஙன மியற்ற வேண்டு மென்பது முதலிய தனது சங்கற்பரூப நசிக்கின் உபேக்ஷாபுத்தியே சேடிக்கும். சர்வபாவங்களிலு முள்ள சமத்துவம் பிரமநிஷ்டையாம் அச்சமத்துவத்திற்றிதிபெற்ற சித்தம் மறுஜன்ம முடையதாகா தென்றுஞ் சுலோகார்த்தங்களே அன்னிய நினைவிலாமையாலதில் விகாரமில்லை என்னும் வாக்கியத்தினும், அன்றி இராகவா! கருத்துருத்துவம் அகர்த்துருத்துவம் அனைத்தையும் விட்டுமனதைவிழுங்கி எந்தரூபனுய்ச் சேஷிக்கின்றனையோ அந்தரூபனுய்த்தீரனுவாயென்னுஞ் சுலோகார்த்தத்தை முன்பு முகத்த +மாய்கிற்றி என்னும் வாக்கியத்தினும் கவிகாயகர் அடக்கிக் கூறியதோருத்தியென்க. நான் = தேவதத்தனுன், இவன் எக்ஞதத்தன், நீநான் = நீநானென்று, இன்னது = இத்தன்மையான பரிமிதாகாரியத்தை, செய்தேன் = செய்கிறேன், எக்கியதத்தாதி காரியத்தைச் செய்திலேன் = செய்யேன் என்னும் பார்வை = பேதபாவாது சந்தானமயமான திருஷ்டி பிரஹ்மாநந்த நிமித்தமன் றென்பது பொருள். (5)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அற்றேல்; அவைதுஷ்டியின் பொருட்டா காவாயின் யாதின்பொருட் டுபசயிக்கப் பெற்றனவெனின், சரூவ அகர்த்தமூலதேக அகம்பாவவிமோசன உபாயத் தன்மையானே உபசயிக்கப் பெற்றனவாம் என்னுங்கருத்தானே தேக அகம் பாவத்திற்கு அகர்த்த ரூபத்தன்மையையும், எல்லாவாற்றனும் விட்டொழிக்குந் தன்மையையும் காட்டுகின்றார்:—மொய்யென்பது.

> மொய்யுடனுனே யென்னின் மூவேழு நரகுமஃதே
> வெய்யவன் றுயராமேனு மெய்யைஞ் னென்னவேண்டா
> வையமில் கேள்விதல்லோர் நினைவதோ வனைத்தாமூனுங்
> கையுறத் தின்பரேனு நாய்ப்பிணங் கவரார்நீசர்.

(ப - வி.) மொய்யுடல் = தோலிரத்தம் என்பிறைச்சி சுக்கிலமேதை மச்சையொன்றும்த் தூலிகரித்த உடம்பை, நானேயென்னில் = அகமேயென்றபிமானிக்கில்; மூவேழு நரகும் அஃதே = இருபத்தொரு வகையாகிய நரகங்களும் அத்திதியேயாம், வெய்யவன் துயராமேனும் = கொடிய வலியதுக்கங்கள் வந்துறினும், மெய்யை = தேகத்தை; யானென்ன வேண்டா = அகமென் றபிமானிக்க வேண்டாம், ஐயமில் கேள்விகல்லோர் நினைவரோ = சமூசயமற்ற சிரவணதிவாய்ந்த மகான்கள் அங்ஙன்அபிமானிப்பரோ; அபிமானியார்; அனைத்தாம் ஊனும் கையுறத்தின்பரேனும் = சகலமாம்சங்களேயும் பிரியத்துடன் கரங்கொண்டு தொட்டுண்பர்க ளாயினும், நீசர் = புற்கசர்கள், நாய்ப்பிணங்கவரார் = நாய்மாம்சத்தைத் தீண்ட மாட்டார்க ளல்லவா.

(ஸ்ரீ - வீர.) தேகோகம் என்னும் திதியாதோன் றனதோ அதுவே காலசூத்ரபதவியாம், அதுவேமகாவீசிவலையாம்; அதுவே அசிபத்திரவனபந்தியாம், காலசூத்திர முதலியவை நரகபேதங்களாம்; காரியகாரணங்கட்கு ஆயுணெய்யென்பதேபோல அபேத ஆரோபத்தாற் சாமானுதிகரண்யமாம். சர்வநாசங்களும் எதிர்கொண்டு வந்துறினனும் சர்வயத்நத்தானும் அது தியாகிக்கத் தக்கதேயாம், நாய்மாம்சசகிதப் புலேச்சியேபோலும், பவ்வீயனுலுது தீண்டத்தக்கதேயன்றும், தேகம் அகம் என்னும் புந்திக்கும்நாய்மாம்சத்திற்கொப்பாய்க்காமாதி அசுசி தூடிதத்தன்மை யுண்மையின் என்பதுகருத்தாம்.

(ச.) அஃதே = தேகோகமென்னும் பாவனையே, மூவேழு = மூவேழென்னும், காலசூத்திரம்மகாவீசி அசிபத்திர மென்ன முதலிய, நரகம் ஆம், வெய்யவன் துயரமேனும் = சகலமுநாசமாயினும், சர்வ எத்தனத்தாலும், மெய்யை நானென்ன வேண்டாம், ஐயமில்

கேள்விகல்லோர் = முமுக்ஷுக்கள், நினைவரோ=தேகான்மபாவனை செய்யார், புக்கசீ = சண்டாளீ என்பது மூலம். (6)

(ஸ்ரீ-வீர-அ-கை.) தேகோகம் மதியினுல்வரும் அநர்த்தத்தையும் அது அகலலானே வருமரும் பயனையும் தெரித்தல்:—நாம் என்பது.

நாமுடலென்னு மாசான் ஞானக்கண் குருடாய்ப் போகும்
தோமுறுமதனைத் தூரத்தூர்ப்ப ரேற்சோதி ஞான
மாமுகிலிலா நிலாப்போல் வயங்கிடு மினையகண்ணு
லேமுறுபிறவி வேலையிருங் கரையெளிது தோன்றும்.

(ப - ரை.) நாம் உடல் என்னும் மாசால் = தேகோகமென்னும் படலலேகையால், ஞானக்கண் = உணர்வுவிழி, குருடாய்ப் போகும் = மூடப்பெற்றுப்போம், தோமுறும் அதனை=குற்றமுற்ற அதனை, தூரத்தூர்ப்பரேல் = வெகுசேய்மையில் எகுமாறு அகற்றவரேல், சோதிஞானம் = பரஞ்சோதியின்உணர்வானது, மாமுகில் இலாநிலாப்போல்= பெருமேகம் மறையாத பூர்ண சந்திரன்போல, வயங்கிடும்=விளங்கா நிற்கும், இனைய கண்ணுல் = இத்தகைய திருஷ்டியினுல், ஏமுறு = துக்கமயமாய, பிறவிவேலை = சமுசார சாகரத்தின், இருங்கரை=பெருமையாய முத்தியங்கரையை, எளிதுதோன்றும் = சுயமாகவே காணலாம்.

(ஸ்ரீ - வீர.) விசுத்தாத்ம திருஷ்டியாகிய தனதிஷ்டானத்தில்படலலேகைபோலும் ஆவரண விக்ஷேப ஹேதுபூதமாய அத்தேகோகம் புத்தியினுனேபெருந்துயரமே யாதலின் வெகுதூரத்தில் அதனை விட்டொழிக்க வேண்டும், ஒழித்தவழி அம்புதமகன்ற அமிர்த கிரண்போனும் மேன்மையானபார்வையானது உதயமாகின்றது, அஃதினிதுதயமாகவே பவசாகரத்தைக் கடந்து பரமானந்த முறலாம்.

(ச.) மாசால் = பாவனையான படலத்தினுல். மூலம், படலம்=கட்பார்வையைத் தடைப்படுத்தும் நேத்திரரோகம். (7)

(ஸ்ரீ - வீர - அ-கை.) இப்போது திருஷ்டித்திரயத்தைத் தொடுத்து அவற்றுள் தன்னதிகாரத்திற்குத் தக்கபடியாய் வாஞ்சித்த திதியையுபதேசித் துபசங்கரித்தல்:—அனைத்தினும், அன்றெனில். என்பன.

அனைத்தினுங் கத்தனல் லேனவனிவ னல்லேனென்ன
நினைத்துளத் துறுதியாகி நிற்றியாலஃ தின்றெண்ணி
லனைத்தினுங் கத்தனுனே யளவுறுமது நானென்ன
நினைத்தசை வொன்றுமின்றி நிச்சயமாகி நிற்பாய்.

அன்றெனி லொன்றுமல்ல வொன்றுநா னுகுமென்றே
நின்றவிப் பதத்தினன்று நின்பதக் கனினீநிற்பா
யொன்றெனும் பதத்தைக் கண்டவுத்தமர் தம்பாணிற்பர்
துன்றுவாதனையே பந்தக்தொல்லை வீடதனைத் தீர்தல்.

(ப-ரை.) அனைத்தினும் = யாவற்றினும், கத்தன் அல்லேன் = கருத்தாயானுகின்றிலேன், அவன் இவன் அல்லேன் = அவனும் இவனும் யானுகேன், என்ன=என்பதாக, நினைத்து=உணர்ந்து, உளத்து உறுதியாகி =மனத்தின் கண்ணேமாறுத நிச்சய முடைய வனுகி, நிற்றி = நிலைபெறுதி, ஆல், அசை, அஃது இன்று என்னில்=அவ்வாறு நில

பெற்றுவாழச் சம்மதமின்றாயின், அனைத்தினுங் கத்தனனே = சமக்கிரமும்யானேயாகின்றேன், அளவு அறும் அது நான் = அளவில்லாத அதுவேயான், என்ன = என்பதாக, நினைத்து = உணர்ந்து, அசைவொன்றும் இன்றி = யாதொரு சலனமுமில்லாமல், நிச்சயமாகி நிற்பாய் = நிச்சய முடையவனாக நின்று வாழ்வாய்.

அன்றெனில் = அவ்வாறிருக்க வாட்டமில்லையாயின், ஒன்றுமல்ல = யாதொன்றுமல்லன், ஒன்று நானுகும் என்றே = எவனே ஒருவன் யானுகுவேன் என்பதாகவே, நின்றவிப்பதத்தில் நன்று நின்பதந்தனில் = நிர்ணயிக்கப்பெற்ற சர்வ உத்தமமாய நினதுயதார்த்தசொரூபத்தின் கண்ணே நீ நிற்பாய் = நீ நிலை பெற்றுச் சுகிப்பாய், ஒன்றெனும் பதத்தைக்கண்ட = ஏகமேவ அத்விதீய பதமாயதமதுசொரூபத்தைத் தரிசித்த, உத்தமர் = மேன்மைவாய்ந்த சாதுக்கள், தம்பானிற்பர் = தமதாநந்த பதத்திலே யிருந்துவாழ்வர், துன்றுவாதனையே பந்தம் = நெருங்கிய துர்வாதனையே பந்தமென்று பகரப்பெறும், தொல்லை அதனைத்தீர்தல் வீடு = அநாதியாகச் சம்பாதித்துக் கொண்டதாற் பெருந்துன்புறுத்தும் அவ்வாதனையை யறுத்தெறிதலே மோகூமாம்.

(ஸ்ரீ-வீர.) யான் கர்த்தாவுமல்லன், கருத்துருத் தன்மைப் பிரயோஜகமாய தேகாதியும் யானுகேன், என்றிவ்வண்ணம் உள்ளே ஸ்புடமாகத் தெரிந்து நிற்றி; அல்லது, மூலத்திலிருக்கும்சமக்ரபதம் தந்திரமாகத்துவிதீயைப் பிரதமாந்தமாம், தேகலீதபரியாயத்தானே = வாசற்படியில் வைத்தவிளக்கே போலவென்னும் லௌகிக நியாயங்கொண்டு, முன்னிலும் பின்னிலும் சம்பந்திக்கும், சம்பந்திக்கவே, சருவகருத்தாயானே யாகின்றேன், சருவசமஷ்டி பூதமாய அந்தப்பிரஹ்மாண்டமும் யானேயாகின்றேன் என்றதாயிற்று; இவ்வண்ணமேனும் நன்றுகவுணர்ந்து துணிந்து சுகிப்பாய்; இவ்வண்ணம் வெளியாய திருஷியரூபம் ஒருநிதியும் யான் அல்லேன், மற்றேர், லோகப்பிரசித்த பரிச்சின்ன ஜடதுக்கசுபாவாத்ம விலக்ஷணபூர்ணனந்த சிதாத்மாவாகிய யாதோவொரு அகோசரவத்துவே யானுகின்றேன், என்றேனும் நிண்ணியித்துச் சர்வோத்தமமான தற்பதத்தில் நீ நிட்டை யுடையவனுகச்சுகி; நிண்ணயித்து என்றதனுனே, மூற்றிருட்டிகட்கும் இதன்பரியவசானமாம் என்பதொரு தலையாகவேண்டற்பாலதெனத் தொனிக்கப் பெற்றதென வுணர்ந்துகொள்க. பிரஹ்மபதத்தை யுணர்ந்தபெரியோர்களாகிய உத்தமசாதுக்கள் எப்பதத்திற்றிதிபெற்று வாழ்கின்றூர்களோ அதன்கண்ணே நீயுமிருந்து வாழ்தியென்பதாம். இப்போது பந்தமோகூ இரகசியங்களைத் தரிசிப்பித்துக் கொண்டு, வாசனேயுச்சேத உபாயமுறையைக் கூறல்:—துன்று என்பது, வாதனைக்கட்டே பந்தமாம், வாசனுகூயமே மோகூமாம்.

(ச.) உளத்து நினைந்து = அறிந்து, நான் கர்த்தாவன்று பரிச்சின்னனுமன்று என்பது ஒருபாவனை, சர்வகர்த்தாவும் சர்வான்மகனும் நானென்பது இரண்டாம் பாவனை.

ஒன்றுமல்ல = இங்ஙனங் கர்த்துருத்துவாதி யுபலகூதிதமாயயாதும் யானன்று, மற்றென்னினின், ஒன்றுநானுகுமென்றே = சர்வவிகற்ப அதீதனுனவனே ஒருவனேநானுவேன் என்று நிச்சயிப்பது மூன்றும்பாவனை. நின்றவீது = இம்மூன்றிலொன்றை யநுசரித்துநீ அனைத்தினன்றும் = சர்வோத்தமமான, நின்பதந்தனில் நீநிற்பாய், உத்தமர் = ஞானிகளான சாதுக்கள், எந்தத்தம்பானிற்பர். ஸ்ரீவசிட்டர், (8-9)

(ஸ்ரீ - வீர - அ-கை.) வாசனுகூயத்தையே தெளிவு பெறுத்துதல்:—புலன் என்பது.

புலன்களிற் பழகிச்சித்தம் பூண்டவாதனை கண்முன்னே
யலம்பெறமாற்றி வீட்டிற்கடித்த வாதனையுந் தீர்வாய்
நலந்திகழருள் சந்தோட நட்புதாகின மிந்நாலு
மலர்தவிர் குணங்களாக மனத்தழுந்தாது செய்வாய்.

(பரை.) புலன்களிற் பழகி = இந்திரியங்களோடு கூடிவிடயங்களைக் கவர்ந்துபயின்று, சித்தம் = மனமானது, பூண்டவாதனைகள் = அலங்கரித்துக் கொண்ட வாசனைகளை, முன்னேயலம் பெறமாற்றி = பூர்வம்துன்புறுவாறு மெதுவாய் முற்றிலும் பரித்தியாகித்து, வீட்டிற்கடுத்த வாதனையுந்தீர்வாய் = மோக்ஷார்த்தித் தன்மையையும் விட்டுவிடுவாய், நலந்திகழ் அருள் = துக்கிப்பிராணிகட்கு நன்மையைப் பயக்கும்கருணை, சந்தோடம் = புண்ணியர்பாற்காட்டும் முதிதை, நட்பு = சற்புருடர்பால் வைக்கும்மைத்திரி, உதாசினம் = பாவியரிடத்துண்டாம் உபேக்ஷை, இந்நாலும் = என்னுமிந்த நான்கையும், மலர்தவிர்குணங்களாக = அமலவாசனையாக, மனத்தழுந்தாது செய்வாய் = உள்ளத்தின்கண்ணொட்டாது ஊற்றுவாய்.

(ஸ்ரீ - வீர') நீவாசனையைப் பரித்தியாகித்து மோக்ஷார்த்தித் தன்மையையும் தியாகிப்பாய்; ஆண்டு வாசஞ்செய்யத்திற் பிரதமபீடிகை வைராக்கியத் திடமுடைமை யென்று கூறுவார் அலம் பெறமாற்றி யென்றார். விடயங்களால் வாசிதங்களாய் அதாவது சம்பாதிக்கப் பெற்றனவாய், தமப்பிரதானதிரியக்குயோனியாதி கதிகளைப்பெரிதீயும் வலுவுடையனவாய தாமசவாசனைகளைப்பூர்வம் அடியோடும் விடுத்து, இராஜசமநுடாதி ஜன்மங்களைத் தருவனவாய விடயவாதனைகளையும் நன்றாகத்தீர்த்து, மைத்திரி கருணைமுதிதை உபேக்ஷையாகிய வற்றின் பாவனைப்பெயரிய அமலவாசனையைக் கவர்ந்துகொள்ளுதி; கொண்டவற்றோடு விவகரிப்பினும் உள்ளே பற்றல்வேண்டா மென்பதாம்.

அவ்வாறே ஸ்ரீ பதஞ்சலிபகவா னருளியுள்ளார்:—இப்போது சம்பிரஜ்ஞாத பூமிரூப ஒருமையுபாயங்களை யுரைத்தல்:—மத்தின்பு துன்பறம் மறவிடயங்களாம், மைத்திரிகருணை முதிதை யுபேக்ஷைதம், சித்திபாவனையாற் சித்தத்தூய்மையாம்.

(பொருள்.) சித்தமோ, இராகத்துவேஷ புண்ணிய பாவங்களானே களங்கம் பெறுகின்றது, ஆண்டுச் சொப்பனஜாதிகளிற் றன்னுலநுபவிக்கப் பெற்றவின்பந் தென்படவே, "எல்லா இன்பக்கூட்டங்களும் எனக்குண்டாகுக" என்னும்மதியின்ஒருவிருத்திவிசேடமே இராகமாம், அதுவும், சுகசமூதாயத்திற்கு, திருஷ்டாதிருஷ்ட சாமக்கிரிய பாவத்தானே, சம்பாதிப்பதற்குக் கூடாமையின், சித்தத்தைக் களங்கப்படுத்தும்; எப்போதுதான் "இவர் யாவருமே யென்னவரின்பினர்" எனச்சுகிப் பிராணிகளிடத்தில் மைத்திரியை யெண்ணுவாரே, அப்பொழுது அச்சுகம் தன்னதாகவேயடைவதும், உறவே ஆண்டுவிருப்புவிலகும், கேவலம் இராக மாத்திரம் அன்றும், மற்றே, பிறர்குணம் பொறுமை மாசுதோற்றுதல் வடிவ அசூயை ஈரிஷை முதலனவும் நீங்கும். இராக அசூயை ஈரிஷையாதிகள் அகலவே, மழைகள் ஒழியவேசரற்சரித்தொப்பச் சித்தந்தெளியும். அங்ஙன்றுன்பமடைய நேர்ந்திடின் எல்லாத் துயரமும் எவ்வகையானும் எனக்கேயாகுதொழிக" என்பதாம் விருத்திவிசேடம் துவேடமாம், அதுவும் வைரியாதிகளிடத்தி லிருக்குமாயின் நிவாரணஞ் செய்யக்கூடாமையின் சதா இதயத்தைத்தகிக்கும், எக்கால் "தனக்கே போலப்பிறர்க்கும் பிரதிகூலம் துக்கம்தாவாதொழிக" என்னும்வகையாகக் கருணையைத்துக்கிப்பிராணிகளிடத்திற் பாவித்திடப்பெறுமோ அக்கால்வைரியாதி களிடத்தில்வெறுப்பு விலகும்; கேவலத்து வேடமாத்

திரமன்றும் மற்றே, துக்கித்தன்மையைப் பிரதியோகியாகவுடைய தனது சுகித்தன்மை யானுளதாயதர்ப்பமும் அகன்றுபோம். அத்தர்ப்பத்தையும் ஸ்ரீ பகவான் றரிசிப்பித் துள்ளார்:—

இப்பொருளடைந்தோம் வேறுபொருளினி யடைவோமென்று
மிப்பகைசெருத்தோம் வேறுபகையினிச் செகுப்போ மென்றுத்
துய்ப்பவரெம்மிற் றுய்க்கவல்லவ ரில்லையென்று
மொப்பவரெம்மின் மிக்காருளர்கொ லென்றுணரா நிற்பார்.

இனம்வலியின்பம் பெற்றேமெம்மின் மிக்காரிளில்லைத்
தனமிகவுடையே மென்றுதம்மையே வியவா நிற்பார்
மனமகிழியாகஞ் செய்வோமழையெனக் கொடுப்போ மென்று
தினமவைதேறாஞ் சிந்திப்பதுவலாற் செய்வதில்லார். (என்பனவாம்.

ஆகலின் உபயமொழியவே உள்ளந்தெளியும். அவ்வாறே பிராணிகட்கு இயற்கையா கவே அறப்பயிற்சி கிடையாதாகும், மறப்பயில்வோ முயல்வதாகும், ஆகலின், அவ்வறமறங் கள் பச்சாத்தாபத்தை யுண்டுபண்ணு நிற்கும், புண்ணிய புருடரிடத்தில் முதிதையைப் பாவிக்கினே அக்கால் அவ்வாசனேயாற்றானும் அப்பிரமத்தனுய்ப் புண்ணியத்திற் பிரவிருத் திப்பன், அவ்வாறே பாவிகளிடத்தில் உபேகூையைப் பாவித்துத் தானும் பாவத்தினின்றும் நிவிர்த்தியாவன்; ஆதலின் பச்சாத்தாப மின்மையானே சித்தந்தெளியும். அற்றேல், புண் ணியவான்களிடத்தில் முதிதையை பாவிப்பவனுக்கு புண்ணியத்திற் பிரவிருத்தி பலத்தன் மையானே பகரப்பெற்றது, அதுவும் யோகிக்கோ பொருந்தாது, அவனுக்கு மறுபிறப்பைச் செய்யுமாதலின் எனின் ? இங்ஙன் வினுதல் அடாதாம், காமியமாகிய இஷ்டா பூர்த்தாதி கட்குப் பிறப்பின் காரணத்தன்மை யுண்மையின், ஈண்டோ யோகாப்பியாச ஜன்னியமாய் ஜன்மசம்பாதக மாகாததாய் அசுக்லகிருஷ்ண மென்னும் புண்ணியத்தைப் புகலும்வேட்கை யுண்மையின் என்க. ஸ்ரீ பகவான் சூத்திரக்காரரே இதனைக் கூறியருளுவர்:— இவ்வாறு கிலேசகரும விபாகாசய சூனியமாய் அபரிக்ஷ யோக்கியமாய் ஆகுக யோகியின் சித்தம் அதன்கருமம் எத்தகைய தென்னும் அவாவுண்டாக அருளப்பெறுகின்றது:—முயல்வினைய சுக்லகிருஷ்ணம் யோகிக்கு மூவிதமிதரர்க்காம் = பொருள்:—காமியகரும விகிதத்தன்மை யானே சுக்லம், நிஷித்தம் கிருஷ்ணம், மிசிரம்சுக்லகிருஷ்ணம், அவ்விம்மூன்றும் மற்றைய அயோகிகட் குண்டாம், அதுவும் மூவகைப்பிறப்பை முற்றுவிக்கும், " தேவத்தன்மை நலங் கொடுசேரலாம், பாவத்தன்மை நரகம்பயக்குமால், மேவத்தன்மை யிரண்டுமிகிரமே, லேவித் தந்திடு மாநுடமென்பவே" என்றஃதையைப் பெற்றதாம். இனியோகத்திற்கு நிஷித்தத் தன்மையின்மையின், அகிருஷ்ணத்தன்மை யுண்மையேனும், விகிதத்தன்மையுண்மையானே சுக்கிலத்தன்மையே யாமெனின் ? அற்றன்றும், அகாமியத்தன்மை யபிப்பிராயத்தானே அசுக்லகிருஷ்ணத்வ மறையப்பெறுதலின், பெறவே மனத்தூய்மை விவேகக்கியாதி வாயி லாக மோக்ஷமொன்றையே பலமாகவுடையது அசுக்லகிருஷ்ணம் யோகிக்குக்கருமம் என் றருளிய தாயிற்று.

ஆகலின் மைத்திரியாதி பாவனையானே இராகாதிவாசனே நிவிர்த்தியாகவே பிரசாத மாகிய நிரத்தன்மையை அடைவுற்ற நற்சித்தம் ஒருமைப்பதத்தை யடையாநிற்கும், "தன் னது முயற்சியிற் சலித்தவிற்றிலுற், பின் னுறுவாதனே பேதமாகவே, நன்னிலைமன்னி நின் ஞட்டமாகுமே, லின்னலில் பதமதை யெய்தலாகுமே" எனவஃதையையும் பெற்றுளது.

(சு.) புலன்களில் = சத்தாதி விடயங்களோடு, பழகி=அதன்மயமாய், சித்தம்=சித்தத்தில், பூண்டவாதனைகள் = பொருந்திய வாசனைகள், முன்னே யலம்பெறமாற்றி = முன்பு விடுத்து, மலந்தவிர் குணங்களாக = அமலவாசனைகளாக, செய்வாய் = கிரஹிப்பாய், மைத்திரியாதி யமலவாசனைகளைக் கிரஹிக்கின் நினக்குச் சித்தந்தெளிவுறும், தீர்வாய் என்று கூறினது அதுவும் வாசனாவிசேஷமாதலின் என்க. உதாரணம், ஸ்ரீ பதஞ்சலிபகவான் " மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷைகளென்னுஞ் சுகதுக்க புண்ணியா புண்ணிய விஷயங்களின் பாவனையதனாற் சித்தப்பிரசாத மாமென்பது. (10)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆன்ம சாக்ஷாத்காரம்வரை வாசனையை விடுமுறையறைதல்:— உள், வாதனையென்பன.

உள்ளுறுதொழில் கண்முற்று மொருக்கியோரு ணர்வைப்பற்றி
மெள்ளவாங் கதுவுமந்தக் கரணங்களுடனே விட்டுத்
தள்ளுவவெல்லா மெத்தாற் றள்ளினையதுவுந் தள்ளித்
தெள்ளுணர் வுள்ளஞ்செய்கை தேசிருளனைத்துந் தீர்ந்து.

வாதனைவடிவமான விவைகளு மற்றிவற்றைப்
பேதமாய்ப் பழகுவோனும் பிராணனி லியக்கந்தானு
மியாதுமூலத் தோடூர்த்து விண்ணக மென்னநின்ரு
லியாதுதீர் சாந்தனுயென்னு யினையதுநீ மெய்யால்.

(ப - ரை.) உள்ளுறு தொழில்கள் முற்றும் ஒருக்கி = சமஸ்தசேஷ்டைகளும் உள்ளே சாந்தமானவனுய், ஓர் உணர்வைப்பற்றி மெள்ளவாங்கு = சின்மாத்திர வாசனையுடையவனுதி, அதுவும் = அதனையும், அந்தக் கரணங்களுடனே = மநோபுத்தி சமன்விதமாக விட்டு = பரித்தியாகித்து, தள்ளுவவெல்லாம் எத்தாற்றள்ளினுய் = தள்ளத்தக்கன வெல்லாவற்றையும் எதனுலே தியஜித்தாயோ, அதுவுந்தள்ளி = அதனையும் தியஜிப்பாய், தெள்ளுணர்வு உள்ளம் செய்கைதேசு இருள் அனைத்தும் தீர்ந்து = கலனைகாலம் பிரகாசம் திமிராதிகள் யாவற்றையும் விடுப்பாய்; விடுத்து.

வாதனை வடிவமான விவைகளும் = வாசனையுருவமான இவற்றினையும், மற்று இவற்றைப் பேதமாய்ப் பழகுவோனும் = கூறிய இவற்றை வேற்றுமையாகப் பயிற்சிசெய்பவனையும், பிராணனி லியக்கந்தானும் = பிராணஸ்பந்தனத்தையும், யாதும் = மற்றெவற்றையும், மூலத்தோடூர்த்து = வேரோடுங்களைந் தெறிந்து, விண்ணகமென்ன நின்ரு்=வானம்போல நிர்மலமாகத் திதிபெற்ரு், யாதுதீர்சாந்தனுய் = எல்லாவிக்ஷேபங்களும் நீங்கிய பரமசாந்தனுய், என்னுயினை = எச்சத்வடிவமாகச் சேடித்திருந்தாயோ, அது = அப்பொருளை, நீமெய் = நீயென்ப துண்மையாம், ஆல் அசைநிலை.

(ஸ்ரீ - வீர.) அவ்வமலவாதனையையும் உள்ளேபற்ரு்மல் விட்டொழித்து, உள்ளே சின்மாத்திரத்தினும் அயலாகமைத்திரியாதிகளும் இலவாமெனக் காண்டலானே வெளியே அம்மைத்திரியாதிகளோடு விவகரித்தபோதினும் சின்மாத்திரமே யான் என்னுஞ்சம்பிரஞ்ஞாத சமாதியப்பியாச திரமுறுத்தப் பெற்றவாசனை யுடையவனுதி; மனம்புந்தி சித்தம் அதன் விருத்திகளோடு கூட அதனையும் பின்விடுத்து, ஆன்மத்தன்மையானே விடமுடியாமையின் அவசியம் பரிசேடித்து நிற்கும்பிரத்தியக்குத் தத்துவத்தில் திரசமாதானமாகிய இளைப்பாறுதலையுடையவனுய், அதாவது அசம்பிரஞ்ஞாத சமாதியில் விசிராந்தி யடைந்தவனுய், எக்கலனையெனப் பெயரிய துவைதகற்பனையின் மூலஸ்தம்ப பூதமாய அகங்காரத்தானே,

முன்மொழிந்த யாவற்றையும் தியாகித்தாயோ அதனையும் விட்டொழித்து வாழ்தி; எல்லாவற்றிற்குமே தியாகமென்பது ஆண்டாண்டுயான் எனது என்னும் அபிமானமறுதலேயாம்; அதுவும் அகங்காரத்திலும் சுத்தசின்மாத் திரரூப அகம்பூத பூர்ணத்ம தரிசனத்தால், மூல அஞ்ஞான உச்சேதத்தால் தானுகவே யுண்டாம் எனவாண்டு வேறுகரண அவாவில்லே, இல தாகவே எல்லேயின்றிச் செல்லுதலுமில்லே யென்பது கருத்தாம். பிராணஸ்பந்தனபூர்வகம் கலனேகாலப்பிரகாச திமிராதிவாசனேயையும் வாசனே வனேபவனேயும் விடயத்தையும் அதன்வாயிலாய இந்திரியங்களேயும், மூலத்தோடும் அகங்காரத்தையும் பறித்தெறிந்து, சீமூதமுக்த விமலாம்பரம்போல நிருமலக்கவின் வாய்ந்து, விகேபங்களியாவும் வெகுசாந்த மாய், பிரஹ்மான்ம அகண்டைக ஆகாரமாயிலகும் மதியுடையவனுகி, எச்சின்மயனுய் நீயடைவதுவாயோ அதே பரமார்த்தரூபம் நீயாதி; ஹே நன்மதிமைந்த ! இங்ஙன் சத்தா மாத்திர நீயாதலினுனே சர்வபூஜிதனுக வாழ்வாய்.

(ச.) உன்னுறத்தொழில் கண்முற்று:—தொழில்கள் = அம்மைத் திரியாதிகளோடு கூவ கரிப்பினும், உள் = உள்ளில், உறமுற்று மொருக்கி = அவைகள் அனேத்தையும் நன்ருய் விட்டு, சர்வேச்சையு நிவிர்த்தித்தவனுய், ஒருணர்வைப் பற்றி = சின்மாத்திர வாசனேயை யடைந்து. அந்தக்கரணங்களுடனே = மநோபுத்தியோடு கூடிய, அதுவும் = சின்மாத்திர வாசனேயையும். மெள்ளவிட்டு, ஆங்கு = சர்வவாதனு ரகிதமான சித்துரூபத்திற் நிரமான சமாதனனுய், தள்ளுவதெல்லாம், எத்தால் = எந்தப்பிரயத்தின விசேடத்தால், தள்ளினுய், அதுவும் = அதனேயும், தள்ளி = விட்டவனுய், தெள்ளுணர்வு = இந்தச்சித்து, உள்ளம் = மனம், செய்கை = கலனுகாரம், தேசு = பிரகாசம், இருளனேத்தும் = திமிராதிகளும், தீர்ந்து = சித்திதுமனமிது என்பதாதிரூபமாயசித்தாதி விகற்பங்க ளெல்லாம் தவிர்ந்து.

வாதனே வடிவமான விவைகளும் = அவ்விடயமான வாசனேயும், மற்றிவற்றை ப்பேத மாய்ப் பழகுவோனும் = வாதனுவேதுவானவனும், பிராணனிலியக் கந்தானும் = பிராண சலனமும், இயாதும் = ஆகியவனேத்தையும், மூலத்தோடுர்ந்து = தள்ளி, விண்ணகமென்ன = வியோமம்போல், நின்ருய், சௌமியனுய், சாந்தரூபம் = பிரசாந்த புத்திரூபனுய், இயாதா யினே = எத்தன்மையனுயினே, இதே = இத்தன்மையுள்ள பூச்சியனுனே, மெய் = உண் மையாக, அதுவாயினே = அத்தன்மையனுயினே, என்பதுபொருள். ஆல், அசை, அவற்றிற் றெள்ளுணர்வு = சொரூபசைதன்யம், உள்ளம் = அந்தக்கரணம், செய்கை = அவித்தியா தற்காரியப் பிரபஞ்சம், தேசு = பிரகாசம், இருள் = தமம், அனேத்து மெனுஞ்சத்தத்தாற் கடாதிகள். மூலம் = கலனே = அவித்தை, ஆகாரம் = பிரபஞ்சம். (11-12)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இத்தகைய நிலேமையை யடைந்தவனுக்குப் பூச்சியத்தன்மை யையே பிரசம்சைகளினுலே காட்டுகின்ருர்:—உளத்தென்பது,

உளத்தினி லனேத்துமாற்றி யுலகிலோர் பற்றதின்றித்
துளக்கிலா நிலேயினின் ருன்று ளறுமுத்தனுவா
னளக்கருமீச னுவானவன் மிகுசமாதிதானுங்
கொளத்தகு கருமந்தானுங் கூடினும் விடினுமுத்தன்.

(ப - கை.) உளத்தினில் அனேத்தும் மாற்றி = இருதயத்தினின்றும் யாவற்றையுமே நன்கு பரித்தியாகித்து, உலகிலோர் பற்றதின்றி = உலகப்பொருள்களின் வாசனேயுமில்லாத மகாமதியனுகி, துளக்கிலா நிலேயில் நின்ருன் = விகேபமற்ற திதியிற்றிதி பெற்றமகான், துகளறு முத்தனுவான் = சர்வ அநர்த்தங்களு மகன்ற பரமாநந்த வடிவமுக்தனுகின்ருன், அளக்கரும் ஈசனுவான் = அநந்தமகிமைவாய்ந்த பரமேசுவரனுகின்ருன், அவன் = அத்த

கைய அறிஞன், சமாதிதானும் = சமாதியையேனும், கொளத்தகுகருமந்தானும் = வருணசிரமத்திற் கேற்றபடி யங்கீகரிக்கத்தக்க தொழிலேயேனும், கூடினும் விடினும்=செய்யினும் செய்யாவிடினும், முத்தன் = விடுபட்டவனே யாகின்றான்.

(ஸ்ரீ - வீர.) எம்மகாமதியை யுடையவன், அந்தக் காரணத்தினின்றும் அனைத்தையுமே அடியோடுமகற்றிச் சர்வவிகேப ஹேதுவாய அபிமானத்தைத் தொலைத்து, நிலைத்துச்சொரூபமாயிருக்கின்றானே, அம்மகானே முக்தனும் பரமேசுவரனு மாகின்றான். இத்தகைய அப்பியாச பரிபாகத்தானே ஏழாவது பூமிகையில் ஏறினவனுகிய சித்தனுக்கு, கிருதகிருத்தியத் தன்மையேயாம், அலது செய்யத்தக்கது பிறிதொன்று ஙனியெஞ்சி நில்லாதெனல்:— அவன் என்றது. அம்மகான் சமாதியைத் தாஞ்தல் கருமங்களைத் தாமாதல் செய்யாதொழிக அலதுசெய்க, விடுபடுத்தவனே.

(ச,) உளத்தினில் = இருதயத்தினின்றும், அனைத்துமாற்றி = சகலத்தையும் விட்டு, மகாமதியாய அளக்கருமீசன் = பரமேசுவரன், சமாதிதானும் = சமாதியையும், கருமந்தாமும் = சர்வகருமங்களையும், கூடினும் விடினும் = செய்யினும் செய்யாதொழியினும், முத்தன் = முத்தனேயாவன், (13)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கூறியதையே வற்புறுத்திக் கூறுநூலுங் கூடாமைகாட்டல்:— இருதயத்தென்பது,

இருதயத்தாசை யொன்றுமிலாமையா லெண்ணப்பட்ட
கருமங்கள் செய்துந்தீர்ந் துங்கையுறு பயனென்றில்லை
யொருவழிப் படநீள்கால முளமொருப் படுதலாலே
பெருகுவாதனை தீர்நெஞ்சிற் பேசுநூலனைத்தும் வேண்டா.

(ப - ரை.) இருதயத்தாசை ஒன்றும் இலாமையால் =மனத்தில் எப்பற்றும் இன்மையினே, எண்ணப்பட்ட கருமங்கள் = இப்பயனைக்குறித்து இவ்வினையாம் என்று சங்கிக்கப் பெற்ற தொழில்களே, செய்தும் தீர்ந்தும் = ஆற்றியுமாற்றியும், கையுறுபயன் ஒன்றில்லை = கரமேற்பெறும் பலம் ஒன்றையும் காணேம், ஒருவழிப்பட நீள்காலம் = ஒரேநெறியாக நின்று சிரகாலம், உளம் ஒருப்படுதலாலே = மனஞ்சமாதான முற்றுச்சீபாதிகள் செய்தலினுலேயும், யாதொருபயனுமில்லை, பெருகுவாதனைதீர் நெஞ்சில் = விருத்தியாகா நின்ற வாசனையற்ற மனத்தின் கண், பேசுநூல் அனைத்தும் வேண்டா = விவாத விவஷயீபூதமாய சாஸ்திரம் யாவுமே வேண்டியதின்றும்.

(ஸ்ரீ - வீர.) எல்லா ஆசைகளும் முன்மொழிந்த அபிமான அத்தியாசங்களும் நன்மனத்தாலே நீங்கப்பெற்றவன், உத்தமபுத்தியையுடைய முத்தனேயாவன். நைஷ்கர்மியத்தானும் அவனுக்கு யாதொருபயனுமில்லை, கருமங்களானும் அவனுக்கு யாதொருபயனுமில்லை, எவனுடையமனம் நிர்வாசனை யுடையதாமோ, சமாதான ஜபாதிகளானும், அவனுக்கொருபயனுமில்லை, சிறிதுபோது அநுஷ்டிக்கப்பெற்ற சிரவணமனனத் தியானங்களானே வாசனாக்ஷயம் வருவதற்கு முன்னரே, செய்யவேண்டியதைச் செய்துமுடித்து விட்டேமென்னும் மயக்கத்தால், திரும்புவதைத் தடுத்துரைத்தல்:—பேசுமென்பது. பரஸ்பரம் வித்வான்களோடு கூடச் சம்வாதத்தானே திடமாக உபந்யாச ஆற்றலுற்றதாக வாற்றியதும் சாலும், சாஸ்திரத்தைச்சரிவர ஆராய்ந்ததும் சாலும், பெரும்பரிசிரமத்தானே சர்வவித்வத் சம்மதியானும் இதுவே மோக்ஷசாஸ்திர ரகசியம் என நிண்ணயிக்கப் பெற்றுளது.

(ச.) ஆசை = சர்வதிருஷ்ணாத்ரம், எண்ணப்பட்ட கருமங்கள், நைஷ்கர்மியத்தானும் காமியாதிகன்மங்களானும் உளமொருப்படுதலால் = சமாதான ஜபங்களோடு கூடுதலினுலே

யும், பயனென்றில்லை; நிர்வாசனையான மனதுடையோனுக்கு கைவல்கர்மியமாதிகளால் எவ் வளவும் பிரயோஜன மின்றென்பது பொருள். கைவல்கர்மியம் = காம்யகர்ம பரித்தியாகம், யாவன் அத்தியந்தம் துயமனத்தானே சர்வதிருசியாதரத்தையும் விட்டொழித்தாலே அவன் உத்தம ஆசயமுத்தனே யாவன். (1)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இப்போது பிராஹ்மணனுடைய யதார்த்த இலக்கணத்தைப் போதித்தல்:—மறுகு என்பது.

மறுகுவாதனைக ளுர்ந்த மவுனத்தை யொழியவேறு
ருறுகதிரல்ல தில்லையுணர்வ னவுணர்ந்ததாகும்
துறுதிசை பத்துஞ்சுற்றி மீண்டதாந் தொல்லுலுலகத்
தறுதியாயுண்மை கண்டோர் சிலர்நின்றே ரவத்தின்மாய்வோர்.

(ப - ரை.) மறுகுவாதனைகள் = துன்புறுத்தாநின்றவாசனைகள், தீர்ந்த = ஒழிந்த, மவுனத்தையொழிய = மவுனத்தைவிட்டு, வேறு ஓர் உறுகதி நல்லதில்லை = அயலாக ஒரு அடையத்தக்க உத்தமமாகியபதம் இலதாம், உணர்வன உணர்ந்ததாகும் = காணத்தக்கன யாவுங் கண்டனவாகும், துறுதிசைபத்தும் சுற்றிமீண்டதாம் = வியாபகமான தசதிசைக ளும் உழன்று திரும்பியதாம், தொல்லுலுலகத்து = பிராசீனத்துயர் மயப்பிரபஞ்சத்தில், அறுதியா யுண்மைகண்டோர் சிலர் = திண்ணமாய் வஸ்துவையுள்ளபடி தரிசித்தவர் எக தேசியரேயாவர், நின்றேர் அவத்தின் மாய்வோர் = சேடித்தவரியாவரும் அவலவினைகளே புரிந்து கவலையடைபவரேயாவர்.

(ஸ்ரீ - வீர.) சகல வாதனைகளையும் நன்றுகவிடுத்த மவுனத்தைப் பார்க்கினும் உத்தம மான பதமியாதொன்றுமில்லை, பாலியபாண்டித்தியச்சப்தவாச்சிய சிரவணமனன பரிபா கத்தானே யுளதாய முன்மொழிந்த நிர்விகற்ப அசம்பிரஜ்ஞாத சமாதி பரிபாகாந்த முனி பாவத்தைக் காட்டினும் உத்தமபதம் = பரமபதம், பிராஹ்மணப் பெயரியபரத்தில் நன்கு நிலைபெற்றதத்துவ ஞானம், இலதாம் என்று நிண்ணயிக்கப் பெற்றுளது என்பதாம். அவ் வாறே சுருதியுமுளவாம்:—எதனும் பூர்வத்திற் பிராஹ்மணர் அசாதன பலசுபாவமாய இவ் வான்மாவை யுணர்ந்து, சர்வசாதன பலசொரூப ஏஷணை வடிவத்தினின்றும் கிளம்பிப்பிகூ சரியத்தை யாசரித்தனரோ, திருட்ட அதிருட்டப் பொருட்டுக் கருமவதன் சாதனத்தையும் விட்டு, அதனால் இப்போதுள்ள பிரஹ்மவித்தாய பிராஹ்மணனும், பண்டிதபாவமாகிய இவ் வாத்ம விஞ்ஞான பாண்டித்தியத்தை நிச்சேஷமாக வுணர்ந்து ஆன்மவிஞ்ஞானத்தை நிரவ சேஷஞ்செய்து, இருந்துவாழ்க; ஆசிரியரானும் ஆகமத்தானும் ஏஷணைகளினின்றும்கிளம்பி ஏஷணையெழுச்சி முடிபேயன்றே, அந்தப் பாண்டித்தியம்! ஏஷணைதிரஸ்கார உற்பவத்தன் மையான், ஏஷணைவிருத்தத் தன்மையான்; ஏஷணையைத் திரஸ்கரிக்காமல் ஆன்மவிடயமாய பாண்டித்தியத்தி னுற்பவம் இலதாமென ஆன்மஞானத்தானேயே ஏஷணையெழுச்சி விதிக் கப் பெற்றதாம். ஆன்மஞான சமானகருத்தாவை யுடையக்த்வா விருதிகோடுங் குறிமறை யாற்றிட மாற்றப்பெற்றதாம். ஆகலின் ஏஷணையி னின்றுங்கிளம்பி ஞானபலபாவுபாலியத் தால் நிலைபெறவிழைக, அஞ்ச்ம வித்துக்களாய இதரர்கட்குச் சாதனபலாசிரயணமே பல மாம், அப்பலமகற்றி வித்வான் அசாதனபல சொரூப ஆத்ம விஞ்ஞானமேபலம், அதன் பாவமேகேவலம் ஆசரித்தல் வேண்டும் என்பதாம். அதனே யாசரிக்கிலே காரணங்கள் ஏஷணை விஷயத்தில் இவனே இழுத்து அழுத்தமுடியாதனவாம், இஞ்ஞான பலஹீனஞ்சிய மூடனேயன்றே திருட்ட அதிருட்ட விடயங்களாய ஏடணையிலேயே காரணங்கள் செலுத்தா நிற்கும், பலமென்பது ஆத்மவித்தையானே அசேஷவிஷய திருஷ்டி திரஸ்காரமாம், ஆக

லின் அதன்பாவமாய பாலியத்தானே நிலைபெறுதல் வேண்டும்; அவ்வாறே "ஆன்ம அறிவி னுல் மீரியம் விளையும்" என்றும், "இவ்வான்மாப் பலவீனனுலெய்துரு" என்றும், அயற் சுருதிகளுண்மையின். பாலியத்தையும் பாண்டித்தியத்தையும் நிச்சேடமாக்கிப் பின்மன னத்தான் முனியோகியாவன், சர்வ அநாத்மப் பிரத்தியயநிரஸ்கரண மியாதொன்றுளதோ அவ்விவ்வளவே பிராஹ்மணனுற் செய்யத்தக்கதாம், இதனையியற்றி யோகியாய்க் கிருதகிருத் தியனுயாவன். ஆன்மஞான அநாத்மப் பிரத்தியய திரஸ்காரமாம் பாண்டித்திய பால்யப் பெயரிய அமௌனத்தையும் நிச்சேடமாக்கி, மௌனமென்னும் அநாத்மப் பிரத்திய யதிரஸ் கரணத்தின் பரியவசான பலமாமதனையும் நிச்சேடமாக்கிப்பின், பிராஹ்மணன் கிருதகிருத் தியனுவன்; பிரஹ்மமேயாவும் என்னும் பிரத்தியயம் உண்டாம், அவன் பிராஹ்மணன் கிருதகிருத்தியனுகலின் பிராஹ்மணன். ஆசார்யபரிசரியை வாயிலாகவே வேதாந்தங்களின் ஞ்ரற்பரியந் துணிதல் பாண்டித்தியமாம், ஊகத்தினுலே அநாத்மநோக்கத்தை நூகக்கல் பாலி யமாம், அகமாத்மா பரம்பிரமமாம், என்னினும் அன்னியம், எதுவுமேயில்லை என்றுமனத்தி னுலேயே மகிழ்ந்ததநுசந்தானஞ் செய்தல் மௌனமாம், மகாவாக்கியார்த்த ஞானம்பிராஹ் மண்யமாம், என்பது விபாகம்.

இங்நேதிநேதியாதி லக்ஷண நித்தியமகிமை பிராஹ்மணனுக்காம், அயன்மகிமைகளோ கருமங்களானே யாக்கப்பெற்றனவென அநித்தியங்களாம், இதுவோ அவற்றினும் விலக்ஷண மகிமையாம் இயற்கையா யுண்மையானே எல்லா ஏடணைகளையும் எறிந்தவனுகிய பிரஹ்ம வித்தாம் பிராஹ்மணனுக்கு நித்தியமாம், நித்தியத்தகைமை யாங்ஙனமா மாலோவெனின், வல்வினையானே வளர்வது மிலையீது, தீவினையானே தேய்வதுமிலையது ஆதலினென்க. இவ்விருமறைகளும் தெளிதற் பொருட்டுப் பொருளொடுங் காட்டப் பெற்றனவாம்.

இதனுனே தத்துவஞ்ஞர் ஏகதேசியருங், கிடைத்தற் கரியருமாவர் எனல்:—உணர்வன என்பது பார்க்கத்தக்க தகிலமும் பார்க்கப் பெற்றதாயது, தசதிசையும் உழன்றுமுன்று என்ற படி; உள்ளபடி வஸ்துவை யுண்மையாகக் கண்டவர்களாகிய ஜனங்கள் சிலர்களேயாவர்கள். சர்வஜனங்கட்கும், வெளிமுகத் தன்மையுண்மையின், வெளியிலேயுள்ள இட்டவ நிட்டங்க ளிலேயே கண்ணுண்மையின் அதனை யடையவும் விடவும் ஆமுபாயம் ஆற்றும் ஆற்றலேயே கண்டாமன்றி, ஆன்மாவை யறியுமாற்றலைக் காணேமென்பார் சிலர் என்ருர். யாதுயாது சிறிது காணப்பெறுகின்றதோ அது இட்ட அநிட்டங்களினும் அயலாகவிலதேயாம், அதனி னும் அயலாகயாதொரு அவிடயமாய ஆத்மதத்துவ முளதோ அதன்மாட்டோ எவனும் எத்தனம் செய்வதேயில்லை, மற்றேர், யாவரும் இஷ்டவநிஷ்டங்களிலேயேமுயல்வர். சேடக் தொடர்பு பற்றிவருங்கவி யுரையிலுரைக்கப் பெறும்.

(ச.) சாஸ்திரத்தைப் பரஸ்பரம் ஈன்ருய் விசாரிப்பினும், ஏகாந்தத்திற்றனது புத்தி யாற்ருனே யாலோசிப்பினும், மறுகுவாதனே கடீர்ந்த = நிர்வாசனேயான, மவுனத்தையொ ழிய = தூஷ்ணீம் பாவத்தைத்தவிர, வேறேருறுகதி கல்லதில்லே = உத்தமமான பரம் பொருள் மற்றென்றுமின்று, உணர்வன=அறியவேண்டிய வஸ்துவையும், உண்மை=மெய்ப் பொருளே, அவத்தினின்ருர், வீணன கிரியாக்கிரமத்தில் நின்ருர், மாய்வோர் = மடி பவராவர்; அல்லது, நின்ருர் = ஆரம்பமுடையவர், அவத்தின் = வீணன கிரியாக்கிரமத் தில், மாய்வோர் = மடிபவராவர். (15)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்வநாத்ம விடயத்தில் உளதாய முயற்சியும் அநாத்மதேக மாத்திரப் பொருட்டாகலின் மறித்தும் மறித்தும் தேகத்தைத் தொடங்கும் அநர்த்தஹேது வேயாம் என்னுங் கருத்தாலுரைத்தல்:—தேகத்தை யென்பது,

தேகத்தை நோக்கியன்றே செகமெலாந் திரிவதல்லா
லேகத்தை நோக்கியன்றே வெங்கணும் பஞ்சபூத
காகத்தை மண்ணைக் கீழைநாடினு மாறுகாணே
மோகத்தை விடுதுமென்றே திடமுற்றார் முழுதும்பற்றார்.

(ப - ரை.) தேகத்தை நோக்கியன்றே = தேகமாத்திரார்த்த மாகவல்லவா, செகமெலாந்திரிவது = உலகமெல்லா முழல்வது, அல்லால் = அதுவேயன்றி, ஏகத்தை நோக்கியன்றே = ஆத்மார்த்தப் பொருட்டல்லவே, எங்கணும் பஞ்சபூதம் = எவ்விடத்தினும் ஐந்துபூத சம்பந்தமேயாம், நாகத்தைமண்ணைக் கீழை = சுவர்க்க பூதலபாதாளங்களே, நாடினும் = நோக்கிச்சென்றபோதினும், ஆறுகாணேம் = ஆறுவது ஒன்றையுங் கண்டிலேம், மோகத்தைவிடுதும்-இரதியைவிட் டொழிப்பேம், என்றே = என்பதாகத்தானே, திடமுற்றார் முழுதும்பற்றார் = தீரமான மதியையுடையவர் திடமடைந்தார்.

(ஸ்ரீ - வீர.) இலௌகிக வீடு மாடமாளிகை முதலிய விடயத்தொடக்கங்கள் யாவை சிலவுளவோ வைதிக யாகமுதலியவையாவை சிலவர்தஞ் செய்கையாயுளவோ, அவையாவுமே தேகமாத்திரப் பொருட்டேயல்லாமல் ஆன்ம உணர்வின்பொருட்டு ஒரு சிறிதுமாகாவாம். அற்றேற் சமூசாரத்தின் கண்ணும் உத்தம இராஜ்ஜியாதி பதங்கிடைக்கின் இழைப்பாறுதல் காணப்படுகின்றதாகலின். ஆன்மதரிசனத்தாலாகவேண்டிய தென்னே ! உரைக்கின்றும் கேட்டி ! புவனத்தில் இராஜ்ஜியம் போற்றுக, இந்திரபதலாபத்தானே விரும்பற்க, மேகத்துட்புகுதுக, வருணபதலாயத்தானே நீரிற்றுன் நிலவுக, யோகசித்திகளாற்றுமாதல் பூதவெற்றிகொண்டு யாண்டுமேதுழைக, எனினும் ஆத்மலாபமில்லாமல் ஐந்து விசிராந்தியை யடையவே மாட்டாதாம். ஆயின் விசிராந்தியை வாஞ்சிப்பவனுல் எவையுபாசிக்கத்தக்கவையெனின் அவற்றைக் கூறுவாம், யாவர்மகா மதியையுடையவரோ, அதனனே யாவர் புலன்கள் வெண்ணிட வெற்றிகொண்ட வீரசேகர சூராவரோ பரமசாந்தரோ, மகாஞானியராய அவரே, அதிசூக்கும மதியையுடைய முமுக்ஷுக்களால் சன்மச்சுர விநாசப் பொருட்டுப் போற்றி யுபாசிக்கத்தக்கவராவர் என்று அறிக. அவரையுபாசித்தலானே தத்துவபோதம் உண்டாயினும், மீண்டும் போகபூமிகளில் உண்டாம் இரதியானது யாவரால் அகற்றப்பெறும் எனின், கூறுகின்றார்:—எங்கணும் என: எவ்விடத்திலும் பஞ்சபூதங்களேயுள்ளனவாம், ஆறுவதுசிறிதும் ஆய்ந்தாய்ந்துங்காணேம், பாதாளத்திற் பூதலத்திற் சுவர்க்கத்தில் மற்றெங்குதான் இரதியையடைவன் றெரியபுந்தியன்; அடையான் என்றபடி = சுருதி:—" எவ்வத்தேவதைகட்குத் திரிவித்காரணம்கூறப்பெற்றதோ அதற்கே உதாகரணம் உரைக்கப் பெறுகின்றது; உதாகரண மென்பது ஏகதேசப் பிரசித்தியானே அசேஷப் பிரசித்தியின் பொருட்டுக் கூறப்பெறுதலாம், அவ்விதனேக் கூறல்:—திரிவித்கிருதமான எவ்வக்கினியின் தோகிதம்ரூபம் உலகிற்பிரசித்தமாமோ அது, திரிவித்கிருதமாகாத தேஜசின் ரூபமாமென்றறிதி, அவ்வாறே அக்கினிக்கே யெச்சுக்கிலரூபமுளதோ அது, திரிவித்கிருதமாகாத அப்புவினதாம், அவ்வக்கினிக்கே எக்கிருஷ்ணரூப முளதோ அது, திரிவித்கிருதமாகாத அன்னமென்னும்பிருதுவியினதாம், என்றுணர்தி. ஆண்டிவ் வண்ணமாகவே ரூபத்திரய வியதிரேகமாக அக்கினியென வெதனை நினைகின்றனேநீ அவ்வக்கினியின் அக்கினித்தகைமை இஞ்ஞான்று அகன்றது, ரூபத்திரய விவேகவிஞ்ஞானத்தின் முன்னினக்கு. எவ்வக்கினி புத்தியகன்றது அக்கினிசப்தமும் அகன்றது, காணப்பெற்ற சிவப்புபாதியோடு கூடியபடிகம் கவரப்பெறுவதாகி, இதுபதுமராகம் என்னும் சப்தபுத்திகளின் பிரயோஜகமாகின்றது, உபாதிபடிகங்களின் விவேகவிஞ்ஞானத்தின்முன், அதன்விவேக விஞ்ஞான

முண்டாயினே பதுமராக சுப்தபுத்திகள் அதன்விவேக விஞ்ஞாதாவிற்கு அகன்றபோம் அதுபோலென்றுணர்க. ஈண்டு, புத்திசத்த கற்பனையால் இயற்றப்பெறுகின்ற தென்னே ரூபத்திரய விவேகஞ்செய்வதினும்முன்னக்கினியே இருந்தது அவ்வக்கினியின் அக்கினித் தன்மை ரோகிதாதிரூப விவேகஞ் செய்தலானே அகன்றது; என்பது பொருத்தம், நூற் கள் சிதைவுற்றவழி ஆடையிலதுபோலும் எனின் ? அற்றன்றும், புத்திசத்த மாத்திரமே தானக்கினி, வாக்காலம்பன மாத்திரம் நாமமேகேவலம் அக்கினியென்னும்விகாரம் இல்லே யாம் என அஃதறையப் பெற்றிருத்தலின், அக்கினிக்கு நாமமாத்திரத் தன்மையாகவே அக்கினிமதியும் பொய்யேயாம்; ஆயின் என்ஞண்டுண்மை யெனின், மூன்றுரூபங்கள் என் பதே மெய்யாம், அணுமாத்திரமும் ரூபத்திரயத் தயலாகச் சத்தியமில்லேயென்பது தேற்றப் பொருளாம்;" என்று மறையறைந்த நெறியானே எல்லாப் பூதகாரியங்கட்கும் பூதமாத்தி ரத் தன்மைவடிவப் பரிய்ம்மைப் போதமுறவே அவற்றில் இரதி உதயமாகாமையின் அடையான் என்பதுகருத்து.

(ச,) அவரனேவரும், தேகத்தை நோக்கியன்றே = தேகமாத்திர நிமித்தமல்லவா, திரிவதெல்லாம் = சஞ்சரித்தன் முதலியவனேத்தும், எகத்தை நோக்கியன்று = ஆத்மார்த் தம் எவ்வளவுமன்றும், ஆத்மார்த்தம் = ஆன்மாவின் பந்தம் விடுபடு நிமித்தம். ஒ, என்பது இரக்கக்குறிப்பு, நாகத்தை மண்ணேக்கீழை = சுவர்க்கத்திலும் பூதலத்திலும் பாதாளத்தி லும், ஆறுகாணேம் = ஆறுவது அற்பமும் இன்று, அப்பூதங்களும் நசுவரங்களும் ஜடங்க ளும் ஆமாதலின், திடமுற்றேர் = தீரரான விவேகிகளது புத்திமுழுதும் பற்றர் = எவ் விடத்தும் விசிராந்தியடையா தென்பதாயிற்று, ஆன்மசொரூபத்தின் கண்ணே இரமித் தற்குரியதா மென்பது கருத்து, (16)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றுயின் எஞ்சிநின்ற பூதங்கட்கே முடிவுகிடையாமையின் அவற்றைத்தாண்டல் கூடாதெனின் ? இஃதுண்மையே, அஞ்ஞர்க்கட் கிங்ஙனமேதான், தத் துவவித்துக்கட்கோ " ஆககாரியம் அன்னமூலமாவதே போலத் துணிபாகச்சோமியகாரிய பூதமாய அன்னத்தானே அப்புமூலம் அன்னகாரியத்திற் கறிதி அப்புவிற்கும் விநாச உற் பத்தியுடைமையின் காரியத்தன்மையே யாமென அப்புக்காரியத்தானே சோமியகாரணம் தேஜோமூலந் தேடிக்கொள், தேஜசிற்கும் போத்தியும் ஆதலும் பொருத்துகின்றமையின் காரியத் தன்மையாமெனச் சோமிய தேஜஸ்காரியத்தானே சன்மூலம் எகமேவாத்விதீயம் பரமார்த்த சத்தியமாம். எதன்கண்ணே இவையாவும், இரஜ்ஜுவின்பாற் சர்ப்பாதிவிகற் பக்குழப்போலும் வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் அதிருதம் அத்தியமிகமாமோ, அவித்தையாலது இச்சகத்திற்கு மூலமாம், ஆகலின். ஹேசோமிய இத்தாவர ஜங்கமவடிவ சர்வப் பிரஜைகளுமே சத்தைக்காரணமாக வுடையனவாம், கேவலஞ்சன்மூலங்கண்மாத்திர மன்றும், இத்திதிகாலத்திலும்சற்பற்றுக் கோடுடையனவேயாம், மண்ணேப்பற்றுமற்குடாதி கட்கு இருப்பாதல் திதியாதல் உளதாவதில்லேயன்றே, ஆகலின் மட்போலச் சன்மூலத் தன்மை யுண்மையின் பிரஜைகட்குச் சதீரயதனர்களே பிரஜைகள் எனலாம், முடிபிலும், சத்தே பிரதிஷ்டையாம் = இலயமாம் = சமாப்தியாம் = அவசானமாம் = பரிசேட மாம், ஆகவே சற்பிரதிஷ்டை யுடையனவேயாம் " என்னுஞ் சுருதிகாட்டிய ஊகத்தானே சருவாதிஷ்டானப் பிரஹ்ம தரிசனத்தால், பூதங்கட்கும் பொய்ம்மைத் துணிபுளதாவதால் அவற்றைத்தாண்டல் எளிதேயாம் என்னுங் கருத்தால் உரைத்தல்:—ஊகமென்பது.

ஊகமின் மூகர்க்கெல்லா மூழிவெங்கட லாஞ்சென்ம
மோகமிலாகத் தோர்க்கு முன்னுறு கோவின்ரூளாஞ்
சோகமின் ஞானிநெஞ்சிற் ரூடர்ந்த சிற்றின்பம்பற்ரூப்
போகமில் சிற்ரூர்ப் புன்பெண் பொலிநகர் விடலைக்கென்னும்.

(ப - ரை.) ஊகமில் மூகர்க்கு எல்லாம் = யுக்தியை வெகுதூரத்தில் வீடுத்தமூடர்யாவ ருக்கும், ஊழிவெங்கடலாஞ் சென்மம் = சம்சாரம் மகாப்பிரளய அர்ணவமாம், மோகமிலா கத்தோர்க்கு = சூதர்க்கமற்ற யுக்தியுடைய அறிஞர்க்கோ, முன்னுறு கோவின்ரூளாம் = எதிரில் அற்பமாய்த் தோற்றுஞ்சமுசாரம் ஆவின்பாதப் பைம்புனலாம், சோகமில் ஞானி நெஞ்சில் = சோகமயச் சகத்திரயமும் உதயமேயாகாத தத்துவஞ்ஞனுடைய மனத்தில், தொடர்ந்த சிற்றின்பம் பற்ரூ = மற்றையர் யாவரும் பின்பற்றிய எச்சகத்துப் பாவங்களும் மயக்கமாட்டாவாம், போகமில் = சிறியவயதையுடைய; சிற்ரூர்ப் புன்பெண் = சூக்கிரா மத்தில் வாழ்ந்து மயக்குந்திறனற்ற அவலக்ஷணமான அழுக்காடை யற்பச்சிறுமி, பொலி நகர்விடலைக்கு என்னும் = சர்வாலங்கார சோபிதப்பெரிய நாகரீகமான பட்டணத்தில் வாழும் மன்மதன்போன்ற காளையை மயக்குவதற்கு எவ்வகையினளாவள், ஆகாள் அது போலப்பற்ரூ வென்றறிக.

(ஸ்ரீ - வீர.) ஊகத்தோடுகூடி ஆராயும் பெரிய அறிஞனுக்குத் துணிபாக இச்சம்சாரம் ஆன்குளப்படி யறற்கொப்பாம்; ஊகத்தையடியோடு மொழித்த மூர்க்கனுக்கோ, சம்சாரம், பெரியமத்தாண்ணவப் பிரளயக்கடற்குச் சமானமாம், தத்துவத்தை யுணர்ந்தவனே பரவை ராக்கிய தாட்டியத்தாற் போகவாசனையை வீட்டியத்தால் நிர்வாசனத் தூயவந்தக்காரணம் படைத்தவனுவன், அன்னனே, லோகபால போக்கியங்களேயாய இம்மூவுலகசம்பந்தி இராச் சியாதி ஜகற்பாவங்க ளெவையுமே, மீண்டுமீண்டும் பரிகிலிய மானங்களாயினும், ஆகாயத் தை யம்புதங்கள் என்ன இரஞ்சனையியற்ற மாட்டாவாம். சகத்திரயமும் உதயமேயாகாத வென்பதை மாண்டூக்கியத்துங் காணலாம்:—" திகிணிரோதமு மில்லையுற்பத்தியும் திகழா, திகழுபத்தமுமில்லை சாதகமுமேயிலையாம், முகிழ்முமுக்குவு மில்லைமெய் முத்தனுமிலையாம், புகழுமிங்கிஃதுண்மைய தென்னவே புகல்வார்." துவைதமபொய், ஆன்மாவொன்றே உண் மையாகவுளது என்னுந் துணிவுளதாகியவழி இவ்வெல்லா லௌகிகவைதிக விவகாரங்களும் அவித்தை விடயங்களேயாம், ஆகவே பிரளயமுமிலையாம், ஜனனமுமிலையாம், சம்சாரியுமிலை யாம், மோக்ஷசாதனமு மிலையாம், மோசனூர்த்தியு மிலையாம், விமுக்தபத்தனு மிலையேயாம், உற்பத்திப் பிரளயங்களின்மையானே பத்தாதிகளு மில்லையென்னுமிது பரமார்த்தமையாம். யாங்ஙனம் உற்பத்திப் பிரளயங்களினின்மை யெனின் துதலுதும்:—துவைதத்திற்கு அசத் துவ முண்மையின், " யாண்டுதானிருமை போற்ரூற்றுமோ, யாவனீண்டு பன்மைபோற் பார்ப்பனே, ஆன்மாவே யிவ்வியாவும், பிரஹ்மமே இவ்வியாவும், ஒன்றேயத்துவிதீயம், இவ்வியாவும் எவ்விவ்வான்மா," என்பவாதி சுருதிகளானே துவைதத்திற்கு அசத்வம் துணியலாம். சத்திற்கன்ரூ உற்பத்தியாதல் பிரளயமாதல் சார்தல், சசவிஷாணுதிய சத் திற்குச் சாராதன்ரூ, அத்வைதம் உற்பத்தியுமாவதில்லை லயமுமாவதில்லையாம், அத்வய மும் உற்பத்திப் பிரளயமுடையதும் மென்பது விப்பிரதிஷித்தமாம். யாதுதான் மீண்டுந் துவைத நல்வியவகாரமோ அது இரஜ்ஜுசர்ப்பம்போலும் ஆன்மாவில் உயிர்ப்பாதி வடிவ மாய்க் கற்பிதமெனக் கழறப்பெற்றது, மநோவிகற்பமாகத் தோற்றும் பழுதைப் பாம்பாதி வடிவத்திற்குப் பிரளயமாதல் உற்பத்தியாதல் இரஜ்ஜுவின் கண்ணின்ரும்; இரஜ்ஜுவைக் காணும் யாவருக்கும் தோற்றும் வழக்காதலின். மனத்தின் கண்ணிரஜ்ஜு சர்ப்பத்தின் உற்

பத்தியேனும்பிரளயமேனும் இலேயாம், வெளிப்புலப்பாடு விரோதமாதலின், இரண்டினுமிர
ண்டும்உண்டாவதில்லே; இரண்டாதாரத் தன்மையேலாமையின். அவ்வாறே துவைதத்திற்கு
மாநசத்தன்மை யொப்பாயிருத்தலின், யாண்டுமே உண்மையான ஜன்மவினாசங்கள் காட்ட
முடியாதாம், மனம் நிற்பினும் நிறுதலியினும் துவைதம் கவரப்பெறுவதில்லேயாம், ஆகலின்,
மநவிகற்பனமாத்திரம் துவைதம் எனத்துணியப்பெறும், பெறவேதுவைதத்திற்கு அசத்வ
மூண்மையின் நிரோதாதிய பாவத்திற்குப் பரமார்த்ததையாம் எனகன்கு நவிலப்பெற்றதே
யாம், இவ்வண்ணந் துவைத அபாவத்தில் சாஸ்திரவியாபாரமாயின், அத்வைதத்தில் இல்
லேயாரும், விரோதமாதலின்; அவ்வாறுகவே, அத்வைதத்திற்கு வத்துதன்மையில் அள
வையின்மையின், சூனியவாத வழக்காம்; துவைதத்திற்கு இருப்பின்மையின்; கூடாதாம்,
இரஜ்ஜுசர்ப்பாதி விகற்பனைக்கு நிராஸ்பதத் தன்மைம் பொருந்தாதெனக் கண்டிக்கப்
பெற்றதிது, யாங்ஙனம் உற்பவிக்கு மாறுசெய்கின்றாய், சர்ப்பவிகற்பத்திற்கு ஆஸ்பதபூத
மாய இரஜ்ஜுவும் விகற்பிதமே யாமெனத் திருஷ்டாந்தம் பொருந்துறுதா மெனின், அற்
றன்றும், விகற்பனை கூயமாகவே அவிகற்பிதத்திற்கு அவிகற்பிதத் தன்மையானே சத்துவ
மொத்திருத்தலின்; இரஜ்ஜுசர்ப்பம்போலும் அசத்துவமாமெனின், ஆகாதாம், ஏகாந்தமாக
அவிகற்பிதத் தன்மையான், சர்ப்பாபாவ விஞ்ஞானத்தின்முன் அவிகற்பித இரஜ்ஜு அம்சம்
போலும். விகற்பம் விளைப்பவனுக்கும் விகற்பனை விளையுமுன் சித்தத்தன்மை யங்ஙேகரித்த
லின் அசத்துவ மமையாதாம். யாங்ஙனந்தான் பின்வியாபார அபாவசொருபத்திற் சாஸ்தி
ரத்திற்குத் துவைதவிஞ்ஞான நிவர்த்தகத்தன்மையாதல்? இதுகோதாகாதாம், தாம்பின்மாட்
டுப்பாம்பாதிபோலும் ஆன்மாவின் பாற்றுவைதத்திற்கு அவித்தையத்தி யஸ்தத்தன்மை
யுண்மையின். யாங்ஙனம்? சுகி யான் துக்கிமூடன் பிறந்தேன் இறந்தேன் ஜீர்ணன் சரீரி
காண்கின்றேன் வியக்தன் அவ்வியக்தன் கர்த்தா பலமுடையவன் சேர்ந்தவன் பிரிந்தவன்
சிதைந்தவன் கிழவன்யான் என்னுடையவரிவர் இன்னேரன்ன முதலனயாவும் ஆன்மாவின்
மாட்டத்தியாரோபிக்கப் படுகின்றனவாம், ஆன்மா இவற்றுள் தொடர்ந்திருக்கும் யாண்டும்
பிறழாதிருத்தலின், தர்ப்பதாராதி பேதங்களில் இரஜ்ஜுவேபோலும்; எக்காற்றுனிங்ஙனம்,
விசேடிய சொரூபப் பிரதியயத்திற்குச் சித்தத்தன்மையான். இன்று கர்த்தவ்யத்தன்மை
சாத்திரத்தான். செய்யப்பெறுதலைச் செய்வதல்லவோ சாத்திரம் விதிக்கும் அதுகாரித்தன்மை
யில் அப்பிரமாணமாம்; எதனால் அவித்தையத்தியாரோபிதசுகித்வாதி விசேஷப்பிரதிபந்தத்
தானேயே ஆன்மாவிற்குச் சொரூபமாக அநவஸ்தானமாமோ, சொரூப அவஸ்தானந்
தானே நிச்சேட துக்கநிவிருத்தி நிரதிசய ஆனந்தப்பிராப்தி யென்னும் மேலாயநிரேயசாம்
என்பது மோக்ஷசாஸ்திரங்களிற் பிரசித்தமாம். சுகித்வாதி, நிவிர்த்தகமான சாஸ்திரம்
ஆன்மாவின்கண் அசுகித்வாதிப் பிரத்தியயமாக்கலால்நேதிநேதி தூலமற்றதாதி வாக்கியங்க
ளானே ஆன்மசொரூபம்போலும் அசுகித்வாதியும் சுகித்வாதி பேதங்களில் தொடர்ந்திருக்
குந்தருமமல்லவாம், தொடர்ந்திருப்பதா மேலாயினே அத்தியாரோபித சுகித்வாதி லக்ஷண
விசேஷமாகாதாம், உஷ்ணத்வ குணவிசேஷவானைய அக்கினியின் கண்ணே சீதத்தன்மை
போலும், ஆகலின் நிர்தீசேஷமேயாய ஆத்மாவின்கண் சுகித்வாதி விசேஷங்கள் கற்பிதங்க
ளாம், அசுகித்வாதி சாஸ்திரமான்மாவிற்கு யாதாமோ அது சுகித்வாதிவிசேஷ நீக்கப்பொ
ருட்டேயெனத் துணியப்பெறும். "சித்தமோ நிவர்த்தகத் தன்மையான்" என்பது ஆகம
மறிந்தவரின் சூத்திரமாம், இதுதிரவிட ஆசாரியசம்மதி யென்ப. பிரஹ்மத்தின் மாட்டுப்
பதங்களின் விற்பத்தியபாவமிருப்பினும், சித்தமேயாய சாஸ்திரப் பிராமாணியம் அபா
வத்தையறிவிக்கும் விற்பந்நமாய நஞ்மொழிகலந்த தூலாதிவிற்பன்ன பதங்களானே இயற்
கையாயமைந்த இருமை யின்மையை யுணர்த்தலானே அத்தியஸ்த நிவர்த்தகத் தன்மை

யுண்மையின் என்பது சூத்திரப் பொருளாம், மற்றையர்யாவரும் பின்பற்றிய வென்பது மறையே மலரும்:—இந்தப் பரமாநந்தத்ததேயாய, அவித்தையா லாக்கப்பெற்ற விஷய இந்திரிய சம்பந்தகாலப் பசுப்புற்ற கலேயைப்பெற்று அன்னியபூதங்கள் ஆநந்தித்துவாழும் என்பதாம். போகமில்லென்பது பாடபேதம்.

(ச.) மூகமில் யூகத்தோர்க்கு = பரிபூரண பிரமபாவனை ரூபமான மகாயோகமுடை யோர்க்கு, தொடர்ந்த சிற்றின்பம் = ஜகபாவனைகளற்பமும், விடலேக்கு = சுந்தரிகாந் தனுக்கு. (17)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஜகத்திற்குத் தத்துவவித்தாத்மப் பிரகாச அபேக்ஷையை விரித் தல்:—பிரமமென்பது.

பிரமமாஞ் சுத்தவேலை நுரைகளாம் பிறங்கலெல்லாம்
பரமவாதித்தன் முன்னர்க் கானலாம் பரவைஞாலங்
திரமதாமிதனை முன்னே செப்பினன் வியாழன்றந்த
வரமகன் கசனும்பே ரோன்மற்ற துவள்ளல் கேட்பாய்.

(ப - ரை.) பிரமமாம் சுத்தவேலை = பிரஹ்மசொரூபம் அமல அம்போதியாம், பிறங் கல் எல்லாம் நுரைகளாம் = குல அசலங்களியாவும் பேனங்களாம், பரம ஆதித்தன்முன் னர் = கானலாம் பரவைஞாலம் = பேய்த்தேராம் ஆர்கலியுலகம், திரமதாமிதனை = அதி திடமாகிய இத்திருஷ்டியை, வியாழன்றந்த வரமகன் = பிருகஸ்பதியீன்ற மேன்மைவாய்ந்த குமரன், கசனும்பேரோன் = கசன் என்னும் நாமதேயம் வாய்ந்தவன், முன்னேசெப்பி னன் = முன்னொருகாலத்தி லுரைத்தனன், மற்றது = மலர்ந்த அதுதன்னை, வள்ளல் = ஹே இராகவ ! கேட்பாய் = யாம்கூறக்கேட்குதி !

(ஸ்ரீ - வீர.) விசாலமான நின்மலப்பிரஹ்ம சமுத்திரத்தில் நுரைகள் போன்றனவாம் குலாசலங்களியாவும், சித்தாதித்திய மகரீபோசமிருக திருஷ்ணைகளாம் நதி சமுத்திராதிக ளோடு கூடியசகங்களியாவும்! இங்ஙனம் அதிஷ்டானத் தன்மைக்குமாத்திரம் அதன பேக்ஷையென்பதாக வின்றும், மற்றே, ஜடங்கட்குப் பிரகாசப் பொருட்டும், முன்மொழிந்த சுருதிப்படி சர்வப்பிராணிகட்கும் ஜீவன ஹேதுவாய விடயானந்தப் பொருட்டும் அதன பேக்ஷயாமென் றறிந்துகொள்க. எல்லா வாழ்வினையுமுறும் சார்வபௌமாதி யிரணியகருப் பாந்தமாய் மேன்மேல் வேண்டுற்ற நல்லானந்தங்களெல்லாம் அதன் லேசமாத்திரமாயிலங்க லின். பூர்ணபதத்தை யடைந்த ஆருடனுடைய சார்வாத்மிய ஸ்திதியைப் போதிப்பதாகிய கசன்கீதையை உபதேசிக்கத் தொடங்கல்:—திரமதாமென்பது. ஹே இராகவ ! முன்மொ ழிந்த இதேவிடயத்தில் பிருஹஸ்பதி மைந்தனுகிய கசனுற்கானஞ்செய்யப் பெற்றதாயுதித்த பூர்வகாலவிருத்த அதிபவித்திரமாகிய கீதையைக் கூறக்கேட்பாயாக. பார்ஹஸ்பத்யேந = அநந்தரா பத்தியத்தில் பதி உத்தரபத லக்ஷணண்ய விகுதியாம் ஆதிவிருத்தியாம் ப்ராஜா பத்யசப்தம்போலு மென்பதாம்; பின்மூன்றும் வேற்றுமை.

(ச.) பிறங்கல் எல்லாம் = சர்வகுலாசலங்களும், பரமவாதித்தன் முன்னர் = சிதா தித்த மகத்தேசின்கண், கானலாம் = மரீசிகளாம், பரவைஞாலம் = சகலஜகங்களும், திர மதாம் = சித்துவிலாசமாத்திர கற்பிதங்களாம் என்பது பொருள். இதனை = இப்பொருளை மூலம்: பார்ஹஸ்பத்யேந = பிருகஸ்பதி அபத்தியமென்னுங் குழந்தையால். (18)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கசன் சுவாநுபூதியை வெளியிட்டபடி வெளியிடல்:—கசன் மேனியென்பன.

கசனுயர் சமாதிநீங்கி யொருபகற் களிக்குநெஞ்சன்
வசமறத் தழுதழுத்த வசனத்தன் யாதுசெய்கேன்
திசையுற வெங்குசெல்கேன் தீர்ப்பதென் கொள்வதென்னு
மிசையுயர் கற்பநீர்போன் மேதினி யெங்குநானே. (19)

மேனியிற் புறத்தினுள்ளின் மேலொடு கீழிற்றிக்கில்
வானில்வை யகத்திலெங்கு நானன்றிமற் றொன்றில்லே
யானிலாவிடமு மில்லே யெனதிடத் திலாதுமில்லேத்
தானிகழ் பொருள்வே றில்லேசச்சிதா நந்தமென்றான். (20)

(ப - ரை.) கசன் = தேவகுரு சுதன், உயர்சமாதிநீங்கி = மேன்மைதங்கிய நிருவிகற்ப சமாதியினின்றுங் கிளம்பி, ஒருபகல் = ஒருபோது, களிக்கும் நெஞ்சன் = மகிழ்நிறைமனத்தனுய், வசமற = பரவசனுய், தழுதழுத்த வசனத்தன் = கத்கதவாணியனுய், கூறியதாவது, யாதுசெய்கேன் = எதனேயியற்றுவேன், திசையுற எங்குசெல்கேன் = எத்திசையை நோக்கியாண்டு போவேன், தீர்ப்பது என்கொள்வது என்னு = எதனேக்கவர்வேன் எதனேத் தியாகிப்பேன், மிசையுயர் கற்பநீர்போல் மேதினி எங்கும் நானே = மேலுங்கீழும் எங்குந் தங்கும் மகாகற்பஜலம்போல விசுவமுழுவதும் யானே வியாபித்துள்ளேன்.

மேனியில் = தேகத்தில், புறத்தில் = பாகியத்திலும், உள்ளில் = ஆந்தரத்திலும், மேலொடுகீழில் திக்கில் = ஊர்த்வ அதோபாகங்களிலும் திசைகள் எட்டிலும், வானில் வையகத்தில் = தேவினும் பூவிலும், எங்கும் = பிறயாண்டுமே, நானன்றி = ஆத்மாவலது, மற்றொன்றில்லே = பிறிதொன்றுமே கிடையாது, யான் இலா இடமும் இல்லே = யாண்டகமில்லேயோ அத்தகைய இடமேகிடையாது, எனது இடத்து இலாதும் இல்லே = என்னிடத்தில் யாவுந்தோற்றலின் இல்லாததொன்றுமேயில்லே, தானிகழ்பொருள் வேறு இல்லே = தன்னேப்பார்க்கினும் அன்னியம் ஒன்று மின்மையின் யாதையான் அன்னியமென வாஞ்சிப்பேன், சச்சிதாநந்த மென்றான் = சர்வமும்சம்வின்மயமாகவே யிருக்கின்றது என்றுதனது பரமானந்த அநுபூதியை யுரைத்தான்.

(ஸ்ரீ - வீர.) சுமேருகிரியின் சோலேயில் ஒருகோணத்திருந்த சுரகுருசுதன் ஒருகால் கேட்ட பிரஹ்மவித்தையினது மனன நிதித்தியாசன பரிபாகத்தால் தன்னிடத்தில் விசிராந்தியை யடைந்தனன். நன்காய் ஞானமிருதத்தானே நிறையப்பெற்ற அவனுடைய சன்மதியானது, அநாதரவுசெய்யத் தகுதியதாய்ப் பஞ்சபூதமயமாய்த் திருசியமாய்த் தன்னினேவு மாத்திரத்தானே கற்பிதமாயுள்ள இத்தோற்றத்தில் இரமிக்கவில்லே. அக்கசன் திருசிய அரமண்டத்தால் ஒரேசத்வடிவத்தினும் அயலாகப் பொருளொன்றையுங் காணுஞகி ஏகமாத்திர பரிசேடத்தானே துக்கிதன்போலும் ஹர்ஷகத்கத வசனத்தாலினிதாக வருமிதனேயியம்பத்தொடங்கினன். எதனேக்கூறினுனே அதனேக் கூறல்:—யாதென்பது. என்னசெய்வேன் எங்குசெல்வேன் என்னகொள்வேன் என்னவிள்வேன், என்னுற்பூரிதம் விசுவம் எங்கும் பெருங்கற்ப நீர்போல், அற்றேல், சீவான்மாவிற்கு யாவைசுகசாதனங்களாமோ அவற்றைச் செய்தி, யாண்டவற்றைப் பெறலாமோ ஆண்டு செல்லுதி, இன்பத்தையும் அதன் சாதனங்களேயும் பெறுதி, துன்பத்தையும் துன்பசாதனங்களேயுந் துடைத்தியெனின், கூடவில்லேயே, துக்கம் அதன் உபபோக்தாவாய் ஆத்மாவாயஜீவன், அவனுலாசைப் படத்தக்கசுகம் என்பதாதியாவு மாயவுலகமூலந் தேடியவழி ஆகாசமாத்திரமாக விருந்து, திக்குகளினும் மநோரதங்களினும் நன்மகத்தாக ஆன்மமயமாயது, சுவர்த்தத்தில் மயட்விருதியாம், ஆன்

மாவேயென அறியப்பெற்றதாம்; ஆகலின், ஆநந்தைகரசவடிவ ஆத்மாவாகிய அதனனே சர்வதுக்கமும் நஷ்டமுடையவ னுயினேன், ஆகவேஹான உபாதானப் பிரயோஜன மில்லை யென்பதாம். ஆநிபௌதிகாதி பாகியங்களோடும், ஆத்தியாத்மிக ஆப்யந்தரங்களோடும், கூடிய, உபயவிபாக நிமித்தபூத உடம்பிலும், கீழிலும் மேலிலும், கிழக்கு முதலிய திசைகளி லும், தத்துவமாகக் காணப்பெற்றவைகளிலும், ஆன்மாவேயுளதாம், அவையாவுமே ஆன் மாவி லாரோபமாகலின் சர்வமும் ஆன்மாவேயாம் அவ்வாறே சுருதியும் " ஆன்மாவே கீழி லும், ஆன்மாவேமேலிலும், ஆன்மாவே பின்னிலும், ஆன்மாவேமுன்னிலும், ஆன்மாவே தெற்கிலும் ஆன்மாவே வடக்கிலும், ஆன்மாவே யிவ்வியாவுமாமே " என்றறைகின்றது. இங்குமாத்மா, அங்குமாத்மா, எங்குமாத்மா, அநாத்மயமெனல், எங்குமேயிலதாம்; யாண்டு மேயதிஷ்டானத் தன்மையானேயாத்மா உளதேயாம், விவர்த்தாத்மக கற்பிதவிகார தரிச னத்திலோசர்வம் ஆன்மமயமாம், தத்துவதரிசனத்திலோ சர்வம் ஆத்மாவேயாம். இவ்வியா வுமே யான்மாவென்னு மித்திருஷ்டியினனே யான் பரமார்த்த ஆத்மாவின் கண்ணெப் போதுமே யிருப்பேன் என்பதாம்.

(ச.) வசமற = ஏகாந்தத் தேகனுய், யானிலாவிடமுமில்லை = எந்த வஸ்துவில்யா னின்றேனும், அந்த வஸ்துவில்லை, அது சிருஷ்டித்து அதே அநுப்பிரவேசித்த தென்னும், மறையாற் சர்வான்மாவுக்கு அநுப்பிரவேசங் காண்டலின் என்றுணர்க. எனதிடத்து இலா தும் இல்லை = எந்தவஸ்து என்னிடத்தின்றே அஃதின்று, சர்வப்பிரபஞ்சமும் ஆன்மஃ வில் அத்தியஸ்த மாதலின். ஆதலாற் சர்வமும் சச்சிதானந்தமயம், தானிகழ்பொருள் வேறில்லை = அதனினும் அந்நியமாக எதைவாஞ்சிப்பேன், என்றான் என்பது கசன் வாக்கியம்.

கசன் கதை முற்றிற்று. ஆகதிருவிருத்தம் (7ஷ்ஜ்)

———(*)———

திதிப் பிரகரணம்

(ஸ்ரீ - வீர - அ - கை.) சுரரர்கள் ஒழிந்துள்ள அரக்கபிசாசாதிகளும் திரியக்குகளும் ஸ்தாவராதிகட்கொப்பாதலின் ஞானுதிகாரக் கதையில் விசாரயோக்கியதையே கிடையா தாம், தத்துவமானது அத்தகைய துர்லபமாதலின், உத்தமஜன்மத்தை யடைந்த சுரர்கர் கட்குன்னும் " மாயுமரநுட ரனேகர்பா லொருவனென்னேயாயு மனம்வைத்துளா, ஞயுமா நுடரனேகர்பா லொருவனேயறிந்துமுடிவானேயா " என்றருளிய ஸ்ரீ பகவானது திருவாக் கியப்படியே, சிலசேசாமசாரிக போகருசியைவெறுத்துக் கடந்துகடவுளை நினேப்பவராவர், வைராக்கியமும் பகவத்பக்தியும் அதிதுர்லபமாதலின், ஆயினும், சமதமாதி சர்வகுண சம்பத்தியானேவிசேஷமாக ஆத்மவிசாரணையோக்கியதையை யடைந்தவரும், நிரந்தாசமாதி சுகவிக்கினபூத பிராரப்த போகத்தாற் சிறிது இராஜசமைந்த சாத்விகமே பெறுவரன்றிச் சுத்தசாத்விகம் பெறார், அத்தகைய முத்தியோக்கியரே புகழப்பெறுவரெனின், சுத்தசாத் விக நிரந்தாசமாதியி லிருப்பவரைப் பற்றியென்னே யுரைப்பதென்னுங் கருத்தையுடையவ ராய், அவ்விராஜச சாத்விகரைப் புகழ்ந்துகொண்டு, அவர்தமக்கு விவேகவைராக்கியமிருமா றுபதேசிக்கத் தொடங்கல்:—பெறற்கொணுத வென்பதாதி,

பெறற்கொணாத சத்துவகுணப் பிறப்பினர்புவிமே
னிறத்துவாழ் வதுவான்றிகழ் நிறைமதி நிகராம்
வறக்குந்துன் பத்தில் வாடலரிரவு தான்வரினுஞ்
சிறக்கும் பொற்கமலத் தலர்குவியுமோ சிறிதும்

(ப - பை.) பெறற்கொணாத = கிடைத்தற்கு அரிதாகிய, சத்துவகுணப்பிறப் பினர் = சிறிது இராஜசகலந்த சத்துவகுணத்துடன் அவதரித்தவர், புவிமேல் = இவ்வுல கத்தில், நிறத்து வாழ்வது = மகாமகிமையுடன் மகாகுணங்களுடன் மலர்ந்திருப்பது, வான்றிகழ் = ஆகாயத்தின் கண்ணெளிரும், நிறைமதி = பூர்ண அமிருதகிரணனுக்கு, நிகராம் = ஒப்பாம், வறக்குந்துன்பத்தில் வாடலர் = தேகத்தைச் சிறிதுமடைந்து வாட்ட முறார், இரவுதான் வரினும் = நிசிவந்து நிகழ்ந்தபோதினும், சிறக்கும் பொற்கமலத்தலர் குவியுமோசிறிதும் = விசேடமாய் விளங்கும் ஹேமாம்புஜம் அற்பமேனும் சங்கோச மடைந்து வாடுமோ.

(ஸ்ரீ - வீர.) எம்மகான்கள் விசேஷ விசாரண யோக்கியதையைத் தொடர்ந்தவராய், இராஜச சாத்விகராய், பழையகரும உபாசனைகளானே உலகின்கண்ணே யவதரித்துள் ளார்களோ, அம்மகாகுண முடையவர்கள் எப்போதுமே ஆநந்தித்து விளங்கிக்கொண்டு ககனத்தி லிலங்கும் பூர்ணசந்திரர்கட் கொப்பாக வாழ்வார்கள். வியோம்பாகமலம் போ லும் மாநசதுக்கத்தை மருவமாட்டார்கள், இரவிற் பொற்றாமரையென்ன ஆபத்தால் சங்கோசத்தையும் அடையமாட்டார்கள்,

(ச.) ஸ்ரீ வசிஷ்டர்:—சத்துவகுணப் பிறப்பினர் = சமதமாதி குணங்களையுடைய ஞானதிஷ்டர் நிறத்துவாழ்வது = பரமபதத்தில் அநவரதஞ் சேவிப்பது, மதிநிகராம் = சசிபோற் சந்தோஷகரமாம். (1)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவர்தம் பெருமையையே பல்லாற்றானும் புகழுதல்:—பகுதம் இயற்கையென்பன.

பகுதமன்றி யேமற்றுள தொழில்களிற்பற்றார்
தகுதியாகிய மேலவர் நெறியிலே சரிப்பர்
மிகுதியா னிறைந்தசை வறுமுளத்தி னுண்மிகுவர்
தொகுதியான நட்பருண் முதற்குணங் களாற்சுடர்வார்.

இயற்கையாகிய குணத்தின ரிழிவுயர் விரண்டு
நயக்கலாதவர் சமமுளோர் நன்னெறி நடப்போர்
வியக்குமா றுதங்கரைகடா வேலையை யொப்போர்
மயக்கிலாத வரிரவிபோ னியநியை வழாதோர்.

(ப - பை.) பகுதமன்றியேமற்றுள தொழில்களில் = இயற்கையாகவே யேற்பட் டுள்ளவை யொழிந்துவேறுக உள்ள விஷைகளில், பற்றார் = சம்பந்தியார், தகுதியாகிய மேலவர் நெறியிலேசரிப்பர் = யாவருங்கொண்டாடத்தக்க சற்புருடரது சதாசாரத் தாலே யொழுகுவார், மிகுதியால் நிறைந்து = அத்தியந்தம் பூர்ணத்தன்மையை யடைந்து, அசைவறும் உளத்தினுள் = கலக்கமற்ற கருத்தினுள், மிகுவர் = கவின்வாய்ந் தொளிர்வர் தொகுதியான = மிகவும் ஆராய்ந்து சம்பாதித்த, நட்பு அருள்முதல் = மைத்திரிகருணை யாதிய, குணங்களால் சுடர்வார் = சற்குணங்களிஞலே பிரகாசிப்பர்.

இயற்கையாகிய குணத்தினர் = மாறுபடாத நல்லகுணத்தினை யுடையவர், இழிவு உயர்வு இரண்டும் நயக்கலாதவர் = துதியில் நிந்தையில் துல்லியமானவர், சமமுளோர் = சுகதுக்கங்களில் ஒப்புள்ள முடையவர், நன்னெறி நடப்போர் = சாதுவிருத்தியை யுடையவர், வியக்குமாறு = ஆச்சரியம் அடையும் வண்ணம், தன்கைகடாவேலையை = தனது மரியாதையைத் தாண்டாத சமுத்திரத்தை, ஒப்போர் = ஒத்து நடப்பவர், மயக்கிலாதவர் = விடயங்களிற் சற்றும் மோகமில்லாதவர், இரவிபோல் நியதியைவழாதோர் = சூரியனைப்போலக் கடமையைத் தவராதுசெய்பவர்.

(ஸ்ரீ - வீர.) எங்ஙனம் விருக்ஷாதிகள் பிராரப்த தேஹத்தினும் அயலொன்றைவாஞ் சியாவோ, அங்ஙனம், அம்மகான்கள் ஞான அதன் சாதனசம்பத்தினும் அயலொன்றை அவாவார்கள். எங்ஙனம் பாதப்பங்கள் தமது புஷ்பபலாதிகளாகிய ஹேதுக்களாலே இரமிக்குமோ அங்ஙனம் அறிஞர்களும் தமது சதாசாரங்களாலே இரமிப்பார்கள். ஹே இராமச்சந்திர ! கூறியஜீவன் முக்தனுகிய இராஜசசத்வ குணத்தனது மதியானது இவன் மோக்ஷமியைவதேபோல, சாந்தியாதிசுத்த விருத்தியாகியவழி நித்தியம் பரிபூர்ண விருத்தியையே யடைகின்றது, அதனுனே சுக்கிலபக்ஷ இந்துவைப்போலும் சுந்திரமாக இருக்கும். அத்தகைய அறிஞர்கள் பேராபத்தின் கண்ணும் சீதத்தன்மையைப் போன்றிராகின்ற சௌமியத் தன்மையைச் சஞ்சிபோலும் விடமாட்டார்கள். நவதனமெனும் பூங் கொத்துகளாலே பிரேமை யுடையனவாய தொடிகள் எப்போதுந் தம்மை யாலிங்கனஞ் செய்து கொண்டிருக்கப் பெற்றவனத்துருமங்கள்போல இயல்பாகவே மைத்திரியாதி குணகாந்தையாலே விளங்கிக்கொண் டிருப்பார்கள். சமமுடையவர்கள், சமரசமுடைய வர்கள், சௌமியர்கள், சந்ததம் சாதுக்களினும் சாதுக்களா யிருப்பவர்கள், அவர்கள் உன்னைப்போன்றே அத்தியொத்துத் தாங்கியமரியாதையை யுடையவர்கள் ஆவர்கள்.

(ச.) பகுதம் + பற்றூர் = அவசியஞ் செய்யவேண்டுங் காரியத்தைத் தவிர மற்ற வற்றையபேக்ஷியார். பகுதியன்றி யென்பது பாடபேதம் மூலம், சிஷ்டவர்த்தமது = ஆன்றோர்நெறியில், சசிந: = பன்மை, மைத்ரியாதி குணகாந்தயா = மைத்திரிகருணை முதிதை உபேக்ஷைவடிவ குணகாந்தையால், சமா: = இராகத்துவேட ரகிதர், சமரசா: = சமமாகிய சர்வகதப் பிரஹ்மம்ரசம் எவர்கட்கோ அவர் அத்தகையசமரசர் என்பதாம். (2-3)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இதுவரை உதாரப்பிரசம்சை வாயிலாக ஸ்ரீ இராமருக்குச் சற்குணங்களையுபதேசித்து இப்போது நேராகவே உபதேசித்தல்:—கொள்ளென்பது.

கொள்ளற் பாலதுதுயரிலா தவர்நிலை குறுகத்
தள்ளற்பாலது தீயவர் நெறியெனுஞ் சழக்கே
யெள்ளற்பாலதா முலகமே தியாமெவ ணென்றே
தெள்ளற்பாலது சூரவரா லறிவினுற் றீர.

(ப - கை.) கொள்ளற்பாலது = கைக்கொள்ளத் தக்கது யாதெனின், துயரிலாதவர் நிலை = துக்கமில்லாதவரதுதிதியாம், குறுகத்தள்ளற்பாலது = அத்தியந்தம் நிவிர்த்திக்கத் தக்கது, தீயவர் நெறியெனுஞ் சழக்கே = கொடியவரது மார்க்கமென்னும் ஆபத்தே யாம், உலகமேது இயாம் எவன் என்றே = இச்சம்சாரம் எங்ஙன் விரிந்தது யான்யார் என்றுதானே, எப்போதும், எள்ளற்பாலது ஆம் = நிந்திக்கத்தக்கது கடமையாம், சூரவரால் அறிவினுல் = தேஹிகோத்தமரானும் அவர்தந்தருளிய பிரஜ்ஞையாலுமே, தீரத் தெள்ளற்பாலது = அஜ்ஞானதிகள் அகல அத்தியந்தம் தெளியத்தக்கதாம்.

(ஸ்ரீ - வீர.) எதனுலித்தகைய குணசம்பன்னர்களோ அதனுல் ஹேமகாபாகோ ! = ஹே பெருந்தோளோய் ! புகன்ற அப்புண்ணியவான்கட்கு ஆபத்துக்களின் இடமல்லாத பதமியாதுளதோ அதுவே யெப்போதும் அடையத்தக்கதாம், அதுபோலவே இவ்வுலகின் கண்ணும் கேதமற்ற மனத்தினுலே விவகரிக்கத் தக்கதாம், விவகரிப்பினும் ஆபத்துக்கட லில் மூழ்கியமிழ்ந் தாகவேண்டிய தொன்றுமில்லை யென்றறிந்து; அறிந்தே விவகரித்தலின். தன்மனத்தால் விரைந்து அதியாதரத்தோடும் நானு நிமித்த உபபாத்ய அநித்தியத் தன் மையை நன்காய்ந்து நித்தியம்விசுத்தபுத்தியானவன், ஆதியில் இகலோக சம்பந்த உபபோ கப் பொருட்டு இனிது பொருந்திய இலௌகிக மென்னும், அந்தத்தில் மரண உத்தர காலத்தில் நன்குபொருந்தும் பாரலௌகிக மென்னும், மூவுலகத்தினும் நிகழ்வனவாய கிரி யைகளேயும்; அவற்றின் பலபூதங்களாய பசுபுத்ரதன சுவர்க்க விமான அப்சரசாதி பதார்த் தங்களேயும்: ஆபத்துக்களேயென விரைவிற் பாவித்தல் வேண்டும், சம்பத்துதுவென வெதையும் பாவித்தல் கூடாது, இவ்வாறறிந்து ஒழுகுபவனுக்கு ஆபத்தேவரமாட்டாதாம். வீணை அஞ்ஞான சந்தியாலாய நன்கலாக்காட்சியை நழுவவிட்டு இனியியம்பும் வகை யாய விசாரவடிவ ஞானத்தானே அந்தமின்றிய அருத்தம்பெற நன்றுகவே நாடத்தக்கது. விதிப்பிரகாரம் ஆசாரியசந்நிதியை யடைந்து பழவடியார்களுடன் மிகமுயன்று நால்வகைச் சேவையுனே ஞானுசிரியரை மகிழ்வித்து, ஹேபிரபுவே ! யானுர் இச்சம்சார ஆடம்பரம் அடியேனுக்கு வந்தவாறென்னென்ப வாதியாய் விநயசகித விஞ்ஞாயிலாய், உத்தமஞான சிரியரிடத்தி லுபதேசம்பெற்று, நன்குதியானிக்க வேண்டும்.

(ச.) உலகெது = இச்சம்சாரமரம் எப்படி விரிந்தது, மூலம், ஆபதவீகூதிதம் = ஆபத் துக்களானே நோக்கப்பெறுதபதம். (4)

(ஸ்ரீ-வீர - அ-கை,) கேள்விக் கங்கமதாகக் கருமசந்யாசங்கூறல்: = வருந்தென்பது.

வருத்துகிற் பதுதனையறி நெறியிலே மனத்தாற்
றிருத்துகிற்பது கருமத்தி லழுந்திலாச் செய்கை
பொருந்துகிற்பது தீயவ ரல்லவர் புணர்ச்சி
யருத்துகிற்பது நானென்ப தாக்குகிற் பதுவே.

(ப - ரை.) வருத்துகிற்பது தனையறி நெறியிலே = ஆன்மாவையறியும் மார்க்கத்தி லேயே பிரயாசமெடுத்துக் கொள்ளல் வேண்டும், அதுவும், மனத்தால் = ஆராய்ச்சியால், திருத்துகிற்பது கருமத்தில் அழுந்திலாச் செய்கை = திருத்தமுறச் செய்யவேண்டியது வினையில் மூழ்காத செய்கையேயாம், தீயவர் அல்லவர் புணர்ச்சி = புல்லர் அல்லார்தம் புகழுறசேர்க்கையே, பொருந்துகிற்பது = சேரவேண்டியதாம், நான் என்பதாக்குகிற் பதுவே = அகந்தைசெய்யும் உபத்திரவத்தையே, எப்போதும், அருத்துகிற்பது = அருந் திக்கொண்டிருக்க வேண்டும்.

(ஸ்ரீ - வீர.) கருமத்தின் கண்ணே மூழ்கலாகாது, அநர்த்தத்தோடு கூடலாகாது, சர்வப்பிரியங்களின் விசேதமானது எப்போதும் சமுசாரத்தைத் தொடர்ந்திருக்கின்றபடி யினுலே அவசியம் பலிக்குமென்று காணவேண்டும். மயூரத்தானே அம்புதந்தொடரப்பெறு வதேபோலச் சற்புருடரையே தொடர்ந்திருக்க வேண்டும். உள்ளேயிருக்கும் அகங்காரம், அதனினும் வெளியே இருக்கும் தேகம், அதனினும் வெளியாய புத்திரமித்திராதி சமு சாரம், என்னும் தாண்டமுடியாத மூக்கடற் கொப்பாயவற்றிற்கு வங்கவடிவத்தனது விசாரத்தைப் பூர்ணபாவாவசானஞ்செய்து சத்தியத்தையே காணவேண்டும். மூலம்:

மங்கத்வ்யம் = மஸ்ஜ என்பதற்குப் பாவத்தில் தவ்யவிகுதியாகி மஸ்ஜிநஷோர்ச்சபலி (7-1-60) என்பதானேனும்.

(ச.) மூலம், அவஹேலயா = அநாதரவாக. (5)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சத்தியத்தையே காணவேண்டும் எனயாது கூறப்பெற்றதோ அதன் கண்ணுபாயம் கூறல்:—தீர்க்கவென்பது.

தீர்க்கத்தக்கது நரம்பெலும் பெனுமுடற் றியக்கம்
பார்க்கத்தக்கது முழுதுயிர்க் குள்ளுறை பரம
மீர்க்கத்தக்கதே நிரவியி னிடத்திலும் பாரி
னீக்கத்தக்கி லாப்புழுவினுஞ் சித்தொன்றே நிற்கும்.

(ப - ரை.) நரம்பு எலும்பு எனும் உடற்றியக்கம் = மயிர்தோல் எலும்புமாமிசருதிர நரம்புமயமாம் மலவுடலில் யான் என்னும் மயக்கமே, தீர்க்கத்தக்கது = தியாகஞ்செய்யத் தக்கதாம், முழுதுயிர்க்குள் ளுறைபரமம் = சகலஜீவர்களிடத்தும் சாக்ஷிமயமா யுள்ளிருக் கும்பரம் பொருளே, பார்க்கத்தக்கது = அவசியம் அவலோகனம் செய்யத்தக்கதாம், ஈர்க் கத்தக்கதே நிரவியினிடத்தினும் = ஏழுகுதிரைகளால் நடத்தப்பெறும் ரதத்தெழுந்தருளி யிருக்கும் சூரியபகவானிடத்திலும், பாரில் = பூமியில், நீக்கத்தக்கிலா = அகற்றற்கும் அரிதாயசிறிய, புழுவினும் = கீடத்தின் கண்ணும், சித்தொன்றே நிற்கும் = உணர் வொன்றே சான்றுமாத்திரமாய் நின்று நிலவும்.

(ஸ்ரீ - வீர.) அஸ்தி மாம்சமயமாய் இரக்தாதி அசோபனவடிவ சரீரத்தை யகமென் பது விடித்து, அகங்காரத்தையும் அடியோடு விட்டு, ல்யப்பாகாமை சாந்தசம், அத்தியந்தம் சோபனமாய், வியாப்தமாயது முக்தாவலி எதிஞல். அத்தகையதாய அதனுள்ளடங்கி யிருக்கும் தந்தூல்வைப்போல் எல்லாதேக அகங்கார சாதாரணமாய் அந்தர்க்கதமான சாக்ஷி சின்மாத்திரத்தைப் பார்க்கவேண்டும் பூதமுக்தாவலிப்பாடமே நலமுடையது. வீதமுக்தா வலி = சாந்தசமாதலின் உபசர்ஜனஹ் ரஸ்வாபாவமாம் திருஷ்டாந்த சாமியம் காட்டப்பெறு கின்றது:—நித்தியமாய் வியாபகமாய்ச் சர்வகமாய்ச் சர்வபாவிதமாய்ச் சிவமாயுள்ள அப்பதத் தின் கண்ணே யிவ்வியாவுமே சூத்திரத்தில் மணிகணங்கள்போலப் புரோதமாம் விசால மான புவனங்களிலும் ஆகாயத்திலும் வியோமபூஷணமாய விண்மணியிலும் வியாபித் திருக்குஞ் சித்துத்தானே தரைசித்தர் கோசத்திருக்கும் கீடத்தின் உதரத்திலும் பூரித் திருக்கின்றது. இத்துணையானே சிற்பேத சங்கையுண்டாகு மென்றெண்ணலாகாது, ஈண் டுண்மையாகக் கும்பம்பம்பும் அம்பரத்தில் வேற்றுமை யில்லாததேபோல, சரீரத்துள் ளிருக்கும் ஜீவர்களினது சித்துருவத்தின் கண்ணும் வேற்றுமையின்மும் என்றநகனே தெரிந்து கொள்வாய்.

(ச.) முத்துமாலையிற் றந்துபோல் முழுதுயிர்க் குள்ளுறை, பரமம் = சின்மாத்திரத் தையே. அஸ்திமாம்ச ரக்தாதிரூபம் அதனுனே அசோபனம் சரீரம், இதில் அகமதியகற்றத் தக்கது பூதமுக்தாவலீதந்து = சர்வபூத அதுஸ்யூதம்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) தத்தமது முயற்சியானே பிறவியின் மாறுதல் உண்டாமெனல்:— தாமதத்தென்பது.

தாமதத்துட னிராசகஞ் சாத்திக மென்னு
நாமமுக்குணப் பிறனியுமுயற்சியா ணண்ணுஞ்
சேமமுத்தியைச் செய்திடுஞ் சாத்திகச் செய்கை
யிராமவுத்தம ராகவவென்று மீட்டுரைப்பான்.

(பூ - ரை.) தாமதத்துடன் = தாமசத்தேடும், இராசதம் சாத்திகம் = இராஜசம் சாத்விகம், என்னும் = என்று சொல்லப்பெற்ற, நாம = பெயர்களையுடைய, முக்குணப் பிறவியும் = மூன்று குணங்களாலாகிய ஜன்மங்களும், முயற்சியால் நண்ணும் = பிரயத் தனமதனைற் கிடைக்கும், சேமமுத்தியைச் செய்திடும் = சர்வ அநர்த்த நிவிர்த்திரூபமாகிய மோக்ஷத்தை யுண்டாக்கும், சாத்திகச் செய்கை = சாத்விகஜாதித் தன்மையானது தனது விவேகமுயற்சியின் முதிர்ச்சியால் உண்டாம், இராம உத்தம இராகவ = ஸ்ரீ இராமபத் திர ! உத்தமத்துவ உபாதியை யுடையோய் ! இருகுலதிலகமே ! என்று = எனவிளித் துரைத்து, மீட்டுரைப்பான் = மீளவுங்கூறத் தொடங்குகின்றார்.

(ஸ்ரீ - வீர.) பழைமையான அகிலபாவங்களையும் கருமவசஞ்செல்பவர் அடைவர், இந்தவுடலம் விடும்பொழுதி யாவனியாதொன்றினை நினைந்தா, னந்தவளவே யந்தப்பாவ னையா லதனையடையுமா, லென்றனியல்பே யெப்பொழுது மிதயத்திடை கொண்டென் பாலாஞ், சிந்தையொடும் வாளமர்தொடங்கி லதனுலெனையே சேருதியால். என்பதுநியாய மாதலின். எத்தகைய கீழாமவரே யெனினும் அவசியம் மோக்ஷப் பொருட்டே முயல வேண்டும் இடைவிடாமல் முயல்பவனுக்குப் பயனுண்டாதல் ஒருதலையேயாம்; இராஜாக்க ளின், மலைகளின் கூட்டம் மகாகுலங்களாய சேனைகளும் வனங்களும், நீதிசாஸ்திர அநுசாரியாய முயற்சிகளானும் சேதனுதிகளானும் உலகில் வெற்றிபெற்றுத் தலைகின்றன வென்பது வெளிப்படையாகலின் சேற்றில் வீழ்ந்தமூட பசுவைக்கரை யேற்றல்போல மிருந்ததைரியங் கொண்டு தனது புத்தியை விடயங்களினின்றும் மீட்பிக்கவேண்டும், அரக்கபிசாசு சூத்தி ராதிரூப தாமசஜாதியை யேனும், க்ஷத்திரிய வைசியாதிரூப இராஜச ஜாதியையேனும், அன்னிய சத்துவகுணமிசிர சர்ப்பாதி ஜாதியையேனும் அடைந்த புருடன் முயன்றால் மீட்ட லாம். சற்புருடர் தமது முயற்சி விவேகங்களின் வயத்தானே சாத்விகஜாதித் தன்மையை யடையா நிற்பர். (7)

திதிப்பிரகரணம் முற்றிற்று. அகதிருஷ்ருத்தம். (734) (766)

—*—

உபசமப் பிரகரணம்

சனகராசன் கதை.

மங்களம்

திசைதருபுவன ரசனபாலனமூந் திகழ்ந்திடச் சாந்தியுந்தெரிவோன்
இசைபெருவிபவ வியற்கையாய்ப் பூன்றவிபமுக விமவலிதநயன்
நசையுறுநிகம மனக்கரியாகி நானிலமுதலன விலனும் கரிதி
நிசசுகபோத கனசிவவீர நிமலசேகரன் றணைப்பணிவாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) உற்பத்திப் பிரகரணத்திற் சர்வசிருஷ்டி சுருதிதாற்பரியத்தை வெளிப்படுத்தும் பொருட்டுச் சர்வப்பிரபஞ்சரசனையும் மனத்தின் அதீனமே யெனக்காட் டப்பெற்றது, திதிப்பிரகரணத்திலும் சர்வசகத்திதிப் பிரதிபாதக சுருதிதாற்பரியத்தை யினிதுகாட்டம் பொருட்டு மனத்திதியின் அதீனமே சர்வப்பிரபஞ்சத் திதியெனக்காட்டப் பெற்றது, இப்போது:—ஸ்ரீ பகவான் பிப்பலாத ஆசிரியர் கூறுவதாவது, ஹே கர்க்ககோத் திர உற்பன்ன சூரியன்போனே ! கேட்டதனைக் கேட்டி ! ஆதித்தியனது ⊕ இரஸ்மிகள்

அதரீனம் ஆவனவாய்ச் சேடமறயாவுமே இத்தேஜோமண்டலராசியில் ஒருமையையுறும், பகுக்கத் தகுதியில்லாதபடி யொப்புமையை யடையும் அவ்வருக்கனது அம்மரீகிகள் மீண்டும் மீண்டும் வெளிப்போந்து தசதிசைகளிலும் பரவிவீழ்ந்து விளங்கும். இத்திருஷ்டாந்த மேபோல, விஷயேந்திரியாதிக் குழுமுழுதும் மேன்மைதங்கிய தேவனிட்டத்தில் = மலர் விப்பதாய மனத்தின் மாட்டு, அதாவது, சஹஸ்ராதி தேவர்கட்கு மனத்தந்திரத் தன்மையுண்மையின், மேலாயதேவன் மனமாம் அதன்கண் சொப்பனகாலத்தில், ஒருமையையடையும் = மண்டலத்தில் மரீசிமானும் அவிசேஷத் தன்மையை யடையும். கனகனவில் மறித்தும் மறித்துந்தோற்றி மண்டலத்தினின்றும் இரஸ்மிபோலும் மனத்தினின்றுமே தமது வியாபாரப் பொருட்டுலவா நிற்கும். எதனாற்சப்தாதி உபலப்தி காரணங்களாய சுரோத்திராதிகள் சொப்பனப்போதில் மனத்தில் ஒருமையடைந்தன போன்று காரணவியாபாரத்தினின்றும் உபரதியடைந் தனவாமோ, அதனால், அச்சொப்பன காலத்தில், இத்தேவதத்தனை, கேட்பதில்லை, காண்பதில்லை, மூகர்வதில்லை, நுகர்வதில்லை தீண்டுவதில்லை, பேசுவதில்லை, வாங்குவதில்லை, கொடுப்பதில்லை, ஆநந்திப்பதில்லை, விடுப்பதில்லைநடப்பதில்லை, தூங்குகின்றான் என்பர் இலெளகிகர். பிரஸ்நோபநிஷத். சுரோத்திராதிகளின் ஏகீபாவமென்பது தன்றன் வியாபாரத்தை விடுத்து மனத்தந்திரத் தன்மையானே அவஸ்தான மாத்திரமாம், முக்கியமாய ஏகத்வமின்றும், அவற்றிற்கு மனப்பகுதியுடைமை யின்மையானே பகுதியல்லாத தன்கண்ணே அஃதொவ்வாமையின், என்பதுகருதியே போன்றென்றதாம். ஆனந்தபோக அவசரமாகிய துயிற்போது நிகிலவிசேஷ விஞ்ஞானமும் தற்காரணத்தில் விலயமாகியவழி, இத்துணேதயிலிலும் மோக்ஷத்திலும் சமமாம், இத்துணேயோ சிறப்பாம், அஞ்ஞான ஆவிருதனுய்ச் சுயம்பிரகாச ஆநந்தாத்ம சொரூபத்தை யடைவன் கைவல்ய உபநிஷத்.

எதனினின்றும் இப்பிரஹ்மாதி ஸ்தம்பபரியந்தங்களாய பிராணிகள் உண்டாகின்றனவோ, எதனால் உண்டானவாவும் பிராணன்றித்து விருத்தியாமோ, விநாசகாலத்தில் எப்பிரஹ்மத்தை நோக்கிச் சென்று அதன்வடிவத்தையே யடைகின்றனவாமோ, இவ்வண்ணம், உற்பத்திதிதிலயகாலங்களில் எதன்வடிவத்தை விடமாட்டாவோ பூதங்கள், அந்தப் பிரஹ்மத்தின் தடஸ்த இலக்கணமிதுவேயாம். தைத்திரியோபநிஷத். எங்ஙனம் ஸ்ரீகங்கை முதலியநதிகள் செல்வனவாய்ச் சமுத்திரத்தைச் சார்ந்து பெயர் வடிவங்களை விட்டு அதரிசனமாய் அவிசேஷ ஆத்மபாவத்தை யடைகின்றனவோ, அங்ஙனம், அவித்தையா லாக்கப்பெற்ற நாமரூபங்களி னின்றும் விடுபட்டு அறிஞன்முன் மொழிந்த பரமென்னும் அவிசேஷத்தினின்றும் மேலான சச்சிதாநந்த திவ்யபுருடனே யடையாநிற்பன். மோக்ஷகாலத்தில், தேகத்தைத் தொடங்குவனவென எப்பிராணிகளும், பிராணன், சிரத்தை, கம், வாயு, சோதி, அப்பு, பிருதிவி, இந்திரியம், மனம், அன்னம், வீர்யம், தபம், மந்திரங்கள், கருமம், லோகங்கள், நாமம், என்பனவாக வள்ளனவோ, அவை தத்தமதுகாரணத்தை யடையாநிற்கும்; பதினேந்து எண்ணிக்கை யுடையனவெனயாவை அந்தியமவது பிரசினத்திற் படிக்கப்பெற்றனவோ. பிரசித்த அதிதேவர்கள் என்னும் தேகாசிரயர்களும் = சஹஸ்ராதிகரணத்திருப்பவர்களும், ஆகியயாவர்களும், ஆதித்தியாதி தேவதைகள்தோறும் அடங்காநிற்பர்கள் பிரவிருத்த பயன்கட்கு உபயோகத்தானே க்ஷயமாதல்கூடலின், அப்பிரவிருத்தபலன்களையுடைய முமுக்ஷுக்களா லாற்றப்பெற்ற கருமங்களும், விஞ்ஞானமயமாய ஆத்மாவும், பரத்தில் ஒடுங்கும். விஞ்ஞானமாவும், அவித்தையா லாக்கப்பெற்ற புத்தியாதியுபாதியை ஆன்மத்தன்மையானேமதித்து, நீராதிகளிற் சூரியாதிப் பிரதிபிம்பம் போலும் ஈண்டுப் புகுந்ததாம், தேகாதிபேதங்களில் கருமங்கட்கு அதன்பவப் பொருட்டாந் தன்மையுண்மை

யின், அவ்விஞ்ஞானமய ஆன்மாவோடு கூடவேயாகலின் விஞ்ஞானப் பிராயுமாம் ஆத்மா, அவ்விக்கருமங்களும் விஞ்ஞானமய ஆத்மாவும் ஆகியயாவும் உபாதியகன்றவழி, பரமாய், அவ்யயமாய், அநந்தமாய், அக்ஷயமாய், ஆகாயம்போன்றதாய், அஜமாய், அஜரமாய், அமிருத மாய், அபயமாய், அபூர்வமாய், அபரமாய், அந்தரமற்றதாய், பாஹ்யமற்றதாய், அத்வய மாய், சிவமாய்ச் சாந்தமாய பிரஹ்மத்தில், ஏகமாம் = அவிசேஷத் தன்மையை யடையும்; ஜலாதியாதாரம் அகன்றவழி சூரியாதிப் பிரதிபிம்பங்கள் சூரியனிடத்தில், ஒருமையுறுதல் போலவும், கடாதியகலவே கடாதியாகாசங்கள், ஆகாயத்தில் ஒருமையுறுதல் போலவும், ஒருமையையடையும் என்பதாம். முண்டக உபநிடதம்.

திருஷ்டாந்தம்:—உலகில் இந்நதிகள் ஓடுகின்றனவாகிச் சமுத்திரத்தைக் கதியாக ஆத்மபாவமாக உடையனவாகிக் கடலையடைவுற்று நாமரூப திரஸ்காரத்தைப் பெறும். அஸ்தமான அவற்றினது கங்கை யமுனையென முதலனவடிவமாம் நாமரூபங்கள் தோற்ரு மற்போம்; அதனோடபேதமாகியபோது எல்லாம் நீராகவேயிருத்தலின் சமுத்திரமென்றே சாற்றப்பெறும், இத்திருஷ்டாந்த மென்னவே, கூறிய இலக்கணம் வாய்ந்தபிரகிருத இந்த, அருக்கன் சொப்பிரகாசனு யிருந்துயாவற்றையும் விளக்கிவைப்பதேபோலச் சுயம் பிரகாசவடிவமாக இருந்துகொண்டு சகலலோகங்களையும் விளக்கிவைக்கும் புருடனது, கூறியபிராணதி இச்சோடசகலைகள். நதிகட்குக் கடல்நஞ்சுப்ப, புருடனே வடிவமாயுடையன வாகச் செல்வனவாய்ப் புருடன்மயமேயாம், புருடனேயடைந்து புருடாத்மபாவம்பொருந்தி அவ்வாறே யஸ்தமடையும். பிராணதிகலைகட் கேற்றபடியிருந்த உருவமும் பெயரும் ஒன்று மில்லாமற்போம், போகவே நாமரூபங்கள் போகாததத்துவமாய புருடன்மாத்திர முளன் என்பதாகவே பிரஹ்ம வித்துக்களாற் பேசப்பெறுவன். கடல்வடிவநீர், எழிலிகொண்டு பொழிந்தவழி ஸ்ரீ கங்காதிநாமரூப உபாதியானே மூந்நீரினும் அன்னியமென்ன விவகரிக் கப்பெற்று, உபாதியொழிந்தவழி கடல்வடிவமேயாம், இன்னணம் அவித்தையா லாக்கப் பெற்ற நாமரூப உபாதிவசத்தான் தன்னின் அன்னியமென்ன மன்னிய எல்லாவுலகும் வித் தையால் அவித்தையாக்கிய நாமரூபமொழியவே பிரஹ்மமாத்திரமாகவே எஞ்சாநிற்கு மென்பதுகருத்து.

இங்ஙனம் ஞாஞநிரியரானே கலைப்பிரளய மார்க்கம் காட்டப்பெற அறிந்த அறிஞன் யாவனே அவ்விவன், வித்தையினலே, அவித்யாகாமகர்மஜநிதபிராணதி கலைகள்யாவும் ஒழிக்கப் பெற்றவனுகிக் கலையற்றவனுவன், அவித்தையா லாக்கப்பெற்ற கலைநிமித்தமே யாகலின் மிருத்யு, அஃதொழியவே, கலையற்றவனுந் தன்மையானே அமிருதனுவன் என் பதாம். பிரகிரைபஞ்சத்தென்பதாதி, சுழப்திப்பிரளய சமாதிசாஷாத்கார விதேகைவல் யங்களில், பிரபஞ்சம் உபசமமாதலின் ஜீவனுக்குப் பிரஹ்ம சுபாவத் தன்மையடைவைப் பிரதிபாதித்தலாற் பிரத்தியக்குப் பிரஹ்மைகரச அகண்டவஸ்துவைக் குறிப்பிலறிவிக்கும் சுருதிகட்கும், மன உபசமத்தானே சர்வப்பிரபஞ்ச உபசமத்தாற் சொரூபப் பிரதிஷ்டை யிற்ருற்பாியம் ஆமென்னுமிரகசியத்தை வெளிப்படுத்தும் பொருட்டு உபசமப் பிரகரணத் தைத் தொடங்குபவராய ஸ்ரீ வசிஷ்டபகவான், இந்த உத்தமசித்தாந்த சுந்தரமாகிய இத உபதேசத்தைக் கேட்பாயாக, சுந்தரசித்த ஆகிருதியுடைய இராகவ! எனவிளித்து ஸ்ரீஇரா மரது சித்தத்தைச் சாவதானப் படுத்திக்கொண்டு கூறல்:—சுரர்குருவென்பது.

(ச-அ-கை.) முன்பு ஜக உற்பத்தி ஸ்திதிகளுக்கு மனதேகாரண மென்னப்பட்டது. இப்போது அஃதுபசம நிமித்தம் உபசமம் பிரகரணம், ஆரம்பிக்கப் படுகிறது; அதிற்சன கன், புண்ணியபாவனர், மாபலி, பிரகலாதன், காதி, உத்தாலகன், சுரகு, பாசவிபாசர்,

வீதகவ்வியன், சீவன்முக்தனுக்கா காசகமனுதியின்மை யென்னும் பதின் கதைகளுள், அவற்றில் ஜநகவிருத்தாந்தத்தைப் பிரித்துரைத்தற்குப் பீடிகைசெய்கின்றார்:—சுார்குரு வென்பது.

சுரர்குருவின் மகனுரைத்தபடியே யிவ்வுலகெல்லாஞ் சொரூபமாகும்
விரவியநீள் பிறப்பிறப்பாமிம் மாயைராசத தாமதத்தைமேவும்
புருடர்தரித்திட வற்றுய்த்தூண் சுமக்குமண்டபமே போலநிற்குந்
திரமுளசத்துவ குணத்துன் போல்வார்கள் சநநபயந்தீர்ந்து நிற்பார்.

(ப - ரை.) சுார்குருவின்மகன் = தேவாகிரியரின் குமாரன், உரைத்தபடியே = கூறியவாறே, இவ்வுலகு எல்லாம் = இச்சகமுழுவதும், சொரூபமாகும் = தன்மயமேயாம், விரவிய = கலந்த, நீள்பிறப் பிறப்பாமிம்மாயை = தீர்க்கசம்சாரமாகிய இம்மாயை, ராசத தாமதத்தைமேவும் புருடர் தரித்திடவற்றுய் = இரஜோகுண தமோகுணப் பிறப்பை யடைந்திருக்கும் மானவர்களால் எப்போதுந் தரித்திடலின்குரித்தாய், தூண்சுமக்கும் மண்டபமேபோல = நல்லதம்பங்களானே தாங்கப்பெற்ற மண்டபமானும், நிற்கும்=திதிபெறும், திரம் உள = தைரியம் மிகுந்துள்ள, சத்துவகுணத்துன்போல்வார்கள் = சத்துவகுணப் பிறப்பை யடைந்துள்ள உன்னைப்போன்ற புண்ணிய புருடர்கள், சநபீயந்தீர்ந்து நிற்பர் = பிறப்பிறப்பின் பெரும் பீதியற்றுச் சுகிப்பர்.

(ஸ்ரீ - வீர.) ஸ்திதிப் பிரதிபாதக சுருதிதாற் பரியவர்ணனத்தின் பின்னர், உபசங்காரத்தைப்போதிக்கும் சுருதிதாற்பரியவர்ணனத்தின் அவசரசங்கதியாம்; பூர்வப்பிரகரணப் பிரயோஜனமேயாய நிர்வாணமே இதற்கும் என ஏககார்யகாரித்தைச் சங்கதியும் உளதா மெனவுணர்க. முன்னுரைத்ததை யதுவதீத்து வருவதோடு சேர்ப்பார் உரைத்தபடியே யென்றார். தீர்க்கசம்சாரமாகிய இம்மாயையானது இராகவனே ! இராஜச தாமசர்கள் என்னமுன்னருரையாடப் பெற்ற ஜீவர்களானே நித்தியம் திண்தம்பங்களினால் வண்மண்டபமேபோலும் தாங்கப் பெறுகின்றது. இத்தன்மையைச் சுருதியும் அறைகின்றது:— எக்காற்பிதாவால் அன்னங்கள் ஏழும் சிருஷ்டிக்கப் பெற்றுத் தனித்தனியாகத் தரப்பெற்றனவோ, அக்காற் றொடங்கியே அப்போக்தாக்களினானே அயிலப்பெற்றன அவை, அவர் தந்திதியும் அந்நிமித்தத்தது ஆதலின், எப்போதும் நிரந்தரமாக அயிலப்பெறவேகூடுமாம், இயற்றப்பெற்றது இரிந்தேகுதல் வழுதலானும் அவற்றிற்கு க்ஷயம்கூடும், ஆனாலவைகூடிய மாணங்கள் ஆம் எனவும் அமையா, ஜகத்திற்கு அவிப்பிரட்ட ரூபமாகவே நிலைபேறு காணப்பெறுதலின், அக்ஷயகாரணத்தோடு அமையவே வேண்டும். ஆகலின் எக்காரணத் தாற்றான் அவைமறித்து மரியாமலிருக்கின்றன ? அதனது விடைவருமாறு—எங்ஙனம் இவன்பூர்வம் அன்னங்களின்சிருஷ்டா ஆயினனோ, மேனதையானும் ஜராயாதி சம்பந்தத்தானும் பாங்தகருமத்தாற் போக்தாவும் ஆயினனோ, அங்ஙனம் எவர்பொருட்டு அன்னங்கள் கொடுக்கப் பெற்றனவோ அவரும் அவவன்னங்களின் போக்தாக்களாக இருந்தும் பிதாக்களேயாவர். மேதையினும் தவத்தானும் அவ்வன்னங்களே யுண்டாக்குவராகவின், அதனாலிது அறையப் பெறுகின்றது:—புருடன்றானியாவன் அன்னங்களின் போக்தாவாவனோ அவன் அக்ஷய ஹேதுவாவன் என்பதாம். இவனுக்கு அக்ஷயகாரணத் தன்மையாங்ஙனமெனின் ? அவன்றான் இப்புசிக்கப்பெற்ற எழுவகையாய காரியகாரணவடிவ கிரியாபல வடிவ அன்னத்தை மீளமீளவும், அவ்வக்காலத்தே பவிக்கும் அவ்வப் பிரஞ்ஞையானும் வாங்மனக்காய சேஷ்டைவடிவக் கருமங்களானும்; உண்டாக்குவனாகலின். கூறிய இச் சப்தவித அன்னத்தைக் கணமாத்திரையும் உண்டாக்கானேற் பிரஞ்ஞையானும் கருமங்க

ளானும்; அதனால் விச்சேதப்படும், எப்போதுமே புசித்துக்கொண்டிருத்தலானே கூடிய மல்லவோவாம். ஆகலின் எங்ஙனந்தான் இப்புருடன் அன்னங்களின் நிரந்தர போக்தாவாவனே அங்ஙனமே பிரஞ்ஞைப்படியுங் கருமப்படியும் உண்டாக்கிக் கொண்டேயுமிருப்பன்; இருத்தலின் சந்ததகருத்துருத் தன்மையானே புருடன் அக்ஷயஹேதுவாவன்; ஆகவே அன்னங்களைப் புசித்துக்கொண்டே யிருந்தபோதினும் அழியாவென்பதாம்.

(ச.) மங்களம்:—மங்களமா நிர்த்தனஞ்செய் மன்றனுகிமகத்துக்கு மகத்தாகி மனவாக்கெட்டா, தெங்களங்க விருளிரிக்கு மிரவியாகி யாமாகியாவையுமா யாவுமன்றாய், திங்களிரியங்கியொளிக் கோளியாய் நாளுந்திகழருணு சலகுரவன் செம்பொற்பாத, நங்களகத்திருத்திடுவாம் வணங்கிவாழ்த்தி நாதாந்தமோன சுகநணுகவென்றே.

சீர்கொண்ட வுபநிடதச் செம்பொருளேயுணரச் சென்னமறப் போகசிந்தை தீர்ந்திடவேமாயைப், பேர்கொண்ட துவிததிட்டி கானலினீராகப் பிரமசுகவது பூதிப் பெருங்கடலின்மூழ்க, நேர்கொண்ட யோகியர்க ணிட்டையகத் திலகு நின்மல சின்மயரூப நித்தியநிர்க்குணமா, மேர்கொண்ட வருணகிரிப் பெம்மானற்ருளே யிதயகமலத்திருத்தி யெப்போதும் வாழ்வாம்.

பூமேவும் விதிவயத்தாற் றமதெண்ணத்தாற் பொல்லாவேழ் பவப்பௌவத் தமிழ்ந்துஞ்சீவர், தாமேவு மெண்ணமெனுங் கன்மமாளிற்ருனு வசமாளுமென வறிந்துமீண்டு, நாமேவும் போகேச்சை தடுத்தாட்கொள்ள நயந்திரங்கித் திருமேனி சாத்திவந்த, மாமேவுஞ்சீரருணு சலவெம்மத்தன் மலர்த்தாளே யனுதினமும் வணங்குவாமே.

இராசத தாமதத்தைமேவும் = இரஜதமப் பிரதானமான, இரஜசுமுதலியவைகளின் இலக்கணம். சத்துவம்லகுபிரகாசகமிஷ்டம், இரஜச அவஷ்டம்பகம்சலம், தமசுகுரு ஆவரணகம் என்று சாங்கியத்திலும்; சத்துவம் — ஞானம், தமம் = அஞ்ஞானம், இரஜசு=மிசிரம், என்று கீதைகளிலுஞ் சொல்லப்பட் டிருக்கின்றது. ஈசுரகீதை:—ஒத்தமுக் குணங்களாம் பகுதியுத்தமஞ், சத்துவஞான மாந்தமமஞ்ஞானமா, மத்திமங்கலப்பதாமற்றிம் மூன்றையும், புத்தியின் விகாரமே புலப்படுத்துமால்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) சத்துவகுணத்தோரது பெருமையையே யுரைத்திதத்தை யுபதேசித்தல்:—வழுவறு என்பது.

வழுவறுசத்துவ குணத்தோர் தோலுரிக்குமர
வென்னமாயாபாச நழுவுவரெல்லாம் பிரமநாமதுவே
யென்றெண்ணி நாமும்வேறே முழுதுலகம் வேறென்னுமோக
மொழிப்பாய் பிரமமூலச்சித்தி லெழுவனகற்பனை
யெல்லாங்கடலி லலைபோலமெய்யா யில்லையன்றே.

(ப - ரை.) வழுவறு சத்துவகுணத்தோர் =குற்றமற்ற சத்துவகுணத்தை யுடையவர் தோலுரிக்கும் அரவென்ன = கஞ்சுகமகற்றும் சர்ப்பம்போல, மாயாபாசம் நழுவுவர் = மாயாபாசத்தை யெளிதாய்விடுப்பர்; எல்லாம்பிரமம் = சமஸ்தமும் பிரஹ்மசொரூபம், நாமதுவே = அந்தச் சர்வான்மகப் பிரஹ்மமேயாத்மா, என்றெண்ணி = எனச்சிந்தித்து, நாமும்வேறே = அகமோ அன்னியமே, முழுதுலகம்வேறு = இஃதெவையும் அயலேயாம், என்னுமோகம் = என்றுண்டாம் பிராந்தியை, ஒழிப்பாய் = அகற்றுவாய், பிரமமூலச்சித்தில் = வியாபகமாகிய ஞானகனப் பிரஹ்மத்தில், எழுவன கற்பனையெல்லாம் =உதிப்

பனவாய ஆரோபங்கள் யாவுமே, கடலில் அலைபோல=சமுத்திரத்திற் றரங்கமேபோன்று மெய்யாய் இல்லை = சன்மயமாகாவாம். அன்று ஏ அசைநிலைகள்.

(ஸ்ரீ - வீர.) முன்மொழிந்த இலக்கணம் வாய்ந்த இராஜச சாத்விக சுத்தசாத்விகப் பிறப்பினராய்த் தைரியமிக்கவராய் உன்போன்ற குணநிறைந்தவராய் விளங்குபவரானே, பக்குவமாய்த் துச்சமாயுள்ள இம்மாயையானது, உரகங்களானே தோலேபோலும், விளையாட்டாகத் தியாகிக்கப்படும். பரமார்த்தமாகவோ மயக்கமும் தனியேநிரூபிக்க முடியாததாகலின், " பிரஹ்மமே யிவையாவும் ஆத்மாவேயிவையாவும் " என்னும் சுருதியோடிய திருஷ்டியானே பிரஹ்மமே சர்வமும் எனக்கூறல்:—எல்லாம் பிரமமென்பது. உண்மையாயிவையாவுமே பிரஹ்மமாம்; விரிந்துள்ளயாவும் வியாபகமாய் ஆன்மாவேயாம், ஹே அநகனே. யான்வேறு இதுவேறு என்னும்பிராந்தியை விட்டொழிப்பாய். தேசத்தாலாம் பரிச்சேத மில்லாததாயும்; வஸ்துவாலாம் பரிச்சேதமில்லாததாயும், காலிகபரிச்சேத சூனியமாயும், அதாவது வியாபகமாயும், ஞானைகனமாயும், நித்தியமாயும், உள்ளசச்சிதாநந்த சிவமாகிய தன்னிடத்தில், கடலின்கண்ணே தரங்கபேன புற்புதாதிகள் நீரினும்வேறுக இல்லாததேபோல எக்கற்பனைகளும் சம்பவியாவாம், தோற்றினும் அதிஷ்டானத்தைத் தவிர இன்மையின் சன்மயமல்வவாம்,

ஈண்டுவழுவறு சத்துவகுணத்தோர் நழுவுவர் என்றமையின் மற்றையர் நழுவார் என்ற தாயிற்று, காரணம்,ஸூக்குமமும் பிரகாசமும் இன்மையேயாம், இதுபற்றியே ஸ்ரீபகவானும் மூக்குணங்களின் குறிகளைத்தெரிந்து இரண்டையகற்ற மொழிந்தருளியுள்ளார்:— ஒத்து நல்லறிவு மிக்கதியாதொரு போதப்போது, சத்துவந் தழைத்ததாகுந் தாங்கரும் வினைகளேகொண், டுய்த்துவந் தாசை கூர லோபம் வந் துற்றபோது, மத்திமகுணமே சால வளர்ந்ததென்றறி நீமன்ஞ. தக்கதுதகாதென் றொன்றைத் தானறியாதபோது, மெக்கரு மங்கண் மாட்டு. மிகழ்ச்சியோ டிருக்கும்போது, மொக்கமெய் மயக்கத்தோடு முறக்கம் வந்துற்றபோது, மிக்கது தமமேயென்று விசயநீ யறியவேண்டும்,

இக்குணங்களின் செயற்பாகு பாட்டைச் சாங்கியநூலுடையாரும்கூறுவர்:—" சத்துவ லகுபிரகாசகஞ் சார்பாம், தத்துபட்டம் பகஞ்சலமுமிரசசாம், கத்துகுருஷ் ணாகமதேதம மாம், ஒத்துறுசுட னெனவர்த்தத்தினுளதே " பிரகாசப் பிரவிருத்தி நியஹார்த்தங்கள் என முன்னிகழ்த்தப் பெற்றது; ஆண்டுயாவையவை இத்தகையன யாண்டிருந்துதான் வருவன வெனின் ? கூறல்:—சத்துவமென்பது. சத்துவமே லகுப்பிரகாசகம் இஷ்டப்பட்டதாம் சாங்கிய ஆசிரியரால்; ஆண்டுக் காரியங்களும்புவதில் ஏதுதருமம் இலாகவம் கௌரவப் பிரதித்துவந்துவி, ஏதனால் அக்கினிக்கு ஊர்த்வச் சொலனமோ, அது வேலாகவம், சில வற்றிற்குத் திரியக்குக்கமனத்தில் ஏதுவாம், வாயுவுக்கேபோலும்; இங்ஙனம் கரணங்கட்கு விருத்தி படுத்துவதேது இலாகவமாம், குருத்துவ மிருப்பினே மந்தங்களாம் எனச்சத்துவத்திற்குப் பிரகாசவடிவுடைமை வழங்கப்பெற்றதாம் சத்துவதமங்கள் சுயம் தொழிற்படாதனவாய்த் தங்காரியப் பிரவிருத்தியின் பொருட்டுத் துயருற்று இரஜசைப் பற்றுநிற்கும். இடர் நீங்கப்பெற்றுத் தங்காரியத்தில் உற்சாகமாய்ப் பிரயத்தனம் புரியும். ஆகலின் உபட்டம்பகம் ராஜசெனப் பெற்றதாம். எதனலெனக் கடாவவிடையாம் சலமென்பது. அவ்விதஞனே இரஜசிற்குப் பிரவிருத்தி யருத் தத்தன்மை காட்டப் பெற்றதாம் இரஜசோசலமாகலானே எப்புறமும் மூக்குணத்தையும் சலிப்பிக்கும். கனமாயும் மறைப்பதாயும்உள்ள தமசினுலே ஆண்டாண்டுப் பிரவிருத்தி தடைப்படுவதாகச் சிலபாலே பிரவிருத்திக்கப்பெறுமென அதின் அதின் விலக்கலாற்றமம் நியாமகமென நிகழ்த்தப்பெற்றது, குருத்வரண கமதே

தமமாம் என்பது. தேற்றம் தனித்தனி மாறுமுறையிற் சம்பந்தித்து ச் சத்துவமே இராஜ சேதமமே யெனவாம். அற்றேல், பரஸ்பரம் விரோத சீலங்கள்வாய்ந்த இக்குணங்கள் சுந் தோப சுந்தர்போலப் பரஸ்பரம் துவம்சமாமென்பதே பொருத்தமாம், முன்னரே இவற் றிற்கு ஏகக்கிரியா கருத்துருத் தகைமையன்றே வாகின்றது எனின் உரைக்கப் பெறுகின், றது; ஒத்துறு என்பது; கண்கண்டதே யன்றேவிது, எங்ஙனம் வர்த்திதைலங்கள் அநல விரோதிகளா மெனினும்பின் ஒன்றுசேர்ந்து அநலத்தோடுகூட ரூபப்பிரகாச இலக்கணம் காரியம் செய்யாநிற்குமோ; எங்ஙனந்தான், வாதபித்தசிலேஷ்மாணங்கள் பரஸ்பரம் விரோ திகளேயாயினும் சரீரதாரண வடிவக்காரி யஞ்செய்வனவாமோ, அங்ஙனம், சத்துவராஜதமங் கள் பரஸ்பரம் விருத்தங்களாயினும் தொடர்ந்து நிற்பனவாகித் தங்காரியத்தைச் செய்பவே யாம். அர்த்தத்தின் = புருஷார்த்தத்தின் என்பதாம். " புருடார்த்தமே யேதுவாம் மற் றெவரானும் காரணம் ஏவப்பெறுவதே கிடையாதாம் = போக அபவர்க்கவடிவ புருடார்த் தமே வருவதா யிருந்துகொண்டு காரணங்களே முயல்விக்கும், ஈண்டு அவற்றின் சொரூப அறிவுஞ்செய்கிய கருத்தாவானே யாற்றியது சாலும்; வச்சவிசேஷவிருத்திநிமித்தம்பாலுக்கே போலும் என்பதிற் கூறுவாம், என்பதாக இது இனியியம்பவும் பெறுமென்றுணர்க. ஈண் டும் சுகதுக்க மோகங்கள் பரஸ்பரம் விரோதிகளாகத் தந்தமனுரூபமாய்ச் சுகதுக்கமோகாத் மகங்களாகவே நிமித்தங்களாக் கற்பிக்கும், அவற்றிற்கும் பரஸ்பரம் அபிபாவ்ய அபிபாவக பாவத்தான் நானுத்தன்மையாம், அஃதெங்ஙனமெனின், ரூபயவ்வன குலசீலசம்பன்னையாய ஒரேஸ்திரீயானவள், சுவாமியை இன்புறுத்துவள், அஃதெவ்வேதுவினால், சுவாமியின் பொ ருட்டு அவள் சுகரூபசமுற்பவமாதலின், அந்த அங்கனையே சபத்நியைத் துயரப்படுத்துகின் றனள், அஃதெவ் வேதுவினால், அவள்பொருட்டவள் துக்கரூப சமுற்பவமாதலின், இவ் வண்ணம் அம்மடந்தையை யடைந்திலாத அயலானை அவளேமயக்கு கின்றனள், அஃதெவ் வேதுவினால், அவன்பொருட்டவள் மோகரூப சமுற்பவமாதலின், இம்மானினியாலே சர்வபாவங்களும் வியாக்கியாதங்களாம். ஆண்டு, யாதுசுகவேது அது சுகான்மகமாகிய சத் துவமாம், யாதுதுக்கவேது அதுதுக்கான் மகமாகிய இரஜசாம், யாதுமோகவேது அது மோகான்மகமாகிய தமசாம். சுகப்பிரகாச லாகவங்கட்கோ ஒன்றன்பால் ஓரோபோதில் உற் பூதமாவதில் முரணின்றும், சகதரிசனமாகலின்; அதனால் விரோதிகளாகிய சுகதுக்கமோ கங்களாற்போல அவிரோதிகளாய் ஒவ்வொருகுணத்திருப்பனவாய சுகப்பிரகாசலாகவங்களா னேநிமித்த வேற்றுமைகள் குறிப்பிடப் பெறுவாம். இன்னணம் துக்க உபட்டம்பகத்வபிர வர்த்தகத்வங்களானே, இவ்வண்ணம் மோகருத்வ ஆவரணங்களானே, குறிப்பிடப் பெறு வாம் எனத்துணியப்பெறுந் திரைருண்யம். எண்ணி மோகமொழிப்பாய் மெய்யாயில்லை யாதலின் எனப்பெற்ற தன்கருத்திதுவாம்:—அந்தப் பிரஹ்மதரிசனத்திற் சாதனம் மனமே யாம், பரமார்த்த ஞானசமஸ்கிருத அம்மனத்தானே ஞானுசார்ய உபதேச பூர்வகம் நன்கு காணத்தக்கது, அந்தத்தரிசன விஷயமாய பிரஹ்மத்தின் கண்ணுறு ஒருசிறிதும் கிடைய வேகிடையாது, நானுத்வம் இலதாயும் அவித்தையானே ஆரோபிக்கின்றனன், அவன் மர ணத்தினின்றும் மரணத்தையடைவன், அவன்யாவன் ? யாவனீண்டு நானுப்போலப் பார்க் கின்றானே; அவித்யாத்யாரோபணத்தினு மயலாய்ப் பரமார்த்தமாகத் துவைதமில்லவே யில்லை என்பதாம். ஆகலின் விஞ்ஞானகனேகரசப்பிரகாரமாகவே ஆகாயம்போலும் நிரந் தரமாகவே இனிது காணவேண்டும் ஏகரசமாய இப்பிரஹ்மம் அப்பிரமேயமாம், சர்வ ஏகத் தன்மையான், அயலாலன்றே அயலொன்று அளக்கப் பெறுகின்றது, இதுவோ ஒன்றேயா மாகலின் அப்பிரமேயமாம், தூருவம்நித்தியம் கூடஸ்தம் அவிசாலியாம். அற்றேற்கூறியது முரணேயன்றே அப்பிரமேயமாயது அறியவும் பெறுமோ, அறியப்பெறுதல் என்பது அள

வையால் அளவிடுவதல்லவோ, அப்பிரமேய மென்பது அதையகற்றுவ தல்லவோவெனின்? இது ஒருகோதென்னற்க, அன்னிய வஸ்துவைப்போல அநாகமப் பிரமாணப் பிரமேயத் தன்மைப் பிரதிஷேத அர்த்தத்தன்மை யுண்மையின். எங்ஙனம் அன்னியவஸ்துக்கள் ஆகம நிரபேக்ஷப் பிரமாணங்களானே விஷயீகரிக்கப் படுகின்றனவோ, அங்ஙனம் இவ்வான்மதத்து வம் பிரமாணாந்தரத்தானே விடயீகரிக்க முடியாததாகும், எல்லாவற்றிற்கும் ஆன்மத்தன் மையேல், எதனுலெதைப் பார்ப்பது அறிவது என, பிரமாத்துருப் பிரமாணதி வியாபாரப் பிரதிஷேதத்தானேயே யாகமமும் விஞ்ஞாபனம் செய்கின்றதன்றி, அபிதான அபிதேய லக்ஷணவாக்கிய தரும அங்கீகாரத் தானன்றும்; ஆகலின் ஆகமத்தானும் துறக்கமேருவாதி போலும் அது பிரதிபாதிக்கப் படுவதின்றும் பிரதிபாதிப்பவனது ஆத்மபூதமேயாமது, பிரதிபாதாபிதாவிற்குப் பிரதிபாதனத்தின் பிரதிபாத்ய விஷயத்தன்மை யுண்மையின்; பேதமிருந்தாலன்றே பிரதிபாத்தியத்வ முண்டாகும், ஞானமும் அதன்கட் பராத்மபாவ நிவிருத்தியேயாம், அதன்கட் சாக்ஷாத்தாத்ம பாவங்கர்த்தவ்யமன்றும், ஆத்மபாவ மிருத்த லின், நித்தியமேயாய ஆத்மபாவம் பூரணமாய பிரஹ்மத் திற்குப் பிரஹ்மவியதிரிக்த விடயம் போலத் தோற்றுகிற்கும், நிற்றலின் அதத்விஷய ஆபாசமாகிய தேகாதியின் கண்ணுத் மத் வப் பிரதிபாச நிவிருத்திக் கயலாகப் பிரஹ்மத்தின் மாட்டான்மபாவம் விதிக்கப்பெறுவ தில்லையாம்; அன்னியாத்மபாவம் அகற்றப் பெற்றவழி சுவாத்மாவின் மாட்டுச்சுவாபாவிக மாக எவ்வான்ம பாவமுளதோ அது கேவலமாகின்றது என ஆத்மா அறியப்பெறுகின்ற தென்று கூறப்பெறுகின்றது. சுயமாகவோ அப்பிரமேயம், பிரமாணாந்தரத்தானே விஷயீ கரிக்கப் பெறுவது மில்லையென்னு மிரண்டும் முரணற்றவேயாம்; விருத்திவியாப் பியத்தன் மையானே மேயத்தன்மையாம், ஸ்புரண் அவ்வியாப்பியத் தன்மையானேயோ அமேயத் தன்மையா மெனவறிக.

(ச.) சத்துவகுணத்தோர் = சத்துவகுணப் பிரதான் ஜன்மத்தை யுடையராய் மைத் திரியாதி குணங்களோடு வாழுந்தீரர், மாயபாசம் = இம்மாயை யென்னும் பாசத்தை, நழு வுவர் = விலையாட்டாக விடுவர், எல்லாம் = ஈதனைத்தும், பிரமம், அது = விரிவானவீத னைத்தும், நாமே = ஆன்மாவேயாம், நாமும்வேறே = அகமக்நியன், மோகம் = பிராந் தியை, கற்பனை யெல்லாம் = கற்பனைரூபமாகிய விக்ஷேபங்கள், அலைபோல் = தரங்காதி பேதங்கள்போல். த்வக் = கஞ்சுகம். தமிஞ் = பிரக்ஷேபணத்தில், அன்றுயிஞை மயட் டிற்குடித் தன்மையான் சன்மய்யவென மூலத்தில் ரூபமுண்டாக வேண்டும். (2)

(ஸ்ரீ-வீர - அ-கை.) வாஸ்தவ ஏகத்வ விரோதத்தானும் துவைதகற்பனை யுண்மையா காதாம், வன்னியின் கண்ணே ஹிமகண மில்லாததேபோல ஒரேயெல்லாமாய பரமாத்ம வத்து வின்கண்ணிரண்டாவது கற்பனையிலதாம், ஆகவே அத்தகைய ஆத்மபரிசயத்தானே ஆண்டு விசிராந்தியின் பொருட்டு எப்போதும் அப்பாவனையே இயற்றவேண்டும், க்ஷீர உத கம்போலும் சித்துரூபத்தை யடைந்தமனத்தினுனே சித்தின்மயமாகிய தன்னையே யுன்னி யன்னியத்தை யென்னென உபேக்ஷிக்குக. என்னை, மாயையின்வஞ்சக மலினமொன்று மில்லாத தன்பாற்றுனே தானுயிலங்கியதன்றே, என்று பாவித்து அம்மயமாய சின்மய னுக்கு ஜீவன்முக்தி விசிராந்தியைக் காட்டல்:—சோகமிலை யென்பது.

சோகமிலைமோக மிலைபிறப்பில்லைபிறப்பிற் சுழல்வாரில்லை
யேகமெனவிங்கென்று முள்ளபொருளேயுள்ள திருங்கவேண்டா
மூகமுறவருவன போவனநினையேற் றொந்தனைக ளொன்றுமில்லா
மாகனசத்துவ குணத்தோடொருவனு யிடரெல்லா மாற்றிநிற்பாய்.

(ப - ரை,) சோகமில்லை = சோகமுங் கிடையாது, மோகமில்லை = மோகமுங்கிடையாது, பிறப்பில்லை = ஜன்மமுங்கிடையாது, பிறப்பு இறப்பிற் சுழல்வாரில்லை = ஜன்ம மரணங்களில் உழல்வாருமில்லை, ஏகமென = ஒன்றேயென்று, இங்கென்றும் = இவ்வினைப் போதும், உள்ள பொருளேயுள்ளது = யாதுளதோ அதுவேயுளது, இரங்கவேண்டாம் = இராகவனே நீ தாபமற்றவனுவாய், ஊகமுற = ஆத்மவானுய், வருவனபோவனநினையேல் = யோகக்ஷேமங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், தொந்தனைகள் ஒன்று மில்லா = சீதோஷ்ண சுகதுக்காதிதுவந்துவங்கள் ஒன்றுமில்லாதவனுகி, மாகனசத்துவ குணத் தோடு = நித்தியசத்துவத் திருப்பவனுகி, ஒருவனுய் = அத்விதீயனுய், இடஞ்செல்லா மாற்றி = விசோகாத்மாவாய், நிற்பாய் = தாபமற்றவனுவாய்.

(ஸ்ரீ - வீர.) சோகமுமில்லை மோகமுமில்லை ஜன்மமுமில்லை ஜன்மவானுமில்லை, யாதுள தீண்டு அதுவேயுளதாம் ஆதலினிராகவ சுரமற்றவனுவாய். சீதோஷ்ணுதி சாரீரதுவந்துவ விக்ஷேபரகிதனுவாய், நித்தியசத்துவத்தி லிருத்தலினுலே இராஜதமமேயியவேயாயமானச விக்ஷேபரகிதனுவாய், அதனுனே அவ்விருவிக்ஷேப பரிகார உபாய யோகக்ஷேமச் சிந்தை யற்றவனுவாய், ஆத்மவானுவாய், அத்விதீயனுவாய், சோகமற்றவனுவாய், எத்தாபமுமற்றவனு வாய், கருத்திதுவாம்:—சீதோஷ்ணுதிகளை நீக்குவான் யாதேனுமுபாயஞ் செய்யவேண் டாங் கொலோவெனின், வேண்டாம் நிர்த்துவந்துவனுயிருத்தி, சீதம் உஷ்ணம் சுகம் துக் கம் மானம் அபமானம் பகை உறவு என்பன முதலிய சர்வதுவந்துவ தர்மங்கள் உறினும் நித்தியதிருக்குருவ என்னிடத்திலிவை கற்பிதங்கள் சங்கற்பமாத்திர வடிவுடையவைகள், அநியதரூபங்கள்; என்பனவாதி யூகங்களானே அவ்வியாவற்றையும் சகிக்கும் இயற்கையனு ஞதி; பொறுக்கக் கூடாத துக்கத்தை யாங்ஙனம் பொறுத்தல் எனுமெனின், நித்தியசத்து வஸ்தனு யிருந்தால்எனும், சலனமற்ற தைரியமென்னும் சத்துவத்தின் கண்ணிருப்பவனுதி, இரஜ தமோகுணங்களாற் றிரஸ்கரிக்கப்பட்ட சத்துவத்தையுடையவன் சீத உஷ்ணுதியா லாம் பீடையாற்றுன்புற்றுத் திரும்புவன், நீயவ்விரு குணங்களாற் றிரஸ்கரிக்கப் படாத கேவல உத்தமோத்தம சத்துவத் துயர்வை யுற்றுவாழ்தி: சீதாதியைச் சகிப்பினும் பசியாதி நீக்குவான்முன்னர் மன்னுத அன்னுதி மன்னவும், பின்னர்மன்னிய அன்னுதி பின்னமாகா மற் காக்கவும் முயலவேண்டிய தவசியமாம், ஆகவே அந்நித்திய சத்துவத்தகைமை யாங்ஙன முண்டாம் எனின். பெறுததன் பேரும் யோகத்தையும் பெற்றுதன் காப்பாம் க்ஷேமத்தை யும் அடையற்க, சித்தவிக்ஷேப ஹேதுவாய பொருள்களின் பெறுகையை யுறவேண்டாம். உறுதொழிவனேலாயின் எனது ஜீவனம் நடப்பது யாங்ஙனமாலோவெனின், ஜீவனசிந்தை யைச் செய்யாதொழிதி, சர்வாந்தரியாமியாகியபரமேசுரரே யோகக்ஷேம நிர்வாகஞ்செய்வர், பரமாத்மாவைத் தியானஞ் செய்பவனுகவும், யோகக்ஷேமங்களைக் கவனிக்குமாறு கடவுளை வைத்தவனுகவும் உள்ள ஆத்மவான் நீயாகுதி, விழைவுகள் யாவையும் விட்டொழித்து நீர் மழையெனக் கருணையின் மற்றுடம்பினைக், கழைமுதற் பொருள்கொடு காக்குமென்பதாய்ப், பழையசிந்தனை யெலாம் பாறிவாழ்தியால். அல்லது யாவுமறந்து ஆத்மாவிலமுந்திச் சிறப் புறுதன் ஞனந்தமாத்திரமாய்த் தனித்திருக்கும்சித்தம் பெறுதியென்பதாம், அத்விதீயஞதி யேற் சோகஞ்சோரும் சோரவேயது சுரமுமாறும் என்பது திண்ணம்.

(ச.) உள்ளபொருளே = பரமார்த்தமா யிருக்குஞ் சின்மாத்திர வஸ்துவே, உள்ளது = சத்தையாற் ரூன்றுகின்றது; ஆதலின், இரங்கவேண்டாம் = இராகவாநீ தாபத்திரய மின் மையனுவாய் என்றதாயிற்று, ஊகமுற = அப்பிரமத்த சித்தனுய், வருவன = இஷ்டசாதன மென்னுமியோகமும், போவன = அநிஷ்ட நிவாரணமென்னும் க்ஷேமமும், நினையேல் =

இன்மையனும்; தொந்தனைகள் ஒன்றுமில்லா = சீதோஷ்ணாதி சிதைவுற்ற, மாகனசத்து வகுணத்தோடு = நித்தியசத்துவகுணத்தோடு, ஒருவனும் = பேதபாவனை யற்றவனும், இடரெல்லாம் மாற்றிநிற்பாய் = விஷ்டி அநுசோசன சிற்சுகனுவாய். (3)

(ஸ்ரீ - வீர - அ - கை) மேலுமதனையே வற்புறுத்தல்:—சமமென்பது.

சமமாகிச் சொரூபத்தே நிலையாகித் திரமதியாய்ச் சாந்தனுகி
யமர் மனனமவுனியாய் நன்மணிபோற் றெளிந்து துயரனைத்துந் தீர்வாய்
நிமலமுற நிகழ்காலத் தொழிற்செய்தி யாவையினு நேயமின்றி
நமதெனக் கொள்ளுதல் விடுதலிரண்டு மறத்துன்பமெலாநாசஞ்செய்வாய்.

(ப - ரை.) சமமாகி = சமதிருஷ்டி யுடையவனும், சொரூபத்தே நிலையாகி=சுவஸ்தனும், திரமதியாய் = திடப்பிரஞ்ஞை யுடையவனும், சாந்தனுகி = பரமசாந்தியை யுடையவனும், அமர்மனனமவுனியாய் = மனனத்தோடு கூடிய மௌனமுடைய முனிவனும், நன்மணிபோற்றெளிந்து = உத்தமரத்தினம்போற் சொச்சனும், துயரனைத்துந் தீர்வாய் = சகல அநர்த்தங்களும் அற்றவனுவாய், நிமலமுற = நின்மலனுயிருந்து கொண்டு, நிகழ்காலத் தொழிற்செய்தி = வர்த்தமான காலத்தில் வந்தகாரியத்தைப் பற்றறச்செய்வாய், யாவையினும் நேயமின்றி = எப்பொருள்களினுமே சிறிதும் நசையில்லாமல், நமதெனக்கொள்ளுதல் = எமதென்று கோடலும், விடுதல் = அல்லவென்று விடலும், ஆகிய, இரண்டும் = இருவகையத்தியாசமும், அற = இல்லாமற்செய்து, துன்பமெலாம் நாசம் செய்வாய் = சகலதுக்கங்களையும் அடியோடு கெடுப்பாய்.

(ஸ்ரீ - வீர.) சமமாய், சுவஸ்தமாய், ஸ்திரமதியாய், சோகமியாவுஞ் சாந்தமனத்தனும், முனிவனும், மவுனியாய், வரமணியெனச் சொச்சனும், எல்லாத்தாபமும் அற்றவனுகி. கிடைத்ததைக் கொண்டு மகிழ்ந்தநுபவிப்பவனும், எதனிடத்திலும் எள்ளளவும் இச்சையில்லாதவனும், விடுத்தல் மடுத்தல் விடுத்தவனும், வெந்துயர் எவற்றையும் விட்டுநீயொழிப்பாய், காமாதிகள் யாவும் மனோதருமங்கள் ஆகலின் ஆன்மாவிற் குண்மையி லின்மையின் எளிதில் விட்டொழிப்பாய்; பரமாநந்தஸ்வரூப ஆன்மாவின் கண்ணே பரமபுருஷார்த்தப் பிராப்தியால் திருப்தியை அடைந்து வாழ்வாய். "இவன் மனத்துள்ள காமாதியாவும் எஞ் சுதலின்றிப் பஞ்சுபோற் பறக்கும், அந்தப்போதில் இந்தச்சீவன், அமிருதமாந் தன்மையை யடைந்து வாழ்வன், கசத்ததேகத்தி லிருந்துளா னெனினும் கடற்சுகப் பிரமமாய்க்களித்து வாழ்வன்" எனமறையும் அறையும்.

(ச.) சாந்தனுகி = பிரவிர்த்தி மார்க்கத்தினின்றுந் திரும்பினவனும், அமர்மனன = உபசாந்த சித்தமனன நிஷ்டையுள்ளவனும், நன்மணிபோல் = ஆகாஜ (இரத்தினம் விளையுமிடத்துள்ள) மணிபோல், தெளிந்து = நிர்மலனும், நிகழ்காலத் தொழிற்செய்து = கிடைத்த பிராரத்த பலத்தினது அநுபவத்திலுல், யாவையினும் = அப்பிராப்தமான அனைத்தினும், நேயமின்றி = வாஞ்சையின்றி, அவ்வேதுவினுல், நம + செய்வாய். (4)

(ஸ்ரீ-வீர - அ-கை.) முன்னர் உத்தரோத்தரம் உற்கிருஷ்டமாய மநுடஜன்மங்களையே புகித்து, இச்சன்மத்தின் கண்ணேயாவர் முத்தியடைவரோ அவர் இராஜசசாத்விகராய முடிந்த பிறப்பினர் என்றும் அவர்க்குச் சாந்தியாதி குணங்கள் எல்லாம் தாமேவளர்ந்தோங்கும் அவதரித்த அவர்பருவத்துறுஞ் சந்திரனுபோல விருத்தியை யடைந்துகொண்டேபோவர், மல்லிகை மழைகாலத்தில் புஷ்ப ஸ்ரீயையடைவதேபோல அவரைச் சாதனசதுஷ்டய மாகிய சௌபாக்கியம் தாமேவந்தடையும் என்றும் அவரைச் சிலாகித்தல்:—இனி யென்பது.

இனிப்பிறவா முடிவானபிறப்பிலே மெய்ஞ்ஞான மெனிதிலுண்டாம்
பனிச்சுடர்வெண் ணித்திலங்க ளுத்தமமா மூங்கில்லல்லாற் படுவதுண்டோ
செனித்தவரின் மேலோராய் நல்லோராய் மித்திரராய்த் தெளிந்தோராகி
யனித்தமறு முத்தராய் ஞானிகளாங் குணமெல்லா மவரைச்சேரும்.

(ப - ரை.) இனிப்பிறவா முடிவான பிறப்பிலே = இனிமேல் ஜன்மமெடாத வகையான தன்மையுற்ற அந்தியஜன்மத்திலே, மெய்ஞ்ஞானம் எளிதில் உண்டாம் = விமலமாயதத்துவ வித்தையானது அதிசுலபமாகலபிக்கும், பனிச்சுடர் வெண்ணித்திலங்கள் = குளிர்ச்சியும் ஒளியும் மிகுந்தவெள்ளிய முத்துக்கள், உத்தமமாம் மூங்கில் அல்லாற்படுவதுண்டோ = மேலாயவேணுவி லல்லாமல் உண்டாவ துண்டுகொல்! செனித்தவரில் = பிறந்தவருள், மேலோராய் = உயர்ந்தவராய், நல்லோராய் = மநோரம்மியராய், மித்திரராய் = மைத்திரியுடையவராய், தெளிந்தோராகி = சௌமியராகி, அனித்தமறு முத்தராய் = நித்தியசொரூப சுகமுற்றுச்சர்வ அநர்த்தங்களும் நீங்கினவராய், ஞானிகளாம் = உணர்வுடையவர்கள் ஆவர்கள், குணமெல்லாம் = கருணைமுதலிய குணங்கள்யாவும் அவரைச்சேரும் = அந்திய ஜன்மமுடைய அவரை யடையாநிற்கும்.

(ஸ்ரீ - வீர.) ஹே மகாமதியையுடைய மைத்ர! யாவனுக்கிந்த ஜன்மம்முடிவாக உற்றதோ அவனையதி விசைவிலேயே, உத்தமவேணுவின் கண்ணேமுத்துக்கள் போல, பிரஹ்மவித்தைக் குபாயங்களாய சர்வவிமல வித்தைகளும் அடைகின்றனவாம், வேணுவிசேடத்திற்கும் முத்துண்டாதற் கிடனுதல் வெளியாம். அம்மகானே, ஆரியத்தன்மை, ஹருத்யத்தன்மை. மைத்திரி, சௌமியத்தன்மை, கருணை, ஞானம் = பரோக்ஷப் பிராயம் ஞானம், என்பவைநித்தியம், அந்தப்புரத்தையங்னேகள் அடைவதேபோல நன்கடையாநிற்கும். அவன் சர்வகாரியங்களையும் செய்தபோதினும் அதன்பயன் புஷ்டமாயினும் நஷ்டமாயினும் அவ்வியாவற்றிலும் சமதிருஷ்டியுடையவனுய்ச் சர்வமும் சங்கற்பமயமென்றுதல் சர்வமும்தன்மயமாகிய சின்மயமென்றுதல் ஒப்புற்று மகிழ்ச்சியையாதல் வாட்டத்தையாதல் அடையான்.

(ச.) முடிவான பிறப்பிலே = அந்தியஜநத்தில், இனிப்பிறவா = மேற்சன்மாந்தரமின்மையின், மெய்ஞ்ஞானம் = ஞானவேதுக்கள், மேலோராய் = சதாசாரபரம்பரராய், நல்லோராய் = சர்வசம்மத முடையோராய், மித்திரராய் = சர்வபூத தயவுடையராய், தெளிந்தோராகி = மனச்சீதள முடையராய், முத்தராய் = நிர்ச்சங்காராய், ஞானிகளாம் = ஞானநிஷ்டராம், அவரை சதாசார பரத்துவமுதலிய குணமெல்லாம், அந்தப் புரத்தையங்னேகள்போல், சேரும் = அநுசரிக்கும். பாசாத்யம் = சாமம் முதலியகுணங்கள் பத்தின் (5)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மகான்களினது சரிதையைப் புகழ்ந்து இருவழிகளை யுபதேசிக்கத் தொடங்கல்:—மெத்தென்பது.

மெத்தென்ற சரித்திரத்தி னவர்தம்மை யுலகெலாம் விரும்புந்தன்மை
கொத்தொன்று வனமூங்கிற் குழலிசையான் மகிழ்விலங்கின் கூட்டம்போலு
மித்தன்மை யாவருக்கும் பொதுமையினு லியம்பியதா மிதனில்வேறுய்ச்
சத்தென்றவழி யிரண்டேழ் பவந்தீர்ப்ப வர்க்கவற்றைச் சாற்றக்கேண்மோ

(ப - ரை.) மெத்தென்ற சரித்திரத்தினவர்தம்மை = கோமள ஆசாரமாதுரியமுள்ள அம்மகான்களை, உலகெலாம் விரும்புந்தன்மை = சர்வஜனங்களும் வாஞ்சிக்குந்தகைமை, கொத்தொன்று வனமூங்கிற்குழல் இசையால் = கொத்திற்பொருந்திய வனமூங்கிலின்

புல்லாங்குழலால் உண்டாய மாதுரியகனைத்தால், மகிழ்விலங்கின் கூட்டம்போலும் = சந் தோஷத்தையடையும் வனமிருக சமுதாயம் போலும் ஆம்; இத்தன்மை = இம்மார்க்கம், யாவருக்கும் = சர்வதேகிகட்கும், பொதுமையினால் = சாமானியமாக, இயம்பியதாம்= உபதேசித்ததாம், இதனில்வேறாய் = இதனினும் அன்னியமாய், எழ்பவந்தீர்ப்பவர்க்கு = எழுவகைத் தோற்றமுமாற்றி மோஷமடைபவர்க்கு, சத்தென்ற வழியிரண்டு = உத்தம மான இருநிரமங்கள் உள்ளன, அவற்றை = அவ்விரண்டையும், சாற்றக்கேண்மோ = கூறக்கேட்பாயாக.

(ஸ்ரீ - வீர.) பகலில் இருள்கள் ஒழிந்தேகலேபோலச் சுகதுக்காதி துவந்துவங்கள் ஒழிந்து, சரற்காலத்தில் மேகங்கள் தூய்மையுறுதல் போல முன்னர் மலினமாயினும் திருந்தி சிரத்தைலஜ்ஜை முதலியகுணங்கள் தூய்மையை யடைந்து தெளிந்து, வழங்கும் அவரது மிருதுவாசார மதுரத்தைச் சர்வஜனங்களும் வாஞ்சிப்பார்கள், மாருதபூர்ண ரந்திரத்தன் மையானே மதுரத்தொனி தொனிக்குங் கீசகத்தை வனத்தில் வனமிருகங்கள் போலும். அந்திய ஜன்மத்தையுடைய அதிகாரியைக் கூறியவாயகுண ஸ்ரீகள் பாலியமுதலாகவே மேகத்தைக்கொக்குகள் தொடர்வதேபோலத் தொடராகிற்கும். ஈண்டுத்தன் விசாரத் தானே நிறது விற்பன்னமான சித்தத்திற்கு ஆகாசபலம் வீழ்தலேபோல ஞானகல்லடை வைவர்ணிக்க உத்தேசித்துக்கொண்டு, நுதலிய சாமானியக் கிரமத்தை யநுவதித்து ஒவ் வொருபாகியவானுக்கு அஃதின்றியே தெய்வத்திருவருளானே கிடைக்கப்பெற்ற தனது விசாரமாத்திரத்தினுலேயே அதிவிரைவிற் சர்வகுண சம்பச்சித ஞானேதயவடிவ விசே டத்தைக்காட்டல்:—இத்தன்மை யென்பதாதி, ஆண்டு இக்கிரமம் சாமானியமாகச் சர்வ தேகிகட்கும் உரையாடப் பெற்றது, ஹேதாமரைக்கண்மஞ்சே! இவ்வன்னிய விசேடத்தை நீகேட்பாயாக; இச்சம்சார ஆடம்பரத்தில் உண்டாகியிருக்கும் தேகதாரிகட்கு மோக்ஷபலந் தருவனவாய இவ்விரண்டு கூறியகூறும் உத்தமக்கிரமங்கள் உள்ளனவாம்,

(ச.) சரித்திரத்தி னவர்தம்மை = சதாசாரமதாரான சகலரையும், உலக்மெலாம் = ஜனங்களனைத்தும், விரும்பும் = வாஞ்சிக்கும், இசையால் = மதுரத்தொனியால், இத் தன்மை = முற்கூறிய இம்முத்திக்கிரமம், யாவருக்கும் = சகலஜந்துக்களுக்கும், பொது மையாய் = சாதாரணமாய், இயம்பியதாம், இராஜீவலோசனனை ஸ்ரீ இராமா! இதனில்= இப்பொதுமையிலும், வேறாய் = அந்நியமாய், விசேடமான, எழ்பவந்தீர்ப்பவர்க்கு = இச் சம்சாரப் பிரமையிற் சனித்த தேகதாரிகளாய் அதுதீர முயல்பவர்க்கு, சத்தென்றவழி = மோக்ஷங்கொடுக்குஞ் சாமர்த்தியமுள்ள உத்தமக்கிரமங்கள், இரண்டுண்டு, அவற்றைச் சாற் றக்கேண்மோ. (6)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்விரண்டு மின்னதென வுரைத்தல்:—தேசிகன் என்பது,

தேசிகன்சொற் பிழையாம லனுட்டிக்கிற் பையப்பையத் தியக்கநீங்கிப்
பேசியசன் மத்தாத லடுத்தசில பிறப்பிலு லாதல்பேரும்
மாசறுவிற் பத்திசிறி தண்டாகு மனத்தாற்றன் மனனத்தாலே
யேசறுமா காசபலம் வீழ்வது போன் மெய்ஞ்ஞான மெளிதிலுண்டாம்.

(ப - ரை.) தேசிகன் சொல்பிழையாமல் = தனது ஞானசிரியர் உபதேசித்தருளிய நெறிதவறுமல், அநுட்டிக்கில் = ஞானநிஷ்டை புரிந்துவரில், பையப்பைய = மெதுவு மெதுவாக, தியக்கநீங்கி = மயக்கமகன்று, பேசிய சன்மத்தாதல் = உபதேசம்பெற்ற சன் மத்திலேனும், அடுத்த சிலபிறப்பிலுலாதல் = மறுபிறப்புக்களிலேனும், பேரும் = முயற் சிக்குத்தக்கபடிபயனும், மாசறு = குற்றமற்ற, விற்பத்திசிறிது = சிரவணஞ்சொற்பம்,

உண்டாகும் மனத்தால் = கிடைக்குஞ் சித்தத்தால், தன்மனனத்தாலே = தனது சயுக்திக விசாரணையிஞலே, ஏசறு = களங்கமறு, ஆகாசபலம் = ககனக்கனி, வீழ்வதுபோல் = பதனமாவதுபோல, மெய்ஞ்ஞானம் = உண்மையுணர்வு, எளிதிலுண்டாம் = சுலபமாக உதயமாம்.

(ஸ்ரீ - வீர.) அவ்விரண்டனுள் ஒன்று இதுவாம்:—ஞானகுரு உபதேசித்தருளிய அனுவந்தானத்தானே சிறிது சிறிதாகச் சித்தத்தெளிந்து, ஒருஜன்மத்திலேனும் அல்லது வெகு ஜன்மங்களிலேனும், மோக்ஷத்தை யடையலா மென்று முன்னே சொன்னேம் என்பதாம். இரண்டாவதோ;—சிறிது விற்பன்ன சித்தத்தானே, தெய்வத் திருவருளாலுண்டாய ஜீவ ஜகத்தத்வ விசாரவாஞ்சிய தன்ஞனே, ஆகாசபல வீழ்ச்சியொப்ப, ஞான அடைவை விரைவிற்பெறுவன் என்பதாம்.

(ச.) பேரும் = சித்தியைத் தருவதொன்று இப்போது கூறப்பெற்றது. (7)

(ஸ்ரீ - வீர - அ-கை.) இரண்டாவது கிரமத்தில் ஜாக ஆக்கியாயிகையை உதாகரிக்கும் பொருட்டுப் பூமிகைபோடல்:—இவ்விரண்டி லென்பது.

இவ்விரண்டி லாகாச பலம்போல மெய்ஞ்ஞான மியைந்ததன்மை
செவ்வியவள் ளான்முன்னோர் கதையாலே யான்செப்பத் திருந்தக்கேட்பாய்
தெவ்வுலகி லாபத்தென் றொன்றுமிலோன் விதரணத்தோன் செல் வமிக்கோன்
அவ்வியமில் விதேகநா டரசாள்வோன் சனகனெனு மரசர்கோமான்.

(ப - ரை.) இவ்விரண்டில் = உரைத்த இருநெறிகளுள், ஆகாசபலம்போல = ககனக் கனிவீழ்ச்சிபோல, மெய்ஞ்ஞானம் = உண்மையுணர்வு, இயைந்ததன்மை=உற்றபான்மை, செவ்வியவள்ளால் = சிறந்ததலேவள்ளலே ! முன்னோர் கதையாலே= பிராக்தன ஒருவிருத்தாந்தத்தானே, யான்செப்ப = யாமுபதேசிக்க, திருந்தக்கேட்பாய் = ஒருமையுடன் சிரவணஞ்செய்வாய், உலகில் = ஜகத்தின் கண்ணே, தெவ்வாபத்தென்று ஒன்றுமிலோன் = பகை ஆபத்து என்று சொல்லப்பட்ட இடர்கள் எதுவும் ஒருபோது மில்லாதவன், விதரணத்தோன் = உதாரமதியை யுடையவன், செல்வமிக்கோன் = சம்பத்ததிக முடையவன், அவ்வியமில் விதேகநாடு = எவ்வளப்பமும் குன்றுத விதேகநாட்டை, அரசாள்வோன் = பரிபாலனம் புரிபவன், சனகனெனும் அரசர்கோமன் = ஜனகராஜாவென்னும் நாமதேயத்தையுடைய இராஜாதிராஜன்; ஒருவனிருந்தான்.

(ஸ்ரீ - வீர.) ஆகாசபல வீழ்ச்சிக்கொப்பாக ஞானம் நன்கடைந்ததன் பொருட்டு உதாரணமாக உனக்குயாம் முன்னடந்த இவ்விருத்தாந்த மொன்றை யுபதேசிக்கக் கேட்பாயாக, சர்வ ஆபத்துக்களும் இல்லாதவனுய், பெருஞ்சம்பத்தோடு கூடியவனுய், உதாரமதியுடையவனுய், வீரியவானுய், ஜனகன் என்னும் பெயர் வாய்ந்தவனுய், விதேகநாட்டார்தம் மகீபாலனுய், ஒரு இராஜ இராஜேசுவர னிருந்தான்,

(ச.) கேளாய், ஸ்ரீ வசிட்டர், விதரணத்தோன் = உதார புத்தியுள்ளவன், அரசர்கோமானுண்டு. (8)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்வரசனது கல்யாணகுணங்களேயே புகழ்ந்து நடந்ததை யுரைக்கத் தொடங்கல்:—சற்குணமென்பது,

சற்குணத்தாற் கடலனையான் சக்கரத்தா னெனவுலகந் தாங்குநீரா
னற்குணஞ்செய் வசந்தஞ ணறு மலர்சூழ் நந்தனத்தி னயந்துமேவி
தற்குரிய தந்திரர்கள் புறநிற்பத் தனியனுய்ச் சரிக்கும்வேலை
சிற்குரிய மனமுடைய சித்தர்கணம் பாடுவபண் செவியிற்கேட்டான்.

(ப - ரை:) சற்குணத்தாற் கட்டனையான் = நல்லகல்யாண குணங்களால் நிறைகட லுக்கொப்பானவன், சக்கரத்தான் என = ஸ்ரீ மகாவிஷ்ணுவேபோல, உலகந்தாங்கும் நீரான் = ஜகத்தை சம்ரக்ஷணைசெய்து பரிக்கும்பான்மையன், நற்குணஞ்செய் வசந்த நாள் = நல்ல ஆநந்தத்தைப் பயக்கும் வசந்தகாலத்தில், நறுமலர்சூழ் = வாசனைவீசும் புஷ்ப பங்கணிறைந்த, நந்தனத்தில் = உத்யானவனத்தில், நயந்துமேவி = உற்சாகத்துடன் உலாவ உற்று, தற்குரிய = தனக்குரித்தாகச் சேவைசெய்யும், தந்திரர்கள் = அநுசரர்கள், புறநிற்ப = தூரத்தேயிருப்ப, தனியனுய்= ஏகாங்கியாய், சரிக்கும்வேலை = குஞ்சங்களில் உலாவும்போது, சிற்குரியமனமுடைய சித்தர்கணம் = சிதாகார நிஷ்டைவாய்ந்த சித்த முற்ற ஞானசித்தரின் கூட்டம், பாடுவபண் செவியிற்கேட்டான்= கீதஞ்செய்த கீதையைச் சிரவணஞ்செய்தான்.

(ஸ்ரீ - வீர.) யாசகஜன சங்கங்கட்குக் கற்பவிருக்ஷமாகவும், மித்திரத் தாமரைகட்குத் திவாகரனுகியும், பந்துவடிவ புஷ்பங்கட்கு வசந்தமாகவும், மடந்தையர்கட்குமகரகேதனனு கவும், மறையவராம் பூலைமலர்த்து மதியாகியும், துவேஷியரிருளைத் தொலைக்கும் பாஸ்கரனு கவும், சௌஜன்யாத்ய ஜலதியாகவும், பூமியைப் பரிபாலிக்கும் பொருட்டு ஸ்ரீ மகாவிஷ்ணுவே யெழுந்தருளியது போலவும் வீற்றிருந்த தரசபுரிந்தான். பிரபுல்லபாலஸ்தைகள்விளை யாடிக் கொண்டிருப்ப, மஞ்சரீபுஞ்ச பிஞ்சரங்கொண்டு, மத்தரைப்போல வீஹரும்ப மாண வதனனே கோகில ஆலாபங்களானே கூத்தாடுவது போற்பொலியும் வசந்தகாலத்தில் ஒரு போது, எங்கும் புஷ்பித்தோங்கி நறுமணந்தாங்கி, சுவிலாசலதைகளேயாய அங்கனைகளா னும், லதைகளேபோன்ற அங்கனைகளானும், அலங்கரிக்கப் பெற்று, மகத் காந்தியுடனிலங் கும் உத்தியானவனத்திற்கு, வாசவன் நந்தனவனத்திற்குச் சென்றதேபோலும் லீலையாகச் சென்றனன். கேசரங்களில் ரஜஸ்சுகளந்திய மகரந்தகண அபகரண சமர்த்தமாய்த் தூளிக ளைக் கிளப்பலின்றிய மந்தசுரபி சீதவாதம்வீச, மநோகரமான, அவ்வாவனத்தில், சேவகர் கள் சேய்மையிலிருப்ப, கிரீடாசைலப் பிரதேசங்களில் விளைந்து வளர்ந்திருக்கும் கொடி வீடுகளில் உலாவிக்கொண் டிருந்தனன். இருக்குங்கால் ஒருதமாலவன சுல்மத்தில், நித்தி யம் சைலகந்தர சாரிகளாய் விலிக்தவாசிகளாய், கட்புலனுக்கு அப்பிரதிருசியர்களாய் மறைந்து நின்ற சித்தர்களின், தமதநுக்ரகப் பொருட்டு உதாகரித்தனவாய், சுருதிஸ் மிருதிபுராண இதிகாசங்களானே கீதஞ்செய்யப்பெற்ற ஆத்மாவைச் சிரவண மாத்திரத் தானே பாவித்தலாற் சுயமாகவே சாக்ஷாத்தா மாறுசெய்வனவாய்; இலங்கிய இயம்பப் பெறும் ஸ்மார்த்த உபநிஷத்துக்களே, ஹே கமலபத்ராக்ஷ ! அவ்வரசன் கேட்டான்.

(ச.) அர்த்தத்தை யிச்சிப்பவர்க்குக் கற்பகவிருக்ஷம்போற் கொடுப்பவனும், மித்திர ரென்னுங் கமலங்களுக்குத் திவாகரனும், சுஜனபாவுரத்தின சலதியும் ஆனவனென்னும் விசேடணங்களே சற்குணத்தாற் கடலனையான், என்பதில் அடக்கிக்கூறினர். சக்கரத்தா னென = விஷ்ணுபோல, உலகம் = பூமியை, தாங்குநீரான், அவன் வாசவன்போல் நயந் துமேவி, சிற்குரிய மனமுடைய சித்தர்கணம்=விரக்தமனதுள்ள சித்தர்கள், பாடுபண் = தமது பிரசங்கத்தாற் சொல்லப்பட்ட கீதைகளே, செவியிற் கேட்டான், மத்தகோகில உல் லாச சாலினியாய வஸந்தத்தில் = வசந்தத்தில், வாசவன் = இந்திரன். (9)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சித்தர் கீதையை மன்னவன் கேட்டபடி கூறிக் கீதையை யுப தேசிக்கத் தொடங்கல்:—வெறியென்பது.

வெறியாரும் பொருப்புறை வோர்விழிப் புலத்தின் மேவாதோர் விளம்புகீத நெறியார்மன்னவன் கேட்டபடிபுரைப்ப நெடியவனே நினைவிற்கொள்வா யறிவானுமறிபொருளுங் கூடியகூட்டரவி லெழுமறிவா னந்தம் பிறியாதவான் மதத்துவத் தெழுந்ததா மதனைப்பேணல் செய்வாம்.

(ப - ரை.) வெறியாரும் பொருப்புறைவோர் = மணங்கமழ் சோலைகள் சூழ்ந்தசைல சஞ்சாரிகள், விழிப்புலத்தின் மேவாதோர் = கட்புலனுக் கெட்டாமற் கரந்துறையும் சித்தர் கள், விளம்புகீதம் = தாமே தம் பொருட்டுரைத்த கீதங்களே, நெறியார் மன்னவன் = அகஸ்மாத்தா யங்குற்ற நிட்காமகரும அதுட்டானம் முற்றுப்பெற்ற உத்தமோத்தம அதி காரியாய அரசன், கேட்டபடி = சிரவணித்த பிரகாரம், உரைப்ப = யாங்கூற, நெடிய வனே = நீண்டபுகழுடைய நெடுமாலே ! நினைவிற்கொள்வாய் = கருத்திற் கொண்டிருத் துவாய். அறிவானும் = திருஷ்டாவும், அறிபொருளும் = திருசியமும், கூடியகூட்ட ரவில் = நற்சேர்க்கையில், எழும் = கிளம்பும், அறிவானந்தம் = பிரத்தியய ஆநந்த நிச்சயம், பிறியாத ஆன்மதத்துவத் தெழுந்ததாம் = அபேதமாய தனது ஆன்மதத்துவத்தினின்றும் உண்டாயதாம், அதனை = அசையாத அப்பொருளை, பேணல் செய்வாம் = விகற்பமின்றி நன்குபாசிப்பாம்,

(ஸ்ரீ - வீர.) விழிமுதலிய வற்றின் வாயிலாக விடயப்பிரமாதாவிற்கு மாலை சந்தன வனிதாதி விடயத்தோடுண்டாம் நற்சம்பந்தத்தா லுளதாய விடயாகாரப் புத்திவிருத்தியின் கண் தானே வெளியாம் எவ்வானந்தரூப நிச்சயமுளதோ, அவ்வியற்கையாயே ஆத்மதத்வ பரிசோதனத்தால், நிரதிசயபூமா சொரூபமாக ஆவிர்ப்பூதமான தன்ஞன்மாவை, நிர்விகற்ப சமாதியினானே பாகிய அந்தக்காரண அசைவையகற்றி நிரந்தரம் அநுபவிப்பேம். கருத்திது வாம்:—விடயாகார விருத்தியிற் சுயம் வெளியாம் ஆநந்தம் விடயகோடியில் இலது, ஜடத் தன்மைவழக்காதலின், கர்த்துரகரண விருத்திகோடியிலும் இலதாம், அவற்றிற்குக்காரகத் தன்மையானே அதனசேஷதை யநுபவவிரோத மாதலின், முடிபாகச் சாக்ஷிகோடியிலே யுளதாம்: சாக்ஷியேதான் அவித்யா வரணத்தான் மந்தமாக்கப்பெற்ற சிதாநந்த வியற்கைய தாய், அயலாய அகங்காரான்மாவைக்கற்பித்து அதனசேஷதையையடைந்ததுபோலவாகி விடயாகார விருத்தியாவிர்ப்பூதமாய தன்ஞனந்தத்தை அதனசேஷதையைப்போலவாக்கி நிரதிசயாநந்த மாகிய தன்ஞன்மாவை யறிவதின்றுமாகலின், தமது தத்துவ விசாரத்தா லுண்டாய நிரதிசயாநந்த இயற்கைத்தாய அதனையே ஒருமையோடு கூடியமனத்தானே யா முபாசிப்பாம் " இவ்வானந்தத்தின் இலேசமா மிதனையே அவ்வயலுயிர்க ளநுபவித்துழ லும்," என்னுஞ் சுருதியானே பிரஹ்மாநந்தத்திற்கே அவித்தையால் விடயாகாரவிருத்தி பரிச்சேதத்தால் விடயாநந்தத்தன்மை விபாவனஞ் செய்யப்பட் டிருத்தலின். அல்லது, காண்போனுக்கும் காணப்பெற்ற வியதாதிகட்கும் பாகிய அத்யாத்மிகவைஷம்மியப்பிரவி லாபனத்தானே, பரிசுத்தசின்மாத்திர சுவாபாவத்தில் ஆத்யந்திக அபேத ஆத்மதிவிடவ மாய யோகத்தானுதல், மேலனூட யோகத்தானுதல் அதாவது நிர்விகற்ப சமாதிபரிபா கத்தானுதல், தனதனுபவத்தானே விசுவசிக்கத்தக்க பூமாநந்த நிச்சயம்யாதோ, அந்த யதார்த்தரூபமாக எழுந்து பிரகடபூதமாய தனது அசைவற்றதன்மையை நன்குபாசிப்பாம். அல்லது, புத்தியினதும் விடயங்களினதும் உபசய அபசய ஜாட்யபிரிய அப்பிரியாதிரூப சாமியத்தால் சம யோக சம்பந்தத்தானே அவ்விரண்டன் அந்தராளிக அவ்விரண்டன் வில கூணத்தன்மையால் பிரத்தியயமே ஆநந்த மென நிச்சிக்கப் பெறுகின்றது பெற்ற வாநந்த நிச்சயமி யாதொன்றுளதோ, சக்கிரியவிருத்தி யுபாதி நிர்முத்த மென்பத ஞனே தன்னது யதார்த்தரூபமாக ஆவிர்ப்பவித்த வச்சிதானந் தைகரசப் பிரத்தி

யக்காத்மாவை யினிது பாசிப்பாம். அல்லது, எவ்வான்மா, யான் என்னுந் திருஷ்டா இது எனதென்னுந் திருசியங்களோடும் அன்னியோன்னிய தாதாத்மிய சம்சர்க்க அத்தியாச வடிவச்சமா யோகத்தானே, சுனகசுகதர்திகளானும் அநுபவிக்கப்பெறுகின்ற விடயாநந்தத்தையே புருடார்த்த மென்பதாகத் துணிந்து, சம்சாரமூறுகின்றதோ, தனது வேதாந்தஜன்னிய அகண்டாகார விருத்தியினானே தனது பாரமார்த்திகரூபத்தை ஆவிர்ப்பூதஞ்செய்து, அதனையே நிச்சலமாக நனியுபாசிப்பாம், அல்லது, எச்சொப்பிரகாச ஆனந்தைகரச சொரூப நிச்சயமானது, திருஷ்டாதிருசியாகார மாயாசகிதமாகிச் சொரூப நழுவுதலை யடைந்துளதோ, அவ்வானந்த நிச்சயத்தை சரமசாக்ஷாத்கார விருத்தியாரூட சுவாத்மபூகமேயாய பிரமையினாலே, திருஷ்டா திருசியமாயா நிராசத்தால், தனதுபார மார்த்திகரூபத்தால் ஆவிர்ப்பவிக்கச்செய்து நிச்சலமாக நிரந்தரமூபாசிப்பேம், அல்லது, எவ்வான்மா "அவ்விதுபிரியம் தனயனிற்பிரியம் தனத்தினிற் பிரியம் அன்னியமெவற்றினு மாமிது பிரியம்" என்பதாதி சுருதியநுபவ சித்தபரமப் பிரேமாஸ்பதத்தன்மைப் பிரத்தியயத்தானே ஆநந்தரூபமாகத் துணியத்தக்கதே யெனினும், விவேகவிசாராதிப் பிரத்தியய மில்லாமையின், போக்தாபோக்கியப் பிராயமான சம்சாரதசையை யடைந்துவிட்டதோ, விவேகவைராக்கிய சிரவண மனனாதிப் பிரயத்நங்களானே சாஸ்தாத்,கரிக்கப்பெற்றதாயும், சர்வதிருஷ்டா திருசியதுவைதக் கூட்டத்தையும் தானே பரிச்கின்னப் படுத்துவதும் இம்சிப்பதும் எவ்வான்ம தத்துவமாமோ அதன்பாவத்தானே வெளிப்பெற்றதாயும், மீண்டு ஒருபோதும் சம்சாரப்பிராப்திச் சங்கையற்றதாயும், உள்ள அதனைச் சர்வசாமீப்பிய பரியந்தம் பிரத்தியக் காத்மாவாக அடைவுற்றுச் சுகித்திருப்பேம். யஸ்தம் = யசுப்பிரயத்நத்தில் க்த: உரைத்த உரைகளை மூலசுலோக மதுசரித்துத் தெரிந்துகொள்வதுடன் இனி வருமுரைகளையும் இவ்வாறே தெரிந்துகொள்க.

(ச.) விழிப்புலத்தின் மேவாதோர் = அதிருசியருமாகிய சித்தர், விளம்பும் = சுவாநு சந்தானப் பிரகாரமாய் வசனிக்கப்பட்ட, கீதம் = சொரூபநிரூபணஞ் செய்யப்பட்ட உபநிடதார்த்த சங்கிரகசுலோகங்களை, அவர்களிற் பிரதமசித்தர் வசனித்தல்:—அறிவானு மறி பொருளுங் கூடிய கூட்டரவில் = திருஷ்டாவாகிய புருடனுக்குத் திருஷ்டிப் பிரியமான வஸ்துவோடு சையோகமாகிய வேதுவினால், அறிவு எழும் = புத்தியிற் பிரகாசியாகின்ற, ஆநந்தம் = ஆநந்தமானது, ஆத்மதத்துவத் தெழுந்ததாம், = சீவனுக்குப் பிரஹ்மபாவத்தாலுதித்ததாம், அதனை = அத்தன்மையுள்ள ஆநந்தான்மகமான சுவான்மாவான தேவையே, பேணல் செய்வாம் = நிச்சலமாகப் பாவனைசெய்வாம், வாஞ்சிதார்த்தங் கிடைக்கில் சபலமாதலாற் சித்தம் உபாதியுறில் ஆன்மாவிலுதிக்கும் ஆநந்தம் பிரஹ்மாநந்தமே யென்பது கருத்து. (10)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவ்வான்மாவையே நன்குதுணிந்து கரதலாமலகம்போலக் காண்பிப்பாரென அன்னியர் கூறல்:—காணென்பது.

காண்பானுங் காண்பனவுங் காட்சியும் வாதனையுடனே கழலவிட்டுச்
சேண்பாவு காட்சிக்கு முதலொளியாமச் சொரூபஞ்சிந்தை செய்வா
மேண்பாலா மூள்ளதில தெனுமிரண்டி னிடையெய்தி யிறவிலாதாய்
மாண்பான வொளிக்கெல்லா மொளியாமச் சொரூபத்தை மதித்தல்செய்வாம்.

(ப - வை.) காண்பானும் காண்பனவும் காட்சியும் = திருஷ்டாவையும் தரிசனத்தையும் திருசியத்தையும், வாதனையுடனே = வாசனையோடு கூடவே, கழலவிட்டு = தியா

கித்து, சேண்பாவு காட்சிக்கு முதலொளியாம் = ஆகாயத்தையளாவும் தரிசனத்துக்குப் பிரதமாபாசமான, அச்சொரூபம் = அவ்வான்மாவை, சிந்தைசெய்வாம் = செவ்விதினுபாசிப்பாம்; எண்பாலாம் = நிலையுடையதாகிய, உள்ளதிலதெனு மிரண்டின் = அஸ்திநாஸ்தியென்னும் இருபக்ஷங்களின், இடையெய்தி = மத்யகதமாய், இறவிலாதாய் = நித்தியமாய், மாண்பான = மாக்ஷிமைவாய்ந்த, ஒளிக்கெல்லாம் ஒளியாம் = பிரகாசியங்கட்கும் பிரகாசனமாய, அச்சொரூபத்தை = அவ்வான்மவடிவத்தை, மதித்தல் செய்வாம் = புத்தியின்கட் டியானம் புரிவாம்.

(ஸ்ரீ - வீர.) அன்னியர் கூறல்:—திருஷ்டா தரிசன திருசியங்களே வாசனையோடுகூட விட்டு, தரிசனப் பிரதமாபாசமாகிய ஆன்மாவை யினிதுபாசிப்பாம். திருஷ்டா முதலிய திரிபுடித்தியாகத்தானே அவஸ்தையிரண்டன் நீக்கமாம், வாசனையோடுகூட என்பதனலே அவ்விரண்டன் பீஜவாசனையைத் தாங்கிய சுழுத்திசம்பந்த அஞ்ஞானத்தினதூஉம் நீக்கமாம் என்றதாயிற்று. சாக்ஷாத்காரமானசாதி தரிசனவிருத்திகளின் முன்னரே அவற்றினுற் பத்திரசாக்ஷியாக விளங்குவது என்றதனுனே பூர்வசித்ததிரிபுடி சாக்ஷி, சர்வாநுபவ சித்தமாகப்பகுத்துக் காட்டப்பட்டதாம்; பீஜசகிததிரி புடித்தியாகத்தானே அத்துரிய ஆன்மாவையே யினிதுபாசிப்பாம். தரிசனப் பிரதமபாச சாக்ஷியில் யாவர் உளது இலது என்று ஐயுறுவரோ அவர் பொருட்டும் அவ்வுபயபக்ஷ அவிருத்தமாய சாக்ஷியைக் காட்டுவராய் மற்றையர் கூறல்:—உள்ளதென்பது. நித்தியமாய் உண்டு இல்லையென்னும் பக்ஷங்கள் இரண்டன் இடையிலிருப்பதாய்ப் பிரகாசியங்கட்கும் பிரகாசனமாயிலங்கும் ஆன்மாவை யினிதுபாசிப்பாம். யாவர் ஆண்டு உளது தரிசனப் பிரதமாபாசம், ஆனல் அதுவும், ஜன்னியமே நித்தியமன்றும் என்பரோ, அவர்கட்கு பூர்வபூர்வ அதனுபாசங்கட்குச் சொப்பிரகாசத்தன்மையிலேனும் சுவவிஷயத் தன்மையிலேனும் சுவமாத்திரபான பரிக்ஷீணத் தன்மையினுனும், பூர்வோத்தர விஞ்ஞான அஸ்பரிசத் தன்மையானும், அதனுற்பத்தியாதி சாக்ஷித் தன்மை நிர்வகிக்க முடியாதென அதன்சாக்ஷி யன்னியமொன்று ஆவசியகமெனத் தற்பக்ஷ மத்யகதமாய் அதனவிருத்தமாம், யாவர்தாம் நாஸ்தியென நாட்டுவரோ, அவர்கட்கு, நாஸ்தித்தன்மைக்கும் சாக்ஷியிலதென்பதாயின் அசித்திவருதலின், தற்பக்ஷசாதகத் தன்மையானே அதன் மத்தியகதமாய் வேண்டற் பாலதேயாம். அல்லது, ஜகத்தின் அஸ்தித் தன்மை ஆவிர்ப்பூத அவஸ்தாகாரியம், நாஸ்தித்தன்மையோ திரோபாவ அவஸ்தாகாரணம், " இஃதுண்டாமுன் அசத்துத்தானிருந்தது அதனினின்றுமே சத்துண்டாயது " என்னுஞ் சுருதியினுல், அவ்விரண்டிற்கும் ஒருபோதுளதாந் தன்மையின்மையின், பக்ஷங்களில்உபாக்ஷிகங்களில் அநுகதசங்மாத்திர ரூபத்தான் மத்தியகதம், அல்லது, அஸ்திநாஸ்தி யென்னும் பக்ஷங்களாகிய கற்பிதவிருத்த கோடிகளிரண்டினுக்கும் அதிஷ்டானமாக மத்தியகதம், இதனுனே கற்பித நாஸ்தித்வத்திற்கு அதிஷ்டானத்தைத் தீண்டாமை யுண்மையின் நித்தியம் பிரகாசியங்களாகிய பாவாபாவங்களின் பிரகாசகமாம்.

(ச.) இரண்டாஞ்சித்தர் வாக்கியம்:—காண்பானும் = திருஷ்டாவென்னும் அகங்கார உபகிதான்மாவும், காட்சியும் = தரிசனமென்னும் சக்ஷுமுதலிய வியாபார உபகிதமான விருத்திஞானமும், காண்பனவும் = திருசியமென்னும் அதின் விஷயமுமாகியமூன்றையும், வாசனையுடனே = அவைகளின் வாசனையுடனே, கழலவிட்டு, காக்ஷிக்கு = தரிசனமென்னும் விருத்தி ஞானத்துக்கு, முதலொளியாம் = முன்பொளிருவதான, சேண்பாவுஞ்சொரூபத்தை = யாவைக்கு முன்பு விளங்குவதுந்; சுபாசத்தாலே எவ்விடத்தும் ஒளிசெய்வதும் ஆகிய ஆன்மாவை; சிந்தைசெய்வாம். மூன்றுஞ் சித்திர்வாக்கியம்: — உள்ளதிலதெனும் இரண்டின் = பக்ஷத்துவயங்களுக்கும், இடையெய்தி = மத்தியகதமாய் = சத்துரூபத்

தாலுள்ளதும், நிராகாரமாதவின் இல்லது மென்கின்ற பகுத்துவய சாதாரணமாய். ஒளிக் கெல்லாம் = சூரியசந்திர மின்னலாதிகளின் ஜடப்ரகாசங்களுக்கெல்லாம், ஒளியாம் = ஒளிசெய்யும் பிரதீதி ஏதுவான, அச்சொரூபத்தை = அந்த ஆன்மாவை, மதித்தல் செய்வாம். ((11)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வேறுசில சித்தர் விளம்பல்:—அகமென்பது.

அகமகமென் றுணர்த்துயிரி னிடத்து மிருந்தனவரத மூரைப்பதாகி
நிகழொளியா யான்மதத்து வமானசொரூபத்தை நினைத்தல் செய்வாந்
திகழிதயகுகை யுறையுந் தேவதையை விட்டயலே தெய்வந்தேடல்
மிகவரிய கவுத்துவத்தை யெறிந்துசிறு மணிதேடும் வேட்கைபோலாம்.

(ப - ரை.) அகமகமென்று=அகம் அகம் என்பதாக, அனைத்துயிரினிடத்து மிருந்து= சகலஜீவர்களி னிடத்தும் இருந்து, அனவரதம் உரைப்பதாகி=எப்போதும் இயம்புவதாகி, நிகழ் ஒளியாய் = விளங்காநின்ற பிரகாசமயமாம், ஆன்மதத்துவமான சொரூபத்தை = ஆன்மதத்துவமான வடிவத்தை, நினைத்தல் செய்வாம் = நன்முகத்தியானஞ் செய்வாம்; திகழிதய குகையுறையும் = தன்மயமாக விளங்கும் இருதயகுகைத் தேயத்திராகின்ற, தேவதையைவிட்டு = ஆன்மதெய்வத்தை விடுத்து, அயலேதெய்வம் தேடல் = வேறொரு தெய்வத்தை யாராய்தல், மிக அரியகவுத்துவத்தை யெறிந்து = அத்தியந்தம் கிடைத்தற்கு அரிதாய கௌஸ்துப மணியைக் கரத்தினின்றும் எறிந்துவிட்டு, சிறுமணிதேடும் = அற்ப ரத்தினம் கோடும், வேட்கைபோலாம் = ஆசைக்கொப்பாம்.

(ஸ்ரீ - வீர.) அன்னியசித்தர் கூறல்:—ஏழாம் வேற்றுமை தொடங்கி மாறுமுறையாய் எல்லாவிபக்திகளும், ஆறுகாரகங்களையும் சம்பந்தப் பிரதிபதிகார்த்த அபேதத்தையும் காட்டற்பொருட்டு ஈண்டுக்குறிப்பிக்கப் பெறுகின்றன; "எதனில் யாவும் எதனதுயாவும் எத னின்யாவும் எதுதனக்கிது, எதனுல் யாவும் எதுதானியாவும் அதுசுத்தியநன் காற்றுது முபாசனை," எப்பிரஹ்மம், சர்வாதாரத் தன்மையானும் சர்வசுவாமித் வாதியினுனும் சர் வோபாதான நிமித்தாவதி பாவத்தானும் சர்வப்பிரார்த்திய சம்பிரதானுதி பாவநிர்வாககத் தன்மையானும் சர்வகர்த்துரு கரணதிபாவித்தானும், மாயையாற் சர்வஜகத் விவகாரநிர்வீக கமும், சர்வாத்மகமும் ஆமோ, அது சர்வாதிஷ்டானம் பரமார்த்தசத்தியம் பிரத்தியக்காத் மாவே யென்னும் போதத்தானே நன்கடைவற்று அவ்வடிவமாக அமர்வுற்று வாழ்வேம். அன்னிய சித்தர்கூறல்:—அசிரம்போலப் பிரதமம் எதற்கோ அது அகார ஆதியது, ஹகாரம் அந்தத்தில் எதற்கோ அதுஹகார அந்தத்தது; அகம்பதம்: அசேஷவஸ்துப் பிரகாசகவேத சாஸ்திராதி சப்தஜாலப் பிரகிருதி பூதங்களாய அசேஷவர்ணங்கட்கும், அக்ஷரசமாம் நாய மாகேசுவர சூத்திரத்தில், அகாரஹகார அந்தால நிவேசத்தால், அசேஷஜகத்தாகாரசப் பிரபஞ்சப் பிரஹ்மத்திலும், கெடுக்கப்படாதது விடுக்கப்படாதது என்னும் விற்பத்தியினு னும், அஹவியாப்தியில் என்னும் பகுதி நிட்பத்தியினுனும், சேடிப்பதில்லே யாகாரம் எதன் கண் என்னும் அசேஷாகார நிர்க்குணத்திலும், நன்கு நிலைபெற்றதாம் = தாற்பரிய நிட் டையை யடைந்துளதாம்; நிரந்தரம் நிகழ்த்தப்பெற்ற தன் விவகாரகங்களில் உச்சரிக்கப் பெறுவதாம்; அகங்கார உபாதி நிராசமாக வர்ணிக்கப்பெற்ற அவ்வகம் பதார்த்தத்தை = "சென்றேயிவையெலாஞ் செறியாமுன்ன, மொன்றே யாத்துமா வுள்ளதேயாகும்" என்ப தாதி சுருதிப்பிரசித்த பிரஹ்மாத்மாவை, நிரந்தரம் பாவிப்பேம், அல்லது, அசேஷவஸ்து ஆகாரசம்ஸ்திதமாய லம்வம்ரம்யம்ஹம் எனஹகாராந்தம் பஞ்சபீஜப் பிரதிபாத்ய பஞ்ச

மகாபூத மூலாஞ்ஞானரகிதம் செய்வான்போலுளதாம் மாயாந்தம் ஜகத்து, என்னும் விற் பத்தியானே, அஸ்மத்சப்த நிட்பந்நமாய அகார சிரஸ்கஹகாராக்ஷீதம் அகம்பதம் நிரந்தரம் உச்சரித்துக் கொண்டிருக்கும் ஆன்மாவைத் தொழுவாம் யுஷ்மசிப்யாம் மதிக்கென்னும் உணர்தியானே அஸ் என்பதற்கு அஸ்மத்சப்த விற்பாதனத்தா னெனவறிக. அல்லது, அசே ஷஜகத்தாகார சம்ஸ்திதம் பிரமாணமற்றதாந் தன்மையானே மூலமின்மையினுனும் சுருதி ஸேதுபூதத்ரயத் தன்மையானும் அசிரஸ்கம், ஹகாராந்தம் சோகம் பரமார்த்த அசங்கசிதேகர சத்தன்மையால் நிரந்தரம் எங்கும் நிகழ்ந்து யாவற்றையும் சின்மயமாக்கும் தனது பிரத்தி யக்குருவமாய ஆன்மாவை யுபாசிப்பாம். சங்கிரகத்திலோ சசிரஸ்கம் ஹகாராதிம் என்று பாடமாம், அதற்கோ; சுரகரதிரியக்காதி அசேஷசரீர ஆகாரங்களில் சம்ஸ்திதமாய சசிரஸ் கம்ஹகாராதிம் ஹம்ச என்னும் மந்திரம் அஜபாகாயத்திரி ரூபத்தானே 21600 எண்ணிக் கையாக நிரந்தரந்தினந்தினம் சுவாச உசுவாசச் சலத்தால் உச்சரிக்கும் ஆன்மாவையென்று பொருள்கொள்க. "உதச்சர: சகர்மகாத்" என ஆத்மநே பத விஷயத்தில் லட்டிற்குச் சத்ராதேசம் சாந்தசமாம். அல்லது, பூர்வரூபமாக அபகாரத்தால் சேடிப்பதில்லை அகாரம் யாண்டோ அது அசேஷாகாரம் சோ என்னும்பதம், ஆண்டு சம்ஸ்திதம், அதனுனே அசி ரஸ்கம் சிரோபூத பிரதமவர்ணரகிதம் ஹகாராந்தம் ஹகாரமாத்ராவசேஷம் அகம்பதம் சோகம் மந்திரமென்பதாம். அஜஸ்ரம் உச்சாரந்தம் என்பதாதி முன்போன்றே, அன்னியர் கூறல்:—இதயத்தில் கையில் வாழும் ஈசனைப் போகவிட்டே, விதத்தொரு அயிலெய்வம் வேண்டு மென்றேவர் சேர்வார், முதமுறு கௌத்துபத்தை மூளாரியங்கை நெகிழ்த்தே, சிதவிதமணி ஸ்தன்னேத்தேருவார் போல்வரேதாம். இதயகுகையீசானம் என்றுரைத்தது சுருதிகளிலும் பிரசித்தமேயாம்:—சுவேதாசுவதரம், அங்குட்டமாத்திரம் புருடன் அந்தராத்மா சந்ததம், இங்குஜனங்களினுள்ளே யிதயத்தே சந்நிவிட்டமாம் = வெளிப்படற்கிடனுய இருதயகுகை யளவுகுறித்து அங்குஷ்ட மாத்திரமாம், பூர்ணச் தன்மையானும் புரியிற்சயனித்தலினுனும் புருடன், எல்லாருடைய உள்ளிலும் ஆத்மபூதமா யிருத்தலின் அந்தராத்மா, எப்போதும் ஜனங்களின் இருதயத்தில், சந்நிவிஷ்ட: = இருதயத்திருக்கும் மனத்தால் மிகமறைக்கப் பெற்றிருக்கும்; இதனேயுணர்ந்தவர் அமிர்தமாயிருப்பர். விசேடம்:—இருகால்கள் யாவற் றிற்குமே தம்மங்குஷ்ட பரிமாண மிருதயமாம், புத்திக் கணுத்தன்மையுளதேனும் இருதய வியாபிப்பிரகாசத் தன்மையானே அதுவும் இருதயத்திருப்பதாய் இருதய பரிமாணமுடை யதாம்; ஆகலின் புத்தியுள்ளிருக்கும் புமானும் அங்குஷ்ட பரிமாணமுடையவனுவன், எல் லாருடைய புத்தியினுள்ளிலுமிருப்பன், ஜனித்தவர்தம் இருதயசரசிஜத்தில் நிரந்தரம் புகுந்தவனுவன்; அங்குஷ்டமாத்திரம் = இலிங்கசரீர அபிமானி. பரமேசுரனுக்கே சருவ அந்தக்கரண உபாதிகளிலும் அநுப்பிரவேச நிபந்தனத்தால், ஜீவத்தன்மையும், கல்லுரானத் தானே ஜீவபாவவிலக்கிலுல் நிஜரூபமாக ஆவிர்ப்பவித்தலும் ஆம் என்பதன் பொருட்டு அங்குஷ்டமாத்திரமெனப் பெற்றது. தத்தமது அங்குஷ்டமாத்திர அளவினுலே இருதயத் தில் அளக்கப்பெறுதலின் அங்குஷ்டமாத்திரம் புருடன், சர்ப்பாதிகளில் இரஜ்ஜுவாதி போலும் சர்வோபாதிகளிலும் ஆந்தரத் தன்மையானே யிருந்துகொண்டு சர்வ உபாதிகளின் சொரூபத் தன்மையானே, அந்தராத்மாவாம், சதாஜநாநாம் என்பதற்குக்காக்கைக்கண் மானும் சம்பந்தமாம், ஜநநாதி தர்மவான்களாய உபாதிகளின் அந்தராத்மா எப்போதும், எப்போதும் ஜனங்களின் இருதயத்தே புகுந்திருப்பதெனவும் பொருள்பெற்று நிலவும், அங்குஷ்ட மாத்திரத்தன்மை தாலுகவேயில்லையாம், மற்றே, அங்குஷ்டபரிமாண இருதயா வச்சின்னத்தன்மையான் ஆன்மாவிற்கு அங்குஷ்டமாத்திரத் தன்மையாம் எனற்பொருட்டு இருதயத்தில் இனிதுபுகுந்த தெனப்பெற்றது. சம்யங் நிவிஷ்ட: சந்நிவிஷ்ட:, இருதய

மெனப் பெயரிய சூக்குமசரீரத்திற்குச் சொரூபாநந்தஸ் புரணந்தருந் தன்மையானே புகுந்த தாம். காடகம்ஸ்ரீஅங்குஷ்ட பரிமாணம் இருதயபுண்டரீகம் அதன் சித்தவர்த்தியாய அந்தக் கரண உபாதியங்குஷ்ட மாத்திரம் அங்குஷ்டமாத்திர வம்சபூவமதய வர்த்தியம்பரம் போலும், ஆன்மாவிற்கு அங்குஷ்ட மாத்திரத்தன்மை யுபாதியால் ஏற்பட்டதாம், அங்குஷ்ட அளவதாய வேணுவிலிருக்கும் விண்ணிற் குபாதியின்வயத்தால் அங்குஷ்ட வளவதாந் தன்மையாதலேபோலும் பூருடன் = பூர்ணமிவஸ்ஸ் யாவும் என்பதால், சோதியைப்போலும் அதாமகமாம், வெறுஞ்சோதியா யிருத்தலின், எப்பிரத்தியக்காத்மாபூத பவ்வியமாம் காலத் திரயத்தின் ஈசானனுக யோகிகளால் இருதயத்தில் குறிப்பிக்கப் பெறலாமோ, அதுவே நித்தியம் கூடஸ்தம், இப்போது பிராணன்களிலுளதாம், காளையுமிருக்கும், அதற்குச் சம மாயய லொன்றுமில்லை, பிறபிறவெல்லாம் பிறந்திறந்தழலும்.

(ச.) நான்காம் சித்தர் வாக்கியம்:—அனைத்துயிரினிடத்து மிருந்து = சுகாரதிரியக் காதி சரீரங்களனைத்தினும் அந்தரியாமியாக விருந்து, அகமகமென்று = சசப்தாந்தமான ஹகாராதியாகிய ஹமிசமந்திரத்தை அனவரத முரைப்பதாகி நிகழ் = ஆன்மாவை நினைத் தல் செய்வாம். (12)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அன்னியர் வேறுசித்தர் அதனடைவின்கண் வைராக்கியமே முக்கியமான சாதனம் என்றுகூறல்:—மாளாத என்பது.

மாளாத காதலெனும் வற்சநாபிக்கொடியின் வனத்தைச்சுட்டு
நீளாசையனைத்து மறுத்தவர்க்கன் ரேவிப்பயன்ரு னேராகிற்குங்
கோளான பொருளனைத்தின் முன்பொடுபின் பினிமையிலாக்குற்றங்கண்டு
மீளாதபாவனையாற் கட்டுண்பார் வேசரியே வேறென்றன்ரு.

(ப - ரை.) மாளாத காதலெனும் = கெடாத ஆசையென்னும், வற்சநாபிக்கொடியின் வனத்தைச்சுட்டு = விடக்கொடியின் காட்டைப் பஸ்மமாக்கி, நீளாசையனைத்தும் = நீண்டுகொண்டுபோம் சகல ஆசைகளையும், அறுத்தவர்க்கன்ரே = விட்டுத்தொலைத்தவர்க் கல்லவோ, இப்பயன்ரு ன் = இந்தப் பிரயோஜனமானது, நேராகிற்கும் = கிடைப்பதாகும், கோளான பொருளனைத்தின் = அகித்தியமான சகல வஸ்துக்களிலும், முன்பொடு பின்பு இனிமையிலாக் குற்றங்கண்டும் = முன்னும் பின்னும் முற்றினும் விரசபாவக்குற்றத்தைத் தெரிந்தும், மீளாதபாவனையால் = நீங்காத பாவனைமாத்திரத்தினல், கட்டுண்பார் = பந் தப்படுவார், வேசரியே = கழுதைகளே யல்லாமல், வேறென்றன்று = நரர் அல்லர். ஆல், அசை.

(ஸ்ரீ - வீர.) அன்னியர் கூறல்:—சர்வ ஆசைகளையும் அடியோடுவிட்டு இருதயத்தின் கண்ணிருக்கும் இஞ்ஞானபலமாய பிரஹ்மத்தை யடையவேண்டுவ தவசியம், எவ்வகலா பத்தானே ஆசாவிஷவல்லிகளின் மூலமாலையென்னும் வாசனுஜால ஜடிலஹிருதயக்கிரந்தி யானது நன்ரு கநிக்குமோ. ஸ்ரீ பகவானும் "குறையுமாப் பிணிப்புற்ரு லுங் கொண்ட விப்புலன்களெண்ணி, லறைகடலனைய நெஞ்சத்தவாவ ரூனதிவினில்லான்" என்றருளியுள் ளார், அன்னியர் கூறல்:—அத்தியந்தம் இரசமில்லாமையை யறிந்தும் யாவன் துர்மதி யுடையனுகிப் போக்கிய விடயங்களில் மீளமீளவும்போக ஆசையைப்பற்றுறுவானை, அவன் கர்த்தபமாவன் அலது நரன் ஆகான்.

(ச.) காதலெனும் = இகபரலோக விடயங்களான சகல மநோரதங்க ளென்னும், வர்ச்சனுபிக் கொடியின் = விடவல்லியின், சந்தாபஹேதுவாதலின். காதலேவர்ச்சனுபிக் கொடியாயிற்று, வனத்தைச் சுட்டு, நீளாசையனைத்தும் = அக்காதல்களினது மூலமான

அஞ்ஞான பரம்பரைகளே, அறுத்தவாக்கன்மே = சேதித்த முமுக்ஷுக்களுக்கே, இப்ப யன்மூன் = இவ்வான்மோபாசனை ரூபமானபலம், நேராநிற்கும். பொருளனேத்தின் = சகல பதார்த்தங்களிலும், முன்பொடுபின்பு = பிராகபாவப் பிரத்துவம் சாபாவங்களில், இனி மையிலாக்குற்றம் = சாரமின்மையை, கண்டும் = அறிந்தும், மீட்டும், மீளாதபாவனையால், கட்டுண்பார் = பந்தப்படும், அற்பபுத்தியுள்ள நரர், வேசரியே வெவருன்றன்றல். (13)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அன்னியர் இந்திரிய நிக்கிரகத்தையே முக்கியம் சாதனம் என்னுங்கருத்தாற் கூறல்:—எழுந்தென்பது,

எழுந்தெழுந்து சீறுகின்ற விந்திரியப் பாம்புகளே யிதயந்தன்னி
லழுந்துவிவேகத் தடியால் வச்சிரங்கொண் டிந்திரன்வெற்படர்வதென்ன
விழுந்திடமோ துற வேண்டுஞ் சாந்தியினுற் சமமேவியிடர் தீர்நெஞ்ச
முழுந்துசுகவடிவாங் தற்பதநிலையைப் பெறுமிதுவே முத்தியென்ன.

(ப - ரை.) எழுந்தெழுந்து சீறுகின்ற = கிளம்பிக்கிளம்பிச் சீறுகின்ற, இந்திரியப் பாம்புகளே = இப்புலன்களாகிய அகிகளே, இதயந்தன்னில் = இருதயத்தில், அழுந்து விவேகத்தடியால் = அழுத்தமாகிய விவேகமென்னுந் தண்டத்தால், வச்சிரம்கொண்டு இந்திரன்வெற்பு அடர்வதென்ன = வச்சிரமென்னும் ஆயுதங்கொண்டு தேவேந்திரன் கிரி களைப் பொடிப் படுத்துவதேபோல, விழுந்திடமோ துறவேண்டும் = நசித்திடுமாறு புடைத் திடவேண்டும், சாந்தியினுற் சமமேவி = சமவசத்தினுற் சமத்தையடைந்து, இடர்தீர்ந் நெஞ்சம் = துயர்தீர்ந்த மனமானது, முழுந்துசுகவடிவாங் தற்பதநிலையைப்பெறும் = பூரண இன்பவடிவமான உத்தமத்திதியை அடையும், இதுவே முத்தியென்ன = இதுவேமோக்ஷ சுக என்பதாகத்தானே.

(ஸ்ரீ - வீர.) நிமிர்ந்து நிமிர்ந்துசீறும் இவ்விந்திரியப் பாம்புகளேமறித்தும் மறித்தும் வஜ்ஜிரத்தானே ஆகண்டலன் கிரிகளைப் பேதித்தலேபோலும். விவேகமாகிய தண்டத் தானே தொறுக்கவேண்டும். இங்ஙனமே "ஏகம் ஏகம் காலகூடமாம் இந்திரியம் நாசகிருத் தாமீண்டு, அதுவேசோதிதமாகச் சாகூாத், தெங்ஙனம் விஷமே யெனினுமமுதமோ" எனப்பிரஹ்மவைவர்த்தபுராணமும், அவ்வாறே ஸ்ரீமத் பாரதத்திலும் "அச்சுறுபுலன்களே அதுவெலாமாகும், எச்சொர்க்க நரகமென்னு மிரண்டோ, சொச்சமா யொறுக்கின சொர்க் கப்பொருட்டாம், நச்சிநின்றுடின நரகப்பொருட்டாம்" என்றுரைக்கப் பெற்றுளது, அன் னியரோ உபசமமே முக்கியசாதனம் பிறயாவுமே அதன்பொருட்டாம் என்னுமபிப்பிராயங் கொண்டுபசங்கரித்தல்: சாந்தியினுலென்பது, வெளிவுள்ளிந்திய வியாபார ஒய்வாம் உப சமத்தானே, விக்ஷேபதுக்க உபசமம்போலும் ஆவிர்ப்பூதமாய ஆத்மசுகம் சம்பாதிக்கத்தக்க தாம், அதுவோ விடயசுக வின்பம்போலும் தோஷவேதுவாகாதாம், மற்றே. மனத்தெளி வின் ஏதுத்தன்மையானே பவித்திரமாம், சமவயத்தினுலே விறகற்ற அக்கினிபோல நல்ல சித்தம் சமமாமுபக்ஷயத்தை யடையும், இங்ஙனம், மிகவுமோய்ந்த மனமானது நிரதிசய ஆனந்தமான தன்னுடைய பரமார்த்த சொரூபத்தில் பூமிகைப்பரம்பரை யாரோகணக்கிரம மாக உத்தமமான சத்தமபூமிகைப் பிரதிஷ்டைவடிவம் விதேககைவல்ய பரியந்தமாம்.

(ச.) இந்திரியப் பாம்புகளே, மீட்டுமீட்டும், இந்திரன், வச்சிரங்கொண்டு = வச்சிரா யுதத்தால், வெற்பு = கிரிகளே; முமுக்ஷுமுன்பு நிர்த்தோடமான உபசமசுகத்தைச் சம்பா திக்கவேண்டும், சாந்தியினுல், = பின்பு அவ்வுபசம சுகசாமர்த்தியத்தினுல்; நெஞ்சம் = விடயசுகங்களிற் சித்தம், சமமேவி நன்கு உபசமமுறும், பின்பு, மிடைதீர்நெஞ்சம் = உப

சாந்தசித்தம், முழுந்து சுகவடிவாந் தற்பதம் = சொச்சொரூப சுகத்தில், நிலையைப் பெறும் = உத்தமமான ஸ்திதியை நீடுழிபெறும், இதுவே முத்தியென்றார். (14)

(ஸ்ரீ - வீர - அ-கை.) இவ்வண்ணம் சித்தர்கீதையைச் சிரவணஞ்செய்த சனகராசன் ஆங்கிருந் தரண்மனையடைந்து அனேவரையும் அகற்றித் தனியனுயிருந்து ஆராயத்தொடங் கினன் என்று ஸ்ரீவசிஷ்டபகவான் கூறல்:—தெளிவென்பது,

தெளிவுடைய சித்தர்கணந் திகழ்வுறப் பாடியகீதந் தெளியக்கேட்டுக்
களிதருவெஞ்சினக் கருடனெலி கேட்ட பாம்பென்னக் கலங்கிமன்னன்
குளிர்ப்பொழினின்றக மடைந்தானனேவரையும் விடைகொடுத்துக் கோயில்புக்கா
னளிர்சுதைசெய் மேனிலத்தி லொருவனேயிருந்து நனிநாடலுற்றான்.

(ப - வி.) தெளிவுடைய சித்தர்கணம் = சந்தேக விபரீதமில்லாத சித்தர்கூட்டம், திகழ்வுறப் பாடியகீதம் = விளங்கும்படியாக விளம்பிய கீதையை, தெளியக்கேட்டு = சம்சய விபரீதமில்லாமற் சிரவணித்து, களிதருவெஞ்சினக் கருடன் = மதோன்மத்தமாய்க் கடுங் கோபத்தோடுற்ற பக்ஷிராஜனது, ஒலிகேட்ட = கர்ஜனேயைக் கண்ணுற்ற, பாம்பென்ன = கட்செவிகடுப்ப, கலங்கி = விஷாதமுற்று, மன்னன் = மகீபதி, குளிர்பொழில் நின்று = தண்மையாய உத்யானவனத்தி லிருந்து, அகம் அடைந்தான் = அரண்மனேயை யடைவுற்றான், அனேவரையும் = யாவரையும், தத்தமது சேர்க்கைசேரும்படி, விடைகொடுத்து = ஆஞ்ஞைசெய்து விட்டு, கோயில் புக்கான் = உள்ளரண்மனேயுட் புகுந்தான், களிர்சுதை செய் மேனிலத்தில் = குளிர்ச்சி பொருந்திய முத்துச்சுண்ணத்தாற் றீற்றிய மேல்வீட்டில், ஒருவனேயிருந்து நனிநாடலுற்றான் = ஏகாங்கியாயிருந்து நன்றாக ஆராயலானன்.

(ஸ்ரீ - வீர.) சித்தர்கணங்கள் உத்கீதஞ்செய்த கீதையை மகீபதிசிரவணித்து, போர்ச் சத்தத்தானே பயகீலன் கலங்கலேபோல விரைவில் விஷாதமுற்றனன். மூலத்தில் பீரு என்பதிற்றீர்க்கம், ட்ரலோபே பூர்வஸ்ய தீர்க்கோண: என்பதாலாய தெனவறிக. பின்ற னது பரிவாரத்தை யழைத்துக்கொண்டு தன்னரண்மனேயை நோக்கி, தந்தீரதருக்கள் பின் றொடர்ந்த சரித்தின்வேகம் தாகரத்தைநோக்கிச் செல்வதேபோலும் சென்றனன். சகலபரி வாரங்கட்கும் தத்தமது கிருகத்திற் கேகுமாறு ஆணேயிட்டுவிட்டு, ஒருவனுகவே உதயாசல மேலேறிய சூரியனேப்போலத் தனது மேல்வீட்டின்மே லேறினன், (15)

(ஸ்ரீ-வீர - அ-கை.) உலகைநோக்கி இரங்கித்தன்னேயே நோதல்—பற என்றது.

பறக்கின்ற பறவைகளின் சிறகென்ன வனவரதம் பதைத்துலாவி
பிறக்கின்ற வுலகநடை நோக்கிவாய் விட்டிரங்கி யியம்பலுற்று
னறக்கன்றி யவத்திலுழன் றலமருமிவ் வுலகிடையா னந்தோவந்தோ
நிறக்கின்ற மயக்கத்தாற் கல்லிடைகற் போலுருண்டு நெரிந்தேனந்தோ.

(ப - வி.) பறக்கின்ற பறவைகளின் சிறகென்ன = மேலெழுந்து சுழலும் பக்ஷிகளின் பக்ஷங்கள்போல, அனவரதம் பதைத்து உலாவி = எப்போதுமே துடிப்புற்றுச் சுழன்று, இறக்கின்ற = இறந்துபோகின்ற, உலகநடைநோக்கி = உலகவிவகாரத்தைப் பார்த்து, வாய்விட்டிரங்கி = அந்தோகட்டம் என்று வாய்திறந்துரைத்து இரக்கத்துடன், இயம்ப லுற்றான் = கூறத்தொடங்கினன், அறக்கன்றியவத்தில் உழன்று = அத்தியந்தம் கஷ்டத் துடன் வீணுகவே சுழன்றுதிரிந்து, அலமரும் = துயருற்றமயங்கும், இவ்வுலகிடை =

இவ்வுலக விவகாரத்திடையில், யான் = அகம், அந்தோ அந்தோ = பரிதாபம் பரிதாபம், நிறக்கின்ற மயக்கத்தால் = பூர்ணமான மோகத்தால்; கல்லிடைகற்போல் உருண்டு = பாஷாணங்களிற் பாஷாணங்கள் போலப் புரண்டுருண்டு, நொந்தேன் அந்தோ = நொறுங்கினேன் ஐயோ !

(ஸ்ரீ - வீர.) பூதரமேறிய மிருகேந்திரன் மேலொன்ற, பூபலண்டோர்வதாவது:—பறக்கும்போது அதிசஞ்சலமுறும் ககங்களின் பக்கமூலங்கள் போலும் அதிசஞ்சலமுற்று உத்வேகத்தோடும் கூடிப்பங்குரமாய லோககதியென்னும் தேகாதிதிருசிய பதார்த்தஸ்திதியினை ஊன்றிநோக்கி, ஆகுலமிருத்தவஞ் யியம்பும்வகையில் துயர் விருத்துரைத்தான். ஹாகஷ்டம் ! அதிகஷ்டம் வாய்ந்த ஜீவர்கடம் ஜன்மஜராபய மரணதியானே அவதிப்படு மித்தசைகளில், சிலைகளிற் சிலைகளேபோல மயல்கொண்டு வலிதிற்புரண்டுருண்டு திரிகின்றேன்யான் ஈண்டுப்பாஷாண திருஷ்டாந்தம் தந்தது மெளர்க்ய கடோரதையை விளக்கற்பொருட்டா மெனவறிக.

(சு.) நடை = கதிகளை, இயம்பலுற்றான் சனகன். (16)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இப்போது தனதுகால மற்பமெனத்தானே யியம்பல்:=கால மென்பது,

காலமொரு கர்ன்முடியா திதனிடையென் னாருண்டோர் கணமுமில்லை
சாலவிது தினமதித்து வன்காதலிடை வீழ்ந்து தளர்வதெனுன்
றூலமதியாற் கெட்டவெனைப் போலவீனரார் சொல்லற்பாற்றே
சீலமறு வாணுளைப் பெரிதாக நினைவதே சீசியந்தோ.

(ப - ரை.) காலம் ஒருகால் மூடியாது = காலமானது ஒரு காலத்திலும் அயர்தியடையாதது, இதனிடை = இத்தகைய மகத்தாகிய இதன்கண், என் = எனது வாழ்க்கையாகிய, நாருண்டு = மநுடவருடம் நூறும், ஓர்கணமுமில்லை = ஒருகணம்சம் என்பதாகவும் எண்ணமுடியாது, சால இதனை மதித்து = இவ்வற்பவாயுளைத்தானே மகத்தாகவெண்ணி, வன்காதலிடை வீழ்ந்து தளர்வதெனுன் = பேராசையில் அழுந்தி வருந்துவதேனுன். தூல மதியாற்கெட்ட = அதமஜட சித்தத்தாற் கெட்டுப்போன, எனைப்போல = அடியனைப் போன்ற, ஈனரார் = கீசரியார், சொல்லற்பாற்றே = மொழிந்திட முடியுமோ, சீலமறு வாணுளை = நன்மைபயக்காத அற்ப ஆயுளை, பெரிதாக நினைவதேசீசியந்தோ = அதிமகத்தாக எண்ணுவதே திக்திக் ஐயைய்யோ !

(ஸ்ரீ - வீர.) வரையறை வற்றகாலத்தின் எவ்வங்கிசம் என்னுல் ஜீவிக்கப்பெறுகின்றது, அதன் கண்ணும் எண்ணம் அதிகமாகப் பற்றுறுகின்றது, அற்ப அறிவினையுடைய அதம சித்தம்வாய்ந்த என்னை யென்னென்பதோசீசி, மூலம்:—ஜீவதாதுவிற்கு அகர்மகத் தன்மை யிருப்பினும் காலபாவ அத்வகந்தவ்யங்கள் கர்மசம்ஜ்ஞகள் அகர்மங்கட்கு, அகர்மகதாது பிர்யோஜேதேச: காலோபாவோ கந்தவ்யோகத்வாச கர்மசம்ஜ்ஞக இதிவாச்யம் (வா) என்னுங் காத்தியாயனவசனத்தானே ஜீவ்யதே என்பது காலத்தில் கருமத்தில் லகாரமென்றறிக. ஸ்ரீ வீரசேகர கௌமுதி காரகப்படலத்தில்நன்குகாணலாம். அத்தகைய ஜீவனத்தின்கண்ணும் ஆசையுண்டாகின்றதே இஃதென்னென்பதாம். (17)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தேசமற்பமெனவும் தேடத்தகுவ தொன்றையும் காணுமெனவும் கூறல்:—எல்லையென்பது,

எல்லையிலா வண்டத்தி லியாளுளும் புவிநோக்கி லிறையுமில்லே
யல்லலுறு மிதுபெரிதா வாதரித்து நிற்பதேயந் தோவந்தோ
புல்லிமையற் றினிதாகியு தாரமாச்செயப் படாப்பொரு ளீதென்னத்
தொல்லுலகி லொருபொருளுங் காணேனித்தொடர்ச்சி நிலையென்னேயென்னே.

(ப - ரை.) எல்லையிலா வண்டத்தில் = அளவில்லாத அண்ட கோடிகளுக்குள், இயான் ஆளும் புவிநோக்கில் = நான் ஆளும் ராஜ்யத்தைப்பார்த்தால், இறையும் இல்லே = அணுவெனவும் அறையமுடியாது, அல்லல் உறும் இதுபெரிதாவாதரித்து நிற்பதே அந்தோ அந்தோ = துன்பங்கணிறைந்திருக்கு மித்தேசத்தை விஸ்தாரமதாக நினைந்துபற்றுற்று விவகரிப்பதே ஐயோ ஐயோ, புல்லிமையற்று = அற்பத்தன்மையின்றி, இனிதாகி = இரம்மியமாய், உதாரமா = உதாரமாய், செயப்படாப்பொருள் ஈதென்ன = அசிருத்திரிம வஸ்து இது என்று சொல்லும்படியாய், தொல்லுலகில் = அநாதியாய இப்பிரபஞ்சத்தில், ஒருபொருளும் = எப்பொருளையுமே, காணேன் = கண்டிலேன், இத்தொடர்ச்சிநிலை என்னே என்னே = எனதுமதியின் இப்பற்றுநிலையாதுகொல் ! இஃதென்ன ஆச்சரியம்!

(ஸ்ரீ - வீர.) ஜீவிக்கும் பரியந்தம் ஆளும்படியான எனது இந்தராஜ்யந்தான் எத்துணை மாத்திரமென்பதோ ! இவ்வளவு மாத்திரையானே சந்துஷ்டனுகிப் புத்திகெட்ட மூர்க்கனேப்போல வருந்துயரை நீக்கும் சிந்தை செய்யாதவனுய் இவ்வாறிருப்பதேன் யான் ? அல்லது, இத்துணைமாத்திரையானே விநஷ்டபுத்தி யுபாதிஜீவன்மூக்தனேப்போலத் துயரமேயில்லாமல் என்னே யிவ்வரறிருக்கின்றேன்? தேகமேயாத்மாவாகுக, அதனதழிவாகவே அதஞேடுகூட்டவே சர்வதுக்க நிவிருத்தியேனுகாதெனின் ? காமகர்மவாசனைப் பீஜமின்றி, போகவாசித்திரியப் பிரயோஜகஜன்ம அசித்தியாதலினுலும், விதிநிஷேத மோக்ஷசாஸ்திரப்பிராமாண்ய அதிதோத்தானும், அநாதியாயும் அநந்தமாயும் இருக்கும்யான்தேகமாத்திரம் ஆகேன்; மத்தியிற்பேரில் ஜீவிதன். சித்திரத்திற் சித்திரிக்கப்பெற்ற இந்து வல்லாததையே இந்து புத்தியினுற் கவர்ந்த பாலனேப்போல, ஆநாத்மாவாய தேகத்தையே ஆத்மாவெனக்கவர்ந்து ஆசுவாசமடைந்து வீணுக இறுமாந்திருக்கின்றேன் என் ? இல்லாதபிரபஞ்ச இந்திரஜாலத்தாலியான் அந்தோகக்ஷடம் மிகவும் மோஹிக்கப்பட்டுளேன், எவ்விந்திரஜாலக்காரனுல் இவ்வாறு பெரிதுமயக்கப் பட்டேன் ? யாதுதான் உளதாதலிற் சத்தியவஸ்துவாமோ, இரம்மியமாய்ச்சுக ஏகரூபம் யாதாமோ, உதாரமென்னும் அபரிச்சின்னம் யாதாமோ, அசிருத்திரிமமென்னும் அஜன்னியத்தானியாதாமோ, அத்தகையவத்து எதுவுமே யிவ்வுலகி லிலவேயில்லே, இத்தேக எனதுமதி எதில் இளேப்பாறுதலே யீண்டடையாகிற்கும்?

(ச.) இறையுமில்லே = அதிசொற்பமாதலின் இந்தவிராச்சியத்தால் எவ்வளவும் பிரயோஜனமின்றென்பது பொருள் பயனின்றுயும், நட்டபுத்திபோலவாளா இவ்விராச்சியத்திலிருக்கின்றேனென்பது கருத்து, புல்லிமையற்று = புன்மையதன்றுய் உள்ளதாய், இனிதாகி = நிர்த்தோடமாய், உதாரமாய் = உத்திருஷ்டமாய், செயப்படா = அகற்பிதமான, பொருளீதென்னத் தொல்லுலகி லொருபொருளுங் காணேன் = இன்றேயின்று, ஆதலின் இத்தொடர்ச்சிநிலே = எனது பிரியத்துக் கிருப்பிடம், என்னே = யாது, எவனென்னும் விஞ என்னென்றுய் இல்லேயென்னும் பொருளேக் குறிப்பித்து நின்றது, என்னேயென்பது இகழ்ச்சிக்குறிப்பு.

(ஸ்ரீ - வீர - அ - கை.) அசித்தியமாய இவற்றிற் பெருமையை நினைத்தல் தகாதெனல்:—தலேவரென்பது.

தலைவர் தலைமே லுறைவோர் நாட்களிஞற்றுழ்ந் தோர்க்குத் தாழவீழ்வர்
நிலையில்பெருமையை யுறுதிநினைக்கின்ற நெஞ்சேயின் னினைவீதென்னே
தொலைவில்பெரும் போகங்கள்பெரியோர்கள் கிளையோடுந் தோன்றித்தோன்றி
யுலைவுறமாண்டார் முன்னுளிந் நாளிங்கிவையனைத்திலுறுதியென்னே.

(ப - ரை.) தலைவர் தலைமேலுறைவோர் = மகத்துக்கள் சிரமேலுறைந்திருப்பவரும், நாட்களிஞல் = தினங்களிஞல், தாழ்ந்தோர்க்குத் தாழவீழ்வர் = கீழுக்குங் கீழாய்வீழுவர் நிலையில் பெருமையை = மாய்ந்துபோம் மகத்துவத்தை, உறுதி நினைக்கின்ற = நிலையென் றெண்ணுகின்ற, நெஞ்சே = சித்தமே, இல்நினைவு ஈது என்னே = அசம்பாவிதமாய இந்த எண்ணம் என்னபயனை வுத்தேசித்தோ! தொலைவில் பெரும்போகங்கள் = புசித்துத் தொலைக்க முடியாதனவாய அளவிறந்த போகங்களும், பெரியோர்கள் கிளையோடும் = நெருங்கிய பந்துக்களோடு கூடிய மகத்துக்களும், தோன்றித்தோன்றி = உதித்து உதித்து, உலைவுற மாண்டார் = நினைவின் விடயீபூதமாய் நீங்கிப்போனார்: முன்னுள் = முற்போது, இக்நாள் = இப்போது, இங்கு = ஈண்டு, இவையனைத்திலுறுதி யென்னே = இவ்வியா வற்றிலும் நிலையாதுகொல்!

(ஸ்ரீ-வீர.) இன்றுயாவர் பெரிதான இராஜ்ஜியாதிவைபவ உற்கர்ஷத்தில் மனமயங்கிய வகையில் இராஜ்ஜிய அபிமானத்தை யடைந்து தலைமைவகித்துத் திரிந்தனரோ. அவரே தினங்கள் சிறிதிலேயே அதோகதியாய் வீழ்ந்துபோகின்றனர், அந்தோ இந்த அற்பமாய பெருமையின் கண்ணே நம்பிக்கைவைத் துழல்கின்றனையே இஃதென்னே! மடநெஞ்சே செத்திலாய் கெடுவாயே, சக்கிரவர்த்திகளாகிய பிருதுமருத்து முதலியவர்தம் பிரசித்த மான மகா ஐசுவர்யங்கள், அந்தப் போகங்கள், அச்சற்குணங்கள், அதிநேய முற்றவவர்தம் பந்துக்கள், என்னும் யாவருமே யாவையுமே, ஸ்ரீமிருதுமார்க்கத்தை யடைவுற்றனவாம், இப்போதிருப்பவற்றிற்றான் என்னேநிலை, ஆஸ்தைதானென்? மூலம், சர்வம் என்பது சாமான்யே நபும்சகம். நினைவின்நெறியுறுமென்பதை ஸ்ரீபர்த்ருஹரியும் தெரிவித்துளார்— சவிமிகு நகரும் பெரியமன்னவனுஞ் சாமந்தவலயமு மவற்சூழ், கவிகளின் குழுவந்தாசரும வன்றன் கலமதிமுகவரிவையருஞ், சுவைமதிமதத்த கோமகக்குழுவுஞ் சுபம்வழுத்துனர வன்கதையென், னெவையுமியார் வயத்தாலென நெறியுறுமோ வெழிலக்காலனைப் பணி குதுமே.

(ச.) அறுதி = சொந்தமாக. மூலம், சித்தவென்பது விளியாம். (19)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சுரகேரேந்திர பிரமாதியர் தம்வாழ்வும் எண்ணில நண்ணிலவென் னின் நின்வாழ் வென்னேயெனல்:—மண்ணென்பது.

மண்ணுடி மன்னவரு மவர்தனமு மாண்டன நுண் மணலியொக்கும்
விண்ணுடி மிந்திரருமவர் வாழ்வும்போ யினவிண்மீன யொக்கு
மெண்ணுடும் பிரமருமண் டமும்பூதங்களு மிறந்த வெல்லையில்லை
கண்ணுடி மவையெங்கே நின்வாழ்க்கை நிலையென்னே கவலுநெஞ்சே.

(ப - ரை.) மண்ணுடி மன்னவரும் அவர்தனமும் = தேசங்களும் மகீபர்களும் அவர் தம் ஐசுவரியங்களும், மாண்டன = அழிந்தன எண்ணின், நுண்மணலை யொக்கும் = சூக் குமரேணுக்களி னு மதிகமாம், விண்ணுடி மிந்திரரும் அவர்வாழ்வும் = தேவலோகங்களும் தேவேந்திரர்களும் அவர்தம் ஐசுவரியங்களும், போயின = சென்றழிந்தன வெண்ணின் விண்மீனை யொக்கும் = ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரக் கூட்டங்களிலு மதிகமாம், எண்ணு

டும் = எண்ணிக்கை செய்யத்தக்க, பிரமரும் = பிரஹ்மதேவரும், அண்டமும் = அவர் தம்பிராரப்த ஐசுவரியமாய அண்டகோடியும், பூதங்களும் = பூதபஞ்சகங்களும், இறந்த = ஒழிந்தன, எல்லையில்லை = அளவேகிடையா, கண்ணுடி மவையெங்கே, கண்ணினுற் கண்டதுபவித்த அவ்வியாவையும் எங்கேசென் றொழிந்தன, நின்வாழ்க்கைநிலையென்னே = உன்னுடைய ஜீவிதமாத்திரம் என்னதிர முடையதோ, கவலும் நெஞ்சே = இவற்றில் ஆசக்தியுற் றழலும்மனமே!

(ஸ்ரீ - வீர.) மகீபதிகள் தந்தங்கள் யாண்டேகின, பழைய இரணியகருப்பர்த்தம் புவனங்கள் எங்குசென்றனஜீரம், பழைய அவையெல்லாம் சென்றவிடந் தெரியவிலையே, நினது இவ்வற்பதனுதிகளில் மாத்திரம் என்னவிசுவாசம் செய்யத்தக்க திருக்கின்றது? வாரியின் கண்ணேபுற்புதங்கள் வயதுகத்தழிந்தார்களன்றே காலத்தால், இலக்ஷக்கணக்கான இந்திரர்கள், எனினும் ஜீவிதத்திற் பேராசையடைந்து அதற் கேற்றபடிதிரியும் என்னேக்கண்டு நகையாரோ விவேகமிருத்த பெரியோர். பிரமகோடிகள் பெயர்ந்து போயினர், பெரிது சாம்பின சர்க்கதாரைகள், திரமதென்கொலோ பூதபூபர்கள், சிதைந்துபோயினர் தூளி போலவே, திசை யென்ன வென்சீவிதந்தனில்; கோடிக்கிரகணம் ஆதிகம்பதி மாம், சம்சாரத்திற்கு அநாதித்தன்மை யுண்மையின்; திருதி = ஆஸ்தை. (20)

(ஸ்ரீ - வீர - அ-கை.) இறையேனுமிச்சை பூண்டிடில் இதனில் என்னேப்போற் பேதையர் எவரெனல்:—செல்லென்பது.

செல்லாத மாயையிரு ளிரவிலே தேகமயத்தி யக்கமான
பொல்லாத நீள்கனவாஞ் சூனியத்தி லிச்சையிறை பூண்டேனென்னிற்
கல்லாதபுல்லிய னேன்சீசீநா ளனவரதங் காணுநாட்க
ளெல்லாம் போயினபோ மாறிறவாதென்றுய் நன்றுமெழிணுட்காணேன்.

(ப - ரை.) செல்லாத மாயையிருள் இரவிலே = பிரஹ்மஜ்ஞானத்தாலன்றிக் கெடாத மாயாந்தகார இராத்திரியில், தேகமயத்தியக்கமான பொல்லாத நீள்கனவாம் = தேகமயமயலான தீர்க்கதுர்ச் சொப்பனமாம், சூனியத்தில் = ஒருபயனுமற்றதில், இச்சை இறை பூண்டேன் என்னில் = ஆசையற்பம் அடைந்தேனுயின், கல்லாதபுல்லியனேன் நான் = ஒன்றும் உணராத அற்பனேயாஞையினேன், சீசீ = திக்திக், அனவரதங்காணு நாட்கள் எல்லாம் போயினபோம் = நிரந்தரம் வந்தவாசரங்கள் யாவுமே சென்றன செல்கின்றன' என்றலும். இறவாது ஒன்றுய் நன்றும் = நாசமில்லாத ஏகமான சத்துவத்துவை ஐயமறத் தரிசித்த, எழில் நாள் காணேன் = அழகியதின மொன்றை இன்றளவுங் கண்டிலேன், ஆல், அசை.

(ஸ்ரீ - வீர.) தமோமயத் தன்மையானே சமுசாரமேயாய இரவின்கண்ணே துக்க சொப்பன பூததேகப் பிரசீ அகந்தைமமதை விவகாரமயலாஞ் சேத்திய சூனியத்தில் ஆஸ்தையையற்பமேனும் அடைந்துள னேலாயினேனு, ஆண்டிம் மரியாதையற்ற எனது அவிவேகித்தகைமையானது சீசீயென இகழ்தற்பாலதேயாம், ஆகத்தன்மையாம் அபரோக்ஷத் தன்மைக்கற்பனை, அதனிற் சேய்மையாம் பரோக்ஷத் தன்மைக்கற்பனை, உடம்பில் ஆத்மத்தன்மைக்கற்பனை, யென்னும் இம்மூவகையாய கற்பனைகளும், அசத்சொரூபியின் மாட்டே வாளாவரும், ஆகலின் அகங்காரப் பேயினுலே மயக்கப்பெற்று யான் அறியாஞேப்போல இவ்வளவுகாலமும் எதன்பொருட்டாக ஆராய்ச்சி யற்றவனுக இருந்தேன் என்பதாம். நிரந்தரம் இத்தினங்கள் வருவனவாம், இவ்வளவதாம் வயதிலும் வீணுகவே செல்வனவுமாம்;

நித்தியமாய் ஏகமாய்ச்சத்தாய்நிர்த்தோஷமாய் ஆநந்தைகரசமாய் இலங்கும்வத்து அடைந்து விட்டோம் என்னும் அத்தகையதினம் இத்தூணைக்காலம் வரையும் கண்டிலேன்.

(ச.) தமோமயமாதவின் மாயையென்னுஞ் சமுசாரமே இருள் இரவாயிற்று, பொல்லாததேகமயத் தியக்கமான = துக்கமயதேக ரூபப்பிரமமான, சீசீ = எனது இத்திதி கஷ்டமென்பது பொருள். எழில் = அழகுள்ள வஸ்துவும், நாள் = நாளும், இப்போதும் காணேன்! (21)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நல்லவல்லாப் பொருளெல்லாம் நாசமாம் எனக்கண்டுலகர்க்கிரங்கல்:—நடுவென்பது.

நடுவின்முடிவி னிலடியினன்ரூன பொருளொன்று ஞாலத்தில்லே
படுபொருளெல்லா மிறப்பாம லத்தினுலேபூசப் பட்டதன்ரே
கடுவினேக ணுேடோறுங் காய்துயர நாடோறுங் கரையொன்றில்லாக்
கொடுமைகளே நாடோறுஞ் செய்கின்ரு ரறிவில்லார் குரம்பைக்கூத்தால்.

(ப - ரை.) நடுவில் முடிவினில் அடியில் நன்ரூனபொருள் ஒன்றும் = மத்தியில் பரியந்தத்தில் ஆபர்த்தத்தில் மநோரமமான வத்துவெதுவும், ஞாலத்தில்லே = உலகத்திலில்லே, படுபொருளெல்லாம் = தோற்றப்படும் பொருள்கள்யாவுமே, இறப்பாமலத்தினுலே பூசப்பட்டதன்ரே = விநாச அமேத்திய தூஷிதமேயல்லவா, கடுவினேகள் நாடோறும் = பாபவினேகளேயே தினந்தோறும், காய்துயரம் நாடோறும் = மிகுந்ததுக்கமே தினந்தினம், கரையொன்றில்லாக் கொடுமைகளே நாடோறும் = எல்லேயில்லாத குரூரமானசெய்கைகளே அகர்நிசம், அறிவில்லார் = ஜடஜனங்கள், குரம்பைக்கூத்தால் = தேக அகம் அபிமான அபினிவேசத்தால், செய்கின்ரூர் = பண்ணுகின்ரூர்கள்.

(ஸ்ரீ - வீர.) கஷ்டத்தினும்கஷ்டதரத்தை யடைந்தும், துக்கத்தினும் துக்கதரத்தைத் துதைந்தும் இன்றளவும் விரக்தியை யடைந்திலேன். அந்தோ இஃதென்னே! இராகலோபாதி தூஷிதத்தன்மையானே அதமமனத்தை யுடையயான் ஈண்டு வாழ்ந்தென்னேபயன் திக்திக். எந்த எந்த இரமணீய வஸ்துக்களாகிய விடயங்களில் அதிதிடமாகப் பிரீதிவைக்கப்பட்டதோ அவையாவுமே அழிவுற்றன வெனக்கண்டோம், ஈண்டுத் தமமென்பது தான்யாதோ அறிந்திலேம். எவ்வயதமத்தியில் மநோரமமாமோ, எத்தருமந்தான் பரியந்தத்தில் மநோரமமாமோ, எவ்விடயங்கடாம் ஆபாதத்தில் = தொடக்கத்தில் மநோரமங்களாமோ, அவ்வியாவுமே அபவித்திரங்களாம், அவைவிநாச அமேத்திய தூஷிதங்களாம். எவ்வெப்பதார்த்தங்களில் மானவன் ஆஸ்தையை யடைகின்றனஞே அவ்வவற்றிலேயே அம்மானவனுக்கு, அத்தியந்தம் துக்கப்பிராதூர்ப்பாவத்தைப் பிரசித்தமாகக் கண்டோம், அஞ்ஞானுக்குத்தரகாலத்திலும் விசிராந்தி யடைந்திடலாம் என்னும் ஆசையிலதாம் எனல்: கடுவினே யென்பதாதி. இவ்வுலகத்தில் ஜடமதி ஜநங்கள், இராகலோபாதி யபிவிருத்தியானே மகாபாவமயமாம் இத்தசையையே நாட்கு நாளடைகின்ரூர்கள்; நாட்குநாள் ஹிம்சாதிப் பிரவிருத்தியானே குரூரதரமான அவத்தையையே யடைகின்ரூர்கள், நாட்கு நாள் அவற்றின் பலகாலத்தில் தூயர்ப்படுத்தும் அவத்தையையே யடைகின்ரூர்கள்.

(ச.) நடுவில் = யவ்வனமானவயதில், நன்ரூனபொருள்=மநோரம்மியமான பொருள் தேகாதி, முடிவினில் மநோரம்மியமான பொருள் மாம்பலாதி, அடியில் = பிரதமத்தில் மநோரமம் மாலதி (முல்லே) குசுமாதி, ஒன்றும் ஞாலத்தில்லே, அவ்வினேத்தும் பவித்திரம் இன்மையனவேயாம், கடுவினேகள் = பாவமூள்ளதும், காய்துயரம் = கேதந்தருவதும்,

கொடுமைகள் = குரூரங்களுமாகிய தசைகளே, குரம்பைக்கூத்தால் = தேகத்தன்மையால் = ஜடவியல்பால், அறிவில்லார் செறிகின்றார். (22)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஒவ்வொரு அவத்தையிலும் துயரமே துதைதலின் இளைப்பாறுதல் இன்றெனல்:—பாலகன் என்பது.

பாலகனுயஞ்ஞானத் தழுந்துவனற் காலாயாய்ப் பாவைமாராற்
சாலவருந்துவன் விருத்தன்முனு கிக்குடும்பத்தாற் முளர்ந்துசாவன்
ஏலவிவனைக்காலத் தென்செய்வான் மாயக்கூத் திருந்தவாறே
ஞாலமெலாமாடரங் காய்ப்பொறி மேளமாய் மனப்பேய் நடிக்குமன்றே.

(ப - ரை.) பாலகனுய் அஞ்ஞானத்தழுந்துவன் = பாலியத்தில் அறியாமையானே ஹதமாவன், நற்காளையாய்ப் பாவைமாராஸ் சாலவருந்துவன் = நல்லயவ்வனத்தில் மதன விதனமேலிட்டு மங்கைமாரால் மயங்கிவாடுவன், விருத்தன்முனுகிக் குடும்பத்தால்தளர்ந்து சாவன் = வயோதிகனுகிக் களத்திர சிந்தையால் வாட்டமுற்று மரிப்பன், எலவிவன் எக்காலத்து என்செய்வான் = இவ்வாறு துன்பியைந்த இச்சடன் எப்போது என்னதான் இயற்றுவன், மாயக்கூத் திருந்தவாறே = மாயா நடனம் இருந்தமுறையே யாமிது, ஞாலமெலாம் = அசாரசம்சார முழுவதும், ஆடரங்காய் = நடனசாலையாய், பொறிமேளமாய் = இந்திரியங்கள் வாத்திய விசேடங்களாக, மனப்பேய் = மனமாகிய வேதாளம், நடிக்கும் = கூத்தாடும்; அன்று ஏ அசைநிலைகள்.

(ஸ்ரீ - வீர.) பாலியத்தில் அறியாமை யொன்றுனே யடிபடுவன், யவ்வனத்தில் மன் மதவிகாரத்தானே மயங்கித்திரிவன், சேடவயதில் களத்திர உபலக்ஷித குடும்பத்தாங்குதலாதி சிந்தையானே பரமதுக்கியாவன், களத்திரவித்தாதி பொருள்கள் கூடியமாக ரோதனஞ்செய்து வருந்துவன். எப்போது இவன்றன்னே யுத்தாரஞ்செய்யும் சாதனத்தைச் சம்பாதிப்பதே! ஒருபோது மிச்சடன் முயலான். இச்சம்சாரமானது ஆகமாபாயியாம். ஆதியந்தங்களிலகத்தாம், மயற்போதினும். இரசமில்லதாம், தரித்திரம் நோய்கிழமை, முதலியதசை விஷமபாவத்தானே தாவித்தமாம், அசாரமே யாமாயினும் சாரமதியானே கவரப்பட்டதாம், இத்தகையதை இத்துர்மதியேன் வீணுக நோக்குகின்றனன், பார்த்துப் பார்த்துக் கூத்தாடல் எந்நிமித்தமோ அறியேம். எப்போது மிடர்ப்படலை ஸ்ரீ பர்த்ருஹரியும் ஞாபகப்படுத்துவர்:—துன்புறமலநடு வைத்தல்பட்ட நியமிததனுக்களாற் திரிவதும் தின்னனுக்கருமீதி, லன்பினஞ் பிறிதரவுறுதுயர் விடமமா மரியயெவ்வனபோக, மின்பெழில் விழியர்களிகணைக்கு இலங்கிழ நகை வீழ் மென்னல நாரேரே, வன்பவமதுதனி லணுவுங்கிஞ் சிலுஞ்சுகம் வருமெனினறைவீரே.

(ச.) அஞ்ஞானத்து = அஞ்ஞானத்தால், அழுந்துவன் = வருந்துவன், குடும்பத்தால் = குடும்ப சிந்தைகளால், எலவிவன் = இவ்வியல்புள்ளஜடன், (23)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பங்குரப்பான்மைதுக்க பீடிதத்தன்மைகளால் யாவற்றிற்கும் அமங்கலத் தன்மையையே விரித்துரைத்தல்:—உள்ளென்பது,

உள்ளத்தின் முடிமேலே யில்லாமை வீற்றிருக்கு மூலகிலென்றுந்
தெள்ளுற்ற நல்லறத்தின் சிரத்திலே யெப்பொழுதுந் தீமைவாழு
மெள்ளற்றவின்பத் தின்றலைமேலே துன்பங்களிருக்குமென்றுற்
கொள்ளத்தக் கனவானகுற்ற மிலாப்பொருளே துகுறிப்புளேற்கே.

(ப - ரை.) உள்ளத்தின் முடிமேலே = நாடுறு பொருள்களின் சிரமீது, இல்லாமை வீற்றிருக்கும் = நாசமானது எழுந்தருளியிருக்கும், உலகில் என்றும் = ஜகத்திலெப்போ

தும், தெள்ளுற்ற நல்லறத்தின் சித்திலே யெப்பொழுதும் தீமைவாழும் = சாத்விகமான சத்தர்மமௌலியில் எஞ்ஞான்றும் தாமததீமைகள் வாழ்ந்து கொண்டிருக்கும், எள்ளற்ற இன்பத்தின் = தள்ளத்தகாத சுகத்தினது, தலைமேலே = சிகைமீது, துன்பங்கள் இருக்கு மென்றால் = துயரங்கள் உள்ளனவாயின், கொள்ளத் தக்கனவான் = அங்கீகரிக்கத் தகுந் தன வென்னும், குற்றமிலாப் பொருளேது = தோஷமற்ற வஸ்துக்கள் யாவைதாம்; குறிப் புளேற்கே = ஆராய்வுற்ற எனக்கே; மூடர்க்குத் தக்கனவெனினும் எனக்குத்தகா வென் பது தேற்றப்பொருளாம்.

(ஸ்ரீ - வீர.) நிகழ்காலத் துளவாங் திருசியத்தின் முடிமேல் நாசமிருக்கும், இரம்மியங் களின் சிரமீது அரம்மியத்தன்மையுளதாம். சுகங்களின் மூர்த்தனியில் துக்கங்களுளவாம், எதுதான் ஒன்றையான் இனிது கொள்ளுவேன். இதனே ஸ்ரீ ஹரியார் ஆகியபெரியாரும் கூறுவர்:—சனனமோ மரணபீடிதமதிக சதுரயெவனஞ் சரையாலே, யினிமகிழ் வருத்த தீசையினுற் சமவின்பிளைய வங்கனே மயல்களினு, னனிகுணந்தாமோ மற்சரவுலகானவ வனப்புவிகள் பாம்பவற்றன், மரவேன்றுர்ச்சனராணிதி யழிவதனுன் மருவுறுதெது வெத னனே, இவ்வாறிருப்பினும் குரம்பைக் கூத்தாடிச்சாவன் என்பதுமாண்டே'' கணத்தினிற் பாலனுகியே கணத்திற்காமவிரசிக வெவனனுய்க், கணத்தினிற் றனத்தினீனனுய்க் கணத் திற் கணக்கறும் விபவனுய்ச் சரையா, லுணத்துறு முடலானடனென வலிகளுறைதருதனு வனுய்மனுட, னெணத்தகு குடும்பவீற்றினிற் புகுவனெம புரியிடையுடல் விடுத்தே. என்ப தாகக் காணலாம்.

(ச.) உள்ளத்தின் = இருப்பதென்னும் பொருளினுடைய, முடிமேலே = பரியந் தத்தில். (24)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல் இராஜத்தன்மை யுண்மையின் சர்வங்கியமன சமர்த்த னுய் உத்தம புருடனுயுள்ள உனக்கு இளைப்பாறுதல் கூடவாமே யெனக்கடாவக் கூறல்:— விழியென்பது.

விழிப்பதுவு மிமைப்பதுவுஞ் சகத்தோற்ற மொடுக்கமாமே லோருண்டாற்
பழிப்பரியவன்னுர் முன்னென்போல் வாரென்னென்று பகரலாவ
ரிழிப்பரிய விசித்திரமாஞ் சம்பத்து மாபத்தா மிதயங்காயி
லொழிப்பரிய விசித்திரமா மாபத்துஞ் சம்பத்தாமுள்ளம் வேண்டில்.

(ப - ரை.) விழிப்பதுவும் இமைப்பதுவும் = கண்டிறந்து மூடலானே, சகத்தோற்றம் ஒடுக்கம் ஆம் = உலகங்களின் உதயவிலயங்களாம், மேலோர் உண்டால் = பெரியோர் உளர் ஆவர் ஆயின், பழிப்பரிய அன்னுர்முன் என்போல்வார் = பூசித்தற்குரிய அப்பெரிய வர்சந்நிதியில் என்போன்ற அற்பர், என்னென்று பகரலாவர் = எட்டிமுன் சந்தனமெனவா கதிர்முன்மின் மினியெனவா மற்றென்னென்றுதான் கணிக்கப்பெறுவர்; இதயங்கா யில் = உள்ளம் வெறுக்கில், = இழிப்பரிய = இகழத்தகாத, விசித்திரமாம் சம்பத்தும் = நானு வகைச் சம்பத்தும், ஆபத்தாம் = மகத்தாபத்தாம், உள்ளம்வேண்டில் = மனம்விரும்பில், ஒழிப்பரிய = அகற்றமுடியாத, விசித்திரமாம் ஆபத்தும் = நானுவகையாய ஆபத்தும், சம்பத்தாம் = சம்பத்தெனலாம்.

(ஸ்ரீ - வீர.) எவர்தம் நிமேஷண உன்மேஷணங்களானே ஜகத்துக்களின் பிரளய உத யங்களாமோ, அத்தகைய புருடருமுள்ளார், என்னின், எம்மஞ்ஞைது எண்ணிக்கையேயா தாம்? இரம்மிய தரங்களினும் இரம்மியங்கள் உளவாம், நற்றிரங்களினும் நற்றிரங்கள் உள வாம், அர்ஜனரக்ஷண வியோகாதியானே சிக்தையையே முடிந்த பலமாகஷ்டையன இப்ப

தார்த்த ஸ்ரீகளாம் ஆகலின், அவற்றை யிச்சிக்கின்றனையென்? நாஞரத்ன கீழ்வாழிதன தாராதி பேதத்தானே விசித்திரமான சம்பத்துக்கள் யாவையோ அவைசித்தத்திற்குச் சம் மதமேலாயின் = மனத்தான் மிகமானிக்கப் பெறுமேலாயின், அம்மகாரம் பங்களும் பகுப் பிரயத்ந லப்யங்களும் துக்க இரகுயியங்களும், அவசியமகல் வனவும் ஆமெனவர்தோமகர ஆபத்துக்கள் என்றே யெண்ணுகின்றேன். இங்ஙனம் தரித்திரம் பந்து இராஜ்யாதி நாச வடிவ ஆபத்துக்களும், சாதுசங்கதீர்த்த தபப்பிரபோதாதி யடைவித்தலானே விசித்திரங்க ளாய சிரேயசுகளே எனமனத்திற் சம்மதமேலாயின் அவையும் விவேகவயிராக்கியாதி மகா ரம்பங்களாகச் சம்பத்துக்களே யெனமனத்தில் எண்ணுகின்றேன், ஆகலின் அசத்தியமாய ஜகத்தில் மமதை யபிவிருத்தியே விபத்தாம், விவேகத்தானே பரிசுயமே சம்பத்தாம் எனக்கருதிச் சகம்மமதை செய்யத்தகாதது என்று காணவேண்டுவ தவசியம்; என்னை; அப்தியிற் பிரதிபிம்பிதமாய இந்து வென்னப்பங்க வியற்கைத்தாய்ப் பொய்யாய் மநோவச் சின்ன சைதன்யமாத்திர விவர்த்தமாயுள்ள இவ்வுலகில் எனது இது என்பதாய் கற்பனையா மிது அபூர்வமேயாம், பதவாக்கிய விடிவமாயவர்ண பந்தியாமிது யாண்டையதோ ! பய னற்றதேயாம். பெரியார் மூன் எம்மாத்திர மென்பதைப் பெரியாராகிய ஸ்ரீஹரியாரும் பகர்ந்தார்:—விரிமனவீசர் மூன்னிவ் விசுவத்தை விரித்தார்மற்றோர், பரிதஜ்ல புரிந்தார் தெற்றேபார்துரும் பெனவேயீந்தார், சரிசிலிஞ்ஞான்றந்தீரா சதுர்த்தசப்புவன முண்பா, நிரிசிலபுரமான் வேந்தரிம்மதச் சுரமதென்னே.

— (ச.) விழிப்பதுவும் இமைப்பதுவும் ஆகிய இரண்டினுல், சகத்தோற்ற மொடுக்க மிவை, = ஜகங்களினுடைய உற்பத்தி நாசங்களென்னும் இரண்டுகளேயும், கண்டார் = செய்தவராகிய, மேலோர் = பிரமாதிகள், உளர் எனவருவித்துக் காண்க. விசித்திரமாஞ் சம்பத்தும், புத்திர வியோகாதியாற் துக்கமுற்றவனது, இதயம் = சித்தத்தில், காயில் = வெறுப்பா மாதலின், அச்சம்பத்துகளும் ஆபத்தாம் = மகத்தான ஆபத்துக்களா மென் றெண்ணுகின்றேன். மனது துக்கிக்கின் அனேத்தும் வெறுப்பாம் என்னும் நியாயத்தினுல் என்க. விசித்திரமாம் ஆபத்தும், உள்ளம்வேண்டில் = சித்தத்தில் இவ்டங்களாதலின், அவ்வாபத்துகளும் சம்பத்தாம் = சகல சம்பத்துக்களு மாமென் றெண்ணுகின்றேன். பிரஹ்மாதிகளின் நித்திரைப் பிரபோதங்களே ஜகத்தின் பிரளய உதயங்களாம். உள்ளம் வேண்டில் = மகாப்யுதய சிரஸ்கமாக = பேராநந்தத்தை விளைப்பதிற் நலமையுபாயமாக, மனத்தால் ஒப்புக்கொள்ளப் பெறின். விசித்திர ஆபத்தே. ஆசிரியரடைவு சிரவணதி சகல சம்பத்துக்களும் பயக்கும் ஆமென்பது கருத்து. (25)

(ஸ்ரீ-வீர – அ-கை.) விடயசுகங்கட்குச் சுபத்தன்மை இல்லவேயில்லை, மற்றோ, துக்க விசேஷரூபதையே யுளதாம் என்று ஊகத்தாற் பொருத்திக்காட்டல்:—வெம்மென்பது.

வெம்மாய வாழ்வன்றோ துயர்க்கெல்லாம் பிறப்பிடமாய் விளம்புகின்ற
தம்மாவிங்கி தனிடையே யழுந்துமவர்க் கின்பமுளதாவ தெங்ஙன்
மைம்மாயை யென்னுமரம் பணையிலைபூகாய் பழத்தால் வரம்பற்றோங்க
விம்மால்செய் மனம்வேரா மிம்மனந்தான் சங்கற்ப மென்பதாகும்.

(ப - டை.) வெம்மாய வாழ்வன்றோ = கொடிய சம்சாரமல்லவோ, துயர்க்கெல்லாம் பிறப்பிடமாய் = துக்கங்கள் யாவற்றிற்கும் ஜன்மஸ்தானமாய், விளம்புகின்றது = கூறப் பெறுகின்றது, அம்மா இங்கு இதனிடையே = அந்தோ ஈண்டிதன்மாட்டு, அழுந்து மவர்க்கு = மூழ்கிக் கிடப்பவர்க்கு; இன்பமுளதாவ தெங்ஙன் = சுகமுண்டாவது யாங்கு

னம்? மைம்மாயை யென்னும் மரம் = மயலுற்ற சம்சாரவிருக்ஷம், பணையிலைபூகாய் பழத் தால் = சாகைபத்திரம் புஷ்பம் காய்கனிகளால், வரம்பற்றேறுங்க = எல்லையில்லாமல்வளர, இம்மால் செய்மனம் = இம்மயக்கத்தை யியற்றும் சித்தம், வேராம் = மூலமாம், இம்மனந் தான் சங்கற்பமென்பதாகும் = இந்தமனதோ சங்கற்பம் என்று சொல்லப்படுவதேயாம்.

(ஸ்ரீ - வீர.) சம்சாரமே துக்கங்கட்கு எல்லை முடிவென்றியம்பப் பெறும், அதன்மத்தி யில் வீழ்ந்தாழ்ந்த தேகத்தில் இன்பம்பெறுவ தெங்ஙனமாம்? ஆயின்யாங்ஙனம் சுகத்தன் மையறுபவம் எனின், ஆண்டுயுக்தியிதுவாம்:—அகிருத்திரிம மகாதுக்க சம்சாரத்தில் விவத் திதியடைந்தவர் இவ்வன்னிய மாயதுயரங்களேயே அத்தியந்தம் மதுரங்கள் என உணர்வர்; கட்கவெட் டறுபவத்தினும் கசையடியநுபவம் சுகம் என்பதுபோலத் துக்கங்களேயே மாது ரிய சுகங்களாக எண்ணுகிற்பர் என்பதுகருத்து. சுருதிமிருதியாதிப் பிரமாண சுசலனுய் மேதாவியாய் ஆராய்ச்சியாற்றலுற்றவனேனும் யான் அதம உற்கிருட்ட காட்டலோட்ட சமத்திதியடைந்துளேன், முற்றினுமே சாஸ்திரலோகப் பிரமாணவஸ்துக்களே யாராயாத தன்மையராய மூர்க்கரோடும் ஒப்பேயாயினேன்; முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயன் றும் அஷ்ர்போலவே தெளிவிலாமையிற் களிமிகுத்திருந்தும் மேற்காரியங் கருதுறுதவனுயி னேன் என்பதாம். இப்போது தனது பிரமாண சுசலத்தன்மையைச் சம்சாரமூல அவதார ணத்தால் பலமுடையதாக ஆக்கலாம்:—மைம்மாயை யென்பதாதி சகத்திராங்குர சாகை யாத்மா பலபல்லவசாலியாய இச்சம்சார விருக்ஷத்திற்கு மநோமூலமகாங்குரம். அங்குரங் கள் = சங்கற்பங்கள், சாகைகள் = தேகபுவனுதிகள். ஆத்மா = சாகாதி யவயவிவிராட்டு, பலங்கள் = சுகதுக்கங்கள், பல்லவங்கள் = இராகலோபங்கள். என்னும் இவற்றுற்சோபியா நிற்கும் இச்சம்சார விருக்ஷத்திற்குச் சித்தம் மூலமாய மகாங்குரமாம். சித்தத்தினது இரக சியமும் தன்னுற்றெறியப் பெற்றதேயாமெனல்: — இம்மனந்தான் என்பது. சங்கற்பமே யஃதாமென எண்ணுகின்றேன். சகத்திரம் = ஆயிரம், மிகுதிபற்றி யென்பதாம்,

(ச.) வெம்மாய வாழ்வன்றே = சம்சாரமே, மைம்மாயை யென்னுமரம் = இச்சம் சாரமென்னுந்தரு, அங்குரம் = இராகத்துவேஷாதிகள், பணைகள் = புத்திரதாராதிகள், அதின்மூல சாகைதேகம், அதினிலைபூ = சுகதுக்க வேதுக்கள், அதின் காய்பழம் = சுக துக்கங்கள், சகஸ்திர மென்பதைப் பணையாதிகளுடன் கூட்டுக. ஆயிரக்கணக்கான அங்கு ராதிகளானே விசாலமுற்றது விருக்ஷம் என்பதாம். (26)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மரமாய்த்தலையுபசங்கரித்துக் கள்ளனைக்கண்டு பதிஞ்ஞை செய் தல்:—சங்கற்பமென்பது.

சங்கற்பநாசத்தா லெளிதாக மனநாசந் தானேயெய்து
மங்குற்ற மனமிறக்கிற் சநநமரணங்க ளெனுமரமுமசாயு
மிங்கிப்பாலெனைத் திருடுங்கள்ளனைக் கண்டேன்கண் டேனிவன்பேர்நெஞ்சம்
பொங்குற்ற நெஞ்சத்தா னெடுநாணெந் தேனின்று பொன்றுவிப்பேன்.

(ப - ரை.) சங்கற்ப நாசத்தால் = சங்கற்பத்தைச் செய்யாமையானே, மனநாசம் = மனத்தினது அழிவானது, எளிதாகத்தானே யெய்தும் = சுலபமாகச் சுயமாகவேகிடைக் கும், மங்குற்ற மனமிறக்கில் = எண்ணுமையானே தனது ஆற்றல்குன்றிய மனதானது சாவுறில், சனனமரணங்க ளெனும்மரமும் மாயும் = பிறப்பிறப்பு வடிவமான விருக்ஷமும் அழிவுறும், இங்கிப்பால் = இங்குணர்ந்து கொண்டேன், எனைத்திருடும் கள்ளனைக்கண்டேன் கண்டேன் = ஆன்மாவைச் சோரஞ்செய்யும் திருடனைக் கண்டுகொண்டேன் கண்டு

கொண்டேன், இவன்பேர் நெஞ்சம் = இத்திருடன் பெயர்மனமாம், பொங்குற்ற நெஞ் சத்தால் = எண்ணுத எண்ணமெல்லா மெண்ணி யேங்குமனப் புண்ணால், நெடு நாள் நொந்தேன் = வேகுகாலம் சிரமப்பட்டேன், இன்றுபொன்று விப்பேன் = யான் அரசனுதலால் இத்தினமிதனைக் கழுவிலிடுவேன்.

(ஸ்ரீ - வீர.) சங்கற்ப உபசமனத்தால் மனத்தைச் சோஷணம் புரிவேன், ஆதலுனே சம்சாரபாதபமும் சோஷத்தை யடையாநிற்கும். அந்தோஹதனுயினேன், விகஷ்டனுயி னேன், மிருதமாயினேன், என்பதாகத்தானே என்னுல் மறித்தும் மறித்தும் முன்னர்ச் சோகிக்கப்பட்டது யாதோ அது சென்றழிந்ததேயாம். யானிப்போது சோகிக்கவே மாட்டேன். என்சோகிக்கவே மாட்டாயென்னின் ? உரைத்தல்:— இங்கு என்பது, விழித் துக்கொண்டேன் களித்துக்கொண்டேன் கண்டேன் கண்டேன் சோரனே. எனது பார மார்த்திகரூப தனமாய ஆன்மாவை யபகரிப்பவனிவனே, இவன் நாமதேயம்மனமாம், இவ னைக் கொல்லுவேன், கேவலம்கள்வனுந்தன்மையான் மாத்திரமிவனைக் கொல்வேனல்லேன் மற்றே, வைரித்தன்மையானும் கொல்வே னென்பார், நெடுநாள் மனத்தால் ஹதமாயி னேன் = நெடுநாள் நெஞ்சத்தால் நொந்தேன் என்றூர்.

(ச.) சனன மரணங்களெனும் மரம் = சம்சாரபாதபம், எனை = ஆன்மாவை.

(ஸ்ரீ - வீர - அ - கை.) தனது வித்யானந்தத்தின் பெருமையை வெளிப்படுத்தல்:— இத்தனை யென்பது.

இத்தனைநாண் மனமுத்தைத் துளைத்திலே னின்றுதுளைத் தியைந்தநூலாற்
சித்திரமாய்க் கோத்தணிவன் முழுதுணர்ந்த தேசிகராற் றெளிந்தேனெல்லாஞ்
சுத்தபர மாநந்தந் தோற்றுவிக்கு நல்லறிவாஞ் சோதிபெற்றேன்
மெத்தவிவ னுனைனதிங் கிவையெனும்பொய் யுள்ளொழித்தேன் மீண்டுநாடேன்.

(ப - ரை.) இத்தனைநாள்=இவ்வளவுகால பரியந்தம், மனமுத்தைத் துளைத்திலேன்= எனது மனதாகிய முத்தினைத்துவாரஞ்செய்திலேன், இன்று துளைத்து = இப்போது துவாரமிட்டு, இயைந்தநூலால் = பொருந்திய சூத்திரத்தால், சித்திரமாய்க் கோத்தணி வன் = விசித்திரமாகக் கோவைசெய்து அலங்கரித்துக் கொள்ளுவன், முழுதுணர்ந்த தேசி கரால் = யாவற்றையுந் தெரிந்த ஆசிரியரால், தெளிந்தேன் எல்லாம் = முழுவதும் போ திக்கப்பெற்றேன், சுத்தபரமாநந்தம் தோற்றுவிக்கும் = தூய்தாய பிரஹ்மாநந்தத்தைப் பிர கடப்படுத்தும், நல்லறிவாம் சோதிபெற்றேன் = சாதனமாகிய சச்சிதாநந்த சொரூபத்தை யடைந்தேன், மெத்த இவன் நான் எனது இங்கு இவையெனும் பொய் = மிகுந்தெழுந்து கொண்டிருந்த அயம் அகம்மம ஈண்டிவை என்பவான மித்தைத்தோற்றங்களை, உள்ளொ ழித்தேன் = அகத்திலும் நாடாமல் தொலைத்தேன், மீண்டும் நாடேன் = மறித்தெப்போ தமே சிந்தியேனிந்த வண்ணம்.

(ஸ்ரீ - வீர.) இத்துணைப்போதும் எனது இம்மனதாகிய முத்தாபலத்தை யலக்ஷியஞ் செய்துவிட்டேன், சித்திரம் செய்யாம லிருந்துவிட்டேன், இப்பொழுது, இலக்ஷியப்படுத் தியதாலோ, சித்திரித்ததாலோ. சமதமாதி குணயோக்கியமாயது, சூத்திரஞ்சேரத் தகுதி யாயது: எனது சித்தமாகிய முத்தென்பதாம். விவிதசாதுக்களாகிய சித்தர்களானே யான் நன்றுக நாளுவித உபதேசங்களால், இனிது போதிக்கப் பெற்றேன், பரமாநந்த சாதன மாய ஆன்மாவைப் பின்றொடாா நிற்பேன், அநுகதிமாத்திரத்தானே பரமாநந்தமாய தனக்கே சாதனமாம், அபேதமெனினும் உபசாரத்தாற் கரணதையா மென்றுணர்க, ஆக

வின் பரமாத்ம நிஷ்டையை ஒருபோதும் விடவேமாட்டேன், ஆன்மாவாகிய மணியை, யேகாந்தத்தில் அடையப் பெற்றவனேயாகிக் கண்டுகொண்டு களிப்புடன் வீற்றிருப்பேன், சர்ப்போதில் ஹிமவதாதிய கலங்களில் அம்புதங்கள் அஸ்தமித மாவனபோலப் பிறவிடய ஆசைகளியாவுமே அடியோடும் அழிந்தேபோயினவாம், இத்தேகமியான்எனவும், இத்தன ராச்சியாதி யென்னது எனவும், வித்தாரமாகத் தோற்றுகின்ற அசத்தியரூபத் தோற்றத்தை மெய்யுணர்வின் பலத்தால் உள்ளிருந் தொழித்தேன், வெளியிலிருந்து உட்சென்றவற்றை மீண்டும் வெளியே தள்ளினேன்.

(ச.) துலேத்திலேன் = சிக்ஷித்திலேன், துலேத்து = செவ்வையாகச் சிக்ஷித்து, இயைத்தலால் = சமமுதலிய குணத்தால், பரமாநந்தந் தோற்றுவிக்கும் = பரமானந்த சாதனமான, நல்லறிவாஞ் சோதி = ஆன்மாவை, இவனுனென திங்கிலையெனும் = அகம மாபிமானங்களோடு, உள் = நிடமாயகத்தில் விளங்கும், மெத்தப்பொய் = மிகுந்த அசத் தியத்தையகற்றினேன். மூலம், பிருண்டு, வித்தம் = சித்ரிதம் = துலேக்கப்பெற்றது. குணம் = கோர்க்கும் நூல். (28)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இப்போதியம்பியதைச் சுருக்கி யுபசங்சரித்து விவேககுருவை வணங்கி நிருவிகற்ப சமாதியையடைந்தான் ஜனகர்பிரான் எனல்:—பேதிக்குமென்பது.

பேதிக்கு மனமென்னும் பெரும்பகையை முழுவலியாற் பிளந்துவென்றேன்
வாதித்த துயரெல்லா மாற்றினே னுபசாந்த வாழ்வுபெற்றேன்
சாதித்த விவேகமே யுனேவணங்கி னேனென்று சனகர்கோமான்
சேதித்த மனவலேவெல் லாமொழித்துத் தானேசித் திரம்போனின்றான்.

(ப - ரை,) பேதிக்கும் மனமென்னும் பெரும்பகையை = உள்ளேயிருந்து துன்புறுத் தும் மனமென்று சொல்லப்பட்ட மிகவலுவுள்ள சத்துருவை, முழுவலியால் = சர்வம் பிரஹ்மமயம் என்னும் பெரும்பலத்தால், பிளந்துவென்றேன் = சொரூப நாசஞ்செய்து செயித்தேன், வாதித்ததுயரெல்லாம் மாற்றினேன் = இடர்ப்படுத்திய துக்கங்களே யெல் லாம் பொடிப்படுத்தினேன், உபசாந்தவாழ்வு பெற்றேன் = பரமசாந்தமாகிய பதத்தினே யடைந்தேன், சாதித்த விவேகமே = இதனே மேவும்படி செய்வித்துத் தந்தபகுத் துணர்வே, உனேவணங்கினேன் = உன்னைப் பன்முறை நமஸ்கரித்தேன், என்று = என் பதாக, சனகர்கோமான் = ஜனகமகாராஜாவானவன், சேதித்தமன அலேவெல்லாம் ஒழி த்து = சரப்பலித்திம் சாந்தியடையப் பெற்று, தானே சித்திரம்போல் நின்றான் = சுயம் பித்தியிலமைத்த பதுமைபோல நிருவிகற்ப சமாதியிலிருந் தாநந்தித்தான்.

(ஸ்ரீ - வீர.) சமாதியப்பியாசத்தானே மிகவும் பலவாஞ்கிய மநோரிபுவை எஞ்சுதலின் றிக்கொன்று, ஏழாவது பூமிவிசிராந்தி வடிவப்பரமசாந்தியை யடையாகிற்பேன், இத்துணை தூணைசெய்த விவேகமே உன்பொருட்டு நமஸ்காரம் நமஸ்காரம், இந்தவண்ணஞ் சிந்தித் துக் கொண்டிருந்த அரசன் சந்நிதியில் துவாரபாலன் வந்துநின்று, ஹேதேவ! ஸ்நாநத்திற் கெழுந்தருளுகியாக வேண்டும், குசுமகர்ப்பூர குங்குமநீர்க்குடமங்கையர் காத்துளார், என் பதாதியாகக்கூறிப் பிரார்த்திப்ப, "எத்துணைமாத்திரம் இந்தராஜ்ஜிய மென்பது, இதனு லுண்டாம் சுகமென்று நின்றதுதான் எம்மாத்திரம்? இக்கணபங்கியால் எனக்கீண்டுண் டாம் பயன் யாதொன்றையுமே கண்டிலேன், மித்தையாய சாம்பரீமாயா ஆடம்பரமும்; மிருகதிருஷ்ணு ஜலம்போன்றதும் ஆயயாவற்றையுமே விட்டொழித்து, பரமசாந்தமுற்ற நிஸ்தரங்க சமுத்திரம்போல, ஏகாந்தத்திலேயே யிருப்பேன், இவ்வசத்பிராய போகவி

ஜிரும்பிதங்களானே எனக்குண்டாயது போதும்போதும், எல்லாக் கருமங்களேயும் விட்டொத்தொலத்து, கேவலம் சுகமாக வீற்றிருப்பேன், ஹேசித்தமே! இப்போகாப்பியாச குசம் பிரமத்தினின்றும் சுகலவ ஆசுவாத சதுரத்தன்மையை யொழித்தி. ஜன்மஜராஜாட்டிய ஜாலஜம்பால சாங்கியின் பேறுண்டாம்'' என்பதாதியாகச் சிந்தித்து ஜனுகமகாராஜன் சித்தத்தின் சஞ்சலத்தன்மைகளே யெல்லாம் அறகீக்கிச் சாந்தமுற்று லிபிகாம அர்ப்பித உபமஞுகித் தூஷ்ணீமாகவே எழுந்தருளி யிருந்தனன்

(ச.) மனமென்னும் பெரும்பகையை = அதிபலமுள்ள சத்துருவென்னும் மனதை, வணங்கினேன். ஸ்ரீ வசிஷ்டர், என்று நின்ரூன் = சும்மாவிருந்தான். மூலத்தில் அதிபல வாஞகிப் பகைவஞும் மனத்தை நெரித்துக்கொல்வேன் என்பது அன்னுவயம்.

(ஸ்ரீ - வீர - அ - கை) நிருவிகற்ப சமாதியினின்றும் எழுந்தபின்ஞய்ந்ததைக் குறித்துக்கூறத் தொடங்கல்:—வாளாவென்பது.

வாளாசித் திரம்போல நெடிதிருந்து சனகர்பிரான் மாய்த்துநெஞ்சை
மீளாநல் லுபசாந்த நிறைநெஞ்சா லுலகியல்பை மேவிப்பார்த்தான்
ரூளாண்மையா லியற்றும் பொருளேது கைக்கொள்ளத் தக்கதேது
கோளா னகற்பனையென் சுபாவவறி வாமெனக்குக் குறிக்குங்காலே.

(ப - ரை.) வாளாசித்திரம்போல நெடிதிருந்து = தூஷ்ணீமாகச் சித்திரப்பதுமை யொத்து நீள்போது சமாதியிலிருந்து, சனகர்பிரான் = சனேபகாரியாய அம்மன்னவன், மாய்த்து நெஞ்சை = மனத்தின் சொரூபத்தை நாசஞ்செய்து, மீளாநல்லுபசாந்த நிறை நெஞ்சால் = மீண்டுமிகவும் சமசாலியாகிய மனத்திஞலே, உலகியல்பை மேவிப்பார்த் தான் = ஜகத்நியற்கையை நன்குசிந்தித்து நாடிஞன், தாளாண்மையால் இயற்றும் பொரு ளேது = பிரயத்தனத்திஞற் சாதிக்கத்தக்க வத்துயாது, கைக்கொள்ளத்தக்கது ஏது = உபாதேயமாயது யாது, சுபாவ அறிவாம் எனக்குக் குறிக்குங்கால் = இயற்கையாகவே சித்தாயிருக்கும் எனக்கு உத்தேசிக்கும்போது, கோளான கற்பனையென் = குற்றமுற்ற கற்பனையாதனது?

(ஸ்ரீ - வீர.) மூன்மொழிந்த வண்ணம், ''எதஞலுதித்தவை வாழுகின்றன'' என் ஞுஞ் சுருதியிஞனே பிராணிஜீவன நிதானமாயபரீத்திற் சிறிதுபோது விசொந்தியுற்றுச் சும் மாவேயிருந்து, சர்வஜன உபகாரியாய ஜனகராஜாவானவன்; மீண்டு சமசாலியாய மனத்தி ஞலே நன்காலோசிக்கத் தொடங்குஞன், யாதுகொள்ளத் தக்கதாயுளதீண்டு யத்தனத்தால் நன்குசாதிப்பேன், எவ்வழிவில்லாததாய வஸ்துவின்கண்ணே திருஷ்டியைப் படுத்துவேன். எனக்குக் கிரியாபரத் தன்மையானே தான்யாது செய்யத்தக்கது, கிரியையற்றதன்மையாற் ரூன் யாதுசெய்யத்தக்கது, யாது ஜன்மத்தை யடைந்ததோ அதுதிண்ணமாக விநாசத்தை விட்டேயிராது அல்லவா! ஜந்யபாவத்திற்கு விநாசநியமத்தால் என்பது கருத்து. அசத்தி னின்றும் எழுந்த இக்காயம் தொழிலோடுங் கூடுக அல்லது வினையைவிடுக. தேகசலன அசலனதசைகளில் துல்லிய ரூபமாயிருக்கும் தூய்தாயகின்மாத்திர சுபாவமுற்ற எனக்கு என்னதான் கெட்டுவிடுமோ! மூலபாடபேதம் கூணம் ஸ்திர்வா, சிரம் ஸ்திர்வா.

(ச.) நெடிதிருந்து = ஞானஜீவிதனுய் நெடுங்கால்மிருந்து, மாய்த்து நெஞ்சைமீளா, உலகியல்பைமேவி = உத்திதனுய், பார்த்தான் = சிந்தித்தான், ஸ்ரீஜனகன், தானாண்மை யால் = எத்தனத்திஞல், இயற்றும் = இவ்விடத்துயான் சாதித்தற்குரிய, பொருளேது = யாதிருக்கின்றது, கைக்கொள்ளத் தக்கது = உபாதேயப் பொருள், சுபாவ அறிவா

மெனக்கு = இயற்கையாகவே நிஷ்களங்கமான சற்சித்துரூபமாகிய திரிவெனக்கு, கற்பனை யென் = என்னகற்பனை யிருக்கின்றது = எவ்வளவுங் கற்பிக்கத்தக்கதின் றென்பது பொருள். பாடபேதம், மாய்ந்தநெஞ்சை மீளா = இறந்தமனதை மீண்டுநாடாத. (30)

(ஸ்ரீ - வீர - அ - கை.) விசிராந்தி விசாரத்தை யுபசங்காரித்தல்:—சுத்தமென்பது,

சுத்தமாய்ச் சொரூபமா மென்னுருவ லால்வேறு தோன்றக்காணேன்
வத்தியான் வாராத பொருணயவேன் வந்தபொரு ளனைத்துந்தள்ளே
னித்தமாய்த் தன்னிலையி னிற்குமென தறிவுருவி னிலையாநிற்பே
னுத்தவா றேதுவரு மதுவருக வென்றழுந்தி யொருமையானேன்.

(ப - ரை.) சுத்தமாய்ச் சொரூபமாம் = தூய்தாய் அறிவுருவாம், என்னுருவலால் = எனதுவடிவமே யல்லாமல், வேறு = அயலொன்று, தோன்றக் காணேன் = பிரதீதியாக்கண்டிலேன், வத்தியான் வாராதபொருணயவேன் = வாடியான் அடைவுறுப் பொருளில் ஆசைவையேன், வந்தபொருள் அனைத்துந்தள்ளேன் = அடைவுற்ற வஸ்து எதுவாயினும் அங்கீகரிப்பேன், நித்தமாய்த் தன்னிலையில் நிற்கும் எனது அறிவுருவில் = அழியாத தாய்ச் சுவஸ்தமாயிருக்கும் என்னுடைய சித்துருவத்தின் கண், நிலையா நிற்பேன் = அசையாமற்றிதிபெறுவேன், உத்தவாறு = உற்றவண்ணம், ஏதுவரும் = யாதுபிராப்தமாமோ, அதுவருக = அஃதுண்டாகுக, என்றழுந்தி யொருமையானேன் = என ஊன்றி ஏகமாயினேன்=விகற்பமற்றேன். வற்றி உற்றவென்பன எதுகைநோக்கி வத்தி உத்த எனவாயின.

(ஸ்ரீ - வீர,) அசம்பிராப்தமானதை யபிவாஞ்சியேன், சம்பிராப்தமானதைத் தியாகியேன், சுவஸ்தமாய ஆன்மாவின் கண்ணே யிருப்பேன், யாதெனக்குப் பிராரப்தம் தந்ததாக வுளதாமோ அதுவேயுளதாகுக, அயலொன்றும் வேண்டாம், எனக்கு எந்நிரதிசயானந்தரூப ஆந்தரமுளதோ அதுவேயுளதாகுக, பாகியமொன்றும் வேண்டாம்; ஆகவின் எழுந்து இக்காயமானது, பூர்வபூர்வ விவகாரமுறையி லடைவுற்ற பஞ்சதமாகிய தொழிலைப் பயிலுக, அசையாமல் வைக்கப்பட்ட இத்தேகந்தான் என்னே கலமுடைத்தாம், காய்ந்தன்றே போம், அஃதென் னின்றியமையாததா ? அன்றென்பதாம். இரஞ்சனங்களே விட்டுச் சமரூபத்தில் அழுந்தி நிட்காமமுற்ற மனம்பெற்றபோது காய அவயவஜன்னிய காரியங்கள் அசைவு அசைவின்மைகள் துக்கவினை வயத்தால் வந்தவைகள், புண்ணிய பாவ அநுதய இலக்கணபலத்தில் ஒப்பானவைகளேயாம் அஃதெங்ஙனமெனின், கருமஜன்னியங்களாய பல ஜீவிகளில் மனத்தாற் கருத்துருதை போக்துருதைகளாம், அவைசாந்தமாகிய வழியோகார்க்குச் செய்துஞ் செய்யாமையேயாம், உண்டும் உண்ணுமையேயாம். (31)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஆராய்ந்த அரசன் உலாவியதுணர்த்தல்:—வானென்பது,

வானேகுகதிரிரவி நாளியற்றும் வாறென்ன வந்துவந்து
தானேதோன் றியதொழிலைப் பற்றின்றிச் செய்துமெனச் சனகனெண்ணித்
தீனேய வருகாலஞ் செல்கால மிமையளவுஞ் சிந்தைசெய்யா
னூனேறு நிகழ்காலத் தோரிமைப்பி னகைதலோடுலாவ லுற்றான்.

(ப - ரை.) வானேகுகதிரிரவி = ஆகாயத்தில் கமனஞ்செய்யும் சகஸ்திரகிரணங்களோடு கூடிய சூரியன், நாளியற்றும்வாறென்ன = தினஞ்செய்யும் முறைபோல, வந்துவந்து தானேதோன்றிய தொழிலை = துக்கவினை வயத்தானே தானேவந்துவந்து பிரதீதியாகிய காரியங்களை, பற்றின்றி = வாதனைக்கிட மில்லாமல், செய்துமென = செய்வோ

மென்று, சனகன் எண்ணி = ஜனகமகாராஜா சிந்தித்து, தீனேய வருகாலம் செல்காலம்= அநுபவிக்கும்படியாக வருங்காலம் சென்றகாலம், இமையளவும் = அணுமாத்திரமும், சிந்தைசெய்யான் = எண்ணுன், ஊனேறு நிகழ்காலத்து ஓரிமைப்பில் = சரீரசம்பந்தமான வர்த்தமான நிமிடத்தோ, நகைததோ டுலாவலுற்றுன் = புன்னகைப்புடன் புரிதலாயினுன்.

(ஸ்ரீ - வீர.) முன் மொழிந்த வண்ணம், சிந்தித்துப்பார்த்த அந்த ஜனகமகாராஜன் பிராரப்தவசத்தால் வந்ததொழிலே, தின்பதி-தினகரணமாறு, கருத்துருத்வ போக்துருத்வ அபிமானவடிவப் பற்றற்றவனுய்ச் செய்யவெழுந்தான். இஃதெனக்கிஷ்டம்; இஃதெனக் கனிஷ்டம் என்னுங் கற்பனைகட்கு நிமித்தபூதமாய வாசனைகளைச் சித்தத்தாற்றுனே நன்றாக விட்டு துகர்வினைவயத்துற் றவற்றைச் சாக்கிரத்தின்கண்ணே சுழப்தனைப்போலச் செய்யத் தொடங்கினுன்; தூலசூக்குமதேகாதி யபிமான அபாவமாகவே ஜாக்கிரத்துச் சுழுப்தி கட்டு விசேடமின்மையின் என்பது கருத்தாம். செய்யும்போதுஞ் சிறிது திருஷ்ய சம்பந்த மூற்றிலன், என்னை, இல்லாத பொருளோடும் என்ன சம்பந்தமுண்டாம், இவ்வண்ணம் பல ஆராய்ச்சியின் முதிர்ச்சியானே ஆண்டுத் தன்னிராச்சியத்தில் ஜனகமகாராஜனுனவன், சகல காரியங்களையும் செய்தனன், என்றாலும் முன்போன்று அகந்தை மமதைகளானே மோகத்தை யடைந்திலன், கலங்காத ஞானியாய்த் தீரனுனன், அதுமுதலாகவே யாவரும் புகழும் புண்ணியவானுய ஜனகன் ஜீவன்முக்தனுய் ஞானவிருத்தனுய்ப் லோகப்ராவர முணர்ந்தவனுய் வாழ்ந்துவந்தனன். செய்துஞ்செய்யாத வன்போன்ற சுழுப்த அவஸ்தித னேயாய ஜனகமகீபதிக்குச் சர்வபாவங்களி னின்றும் இராகாதி வாசனைகள் எல்லாம் எல் லாவாற்றுனுமே அஸ்தமித்துப் போயின, வாசனைக்ஷயபலம் பகர்தல்:—தீனேயவென்ப தாதி. வருவதை யெண்ணுவதுமில்லை, சென்றதைச் சிந்திப்பதுமில்லை; வர்த்தமான நிமிடத் தோ புன்னகையுடனே பொருந்தியதைப் பொருந்தினுன், வாசனைவசத்தாற் பூர்வஅத்தர அநுசந்தானம், அதனுனே, பழைய அநிஷ்டகாரிகளில் வெறுப்பு, ஆகாமிப் பிரியப் பொருட்டு விருப்பு, அதனினின்றும் பிரவிருத்தி யெனச்சர்வ அநர்த்த அடைவரும். வர்த்த மான மாத்திர தரிசனமோ, துக்கத்திற்குமே பேக்ஷையாய்ப் பிரியத்தன்மை யநுசந்தான மாகாதாமெனச் சகஜாகந்த அநுவிருத்தியானே புன்னகைகொண்டே புரிந்துலாவினுன் என்பது பொருளாம்.

(க.) பொழுதுகழித்து விளையாடினுன்; யாவற்றையும் அநுசரித்தான் என்றதாயிற்று.;()

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஆக்கியான உபக்கிரம பீஜத்தை நினைப்பூட்டிக்கொண்டு உபசங் கரித்தல்:—பேசிய வென்பது.

பேசியதன் விசாரத்தாற் சனகர்பிரான் பெரும்பேறு பெற்றதல்லால்
வாசியுளு மற்றுன்றுல் வந்ததல்ல வாரீச மலர்க்கண்மாலே
யாசிலதாய்ச் செவ்வியதாய்த் தனதான விசாரத்தா லடைவதல்லாற்
றேசிகரில்லாவீனர் செய்தொழிலாற் பெறலாமோ சிற்சொரூபம்.

(ப-ரை.) பேசியதன் விசாரத்தால் = கூறியதனது ஆராய்ச்சியினுல், சனகர்பிரான் = ஜனகராஜாவானவன், பெரும்பேறு = பெரியதா யடையத்தக்க பிரயோஜனத்தை, பெற்ற தல்லால் = அடைந்ததேயன்றி, வாசியுளமற்றுன்றுல் = நன்மையைப் பயக்கத்தக்க அயலொன்றினுல், வந்ததல்ல = அடைந்ததல்ல, வாரீச மலர்க்கண்மாலே = தாமரையிதழ் போன்ற திருநேத்திரங்களையுடைய ஹரியின் அபரவடிவமே, ஆசிலதாய் = குற்றமற்றதாய், செவ்வியதாய் = சிறப்புற்றதாய், தனதான விசாரத்தால் = தன்னுடையதான ஆராய்ச்சி யினுல், அடைவதல்லால் = பிராப்தமாவதே யல்லாமல், தேசிகரில்லா வீனர் = ஆசிரிய

ரில்லா நீசர், செய்தொழிலால் பெறலாமோ சிற்சொரூபம் = சிதானந்த வடிவத்தை இயற்றும் வினையினால் எய்தலுமாமோ.

(ஸ்ரீ - வீர.) ஹே தாமரசேஷண ! அந்த ஜனகராஜாவால் தனது விசாரவசத்தானே, எஞ்சுதலின்றி யடையத்தக்க வெல்லாமே, மறந்தகண்ட சாமீகரம்போலும் அடையப்பெற்றனவாம், வேறொரு இச்சையால் இலவாம். ஆகையினாற் பலபரியந்தம் விசாரஞ்செய்யத்தக்கதாம், இடையில் வெறுப்பினை யடைந்து விட்டுவிடலாகாது, அவ்வளவு அவ்வளவு தன்னுடைய மனத்தினாலேயே நன்காராய்க. எவ்வளவு எவ்வளவு விசாரங்களின் பயன்றன் எல்லை நன்கடையப் பெறுமோ, சற்சாஸ்திர விவேகாதி பரிஷ்கிருதங்களாய்த் தன்னுடைய ஸன்னாஹோபாஹ குசலங்களாய மதிவிருத்திகளாம் பிரஞ்ஞைக ளென்னுஞ் சகிகளானேயே; உயர்ந்தபதமானது அடையப் பெறலாம், வேறெக்கிரியையினாலுமே அடையமுடியாதாம்.

(க.) பெறும்பேறு = அடைதற்குரிய ஆன்மபதத்தை, மற்றொன்றாலும் = மற்றொரு கிரியையானும், வந்ததல்ல = பெற்றதன்று, அவ்வேதுவினாற் சகல முமுக்ஷுக்களாலுந்தம் விசாரத்தினாலே யடைதற்குரிய ஆன்மபதம் அடையப்பட்ட தன்றி இதரக்கிரியையாலடையப் படவில்லை யென்றதாயிற்று, (33)

(ஸ்ரீ-வீர - அ-கை.) பிரஞ்ஞையினாலே, யடைய வேண்டியதாய பிரமபதம் அடையப் பெறுதலின், தொடக்கத்திலிருந்தே அந்தப் பிரஞ்ஞையை வளர்க்கவே பிறமுயற்சிகளையும் உபயோகிக்கவேண்டு மெனல்:—புறவென்பது.

புறப்பேறு கூவேண்டி யியற்றுகின்ற புண்ணியத்தைப் புவியி லுள்ளோர்
சிறப்பான நல்லறிவு மிகவேண்டு மென்றுமுதற் செய்யிற்பேறு
மிறப்பான வாபத்து வினைநிலமா யிருந்துதுயர் வேலியாகிப்
பிறப்பான நச்சுமர வித்தாகும் பேதைமையைப் பிளக்கல்வேண்டும்.

(ப - ரை.) புறப் பேறுகளை வேண்டி = பாகியப் பிரயோஜனங்களை விரும்பி, இயற்றுகின்ற புண்ணியத்தை = செய்யாநின்ற யத்தனத்தை, புவியிலுள்ளோர் = உலகிலுள்ள முமுக்ஷுக்கள், சிறப்பான நல்லறிவு = விசேடமான நல்லபிரஞ்ஞை, மிகவேண்டு மென்று = மிகவும் உண்டாகி வளரவேண்டு மென்பதாக, முதல் = பூர்வம், செய்யிற் பேறும் = செய்வார்களேயாயின் நல்ல பிரயோஜனமாம், இறப்பான ஆபத்து = பெருந்துன்பப் படுத்துவனவாய ஆபத்துகள் எல்லாம், வினைநிலமாய் = உண்டாம், பூமியாய், இருந்து = திடமுடனிலைத்து, துயர்வேலியாகி, = துக்கக்கடலாகி, பிறப்பான நச்சுமர = சம்சாரமாகிய விடவிருக்ஷங்களின், வித்தாகும் = பீஜமாகும், பேதைமையை = பிரஞ்ஞாமாந்த்யத்தை, பிளக்கல்வேண்டும் = விநாசஞ் செய்யவேண்டும்.

(ஸ்ரீ - வீர.) ஜனங்களால் வெளிப்பொருள் தேடுவதில் எதேமுயற்சி செய்யப்பெறுகின்றதோ அதேமுயற்சி பூர்வம் பிரஞ்ஞைவளர்த்தற் பொருட்டுச் செய்யத்தக்கதாம். எத்தகைய உத்யோகமோ, அத்தகையதேசாலும் அதிக சிரமம்யாதொன்றும் வேண்டியதில்லை யென்பதாம், பாடுபடாமலா இருக்கின்றோம், பட்டும் பயனில்லை, பயனுறு தொழிலன்மையின், இதனை ஸ்ரீபர்த்ருஹரியாரும் உணர்த்துவர் "பொறுமையிற் பொறுக்கே மிலத்தினது சிதபுற்சுக மகிழ்ந்தினாற் போக்கேம், பொறாவினம் பொறுவாக்குளீர் வளியழற்சிப் பொங்கருர் புகழ்தவம் புரியேஞ், சிறுதனமிரவும் பகலுமே நினைந்தேஞ்சி வன்பதமில்லுயிர் செயித்தே, வறிதவ்வப்பயனுன் வஞ்சியாமுனிவர் வினைதருகருமமே வினைந்தேம்" சகலதுக்கங்களுக்கும் தூர்த்தசைகட்கும் பரம அவதியாகியும், ஆபத்துக்கட்கெல்லாம் உத்தமமான

கோசமாகியும், சம்சார விருக்ஷங்கட்குப் பீஜமாகியும், இருக்கும் பிரஞ்ஞாமாந்தியத்தை விநாசஞ்செய்ய வேண்டும். பிரஞ்ஞையை வளர்த்தால் அதுவேசர்வ சம்பத்தின் வைப்பிட மாம், ஆத்தியந்திக துக்கக்ஷயத்தை யாற்றும் சாதனமாம், துக்கமுதலியவற்றைப் பயக்குங் கருவியாம், கல்வியுஞ் செல்வமும் பிறவுந்தரு மென்பதை யுய்த்துணர்ந்து கொள்க.

(ச.) புறப்பேறுகளை = வாகியார்த்தங்களை, புண்ணியத்தை = எத்தனவிசேடத்தை, முதற்சிறப்பான நல்லறிவு = மூன்பு பிரஞ்ஞை, பிறப்பான = சம்சாரமென்னும். பேதை மையை = பிரஞ்ஞா மாந்தியத்தை, பிளக்கவேண்டும் = நாசஞ்செய்யவேண்டும், (34)

(ஸ்ரீ-வீர - அ-கை.) போதங்கற்பகம் போன்றதே யெனவும் வாதையதற்பமும் வாரா தெனவும் வழங்கல்:—இலங்கென்பது.

இலங்கியசிந் தாமணியா மிதயமெனுஞ் சரக்கறையி லிருக்கும்போ தந்
கலங்கலிலா விவேகியர்க்குக் கருதுபொருள் கற்பகம்போற் கணத்தினல்குந்
துலங்குவிசா ரம்படைத்துப் பேதைமைபோய் நல்லறிவு தோன்றிஞரை
விலங்குகவ சத்தோரை யம்புகள்போற் காமாதி விகற்பந்தாக்கா.

(ப - ரை.) இலங்கிய சிந்தாமணியாம் = சிறப்புற்றேங்குஞ் சிந்தாமணியாகிய, இதய மெனுஞ் சரக்கறையில் = இருதயமாகிய கோசத்தில், இருக்கும்போதம் = இராநின்ற இப் பிரஞ்ஞை, கலங்கல் இலாவிவேகியர்க்கு=விக்ஷேபமில்லாத விவேகிகட்கு, கருதுபொருள்= சிந்தித்தபலத்தை, கற்பகம்போல் = கற்பகக்கொடிபோல, கணத்தில் நல்கும் = க்ஷணத் திற் கொடுக்கும், துலங்குவிசாரம் படைத்து = விளங்காநின்ற ஆராய்ச்சிவிஞ்ஞாந்து, பேதை மைபோய் = அறியாமையகன்று, நல்லறிவுதோன்றிஞரை = உண்மையுணர் வுடைய வரை, = விலங்குகவசத்தோரை யம்புகள்போல் = காப்பாகும் கவசமுடையவரைச் சாய கங்கள்போல, காமாதி விகற்பந்தாக்கா = பலதோடாதி பாதகம் பண்ணுவாம்.

(ஸ்ரீ - வீர.) இருதயகோசத்தி லிருப்பதாகிய இனியநல் லறிவுதாமெனுஞ் சிந்தாமணி, விவேகிகடமக்கிது வேண்டிய பலமெலாம் கணந்தனிலுதவிடுங் கற்பகக்கொடிபோல், கப் பலானதுகடலில் ஒழுங்காகச் செலுத்தப்பெறின் நானேக்கரையடைவிக்கும், அல்லாக்காற் சுழன்று துன்புறுத்தும், அதுபோலவே இச்சம்சாரத்தில் மதியானது கன்முக விவேக வைராக்கியாதி சன்மார்க்கத்தில் பொருத்தப் பெறுமேலாயின் முத்தியங்கரையை யடைவிக் கும், நீதாக இராகத்துவேட லோபாதி அசன்மார்க்கத்திற் செலுத்தப்பெறிஞே ஆபத் தையேதரும், சுழன்றுவரும். கவசம்பூண்டு கொண்டவனேயம் புகழிகள்போல=மோகமுழு வது மகன்று பிரஞ்ஞைமிகுந்த விவேகியை, ஆசையும் அதன்பக்ஷத்துற்றனவாய லோப மோககுரோத சிந்தாதிகளாங் கணங்களும்: அவற்றினின்றும் உதிதமாம் துவேஷசிந்தா விஷாதாதியவாய தோஷங்களும், சிறிதும் பாதிக்கமாட்டா.

(ச.) போதம் = பிரஞ்ஞையானது, கருதுபொருள் = சிந்தித்தபலத்தை, விலங்கு = தடைசெய்யும். (35)

(ஸ்ரீ-வீர - அ-க்க.) அகங்காரமானது அதிவச்சிரமெனினும் விவேகம் விஞையவிலகும், அது வினைவதும் ஆசையறிஞமெனல்:—பரமவென்பது.

பரமாதித் தணமறைத்துக் கறுத்தறிவற் றுக்களித்துப் படர்ந்துமீண்டு
நிரமான வகங்காரமூகில்விவேகக் காற்றுற் சிதறிப்போகும்
வரமான பதம்வேண்டிற் றன்மனத்தி ஞசைமுதன் மாற்றவேண்டு
மூரமான புவியையுத லுழுதன்றே விஞைபயன்க ளூறுகின்றுரே.

(ப - கை.) பரம ஆதித்தனே=பரம அருக்கனே, மறைத்து=ஆச்சாதித்து, கறுத்து=இருண்டு, அறிவற்று = ஜடவடிவாகி, களித்து = மதத்து, படர்ந்து = விசாலித்து, மீண்டுதிரமானதிருசியங்களில் மறித்தும் மறித்தும் பழகப்பழகத் திடப்பட்டுக் கொண்டேவாராநின்ற, அகங்காரமுகில் = அகங்காராம்புதமானது, விவேகக்காற்றால்=பிரஞ்ஞை வடிவ வாதத்தினாலே, சிதறிப்போரும் = பாதிக்கப்படும், வரமானபதம் வேண்டில் = மேலானபதத்தை விரும்பில், தன் மனத்தினுசை=தனது உள்ளத்திலுள்ள பேராசையை, முதல் = ஆதியில், மாற்றவேண்டும் = நீக்கவே வேண்டும், உரமானபுவியை = கடின மானபூமியை, முதல் உழுதன்றே = பிரதமத்தில் பண்படுத்தியே யன்றே, விவேபயன்கள் உறுகின்றார் = உண்டாம் உண்பொருள்களாம் பலனைக் கிருஷீவலர் அடையாகிற்பர்; ஏ = இருபாலும் அவதாரணப் பொருட்டாம்.

(ஸ்ரீ - வீர.) பரமான்மவடிவ அருக்கன் றன்னை மறைப்பதுவாய், ஜடாத்மாவாய், லடக்கட்கு அபேதமுண்மையின் அம்புதபஷத்தில் ஜலாத்மாவாய், விஸ்தீர்ணமாய், அஸ் வச்சமாய் நீலமாய், வளரும் அகங்கார அம்புதம் =மேகம், மதோன்மத்தமாய்த் திரியினும், பிரஞ்ஞாவாதத்தானே பாதிக்கப்படும். ஒப்பில்லாததா யுயர்ந்ததான பதத்தையடைய விரும்பிய அதிகாரியானவன் பிரதமம் இம்மதியையே லாலனஞ்செய்யத்தக்கது. பாலனைப் போல முறையாக விவேகசிஷ்ணத்தாற் சோதிக்கத்தக்கது என்பதாம்: கிருஷியின் பலமாகிய தானியாபி விருத்தியை விரும்பிய மேழிச்செல்வனால் முதல்முதலில் பிரசித்தமாக, தரையே சீர்திருத்தப் பெறுகின்றதுபோலும்.

(ச.) விவேகக்காற்றால் = பிரஞ்ஞையென்னும் மாருதத்தினால், ஆசைமுதன் மாற்ற வேண்டும் = அவாமுதலியவற்றை மாற்ற, இப்பிரஞ்ஞையை முன்புவளர்க்கவேண்டும். (36)

ஜனகராஜன் கதை முற்றிற்று. ஆகதிருவிருத்தம் (734) (8062)

புண்ணிய பாவனர் கதை.

——(*)——

(ஸ்ரீ-வீர - அ-கை.) மிகத்தெளிந்து கெம்பீரமாய் எங்கணும்மேவி அத்தியாத்ம அதிகாரத்தானே சகல தேவர்களாம் இந்திரியங்கட்கும் ஈசனாய் வசியாய்த் தேஜோமயமாய பரமாத்மாவைச் சுயம் பார்த்தபோதே, யெல்லாத் துக்கதிருஷ்டிகளும் அழிந்துபோமென் நிதமுரைக்கத் தொடங்கல்:—மோகவென்பது.

(ச-அ-கை.) முன்பு ஆகாசபலம் வீழ்வது போற்றெய்வகதியாற்பெற்ற சித்தர் கீதையின் சிரவணத்தினாற் சனகனுக்குச் சித்தோபசாந்தி சொல்லப்பட்டது, இப்போது முன்பு சென்ற அநேகஜன்ம சிந்தனை வசத்தாற் சித்திக்கும் ஆன்மஞானத்தினாற் சித்தத்தினது உபசமம் புண்ணியபாவனர் கதையாற் சொல்லப்படுகிறது, அதில் இப்போது சித்த உபசம உபாயங்களே யுபதேசிக்கின்றார்:—மோகமென்பது.

மோகவற்ச நாபிக்கொடி மூளத்தெழு மூலஞ்
சோகமாசுண மிருந்தர சாள்வதோர் சூழ
லாகமேமுத லியானெனைக் காணு மஞ்ஞான
மேகமாகிய பராபரந் தோன்றினு லிறக்கும்.

உபசமப் பிரகரணம்

அஉள

(ப - ரை.) மோகவற்ச நாபிக்கொடி = மோகமாகிய விடக்கொடி, மூளத்தெழு மூலம் = உண்டாகி யோங்குவதற்கு ஹேதுவும், சோகமாசுணம் இருந்து அரசாள்வதோர் சூழல் = சோகமாகிய சர்ப்பம் எழுந்தருளியிருந்து இராஜ்யபரிபாலனம் செய்வதற்கு ஒப் பற்றபுதரும், ஆகமேமுதல் யானெனக்காணும் = தேகமே முதலாயவற்றை யகம்மெனக் காணும், அஞ்ஞானம் = அறியாமையும், ஆகியது,) ஏகமாகிய பராபரந்தோன்றிஞல் இறக் கும் = அத்விதீயமாகிய பராபரவஸ்துவின் சாக்ஷாத்காரம் உண்டாஞல் நசிக்கும்.

(ஸ்ரீ-வீர.) மோகபீஜங்களாய துர்வாசனைகளின், முஷ்டிக்கும்முஷ்டிபோல உள்ளோடிட இரு மாகச் சங்கிராஹகங்களும், சித்தபூமியில் நடவுபெற்றவைகளும்; நாஞவிதமாய அத்தியாத்மீ காதி வேற்றுமையுற்ற ஆபத்துக்களின்றுயரங்களின் விருஷ்டிகளும், விருஷ்டிபோல அகஸ் மாத்தாகஎப்பக்கங்களினின்றும் சாம்பர்களைத் தூற்றுவனவும், ஆகியசுதிருஷ்டிகள்=அகந்தை மமதையாதிப் பிரத்தியயவடிவ இருதயக்கிரந்திகள், அந்தப் பராவரத்தைக் கண்டபோது வீண்டுபோம்; பராவரம் = மாதுஷாநந்தாதி ஹிரண்ய கர்ப்பாநந்தாந்தங்களாய சுக உத் கர்ஷங்கள், அவரங்கள் = நியூநங்கள் = கீழானவை எதனினின்றும், அத்தகையது பரா வரமாம். அவ்வாறே சுருதியுமியம்பும், இதயமாமிந்த விமலகோசத்தே யிரசமாய் விளங்கு நற்பிரமந், துதயமே விடுமச்சோதியே யெல்லாச் சோதிக்குஞ் சோதியாவதுவு, மிதயமே நிகழுமிதனை மெய்கண்ட விடத்தின் மற்றிதயநோ யெல்லாஞ், சிதையுமையுறவுந் தீருமெவ் வினையுஞ் செய்யினுஞ் செய்திலனுமால். மூலசுருதிப் பொருளிதுவாம்:—இந்த ஜீவன்முக்த னுடைய பரமாத்ம ஞானத்தின் பலமிதுபகரப் பெறுகின்றது, ஹ்ருதயகிரந்தி=அவித்யா வாசனைப்பிரசய புத்தியாகிய காமம், "காமங்கள்எவை யிவனிருதயத்துள்ளன" என வேறு சுருதியுமிருத்தலின்; இக்காமங்கள் இதயத்தைப் பற்றினவே யன்றி ஆத்மாவைப் பற்றினவல்ல; பித்யதே = பேதம் = விநாசம் ஆகின்றன; சித்யந்தே சர்வசம்சயா:=சர்வ ஜ்ஞேய விஷயங்களாகிய சம்சயங்களும் ஸைனிகர்கட்கு மரணபரியந்தமும் ஸ்ரீ கங்கையின் அருவிபோன் றொழுகப்பட்ட அவைதாமும். விச்சேதமாவனவாம்; அஸ்ய = சம்சயம் விச்சின்னமாகிய வித்தை நீங்கப்பெற்ற இஜ்ஜீவன் முக்தனுடைய கர்மாணி = விஞ்ஞான உற்பத்தியின் மூர்த்தினவும், ஜன்மாந்தரத்தில் அப்பிரவிருத்த பலங்கள் உடையனவும், ஞானோற்பத்தி சகபாவிகளும், ஆகியகருமங்கள், க்ஷீயந்தே = கெட்டுப் போகின்றன; இச் சன்ம ஆரம்பகங்களிலவாம், பிரவிருத்த பலத்தன்மையான்; சர்வஞ்ஞமாயும் அசம்சாரியா யும், காரணவடிவமாய பரமாயும், காரியவடிவமாய அவரமாயும் உள்ள தஸ்மிந்பராவரே = அந்தப் பராவரப் பிரஹ்மத்தைநேராக யானுயிருக்கின்றேன் என்று, திருஷ்டே = கண்ட போது, சம்சாரகாரண உச்சேதமாதலின் விடுபடுகின்றன்.

(ச.) மூலம், முஷ்டிகள் = மோகபீஜங்களே நடும் ஹேதுக்களாகிய விரல்கள் சுவித்த காரங்கள், திருஷ்டிகள் = தாரிசன ஹேதுக்கள், சுதிருஷ்டிகள் = பிராந்திகள், முஷ்டிகள்திரு ஷ்டிகள்என்னும் இருபதங்களுமே சுதிருஷ்டிகள் என்பதற்கு விசேஷணங்கள் என்று காணவேண்டும். மோகசோகமய அஞ்ஞானமானது ஏகபோதசுக சாக்ஷாத்காரத்தாலிறந்து போமென்பது திரண்டபொருள்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) எப்போதுஞ் சனகனைப்போல இராகவ, விவேக புத்தியிஞலே தன்னைச் சர்வஜகத் துற்பத்தியாதியதிஷ்டானப் பிரஹ்மவடிவமாகச் சாக்ஷாத்தநுபவித்துப் பரமபுருஷார்த்த லக்ஷ்மியுடையவனுகவும் அதனுனே சர்வ உற்கிருஷ்ட முடையவனுகவும் ஆகுதியென் றநுக்கிரகித்து, இப்போது ஆத்மப்பிரசாத உபாயத்தில் விசாரமே முக்கியமா மெனல்:—அநித்தமென்பது.

அநித்த மிச்சக மென்பதை நாடொறு மகத்தி
னுனித்து நோக்கினர் சனகனைப் போலதுண் ணறிவாற்
றனித்த மெய்ப்பொருள் பக்குவத் தறிகுவர் தனத்தால்
மனித்த ராற்கரு மத்தினுற் றேவரால் வாரா.

(ப - ரை.) அநித்தமிச்சகம் என்பதை = இவ்வுலகமானது அத்தியந்தம் அசத்து என் பதை, நாடொறும் = நித்தியம், அகத்தில் = உள்ளத்தில், நுனித்து நோக்கினர் = அதி சூக்குமமாகப் பார்த்தவர், சனகனைப்போல = ஜனகராஜாவைப்போல, துண்ணறிவால் = சூக்குமப் பிரஞ்ஞையால், தனித்த மெய்ப்பொருள் = கேவலமாய்ச் சுயமாய ஆத்மதத்து வத்தை, பக்குவத்து = பக்குவகாலத்தில், அறிகுவர் = உணர்வர்; தனத்தால் மனித்தரால் கருமத்தினுல் தேவரால் = தனத்தினுலும் பந்துக்களினுலும் கருமத்தினுலும் தெய்வங் களினுலும், வாரா = பவபீதர்கட்குச் சரணகதியுண்டாகா.

(ஸ்ரீ - வீர.) உலகமானது அநித்தியம் என்றும் சுழலும் இயற்கையதென்றும், நித்தி யம் உள்ளே விசாரஞ்செய்யப் பெற்றவனுக்கு நேரேகாண்பவனுக்கு, ஜனகனுக்கேபோலக் காலத்தால் ஆத்மாத்தானே வெளிப்படும்;ஜனனமரண சம்சாரத்திற்குப் பயந்தவர் தமக்குச் சரண்டருவன, தெய்வங்களல்ல கருமங்களல்ல தனங்களல்ல பந்துக்களல்லவாம்.

(ச.) அகத்தின் நுண்ணறிவால் = விசாரத்தினுல், நுனித்து நோக்கினர் = கூர்ந்து ணர்ந்தவர், பக்குவத்து = காலபரிபாகத்தால், தனித்தமெய்ப்பொருள் = சொச்சொரூ பத்தை, அறிகுவர், வாரா = ஆன்மஞானம் பெறவாராது. (2)

(ஸ்ரீ-வீர - அ-கை.) விசாரத்திற்கும் மூலம் புருடப் பிரயத்தினமே யாமென்னுங்கருத் தாற்கூறல்:—சனனமென்பது.

சனன மஞ்சினர்க் கவருடை முயற்சியே சரணும்
தினமு மிங்கிவ ணெனனுஞ் சிறுமைதான் சிதையி
னகமாயுல கெங்குமாம் விசால முண் டாகும்
மனனுறத் தனதுயர்ச்சி தான்காண்புற வருமால்.

பரிகீலனம்

(ப - ரை.) சனனமஞ்சினர்க்கு = பவபீதர்கட்கு, அவருடைமுயற்சியே = அவர் தமது பிரயத்தனமே, சரணும் = சரணகதியாம், தினமுமிங்கு = நாளுமிவ்விடத்தில், இவன் நான் எனும் சிறுமைதான் சிதையில் = அபிமேவ அகமென்னும் சங்கோசமானது கூடியமாயின், அனகமாய் = பவித்திரமாய், உலகெங்குமாம் விசாலமுண்டாகும் = புவன வியாபியாய விஸ்தாரம் உண்டாவதாகும், மனனுறத்தனதுயர்ச்சிதான் காண்புறவரும் = உள்ளத்திற் பொருந்துறுமாறு தன்னுடைய மேன்மையானது காணும்படியாகத்தோற்றும்.

(ஸ்ரீ - வீர.) மற்றோ, தனது பிரயத்தனமே பவபீதர்க்குச் சரணகதியாமன்றிப் பிறவன் றும்; தெய்வவயத்தாற் காலத்தாற்றானுகவே ஞானம் பவிக்கும், நமது பிரயத்தத்தாலென் னேயென்று யாவ ரெண்ணுவரோ அவர் நிந்திக்கத் தக்கவரேயாவர், முயற்சி விவேக வைராக்கிய விசாராதிகளிடத்தில் யாவர்தெய்வ நிட்டராவரோ; தெய்வம் பிரதிகூலமாயின் தற்பிரயத்தன சகத்திரத்தானும் உறுவதென், வெகுயத்தன சாலிகளும் தெய்வத்தாலிடை யூறு செய்யப் பெற்றவராய்க் காமக்குரோதமுதலியவற்றுனே தட்டுக்கெட்டுப் போதலைக் காண்டலின் என்பதாதி குவிகற்பப்பாயிணரோ; அவர்தம் மந்தமதி தொடர்புறுவ தாகா தாம் யாவற்றையுமே கெடுத்துவிடும் என்பதேக அகம்பாவத்தியாகமே பூர்ணத்மதரிசனத் தில் முக்கியமான சாதனமெனல்:— தினமுமென்பதாதி, இதுவேயான் என்பதாய இரவா

னது கூயமாகுமாயின், சுயம்சர்வகதமாய தனதுபிரகாசம் விஸ்தாரமாய்ப் பிரவிருத்திக்கும்; இதுவேயான் என்பதான சுருங்கியமதி விலயமா குமாயின் அநந்த புவனவியாபியாய்த் தனது விஸ்தாரம் இணையற்றேங்கும்.

(ச.) இவனுனெனும் = தேகபரிமிதாகாரனே, நான் என்கின்ற, சிறுமைதான்=அகங்காரமானது, தனதுயர்ச்சி = சுவான்மதத்துவ ஞானம், காண்புறவருமால் = உதயமாம், தேகபரிமிதாகாரனே நானென்கின்ற நிசிதமோ மயமாதலின், அதனது கூயோதயத்தில் எங்குநிறைந்த ஆத்மதத்துவஞானம் உதயமாம், என்னுஞ் சுலோகார்த்தத்தை யடக்கி மனனுறவெனக் கூறினர். (3)

(ஸ்ரீ-வீர - அ-கை,) கொள்ளத்தக்க விடயங்களி லிராகமும், தள்ளத்தக்க விடயங்களிற்றுவேடமும், உடையமனமே புருடனுக்குப் பந்தமாம் அயலன்ருமெனல்:—பற்றென்பது.

பற்றுவீ டென்றிரண்டிற் பற்றலும் விடுதலுனு
மூற்றவை மனத்துரூப மூயர்பந்த மதுவேறில்லை
மூற்றுறு பற்றுவீட்டின் மோகமுந் துயரும்விட்டுத்
துற்றுள பற்றுவீடு துடைத்தசை யாதுநிற்பாய்.

(ப - ரை.) பற்றுவீடு என்றிரண்டில் = உபாதேயம் ஹேயம் என்னும் இரண்டன் கண்ணும், பற்றலும் = கொள்ளலும், விடுதல்தானும் = விள்ளலும், உற்றவை = பொருந்தியவை, மனத்துரூபம்=மனத்தினது வடிவமாம், உயர்பந்தம் = பெரியபந்தமாம், அது = அப்பந்தம், வேறில்லை = அயலொன்றில்லையாம், மூற்றுறுபற்று வீட்டின் = வாசனையையதிகரிக்கச்செய்யும் கொள்ளத்தள்ளத் தக்கவற்றின், மோகமும் துயரும்விட்டு = மயக்கத்தையும் துக்கத்தையும் விட்டோட்டி, துற்றுளபற்றுவீடு துடைத்தசையாது நிற்பாய் = உள்ளத்தே பொருந்தியுள்ள ஹேய ஆதேய திருஷ்டிகளைத் தியாகித்துச் சேடத்தனுகி, சொச்சத் தன்மையைப் பஜிப்பாய்.

(ஸ்ரீ - வீர.) உபாதேயத்தைப் பின்றொடர்ந்து வீழ்தல், ஹேயத்தை அஸ்திரியந்தம் யேகாந்தமாக விடுதல், எனமனத்திற்குள்ள இதுவேபந்தமாம், மற்றொன்றுமின்றும் என்றுணர்தி. ஹேயங்களிற் பெருங்கேதத்தைப் பேணவேண்டாம், உபாதேயபரனுகவேண்டாம், ஹேய ஆதேய திருஷ்டிகள் = இராகத்துவேஷாத் மகதிருஷ்டிகள், அவ்விருத்திகளை யடியோடுமகற்றி, சேடித்த அவற்றின்சான்ருய்த் தேதேகநிஷ்டனுகி விசேஷ காலுஷ்ய சூனியத்தன்மையைப் பஜிப்பாயாக.

(ச.) பற்று = பற்றற்குரியதும், வீடு = விடுதற்குரியதும், ஆகிய, இவ்விடத்துப்பாமர திருஷ்டியால் பற்று வீடுகளின் விபாகமென் றுணரத்தக்கது. அசையாது நிற்பாய் = சம திருஷ்டியி லிருப்பாய். (4)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இப்போது ஜீவன்முக்த இலக்கண பூதங்களாய பஞ்சதசகுணங்களைக் கூறல்:—மயலின்மை யென்பது. 15

(ச-அ-கை.) சமதிருவ்டியி லிருப்பவனது இலக்கணமான குணங்களைக் கூறல்:—மயலென்றது.

மயலின்மை யநித்தமின்மை மடமின்மை வருத்தமின்மை
செயலின்மை கருமமின்மை தியக்கின்மை விகற்பமின்மை
பயமின்மை துவட்சியின்மை பகையின்மை குறைவொன்றின்மை
கயமின்மை கடினமின்மை கடினமாய்க் கழறலின்மை.

(ப - ரை.) மயலின்மை = ஆசையின்மை, அநித்தமின்மை = நித்தியத்தன்மை, மடமின்மை = ஞத்தன்மை, வருத்தமின்மை = துயரமில்லாமை, செயலின்மை = எண்ணமில்லாமை, கருமமின்மை = தொழிலில்லாமை, தியக்கின்மை = சமத்தன்மை, விகற்பமின்மை = நிருவிகற்பத்தன்மை, பயமின்மை = அச்சமில்லாமை, துவட்சியின்மை = கலக்கமில்லாமை, பகையின்மை = மைத்திரி, குறைவொன்றின்மை = சந்துவஷ்டி, கயமின்மை = சித்தமதித்தே யிருத்தல், கடினமின்மை = மிருதுத்தன்மை, கடினமாய்க்கழறல் இன்மை = இன்சொற்பகர்தல்.

(ஸ்ரீ - வீர.) ஆசையில்லாமை, அச்சமில்லாமை, மோசமில்லாமை, முற்றினுஞ்சமதை, பேசறிவுண்மை, பிறழ்மனமின்மை, காசுறுங்காயகருத் துருத்வாபினி வேசமில்லாமை விளம்புமெப்போதும், தேசுடைத் தெளிவு திருகலில்லாமை; மாசிலாத் திருதி மைத்திரி பிரீதில்லா யெவர்க்கும், ஆசிலாச் சுகிருத்தாயிடந்தன்மை, பேசியமனனம்பேணிடந்தகைமை, மீசெலாத் துட்டி மிருதுதைமிருது, பேசுதலெனவே பிறங்கிடுமெவையும்.

(ச.) மயலின்மை = ஈது எனக்கு வரவேண்டுமென்னும் வரும் பாவி விஷயேச்சை நிவர்த்தியும், அநித்தமின்மை = தேகவிலக்ஷணமான நித்தியான்ம பாவமும், மடமின்மை = பரிபூரண ஞானதிருவ்டியும் நிஷ்டையும், வருத்தமின்மை = மகிழ்ச்சியும், செயலின்மை = பற்றற்குரியதிலும் அப்பிர விருத்தியும், கருமமின்மை = அநிஷ்டத்தினதூ உம் அமரிகாரமும், தியக்கின்மை = அசஞ்சலத்துவமும், விகற்பமின்மை = ஏகாக்கிரசித்தத்துவமும், பயமின்மை = சர்வபூதாபயப்பிரதானத்திஞற்றனக்குப்பய நிவர்த்தியும், துடர்ச்சி யின்மை = எவையுஞ் சுவாநுபூதிக்கவிரோத மாதலின் மதவாதிகளியாவரோடும் வழக்கின்மையும், பகையின்மை = எவர்களிடத்தும் மித்திரபாவமென்னும் மைத்திரியுங்; குறைவொன்றின்மை = கிடைத்ததில் திருப்தியும், கயமின்மை = பெருமையும், கடினமின்மை = அநிஷ்டோசித்தத்துவமும், கடினமாய்க் கழறலின்மை = பிரியவசனமும். (5)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மொழிந்ததை முடித்து வாதனையின் வன்மையை வழங்கல்:—வீடென்பது.

வீடுபற் றிரண்டுநீத்த மேலவ ரிடத்துமேவி
நீடுவா தனைகளின்றி நிகழ்த்திய குணங்க ணிற்கும்
பீடுறு நினைவா நூலாற் பிணிப்புற்றுப் பிறவிவேலை
யூடுற மயன்மீன்வாரு முயர்ந்தவா தனையாஞ்சாலம்.

(ப - ரை:) வீடுபற்றிரண்டும் நீத்தமேலவரிடத்து = ஹேய உபாதேய நிர்முக்தஞானிகளிடத்து, மேவி = பொருந்தி, வாதனைகளின்றி = வாதனைவழங்காமல், நிகழ்த்தியகுணங்கள் நீடுநிற்கும் = முன்மொழிந்த பதினைந்து குணங்களும் நிலைத்து இருக்கும், பீடுறுநினைவா நூலால் பிணிப்பு உற்று = பெருமைபொருந்திய அளவற்ற எண்ணங்களாலே நிர்மிக்கப்பெற்று, உயர்ந்த = மேன்மையுற்ற, வாதனையாம் சாலம் = வாசனையாகியவலை, பிறவிவேலையூடுற = சம்சாரசாகரத்திற் பரப்பியவழி, மயன் மீன்வாரும் = ஆசையாங் கயல்களையள்ளாநிற்கும்.

(ஸ்ரீ - வீர.) முன்மொழிந்த பதினைந்து குணங்களும், வீடுதல் பற்றுதல் இரண்டும் விடுபட்ட ஞானிகளிடத்தில் உளவாகியுலவும் உரைத்தகுணங்க ளிருக்குமாயின் அவற்றின் வாசனையினாலேயே அவனுக்குப் பந்தமாம் எனச்சங்கிப்ப கூறல்:—நீடுவாதனைகள் இன்றியென்பது. வாசனையின் விரையாய அறியாமை யழிந்துபோனமையின் வாசனையன்று நிற்கும் என்பது கருத்தாம். வெளிப்பொருள்களில் ஆன்மத்தன்மைப் பிராந்தியணுகாதிருத்

தற்குத்தியாகமே உபாயமாய், உள்ளவற்றிலோ அஃதணுகற்கு எப்போதும் எல்லாவகையானும் ஆண்டு இரத்தினதத்துவ பரீக்ஷைபோலும் விசாரம் செய்யத்தக்கதாம்; இப்பாகியப் பொருள்களே யடியோடும் விட்டு நிற்றல் நடையோடல் கண்படுத்தல் காலவிடுத்தல் ஆங்காலும் எல்லாவகையினும் எஞ்ஞான்றும் சர்வ ஆந்தாங்களையு மாராய்க. நடந்திடினு மிருந்திடினும் நனவுறினும் கனவுறினும், படர்ந்தவிசாரம் படையாப் பாவிமனம் பட்டைத்தவனே, இறந்தவனென்றே சுவரேயிணையில்லாப் பெரியோரே. என்பர் பெரியார். ''நிற்றலிருத்தல் கிடத்த னடையோடல், பெற்றவக்காலுங் திருவருள் பேராமற், சற்றியன் ஞானந்தந்தானந் தந்தங்கவே, யுற்றபிறப்பற் றெளிர்ஞான நிட்டையே'' என்னுந் திருமந்திரமு மீண்டுணர் தற்பாலது, சிந்தைகள் வடிவமாந்தந்துக்களானே பின்னப்பெற்றதும், மோகவலைகளால் மலினமடைந்ததும், சமுசாரசாகரத்தே வீசப்பெற்றதும், திருவஷ்ணைகளாகிய சபரிமச் சங்களேவாரிக் கொண்டிருப்பதும், ஆகியது வாசனைஜாலமாம்; இத்தகைய வாசனையாலு யத்தை = வலையை. யாமுபதேசித்த இப்புத்திவடிவ கர்த்தாவாஞ் சலாகையினுற் சிந்திநிற் பாயென வருவதோடு அந்துவயம்.

(சு.) நிகழ்த்திய குணங்கள், வீடுபெற்றிரண்டு நீத்தமேலவரிடத்து = சமதிருவஷ்டியுள்ள ஞானிகளிடத்து, வாதனைகளின்றி. நீடுமேவிநிற்கும், ஊடுற்றென்பது ஊடுற எனவிகாரமாயிற்று. மூலம், சம்சாரமெனப் பெயரியஜலத்தில் வீசப்பெற்றதும் சிந்தைகளேயாய தந்துக்களால் விஸ்திருதமும், ஆகிவரப்பெற்றன திருவஷ்ணைகளேயாய மீனங்கள் எதனுல் அத்தகையதாம் வாசனைவலை, (6)

(ஸ்ரீ-வீர - அ-கை.) வழங்கிய வலையைச் சிந்திநிரமாய் நிற்றியெனல்: = வாதனை யென்பது.

வாதனை யென்னுமிந்த வலைபுந்தி வாளாலீர்ந்து
மோதுசூறைக் காற்கிந்து மூகிலெனைச் சிந்திநிற்பாய்
பாதவங் குடாரத்தாலே படுப்பபோ னெஞ்சைநெஞ்சாற்
றீதறமாய்த்து மேலாம்பதத்திலே நிரமாய் நிற்பாய்.

(ப - ரை.) வாதனை யென்னுமிந்தவலை = வாசனையென்று சொல்லப்பெற்ற இவ்வலையை, புந்திவாளால் ஈர்ந்து = புத்தியாகிய வாளினுல்அறுத்து, மோதுசூறைக்கால் சிந்து மூகிலென = அடிக்கும் பெருங்காற்றுச் சிதறடிக்கும் மேகமென்ன, சிந்திநிற்பாய் = சின்னபின்னப்படுத்தி விடுவாய், பாதவம் = விருக்ஷமானது, குடாரத்தாலே = கோடாரியாலே, படுப்பபோல் = வெட்டப் பெறுவதேபோல, நெஞ்சை = மனத்தை, நெஞ்சால் = மனத்தால், நீதறமாய்த்து = களங்கமறக்கெடுத்து, மேலாம்பதத்திலே = பாவனமான பதத்திலே, நிரமாய் நிற்பாய் = அதிதிடமாக நிலைபெறுவாய்.

(ஸ்ரீ - வீர.) முன்மொழிந்த வாசனையாகிய வலையை இக்கூர்மையான மதிவாளாயுதத்தினுலே சிதைத்துச் சிந்துவாய். விஸ்தீர்ணதரமான ஆகாசப் பிரஹ்மபதத்தினிடத்தில், அடித்தொளிரா நிற்கும் காற்றுங் கட்கத்தால் காலத்தில் மேகமாம் வலையைச் சிதறடித்து வெட்டியெறிவாய். ஹேகல்யாண மூர்த்தியே! நீள்பயிற்சியினுலே திடமாக்கப் பெற்ற தீரத்தால், எகான்மத்திரபாவவடிவச் சித்தத்தையித்தால், அடைவுற்ற அதனுனே அநாதிகாலமாய் மூழ்கியிருக்கும் ஆத்மாவை யுத்தாரஞ் செய்வதிற்சமர்த்துற்ற அபரோக்ஷ சாக்ஷாத்கார யுத்தியால், இச்சம்சார விருக்ஷத்தின் மூலமாய் தோஷாங்குராஸ்பதமா யிருக்கும் வாசனை சகித அஞ்ஞானத்தைச் சிதைத்தெறிவாய். விக்ஷேப ஹேதுவாய மனதிருக்கும்போது யாங்ஙனம் மூலோச்சேதம் எனிற்கூறல்:—பாதவமென்பதாதி. முன்னர்ப் புகுத்திய இரும்போடு

கூடியபாதப அவயவக்காஷ்ட வடிவக்கோடாரியானே பாதபம் வெட்டப்படுவதேபோல, தூனியிற் புகுத்தப்பெற்ற வீருத்தியிற் சம்பந்தித்த பிரஹ்மசைதன்ய மனத்தானே மனத்தைக்கெடுத்து, பாவனமான பதத்தைப்பற்றி இப்போதே திரமாயிருந்து வாழ்தி, பாதத்தில் நீர்மாந்தலாற்பாதபம்,

(ச.) வாதனேயென்னு மிந்தவலே = இந்தச் சிந்தனரூபமாகிய வாதனுசாலத்தை, சூறைக்கால் = வாயுசமூகங்களால், முகிலென = மேகத்தைப்போல, சிந்தி நிற்பாய் = வியாபகபதத்திருப்பாய். (7)

(ஸ்ரீ - வீர - அ - கை.) என்றபோதினும் தத்துவவித்தின் ஜீவனசித்தியின் பொருட்டு அதன் உபாதானபூத அவித்தையெனப் பெயரியமோகம் அவசியம் அங்கீகரிக்க வேண்டும், வேண்ட அதுவே மீளச்சம்சாரத்தை விளைவிக்கும் எனின், விளைவியாதாம், மோகம்மறந்திடிற் சம்சாரம் மீண்டெங்ஙனமாம், வாசனுக்ஷயவடிவ விஸ்மரண முண்டாயபோது அதற்குப்பீஜசக்தியின்மையின்; ஆயின், சம்சாரம் அந்தமோக கூத்திரத்திற்றானே யுண்டாகலாமே யெனின், சித்தம் மறக்கச் சம்சாரம் சிறக்கமீளவாராதாம், சித்தசம்ஸ்கார உச்சேத வடிவச்சித்த விஸ்மரணமுண்டாகிய வழிச்சேத்தியத்தின் றலீட்சி சம்பவியாதாம், சித்த சம்ஸ்காரத்திற்கும் சேத்திய ஆரோப பீஜத்தன்மை யுண்மையின்; ஆயின்சித்தம் சேத்தியம் என்னும் இரண்டினேயும் மறப்பதற்குயாது கொல்லுபாயமாலோ வெனின், அவற்றின் ஆஸ்தைத்தியாகமே உபாயமாமென வருளல்:—எகுதலென்பது.

ழீ

எகுதல்வருத றுஞ்சல் விழீத்திட லிருத்தணிற்ற
லாகியவெல்லாம் பொய்யென் றமுந்தியுள்ளா சைதீர்வாய்
சேகுறவலியுஞ் சித்தம்பகுதியாற் சித்தின்பின்னே
போகலான் மணத்தாற் சிங்கந்தனைத் தொடர் பூசைபோலாம்.

(ப - ரை.) எகுதல் வருதல் துஞ்சல் விழித்திடல் இருத்தல் நிற்றல் = செல்லுதல் திரும்பப்புல்லுதல், துயிலுதல் கண்டிறந்தயிலுதல், இருக்குதல் எழுந்து தருக்குதல், ஆகிய எல்லாம் = இவைமுதலியயாவும், பொய்யென்றமுந்தியுள் = மித்தை யென்றுள்ளே நிச்சயித்து, ஆசைதீர்வாய் = ஆஸ்தையை விட்டொழிப்பாய், சேகுற அலையும் சித்தம் பகுதியால் = மிகமிகவும் சாஞ்சல்யமானமனம் இயற்கையானே ஜடமாம், சித்தின் பின்னேபோகல் = சித்தத்துவத்தைத் தொடர்ந்து நிற்றல், = ஊன்மணத்தால் = மாம்சவாசனேயால், சிங்கந்தனைத் தொடர் பூசைபோலாம் = மிருகேந்திரனைப் பின்றொடரும் இற்புலி போலவாம்:

(ஸ்ரீ - வீர.) நின்றுஞ் சென்றும் தூங்கியும் வாங்கியும் வசித்தும் புசித்தும் எழுந்தும் விழுந்தும், என்பனவாதிகள் அசத்தேயாம் என்றுள்ளே துணிந்து ஆஸ்தையையறுத்தெறிந்திடுவாய்; ஆஸ்தையைப் பரித்தியாகஞ் செய்யின் சமத்தன்மையுஞ் சித்தமாம், சமத்தன்மையை யத்தியந்தம்பற்றி அடைவுற்ற காரியத்தையாற்றி, அடைவுறுதலைச் சிந்தியாமல் ஈண்டு மகிழ்வுடன் விவகரிப்பாய், இவ்வுலக முந்தானும் சிற்சத்தை மாத்திரமேயாம்நிச்சயமுடைய மனமானது, போகசிந்தையை விட்டொழித்ததாய், ஹே மகாமதியையுடைய இராகவனே! சமத்தையடையா நிற்கும். சித்சத்தை மாத்திரமே இது என யாதோதப்பெற்றதோ அதனே நிரூபித்தல்:—சேகுறவென்பதாதி. இயல்பாகவே சித்தம் ஜடம் ஆகலின், தான் சித்திக்கவும் • பிறவற்றைச் சாதிக்கவும் அசமர்த்த முடையதாம், ஆகவே, தன் சித்தியின் பொருட்டும் தனது விடயசித்தியின் பொருட்டும், தன் சாகூஷ்பூதமாயும் சுவப்பிரகாசசித்து

ரூபமாயும் உள்ள பாரமார்த்திகவத்துவை யநுசரிக்கும், தன்ஜீவனப் பொருட்டும் தன் புத்திராதி பரணப்பொருட்டும் மாந்சாரம் மாம்சமணத்தால் வனத்தில் மிருகபக்ஷியைத் தொடர்தலே போலும்.

(ச.) ஆகுவது = ஆகியசகல அவத்தைகளிலும், எல்லாம் = சகத்தினத்தும், பொய் யென்று அழுந்தியுள் = நிச்சயித்து, அதில் ஆசைதீர்வாய் என்பதுபொருள், பருதியால்= பிரகிருதியினுலே, சேகுறவுலேயும் = அதிசஞ்சலமுள்ள; சித்தம்=மனமானது, மார்ச்சாலம் யானையைக் கொன்ற சிங்கத்தை மாம்சலோபத்தால் தொடர்வதுபோன் மனது விஷயலோபத்தினுற் சிற்சொரூபத்தைத் தொடர்ந்தோடு மென்பது பொருள். (8)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பூனைபோன் மனதும் பொருளைப் பற்றுதானவை நீக்கின் முத்தியாமென்னல்:—மடங்கல் என்பது.

மடங்கல் வீரியத்தாற் பெற்றதசை தின்மார்ச் சாலம்போற்
றொடர்ந்து சென்மனனுஞ் சித்தாற்றேன்றிய பொருளைப்பற்றும்
படர்ந்துகாண்ப வற்றைப்பற்றின் மனங்கெடாப் பந்தம்போகாத்
திடங்கொள் காண்பவற்றை நீக்கிற்சித்தம் போய் முத்தியாகும்.

(ப - ரை.) மடங்கல் வீரியத்தால் = சிங்கத்தின் வலிமைவயத்தானே, பெற்றதசை= கிடைத்த மாம்சத்தை, தின்னும் மார்ச்சாலம்போல் = உண்ணும் பூனைபோல, தொடர்ந்து செல்மனனும் = அறிவைப் பின்பற்றியமனமும், சித்தாற்றேன்றிய பொருளைப் பற்றும் = அறிவால் விளங்கியவத்துவைப் பருகும், படர்ந்து காண்பவற்றைப்பற்றின் = விஸ்தரித்துத் திருஷ்யத்தை யாசையஞ்செய்யின், மனங்கெடா பந்தம்போகா = மனம்மரியாது பந்தம் தொலையாது, திடங்கொள் காண்பவற்றை நீக்கில் = திருஷ்யத்தைத் திடங்கொண்டு நன்றுக அகற்றின், சித்தம்போய் முத்தியாகும் = மனமிறந்து வீடுண்டாம்.

(ஸ்ரீ - வீர.) பின்றொடர்ந்த பூனையானது சிங்கவீர்யவசத்தால் இலப்தமாய மாம்சத்தைப் புசிக்கும், அதுபோலவே, சித்வீர் யவசத்தானே பிராப்தமாய திருஷ்யத் தன்னையும் தனது விடயத்தையும் பற்றிவாழும், ஆகுக விங்ஙன் அதனுலென்னெனின் ? மனமேயசத் கற்பமாம் சிற்பிரசாதத்தானே ஜீவிதமாம், இங்ஙனமாகவே மனம் அசத்கற்பம் = சூனியப் பிராயம் மித்தையெனச் சித்தமாம். எங்ஙனம் ஜீவிதமாமெனின், ஒன்றுய அத்விதீய ஆத்மாவைமறந்து ஜகதாகாரத்தையே பாவித்து, ஜகதாகாரத்தைக் கற்பித்து அதன்வடிவாய் வாழும், அதனுனே ஆன்மஸ்மிருதியை யடைந்து மீண்டும் சித்தும் ஆம் சித்தத்தன்மையைத்தியாகிக்கும் மனத்திற்குப் பிரகாச சக்திபோலும் ஸ்பந்தசக்தியும் சித்தின் அதீனமேயாம், அதனுற்றுன் சித்தின் ஸ்பந்தகற்பனையே மனமென்பதும் பொருந்தல், சித்தானது சேத்தியத்தைத் தியாகிப்பதே பிரஹ்மத் தன்மையாம், எனின், விருத்திஞானமே விடய பரித்தியாகத்தால் அஃதாமென்னற்க, அதனினும் உள்ளிருக்கும் சான்றேசுத்த சித்தேயஃதாதலின். இதுவே உபாதியைவிடச் சர்வசாக்ஷியாம், பந்தமோக்ஷ இரகசியம் பகர்தல்:— படர்ந்தென்பதாதி. இத்திருஷ்யத்தைப் பற்றுதியேலாயின் அதனுற் சித்தமுடையவனுகிப் பந்தவானுவாய், இத்திருஷ்யத்தை யிகந்து கைவிடுதியேலாயின் அதனுற் சித்தமற்றவனுகி மோக்ஷவானுவாய், ஆயின் திருஷ்யதத்துவந்தான் என்னேயெனின் ? இது திரிகுணன்மக மாயாமயமேயாம், பற்றப்பற்றப் பந்தமேயாம், விட்டுத்தொலைத்தால் வீடேவிளையும், எவ் வாறிட்டமோ அவ்வாறுசெய்தி.

(ச.) தமக்குச் சாமர்த்திய மின்மையினும் பூனைகரி முதலியவை சிங்கத்தை யநுசரித்தனவாய் மாமிசத்தைப் புஜிப்பதுபோல், மனதும் சிற்சாயையோடு சம்பந்தமுற்றதாய், தான் ஜடமாயினும் விஷயக்கிரகண சாமர்த்தியமுள்ளதா மென்பதுபொருள், திருஷ்யாதிரயமே சசித்தத்துவம் பந்தவேதுவுமாம், திருஷ்யத்யாகமே அசித்தத்துவமும் மோக்ஷவேதுவுமாம் என்பதுபொருள். (9)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அகமிதந்தீர்ந்து அசலம்போல மகிழ்வுடனிருந்து வாழ்வா யென்னல்:—யானெனபது,

யானிவை யிரண்டுமில்லென் றெண்ணி மேருவைப் போனிற்பா
யூனிறமில்லா விண்போ லுளத்தனுய் நல்லுளத்தே
தானும்வையமு மாய்க்காண்பான் காண்பன தம்மினூடே
மேனிகழ் காட்சியென்னு நின்னே நீவிடாது தேர்வாய்.

(ப - வை.) யானிவை இரண்டும் இல்லென்று எண்ணி = அகமுமில்லை இதுவுமில்லை என்பதாகச் சிந்தித்து, மேருவைப்போல் நிற்பாய் = பொன்மலைபோ லசையாது நிற்பாய், ஊனிறமில்லா விண்போல் = மேகாதியொன்று மில்லாத ஆகாசம்போல, உளத்தனுய் = இருதயமுடையவனுய், நல்லுளத்தே = நல்ல இருதயத்தே, தானும் வையமும் ஆய் = ஆத்மாவும் ஜகத்துமாய், காண்பான் காண்பன தம்மினூடே = திருஷ்டாதிருசிய தசாந்தரத்தில், மேனிகழ்காட்சி யென்னும நின்னை = மேலாக இலங்கும் தரிசனமென்னும் நின்வடிவத்தை, நீ விடாதுதேர்வாய் = எப்போதும் பாவித்துச் சுகியாவாய்.

(ஸ்ரீ - வீர.) அகமென்னும் உட்டிருசியமும், இதமென்னும் வெளித்திருசியமும் இல்லவேயில்லை யெனத்தியானித்துக் கொண்டு அசலமென அசலனு யதிதிட முடையவனுய் நீ நிற்றி; அநந்தாகாசசங்காச இருதயமுடைய ஆத்மாவா யிருப்பாய்: நான் என்றும் இவ்வுலகமென்றும் உண்டாம் இருமையமாயமயக்கத்தை அடியோடும் விட்டொழித்துசேஷித்து நின்றநிலையில் அநிதிடமாக நிற்பாய், அற்றேல் அவ்விரு மயக்கத்தையும் அகற்றின் யாது சேஷிக்கும், யாண்டுத் திதியான துபதேசிக்கப் பெறுகின்றதோ வெனின் அதற்குரைத்தல்:—தானும் என்பதாதி. ஆன்மாவிற்கும் ஜகத்திற்கும் அந்தர் திருஷ்டாதிருசிய தசாந்தரத்தில் தரிசனப் பெயரியதில் தன்னுன்மாவை யெப்போதும் பாவித்தின்புற்றுவாழ்வாய்; திருஷ்டாதிருசிய தசைகளின் அந்தரே = அந்தராளத்தில் என்றித்தூணை மாத்திரம் கூறுவதாயின் விருத்தி ஞானத்திற்கும் அந்தாளிகத் தன்மையுண்மையின் கவர்ச்சியாம் அஃதாக வேண்டாம் என ஆன்மாவிற்குஞ் சகத்திற்கும் அந்தரென்றதாம், ஆகவே திரிபுடியநுஸ்யூதசன்மாத்திர ரூபதரிசனப் பெயரிய திரிபுடிசாக்ஷி யியற்கையதில் இராநின்ற தனதான் மாவைப்பாவித்து ஆனந்தியாய் வாழ்வாய்.

(ச.) ஆன்மா அபரிச்சின்னன் ஜகத்து அசத்தியம், என்று நிதித்தியாசனஞ் செய்துகொண்டு கிரிபோற்றிரமுடையவனுய் அநந்தாகாசம்போல் நிர்மலவிருதயனு யிருதயேசுவரகூடஸ்தனிடத்து நிற்பாய், தானும் = ஆன்மாவுக்கும், வையமும் ஜகத்துக்கும், ஆய் = மத்தியமாய், யாதொரு தரிசனமானது, காண்பான் காண்பன தம்மினூடே திருஷ்டாதசையையும் திரிசியதசையையும், பொருந்தாமல், மேனிகழ் = சின்மாத்திரரூபமாக நிகழுமோ. காட்சியென்னும் = அத்தன்மையுள்ள தரிசனரூபமான, நின்னை = நினதான் மாவை, நீவிடாது தேர்வாய் = எப்போதும் பாவித்திருப்பாய். (10)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சர்ஷ்-வஷத் திரிபுடிபோலும் இராசஞ்தித் திரிபுடிகளிலும் அதே அதன் சாக்ஷியாகவுளதென் அநுசந்தானஞ் செய்யவேண்டு மெனல்:—இனியென்பது.

(ச - அ.) இவ்வர்த்தத்தை மற்றொருவழியாகக் கூறல்:—இனியென்பது.

இனியனவினிமை கொள்வானிரண்டும்விட்டிவற்றினூடே
தனிநிகழினிமை நாடித்தற் பரமயம்மாய் நிற்பாய்
நனிபலதுய்ப் பான்றுய்ப்ப திரண்டுக்கு நடுவேதானே
யனிசம்பற்றின்றி நிற்குமதுபற்றிய தனுணிற்பாய்.

(ப - கை.) இனியன இனிமைகொள்வான் = சுவாதான்வை சுவாதுகொள்வோன், இரண்டும் விட்டு = என்னும் இரண்டையும் விடுத்து, இவற்றினூடே = இவ்விரண்டன் மத்தியில், தனிநிகழ் = கேவலமாயிலங்கும், இனிமைநாடி = சுவாதனத்தைத் தியானித்து, தற்பரமயமாய் நிற்பாய் = நித்தியம் ஆத்மமயமா யிருப்பாய், நனிபல துய்ப்பான் = நன் ரூக நானுவகையநுபவிப்பவன், துய்ப்பது = அநுபவிப்பது, இரண்டுக்கு நடுவேதானே = என்னும் இவ்விரண்டினுக்கும் இடையிற்கேவலம், அனிசம் = பகலும் இரவும், பற்றின்றி = அசங்கமாய், நிற்கும் = சாக்ஷிமாத்திரமா யிலகும், அதுபற்றி = அவ்வான்மாவை நாடி, அதனுள் நிற்பாய் = அதன்கண்ணே திடமுடையவனுக எப்போது மிருந்துவாழ்வாய்.

சுகமும் அநுபவிப்பதும்

(ஸ்ரீ - வீர.) சுவாத்திய சுவாதகங்களை நன்குவிடுத்து. சுவாத்திய சுவாதகமத்தியிலிருக் கும் கேவலம், சுவாதனத்தைத் தியானித்து நித்தியம் ஆத்மமயன் ஆகிவாழ்வாய். அனுமிதி யாதி அநுபவாந்தரங்களிலும் இவ்வண்ணம் உணர்ந்துகொள்ள வேண்டுமெனல்:—நன்மை யென்பதாதி. அனுபவிக்கப் பெறுவதற்கும், அநுபவிப்பவனுக்கும் இடையிலுள்ள அது பரூபமாய்ச் சுயமாய், விடயபூதத் திரிபுடியங்கிய வியதிரிக்தமாய், அத்னுள்ளிருப்பதாய், இலங்கும் ஆன்மாவை இருதயமத்தியிற் கொண்டு திடப்பிரஞ்ஞை யுடையவனுய் வாழ்தி ராமச்சந்திரனே.

(ச.) இனியன = சுவைகொள்ளற் குரியபானகாதியும், இனிமைகொள்வான் = சுவை கொள்பவனும், ஆகிய இவற்றினூடே = இரண்டின் மத்தியிலிருப்பதாய், இரண்டும்விட்டு = அந்தக் கர்த்தா கருமங்களோடு கூடாததாய், தனிநிகழ் = கேவலம் அனவச்சின்னமாய் விளங்கும், இனிமை = இரசாநுபவ ரூபமான பொருளை, நாடி = தியானிப்பவனுய், தற் பரமயமாய் நிற்றி: பரமான்மமயமா யிருப்பாய், துய்ப்பான் = அநுபவிப்பவனும், துய்ப் பது = அநுபவித்தற்குரிய அங்கனேயாதியும், ஆகியிரண்டுக்கும் நடுவேதானே = சுயமாய், அனிசம் = அனவரதமும், பற்றின்றி = கருத்துருகன்மபாவங்களோடு கூடாதாய், நிற்குமது = இருக்குமனுபவரூபத்தை, பற்றி = அவலம்பித்து, இராமாநீ, அதனுணிற் பாய் = அதன்மத்தியி லிருப்பாய். (11)

(ஸ்ரீ - வீர - அ - கை.) யாங்ஙனந்திருஷ்ய வீழ்ச்சி, அதனுற்றூன் யாங்ஙனம் சங்கற்ப கமனம், எங்ஙனந்தான் அதனழிவு எனின் ? பூர்வாநுபவ ஜநிததிருஷ்ய சம்ஸ்காரமூற் போதமாகியவழி சித்தேசிறிது தூலத்தன்மையைப்போல அடைவுற்றதாகிச் சித்தம்மென் னுஞ் சம்வித்தால் ஆன்மாவினும் வேருயது சித்தமாம், அப்போதே, மறித்தும் மறித்தும் மனனத்தானே அதிதிடப்பட்டுச் சங்கற்பசமர்த்த முடையதாய் மனமெனவாம், அதுவே துக்கியாம், தனக்கயலாய சத்தைச் சம்வித்தாற்றியாகிக்கிப்படின் ஷயித்துப்போம், ஆக லின்யாவும் ஆன்மாவே யென்னும் ஞாலேதையப் பொருட்டு அகம்பாவத்தை யடியோடுந் தியாகிக்கவேண்டு மென்றுபதேசித்தல்:—காதலென்பது.

காதலாற் கட்டிலுய்யார் கயிற்றினுற் கட்டிலுய்வா
ராதலாலசைவைக் கட்டையசங்கற்பத் தறுப்பாய் நானென்
றோதுபாவனையை நானென்னுந் தோர்வாளால் வீட்டி
யேதமில் சுபாவம்பாவித் தெழுபவமிலா வீடெய்தி.

(ப - ரை.) காதலாற் கட்டில் உய்யார் = திருஷ்ணையாற் பந்திக்கப்படின் விடுபடார், கயிற்றினுற்கட்டில் உய்வார் = இரஜ்ஜுவாற் பந்திக்கப்பெறின் விடுபடுவார். ஆதலால் ஆசைக்கட்டை = ஆகையால் ஆசையாகிய கட்டினை, அசங்கற்பத் தறுப்பாய் = சங்கற்ப வர்ஜனத்தானே தியாகிப்பாய், நான் என்று ஓதுபாவனையை = அகமென்று சொல்லப் பட்ட பாவனையை, நான் என்னுந்தோர் வாளால்வீட்டி = அநகம் பாவனையாகிய வாளி னலேவெட்டி, ஏதமில் = குற்றமற்ற, சுபாவம் = இயற்கை வடிவத்தை, பாவித்து = தியா னித்து, எழுபவமிலா வீடெய்தி = எழுவகைத் தோற்றமற்ற மோக்ஷத்தையடைந்து.

(ஸ்ரீ - வீர.) இவ்வுலகயாத்திரையாவுமே திருஷ்ணையாகிய சாமக்கயிற்றினுலே கோர்க் கப் பெற்றுள்ளன வாகலின் இரஜ்ஜுபந்தத்தி னின்றும் விடுபடுவரெனினும், திருஷ்ணை பந்தத்தினின்றும் ஒருவருமே விடுபடமாட்டார்; ஆகலினிராகவ ! நீ சங்கற்பவிவர்ஜனத் தானே திருஷ்ணையைத் தியாகிப்பாயாக. சங்கற்பவர்ஜன மாத்திரத்தானே யாங்ஙனம் திருஷ்ணைத்தியாக சித்தியெனின், சங்கற்பரஹிதமாக மனம்கிடையா தாதலின், மனமில தாகவே யாங்ஙனம் திருஷ்ணையின் அடைவாதல், ஆகாதாமென்பது ஹேதுத்தானே நிர்ணயிக் கப்பெறு மென்பதாம். இவ்வகம் பாவமயமாய திருஷ்ணையாம் அபுண்யபுஞ்சத்தைக் கத்த ரித்தெறிந்து, அநகம் பாவவடிவக் கத்தரியானே சிதைத்தென்றபடி; ஹே கல்யாணகுண கணலங் கிருதகுமர ! பவத்தின் ப்ராதமிகியபூமியில் அதாவது பிரஹ்மத்தில், அல்லது சப் தமபூமிகைப் பேதத்தில், இயற்கையாயதில் ஆத்மபாவனைசெய்து வாழ்வாய்,

(ச.) கட்டில் = கட்டுறுவர் எனில், உய்யார் = வீடுரூர், நான் என்னுதோர் வாளால் = அனகம் பாவசலாகையால், நான் என்றோதுபாவனையை = அகம்பாவமய மென்னுந் தனதுபாவனையை, வீட்டி = சேதித்து, வீடெய்தி = வீட்டிலிருப்பாய். பிர சாந்த அகிலபூத பீதியுஞ்சி சம்சாரத்தின் பாரத்தில் இருப்பாயென்பதாம். (12)

(ஸ்ரீ-வீர - அ-கை,) ஸ்ரீ வசிஷ்டபகவான் தமது திருமொழிகளை யுபசங்கரித்தலும் ஸ்ரீ-இராகவர் ஞானஸிரியரது உபதேசத்தை வியந்தோதலும்:—அனைத்தென்பது.

அனைத்துயிர்க் கச்சமில்லா நிலைநிற்பாய தூலவென்ன
வினைத்தொடர் ரகம்பாவத்தின் வேட்கைதீர் ரென்றநின்சொன்
னினைத்திடின் மிகவுமாழ மீடகங்கார நாசந்
தனைச்செயி னுடலமென்னு மேதுவைத் தவிர்க்கின்றேனுல்.

(ப - ரை.) அனைத்துயிர்க்கு அச்சமில்லாநிலைநிற்பாய் அதுல என்ன = ஹே உபமான மற்றகுணவிசிஷ்டனே ! சகலஜீவர்க்கும் பயமற்றதிதியில் திடமுற்று நிற்றியென்றருளிய போது, ஸ்ரீ இராமர்:—வினைத்தொடரகம் பாவத்தின் வேட்கைதீர் = கருமத்தொடர் பினைக்கனிந்த அகங்கார திருஷ்ணையை யகற்றுவாய், என்றநின்சொல் = எனவுபதேசிக்கும் தேவரீரது திருவாக்கியத்தை, நினைத்திடின் = சிந்தித்துநோக்கின், மிகவும் ஆழம் = அதிக கம்பீரமாக இருக்கின்றது, மீடகங்கார நாசந்தனைச்செயில் = நீண்ட அகங்கார அழிவுதன் னைச் செய்தால், உடலமென்னும் ஏதுவைத் தவிர்க்கின்றேன் = தேகமென்ற காரணத் தைத் தியாகிக்கின்றேன். ஆல் அசைநிலை.

(ஸ்ரீ - வீர.) அகில பூதபீதியன் அல்லவனுகி வாழ்வாய்; வாழ்பவனும் தேகத்தில் யான் என்னுந்தன்மையை விடுதல் முடியாமையின், சேடனது மரணத்தில் குருவினது கருத்துங் கூடாமையின் "இவ்வகம் பாவமயீ. திருவஷ்ணையைச் சேதித்து" என்பதாதி யுபதேசத் திற்குத் தாற்பரியம் துணியாதவராய ஸ்ரீ இராகவர் விஞ்தல்:—வினைத்தொட ரென்பதாதி. ஹேபகவன்! எவ்வகங்கார திருவஷ்ணையை நீ கவரற்றவென வென்னைநோக்கிக் கூறியது யாதோ, அந்தத்தேவரீரது திருவசனமானது சுபாவகம்மீரமா யிருக்கின்றது. இந்த அகங் கார நற்றியாகம் செய்வேனுயின் ஹே பிரபுவே! அக்கால், தேகமெனப் பெயரிய சந்நிவேசத்தைச் சேடமில்லாமலே தியாகித்தவனுவேன், அதாவது, பிராண அகங்காரங்கட்கு ஒருமையின் அடைவு தேவரீராலேயே யருளப்பெற் றிருத்தலின்பிராணன்களை யெஞ்சவைத்து அகங்காரத் தியாகஞ்செய்தல் சம்பவியாமையின் பிராணன் கட்கும் எஞ்சுதலின்றியே தியாகமாகு மென்பதாம்.

(ச.) அதுலவென்ன = ஒப்பற்ற ஸ்ரீ இராகவா என்று ஸ்ரீ வசிஷ்டர்கூற, ஸ்ரீ இராமர், வினைத்தொடர் = பாவமயமான, தீரென்றது = விடுவாயென்று தேவரீர் கூறிய விவ்வ சனம் மிகவும் ஆழம் = அதிகம்பீரமாம், அகங்கார நாசந்தனைச்செயில் = நான் அகங்காரத் தியாகத்தைச் செய்வேனெனில், ஆல் = அதனுல், உடலமென்னு மேதுவை = காமங்க ளுக்கு இருப்பிட மென்னுந்தேகத்தை, தவிர்க்கின்றேன் = சேடமறத்தியாகஞ் செய்தவ னுகிறேன், தேகபந்தத்துக்கு அகங்காரமூலமாதலின், அகங்காரத்தியாகஞ் செய்யில் தேகத் தியாகமேயா மென்பது பொருள், (13)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீ இராகவர் தமது விஞ்ஞையுபகூங்கூர்த்தலும் அதற்கு வித்தார மாக விடையருள விரும்பிய ஸ்ரீ வசிஷ்டபகவான் வாதனையைப் பிரித்துரைக்கத் தொடங் கல்:—அகமென்பது.

அகமென லொழிக்கிற்ரூனே யங்கமுமடியி லீர்ந்த
நகமென விறக்குமன்றே யென்றுயர் நாதன்கூற
மகமுனி யுரைப்பான் வள்ளால்வா தனை மாற்றுமாறு
நிகழ்வுறு தேயஞ்ஞெய மிரண்டென நினைப்பர் கற்ரோர்.

(ப - ரை.) அகம் எனல் ஒழிக்கில் = அகம்பாவத்தை யகற்றிவிட்டால், தானே = சுய மாகவே, அங்கமும் = தேகமும், அடியிலீர்ந்த நகமெனவிறக்கும் = மூலத்தில் வெட்டப் பட்ட பெருந்தருவைப் போலக் கெட்டுப்போம், அன்றே = என்பது துணிபல்லவா, என் றுயர் நாதன்கூற = என்பதாக உயர்ந்த ஸ்ரீ இராகவர் கூற, = மகமுனியுரைப்பான் = அநேக யாகசருத்தாவாகிய மகாமுனிசிரேஷ்டர் கூறுவார், வள்ளால் = தலைவள்ளலாகிய இராகவ! வாதனைமாற்றுமாறு = வாதனையின்றியாகப்பொருட்டு, = நிகழ்வுறு = விளங்கா கின்ற, தேயஞ்ஞெயம் இரண்டென = தியேயத்தியாகம் நேயத்தியாகம் என்றிரண்டாக, நினைப்பர் கற்ரோர் = பெரியோர் எண்ணுவர்.

(ஸ்ரீ - வீர.) ஜானுமானும் பரந்த மூலபந்த சுற்றுப்பற்ரால் எங்ஙனம் பெரியமரமானது தாங்கப்பெறுகின்றதோ, அங்ஙனமே இத்தேகமும் அகங்காரத்தானே நன்ரூகத் தாங்கப் பெறுகின்றது; அதனையே எதிர்மறை வாயிலாகத் திடப்படுத்தல்:—அகமென்பதாதி. அகங் காரகூடியமாயின் தேகம் அவசியமாகவே கூடியமாய்ப்போம், மூலமானது இரும்பத்தா லறுக் கப்பெறின் பெரிய விருகூம் விழுந்துவிடல் போலவாம். ஆகவின் எங்ஙனம் நன்குதியாகிப் பேன், யாங்ஙனந்தான் ஜீவிப்பேன் சுவாமிந்! இப்பொருடன்னே யினிதாய்த் துணிந்தே செப்புவீராக செப்புவர்க் நிறைவரோவென்று ஸ்ரீஇராகவரியம்ப ஸ்ரீவசிஷ்டபகவான் கூறல்:—

ஹேராஜீவலோசன ஸ்ரீ இராமசந்திர ! யாண்டும் வாசஞத்தியாகம் ஞேயமும் தியேயமும் என இருவகையாக அஃதறிந்தவராற் கூறப்பெறும், ஞேயமென்பது, அறிஞர்தஞ் சமாதிகாலத்திலும் வீதேக கைவல்பத்திலும் ஞீனபாதிதமாம்; அதிஷ்டான மாத்திர பரிசேடவடிவம் தேயமாம் சமாதியினின்றும் எழுந்தபோது, வாக்கியஜன்னிய அகண்டாகார விருத்தியானே வாசனேயோடு கூடிய அஞ்ஞானத்திற்குப் பாதமிருப்பினும், ஜீவன்முக்தி சாஸ்திர அநுரோதத்தானும், பிராரப்த பலபோகசேடத்தானும், அவற்றின் நிர்வாகப் பொருட்டுப் பாதிதாதுவிருத்தியானே அவித்யாலேச பரிசேடத்திற் காதல் விக்ஷேபாம்ச அபாதத்திற் காதல், உடன்பாடுண்மையின், அஅத்தியஸ்த அகம்பாவ தேகத்தாற் போகஹேது வியவகார அசித்தியாதலின், அப்போதிய அகங்கார ஆபாச அநுவிருத்திக்கு அறிஞரநுவப சித்தத்தன்மை யுண்மையின் அத்தசையில் தற்பாத அநுசந்தானத்திற்கு யத்தசாத்தியத் தன்மையானே தியானப் பிராயத் தன்மையால் தியேயம் போலுந்தியேயம் என்றிருவித மென்பது பொருள்.

(ச.) அங்கமும் = தேகமும், நகமென = பெரியபாதம்போல், அங்கமும் என்பதில் உம்மை சிறப்புப் பொருளில் வந்தது. மகமுனி = ஸ்ரீ வசிஷ்டர், வாசனே மாற்றுமாறு = வாதனுத்தியாகப் பிரகாரம். (14)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அவ்விரண்டினுள், தேயத்தியாகத்தைத் தெளிவுபடப் பகர்தல்:— இந்த, பொருள், என்பன.

(ச - அ - கை.) தேயஞேய மென்னும் வாசஞத்தியாக மிரண்டினுள் தேயவாதனுத்தியாகத்தினது இலக்கணங் கூறல்:—இந்த, பொருள், என்பன.

இந்தநம்பொருட் குவாணுளியாமிவை யெமக்குவாணு
ணந்துறு மிவற்றுலன்றி நாமில்லை நம்மாலன்றி
வந்தவிப் பொருள்க ளில்லையெனு மனத்துறுதி மாற்றிப்
புந்தியாலு சாவியாமும் பொருள்களும் வெவ்வேறென்றே.

பொருளினே மல்லநாமு நமதல்லப் பொருளுமென்றே
தெருளுற்றுட் குளிர்ந்தியாவும் விநோதமாய்ச் செய்யுநெஞ்சான்
மருளறு நிச்சயத்தால் வாதீன விடுதருனே
யருள்பொழி மேகமொப்பாய் தேயமென் றறிவாயன்றே.

(ப - ரை.) இந்தநம் பொருட்குயாம் வாணுள் = இந்த நமது பதார்த்தங்கட்குயாம் ஜீவிதம், இவை எமக்குவாணுள் = இப்பொருள்களே எமக்குஜீவிதம், நந்துறுமிவற்றுலன்றி நாமில்லை = விருத்தியாகும் இவற்றினுலல்லாமல் நாம் இலம், நம்மாலன்றி = நம்மாலல்லாமல், வந்த இப்பொருள்கள் இல்லையெனும் = கிடைத்த இந்தப்பொருள்கள் இலவாம் என்பதான, மனத்துறுதி மாற்றி = உண்ணிச் சயத்தைத்தியாகித்து, புந்தியால் உசாவி = மனதினுல் விசாரித்து, யாமும் பொருள்களும் வெவ்வேறு என்றே = நாமும் வஸ்துக்களும் வேறுவேறு என்பதாகவே துணிந்து; அதனுல்,

பொருளினேமல்ல நாமும் = பதார்த்தத்தினேம் நாமும் அல்ல, நமதல்லப்பொருளும் என்றே = எமதல்ல இந்தப்பொருளும் என்றுதானே, தெருளுற்று = உணர்ந்துணர்ந்து, உட்குளிர்ந்து = அந்தர்சீதளமாகி, யாவும்விநோதமாய்ச் செய்யும் நெஞ்சால் = எல்லாக்காரியங்களேயும் லீலேயாக இயற்றும் மனத்தினுலே, மருளறு நிச்சயத்தால் = மயக்கமற்ற துணி

பிறவே, வாதனைவிடுதல்தானே = வாசனைத்தியாகஞ் செய்தலே, அருள்பொழிமேக மொப்பாய் = தயையே பெய்யும் கார்முகில்போன்றாய் ! தேயவுன்றன்வாயன்றே! தேயத் தியாகமென் றறிந்துகொள்வாய்.

(ஸ்ரீ - வீர.) விவேகி திருஷ்டியினனே ஈண்டு இரண்டு அகம்பிரத்தீய கோசரங்கள் பிரதீதியாகின்றன, தேகேந்திரிய புத்திமனவபேகை யுடையதாகிச் சங்காதாத் மாவாய்ப் புத்திரமித்திர களத்திரதனந்தி மமதை நிரூபகமாம் ஒன்று; மற்றொன்றே அகண்டைகசுபாவ மாய், அவஸ்தாத்திரய மரணமூர்ச்சை ஜுன்மாந்தர சாதாரணமாய்ச் சின்மாத்திர சுபாவமாய் விவேகபரிசுத்தமாம்; அவற்றுள் ஆதியதன் சொரூபத்தை முதலில் விசாரித்து நிர்த்தார ணஞ் செய்யத்தக்கது எனல்:—இத்தவென்பது.

இத்தேகேந்திரி யாதிகட்கும், பாகிய அன்னபானாதிகளாய உபபுக்த பதார்த்தங்கட்கும்; சங்காதாத்மா வென்பது பொருள். இத்தேகாதிகளும் அன்னாதிகளும் எனது ஜீவிதம் = சொரூபசித்தி நிமித்தம், இதனனே இவைகளானன்றி யான் எவ்விகாரபதத்திலும் பிரசித் தனகேன் என்னலன்றி யிவைகளுமிலவாம் என்றுள்ளே பிரதமமாகிய அகம்பதார்த்தத் தின் நிச்சயஞ்செய்து மனத்தோடு கூடப் பிருத்தக் கரணத்தில் அத்தியந்தம் அசத்துருவ மேயாய சங்காத ஆன்மாவை விசாரித்து, இரண்டாவதில் இனிதெஞ்சிய சித்துருவத்தில் அகம்பதார்த்தத்தினன் அல்லன், எனக்கிப் பொருள்களிலவாம் என்னும் நிஷ்கிருஷ்ட போதத்தால் அவ்வாறே பாவித்தபோது எப்பாவனாத்மாவாய வாசனாத்தியாக முளதோ அதுதியேயம் எனவெம்மாற் கீர்த்திக்கப் பெற்றதாம்; செயலே வினையாட்டாகச் செய்து கொண்டு, உட்சீதள மாயமதியினலே எத்திண்ணமான வாசனாத்தியாக முளதோ அதுதி யேயமெனப் புகலப்பெறும். மூலம்:—க்ருத்வா என்னுமிடத்து த்யக்த்வா என்று சங்கிரக வாசிட்டப்படி பாடமிருப்பின் எளிதிற் பொருளாமென்று தோற்றுகின்றது.

(ச.) மனத்துறுதி = அகங்காரத்தை, உசாவி = முன்பு விசாரித்து, புத்தியால்=மன தோடுகூடமாற்றி = தியாகஞ்செய்து.

தெருளுற்று = பாவிக்கில், யாவும் = சகலகிரியையும், இவ்விரண்டு கவிக்குங்கருத் துரை:—ஆன்மாவுக்குத் தேகாதிகளோடு ஒன்றற்கொன்று சம்பந்தாபிமானரூபமான அகங் காரத்தை விசாரபூர்வகம் மனதுடன்றி யாகஞ்செய்து தேகாதிபதார்த்தங்களுக்கும் எனக் கும் ஒரு சம்பந்தமுமின்றென்று பாவிக்கின் உட்குளிர்ந்து இராகத்துவேடாதி ரகிதமான புத்தியாற் கிரியையைச் செய்பவனுக்குவரும் இவ்வாதனத்தியாகமே, தேயமெனப்படும்

(ஸ்ரீ-வீர - அ-கை.) முதலாவதாய வாசனாக்ஷயத்தைமொழிதல்:—தனதென்பது.

(ச-அ-கை.) ஜேயவாசனத்தியாக விலக்கணங் கூறல்:—தனதென்பது.

தனதுவாதனை மாண்டெல்லாஞ் சமமதா நெஞ்சாற்பண்ணி
யெனதெனு துடலீநீக் கினிந்தவாசனை நாசந்தா
னனகமா ஜேயமாகு மகங்கர மயமதான
வினவுவாதனையை முற்றும் விநோதமாய் விட்டோர் மேலோர்.

(ப - ரை.) தனது வாதனைமாண்டு = தன்னுடைய வாசனையை க்ஷயஞ்செய்து, எல் லாம் சமமதா நெஞ்சாற்பண்ணி = யாவற்றையுஞ் சமமாகவுணர்ந்து, எனது எனது உடலை நீக்கின் = தேகத்தை என்னுடையது என்றிடாதகற்றின், இந்தவாசனை நாசந்தான் = இவ்வாசனாக்ஷயமானது, அனக ! பாவமற்ற பவித்திரமூர்த்தியே ! மாஜேயமாகும் = மாக்ஷி மைதங்கியஜேய மெனப்பெறும், அனகமாம் எனப்பதச் சேதமேல் ஜேயத்திற்கே சிறப்

பாம், அகங்காரமயமதான = அகங்காரமயமாகிய, வினவுவாதனையை = விசாரித்துத் தீர்ந்தளத்தக்க வாசனையை, முற்றும் = அடியோடும், விநோதமாய் = லீலையிலேயே, விட்டோர் = விடுத்தவர், மேலோர் = ஜீவன்முக்தராவர்.

(ஸ்ரீ - வீர.) எல்லாவுலகையும் சமமாகிய பிரஹ்மபாவமாகச் சாக்ஷாத் காரஞ்செய்து பூமிகையப்யாசமுறையில் எவ்வாசனாக்ஷயத்தைச் செய்து மமதையற்று; அகந்தையற்று நிருவிகற்பக சமாதியுற்றுதல் பிராரப்த க்ஷயத்தினுலாதல் எல்லாவாற்றானும் தேகத்தைவிடுதல் யாதொன்றுளதோ அது ஜீவயவாசனா க்ஷயமெனப் பெயரியதாம் ஆண்டிமவாதனையுதாகரித்தல். = அகங்கரமென்பது. அகங்காரமயமாய வாசனையை, லோகசங்கிரகத்துக்குத் தக்கபடியாய வியவகாரலீலையானே விடுத்து இருப்பவர் நியேயவாசனைத் தியாகமுடையவராவர்.

(ச.) சமமதா கெஞ்சால் = பேதரகிதமான புத்தியால், தனது வாதனைமாண்டு, வாசனையை நாசமாம்படி, பண்ணி, எனதெனுது = நான் எனதென்னும் பாவனையற்றவனும், உடலெயெல்லாம் = தூலசூக்ஷ்ம காரணபேதத்தால் மூவிதமான தேகத்தையும் நீக்கில் இந்தவாசனை நாசந்தான் = இவ்வாசனைத்தியாகம், ஞேயமென்று சொல்லப்படும், அனகமாம் = இது மாசின்மையதாம், மகிமையுள்ள இராம எனினுமொக்கும், (17)

(ஸ்ரீ - வீர.) இரண்டு தியாகங்களின் பயனையும் பகர்ந்து இரண்டும் ஒன்றற்கொன்று வீஞ்சாதெனல்:—தீரர் என்பது.

(ச-அ-கை) இங்ஙனங்கூறிய தியாகமிரண்டையும் சீவன்முக்தர் விதேகமுக்தர் இடங்களில் விபாகஞ்செய்கின்றார்:—தீரர் என்பது.

தீரராமவரே தேயத் தியாகஞ்செய் சீவன்முக்தர
வேரறத் தொழில்களோடே வாதனை விட்டுள்ளாறித்
தூரமாஞேயம் விட்டோர தூகளறு முத்தராகும்
வீரனேயிவை யிரண்டின் விடுதியுந தமமிலொக்கும்

(ப - ரை.) தீராம் அவரே = அகங்காரத்தை யொழித்த தைரியவான்களே, தேயத் தியாகஞ்செய் = தியேயசந்தியாகிகளாய, சீவன்முக்தர் = ஜீவிதமுக்தராவர்கள், வேரறத் தொழில்களோடே = நிர்மூலமாக வினைகளோடும், வாதனைவிட்டு = வாசனையையும் விடுத்து, உள்ளாறி = சமமடைந்து, தூரமா = வெகுசேய்மையி லேகுமாறு, ஞேயம்விட்டோர் = ஞேயத்தியாகம் செய்தவர், தூகளறு முத்தராகும் = குற்றமற்ற முத்தராவர், வீரனே = வீரத்தைச் சேகரித்த இராகவனே ! இவையிரண்டின் விடுதியும் = இவ்விரண்டு தியாகங்களுமே, தம்மிலொக்கும் = ஒன்றேடொன்று ஒப்பாகவே யொளிரும்.

(ஸ்ரீ - வீர.) நியேயத்தியாகியே ஜீவன்முக்தனெனச் செப்பப்பெறுவன்; ஆதியதை யறைதல்:—வேரறவென்பது மூல அஞ்ஞானத்தோடுகூடத் தொழில்களையும் விடுத்து, வாசனையையும் விட்டுச் சாந்தியையடைந்து, இருப்பவன். ஞேயத்தியாகமயன் = ஞானத்தாற் பாதிக்கப்பெற்ற வாசனையோடுகூடிய அஞ்ஞான பரிசிஷ்ட சின்மாத்திரப் பிரதானன், என்றுணர்தி, அவனையே முக்தன் எனவும் இரகுநந்தனனே நீயறிவாய். கூறியதையே விரித்தருளுவார் வீரனே யென்றருளினர்.—ஜீவன்முக்தர்களாய் மகாத்மாக்களாய்ச் சுஜனர்களாயிலங்கி ஞானவீரம்வாய்ந்த ஜனகாதிகள் நியேயமென்னும் அவ்வாசனைத் தியாகத்தைச் செய்து விவகாரலீலையால் வாழ்கின்றனர். உபசாந்தியை யடைந்த விதேகமுக்தர் ஞேயமென்றுரைத்த வாசனைத்தியாகத்தைச் செய்தோ, பராவரமாய பிரஹ்மத்திலேயே இருக்கின்றனர். (18)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இயம்பிய இரண்டு தியாகங்களையும் பெருமைப் படுத்தியுரைத்தல்:—தேயமென்பது,

தேயஞ்ஞெயத் தின்றியாகங்கண் முத்தர்பாற செறிவ
தேயஞ்ஞெயத் தின்றியாகங்கள் பிரமத்தைச் சேர்ந்த
தேயஞ்ஞெயத் தின்றியாகங்க ளிடரெலாந் தீர்ந்த
தேயஞ்ஞெயத் தின்றியாகங்கள் தேடருஞ் செல்வம்

(ப - பை.) தேயஞ்ஞெயத்தின் தியாகங்கள் = இவ்விரண்டு தியாகங்களுமே, முத்தர் பாற்செறிவ = முக்தபதத்தி லிருப்பனவாம்; தேயஞ்ஞெயத்தின்றியாகங்கள் = இவ்விரண்டும், பிரமத்தைச் சேர்ந்த = பிரஹ்மத் தன்மையை யடைவற்றனவாம், தேயஞ்ஞெயத்தின்றியாகங்கள் = இரண்டும், இடர் எலாந்தீர்ந்த = சகலதுக்கங்களு மில்லனவாம்; தேயஞ்ஞெயத்தின்றியாகங்கள் = என்னுமிவை, தேடரும் செல்வம் = தேடைத்தற்கரிய ஐசுவரியங்களாம்.

(ஸ்ரீ - வீர.) தேயஞ்ஞெயத் தியாகங்களிரண்டும் ஜீவன்முக்தர் விதேகமுக்தர் பாலிருப்பனவாம், ஆனந்த பிரஹ்மமயமாவனவாம், சகல அனர்த்த நிவிர்த்தி வடிவமாவனவாம். ஹே அனகனே ! சமாதியாரூடனுகிய யுக்தமதி, வியுத்தான விவகாரவானுகிய அயுக்தமதி, என்னும் இவ்விருவருமே இன்பமாக இளைப்பாறி யிருப்பர், அவித்யாமல நிர்முக்த பிரஹ்மத்தின் கண்ணே கேவலமிருப்பர்; ஆயின்யாவன் சிறந்தவன் என்னின் ? ஒருவன் ஒளிராநின்ற உடம்பினனுகி வியுத்திதனுயிருப்பன், மற்றொருவன் சாந்ததேகனுகிச் சமாதிதனுபிருப்பன்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) விவகரிக்கும் முக்தனது இலக்கணங்களை யியம்பல்:—சூழறு மென்பது.

(ச-அ-கை.) ஜீவன்முக்த இலக்கண மியம்பல்:—சூழென்பது.

சூழறுமின்ப துன்பந் தொடர்வுறி லொருகாலத்து
மாழுதன் மிதத்தலில்லா வவர்களே சீவன்முத்தர்
கேழுபர் மகிழ்ச்சியச்சஞ் சினமின்மை பொருமைகேத
மூழறு மிவற்றை நோக்கா வளத்தினர் சீவன்முத்தர்.

(ப - பை.) சூழறும் இன்பதுன்பம் தொடர்வுறில் = நுகர்வினை வயமாயிடை விடாமற் சுகதுக்கங்கள் வந்து தொந்திக்கினும், ஒருகாலத்தும் = எப்போதும், ஆழுதல் மிதத்தல் இல்லா = மகிழ்ச்சிவாட்ட மற்றுள்ள, அவர்களே சீவன்முக்தர் = அத்தகையர்களே ஜீவன் முக்தர்கள் எனப்பெறுவார்கள்; கேழ் உயர் மகிழ்ச்சி = மிகுந்த ஐசுவரியாதியால் உண்டாய சந்தோஷம், அச்சம் = பயம், சினம் = குரோதம், இன்மை = தீனத்தன்மை, தரித்திரம், பொருமை = சகியாமை, கேதம் = துயரம், ஊழறும் = என்பனவாதியாய்ப் பிராரப்த வயத்தால் வந்துற்ற, இவற்றை = இப்பொய்களை, நோக்கா = இலக்கியஞ் செய்யாத, உளத்தினர் = சித்தத்தினர், சீவன்முத்தர் = சீவிக்கும்போதே முத்தர்.

(ஸ்ரீ - வீர.) நிரந்தரம் காலத்திற்குத் தத்தகவாறு வினைவயமாகச் சுகதுக்கங்கள் வந்து வீழ்ந்துகொண்டே யிருப்பினும், மகிழாமலும் வாடாமலு மிருப்பவனே சீவன்முக்தன் எனப்பெறுவன்; விருப்பு வெறுப்புக ளில்லாதவனுய், அஞ்ஞதிருஷ்டியானே இவ்விட அனிஷ்டத் தன்மையனவாகச் சம்மதித்த வத்துக்களிற் றுயின்றான் போன்று சரிப்பவனே சீவன்

முக்தன் எனப்பெறுவன்; ராண்டுத்தேகத்திலும் அதன் சம்பந்திகளிலும் யான் எனவும் என தெனவும், தன்னத்தக்க கொள்ளத்தக்க சடங்குகள் எனவும், உள்ள தொந்தங்களியாவும் எவன்றனுள்ளே எள்ளளவுமில்லாமல் இரிந்து கரிந்துபோயினவோ அவனே சீவன்முக்தன் எனப்புகழப் பெறுவன்; ஹர்ஷம், அமர்ஷம், பயம், குரோதம், காமம். கார்ப்பண்யம் முத லிய திருஷ்டிகளானே யாவனதுள்ளம் சிறுபான்மையும் தீண்டப்பெறாமல் அறிவாகவே யிருக்குமோ அவன்வாழும் போழ்தே முக்தனென வாழ்த்தப் பெறுவன்.

(ச.) சூழறும் = தன்னைச் சூழாநின்ற, இன்பதுன்பம் = சுகதுக்கங்களும். ஆழுதல் மிதத்தல் = சந்தோஷமும் கிலேசமும்; மூலம்:—வஸ்து திருஷ்டிஷ்ட=இஷ்ட அனிஷ்ட தரிசனங்களில், அமர்ஷம் = ராண்டு அஷ்ராந்திவடிவ ரர்ஷ்ணயயாம், குரோதம் = பரதிரஸ் காரத்தியானே மனத்தினது பிரஜ்வலனம், காமம் = அபிலாஷை, கார்ப்பண்யம் = தைர்யம். (20)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இதுவுமது:—சுழுத்தியென்பது.

சுழுத்திபோ லாறிநின்ற பாவனைத் தொழிலினுலே
பழுத்தநெஞ் சதனுனீங்காச் சாக்கிரம் பயில்வோர்நாளும்
விழுத்தகுகலைகள் சூழ்ந்தமதி யெனமே லோர்மேவ
முழுத்தமும் பிரிவிலோரே முக்தரென் றுரைக்கத்தக்கோர்.

(ப - ரை.) சுழுத்திபோலாறி நின்ற = துயில்பவனைப்போல் மிகவுஞ் சாந்தமாகியுள்ள, பாவனைத்தொழிலினுலே=பாவவிருத்தியினுலே, பழுத்தநெஞ்சதனுல் = அசங்கமானமனத் தினுல், நீங்காச் சாக்கிரம்பயில்வோர் = சந்ததம் விழித்து விவகரிப்பவர், நாளும் = எப் போதும், விழுத்தகுகலைகள் சூழ்ந்தமதியென =சோடசகலைகளும் நிறைந்த பூர்ணசந்திரன் என்ன, மேலோர்மேவ = பெரியோர் பொருந்த, முழுத்தமும் பிரிவிலோரே = எப்போ தும் வேறு பெறாதவரே; முத்தரென் றுரைக்கத்தக்கோர் = ஜீவன்முத்தர் என்பதாகக் கூற யோக்கியர்.

(ஸ்ரீ - வீர.) பாவவிருத்திகளாய பதார்த்தங்களிலுள்ள ஆஸ்தைகள் எவனுல் துயில் பவனைப்போலப் பரமசாந்தப் படுத்தப்பட்டனவோ, எவனுக்கு அவ்வகையாய சேதசோப ஆலீக்கித்தாளே விழித்திருத்தலாமோ, ஜாகரத்திலும் எப்போதுந்திதியாமோ, (பாவத் தில்க்தவிகுதி) யாவன்முன் எஞ்ஞான்றும் இயற்கையாய மகிழ்ச்சியினுனே பூர்ணகலைகளே யுடைய சந்திரனைப்போல மிகத்தெளிவாக இனிது சேவிக்கப் பெறுவனோ, இயல்பாகவே மிகமலர்ந்த சந்தோஷவதனனு யெப்போது மிலங்குவானோ, அவன் இவ்வுலகின் கண்ணே ஜீவன்முக்தன் எனப்புகழப் பெறுவன்! ஏகாதசதிவசம். (21)

(ச.) சாக்கிரம் = சாக்கிரா வஸ்தையிலும், சுழுத்திபோல் = சுழுத்தியவஸ்தையி லிருப்பதுபோல் பாவனை = சந்தோஷக் கிலேசாதிபாவனை, ஆறிநின்ற = நிவிர்த்தித் திருக்கும், தொழிலினுலே = விருத்தியினுலே, பழுத்த நெஞ்சதனுல் = பரிபக்குவமான மனதோடு, நீங்கா = கூடினவராய், பயில்வோர் = இருப்பவர், மேலோர் = அறிஞர்களால், மூலம் = தேக = முழுகூவால், மேவி = பொருந்தி, முழுத்தமும் = கணமும், பிரிவி லோர் = பிரிவுபடாதவர்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ இராமரது இங்கிதங்களால் விதேகமுக்த இலக்கண ஜிஞ் ஞாசையை யுணர்ந்து, அது ஒருவடிவமாதலினுனே இலக்கணதி யில்லாமையின், வாக்கு கட்குக்குண்டாவ உக்தியினுனே நிரதிசய சுவப்பிரகாச பூமாநந்த மாத்திர பரிசேடம்

அதன் சொரூப இலக்கணமாம் எனக்குறிப்பித்துக்கொண்டு ஜீவன்முதலி மிலக்கணங்களி லேயே அவகியங் கொள்ளத்தக்கனவான விசேடங்களைத் தெரிந்துகோடல் வேண்டும் என, ஆயின்ஜீவன் முக்தர்கட்கு அவ்வவ்வர்ஞரிம உசிதகர்ம பலதிருஷ்ணையுளதேல், அஞ்ஞர் கட்கேபோலும் அப்போகப் பொருட்டு மீண்டும் தேகபந்தமுமாம், இலதேல், பிரவிருத் தியே யுண்டாகாதாம், பிரயோஜனங் குறியாது மந்தனும் பிரவிருத்தியான், என்னும் நியா யத்தான், எனவருந்தோடத்தை யதற்றும் பொருட்டு, ஞானியஞ்ஞானிகளின் பிரவர்த்தக மாயசுத்த அசுத்ததிருஷ்ணை வைலக்ஷண்யத்தை யுபபாதிப்பவராகி உரைதத இலக்கணத் திலேயே திருஷ்ணைகளை விரித்துரைத்துக் கொண்டு பிண்டமாக்கிக் கூறல்.—புறப்பொரு ளென்பது.

புறப்பொருள் விட்டாலுள்ளே பூண்டமாலென்று சொலவர்
மறப்பற வனைத்தும விட்டான் மாண்டமா லென்றுசொல்வர்
திறப்பட வெனக்கீதாக வென்றெழுஞ சிந்தையாசை
துறப்பில்பொன் விலங்காமித்தைத் துவக்கறத் துடைத்தல் வேண்டும்.

(ப - ரை.) புறப்பொருள் விட்டால் = பாகியப் பொருள் விட்டால், உள்ளே பூண்ட மால் என்றுசொல்வர் = உள்ளேபற்றிய ஆசை என்றுகூறுவர், மறப்பற அனைத்தும் விட் டால் = மறவாம லியாவற்றையும் விட்டால், மாண்டமாலென்று சொல்வர் = இறந்த இச் சையென் றியம்புவார்கள், திறப்பட = இவ்விதமாக, எனக்கீதாக = எனக்கிது உண்டா குக, என்றெழும் சிந்தையாசை = எனவுதிக்கும் பாவனையாகிய திருஷ்ணையே, துறப்பில் = விடமுடியாத, பொன் விலங்காம் = தங்கச்சங்கிலியாம், இத்தைத்துவக்கறத் துடைத்தல் வேண்டும் = இதனையடியோடு கெடுத்தல் வேண்டும்.

(ஸ்ரீ - வீர.) பாகியார்த்த வியசனலம்பட்டத்தன்மை வாசனைபொருமிய வாசையே பந்தமெனப்படும், சர்வார்த்த வியசனம் விடுபட்டவிழைவே முத்தியென மொழியப்பெறும். விடயப்பிராப்திக்கு முன்னரும், விடயநாச உத்தரகாலத்திலும், (எத்திருஷ்ணையினுடைய) இராகவிர்காதியாலாயதுக்க சூனியத்தன்மை யுளதோ, விடயப் பிராப்திகாலத்திலும் அத் துக்கக்கினர்ச்சி யிலதாயின் அதுவே சாசுவதமாய முக்தியெனப்பெரியோராற் பேசப்பெறும் இது உண்டாகுக, எனக்கு என்றுள்ளேயாதொரு இத்தகைய பாவனையுளதாமோ அத்திருஷ் ணையைச் சிருங்கலையென் றுணர்தி, அதற்கேற்ற வினையையும் அங்ஙனமேயறிதி மகாமதி யோய் ! ஆகலின் இதுதனை யழித்திடல் வேண்டும்.

(ச.) ஸ்ரீ வசிஷ்டர்:—உள்ளே = சிந்தையானது, புறப்பொருள் விட்டால் = வாகி யார்த்த வாசனைகளோடு மலரின், பூண்டமால் என்று சொல்வர் = பந்தேச்சை யென்பர், மறப்பறவனைத்தும் விட்டால் = சர்வார்த்த விசனங்களைத் தவிர்ந்தால், மாண்டமாலென்று சொல்வர் = மோக்ஷேச்சை யென்பர். இச்சையின் சொரூபத்தைக் கூறல்:—சிந்தை = அப்பாவனையே, ஆசை = இச்சையும், துறப்பில் பொன்விலங்காம் = பந்தமும் பந்த ஏதுவுமாம் என்பது பொருள். (22)

(ஸ்ரீ - வீர - அ-கை.) நிற்கு நிலையை நிச்சயப்படுத்தல்:—சத்தென்பது.

சத்தசத் தென்னபபட்ட சகலபாவனையி லென்றுங்
கொத்தற வாசைமாற்றிக் குறைவில்பே ருளத்தனாகிச்
சுத்தநல் லுதாரமான சொரூபத்தி னிற்பாய்பெத்த
முத்தமா மாசையின்ப துன்பங்கண் முழுதுநீக்கி.

(ப - ரை.) சத்து அசத்து என்னப்பட்ட சகல பாவனையில் = உள்ளது இல்லது என்று சொல்லப்பெற்ற எல்லாப் பாவங்களிலும், என்றும் = சந்ததம், கொத்தற வாசைமாற்றி = உள்ள அளவற்ற ஆசைகளையும் அடியோடுங் கெடுத்து, குறைவில் பேருளத்தனுகி = யாதொரு குறைவுமில்லாத பரம உதாரமுடைய மனத்தனுகி, சுத்த நல்லுதாரமான = தூய் மையாய்ப் பரமானந்தம் பயப்பதில் அதிக உதாரம்வாய்ந்த, சொரூபத்தில் = நினது வடி வத்தில், நிற்பாய் = ஸ்திதிபெறுவாய், பெத்தம் முத்தமாமாசை = பந்தாசைமோக்ஷாசை, இன்பதுன்பங்கள் = சுகதுக்கதசைகள், முழுதும் நீக்கி = யாவற்றையும் விடுத்து; நிற்பாய்.

(ஸ்ரீ - வீர.) சத்துக்கள் அசத்துக்கள் என்னப்பட்ட சர்வபாவங்களிலும் எப்போதும் அவ்விவ்வாசையை விட்டுத்தொலத்து, பரம உதாரமகாமனத்தினர் பரம உதாரஜீவன்முக்தி பதத்தை யடைகின்றனர். கட்டுப்படுத்துவ வாய உடம்பாதிகளின் ஆசையையும், அதன் நிலிருத்தியாய மோக்ஷ ஆசையையும், தியாகித்து, பந்தமித்தியாத்வ நிச்சயமாகியவழி அதன் நிலிருத்தியின் அநாசை யுண்மையின், விழித்துக் கொண்டவன் கனச்சங்கிலிக்கட்டுவிடு தலையை விரும்புவதில்லை யன்றே என்பதுகருத்து; சுகதுக்க தசைகளையும் தியாகித்து, சுக துகதசைகட்கும் மித்தியாத்வ நிச்சயமே காண்டுத்தியாகமாம்; சத்தசத்தாசையையும் தியா கித்து, கலங்காத பெருங்கடல்போல இருப்பாய்.

(ச.) பெத்த முத்தமா மாசை = பந்தேச்சையும் மோக்ஷேச்சையும்! இன்பதுன்பம் = சுகதுக்கமும், முழுதும் = சத்தசத் திச்சையுமாயுள்ள வினைத்தையும், நீக்கி. (23)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நுதலியதை முடித்துக் கூறப்பெறும் நிச்சயநான்கனுள் முத னிச்சயத்தை மொழிதல்:—பேனமென்பது.

(ச-அ-கை.) மானவகேள் என்பது முதலிய மூன்று பாதத்தோடும் மூன்றுகவிகளால், அகங்காரத்தை நான்குவிதமாகப் பிரித்துரைத்தல்:—பேனமென்பதாதி.

பேனமுந் திரையுமில்லாப் பெருங்கடல் போலநிற்பாய்
மானவகேண் மற்றொன்று மாசிலாவிசார மூள்ளோர்க்
கானநிச்சய நாலுண்டா மடிதலே மட்டுநானே
யீனலுற்றவர் தாய்தந்தை யென்பதோ ரறுதிதானே.

(ப - ரை.) பேனமுந்திரையும் இல்லாப் பெருங்கடல்போல நிற்பாய் = அகிலமும் அகற்றி அலைதுரையாதியற்ற அகண்டாகார ஆழியென்ன அமர்ந்திருப்பாய், மாணவ! மனு வங்கிசத்தை விளக்கவவதரித்த இராகவ! கேள் மற்றொன்று = வேறொன்று விளம்பக் கேட்பாயாக! மாசிலாவிசாரமுள்ளோர்க்கு = குற்றமற்ற ஆராய்ச்சி யுள்ளவர்கட்கு, ஆன நிச்சயம் நாலுண்டாம் = உண்டாகும் நிச்சயங்கள் நான்குள்ளனவாம், அடிதலேமட்டும் நானே = பாதமுதல் மஸ்தகபரியந்த மாத்திரந்தான் யான், ஈனலுற்றவர் = என்னேயீன்ற வர், தாய்தந்தை = அன்னேயும் பிதாவுமாவர், என்பதோர் அறுதிதானே = என்னுமிது ஒரு நிச்சயம் அநேக ஜன்மப் பழக்கத்தாற் சுயமாயே யுண்டாம்.

(ஸ்ரீ - வீர.) ஹே இராமச்சந்திர! மற்றொன்று = கூறப்படும் நான்குவிதநிச்சய பேதத்தைக் கேட்பாய்; அதனேயேகூறல்:—மாசிலா வென்பது, மனநிர்மலமென்றே யிருக்க லாம் மூலம்சுத்தலின். மனத்தில் விசாரமுடைய புருடனுக்குப் பராகாரமாய் நான்குவித நிச்சயமுண்டாஞ் சாதலே. கால்முதல் தலைவரையே யான் மாதாபிதாக்களான் மகிழப்பெற் றிட்டது, என்பதேக நிச்சயமாம், பாமரனேக்குறித்துச் சார்வாகன் ஆராய்ச்சி யிற்றலைப்

பட்டான் எனமகிழ்ந்தார் போலும் நால்வருட்படுத்தினர். அல்லது விஜாதீயசங்கியா பூரணமாதலுமுண்டு; அகங்காரசாமியம் பற்றியெனினு மமையும்.

(ச.) அவற்றிற்பாத மஸ்தகபரியந்தனே நானென்பது முதலாவது. (24)

(ஸ்ரீ-வீர - அ-கை.) முதலாவதன் பயனேமொழிந்து, இரண்டாவத னிலக்கணமியம் பிப்பயனேயும் பகர்தல்:—கன்றிய வென்பது.

கன்றியபந்த மாகுமிது மெய்ம்மை கருதாவீற்று
னின்றனவ னேத்தின்மேலோ னெல்லின்வா லினுஞ்சற்றேநா
னென்றிரண் டாவதான நிச்சயமெய்து மென்னி
லொன்றிய முத்தியுண்டா முத்தமர்க் குடைமையாகும்.

(ப - ரை.) கன்றிய பந்தமாகும் இது =இயம்பிய இவ்வகங்காரம் துன்புறுத்தா நின்ற பந்தமாம், மெய்ம்மை கருதாவாற்றால் = அசத்தைக் கண்டுகொண் டிருத்தலான், நின்றன அனேத்தின்மேலோன் = சர்வபாவங்களி னின்றும் அதீதன், நெல்லின்வாவினும் சற்றே நான் = நெல்வாணுணியினும் செடிது நுண்மையன்யான், என்று இரண்டாவதான நிச்சயம் = என உண்டாம் இரண்டாவதான துணிபு, எய்தும் என்னில் = கிடைக்குமாயின், ஒன்றிய முத்தியுண்டாம் = ஆனந்தம் நிறைந்த மோக்ஷமான துண்டாம், உத்தமர்க்குடைமையாகும் = சற்புருடருக்குச் சம்பத்தாயாம்.

(ஸ்ரீ - வீர.) முதனிச்சயவடிவத் தேகாத்மமதியானது பொய்ப்பொரு ளேக்கமிக்கிருத்தவின், பெருந்துயரத்திற்குரிய பந்த ஹேதுவாம். தேகேந்திரியாதி பேதங்களி யாவற்றினும் அதிரிக்தன் நுண்மயிர் நுனியினும் நுண்ணியனேயான், மூலம், தனு = சூக்குமம் = ஸ்தௌல்யரஹிதம், என்னுமிது இரண்டாவது நிச்சயமாம் மோக்ஷத்தின் பொருட்டுச் சற்புருடருக்குண்டாம்: துவம் பதார்த்தசோதன விதியினனே இதற்கு மோக்ஷ ஹேதுத்தன்மையாம்.

(ச.) சர்வாதீதமான பரமசூக்குமன் யான் என்பது இரண்டாவது.

(ஸ்ரீ-வீர - அ-கை.) மற்றிரண்டையும் மலர்தரல்:—புவியென்பது.

புவியெலா மெனதுரூபம் பொன்றுத லிலனுனென்று
குவிவறக் காண்டன் மூன்றுநிசயங் குறைவில்வீடா
மவியுறுமுலகு நானுமனேத்துமை பொய் விண்போலென்றுந்
தவிர்கில மென்றனுலா நிச்சயத் தனிவீடாகும்.

(ப - ரை.) புவியெலாம் எனதுரூபம் = ஜகத்ஜாலங் களியாவும் என்னுடையவடிவம், பொன்றுதல் இலன் நான் என்று = அக்ஷயன்யான் என்பதாக, குவிவறக்காண்டல் = சங்கோசமில்லாமல் நோக்குதல், மூன்றும் நிச்சயம் = மூன்றாவது துணிபாம், குறைவில் வீடாம் = பரிபூரணமோக்ஷத்தைப் பயப்பதாம், அவியுறும் உலகும் நானும் அனேத்தும் = அழிந்துபோகாதின்ற ஜகத்தும் யானும் என்னுமியாவும், பொய் = மித்தை, விண்போல் = வியோமசமமாகத் தோற்ற மற்றனவேயாம், என்றும் = எப்பொழுதும், தவிர்கில மென்றல் = விடுகில மெப்போது முள்ளேம் என்றிருத்தல், நாலாம் நிச்சயம் = நான்காவது துணிபாம், தனிவீடாகும் = கேவலம் மோக்ஷமே பலமாகவுடையதாம்.

(ஸ்ரீ - வீர.) ஜகதஜால பதார்த்தாத்மா சர்வழுமேயான் நாசமற்றவனியான் என்னும் இத்தகையது மூன்றாவது நிச்சயமாம், ஹே இரகுவர! இது மோக்ஷத்தின் பொருட்

டேயாம்; இதற்கும் ஆத்தியாத்மிக பரிச்சின்ன ஆன்மத்தன்மை மயனீக்கத்தானே தற்ப தார்த்தத்தோடே சோதனசம்பவத்தால் மோக்ஷோப யோகமாம். அகமாதல் ஜகத்தாதல் சகலமும் சூனியம் வியோம சமமெஞ்ஞான்றும், என்றுண்டாதல், நான்காவது நிச்சயமா மிது அன்னியம் மோக்ஷித்தியின் பொருட்டாம்; அகமென்றது ஆத்தியாத்மிக பரிச்சேத உபாதியாம், ஜகத்தென்றது ஆதிதை விகாதி யுபாதியாம், எஞ்ஞான்றும் = காலத்திரயத் திலும், இது சர்வதிருஷ்ய பாதாத்ம நிச்சயமாம். இந்நான்குவித நிச்சயங்களுள் முதலாவது பந்தத்தின் பொருட்டாம், பிறமூன்றும் சுத்தபாவனையானே யெழுந்தனவாகி மோக்ஷத் தின் பொருட்டாம் என இயம்பியதாயிற்று.

(ச.) சர்வான்மகன் நானெனபது மூன்றாவது. நானும் ஜகத்தும் ஆகியவனைத்தும் சூனியமே யாதலின் வியோமம்போற் சர்வலிகற்பாதீதன் நானென்பது நான்காவதாம்.(26)

(ஸ்ரீ - வீர - அ - கை.) திருவஷ்ணுபேத நிரூபணத்தில் இதன் விபாகத்திற்குயாது பிரசக்தியெனின் ? உரைப்பதாம்:—பெத்தவென்பது.

பெத்தவாசை யதாமுன்னே பேசுநிச்சயம தொன்றுஞ்
சுத்தவாசை களாமூன்று நொய்யவாய்த் துகளில்சீவன்
முத்தர்பால் விளங்குமிந்த மூன்றினு ளெல்லாநானென்
றெத்ததோர் நிச்சயத்தை யுறிற்பின்னை யுள்ளஞ்சோரா.

(ப - ரை.) பெத்த ஆசையதாம் முன்னேபேசும் = பத்தயோக்கிய திருஷ்ணைவடிவ மாம் முதலில் உரைத்த, நிச்சயமதொன்றும் = நிச்சயமாகிய அஃதொன்றும், சுத்த ஆசை களாம் மூன்றும் = தூயதிருஷ்ணை வடிவங்கள் வாய்த்தபின் மூன்றும், ஆம், நொய்யவாய்த் துகளில் சீவன் முத்தர்பால் விளங்கும் = இவை அதிசூக்கும முடையனவாய் மைத்திரி யாதி நிறைந்த ஜீவன் முத்தரிடத்தி லிலங்குவனவாம், இந்த மூன்றினுள் = பின்மூன்றி னுள்ளும், எல்லாநானென் றெத்ததோர் = எல்லாவடிவமா யிருப்பவனியானே யென் னும் சமதிருஷ்டி வடிவமாய, நிச்சயத்தை = துணிபை, உறில் = சாரில், பின்னை = மறு படி, உள்ளஞ்சோரா = மனத்தில் வாட்டம் மன்னுறமாட்டாது.

(ஸ்ரீ - வீர.) இந்நான்கின் மத்தியில் முதலிலுரைத்தது திருஷ்ணைக்குப் பந்தயோக் யதைதருவதாம், இஃதிருந்தே திருஷ்ணைக்குப் பந்தகத்தன்மை யுண்மையின் இதுவே பந்தஹேது வென்பது பொருளாம். சுத்தமாய்த் தோடமற்றனவாய திருஷ்ணைகளே யுடையனவாய பின் மூன்று நிச்சயங்களும் சொச்சங்களாய்ச் சீவன்முக்த விலாசிகளாம். அவற்றுள் மூன்றுவதன் பிரயோஜனத்தைக் கூறல்:—இந்த என்பதாதி. சர்வம் ஆத்மா அகமேவ என்னும் நிச்சயம் யாதனதோ ஹேமகாமதியை யுடையோய் ! அதனைக்கொண்டு பயின்றுல் மறுபடிவிஷாதப் பொருட்டாகான் என்பது எமதுகருத்தாம். எங்குமியானென எல்லாம் யானெனத் திங்குமதியினன்றுன் பிறந்திறவான்.

(ச.) இவைகளின் மத்தியில் முதலாவது பந்தயோக்கிய இச்சையை அநுசரித்திருத்த லின் பந்தப்பொருட்டேயாம் =ஹேதுவேயாம், மற்றைய மூன்றுமோ; தூய இச்சையோடு கூடியிருத்தலின் ஜீவன் முக்தர்களிடத்தே விளங்குவனவாம். கொள்ளத்தகுந்த அம்மூன்ற னுள்ளும் சர்வான்மா நானென்னும் நிச்சயம் மேலானதெனல்: —எல்லா மென்பது. சர்வ மும் அகமும் ஆன்மாவே யென்னும் எந்நிச்சயமுளதோ என்பதற்வயமாம் மூலத்தில். (27)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நான்காவதற்குச் சூனியவாதி மதம் புகுதலே விலக்கி விளம் பல்:—சூனியமென்பது.

(சு-அ-கை.) சூனியவாத சங்கையைத் தவிர்த்தற்குச் சூனியமென்பது முதலிய சப்தங்கள் எப்படியும் சிதான்ம பரியாயங்களாம் என்றுகூறல்:—சூனியமென்பது.

சூனியம் பகுதிமாயை பிரமஞ்சிற் சோதிஞான
மீனமில் புருடனுன்மா வீசானன் சிவமேநித்த
மானவை யென்னலா மூன்றிரண் டெனுமகல்பேதத்தால்
வானுயர் சகம்படைக்கும் விநோதத்தால் வளருமொன்றே.

(ப - ரை.) சூனியம் பகுதிமாயை பிரமம் சித்சோதி ஞானம் ரான மில்புருடன் ஆன்மா ஈசானன் சிவமேநித்தம் ஆனவை என்னலாம் = சூனியம் பிரகிருதிமாயை பிரஹ்மம் விஞ்ஞானம் சிவம்புருடன் ஈசானன் என்பதாதி சப்தங்களானே வாதிகளால் நித்திய ஆன்மாவே நிகழ்த்தப் பெறுகின்றதாம், ஒன்று இரண்டு எனும் அகல்பேதத்தால் = அதவைதத் வைதமென்னும் விரிந்த வேற்றுமையானே, வானுயர் சகம்படைக்கும் விநோதத்தால் = ஆகாசாதி உயர்ந்த உலக நிர்ம்மாண லீலையால், வளரும் ஒன்றே = ஏகமே விஜ்ரும்பணமாம்.

(ஸ்ரீ - வீர.) சூனியம் தத்பிரகிருதிமாயை பிரஹ்மம் விஞ்ஞானம் எனவும், சிவம் புருடன் ஈசானன் என்பதாதி சப்தங்களானே, சூனியர் யோகியர் சுருதிமுடிவினர் தானியல் கணிகர்சைவர் சாங்கியர் முதலிய வாதிகளானே, ஒன்குசேடித் தினிதுநிற்கும் நித்திய ஆன்மாவே அறையப் பெறுமலது அவஸ்து அறையப்பெறுதாம், உண்மையில் எல்லாம் உயர்ந்த தாய்க்காணும், தண்ணீரன்றித் தரங்கமுன்னுளவோ, விண்ணிய லன்றியோவியம்விளங்குமோ,பண்ணிய கடககேயூரபுரங்,கண்ணிய காஞ்சனமலதுதான் காணுமோ,மண்ணினையன்றித் தருதிருணுதிகள், எண்ணிடிற் பிறிதென விலங்குறுங்கொல்லோ,திண்ணமெய்யிது போற்நிகழ்தரும் வீர, அண்ணலெக் கரியினையன்றி யொன்றிலையே. ஆயின் யாங்ஙனம் ஜலசமூத்திராதி ஜகத்திற் பேதாபேதப் பிரத்தியயமெனின் ? உரைத்தல்; — ஒன்றென்பதாதி. இருமை யொருமை யென்று சொல்லளவா யெழுந்து குமுறும் வேற்றுமைகளானும், ஜகந்நிர்ம்மாண லீலையானும் ஒருபொருளே கிரீடிக்கு மென்பதாம்.

(ச.) அவற்றில், நிராகாரமாதலின் சூனியமாம் பரோக்ஷத் தன்மையால் தத்தாம், ஜகத்துக்குபாதான மாதலின் பிரகிருதியாம், விவிதவிகேப வேதுவாதலின் மாயையாம், பெரிதுக்கெல்லாம் பெரிதாதலின் பிரஹ்மமாம், விசுத்தஞானரூப மாதலின் விஞ்ஞானமாம், பூரகமாதலிற் புருடனும், இயக்கஞ்செய்தலின் ஈசானனும், கல்யாணரூப மாதலிற் சிவனும், என இங்ஙனம் ஆன்மாவே நித்தியம் சொல்லப்படுகின்றது. ஒன்றிரண்டெனும்= தொய்தமும் அத்தொய்தமு மென்னும் பேதாபேதங்களிலுள்ள, அகல்பேதத்தால் = பிரகாரங்களால், வானுயர் சகம்படைக்கு விநோதத்தால் = ஜகந்நிர்மாண லீலையால், இங்ஙனம் வளருமொன்றே, மூலம்: இரண்டின் றன்மைத்விதா. இருமையே. த்வைதம் பேதமென்பது திரண்டபொருள். இருமையும் ஒருமையும் அவற்றின் சேர்க்கையும் என்னும் அவ்வகைகளானே எச்சகந்நிர்மாண ரூபலீலையுளதோ அதனால் ஒன்றே யாடியமருமென்பதாம். (28)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பேதகாரணத்தையே யோதியுணர்த்தி நீதிஸ்தாயிங்ஙனம் நிற்றி யென்னல்:—ஒன்றென்பது.

ஒன்றெனும் பரமரூபத் தொருசத்தி யொருமையாலே
நின்றெழு கின்றதன்றே நின்னது பிறரதென்றும்
பொன்றிய திருந்ததென்றும் பொருள்களிற் கருமந்தன்னி
லென்றுமின் பத்துன்பங்க ளிதயத்திலுன்ற வேண்டாம்.

(ப - ரை.) ஒன்றெனும் பரமரூபத்து = அத்விதீயமாய் பரமவத்துவில், ஒருசத்தி = உள்ள ஒப்பற்ற 'தெய்வாத்மசக்தி, ஒருமையாலே = அத்வைதமாகவே, நின்றெழுகின்ற தன்றே = இருந்து விஜ்ரும்பண மாகின்றதல்லவோ, நின்னது பிறரது என்றும் = தன்னது அன்னியரது எனவும், பொன்றியது இருந்தது என்றும் = நட்டமாயது விருத்தியாயது என்றும், பொருள்களில் கருமத்தன்னில் = வத்துக்களில் வினைகளில், என்றும் = எப்போதும், இன்பத்துன்பங்கள் = சுகதுக்கங்களே, இதயத்தில் = மனத்தில், ஊன்ற வேண்டாம் = அழுத்தவேண்டாம். எழுகின்றதே பிறிதன்று எனினும் அமையும்

(ஸ்ரீ - வீர.) பிரஹ்ம சத்தையேயாய அத்வைத பரமாத்மமய சக்தி, அறியார்பொருட்டுத் துவைத அத்துவைத சமூற்பேதங்களானே விஜ்ரும்பணமாகின்றது. ஆகை விஷ்ணு ஆதலெனெனினின், தன்னது அல்லது அன்னியரது புத்திரமித்திராதி யெல்லாவுலகிலுமே எப்போதுமே, விருத்தி யுண்டாயினும் ஆனியுண்டாயினும் பிறகாரியங்கள் செய்யினும், அறிவுடையவனுகியீ இன்பதுன்பங்களே யெய்தவேண்டாம். ஆயின் எங்ஙனம் என்னில் விவகரிக்கத்தக்கது எனின், பிரஹ்மத்தைப்போலும் துவைத அத்துவைதம் பற்றுதலானே விவக்ரிக்கலாம்; பிரஹ்மத்தைப் போலவே நீ பரமார்த்தமாகச் சத்தாத்வைதமயான்மகனேயாகி, வியவகார காலத்திலும் பாவனையால் அத்வைகத்தையே கன்குபற்றி அவ்வப் பிராணிசரும பலதாரனத்திற் பிரஹ்மம்போல வருணசிரம தரும விவத்தாபன கருமவிஷயத்தில் அத்வைதத்தை எல்லாவாற்றனுமே அநாதாவுசெய்து, விவகரித்துக் கொண்டு தக்கபடி துவைதாத்துவைத உபயபரனுகிவாழ்வாய். அத்வைதத்தில் கருமங்கட்கே யசித்தியாதலினுலும், ஏகரூபமதாக யாண்டுமே ஒருவாறு அத்வைதா சரணமேல் ஜகத்விவத்தை தரும சாஸ்திராதி பாதவழக் காதலினுலும், ஆண்டுத்துவைதாசிரயணமே உசிதமாமென்பது கருத்தாம்.

(ச.) பரமரூபத்து = பரமான்மமயமான, ஒருசத்தி = இத்தகைத்தாய ஒரு சிற்சத்தி, ஒருமையாலே = எவ்விடத்துஞ் சச்சிதாநந்தான்ம சொரூபத்துக்கு வேறுகாததாகவே, நின்றெழுகின்றது = பிரகாசிக்கின்றது, தரங்காதி வைசித்திரியமாயினுஞ் சமுத்திரத்துக்கு ஐக்கியமே யென்பது கருத்து. அவற்றில்; காரியகாரணங்களுக்குச் சிறிதிடத்திற் றெய்தமே காணப்படுகின்றது:—கோமயத்தினின்றும் விருச்சிகம் உதிக்கின்றது என்னுமிடத்திற் போலும்; சிறிது அத்வைதம்:—எங்ஙனம், சொர்ணத்தினின்றும் கடகுகுண்டல மூகுடாதி; சிறிது துவைதாக் துவைதங்கள், எங்ஙனஞ் சீரத்தினின்றும் ததியாதி. அன்று ஏ இரண்டு மசைநிலே. (29)

(ஸ்ரீ - வீர - அ - கை) எத்திதியாற்றிதமாய அறிஞன் சம்சாரத்திற் றுன்புறுனே அத்திதிசார்ந்து சமாதித மனமுடையவராய், காமலோபாதி குதிருஷ்டிகளானே தூடிக்கப் படாதவரா யிலங்கும் பெரியாரது பெருமையைப்பேசல்:—யாது, இழிவு, என்பன.

யாதினுமுயர்ந்து மாளாப்பதம் பற்றியிதய மென்றுஞ்
சீதமாயின்பத் துன்பஞ் சேர்கிலார் பிறப்பிற்சேரார்
சாதுகொள் பகைகொளொத்தல் தஞ்சம்வல் லபங்களுள்ளோ
ரோதிய நெறியிற்செல்லு முத்தமர் பிறப்பிற்சேரார்.

இழிவுயர் விரண்டுமெண்ணு நிச்சைகோபங்க ளெய்தார்
தொழிறெழி லிலாமைவிட் டோர்துன்னிய பிறப்பிற்சேரா
ரெழில்பெற விளங்கியார்க்கு மீனியனவினி திற்சொல்வோ
ரழிபொரு ளனைத்தின் சால்பை யறிந்துளோர் பிறப்பிற்சேரார்.

(ப - ரை,) யாதினும் உயர்ந்து மாளாப்பதம் பற்றி = சர்வாதீதமாய நித்தியபதத்தை யாசிரயித்து, என்றும் = எப்போதும், இதயம் சீதமாய் = மதிபூரணமதியெனத் தண்மையாய், இன்பத் துன்பஞ் சேர்கிலார் = மகிழ்ச்சி வாட்டமடையாதவர், பிறப்பிற்சேரார் = சம்சாரத்திற் சோகமுறார்; சாதுகொள் பகைகொள் ஒத்தல் = சத்துரு மித்துருகளிடத்திற் சமதிருஷ்டி யுடையவராய், தஞ்சம் வல்லபந்தள் உள்ளோர் = தயாதாக்ஷணிய முடையவராய், ஒதியநெறியிற்செல்லும் உததமர் = விதிதமான மார்க்கத்திற்பயிலும் மேன்மையர் சம்சாரத்திற்றுயர் உறார்.

இழிவு உயர்வு இரண்டும் எண்ணர் = கீழ்மேல் இரண்டையும் நாடார், இச்சைகோபங்கள் எய்தார் = ஆசைசினந்தி யடையார், தொழில் தொழிலிலாமை விட்டோர் = வினை வினையின்மை விடுத்தோர், துன்னிய பிறப்பிற்சேரார் = நெருங்கிய பிறவியில் நீங்கினமாகார்; எழில்பெறவிளங்கி = சுப்பிரசன்னமாய்ப் பிரஹ்மதேஜசோடுமிலங்கி, யார்க்கும் = எப்பிராணிகட்கும் ஏற்றத் தாழ்வின்றி, இனியன = இதமானவற்றை, இனிதிற்சொல்வோர் = இன்சொற்களா லுபதேசிப்பவர், அழிபொருளனைதின் = அநித்தியவதுக்கள் யாவற்றின், சால்பை = இயல்பையும், அறிந்துளோர் = தெரிந்துள்ளவர், பிறப்பிற் சேரார் = சமுசாரத்திற் றுன்படையார.

(ஸ்ரீ - வீர.) சர்வாதீதமாயுள நிலைவிலா விமலபரபதத்தைப் பற்றியவராகி, பூரணசந்திரனென்னக் குளிர்ந்த வகமுடையவராய், இடருற்றபோழ்து எங்கிவருந்தாராய், சுகமுற்ற போது துள்ளிக்குதியாராய், விளங்குபவர் சம்சாரத்தி லிடாப்படார்; சர்வசத்துருக்களிலும் மத்தியஸ்தராய், சத்துருவினிடத்திலும் மித்துருவினிடத்திலும் சமமுடையவராய், தயை தாக்ஷிண்ய முடையவராய் விதான கருமங்களைச் செய்பவராய், ஆசிரியர் முதலியவர்க்குச் சமயோசிதப் பிராப்தசேவை பரிபாலனுதி கருமங்களைச் செயபவராய், உள்ளவர் சம்சாரத்திலுள்ள மெலியார். அபிநந்தன மடையார் துவேடமு மடையார், சோகமுமடையார் ஆகாங்ஷையுங் கதுவார், மௌனமுமுடையார் மிதபாஷணதர் இதபாஷணதர், ஆதியகாரிய ஆரம்பமுடையார் ஆலசியமடையார், சமுசாரதலில் அவதியுமடையார். பிராரப்தம் அடைவித்த சுகதாரணப் பிரியவிடயங்களை யடைநிடினும் மகிழ்ச்சி விசேஷவாயிலாய் அவற்றைப்புகழார், துக்கர்வினைதந்த துகதாரண அப்பிரிய விடயங்களை யடைநிடினும் அருவை வாயிலாய அவற்றைஇகழார்; அஞ்ஞானிகட்குச் சுகஹேதுக்களாய மனைவியாதியர்கள் சுபங்களாம், அவற்றின் குணகதனப் பிரவர்த்தகப் பிராந்திரூப தாமசவிருத்தி அபிநதனமாம்; அந்தியர்தம் வித்தையாதி ஈரிவைஷயைப் பயக்கும் வாயிலாய் அறியாதவர்க்குதுயர்க்காரணங்களாம், ஆகலினசுபங்களாம் அவற்றின் நிந்தையாதிப் பிரவர்த்தகமயல வடிவத் தாமசவிருத்தி துவேஷமாம்; இவ்விரண்டும் மயலற்றவரை மருவாவாம், அவை மருவும்போதும் அவர்புகழா இகழார் தொதுமலையடைந் திருப்பர் என்றபடி. கிடைத்த பிரியவஸ்து நீங்கும்போது சோகமுமடையார். இஷ்டா நிஷ்டவஸ்துகளின் சேர்தல் பிரிதல்களை யிச்சியார் என்பதாம். மவுனத்தையே கிளத்தில், வினவின், நடப்பைநவிலுவர். வினவாவிடில் தாணுவைப்போ லிருப்பர். இன்னது செய்தல்வேண்டும் இன்னது செயதல் கூடாது என்னுங் கற்பனையும் விட்டவர் இச்சம்சாரத் திடர்ப்படார், யாவருக்கும் பிரியத்தையே கூறியருளுவர், ஆக்ஷேபித்ததற்கு மிகவும் சாதுரியமாகவும் இனிமையாகவும் விளங்கச் சமாதானந்தருபவர், பூதகளின் ஆசயமுணர்ந்தவர், சமுசாரத்திற் பொன்றுமுர்.

(ச.) யாதினுமுயர்ந்து = சர்வாதீதமாய, சீதமாய் = பூரணேந்துபோற் சீதளமாய், சாதுதைபகைகளொத்தல் = மித்துரு சத்துருக்களிடத்துச் சமத்துவம்; தஞ்சம் வல்ல

வம் = தயைதாக்ஷண்யம். இழிவு = துக்கமும் அதின் சாதனமும், உயர்வு = சுகமும் அதன் சாதனமும், ஆகிய இரண்டும் கிட்டின், எண்ணர் = துவேடமும் பிரியமும் உரூர், இடையாத இஷ்டத்தைக்குறித்து இச்சையும், இஷ்டம் நஷ்டமாயின் கோபங்கள் சோகமும் எய்தார், ஆகலின், தொழில் தொழிலிலாமை = இஷ்டா நிஷ்டங்களை, விட்டோர், எந்த முமுக்ஷுக்களோ அநதப் புருடர், துன்னிய பிறப்பில் = ஜன்மாதி துக்கங்களால், சேரார் = கிலேசமுறார், எழில்பெற விளங்கி = சுபாவமாகவே மிருதுவசன முடையரும், எமக்கிஷ்ட மென்னென்று அந்நியரால் வினவப்பட்டவருமாய், என்னசெய்யத்தக்கதெனப் பரரால் வினவப்பெற்றவருமாய், யார்க்குமினியன = அபிமதத்தை, இனிதிற்சொல்வார் = உசிதமாகவே போதிப்பவர், அபிமததது நிச்சயம் எங்ஙனமெனிற் கூறல்:—அழிபொருள் என்பது. பூதங்களுடைய அபிப்பிராயத்தை யறிந்தவரென்பது பொருள். மூலம்:—அபிமதம் வக்தா, அச்சிலமுடையதாக த்ருக்விருத்தியாம், இது கிருதந்தப் பிரகரணத்திற் காணலாம், த்ருஷ்விருத்திவந்ததனால், நலோகாச்ய நிஷ்டாகலர்ந்த கருநாம், ல, உ, உக, அவயய நிஷ்டா, கலர்த்த, த்ருந், இவற்றினது பிரயோகத்தில், க்ருதயோகமாகக கர்த்தாவிலும் கருமத்திலும் ஷஷ்டியாம், என்பதாற் கண்டஷஷ்டி யாகாதாம், என்பதனானே க்ருத் யோகவடிவ ஷஷ்டியின் நிடேதத்தால் அபிமதம் எனத்விதியா பொருத்துமும் எனக்காரகத்தாரும் வேற்றுமைப் பிரகாணத தறிந்துகொள்க. (30-31)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பரமபதத்தில் எறியவர் பக்ருமாய ஜகத்சம்பந்த ஸ்திதியை உட்கிதள அகத்தாற் புன்சிரிப் புடன்காண்பர், பராபரஙகண்டு மனத்தை வென்றமகாத்மக்கள் இயற்கையித்தகையதாகவின் நீயும் விதவத் சரிதத்திரத்தானே சஞ்சரிப்பாய் அயலொன்றுல் வேண்டாம் என்றித முபதேதித்தல்:—தேயவென்பது.

(ச.) தேயவாதனே யென்பது முகலிய மூன்றுஷிகளாற் சீவன் முக்தன் விவகாரத்தைக் கூறல்:— (வேறு)

தேயவாதனே நீங்கிபபூர்ண மாகித்திதரிகத விழிபிமையாமற் சீவன்முத்தி
யாயபாவனையாலே சொரூபமேவி யனவரதமுலகில் விளையாடுவீரா
மாயவாசையை நீக்கிபபற்றுதத துவாதனேபோ யுள்வெளியாய் வாகியத்தே
மேயவாசாரமெலா மியற்றியென்றும வேண்டியபவா றுலகில்விளையாடுவீரா. (32)

(ப - ரை.) தேயவாதனே நீஙகி = தியேயததியாக முடைத்தாகி, பூரணமாகித் தெளிந்தவிழி=பரிபூரணமாக நிச்சயித்த திருஷ்டி, இமையாமல்=அகலாமல், சீவன் முக்தியாய பாவனையாலே = ஜீவன்முக்தத்தன்மையானே, சொரூபமேவி = சுவஸ்தனுய், அனவரதம் = எப்போதும், உலகில் விளையாடுவீரா = இவவுலகின் கண்ணே விவகரித்துவிளையாடுவாய் வீரராகவனே, மாயவாசையை நீகஙி = மாயாகாரியதத்துற்ற ஆசைகள் அனேதத்தையும் அகற்றி, பற்றறுத்து = வீதராகனுகி, வாதனேபோய் = வாசனே யற்றவனுய், உள்வெளியாய் = உள்ளே சிதாகாசமாய், வாகியத்தே மேயவாசார மெலாமியற்றி=வெளியில் யாவற்றையும் நன்ருக அனுஷ்டிதது, என்றும் = எப்போதும், வேண்டியவாறு = இஷ்டப்படி, உலகில் = இச்சகத்தில், விளையாடுவீரா = விளையாடிக கொண்டிருப்பாய் வீரராகவனே.

(ஸ்ரீ - வீர.) தியேயத்தியாக விலாசினியாய, பூர்ணமாகிய திருஷ்டியை நன்ருகப்பற்றி ஜீவன்முக்தத் தன்மையானே சுவஸ்தனுப் இவ்வுலகில் ஹே இராகவனே விவகரித்து விளையாடுவாய். அந்தக்காரணத்தி னின்றும் சர்வ ஆசையையும் ஒட்டினவனுகி இராகமற்றவனுய்

வாசனையற்றவனும், பாகியத்தே சாவசமாசாரனுகி ஹே இராகவனே இவ்வுலகில் இன்புடன் விளையாடிக்கொண் டிருப்பாயாக.

(ச.) தேயவாசனை நீங்கி = முற்கூறிய அகங்காரரூபமான தேயவாதனுத்தியாகமாய், அதனல் விளங்கிய பூர்ணமாகி = பிரஹ்மமயமாய், வருங்காலத்தபிமதத்திலாசை பற்று, நிகழ்காலத்தில் இராகம், சென்றகாலத்தில் வாசனை, ஆகியவிம்மூன்றும் இன்மையனுல்.(32)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மேலும் அதனையே விரிததுபதேசித்தல்,—சகத்தென்பது,

சகத்திலேபுறத் தொழிலிலூரம் பித்துத்தனி யிதயத்தூரம் பஞ்சற்றுமின்றி
யகத்திலேசெயா தோனுய்பபுறத்தே செய்வோனுகியே யுலகில் விளையாடுவீரா
வருத்தவகங்காரம் போய்ச்சித்தந் தேறிவானம் போனுய்தாகி மாசொன்றற்று
வெருத்துவமா மடையாளமனைத்துமின்றி வேண்டியவாறுலகில் விளையாடுவீரா.

(ப - ரை.) சகத்திலே = இவ்வுலகத்திலே, புறத்தொழிலில் ஆரம்பித்து = வெளித் தொழிலில் தொடக்கமுடையவனுய, தனி இதயத்து ஆரம்பம் = சொரூபத்தி லிளைப்பாறும் இருதயதலில் தொடக்கம், சற்றுமின்றி = சிறிதுமில்லாமல, அகத்திலே செயாதோனுய் = உள்ளேயகர்த்தாவாய், புறததே செய்வோனுகியே = வெளியிற் கர்த்தாவாய், உலகில் விளையாடுவீரா = இவ்வுலகத்தின் கண்ணே வீரம்பொருந்திய இராகவனே விளையாடி விவகரிப்பாயாக, வருத்த அகங்காரம்போய் = பல ஆராய்வினிருந்த அகங்கிருதியைத் தியாகித்து, சித்தந்தேறி = மதிதெளிந்து, வானம்போல் = ஆகாசம்போல, நொய்தாகி = அதிசூக்குமமாய, மாசொன்று அற்று = களங்கமொன்று மின்றி, வெருத்துவமாம் அடையாளம் அனைத்துமின்றி = அதிகவிதமான குறிகள் எதுவு மில்லாமல், வேண்டியவாறு = இஷ்டப்பிரகாரம், உலகில் = இச்சம்சாரத்தில் விளையாடுவீரா = வீரராகவ! நீகிரீடிப்பாய்!

(ஸ்ரீ - வீர) பாகியத்தில் நன்கு தொடருகியவன்போல் நடித்து, இருதயத் தெவ்வளவுந்தொடக்கவர்ஜ்தனுய, பாகியகருததாவாய ஆந்தர அகர்த்தாவாய், இராகவ' விளையாடுதியுலகில்; அகங்காரததை யடியோடுந தியாகஞசெய்தவனும் விசிராந்தியடைந்த மதியையுடையவனும், ஆகாசசோபனனுய, களங்க அங்கங்கள் எவையும் கவராதவனுய், உலகில் ஹே இராமச்சந்திர! நீவிளையாடுவாய். சந்திரனே இரவில்யானே பிரகாசகன் எனகவர்ந்த அகங்கிருதியுடையவன், ஷியரோகித் தன்மையானே இளைப்பாறுதமதியன் கவர்ந்த களங்க லாஞ்சனனுமாவன், நீயோ அவ்வாறல்லே எனவியதிரேகமாம்.

(ச.) ஆரம்பித்து = கற்பிதமான இராகததுவேடாதி விகாரத்தோடு கூடினவனும், ஆரம்பஞ் சற்றுமின்றி = வாதனையின்மையின் நிரவிகாரனும், செயாதோனுய் = அகர்த்தாவாய், மாசு = மனேதோடங்கள், அடையாளம் = பிரித்தறியும் எதுக்களானகுறிகள். (33)

(ஸ்ரீ-வீர - அ - கை,) மேலும் அவ்விதத்தையே வேறோராற்று லுபதேசித்தல்:— இதமென்பது.

இதமானவுதாரியாய்க் கடினுசாரமின் றியாசாரங்கட் கெளிதுபின்போய், விதமானவினத்துக்குரு சார்பைநோக்கி வேண்டியவா றுலகிலவிளையாடுவீரா, புதனுகிநிராசைதனை யுள்ளேதேக்கிப் புறத்தேயாசையிற் றொழில்கள்பூண்டான் போலா, பதனுலுட் சீதளமாய்ப் புறம்வெய்தாகி யனவரதமுலகில் விளையாடு வீரா.

(ப - ரை.) இதமான உதாரியாய் = நல்ல உதாரமுடையவனும், கடிஞசார மின்றி = கோமளாசார முடையவனும், ஆசாரங்கட் கெளிதுபின்போய் = சர்வாசார அநுவிருத்தி மானும், விதமான அனேத்துக்குஞ் சார்மைநோக்கி = நானுவகையான யாவற்றிற்கும் பற்றைப்பார்த்து, உட்சர்வ பரித்தியாகியாய், வேண்டியவாறு = உனதிஷ்டப் பிரகாரம், உலகில் = ஜகத்தில், விளையாடுவீரா = விவகரிப்பாய் இராகவனே; புதனுகி = அறிவுடையவனும், நிராசைதனே யுள்ளேதேகங் = ஆசையின்மையை யகத்தேகொண்டு, புறதனே = பாகியதனே, ஆசையிற்றெழில்கள் பூண்டான்போலாய் = அவாவோடு கூடிக் காரியங்கள் ஆற்றுவோன் போல்பவனும், அதனுல் = அக்காரணத்தால், உட்சீதளமாய் = அகங்குளிர்ந்தவனும், புறம்வெய்தாகி = வெளியில் வெம்பியவனுய, அனவரதம் = நிரந்தரம், உலகில் = ஜகத்தில், விளையாடுவீரா = வீரசேகரராகவுநீ கிரீடிப்பாய்.

(ஸ்ரீ - வீர.) உதாரமிகுந்து மிருதுவான ஆசாரமுடையவனுகி, எல்லா ஒழுக்கங்களையும் பின்றொடர்ந்தவனும், உள்ளே சர்வபரித்தியாகியாய், சர்வபாவங்களின் சாராசார தாரதம்மியத்தை விவகாரத்தானும் பரமார்த்ததத்தானும்; நன்கறிந்தவனும், எவ்வாறிட்டமோ அவ்வாறே யவனியில் விவகரித்து நீ இராகவ விளையாடுவாய்; எல்லா அஞ்ஞானிகளினது கருமாதியாசாரங்களிலும் அநுவிருத்திமான் என்பது ஸ்ரீ பகவத் வசனத்தானும் வெளியாம்:—என்செயற விரிலியான் செயாவினேக ளியாவருஞ் செயாரதனுலே, மன்செய்த குலங்கண் மயங்கிமாய்ந்திடுவர் மற்றவர் மற்றதற்காகப், பின்செயலறியா தவாவொடு முயலும் பேதையைப்போற் பிறர்பொருட்டா, லுன்செயல்களைச் செய்யவை செய்வார் தம்மினுணர்வை வேறுக்கலு மொழிவாய். ற்றடியின் கருதுதிதுவாம்:—அசுத்தாந்தக் காரணமுடைய அனதிகாரிகட்கு அசங்கான்ம ஞானமுபதேசிகில் சுபகர்மங்களிலுள்ள சிரத்தை நீங்கிவிடுவதனுலும், அசுத்தாந்தக் காரணததில் ஆன்மஞான முண்டாகாமையினுலும் போகமோக்ஷங்க ளிரண்டையும் இழநது விடுவார்கள், ஆதலால் ஆன்மஞானியானேனுன் தானும் சுபகர்மங்களைச் செய்துகொண்டு அவர்களையும் சுபகர்மங்களிலே சேர்ப்பிக்க வேணடுமென்பதாம். உள்ளே ஆசையினமையைப் பூரித்து வெளியே ஆசையுண்மையன் போல விவகரித்து, வெளிவெப்பத்தனும் உள்தட்பத்தனும் உலகத்திலிருநது விளையாடி வாழ்வாய் இரகுகுலதிலகனே; ஆசோன் முகர்களைப்போன்ற சேட்டையுடையவனுகி, சர்வவடிவத்தானும் ஆசையின்மையைப் பிரகடனப்படுததின், தனமித்திராதி சங்கிரகங் கூடாமையானும், இராஜ்யபரிபாலன நிர்வாகம் ஏலாமையானும், அங்ஙனம் படுத்தற்க என்பது பாவமாம். மற்ரோ, உல்லாசமாய் மகிழ்ந்தான் போலும். உண்மையில் உச்வேகமுடையான் போலும், அறிபார், கருமநிட்டன் என அவமதித்தாற் போலும், ஆடம்பரமாகப் பொய்யாயாரம்ப மியாவும் செய்வான்போலும், இப்பொய்யுலகில் மெய்யை விடாமல் உயயயாவரும் செய்யுங கருத்தேபோல ஜயவிளையாடுவாய்.

(ச.) கடிஞசாரமின்றி = மிருது விவகாரனும், ஆசாரங்கட் கெளிதுபின்போய். சகல ருடைய வாசாரத்தையு நோக்கி மிகச் சுதோஷிப்பவனும் என்பதுபொருள். வித்துவான் முதற்தனுகச் செவ்வையாய் அநுசரிப்பவனும்ச் சகல கருமங்களையும் செய்விக்கவேண்டுமென்னு நியாயத்தினுல், சார்பைநோக்கி = அகத்திற் சர்வ பரித்தியாகியாய், ஆசையிற் றெழில்கள் பூண்டான்போலாய் = ஆசானுகூல சேஷ்டிதனும். நியாயம் ஸ்ரீபகவத்கீதாஸ் மிருதி: ஸ்ரீ வீரசேகரத்திற் காட்டியதே ராண்டுங்கொள்க. (34)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆயின் எக்கால் அடியேனுக்கு விவகார உபரமம் உண்டாமெனின், வாசனுகூய காரிணியாய விசாரணையுனக்கு எவ்வாறெவ்வா றுதயமாமோ அவ்

வாறவ்வாறு விவகாரகாரியங்கள் உபராமத்தை யடையும், ஆகலினீ யிவ்வாறு ஆராய்தி யெனல்:—இவனென்பது.

இவன்சுற்ற னிவன்பகைவ னிவனுனென்னு மிவ்வெறும் பொய்யிராமநீ யிறையுமெண்ணே, லவம்பற்று நொய்யமனத் தவர்க்கிவ்வாரு மறிந்தோர்க்குச் சகமுழுது மகலாச்சுற்ற, நிவந்துற்ற பலகோடி பவமோகத்தா னீபகைகீயுற வென்பர் நிமிடந்தோறு, முவந்துற்ற மயக்கிதுவாம் பரமார்த்தத்தா லுலகெல் லாம் பகையாகு முறவுமாகும்.

(ப - ரை.) இவன் சுற்றன் இவன்பகைவன் இவன் நான் என்னும் = இவன்பந்து இவன் சத்துரு இவன்யான் என்பதான, இவ்வெறும்பொய் = இந்த ஒருபயனுமற்ற முழுக் கட்டுப்பொய்யை, இராம = யோகிகளிருதயததி லிரமிக்கத் தக்கவனே ! நீ இறையுமெண் ணேல் = நீ அணுவளவுஞ் சிந்தியாதே, அவம்பற்றும் நொய்யமனத்தவர்க் கிவ்வாரும் = அதர்மப் பிரவிருத்தியையுடைய அற்பமனத்தினர்க்கு இங்ஙனமாம், அறிந்தோர்க்குச் சகமு முதும் அகலாச் சுற்றம் = உணர்ந்தவர்கட்கு உலகமியாவுமே நீங்காதபந்துவாம், நிவந் துற்ற பலகோடி பவமோகத்தால் = வந்துவந்து சென்ற அநேகங்கோடி ஜன்மமயக்கத் தால், நீபகை நீயுறவு என்பர் நிமிடந்தோறும் = நீ அபந்து நீபந்து என்றுகற்பிப்பர் கணந் தோறும், உவந்துற்ற மயக்கிதுவாம் = அன்புமிக்குப் பழகிய பிராந்தியே யாகுமிது, பர மார்த்தத்தால் = உண்மையாக நோக்கின், உலகெல்லாம் பகையாகும் உறவுமாகும் = திரி புவனமும் அபந்துவுமாகும் பந்துவுமாகும்.

(ஸ்ரீ - வீ.) இவன்பந்து இவன் அபந்து இதுயான் இது தாங்கள் என்னும் மித்தியா திருஷ்டியானது நினக்குச் சிறிதுமில்லாமல் ஒழிந்திடுக விப்போதே; இவையாவுமே அநியத சுபாவங்களாம், இவன்பந்து இவனல்லன் என்னும் எண்ணம் அற்பமன முடையவர்க்கே யாம், உதார சரித முடையவர்கட்கோ, இவனே பந்துவென்னும் பரிச்சேத லக்ஷணவர ணங்கழிந்ததாகிய தீயேயாம், அத்தகையமதியே யாண்டும் சமததன்மையைக்காண்பதாம். ஆலோசிக்குமிடத்துப் பூதஜாதிகளியாவுமே நினக்குப் பந்துக்களேயாம், அத்தியந்தஞ் சேர்க்கை யற்றவர்களாக இவர்கள் எவர்களுமே கிடையார்கள்; அநாதிசம்சாரத்தில் சர்வ யோனிகளிலும் தனக்கு அநேகமாகச் சன்மானுபவ முண்மையின். பந்துத்தன்மையானே அத்தியந்தஞ் சேராதவர் எங்கும் எப்போதுமே எவருமேகிடையார், பரியாயமாகச் சருவ சோடுஞ் சம்பந்தமிருத்தலின், தேகத்துவாரக பரம்பரா சம்பந்தத்தைக் குறித்துச்சர்வ ஜீவர்களோடும் சாஷாத்தை காதமியசம்பந்தத்திற்கு அந்தரங்கத் தன்மையுண்மையின் அச் சம்பந்தத்தானே அத்தியந்தஞ் சேர்க்கையற்றவர் ஒருவருமேயிலர் என்பதாம். கூறியபொ ருளையே சுருக்கி விவரணித் துபசங்கரித்தல்:—நிவந்துற்ற என்பதாதி நானுயோனி விசித் திரவிவிதஜன்ம சதங்களானே நீண்டுநீண்டு வந்துற்ற சம்பிரமங்களே யுடையதாகிய ஜகத் தில் இவன்பந்து இவனபந்து என்னும் ஈக்ஷணம் = பேததரிசனம், பிரமத்தசையிலுலேயே விஜ்ரும்பண மாகின்றது; உண்மையாயோ ஜீவபாவதிருஷ்டியில் திரிபுவனத்திலு முள்ள ஜீவக்கூட்டம் நிஜபந்துவாம், பிரஹ்மபாவ திருஷ்டியிலோ, சுயமே சர்வமுமாதலின் அபந் துவும் அதுவேயாம்.

(ச.) இவ்வெறும்பொய் = இப்பேத திருஷ்டிகளே, நொய்யமனத்தவர்க்கு = பரிச் சின்னமான தேகாதியில் ஆன்மாவென்னும் புத்தியுடையவர்க்கு, இவ்வாரும் = இவன்பந்து இவனன்றெனும் விசாரணையாம், அறிந்தோர்க்கு = பிரஹ்மமயமான பரிபூரண ஆன்மா வில் நிஷ்டையுடையவர்க்கு, சகமுழுதும் அகலாச்சுற்றம் = போகோப காரணத்திர விய

மாம் சாவமும் குடும்பகமாம் = என்பதுபொருள். நிவந்துற்ற பலகோடிபவமோகத்தால்= சுரநரதிரியக்காதி ரூபங்களான பலகோடி ஜன்மங்களா லுண்டாகிய விபரீதபாவனையால், மயகுகிதுவாம் = இது பிராந்திதசையாம், தோற்றமேயாம், வீசாரிக்கும்போது பரமார்த்தத்தின் = உண்மையாக, உலகெலாம்=திரிபுவனமும்,ஜன்மபேதத்தால் பகையாகும் உறவுமாகும் = வெகுகால்பந்துவுமாம்பந்துவுமாம், ஜன்மபேதங்களைக் குறிக்கின் சம்பந்தங்ளுககு நியமமின்றுதலின் என்பது கருத்து. மயக்கிதுவாம் = மாறுபாடுடைய இவ்வுலகில் இவன்பந்துவென்று தாளுதல் இவன் அபந்துவென்று தாளுதல் நோக்குதல் கேவலம் பிராந்த,தசாஸ் புரணமேயாம். (35)

(ஸ்ரீ-வீர - அ-கை,) இப்பொருளை நன்கு புலப்படுத்தற்பொருட்டு ஒருபழைய சரிதையை யுதாகரணமாக எடுத்துபதேசிகத் தொடங்கல்:—இது என்பது.

இதுபொருட்டா லிதிகாச மொன்று கேள்பண்டி யைந்தது கங்கையின் கரையினிருடிமைநத, ரதுலமயேர் திரகிரியினயலே வாழ்வோ ரருந்தவத்தோர் தீர்க்கதவனனிக் கவநதோர், சதுாமறைதேர் புண்ணியபாவன ரென்றுள்ளார் தந்தையொடு கங்கையின் பாற்றவஞ செய்நாளிற், பொதுவுறச் செய்தவப் பயனுற்கால முற்றிப் புண்ணியனும் புண்ணியவான் போதம்பெற்றுன்.

(ப - ரை.) இது பொருட்டால் = இப்பொருள் தெளிதற்காக, இதிகாசம் ஒன்று கேள் = கதையொன்று கூறக்கேட்குகி, அககதை, பண்டியைநதது = புராதனமானகு, கங்கையின் கரையில் = திரிபதாதையின் தீரத்தில், அதுல = ஒப்பில்லாத, மயேந்திரகிரியின் அயலேவாழ்வோர் =மகேந்திரபர்வதத்தின் சாலையில் வாழ்வோர், இருடிமைந்தர்= இருஷ்குமாரர், அருந்தவத்தோர் = பெருந்தவ முடையோர், தீர்க்கதவன் அளிக்கவந்தோர்= தீர்க்கதவ இருடியின்குமாரர், சதுர்மறைதேர் புண்ணியபாவனர் என்றுள்ளார்= நான்கு வேதங்களுந் தேர்ந்த புண்ணிபாவனர் என்னும் நாமதேயம் வாய்நதவர், தந்தையொடு கங்கையின்பால் தவஞ்செய் நாளில் = பிதாவிலோடு ஸ்ரீ கங்காதீரத்தில் தவஞ்செய்கி காலையில், பொதுவுறச் செய்தவப்பயனுற் காலமுற்றி = நிட்காமியதவத்தின் பயனுகப் பரிபக்குவ காலத்தில், புண்ணியனும் புண்ணியவான் போதம் பெற்றுன் = நிட்காமியபுண்ணியம் நிறைந்த புண்ணியன் என்னும் குணஜேஷ்டன் ஞானபூரணனுனன்.

(ஸ்ரீ - வீர.) விளம்பியபொருள் விடயத்தில், திரிபதகாதீரத்தில், சகோதரர்களாகிய முனிபுத்திரர்களின் சம்வாதவடிவப் பழைமையான இவ்விதிகாசத்தை, உதாகரிக்கின்றனர் ஹே இராகவ ! இவன்பந்து இவன் அபந்துவென்னுங கதையின் பிரஸ்தாவத்தி னின்றும், நினைவில்வந்த, புண்ணியமும் ஆச்சரியமுமாய இவ்விதிகாசத்தைக் கேட்டி ! இந்தஜம்புத்தீவினது ஒரு கிரிஜாலமத்தியில், நிர்த்தாரணத்தில் ஏழாம் வேற்றுமை மூலம்புஞ்சகேன்னும் பாடம்வெளியாம், வனவிபூகமகா பூவுணமகேந்திர மெனப்பெயரிய மகாபர்வதமொன்றுளது, அது கற்பத்துருமவனச் சாயையில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் முனிவர்கின்னரர்களை யுடையது, ஆகாசம் விஸ்தீர்ணமாயினும் சமுந்நத சிருங்கங்களானே வெற்றிகொண்டு வியாபித்து நிற்பது, என்பனவாதி அநேகவளப்பங்கள் நிறைந்து பிரஹ்மலோகாந்தரம் என்று சொல்லப்பெற்ற அதனது ஏகதேசத்தநிவிஸ்தாரமாய இரத்தினப் பாறைகளிலேநரங்களில் மகோரம்மியமாய சோலைகளின் நீரங்களில், முனிவர்களின் ஸ்நானபானப்பொருட்டு வியோம கங்கையென்னும் மந்தாகினி யவதரித்து விளையாடும்; அந்தகிரிபதாகையினது, தேன்றுளி சிதறிக்கொண்டும் பூந்துணர் துருமிக்கொண்டும் வண்டினம் ரீங்

காரஞ்செய்து, கொண்டும் விளங்காநின்ற விருஷங்கணிறைந்த தீரத்தில், மேருவின்றடம் போல் மிகமிக விளங்கும் கனகவொளியது காலுஞ்சோலையில், பரமாத்மபோதம் நிறையப் பெற்ற தபோராசியாயும் பரம உதாரமதியை யுடையவராயும், தபமே அபரசீராக தரித்து வந்தது போன்றவரும், தீர்க்கதவர் என்னுந் திருநாமம்வாய்ந்த வருமாகிய ஒரு பெருந்தவ நிருந்தார். அம்முனிவருக்கு, பிரகஸ்பதிக்கு இரண்டுகசர்கள் உண்டானாற்போலப் புண்ணியபாவனர்கள் என்று நாமம்படைக்கப்பெற்ற இந்து சுந்தரர்களாய இரண்டு மைந்தருண்டாகி யிருந்தார்கள்; இரண்டு கசர்கள் போன்றென்றது, அபூத உவமையாம், கசன் ஒரு வனேயாதலின். அம்முனிவர் அவ்விரு குமரரோடும், அருமையாய தனதொருபாரியோடும்; அந்தச் சபலிபாதப் சரித்தின்தீரத்தில் வசித்தனர்; சிறிதுகாலஞ் சென்றபின்னர், அம்முனிவரது இருகுமரர்களுக்குள் புண்ணியனெனப் பெயரிய குணங்களில் மூத்தவனுகிய மூத்தவன் ஞானவானுகிய தத்துவவித்தாயினன். (36)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சின்னவன் செய்தியைச் சிறிதுவிளம்பல்:—அங்கவன் என்பது

அங்கவன் பின்னவனுன பாவன்ன் பாலறிவுடைமை பாதியளவாதலாலே, செங்கதிரோ னுதிப்பதன் முன்னருணன்றேன்றச செங்கமலங் கிண்கிணிவாய்ச செய்வதொத்துத், துங்கவறியாமையு மெய்வீடு மின்றித்தோளா வெந்திரம்போலத் துவண்டு நின்றான், பொங்குதவத் தீர்க்கதவ னென்னுநதந்தை போகத்திலிச்சையெலாம் புந்திதீர்ந்தான்.

(ப - ரை.) அங்கு அவன் பின்னவனுன பாவனன்பால் = அவ்விடத்தில் புண்ணியன்றன் சின்னவனுன பாவனன் என்பவனிடத்தே, அறிவுடைமை பாதியளவு ஆதலாலே = ஞானங்கொண்டிருக்குந்தன்மை அர்த்தபரிமாண மாகையினால், செங்கதிரோன் உதிப்பதன்முன் = சிறுதிலங்குஞ் சூரியன் உதயமாவதன் முன்னா, அருணன் றேன்ற = அருணோதய சமயத்தில், செங்கமலம் கிண்கிணிவாய் செய்வதொத்தது = செந்தாமரையானது சதங்கைவாய் போலச்சிறிதுவிரிதலும் விரியாமலும் இருப்பதுபோல, துங்க அறியாமையும் மெய்வீடுமின்றி = அதிதியுந்த மஞ்ஞானமும், முதிர்ந்த மெய்ஞ்ஞானமும் இல்லாமல், தோளாவெந்திரம்போல = ஊஞ்சல்போல, துவண்டு நின்றான் = சலனப்பட்டிருப்பவன், பொங்குதவத் தீர்க்கதவ னென்னுந்தந்தை = மிகுந்ததவத்தை யுடைய தீர்கதவா என்னும் அம்மைந்தர் தந்தையானவர், போகத்திலிச்சையெலாம் புந்திதீர்ந்தான் = போகத்திலுள்ள ஆசைகளனைத்திலும் எண்ணமற்றவரானர்.

(ஸ்ரீ - வீர.) பூர்வசந்தியா அம்புஜம்போலப் பாவனன் அர்த்தப் பிரபுதஞனுன், மூர்க்கசம்பந்தத்தைக் கடந்தான் எனினும் பரமாத்மப தத்தை யடைந்திலான், இரண்டிற்கிடையில் ஊசலாடிக்கொண்டிருந்தான், அதன்பின், பிராணிகளானே ஆயுஷ்யத் தன்மையானே அலகிதமும், சம்வற்சர சதவடிவினதும், காரணங்களியக் கழிவதும், தவத்தானே செலுத்தியதும், தீர்கதேகக் கொடியையும் ஆயுளையும் ஜீர்ணஞ்செய்ததும் ஆகியகாலங் கடந்து போக, அம்முனிவர் பகுரூபூதத்தோடு கூடியதும், ஜன்மஜரா மரண சுவர்க்கபாத நரகாதி விருத்தாந்த சதங்களானே அதிபீஷ்ண மாயதும், ஆகிய இச்சம்சாரததினின்றும், ஜராஜர் ஜராஜீவிதத்தினின்றும் இராதியை விட்டொழித்தனர், அதிபயிற்றல்

(ச.) மெய்வீடும் = பிரஹ்ம நிஷ்டையும். (37)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தீர்க்கதவரது விதேகமுக்தி:—காலமே யென்பது.

காலமே காரணமாய்க் குடும்பவாழ் விற்காத லொழித்தறச் செறிந்தகாயந் தன்னைச், சாலமிகு தொழிற்பறவைக் கிடமாங்கூட்டைச் சானவியின் கரைவரை யிற்றானே தீர்ந்தான், கோலியொரு சுமைசுமப்பான் குறித்தவெல்லை கொண்டு போய்ப்போடுவ போற்குரம்பை போட்டு, மாலுறுபற் றொன்றின்றிப் பூவினற் றம் வாணுறல்போற் பரமபத வாழ்வுபெற்றான்.

(ப - ரை.) காலமே காரணமாய் = காலத்தையே நிமித்தமாகக்கொண்டு, குடும்ப வாழ்வில் = சமுசார வாழ்க்கையில், காதலொழித்து = ஆசையையகற்றி, அறச்செறிந்த காயந்தன்னை = தவம்புரிந்து ஜராஜர் ஜரமாகிய சரீரத்தை, சாலமிகு தொழிற்பறவைக்கிட மாங் கூட்டை = அத்தியந்தம் அலையும் வினைவிகாரத்திற்கு இடமாகும் நீடத்தை, சான வியின் கரைவரையிற்றானே தீர்ந்தான் = ஸ்ரீ கங்கைக்கரைவரைக் குகையிற் சுயமாகவே விலக்கினான், கோலியொரு சுமைசுமப்பான் = இன்ன இடத்திற் போடுவதென்று நிய மனஞ் செய்துகொண்டு ஒருபாரத்தையெடுத்துச் செல்லுவோன், குறித்தவெல்லை கொண்டு போய்ப் போடுவபோல் = நியமித்த இடத்திலப் பாரத்தை யெடுத்துக்கொண்டு சென்று அடைந்தத்தலத்தில் போடுவதுபோல, குரம்பைபோட்டு = நுகர்வினை தீர்ந்தவுடனே தேகததை விடுத்து, மாலுறுபற் றொன்றின்றி = மயக்கததைத் தரத்தக யாதொரு வாஞ சையு மில்லாதவனாய், பூவினற்றம் வாணுறல்போல் = புஷ்பகந்தம் அம்பரமடைதல்போல், பரமபதவாழ்வு பெற்றான் = பரமபத வாழ்வாகிய மோக்ஷத்தை யடைந்தனன். அறச் சரிந்த = முற்றினும் சரைமூடிய.

(ஸ்ரீ - வீர) வினைவிகாரத்தின் வீடாகிய நீடதேகத்தைத் தீர்க்கதப ரென்னுமம் முனிவர், கிரிகுகைக கேகத்தில், வைவதிகன் = விறகுமுதலிய பாரம்தாகஙிச் செல்பவன் வீட்டில் கொண்டுபோன பாரத்தைப் போட்டுப் போதல்போல், விட்டுவிட்டார். மூலம் விவதவீவத சப்தங்கள், இருபாலு முறிகட்டிய ஸ்கந்தவாகிய காவ்ஷ்டவிசேடத்தில் நிகழும், புஷ்பகந்தம் அம்பரமடைந்ததைப்போல நீராகபதத்தை யடைந்தார்.

(ச.) அறச்சரிதத = சரையான் மிகவுஞ்சீர்ணமான, காயததன்னை = தேகமென் னும், தொழிற்பறவைக்கு = அகங்கிருதி யென்னும் பக்ஷிக்கு, பூவினற்றம் = மோக்ஷ முகளபத் தத்தினின்றும் நீங்கி வாணுறல்போல், மாலுறு பற்றொன்றின்றி = பந்த வேதுக்களான சங்கற்பாதிக ளொன்றுமின்றி, பரமபதவாழ்வு = பரிசுத்த சின்மாத்திர ரூபமான கைவல்லி யத்தை, பெற்றான். மூலம்:—கலிதகாரணே = ஜன்மாதி காரணங்களைப் பிரேரணைசெய்த காலங்கடந்து செலலவே; வைவதிக:, விவத:=பாரயஷ்டி. அதைத் தூக்குபவன்=காவடிச் சுமைதூக்கி. சேத்யமுகத சிதாஸ்பதம் = திருசியத்தை விட்ட சித்திற்குப் பிரதிஷ்டை வடிவமாயது, இராகாதி இரகிதங கைவல்யமாம், அதனைப் பெற்றான்.

(ஸ்ரீ-வீர - அ-கை.) அன்னையும் பிதாவும் ஆகம்விட்டபின் முன்னவன் பின்னவன் செய்கையை மொழிதல்:—தொழிலென்பது.

தொழிலின்றிக் காட்சியெனுந் துன்பமின்றித் தொல்லறிவு தோன்றிட மாஞ சொரூபம்பெற்ற, வழிவின்முனி யிறத்தலுமே யவன்றன்பன் னியம்புய நின்றகலளிபோ லங்கம்விட்டாள், விழிகணிகர் தாய்தநதை யிறப்பக்கண்டு மேற்செய வேண்டிய கிரியைவிதியிற் செய்வான், வழிபடு புண்ணியன் மூயன் றான்பாவன்றனும் வருத்தமெனுங் கடற்புகுந்து மயங்கலுற்றான்.

(ப-ரை.) தொழிலின்றி = திருதிருத்திய வடிவமாய், காட்சியெனுந் துன்பமின்றி = திருசியமென்பதான துயரமொன்று மில்லாமல், தொல்லறிவு தோன்றிடமாம் = சிதாஸ் பதமாம், சொரூபம்பெற்ற அழிவின்முனி யிறத்தலுமே = சொரூபத்தைச் சாக்ஷாத்கரித்த நித்தியமுனிவர் சரீரத்தை விடுதலும் உடனே, அவன்றன்பன்னி = அவரது தருமபத்தினி யும், அம்புயம் நின்றகலரிபோல் அங்கம்விட்டாள் = தாமரையினின்றும் நீங்கும்வண்டே போல் ஆகத்தை விட்டனள், விழிகணிகர் தாய்தந்தை யிறப்பக்கண்டு = இரண்டுநேத்திரங் கட்குச் சமானமான அன்னையும் பிதாவும் தேகம் விட்டதைப்பார்த்து, மேற்செயவேண் டியகிரியை = செய்யத்தக்க உத்தரக்கிரியையை, விதியிற்செய்வான் வழிபடு புண்ணியன் முயன்றான் = விதிப்பிரகாரம் செய்யும் பொருட்டுத் தாய்தந்தையரைத் தெய்வமாகப் போற்றிக் கொண்டிருந்த முன்னவன் முயல்வதானான், பாவன்றானும் = பாவனனே, வருத்தமெனுங் கடற்புகுந்து = துக்கமாகிய சாகரத்துட்டுளைந்து, மயங்கலுற்றான் = மயல் கொண்டழத் தொடங்கினன்.

(ஸ்ரீ - வீர.) அம்முனிவர் பூமணங்கம் முறலேபோல, சகலதொழில்களும் ஒய்ந்ததும், சேத்தியங்களினின்றும் அகன்ற அவ்வச்சீவ சைதன்யங்கட்குப் பிரதிஷ்டாபூதமாய பரம பதமும் ஆகியமோக்ஷ மடைந்தபின்னர், பிராணு அபானவிவர்த்திதமாய முனிவாதுதேகத் தை அவ்வம்மையார் கண்டு நாளமில்லாத பங்கஜம்போலப் பூமியின் கண்ணே புரண்டழு தனள், பதியினுலே யுபதேசிக்கப்பெற்ற யோகயுக்தியினுனே வெகுகாலம் பயின்றயோக வல்லமையானே, அறுகாலளியம்புயத்தினின்றும் அகலுதல்போல, ரோகஜராதி மலின மொன்று மின்றேனும் தனுவைவிடுத்தனள். அஸ்தமடைந்த சந்திரன் பிரபாத கனகோசத் திருத்தலேபோலும், ஜனங்களின் கண்காணுமையை யடைந்த அவ்வம்மையாரும், பர்த்தா வையே பின்றொடர்ந் தடைந்தனள்; பிரஹ்மமயமாய பர்த்தாவையே யடைந்தனள் = தாமும் பிரஹ்மபாவத்தையே யடைந்தனள் என்பதாம், பிரஹ்மவித்துக் கட்குத் தேசாந் தரத்திற் கதிஇடையாதாம்; " அவனது பிராணன் எழுந்தடையாவாம், இவணேயிலய மெய்திடுமினிதே " எனமறையுமறையும். சென்றமாதா பிதாக்கட்கு நடத்தவேண்டிய மேலதாய சரீரசம்பந்த கருமத்தில், புண்ணியனே வியசனசோகாதி யொன்றுமின்றி நின் ருன், பாவனன் துயரமேமிக அடைந்தான். பாவன்றானும் என்ற இடத்தில் பாவனன்றான் என்றிருப்பினும் செய்யுளமையும், எனினும் பாவன் என்று விகாரப்படுத்தி யுரைத்தது, அவனது விகாரத்தைக் காட்டுவதற்கே போலும்.

(ச.) பர்த்தாவாற் கொடுக்கப்பட்ட யோகபலத்தால் தாயும் உடல் விட்டாள். (39)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பின்னவன் மதியறவின லெய்தலும் முன்னவன் விதிமுறை வினை செய்தலும் விளம்பல்:—அன்னே யென்பது.

அன்னேயன்னே யென்னுமென்னே யின்றவை யாவையா வென்னுமந்தோ வந்தோ, வென்னேயென்னே யென்னுமாற்ற ஞகியெரிமிதித்தாற் போற்கான மெங்குமோடுந், தன்னேரின் முன்னவனே நோக்கித்தேறுன் றம்பிமிகத் தளர் வுற்றான் புளராமுன்னேன், மின்னேரு மூடற்கிறத்த லியல்பேயென்று வே றொன்று நினையாமல் விதியேசெய்தான்.

(ப-ரை.) அன்னே அன்னே யென்னும் = மாதாவே மாதாவே யென்றழுவன், என்னே யின்ற ஐயா ஐயா என்னும் = என்னைப்பெற்ற பிதாவே பிதாவே யென்றலறுவன், அந்தோ அந்தோ = ஐயோ ஐயோ, என்னே என்னே யென்னும் = எங்களே பரிதவிக்க விட்டுப்

போய்விட்டீர்களே இஃதென்ன காரணம் இருவருந் திடீரென்று போய்விட்டீர்களே இஃ தென்னகாரணம் என்று புலம்புவன், ஆற்றாஞெகி = துயரஞ் சகியாதவனுகி, எரிமித்தாற் போற் காணம் எங்கும் ஓடும் = அக்கினியை மிதித்தவன் பதறியோடுதல் போலச் சோலை யெங்கும் சோகாக்கினியால் சுழன்று சுழன்றோடும், தன்னேரின் முன்னவனே = தனக் கொப்பற்றவனுகிய சேஷ்டனே, நோக்கித் தேறன் = பார்த்தாறுதலே யடையான், தம்பி மிகத்தளர்வுற்றான் = பாவனன் அத்தியந்தம் சோகத்தை யடைந்தனன், தனாமூன் னேன் = சோகமடையாத பெரியவன், மின்னேரூடற்கு = மின்னிலேயி லிம்மன் னுயிராக்கைகட்கு, இறத்தல் = அழிதல், இயல்பே = சகஜமே, என்று=எனவெண்ணி, வேறொன்றும் = அயலொன்றையும், நினையாமல் = சிந்தியாமல், விதியே செய்தான் = பிதுர் காரியமே யியற்றினன்.

(ஸ்ரீ - வீர.) சோகத்தானே நிறையப்பெற்ற மனத்தை யுடையபாவனன் கானனவீதி களில் பிரமமடைந்து சுற்றி, சேஷ்டபிராதாவை நோக்காமலே = நோக்கியவனேப்போல இவனும் தைரியத்தைப் பற்றுமலே, ஓலமிட்டலறி யுலறினன். புண்ணியனே இத்தரையிற் பிறந்திறப்ப தெடுத்தவுடற் கடுத்தபொறி யென்றெண்ணி மறைநெறியே கருமங்களைச் செய்தான். (40)

(ஸ்ரீ-வீர - அ-கை.) புண்ணியன் உத்தரகிரியையை முடித்து, பின்னவனைத் தேற்றத் தந்தைதாய ரடைந்தபதத்தின் பெருமையை யெடுத்துரைத்தல்:—மறையென்பது.

மறைநெறிகண் முடித்ததற்பின் சோகத்தாலே வாய்மூடா விளவறினே வந்துசார்ந்து, நிறையறிவாம் புண்ணியன்பா வனனேநோக்கி நெஞ்சழிக்குந் துயரமைந்தா நீத்தலென்னே, பொறைமிகுநின் பிதாநின்ன தன்னையோடும் பொருந்தியிருந்துளபதத்தின் பொலிவைக்கேளாய், குறைவுநிறைவில தென்றுந் தனதாய்த்தானுய்க் கோதிலதாம் வீடெனும்பேர் கூறவற்றும்.

(ப - ரை.) மறைநெறிகண் முடித்ததற்பின் = ஔர்த்வதேகிக கர்மஞ்செய்து முடித்த தன்பின், சோகத்தாலே = துயரத்தாலே, வாய்மூடா இளவல்தனை வந்துசார்ந்து=அழுது கொண்டேயிருந்த சின்னவனைத் தேடியடைந்து, நிறையறிவாம் புண்ணியன் = பூர்ணஞா னம் பெற்றுள்ள சேஷ்டன், பாவனனை = கனிஷ்டனை, நோக்கி = கருணையோடும் பார்த்து, நெஞ்சழிக்குந் துயரம்மைந்தா நீத்தல் என்னே ! = அவிவேக காரணமாகிய துக் கத்தை விடாமல் இருக்கின்றீரே இஃதென்னே குழந்தாய் ! பொறைமிகும் = சாந்தி மிகுந்த, நின்பிதா = உனதுதந்தை, நின்னது அன்னையோடும் = உனது தாயாரோடும், பொருந்தியிருந்துளபதத்தின் = அடைந்திருந்துள்ள இடத்தின், பொலிவைக்கேளாய்= பெருமையைக் கூறக்கேட்பாயாக, குறைவு நிறைவு இலது = அவயவத்தோடு கூடியில்லா மையின் சங்கோச விகாசாதி தருமங்களற்றது, சிறுகல் பெருகல் இல்லது,) என்றும் =எப் போதும், தனதாய் = தன்னுடையதாய், தானுய் = ஆத்மபதவியாய், கோதிலதாம் = குற்றமற்றதாம் மாயையையுங் கடந்திருத்தலின்,) வீடெனும்பேர் கூறவற்றும் = மோக்ஷ மெனப்பெறுவதாம். நின்பிதா அத்தியாசத்தியோதனம் [illegible]

(ஸ்ரீ - வீர.) மாதாபிதாக்கட்குச் செய்யவேண்டிய சடங்குகள் யாவற்றையும் செய்து முடித்தபின்னர், உதாரதீயாகிய பரமதார்மிக புண்ணியன் சோகலாலசனுகிய பாவனனைத் தேடிவந்து விழிநீரினத்திற்கண்டு கூறுவதாவது:—ஹே குழந்தாய் ஹேமைந்த ஹேபாவன ! பிதாவுக்கொப்போன் சேட்டன் என்னும் [illegible] முறைபற்றி மைந்தனென விளித்ததாம்,

ம்மிழகாலத்திய தாமக்ரியர்னது, பெருமேகமண்டல கோரகர்ச் சூனையையும் தாரையாகப் பொழியுமெழி லியையும் பேரிரூளையும் உடைத்தாகிச் சோகமுறுவதேபோலக் கனமான துக்கத்தையும் வெம்பிய பொருமலையும் பெருமூச்சையும் பெருங்கண்ணீர்த் தாரையையும் பேரழுகையையும் உடையவனு யதனுனேயே யுளக்கண்ணுங் குருடடைந்து வெளிக் கண்ணுங் குருடடைந்து தாமரைபோன்ற வதனம்வாடி மரையிதழ்போன்ற விழிகளுஞ் சோர்த்து வருந்துகின்றுயே இஃதென்? மூலத்திற் சிலேடை யாதலின் விசேடணங்கள் சாதாரணங்களாம், மகாப்பிராஞ்ஞராகிய நினதுபிதாவானவர், நினது மாதாவோடும், தன்னதேயாய மோக்ஷமெனப் பெயரிய பரமாத்ம ஆத்மபதவியை யடைவுற்றனர்.

(ச.) துயர் = துக்கசாகரத்தில், நீந்தல் = நீஞ்சுவது, என் = மிகுந்தசோகத்தை யடைவதென்ன காரணமென்ற தாயிற்று. (41)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மீளவும் அப்பதத்தையே வியந்தோதிச் சுற்றமொரு மட்டில்லை யெனல்:—அனைவருக்கு மென்பது.

அனைவருக்குமேவுமிட மதுவேயாகு மறிஞருக்கு மெய்யுருவ மதுவேயா குந், தனையகலா வப்பதத்தில் வாழுந்தாதை தனைநோக்கித் தளருமதுதகவோ தம்பி, துனைபுனலி னெட்டடத்துக் கெய்தும்பள்ளத் தொருதிபோற் பிறவிதொ றுந் தொடர்பாய்ப்போன, வனையுறுநின் ரூய்தந்தைக் கிலக்கமுண்டோ மனை மக்கள் சுற்றமொரு மட்டுண்டாமோ.

(ப - ரை.) அனைவருக்கும் மேவுமிட மதுவேயாகும் = ஜந்துக்கள் அனைத்துக்குமே புலமதாகி முடிபவர் அது அடையத்தக்க தானமாம், அறிஞருக்கு மெய்யுருவமதுவேயாகும் = விஜ்ஞாதாத்மாக் கட்கு அதுவே வடிவமாம், தனையகலா வப்பதத்தில் வாழுந்தாதை தனைநோக்கித்தளருமது தகவோதம்பி = ஆத்மசொரூபத்தை விட்டகலாத அந்தப் பிரஹ்மாநந்த பதத்தில் ஆநந்த மாக வாழ்கின்ற அன்னை பிதாக்களைக் குறித்துச் சோகமுறுவது யோக்கியமாமோ இஎ யேஎய், துனைபுனலின் ஓட்டத்துக்கு = நெருங்கிய ஜலப்பிரவாகத்திற்கு, எய்தும்பள்ளத் தொருதிபோல் = நேரும் நீர்மடுக்கள்போல, பிறவிதோறும் = ஜன்மந்தோறும், தொடர் பாய்ப்போன = தொடர்ந்து கொண்டேசென்ற, வனையுறு நின்ரூய் தந்தைக்கு=நின்னை மீன்ற அன்னையத்தருக்கு, இலக்கமுண்டோ = கணக்குண்டோ, மனைமக்கள் சுற்றம் ஒரு மட்டுண்டாமோ = மனைவிகள் மைந்தர்கள் பந்துக்கள் என்பவர் ஒருகோடிக் கணக்கில் அடங்குவனவாமோ.

(ஸ்ரீ - வீர.) அப்பதம் சர்வஜனன தர்மிகளாகிய பிராணிகட்கும், உற்பத்தியாதி காலத் திரயத்திலும் ஆதாரபூதமாம், விஜ்ஞாதாத்மாக்களாகிய பிரஹ்மவித்துக்கட்கு அது சொரூப மாம், அதனுனே பிதாமாதாவைக் குறித்துச் சோகிக்கலாகாதெனல்:—தனை + தம்பியென் பது, தஞ்சுபாவ சுகத்தை யடைந்துள்ள பிதாக்களைக் குறித்துப் படர்ந்து சோகமடைந் திடல் உசிதமாகா தென்பதாம். ஹேசுத ! நினக்கு மாதாக்களும் பிதாக்களும் நன்றுசென் றவர்கள் ஆயிரங்கோடியன்றே ! வனந்தோறும் ஜலப்பிரவாகத்தினது அளவில்லாதபள்ளத் தாக்குகள் போலவாம் = கம்பீரஸ்தானங்கள் போலவாம், எண்ணமுடியாத மைந்தர்களை யுடைய அவ்விருவருக்கும் நீயே சுதன் என்பதாக வில்லையல்லவோ, மூலம். நீயே என்பதற் குப்வானேவ என்றுள்ளது தாங்களே யென்பது அதற்குப் பொருளாம், அவ்வளவு மரியா தையாக உரைத்தது அருமை தோன்றவாம், ஆகவே அநேகங்கோடி சுதருள் நீயு மொரு வன் என்பதாம். ஹேபுத்திர ! அன்னிய நரர்கட்கும் சரித்திரங்கம்போலும் புத்திரகணங்

கள் சென்றனவாம்; புத்திரமித்திர பந்து விருந்தங்கள் ஜன்மஜன்மந்தோறும் ஜந்துக்கட்குக் கோடானு கோடியாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) காலமெல்லாம் கதறினும் கழியாத காரியத்திற் கையிடலாகாதெனக்கூறிப் பேதவாதனையின் பெருமையைப் பேசல்:—பருவமென்பது.

பருவங்க டொறும்பெரிய வனத்திற் காய்க்கும் பலங்கள்போற் பவங்கடொறும் பரந்தசுற்றங், கருதுங்கா லிறந்தவவர்க் கிரங்கவேண்டிற் கற்பமளவு லறிணுமோர் கரையுண்டாமோ, சொருபமிலா வஞ்ஞானக் கானன்மேட்டிற் பிருடர்ந்தவாதனைக கோடைச்சுழல வெங்கானற், பெருகுநீர் சுகாசுகமாந்திரை கண்மோதிப் பேதமொரு கரையின்றிப் பிறழுமன்றே.

(ப - ரை.) பருவங்கள் தொறும் = இருது இருதுக்களில், பெரியவனத்தில் = மகத்தான வனங்களில், காய்க்கும் பலங்கள்போல் = உண்டாகும் கனிகள்போல, பவங்கள் தொறும் பரந்தசுற்றம் = ஜன்மஜன்மங்களில் விஸ்தரித்த பந்துவர்க்கம், அளவில்லதாம்;) கருதுங்கால் = ஆலோசிக்கும்போது; இறந்த அவர்கட்கு இரங்கவேண்டில்=சென்றவரைக் குறித்து அழுவதானால், கற்பமளவு = கற்பகால பரியந்தம், அலறிணுமோர் கரையுண்டாமோ = கதறினும் ஒருவஸ்லகாண முடியுமோ, முடியாதாம்;) சொரூபமிலா அஞ்ஞானக் கானல்மேட்டில் = அநிர்வசனீயமான அஜ்ஞான மருப்பூமியில், தொடர்ந்த வாதனைக் கோடைச் சுழல்வெங்கானல் பெருகுநீர் = அநாதியாகச் சம்பந்தித்துவரும் தனதுவாசனையெனப்பெயரிய மரீசிவாரியானது, சுகாசுகமாந் திரைகண்மோதி = இன்பத்துன்பங்களாகிய தரங்கங்கள் அலைப்ப, பேதமொரு கரையின்றிப் பிறழுமன்றே = அநந்தரூபமதாக அவிர்ந்தோங்கும், அநாதியாகவே, அன்று ஏ அசைநிலைகள் எனினுமாம்.

(ஸ்ரீ - வீர.) இருது இருதுதோறும் பெருந்தருவி னின்றும் சென்றன கனிகள்போல ஜன்மந்தோறும் சென்றனர் உறவோர்யாரும், நேயமிருதியினனே சென்ற மாதாபிதாசுதாதிகளைக்குறித்துச் சோகித் தழுவதென்றால் ஆயிரங் கோடிகாலம் நிரந்தரம் அழுதாலும் முடியுமோ, ஆகலின், உன்னுற்சோகிக்கத் தகாதவரேயாவர்; மாதாவாதியர் அன்பாற்சோகிக்கத் தக்கவரேலாயின் என் உன்னல் நிரந்தரம் ஆயிரம்வகையாகச் சென்றவர் சோகிக்கப்பெறவில்லை, நீ நிரந்தரம் சோகித் தழுதுகொண்டே யன்றோ விருக்கவேண்டும். ஹே மகாபாகுவே ! இப்பிரபஞ்சம் ஜகத்கற்பனை நிமித்தமான மோகமிருந்தான் மாத்திரம் காணப்பெறும், உண்மையாகவோ உனக்குப் பிரஞ்ஞையே வடிவமாதலின் ஹே பிராஞ்ஞனே மித்திரருமில்லை பந்துக்களுமில்லை. அவ்வாறே வார்த்திகத்தும் கூறப்பெறுகின்றது: — அவித்தையிலிருந்தே யவித்தைய தண்டெனக்கு வித்தையிற் கற்பனை சுவலயமியற்றும், அவித்தையென்பதுதான் அகண்டமாம் பிரமசுவிதத்தையினனே சொற்பமுமிலதே, அஞ்ஞான வடிவ ஆதபத்தானே விஸ்தீர்ணமாக ஆச்சன்னமான மருப்பூமிசதிருச ஆத்மாவில், சுபாசுபமாய்க் காலாநின்ற ஓலமிடு மலைகளானே விலோலமாம், சுவசகற்பவாசனை நாமம் வாய்ந்த மிருகதிருஷ்ணை நீதகம் அநந்தரூபமாக எதிரிற்றிகழ்ந்து தோற்றும்,

(ச.) அஞ்ஞானம் என்னும் கானன்மேட்டில் = மருப்பூமியில், தொடர்ந்த வாதனை= தனது வாதனையென்னும், கோடை = தாபத்தால், கற்பிதமாய்ச் சுழலும் = வெங்கானல் ரூபமாய். பெருகு நீரானது = சுபாசுபமாந் திரைகண்மோதி=தரங்கங்களை யடித்துக் கொண்டு, பேதமொரு கரையின்றி = அநந்தரூபமாய். இச்சகத்து பிறழும், ஒளிர்கின்றது பார் எனவருவித்துக் காண்க.

(ஸ்ரீ-வீர - அ-கை.) சோகத்திற்கு மோகமூலகத்தன்மையுண்மையின், மோகமகற்ற லாலே இவனது சோகமகலும் என எண்ணினவனுய புண்ணியன் அதன் விடயங்களாய பிதாதிகட்கு அநிர்வசநீயத் தன்மையாற் பொய்ம்மையைப் பதிஞ்ஞைசெய்து ஞானத்தால் விலக்கப் பெறுந்தன்மையைக் கூறல்:—இல்லென்பது.

[2] இல்லுறவு பகைநேயங் கோபமாசை யிழிவுயர்வா திகள்வடிவா யெழுந்த ஞாலம், புல்லுறுதன் ஞமமாத்திரத்திஞலே பொலிந்து விரிகின்றதல்லாற் புற னிலுண்டோநல்லுறவா நினைத்திடில் லுறவேயாவர் நண்ணுராய்ப் பாவிக்கி னண்ணுராவர், கொல்லுறுநஞ் சமுதிரண்டின் குணங்கள்போலுங் குறித்திடுபா வனைக்கட்டுக் குலைந்தாலுண்டோ.

(ப - ரை.) இல்லுறவு பகைநேயம் கோபம் ஆசை இழிவு உயர்வு ஆதிகள்வடிவா யெழுந்த ஞாலம் = பந்துமித்திர சுதஸ்நேக துவேஷமோக தசைமயம்பெற்று இது எனத் தோற்றும் பிரபஞ்சம், புல்லுறுதன் ஞமமாத்திரத்திஞலே பொலிந்து விரிகின்றதல்லால் புறனில் உண்டோ = பொருந்துறு தனதுபெயர் மாத்திரையாலே விளங்கி விஸ்தரிக்கின் றதேயன்றி வெளியில் உள்ளதாமோ, நல்லுறவா நினைத்திடில் = நல்லபந்துவாக நினைக் கின், நல்லுறவேயாவர் = நல்லபந்துவேயாவர், நண்ணுராய்ப் பாவிக்கின் நண்ணுராவர்= பராய் எண்ணிடின் பரரேயாவர், கொல்லுறு நஞ்சு அமுது இரண்டின் குணங்கள்போலும் = கொல்லா நின்றவிடம் அமிருதம் என்னும் இரண்டின் தசைகள்போல எண்டுத்திதி பாவநிபந்தனியாம், குறித்திடு பாவனைக் கட்டுக்குலைந்தாலுண்டோ = பாவித்திடும் பாவ னைக்கட்டுச் சிதைந்தாலுளதோ.

(ஸ்ரீ - வீர.) பிதாவென்பதன் சொரூபமென்ன? மித்திரனென்றூற்று னென்ன? மாதா வென்னிற்று னென்ன ? பந்துக்கள் என்றூற்றுன் என்ன ? உண்மையாக நன்குகூற எவரா னுமே முடியா; தமதுமயலெனும் வாயுவினுனே ஜனத்தூளிகளைக் கிளப்புகின்றனர்; தமது விவேகபுத்தி வடிவவாயுவினுனே சுவஜனத்தூளிகளை விலக்குகின்றனர். பந்துமித்திர சுதஸ்நேக துவேஷமோக தசாலக்ஷண ஆமயம் = ரோக இப்பிரபஞ்சமானது, தாஞ்செய்த சங்கேத மாத்திரத்தானே விரிந்திலங்குகின்றது; கூறியதை விளக்கியுரைத்தல்:—நல்லுற வென்பது. பந்துத்தன்மையிற்றிட பாவனையானே சங்கேதிதமாகியவழி பந்துவாம், சத்து ருத்தன்மையிற் றிடமுறச் சத்துருவாம்; விஷத்திற்கு ஜீவனஹேதுத்தன்மையானே விடக் கிருமிகளானே செய்யப்பெற்ற திடபாவனையான் அவற்றின் பொருட்டு அமிருததசையும், அன்னியங்களானே அதனினும் விபரீதபாவனையான் விஷதசையும், என்பதாகப் பாவ நிபந்தநி ஸ்திதி எங்ஙனமாமோ அங்ஙனமென்றறிக.

(ச.) அவற்றில் நண்ணுராய்ப் பாவிக்குந்திதி நஞ்சின்குணம் போலும், உறவாய்ப் பாவிக்குந் திதியானது அமுதின் குணம்போலும், பாவனைக்கட்டு = பாவனையாற் கட்டுற்ற தாம் என்பது பொருள். (44)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சாலும் பந்துதத்துவ சிந்தைகள், அது குறித்துச் சோகப்படும் நினக்கு நினதுதத்துவ ஆராய்ச்சி மாத்திரையானே அவையகற்றக் கூடியவாம் என்னுங் கருத்தானே யுரைத்தல்:—ஒன்றிலே யென்பது.

ஒன்றிலேதோன்றி யனேத்துருவமான வுணர்வுக்குப் பகையுறவென்றுரைப்ப தெங்ஙு, னின்றியொழி தசைபுண்ணீர் தோல்கண்மேய்ந்த வெலும்புப்புஞ் சுரந் தன்னிலியா மாரென்று, நின்றிவணீ நின்மனத்தா னீனேந்து நோக்காய், நிமல மாம் பரமவிழி நெறியாளைக்கிற், பொன்றுதுயர் நீயில்லோனுமில்லைப் புண் ணியபாவன னெனல்பொய்யேபோதந்தோன்றும்.

(ப - ரை.) ஒன்றிலேதோன்றி = ஏகமாகவே யிருந்திலங்குவதாய், அனைத்துருவ மான = எங்குமாய் எல்லாமாய, உணர்வுக்கு = அறிவுருவ ஆன்மாவிற்கு, பகை உறவு என்று உரைப்பது எங்ஙன் = சத்துருவென்றும் மித்துருவென்றும் கூறுவது எப்படிக் கூடும்? இன்றியொழி தசைபுண்ணீர் தோல்கண் மேய்ந்த = இல்லாமலழிந்து போம்மாம் சரக்தாதி நிணறக்கப்பெற்றுச் சருமங்கள் போர்த்த, எலுப்புப் பஞ்சரந்தன்னில் = என்புக் கூண்டில், யாம் ஆரென்று = அகம் சப்தார்த்தம் என்னென்று, நின்று இவண் நீ நின்மனத் தால் நினைந்து நோக்காய் = ஏகாக்கிரமாய் இத்தேகத்துட்டானே நீ உனது சித்தத்தினு லேயே நன்காலோசனை செய்துபார்ப்பாய், நிமலமாம் பரமவிழிநெறியால் நோக்கில் = அமலமாய் உண்மையாயுள்ள திருஷ்டியானே பார்த்தால், பொன்றுதுயர் நீயில்லை=சார் துயர்ப்படும் நீயுமில்லை, நானுமில்லை = உனக்கித முரைக்கும் யானுமில்லை, புண்ணியபாவ னன் எனல்பொய்ப் போதந்தோன்றும் = புண்ணியன் என்றும் பாவனன் என்றுந்தோன் றுதல் மித்தியா ஞானமே யிவ்வாறு பிரதீதியாகின்றது.

(ஸ்ரீ - வீர.) சர்வதேகங்களிலும் அபின்னமாக விருக்குஞ் சர்வகமாய ஆன்மாவிற்குத் தான், இவன்பந்து இவனபந்து வென்பதான இவ்விவகாரம் எங்ஙன் எலும்; அற்றேல் யான் யாங்ஙனம் சர்வதேகங்களிலும் ஏகன் எனின்? அகம் பிரத்தியயவேத்யமேயாதிது என்று ஆராய்தியெனல்:—தசையென்பதாதி. இரக்தமாம்ச அஸ்தியாதி ஜடக்கூட்டமாய எலும் புக் கூண்டாந் தேகத்தி னின்றுந்தானே அன்னியமாய்ச் சேதன இயற்கைவாய்ந்த யான் யாராவேன் என்று சித்தத்தாற் சுயம்புத்திர! விசாரித்துப்பார். பாரமார்த்திக்கிய திருஷ் டியாலே பாவனசப்த வாச்சிய தேகாதியா தொன்றுமேயின்றும், புண்ணிய சப்தவாச்சிய தேகா தியுமின்றும், புண்ணியன் பாவனன் என்னுமிது தேகாத்மத் தன்மைமயலேயாய மித்தியாஞானமே மிளிர்ந்து வெளியாம். இவ்வண்ணம் பிதுராதிசரீரமும் ஆராயில் மயலே யாம் என்றறிதி.

(ச.) ஒன்றிலே தோன்று = ஏகனுயிருப்பவனுய், அனைத்துருவமான = சர்வகதனை, உணர்வுக்கு = ஆன்மாவுக்கு, பகையுறவு = இவன்பந்து இவன் அன்னியன் என்றுரைப் பது என்னும் இக்கற்பனை, பஞ்சரந்தன்னில் = பஞ்சரமான தேகத்தினின் ரூரம்பித்து, நோக்காய் = விசாரிப்பாய், இவ்விசாரப் பிரயாசம் நிற்க இவ்விடத்து இந்தப்பரமார்த்த திருஷ்டியை அவலம்பிப்பா யெனல்:—பரமவிழி நெறியால் = பரமார்த்தத்தை யாலோ சிக்கும் பிரமாண திருஷ்டியால், நோக்கில் = விசாரிக்கும்போது, நீயில்லை = நீயென் ரூருவன் பரமார்த்தமாக வின்று. நானுமில்லை = நானென் ரூருவனும் பரமார்த்தமாக வின்று, மற்றென்னெனில். பொய்ப்போதம் = மித்தியாஞானமே, புண்ணியபாவன னெனல் = புண்ணியன் பாவனன் என்பதாக, தோன்றும் = விளங்கும், புண்ணியன் நான், பாவனன் நீயென்பது, மித்தியாஞான கற்பிதமாதலின் பிராந்தியே யென்பதுபொருள். பரமார்த்த சத்தாயெங்கும் நிறைந்துள்ள ஆன்மாவிற்கு அத்விதீயத் தன்மையாம்போது, அயம்பந்து அயன் பரன் என்னும் கற்பனை யாண்டையதென்க. இரக்த மாம்சாதி சங்காத ரூபத்தன்மையானே இத்தேகமே யாத்மாவன்று மென்றலும் அவ்வாறுருவற்ற ஆகத்தி னின்றே தொடங்கியான் யாராயுள்ளேன் என்று விசாரிப்பாய். மூலம், பாரமார்த்திக்யா= பர்யாலோசன சாமர்த்தியமுடைய, பரமார்த்தமாக = பரமார்த்தமாக. (45)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஜன்மாந்தர பந்துக்களை விஸ்தரிததோதல்:— எனிய, கோசலத் தென்பன;

ஏகியதீவுகடோறும் பிறந்தசென்ம மெண்ண வொண்ணு விங்நாவற்பெருந் தீவத்திற், கோகிலமாய் முன்பிறந்தாய் விலங்குமேகங் குன்றுமரமூர் வனபுட்கு லங்கடம்மிற், போகியசென்மத் தொகுதிபுகல வொண்ணுப் பொருந்து மவற் றுன் கிளையாய்ப் போனர்க்கெல்லா, மாகுலமுற் றிலையென்னீ யவற்றின்மட் டோவனந்த தேசப்பிறவி யறையக்கேளாய்

கோசலத்துந் தெசார்ணவத்தும் பௌண்டரத்துங் குச்சரத்துந் துழாரத் துங் கோகனத்தும், போசலத்துமே கையத்துஞ் சாளுவத்தும் பூபதியாய்வான ரமாய்ப் புழுவாய்ப் புல்வாய், மாசலத்திற் கரண்டமாய்ப் பதங்கமாகி மாசுண மாய் வேசரியாய் மட்டில்சென்ம, நீசகலவாதனையாற் பிறந்தபோதி னின்கிளை ஞர்க் கிரங்காத நீதியென்னே.

(ப - ரை.) ஏகியதீவுகள் தோறும் = சென்றதீவுகள் தோறும், பிறந்தசென்மம் = எடுத்தபிறப்பு, எண்ண ஒண்ணு = அளவிடமுடியா, இங்நாவல் பெருந்தீவத்தில் = இப் பெரிய ஜம்புத்தீவில், கோகிலமாய் முன்பிறந்தாய் = குயிலாய்பூர்வஞ்சன்மித்தாய், விலங்கு மேகங்குன்று மரமூர்வன புட்குலங் கடம்மில் = பசுகார்கிரிதரு ஊர்வன பறவைக் குலங்கள் தம்மில், போகியசென்மத் தொகுதி = சென்றபிறப்பின் கூட்டம், புகல ஒண் ணு = கூறமுடியாத, பொருந்துமவற்று = சேர்ந்த அவற்றுள், உன்கிளையாய்ப் போனர்க் கெல்லாம் = உனதுறவாய்ச் சென்றவர்க் கெல்லாம், ஆகுலம் உற்றிலை = சோகித்தா யில்லை, என்னீ = என்னே நீ, அவற்றின்மட்டோ = இவ்வளவுதானோ, அநந்ததேசப் பிறவிய றையக்கேளாய் = அளவறு தேயத்ததயங்களைக் கூறக்கேட்குதி.

கோசலத்தும் தெசார்ணவத்தும் பௌண்டரத்துங்குச்சரத்தும் துழாரத்தும், கோக னத்தும், போசலத்தும் ஏகையத்தும் சாளுவத்தும் = கோசல, தசாரண பௌண்டிரகுச் சரதுஷாரகோகன போசல ஹைஹய சாளுவமுதலிய தேயங்களில், பூபதியாய் = அரசனுய், வானரமாய் = குரங்காய், புழுவாய் = கீடமாய், புல்வாய் = மானுய், மாசலத்தில் = மாநீரில், கரண்டமாய் = நீர்க்காக்கையாய், பதங்கமாகி = விட்டிலாய், மாசுணமாய் = பாம்பாய், வேசரியாய் = கழுதையாய், மட்டில் சென்மம் = அளவற்ற பிறப்புகளில், நீசகல வாதனையாற் பிறந்தபோதில் = நீசர்வவாசனையினுலே ஜன்மமெடுத்த போதில், நின்கிளை ஞர்க்கிரங்காத நீதியென்னே = இருந்த உனது உறவினர்க் குறித்துச்சோகியாத நியாய மியாது கோலோ !

(ஸ்ரீ - வீர.) சுபுஷ்பங்கணிறைந்த ஸ்தலங்களில் மிருகஜாதிகளில் ஜன்மித்தபோது, மிருகயோநி ஜன்னிய ஜீவர்கள் பந்துக்களாகப் பகுபேர்கள் உண்டாகியிருந்தார்களே அவர் களைக்குறித்து நீ எங்ஙனம் சோகியாம லிருக்கின்றாய், பர்வதங்களினுடைய மகா உக்கிர மாகிய சிகரங்களில் நீ பிறந்தபோது வெகு சிங்கங்கள் நினக்குப்பந்துக்களாகி யிருக்கலாமே அவர்களைக்குறித்து நீயேன் அழுகாம லிருக்கின்றாய். இங்ஙனம் ஹம்சங்களும், விருகங்க ளும், மீனங்களும் ஆங்காங்கு நீஜனித்தபோது பந்துக்களாமே யுனக்கு அவற்றைக்குறித்து நீயேன் புலம்பவில்லை, இப்போது யோகபலத்தானே கண்டனவாய சகோதரனது ஜன்ம பேதங்களைச் சிறப்பித்து மரித்துரைத்தல்:—கோசலமென்பதாதி. தசாரணங்களில் கபில வர்ணவானரமா யிருந்தாய், துஷாரங்களில் ராஜபுத்திரனுகி யிருந்தாய் புண்டரங்களில் வன வாயசமாயிருந்தாய்; தசார்ணதுஷார புண்டராதிகள் தேசவிசேடங்களாம். ஹைஹயங் களில் மாதங்கமாயும், திரிகர்த்தங்களில் கர்த்தபமாயும், சால்வங்களில் நாயாயும், மூலம்

சமாபுத்ர:=காயின்சுதன், சரீரத்துருமத்தில் பக்ஷியாயும் இருந்தாய், இவ்விரண்டும் சால் வங்களிலேயே, இன்னும் அநேகமிடங்களில், பிப்பலமாயும் குக்குடமாயும் விப்பிரனுயும் தித்திரியாயும் சற்பரியாயும் மட்புழுவாயும் முற்பிகமாயும் இற்கொதுகாயும் வண்டாயும் வ்ருச்சிகமாயும் பற்பலவாயும் எற்கனுஜனுமா யிருந்தாய். இவைகளிலும் அன்னிய வெகு ஜனயோனிகளிலும் ஹேபுத்திர! முன்னர் நூருயிரங்கால் இச்சம்புத்வீவில் ஜன்மித்துளாய எத்துணை யுறவினர்க்காகத்தான் அழுதுமுடியும் ஆலோசனைசெய்து பார்ப்பாயாக.

(ச.) மூலம், மார்க்கா = மிருகசம்பந்திகள். (46-47)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அன்னை தந்தைகள் அளவிலையாகவின் இன்னவர்க் கெனவழு தெவர் துயராற்றுவார், உன்னருவினை யுளத்துன்னி யுன்னிநீ பொன்னென விளங்குதி யென்னவோதுவார்:—அளவிறந்த வென்பது.

அளவிறந்த பிறவிதொறும பிறந்தோர்க் கெல்லாமன்னை தாதையையெண் ணிலகன்றகானிற், கிளர்மரங்கடருஞ சருகையெண்ண வற்றுங்கேதமுறக் கணக் கில்லைக் கேளாய்மைந்தா, தளர்வின்றிப் பாவாபாவனைக ளின்றிச்சரா மரண மற்றவுனைச் சங்கியாதே, யுளமுறநோக்காய் துயர்விட்டஞ ஞானத்தையொழித் துணரிலுள்ளபடி யுன்னைக்காண்டி.

(ப - மை.) அளவு இறந்த பிறவிதொறும்=அளவில்லாத ஜன்மந்தோறும், பிறந்தோர்க் கெல்லாம் = ஜன்மித்தவர்க் கெல்லாம், அன்னை தாதையை எண்ணில் = மாதாபிதாக்களை எண்ணில், அகன்றகானில் = விஸ்தாரமாகிய கானகத்தில் உள்ள, கிளர்மரங்கள் தரும் = விருத்தியாய பெரியதருக்கள் தரும், சருகை யெண்ணவற்றும் = பர்ணத்தை யெண்ணு வதுபோலவாம், கேளுமுறக்கணக்கில்லை = துக்கப்பட அளவுமில்லை நியாயமுமில்லை, கேளாய் மைந்தா = புத்திர நீகேட்குதி,! தளர்வின்றி = விசிராந்திவடிவமாய், பாவாபாவனைக ளின்றி = பாவ அபாவவிகிர் முக்தமாய், சராமரணமற்ற = ஜராமரண வர்ஜிதமாய், இலங் கும்,, உன்னை = ஆத்மசொரூபத்தை, சங்கியாதே=ஐயந்திரிபு இல்லாமலே, உளமுறநோக் காய்=சித்தத்தில் ஊன்றிப்பார்ப்பாய், துயர்விட்டு = விக்ஷேபத்தைவிலக்கி, அஞ்ஞானத் தையொழித்து = அறியாமையை யகற்றி; உணரில் = சாக்ஷாத்கரிக்கில், உள்ளபடி உன் னைக் காண்டி=யதார்த்தமாக உனது சொரூபத்தைக்கண்டு மகிழ்வாய்.

(ஸ்ரீ - வீர.) அநந்த பிதாக்கள் சென்றனர், அநந்தமாதாக்கள் சென்றனர், சென்றவ ரீண்டு சம்சாரிகளாய புருடர்கட்கு வனபாதப்பர்ணம் போலும் அளவில்லையாம். ஆகலின் இங்கு துக்கத்திற்கும் சுகத்திற்கும் அளவை அவதியென்னே! இல்லையாகையால் சோகம் யாவற்றையும் அல்லது திருசியமாத்திரத்தையும், விடுத்து மிகத்தெளிந்து கம்பீரமாக விருப் பேம், பாவ அபாவங்களை விட்டு ஜராமரணவர்ஜிதமாய ஆன்மாவைச் சாவதானமாய் இலய விக்ஷேப இராஸ்வாத கஷாயமென்பனவாங்தடையின்றி நன்கு சிந்திப்பாய். விமூடமனத் தையுடையவனுக வேண்டாம். உனக்குத்துக்கமுமில்லை ஜன்மமுமில்லை மாதாவுமில்லைபிதாவு மில்லை, ஹே நன்மதிமைந்த' நீயாத்மாவாகவே யிருக்கின்றாய், அநாத்மபூத தேகாதி யொன்றுமே நீயல்லை, என்றுணர்தி. (48)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அகில ஆசைகளையு மகற்றி அதிசூக்கும மதியினுலே ஆன் மாவைத் தரிசித்து ஆநந்தமயமாவா யெனக்கூறினுன் என்றுபசங்கரித்தல்:—உன் னென்பது.

உன்னுருவை நீகாணுஞானக் கண்ணிலொன்ற லாவாசை யெனுங்காச மூறு, முன்னதுதீர்த் துளக்கமலத்துள்ளே நொய்யவறி வுடையவன் மனத்தா லுன்னுன்னே, யின்னபடி யெனநோக்கி மயக்கமெல்லா மிறையுமற வொழித் தின்பமெய்திநிற்பாய், பின்னவனே யெனமுன்னே னுரைத்தானென்று பெருந் தகைக்கு வசிட்டமுனி பேசினனே.

(ப - ரை.) உன்னுருவை = நினது சொரூபத்தை, நீகாணும் = நீதரிசிக்கும், ஞானக் கண்ணில் = ஞானதிருஷ்டியில், ஒன்றலா ஆசையெனும் காசமூறும் = அநேக ஆசைகள் என்று சொல்லப்பட்ட காசபடலங்கள் உண்டாகித் தடைசெய்யும், அன்னது தீர்த்து = அத்தகைய இடையூறுகளை நீக்கி, உளக்கமலத்துள்ளே = இருதய அப்ஜமத்தியில்: நொய்ய அறிவுடைய = சூக்குமவுணர்வுடைய, உன்மனத்தால் = உன்னுடைய வுள்ளத்தால், உன்னல் = அதிப்பிரயத்ன முடைய உன்னல், உன்னே = உனதுமெய்வடிவை, இன்னபடி யெனநோக்கி = சச்சிதானந்தமா யிருகின்றேனென் றுள்ளபடி சுவாநுபூதியாற் கண்டு, மயக்கமெல்லா = ஆவரணதிகள் யாவற்றையும், = இறையுமற = அணுவு மில்லாமல், ஒழித்து = தொம்சஞ்செய்து, இன்பமெய்தி = பரமானந்தமுற்று, நிற்பாய் = பரமசந்தோஷ சித்தனுய் வாழ்வாய், பின்னவனே = என்னிளையோய்! என = என்பதாக, முன்னோன் = புண்ணியன், உரைத்தான் = உபதேசித்தான், என்று = என, பெருந்தகைக்கு = ஸ்ரீ இராமருக்கு, வசிட்டமுனி = ஸ்ரீ வசிஷ்டபகவான், பேசினனே = கூறியருளினர்.

(ஸ்ரீ - வீர.) ஹே புத்திர! சர்வ ஏஷணமய களங்கங்கள் விடுபட்டவதனாலே மகாம னன சீலவான்மாவால் ஆன்மாவில் தன்னாலே இருதயதாமரை யிடையில் சுவஸ்த ஆத்ம சுபாவமாகச் சாக்ஷாத்காரஞ் செய்தலால் சம்சார சம்பிரமத்தைச் சேடமின்றித்தியாகித்துப் பரிசிட்டமாய ஆன்மாவானேயே பரமசந்தோஷத்தை யடைந்து வாழ்வாய்.

(ச.) ஆசையெனும் = புத்திரகளத்திராதி விடயேச் சாமயமென்னும், மூலத்தில்:— ஏஷணைகள் = புத்திரகளத்திராதி விஷயேச்சைகள், அவற்றின் மயகளங்க வர்ஜிதமாய், சொச்சபாவத்தோடுகூடிய அந்தக்கரணத்தால், சம்பிரமத்தை நன்முகத்தியாகித்து, ஆன்மா வின் கண்ணே பரமசந்தோஷத்தை யடைதியென்ப தந்வயமாம். (49)

புண்ணிய பாவனர் கதை முற்றிற்று. ❀(8 5 1)

மாவலி கதை.

———(*)———

(ஸ்ரீ - வீர - அ-கை.) புண்ணியனதினிய வுபதேசத்தாற் பாவனனும் ஞானியானு னெனல்:—புண்ணியன் என்பது.

புண்ணிய னுரைத்தஞானம் பொலிந்த பாவனன் றனுள்ள
நண்ணிய விடியற்கண்ட ஞாலம்போல் விளங்கித் தோன்றத்
திண்ணிய விருவர்தாமுஞ் சித்தராய் விவேகஞானத்
தெண்ணிய கரையையெய்தி யியம்பிய வனத்திருந்தார்.

(ப - ரை.) புண்ணியன் உரைத்தஞானம் = புண்ணிய னுபதேசித்த பிரஹ்மவித்தை யானது, பொலிந்த = பரிபக்குவப்பட்ட, பாவனன்றன் = இவையோனுடைய, உள்ளம் = உள்ளத்தில், நண்ணிய விடியற்கண்ட ஞாலம்போல் = பொருந்திய சூரியோதயத்தைத் தரிசித்த பிரபஞ்சம்போல, விளங்கித்தோன்ற = சமுசாரயாதி யில்லாமல் தன்வடிவமாகவே புலப்பட, திண்ணிய இருவர்தாமும் = திடமுற்ற இரண்டுபேருமே சித்தராய் = யாவும் பெற்றவராய், விவேகஞானத் தெண்ணியகரையை எய்தி = ஞானவிஞ்ஞான பாரகராய், இயம்பிய வனத்திருந்தார் = கூறியவனத்தில் வசித்துக்கொண்டிருந்தார்.

(ஸ்ரீ - வீ.) ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறல்:—அந்தப் புண்ணியனுல் இவ்வண்ணம் அக்கால் உணர்த்தப்பெற்ற பாவனன், பிரகாசியமாய பூதலம் பிரபாதத்திற்போல, பிரபோதத்தை யடைந்தனன்; பிரபோதம் = பரிநிஷ்டிதமான ஆத்மநிச்சயம். அநிந்திதராய், ஞானவிஞ்ஞானங்களைக் கரைகண்டவராய், சித்தராய், இலங்கிய அவ்விருவரும் அதன்பின் னவ்வனத்தில் பிராரப்தக்ஷய பரியந்தம் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

(ச.) ஞானம் = ஞானத்தினுல், சித்தராய் = தவச்சித்தராய, விவேகஞானத்து = பரோக்ஷ அபரோக்ஷப் பிரஹ்ம ஞானத்தினது. பிரபாதத்திற் பூதலம் கர்த்தரு.பிரகாசியம் = பிரகாசமானத்தன்மை. (1)

(ஸ்ரீ - வீ - அ-கை.) கூறியகதையை யுபசங்கரித்துப் பிரகிருதத்திற் பொருத்தல்:—வேண்டிய வென்பது.

வேண்டிய காலமெல்லாம் விநோதமாம் வினையாட்டெய்தி
யீண்டிய காலஞ்செல்ல யாக்கைதீர் வீட்டிலெய்தித்
தூண்டிடுதிரி நெய்யில்லாச் சுடர்கள்போற் சாந்தமுற்றார்
மாண்டிடு மூயிர்கட்கெல்லா மரபிந்த மரபுபோலாம்.

(ப - ரை.) வேண்டிய காலமெல்லாம் = தேகபரிதன் பரியந்தம், விநோதமாம் வினையாட்டெய்தி = அதை நினைத்தும் அதையுரைத்தும் அதன்மயமே யாகியென்றும் அமராநின்ற விநோதமாம் லீலையை அடைவுற்று, ஈண்டிய காலஞ்செல்ல = இவணுற நியமித்த காலமானது அதிதமாக, யாக்கைதீர் வீட்டில் எய்தி = விதேகமுக்தியை யடைந்து, தூண்டிடுதிரிநெய் இல்லாச் சுடர்கள்போல் சாந்தமுற்றார் = தூண்டும்படியான திரியும் எண்ணெய்யும் இல்லாதனவாய தீபங்கள்போலப் பரம உபசாந்தியை அடைந்தார்கள் மாண்டிடும் உயிர்கட்கு எல்லாம் = இறந்திடுஞ்சீவர்க ளெவர்க்கும், மரபு இந்த மரபுபோலாம் = வங்கிசம் இந்தவங்கிசம் போலவாம்.

(ஸ்ரீ - வீ.) பின்னர் வெகுகாலங்கழித்து அந்தத்தில் அவ்விருவரும் க்ஷீணதைலங்களையுடைய தீபங்கள்போல விதேகராய் நிர்வாணபதத்தை யடைந்தனர் பரமசாந்தியை யடைந்தனர். இவ்வண்ணம் முன்புக்த தேகங்கட்குச் சுகிருத்துச் சனபந்து சமூகம் அநந்தமாம்.

(ச.) மாண்டிடு மூயிர்கட்கெல்லாம் = பூர்வ ஜந்மாநுபவமுள்ள தேகசம்பந்தமுடையோர்க்கு, இந்தமரபுதானேயாம் = வம்சம் இத்தன்மையதேயாம். (2)

(ஸ்ரீ-வீ - அ-கை.) ஆசையே அகிலசிந்தாகுலமெனல்:—அனந்தமென்பது:

அனந்தமாம் பிறப்புற்றாருக் ககிலமு மயலன்றுகிற்
கினந்திட னயத்தல் வேண்டாவா தலாற்செறிந் தவாசைக்
கனந்தனை விடுவதல்லாற் கதித்துற வளர்க்கலாகா
மனந்தனில் வளர்க்கிற்சிந்தை வன்னிக்கு விறகாமன்றே.

(ப - பை.) அனந்தமாம் பிறப்புற்றருக்கு = அந்தமில்லாது பிறப்பை யடைந்தவர்க்கு, அகிலமும் அயலன்றகில் = சகலமும் வேறன்று ஆயின், சினந்திடல் நயத்தல்வேண்டா = தள்ளலுங் கொள்ளலும் வேண்டா, ஆதலால் = ஆகையினால், செறிந்த ஆசைக்கனத்தனை = வெகுவாகச் சேர்ந்துள்ள அவாவின் கூட்டத்தை, விடுவதல்லால் = விட்டுத்தொலைக்க வேண்டுமே யல்லாமல், கதித்துற வளர்க்கலாகா = மேலும் மேலும் விருத்தியாம்படி போற்றிக்கொண்டே யிருத்தல்கூடாது, மனந்தனில் வளர்க்கில் = உள்ளத்திலாசையை விளைவித்துக் கொண்டே போற்றில், = சிந்தைவண்ணிக்கு விறகாம் = சிந்தையக்கினிக்கு இந்தனமாம், அன்றே = இது உசிதமல்லவேயல்ல, அல்லது அன்று ஏ அசைநிலைகள்,

(ஸ்ரீ - வீர.) ஜனசமுதாயமே பந்துவானால், யாவரால் யாதுதான் கொள்ளற்பாலதுள்ளது, அவற்றினின்றும் யாதுதான் தள்ளற்பாலதுள்ளது, அந்தோ ஆச்சரியம்! எதைக் குறித்துத்தான் சோகிப்பது = சோச்சியத் தன்மையானே கவர்வது, எதைக்குக்குறித்துத் தான்மோகிப்பது; ஆகையால், ஹே இரகுநந்தன! விடயந்தோறு மநந்தங்களாய், சர்வசோ காதி மூலபூதங்களாய திருவஷ்ணைகளின்றியாகம் ஒன்றே உபாயமாம், பரிபாலனம் = விடய சம்பாதனங்களால் விருத்திசெய்து கொண்டேபோதல், என்பதன்றும். விடய அசிந்த னமே அதன் பரித்தியாகமாம், என்னுங்கருத்தா வுரைத்தல்:—மனந்தனி லென்பதாதி, சிந்தனத்தானே சிதையோ விருத்தியாம், இந்தனதானே பாவகனென்ன.

(ச.) சினந்திடல் நயத்தல் வேண்டா = புத்தியளித்தற்கு இசாமனே நோக்கிக்கேட் கின்றார் ஜனபந்து ஜன்னிய அநந்த ஆசைகளைக் கவருதியோ என; அவற்றின் ஆசையின் றியாகீம் யுக்தமா? கிரகணம் யுக்தமா? எனத்தியாகமே யுக்தமென்பது கருத்து, மூலம்:— எங்ஙனமிவ்டஞ் சித்திக்குமென்னும் விசாரஞ் சிந்தையாம், கண்டபொருள்களின் மீண்டு மீண்டுள்ள தொடர்ந்த எண்ணம் சிந்தனமாம். (3)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இச்சையை யிரித்து இவ்வுலகினைத் துச்சமாய்க்கண்டு இன்புடன் இருத்தியெனல்:—இச்சையென்பது.

இச்சையாம் விறகுமாண்டா லெண்ணமாம் வன்னிமாளு
நிச்சயமாகுந் தேயத்தி யாகமா நெடுந்தேரேறி
மெச்சிய வுதாரக்கண்ணுல் வேட்கையான் மிகவும்வாடுங்
கொச்சைஞா லத்தைநோக்கிக் குறைவற விருப்பாய்தீரா.

(ப - பை.) இச்சையாம் விறகுமாண்டால் = ஆசையாகிய இந்தனந்தீர்ந்தால், எண்ண மாம் வன்னிமாளும் = சிந்தையாகிய நீதீர்ந்துபோம், நிச்சயமாகும் தேயத்தியாகமாம் நெடுந்தேர் ஏறி = துணிபாகும் தேயத்தியாக மெனமொழிந்த பெருந்தேரில் ஆரோகணித் து, மெச்சிய உதாரக்கண்ணுல் = புகழும் கருணைதார திருவஷ்டியால், வேட்கையால் மிக வும்வாடும் = ஆசையால் அத்தியந்தம் வாட்டத்தை யடையும், கொச்சை ஞாலத்தை நோக்கி = தீனமான ஜகத்தைப்பார்த்து, குறைவற இருப்பாய்தீரா = பரிபூரண ஆனந்த பரிதருஞ்சி வீழ்வாய் தைரியசாலியாகிய இராகவனே.

(ஸ்ரீ- வீர.) சிந்தையான து, இந்தனமில்லாத ஸ்ரீயேயென்ன, சிந்தமின்மையினனே கிதைந்துபோம், முன் வருணித்ததியேய வாசனைத் தியாகமாகிய இரதாரூடனாகி, எல்லாப் பிராணிகளிடத்திலும் தயை உதாரமாம் திருவஷ்டியினனே தீனமாகிய லோகத்தை நோக கிப் பிரகிருத விவகாரத்தை யதுஷ்டித்துச் சுகிக்க எழுந்திருத்தி இராகவனே.

(ச.) மெச்சிய உதாரக்கண்ணுல் = கருணையோடு உதாரமான திருஷ்டியால், குறை வற = சுகியாய்ச் சீவன்முத்தி நிமித்தம் யத்தனஞ்செய்பவனு யிருப்பாய். (4)

(ஸ்ரீ-வீர - அ-கை.) பிரஹ்ம நிலையையடையின் அறியாதவரும் சுகிப்பரெனல்:— நொய்யென்பது.

நொய்யதாயொரு மயலின்றி நோயெலா நீங்கி
மெய்யதாகிய பிரமமா நிலையிது வீரா
வையமின்றி யிந்நிலையுறி லறிவில ரேனு
மையன்மேவல ரிராமநீ யிவ்வகை வாழ்வாய்

(ப - ரை.) நொய்யதாய் = சொச்சமாய, ஒருமயலின்றி = கிட்காமமாய். நோயெலா நீங்கி = ஆமயமகன்றதாய், மெய்யதாகிய = சத்தியமாகிய, பிரமமா நிலையிதுவீரா = ஹே மகாபாகுவே! பிரஹ்மஸ் திதியிதுவாம், ஐயமின்றி = சமுசயரகிதமாய், இந்நிலை யுறில் = இந்தஸ்திதியை யடையில், அறிவிலரேனும் = அறியாதவரோனும், மையன்மேவ லர் = மோகத்தை யடையமாட்டார், இராமநீ = இராகவனேநீ, இவ்வகை வாழ்வாய் = இந்தப் பிரகாரம் சுகிப்பாய்.

(ஸ்ரீ - வீர.) இந்தப் பிரஹ்ம சம்பந்தஸ் திதியானது மிகத்தெளிவுடையதாம், காமமற்ற தாம், வியாதியுற்றதாம், ஹே பெருந்தோளோய்! இதனை யடைந்தவன் விவகாரங்களில் அசதரனுய்விழுடனேனும் மோகத்தை யடையமாட்டான். (5)

(ஸ்ரீ - வீர - அ- கை.) நன்மையடைந்திட இருநண்பைத் தெரித்தல்.—நல்லஎன்பது.

நல்லபுந்தியும் விவேகமு மெனவிரு நண்பா
லல்லறீர்ந்திடு மொருவரை யெண்ணி னுமணுகிற்
சொல்லு பல்பொருட் சுற்றங்க டுடக்கறத்தீர்ந்து
புல்லு திண்மையி னுலன்றித் துயரெலாம் போகா.

(ப - ரை.) நல்லபுந்தியும் = நன்மதியும், விவேகமும் = விவேகமும், என இரு நண் பால் = என்ற இரண்டு நேயரால், அல்லல் தீர்ந்திடும் = துக்கந்தொலைந்திடும், ஒருவரை யென்னினும் அணுகில் = ஒருவரையேனும் அடையில், சொல்லும் பல்பொருள் = ஆசா விடயங்கள் என்று சொல்லப்பட்ட சகல வஸ்துக்களேயும், சுற்றங்கள் = பந்துக்களேயும், துடக்கறத்தீர்ந்து = சம்பந்தமில்லாமல் விடித்து, புல்லுதிண்மையினுல் = பொருந்தா கின்ற தைரியத்தினுல், அன்றி = அல்லாமல்; துயரெலாம் போகா = சங்கடங்கள் எல் லாம் சாம்பா.

(ஸ்ரீ - வீர.) விவேகலக்ஷண மித்திரன் ஒருவன், பரமார்த்தபோத லக்ஷணப் பிரியசகி யகை, என்பவரைத் துணையாகக்கொண்டு விவகரித்த போதினும் இவ்வண்ணம் சங்கடங்க ளில் மோகியான், சர்வதனங்களேயும் அத்தியந்தம் அகற்றல், உண்மேய நண்ணுதெழித லின், கையான்மாட்டை யதட்டியோட்டல் போலப்பந்துக்களேக் கைவிடுதல், தனதுதைரி யம், என்னுமிம் மூன்றையும் விடுத்து எவனும் தன்னேச் சங்கடங்களி னின்றும்மீட்பரிதாம்.

(ச.) நண்பு = கட்புள, ஆவரில், ஒருவரை யென்னினும் அணுகில் = அநுசரித்து வாழில், அல்லறீர்ந்திடும், சொல்லுபல் பொருள் = சர்வார்த்தங்க ளென்னுஞ் சம்சாரப்பிர யோஜன முள்ளவைகளேயும், சுற்றங்கள் = பந்துக்களேயும், துடக்கறத் தீர்ந்துவிட்டதாய், புல்லுதிண்மையினுலன்றி = பொருந்திய தனது விவேக வைராக்கிய தைரியத்தினுலன்றி,

துயரெலாம் போகா = சம்சாரதுன்பம் எவ்வளவு நீங்காது. தனது தைரியமே சம்சாரசங் கடத்தினின்றுங் கரையேற்று மெனப்பட்டது. மூலம்:—அபஹஸ்திதா = அத்தத்தா லகற்றல். (6)

(ஸ்ரீ-வீர - அ-கை.) நிறைந்த மனத்திற்குத் திரிலோக ஐசுவரியமும் குறைந்ததே யெனல்:—மயலென்பது.

(ச-அ-கை.) இப்போது தைரியத்தைச் சம்பாதிக்கும் பிரகாரத்தையே கூறல்:—மயலென்பது.

மயலிலா மையா னூல்களான் மகத்துவ முதலா
முயர்குணங்களால் வருந்தியு மனத்தினை யுய்க்கிற்
றுயர்கணீங்குமூ வுலகுறு செல்வமுந் தொக்கும்
பயனளிக்கினு முயர்வுறு மனமெனப் பயிலா.

(ப - ரை.) மயல் இலாமையால் = வைராக்கியத்தால், நூல்களால் = சாஸ்திரத்தால், மகத்துவ முதலாம் உயர்குணங்களால் = பெருந்தன்மை யாதியுயர்ந்த குணங்களாலும், வருந்தியும் மனத்தினை = கஷ்டப்பட்டும் சித்தத்தினை, உய்க்கில் = உய்த்திடின், துயர் கள் நீங்கும் = துக்கங்கள் தொலையும், மூவுலகுறு செல்வமும் தொக்கும் = திரிபுவன ஐசு வரியமும், இரத்நாதி நிறைந்தகோசமும், பயன் அளிக்கினும் = பிரயோஜனத்தை நல்கி னும், உயர்வுறு மனமெனப்பயிலா = மகத்துவத்தாற் பூரிக்கப்பெற்ற மனத்தைப்போலச் சுகந்தரா.

(ஸ்ரீ - வீர.) வைராக்கியத்தினாலும் சாஸ்திரத்தினாலும் மகத்துவாதி குணங்களினாலும் மிகுந்தமுயற்சியினாலே ஆபத்து வீகாதப்பொருட்டுச் சுயமாகவே மனத்திற்கு உத்கர்ஷம் அடைவிக்குக, அல்லது விடயப் படுகுழியினின்றும் மனத்தைக் கரையேற்றி யுய்விக்குக, திரிபுவன ஐசுவரியத்தானும் இரத்நதாரியாய கோசத்தினாலும், சர்வதுக்கப் பிரசமன உபல கூஹித நிரதிசய ஆநந்தலாபலக்ஷணமான அந்தப் பிரயோஜனமடைய முடியாதாம்; எவ்வித னேத்துச்சவிடய அநபிலாஷையினாலே பூரணிக்கப் பெற்று விருத்தியை யடைவுற்ற சித் தத்தானே யடைந்திடலாமோ. இதனைப் ஸ்ரீபர்த்ருஹரியும் கூறியுள்ளார்:—கோவணமாறு கூறுபுற் பீறற்கொளுங் கந்தைமற்று மத்தகைத்தேயாவலில் பயிக்கவுணவெண மிலதா மருந்தியில் வனழியானத்தே, தாவீறன் வயனுய்த் தடையறத்திரிதல் சந்ததஞ்சிந்தை தண் மையதா, மூவுறில்யோக மகோற்சவத்திறமை மூவுலகாளலா லென்னே. அதோகதிகள், ஊர்த்தகதிகள், மர்த்யலோகங் களிலேயே ஜன்மபரம்பரையால் சுழல்பவைகள், என்பவற் றின் நிமித்த பூதங்களாய விடயாபிலாஷைகளால் யாவர்வீழ்கின்ரூர்களோ, அவர்களுடைய மனம் எப்போதுமேசந்தாபம் அடைவுற்றதாகவே யிருக்குமன்றி யொருக்காலும் விசிராந் தியை யடையவே மாட்டாதாம், என்னுமவ்விது இச்சகத்குகியின் கண்ணியற்கையேயாம். யாவர் வீழாரோ அவர்தம்மனம் சந்தாபமற்றதேயாம், அழிந்தெழுந்தமரும் விடயாகங் களினின்றுங் கிளம்பிப் பிரத்தியாகார உபாயங்களானே ஆன்மாவின்கண் ஸ்தைர்யசம்பா தனத்தானேயாவர் மனத்தைப் புனிதமாக்கி முயல்விக்கின்றனரோ, அவர்தம்மனம் திரிவித தாபமுறுவதினின்றும் சாந்தமுற்றதேயாம்.

(ச.) துயர்கணீங்கும் = சம்சாரநிவிருத்தி நிமித்தம் வைராக்கியாதி சாதனங்களிலுற் றூனே மனதைத் தைரியமுடைய தாக்கவேண்டும் என்பதுபொருள். மகத்துவாதிகுணங்க ளாலுன்னதி யாக்கப்பெற்றுத் தயிரியமான சித்தத்திலல் மகாபலமான கைவல்லியம் பெற லாம் அப்பலந் திரிபுவன ஐசுவரியாதியிலும் பெறப்படா தென்பதுபொருள். (7)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேற் சந்தாப ஏதுக்கள் என்று சொல்லப்பெற்ற ஆதீயாத் மிக ஆதிதைவிக ஆதிபௌதிகங்களாய ரோகவருஷ ஆதப சோரசர்ப்பாதிகள் இருக்கும் போது யாங்ஙனம் மனப்பிரசாந்தி மாத்திரத்தானே சர்வதாப நிவிருத்தியெனின், இங்ஙன மெனல்:—மனமென்பது.

மனநிறைந்திடி லமுதமாய் நிறைந்திடும் வையந்
தனதுதாட் செருப் புலகெலாந் தோன்முச்சுந் தரமபோற்
கனதிராசையா னிறையுநெஞ் சாசையிற் கவிழா
தினமுமாசையா னிறைமனங் குறைவென்றுந் தீரா.

(ப - ரை.) மனம் நிறைந்திடில் = மனம்பூர்ணமாயின், அமுதமாய் நிறைந்திடும் வை யம் = அமிருதப் பிரவாகத்தாற் சர்வசகத்தும் சம்பூர்ணமாம், தனதுதாள் செருப்பு உலகு எலாம் தோல்முச்சும் தரம்போல் = தற்பாதத்திற் பாதரக்ஷையைத் தரித்திடிற் பூமிமுழு துமே சருமம் பரப்பிய தொத்தலாகும்; கனதிராசையால் நிறையுநெஞ்சு = அதிதிடமான வைராக்கியத்தானே பூர்ணத்தன்மையை யடைந்த மனமானது, ஆசையிற்கவிழா = ஆசாவ சாநுகமாகாதாம், தினமும் ஆசையால் நிறைமனம் குறைவென்றும்தீரா = எப்போதும் ஆசையினுனே நிறைவற்ற மனமானது ஒருபோதுங்குறைதீராதாம்.

(ஸ்ரீ - வீர.) மூவித சந்தாபங்களும் மநோதோஷ மூலங்களேயாம், மனத்திற் சித்வி சுத்த பிரஹ்மாமிருத ரசம்பூர்ணமாகியவழி யெல்லா வுலகமும் ஆனந்த பூர்ணமாகவே விளங்காநிற்கும்: மிருதுவான பாதரக்ஷைகளான் மறைக்கப் பெற்றபாதனுக்குக் குசகண்ட காதி சங்குலமாய பூமிமுழுதும் அதிமிருதுவாய சருமம் விரிக்கப்பெற்றதேயாகி விளங்கு வதுபோலு மென்றறிக. வைராக்கியத்தானே பூர்ணத்தன்மையை யடைவுற்ற மனமானது ஆசையின் வசமாய தன்பின் ரௌடராதாம், ஆசையால், காய்ந்தகட லுதாகப்பத் தன்மை யையடையும், சரற்காலத்திற் பின்னதடாக பங்கம்போலும், அல்லது சரோஜலம்போலும்.

(ச.) மனநிறைந்திடில் = மனது மகிழ்ச்சியுறில், வையம் = சகலசகத்தும், அமுதமாய் நிறைந்திடும் = அமிர்தரசங்களாற் பூர்ணமானது போற் சுக நிமித்தமாமென்பது பொருள். மனதிற்குப் பூர்ணத்வம் எப்படி வருமெனிற் கூறல்:—வைராக்கியத்தானே மனம் பூர்ணத் தன்மையை யடையும், ஆசையின் வசமாயலந்து திரிவதோ ஒருபோதும் பூர்ணத்தன்மை யையடையாதாம், பராசரர்வாக்கியம் உதாகரணம்:—காமிகளுடைய காமமானது மிகு போகங்களால் ஒருபோது மொழியாது அவிஞல் அக்கினிபோல மீண்டும் விருத்தியே யாம் என்பது. (8)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஒன்றுமில்லாமற் போகின்ற தென்பதையே திருஷ்டாந்தவாயி லாக விளக்கிக்கொண்டு இவ்வுலகிலுள்ள பெரும்பாக்கியங்களும் மாலிலாமனமென மலரா தெனல்:—அகத்தியன் என்பது.

அகத்தியன்கவர் கடலென நன்னெஞ்சை யழிக்கு
மிருத்தமாலிலா மனமென நிறைமதி விளங்காப்
பருத்தபாற்கட னிறைவுறு ப்பரிமளக் கோக
னகத்தினுயகி திருமுக நலம்பெறத் தோன்றும்.

(ப - ரை.) அகத்தியன் கவர்கடலென = ஸ்ரீ அகஸ்தியர் மாந்திய சமுத்திரம்போல நல்நெஞ்சை யழிக்கும் மிருத்தமால் = நல்லமனத்தையும் நாசஞ்செய்யும் பேராசை, இலா மனமென = அப்பேராசை யில்லாத மனதுபோல, நிறைமதி=பூரணசந்திரன், விளங்கா= தண்மையாய்ப் பிரகாசியாது, பருத்தபாற்கடல் = சுப்த சாகரங்களுள்ளும் குறையாத

தெனப்புகழும் கூரீசாகரமும், நிறைவுரு = பூரணத்தை யடைந்திருக்க மாட்டாது, பரிமளக் கோகனத்தின் நாயகி = பரமசுகந்தம் பொருந்திய பங்கஜச்செல்வியின், திருமுகம் = அழகிய திருவதனமும், நலம்பெறத் தோன்ரு = கவின்மிகுத்துக் கதிர்த்திடாது.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ அகத்தியர் குடித்த அர்ணவம்போல ஆசாவிவச சித்தமுடையவர்களின் பிரகடஞ்செய்யப்பெற்ற கோடர இருதயமானது சூனியத்தன்மையை யடைகின்றது, கோடரத்தின் பிரகடீகரண மீண்டு உள்ளடங்கிய லோபதைன்னியாதி தோஷங்களின் தூஉம், கிராகபுஜங்காதி களினதூஉம்; புடமான பிரகாசனமாம். அபரிச்சின்னப் பிரஹ்மாநந்த திருஷ்டியினுனே நோக்கின் பிரஹ்மாண்டத் துள்ளடங்கிய சுகலவுகட்கு அற்பதரத் தன்மை யுண்மையினுனும், நித்தியசர்வகதப் பிரஹ்ம திருஷ்டியினுனே நோக்கின் தேசகால பரிச்சின்ன ஆதிப்தியாதி விபவங்களும் அற்பங்களே யாகலினுனும், அவற்றைத் திருட்டாந்தப்படுத்தி மாலிலாமனத்தை வியக்தோதல்:—மாலிலாவென்பதாதி, ஆசையற்றமனம் எல்வாரோ, அவ்வாறு பூர்ண இந்துபொலிந்திட மாட்டாது, கூரீசாகரம் பூர்ணமாகமாட்டாது, ஸ்ரீ தேவிவதனம் காந்தியுடையதாகாது.

(ச.) பூரணசந்திரன் முதலானவைக்கு நாசமும் விருத்தியு முளதாதலின் நித்தியசோபையின்ரும் நிராசையை யுடையவனது மனதுக்கு ஒருபோதும் மகிழ்ச்சிசோர் வின்மையின் நித்தியசோபை யுளதாமென்பது கருத்து. மூலம்: –ஹிருதயத்திற்குப் பிரகடீகிருத கோடரத் தன்மையென்றது திருஷ்ணேயதிசயப் பிரகாசனமாம். (9)

(ஸ்ரீ-வீர - அ-கை.) நன்னெஞ்சை யாசைகெடுக்கும் என்பதைத் திருஷ்டாந்த முகமாயிலக்கி மாலின்மையே முத்தியெனல்,—மதியையென்பது.

மதியை மேகம்போல் வெண்டலச் சுதையினைமைபோ
லதிகநன் னெஞ்சை யாசையாம்பே யழகழிக்கும்
பொதியுமா லெலாநீக்கி வன்பவப் பயம்போக்கி
முதிர்மனத் தின்மால் பிணிப்பறீன் முத்திவேறுளதோ.

(ப - ரை.) மதியை மேகம்போல் = சந்திரனைக் கார்கடுப்ப, வெண்டலச் சுதையினைமைபோல், = வெள்ளிய தலச்சுதையைக் கஜ்ஜலம்போல, அதிக நல்நெஞ்சை = மிகவும் நல்ல மனத்தினை, ஆசையாம்பேய் = ஆசாபிசாசு, அழகு அழிக்கும் = கவின்பெருமற்கெடுக்கும், பொதியுமாலெலாம் நீக்கி = வெகுகாலமா யடைந்து கிடக்கும் அவாவெல்லாமகற்றி, வன்பவப் பயம்போக்கி = கொடிய பவபந்தத்தைக் கெடுத்து, முதிர்மனத்தின் மால் பிணிப்பறில் = மனத்தின் மாட்டேற்ற ஆசையின் வலியகட்டு அற்றுப்போனுல், முத்தி வேறுளதோ = வீடுவே ருென்றுண்டோ.

(ஸ்ரீ - வீர.) சசியை மேகபந்தியானது போலவும், சுதைவேபத்தை மைநீர்போலவும், ஆசைப்பேயானது உத்தமமான மனுடனதுள்ளத்தை மலினமே படுத்தும்; ஆகலின் ஆசையையடியோடு மகற்றவே வேண்டு மென்பதாம். அங்ஙனமாயினும் ஆசையின் நியாகமாத்திரத்தானே யாங்ஙனம் சித்தோபசமம். சங்கற்பம் சம்சயம் திருதி அதிருதியாதி விருத்தியந்தரங்களானும் அதன் வளர்வைத்தடுக்க முடியாமையின் எனச்சங்கை யுண்டாயின், சருவ விருத்திகட்கும் ஆசைமூலத் தன்மைகற் காட்டானே பரிகரித்துக்கொள்க, அஃதிங்ஙனமாம்:—சமாதியாரம்ப காலத்தில், பாகியகரணங்கட்கு நிருத்தத்தன்மை யுண்மையின், சாகூஷாதி விருத்தியினடைவு இலதாமென அக்கால் சிந்தனமேயாய சித்தத்தின் விருத்தி

பரிசேடிங்கும் என்பது முன்னரியம்பப் பெற்றது, சிந்தனத்திலோ சித்தம் ஆசையினனே பிரிவிருத்திப் பிக்கப் பெறுகின்றது, ஆசைவாயிலாய விடயங்கட்கே சிந்தனங்காண்டலின்; சங்கற்பாதி விருதகிகட்கும் சிந்திதார்த்த விடயத்தன்மையானே சிந்தாபூர்வகத் தன்மையுண்மையின், சித்தமூல பூதமாய ஆசையெனப் பெயரிய சித்தவிருத்தியை விடுத்து நிச்சித்தத்தன்மையை அடைவாயாக. கூறியபொருளேயே தொகுத் துபசங்கரித்தல்:—பொதியுமென்பதாதி, ஹே மகாத்மாவே ! நீ புத்திரவித்த லோகாதி சகல ஏடணைகளி னின்றும் மிகச் சாந்தமடைந்தவனும், ஆசையெனப் பெயரிய பவபந்தத்தை யகற்றி, ஜீவன்முக்தன் ஆகக்கடவாய்; நிந்திதமான ஆசைகள் மனத்தில் இருப்பவைகளாய் ஆன்மாவிற்குச் சங்கீலி போலும் கயிறுபோலும் பந்தன ஹேதுக்களா மாகலின், அவைகள் நன்குகழிந்த அளவில் யாவர்தாம் முத்தராகார், எல்லா ஜந்துக்களுமே வீடுபெறுபவர்களே யாவர்கள் என்பதாம்.

(ச.) மாலெலாம் = ஆசையனைத்துந் தவிர்ந்தவனும்ப் பவபந்தத்தை விட்டு, முதிர், முக்தசித்தனுவாய், மனத்தின்மால் = மனத்தின் கண்ணுள்ள புத்திரனத்திர சிநேகாதி ரூபங்களான கொடிய வாசைகள், பிணிப்பு = விலங்கு, கயிறெனப் பந்தஹேதுக்களாம், ஆதலின் அவைகள் அறின் முத்திவேறுளதோ, எவன்ரூன் முக்தனுகான், யாவரும்முக்தரே யென்பது பொருள். மூலம், அப்ரலேகை = மேகபந்தி, சுதாலேபம் = சூர்ணதிதிரவிய லேபம், இப்பதின் கவியும் புண்ணியபாவனர் கதைச்சேடமாம். (10)

(ஸ்ரீ - வீர - அ - கை) முன்னர் ஆசையற்றவனைப் புகழுங்கால் மூவுலகமும் பதுமபீஜ கோசம்போலும் அற்பம், நான்கு குரோசதூரம் ஆவின்பாதம், அரைநிமிடம் மகாகற்பம், ஆசையற்ற மனத்தினர்க்கு என்பதாக விவேக உதயத்தில் மூவுலக ஐசுவரியத்திற்கும் அற்பத்தன்மையா தோதப்பெற்றதோ அதனையுப் பாதனஞ்செய்யும் பொருட்டு இப்போது மாபலியின் ஆக்கியானத்தைக் கூறும் வேட்கையாராய ஸ்ரீ வசிஷ்டபகவான் பூமிகை இரசனை செய்தல்:—இன்னதென்பது.

(ச-அ-கை.) முன்புசென்ற வநேகஜன்மங்களைத் தொடர்ந்து நினைக்கும் வழியால் வருஞ்சொரூப ஞானத்தால் சித்தோபசாந்தி சொல்லப்பட்டது, இப்போது புண்ணிய மிகுதியால் ஏகதேசத்தில் விடயசம்பந்தமான சுகமும் சித்தோபசாந்தி நிமித்தமாமென்றுமாவலி கதையால் நிரூபிக்கின்றூர், அதில் வெகுகால போகத்தினுற் போக்கியங்களில் அருசிபிறந்த தெனல்:—இன்னதென்பது.

இன்ன தன்றெனி லிராகவ மாபலி யென்ன
நன்ன தாகிய புந்தியான் ஞானமே நேர்வா
யன்ன தேநல னென்றலு மனையதே தென்று
சொன்ன மாமுனி தன்னையே யிராமனுஞ் சொன்னன்.

(ப - கை.) இன்னது அன்றெனில் = இல்லாதில்லை யாயின், இராகவ = ஹே ராமச் சந்திர ! மாபலியென்ன = மகாபலிச் சக்கிரவர்த்தியைப்போல, நன்னதாகிய புந்தியால்= நல்லதாகிய புத்தியால், ஞானமே நேர்வாய் = ஞானத்தையே அடைவாயாக, அன்னதே நலன் என்றலும் = அதுவே நல்லது என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறுதலும், அனையது ஏதென்று = அத்தகையதுயாது என, சொன்ன மாமுனிதன்னையே இராமனுஞ் சொன்னன் = கூறிய மகாமுனிவரையே நோக்கி ஸ்ரீ இராமச்சந்திரரும் வினவினர்.

(ஸ்ரீ - வீர.) அல்லது ஹே இராகவம்சப் பெயரிய ஆகாசபூர்ண சந்திரனே ! பலிபோலும் அகஸ்மாத்தாக விசாரமுதயமாய மதிபேதத்தால் அமலமான ஞானத்தையடைவா

யாக என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறியபோது ஸ்ரீ இராகவர் கூறுவதாவது:—ஹேபகவன்! சர்வதர்மஜ்ஞரே! தேவரீரது திருவருளால் அடியேன் அடையத்தக்கதாகிய சர்வான்மகப் பிரஹ்மத்தை இருதயத்தில் அடைந்தனன், அதே நிர்மலபதத்தில் விசிராந்தியையும் அடையப்பெற்றேன்; என்றாலும் அடியேன், ஹே சகலசம்சயலக்ஷண அம்போதங்களின் சரத்சமயம்போ னிவாரகரே! ஹே ஞானசிரியரே' உபதேசிதத்துக் கொண்டிருக்கும் தங் களுடையஇந்தத்திவ்ய அமிருதமயத்திருவாய்மொழிகளின் சிரவணவிடயத்தில்(திருப்தியை) அலம்புத்தியை யடைந்திலேன்; ஆகையினால், மகாபலியின் விஞ்ஞானப் பிராப்திப் பிரகா ரத்தை மீளவும் அடியேனது போதவிருத்தியின் பொருட்டு ஹே வியாபகமாகிய சிவசொரூ பரே! உபதேசித் தருளுவீராக, வணங்கியடங்கி விநயாதி குணசம்பந்த சீடன்பொருட் டுபதேசிக்கும் விடயத்தில் சற்புருடர்களாகிய மகான்கள் கேதமூருரன்றே. (11)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மகாபலியினுடைய பெருமையை யெடுத்துரைத்து அவன் விசா ரப்பொருட்டு முயன்றதை மொழிதல்:—விஞயமாவலி, யென்பன.

விஞயவள்ளலுக கருந்தவ னுதரம விளம்புந
தனதுதோள்களளா லுலகெலா மஞசுறச் சயித்தோன்
பிஞகிசார்ங்கியே முதலினர தாழ்வுறப பெரியோ
னனதியாமெனப பாதலத் தரசுசெய் யதுலன்

மாவலிப பெயரானுயர் விரோசனன் டைநத
ஞவலிப் புறுகோடி பத்தாண்ட ரசாஞை
காவலிற றிகழ்மேருவின் சிரமணிகதுவு
மேவலிற பொலிசாளர மேனிலமேவி.

(ப - ரை,) விஞய வள்ளலுக்கு = வினவிய ஸ்ரீ இராகவருககு, அருந்தவன் = அரிய தவவடிவமான ஸ்ரீ வசிஷ்டபகவான், உத்தரம விளம்பும் = விடையருளிச் செய்வதாவது, தனதுதோள்களால் = தன்னுடைய புயபலத்தால், உலகெலாம் = சகல புவனஙகளையும், அஞசுறச் சயிததோன் = பயப்படும்படியாக வெற்றிகொண்டவன், பிஞகி சார்ங்கியே முதலினா தாழ்வுறப் பெரியோன் = சகலதேவர்களும கீழ்ப்படும்படியாக உயர்ந்தவன், அனதியாமெனப் பாதலத்தரசுசெய் யதுலன் = ஆதியின்றென்று சொல்லும்படியாகப் பாதாளலோகத்தில் அரசாளும் உவமையற்றவன்;

மாவலிப் பெயரான் = மகாபலியென்னும் பெரும்பெயர் வாய்ந்தவன், உயர விரோ சனன் மைந்தன் = உயர்ந்த விரோசனனுடைய குமாரன், ஆவலிப்புறு கோடிபத்து ஆண்டு அரசாஞென் = ஆச்சரியமாக வலிமிகுந்த பததுகோடி வருடங்களாக அரசாண்டு கொண்டு வரப்பெற்றவன், இததகைய அவவரசன், காவலிற்றிகழ் மேருவின் சிர = கவலோடு பொலியும் சுமேருசிருங்கத்தின் அக்கிரபாகத்தில், மணி = இரதினஙகளால் ஆதரிக்கப்பெற்று, மேவலில் = இருத்தலினாலே, பொலி = விளங்காநின்ற; சாளரம் = வாசனம் பொருந்திய, மேனிலமேவி = பிராசாதத்தை யடைந்து ஓர்வனனன்.

(ஸ்ரீ - வீர.) இராகவ கேளுனக்குயர்ந்த மாபலியின் விருத்தாந்த மியம்புகின்றேம், எதனுடைய சிரவணத்தா லத்தகைய தத்துவதின் இனியபோதம், விசாரபூர்வகததுவு அவதாரணம், நித்தியாத்மலாபபலம், நித்தியம் தத்துவபுதம் ஆத்மசொரூபபோதம் அடைந் திடுவாயோ, இச்சகத்தின் கோசமாகிய பிரஹ்மாண்டத்தில், ஒருதிக்கிலகணை நிஞ்சகத்

தில் = அற்பகுஞ்சத்தில், பாதாலமெனப் பிரசித்திபெற்ற லோகம் பூமியின் கீழாக நிலை பெற்றுளது; அசுரமங்கையரானும் அவர்தஞ் சேனைகளானும் அர்ப்பிக்கப் பெற்றனவும், வெகுவித உபகரணங்களானே யாற்றப் பெற்றனவுமாகிய பூஜனைகளையும், கிரீடனங்களையும், வீரும்புஞ் சீலத்தை யுடையவரும், ஸ்காந்தாதி புராணப் பிரசித்தரும், சுவர்ணலிங்க வடிவரும், பகவானுகிய பரமசிவமும் ஆகிய ஸ்ரீ ஹாடகேசுவரால் ஒருபாற்பாலிதமாம், அப் பாதாலலோகம்; அத்தகைய பெருமையாய்ந்த பாதாளலோகத்தில் அசுரர்தம் புஜஸ்தம் பங்களானே தாங்கப்பெற்ற மகத்தான இராஜ்யபார விடயத்தில், விரோசன சுதனுகிய மகாபலியென்பவன் தானவர்தம் மரசனுயிருந்தான்; சர்வசுரவித்யாதர உரகமுதலவரும் அவன்பாணடுங்கி யடங்கியிருந்தனர்; மூவுலகவடிவ இரத்தினங்களைக் கோசம்போலத் தம் மூதரத்தே வைத்துக் காப்பவரும், சாவசரீரிகளையும் விரும்பியதரு காப்பவரும், மூவுலக பாலகராகிய இந்திர மனுசேடாதிகளின் ஆதாரபூதருமாகிய ஹரியானவர் அம்மகாபலியின் பாலயிதாவர்வர். எனவே பூஜனத்தானும் பூதானத்தானும் பரமசிவத்தையும் மகாவிஷ்ணு வையும் தன்வயப்படுத்தி யிருந்தனன் என்பது பெற்றும், இதனைக் கவிகாயகரும் பிணங்கி சார்ங்கியென்பதானே குறிப்பித்தனர். அத்தகைய மகாபலியால், அசேஷபுவனு போகங்க ளாய லோகசம்ஸ்தானங்களின் பூஷண பூதகாயகர்களாகிய இந்திராதிகள் லீலையாலே வெல்லப் பட்டவர்களாகி யிருந்தார்கள்; தசகோடி வருடங்கள் அ தபித்திய அரசன் இராஜ்ய பரிபாலனம் நடத்திவந்தனன், பின்னர் நீச்சுழலொத்த இயற்கை வாய்ந்தயுகங்கள் அநேகங்கள் சென்று கொண்டுபோக, சுராசுரப் பெருங்கூட்டங்கள் எழுந்துகொண்டும் வீழ்ந்துகொண்டு மிருப்ப, மூவுலகத்திலும் உதாரவிருத்திகளாய் உத்கிருஷ்ட ஸ்திதியுடை யனவாய போகங்களை நிரந்தரம் மிகமிகவும் அநுபவித்துக் கொண்டே வருதபோது விடய பூதங்களாய அவற்றில் தானவ நாயகனுகிய அம்மகாபலிக்கு வைராக்கியம் உண்டாயது; அக்கால் மேருசிருங்கத்தின் அக்கிரபாகதலில் இரத்தினங்களா லாக்கப்பெற்ற ஹர்மியவர தாயனத் திருப்பவனுகி வருமாறோர் வானுயினன்.

(ச.) மூலம்:—யுகங்கள் மாறிமாறி வருதலின் "ஆவர்த்தவருத்திஷ்" எனச் சிறப்பிக்கப் பெற்றன, அம்பசாம் பிரமமாவர்த்தி மென்ப வென்பதானே அதனது நிகழ்வுபோன்ற நிகழ்வு எவற்றிற்கோ அவைகள் என்பதாம், உதவேகம் = அருசி. (12-13)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அவ்வரசனது ஆராய்ச்சியைப் புலப்படுத்தல்:—ஒரு என்பது.

ஒருபகற் றனியிருந்தன னிவையிவை யுணர்ந்தான்
பெருகுபோகங் கண்முனிந்தனன் பிறவியை நினைந்தான்
பொருவின் மூவுலகங்களிற் போகங்க ணெடுநாட்
பருகநல்கு நமபேரர சாலென் கொல்பயனே

(ப - பை.) ஒருபகல் = ஒருபோது, தனியிருந்தனன் = ஏகாந்தமாக இருந்து, இவை இவையுணர்ந்தான் = இனிவருமாறு சிந்திக்கத் தொடங்கினன், பெருகுபோகங்கள்முனிந்தனன் = வெகுவகை மிகுத்துவரு போகங்களை வெறுத்தான், பிறவியை நினைந்தான் = ஜனனுதி துன்பத்தை யெண்ணினன், பொருவு இல் மூவுலகங்களில் = உவமையற்ற திரி லோகங்களிலும், போகங்கள் = திவ்யசப்தாதிகள், நெடுநாள் = வெகுகாலமாக, பருக = அநுபவிக்க, நல்குநம் பேரரசால் என் கொல்பயன் ஏ = தரும் நமது பெரியராஜ்ஜிய சம் பத்தால் என்னே பிரயோஜனம் அந்தோ ஒன்றுமே கிடையாது.

(ஸ்ரீ - வீர.) ஒருகாற் சுயமாகவே சம்சாரசம் ஸ்திதியைச் சிந்தித்துப் பார்த்தனன்:— மிகுந்த போகங்களின் அதிசயத்தானே மநோஹாரியாயும், திரைலோகிய அற்புதகாரியாயும், உள்ள என்னுடைய மகத்தான புஜிக்கப்பெற்ற இராச்சிய சம்பத்தா லென்னே பயன்?

(14)

(ஸ்ரீ-வீர - அ-கை.) எத்தகையன வாயினும் விடயங்கள் அழிவனவே யன்றியும் வந்தனவே மீண்டும், அத்தகைய விடயங்கோடல் சிறுவர்செயலேயாயும் யானிற்றலென்னென் பனவாதியாயாராய்தல்:—எய்து, உண்ட, அருந்து, என்பன.

எய்துபோதினி லினியவா யெங்ஙனே யெனினு
நொய்தி னீங்குமிப் போகத்தி னின்பமேதுவலி
னெய்த னேக்கிய தின்பமு நெருநல்போ லின்றுஞ்
செய்தசெய் வதேயல்லது கண்டிலஞ் செயல்கள்.

உண்ட வின்பமே மீளவுமுண் கின்றதொரு நாட்
கண்ட காட்சியே மீளவுங்காண் கின்றதுவந்து
கொண்ட கோலமே மீளவுங்கொள் கின்றதென்றுல்
விண்டமேலவர் நாணுரு தொழிவரோ வெறுத்து.

அருந்துமட் டினிதென்றதே மீண்டுமீண் டருந்தித்
திருநதிடாத புன்சிறுவர போற்செய லறியாது
வருந்துகின்றன னுள்பக்க மாதமாண் டுகங்கள்
பொருந்தி வந்ததேயல்லது புதிதொன்று மம வாரா.

(ப - ரை.) எய்துபோதினில் = கிடைக்கும் காலத்தில், இனியவாய் = மதுரமுடையனவாய், எங்ஙனே யெனினும் நொய்தில் நீங்கும் = எவ்வாறுயினும் அதிவிரைவிற் செல்வனவாம், இப்போகத்தின் இன்பமேதுவலின் = இந்தப் போகங்களின் சுகத்தையியம்புமிடத்திவ் வளவினவேயாம், நெய்தல் நோக்கியர் இன்பமும் = கருங்குவளை விழிநோக்கக் காரியரின் ஆலிங்கன சுகமும், நெருநல்போ லின்றும் = நேற்றுப் போன்றே யின்றுமாம், செய்த செய்வதேயல்லது கண்டிலஞ் செயல்கள் = இயற்றியதை இயற்றுகின்றோமே யல்லாமற் புதிதொரு செயலையுஞ் செய்யக்காணேம். அதனையே விரித்துரைத்தல்:—

உண்டவின்பமே = அனுபவித்த சுகபோகமே, மீளவும் உண்கின்றது = மீண்டு மநுபவிப்பது, ஒருநாட் கண்டகாட்சியே = ஒருபொழுது தரிசித்த விநோதமே, மீளவுங்காண்கின்றது = மறுபடியும் பார்ப்பது, உவந்துகொண்ட கோலமே = மகிழ்வுடன் அலங்கரித்துக்கொண்ட ஆடையாபரண அலங்காரமே, மீளவும் கொள்கின்றது = மறித்துந் தரித்துக் கொள்வது, என்றுல் = என்பதனால், விண்டமேலவர் = ஆசையை யொழித்த பிராஞ்ஞர், வெறுத்து நாண் உருதொழிவரோ = வெறுப்படைந்து இலஜ்ஜையை யடையாமல் விடுவரோ. என்னைப்போல் விடயமயமாய்ப் போய்விடமாட்டார்.

அருந்துமட்டு இனிதென்று அதே மீண்டுமீண்டருந்தி = புசிக்கும்வரை இனிமையாக விருக்கின்றதென்று அதனையே மறித்துமறித்தும்புசித்து, திருந்திடாத புன்சிறுவர்போல்= திருப்தியை யடையாத அற்பப்பாலர்போல, செயலறியாது = திருத்தியமின்னதென உணராமல், வருந்துகின்றனன் = வருத்தத்தையே யடையா நிற்கின்றேன், நாள் பக்கம் மாதம் ஆண்டு உகங்கள் = தினம் பக்ஷம் திங்கள்வருடம் யுகம் என்பன, பொருந்திவந்ததே யல்லது புதிது ஒன்றுமவாரா = இசைந்து வந்துகொண் டிருக்கின்றதே யன்றி நவீனமாக ஒன்றும் வரக்காணேம்.

(ஸ்ரீ - வீர.) தொடங்கும்போது மாத்திரம் மாதுரியமாக இருப்பது, ஒருகாலையா யழிந்தேபோவது, புருஷார்த்தாந்தரம் ஒன்றும் இன்றியதாகிக் கேவலம் மூழுவதும் உபபோகமே

ஆகிய இது எனக்கென்னதான் சுகத்தைக் கொடுக்கப் போகின்றது. புனர்த்தின ஏக விவகாரம், இரவின் நிலைமையும் மீண்டே, மீண்டும் ஸ்நானபோஜன சயனாதிகளும், அவை களே, அபிகவமாய சிறிதுகருமமேனும் சிறிது சுகமேனும் இல்லவேயில்லை யாகலின் பெரி யோர்தஞ் சரித்தியிலிரும பட்டியம் இலஜ்ஜையின் பொருட்டே யாமன்றிச் சந்துஷ்டியின் பொருட்டாகாதாம். கூறியதையே புடஞ்செய்தல்:—நெய்தலென்பதாதி, மீண்டுமீண்டும் காந்தையாலிங்கனம், மீளமீளவுமே போகமே புசித்தல், அவ்விது சிசுஜனக்கிரீடையேயாம், ஈண்டு மதுநிதுக்கட்கு இலஜ்ஜையின் பொருட்டேயாம், தினந்தினம் மீண்டு மீண்டும் அதே புத்தஹீசமாய வியாபாரம் கூட்டத்தைச் செய்துகொண்டு பிராஞ்ஞன் எதனால் இலஜ்ஜை யடையான், அவ்யமடைவான் என்றபடி மீண்டுநதினம் மீளவுமிரவு மறித்துங்காரிய பரம் பரைகள், மீளவுமீளவு மிவ்வாரூயின், திருத அநுக்கிரணம் போலத திருகிய இவ்விடம்பனை பிராஞ்ஞனுக்கு உபகாதஹேதுவாமெனயான் எண்ணுகின்றேன். வீணைச்செய்த செய்வ திற் றிருஷ்டாந்தம்:—ஊர்மித் தன்மையை மீண்டு மடைந்தூர்மித்தன்மையையீண்டு மடைதல்போல் அவ்வவ்வினைகளே யகிலருமடைவர், உன்மத்தசேஷ்டிதாகாரமாய் மறித்து மறித்துஞ் செய்யுமிக கிரியையானது, அடிக்கடியாற்றும் பாலலீலைக்கொப்பாக. ஜனங்களை நோக்கி யறிவாளியைச் சிரிக்கச் செய்கின்றது.

(ச.) நோக்கியர் = மாதர், உண்ட = உச்சிட்ட மீண்டநுபவித்தற்கு யோக்கியமன் றுதலின் என்பது கருதது. (15-16-17)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வளவுஞ்செய்து மடையும் பயனியாதெனவும் செயற்கை யற்றது போகத்தாலன்றி யெஉன்உருமெனவுஞ் சிதித்தல்:—செய்யவென்றது.

செய்யத்தக்கன யாவையுஞ செய்துமிச் செயலா
லுய்யப்பெற்ற தென்செயன் மறித்திலாத தொன்றுலகி
லேயப்பாடற யாதினுலெய்து மப்பொருடான்
மையபபோகத்தா லொழிந்து மேல்வரு நெறியாதே

(ப - ரை.) செய்யதக்கன யாவையும் செய்தும் = இயற்றவேண்டு வனவாக எவற் றையுமே யியற்றியும், இச்செயலால் உய்யப் பெற்றதென் = இக்கிருத்தியத்தா லடையப் பெற்றதென்னே, செயல்மறித்து இலாதது ஒன்று உலகில் = மீண்டுஞ் செய்யவேண்டுவ தொன்றில்லாததான ஒப்பற்ற தொருபதத்தை யிவ்வுலகில், ஐயப்பாடற = சந்தேகவிபரீத மில்லாமல், யாதினுல் எய்தும் = எதனுலடையலாம், அப்பொருடான் = அவ்வத்துவானது, மையப் போகத்தால் ஒழிந்து = மயக்கத்தைத தரத்தக்க போகத்தினுலன்றி, மேல்வரு நெறியாதே = வாராநின்ற உயர்ந்த மார்க்கம் யாதுதானும்.

(ஸ்ரீ - வீர.) செய்ததை செய்வதான இந்தச்செயலானே, எப்போதுஞ் செய்துகொண் டே யிருந்தபோதினும், அடையத்தக்க பொருள்யாதாம்; எவ்வடைவினுனே மீளவும் கரும மூளதாகாதோ கிருதக்கிருத்தியத் தகைமையாமோ, அத்தகைய பொருளியாதாம், அல்லது எவ்வளவு காலந்தான் இந்த மகதாடம்பரமாய திருஷ்டாதிருஷ்டிட அர்த்தகருமஜாதம் ரண்டு எம்மனோரா லநுஷ்டிக்கத தககது? அதனுற்றன் என்னே யடையத்தக்கது? எதையடைந்தவுடனே வேறுக யாதொருகாரியமுஞ் செய்யத்தக்கதாக விலதாமோ, அத்த கைய மகோதாரமா யேகமாயுள்ள பலவடிவப் புருடார்த்தம் ரண்டு ஒன்றையுங்கண்டிலேன். ஸ்நிகதுச்ச விடயசுகமன்றி, அன்னியமாகயாது நித்தியமாமோ அந்த மங்கலமாய சுகம்யாதாம்?

(ச.) செயன் மறித்திலாததொன்று = கிருதகிருத்தியம், யாதினு லெய்தும் = ஒரு கிரியையாலும் வாராதென்பது பொருள் போகததாலொழிந்து = போகரூபமான விடய சுகத்தையல்லாமல், பயன்படுத்தப் பட்டபோதினும் நித்தியஞ்செய்த இககிரியையால் அத் தகைய எப்பொருளாம்,எப்பொருளான் மீண்டுங்கருமம் உளதாகாதோ, கிருதகிருத்தியதா வேதுவாக எக்கிரியையுமே யிலதாம். (18)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணஞ் சிந்தித்துக் கொண்டிருந்த மகாபலியானவன் எதோ ஒன்றைமனத்திற் சிந்தித்துக்கொண்டு வியத்தல்:—அழிவிலாத வென்பது.

அழிவிலாததா யன்னியமாகிய வதுசேர்
வழியதேதெனச் சிந்திப்பான் மனத்தொன்றை நினைந்து
மொழியலுற்றன னறிந்தனனென் றிருநொடியில்
விழிபெருத்திடப் புருவமே லேற்றினன் வியந்தான்.

(ப - ரை.) அழிவிலாததாய் அன்னியமாகிய அதுசேர் = அவிகாசியாய் இவ்வியாவி னும் அயலாகிய அதனேயடைய, வழியது ஏதென = மார்க்கம்யாதாமென, சிந்திப்பான் = ஆராய்ந்து கொண்டிருந்தவன், மனத்தொன்றை நினைந்து = சித்தத்தில்யாதோ ஒன்றைச் சிந்தித்து, மொழியல் உற்றனன் அறிந்தனன் என்றிரு நொடியில் = தெரிந்துகொண் டேன் என்று ஒருகொடியில் கூறத்தொடங்கினன், விழிபெருத்திடப் புருவமேல் ஏற்றினன் வியந்தான் = நேத்திரத்தை யுருட்டிப் புருவமேற்சொருகி யாச்சரியத்தையடைந்தான்.

(ஸ்ரீ - வீர.) இவ்வாறு சிந்திக்கின்றேன் என்றெண்ணி இம்மகாபலியானவன் விசை வில் எண்ணத் தொடங்கினனு; தியானத்தானேசம்ஸ்கார உற்போதத்தால் விமர்சையோடு கூடிய, முன்தன்னுல் வினவப்பெற்ற பிதாவின் உபதேசக் கிரமஸ்மிருதியைக காட்டல்:— மொழியலுற்றன னென்பது, பின்ன சுராராட்டானவன் கணத்தில் தனக்குள்ளேயே சொல் லிக்கொள்ளுவா னுயினன், என்ன சொன்னுனெனின், உரைத்தல்:—அறிந்தனன் என்பது ஆ நன்முக என்னுல் ஸ்மரிக்கப்பெற்றது ஆ = ஸ்மரித்தியோத்தக நிபாதம். ஸ்மரித்தபொ ருளை மனத்திலேயே புருபங்கத்துடன் ஆய்ந்து கூறிக்கொண்டான். மூலம்;—பிரேஷண அத்தியாரோபத்தால் ணிச்சாம், விமர்சயன் என்பது.

(ச.) அழிவிலாதாய் = அவிநாசியாய், அன்னியமாய் = விடயசுகத்திற்கு அன்னியமாய், நினைந்து = நிச்சயித்து விழியாதி விசாரதிருஷ்டியின் அபிநயம், மூலம்:—பின்னர் அசுர அரசனுகிய மாபலிமனத்தில் விசாரித்த அர்த்ததத்தைச் சப்ரூபங்கமாகத் தன்புத்தியிலேயே தாபித்துக் கணத்திற்குமேல் ஆ நன்முகநினைந்தேன் என்றினிது கூறிக்கொண்டான். ஆ = ஸ்மிருதியை விளக்கும் அவ்யயம். (19)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்மரித்தபொருளை முறையாகக் கூறல்:—தன்னதென்பது.

தன்னதுள்ளுற நினைத்தது விளம்பி னன்றுனே
முன்னமிங்கியான் கேட்டனன் முழுதுணர் முதன்மை
யென்னரும் பிதாவிரோ சனன்றன்னை யிப்படியே
யன்னவன் புகன்றனனென விவையெலா மறைவான்.

(ப - ரை.) தன்னதுள்ளுற நினைத்தது = தனக்குள்ளேயே எண்ணியதை, விளம்பி னன்றுனே = சுயஞ்சொல்லிக் கொண்டான், முன்னம் = பூர்வம், இங்குயான் = ஈண்டு

யான், முழுதுணர் = சகலமுமுணர்ந்த, முதன்மை = ஆத்மதத்வஞ்ஞனிய, என்னரும் பிதா விரோசனன் றன்னை = எனது தந்தையாகிய பகவான் விரோசனனை, கேட்டனன் = வினவினன், இப்படியே = இவ்வாறே, அன்னவன் புகன்றனன் = அவ்வரியபிதா உபதேசித்தனன், என = என்று, இவையெலாம் அறைவான் = வருமாறுள்ளவற்றை யெல்லாங் கூறத்தொடங்கினன்.

(ஸ்ரீ - வீர.) முன்னர் ஈண்டு: ஆத்ம தத்துவத்தை யுணர்ந்தவனும் லோகபராவரங் கண்டவனும் பகவானும் எனது தந்தையும் ஆகிய, அவ்விரோசனன் என்னால் வினவப்பெற்றனன்.

(ச.) நினைந்தது விசாரித்தபொருளை, தானே = தனதுபுத்தியிற் பாவிப்பவனுய்க் கணத்தின் பின்ருனே, விளம்பினன் = நினைத்ததை மேற்கூறுகின்ருன்:—முன்னமென்ப தாதி, மூலம்:—திருவுடலோக பராவர: = பரம் = பரியவசானஹேது, அவரம் = ஆதி காரணம், கண்டவன். (20)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வினவியது யாதோ அதனைக்கூறல்:—ஐயவென்பது.

(ச-அ-கை.) தான் விளவிய பிரகாரதத்தைக் கூறல்:—ஐயவென்பது.

ஐயதுன்பமு மின்பமு மென்பன வனைத்தின்
மையலியாவையு மடிந்ததோ ரிடமெது மனத்தின்
வெய்யமோகந் தீரிடமெது வேட்கைக ளெல்லாங்
கையறப்பட்ட விடமெது கருணையா லுரையாய்.

(ப - ரை.) ஐய = என்னருமைத் தந்தையே! துன்பமும் இன்பமும் என்பனவனைத்தின் = சகலதுக்க சுகங்களின், மையல்யாவையும் = சர்வ பிரமங்களும், மடிந்ததோரிடமெது = சாந்தமாகிய ஒப்பில்லாதபத மியாதாம், மனத்தின்வெய்யமோகந்தீர் இடமெது = மனத்தினது கொடிய மயக்கமற்ற இடமியாதாம், வேட்கைகள் எல்லாம் கையறப்பட்ட இடமெது = சகல ஏடணைகளும் அடியோடுந்தீர்ந்த இடமியாதாம், என்பதை, கருணையால் உரையாய் = என்பேரில் வைத்ததயையினு லுரைப்பாய்.

(ஸ்ரீ - வீர.) விளவியவகையைக் கூறத்தொடங்கல்:—ஹே தந்தையே! ஹேமகாமதியையுடையோய்! சகல துக்கங்களினதூஉம், சாம்சாரிக சுகங்களினதூஉம் பரிகாரப் பிராப்தி உபாய கோசரங்களாய சர்வவிவகாரப் பிரமங்களும், எங்குசாந்தமாமோ, அச்சம் சார எல்லையின் அவதி யாதாமென்று பிராஞ்ஞாற் பேசப்பெறும்? மநோமோகம் யாண்டுபசாந்தமாம்? சகல ஏடணைகளும் யாண்டு அதீதங்களாம்? அருளுவாய்.

(ச.) ஐயாபிதாவே! துன்பமு மின்பமு மென்பனவனைத்தின் = விஷயஜன்னியமான சுகதுக்கங்களுக்கும், ஓரிடமெது = பரம அவதியாது, மையலியாவையு மடிந்தது ஓரிடமெதுவென்றுங் கூட்டுக; ஈற்றவப்பிரமசாந்தியையே விரித்துரைத்தல்:—மனத்தின் வெய்யமோகம் = மநோமோகங்கள். (21)

(ஸ்ரீ - வீர - அ - கை.) முன்னர் அனர்த்த நிவிருத்தியைப்பற்றிக் கடாவி, இப்போது பரமானந்தப் பிராப்தியைப் பற்றிவினுதல்:=நிராசையென்பது.

நிராசையாகி யேயிளைப் பெலாநீங் கிடமேது
விரவுபேரின்பத் தழகிதாய் விரிவிடமேது
பராபரந் தெளிந்துணர்ந்த நீபகர்தியென் னெஞ்சை
யராவுதுன்பம் விட்டிளைப் பெலாமாறுதற் கென்றேன்.

(ப - ரை.) நிராசையாகியே = சகல ஆசைகளுந்தீர்ந்து, இஷப்பெலாம் நீங்கிட மேது = விசிராந்தியடையு மிடம்யாதாம் ? விராவு பேரின்பத் தழகிதாய்விரிவிடம் ஏது = பேரின்பமானது நிறைந்து சுந்தரமாகியிலங்கும் பதமியாதாம், பராபரந் தெளிந்துணர்ந்த நீ = பராபரவத்துவை யையந்திரிபற ஆய்ந்துணர்ந்த நீ, பகர்தி = எனக்குபதேசிப்பாய், என்னெஞ்சை அராவுதுன்பம் விட்டு = எனது மனததைத் தேய்க்கும் துயரமெல்லாம் விடுத்து, இஷப்பெலாம் ஆறுதற்கு என்றேன் = சிரமமெல்லாம் தீர்தற்கு என்று வினவினேன்.

(ஸ்ரீ - வீர.) புனரா விருத்திரகிதமாய விசிராந்தி நீள்போது எவ்விடத்திற்கிடைக்கும், புமான் எச்சுகத்தை யடைந்தவனுயித் தேகத்திலேயே சமஸ்த பிரஹ்மலோகாந்த விடங்களி னின்றும் அடையப்படு மின்பதில் எத்திருப்தி, ஆசையின் பரிபூர்த்தியுடையவனிங்கு ஆவனெனு; என்னகண்டு தான் றரிசனம்மறித்தும், மன்னும் மற்றொரு பலாந்தரத்தானே, நன் னரா யுபகாரமதாகா, தன்னதேதுரையா யருளானே, ஏதவிஞ்ஞானத்தானே சர்வவிஞ்ஞா னஞ்சித்திக்கு மென்பதெதனுல் ? அந்த ஜிஞ்ஞாசை யுனக்காய தெங்ஙனமெனின்? அத்தி யந்த வெகுவாக விருந்தபோதினும் இப்போகங்கள் சுகாவகங்க ளாகாவாகலின். சுகாவகங் கள் ஆகாவகை யென்னெனின் ? சற்புருடருடைய மனததையும் மோகத்தில் வீழ்த்துகின் றன கலக்குகின்றன வாட்டுகின்றன வாகலின். கெடாததாய்த் தடையற்றதாய் அதிவிஸ்தார மான ஆனந்த சுந்தரமாயது யாதொன்றுளதோ அஃதென்னென அடியேனுக கெந்தைநீ யருளவேண்டும், எதுதகைய அதுகிடைக்கப்பெறின் நெடும்போதிருந்தயான் விசிராந்தியை யடையா நிற்பனே. இவ்வண்ணம், சுவர்ககதிலிருந்து வலிதிற்கொணர்ந்து, மூற்றத்திற்ரு பித்திருக்கும் கற்ப விருகூத் தின்றலத்தில் வீற்றிருந்த எனது பிதாவாகிய வீரோசனனே வினவினேன், அதற்கென்றந்தை, கற்பதருவானது தனது மணமதுர மலர்பல மகரந்தாதி யானே ஜராமரண துக்கநிவாரணஞ் செய்வதேபோல என்னுடைய அஞ்ஞானப் பிரமநிவா ரணப் பொருட்டு எதனை யுபதேசித்தனனே அது என்னலிப்போது ஸ்மரிக்கப்பெற்ற தென்பதாம்.

(த.) நிராசையாகியே=அருசி யத்தியக்தமின்மைதேயாய், இஷப்பெலாம் நீங்கிடம்= சிரம் விசிராந்திச் சுகஞ்சம்பவிக்குந்தானம், ஏது, விராவு பேரின்பத்தழகிதாய் = தனது சொரூபமானது அதிவியாபகமாந்த சுந்தரமாய், விரிவிடம் = விவகரிததற் கரியதாருமோ, எது, அத்தன்மையான பொருளை, பராவரம்,= முன்போல் தெளிந்துணர்ந்த நீபகர்தி, இஷப்பெலா மாறுதற்கு = அதில் விசிராந்தியடைதற்கு, என்றேன். (22)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சித்தஞ் சிந்தையற்றுன்றனக் கெவ்வுழிதேய்த்தே, சித்தமன்றென நின்றிடுமவ்வுழி சிவமாம், முத்தியென்றிடு முழுமுதலுட் செறிமோக்ஷம், சத்தைவந்துறுஞ் சுத்த நிறைதருமதுவே, என்று மோகூத்திற்குச் சித்தஜயா தீனத்தன்மை இயம்பப் பெற் றது, சித்தஜயத்தின் கண்ணும் ஆத்தியந்திக ஆசையின்றியாகம் உபாயமென் றுரைக்கப் பெற்றது, அதுவும் ஆன்மதரிசனமன்றி யமையமாட்டாது, "குறையுமாப் பிணிப்புற்ரு ரூலுங் கொண்டவிப் புலன்களெண்ணி, லறைகடலனைய நெஞ்சத்தவாவுரு னறிவினில் லான், மறைமொழிபலவு மோதியடக்குவான் மனத்தைவாங்கிப், பொறைகெடப் புலன் களைந்தும் பொறியிலே புகட்டுங்கண்டாய்" என்னும் ஸ்ரீ பகவானது திருவாக்காலுணர லாம்; ஆன்மதரிசனமும் மநோஜயமின்றிச் சித்தியாதாம், என அன்னியோன்னியா சிரயத் தன்மையை யடைவுற்ற விது முடியாததேயாகும் என்னுமா சங்கையைப் பரிகரித்தற்குச் சாதனத்துவய யெளிப்பத்தியி அப்பியாசாதி யுபாயபேதத்தைக் கூறும் பொருட்டுப் பலியு

பாகமான அந்தராளத்தில் இராஜமந்திரி யுபாக்கியானத்தை விரோசனமுகத்தால் இனிது புகழ்தல்:—எந்தை யென்பது.

(ச-அ-கை) தனது பிதாவின் உத்தரத்தைத் தொடர்ந்து கூறல்:—எந்தை யென்பது.

எந்தையப்பொழு துரைசெய்வான் மைந்தகே ளியம்ப
வந்தமற்றற விசாலமாய ளவறவகன்று
சுந்தரத்ததாந் தேசமுண் டண்டத்தின் ரெருகுதி
வந்துதித்திருந் திறப்பதற் கிடமதாய் வயங்குமம.

(ப - ரை.) எந்தை = எந்தாதை, அப்பொழுது = அக்கேள்விகள் கேட்டபோது, உரைசெய்வான் = உத்தரங கூறத்தொடங்கினன். மைந்தகேளியம்ப = ஹே குழந்தாய்! விடைபகர ஒருமையுடன் கேட்குதி, அந்தமற்று = அந்தமின்றி, அறவிசாலமாய் = அத்தியந்தம் விஸ்தாரமாய், அளவற அகன்று = அளவில்லாமல் விடமுடைத்தாய், சுந்தரத்ததாம் தேசமுண்டு = அழகியதாம் தேசமொன்றுளது, அண்டத்தின்ரெருகுதி = அண்டக் கூட்டமாயிரம், வந்துதித்து இருந்து இறப்பதற்கு இடமதாய் வயங்கும் = வந்துதயமாகித் திதியாகிச் சங்காரமாகி விவகரிதற்கு இடமாக இலங்கும்.

(ஸ்ரீ - வீர.) விரோசனன் விடைகரல், ஹேபுத்திர! அதிவிஸ்தீர்ண பெரிய விபுலகோடரமாய தேசமொன்றுண்டு, மூவுலகங்களின் சகத்திரங்கள் வெகுவாக இருந்தபோதினும் நிறைவுரு மலேகதேசத்திலங்கும். (23)

(ஸ்ரீ - வீர - அ - கை) ஆகாகொன்று மில்லையென்றும் இறைவனே யிருக்கின்ரு னென்று மியம்பல்.—ஆயவென்பது.

ஆயதேயத்தி லிமபெரும் பூதமு மில்லை
சேயகுன்றில்லை வனமில்லைத் தீர்த்தங்க ளில்லைத்
தூயதேவரே முதலிய தொல்லுயி ரிலலை
நாயகன்பெருஞ் சுடரென்று மொருவனே நண்ணும.

(ப - ரை.) ஆயதேயதில் = விசாலமாய அநதததேசத்தில், ஐம்பெரும் பூதமுமில்லை = ஆகாசாதி பஞ்சபூதமுமிலவாம, சேயகுன்றில்லை = உன்னதமான பர்வதமுமில்லை; வனமில்லை தீர்த்ததமுமில்லை = ஆரண்யமும் நதிகளுமிலவாம், தூயதேவரே முதலியதொல்லுயிரில்லை = பரிசுத்தீர்கிய தேவதைகளே முதலிய பிராசீனஜீவ ஜெந்துக்களுமில்லை, நாயகன்பெருஞ் சுடரென்று மொருவனே நண்ணும் = பரஞ்சோதி வடிவமாய இறைவன் ஏகனே எழுநத ருளியிருப்பன்.

(ஸ்ரீ - வீர.) கடல்களு மலைகளும் காணவாகதே, வனமும் தீர்த்தமுமீ வக்துறமாட்டா, நதியுஞ்சாரமு நண்ணுவாகதே, மதியும்கதனமும் மன்னுறமாட்டா, திவமும பவனமுஞ்சேரா வாகும், மதியுமிரவியும் மருவலோகேசரும் திதியினசுதரும தேவருஞ்சேரார், ஆண்டப்பே ரொளியான்மா வொன்றே தாண்டருஞ் சுடராய்த் துலங்குமா மகததே.

(ச.) தேசம் = மோட்சம், இராஜா = ஆன்மா மந்திரிமனமென்று மாவலி விஞவின் பின் விரோசனரே சொல்வர். (24)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இறைவன் பெருமையை யியம்பி மந்திரிமூலமாக காரியசித்தி யுரைத்தல்:—முழுதுமென்பது.

முழுதுங் காண்பவன் முழுதினுஞ செறிபவன் முதல்ஈன்
பழுதில் சாந்தனுய் நிறைநதுவா ளாவுறை பண்போன்
வழுவி லாவிவ ஞக்கிய மநதிரி வசத்தாற்
றழுவு செய்கைக ளியாவையு நடத்திடுந் தானே.

(ப - ரை.) முழுதுங காண்பவன் = யாவற்றையுங கண்டுசெய்பவன், முழுதினுஞ் செறிபவன் = எஙகுமிருப்பவன், முதல்வன் = சர்வன், பழுதில் சாந்தனுய் = குற்றமற்ற சாந்தமூர்த்தியாய், நிறைந்து = பூரணித்து, வாளாவுறை பண்போன் = துவ்ஷணீம் நிலையையடைந்துள்ளவன், வழுவிலாவிவன் ஆக்கியமந்திரி = நித்தியமாகிய இவ்விறைவன் சங்கற்பித்தமந்திரி, வசததால் = மூலமாக, தழுவுசெய்கைகள் இயாவையு நடத்திடுந்தானே = சம்பந்தியா நின்றகாரியங்கள் எல்லாவற்றையும் சுயமேசெய்வித்திடும்.

(ஸ்ரீ - வீர.) சர்வகிருத்துவாயச் சர்வஜ்ஞய்ச் (சாவஜ்ஞ யிருக்கப்பெற்ற) அவ்விறைவனும் வாளா இருக்கும் கூடஸ்தனுவன்; அவனுற் சஙகற்பிகக்பெற்ற மந்திரியென்னும் மனம், சர்வசக்மந்திரண உன்முகனுவன். ஸலிலவாறையும் சுரயமவன்

(ச.) முழுதுங்காண்பவன் = சர்வமுஞ்செய்பவன், சர்வத்தையும் அறிபவன் எனினுமாம், இவன் = இத்தராஜாவால், ஆக்கிய = அவன் ராகூத்து லோகஙகளைச் சிருஷ்டித்தான் என்னுஞ் சுருதிப்படி சிருஷ்டிகக வேண்டுமென்னும் இச்சாமாத்திர கற்பிதனை, மநதிரி = மந்திரியினது, வசத்தால் = விசாரபூர்வகமாய், தழுவுசெய்கைகள் யாவையும் = இராஜகாரிய மனைத்தும், நடத்திடுத்தானே. (25)

(ஸ்ரீ-வீர -அ-கை.) மந்திரியின் ஆற்றலைவருணித்தல்:—இல்லதென்பது.

இல்ல துள்ளதா மூள்ள தி மில்லதா மிமைப்பிற்
புல்லு மநதிரி நினைத்திடி லிவஞென்றும புசிக்க
வல்ல தில்லையொன் றறிகிலன் மன்னனை விடாது
செல்லுந் தன்மையாற் கேவல மனைதையுஞ செய்யும.

(ப - ரை.) இல்லது உள்ளதாம் = முடியாதது முடியும், உள்ளதும் இல்லதாம் = கூடுவது கூடாதாம், இமைப்பில = விரைவில், புல்லுமந்திரி நினைத்திடில் = சங்நியிலிருக்கும் மந்திரி யெண்ணிடில், இவஞென்றும் புசிக்கவல்லதில்லை = இவன் ஒருகிறிதும் அயில ஆற்றலற்றவனுவன், ஒன்றறிகிலன் = யாதொன்றையு மறிந்திலன், மன்னனைவிடாது செல்லுந்தன்மையாற் கேவலம் அனைத்தையும் செய்யும் = எப்போதும் சங்நியிலேயே யிருத்தலால் அறியாஞயினும் கேவலம் இராஜாவின் பொருட்டே யாவற்றையுஞ் செய்து முடிபபன்.

(ஸ்ரீ - வீர.) அகடம் = அத்தியந்தம் அதுபபந்தாமாயினும் ஆன்மாவிற்குச் சம்சாரித்தன்மையை, கடயதி = பொருத்திவைப்பன், கடம் = பொருத்துவதாயினும் பூர்ணனந்த ஏகாரசத்தன்மையை, அலம் = அத்தியந்தம், ஆச = விரைவில், விகடயதி = இருப்பதில்லை இலஙகவில்லை யெனக்கெடுத்துச் சொலலப்பன். சிறிதும் புசிக்க ஆற்றலற்றவன், சிறிதுந் தெரிய முடியாதவன் = இவன் ஜடஞயினு மிவன் எந்தஞான்றும் அரசன் பொருட்டுக் கேவலம் சர்வமும் செய்வன்.

(ச.) இல்லது = பொல்லாங்கு, உள்ளது = நீதியாம், உள்ளதும் = நீதியுள்ளகாரியமும், சம்மதமின்றெனில், இல்லதாம் = நாசமாம் என்பதுபொருள்; இவனென்றும் புசிக்கவல்லதில்லை = அற்பமும் புசித்தற்குச் சக்தியுடையனல்லன், ஒன்றறிகிலன் = அற்பமுமறியான், மனது அசேதனமாதலின் என்பதுகருத்து. கேவலம், அவனே அனைத்தையும் = சர்வகாரியத்துக்கும் முக்கிய கருத்தாவாம். (26)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மந்திரியியற்ற மன்னவனிருப்பன் மைந்தவென்றிசைத்த தந்தையை வினவினேன் எனல்:—இந்த என்பது.

இந்த மந்திரி தன்னெதி ரியாவையு மியற்ற
வந்த மன்னவ னென்றுமே காதததத லுரு
மைந்த வென்றுரைத் தருளிய பிதாவைநான் மகிழ்ந்து
புந்தி யாலந்த வகையெலாம் வினவினேன் புகழ்ந்து.

(ப - ரை.) இந்த மந்திரிதன்னெதிர் = கூறிய மந்திரிதனது சந்நிதியில், இயாவையும் இயற்ற = எல்லாவற்றையும் செய்ய, அந்த மன்னவன் = அவ்வான்மராஜன், என்றும் = எப்போதும், ஏகாந்தத்தன் ஆரும் = ஏகாந்தத்தில் சொல்தகு யிருப்பன், மைந்த = குழந்தாய் ! என்றுரைத்தருளிய = என இந்தப்பிரகாரம் கூறியருளிய, பிதாவை = தந்தையை நோக்கி, நான் = அகம், மகிழ்ந்து புகழ்ந்து = சந்தோஷித்து ஸ்தோத்திரஞ்செய்து, புந்தியால் அந்தவகை யெலாம் வினவினேன் = புத்தியால் அவ்வகையை யெல்லாம் விபரமாகக் கேட்டேன்.

(ஸ்ரீ - வீர.) அந்த மஹீபதிக்குச் சர்வகார்யங்களின் முக்கியகர்த்தா அம்மந்திரியேயாவன், இராஜாகேவலம் ஏகாந்தமாய அத்விதீய சுபாவத்தில் சுவஸ்தமாகவே வீற்றிருப்பன்; என்று என்றந்தை யுபதேசிப்ப அதன் விபரத்தை வினவினேன். (27)

(ஸ்ரீ - வீர - அ - கை.) வினவியவகையை யுணர்த்துதல்:—அற, புவனமென்பன.

அறவி லாசமா யாதியும் வியாதியு மின்றி
நிறைவி தானவத் தேசமே ததுதனே நேருந்
திறவி யாதது யாதினு லெய்துமத் தேசத்
திறவி லாதவம் மன்னனர் மந்திரி யாவன்.

புவன மியாவையும் விநோதத்தா லடர்த்தவென் புயத்தா
லவனம் மந்திரி யுடனடர்ப் புருவலி யமர்ந்த
தெவன றைந்தருள் கென்றலு மென்பிதா விசைப்பான்
கவன நீள்வலி மந்திரி வேகமார் கடப்பார்.

(ப - ரை.) அறவிலாசமாய் = அத்தியந்தம் விஸ்தாரமாய், ஆதியும் வியாதியுமின்றி = இருவகையுடம் பின்நோயு மில்லாமல், நிறைவிதானபரிபூரணமான, அத்தேசமேது = அத்தேயமியாதாம், அதுதனே நேரும் = அத்தேயத்தை யடையும், திறவியாது = மார்க்கமியாதாம், அதுயாதினுல் எயதும் = அதை யெங்ஙன மடையலாம், அத்தேசத்து இறவிலாத அம்மன்னன் ஆர் = அத்தேயத்திருக்கும் நித்தியமாகிய அவ்வரசன் யாவன், மந்திரியாவன் = மந்திரி யார்.

புவனமியாவையும் = சகலபுவனங்களையும், விநோதத்தால் = விளையாட்டாக, அடர்த்த என்புயத்தால் = வெற்றிகொண்ட என்னுடைய புயங்களால், அவன் அம்மந்திரியுடன்

அம்மன்னவன் அவ்வமைச்சனுடன், அடர்ப்புரு = வெற்றியிடப் பெறுத, வலியமர்ந்த தெவன் = பலத்தோடு கூடியிருத்தல் யாதுகாரணம்?, அறைந்து அருள்க என்றலும் = கூறியருளுதி யென்று யான்வணங்கிக் கேட்டலும், என்பிதா இசைப்பான் = எனதுதந்தை கூறியதாவது, கவனநீள்வலி மந்திரி வேகமார்கடப்பார் = யாவரையும் கலங்கச்செய்யும் தகுந்த பலத்தையுடைய அம்மந்திரி யினது வேகத்தைக கடந்தேற வல்லவரியாவருளர் ஒருவருமேயில்லை.

(ஸ்ரீ-வீர.) மகாபலிவாக்கியம்:—ஹேமகாமதியையுடைய பிதாவே! தூலசரீரவியாதியும் சூக்குமசரீரவியா தியும் அற்ற அத்தேசம் யாதாம்? ஹேபிரபுவே! எங்ஙனமடையலாம்? எதனு லெய்தலாம், யாவராலேனும் அடையப் பெற்றதா ? அவ்விதமாய மந்திரிதானியாவன்? மகா பலம்வாய்ந்த அந்த ராஜாதானியாவன்? வீளையாட்டுமாத்திரத்தானே ஜகத்ஜாலங்களையெல் லாம் வெற்றிகொண்டு எம்வசப்படுத்திய எம்மனோரானும் எவ்விருவிரும் வெற்றிகொள்ளப் பெறுமல் இருக்கின்றனரோ அவர்தாமியாவர் ? ஹே அமரபயப் பிரதனுயிய தந்தையே ! இவ்வாக்கியானம் எனக்கு அபூர்வமாகவே தோற்றுகின்றது, ஆகலின், எம்மனோரால் அவர் தம் அஜயபிடயத் தேற்பட்ட நிமித்தத்தைக்கூறும் வாயிலாக எம்மனோரது இருதய ஆகா யத்தினின்றும் சமுசய அம்புதத்தை விலக்கியருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தேன்; அப்போ தென்றந்தை கூறியதாவது:—ஆண்டாதியில் அதத்தில் வினவிய அவர்தம்முஜயத் தில் நிமித்தத்தையே விஸ்தாரமாக விளம்பல்:—கவனமென்பது. விரோசன வாக்கியம்:— ஹேமைந்த ! ஆண்டுள்ள அம்மந்திரியானவன் மிகுந்த பலவானுவன், தேவாசுர கணங்கள் கோடிக்கணக்காக ஒன்றுசேர்ந்து போராடின போதினும் இறையளவும் வெற்றிசேர முடி யவே முடியாது. (28-29)

(ஸ்ரீ - வீர - அ - கை.) எவரும் வெல்லாமையோடு எவ்வாயுதமும் பயன்படாமையைப் புலப்படுத்தல்:—தேவர் என்பது

தேவர்தானவ ரெண்ணறு கோடிக டிரண்டு
மேவ வென்றிலர் சூலமே மிகண்முத லென்ற
மேவரும் படைக்கலமெலா மவன்மிசை விட்டான்
மாவருங் கல்லி லறைந்தபூ வெனமூணை மடியும.

(ப - மை.) தேவர்தானவர் எண்ணறு கோடிகள் திரண்டு = சுராசுரக்கூட்டம் கோ டானு கோடியாக ஒருங்குகூடி, மேவ = எதிர்த்துப் போராடியும், வென்றிலர் = வெற்றி கொண்டிலர், அதுவேயுமன்றி, சூலம் நேமிகள் முதல் என்றமேவரும் படைக்கலமெலாம் = திரிசூலம் சக்கிரம் வச்சிரம் முதலனவாகப் பிரசித்தி பெற்ற தாங்கமுடியாத தேஜசோடும் வலிமையோடும் கூடிய ஆயுதவர்க்கங்கள் எல்லாம், அவன்மிசை விட்டால் = அம்மந்திரி யின்மீது எவினுல், மா அருங்கல்லில் அறைந்த பூவென மூனைமடியும் = மாகூழிமைதங்கிய பெரும்பாறையில் அடித்தபுஷ்பம்போலக் கூர்மைகெட்டு நொருங்கித் தூளாகிப்போகும்.

(ஸ்ரீ - வீர.) தேவாதி யாவருங்கூடிய கோடானு கோடியானும் வெல்லமுடியான் அம் மந்திரியெனின் : அவனென்னிரண்டாவ திந்திரனு அல்லதென்னமனு ? அல்லதுதா னென் சூபேரனு ? அலது யாதேனுமொரு அமரவிசேடனு ? அசுரவிசேடனு ? அலது எவ னேனும் மகாதபாவனு ? எதனுல் வெல்ல முடியாதவனே யாகின்றனே எனின் ? இவர்யா வருமே யலனவன், ஆயிரங்கண்ணனும் அன்றவன் யமனும், தூயதனேசனும் அமரனும் அசுரனும் ஆயனல்லன் அவரிலொருவனேல் நீயுநன்மைந்த திண்வெற்றி நினைக்கலாம்.

ஆயின் என்னெனக்கு ஆயுதங்களில்லையா படர்களிலரா ? உளவாகுக, அவன் இவற்றிற்கெல்லாம் விடயனேயல்லன் எனல்:—சூலமென்பதாதி, அவன்மேல், வாள், உலக்கை, ரட்டி, வச்சிரம், சக்கிரம், கதை முதலனவும், அகனிகாலும் பாணவீசேடங்களும் ஏவினால்,பெரும் பாறையிலறைந்த கருங்குவளை மலர்போல மழுங்கிப் பொடியாகின்றன. மன்மதன் பஞ்ச மாத்திர சரனுயினும் சாம்போபமாய்ச் சம்பிராட்டைப்போல, அம்மந்திரியின் திருவருளால் இம்மூவுலகையும் வெற்றிகொண்டு விளையாடுகின்றன்; குணஹீனனுய்த் துர்மதியாய்ச் சுராசுரக்கூட்டங் கொண்டவனுய்த் துராகிருதியாயினும் குரோதன் அவன்றிருவருளால் அனல் போலக் கொதித்தாடு கின்றன். (30)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அம்மந்திரி கேவலம் அவ்வாத்மப் பிரபுவினுலேயே வெற்றி கொள்ளலாகுமெனல்:—விளியென்பது.

விளிவ ருந்திற் லந்தமந் திரியந்த வேந்தா
லெளிது வென்றிடில் வணங்குறு மிவ்வகை யின்றே
லளிய மேருவை யசைப்பினு மசைப்பரி தாகு
மொளிகொ ளுகபுந் தியினலால் வெலப்படா ரெருங்கே.

(ப - ரை:) விளிவருந்திறல் = கெடாத வலிமையையுடைய, அந்தமந்திரி = அவ்வமைச்சன், அந்தவேந்தால் = அவ்வரசனுல், எளிது வென்றிடில் = சுலபமாகச் செயஞ்செய்யின். வணங்குறும் = கீழ்ப்படிந்து நிற்கும், இவ்வகையின்றேல் = அங்ஙனமாக்கா தொழியின். அளிய = கருணையுதார முதலிய குணங்களா லலங்கரிக்கப்பெற்று எனது கிருபைக்குப் பாத்திரனை புத்திர ! மேருவை யசைப்பினும் = சுமேரு பருவதத்தைப் பிடுங்கினும், அசைப்பரிதாகும் = சலிப்பித்தற்கு முடியாதாம், ஒளிகொள் ஊகபுந்தியினலால் = பிரகாசம் பொருந்திய ஊகமதியினனன்றி, வெலப்படான் ஒருங்கே = செயிக்கப் பெரூன் அத்தியந்தம்.

(ஸ்ரீ - வீர.) அம்மந்திரியைக் கேவலம் அவ்வாத்மப பிரபுவினுலேயே வெற்றிகொண்டால் அவ்வெற்றி நல்வெற்றியாகும், மாருயினே அசல உபமனுவன். அவ்வொருவனை, வியாமோக பரிஹீனமாய் நிச்சிதமாய் ஏகாக்கிரமா யிலங்கும் புந்தியினுலே வெற்றிகொள்ளச் சமர்த்தனுகியேலாயின் அக்கால் ஹேசுவிரத! தீதீரனேயாவாய் என்றவிரோசனனை நோக்கி, ஹேதாத ! எப்புபாயத்தானே அந்தப் பலவான் நன்குஜயிக்கப் பெறுவன், அவ்வதிமகாவீரியவான்றுன் யாவன், யாவற்றையும் அடியேற்கு விசைவில் உபதேசிகவேண்டும் என்று மாபலிகூற அதற்கு விரோசனன் கூறல்:—ஹேதநய ! அம்மந்திரி நித்தியம் வெற்றிகொள்ளகூடாத நிலைமையிலிருந்த போதினும், அவனை யெளிதாக வெல்லுமுபாய மியம்பக் கேட்டி; எதனுல் அவனைத் வெல்லலாமோ; யுக்தியினுலே கவரப்பெற்றிடினவன் கணத்தில் வயப்பட்டு நிற்பன். (31)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஊகமின்றியவன் பாலுற்றிடிற் சோகமொன்றிடு மென்றிசைத்தல்:—ஊகவென்பது.

ஊக புந்தியா லல்லதவ் வமைசனை யுற்றுல்
வேக நாகமபோ லெரித்திடுமை வேந்தனை டமைச்ச
னேக ராச்சியஞ் செய்யுமத் தேசமு மியாவுஞ
சோக மற்றிடக் கேளென விரிதிது சொன்னன்.

(ப - ரை.) ஊகபுத்தியால் அல்லது அவ்வமைச்சனையுற்றால் = யுக்தியினால் அன்றி நெருங்கி அத்தமந்திரியை எதிர்த்தால், வேகநாகம்போல் எரித்திடும் = மிகுந்த சீற்றத்தையுடைய நாகசர்ப்பம்போல் தகித்துச் சாம்பராக்குவன், வேந்தனுடு அமைச்சன் ஏகராச்சியம் செய்யும் = அம்மன்னவனுடுகூடி யம்மந்திரி ஏக அரசாகஞ்செய்யா நின்ற, அத்தேசமும் யாவும் = அத்தேயத்தையும் பிறயாவற்றையும், சோகமற்றிடக்கேள் என = கூறக்கலங்காமல் ஒருமையுடன் கேட்பாயாக வென்று, விரித்திதுசொன்னன் = விரிவாக இதனைக்கூறினன்.

(ஸ்ரீ - வீர.) யுக்தியின்றி எதிர்த்தால் விடமுடைய சர்ப்பம்போலக் கோபத்துடன் சீறிவிழுது கன்றிச் சாம்பராகும், பாலனைப்போல, அற்பவிடயப் பிரதானத்தானும் அடிக்கடி விடயதோடத்தை யறிவித்தலாலும் லாலனஞ்செய்து வஞ்சித்து இம்மந்திரியை இராஜயோக யுக்தியினனேயாவர் நியமனஞ் செய்கின்றனரோ, அவர் அந்தராஜாவை நன்கு பார்த்து இராஜபதத்தை யடையாநிற்பர்; அம்மபாலனைக் கண்டபோது அம்மந்திரி வயப்பட்டு நிற்பன், அம்மந்திரியை வெற்றிகொள்ளில் அவ்வரசன் தரிசிக்கப் பெறுவன், மாறுபடில் மாறுபடுமாகலின் பயிற்சியினாலே யிரண்டையுமே சமமாகவே தொடங்க வேண்டும், பெளருஷப் பிரயத்தத்தானே யாம்,தனது பயிற்சியின் வலியால் மெதுவு மெதுவாக இராஜ சந்தரிசனத்தையும மந்திரி பராஜயத்தையும் சம்பாதித்து அச்சுபமாய தேயத்தை முயற்சியானே யடைவாய். அப்பியாசமானது சபலீபூதமாயின் ஞானபல வடிவமாய்ப் பரிணதமாயின் நீ அத்தேயதத்தை நன்கடைவாய், அடைதியேல் ஹே தைததியோதர! மறுபடிறிதும் சோகத்தை யடையமாட்டாய் அவ்விடத்தி லியாவர் இருப்பர் என்னிற்கேட்டி! சம்சாரத சகலாயாசரும் நித்தியப் பிரமுதிதாசயரும் பிரசாந்த அசேஷசம்சயரும் ஆகிய சாதுக்கள்= சர்வ அநர்த்தங்களும் நீங்கியவரும் நிரதிசய நித்தியானந்த பூரணரும் சந்தேக விபரீதமியாவு மற்றவரும் ஆகியசாதுக்கள் ஆண்டெழுந்தருளி யிருப்பர். இப்போதுகூட உக்தியைவிவரப் படுத்தல்:—விரித்திது சொன்னன் என்பது. ஹேமைந்த! அத்தேசமியா தென்பதும் பிற யாவும் வெளிப்படுத்தி யுரைப்பக்கேட்டி! என்றுரைத்தான். (32)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அதன்வித மிதுவாம் எனல்:—மூன்னம் என்பது.

மூன்னநாஞ் சொன்ன தேசமோர் முடிவிலா முத்தி
மன்ன னென்றது மாசிலா மணியென வயங்குந்
தன்னில வேறிலா வாத்துமத் தத்துவந் தானே
யன்ன வேந்தனு லமைத்தமந் திரிமன மாகும்.

(ப - ரை.) முன்னம் நாம சொன்னதேசம் = பூர்வம் எம்மாலுரைக்கப் பெற்றதேயம், ஓர் முடிவிலாமுத்தி = சகலதுக்கமுநீர்ந்த ஒப்பற்ற மோக்ஷமாம், மன்னன் என்றது = ராஜாவெனக கூறியது, மாசிலாமணி யெனவயங்கும் = சர்வபத அதீதமாகிய பகவான், தன்னில் வேறிலா ஆத்துமதத்துவந்தானே = தனது வடிவமேயாய ஆன்மதத்துவமே யாம், அன்னவேந்தனுல் அமைத்த மந்திரிமனமாகும் = அத்தகைய அரசனுலமைக்கப் பெற்ற ஆமாத்தியன் மனமெனப் பெறுவன்.

(ஸ்ரீ - வீர.) எம்மாற்றேச மெனக்கூறப் பெற்றது எல்லாத் துயரையுந் தீர்க்கும்மோ க்ஷமாம் ஆண்டராஜாவோ, மாறுதானந்தாதி ஹிரண்ய கர்ப்பாநந்தாந்த சருவபதங்களையும் கடந்து நடந்தவனும், சர்வவாக்குமன அகோசரனுமாவன், அவனேபகவானுகிய ஆன்மா. ஹேமகாமதியை யுடையமைந்த! அவனுல் ஆக்கப்பெற்ற மந்திரியோ, சர்வப்பிரஞ்ஞா

சமஷ்டிரூப மனமெனப் பெயரியோனும். மனத்தில் வாசனுன்மக சூக்குமபாவமாக இருந்து தானே இவ்விசுவமானது தூலபாவ பரிணமத்தை யடைந்துளது, கடபாவமாகப் பிண்டாந்தர்க்கத மட்பாகம்போலும், அம்புதத்தன்மையதாகப் புகைபோலும், ஆம்; அதைஜயித்தால் வெற்றிகொள்ள வேண்டியயாவும் வெற்றிகொள்ளப் பெற்றுப் பற்றிக்கொள்ள வேண்டியாவும் பற்றிக்கொண்டதாகும்; ஆகலின், துர்ஜயமென்றே அதனேயுணர்ந்து கொள்ளல் வேண்டும், யுக்தியினுலேயே இனிது வென்று சுகிக்கலாம். (33)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஹேபகவந் ! அந்தச் சித்ததினுடைய சமரில்·வெற்றிபெறுவதில் எவ்வுகம்·புடமாகவுளதோ அதனே. யடியேனுக்கருளல் வேண்டும், எவ்வுபதேசத்தானே அக்கொடிய பகையைவென்று கொடியிடுவேனே அஃதென்னென மகாபலிவினவ விரோசனன் விளம்பல்:—விடயமென்பது.

விடய மியாவையு மொருப்பட வொருக்கிநல் விராக
மூடைமை யாவது பரமமாம யூகமென் றுரைத்தோந
தடையி லாமனம் விராகததால் வெலப்பட்ட தன்மை
படைசெய் மத்தமா தொழுவத்து ளகப்பட்ட பண்பே.

(ப - ரை.) விடயம் யாவையும் = சகல விடயங்களையும், ஒருப்பட ஒருக்கி = எல்லா வகையாலுமே ஒடுக்கி, நல்விராகம் உடைமையாவது = நன்மூக அநாஸ்தையை அடைந்திருத்தலே, பரமமாம்யூகம் என்று உரைத்தோம் = மேலானயுக்தி என்று கூறினேம், தடையிலாமனம் விராகத்தால் வெலப்பட்ட தன்மை =சித்தமானது வைராக்கியத்தானே தடையின்றி ஜெயிக்கப்பெற்ற பெற்றியானது, படைசெய்மத்தமா = போர்புரியும் மதோன்மத்த மாதங்கமானது, தொழுவத்துள் அகப்பட்ட பண்பே =படுகுழியிற் பட்டுக்கொண்டு வயவர் கைவசமாய் வயங்குதலொக்கும்.

(ஸ்ரீ - வீர.) ஹேமைந்த ! எல்லாவிடயங்களைக் குறித்துமே எல்லாவகையாலுமே ஆசையில்லாமையே மநோஜய விடயத்தில் மேலான உபாயமாம். என்னும் இதுவேயுக்தியென்றதாம்; இதனினும் உயர்ந்த உபாயமே கிடையாதாம், இதனுனே மகாமதத்தையுடைய தன்மனமாகிய மத்த மாதங்கமானது சடுதியிலேயே அவமதித்தடக்கப் பெறுகின்றது. "முத்தியையடைய முதிர் விழைவுளதேல், வித்தகவிடயம் விடமென விடுவாய்" எனப்பெரியோருங் கூறியிருத்தல் காணலாம். பயில்விஞலல்லாமல் யாருமே விடயவைராக்கியத்தை யடையமுடியாதாம், அத்தியந்தம் பலத்தையுடைய தேகியாயினும் தேசாந்தரத்தைக்கமன சூனியனுயின் அடைய முடியாததே போலும். புருடப்பிரயத்தமின்றி ஹர்ஷா மர்ஷ விவர்ஜிதமாய கிரியாபலத்தை நன்கடைய அநுகூலமாய சுபசாதனம் அடையமுடியாதாம். தைவத்தானே அதனடைவு என் கூடாதெனின் ? தன்னுடைய நியதிப்பிரயுக்தமாய சுபாசுபக் கிரியையாதுளதோ அதுவே தைவமெனப் பெறும்; முயல்வின்றியும் தைவத்தானே சிலர்க்கு ஹர்ஷ அமர்ஷ உபசமங்காணப் பெறுகின்றதே அஃதெவ்வன மெனின் ? ஹர்ஷ அமர்ஷஹேத்துகருமஷயமாகிய வழியாதுதான் ஹர்ஷ அமர்ஷவிநாசப் பொருட்டுச் சம்பன்னமாமோ அதுவே தைவமெனப்பெறும், ஆகுக அறைந்தபடியே தைவம் அதனுலென்னினின் ? கூறியநியதி ரூபதைவமோவைராக்கிய தார்ட்டிய அப்பியாசாதி பௌருஷத்தானே சொற்பகாலததிலேயே, மருப்பூமித் தத்துவஞான விலாசத்தானே மிருகதிருஷ்ணைப் பிரமம்போலச் செய்க்கப்பெறும்: தைவமெனப் பெயரிய நியதியானது பௌருஷத்தானே செயிக்கப்பெறுமாயின் அதனது பல நியமமின்மையின் அநியதத்தன்மை வழக்காம் எனின் ? அஃதிஷ்டமேயாம்; மனச்சங்கற்பத்தா லுளவாய யாவற்றிலும் பாதகமில் வழி

அளவைகளிஞல் பலமுடையதாகக் கவரப்பெறுந் தன்மையுளதாமாயின் பலமுடைமை சுகப் பிரதமென்றே நியமமங்கீகரிக்கப் பெற்றிருத்தலின். இவ்வாறுயின் அநியதித்தன்மை வழக் காமென்னற்க, மனமாகிய கருததாவால் இத்தகைய நியமத்திற்கே கற்பனேயாதலின் நிய தித்தன்மை விவகார சித்தியாதலின்; கருமஞானஞ்கிகாரி சரீரங்கொண்டவன் எதனேயெவ் வாறு சங்கற்பிக்கின்றனே அஃதவ்வாறேயாம் எனத்தனது சங்கற்பத்தில், பௌருஷத் தானே வைராக்கியாதி சாதனங்களேச் சம்பாதித்துப் பரமபுருஷார்த்த வடிவப்பிரஹ்மாத்ம பாவமே சங்கற்பிக்கத் தக்கதாமன்றி சம்சாரியாத்ம பாவமன்றும். (34)

(ஸ்ரீ - வீர - அ - கை.) போகங்களில் அரதியே, உள்ளில் ஜீவனுக்கு நித்தியாத்மபாவ மாக நிலேபேற்றைத் தருவதாய், நிலேயுறுவதாக வருவதெங்ஙன், ஹே சர்வாசுரேசுவரனே ! என்று மாபலிவினவ அதற்கு, ஆத்மாவலோகனத்தானே இவ்வுத்தமமாய விடய அரதியா னது, இருதயத்தில், இலக்குமி பதமகருப்பத்தில் நிலேபெறுவதேபோல நிலேபெறுவதாகும், ஆகவின் பிரஞ்ஞாமணியின் சாணேத்தானத்ததாய வதிசாருவான விசாரத்தானே தூல்லிய காலத்தில் பிரமான்மதேவனேயும் காணவேண்டும் பவபோகரதியையும் நாணவேண்டும், என்றுரைத்து ஆண்டுச் சித்தபரிபாக பேதானுசாரமாகப் பூமிகாபேதங்களே விளம்பும் வேட் கைவாய்ந்த விரோசனன் பிரதமபூமிகையைக் கூறல்:—கற்றென்பது.

கற்றறிந்திலார் மனத்தைநாற் கூறெனக் கற்பித்
துற்றபோகத்தி லுபயமு நூல்வழி யொன்றும்
பெற்றதேசிகன் பூசையி லொன்றுமாய்ப் பேணிற்
றுற்றகங்குல் போய் விவேகமாஞ் சுடர்வந்து தோன்றும்.

(ப - ரை.) கற்றறிந்திலார் = விற்பன்ன மில்லாதவர், மனத்தை நாற்கூறெனக்கற் பித்து = சித்தத்தை நான்குகூருகக் கற்பனேசெய்து, உற்றபோகத்தில் உபயமும் = துகர் வினேவயத்தாற் கிடைத்த போகத்தில் இருமடங்கும், நூல்வழியொன்றும் =சாஸ்திரமார்க் கத்தில் ஒருமடங்கும், பெற்றதேசிகன் பூசையில் ஒன்றும் = சரணுகதியடைந்து உபதேசம் பெற்ற ஞானுசாரியரது சேவையில் ஒருமடங்கும், ஆய்ப்பேணில் = ஆக இம்முறையை யநுட்டித்துவரில், துற்றகங்குல்போய் = பொருந்திய அஞ்ஞானம்போய், விவேகமாம் சுடர்வந்து தோன்றும் = விவேகமாகிய பிரகாசம் உண்டாகி விளங்கும்.

(ஸ்ரீ - வீர.) அவ்வியுற் பன்னனுடைய சித்தத்தினது சற்கிரமத்தில் = சன்மார்க்க ஆரம்பத்தில் = சாஸ்திரோக்தக் கிரமத்தில், போகங்களால்=தேகமாத்திர உபாயங்களால், தினத்தின் காலபாகங்கள் இரண்டை நிரப்புக, சாஸ்திர சிரவணத்தானே ஒன்றைநிரப்புக; குரு சுசூஷையால் ஒன்றை நிரப்புக.

(ச.) சித்தஜயக் கிரமத்தையதிகாரிபேதத்தால் மூன்றுகவிகளாற் கூறல்:—மனத்தை= சித்தத்தினது விவகாரகாலத்தை, நாற்கூறெனக் கற்பித்து, கற்றறிந்திலார் = ஞானுப்பியா சத்திற் சிக்ஷிப்புறுத சித்தத்தையுடையவர், உற்றபோகத்தில் = விஷயபோகங்களிஞல், உபயமும் = இருபாகங்களான காலத்துவயத்தையும், நூல்வழி = அத்தியான்ம சாஸ்திர மார்க்கத்தால், ஒன்றும், பெற்றதேசிகன் பூசையில் = குருபணிவிடையிஞல், ஒன்றும் = நான்காம் பாகத்தையுங் கழிக்கவேண்டு மென்பது பொருள். (35)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அதனது ஜயத்தில் அதன் உத்தர பூமிகையைச் கூறல்:—சிறி தென்பது.

சிறிதறிந்தவர் மனத்தைநாற் கூறெனச் செய்து
பொறிவசத் தொன்றுந் தேகிகர பூசையி லிரண்டு
மறியுநூற் பொருண் மனனத்தோர் கூறுமே யாக்கி
னெறிவி வேகத்தா லொன்றுணர் ஞானமே நிரமபும்.

(ப - ரை) சிறிதறிந்தவர் = கிஞ்சித்து விற்பத்திவாய்ந்தவர், மனத்தைநாற்கூறெனச் செய்து = சித்தத்தை நான்குபாகமாகச் செய்து, பொறிவசததொன்றும =போகங்களால் ஒருபாகமும், தேகிகர்பூசையி லிரண்டும் = குருபணிவிடையால் இரண்டு பாகங்களும், அறியும் நூற்பொருண் மனனத்து = தெரிந்துகொள்ள வேண்டிய சாஸ்திர அர்த்தசிந்தையானே, ஓர்கூறுமே = ஒருபாகமுமே, ஆகின் = நிரப்பின், நெறிவிவேகததால = இம்முறையில் வரும் விவேகத்தானே, ஒன்றுணர் ஞானமே நிரம்பும் = ஏகசிவத்தையறிஞ்சும் மெயயுணர்வே பூரணமாம.

(ஸ்ரீ - வீர.) சிறிது விற்பத்தி யதிகரித்து ஆன்மஞானதத்திற் சமத்கார மடைந்தவனது சித்தத்தைப் போகங்களா லொருபாகம் நிரப்புக, அதனுனே போகங்களில் அநாஸ்ஸை யுத யத்தானே பாகக்குறைவி னடைவாம், குருசுசூஷையானே இரண்டுபாகங்கள் நிரப்புக, குருபணிவிடையிலோ பாகாந்தர விருத்தியாம், சிரேஷ்டகுருசங்கிதானங கிடைப்பதால் சம யங்கிடைத்தபோது ஆசிரியரிடத்தில் தனது சந்தேகப்பிரசின சம்பவததா னென்பது பாவ மாம். சாஸ்திரார்த்த சிந்தையானே ஒருபாகம் நிரப்புக.

(ச.) சிறிதறிந்தவர் = கொஞ்சம் விற்பன்னமுள்ள சித்தத்தினர், மனத்தைநாற் கூறெனச்செய்து, பொறிவசத்து = போகங்களினால், ஒன்றும் = ஒருகாலத்தையும், தேகிகன் பூசையிற் காலத்துவயத்தையும், அறிஞ்சும் நூற்பொருள் மனனத்து = சாஸ்திரார்த்த சிந்தையால். ஒருகூறும் = சதுர்த்த காலத்தையும், கழிக்கவேண்டு மென்பதுபொருள். (36)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அதன் வெற்றியின்பொருட்டு அதனுத்தர பூமிகையையறைதல்;— ஞானமென்பது.

ஞானமுற்றவர் மனத்தைநாற் கூறென நாட்டி
யான நூலினும் விராகத்து மநுபவந தனிலு
மானநற் குரு பூசையின் வழியினுஞ செலுத்தி
லீனமற்ற நன் முத்திவந தெய்திடு மெளிதின்,

(ப - ரை.) ஞானமுற்றவர் = தத்துவந்துணிந்தவர், மனத்தைநாற் கூறெனநாட்டி = சித்தத்தை நான்குகூருகப் பகுத்து, ஆனநூலினும் விராகத்தும் = பிரமாணகத சம்சயந் தீர்வதற்கான சாஸ்திரத்தும் வைராக்கியததும், இருகூறையும், அநுபவந்தனிலும் மானநற் குருபூசையின் வழியினும் = பிரமேயகத சமசயந்தீர்வதற் கேதுவான தியானத்திலும் யாவரும் போற்றத்தக்க நல்லஞாஞசிரியரது பணிவிடையின் கண்ணும், இருகூறையும், செலுத்தில் = கழிப்பராயின், ரனமற்ற = சர்வ அநர்த்த நிவிருத்தி, நல் = பரமானந்த. வடிவ, முத்தி = மோகூம், எளிதின் = சுலபமாக, வந்தெய்திடும் = தனது வடிவமாதலிற்றானே வந்து கிடைக்கும்.

(ஸ்ரீ - வீர.) இரத்தினதத்துவம் போலச் சிரபரீக்ஷணத்தானே தத்துவமாகத்துணிதல் விற்பத்தியாம் அதனை நன்கடைந்தவன் தனது சித்தத்தின் இரண்டுபாகங்களைத் தினந்தினம் சமுச்சிதமாய சாஸ்திர வைராக்கியங்களானே பூரணஞ்செய்க, மற்றிருபாகங்களையோ தியானங்களானும் குருபூஜனத்தானும் முறையாகப் பூரணஞ்செய்க. நான்குவிதமாய

முறையிலும் தூயமனமுடையவனே யதிகாரியாவனன்றி மற்றையனுகான், எங்ஙனமெனின் நிர்மலாகிருதியையுடைய ஆடையானது நலமிக்க பரிசுத்த கன்னிலேமையிலிருந்தே உத்தம மாகிய குசும்பகுங்குமாதி இரஞ்சனையை யேற்றுக் கொள்கின்றது மலினமிக்க துணியா யிருந்தோ வற்காதாம்; அஃதொப்ப, சாதுத்தன்மையை யடைந்த ஜீவனே ஞானகதைக் கிரமத்திற் றகுதியுடையவ னுவனன்றி மற்றையனுகான், ஆயின் சிறிது மலினனுக்கு யாங்ங னம் எனின், இங்ஙனமாம்:—பையப்பையச் சித்தபாலகனே, துக்கான்வய வியதிரேகப் பிர தரிசனமான யுக்திகளானும், சுருதிமிருதி குருவசனங்களாய பிரவண உக்திகளானும் லால னஞ் செய்யவேண்டும், சாஸ்திரார்த்தத்திற் சித்தத்தினது பரிணமத்தானே = சிரபரி சீலனத்தாற் சர்க்கராமலகமென்ன மதுரைகரஸ்ய பரிணதியினனே, பாலனஞ்செய்ய வேண்டும்.

(ச.) ஞானமுற்றவர் = திடவிற்பன்ன சித்தர், மனத்தை காற்கூறென காட்டி, விவ காரகாலத் துவயங்களே, ஆனநூலினும் விரகத்தும் = அத்தியான்ம சாஸ்திரவிசாரங்க ளாலும் விடயங்களின் தோஷதர்சன விசாரங்களாலும், இரண்டு காலங்களே, அநுபவத்தனி லும் = தியான நிஷ்டையாலும், மானகற்குரு பூசையின் வழியினும் = ஸ்ரீ குருபூசையா லும் கழிக்கவேண்டு மென்பது பொருள்; தியானசஹிதமான குருபூசையானும் கழிக்குக வென்பதாம். (37)

(ஸ்ரீ-வீர - அ-கை.) விசாரபல திருஷ்ணைசந்நியாகமும் ஆத்தியந்திகமாக அக்காலே யுண்டாம் என்னுங் கருத்தாற் கூறல்:—மிக்கவென்பது.

(வே து)

மிக்கவறிவால் விசாரத்தான் மெய்ம்மையுணர்வு நிராசையுநீ
யொக்கவென்றுங் கைக்கொள்வா யூற்றமான நிராசையினுற்
றக்கவிசாரம் விசாரத்தாற் றவிராநிராசை தம்மாற்றுந்
தொக்குநிரம்பும் வாரிதியுந் தொடர்மேகமுநதுன் னுதல்போலாம்.

(ப - ரை.) மிக்க அறிவால் விசாரத்தால் = பிரஞ்ஞையினுலும் விசாரவசத்தினுலும், மெய்ம்மையுணர்வும் நிராசையும் நீ = ஆத்மாவலோகனமும் திருஷ்ணை சந்நியாகமும் நீமைந்த ! ஒக்க = சமமேயாக, என்றும் = எப்போதும், கைக்கொள்வாய் = கன்முகக் கவர்வாய், ஊற்றமான நிராசையினுல் = அதிதிடதர வைராக்கியத்தினுல், தக்கவிசாரம் = தகுந்த விசாரமாம், விசாரத்தாற் றவிராநிராசை = விசாரத்தினுலே கெடாத நிராசையாம், தம்மாற்றும் தொக்குநிரம்பும் = ஒன்றற்கொன் றுதவியாயிவை பூரணமாம், வாரிதியும் தொடர்மேகமும் தன்னுதல் போலாம் = சமுத்திரமும் அதைத்தொடர்ந்தமேகமும் பரஸ் பரம் பூரித்துக் கொள்வது போலவாம்.

(ஸ்ரீ - வீர.) பிரஞ்ஞை விசாரவசத்தினுற் சமமாகவே சந்ததம் மைந்த : ஆன்மதரிச னத்தையும் ஆசையின்றி யாகத்தையும் இனிது கவர்வாய். விசாரபலமாய புருஷார்தாத நிவிருத்தியும் ஞானபலமாய மூலாவித்யா நிவிருத்தியும் தனித்தனி சித்தியாவாம், பரதி ருஷ்டியுளதாயவழி நிராசையுளதாம், நிராசையுளதாய வழியோ திருக்குப்பரமாம், வன்னியி னது தேஜோதசையாகிய பிரபையையுத்தையும் தீபதசையாகிய தீபாகாராவஸ்தையும், திமிர தைல மிரண்டையுந் தீர்ப்பனவாயுவை, அன்னியோன்னிய யெளகபத்யத்தானே, திதங்களா வனபோலவே, கூடிய திருஷ்டிகளிரண்டும் பரஸ்பர மிருப்புறவனவாம். சீசியாதி அபி விருத்தியோடு கூடிய மழைகாலமுள்வழி சாலியாதி பல சம்பத்தினுலே ஸ்ரீமான், சரற்காலத்

தில் அமலம்போல, விசாரபோக நிராசையென்பவற்றிற்கும் பரஸ்பர அதீனமாம் அபி விருத்தியென ஒரேகாலத்தில் விருத்தியாக்க வேண்டுமெனல்:—ஊற்றமான வென்பதாதி. போகம் போக்கலால் விசாரமாம், விசாரத்தானே போகநிராசையாம், சமுத்திரஜலதங்கள் போல அன்னியோன்னிய மிவைபூரித்துக் கொள்ளும். சமுத்திரத்தானே இரஸ்மிவாயிலாய் மேகங்கள் பூரிகைப் பெறுகின்றன, மேகங்களாலே மழைவாயிலாய்ச் சமுத்திரம் பூரிக்கப் பெறுகின்றதென்பது வெளியாம்.

(ச.) மிக்கவறிவால் = இங்ஙனம் பிரஞ்ஞை வசத்தினலும், விசாரத்தால் = விசார வசத்தினலும், ஒகை = சித்த உபசமமாக, நிராசையும் = ஆசையின் றியாகத்தையும், மெய் யுணர்வு = ஆன்மாவலோ கனத்தையும் = பார்வையையும், கைக்கொள்வாய = சம்பாதிப் பாய், ஊற்றமான நிராசையினல் = விடயசுகங்களினதுதோட தரிசனத்தினல். தக்கவிசா ரம் = புருடார்த்த விசாரம், நிரம்பும், விசாரத்தால் = புருடார்த்த விசாரதத்தினல், தவிரா நிராசை = விடயசுகங்கள் புருடார்த்த மின்மையன வாதலின் குற்றிதார்த்தம் (அருவருப் புள்ளது) ஆதலும், நிரம்பும், தம்மாற்றும் = இப்படி இவ்விசார நிராசைகளும் அன்னி யோன்னியம், தொக்கு நிரம்பும், எங்ஙனமெனில், சமுத்திரம் மேகத்தால் மழைவாயிலாய் நிரம்புவதும் சமுத்திரோதகத்தினல் மேகம் நிரம்புவதும் போலாமென்பது பொருள். (38)

(ஸ்ரீ - வீர - அ - கை.) கூறியபொருளைச் சுருக்கியுபசங்கரிதல்:—நாட்டின் என்பது.

நாட்டினியல்பு வழுவாம னட்டோர்க்கிதமா நற்பொருள்க
ளீட்டிமுன்ன மதனுலே யினியகுணத்தி லுயர்ந்தோரைக்
கூட்டியவரா னிராசையினைக் கூடியதனல் விசாரத்தைத்
தீட்டியதனன் மெய்ஞ்ஞானந் தெளிந்தான் முத்திசித்திக்கும்.

(ப - ரை.) நாட்டின் இயல்பு வழுவாமல் = உலகத்தோடொத்து வாழ்ந்து முறைதவ றுமல், நட்டோர்க்கு = உறவினாக்கு, இதமா = அநுகூலமான, நற்பொருள்கள் = தரும தனங்களை, ஈட்டி = சம்பாதித்து, முன்னம் = பூர்வம்; அதனலே = அதுகொண்டு, இனிய குணத்தி லுயர்ந்தோரைக் கூட்டி = மைத்திரியாதி கல்யாணகுணங்க ணிறைந்த பெரி யோரைப் பூஜித்துச் சேர்த்து, அவரால் = அம்மகான்களால், நிராசையினைக்கூடி = ஆசை யின்மையை யடைந்து, அதனல் = அந்த வைராக்கியத்தினல், விசாரத்தைத் தீட்டி = ஆராய்ச்சியை யதிகரிக்கச்செய்து, அதனல் = அவ்வாராய்ச்சி முதிர்ச்சியால், மெய்ஞ்ஞானந் தெளிந்தால் = சத்தியஞான அநந்தானந்த வடிவத்தைச் சாக்ஷாத்கரித்தால், முத்திசித்திக் கும் = மோக்ஷமானது தனது வடிவமாகவே எஞ்சியிலங்கும்.

(ஸ்ரீ - வீர.) தேசாசார அவிருத்த முறையானே தனத்தைச் சம்பாதித்து, அத்தனத் தானே அற்பமாய்த் துச்சதரமாயுள்ள போகத்தைவெறுத்து அதன் பொருட்டுத் தனத்தை செலவிடாமல், சாதுஜனங்களையும் பிரஹ்ம வித்துக்களையும் நமஸ்காராதிகளானும் சேவைக ளானும் அன்னமாடையாதி யுதவியருச்சித்தலானும் சன்மானபூர்வகம் சம்பாதித்து, " அப் பொருளறியும் பொருட்டங் கவன்முன், மெய்ப்பரங் குருவையேமேவுக சமித்தை, வைப் புறுகரனுய்வரு சுரோத்திரியனும், நிற்புறுபிரம நிட்டையன்றனையே " என்னும் சுருதி கூறியமுறையே யென்பதாம். அதன்பின்னர், சற்சங்கமத்தினின்று மெழுந்த விடயவதன் விருப்புவெறுப்பு முதலவற்றை யிகந்து வீடலானே சாதனசதுஷ்டய சம்பத்தியாற் பிரவி ருத்தித்த நலமிகுமத்தியாத்ம சாஸ்திரவிசாரத்தின் விபவத்தால் ஹே குழந்தாய் ! உனக்கு ஆத்மலாபமானது, மறந்த கண்டாபரண லாபம்போலு முண்டாம்.

(ச.) நாட்டினியல்பு வழுவாமல் = தேசாசார விருத்தமின்றி, நட்டோர்க்கு = உறவினர்க்கு, இதமாய் = முக்கியசம்மதமாகிய புருடப் பிரயத்தினத்தினுல் முன்ன, நற்பொருள்களீட்டி = தனங்களைச் சம்பாதித்தது, அதனுலே = அத்தனங்களால், இனியகுணத்தினுயர்ந்தோரை உபசரித்துக் கூட்டி, அவரால் = அவர்களது சங்கத்தினுற குணவந்தனுய், நிராசை = விஷயவைராக்கியதை. மூலத்தில், சொற்பதோஷத்தானே தேசாசாரக்கிரமத்தானே தனத்தைச் சம்பாதித்து, அத்தனத்தானே சற்காரபூர்வகமாகச் சாதுஜனங்களைச் சம்பாதித்து, அச்சாது சங்கமதத்தானே யுண்டாய விடயவைராக்கியத்தானும் சம்யக் விசார விவகத்தானும் உனக்கு ஆன்மலாப முண்டா மென்பதன்வயமாம். (39)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அவாந்தர ஆகியஸனத்தை யுபசங்கரித்துப் பிரகிருதத்திற் சேர்த்தல்:—என்று என்பது.

என்றுமுன்ன மென்றந்தை யிசைத்தான்றெய்வ சகாயத்தா
லொன்றுமொழியா தின்றுணர்ந்தே னுணர்வுபெற்றேன் போகத்தி
னின்றவாசை யின்றொழித்து நிராசையென்னு நிதியாலே
துன்றிநொய்தா யுபசாந்தச் சுதையிற்குளிர்ந்த சுகம்பெற்றேன்.

(ப - ரை.) என்று = எனவிவ்வண்ணம், முன்னம் = பூர்வம், என்றந்தை = எனது பிதா, இசைத்தான் = உபதேசித்தான், தெய்வசகாயத்தால் = பரமேசுரது திருவருளால், ஒன்றும் ஒழியாதின் துணர்ந்தேன்=ஒன்றையும் விடாமல் இப்போது ஸ்மரித்தேன், உணர்வுபெற்றேன்=விவேகத்தை யடைந்தேன், போகத்தினின்ற வாசையின்றொழித்து= போகத்தின் கண்ணே நிலைபெற்றிருந்த அவாவை இப்போதுவிட்டு, நிராசையென்னும் நிதியாலேதுன்றி = போகவிராக மென்னும் ஐசுவரியத்தானே பூரணனுகி, நொய்தாயுப சாந்தச் சுதையிற் குளிர்ந்தசுகம் பெற்றேன் = சொச்சமாய மிருதசீதளமாய சமசுகத்தை யடைந்தேன்.

(ஸ்ரீ - வீர.) எழிலாருமாராய்ச்சி மிகுந்த எனது தந்தைபூர்வம் எனக்கிவ்வண்ண மிதனைக்கூறினுன், இப்போது தெய்வதகியாலே யாவற்றையும் நன்கெண்ணினேன், நல்லபிரபோதத்தையும் நானடைந்தேன், இப்போது எனக்கு இப்போக விராகமானது நன்றுக இனிதுண்டாயது, தெய்வத்திருவருளாலே அமிருதசீதளமாய அதிதெளிவான உபசாந்திச் சுகத்தை யடைகின்றேன்.

(ச.) தெய்வசகாயத்தால் என்பது ஆனந்தத்தில் வந்தது, உணர்ந்தேன் = நினைந்தேன், நிஷ்டயா = அவ்யயம் ஆநந்தப் பொருளில். (40)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மீண்டும் மீண்டும் ஆசையைப் பூர்த்திசெய்து கொண்டும், மீண்டும் மீண்டும் தனத்தைச் சேகரித்துக் கொண்டும், மீண்டும் மீண்டும் காந்தையைப் பிரார்த்தனையாதியாலே யநுகூலப்படுத்திக் கொண்டும், இங்ஙன் சம்பத்பரிபாலன விடயத்திற் சந்தப்தனுகி யிருந்தயானிப்போது சந்தோட மடைந்தேனென்றப் பதத்தை வியந்தோதல்:—அந்தோவென்றது.

அந்தோவந்தோ வீதுநெடுநர ளிந்திலேனின் றறிவற்ற
சந்தோடத்தை யென்சொல்வேன் சகலநிஜபுரு சமித்தாறி
நொந்தோரின்ப நுன்பத்தா லேவாதிருக்கு மிடமிதுவே
யுய்ந்தோருறையும பதமிதுவே யுபசாநததி னுயர்விதுவே.

(ப - பை.) அந்தோ அந்தோ = அகோ அகோ ! இது நெடுநாள் அறிந்திலேன் = இதனை வெகுகாலம் அறியாமற் போனேன், இன்றறிவுற்ற சந்தோடத்தை யென்சொல் வேன் = இப்போது அறிந்துகொண்ட மகிழ்ச்சியை என் எனக்கூறுவேன், சகல நினைவும் சமித்தாறி=எல்லா எண்ணங்களும் இரிந்து சாந்தமாய், இன்பதுன்பத்தால் நொந்தோர்= சுகதுக்கங்களாற் கவலையுற்றவர், நோவாதிருகும் இடமிதுவே = கிலேசமுறு திருக்கும் பதமிதுவேயாம், உய்ந்தோர் உறையும் பதமிதுவே = அவித்தையின் கரைகண்டு தேரியவர் சுகமாய்வாழுந் தானமிதுவே, உபசாந்தத்தின் உயர்வு இதுவே = பரம உபசாந்தியின் காஷ்டையு மிதுவேயாம்.

(ஸ்ரீ - வீர.) ஆச்சரியம் ! ஆச்சரியம் !! அநிதிண்ணமாக வன்றேவிது இரம்மியமா யுளது, உபசாந்தி பூமியாயுளது, சகல சீதளங்களினும் விலக்ஷணமா யுள்ளத்திதிசீதளமா யுளது, சாந்திகுணத்தில் இன்பதுன்ப திருஷ்டிகளியாவுமே நாசத்தை யடைகின்றனவாம், சமத்தில் நிலைபெற்றயான் சாமியத்தை யடைகின்றேன், சர்வதாப உபசமமாயிற்றென்றதாம், சந்திரபிம்பத்தில் அர்ப்பிதன்போல வெப்பங்கள் யாவுந்தீர்ந்துகுளிர்ந்தேன் இதுசித்தத்தின் நிராதிசய சுகபாரவசியோக்தியாம், சுகமாயிருகின்றேன் இது அதன்றேறது இன்பவடிவமா யிருத்தற்கூற்றும், உள்ளேயென்று எல்லாவிடங்களிலும் கூட்டிக்கொள்க, இதனைக்கவர்ந்து மகிழ்கின்றேன் இது ஹர்ஷலிங்க புலகாதி யதிசயக்கூற்றும்.

(ச.) மூலம், சமபூ: = சமதசை. (41)

(ஸ்ரீ - வீர - அ - கை) இவ்வண்ண மியம்பிய மாபலி சம்சய நிவிர்த்தியின் பொருட்டுத் தரிசனக்தர ஸ்ரீ சுக்கிராசாரியரைத் தியானித்தல்:—என்ன வென்பது.

என்னவுரைத்து நானுரென் னுருவமேதென் றியான்விளங்கத்
தன்னையறியுஞ் சுக்கிரனைத் தாழ்ந்துவினவித் தத்துவத்தை
யுன்னும்பொழுதே யஞ்ஞான மோடுமென்ன வசனவை
முன்னவேண்டு மெனக்கண்கண் முகிழ்த்துநினைநதான் முழுதன்பால்.

(ப - பை.) என்னவுரைத்து = இவ்வண்ணமியம்பி, நானுர் என்னுருவமேது என்று= யான்யாவன் எனது வடிவமியாது என்பதாக, யான்விளங்க = யான்விளங்கும்படியாக, தன்னையறியுஞ் சுக்கிரனை = சுவாதம வேத்தாவாய ஸ்ரீ சுக்கிராசாரியரை, தாழ்ந்து = நமஸ்கரித்து, வினவி = உசாவி, தத்துவத்தை = யதார்த்த வதுவை, உன்னும் பொழுதே = தியானிக்குங் காலத்திலேயே, அஞ்ஞானமோடு மென்ன = அஞ்ஞானமா னது ஓடியொழிந்து போகுமென்று, உசனவை = ஸ்ரீ வெள்ளிபகவானை, முன்னவேண்டு மென = பிரசன்னமாக வேண்டுமென்று, கண்கள் முகிழ்த்து = விழிகளமூடி, நினைந் தான் முழுதன்பால் = தியானித்தான் பூரணபகதியால்.

(ஸ்ரீ- வீர.) இப்பிரபஞ்ச மானது யாது ? அகம் என்னும் உணர்விற்கு விடயமாய ஜீவ தத்துவமியாது ? ஆன்மாவென்பது யாது ? என, ஆன்மாவை யறிந்துள்ளவரும் அறியும் வேட்கையர்க் குபாயத்தை யுபதேசிப்பவரும், குலகுருத் தன்மையானே குலத்திற்கே பர மேசுவரரும் ஆகிய ஸ்ரீசுக்கிராசாரியரை அத்தியந்தம் அஞ்ஞான சாந்தியின்பொருட்டு வினவு வேன், யான்பரமேசுவராய் யோக சித்தத் தன்மையானே சர்வகாமேசுவராய், தன்னைச்சரணு கதி யடைந்தவரிடத்தில் விரைவிற் றிருவருள்சுரக்கும் பகவானுயுள்ள ஸ்ரீ சுக்கிராசாரியரை நன்கு தியானிப்பேன், அவர் பிரசன்னமான பின்னர், இன்பமய அவரது உபதேசமகாவாக்

இயத்தால் உபதேசிக்கப்பெற்ற அநந்தவிபவ ஆன்மாவில் சுயம் ஆன்மாவாகவே நிலைத்திருப்பேன், அவண் நிலைபெறுதலில் என்ன ஹேதுவாலுனக்கு நம்புதலாதல் எனின், மகத்துக்களினது உபதேசத் திருமொழியானது அஷ்டியப்பொருளைப் பயக்கும் அன்றி யொருகாலத்திலும் விபரீதமாட்டாது வாகலின் என்பதாம். ஸ்ரீ வசிஷ்டபகவான்: — இவ்வண்ணம் நன்கு சிந்தித்த மகாபலவானுகிய மாபலிச் சக்கிரவர்த்தி, விழிகளினிதுமூடி, பிரஹ்மாகாசத்தையே விசிராந்தி ஸ்தானமாகவுடைய கமலபத்திராக்ஷராகிய ஸ்ரீ சுக்கிராசாரியரைத் தியானஞ் செய்தான்.

(ச.) யானுர் = அகஞ்சத்தார்த்த மியாது, என்னுருவம் = ஆன்மசொரூபம், என்னு = என்று சிந்தித்து, உசனுவை = சுக்கிராசாரியரை, மூலத்தில், ஆன்மதரிசனஞ் செய்தவராகிய ஸ்ரீ சுக்கிரரென்னும் ஞானுசாரியரை, யார்யான் இவ்வான்மா வென்னும் என அகம் சப்தார்த்தத்தையும் ஆன்மசொரூபத்தையும், அஞ்ஞானம் அகலுதற் பொருட்டுத் துணிபாக வினவுவேன் என்பது அன்வயமாம். (42)

(ஸ்ரீ - வீர - அ - கை,) மாபலியின் நற்சிந்தனத்தின் பின்னர் எப்போதும் தியானபராய ஸ்ரீ பார்க்கவர், சர்வாந்தரப் பிரஹ்மரூபத் தன்மையானே எங்குமிருக்கப் பெற்றதம்மைச் சிந்தியாநின்ற தமது சித்தத்திலிருக்கும் மாபலியென்னுஞ் சீடன் புரத்திற் குருவையடையும் விருப்பினுல்த் தத்துவ ஜிஞ்ஞாசையால் தம்மைத் தரிசிக்கும் வாஞ்சையுமிருப்பதை யுணர்ந்தவராய்ச் சந்திசெய்தலும் அவன் பிரார்த்தித்தலும்:—மெய்யென்பது.

மெய்யாகியசச் சிதாநந்த வெளியேவடிவா கியவெள்ளி
யுய்யாநின்ற மாவலிமுன் னுதிப்பவவனு மூவந்திறைஞ்சிக்
கையார்மணியா லுயர்மலராற் காலிலருசித் துரைசெய்வா
னேயாகின்னன் பெனேயெழுப்ப வடியேனுரைப்ப தறிந்தருள்வாய்.

(ப - ரை.) மெய்யாகிய = சத்தியமாகிய, சச்சிதாநந்த வெளியே = உண்மையறிவின்ப ஆகாசமே, வடிவாகிய, = உருவமாகிய, வெள்ளி = ஸ்ரீ சுக்கிராசாரியர், உய்யாநின்ற மாபலிமுன் = உபதேசத்தாற் சீவன் முக்தனுகும் மாபலிச் சக்கிரவர்த்தியின் முன்னிலையில், உதிப்ப = பிரசன்னமாக, அவனும் = அம்மாபலியும், உவந்து = பரமசந்தோஷத்தையடைந்து, இறைஞ்சி = நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து, கையார் மணியால் உயர்மலரால் = கரநிறைந்த ரத்நினங்களாலும், மேன்மையான மணநிறைந்த புஷ்பங்களாலும், காலிலருச்சித்து = பாதங்களில் அருச்சனைசெய்து, உரைசெய்வான் = விண்ணப்பிக்கின்றதாவது, ஐயா = எனதாசிரியரே, நின் அன்பு = தேவரீரது பாதாரவிந்தங்களிலுள்ள பக்தியானது, எனேயெழுப்ப = அடியேனேயேவ, அடியேன் உரைப்பது அறிந்தருள்வாய் = நாயினேன் விஞ்ஞாபனஞ் செய்துகொள்வதைத் திருச்செவி கொண்டருள்வாய்.

(ஸ்ரீ - வீர.) பின்னர்ச் சர்வகத அநந்த சிதாத்மாவாகிய ஸ்ரீ பார்க்கவர், ஆகிய அந்தப் பிரபுவானவர், தமது திருமேனியை மகாபலியினுடைய இரத்தினச் சாளரம் வாய்ந்தஸ்தானத்தை நோக்கிக் கொணர்ந்தனர் தாமாகவேவந்தனர் என்பதாம். குருப்பிரான் திருமேனிப்பிரஜ்ஞையின் ஜ்வலந்தீண்டப் பெற்றதனுவையுடைய மகாபலியானவன், காலைப்போதில் அருக்கனது கிரணவிகாசித அம்புஜம்போல உணர்ந்தனன் ஆண்டு இரத்தின அர்க்கியதானத்தானும், மந்தாரமலர் மாலைகளானும், பாதாபி வந்தனங்களானும், பிரசன்னமான ஸ்ரீ பார்க்கவரைப் பூசைசெய்தபின், மகத்தான ஆசனத்தில் விசிராந்தியை யடைந்த ஞானுசாரியரை நோக்கிக் கூறுவதாவது, ஹேபகவந் ! தேவரீரது திருவருளானே எழுந்த நவநவ

உன்மேஷ சாலினீயாய இப்புத்தியானது தேவரீரது சந்நிதியில் அடியேனை விண்ணப்பிக்குமாறு, காலையிலுதித்த சூரியப்பிரபையானது பிராஹ்மணஜாதிகளைச்சந்தியாவந்தனாதி காரியம் செய்யும்பொருட்டுச் சந்நிதான மாத்திரத்தானே யேவுவதேபோல ஏவுகின்றது.

(ச.) கையார்புனலால் = இரத்தினர்க்கிய தானத்தானும், உயர்மலரால் = மேலான மந்தார குசுமங்களாலும், பகவனே! தேவரீர் அநுக்கிரகத்தாலெழுந்த இந்தப்பிரதிபை தேவரீரது முன்பு என்னைச் சொல்லுகின்றதற்கேவுகின்றது, சூரியப்பிரபைகள் காரியத்தைச் செய்தற்கேவுதல்போலென்பது பொருள். (43)

(ஸ்ரீ-வீர - அ-கை,) மகாசம்மோகத்தைக் கொடுப்பனவாகிய போகங்களின்பொருட்டு விரக்தனுள்ளேன், யாதுதனது ஞானமாத்திரத்தானே மகாசம்மோக ஹாரியாமோ அத்தகைய தத்துவத்தை யறியும் வேட்கையுற்றுளேன், ஆகலின் அடியேற்குக் கிருபையானே யுண்மையை யுணாத்தவேண்டு மென்று வேண்டிக்கொண்டு விஞ்ஞதல்:—என்னென்பது.

என்னிங்குள்ள தப்பாலென் னெல்லைசொல்லப் பட்டுளதென்
றுன்னுமெல்லை யில்லாதென் சொல்லுநானுர் நீயாரிம்
மன்னுமூலக மேதென்று மயக்கந்தீர வருளென்ன
வன்னதெல்லாந் தெரியவிரித் தவனுக்கிவனன் றறிவித்தான்.

(ப - ரை.) என்னிங்குள்ளது = இவணிருப்பது யாது, அப்பாலென் = அவணிருப்பதுயாது, எல்லைசொல்லப் பட்டுளது என் = எல்லைகூறப் பெற்றுள்ளது யாது, துன்னுமெல்லையில்லாதென் = பொருந்திய எல்லை இல்லாததுயாது, சொல்லுநானுர் = இவ்வாறு வினவும் யான்யார், விடையருளும், நீயார் = தேவரீர்யாவர், இம்மன்னும் உலகமேது = இங்கிலைபோன்ற ஜகத்தேது, என்று = எனத்தோன்றும் சங்கைகட்கெல்லாம், மயக்கந்தீர = எனதுள்ளத் துறையும் மோகமேக, அருள் என்ன = உத்தரங்களைத் திருவாய் மலர்ந்தருளவேண்டும் என்று, மகாபலிபிரார்த்திப்ப, அன்னதெல்லாந்தெரிய = அவ்வெல்லா வினுக்கட்கும் விடைக டெளிவாகத் தெரிந்து கொள்ளுமாறு, விரித்து = பகுத்து, அவனுக்கன்று இவன் அறிவித்தான் = அம்மாபலிக்கு வினவிய அப்போது ஸ்ரீ சுக்கிராசாரியர் உபதேசித்தருளினர்.

(ஸ்ரீ - வீர.) எத்துணை மாத்திரை உத்கர்ஷ அவதியையுடையது இது, போகஜாலமாகிய விடயசுகமானது என்பிரகிருதியை யுடையது, இது போகதத்துவப் பிரசினமாம், யான்யார், தேவரீர்யாவர், இது போக்துருதத்துவப் பிரசினமாம், இவ்வுலகங்களென், இது போக்கியதத்துவப் பிரசினமாம், போகானுபவ விடயங்களாகவின் லோகங்கள் போக்கியங்கள் என்னப்பெற்றன, இவ்வினுக்கட்குத் திண்ணமான விடைகளை விரைவில் அடியேனுக்கனுக்கிரகம் செய்யவேண்டும். சின்னஞசிட்டத்தின் கண் கிம் இக அஸ்தியெனப் பாடபேதம் உளது விடையை நோக்க இப்பாடமே சிலாக்கிய மென்றறிக. (44)

(ஸ்ரீ-வீர - அ-கை.) போக்தாமுதலிய திரிபுடிபேதத்திற்கு, ஒரு சித்தின்கட் கற்பிதத்தன்மை யுண்மையின் சுருக்கமாக அதனுபதேசத்தானே வினுமூன்றற்கும் விடைதருதல் எளிதாருமென்னுங கருத்தை விளக்கிக்கொண்டு அருளல்:—வருமென்பது.

வருங்கற் பகவிண் விரைந்தேக வந்தேன்பலசொல் லியும்பயனென்
சுருங்கச் சொல்லும பரன்கேளாய் தோன்றவிங்குள் ளதுவஞ்சித்
தொருங்கப் புறத்துஞ் சித்தெல்லை யுள்ளதுஞ்சித் தெல்லையற
நெருங்குற் றதுஞ்சித் தியான்சித்து நீசிததுலக நிறைசித்தே.

(ப - ரை.) வரும் கற்பகவின் = சகலவனுப்பங்களும் மேன்மேலு முண்டாம் கற்பகம் நிறைந்திலங்கும் ஆகாசமார்க்கமாக, விரைந்தேகவந்தேன் = சீக்கிரத்திற் செல்லவந்தேன், பல சொல்லியும் பயனென் = நம்பினும் நம்பாவிடினும் அநேகமுபதேசித்தும் பிரயோஜனம் என்னே ! சுருங்கச்சொல்லும் பயன்கேளாய் = சங்கிரகமாக உபதேசிக்கும் பயனை தன்மையைக் கேட்குதி ! தோன்ற இங்குள்ளதுவும் = புலப்பட இவணிருப்பதுவும், சித்து = அறிவேயாம், ஒருங்கப்புறத்தும் சித்து = இவ்வியாவற்றிற்கும் அப்பாலும் அறிவேயாம், எல்லையுள்ளதும் சித்து = சீமாவுடையதுஞ் சித்துரூபமேயாம், எல்லையற நெருங்குற்றதுஞ் சித்து = எல்லையில்லாமல் விரிந்துள்ளதும் அறிவேயாம், யான் சித்து = ஆசாரியராகிய யாமும் அறிவேயாம், நீ சித்து = சீடனுகிய நீயும் அறிவேயாம், உலகம்நிறை சித்தே = பூரணமாகிய சித்துருவமே ஜகத்துருவமுமாம்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ சுக்கிராசாரியர்:—வெகுவாக வீண்டுவிளம்புவதானே என்னேபிரயோஜனம், விண்ணெறி செல்வான் விழைந்துவந்தேம், ஹே சர்வதானவ ராஜேந்திர ! சுருக்கமாக, பிரசினத்திரய சாரம்கூறக்கேட்டி ! இவ்வுலகின் கண்ணே சித்தேயுளது, தோன்ற என்றது அதன் சித்திக்கு அன்னிய நிரபேக்ஷத்தன்மைப் பிரசித்தியை விளக்குதற்பொருட்டாம். இச்சித்திருசியம் = சிதசீன சித்திகம்போகஜாதம் சித்தையே உத்கர்ஷ அவதியாக வுடையது, சின்மயமேயாம். " எதனினின்றும் வாக்குகளெல்லாம் எட்டாமற்றிரும்புகின்றனவோ " என்னுஞ் சுருதியானே பூரணசித்திற்கே சர்வாநந்த உத்கர்ஷ அவதித்தன்மை கூறப்பெற்றிருத்தலின், " சித்திலேயே பேதவைச்சித்திரிய அத்தியாசத்தாற் சின்மயமேயாம் " " இவ்வின்பினது மாத்திரைகொண்டே யெல்லாவுயிரும் வாழுகின்றனவே " என்னும் சுருதியினுனும். இவ்வண்ணம் " தத்துவமசி அகம்பிரஹ்மாஸ்மி இது பிரஹ்மா இது இந்திரன் " இதனினுங் காண்போன் அயலெதுமிலையே. இதனினுங் கேட்போனையலெதுமிலையே " என்பதாதி சுருதி சதங்களானேதுவம் அகமாதி போக்துருதத்வமும் சின்மாத்திரமேயாமெனக் கூறல்.—யான் என்பதாதி. சித்துநீ சித்துயாம். இவ்வண்ணம் போக்கிய ஜாதமும் பரமார்த்தமாகச் சித்தேயாம் அதன் இருப்புண்மைகட்குச் சித்தசீனத் தன்மையுண்மையினுனும், " பிரமமேயிந்த விசுவமாதி வரிட்டம்தாம் " என்பதாதி சுருதியினுனும் என்னுங்கருத்தா லுரைத்தல்; உலகம் = இவ்வுலகங்கள் எல்லாம் சித்தேயாமென்பது சங்கிரகம். சிரத்தையையுடைய விவேகியேயாயின் நிச்சயமாக இவ்வுபதேச மொன்றனுமே கூறிய இத்துணையானுமே யாவற்றையுமே நீபெறலாம், அல்லாக்கால் உபதேசங்கோடானுகோடியேனும் நின்பாற் கிளத்தினும் சாம்பரில் ஓமம் செய்ததையே யொக்கும். சித்திற்குச் சேத்திய = திருசிய, ஆகாரமுறுதலே பந்தமாம், அதுவிடுபடுதலே வீடெனப்படும், சேத்தியாகாரம் கன்கு விடுபட்டதாய சித்துப் பூர்ணத்மாவாம், என்னுமிதுவே சர்வசித்தாந்த சங்கிரகமாம்.

(ச.) சின்மாத்திரத்திற்கு வேறுக ஒன்று மின்றென்பது பொருள். மூலம்:—சின்மாத்திரம் = அறிவுருவம், சின்மயம் = அறிவைப் பகுதியாகவுடையது. (45)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சுருக்கமா யுபதேசித்தருளியபின் இந்நிலையிலிருவென ஆசீர்வதித்து ஸ்ரீ சுக்கிராசாரியர் எருதல்:—இதுவே யென்பது.

இதுவே சுருக்க மிவ்வுறுதி யிதயங்கொண்டிவ் வகைக்கேற்ற
மதியா னின்னே நினைநீயே மாறுதுணர்ந்து நோக்குதியே
லதனு லநந்த மாம்பதத்தை யடைதியோரே ழுருந்தவரும்
புதிதோர் தெய்வ காரியத்திற் புகுந்தாரியாமும் போகுதுமால்

(ப - ரை.) இதுவே சுருக்கம் = இப்போ துபதேசித்ததே சங்கிரகமாம், இவ்வறுதி இதயங்கொண்டு = இந்நிச்சயத்தை இருதயத்திற் கவர்ந்து, இவ்வகைக்கேற்ற மதியால் = இத்தன்மைகேற்ற புத்தியால், நின்னை = உன்னை, நீயேநினை = நீயேசுயம் எண்ணுதி, மாறுதுணர்ந்து நோக்குதியேல் = இடைவிடாது அறிந்து பார்ப்பாயேல், அதனால் = அத்தன்மையால், அநந்தமாம் பதத்தையடைதி = அந்தமில்லாத பரமபதத்தினை யடைந்து சுகிப்பாய், ஓரேழ் அருந்தவரும் = ஒப்பற்றசத்த இருடிகளும், புதிதோர் தெய்வகாரியத்திற் புகுந்தார் = நவமானதோர் சுரகாரியத்திற் பிரவேசித்தார், யாமும் போதுதும் = யாமும் மங்குச்செல்வேம். ஆல் அசை.

(ஸ்ரீ - வீர.) இவ்வண்ணமாய நிச்சயத்தை இருதயத்திற் கொண்டு வினோயாட்டாக இனிபார்ப்பாயாயின், சுயமாகவே அகண்டாகார வீரூத்தியாரூடப் பிரத்தியக்காத்மாவானை, அநந்தம் = தேசகால வஸ்து பரிச்சேதரகிதமாய பதமாநதன்னை யடைந்து சுகிப்பாய். இங்கிருந்தேயாம்தேவலோகஞ் செல்லவேண்டும், ஆண்டு எழுமகரிஷிகளும் ஒருதேவ காரியத்திற் புகுந்துளார்கள். யாமுமவண் அவசியம் மூன்னிற்கவேண்டும். வஸ்தவ்யம் = பாவத்தில் தவ்யவிருதியாம்.

(ச.) மூற்கூறிய இந்நிச்சயத்திஞல் யோக்கியனுய் அனைத்து மடைவாய், அன்றெனின் நின்னிடத்திற் பலசொல்வது சாம்பலில் ஆகுதிகொடுத்த தொக்கும், திருஷியபாவனையோடு கூடிய சித்தேபஞ்தமாம், அது விடுபட்ட சித்து முத்தியெனப்படும், திருஷிய பாவனையோடு சம்பந்தமற்ற சித்தே ஆன்மாவா மென்னும் இதுவே சர்வசித்தாந்த சங்கிரகம். (46)

(ஸ்ரீ - வீர - அ - கை.) சுராசுரசபைகளில் மிகமிகவும் மேன்மையோடு கூடிவிளங்கும் அந்தப்பிருகு சுதராகிய ஸ்ரீ சுக்கிராசாரியர் சென்றபின்னர் மதிமான்களுட் சிரேட்டனுய மாபலியானவன் மனத்திஞலே என்ன சிந்தித்தா னென்பதைக் கூறல்:—என்னுவென்பது.

என்னு வெள்ளி யேகியபின் னெல்லாமறிவா முலகினைப்பார்த்
துன்னு வொக்கு மொக்குமெனக் குசனுவுரைத்த துண்மையதே
மூன்னு மவனி சித்துலகு மூன்றுஞ்சித்து நான்சித்து
நன்னு லான திசைசித்து நாட்டுகின்ற தெலாஞ்சித்தே.

(ப - ரை.) என்னுவெள்ளி எகியபின் = என்றிவ்வண்ணம் உபதேசித்தருளி ஸ்ரீசுக்கிர பகவான் சென்றபின்பு, உலகினை யெல்லாம் அறிவாம்பார்த்து = சகல லோகங்களையும் சித்தாகவே பார்த்து, உன்னு = ஆலோசித்து, ஒக்கும் ஒக்கும் = பொருந்தும் பொருந்தும், எனக்குசனு உரைத்தது = எனக்கு ஸ்ரீ சுக்கிராசாரியர் உபதேசித்தருளியது, உண்மையதே = சத்தியமேயாம், மூன்னும் அவனிசித்து = எதிரிற் புலப்படும் திருஷியமியாவும் அறிவேயாம், உலகம் மூன்றுஞ்சித்து = ஜகதத்திரயமும் சித்தே, நான்சித்து = காணுமியான் அறிவுருவமே, நன்னுலான திசைசித்து = எட்டுத்திசைகளும் சித்தேயாம், நாட்டுகின்ற தெலாஞ்சிததே = எப்பொருள்களுமே சித்தேயாம்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ பகவானுலே பொருத்தமாகவே புகன்றருளப் பெற்றது, இச்சகத்திரயமும் சித்தேயாம், யான்சித்து, இவ்வுலகங்களியாவும் சித்து, திசைகளும் சித்து, இத்தொழிலுஞ்சித்து, உண்மையாக நோக்குங்கால் உள்ளும் புறம்பும் உள்ளவையாவும் சித்தேயாம். சித்திற்குவேருக எப்பொருளுமே எவ்விடத்துமே கிடையவே கிடையாதாம்.

(ச.) ஸ்ரீ வசிஷ்டர்:—உலகினை யெல்லாம், அறிவாம் = சிதான்மகமா மென்று, பார்த்து அன்னு = கவனித்துச் சிந்தித்தவனுகி, கவனித்தல் = கருத்துவைத்தல். (47)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இவ்வண்ணமாகவே யான்யார் என்னும் வினவின் பின்னரும் சுய மாகவே என்னுணரப் பெற்றதெனல்:—தெரிக்கு மென்பது.

தெரிக்கும் பொருளுந் தரிசனமுந் தீர்ந்துவெறுநின் மலவடிவாய்ப்
புரிக்கு முதயம் விடாதென்றும் பொலியும்பரமப் பொருளானேன்
வரிக்குங் காட்சி யிலாவதிவே வடிவாயொருகா லேயெங்கும்
விரிக்கு நிறைவா யுபசாந்த வெளியாயறிவா மிகுபொருணன்.

(ப - ரை.) தெரிக்கும் பொருளும் = திருசியமும், தரிசனமும் = காட்சியும், தீர்ந்து = விடுபட்டு, வெறு நின்மலவடிவாய = கேவலாமல ரூபவானுகி, புரிக்குமுதயம் விடாது என்றும் = யாவற்றையும் எப்போது மிலக்குபவனுய், பொலியும் பரமப்பொருளானேன் = ஒன்ருலன்றிச் சுயமேயிலங்கும் உயர்ந்தவத்து வாயுள்ளேன்; வரிக்குங்காட்சியிலா = வாதனை யானே வாதனைப்படுத்தும் சேத்தியமில்லா, அறிவேவடிவாய் = சித்துரூபமாய், ஒருகாலே எங்கும் விரிக்கும் நிறைவாய் = ஒருபாதமே எவ்விடத்திலும் வியாபிக்கும் பூரணமாய், உபசாந்த வெளியாய் = பரமசாந்தமான வெட்டவெளியாய், அறிவாமிகுபொருள் நான் = உள்ள சச்சிதானந்த மகத்தேயான்.

(ஸ்ரீ - வீர.) திருசியதரிசன நிர்முக்தனுய், கேவலம் நிர்மலவுரூவ முடையவனுய், நித்திய உதிதனுய் நிராபாசனுய்த் திருஷ்டாவாய்ப் பரமேசுவரனுயுள்ளேன். சேத்திய நிர்முக்த சித்துரூபனுய், நானுவித பதார்த்தங்களோடு கூடிய விசுவத்தை யெங்கும் வியாபித்தவனுய், சர்வசம் வேத்தியமும் சம்சாந்தமானவனுய், சச்சின்மாத்திரனுய் மகத்தாயுளேன்யான்.

(ச.) தெரிக்கும் பொருளும் = திருசியங்கள் என்னும் பூதபௌதிகங்களும், தரிசனமும் = ஞானசாதனங்களும், தீர்ந்து = ஆகிய இவற்றிற்குவேருய், வெறு நின்மலவடிவாய் = அதனுற் கேவலாமல ரூபமாய, புரிக்கும் = பிரகாசாந்தரா பேக்ஷையின்றி விளங்கும், உதயம் விடாதென்றும் பொலியும் = நித்தியப்பிரகாசமான, பரமப்பொருள் = பரமேசுவரன் என்னும, கண்டேன் = சர்வசாக்ஷியானே; உபசாந்த வெளியாய் = சகல விஷய வாசனேயு மற்றதாய், ஒருகாலேயெங்கும், விரிக்கும் நிறைவாய் = விசுவபூரகமாய் மிகு பொருள் = பூரணமான சின்மாத்திரம், நான் = நானுனேன், என்று பரமஞானியான மாபலி சிந்தித்தானென வருவித்துக் காண்க. மூலம்: சேத்திய நிர்முக்தசித்ரூபம் = விசுத்த சித்துரூவ மியான், விஷ்வக் = உள்ளும்புறம்பும் எவ்விடத்தும். (48)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தன்னேயன்றிச் சகமொன் றிலேயெனப், பன்னுமாய்வினேப்பற்றிய மாபலி, பொன்னதே முதற்போக்கி, மெய்ச்சித்திர, மென்னவே நெடும்போ திருந்தானெனல்:—ஓங்குமென்பது.

ஓங்குஞ் சின்மாத் திரப்பொருளா மோங்காரதத்தை யுண்ணினேந்து
தூங்குந் தியான பரனுகித் தொடர்சங்கற்ப மெல்லாம்போய்
வாங்குந் தொழிலே டணையைய மனனஞான நேயமிவை
தாங்கு ஞாதா வனேத்துமறத் தனிசசித்திரமபோ னெடிதிருந்தான்.

(ப - ரை.) ஓங்கும் சின்மாத்திரப் பொருளா மோங்காரத்தை = வியாபகமாகிய அறிவுமாத்திரத்தைப் பொருளாகவுடைய பிரணவார்த்த மாத்திரையை, உண்ணினேந்து = மனத்திலேயே தியானித்து, தூங்குந் தியானபரனுகி = ஞானயோக நித்திரையை நன்

கடைந்தவனுகி, தொடர் சங்கற்பம் எல்லாம்போய் = பற்றிய சகல சங்கற்பங்களும் பரம சாந்தமடையப் பெற்றவனுகி, வாக்குந்தொழில் = தொழில்க ளெவையும் தொடராதவ னுகி, எடணை ஐயமனனனுன ஞேயமிவை தாங்குனாதா அனேதமும் அற=ஏடணைமூன்று சம்சயமிரண்டு நிதனேதியானம் நியேயம் நியானகருத்தாவாய்த் நியேயத்தை விடயஞ் செய்பவனுய நியாதாவென்பனயாவும் அற்று, தணிச்சித்திரம்போல் நெடிதிருந்தான் = கேவலம் பதுமைபோல நெடும்போ திருந்தனன்.

(ஸ்ரீ - வீர) ஒன்றேயாய சித்தேயான் சிதது வடிவனுகிய எனகருச் சகலற்பவிகற்பங்க ளானே என்னேவிருதது என்னேசீர்னியாவதோ ! அஞ்ஞானதது னின்றும் நன்குகலங் குறுவேன் ததுவபோதத்தானே அதிபாவனமாய ஆன்மாவின் கண்ணே பரமசாந்தத்தை யடைவேன் என்றிந்தப் பிரகாரம் பரமபண்டித ஞானியாய மாபலிசிதிதுக் கொண்டே யோங்காரத்தால் தூலருகளுமக் கலக்கங்களானும் அவற்றின் பீஜமாய அஞ்ஞானத்தானும் வினைகளப்பெற்ற சைதன்யததை யுணர்த்திக்கொண்டு அகாராதி மாதிராத நியத்தையும் விடுத்து, மேலாய அர்தமாத நிராாத்தத் துரியததைப் பாவித்துத தன்வடிவமாகவே யது பவித்துகொண்டு ஆண்டுச் சமாகிதனுகி யிருதனன், மௌனமாகவே யிருந்தனன், சர்வ சங்கற்பங்களுஞ் சமித்தாறியவனுகவே யிருந்தனன், வினைக்குழுவெவையும் விட்டேயிருந்த னன். சம்சயமும் கவலையு மற்றவனுயினன், சேத்தியசித்த நிதனங்களை வெருதூரத்தில் விட்டவனுயினன், திரிபுடிமாத்திரத்தியாக உபலக்ஷணமாமிது, அதிலேதுவாய நியாதாதி யேயம் நியானமு மற்றவனுயினன், நிர்மலனுகிச் சாந்தவாசனேயனு மாயினன், பதுமைய தொத்தசையாது படிந்தான்.

(ச.) ஸ்ரீ வசிட்டர்:—ஓங்காரத்தை = வாகியப் பிரணவத்தினுல் நிச்சயத்தையடைந்து, ஓங்குஞ் சின்மாத்திரப் பொருளாம் =தொனிரூபமான அந்தப் பிரணவாது சந்தானததைச் செய்தவனும், நியானபரனுகி, சிதாகாசரூப பரப்பிரம பாவனையைப் பெற்றிருந்தா னென் பது கருதது. எடணையைய மனனமனேதமற என்றதனுல், பகிர்முக விக்ஷேபாகித்தியஞ் சொல்லப்பட்டது. ஞானம் = நியானம், ஞேயம் = நியேயம், ஞாதா = நியாத்துரு, அனேத்துமற என்றதனுல் நிர்விகற்பசமாதி யுடையன் ஆனுன் என்பதுகருத்து. அந்தர் முகவிக்ஷேபமுமற்றன். (49)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மகாபலியினது நிருவிகற்ப சமாதியையே வருணித்தல்:— காற்றென்பது.

காற்றிலாத விளக்கொளிபோற் கலங்காதிருந்த மாவலிதான்
சிற்றமயறிர்ந தறநிறைந்து சிந்தையென் னு மாசினறித
தோற்றுஞசததா மாத்திரத்தாற் சுடர்விட்டெறித்த படிசொல்லி
லாற்றன்முகிமிர சரற்காலத் தறவேதெளிநத விண்போலும்-

(ப - பை.) கற்றிலாத விளக்கொளிபோல் = நிவாதததலத்தில் வைத்திருக்கும் தீபச் சுடர்போலும், கலங்காதிருந்த மாவலிதான் = சஞ்சலமற்றிருந்த மகாபலியானவன், சிற்றமயல் தீர்ந்து = துக்கப்படுத்தும் மோகமகன்று, அறநிறைந்து = அத்தியந்தம் பூரண மாகி, சிந்தையென்னும் மாசின்றி = மனனமென்னும் தோஷமற்று, தோற்றுஞ் சத்தா மாத்திரத்தால் = நிருமலமாகப்புலமாம் சன்மாதநிரமாகவே, சுடர்விட்டெறித்தபடி சொல் லில் = விளங்கிக் கொண்டிருந்த சமாதியின் நிலைமையை உவமித்துரையாடின், ஆற்றல் முகில்தீர் = மழைபெய்யுஞ் சமர்த்தற்ற முகில்கள் யாவும்விலகிய, சரற்காலத்து=சரத்து இருது வந்துற்றபோது, அறவே தெளிநத விண்போலும் = அதியந்தம் சொச்சத்தன் மையை யடைந்துள்ள ஆகாயமேபோல ஆனுன்.

உபசமப் பிரகரணம் மாவலிகதை அகாகக

(ஸ்ரீ - வீர.) மகாபலியானவன் வாதமில்லாத விடத்தில் வைத்துள்ள தீபம்போல மகாபதத்தை யடைந்தவனும் நிருவிகற்பமா யிருந்தான்; உபசாந்த மனத்தினனும் அந்த இரத்தின வாதாயன ஸ்தலத்திலேயே யிருந்தனன்; கல்லில் உளியாற் செதுக்கியமைத்த விக்கிரகமேபோல = புருஷாகிருதியேபோல; வெகுகாலம் நிலைபெற் றிருந்தனன், மகாபலிச்சக்கிரவர்த்தியானவன், சகல ஏஷணைகளும் சாம்பினனும், அதனனே பரிபூர்ணநிலையையடைந்தவனும், அதனனே விடயமனன தோடதசைகளி னின்றும் விடுபட்ட இன்பர்மல பிரஹ்மபாவப் பிராப்திலக்ஷண சன்மாதிரமேயாகி மேகங்கள் ஒழிந்த சரத்காலமென்ன ஒளிர்ந்தனன். (50)

(ஸ்ரீ-வீர - அ-கை) சமாதியில் தங்கள் அரசனிருந்ததை யுணராத அநுசரர் துயருறுதலும் மாபலியுணர்தலும் தெரிதல்.—ஆங்கென்பது.

ஆங்கப்படியே யவனிருப்ப வவனதேவற் புரியசுர
ரோங்கறகோயின் மேனிலத்தை யுற்றுருயரமா வலிதாலு
நீங்கற்கரிய நிருவிகற்ப நிலைகூரசமாதி நெடுமபோது
தேங்குற்றதற்பின் விழித்துணரநது மமதைதீர்ந்த சிநதையனும்.

(ப - ரை.) ஆகு அப்படியே அவனிருப்ப = அவ்விடத்தில அவ்வாறே அம்மாபலியிருந்தபோது, அவனது = அவ்வரசனது, எவல்புரி யசுரா = பணிவிடைசெய்யும் அநுசர அசுரர், ஓங்கற்கோயின் மேனிலத்தையுற்றூர் = ஆகாயமளாவிய அரண்மனையின் மேன்மாடியை யடைநதனர், உயர் மாவலிதானும் = மேன்மை மிக்க விரோசனன் மைந்தனும், நீங்கற்கரிய நிருவிகற்ப நிலைகூர்சமாதி = அவன் மந்திரிமாரது பிரயதநதனத்தானும் கலைக்க முடியாத நிருவிகற்ப நிலைமையோடு கூடிய சமாதியில், நெடும்போது = நெடுங்காலம், தேங்குற்றதற்பின் = விசிராந்தியடைந்த பின்னர், விழித்துணர்ந்து = சமாதி கலைந்து கண் விழித்துணர்ந்து, மமதை தீர்ந்த சிந்தையனும் = சிறிது மமதையில்லாத சித்தத்தை யுடைய வனு யுலாவினன்.

(ஸ்ரீ - வீர.) பின்னர் ஆண்டு மகாபலியின் பணியாளராகிய தானவர் அப்போது அம்மன்னவனது ஆசிரயபூதமாய படிகத்தமைத்த மேன்மாடியின்மேல் கணப்போதில் எறினர்கள், எறிய.டிம்ப.குமுத.ஹயக்ரீவ.லடுக.பல்லாகர் முதலியயாவரும், சித்திரார்ப்பித அசலம் போலததியான மௌனசமாதியி லிருந்த மன்னவனே நமஸ்கரித்து, நோகஇ விஷ்ணுஸ்மரணம் ஆனந்தபய மந்திரத்தன்மையை யடைந்தனர். அந்த மந்திரிகள் அரசனுக் கடைநததென்னேயென கண்காரார்ந்தும் அறியாதவராய், யாவற்றையும் உணர்நதவருள் மேன்மைமிகுகவராய ஸ்ரீ பார்க்கவராகிய தங்கள் ஆசிரியரைத் தியானம்புரிந்தனர், புரிநத அளவில் அகுகு எழுந்தருளிய பகவான் ஸ்ரீ பார்க்கவர் தியானமௌனத நிருநதான வேசனைக்கணடு மகிழ்ந்து புன்னகை கொண்டருளி மந்திரிமாரை நோக்கி, நீகள் இராஜ்யகாரியகளை கவனிதது கொள்ளுங்கள் ஆயிரம் வருடங்கழிநத பின்னுன் மாபலிவிழிப்பன் என்றருளி மறைந்தனர். பின் திவ்ய வருடமாயிரம் சென்றபின் ணுணர்ந்த மாபலி ஒன்றும் வேண்டிய தின்றியினும் உலகுபகாரப் பொருட்டுப் பிராரப்தபரியந்தம் விவகரிப்போமென நிச்சயித்து எழுந்து குளிர்ந்துலவினுன்.

(ச.) உதாரமதியையுடைய மகாபலியானவன், நெடும்போது நிர்விகற்ப சமாதியி லிருந்து, அதன்பின் அவர்களது முன்பு விழித்தனன். (51)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வாறிருந்து இராஜ்ய பரிபாலனஞ் செய்து வாழ்ந்தான் மாபலியெனல்:—பற்றிலாத வென்பது.

பற்றிலாத மனத்தாலே பயின்றிராச காரியங்கண்
மூற்றுமியற்றி யாபத்து முதிர்சம்பத்துஞ் சமமாகக்
குற்றமில்லாக் குறிப்பாலே குறிப்புற்றின்ப துன்பத்திற்
சற்றுமிதவா தமிழாது சமபாவனையிற் றுணுணன்.

(ப - பை.) பற்றிலாத மனத்தாலே = யான் எனதென்னும் சங்கமற்றமனத்திஞலே பயின்று = விவகரித்து, இராச காரியங்கண் முற்றுமியற்றி = சகல இராஜகாரியங்களையும் ஒழுங்காகச்செய்து, ஆபத்தும் முதிர்சம்பத்தும்=போராபத்தும் பெரும்சம்பத்தும், சமமாகக் குற்றமில்லாக் குறிப்பாலே குறிப்புற்று = துல்லியமாகப் பார்க்கும் மாசற்ற திருவ்ட்டியினுலேகண்டு, இன்பதுன்பத்தில் = சுகதுக்கங்களில், சற்றும் மிதவாது அமிழாது = சிறிதும் மகிழாதுவாடாது, சமபாவனையிற் றுணுணன் = அவனது பிரஞ்ஞையானது அஸ்தமும் உதயமுமற்ற அறிவுருவாகவே யிருந்தது.

(ஸ்ரீ - வீர.) பின்விரோசனன் றவப்பயனுகிய மகாபலியானவன், ஆண்டு, முன்மொழிந்த நியேய வாசனுத்தியாகமய வடிவனுய் அதன்விலாச ஆதிக்யத்தான் மேன்மைமிக்க மனத்தினுலே சகல இராஜகாரியங்களையும் செய்தான். அக்கால் அவன் அசுவமேதமகாயாகமியற்ற, அங்கு இந்திரசகாயமாய்ச் சென்றருளிய ஸ்ரீபகவானுலே மூன்றடி மண்வேட்டு வஞ்சிக்கப் பெற்றுப் பாதாளதலத்திற் கட்டுப்பாட்டுடன் இன்றும் அம்மாபலியானவன் மறு இந்திரத்தன்மை யேதுவினுனே பிராரப்தத்தானே புபலக்ஷிதனுய் நன்கிருக்கின்றுன்; ஜீவன்முக்த வபுவையுடையவனுய்ச் சுவஸ்தனுய், நித்தியம் நிர்விகற்ப சமாதியிற்கழிந்த மதியையுடையவனுய்ச் சுகித்து வாழ்கின்றுன்; இவ்வண்ணம் பாதாளகுகரத்திலிருக்கப் பெற்ற அவன் ஜீவன்முக்த கதியையுடையவனுகி விழித்தபோது விவகரித்தபோதினும், சமதிருவ்ட்டியினுலேயே ஆபத்தையும் சம்பத்தையும் காண்கின்றனன், சுகதுக்கங்களில் அவனது பிரஞ்ஞையானது பூரிப்பதுமில்லை காரிப்பதுமில்லை.

(ச.) இயற்றி = நானெனதென்பன முதலிய வாதனுத்தியாக மென்னுந் தேயத்தியாக மயரூபமான மனத்தால் இத்தன்மையனுய் இராஜகாரியங்களைச் செய்தானென்றதாயிற்று. குறிப்பால் = திருவ்ட்டியால், ஆபத்தும் = ஆபத்தையும், சம்பத்து = சம்பத்தையும், குறிப்புற்று, அவனது பிரஞ்ஞையானது. (52)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மகாபலியின் பெருமையையே எடுத்துரைத்து மனத்தை யடக்கவேண்டு மெனல்:—ஓவாதென்பது.

ஓவாதவன்ற னுள்ளெழுந்த வூகாபோகம் பலகோடி
பாவாபாவம் பலகோடி பரந்தெதெல்லா மீளப்பாறி
மேவாநின்ரு னெவ்விடத்தென் விண்ணின்மண்ணில் வேட்கைகளிற்
ரூவாநின்ற மனநதனினைத் தன்ன திதயத் துள்வைப்பாய்.

(ப - பை.) ஓவாது = இடைவிடாமல், அவன்றன் உள்ளெழுந்த = அவனுடைய உள்ளத்தெழுந்த, ஊகாபோகம் பலகோடி = கொள்ளுவதுந் தள்ளுவதுமாகக் கினைத்தனகோடானுகோடியாம், பாவாபாவம் பலகோடி = பாவ அபாவங்கள் கோடானுகோடியாம், பரந்தெதெல்லாம் ஈளப்பாறி = இங்ஙன் விஸ்தரித்த யாவற்றினின்றும் ஆறுதலையடைந்து, மேவாநின்ரு = பிரஹ்மானந்த பரிதஞகியிருக்கின்றுன், எவ்விடத்தென் = எங்குதான் என்னபற்றை யடைந்தான், ஒன்று மடைந்திலன் ஒரிடத்தும், விண்ணில் மண்ணில் வேட்கைகளில்=பரத்திலிகத்திற் பற்றிய விருதிகளின் வாயிலாக, தாவாநின்ற மனந்தன்னை=

வீழ்ந்து தத்தளியாநின்ற மனத்தினை, தன்னது இதயத்துள் வைப்பாய் = உன்னுடைய இருதயக் குகையின்கண்ணே யிருத்தி யின்புறுவாய்.

(ஸ்ரீ - வீர.) பத்துக்கோடி வருடபரியந்தம் ஜகத்திரயத்தையும் ஆண்டு அந்தத்தில் வீரத்தியையடைந்து மகாபலியின் மனமானது உபசாந்தியை யடைந்தது. சுகதுக்கங்களின் ஊகாபோகங்கள் = ஆகமாபாயங்கள், ஆயிரக்கணக்காம் பாவாபாவங்கள் = சம்பத்து விபத்துகள் நூற்றுக்கணக்காம், சகத்திர சதசப்தங்கள் எண்ணிக்கையற்றன என்பதன் பரங்களாம். மாபலியாற் பரிந்து பார்க்கப்பட்டன இத்துணை யெனினும், எவ்விடத்தில் சமாசுவாசத்தை யடைந்தானவன்? போகாசையை அடியோடும்விட்டுச் சம்பூர்ணமனத்தையுடையவனும், நித்தியம் ஆத்மாராமனும், பாதாலகோடர மத்தியத்தில் = சப்தபாதாளங்களின் மத்தியபூதமாய இரசாதலப் பெயரியபாதாள கோடரத்தில், எல்லாவிபத்துக்களும் இன்றியவனும், இருக்கின்றனன். இங்ஙனம் மாபலிசரித்திரத்தை யுபசங்கரித்து ஸ்ரீ இராமருக்குபதேசித்தல்:—விண்ணில் என்பதாதி. மகாபலியினுடைய இவ்விஞ்ஞான சம்பிராப்தியானது இவ்வாறு கூறப்பெற்றது, இத்திருஷ்டியைப் பின்பற்றி நீயும் இராகவ! மிக மேன்மையை யடைவாயாக. இகலோக போகங்களிலும் பரலோக போகங்களிலும் ஓடித் திரியாநின்றதும், பாமரசேஷ்டைகளில் முயன்று புரள்வதும், ஆகிய இச்சித்தத்தை யிருதய குகாகோடரத்திற் கட்டுப்படுத்தி நன்குதாபிப்பாய்.

(ச.) இஷ்ட சாதனபாவனை ஊகமாம், அநிஷ்ட நிராசபாவனை அபோகமாம், அவைகளின் பலகோடியும், பதார்த்தங்களினுடைய பாவாபாவம் பலகோடியும், ஆகப் பரந்ததெல்லாம், மாவலியாற் பார்க்கப்பட்டனவாயினும் இம்மாவலியானவன் இளைப்பாறிமேவாநின்ற தெவ்விடத்தே=எவ்விடத்து விசுவாசத்தை யடைந்தான், ஓரிடத்தும் அடைந்திலன் என்பதுபொருள். ஆசையற்றவனேயாய் இராச்சிய காரியஞ்செய்தானென்பதாம். இனி இராமற்கு ஸ்ரீ வசிட்டர் இதமுபதேசிக்கிறார்:—ஸ்ரீ வசிஷ்டர், இவ்வுலகத்திலும் பரலோகத்திலும், வேட்கைகளில், அர்த்தசம்பாதன முதலிய விவகாரங்களில், தாவாநின்ற = விடயசுகவாஞ்சையால், வேகமாய்ச் செல்லாநின்ற, மனந்தன்னை = விவேகவைராக்கியாதிகளால் நிரோதஞ்செய்து, தன்னிதயத்துள் = இருதய புண்டரீகத்தில் வைப்பாய் ஆன்மானுசந்தான முடையதாகச் செய்யென்பது பொருள். (53)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மனத்தையடக்கும் உபாயம் கூறல்:—எங்கே யென்பது.

எங்கேயெங்கே மனமோடி யிளையோரென்ன வீழ்ந்தழுந்து
மங்கேயங்கே நின்றெழுப்பி யகண்டவறிவி லடைவிப்பாய்
சங்கேதமதா யிவ்வாறு சாதித்துளமா மதகரியை
வெங்கேதமறத் தளைத்தெல்லா விசாரத்தாலும் வீடணைவாம்.

(ப - ரை.) எங்கே எங்கே மனமோடி = எந்த எந்தப் பிரதேசங்களில் மனமானது ஓடி, இளையோரென்ன வீழ்ந்தழுந்தும் = பாலர்போல விழுந்துமூழ்குமோ, அங்கேயங்கே நின்று = அங்கங்கிருந்தும், எழுப்பி = மேற்கிளப்பி, அகண்ட அறிவில் அடைவிப்பாய் = கண்டிதமில்லாத சித்துரூபத்தில் சேர்ப்பிப்பாய், சங்கேதமதா யிவ்வாறு சாதித்து = நியமமாக இவ்வாறுபயிலும் பயிலினாலே, உளமாமதகரியை = மனமாகிய மதோன்மத்தமாதங்கத்தை, வெங்கேதமறத் தளைத்தெல்லா விசாரத்தாலும் வீடணைவாம் = சகல கொடுந்துயரங்களும் நீங்கும்படியாக நிபந்தனஞ்செய்தி சர்வபாவத்தானும் பரமமான சிரேயசு அடையப்பெறும்.

(ஸ்ரீ - வீர.) எந்த எந்தப்பிரதேசங்களில் மனம்பாலர்போல வீழ்ந்து ஆழ்ந்துபோமோ, அவணின்றும் அவணின்றும் நன்குகவர்ந்து அந்த மனத்தைத் தத்துவமாகிய அக்வவ்வதிஷ்டானமாகிய சின்மாத்திரத்தில் அடைவிக்க வேண்டும். அவ்வாறே பகவானும் அருளியுள்ளார்:—வாங்கி யைம்பொறி னின்ற மனத்தினை, நீங்கிடாவகை நின்னுளிருத்தியே, நீங்கியாவையுஞ் சிதைசெயாமையாம், பாங்கியாததுவே பயில்வாயரோ. நேத்திரமுதலிய இந்திரியவாயில்களாற் புறம்போந்து உருவமுதலிய பஞ்சவிஷயங்களிற் சஞ்சரித்து நிற்கின்ற மனத்தை விஷயத்தின் ரூவஷதிருஷ்டி முதலிய வைராக்கியத்தின் ஏதுவாதிய உபாயங்களால் உள்ளே இழுத்து லயரூபமான நித்திரையடையாதபடி சர்வ உபாதிகளினின்றும் விடுபட்ட பிரத்தியக் காண்மாவின் கண்ணே நிரோதமாகப்பண்ணி, சமாதிக்குயாதாமொரு சிந்தனையும் விக்கினமாகலின், யாதானும் ஓர் அகாண்ம பதார்த்தத்தை யாவது, அல்லது பிரதிதியக்காண்மாவை யாவது கொஞ்சமும் விருத்திக்கு விஷயமாக் காமையாகிய தன்மையினையுடைய அப்பியாச மெதுவோ அவ்வுபாயத்தையே பழகுவாய்; என்பதாம் இதன்விசிவுரையைக் கூடார்த்த தீபிகையுரையின் கண்ணே கண்டுகொள்க, இவ்வண்ணம் தீர்க்க காலம் அப்யாசஞ்செய்து உன்மத்த மனமாகிய மதமுற்றகஜத்தைச் சர்வப்பிரயதனத்தாலும் சர்வாத்மபாவத்தாலும் நிரோதஞ்செய்து பரமசிரேயசானது அடையப்பெறும்.

(ச.) எங்கேயெங்கே = எந்தெந்தப் பிரதேசங்களில், சங்கேதமதாய்,=நியமமாய் ≠ பொருத்தமா யெனினும் ஒக்கும், எல்லா விசாரத்தாலும் = சர்வபாவத்தால், வீடு = பரமசிரேயசு, அணைவாம் = அடையப்படும். ஆகதிரு விருத்தம்(முற்றிற்று)

54

மாவலி கதை முற்றிற்று.

பிரகலாதன் கதை.

———(*)———

(ஸ்ரீ-வீர - அ-கை.) இவ்வண்ணம் கேவலம் காகதாலீய நியாயப் பிரவிருத்த தனது விசாரத்தாலும், சாஸ்திர ஆசாரிய உபதேச அனுக்கிர கீதத்தாலும் ஞானேதயக்கிரமம் நிரூபிக்கப் பெற்றது. இப்போது உபாசிக்கப்பெற்ற ஈசுவர அனுக்கிரக ஜன்னிய விசாரதாரனே ஞானேதயப் பிரகாரத்தை வர்ணிக்கும் பொருட்டுப் பிரகலாத உபாக்கியானத்தை யுபதேசிக்க வேண்டுமென் றிச்சித்த ஸ்ரீ வசிஷ்டபகவான் அதன் சிரவணத்தில் ஸ்ரீ இராகவரை ஒருமைப்படுத்தல்:—பின்னுமென்பது.

(ச-அ-கை.) முன்பு மாவலிகதையிற் புண்ணிய மிகுதியினால் விஷயஜன்னியமான சுகமும் ஏகதேசத்திற் சித்தோபசாந்தி நிமித்தமாமெனச் சொல்லப்பட்டது; இப்போது ஈசுவரானுக்கிரகத்தினாலே, ஒருகாலத்து ஆன்மதத்துவ போதமுண்டாகு மென்று பிரகலாதன் கதையாற் பிரதிபாதிக்கிறார்:—பின்னு மென்பது.

பின்னுமீதோர் கதைகேட்பாய் பிரகலாதப் பெயரோனுந்
தன்ன துணர்வான் மெய்ஞ்ஞான தத்துவத்தைச சாதித்தா
னன்ன துரைப்பா மிரணியனு மசுரவேந்த னிறந்தளவே
யின்னல்கூரு மவன்மைந்த னிதயநடுங்கி யிவையுணர்ந்தான்

(ப - ரை.) பினனும் = மீட்டும், ஈதோர்கதை = இஃதொருகதை, கேட்பாய் = கூறச்சிரவணஞ் செய்வாய், பிரகலாதப் பெயரோனும் = பிரகலாதன் எனப்பிரசித்தி பெற்ற தைத்தியேசுவரனும், தன்னதுணர்வால் = தனது விவேகத்தாற்றானே, மெய்ஞ்ஞான தத்துவத்தை = சச்சிதானந்தப் பிரஹ்மவத்துவை, சாதித்தான் = தனது சொரூபமாய்ச் சாகூாத்கரித்தான், அன்னது உரைப்பாம் = அதனைக கூறுவாம், இரணியனும் அசுரவேந்தன் = ஹிரண்யகசிபு என்னும் அசுரேசன், இறந்தளவே = மரித்தபோது, இன்னல் கூரும் அவன்மைந்தன் = துயரத்தையடைந்த அவ்வசுரேசனது குமாரன், இதயகடுங்கி = மனத்தின் மிகவும் அச்சமடைந்து; வருமாறு, இவையுணர்ந்தான் = இன்னவற்றைச் சிந்தித்தான்.

(ஸ்ரீ - வீர.) இனி இராகவ! விஞ்ஞானத்தினது மிக முக்கியமான அடைவில் மிகவும் மேலான இம்முறையை, சிரவணஞ் செய்வாய், யாதொருதடையு மில்லாத அடைவாமிதனில், தைத்தியாசுரனுகிய பிரகலாதன் ருஜுகவே சித்தஞ்ஞன். பிரகலாதனது தந்தையாகிய இரணியகசிபு என்பவன் மகாவீரபராக்கிரமஞ யிருந்து தேவதைகளைத் துன்புறுத்த ஸ்ரீ நரசிங்கரூப ஹரியான் மாண்டனன், பின்னர் அத்தானவேந்திரன் மடிந்த பாதாலகோடரத்தில், தூயரம்மிக நிறைந்த வடிவினனுகிய பிரகலாதன் மெளனியா யிருந்து சிந்திக்கத் தொடங்கினன். (1)

(ச.) திரிதச விருத்தரிகளின்பிரபுவாகிய இரணியகசிபு உயிர்விடுத்ததும், சோகசம் விக்ன மானசனுகிய பிரகலாதன் சிந்திக்கத் தொடங்கினன் என்பதாம்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) சிந்தித்த பிரகாரத்தைக் கூறல்:—எனது என்பது.

எனதுதாதை முதலசுர ரெனநூலுத்தோ ரெண்ணிறந்தோர்
கனகமேரு வணுவென்னக் காயநிலைமை பெரிதுடையோர்
வனசயோனி யதிகார மாற்றவல்லோர் தரவல்லோர்
புனைவண்டுளவோ னெனுங்கனலிற் பூவைவீபோற் போயொழிந்தார்.

(ப - ரை.) எனதுதாதை முதல் அசுரர் = என்னுடைய தந்தையே முதலானதைத் தியர், எனது குலத்தோர் எண்ணிறந்தோர் = என்னுடைய வம்மிசத்தினர் அளவற்றவர், கனகமேருவணு வென்னக் காயநிலைமை பெரிதுடையோர் = சுவர்ணச் சுமேருபர்வதமும் அற்பமென்று சொல்லும்படியாகத் தேகவியற்கையானது மகத்தென்றுடையவர் வனசயோனியதிகாரம் மாற்றவல்லோர் தரவல்லோர் = பிரஹ்மாவினது படைப்பின் அதிகாரத்தை இவ்டமறின் தடுக்கவல்லவர் இவ்டமுறின் கொடுக்கவல்லவர், புனைவண்டுளவோன் = அணியாநின்ற வளப்பம் பொருந்திய துளபமாலையன், எனும் கனவில் = என்னும் அக்கினியின் கண்ணே, பூவைவீபோற்போய் ஒழிந்தார் = பூவைப்பூ விழுவதுபோலப் போயெதிர்த்து மடிந்துபோனர்.

(ஸ்ரீ - வீர.) எனது இத்தந்தை முதலிய அசுரசத்தமர் யாவருமே, கலங்கிய கற்பாந்த வாதத்தானே குலாசலங்கள்போல அவ்வரியினலேயே கொல்லப்பெற்று வீழ்த்தப்பட்டனர். பர்வதங்களைப் பரஸ்பரம் எடுத்தெறியப் பெற்றபோர்க் கௌசல விசேஷர்களாய்ப் பீமர்களாகிய வெருபோர்கள் எனது பிதாமகர்களோடு கூடப் போர்புரிந்து அவ்வரியாற் சிக்ஷிக்கப் பெற்றார்கள். (2)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சிந்தித்தவகையை உபசங்காரித்து உபாயங்காணல்: — அன்ன ரென்பது.

அன்னரொக்கும் பேரசுர ரழியுமூழிப் பெருங்காற்றுற்
சின்னகங்கள் போன்மடிந்தார் செறிதிண் மணலிற்பலகோடி
யின்னளவனுக் கஞ்சாதா ரியாருமில்லை யெம்பகையா
மின்னர்நேமிப் படையோனை வெல்வானுபாய மீதொன்றே.

(ப - பை.) அன்னரொக்கும் பேரசுரர் = அத்தகையர்கட்குச் சமானமான மலை போன்ற பெரிய அசுரர்கள், அழியும் ஊழிப் பெருங்காற்றால் = யாவற்றையும் அழியும்படி செய்யும் கற்பாந்த பிரசண்ட மாருதத்தால், சின்னகங்கள் போல்மடிந்தார் = குலாசலங்கள் போலத் துவம்சமானர், அழிந்தவரை யெண்ணின், செறிதிண்மணலில் பலகோடி = நெருங்கியிருக்கும் சூக்குமமணலினும் அநந்தங்கோடியாம், இன்னள் = இக்காலத்தில், அவனுக்கு அஞ்சாதார் = அந்தராயணனுக்கு வெருவாதவர், யாருமில்லை = நம்மவரில் எவருமேகிடையாது, எம்பகையாம் = எமதுகுலப் பகைவனுன, மின்னா நேமிப்படை யோனை = பிரகாசம் பொருந்திய அக்கினிகாலும சக்கிராயுதத்தைத் திருக்கரத்திற்றரித்த ஸ்ரீ பகவானை, வெல்வானுபாயம் = ஜயிக்கும்படியான உபாயம், ஈதொன்றே = இஃதொன்றேயாம்.

(ஸ்ரீ - வீர.) அதிகோரர்களாய் விஸ்தாரமாய் நிகழ்ந்த பெருங்கூட்டங்களில் அவ்வவ் வசலங்கள்போல வினங்கியவருக்குள் அஞ்சாதார்யாவர்தாம், இப்போது அவ்வரிபயப்படுத்து கின்றன என்பது என்னேகதை ! என்னே பிரசங்கம் ! யாவருமே நடுங்காநின்றனர். அத் தகைய ஸ்ரீமந்நாராயணரின் வசிகரணத்தில் ஸ்புடமாக உள்ள உபாயம் இஃதொன்றேயாம். (3)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இதைவிட வுயர்ந்த உபாயம் வேறில்லை யெனவும் அதுவும் ஸ்ரீமந் நாராயணனைச் சரணுகதியடைதலே யாமெனவும் கூறல்:—எத்தன்மை யென்பது.

எத்தன்மையினு லெண்ணுகினு மிதில்வேறுயர்ந்த நெறியில்லை
தத்துந்திரைப்பாற் கடலுறைவோன் சரணமன்றிச் சரணில்லை
சித்தமிந்தக் கணந்தொடங்கிச் சேர்கநாரா யணன்சரணம்
பத்தனுகி நானவனுப்ப் பகிராதொழிக பாவனையே.

(ப - பை.) எத்தன்மையினால் = எவ்வகையினால், எண்ணுகினும் = சிந்தித்துப்பார்த்த போதினும், இதில் வேறுயர்ந்த நெறியில்லை = இதனினும் அயலாக மேலானமார்க்கம் கிடையாது, தத்தும் = ததும்பிவிளையாடும், திரை = தரங்கங்கள் வாய்ந்த = பாற்கடல் உறைவோன் = கூரிராப்தியின் கண்ணே ஆலிலையிற் பள்ளிகொண்டவன், சரணமன்றிச் சரணில்லை = திருவடிகளைத் தவிர்த்து வேறுசரணுகதியில்லை, சித்தம் இந்தக்கணந்தொடங் கிச்சேர்க = மனமானது இதுதொடி தொடங்கித் தியானிக்குக, நாராயணன் சரணம் = ஸ்ரீ பகவானது திருவடித்தாமரையை, பக்தனுகி = அனன்னிய பக்தியுடையவனுகி, நான் அவனுய் = நானேயவனுக, பகிராதொழிக பாவனையே = பேதியாதொழிக சிந்தனையே.

(ஸ்ரீ - வீர.) அதற்குவேறுக அவன்செய்த பீடையினீடுதொழில் ஒன்றும் இன்றெனத் துணிகின்றேன், இல்லாதது என்னேயென வுரைத்ததாம்:—எத்தன்மை யென்றது. ஜகத் தில் சர்வவஸ்து சுபாவத்தாலுஞ் சர்வபுத்திபேதத்தாலும், சர்வக்கிரியை உத்யோகத்தாலும் சரணர்த்திகட்கு அவனேசரணம், அயலொருகதி கிடையவே கிடையாது, ஆகலின் சரண கதவத்சலன் அத்தேவனே; அன்னியர் சரணம் ஆகா என் எனின், ஆகலின் லோகத்தி யாந்தரத்தில் அதிகமா யெவனுமிலனேயாவன், பிரளயஸ்திதி சர்க்கங்கட்கு ஹரிகாரணத்

தன்மையை அடையாநிற்பன். இங்ஙனந்துணிந்து சர்வபாவத்தானே அவன் சரணாகதியைச் சங்கற்பித்தல்:—சித்தமென்பதாதி, இங்கிமிடம்தொடங்கி அஜனுகிய ஸ்ரீமந்நாரயணனைச் சந்ததம் நன்கடையா நிற்பேன், தேசகாலவஸ்து பேதத்தானே யடைகின்றனையோ வெனின், இலையென்பான் பகிராதொழிக வென்றனன். சர்வதேசகால வஸ்துக்களிலும் யான் நாராயணமயனே யாவேன். (4)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நிரந்தர தற்பிரதிபத்திகாரணனுஸ்மரணஜப சாதனமாகிய சிரஸ்தித அம்மந்திரத்தைத் தொடர்ந்து ஸ்மரித்து நிரந்தரம் அச்செபத்தைச் சங்கற்பித்தல்:—நயந்தது.

நயந்ததெல்லா மெளிதருளு நாராயணய நமவென்னு
மூயர்ந்ததிரு மந்திரமென் றனுளத்தில் விண்ணின் மாருதம்போற்
பெயர்ந்துநீங்கா துள்ளுறைகப் பேணியரியைப் பூசிப்போ
ரியைந்தவரிதா மப்பூசை யியற்றிற் பலனுமலதில்லை.

(ப - வை.) நயந்தது எல்லாம் எளிதருளும் = வாஞ்சித்தவற்றையெல்லாம் சுலபமாக அநுக்கிரகஞ் செய்யும், நாராயணய நமவென்னும் = நாராயணனுக்கு நமஸ்காரம் என்று சொல்லப்பட்ட, உயர்ந்த திருமந்திரம் = மேன்மைமிக்க அழகியமந்திராராஜன், என்றன் உளத்தில் = அன்புநிறைந்த எனது மனதில், விண்ணில் மாருதம்போல் = ஆகாயத்தில் வாயுப்போல, பெயர்ந்து நீங்காது உள்ளுறைக = அசைந்தகலாமல் அந்தரமைக, பேணியரியைப் பூசிப்போர் = அன்போடு ஸ்ரீபகவானைப் பூசைசெய்வோர், இயைந்தவரிதாம் = பூச்சியனுகப் பொருந்திய ஸ்ரீ நாராயணனே தாமாகி, அப்பூசையியற்றில் = அந்தப் பூசையைச்சாதிக்கில், பலனும் = சுபலமாம், அலதில்லை = மாறுயினை பலனிலதாம்.

(ஸ்ரீ - வீர.) நமஸ்காரம் நாராயணனுக்கு என்னும் மந்திரம் சர்வார்த்த சாதகமாம், ஆகாயத்தினின்றும் காலேபோலும் எனது இருதயகோசத்தினின்றும், அஸ்திகலாதுறைக; பிரணவத்தோடு கூடிய இது பவித்திரமாய தேசாதிகளிலேயே நியமிதகாலத்தில், சுசியாக இருந்து ஜபிக்கத்தக்கது நிரந்தரம் தகாது எனப் பிரணவமின்றிக் கொண்டதாம்; இருதய கோசத்தினின்றும் எனக்கூறியது மானசஜப முக்கியத் தன்மையை விளக்குதற் பொருட்டாம். முன்னர் யாண்டும் நாராயணமயனே நான் என்று புகன்றதைத் தெளிவுபடுத்தல், ஹரியேயாதையும் = திசையும், ஹரியேவிண்ணும், ஹரியேமண்ணும். ஹரியேஜகத்தும், அமேயாத்மாவாகிய ஹரியேயானும், எனுமுறையில் விஷ்ணுமயமே யாஞயினேன்; விஷ்ணுமயம் = பாவனேயானே விஷ்ணுப்பிராயம், பெண்மயன் விடன் என்பதுபோலப் பாவனேயாலாக்கப் பெற்றதற்பாவ இலக்கணப் பிராசுரியத்தில் மயட்விகுதியாம் யாதின் பொருட்டு இங்ஙனங கற்பிக்கின்றனே யெனிற்கூறல்:—பேணியரியை யென்பதாதி, அவிஷ்ணுவாயிருந்து விஷ்ணுவைப் பூசித்துப் பூஜாபலத்தை யநுபவிப்பவ னுகமாட்டான்; "அவிண்டுவாய் விண்டுவை யருச்சியாதொழிக, அசிவமாய்ச் சிவத்தையருச்சியாதொழிக" என்னும் விதியையனுசரித தென்பதாம். அஷ்டாக்ஷர மந்திரத்தின் பெருமை ஸ்ரீ சுவாநுபவத்திருவாக்கு:—நடந்துவிடுங் காணிருவினைக, ணாராயணய நமவென்னி; னடந்துவிடுங் காண் பிறப்பிறப்பு, நாராயணய நமவென்னி; னடந்துவிடுங் காண்பகையுறவு, நாராயணய நமவென்னி; னடந்துவிடுங் காணகங்கரப்பேய், நாராயணய நமவென்னில். சுயஞ்சோதியாய சர்வான்மதேவரே நாராயணசப்த வாச்சியாவர், தற்சமீபத்தன்மையானே யாவற்றையும் தத்தங்காரியத்தே முயல்விப்பது நாமாம், மாயை அதற்குச் சம்பந்தியாதலின் மாயை

நாராவாம், சுக்குமவுலகம் மாயாகாரியமாகலின் நாரவாம், இவ்விரண்டிலும் அதுபிரதிபிம்ப ரூபமாய் நிகழுதலின் அம்மாயா விசிஷ்டப் பரமான்மாவும் அச்சுக்குமப் பிரபஞ்சவிசிஷ்ட இரணியகருப்பரும், நாராயணரெனப் பெறுவர்; பரமான்மரூப நான் உண்டாக்கிய நீர் நாராவாம், அது விராட்டுக் காதாரமாதலின் நாராயணரெனப்பெறுவர்; நதிநீர் ஓடாதாரமே போலப் பூமியேராதார நீர் பரமான்மாவி னின்றேயுண்டா மாதலின் நாராவெனப் பெறும், அதனையதுவே சூத்திரான்ம வடிவப் பிராணரூபத்தால் தாரணஞ் செய்தலின் நாராயண வெனப்பெறும்; தூலப்பிரபஞ்ச சரீரவிராட்டும், சூக்குமப் பிரபஞ்சசரீர இரணிய கருப்பரும் நரரெனப்பெறுவர், அவ்விருவரின்நிதியும் பரமான்மா விடத்தேயாகலின் அது நாராயண வெனப்பெறும்; பிரதிபிம்பஜீவர் நாராவர், அவர் நிரூபணம் பிம்பரூபப் பரமான் மாவானே நிகழுமாகலின் நாராயணவெனப் பெறும்; ஜீவர்களிடத்துள்ள காமக்குரோ தாதி தோடங்கள் அரவாம், அவற்றாலாந் துக்கம் ஆரவாம், அதற்காதிரய அஞ்ஞானதி ஆராயணமாம், அது சுயஞ்சோதியானந்த ஆன்மாவில் மூக்காலத்து மின்றுமாகலின் நாரா யணவெனப் பெறும்; அவித்தையாதி ஐந்து கிலேசங்கள், அறம்பாவம் இன்பத்துன்பம், அவற்றின்வாசனை என்பனயாவும் சம்சாரசக்கிரத்தின் அராக்களாம், இவற்றிற்கு மாயை பரிணாமி யுபாதானமா மாதலின் இது ஆராயணமாம், இதனினும் கூடஸ்தர்வேறுமாதலின் நாராயணரெனப் பெறுவர்; கற்பிததாதாத்மிய அத்தியாசரூப சம்பந்தத்தால் மாயையாகிய காரியின்ஸ்திதி பரமான்மாவிலேயே யாமாகலின் நாராயண வெனப்பெறும், பரமேசுவரூப நரசம்பந்தி இலக்குமி காரியெனப்படுவள், அவ்வம்மை சகல தேகதாரிகட்கும் பிரியையும், அநேகங்கலையோடு கூடியவளும், அநேகம்ரூப முடையவளும், அத்தியந்தம் மனோரமையும், புண்ணியவான்கட்குச் சுகத்தம் சுகங்கொடுப்பவளும், பாவிகட்குத் தன்னேயடைவியாமலும் நாசத்தானும் எப்போதும் துக்கத்தை யடைவிப்பவளும் ஆவள், அந்காரிபரமான்ம புருட னிடத்தே நிச்சலமாய் நிலைபெறுவ னாதலின், நாராயணராவர். ஆனந்தவடிவ திருவுந்தி வாய ஆன்மாவிற்கு நானுவகையாய பதார்த்தங்களைக் காண்பிக்கும் சர்வஜீவர்களின் புத்தி காரியம், அதனை யாள்மாவே யொளிர்விக்கு மாதலின் நாராயணராம்; பரமான்மாவினும் வேறுயொரு சிறிதும் இன்றுமாதலின் நாராயணராம்.

(ச.) அரிதாம் = விஷ்ணுதானும்; அப்பூசையியற்றின் = அவ்விஷ்ணுவைப் பூஜிக்கின், பயனும் = பூஜாபல முடையனும், அலது = அவிஷ்ணுவாய் விஷ்ணுவைப் பூஜிப்பினும், இல்லை = பூஜாபலமுடையனல்ல னென்றதாயிற்று. (5)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீ மகாவிஷ்ணுவின் வடிவமே தானுகப்பாவித்துத் தியானித் துப் பின் பாடிய பூசைக் கொருப்படல்:—அத்தனென்பது.

அத்தனெறியா லரியுருவா னகியரியைப் பூசிப்ப
னிந்தவுடன்மா தவன்வடிவா மிதனில்வாயு வடிவாகிப்
பந்தமுறுவோன் பராபரனு மிவனேபிராண பவனத்தின்
முந்துமோட்டத் தாலிரண்டா முருத்தனுகிப் புறத்துறைவோன்

(ப - ரை.) அத்தனெறியா லரியுருவானகி = கூறியமுறைபால் ஸ்ரீ மகாவிஷ்ணுவடிவ மேயானகி, அரியைப்பூசிப்பன் = ஸ்ரீ முருத்தனைப் பூஜிப்பேன், இந்த உடல் = இச்சரீரம், மாதவன் வடிவாம் = ஸ்ரீராயகன் ஆகுநியாம். இதனில் வாயுவடிவாகி = இதன்கண் வாயுவினுருவமாகி, பந்தமுறுவோன் = கட்டுப்படுவோன், பராபரனும் = பராவரனுவன், இவனே பிராணபவனத்தின் = இம்மகா விஷ்ணுவே பிராணவாயுவின், முந்தும் தூட்டத்

தால் = பிரவாகத்தால். இரண்டாம் முருந்தன் ஆகிப் புறத்துறைவான் = வேறொருபகிர் விஷ்ணுவாகி வெளியிலிருப்பன்.

(ஸ்ரீ - வீர.) ஸ்ரீ மகாவிஷ்ணுவாகி யவனைப் பூஜிப்பேன், இப்பெருமான் யானேயா கின்றேன், ஹரியானவனே பிரகலாதப் பெயரிய பெரியோன், " இவனினு மயலாய்க்காண் போனில்லை " என்பதாதி சுருதியிருத்தலின். பிரத்தியக்கான என்னினும் அன்னியம் ஹரி பிருத்தக்காகவில்லை= ஆத்மாந்தர பூதமாகவில்லை யென்பதாம், எங்குமேயான் வியாபக மாக விருக்கின்றேன் என்பதாக உள்ளே திட நிச்சயமுடையவனுகி நன்கு சிந்தித்துப் பிரக லாதன் றன்றனுவைப் பாவனேயானே ஸ்ரீமந்நாராயண வடிவமாக ஆக்கி, மீண்டுமரியைப் பூசிப்பான் இனிதெண்ணுவா னுயினன், என்னல் இனிதுகற்பிக்கப்பட்ட திரிவிதவைவத் ணவ இவ்வுபனிஷதும் அன்னியமாகப்பரா = சமவஷ்டிரூப, அவரா = வியவஷ்டி தேவதைவடிவ மாகத்தானுதல், ஆகாதொழிக, மற்றேரு, இவ்வைனதுவடிவ மகாவிஷ்ணுவே இருதயத்தி னின்றும் பிராணப் பிரவாகததானே புட்பாஞ்சலி பாவனேயால் வெளியே ஆவாகனஞ் செய் யப்பெற்றுப் பூஜாகாலபரியந்தம் வேறுபோலக் கற்பிக்கப்பெறும். அஃதெத்தகைய மகா விஷ்ணுவெனின், வைநதேய சமாரூடமாம் அம்மூர்த்தம், விளங்காகின்ற கிரியைஞான இச்சை அதுக்கிரகமெனப் பெயரிய நான்கு சக்திகளுடன் கூடியது, சங்கு சக்ர கதாபாணி, சியாமளாங்கம் சதுர்ப்புஜ முடையது. சந்திர அர்க்கநயன முடையது, ஸ்ரீமானுயது, காந்தி பொருந்திய நந்தகமென்னும் கட்கத்தோடு கூடியது. தனதுஜன ஆநந்தந்தருவது, பத்ம பாணி, விசாலாக்ஷம் சாரங்கதனுவுடைய மகாப்பிரகாச மயமாயது.

(ச.) மாதவன் வடிவமும் என்று சிந்தித்து அப்பிரகலாதன் பூசைநிமித்தம் மீண்டுஞ்சிந் தித்தல், பரர் = பிரமாதிகள், அபரர் = அதமர்கள் எவனினின்றேர்; அவன் பராபரனும், இவனே = இவ்விஷ்ணுவே, இதனில் = நாராயணமயமான இவ்வடிவத்தி னின்றும், புறத்து, பிராணபவனதினின், முநது மோட்டத்தால், வாயுவடிவாகி, இரண்டா முருக்தனுகி யுறைவேன் என்பதந்துவயம். (6)

(ஸ்ரீ-வீர - அ-கை.) பூசைசெய்ய உததேசிதத பிரகலாதன் அகத்தே சகலமுங் கற்பித் துப் பூசைசெய்ததையும் புறத்தே பூசைசெயததையும் புகலல்:—அவ்வாறு, மணி.

அவ்வாறுன விவ்வரியை யகிலவுபசா ரங்களையுந்
தவ்வாமனத்தா லுளதாக்கிச் சதாபூசனையே சமைப்பனெனு
விவ்வாறெண்ணிப் பாரமெலா மெடுத்துச் சுமக்குமனத்தாலே
செவ்வான் மணிப்பாத்திரதூப தீபங்கந்த மெலாஞ்செறித்து.

மணிப்பூண்களும் பீதாம்பரமும் வாடாமலரு நல்லமுதுங்
கணிப்பிலாத பொருளெல்லாங் கருத்தாற்பாவித் தருச்சித்துத்
தணிப்பிலாத வன்பான்முன் றந்தப்புறத்தின் பொருட்டிரளாற்
பணிப்பாயவனை யுட்போலப் பரிந்துபுறத்தும் பூசித்தான்.

(ப - ரை.) அவ்வாறுன இவ்வரியை=மொழிந்தபிரகாரம் எனது வடிவமான இவ்விஷ் ணுவை, அகில உபசாரங்களையும் = சகல உபசாரங்களையும், தவ்வாமனத்தால் = ஏகாக் கிரசித்தத்தால், உளதாக்கி=இருப்பனவாகப் பாவித்து, சதா = எப்போதும், பூசனையே= பூசையே, சமைப்பன் எனு = செய்வேனென்று, இவ்வாறெண்ணி = இந்தப் பிரகாரஞ் சிந்தித்து, பாரமெலாம் எடுத்துச் சுமக்கும் மனத்தாலே = சகலலோக பாரங்களையும்

அநாயாசமாகத் தூக்கிச் சுமதாங்கிபோலே சுமந்துகொண்டாடுஞ் சித்தத்திஞலே,செவ்வான் மணிப்பாத்திரம் = செக்கர்வானம் போன்ற இரத்தின பாத்திரம், தூபதீபம் கந்தம் எலாம் செறித்து = தூபம்தீபம் சந்தனம் முதலிய யாவற்றையும் அர்ப்பித்து.

மணிப்பூண்களும் = நாஞவித இரத்தின பூஷணங்களும், பீதாம்பரமும் = சுவர்ண ஆடையும், வாடாமலரும் = அன்றலர்ந்த புஷ்பமும், நல்லமுதும் =பரமான்னமும், கணிப் பில்லாதபொருள் எல்லாம் = என்பனமுதலிய எண்ணிறந்த வஸ்துக்கள் யாவற்றையும், கருத்தால் பாவித்து = மனத்திஞலே பாவனைசெய்து, அருச்சித்து = அருச்சனைசெய்து, தணிப்பிலாத அன்பால் = அளவுகடந்து தீராதபக்தியிஞலே, முன்றாந்து = எதிரிற்சமர்ப் பித்து, அப்புறத்தின் பொருள் திரளால = அந்தப் பாகியத்தின்வஸ்து சமூதாயங்களால், பணிப்பாயவனை = சேஷசயனத் தெழுந்தருளுந் திருநெடுமாலை, உட்போல = உள்ளே போல, பரிந்து = அன்புமிக்கு, புறத்தும் பூசித்தான் =பாகியத்திலும் பூசைசெய்தான்.

(ஸ்ரீ -வீர.) சர்வசம்பாரமிய மாயமஞமய சாமக்கிரியைகளாலும் அத்தன்மயமாய மகாவிஷ்ணுவை, சங்கர்ஷண பிரத்தியும் நாதிவியூகங்கள் பார்ஷதர்கள் முதலிய பரிவாரங்க ளோடுகூட விரைவிற் பூசைசெய்வேன்; என்பதாகப் பிரகலாதன் சிந்தித்துச் சம்பாரபர பாரியாகிய மனத்தானே, ஸ்ரீ மாதவனைக் கமலாதவனைப் பூசைசெய்தான், மா = கமலா= இலக்குமி, தவன் = நாயகன், இரத்தினக் குழுத்தழுவிய பாத்திரங்களின் படலவபிஷே சனங்களாலும், நாஞவிபவபூஷண அலங்காரங்களாலும், சந்தனாதி விலேபனங்களாலும், தூபதீப விசித்திரங்களாலும், அநேகவித புஷ்பார்ச்சனைகளாலும் மாலைகளாலும், நைவேத் யதாம்பூல தர்ப்பண சித்தரசாமர நீராஜன புஷ்பாஞ்சலி பிரதக்ஷிண நமஸ்காராதிகளாலும், சௌந்தரிய யுக்தசம்மான யுபசாரங்களாலும், சுயம் ஆத்மார்ப்பணங்களாலும், ஜகத்தின் கண்ணே எவ்வெவ் விபவங்கள் பிரசித்தங்கள் ஆமோ அவ்வவற்றால் உபகரணீ கிருதபவித் திரமான பரமபக்தியிஞனே ஜகத்பதியாய் சுவசுவாமியாய யிலங்கும் ஸ்ரீமந் நாராயணனைப் பிரகலாதன் அந்தப்புரத்தில் மனத்தாற் பூஜிப்பானுயினன்; மாநசபூஜாகதாம் அவ்வந்தப் புரத்தின் கண்ணேயிருக்கும் தேவகிருகததில், பாகியார்த்தங்கள் கொண்டு பரிபூரணமாகிய பூசையால் தானவேசன் ஸ்ரீஜனர்த்தனைப் பூசித்தான்; மாநசபூசையிற் புகன்ற முறை யானே, பகிர்திரவ்யங்களாற் பரமேசுரனை மீண்டும் மீண்டும், பூசித்துத் தானவேந்திரன் சந்துஷ்டிமானுயினன்.

(ச.) அவ்வாறுன இவ்வரியை = வாயுரூபமாக இருக்கும் ஜனர்த்தனன் என்னும் விஷ்ணுவை, பாரமெலாம் = பூஜோபகரணங்கள் அனைத்தும், மணிப்பாத்திரம் = இரத்தி ஞர்க்கியபாத்திரங்கள். மூலம், சம்பா:=பூஜோபகரணங்கள், பூஜயா=பூஜாவிதியால் (7-8)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தங்கன் அரசன் பூசையைக்கண்ட அசுரரும் பூசாதற்பராதல்:— ஆயவென்பது.

ஆயவாறக் கணந்தொடங்கி யகண்டவடிவப் பரம்பொருளா
மாயனடிக ளருச்சித்தா னவனைப்போல வாளசுரர்
தீயகுணம்விட் டெல்லோருந் திருமாற்கடிமைத் திறம்பூண்டார்
மேயமன்னன் குணமன்றே விரிந்தவுயிரின் குணந்தானே.

(ப - ரை.) ஆயவாறு = கூறியபிரகாரம், அக்கணம் தொடங்கி = அப்போ தாரம் பித்தே, அகண்டவடிவப் பரம்பொருளாம் மாயனடிகள்=கண்டிதமில்லாத அறிவுருவமான

பரமேசுரமாயவன் நிருவடிகளே, அருச்சித்தான் = அருச்சனைசெய்து பூசித்தான், அவனைப் போல வாளசுரர் = அத்தப் பிரகலாதனைப்போல அவன் பிரசைகளாகிய வாளாயுதந்தரித்த அசுரர், தீயகுணம் விட்டு = கொடிய குணங்களே விட்டொழித்து, எல்லோரும் = யாவருமே, திருமாற்கடிமைத் திறம்பூண்டார் = ஸ்ரீமகாவிஷ்ணுவிற்கு அன்பர்களாகிய வைஷ்ணவராயினர், மேயமன்னன் குணமன்றே = ஒருதேயத்தை யாளப்பொருந்திய அரசனது ஆசாரமல்லவோ, விரிந்த உயிரின் குணந்தானே = அததேயத்திற் பரந்த பிரசைகளின் ஆசாரமாக இலங்காநிற்பது.

(ஸ்ரீ - வீர.) அது முதலாகத்தானே பிரகலாதன் பரமேசுவரனே முன்மொழிந்த வகையானே பூரணமாய பக்தியினனே தினந்தினம் பூஜித்துக்கொண்டு வந்தனன், பின்னர் அந்தப்புரத்திலுள்ள தைத்தியர்கள் எல்லாம் அதுமுதலாகவே வைணவராயினர். யாவருமே மங்களமாய்ப் பவித்திரராயினர், இராஜாவன்றே வாசாரகாரணம்; " தன்மியென்றிடின் மன்னவன் றன்மியராவர், கன்மியென்றிடிற் கன்மியர் துலியனேற்கடுப்பர், தன்மமென்பதைத் தழுவுவர் தழுவினரிறைவன், றன்மையெங்ஙனமங்ங மவனணைந்தவரே " என்னும் நியாயமிருத்தலின். (9)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அமரர் இந்திரன் அசுரர் செய்கையைக் கேட்டயர்தல்:—திதியென்பது.

திதிகாதலரு மவர்க்கரசுஞ் செங்கண் மான்மேற் சினந்தீர்ந்து
புதிதாகிய பத்தியிலடிமை புக்காரென்று புரந்தரனுந்
துதிவானவருங் கேட்டலுமே துணுக்கமோடு வியப்பெய்தி
யதிபாதகர்க ளெம்பெருமாற் கன்பாகியதென் னெனவயிர்த்தார்.

(ப - ரை.) திதிகாதலரும் அவர்க்கரசும் = தைத்தியரும் அவருடைய அரசனும், செங்கண்மால் மேற்சினந்தீர்ந்து = செந்தாமரை யிதழ்போலும் திருநேத்திரங்களையுடைய ஸ்ரீமந்நாராயணர் மீது குரோதம் நீங்கி, புதிதாகியபத்தியில் = நவீனமாகிய பக்தியில், அடிமைபுக்கார் = வைஷ்ணவர் ஆயினர், என்று புரந்தரனும் துதிவானவரும் = என்பதாக தேவேந்திரனும் அவனைப்போற்றுந் தேவரும், கேட்டலுமே = செவிகொள்ளலுமே, துணுக்கமோடு வியப்பெய்தி = பயத்தோடும் ஆச்சரியத்தை யடைந்து, அதிபாதகர்கள் = மகாபாதகர்களாகிய அசுரர்கள், எம்பெருமாற்கு = எமது பெருமானுக்கு, அன்பாகியது = பக்திபூண்டது, என்னென் அயிர்த்தார் = இஃதென்னே யென்று மயங்கினர்.

(ஸ்ரீ - வீர.) ஹே சத்துருஜயசீல இராகவ ! அதன்பின், ககனத்திற் றேவலோகத்திலிவ்வார்த்தையானது சாரீரவாயிலாக எட்டியது, அவ்வார்த்தை: தைத்தியர் ஸ்ரீமகாவிஷ்ணுவின் றுவேடத்தை அடியோடும் விடுத்துப் பக்தர்களாக இருக்கின்றனர் என்பதாம். மருத்கணசஹித சக்கிராதி தேவர் விஸ்மயத்தை யடைந்தனர், தைத்தியர்களானே வைஷ்ணவீபக்தி கவரப்பெற்றுளதே இஃதென்ன காரணத்தானே கவரப்பெற்றதோ ! (10)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தேவேந்திராதிதேவர் ஸ்ரீ பகவானைச் சேவித்து அசுரரது செய்கையைப்பற்றி விளைதல்:—திரு, கொடிய என்பன.

திருப்பாற்கடலிற் கண்வளருந் திருமான்முன்பு சென்றணுகி
விருப்பாற்றுதித்திந் திரன்முதலோர் மேகமேனி யனைநோக்கி
நெருப்பாந்தன்மை யசுரரெலா நினைப்பாவித்து நின்வடிவா
யிருப்பாரானுன் மாயையென வெண்ணினனே மீதென்னென்னை.

ஞான வாசிட்டம்

கொடிய கொலைசெய் வல்லசுரர் குணங்களெங்கே பெறவரிய
முடிவதான பிறப்பெங்கே முருந்தன்பத்தீப் பேறெங்கே
கடியதீயோர் நற்குணங்கள் கலந்தாரென்று கதையல்லா
னெடியமாலே நின்பத்தி நீசர்க்கெல்லா நேருமதோ.

(ப - ரை.) திருப்பாற்கடலில் கண்வளரும் = ஸ்ரீகூர்மாப்தியின் கண்ணே யோகநித் திரைசெய்யும், திருமால் முன்புசென்றணுகி = ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திருச்சந்நிதியைச் சென்றடைந்து, விருப்பாற்றுதித்து = அன்போடும் ஸ்தோத்திரம் செய்து, இந்திரன் முத லோர் = தேவேந்திரன் முதலிய தேவர்கள், மேகமேனியனை நோக்கி = கார்மேனியனா கிய ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி, நெருப்பாந்தன்மை யசுரரெலாம் = அக்கினிக்குச் சமான மாய கொடூரசுபாவத்தோடு கூடிய தைத்தியர்க ளெல்லாரும், நினைப்பாவித்து நின்வடி வாய் = தேவரீரைத் தியானித்து தேவரீருடைய திவ்யமங்களமாய், இருப்பாராஞல்=கவ லையின்றி யிருப்பார்களாயின், மாயையென = மாயாவிசித்திர மென்று, எண்ணினேனும் = நினைந்தோம், ரதென் எண்ணு = இஃதென்னே ஆச்சரியம் என்றனர்.

கொடிய கொலைசெய்வல் லசுரர்குணங்கள் எங்கே = கொடூரமான கொலையாதியதி பாதகங்கள் செய்யும் கொடிய அசுரரது துஷ்டகுணங்கள் எவ்விடத்தன ! பெறவரிய = பெறுதற்குத் துர்லபமான, முடிவதான பிறப்பெங்கே = இனிப்பிறவா முடிவானபிறப் பெவ்விடத்தது ! முருந்தன் பத்திப்பே றெங்கே = ஸ்ரீமந் நாராயணனது பக்திப்பிரயோ ஜனம் எவ்விடத்தது !, கடியதீயோர்=கொடுமைவாய்ந்த பாதகர், நற்குணங்கள் = நல்ல குணங்களை, கலந்தார் என்று கதையல்லால் = அடைந்தார் என்றுரைப்பது கதையேயல் லாமல் உண்மையல்ல, என்னே! நெடியமாலே=சர்வவியாபகமாகிய ஸ்ரீபகவந் ! நின்பத்தி= தேவரீரது அன்பு, நீசர்க்கெல்லாம் நேருமதோ = தாழ்ந்தோர்க ளெல்லாம் கிடைக்குங் கொல்லோ !

(ஸ்ரீ - வீர.) விஸ்மய ஆகுலர்களாகிய விபுதர்கள் அமராவதி நகரத்தைவிடுத்து, ஸ்ரீ கூர்மாப்தியின் கண்ணே ஆதிசேஷசயனத்தே யோகநித்திரைசெய்தருளும் போரில்வன்மை மிக்க ஸ்ரீ ஹரியைநோக்கிச் சென்றார்கள்; சென்று தரிசித்த அத்தேவதைகள் மிகவுந்தோத் தரித்து விண்ணப்பித்ததாவது:—ஹே பகவந் ! இஃதென்னே ஆச்சரியம் ! தேவரீரைச் சுற்றதமுமே துவேஷித்துக் கொண்டிருக்கும் தைத்தியரும் கூடத்தேவரீர் மயமாகப்பத்தி யினுல் ஆனந்தர்கள் என்றுல் இதனே மாயையென்றே எண்ணுகின்றோம்; அந்தோ அத்தியந் தம் கெட்ட ஒழுக்கமுடைய தானவர், துவேஷத்தினுலே தேவரீருடைய பக்தர்களாகிய தேவர்க ளினிதுவா முழம்பர்வதங்களையும் பட்டணங்களையும் துவம்சம்செய்வதே கடனுக உடையவர் எங்கே ! பச்சாத்தாபம் தீண்டாவதான மகாஜன்மத்தி லடையத்தக்க ஜனர்த்தன னிடத்தில் அன்பெங்கே ! ஹே பகவன் ! பாமரர் குணவான்கள் ஆயினர்கள் என்னுமிது கதையேயாம். உத்பாத சம்பந்தியாய அகாலபுஷ்ப மாலேபோலும் அசுரத்தின் பொருட்டும் உபத்திரவத்தின் பொருட்டுமாம், சுகத்தின் பொருட்டும் என்றும் பாடமுளது; கசியபவம் சத்தன்மையானே உங்களுக் கொப்பானவர்களே அவர்கள் எனின், குணவைஷம்மிய மிருத் தலின் அல்லது ஹீனமெனல்:—நெடியமாலே யென்பதாதி. எங்கேயதமர், பிராகிருதாரம்பர் எப்போதும் ஹீனகருமரதியுடையர், துச்சர்தானவர் ஹீனஜாதியாகிய தாமசயோனியர்; எங்கே வைஷ்ணபக்தி. ரண்டு கமலினீ, தப்தமாய ஊஷரப்பூமியில் ஆர்ந்ததென்னுங் கதை யெங்ஙனங் கேட்பவர்கட்குச் சுகத்தையுண்டாக்க மாட்டாதோ, அங்ஙனமே ஹே பரமே

சுர ! திதியின் சந்ததிகளும் ஸ்ரீ மாதவனிடத்தில் பக்தியுடையவர்கள் ஆயினர்கள் என்னும் அதமாசிரய விஷயகதையும் எங்களுக்குச் சுகமாக விருக்கவில்லை.

(ச.) கலவாரென்று கூறுவது கதையாம், கலவாரென்ற பாடத்தை யொப்பியதாமிது, அல்லால் = அன்றெனில். மூலம், வராக:=சோகிய: = சோகிக்கத்தக்கவர். (11-12)

(ஸ்ரீ-வீர - அ-கை.) அநுசிதக்காட்சியானே மிகவும் கோபமுடையவராய், அதனனே முன்மொழிந்த முறையே பெருங்குரலால் வினவுபவராய், நின்றதேவர்களை நோக்கி ஸ்ரீமாதவன் அம்புதம் சிதிலிருந்தத்தைப்போல இத்திருவாக்கியத்தைக் கூறத்தொடங்கினன். என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் வென்றிக் குரிசிலாகிய ஸ்ரீ இராகவருக்கு அனுக்கிரகித்தல்:— என்றவென்பது.

என்றவிண்ணோர்க் கெம்பெருமா னிமையோரஞ்சா தொழிமின்கள்
வென்றியிலும் பிரகலாதன் மீண்டும்பிறவாப் பிறப்புற்றான்
கன்றுதுயர்போய் மெய்ஞ்ஞானக் கண்ணுல்வீடு காண்குவனு
லொன்றுமிதனிற் கைதவமென் றுணரற்பால திலதாகும்.

(ப - ரை.) என்றவிண்ணோர்க்கு = கூறியவண்ணம் தெரிவித்துக் கொண்ட தேவர்கட்கு, எம்பெருமான் = எமது பெருமானுகிய ஸ்ரீ பகவான், இமையோர் = ஹே தேவதைகளே ! அஞ்சாதொழி மின்கள் = பயப்படாதீர்கள், வென்றியிலும் பிரகலாதன் = வெற்றியையே மேற்கொண்ட பிரகலாதாழ்வான், மீண்டும் பிறவாப்பிறப்புற்றான் =இனிப் பிறவாத அந்திய ஜன்மத்தை யடைந்தனன், கன்றுதுயர்போய் = துன்புறுத்தா நின்றதுக் கங்கணீங்கி, மெய்ஞ்ஞானக் கண்ணுல் =தத்துவஞான திருஷ்டியினுல், வீடுகாண்குவன்= மோக்ஷத்தைத் தரிசிப்பன். ஒன்றும் இதனில் = இதன்கண்ணியா தொன்றும், கைதவம்= பொய், என்றுணரற்பாலது இலதாகும்=என அறியத்தக்கது இல்லையாம், ஆல், அசைநிலை.

(ஸ்ரீ - வீர.) ஹே விபுதர்களே ! பிரகலாதன் பக்திமான் என்று நீங்கள் வருத்தப்படாதீர்கள், அவனுக்கிந்தப் பிறப்பானது முடிவானதாகும்; தாமேபலமுடையவர் தைத்தியர், தேவரீரது பக்தியுடனும் கூடிவிடின், மிகுந்த வலுவுடையவராய் விடுவர், ஆகவே எங்ஙனம் யாங்கள் வருத்தப்படாம லிருக்கக்கூடும் என அருளல்: – வீடுகாண்குவன் என்பது ஹே பகைவரை வென்றிகொள்ளும் சீலரே ! மோக்ஷயோக்கியன் அவனென்றறிவீர். மோக்ஷயோக்கியன் ஆனபடியினுலே உங்களுடைய துச்சமான இராஜ்ஜிய சுகத்தையவன் வாஞ்சிக்கமாட்டான், என்பதாம்.

(ச.) ஸ்ரீபகவான் சொல்லுகின்றார், வென்றியிலும் = பக்திமானனை. (13)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தேவர்களாற் கூறப்பெற்ற அவனது பகவத்பக்தி யுசிதமின்மைத் தோடத்தைப் பரிகரித்தருளிப் போமெனப்போய்ப் புரையற்ற தமராதல்: – நல்லோரென்பது.

நல்லோர்தீமை யுறிற்கேடாந் தீயோர்நன்மை யுறினன்று
மெல்லோரும்போ மெனவருளி யெம்மானுங்கே மறைதலுமே
கல்லோலஞ்சூழ் கடனின்றுங் ககனலயஞ்சேர்ந் தமரரெல்லாம்
புல்லாரென்ற வசுரருடன் புரையிலாத தமராஞர்

(ப - ரை.) நல்லோர் தீமையுறிற் கேடாம் = குணவான்கள் குணமின்றியவர்களாயின் கெடுதலாம், தீயோர் நன்மையுறின் நன்றும் = குணமில்லாதவர்கள் குணமுடையவர்களா

யின் நலமேயாம். எல்லோரும் போமெனவருளி = யாவர்களும் உங்களிருக்கை சேருங்கள் எனறு திருவாய் மலர்ந்தருளி, எம்மான் ஆங்கேமறைதலுமே = எமது பெருமான் அவ்வி டத்திலேயே மறைந்தருளலுமே, அமரர் எலாம் = தேவதைக ளியாவருமே, கல்லோலஞ் சூழ் = திரைகள் சூழப்பெற்ற, கடல்நின்றும் = திருப்பாற்கடனின்றும், ககனலயஞ் சேர்ந்து = விண்ணிலுள்ள தங்கள் நகரமடைந்து, புல்லார் என்ற அசுரருடன் = பகைவர் என்று கொண்டிருந்த அசுரர்களுடன் புரையிலாததமர் ஆனர்=வஞ்சகமில்லாத நேயர்கள் ஆனர்கள்.

(ஸ்ரீ - வீர.) குணவான் நிர்க்குணனுவனுயின் அநர்த்தமுடிவு பேற்றையும் புருடார்த்த விகாதகத்தையும் முறையே யடைந்தவனுயினன் என்றறிமின் பெரியோரும் பேசுவர், நிர்க் குணன் குணவானுயின் சித்திதருங் கிரமமெனக் கினைத்துவர், எண்டு இப்பிரகலாத சம்பந் தியாய எமது பக்தியாதிகுணிதம் உங்கட்கு அசுகப்பொருட் டாகாதாம், ஆகலின் ஹேஅம ரோத்தமர்களே ! உங்களுடைய விசித்திரமான புவனங்கட்குப் போய்ச் சேருங்கள் என்று விபுதர்களே நோக்கிக் கூறியருளிய ஸ்ரீபகவான் ஆண்டு கூறோதார்ணவவீசிகளில், தடத் திற்றோன்றிய தமாலநீலப் பூங்கொத்தானது உன்னதமான தரவ்கங்களில் தடையான் மறை தலை யடைவதேபோலும் மறைந்தருளினர். சுரக்கூட்டமும் நன்றாக ஸ்ரீ ஹரியைப் பூசித்து விட்டு அம்பரஞ்சென்றது, பூர்வம் அம்பரத்தினின்றும் அர்ணவத்தில் வீழ்ந்தகுணஜாலமா னது மந்தாரமகற்றலானேஅர்ணவத்தினின்றும் மீண்டும் அம்பரமடைதலேபோலுமிருந்தது. பிரகலாதன் பொருட்டுக் கீர்வாணர் அது முதலாகச் சௌகிருதத்தை யடைந்தனர். எப் புருடனிடத்தாதல் விடயத்தினிடத்தாதல், பெரியோர் = தற்பூச்சியர் = பிதுர் ஆசிரியர் ஆதியர் வெம்புதலடையாரோ, அவன்பாலாதல் அதன்பாலாதல் பாலர்களுடைய மனமும் விசுவாசமுடைய தென்பது வெளியாம்.

(ச.) மூலம் பிராஹ்லாதி = பிரகலாத சம்பந்தியான குணிதா =குணமுடைமையின், உற்பவா = மேன்மையான பிரபாவமானது அசுகப் பொருட்டாகாதாம். தாபிச்சகுச்சம் போலும் = தமாலபுஷ்பஸ்தபகம்போலும். ஸ்தபகம் = மஞ்சரி.

(ஸ்ரீ-வீர - அ-கை.) பிரகலாதன் பூசையினது பெருமையால் இன்ன இன்னதுண்டா யிற்றெனல்:—என்பு சாதனம் என்பன.

என்புருகுமிரும பத்தியினு லிமைப்போ தொழியாதெப்போது
மன்புகூர நெடுமாலே யசுரர்வேந்த னருச்சித்தான்
வன்புபயி லுமுக்கரணம் வழுவாப்பூசா பலத்தாலே
முன்புவிவேக மானந்தமுதிர்வும் விராகமூளத் தெழுந்த.

சாதனங்கண் முதற்குணங்கள் சாலவுண்டா யிவனெஞ்சங்
காதலான போகத்திற் கவலும்பற்றுக் கழன்றனவாற்
சீதமுத்து முத்துடனே சேர்ந்தாற் பற்றுச் சேர்வுறுமோ
வாதலாலே போகத்தி லழுந்தாதுள்ள மாறினதே.

(ப - ரை.) என்புருகுமிரும் பத்தியினுல் = என்புந் தண்ணென்றும் அன்பதனுல், இமைப்போது ஒழியாது = கணகாலமும் இடைவிடாது, எப்போதும் = அனவரதமும், அன்புகூர = மிகுதியாய பக்தியுடனே, நெடுமாலே = ஸ்ரீமந்நாராயணனை, அசுரர்வேந் தன் = தானவேந்திரன், அருச்சித்தான் =பூசித்தான், வன்புபயிலும் முக்காரணம் வழுவாப் பூசாபலத்தாலே = இடர்ப்படுத்தும் மூன்று காரணமும் மாறுபடாத பூசையின் வலுவாலே, முன்பு விவேகம் = பிரதமம் விவேகமும், ஆனந்த முதிர்வும் = இன்பமுதிர்ச்சியும், விரா கம் = வைராக்கியமும், மூளேத்தெழுந்த = உற்பத்தியாகிக் கிளம்பின.

சாதனங்கள் முதற்குணங்கள் = நித்தியாநித்திய வத்து விவேகாதியே முதலவாய்ச் சாந்தியாதி குணங்களியாவும், சாலவுண்டாய் = மிகவும் உண்டாகி, இவன்நெஞ்சம்=பிரகலாதனது மனமானது, காதலான போகத்தில் = ஆசைப்படத்தக்க போகங்களில், கவலும் பற்றுக்கழன்றன = கவலைப்படும் ஆசக்தியானது அவிழ்ந்தன, சீதமுத்து முத்துடனேசேர்ந்தால் = குளிர்ச்சிபொருந்திய முத்தானது முத்திலேடு கலந்தால், பற்றுச் சேர்வுறுமோ= பற்றுதல் உண்டாமோ, ஆதலாலே = ஆகையினாலே, போகத்தில் அழுந்தாது உள்ளம் ஆறினதே = சப்தாதி போகங்களில் இரமியாது மனமானது சாந்தியையே யடைந்தது. ஆல் அசை, ஏதேற்றம்.

(ஸ்ரீ - வீர.) மிகுதியாய அன்பினையுடைய பிரகலாதனனவன் மனத்தாலும் கருமத்தாலும் வாக்காலும் தினந்தோறும் இடைவிடாமல் தேவதேவனுகிய ஜனுர்த்தனனைப் பூசிப்பான் ஆயினன்; அதன்பின்னர் பூஜாபரனுய இவனுக்குக்காலமாக ஆக, விவேகாநந்த வைராக்கிய விபவாதி முக்கிய குணங்களியாவும் நன்கு விருத்தியடைந்தன. ஆநந்தம் = கிடைத்தது கொண்டு மகிழ்ந்திருத்தல். சாஸ்திரார்த்த சம்பாஷணதையை விடுத்து அசாஸ்திரீயலோக விருத்தங்களில் அவனிரமிப்பதே கிடையாது, தாமரைதலத்திற்போலத் தரிசன யோக்கியமாயசமாஜ உற்சவாதி கௌதுகத்தில் அவனுக்கு ரதியுண்டாகவில்லை, போக ரூபங்களாய ரோகங்களின் விடயாபத்திய சேவனத்தானே அதகூல ஆசரணத்தில், பிரகலாதனுடைய சித்தமானது இளைப்பாறுதலை யடையவில்லை, கோரிக்கப்படாத சித்திரஞ் செய்யப்பெறுத முக்தாபலம் = தரளம், அமலமான முக்தாபலத்திற் போலச் சேரவில்லை யென்பதாம். (15-16)

(ஸ்ரீ-வீர - அ-கை.) பிரகலாதனது உள்ளமிருந்த விதத்தைக்காட்டி அவனது பூஜாகிருகத்தில் ஸ்ரீமந்நாராயண ரடைந்தார் எனல்:—பூன்றவென்பது.

பூன்றவடிவுங் காணுமற் போகத்துள்ளு மழுந்தாம
ஞன்றவூச லாடுவபோ னல்லோனுள்ளந் திரிவதனே
மூன்றுசகத்தின் சான்முன முருந்தன்றிருவுள் ளத்துணர்ந்து
சான்றகுணத்தோன் பூசிக்குந் தனிமாமனையிற் முனடைந்தான்.

(ப - ரை.) பூன்றவடிவுங் காணுமல் = பூர்ணவடிவத்தையும் தரிசியாமல், போகத்துள்ளும் = போகங்களிலும், அழுந்தாமல் = மூழ்காமல், நான்றவூசல் ஆடுவபோல் = தொங்கிய ஊஞ்சல் ஆடுவதுபோன்று, நல்லோன் உள்ளம் திரிவதனே = தமது அன்பனுடைய மனம் சஞ்சலப்படுவதனே, மூன்று சகத்தின் சான்முன =மூவுலகத்தின் சாக்ஷியான, முருந்தன் = ஸ்ரீமந் நாராயணன், திருவுள்ளத் துணர்ந்து = திருவுள்ளத்தின் கண்ணே தெரிந்தருளி, சான்றகுணத்தோன் பூசிக்கும் = உயர்ந்த மைத்திரியாதி கல்யாண குணங்கள் வாய்ந்தோன் பூசைசெய்யும், தனிமாமனையிற் முனடைந்தான் = ஒப்பற்றமாகுமைதங்கிய அரண்மனையிற் சுயம் பிரசன்னமாயினன்.

(ஸ்ரீ - வீர.) ஆயின் அவனதுள்ளம் எங்ஙனமிருந்தது எனிற்கூறல்:—போகாதி விவகாரங்கள் எவற்றையுமேதியாகித்தும், பரம்பொருளில் விசிராந்தியை யடைந்திடாமலும் அவனதுள்ளம் கேவலம் ஊசலிற் சேர்ப்பித்ததுபோல இருந்தது, ஊசற்போல ஒருபாகதலிலுமே விசிராந்தியை யடையவில்லை, உள்ளே பற்றுதலடையவில்லை யென்பதாம். ஸ்ரீமஹாவிஷ்ணுவாகிய பரமதேவரானவர் பிரகலாதனது அங்கிலேமையை கூரோதக மந்திரத்திலிருந்தேசுத்தசத்துவவடிவமாய்ச் சர்வகதமாயிலங்கும் ஞானசக்தியினுனேயுணர்ந்தனர். அதன்

பின்னர்ப் பாதாளமார்க்கமாகப் பக்தர்கட்குமகிழ்வை யுண்டாக்குபவராகிய ஸ்ரீமகாவிஷ்ணு வானவர், "இதேயாகந்தத்தினுடைய மாத்திரையைப் பற்றியன்னிய ஜீவர்கள் இனிதுஜீவிக் கின்றனர்" என்று மறையறைதலின் சர்வாகந்த கர்த்தாவாகிய ஸ்ரீபகவானுனவர் பூஜா தேவக்கிருகத்தை யடைந்து அந்தப் பிரகலாதன் முன்பு பிரசன்னமாயினர்.

(சு.) முருந்தன் க்ஷீரசாகரத் திருமந்திரத்திலிருந்தே சர்வகதமானபுத்தியால் உணர்ந்தான் என்றதாயிற்று. சான்றுன என்பது எதுகர்ப்பவிசேஷணம். க்ஷீரசாகரத்தின் மூழ்கி பூஜிக்குந் தனிமாமனேயில் = பிரகலாதனது தேவபூஜாகிருகத்தில், பாதாளமார்க்கமாக தானடைந்தான் = எழுந்தருளினுர், என்பதுபொருள், பந்தாநுக்கிரக பரபரப்பாற் சந்தோஷிக்கும் பரிவாரசமன்விதராய் எனவுங்கூட்டுக. மூலம்,—மந்திராததென்பது அதிகரணத்திலும் கூறலாம் என்னும் வார்த்திகப்படில் யப்லோபமாக ஐந்தாம் வேற்றுமையாயது.(17)

(ஸ்ரீ - வீர - அ-கை.) ஸ்ரீ பகவான் பிரசன்னமானதும் உணர்ந்த பிரகலாதன் இனிது பூசித்தான் எனல்:—மூவரென்பது.

மூவராகி நின்றமுதன் மூலமடைந்த படியறிந்து
தேவதேவன் றனைமுன்னர்ச் செயலினிரட்டிப் பூசனைசெய்
தியாவராலுங் காண்பரிய வெம்மானம்மா வெதிர்ந்தனனென்
றுவதான படியன்பா லவனைத்துதித்தா னசுரேசன்.

(ப - ரை.) மூவராகிநின்ற = மும்மூர்த்திகளாகி லீலையாடாநிற்கும், முதன்மூலம் = ஆதிகாரணம், காரணப்பிரமம் என்றபடி: அடைந்தபடியறிந்து = எழுந்தருளி வந்திருப்பதையுணர்ந்து, தேவதேவன்றனை = தேவர்கட்கெல்லாந் தேவனுகிய மகாதேவனை, முன்னர்ச்செயலின் இரட்டிப் பூசனைசெய்து = பூர்வஞ்செய்ததைக் காட்டினும் இரண்டு மடங்கு பூசித்து, இயாவராலும் காண்பரிய = எவர்தம்மாலும் கனவினும் தரிசித்தற்குத் துர்லபமான, எம்மான் = எமது பெருமான், அம்மா = அகோ ஆச்சர்யம், எதிர்ந்தனன் = பிரசன்னமாயினன், என்று = என உரைத்து, ஆவதானபடியன்பால் = இயன்றவகையெழுந்த பக்தியினுலே, அவனைத்துதித்தான் அசுரேசன் = சகலலோக நாயகனைத் தோத்தரித்தான் அசுரஜன நாயகன்.

(ஸ்ரீ - வீர.) தேவதேவன் எழுந்தருளினுன் என்றுணர்ந்து இருமடங்குபகரண உபசாரத்தானே தீப்தமாய பூஜையால் தைத்தியேந்திரன் ஸ்ரீ புண்டரீகாக்ஷனே மிகுந்த ஆதரவோடும் நன்குபூசித்தான். பூஜாகிருகத்தை யடைந்து பிரத்தியக்ஷமா யெதிரில் திருச்சந்நிதி செய்துள்ள ஸ்ரீமகா விஷ்ணுவாகிய தேவதேவனை நோக்கிப் பிரகலாதனுனவன் பரமப்பிரீதனுய் மசிழ்ச்சி பொங்கித்ததும்பும் வாணியினுல் தோத்தரிக்கத் தொடங்கினுன். (18)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தோத்தரித்த பிரகாரத்தைக் காட்டல்:—அண்ட, மேலோன், கேதம், என்பன.

அண்டமென்னு மொருவீட்டி லரியபொருள்சேர் சரக்கறையே
சண்டபானு வெனவுதயாத் தமுமற்றெளிருந் தற்பரமே
கண்டவுயிர்க ளனைத்திற்குங் களைகணென வான்றுணையே
புண்டரீகை நாயகமே போற்றிபோற்றி மிகப்போற்றி.

மேலோனுகிச் சகம்படைக்கும் விளையாட்டுடைய வித்தகனே
நாலோடொருபதெனுமூலகி னண்ணுவுயர்ந்த நற்பொருளே
யாலோனுகிக கண்வளர்ந்த வையாமெய்யா வருண்மூழத்தி
பூலோகத்தி னுயகமே போற்றிபோற்றி மிகப்போற்றி.

கேதமிகுந்த வசுரரெனுங் கிளைததாமரைக்கு நெடும்பனியே
வேதநெறிச்செல் லமரரெனும விரிதாமரைக்கு வெய்யோனே
பேதமறுத்தோ ருள்ளமெனும் பெருந்தாமரையிற் பிரமரமே
பூதமனைத்தி னுயகமே போற்றிபோற்றி மிகப்போற்றி.

(ப - ரை.) அண்டமென்னும் ஒருவீட்டில் = திரிபுவனமாகிய பிரஹ்மாண்ட மென்னும் ஒப்பற்றபுவனத்தில், அரியபொருள் சேர்சரக்கறையே = அருமையான பொருள்கள் சேர்ந்துள்ள கோசமே, சண்டபானுவென = பிரசண்ட சூரியனைப்போல, உதய அதத மும் அற்று ஒளிருந்தற்பரமே = எழுதலும் வீழுதலும் இல்லாமல் பிரகாசிக்கும் பரம்பிர காசமே, கண்ட உயிர்கள் அனைத்திற்கும் = பிரதீதியாகப்பெற்ற சகல ஜீவர்கட்கும், களைக ணைவான்றுணையே = சரண்யனை உயர்ந்ததுணையே, புண்டரீகை நாயகமே = ஸ்ரீசெங்க மலச் செல்வியின் மணவாளரே, போற்றிபோற்றி மிகப்போற்றி = நமஸ்காரம் நமஸ்காரம் மிகமிகவும் நமஸ்காரம்.

மேலோனுகிச் சகம்படைக்கும் விளையாட்டுடைய வித்தகனே = உயர்ந்தவனுகிச் சதுர்த்தச புவனங்களையுஞ் சிருட்டிக்கும் கிரீடையையுடைய சர்வஞ்ஞ சிகாமணியே, நாலோடு ஒருபதெனுமூலகில் நண்ணு உயர்ந்த நற்பொருளே = பதினுன்குலகிலும் கிடைக் கக்கூடாத மேலான நல்லவஸ்துவே, ஆலோனுகிக் கண்வளர்ந்த ஐயாமெய்யா = ஆலிலை யின்கண்ணே துயில்கொண்டருளும் குழந்தையே சத்தியவடிவமே, அருண்மூர்த்தி = கிருபா விக்கிரகமே, பூலோகத்தின் நாயகமே = பூவுலகத்தின் நியந்தாவே, போற்றிபோற்றி மிகப் போற்றி = நமஸ்காரம் நமஸ்காரம் மிகமிகவும் நமஸ்காரம்.

கேதமிகுந்த வசுரரெனும் = பிறருகுந்தமக்கும் துயரமே மிக்காக்கும் திதிசுதர்க ளென்று சொல்லப்பட்ட, கிளைத்தாமரைக்கு = பதுமக்கூட்டங்கட்கு, நெடும்பனியே = தீர்க்கமான இமமே, வேதநெறிச்செல் அமரரெனும் = மறைமார்க்கத்திற்போம் தேவதை கள் என்னும், விரிதாமரைக்கு வெய்யோனே = மலரத்தக்கனவாய பங்கஜங்கட்கு மார்த் தாண்டனே, பேதமறுத்தோர் உள்ளமெனும் = அபேதநிருஷ்டியை யுடையவரது மன மென்னும், பெருந்தாமரையிற் பிரமரமே = விகசிதபங்கஜத்தில் மதுகரமே, பூதமனைத்தின் நாயகமே = சகலஜீபிராணிகளின் நியந்தாவே, போற்றிபோற்றி மிகப்போற்றி = நமஸ்காரம் நமஸ்காரம் மிகமிகவும் நமஸ்காரம்.

(ஸ்ரீ - வீர.) திரிபுவனத்தின் எப்புவனமுளதோ சுரகணிதஸ் திதியுளதோ, அதனனுகூல மான அபிராமகோசக் கிருகமும், தன்னுள்ளிருக்கும் முப்புவனத்தையும் தானேபரிபால னஞ்செய்தலின், சகலபாகிய அந்தரகளங்கதமத்தை யபகரிப்பவருமு, சூரியசந்திர அக்கினி வாக்குக்காண பிரகாசங்களினும் உதகிருஷ்டமாய சுயஞ்சோதிப் பிரகாசமும், அன்யசர ணமில்லாதவர்களாகிய அசரணர்களைக், காப்பாற்றுபவரும், அவிநாசித் தன்மையானே சர ணர்கமாயவரும், சர்வசக்தி சம்பன்னராய ஈசரும், அதனுனே இராஜசால் அஜரும், சத்துவத் தால் அச்சுதரும், தமத்தால் ஈசரும், சர்வதுக்கங்களையும் அரிக்குந்தன்மையானே ஹரியும் ஆகியிலங்கும் பரமேசுவராகிய தேவரீரை நமஸ்கரிக்கின்றேன். நீலோற்பல தளம்போலும்

நீலமணியே போலும் கவின்காலுங காந்தியுற்றவரும், சாற்காலத்திய மேகங்களைகன்ற நின் மலமான அம்பரகோடர உபமானமுற்றவரும், பிரமர திமிர கஜ்ஜல=அஞ்சனம்போலும் பிர பையுடையவரும், ஆகிய கமலசகிர கதாதாரைப் பணிவாம். அளிக்கூட்டம் போலும் கோ மளமாகிய சுந்தரமாகிய விமலமாகிய அங்கங்களே யுடையவரும், வெண்டளத் தண்டா மரைக்குட் மலம்போலுமொளிரும் வெண்சங்குடையவரும், சுருதிகளேயாய கும்கும்மெனச் சப்திககும சப்தங்களைச் செய்யும் பிரஹ்மாவாகிய வண்டாடும நாபிபதுமத்தை யுடைய வரும், தம்முடைய பக்தர்களின் இருதய பதுமதளங்களே ஆதாரமாக வுடையவரும், ஆகி விளங்கும் ஸ்ரீமந்நாராயணரை நமஸ்கரிக்கின்றேன். வெண்ண ககணதாரதைகள் விரியப் பெற்றவரும், புன்னகையால் வெண்மையான திருமுகவடிவாம் பருத்தபூர்ணேந்து சுந்தர பிம்பத்தை யுடையவரும், ஹிருதயமணியாகிய கௌஸ்துபமணியின் மரீசிஜாலங்களேயாய ஸ்ரீமந்தாகினியை யுடையவரும், ஆகிய, ஸ்ரீமந்நாராயண ரென்னும் சரத்காலாகாசத்தை வியாபக வததுவை நமஸ்கரிக்கின்றேன்.

சகல நெருங்கிய சிருஷ்டிகாதாரமாகி யிருப்பவரும், யாதொருபாதமு மில்லாமலே சர்வதிற்கும் இலயத்தான மானவரும், தாமோ எப்போதும் உண்டாகாதவரும், அதனாலே விருததியாதி விகாரசூனியரும், யாங்ஙனம் அவருக்குத் தேகமுடைமை யெனின்? கூறல், சத்துவாதி மாயாகுணங்களானே யேற்பட்ட அநந்த கல்யாண குணங்களால் அதிசிரந்தன அபிஜாத சுந்தரமாந திருமேனியை யுடையவரும், பிரளயகாலத்தில் வடதருளத்தில் சய னித்துக்கொண் டிருக்கும் குழவியும், ஆகிய ஸ்ரீபகவானைப் பணிகின்றேன், கவிகசிதமாய நாபிபதுமத்தின் ரேணுக்களானே கௌரம் = பீதம் பொருளால் உதரதேசத்தில் என்ப தாம், உதரத்தே கௌரமாயவரும், ஸ்புடமாய்ப் பிரகாசமானமாய கமலேயாகிய ஸ்ரீதேவி யின் திருமேனியால் அலங்கரிக்கப்பெற்ற திருமார்பை யுடையவரும் இடது திருத்துடை யையுடையவரும், தினசமசமயமாகியசாயங்காலம்போல இரக்த,சந்தனகாஸ்மீராங்க. இரா கத்தை யுடையவரும், கனகநிகர்த்த கவின்காலும் பீதாம்பரசோபிதரும் அதிசுந்தரரும் ஆகி விளங்கும் ஸ்ரீபகவானைப் பணிக்கின்றேன். திதிசுத நளினங்கட்குப் பனிவீழ்ச்சியாயும், சுர நளினங்கட்குச் சதத உதிதமாய அருக்கபிம்பமாயும், கமலஜப்பிரஹ்மா நளினஜலத்தானே பூரிக்கப்பெற்ற தடாகவடிவினரும், இருதயபதும நிலயரும் விபுவும் ஆகியபரமேசுரரைப் பணிகின்றேன். திரிபுவன நளினியின் சித அரவிந்தங்கள் கரத்தி லெச்சூரியனுக்கோ அத்த கையரும், அதனாலே திமிரசமானமாய விமோகத்தின்றீபமும், மேன்மையரும், பௌதிகப் பிரகாசரோ அவர் எனின் அல்லர். மற்றோ, நித்தியசுவப்பிரகாசர் அதனாலே அஜடர், சித்து ரூபமாய ஆத்துமதத்துவம் ஆவர், ஆவதனாலே சாக்ஷாதகார மாத்திரத்தாற் சகத்துக்கட் கும் ஜகத்திலுள்ள ஜீவர்கட்கும் சகலபீடைகளேயும் அகற்றுபவராவர் அத்தகையரும் ஆகிய ஸ்ரீஹரியை நமஸ்கரிக்கின்றேன்.

(ச.) சரக்கறையே = சரக்கறைபோற் சகலரும் ஜீவிக்குந் தன்மையினால் அத்தன்மை யரே, ஒளிரும் = சகல களங்கத்தையும் போக்கி அனைத்தையும் விளக்கும், தற்பரமே = பரமப்பிரகாசமே.

பனியே = ஸ்ரீநரசிங்காதி அவதார அபிப்பிராயத்தாலென்க; வெய்யோனே=ஞானப் பிரதிபந்தகமான இருள்போன்ற அஞ்ஞானத்தைச் சூரியன்போன்றொழிப்பவரே; இத்தோத் திரம மூன்றுகவியும் கீர்வாணத்திற் பிரகாராந்தரமாய் விஸ்தாரமா யிருக்கின்றது. கீர்வா ணம்:—எட்டுச் சுலோகங்களாற் பிரகலாதன் ஸ்ரீ பகவானைத் தோத்தரிக்கின்றனன்:— திரிபுவனமேபவனம் அதன் அபிராமகோசம் அருத்தக்கூட்டம் போலும் யாவராணும் உப ஜீவ்யத் தன்மையால அததகைமையாம், கருநெய்தல் மலர்த்தளங்களின் கைலாகாராசி

யென ஒளிர்வது, கஜ்ஜலரூபம் அஞ்சனம், நயனப்பிரசாத காரணமாகிய அஞ்சனதிரவியத் திற்குப் பருவிதத்தன்மை யுண்மையின்விசேஷண உபாதானமாம், வேதங்களானே ஓதிங்க ளாடும் விரிஞ்சனேயாய பிரமரத்தை யுந்தியந்தாமரையி லுடையவரை, பிரகலாதனுகிய எனது இருதயமேயாய பதுமத்திற்குச் சலாசயம்போல ஆசிரயபூதரை, திருமார்பிலிரா நின்ற முத்துமணிகளின் மரீசிஜாலமேயாய ஸ்ரீ மந்தாகினியை யுடையவரை, திரிபுவனமே யாய தடாகத்தின் கண்ணே சிதாரவிந்தரை, சிதத்தன்மையும் நரசிம்ஹாதி அவதார அபிப் பிராயத்தானே யாம், ஞானப்பிரதிபந்தகத் தன்மையால்திமிரசமானமாயமோகதத்தின், தீபம் போலும் நிவர்த்தகமாயவரை, கவவிகசித பத்மரேணுவெனக் கௌரமாய, மிகவும் பிரகாச மாகத்திருமார்பில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இலகுமிதேவியின் திருமேனியிலுலே உப பூஷிதமாய அகங்களே வுடையவரை, சந்தியாகாலம் போலும் அருண அங்கராகத்தை யுடையவரை, அவிரதசுலோகத்தில்நிரந்தரமாற்றியருளும் விசுவசர்க்கவியோர்க்கு சந்ததம் அஜாதத்தன்மையும், அவர்த்தனர்க்கு விசாலத்தன்மைஷ்ம், ஜரட்டர்க்கு அபிஜாததேகத்தன் மையும் அர்ப்பகத் தன்மையும் விருததமாம் எனவிரோதாபாசம் விளங்குகின்றது. வர்த்தன மில்லாத தேயாயதில் இயற்கையாயே வியாபகத்தன்மையால், யுகசதங்களில் ஜீர்ணமாயி னும் இசம்மியத் திருமேனியுடையவரை, வட்பத்திர சாயியானவரை, திதிசுதர்களேயாய தாமரைகளுகுச் சம்ஹார ஹேதுத்தன்மையானே பனியிடியாயவரை: பிரஹ்மாவேயாய களினீ = தாமரைத்தடாகம், அநேகமுக பதுமங்களோடு கூடியிருத்தலின், அதன்ஜலாசய மாயவரை, ஹ்ருதிகளினீ நிலயம் = களினீசப்த மீண்டு பதுமமாத்திர வாசியாம், இருதய மாகிய மார்பில் எப்புண்டரீகமுளதோ அதன் நிலயமாயவரை வணங்குகின்றேன் எனக் கூட்டுக. (19-20-21)

(ஸ்ரீ - வீர - அ - கை.) துதியினுல் மகிழ்வுற்ற ஸ்ரீ பகவான் பிறவாவரங்கே ளென்ற ருள அவ்வாறே வேட்டல்:—என்பதென்பது.

> என்பதான துதிபலவு மிசைப்பவிதயங் குளிர்ந்தருளி
> யன்பமறுத்துப் பிறவாவா முயுவரங்கே ளெனக்கருணை
> முன்பனுரைபப வினைத்திய முளரியினுஞ்சேர் முதற்பொருளே
> துன்பமில்லா வுயர்பதமே ததுவேயருள்வா யெனச்சொன்னன்.

(ப - ரை.) என்பதான துதிபலவும் இசைப்ப = கூறிய பிரகாரமாய அநேகதோத்தி ரங்களாற் றேத்தரிப்ப, இதயங்குளிர்ந்தருளி = திருவுள்ளம் மகிழ்ந்தருளி, அன்ப = பக்த சிரோரத்தினமே, மறுத்துப் பிறவாவாறுய வரங்கேள் = மீண்டும் ஜனியாத தன்மையதாய வரத்தைக் கேட்பாயாக, என = என்று;, கருணைமுன்பன் = தயாக்ரகண்யன், உரைப்ப = திருவாய் மலர்ந்தருள, அனைத்திதய முளரியினுஞ்சேர் முதற்பொருளே = சகலாந்தக் கரணகமலங்களிலும் உறைந்தருளும் ஆதிவத்துவே, துன்பமில்லா வுயாபதமேததுவே = துயரம் அணுவுமணுகாத மேலான பதமியாதோ அதனையே, அருள்வாய் எனச்சொன் னன் = அருள் செய்வாய் என்பதாகப் பிரார்த்தித்தான்.

(ஸ்ரீ - வீர.) இவ்வண்ணம் மொழிந்த பிரகாரமாய வெருகுணங்கள் வாய்ந்த ஸ்துதி மொழிகளால் நன்கருச்சிக்கப் பெற்றவரும், அசுரகுலகாலரும், ஸ்ரீதேவியால் ஆலிங்கனஞ் செய்யப்பெற்ற அம்சதேசத்தை யுடையவரும், பிரீதியுடையவரும் குவலயதல நிலரும் ஆகிய ஸ்ரீ பகவான் ஜலதம் மயூரத்தைப்போல் மிகுந்த அன்புடன் எதிரிலிருக்கும் ஆதி லாதயோகிய அசுரேந்திரனுகிய பிரகலாதனே நோக்கி யருள்செய்யத் தொடங்கினர். ஹேதைத்தியகுல சூடா மகாமணியே ! குணநிதியே ! மீண்டும் பிறவித்துயர் வாராமல் உப

சாந்தியடையுமாறுய உனக்கத்தியந்த மிஷ்டமாய இவ்வரத்தை நீவாங்கிக் கொள்வாயாக. ஹே சர்வசங்கற்ப பலதரே! சர்வலோகங்களுள்ளும் பிராணிகளுள்ளும் உள்ளில் இருதயத்தில் இருப்பவரே! யாதினைச் சர்வகார்ப்பண்ய நிவாரகம் என்றுணர்ந் தருளுகின்றீரோ அதனையே ஆஞ்ஞாபனஞ் செய்தருளுவீராக, அடியேனுகது ஹே விபுவாகிய பரமேசுரரே! இது விநயோக்தியானே யாசனமா மென்றறிக. [illegible]

(ச.) கருணை முன்பன் = சர்வசங்கற்பவரதன். (22)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இங்ஙனம் பிரார்த்திக்கப் பெற்ற ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் தனது விசாரணையினுல் உதிதமாய பிரஹ்மாத்ம தத்துவ சாஷாத்கார விகிரான்தியில்லாமல் ஆத்தியந்திக காரப்பண்ய நிவிருத்தி கூடாதென்று திருவுளங்கருதி அதற் கநுகூலமாய வரத்தையருளல்:—சித்தமென்பது.

சித்தப்பிரம மெல்லாமபோய்த் தெளிந்தபரம சுகம்பெற்றுச்
சுத்தப்பிரமத் திளைப்பாற முடிவாம்விசாரந் தோன்றுகவென்
றத்தப்பதும மமைத்தருளி யமலனேக வவன்றுதியான்
மெத்தப்பரவி மலர்தூவித் தொழுதான்விவேகி களின்மிக்கோன்.

(ப - ரை.) சித்தப்பிரமம் எல்லாம்போய் = சித்தத்திலுள்ள மயக்கங்க ளெல்லாம் தீர்ந்து, தெளிந்த பரமசுகம்பெற்று = அதிசொச்சமா யிலங்கும் மேலான வின்பத்தை யடைந்து, சுத்தப்பிரமத் திளைப்பாற = தூயசிவஸ்வரூபத்தில் விசிரான்தியடைய, முடிவாம் = வேண்டிய அளவு, விசாரந் தோன்றுக = ஆராய்ச்சியானது மனத்தே பிரதீதியாகுக, என்று = என்பதாக, அத்தப்பதுமம் அமைத்தருளி = திருக்கரகமலத்தைச் சிரக்கிரிசுத்தில் வைத்தருளி, அமலன் ஏக = நின்மலனை பரமேசுரன் பாற்கடற்குச் சென்றருள, அவன்றுதியால் மெத்தப்பரவி = அம்மகாவிஷ்ணுவைத் தோத்திர கலாபங்களால் மிகவும் புகழ்ந்து, மலர்தூவி = பூஜையிற் குசுமாஞ்சலிசெய்து, தொழுதான் விவேகிகளின் மிக்கோன் = வணங்கிஞனுன் விவேகிகளுக்குள் அக்ரகண்யனுகிய பிரகலாத ஆழ்வான்.

(ஸ்ரீ - வீர.) சர்வசம்பிரமசம் சாந்தியாகிய ஆத்தியந்திக அஜ்ஞாநிவிர்த்தியின்பொருட்டும், பரமபலமாய நிரதிசயானந்த அடைவின் பொருட்டும், பிரஹ்மவிசிரான்தி பரியந்தமும் விசாரம் உனக்கு ஹே அநகனேயுளதாகுக. இவ்வண்ணமருள் புரிந்து திதிபுத்திரேந்திரனே யாசீர்வதித்து, ஸ்ரீமகா விஷ்ணுவானவர் கடலினின்றும் கர்த்தாஅலை ஓசைசெய்து கொண்டு கிளம்பியதரங்கம் ஓசையோய்ந்து அடங்குவதேபோலும், மறைந்தருளினர்.

(ச.) ஸ்ரீபகவான்: இளைப்பாற முடிவாம் = விசிரான்தி பரியந்தமான. மெத்தப்பரவி, உத்துவாசனுங்க பூதமான, மலர்தூவி. (23)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீபகவானைப் பூஜித்துப் பதுமாதனத் தமர்ந்து விசாரஞ்செய்யத்தொடங்கல்:—பனியென்பது.

பனிவார்கடலிற் றிரையென்னப் பரமபுருடன் மறைந்ததற்பின்
னினிதாம்பதுமா தனத்திலிருந் திறைவனு றுதிக ளேத்தியபின்
சனியாவிசாரந் தந்தளிதான் சதுரமறுக்குந் தனிமூர்த்தி
நனிநாநம்மை யாரென்று நாடுவோமுள் ளெனநினைவான்.

(ப - ரை.) பனிவார் கடலிற்றிரை யென்ன = குளிர்ச்சிபொருந்தி நீர்நிறைந்த சமுத்திரத்திற் றரங்கம்வந்து போவதேபோல, பரமபுருடன் = உன்னதமான புருடோத்தமன்,

மறைந்ததற்பின் = அந்தர்த்தான மானபின், இனிதாம்பதும ஆதனத்திலிருந்து = மிகவும் அநுகூலமாகிய பத்மாசனத்தில் உறைந்து, இறைவன்றுதிகள் எத்தியபின் = பரம்பொரு ளைத் தோத்திரங்களாற் ரோத்தரித்தபின், சனியாவிசாரந் தத்தளித்தான் = சனியாதபத மடையுமாறு ஆராய்ச்சியைக் கொடுத்தருளினர், சகநம் அறுக்குந் தனிமூர்த்தி = சனன மரண சம்சாரத்தை யகற்றும் ஒப்பற்ற தெய்வமூர்த்தி, நனிநாநம்மை யாரென்று = நன்ரு நாம் நமது சொரூபத்தை, எத்தகைத்தா யிருக்கின்றதென்று, நாடுவோம் உள் என நினைந் தான் = ஆராய்ந்து பார்ப்போம்உள்ளே என்பதாக எண்ணினன்.

(ஸ்ரீ - வீர.) பரமதேவராகிய ஸ்ரீமகாவிஷ்ணு வானவர் மறைந்தருளியபின்னர்ப் பூஜை யின்கண் மணிரத்ந பரிஷ்கிருதமாய பாச்சாத்தியு குசுமாஞ்சலியைத் தானஷேந்திரன்றாவி; அதிக சந்தோடத்தோடும் வராசனத்தில் உட்கார்ந்து பதுமாதனத்தை யிருந்து, தோத்திர பாட வித்தானகாலத்தில் உள்ளே இனியியம்பும் பிரகாரமாக நன்மனத்தானே நாடுவான் ஆயினன். விசாரவானுகவே நீயாவாய் என்று சம்சாரநிவாரக தேவதேவனுல் அனுக்கிரகிக் கப்பெற்றேன், அக்காரணத்தால் உள்ளே ஆத்மவிசாரணையைச் செய்வேனுக.

(ச.) நினைவான் = நினைந்தவனுனன், பாச்சாத்தியம் = பின்னுண்டாவது, உத்வா சனு (கிளப்பிவிடுதல்) அங்கபூசமென்பது பொருள். மணிரத்ந பரிஷ்கிருதம் = மணி சிரேஷ்டங்களானே யலங்கரிக்கப் பெற்ற, பாஞ்சபட விருந்தபத்மா தனம்பகரி, ஸேங்கி யிருந்தடியை யூருவிலேமாருடி, வாங்கி மனமொன்றி வலக்கையிடக்கைமேற், ரூங்கிவிழி நாசியினே நோக்குந் தகைமைத்தே,

தடித்தவூருவி ரண்டின்மேற் சாரவைத் தடித்தலங்க ளிரண்டுந் தன்கையினுற், பிடித் துக்காலிற் பெருவிரல் பின்புபோய்ப், படுத்துவைத்தல் பதுமாசனமிதே. என்பது பதுமா தன இலக்கணம். தோத்திரபாட வித்தியீண்டு முன்மொழிந்த தோத்திரவிடயத்தில். (24)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஆண்டுச் சர்வதிருசியங்களும் ஆன்மாவின் பொருட்டாதலின் ஆன்மாவையே முக்கியமாகத் துணிந்து அதுவேயிதன் கண்ணியாதாம் என்ரூராயத் தொடங்கல்:—யானென்பது.

(ச.) பிரகலாதன் ஆத்ம விசாரஞ்செய்தல்:—யானென்பது.

யானுர்முன்ன மெவனுனே னிந்தப்புவியா டம்பரத்தி
லானுதிருந்து நின்ரூடி யழுதுசிரித்து மகிழ்ந்தயர்ந்தே
னனுவான சகமல்லே னகங்கல்புல்லு மண்மரங்க
டானுய்ப்புறம்பா யசேதனமாஞ் சகநானென்னத் தக்கதுவோ.

(ப - ரை.) யானுர்முன்னம் எவனுனேன் = யானியாவன் பூர்வம்யாவனுயினேன். இந்தப் புவியாடரம்பத்தில் = இப்புவனடம்பரத்தில், ஆனுதிருந்து = கெடாதிருந்து, நின்று ஓடி அழுது சிரித்து மகிழ்ந்து அயர்ந்தேன் = நின்று ஓடி அழுது நகைத்துச் சந் தோஷித்து மயங்கியுள்ளேன், நானுவான சகமல்லேன் = பலவகையான வுலகமல்லேன், நகம் கல்புல்லு மண்மரங்கள் தானுய் = மலபாஷாணம் திருணம் மண் விருக்ஷங்கள் வடிவ மாய், புறம்பாய் = பாகியமாய், அசேதனமாம் = ஜடமாம், சகம் = உலகம், நானென்னத் தக்கதுவோ = அகமென்று சொல்ல யோக்கியமாமோ.

(ஸ்ரீ - வீர.) இந்தப்புவன ஆடம்பர விவகாரத்தில் ஈடுபட்டுள்ளயான் முதலில் என்ன வடிவமா யிருக்கின்றேன், பேசுகின்றேன் செல்கின்றேன் நிற்கின்றேன், சர்வ உத்யோகத்

தானே விடயங்களே யுபபோகிக்கின்றேன். அவற்றுள் தேகத்தினும் வெளியேயிருப்பது ஆண் டான்மாவாகாதாம் எனல்:—சகமென்பது. விருகூடதிருண பர்வதசகிதமாய இந்த ஜகத்தானது ஆண்டுயாஞகேன், யாதுபாகியமாய் அசுத்தமாய் அத்தியந்தம் அசேதனமாய் உளதோ அஃதெங்ஙனநதான் யாஞவேன்.

(ச.) இருந்தென்பது முதலியது சர்வேந்திரிய வியாபார உபலக்ஷணம், சர்வேந்திரிய வியாபாராபிமானியான நான் எத்தன்மையஞ மென்பது விசாரோபக்கிரமம். நாஞவான சகமல்லேன் = இச்சகத்துயானன்று, வாகியமாதலினுனும் ஜடமாதலினுனும், என்பது பொருள். (25)

(ஸ்ரீ - வீர - அ - கை.) தேகமும்சததமும் அகமன்று என்றுதேர்தல்:—இல்லென்பது.

இல்லாவிடத்துண் டாய்மூக மெனலாய்க்காற்றி லியங்குவதாய்ச
செல்லாநின்ற சிலநாளிற் சிதைந்துசடமா மூடனலேனு
நில்லாதாய்பபொய்க் கேதோன்றி நிராசாரமதா யறிவின்றிப்
புல்லாவறிவிற் செவிக்குணவாய்ப் போன்றுஞ்சத்த நாஞமோ

(ப - கை.) இல்லாவிடத் துண்டாய் = இல்லாதிருந்தும் எழுந்து தோற்றுவதாய், மூகமெனலாய் = ஒன்றும் பேசாததாய், காற்றில் இயங்குவதாய் = வாயுவானடிப்பதாய், செல்லாநின்ற சிலநாளில் = கழியாநின்ற சொற்பதினகளில், சிதைந்து = கெட்டுப்போம், சடமாம் உடல்காலேனு = அசேதனமாகிய தேகம்யானேனு, நில்லாதாய் = நிலையற்றதாய், பொய்க்கேதோன்றி = மித்தையாகப் பிரதீதியாவதாய், நிராகாரமதாய் = சூனியாகிருதியதாய், அறிவின்றி = சடமாய், புல்லா அறிவிற்செவிக்குணவாய் = அவிவேகதசையிற் சுரோத்திரத்திற்கு விடயமாய், பொன்றும் = அழிவுபடும், சத்தம் நாஞமோ = ஓசையகமாமோ.

(ஸ்ரீ - வீர.) அசத்தாகவே யிருந்தும் சத்துப்போலத் தோற்றுவதாய், அறிவின்றி யொன்றையும் உணராமையானே சாற்றச்சமர்த்தற்றதாய், பிராணவாயுக்களால் சுவசஞ்சார கூணத்தில் சஞ்சலிதமாய், அற்பகாலத்தில் விலயமாவதாய், அசேதனமாய இத்தேகம் யானல்லேன், இவ்வண்ணம் சப்தாதி விடயங்களும் ஆத்மாவாகாதாம் எனத்தொடங்கல்:—நில்லாதாயென்பது. அசித்துருபமாய கர்ணசஷ்குலியினுல், தாரம் = சுரம், மந்திரம் பதம் வாக்கியம் என்பதாதி பேதங்களானே கற்பிக்கப் பெற்றதாய் = சமர்த்திய மானமாய், கூணத்தில் கூயிப்பதாய், கூயித்தன்மையானே சூனியாகிருதியதாய், சூனியமாய ஆகாயத்தினின்றும் உண்டாவதாய், தோன்றும் சப்தம் அசேதனமாகலின் யானல்லன். ஆகாசம் சூனிய சுபாவமாகாதாயினும் ஆன்மசத்தை யினின்றும் பிருத்தக்காகச் செய்யில், சொரூப மற்றதாமெனச் சூனியத்வ உக்தியாம், நேத்திராதிகட்கு விடயமாய ரூபாதிகளின்மையின் சூனியத்வ உக்தியெனினும் அமையும்.

(ச.) உண்மையாக இல்லாதிருந்தே கற்பிதமாம் பூதேந்திரியக் கூட்டரவிற்கே தேக மென்னும் விவகாரமாதலின், உடல் நாலேனு = தேகம் நானலன், ஓ என்பது எதிர்மறை, ஜடமாதலினுல், ஜடத்துவ மெங்ஙனமெனின், அசத்தினுண்டானதாலும், மூகமாதலானும், பவனப் பிரேரிதமாதலாலும் என்பதுபொருள், பிரேரிதம் = காரியப்படுவது. பொய்க்கே தோன்றி = ஆகாசத்திற் பிறந்ததாதலின் சூனியஜன்னியமாய்=நிராகாரமதாய், அமூர்த்த மாதலின், சூனியாகிருதியாய், இவ்விடத்தும் சாத்தியசாதனபாவங கூட்டுகமுன்போல்.(26)

(ஸ்ரீ - வீர - அ - கை,) பரிசஞ் சுவை உருவம் கந்தம் என்பவை நான் அல்லன் எனல்:—தோல், கணத்தென்பன.

தோலிலன்றி யறிவரிதாய்த் தோற்றமின்றிக் கணத்திறந்து
கோலுமறிவா லறிந்தறிவு கூடாப்பரிச நானல்ல
காலிலைசைந்து வசித்துருவாய்க் காதன்மிக்குக் கணத்திறக்குந்
தாலுவுணவாய்த் திரவியத்திற் சனித்துச்சடமாஞ் சுவைநாமே.

கணத்தினிறக்குங் காண்பவற்றிற் காட்சிதன்னிற் பற்றுகிப்
புணர்ப்பில் காண்பானிடத் திறக்கும்போத மில்லாவொளிநாமே
குணக்குமூக்கா மசேதனத்தாற் குறிப்பதாகிச் சடமாகி
மணக்குகொய்ம்மை நியமங்கள் மருவுகந்த நாமுமோ.

(ப - ரை.) தோலில் அன்றியறிவரிதாய் = துவக்கிலல்லாமல் உணர முடியாததாய், தோற்றமின்றி = அப்பிராப்பியமாய், கணத்திறந்து = கூணவிகாசினியாய், கோலுமறிவா லறிந்து = சிற்பிரசாதத்தானே பிரதிதியாவதாய், அறிவுகூடா = அசேதனமாய், உள்ள பரிசம் = ஊறு, நானல்ல = யாளுகேன், காலிலசைந்து = சொற்ப மசைவுடையதாய், அசித்துருவாய் = நுச்சமாய், காதன்மிக்கு = லோலமுடையதாய், கணத்திறக்கும = லோலசத்தையோடு கூடியதாய, தாலுவுணவாய் = ஜிஹ்வையாற் பத்தாதமாடாய், திரவியத்திற் சனித்து = திரவியநிஷ்டமாய், சடமாம் = அசேதனமாம், சுவை = இரசம், நாமே = அகம் ஆவமே

கணத்தின் இறக்கும் = கூணவிகாசிகளாய, காண்பவற்றில் = திருசியங்களில், காசி தன்னில் = தரிசனத்தில், பற்றுகி = லீனமாய், புணர்ப்பில் காண்பான் இடத்திறக்கும்= கேவல திருஷ்டாவின் கண் கூணமாம், போதம் இல்லா ஒளிநாமே = அசேதனமான ரூப மியாமே. குணக்குமூக்கா மசேதனத்தால் = கூயமுடையதாய்ச் சடமாயுள்ள நாகியால், குறிப்பதாகி = பரிகற்பிதமாய், சடமாகி = அசேதனமாய, மணக்குகொய்ம்மை நியமங்கள் மருவுகந்தம் = இடைவெளி யுள்ளதாய், அநியதாகாரமாய் வீசும்மணம், நான் ஆமோ = அகம் ஆவமே.

(ஸ்ரீ - வீர.) துவக்காலுணரத் தக்கதாய் கூணவிகாசிகியாய், ஒரொருகாற் கிடைப்ப தாய், ஒரொருகாற் கிடையாததாய், அறிவின் திருவருளால் தோற்றமுடிவதாய், அசேதன மாய உஷ்ணத்வாதி ஸ்பரிசனம் யாளுகேன்; இத்தகைய இது நித்தியப்பிராப்த சுபாவ ஆத்மா ஆதற்குத் தகுதியதாகாதாம் என்பது கருத்து, அநித்தியமாய்ச் சலமாய், ஜிஹ்வை யாற் கட்டுப்பட்ட வியற்கையதாய், இரசனேந்திரிய அதீனசித்திகமாய், நுச்சமாய், சிறிது அசைவதாய் அதாவது நாவின் நுனியினின்றும் களம்வரை சுவைத்து விளையாடுவதாய், பொருளி லிருப்பதாய், அசேதனமாய இரசம் அகமன்று. திருசியத்தில் = திரவியத்திலும் தரிசனத்தில் = சகூாவகிலும், லீனமாய் = அவ்விரண்டன் அதீன சித்தியை யுடையதாய், அவ்விரண்டும் கணவிகாசிக ளாகலின் இதுவும் கணவிகாசியாய். கேவலம் அசங்கமாய திருஷ்டாவின் கண்ணே உபபேரக ஜனனத்தானே உபகூணமாவதாய், அசேதனமாயுள்ள ரூபம்யானல்ல. அந்நவத்சடமாய் = அப்பிரதாசமாய், சுயமாய இராணஇந்திரியத்தானே பரிகற்பிதமாய், பேலவமாய = இடைவெளி யுள்ளதாய, விரளமாய், காலததால் வேறொரு விதமாய்ப் பரிணம மடைதலின் நியதமின்றிய ஆகாரமுடையதாய், அசேதனமாய் மிளிரும் கந்தம்யான் ஆகேன்.

(ச.) தோலினன்றி = தொக்கிந்திரியத்தால் அறியப்படுவதின்றி, பிரகாராந்தரத்தால், அறிவரிதாய், கோலுமறிவால் = இந்திரியத் துவாரத்தால், வெளிப்புறப்படு மூணர்வால்,

அறிந்து = பிரகாசமுறுவதாய், காலிலசைந்து = காற்றெனச் சலிப்பதாய், காற்றினுல் எனினும் ஒக்கும்; கணநிலையாம்=கூணசத்தையுள்ள, தாலு=ஜிகுவையால், உணர்வாம்= அறியப்படுவதான.

காண்பவற்றில் = கடாதியிலும், காட்சிதன்னில் = நேத்திரேந் திரியத்திலும், பற்றுகி = கூடினதாய், புணர்ப்பில் காண்பானிடத்து = கேவலமான திருஷ்டாவினிடத்து, இறக்கும் = இல்லாததான, கேவலக்கிரகணம் உபகிதங்விர்த்தி நிமித்தமாம், குணிகளும் = கந்தமுள்ள, ஜடமான, மூக்காம் = மூக்கின்வழியாய் வெளிப்புறப்படும், மணகுநொய்மை நியமங்கள் மருவும் = குணுத்தரத்திற் கந்தாந்தரமாதலின், நியதாகாரமற்ற, பேலவம் = விரலம். (28)

(ஸ்ரீ-வீர - அ-கை,) சப்தாதி விடயங்களின் அஞ்மத்தன்மை வசனம், வசன ஆதான ஆதிகட்கும் சமானமாகி, யாண்டும் திரிபுடிகட்கு நியாயசாமியத்தால் அஞ்மத்தன்மையு பலகூணம் ஆம், ஆகவே, அகங்கார மதோபுத்தி சித்தமென்னுங் திரிபுடிகளும் அஞான்மத் தன்மையானே நிராசமாகவே, சுத்தசின்மாத்திர ஆன்மாவே பரிசிஷ்டமாம் என்னுங் கருத்தாலுரைத்தல்:—எனதற்றென்பது.

(சு-அ-கை.) ஆயின் நீயாவன் எனிற்கூறல்:—எனதற்றென்பது.

எனதற்றெண்ண மெல்லாம்போ யிளைப்பற்றைந்து பொறிமயல்போ
யனகவறிவாய்த் தொழிலின்றி யறியும்பொருடூ ரறிவேயாய்க்
கனமாயுள்ளும் புறம்பினுங்கிட் களமாயுண்டா மாத்திரமாய்ச்
சநநமரணமிலா வென்னைத் தயங்கக்கண்டேன் சத்தியமே.

(ப - கை.) எனது அற்று = மமதையற்று, எண்ணம் எல்லாம்போய் = மனவிருத்தி கள் ஒய்ந்து, இளைப்பற்று = சாந்தமாய், ஐந்துபொறி மயல்போய் = பஞ்சேந்திரிய பிரமமகன்று, அனகவறிவாய் = சுத்தசேதனமாய், தொழிலின்றி = நிட்கிரியமாய், அறியும் பொருள்தீர் அறிவேயாய் = சேத்தியவர்ஜித சின்மாதிரமாய், கனமாயுள்ளும் புறம்பினும்= பாகிய அந்தரவியாபியாய், நிட்களமாய் = அவயவமற்றவனுய், உண்டாமாத்திரமாய் = சன் மாத்திரமாய், சநநமரணம் இலா என்னை=பிறப்பிறப்பில்லாமல் அமலமாயிருக்கும் என்னை, தயங்கக்கண்டேன் சத்தியமே = சேடித்து விளங்கக் கண்டனன் உண்மையே.

(ஸ்ரீ -வீர.) நிர்மமனுய் அமனனும், சாந்தனும், ஐந்து இந்திரியப் பிரமமகன்றவனும், கேவலனான யற்றவனும், சுத்தசேதனனுகவே யான் உள்ளேன். சேதன மென்றதனே சேதனுவானுகிய ஜடாம்சத்திற்கும் கிரகணம் ஆகவேண்டாம் எனவதன் பரிசோதனப் பொருட்டுக் கூறல்:—அறியும் பொருள்தீர் அறிவேயாய் என்றதாம். திருசியமற்ற திருக்கு மாத்திரமாகிய யான் இவ்வியாவற்றையும் விளக்கிக்கொண் டிருகின்றேன், வெளியிலும் உள்ளிலும் வியாபித் திருக்கின்றேன், நிட்கல அமலசன்மாத்திரனேயான்.

(ச.) ஐந்துபொறிமயல்போய் என்பதனுல் நேத்திராதி இந்திரிய தாதான்மியம் நீக்கப் பட்டது, எண்ணம் எல்லாம்போய் = மனேவியாபாரம் நீங்கி, எனதற்று=எனதென்னும் அபிமானமற்ற அனகங்காரமாய், அனக அறிவாய் = சுத்தசேதனமாய்; ஜீவபாவத்தையும் ஒழித்தல்:—அறியும் என்றது. அறியும் பொருள்தீர் அறிவேயாய் = திருசியசம்பந்தமற்ற சின்மாத்திரமாய், உள்ளும் புறம்பினும் கனமாய் = பாகியாந்தர வியாபியாய், நிட்களமா யுண்டாமாத்திரமாய் = நிட்களாமல சன்மயமாய், மூலம்:—மம என்பது அவ்யயம், நிர்கத

மாயது மம என்னும் அபிமானம் எதனினின்றும். கலாகலனவர்ஜித: = மாயாசம்பந்த ரஹிதம், நிட்களாமலசன்மய:=நிஷ்கலம் = நிரம்சம், அமலமும் எச்சத்துவத்து அவ்வடிவமாய். (29)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இவ்வண்ணம் துவம்பதார்த்தம் பரிசுத்தமாயதை விசாரித்து அம்முகதானேயே தற்பதார்த்தத்தையும் பரிசோதித்துத் தணியும் பொருட்டுத் தொடங்கல்:—ஆவாவென்பது.

ஆவாவிப்போ துள்ளபடி யறியுநெறியி லெனையறிந்தே
னேவாவிகற்ப மற்றறிவுள் ளொளியாஞ்சீவ னுருவிதுவோ
தாவாதெங்கு முளநானுந் தத்துவத்திற் சகமெல்லா
மேவாகின்ற விரவிமுதற் கடமீறுக விளங்கியதால்.

(ப - கை.) ஆஆ இப்போது = ஆச்சரியம் ஆச்சரியம் இப்பொழுது, உள்ளபடி = யதார்த்தமாக, அறியுநெறியில் = உணரும் மார்க்கத்தில், எனையறிந்தேன்=என்னையுணர்ந்தேன், ஓவாவிகற்பம் = ஓயாதசலனம், அற்று =ஓய்ந்து, அறிவுள்ளொளியாம் = சித்துப் பிரகாசமாம், சீவனுருவிதுவோ = ஆன்மவடிவம் இஃதோ, தாவாதெங்கும் உள நானும் தத்துவத்தில் = குறைவின்றி யெவ்விடதிலும் இருக்கும் யானும் உண்மைவத்துவில், இரவிமுதல் கடம் ஈறுக மேவாகின்ற சகம் எல்லாம் = சூரியனே முதலாகக்குடம் வரையுமாகப் பொருந்தி நிறையும் உலகம் யாவும், விளங்கியதால்=இலங்காநிற்கும், ஆல் அசை.

(ஸ்ரீ - வீர.) அன்னிய நிரபேக்ஷத் தன்மையானே உத்தமதேஜசுவாய்ந்த இச்சேதனமாகிய தீபத்தானே, இக்கடபடாதியாய்ச் சூரியாந்தமாயுள்ள யாவுமே விளங்காநின்றன: ஆச்சரியம்! இப்போது உண்மையாகவே இது அது முழுதும் என்னால் ஸ்மரிக்கப்பெற்றது வியதாதி விகற்பருனிய சித்வடிவப் பிரகாசமாகிய இவ்வாத்மாவாக யானிருக்கின்றேன், என்னுமிது அநாத்மாசுவர நிராசமாம்.

(ச.) ஆஆ என்பது அறிந்ததைக் குறிப்பித்தது, சீவனுரு= ஆன்மரூபம், நானுந்தத்துவத்தால் = சேதனமான நானென்னுந் தீபத்தால், இக்கடபடாதியாய் இரவியீறுகிய சகமெல்லாம் விளங்கியது, அதனதொளியால் நானேத்தும் விளங்குகின்றது என்னும் சுருதியினாலென்றுணர்க. மூலம்:—ஆ என்பது மிருதியைக் குறிக்கும் அவ்வயமாம். சத்தியம் அகிலம் சர்வான்மகமுமாய இவ்வுருவம் என்னால் உன்னப்பெற்றது என்றன்னுவயம். அதே உருவத்தை விகற்பமற் றென்பதாதியாற் காட்டியதாகும்.

(ஸ்ரீ - வீர.) என்னாலே ஐம்பொறிகளும் திகழ்கின்றன வென்றும் எவையும் சென்ற போதும் யானே யொளிர்வன் என்றும் எண்ணுதல்:—உள்ளில் என்பது.

உள்ளிலொளியாற் கனற்பொறிக ளொளிர்வதென்ன வைம்பொறியுந்
தெள்ளியறியு மென்னாலே செறிசித்திரமாய்த் திகழ்ந்தனவாற்
றள்ளிலயனே டுட்பட்ட தனிக்கற்பாந்தத் துயிரீறுத்தும்
வெள்ளவெளியா மப்போது மீளாதொளிரு மென்வடிவே.

(ப - கை.) உள்ளில் ஒளியால் கனற்பொறிகள் ஒளிர்வதென்ன = தேஜசின் உட்பிரகாசத்தால் அக்கினி கணப்பந்திகள் பிரகாசிப்பதொப்ப, தெள்ளியறியும் என்னாலே=தெளிவாக உணரும் என்னாலே, சித்திரமாய்ச் செறியையும் பொறியும் திகழ்ந்தன = விசித்திர இந்திரிய விருத்திகள் விளங்கின, ஆல், அசை, தள்ளில் அயனோடு உட்பட்ட=அகற்ற முடியாத பிரஹ்மாவோடும் அந்தர்க்கதமான, தனிக்கற்பாந்தத்து =ஒப்பற்ற கற்பமுடிபில்,

உயிரனைத்தும் = ஜீவர்களனைத்தும், வெள்ளெளியா மப்போதும் = அடியோடுமறைந்த அப்பொழுதும், மீளாது = அகலாது, ஒளிரும் = பிரகாசித்துக் கொண்டிருக்கும், என் வடிவே = என்னுடைய வுருவமே.

(ஸ்ரீ - வீர.) தேஜசாந்தப் பிரகாசத்தானே எங்ஙனம் அக்கினிபூதங்களாய அங்காரகண பந்திகள் விளங்குகின்றனவோ, அங்ஙனம், ராண்டு விசித்திரமான இந்த இந்திரியவிருத்தி களியாவும் விளங்குகின்றன விதனனே. உத்தரோத்சரமாகப் பதின்மடங்க பார்த்திவாதி யாவரணவிருத பிரஹ்மாண்டவடிவ ஸிரி நிபவனத்தின் பரத்தினும், சாங்கிய வைஷ்ணவாதி தந்திரப் பிரசித்தங்களாய இருபத்து ஈான்கு எண்ணிகைவாய்ந்த தத்துவங்களின் அந்தத்தினும், சைவபாசுபதர் கருதியுள்ள மூப்பத்சாறு எண்ணிகைவாய்ந்த தத்துவங்க ளின் அந்தத்தினும், பதம்பரப்புவதாகி யெனதுரூபம் விரிவையே யடைகின்றது இன்றும் நீங்குவதில்லை; விரிவையே யென்றது வாஸ்தவமேயாய விஸ்தாரத்திற்கு விரிவுறுந்தன்மை யானே கற்பனேயாம்.

(ச.) ஐம்பொறியும் = இவ்விசித்திரேந்திரிய விருத்திகளும், உள்ளிலொளியாற் றெள் ளியறிவு மென்னுலே, திகழ்ந்தனவால், கனல் = அந்தர்கதாக்கினியால், பொறிகள் = காட்டகணங்கள், ஒளிர்வதென்ன, அப்போதும் இப்போதும் மீளாதொளிருமென்வடிவே = தேசகாலவஸ்துகளால் அபரிச்சின்னமாதலின் எவ்விடத்தும் பரிபூரணமாய் விளங்குவது எனது சொரூபமென்பது பொருள். எனது சைதன்யரூபம் சத்தியலோகத்தின் மேலினும், கற் பாந்தத்தினும், ஸ்தானத்தைச் சம்பாதிதுகொண்டு பரமாநிற்கும், இன்றும் அகலுவதில் லேயாம் என்பது கருத்து (31)

(ஸ்ரீ-வீர – அ-கை.) போதவடிவமே பூரணமாதலின் ஒதருபேதம தோதுறுமாறென் எனல்:—இவனென்பது.

இவனெனன் றுள்ளேபற் றெண்ணமெங்கே யெல்லையறப்
புவனமெல்லா நிறைந்தொளிரும் போதவடிவா மென்றனக்குக்
கவருமனப்பா வனைதானே கருதிலுண்டோ முடிவில்சுகத
துவமையில்லா வுபசாந்த வுணரவாங்கண்ணே யுலகெங்குஞ்

வனியாவன் ? யாவன்முன் பிராணதாரணவடிவ வாழ்க்கையை யுறுவன் ? அநந்தாநந்த சம் போகமாய், பரோபசம சாவினியாய், தூயதாயுள்ள இச்சின்மய திருவ்ஷ்டி அகிலதிருவ்ஷ்டி களிலும் ஜயம்பெற் றிலங்கும்.

(ச.) அபரிச்சின்னமான ஆன்மாவிற்கு இவனுனென்னும் பரிச்சேத பாவனையானது நிராலம்பமும், நிரோதகமுமா மென்பதுபொருள். உபகாத்த வுணர்வாம் கண்ணே = எனது திருவ்ஷ்டியே, உலகெங்கும் = சகலவஸ்து தரிசனங்களிலும், மூடிவில் சுகத்து = அநந்தா னந்தானுபவத்திலுல், உவமையில்லா = உவமையற்றதாம். பிரகிருவ்ஷ்ட உபசமசாலினியாய இவ்வெனது திருவ்ஷ்டி, சமஸ்தவஸ்து சரிசனங்களிலும் அநந்தமான ஆனந்தத்தை யதுப விப்பதாய்ச் சின்மயமாய் ஜயத்தையடையு மென்பது அன்வயமாம். (32)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சர்வான்மகமாய்ச் சுத்தமாயிருக்கும் பிரத்தியக் காண்மாவாக விலங்கும் என்பொருட்டே நமஸ்காரமெனல்:—நோக்க வென்பது.

நோக்கப்பட்ட நோக்கெல்லா நுண்மையறிவா நோக்கொன்றே
யாக்கப்பட்ட வுயிரனைத்தி னகத்தாயறிவ திலாவறிவாய்த்
தாக்கப்பட்ட தொன்றில்லாத் தனித்தத்துவமாய்த் தனையன்றிப்
போக்கப்பட்ட தில்லாவெம பொருட்டுவணங்கிப புகழுதுமால்.

(ப - ரை.) நோக்கப்பட்ட நோக்கெல்லாம் = பார்க்கப்பட்ட பார்வையாவும், நுண் மையறிவாம் நோக்கொன்றே = சூக்குமசித்தாம் பார்வையேகமே, ஆக்கப்பட்ட வுயிரனைத் தினகத்தாய் = படைக்கப்பட்ட சரீரங்களோடு கூடியபிராணிக ளெல்லாவற்றின் உள்ளாய், அறிவதிலா அறிவாய் = திருஷியத்சன்மை விடுபட்டசித்தாய், தாக்கப்பட்ட தொன்றில்லாத் தனித்தத்துவமாய் = சம்பந்திக்கத்தக்க திருஷியங்கள் யாதொன்று மில்லாதகேவல உண் மைவத்துவாய், தனையன்றிப் போக்கப்பட்டதில்லா வெம்பொருட்டு = பிரத்தியக்காத்மா வாய தன்னேத்தவிர அன்னியமில்லாத் தன்மயமான எம்பொருட்டு, வணங்கிப்புகழுதும் = நமஸ்காரஞ்செய்து தோத்தரிப்பாம், ஆல், அசை.

(ஸ்ரீ - வீர.) சர்வபாவாந்தரத் திருகப் பெற்றதாய், திருஷியம் விடுபட்ட சிதாத்மா வாய். பிரத்தியக்குச் சேதனரூபமா யிலங்கும் என்பொருட்டே நமஸ்காரம் நமஸ்காரம்.

(ச.) அறிவாநோக்கொன்றே = சின்மயமான அத்திருவ்ஷ்டியே, நோக்கப்பட்ட நோக் கெல்லாம் = அகில திருவ்ஷ்டிகளிலும் நுண்மையா மென்பது பொருள். உயிரனைத்து முகத் தாய் = சர்வபாவத்திற் குள்ளுமிருப்பதாய், தாக்கப்பட்ட தொன்றில்லா = திருஷியசம்பந்த மியாதுமற்ற, தனித்தத்துவமாம் = பிரத்தியகுக் சைதன்னியமாம், போற்றப்பட்ட தென் பது போக்கப்பட்டது எனத்தொடை நோக்கிநதிரிந்து நிற்கின்றது. ஆன்மாவே தேவதை யனைத்தும் என்னுஞ் சுருதியினுல் ஆன்மா அத்துவிதீயனுதலின் றனகமே வணக்கந்தகும். சர்வபதார்த்த அந்தரியாமியான விஷயசம்பந்த ரகித சற்சித்தாரூபமென்னும் பிரத்தியக் காண்மாவாகிய எனக்கு நமஸ்கார மென்றதாயிற்று. (33)

(ஸ்ரீ - வீர - அ - கை) நிர்விகாரசேதன சந்நிதியில், சகலசக்திகளும் நடிக்குமெனல்:— அறவுமென்பது.

அறவுநொய்தாய்ச் சமமாகி யவிகாரமதா யதிதமதா
யிறவுநிகழ்வோ டெதிர்வென்ன வெண்ணுங்கால மூன்றிலதாய்ப்
பிறவுநினக்கு நினைவின்றிப் பேதமற்ற வறிவாலே
நிறைவிதான சத்தியெலா நேரேசெய்யப் பட்டனவே.

(ப - ரை.) தாக்கற்றொன்றில் = ஒருபொருளிலும் சம்பந்தமில்லாத, அறிவுக்கு = சிதாத்மவஸ்துவிற்கு, சமமேயொழிந்து கண்டதிலே = சமத்தன்மையே யியற்கையல்லாமல் அயலொருவிதம் பார்த்ததில்லே, வாக்குக்கு எட்டாமையினாலே = வசனத்திற்குக் கோசரமாகாமையினாலே, வசனங்களினால் சமம்தோன்றா = வசனங்களினாலே சமமானதுதோன்றமாட்டாது, நோக்கற்கரிதாம் பொய்ப்பொருள்போல் நொய்தாய் = பார்த்தற் கரிதாகிய சூனியவதுதுவைப்போல அதிசூக்குமமாய், அழியா = சாசுவதமாம், நிராசைதனைத் தேக்கில் = ஆசையின்மை யதிகரிக்கவே, சமபாவனைதானே = சமதிருஷ்டியானது சுயமாகவே, திரைதீர் கடல்போல் சேடிக்கும் = நிஸ்தரங்க சமுத்திரம்போல நிகழாநிற்கும்.

(ஸ்ரீ - வீர.) வாக்குகட்கு அகோசரமாதலினாலே சாசுவதமாய அசத்தைபோல ஆம்; சூனியவாதிகளும் சைரோத்மிய சித்தாந்த தசையை அடைந்ததுபோல இருக்கும், உண்மையாயோ அடைந்திடாமலே யிருக்குமாதலின்போல என்றதாம், சத்திற் சசத்துத்தகைமை தகாமையின் என்பதுகருத்து. யாதிருகும் அது சாஸ்திரீய விவகாரதசில் பிரத்தியக்குத் தன்மையால் ஆன்மாவாம், அவ்வாறே பிருகத்தன்மையால் அதாவது பெருந்தன்மையாற் பிரஹ்மமாம், பரமார்த்த திருஷ்டியாலே வாக்குகட்குப் பிரவிருத்தி யின்மையின் ஒருசிறிதுமல்லவாம், பிரவிருத்தி நிமித்தகற்பனையாற் சப்தப்பிரவிருத்தி கூறப்பெறினே, அப்போழ்து சுகுகோசகாரணபாவத்தாற் சர்வப்பிரவிருத்தி நிமித்த கற்பனத்தால் அகிலமுமாம்; " எதனினின்றும் வாக்குகள் திரும்புற்றிடும் எய்தலாகாமையின் மனததொடுங்கூட " " ஆகலினஃதெலாமாகியே யொளிரும் " எனவும் சுருதியில் இருவகையாகவும் நிரூபணத்தாலே என்பது கருத்தாம். சருவதிருஷ்டியாளர்களும் பரம உபசாந்தியை யடைந்தபோது அஃதவத்தியா யிருத்தலின் லீனமாகாதபரையாய சமதைமோக்ஷமெனப் பெயரியதாம் என்றுமொழியப்பெறுமே.

(ச.) தாக்கற்றொன்று வறிவுகு = தனது வலியால் ஒன்றோடு மொன்றுத சிததகு, சமமேயொழிந்து கண்டதிலே, பூரணத்துவமே சேடிக்குமென்பது பொருள். சமம் = அச்சமத்துவத்தை யடைந்தறித்து; வாக்குக்கெட டாமையினாலே = விவகரித்தற் கரிதாதலின், பொய்ப் பொருள்போல் = சாசுவதமான சமதத்துவத்தை யடைந்ததுபோல, நோக்கற் கரிதாம் = சூனியவாதிகளின் சித்தாந்த அவஸ்தையான சூனியரூபத்தை யடைந்ததுபோற் சேடிக்கும். (35)

(ஸ்ரீ - வீர - அ - கை.) இவ்வண்ணம் பேதசங்கற்ப கலனத்தியாகம் உபாயத்துடன் வருணிக்கப் பெற்றது; இப்போது சங்கற்பச் செயல்களிற் சேர்ந்த சித்தானது மந்தமாய் விரியும்முறை இற்றெனவும், சங்கற்பகலிதமாய இது மந்தாபாசத் தன்மையானே இவ்வுலகத்தை நன்றுகப் பாரமார்த்திக ரூபத்தானே பார்ப்பதில்லே யெனவும், இச்சித்திருஷ்டி படலாவரணவதி போலாகி இவ்வாறு துன்புறுத்துகின்றதெனவும் திருஷ்டாந்த பூர்வகமாகத் தெரிவித்தல்:—செயலென்பது.

செயலுஞ்செயலி லாமையுமாய்த் தியங்குஞ்செயலிற் சேரறிவு
பயிலும்வலியிற் புட்போலப் பந்தமடையு மாதலினுன்
மயல்வெங்கோப மிரண்டாலும் வருந்தொந்தனையா மயக்காலே
யுயிர்களெல்லா நிலப்புழுப்போ லொன்றுமகலா தாகுவதாம்

(ப - ரை.) செயலும்செயல் இலாமையுமாய்த் தியங்குஞ்செயலிற் சேரறிவு=விரும்பும் வெறுக்கும் எண்ணவடிவ மலங்களோடு கூடிய உள்ளறிவானது, பயிலும்வலியிற் புட்போலப் பந்தமடையும் = அகப்பட்ட ஜாலத்திற் பக்ஷியென்னக் கட்டுப்பட்டழலும், ஆதலி

(ப - ரை.) அறவு நொய்தாய் = அத்தியந்தம் சூக்குமமாய், சமமாகி = எங்கும் ஒரு படித்தாய், அவிகாரமதாய் = விகாரமற்றதாய், அதீதமதாய் = சகலமுங்கடந்ததாய், இறவு நிகழ்வோடு எதிர்வு என்ன = பூசுவர்த்தமான பவிஷ்யத்தென்று சொல்லப்பட்ட, எண்ணுங்கால மூன்றிலதாய் = கணக்கிடும் காலத்திரயா தீதமதாய், பிறவுநினைக்கும் நினைவின்றி = எண்ணும் எண்ணங்களும் எண்ணப்பட்ட விடயங்களும் இல்லாததாய், பேதமற்ற அறிவாலே = எவ்வேற்றுமையுமற்ற உணர்வானே, நிறைவிதான சத்தியெலாம் = விசித்திரமான சக்திகளியாவும், நேரேசெய்யப்பட்டனவே = சந்நிதிமாத்திரத் தானேயியற்றப் பெற்றனவேயாம்.

(ஸ்ரீ - வீர.) இயற்கையின் சூழ்வாதாதாய், அதனுனே யேகரூபமாய், வாஸ்தவ விகார சூனியமாய், அவ்வச்சக்தி காரியானுசந்தானத்தோடு கூடியதாய், விளங்கும் பரமான சித்தினுலே விசித்திரசகதிகள் செய்யப் பெறுவனவாம். அற்றேல், விசித்திரமாய அருத்தங்களின் விசித்திர வெளிக்காட்சியால் யாங்ஙனஞ் சித்திற்குச் சமதையெனின் ? விகற்பஹீனமான சித்தானது கோடிக்கணக்கான பதார்த்த திருவ்டிகளில் ஒப்பாகவே நிகழ்கின்றமையின் என்க. திக்குக்கால வேற்றுமை கொண்டும் விடமபாவ மடையாதாம், சௌரியின் பிரபை போலும் சிற்பிரபை விளங்கலின், ஒன்றே பலவாய்க் களுவுறழ வொளிராகிற்கும், நிற்கவே பரிபூர்ண அகண்டமாய சுத்தசிததே அபின்ன காலததைப் பின்னியதாயே அதீதாதி திரிகால விவகார சதபின்ன மென்னவும், பிரததியக்ஷ அணுமிதி யுபமிதியாதி அநந்தமானமேய புருவ்பேத பின்னவித்தார மென்னவும் விளங்கிக்கொண் டிருக்கும். இதனுனே காலபேதம் வீருத்திபேத முறினும் அவற்றின் காரியாய அறிவுகளுப் பேதமின்றென்றும் அது பூர்ணமே யென்றும் அறிக. இதனுனேயே இனிப்பிரண்டு ஆதல் கசப்பிரண்டு ஆதல் ஒரேபோதில் ஆசுவாதிகைப் பெறின், விடயபேத மிருப்பினும் அநுபூதிபேத மிலதாம், இலதாகவே விடயாதிபேதம் சித்பேதப்பிரயோஜக மாகாதென்க. கூறியபொருளையே கூறுவேறுற் கூறல்:- இறவு என்பதாதி, நிகழ்கால திருசியத்தை யுபேக்ஷித்து, சென்றதிருசிய வாசனைப் பந்தனைகளானே ஹீனமான, திருசிய ஆதாரமாய காலத்திரயத்தையும் காணுத சித்திற்கு, எதிர்வாம் திருசியசையோகமும் சம்பவியாதாம், ஆகவே சமதையே நன்குசேடியாநிற்கும்.

(ச.) அறிவாலே = சித்தினுலே, நிறவிதான சத்தியெல்லா நேரேசெய்யப் பட்டனவே = விசித்திரங்களான சக்திகள் ஜகதிருவ்டியாதிக்கு அநுகூலங்களான பிரமாதிரூப மூர்த்திகளாகத் தரிக்கப்பட்டன வென்பது பொருள். மூன்றிலதாய் = மூன்றையும் அநுசந்தியாததாய், நினைவின்றி = சங்தோவ்ஷக் கிலேசமற்றதாய், பேதமற்ற = திருசியபேதத்தையுபேக்ஷிககும், அறிவாலே யென்று கூட்டுக. அறவுநொய்தாய் = அத்தியந்தம் சொச்சமாய்; சமமாகி = ஒப்புறுவதாய். அவிகாரமதாய் = நிர்விகாரமாய்ப் பரமாய். அதீதமதாய் = களங்கமலம் விடுபட்டதாய்; மூலம்:—உபேக்ஷித்ர்யா என்பது த்ருந் நந்தத்தானே, ருக்வேப் யோநீப்பென்பதால் ஹீப்பில் உருவமென வுணர்க. (34)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இன்ன வின்னபடியால் இன்ன வின்னவகையாக இலங்குமெனல்;—தாக்கற்றென்பது.

தாக்கற்றொன்றி லறிவுக்குச் சமமேயொழிந்து கண்டதிலை
வாக்குக்கெட்டா மையினுலே வசனங்களினுற் சமந்தோன்று
நோக்கற்கரிதாம் பொய்ப்பொருள்போ னெய்தாயழியா நிராசைதனைத்
தேக்கிற்சமபா வனைதானே திரைதீர்கடல்போற் சேடிக்கும்.

ஞல் = ஆகையால், மயல்வெங்கோபம் இரண்டாலும் = இச்சை துவேடமென்னும் இரண்டினாலும், வரும் = எழுந்த, தொந்தனேயா மயக்காலே = துவந்துவ மோகத்தினாலே, உயிர்கள் எல்லாம் = ஜந்துக்களியாவும், நிலப்புழுப்போல் = தரைக்கீடமொப்ப, ஒன்றும் அகலாதாகுவதாம் = ஒன்றுங்கூட நீங்காமல் நிகழும்.

(ஸ்ரீ - வீர.) இஷ்ட அநிஷ்ட சங்கற்பனரூப மலங்களானே உள்ளே யெச்சித்துச் சூழப்பெற்றதாமோ அதுதான், பாசபத்தமாயாகாயத்திற் செல்லமுடியாத பக்ஷியைப்போல விண்முழுதும் வியாபிக்க முடியாததாகும். இச்சைதுவேடங்களினின்றும் இனிதெழுந்து வந்தது வந்தமோகத்தானே = சுகதுக்க சீத உஷ்ணாதி ஆக்கல் போககல் அபிநிவேசத்தானே, ஜந்துக்கள், தரைப்பொந்திற் றவித்துமூழ்கும் கீடங்களின் சமத்தன்மையை யடைந்து அழல்வனவாம்.

(ச.) செயலுஞ் செயலிலாமையும் = இராகத்துவேட மூலங்களாகிற மனோதோஷங்களோடும், சேரறிவு = கூடிய சித்து. பயிலும்வலியிற் புட்போல = வலியாற் கட்டுப்பட்ட பட்சிபோல், பந்தமடையும் = விடுபடுதற்குச் சத்தியற்றதாம், ஆதலினால், நிலப்புழுப்போல் = நிலத்துக்கு ளமிழ்ந்திக டக்குங கீடங்களுக்குச் சமானமாவதன்றி விசேடமொன்று மல்லாதாகுவதாம். (36)

(ஸ்ரீ-வீர - அ-கை.) இப்போது அகண்ட வாக்கியார்த்ததைச் சாக்ஷாத்கரித்துத்தற் பாவததி லவத்திதமாய் அதிதர்லபமா யறியப்பெற்றதாய் உள்ள ஆன்மாவை மிகுந்த அன்புடன் வணங்கல்.—

நீடத்தகுமன் னுயிர்க்கெலா நெஞ்சத்துறைவாய் நெடுநாளாக்
கூடப்பெற்றே னுனேயிந்தக் குறைவில்பேற்றை யார்பெற்றார்
தேடப்பட்டாய் பெறபபெற்றாய் தெரியநின்றாய் விகற்பமெலாம்
வீடப்பட்டா யெதுவாகு யதுவாய்நின்றாய் மிகத்துதிபபாம்.

(ப - மை.) நீடத்தகு மன்னுயிர்க்கெல்லாம் = விஸ்தாரமான உலகிலுள்ள உயிர்கள் எவற்றினதாகும், நெஞ்சத்துறைவாய் = உள்ளதற்கு கணனே யிருப்பாய், நெடுநாளாக கூடப்பெற்றேன் உனே = வெகுகாலங்கழித்து நினேயறிந்து சேர்ந்தேன், இந்தக்குறைவில் பேற்றையார் பெற்றார் = இப்பூரணமாகிய பிரயோஜனத்தை யாவரேபெற்றவர், தேடப்பட்டாய் = ஆராயப்பெற்றாய், பெறப்பெற்றாய் = அடையப்பெற்றாய், தெரியநின்றாய் = உதயமானாய், விகற்பமெல்லாம் வீடப்பட்டாய் = சகல விகற்பங்களினின்றும் விடுபட்டாய், எதுவாகுய் அதுவாய் நின்றாய் = எதுவாயிருத்தியோ அதுவேயா யிருக்கின்றாய், மிகத்துதிப்பாம் = அதிகமாகப் போற்றுவாம்.

(ஸ்ரீ - வீர.) கெடாத சிதாத்மாவாகிய என்பொருட்டு நமஸ்காரம், சகல ஆன்மவடிவான என்பொருட்டு நமஸ்காரம், உலகுத்தின் ஞானப்பிரகாசத்தின் நிமித்தபூதமாய மணியாய தேவனுமென்பொருட்டு நமஸ்காரம், கீழ்மிபோழ்துபோய் நின்னேயானுது நெறியிலறிந்து நேர்ந்தேன் அந்தோ ஆச்சரியம், என்னுமிதனே,"நிலவனுவளவி னேராசெகிழ்த்திய படியினுன்கு, குலவனுவதனர் போயும் கொண்டிடற் கரியதாகித், தலவனுவர் திருமின்றித தடையடு சுகமாசிந்துப், பலவனுகுதனினுன் மப்பயனினும் பரம்பேறின்றும்" என்னும், சுவாராஜ்ய சித்தியின் கண்ணுங் காணலாம். அரியதாகியனுகு பயனினுமின்று மென்று சேர்க்க, நன்காராயப் பெற்றாய், அதனுனே இனிதடையப் பெற்றாய், உனது பரமார்த்த ரூபத்தானே நன்குவெளிப்பட்டு விட்டாய், நெடும்போது கழித்தன்றே நேர்ந்தாய், சகல

விகற்பங்களினின்றும் எடுத்துய்யப் பெற்றாய், சேடித்தபோது யாது ஆகியிருந்தாய் அது வேயாய் அமர்ந்தாய், அத்தகைய யானுகிய நின்பொருட்டு நமஸ்காரம்.

(ச.) தேடப்பட்டாய் = சுருதியினுலும் ஆசாரியவாக்கியங்களாலும் நன்ருய் விசாரிக்கப் பட்டவனுலும், ஆதலினுல், விகற்பமெலாம் = கற்பிதாகார மியாவற்றினு நின்று, வீடப் பட்டாய், அதனுல், தெரியாநின்ருய் = உத்தமமான சத்தியஞானனந்தாதி லக்ஷணமாகிய சொரூபமாகப் பிரத்தியக்ஷமானுய், அதனுல், பெறப்பெற்ருய் = ஐக்கியத்தாற் சோகமென அபரோக்ஷமாகவே அநுபவிக்கப் பட்டாய், எதுவானும் = இங்ஙனம் மூன்பு எந்தரூபனு யிருந்தனையோ, அதுவாய் நின்ருய் = அந்தரூபமாகவே இப்போது மிருக்கின்ருய், மிகத் துதிப்பாம் = கற்பிதாகார நிவிருத்தியாற் சொரூபமாகவே யிருக்கின்ருய், அத்தன்மையான நினக்கு நமஸ்காரம் என்பதுகருத்து. மூலம்:—லோகாலோகமணே=லோகங்களே யொளிர் விக்கும்படியான மணியே ! (37)

(ஸ்ரீ - வீர - அ - கை.) மகாவாக்கிய விசார பூர்வகமாகத் தன்னைத் தொழுதல்:—நானேயென்பது,

நானேநீயாய் நீநானுய் ஞானவடிவாய் முடிவின்றித்
தானேயாகி யண்டத்தின் றலையாய்ப்பரம தத்துவமாங்
கோனேயுன்னை தொழுகின்றேன் கொண்டன்மறையா நிறைமதிபோ
லூனேர்நினைவு களின்மறையா வொளியாமுருவே யுனைப்பணிகேன்.

(ப - ரை.) நானே நீயாய் = அகமேதுவமாய், நீநானுய் = துவமகமாய், ஞானவடிவாய் = அறிவு சொரூபமாய், முடிவின்றி = அநந்தமாய், தானேயாகி = சுயமேயாகி, அண்டத்தின் றலையாய் = தேவாதிதேவனுய், பரமதத்துவமாம் = மேலானதத்துவமாம், கோனே = பரமாத்மாவே, உன்னைத் தொழுகின்றேன் = நின்னை நமஸ்கரிக்கின்றேன், கொண்டல் மறையாநிறைமதிபோல் = மேகமறைக்காத சந்திரன்போல, ஊனேர்நினைவுகளின் மறையா = தேகான்மாதி மதிகளினுலே மறைக்கப்பெருத, ஒளியாமுருவே யுனைப் பணிகேன் = சிற்பிரகாச வடிவமே யுன்னை நமஸ்கரிக்கின்றேன்.

(ஸ்ரீ - வீர.) என்பொருட்டு உன்பொருட்டு அநந்தப்பொருட்டு, என்பொருட்டு உன் பொருட்டுச் சிவவடிவப் பொருட்டு, நமஸ்காரம், முதலில் என்பொருட்டு உன்பொருட்டு என்னும் பதங்கள் பரஸ்பரவிசேஷணத்தால் சோதன அர்த்தத்திலாம், அதனுனே யநந்தப் பொருட்டாம், இரண்டாவதிலோ, அகண்டைகரசத்தன்மை லக்ஷண வாக்கியார்த்த லாபார்த்தத்திலாம், அதனுனே சிவவடிவப் பொருட்டாம், பிரஹ்மாதி தேவர்கட்கும், சர்வேந்திரியப் பிராணமனசுகட்கும், அதிதேவன் பொருட்டு, அதிஷ்டாவின் பொருட்டு, பிரகாசகன் பொருட்டு, பரன்பொருட்டு, பரமாத்மாவின் பொருட்டு நமஸ்காரம். மேகாவரணம் நீங்கப்பெற்ற பரிபூர்ண இந்து பிம்பம்போலக் கலனுவரணம் கழியப்பெற்ற தன்வடிவத்தையே நமஸ்கரிக்கின்றேன்.

(ச.) அண்டத்தின் றலையாய் = தேவாதிதேவனுய், கோனே = பரனுய பரமான்மாவே, ஜீவபரங்களுக்கு ஐக்கியத்தினுல் நானே நீயாய்த் தொழுகின்றேன் என்றது, எனதுரூபமாகிய வனதுரூபத்தை யென்பது கருத்து. மூலம்:—என்வடிவமாய உன்பொருட்டு நமஸ்காரம், உன்வடிவமாய என்பொருட்டு நமஸ்காரம்; அவித்யாவரணம் அகலப்பெற்றதனுனேயே கண்மகன்ற பூன்ற நிலவின் பிம்பம்போல விருப்பது. (38)

(ஸ்ரீ-வீர - அ-கை.) நிராவரண வடிவமாகிய என்னையே வணங்கிப் பற்றற்றிருப்பேன் எனல்:—உன்னலென்பது.

ஞான வாசிட்டம்

உன்னலென்னு மாவரண மொன்றுமில்லா வெளியாகித்
தன்னதான சுகவடிவிற் ருனேவிளங்கித் தன்வசமா
மென்ன தருவை யான்பணிகே னிருந்துநடந்துஞ சாந்தமுற்று
மன்னதன்ன திலதாகு மனேத்துஞ்செய்தும் பற்றிலதாம்.

(ப - ரை.) உன்னலென்னும் ஆவரணம் = அபிமானவடிவ நினேவுகள் என்பனவான மறைப்புகள், ஒன்றும் இல்லாவெளியாகி = யாதொன்று மின்றிய வெட்டவெளியாகி, தன்னதான சுகவடிவில் = தன்னுடையதேயான ஆனந்தவடிவத்தின் கண், தானேவிளங்கி = சுயமாகவே யிலங்கி, தன்வசமாம் = தனதுவயமாம், என்னதருவை = எனதுவடிவத்தை, யான்பணிகேன் = யான் நமஸ்கரிக்கின்றேன், இருந்தும் நடந்தும் சாந்தமுற்றும் = இருப்பதாயும் நடப்பதாயும் சாந்தமுடைத்தாகியும், அன்னது அன்னது இலதாகும் = அவ்வதனேயியற்றுதாகும், அனேத்தும் செய்தும் பற்றிலதாம் = யாவற்றையு மியற்றியும் சம்பந்த மற்றதாம்.

(ஸ்ரீ - வீர.) ஆவரணம் யாதொன்று மின்றி, சுவாத்மாவாகிய ஆனந்தைகரசத்தில், அனன்னிய ஆதாரத் தன்மையானே பாரமார்த்திக ரூபமாக விசிராந்தமாயதும், நிராதார மென்பது நிரண்டபொருள்; சுவப்பிரகாசமாய், சுவாதீன சுவாநந்தமாய், அனன்னியமா யிருப்பதும் ஆகிய என்னே யான் நமஸ்கரிக்கின்றேன்: சர்வ உத்கர்ஷமாக என்னே யான் அது சந்தானஞ்செய்வேன் என்பதாம். ஓங்காரவடிவமாய ஆன்மா யாவற்றையும் ஒளிர்வித்தலின் யாவுமாம் யாதும்செய்தும் செய்திலதெனல்:—இருந்தும் என்பதாதி. எப்போதும் நிட்கிரியமாயினும், உட்காராததுபோலத் தூவஞுதி விவகாரத்தினின்றும் உபரதமடையாதாம், வாயுவாதித்தியாதி வடிவமாய்ச் சதாகதியுடைமையின் அவ்வாறே காலவடிவமா யெப்போதுஞ் சென்றுகொண் டிருந்தபோதினும் குலால சகரம்போல, திலமாதிரமும் அயற்பானடப்பதில்லே, நிர்வியவகார மதேயாயினும், சர்வவியவகாரமதேயாம், செய்வதேயாயினுஞ் செறிவதேயில்லே. அற்றேற் பூர்வஞ் செய்தவகையானே இப்போது சுகதுக்கங்களானேபற்றும். இப்போதீண்டு இயற்றலானே இனிப்பாத்திற் பற்றையடைந்திடும், அங்ஙனமாகயாங்ஙனம் செய்வதேயாயினுஞ் செறிவதேயில்லே யென்றேதியதோ வெனின்? முன்னரின்றும் அவ்வாறே யிப்போதினியும், இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் இகலோக சந்திபூதசுவப் பிரஜுதானத்திலும், சாஸ்திர அநிஷ்டித சுபகர்மபலபுக்காகியும், சாஸ்திரநிஷ்டித அசுபகர்ம பலபுக்காகியுமிது, சர்வபோக விருத்திகளிலும் சமமாகவே யிருக்கும்; திருஷியபோகங்களானே திருக்கிற்குவிகார அசித்தியாதலின் என்பது கருத்தாம்.

(ச.) ஆவரணம் = அவித்தியாவரணம், தன்னதான சுகவடிவில் = ஆனந்தான்மகமான சொச் சொரூபத்தில், தன்வசமாம் = அநந்தியாதீனமான, இருந்தும் = நிஷ்கிரியஞுதலி னிருப்பவனுயினும் இருக்கும்தேகாபிமான மின்மையின் இருப்பவனன்று, நடந்தும் = தேசாந்தரத்தைப் புணரினும், செல்லுங்கிரியை தேகநிஷ்ட மாதலினுனும், ஆன்மா அதற்கங்கியமாதலினுனும் சென்றிலன், சாந்தமுற்றும் = நிர்விகாரசித்தஞுயினும், சர்வேந்திரியங்களேயும் பிரவர்த்திப்பவனுதலின் விவகரித்திருப்பவனுமாம், இவ்வர்த்தத்தையன்ன தன்னதிலதாகும் என்றதில் அடக்கிக்கூறினர்; அனேத்துஞ்செய்தும் = இங்ஙனம் விவகரிப்பவனுயினும் ஆன்மாபற்றிலதாம் புண்ணிய பாவங்களாற் சம்பந்தமுறுதவனும், அகங்கார நிவிர்த்தியாதலி னென்க, மூலப்படி:—முதிதே = ஆனந்தான் மகமான, ஸ்வவபுஷி = தனது வடிவத்தில், தன்னின் அயலாய ஆதாரத்திலோ அல்லவாம், ஸ்வயம் = தன்னுனே, அயற்காரணத்தா லல்லதாம், ஸ்வசமஸ்தம் = தனது சொரூபபூதம், கிரியாரூபத் திதியுடை

யதோ அல்லவாம், ஸ்வயமுதிதம் = தானுகவே வெளிப்புறிவதாம், ஸ்வவசம் = அயற்பற்றுக்கோ டற்றதாம், ஸ்வயம் கமாமி = இத்தன்மையதன்று வடிவத்தையே நமஸ்கரிக்கின்றேன். (39)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அற்றேல் அசையாதது யாங்ஙனம் சுழலும் எனின்; நித்தியாத்மசத்தைக்கேஸ்பந்த சத்தாத்தன்மை யுண்மையின் நித்தியம் ஸ்பந்தமயமாம் அதன்ரூதாத்மியத்தால் என்க, எனினும் மனமாதல் புலன்களாதல் தேகாதிகளைப் பிரவிருத்தியாநிற்கும் ஆன்மாவல்லவாம் எனின் விடைதரல்:—பல்லவமென்பது.

பல்லவங்க டமையசைக்கும் பவனன்போல மனமுதலாய்ச்
செல்லுங்கரணங் களேயிந்தச் சித்தாம்புருட னசைத்திடுமால்
வல்லபாகர் நடத்துகின்ற வாசித்திரள்போற் றனதான
வல்லன்மேவப் பொறியெல்லா மவனேபரிக்கு மநவரதம்.

(ப - ரை.) பல்லவங்கள்தமை யசைக்கும் பவனன்போல = இலைகள்தம்மை இயக்கும் காற்றேபோல, மனமுதலாய் = மனதேயாதியாக, செல்லும் கரணங்களே = விடயங்களிற் போம் உட்புறப் புலன்களே, இந்தச் சித்தாம்புருடன் அசைத்திடும் = இவ்வறிவுருவமாய புருடன் சலிப்பித்திடுவன், வல்லபாகர் நடத்துகின்ற வாசித்திரள்போல் = சாமர்த்திய முடைய சாரதிகள் செலுத்துகின்ற அசுவக் கூட்டமேபோல, தனதான வல்லன்மேவப் பொறியெல்லாம் = தன்னுடையதான விடயங்களிற் சுழன்றலைந்திடப் புலன்கள் அனைத்தையும், அவனேபரிக்கும் அநவரதம் = அவ்வான்மதேவனே நடத்துமெப்போதும். ஆல், அசைநிலை.

(ஸ்ரீ - வீர.) இவ்வான்மா, பல்லவங்கடம்மை யசைக்கும் மாருதமேமான மனங்களைக் கலக்கும், சாரதி யசுவமாலையைப்போல, தனது இந்திரியப் பந்தியை நடத்திடும். இவ்வான்மா, அத்தியந்தத் துர்த்தசையை யடைந்ததுபோலத் தேகதேகத்தில் எப்போதும் வினைவிளைத்து விளையாடும், போல என்றது துர்த்தசை மித்தையெல் அணர்த்தற் பொருட்டு, பூர்வவிருத்த தசைகளிலும் பொருந்துக, வீபுவாகிய ஆன்மா, சம்சாட்டைப் போலத் தன்பாலே சொஸ்தமாயிருந்து கொண்டு போகம்புரித்து விளையாடு மென்பதுகருத்து.

(ச.) மனம் முதலாய்ச் செல்லுங் கரணங்களே = மனமபுத்தியாதிஅந்தக் கரணங்களே, பொறியெல்லாம் = வாகியேந்திரியங்கள் அனைத்தையும், பரிக்கும் = நடத்துவன். (40)

(ஸ்ரீ-வீர - அ-கை.) தேடல் துதித்தல் தியானித்தல் முதலிய சகலத்திற்கும் இவ்வான்மாவே தகுதியதெனல்:—இவனே யென்பது.

இவனேதேடப் படுகிற்போ னிவனேதுதிக்கப் படுகிற்போ
னிவனேதியானிக் கப்படுவோ னிவனுன்மரண மயக்கொழிந்த
திவனேயெளிதி னெய்திடுவோ னிவனேநன்ரு யறிகிற்போ
னிவனேயெல்லார் மனக்கமலத் திடையிலிருக்கு மிசைவண்டே.

(ப - ரை.) இவனே தேடப்படுகிற்போன் = இவ்வான்மாவே ஆராயத்தக்கதாகும், இவனே துதிக்கப் படுகிற்போன் = இதுவே தோத்திரித்தற் குரித்தாகும், இவனே தியானிக்கப்படுவோன் = இதுவே தியானஞ்செய்தற் குரித்தாகும், இவனுன் மரணமயக்கு ஒழிந்தது = இதனுனே மரணமோக மழிந்தது, இவனே எளிதின் எய்திடுவோன் = இதுவே சுலபமாக அகப்படுத்தப் பெறும், இவனே நன்ருயறிகிற்போன் = இதுவே சம்யகாகாரச்

சாக்ஷாத்கரிக்கப்பெறும், இவனேயெல்லார் மனக்கமலத்திடையிலிருக்கும் இசைவண்டே = இதுவேயாவருடைய இருதய தாமரையிடையிலும் வீற்றிருக்கும் கான்வதுகாலாம். ஏகாரம் தேற்றப்பொருட்டாம்.

(ஸ்ரீ - வீர.) இதுவே யெப்போதும் ஆராய்தற்குரியது, புகழுதற்கும் தியானித்தற்கும் உரியது, தேடியவிதனுனே ஜராமரண சம்மோகத்தினின்றும் கடந்தேறிக்கதியடையலாம், இது அத்தியந்தம் சுலபமாம் = ஞானமாத்திரத்தானே கிடைக்கக் கூடியதாம், ஆப்தபந்து வைப்போலச் சுஜேயமாம் = ஸ்மிருதி மாத்திரத்தானே வயப்படுத்தற்கு யோக்கியமாம், சர்வப் பிராணிகளினுடைய சரீரபத்மகரத்துமுறையும் வேட்பதமேயாம்.

(ச.) இவனே = இவ்வான்மாவே, தேடப்படுகிற்போன், அவன்றேடற் குரியன் அவன் அறிதற்குரியன் என்னுஞ் சுருதியினுல், இத்தன்மையாகவே, இவனுல் = இவ்வான்மாவால், மரணமயக்கு = சராமரண சம்மோகமயமான சமுசாரமானது, ஒழிந்தது = ஒழிந்ததாம், நன்றுடிகிற்போன் = கிட்டிய பதுபோல் அத்தியந்தம் செவ்வையா யறிதற்குரியன்.(41)

(ஸ்ரீ-வீர - அ-கை.) போகத்தில் விருப்பற்ற எனக்கு வந்தது வருக, வாராதது ஒழிக வெனல்:—மேவலென்பது.

மேவலுற்ற போகத்தில் விருப்புவெறுப்பு மெனக்கில்லை
யாவதெய்து மதுவருக யாதுபோகு மதுபோகப்
பாவமிகுமிவ் வஞ்ஞானப் பகைவனுலே விவேகமெனு
மேவமில்லாப் பொருளெல்லா மிழந்தேனுணர்வா லவைபெற்றேன்.

(ப - கை.) மேவலுற்ற போகத்தில் விருப்பு வெறுப்பும் = கருமவயத்தால் அடையா நின்ற விடயங்களில் இராகமும் துவேடமும், எனக்கில்லை = ஆராய்வுற்ற என்றனக்குக் கிடையாது, யாவது எய்தும் அதுவருக = யாது அடையா நிற்குமோ அஃதடையுறுக, யாதுபோகும் அதுபோக = எஃதகலுமோ அஃதகலுக, பாவமிகு மிவ்வஞ்ஞானப் பகைவ னுலே = மறமதிகரித்தற் கேதுவாகிய இந்த அறியாமையாகிய சத்துருவினுலே, விவேகம் எனும் = பகுத்துணர்வு என்னும், எவம் இல்லாப் பொருளெல்லாம் = குற்றமற்ற சர்வ ஐசுவரியத்தையும், இழந்தேன் = கைவிடப்பெற்றேன், உணர்வா லவைபெற்றேன் = ஞானத்தால் அவற்றை யடைந்தேன்.

(ஸ்ரீ - வீர.) போகஸ்திதியின் கண்ணே யெனக்கு வாஞ்சையுமில்லை, போகவிவர்ஜன மாயின் துயரமுமில்லை, யாதுவருமோ அதுவருக, யாது செலுமோ அது செல்க. சுகங்களி லெனக்கு அபேக்ஷையுமில்லை, துக்கவிருத்திகளி லுபேக்ஷையுமில்லை சுகதுக்கங்கள் வரு மேல்வருக, போமேற்போகுக, இவற்றில் யான்யார், ஜடங்கட்கும் சேதனத்திற்கும் என்னே சம்பந்தம்? நானுவித வாசனைகள் தேகத்தில் அஸ்தமாகுகதான் உதயமாகுகதான், இவை களில் யானுமில்லேன், எனக்கிவை யெவையுமில்லை, இவை = வாசனைகள்; இத்தூணைப் போதும் யான் அஞ்ஞான நிபுணுலே ஹதனுனேன், என்னுடைய விவேகசர்வ ஐசுவரி யத்தை யபகரித்துக்கொண்டு என்னை யத்தியந்தம் தனித்திம்சித்தது, அப்பகை; மூலத்தில் அவபோதிதம் என்பது பாடமாயின், அவிவேக சர்வஸ்வம் எனப் பதச்சேதஞ் செய்க, வைஷ்ணவ அதுக்கிரகத்தானே என்னுடைய அவிவேக சர்வஸ்வம் அபகரிக்கப்பெற்று நிய ஏகசுபாவமாய பிரஹ்மம் அறிவிக்கப் பெற்றேன் என்றுணர்க.

(ச.) மூலம்:—ஏகாந்தம்=பரர்கள் அறியாதபடி, அவபோதித:=ஹிம்சிதன் ஆனேன்.

(ஸ்ரீ-வீர - ஆ-கை.) மன அகங்காராதிகள் போய்க் கேவலத்தத்துவமா யிருக்கின்றேன் எனல்:—தானேயுமென்பது.

தூனையுமனத்தான் மனமமுத்துத் துயர்செய்யகங்கா ரந்தீர்ந்து
நினைவானினைவு போயசையா நிலைக்கேதனிக்கே வலகின்றேன்
வினையாநினைவற் றகங்கரம்போய் மேவுமனம்போய்த் தொழிலின்றித்
தனையேகிகர்கே வலத்தொடர்ச்சித் தத்துவத்தென் வடிவிருக்கும்.

(ப - ரை.) தூனைய மனத்தான் மனமமுத்து = சுத்தவாசனை விசிஷ்டமனத்திலே மலினவாசனை விசிஷ்டமனததைக் கெடுதது, துயர்செய் அகங்காரக் தீர்ந்து = துன்புறுத்தா நின்ற அகந்தையொழித்து, நினைவால் நினைவுபோய் = பாவத்தாற் பாவங்கழிந்து, அசையா நிலைக்கே தனிகேகவல நின்றேன் = சொச்சமாய்க் கேவலமாய்த் திரமாயிருக்கின்றேன், வினைய நினைவற் றகங்கரம்போய் = பந்தமாம் பாவமற்று அகங்காரமற்று, மேவுமனம் போய்த் தொழிலின்றி = மனமற்று மற்றொரு செய்கையுமற்று, தனையேகிகர் = தனககே யொப்பாம், கேவலத்தொடர்ச்சித் தத்துவத் தென்வடிவிருக்கும் = அத்தியந்தம் சுத்த வடிவமாய்த தத்துவமாய் என்னுடைய சொரூபமிருக்கும்.

(ஸ்ரீ - வீர.) மனத்தினுலே மனங்கெட்டிட, நிரகங்காரத் தன்மையும் அடைந்திட, பிரஹ்மாகம் பாவத்தானே தேகாதியகம் பாவங்கழிந்தோடவே சொச்சமாய்க் கேவலமா யிருந்திடுவேன்; பாவனஹேதுவாய புத்திருனியமாய், நிரகங்காரமாய், மனமற்றிட இச்சா ஹேதுவாய சித்தருனியமாய், கேவலமாய், பிராணனக்கிரியா மாத்திரத்தானே சுத்த ஆத் மாவாய், இலங்கும் ஜீவன் முக்தாத்மாவின் கண்ணே யிருக்கும் எனதுவப்; "ஆதலினலோ விரதஞ்சரித்தமைக, ஓதருபிராணனபான னெடிடவே" எனச்சுருதியு மறைகின்றது.

(ச.) தூனைய மனத்தால் = சாஸ்திரவிரைவுள்ள மனுவிருத்தி விசேடத்தால், மனம் = சம்சாரவாசமுள்ள சித்தத்தை, அறுத்து = நிரகங்காரத்தை யடைந்து, நினைவால் = பிரஹ்ம மத்தை அத்தொய்தமாய்க் காணுந் தாற்பரியத்தால், நினைவுபோய் = சம்சாரப் பிடிப்புள்ள பாவம் நீங்கிக்கேவலஞுகிச் சுவத்தனு யிருகின்றேன் என்றதாயிற்று, சுவத்தன் = சுகன், தத்துவத்து = சுத்தாத்மாவில், மூலத்தில் நிரப்பாவ மென்பதாதி திஷ்டதிக் கிரியையின் விசேஷணமாம், பாவம் = சம்சாரவாசனை. (43)

(ஸ்ரீ - வீர - அ - கை.) அகங்காரம் அகன்று ஐக்கியமடைந்ததை யறைதல்:—காத லென்பது.

காதலென்னுங் கட்டறுத்துக் காயமென்னுங் கூடகன்று
சாதன்மேவு மகங்கரமாந் தனிப்புள்ளெங்கே பறந்துளதோ
வேதமறுநீ நானுனீ யென்னுமொருமை யிருமையதா
யோதும்விதியான் மீண்டொன்றி யுயர்நீநானு னியானேம்.

(ப - ரை.) காதல் என்னுங்கட்டு அறுத்து = திருஷ்ணாரஜ்ஜு குணத்தைச்சேதித்து, காயமென்னும் கூடகன்று = எனது சரீரமாகிய பஞ்சரத்தினின்றும் சென்று, சாதன்மே வும் அகங்கரமாம் = நைசுவரமாம் தாரகங்கிருதி யென்னும், தனிப்புள்ளெங்கே பறந்து ளதோ = ஒப்பற்ற பக்ஷியானது யாண்டு பறந்தோடி விட்டதோ அறியேன், வேதமறு நீ = குற்றமில்லாதநீ, நான் = யான், நான் நீ என்னும = அகம் துவம் என்னும், ஒருமை இருமையதாம் = பேதமின்மை பேதமுண்மையதாய், ஓதும் விதியால் = வேதப்பிரதிபாத் தியமான தெய்வகதியால், மீண்டொன்றி = அறியாமை நீங்கப்பெற்று மீளவும் பொருந்தி, உயர் நீ = பரிபூரணமாகிய நீ; நான் = யான், நான்நீ = கூடஸ்தனுகிய யான் நீ, ஆனேம் = ஆகிவிட்டோம்.

(ஸ்ரீ - வீர.) துரகங் கிருதியாகிய பகுதியானது திருஷ்ணராஜ்ஜு குணத்தைச் சேதித் துக்கொண்டு எனது சரீரசபஞ்சரத்தினின்றும், இளம்பி எங்குசென்றதோ யானறியேன், இத்தணைப்போதும் இவ்வாறுக மகா அகங்தையை யடைந்து பரிதபித்த தென்னையக்தோ! இப்போது பகவானுகிய ஆன்மாவைக் கண்டேன், இனிவிடேன் தன்மயமாதலின்; இது பற்றியே "உடலமான்ம வுணர்வென மெய்யுணர், வுடலமான்ம வுணர்வை யொழிப்பதாய், மடமைமாய்ந்திடத் தன்னிடத்தேமனும், விடும்விழை விஷ்ணேனும் விடுபடும்" என்பர் பெரியோர். பாக்கியத்தானே என்றன்மையை யடைந்துளாய், பாக்கியத்தானே உன்றன் மையை அடைந்துளேன், ஹேதேவ! அகம்துவம் துவம் அகம், பாக்கியவயத்தால், நம்மிரு வருக்கும் பேதமில்லையேயாம், நானீ நீநான் என்னும் மாற்றுப் பார்வையால், அபேதம் திடப்படுத்தியதாம்; அகம்துவம் என்பன பரியாயங்களே யாவனவாம்.

(ச.) நீ நானுநீ = தேவனே நான் நீ நீ நான் என்னும், இருமை = இருவருக்கும், ஒரு மையதாய் = பேதமின் றென்பதாய், ஒதும் விதியால் = தெய்வகதியால், நீ நானும் = எனது ரூபமுள்ளவனுனய், நீயானேன் = உனது ரூபமுள்ளவனுனேன், என்பது பொருள்.

((ஸ்ரீ-வீர - அ-கை.) இங்ஙனம் சிற்பிரகாசத்தோடு கூடாதசத்தும் அசத்பிராயமேயாம் என்றறைதல்.—ஒழிவிலென்பது.

ஒழிவிலுலகின் சீரெலாம் முண்டாயிருந்து நீயிலேயேல்
விழியிலவர்க்குப் பேரெழில்கூர் மின்னுரைப்போல் விளங்காதால்
வழுவிறேவே சயசாந்தி மன்னுமிடமே சயவேத
முழுதுக்கயலே சயவேத மூளத்தவிடமே சயவென்னு.

(ப - ரை.) ஒழிவில் உலகின் சீரெல்லாம் = சேடமற இலௌகிகச் சிறப்புகள்யாவும், உண்டாயிருந்தும் நீயிலேயேல் = இருப்பனவாயினும் நீயில்லாவிடின், விழியில் அவர்க்கு = நேதத்திரமில்லாதவர்கட்கு, பேரெழில்கூர் மின்னுரைப்போல் விளங்காதால் = மிகுந்த அழகோடுகூடிய மங்கையரைப்போல விளங்காவாம்? ஆல் அசை, வழுவில் தேவேசய = கெடுதலில்லாத பெரிய தேவ தேவனே ஜய, சாந்திமன்னு மிடமேசய = சாந்திபொருந் தும் இடமேஜய, வேதமுழுதுக் கயலேசய = சருவ ஆகம அதீதனேஜய, வேதமூளத்த விடமே சயவென்னு = சர்வ ஆகம ஆஸ்பதனே ஜயவென்று தியானித்து,

(ஸ்ரீ - வீர.) வஸ்து பணமதுரிய ஸ்ரீ இருந்தபோதினும் நீயில்லாதிருந்தால் இல்லாததேயாம், கண் ணில்லாதவர்க்கு வனிதை சம்பந்திரூபலாவண்ய சதசதையேபோலும்; இப்போது விவேகி அவிவேகிப் பிரசித்தரூப மிரண்டினுலும் தோத்தரித்தல்: — வழுவிலென்பது. பிரஹ்மாண் டாதி யதிவிஸ்தாரமான ஆகாரமுடையவனே வெல்க, சாந்திபராயணனே வெல்க, சர்வ ஆக மாதிப் பிரமாண அதீதனே வெல்க, சர்வ ஆகமாதிப் பிரமாண வேத்தியனே வெல்க; என் றெண்ணி.

(ச.) ஆன்மாவையே துதித்தல்:—வேதமுழுதுக் கயலே = சர்வாகமாதீதனே யென் பது நாமஜாதியாதி அபாவத்தினுல், வேதமூளத்த விடமேயென்பது, சர்வோப கிடதாற் பரிய கோசரமாதலின்: மூலம்:—ப்ரோட்டாமர: = பயங்காபைரவாதி யாகாரமுடையவன்; சர்வாகமாஸ்பத = சர்வோபநிஷத் சமன்வயகம்மியத் அனுபவி தன்மையால் என்பதாம். (45)

(ஸ்ரீ - வீர - அ - கை.) பலவாறு துதித்தபின் பரமசமாதிச் சுகமடைந்தா னெனல்:— பிறக்கு மென்பது.

பிறக்குமுதலே சயவென்றும் பிறவாமுதலே சயனாளு
மிறக்குமுதலே சயவென்று மிறவாமுதலே சயவென்று
சிறக்குமனத்தாற் சிந்தித்துச் செம்பொற்பெயரோன் றிருமதலை
பறக்கும்விகற்ப மில்லாத பரமசமாதிச் சுகமுற்றான்.

(ப - ரை.) பிறக்கு முதலேசய = ஜனிக்கும் பொருளேவெல்க, என்றும் பிறவாமுத லேசய = எப்போதும் ஜனியாத பொருளே வெல்க, காளும் இறக்குமுதலேசய = தினம் இறக்கும் பொருளேவெல்க, என்றும் இறவாமுதலேசய = எப்போதும் நாசமில்லாதபொரு ளேவெல்க, என்று = என இவ்வண்ணம், சிறக்குமனதாற் சிந்தித்து = அன்போடு கூடிய சித்தத்தினுலே தியானித்து, செம்பொற் பெயரோன்றிருமதலை = இரணியனுடைய தவமைந்தனுகிய பிரகலாதன், பறக்கும் விகற்பமில்லாத = விஸ்தரிக்குஞ் சலனமற்ற, பரம சமாதிச் சுகமுற்றான் = அசம்பிரஜ்ஞாத சமாதியானந்தத்தை யடைந்தான்.

(ஸ்ரீ-வீர.) ஜயஜாதனே, ஜய அஜாதனே. ஜயகூதனே, ஜய அகூதனே, ஜயபாவனே, ஜய அபாவனே, ஜய ஆவித்யக ரூபத்தானே வெற்றிகொள்ளத் தக்கவனே, ஜய. சுவாபாவி கத்தானே வெல்லத்தகாதவனே, நின்பாணிலத்த என்றனுக் கென்னேகுறை, பரம உபசாந் தியை யடைகின்றேன் என்று வர்ணித்த வகையில் தன்னே நன்குநிந்தித்துப் பரவீரஹனனு கிய பிரகலாதன், நிர்விகற்ப பரமானந்த சமாதியை இனிதாக அடைவுற்றனன்.

(ச.) சர்வான்மகமாதலின், பிறத்தல் பிறவாமை முதலிய ரூபத்துவம். (46)

(ஸ்ரீ - வீர - அ - கை.) நிகழ்த்திய வண்ணம் நீண்டகாலம் நிர்விகற்பசமாதியில் நிலைத் திருந்தபோது பாதலத்தில் நிகழ்ந்த திதுவெனல்:—நிருவிகற்ப வென்பது.

நிருவிகற்ப சமாதியிலே நிகழ்சித்திரம்போ னிலைபெற்று
வருடமையா யிரஞ்செல்ல மாறுவொருபார் வையினிற்ப
வருணமணிசூழ் பாதலத்தி லரசிலாம லசுரரெலாங்
கருடன்முதற்புள் ளினங்கவரக் கலங்குகுளமீ னினமொத்தார்.

(ப - ரை.) நிருவிகற்ப சமாதியிலே = அசம்பிரஜ்ஞாத சமாதியின்கண்ணே, நிகழ்சித் திரம்போல் = சித்தியிலமைத்த சித்திரப்பதுமைபோல, நிலைபெற்று = திரமானதிதியை யடைந்து, வருடம் ஐயாயிரம் செல்ல = ஐயாயிரவருடங்கள் கழியும் பரியந்தம், மாறுவொ ருபார்வையி னிற்ப = மாறுபடாத ஏகதிருஷ்டியில் நிலைத்திருப்ப, அருணமணிசூழ் பாத லத்தில் = பிரகாசம் பொருந்திய அரதனங்கணிறைந்த பாதாள லோகத்தில், அரசிலாமல் = அரசன் இல்லாமையினுல், அசுரர் எலாம் = அசுரர்கள் யாவருமே, கருடன் முதற் புள்ளி னம் கவர = கருடன் முதலியபறவைகள் கிரகணஞ்செய்ய, கலங்கு = சஞ்சலமுற்ற, குள மீன் இனம் ஒத்தார் = தடாக மச்சக்கூட்டத்திற் கொப்பானுர்.

(ஸ்ரீ - வீர.) சித்திரத்திலர்ப்பித்த அசலம்போல நிர்விகற்ப சமாதியில் நிலைபெற்ற னன், சைலத்தினின்றும் வருத்துவைத்த விக்கிரகம்போலச் சொரூபசாம்ராஜ்ய மடைந் திருந்தனன், அம்மகாமதியானவன் அசராதீசர்களாதேனுஉணர்த்துப் பெறினும், உணர்ந் திலன், அகாலத்தில் வெருமழை பெய்தபோதினும் பீஜபுட்டத்தினின்றும் அங்குரம் இளம் பாதபோலும்; இவ்வண்ணம் வருடசகத்திரங்கள் மிகமிகவும் விரிந்த பிரஹ்மவடிவமாய் ஏகதிருஷ்டியை யடைந்து பாகிய திருஷ்டி சூனியனும், பாறையில் வருத்த பாஸ்கரனைப் போல நிச்சலனும், சாந்தனுகவே அசுரபுரத்தில் வீற்றிருந்தனன், இருந்த அந்தக்காலத்தில்

அந்தரசாதலமண்டலமானது, அராஜகத்தையும் தீகூணத்தையும் அடைந்து மச்சநியாய பீடிதமாயது, மச்சநியாயமாவது:—பலவான்களாய தன்னினத்தவராணும் அன்னியராணும் காரணமின்றியே துர்ப்பலர்தம் வதாதியாம், அதனாற் பீடிதமாய தென்பது பொருள்.

(ச.) மீனினம் ஒத்தார் = பெலமுள்ளவராற் றுர்ப்பலர்க்கு வாதை மிருந்தென்ப தாம், மூலம்:—தீகூணம் = ஹிம்சைமிருதி, மச்சநியாயம்:—பெருமீன்கள் சிறுமீன்களைத் தின்புறுத்துவதே போலும், பலவானுல் துர்ப்பலர்தம் பாதமாம். (47)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஜகத்விவத்தையின் சித்தியின் பொருட்டு ஸ்ரீ பகவான் சிந்தித்தரு ளல்:—ஆவதாய வென்பது.

ஆவதாய காலத்தி லனைத்தாமூலகி னெறியனைத்துங்
காவல்புரியுந் திருநெடுமால் கடல்வாய்விழித்துக் கண்வளர்வான்
றூவல்வருடக் கார்நாளிற் றுயிலெத்தவிர்ந்து வொருகாலைச்
சேவல்கூருந் திருவுளத்திற் செகத்தினெறியைச் சிந்தித்தான்.

(ப - ரை.) ஆவதாயகாலத்தில் = முற்கூறியவண்ணம் நிகழும்போது, அனைத்தாமூல கின் = சகலலோகங்களின், நெறியனைத்தும் = மார்க்கங்கள் யாவற்றையும், காவல்புரியும் = காப்பாற்றியருளும், திருநெடுமால் = ஸ்ரீமந்நாராயணர், கடல்வாய் விழித்துக் கண்வளர் வான் = க்ஷீராப்தியில் சேஷசயனத்தில் யோகநித்திரையில் எழுந்தருளியிருந்தவர், தூவல் வருடக்கார் நாளில் = தூவும்வருஷ மேககாலத்தில் = மழைப்போதில், துயிலெத்தவிர்ந்து = விழித்தருளி, ஒருகாலை = ஒருபோது, சேவல் கூருந்திருவுளத்தில் = யாவரையுங் காக்க வேண்டு மென்னும் கவலையுண்ட திருவுள்ளத்தின்கண், செகத்தின் நெறியைச் சிந்தித் தான் = உலகமுறையை உன்னியருளினர்.

(ஸ்ரீ - வீர.) அதன் பின்னர், சகல ஜகத்ஜால சம்பந்திகளின் நியதிகளைக் காப்பாற்று வதே திருவிளையாட்டாக வுடையவரும், க்ஷீரசாகர நகரத்திற் சேடசய்யாசனத் தெழுந் தருளி யிருந்தவரும், ஆகிய ஸ்ரீஹரியானவர், கார்த்திகாந்தத்தில் நித்திரைகழித்ததும், தேவதைகட்குப் பிரயோஜனத்தைச் சாதித்தருளுவார் அரிசூதனர், ஒருபோது மூவுலக சம்பந்தியாய கதியை = தாத்காலிகஸ் திதியைத் திருவுள்ளத்திற் சிந்தித்துப் பார்த்தருளு வாராயினர்; இதனுனே தேவதைகளாற் காலத்தில் ஸ்துதியால். இனிதுணர்த்தி யருளப் பெற்றார் என்றதாயிற்று.

(ச.) அனைத்தாமூலகின் நெறியனைத்தும் = சகல ஜகச்சாலமும் அதனது நெறியென் னும் வருணச்சிரம மரியாதைகளுமாகிய விவற்றினது, காவல்புரியும் = பாலன நிமித்தந் திருமேனி தரித்தருளிய, திருவுளத்தின் = திருவுள்ளத்தினுல், தாமே, நெறியை = ஸ்தி திதியை, சிந்தித்தான் = ஸ்ரீபகவான் சிந்தித்தருளுவாராயினர்.

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆண்டுப் பாதாள லோகத்தில் பிரகலாத தானவேந்திரன் அதிதிடமான நிர்விகற்ப சமாதியை யடைந்திருப்ப, தேவேந்திரனுடைய புரமாகிய சுவர்க் கத்தில் மிகவும் அபிவிருத்தியை யடைந்துள்ள சம்பத்தைக் கண்டருளி, பூர்வம் க்ஷீரோ தார்ணவசாயியா யிருந்தருளிய ஸ்ரீமந்நாராயணர், பின்விழித்தருளி, ஆதிசேடனது அதி மிருதுவாகிய மேற்றலத் தெழுந்தருளி, ஆண்டும் பதுமாசனத்தாய், சங்கு சக்கிரகதை முதலியவற்றைத் திருக்கரந் தரித்தருளிய அந்தரசாரியாந் திருமேனியுடையவராய், வீற்றி ருந்தருளும் அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் தம் திருவுள்ளம், தற்கற்பிதமாய் மிகமிகவும் ஒளிவாய்ந் தொளிரும், மூவுலகமுனாரியின், பெரும்பிரமர பூதத்திருமேனியினுலே, இக்கூ

றும் பிரகாரமான கர்த்தவ்யத்தை இனிதுசிந்தித் தருளத் தொடங்கிய தனெல்:—பேத, தேவ, இன்ன, தானவர், என்பன,

(ச - அ - கை.) நான்கு கவிகளாற் பகவற்சிந்தையின் கிரம மித்தன்மைய தனெல்:— பேதமுதலன.

பேதமில்லாச் சாந்திபதம் பிரகலாதன் பெற்றிருப்ப
வேதன்சிருட்டி யழிந்துளவால் வெவ்வாளசுர ரிலாமையினு
லேதவசுர ரில்லையெனி லிகலற்றிமையோ ரெல்லோரும்
போதவுபசாந் தியராகிப் பொருவில்வீடு பொருந்துவரால்.

தேவருபசாந் தியையடையிற் செந்தீவேள்வி தவமெல்லாம்
போவதாகிப் பயனெல்லாம் பொருந்தாதெவையும் பொன்றிடுமா
லோவலுற்ற கிரியையெலா மொழிந்தாற்பூமி யொடுங்கிடுமாற்
கேவலத்திற் புவியொடுங்கிற் கிளருஞ்சிருட்டி யற்றிடுமால்.

இன்னசிருட்டி சூனியமா யிரவிமதியோ டெலாமிறக்கிற்
பின்னர்யாமும் வடிவொழித்துப் பேதமில்லாப் பதமடைவோஞ்
சொன்னகாலத் தலாதிடையே தொல்லுலால மெலாமிறக்கி
லுன்னகலங்காண் கிலமிதனுக் குறுதியுபாய முணர்ந்தனமால்.

தானவருய்க வுய்ந்தாற் சமருண்டாஞ் சமருமுண்டேல்
வானவருண்டா மூண்டேன் மகந்தவமுண்டா முண்டே
லானதோர் சிருட்டியுண்டா மன்றெனிற் சிருட்டிமாளு
மூனமிலசுரர் கோனிவ் வுடலொடு மூழிவாழ்க.

(ப - ரை.) பேதமில்லாச் சாந்திபதம் = அபேதமான பரமசாந்தி பதத்தை, பிரகலாதன் பெற்றிருப்ப = தானவேந்திரன் அடைந்தானந்தித்திருப்ப, வேதன்சிருட்டி = பிரஹ்மாவினது சிருட்டி, அழிந்துள = கெட்டிருக்கின்றது, வெவ்வாள்=கொடியவாளாயுதத்தையுடைய, அசுரர் இலாமையினால் = அசுரர்கள் இல்லாமையினாலே, ஏத அசுரர் இல்லையெனில் = துன்புறுத்தும் அசுரர்கள் இல்லையாயின், இகல் அற்று = பகையில்லாமல், இமையோர் எல்லோரும் = தேவதைகள் யாவரும், போத உபசாந்தியராகி = அத்தியந்தம் அறிவுருவில் உபசாந்தியை யடைந்தவராகி, பொருவில்வீடு = துவந்துவமற்ற மோக்ஷத்தை, பொருந்துவர் = அடைந்திடுவர். ஆலிரண்டும் அசைநிலைகள்,

தேவர் உபசாந்தியை யடையில் = அமரர்கள் உபசாந்தத்தை யடைந்து விடுவார்களாயின், செந்தீவேள்வி தவம் எல்லாம் = சிறந்த அக்கினியிற்செய்யும் யாகாதிகளும் தவமுதலனவும், பிறயாவும், போவதாகிப்பயன் எல்லாம் = சகலபலன்களும் அற்றனவாகி, பொருந்தா தெவையும் பொன்றிடும் = ஐயமில்லாமல் யாவுமே நாசத்தை யடைந்திடும், ஓவலுற்ற கிரியையெலாம் ஒழிந்தால் = சிரத்தையோடுஞ் செய்யப்படும் வைதிகக்கிரியைகளியாவும் சிதையுமாயின், பூமி ஒடுங்கிடும் = பூலோகமானது அத்ததையடையும், கேவலத்திற் புவியொடுங்கில் = கேவலவடிவத்திற் புவியானது ஒடுக்கமடைந்திடில், கிளருஞ் சிருட்டியற்றிடும் = விளங்காநின்ற சம்சாரமானது அசம்சாரப் பிரபஞ்சத்தை யடையும், ஆல்கள் அசைகள்,

இன்ன சிருட்டி சூனியமாய் = இங்ஙனிலங்கும் சிருட்டியானது சூனியமுற்று, இரவி மதியோடு எலாம் இறக்கில் = சூரியசந்திர நக்ஷத்திர முதலியயாவும் ஒழியில், பின்னர் யாமும் வடிவொழித்து = அதன் பின்பு யாமும் திருமேனிகரந்து, பேதமில்லாப்பதம் அடைவோம் = அபேதமயமாய தற்பதத்தை யடைந்திடுவோம், சொன்ன காலத்தலாது = நியமித்த காலத்தில் அல்லாமல், இடையே = மத்தியில், தொல்லை ஞாலமெலாம் = பிராசீனப் பிரபஞ்சமியாவும், இறக்கில் = நாசமடைந்திடில், உன்ன நலங்காண்கிலம் = ஆராய்வுழி யாதொரு சிரேயசையும் கண்டிலேம், இதனுக்கு உறுதியுபாயம் உணர்ந்தனம் = இதற்குத் திடமான சாதகம் தெரிந்துகொண்டேம், ஆல் அசைகிலை.

தானவர் உய்க = ஆசுரர் வாழ்க, உய்ந்தால் = வாழ்ந்தால், சமருண்டாம் = அமருண்டாம், சமரும் உண்டேல் = அமரும் உண்டேல், வானவருண்டாம் = மாசுரர் உண்டாம், உண்டேல் = உண்டேல், மகந்தவமுண்டா முண்டேல் = மகந்தபமுண்டாம் உண்டேல், ஆனதோர் சிருட்டியுண்டாம் = பேசுறுபடைப்பும் உண்டாம், அன்றெனில் = பிறவெனில், சிருட்டிமாளும் = படைப்புமாயும், ஊனமில் அசுரர்கோன் = தேசுறும் பிரகலாதன், இவ்வுடலொடு மூழிவாழ்க = தேகமோடொளிர்க கற்பம்.

(ஸ்ரீ - வீர.) பிரகலாதனுனவன் சமாதி சாம்ராஜ்யபதத்தில் இலோப்பாறுதல் அடையவே, பாதாளத்தில் நாயகன் இலனுக, கஷ்டம் சிருட்டியிது பெரிதும், தைத்தியரில்லாமையைக் கதுவியது தைத்தியர் இல்லாமற்போகவே தேவர்கூட்டம் வெற்றிபெறும் வேட்கை விட்டுப்பரம உபசாந்திபதத்தைப் பற்றும், அப்தபடலங்கள் காணுப்பெறுத அகாவிருவுஷ்டி காலத்தில், யாருமாறு உபசாந்தி பெறவே, கூஷ்ண அபிமான வீரசலத்தையாண்டது மிகமிகவும் காய்தலே எய்தலேய்ப்பத் துவந்துவங்கள் அகன்றுள்ள மோக்ஷமெனப் பெயரிய தற்பதத்தை யடையும்; சாந்தியினுலே சீத உஷ்ணுதி துவந்துவங்களற்ற அத்விதீய பதத்தை யடையுமென்பதாம்; எனவே நீர் தெளித்தலில்லாத கொடியேபோலச் சொர்க்க சுகத்தினின்றும் விரக்தர்களாய் எவற்றினும் அபிமானமில்லாத அத்தேவர்கள் குழுமிய அக்கூட்டம் இருந்து விடுமென்பதாயிற்று. துவேஷ்ய மின்மையின் சுவர்க்க சுகத்திற் றூர்லபத்தன்மை காணுமையின் உபேக்ஷையுண்டாதலின் சுயமாகவே சாத்விகத்தன்மை யுண்மையின் தேவர்கூட்டம் சாந்தியைச் சார்ந்தபோது; "ஏகமதாம் வீடெய்து பயத்தான், மோகமதானும் முழுத்துவர் நரரை, ஆகலினுமரர்க் கஞ்சப்பிரியம், ஊகமதாய் வீடுணர்ந்தான்மநுடர்; ஆகலினித்தேசுறு சுரரிடையூராசரித்திடுவர் சபித்தலும் ஆற்றுவர்; பிரமாதியர் வெளிச்சித்தர் பிசுனர்களாகிய கேலியர், திரமாதுறவியருங் காண்பர் தேவசந்தூஷிதாசயர்" என்பதாதி சுருதிமிருதி வார்த்திகாதிப் பிரசித்ததேவ சந்தூஷித ஆசயத்தன்மை யசித்தியான் மநுடர்கட்கும் சமாதிப் பிரசங்கமுளதாகவே புவியில்வேன்வி தவவினைகள்யாவுமே, அதேவத்வ பலமுடையனவாகி ஐயமெதுவு மில்லாமல் அழிந்து போவனவாகும்; வினைகளின் விளிவுவினைவற்றிக அனேய தன்மையினு லழிவுதா னென்னெனின்! உரைப்பார்:—ஒவலுற்ற வென்பதாதி கிரியைகளியாவும் கெட்டொழிந்திடவே வரமுறுபூமியும் வாடியேமடியும், பூலோகக் கிரகணம் கருமபூமிபரம் வியர்த்தமாய்ப்போம், அதுதான் வியர்த்தமா யகன்றொழிந்திடவே, பொதுவினையதீன சமுசாரத்தின், வதமதாமென்னும் வழக்குவந்திடுமே ஆகுக விவணமதலுலென்னு மக்கேகுதலென்றிடின்? எவ்வித்திரிபுவனம் கற்பாந்த பரியந்தம் எம்மாற் கற்பிக்கப் பெற்றதோ, அவ்வீது, தாபமுறவே இமகணம் சாம்புதலொப்ப அகாலத்திலேயே நாசத்தை நண்ணுகிற்கும்; நிற்கவே இவ்விஸ்தாரமாகிய ஜகத்சம்ஸ்தானமானது விலீனமாகி கூயத்தையடைந்திடில் தமது லீலையின் கூயகாரியாயஎம்மால் சுண்டுசிதமாக வியற்றப்பெற்றது யாதாகும்? ஒரு சிறிதுமேயின்றும். எமது லீலையின் கூயமெய்தியவுடன் யாமும் சந்திர

அருக்கதாரகைகள் எல்லாம் நட்டமாய் மகாசூனியமாகிய இத்தற்பதத்தின்கண், லீலார்த்த மாகிய திருமேனியின் உபசங்காரத்தைக் கொண்டு மீண்டுஞ் சமுசார உற்பவமாகாதவாறு அந்தப்பூர்ணத்ம பதத்திலேயே திதியையடையா நிற்பேம். மூலம்:-சம்பாவனே யதிகமாயப விஷ்யத்திலும் ல்ருட்லகாரமேயாம். இங்ஙனிங்ஙன் விளம்பிய காலுவகையாய வேற்றுமை யானே அநவசரத்தில் ஜகத்தானது உபசமத்தை யடையுமாயின், ஈண்டுத்தேவ மதுடாதி ஜீவவர்க்கத்தில் மேன்மையைக் கண்டிலேம் ; அல்லது, சிரேயசைக் கண்டிலே மென்பதாக இல்லை, மற்றோ, காணவே செய்வேம், " வைராக்கியத்தானே பகுதியிலிலயம் " என்னும் மிருதியினுல், பகுதி இலயத்தில் துயிலிற்போலச் சர்வதுக்க உபசமவடிவச் சிரேயசின் சித்தி யாதலின். ஆனுல், " அப் பரம்பொருளையே யறைமறையினுல், விப்பிரருணர்ந்திட விழை தல் செய்குவார் " " நீடுமனங்கே நின்றிலனையினு, மோடும்வகையால் விடாதே யுழன்றவன், பாடும்பவங்கள் பலகடந்தாயினும், வீடும்பெறு மின்னும் வேறுஞ்சில கேளாய். " என்ப தாதி சுருதிமிருதி சித்த அநேகஜன்ம அநுட்டித நிட்காமகரும சாத்தியமாய விவிதிஷை தத்துவ சாக்ஷாத்கார மின்மையின் மூலாஞ்ஞான ஆவரணம் நீங்காமையின், விரையுள்ளதா கவே மறித்துந் திரும்புகைக் கடாவருதலினுலும், நிரதிசயாநந்த அடைவுவடிவச் சிரேய சானது எவர்க்குமே எய்தாதென எண்ணுவேம்; ஆகலின் முறையே யாவர்க்கும் அதன் இலாபப்பொருட்டுத் தானவர் வாழ்ந்திடுக. அதேமுறையை மீளவும் தொகுத்துக்கூறல்:— தானவரென்பதாதி. தைத்திய உத்தியோகத்தால் தேவர்கள், அத்தேவர்களால் யாகதவக் கிரியைகள், அவற்றினுலே சமுசார நன்னிலபேறு, ஆம், அன்னியவகையாற் சமுசார மூறையாகாதாம்.

(ச.) பிரகலாதன் றற்பதத்தில் விசிராந்தி யடைதலின் பாதானம் அரசில்லாமல்வாதை மிகுந்து அசுரர் அநாதைகளாய் இறப்பர், இமையோ ரெல்லோரும் இகலற்று ஜயிக்க வேண்டுமென்னும் இச்சையைவிட்டு உபசாந்தியாகில் முத்தி விருப்புறில் அதனுலவரது போகபூமியாகிய சுவர்க்க மின்மையிற் புவியில் வேள்வித்தவ முதலிய சுவர்க்கதபலங்களும், சற்கருமங்களும் பொன்றிடும். அதனுற்றருமப் பிரவிருத்தி யின்மையின் புவியொடுங்கிடும், சிருஷ்டி சூனியமாய்ச் சம்சாரப் பிரசங்க மின்மையாயின் பாலிக்கத் தக்கதின்மையின் யாமுந் தற்பதத்தில் விசிராந்தி யடைவோம்; அதனுற் சொன்ன காலத்தலா திடையே பிரளயமா மாதலின், தானவருய்வதே நலமென் றெண்ணுகிறேன், தானவரது சமரத்தால் வானவர்க்கு விஜயேச்சை யுண்டாய் அதனுல் மகமுதலிய கிரியாப்பிரவிருத்தி யுண்டாயின் சம்சாரந்திதிபெறும் அன்றெனில் மாளுமென்பதாம். (49-50-51-52)

(ஸ்ரீ-வீர - அ-கை.) கூறியவண்ணஞ் சிந்தித்தருளிய ஸ்ரீ பகவான், பிரகலாதனுக் கிட் டிருக்கும் நியதியைக் கண்டருளி அவ்வன்பு நிறைந்தவனைச் சமாதியினின்றும் பகிர்முகப் படுத்த ஆங்கெழுந்தருளல்:—பரமமென்பது.

பரமமா மீசனுலே பாலிக்குங் கடவுளீதி
திறமுற விவ்வாறென்று சிந்தித்த செங்கண்மாய
னரவணைப் பாயனீங்கி யசுரர்கோ னருகுசேர்ந்தான்
பிரமலோ கத்தையொக்கும் பெரியபா தலநகர்க்கே.

(ப - பை.) பரமமாம் ரசனுலே = பரமேசுவரனுலே, பாலிக்கும் = நியமிக்கப்பெற்ற, கடவுள் நீதி = தெய்வநியதியானது, திறமுற இவ்வாறு = திடமாக இத்தகைத்து, என்று = என்பதாக, சிந்தித்த செங்கண்மாயன் = அறிந்தருளிய செந்தாமரை யிதழ்போலும் திரு

நேத்திரங்களையுடைய மாயவனுகிய ஸ்ரீ பகவான், அரவணைப்பாயல் நீங்கி = ஆதிசேட சயனத்தினின்றும் அகன்றருளி, அசுரர்கோன் அருகுசேர்ந்தான் = தைத்தியேந்திரனது சமீபத்தை யடைந்தருளினன், பிரமலோகத்தை யொக்கும் = சகல ஐசுவரியங்களானும் சத்தியலோகத்திற்குச் சமானமான, பெரிய = அதிவிசாலமான, பாதலநகர்க்கே = பாதாள லோகத்திலிருக்கும் பிரகலாதனது இராஜதானி நகரத்தை நோக்கிவந்தருளினர். நகர்க்கே அருகுசேர்ந்தான் எனக்கூட்டுக.

(ஸ்ரீ - வீர.) பிரகலாதனுடைய இத்தேகமோ பஞ்சிமம் பாவனம் மகத்தாகவுடையதாம், ராண்டுக்கற்ப பரியந்தம் இத்தேகத்தோடும் அவன் வசிக்கவேண்டும், என்பதாகவே பாரமேசுவரி நியதிதேவி நிச்சயித்தமாம், ஆகவே இத்தேகத்தோடும் அவன் ஈண்டுக்கற்ப பரியந்த மிருக்கவேண்டிய தின்றியமையாததாம், ஆகலின் அத்தைத் தியேந்திரன்பால் யாமே சென்று சமாதியினின்றும் அவன் உணருமாறு செய்வேமாக என்று சர்வான்மாவாகிய ஸ்ரீபகவான் சிந்தனையினிது செய்தருளி; பாற்கடற்குள்ளடங்கிய சுவேததீப அந்தர்க்கத மான தமது திருப்புரத்தினின்றும், பரிவாரத்தோடுகூடத் தாழ்வரை சகிதமாய மந்திரா சலமென்ன, பரமார்த்தமாகச் சலன சூனியரேயாயினும், அசைதலையடைந்தருளி; தூதாவினது சங்கற்பத்திலுலேயே தம்பிதமாகிப் பாதாளகுகர அப்பிரவேசியாய அம்புகிறைக் துள்ள சுஷீரோதகத்தின் நலரந்திரக்கீழ்த்துவாரவாயிலாகவே, அயலொரு தேவேந்திரலோகம் போன்றிராநின்ற அதிரம்மியமாகிய பிரகலாதனது திருநகரத்தை யடைந்தருளி; அந்தப்பிரகலாத நகரத்தில், சுமேருபர்வதத்துற்ற குகையின் கண்ணே லீனமாய்ச் சமாதியிலிருக்கும் பிரஹ்மாவேயென்ன ஹேமமந்திர கோசத்திருந்த பிரகலாதனை ஸ்ரீஹரியானவர் கண்டருளினர். (53)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஆண்டிரண்டு மூன்று முக்கிய அசுரர்களோடு கூடப் பரிவார சகித ஸ்ரீஹரியானவர் பிரகலாதனது அரண்மனையில் தாராவாஞுகிய சசியாகாசத்திற்போலப் பிரவேசித்தருளினுரெனல்:—கருட என்பது.

கருடவாகனத் துறைபவன் கவரிசேர் செங்கைத்
திருமடந்தைவாழ் வலத்தின னேம்படை செறியு
மிருபுறத்தினன் றேவரு முனிவரு மிறைஞ்ச
வருளுநாயக னசுரனை யுணர்தியென் றருளி.

(ப - பை.) கருடவாகனத் துறைபவன் = வைநதேய ஆசனஸ்தன்; கவரிசேர்செங்கைத் திருமடந்தை வாழ்வலதினன் = சாமரஞ்சார்ந்த செந்தாமரை புரையுங்திருக்கரத் திருவல்லி யெழுந்தருளுந் திருமார்பினன், ஐம்படைசெறியும் இருபுறத்தினன் = பஞ்சாயுதங்கள் படைத்த இரண்டு பாகத்தினன், தேவரும் முனிவரும் இறைஞ்ச = இமையவரும் இருடியரும் முனிவாரும் இனிதேத்த, அருளுநாயகன் = அவர்கட்கு வேண்டியவற்றை யெல்லாம் அநுகிரகஞ் செய்யும் எம்பெருமான், அசுரனையுணர்தி யென்றருளி = பிரகலாதனைநோக்கி நீ சமாதியினின்றும் உத்தானதிசையை ஹேமகாத்மாவே யடைவாயென்று கூறியருளி.

(ஸ்ரீ - வீர.) கருடாரூடரும், ஸ்ரீதேவியீட்டிய சாமரத்தினரும், தமதாயுதாதிபரிவாரரும், தேவருஷி முனிவர்களானே வந்திதரும் ஆகிய ஸ்ரீமகாவிஷ்ணுவானவர், ஹே மகாத்மாவே! மிகவுன்றுக வீழுமதி வெளியாவாய் என்பதாக இயம்பியருளி. (54)

(ஸ்ரீ - வீர - அ - கை,) உரைத்தருளிய ஸ்ரீபகவான் வலம்புரிச் சங்கத்தொனிசெய்தருளப் பிரகலாதன் பைய உணர்ந்தனன் எனல்:—வலமென்பது.

வலம்புரித்தொனி கிளப்பினன் மாதிரம் பிளப்ப
நிலம்பிளப்புற நெடுந்திசை பிளப்புற நிமிர்ந்த
வலம்புமோதையான் மெல்லென மெல்லென வறிந்தா
னலம்பயப்புறு தற்பதத் தொன்றிய நல்லோன்.

(ப - ரை.) வலம்புரித் தொனிகிளப்பினன் = பாஞ்சஜன்யத்தின் நாதத்தை வெளிப் படுத்தியருளினன், மாதிரம் பிளப்ப நிலம்பிளப்புற நெடுந்திசை பிளப்புற = விண்ணுலகை யும் மண்ணுலகையும் திசைகள் தசங்களையும் பிளந்து வியாபித்து, நிமிர்ந்த = ஓங்கிய, அலம்பும் ஓதையால் = மகத்தாகிய அச்சப்தத்தானே, மெல்லென மெல்லென அறிந்தான் = பையப்பைய உணர்ந்தனன், நலம்பயப்புறு தற்பதத்தொன்றிய நல்லோன் = ஆநந்தமே யுண்டாக்கும் தத்பதப் பிரஹ்மத்தின் கண்ணெடுங்கிய நல்லதானவேசுரன்.

(ஸ்ரீ - வீர.) திசைக்கணங்க ளெல்லாம் பிரதித்தொனி செய்யும்படியாகப் பாஞ்சஜன்ய மென்னுஞ்சங்கை ஸ்ரீபகவான் முழக்கியருளினர், ஸ்ரீவைஷ்ணவபலத்திலுலே யுண்டாகிய, ஓரேகாலதலத்திற் கலக்கமுற்றுக் கிளம்பிய பிரளயமேகங்களின் பிரளய ஆர்ணவங்களின், வேகப்பிரவாகத்திற் சனித்த பெருந்தொனி போன்ற தொன்றும் மகத்தாகிய அந்தச் சப் தத்தானே, மெதுவுமெதுவாகத் தானவேசனுகிய பிரகலாதன் சம்பிரபுத்தனுக ஆயினன்.

(ச.) மூலம்: வைஷ்ணவப் பிராணஜன்மஹா = விஷ்ணுசம்பந்தப் பிராணவாயு ஜநித மான பெருந்தொனியினுலே. (55)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மேகாவசரத்திற் கானனத்தில் மலர்ந்த கதம்பம்போல உணர்தற் கரிய பிரகலாதனது சம்பிரபோதக் கிரமத்தை விஸ்தரித்தல்: — பிராண, அறிவு, அற்பம், அமைவில், என்பன.

பிராணசத்திதான் பிரமரந் திரநின்று பெயர்ந்து
புராதனப்படி நாடிக ளாலெங்கும் பொருந்தி
விராவலுற்றன வொன்பது துவாரத்து மேவப்
பராபரத்தினை யறிந்துளோ னறிவுசம் பவித்த.

அறிவுதோன்றியுட் பிராணதர்ப் பணநிழ லாகி
யறிவதாம்பொரு ணேக்குற்ற தன்னதா மறிவு
பிறிவதாமறி பொருளிலே மனத்தன்மை பெற்ற
பிறிவிலாமூகந் தர்ப்பணத்திருமைபெற் றதுபோல்.

அற்பமுள்ளமங் குரித்தது மரும்பவிழ் வுற்ற
வுற்பலங்கள்போன் மெல்லென மலர்வுற்ற வொண்கண்
ணிற்பதாய்நரம் புறுபொறி யறிவுக ணிறைய
நற்பிராணனு மபானனு மெங்கணு நடந்த.

அமைவில்காற்றுற்ற பதுமம்போ லசைவினை யடைந்தா
னிமைகளுக்கிடை யளவிலே மனந்தடித் தெழுந்த
சமைவுறத்தெரி கண்மனம் பிராணன்மெய் தயங்கக்
கமையின்மிக்கவன் விளங்கினன் கருணைமால் காண.

(ப - ரை.) பிராண சத்திதான் = பிரகலாதனுடைய பிராணசத்தியானது, பிரமரந்திர நின்று பெயர்ந்து = அடங்கியிருந்த பிரமரந்திர மூர்த்தன்ய ஸ்தானத்தி னின்றும் எழுந்து, புராதனப்படி = பழையபடி, நாடிகளால் எங்கும் பொருந்தி = நாடிகளின் வாயிலாக எவ்விடத்திலும் வியாபித்து நின்றது, விராவலுற்றன = கலத்தலையடைந்தனவாகிய பிராணன்கள், ஒன்பது துவாரத்துமேவ = நவரந்திரத்தும் பொருந்திய அளவில், பராபரத் தினையறிந்துளோன் அறிவு சம்பவித்த = பராபரமாகிய பிரஹ்மத்தை யறிந்த பிரகலாதனது சித்தானது சேத்தியோன் முகமாயது.

அறிவுதோன்றி = உணர்வானது விடயமுன்னிலைப் படுதலையடைந்து, உட்பிராண தர்ப்பண நிழலாகி = அந்தர் பிராண தர்ப்பண பிம்பிதமாகி, அறிவதாம் பொருள்நோக்குற்றது = விடயத்தை நாடலுற்றது, அன்னதாமறிவு = அத்தன்மையை யடைந்த சித்தானது, பிறிவதாமறி பொருளிலே = பேதமதுற்ற திருசியம் போலவாகி, பிறிவிலாமுகந் தர்ப்பணத் திருமை பெற்றதுபோல் = பேதமதாகாதவதனமானது கண்ணுடியின் கண்ணிரண்டாந் தன்மையை யடைந்ததொப்ப, மனத்தனமை பெற்ற = மனதாந்தகைமையையமருவியது.

அற்பம் உள்ளம் அங்குரித்தலும் = சிறிதுசித்தம் முளைத்தலும், அரும்பவிழ்வுற்ற உற்பலங்கள்போல் = நீலோற்பல மொட்டுகள் சிறிது வாய்திறந்தனபோல, மெல்லெனமலர்வுற்ற ஒண்கண் = மெதுவாக விழிகள் அற்பமலர்ந்து, நிற்பதாய் = நின்ற அளவே, நரம்புறு பொறியறிவுகள் நிறைய = நாடிகளின் துவாரங்களிற் பொருந்துவனவாகிய விடயவுணர்வுகள் வியாபிக்குமாறு, நற்பிராணனும் அபானனும் எங்கணும் நடந்த = சாதகமாகப் பிராணவாயுவும் அபானவாயுவும் சகல நாடித் துவாரங்களிலும் சஞ்சரித்தனவாம்!

அமைவில் காற்றுற்ற பதுமம்போல் அசைவினை யடைந்தான் = சலன சுபாவம் வாய்ந்த சதாகதி சார்ந்த சலசமென்னச் சற்று சலனத்தைச் சார்ந்தான், இமைகளுக்கிடையளவிலே = நிமேட அந்தரமாத்திரமாக, மனந்தடித் தெழுந்த = மனமானது பருமையையடைவுற்று நின்றது, சமைவுறத் தெரிகண்மனம் பிராணன் மெய்தயங்க = பொருந்துறுமாறு விகாசமுற்ற நேத்திரங்களும் மனதும் பிராணனும் தேகமும் ஒன்றுபெற்றிருளிர, கண்ணையின் மிக்கவன் = சொரூபத்திற் பரமவிசிராந்தியை யடைந்தவன், கருணைமால் காணவினங்கினன் = தயாவடிவம் வாய்ந்த தாமோதரன் கண்குளிரக் கண்டருளக் கவின்வாய்ந்திலங்கினன்.

(ஸ்ரீ - வீ.ர.) பின்னர் அவ்வசுரேந்திரனுடைய பிராணசக்தியானது பிரமரந்திரத்தானத்தினின்றுங் கிளம்பி, ஸ்ரீ கங்கை அர்ணவமுழுவதும் பூரித்ததொப்ப, அவனை மெதுவாக வியாபித்தது; நாடிகளின் வாயிலாயென்பது கோடக்கிடந்தது; ஒன்பது வாயின் புரத்தில் இந்திரியங்கள் முயன்ற அளவில், அவனது சித்தானது, திருசிய உன்முகத்தையடைவுற்று, உட்பிராணக் கண்ணுடியிற் பிரதிபிம்பித் திலங்கியது, பிராணனென்னும் லிங்க தேகவடிவ ஆடியிற் பிரதிபலித்திலங்கிய தென்பதாம்; விடயநாட்ட மடைந்த சித்தானது திருசியாகார சமஸ்கார வுற்போதத்தால் திருசியம்போலவாகிச் சிற்சட உபயரூபத்தன்மை வடிவமான மனத்தன்மையை மருவியது, முகுரத்திற் கலந்தமுக ஸ்ரீயானது சிகரத்தி லிருமையைச் சிவணியதெனவாம். சித்தமானது சிறிது அங்குரித்திடச், சுத்தமானவன்றன் விழிகளிரண்டும், நித்தகாலயி னின்வலும்பலமென, மெத்து மெத்தாக மிளிர்வைமேவினவே; உள்ளே புகுந்தனவாகிய பிராண வபானன்களால், உற்போதிதமாகி, சகல விடங்களிலுமுள்ள நாடிகளின் துளைகளிலிலங்கும், உணர்வின் நிமித்தத்தினுல், காற்றினுற்றூற்றப் பெற்ற கமலத்தினசைவென வவனது காயத்தின் அற்ப அசைவான தினிதுளதாயது.

புருவத்திடை மாத்திரத்தானே மனம் பொருமிப்பருமையைப் பொருந்தியது, தரங்கமென வாரியிற் பிராணவயத்தாலது பூரணமாகியமர்ந்த அளவே, ஆதித்தியன் அர்த்தமுதிதமாக மலர்ந்த தாமரைமடுவேமானப் பிரகலாதனும் விரிந்த நேத்திரமனப் பிராணவபுடையவ ஞகி வயங்கினன்.

(சு.) அறிந்த பின்பு, பிராணசக்தி = சைதன்யசக்தியானது, பிரமரந்திரம் நின்று = முன்சமாதி சமயத்தில் அந்தப் பிரமரந்திரத்திற்றானே யிருந்தது; பின்பெயர்ந்து சர்வநாடி களால் மெல்லெனப் பொருந்திப் பிரகலாதனே வியாபித்த தென்பதாம், ஒன்பது துவாரத் தும் = நவத்துவார மென்னும் இந்திரியங்களில்.

அறிவுதோன்றி உட்பிராண தர்ப்பணநிழலாகி = பின் அந்தர்ப் பிராணன் = அந்தரிந் திரிய மென்னுந் தர்ப்பணத்திற் பிரதிவிம்பமாய், அறிவதாம் பொருணேக்குற்றது = திருஷி யோன் முகமாயிற்று, பிறிவதாமறி பொருளிலே = திருஷியத்தில், அன்னதாமறிவு = உன் முகமாய் அந்தக்கரணப் பிரதிவிம்பமாதலின் திருஷியரூபமாகிய வவ்வறிவு, மனத்தன்மை பெற்ற = மனேரூபத்தை யடைந்தது, பிறிவிலா முகந்தர்ப்பணத்திற் பிரதிபலித்ததாய் ரூபாந்தரத்தைப் பெற்றதுபோல.

நரம்புறுபொறி = நாடிகளினுட் டுளைகளில், மூலம்: சேதனீயம் = சேத்யம் = திருஷி யம். முகஸ்ரீ = முகச்சோபை, த்வித்வம் = ரூபாந்தரம். பிராண + சம்விதः = பிராண அபானன்களினுற் பிரபோதிதமாகி நாடிகளின் துளைகளி லுற்றுள்ள சேதனத்தோடு கூடிய அததேகமானது வாதமோதிய பதுமம்போல ஸ்பந்தத்தை யடைந்தது. (56-57-58-59)

(ஸ்ரீ-வீர - அ-கை,) பூரணப் பிரஞ்ஞையை யடைவுற்ற பிரகலாதனே நோக்கி ஸ்ரீபக வானருளல்:—பரந்து என்பது.

பரந்துநாட்டங்க ளேக்கின மனனமும் பருமை
நிரந்தரித்தன வவ்வயி னவன்றனே நெடுமால்
சுரந்தவன்புட னேக்கியே யருள்செய்வான் ஈயோய்
புரந்தரன்புக ழனதுசீர் நோக்குவாய் புரிந்து.

(ப - ரை.) பரந்து நாட்டங்கள் நோக்கின = மலர்ந்து கண்கள் மகிழ்ந்து நாடினன, மனனமும் பருமைநிரந் தரித்தன = இன்ஞன் என்னுஞ் சங்கற்பமும் இனிய எண்ணங்க ளும் உதயமாயின, அவ்வயின் அவன்றனே நெடுமால் = அப்போது அந்த அசுரேந்திரனே சர்வஞ்ஞனுகிய ஸ்ரீ பகவான், சுரந்த அன்புடன் நோக்கியே = சுயமாகவே இளம்பியவாத் சல்யத்துடன் பார்த்தருளி, அருள்செய்வான் = அநுக்கிரகித் தருளுவார், ஈயோய் = பர சுத்தனுகிய எமதன்பனே, புரந்தரன் புகழ் = தேவேந்திரன் கீர்த்திக்கும், உனது சீர்நோக் குவாய் புரிந்து = உன்னுடைய சீர்த்தியைச் சற்று நிதானித்து நோக்கியுண்ணேர்வாய்.

(ஸ்ரீ - வீர.) விழியாதிகள் விகாசமடைந்தபோது விபுவானவர், உணர்ந்து காண்டி யென்றருள் செய்யவே, அவ்வளவில், மேகசப்தத்தான் மயூரம்போலப் பிரகலாதன் இனி துணர்ந்தனன்; நயன நளினங்களின் மலர்தலையும், பிரகலாத அகம்பாவப் பிரத்தியபிஞ்ஞை யின் உதயத்தையும், நன்முகவளர்ந்த முன்னவத்தாதி முருதியையும், அடைந்த பிரகலா தனே, திரிலோக நாயகன் நோக்கியருளி: முன்னர் உந்தியந்தாமரை வந்தவனேநோக்கியருளி யனுக்கிரகித்ததேபோல அனுக்கிரகிப்பார், ஹோசாதுவே ! உன்னுடைய மகத்தான இல க்ஷ்மியாகிய தைத்தியராஜ்ய ஐசுவரியத்தை யெண்ணுதி ! (60)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீ பகவானிதோபதேசஞ் செய்தருளல்:—உடலெனின்பது.

உடலோநோக்குதி யகாலத்தி லுன்னுடை யுடலே
விடநினைப்பதென் பற்றுதல் விடுதல்சங் கற்பம்
படர்கிலாவுனக் கபாவமும் பாவமு மூடலிற்
றொடரிற்சேதமென் னெழுதியா லிருத்தியாற் றூயோய்.

(ப - ரை.) உடலோநோக்குதி = உன்னுடைய தேகத்தை யுற்றுப்பார்ப்பாய், அகாலத்தில் = காலமல்லாத காலத்தில், உன்னுடையுடலே, உனது வஜ்ஜிரதேகத்தை, விடநினைப்பதென் = தியாகஞ்செய்ய எண்ணுவதென்னே, பற்றுதல் விடுதல் சங்கற்பம் படர்கிலாவுனக்கு = ஹேய உபாதேயசங்கற்ப விகினைஞகிய நின்றனக்கு, அபாவமும் பாவமும் உடலில் தொடரில் சேதமென் = சரீரசம்பந்தமான பாவாபாவங்களானே நினக்கென்னே பயன் ? எழுதியால் இருத்தியால் தூயோய் ! = ஹேபரிசுத்த சித்தத்தையுடைய பக்தனே! எழுந்து சுகமாகநினது விவகாரத்தைச் செய்துகொண் டிருப்பாயாக.

(ஸ்ரீ - வீர.) உன்னுடையதாகிய தேகாகாரத்தைத்தான் எண்ணிப்பார் ! நீ தேகத்தை மறந்திடுதலானே அநவசரத்திலேயே, தேகத்தின் அவசரானத்தையேன் செய்யத்தொடங்குகின்றாய் ? அதனலுனக் கென்பயன் ? அற்றேல், " ஆகமுடையனுக் காசையும் வெறுப்பும் எகலின்றென வெழின்மறை யறைதலின், சர்வஜனங்கட்கும் அவ்வாறே யதுபவமிருத்தலினலும் அகர்த்த ஹேதுவாம் தேகஸ்மரணம் எனின் ? விடையருளுவார்:—பற்றுதல் என்பதாதி. தள்ளத்தக்கதிது கொள்ளத்தக்க திதுவென்னும் எண்ணங்கள் எதுவுமின்றிய உனக்குச் சரீரத் துறவனவாகியலாப நஷ்டங்களானே மகிழ்ச்சி வாட்டவடிவப் பிரயோஜனம் எங்ஙனமுண்டாம் ? ஹேய உபாதேய சங்கற்பந்தியாகமாகவே தேகமிருந்தபோதினும் பிரியாப் பிரியங்களானும் பாவாபாவங்களானும் உனக்குப் பயனிலதாம் என அகர்த்த அடைவின் றென்பதாம். ஆகலின் உடனேயெழுந்து நினது இராஜ்ய விவகாரத்தைக் கவனித்துக் கொண்டிருப்பாய்.

(ச.) அபாவனே = அநிஷ்டங்களும், பாவனே = இஷ்டங்களும், அபாவமும் பாவமும் என்னும் பாடபேதத்திற்கும் இதுவே பொருள்; சேதமென் = ஆனியேது, ஆதலிற்சமாதியினின்று எழுதி, ஜீவன்முக்திப் பதத்தில் இருத்தி. ஹேயோபாதேய விஷய சங்கற்பவினைஞகிய நினக்கு ஆகத்திற்ற இஷ்ட அனிஷ்டங்களானே ஆனியென் னென்றதாம். (61)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஆயின் எத்துணைப்போது தேகதாரணஞ் செய்யவேண்டுமெனின்? ஈண்டு இத்தேகத் தோடுங் கற்பகாலபரியந்தம் நன்னிலைமை பெற்று வாழ்வாயாக, யாமோ உள்ளபடியாய அநந்திதமான நியதியையறிவேம், நினது ஆயுணியமத்தை யுணர்வேம், என்னுந் திருக்கருத்துடன் ஆசீர்வதித்தருளல்:—சிவனென்பது,

சிவன்முத்தனு நீயிந்த வுடலொடுஞ் செங்கோற்
காவலாளனுய்ச் சுமையறக் கற்பமட் டிருப்பாய்
பாவகன்சுடப் பன்னிரு கதிர்சுட வுலகம்
யாவதுங்கெடா திருப்பநீ யிறப்பதென் வாளா.

(ப - ரை.) சிவன் முத்தனுநீ = ஜீவித்துக்கொண்டே முக்தனுகி யிருக்கும் நீ, இந்த உடலொடும் = இத்தேகத்தோடும், செங்கோற் காவலாளனுய் = இராஜ்யபரிபாலனஞ் செய்பவனும், சுமையற = உத்வேகமின்றி, கற்பமட்டிருப்பாய் = கற்பகால பரியந்தம் இருந்துவாழ்வாய்; பாவகன்சுட = அக்கினி சொலித்துக் கொண்டிருப்ப, பன்னிருகதிர்

சுட = துவாதச ஆதித்தியர்கள் தகிப்ப, உலகம் = ஜகத்து, யாவதும் கெடாதிருப்ப = முழுவதும் அழியாதிருப்ப, நீ இறப்பதென்வாளா = வீணுகவே நீ தனுவை விட்டுவிடுதல் என்னகாரணமோ.

(ஸ்ரீ - வீர.) ராண்டிவ் விராஜ்யத்திற்றானே ஜீவன்முக்தனுகிய நீ இருந்துகொண்டு இராகத்துவேட மற்றுச் சாந்தனுய்க் கற்பகால பரியந்தம், இத்தேகத்தை விவகாரத்திற் பிரேரிப்பாயாக. ஆயிற் கற்பாந்தத்தில் யான் இருக்கவேண்டிய தெவ்வாறெனில்? ஹே அநகனே ! கற்பாந்தத்தே தேகமுடிந்தபோது, சுவாத்மபூதமாய நிரதிசய நின்மகத்துவத்தில், கும்பமுடைந்தபோது கும்பம்பம்பும் அம்பரமானது மகாம்பரத்தில் இருப்பதேபோல நீயுமிருப்பாய். ஆயின் என்கற்பாந்தம் சந்நிதிதமா வெனின் ? இன்றென் றருளுகின்றூர்:— பாவகன் என்பதாதியாய், துவாதசாதித்தியர் உதயமாகாதிருப்ப, பெரும்பர்வதங்கள் பிரலீனமாகாதிருப்ப, ஜீகத்ஜ்ஜோலித மாகாதிருப்ப, ஹேசாதுவே ! வீணுகவே நீ தனுவைவிட வெண்ணுவ தென்னே !

(ச.) சுமையற = பயமின்றி, தேகத்தைப் பிரவர்த்திக்கச் செய்வாய். (62)

(ஸ்ரீ - வீர - அ - கை) இரவிமதியாதி யாவுமிருப்ப இராகத்துவேடமற்ற நினக்குமரணம் இப்போது சோபிதமாகாதாம், என்றருள, ஆயின்யாவர்க்கு மரணமுசிதம் எனவினவ, விடையருளுகின்றூர்:—ஒங்கு மென்பது.

ஒங்குமாசையாம் பாசத்தா லுறப்பிணிப் புண்டு
வீங்குமுள்ளுணர் வதன்வழி யோடியே மெலிந்து
தாங்குசெய்கையான் மனமிகச் சலிப்பவர்க் கன்றே
தீங்குமேவிய மரணந்தான் சிறப்பது சகத்தில்.

(ப - ரை.) ஒங்கும் ஆசையாம் பாசத்தால் = வளர்ந்தே செல்லும் ஆசாபாச சதகனனே, உறப்பிணிப்புண்டு = அத்தியந்தங கட்டுப்பட்டு, வீங்கும் உள்ளுணர்வு அதன்வழி = வீங்கியேங்கிக் கிடக்கும் அந்தர்மனமானது அதன்மார்க்கமாகவே, ஓடியேமெலிந்து = சென்றேமடைந்து சிறுத்து, தாங்குசெய்கையால் = அதன் பொருட்டாக்கும் வினைகளால், மனமிகச் சலிப்பவர்க்கு அன்றே = உள்ளம் மிகவுஞ் சஞ்சலமுற்றவர்க்கல்லவோ, தீங்குமேவிய மரணந்தான் = மகாதுன்பத்திற் கேதுவாகிய மரணமானது, சிறப்பது சகத்தில் = அகாலத்தில் வருவது இவ்வுலகத்தில்.

(ஸ்ரீ - வீர.) பெருத்த அஞ்ஞான யோகத்தானே பரியாகுலப்பட்ட எவன்மனத்தைத் துக்கங்கள் தூளாயாகிற்குமோ அவனுக்கு மரணஞ்சிறந் துண்டாம்; " அத்தியந்தம் பீடிதன் ஜீவன் நூலதேகமகற்றுவான் " என்னும் மிருதிசித்த மரணஹேது பொருந்தலின் என்பதாம் இனித்தேன், அநிதுக்கி, மூடன்யான் என்பனவாதியும், பிறதூர்ப்பாவனைகளும், எவன்மதியை மூழ்கடித்துத் துன்புறுத்திக் கவலைப்படுத்துமோ அவனுக்கு மரணஞ்சிறப் புடைத்தாகும்; ஆசாபாச நிபத்தமாய் அந்தக்கரணம் எவனது, அகற்றப்பெறுமோ விடயங்களை நாடியோடுமோ, மனேவிருத்திகளானே யாவன் மகாலோலனுகித்திரிவனே அவனுக்கு மரணமானது விசேடித்தோங்கா நிற்கும்.

(ச.) அந்தக்கரணம் ஆசாபாசத்தாற் பிணிப்புண்டிருத்தலின், வீங்கு முள்ளுணர்வதன் வழிசமிகுசஞ்சலமுள்ள மனேவிருத்தி வசமாய், பசுப்போலிங்கு மங்கும், ஓடியே, சுகம் அற்பமும் இன்மையின், மெலிந்து = மெலிவுள்ளவனுய், தாங்குசெய்கையால், தாரித்திராதி

துக்கவாதனையால், மனமிகச் சலிப்பவர்க்கன்றே = தைரியமற்றவர்க்கே: மரணஞ் சிறப் புள்ளதென்பது பொருள். (63)

(ஸ்ரீ-வீர – அ-கை.) முன்மொழிக்கவர்க்கு மரணஞ் சிறப்புடைத்தாயின் மற்றியா வர்க்கு ஜீவிதம் சோபிதமாகும் எனவினவ விடையருளிச் செய்கின்றார்:—அகமென்பது.

(ச - அ - கை.) ஜீவன் முத்தனுக்கு உயிர்வாழ்க்கையே சிறப்புள்ள தெனல்:—அக மென்பது.

அகங்கரத்தினை யகற்றியோர் பற்றின்றி யனைத்துஞ்
சுகந்தருஞ்சம மானவ ராயுவே சுகமா
முகந்தவாசையுஞ் சினமுமற் றுட்குளிர் மதியாற்
செகங்களின்கரி யானவ ராயுவே சிறக்கும்

(ப - ரை.) அகங்கரத் தினையகற்றி = தேகாதிகளில் யானென்னுந் தோற்றத்தைத் துடைத்து, ஓர்பற்றின்றி = யாதொருபற்றுதலும் எவற்றின் கண்ணுமில்லாமல், அனைத் தும் சுகந்தரும் சமமானவர் =சர்வபாவங்களிலும் இன்பமீயும் சமமுடையவர்தம், ஆயுவே= ஜீவிதமே, சுகமாம் = இன்புற்றிலங்கும்; உகந்த ஆசையும் = அது கூலங்களில் விருப்பும், சினமும் = பிரதிகூலங்களில் வெறுப்பும், அற்று = கடந்து, உள்குளிர்மதியால் =உட் சீதளபுத்தியால், செகங்களின் கரியானவர் = இவ்வியாவற்றையும் சாக்ஷிபோற் காண்பவர் தம், ஆயுவே = ஜீவிதமே, சிறக்கும் = விசேஷித்து விளங்கும்.

(ஸ்ரீ - வீர.) சுவாத்மதத்வ அவலோகத்தானே எவனுடைய மதிகிளம்புவதில்லையோ, யதார்த்த தரிசியாய அவ்வறிஞனுடைய வாழ்நாளே யாவரும் புகழ இலங்குவது; தேகத்தி னின்றும் பிராணன் வெளிக்கிளம்புதல் மரணமென்ப தின்றும், மற்றே, ஆத்மதத்வத்தி னின் றும் மதியின் வெளிக கிளம்புகையே அதுவாம், அதுவும், அறிஞனுக் கிலதேயாம் என எப் போதுமே அவனது ஜீவிதம் சோபிதமாம்; அறியாதவனது மதியோ, எஞ்ஞான்றுமே சுவாத்ம தத்துவத்தினின்றும் வெளிக்கிளம்பு கின்றதென அவன் நித்தியமிருத்த சொரூபனே யாவன் என்பது பாவமாம், மேலும் ஏகதேகாபிமான மிருப்பில் அதனது இயாகம் மரண மாம், எவனுக்குத்தான் அத்தகைய அகங்காரமானது இலதோ, எவனதுபுத்திதான் அதனது பிரியாப் பிரியங்களானே பற்றுறமாட்டாதோ, அவன் சர்வபாவங்களிலும் தேகங்களிலும் விடயங்களிலும் சமமாய்ச் சாதாரணத்மாவாவன், அவனுககு மரணஞ் சம்பவியாமையின், ஜீவிதமே விளக்கமுடையதாம்; மேலுமிங்ஙனமே யூகிக்கத்தகுகதாம். யாவன், இராகத்து வேட விமுக்தமான அந்தர்ச் சீதளபுத்தியிலுலே சாக்ஷியைப்போல இவ்வியாவற்றையும் கண்டு கொண்டிருப்பனே, அவனது வாழ்க்கையே வாணும் வையமும் வணங்கத்தக்கதா கும். பரமான்மாவாகிய தன்னை யொழிந்துள்ள பிறயாவற்றையும் நன்றுக அசாரமெனக் கண்டு தள்ளுதல் கொள்ளுதன் முதலிய சடங்குகளே யெல்லாம் ஒழித்து, சித்தத்தினது அவசானபூமியாகிய சாக்ஷியினிடத்தில் யாவனுற்சித்தம் அர்ப்பிக்கப் பெற்றதாமோ, அவ னது ஜீவிதம் சோபிதமாகும்; தள்ளத்தக்க தக்கஹேதுவாயது வந்தடைந்தபோது மங்கி மடிதலுமிலை, கொள்ளத்தக்க சுகசாதனம் சம்பிராப்தமானபோது உள்ளே யானந்தித்துப் பொங்கி மகிழ்தலுமிலை யென்றுணர்க.

(ச.) அகங்காரத்தினை யகற்றி = தேகாதியினிடத்து யானென தென்னும் அபிமான சூனியராய், ஓர் பற்றின்றி = சந்தோஷக் கிலேசாதிகளால் அற்பமும் பரிசிக்கப்படாதவ ராய், அனைத்தும் = சர்வபூதங்களிடத்தும், சமமானவர் = சமதிருஷ்டி யுடையவரது.

ஆயுவேசுகமாம்; செகங்களின் கரியானவர் = இச்செகங்களைச் சாட்சிபோற் பார்ப்பவரது, ஆயுவே சிறக்கும். ஆன்மதத்துவத்தை யுள்ளபடி யுணர்ந்து பற்றுதலற்று, சித்தலயத்தான மான சொச்சொரூபத்தில் சித்தத்தை அதன்வசமாய் வைப்பவரது உயிர்வாழ்க்கையே சிறப் புள்ளதெனவுங் காண்க, மூலம்: பாவம் = அந்தக்கரண விருத்தி. (64)

(ஸ்ரீ-வீர - அ-கை.) மெய்யுணர்ந்த சின்மயர்தூயர், பரமார்த்த சொரூப ஆவிர்ப்பாவத் தானே வியாபித்து நன்னிலேபெறுவர், அவர்க்கு அப்பிராப்தமெவை, எவ்விகலோக சம்பந் தியாயபலத்தை யில்லேயென வினிதுகவருவர், எதனேத்தான் கவர்ந்ததாக விட்டொழிப் பர்; கிராகியகிராகக வதன்சம்பந்த லக்ஷண அஞ்ஞதசையில் உண்டென அளவிடப்பெற்ற கிரியாகாரக சம்பந்தமடங்கிய அவாந்தர வாகையார்த்தவடிவ அவயவிக் கிரமங்களானும், மகாவாக்கியப் பிரமேய அவயவங்களாகிய அங்கப்பிரதான கிரியாகலாப லக்ஷண விகாரங்க ளானும் தீண்டப்பெறுத, கூடஸ்த வடிவமானவர், அவையடங்கிய அங்கசகிதப் பிரதானக் கிரியை முடிந்ததுச் சாந்திக்கத்தக்க பாரலௌகிக சொக்காதி பலதைததான் எதற்காகக் கவருவர் எதன்பொருட்டு விட்டொழிப்பர், அசங்க சாந்தமோக்ஷ வடிவமாகவே யமருவர் என்றுணர்த்தி யருளுவார் அதன் வடிவத்தைக காட்டியருளல்:—பற்றென்பது.

பற்றுவான் பற்றுபொரு ளிரண்டும் பயில்பந்த
மற்றபோ துப சாந்திதோன் றிடுமது நிலேமை
பெற்றபோ துவீ டெனுமபெய ரநிலே பெறுமால்
வெற்றிவீரசிங் காதனத் திருத்தியால் விளங்க.

(ப - ரை.) பற்றுவான் = கிராகன், பற்றுபொருள் = கிராகியம், இரண்டும் பயில் பந்தம் = இரண்டுஞ்சேர்ந்து விவகரிக்கும் சம்பந்தம், அற்றபோது = கூஷ்ணமாகியபோது. உபசாந்தி தோன்றிடும் = நல்லசாந்தியான துண்டாகும், அது நிலேமைபெற்றபோது = அவ்வுபசாந்தியானது திதியடைக்தபோது, அநிலே = அந்தத்திதியானது, வீடெனும் பெயர்பெறும் = மோக்ஷமென்னும் நாமத்தையடையும், வெற்றி வீரசிங்காதனத்திருத்தி விளங்க = ஜயசாலிகளாகிய வீராகள் வீற்றிருந்த சிங்க ஆசனத்தின்கண் அவர்கள் போல் அல்லாமல் யாவருக்கும் அதுகூலத்தனுய் இவன் இத்தகையனே வென யாவரும் போற்ற வீற்றிருப்பாய். ஆல்கன் அசைகள்,

(ஸ்ரீ - வீ) இகத்துள்ள பரத்திலுள்ள இட்டவநிட்ட சாதனஹோமோபாதான நிமித்த கிராகிய சிராக சம்பந்தம் உபசமமாகவே, அத்தியந்தம் இராகாதி விக்ஷேபசாந்தியுதயமாம், அச்சாந்தி இராகாதிமூல உச்சேதத்தானே நல்லதிதியை யடையுமாயின் மோக்ஷநாமத் தான் மொழியப்பெறும்; எனவுரைத் தருளி யதன் உபபாதன உபசங்காரமாம். இவ்வண் ணம், நிலேபெற்றவர்க்கும் துர்கர்வினே நீங்குகாறும் விவகாரசித்தியுண்டாம் என்பதிற் றிருட் டாந்தம்.—துயில்வோர் துயிலானே பிரஹ்மப் பிராப்தரேயாயினும் பிராண உதர அன்னர சாதியசைவை ஜீவன அதிர்வ்ஷ்டாதம சந்நிதிமாத்திரத்தானே ஆசரிகின்றனர் எனக்கூறு மாறு, அந்த நிலேமையில் திதிபெற்றுச் சந்ததஞ் சாதராய், இலஙகும் உன்னேப்போன்ற ஜீவன்முக்தர்களாகிய புருடோத்தமர்களும் விவகரிப்பார்கள். அஃதொப்பநீயும் இராஜ்ய பாலனம் ஆசரிப்பாயெனக் கருதியருளல், பராவபோத விசிராந்த வாசனேயருகி யீண்டிச் சகத்திற்றிதியை, நீ ஆத்மாவில் வைத்த சிந்தையனுய், சுழுத்த சாகரித் சந்தியிலிருப்பவன் போலக்காண்குநி, சுவாத்மாவின் கண்ணே செலுத்திய கருத்தினராய், இரம்மியங்களாகத் தோற்றும் அநாத்ம வர்க்கங்களிடத்தே இரமிக்கவே மாட்டார் பெரியோர், ஆன்மாவைத்

தீண்டாத துக்கங்களில் அளுரடைந்து பொங்கார், தம்மிடத்திலேயே ஒரு இராசயனம் போல மதுரமாய சுகத்தையே யுடையவர் ஆகலின்; " துகசிசான்றெனத் துன்றுறிலியாவர் தாந், துக்கிதைக் காியாகித் துலங்கலோ, துக்கிதற்குக் காிததகைதுன்னுரு, துக்கிதாகாிக் கெங்ஙனக் தோன்றுமால் " என்னும் வார்த்திகத்தும் இப்பொருள் விளக்கங்காணலாம். இவ்வண்ணம் ஸ்ரீபகவாந்திருவருள் செய்தபோது, பிரகலாதன் எழுந்து வணங்கித தோத்தரித்து ஆராதித்து, எந்தையே நினதுதெய்வத் திருவருளால் யாதொருகுறைவு மில்லாமல் விகிராந்தியையடைந்து சுகித்தேன், விருப்பு வெறுப்பையும் தள்ளல் கொள்ளலையும் துவந்துவங்களையுங் கண்டிலேன் என்று விண்ணப்பித்தபோது ஸ்ரீ கமலாபதி கூறியருளல்:— வெற்றியென்பதாதி. ஹேகுழந்தாய்! தானவாதீசனே ! உற்சாகத்துடன் இச்சிங்காசனத்தை யேற்று வீற்று வாழ்தி.

(ச.) பந்தம் = சம்பந்தம், பற்றுவான் முதலிய பேதப்பிரதீதி நிவிர்த்தியாயின், உப சாந்தி = சிதததிற்கு நிர்விகாரத்துவம், தோன்றிடும், அதுவே நிலைமைபெற்றபோது = திதியைப்பெறின், மோக்ஷமெனப்படும். (65)

(ஸ்ரீ-வீர - அ-கை.) ஸ்ரீ பகவான் பிரகலாதனுக்கு இராஜ்யாபிடேகம்செய்தருளி ஆசீர் வதித்தருளல்:—குரை, மங்கல, என்பன.

குரைசெய் சங்கின தோசையாற் குழுறுறவந்த
புரையில்வானவர் மங்கலப் பணிசெய்து புகழ
விரைவிலின் றுனைமாமுடி மிலைச்சு வஞனே
யரசுசெய்க நீயூழியி னளவென வருளி.

மங்கலப் புனல்கொணர் கெனமஞ்சன மாட்டிச்
சங்குசக்கரந் தரித்தன கைகளாற் ருனே
புங்கவத்திரள் போற்றிடப் பொன்முடி சூட்டி
யங்கணச்சுத னசுரர்கோ னுக்கிவை யறைந்தான்.

(ப - ரை:) குரைசெய் சங்கினதோசையால் = தொனித்தருளிய பாஞ்சஜன்யாரவத்தி ஞலே, குழுறுறவந்த = உற்சாக அச்சாதிகளுடன் வந்த, புரையில்வானவர் = இக்குற்ற மற்றதேவக் கூட்டங்கள், மங்கலப் பணிசெய்து புகழ = மங்களவாழ்த்துகள் பாடிப்புகழ்ந் திட, விரைவில் இன்றுனே = அதிசிகிரமாக இப்போது உனக்கு, மாமுடி = மாகூமிமைதங் கிய நவரதநகசித கிரீடததை, மிலைச்சுவல் நானே = யாமே சூட்டியருள்வேம், அரசு செய்கநீ ஊழியின் அளவென அருளி = கற்பகாலபரியந்தம் நீ தைததியராஜ்ய பரிபாலனம் செய்து வருவாயாக என்றனுக்கிரகித்தருளி.

மங்கலப்புனல் கொணர்கென = ஸ்ரீ கங்கை கூரீராப்தியாதி தீர்த்தங்கள் கொண்டு வருக வென்றருஞ் ஞாபித்தருளி, வந்தபின், மஞ்சனமாட்டி = அபிடேகித்தருளி, சங்குசக் காந் தரித்தன கைகளாற்ருனே = சங்கையும் சககிரத்தையுங் தாங்கிய திருக்காய்களாற் சுயமே, புங்கவத்திரள் = தேவதைகள் முதலியவாகள், போற்றிட = தோத்திரஞ்செய்ய, பொன்முடிசூட்டி = நவரத்நகசிதமான ஆயிரத்தெட்டு மாற்றுச் சுவர்ணகிரீடத்தைப் புனைந் தருளி, அங்கண் அச்சுதன் அசுரர்கோனுக்கு இவையறைந்தான் = அழகிய செந்தாமரை யிதழ்போலுங திருநேத்திரங்களே யுடைய அழியாத செல்வினாயகன் தைததியேந்திரனுக்கு வருமாறு அருளிச் செய்வானுயினன்.

உபசமப் பிரகரணம் பிரகலாதன்கதை கூறுதல்

(ஸ்ரீ - வீர.) உனக்குயாமே விரைவில் திருவபிடேகம் செய்தருளுவேம்; பாஞ்சஜன்னியமென்னுஞ் சங்கநாதத்தைக் கேட்டு இங்குசூழுமிய சித்தர் சாத்தியர் சுரர்கூட்டங்கள் நினக்குமங்களஞ் செயக, என்று புகன்றருளி ஸ்ரீ புண்டரீகாக்ஷர், மேன்மை மிக்கதானவ நாயகனே மிகவழகிய யோக்கியமாய இரத்நசிங்காசனத்தில், அம்புதத்தைச் சுமேருசிருங்கத் திற்போல வீற்றிருக்குமாறு அருளினர், கொண்டுவரும்படி ஆணையிட்டருளிய வண்ணங் கொணர்ந்துதந்த கூர்சாப்தி முதலிய பெருங்கடல்களின் உதகததாலும், ஸ்ரீ கங்கைமுதலிய தீர்த்தப் பிரவாகங்களானும், சர்வதீர்த்த ஜலங்களானும், சர்வவிப்பிர இருடிமுனிக் கூட்டங்களோடும், சர்வசித்த கணங்களோடும், கூடியவராய், மீளவும் வித்யாதரயுதராய், லோகபால சமன்விதராய், இலங்கும் அமேயாத்மாவாகிய ஸ்ரீமந்நாராயணர், மகா அசுரேந்திரனுக்குத் தைத்தியராஜ்ய பட்டாபிடேகத்தைச் செய்தருளினர். மீளவும் என்ற சப்தசுவாரசியத்தானே, பூர்வம் தாமொருவரே அபிடேகித்தருளினர், வித்தியாதராதிக ளுடன்கூடி மீளவும் உற்சாக அதிசயத்தானே அபிடேகிததருளினர் எனதகோற்றுகின்றது. அப்போது சுவர்க்கத்தில் தேவேந்திரனே மருதகணங்கள் முன்னா தோததிரஞ் செய்தகேபோலச் சுராசுரர்கள் பிரகலாதனைத் தோத்திரஞ்செய்தனர்கள், இவ்வண்ணம் இராஜ்யபட்டாபிடேகம் செய்விததுக கொண்ட அசுரநாயகனே நோகியருளி, சுராசுரர்களானே கீர்த்திக்கப்பெற்ற ஸ்ரீ மதுசூதனர் வருமாறு அருளத்தொடங்கினர்.

(ச.) சங்கு = பாஞ்சஜன்னியம், வானவர் = சிததசாத்திய சுரகணங்கள்.

ஸ்ரீவசிட்டர்: தான் வரவழைத்த சர்வதீர்த்தங்களாலும், மஞ்சனமாட்டி. (66-67)

(ஸ்ரீ - வீர - அ - கை.) ஸ்ரீபகவான் ஆசீர்வதித்தருளிய பின்னர் மறைந்தருளினுரைனல்:—தள்ளின் என்பது.

தள்ளின் மேருவும் புவனமு மருக்கனுஞ்சசியு
மூள்ளநாளெலா மரசுசெய் துயர்கென வருளிக்
கள்ளமாயையின் சிருட்டியொன் றெளித்தல் போற்கணத்தில்
வெள்ளவானவர் குழாத்தொடு மறைந்தனன் விண்டு.

(ப - ரை.) தள்ளின் மேருவும் = கெடாதசுமேருபர்வதமும், புவனமும் = சதுர்த்தச புவனங்களும், அருக்கனும் சசியும் = சூரியசந்திரர்களும், உள்ளநாளெலாம் = இருக்குங் காலமெல்லாம் அரசுசெய்துயர்க என அருளி = இராஜ்ய பரிபாலனஞ்செய்து மேம்பட வாழ்வாயாக என்றனுகிரகித்தருளி, கள்ளமாயையின் = வஞ்சகமாகிய மாயாசகதியின், சிருட்டியொன்று = ஒரு சம்சாரமானது, ஒளித்தல்போல் = இலயமாதல் போல், கணத்தில் = க்ஷணப்போதில், வெள்ளவானவர் குழாததொடு மறைந்தனன் விண்டு = தேவதைகளின் மிகப்பெரிய கூட்டத்துடன் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் அந்தர்த்தானமாகியருளினர்.

(ஸ்ரீ - வீர.) சுமேருபர்வதமும் பிருதிவியும், பிறமலைகளும் உள்ளவரையும், சந்திரார்க்க மண்டல முள்ளவரையும், அகண்டித குணசிலாகியாகிய மகாராஜாவாய் ஹே அநகனே நீ வீற்றிருத்தி. இஷ்ட அநிஷ்ட பலங்களைத் தியாகம் புரிந்து, சமதரிசனமாகிய மதியினனே, இராகபயக் குரோதமற்றவனுகி இராஜ்யத்தை யினிதாக நன்குபாலிப்பாயாக. ஸ்ரீ புண்டரீகாக்ஷராகிய பகவான் இவ்வண்ணம் ஆசீர்வாதஞ் செய்தருளியபின்னர், அசுரேந்திரனது திவ்ய மந்திரத்தினின்றும், நர அமர கிந்நராதிகளுடன் கூடினமையானே இரண்டாவது சம்சாரம்போல் விஸ்தாரமாகிய அப்பரிவாரக கூட்டங்களுடன் மறைந்து சென்றருளினர்.

பிரகலாதாதிகளானே தூவப்பெற்று, பக்ஷிராஜாவாகிய கருடபகவானுடைய பிற்பாகத்திய இறகுகளில் இராசிபூதங்களாகக் குவிக்திருந்த பிச்சாத் புட்பாஞ்சலிச் சமூதாயங்களானே ஸ்ரீஹரியானவர் பூர்யமாணராய், முறையே ஸ்ரீபாற்கடலே யடைக்தருளி, சுரப்பிரஹாகத் தைப்போமாறு விடைகொடுத்தருளி. வெண்டாமரையின்கண் ணறுகால் வீற்றிருந்ததே போல போகி.போகாசன்த்தின் கண்வீற்றிருந்தருளினர்.

(ச.) உயர்கென = அகண்டிதகுண சிலாக்கியனுவா யென்றருளீ. (68)

(ஸ்ரீ-வீர - அ-கை.) சமாதிமுக்தனுக்கு விதேகமுக்தனேடு கூட விசிராந்தி சுகாதி சாமியமாக மீண்டும் கிளம்பும் காரணத்தையறியும் வேட்கையராய் ஸ்ரீஇராகவர் விஞதல்:— என்னவென்பது.

எண்ணவோதிய வசிட்டனே யிராகவ னேக்கி
யன்னதானவர்க் கரசனுய் வீடுற்ற வறிஞன்
தன்னதுள்ள மெய்ப்பரத்திலே தன்மயமான
பின்னர்மால் சங்கினேனையாற் பிறந்ததெப்பரிசோ.

(ப - ரை.) என்னவோதிய வசிட்டனே = என்றிவ்வண்ண மருளிச்செய்த ஸ்ரீவசிட்ட பகவானே, இராகவன் நோக்கி = ஸ்ரீ இராமச்சந்திரர் பார்த்து, அன்னதானவர்க் கரசனுய் வீடுற்ற அறிஞன் தன்னது = தாங்கள் அருளிய தானவேந்திரனுய் மோக்ஷசொரூபமாகிய விவேகியாம் பிரகலாதனுடைய, உள்ளம் = சித்தமானது, மெய்ப்பரத்திலே = சத்தியமான பரமபதத்திலே, தன்மயமான பின்னர் = ஸகைகபாவதத்தை யடைந்தபின்னர், மால்சங்கின் ஓசையால் பிறந்தது எப்பரிசோ = ஸ்ரீமந்நாராயணரது பாஞ்சஜன்னிய நாதத்தினுலே இளம்பியது எவ்வாரோ.

(ஸ்ரீ - வீர.) ஹேபகவன்! மகாத்மாவாகிய பிரகலாதனுடைய மனமானது பரபதத்திற் பரிணதமாகிய தன்மயமான பின்னர் பாஞ்சஜன்யத் தொனியினுலே யாங்ஙனம் உணர்த்தப் பெறலாயது, மனமானது விலயமாயின் பாஞ்சஜன்ய நாதசிரவணமும் தர்லபமாகலின் யாங்ஙனம் அதனுற்பிரபோதம் என்பது கருதது.

(ச.) மெய்ப்பரத்தில் = பிரஹ்மத்தில். (69)

(ஸ்ரீ-வீர - அ-கை.) பிராசப்சகேவஷ உற்போதித சுத்தவாசனுசகித பகவதிச்சையே உள்ளப் பிரபோதத்தில் ஹேதுவாம் என்று சிறப்புரைப்பார், சதேகவிதேகமுக்தியைப் பகுதுக்காட்டி, ஜீவன் முத்தர்கள்பால் சுத்தவாதனே யிருகரும் இயல்பைக்கூறுகின்றார்;— என, சுத்த வென்பன.

எனவிளவலு மிராமனுக் கருந்தவ னுரைப்பா
னனல்பயின்றவித் தாமென வமலவா தீனதான்
கனமில்சிவன்முத் தருக்கெலா மிதயத்தின் கண்ணே
சனனவங்குர மீண்டில தாகியே சாரும்.

சுத்தமாய்ப் பரமமாகித் தோற்றஞசா லுதாரமாகிச்
சுத்தமாஞ் சாத்திகதைத் தன்றியே விடாமலொன்றிச்
சுத்தவாத் துமத்தியான மயமதாய்த் துவக்கொன்றில்லாச்
சுத்தவா தீனகணித்தஞ் சுழுதிவா தீனபோனிற்கும்.

(ப - ரை.) எனவிஞ்ஞவும் = என்று ஸ்ரீ இராகவர் வினவியதும், இராமனுக்கு = ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்திக்கு, அருந்தவன் = அரியதவத்தினையுடைய ஸ்ரீவசிட்டபகவான், உரைப்பான் = அனுக்கிரகிப்பதாவது, அனல்பயின்ற வித்தாமென = தக்தபீஜநியாயமாக, அமலவாதனே தான் = சுத்த வாசனையானது, கனமில் ஜீவன்முத்தருக்கெல்லாம் = தேகாதியபிமானங்களுன்ற உணர்வுருவமாய ஜீவன்முத்தர்கள் எவர்கட்கும்; இதயத்தின் கண்ணே = மனத்தானத்தில், சனனவங்குர மீண்டிலதாகியே சாரும் = பிறப்பா மூலை மறுபடி இலதாமாறே பொருந்தாநிற்கும்.

சுத்தமாய்ப் பரமமாகி = தூய்தாய் மேன்மைமிக்கதாய், தோற்றஞ்சால் உதாரமாகி = பரமோதாரீப் பிரதீதிமத்தாய், சுத்தமாம் சாத்திகத்தைத் துன்றியே விடாமல் ஒன்றி = சாத்விகத்திற் சாத்விகத்தை யெப்போதுமே விடாமலுடையதாய், சுத்தவாத்துமத் தியான மயமதாய் = பரிசுத்தமான பரமான்மத் தியானவடிவ முடையதாய், துவக்கொன்றில்லா = பந்தகந்தமே யில்லாததாய், சுத்தவாதனேகள் = இலங்கும் சுபவாசனேகள், நித்தம் = நித்தியம் = இடைவிடாமற் சகசமாகவே, சுழுத்திவாதனேபோல் நிற்கும் = துயில்வாதனே போல இருக்கும்.

(ஸ்ரீ - வீர.) ஹே அனகனே ! இவ்வுலகத்தின் கண்ணே இருவகை முக்தத்தன்மைகள் சம்பவிக்கின்றன, அவற்றுள் ஒரு விபாகம் தேகத்தோடு கூடியதாம், மற்றொருவிபாகம் தேகமற்றிருப்பதாம். கூறும் வகையாய அவற்றை யொருமையுடன் கேட்குதி; விபாகமென்பது விபாஜகலக்ஷணை பேதமாம். இஷ்ட அநிஷ்டங்களாகிய கருமங்களின் தன்ஞதல் கொள்ஞதல் விடயங்களில் எந்தப்பற்றற்ற மதிக்கு இராகமிலதாமோ அந்தத்திதியை நீயறிதி மீண்டு ஜீவன்முக்தத் தகைமையாமென வவனுக்கு, அதுவே தேகதாரண வேதுவாய பிராரப்தசேடம் போகத்தானே கூயமாகவே புனர்ஜனன வர்ஜிதமாய் விதேகமுக்தத் தகைமையெனப் புகலப்பெறும், அங்ஙிலைமை திருசியத் தகைமையை வரவொட்டாதாம். வறுத்தவிதைக் கொப்பாகி, மீண்டுந் திருசியத்தகைமை யடையவொட்டாமன் மறுபடியும் ஜன்மாங்குர விவர்ஜிதமாயது மருவும், ஜீவன் முக்தர்களிடத்திலோ சமாதியெழுச்சியானே மீண்டும் தேகதிருசியத் தகைமையில் ஹேதுவாகாவாம் எனல்:—கனமில என்பதாதி ஜீவித்துக்கொண்டே விமுக்தர்களா யிருப்பவரின் இருதயத்தில் ஆசங்கமாலின்ய நிர்முக்தமாய தூய்தாய சுபவாசனே யிருக்கும்; அந்தச்சுத்தப் பிரஹ்மாதம பாவனேயானது பலித்திரமாய்ப்பரம உதாரமாய் திருஷ்ணை கார்ப்பண்யரகிதமாய் தூயசத்துவந் தொடர்ந்ததாய்த் துலங்கும்.

அந்தக்கரணத்திற்குப் பிரஹ்மத்தின் கண்ணே இலயமெய்திய போதிலும் வாசனே யிருக்கு மென்பதில் திருஷ்டாந்தமறைதல்: — சுழுத்திவாதனே யென்பது. ஆன்மத்தியான மயமாய அவ்வாதனே நித்தியம் துயில்வோனுக்கே யெனநிற்கும்.

(ச.) ஸ்ரீ வசிஷ்டர்; அனல்பயின்ற வித்தாமென = வறுத்த விதைக்கொப்பாய், அதனலே, மீண்டு ஜனனரூபமான அங்குரமிலதாகி. அமலவாதனே ஜீவன்முத்தருடைய இருதயத்தில், சாரும் = வசிக்கும் என்றதாயிற்று.

அதனேயே விரித்துரைத்தல்:—பாபம் அற்பமும் இன்மையின், சுத்தமாய், கைவல்ய சுகத்தைத்தருவதாதலின், பரமமாகித் தோற்றஞ்சாலுதாரமாகி, சுத்தமாஞ் சாத்திகத்தைத் துன்றி = இரசதமோ குணங்களால் விடாமல் ஒன்றி = பின்னப்படாமல் விருத்திசெய்வதாய், சுத்த + வாதனேகள், ஜீவன் முத்தரிடத்து, நித்தஞ் சுழுத்திவாதனேபோல் மிகவு மடக்கமாய், நிற்கும். மூலம்:—அசம்பின்னம் = கலவாமல். (71)

(ஸ்ரீ-வீர - அ-கை.) எவ்வளவுகாலஞ் சென்றபோதினும் தேகமானது திடியாகுமாயின் வெளியேவருதல் கூடுமென விளம்பல்:—ஆயிரமென்பது.

(ச-அ-கை.) பரமபதத்திற் ரூதாத்மியத்தை யடைந்த உள்ளமானது சரீரமிருந்தால் நுகர்வினை வயத்தானே திரும்புதல் கூடுமெனல்:—ஆயிரமென்பது.

ஆயிர வருடஞ்சென்று மங்கமே பிருக்கினுள்ளே
மேயதா மவ்வவத்தை மெல்லென வொருபானின்று
தேயல தாகித்தோன்றுஞ் செறியுமவ் வவத்தையாலே
தூயநற் சீவன்முத்த ருணர்ச்சியைத் தொடர்வரென்றான்.

(ப - ரை.) ஆயிரவருடம் சென்றும்=சகத்திர சம்வத்சரங்கள் சாம்பியபோதினும், அங்கமே யிருக்கில்=சரீரமானது நுகர்வினை வயத்தாற்றகுமேலாயின், உள்ளேமேயதாம் அவ்வவத்தை=அத்தரிற் பொருந்தியதான அந்த அவத்தை, மெல்லெனவொருபானின்று தேயலதாகித்தோன்றும் = ஓரிடத்தமர்ந்திருந்து கெடாமன் மெதுவாக வினைவயத்தால் வெளியேவரும், செறியும் அவ்வவத்தையாலே=பொருந்தாகின்ற அந்த அவத்தையினாலே, தூயநற்சீவன் முத்தா=பரிசுத்தமான சுபவாசனையையுடைய ஜீவன் முத்தர்கள், உணர்ச்சியை = வெளிநாட்டத்தை, தொடர்வர் என்றான் = பற்றுவர் என்று ஸ்ரீ வசிட்டபகவான் அருளிச்செய்தார்.

(ஸ்ரீ - வீர.) வருட சகத்திராக்ததிலும், அடங்கியிருந்த அதேயுள்ளவத்தையானே, தேகதாரண ஹேதுவாய பிராரப்தசேட மிருக்குமாயின், ஜீவன்முக்தர் உணராநிற்பர். அது வே பிரகலாதபோதத்தினும் எதுவாகும், பிரகலாதனவன் உள்ளேயிருந்த தன்னுடைய சங்கு சப்தத்தானே யுணர்த்தப்பெற்ற சுத்தசத்துவ வாசனையானே போதத்தை யடைந்தனன். செவியானது அடங்கியிருப்பின் சங்கத்தொனியும் கேளாமையின் அத்தினைமாத்திரையானே யாங்ஙனம் போதமாதல் எனின்? ஸ்ரீ ஹரியானவர் சகல பூதங்கட்கும் காரணத்மா = சத்தியசங்கற்பர், அவருக்குயாது தோற்றுகின்றதோ அது அவ்வாறேயாம் விரைவில், சர்வம் ஆன்மாவே காரணம்- பிரபோதத்தைப் பிரகலாதன் எய்துகவென எப்போது ஸ்ரீ பகவான் சிந்தித்தருளினரோ அப்போதே நிமிடமாத்திரத்தில் அவன் உணரமுயன்றனன். சுததவடிவததானே, பூதங்களின் காரணமாகிய அவ்வியாகிருதத்தானும், காமகருமாதி நிமித்தங்களானும் தம்மாலே ஜகத்சிருஷ்டியின் பொருட்டு ஸ்ரீ வாசுதேவ மயவடிவமாகத் திருமேனியொன்று கவரப்பெறும், என்பது சுருதிமிருதி புராணப்பிரசித்தமாம். அதனானே, அந்தத்திருமேனியின் ரிசனத்தான் ஆன்மதரிசனமாம், ஆன்மதரிசனத்தானே எளிதாக அதன்ரிசனமாம், என்னே ஆன்மாவலோகனத்தானே மாதவன் விரைந்து காணப் பெறுவன், மாதவாராதனத்தானே விரைவிற் சுயமான்மாக் காணப் பெறும் என்பது பெரியோரது சம்மதமாதலின். ஹே இரகுகுலதிலகனே! இத்திருஷ்டியைப் பின்பற்றி ஆன்மாவலோகனத்தில் முயன்றிடுதி விரைவில், அதனால் விசாராத்மாவாகிய நீ சாசுவதமான பதத்தை யடைந்திடுவாய். பரமேசுரப் பிரசாதஜனித விசாராதியானேயகியும் ஞானலாபமாம் என்பது இக்கதையின் முக்கிய தாற்பரியமாம்: இங்ஙனமே ஸ்ரீ பகவான் வாதராயணரது சூத்திரமும் கூறுகின்றது:—"பராபிதியானத்தானே மறைந்தது அவனினின் றுயிர்க்கடல் விடலாமே" = உயிர்க்கு = ஜீவனுக்கு, மறைந்தது = மறைபட்டிருந்ததாகிய ஐசுவரியம், பரஸ்ய = ரசுவராது, அபிதியானத்தானே =மிகுந்த ஒருமையோடும் அன்போடும் செய்யப்பெற்றதிருந்தர ஆதரவோடு கூடிய நற்றியானத்தானே, அபி